KVC0023.

அரையணா, பதிவு எண் 245

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை — வாரம் இரு முறை

மலர் 9 | இரத்திரன், 28-10-3... | இதழ் 26

அட படுபாவி பிர்மாவே!

என்னை வஞ்சித் தென் செல்வத்தைக்
[கொள்வோர்
என்றனக் கிடர் செய்பவ ரல்லர்
முன்னை நின்ற தொர் நான் மறை
[கொல்வார்
மூ தணர்விற் கலைத் தொகை மாய்ப்பார்
பின்னை யென்னுயிர்ப் பாரத நாட்டில்
பீடை செய்யும் கலியை யழைப்பார்
நின்னை மிக்கப் பணிவொடு கேட்பேன்
நெஞ்சிற் கொள்கையை நீக்குதி......

—கவியரசன்

அட படுபாவி பிர்மாவே!

அட படுபாவி பிர்மாவே! என் வாழ்க்கைக் கதையை இப்படியா யெழுதிவிட வேண்டும்? ஆதியிலே என் தலையிலே உனது தெய்வீகக் கரத்தை வைத்துச் சபித்து விட்டாய். வருடக் கணக்காக என் வாழ்நாள் இன்று நாளை சரிப்பட்டு விடலாமென எண்ணிய எண்ணமெல்லாம் இப்படியா கனவாய்ப்-பாட்டாய்ப்-பழங் கதையாய் முடிய வேண்டும்? எவ்வளவு பணத்தைத் தான் கை சலிக்க வாரி வாரி யிறைத்தேன்! எத்தனை ஆசிரியர்களைத் தான் சிறைக் கூடஞ் செலுத்தினேன்! என்றாலும் நான் இப் பாழும் தமிழ் மக்களிடையே ஒரு உபகாரியாய்ப் பிறந்த தோஷம் என்னை விட்டு நீங்க வில்லை. எவரெவரை நான் நம்பினேனோ, எவரெவரிடம் எனது வாழ்க்கை யில்லத்தை யொப்படைத்தேனோ, எவரெவரை எனது தர்ம கர்த்தாக்களாக நியமித்தேனோ, அவர்களெல்லாம் என்னை ஏறவிட்டு ஏணி வாங்கிவிட்டார்கள். எனது செல்வத்தை யுண்டு ஏப்பம் விட்டு விட்டார்கள். என்றாலும் எத்தனைதான் நித்திய கண்டங்கள் என்னை நிர்மூலப் படுத்த மூண்டாலும் பூரணமான ஆயுளென்னவோ பெற்றுவிட்டேன், இறப்பென்ப தெனக்கில்லை. இடைஞ்சல்கள் எண்ணற்றன திடீர் திடீரென எதிர்பாரா விதமாய் ஏற்பட்டு விடலாம். அவை யனைத்தையும் படிக்கல்களாகக் காலடியில் மிதித்தேறும் சக்தி யெனக்குண்டு, வீழ்ச்சி யென்றா பிறர் கண்ணிற் படுபவைகளை நான எழுச்சி. யென்றா கொண்டுவிட்டேன். வாழ்வும் தாழ்வும் மனிதன் செயலல்ல. இன்று மடுவாயிருப்பது நாளை மலையாய் முளைக்கலாம். இன்று பல்லக்குச் சுமப்பவன் நாளை பல்லக்கேறவும் காலம் வரலாம். மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழையுண்டு. ஒவ்வொரு சாபமும் விமோசனமடைந்தே தீரும். ஆகவே எனது துன்பங்களெல்லாம் தீர்ந்து நானும் எனது நாட்டு மக்களும் இன்பமான வாழ்க்கை நடத்தும் காலத்திற் கறிகுறியான சுப. சகுனங்கள் பல தோன்றுகின்றன. அப்பொழுது நான் பட்ட கதை யெல்லாம் பாரதமெனப் படிக்கலாம்.

இப்பொழுது நானிருக்கும் இச் சிறு உருவங் கண்டும் கந்தைக் கோலங் கண்டும் வெறுத்து விடாதீர் உலகத்தீர்! பரோபகார இத சரீரமெடுத்த எனக்கென்ன குறை! நாடுண்டு அதன் மத்தியிலே நானுமிருக்கிறேன். "போருக்கு வந்தங் கெதிர்த்த கவுரவர் போல வந்தானுமவன் நேருக் கருச்சுனன் தேரிற் கசை கொண்டு நின்றதுங் கண்ணனன்றோ?" அவனது நம்பிக்கை கொண்டுவிட்டால் அஞ்சு தருவதற்கு யாதுளது? மேலும் எனது கொள்கை பகைவனுக்கு மருள் புரிவதாகும் சமஸ்த மக்களிடத்தும் அன்பு செலுத்துவதாகும். "தின்ன வரும் புலி தன்னையு மன்பொடு, சிந்தையிற் போற்றிடுவாய் அன்னை பராசக்தி அவ்வுருவாயினள் அவளைக் கும்பிடுவாய்"

காங்கிரஸ் கதை

நமது தேசியக் கிளர்ச்சிக்கு கிட்டத்தட்ட 50 வயதாகிறது. அன்னியருடைய முயற்சியால், அன்னிய மோஸ்தரில், அன்னியருடைய தலைமையில் நமது காங்கிரஸ் மகாசபை ஆரம்பமாயிற்று. எல்லாம் அன்னிய மயமா யிருந்தால் இந்தியருக்கு காங்கிரஸ் என்றால் என்னவென்றே தெரியாது. வருடத்திற்கு ஒருமுறை மெத்தப் படித்த சிலரும், பேராசைக்கார வக்கீல்கள் சிலரும் கிறிஸ்மஸ் விடுமுறை காலத்திலே வேலையற்றுப் போய் கூடுவதும் ஏதோ பொழுது போக்காக சில வெள்ளைக் காகிதத்தை கருப்பு மையால் கறைப்படுத்துவதும் வாய்ப்பந்தல் போடுவதும் போவதுமா யிருந்தார்கள். எட்மண்டு பர்க்கென்ன, ஷெரிடனென்ன, கிளாடு ஸ்டோன் என்ன இவர்கள் பாணியிலே வாசா மகோசரமாய்ப் பேசுவதைத்தான் புகழ்ந்தார்கள். சிற்சில சமயம் ஆள்வினையாளரை போற்றியும் மறதியாகத் தூற்றியும் வந்தனர். சில தீர்மானங்களை நிறைவேற்றி விட்டு—செயலிலல்ல—வெறும் காகிதத்திலே எழுதிமுடித்துவிட்டு ராஜாப் போலே போய் விடுவார்கள். அவ்வளவுதான் அடுத்த வருடம் மறுபடியும் கூடி முன்னைப்போலவே செய்வார்கள். அப்பால் பேச்சுக்காலம் போய் விண்ணப்பகாலம் வந்தது. நாச்சலிக்க—வாய்கடுக்கப் பேசுவதால் பிரயோஜன மில்லையென்று கண்டு கைகடுக்க கற்றை கற்றையாய் மனுக்கள் எழுதி கட்டாயக் கல்வி வேண்டும்—உப்புவரி கூடாது என்று என்னென்ன வெல்லாமோ கேட்டார்கள். அவ் விண்ணப்பங்கள் யாவும் மரியாதையாகக் கழிவுதாள் கூடையிலே பத்திரமாயிருந்து வருகின்றன. அப்புறம் மகரிஷி திலகர் வந்தார். அவர் தமது உள்ளங் கையிலே காங்கிரஸை வைத்தாட்டினார் வெடிக் குண்டு வேதாந்தங்கள் பேசினார். "சுதந்தரம் பிறப்புரிமை, அடைந்தே தீருவேன்"—என்று சபதஞ் செய்தார். மறைந்தார். காந்திஜீ கையிலே காங்கிரஸ் வந்த பிறகு தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை மட்டுமல்ல உலகத்தையே ஆட்டி அலைத்து வருகிறது. காந்திஜீயும் காங்கிரஸும் இரண்டல்ல ஒன்றே என்பதை இன்று நாம் அவரை ஏக பிரதிநிதியாக இங்கிலாந்துக்கு அனுப்பியதி லிருந்து உலகம் அறிகிறது.

சர்வம் சுண்ணாம்பு மயம்

எப்படியாவது இந்தியர்கள் கண்ணிலே சுண்ணாம்பைத்தடவிக் காசுதட்டிக் கொட்டிக் கொண்டுபோய் இங்கிலாந்து ஜனங்களின் வயிற்றைக் கழுவ வேண்டும் என்ற சுயநல நோக்குடன் சீமைத்துணிகள் இந்தியச் சந்தைகளில் ஏராளமாய் விற்கப்பட்டன. 64 கோடி ரூபாய்களை நாம் வருடா வருடம் கொட்டிக் கொட்டிக் கொடுத்தோம். காந்திஜீ வந்தார் "கதர்" என்றார், நாமெல்லாம் கதர் துணி கட்டிக்கொண்டோம். இங்கிலாந்தின் நெசவு ஆலைகளெல்லாம் ஆயிரக்கணக்கில் அடை பட்டுவிட்டன. இராஜ தந்திரிகளெல்லாம் யோஜித்துப்பார்த்தார்கள். இந்திய ரூபாயை வேறு எப்படியிழுக்கலாம் என்று எண்ண ஆரம்பித்தார்கள். இல்லாவிட்டால் இரும்பையும் நிலக்கரியையுமா போட்டு வயிறு வளர்க்க முடியும்? ஸ்னோடன் சொன்னார் "ஆம் நிலக்கரியையும் இரும்பையுங் கொண்டுதான் வயிறு வளர்க்க வேண்டும். நிறைய இயந்திரக் கலப்பைகளைச் செய்து குறைத்த விலைக்கு விற்றால் 64 கோடி ரூபாய் மாத்திரமில்லை அதற்கு மேலும் சம்பாதித்து விடலாம்" என்றார். அதுகூட வேண்டியதில்லை. எப்படியும் மனிதவர்க்கம் வீடுகட்டித்தானே குடித்தனம் செய்ய வேண்டும் இந்தியாவிலுள்ள மரம் கல் முதலியவற்றிற்குப் பதிலாக இரும்பு உத்திரங்களையும், தூண்களையும் சுண்ணாம்பையும் ஏற்றுமதி செய்யலாம்" என்று யாரோ ஒருவர் மண்டையிலே தட்டிவிட்டது. அவ்வளவுதான் இந்தியாவில் எந்தப் பாலத்தைப் பார்த்தாலும் எந்த ஷ்டேஷனைப் பார்த்தாலும், கட்டிடத்தைப் பார்த்தாலும், விளக்குத் தூண்களைப் பார்த்தாலும் குத்துக் கால்களைப் பார்த்தாலும், மைல் கல்களைப் பார்த்தாலும்கூட எல்லாம் சுண்ணாம்பு(சிமெண்ட்) மயமாகவே யாகிவிட்டது. சர்வம் ஜெகத் சுண்ணாம்பு மயமாகி விடாமல் ஆண்டவன் காப்பாற்ற வேண்டும்.

வந்துவிட்டது சுயராஜ்யம்.

கோவில் பட்டி கழுகுமலை மறியல் வழக்குகளிலே கள்ளுக்கடை மறியல் செய்த தொண்டர்களையும், தொண்டர்களுக்கு உதவி செய்த வர்த்தகர்களையும் நியூ சென்ஸ் சட்டத்தின்படி கைது செய்து ஞாயிற்றுக் கிழமையிலே விசாரித்து ஒருவாரம் தண்டித்தது தப்பு என்று நமது தலைவர் சக்கிரவர்த்தி ரா

கிழவன் பேச்சு

காந்திஜீ ஒரு அகராதி

காந்தியென்னும் பெரிய அகராதியில் எதைவேண்டுமானாலும் பார்க்கலாம். எல்லா விஷயங்களுக்கும் அப்புத்தகத்திலே பக்கங்கள் ஒதுக்கி விடப்பட்டிருக்கின்றன. எந்த எழுத்தில் எந்தவார்த்தையில் எந்த விஷயத்தில் சந்தேகம் பிறந்துவிட்டால் உடனே அந்தஅகராதியிலே பார்த்துத் தெளிந்து கொள்ளலாம். இத்தனைபக்கம் என்ற எல்லையில்லை—இத்தனை பாகம் (வால்யூம்) என்றவரை யறைகிடையாது. இருந்தாலும் வெட்டியான் முதல் வேந்தன் வரை இலகுவில் வாங்கமுடியும். மிக மிகக் குறைந்தவிலை. ரூபாய் அணா பைசாவிலல்ல பக்தியின் சில சில்லரையிலேதான். அதன்விலை கணிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகத்தை இங்கிலாந்திலே இப்பொழுது எல்லோரும் அட்டைமுதல் அட்டைவரை புரட்டிப் புரட்டிப் படிக்கிறார்கள். இராஜரீகமானாலும் சரி, வேதாந்த சித்தாந்தமானாலும் சரி சாதாரண வாழ்க்கை முறையானாலும் சரி எல்லா சந்தேகங்களையும் அவர்கள் நிவர்த்திபெற்று வருகிறார்கள். எந்தக் கூட்டத்திற்குப் போனாலும் காந்திஜீ தமது மனதிற்குத் தோன்றுகிறதில்லை. "யார் யார் எதெதை வேண்டுமானாலும் கேளுங்கள் சொல்லுகிறேன்"—என்பார். நாலா பக்கங்களிலிருந்தும் புற்றீசல்போலக் கேள்விகள் குவியும். அத்தனைக்கும் அடித்த வாய் துடைத்தாப்போல் அவரவர் மனது திருப்தியுற சுருங்கச்சொல்லி விளங்கவைத்து விடுகிறார். இந்த அகராதி நமக்குக் கிடைத்துள்ளதால் சுயராஜ்யம் என்றால் என்ன என்பதை நாம் அனுபவித்து அறிந்துகொள்வோம். சந்தேக மெழுவதற்கு இடமேயில்லை, முடியாது என்ற பதமும் அந்த அகராதியிலே கிடையாது.

காந்திஜீ ஒரு மாணவர்.

எனது ஆழ்ந்த பல அனுபவங்களின் முடிவில் பள்ளி வாழ்க்கைக்குப் பின்னரே உண்மையான மாணவ வாழ்வு ஆரம்பிக்கின்றதென்பதைக் கண்டேன். கல்லூரிகளிலும் கலா சாலைகளிலும், சட்ட வாசக சாலைகளிலும், காலைக் கட்டி யுட்கார்ந்து கொண்டு புத்தகங்களுக் கிடையில் புதைந்து கிடப்பதால் வெறும் புத்தகப் புழுவாகவே யிருக்கிறானே யொழிய உண்மையான மாணவ உருவம் பெற்றுவிடுகிறதில்லை. கலா ஞானத்தின் திறவுகோலால் மனித வாழ்க்கையின் கதவைத் திறக்க முடியாது, பள்ளித் தலத்தை விட்டு வெளி வந்தவுடன் சகஜமாக நாம் படித்த தனைத்தையும் மறந்துவிடுகிறோம். ஒருவாறு ஞாபகமிருந்தாலும் பள்ளிக் கணக்குப் பள்ளிக்குதவுகிறதில்லை. அப்புறம் தான் உண்மையான உலக விவகாரத்தைப் படிக்க ஆரம்பிக்கிறோம். ஆகையால் நாம் இப்பொழுது சர்வ சாதாரணமாகச் சொல்லிக் கொள்ளும் மாணவ வாழ்க்கை யென்பது நான் கூறும் உண்மையான மாணவ வாழ்க்கைக்கு வெறும அஸ்திவாரமே யாகும். பள்ளி வாழ்க்கை யென்பது இறக்கை முளைக்காத குஞ்சுப் பறவையைப் போன்றது. பள்ளிக்கு வெளியிலே தான் இறக்கை முளைக்கிறது. பறக்கக் கூடிய பருவம் வருகிறது. தத்தித் தத்திப் பறந்து எவ்வளவுக் கெவ்வளவு உயரப் பறக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு பலம் உண்டாகிறது. ஆகையினாலே தான் நான் இன்னும் பள்ளிச் சிறு பையனாகவே யிருக்கிறேன்.

—காந்திஜீ

கோபாலாச்சாரியார் சென்னை சர்க்காருக்கு எழுதிய குற்றப் பத்திரத்திற்கு விசித்திரமான பதில் கிடைத்திருக்கிறது. "இனிமேல் கீழ்தர உத்தியோகஸ்தர்கள் எவருக்காவது இவ்விதம் தீங்கிழைத்தால் உடனே அந்த இலாகா ஜில்லா மாஜிஸ்திரேட்டிடம் சென்று பரிகாரம் தேடிக்கொள்ளுகிறது"—என்று நமக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார் அப்படியானால் நமது குற்றங் குறைகளை—கீழ்தர சர்க்கார் சிப்பந்திகள் நமக்குக் கொடுக்கும் கஷ்ட நஷ்டங்களை உடனுக்குடன் நிவர்த்தி செய்து கொள்ள முடியுமானால் நாம் சுயராஜ்ய சர்க்காரிலே குடியிருந்த' மாதிரி தான். என்றாலும் தன் கீழ் சிப்பந்திகளைக் கூப்பிட்டு 'இனிமேல் இப்படிச் செய்யாதே" யென்று ஒற்றை வரியில் ஏன் கண்டித்துவிடக் கூடாது? என்னும் போது பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகிறார் என்று ஏற்படுகிறது.

நட்மாடும் இந்தியா

(எய்ச். என். பிரெயில்ஸ் போர்டு)

கடைசியாக இந்தியா லண்டனுக்கு வந்து விட்டது. இந்தியாவின் உண்மையான இந்தியன்—சப்பளங்கூட்டி வெறுந்தரையில் வீற்றிருக்கும் இந்தியன்—குடிசையில் நூற்றுக் கையால் நெய்த முரட்டுத் துப்பட்டியை மூடிக்கொண்டிருக்கும் இந்தியன்—நெருப்புத்துண்டத்தையும் நிமிஷத்தில் உறைபனிக் கட்டியாக்கிவிடும் குளிரையும் நிர்வாணமாக நின்று எதிர்த்துவருகிறார். காம்பீரமான நமது வெஸ்ட் மினிஸ்டர் ஆலயத்திலும்கூட அவனது புனிதமான குரல் எதிரொலிக்கின்றது. வட்டமேஜையும் அவனது மகத்தான பாத்தூளிபட்டு சோபிதமான—வர்ணிக்கமுடியாத பிரபையுடன் பிரகாசிக்கின்றது. அவனது இருக்கையால் அம்மகாநாடும் பூரணமான பிரதிநிதித்துவம் பெற்றுவிட்டது. சென்றவருடம் இராஜ இராஜாக்களும், பிரபலமான வக்கீல்களும், இங்கு வந்து பட்டவர்த்தனமாய் பேசிப்போனார்கள் இந்தியாவின் சிறுபான்மையான நகரங்களைப்பற்றிக் கூறினார்கள். காந்திஜீயின்வரவால் இந்தியாவின் ஏழு லட்சம் கிராமங்களும் குரலெழுப்பியிருக்கின்றன. நாம் முன்னெப்பொழுதும் கேட்டிராத பல சங்கதிகளை அவர் கூறுவார். நம்மில் எவரும் பார்த்திராத கிராமங்களின் கிழிந்த படத்தை மேஜையிலே விரிப்பார், காந்திஜீயின் மகத்தான தெய்வத் தன்மையால் அவரது மிருதுவான ஆனால் உறுதியான—ஹாஸ்யமான—ஆனால் ஆழமான அர்த்தம் பொதிந்த—வார்த்தைகள் அபிஷேகிக்கப் பட்டிருக்கின்றன. மெதுவாகத்தான் பேசுவார்' நாவன்மை படைத்த பிரசங்கிகளின் 'சூழ்ச்சிகளுக்கு அங்கே இடங் கிடையாது. ஒரு பிரமாண்டமான கூட்டத்தில் ஆவேசம்நிறைந்த பெருமிதமான ஜனங்கள் மத்தியில் பேசும்போதும் ஒரு டைப்படிப்பவனுக்கு வாசிப்பது போலவே யிருக்கும்' அவர் இப்பொழுது ஒரு தூதுவராக வந்திருக்கிறார். அவரிடத்தில் நாம் நேர்மையாக நடந்துகொண்டால் மாத்திரம் நிரந்தரமான சமாதானங்காணலாம்' சூழ்ச்சிகளெல்லாம் அவரிடம் செல்லாது, அவரது கட்சியான காங்கிரஸ்தான் இந்தியாவின் எல்லா சபைகளிலும் மஹாபலம் பொருந்தியது. மிதவாதிகள் என்பவர்கள் ஒருசிறு கைப்பிடியாளர்களான உத்தியோக—தொழிற் பற்றுடையவர்கள் காந்திஜீயின் பக்கத்திலேதான் இந்தியாவின் பொது மக்களெல்லாம் சேர்ந்திருக்கின்றனர். பாமரனும்கூட காந்திஜீயிடம் தெய்வீக நம்பிக்கை கொண்டு விட்டான். அவரது நாவசைந்தால் நாடேயசையும் அவர் சமிக்கை செய்தார் அறுபதினாயிரம்பேர் சிறைசென்றார்கள். அவர்கைகாட்டிவிட்டால் நகரங்களெல்லாம் தொழில் நிறுத்தம்செய்து போட்டது போட்டாப்போல் நின்றுவிடும். நான் நகரங்களின் நிச்சப்தமான வீதிகளின் வழியே சென்றிருக்கிறேன், ஒரு கடையின் கதவாவது திறந்து வைக்கப்படக் காணேன்; ஒரு ஆலையாவது புகை கக்கியதில்லை: கிராமங்களைக் கூட குடிபோன ஊர்களாக்கிவிட்டார்கள் வரி மறுத்துவிட்டு ஊரைவிட்டு அருமையாக வளர்த்த மாடு கன்றுகளையும், பிரயாசைப்பட்டுச் செய்த விளைச்சல்களையும் போட்டுவிட்டுவிவசாயிகள் தேசியயாத்திரைபோய்விட்டார்கள். பிரிட்டிஷ் சாமான்கள் விலைப் போகவில்லை. மதியல் கள்ளுக் கடைகளைக் கதவடைத்து விட்டது. முடிவில் இந்திய பொக்கிஷம் வறண்டு லண்டனில் கடன்வாங்கிச் சரிப்படுத்தும்படி யாயிற்று. கண்கூடாகப் பார்த்த எவரும் அச் சனங்களின் ஒற்றுமையையும் திட சங்கல்மத்தையும் சந்தேகிக்க முடியாது. ஒவ்வொரு கிராமவாசியும் கூட காந்தி குல்லாய் தரித்திருந்ததை இந்தக் கண்களாலே நான் கண்டேன். இந்த பருவத்திற்குள் நாம் ஏதாவதொரு முடிவுக்கு வராவிட்டால் அவ்வளவுதான் மறுபடியும் அடக்கமுடியாத சட்டமறுப்பு ஆரம்பித்துவிடும்.

நமது வெள்ளை இராணுவத்திற்கு இந்திய கிராமங்களை இரைப் பொருளாகச் செய்துவருகிறோம் வெள்ளை யானை விழுங்கிவரும் செலவைக் குறைத்து—வெள்ளை சிவில் வர்த்தகத்தாருக்குக் கொடுத்துவரும் சம்பளத்தை யிறக்குவதால் கிராம ஜனங்களைச் சீர்படுத்தி கல்வி பயிலச் செய்வது வறுமைப் பிணியையும் போக்கலாம்.

முடிவாக வெள்ளை இராணுவமானது இந்தியாவில் சந்தேகமில்லாமல் இன்னொரு இரண்டாவது இந்திய கலகத்திற்கு இன்சூர் செய்வதாகும். சுயராஜ்யம் கொடுக்கும் எண்ணம் நமக்கிருந்தால் அந்த ஆபத்து நீங்கிவிடும். இந்தியாவின் வறுமையை ஒரு சிறிதாவது நீக்க வேண்டுமானால்—இந்திய ஜனங்களைக் கூடுமான வரை திருப்தி செய்ய முடியு

ஊதாரி இராஜாக்கள்.

இந்திய சமஸ்தானங்களைப் பரிபாலிக்கும் மன்னர்கள் இந்த சர்க்காரின் உள்ளங்கையில் இஸ்பேட்—ஆடுதன்—கிளாவர்—(இன்னொன்று தெரியாது) இராஜாக்கள் போலிருந்து வருவதால் ஊதாரித் தனமாய் ஏழைக் குடி ஜனங்களிடமிருந்து வசூலித்த வரிப் பணத்தை ஒட்டாஞ் சல்லி மாதிரிச் செலவு செய்கிறார்கள் அதனாலே தான் சுயராஜ்யம் என்றால் பயப்படுகின்றனர். சுயராஜ்ய சர்க்காரிலே இப்படி ஓட்டம் ஓட முடியாது என்பது அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். அவர்கள் இடம் வலமாக ஏழைகளின் பணத்தைச் செலவு செய்யும் பாணியைச் சிறிது பார்ப்போம.

"தாங்கள் பரிபாலிக்கும இராஜ்யத்தைச் சமஸ்தானாதிபர்கள் தங்களது காணியாட்சியென்றும், ஜனங்களைத் தங்கள் சொந்தப் பெட்டிப் பணமென்றும் கருதித் தட்டிச் சொல்ல ஆளில்லையென்ற முறையில் எவருக்கு நாம் கணக்குக் கொடுக்கப் போகிறோம் என்ற நெஞ்சழுத்தத்தில் செலவு செய்கிறார்கள்."

"ஏழைகளின் வரிப் பணத்தை வேட்டை விருந்துகளுக்கும், ஐரோப்பிய விருந்தாளிகளுக் களிக்கும் தோட்டக் கச்சேரி தேக் கச்சேரிகளுக்கும், விபசாரித் தனத்திற்கும், கூத்தாடிச்சிகளுக்கும் ஐரோப்பா அமெரிக்கா முதலிய தூர தேச யாத்திரிகளுக்கும் கேள்வி கேட்பாடில்லாமல் அள்ளி யெறிகிறார்கள்.

"வசூலிக்கப்படும் பணத்தில் சரிபாதிக்கு மேல் அரண்மனைச் செலவிலும், கூத்தியார் செலவிலும் விழுந்தது போக மீதத்திலே தான் தேசீயமான—கல்வி, வைத்தியம், சுகாதாரம் முதலிய உருப்படியான செலவுகளுக்காக மிக மிகக் குறைவாகவே செல்லுகிறது. தோட்டத்திலே பாதி கிணறு என்றாற்போல் வருமபடியில் பெரும் பகுதி லண்டன், பாரீஸ் ஹோட்டல்காரிகளுக்கும், சோபா நாற்காலிகளுக்கும், முகஸ்துதி பேசுவோர்க்கும, தூது செல்லும மாமாக்களுக்கும் சிற்சில சமயம் பெண்டுகளை விலை கொடுத்து வாங்குவதிலும் வாரி வாரி வீசப்படுகிறது."

மானால் அதற்கு ஓரே வழி இராணுவத்தைக் குறைப்பதைத் தவிர வேறில்லை

காந்திஜீயும் இந்தியாவும் வேறல்ல. காந்திஜீயைத் திருப்தி செய்வதால் முழு இந்தியாவையே திருப்தி செய்தவர்களாகிறோம். நடமாடும் இந்தியாவாக காந்திஜீ விளங்குகிறார்.

இதுதானா ஒப்பந்தம?

நீண்டகாலப் போருக்குப் பின்னால்—இனிமேல் இவ் வியக்கத்தை அடக்கிவிட முடியாது என்று கண்டதின் மேல்—ஆயிரக்கணக்கான அவசரச் சட்டங்களை அள்ளி அள்ளி யெறிந்தும ஆயுத பலத்தைக் கை சலிக்கப் பிரயோகித்தும புற்றீசல் போலப் புறப்பட்டுவிட்ட பையன்களையும் பெண்டுகளையும் நில்லென்று சொல்லி நிறுத்திவிட முடியாதென அனுப வார்த்தமாய்ப் பார்த்ததின் பிறகு சபர்மதி சிறைக்குள்ளே கிடந்த கோவணாண்டியை—பக்கிரியை— இராஜ மாளிகைக்கு அழைத்துப் போய் பத்துப் பதினைந்து தினங்கள் வரை இரவும் பகலுமாய் பிரயாசை யெடுத்து முடித்த— ஒப்பந்தம் இது தானா? ஒரு பெரிய ஏகாதிபத்திய சாம்ராஜ்யத்தின் பிரதிநிதியான இர்வின் பிரபுவும் இந்தியாவின் முப்பத்து மூக்கோடி ஜனங்களின் ஏக பிரதிநிதியான காந்திஜீயும தங்கள் தங்கள் ஒற்றைக் கரத்தையும் ஒல்லிக் கையையும் காட்டிவிட்ட உடன்படிக்கை இது தானா? என்றுபலர் சந்தேகிக்கிறார்கள். காந்திஜீயும் ஆங்காங்கு சர்க்கார் அதிகாரிகள் செய்துவந்த ஒப்பந்த மீறிய செயல்களைக் கண்குத்திப் பாமபு போலப் பார்த்து எல்லாவற்றையும குறிப்பிட்டு நீண்டதோர் குற்றப் பத்திரிகை வாசித்தார். என்றாலும் நின்றபாடில்லை. ஆங்காங்கு பல்லிடங்களில் பலர் கைது செய்யப்பட்டு வருகிறார்கள். சாத்வீக முறையில் தலைவர்களின் எச்சரிக்கையான கண்காணிப்பின் கீழ் தொண்டர்கள் செய்து வரும் மறியலையும், பகிஷ்காரத்தையும் குலைத்து உடன்படிக்கைக்கு விரோதமாக் இதுவரை ஆயிரம பேருக்கு அதிகமாகவே சிறைவாய் மடுத்துக் கொண்ட பின்னும் ஒப்பந்தம் இருக்கின்றதா? என்று பலர் கேட்கிறார்கள். இருந்தாலும் காந்திஜீயின் கையெழுத்துக்கு நாம கௌரவமளிக்காதிருக்க முடியுமா? அவருடைய சைகை கிடைக்குமவரை எத்தனை ஆயிரம் பேரைச் சிறைப்படுத்தினாலும், எத்தனை அவசரச் சட்டங்களை உண்டாக்கினாலும் நாம் பொருட்படுத்தக் கூடாது. நம் போக்கில் மறியலை நடத்திச் செல்லுவோம். ஒப்பந்த மீறியவர்களிடம் பேசிக்கொள்ளத் தான் பகவான் காந்திஜீயும், சக்கிரவர்த்தி ஆச்சாரியாரும் இருக்கிறார்களே. அவர்கள் பார்த்துக் கொள்ளுவார்கள், நமக்கு அந்தக் கவலை வேண்டாம்.

லண்டனில் கார்வாலி சிப்பாய்கள்.

தங்கக் கரை (கோல்டு கோஸ்ட்) யிலிருந்து வந்த ஒரு கிறிஸ்தவ நீகிரோவர் கேட்ட கேள்விதான் எல்லாவற்றையும் விட விவேகமானது. இந்தியாவின் சத்தியப் போரை அதி நுட்பமாகப் படித்திருக்கிறாரென்று காந்திஜீ அவருக்கு மதிப்புரை கொடுத்துவிட்டார். அக் கேள்வியையும் அதற்கு பகவான் விடுத்த பதிலையும் பார்ப்போம்:—

நீகிரோ:—"தண்டிப் போலீஸ்காரர்களையும், கிராமாதிகாரிகளையும் இராஜிநாமாச் செய்துவிடும்படி சொன்னீர்கள். உங்கள் பேச்சைக் கேட்டு சர்க்காருக்குச் செய்து கொடுத்திருந்த சத்தியப் பிரமாணத்தையும் பொருட்படுத்தாது அன்றைக்கு கார்வாலி கூர்க்க சிப்பாய்கள் காங்கிரஸ்காரரைச் சுடுவதற்குத் துப்பாக்கியைத் தூக்க மாட்டோமென்று விட்டார்களே அவர்களை விடுவிக்க நீங்கள் ஏன் உங்களது சக்தியை உபயோகிக்கக் கூடாது?"

காந்திஜீ:—இது ஒரு நல்ல விவேகமான கேள்விதான். பத்திரிகைகளை இந் நண்பர் ஊன்றிப் படித்திருக்கிறார். ஆனால் இந்த தத்துவம் எந்தப் புத்தகத்திலும் எழுதப்படவில்லை. புத்தகங்களிலிருந்தும் படித்தறிய முடியாது கிராமாதிகாரிகளையும் போலீஸ் சிப்பந்திகளையும் நான் இராஜீநாமாச் செய்யச் சொல்லிய போது சர்க்கார் பெரிய தப்புச் செய்திருந்தார்கள். மன்னிக்க முடியாத குற்றத்தைச் செய்தார்கள். தப்புச் செய்வதில் பந்தயம் போடவோ, பிரதிஞ்ஞை யெடுத்துக் கொள்ளவோ கூடாது. 50 சிகிரெட்டுகளையும், இரண்டு மூன்று புட்டி கள்ளையும, உணவு உண்பதற்கு முன் ஒரு மனித உயிரையே விழுங்கிவிட வேண்டும் என்று ஆணும் பெண்ணும் சபதம் செய்து கொள்ளுகிறார்களே அந்த மாதிரி யில்லை இச்செய்கை. கிராமாதிகாரியும் போலீஸ்காரனும் வேலையை விட்டுவிடத்தான் வேண்டும். அது அவனது பிரதானமான கடமை. அதைச் செய்யும்படி தான் நானும் சொன்னேன். இந்த ஜனங்கள் தங்களது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் தங்களுக்குமே கொடுமையான அநீதம் புரிந்தார்கள். என்னை நம்பி பலர் எவ்வித முணுமுணுப்புமின்றி சர்க்கார் உத்தியோகத்தைத் தூக்கி யெறிந்து விட்டார்கள். அதற்காக அவர்களிற் பலர் சகிக்கொணாத கஷ்ட நிஷ்டூரங்களுக்கும் ஆளானார்கள். என்றாலும் அவர்கள் செய்த தியாகம் மஹா மகத்தானது. அவர்கள் காட்டிய தேச பக்தி பலருக்கு எடுத்துக் காட்டாய் விளங்குவது. சரி. இனிக் கார்வாலி சிப்பாய்களை யெடுத்துக் கொள்ளுவோம். அவர்கள் தங்களது மேல் உத்தியோகஸ்தர்களிடமிருந்து கட்டளை பெற்றார்கள். அதை நான் ஹிம்சை யென்று எப்பொழுதும் சொல்லியதில்லை. அதுவும் தேசபக்திதான். அவர்கள் நிர்தாக்ஷண்யமாய் சிறைப்படுத்தப் பட்டார்கள். இராணுவக் கட்டுப்பாட்டை மீறியதாகச் சிலர் இராணுவச் சட்டத்தின் கீழ் கொடூரமாகத் தண்டிக்கப்பட்டார்கள். என்றாலும் அவர்கள் தங்களது நாட்டானைச் சுட மறுத்த தீரத்தையும் கஷ்டத்தைச் சகிக்கும் வீரத்தையும் போற்றாதிருக்கமுடியுமா? அவர்களுக்காக இரக்கங்காட்டுமாறு சர்க்காரை நான் கெஞ்சிக்கேட்பேன்; ஆனால் சட்டமறுப்போன் என்ற ஹோதாவில் அதை நான் ஒருக்காலும் செய்யமுடியாது. இப்பொழுதிருக்கும் இச் சர்க்கார் மாறி காங்கிரஸின் கையிலே நாடுகிடைத்துவிட்டால் நாளைக்கே அவர்களைக் கதவைத்திறந்து வெளியில் விட்டுவிடுவோம் அவர்களது தெய்வீக நோக்கத்தையும் உன்னதமான கொள்கையையும தீர வீரச் செயல்களையும் விவாதிப்பதற்கிடமில்லை. யாதலால் எவ்வித ஆட்சேபம எழுவதற்கும் காரணமில்லை. அவர்களை விடுதலை செய்வதற்காக நான் முயற்சி யெடுத்துக் கொள்ள வேண்டுமென்று என்னுட்டார் பலர் என்னை வற்புறுத்தினார்கள். நான் "கூடாது" என்று கூறிவிட்டேன் அத்தகைய சிப்பாய்கள் இராணுவக் கட்டுப்பாட்டை மீற வேண்டுமென்ற நிர்ப்பந்தம் காங்கிரஸ் அகராதியிலே கிடையாது. காங்கிரஸ் அப்பேர்ப்பட்ட கட்டளை பிறப்பித்ததில்லை. அவர்கள் சட்ட மறுப்புச் செய்தவர்கள் தொகுதியிலே கணக்கிடப்பட மாட்டார்கள். ஒவ்வொரு சட்ட மறுப்புக்காரனும் தேச பக்தனாகிவிட மாட்டான். அதேபோல் ஒவ்வொரு தேச பக்தனும் சட்டமறுப்புக்காரனாகிவிட முடியாது.

காந்திஜீயின் கதர் வேல்

காந்திஜீயின் கதர் வேல் ஆறுயிரம் மைல் களுக் கப்பாலும் பாய்ந்து பதினுயிரம், லட்சக் கணக்கான ஜனங்களைப் பசியும் பட்டினியு மாய்க் கிடத்திவிட்டது. என்றாலும் அந்த நிர்பாக்கிய மக்கள் எய்தவனை நோக்கவில்லை. அவனுடன் அத்தியந்த அன்பு கொண்டு அவ னிடமே சிகிச்சை பெற விரும்புகின்றனர். காந்திஜீ லங்காஷையர் சென்றிருந்தபோது அந்த ஜனங்கள் அவரை தெய்வமாகக் கொண் டாடினார்கள். ஒவ்வொருவனும் அவரிடம் தனது முறையீட்டுகளைக் குறை யிரந்து கூ றிக்கொண்டான். அவைகளிற் சிலவற்றை ஈண்டு தருகிறோம்.—

"ஆனால் இதோ இந்த ஆலைகளைப் பா ருங்கள். சில தினங்களுக்கு முன்னதாக ஒய்வு ஒழிவில்லாமல் இரவு பகலாய் இருபத்தி நான்கு மணி நேரமும் சிண்டைப் பிடித்துக் கொண்டிருந்தவை இப்பொழுது உயிரற்றுக் கிடக்கின்றன. பிளாக் பர்ன், டார்வென், மஹா ஹார்வுட், ஆக்ரிண்டன் முதலிய பல இடங்களில் இயந்திரங்க ளெல்லாம் துருப் பிடித்துவிட்டன. கிரேட் ஹார்வுட்டில் மாத் திரம் 17,436 தரிகள் தூங்குகின்றன"—என் றான் ஒருவன்.

"நூற்றல் தொழில் கல்வியை நாங்கள் பிரத்தியேகமாகக் கலாசாலைகளிலே கற்றோம். இந்தியாவுக்காக நவ நவமான வஸ்திரங்கள் செய்தோம். இப்பொழுதும் அவ்வாறே செய்து ஏன் இந்தியர்வையும் இங்கிலாந்தை யும் நட்புறவால் பிணைத்துவிட லாகாது?"— என்றது இன்னொரு உருவம்.

"1897—99 ம் வருடங்களில் இந்தியாவி லேற்பட்ட பஞ்சத்திற்கு நாங்கள் உதவி செய் தோம் ஏழைகளிட மிருந்துகூட வசூல் செய்து இந்தியருக் கனுப்பினோம். தாராள ஸ்பாவமாகவே நாங்கள் இருந்து வருகிறோம் பின் ஏன் நீங்கள் எங்களை பஹிஷ்கரிக்க வே ண்டும்'?—என்றான் மற்றொரு தொழிலாளி.

"நான் பருத்தித் தொழிலாளி. 40 வரு டங்களாக நூற்றல் தொழில் செய்து வருகி றேன். இப்பொழுது வேலையில்லை. ஏழை யாகிவிட்டேன் என்ற கவலை யெனக்கில்லை. எனது சுய மதிப்புப் போய்விட்டது. வாழ்க் கையில் வெறுப்புத் தட்டிவிட்டது. வேலை யில்லாதவர் கூட்டத்திலே நானும் ஒருவனுகி விட்டேனே என்று வருந்துகிறேன். பூமிக்கு பாரமாய் இருக்க எனக்கு இஷ்டமில்லை" எ னச் சொன்னான் வேறொருவன்,

இது தான் காந்திஜீயின் கதிர் வேலின்— கை ராட்டையின் சக்தி.

"அம்பட்ட மந்திரி"

இங்கிலாந்திலே தேர்தல் நாடகம் நடந் துவருகிறது. புதுப் புது நடிகர்க ளெல்லாம் தோன்றுகிறார்கள். ஒருவன் வருகிறான் "வா னத்தை வில்லாய் வளைத்து விடுவேன்' என் கிறான். இன்னொருவன் 'பிச்சைக்காரர்களை யெல்லாம் குபேரர்களாக்கி விடுகிறேன்" என்று வீசுகிறேன். அப்புறம் ஒருவன் "இங் கிலாந்திலே தங்கப் பஞ்சம் வந்துவிட்டது எனக்கு இரஸவாதம தெரியும் இரும்புத் துண்டத்தையும் கரிக் கட்டிகளையும் தங்கக் கட்டிக ளாக்கிவிடுவேன்" என்று வாய் வலை விரிக்கிறான். இப்படி யெல்லாம் பார்லிமெ ண்டு ஸ்தானத்திற்காக ஓட்டைத் தூக்கிக் கொண்டு குடுமியைப் பிடித்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாய்த் திரிகிறார்கள். நம்ம ஊரா யிருந்தால் இரண்டொரு சல்லிகளை வீசி யெறிந்து விட்டு குசவர் வீடுகளிலே நிறைய உடைந்ததும் ஓட்டையும் சாட்டையுமாக ஓட்டுகளை நிறையப் பொறுக்கிவிடலாம். இங் கிலாந்திலே குசவர்க ளில்லாததால் அது மு டியவில்லை. இருந்தாலும் ஓட்டை கூட்டிப்பொ றுக்கியாக வேண்டும், போட்டிகளும் கொஞ்ச நஞ்சமல்ல' ஒரு ஸ்தானத்திற்கு ஒன்பது நூறு பேர் அபேக்ஷகர்கள் முளைத்துவிடுகி றார்கள். இந்தக் கும்பலிலே க்ஷவரத் தொ ழில் செய்யும் ஒருவர் அடைப்பப் பையோ டும் வந்தார். தொழிலாளி யாகையால் தொ ழில் கட்சி அபேட்சகராக நிற்கிறார் இந்தியா மந்திரி ஸர் சாமுவேல் ஹோரோடு போட்டி போடுகிறார். அவரை மழுங்க மொட்டை யடித்து விடுவதாகக் கத்தியைத் தீட்டிவிட் டார். "நான் பாடுபடுவதெல்லாம் ஸர் ஹோ ரை அடியோடு மொட்டையடித்து அனுப்புவ தற்காகத் தான்" என்று கூறினார். ஸர் ஹோ ரும் தம்பிடி கொடுக்காமல் மொட்டை யடித் துக்கொள்ள விரும்புவதில் நஷ்ட மொன்று மில்லை. இந்தியாவும் பெருத்த லாப மடை யும். அம்பட்ட அபேக்ஷகர் மந்திரியாக ஜெ யம்பெற வேண்டுமென்று நாமெல்லாம் பிரா ர்த்தனை செய்வோம்.

ஊரை யெரித்துவிடாதே குரங்கே!

கை நொண்டிக்கும் காது மூளிக்கும் கலியாணம் நடந்ததாம். மணப் பெண் முக்காடு போட்டு மூளிக் காதை மூடி யிருந்தாள். மண மகன் குறைக் கையை சால்வையால் மறைத்திருந்தான். பாப்பான் கட்டியோ நாத்தி கட்டியோ தாலி கட்டி யாயிற்று. பள்ளி யறைப் புகுந்ததும் ; மணமகள் மூளிக் காதைக் காட்டி 'எய்த்துவிட்டேன்' என்றாள். மணமகன் "இங்கென்ன வாழுதோ" வென்று குறைக் கையை நீட்டிக் காட்டினான். அந்தமாதிரி யொரு ஒப்பந்த நாடகம் காங்கிரஸுக்கும் சர்க்காருக்கும் நடந்துமுடிந்து சாத்விக மறியலும் பகிஷ்காரமும் நாடெல்லாம் நடக்கிறது. ஏமாந்து போன சர்க்கார் ஒப்பந்தத்தை மீறிய செயல் பல செய்து வருகின்றது. கோவில்பட்டி கழுகுமலை முதலிய இடங்களில் மும்முறமான மறியல் நடக்கின்றதை நாமறிவோம். போலீஸார் மூஞ்சிக்கு முன்னால் சாத்விகத் தொண்டர்கள் அன்னிய துணிக்கும், கள்ளரக்கனுக்கும் சாவுமணி யடித்து வருகிறார்கள். பூஜை மணி கேட்டு உள்ளூர் வாசிகளும் கடைகாரர்களும் அரிசி பருப்பு வகையரு சாமான்களை யெல்லாம் தொண்டர்களுக்கு வயிற்றுப் பூஜைப் பொருளாக அள்ளி விடுகிறார்கள். இது போலீஸாருக்குப் பொறுக்கவில்லை. "உன் சொத்தை இன்னொருவருக் கென்னமாய்த் தானமிடலா" மென்று சீறி விழுகிறார்கள். ஆள்வார் தாஸ ரென்றொரு சப் இன்ஸ்பெக்டர்—குட்டித் தேவதை. நல்ல பெயர். ஆனால் காங்கிரஸ் ஆள்வார்களுக்கு என்னமாய்த் தான மிடலா மென்று இந்த ஆள்வார் கேட்டது. "அட கடைகாரப் பயல்களே! கொழுத்துப் போனீர்களா? காங்கிரஸ்காரப் பயல்களுக்கு அரிசியும் பருப்பும் அள்ளிக்கொடுக்க உங்களுக்கு அத்தனை துணிச்சலா? சிந்தாமணியிலே போலீஸ்காரர் சுட்ட சூடு தெரியுமா? உஷார் ஊரையே சுட்டுக் கொளுத்தி விடுவேன்"—என்று பாய்ந்தாராம். அன்று அனுமார் ஆள்வார் இலங்கையை கொளுத்தியது போல இந்த ஆள்வார் சாமி கழுகு மலையைக் கொளுத்தா திருக்குமா? கழுகு மலையிலே சக்தி வேல் இருக்கிறதே அது அவருக்கு ஞானோபதேசம் செய்யட்டும். காங்கிரஸ் ஆள்வார்களைக் காக்கட்டும்.

பிள்ளையாரைப் பிடித்த சனி.

(திரு. ஜே. ஸி. குமரப்பா)

பிள்ளையாரைப் பிடித்த சனி அரச மரத்தையும் ஆட்டி யலைத்தது போல இங்கிலாந்தின் ஸ்டர்லிங்கைப் பிடித்த சனி இந்தியாவின் ரூபாயையும் கட்டிப் பிடித்திருக்கிறது. தங்கத்தை விட்டு தாலி யறுத்துக் கொண்ட முண்டை ஸ்டர்லிங்கை எத்தனை காலந்தான் கட்டி யழலாம்? இந்தியாவும் இங்கிலாந்தும் கழுத்தை கட்டிக்கொண்டு வீழ்வதை விட சுயேச்சை இந்தியா தனக்கெனத் தனி நாணயம்வைத்துக்கொள்வதுதான் நலம். இதுவரை வெள்ளிக்கும் தங்கத்திற்கும் பகிரங்கமா யில்லாவிட்டாலும் அந்தரங்கமாக வாவது கொஞ்ச நஞ்சம் ஒட்டியிருந்தது. இப்போது அதுவும் அற்றுப்போய்விட்டது. ஒரு அரசாங்கம் இராஜ நீதிப்படி—அதன் பெயருக் கேற்ப நடந்துகொள்வ தன்மையானால் அதன் முதற் கடமை நாட்டின் நாணயத்தை நிரந்தரமான நிலைமையி லமைத்துக்கொள்ள வேண்டும். 5 மாதங்களுக்கு முன்னதாக சர்க்கார் நாணயத்தை 38 கோடியாக வரையறை செய்த லவசியமெனக் கண்டவர்கள் திடீரென நிலையற்ற இந்திய நாணயத்தை தங்க விலை மதிப்பில்லாத ஓர் அன்னிய நாணயத்துடன் பிணைப்பதின் அர்த்த மென்னை?

இந்தியா ஒரு கடன்கார நாடு. விளைச்சற் குறைச்சலாலும், தொழி லின்மையாலும் வருமான மற்றுக் கிடக்கின்றது. கடன் தொல்லை யதிகம். வட்டிக்குக் கட்டாமல் விஷங் கட்டி யேறுவது போல் கடன் தொகை பெருகி வருகிறது. வரிப் பளுவைத் தாங்க மாட்டாமல் கோடிக் கணக்கான வாயில்லாப் பூச்சிகள் வாடி வதங்குகிறார்கள். நாட்டின் நலத்திற்கேற்ற நாணயத்தையும் நாணய மாற்ற விகிதத்தையும் நிர்ணயித்துக் கொள்ளும் உரிமை நாட்டு மக்களிட மிருக்கவேண்டுமென காங்கிரஸ் தீர்மானித்தது நியாயமேயாகும். இந்தியாவுக்கென தனி நாணயம் இருக்க வேண்டும். அன்னிய நாணயத்துடன் கட்டுண்டு கிடப்பதை இனியும் விட்டுக்கொண்டிருக்க முடியாது.

—யங் இந்தியா

Printed & Published By A. V, Sellam Pillay at the Desopakari Press, 210, 36th Street, Rangoon.

அரையணா. பதிவு எண் 245

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை வாரம் இருமுறை

மலர் 9 | இரங்கோன், 1—11—31 ஞாயிறு | இதழ் 27

போ போ! வா வா!

பிரிவுக்கும் வரவுக்கும் உபசாரம் செய்வது என்று இரண்டு வகை உபசாரங்கள் உலக சம்பிரதாயங்களாகி விட்டன? அவ்வழிபற்றி நாமும் நமது சாண் பத்திரிகையில் தனித் தனியாக எழுதி இடத்தை வீணாக்க விரும்பாமல் ஒருமிக்க இரண்டையும் சேர்த்து எழுதும்படியாயிற்று. நம்மையும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய முழுதையும் ஏகாதிபத்தியமாய் ஆளும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் ஆதிக்கத்திலிருந்த ஒரு கட்சியார் அரசிழந்துபோனதற்காக அவர்களுக்கு ஒரு பிரிவுபசாரமும், இனிமேல் நம்மை ஏகபோகமாய்க் கட்டியாள விருக்கும் புதுக் கட்சியாரை வரவேற்குமுகமாக ஒரு வரவேற்பு உபசாரமும் அளிப்பது நமது கடமையாகும். ஆயிரமிருந்தாலும் நம்மை ஆளுபவர்களல்லவா? அவர்களை மறந்துவிட முடியுமா? இரண்டு வருட ஆட்சியில் நம்மிடை விட்டுப்போன தொழிற்கட்சியார் செய்த சரித்திர இலக்கான காரியங்களை எந்த இந்தியன்தான் மறந்திருப்பான்? நமது மாது சிரோண்மணிகளையும், புத்திர ரத்தினங்களையும் குறுந்தடிகொண்டடித்த தழும்பு இன்னும் மாறவில்லை. நமது விவசாயிகளை வீடு விட்டோட்டியது உலகத்தில் பயிர்த்தொழில் இருக்கும் வரை ஞாபகமிருக்கவே செய்யும். கல்வியால், நாகரீகத்தால் உயர்ந்த 80,000–தேசாபிமானிகளைச் சிறைப்படுத்தியதற்காக அக்கட்சியாருக்கு நாம் நன்றி செலுத்தாவிட்டால் நாகரீக மக்களோடு சேர்த்தியாவோமா? இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையே வகுப்பு துவேஷத்தை வளர்த்து இரு சகோதரர்களுக்குள் சிண்டுபிடி சண்டையை மூட்டிவிட்ட புகழ் தொழிற்கட்சியாரின் தனிப்பெரும் புகழைக் குறிப்பதன்றோ? பிரித்தாளுங் கொள்கை பிரிட்டிஷ் இராஜதந்திரிகளின் பிறப்புரிமையேயாயினும் நடைமுறை பஹிரங்கமாய் நடத்திக் காட்டியவர்கள் தொழிற்கட்சித் தலைவர்களேயாவர். என்றாலும் தொழிற்கட்சிக்கு பிரிவுபசாரம் செய்கின்றோமெனினும் அக்கட்சித் தலைவரான ஸ்ரீ மக்தனால்டுக்கு நாம் உபசாரஞ்செய்ய முடியாமைக்குப் பெரிதும் வருந்துகிறோம். ஏனெனில் எந்தக் கட்சியின் ஆதரவைக்கொண்டு—எந்தக் கட்சியின் பலத்தால் ஸ்ரீ மக்தனால்டு மந்திரியாகும்படியாயிற்றோ அக்கட்சியை வஞ்சித்துக் கைவிட்டுவிட்டு அடிக்கடி நிறம் மாறும் பச்சோந்தி போல மாறி வேறு ஒரு புதுக் கட்சியை ஸ்தாபித்து அதன் தலைவராகவும் ஆகிவிட்டார். ஆகவே அவரைப்பற்றி அதிகம் பேசவேண்டியதில்லை. சரி. போனவர்களைப் போவென்று கூறியாயிற்று. இனி வந்தவர்களை வாவென்றழைப்போம். இப்பொழுது தேர்தலில் வெற்றிபெற்று நாடாளும் பொறுப்பேற்றுள்ள தேசியக் கட்சியென்பது ஒரு நவதானியக் கோத்திரம்; பலபட்டடைக் கூட்டம் இரண்டு மூன்று கட்சிகள் சேர்ந்த

தொடர்ச்சி 8 ம் பக்கம் பார்க்க-

பிரிட்டனே! இது உனக்கு.

இந்தியப் பாராளுமன்றமான காங்கரஸ் கடந்த ஆண்டு சுதந்தரப் போர் தொடுத்தது. இந்திய மக்கள் சொல்லொண்ணு கஷ்ட நிஷ்டூரங்களடைந்தனர். இறுதியில் தில்லி ஒப்பந்தம்—போர் நிறுத்தம் ஏற்பட்டது. கதையை வளர்ப்பானேன்? இந்தியத் தெய்வம் கப்பலேறும்வரை இன்னல்மேல் இன்னலேற்பட்டது. இறுதியில் சாந்தி கிழவன் கப்பலேறினர், உன்னை அணைந்தார். நவநாகரீகத்தில் உச்ச நிலைவகிக்கும் நீ அவருடைய மெல்லிய எலும்புந் தோலுமான பிச்சைக்கோலங் கண்டு ஒருவாறு மனந்தேறினாய்; நடித்தாய். அதன் உண்மையை இந்தியன் அறிவான். "அவன் கிழப்பிணம்—காட்டுமிராண்டி—அவனை ஓர் தக்க வாயில் காப்போனாக வைத்துககொள்ளலாம்" எனக் கருதினாய். ஆனால் அவனோ கிழவனே ஆயினும் ஆண்மை நாட்டவனன்றோ? ஆண்மையற்றவர்களென பேடிகளால் கருதப்படும் பெண் தெய்வத்தின் புத்திரனன்றோ? ஆகையால் பெண் ஆண்மையைவிட ஆண் ஆண்மையுடன் விளங்குகிறான். அவனை எவரும் ஏமாற்ற முடியாது. அவ்விதம் ஏமாறுவதாயிருந்தால்—முப்பத்து முக்கோடி மக்களுக்கு ஏக—உண்மையான பிரதிநிதித்துவம் வாய்ந்த காங்கிரஸின் ஒரே பிரதிநிதியாக அவனை அனுப்பியிருப்போமா? இருக்கட்டும். வந்தான் கிழவனேயாயினும் உன் ஜாதிக் குணத்தின்படி வரவேற்றாய். நினைத்தார் இந்தியர் தங்கள் பூர்வீகப்படி. ஆனால்! ஆனால்? இப்பொழுதோ அக் கிழவனுடன் வந்த வகுப்புவாத மாப்பிள்ளைகள் தடசித்தமுடன் விளங்குவதாக நினைந்து ஆண்மையுள்ள புருஷனை அலட்சியஞ்செய்ய நினைக்கிறாய். ஒரு வீட்டிற்கோ அல்லது தேசத்திற்கோ துரோகஞ் செய்பவன் உண்மையில் பேடியிலும் பேடியாவான். அவனை நம்பி எவரும் மோசம் போவதற்கில்லை, இருப்பினும் நீயா உன் மதத்தால்—திமிர் கொண்டு உண்மை ஆணவமுடையவனை அலட்சியஞ்செய்து சமூகவாதிகளை கைக்குள் போட்டுக்கொள்ள முன்வந்திருக்கிறாய். உன் ஜம்பம் பலிக்காது! நீ உண்மையில்—சத்தியமாய் ஏமாறுவாய். அதன் பின் கிழவன் நீ உன் தாலியை அறுத்துவிட வேண்டியதே. நீ முண்டை ஆவாய். அதை நீ விரும்புகிறாயா? இந்தியாவின தொடர்பை அறுத்துக்

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்

அழிய அதிக நேரமில்லை

சமீபத்தில் நடந்த இங்கிலாந்து தேர்தலில் தேசிய கன்ஸர்வேட்டிவ் கட்சி அபேக்ஷகராய் நின்ற ஸ்ரீ பிரண்டென் பிராக்கென் என்பவரை ஆதரித்த ஸ்ரீ எட்மண்ட் ஹாம்ஸ்வொர்த் என்பவர் கூறியதாவது:— நமது நாட்டிலாகட்டும் இல்லை வெளி தேசங்களிலாகட்டும் நமது செல்வாக்கை யிழந்துவிட்டோம். இந்தியாவில் நமது ஆட்சி முறை பிறர் குறை கூறும்படியாகிவிட்டது. தீவிரவாதிகளுக்கு நாம் இடங் கொடுத்துவிட்டோம். அதனாலே தான் நமது சிப்பாய்களின் கையிருப்புச் செலாவணி யாகவில்லை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அழிவு அதிக தூரத்திலில்லை. எப்பொழுதும் போல் இந்தியாவில் நமது ஆட்சி முறை பல ஹீனமாய் இத்துப்போய் தொட்டவுடன் ஒடிந்துபோகக்கூடிய நிலைமையில் நிற்பதுடன் முட்டாள்தனமான தாகவும் இருக்கிறது. தங்க விலை நிர்ணயத்தை நாம் கை விட்டுவிட்டதால் ஏற்பட்ட அவமானத்தை விட அதிகமான அவமானத்தை நாம் அடைந்துவிட்டோம்.

—பம்பாய் கிரானிக்கிள்.

கொள்ள ஒருப்படுவாயா? ஒருப்படாய் என்பதை நான் மட்டுமல்ல உலகமே அறியும். ஆகையால் இந்நிலைமையில் நீ செய்யவேண்டுவதென்ன? காந்திக் கிழவனுடன் ஒத்துப்போகவேண்டும். அவனைக் கைவசப்படுத்தி இன்புறச் செய்யவேண்டும். அப்பொழுதே உனக்கு மீட்சி; பதிவிரதை என்ற பேச்சு. அன்றேல் மீட்சியில்லை. பதிவிரதா தர்மத்திற்கு பங்கமேற்பட்டுவிடும். இந்தியனோ கிடந்தான் அடிமையாய்; விழித்தான் உண்மை நிலை ஓர்ந்து; எழுந்தான் ஆண்மையுடன்; தொடுத்தான் அறப்போர். அல்லியைப்போல் மடங்கினும் இனியும் அர்ஜுனன் முன் அல்லியைப்போல் அமைவாய் இந்தியன் முனை. நீ க்ஷேமமுறுவாய். அன்றேல்! அன்றேல்? நான் கூறேன். உலகமறியும். பிரிட்டனே! எது உனக்கு விருப்பம்?

"நான்தான்"

கடல் கடந்த மணியோசை

அஹிம்ஸா தத்துவத்தை காந்திஜீ ரேடியோவில் பேசினாரோ இல்லையோ அமெரிக்காவிலுள்ள ஜனங்களை காந்திப் பைத்தியம் பலமாய்ப் பிடித்துக்கொண்டுவிட்டது. அது பற்றி ஒரு நிருபர் எழுதும்பொழுது 'உங்களது ரேடியோச் செய்தி எத்தனையோ ஆயிரக் கணக்கான கடலைக் கடந்து மணியோசை போல எங்கள் காதுகளை பட்டது. நன்றாய்த் தெளிவாய்க் கேட்டோம். உங்களுடைய தெய்வீக வாக்குக்கு நாங்கள் என்ன காணிக்கை செலுத்தினால் ஈடாகும்? நாங்கள் சமாதானத்திற்காக பாடிப் பஜித்து கடவுளை வணங்குகிறோம். ஆனால் தயார் செய்வதெல்லாம் போர்: உங்களிடமிருந்து ஒரேயொரு வரம் வேண்டும். "இரத்தம் சிந்துவதல் உலகம் வெறுப்படைந்துவிட்டது" என்று கூறினீர்களே அந்த வாக்கியத்தை உங்கள் கைப்பட எழுதிக் கையொப்பமும் வைத்தனுப்பும்படி பிரார்த்திக்கின்றேன்: ஏனெனில் உலக மஹா யுத்த நிறுத்த விழாவுக்கு முன் தினதில் அதாவது நவம்பர் 8-ந்தேதி ஞாயிற்றுக் கிழமை காலண்டரில் அப்படியே பிரசுரிக்க விரும்புகிறேன்" என்று கூறுகிறார்.

அதேபோல் காந்திஜீயை எல்லா நாட்டாருமே நேசிக்கின்றனர் தெய்வமாகக் கொண்டாடுகின்றனர் அமெரிக்காவிலிருந்து காந்திஜீக்கு வந்துள்ள கடிதங்கள் கணக்கிலடங்காது. அயர்லாந்து ஜெர்மனி, டென்மார்க், வியன்னா, ஸ்பெயின் முதலிய நாடுகளிலிருந்தெல்லாம் அழைப்புகள் வந்து குவிந்தவண்ணமாயிருக்கின்றன. இந் நாடுகளை யெல்லாம் காந்திஜீ திருப்திசெய்யமுடியுமா? ஒரு நிமிஷங்கூட விருதாவாக்கப் படாமல் காந்திஜி இந்தியா வந்து சேர விரும்புகிறார். வட்டமேஜையால் எதுவும் பலனடைய முடியுமானால் அது இந்தியாவிலே யன்றி இங்கிலாந்தி லல்ல. லண்டனிலே வெறும் வரய்ப் பந்தல் போட்டார்கள். இந்தியாவின் வறுமைவெயிலைத் தாங்க உண்மையான பந்தல் இந்தியாவிலே போடவேண்டும். அப் பந்தலை நிர்மாணிக்கும் தச்சன் காந்திஜீயே யாவர். அவரன்றி இந்தியாவில் அணுவும் அசையாது' அவரது நாவசைந்தால் நாடே யசையும்:

—யங் இந்தியா-

சரணடைய இதுவே சமயம்

காந்திஜியைப் பற்றியும் அவரது புனிதமான அஹிம்ஸா முறை குறித்தும் நியூயார்க்கில் பிரசுரமாகும் நேஷன் என்னும் பத்திரிகை பிரிட்டனுக்குப் புத்தி கூறி விடுக்கும் கட்டுரையாவது:—

"காந்திஜி லண்டனுக்கு வந்தார். பிரிட்டிஷ் குளிரைக்கூட நிர்வாணமாக் எதிர்த்து நிற்கிறார். செப்டம்பர் 13-ந்தேதி முதன் முதலாக ரேடியோவில் பேசும்போது அறிமுகமற்ற அநேக கோடி மக்களுக்குச் சாந்தமாக இந்தியாவின் அஹிம்ஸாத்துவத்தை விளக்குவது வருமாது:—

எனது நாடு சுதந்திரமடைய நாட்செல்லுமானால் நான் பொறுமையுடன் காத்திருப்பேன். அதற்காக இரத்தஞ் சிநதி நாட்டை மீட்க நான் விரும்பவே மாட்டேன். இடைவிடாத எனது முப்பது வருஷத்திய அரசியல் அனுபவத்தை நான் கூறுவதானால் உலகம் இரத்தஞ் சிந்துவதை அடியோடு வெறுத்துவிட்டது என்றே சொல்லுவேன். உலகம் ஒரு நூதன வழியில் ஆசை கொண்டுள்ளது. புராதீன காலந் தொட்டு நாகரிக பூமியாய் விளங்கும் இந்தியா தான் அவ் வழியை உலகிற்களிக்கும் என்று தற்பெருமையுடன் காம்பீரமாய் கூறிக் கொள்ளுகிறேன்."

யாராவது ஒருவான தூதன் வந்து பிரிட்டிஷ் இராஜ தந்திரிகளின் மனதை வயப்படுத்தி அவர்கள் காதுக்குள் "இந்தியாவிடம் சரணடைய இங்கிலாந்துக்கு இதுவே சமயம். இது தப்பினால் முடியாது" என்று கூறுமானால் நலமாயிருக்கும். ஏனெனில் காந்திஜீயிருந்து நடத்தும்வரை யாகிலும், இந்தியாவின் அஹிம்ஸை யியக்கம் எத்தகைய சாம்ராஜ்யங்களாலும் எதிர்த்து நின்று ஈடு கொடுக்க முடியாததா யிருக்கிறது. அசைவற்ற--உயிரில்லாத பொருள்களைப் போல காந்திஜீயின் சத்தியாக்கிரஹ சைன்யம் தங்களுக்கிழைக்கப்படும் கொடூரமான தண்டனைகளை மூணு முணுக்காமல்—பின்வாங்காமல்—எதிரிக்கு எவ்வித இடைஞ்சலும் விளைவிக்காமல் தனக்குத் தானே தாங்கிக் கொள்ளுவதென்றால் என்ன சொல்லுவது. காந்திஜீயும் அவரைப் பின்பற்றுபவர்களும் அஹிம்ஸை வழி விட்டுக் கொஞ்சங்கூட விலகாமல் தங்களது காரியத்தைச் சாதிக்கவே செய்வர். அவர்க

இந்தியாவில் வெள்ளை இராணுவம்

இத் தலைப்புச் சம்பந்தமாக திரு. எய்ச். என். பிரெயில்போர்டு கேட்ட கேள்விகளும் காந்திஜீ விடுத்த பதிலும் பின் வருமாறு:—

கே:—உப்பு வரியை ரத்துச் செய்துவிட்டால் அதனாலேற்படும் வருமானக் குறைவை எவ்வாறு ஈடு செய்யலாம்?

பதி:—உப்பு ஒரு அற்ப விஷயம். கலால் வருமானந்தான் அதிகம் பாதிக்கக்கூடிய விஷயம் அதனால் விழும் துண்டைப் பூர்த்தி செய்வதற்கு இராணுவச் செலவைக் குறைப்பதைத் தவிற வேறு வழியில்லை. இராணுவம் தான் எங்களை ஊணிருக்க உயிரை வாங்குகிறது இதற்கு ஒரு முடிவு ஏற்படவேண்டும்.

கே:—அப்படியானால் வெள்ளை இராணுவத்தை அடியோடு எடுத்துவிட விரும்புகிறீர்களா?

பதி:—ஆம்: அப்படித்தான்.

கே:—ஐ. ஸி. எஸ். வர்க்கத்தாரையும் இராணுவத்துடன் சேர்த்துப் பேசுகிறீர்களோ?

பதி:—நாங்கள் சுமக்கவேண்டிய பெருஞ் சுமையில் அது ஒரு பகுதி. சர்க்கார் வருமானத்தின் பெரும் பாகத்தை இச் செல்லப் பிள்ளைகள் சாப்பிடுகிறார்கள். அவர்கள் வாங்கும் அபரிமிதமான சம்பளம் எந்தக் கணக்கின்மேல் கொடுக்கப்படுகிறதோ தெரியவில்லை. அவர்களது சொந்த ஊரில் வாழுவதைவிட ஆயிரம் மடங்கு ஆடம்பரமாக இந்தியாவில் வாழுகிறார்கள்.

கே:—நாடு தாண்டி நாடு வந்து ஒத்துக்கொள்ளாத உஷ்ணத்தைத் தாங்குகிறார்களல்லவா?

பதி:—இப்பொழுது அவ்வாறில்லை, சமா நிரப் போக்கு வரத்துக்கள் அக் குறையை விர்த்தி செய்துவிட்டன. வாரத்தில் இரண்டு முறை தபால் கிடைக்கிறது. சதா சர்வகாலமும் இங்கிலாந்திலுள்ள தனது குடும்பத்தினருடன் கடித சம்பந்தம் வைத்துக்கொள்ளலாம். உஷ்ணத்துக்கு மலைகளிருக்கின்றன, அங்கு சென்று சுகமாகக் காலங்கழிக்கின்றார்கள்: இதையெல்லாம் அவர்கள் இந்தியர்களாக இருந்துகொண்டு செய்தால் நாங்கள் வரவேற்போம் ஆனால் அவர்கள் இந்தியர்களாக விரும்புகிறதில்லை.

கே:—இந்திய இராணுவத்தின்மீது இந்தியர்களுக்கு அதிகாரம் இருப்பது, இராணுவச் செலவைக் குறைப்பது ஆக இரண்டு பிரச்னைகளையும் தாங்கள் வற்புறுத்துவீர்களா?

பதி:—முதலாவது எனக்கு இராணுவ நிர்வாகந்தான்:

பிரே:—இராணுவமில்லாவிட்டால் ஒரு நாட்டுக்கு ஆணவமில்லையல்லா?

காந்தி:—இராணுவம் எனக்கு வேண்டும். பத்தான்களிடமிருந்து எங்களைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக பிரிட்டிஷ் இராணுவம் இருந்ததாகு வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் அத்தகைய பாதுகாப்பு என்றால் வேண்டவே வேண்டாம் என்போக்கில் நான் போவதற்கு நான் சுயேச்சையிலிருக்கவேண்டும். அவர்களை யெதிர்த்துச் சண்டை போடுவதோ இல்லை சமாதானப்படுத்துவதோ அது என்னிஷ்டத்தைப் பொறுத்ததாயிருக்க வேண்டும். சில காலம்வரை வெள்ளை இராணுவம் இந்தியாவில் இருப்பதற்கு நாங்கள் இணங்குவோம். ஆனால் டாமிகளும் டோனிகளும் இந்தியர்களின் கீழ் இருக்க இஷ்டப்படமாட்டார்கள்.

பிரெ:—அவர்களது சம்மதமில்லாமல் அவ்வாறு மாற்றுவது கூடாது. (காந்திஜீ தலையை அசைத்துக்கொள்ளுகின்றார்.) என்றாலும் அநேகர் இணக்கமான சில நிபந்தனைகளின்மேல் இந்திய இராணுவத்தில் சேர்ந்துகொள்வர்.

காந்:—(சந்தோஷமாய்) ஆம். அதுதான் அதற்குவழி ஆனால் இராணுவம் குறைக்கப்பட்டால் உங்கள் வேலையில்லாதவர்களின் தொகை மிகைத்துவிடுமென்று பயப்படுகிறேன்.

பிரெ:—அப்படியானால் இராணுவ ஆதிக்கம் இந்தியாவுக்களிக்கப்பட்டால் சில வருடங்கள் வரை இவ்வளவு இராணுவம் வைத்துக் கொள்ளுவதென்றும் இவ்வளவு செலவு செய்வதென்றும் ஒரு ஒப்பந்தஞ் செய்துகொள்ளத் தாங்கள் இணங்குவீர்களா?

காந்:—இந்தியாவின் நன்மைக்காகவிருந்தால் இணங்கவே செய்வோம்.

பிரெ:—அது எங்களது நலம்பற்றியதாய்த் தானிருக்க முடியுமேயல்லாது தங்களது நன்மைக்கானதாயிராது.

காந்:—(சிரித்துக்கொண்டு) எல்லாம் ஒன்றுதான். இருந்தாலும் இணங்குவோம்.

ளைத் தாக்குவதென்றால் பிரிட்டனின் வடிகட்டிய முட்டாள் தனத்தை குறிப்பதுடன் தனது மனோ பீஷ்டத்தை எவ்வளவு இரத்தஞ் சிந்தியாகிலும்—எத்தனை பணச் செலவு செய்தும் ஜனங்களின் மீது வற்புறுத்தும் கொடுங்கோன்மையு மாகும்.

—பம்பாய் க்ரானிக்கிள்-

சிறையில் ராஜா

ஜன சைன்ய ஸ்தாபகரான திரு. எய்ச். டி. ராஜா எரவாடா சிறையிலே படும் கஷ்டம் கொஞ்சம்நஞ்சமல்ல. இவர் 1930 நவம்பர் 1வ யன்று மூன்று வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டவர். சென்ற பதினேரு மாதங்களாக எரவாடா சிறையிலே கிடந்து புழுங்கிவருகிறார். ஐந்து மூறை சீதபேதியால் வருந்தினர். ஒவ்வொரு முறையும் மூன்று நான்கு வாரங்களுக்குமேல் அந்நோய் நீடித்திருக்கும். சிறை ஆஸ்பத்திரியிலே சிகிச்சை செய்யப்பட்டாலும் குணமடைந்தவுடனே தனியறையிலடைத்துவிடுவார்கள்: சாதாரண மூன்ருவது வகுப்புக் கைதிகளுக்களிக்கப்படும் உணவுதான கொடுக்கப்படுகிறது. அவ்வுணவு அவரது உடலுக்குச் சரிப்படவில்லையெனக் கண்டும் அவரதுஉடலுக்கு ஒதுக்கிக்கொள்ளக் கூடிய வேறு உணவை சிறையதிகாரிகள் கொடுக்காதிருத்தல் முறையற்ற முறையெனபோம்.

ராஜாவைச் சதா பூட்டியே வைத்திருக்கிருர்கள். ஒப்பந்தத்தில் விடுதலையடையாத காங்கிரஸ் கைதிகளும், ஷோலாப்பூர் இராணுவச் சட்டக் கைதிகளும் அச் சிறையிலிருந்தும் அவர்களுடன் திரு ராஜா கலந்துகொள்ள விடப்படுகிறதில்லை. கேவலமான உணவும், தனிமையான வாழ்க்கையுமே அவரை அடிக்கடி நோய்வாய்ப்படுத்துகின்றன. அவரது உடல் நிலை முழுதும் கெட்டுவிட்டது. இந்நிலைமையிலேயே இன்னுஞ்சிறிது காலமிருந்தால் சீக்கிரத்தில் சீட்டுக் கிழித்துவிடுவார் சிறையதிகாரிகள் கவனஞ்செலுத்தட்டும்.

அமெரிக்கா செல்லும் அம்பேத்காரே

டாக்டர் அம்பேத்கார் வட்டமேஜையிலிருந்து அமெரிக்கா போகப்போகிருர். சர்ச்சில், சைமன் போன்ற இடை பிரிட்டிஷாரெல்லாம்வாழ்த்துச் சொல்லியனுப்புவார்கள் இந்தியாவின் தர்ம கர்த்தாக்களாகக் கடவுளால் நியமிக்கப்பட்டிருப்பதாகக் கூறும் அக்கோஷ்டியார் அமெரிக்கர்களை ஏமாற்ற முடியவில்லை. அவர் அமெரிக்க ஜனங்கள் மத்தியிலே இந்தியாவின் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தன்னலம் வெறுத்துத் தான் பாடுபட்டுவருவதைக் கம்பீரமாக கூறிக்கொள்ளுவார். ஆனல் தீண்டாமை தீர்ந்துவிட்டால் அம்பேத்காரை அச் சமூகத்தார் சட்டைசெய்யமாட்டார்கள். அதலேதான் டாக்டர் அம்பேத்கார் தனது நலத்திற்காகத் தீண்டாதார் தீண்டாதாராகவேயிருக்கவேண்டுமென்று விரும்புகிருர். அவரது சூழ்ச்சியாலும் அவர் துணைசெய்யும் வர்க்கத்தாரின் வஞ்சனையாலும் அச் சமூகம் கெட்டுவிட மாட்டாது.

இப்படியும் ஒரு பிழைப்பா?

சண்டை நடக்கும்போது ஜம்பமாய் கையெழுத்து வைத்து ஒப்பந்தஞ் செய்துவிட்டு இப்போது மீறுவது பொருந்துமா? வரிமறுப்புச் செய்த விவசாயிகளின் வரியைக் குறைத்தும் வஜாச்செய்தும் நிலைமையைச் சரிப்படுத்துவதாகக் காங்கிரஸும் சர்க்காரும் போர் நிறுத்தஞ் செய்தனர். அவ்வொப்பந்தத்தின் ஷரத்துப்படி சர்க்கார் நடந்து வரவில்லையென்று நாலா பக்கங்களிலிருந்தும் புகார் மிகுத்துள்ளது. அத்தகைய குற்றங்களில் ஐக்கிய மண்டல வரி வஜாத் தகராறு ஒன்று பண்டித ஜவஹர்லால் இது சம்பந்தமாக சர்க்காருடன் கடைசிவரை கடிதப் போக்குவரத்து வைத்துப் பார்த்தார்; பிரயோஜனமில்லை. காந்திஜிக்குத் தந்தி கொடுத்து உத்தரவு கேட்டார். "சரி, சத்தியாக்கிரஹம் ஆரம்பிக்கலாம். இங்கிருந்து எதையும் எதிர்பார்க்க வேண்டாம்"—என்று காந்திஜி கம்பி மூலம் கட்டளையும் கொடுத்துவிட்டார். பண்டித ஜவஹரியும் தயாராகிவிட்டார். அப்போது தான் எட்டினல் குடுமி எட்டாவிட்டால் கால்—என்னும் கொள்கை அனுஷ்டிக்கப்படுகிறது. போன வருஷம் பட்ட பாடு ஞாபகத்துக்கு வந்து ஒருவிதமான பஞ்சாயத்தில் பேசி முடித்துக்கொள்ளுவோமென்று ஐக்கிய மண்டல அரசாங்கத்தார் ஜவஹர்லாலை கேட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அப் பஞ்சாயத்தில் சர்க்கார் தரப்புக்காக கலெக்டர், கமிஷனர், ஸெட்டில்மெண்டு ஆபீஸர் ஆகிய மூவரும் காங்கிரஸ் தரப்பில் பண்டித ஜவஹரிலாலும், திரு. புருஷோத்தமதாஸ் தாண்டனும் கூடுவார்கள்; வரி மறுப்பு இயக்கம் இன்னதென்பதை ஐக்கிய மண்டலம் நன்ருய்ச் செய்து காட்டியிருந்தால் நிச்சயமாய் காங்கிரஸ் வெற்றியே யடையும். இல்லாவிட்டால் இன்னொரு முறை செய்துதான் காட்டவேண்டும், எல்லாவற்றிற்கும் முடிவைப் பார்த்துப் பேசுவோம்.

எவன் பொய்யன்? இந்தியா மந்திரியா டெய்லி ஹெரால்டா?

இந்தியா மந்திரி ஸர் சாமுவேல் ஹோருக்கும் லண்டன் பிரபல பத்திரிகைகளிலொன்றான டெய்லி ஹெரால்டுக்கும் ஒரு சிறு பூசலேற்பட்டுள்ளது. தேர்தல் பிரசாரதில் தேசியக் கட்சியார் வட்டமேஜையை வகுப்புப் பிரச்னையின்மீது போட்டு உடைத்து விடுவார்கள் என்று அப் பத்திரிகை எழுதலாயிற்று. அதை மறுத்து ஸர் ஹோர் கூறுவதாவது:—

"வட்டமேஜை ஒரு வெற்றிகரமான முடிவுக்கு வர வேண்டுமென்று பிரிட்டிஷ் தீவுகளின் பெருமிதமான மக்கள் விரும்புவதாக டெயிலி ஹெரால்டு கூறுவது வாஸ்தவந்தான். ஆனால் தேசியக் கட்சியார் வட்டமேஜையை உடைத்துவிடுவதாகக் கங்கணம் கட்டியுள்ளனரென்று அப் பத்திரிகை கூறுவது அக் கட்சியின் மீது ஜனங்களுக்கு அதிருப்தியும் அவநம்பிக்கையும் ஏற்படும்படி செய்வதற்காகவே யன்றி வேறில்லை. ஆரம்பத்திலிருந்தே நாங்கள் இந்தியா பிரிட்டன் இரு தேசங்களின் நன்மைகளை யுதேசித்தே பாடுபடுகிறோம். வட்டமேஜையை அதற்குரிய காலத்துக்குள் முடிவுக்குக் கொண்டுவருவதாக உத்தேசமில்லை. வட்டமேஜையைக் குலைத்துவிட வேண்டுமென்று நாங்கள் விரும்பினால் வகுப்புப் பிரச்னையின் ஆதாரத்தின்மீது—வட்டமேஜைப் பிரதிநிதிகள் ஒருவருக்கொருவர் சிண்டைப் பிய்த்துக்கொண்டிருக்கும் சச்சரவின் பேரில்—முடித்துவிட முடியும். ஆனால் எங்களது நோக்கம் அதுவல்ல. அந்த சந்தர்ப்பத்தை உபயோகித்துக்கொள்ள நாங்கள் முற்றும் மறுத்துவிட்டோம். தேர்தல் சாக்கைச் சொல்லி வட்டமேஜையை வீழ்த்திவிடவும் ஹேதுவுண்டு. ஆனால் தேர்தல் நடந்துகொண்டிருக்கையிலுங் கூட வட்ட மேஜையை நடத்திக் கொண்டுதா னிருந்தோம்: இதனால் வட்டமேஜையில் நாங்கள் கொண்டுள்ள சிரத்தையும், டெய்லி ஹெரால்டு சுமத்தும் ஆதாரமற்ற குற்றமும் இத்தன்மைத்தென்பது நன்கு விளங்கும்."

இதுபற்றி நமது சொந்த அபிப்பிராயம் தேவையேயில்லை. எல்லாம் ஒரு வாரத்துக்குள் முடிவடைந்துவிடும். அப்போது யார் சொல்லுவது நிஜம் என்பது தானே விளங்கிவிடும்.

பட்டாசுத் திருநாள்

தீபாவளி வருகிறதே அதைச் சிறு குழந்தைகள் பட்டாசுத் திருநாள் என்று சொல்வதுண்டு. ஏனெனில் அவர்கள் அத் திருவிழாவை ரஸிப்பதெல்லாம் சீனி வெடியிலே தான். "டப்" "டுப்" பென்று ஏதோ இரண்டு வெடித்துவிட்டால் குழந்தைகளின் மனம் பூரித்துவிடுகிறது. பட்டாசில்லாத தீபாவளி ரஸிக்குமா? என்று பையன்களெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் வானர சைன்யத்தில் சேர்ந்துள்ள சிப்பாய்ப் பையன்கள் இப பட்டாசு விழா வேண்டவே வேண்டாம் என்றுதான் சொல்லுவார்கள். ஏனெனில் காங்கிரஸ் குழந்தைகள் அன்னியச் சரக்கை ஆதரிக்க முடியுமா? என்றைக்கு நாம் கூடுமானவரை அன்னிய ஜாமான்களை பஹிஷ்கரிப்பது என்று இறங்கிவிட்டோமோ அன்றுமுதல் விளையாட்டாககூட விதேசிப் பொருளை வாங்குவது கூடாது. நமது நாட்டுச் செல்வம் அயல் நாடுகளுக்குச் செல்லாமல் தடுக்க வேண்டுமென்பதல்லவா நமது நோக்கம்? அப்படியானால் ஒரு நாள் வேடிக்கைக்காக நாட்டின் லக்ஷக்கணக்கான பணத்தை யிழந்துவிடலாமா? சீனாவும் ஜப்பானும் இந்தியப் பணத்தால் கொழுக்கவும் நமது தாய்நாட்டு மக்கள் நடை பிணங்களாய் இரத்தம் வற்றி மடியவும் நாம் நன்றாய்க் குளித்து முழுகி கோடியுடுத்து சீனிவெடி சுடுவது பொருந்துமா? என்று ஒவ்வொரு இந்தியனும் எண்ணிப் பார்க்க வேண்டுகின்றோம்: பட்டாசு கேட்கும் குழந்தைகளுக்குப் பெற்றோர் காந்தி படத்தைக் காட்டி தேசியத்தைப் புகட்ட வேண்டும். பெற்றோர்களும் பட்டாசு சுடலாகாது அவ்வாறே ஒவ்வொரு இந்தியனும் பட்டாசை பகிஷ்கரித்துவிட்டால் அமைதியான அந்தக் காலை நேரத்தில் காதைத் துளைக்கும் கடுஞ் சப்தமில்லாமல் தெய்விகமான அத் திருநாளை நன்கு பஜித்தவர்களாவோம். தரித்திர நாராயணனை வணங்கிய பலனுங் கிட்டும். தேசிய மயமாகவும் அகற்றைநாள் விளங்கும். நாட்டுப் பணம் நாட்டிலேயே தங்கும். ஏழைகளுக்கு வயிறு நிறையும்.

போலீஸ் பொய் வழக்கு!

முதலை வாய்ப்பட்டு மீண்ட செட்டியார்

அண்டப் புளுகன் தம்பியை எறும்பு விழுங்கியதாக ஒரு கதை யுண்டு. கர்னாடகக் கதை. தற்கால நாடகத்தில் அண்டப் புளுகும் ஆகாயப் புளுகும் சேர்ந்து மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடித்துப்போடும் போலீஸ் கற்பனைக் கதைகள் மிகைத்துவிட்டன. காரணங்கள் பல வுண்டு. சர்க்காருக்குத் தாசானு தாசர்களாய் நடந்துப் பட்டம் பதவி, முதலியவைகளைச் சம்பாதிக்கும் ஆசைப் பேயால் ஆட்டுண்டு கிடப்பதே முக்கிய காரணமாகும். ஆனால் பிரஸ்தாப வழக்கு சம்பந்தப்பட்ட மட்டில் வேறு ஏதோ காரணந்தா னிருக்கவேண்டும். வழக்கின் போக்கில் குற்றவாளியான ஸ்ரீ சுப்பையா செட்டியார் கூறுகிற வாக்கு ஒரு பெரிய கௌரவமான ராஜாவின் தூண்டுதலினால் இவ் வழக்கு தொடிக்கப்பட்டதாகவும் கொள்ளுவதற்குத் துளி யிடமுண்டு. ஒரு உயிரைக் கொல்ல நஞ்சு நாக்கலம் வேண்டாம்; ஒரு சிறு துளியே போதுமானது. இனி வழக்கின் ஆரம்பத்தை பார்த்தால் அதுவே மஹா விசித்திரமாயிருக்கிறது: ஒரு விறகுக்காரன் ஸ்ரீ சுப்பையா செட்டியாருக்கு வண்டி விறகு விற்றான் பாக்கி 15 ரூபாய் நின்றுவிட்டது. அதைக் கேட்டானாம். செட்டியார் அரிவாளால் வெட்டினாராம். எலும்பு முறிந்துவிட்டதாக ஒரு மேதாவி டாக்டர் சர்ட்டிபிக்கெட்டுக் கொடுக்க அதன் ஆதாரத்தின் மேல் போலீஸார் ஸ்ரீ செட்டியாரைக் கைது செய்து வழக்குத் தொடுக்க கோர்ட்டுக் கலையும் வரை காவலும் 250 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டார். எத்தனை அவமானம்! ஆயிரமும் அரைக் காசும் அபராதந் தான். குலாபிமானி பொறுக்க முடியுமா? அப்பீல் தொடுத்தார்.

இராமநாதபுரம் செஷன்ஸ் ஜட்ஜ் கனம் ஆர். எஸ். சங்கரய்யர் அவர்கள் தமது தீர்ப்பில் இவ் வழக்கு முழுதும் சூழ்ச்சியாய்க் கற்பனை செய்யப்பட்டிருக்கிற தென்று கூறி ஸ்ரீ சுப்பையா செட்டியாரின் அப்பீலை அனுமதித்து—தண்டனையைத் தலையி லடித்துத் தள்ளி போலீஸ் போக்கிரித் தனத்தை கண்டித்து அபராதம் வாங்கியிருந்தால் மரியாதையாகக் கொடுத்துவிடும் படியும் செட்டியாரின் சீரைக் குலைக்கும் வார்த்தைகூட அசல் ஜட்ஜ்மெண்டில் இருக்கக் கூடாதென்றும் கூறி விட்டார்.

எகிப்தில் காந்திக் கிறுக்கு

நீல நதியின் நித்திய பிரவாகத்தால் அபிஷேகிக்கப்பட்டுச் செழிப்புற்று விளங்கும் எகிப்து மண்ணில் மகாத்மாவின் பாத தூளி பட்டதோ இல்லையோ அங்குள்ளவர்களை யெல்லாம் காந்திக் கிறுக்கு பற்றிப் பிடித்துக் கொண்டது. காந்திஜீயையும் அவரது புனிதமான—சத்திய—அஹிம்சா மார்க்கத்தைக் கடைப் பிடித்து அவரது ராட்டை யியக்கத்தைப் பின் பற்றினாலொழிய எகிப்துக்கு வேறு வழியில் விமோசனமில்லை. எங்கு சென்றாலும் காந்திஜீ அவரது ராட்டையைத் தூக்கிக் கொண்டே போகிறார் என்ன வேலை யிருந்தாலும் 214 கெஜம் நூல் நூற்றே விடுகிறார். இவ்வாறு காந்திஜீயும் அவரது முப்பத்து முக்கோடி ஆண் பெண் அடங்கலும் தினந்தோறும் தவறாது நூற்றால் வருடத்தில் எத்தனை கோடி கெஜம் நூலாகிறது? அப்படியானால் ராட்டையை ஏன் இந்தியாவுக்குச் சுதந்தரமளிக்கும் சஞ்சீவியாக ஏன் எண்ணக்கூடாது? காந்திஜீ தமது சர்க்காவின் சப்தத்தினால் இந்தியாவை மட்டுமல்ல உலகத்தையே தம் பக்கம் இழுத்துவிட்டார். தேசியம் மாத்திரமில்லை சர்க்காவிலே நீதியும் பொதிந்திருக்கிறது. உலகப் பிரசித்தி பெற்று வரும் மகாத்மா காந்தியின் குருவுமான மகரிஷி தோல்ஸ்தோய் தமக்கும் தனது குழந்தைக்கும் வேண்டிய பாதரக்ஷைகளைத் தாமும் தைத்துக்கொண்டார் வால்டேரின் நிபுணத்துவத்தைக் கண்டு வியந்த நண்பரொருவர் "நீர் செய்துள்ள மகத்தான சேவைக்காக நமது பின் சந்ததியார் உம்மை மறக்க மாட்டார்கள்" என்றார். அதற்குப்பதிலாக வால்டேர் "ஆம் வாஸ்தவந்தான் நாற்பதினாயிரம் மரம் பயிர் செய்துள்ள என்னை அவர்கள் வாழ்த்தாதிருக்க முடியுமா? என்றார். ஆனால் மூடப் பழக்க வழக்கத்தினின்றும், பழைமையான—தற்காலத்திற்குக் கொஞ்சமும் ஒவ்வாத அநாகரீகத்தி லிருந்தும் கொடுங்கோன்மையினின்றும் உலக மக்களை விடுவிப்பதற்காக அவர் எழுதியுள்ள 99 புத்தகங்களை அவர் குறிப்பிடவேயில்லை. காந்திஜீயின் ராட்டை மகத்துவத்தை நாங்கள் அறிந்துகொண்டு விட்டோம். அதையே பின்பற்றுவோம்.

—அல் பலாக்.

(முதற் பக்கத்தின் தொடர்ச்சி)

ஒரு மிலாய் இக் கட்சியைப்பற்றி நாம் அறிய மாட்டோம். ஏனெனில் இது ஒரு புதிய கட்சி; இதன் இரண்டொரு வார வாழ்க்கையைத்தான் நாமறிவோம். தங்க விலையைக் கைவிட்ட பெருமை யிவர்களுக்குண்டு. தங்கத்துக்கும் வெள்ளிக்கும் தாலி கட்டிவைத்த புரோஹிதர்கள்; ஸ்டர்லிங்கையும் ரூபாயையும் பிணைத்து வைத்த தரகர்கள் இம் மஹா கட்சியார்தான். நாணய நெருக்கடியைத் தீர்த்துவைப்பதற்காகத்தான் இக்கட்சியை இங்கிலாந்து மக்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவர்கள் தம்மைத் தேர்ந்தெடுத்தவர்களைத் திருப்தி செய்வார்களா? இந்தியாவின் தகராறைத் தீர்த்துவைப்பார்களா? இல்லாவிட்டால் —இந்தியாவின் குறைகள் பூர்த்திசெய்யப் பெறாவிட்டால் இங்கிலாந்தின் கஜனு பூர்த்தியாகப்போகிறதில்லை. இங்கிலாந்தின் நாணய நெருக்கடியை நிவர்த்திக்க வேண்டுமானால் இந்தியாவுடன் பரஸ்பரம் நேசப்பான்மையுடன் வாழவேண்டும், அவ்வாறு செய்துகொண்டாலன்றி தங்களைத் தேர்ந்தெடுத்தனுப்பிய பிரிட்டிஷ் மக்களைத் திருப்தி செய்ய இக் கட்சியால் முடியாது. இச் சிறு ஆலோசனையைக் கூறிவந்த கட்சியை வாவென்று கூறுவோம்.

தேவடியாள் தெருவில் பல்லக்கு விடும் கலகக்காரர்கள்

பர்மாவில் மனித வாழ்க்கை அதிக கிராக்கியி லிருக்கும் இதுகாலை சில கலகத் தலைவர்கள் இலவசத்தில் கிடைத்த செல்வத்தை இடம் வலமாக விசிறி யெறிகின்றனர். தாராவாடி ஜில்லாவில் மிகைத்திருக்கும் கலகக்காரர்களின் தலைவர்களான ஆண்டி என்பவனும் நகாஷீன் என்பவனும் 30,000 ரூபாய் வரை கொள்ளையடித்துச் சேர்த்திருக்கின்றனர். தங்களை மோகிக்கும் மாதர்களை வயிர நகைகளால் அலங்கரித்தும் பவுன் பவுனாக பாதகாணிக்கை செலுத்தவும் செய்கின்றனராம். நகாஷீன் என்பவன் தனது வைப்பாட்டிகளை தங்கத்தால் அலங்கரித்து வருகிறான். கனவில் கண்ட பணத்திற்கு மாற்றேது? உறையேது? மோசத்தால் வசூலிக்கப்படும் எப் பணமும் இப்படித்தான் பரத்தையர்க்கும், வம்புக்கும் தும்புக்கும் செலவாகும் என்பது இயற்கைச் சட்டம்.

உனக்கும் பேப்பே உன்னப்பனுக்கும் பேப்பே!

ஒருவன் அதிகக் கடனாளி யாகிவிட்டான். பணங்கொடுத்தவர்க ளெல்லாம் பிச்சுப் பிடுங்கித் தின்றார்கள்; கடைசியில் வழக்குத் தொடரப்பட்டது. கடனாளி ஒரு வக்கீலைப் பிடித்தான். நல்ல சாமர்த்திய சாலி அவ் வக்கீல். "கோர்ட்டில் யார் என்ன கேட்டாலும் எல்லாவற்றிற்கும் பெப்பே யென்று பதில் சொல்லும்படி தன் கட்சியானுக்கு பாடஞ் சொல்லி வைத்தார்: அவ்வாறே சொன்னதன் மேல் வக்கீல் தமது வாக்கு வாதத்தில் தமது கட்சிக்காரனுக்குக் கிறுக்குப் பிடித்துவிட்டதாக விவாதித்து வழக்குகளையெல்லாம் தள்ளி விடும்படி செய்துவிட்டார்: அப்புறம் அவருக்குச் செல்லவேண்டிய பீசுக்கு பேச்சுப் பிறந்தது. வக்கீலுக்கும் பெப்பே யென்றான் கடன்காரன். "எனக்குமா?" என வினவினர் வக்கில். "உன்னப்பனுக்கும்" என்று ஒற்றை வரியிலே கூறிவிட்டான்.

அதேமாதிரிக் கதை இதுகாலை தாரங்கதாரா சமஸ்தானத்தில் நடந்துவருகிறது. இந்தியாவில் தனியரசு செலுத்தி வரும் அன்னியரிடமிருந்து சுயராஜ்யம் பெறுவதற்காக எவ்வாறு நாம் பகிஷ்கார ஆயுதத்தைப் பிரயோகிக்கின்றோமோ அவ்வாறே தாரங்கதாராத் தொழிலாளிகள் தங்களது சமஸ்தான மன்னனிடத்திலேயே பகிஷ்காரத்தைப் பிரயோகிப்பதாகக் கூறுகின்றனர். அன்னியரிடத்தும் நம்மவரிடத்தும் எவ்வித பாகுபாடு மின்றி உபயோகிக்கப்படும் இப் பகிஷ்கார முறை—சத்தியாக்கிரஹ இயக்க பகிஷ்கார கலை—வலுத்ததோர் ஆயுதந்தான், சென்ற 29 ந்தேதியன்று கத்தியவார்த் தொழிலாளிக ளெல்லாம் வத்துவானிலே கூடி—தாரங்கதாரா நிலைமையைச் சர்ச்சை செய்து முடிவில் கத்தியவாரிலே அரசியல் மகாநாடு கூடுவதைத் தடைப்படுத்தும் உத்தரவை நவம்பர் மீ 4 ந்தேதிக்குள் வாபீஸ் வாங்கிக் கொள்ளாவிட்டால் சத்தியாக்கிரஹத்தை ஆரம்பித்து விடுவதென்றும் தாரங்கதாராவில் உற்பத்தியாகும் பருத்தி, உப்பு; கல் வகைகள், சோடா முதலியவைகளை பகிஷ்கரிப்பதென்றும் தீர்மானித் திருக்கின்றனர். தாராங்கதாராவில் நடந்த போலீஸ் அட்டூழியங்களை விசாரித்தறிவதற்கு ஒரு விசாரணைக் கமிட்டியும் நியமிக்கப்பட்டிருக்கிறது

Printed & Published By A. V. Sellam Pillay at the Desopakari Press, 210, 36th Street, Rangoon.

அரையணா மலர் 9. இதழ் 28. பதிவு எண் 245.

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை **DESOPAKARI** புதன், ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி, இரங்கோன், (4—11—31) ஐப்பசிமீ 19உ புதன்கிழமை.

இழுத்துப் போடு உள்ளே !

தேர்தல் நாடகம்.

இம்மாதம் இறுதியில் இரங்கூன் நகரசபைத் தேர்தல் நடைபெறும். பல ஹிந்து, முஸ்லீம் அபேக்ஷகர்கள் வெளிவந்திருக்கின்றனர். சில முஸ்லீம் தலைவர்கள் ஜனாப் தயாப்ஜியைத் தவிர்த்து வேறு நான்கு கனவான்களைச் சிபார்சு செய்து பத்திரிக்கைகளில் பிரசுரித்திருக்கிறார்கள். இந் நால்வரையும் தெரிந்தெடுத்தால்தான் முஸ்லிம் சமூகத்தில் சமாதானமும், அமைதியும் நிலவுமென அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இதில் மிஸ்டர் ஆலம் வீட்டுவாடகைச்சட்டம் அமுலில் இருக்காமல் தடைசெய்தவர்களில் முக்கியஸ்தராவரென்பதை வாக்காளர்கள் மறந்திருக்கமாட்டார்கள். அது காரணமாகச் சட்ட சபைத் தேர்தலிலும் தோல்வியுற்றவர். மற்றும் மூவரும் முதலாளி வர்க்கத்தையே சார்ந்தவர்கள். ஜனாப் தயாப்ஜியோ எளியவர்களுக்காகப் பாடுபடுகிறவர் என்பதை சகலரும் அறிவர். தற்சமயம் சிபார்சு செய்யும் நால்வரை கனவான்களுக்கும் தெரியாததல்ல. நமது தயாப்ஜியால் சமூகத்தில் சமாதானம் குலையுமென்று இவர்கள் எண்ணுகிறார்களாக்கும். அப்படியும் இருக்கமுடியாது. ஆனால் வாக்காளர்கள் சிறிய குழந்தைகளல்ல. ஹிந்துப் பிரதிநிதிகளைக் கவனித்தால் ஸ்ரீமான் சி. கே. தம்பி (பார்—அட்லா)யும், டாக்டர் டுகேலும் பொது ஜனங்களுக்காக முனிசிப்பாலிட்டியில் அதிக சிரத்தையுடன் உழைத்தவர்களெனக் கூறுவது மிகையாகாது. நமது கூற்றை எவரும் ஆக்ஷேபிக்கவும் இயலாது. ஸ்ரீமான் ஹரிகிருஷ்ண பிள்ளை பலவருடங்களாக அங்கத்தினராக இருந்துவருகிறார். ஒரு பொழுதும் வாய்திறந்து ஒரு வார்த்தைகூடப் பேசியவரல்ல. காந்தியடிகள் வாரத்திற்கு ஒரு நாள் மவுனவிரதமிருந்தால், இக்கனவான் முனிசிப்பல் கூட்டங்கள் தோறும் மவுனவிரதம் கைக்கொள்ளுகிறார்போலும். ஆனால் அன்னவர் வேறுவழிகளில் பொதுஜன சேவை அவரது யுக்திப்பிரகாரம் செய்துவருகிறாரென்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. ஆனால் முனிசிபல் விஷயங்களில் ஊக்கம் எடுக்கத் தவறிவிட்டபடியால் அதில் சிரத்தையுடன் உழைப்பவர்கள் அந்தஸ்தானத்தையடைய வழிவிடுவதே உசிதமாகும். ஆனால் எதிர் காலத்தில் தாமே சரியாய் உழைப்பதாகத் தீர்மானித்து முன்வந்தாலும் அம்மாதிரி வாக்காளர்களுக்கு உறுதிசெய்து கொடுக்கட்டும். ஸ்ரீமான் சி. கே. தம்பி மறறோரிடத்தில் கூறுவதுபோல் இது விஷயத்திலும் தமிழ் பத்திரிகைகளின் கடமை முக்கியமானதாகும். தகுந்தவர்களை நமது பிரதிநிதிகளாக அனுப்பச் செய்வது பத்திரிகை ஆசிரியர்களின் அரும் பெரும் ஊழியம் என்பதை நாம் எடுத்துக்காட்டவேண்டியதில்லை. ஸ்ரீமான் டி. வெங்கிடசாமியும் தன்னால் இயன்ற அளவு ஊழியஞ் செய்திருக்கின்றாரென்பதில் தடையில்லை

வெளிப்படுத குட்டு

(ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார்)

"தபாலாபீஸும், ஆஸ்பத்திரியும் கூட மூடிக்கிடக்கலாம். ஆனால் கள்ளு, சாராயக் கடைகள் மூடியிருந்தால் அந்த ஒழுக்கீனத்தை இந்திய சர்க்கார் அனுமதிக்கமுடியாது. உடனே விசாரணை நடத்திக் கடுந்தண்டனை விதிக்க வேண்டும்;"

இப்படியொரு சட்டம் கலால் லைசென்ஸிலே யிருக்கிறது. இதைப்பற்றி வியாக்கியானம் செய்து பார்த்தால் குட்டு வெளியாகிறதல்லவா? கலால் இலாகா வருமானம் என்ன? 24 கோடி ரூபாய்தானே, தபால் வருமானம் எவ்வளவு அதிகம். அது போனாலும் தோஷமில்லை, கள் வரும்படியல்ல—ஜனங்கள் குடிக்காமல்இருக்கக் கூடாதென்னும் அர்த்தமுள்ள இச்சட்டம் எத்தனை கொடூரமானது. நாகரீகஆட்சியில் ஜனங்களை நல்லவர்களாக்கினால் நாடுகாப்பவனுக்கு நல்லபேர்கிடைக்கும். கள்ளுக்கடைகளை வியாபாரதோரணையில் சர்க்கார் தங்களது வியாபாரமாகவே நடத்திவருகிறது. "நிலங்களெல்லாம் சர்க்காருடையது. குடி ஜனங்களிடம் வசூலிப்பது வரியல்ல; குத்தகைப் பணம்" இது மாதிரிதான் மது வியாபாரமும் சர்க்காருடையதாகிறது. சௌகரியத்துக்காகவே குத்தகைக்கு விடுகிறார்கள். கடைக்காரர்களிடம் வசூலிப்பது வெறும் குத்தகைத் தொகையே யாகும். அதனாலேதான் குத்தகைக்காரர் ஒவ்வொருவரும் தங்களது ஆண்டைகள் குறிப்பிட்டுக் கொடுத்திருக்கும் நேரங்களில் கட்டாயம் கடைகளைத் திறந்துவைத்திருக்க வேண்டும் என்ற கட்டுக்குள் ளகப்படுகிறார்கள்' இல்லாவிட்டால் அபராதம் கொடுத்தாக வேண்டும்.

மது வியாபாரம் இவ்வாறு சர்க்காரின் சார்பாக சர்க்காரின் அதிகாரத்துடன் நடப்பதாலே தான் ஒழுங்கீனங்கள் பலவற்றிற் கிடமேற்படுகிறது. திருஷ்டாந்தமாக இவ்வருடத்தில் எங்கு பார்த்தாலும், சொந்தக்காரர்களின் சம்மத மின்றிக் கள்ளுமரங்கள் முத்திரை போடப்படுகிறதாகப் புகார்கள் எட்டுகின்றன. கள்ளு வேண்டு மென்பதற்காக சர்க்கார் அதிகாரிகள் பிறருடைய தோப்புகளில் சொந்தக்காரர் அனுமதி யில்லாமலேயே மரத்தில் முத்திரை போட வேறு எந்த நாகரீக சர்க்கார் துணியும்? வியாபார தோரணையிலே தான் இவ்வளவு ஊழல்களும் ஏற்படுகின்றன. சர்க்கார் உபயோகத்துக்காக பிறர்

தூதுபோன தென்ன?

பர்மா தொழிலாளர் துயர் தீர்க்க வந்த பரமத்மாக்களெல்லாம் அன்றொரு ஓயாத மழை நாளிலே தரையீரமாய் சதசதத்திருக்கையில் தொழிலாளிகளைத் துணிமணியெல்லாம் சேறுபடியக் குந்தவைத்துத் தலைவரென தங்களை யழைத்துக்கொண்டு சுகமாய் நாற்காலிகளிலே வீற்றிருந்து வியாசன் பாரதம் பாடிய பாணியில் அன்று பெய்த மழைபோலச் சரமாரியாக வார்த்தைகளை வாரி வாரி வீசினார்கள். உயர்ந்த மேடைமீதேறி நின்று வாய் வரிசை கைவரிசைகளெல்லாம் காட்டினர். பழைய விட்லி கமிஷன் யாதாஸ்தை வரி விடாமல் பள்ளிப் பையன் பாடம் படிப்பதுபோல சபைத் தலைவர் படித்துத் தாத்பரியம் பண்ணினார். ஜனங்களனைவரும் காதுகளை அகல விரித்துக் கேட்டிருந்தார்கள். கடைசியில் ஏதோ ஓர் தீர்மானத்தை நிறைவேற்றி அதன் நகல்களை வைசிராய்க்கும் கவர்னருக்கும் அனுப்புவதென்று சொல்லப்பட்டது. இரண்டொரு நாட்சென்று ஒரு தெய்வம் அவசர அவசரமாய் ஓடோடி வந்து கவர்னர் பேட்டி கொடுக்க வரமளித்து விட்டதாக ஊதிற்று. மறுநாளே தூதுவர் கூட்டம் தயாரிக்கப்பட்டதாகக் கேள்வி. சில பொருக்கிகள் போகவும் போனார்கள். கவர்னர் பெருமான் சன்னிதானஞ்சென்று கைலாகும் கொடுத்துக் கொண்டார்களாம்; முடிவு இவ்வளவு தான். இத்துடன் ஜென்ம சாபல்யம்பெற்று வீடு திரும்பிவிட்டனர். போனாற் போகட்டும் தூதுபோன செய்திதானென்ன? வரங் கிடைத்ததா கிடைக்கவில்லையா? இதுகளையெல்லாம் நாலுபேரறியக் கூறிவிடுவதால் எவன் குடி முழுகிவிடும்? பொதுக் காரியத்தை இரகசியத்தில் வைப்பது எதை உத்தேசித்திருக்கலாம்? என்பது எமது மண்டையில் தட்டவேயில்லை. மகாஜனம் தூதுவர்கள் சிறிது விளக்கிவைத்து தொழிலாளிகளுக்கு தாங்கள் செய்த ஊழியத்தைப் பட்டவர்த்தனமாய்க் கூறுவதால் நஷ்டம் ஒன்றுமேயில்லை பார்க்கலாம்.

சொத்தை கட்டாய உரிமைப் படுத்துவதாக கலால் இலாக்கா உத்தியோகஸ்தர் முதல் சாதாரண சேவகன் வரை எல்லோரும் எண்ணிக் கொள்ளுகின்றனர். இல்லாவிட்டால் இவர்கள் நெஞ்சு துணிவரா?

Printed & Published By A. V, Sellam Pillay at the Desopakari Press, 210, 36th Street, Rangoon.

கோவிந்தா ! கோவிந்தா ! கோவிந்தா !

உலக முழுதுக்குமே இந்த வருஷம் நல்ல நேரத்தில் பிறக்கவில்லை. எங்கு பார்த்தாலும் பணப் பஞ்சம், வியாபாரமந்தம். ஏற்கனவே வறுமைப்பிணியால் பீடிக்கப்பட்டுக் கிடக்கும் ஏழை இந்தியாவைப் பற்றிக் கேட்பானேன். தலை கீழாய் அடித்துக்கொண்டுவிழ ஆரம்பித்துவிட்டது. தங்க வீழ்ச்சியும், சுங்கவரி உயர்வும் அநேக வியாபாரிகளை அடியோடு கவிழ்த்துவிட்டது. இந்தியாவின் பெரியசந்தையான பம்பாயில் மாத்ரம் லேவாதேவிக்காரர் பலர் சில தினங்களில் 8 கோடி ரூபாய்களைக் கைகழுவிவிட வேண்டியதாயிற்று. இதுபற்றி பம்பாய் "இந்தியன் டெயிலி மெயில்" பத்திரிகை வெளியிட்டுள்ள கட்டுரை வருமாறு:—

திவாலா வானவர்களின் எண்ணற்ற ஜாபிதாவைப் படித்ததும் அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டேன். ஏழைமுதல் பணக்காரன்வரை சிறு திவாலா சைன்யத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந் நிர்ப்பாக்கியர்கள் வாழ்க்கைக் கடலில் சிறு குமிழிகளைச் சிறுகச்சிறுகப் பெருக்கச் செய்து கடைசியில் வெடிக்கவிட்டு விட்டார்கள். இதுவரை கணக்கெடுத்ததில் 750 பேர் இன்ஸால் வெண்டாகி யிருக்கின்றனர். அந்தோ! என்ன கோரம்! எத்துணை பரிதாபகார பட்டியல். சென்ற அக்டோபர் 8உ பம்பாய் சர்க்காரால் பெயரெழுத்து வாரியாக பம்பாய் நகரம் அதைச் சார்ந்த இடங்களிலுள்ள 750 பேர்கள் அடங்கிய இன்ஸால் வெண்ட் பட்டியலைப் படித்தால் இரத்தம் கொதிக்கிறது. இவ்வளவு பேர் இத்தனை சீக்கிரத்தில் ஏககாலத்தில் எவ்வாறு திவாலாவாகி விட்டனர் என்பது நிதி ஆராய்ச்சியாளர் தம் வேலை. அதை அவர்கள் பார்த்துக்கொள்ளட்டும். ஒன்றிரண்டு கடைகளின் வீழ்ச்சி பென்றால் ஒருவரிருவரின் பரிதாபகரமான திவாலாவா யிருந்தால் பரவாயில்லை. சர்வமும் திவாலாவானால் ஈதென்ன கொடுமை! பம்பாய் ஓரிடத்தில் மாத்திரம் 750 பேர் நிலை குலைந்து வீழ்ந்து தலைநிமிர்ந்து நடக்கமுடியாத நிலைமைக்காகிவிட்டாரென்பதென்ன சாமான்யமான விஷயமா? தொழிலோ, தொழிலில்லையோ வீழ்ச்சியோ மீட்சியோ ஐயோ! நாணய மிழந்து விட்டனர்.

இந்த திவாலா சைன்யத்திலே எந்தவித மானஜாதிமதபாகுபாடும் கிடையாது. ஐரோப்பியர்களின் தொகை ஈவுப்படி பார்த்தால் அதிகமாகவே யிருக்கிறது. அவர்கள் எல்லாத் தொழில் முறையிலும் ஈடுபட்டிருப்பவர்கள். பம்பாய் ஹைக்கோர்ட்டு வக்கீல் ஒருவர். இரண்டுபேர் டாக்டர்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் இரயில்வே வேலைக்காரர்களும் கூட இன்ஸால்வெண்டாகி யிருப்பது விசித்திரம். ஒரு பார்ஸிக் கோவில் புரோகிதரும் திவாலாவாகி யிருப்பாரென்றெவர் எண்ணமுடியும்? ஏன் இந்த சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இம்மாதிரி இன்ஸால் வெண்ட் ஜாபிதாவை அதிகம் நிறைத்திருக்கிறார்கள் என்பது விளங்கவில்லை. பம்பாய் மத்திய தந்திச் சாலையில் தந்தியடிப்போர் பத்துப் பேர் திவாலா. இதனால் ஒரு சிறு சந்தேகம் பிறக்கின்றது. குதிரைப் பந்தயத்திற்கும், பருத்திவிலைப் பருவத்திற்கும் இந்தஇன்ஸால்வெண்ட் ஜாப்தாவுக்கும் ஏதாவது ஒட்டிருக்கலாமா? இந்தியாவிலேயே பெரிய இரயில் கம்பெனியான ஜி ஐ. பி. கம்பெனியும் இந்தக் கெட்டுப்போகும் பந்தயத்தில் தோற்றுப்போக வில்லை. தன்னுடைய 11 கார்டுகளையும், 6 இயந்திர ஓட்டிகளையும், 1 இன்ஸ்பெக்டரையும் திவாலாத் திருகைக்குள் தள்ளிவிட்டது. ஜீ. ஐ. பி. ரயில்வே போலீஸ் சார்ஜெண்டு ஒருவரும் ஜாபிதாவில் போலீஸ் முறுக்கிலே நிற்கிறார். பி. பி. அண்டு ஸி. ஐ. ரயில்வேயும் பங்கெடுக்காதுவிடுமா? இரண்டு இன்ஸ்பெக்டர்கள், ஒருவர் போலீஸ் இலாக்கா மற்றவர் கணக்குப்பரிசோதனை(ஆடிட்)இலாக்காவில் சேர்ந்தவர். சில கார்டுகளுக்கும் திவாலா. சர்க்கார் சிப்பந்திகளில் முக்கியமான சிலரை பிரத்தியேகமாகக் கௌரவிக்க வேண்டாமா? சுங்க இலாக்கா அதிகாரி யொருவர் வருமானவரி உத்தியோகஸ்தர் இன்னொருவர். இந்தமகா னங்களெல்லாம் திவாலா நாடகத்தின் சிங்கார நடிகர்கள். ஸ்திரீ பார்ட்டு மில்லாமலில்லை. இல்லாவிட்டால் கதைரஸிக்குமா? மரியாதையுள்ள மனைவி யொருத்தி காட்டுக்கும் கணவனைத் தொடர்ந்த சீதையைப்போல் இன்ஸால் வென்ஸித் தீயிலே கணவனோடு உடன் கட்டை யேறிவிட்டாள். அச்சதிபதிகள் ஐரோப்பியர். கணவர் இஞ்சினீர். ஐயோ பாவம்

இந்தியாவைத் திருடிய இங்கிலாந்தே!

(ஸ்ரீ ஜான் இங்க்லாண்டு)

உலகத்தைக் காத்து உத்திரவாதஞ் செய்வதற்கெனப் பிறந்த காவலர்களாக பிரிட்டிஷ் சமுதாயத்தைச் சொல்லிக்கொள்ளுகிறோம். ஆனால் நாம் அன்னிய நாடுகளைப் பிடித்த கதை அப்படி இல்லை. கிழக்கிலோ மேற்கிலோ எங்கெங்கே இங்கிலீஷ்காரன் கால் வைத்தானோ அங்கெல்லாம் என்ன கிடைக்கும் என்ற பேராசைப் பேயோடேயே நுழைகிறான். பழைய கானடாவில் கரடி மயிர் பிடுங்க நாம் நுழைந்தோம். வேட்டையாடத் தொடங்கினோம். இந்தியாவில் அடி வைத்தோம். எதைச் சுரண்டலாமென்னும் எண்ணத்தோடேயே வேலையை யாரம்பித்தோம். ஆஸ்திரேலியாவை அடித்துக்கொண்ட கதை ரஸமானது. நமது திருடர்களைக் குடியேற்றி வைக்கும் நோக்கத்தோடு நுழைந்தோம். அங்குள்ள சுரங்கங்களைத் தோண்டிவிட்டோம். இதையெல்லாம் சொல்ல வெட்கமாயிருக்கிறது. ஆபாசமான இவ் வசக்கேயக் கதையை நாகரீக மக்கள் கேட்டால் நகைக்கவே செய்வர் என்றாலும் நல்ல லாபம்; கொழுத்த வருமானம். நம்மோடு போட்டி போடுவதற்கு எந்த மனிதப் பிராணி துணிவான். இங்கிலீஷ்காரர்கள ஆரம்பத்திலே கஷ்டப்படுவார்கள். நல்ல எண்ணம் கெட்ட சிந்தை இரண்டும் சிறிது காலம் சமமாகவோ கொஞ்சம் ஏற்றத் தாழ்வாகவோ கலந்திருக்கும். அப்புறம் மண்ணாசை பிடித்து தந்திரமாய்ப் பலர் தலையிலே கை வைத்து ஒருவருக்கொருவர் முடிபோட்டு ஒருவன் பக்கம் சேர்த்து ஒருவனைத் தோற்கடித்து பூமி சேர்த்து ஆளஆரம்பிப்பார்கள். சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலேயே இந்தியாவைக் கவர்ந்த கதைதான் அதி ருசிகரமானது.

கிளைவ் என்ற சின்னப் பையல் கிழக்கிந்தியக் கம்பெனியிலே குமாஸ்தாவாக வேலைக்கமர்ந்தான். கெட்ட பையன்; மிருக பலம் படைத்தவன், சுறுசுறுப்பும் உற்சாகமும் உடையவன். சென்னைக்கு வந்தபோது அவன் கையில் அரைக்காசுகூடக் கிடையாது, ஆனால் நாளாவட்டத்தில் தனது பல சூழ்ச்சிச் செயல்களால் சொந்தத்தில் வியாபாரங்கள்பல செய்யவும் செய்தான். காசும் ஊறிவிட்டது. லாபத்துக்கு மேல் லாபம் கிடைக்கலாயிற்று அச்சமயத்தில்தான் இந்தியாவின் அளவற்ற ஆஸ்தியைக் கண்டு இரண்டு திருட்டுக் கூட்டங்கள் போட்டி போட்டுக் கொள்ளையடிக்கத் தலைப்பட்டன, மூன்று பிரெஞ்சுக் கூட்டம்; மற்றொன்று ஆங்கிலக் கூட்டம். ஆரம்பத்தில் இக் கூட்டங்களிரண்டும் தங்கள் தங்கள் சொந்த நலன் கருதிற்றேயொழிய நாட்டு நலம் துளிகூட கிடையாது. இம்மாதிரி கொள்ளை கொள்ளையடித்து நாட்டைச் சுரண்டி சேர்த்து முழு தேசத்தையுமே முழுங்கிவிட்டது. இது கிடக்கும் நடுவிலே காந்தியைப் பற்றிக் கொஞ்சம் பார்ப்போம். காந்திக்கு ஞானமேயில்லையென்று நம்மவர் சிலர் சொல்லலாம். இந்தியாவை சுயாட்சிக்கு நாம் தயாரித்துக் கொண்டிருக்கையில் வலுவில் பிடுங்க வந்தவராகச் சிலர் கருதலாம். ஆங்கில ஆட்சியை ஆதி முதல் அந்தம் வரை குறைகூறும் அவ

மிஞ்சினீர் வந்துவிட்டால் இஞ்சினீர். என்ன செய்வார். மூழ்கவேண்டுவது தானே.

கோடிக்குக் கொஞ்சங் குறைந்த 90 இலட்சங்களுக்கு அதிபதியா யிருந்த ஒரு கோஜா வியாபாரியின் கை வீழ்ந்துவிட்டது. தம்படி மிச்சமில்லை. அப்புறம் ஒரு வயிர நகை வியாபாரி, பாவம் 35 இலட்சத்துக்கு பணக்காரர். கடன்காரர்களுக்கெல்லாம் கையிருப்பிலிருக்கும் தொகையை ரூபாய்க்கு ஒன்னரைத் தம்படிக்கு மேல் கொடுக்க முடியாத நிலைமைக்கு வந்துவிட்டார், இன்னொருவர் ஏற்றுமதி இறக்குமதிக்காரர். 25 லட்சம் போன போக்குத் தெரியவில்லை. வேறொருவர் பாவம் நாளுக்கு நாள் மெலிந்து தேய்ந்து போனார் ஆதியில் ஆலைச் சொந்தக்காரராயிருந்து அதில் நொடித்து ஹாக்கராகி அப்பால் ஒரு குட்டிக் குமாஸ்தாவா யிருந்தார். இவர்களையெல்லாம் விட இன்னொருவன் பரிதாபம் தான் பகரக் கூடவில்லை. காய்கறி வியாபாரி- ஏதோ ஒரு பத்து நூறை வைத்து மரியாதையாய் விற்றுப் பிழைத்தான். காயோடு பழத்தையும் சேர்த்து பழக்கடையும் வைத்து காயும் பழமும் அழுகி 550 ரூபாய்க்கு திவாலாய்ப் போனான். சில காலத்திற்குள்ளாக எல்லா விதமான வியாபாரிகள் உத்தியோகஸ்தர்களெல்லாம் விழுந்துவிட்டார்கள். போதாக் குறைக்கு பந்தயக் குதிரை சவாரி செய்யும் ஒருவனுமா இப் பேய்வாய் படவேண்டும். பணமே! உன் திருவிளையாடல்கள் இவ்வளவு தானே? இன்னும் உண்டா?

ரைச் கண்டிக்க அவரிடம் துளி குற்றத்தைக் கூடக் காணோம். ஒரு சிலர் கூறுகிறபடி அவர் ஒரு நாட்டுப்புறத்துச் சந்நியாசியல்ல. உண்மையிலேயே அவர் அவர் ஒரு மகாத்மா. உலக முழுதிலுமே ஒருவரைத்தான் ஜனங்கள் அவ்வாறு அழைக்கின்றார்கள். இந்தியா முழுதுக்கும் அவரே ஏக பிரதிநிதி சுத்தமான வாழ்க்கை வாழுகிறார். எளிய—சாமான்யமான ஜீவனம் செய்கிறார். தனக்காக எதையும் தேடித் திரிகிறதில்லை தேசத்திற்காகவே சதா சர்வ காலமும் உழைக்கிறார். மேல்நாட்டுப் படிப்புப் படித்திருக்கிறார். லண்டனையும் அதன் சட்ட திட்டங்களையும் ஊன்றிப் படித்துத் தேரிய பாரிஸ்டர். என்றாலும் கீழ் தேசத்துப் பெரியார்களின் அம்சங்களும் குணங்களும் அப்படியே யமைந்து நிறைந்து பிரகாசிக்கின்றன. அவரது தேசத்துச் சரித்திரம் அவருக்கு ஐயம்திரிபு அறத்தெரியும். எவ்வளவுதான் நமது நாட்டங்கள் நல்லவையென்று நாம் காட்டிக்கொண்டாலும் நமது அரசாட்சியிலுள்ள ஊழல்கள் அவருக்குத் தெரியவே தெரியும். காலத்தைத தள்ளிப் பார்த்தால் ஏகாதிபத்தியங்களெல்லாம் திருட்டுச் சொத்துக்கள் என்று நன்றாய்த் தோன்றிவிடுகிறது. எல்லாம் வெறும் காட்டு நீதி இப்போது அதெல்லாம் மாறிப் போய்விட்டது. சுதந்திர எண்ணம் ஒவ்வொரு தனி மனிதனது உள்ளத்திலும் தோன்றிவிட்டது.

ஒரு காலத்தில் வெள்ளைக்காரர்களின் கொள்ளைக் குகையாயிருந்த இந்தியா இப்போது தர்மசொத்தாகிவிட்டது. அபிப்பிராயங்கள் கொள்கைகள் புதுப் புதியதாய்த் தோன்றி வளர்கின்றன. கிளைவ் செத்துப்போய் இருந்த இடம் புல் முளைத்துப் போய்விட்டது. அவரது இடத்தில்பிறந்த சந்ததியார்களின் முன்னால் லங்கோடுடுத்திய காந்திப் பக்கிரி உட்கார்ந்து கொண்டு பழைய தப்பிதங்களை யிடித்திடித்துக் கூறித் திருத்திவருகிறார்.

கிழவன் கையாயுதம்

இந்தியாவின் கோரிக்கை எகிப்து சுதந்தரத்துடன் பிணைக்கப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தை இந்தியாவிலே தோற்கடிக்கவெண்ணிய நெப்போலியன் அதற்காக எகிப்தைக் கைப்பற்றிக்கொள்ள முயறசித்தலாலவா? ஒரு நூற்றாண்டு காலம் இங்கிலாந்து எகிப்தைப் பிடிப்பதற்காகப் போராடியதெல்லாம் இந்தியாவுக்காகவன்றோ? அதனாலேதான் "இந்தியா சுதந்தரம் பூண்டுவிட்டால் எகிப்தும் தனது தேவைகள் பூர்த்திசெய்யப் பெறும்" என்று காந்திஜீ கூறுகிறார்.

சென்ற வருடம் பஹிஷ்கார இயக்கத்தை ஆரம்பிக்க எகிப்து விரும்பியது. நிறையப் பேசினார்கள்; செயலில் ஒன்றுமே செய்யவில்லை- இந்த விஷயத்திலேதான் இந்தியா எகிப்தைத் தாண்டிவிட்டது. இந்தியா எகிப்தைப் பின்பற்றவில்லை. எகிப்துக்கு ஒரு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. கையால் நூற்றுக் கையால் நெய்யப்பட்ட காந்திஜியின் லங்கோடும், எங்கு போனாலும் சுமந்து திரியும் சர்க்காவுமே எகிப்தைத் தோற்கடித்த வஜ்ராயுதங்கள். காந்திஜியைப் பின் பற்றினால் எகிப்து முன்னேற்றமடையும்.

வெடிக்குண்டு வேதாந்திகள்!

வங்காளத்தில் வாலிபர் சிலர் எவரும் வெறுக்கத்தக்க விதமான கையோங்கிய செய்கைகளில் இறங்கிவிட்டனர். டக்கா மாஜிஸ்ட்ரேட் மீதும், ஐரோப்பிய சங்கத் தலைவர்மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். இம்மாதிரி மதியற்ற பலாத்காரமான செயல்களால் நாடு விடுதலை யடையாதென்பதை ஒவ்வொரு இந்தியனும் அறியவே செய்வன். சாந்திபடிகளின் அஹிம்ஸா யுத்தம் கடந்த ஆண்டில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே நடுக்கிடச் செய்ததை நமது வங்க வாலிபர்கள் இன்னும் அறிந்து கொள்ளாதது மிகவும் வருந்தத் தக்கதாகும். ஆனால் ஹிம்சையில் பிரவேசித்திருக்கும் வாலிபர்களை நல்வழியில் திருப்புவது காந்தி பக்தர்களின் முதற் கடமையாமென்பதை நாம் வற்புறுத்திக் கூறுகிறோம். அதிகாரிகளுக்கும் இச் சந்தர்ப்பத்தில் ஒரு முக்கிய கடமையுண்டு. ஐரோப்பியர்களின் தூண்டுதலால் வீண் பீதியடைந்து மேலும் மேலும் அடக்கு முறைகளை கையாண்டால் அதிகப் பலனை யடைய முடியாதென்பதும் நெடுநாளைய அனுபவம். இருபதாம் நூற்றாண்டு ஆரம்ப முதல் வங்க சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் அதன் உண்மை விளங்காது போகாது. சுயராஜ்யம் அடைவதற்கென்றே இச்சிறு கூட்டத்தினரால்; நம் இந்தியர் அருவருக்கும் பலாத்கார முறைகள் கையாளப்பட்டு வருவதாக அறியக் கிடக்கிறது. சர்க்கார் பலம் எவருக்கும் தெரியும். அதை காண்பிப்பதை விடுத்து இந்தியாவுக்குப் பொறுப்பாட்சி வழங்க முன்வருவார்களாயின் இந்த அராஜகப் பூண்டின் வேரற்றுப் போகுமென்பதில் ஐயமில்லை.

முப்பது கோடியும் வாழ்வோம்!
வீழில்?
முப்பது கோடியும் வீழ்வோம்!

(குயில் கூவுகிறது)

இங்கிலாந்திலே நமது நாட்டிளைஞர்கள் பலர் படிக்கப் போயிருக்கிறார்கள். படிப்பு முடிந்து நாடு திரும்பும்போது பாரிஸ்டராகவோ, ஐ.ஸி.எஸ். (கலெக்டர்) ஆகவோ டாக்டராகவோ, இஞ்சினீராகவோ பட்டம்பெற்று வருவார்கள். அக் காலத்தில் படித்து சர்க்காரில் உத்தியோகம் வஹிக்கும் கோடாரிக் காம்புகளைப்போல் இவர்கள் இருக்கமாட்டார்கள் என்பதைச் சொல்லிவிட்டார்கள். இம்மாணவர்கள் லண்டனில் தங்களுக்கென நிர்மாணித்துள்ள பல சங்கங்களின் மத்திய சங்கமாக ஒரு கழகமமைத்து அதன் வருடக் கொண்டாட்ட விழா நடத்தினர். அதுபோழ்து கவியரசி சரோஜினி தேவி தமது குயில் குரலில் கூவியது வருமாறு:—

"இந்தியாவின் மங்கி மறைந்துகிடக்கும் பண்டைப் பெருமையை மறந்து அழகு தெய்வத்தையும், கலைமகளையும், கவிதா சக்தியையும் தேடி வணங்கித் திரிவதால் பிறந்து வளர்ந்த பண் மகளை—பாரத தேவியை—மறந்துவிடுகிறோம். தற்கால இந்தியாவின் ஈனஸ்திதியில், பிறந்த பொன்னாட்டைக் கைவிட்டுவிடுவது பொருந்தாது. இளைஞர்களின் ஒளி நிறைந்த கண்களில் தேவியின் கந்தைக் கோலமும் பிச்சை நிலைமையும் நன்கு தோன்றும். இதோ நான் உங்கள் மத்தியிலே வனப்பின் ஒளியிலே—கவிதையின் இனிமையிலே—தேசீயத்தையும் சுதந்தரத்தையும் பேசுகிறேன். எங்களது வாழ்நாள் பின்னடைந்துவிட்டது. இளைஞர்களாகிய உங்களுடைய வாழ்க்கை எதிரேயிருக்கிறது. உணர்ச்சியில் எழுச்சியுடையவரெல்லாம் யுவர்களாவர். உங்களுக்கு சுதந்தரம் வேண்டுமானால் ஒரே சப்தமாய்—ஒரே தோற்றமாய்—ஒரே மனதாய்க் கேளுங்கள். அளிக்கப்படும். மகத்தான தியாகம் செய்தாலொழிய உத்கிருஷ்டமான ஒன்றைப்படைய முடியாது. பட்டினிகிடக்கும் கோடிக் கணக்கான வாயில்லாப் பூச்சிகளுக்கு நன்னம்பிக்கை கொடுக்க வேண்டுமானால் உங்களைப் பிணைத்துள்ள பிரிவினைப் பட்டுக் கயிற்றை அறுத்தெறிந்தாலொழிய முடியாது. யுவர்களே! உங்களது அருஞ்செயல்களெல்லாம் ஐக்கியப்பட்ட கட்டுப்பாட்டுடனிருக்கட்டும். சாகவேண்டி

ஜீவரத்தினங்கள்.

"ஆண்மையுள்ள ஹிருதயம் நமக்கிருக்கையில் நாம் பலஹீனர்களா? மெல்லிய பூங்கொடிபோன்ற—எழுத்துவாசனை யறியாத—கலாஞானம் கொஞ்சமுமில்லாத — என்றாலும் சரோஜினிக்கும் சிறிது மிளைக்காத பெண்மணிகளும் முன்வைத்த காலைப் பின்வாங்காது—நெஞ்சதுாக்கி—தலைநிமிர்ந்து—கண்சிமிட்டாது பட்ட குறுந்தடியடிகளே இதற்குச் சாக்ஷி.

ஃ ஃ ஃ

பார்ஸிகளே இந்தியாவின் சிறுபாலார் எல்லாரிலும் சிறுபாலார். ஆனால் அவர்கள் தேச சேவையில் வெகு பலம் பெற்றுவிட்டனர். மகரிஷி தாதாபாய் — சுவர்க்கிய ஸர் பிரோஸிஷா மேத்தா—முதலிய மாபெருந் தலைவர்களெல்லாம் அச் சாதியை நடத்திச் சென்றதாலேதான் இன்று அவர்கள் தேசியத்தில் முழுப் பங்கு பெறுகிறார்கள்.

ஃ ஃ ஃ

நல்லரசாட்சியிலே சுயராஜ்ய மென்ற பேச்சே வேண்டாம்; தேவையுமில்லை. தப்புச் செய்வதில் ஒப்பற்ற நீங்கள் (பிரிட்டிஷார்) நாங்கள் தப்புச் செய்து விடுவோமென்னுஞ் சாக்குச்சொல்லி எங்களுக்குச் சுதந்திர மறுக்க உங்களுக்கு அவ்வளவு நெஞ்சழுத்தமா?

ஃ ஃ ஃ

காங்கிரஸ் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து எல்லையில்லாத எவ்வளவு கஷ்ட நஷ்டங்களை நாடு சகித்தது. இவற்றையெல்லாம் நாங்கள் வேறு விதியில்லாமல் — முடியாமல் — கையாலாகாமல் தாங்கினோமா? அஹிம்சையின் அந்தரார்த்தம் ஸ்புரிக்க எண்ணற்ற—இந்துக்கள்—முஸ்லீம்கள்—சீக்கியர்—பார்ஸிகள்—கிறிஸ்தவர்—எல்லோரும் பிரகாசித்தார்கள். காங்கிரஸ்தான் இந்தியாவின் பெரும்பான்மை சமூகம். "சகல உரிமைகளையும், அரசியல், சாதிச் சமய சமத்துவம், பொருளாதாரம் முதலிய எல்லா சுதந்திரத்தையும் ஒவ்வொரு இந்தியனுக்கும் காங்கிரஸ் திறந்த மனத்துடன் கொடுக்கத் தயாரிலிருக்கிறது"

—பகவான் காந்தி.

நேர்ந்தாலும் ஒரே உடலைப்போல் சாவோம். வாழ வேண்டுமானால் ஒரே உயிராய் வாழ்வோம். கட்டுண்டு கிடக்கும் அடிமை இந்தியத் தாயைக் கட்டவிழ்த்து விடுதலை செய்து உலகத்தின் சுதந்தர நாடுகளுடன் தலைநிமிர்ந்து கம்பீரமாய் நிற்கச் செய்துவிடவேண்டும்.

—பம்பாய் கிரானிகிள்.

தான் திருடி அசல் வீடு நம்பாத ஸ்டேட்ஸ்மன்.

கொண்டவன் வலுவிருந்து கூரையேறிச் சண்டை செய்வது நமது கல்கத்தா ஸ்டேட்ஸ்மன் பத்திரிகைக்கு வழக்கமாகிவிட்டது. இந்தியாவின் தேசீய ஸ்தாபனங்களையும் தேசீய இயக்கங்களையும் விழுங்கி ஏப்பம் விட்டு விட்டு இந்தியாவின் அளவற்ற செல்வத்தைத் தன் வர்க்கத்தவரே ஏகபோகமா யாள வேண்டுமென்பது அப் பத்திரிகையின் ஏக விரதம். சர்க்கார் சலுகையை வைத்துக்கொண்டு தலை கால் தெரியாமல் கூத்தாடிக் கும்மாள மடிப்பதில் ஸ்டேட்ஸ்மனுக்கு சரிநிகர் சமானமான பத்திரிகையோ தனி மனிதனோ கிடையாது. சர்ச்சில், ராதர்மீர் கூட இவ் வர்த்தமானிக்குப் பிச்சை போடக் காணாதென்றால் வேறு பேசுவானேன். சமீபத்தில் காஷ்மீர கலக சம்பந்தமாய் கூரை யேறிய செயல் செய்த ஸ்டேட்ஸ்மனை சட்டசபையில் புரட்டிப் புரட்டியிழுத்தும் புத்தி வரவில்லை. தான் திருடி அசல் வீடு நம்பாள் என்ற மாதிரி தன்னுடைய ஜாதிப் புத்தியைக் காட்டத் தலைப்பட்டுவிட்டது. தனது தலையங்க மொன்றில் சர்க்கார் மீது காங்கிரஸ் சாட்டியுள்ள குற்றப் பத்திரிகையைப் பற்றி யெழுதும்போது காசி வர்த்தகர் ஆகா கான் கொலையுண்டதற்கு காங்கிரஸ் கமிட்டிதான் ஜவாப்தாரி யென்று நெஞ்சழுத்தமாக பல்லில் நாக்கைப் போட்டுப் பேசுகிறது. இவ் வடாத செயலை ஈடுசெய்ய அலகபாத்து அட்வொகேட் டாக்டர் காட்ஜூ என்பவரைக் கொண்டு காங்கிரஸ் கமிட்டி நோட்டிஸ் ஒன்று அனுப்பியிருக்கின்றது. அதன்படி ஸ்டேட்ஸ்மென் தான் செய்த குற்றத்தை யுணர்ந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்வதுடன் மான நஷ்டத்திற்காக 51,000 ரூபாய் ஈடும் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் சட்ட பூர்வமாக வழக்குத் தொடரப்படும். அத்துடன் இனிமேல் நாவடக்கிப் பேசவும் நமது பிரஸ்தாப வர்த்தமானி கற்றுக் கொள்ளும் என்று நம்புகிறோம்.

தேசீய சுய மரியாதை மகாநாடு.

சில தினங்களுக்கு முன்னால் குடியில் தேசீய சுயமரியாதை மகாநாடு கூடி காங்கிரஸை ஆதரித்தும், காந்திஜியைப் போற்றி அவரது மகத்தான தலைமையை ஏற்றுக்கொண்டும், சமூகப் பிரச்னையின் மீது வட்டமேஜையைப் போட்டுடைக்கும் முதல் மந்திரியைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளது கேட்டுப் பேரானந்தம் பெறுகின்றோம். காங்கிரஸென்றால் மிளகாய்ப் பொடிபோல கருதிய சுயமரியாதைக் கோஷ்டியார் இவ்வளவு தூரம் தேசியத்தி லிறங்கியதால் நாட்டிற்கு நல்ல காலம் பிறந்துவிட்ட தென்பதில் சந்தேகமே யில்லை. வெறுஞ் சுயமரியாதை மறைந்து தமிழ் நாட்டில் எங்கும் தேசிய சுயமரியாதை சங்கங்களும் மகாநாடுகளும் நடைபெற்றால் எந்த மாகாணம் தமிழ் மாகாணத்துடன் தேசியப் பணியில் போட்டி போட முடியும். பாழும் துவேஷக் கண்ணைத் துடைத்துக்கொண்டு தமிழன் பரந்த பார்வை பார்க்கட்டும். காங்கிரஸின் ஸநாதனமான உண்மை அப்போதுதான் தோன்றும்.

அட குறும்புக்காரா!

“இரங்கூன் கெஜட்” சிலமாதங்களாக நம்மவர் மீது விரோதப் பான்மைகாட்டி எழுதி வருவதை வாசகர்கள் அறிவர். மகாத்மா காந்தியடிகள் இங்கிலாந்து சென்றது முதல் இடைவிடாது அன்னவரைத் தாக்கி அதிகப் பிரசங்கம் புரிந்து வருகிறது. சமீபத்தில் வங்காளத்தில் சம்பவித்த அராஜகச்செயல்களை காந்தியடிகள் லண்டனில் தன்னால் கூடியமட்டும் கண்டிக்கிறார். பலாத்காரப் பிரயோகத்தைக் கண்டு இரத்தக் கண்ணீர் வடிக்கிறார். நமது அஹிம்ஸாதர்ம மூர்த்தி இதைவிடப்பிறிதென்செய்வார்? ஆனால் அதற்குக் காரணமாக சிட்டகாங்கிலும் ஹிஜ்லியிலும் சர்க்காரின்கையோங்கிய செய்கைகள் இருக்கலாமென ஊகிக்கிறார். இதை யொட்டிக் காந்தியடிகளின் அபிமானம் பலாத்காரத்தில் இருப்பதாக ‘கெஜட்’ முடிவு கட்டிவிட்டது. இது காமாலைக் கண்ணன் சங்கதியாகத் தானிருக்கிறது. பலாத்காரம் ஏற்பட்டதற்குக் காரணங்களை பிரிட்டிஷ் பொதுஜனங்களுக்கும் பாராளுமன்றத்திற்கும் அரசர் பெருமானுக்கும் எடுத்துக்காட்ட வேண்டியது குடிகளின் கடமையல்லவா? அக்கடமையையே காந்தியடிகள் நிறைவேற்றிவருகிறார். பலாத்கார இயக்கம் தலைவிரித் தாடுவதை உத்தேசித்தே இந்தியாவுக்கு சீக்கிரம் திரும்ப நினைப்பதாக காந்தியடிகள் கூறியதைக் கெஜட் திரித்துக் கூறி கடுமையான அடக்குமுறையை கையாளும் படி பலமாய் வற்புறுத்துகிறது.

திறந்து விடு கோயிலை.

சனாதன ஹிந்து மதத்தைக் குறை கூற யாராலும் முடியாது. புராதனமான வழக்கங்களெல்லாம் கெட்டவை யல்ல. முன்னோர் வகுத்த வழியை விட்டு நாளடைவில் மனிதன் விலகிவிட்டான். வேதங்களில் கூறப்பட்டிருக்கும் ஹிந்து மதத்திற்கும் நடை முறையிலிருந்துவரும் ஹிந்து மதத்திற்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமுண்டு. ஸ்ரீ விவேகானந்தரின் ஹிந்து மதம் இப்போதிருக்கின்றதா? பகவான் பரமஹம்ஸரின் ஹிந்துத்வத்தை எங்காவது பார்க்கிறோமா? இல்லை. மனிதனை மனிதன் தீண்டக்கூடாதாம். தொட்டால் சௌளென விழுகிறான்; குளிக்கிறான்; முழுகுகிறான். இது ஹிந்து மதத்திலே ஒரு கறை. ஐயையோ! மத மென்ன செய்யும் மனிதன் செய்யும் குற்றத்திற்கு இதனாலே தான் இந்தியாவில் தீண்டாமை தீர்ந்தாலொழிய விமோசன மில்லையென்று பலர் கூறுகின்றனர். உருவத்திலானாலும் சரி, நடை உடை பாவனை, பேச்சு வார்த்தை முதலிய எந்த அம்சத்திலானாலும் சரி மாறுபடாத ஒருவனைத் தீண்டப்படாதவன், தாழ்த்தப்பட்டவன் என்று கூறுவதும் புறக்கணிப்பதும் மன்னிக்க முடியாத பாவச் செயலாகும். மனிதவர்க்கம் ஒரே ஆண்டவனுடைய சிருஷ்டி ஆண்டவனுடைய கையினால் தொட்டுப் படைக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட சிலரை அவனது ஆலயத்துக்குள் பிரவேசிக்க லாகாதென்று சொல்லுவது ஆண்டவனையே வணங்கக்கூடாது என்றுகூறுவதைத் தவிர வேறில்லை இதனால் இந்து மதஸ்தர்களில் உயர்ந்த ஜாதியாரென் றழைக்கப்படுகிறார்களே அவர்களின் யோக்யதை புலனாகின்றது. தெருவில் திரியும் சொறி நாய்கூட கோயில்களுக்குள் சென்று நாலா மூலைகளிலும் சுற்றித் திரிந்து வருவதுண்டு. அதையெல்லாம் கண்ணில் பெண்ணெய் விட்டு திரிப்போட்டுப பார்த்துக் கொண்டிருக்கும் தர்மகர்த்தாவோ, பட்டரோ, பூசாரியோ ஒரு ஆதி திராவிடன் தப்பித்தவறி வழிமறந்து வந்துவிட்டாலோ அவ்வளவுதான் "சண்டாளன், பஞ்சமன்" என்ற பல பல்லவிகளைப் பாடி ஊரை யெழுப்பிவிடுகிறான். அப்புறமென்ன பஞ்சாயம், வம்படி அபராதம் எல்லாம் தொடரும். இதைத் தொலைத்து வைதிகர்கள் வாயிலே 'மண்போட இம்மதி முதல் திகதி முதல் மலையாளத்திலே ஆலயப்பிரவேச சத்தியாக்கிரஹம் நடந்துவருவது கேட்டு சந்தோஷிக்கின்றோம். முறை தவறாமல் அஹிம்சைப் பிடியிலிருந்து இம்மிகூட விலகாமல் மலை யிடிந்து தலைமீது விழுவதாயினும் நிலை குலையாமல் வெற்றியின் எல்லைவரை இயக்கத்தை நடத்தி ஆதித்திராவிட சகோதரர்களுக்கு ஆலயப் பிரவேச உரிமை யளிக்க முன்வந்துள்ள கேரள காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகளுக்கு நமது வாழ்த்து உரித்தாகுக.

பர்மா கலகம்

வங்காளக் கிளர்ச்சியை அடக்க அயர்லாந்து சட்டங்களையும், ராணுவச் சட்டத்தையும் அமுலுக்குக் கொண்டுவந்து அடக்கவேண்டுமென்றும், காங்கிரஸ் மகாசபையை நசுக்கவேண்டுமென்றும் இரங்கூன் "கெஜட்" மிக்க ஆத்திரத்துடன் கூறுகிறது. அது நியாயமே! அராஜகக் கிளர்ச்சியை வேரோடு களையவேண்டுவது அத்தியாவசியமாகும். ஆனால் அதற்காக ஆதாரமற்ற பொய்களைக் கூறுவது பொறுப்புவாய்ந்த பத்திராதிபருக்கு அழகல்லவே? "இந்தியா விடுதலையடைவதற்கு ஐயர்லாந்து முறைகளைப் பின்பற்றி கொலை முதலிய கொடுஞ் செயல்களைப்புரிந்து வெள்ளையர்களைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்று இந்தியக் கிளர்ச்சிக்காரர்கள் அடிக்கடி சொல்லிவருகிறார்களென்று" கெஜட் பத்திரிகைக்குக் குறிப் பெழுதுபவர் வெட்கமில்லாமல், மானங்கெட்ட விதமாக அபாண்டம் செப்புகிறார். அவாறு கூற்றை ரூபிக்கும்படி அன்னவரையும், அவரது வர்க்கத்தாரையும் அறைகூவி யழைக்கிறோம். இன்றேல் அந்த வார்த்தைகளை மரியாதையாக வாபீஸ் வாங்கிக் கொள்ளட்டும். பர்மாவில் கலகம் ஆரம்பித்து அடுத்த கிறிஸ்மஸ் பண்டிகையும் வருகிறது. இந்திய சர்க்காருக்கு இங்கிருந்து புத்திசொல்லும் இந்த அதிபர் தானிருக்குமிடத்தில் வருடமாகியும் கலகம் அடங்காமல் இருக்கிறதே! அதற்குத் தகுந்த யோசனைகள் சொல்லி ஒழுங்கு செய்யலாமே. இவருடைய பேச்சு உள்ளூரிலேயே விலைப்படவில்லையே. அதை யறிந்து மரியாதையாக அடங்கியிருப்பதே மேன்மையாகும்.

தேசோபகாரி

சந்தா விபரம்

வருஷம் 1-க்கு	ரூ.	3 0 0
ஆறு மாதம்	ரூ	1 8 0
மாத சந்தா அணா		நான்கே

அரையணா மலர் 9. இதழ் 29. பதிவு எண் 245.

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை

DESOPAKARI

புதன், ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி, இரங்கோன், (8—11—31) ஐப்பசிமீ 23உ ஞாயற்றுக்கிழமை.

அட நரகா சூரா!

"பந்தமுற் றெத்தனை நாள்—இந்தப
பாரினில் ஈடழிதல்?
சொந்த மில்லாத சுக—வாழ்வைத்
தோற்று விப்போம் வாராய்."

—கவிராஜன்.

இன்றிரவு தீபாவளிதினம். நமது வீடுகளெல்லாம் கோலகலமாயிருக்கும். இந்துக்களயாவரும் இவ்விழாவைக் கொண்டாடுவோம். துணிமணி தினுசுகளும்- பலகாரப்பண்டங்களும். பட்டாசுவகைகளும் தாராளமாய் விலையாகும், காசைக் காசென்று கருதாமே—பணத்தைப் பணமென்று பார்க்காமே—இன்று நாம் பவிசு குழைவோம்.

இன்று காலமே விடிந்ததும் வீட்டுத் தலைவி வருவாள். சேலையில் ஐம்பது; அதுவும் பச்சை, சிவப்பு பலபலவர்ணத்தில் வாங்கிவா வென்பாள். பட்டுவகையில் பதினாயிரம் சொல்லுவாள். பலகாரப் பண்டங்கள் பட்டியலொன்று பத்து முழத்தில்படிப்பாள். பிள்ளைகள் வரும். ஒன்று சீனிவெடியென்னும்; இன்னொன்று கல்வெடியெனக் கண்ணைக் கசக்கும்; மற்றொன்று மத்தாப்புக் கேட்கும், சரியெனச் சொல்லி வீட்டை விட்டெழுந்து கடைவீதி சென்றால் பாவி கடைகாரன் தீபாவளிக்கிராக்கியென்று ஒன்றுக்குப்பத்து விலை ஒட்டிவிற்கின்றான். கொட்டிக் கொடுத்து மனைவியும் குழந்தைகளுங் கட்டளையிட்டவை யனைத்தையும் துளி குறையாமல், ஒன்றும்விடாமல் வாங்கியாகவேண்டும். மாலையிலெல்லாம் மனையில்லை கடைவிரித்தாகும். சேலைகளின் நயமிதம் பேசப்படும். அண்டை அயல் வீட்டுக்காரிகளெல்லாம் கும்புகூடி ஒருத்தி நிறம் கம்மியென்பாள்; இன்னொருத்தி நல்லசேலை, விலையதிகமெனச் செப்புவாள்; அப்புறம் ஒருத்தி குறக்கிழை பாய்ந்திருக்குதென்பாள்; வேறொருத்தி உன்னிறத்திற்கிது ஒவ்வாதென உரைப்பாள். இவ்வளவுங் கேட்டு இம்மனைவி வேறுசேலை தான்வேண்டுமென விளம்புவாள், அம்மம்மா! யாரால்முடியும் இவர்களைச் சரிப்படுத்த. பட்டாசுக் குழந்தைகள் வண்டிப்பட்டாசு என் வாங்கிவரவில்லை யெனக்கேட்கும். ஏதேதோ சாக்குப்போக்குச் சொல்லித் தொலைக்க வேணும். இல்லாவிட்டால் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் எவ்வளவு காசைத்தான் கொடுத்தழுவது.

இரவெல்லாம் பெண்களுக்குத் தூக்கமென்பதில்லை. அரைப்பது, திரிப்பது, எரிப்பது, சுடுவது, செய்வது யாவும் சிண்டைப் பிய்த்துக்கொண்டு நடக்கும். எண்ணெய்க்குள் வடை வேவதும், கல்லின் மீது தோசை கருதுவதும், காதைத் துளைக்கும். இத்தனை இரைச்சலின் மத்தியில் என்னமாய்த் தூங்குவது? தலைக் கோழி கூவியதும் எழுந்து திரவேண்டும். எண்ணெய் ஸ்நானம் எடுப்போம்; கோடியாடை யுடுத்துவோம். சீன—ஜப்பானியர் துப்பாக்கி பீரங்கிகளால் சுட்டுக் கொள்ளுவது போல எங்கள் குழந்தைகள்

சீனிவெடி, பட்டாசு சுடுவார்கள். நம்ம காசுகளெல்லாம் அன்றுதான் கரியாய்ப் போகிறது. புகையாய்ப் புகைத்துவிடுகிறார்கள். 'காசைக்கரியாக்காதே சீனிவெடி வாங்கிச்சுடு' என்று சீனக்காரனும் ஜப்பான்காரனும் சொன்னார்கள்' ஏமாந்த இந்தியப் பிள்ளைகள் அவ்வாறுதான் செய்து வருகிறார்கள். கும்பிக் கூழுக்கழுகையில் கூந்தல் பூவுக்கழுகிறதாக்கும்? ஏழை இந்தியாவுக்கு இரவு ஆடம்பரமெல்லாம் எனனத்துக்கு ?

நமது முன்னோர்கள் கொண்டாடியது போல—கொண்டாடிய காரணத்திற்காக நாம் இப்பொழுது தீபாவளி கொண்டாடுகிறோமா? நம்முடைய தீபாவளியில் சத்தில்லை; அர்த்தங் கிடையாது. முன்னோர்கள் கொண்டாடிய தீபாவளியில் ஆழமான கருத்து — சனாதனமான உண்மை பொதிந்திருந்தது. நாமோ வாலைவிட்டு உரையைப் பிடித்துக்கொண்ட சிப்பாய் போல உண்மைத் தீபாவளியை விட்டு விட்டு வெறும் நிழலைத்தான் கொண்டாடுகிறோம்.

ஐப்பசி மாத சதுர்த்தசியில் நமது நாட்டையும் நாட்டு மக்களையும் ஏன் ? தேவர்களையுங்கூட வாட்டி வருத்திய நரகாசூரனை நமது தெய்வம் கொன்று சாய்த்தது நம் மக்கள் அடிமை நிலை நீங்கி சுதந்திரம் பூண்டு களிக் கூத்தடித்தனர்; குதூகலங் கொண்டாடினர்; அடிமை வாழ்க்கை தொலைந்ததென்று ஒய்ந்த முழுக்கு ஒரு முழுக்காய் எண்ணெயிட்டு சீயக்காய் தேய்த்துக குளித்து விட்டனர்; சுதந்திர இன்பத்தில் கோடியுடுத்தி பசியென்பதில்லாமல் வயிறுற உண்டுகளித்தனர்.

"காலத்திற்கேற்ற கோலம்" என்பது நாட்டுப் பழமொழி; நமது காலமென்ன? எந்தக் கோலத்தில நாமிருக்க வேண்டும்? என்பதறியாமல் நாம் விழாக் கொண்டாடுகிறோம். நமது நாடு நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டுவருகிறது; பஞ்சமும் பட்டினியும் வாட்டி வருத்துகிறது; தரித்திரம் பிடுங்கித் தின்னுகிறது. நவமணிகளெல்லாம் நகர்ந்து போய்விட்டன- தங்கமும் வெள்ளியும் துளி விடாமல் சுரண்டப்பட்டாகிறது. ஒரு நரகாசூரன் அன்று ஒழிந்தான். இன்று எத்தனை எத்தனை நரகா சூரர்கள் நாட்டை வளைந்து கொண்டிருக்கிறாகள். கள்ளரக்கன் ஒரு கொடியன்; அன்னியத் துணி ஒரு அசுரன்; தீண்டாமை ஒரு அவுணன்; சமூக துவேஷம் ஒரு இராக்ஷசன்; அடிமை வாழ்க்கையே ஒரு பிரமாண்டமான கவந்தன். இவர்களையெல்லாம் வைத்துக்கொண்டு கொண்டாடும் தீபாவளி வெறும் கேலிக் கூத்தேயன்றி வேறில்லை. ரோமாபுரி தீப்பற்றி யெரிகையில் மலைமீதேறி அக் காட்சி கண்டு களித்து வீணை வாசித்து கூத்தடித்த நீரோ மன்னன் செயல் செய்கின்றோம். இத்தகைய தீபாவளி தீபாவளியோடு கூட்டா ?

நம்மிடை இவ்வளவு அசுரர்களைக் கட்டி அழுதுகொண்டிருக்கையில் எப்பொழுதோ எவனோ ஒரு நரகாசூரனைக் கொன்று விடுதலையடைந்ததாக ஒரு நாடகத்தை நடத்தலாமா ? இன்று நாம் ஆயிரம் கோடிக் கணக்கில் நாட்டுச் செல்வத்தைக் கரைக்கின்றோமே! மனிதனுக்கும் ஜீவ வர்க்கத்துக்கும் சிறிதும் பயனபடாமல் காசைக் கரியாக்குகின்றோமே! இந்தச் செல்வத்தை யெல்லாம் நாட்டுப்பணியில் ஏன் ஈடுபடச் செய்யலாகாது? நாட்டு வறுமையைப்பற்றி இவ்வளவு கோலாகல மத்தியில் இத்தனை ஆடம்பரத்திடையில் எந்த இந்தியனாவது எண்ணினானா? வங்காளத்தில் சிட்டகாங்கில் தேச மக்கள் படும் பாட்டை பார்க்க எவனுக்காவது கண்ணிருக்கின்றதா? 'கள்' என்னும் அசுரனேயும், 'அன்னியத்துணி' என்னும் அரக்கனையும் நாட்டைவிட்டோடச் செய்யும் முயற்சியில் எத்தனை இடங்களில் பொருள் இல்லாது மறியல் தடைபட்டுக் கிடக்கின்றது. நெஞ்சில் ஈரமுள்ள எந்த இந்தியனும், நெஞ்சில் உறமுள்ள எந்த இந்தியனும் பழைய பாணியில் தீபாவளி கொண்டாடமாட்டான். பட்டுடுத்தான். கதரே கட்டுவன். அந்நியமல்லாத சுதேசியையே கூடியவரை உபயோகிப்பான் சீனிவெடி சுடான்! அப்பணத்தின் ஒவ்வொரு தம்படியையும் சிட்டகாங்கில் இந்தியனாய்ப் பிறந்த தோஷத்தால்—பிறந்த பொன்னாட்டை நேசித்த பாசத்தால் பாழுங் கொடுமைக்குள்ளாகிக்கிடக்கும் சகோதரர்களுக்கு அனுப்பிவைப்பான். அப்பொழுதுதான் நமது தீபாவளி தெய்வ ஒளிபெற்றதாகும்; தேசிய மணம்பெற்றதாகும். வந்தே மாதரம்.

அன்னிய ஆடையை இனமாக வழங்கிய போதிலும் நாம் அணியக்கூடாது; அணிந்தால் நமக்கு வீசிய வலையில் சிக்கிக் கொண்டவர்களாவோம். ——மகாத்மா காந்தி.

ஓட்டாண்டிகளே!

ஜாடை பேச நான் கற்றதில்லை; தெரிய வும் தெரியாது. ஆனால் கீழே குறிப்பிடப் போகும் வார்த்தைகளால் நகர சபையாரை யோ, இல்லை சர்க்காரையோ, வேறு யாரை யோ ஜாடையாக வசவு செப்பவதாக எண்ணி விடலாகாது. என்னமோ கதை சொல்லுகி றான் என்று வேண்டுமானால் சொல்லிவிடுக் கள் பரவாயில்லை.

எமன் தர்பாரிலே வேலையில்லை. எல் லோரும் தூங்கி விழுந்துகொண்டிருந்தார்கள். சித்திர குப்தன் பேனாவைப் பிடித்தமட்டில் கும்பகர்ணனாகிவிட்டான். எமதர்மன் கொட் டாவி விடுகிறான். காலன் கனவு கண்டுகொண் டிருக்கிறான். தூதன் தூது போகவில்லை. எல்லாம் வைத்தது வைத்தாப்போலிருந்தது. இந்த சமயத்தில் இவர்கள் தூக்கத்தைக் கெ டுக்க ஒரு தாடிக்காரன் உள்ளே நுழைந் தான். எல்லோரும் தூங்குவது கண்டு ஒரு சிரிப்பும் சன்னக் கனைப்பும் செய்தான். அ ரைத் தூக்கத்திலிருந்த காவற்காரன் மாத்தி ரம் பாதிக் கண்ணைத் திறந்து பார்த்தான் நாரதப் பிர்மமே! நமஸ்காரம் என்றான். தீர்க் காயுஷ்புமான் என்று இடித்த குரலில் வாழ்த் தினார் நாரதர். அவரது வரவைச் சொல்ல எல்லோரையும் எழுப்புமுன் மூச்சுத் திணரிப் போனான். எமனை எழுப்ப ஏழுபேர் வேண் டியிருந்தது. எழுந்து தொலைந்தான் இல்லா விட்டால் நாரதர் சாபம் பொல்லாது. யோக க்ஷேமமெல்லாம் பேசி முடியவும் வேலையில் லாத் திண்டாட்டத்தைப் பற்றி உலகத்தார் மீது எமன் நீண்டதோர் குற்றப் பத்திரம் படித்தான். பூலோகத்திலே எவனோ தரும புத்திரனாம் ஏக சக்கிராதிபதியாய் ஆளுகிறா னாமே. அவனது குடி ஜனங்கள் வயிற்றுக் குப் பஞ்சமில்லாமே—மத ஜாதி பாகுபாடில் லாமே—ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல வழுகிறார்களாமே. அவன் செய்யும் அக்கிரமத்தால் எங்கள் ராஜ்யத்திற்கு (நகரத் திற்கு) ஒரு சுட்ட நண்டுகூட வருகிறதில்லை. வெகு காலமாச்சு, கேஸ் என்ற பேரே யில்லை. சட்டத்தைக்கூட மறந்துவிட்டோம். வேலை யில்லாமல் இப்படி சோம்பலாக எவ்வளவு காலந்தான் வாழ முடியும்? எனக்குத் துளி கூட உபரிபோகங் கிடையாது? சித்திரபுத் திரன் (கணக்குப்பிள்ளை) விரல்விட்டு எண்ணக் கூடத் தெரியலை என்கிறான். என் கோர்ட்டு வக்கில்களுக்கெல்லாம் பிழைப்பில்லை. ஸ்டாம் புக்குச் செலவில்லை. டாக்டருக்கு தம்படி வரும்படியில்லை. இப்படியிருந்தால் என்னூர் குட்டிச்சுவராய்ப் போக யாரைக் கேட்க வே ணும்? உங்கள் புண்யமாகட்டும், ஒரு யோ ஜனை சொல்லுங்கள். பீஸு வேண்டுமானால் வரும்படி வந்தவுடன் சல்லி குறையாமல் கொடுத்துவிடுகிறேன்"— என்று கெஞ்சிக் கேட்டான். நாரதர் சிறிது சிந்தித்துப் பார்த் தார். "சரி. அப்படியே யாகட்டும்பிள்ளாய். நாளை உன் ஆபீஸில் வேலை செய்ய ஆள் காணா மல் பத்திரிகைகளிலே தேவை விளம்பரஞ் செய்வாய்" என்று கூறிவிட்டுப் போய்விட் டார். பூலோகத்திலே வந்தர் கள்ளுச் சாராயங்களை மனிதருக்கு ருசிகாட்டிவிட்டார், மூலைக்கு மூலை கள்ளுச் சாராயக் கடைகளைத் திறந்து வைத்தாயிற்று. எமன் தர்பாரிலே இரவு பகலாய் விசாரணை. சித்திரபுத்திரனு க்கு எழுதி எழுதிக் கை கடுப்புக்கண்டுவிட் டது. சிறைச் சாலைகளில் இடமில்லை: புதிது புதிதாய்க் கட்டியாகிறது. அந்த மாதிரி இரங்கோன் நகர மத்தியில் கள்ளுக் கடைகளிருப்பதால் பலர் பிழைக்க ஏதுவிருப்பதால்தான் நகர சபையிலிருக்கும் அங்கத்தினர்களுக்கு பிழைப் பிருக்கிறதென்று அவைகளை எடுக்க மனமில் லையாக்கும். வாக்காளர்களாவது இந்த சம யத்தில் அவர்கள் ஓட்டுக்கு வரும்போது கள் ளுக்கடைகளை எடுப்பதற்காகப் பாடுபடுவ தாக எந்த அபேக்ஷகர் சத்தியம் செய்து கொ டுக்கிறாரோ அவருக்கே தலை நிறைய ஓட்டு களை அள்ளி அள்ளிப் போட்டு அந்த தர்மத் தைச் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். போய்வாட்டுமா?

பத்திரிகைகளுக்குச்சனியனா?

இந்தியாவில் பல மாகாணங்களில் சில்ல றை தெய்வங்கள் யுத்தக்கொடி இழுத்துவிட்ட ன. அடக்கு முறை தாண்டவமாடுகிறது. அவசரச் சட்டங்கள் ஏற்படுகின்றன. குலாம் கோஷ்டியினரும், அதிகார வர்க்க தாசர்களும் எக்களித்துக் கொக்கரிக்கின்றனர். அச்சுச் சட்ட சனியன் இன்னும் தொலைந்தபாடில்லை. இந்தியாவிலேதான் இம்மாதிரியென்றால், புளி க்குமா மாங்காய் தோற்குமா என்கிறது பர்மா சர்க்கார். அதன் சுவரூபத்தைக் காண் பிக்கத்தான் செய்யும். தற்சமயம் தேசபா

தாய் எட்டடி! குட்டி பதினாறடி!

டி. எய்ச். தார்ன் என்ற வெள்ளைப் பத்திரிகாசிரியர் வங்காளிகளைப் பற்றி வாய்க்கு வந்தவாறு உளரத் தலைப்பட்டுவிட்டார். ராஜத்துரோகம், பாதகம், பொய், இச்சகம் பேசல் முதலிய என்னென்ன பட்டங்களை யெல்லாமோ கட்டுகிறார்' இவரும் கல்கத்தா ஐரோப்பிய சங்கத்தில் அங்கத்தினராயிருக்கக் கூடும். அதன் தலைவர் வில்லியர்சைப்பற்றி நாம் நன்கறிவோம். கொஞ்சநஞ்சம் அறிமுகமில்லாதிருந்ததையும் வங்க வாலிபர்கள் விளம்பரப்படுத்திவிட்டார்கள். செவிடனும் கேட்கும்படி சுட்டதால் உலகத்திலேயே வில்லியர்ஸ் கண்காட்சிப் பொருளாகிவிட்டான். தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடிபாயுமன்றோ? இக் கூற்றை நோக்கும் எந்த வங்காளியும் அஹிம்சா தர்மத்திலே ஊறிச் சுவறியிருந்தாலும் பல்லைத் தட்டிக் கையில் கொடுக்கத் துணிவது மனித ஸ்வாபம். இந்த வெள்ளை ஆசிரியர் கூற்றைக் குறித்து இந்திய சர்க்கார் கவனஞ்செலுத்தினார்களா? ஆனால் இந்நாட்டுச் சட்டங்கள் கருப்பருக்கேயன்றி, வெள்ளையருக்கில்லை போலும்? இம்மாதிரி துவேஷப் பிரசுரங்களே இந்தியாவில் ஏற்படும் கிளர்ச்சிகளுக்கெல்லாம் காரணமென்பதை ஒரு மாட்டாம் பையனும் அறியவே செய்வன். ஆயினுமென்? அதிகார வர்க்கத்தின் இரும்புத் தூண்கள் இது சம்பந்தமாக கண்ணிருந்தும் பார்க்காமல், காதிருந்தும் கேழ்க்காமல் இருக்கும் பிரதிமைகளாய் விட்டனவா? இந்தியப் பத்திரிகைகள் என்றால் பாணங்களை அடுக்கடுக்காய் தொடுக்கத் தெரியும்? இத்தகைய சலுகை காட்டுவதால்தான் ஆள்வினை வர்க்கத்தாரின் அகம்பாவச் செயல்களாலேதான் நம் நாட்டில் ஆராஜக உணர்ச்சியேற்பட்டு வளர்ந்துவர ஹேதுவாயிற்று என்றால் மிகையாகுமா?

ஷைப் பத்திரிகைகளின் மீது போர் தொடுப்பார்களென வதந்தி. அது எம்மட்டும் உண்மையோ நாமறியோம். ஆனால் அதிகாரிகளின் புன் சிரிப்பில் குளிர்காயும் பத்திரிகைகளை இவ் வதந்தி பாதிக்க முடியாது. இம்மாகாணத்தில் சர்க்கார் செய்யவேண்டிய பிரதம வேலையாகிய கலகத்தை அடக்கவேண்டியதை விடுத்து சில்லரை சேஷ்டைகளைச் செய்வதில் யாதுபயன் இனியேனும் தவறிழைப்பதாகத் தோன்றும் பத்திரிகை ஆசிரியர்களை எச்சரிக்கை செய்து, பிறகு நடவடிக்கை எடுப்பதே முறைமையென்பதைநாம் அழுத்தமாக எடுத்துக்காட்டுகிறோம்.

சிண்டு முடி சாயுமா?

காந்திஜி முஸ்லிம்களுக்கு அதிகமாக விட்டுக் கொடுத்துவிடுவாராம்? இவ்விதம் இங்கிருந்து ஓலமிடுகின்றனர் சிலர். வட்டமேஜையிலேயே டாக்டர் மூஞ்சி தாட்டிகத்துடன் மூர்க்கண்யமாகப் போர் புரிய முன்வந்தாராம். நமது மௌலானா அதற்கு இளைத்தவரா? 1916 ம் ஆண்டு லோகமான்ய திலகர் —நமது மூஞ்சியின் குரு யாது கூறினார்? "முஸ்லிம் சகோதரர்களுக்கு இந்துக்கள் அதிகம் விட்டுக் கொடுத்துவிட்டதாக சொல்லப்பட்டது. நான் இந்தியாவில் உள்ள இந்துக்களுக்காகப் பேசுகிறேன். நாம் இன்னம் அதிகமாக வேண்டுமானாலும் விட்டுக் கொடுக்கலாம். முஸ்லிம் சமுகத்திற்கு மாத்திரம் சுயாட்சி அளிக்கப்படுமயின் எனக்குப் பரம ஆனந்தம். ரஜபுத்திரர்களுக்குக் கொடுக்கட்டும்; தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் கொடுத்தாலும் எனக்கு சந்தோஷமே" இவ்வாறு நமது வீர கேசரி கர்ஜித்தது. பதினைறு ஆண்டுகள் கடந்தன. முடிவு என்ன? எவருக்கும் எதுவும் கிடைத்தபாடில்லை. அதிகாரவர்க்கத்தினர் வாழையடி வாழையாக அனுபவித்து ருசி கண்டவர்கள். தங்கள் சலுகைகளை இலகுவாக விட்டுவிட மாட்டார்கள். உருசி கண்ட பூனை உரியைத் தாவுவது சகஜமன்றோ? மனித சுபாவமும் அதுதான். மறுபடியும் மறுபடியும் இந்து முஸ்லிம் பிணக்கைத்தான் இழுத்துப் போடுகிறார்கள். ஆங்கில ராஜதந்திரிகளும் புன்முறுவல் புரிகின்றனர். சுவர்க்கீய லோகமான்யர் கூறியபடி கொடுக்கவாவது அரசாங்கம் முன்வருமா? ஆனால் பனிரண்டு வருடங் கடந்து காலாவதியுமாகிவிட்டதாக ஒருவேளை கூறலாம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நோக்கம் வெளிப்பட்டால், நமக்குள்ளிருக்கும் பேதங்களும் பாகுபாடுகளும் சூரியன் முன் பனிபென மறைந்துவிடும். வட்டமேஜையும் அனேகமாய் முறிந்துவிட்டது பிரதிநிதிகளும் பிரிட்டிஷ் கபட நாடகத்தை நன்கே உணர்ந்துகொண்டனர். அதி சீக்கிரத்தில் நாம் அனைவரும் அவர்களை எதிர்கொண்டழைப்போம். சுதந்திர யுத்தம் தொடங்க நாள் கிழமை நட்சேத்திரம், பார்க்க வேண்டியதுதான். அஹிம்சைப்போர் வீரர்களும் நம் நாட்டில் அனேகரிருக்கின்றனர். அதற்கும் கவலை வேண்டாம்.

இங்கே கொஞ்சம் கொட்டம்மா! அங்கே கொஞ்சம் பெட்டம்மா!

என்னமோ வென்று மலைத்துவிட வேண்டாம். உலக நடப்பை இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சமாகத் தொட்டுப் பேசுவோம். என்பதுதான் இத் தலைப்பின் பொருளாகும்.

கிழக்கு வட்டத்தின் இரு கோடியிலும் என்னென்ன நடக்கின்றன ? மேலைப்புறத்தில்—இங்கிலாந்தில் ஆமை நகர்ந்ததுபோல வட்டமேஜை ஊர்ந்து கொண்டிருக்கின்றது. பேச்சு! பேச்சு! வெறும் பேச்சைத்தான் பேசுகிறார்கள். காங்கிரஸின் ஏகபிரதிநிதி—இந்தியாவின் தரித்திர நாராயணர்களான முப்பத்து முக்கோடி வாயில்லாப் பூச்சிகளின் வழக்கையெடுத்துப்பேசும் தீர்க்கதரிசியானகாந்திஜீ ஒருவர்தான் விஷயங்களை வெட்டொன்று துண்டிரண்டில் பேசுகிறார். சமூகப் பிரச்னையில் வட்டமேஜை நாலுகாலும் சறுக்கிக்கொண்டிருக்கிறது. அந்தச் சாக்கில் பிரிட்டிஷ் இராஜதந்திரிகள் பழைய பல்லவியைப் பாடப்பார்க்கின்றனர். ஐக்கிய மண்டலத்தில் சேனாபதி ஜவஹர்லால் போர்க்கொடி யிழுத்தார். சர்வாதிகாரி காந்திஜீயும் கட்டளை கொடுத்துவிட்டார். இப்பொழுதுதான் பிரிட்டிஷ் மந்திரிகளுக்கு பழைய ஞாபகம்—சென்ற வருட சத்திய யுத்தத்தின் காட்சி கண்ணிலும் மனத்திலும் படுகிறது. போருக்குப் பயப்படுகிறார்கள். இந்தியா எவ்வளவு தியாகஞ் செய்தும் சொந்த நாட்டுச் சுதந்திரமடையவிரும்புகின்றது. வட்டமேஜையும் கொஞ்சம் உருப்படப் பார்க்கிறது; சமூக வாதிகள் உறுமுகின்றனர்.

ஃ ஃ ஃ

கிழக்குக் கோடியில் சீனமும் ஜப்பானும் மோதிக்கொண்டிருக்கின்றன சர்வதேச சங்கத்தில் செய்துகொண்ட ஒப்பந்தத்தையும், கெல்லாக் உடன்படிக்கையையும், வாஷிங்டனில் ஒன்பது வல்லரசுகளும் ஒப்புக்கொண்ட சமாதானத்தையும் ஜப்பான் மீறி சீனத்தை ஜெயித்துக்கொள்ள ஆசைப்படுகிறது. இது பேராசை. ருஷியா கண்குத்திப் பாம்புபோல் பார்த்துக்கொண்டிருக்கிறது. பூகோள அமைப்புபடி பார்த்தால் ருஷியா சீனாவுக்கு உதவி செய்யலாம். இந்தியாவுக்கும் ருஷியாவுக்குமிடையில் (பப்பர் ஸ்டேட்டாக) இடைநாடாக ஆப்கானிஸ்தானம் இருப்பதுபோல ஜப்பானுக்கும் ருஷியாவுக்குமிடையில் சீனமிருக்கிறது. இதனால் ருஷியா சீனாவுக்குதவி செய்தால் பிரிட்டன் சாம்ராஜ்யத்துக்கே ஆபத்து. ஆகையால் பிரிட்டனும் தலை நுழைத்துக்கொள்ள நேரும். அப்படியானால் இன்னொரு உலக யுத்தம் தான். கீழ் கோடியில் அஹிம்சைப் போருக்கும் மேல் கோடியில் மிருக யுத்தத்திற்கும் அடிகோலியாகிறது.

ஃ ஃ ஃ

இந்தியாவின் இரு கோடிகளிலும்? வட கிழக்கில் வங்காளத்திலே சிட்டகாங் கொடுமை! வடமேற்கில் காஷ்மீரத்திலே அமளி! இதையெல்லாம் நினைத்தால் நெஞ்சு திடுக்கிடுகிறது. கலப்பில்லாத இந்திய இரத்தம் ஓடப்பெறும் ஒவ்வொருவனும் இற்று விடுகிறான். என்ன உலகமடா இது! கோர விலங்கினங்களைப் போல் மனித வர்க்கம் இரத்த வெறிபிடித் தலைகின்றது. சமாதானமென்பது துளிகூடக் கிடையாது. பிரிட்டிஷ் ஆட்சியில் இவைகள் நிகழலாமா? சிட்டகாங்கில் இராணுவத்தால் நேர்ந்த நிஷ்டூரங்களுக்குக் கங்கு கரையில்லை இந்துக்கள் பட்டிருக்கும் பாடு பகவானே யறிவன்; கேள்வி கேட்பாடில்லையா? தெய்வத்துக்கும் கண்ணில்லையோ ?

ஃ ஃ ஃ

காஷ்மீரத்திலே ஹிந்து மன்னனுக்கு விரோதமான கிளர்ச்சி. பாஞ்சால முஸ்லீம்கள் காஷ்மீர் மீது படையெடுத்துக் கொண்டிருக்கின்றனர். பிரிட்டிஷ் சர்க்கார் தலையிட்டு பலமான அடக்கு முறை கைபாண்டு வருகின்றனர். ஆட்டு மந்தைகளைப் பட்டியிலடைப்பது போலப் பல நூற்றுக் கணக்கில் பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர். அவசரச் சட்டங்கள் தாண்டவமாடுகின்றன. வங்கச் சட்டம்! பாஞ்சாலத்தில் அவசரச் சட்டம்! இந்தியா வெங்கணும் அவசர அச்சுச் சட்டம்! அப்புறம் வங்க வாலிபர்களின் வெறிபிடித்த செயல்கள். இவைகளை யெல்லாம் எண்ணிப் பார்த்தால் இந்தியாவுக்கு நல்ல காலமில்லை யென்றுதான் சொல்ல வேண்டும்.

ஈசல் பட்டாளம்.

இரங்கோன் நகரசபையில் அங்கம் வகிக்க புற்றிலிருந்து ஈசல்கள்போலப் புறப்பட்டு விட்டனர். இதைப்பற்றி சென்ற இதழில் சிறிது விஸ்தரித்தோமல்லவா. மற்றும் ஈண்டு ஆராய்வோம். முஸ்லிம் தொகுதிக்கு ஜனுப் மூசாமால் முன் வந்திருக்கிறார். இவர் தேச சேவையில் ஈடுபட்டு தீவிரமாய் உழைத்தவர். மதாபிமானத்திறகாக சர்க்காரால் ஒரு சமயம் நாடு கடத்தப்பட்டவர். இந்துக்களின் சார்பாக தற் சமயம் இருப்பவர்கள் தவிர ஸ்ரீமான்களான இ. பி. பிள்ளை. யெஸ். யெஸ். ஹால்க்கார், டீ. கே கோஷ் கே யென் டாங்காலி, ஏ. பார்னபாஸ் இவர்கள் அபேக்ஷகர்களாக நிற்கிறார்கள். பழய அங்கத்தினர்களில் ஸ்ரீமான் தம்பியும், டாக்டர் டுகலும் தங்களுடைய ஊழியத்தால் வாக்காளர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாய் விட்டார்களென்பது திண்ணம். ஸ்ரீமான் அரிகிருஷ்ணபிள்ளையோ நாம் யேற்கனவே கூறியபடி பல வருடங்களாக நாற்காலியை அலங்கரித்துக்கொண்டு பிரதிமைபோல வீற்றிருந்துவருகிறார். இச சம்பவம் வாக்காளர்களின துரதிருஷ்டத்தையும் அறியாமையையும் குறிக்கிறதெனலாம். இத் தடவையாவது கண்விழித்துப்பார்ப்பார்களா? எல்லாம் பிரதிதெரியும். ஆனுல் வழக்கம்போல திரிகிறார்கள், காலக்ஷேபங்களையும் லட்டு மிட்டாய் வகைகளையும் மறக்கலாம என ஒரு சாரினர் கூறுகின்றனர் எது எப்படியாயினும் ஆகட்டும் "மஹா மஹத்துவம் தங்கிய மதுவீரனை" ஞாபகத்திலிருத்துங்கள் என மற்றொருவர் கூறுகிறார். பெருநாட்கள் தீபாவளி, பொங்கல் சமபாவனைகள் இவைகளைக் கைவிடலாமா என ஏங்குகின்றனர் ஒரு சிலர். இது போகட்டும் புதிய அபேக்ஷகர்கள் அனைவரும் கல்வி அறிவில் சிறந்து விஷயங்களைச் செவ்வனே உணர்ந்து வாசிக்கக்கூடியவர்கள். ஸ்ரீமான் ஹால்க்கர் நீண்டகாலமாக பர்மா காங்கிரஸ் ஸ்தாபனத்தில் கலந்துழைத்து வருபவர். ஸ்ரீமான். ஜே. கே கோஷ் சிலகாலம் அங்கத்தினராயிருந்து உழைத்திருக்கிறார். என்றாலும் பொது நன்மையைவிட சுயநன்மையை மிகுதியும் அடைந்திருக்க முடியும் இந்தியக் கிருஸ்தவ சமூகத்தினருக்கு மதிப்பளிக்க வேண்டி மிஸ்டர் பார்னபாசை அபிமானிக்கலாம். அன்னவரும் போது ஊக்கம் உள்ளவர்தான் ஸ்ரீமான் ஈ. பி. பிள்ளையை நமது வாக்காளர்கள் நன்கு அறிவர். நாம் அதிகம் சொல்ல வேண்டி

சூரபத்மன் எங்கே ?

கெருடக்கொடியுடன் போர்புரிந்த யாளிமுகாசூரன் படையினர் அனேகமாய் அழிக்கப்பட்டனர்; பலர் சரணடைந்தனர். அதன் தலைவனும் மரண தண்டனையை எட்டிப்பார்த்துக்கொண்டிருக்கின்றான். சிங்கமுகாசூரன் கூட்டமும், புலிமுகாசூரன் கோஷ்டியும் பர்மாவில் பலஇடங்களில் இன்னும் அட்டூழியம் செய்துவருகின்றனர். இவர்களுக்கும் தீர்க்காயுள் கிடையாதென்பது திண்ணம். அடுத்தாப போல் தாரகாசூரன் கூட்டம் வெளிவரும்போதும். இறுதியில் சூரபத்மனே புறப்படலாம். அவன் மாண்டபிறகே பர்மாவில் கலகம் அடங்கி சமாதானம் நிலவும். இந்த இருபதாம் நூற்றாண்டிலும்கூட மந்திரம், தந்திரம், மாய்கைமுதலிய ஜாலங்களில் நம்பிக்கைவைத்து தேசத்தைப் பாழ்செய்யும் ஒரு ஜாதியிருப்பது மிகவும்நகைப்பிற்கிடமாகும். குடிகளின் க்ஷேமத்தைப் பாதுகாப்பதற்காகவே கொழுத்த சம்பளங்களைப் பெற்று உல்லாசமாக் காலங்கழித்துவரும் ஜியார்ஜி சக்கரவர்த்தியின் ஊழியர்கள் தங்களுடைய கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றியிருப்பார்களானல் இக்கலகம் சுமார் ஒருவருடகாலம் நீடித்திருக்கமுடியுமாவென்பதை வாசகர்களே ஊன்றிக் கவனித்தறிந்துகொள்ளுமாறு விடுகிறோம். ஆனுல் இந்தியாவிலிருந்து வரும் துருப்புகளோ இன்னும் நின்றபாடில்லை. இதசமிப்பிடி கலகம்செலவுகள் தேசமகாஜனங்களின் தலையின்மீது விழுமென்பது வெளிப்படை. தேசம் தற்சமயம் இருக்கும் ஏழ்மையைப்பற்றி நாம் செப்பத் தேவை இல்லை.

யதில்லை. புதிய அபேக்ஷகர்களில் இருவரையும் பழயவர்களில் இருவரையும் தெரிந்தெடுப்பது வாக்காளர்களின கடமை யென்பதை மிகவும் பலமாய் வற்புறுத்துகிறோம். பேசா மடந்தைகளையும் மவுன ஸ்வாமிகளையும் அனுப்பி இதுவரையில் அவமானமடைந்தது போதும் இனியேனும் சுயராஜ்யம் எட்டிப் பார்க்கும் இக்காலத்திலாயினும் உங்கள் கடமையை தயைதாக்ஷண்யமின்றி நிறைவேற்ற முனைவாருங்கள், பத்திரிகை ஆசிரியர்களும் தயவுசெய்து ஒவ்வொரு அபேக்ஷகர்களின் யோக்கியதைகளையும் பொதுஜனங்களுக்கு எடுத்துக் காட்டுவதில் தவறமாட்டார்களென நம்புகிறோம்.

144? பெஷாவரில் 144!

144 என்பது ஒரு சட்டம் இந்திய சர்க்காருக்கு பொறுக்கி யெடுத்ததொரு கைப்பாணம். ரப்பர் போன்று எவ்வளவும் இழுக்கலாம்! எப்படியும் வளைக்கலாம்! இழுத்த இழுப்புக்கெல்லாம் வரக்கூடிய சட்டம் புற்றீசலைப் போலப் புறப்பட்டிருக்கும் அவசரச் சட்டத்தைத் தவிர வேறு கைபிருப்பிலில்லை; வேண்டுமானல் சிருஷ்டிக்க சர்க்காருக்குச் சர்வ அதிகாரமும் இருக்கவே செய்கிறது. ஒன்னுக்குப் போனாலும் 144 உறக்கப் பேசினாலும் 144. நாலு பேர் சிநேகிதர் கூடினால் 144. ஐந்துபேர் தெருவழியே போனாலும் 144. பாடினாலும் 144. இவ்வாறெல்லாம் வெட்டியான் முதல் வேந்தன் வரை கையாளக்கூடிய ஆயுதம் வேறெத்தைச் சொல்லலாம்? எல்லைப்புற காந்தியின் ஊரிலே—கலியுக பீமன் கபூர்கானின் ராஜ்யத்திலே 144 போடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துக் கொள்ளத்தான் அவரும் அவரது மூன்று லட்சம் தொண்டர்களும இருக்கின்றார்களே! நாமேன் அதைப்பற்றிச் சிந்திக்கவேண்டும்? இருந்தாலும் நமக்கு அந்த 144 மாமியாரிடத்திலே பிரததியேகமான பிரேமை யிருக்கும் போது பேசாது விட முடியுமா?

இம் மாமியாரை அலங்கரித்து வெளியிலனுப்பும் மாஜிஸ்ட்ரேட்டுகள் புதுப் புதுப் புடவைகளை (வியாக்கியானத்தை)க் கட்டுகின்றனர். பெஷாவர் மாமியார் நல்ல வர்ணத்தில் வருகிறாள். "ஊரில் தொழில் முறை நடத்துவதற்கும் இடைஞ்சலா யிருப்பதாலும், வனமக்கள் ஊருக்குள் பிரவேசித்து உலவுவதாலும் நகரத்தில் அமைதி நிலவுவதற்காக பொதுக் கூட்டங்களோ ஊர்வலங்களோ நடத்தக் கூடாது" என்பது வியாக்கியானம், வியாபாரத்திற்கும் தொழிலுக்கும் இதுவொரு நல்ல பாதுகாப்புத்தான். அம்மாதிரி பாதுகாப்பு நமது இரங்கோனுக்கும் அவசியம் வேண்டியிருக்கிறது. வேலை செய்ய முடியவில்லை. ஆலோசனை பண்ணி சிந்தனையை ஒருமுகப்படுத்திச் செலுத்துவதற்கும் சந்தர்ப்பமே கிடையாது. ஓயாத இறைச்சல். பொழுது விடிந்தால்மோட்டாரோடும் சப்தமும் ஊதும் இரைச்சலும் காது குத்தலெடுக்கிறது. தெருவில்நடமாடும் ஜனங்கள் இரைந்து பேசுகிறார்கள். சரக்குத் தூக்கி விற்கும் ஹாக்கர்கள் கழுதை கத்துவது போலவும், புலி உறுமுவது மாதிரியும், நாய் குரைப்பது போலவும் கத்திக் கலனத்தை யிழுத்து விடுத்துகிறேன். இந்த மோட்டார் எமன் படையெடுப்புக்கும் ஹாக்கர் இரைச்சலுக்கும் ஏன் 144 போடக்கூடாது? என்று ஆசிரிய நண்பர் என்னை கேட்கிறார்.

நம்ம கிரடாக்கா?

நமது மாஜி லெப்டினண்டு கவர்னர் ஸர் ரெஜினால்டு கிராடாக்கையும் அவர்தம் திருவிளையாடல்களையும் நாம் மறந்துவிட முடியுமா? இவர் ஏகாதிபத்திய மோகத்தில் மூழ்கி, உலகமே பிரிட்டிஷாருக்காக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதென்ற பிடிவாதமான கொள்கையுடையவர். இந்தியாவின் உப்பைத் தின்று கொழுத்து, நமக்குத் துரோகம் செய்யக் கங்கணம் கட்டி நிற்கும் சிடன்ஹாம் ஓட்வியர் கோஷ்டியில் முன்னணியில் மார்தட்டிநிற்பவர். தற்சமயம் நடைபெற்ற தேர்தலில் கன்சர்வேடிவ் கக்ஷியின் சார்பாக பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஒரு ஸ்தானம் பெற்றிருக்கிறார். இதை "கெஜட்" பத்திரிகை கொட்டை எழுத்துகளில் பிரசுரித்துளது. இனி இவருக்கு பர்மா வட்டமேஜை மகாநாட்டிலும் இந்திய மகாநாட்டிலும் அதிக செல்வாக்கு ஏற்படக்கூடும். அதுவும் நமது அதிருஷ்டம்தான். கிரடாக்கு சுபாவத்தில் உள்ளதை உள்ளவாறு உரைக்கக்கூடியவர். தவிரவும் கிரியாம்சையிலும் அப்படித்தான் இருந்துவந்திருக்கிறது. மற்ற ஆங்கில ராஜ தந்திரிகளைப் போல தித்திப்பாகப் பேசி ஏமாற்றுகிறவர் அல்ல. இந்தியா பர்மாவுக்கு யுகாந்திரம் வரையில் அடிமைவாழ்க்கை தான் தகுதியென அழுத்தமாகக் கூறிவிடுவார் அதனால் பிரிட்டிஷ் மாய்கையில் சிக்கிப் பரதவிக்கும் நமது மிதவாதப் பெரியார்கள் பலருக்கும் நற்புத்தி உதயமாக ஹேது உண்டு. ஆனால் பர்மாவில் வதியும்இந்தியர்கள் சார்பாக கடைசிக்காலத்தில் சில நன்மைகளைச் செய்துள்ளார். அதற்கு நாம் கடமைப் பட்டிருக்கிறோம். இந்தியத் தொழிலாளர் விஷயமாகவும் அதிகசிரத்தை எடுத்ததுண்டு. ஆனால் தற்கால இந்தியா பர்மா நிலை அவருக்கு தெரியாது.

தேசோபகாரி

சந்தா விபரம்

வருஷம் 1-க்கு	ரூ.	3 0 0
ஆறுமாதம்	ரூ	1 8 0
மாத சந்தா அணா		நான்கே

காந்திஜீயின் ஆத்மசக்தி.

காந்திஜீயின் பாத தூளி படுவதற்கு முன்னதாக எப்பொழுதாவது ஜேம்ஸ் அரண்மனை இத்தகைய காட்சியைக் கண்டதுண்டா? இதோ ஒரு நிர்வாண சிறு உருவம்—வேடிக்கை மனிதன் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் தூதுபேசுகிறான், பாரம்பரியமாய் பெற்ற வெற்றிகளாலும்: நிறகர்வத்தாலும், பிறரை அடக்கியாளும் திமிரினாலும், உலக முழுவதையும் ஏக போகமாய்க் கட்டியாளும் ஆசையாலும், அகங்காரம் ஒருபுறமும், எங்கே இந்தியாவை இழந்துவிட நேருமோ என்ற பயம் இன்னொரு புறமும் பீடித்து நிற்கும் பிரிட்டிஷ் கட்சிக்காரனும் கேவலம் வெறும் ஆட்டுப் பால் புட்டி யொரு கையிலும் ஈச்சம் பழமும், நிலக்கடலைப் பச்சைப் பருப்பும் நிறைந்த பிரப்பங் கூடை, இன்னொரு கையிலும் எடுத்துக் கொண்டு வாமனனைப் போன்ற சிறு உருவர் தாங்கி மகத்தான புதுப் புதுத் தத்துவங்களை மெல்லிய குரலில் எடுத்துக் கூறும் கலியுக சத்திய அவதார புருடன் இன்னொரு கட்சியிலுமாய் நின்று இந்தியாவின் தலையெழுத்தை அழித் தெழுதுவதற்காக வாதாடுகிறார்கள். புனிதமான அஹிம்சா தர்மந்தான் அவருக்கு அத்தனை சக்தியையுமளித்துக் கொண்டிருக்கின்றது. அவரது மஹா மகத்தான சகிப்புத் தன்மைதான் அவருள்ளிருந்து பேசுகிறது: வெற்றி யளிக்கின்றது. வட்டமேஜைக்கு காந்திஜிவந்தார். என்ன பேசுவாரோ வென்று இந்தியப் பிரதிநிதிகளும் பிரிட்டிஷ் மக்களும் பீதி பெற்றிருந்தனர். வட்டமேஜையில் என்னென்ன விஷயங்களைப் பற்றிப் பேசப் போகிறீர்கள் என்று கேட்ட நிருபர்களுக்கு காந்திஜி ஒற்றை வரியில் பதிலிறுத்துவிட்டார். "நான் ஒன்றுமே பேசப்போகிறதில்லை. எதையும் நான் தயார் செய்யவில்லை. பிரிட்டிஷார் தங்களது மனதைத் திறந்து மேஜை மீது போட்டுவிட்டால்—முதல் மந்திரியின் முகத்தில் எழுதியிருக்கும் பிரிட்டன் மனப்பான்மையைப் படித்துவிட்டால்—அப்புறம் என் வாயிலிருந்து வார்த்தைகள் தானே புறப்படடுவிடும்" என்று மாத்திரம் கூறினார். அப்படியே காங்கிரஸின் கோரிக்கைகளை யெடுத்துச் சொல்லி "இந்தியா விடுதலையடைய வேண்டும்"—என்றார் "நாங்கள் பூரண சுதந்திரம் பெற விரும்புகிறோமென்றால் அது எங்களது கௌரவத்தைக் குறிக்காது; பிரிட்டிஷ் மக்களிடமிருந்து எல்லாத் தொடர்புகளையும் அறுத்துக் கொள்ளுவதாக அர்த்தமில்லை. காங்கிரஸ் கோரிக்கைகளை நன்றாய் ஊன்றிப் பார்த்தால் இந்தியா, பிரிட்டனுடன் கூட்டாளியாகவே யிருக்க விரும்புகின்றதென்பதைக் காணலாம். ஒரு பிரிட்டிஷ்காரனும் இந்தியனும் நிரந்தரமான நேசப் பான்மையுடன் வாழவேண்டுமென்பதை காங்கிரஸ் வற்புறுத்துகிறது. நான் இங்கே வந்திருப்பதெல்லாம் எங்களது உரிமைகளைச் சாந்தமாக உறக்க—அழுத்தம்—திருத்தமாகக் கூறுவதற்கேயாகும். வேறு வேலையில்லை."

இவ் வார்த்தைகளை காந்திஜி பொறுமையுடன் பேசியிருந்தாலும் அவைகளில் அந்தரார்த்தம் ஸ்புரித்து நிற்கின்றன; சர்வ வல்லமையும் நிறைந்திருக்கின்றன. ஒரு சமாதானத் தூதுவர் என்ற ஹோதாவில் காந்திஜி முஸ்லீம்களிடம் தோல்வியுற்றே யிருக்கலாம்—இந்தியாவில் மறுபடியும் சாத்வீக சண்டையை மூட்டலாம், என்றாலும் அவராலேதான் உலகம் சமாதான யுகத்தையும் சாந்த சாம்ராஜ்யத்தையும் சத்திய தரிசனத்தையும் காணப் போகிறது. "ஒரு காலத்தில்நானே என்னை பிரிட்டிஷ் குடியானவன் என்றழைத்துக் கொள்வதில் பெருமை பாராட்டினதுண்டு. ஆனால் இப்பொழுதோ என்னை ஒரு கலகக்காரன் என்றழைக்கப் படுவதிலிருக்கும் பிரியத்தைப் பிரிட்டிஷ் குடியானவன் என்பதில் காணவில்லை, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலல்ல—ஜனநாயகத்தில்—பிரிட்டன் கூட்டாளியாக விருக்கவேண்டுமென்றுகனவு கண்டேன்: இன்னும்காணவே செய்கிறேன் ஒருவரும் போரில் உண்மையான வெற்றிபெறுவதில்லை. நாங்கள் பெற்றே தீருவோம். இவ்வாறு ஆளப்படும் ஒருவன் ஆளுவோனிடம் பேசினால்அங்கேயிரக்கம் காட்டுவதைத் தவிர்த்து அரசனுக்கு வேறு தேர்ந்தெடுப்பதெதுவும் இருக்கமுடியாது. அரசன் எவ்வித பதிலிறுக்கவோ அன்றேல் அரசனாகவே யிருக்கவோ வழி கிடையாது. அவ்வாறு பேசும் ஆளப்படுவோனும் அரசன்கீழ் குடியாயிருக்க முடியாது,மஹாத்மாவின் ஆத்ம சக்தி இந்தியா வெங்கணும் வியாபித்துவிட்டது. வேறெந்த சீர—பிரும—ஆயுத — பலத்தாலும் அடக்கிவிடமுடியாது.

—நியூ யார்க் "நேஷன்"

Printed & Published By A. V, Sellam Pillay at the Desopakari Press, 210, 36th Street, Rangoon.

அரையணா   மலர் 9   இதழ் 30.   பதிவு எண் 245.

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை

DESOPAKARI

புதன், ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி, இரங்கோன், (12—11—31) ஐப்பசி மீ 27உ வியாழக்கிழமை.

வைசிராய் ராஜினாமாவா!

மீண்டும் சிவில் சர்விஸ கலகமா!

சர்வ அதிகாரிகளின் சம்பளங்களில் நூற்றுக்குப் பத்து விகிதம் குறைப்பதாக ராஜப் பிரதிநிதி சிபார்சு செய்தார். அதற்காக பார்லிமெண்டில் ஒரு மசோதா தயாரித்து சட்டமாக்கவேண்டியிருந்தது அந்த யோசனையை இந்தியா மந்திரி மறுத்துவிட்டார். அது காரணமாக ராஜப் பிரதிநிதியும், அவரது நிர்வாக சபை அங்கத்தினர்கள் ஸர் ஜியார்ஜ் ஷுஸ்டர், ஸர் பசில் ஹுசேன்' ஸர் ஜோசப் போர், ஸர் சி. பி. ராமசாமி அய்யர் இவர்கள் ராஜினாமா செய்தார்களாம். பிறகு இந்தியா மந்திரி சம்பளம் குறைப்பது நூற்றுக்குப் பத்து விகிதம் தாங்களாகவே குறைத்துக் கொள்ளுவதாக இருக்கட்டும், பார்லிமெண்டைக் கேட்கவேண்டிய அவசியமிராதென ஒருமாதிரி சமாதானம் செய்ய, அதன் பேரில் ராஜினாமாக்கள் திரும்ப வாங்கிக் கொள்ளப்பட்டதாம் என்ற செய்தி யெட்டுகிறது; தற்கால இந்தியா மந்திரி தங்களைக் கலக்காமல் நாணய மாறுதல் விஷயத்திலும் நடந்து கொண்டாரெனவும், அதற்காகவும் ராஜினாமா செய்வதாகக் கூறியதாகவும் வெளிப்படுகிறது. ஸர் சாமுவேல் ஹோர் இந்தியா மந்திரியாயிருக்கும் வரையில் இந்திய சமாதான நிலைமை அடையாதென்று வைசிராய் பிரதம மந்திரியை வற்புறுத்துவதாகவும் தெரிகிறது. இந்த நூற்றைம்பது வருடங்களில், இந்தியா வைசிராயும், நிர்வாக சபை ஐந்து அங்கத்தினர்களும் இந்தியா மந்திரியின் கையோங்கிய செய்கையைக் கண்டித்து ராஜினாமா செய்தது இதுதான் முதல் தடவையாகும். சிக்கன முறையில் சம்பளம் குறைப்பது இந்தியர்களைப் பொறுத்தமட்டில் இருந்தால் யாரோ செத்தான் எவனோ அழுதான் என்று வாளா யிருந்துவிடுவார்கள். ஆனால் தற்சமயம் ஆங்கில சிவில் சர்விசையும் பாதிக்கிறது. அதன் பொருட்டே இடி மின்னல் குமுறலுடன் யுத்தார்ப்பாட்டம் ராஜப் பிரதிநிதி மாளிகையில் நடைபெற்றதாகத் தெரிகிறது. இதைப் பொதுவாக வெள்ளையர் கலகமெனக் கூறலாம். இதுவும் புதியதல்ல. பல ஆண்டுகளுக்கு முன் கில்பர்ட்டுபில் சம்பந்தமாகவும், ஜூரி விசாரணை அளிப்பதன் சம்பந்தமாகவும் பெருத்த கிளர்ச்சிகள் நடந்தன. ஐரோப்பியர் அனைவரும் கூடி வைசிராய் லார்டு ரிப்பனை அவருடைய மாளிகையிலிருந்து கட்டித் தூக்கிக் கப்பலில் போட்டு இங்கிலாந்து அனுப்புவதாக பிரயத்தனமும் நடந்ததுண்டு, ஆனால் இது பழைய கதை. இதனால் மாகாண கவர்னர்களும், நிர்வாக சபை அங்கத்தினர்களும் சமீபத்தில் மாண்டேகு செம்ஸ்போர்டு திருத்தங்கள் வழங்கு முன்னர், ஐரோப்பிய சங்கத்தின் ஆதரவில் மெட்ராஸ் மெயில் மாஜி அதிபர் மிஸ்டர் வெல்பி சிவில் சர்விஸ் வர்க்கத்தின் சம்பள விஷயத்தில் பெருத்த கலகம் விளைத்து தகுந்த பய

வைத்தியரும் ராஜ தந்திரியும்

பிரதம மந்திரி ராம்சே மெக்தனல்டு பேசிவிட்டார். உடற்கூறை அறிந்து சிகிச்சை செய்வது வைத்தியனுக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கிறதோ, அம்மாதிரியே ஒரு தேசத்தின் நிலைமையை அறிந்து நடத்துவதும், முக்கியமாக இந்தியாவுக்கு சுதந்தரம் அளிப்பதும் அவ்வளவு கடினமென்று கூறிவிட்டார். முக்கியமாக இந்தியாவில் தற்கால சந்தர்ப்பங்கள் மிகச் சிக்கலாயிருக்கின்றனவாம். ஆதலால் அளிக்கப்படும் ஆக்ஷி நடைபெறக் கூடியதாக இருக்க வேண்டுமாம். அனுபோகத்தில் நடைபெறத் தகாத ஆக்ஷி முறையை அளிப்பதிலும் பயனில்லையாம் உள்நாட்டில் சமாதானம் நிலவவேண்டும். சுய ஆக்ஷி பெற்ற இந்தியாவில் மென்மேலும் விருத்தியாவதற்கு சந்தர்ப்பங்கள் ஏற்பட வேண்டுமாம். இத்துடன் பழைய பல்லவிகளையும் ராக தாளத்துடன் ஒழுங்காகப் பாடுகிறார். பலே பேஷ்! இந்தியா மக்கள் கண் விழிப்பதற்கு இது சரியான வழிதான். இதிலிருந்து நமக்குக் கிடைக்கப்போவது படிப்படியான சுய ஆக்ஷிதான் என்று பட்டவர்த்தனமாய் விளங்கிவிட்டதல்லவா? மாண்டேகு செம்ஸ்போர்டு திருத்தங்கள் வழங்கப்பட்ட காலத்திலும், அதை யொட்டி இந்தியா கவர்ன்மெண்டு ஆக்ட் செய்யப்பட்ட பொழுது இதையேதான் முக உரையாகக் கூறப்பட்டிருந்தது. அக் காலத்தில் இந்து—முஸ்லிம் என்ற பிரச்னை கிடையாது, காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் சேர்ந்தே ஒரு திட்டம் தயாரித்திருந்தது. அதை அனுசரித்தே மாண்டேகு—செம்ஸ்போர்டு யாதாஸ்தும் தயாரிக்கப்பட்டது. அக் காலத்தில் வழங்கப்பட்ட திருத்தங்கள் திருப்திகர மில்லை யென்று இந்து முஸ்லிம்கள் யேகோபித்து ஆக்ஷேபனை செய்தார்கள். அச் சமயம் இது விஷயம் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளின் செவிகளுக்கு ஏறியதா, இல்லவே இல்லை, ஏன் அது அவர்களுடைய சுயநலத்தைப் பாதிக்கிறதல்லவா? மேலும் இரத்தம் தண்ணீரைவிட கனமுள்ளதல்லவா? இப்பொழுதோ வகுப்புவாதப் பித்துக் கொண்ட பலரையும் லண்டனில் முட்டை மேஜையைச் சுற்றி உட்காரவைத்து, சண்டைக் கிடாக்களைப்போல நிறுத்தி வேடிக்கை பார்ப்பதுமன்றி ஏளனமும் செய்கிறார்கள். இந்த யெழவுக்கு இவ்வளவு ஆடம்பர பணச் சிலவு என்? பசப்பு வார்த்தைகளேன்? முன்னமேயே ஒரு வார்த்தையில் சொல்லிவிடலாகாதா? சுயராஜ்யம் நமது கையிலிருக்கிறது, இன்னொருவர் கொடுத்து பெறுகிற வஸ்துவல்ல. காந்தியடிகளும் காரியக் கமிட்டியின் வேண்டுகோள்படி தமது தாய்நாடு திரும்புவது உத்தமம். சுய ஆக்ஷி பின்பு தானே கிடைக்கும்,

---

னைப்பெற்றார். அப்படிகஷ்டப்பட்டுசம்பாதித்த உரிமை இழந்துவிட லாகாதெனத் தான் இந்தியா மந்திரி ஆக்ஷேபித்தது. மந்திரிகளும் எம்மாதிரி தங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டார்களென்ற விஷயம் அறியக் கிடக்கிறதல்லவா? முட்டை முட்டையாய் சம்பளம் வாங்குகிறவர்கள் கதை இப்படியிருக்க, ஐம்பது, நூறு பெறும் இந்தியர்களின் நிலையைக் கேட்பவர் எவரும் இலர். பதினாயிரம் ஐயாயிரம் சம்பளம்பெறுகிறவர்கள், நூற்றுக்கு பத்துப் பதினைந்து விகிதம் குறைத்துக்கொண்டால், அதுவும் தானாக தர்மம் செய்கிறார்களாம். நூறு ஐம்பது வாங்குகிறவர்களுக்கும் அந்த ஈவுப்படி தானே செய்யவேணும். அது தானே ஒழுங்கான முறையும் ஆகும். பெரிய உத்தியோகஸ்தர்களுக்காகவைசிராயாகியதெய்வம் வரம்கொடுத்தாலும் இந்தியா மந்திரியாகிய முன்னடியான் 'வரம்தரமாட்டேன் என்கிறது. எல்லாரும் ராஜீனமா செய்வதாக பயமுறுத்துகிறார்கள். 'எளிய சம்பளக்காரர்களுக்கு உதவி யார்? இவர்கள் கையிலே ஆயுதமாயிருக்கிறது. தர்மமும் இவர்களுடன் இருக்கிறது. எல்லாரும் ஒன்று சேர்ந்து ஊக்கத்துடன் நடந்தால் இவர்களுக்கும் சிறிது ஞாயம் கிடைக்கலாம். ஒற்றுமையால் ஆகாத காரியம் எதுவுமில்லை. இக் கிளர்ச்சியின் பயனாக கொழுத்த சம்பளம் வாங்குகிறவர்களின் சம்பளத்தை அதிகமாக குறைத்து எளியவர்களைச் கொஞ்சம் ஒழுங்காய் நடத்தலாம். இந்தியாவில் நமது மேதாவிகள் என்ன செய்கிறார்களென்று பார்ப்போம்.

தேசோபகாரி

சந்தா விபரம்

வருஷம் 1-க்கு ரூ. 3 0 0

ஆறுமாதம் ரூ 1 8 0

மாத சந்தா அணா நான்கே

முட்டிக்குனியும்—சர்க்கார்!

இந்திய வாலிப உலகத்தின் தலைவர் பாபு சுபாஸ் சந்திரபோஸை அறியாதார் ஒரு சிலரேயாவர். அன்னவரது தேசத்தொண்டுகளும், அரும்பெருந் தியாகங்களும் அளவுகடந்து நிற்கின்றன. சில தொழிலாளர் தகராறுகளை தீர்த்துவைக்கவேண்டி சென்றுகொண்டிருந்த நமது போஸை அதிகாரவர்க்கத்தினர் இரண்டொரு மாதங்களுக்கிடையில் எப்பக்கத்துக்கிழுத்தாலும் வளையக்கூடிய சட்டபுத்தகத்தின் பிரிவை உபயோகித்து இருமுறை கைதிசெய்தார்களென செய்தி எட்டியது. அதற்கடுத்தாற்போல் ஒவ்வொரு முறையும் அவ்விதம் நடைபெறவில்லை என்று அதிகாரத்தோரணையில் மறுக்கப்பட்டது. ஏன் இவ்வளவு பீதி! ஏன் இவ்வளவு அடைசடுக்கர்!! தேசத்தில் தற்காலம் அனுஷ்டானத்திலிருக்கும் சட்டங்களை குற்றமிழைப்பவர்கள்மீது பிரயோகிப்பதில் தடையென்ன? அரசனாயிருந்தாலும் சரி; ஆண்டியாயிருந்தாலும் சரி எல்லாரும் சமமே, இவரை இருமுறை கைதிசெய்தும் விசாரணைக்குக் கொண்டுவராததின் காரணமென்ன? அதிகாரவர்க்கத்தினரின் நடத்தையினால் சுபாஸ் பாபு இருமுறைகளிலும் குற்றமிழைக்கவில்லை என ரூபிக்கப்படவில்லையா? இவரை விசாரணை புரிந்தால் சட்டமறுப்பு இயக்கம் தொடங்கிவிடுமென கவலைப்படுகிறார்களாக்கும் அதற்கு ஒருவித ஆக்ஷேபணையுமில்லை. இப்பொழுது புதிய அவசரச்சட்டங்களுளபட, பழைய சட்டங்களின் கீழும் வங்கவாசிகளால் நிறையப்பெற்ற சிறைச்சாலைகள் இன்னும் இடந்தராதென அஞ்சுவது சகஜந்தான். கடவுளுடைய சித்தத்தை அறியமுடியாததுபோல நமது அதிகாரிகளின் சித்தத்தையும் அறியக்கூடவில்லை. இந்தியாவில் பல மாகாணங்களிலும், பல தேசாபிமானிகள் சுபாஸ்பாபு கைதிசெய்யப்பட்ட குற்றத்திற்காகவும், வேறு இராஜீயக் குற்றங்கள் இழைத்ததற்காகவும் அடிக்கடி கைதிசெய்யப்பட்டு தண்டனையடைந்து வருவதை நாம் காண்கின்றோம். கள்ளுக்கடை மறியலில் பலாத்காரப் பிரயோகம் செய்வதையும் கொதிக்கும் தார் ஊற்றுவதையும் அதிகாரிகள் ஜாடையாகத்தான் கவனித்துவருகின்றனர். காந்தி—இர்வின் ஒப்பந்தமும் இருக்கவேசெய்கிறது. அதிகாரிகளின் திருவிளையாடல்களும் நின்றபாடில்லை.

கலகப்படையின் நியாயசபை!

இம்மதி 5—ம் திகதி புரோம் ஜில்லாவில் பவுண்டேகிளே சரகத்தைச் சேர்ந்த கிராமவாசிகளாகிய இரண்டு சின் ஜாதியினரும், ஒரு பர்மியரும் காணாமல்போன எருமையைத் தேடிச்சென்றனர். இவர்களைக் கலகக்காரர்கள் கைதுசெய்து கலகப்படையின் நியாயசபையின் முன் நிறுத்தினார்கள். காலியாயிருந்த ஒரு பொங்கிமடத்தில் கலகத்தலைவர் பான்மியாங் நீதிபதியாக ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அவரும் கம்பீரமாக கைதிகளை கேள்விகள் கேட்டார். அவர்கள் சர்க்கார் சார்பினரா அல்லது கலகக்கார கக்ஷியினரா என்று கேட்கப்பட்டபொழுது, கைதிகள் யாதொரு மயக்கமில்லாமல் கண்டிப்பாய் நாங்கள் கலகத்தை ஆதரிப்பவர்களென்றும், கலக யுத்தநிதிக்குப் பொருள் உதவி சந்தா செலுத்தினவர்களென்றும் விடை அளித்தார்கள். மேன்மை தங்கிய நீதிபதியும் விஷயங்களை விசாரணைசெய்து அறியும் பரியந்தம் ரிமாண்டில் வைக்கும்படி உத்திரவிட்டார். உடனே இரண்டு சின்ஜாதியினரும் யேடாஷி கிராம கலக நாட்டாண்மைக்காரன் வீட்டில் சிறைவைக்கப்பட்டார்கள். பர்மியனை டெயிணா கிராமத்திற்குக் கொண்டுபோனார்கள். இரவில் மூன்று கைதிகளும் தப்பி ஓடிவிட்டனர். காலை முதல் இவர்களைத் தேடிக்கொண்டிருந்த சர்க்கார் படைகள் ஆயுதபாணிகளாகி எட்டுப்பேர்களைச் சந்தித்து நிற்கும்படி உத்திரவிட்டார்கள். ஒருவனே உத்திரவுக்குக் கீழ்ப்படியாததால் சுடப்பட்டான். மற்ற ஏழுபேர்களும் பிடிபட்டார்கள். விசாரணைக் கைதியாகவிருந்து தப்பிவந்தவர்கள் இவர்களை அடையாளம் காண்பிக்க துருப்புகள் விரைவினில்சென்று பொங்கிமடத்தை வளைந்தனர். பான்மியேங் தனது நியாய ஸ்தலத்தை ஒருவரும் காண இயலாத வேறு இடத்துக்குத் தூக்கிக்கொண்டு மறைந்துவிட்டதாகக் காண்கிறது. கலகத்தலைவர்கள் பலர் பிடிபட்டும் அவர்களுடைய அட்டூழியங்களும், கையோங்கிய செயல்களும் இன்னும் நின்றபாடில்லை சர்க்கார் அறிக்கையும் கலகக்காரர்கள் யேராளமாய் வந்து சரணடைகிறார்களெனக் கூறுகிறது. துருப்புகளின் வேலைகளும் விசேஷமாகத் தெரிவிக்கப்படுகிறது. இருந்தாலும் புதிய கூட்டங்களும், தலைவர்களும் ராவணனுடைய மூலபலம்போல் வந்துகொண்டே இருக்கின்றன. "கெஜட்டு'ம்' தற்

அடா! சுடுகாட்டு வீரா!

தென்னாட்டில் கோவில்களுக்கும், சத்திரங்களுக்கும், மடங்களுக்கும் டிரஸ்டிகள் என்ற தர்மகர்த்தர்கள் ஏற்படுத்தப்பட்டு தர்ம பரிபாலனம் செய்துவருவதை நாமறிவோம். ஆனால் நவீன நாகரிகம் தாண்டவமாடும் இந்த இரங்கோன் நகரத்தில் சுடுகாடுகளுக்கும் டிரஸ்டிகள் ஏற்பட்டிருக்கிறார்கள். நம்மூரில் சுடலை காவலனே சகலமும் கவனிப்பது வழக்கம். இந்த ஊரில் நீண்ட காலமாக இந்த சுடுகாடுகள் டிரஸ்டிகளின் கவனிப்பின்மையினாலும், கேட்பாரின்மையாலும் கேவலமான நிலைமையிலிருந்து வந்தன. 1913-ம் ஆண்டு சில பொதுநலப் பிரியர்கள் கோர்ட்டில் விவகாரம் தொடுத்து அதற்கென ஓர் திட்டம் ஏற்படுத்தி டிரஸ்டிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதன் பிரகாரம் இந்த டிரஸ்டிகள் வருடம் ஒரு முறையாவது தவறாமல், வரவுசெலவுகணக்குகளைத் தயாரித்து தக்க ஆடிட்டரால் பார்வையிடப்பட்டு ஆங்கிலம் தமிழ் பத்திரிகைகளில பிரசுரிக்கப்பட வேண்டுமென உத்திரவிடப்பட்டிருந்தது. தாம்புவே மயான மானேஜிங்டிரஸ்டி ஸ்ரீமான் கோ. அரிகிருஷ்ணபிள்ளை அவர்கள் இம்மாதிரி சில வருடங்கள் செய்துவந்ததாக அறிகிறோம். அதுவும் சமீபத்தில் நாம் காணக்கிடைக்கவில்லை. அதிலும் பாங்கியில் போடப்பட்டிருக்கும் சுடுகாட்டுப் பண விஷயமாய் சில தகவல்கள் நமக்கு எட்டியிருக்கின்றன. அதையும் ஒழுங்காய் விசாரித்து பின்னால் வெளிப்படுத்துவோம். எல்லா டிரஸ்டிகளும் அலுவல் புரிந்துவருகிறார்கள் என்றும் நம்புகிறோம். அல்லது ஒருவேளை ஸ்ரீமான் பிள்ளையே நிரந்தர மானேஜிங் டிரஸடியாயிருந்துவருகிறாரா? இது ஒரு புறமிருக்க, நாமேதான் இந்த மயானத்தைப்பற்றியும் கேட்கத் தேவையில்லை. இதற்கு ஏற்படுத்தப்பட்ட டிரஸ்டிகளின் சில ஸ்தானங்கள் காலியாயிருப்பதாக அறிகிறோம். நீண்ட காலமாக மானேஜிங் டிரஸ்டி வேலை பார்த்து வருபவர் நமது ஸ்ரீமான் லாயர் ப.சி, சோமசுந்தரம்பிள்ளையவர்கள் ஆவர். இவருக்கு சட்ட ஞானம் அபாரமுண்டு. ஏனோ இதுகாறும் கோர்ட்டுக் கட்டளைப்படி கணக்குகளை பிரசுரிக்கிறாரில்லை. இது சம்பந்தமாக நான்கு வருடங்களுக்குமுன் ஒரு தமிழ் பத்திரிகையில் பிறந்த கேள்விக்கு, தான் கணக்கைத் தயாரித்துக் கொண்டிருப்பதாகவும், கூடிய சீக்கிரத்தில் வெளிப்படுத்துவதாகவும் பதில் கூறினார். காலியாயிருக்கும் ஸ்தானங்களை ஏன் பூர்த்திசெய்யவில்லை என்ற கேள்விக்கு அபேக்ஷகர்கள் இல்லை என சொன்னதாகத் தெரிகிறது. இப்பவும் பாதகமில்லை. மூன்று வருஷக் காலாவதியானாலென்ன? கணக்குகளையே வெளிப்படுத்தவேண்டியதே முறையாகுமல்லவா? அபேக்ஷகர்கள் முன்வராவிட்டால் கோர்ட்டில் தெரிவித்து நியமனம் செய்துவைக்கலாமே மேற்கண்ட நமது யோசனைகளை ஸ்ரீமான் பிள்ளை அவர்கள் பொது ஜனங்களுக்குத் திருப்தியளிக்குமாறு நம்புகிறோம்

பரிபாலினியின் பொன்னுரை

நமது சகோதரப் பத்திரிகை "சுதேச பரிபாலினி" 11-ந்தேதி வெளியீட்டின் தலையங்கத்தில் "இரங்கோன் கார்ப்பரேஷன் தேர்தலும் வாக்காளர் கடமையும்" என்ற மகுடத்தின் கீழ் மிகுந்த அர்த்தபுஷ்டி யுள்ள நீண்டதோர் வியாசம் எழுதியுள்ளது. அதில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது. "முனிசிபல் கவுன்சிலில் அங்கத்தினர் ஸ்தானம் பெறுவது ஒரு கௌரதையாகும். அந்த கௌரதையைப் பலரும் விரும்பி வந்தபோதிலும் வீண் கௌரதை மாத்திரம் பெறுதல் பயனில்லையெனவும் அந்த கௌரதையை நிலைநாட்ட போதிய காரியங்களை இயற்ற முனிசிபல் கவுன்சிலர்களாகத் தெரிந்தெடுக்கப்படும் பாக்கியத்தை இதுவரை அடைந்த, இனி அடையப் போகிற கனவான்களுக்குத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். போட்டியில் வெற்றிபெறுவதை நாம் ஒரு பொது ஜனமுடிவாகக் கொள்ள இயலாது எவ்வளவுக் கெவ்வளவு முயற்சி செய்து வருகின்றனரோ அவ்வளவுக் கவ்வளவு அவர்களுக்கு ஓட்டு கிடை

சமயம் சர்க்கார் அறிக்கைகள் ஒழுங்காக இருக்கின்றனவென்று ஆநந்தமடைகிறது. அதில் என்ன பிரயோஜனம், அறிக்கை எழுதுகிறவன் சாமர்த்தியத்தைப் பொறுத்ததாக இருக்கிறது. அறிக்கைகளாலும், சுற்றுக் கடிதங்களாலும் ராஜாங்கம் நடத்துவது பலாத்காரத்தைப்பிரயோகிக்கும்பர்மியர்களிடையில் இனியும் பலிக்குமா? அந்தக்காலம் மலையேறிவிட்டது, கடுமையான இராணுவச்சட்டம் சில பாகங்களில் அமுலுக்குக் கொண்டுவந்து கலகப் பூண்டை வேரறுத்தாலொழிய தேசமகாஜனங்களுக்கு சர்க்கார் தங்களுடைய கடமையை நிறைவேற்றினவர்கள் ஆகமாட்டார்கள்.

த்துவருகிறது. ஆனால் யாதொரு முயற்சியும் செய்யாமல் யாருக்கு வாக்குகள் அதிகப்படுகின்றனவோ அவரை மக்களின் உண்மை ஊழியன் எனவும் கூறலாம்" இக் கூற்றை பொது ஜனங்கள் அபிமானிக்க கடமைப்பட்டுள்ளார்கள். இதுவரையில் இருந்தவர்களில் சிலரே அரும் பாடு பட்டுள்ளனர் என்றும் ஒத்துக்கொள்ளப்படுகிறது. இதுவரையிருந்தவர்களும் இனி வரப்போகிறவர்களும் கௌரதையை மாத்திரம் எண்ணலாகாதென்றும் அதற்கேற்ற செயல் வேண்டுமெனவும் இடித்துக் கூறுகிறது. இது மிகவும் நியாயமே. அப் பொன்னுரைகளை நாமும் முழு மனதுடன் ஆமோதிக்கிறோம். தேர்தலில் ஜெயம் பெறுவதினால் அருத்தமில்லை யென்கிறது. ஆனால் இந்த சின்ன சங்கதி "இரங்கோன் டைம்ஸ்" மண்டையில் நுழைகிறதில்லை. நமது "பரிபாலினி" அதிபர் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக பேற்பட்ட இரங்கோன் தேர்தல்கள் திருவிளையாடல்களை அறிந்தே பேசுகிறார் என்பது வெளிப்படை. அது எவரும் மறுக்க முடியாத உண்மை. ஊரில் இல்லாதார்களும், காலஞ் சென்றவர்களும் ஓட்டுக் கொடுப்பதையும் ஓட்டர்களாக்குப்படி விண்ணப்பம் செய்வதில் ஒருவரே பலருக்கும் கையெழுத்து செய்து மனுக்கள் அனுப்புவதையும் பலரும அறியவே செய்வர். அதனாலேயேதான் தேர்தலில் ஜயத்திற்கு அருத்தமில்லையெனச் செப்புகிறார். அபேக்ஷகர்களின் யோக்கியதாம்சங்களை வாக்காளர்களைத் தெரிந்து கொள்ளும்படி விடுவது ஒழுங்கான முறையல்லவென நாம் எண்ணுகிறோம். ஒவ்வொரு அபேக்ஷகர்களின் யோக்கியதைகளையும் முன் இருந்தவர்களைப்பற்றியும் புதிதாய் வருகிறவர்களைப்பற்றியும் எடுத்துரைக்க வேண்டியது பத்திராதிபர்களின் கடமையென நாம் வற்புறுத்துகிறோம். ஏனென்றால் அதை நாம் இதுவரையில் எடுத்துக்காட்டத் தவறிட்டபடியினால் தான். பிரதிமைகளும், மவுனஸ்வாமிகளும் நமக்குப் பிரதிநிதிகளாக இதுவரையில் இருந்துவந்திருக்கிறார்களென்பது உலகறிந்த இரகசியம்; பொது ஊழியம் செய்வதில் நமக்கு தயை தாக்ஷண்யம் இருக்கத் தேவையில்லை. பொது வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் தங்கள் கடமையை செய்யத் தவறினால் நாம் நிச்சயமாய்க் கண்டிக்கலாம். இது மனிதர்களின் சொந்தஹோதாவைப் பொறுத்ததன்று. நாம் நண்பர்களாகவும் இருக்கலாம் வேறு விஷயங்களில் ஒத்துழைக்கவும் செய்யலாம். பொது வேலைகளில் கடமை செய்யத் தவறுங் காலத்தில் கண்டிப்பதால் தோஷம்வராது. இறுதியில் நன்மையையே பயக்கும்.

ஐரோப்பியரின் யுத்த முழக்கம்

இந்தியாவில் வதியும் ஒவ்வொரு பிரிட்டிஷ்காரனும் தன்னுடைய ராஜீய, வியாபார பாத்தியதைகளைக் காப்பாற்றும் பொருட்டும், இவ் வுரிமைகளைப் பாதிக்கும்படியான எந்த சுதந்திரங்களும் அளிக்கப்படலாகாதெனவும் நிமிர்ந்து நின்று அதற்கென ஓர் சங்கம் நிறுவி சங்கத் தொனி செய்து யுத்த முழக்கம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள் ஐரோப்பியர்கள் அனைவரும் ஒன்றுகூடி பல காரியங்களை சாதிப்பார்களாம். ஆனால் சட்டதுக்குள்பட்டா அல்லது சட்ட வரம்பு மீறியா? என்கிற விஷயம் புலப்படவில்லை. ஐயர்லாந்தில் சுய ஆக்ஷியைத் தடுப்பதற்கு, இம்மாதிரியான ஆயுத பாணிகளான கூட்டம் பிரபல லாயரான ஸர் எட்வார்டு கார்சன் தலைமையின் கீழ் கூடி இங்கிலாந்தை பயமுறுத்தியதை நாம் அறிவோம். அவரது வகுப்பினர் கல்கத்தாவிலும் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றினால் நாம் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை, அக் கூட்டத்தில் ஆங்கிலோ இந்தியர்களும், இந்தியாவில் ஸ்திரமாக வசிக்கும் ஐரோப்பியர்களும் ஸ்தானம் பெறுவார்களோ என தெரியவில்லை. ஆனால் இந்தியர்களுக்கு அதில் ஸ்தானங்கள பெற உரிமையில்லையென்பது நியாயம்தான் மேலும் அனேக இந்திய ராஜபக்தர்கள் இருப்பதாகவும் அவர்களும் தங்களைப்போலவே ஒழுங்கான ராஜாங்கம் நடைபெற வேண்டுமென கவலையுடையவர்களாயிருக்கிறார்களென்றும் இக் கூட்டத்தினருக்குத் தெரியுமாம். ஆனால் அவர்களுக்குத் தற்சமயம் சிமலாவிலும் லண்டனிலும் நடக்கும் ராஜீய முறைகளில் நம்பிக்கையில்லாவிட்டாலும், காங்கிரஸ் கொடுங்கோல் ஆக்ஷியின் கீழ் நசுக்கப்படுகிறார்களாம், அவர்களுடைய உரிமைகளையும் இப் புதிய சங்கத்தார் பாது காப்பார்களாம். பம்பாய் ஐரோப்பியர்கள் இவ்வளவு கேவலத்தில் இறங்கவில்லை. அவர்களுக்கு மேல்வீடு காலியில்லையென்று நாம் நினைக்கவேண்டியிருக்கிறது.

ஹே! கிர்ஹார்டியா!

"ஹே! கிர்ஹார்டி! என்ன சொன்னாய்? யாரைப்பார்த்து? எங்கே?" என்றிரைந்தார் பிரிட்டிஷ பிரதம மந்திரி, ஸ்ரீலஸ்ரீ மெக்டனால்டு கிர்ஹார்டிக்கு கோபம் மண்டை முட்டிவிட்டது. "அடபடுபாவி! குடியைக்கெடுத்துவிட்டாயே! நமது கக்ஷியை சிந்திச் சிதறிக்கிடக்கும் கேவல நிலைமையில் கொண்டுவந்து வைத்துவிட்டாயே குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பே! என" உச்சிவான மதிர இடி இடியென இடித்தான். "ஐயோ! நம் தொழிலாளர் பட்டபாடென்ன பாராளுமன்றத்தை சுவர்க்கம், மோக்ஷம், தேவஉலகம் எல்லாமென எண்ணிய இன்பக்கனவை குலைத்துவிட்டாயே! நான் ஆதியில் வெறும் கூலிக்காரனாயிருந்து இப் பாராளுமன்றத்தில் பதவி பெறுவதற்காக பட்ட பாடனைத்தையும் பாழ்படுத்திவிட்டாயே! தொழிலாளிகளை வயிற்றிலடித்து வாழ்ந்த வர்க்கத்தாரை எதிர்த்துப் போராடிய சிரமத்தை நீ அறிவாயோ கற்றுக்குட்டி! வெறுந் தொழிலாளியாக இந்த மண்டபத்துக்குள் நுழைந்தபோது நீ யூதாஸ் காரியேத்தாயிருப்பாயென்று எவன் எணணியிருக்கமுடியும். பக்கத்திலிருக்கும் மாஸ்க்கா ஹானஸனும் ஜான்பர்னஸனும் உன் உயிரை எடுக்கவேண்டுமென்று ஆததிரப்படுகிறார்களே! ஒருபிரபுவாகப்போகும் நீ கெர்வம், அகம்பாவம் தலைக்கேறப் பெற்றுவிட்டாய், இருபது ஆண்டுகளுக்கு முன் நீ இந்தியா சென்றிருந்தபோது உன்னை விரட்டி யடித்ததும், உலக யுத்த காலத்தில் காலே (சிறை)யில் பிடித்தடைத்ததும் பழங் கதைகள், வகுப்பு வாதம் தீர்க்க முன் வந்த நீ வெகு சமர்த்தன்! நம்பினவரை நட்டாற்றில் விட்ட உன் செயலை உன்னை நம்பும் சமூக வாதிகள் நாளை உணர்வர். அவர்களையும் காலை வாரி விட்ட போதுதான் உனது வண்டவாளத்தை உலகமறியும். தொழில் கக்ஷியின் கொள்கைக்கும் இப்பொழுது நீ அணடியிருக்கும் கன்ஸர்வேட்டிவ் கக்ஷியின் கொள்கைக்கும் கிளிக்கும், பாம்புக்கும் உள்ள உறவன்றோ! பிறரை ஏமாற்றுவதாகக் கருதும் ஒவ்வொருவனும் பிறரால் ஏமாற்றவே படுகிறான். கன்சர்வேடிவ் கக்ஷியாரை ஏமாற்றி பழைய மந்திரி பதவியை காப்பாற்றிக் கொண்டதாக நினைப்பது முடிவில் கனவெனமுடியும் காலம் வரும். அப்பொழுது இரண்டுங் கெட்டு திரிச்சங்கு சுவர்க்கத்தில் நீ தலை

காந்திஜி திரும்புவார்

ராய்ட்டர் நிருபருக்கு பின் வருமாறு பதிலளித்துள்ளார்.—"காங்கிரஸ் காரியக் கமிட்டியின் முடிவை எதிர்பார்த்து எனது ஐரோப்பிய நாடுகளின் யாத்திரையை நிறுத்திவிட்டேன். இந்தியாவில் நடைபெறும் சம்பவங்களின் மீதே எனது கண் பார்வை அடிக்கடி சென்றுகொண்டிருக்கிறது ஆனால் வட்டமேஜை மகாநாட்டின் அலுவல் என்னை இங்கிருக்கும்படி செய்யும்வரையில், இங்கிலாந்தை விட்டு நான் செல்லுவது தப்பிதமென உணருகிறேன். நான் புறப்படும் திகதியை இவ்வாரம் நிர்ணயிக்க முடியுமென்று எதிர்பார்க்கிறேன்" காந்தியடிகளின் மேற்காட்டிய கூற்றின்படி வட்டமேஜையில் பயனில்லையென்றும் இந்தியாவிலேயே எல்லாம் நடைபெறவேண்டுமென்று கண்டிப்பாய் விளக்குகிறது. சகலரும் எதிர்பார்த்தபடி முட்டைவடிவமாய் இருந்த மேஜை முட்டையைத் தவிர வேறு எதை நல்கும். அதாவது பூஜ்யம்தான், இதுவுமன்றி திருமிகு சென குப்தாவும் அவரது பத்தினியாரும் மகாத்மாவைத் தரிசித்து வங்காள நிலைமையை உள்ளதை உள்ளவாறு உரைத்திருப்பதாகவும் அறிகிறோம். முக்கியமாக சிட்டகாங்கிலும், ஹிஜிலியிலும் நடந்த கோர சம்பவங்களும் அட்டூழியங்களும் மகாத்மாவின் மனதைப் புண்படுத்தியிருக்குமென்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. ஏற்கனவே இச் சம்பவங்களைப்பற்றிய உண்மைகளைப் பிரிட்டிஷ் பத்திரிகைகள் வெளியிடவில்லை யென்று காந்தியடிகள் தெரிவித்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஆனால் காந்திஜியின் இங்கிலாந்து விஜயம் நமக்கு ஒரு சிறிது நன்மையை விளைத்திருக்கிறதெனலாம் அனேக செல்வாக்குள்ள மனிதர்களும் பிரிட்டிஷ் பொது ஜனங்களுக்கும் மஹாத்மாவைக் கேட்ட பிறகு இந்தியாவின உண்மை விளங்கிவிட்டது. நாம் சாத்வீகப்போர் தொடங்குங்காலையில் அதிகாரிகளின் கையோங்கிய செய்கைகளுக்கும் அடக்கு முறைகளுக்கும் இவர்கள் கொஞ்சம் தடைசெய்ய முடியும். அதனாலும் பெருந்த பயன் விளைந்துவிடாது. எது வந்தாலும் வரட்டுமென்று காந்தியடிகளின் ஆணையின்படி நின்று நாம் தொண்டாற்றவேண்டியது நமது முக்கிய கடமையாகும்.

கிழாய்த் தொங்குவதை காண கண்குளிரும்! உலகம் கை கொட்டி நகைக்கும்!

ஊழியனே இதுதான் ஊழியமோ!

சமீபத்தில் உதயமாகிய நமது 'ஊழியன்' தனது பருவத்திற்கேற்றவாறு மழலைச் சொற்களுடன் வெளிவருகிறது. மழலைச் சொற்கள் காதுக்கினிப்பாய் இருப்பது சகஜந்தான். சாராம்சத்தைக் கவனித்தாலோ நகைப்பிற்கிடமாகவேயிருக்கும். அதுவும் குற்றமெனக் கொள்ளலாகாது: குழந்தைகளிடத்தில் நாம் எவ்வளவு எதிர்பார்க்க முடியும். நகர பரிபாலன சபைகள் முதலிய பொது ஸ்தாபனங்களில் தக்க இந்தியர்களை வீற்றிருக்கும்படி செய்ய முயலுவது தன்னுடைய எதிர்கால வேலையில் ஒன்றாக முதல் இதழிலேயே பறைசாற்றிற்று. அடுத்த இதழில் பார்த்தால் இறங்கு துறையிலேயே நீச்சாயிருக்கிறது. இரங்கூன் நகர சபைத் தேர்தல் சம்பந்தமாய் எழுதுங்கால் ஜாதி வித்தியாசங்கள் நிறைந்துள்ள நம்மவர்களுக்குள் வேறு வித்தியாசங்களையும் புதிய ஜாதிகளையும் சிருஷ்டிக்க ஆரம்பித்துவிட்டது. வட இந்தியா முஸ்லீம்களாம்! தென் இந்தியா முஸ்லீம்களாம்!! வட இந்தியா இந்துக்களாம்! தென் இந்தியா இந்துக்களாம்!! என்னே! இதன் பேதமை. இது அறியாமையா? அல்லது விஷமத்தனமா? நிற்க எல்லா முஸ்லிம்களும் யாதொரு பாகுபாடுமின்றி அரசன் முதல் ஆண்டிவரையில எத்தேசத்தவராயிருந்தாலும், எப்பாஷையினராயிருந்தாலும் ஜன நாயகக் கொள்கையை உலகினின் தோற்றுவித்த பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்தில் அடிப்படை என்பதை இதுவரை அறிந்திராவிட்டாலும், இனியேனும் அறியல் வேண்டியதவசியம். இவரது கூற்றைக் கண்ட நமது தமிழ்நாட்டு முஸ்லிம்கள் மனம் புண்ணாவதைக் குறித்து நாம் மிகவும் வருந்துகிறோம்.

இந்தியாவெங்கும் நமது தலைவர்கள் எல்லா வகுப்பினரும் ஒற்றுமையாய் உழைக்கவேண்டி பகீரத பிரயத்தனம் செய்துவருகிறார்களென்பது வெளிப்படை. இரங்கோனிலோ; நமது தேச ஊழியர்! வேறு பிரிவினைகளை உற்பத்தி செய்து ஆனந்தமடைகிறார். இதுதான் தேச ஊழியமோ? என்று அவரை நாம் கேட்கிறோம். ஒருவேளை இதுதான் சுயராஜ்யம் பெறுவதற்கு அடிப்படையெனக் கருதுகிறாராக்கும், இது போகட்டும்; ஸ்தல சுய ஆட்சியே தேசம் சுய ஆட்சிபெற்று நடத்துவதற்கு அஸ்திவாரம் என்பதை இவரும் அறியாததல்ல; அறிந்துதான் இருக்கவேண்டும். முஸ்லீம் அபேக்ஷகர்களைப்பற்றிக் குறித்துப் பேசுங்கால் அவர்களது யோக்கியதாம்சத்தைப் பற்றி ஆராய்வது அனுவசியமென்று நினைத்துவிடுகிறாராம். நமது நகரத்தின் நன்மை, நன்மைககு அவர்களும் பாத்தியப்பட்டவர்கள்தானே. இதைக் கவனித்தால் இவரது கொள்கையின்படி வடநாட்டு முஸ்லிம்களுடன் எந்த சம்பந்தமும் வைத்துக்கொள்ள மாட்டார்போலும், அதுதான் போகட்டும் இந்த அபேக்ஷகர்களைக் குறித்து என்ன சொல்கிறாரெனப் பார்ப்போம். தென்னிந்திய அபேக்ஷகர்கள் நால்வரை சிபார்சு செய்கிறார். அவர்களது யோக்கியதைகள் இன்னதென்று கூறப்படவில்லை. ஸ்ரீமான் சி. கே. தம்பி (பார்-அட்-லா) அவர்களின் நகர சபை ஊழியம் பலரும் அறிந்ததே. ஸ்ரீமான்கள் ஏ. பி. பிள்ளை, வ. பர்னபஸ் இவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டால் ஊழியம் செய்ய சக்தி வாய்ந்தவர்களென்பதில் ஐயமில்லை. ஸ்ரீமான் அரிகிருஷ்ண பிள்ளை 1918-ம் ஆண்டுமுதல் நகர சபையில் அங்கம் வகித்துவருகிறார். அதுமுதல் இன்றையவரையில் நகர பரிபாலன சம்பந்தமாக ஒரு வார்த்தையாவது வாயைத் திறந்து கூறினாரென எவரும் சொல்லமுடியாது. அப்படி இருக்க நமது "ஊழியன்" தக்க இந்திய அபிமானிகளை வீற்றிருக்கும்படி செய்த முயற்சியில் இக்கனவான் பிடிபட்டாராக்கும். எவ்விதத்தில் இவர் நகர சபையில் நமது பிரதிநிதியாக இருப்பதற்கு யோக்கியதையுடையவர் என்பதையும், அன்னவர் இதுகாறும் அச்சபையில் செய்த ஊழியங்களையும் வெளிப்படுத்துவாராயின் மிக்க நலமாயிருக்கும். இவர் செய்த அரும்பெரும் ஊழியம் சைபர் என்றே நமக்குத் தெரியும். சைபர் எப்பொழுதுமே சைபரைத்தான் கொடுக்கும். இதையெல்லாம் அறிந்து ஊழியன் இவரைச் சிபார்சு செய்வது பொதுநலத்தை ஒட்டியதல்லவென்பதை ஒரு மாடுமேய்க்கும் பையனும் அறியவே செய்வான். இதுகாறும் நகர சபையில் செய்த ஊழியங்களை ஒட்டியே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதே ஒழுங்கான முறையாகும். அப்படிச் செய்யுங்கால் தற்காலமிருந்துவரும் ஸ்ரீமான் தம்பி, டாக்டர் டேல் இவர்களையும் புதிய அபேக்ஷகர்களில்

வலியாரைத் தெய்வமடிக்கும்.

சீனாதேசம் தற்சமயம் போர்புரிவதற்குத் தயாராக இல்லையென்பதை அறிந்த ஜப்பானியர் மஞ்சூரியாவில் பல அக்கிரமங்களைப் புரிந்துவருகின்றனர். சீனரும் சமாதானத்தைக் கோரினர். சர்வதேச சபையும் சொல்லிப்பார்த்தது ஒன்றும் நடைபெறவில்லை. அதன் ஜம்பம் ஆயுதபலம் பெற்ற ஜப்பானிடம் பலிக்குமா? சீனாவோ இளைத்தகக்ஷியாகக் காணப்படுகிறது, ஐரோப்பிய வல்லரசுகளும் அவ்வளவு கடுமையாகப் பேசவில்லை. இது நமக்கு ஆச்சரியமல்ல. அடிமை இந்தியாவுக்கும் சர்வதேச சபையில் ஒரு ஸ்தானமுண்டு. "சுயநிர்ணய"க் கொள்கைக்கு விரோதமாக தேச ஜனங்களின் இஷ்டத்துக்கு மாறாக இன்னும் இந்தியா அடிமையாகவே இருக்கிறது. இதைப் பற்றி இந்த ஆடம்பரசபை நம்முடைய பணத்தையும் அதன் செலவுக்கென ஒரு பகுதி வாங்கிக்கொண்டு, இதுவரையில் ஒரு சிறு விரலையேனும் அசைத்ததுண்டா? இல்லவே இல்லை, ஏன்? நமது சார்பாகக் கொஞ்சம் தனது பார்வையைத் திருப்பினால் சர்வ வல்லமையுள்ள பிரிட்டிஷ் யேகாதிபத்திய அரசாங்கம் இச்சபையை இருந்தவிடம் தெரியாமல் தவிடு பொடியாக்கி விடாதா? இதை விடுத்து மஞ்சூரியாவைக கவனிப்போம் ஜப்பான் அவசரம் அவசரமாக படைகளை அனுப்பினது சென்றவிடமெல்லாம் ஜயமாகவே காணப்பட்டது. இதற்கிடையில் ரஷியாவும் தனது பழைய பாத்தியதையை எண்ணிக்கொண்டு யுத்தத்திற்கு தயாரானது ஆனால் நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைப்பதுபோல சங்கதிகள் முடிவடைகின்றன. ஜப்பானியர் தங்களுக்குத் திறவுகோலாயுள்ள நன்னி நதியின் பாலங்களைச் சின்னாட்களுக்குமுன் வெகு சுலபமாய்க் கைப்பற்றி அங்கிருந்து அட்டகாசம் செய்துவந்தனர் அந்த இடத்தில் வெகு மும்முரமாக யுத்தம் நடந்து ஜப்பானியர் தோல்வியுற்ற செய்தி எட்டுகிறது, ஆறுநூறு பேர்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிகிறது. தேசாபிமானத்தால் தூண்டப்பட்டு தற்காப்புக்காக ஆவேசத்துடன் யுத்தம் செய்யும் சீனர் பாலங்களைத் திரும்ப கைப்பற்றிக்கொண்டனர். இனிமேல் கனத்தயுத்தம் நடக்கும் சிராஜிவா என்ற இடத்தில் ஆஸ்டிரியா டியூக் கொலை செய்யப்பட்ட நிமித்தம் மகா யுத்தம் உண்டாயிற்று. இங்கே ஒரு ஜப்பானியக் காப்டன் உயிர் துறந்ததற்காக பிரமாதம்விளையும் போலிருக்கிறது. அக்காலத்தில் ஜர்மனியரின் பேராசை என்று கூறப்பட்டதுபோல இது ஜப்பானியரின் பேராசையாக முடியும். ஐரோப்பிய பலத்த அரசுகளும், அமெரிக்காவும இதனால் சம்பந்தப்படும்படி நேரிடலாம். தற்சமயம் ரஷ்யா வந்தது அதன் படை 562000. ஜப்பான்படை 200,000. சீனப்படை 1000000 முற்கூறிய இரண்டு படைகளும் பலவந்தத்தில் சேர்க்கப்பட்டவை. சீனாவின் படையோ தனது இச்சாபூர்வமாக யுத்தத்திற்கு வந்தவர்கள் ரஷ்யா, ஜப்பான் இவைகளுக்கு தலா ஒன்றுக்கு ஆயிரம் ராணுவ ஆகாயக் கப்பல்கள் உண்டு. ஆனால் சீனாவுக்கு அதிகமில்லையெனத் தெரிகிறது. இச்சண்டையின் காரணம் சீனா நவீன ஆயுதப் பயிற்சி பூராவும் அடையுமுன்னும் உள்நாட்டில் சமாதானம் ஏற்படுமுன்னும் அதை நசுக்க வேண்டுமென்கிற அவாதான். எளியாரை வலியார் அடித்தால் வலியாரை தெய்வமடிக்குமென்பது ஆன்றோர்வாக்கு.

ஸ்ரீமான்களான ஹால்க்கர், ஈ. பி. பிள்ளை, ஏ பார்னபஸ் இவர்களில் இவரைத் தேர்ந்தெடுக்கலாம். ஆனால் ஸ்ரீமான் பார்னபஸ் தனித்தொகுதி வேண்டாத இந்திய கிருஸ்தவ வகுப்பைச் சேர்ந்தவரா யிருக்கிறார். அவருக்கும் மதிப்பளிக்கவேண்டிய தவசியம். இந்திய கிருஸ்தவர்கள் இந்த நகரசபை வாக்காளரில் சிறுபான்மையோரா யிருப்பதால் அவர்கள் இதுகாறும் முன்வந்ததுமில்லை, தேர்ந்தெடுக்கப்பட்டதுமில்லை. இதை ஒரு குறையென்றே கூறலாம் நமது ஸ்ரீமான் வெங்கடசாமியும் நகரசபையில் தம்மால இயன்றஅளவு பாடுபட்டு உழைத்திருக்கிறார் என்பது உண்மை மேற்குறித்த இந்து அபேக்ஷகர்கள் நமது கிருஸ்தவ சகோதரருக்கு ஒரு ஸ்தானத்தை விட்டுக்கொடுப்பது பெருந்தன்மையா யிருப்பதுமன்றி இராஜ தந்திரமுமாகும். இது ஒருபுறமிருக்க நமது வாக்காளர்களோ யோக்யதையை மட்டும் முக்கியமாய்க் கவனியாமல் வேறு பல காரணங்களை முன்னிட்டு வாக்களிக்கிறார்களென்பது உலகறிந்த ரகசியம். இந்தத் தடவையிலாவது தங்களது கடமைகளை ஒழுங்கான வழியில் செலுத்துவார்களா என்பதை நாம் பொறுத்துப் பார்ப்போம்.

Printed & Published By A. V, Sellam Pillay at the Desopakari Press, 210, 36th Street, Rangoon.

அரையணா மலர் 9 இதழ் 31. பதிவு எண் 245.

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை

DESOPAKARI

புதன், ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி, இரங்கோன், (15—11—31) ஐப்பசிமீ 30௳ ஞாயிற்றுக்கிழமை.

வாக்காளர்களே கவனியுங்கள்.

நகரச்சபை தேர்தல் நாள் இம்மாதம் 26ந் தேதியாகும், இன்னும் சிறிது நாட்களேபாக்கி இருக்கின்றன. இதுசம்பந்தமாக நாம் யேற்கனவே கொஞ்சம் தெரிவித்துள்ளோம். இதற்கிடையில் வழக்கம்போலச்சில்லரைவிளையாட்டுகளும் நடைபெறுகின்றன. ஸ்ரீமான்கள் சி.கே. தம்பி, இ. பி. பிள்ளை, டாக்டர் டுகல் இவர்கள் மீது ஆக்ஷேபனை மனுக்களாம். தேர்தலில் பிரயோகிக்கப்படும் ஆயுதங்களில் இதுவும் ஒன்றென நாமறிவோம். அவைகளின் உற்பத்தி ஸ்தானங்களைப்பற்றி எவருக்கும் சந்தேகம் இருக்கமுடியாது. அந்நாடகத்தின் முடிவையும்நாம் எதிர்பார்ப்போம் இதுவரையில் நமக்குப்பிரதிநிதியாக இருந்துவந்தவர்களும் இனிவரப்போகிறவர்களும், முந்தியவர்கள் தாங்கள் இதுகாறும் நகரசபையில் என்ன ஊழியம் செய்தார்களென்றும், அதற்காகத் கங்களுக்கு வாக்குரிமையை வழங்கவேண்டுமென்றும் வாக்காளர்களுக்குப் பகிரங்கமாகத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த அம்சத்தை வற்புறுத்திக் கேட்டறிந்து திருப்தியானால் தங்களுடைய வாக்குகளை மறுபடியும் அளிக்கும்படி வாக்காளர்களுக்கு எச்சரிக்கிறோம். இனி வரப்போகிறவர்களும் தற்சமயம் இருக்கும் முனிசிபல் நிர்வாக ஊழல்கள் இன்னதென அறிவித்து அவைகளைச் சீர்திருத்த எம்மாதிரி செய்வதாக உத்தேசம் என்று தெரிவிக்கும்படி வாக்காளர்களுக்குக் கேட்க அதிகாரம் உண்டு. அப்படிச்சொல்லுவார்களானால், இப்புதிய கனவான்கள் வெளியிலிருந்து முனிசிபல் நிர்வாகத்தைச் சிரத்தையுடன் கவனித்து வந்திருக்கிறார்களென்று வெளிப்படும் அதிலிருந்து இவர்கள் பெருமைக்காக வெளியில வரவில்லையென்றும் உண்மையில் பொதுமக்களுக்கு ஊழியம் செய்யவேண்டுமென்கிற உயர்ந்த நோக்கத்துடன் வருகிறார்களென்றும் வாக்காளர்கள் அறிந்துகொண்டு வாக்களிக்கமுடியும் இவ்விஷயத்தில் எவ்விதமான தயை தாக்ஷண்யமும் காட்டுவது கொடிய குற்றமாகுமென்பதை நாம் பலங்கொண்டமட்டும் வற்புறுத்துகிறோம், நமது தாய்நாடு சுய ஆக்ஷிக்குத்தகுதியென்றும் அதை உடனே அடையவேண்டும் என்றும்லண்டன்வட்ட மேஜையில் உலகினிற் பெரியார் காந்தியடிகள் கர்ஜிக்கும் இக்காலத்தில் நகரசபைக்குத் தகுதியுள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கச் சக்தியில்லாவிட்டால், நாகரீக உலகமேகைகொட்டிநகைக்கும் மஹாத்மாவையும் அவமதித்ததாகும் இந்த யேனத்திற்கும் நம்மை உட்படுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நமதுவாக்காளர்களின் முக்கிய கடமையாகும். 1922-ம் ஆண்டுக்கு முன் நகரசபையில் பேச்சே இல்லாமல் நடவடிக்கைகள் முடிவுற்றன. அக்காலத்தில் பல அங்கத்தினர்கள் அர்த்தம் விளங்காமலே கையைத் தூக்கி விட்டு வாகனங்களில்யேறி வீடுதிரும்புவர். அதைப்பார்த்துப் பேச்சில்லாமல்எல்லாம் மவுனமாய் எப்படி முடிவடையலாகுமென ஒரு சார்பினர் கண்டித்து வந்தனர். அதன் பிறகு

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

ஆலயப் பிரவேசம்.

கேரள நாட்டில் ஆலயப்பிரவேசத்திற்காக சத்தியாக்கிரகம் நடைபெற்று வருகிறது. இச்சம்பவம் இந்து சமூகத்திற்கே பெருத்த அவமானத்தை விளைவிப்பதில் ஐயமில்லை. கடவுள ஆலயத்தில் ஒரு வகுப்பார் போகலாமென்றும் மற்றவர்கள் போகலாகா தென்பதையும் நாம் ஒருபொழுதும் அறிந்து கொள்ளமுடியவில்லை. ஆலயம் கடவுளுக்காக நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. எல்லா மானிடர்களுக்கும் கடவுள் ஒன்றென்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆகையால் நாம் கடவுளை வணங்குவதற்கு ஒரு ஆலயத்தை நிர்மாணித்தால், எல்லோரும் அதில் வந்து வணங்கலாமென்பது தானே பொது அறிவுக்கும் ஒத்ததாக இருக்கிறது. தீண்டாமையென்பது இந்தியாவுக்கேற்பட்ட ஒரு கொடிய சாபம் அதற்குமனிதனே ஜவாப்தாரி ஆகவேண்டும். இந்தியாவில் நமது சகோதரரை இம்மாதிரி நடத்துவதால்தான். பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் நம்மவர்களை இதைவிடக் கேவலமாக நடத்துகிறார்கள். அதைகுறித்து நாம் வருந்துவதில் பயன் என்ன? இதைத்தான் ஜாதி இந்துக்களுக்கு கடவுள் விதித்த கடுந்தண்டனை எனக்கொள்ளல் பொருந்தும். இதுவேறு. வைதீக இந்துக்கள் நமதுநாட்டில் தீண்டாதார் என அழைககப்படுவோரிடம் கொஞ்சமேனும கருணைஇல்லாமல்இருப்பதன் காரணம் நமக்கு விளங்கவில்லை. அவர்களும் நம்மைப் போல ஐயறிவுடன் கடவுளால் சிருஷ்டிகப்பட்ட மனிதர்கள் என்பதை மறக்கலாமா? இதே இனத்தவர் தங்கள் பெயரைக் கொஞ்சம் மாற்றிக் கொண்டாலும் வித்தியாசம் காணைப்படுவதில்லை. இதே வகுப்பினர் கிருஸ்து மதத்தையோ, இஸ்லாம் மார்க்கத்தையோ தழுவிவிட்டால் இவர்களிடம் யாதொரு வித்தியாசமும் காட்டப்படுவதில்லை, அவர்கள் டாக்டர்களாகவோ வேறு அவசியமான உத்தியோகஸ்தர்களாகவோ இருந்து விட்டால் எந்தவைதிக இந்துவின் அடுப்பங்கரை வரையிலும்போக அனுமதிக்கப்படுவதை நாம் நேரில் அறிவோம், அச்சமயம் தீண்டாமைக் குற்றம் பறந்துவிடுகிறதல்லவா? எல்லா சமயங்களிலும் இம்மாதிரி சகோதர பாவமாக தாராளமாக நடந்தால் இந்து சமூகத்தின் பலம் குறையுமா? இந்த உழைப்பாளிகளான வகுப்பினர் பிறமதத்தைத் தழுவுவார்களா? அது நமக்குப் பெருத்தநஷ்டமானக் கேடல்லவா? வைதீகர்களுடைய ஆக்ஷேபனைக்கு யாதொரு ஆதாரத்தையும் காணோம். பழய கொடிய வழக்கம் என்பதைத்தவிரப் பிறிதொன்றுமில்லை. பழயனகழிதலும், புதியன புகுதலும் நியாயந்தானே. சுய ஆக்ஷி எட்டிப்பார்க்கும் இச்சமயத்திலும், பொதுரஸ்தாக்களையும், பொதுக்கிணறுகளையும், தேவாலயங்களையும், நம் சகோதரர்களில் ஒரு வகுப்பார் உபயோகிக்கலாகாதென நாம் விதண்டா வாதம் செய்தால், அவர்கள் நம்மை விட்டுப்பிரிய நினைப்பதில் ஐசகென்ன? அவர்களுக்கு நம்பிக்கை உண்டாகும்படி நாம் சிரியாம்சையில் செய்து காட்டினுலொழிய, வெறுந்தீர்மானங்கள் ஆயிரககணக்காகச் செய்தாலும் பயனளிக்காது. இவ்விஷயத்தை ஒவ்வொரு இந்துவும் ஊன்றி யோசித்து தக்கன செய்யுமாறு வற்புறுத்துகிறோம். விடுதலைப் போரைப்போல இதுவும் இப்பொழுது முக்கியமானதாகும்.

இது ஓர்புறமிருக்க வைதீகர்களின் பிடிவாதம் சேற்றில் நட்ட கம்பம்மாதிரி யாதொரு ஆதாரமும் இல்லாமல் இருக்கிறது. ஆராயப்புகின்எல்லாம் வெளிச்சமாகும். கடவுள் எப்படிஎல்லாருக்கும் பொதுவோ அதேவிதமாக தேவாலயமும் எல்லாருக்கும் உரிமையுடையதுதான், தெய்வத்தை வணங்குவதற்கு ஆலயத்திற்குட் செல்வதை ஒருமனிதன் மற்றொரு மனிதனைத் தடுப்பதற்கு எவ்வித பாத்தியமும் இல்லையென நாம்கண்டிப்பாய்க் கூறுவோம். இந்தியாவின் எல்லாப்பாகங்களையும் தீண்டாமையாகிய கொடியசாபம் பிடித்திருந்தாலும் தென் இந்தியாவில் முக்கியமாக மலையாள தேசத்தில் தான் இந்த அட்டூழியங்கள் அதிகமாய் நடந்துவருகிறதெனலாம் தற்சமயத்தில் அங்கு தான் குருவாயூர் ஆலயத்தில் பிரவேசிப்பதற்கு கேரள மாகாண காங்கிரஸ் கமிட்டியின் கீழ் சத்தியாக்கிரகம் மிக்க மும்முரமாக நடந்துவருகிறது. இந்த இயக்கத்திற்கு மஹாத்மா காந்தியும் ஆதரவளித்திருப்பதாக அறியக்கிடக்கிறது ஆனால் தமிழ் நாட்டில் எல்லாம் ஒழுங்காக நடைபெறுகிறதென எண்ணலாகாது. அதுவும் அவன்தம்பி அங்குதன் என்றமாதிரியாகவே இருக்கிறது. யுகக்கணக்காக நடந்துவந்த வழக்கத்தை ஒருநாளில் மாற்றுவதென்றால் அசாத்தியமெனப் பலரும் கூறக்கூடும் அப்பேர்ப்பட்டவர்கள் தங்களுடைய தொன்

று கொட்டுலந்த வழக்கங்களை சமயத்துக் கேற்றவாறு தங்களுடைய வயிற்றுப் பிழைப்பை உத்தேசித்தும், மேனாட்டுநாகரீகத்தில் சிறந்தவர்களென நம்மை ஆளுபவர்கள் கருதவேண்டுமென்றும் கண்மூடிக் கண்திறப்பதற்குள் மாற்றிக்கொள்ளவில்லையா? உதாரணங்கள் தேவையானால் ஆயிரக்கணக்கான இந்து தர்மத்திற்கு அடுக்காத அநுசாரமான மாறுதல்களை எவரும் ஆக்ஷேபிக்க இயலாதபடி நாம் எடுத்துக்காட்டமுடியும். அவைகள் நமது வாசகர்களுக்கும் தெரியவே செய்யும். உண்மை இவ்வாறிருக்க நமது நாட்டில் பிறந்துவளர்ந்து ஜீவனம் செய்கிற பல கோடிமக்களை நாம் ஒதுக்கித் தள்ளுவது கடவுளுக்கே பொறுக்குமா? இப்பழி நம் தலைமீது இருப்பதால் தான் பலவருடங்களுக்குமுன் வடஇந்தியாவில் ஒரு முக்கிய நகரில் உள்ள ஐரோப்பிய கிளப்பில் "நாய்களும் இந்தியர்களும் உள்நுழையலாகாதென" நோட்டீஸ் போடப்பட்டிருந்ததாம். அதைக்கண்ட நமது தலைவர்கள் அங்கேவாஸ்தவமாக நுழைவதற்கு இஷ்டப்படாவிட்டாலும், பெருத்த கிளர்ச்சி செய்து தவக்கமன்னியில் மன்னிப்புடன் அந்த நோட்டீஸ் பலகையைத் தூக்கியெறிந்துவிடச்செய்து பிறகுவந்து படுத்துறங்கினார்களாம். இதுவெகு பழய நாளையச்செய்தி அதுமாதிரி தானே நமது சகோதர தீண்டப்படாதவர்களுக்கும் ஆத்திரம் இருக்க முடியுமல்லவா? அவர்களிடம் நாம் தற்சமயம் மன்னிப்புக் கேட்காவிட்டாலும், நியாயம் வழங்கவேண்டியது அவசியத்திலும் அவசியமாகும் இத்துடன் காந்தியடிகள் கூறுவதும்கல்லயோ சனைதான். பொதுத்தொகுதியேற்பட்டால் இந்தவித்தியாசம் உடனே தொலைந்துபோகும் என்பதில் ஐயமில்லை. கண்டிப்பாய் ஜாதி இந்துக்கள் அவர்களுடைய ஓட்டைப் பெறுவதற்கு அவர்கள் இல்லங்களுக்குப் பன்முறையும் சென்று தயவாகக் கேட்கவேண்டிவரும். அதனல் எல்லாரும் சமத்துவமாகி விடுவார்கள். ஒருக்கால் பெரும் பான்மையான ஜாதி இந்து வாக்காளர்கள் மத்தியில் தங்களுக்குப்போதிய ஸ்தானங்கள் கிடைக்காதென்ற பயமிருந்தால், பொதுத்தொகுதியில் தங்களுக்கென சில ஸ்தானங்களை ஒதுக்கிவைககும்படி கேட்கலாம், அது நியாயமாகும்; அம்மாதிரி தானே சென்னை பிராமணரல்லாதாரும் முன்னல் செய்துகொண்டு, இப்பொழுது அதுவும் அவசியமில்லை யென்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். நம் தாய்நாடு விடுதலைப்போர் மறுபடியும் ஆரம்பிக்கப்போகும் இச்சமயத்திலாவது, வைதிக இந்துகள் தங்கள் தேச க்ஷேமத்தில் கண்ணுங் கருத்துமாயிருந்து ஒடுக்கப்பட்ட நமது நிர்பாக்கிய சகோதரர்களுக்கு நியாயம் வழங்குமாறு நாம்பலங்கொண்டமட்டும் வற்புறுத்துகிறோம் இன்றேல் இந்திய மாதாவின் கோபத்திற்குக் கண்டிப்பாய் இலக்காவீர்கள்.

கிராமபோனில் காந்திஜி.

கொலம்பியா கிராமபோன் கம்பெனியார் மகாத்மா காந்தியை ஒரு அரியசெய்தி தெரிவிக்கும்படி வேண்டி அதைதங்களுடைய பிளேட்டில் பிடித்ததாகத் தெரிகிறது அதன் வருவாயிலிருந்து 100-க்கு 10 வீதம் காந்தியடிகள் தெரிவிக்கும் தருமத்திற்கு கொடுப்பதாகவும் ஒப்புக் கொண்டிருக்கிறார்களாம். அத்தொகை 5-லக்ஷம் ஆகுமெனக் கூறப்படுகிறது, மகாத்மாவின் பொன்னுரைகளைக் கேட்க ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும் மிகுந்த ஆவலுள்ளவர்களாயிருப்பது வெளிப்படை. ஒரு பிளேட் நான்கு ரூபாய் விலையாக டிசம்பர் மாதக்கடைசியில் பி ஆர். அண்டு சன்ஸ் கம்பெனியில்கிடைக்கும் கொலாம்பியா கம்பெனிககாரரும் வேறு வேலைகளை நிறுத்தி இந்த ரிக்கார்டுகளையே செய்து இவ்வருட இறுதிக்குள் 10 லக்ஷம் ரிக்கார்டுகள் விற்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. சாதாரண இங்கிலீஷ்காரன் ஒவ்வொருவனும் நமது மகாத்மாவை மிகுதியும்நேசிக்கிறன் என்பதில் தடையில்லை. காந்திஜி இந்தியாவுக்கு சுயராஜ்யம் கொண்டுவந்தாலும், வராவிட்டாலும் இங்கிலாந்திலுள்ள ஆண், பெண், பாலரின் அனுதாபத்தைக் கொண்டுவருவாரென்பது திண்ணம் இம்மாதிரி பிரிட்டிஷ் மனப்பான்மையை மாற்றியதே பெருத்ததோர் ஜெயமாகும்

தேசோபகாரி

சந்தா விபரம்

வருஷம் 1-க்கு	ரூ.	3	0	0
ஆறுமாதம்	ரூ.	1	8	0
மாத சந்தா அணா			நான்கே	

முழுமுட்டாளே காந்தி பிராமணரல்ல

பஞ்சபாண்டவர்களைத் தெரியுமா? என்று ஒருவன் தன் நண்பனைக் கேட்டான். ஆமாம் தெரியும் நன்றாய். கட்டில் கால்போலே நாலு பேர் என்று மூன்று விரலைக்காட்டி இரண்டு கோடுகிறினானும். அந்தமாதிரிதானிருக்கிறது இந்த 150 வருடங்களாய் நம்மை ஆண்டு அனுபவித்துவரும் பிரிட்டிஷ் ஆள்வினை வர்க்கத்தாரின் செயல் இந்த லட்சணத்தில் ஆனைகண்ட எழுகுருடர்களின் முடிவுக்கு வந்துவடுகிறார்கள். குருட்டுத்தனமென்று நான் சொல்ல வரவில்லை. இங்கிலாந்தில்நடக்கும் மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகைதான் அப்படிக்கூறுகிறது, இதுசம்பந்தமாக காந்திஜீயை பிர்மிங்காமில் ஒருவர் கேள்விகேட்டார். அக்கேள்வியையும் அதற்குக் காந்திஜீ கொடுத்த பதிலையும் அப்படியே ஈண்டுதருகிறேன்:—

கே:— எந்த ஒரு வகுப்பார் இனனொரு வகுப்பாரை அடக்கி ஆழ்த்தி அமிழ்த்து வருகிறார்களோ அந்த பிராமண வகுப்பைச் சேர்ந்த தாங்கள் எவ்வாறு தாழ்த்தப்பட்டவர்களுக்காகப் பேசுவதாகக் கூறமுடியும்?

பதில்:— நான் ஒரு பிராமணன் என்பது எனக்கே இதுவரை தெரியாது. ஆனால் நான் ஒரு பனியா (செட்டி) வாகத்தான் பிறந்தேன். நான் பிராமணன் எனறெண்ணப் பட்டதற்காக வருந்துகிறேன், நாற்பது வருடங்களுக்கு முன்னால் இந்தி, இங்கிலீஷ் மண்ணில் நான்மிதித்தபோது எனது சமூகத்தார் என்னை ஜாதியைவிட்டுத் தள்ளிவிட்டார்கள். இப்பொழுது நான் செய்துவரும் வேலையிலிருந்து நான் ஒரு விவசாயியாகவும், நெசவுகாரனாகவும், தீண்டப்படாதவனாகவுமே அழைக்கப்பட வேண்டியவன். நான் என்மனைவியை மணப்பதற்கு முன்னரிருந்தே தீண்டாமை தீர்க்கும்வேலையில் மணக்கப்பட்டேன், எங்களிருவரது கூட்டுவாழ்க்கையில் இரண்டுமுறை சோதனையேற்பட்டதுண்டு, என் மனைவியுடன் வாழ்வது, தாழ்த்தப்பட்டவர்களுக்காக உழைப்பது. இநத இரண்டில் நான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உழைப்பதைத்தான் [illegible] தேன், என் மனைவியும் என்னுடன் ஒத்துழைத்தாள், எனது ஆஸ்ரமத்தில்-அதுதான் என் குடும்பம் அநேக தீண்டப்படாதாரிருக்கின்றனர், அன்பார்ந்த ஆனால் குறும்பு மிகுந்த ஒரு சின்னப் பெண்ணை என்மகளாக வளர்க்கிறேன், அவள் ஒரு தீண்டப்படாதவள். ஆனால் நான் அவளுடன் அன்போடு குலவுகிறேன்.

யார் வீட்டுப்பணம் தள்ளு செலவிலே!

மீரத்திலே ஒரு வழக்கு நடக்கிறதல்லவா? அது எவ்வளவு பணத்தைத்தான் வாரி வாரி விழுங்குகிறது. கவந்தராக்ஷனை விட அவ்வழக்குக்கு வயிறு பெரிது. மலைமுழுங்கி மகாதேவன் ஒரு வக்கீல். அவன்தான் சர்க்கார் தரப்பில் கேஸை நடத்துகிறான், வேலையென்னமோயில்லை. இருந்தாலும் மாதா மாதம் ஒரு 30 ஆயிரம் கொட்டிக்கொடுத்து விடவேண்டும். சென்ற செப்டம்பர் மாதம் 30ந் தேதிக்குள் கொஞ்ச நஞ்சமல்ல 9 லட்சம் ரூபாய்க்கு மேல் கொடுத்தாகிவிட்டது. இன்னும் கொஞ்சக்காலம் இவ்வழக்கு நடக்குமானால் அந்த வக்கீல் உலகத்தின கோடீஸ்வரர்களில் ஒருவராகி விடுவதில் சந்தேகமிருக்கிறதா? சாட்சிகளுக்கும் ஜூரர்களுக்கும் ஒரு 60,000 ரூபாய் இன்னும் இதர செலவில் சொச்சம் ஆகமொத்தம் 12 லட்சத்து 18 ஆயிரம் முழு வெள்ளி ரூபாய்கள் செலவு செய்யப்பட்டிருக்கின்றன. இதைக்கேட்ட எனது நண்பரொருவர் அப்படியே விறைத்து விட்டார். ஒரு பெருமூச்சு விட்டு எழுந்திருக்காமல் நிச்சயமாய் சீட்டுக் கிழித்தே விடுவார், அப்புறம் சொன்னார்,' அடபடுபாவிகளே! இந்தச் செலவுகளுக்கெல்லாம் எவன் தாலியறுத்துக் கொடுப்பது' என் வயிறு எரிகிறதே. குடிக்கக்கஞ்சியில்லை, குண்டியிலுடுததத்துணி கிடையாது, குந்தக்குடிசைக்கானோம். மாதம் பத்து ரூபாயிருந்தால் பசியாமல் தண்ணீர் குடிக்கலாமே! இதென்ன இழவுக்கு மாதா மாதம் 30 ஆயிரம்இப்படியெல்லாம் ஏழைகளின் பணத்தைக் கண்ணு மூக்குத் தெரியாமல் செலவழித்துவிட்டு பணமில்லை பணமில்லை என்று கத்துவதும், சிக்கனம், சிக்கனம் என்று கூச்சலிடுவதும், வரி, வரி. யென்று வானை வாங்குவதும் ஏன்? இந்தமாதிரி செலவுகளையெல்லாம் நிறுத்திக் கொண்டு கொஞ்சம் செட்டாய்க் குடித்தனஞ் செய்யாமல் டம்பாச்சாரித்தனமாய் ஆடம்பரத்திலும் அதிகாரத்திலும் வண்டியோட்டினால்காரியமாகாது. ஏழைகளின் மீதுவரிச்சுமையைப் போடவேண்டாம் கடைசித்துரும்பும் ஒட்டகத்தின் இடுப்பை முறித்துவிடும்.

பேர்லி இந்தியா சட்டசபை

சோலிய முஸலிம் மாணவர்களால் நடத்தப்படும்.

இன்று மாலை 8-30 மணிக்கு சோலிய முஸ்லிம் அஸோஸியேஷன் ஆதரவில் சீக்கேமவுண்டாலே வீதியிலுள்ள ஷை அஸோஸியேஷன் ஹாலில் நடைபெறுமாதலால் இதைக் கண்ணும் ஒவ்வொருவரும் விஜயம் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

விஷயங்கள்.

1 சட்டசபைத் தலைவர் தேர்தல், 2 கேள்விகளும் பதில்களும், 3 சுயராஜ்யக் கட்சித் தலைவர்—ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாகவும் இலவசமாகவும் இந்திய மக்களுக்குப் போதிக்க வேண்டுமென் னும் மசோதாவைக் கொண்டுவருவார், 4 கவர்ன்மெண்டார் மசோதாவை எதிர்ப்பார்கள்.

சட்டசபைத் தலைவர்—ஜனுப் கே. எ. அப்துல் ஜலீல் மரைக்காயர் பி. எ.,

ஹோம் மெம்பர்.

ஜனுப்களான கே. எம். என். முகம்மது,பொக்கிஷ மெம்பர், வி. என். எம் நல்லகனி, கல்வி மெம்பர், இ. காதர் பாஷா, இராணுவ மெம்பர், கே. எம். முகம்மது ஹனிபா, சட்ட மெம்பர், பி. எஸ். கே. தஸ்தகீர். சுயராஜ்யக் கட்சித்தலைவர். ஜனுப்களான என். கே. எச். முகம்மது காஸீம், சுயேட்சைக் கட்சித்தலைவர், பி. எம், ஜமால், தொழில் கட்சித்தலைவர், எம். ஐ. உமர், மிதவாதக் கட்சித்தலைவர், ஒ. எம். முகம்மது ஹுஸேன், நியமுக மெம்பர், ஐ. பி. ஜெய்னுல்லாபதீன், சுயராஜ்யக் கட்சி மெம்பர் ஜனுப் எம். எம். ஆதமூஸா. சுயேச்சைக்கட்சி மெம்பர் பி. என். இ. அபூதாலிபு.

இதர மெம்பர்கள். ஜனுப்கள்:— எ. முகம்மது இப்ராகீம், என், கே. நயினு முகம்மது, எஸ். எ. இப்ராகீம் அலி, வி. எம். கே. முகம்மது ஈசூப், என். என். எ. செய்யது அகமது, கே, எம், அப்துல் லத்திபு. சட்டசபை காரியதரிசி—ஜனுப் பி. முகம்மது ஷரீபு,

இங்ஙனம்:
எம். கே. எ. முகம்மது இப்ராஹீம்,
கௌரவ காரியதரிசி,
சோலிய முஸ்லிம் அஸோஸியேஷன்.

மற்றுமோர் அதிசயம்!

லண்டன் ஹைகோர்ட் போலீஸ் கோர்ட்டில் ஒருமனிதனிடத்தில் சிலகாலம் நேசமாக இருந்து பிரிந்த ஓர் சிறுமி, அவன் தன்னை அடிக்கடி தொந்திரவு செய்கிருனென்று வழக்குத் தொடுத்தாள். நீதிபதி அந்தமனிதனைப் பார்த்து ஆண்களைவிடப் பெண்கள் ஜாஸ்தியாக இருக்கிருர்களே. அனேகர் அழகாகவும் இருக்கிருர்கள், இவளைப்போல அவ்வளவு அழகாகவும் கிடைக்குமே. இவளை இனித்தொந்திரவு செய்வதில்லை யெனவாக்குறுதி கொடுக்கலாமே என்ருர். எதிரி அம்மாதிரி வாக்குறுதி கொடுத்தான் நீதிபதியும் இனி நீ வெளியில் போய் வேறொரு அழகானச்சிறுமியைத் தேடிப்பார் என உத்திரவளித்தார் இதுவும் ஓர் விந்தைதான்,


பெண்டு, பிள்ளைக்கு விலை!

15 ஷில்லிங்!

ஐரோப்பாவில் சிலவோக்கியா என்ற தேசம் ஆஸதிரியா அழிந்த பின் யேற்பட்டது, அங்கே துச்சனிகசு என்ற் தொழிலாளி வேலை அகப்படாததால் தனது ஜீவனத்திற்கு தன் குழந்தைகளை பதினேந்து ஷில்லிங்குகளுக்கு விற்பதாக விளம்பரப்படுத்தி யிருக்கிருன் தனது மனைவியையும்தகுந்த விலை வந்தால் கொடுப்பதாகத் தெரிவிக்கிருன். என்னே! காலத்தின் கொடுமை! கலிகாலக் கொடுமையோ? ஐரோப்பாவின் நவ நாகரீகமோ இதைப்பார்த்த நம்மவர்கள் திடுக்கிடலாம் ஆனல் கலியாணம் செய்வது ஓர் வியாபாரமாகக் கருதும் மேல்நாடுகளில் இதைப்பற்றி எவரும் கேவலமாகக் கருதமாட்டார்கள் போலும் ஆனல் இந்த மேல் நாட்டினர் நம்மிடம் குறைகள் கண்டு எடுத்துக்காட்ட வெட்கமில்லாமல் முன் வருகிருர்களே. வைத்தியரே உமது வியாதியை முந்தித் தீர்த்துக்கொள்ளும் என இவர்களுக்கு நாம் பதிலளிப்போம்.

மிஸ் மேயோ நாடாகிய நியூயார்க் பட்டணத்தில் இம்மாதிரி யொத்த மனைவி புருடன் மீது குற்றங்கள் தலைசிறந்து விழங்கும் போது நம் நாட்டைக் குறைகூறி புத்தகங்களும் வெளியிட்டு விடுகிருள்.

இந்தியாவைப் பிடித்திருக்கும்



வறுமை நோய்.

ரயில்வே நிர்வாகம்

பர்மா ரயில்வேயில் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் படும் தொல்லைகளைக் குறித்துப் பன்முறையும் நமது "தேசோபகாரி"யில் எழுதியதுண்டு. சிற்சில குறைகள் கவனிக்கப்பட்டனவென்றாலும், பெரும்பான்மை விஷயம் செவிடன் காதில் ஊதிய சங்குமாதிரி இருந்து வருகிறது, தற்கால பர்மா ரயில்வே நிர்வாகம் கவர்ன்மெண்டுவசம் இருக்கிறதென்பதை வாசகர்கள் அறியவே செய்வர் இதிலும் கம்பெனி நிர்வாகத்தை விட விசேஷ மாறுதல்கள் கிடையா. சமீபத்தில் ரயில்வே நிர்வாகத்தை பற்றி யோசனை கூறும் கமிட்டியின் கூட்டம் நடைபெற்றது. பயணச்சீட்டுகள் எப்பொழுதும் கொடுக்கப்படுவதைப்பற்றி இரங்கோனில் முதல் இரண்டாவது வகுப்புகளுக்கு எல்லாக் காலங்களிலும் கொடுக்கப் படுகின்றனவென்றும் மூன்றாவது வகுப்பினருக்கு மாத்திரம், வண்டி புறப்படுவதற்குத் தொண்ணூறு நிமிடங்களுக்குமுன் கொடுக்கப்படுகிறதென்றும், பொது ஜனங்களின் சவுகரியத்தை உத்தேசித்து நகரத்திற்குள் டிக்கட்டு ஆபீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் அங்கு எப்பொழுதும் கிடைக்குமென்றும் தெரிவிக்கப்பட்டது. உயர்ந்த வகுப்புகளில் ப்ரயாணம் செய்பவர்கள் தனவந்தர்கள் அந்தஸ்துடையவர்கள், ஆட்படைகள் உள்ளவர்கள், ரயில் ஓடும் பொழுதும் வண்டியைத் தாமதிக்கச் செய்து ஏறிக்கொள்ளும் செல்வாக்கு வாய்ந்தவர்களும் உண்டு. அதிகநபர்கள் அந்தவர்க்கத்தில் இருக்க முடியாது. ஆனதால் அவர்களுக்குச் சலுகைகள் தேவை இல்லை, மூன்றாவது வகுப்பினருக்குத்தான் இருபத்து நான்குமணிநேரமும் டிக்கட்டுகள் கொடுபடவேண்டியதவசியம். இவர்களுக்களித்திருக்கும் தொண்ணூறு நிமிடத்தில், டிக்கட்டு விற்குமிடத்தில் ஆண்களும், பெண்களும், வயோதிகர்களும், பாலர்களும் கர்ப்பஸ்திரிகளும், குழந்தைகளை இடுப்பில் வைத்துக் கொண்டிருப்பவர்களும் படும் பாடு கடவுள்தான் பார்க்கவேணும். அந்தஸ்தலத்தில் குட்டித் தெய்வங்களும், போலீஸ் வீரர்களும், புன்முறுவல் செய்து, திருவிளையாடல்கள் புரிவதும் அனைவரும் அறிந்ததே. ஒரேவார்த்தையாகச் சொல்லும்பக்ஷத்தில் நரகத்திற்குச்சென்று மீண்டதை ஒத்திருக்கும் நகரத்தில் டிக்கட்டு ஆபீஸ் இருப்பது எல்லோருக்கும் எப்படித் தெரியமுடியும். அவ்விஷயத்தை அறிவிக்க நகரத்தில் பல பொது இடங்களிலும்,ரயில்வே ஸ்டேஷன்களிலும், கொட்டை எழுத்துகளில் பல பாஷைகளிலும் பிரசுரித்த விளம்பரங்கள் சாசுவதமாக வைக்கப்பட்டிருந்தால், பயனளிக்கும்.கமிட்டியில்பிரசன்னமாயிருந்தவர்கள் அனைவரும் கொழுத்த பணக்காரர்களும், தகுந்த அந்தஸ்தும் செல்வாக்கும் உடையவர்களாதலால் மூன்றாவது வகுப்பு ஒன்றிருப்பதாகக் கூட அவர்களறிய நியாயமில்லை. அதனாலேயே சும்மா இருந்தனர் போலும், வட்டமேஜையில் தொழிலாளர்களுக்குப் பரிந்து பேசப் போட்டி போடும் ஏழைபங்காளர்கள் இக்கமிட்டியில் ஸ்தானம் பெற முயற்சிப்பதவசியமென பலமாய் வற்புறுத்துகிறோம். இதுவும் தவிர, இரயில் ஸ்டேஷன்களில் வண்டிவந்து நிற்க உடன் போர்ட்டர்கள ஸ்டேஷன்களின் பெயர்களை உரத்த சத்தமாகப் பன்முறையும் தெரிவிப்பது இந்தியா ரயில்வேக்களில் வழக்கம். அதனால் படிக்கத்தெரியாத ஏராளமான பிரயாணிகளின் தொந்திரவுகளும் பண நஷ்டமும், காலதாமதமும், நிவர்த்தி ஆகிவந்தன, பர்மா ரயில்வேயிலும் அந்தமுறையை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டிய அவசியத்தை வற்புறுத்தி நீண்டகாலமாக ஆங்கிலம், தமிழ்ப்பத்திரிகைகளில் எடுத்துக்காட்டப்பட்டதுண்டு. ஆயினும் சர்க்கார் நிர்வாகத்தின் கீழ்வந்தபிறகும் அவளுக்கிவள் எழுந்திருந்தாள் என்றதுபோல இருக்கிறது. பிரஸ்தாபக் கூட்டத்தில் போர்ட்டர்கள் ஸ்டேஷன்களின் பெயர்களை உரத்த சத்தத்தில் தெரிவித்தால், பிரயாணிகளின் நித்திரைக்கு பங்கம் வருமென்றும் அதை உத்தேசித்தே தின்பண்டங்களும், பானவகைகளும் விற்கிறவர்கள் கூட வாயைத் திறக்கலாகாதென உத்திரவளிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. என்னே! புத்திதீக்ஷண்யம்! இரவில் வண்டிகளில் தூங்குகிறவர்கள் எத்தனை பெயர்கள்? உயர்வகுப்புகளில் உள்ள சுமார் இரண்டு டஜன் நபர்களைத் தவிர வேறு அசாம்கள்கிடையாது, அங்கும் நித்திரையைக் கெடுக்கபெருமாளகள் இருக்கவே செய்கின்றன, மூன்றாவது வகுப்பிலோ உட்காருவதற்கே இடம் கிடையாதென்றால் உறங்குவதெங்ஙனம்! கைவிரல்களால் எண்ணக் கூடியவர்களின் சவுகரியத்தை உத்தேசித்து நூற்றுக்கணக்கானவர்களும், மொத்தத்தில் அதிகப் பணம் கொடுப்பவர்களுமானவர்களுக்குக்

வாக்காளர்களே கவனியுங்கள்

(1—ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வியில் சிறந்தவர்களும் வாக்குவன்மையுள்ளவர்கள்பலரும் அங்கத்தினர் ஸ்தானங்கள் அடைந்தார்கள் விஷயங்களைத் தீவிரமாக வாதிக்க ஆரம்பித்தனர் அதைக்கண்டு வீண்பேச்சுப் பேசுவதில் பயன் என்னவென்று தற்சமயம் கண்டிக்கப்படுகிறது. ஆனால் மவுனம் கலக நாஸ்தியென்பதும் உண்மைதான். மவுனஸ்வாமியும் அவர்தம் கோஷ்டியினரும் அம்மாதிரி கூறுவதில் யாதொரு ஆச்சரியமும் இல்லை தற்காலத்திய வாக்காளர்கள் மிக்க அறிவுள்ளவர்கள் யென்பதில் ஐயமில்லை. பழயகாலமல்ல. இந்தஜாலம் செல்லாது. தமிழ் பத்திரிகையைப் படிப்பவர்கள் விஷயங்களைச் சுறுசுறுப்பாகக்கற்கிறார்களென்றும், அவர்கள் சுயராஜ்யமே லக்ஷயமாக உள்ள தீவிரவாதிகள் என்றும் 1907-ம் ஆண்டிலேயே காலஞ்சென்ற தென்னாட்டுத்தலைவர் ஸ்ரீமான் ஜீ. சுப்ரமணிய அய்யர் அவர்கள் கூறினார்கள், அதில் ஒருவித சந்தேகமில்லை. இப்பொழுது எத்தனையோ வருடங்கள் கடந்து விட்டன. இரங்கோனிலும் தமிழ்ப்பத்திரிகைகளின் விருத்தியையும் படிப்பவர்கள் சங்கியையும் கவனித்தால், இந்தத்தடவை வாக்காளர்கள் தக்கவர்களையே அபிமானிப்பார்களென்பது திண்ணம். “இரங்கூன் டைம்ஸ்” நிருபரைத்தட்டிக் கொடுத்துப் பிரபந்தம் பாடவைப்பதில் பயன் கிடையாது. பாடுகிறவனும் எதை வைத்துக்கொண்டு பாடுவதென்று இஞ்சிதின்றதுபோல விழித்து ஒருமாதிரியாக ஒப்பாரிவைக்கிறான். கூலிக்கு மாரடிக்கிறவன் தானே இச்சந்தர்ப்பத்தில் இங்கிலாந்தில் பிரபல ராஜீயவாதியாகிய காலஞ்சென்ற ஜான் பிரைட்டின் கூற்று நியாபகத்திற்கு வருகிறது, அன்னவர் லண்டன் டைமஸ் பத்திரிகை தாம் செய்தது ஒழுங்கெனக் கூறினால், தாம் ஒழுங்கினமாக நடந்திருப்பதாகவும, அல்லது அப்பத்திரிகை தாம் செய்ததைக் கண்டித்தால் தாம் நியாயமாக நடந்திருப்பதாகவும் உறுதிசெய்து கொள்ளுவதாகவும், அடிக்கடி கூறும் வழக்கம்உண்டு. அதேபோல் “இரங்கோன் டைம்ஸ்” இந்தியாவைப் பற்றியோ இந்தியர்களைப்பற்றி யெழுதுவதையெல்லாம் அதற்கு எதிரிடையாகவே தார்பரியம் செய்து கொள்ள வேண்டியதுதான்முறை ஆனால் அதன பேச்சு ஆங்கிலம் அறிந்தவெகு சில இந்தியர்கள் காதுகளில் தான்விழும். யேனெனறால் பெரும்பாலான இந்தியர்கள் அதை யெடுத்துப் பார்ப்பதுமில்லை கையில் தொடுவதுமில்லை. மேலும் ஆங்கிலம் படித்த வகுப்பாரின் வாக்குகள அனேகமாக டைம்ஸ் நிருபரின் போஷகருக்குக் கிடைப்பதில்லை. ஒவ்வொருதேர்தலிலும் அளிக்கப்பட்ட வாக்குகளைப்பரிசீலனை செய்திருந்தால் நமது கூற்றின் உணமை கண்டிப்பாய் விளங்கும். ஆக்ஷேபனைகளைக் குறித்துப் பேசினோமல்லவா. இந்தநாடகம் தேர்தல் நடந்தபிறகும் ஒருமுறை நடைபெறும், இப்பொழுது ஒததுத்தான்நடக்கிறது எப்பொழுதும் நமக்கு நாடகத்தில் பிரியம். வாக்காளர்கள் மேற்குறித்த சம்பவங்களை நன்றிக்கவனிக்குமாறு வேண்டுகிறோம்.

கஷ்டம் உண்டுபண்ணலாமா? அது ஒழுங்காகுமா. இதுவும் இராவணேஸ்வரன் இறந்தஇந்திரஜித்தின் சவத்தைக்காண யுத்தகளத்திற்கு இரவில் சென்றகாலத்தில் கூச்சலிட்டுப் பிணங்களைப்பிடுங்கித் தின்று கொண்டிருந்த பக்ஷிகளும் மிருகங்களும் பிரதாபலங்கேசுவரனுக்குக் கோபம் வருமென மவுனமாக இருந்ததென்று கம்பர் வர்ணித்ததை ஒத்திருக்கிறதெனலாம். இந்தியா ரெயில்வேக்களில் இதனால் குடி முழுகிப் போகவில்லையே! வாசிக்கத் தெரியாதவர்கள் வேறுஸ்டேஷன்களுக்குத் தவறிச் செல்வதால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் எடுத்துக் காட்டப்பட்ட பொழுது அதுமாதிரி புகாருகள் வரவில்லையென்றும், அப்படி அதிகப்பிரயாணம் செய்கிறவர்களுக்குத் திரும்பவருவதற்குசாதாரணக் கட்டணமே வாங்க உத்திரவென்றும் அபராதம் இல்லையென்றும் கூறப்பட்டது. சாதாரண கட்டணம் பணமல்லவோ? அதுவே அபராதம் தானே. எவனோ செய்த பிசகுக்கு எவனோ தண்டம் கொடுப்பது போலல்லவோ இருககிறது. புகாரில்லையாம். மூன்றாவது வகுப்புவாயில்லாப்பூச்சிகள்எப்படிப்புகார்செய்யும் அதைச்செய்ய எவ்வளவோ தடைகளுண்டே, அப்படியும் செய்தாலும் நியாயம் உண்டா இம்மாதிரிஅனுவசியமாகவாய்ப்பந்தல்போடுவதை விடுத்து ஸ்டேஷன்கள் பெயர்களை போர்ட்டர்கள் சொல்லும்படி செய்வதே நியாயமும் தர்மமும் ஆகும். நல்லதிருக்கட்டும். எந்தப் பிரயாணியாவது இப்படிச் செய்வதால் நித்திரை பங்கம் வருவதாக குறை கூறியதுண்டா? அப்படியிருந்தால் வெளிப்படுத்தட்டும் நாமும் பதிலளிப்போம்.

Printed & Published By A. V, Sellam Pillay at the Desopakari Press, 210, 26th Street, Rangoon.

அரையணா மலர் 9 இதழ் 32. பதிவு எண் 245.

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை

DESOPAKARI

புதன், ஞாயிறு வெளியீடு

210–36-வது வீதி, இரங்கோன், (18—11—31) கார்த்திகைமீ 3உ புதன்கிழமை.

குண்டுசட்டிக்குள் குதிரையோட்டி?

"போச்சுது! போச்சுது பாரதநாடு!
போச்சுது நல்லறம்! போச்சுதுவேதம்!
ஆச்சரியக்கொடுங் கோலங்கள் காண்போம்
ஐய! விதனைத் தடுத்ததரிதோ?

—விதுரன் வாக்கு

வட்டமேஜை குட்டிச் சுவறு!

கடைசியில் வட்டமேஜை ஆனை குசுவிய கதையாய் முடிந்தது. வேலையற்றுப்போய் ஆறாயிரத்தைந்நூறுமைல் கடலையுந்தாண்டி-வானாளில் இரண்டொரு மாதங்களை வீணாக்கி இப்படியுஞ் செய்யலாமா? என்று எல்லோரும் கேட்கும் நிலைமையிலே மகாநாடு சமாப்தியாகப்போகிறது. பிராப்தகாலத்திலேயே இப்படித்தான் முடியும்என்று நம்மகிழவன் ஜோசியம் சொல்லவே செய்தார் இருந்தாலும் மகாத்மா ஏன் வட்டமேஜைக்குப் போயிருக்கவேண்டும்? என்று பலர் கேட்கிறார்கள். ஆற்றோடு போனாலும் செட்டி ஆதாயத்தோடு தான் போவான் என்று அவர்களுக்கு நாம் பதில் சொல்லிவிடுவோம்.

சரி. வட்டமேஜை குட்டிச்சுவரான கதையென்னவென்றுபார்க்கலாமா? அதன்இறுதிப் படுக்கையை யெண்ணினால் வெறுமனே சிரிக்கவேண்டுமே யொழிய வருந்துவதற்கில்லை. ஆரம்பத்திலே வட்டமேஜையைக் கூட்டுவதற்கு முன்னால் "இந்தியாவின் அரசியல் அமைப்பைத் தவிர வேறெதுவும் அங்கே பேசுகிறதில்லை" யென்று ஒரு பிரமாணஞ் செய்து தரப்பட்டதே அது எங்கே? காந்திஜி பூரணசுயராஜ்யத்தைக் கேட்டார். சிலர் குடியேற்றந்தஸ்தாவது கிடைக்குமென்று எதிர்பார்த்தார்கள். வேறு சிலர் கட்டாயம் ஐக்கிய அரசியல் கிடைத்தே தீரும் என்று கொட்டாவி விட்டார்கள். கடைசியில் நாளுக்குநாள் நகன்றது காண் அம்மானை என்றதுபோல மாகாண சுயாட்சியில் வந்து நிற்கின்றது. இன்னும் குறைநாளில் அதுவும் இல்லையென்றால் யார் அடிப்பது? ஏறியதற்கொன்று, இறங்கியதற்கொன்று, நீங்கள் கொடுப்பதொன்று, நானெடுத்துக்கொள்வதொன்று, களையாற்றுவதொன்று ஆகத்தேங்காய் ஐந்து என்று கூறி மரத்துக்காரனுக்கு ஒன்றுமே கொடுக்காத மரமேறி கதையாகத் தானிருக்கிறதேயொழிய ஒரு நாட்டின் அந்நாட்டுமக்களின் தலையெழுத்தை நிர்ணயிப்பதற்காக இம்மேஜை போடப்பட்டதென்று காந்திஜி தவிர வேறுஎவனாவது எண்ணினான்? இதனால் பிரிட்டிஷ் மந்திரிகளுக்கு ஒரு தந்திரமான வெற்றியும், வட்டமேஜைப்பிரதிநிதிகளுக்கு ஒரு ஆபாசமான தோல்வியுமே கிடைத்திருக்கிறதன்றி உப்புக்கல்லுக்குபயோகமானதெதுவையுமே இந்தியன் பெற்றுவிடவில்லை. அவர்கள் கொடுப்பதாகச் சொல்லும் மாகாணசுயாட்சியைப்பற்றித்தான் பார்ப்போமே அது

நமக்குள் கட்டுப்படுத்திக் கொடுப்பதைத் தவிர வேறில்லை. இந்து, முஸ்லிம, சீக்கியன், அவன், இவன் என்கிற பிரிவினை போதாதென்று தமிழன், ஆந்திரன், வங்காளி பஞ்சாபி மண்ணாங்கட்டி, அடுப்பு, துடுப்பு என்று வேறே பிரித்து ஒருவன் குடுமியை இன்னொருவன் கையிலே பிடித்துக் கொடுப்பதுதான் இம்மாகாண சுயாட்சியின் உள்ளுக்குள்ளிருக்கும் இரகசியச்சூழ்ச்சியாகும். இந்து முஸ்லிம் சீக்கியச் சண்டையென்ற சாக்கைச்சொல்லி இன்னொரு பத்துவருடம் ஆண்டு அப்புறம் தமிழன், ஆந்திரன், வங்காளிகளுக்குள் சிண்டுபிடி சண்டையையிழுத்துப்போட்டு அப்பால் ஒரு பததோ பதினைந்தோ வருடங்கள் நாள்தள்ளநினைக்கிறார்கள். இந்தியாவுக்கு சுதந்திரமளிக்கவேண்டுமென்கிற எண்ணம் உண்மையிலே எந்த பிரிட்டிஷ்காரன் மனத்திலும் எள்ளத்தனை கூடக் கிடையாது. இதுகளையெல்லாம் கண்டுதான் காந்திஜீ வந்துவிடலாமாவென்று கூடக்கருதினார். இருந்தாலும் வந்தது வந்துவிட்டோமே நம்மீது ஏன் பழியை போட்டுக் கொள்ளவேண்டும் பொறுத்துப் பார்ப்போம் என்று வேண்டாத வெறுப்பாய் இதுவரை இருந்து பார்த்தார். நாய்வாலை நிமிர்க்க முடியுமா? அது கோணலாகவே கடைசிவரை நிமிராது நின்றுவிட்டது. ஆண்டவன் தான் நோக்கவேண்டும். நொண்டிக்கழுதை சருக்கி சாக்கிலே விழுந்து வண்ணானைப் பொதி சுமக்கவைத்தாப்போலே வட்டமேஜை சமூகப்பிரச்னையின் சாக்கிலே விழுகிறது. சுதந்திர இந்தியாவிலல்லாடில் பிரிட்டிஷ் இந்தியாவில் இவ்வகுப்புவாதம் எத்தனை தலைமுறையானாலும் எடுபடப்போகிறதில்லை சுயராஜ்யம் கிடைத்து விட்டதோ இல்லையோ இம் மூடுபனி இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும் என்று காந்திஜீ சொல்லுகிறார், பிரிட்டிஷார் "இல்லையில்லை. மூடுபனியை நீக்கிக் கொண்டு சுதந்திரசூரியன் உதயமாகட்டும்" என்கின்றனர். இந்த நியாயத்தைத் தீர்க்க முதல் மந்திரியார் சம்மனில்லாமல் தானே ஆஜராகிறார் எல்லோரும் சரிப்போடுகின்றனர். காந்திஜீ மாத்திரம் "போதுமப்பா நீ நியாயந்தீர்த்தது எங்க முதலாளியை (காங்கிரஸை)க்கேட்டுச் சொல்லுகிறேன்" என்று ஒற்றை வரியிலே சொல்லிக் கையெழுத்து வைக்கமறுத்து விட்டார். மந்திரியார் பஞ்சாயம் குரங்குப் பஞ்சாயம் போலத்தானிருக்குமென்று இந்த இதழின் வேறொருபக்கத்தில் பேசியிருக்கிறோம் பார்த்துக்கொள்ளுங்கள்: இருந்தாலும் நம்ம கிழம் ஒரேயடியாய் வட்டமேஜைக்கு கல்லடிப்புகாடாத்தெல்லாம் கூட்டி விட்டுத்தான் வருமாம்.

இதற்கிடையில் இன்று எமது நண்பரொருவர் இதென்னத்துக்கு இந்தமாகாண சுயாட்சி இதைவிட வீட்டுச் சுயாட்சி கொடுத்திருக்கலாமேயென்று மக்தனால்டுக்கு யோசனைசொல்லி தந்திகொடுக்கப் போவதாகச் சொன்னார். அதுவும் நல்லயோசனைதான்; அப்படிக் கொடுத்துத் தொலைந்திருக்கலாமே. இப்படியேன் குண்டுசட்டிக்குள் குதிரையோட்டி வட்டமேஜையைக் குட்டிச் சுவறு செய்தான் பாவியென்று படுகிறது.

பெண் வாடை வீசுகிறது!

ஆண் காற்றைத் தவிர பெண் வாடையே வீசப்படாதென்றிருந்த சுத்த பிரமசாரி பர்மா வட்டமேஜை மகாநாட்டிலே ஜாடையாய்ப் பெண்வாடை வீசுகிறது. ஆரம்பத்திலே பிரதிநிதிகளைப் பொறுக்கி எடுத்தபோது பெண்மை புறக்கணிக்கப்படுவதில் ஆண்மை காட்டப்பட்டது. அப்புறம் பெண்களெல்லாம் கும்புகூடி "வட்டமேஜை நாற்காலிகள் எங்களுக்கும் வேண்டுமென்று கேட்டனர். போனாற்போகிறதென்று வெகு சிக்கனமாய் ஒரு ஸ்தானம் அளிக்க மேமியோ தெய்வத்திற்குத் தயவு பிறந்தது. பெண்கள் இரண்டுக்குக் குறையாமல் கொடுக்கப் படவேண்டும் இல்லாவிட்டால் மகாநாட்டையே பர்மியர் பகிஷ்கரித்து விடுவர் என்று பூச்சாண்டி பிடித்தார்கள். "அந்தஆள்வேறே; இந்தப் பூச்சாண்டிக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன்" என்று கவர்னர் துரையவர்கள் ஒற்றை வரியில் கூறிவிட்டார் ஸ்திரீ ரத்தினங்கள் மறுபடியும் ஊர்கூட்டி ஆண் பிரதிநிதிகளை வட்டமேஜைக்குப் போகவேண்டாமென்று பெண்மைக் குணத்தால் பேசினார்கள். சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளைகளல்லவா? மீறினார்கள், மறுபடியும் மாதர்கள்" அடா! அண்ணமாரே! தம்பிமாரே! வேண்டாம்; ஸ்திரிபார்ட்டில்லாத நாடகம் ரஸிக்குமா? போகாதீர்கள்" என்று மடியிலும் கைபோட்டிழுத்தனர். உதைத்துத தள்ளிவிட்டு ராஜாப்போலே கப்பலேறிப் போய்விட்டார்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

சூஸ்டரே! நாங்கள் சுமைதாங்கிக் கல்களா?

போச்சு! போச்சு! வட்டமேஜை உடைந்து போச்சு! பேச்சு! பேச்சு! வெறும்பேச்சுப்பேசித் தொலைத்துத் தலைமுழுகிவிட்டார்கள். போனால் போகிறது குட்டிச்சுவறு. அதைப்பற்றி நாம் அங்காய்த்திருக்கவில்லை, என்றாலும் பிரிட்டிஷார் செய்யும் எண்ணற்ற தப்புகளால் நமக்கு பலம் அதிகரிக்கின்றதே யொழிய நஷ்டமெதுவுமேற்படுகிறதில்லை. வட்டமேஜை ஒருதப்பு. அது இங்கிலாந்துத்தப்பு. இனி இந்தியாவிலே ஒரு தப்புக்கட்டியாகிறது. சட்டசபையில் சூஸ்டர் அத்தப்பைக் கட்டியடிக்கிறான். அதுவும் நமக்குச் சாதகமேயொழிய பாதகமில்லை, ஒரு நாட்டு ஜனங்களை அந்நாட்டு மன்னன் வருத்தும்போது ஸ்வபாவத்தில் அவர்கள் அம்மன்னனிடம் வெறுப்பும் துவேஷமும் கொள்ளுவது சகஜம். பொறுக்கமுடியாத சுமையைச் சுமத்தினால் மிருகங்கள் கூடமனிதனை மீறிவிடுகின்றன. அதேமாதிரி நம்மீது ஏற்கனவே நாம் சுமந்துகொண்டிருக்கும் தாங்கமுடியாத வரியோடு இன்னும் அதிகமான வரிப்பளுவைத் தூக்கிப் போட்டால் பொறுக்கமுடியுமா? இடைபெருத்த பிரமாண்டமான பிராணி ஒட்டகம் கூட கடைசித்துரும்பு அதிகமாக ஏற்றப்பட்டால் இடுப்பொடிந்து விழுந்து விடுமாம். அப்படியிருக்க சிறிய மனிதப்பிராணி அதிலும் எலும்பும் தோலுமாயிருக்கும் ஏழை இந்தியனா இத்தனை பெரிய வரி மூட்டைகளைச் சுமப்பான்?

இந்திய சர்க்காரின் வரவுசெலவிலே எவ்வளவு கொட்டினாலும் நிரப்பமுடியாத பள்ளம் விழுந்து விட்டது. அதைமூட சூஸ்டர் சட்டசபையில் கோடரியும், கூடையுங்கையுமாய் நுழைந்திருக்கிறான். “சிக்கனக் கோடரிக்குக் கூரில்லை. வெட்டமட்டும் சம்பளத்தையும், இராணுவச் செலவையும் வெட்டியாகிவிட்டது. இனிமேல் வெட்டுவதற்கிடமில்லை” யென்று ஏழை இந்தியரின் அடிமடியில் கைபோடுகிறான். சில அங்கத்தினர் “இதென்ன வேலைபடா அப்பா! வேண்டாம்! வேண்டாம்! என்றுகையைப் பிடிக்கிறார்கள். ஆனால் கடைசிவரை கைபிடிக்கமாட்டார்கள். அதிகாரவலைக்குள் விழுந்து விடுவார்கள். எப்படியும் தொலையட்டும். ஆனால் தற்காலம் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்பாளிகள் சர்க்காராயிருந்தும் அவர்களது குற்றத்திற்குப் பலிப் பொருளாய் இந்திய ஜனங்கள் தானா அகப்பட்டார்கள். சிக்கனக் கத்தியைச் செம்மையாய்ப் பிடித்து விழுந்த துண்டைச்சரிப்படுத்தலாகாதா? என்பதுதான் கேள்வி.

சூஸ்டரின் புள்ளிவிபரம் தேவையில்லை. கணக்குச் சொல்லுபவன் எப்பொழுதுமே “இதிலே கொடுத்தேன் கேளுகழுதை கேளு, அதிலே கொடுத்தேன் கேளுகழுதை கேளு, என்றுபாடுவது சகஜந்தான். அதைப்பற்றி நாமேன் மண்டையை யுடைத்துக் கொள்ளவேண்டும். ஆனால் சூஸ்டரின் மண்டையிலே இந்திய இராணுவத்தை நுழைப்போம். இராணுவச்செலவில் எவ்வளவு வேண்டுமானாலும் வெட்டலாமென்பது நாம் எவ்வளவு காலமாய் எத்தனைமுறையோ கூறியும் தெரியவில்லை. பழையசாக்குப் போக்கைத்தான் தூக்கிப் போடுகிறார்கள் “வெட்டியவரை வெட்டியாகிவிட்டது. இனிமேல் வெட்ட இடமில்லை” யென்று சேனாபதிகூறியதையே இவரும் பள்ளிப் பாடம் படிக்கின்றார். விருதாவில் பேசுவதால் பணம் வந்துவிடாது. இராணுவத்தைத்தானே பார்த்துக்கொள்ளட்டும்.

இனி உப்புவரி. இதற்கும் உயிர்கொடுக்கப்பார்க்கிறார். ஜனங்களெல்லாம் உப்புச்சட்டம் செத்துபட்டதென்று கருமக்கிரியைகள் கூட செய்துவிட்டார்கள். போனவருஷம் ஒரு லட்சம் பேர்வரை உப்புக்காகச் சிறைபோனார்கள். காந்தி-இர்வின் ஒப்பந்தத்தில் உரிமையையும் தரப்பட்டது, ஆனால் இன்னும் அதற்காகப் போராடவேண்டுமானால் செய்வோம். சர்க்காருக்கு சகலவல்லமையும இருக்கலாம். என்றாலும் அதற்கும் எல்லையுண்டு காந்தி பகவானும் நமக்கும் நல்லபலத்தைத் தந்துதானிருக்கிறார் அந்தச் சர்க்காரும் சோதித்துப்பார்த்து விட்டார்கள் இன்னும் அதிகப்பரிட்சை வேண்டுமா? போனவருஷத்தில் ஒரு சிறுபகுதியில் வரிமறுப்பும் செய்யப்பட்டது, மேலும் மேலும் வரிசுமத்த நாங்கள்சுமைதாங்கிக் கற்களல்ல. உப்புச்சண்டைக்கும் வரிமறுப்புக்கும் இடஞ்செய்வதால் சூஸ்டரே! எங்களுக்கு நீர் அதிகபலம் அளிக்கிறீர்.

பிரிட்டனே! பேராசை தரித்திரம் தீராத உபத்திரம்!

(ஜாவினித் போடன்)

1 பிரிட்டன் பேரிழந்து விடுவாள்.
2 பிரிட்டனின் பலம் பழங்கதையாகிவிடும்,
3 பிரிட்டிஷ் மக்கள் பசியால் பட்டினியால் வருந்தநேரும்.
4 பிரிட்டிஷ் கொடி பாதிக்கம்பத்தில் சோர்ந்து தொங்கும்.

இவைகளைத் தலையங்கத்தில் தாங்கி கன்ஸெர்வேட்டிவ் பத்திரிகைகள் சில வெளிவந்தன. தேசிய கட்சியைச் சேராதவர்கள் பார்லிமெண்டுக்குள் நுழைந்து விட்டால் இவ்வளவுஆபத்துக்களும் பிரிட்டிஷ் தீவுகளுக்கு ஏற்பட்டு விடுமாம். இருக்கட்டும். இப்பொழுதுதான் என்னவாழுகிறது? உலகத்தில் பிரிட்டனை எவனுவது மதிக்கிறனு? பிரிட்டனுக்குக் கப்பங் கட்டிக்கொண்டிருந்த நாடுகளெல்லாம் தீவிரமாகவோ மந்தமாகவோ கலகஞ் செய்யக்கிளம்பிவிட்டனவே இனிமேலும் பிரிட்டனின் பழைய ஒட்டம் ஓடுமா? இந்த உண்மைகளை ஏன் பிரிட்டன் அறிந்துகொள்ளாதுபோனுள்? பிரிட்டனின் ராக்ஷஸபலமெல்லாம் பழங்கதையாகிவிட்டது. ஏனெனில் பிரிட்டன் அவளது சொந்தக்காரியத்தைக் கவனித்துக் கொள்ளுவதுபோல பிறநாடுகளேயும் அதததன் காரியங்களைக் கவனித்துக்கொள்ளும்படி விட்டுவிட வேண்டும். பிரிட்டனென்ன உலகத்துக்கெல்லாம்தர்மகர்த்தாவா? மேலும்பிரிட்டன் கிறிஸ்தவ கிறிஸ்துமகரிஷியின் வேதவாககை தினந்தோறும் பாராயணம் பண்ணுபவள் ஆகையினுலே'உன்னிடத்தில் பிறர்என்னவிதமாய்நடந்து கொள்ள வேண்டுமென்று நீ விரும்புகிருயோ அவ்வாறே நீயும் பிறரிடத்தில் நடந்து கொள்' என்று இயேசுமகான் சொன்னபடி கட்டாயம் நடக்கக் கடமைப்பட்டவள். பிறநாடுகளை பிரிட்டன் வறுமையிலும் கஷ்டத்திலும் வைத்தாள். பிரிட்டனும்- அவ்வாறே வறுமையால் கஷ்டத்தால் வருந்துவாள். செய்தாருக்குச் செய்தவினை சம்பவிக்குமல்லவா? நிற்க, பிரிட்டிஷ்மக்கள் நல்ல நேர்மையான-நியாயமான சமுதாயமாயிருந்தால் அவர்கள் தங்களை தர்மகர்த்தாக்களாக அழைத்துக் கொள்ளும் நாடுகளேன் புரட்சிகொள்ளவேண்டும்?

அமெரிக்க தேசாபிமானியான ஆப்ராம்லிங்கன் இருந்தாரே அவர் சொன்னர் "எந்த ஒரு தேசமும் இன்னெரு தேசத்தையாளத் தகுதியுடையதல்ல" இந்த வேதத்தை-மகத்தான உண்மையை இப்பொழுது தான் உலகம் கொஞ்சங் கொஞ்சமாய் அறிய ஆரம்பித்திருக்கிறது. ஒரு தேசத்தின ஆடம்பரமும் டம்பாச்சாரித்தன்மையும் போய்விட்டபோதிலும் "இது என்தேசம் இவர் என் நாட்டுமக்கள் இது என்னூர்ப்பொருள்" என்ற உணர்ச்சி மனித உள்ளத்தில் இப்பொழுதிருப்பதைப் போல முன்னிருந்ததில்லை. சுதந்திரம் ஜனநாயகம் என்றதத்துவத்துடன் இவ்வுணர்ச்சியும் வளர்ந்து வருகிறது. முடியரசுகளெல்லாம் தொலைந்து குடியரசுகள் ஓங்கி நிற்கின்றன. மன்னாதி மன்னரெல்லாம் மண்ணைக் கவ்வுகிருர்கள். சமீபததிலேயிருந்த ஜார்ஜ் மன்னனெங்கே? கெய்ஸரெங்கே? சீனத்தாசனெங்கே? ஸ்பெயின் வேந்தனெங்கே? அவர்களிருந்த இடங்களில் அவ்வந்நாட்டு மக்களே மன்னர்களாக வீற்றிருந்து தங்களைத் தாங்களே ஆண்டுவருகிருர்கள். கூலிப்படைகள் தொலைந்தபோது நாட்டுவேட்டையும் இல்லாதொழிகிறது ஒவ்வொரு ஆணும் ஒவ்வொரு பெண்ணும் இப்பொழுது தங்கள் தங்கள் மனப்பான்மைப்படி நடக்க உரிமை கொண்டாடுகிறோம். புதுமை விரும்புகிறோம். ஆனுல் அரசியலில் பழையன கழித்து புதியன புகுத்துவதில் மனிதவர்க்கம் மந்தமாகத்தான் சென்றுகொண்டிருக்கின்றது. அத்துணை சுருசுருப்பில்லை. ஆனுல் பிரிட்டனே இது விஷயத்தில் கைகாரி. தன்னுடைய சொந்த அரசியல்அமைப்பிற்வெகுதந்திரமாய் வேலை செய்வாள்.பிறரைத்தலையெடுக்கவிடமாட்டாள் ஒன்று பிரிட்டன் தன்னைப்போல் பிறரையும் எண்ணவேண்டும் இல்லாவிட்டால்தங்களின் பிறப்புரிமையாகியசுதந்திரத்திற்காகப் பாடுபடும் நாடுகளை அடக்குவதில் அழிந்துபட வேண்டியதைத்தவிற வேறுவிதியில்லை.பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள நாடுகளெல்லாம் விடுதலையுணர்ச்சி பெற்றுவிட்டன. அயர்லாந்து பூரண சுதந்தரம் வேண்டுகிறது சின்னத்தீவு சைப்பிரஸ் கூட விடுதலைவிரும்புகிறது; தென் ஆப்பிரிக்காவுக்கு சுதந்தரம் வேண்டும்; இந்தியா சுயராஜ்யம் கேட்கிறது. பிரிட்டன் தனது தோள் வலியால் எதைத்தான் அடக்கிவிடமுடியும்? எலிவேட்டியான் கதையாய்த்தான் முடியும். எலிவேட்டைக்காக ஒருவன் ஒருவனையை வெ

இழிவுகொண்ட மனிதரென்பர் இந்தியாவில் இல்லை!

வெறும் வாயளவிலும் காகிதத்தீர்மான மட்டிலும் தான் தீண்டாமை தீர்ப்பதாகக் காங்கிரஸ் கூறி வருகிறதேயொழிய உண்மையான செயலில் நுனிவிரலையும் ஆட்டியதில்லை யென்று சில திண்ணைத் தூங்கிகளும், வாய்வேதாந்திகளும் வாய்ப்பறை கொட்டி வந்த குறையையும் இதுகாலை காங்கிரஸ் செய்ய முற்பட்டு விட்டது. நம் வீட்டுக்குள் நுழைந்து நமது பிடரியிலு மேறியிருக்கும் பீடையைப் போக்கி விட்டு அப்புறம் நமக்குள்ளுள்ள விவகாரங்களை நாமே தீர்த்துக் கொள்ளுவோம் என்பது காங்கிரஸின் கருத்து. எதிரியை வைத்துக்கொண்டு நமது எளிமைகளைக் கூறிக்கொள்ளலாகாதென்று கருதிற்று. என்றாலும், காங்கிரஸ் சபைகளிலும், சத்தியாக்கிரகக் கைதிகளுக்கிடையிலும் எவ்வித ஜாதிவித்தியாசமோ, தீண்டாமையோ இருந்ததில்லை. வெளியுலகத்திற்கும் அப்பான்மை இப்பொழுது புலப்படும்படி தென்மலையாளத்திலே குருவையூரிலே ஆலயப்பிரவேச சத்தியாக்கிரகம் கேரள காங்கிரஸ் சபையார் சார்பில் நடந்துவருகிறது. அதை வரவேற்காத ஹிந்துவும் ஆதரவளிக்காத இந்தியனும் இந்தியன் என்றழைக்கப்பட மாட்டான். ஹிந்துமஹா சபைத்தலைவர் டாக்டர் மூஞ்சேயும், அகில இந்தியத்தலைவர் பி.ஸி. ரேயும் குருவையூர் சத்தியாக்கிரஹத்திற்கு வாழ்த்துக்கம்பி விடுத்துள்ளனர். நாஸிக் சத்தியாக்கிரகத்தையும் நாமனைவரும் போற்றவும் ஆதரவு காட்டவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த சத்தியாக்கிரஹத்திற்கும் சர்க்காரும் சம்மந்தமே கிடையாது, தீண்டப்படாதவர்கள் என்று கூறப்படுகிறவர்கள் ஹிந்துக் கோவில்களில நுழைந்து ஆண்டவனைத் தொழவேண்டுமென்று விரும்புகின்றனர். இதனால் சர்க்காரின் சட்டங்கள் எதுவும் மீறப்படுகிறது கிடையாது. இந்த நோக்கத்திலோ அனறேல் இயக்கத்திலோ சர்க்கார் வெறுப்புக் கொள்ளவும், அடக்கப்பார்க்கவும் அவசியமில்லை. அந்நிய சர்க்காரைப் பாதிக்கக்கூடிய ஒரு துளி அம்சங்கூட ஆலயப்பிரவேச சத்தியாக்கிரஹத்தில் இல்லை.

இவ்வியக்கம் எவருக்கும் பாதக மெதுவும் விளைவிக்காது. வைதீக இந்துக்கள் ஏதோ தங்கள் குடிமுழுகி விட்டதாகக் கூக்குரலிட்டால் அதற்கு அர்த்தமே கிடையாது; எவரும் சட்டை செய்வதற்கில்லை. இந்து மதத்திலல்ல- இந்து மதஸ்தர்களின் நடைமுறையிலிருந்து வரும் பாரபக்ஷமான சில களை களை களைந்தெறிவதால் சனாதனமான இந்துமதம் பிரகாசிக்கும், மதமாற்றங்களால் இந்துமதம் தனது மக்களையிழந்து மெலியக்காரணமில்லை. இந்துக்களெல்லாம் தெய்வ நம்பிக்கையும் வேதவிசுவாசமும் உள்ளவர்கள், ஆலயத்திலும் விக்கிரஹ ஆராதனையிலும் பற்றதலுற்றவர்கள், இந்துவாய்ப் பிறந்திருந்தும் இந்துக்களுக்குரிய உரிமைகளைக் கொடுக்காது ஒருவகுப்பாரை ஒதுக்கி விடுவதென்பது பொருந்துமா? குருவையூரில் கோயில் கொண்டிருக்கும் கிருஷ்ணபகவானிடத்தும் நாஸிக்கில் ஆலயம் அடைந்துள்ள கலாராமனிடத்திலும் இந்துக்களுக்கு நிரம்பிய பக்தியுண்டு. ஆனால் பக்தி செலுத்தக் கூடாது; பஜிக்கலாகாது, வைதீக இந்துக்கள் தடுக்கிறார்கள். கொடுமை! அவமானம்! பகுத்தறிவுள்ள இந்து இதைப்பார்த்துக் கொண்டிருப்பதற்கில்லை. கோவில் கதவைத் திறந்து விடவேண்டியது தான். குருட்டுத்தனமாகச் சுவறு வைப்பதில் பிரயோஜன மில்லை. பழக்க வழக்க மென்ற பழங்கதை பேசுவதற்கு இனி

ட்டினை. அவ்வளையிலிருந்து ஏராளமான எலிகள் புறப்பட்டோடின ஒன்று வடக்கே, இன்னொன்று தெற்கே, அப்புறமொன்று கிழக்கே, வேறொன்று மேற்கே, இவ்வாறு நாலாபக்கங்களிலும் எலிகள் ஓடுகின்றன. என்னசெய்வான்; எதைத்தான் அடிப்பான் முடியவில்லை கடைசியில் அந்த எலிக்கு அந்த எலிவேகம் இந்த எலிக்கு இந்த எலிவேகம் என்று சொல்லி எலிகளைப் புகழ்ந்து கொண்டிருந்தான் அந்தக்கதையாகத்தான் பிரிட்டன் பாடு முடியப் போகிறது. இவ்வாறு எல்லா நாடுகளையும் தன் கீழ் வைத்திருக்க விரும்பும் பிரிட்டன் ஒருகாலத்தில் எல்லாவற்றையும் இழந்து தனிமையில் இஞ்சி தின்ன குரங்குபோலிருக்கும் காட்சியைக்காணும் வரை நான்வாழ வேண்டும் என்று ஒரு ஆசையிருக்கிறது. இங்கிலாந்து தன் சாம்ராஜ்ய மனைத்தையுமிழந்து வாழும் போது தான் அவளது பெருமை பிரகாசிக்கும்.

மேலும் இடமில்லை. ஒரு சமூகத்தை இன்னொரு சமூகம் அடக்கியாளுங்காலம் மலையேறிவிட்டது. ஆலயத்திற்குள் நுழைந்து ஆண்டவன் சன்னிதானத்தைத் தெரிசிக்க வேண்டுமென்பவன் பக்கத்திலே தான் நியாயமும் சத்தியமும் மிலகத்திருக்கிறது. தீண்டாமை தீர்க்கப்படவேண்டு மென்று எவன் கருதுகிறுனே அவன் இந்து மதத்தை புனிதமாக்க முற்படுகிறுன். எவன் தீண்டாமையை நிலைநிறுத்தவேண்டுமென்று நினைக்கிருனே அவன் ஹிந்துமதத்துவத்தைச் சர்வநாசம் செய்தவனுகிறுன். சுவாமி விவேகாநந்தர், பகவான் பரமஹம்ஸர், மகரிஷி ராம தீர்த்தர் இவர்களெல்லாம் இதைத்தான் அருளிச்சென்றனர். மனிதனுக்கு மனிதன் வித்தியாசமில்லை. கடவுள் சிருஷ்டியில் மனிதவர்க்கத்தில், பாகுபாடே கிடையாது. பாப்பான் பத்துத் தலையோடும் பறையன் ஒரு தலையோடும் பிறப்பதில்லை. இதை எந்த உண்மை இந்துமறுப்பான்? ஆலய சத்தியாக்கிரஹத்தையும் அவ்வாறே சுத்த இந்து இரத்தம் ஓடப்பெற்றவன் எவனும் எதிர்க்க முடியாது. பாசண்டங்கள் சில சீறுகின்றன. இந்துக்களில் உயர்ந்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் சில கழிகூளங்கள் கோட்டை கட்டுகின்றன. அவைகள சத்திய நெருப்புக்கு முன்னுல் நிற்கமுடியாது. வெந்துகருகிக் காற்றிலூதப்படும். சத்தியத்திற்கும் நியாயத்திற்கும் முன்னுல் வேறு எதுவும் முளைக்க முடியாது. இப்பொழுது நடக்கும் இச்சத்தியாக்கிரஹம் வேத இந்து மதத்திற்கும் நடைமுறையிலுள்ள இந்து மதத்திற்கு மாகும்; வைதீகத்திற்கும் நாகரீகத்திற்குமாகும். ஆகவே சர்க்கார் இதில் தலையிட்டு பூஜைவேளையில் கரடிவிடாமல் வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது தான் முறை. நடுநிலைமையைத் தவிர்த்து ஒருதலைப்பக்ஷமாய் நிற்க சர்க்காருக்கு காரணமெதுவுமில்லையென்று அழுத்தமாயக் கூறுகிறோம். சத்தியாக்கிரஹம் என்ற வார்த்தையைப் பிடித்துக்கொண்டு அடக்குமுறையில் இறங்கிவிடக் கூடாவென்று எச்சரிக்கின்றோம். சத்தியாக்கிரஹிகளே! நீங்களும் சத்தியாக்கிரஹதத்துவத்தில் மயிரிழை கூட பிசகிவிடக்கூடாது. வெற்றி உங்கள் பக்கம் தான். சந்தேகமே இல்லை. இடையிலே எத்தனை கஷ்டம் வேண்டுமானுலும் சகிக்க

வேண்டுவதுதான். தியாகத்தின் கடைசி எல்லைவரை சகிப்புத்தன்மையையே சாதித்து விடுங்கள்: ஆண்டவன் பார்த்துக்கொண்டுதானிருக்கிறுன்.

குரங்குப் பஞ்சாயத்து

இந்தக்கதை எல்லோருக்கும் தெரியும். இரண்டு பூனைகளுக்குள் அப்பம் பகிர்வதில் தகராறேற்பட்டது. உடனே அவைகள் ஒரு நியாயாதிபதியிடத்திலே சென்றுபாகவிஸ்தி செய்வதென்று இணங்கிக்கொண்டன. தர்மகர்த்தாவைத் தேடிச்செல்லுகையில் வழியிலே ஒரு குரங்கிருந்தது; விஷயத்தையறிந்து தான் தீர்த்து வைப்பதாக வலிய நியாயாதிபதியின் பதவியேற்று ஒருதராசிலே ஒருதட்டில் இரண்டு அப்பமும் இன்னொரு தட்டிலே ஒரு அப்பத்தையும் நிறுத்து அதிகம்இருந்ததைத் தின்று தின்று முடிவில் எல்லாவற்றையும் விழுங்கியேப்பம் விட்டது. பூனைகள் ஏமாந்துபோய் "நமகுள் யாராவது ஒருவர்கொஞ்சம் அதிகமாய்த்தின்று விட்டதால் என்னகுறைந்துபோகிறது. கடைசியில் ஒருமிக்க எல்லாவற்றையும் ஊரான் தின்னக் கொடுத்துவிட்டோமே" என்று விசனித்தனவாம்.

அம்மாதிரி ஒரு தர்மகர்த்தா முளைத்திருக்கிருர்: "சமூகப் பிரச்னையை என்கையிலே கொடுத்து விடுங்கள் ஒரேயடியாய்த் தீர்த்து விடுகிறேன்" என்று வருகிருர் பிரதமமந்திரியார். வாஸ்தவந்தான் கொடுத்துவிடுவோம்: முடிவென்னவாகும் அப்பம் போனமாதிரிதான். இதையறிந்தே சமூகவாதிகள் ஒன்றுமே பேசாதிருக்கின்றனர். சாஸ்திரி மாத்திரம் எழுந்து "நீங்கள் சொல்லுகிறதை நாங்கள் கேட்கிறோம்" என்றுசொல்லுகிருர். ஏனெனில் மந்திரியார் கடித்துத்தின்றுவிழும் துணுக்குகளை தான்பொறுக்கித் தின்னலாமென்ற ஆசை. மந்திரியாருக்கு நல்ல பிள்ளையாய் நடந்து கொண்டால் ஆயுள்காலமெல்லாம் பிரிட்டிஷ் நீதிதர்மத்தைப் பிரசாரம் செய்து வயிறுவளர்க்கலாம் மகா கனத்துக்குமேல் மகா கனம், மலைக்கனம் பட்டங்களெல்லாம் வாங்கலாமல்லவா? அதற்காகத்தான் சாஸ்திரி தஞ்சாவூர் சாஸ்திரம் பேசினுர். வேறென்ன சமூகப் பிரச்னையாவது மண்ணுங்கட்டிப் பிரச்னையாவது எது எப்படிப்போனுல் அவனுக்கென்ன?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கள். லண்டன் போய் இறங்கியதும் அங்கே பெண்களனுபவித்து வரும் சுதந்திரத்தையும் பெண்கள் போலீஸிலுங்கூட உத்தியோகம் பார்த்து வருவதையுங் கண்டார்கள். இந்திய வட்டமேஜையிலும் தேவி சரோஜனி, ஸ்ரீமதி சுப்பராயன் பீகம் ஷா நாவஸ் இவர்களெல்லாம் பிரகாசிப்பதையும் பார்த்தார்கள். அவ்வளவுதான் "நம்ம வட்டமேஜைக்கும் பெண்ணடிகர் வேண்டவே வேண்டும்" என்று இந்தியா மந்திரியைக் கேட்டார்கள். அவரும் உத்திரவு கொடுத்து விட்டார்; லண்டன் தெய்வம் வரம் கொடுத்தும் மேமியோப் பூஜாரிதலையையாட்டிடுகிறார். 'கிழவி போனாற் போகட்டும். கன்னிமாமியாஸீன் போகக் கூடாதென்று சொல்லுகிறதாக ஒரு சிட்டுச் சொல்லுகிறது. கிழவி போனாலென்ன; குமரி போனாலென்ன? மாமியாஸினைத் தவிரவேறு யார் வேண்டுமானாலும் போகட்டுமென்பதில் ஏதோ இரகசியம் இருக்கவே வேண்டும்.

பர்மா வட்டமேஜை பிரமாசாரியாகவே திரும்பிவிடவேண்டும். இல்லாத்தில் இறங்கிவிட்டால் பிரிவினைக்குப் பின்னால் பர்மா வெள்ளைக்காலனியாவதற்கு ஒரு திருஷ்டாந்தமாகிவிடுமன்றோ!

நிற்க, இன்னொன்று கூற மறந்து விட்டோமே. மந்திரி தனக்குப் பஞ்சாயத்துத் தர்மகர்த்தாப்பட்டம் கட்டச் சொன்னானல்லவா அப்போது இதுவும் கூறினான். "இதுவரை நடந்தனவெல்லாம்முன்னேற்பாட்டின்படிநடந்தனவென்றோ அல்லது நாங்கள் விரும்பிய வாறு நிகழ்ந்தனவென்றோ கூறுவதற்கில்லை." பேஷ்! வேறு எப்படித்தான் நடந்திருக்கிறது. பூனைகண்ணை மூடிக்கொண்டு பால் குடிக்கிறதும் உலகத்தாருக்கெல்லாம் கண் தெரியாது என்று எண்ணிக்கொள்ளுகிறதும் போலிருக்கிறது. "நாங்களெல்லாம் தூங்கிக் கொண்டிருக்கவில்லை மக்தனால்தே! உன்பஞ்சாயத்துப் போதுமப்பா! போதும்! என்று எல்லோரும் சொல்லிவிடுவதேமேல். கம்பெடுத்துக் கொடுத்தவன் பஞ்சாயம் தீர்க்கவருகிறானாம்.

போலீஸ் டாப்பர் மாமா,

காங்கிரஸ் கூட்டங்களைக கலைக்க போலீஸ்காரன் மண்டையிலே புதுப்புது யோசனைகள் தட்டுகின்றன. தடியடித்தடியன்களை விட்டு காலாடித்தனமாய் நடந்துகொள்ளச் செய்வது ஒரு முறை. இராஜ நிந்தனையான வாடையெதுவும் வீசுகிறதா வென்று மோப்பம் பிடித்துத்திரியும் போலீஸான் மீது இன்னொருவனை கல்லை விட்டெறியச் செய்து காங்கிரஸ் காரர் மீது கல்லைத்தூக்கிப் போட்டு அந்தச் சாக்கிலே அடித்து உதைத்துக் கூட்டத்தைக் கலைப்பது இன்னொரு முறை. அப்புறமொன்றுகூட்டத்தில் பேசுபவர்களையும், தலைமை வகிப்பவர்களையும் வாயிலே துணியைத் திணித்து வாயடைப்பது. இந்த செய்கையை வேறெவனாவது செய்தால் கொலை, கொலை செய்ய முயல்தல், கொலைக்கு உடந்தை. முதலிய குற்றங்களெல்லாம் சுமத்தப்படும். ஆனால் போலீஸ்காரனுடைய தூண்டுதலால் நடந்தால் அது மாமியார் உடைத்த மண்சட்டி. யார் கேட்பார்?

இந்த மட்டோடா? இவைகளையெல்லாம் விட கேவலமான இன்னொரு முறை அதையெழுதுவதற்கே நாம் வெட்கப்படும்படியான செய்கையும் செய்திருக்கின்றனர். விசுவாமித்திரனுடைய அகோர தவத்தை அழிப்பதற்காக மேனகை யனுப்பப்பட்டாள். அதேமாதிரி காங்கிரஸின் தவத்தைக் கெடுப்பதற்காகச் சில மோகினிகளை (தேவடியாள்களை) யனுப்பிக் கூட்டம் நடக்கும் இடத்திற்குச் சமீபத்தில் நடனம் செய்யும்படி யேற்படுத்தினர். சிச்சி! இதென்ன வேலை. இப்படியும் ஒரு பிழைப்பா? இதைவிட முச்சந்தியில் நின்று பிச்சையெடுக்கலாம் வேறு தொழிலும் செய்யலாம். இதைத்தட்டிக் கொடுக்காத ஐக்கிய மண்டலப் போலீஸின் இந்த அவமானகரமான மாமன் செயலைக் கண்டிக்காத அந்த ஜில்லா அதிகாரிகளை நமது அகில இந்தியச் சிங்கம் ஜவஹரிலால் மூக்கை யுடைக்கிறார்.

தேசோபகாரி

சந்தா விபரம்

வருஷம் 1-க்கு	ரூ.	3	0	0
ஆறுமாதம்	ரூ.	1	8	0

மாத சந்தா அணா நான்கே

தூக்குமரத்தில் தொங்கிய காந்தி.

நிராயுதபாணிகளான இந்தியருக்கு சுதந்திரம் அளிப்பதற்காக-பல வல்லரசுகள் ஒன்றுசேர்ந்து எதிர்த்தபோதிலும் சாய்க்கமுடியாத ஏகாதிபத்திய பிரிட்டனின் முதலைப் பிடியிலிருந்து இந்தியாவை விடுவிப்பதற்காக இதுவரை உலகம் கண்டிராத புத்தம்புதிய சத்தியாக்கிரஹமென்னும் வலிய வஜ்ராயுதத்தை காந்திஜீ உயிரைப் பணயமாக வைத்துக் கண்டுபிடித்தார். இலகுவிற் பெற்றதில்லை; ஜெயதேவியின் பலிபீடத்திலேறி நின்று தியாகத்தின் கடைசி எல்லைவரை சென்றுதான் அஹிம்ஸா தர்மத்தை மஹாத்மா அருளப்பெற்றார்.

தென்னாப்பிரிக்காவிலே காந்திஜீ சத்தியாக்கிரஹத்தை முதன் முதல் ஆரம்பிக்கச் சென்றாரே 1897-ம் ஆண்டில்—இற்றைக்கு 34 வருடங்களுக்கு முன்னாலே அப்போது ராய்ட்டர் ஒரு கயிறு திரித்து விட்டான். அக்கயிறு காந்திஜீயின் கழுத்திற்குக் கயிறாய் விழுந்தது. "காந்திஜீ 700 இந்தியர்களுடன் தென்னாப்பிரிக்காவில் போராட வருகிறார்" என்று, ராய்ட்டர் ஒரு கம்பியை யிழுத்துவிட்டான். தென்னாப்பிரிக்கா வெள்ளையர் காந்திஜீயின் உயிருக்கு உலைவைக்கத்துணிந்து விட்டார்கள். "தர்பானில் நடந்த முதல் கலகத்தில் காந்திஜீயின் கழுத்திலே சுருக்குப் போட்டு விளக்குத் தூணில் கட்டித் தொங்கவிட்டு விட்டார்கள். அப்போது நான் தர்பான் போலீஸில் ஒரு சார்ஜெண்டாக விருந்தேன். நான் தற்செயலாய் என்னுடைய ஆட்களுடன் அந்த இடத்திற்குப் போக நேர்ந்தது. உடனே கயிற்றை வெட்டி காந்திஜீயைக் காப்பாற்றினேன். அப்புறம் காந்திஜீ இருந்த வீட்டை வளைந்து கொண்டு அவரது உயிரை வாங்கக் கும்பு கூடிவிட்டனர். ஒரு இந்தியப் போலீஸ்காரன் மாதிரி காந்திஜீயை உருமாற்றி யழைத்துப் போய் உயிர் பிழைக்கச் செய்தேன். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் இரத்தவெறி ட்டித்த அந்த ஐரோப்பியக் கூட்டம் அவரைக் கொன்றே யிருப்பார்கள். இப்பொழுது இந்தியாவில் இவ்வளவு கலவரை யேற்பட்டிருக்க மாட்டாது நான் காந்திஜீயை காத்தபோது அவர்காலை வெட்டிக்கொண்டிருந்தார்! நாக்கும் வெளியே கொஞ்சம் நீட்டிக்கொண்டிருந்

தமிழா! தயார் தானா?

இந்தக் கேள்வியைக் கேட்டு விடவேண்டுமென்ற ஆசை எனக்கு வெகு நாளாயுண்டு. சந்தர்ப்பத்திற்காக இவ்வளவு நாள் பொறுமையின்றிக் காத்திருந்தேன். இப்பொழுதுதான் சமயம் கிடைத்தது. எனது பிரிய தமிழ் சகோதர சகோதரிகள் இக்கேள்விக்கு விடையளித்து விடவேண்டும். வெற்றுரையிலல்ல; வெறும் பேச்சிலல்ல காரியாம்சத்திலே பதில் சொல்லுங்கள். சோதனை நாள் வெகு தூரத்திலில்லை; கைப்பிடிதூரத்திலே தானிருக்கிறது. அன்று நாம் தமிழர்கள்; வீரத்தாய்மாரின் வயிற்றிலே பிறந்தவர்கள்; மூவேந்தர் சேர,சோழ பாண்டியன் வழித்தோன்றல்கள்; சுதந்திர வீரர் கட்டபொம்மு, ஊமைத்துரையின் சந்ததியார் என்பதைக் காட்டிவிடவேண்டும். "எனது பிரிய தமிழர் சுத்தவீரர்கள்" என்று நமது காந்தி பாபு கூறிவருகிறாரே அதைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். ஒரு குஜராத்திக் காரனுடனும், ஒரு வங்காளியுடனும்; ஒரு பஞ்சாபியோடும் நாம் போட்டிக்கொண்டு சுதந்திரப் போரில் இறங்கவேண்டும். இல்லாவிட்டால் போன வருஷத்திலே நாம் வாங்கினோமே கெட்டபேர் அது மறையாது. சென்ற சுதந்திரப்போரிலே நாம் ஆந்திரரத்தனை பேரைக் கூடச் சிறைக்கனுப்பவில்லை. பம்பாய்ச் சிறைகள் கொள்ளாமல் பம்பாய்ச் சத்தியாககிரகக் கைதிகளை நம் நாட்டுச் சிறைகளில் கொண்டு வந்தடைத்தார்களே அந்த அவமானத்தைத் துடைத்துவிட வேண்டாமா? கராச்சிகாங்கிரஸ் மகாநாட்டிலே கூட "தமிழர்கள்என்னசெய்து விட்டார்கள்? என்றொரு வட நாட்டார் கேட்டு விட்டாராம். கேட்கத்தானே செய்வார்? போன போரில் பிரமாதமாக நாம் ஒன்றுமே செய்துவிடவில்லை யென்பதை வெகு வெட்கத்துடன் ஒப்புக்கொள்ளத்தானாகவேண்டும். போனாற் போகிறது. தோல்வியை வெற்றியின் ஏணியாகக் கொண்டேறுவோம். தமிழா! தயாராயிரு. கட்டளை பிறந்துவிட்டால் முன்பின் எண்ணாமல் குதித்துவிடு!

தது. கண்விழிகளும் பிதுங்கிக்கொண்டிருந்தன' என்று காந்திஜீயின் தென்னாப்பிரிக்கா விஜயத்தில் ஒரு பகுதியை அந்தப் போலீஸ்காரன் சொல்லுகிறான்.

Printed & Published By A. V, Sellam Pillay at the Desopakari Press, 210, 36th Street, Rangoon.

அரையணு   மலர் 9   இதழ் 33.   பதிவு எண் 245.

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை

DESOPAKARI

புதன், ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி, இரங்கோன், (22—11—31) கார்த்திகைமீ 7உ ஞாயிற்றுக்கிழமை.

விடாத கண்டன்; கொடாத கண்டன்.

வட்டமேஜைக்கு முடக்குவாதம் மண்டை முட்டி விட்டது. நிமிடத்துக்கு நிமிடம் செத்துச்செத்துப் பிழைக்கிறது. எத்தனையோ முறை காந்திஜீயும் இதர பல அரசியல் வைத்தியர்களும் தாக்கிச் சார்த்திப்பால் வார்த்து வந்தும் கடைசியில் ஒரு நாள் கையை விரித்து விடப்பார்த்தது. நல்லவேளையாய் உள்ளூர் வைத்தியர்கள் கொடுத்த மருந்தில் கொஞ்சம் உயிர் ஒட்டிக் கொண்டிருக்கிறது. இனிமேல் பிழைக்கவேண்டும்; இல்லாவிட்டால் ஒரேயடியாய்ச் செத்துத்தொலையவேண்டும். பொம்மலாட்டமென்று சிலர் சொல்லுகின்றனர். அப்படியிருந்தாலும் மறந்து சர்வதும் உண்டு. இருக்கட்டும் நோய் எங்கிருந்து ஆரம்பமாகிறதென்று நமது "எக்ஸ்ரே" மூலம்பரீக்ஷைசெய்து பார்ப்போம். சமூகப் பிரச்னையிலே தான் பிளேட் பிடிக்கிறதென்று ஒரு சாரார் கூறுகின்றனர். நாடியும் அப்படித்தான் பேசுகிறது. ஆனால் "எக்ஸ்ரே" அவ்வாறு காட்டவில்லை. பிரிட்டிஷ் மந்திரிகளின் ஹிருதயத்திலே பிடிவாதமாக அந்நோய் பிடித்திருப்பதாக ஸ்பஷ்டமாய்த்தெரிகிறது. சட்டமறுப்பு என்ற சத்திரத்தை வைத்தாலொழிய அப்பிடிவாத நோய் தீராது என்பது நமது அனுபவத்திய வாகடத்தின் கருத்து.

பிரிட்டிஷ் இராணுவம் ஒரு எலும்புருக்கி நோய். இந்தியனை ஊனிருக்க உயிரை வாங்கி விடுகிறது. இந்திய வருமானத்தில் மூன்றிலொருபகுதியை இந்த இராணுவம் சாப்பிட்டு வருகிறது. இந்தியாவின் தற்காப்புக்காகவே இவ்விராணுவம் வைக்கப்பட்டிருக்கிறதாக நம்மையாளும் முதலாளிகள் கூறுகின்றனர். ஆனால் சுயநலக்கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்க்கும் ஆங்கிலர் கூட வெள்ளையரில் அறுபதினாயிரம், இந்தியரில் ஒரு லட்சத்துஐம்பதினாயிரம் ஆக இரண்டுலட்சத்து பதினாயிரம் பேர் கொண்ட இவ்வளவு பெருத்தசேனை வேண்டியதில்லையென்று சொல்லுகின்றனர். காந்திஜீயின் 11 நிபந்தனைகளிலும் கராச்சிகாங்கிரஸின் 20 திட்டங்களிலும் இவ்வளவிறந்த சைன்யம் தேவையேயில்லையென்று வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. பின் என்னத்துக்காகத் தான் இவ்வளவு படையும்? பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் நன்மைக்காகவேயாகும். இந்தியநன்மைக்கெனக் கூறுவது வெறும் மூடுதிரையேயன்றிவேறில்லை. நமது கருத்துக் கெட்டியவரை பார்த்தால் இந்தியாவைக் காப்பதற்காக இச்சேனை எந்தச் சண்டையும் செய்ததுகிடையாது. ஆப்கானியர்களோடும், சீனர்களோடும், ஜெர்மானியரோடும் தான் போராடுவதில் இந்திய இராணுவம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. சென்ற உலக மஹாயுத்தத்தில் மாத்திரம் இந்தியச் சிப்பாய்களாக 14,70,000 பேர் ஐரோப்பாவுக்குச் சென்று இங்கிலாந்தின் மானத்தைக் காப்பதற்காகப் போராடி 1,06,594 பேர் காயமடைந்தும் 36,969 பேர் மாண்டும் பட்டனர். யுத்தச் செலவுக்காக இந்தியாக் கஜானாவிலிருந்தெடுத்தது 170 கோடி, நன்கொடையாகவசூலித்தது 10 கோடி ஆக 180 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது. இங்கிலாந்

வீரத்தாயே வருக!

வெண்பா.

வீரமுடனேபிறந்தாய்வீரமுடனே வளர்ந்தாய்
வீரமுட னேதிகழும் வில்லீ!—தாரணியில்
"தேசோபகாரி"யெனச்சென்னுமம்பூண்டிலகு
வாசாம கோசரமே வா!

வீ. மா.

தின் இந்தச்சண்டைக்காக இங்கிலாந்து செலவு செய்தது. இந்தியச் செலவில் மூன்றில் ஒரு பகுதியேயாகும். இதனால் எவருடைய நன்மைக்காக இந்திய இராணுவம் இந்தியச் செலவில் இந்தியாவில் வைக்கப்பட்டிருக்கிறதென்பது புலனாகிறதல்லவா?

இந்த விஷயங்களையெல்லாம் நமது அரசியல் தலைவர்கள் எத்தனைபோமுறை இடித்திடித்துக்கூறி விட்டார்கள் கிழச்சிங்கம் தாதாபாய் நௌரோஜியும், மஹாராஷ்டிர வீரன் கோகலேயும் கூட எவ்வளவோ சொல்லிப்பார்த்தார்கள், ஜம்பம் சாயவில்லை. இப்பொழுது காந்திஜீயும் இரண்டு தினங்கள் முன் தெக்கத்தெளிவாய்க் கூறிவிட்டார். "சிலகுறிப்பிட்ட காலம்வரை பிரிட்டிஷ் இராணுவம் இந்தியாவில் இருக்கட்டும். ஆனால் இராணுவத்தை நிர்வஹிக்கும் மேலதிகாரி இந்தியனாகத்தானிருக்கவேண்டும்" என்று கூடச் சொல்லியாகிவிட்டது. இதற்கும் இணங்காவிட்டால் இந்தியா மந்திரி ஸர் சாமுவேல் ஹோர் கூறியதுபோல வெள்ளைத் தோலின் திமிர் அடங்குவதற்கு மருந்து தந்து தானாகவேண்டும். அந்நிய நாட்டு சம்பந்தமும் இத்துடன் இணைக்கப்படுகிறது. பணப்பெட்டியையும் சர்க்கார் தன் கையிலே வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறது இவ்வளவு பேராசைகளையும் வைத்துக்கொண்டு சமூகப்பிரச்னையை ஒரு சாக்காகத் தூக்கிப்போட்டால் அது எமன் பழி யேற்றுக் கொள்ள மாட்டாமல் காலராவில் செத்தான், மாடுகுத்திச் செத்தான், அப்படிச் செத்தான் இப்படிச் செததான் என்று உலகத்தார் சொல்லிக் கொள்ளுவதைப் போலன்றி வேறில்லை; எப்படியானாலும் விடாத கண்டன் காந்திஜீயும்கொடாத கண்டன் பிரிட்டிஷ் சர்க்காரும் எப்படித்தான் கரையேறுவார்களோ பார்ப்போம்.

மைசூர் நீதி!

கடைகளிலே இரண்டணாவுக்கு விற்கப்படும் "மைசூர்பாகு" மாதிரி கூட தித்திப்பாயில்லை மைசூர் நீதி. மைசூர் சமஸ்தானத்திற்குள்ளே தொழிலாளி முதலாளிகள் சண்டையே கூடாதென்பது அச்சமஸ்தானாதிபதியின் அபிப்பிராயம். தொழிலாளிகளை அடக்கு ஒடுக்கி விடுவதால்தான் இச்சமஸ்தானத்தைநிலவச்செய்தல் இயலாது. வலியவரிடத்திலிருந்து எளியவர் காப்பாற்றப்படவேண்டுவது நீதி தர்மம். தொழிலாளிக்கும் முதலாளிக்கும் ஏதாவது தகராறு ஏற்பட்டால் நடுவிலிருக்கும் சர்க்கார் நடுநிலைமை வகித்து அவ்வழக்கை விசாரித்து நீதிவழங்கவேண்டும். அதைவிடுத்து ஒருவர்பக்கம் சேர்ந்து கொண்டு அடுத்தவனை வலியகரத்தால் அடக்கிவிடுவது பொருந்துமா!

ஸ்ரீஜத் பி எம். ராம சர்மா என்பவர் பெங்களூர் வாசி. ஐந்தாறு வருஷங்களாய் ஆலைத் தொழிலாளிகளுக்காகப் பாடுபட்டு வருகிறார். தமது சக தொழிலாளிகளின் நியாயமான உரிமைகளை நிலை நாட்டுவதற்கும் பெறுவதற்கும் இவர் முதலாளிகளுடன் போராடிவருகிறார். இதில் இவர் செய்தகுற்றமென்ன? எளியவர்களின் வழக்கை யெடுத்துப் பேசியது அவர்பேரில் குற்றமென்றால் வேறு பரோபகாரமான தொழில் உலகத்தில் எது இருக்கிறது? இதற்காக அவரை அவரது சொந்தவூருக்குள் நுழையலாகாதெனத் தடைப்படுத்துவது தான் மைசூர் நீதியா?

ஸ்ரீமான் சர்மாவைத் தடைப்படுத்தியதால் பெங்களூரிலுள்ள சில ஆலைகள் மஞ்சள் குளிக்கின்றன. தொழிலாளிகள் கேட்பாரற்றுக் கிடக்கின்றனர். இது போன்ற கண் மூடித்தனமான செயல்களை இந்திய பிரஜைகளுக்கிழைப்பதைக் கண்டியாது விடுவதற்கில்லை. என்றாலும் பொதுஜன உணர்ச்சியுடைய ஜனங்கள் பொறுமையிழந்து விடலாகாது. "கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம்மாறும் என்று பொறுமையுடன்காத்திருப்பதேநலம்" எவ்வளவுக் கெவ்வளவு அடிமை ஜனங்கள் அடக்கியாளப் படுகிறார்களோ அவ்வளவுக் களவு விடுதலை நெருங்குகிறது.

ஒருகண்ணில் சுண்ணாம்பும் இன்னொருகண்ணில் வெண்ணெயுமா?

இரங்கூன் கப்பல் துறைமுகத் தொழிலில் தகராறு ஏற்பட்டு அத்தொழில் இந்திய-பர்மியர் இருவருக்கும் சரிபாதியாகப் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருப்பது தெரிந்த கதை. அப்பாகவினையின் நியாயா நியாயத்தைப் பற்றி இப்போது நாம் பேசவரவில்லை. ஆனால் அப்பங்காளிகள் எவ்வாறு கண்காணிக்கப்படுகிறார்கள் என்பது தான் நாம் எடுத்துக்கொண்ட விஷயம். இதற்காக ஒரு அதிகார சபையும் அமைக்கப்பட்டிருக்கிறது. அச்சபை விஷயத்தை பாரபக்ஷமற்ற முறையில் கையாளவில்லையென்ற புகார் கிளம்புகிறது. இது அனாவசியமான ஒரு தலைப்பக்ஷமான புகார் என்பது தொழிலாளர் தம் அபிப்பிராயம்.

இந்தியர் பொதுவாகவே தொழில் வன்மை படைத்தவர்கள். அதிலும் மூட்டை தூக்குவது இறக்குவது ஆகிய தொழிலில் ஆந்திரருடைய பலத்தை ஆக்ஷேபிப்பதற்கில்லை; வேறு எவரும் போட்டி போட்டு விடவும் முடியாது. அங்ஙனமிருக்க இத்தகைய தொழிலில் பயிற்சியில்லாத பர்மியர் மீது கிளம்பவேண்டியபுகார் இந்தியர் மீது ஏற்படுவதென்றால் தொழில் சம்பந்தப்படாத வேறு காரணந்தானிருக்க வேண்டும். நிர்வாக அதிகாரிகளும் பர்மியர் தோளிற் சாய்ந்து அவர்களால் தட்டிக்கொடுக்கப்படுவதாலே இந்தியத் தொழிலாளிகளின் தோளில் குதிரையேறிச் சாட்டையாலடிக்கின்றனர். பர்மியத் தொழிலாளியை விட வேகமாகவேலை செய்யவேண்டுமென்று கூறுவதற்கு வேறு காரணமென்னவாயிருக்க முடியும்? இயன்றவரைதான் செய்யலாம். இயலாத போது அவர்களை வெளியே தள்ளிவிட்டு அவ்விடத்தில் வேறு ஆட்களைப் புகுத்துகின்றனர். இந்தியக் கூலிகள் இக்கஷ்டத்தை எவ்வாறு சகிப்பார்கள். ஏற்கனவே ஏராளமானவர்கள் ஒருபக்கத்தில் காட்டப்படும் சலுகையால் திடீரென எவ்வித முன்னெச்சரிக்கையுமில்லாமல் நீக்கப்பட்டு வருகின்றது போதாதா? ஓட- ஓடத்துறத்துவது மனிதஸ்வபாவமல்ல. ஒரு குறிப்பிட்ட வேலையைச் சரிபாதியாகப் பகிர்ந்து பர்மிய இந்தியத்தொழிலாளிகள் செய்து வரும் முறையில் ஒரு குறிப்பிட்டகாலவரையறை இந்தியர் தலை மீது போடுகின்றனர். பர்மியருக்குக் கால நிர்ணயம் கிடையாது. இந்தியத் தொழிலாளி கொடுக்கப்பட்டிருக்கும் காலத்துக்குள் அவ்வேலையைச் செய்யாவிட்டால் "வெளியே போ" வென்று துறத்தப்படுகிறான். இந்த நிர்ப்பந்தம் ஏன்? இந்தியன் கண்ணில் சுண்ணாம்பும் பர்மியன் கண்ணில் வெண்ணெயும் தடவுவது எந்த நியாயம்?

இதென்னடா! சனியன் எதைத் தொட்டாலும் வரியா?

இந்தியா சட்டசபையிலே ஒரு நிதி மசோதாவை நிதி மந்திரி சூஸ்டர் தூக்கிப் போட்டிருக்கின்றாரல்லவா? அதைப்பற்றி விவாதங்கள் பலமாக நடக்கின்றன. வேட்டை நாய் போல ஆகிவிடக் கூடாது என்பதே எமது பேரவா. "சர்க்கார் கஜானா திவாலாவாகிவிட்டது இந்நிலைகொஞ்சம் அந்நிலைகொஞ்சமாக வரியைத் தூக்கி வரவையும் செலவையும் சரிக்கட்டலாம்" என்கிறான் சூஸ்டர். இரண்டொரு தலையாட்டித் தம்பிரான்களைத் தவிற வேறெல்லோரும் கொஞ்சம் சுடச் சுடத்தான் பேசுகிறார்கள். பர்மாவிலிருந்து டெயிட் என்று ஒரு கூளம் போயிருக்கிறதே அது சர்க்கார் பணத்தைச் சரிப்படுத்தவேண்டுமென்கிறது. இன்னொருவர் சொல்லுகிறார். "எனது கிறிஸ்தவ ஜாதியாரெல்லாம் இராஜவிசுவாசத்தை மறந்து ஏற்கனவே தேசியக் கிளர்ச்சியிலீடுபட்டு விட்டார்கள். இத்தகைய மசோதாக்களால இன்னும் தீவிரமாய் அவர்கள் புரட்சிச்செயலிலும் இறங்கிவிடுவார்கள்" என்று எச்சரிப்புடன் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் உற (சாணி குப்பை) த்தின் மீது வரி விதிக்க ஆலோசனை சொல்லுகிறார். நல்ல யோசனை உரமில்லாவிட்டால் விளைச்சல் குறைவு. விவசாய தேசமாகிய இந்தியா உரமில்லாமல் நல்ல விளைச்சல் பெறமுடியாது. டாக்டர் டிசௌஸா ஒரே வேட்டில் இரண்டுபக்ஷி சுடப்பார்க்கிறார். எல்லாரையும்விட ஐரோப்பிய அங்கத்தினர் கொடுக்கும் சாட்டையடி தான் சூஸ்டருக்கு உறைக்கும். "காலையிலிருந்து மாலைவரை நான் வரி விதிக்கப்படாத எதுவையும் தொட்டதில்லை. எதைத் தொட்டாலும் வரி. அடுப்பு, துடுப்பு, அரிவாள் மனை, அகப்பை, சோறு, தண்ணீர் எல்லாவற்றிலும் வரிச்சுமை யேற்றப்பட்டுத் தானிருக்கிறது. வரி போடாத

காஸிம் அல்லது மாஜி குடியன்

(ஸ்ரீஜத் ராஜகோபாலாச்சாரியார்)

உண்மையில் நடந்த கதை. ஒரு வார்த்தைகூட பொய்யே கிடையாது. நாமக்கல் மறியல் படையில் முகம்மது காஸிம் ஒரு தொண்டர். எல்லாத் தொண்டர்களையும் போல் காஸிமும் ஒரு இச்சா சேவகன்; காசுபணத்திற்கு வேலை செய்கிறவனில்லை. தேசத்திற்காகப் பாடுபடுகிறான்.

காஸிம் ஒரு கசாய்க்கடைக்காரன். நல்ல ஆஜானுபாகு; குஸ்தியில் தேர்ந்தவன். ஒன்பது வருடங்களாக அவனைப் போல் குடித்தவர்கள் யாருமிருக்கமாட்டார்கள். காஸிம் பேரைக் கேட்டால் அழுதபிள்ளை கூட வாய்மூடிவிடும். பெண்களுக்கெல்லாம் காஸிமென்றால் ஒரு பேய். இப்பொழுதோ காஸிம் குடியை அடியோடு விட்டுவிட்டான். கள்ளுக்கடைகளை மறியல் செய்கிறான். அந்த ஊரிலேயே ஒரு செல்லப்பிள்ளையாகிவிட்டான்.

அவனது தந்தை சோட்டிமியான் ஒரு அமீன்—சம்மன் நிறைவேற்றுபவர். காஸிமுக்கு மூன்றுவயது நடக்கையில் கையைவிரித்துவிட்டார். மதுரையிலே காஸிம் தன் மைத்துனன் வீட்டிலே வளர்ந்தான். வயதுவந்ததும் சொந்தத்தில் ஒரு கசாய்க்கடையைத் திறந்து வியாபாரஞ் செய்தான். தினம் மூன்று நான்கு ரூபாய்க்குமேல் சம்பாதித்தான். ஒன்பது வருடங்களுக்கு முன்னால் விவாகமும் செய்துகொண்டான். ஒரு பையனைவிட்டு அவளும் இறந்து போனாள். அப்புறம் அவளது தங்கையை மணஞ் செய்துகொண்டான்.

ஒருநாள் பத்துவருடங்களுக்கு முன்னாலே கம்பியில் விளையாடியபோது காஸிம் கைதவறி விழுந்துவிட்டான். அதுமுதல் அவனுடைய அடிவயிற்றிலே ஒரு வலியேற்பட்டது. எவ்வளவோ மருந்து சாப்பிட்டுப்பார்த்தான்; எத்தனையோ வைத்தியர்களிடமெல்லாம் கையைக் கொடுத்தான்; பேதிக்கும் எடுத்தான். ஒன்றுமே அவன் வலியைத்தீர்க்கவில்லை. "தினந்தோறும் காலையில் வெறும்வயிற்றில் ஒரே மரத்தில் இறக்கிய கள்ளைச்சாப்பிட்டு வந்தால் நோய் நீங்கிவிடும்" என்று ஒரு சமுசாரி சொன்னான். இந்த ஒற்றை மரக் "கள்" வைத்தியம் நம்நாட்டில் ஒரு முட்டாள்தனமான முறை. எல்லாநோயும் இந்த ஒரே மருந்தில் தீர்ந்துவிடுமென்று சாதாரணமான மூடங்கள் குருட்டுத்தனமாய்க் கைக்கொள்ளுகின்றனர். ஒரு பதினைந்து நாட்கள் காஸிம் இம்மருந்தைச் சாப்பிட்டான். குடித்தவுடன் கொஞ்சநேரம் அவனுக்கு வலிதோணுகிறதில்லை. கள் வெறியடங்கியவுடன் மறுபடியும் வலிதொடங்குதய; அப்புறமும் குடிப்பான். இப்படியாக ஒருமரம் போய் பலமரங்களை விழுங்கிக் கடைசியில் கள்ளுக்கிடங்கிலும் விழுந்து விட்டான். மருந்தாய், மயக்கமாய், சீசாவாய், மொந்தையாய், மிடாவாய், ஜாடியாய் பீப்பாயாய் முடிந்தது. அப்புறமென்ன தெருக்களிலெல்லாம் காஸிம் நாடகந்தான்.

வயிற்றுவலியில்லை. குடிவெறி சதாவிருந்தால் எந்தவலிதான் தெரியப் போகிறது? காலைமுதல் மாலை கள்ளுக்கடையில்கிடப்பதேவேலையாய் வைத்துக் கொண்டான். கசாய்க்கடை தட்டுப்பறந்துபோய்விட்டது. பெண்சாதி பிள்ளைகள் அடி, உதை, மிதிவாங்குவதைத்தான் கண்டார்கள். பெண்சாதி காது கழுத்திலே கிடந்ததெல்லாம் கள்ளுக்கடைக்காரன் பெண்சாதி போட்டு மஞ்சள் குளிக்கிறாள். தெருவில் காஸிமைக்கண்டு விட்டால் பெண்களனைவரும் கதவையடைத்துத் தாளிட்டுக்கொள்ளுவார்கள். குழந்தைகுட்டிகள் சந்துபொந்துகளுக்குள் பதுங்கிக் கொள்ளும். அவன் போனவிடமெல்லாம் கழுதைபுரண்ட களமாதிரியாகிவிடும். இரண்டுமுறை கோர்ட்டு மேறி அப

ஏதாவது ஒரு பொருளைக்காட்டச் சொல்லி ஜூஸ்டர் பந்தயம் போட்டாலும் நிச்சயமாய் அவருக்குத்தான் பந்தயப்பணம் சேரும். வரியிலிருந்து விடுபட்ட ஒரே யொரு சங்கதி இச்சபையில் பேசும் ஓயாத பேச்சு. இதற்கு வரி விதித்து விட்டால் ஜூஸ்டர் தம்மிஷ்டம் போல் செய்து விடலாமே. அப்புறம் யார் வரிக்கொடுத்துப் பேசப்போகிறார்கள். வரிவிதிக்கப்படாத இன்னொரு சங்கதியுமிருக்கிறது. அது தான் தூக்கம். அதற்கும் வரிப்போட்டுவிட்டால் அப்புறம் காற்றுக்கும் வரிச்சுமத்தி விட்டால் ஒரேயடியாய் எல்லோருக்குமே ஜூஸ்டர் சீட்டுக் கிழித்து விடலாமே, இது என் இத்தனை தொல்லையும்? என்று சொல்லி "அவன் கிடக்கிறான் குடிகாரப்பயல் எனக்கு ஒரு மொந்தை கொடு" என்றாற்போல சர்க்கார் தலையிலே தனது ஓட்டைப் போட்டுவிட்டான்.

நல்லசாமி அல்லது நாடகக் குடியன்

(ஸ்ரீஜத் ராஜகோபாலாச்சாரியார்.)

நான் நல்லசாமி. என் தாய் தகப்பன் வைத்தபெயரே யொழிய நான் உண்மையில் நல்லவனில்லை. கெட்டவன். எனக்கு வயது 23 நடப்பு. 1921ல் நான்மோட்டார் சுத்தஞ்செய்பவனாகப் பிரவிர்த்தியிலிறங்கினேன். நாளடைவில் மோட்டார் ஓட்டவும் கற்றுக்கொண்டேன்.

மாரியம்மன் திருவிழா வந்தது. எனது சிநேகிதர்கள் ஒரு நாடகம் ஆடினார்கள். என் மைத்துனன் குமாரசாமி பிள்ளை அக்கம்பெனியில் ஒரு முக்கிய நடிகர். இது 1927-ல். வழக்கமாக நாடக நடிகர்கள் குடிப்பது போல அவரும் குடித்தார். நன்றாய் நடிப்பதற்கு குடி அத்யாவசிய மென்று சொல்லிக் கொண்டார்கள். ஒத்திகை காலத்தில் என்மைத்துனர் என்னையும் குடிக்கச்சொன்னார். நானும் அந்நடிகர் கம்பெனியில் சேர்ந்து கொண்டதால் குடியிலும் சேர்ந்துகொண்டேன். முதலில் மறுத்தேன். ஒருநாள் என்மைத்துனர் ஒரு கால் புட்டியை வாயிலே ஊற்றினார். வாந்தியெடுத்து விட்டேன். என்னமோ போலிருந்தது. எனாறும் விட்டார்களில்லை. மேலும் மேலும் வற்புறுத்தி அப்பாவிகள் என்னைக் குடிகாரனாக்கி விட்டனர். கொட்டகைக்கே குடம் குடமாக வந்துவிடும். அள்ளி அள்ளிக் குடித்தேன். கடைசியில் பகலும் இரவும் குடிப்பதே வேலையாய் 15, 20 புட்டிகளை சிரமமில்லாமல் விழுங்கி விட்டேன் எனக்குப் பாடங்கற்றுக் கொடுத்த வாத்தியார்களெல்லாம்என்னைப்போல்அவ்வளவு குடிக்கமுடியவில்லை. கள் குடிப்பதில் குருவை மிஞ்சிய சீடனாகி விட்டேன். கள்ளுக்கடையே தஞ்சமாய் அங்கேயே குடி கொண்டும் விட்டேன். இரவில் ஒரு வேளை சாப்பாடப்போவேன். சோறு செல்லுகிற தில்லை. ஏதோ பேருக்கு இரண்டு அள்ளிக் கொட்டிக் கொண்டு குப்புறடித்துப் படுத்துக்கொள்ளுவேன்.

நாலு வருஷத்துக்கு முன்னாலே தான் கலியாணங்கட்டினார்கள், எங்கள் ஜாதியிலே குடிக்கக்கூடாது என்ற கட்டில்லை. என்றாலும் அதை அநேகமாய் எல்லோருமே அருவருப்பர். ஆனால் இப்பொழுது ஒப்பந்தஞ் செய்து ஜாதியை விட்டு விலக்கிவிடுவதாகக் கட்டுப்பாடாகியிருக்கிறது. நானும் அக்கட்டுக்கடங்கி கையெழுத்து வைத்துக்கொடுத்திருக்கிறேன்.

நான் இப்பொழுது காங்கிரஸில் சேர்ந்து மறியல் வேலை பார்த்து வருகிறேன். என் தாயார் கூத்தரிசி குத்தி நாலுகாசு சம்பாதிக்கிறாள். அதைக்கொண்டு நாங்கள் வயிறுவளர்க்கிறோம். எங்கள் குடும்பத்தில் என் தாயார் பெண்ஜாதி, நான்எல்லோரும் சந்தோஷமான வாழ்வு நடத்துகிறோம்.

—யங் இந்தியா.

...ரத்தமும் கொடுத்தான். அவனுடைய பெண்டுபிள்ளைகளை மைத்துனன் காப்பாற்றி வந்தானை மட்டுமரியாதைகளெல்லாம் இழந்துவிட்டான்; புத்தியும் தன் ஸ்வாதீனத்திலில்லை.

நாமக்கல்லில் கள்ளுக்கடை மறியல் நடந்து கொண்டிருந்தது. நாமக்கல் முஸல்மான்களெல்லாம் மசூதியிலே கூட்டம்போட்டு ஜாதி ஒப்பந்தம் பேசினார்கள். மீறிக் குடிப்பவர்களை ஜாதியை விட்டு விலக்கி விடுவதென்று கட்டுப்பாடாயிற்று. மறியல் நடந்து கொண்டிருக்கையிலே கூட காஸிம் கள்ளுக் கடைக்குள் நுழைந்து விடுவான். மறியலையும், ஜாதிக்கட்டுப்பாட்டையும் கண்டதும் காஸிம் வழிக்கு வரப் புத்தி பிறந்துவிட்டது கள்ளுச்சாராயம் சாப்பிடுகிறதில்லையென்று கையெழுத்துவைத்துக் கொடுத்தான். காங்கிரஸ் தொண்டனாகவும்சேர்ந்து கொண்டான். நாள்முழுதும் காங்கிரஸ்வேலை செய்கிறான்; வீட்டில் போய் வேளைக்கு வேளை சாப்பிடுகிறான். அவனது குடும்பத்தாரெல்லாம் காஸிம் மீது பரமபிரியம் வைத்திருக்கிறார்கள். மசூதியிலே சத்தியம் செய்து கொடுத்ததுமுதல் காஸிம் சபதம் புரண்டதில்லை. அவனது முகத்தில் திவ்ய ஜோதி, ஆநந்தம் அனைத்தும் ஸ்புரித்து நிற்கின்றன. அவ்வூர் ஜனங்கள் அனைவருக்கும் காஸிம் மீது அன்பு அதிகம், பெண்டுகள் காஸிமைக் கண்டால் நெருக்கதவைத் தாளிடுவது கிடையாது. குழந்தைகள் கூட 'காஸிம் நல்லாயிருக்கிறாயா?' என்று கேட்கின்றனர். அவன் போட்டிருக்கும் காந்திக்குல்லாய்க்கும் முகத்தில் விளங்கும் களைக்கும், தொண்டருடைக்கும் அவன் ஒரு புதுக் காஸிமாகிவிட்டான்.

—யங் இந்தியா.

நீ யென்ன எனக்கு ராஜாவா?

டாக்காவில் டூர்னோவைச்சுட்டது சம்பந்தமாகப் பயங்கர ஆட்சி நிலவிவருகிறது. வேட்டை நாய்க் கூட்டமும், ஒற்றர் குழாமும் நிரபராதிகளான ஊர் ஜனங்களின் மீது பாய்ந்து வந்தன. பலர் கைது செய்யப்பட்டனர். சொத்துக்கள் சீர்குலைக்கப்பட்டன. பெண்டுகளும் குழந்தைகளும் காயப்படுத்தப்பட்டு பலருடைய உயிருக்கும் ஆபத்தேற்பட்டது.

இவைகளை விசாரித்தறிவதற்காக கல்கத்தாவில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு விசாரணைக் கமிட்டி யொன்றுஏற்படுத்தப்பட்டது. அக்கமிட்டியின் அங்கம்பெற்ற ஸ்ரீஜத் ஜே. ஸி. குப்தா டாக்கா சென்று விசாரணையை ஆரம்பிப்பதற்கு முன்னதாக டாக்கா டிவிஷன் கமிஷனர் ஹெரால்டு கிரஹாம், முதலிய ஜில்லா அதிகாரிகளை இவ்விசாரணைக்கு உதவி செய்யும்படி கேட்டார். அதற்கு ஹெரால்டு கிரஹாம் எழுதியிருக்கும் பதில் அஹங்காரமும் அதிகாரத்திமிரும் பிடித்ததாகும். அதற்கு மேது விசேஷ வியாக்கியானம் கூறுவதற்கு முன்னால் அக்கடிதத்தை அப்படியேமொழிபெயர்த்துத் தருகிறோம்:—

மிஸ்டர் ஜே. ஸி. குப்தாவுக்கு,

நவம்பர் 9உ

அன்பார்ந்த மிஸ்டர் குப்தா,

உமது 8உ கடிதம் கிடைத்தது. எனக்கு மேல் உன்னை ஓர் அரசனாகவும் நீதிபதியாகவும் ஆக்கியது யார்?

உமது உண்மையான,
ஹெரால்டு கிரஹாம்.

இந்தமாதிரியான கெர்வம் பிடித்த அதிகாரிகளால் தான் நாடு ரோஷமும் உணர்ச்சியும் கொள்ளுகிறது. ஆளவினைத் திமிர்பிடித்த இவ்வதிகாரிகள் நம்மை சீக்கிரம் சுயராஜ்யம் பெறத் தூண்டுகிறார்கள். இந்திய மக்களின் வரிப்பணத்திலிருந்தே கிரஹாம், சம்பளம் வாங்குகிறான். செருப்பெருக்கும் ஒரு தோட்டியின் தம்படிகூட அவனது சம்பளத்திலிருந்து வருகிறது. இந்திய ஜனங்களின் சம்பளத்தை வாங்கித்தின்னும்வரை இக்கிரஹாம் இந்தியாவின் வெட்டியானுக்கும் சேவகம் செய்கிறவனன்றோ? இந்திய ஜனங்கள் இச் சனிக்கிரஹத்துக்கு சம்பளம் கொடுப்பதால் நிச்சயமாய் இந்தியாவின் ஒவ்வொரு கூலிக்காரனும், பிச்சைக்காரனும் கூட இக்கிரஹாமின் அரசனும் நீதிபதியுமல்லவா? இதை யுணராது தலைவெட்டித்தனமாய்—அதிகார வெறிபிடித்து அதற்கேற்றவாறு நடப்பதாலேதான் ஆவேஷம் வருகின்றது. குட்டி குலைத்து நாய்த்தலையில் வைத்து விடுவதால் பிரிட்டிஷார் நல்ல பெயரெடுக்க முடிகிறதில்லை. அதிகார தோரணையில் ஆளுவதைவிட அன்பு நீதியில் ஆளுவதே மேல். என்ன அக்கிரமம்? இவனுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தது யார்? என்று அவனறியட்டும்,

கடைசியில் கையை விரித்துவிடாதே!

காந்தி—இர்வின் ஒப்பந்த காலத்தை உபயோகித்ததில் தமிழா! நீ மற்றெல்லோரைப் பார்க்கிலும் எப்படிக்குதித்து விட்டாய். வேறெம்மாகாணத்தாரும் தமிழனைப் போல் அத்தனை சுறுசுறுப்பாய் இந்த ஒபாது ஒன்பது மாதமும் உழைக்கவில்லை, தமிழ் நாட்டிலே நடப்பதுபோல எந்த எந்த நாட்டிலே மறியல் வேலை தீவிரமாய் நடைபெறுகிற தென்று நாம் கெர்வத்துடன் இந்தியனைக் கேட்கிறோம். மூலைக்கு மூலை-ஒதுக்குப்புறமான சிறு சிறு கிராமங்களிலும் கூட பிரசார வேலைகளும் மறியலும், பரதேசி பகிஷ்காரமும் நடக்கின்றன. "இப்பொழுது நாம் ஒப்பந்தத்தின் ஷரத்துப்படி இவைகளையெல்லாம் செய்யலாம். இரண்டொரு போலீஸ்காரன்கள் செய்வதைத் தவிர்த்து பொதுவாய் சிறைதண்டனை கிடையாது. ஆகையினாலே தான் தமிழர்கள் இவ்வளவு மும்முறமாய் வேலை செய்கிறார்கள். நாளை குடிக்காதே சீமைத்துணி வாங்காதே யென்று வாயினாலே சொன்னாலும் தண்டிப்பார்கள். அப்போது தமிழர்கள் இவ்வளவு வேகமாக வேலை செய்வார்களா பார்ப்போம்? என்றுபேச்சுப் பிறக்கிறது. அதற்குத் தக்கபடி நாம் நம மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் ஏராளமான பிரசாரம் செய்திருக்கிறோம். இரண்டுலட்சம் தமிழர்களது வரும் போரில் சிறைபோகாவிட்டால் நமது பிரசாரம் பலனளித்து விட்டதென்று நான் சொல்லமாட்டேன். இவ்வளவெல்லாம் செய்து கடைசியில் கையை விரித்து விடாதே! மானம்போய் விடும்.

— 19 —

இந்தப் புள்ளியைப் பார்த்தவுடனே நம்மள் ஊரிலேதிரிகிறதேதீக்குச்சிகள் அதுகளிலேதொன்றின் நம்பர் என்று நினைத்து விடக்கூடாது. இது ஒரு பெரிய சங்கதி. காந்தி — இர்வின் ஒப்பந்தத்தில் இந்தப்புள்ளியிலே ஒரு நிபந்தனை எழுதப்பட்டிருக்கிறது. அந்த நிபந்தனைப்படி சர்க்கார் நடந்து கொண்டார்களா? இல்லையா? என்பதற்குத்தான் இதை எழுதவந்தது. இந்தப்பத்தொன்பதாவது நிபந்தனையைச் சர்க்கார் கொஞ்சங்கூட நிறைவேற்றவேயில்லை ஆனால் மற்ற நிபந்தனைகளை யெல்லாம் நிறைவேற்றிவிட்டார்களா? என்று நீங்கள் கேட்கலாம். எல்லாம் இப்படித்தான் அவர்கள் லட்சணம்.

போனவருஷம் சத்தியாக்கிரஹம்நடந்ததே அப்போது சர்க்கார் சிப்பந்திகள் பலர் சத்தியாக்கிரஹிகளுக்கு அனுதாபமோ ஆதரவோ காட்டியதற்காக வேலையை விட்டு நீக்கப்பட்டார்கள். காந்திஜீ அவர்களையும் மறந்துவிடாது அவர்களுக்காகவும் வாதித்து இந்த 19—வது பிரிவிலே அவர்கள் மறுபடியும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று ஒப்பந்தப் பத்திரத்தில் கையெழுத்திடப்பட்டது. அதன்படி செய்ய சென்னை மாகாண சர்க்கார் தவறிவிட்டது. மன்னார்குடி சரகம், கர்ணம் தியாகராஜதேவர் 14 செண்டு நிலத்தை ஒரு காங்கிரஸ்காரருக்கு விற்ற குற்றத்திற்காக வேலையைவிட்டு நீக்கப்பட்டார். அந்நிலம் வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரஹத்திற்குஉபயோகப்படுத்தப்பட்டது. சிவந்தாராஜத்தேவர் தஞ்சாவூர் ஜில்லா, வங்கநகர் கிராமமுன்சீப்பு சத்தியாக்கிரஹிகளைப் போலீஸார் நடத்திய கொடுமை பொறுக்காமல் வேலையை இராஜிநாமாச் செய்துவிட்டார். அருணாசல முதலியாரும் தமது கர்ணம் வேலையை இராஜிநாமாச்செய்தவர்; நாகலிங்கம்பிள்ளை யென்பவரும் சத்தியாக்கிரஹியொருவருக்கு ரூ 5-கொடுத்த குற்றத்திற்காக வேலையை விட்டு நீக்கப்பட்டார். இராமசாமி ஐயங்கார் என்பவர் தமது அமீன் பதவியை சத்தியாக்கிரஹிக்கு தண்ணீர் கொடுத்த குற்றத்திற்காக வேலையிழந்தார். இவர்களெல்லாம் இந்த 19-வது பிரிவுப்படிவேலை பெற வேண்டியவர்களாயிருந்தும் சர்க்கார் கொடுக்கவில்லை. இதுதான் சர்க்காரின் ஒப்பந்தமா?

வெட்டியான்வேலையில் கெட்டி ஆனால்?

ஆனாலென்ன? அபசகுனம் என்று இரங்கூன கிமெத்தான் வாசிகள் குறை கூறுகிறார்கள். இவர்களெல்லாம் சகுன சாஸ்திரத்தில் நம்பிக்கையுடையவர்கள். ஏதாவதொன்று நேர்ந்து விட்டால் இது சகுனத்தின் கோளாறு என்று கூறுவது வழக்கம். ஒருவகையாகப் பார்த்தால் இது தெய்வநம்பிக்கையைக் குறிப்பதுமாகும். மெத்தப்படித்தவர்கள் குருட்டுத்தனமான நம்பிக்கை யென்றும், புராதனமான பழக்க வழக்கமெனவும்கண்டிப்பர். எப்படியானாலும் அவரவர் வீட்டில் எதைவேண்டுமானாலும் செய்துகொள்ளலாம்; சொல்லிக் கொள்ளலாம்; அவரவர் மட்டில் எப்படியாகிலும் நடக்கட்டும். ஆனால் பொதுஜனங்களின் காரியத்தில் தலையை நுழைத்துக் கொண்டால் ஜனங்கள் தப்பாகப் போனாலும் கூட அவர்களோடு ஒட்டி நடப்பதுதான் மேன்மை. நல்ல பெயரெடுப்பதற்கும் அதுதான் வழி.

கிமெந்தான் சுடுகாட்டு வீரர் கணக்கு வழக்கு விஷயத்தில் ஒருவருடம் இரண்டு வருடம் உறங்கிவிட்டாலும் குழி வெட்டி வைப்பதில் மாத்திரம் இரவு பகல் ஓய்வு ஒழிவில்லாமல் வேலை செய்கிறார் பாவம். செத்தவனுக்கும்இனிமேல் சாகப் போகிறவனுக்குமாகச் சேர்த்து எல்லோருக்குமே வரிசையாய்க் குழிகளை வெட்டி வைத்துவிடுகிறார். இது என இத்தனை அவசரம்? குழிவெட்டியான்கள் குறைச்சலாயிருக்கிறார்களா? இல்லை இதில் ஏதாவது சிக்கன முறை கையாளப்படுகிறதா? என்பது எம் போன்றார் மூளைக்குள் நுழைகிறதேயில்லை. மேதாவிகள் கொஞ்சம் விளக்கஞ் செய்துவைப்பது நலம். கொஞ்சம் செலவு அதிகம் பிடித்தாலும் பரவாயில்லை இம்மாதிரி சாகாதவனுக்கெல்லாம் சேர்த்துக் குழிவெட்டும் வழக்கம வேண்டவே வேண்டாம் என்று சொல்லுகிறார்கள் ஜனங்கள். அப்படிச் செய்து கிமெந்தானில் அநேகம் வீடுகள் கூட்டோடு கைலாசஞ் சேர்ந்துவிட்டனவாம். "இந்தப்பாவி இப்படி குழி வெட்டி ஆரப்போட்டு அநேகம் வீடுகளைக் குட்டிச்சுவறு செய்துவிட்டானே!" என்று அந்த ஜனங்கள் சபிக்கிறார்கள், அப்படியேன் அவர்கள் வாயிலேயிருக்கவேண்டும். ஏதாவது "ஜால் ஜாப்" சொல்லுவதானால் மற்றவர்களுக்குக் குழி வெட்டி வைத்திருப்பது போல் தனக்கும் ஒரு குழியை வெட்டி வைத்துக்கொண்டு வெளிவந்து சொல்லட்டும்.

நம்ம ஊர்க் குருவி.

நம்ம ஊர்க் குருவி யென்றால் எல்லோருக்கும் கொஞ்சம் பிரியந்தான். இல்லாமற்போகுமா? இது பழங்குருவியல்லவா? இதன் தலையிலே ரொம் க்கால வாழ்க்கையை எழுதியிருக்கிறான் பிர்மா. என்றாலும் இப்பொழுது கொஞ்சம் மெலிந்துவிட்டது. ஊராரெல்லாம் இந்தக் குருவியின் மேலே அனுதாபங்காட்டுகிறார்கள். புதுப்புதுச்செய்திகளைச் சுடச் சுடச் சொல்லுவதில் இந்தக் குருவிக்கு யார் நிகர்? தயவு தாக்ஷண்யமெல்லாம் இக்குருவிக்குக் கொஞ்சங் கூடக்கிடையாது. வெட்டியானானாலுஞ் சரி, வேந்தனானாலுஞ் சரி அவனவன் செய்த தப்பை வெளிப்படுத்தாவிட்டால்-கண்டிக்காவிட்டால் தூக்கமேபிடிக்காது இந்தக் குருவிக்கு. நாலுபக்கமும் பறந்து திரிந்து கண்ணிலே எண்ணெய் ஊற்றித் திரிப்போட்டுப் பார்த்து எங்கேனும் இரண்டு செய்திகளைக் கொண்டு வந்து சேர்ப்பதில் திரிலோக சஞ்சாரி நாரதனைக் கூட "நில்" லென்று சொல்லிவிடும்.

சில காலமாய் உலகம் கொஞ்சம் சுரு சுருப்பாய் ஓடிக்கொண்டிருக்கும் ஓட்டத்திலே நம்ம குருவியும் கொஞ்சம் வேகமாய் வாரம் இருமுறை பறந்து திரிகிறது "நன்றாய்த்தான் இருக்கு" என்று ஊராரெல்லாம் சொல்லிக் கொள்ளுகிறார்கள். கடிதங்கள் கூட பலர்விடுகிறார்கள். என்றாலும் அக்குருவிவயிறு நிறையவில்லை. இரண்டு காசு—வெற்றிலையாய்ப்போட்டுத் "தூ" வென்று துப்பினாலும் போச்சு; அல்லது பீடியாய் வாங்கிப் புகைத்தாலும்போச்சு;இல்லை காலமே சாயங்காலம் காப்பிசாப்பிடுகிறபோமே ஒரு வடையாய் விழுங்கினாலும் போச்சு, இதைப் பொருட் படுத்தாமல் ஒரு வடையைக் குறைத்துக் கொண்டாவது இரங்கோனிலிருக்கும் தமிழர்கள் நம்ம குருவியை வாங்கிப்படித்தாலும் போதும். பதினாயிரம் பிரதிகள் செலவழிவது சிரமமில்லை. என்னசெய்யச் சொல்லுகிறீர்கள் படுபாவிபின் மோசவலையிலே சிக்கியதால் குருவிக்குக் கொஞ்சம் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால் ஒரு காசுக்கு மூணுதரம் பறக்கலாம். போனால் போகிறது இரண்டிரண்டுகாசையெறிந்து விடுங்கள் சீக்கிரம் மூணுதரம் காணலாம்.

இங்கிலாந்து செத்தால்?

புதிய பில்லிலே அதிக வரி போடுவதற்கான ஏற்பாடுகளெல்லாம் நடக்கிறதல்லவா? அப்போது நமது போக்கிஷ மந்திரி யிருக்கிறானே புண்ணியவான் அவன் பெரிய பல சந்தேகங்களைக் கொண்டு வந்து போட்டு விட்டான். "இந்தியாவில் எந்தக் காலத்திலானாலும் சரி ஏழைகளை வருத்தி வரி வசூலிக்காமல் சர்க்கார் கஜானாவை நிறைக்க முடியாது" என்பது ஒரு சந்தேகம். இன்னொன்று சூஸ்டர் இந்தியாவுக்கு இங்கிலாந்து மகன் அனுபவிக்கும், அவ்வளவு சுதந்திரத்தையும் அளித்து விட்டானா என்பது. அப்புறமொன்று இங்கிலாந்து செத்தால் அவளுடன் கழுத்தைக் கட்டிக்கொண்டு இந்தியாவுமா சாகவேண்டும்? என்பது.

"உங்களுடைய வரவு செலவில் பொத்தல் விழுந்திருக்கிறது, அதைவிட பெரிய பொத்தல் இங்கிலாந்தின் கணக்கிலேற்பட்டிருக்கிறது இங்கிலாந்து தனது பொத்தலை அதிக வரியால் மூடுகிறாள். அதே மந்திரி நீங்களும் ஏன் செய்யக் கூடாது? என்று சூஸ்டர் கேட்கிறார். இதனால் இங்கிலாந்து செத்தால் இந்தியாவும் சாகத்தான் வேண்டுமென்பது சூஸ்டரின் கருத்துப்போலும். அப்படி நாங்கள் சாக மாட்டோம் என்று சொல்லிவரத்தான் காந்திஜீ சீமைக்குப் போயிருக்கிறார். அப்படியானால் அன்றைக்கு அச்சுச்சட்டத்தை நிறைவேற்றினார்களே அதே மாதிரி ஒரு சட்டம் இங்கிலாந்திலுமிருக்கிறதா? என்று ஒரு கேள்வி பிறக்கிறது. இங்கிலாந்தைப் போல என்றால் எல்லாவற்றிலும் இங்கிலாந்தைப்போல் இந்தியாவுக்கும் சுதந்திரம் அளிக்கவட்டமேஜையில் ஏன் இவ்வளவு சூழ்ச்சியும் கையாளப்படுகிறதென்று தெரியவில்லை. சூஸ்டரே இச் சந்தேகங்களை நிவர்த்தி செய்யட்டும்.

தேசோபகாரி

சந்தா விபரம்

வருஷம் 1-க்கு	ரூ.	3 0 0
ஆறுமாதம்	ரூ.	1 8 0
மாத சந்தா அணா		நான்கே

Printed & Published By A. V. Sellam Pillay at the Desopakari Press. 210, 36th Street, Rangoon.

அரையணா மலர் 9 இதழ் 34. பதிவு எண் 245.

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை

DESOPAKARI

புதன், ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி, இரங்கோன், (25—11—31) கார்த்திகைமீ 10உ புதன்கிழமை.

தேர்தல் தினத்தில் குதிரை வீரன்.



சட்ட நிபுணர்
ஸ்ரீமான் வி. கே. தம்பி,

நகரச்சபைத் தேர்தல்கள் நடைபெறுங்காலங்களில் பல சில்லரைத் திருவிளையாடல்கள் ஏற்படுவதுண்டு. பணத்தால் பதவியடைய விரும்புகிறவர்கள், அதற்கென பலவிதக் கருவிகளை உபயோகிப்பதுண்டு. வெளியில் பந்தோபஸ்துக்காக அனுப்பப்பட்டிருக்கும், போலீஸ் குதிரைப்படையும், காலாட்படையும் முறைதவறி நடக்கும்படி தூண்டப்பட்டு, ஜனங்கள் மீது குதிரையை விட்டு ஓட்டியும் மிதித்தும், ஆட்களை மென்னியைப் பிடித்துத்தள்ளியும் பாதுகாவல் புரிவார்கள். இதைப்பார்த்த மரியாதையுள்ள ஓட்டர்கள், நமக்கேன்டா இந்த இழவு அடியும், உதையும் என ஒருவருக்கும் சொல்லிக் கொள்ளாமல் ஓட்டமெடுத்து விடுகிறார்கள். இதுவும் தவிர, படித்த ஓட்டர்கள் அவரவர்கள் ஆபீசுகளுக்குக் குறித்த நேரங்களுக்குள் போய்ச்சேரவேண்டும். அவர்கள் அநேகமாக அலங்கார பொம்மைகளுக்கு ஓட் கொடுக்கமாட்டார்கள். அதற்கென ஒருயுக்தி கையாளப்படுவதுமுண்டு. ரிக்கப்பலில் இருந்து நேரே இறங்கிவருபவர்களையும், மற்றும் அழுக்கான உடைகளை இதற்கென தரிக்கச் செய்த தொழிலாளர்களையும், கூட்டம் கூட்டமாகக் கொண்டுவந்து தள்ளிவிடுவார்கள். ஆபீசுக்குப் போகச் சுத்தமான உடையுடன் வரும் ஓட்டர்கள் இவர்களைக் கண்டவுடன் தாங்களே விலகிப்போய் விடுவார்கள். இக்கூட்டம் தேர்தல் முடிவுவரையில் கலைவதில்லை. ஏனென்றால் அன்றையக் கூலி அவர்களுக்கு யேற்கனவே

குந்து குரங்கே!

வங்காளத்தில் புரட்சிக்குழு பெருத்து அரசியலின் பெயரால் பயங்கரமான கொலைகளும் கொலைகளுக்கு முயற்சிகளும்வலுத்துவருகிறது ஐரோப்பியர்களது உயிருக்கே உலைவைத்து வங்கவாலிபர்கள் இரத்தவெறி பிடித்தலைகின்றனர் என்பதை நாம் வருத்தத்துடன் ஒப்புக்கொண்டு தானாகவேண்டும். அதற்கேற்றாற்போல அவ்வளவு வேகத்தில் துளி கூடக் குறையாமல் ஐரோப்பியர்களும் அரசாங்கத்தை பலமான அடக்குமுறை கையாள வேண்டுமென்று பலகாலும்தூண்டிவருகின்றனர். கல்கத்தாவில்ஐரோப்பியசங்கத்தின்சார்பில்பல ஐரோப்பியர் கூடிக் கூடி சர்க்காருக்குத் தூர்வைப்பதும் ஆலோசிப்பதும் நெருப்புத் துண்டங்கள் போன்ற வார்த்தைகளைக் கக்குவதுமாகவேயிருந்து வருகின்றனர். ஸ்டேட்ஸ்மன் பத்திரிகை இவ்வளவு கண்டால் விடுமா? வெறும் வாயையே மென்று கொண்டிருக்குமே. இப்பொழுது இவ்வளவு அவல் கிடைத்து விட்டபின் வாயை மெல்ல யாரைக் கேட்கவேணும்? மனங்கொண்டமட்டும் கலகத்தீயை வாரி வாரி யிறைக்கிறது. தான் தான் சர்க்கார் என்று நினைத்துக்கொண்டு அப்பத்திரிகை பலஅடாத வார்த்தைகளைப் பிரயோகித்து வருவதை சர்க்கார் கண்டிக்காமல் தட்டிக் கொடுத்து வருவதே வங்கவாலிபர்களின் புரட்சித் தீயில் எண்ணெய் வளர்ப்பதாகும். ஜாதியபிமானமாயிருக்குமா? அப்படியானால் அதே ஜாதிப் பத்திரிகையான மான்செஸ்டர் கார்டியன் கூறுவதையும் கேட்க சர்க்காருக்குக் காதில்லாமலா போய் விட்டது. புரட்சிக்காரர்களை அடக்க சர்க்காருக்கு ஒரேயொரு வழியைத் தவிர வேறு இரண்டாவதொன்றுமே கிடையாது பொது ஜனங்களின் ஆதரவு பெறாது சர்க்காருக்கு கதிமோக்ஷமுண்டா? வங்காளத்தில் அமைதியை நிலவச் செய்யவேண்டுமானால் இயற்கையிலேயே இருக்கிறதோ இல்லையோ தாராளமனப்பான்மையைக் காட்டிவிடவேண்டும் அப்போதுதான்நோயை வேருடன் அறுத்தெறியமுடியும்.1001 அரசியல் கைதிகளையும்தயாளபூர்வமாய் விடுதலை செய்து விடவேண்டும். அப்பொழுது ஜனங்களின் மனத்தில் சர்க்கார் பக்கம் தயவு தாக்ஷண்ய மெல்லாம் பிறக்கும். இது பற்றி மான்செஸ்டர் கார்டியன் கூறுவதை அப்படியே மொழி பெயர்த்துத் தருகிறோம்.

அநியாயம் கெடுதலாயிருப்பதால் ஒரு வழியில்லா விட்டால் ஒரு வழியில் ஹிம்ஸையில் புகுத்தி விடுகிறது. இதில் எவனையும் நோவதற்கில்லை. போலீஸ்காரனையும் மாணவனையும்சரி எவனைத்தான் குறைகூறி விடலாம். அரசியல் அட்டூழியங்களை பொழிப்பதற்கு வழிதேடுவது தான் இந்தியாவுடையவும் இங்கிலாந்துடையவும் முதல் கடமையாயிருக்கவேண்டும் இதில் வெற்றியடைந்து விட்டால்—வெற்றியே யடையவேண்டு—அஹிம்ஸை இருந்த இடம் தெரியாமல் அழிந்து போய்விடும். அப்புறம் மாணவன் தனது கைத்துப்பாக்கியுடனும் து

(தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க)

கைமேல் கிடைத்து விட்டது. இவர்களே பொம்மன் என்றும் திம்மன்என்றும், முத்தன் என்றும், ராமன் என்றும், டானியல் என்றும் பல்வேறு நாமங்களுடன் ஓட் செய்து போவது அனைவருமறிந்த ரகசியம். உள்ளே உட்கார்ந்திருக்கும் டெல்லர்களும் இதைக்கண்டுபிடிக்கச் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். இரண்டொருவரைக் கண்டுபிடித்து, மூன்று முத்தனாகவந்த நீ எப்படி ராமனானாய் என்று பிடித்து போலீசிடம் ஒப்படைத்தால், அவனுடைய போஷகர்கள் அவனை விடுவித்து டானியேலாக மற்றொரு பகுதிக்கு அனுப்பி விடுவார்கள் இதில் கொஞ்சம் அடிதடிகளும் நடப்பதுண்டு. எல்லாம் தவறிவிட்டால் தேர்தல் நாடகத்தில் கடைசி காக்ஷியாகிய ஆக்ஷேபணைகள் நடந்தேறும். இத்தியாதி அட்டூழியங்கள் இத்தேர்தலில் நடைபெறுதவண்ணம் இரங்கூன் போலீஸ் கமிஷனர் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை தேர்தல்கள் நடைபெறும் ஸ்தலங்களுக்கு அனுப்பி, தகுந்த யேற்பாடுகள் செய்யுமாறு மிகவும் வற்புறுத்துகிறோம். குதிரை வீரனுக்கும் ஜனங்களைக் கீழே வீழ்த்தி அவர்கள் மீது தனது சவாரி செய்யும் திறமையைக் காட்டுவதற்காக அவனுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை யென்று கண்டிப்பாய் எச்சரிக்கை செய்யவேண்டுமென மேலதிகாரிகளுக்கு எடுத்துக்காட்டுகிறோம். குதிரை வீரனுக்கு அங்கு வேலையிருப்பதாக நாம் அறியக் கூட வில்லை. எல்லாம் விடிந்தால் தெரியும்.

சுய ஆக்ஷி நாளே!

இந்த நகரத்தை ஆக்ஷி புரியும் உரிமை நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிர்வாகம் செவ்வனே நடைபெற தக்கவர்களே நமது பிரதிநிதிகளாக நகர் சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்புவது நமது முக்கிய கடமையாகும். இம்மாதிரி தேர்தல் மூன்று வருடத்திற்கொரு முறை சம்பவிக்கிறது. கடந்த பல வருடங்களாக இந்துக்கள் ஒரு சிலரையே அப்பதவிக்கு தகுதி உள்ளவர்களாக அறிந்து நியமித்தும் மற்றும் சிலரை தயை தாக்ஷிண்யத்திற்காகவும், வேறு பல காரணங்களை முன்னிட்டும் தேர்ந்தெடுத்து வந்தார்களென்பதும் வெளிப்படை. அதுவும் நம்மிந்துக்களின் துர்பாக்கியமாகும். இந்தியாவிலுள்ள சகலவகுப்பார்களிலும் இந்துக்களே ராஜீய விஷயத்தில் முற்போக்கடைந்து தலைசிறந்து விளங்குகிறார்களென்பது உலகறிந்த ரகசியம். அப்படியிருக்க இரங்கூன் இந்து வாக்காளர்கள் மாத்திரம் தங்களுடைய செய்கையால் நமது சமூகத்துக்கே இழிவு கொண்டு வருவதை நோக்கின் எந்த இந்துவும் தலைகுனியவேண்டியிருக்கிறது. தற்காலம் நமது நகர சபையில் நான்கு இந்து மெம்பர்கள் உண்டு. அவர்களுடைய யோக்கியதைகளை நமது வாக்காளர்கள் கண்டிப்பாய் விசாரித்தறிந்த பின்னரே; தக்கவர்களுக்கு தங்களுடைய வாக்குகளை அளிக்கும்படி மிகவும் பலமாய் வற்புறுத்துகிறோம். இந்த ஸ்தல சுய ஆக்ஷியையே நிர்வகிப்பதற்கு லாயக்குடையவர்களை தயை தாக்ஷிண்யம் பாராட்டாது யோக்கியர் ஒன்றையே கருத்தினுன்னி தேர்ந்தெடுக்கத் தவறுவோமானால் உலகம் நகைப்பது மன்றி யுகாந்தரம் வரையிலும் சுய ஆக்ஷி நடத்துவதற்கு நாம் எப்படித் தகுதியுடையவர்களாவோமென்பதை வாக்காளர்கள் சற்று யோஜித்துப்பாருங்கள். தற்சமையமிருக்கும் டாக்டர் நேகல், ஸ்ரீமான் தம்பி இவர்கள் நகரசபையில் செய்த மாபெரும் ஊழியம் பலரும் அறிந்ததே. முனிசிப்பல் கூட்ட நடபடிக்கைகளை வாக்காளர்கள் அவ்வப்போது கவனித்த விஷயங்களைச் சுருசுருப்பாகக் கற்றறிந்து வருகிறார்களென்றே நாம் நம்புகிறோம். அப்படி இருப்பதால் இவர்களைக் குறித்து நாம் அதிகம் சொல்லத் தேவையில்லை. வாக்காளர்கள் ஓடோடியும் வந்து இவர்களுக்கு வாக்களிப்பது அவர்களுடைய முக்கிய கடமையாக எண்ணுவார்களென்பதில் ஐயமில்லை. இவர்களுடைய ஊழியங்களை விஸ்தரிப்பதென்றால் நமது சிறுபத்திரிகை இடந்தராதென்று அஞ்சி விடுத்தனம். மற்றவர்களை நோக்குவோம். ஸ்ரீமான் அரிகிருஷ்ண பிள்ளையைக் குறித்து முற்கனவே நாம் சிறிது பிரஸ்தாபித்திருக்கிறோம். மறுபடியும் அவரைக் கொஞ்சம் நினைப்பூட்டுவதும் மிகையாகாது. இவர் 1918-ம் ஆண்டு முதல் முனிசிபல் மெம்பராக இருப்பதாக எண்ணுகிறோம். அதுமுதல் இன்றைய வரையில் சதா நாற்காலியில் பொம்மைபோல் அழகாக வீற்றிருந்து ஒரு வார்த்தையும் பேசாமல் எங்கள் வீட்டுக்காரரும் கச்சேரிக்குப் போகிறார் என்ற பாவனையாகத் திரும்பிவந்து விடுகிறார். வாக்காளர்

முனிசிப்பல் அபேக்ஷகர்



டாக்டர் நேகல்.

கள் இவ்விஷயத்தை இது வரையிலும் கும்பகர்ணம் சாதித்து வருவது இந்துக்களுக்கே மிக்க அவமானமாகும். 1920-ம் ஆண்டு இவ்வூரில் பொதுக்கூட்டம் கூடி இவரையும், இவருடன் இருந்த திறமையிருந்தும் விஷயத்தைக் கவனிக்கச் சாவகாசமில்லாதிருந்த மற்ற இந்து மெம்பரையும் ராஜீனாமா செய்யும்படி தீர்மானம் செய்தனுப்பியதுண்டு. அக்கனவான் உடனே ராஜினாமா செய்துவிட்டார். இவரோ அந்தஸ்தானத்தில் அட்டை போல் ஒட்டிக் கொண்டிருக்கிறார். வாக்காளர்களே சற்று கவனியுங்கள்! எல்லா அதிகாரமும் உங்கள் கையில் தானிருக்கிறது. நம்மவர்கள் மெம்பர்களை எம்மாதிரி பொறுக்குவதென்று பல யோசனைகள் கூறப்பட்டு வந்திருக்கின்றன. பர்மாவில் வதியும் இந்தியர்களைக் காக்க தற்சமயம் உற்பவித்திருக்கும் ஓர் குழந்தை முனிசிபல் கூட்டங்களில் நம்மவர்களின் சார்பாக விஷயங்களை மிக்கத் திறமையுடன் வாதித்து முடிவுக்குக் கொண்டுவந்த ஸ்ரீமான் தம்பியை வாய்ப்பேச்சினால் எதுவும் ஆகாதெனத் தாக்கி; பேசாமடந்தையாகிய தம்மை போஷித்து வளர்த்து வந்த போஷகரை மறைமுகமாக ஆதரிக்கிறது. அதை நேர்முகமாகச் சொல்லுவதென்றால் அன்னவருக்கு வித்தியாப்பட்டம் அளித்த யூனிவர்ஸிட்டிக்கே அவமானமெனக் கருதுகிறாராக்கும். மற்றும் ஓர் குழந்தை இந்த வாய் பேசாத பொம்மையையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நேர்முகமாகவே சிபார்சு செய்கிறது. சட்டசபை அங்கத்தினர் பேசக்கூடாதென உத்தரவளித்த குழந்தை இதைச் சொல்லுவது ஆச்சரியமல்ல. ஒரு அபேக்ஷகர் ஹார்ப் பொது விளக்கை ஆலயத்திற்கு சமீபத்தில் கொண்டுவந்ததாகக் கூறுகிறார். மற்றும் பள்ளிக்கூடங்கள் நடத்துகிறாராம். அதனால் கைநஷ்டமில்லை என்பது அன்னவருக்கும் தெரியும். அதிகமாய்ப் பயனை அளிக்காதென நம்புகிறார். ஒன்றுமே பேசாதவர் நான் அதிக வேலை செய்ததாகச் சொல்லலாமல்லவா? உயிரற்ற சங்கத்தில் இரண்டொரு முறை காலக்ஷேபங்கள் வைத்து தின்பண்டங்கள் வழங்குவதும் ஊழியமல்லவா என நினைக்கமுடியுமே. இவைகளுக்கும், முனிசிபல் மெம்பராக ஊழியம் செய்வதற்கும், தலைக்கும், தவலைக்கும் உள்ள வித்தியாசம் உண்டென்பதை ஒரு சிறுபையனும் அறியவே செய்வான். வாக்காளர்களே! படாடோபத்தையும் பசப்புவார்த்தைகளையும் நம்பிமோசம் போகாதீர்களென நாம் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஒன்ஸமோர் உள்ளே போ!

இந்தியா சட்டசபையிலே நிதி மசோதா படுகிறபாடு தெரு நாய் கூடப்படாது. ஒவ்வொருவனும் சீ! சீ! யென்றடிக்கிறான். நல்ல மாட்டுக்கு ஒரு சூடு நற்பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை போதும். ஆனால் இந்த மசோதாவுக்கு எத்தனை சூடு போட்டாலும் உறைக்கிறதில்லை. சண்டித்தனமாய் இழுபடுகிறது; மசோதாவின் ஒவ்வொரு அம்சத்தையும் பிடித்துக் கொண்டு அடி அடி யென்றாலும் ரோஷமில்லை சூஸ்டருக்கு வாபீஸ் வாங்கிக் கொள்ள மனமுமில்லை. நமது வைஸ்ராய் ஷோக் வெல்லிங்டன் கூட சிபார்சு செய்து ஓட்டுப்படையும் கொடுத்துப்பார்த்தாகிவிட்டது அப்பவும் ஆத்தாடி அப்பாடி தான் அதன் கெதி;

இந்திய சட்டசபையில் இப்பொழுது தீவிர தேசியவாதிகளின் வாடையே கிடையாது: ஒரு லஜபதியோ, ஒரு மாளவியாவோ, ஒரு வித்தல்பாயோ இருந்திருந்தால் இந்நாள் அம்மசோதாவுக்குச் சீட்டுக் கிழித்திருப்பார்கள். இருந்தாலும் மிதவாதக் கொள்கையுடையவர்களும்கூட இம்மசோதாவைக் கண்டால் 'செல்'லான விழுகிறார்கள் என்றால் எவ்வளவு நல்ல மசோதா வென்பதை நாம் வியாக்கியானஞ் செய்ய வேண்டிய வேலை மிச்சம். இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்கள் மீதும், உப்பு, தபால் பில்லைகள் மீதும் தீர்வை ஒட்டு இவைகளோடு போடுவதையும் ஏற்கனவே யிருந்த வருமான வரியின் தொகையைக் குறைத்து அதிக வருமான வரி வாங்குவதையும் எந்த இந்தியன் தான் முணுமுணுக்காமல் பொறுக்க முடியும்? இதனாலேதான் இம் மசோதா சீர்ப்படுகிறது. கண்ணிருந்தும் குருட்டுத்தனமாய் இம் மசோதாவைத் தூக்கிப் போட்ட சர்க்காரின் கண்களை இந்த அங்கத்தினர்கள் திறந்து வைக்கட்டும்; சர்க்காரின் க்ஷேமத்திற்காக பிரார்த்தனை செய்யும் சிலர் கவலையுறலாம். அவர்களை நாமென் சட்டை செய்யவேண்டும்! நாம் கவனிக்கவேண்டுபவர்களெல்லாம் சாதாரண ஜனங்கள் தாம், அவர்களது பிரார்த்தனை கேட்கப்படட்டும். இல்லாவிட்டால் நமது தேசீய இயக்கம் வலுவடைந்து விடுதலை சீக்கிரம் கிட்டட்டும்.

வேப்பெண்ணெய் விற்ற காசு கசக்குமா?

(ஸ்ரீஜத் ராஜகோபாலாச்சாரியார்)

நமது நகர சபைகளிலெல்லாம் தோட்டிகளும் தெருப்பெருக்கிகளுமிருக்கிறார்களே அவர்களது வாழ்க்கையைப் பற்றி வர்ணிக்க பாஷையுண்டா? கிடையாது. ஆனால் அவர்களது வாழ்க்கையைக் குட்டிச் சுவராக்கி வரும் ஒரேயொரு அம்சத்தைப்பற்றி மட்டும் தான் இங்கே பேசப் போகிறோம். ஒரு சின்ன நகர சபை கூட இவர்களுக்காக மாதா மாதம் அறுநூறு முதல் ஆயிரம் ரூபாய்கள் வரை சம்பளமாகக் கொடுத்து வருகிறது. சம்பள நாளில் இப்பணங்களெல்லாம் எங்கு போகின்றன என்று பார்ப்பது அவசியம். நானே ஒரு நகர சபையில் இருந்து இந்தக் காட்சியைக் கண்ணாலே கண்டிருக்கிறேன். அதையெல்லாம் சொன்னாலே போதும். இன்றைக்கெல்லாம் இருந்து கேட்பீர்கள். அநியாய வட்டிக்காரர்களின் பெட்டிக்குள்ளும் மது வியாபாரிகளின் பணப்பைக்குள்ளுமே இவைகள் போய்ச்சேருகின்றன. கள் கடைகளிலும் அன்றே அவன் முடித்தளிக்கிறதில்லை. இதற்கு முன் கடனைக் முடித்த கடனுக்கும் இனிமேல் குடிக்கப் போவதற்கு முன்பணமாகவும் செலவழிந்து போகிறது. ஆகலால் சட்டத்திலே கடனுக்கு விற்கக் கூடாதென்று ஒரு விதியிருக்கிறது. அதை எந்த மது வியாபாரியும் எண்ணுகிறதேயில்லை. ஆகலால் அதிகாரிகளுக்கும் அந்தமாதிரியொரு சட்டமிருக்கிறதாக ஞாபகமே கிடையாது. நிர்பாக்கியமான இவ்வாயில்லாப் பூச்சிகளையும் இதர வழக்கக் குடிகாரர்களையும் இச்சட்டம் ஏன் என்று கூடக் கேட்கிறதில்லை. மதுவியாபாரிகளைக் கடைக்கண்ணாலும் பார்ப்பதில்லை. இதனால் இத்தோட்டிகளது சம்பளம் தங்களுக்கு அடமானமோ ஈடோ வைக்கப்பட்டிருப்பதாக மதுவியாபாரிகளின் கருத்து;

இந்தத் தோட்டிகளுக்கும் தெருப்பெருக்குவோர்களுக்குமெனப் பிரத்தியேக நகரசபையார் ஒரு கள்ளுக்கடையையேன் திறக்கலாகாது? நாய்விற்ற காசு குலைக்குமா? வேப்பெண்ணெய் விற்றகாசு கசக்குமா? என்றைக்கு ஒரு காரியத்தை அது கெட்டதென்று தெரிந்தும் நாம் அனுமதிக்கின்றோமோ அப்போது நாம் அந்தத் தொழிலையும் ஏன் மேற்கொள்ளலாகாது? என்று நான் கேட்கிறேன். அதுதான் நேர்மையாகும். இவ்வியாபாரத்தில் நகரசபையார் நஷ்டமடைந்து விடமாட்டார்கள் என்று சத்தியமாய்ச் சொல்லுவேன். ஏராளமான வியாபார விர்த்தியும் இருக்கவே செய்கிறது!

இல்லாவிட்டால் இன்னொன்றும் செய்யலாம். தெருப்பெருக்கும் தொழிலையே கள்ளுக்கடைகாரர்களிடம் குத்தகைக்கு விடலாமே. மாதம் இவ்வளவென்று ஒரு தொகையைச் செலுத்திவிட்டு அந்தத் தெருப்பெருக்கும் தொழிலையும் கக்கூஸ் வாரும் உத்தியோகத்தையும் கள் வியாபாரியே வைத்துக் கொள்ளட்டும். அவனிடம் ஏராளமான வாடிக்கைக்குடிகாரர்கள் இருக்கிறார்கள், அவர்களெல்லாம் அவனடியில் வேலைசெய்து கள்ளாய்க் குடித்துக் காசைக்கரைத்து விடுவார்கள். நகரத்தின் வேலையும் சரிவர நடைபெறலாம முடிச்சோடு ஒரே மொத்தமாய் கள் வியாபாரி நகரசபையிலிருந்து பணம் பெறுகிறான் தன்னுடைய வாடிக்கைக் குடிகாரர்களிடமிருந்து கள்ளையூற்றி வேலை வாங்குகிறான். வியாபார முறையில் பார்த்தாலும் சரி அல்லது நகரசபையின் நிர்வாக வழியில் பார்த்தாலும் சரி எல்லாம் சரிப்பட்டேயிருக்குமென்பதில் சந்தேகமேயில்லை. இப்பொழுது தோட்டிகள் சரிவர வேலை செய்வதில்லை. தங்களது சம்பளப்பணத்திற்குச் சரியான கள்ளும் கிடைப்பதில்லை. ஏனெனில் கடனுக்கு வாங்குவதனால் ரொக்கத்துக்கு வாங்குவதத்தனை பொருள்பெறமுடியுமா?

தோட்டிகளுடைய வாழ்க்கையை எதற்கு ஒப்பிடலாம்? நரக வாழ்க்கை யென்று ஏன் சொல்லக் கூடாது? அப்படித்தான். அதற்கு வேறு உதாரணம் உலகமெங்கும் தேடினாலும் கிடைக்கப்போகிறதா?

இங்கிலாந்திலும் தெருப்பெருக்கிகளும் தோட்டிகளும் இல்லாமலில்லை. வேலைக்காலத்திலும் கூட அவர்கள் சூட்டுடனும், ஹாட்டுடனும், பூட்டுடனும் விளங்குகிறார்கள். வேலை முடிந்ததும் ஒவ்வொருவனும் நன்றாய்த் தேய்த்துக் குளித்துத் தனது சொந்த உடையணிந்த ஜமீன்தார் மகன் போல வெளியில் உலவுகிறான் தேய்த்துக் குளிக்க சோப்பு துவட்டிக் கொள்ள துண்டுத்துணிகள் எல்லாம் அவர்களுக்கு நகரசபையின் செலவில் கொடுக்கப்படுகிறது.

—யங் இந்தியா.

(தொடரும்)

பரத்துவான் நாட்டியம்!

பரத்துவான் மகாராஜாதிராஜ் சில வருடங்களாய் தம்மக்களுடன் வசித்து வருகிறார். நாட்டியங்கற்றுக் கொண்டாராம். பிறகு பார்லிமெண்டில் அந்நடனத்தை ஆரம்பிப்பாரென நினைத்தோம். இப்பொழுது அமெரிக்காவில் அவ்வூர் ஜனங்கள் முன்னிலையிலும் பிரஸிடெண்டு ஹவர் சன்னிதானத்திலும் ஒத்திகை நடக்கிறது. வாஷிங்டனில் உள்ள பிரிட்டிஷ் ஸ்தானாதிபதி அவருக்கு வால் பிடித்துக் கொண்டு நிற்கிறார். அவரை இந்தியரெனக் கருதி பத்திரிகா நிருபர்கள் காந்தி இந்தியாவின் உண்மை நிலைமையைத் தெரிவிக்கிறாரா எனக் கேட்டதற்கு அவர் அம்மாதிரி தெரிவிக்கவில்லையென மகாராஜா கம்பீரமாக பதிலளித்தாராம். கேட்டவர்கள் திடுக்கிட்டனராம். திரையும் விழுந்தது நாடகத்தில் முதல் காக்ஷி முடிவுற்றது. மற்றும் விசேஷ காக்ஷிகள் பின்னர். நமதுராஜா அதிவிநோதமான உடைகளுடன் காணப்படுவார். எதிர்பாருங்கள். இந்த மேதாவியைக் குறித்து நமது வாசகர்கள் அறியல் வேண்டியதவசியம் இவர் வங்காளத்தில் ஒரு பெரிய ஜமீன்தார். ராஜ்யமில்லாத ராஜா. சதாவெள்ளையர் பூசாரி சர்க்கார் தாசானுதாசர். 1908-ம் ஆண்டில் வங்காளலெப்டினண்டு கவர்னர் ஸர் ஆன்டுரு பிரேசரை கல்கத்தா ஓவர்டன் ஹால் கூட்டத்தில் அருகில் சென்று ரிவால்வரால் சுட்ட வங்கவாலிபர் சாருசந்திர கோசுக்கும் கவர்னருக்கும் இடையில் நின்று தடுத்து உயிரைக் காப்பாற்றித் தாமும் சிறிது காயமடைந்தவர். அவ்வூழியத்தை மெச்சி சர்க்கார் அன்னவருக்கு "மகாராஜாதிராஜ்" என்றபட்டத்தை பரம்பரையாக அனுபவிக்கும்படி கொடுத்தார்கள் இதனால் மகிழ்ந்த மகாராஜா காலஞ்சென்ற பிரிட்டிஷ் தொழிலாளர் தலைவர் ஜேம்ஸ் கீர் ஹார்டி இந்தியாவில் பிரயாணஞ் செய்து உண்மை நிலையறிந்து பிரிட்டிஷ் பொது ஜனங்களுக்கறிவித்துப் பார்த்து மனம் சகிப்பாரா? மாட்டவேமாட்டார். ஆத்திரத்துடன் எழுந்தார் ஆசனத்தை விட்டு விளித்தார் தமது காரியதரிசியைக் கோபக்குறியுடன், திட்டும் ஒரு நிருபம் ஆங்கில நாட்டுப் பத்திரிக்கைக்குகென கிழித்தார். இந்நிருபமும் வந்தது பிளாக் உட் மாதாஞ்சிகையில், விட்டேனே இந்தக் கூலி சர்தாரை என மார் தட்டினார். கீர் ஹார்டியும் சரியான பதிலே அளித்தார். பிறகு வங்காள கவர்னர் நிர்வாக சபையில் அங்கத்தினராகஇருந்து, இங்கிலாந்து சென்று பார்லிமெண்டில் ஸ்தானம்பெற முயற்சித்தார். அதற்கென வெகுபணம் செலவழித்துநாட்டியமும் கற்றுக்கொண்டார். அதாவது டான்ஸ் இப்பொழுது முதலாக அமெரிக்காவில் தமது ஆடும் திறமையைக் காட்ட ஆரம்பித்துவிட்டார். நாட்டியம் கற்பித்தவருக்குத் தகுந்த பரிசு கிடைக்கத்தான் செய்யும்,

கம்பைத் தமாசின் விசித்திரம்.

(வேலன் விடுப்பது.)

இவ்வருஷம் புரட்டாசியீ கடைசி சனிக்கிழமையன்று வழக்கம்போல் வருஷா வருஷம் நடத்திவரும் தமாஸ்-ஒன்று நடைபெறலாயிற்று. அத்தமாசில் குமாஸ்தாக்களும், செட்டியார்களும் குறிப்பாக சிறுவர்களும் அதில்கலந்து இரவுபகலாய் உழைப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வளவுதானே, இதிலொன்றும் விசித்திர மில்லையே, வேறென்ன விசித்திர மென்பதே கேள்வி. ஆம், வாஸ்தவந்தான், அவசரப்படாதீர்கள். சொல்லவந்தவன், சொல்லிமுடிப்பேனல்லவா, யெல்லோரும் நன்றாய் வேலைபார்த்து முடித்துவிட்டு காலை சிற்றுண்டியருந்துவதற்காக இலைப்போட்டுக்கொண்டு சிற்றுண்டி யருந்திக்கொண்டிருந்தோம். அப்பந்தியில் முதலாளிகள், ஏஜண்டுகள் வர்க்கங்களும் பணியாளர்களும் யிருந்தார்கள். பணியாளர்களுக்கு ஒவ்வோர் இட்டலியும் ஒருதோசையும் தான் வைக்கப்பெற்றன. மற்றவர்களுக்கோ, இட்டலி, தோசை, பொங்கல். வாழைப்பழம் இன்னும் யென்னென்னமோ வைக்கப்பெற்றிருந்தன. இவர்களுக்கு இத்தனைவகையிருப்பதைப்பற்றி நான் கொஞ்சமும் பொருமைப்படவேயில்லை. வேறென்ன வென்று கேள்விபிறக்கலாமல்லவா, அதுதான் சொல்லவந்த விஷயம். பணியாளர்களுக்கு வைத்த சிற்றுண்டி கொஞ்சமேயல்லவா. ஒருவர். இன்னமொரு இட்டலி வையென்றுசொன்னார். வந்ததைய்யா கோபம்! யாருக்கு? ஓர் முதலாளி வர்க்கத்துக்கு! வந்து யென்ன சொல்லியது தெரியுமா, பணியாளர்களைப் பார்த்து தலையசைத்துக்கொண்டு அம் முதலாளி வர்க்கம் சொல்லுகிறது. ஓர் இட்டலி ஓர் தோசைக்கு மேல் ஒருவருக்கும் கிடையாது. யென்று சொல்லி

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ளிச்சலான பாய்ச்சலுடனும், எதிர்த்தான் என்பதும், போலீஸ்காரன் தனது குறுந்தடி சாட்டையுடன் சூறையாடினான் என்பன வெல்லாம் பழங்கதையாய் விடும். இந்த மாதிரி ஒரு யுகம் இருந்தது என்பதைக்கூட மறந்து விடுவோம். பயங்கரச் செயல்களை யும் அடக்கு முறைகளையும் ஒழிக்க வேண்டுமானால் துவேஷத்தை வளர்க்காமல், தடியை ஓங்காமல், கிளர்ச்சிக்கு இடங்கொடாமல் தப்புக்களைச் சரிக்கட்டி இரண்டு நாடுகளுக்கும் நேசப்பான்மையை யுண்டுபண்ண வேண்டும்,"

உண்மையிலேயே இதுதான் வங்காளப் புரட்சியை அடக்கும் வழி. விருதாவில் ஐரோப்பியசங்கத்தின் பேச்சையும், ஸ்டேட்ஸ்மனின் ஆலோசனையையும் கேட்டு நடந்தால் உருப்படமுடியாது ஐரோப்பிய சங்கத்தாரும் துள்ளாமல் குந்தட்டும். "அடித்தநாய் குலைக்கத் தானே செய்யும்" என்று ஒரு நண்பர் சமாதானஞ் சொல்லுகிறார் ஆகையிலே விட்டு விட்டோம்.

எனது அனுதாபம்.

பொதுஜன ஊழியரும், பரோபகாரியும், இரங்கூன் சோலிய முஸ்லிம் அஸோஸியேஷன் நிர்வாகசபை அங்கத்தினரிலொருவரும் பிரபல வர்த்தகருமான கீமேந்தான் ஜனாப் ஆ. பி. நாகூர் மீரு சாஹிப் பஹதூர் அவர்களது மருமகரும் சென்னை சிட்டிபோலீஸ் கிரைம் டிபார்ட்டுமெண்டில் சப் இன்ஸ்பெக்டர் உத்தியோக பதவி வகித்து வந்தவருமான ஜனாப் மீ. அ. சிக்கந்தர் சாஹிப் பஹதூர் அவர்கள் தமது 36-வது இளம்பிராயத்தில் தெய்வ சங்கற்பத்தால் நாளது 18-11-31ந் தேதி புதன்கிழமை சித்தூர் ஆரோக்கியவரம் என்னுமிடத்தில் விண்ணுற்ற செய்தியறிந்து வருந்துகின்றேன். ஜனாப் ஆ. பி. நாகூர் மீரு சாஹிப் பஹதூர் அவர்களுக்கும், காலஞ்சென்ற கனவானுடைய இதர உறவினர்களுக்கும் எனது மனமார்ந்த அனுதாபத்தைச்சமர்ப்பித்துக் கொள்ளுகின்றேன்.

ஜனாப் ஆ. பி. நாகூர் மீரு சாஹிப்பஹதூர் அவர்களால் நாளது 22-11-31ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு கீமேந்தான் சூரத்தி பஜார் ரோட் 6 நெம்பர் இலெக்க மிட்டதமது கிரஹத்தில், அங்கு விஜயம் செய்திருந்த சுமார் 700 மக்கள்வரை கூடிய மஜ்லிஸில் காலஞ்சென்ற அன்னவரின் ஆத்மா சாந்தியடையுமாறு கத்தம், பாத்திஹா, முதலிய தலீல்கள் வெகு சிறப்புடன் ஓதப்பெற்று ஏகமனதுடன் துஆ, கேட்டானபின் அவ்வமயம் ஆங்கு விஜயம் செய்யாநின்ற பூரமகக்களுக்கும் சிற்றுண்டி வழங்கப்பெற்று கூட்டம் இனிதுகலைந்தது.

பெ. கா. முகம்மது சுல்த்தான்.

விட்டுப் போயிற்று. பணியாளர்களோ. வாயில்லாப்பூச்சிகளானதால் ஒன்றுமே சொல்லவில்லை. முதலாளி வர்க்கங்களே, யேஜண்டு வர்க்கங்களே, ஒரு பணியாளன் வயிற்றிலடிப்பது மிகப்பாவமென்று தங்களுக்குத் தெரியாது போலும், போனது, போகட்டும். இனி வரப்போகும் தமாசிலாவது ஒழுங்காய் நடந்துகொள்வீர்களா, யென்பதை பார்ப்போம்.

இதில் ஒரு முக்கிய சம்பவம் —

சீட்டுக்கச்சேரி. வெகு முருக்கு. ரொம்ப ஜோர். இந்தவைபவத்தில் ஒருவருக்கொருவர் போட்டி. இவ்வளவிலும் அண்டாத-டிங் டிங் யென்ற பண இரைச்சல் ஒருவரிடம் மூன்று ராஜா. மற்றவரிடம், புல்ரங்கு, பணமோ — 50 ரூபாய் ஒரு நிமிடத்தில் குவிந்து விட்டது இருபேரும் ஒருவரை யொருவர் தள்ளாதவர்கள் ஆதலால், ரூபாய் 50 விருந்து ரூபாய் 85-ஆகிவிட்டது. புல்ரங்குகாரரோ ஜோராய் நிற்கிறார் மூன்று ராஜாவைத்திருப்பவரோ, இதற்கு பெரிதான மூன்று தாளை (ஆஸ்) நிற்குமோ யென்று நினைத்து திருப்பச் சொல்லும்படி நேரிட்டது. புல்ரங்குகாரர் திருப்பினார். மூன்று ராஜா வைத்திருப்பவர் பணத்தை கண்டேன் கண்டேனென்று வாரி வாரியள்ளினார். பெரியோ தலையில் கையைவைத்துக் கொண்டு, சீ, யென்று சீட்டை கிழித்து குழுமியிருந்தோர் தலையில் போட்டுவிட்டுச் சென்றுவிட்டார். குழுமியிருந்தோரனைவரும் கெக், கெக் கென்று சிரித்தனர் நாடகம் முடிவடைந்தது. யென்ன அலங்கோலம் பார்த்தீர்களா! இந்தரூபாய்க்கு கதராடை வாங்கினால் யெத்தனையோ ஏழைகள் பிழைப்பார்கள். இதில் சிந்தனை செலுத்தி நம் நாட்டைப் பிடித்திருக்கும் வறுமைப்பிணியை அகற்றுங்கள். உங்களுக்கும் நிரம்ப புண்ணிய முண்டு. இதில் சற்றும் தயங்காது தலையிடுங்கள்.

அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்

தமிழ் நாட்டிலே பிரசார வேலை வெகுவேகமாக நடந்துவருகிறது. தொண்டர்கள் மாத்திரம்தான் வேலை செய்கின்றார்களென்பதில்லை. பத்திரிகைகள் மட்டும்தான் பிரசாரம் செய்கின்றன என்பதில்லை. நாடகநடிகர்களும் கூடத்தங்களது பங்கையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லது பங்கெடுத்துக் கொள்ளும்படி வற்புறுத்தப்படுகிறார்கள். ஒருநாட்டிலே தேசீயம் என்ற வெறிபிடித்துவிட்டால் அந்நாட்டு மக்களை அப்படித்தான் அது ஆட்டி அலைத்து விடுகிறது. எல்லாவற்றிலும் சுதேசிமணம் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் பிடிக்கிறதில்லை. பிடியிலும் சுதேசி பிடி; காப்பியிலும் சுதேசி காப்பி; பாட்டிலும் சுதேசிப் பாட்டு. நாடகமேடைகளிலே தேசீயப் பாட்டுப் பாடாவிட்டால் அந்த நாடகத்தில் ருசியே கிடையாது. எவ்வளவு பிரபலமான நடிகராயிருந்தாலும் ஒன்றிரண்டு தேசீய கீதங்கள் பாடத் தெரியாவிட்டால் "உள்ளே போ" என்று நாடகரஸிகர்கள் சொல்லிவிடுகிறார்கள். வள்ளியாக வந்தாலும் சரி, கோவலனாகவந்தாலும் சரி, அரிச்சந்திரனாக ஆடினாலும் சரி அவர்கள் காந்திப்பாட்டுப் பாடாவிட்டால்பேர்வாங்க முடியாது. கையைத்தட்டிக் கழுதைக் கூத்துப் பண்ணி போய்வா என்று கூச்சலிட்டுவிடுவது தமிழ் நாடகங்களில்வழக்கமாகவந்துவிட்டது.

திருவனந்தபுரத்திலே திரு கிட்டப்பாவும். திருமதி. சுந்தராம்பாளும் "வள்ளி" சரித்திரத்தை நடித்தார்கள். "பண்டித மோதிலால் நேரைப் பறிகொடுத்தோமே" என்ற பாட்டை திருமதி சுந்தராம்பாள் பாடினாள். ஸி. ஐ. டி. களும் மோப்பம் பிடிக்கப் போயிருந்தார்கள். இந்தப்பாட்டிலே இராஜ துவேஷம் இருப்பதாக அவர்கள் கண்ணிலே பட்டுவிட்டது. அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய். என்பதுபோலத் தோன்றி விட்டது. அவ்வளவுதான் தடைஉத்திரவு போட்டு விட்டார். அப்பாட்டில் ஏதாவது இராஜதுவேஷம் இருக்கின்றதா என்று நீங்களே பார்த்துக் கொள்ளுவீர் களென்று கருதுகிறோம்.

மும்மூர்த்திகளுக்கும் பிடிக்கவில்லை.

மும்மூர்த்திகளென்றால் நமது சிவன், விஷ்ணு, பிர்மா முதலிய மூன்று தெய்வங்களென்று தப்பாக அர்த்தம்செய்து கொள்ளக் கூடாது, சமஸ்கிருதத்திலோ, ஹிந்தியிலோ மூர்த்தி யென்றால் பொம்மையென்று ஒரு பொருள் இருப்பதாக எனக்கு ஞாபகம். இங்கே இந்திய அரசியலில் மும்மூர்த்திகளாக-மூன்று பொம்மைகளாக விளங்குகிறவர்கள் நமது சாஸ்திரி, ஸாப்ரூ, ஜெயக்கர், இந்தப்பேர்வழிகள் சர்க்காருக்குத் தூதுவர்களாக விருந்து வந்ததை நாம் பலகாலும் அறிவோம். சட்டமறுப்புக்காலத்தில் எரவாடா சிறையிலே தவங்கிடந்த நமதுவிடுதலைத் தெய்வத்திற்கும் சிம்லா தெய்வமான வைஸ்ராய்க்குமிடையே சாப்ரூவும் ஜெயகரும் கால் தேய நடந்து திரிந்ததை நாம் மறந்திருக்கமாட்டோம். தென்னாப்பிரிகாவுக்கு கனம் சாஸ்திரிகாரு சர்க்கார் தூதுவராக நடந்து திரிந்ததும் நமக்கென்ன ஞாபகமில்லாது போகுமா? இந்த மூர்த்திகள் எப்பொழுதுமே பிரிட்டிஷ் சர்க்காரை பரம்பிர்மமாகவைத்து வணங்கிவருகிறார்கள். அவர்களுக்குக் கூட வட்டமேஜையில் பிரிட்டிஷ் ஆண்கள் செய்யும் வேலைகள் பிடிக்கவில்லை மாகாண சுயாட்சியென்ற சூழ்ச்சித் திட்டத்தைக் கேட்டவுடனே—அதைத்தான் இந்தியாவுக்குக் கொடுக்கப்போகிறார்கள். என்று தெரிந்ததும் அவர்களுக்கு விட்டது ஆசை விளாம்பழத்தோலோடு மத்தியசபையில் பொறுப்பாட்சி கொடுக்காமல வெறும் மாகாண சுயாட்சியை மட்டும் அளிப்பதில் அர்த்தமில்லை யென்று அவர்களுக்கே பட்டுவிட்டது. "தவணைவாரியாக—கிஸ்திப்படி இந்தியாவை திருப்தி செய்வதாயிருந்தால் வட்டமேஜையையே கூட்டியிருக்கவேண்டிய தேவையில்லையே" என்று ஜெயக்கரே வாய்விட்டுச் சொல்லிவிட்டார். அப்படியானால் மாகாண சுயாட்சியின் வண்டவாளம் வாழைப்பழம் கொடுத்த கதைதான்.

தேசோபகாரி
சந்தா விபரம்
வருஷம் 1-க்கு ரூ. 3 0 0
ஆறுமாதம் ரூ. 1 8 0
மாத சந்தா அணா நான்கே

Printed & Published By A. V. Sellam Pillay at the Desopakari Press, 210, 36th Street, Rangoon.

அரையணா மலர் 9 இதழ் 35. பதிவு எண் 245.

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை **DESOPAKARI** புதன், ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி, இரங்கோன், (29—11—31) கார்த்திகைமீ 14உ ஞாயிற்றுக்கிழமை.

வட்டமேஜையால் பூரணசுயராஜ்யம்

"பேதமிட்டுக் கலகமிட்டு வேலிகட்டிப்
பின்னதற்குக் காவலென்று பேருமிட்டு
நீதமில்லாக் கள்வர் நெறியாயிற்றப்பா
நினைக்குங்காலிது கொடிய நிகழ்ச்சியென்றே.
—கவியரசன்.

வட்டமேஜையால் பூரண சுயராஜ்யம்

வட்டமேஜையின் அச்சு, ஆணி, ஆப்பு எல்லாம் கழன்று ஆடிவிட்டது. இனிமேல் ஒரேயடியாய் விழுந்து நொருங்கவேண்டியதுதான் பாக்கி. அதுவும் அதிக நாளிலல்ல அடுத்து வரும் செவ்வாயன்று வெறும் வாயாய்ப் போவதைப்பார்க்கத்தான் போகிறோம். அப்போது பிரித்தானியாவின் பேய்க்கோலமும், பாரதமாதாவின் காளிகாசொரூபமும் நம்முன்னே நர்த்தனஞ் செய்யக் காண்போம். ஜெயதேவியானவள் பலிபீடத்திலே கொலுவிருப்பாள். இந்தியரனைவரும் அஹிம்ஸா மந்திரத்தை ஜெபித்துக் கொண்டு என்னவிலை கொடுத்தும்—உயிரைப் பணயமாக வேண்டுமானாலும் வைத்து அவளைப்பஜிப்பார்கள். தியாகத்தின் எல்லைவரையோடி பூரண சுதந்திரம் பெற்று சுயராஜ்ய பவனத்தில் குடிபுகுவர்,

சரி. அதிருக்கட்டும் நாளை நடக்கும் செய்தி. இன்று இங்கிலாந்தில் என்னென்ன வெல்லாம் நடக்கின்றதென்று பார்த்து விடுவோம். வட்டமேஜை செத்துச் செத்துப் பிழைத்துக்கொண்டிருந்ததல்லவா? ஒரு சமயம் கையைவிரித்து விட விருந்ததாகவும் சொன்னோம். அப்போதே அது சீட்டை (எமனோலை) க்கிழித்துவிட்டது. பிரிட்டிஷ் இராஜதந்திரிகளுக்கு அந்தநிலைமையில் கருமாதி செய்ய இஷ்டமில்லை. ஏனெனில் வெறும் சமூகப் பிரச்னையைத் தூக்கிப்போட்டு அதன் சாக்கில் செத்ததாக இல்லாமல் முக்கியமான இராணுவ, பொக்கிஷ, அந்நிய நாட்டு சம்மந்தப் பேச்சுக்களையும் ஒப்புக்குப் பேசி மத்திய சபையில் இந்தியர்களிடம் பூரண பொறுப்பாட்சியளிக்கும் பெரிய பிரச்னையில் சாய்ந்ததாக இருக்கவேண்டும். அப்பொழுதான் பிரிட்டன் தனது மானத்தையும் அந்தஸ்தையும் வெளியுலகத்திற்குக் கௌரவமான முறையில் கணக்குச் சொல்லமுடியும் என்று கருதியே இவ்வளவும் பேசப்பட்டாயிற்று. என்னென்னவோ கண்கட்டிவித்தை, ஜாலம்வேடிக்கை, பொம்மலாட்டங்களெல்லாங் காட்டியாகிவிட்டது. இனிமேல் இறுதிச் சடங்கு கல்லடுப்பு கருமாதி தான் பாக்கி. இதற்கிடையில் பார்லிமெண்டின் அந்தரங்க மேடைகளில் பலமான விவாதங்களும் நடந்தன. இந்தியாமந்திரி சர் சாமுவேல் ஹோரும் உள்நாட்டுமந்திரி ஸர் ஹெர்பர்ட் சாமுவேலும்குஸ்தி கூட போட்டுக் கொண்டார்கள். முதல் மந்திரிக்குத் தலைக் த் தண்ணீர் கூட ஊற்றிவிடப்பார்த்தனர். ஆனால்மக்டோனால்டு பழம்பெருச்சாளியல்லவா? இந்தியாவுக்காக மந்திரிபதவியை யிழக்கவிரும்புவானா? அதற்குந் தகுந்தாப்போலக் சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொண்டான். தளபதி ஸ்மட்ஸும் இர்வின் பி

ரபுவும் இந்தியாவைப் பற்றியும் காந்திஜியைக் குறித்தும் நன்றாய் அறிந்தவர்கள். அவர்களும் தங்களாலானவரை புத்திசொல்லிப் பார்த்தார்கள். எவனும் ஏன் என்று கூடக் கேட்டானில்லை. கடைசியில் சம்மட்டிக்கமிட்டியில் அறையிலாடிய அம்பலவாணர்கள் அம்பலப்பட்டனர். பழைய மந்திரி வெட்ஜ்வுட் பென்னும் விஸ்மித்தும் "அடே யென்னடா அப்பா இப்படிக் குட்டிச்சுவரு பண்ணுகிறீர்கள் பொறுப்பாட்சி கொடுத்துவிடுங்களேன்" என்று சொன்னார்கள். அதைக் கேட்க எவனுக்காவது காதிருந்ததா?

காந்திஜியும் தமது உடல் நிலையைக் கூடப் பொருட்படுத்தாமல் கூட்டத்தில் பேசினர். "பொறுப்பாட்சியளிக்க நீங்கள் விரும்பாவிட்டால் எனக்கு அதை அடைய வழி தெரியும். வெறுங்கையுடன் என் நாட்டுக்குப் போய் என் நாட்டுமக்களுக்கு நடந்ததைச் சொல்லி சட்ட மறுப்புப் போரில் அவர்களும் நானும் இறங்க வேண்டுவதைத் தவிர்த்து வேறு கதியில்லை" என்றார். அப்புறம் சர்ஹோர் எங்களப்பன் குதிருக்குள்ளில்லை யென்றது போல 'சர்க்கார் மீது சந்தேகங் கொள்ளவேண்டாம்' மென்று கேட்டுக்கொண்டான். இவ்வளவுதான் கதையை வளர்த்துவானேன். செவ்வாய்க்கிழமை கருமாதிதினத்திலே மக்தனல்டு ஐயர் வருவார். அப்பன், பாட்டன், பூட்டன், முப்பாட்டன், நாப்பாட்டன் பேர்களையெல்லாம் கேட்டு பழைய மந்திரங்களைச் சொல்லி ஸ்லோகங்களைத் தலைகிழாகப்பாடி தகாஸ்து சொல்லி வட்டமேஜையின் தலையிலேமண்ணைப்போட்டு விடப்போறான். அத்துடன் லண்டன் சுடுகாடு விட்டு அவரவர் வீட்டுக்கு அவரைக்காயும் சோறும் தின்ன எல்லாப் பிரதிநிதிகளும் போய்விடுவார்கள். சிலர் பூரிதக்ஷணைக்காகக் காத்திருந்தாலுமிருக்கலாம். மக்தனல்டு தீக்ஷகர் ஏதோ கொஞ்சங் கொஞ்சம் கொடுப்பார். அப்புறம் அவர்களும் எமனுக்கோ, காலனுக்கோ, தூதனுக்கோ போவார்கள். இப்படியும் ஒரு மேஜை யிருந்ததே யென்பதைக்கூட அநேகமாய் எல்லோருமே மறந்து போய் விடுவார்கள். தங்கள் தங்களுக்குக் கிடைத்ததைக் கணக்குப்பார்ப்பார்கள். ஆம். ஆதாயஞ் செலவு பார்க்காவிட்டால் கொண்டு நடத்த முடியுமா?

காந்திஜீ ஒரு செட்டியார், நுனிவிரலில் கணக்கு வைத்திருப்பவர். ஆற்றிலே போனாலும் ஆதாயத்தோடுதான் போவார். ஆகையினாலே கடலிலே போனதிலே எவ்வளது ஆதாயம் என்று கணக்குப் பார்க்கவேசெய்வார். நமக்கெட்டிய புள்ளிவிபரப்படி பார்த்தாலும் இந்தொகையில் அநேகமாய் அதிகப்படியான வித்தியாசமிருப்பதற்கில்லை. ஏனெனில் காந்திஜீயின் இந்தக்கணக்கிலே ரூபாய் அணா பைசாவென்பதே கிடையாது. எல்லாம் புள்ளிகளேயாகும். சென்ற சட்டமறுப்பு ஆரம்பித்தபோது காந்திஜீயின் நியாயமான உரிமை நிபந்தனைகளுக்கிணங்காமல் சர்க்கார் பிடிவாதஞ்சாதித்ததாலேதான் பண்டிதமாளவியா, தலைவர் வித்தல்பாய் பட்டேல் முதலிய இரும்புத்தூண்கள் போன்றோர் சர்க்காரின் சட்டசபையைத் 'தூ' வென்று தள்ளிவிட்டு காங்கிரஸில் சேர்ந்து சத்தியாக்கிரஹ இயக்கத்திலிறங்கிப் படைத்துணை புரிய ஹேதுவாயிற்று. அவர்களின் பெரும் முயற்சியாலேதான் வியாபார வர்க்கமே காங்கிரஸுடன் ஒப்பந்தஞ் செய்து அந்நியத்துணிக்குச் சாவுமணியடிக்கச் சாதகமேற்பட்டது. அதேபோல் இப்பொழுதும் வட்டமேஜையில் காந்திஜீயின் கோரிக்கைகளுக்கு பிரிட்டிஷ் மந்திரிகள் இணங்காமல் போய்விட்டதால் சர் சாப்ரூ, கனம் சாஸ்திரி ஜெயகர், ராமசாமி முதலியார், முதலியோர் நமக்கு கிடைத்துள்ளனர். இந்தப்புள்ளிகளெல்லாம் காங்கிரஸிலிறங்கி வேலை செய்யத்துணிந்து விட்டால் பூரண சுயராஜ்யம் அதிக தூரத்திலில்லை. வட்டமேஜையில் பேச்சுப் பேச்சென்று பேசவும் வேண்டுமா? பிரிட்டிஷ் சர்க்கார் கீச்சுக் கீச்சென்று நாம் கேட்பதற்கிணங்கி விட வேண்டுவதுதானே? அவர்களும் ரோஷமுள்ளவர்கள்தான். இல்லாமலா நாலு பேரறிய அன்று நடுச்சபையில் எதிரிகள் முன்னிலையில் அவர்களனைவரும் தாங்கள் இனிமேல் சர்க்காருடன் ஒத்துழைக்க முடியாதென்று ஒற்றைவரியில் கூறினர்கள். இந்தியனாகப் பிறந்த எவன்தான் இந்த அவமானத்தைச் சகிக்கமுடியும்? எவன்தான் இனிமேல் சர்க்காருக்குச் சேவகஞ் செய்ய இசைவான்?

இங்கிலாந்தின் முத்தண்ணாக்கள் கூட்டத்தில் (லார்டு சபையில்) ஒருஎலி (வைகௌண்ட் எலிபாங்கி) காந்திஜீயையும் அவரது சகாக்களையும் நாடு கடத்திவிட வேண்டுமென்கிறது; செய்தாலென்ன? ஒரு காந்தியைப் பெற்றெடுத்த பாரதத்தாய் மலடியல்ல. எத்தனையோ காந்திகள் தயாரிலிருக்கின்றனர். காந்திஜீ வழி காட்டிவிட்டார் நன்றாய்ப் பயிற்சியும் செய்து

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

பெரியர் பேச்சு

காந்திஜியின் காந்த சக்தி!

காந்திஜியை பிரதானமாக ஒரு மகான்என்று சொல்லிவிட்டு அப்புறந்தான் அரசியல் வாதியென்று போற்றவேண்டும். அவரது உருவப் படத்தையோ அல்லது உருவ அமைப்பையோ பார்த்தால் விசேஷமெதுவுமே யில்லை, ஆனால் அவ்வுருவத்துள்ளிருக்கும் ஆகர்ஷண சக்திக்கு அளவே கிடையாது. அவரது பேச்சிலிருக்கும் காந்தசக்திக்கும் ஹாஸ்யத்துக்கும் நிறையுண்டா? “செல்வம்” உபயோகமற்ற ஒரு பொருள் என்பது அவரது கொள்கை. மனிதன் தனக்கு வேண்டிய உணவையும் உடையையும் தானே தயாரித்துக் கொள்ளவேண்டுமென்பது அவரது உபதேசம். உண்மைகடைப்பிடிப்பவர்; வைராக்கியம் பிசகாதவர். தமது சொந்த ஜனங்களின் எதிர்ப்பையும் எதிர்ப்பதில் அஞ்சாத அழுத்தமான நெஞ்சு படைத்தவர்.

—ராபர்ட் பாரனே.

ஃ ஃ ஃ ஃ

விலை மதிப்பு

வட்டமேஜைக்கு எத்தனையோ பிரதிநிதிகள் சென்றிருக்கிறார்களே அவர்களது விலைமதிப்பெல்லாம் கூடி சர்க்காரின் நாணயச் சாலையிலடிபடும் வெள்ளி ரூபாய்போன்றது. பார்வைக்கொரு மதிப்பு, உண்மை மதிப்புவேறு. செல்லாக்காசுகள். உண்மையில், ஒருரூபாயில் உள்ள 4 அணா வெள்ளிபோன்றது. ஆனால் காந்திஜீயோ, தங்கமோஹரா போன்றனர்: இது பார்வையில, உண்மை விலையை மதிப்பிடவே முடியாது. அவர்தான் நமது நாட்டின் உண்மைத்தலைவர்; ஏகபிரதிநிதி.

—ஸ்ரீ ஜீ. வி. தேஷ்முக்.

ஃ ஃ ஃ ஃ

மன வன்மை.

ஆக்ஸ் போர்டின் ஒரு குறுகிய வீதிவழியே காந்திஜீ ஏறியிருந்த மோட்டார் போய்க்கொண்டிருந்தது. எதிரிலிருந்து ராய்ட்டரின் விசேஷ நிருபரது மோட்டார்ஓடிவந்தது. இரண்டும் மோதிக்கொள்ள ஒரேயொரு அங்குலந்தான் தப்பிற்று. இந்தஆபத்திலும் மகாத்மா சித்தம் கலங்கவே யில்லை. குலுங்கக் குலுங்கச் சிரித்தார் என்ன இவருக்குள்ள நெஞ்சழுத்தம்; எமனைக்கூட “நில்” லென்று நிறுத்திப் பேசுவாரோ?

ஃ ஃ ஃ ஃ

அறிதுயில்.

பெரியார்கள் தூங்குவதிலும் விசேஷமிருக்கிறது: மும்முறமாக வேலை செய்து கொண்டேயிருக்கிறார் காந்திஜீ. திடீரெனக்கண்மூடுகிறார்; தூங்கிவிடுகிறார். உடனே கண்விழித்துக்கொள்கிறார். உறக்கத்திலும் எத்தனை பகிமை! ஒரு சமயம் காந்திஜீ ஏதோ ஒரு விஷயத்தைச் சொல்லிக்கொண்டேயிருந்தார். தேசாய் எழுதினர். திடீரென அவரது கண்கள் மூடின. இரண்டே இரண்டு நிமிஷங்கள் நிச்சப்தமாய்த் தூங்கினர்; அப்புறம் கண்விழித்தார்; விட்ட இடத்திலிருந்து தொடர்ச்சி குறையாமல் சொன்னார். நெப்போலியனும் இப்படித்தான் தூங்கினதாகப் படித்திருக்கிறோம்.

—ஸ்ரீமதி போலக்.

ஃ ஃ ஃ ஃ

“காந்தி முயல்”

கிங்ஸ்லி மண்டபத்தில் குழந்தைகள் காந்திஜீயோடு குலவி விளையாடுகின்றன. ஒருநாள் காந்திஜீ ஒருபுட்டி நிறைப் பட்டாணிக்கடலையையடைத்து வைத்துக்கொண்டு “இதில் இத்தனை பட்டாணியிருக்கிறதென்று உத்தேசமாகச்சொன்னால் ஒருபரிசு தருகிறேன்” என்றார். ஒரு மூன்று வயதுப் பையன் காலிக்என்பவன் சொன்னது சுமாராய்ச் சரியாயிருந்தது. காந்திஜீ ஒருமுயல் கட்டி பரிசுகொடுத்தார். அதற்கு “காந்தி முயல்” என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

ஃ ஃ ஃ ஃ

“காந்தி ஆடு”

ஐலிங்க்டனில் ஒரு ஆட்டுப்பண்ணைக்காட்சி நடந்தது. காந்திஜீ ஒரு அரைமணி நேரம் சந்தோஷமாக அங்கு காலங்கழித்தார். அந்த ஆட்டுமந்தைகளில் முதல் பரிசு காந்திஜீக்கு பால் கொடுத்துவரும் ஆட்டுக்கே கிடைத்தது, அதற்காக அவ்வாட்டுக்கு “காந்தி ஆடு” என்றுபெயரிட்டார்கள். காந்தி அந்த ஆட்டைத் தடவிக் கொடுத்து “இந்தியாவில் பாதிப்பட்டினியும் முழுப்பட்டினியுமாய்க் கிடக்கும் மக்களைப் போலத்தான் அவர்களது ஆடுகளும் மெலிந்து கிடக்கின்றன. பிரிட்டனிலுள்ள ஆடுமாடுகள் நன்றாய்ச் செழித்திருக்கின்றன” என்றார்.

கன்ஸெர் வேட்டிவ் காந்தி.

(ஸ்ரீ ராபர்ட் பர்னே.)

காந்திஜியை எவனும் வெறுக்க முடியாது. பார்ப்பதற்கு அழகாக இருக்கமாட்டார். ஆனால் உயர்ந்த வசீகர சக்தியும் அழுகிறவனையும் சிரிக்கச் செய்யும் ஹாஸ்யத்திறமையும் நிறைந்திருக்கிறது. மனித வர்க்கத்தைப் பற்றிய அன்பும் கவலையும் அவரிடத்திலெல்லையில்லாமலிருக்கிறது.

காந்திஜி பொதுவுடமைக்காரரல்ல. சோவியத் ருஷியாவிலிருந்து அவர் தம்படி கூடப் பெறுகிறதில்லை. ஏனெனில் சோவியத் கொள்கையென்றால் அவருக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்காது. தொழிலாளிகளின் ஆட்சியை ஸ்தாபிக்க காந்திஜிக்கு இஷ்டமே கிடையாது. அதற்குப்பதிலாக தொழிலாளிகளின் ஆதிக்கமே அடியோடு கூடாதென்கிறார். புராதனமான குடியானவர் ஆட்சியில் அவரது மனம் நாடியிருக்கிறது வல்லரசென்பதே இருக்கலாகாதென்பது காந்திஜியின் கருத்து:

காந்திஜியின் வேதாந்தமெல்லாம் முழுதும் கன்ஸெர் வேட்டிவ் கொள்கை. தனியொரு மனிதனும் தனக்கு வேண்டியதற்குமேல் வைத்துக்கொண்டிருப்பதாலே தான் வாழ்க்கை நடத்த முடியும் என்பதைப்போல் பைத்தியக்காரச் செயல் வேறெதுவுமேயில்லையென்பது அவரது தத்துவம். இதனால் பறிமுதல் செய்யும் எண்ணம் இருக்கின்றதென்றெண்ணுகிறீர்களா? இருக்கின்றவனிட மிருப்பதைப்பறித்து இல்லாதவனுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று கூறுகிறாரா? கிடையவே கிடையாது. காந்திஜியின் நம்பிக்கையும் உபதேசமும். "செல்வம்" என்றால் ஒன்றுமில்லை, வெறுமை என்னும் கருத்தைக் கொண்டிருக்கின்றன. உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் தனக்குவேண்டிய உணவையும் உடையையும் தானே உற்பத்தி செய்து கொள்ளவேண்டும், இன்னொருவனைச் சார்ந்திருக்கலாகாது என்பதுதான் அவரது உள்ளார்ந்த சித்தாந்தம்.

காந்திஜி குருக்ஷேத்திர பூமியிலே முன்னணியிலே செல்லுகிறார். கையிலே ஒரு சிறு ஆயுதத்துரும்பு கூட கிடையாது. சர்க்கா (ராட்டை) வையும், கீதையையும் வைத்துக்கொண்டு தான் போராடுகிறார். கொலைக்கருவிகளும், மிருகபலமும் அவரிடத்தில் செயலிழந்து ஆற்றலழிந்து சரணடைந்து விடுகின்றன.

காந்திஜியின் மற்றெல்லா குணங்களையும் அவரது ஆத்மத் துணிச்சல் இருக்கின்றதே அதற்குத்தான் உலக முழுதுமே தலைவணங்குகின்றது. சத்தியமாகவே அவதரித்திருக்கின்றார். தனக்கு எது சரியென்று தோன்றுகின்றதோ எது நியாயம் என்று படுகின்றதோ அதைத் தான் செய்வார். ஏதாவது ஒப்பந்தத்திற்கு வந்துவிட்டால் கடைசிவரை அதினின்றும் இம்மிகூடப் பிசகமாட்டார். தனது ஜனங்களே அதைப்பல்லும் நகமுமாய் எதிர்த்தபோதிலும் அவர்களைச் சமாதானப் படுத்துவாரே யொழிய செய்து கொண்ட உடன்படிக்கைக்கு விரோதமாக உயிர்போவதாயிருந்ததாக யிருந்தாலும் நடக்கமாட்டார்.

மீராபாய் (மிஸ். ஸ்லேடு) ஒரு ஆங்கிலக்கன்னிகை இந்தியப் பெண்களைப் போலச் சேலையுடுத்திக்கொண்டு காந்திஜிக்கு ஏன் இவ்வளவு சேவைகளும் செய்கிறாள்? என்று எந்த வெள்ளைக்காரனாவது சொல்லமுடியுமா? அவளுக்குக் காந்திஜியிடத்தில் அளவுகடந்தபக்தியேற்பட்டு விட்டது. அரசியலைப்பற்றி அவளுக்கு அக்கரையில்லை. இராஜரீகத்தைக் குறித்த சிந்தனை கிடையாது. காந்திஜிக்கு சிஷ்ருஷை செய்ய வேண்டும் அவ்வளவுதான் அவளது ஆசை, அவா, அன்பு, எல்லாம்.

இப்பொழுது உலகத்தில் பிறந்திருக்கும் எல்லோரிலும் காந்திஜி பெரியவர். அவரது கொள்கைகள் எப்படியிருந்தாலும் இப்பொழுது அவர் பிரிட்டனின் விருந்தாளி. விருந்தாளிக்குரிய மரியாதை யத்தனையையும் நாம் அவருக்கு அளித்தனுப்பவேண்டும். நாம் ஒருசிறிது தாராளமாக நடந்துகொண்டால் அவர் தமக்கியல்பாயுள்ள தாராள சிந்தையை காட்டி விடுவார். எல்லாம் சுபீக்ஷமாய் முடியும்.

—நியூஸ் கிரானிக்கிள்.

பொதுக்கூட்டம்.

நிகழும் 1931 ஸு நவம்பர்மீ 28உ சனிக்கிழமை மாலை 8-30 மணிக்கு சீக்கேமவுண்டாலே வீதியிலுள்ள சோலிய முஸ்லிம் அஸோஸியேஷன் சங்க ஹாலில் நடைபெற்றது. அவ்வமயம் தமிழ் பண்டிதர் ஸ்ரீமான் பி. வீ இராமதாஸ் நாவலர் அவர்கள் "தமிழின் மகிமை" என்னும் விஷயம்பற்றி அரிய சொற்பொழிவு ஆற்றினர். இங்ஙனம்;

எம். கே. ஏ. முஹம்மது இப்ராஹீம்,
கௌரவ காரியதரிசி.

பூனைக்கு மணிகட்ட எலிபாங்கின் யோஜனை

வைகௌண்டு எலிபாங்கியைப்பற்றி நம்மில் அநேகர் அறியமாட்டோம். வைகுண்ட எலி யென்று கூட சிலர் தப்பாகக் கொண்டுவிட்டாலும் விடக்கூடும். எலியல்ல; அது ஒரு மனிதப்பிராணி. எலிபாங்கியென்பது ஒருபெயர் வைகௌண்டு என்றால் பிரபுப்பட்டம். எலிபாங்கி பிரபு இங்கிலாந்திலிருக்கும் பிரபுக்கள் சபையிலே ஒருவன். இந்தியாவைப்பற்றி சதா உளரிக்கொட்டும் முதுதண்ணுத்தைகள் சர்ச்சில், ராதர்மீர், இஞ்சுக்கேப் முதலிய முனிவர்கள் கூட்டத்திலே ஒருத்தன்.

பூனையின் உபத்திரம் பொறுக்காமல்—பூனைக்கு இறையாகாது தப்பித்துத் கொள்ளவும் ஏராளமான இறைப்பொருளைத் தாராளமாக உண்டு கொழுக்கவும் வழிகாண எலிகளெல்லாம் ஒரு மகாநாடு கூட்டி ஆலோசனை செய்தன. அப்போது ஒரு கிழட்டெலியின் மூளையிலே ஒரு குயுக்தியான யோஜனை தட்டிவிட்டது. "பூனைக்கு மணிகட்டி விட்டால் அதுவரும் போது மணியோசை கேட்கும் நாமெல்லாம் பூனைக்கு இறையகாமல்தப்பியோடிவிடலாம்" என்று ஒரு தீர்மானங்கொண்டு வந்தது.எல்லா எலிப்பிரதிநிதிகளும் அதற்குச்சாதகமாக "ஓட்" கொடுத்தன. தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது, அப்புறம் ஒரு குட்டியெலி எழுந்து "யார் மணிகட்டுவது? என்று கேட்டுவிட்டது. எல்லா எலிகளும் பரக்கப்பரக்க விழித்தன.

இந்த எலிக்கதைபோல எலிபாங்க் ஒரு ஆலோசனை சொல்லுகிறார். "காந்திஜியையும் அவரது சகாக்களையும் இந்தியாவுக்கடுத்த தீவொன்றில் சிறைப்படுத்தி விடுவதை விட்டு வட்டமேஜை கூடி இவ்வளவு யோஜனையும் செய்யலாமா? என்று சிபார்சு செய்கிறார். காந்திஜியையும் அவரது சகாக்கள் 35 கோடி பேரையும் அடைத்துவைக்க இந்தியாவத்தனைபெரிய தீவொன்றிருந்தால் இந்தியாவைக் காப்பாற்றிக்கொள்ள பிரிட்டன் ஏன் இவ்வளவு பிரயாசையும் எடுத்துக்கொள்ள வேண்டும்? பிரிட்டிஷ் இராணுவத்தையும் பிரிட்டனில் வேலையில்லாமல் கிடப்பவர்களையும் அங்கு குடியேற்றி அந்நாட்டைச் சுரண்டலாமல்லவா? அட! எலிபாங்கே! காந்திஜியாகிய பூனைக்கு பிரிட்டன் எலியால் மணிகட்ட முடியாது. தெரியுமா!

வாலைப் பிடிச்சுக்கோ!

ஒரு காட்டிலே நரியொன்று அலைந்து திரிந்தது. அதற்கு அன்று முழுதும் இறையே கிடையாது. பசி வெடுத்து சிறுகுடலை ப்பெருங்குடல் தின்னவாரம்பித்தது. எதாவது ஒரு சூழ்ச்சி செய்து-நாயோ பூனையோ ஏதாவதொன்றின் தலையிலே விழுந்துதொலைய வேண்டும் என்றெண்ணிற்று, தேடிப்போன பூண்டுகாலிலே தட்டியமாதிரி யானையொன்று அந்நரியின் கண்ணிலே பட்டுவிட்டது. யானைக்கறியும் யானைக் கொழுப்பும் தின்ன நரிக்கு நாக்கில் ஜலம் ஊறிற்று. உடனே யானையண்டை சென்று சொல்லுகிறது:— ஐயா! மிருகேந்திரரே! நீரேன் உமதுஒருபிடி இறைக்காக இப்படி அலைந்து திரியவேண்டும்? அதோ அக்கரை தெரிகிறதே அங்கே நிறையச் செடிகொடிகளிருக்கின்றன. உம்முடைய குறைஆயுளெல்லாம் தின்னு தின்னென்று தின்னுலும்குறையாது. "ஆ! அப்படியா! வாரும்பிள்ளாய் போகலாம். எனக்கு வழிகாட்டியாக நீயும் வா" என்று கூறிற்று. இடையிலே நடுவழியிலே ஒரு உவர் நிலமிருந்தது. அதிலே இரண்டும் இறங்கின. மலைபோன்ற யானையின் பாரிய சரீரம் களிக்குள் புதைந்துவிட்டது. "நண்பனே! நடக்கமுடியவில்லையே" என்றது யானை. "ஐயோ! அரசே! அப்படியா! இதோ என்வாலைப் பிடித்துக்கொண்டு கரையேறுங்கள்" என்று நரிவாலை யாட்டிற்று.

அந்தமாதிரி யிருக்கிறது நம்ம வட்டமேஜைக்கதை. இந்தியப் பிரதிநிதிகள் யானை. மேல் நாடுகளில் இந்தியாவை ஒரு கொழுத்த யானையாகவே வர்ணிப்பது வழக்கம். பிரதம மந்திரியிருக்கிறாரே மிஸ்டர் ராம்ஸே மக்தனால்டு அவர் நரி. பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியப் பிரிதிநிதிகளை வட்டமேஜைக்குஅழைத்தார்கள். இப்பொழுதோ பிரதிநிதிகள் சேற்றிலே புதைபடுகிறார்கள். மக்தனால்டு வாலையாட்டுகிறார். அவரது மத்தியஸ்தம் "இதோ எனது வால்பிடித்துக்கொண்டு கரையேறுங்கள் என்று நரி சொன்னது மாதிரியாயிருக்கிறது.' ஆனால்மகாத்மாஜியை மாத்திரம் அந்த மத்தியஸ்தச் சேற்றுக்குள்ளே மக்தனால்டின் நரிகுளிப்பாட்டித்தனத்தால் முடியவில்லை.

பிரெயில்ஸ்போர்டின் பேனுமுனை.

இந்த வட்டமேஜைக்கு இவ்வளவு மகிமை யளித்தது யார்? உலகமெல்லாம் இந்தமேஜையையேன் இத்தனை கூர்மையாகக் கண்களைத் திறந்து கவனித்துக்கொண்டிருக்கின்றது. வயிர நகைகளும் பட்டுத்தலைப்பாகைகளும் அணிந்திருக்கும் இந்திய மன்னர்களால் வட்டமேஜை இவ்வளவு ஜோதியுடன் பிரகாசிக்கின்றதா? நாவன்மைபடைத்த வக்கீல்களின் பேச்சுத்திறத்தால் புகழப்படுகின்றதா? இராஜதந்திரிகளின் அபாரமான அரசியல் வன்மையால் எதிரொலிக்கின்றதா? இவைகளில் எதுவுமே இந்த மேஜையைச் சிறப்பித்து விடவில்லை. காந்தியின் ஜீவவொளி, ஆத்மசக்தி, சத்தியஜோதி இவைகள் தான் வட்டமேஜையை இவ்வளவு தூரம் பிரகாசிக்கச் செய்திருக்கிறது. இத்தனை பிரதிநிதிகள் இங்குவந்திருக்கிறார்களே எவர்களாவது நமது கண்களைக் கவருகிறார்களா? எவர்களுக்காவது இந்த ஏகாதிபத்திய பிரிட்டன் பயப்படுகிறதா? இல்லவே யில்லை. இதோ இந்தச்சிறு உருவம் தான் நமது கண்களின் கருவிழிகளுக்குள்ளே கோயில் கொண்டிருக்கிறது. கொஞ்ச நேரம்தான் அரசியல் அமைச்சர்களுடன் பேசுகிறார். மற்ற நேரத்லதயெல்லாம் கிழக்குலண்டன், லங்காஷயர் தொழிலாளிகளுடனே பேசுவதில் செலவழிக்கிறார். நம்முடைய தலைவிதி அவருடைய கையிலிருக்கிறது. நம்முடைய தலையெழுத்தை அவர்தான் எழுதவேண்டும். வேறுயாரால் முடியும்!

மந்திராலோசனை சபைகளிலே என்னென்ன திட்டங்களை யெல்லாமோ நமது மந்திரிகள் மூளை கரையத் தயாரிக்கிறார்கள். காந்திஜீ அவற்றை ஒரேயொரு பார்வையில் அருவிப்பார்த்து நிறைபோட்டு அவற்றுள்ளிருக்கும் சூழ்ச்சிகளை வெளிப்படுத்தி சுக்குநூறாய்த் தகர்த்தெறிந்து விடுகிறார். அவருக்கு வேண்டுவது இன்னதென்பது அவருக்கு நன்றாய்த்தெரியும். சுயராஜ்யத்தின் சத்தை விரும்புகிறார்; சக்கைகளைத் "தூ" வென்று தள்ளிவிடுகிறார். அவர் விரும்புவதை நமது மந்திரிகள்கொடுக்காவிட்டால் அதைப்பெறுவதற்கு அவருக்கு வழிதெரியும். தமது சர்க்கா (ராட்டை) வை யெடுத்துக்கொண்டு இந்தியாவுக்குத் திரும்பிவிடுவார். ஒரேயொரு நுனிவிரல் அசைப்பு. அவ்வளவுதான் நாடே திரண்டுவிடும். மூலை முடுக்கு, கிராமம், பட்டணம் எங்குபார்த்தாலும் சட்ட மறுப்பு ஒரே நெருப்பாய்ப்பற்றிப் பிடித்துக்கொள்ளும். ஆண் பெண்; கிழவன், குமரன்; குழந்தை குருமான்; எல்லாம் புறப்பட்டு விடும். எத்தனை வல்லரசுதானாகட்டும்; எத்தனைபீரங்கிகள்தான் குண்டுகளைக் கக்கட்டுமே ஜம்பம் சாயாது. இந்தச் சிறு மனிதன் நினைத்தால் எந்த சாம்ராஜ்யத்தையும் சாய்த்துவிடமுடியும். உலகத்தைக் கூட ஒரு ஆட்டு ஆட்டி விடுவார். சர்வவல்லமையும் அவருக்குண்டு.

காந்திஜீ என்ன கேட்கிறார்? பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் வேண்டுமென்கிறாரா? தமது நாட்டின் சுதந்திரத்தைத்தானே கேட்கிறார். இந்தியாவை இந்தியர்களிடம் கொடுத்து விட பிரிட்டனுக்கென்னத்திற்கு இத்தனைமனச்சலிப்பு? யார் அப்பன் வீட்டுச்சொத்து? இந்தியர்களுடையது தானே! மாகாண சுயாட்சியா? அல்லது ஐக்கிய அரசியல் திட்டமா? ஒருசபையா? இரண்டுசபையா? எதற்கு உயர்ந்த அதிகாரம் இருப்பது? இராணுவம், பொக்கிஷம், அயல்நாட்டு சம்பந்தம், இதுகளெல்லாம் எவர் வசமிருப்பது? பிரிட்டிஷார்கையிலா? இல்லை இந்தியர்களகையிலா? இந்தமாதிரியெல்லாம் கேள்விகளைப் போட்டு மண்டையை உடைத்துக் கொள்ளுவதால் ஆவதென்ன? காந்திஜீக்கு இவைகளெல்லாம் தெரியாது. அவர்வேண்டுவது சுயராஜ்யத்தின் சத்து; கிழவல்ல. பெயர் எதுவேண்டுமானாலும் வைத்துக் கொள்ளட்டும்.

ஃ ஃ ஃ ஃ

கிழக் குழந்தை.

ஒருநாள் பலஏழைக்குழந்தைகளோடு நமது 63-வயது காந்திக்குழந்தை வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தது. அடுக்கடுக்காகப் பல கேள்விகளைக் கேட்டன. அவற்றிற் கெல்லாம் காந்திஜீ அன்போடும் அமைதியோடும் பதில் அளித்தார். பேச்சிடையே அக்குழந்தைகளுக்கு அஹிம்சைத் தத்துவத்தைப் பாலைப்புகட்டுவது போலப் புகட்டிவிட்டார்.

தேசோபகாரி

சந்தா விபரம்

வருஷம் 1-க்கு	ரூ.	3	0	0
ஆறுமாதம்	ரூ.	1	8	0
மாத சந்தா	அணா	நான்கே		

ஆட! மயான ருத்திரா

தாம்புவே மயான டிரஸ்டி தனது கணக்குகளுடன் நாம்ரூடு கொடுத்த உடன் வெளிவந்தது பாராட்டத்தக்கதாகும். ஆனால் 1930ம் ஆண்டு மார்ச்சுமாதம் 31ந்தேதி வரையில் உள்ளகணக்குகளே தற்சமயம் வெளிச்சத்தைக் கண்டிக்கிறது. கணக்குப் பரிசோதகர்களும் கைச்சாத்திட்டிருக்கிறார்கள். பாங்கியில் பணம் மிகுதியாக இருப்பதாகக் காட்டப்பட்டிருக்கிறது: அப்படியிருந்தும் மனேஜிங் டிரஸ்டி ரூ 1000 முன்பணம் கொடுத்திருப்பதாகக் குறிப்பிடுவது, நமக்கு விளங்கவில்லை இதர அம்சங்களைப்பற்றி இனி யொருமுறை பேசுவோம். இன்னும் ஒருவருடக்கணக்குகள் வெளிவரவேண்டி யிருக்கிறது. தற்கால முனிசிபல் இலெக்ஷன் கொந்திரவுகளும் தீர்ந்து போனபடியால் அக்கணக்குகளும் சீக்கிரம் வெளிப்படுமென நாம் திட்டமாய் நம்பலாம். இந்த டிரஸ்டி, எப்பொழுதுமே கணக்குகள் கொடுப்பதில் அனேகமாகத் தாமதித்ததில்லை. ஸ்கீமில் கண்டபடி டிரஸ்டிகள் உண்டா? அப்படி இருந்தால் கூட்டம்கூடி கலந்தாலோசனை செய்வதுண்டா? அவ்விவரங்களும் பொது ஜனங்கள் அறியும்படி செய்வது முறையென மானேஜிங் டிரஸ்டிக்கு வற்புறுத்துகிறோம். தாம்புவே மயான விஷயம் இவ்விதமாக ஒழுக்காய் வந்து கொண்டிருக்க, கீமந்தான் இந்து மயானத்தைப்பிடித்த கேடுதான் என்ன? ஸ்ரீமான் லாயர் ப. சி. சோமசுந்திரம் பிள்ளை சுடுகாட்டு நிர்வாகம் வகித்தகாலம் முதல் கணக்குகள் ஒருதடவையேனும் வெளிப்படுத்தியதாக நாம்அறியக்கூடவில்லை. அப்படியிருந்தாலும் நம் மை மத் திருத்தலாம். தாம்புலேசுடுகாட்டுக்கணக்குகளைப்பார்க்குமிடத்து இந்த சுடுகாடடு நிதி யேராளமாக இருக்கவேண்டுமெனக் காணப்படுகிறதே. வரவுசெலவு கணக்குகளை கோர்ட்டுத்திட்டபடி பொது ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டியது அவசியமல்லவா? அதை விடுத்து மவுனம் சாதிப்பதன் அர்த்தம்தானென்ன? பொதுஸ்தாபன நிர்வாக ஊழல்களைவெளிப்படுததி நிவர்த்தி செய்ய யேற்பட்டால், எல்லாரும் சபைக்கு வர வேண்டிவருமே? இனியேனும் ஸ்ரீமான் சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் அதிவிரைவினில் தமது கணக்குகளை வெளிப்படுத்தி பொதுஜனங்களைத் திருப்தி செய்யுமாறு வற்புறுத்துகிறோம். பொதுவிஷயங்களில் ஈடுபட்டுத்தவறி நடப்பவர்கள் நமது ஆப்த நண்பர்களாயிருந்தாலும் நாம் கண்டித்து எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறோ மென்பதை ஸ்ரீமான் பிள்ளையும் அறியாததல்ல. ஒருவேளை தமக்கு சொந்த அலுவல் அதிகமிருந்து இதைக்கவனிக்க சாவகாசமில்லாதிருந்தால், கணக்குகளை ஒழுங்குசெய்து கோர்ட்டில் விசிறியெறிந்து விட்டு இந்தச் சுடுகாட்டு பந்தத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வது மேலான தாகுமென நாம் மிகவும் வற்புறுத்துகிறோம். கணக்குகளைக் கூடியசீக்கிரம் நாம் எதிர் பார்க்கலாமல்லவா?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்தாயிற்று அப்புற மென்ன? அவரது அருட்கடாக்ஷமும் உபதேசமும் பெற்ற முப்பத்தைந்து கோடி காந்திகள் புறப்பட்டுவிடுவார்களே அப்புறம் இந்த எலியாலும் அதன் எலிக்கும்பலாலும் என்ன செய்யமுடியும்?. சோமாபுரியில் வேய்ங் குழலோன் (பைடு பைப்பர் என்னும் ஆங்கிலக் கவிதா நாயகன்) பின்னாலோடிய எலிகள் கதியன்றி வேறில்லை.

இந்திய முத்தண்ணாத்தைகள் (இந்தியா சட்டசபை) சபையிலே கேட்கப்பட்ட கேள்விக்கு ஸர் ஜேம்ஸ் கிரேரார் "சட்டமறுப்பு ஆரம்பமாகுமானால் அதை அடக்க எனக்குத் தெரியும்" என்கிறான். என்ன தெரியுமாம் இவனுக்கு? தடியாலடிக்கத் தெரியும். துப்பாக்கியால் சுடத்தெரியும். இதெல்லாம் மிஞ்சினால் பீரங்கியால் கொளுத்தத் தெரியும்: இவ்வளவுதானே. வேறென்ன தெரியும். நமக்கு பூரண சுதந்திரம் பெறதெரியுமே அதற்கென்ன செய்வார் இந்த ஸர்ர்ர்ர்.

சுருக்கமாகச் சொல்லப்போனால் வட்ட மேஜையால் கைமேல் சுயராஜ்யம் கிடைக்காவிட்டாலும் வட்டமேஜையாலேதான் சுயாராஜ்யம் பெறுவதற்கு ஆதரவும் ஆட்களும் கிடைத்திருக்கிறது. இல்லாவிட்டால் ஒருசாப்ரூ, ஒரு சாஸ்திரி, ஒரு முதலியார், ஒரு சுப்பராயனெல்லாம் கிடைப்பார்களா? மேலும் இந்தப் புள்ளிகளை யெல்லாம் வட்டமேஜைக்காக நாம் செலவழித்த 8 லட்சம் ரூபாய்களை விலையாகக் கொடுத்து வாங்கியிருக்கிறோம். இவர்கள் இந்தியாவின் விடுதலைக்காக காந்திஜீயின் கட்டளைப்படி நடக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகையினாலே தான் வட்டமேஜையால் நாம் சுயராஜ்யம்-பூரண சுதந்திரம் பெற்றுவிற்றதாகக் கூறுகிறோம். நம்மிடத்தில் இழப்பதற் கெதுவுமில்லாதவரை கிடைத்ததெல்லாம் ஆதாயந்தானே.சரி நடக்கட்டும் சட்டமறுப்புக்கதை



வட்டமேஜை அலங்கோலம்.

வட்டமேஜையாகிய கழுதையிலேறிக் கொண்டு ஏகாதிபத்திய சவுக்கை இடதுகையில் பிடித்துக் கொண்டு முதல்மந்திரி மக்தனல்து வாலில்கடிவாளம் கட்டி குண்டி பக்கம் குதிரையோட்டும் காக்ஷி. இப்படிச் செய்தால் வட்டமேஜை உருப்படுமா?

சுதந்தரன் படம்,

Printed & Published By A. V, Sellam Pillay at the Desopakari Press, 210, 36th Street, Rangoon.

பதிவு எண் 245 மலர் 9. இதழ் 36. அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை

DESOPAKARI

புதன், ஞாயிறு வெளியீடு

210—36-வது வீதி, இரங்கோன், (2—12—31) கார்த்திகைமீ 17உ புதன்கிழமை

தேளுக்கு மணியங் கொடுத்தால்?

ஐயகோ விதையாதெனச் சொல்வோம்?
அரசரானவர் செய்தவதொன்றோ?
மெய்யதாக வொர் மண்டலத்காட்சி
யென்றுகுநினி லாளுங் கருத்தோ?
வையமிஃது பொறுத்திடுமோமேல்
வான் பொறுத்திடுமோபழிமக்காள்!
துய்ய சீர்த்தி மதிக்குலமோ நாம்! "தூ"

—விதுரான் வாக்கு.

தேளுக்கு மணியங்கொடுத்தால் நிமிஷத்துக்கு ஒரு கொட்டு.

வரவையும் செலவையும் ஒரு கோட்டில் நிறுத்த சூஸ்டர் கொண்டுவந்த நிதி சோதாவை சட்டசபை மந்திரிகள் உள்ளே [illegible] வென்று சொல்லி விட்டார்களல்லவா? சூஸ்டருக்கு முகத்தில் ஈயாடவே யில்லை. உதவி மந்திரியோ பணம் பணமென்று அடித்துக்கொண்டிருக்கிறான். சம்பளக்காரன்களுக்கும் கடன்காரர்களுக்கும் ஏதோ மரியாதையாய்க்கொடுத்தனுப்பக் கூட வழியில்லையே. நம்ம பவிசு வெளிவந்தால் காங்கிரஸ்காரர்கள் தூற்றுவதற்கு ஆதாரமாகிவிடுமே என் செய்கிறது? பிரித்தானியாவிடம் கடன் வாங்கிச் செலவுசெய்யவாவது அவள் கையோடுகிறதா? அவளும் "ஒய்ந்துகடிபானை உட்காரடி...' என்று உட்கார்ந்து விட்டாள். கடன் கேட்கவும் லாயக்கில்லை. முந்திபகடனைக் கொடுத்திருந்தாலல்லவா பிந்திக்கடன் கேட்கக் கூசாமல் நாக்கு நீளும். சண்டை முடிந்து பத்துப்பதினைந்து வருடங்களாகியும் இன்னும் அந்தக்கடன் தீராதிருந்தால் என்ன அவமானம்! எப்படியும் இத்தப்பொத்தலை யடைத்தாகவேணுமேடா தம்பி, என்று ஒப்பாரிவைத்தான். மகோதரனாகிய மந்திரியிப்படி யழுவதைக் கண்டால் இராவணன் மனது எப்படியிருக்கும்? உடனே பரிதாபம்—ஆத்திரம்—படபடப்பு—மீசை துடிப்பு—கோபம்—மண்ணாங்கட்டி —செருப்பு—எல்லாம் வந்துவிட்டது. "அடடா! அப்படியாசெய்து போட்டார்கள் போக்கிரிப்பயல்கள். நல்லது மகோதரா! நம்ம பிழையா வேலையெடுத்துவா' என்று உருமினார். யார்? ஷோக் வெல்லிங்டன் துரைகாரு அவ்வளவுதான். அந்த சட்டசபைப்பயல்களை யிங்கே காதைப் பிடித்து இழுத்துவா, வென்றுத்திரவிட்டார். எல்லோருமா வந்தார்கள். நல்ல விருந்து. ஏக தடபுடலான சாப்பாடு. வைஸ்ராய் வீட்டில்- அதுவும் 70, 75 வயது மைனர்ஆண்மணையில் நடக்கும் விருந்தில்—மந்திரிகளைத் தலையைத்தடவி யனுப்புவதற்கென்றே யேற்பாடு செய்யப்பட்ட விருந்தால்—எது தான் குறைச்சலாயிருக்கப்போகிறது! ஆமைவடை வேணுமா? அப்புறம் இன்னொரு வடையிருக்கே காதுகுத்தி அந்தவடை வேணுமா? இல்லை இதுவேணுமா? அது வேணுமா? என்று கேட்டுக் கேட்டுப் போட்டு உள்ளே போட்டுக்கொண்டாரோ என்னமோ தெரியாது? இப்பொழுது நிதிமசோதா உயிரொடுத்துக் கொண்டு வந்து

விட்டது. பாழும் விசேஷ அதிகாரம் இருக்கிறதே அந்த இழவுபண்ணுகிற கூத்து இவையெல்லாம். அச்சுச்சட்ட மசோதாவையும் இப்படித்தான் தலையிலடித்துத் தள்ளிவிட்டார்கள். வைசிராய் உயிர் கொடுத்தார் இப்பொழுது இந்த நிதிமசோதாவுக்கும் உயிர்கொடுக்கப்பட்டிருக்கிறது. "அரசனுக்கு ஒருசொல், அடிமைக்குத் தலைச்சுமை" யாவதுபோல வைசிராய் ஒரே யொரு வரியிலே மசோதாவை "சட்டிபை" செய்துவிட்டார். சட்டியும், பையுமல்ல. வேண்டுமானால் நீங்கள் அந்த அர்த்தமும் செய்து கொள்ளலாம். அதற்கும் பொருளில்லாமலில்லை. இந்திய மக்களுக்குச் சட்டியும் சர்க்காருக்குப் பணப்பையும் செய்து கொடுத்திருக்கிறார் என்றால் என்ன பொருத்தமில்லாது போகுமா? நமது விவசாயிகளும், வியாபாரிகளும் இம்மசோதாவால் ஓடெடுக்க வேண்டியதுதான். சர்க்கார் பணப்பை நிறம்பும். ஏனெனில் செலவுக்குப் போதுமான வரும்படி மட்டும்தான் இம்மசோதாவில் சிபார்சு செய்யப்படுகிறதென்பதில்லை. இந்த வருஷத்துக்குக் கண்டு அதற்குமேல் ஒரு ஐந்து கோடி ரூபாய் அதிகமும் மிஞ்சுகிறது. இந்தமாதிரி இப்பொழுதிருக்கும் பணப் பஞ்சத்தில் வேண்டியதற்கு அதிகமாக வசூலிப்பது தகுமா? இல்லை வைசிராய்தான் விசேஷ அதிகாரத்தை உபயோகித்தாரே அப்போதாவது இந்தஐந்து கோடியைக் குறைத்துச் செய்திருக்கலாகாதா? அதெல்லாம் அவருக்குப் பார்க்க நேரமேது. புதிதாய்க் கிடைத்த ஆகாயக் கப்பல்களை வெள்ளோட்டம் ஓட்டி ஊர் சுற்றுவாரா இந்தப்புள்ளிவிபரங்களையெல்லாம் கிழ மண்டையிலே போட்டு உடைத்துக் கொள்ளுவாரா? மேலும் விசேஷ அதிகாரத்தை உபயோகிப்பது நம்ம வெல்லிங்டனுக்கு லட்டுச் சாப்பிட்டமாதிரி இது நமக்குத் தெரியாதா? சென்னையிலே கவர்னரா யிருந்தபோதே "சட்டிபை" செய்தவரல்லவா? இப்பொழுது வைசிராயாகிவிட்டதால் எத்தனை "சட்டிபை" வேண்டுமானாலும் செய்யலாம். யார் தட்டிச் சொல்லுவது? கொண்டா ரஸ்ஸல் வாள் கூடம் நஷ்டத்தில் வேலை செய்வதால் அதை அடியோடு மூடிவிட வேண்டுமென்று சட்டசபை தள்ளிவிட்டதை நம்ம வெல்லிங்டன் சாகிப் பத்து வருஷம் பிடித்து நிறுத்திவந்தார் கடைசியில் ஒரேயடியாய் விழுந்தே போயிற்று. கவர்னரா யிருந்தபோதே சின்னக்காரியத்திற் கெல்லாம் விசேஷ அதிகாரத்தை உபயோகித்தவர் இப்பொழுது பெரிய மணியகாரராகி விட்டதால் பெரிய காரியத்தில் அந்த அதிகாரத்தை உபயோகியாது விடுவாரா? இது தவிர இன்னொரு பேச்சும் பிறக்கிறது. லண்டனில் இருக்கிறாரே புண்ணியவாளன்—நம்ம மந்திரி—ஸர் சாமுவேல் ஹோர் அவரும் வெல்லிங்டனுக்கு "ஸர்ட்டுபிக்கெட்" அனுப்பியிருக்கிறாராம்.

இந்த விசேஷ அதிகாரத்துக்கு வால் எத்தனை நீளம். எல்லாச் சட்டத்துக்குள்ளும் இது நுழைந்து கொள்ளுகிறது. ராஜநீதியாகப்பார்த்தாலும் சரி அல்லது ராஜாங்க சட்டப்படி பார்த்தாலும்சரி இந்தஅதிகாரம்செல்லுபடியாகாது. நெருக்கடியான நிலைமையில் மாத்திரம் உபயோகிக்கக் கூடிய ஒன்றை நினைத்த நினைத்தபோதெல்லாம் உபயோகித்தால் அதற்கு விசேஷ என்ற ஒட்டென்னத்திற்கு. வெட்டிவிட்டு வெறுமனே வைசிராய் ஏதேச்சாதிகாரம் என்றிருந்தால் போதாதா? என்று கேட்கிறோம். இப்பொழுதென்ன சர்க்கார் குடி முழுகிப் போய்விடவில்லையே! எற்றுமட்டும் வற்றினால் ஆனபடி ஆகிறது என்ற கருத்தா?

வரிகொடாப் பேச்சு.

இதை பார்த்ததும் படுபாவி ரூஸ்டர் பேச்சுக்குக் கூடவரிப்போட்டு விட்டானுக்குமென்று பயந்து விடாதீர்கள்; அதுவொன்றுக்குத் தான் வரியில்லை. அந்தத் தப்பை ஜேம்ஸ்கிரேரார் எடுத்துக் கொண்டாலும் கொள்ளுவான். என்றாலும் தற்காலியமாக வேண்டுமானாலும் வேரலோ! ரூஸ்டர் பாய்க்கி ஜே!

கேசரிப்படை.

"இந்தியாப்படத்தைக் கூடிய சீக்கிரம் கேசரி வர்ணத்தில் காணப் போகிறோம். ஒதுக்குப்புறமான ஒரு சிறு கிராமங்கூட கேசரிவர்ணத்திலேதான் திகழும். இந்தியாவின் ஒவ்வொரு பெண்மணியும் கேசரிச் சேலை (குங்குமப்பூ வர்ணம்) கட்டிக்கொண்டு காங்கிரஸ் தொண்டச்சியாகிவிடுவர்கள்—என்றார் திருமதி. கமலாதேவி சட்டோபாத்தியாயர். அப்படியானால் ஆண்களெல்லாம் தொண்டர்களாகாவிட்டால் விடுதலைப்போர் செய்யும் வீர மாதர்களுக்கு சோறு சமைத்து வைக்கவேண்டியது தானே?

பிழை திருத்தம்.

இவ்விதழ் 4 வது பக்கம் முதல்பத்தி 22ம் வரியில் கொள்ளைவழியென்பதை கொல்லைவழியென்று திருத்திப்படிக்க (ப—ர்)

சாயம் வெளுக்கிறது.

பர்மாவட்டமேஜை ஆரம்பமாயிற்று. மேளதாளத்திற்குக் குறைச்சலிருக்குமா? அரசர் பெருமானும் ஆசி கூறிவிட்டார். மற்றவர்களும் சமயசந்தர்ப்பத்திற் கேற்றாப்போல் ஒத்தாக்கு மத்தளம் போடுகிறார்கள். இவைகள் லண்டன்மாநகரில் நடக்கும் ஒத்திகை. இங்கே நடப்பதென்ன? இந்திய வட்டமேஜைப்பிரதிநிதிகள் இந்தமேஜையில் இடம் பெறுவதைத் தடுக்க ஆங்கில, பர்மிய கூக்குரல்கேட்கிறது. அதுவும் பலனளித்துவிட்டது. முதல் மந்திரியும் செவிசாய்த்து விட்டார். இந்தியா விஷயம் அவர்மனம்போல் முடிந்துவிட்டது. இனியும் இந்தியர்கள் தயவு அன்னவருக்கு அவசியமேன்? இவ்வளவு கண்டால் இரங்கூன் கெஜட்டு "சும்மா யிருக்குமா? அதன் ஸ்வரூபத்தைக்காண்பிக்கிறது. இந்தியாவுடன் வைத்திருக்கும் கொடுக்கல் வாங்கல் கணக்குகளை தீர்த்துக்கொள்வதும், பர்மாவுக்குள் இந்தியர்கள் நுழைவதை தடுப்பதும் தான் பாக்கியிருக்கும் பிரச்னைகள் என்றும், மற்ற அம்சங்கள் முடிவடைந்து விட்டதாகவும் மனப்பால் குடிக்கிறது. ஐயோ போகட்டும். எப்படியாயினும் திருப்தியடைந்து கொள்ளட்டும். அதைநாம் கெடுப்பானேன்! இதனால் பர்மா அரசியல் திட்டங்கள் அதிகார வர்கத்தினரின் எண்ணப்படி சமைக்கப்படுமென்பது வெளிப்படை. பர்மா இந்தியர்கள் பிரச்னை மிகச்சிக்கலானதாம். இந்தியர்கள் பர்மாவுக்கு வருவதைத் தடுக்க வெறும் பிரஸ்தாபம் யேற்பட்டாலும் பிரமாண்டமான கிளர்ச்சி யேற்படுமாம். பர்மா வட்டமேஜை இந்தியப் பிரதிநிதிகள், இவ்விஷயத்தில் ஆதரவுகாட்ட மாட்டார்களென்று "கெஜட்" நம்புகிறது. என்னே! இதன் புத்திதீக்ஷண்யம்! விரும்பத்தகாத அன்னியர்களை விடாமல் தடுப்பதற்கு ஒவ்வொரு தேசத்திற்கும் உரிமையுண்டென இடித்துக் கூறுகிறது. அதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். இதைத்தான் இந்தியாவேண்டி நிற்கிறது. அயல்நாட்டார், பொன்விளையும் பூமியெனப் போற்றப்பட்ட பாரததேசத்தில் அழையாவிருந்தினராக நுழைந்து பல நூற்றாண்டுகளாக இந்தியச் செல்வத்தைச் சுரண்டிக் கொண்டு போவது உலகறிந்த ரகசியம். மேனாட்டவரின் கூற்றுகளே இதற்குச் சாக்ஷி. இதைத் தடுக்கக் காங்கிரஸ் மகாசபை முயற்சித்தால் அவ்வெண்ணம் சித்திபெறாத வண்ணம் வட்டமேஜையில் தந்திரங்கள் பலகையாளப்பட்டன அனைவரும் இதை அறியவே செய்வோம். பர்மாவில் இந்தியரைத் தடுப்பதென்றால், இதர அன்னியருக்கு இங்கு வசிக்க என்ன பாத்தியதையுண்டென்பதை நாம் அறியவிரும்புகிறோம். ஒரு சமயம் பர்மா ஐரோப்பிய சங்கத்தலைவர் மிஸ்டர் டி. ஜெ. ஆர். மெக்டானல்டு, ஆசியாவாசிகளை எக்காலத்தும் எங்கும் ஐரோப்பியருடன் சமமாக நடத்த முடியாதென்றும், இதற்குமாறாக ஒத்துழைக்கலாமெனக் கூறுபவர்கள் எவரேனும் இங்கிருந்தால் பைத்தியக்காரர்களென்றும் கூறினார். அதற்காக அக்காலத்திய "பர்மா அப்ஸர்வர்" பத்திரிகை, ஐரோப்பியர்களுக்காக பர்மா சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதா? என்று ஆத்திரத்துடன் கேட்டது. இது ஒரு மாமாங்கத்துக்கதை. ஆனால் இந்தியத்தொழிலாளர்கள் பர்மாவுக்கு அதிக காலம் வரை அவசியம்தானாம். அதற்குத் தகுந்த யேற்பாடுகள் செய்யப்படுமாம். தென் ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா, மற்றும் குடியேற்ற நாடுகளிலிருப்பது போன்ற யேற்பாடுகளை "கெஜட்" சிபார்சு செய்யும் போலும், ஆனால் காலம் மாறிவிட்டது. சாயம்வெளுத்துப்போயிற்று. அந்தஓட்டம் இனிமேல்ஓடமுடியாது. இந்தியர் நாற்றமே ஆகாதென்பவர்களைக் கொழுக்கவைக்க நமது ஏழைத் தொழிலாளர்களைத் தியாகம் செய்யலாமா? பொதுவாக இக்குவதியும் இந்திய மக்களுக்கு இதர சிறுபான்மையோராகிய ஐரோப்பியர்களுக்கு அளிக்கப்படும் உரிமைகள் அளிக்கப்பட்டாலொழிய வெறும் கற்கண்டு வார்த்தைகளால் இந்தியர்களை வசப்படுத்தும் காலம் போய் நெடுநாளாகிவிட்டது. இந்தியர்கள் பர்மாவிலிருந்து நூற்றுக்கு ஐந்து விகிதம் பொருள் கொண்டு போனால், கெஜட்டின் வர்க்கத்தார்—நூற்றுக்குத் தொண்ணூறு விகிதம் தங்கள் தாய்நாடு கொண்டேகுகின்றனர். எஞ்சியதே பர்மியர்களுக்காக நிறுத்தப்படுகிறதென்பது வெளிப்படை. இந்த உண்மையை எடுத்துக்கூற கெஜட்டாசிரியர் முன்வந்தால் பக்ஷபாதமில்லாத ஆசிரியரென நாமும் சகலரும்போற்றுவோம். அதைவிடுத்து ஒருதலைப் பக்ஷத்தில் இறங்குவது எந்த நியாயத்தைச் சேர்ந்தது. இரத்தம் தண்ணீரைவிடக் கனமென்பதும் வாஸ்தவந்தான்.

ஊமைக்கு உளறுவாயன்

சண்டப்பிரசண்டன்.

அடடா! வந்துவிட்டாயா மேதாவி! நல்லது. புலிக்குப் பயந்தவனெல்லாம் என்மேல் படுத்துக்கோ! என்று புறப்பட்டுவிட்டாய். ஆசிரியர், கவிஞர், வாத்தியார், இவர்களையெல்லாம் உனது நாக்கொடிந்த தராசில் நிறைபோடுகிறாய். செட்டியல்லவா? போடத்தானே செய்வாய்! நீ வகையிலே பார்த்தால் நான் தொகையிலே பார்க்கிறேன் என்று வாய் வீசுகிறாயாக்கும். அதைப்பற்றி அக்கரையில்லை, வாய்கொண்டமட்டும் அளந்துகொள். எப்படியிருந்தாலும் "மாஜி குடியனி"ன் கூத்து. குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு. ஆனால் ஆசிரிய உலகத்தையே அவமதிக்கும் உன்னைச் சும்மாவிடலாமா? உன் கருத்தில் எவன் தகுதியுள்ள ஆசிரியன்? மடைப்பள்ளியை மாண்புறச் செய்தவன் ஆசிரியனா? தாஞ்சாவைத் தட்டிக்கொண்டு செஞ்சாய் மலையேறி சிறுகல்லுடைத்தவன் ஆசிரியனா? சொல்லிபதொன்று செய்தது வேறாய் கள்ளுக்கடைமறியலில் காசு கொடுத்து விட்டு கடையைக் கட்டிக்கொண்டு நடையைக் கட்டியவன் ஆசிரியனா? போலீஸ்காரனை "டிமிக்கி" கொடுத்து கொள்ளைவழியாய் நெடுங்கம்பி நீட்டியவன் ஆசிரியனா? ஆணாயிருந்தவன் பெண்ணாய்மாறிக் கப்பலேறிய—பேடியல்ல—சுத்தவீரன் ஆசிரியனா? நிரந்தரமான கொள்கையொன்றின்றித் தனக்கு சாதகமாக வேண்டிய சந்தர்ப்பங்களிலெல்லாம் நினைத்த நினைத்தபடியாங்கே மாற்றிக் கொள்ளுபவன ஆசிரியனா? இந்தச் சந்தேகங்களெல்லாம் எமக்குள்ளே ஏற்பட்டுவிட்டது. ஆசிரியர் லட்சணம் கூறவந்த அடிமை நீர் அதிசயத்துடன் வெளிவந்து ஆனந்தமாய் அர்த்தஞ் சொல்லட்டும். எல்லோரும் அற்புதமும் ஆனந்தமுமாயிருக்கமாட்டார்கள். வல்லினம் மெல்லினம் சரியா யெழுதத்தெரியாத இப்பேர்வழி தன்னைத்தானே மேதாவியெனக் கூறிக்கொண்டு "கூரையிலிருக்கும் கோழியைப்பிடிக்கமாட்டாதவன் கோபுரத்தின் மீதேறுவேன்" என்ற கதையாய்க் கத்துகிறார். வேண்டுமானால் நம்மிடமிருக்கும் அவரது கையெட்டுத் தம்பிரானே இதற்குச் சான்று நிற்பான். மலத்தொட்டி (க்கக்கூஸ்)யைவைப்பதற்கும் எடுப்பதற்கும் லைசென்ஸ் பெற்றிருக்கும் இப்புள்ளி ஆசிரியபீடத்தின் அருமையை யென்னமாயறியமுடியும்! ஏதோ தெரியாத்தனமாய் உளறிக் கொட்டிவிட்டதாக விட்டுவிடுவோம். ஆனால் ஆசிரிய கெர்வமிருக்குமானால் போட்டி போட்டும்பார்க்கலாம். அரசியலாகட்டும், பொருளாதாரமாகட்டும் இதர எந்தச் சிக்கலான பிரச்னைதானாகட்டுமே வாகிட வரட்டும். அப்போதுதான் எவன் ஆசிரியன் என்பது நிரூபணமாகும்.

செஞ்சட்டை கிலி!

செஞ்சட்டை வீரர்களைப்பற்றி நாமெல்லாம் நன்கறிவோம். இவர்களுக்கு "குதாய் கித்மத்கர்" என்று எல்லைப்புறத்திலே பெயர். இவர்கள் "எல்லைப்புற காந்தி—கான் அப்துல் காபர் கான்" அவர்களின் சைன்யத்தில் ஒரு படை வீரர்கள். எல்லைப்புறத்தில் இப்பொழுதிருக்கும் 3 லட்சம் காங்கிரஸ் தொண்டர்களில் ஒரு சாரார். இவர்களைப்பற்றி எந்த ஒரு இந்தியனாவது அறியாதிருக்க முடியுமா? அஹிம்ஸையின் அந்தரார்த்தம் ஸ்புரிக்க இவர்களெல்லாம் சத்தியாக்கிரஹம் செய்துவருகிறார்கள். அவர்களது அடிப்படையான நோக்கம் காங்கிரஸின் நிர்மாண வேலைகளை இம்மிபிசகாமல் செய்து முடிப்பது. காபர் கானின் கண்காணிப்பில் இவர்களது கிலி இங்கிலாந்துக்கும் கப்பலேறிப் போய் பார்லிமெண்டிலும் புகுந்துவிட்டது. பிரிட்டிஷ்மந்திரிகள் சிலநாளாய்ச் சிம்மசொப்பனங்கண்டுவருகின்றனர். காபர் கானின் காங்கிரஸ் தொண்டர்களை—செஞ்சட்டை வீரர்களை—அப்படியே நசுக்கிவிட வேண்டுமென்று பார்லிமெண்டிலே பேச்சுப்பிறக்கிறது. "சட்ட வரம்பு மீறியவர்கள்" என்று ஒரு எம். பி (பார்லிமெண்டங்கத்தினர்) சொன்னார். அடுத்தவர் "அவர்களையெல்லாம் இதுவரை இந்தியா கவர்மெண்டு ஏன் விட்டு வைத்திருக்கிறது?" என்றார். அப்படியானால் "சட்டவரம்பு" என்பதற்கு அந்தமந்திரி எந்த வேலி கட்டுகிறார். ஆனால் அதைப்பற்றிப் பிடிவாதக் காரனிடம் பேசுவதில் அர்த்தமில்லை. புத்தியுள்ள எந்த மனிதனும் ஏற்றுக்கொள்ளும் 'நீதி அநீதி" இரண்டுக்கும் அந்த எம். பி. கொண்டுள்ள "நீதி அநீதி' க்கும் வெகு தூர வித்தியாசமிருக்கிறது. தேசியமென்னும் எந்த காரியத்தையும் சட்டம் வகுக்கும் இந்த மந்திரிகள் நியாய வரம்பு மீறியதென்றும் இராஜதுவேஷ மிகு

சபாஷ்! சுபாஷ் சந்திரா!

காந்திஜீ ஒரு புதிய வழியைக் காட்டிவிட்டார். எதற்கெடுத்தாலும் சத்தியாக்கிரகம். உப்புச்சத்தியாக் கிரகத்தைப் பார்த்தோம். வன சத்தியாக்கிரகம், வந்தது வரிமறுப்பு சத்தியாக்கிரகம், ஆலயப் பிரவேச சத்தியாக்கிரகம் இப்படி யெத்தனை யெல்லாமோ சத்தியாக்கிரஹத்தைக் கண்டிருக்கிறோம். ஆனால் வங்கச் சிங்கம் சுபாஷ் சந்திரன் செய்ததைப்போல் ஒரு புதிய சத்தியாக்கிரஹத்தை பார்த்திருக்கிறோமா?

கஜாரியிலிருந்து சந்திரபுரி செல்லுங் கப்பலில் சுபாஷ் பாபுவும் அவரது நண்பரொருவரும் முதல் வகுப்பிலே பிரயாணஞ்செய்துகொண்டிருக்கிறார்கள். சுபாஷ் பாபுவிடத்தில் பிரயாணச் சீட்டு (டிக்கட்) க்கிடையாது. மறந்துவிட வில்லை. ஞாபகசக்தி அவருக்கு அதிகமுண்டு. இல்லாவிட்டால் வங்காளம் முழுதுமே அவர் கைக்குள்ளாடுமா? பணங்கிடையாதென்றெண்ணி விடப்போகிறீர்கள். அவர் நாவசைத்தால் போதும். லட்சம் கோடிக்கணக்கில் ரூபாய்கள் கோட்டுகோட்டாய்க்குவிந்துவிடும். ஆனால் வேண்டுமென்றே டிக்கட்டில்லாமல் பிரயாணஞ் செய்கிறார். கப்பல்கம்பெனியின் அதிகாரிகள் டிக்கட்டுக் கேட்டனர். இல்லையென்று சொல்லிவிட்டார்: "நான் என் வேலையாக என் விருப்பப்படி பிரயாணஞ் செய்யவில்லை, என் இஷ்டத்துக்கு விரோதமாக இந்தப் பிரயாணத்தை செய்யும்படி வற்புறுத்தப்பட்டிருக்கிறேன். வேண்டுமானால் சர்க்காரிடத்திலே பில்லனுப்பி வாங்கிக் கொள்ளலாம், என்று கூறிவிட்டார்

சரி, இந்த இஷ்டமில்லாப் பிரயாணியின் ஏழு ரூபாய் இரண்டணாவையும் யார் கொடுப்பது? எப்படி வாங்குவது? என்று கப்பல்காரன் மூளையைக் கலக்கிவிட்டது. சந்திர புரி கலெக்டருக்கு எழுதிக் கேட்டான். கலெக்டருக்கும் சட்டம் தட்டவில்லை. மேல் அதிகாரியாகிய திப்பரா ஜில்லா கலெக்டரைக்கேட்டான். அவனுக்கும் ஒன்றும் தோன்றுது டாக்கா ஜில்லாக்கலெக்டருக்கு எழுதினான்; அவன் யாரைக் கேட்கிறானோ தெரியாது. எல்லோரும் இரவும் பகலுமாய்ச் சட்டத்தையெல்லாம் தூக்கித் தூக்கிப்பார்த்துத் திரிகிறார்கள். ஒரு சட்டமும் சுபாஷைக் கட்டமுடியவில்லை எவன் தலையிலே தான் இந்த ரூபாய் 7—2—0 ம் விழுகிறதோ பார்க்கலாம். சுபாஷென்னவோ கொடுக்கப் போகிறதில்லை. ஒரு தரம் இல்லை யென்றால் இல்லைதான். அப்புறம் அப்பீலேது. சர்க்கார்தான் முடிச்சவிழ்க்க வேணும்.

ந்தசென்றுந்தான் சொல்லுகிறார்கள். இல்லை "இச்செஞ்சட்டையார் இரத்தஞ் சிந்தவும் செய்வார்கள்;என்றின்னொருவன் உளறுகிறானே. அதற்காவது ஆதாரமுண்டா? நாமறிந்தவரை சட்டமறுப் பியக்கம் ஆரம்பமான காலத்திலிருந்து செஞ்சட்டை வீரர்கள் ஒரு மயிரிழைகூட அஹிம்ஸைக்குப் புறம்பே போனதில்லை. காந்திஜீ கூட அவர்களை வாயாறப் புகழுகிறாரே அதைக் கேட்டாவது தங்களது தப்பைத்திருத்திக் கொள்ளக் கூடாதா? அந்தப்புத்தியேது? எப்படியும் அடக்கிவிடவேண்டும். கான் காபர் கான் பிஜே! அவரை அடுத்து வரும் பூரி காங்கிரஸில் தலைவராகச் செய்தாவது கானையும் கானின் செஞ்சட்டையையும் பார்லிமெண்டாருக்குக் காட்டுவோம். செஞ்சட்டையின் சிவப்பு நிறத்தைக் கண்டதும் இரத்தஞாபகம் வருகிறது போலும் பார்லிமெண்டாருக்கு!

வெட்டியான் வேலையில் கெட்டி ஆனால்?

கூலித்தரகனுமல்ல வாய்க்கரிசிக்கு வழியற்றவனுமல்ல.

இத்தலைப்பிட்ட மறுப்புரை யொன்று வரப்பெற்றோம். 22-11-31ல் வெளிவந்த நமது "தேசோபகாரி"யில் நாம் வெளியிட்டுள்ள "வெட்டியான் வேலையில் கெட்டி ஆனால் ?" என்ற கட்டுரைக்கு மறுப்பென்பது இதை யெழுதி விடுத்த நண்பர் தம் கருத்து. ஆனால் தர்க்க பூர்வமாக எதுவுமே மறுக்கப்படவில்லை. செங்காங்கடைப் பதங்களே செறிந்து கிடப்பதால் அதை கழிவுதாட் கூடையில் க்ஷேமித்து விட்டோம். அன்பர் தமது யுக்தம்போல் செய்து கொள்ளட்டும்.

வேப்பெண்ணெய் விற்றகாசுகசக்குமா?

சென்றதற்குமுன் இதழில் நகரசபைகளே ஏன் கள்ளுசாராயக்கடைகளைவைத்து நடத்தக்கூடாதென்றும் கள்ளுக்கடைக்குத்தகைதாரர்களுக்கே குப்பைவாரும் உத்தியோகத்தை குத்தகைக்கு விட்டுவிடலாமே யென்றும் ஸ்ரீ சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் நகர சபைகளைக் கேள்வி கேட்டெழுதியிருந்ததைப் பிரசுரித்திருந்தோமே அதைப்பற்றி இரங்கூன் நகரசபையாரும் சிறிது சிந்தித்து முடிவுக்குவர வேண்டுகிறோம். ஏனெனில் இப்பொழுதுள்ளவாறு நிலைமையை நடக்கவிடுவதால் குப்பைவாரிகள் கெட்டுமுட்டைச் சாம்பலாய்ப் போவது மாத்திரமில்லை நகரமத்தியில் கள்ளுக்கடைகளிருப்பதால் நகரத்தைச் சுத்தப்படுத்துவது போய் நரகமாக்கிவிடுகிறார்கள் அவர்களும் நரகவாழ்க்கை வாழுகின்றனர். 36-வது வீதியிலும் இதர கள்ளுக்கடைவீதிகளிலும் மாலை வேளைகளில் நாணயமான மனிதவர்க்கம் நடமாடுவதற்கில்லை. சந்தைக்கடை போன்று ஒரேகும்பல்; ஒரே கூச்சல்; ஒரே கூத்து. கௌரவமான ஸ்தானம் வகிக்கும் ஒருவர்—தன்னுடைய பேருக்குபின்னால் மூன்று தனித்தனி ஆங்கில அக்ஷரங்களை ஒட்டிக்கொண்டிருக்கும் ஒருவர் கூட சமீபத்தில் நடந்தநகரசபை தேர்தல் தினத்தில—அசோகவனத்தை அனுமன் அதஞ் செய்ததுபோல இரங்கூன் இராணிதோட்டத்தில் அடித்து அதஞ்செய்து கூத்தடித்ததாகக் கேள்விபடுகிறோம். இப்பேர்வழி நகரசபையில் நாற்காலிபெறுவதற்கும்முனைந்தார். இவர்போன்றார் நகர சபையிலிருக்கவேண்டியது அவசியந்தான்; அவருக்குத்தான் கள்வெறியின் முறுக்குத்தெரியும். அம்முறுக்கிலும் பேசுவார். சீனுக்காரன் பீடாயில் ஏறிக்கொண்டால் கேட்பானேன்? உடனே கள்ளுக்கடைகளையும் சாராயக்கடைகளையும் தூக்கி அப்பால் எறிந்துவிடுவார். ஆனால் அவ்விதம் ஆகவில்லை. இவரே இவ்வாறாயின் எழுத்துவாசனையில்லாத தோட்டிகள் குடித்துக் கூத்தடிப்பதற்கு யாரைக் கேட்கவேணும்? இதனால் மரியாதையுள்ள மனிதர்கள் பெரிதும் பாதிக்கவும் படுகின்றனர். நகரசபையில் புதிதாய் அங்கம் பெற்றிருப்பவர்கள் இதுபற்றி விசேஷ கவலைகாட்டி கவுன்ஸில் முறைபாரம்பித்தவுடன் விவாதித்து முடிவுக்கு வரவேண்டுகிறோம்.

ஓய்ஞ்சுதடா அப்பா!

திரையும் விழுந்தது; நாடகமும் முடிந்தது. நாமஎதிர்பார்த்தபடியே டாக்டர்டுகல் வெற்றியுற்றார். அவரது வாலைப்பிடித்துக் கொண்டிருந்த ஸ்ரீமான் ஹரிகிருஷ்ண பிள்ளையும் அவருக்குக் கீழ் தொங்குகிறார். தமிழ் வாக்காளர்கள் தங்கள் தலைமீது கிடந்த கடமையை சரியாகவே செய்துவிட்டனர். வழுக்கமாய் வானத்திலிருந்தவரை ஒருபடி இறக்கிவிடவே செய்தனர். அடுத்த தேர்தலில் இன்னும் இடுப்பிலிருந்து கீழேயிறக்கி "போய்வாப்பா! உன் ஜோலியைப் பார்த்துக்கொள்" என்று வழிகாட்டிவிடுவது நிச்சயம். அது கிடக்கட்டும் பின்னால் பேசுவேண்டியபேச்சு. இப்பொழுதைய விஷயத்தை யெடுத்துக்கொள்ளுவோம். இதுவரை தமக்குத்தாமே 144 வாய்ப்பூட்டுச் சட்டம் போட்டிருந்ததை வாபீஸ் வாங்கிக் கொண்டு வாய்திறந்து பேசட்டும். தமது சொந்த அலுவல்களில் உபயோகிக்கும் அந்தப் பொன் வாய்திறந்து பொதுக்காரியத்தில் தலைகீழாயேன் இறங்கிவிடக் கூடாது? அந்தப்பாபத்தைச் செய்யலாகாதென்ற கருத்தா? வேறேதேனுமுண்டா? எடுத்துக் காட்டாய் நிற்கும் ஸ்ரீ. வெங்கிடசாமியிடமாவது பாடங் கற்கட்டுமே? இதனாலெல்லாம் அந்தஸ்துக் குறைந்துவிட மாட்டாதென்னும் ஜாமீன் வேண்டுமானாலும் தருகிறோம்.

ஸ்ரீமான் தம்பியில்லாத நகரசபையும் நகரசபையாமா? ஏற்கனவே அவரால் தயாரிக்கப்பட்டிருக்கும் பல திட்டங்களை யினிமேல் எவன் எடுத்தாளப்போகிறான்? ஒரே யொருவனை மாத்திரம் நம்பலாம். அவன்தான் அவற்றை நிறைவேற்ற அருகதையுடையவன். திரு டங்காலியின் தலையிலே பொறுப்பு விழுந்திருக்கிறது. அவரும் அனேகமாய் நம்மை ஏமாறச் செய்து விடமாட்டார். ஒப்பந்தப்படி ஒரு இந்தியனே இவ்வருடம் மேயர் மேடையில் வீற்றிருக்கவேண்டியவன். இதுவரை இரு முஸ்லிம் கனவான்கள் அப்பதவியில் அமர்ந்திருந்தனர் இனிமேல் வரவேண்டியது இந்துவின் முறை. அப்படியானால் டாக்டர் டுகலைத்தவிர வேறுயார் பெயரைப் பிரஸ்தாபிக்கலாம்? இவர்கள் போட்டி போடாமல்—குண்டுசட்டிக்குள் குதிரை யோட்டிவிடாமல் முடிவுசெய்வதே முறை. இதைத்தவிர்த்து இரண்டுபண்ணிவிடவேண்டாம். கூத்தாடிகள் குதுகலங்கொண்டாடப் போகிறார்கள். ஜாக்கிரதை.

துருதுருத்த கை

இனிமேல் எழுதப் போகிறோமா? இல்லையென்று எழுதும்படி பேறப்பட்டாலும் ஒருதாம் இருதாம் சந்தர்ப்பம் கிடைத்தாலும் போச்சு, இல்லாவிட்டாலும் இல்லை, சந்தேகம் என்னத்திற்கு? துருதுருத்த கைசலிக்க எழுதித்தான் தீருவோமே. ஆயிரம் இருந்தாலும் நம்ம மேஜையில்லையா? நம்ம வாங்கியிருந்த கோயிலல்லவா?

நேற்றுத்தான் வட்டமேஜைக்குச் சீட்டுக்கிழித்திருப்பார்கள். நேற்றுத்தான் வட்டமேஜையின ஓலையை எருமைமாடு மேய்ந்துவிட்டிருக்கும். செத்தபிணத்துக்கு வாய்க்கரிசிபோடுவதென்று ஒரு சம்பிரதாயம் உண்டே! அந்த மாதிரி வட்டமேஜைப் பிரதிநிதிகளெல்லாம் அவரவர்கள் கொண்ட மதிப்புரையைக் கூறிவிட்டார்கள். பிரிட்டிஷ் பத்திரிகைகள் முழுதும் அதன் அபிப்பிராயத்தை எழுதிவிட்டன. டோரிப் பத்திரிகைகள் "காந்தி இன்னுமா இங்கிலாந்திலிருக்கிறான்?" என்றும்கேட்டுவிட்டன. உளறவாயன் சர்ச்சிலும் அமெரிக்காவுக்கு இந்தியர்கள மீது வசைபுராணம்பாடி 1,35,000 ரூபாய் சம்பாதிக்கப் போகிறவன்காந்திஜீ சனிக்கிழமை வரை லண்டனிலிருக்கப் போகிறாரென்று கேள்விப்பட்டு எங்கே மக்டனல்ட காந்திஜீக்கு சுயராஜ்யத்தைத் தூக்கிக் கொடுத்துவிடுவானோ வென்று காத்துக் கொண்டிருக்கிறான். இவனுக்கு எது போனாலும், என்ன தொலைந்தாலும் அக்கரையில்லை. இந்தியா மாத்திரம் சாச்வதமாய் இங்கிலாந்தின் கீழிருக்கவேண்டும். அதுதான் ஓயாத கவலை. கானடா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா இதுகளெல்லாம் போனாலும் போகிறது. இந்தியா மாத்திர மிருந்தால் போதுமடா ஆண்டவனே! என்று பிரார்த்திக்கிறான். குடியேற்ற நாட்டந்தஸ்தளிக்கப் பட்டிருந்த நாடுகளையெலலாம் பிரிட்டனுடன் சம அந்தஸ்தில் வைக்க வேண்டுமென்று பார்லிமெண்டில் வெஸ்ட்மினிஸ்டர் மசோதா வென்றொரு மசோதாவைக் கொண்டுவந்த போது கூட சர்ச்சில் "இம்மசோதாவைக்கண்டு இந்தியாவும் சுயராஜ்யம் கேட்டுவிடா விட்டால், நான் இம் மசோதாவை ஆதரிக்கிறேன்" என்றான். இந்த வள்ளல்களா இந்தியாவுக்கு பொறுப்பாட்சியளித்துவிடுவார்கள்? நமக்கு நாமே சுயராஜ்யம் வாங்கினால்தான் முடியும்.

ஆட்டுத்தலையா! வெளியே போ!

ஆட்டுத்தலை யென்றால் என்னமோ வென்றெண்ணிவிடாதீர்கள். நமக்கு வடமொழிகொஞ்சம் அழுத்தம் திருத்தமாய் வராது. ஆங்கிலத்திலும் "ஹா" வைச் சரியாய் உச்சரிக்கத் தெரிகிறதில்லை அதனாலேதான் ஹாட்டு (ஐரோப்பியத்தொப்பி) என்பதை ஆட்டு என்று எழுதநேர்ந்தது. இதனாலே வெள்ளாட்டுத்தலை செம்மரி யாட்டுத்தலை யென்று தப்பர்த்தஞ் செய்துவிடக் கூடாதெனக் கேட்டுக்கொண்டு கதையை நடத்துகிறோம். ஆட்டுத்தலைகாரர்களும் கோபித்துக்கொள்ளக்கூடாது

"கோவா" என்றொரு ஊர் இந்தியாவின் மேலக்கரையிலிருக்கிறதல்லவா? அங்கேகாந்திக்குல்லாய்க்கும் ஐரோப்பிய ஆட்டுக்கும் ஒருபோட்டிநடந்தது. அதன் முடிவைச்சொல்லும்வரை உங்களை அதிக நேரம் ஆத்திரத்துடன் காத்திருக்க வைக்கலாமா? முதலிலேயே சொல்லிவிட்டு நடந்ததைக் கூறுகிறேன். அந்தச்சண்டையில் காந்திக் குல்லாய் ஜெயித்துவிட்டது; ஆட்டுத்தலை தோற்றுப் போயிற்று. இப்படித்தான் சுதந்திரச் சண்டையும்.

டவுன் ஹாலிலே நகரசபைத் தேர்தல் பரிசோதனை நடந்து கொண்டிருந்தது. ஜில்லாக் கமிஷனருமிருந்தார். ஒருஆட்டுத்தலை ஆசாமி உள்ளே நுழைந்தார். சோதனைக் கழகத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தரொருவர் தொப்பியைக் கழற்றச் சொன்னார். "இது பொது இடம். எல்லோருக்கும் உபயோகிக்க உரிமையுண்டு" என்றார். அதற்கு அதிகாரி "உனக்கு உரிமையுண்டு அதை நான் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால உன்னுடைய தொப்பிக்கு இங்கே நுழைய உரிமையில்லை யாது தெரியுமா? என்று விட்டார். அவ்வளவுதான் ஓட்டமாயோடி ஒரு காந்திக் குல்லாவைப போட்டுக்கொண்டுபோய் இதோ நானே காந்தித்தொப்பி போட்டிருக்கிறேன். அதிகாரிகளில் எவனுக்காவது இதில் கைவைக்க நெஞ்சழுத்த மிருக்கிறதா? பார்க்கிறேன் எல்லோரும் ஆச்சரிய மடைந்தனர்; வாழ்த்தினர். எப்படியொரு யூதத் தொப்பியை கௌரவிப்பார்களோ அப்படி காந்தித் தொப்பிக்கு மரியாதை யளித்தார்கள் இதைக் காந்திக் குல்லாய்க்கு எத்தனை துணிச்சல். பார்லிமெண்டுக்குள்ளும் நுழைந்ததல்லவா? சிங்கக்குகைக்குள் நுழைந்து போராடிய வீரம் இல்லாது போகுமா?

குறட்டைவிட்ட புருஷன் வேண்டாம்

ஒருவனுக்குப் பெண்ஜாதி பிடிக்காவிட்டாலும், பெண்ஜாதிக்கு புருஷன் பிடிக்காவிட்டாலும், விவாகரத்துச் செய்துகொள்ளுவது மேனாட்டில் பலாச்சுளை விழுங்கியமாதிரி. இதுசம்பந்தமான கதைகள் ஏராளமாய்க்கேட்டு காதுகள் குத்தலெடுத்து விட்டன. என்றாலும் நாம் சொல்லப்போகும் இந்த விவாகரத்தில் கொஞ்சம் ரசமிருக்கிறது. இல்லாவிட்டால் உங்கள் காதுக்குள் இதைப்போடலாமா?

புருஷன் கொஞ்சம் நித்திரைப் பிரியன். இரவில் அவன் தூங்கும்போது எலிகள் தொந்தரவேயிராது. ஏழுவீடு கேட்கும்படி குறட்டைவிடுவான். இது பெண்சாதிக்குப் பிடிக்கவில்லை. இரவெல்லாம் புலிஉறுமுவது போல குறட்டை போடுவதால் அந்த அம்மாளுக்குத் தூக்கமே கிடையாதாம். உடனே கோர்ட்டிலே வழக்குத் தொடுத்துவிட்டாள். விவாகபந்தனத்தை ரத்துச்செய்து விட வேண்டுமென்று மனுச்செய்து கொண்டதுடன் மானநஷ்டத்துக்கும் தாவாச் செய்தாள். நீதிபதி முதலில் ராஜிசெய்துவிடப் பார்த்தார். "நீயேன் தனியறையில் படுத்துக் கொள்ளக்கூடாது?" என்று கேட்டார். அதற்கு அந்த ஆங்கில அம்மாள் "நீங்கள்புருஷன் பெண்டாட்டியாகக் குடித்தனம் செய்கிறீர்களே! இப்படித்தானா வழக்கம்?' என்று கேட்டுவிட்டு "குறட்டை போடும் புருஷனே எனக்கு வேண்டாம்" என்றாள். அவளுக்காக ஆஜரான வக்கீல் "எககாளம் ஊதியது போல் குறட்டையிட்டால் என்னமாய்த்தூங்குகிறது? தூங்காவிட்டால் என்னபாய் உயிர் வாழுகிறது? இதனால் இவர்குறட்டைபோடுவது கொலைசெய்யமுயபற்சித்தகுற்றமல்லவா?என்றுவாதாடினார். அப்படியானால் தும்மினால் மூக்கையறுப்பேன் என்று விளையாட்டாக நம்மவர் குழந்தைகளைச் சொல்லுவதும் கொலை செய்து விடுவதாகப் பயமுறுத்திய குற்றமாகுமல்லவா? குறட்டையிடுவோரே! உஷார். உங்களது குறட்டையால் நீங்கள் பிரியமாய் நேசிக்கும் மனைவியை—உங்களுக்கு ஒருத்தியிருந்தால்—பிரிந்துவிடும். இல்லாதிருந்தால் நீங்கள் ஒருத்தியைக் கட்டுவதற்கு முன்னால் இரண்டுதரம் ஆலோசித்து அல்லது அவளிடத்தில் குறட்டை பிடிக்குமா? என்றுகேளுங்கள். தாலாட்டிய மாதிரியிருக்கும். நன்றாய்த் தூங்குவேன்!என்றவள்சொன்னால்மாத்திரம்போனாற்போகிறதுகட்டிக்கொள்ளுங்கள்

பத்திரிகைத் திருடர்கள்.

உலகத்தில் எத்தனையோ ரகம் திருடர்களிருக்கிறார்கள். அவர்களெல்லாம் இந்தப் பத்திரிகைத்திருடர்களைபோல் பஹிரங்கமாகவும் கௌரவமாகவும்திருட மாட்டார்கள். இதுஒரு கௌரவமான திருட்டு.

"பத்திரிகாலயம் ஒரு நரகம். ஆனால் வெளிவரும் பத்திரிகைகள் கற்பகத்தருப் போன்றவை' என்றார் ஓர் ஆங்கிலமேதாவி, அவ்வளவு கஷ்டப்பட்டுப் பத்திரிகையைஅச்சடித்து பத்திரிகாசிரியர்கள் வெளியிலனுப்புகிறார்கள். தபால் பெட்டியில் விழும்வரை திருட்டு நடக்கிறதில்லை. அப்புறம் அப்பத்திரிகை விலாசதாருக்கு வினியோகிக்கப்படாமல் விற்கப்பட்டாகிறது. அது ஒரு திருட்டு. இன்னொரு திருட்டுத்தான் வெகு வேடிக்கையானது. தோலிருக்கச் சுளைவிழுங்குகிற திருட்டு இது. பத்திரிகை விற்கிற இடத்துக்குப் போகிறதும் பக்கம் பக்கமாய் படிக்கிறதும் எல்லாம் படித்து முடிந்ததும் மரியாதையாய் பத்திரிகையை வாங்காமலே நழுவிவிடுகிறது. ஒரு காசு இரண்டுகாசு இல்லை மிஞ்சிப்போனால் ஓரணா இரண்டணா. விற்பனைக்காரர்கள் திருட்டுவேறு. இத்திருட்டு இரங்கோனில்ரொம்ப மலிந்து விட்டது. ஏனெனில் குபேரன் பட்டணமல்லவா? தோட்டத்திலே பாதி கிணறு என்ற மாதிரி சரிபாதி கமிஷன் விற்பனைக்காரர்கள் வாங்கிக் கொள்ளுகிறார்கள் அதற்குமேல் திருட்டுத் தனமாய்ச் சம்பாதிப்பது வேறே இலாபம். பத்திரிகைகளை வாசகருக்கு பாதிவிலைக்குப் படிக்கக்கொடுக்கிறது. படித்து முடிந்ததும் அதே பிரதியை இன்னொருவருக்குப்படிக்கக் கொடுக்கிறது இம்மாதிரி ஒருபத்திரிகையால் பத்து இருபது பத்திரிகையின் விலையைத் தட்டிக்கொள்ளுவது. இதைத் தடுப்பதற்காகப் பத்திரிகையில் காகிதப் பூட்டுப் போட்டுவிட்டால் அதையும் சர்க்கார் தேசீயவாதிகளின் கடிதத்தை திருட்டுத்தனமாய் உடைத்துப் பார்ப்பதுபோலத் தண்ணீரில் நனைத்து மெதுவாக பிரித்துப்படித்துவிட்டு முன்னிருந்ததுபோல ஒட்டிக் கொடுத்துவிடுவது. இந்தமாதிரி யெல்லாம் திருட்டுகள் நடப்பதாலேதான் பத்திரிகைகள் அநேகம் காலூன்றி நிற்கமாட்டாமல் விழுந்து விடுகின்றன. இதைக் கண்டுபிடிக்க பத்திரிகைச் சொந்தக்காரர்களெல்லாம் சேர்ந்து உளவுபார்க்கும் வேட்டைநாய்களையேவி மோப்பம் பிடிக்கச் செய்யலாமா?

Printed & Published By A. V. Sellan Pillay at the Desopakari Press, 210, 36th Street, Rangoon.

பதிவு எண் 245 மலர் 9. இதழ் 37. அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை

DESOPAKARI

புதன், ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி, இரங்கோன், (6—12—31) கார்த்திகைமீ 21உ ஞாயிற்றுக்கிழமை

நாய்ச் சர்ச்சில் உளறிக் கொட்டல்.

சாலவு மஞ்சு தரும்-கெட்ட
சதிக் குணத்தார் பல மாயம் வல்லோர்
கோல நற் சபை தனிலே—வந்து
கொக்கரித்தார்ப் பரித்திருந்தனரால்.
ஃ ஃ ஃ
பேராசை கொண்டு பிழைச் செய்கள்
செய்கின்றார்
வாராதவன் கொடுமை மாவிபத்து வந்துவிடும்;
—கவியரசன்.

ஓநாய்ச் சர்ச்சில் உளறிக் கொட்டுகிறான்.

இந்தியா வட்டமேஜைப் பேச்சுப் போய்விட்டது. பத்திரிகாசிரியர்களின் பேனாக்குச் சிறிது ஓய்வு கிடைக்குமென்றெண்ணினோம்: இடையிலே இன்னொரு சனியன் வந்து விழுந்துவிட்டது. பர்மா வட்டமேஜை ஒரு குட்டிமேஜைதான். அதற்காக அதிக மை செலவாகிவிடாது. பிரிவினைப் பிரச்னை தீர்ந்துவிட்டதாக வைத்துக் கொண்டு பேசவேண்டுமென பீல் பிரபு பீடிகை போட்டுவிட்டதால் தாராவடி வைப்பு கூறுகிறபடி இரண்டு மூன்று நாட்களில் முடிந்து போகலாம். அதைப்பற்றியேன் அடித்துக் கொள்ளவேண்டும்? வேறு ஏதாவது பேசவேண்டியதிருக்கிறதாவென்று பார்த்தால் காமன்ஸ் சபையில் மந்திரிமார்கள் பாரதம் படிக்கிறார்களே அதுவொன்று தான் முக்கியமானது. வழ வழ வென்று பேசுகிறார்கள். மெக்டனால்டு மகானுபவர் இந்தியாவுக்கு சுயராஜ்யத்தை ஓட்டைக் கப்பலில்ஏற்றியேற்றியனுப்பி விட்டாரென்று கடுவாய்கள் சீறிச் சீறி விழுகின்றன. இந்தியாவைப் பிடித்து நட்டமே நிறுத்த வந்திருக்கிறாரே சர்ர் ஹோர், அவர் அனுமான் விசுவரூபங் காட்டியதுபோல தனது உண்மை சொரூபத்தைஅப்படியே அப்பட்டமாகக் காட்டிவிட்டார். "பெரியமந்திரிபேச்சுக்கு மதிப்புக் கொடுக்கலாம். ஜனவரியில் அவர்செய்துகொடுத்த சத்தியப்பிரமாணத்தைக் காப்பாற்றலாம் ஆனால்ஜாமீன் (நிபந்தனை) வேணும்." என்கிறார். நமது நாட்டை நம்மிடம் ஒப்படைக்க யார் யாருக்கு ஜாமீன் கொடுக்கிறது? எல்லாம் ஆண்டிகள் கூடி மடங்கட்டியது மாதிரிஇருக்கிறதே யொழிய உண்மையில் விவகாரலட்சணமா காரியமாயில்லை இந்த நிலைமையில் இன்னொன்று பம்பை விரித்தாடப் புறப்பட்டு விட்டது. ஹோர் உடுக்கடிக்க சர்ச்சில் பேயாட அடடா! நமக்கெல்லாம் ஒரு இலவசச் சீட்டுக்கிடைத்திருந்தால் என்ன அழகாய்—சட்டமாய் உட்கார்ந்து கண்குளிரக் கண்டுகளித்திருக்கலாமே! சாம்பிராணி கூடத்தாராளமாய்ப் போட்டிருக்கலாம். ஆனால் அந்த அதிர்ஷ்டம் நமக்கு வருமா? வடிகட்டி யெடுத்த சர்ச்சிலுக்கும் அவன் தம்பி ஹோருக்கும் நல்லஜோடியல்லவா? இரண்டுங் கூடிவிட்டால் என்னமாய் உருப்படும்?

ஏக கூட்டமாயிருந்த ஒரு சபையில் ஒரு திருத்தப் பிரேரேபணையைக் கொண்டு போகும்போதே சர்ச்சில் "இந்தியாவுக்கு எல்லாம்வழங்கவே கொடுத்து விட்டோமே போதாதென்றடித்துக் கொண்டால் யார் கொட்டிக்

கொடுக்கிறது?" என்று மந்திரிகளை கேட்கிறான். உலகமஹாயுத்தம் நடந்தபோது 1,40,000 இந்திய ஆடுகளைப் பலிவாங்கிக் கொண்டு 1,500 கோடி ரூபாய் உண்டியல் பணமோ, தோப்பராப்பணமோ வாங்கிக் கொண்டு இந்தியாவுக்கு ஏகாதிபத்திய மகாநாட்டிலும், சமாதான மகாநாட்டிலும் பிரதிநிதித்துவமளித்து குடியேற்ற நாட்டந்தஸ்துக் கொடுத்துவிடவில்லையா? இன்னுமென்ன கொடுக்கப் போகிறீர்கள்? வேண்டாம் வேண்டாம். கொடுத்தது போதும்" என்று சொல்லி மக்டொனல்டு கையைப் பிடித்துக் கொண்டான். அப்புறம் அங்கிருந்தவர்களெல்லாம் சொன்னதின் மேல் ஏதோ தயவு பிறந்து "போனாற் போகிறது சைமன் மகரிஷியவாள் சொன்னார்களே அந்த அந்தஸ்தை கொடுங்கள் இல்லையென்று உங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு ஏதாவது கூடுதலாகக் கொடுத்துவிட்டால் அவ்வளவு தான். அதை விட தடிக்கம்பைக் கொடுத்துவிடலாம். ஒருவனோடொருவன் மயிரைப் பிடித்து மண்டையை யுடைத்துக் கொண்டு செத்துப்போவார்கள்" என்றழுதுகிறான். என்னடாப்பா! இரக்கம்! இவ்வளவு தூரம் சர்ச்சிலுக்கு இரக்கம் உதயமாகிவிட்டால் நிச்சயமாய்—சீக்கிரத்தில் இந்தியா சுயராஜ்யம் பெற்று விடுவதில் சந்தேகமா? அப்புறம் இந்தியாவில் மனிதப்பூண்டு இருக்கிறதா? இல்லை ஒன்றோடொன்று அடித்துக் கொண்டு செத்துத் தொலைந்து போகிறதா? என்பதை அவனே அவன் பிழைக்கண்ணால் பார்த்துக் கொள்ளட்டும்.

நிற்க, இந்தத்திருத்தத்தைக் கொண்டுவந்தானோ இல்லையோ சர்ச்சில் அப்படியே அதைத் தலையிலடித்து "போ கழுதை!" யென்று வாலிலே ஓலையைக் கட்டித் துரத்திவிட்டார்கள். மத்தளக்காரன் மத்தளத்தைப் பிடுங்கிக் கொண்டான். நெளித்த குண்டி நெளித்தாப் போலும் இஞ்சி தின்ற குரங்கு போலும் சர்ச்சில் உட்கார்ந்து விட்டான்; நாவடக்கப்பட்டாயிற்று. மாக்டொனல்டு கொண்டுபோன வெள்ளைக்காகிதத்தின் கதி என்னாயிற்று? அது வெள்ளைக் காகிதமாகவே தானிருக்கிறது. என்ன மூளை! இருந்திருந்து இந்தியா விஷயமான மசோதாவுக்கு "வெள்ளைக்காகித" மென்று பேர்வைத்தார்களே! வேறுபேர் கிடைக்கவில்லையா? பேரிலிருந்தே தம்பிகளின் வள்ளல் தெரியவில்லையா? இந்தியா விஷயத்தில் அவர்கள் மனது சுத்த வெள்ளையாகவே யிருக்கிறது. வெள்ளையர்களில்லையா? எல்லாம் வெள்ளையாய்த் தானே யிருக்கமுடியும்!

கள்ளரக்கனும் போலீஸ பக்கபலமும்

நாம் இங்கே எழுதுவதெல்லாம் போலீஸ் ரிப்போர்ட்டுகளிலிருந்து தமிழ் நாட்டுத் தலைவர் ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரவர்கள் பொறுக்கி யெடுத்து "யங் இந்தியா" பத்திரிகையில் தலையங்கத்தில் எழுதியிருப்பவை. அவற்றிற்கு அவையே பேசிக் கொள்ளட்டும். நம்முடைய வியாக்கியானம் வேண்டாம்.

"இக்கிராமவாசிகளெல்லாம் மது வியாபாரத்திற்கு விரோதமாயிருக்கிறார்கள். குடிக்கக் கூடாதென்று சமூகத்தலைவர்களனைவரும் சமூகக் கட்டுப்பாடு செய்து வருகிறார்கள். அவர்களிடத்திலிருந்து ஜாமீன் பெற்றோ அல்லது வசப்படுத்தியோ ஆகவேண்டும். ஜனங்களின் நன்னடத்தையைக் கெடுப்பதற்காக துப்பாக்கிப் போலீஸ்காரர் சிலரை அனுப்பி வையுங்கள். முத்திரை போடுவதற்கு எவனுமே மரங்கொடுக்க மாட்டேனென்கிறான். லோக்கல் போர்டில் சில மரங்களை ஏற்பாடு செய்யுங்கள். கிராமத்தாரனைவரும் ஒன்றுசேர்ந்து கொண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பாரைக் கூடக் குடிக்கவிடுகிறார்களில்லை. அவர்களை இந்தப்பாதிரி அடக்கியாளுவதினின்றும் விடுவிக்க வேண்டும்"

ஃ ஃ ஃ

"இக்கிராமத் தலைவர்களெல்லாம் ஏகமாய்க் கூடிக்கொண்டு இவ்வருஷத்தில் இங்கே கள்ளுச்சாராயக் கடைகளைத் திறந்துவைக்கவிடாமல் செய்து வருகின்றனர். எல்லோருமே ஏலங்கேட்க மறுத்துவிட்டார்கள். பழைய ஏலதார் கூட அடுத்தடுத்த கிராமத்தார்களால் தடைப்படுத்தப்படுகிறான். அவனும் ஏலமெடுக்கமாட்டான் போலிருக்கிறது. வேறே எங்கிருந்தாவது இரகசியமாய் ஒருவனை ஏற்பாடு செய்ய வேண்டும். வேண்டியிருந்தால் அவனுக்குப் போலீஸ் பந்தோபஸ்தும் அளிக்கவேண்டும் சமூக பஹிஷ்காரஞ் செய்தால் அவனுக்கு உதவி செய்யும்படி கிராமாதிகாரிகளுக்கு உத்திரவு போடுங்கள்"

ஃ ஃ ஃ

"இக்கிராமாதிகாரி சர்க்காருக்கு விரோதமாயிருக்கிறான். அவனே கள்ளுக்கு மரம் விட

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

ஏன் செய்யக்கூடாது?

நமக்கும் இரங்கோன் பொது ஜன வாழ்க்கைக்கும் நெடுநாள் ஒட்டுண்டடு? அதைப்பற்றிப் பேசாவிட்டால் நாம் நன்றி கெட்டவராகி விடமாட்டோமா? பல சங்கங்கள் தோன்றின. சில தோன்றி மறைந்தன. வேறு சில செத்தே பிறந்தன. இன்னும் சில ஜீவிதம் பெற்றிருக்கின்றன. இவற்றுள் இல்லாதவை பற்றிப் பேச்சில்லை. இருப்பன பற்றிச் சிறிது பார்ப்போம். சோலியா முஸ்லிம் அஸோஸியேஷன், சத்திசிவானந்த சபை, வாணிவிலாஸ சடா, யாதவ வாலிபசங்கம் முதலிய சில சங்கங்கள் உருப்படியாகச் சில வேலைகள் செய்து வருகின்றன, சமூகசம்பந்தமாக மட்டுமமைந்து விடாது பொது ஜன சேவைகளிலுமிறங்கிப் பொதுக் கூட்டங்கள் கூட்டி அறிவு, அரசியல் வளர்ச்சிக்கான வேலைகள் செய்து வருவதை இரங்கோன் வாசிகள் மறந்து விட முடியுமா? அவைகளுக்கு நாமெல்லோரும் நமது கடமையைச் செலுத்திக் கொள்ளுவோம். இன்னொரு துறையிலும் நமக்காக இவைகளை உழைக்கும்படி கேட்டுக்கொள்ள நமக்கு சர்வ உரிமையுமுண்டு. கப்பலடித்தொல்லைகள் இவைகளறிந்ததே. பிரயாணிகளின் கஷ்ட நிவாரணத்திற்கென்றே "பர்மா சமூக ஊழியர் சங்கம்' பத்தாண்டுகளுக்கு முன்னர் பாடுபட்டு வந்து ஙகமேற்பலனையும் காட்டிற்று. நமது பல துரதிருஷ்டங்களிலொன்றாய் அச் சங்கமும் இப்பொழுதில்லை. ஆனால் அது செய்த சேவை நமக்கெல்லாம் ஞாபகத்திலிருக்கின்றது. அச்சேவையை இச் சங்கங்களும மேற்கொண்டு நமது தென்னிந்தியப் பிரயாணிகளின் கஷ்டத்தை நிவர்த்திக்கலாகாதா வென்று கேட்கின்றோம். நமது துறைமுகத்தைத் தொடும், விடும் ஒவ்வொரு கப்பல்களுக்கும் இவர்கள் தங்களுக்கென தனித்த தொண்டர்படை தயாரித்து அவர்களைக்கொண்டு, பொது ஜன சேவை செய்யலாம். முன்னிருந்தது போல் இப்போதும் இந்த உரிமையை கப்பல் கம்பெனியாரிடமிருந்து அடையவும் முடியும். அது அத்தனை பிரமாதமல்ல. சேவை செய்ய முன்வருவதுதான் பிரமாதம். இதற்கென கம்பெனியாரின் ஆட்களும் சர்க்காரின் உதவி இரக்ஷகரும் இருக்கிறார்களே! யென்று கேட்கலாம். ஆனால் அவர்களால் சாதிக்க முடியாத பல நன்மைகளை நம்மால் சாதிக்கமுடியும். முதலாவதாக கூலிக்காரர்கள் தொந்தரவை யெடுத்துக் கொள்ளுவோம். நமது மூட்டை முடிச்சுகளை-இருந்ததோ-இல்லையோ-கப்பலில் சேர்ப்பதற்கும் இறக்குவதற்கும் சேர்த்தே நாம் டிக்கெட் வாங்குகிறோம். கம்பெனிக் கூலிகளுக்குப் பிரத்தியேகமாக நாமொன்றும் கொடுக்கத்தேவையில்லை. இவ்விஷயத்தை யறிவிக்க விளம்பரப்பலகைகளும் கப்பலருகில் காணப்படுகின்றன. இதையறியாமலே அநேகர் கூலிக்காரர்களுக்குப் பணங் கொடுப்பதுடன் கட்டாயப்படுத்தி வசூலிக்கவும் படுகின்றனர். இது கண்டிப்பாய்த் தடுக்கப்படவேண்டிய விஷயம். உதவிரக்ஷகருக்கும் கம்பெனி ஆட்களுக்கும் இதைகவனிக்கப் போதிய அவகாச மிருக்க முடியாது. நமது தொண்டர்களாயிருந்தால இதுபற்றி கண்குத்திப் பாம்புபோன்று கவனித்து அதிகாரிகளின் பார்வைபடச் செய்து நியாயம் வழங்கலாம்

இரண்டாவதாக போலீஸ்காரர்களும் கம்பெனித்தரவாகளும் செய்யும் சிற்சில சில்லரை சேஷ்டைகளை கண்டிக்கவும் தடுக்கவும் கூடும். இவ்வீரர்கள் நமது சேவகர்களென்பதை அவ்வப்போது உணர்த்தி நம்மவர்களை நன்முறையில் கௌரவமாக நடக்கும்படியும் செய்விக்கலாம், நமது வரிப்பணத்திலிருந்து சம்பளம் பெற்று நமக்காக சேவை செய்யும் சேவகன் தனது கடமையை நிறைவேற்ற இரண்டொரு அனு நீட்டப்படும் வழக்கமும் நிவர்த்தியாகும். இதனால் நம்மவர்க்கும் நமது சேவகர்களுக்கும் கடமையின் பாடத்தைக்கற்பித்த பெருமையுங்கிடைக்கும்.

மூன்றாவதாக ஜன நெருக்கடி காலங்களில் "டிக்கெட்டுகள்" அதிக கிராக்கி விலைக்கு விற்கப்படுவதை நாமெல்லோரும் நன்கறிவோம். அந்தீச்செயலை அறவே யொழித்து விடுவது முடியாதாயினும் ஒரு சிறிதேனும்நன்மை யேற்படும்படி செய்யலாம்.

இவையனைத்தையும் செய்வதற்கு தொண்டர் படை தயார் செய்து தீவிரவேலை செய்து வரும் மேற்காட்டிய சங்கங்கள் முன்வரவேண்டும். அவைகளிடத்திலே தான் இவ்வுதவியைக் கேட்க நமக்கு உரிமையுண்டு. அவைகள் தாம் காரிய சித்தியும்காணலாம். இருந்தும் வெறும் பெயர்ப்பலகையில் தொங்கிக் கிடக்கும் சென்னை இந்து அஸோஸியேஷனைக் கேட்கலாமா? இல்லை நாம் தான் கேட்போமா? அதன் ஜீவிய

வட்டமேஜை வரவு செலவு.

வட்டமேஜையை கடையைக்கட்டியபோது இந்தியாவும் பிரிட்டனும் ஒன்றுக்கொன்று தாராளமாய்க் கொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கூறினர். அவர் நல்லெண்ணத்துடன் ஹிருதய பூர்வமாக இந்தியாவின் கோரிக்கைகள் எவ்வித முணு முணுப்பு மின்றி பிசிறித்தனங் காட்டப்படாமல் பூர்த்திசெய்யப் படவேண்டுமென்றார்; இவ்விடத்தில் நாம் இந்தியாவின் கோரிக்கைகள் என்றதை காங்கிரஸின்—காந்திஜீயின் கோரிக்கைகள் என்று அர்த்தம் செய்துகொள்ளும்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். திரு. பென்னின வேண்டுகோளின்படியோ அல்லது அதற்கு எதிர்மாறாகவோ நமக்கு பிரிட்டிஷார் கொடுத்தவையென்ன? நாமடைந்த லாபம் எவ்வளவு? என்று கணக்குப்பார்த்து விடுவோம்

1. பொறுப்பில்லாத மாகாண சுயாட்சி. அதுவும் பிரதிநிதிகள் ஆக்ஷேபித்ததால் இப்பொழுதில்லை பின்னால் கொடுக்கப்படும்.

2. பொறுப்பாட்சி. இதைப்பற்றி யோஜிக்கப் போகிறார்கள்.

3. நாலு கமிட்டிகள்.

(அ) நேர்முகமாகயில்லை வைஸிராய் மூலமாக சர்க்கார் கலந்தாலோசிக்க ஒருகமிட்டி

(ஆ) வரவு செலவுக் கணக்குப் பார்க்க ஒரு கமிட்டி.

(இ) வாக்குரிமையை வரையறுக்க ஒரு கமிட்டி.

(ஈ) சமஸ்தான மன்னர்கள் சம்மந்தமாக ஒரு கமிட்டி.

4 மூன்றாவது வட்டமேஜை

காந்திஜீ பெற்றலாபம்.

1. ஆட்களில் நாலுபேர்:—

(அ) இர்வின பிரபு.

(ஆ) தளபதி ஸ்மட்ஸ.

(இ) ஸர் ஹெர்பர்ட் சாமுவேல்.

(ஈ) திரு. பென்.

2. இங்கிலாந்தின் குழந்தைகள்.

3. "காந்தி மாமா" என்ற பட்டம்.

4. "காந்தி ஆடு" "காந்தி முயல்"

5. லங்காஷயர் தொழிலாளிகள்.

6. உலகத்தின் நன்மதிப்பு.

7. உண்மை இந்தியாவை இங்கிலாந்து மக்களுக்கு எடுத்துக் கூறிய சந்தர்ப்பம்.

8. கப்பலோட்டக் கற்றுக்கொண்டது.

9. சட்டமறுப்பியக்கத்திற்கு உலக ஆதரவு.

இதர பிரதிநிதிகளுக்கு.

1. பத்ரோவுக்கு இந்திய ஆபீஸில் உத்தியோகம்.

2. ஜின்னாவுக்கு இங்கிலாந்தில் வக்கீல் தொழில்.

3. உலக இகழ்ச்சியும் கெட்ட பெயரும்.

4. சர்க்காரின் கிருபா கடாக்ஷம்.

இந்தியா இழந்தது.

1. முதல் வட்டமேஜையில் இந்தியாவின் மாபெருந் தலைவரும் முஸ்லிம் சிங்கமுமான மௌலானாவின் உயிர்.

2. மேஜையொன்றுக்கு சுமார் 7 இலட்சமாக மூன்று மேஜைக்குமாகச் சேர்த்து சுமார் 21 இலட்சம்.

3. கமிட்டி நாலுக்கு எத்தனை பேரை நியமிக்கிறார்களோ எவ்வளவு செலவழிப்பார்களோ இப்போது சொல்ல முடியாது இருந்தாலும் அதில் ஒரு பெருத்த செலவு,

4 இரண்டு மூன்று மாதங்கள் விருதாவில் கழிந்தது.

இவ்வளவெல்லாம் கடைசியில் முன்னிருந்த நிலைமையைவிட வேறு எவ்விதமாற்றமுமடைந்து விடவில்லை. பிரிட்டிஷ் மந்திரிகள் பழைய பாடத்தை ஒப்பித்தார்கள்; காந்திஜீ அவரது பாடத்தைப் படிக்கப்போகிறார் வட்டமேஜை செத்துப்புதைபட்டவுடன் இக்கணக்கை நாம் கூறுவதால் நாம் மயானத்தில் கணக்குப் பார்க்கும் சம்பிரதாயமுண்டே அதுபோலென்று தப்பாகவோ சரியாகவோ நினைத்து விடக்கூடாது. தொகைகள் அதிகம் காணப்படா விட்டாலும் வட்டமேஜையின் உண்மையான வரவு செலவு இவ்வளவுதான்.

அக்கிராசனரின் தூக்கத்தைக் கெடுத்து விடும் பாபத்தைச் செய்யலாமா? இச் சங்கம் தோன்றியநாள் தொட்டு பார்வீதியில் பலகைதொங்கிக் கொண்டிருந்தது. அத்துடன் இலவச வாசகசாலை யென்ற வாலு மிருந்தது. இப்பொழுதோ ஸ்டாக்கேட் ரோட்டில் வாலறுந்து தொங்குகிறது. என்றைக்கும் எதுவையுமே செய்துவிடாத அச்சங்கந்தானெல்லாம் இப்பெரிய காரியத்தைச் சாதிக்க முடியுமா? தனி நபரையலங்கரிக்கப் பிறந்த சங்கம் அது. அதைப்பற்றிப் பேச்சில்லை விட்டுவிடுவோம். ஆனால் உங்களைமாத்திரம் கண்டிப்பாய் சமூகச் சேவை செய்ய வாருங்களென்று அழைக்கின்றோம்.

நீயென்ன சொல்றது நானென்ன கேட்கிறது?

இந்தமாதிரி இந்தியா விஷயமாக ஒருஐரோப்பியனை இன்னொரு ஐரோப்பியர் கேட்டிருந்தால் அதை உங்களுடைய காதுகளிலே போடாமலிருக்கலாமா? கிறிஸ்தவர் அக்ரோயித் என்பவர் கல்கத்தாவிலே ஒரு மிஷன் கலாசாலையிலே ஆசிரியர். சிட்டகாங் அட்டூழியங்களைப்பற்றியும் ஹிஜிலிக் கொடுமைகள் குறித்தும் துண்டுப் பிரசுரங்களெழுதி இவர் இங்கிலாந்திலே பரவும்படி செய்துள்ளார். இதைக் கண்டதும் ஆங்கிலோ இந்தியப் பத்திரிகையொன்று சீறி விழுந்தது. கல்கத்தா ஐரோப்பிய சங்கத்தாரும் துள்ளிக் குதித்தார்கள். "அட படுபாவி! இப்படிப்பண்ணிவிட்டாயே!' என்று சபித்தவுடன் கலாசாலை மேலதிகாரியிடம் கூறி அவ்வாசிரியரை "வேலையில்லை வெளியேபோ" வென்று சொல்லச் சொன்னார்கள். கலாசாலை மேலதிகாரியும் கொஞ்சம் சுயமதிப்பும் ஈர நெஞ்சமுமுள்ளவர். உடனே அவர் அடித்தவாய் அடைத்தது போல் "நீயாரெனக்குச் சொல்ல? நீ சொன்னதைக் கேட்டு நடக்க வேண்டியதில்லை. எனது கலாசாலை ஆசிரியர்களை நீக்கவும் சேர்க்கவும் எனக்குத் தெரியும் கெட் அவுட் (வெளியே போ) டென்று ஒற்றையில் பதில் கூறிவிட்டார். சென்ற மாதம் 16ந் தேதியன்று ஆசிரியர் அக்ரோயத் இங்கிலாந்துக்குப் பயணங்கொண்டு போகிறார்.

ஆசிரியர் அக்ரோயத்துக்கு இன்னும் இருபத்தைந்து வயது பூர்த்தியாகவில்லை நல்ல அறிவாளி. உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர். கன்ஸெர் வேட்டிவ் கொள்கையாளர்.

ஹிஜிலி, சிட்டகாங் சம்பவங்கள் ஒரு இளம் கன்ஸெர் வெட்டிவ் கட்சியாளருக்குப் பிடிக்கவில்லை யென்பது தான் இங்கே கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம். வாலிப இரத்தத்தின் தீவிர வேகத்தில் ஆசிரியர் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளார். உத்தியோகப் பற்றற்ற விசாரணைக் கமிட்டியார் விடுத்துள்ள அறிக்கையையும் இங்கிலாந்தில் காந்திஜியின் அருள்வாக்கையும் படித்தவர்களுக்கு அதிகம் வியாக்கியானம் பண்ண வேண்டாம். காந்திஜீயின் ஐரோப்பாச் சுற்றுப்பிரயாணத்தைத் தடைப்படுத்தி அவசர அவசரமாக அவரை அழைத்துக்கொண்டிருக்கும் அச் சம்பவங்களைப் பற்றி அதிகமேன் பேசவேண்டும்? இத்துடன் நிறுத்தி விடுவோம்.

எவன் பெரியவன்?

கான்ஸடேபிளா? மாஜிஸ்டிரேட்டா?

நம்முடைய நாட்டிலே உத்தியோகம் வகிக்கும் மாஜிஸ்டிரேட் பெரியவனா? போலீஸ் சேவகன் பெரியவனா? என்ற சந்தேகம் ஏற்படுகிறது. 500, 600, 1000 க் கணக்கில் சம்பளம் வாங்குகிறவன் தான் 18 ரூபாய் போலீஸ் சேவகனைவிட உயர்ந்தவன் என்று சீக்கிரம் சொல்லிவிடுவீர்கள். ஆனால் சப்ரா என்ற இடத்தில் நடந்திருக்கும் செய்தியைச் சொன்னால் உங்களுக்கும் இச்சந்தேகம் ஏற்படாது போகாது. சாரன் சதிவழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டு திரு. முக்தானந்தர் ஒரு மாஜிஸ்டிரேட்டின் முன் விசாரணைக்குக் கொண்டுபோகப்பட்டார். மத்தியான சாப்பாட்டுக்காகக் கோர்ட்டுக்கலைந்தபோது மாஜிஸ்டிரேட் முக்தானந்தரைக்காத்துக் கொண்டிருந்த போலீஸ்காரனிடம் முக்தானந்தருக்கு சாப்பாடு கொடுக்கும்படி கூறிச்சென்றார். போலீஸ்காரன் சாப்பாடு கொடுக்கவேயில்லை. ஏனென்று கேட்டதற்கு முக்தானந்தருக்களிக்கப்படும் உணவை ஒரு டாக்டர் சோதனை செய்து சர்டிபிக்கெட்டுக் கொடுத்தாலொழிய அனுமதிக்க முடியாதெனக் கூறிவிட்டான். உணவைச் சோதிக்க ஒரு டாக்டராவது அச்சமயம் அங்குகிடைக்கவில்லை அதனால் முக்தானந்தர் பட்டினியே கிடக்கவேண்டியதாயிற்று. ஒரு போலீஸ்காரன் ஒரு மாஜிஸ்டிரேட்டின் உத்தரவைக் கீழ்படியாமல் எதேச்சாதிகாரமாக வேறொரு உத்திரவைப் போட்டுவிட்டான். இப்பொழுது நீங்களென்ன நினைக்கிறீர்கள்? நமக்கேற்பட்ட சந்தேகம் உங்களுக்கும் ஏற்படுகிறதல்லவா? அத்துடனாவது முடிந்ததா? மாஜிஸ்டிரேட் மறுபடியும் தனது பீடத்திலமர்ந்ததும் விசாரணையைத் தொடர்ந்தார். முக்தானந்தர் வெறும் வயிற்றைக் காட்டினார். மாஜிஸ்டிரேட்டுக்குக் கோபம் வந்து சோறுகொடுக்கச் சொன்னார். போலீஸ்காரப் பயல்களின் ஈரமற்ற நெஞ்சில் முட்டிக்கொண்டு அழுதார். அவன் ஏன் அப்படிச்செய்தானென்று கேட்க மாஜிஸ்டிரேட்டுக்கு நாக்கெழவில்லை. சாயந்திரம் கோர்ட்டுக் கலைந்தபோது முக்தானந்தருக்கு உணவளிக்கப்பட்டது. அந்தச் சோற்றை அவர் சிறைக்குச் சென்று சாப்பிட்டு மிருக்கலாம். தன்னுடைய அதிகாரத்தை அவமதித்த போலீஸ்காரனை மாஜிஸ்டிரேட் ஒன்றுமே செய்யவில்லை.

வெள்ளிக்கிழமை வேண்டாம்.

இரங்கோனுக்கும், சென்னைக்கு மிடையே யோடிக்கொண்டிருக்கும் ஆளேறறிக் கப்பல்களை வெள்ளிக்கிழமை யல்லாது வேறுதினத்தில் விட வேண்டுமென்று சிலதினங்கள்முன் "கெஜட்" பத்திரிகையில்எழுதபபட்டிருந்தது அதில் காட்டப்படும் இரண்டு காரணங்களில் ஒன்றுதான் ஏற்றுக் கொள்ளத்தக்கது. மற்றொன்று இந்துக்களின் இராகுகாலத்தைக் குறிப்பதாலும் இராகுகாலங்கள் நாள்தவறினும் தவறாமல் வெள்ளிக்கிழமை யென்றும் வேறுதினமென்றும் பாராமல் தினந்தோறும் விழுந்துகொண்டிருப்பதால் அதை ஆதாரமற்றபல ஹீனமான காரணமென்று தள்ளிவிட்டோம். அடுத்தகாரணத்திற்குச் சிறிது அஸ்திவாரமிருக்கவே செய்கிறது. அதைப்பற்றிப் பேசத்தான் வேண்டும் முஸ்லிம்களுக்கு வெள்ளிக்கிழமை ஜும்மாத் தொழுகை நாளாகும். இஸ்லாமியதர்மப்படி அவர்கள் அன்று ஒய்வெடுத்து தெய்வசிந்தனையன்றி வேறுவழியில் கழிக்காமல் அப்புனித தினத்தை ஆண்டவன் வழியில் செலவிடவேண்டும். ஆனால் வெள்ளிக்கிழமைக்கப்பலை வேறு தினத்துக்கு மாற்றுவது கெஜட்டில்வியாசம் எழுதிவிடுவதால் மாத்திரம் முடிந்துவிடும்என்று எமக்குத் தோன்றவில்லை. பெரியபிரச்னைகளை சிறுமுயற்சிகளால் சாதித்துவிடமுடியாது. பெரிய முயற்சி யெடுக்கவேண்டும். கப்பல்கம்பெனியுடன் கலந்துமுடிவுகட்டிவிடவும் வழியில்லை. ஏனெனில் சென்னைக்கப்பல் வெறும் ஆட்களையும் மூட்டைகளையும் மாத்திரந்தானா ஏற்றிச் செல்லுகிறது? தபால்கட்டுகளும் அத்துடன் செல்லுகின்றன. அதற்கு கப்பல் கம்பெனியும் கவர்ன்மெண்டும் ஒப்பந்தஞ்செய்துகொண்டிருக்கின்றன. வெள்ளிக்கிழமையில் மெயிலெடுத்து திங்கட்கிழமையில் இரங்கோன் சென்னை இரண்டிடங்களிலும் சேர்க்கவேண்டும் பிரயாணிகளின் சௌகரியத்துக்காக கப்பல் பிரயாண தினங்கள் மாற்றப்படவேண்டுமானால் மெயில் ஒப்பந்தமும் மாற்றப்பட்டாகவேண்டும்: ஆகவே இப்பிரச்னையைத் தீர்த்துவைப்பது இந்தியா சட்டசபையின் வேலையாகும். எடுத்துககொண்ட தாவாவை "கெஜட்டுக்கு" வியாசமெழுதிய முஸ்லிம் நண்பர் விடாது சட்டசபை வரைபுகுத்தி கிழமை மாற்றத்தில் வெற்றிபெறும்படி அவருக்கு வழிகாட்டுகின்றோம்.

தமிழா! உஷார்!

(நெஞ்சிலுற் மமின்றி என்ற கும்மி மெட்டு)

கண்ணிகள்.

1 வெட்கமுங் கெட்டா யடா தமிழா!
மேன்மை குலைந்தா யோடா
தக்க மனிதர்களைக் குறை சொலத்
தான் முனைந் திட்டாயடா.

2 ஆசிரிய ருலகைத் தமிழா!
அவமதித் திட்டா யடா
நீ சிறிய மதியால்ப் பிறரை
நிந்தனை செய்தா யடா.

3 ஓதி யுணர்ந் தாயோடா தமிழின்!
உண்மை யறிவா யோடா
நீதி எடுத்துரைக்கத் தமிழா!
நீ வெளி வந்தா யோடா.

4 சாஸ்த்திரங் கற்றாயோடா இலக்கணத்
தன்மை யறிவா யோடா
நாஸ்த்திக வே யுனது தடித்த
நாவையடக் கிடடா.

5 "கல்வி கரையில தாம் தமிழா!
கற்பவர் நாள் சிலதாம்"
தொல்கவி வாண ரினைந் தமிழா!
சொன்ன தறியாயோடா.

6 "குருவி பருந்தாமா" தமிழா!
கூறுக வென்றுரைத் தாய்
அறிவிலி யுந்தனைப் போல் உலகில்
யாருமே யில்லையடா.

7 தின்று கொழுத்ததினால் தமிழா!
திமிர்பிடித் திட்டாயோ டா
என்றுமுனக்கிது தான் தொழிலோ?
ஏனன மாகு மடா.

8 எத்தனையோ தொழில்கள் தமிழா!
இவ்வுல கிலிருக்க
அத்தனையும் விடுத்துத் தமிழா!
அகப்பட்டுக் கொண்டா யடா.

9 எழுதும் எழுத்துகளில் பிழையின்றி
எழுதத் தெரியுமோடா
முழுதும் மூட்டாளத்தனமாய் இன்றுமதி
மோசம் போய்விட்டா யடா.

10 அமுதமொழித் தமிழில் தமிழா!
யார் கெட்டிக்காரரடா?
தமிழனென்ற முறையில் உந்தன்பிழை
தன்னைப் பொறுத் தோமடா.

"எதுகை மோனை தெரியாதவன்"

உன்பட்டத்தைக் காற்றிலே விடு.

பட்டம் கொடுக்கிறதென்பது பழைய காலத்திலிருந்து வழக்கமாக வந்து விட்டதொரு பழக்கம். அக்காலத்தில் தகுதியறிந்து பட்டங்கொடுக்கப்பட்டது. உண்மை வீரனுக்கு வீர பட்டமும், இலக்கிய சாஸ்திரமோ வேறதுவோ ஒரு சாஸ்திரத்தில் பாண்டித்திய முடையவனுக்கு வித்துவப்பட்டமும் வழங்கப்பட்டது. தகுதியில்லாதவன் தலைகீழாக நின்றாலும் கோடிகோடியாய்ப் பணத்தைக் கொட்டினாலும் கயிறறுந்த காகிதப் பட்டங்கூடப் பெறமுடியாது. ஆனால் இக்காலத்திலோ எல்லாம் தலை கீழாய் மாறி நிற்பதுபோல இவ்வழக்கமும் மாறி தகுதியென்பதையே யெண்ணாமல் வெறும் பணத்திற்கும், தலையைத் தடவுகிறதற்கும் காரிய சித்திபடைவதற்குமே பட்டங்கள் வழங்கப்படுகின்றன. என்றாலும் ஒரே யொரு மாறுதல் மாத்திரம் ஏற்படவில்லை. அக்காலத்திலும் அரசர்களிடத்தில் இவ்வதிகார மிருந்தது போல இக்காலத்திலும் அரசரிடமே யிருந்துவருகிறது. சர்க்கார் கிரிய கோட்டைத் தாண்டாமல் தாசானு தாசனாயிருப்பவனும், பணம்படைத்தவனும் தான் பட்டங்களுக்குத் தகுதியுடையவனென்பது ஒரு நியதியாகிவிட்டது. நூற்றுக்கு ஒருவர் இருவர் விஷயத்தில் தகுதி கையாளப்படலாம். ஆனால் மேற்போக்காகப் பார்த்தால் யுத்தக்கடனுக்கோ சர்க்கார் சர்வ கலாசாலைக்கோ இரண்டொரு இலட்சங்களை வாரியிறைத்து விட்டால் என்னபட்டம் வேணும்? ராஜாப்பட்டமா? சர் பட்டம், ராவ்பகதூர்; பகல் பகதூர் பட்டமா?எது வேண்டுமானாலும் வீடு தேடிவந்துவிடும். ராஜாப்பட்டம்பெற்ற ஒருவன் உண்மையில்லவரையாளும் ராஜாவாகி விடமாட்டான்.அரசாங்கத்தின்உள்ளங்கையில் இஸ்பேட்டோ. ஆடுதனோ இன்னும் இரண்டு இழவு இராஜாக்களாக விளங்கலாம். அரிச்சந்திரனாகவும், நளனாகவும், நாடக மேடையில் நடிப்பவன் 56 தேசராஜர்களுக்கும் சக்கிரவர்த்தியாகி விட மாட்டான்,

டாக்டர்பட்டத்தைப்பார்த்தால் அதன்ஒட்டையும் இப்படித்தான். நோயைச் சிகிச்சை செய்கிறவன் டாக்டர். சட்டத்தின்பேதங்களை ச்சரிப்படுத்தவோ வகுக்கவோ செய்கிறவன் டாக்டர் இலக்கியத்தில் நிபுணனும் டாக்டர். ஆனால் பணக்காரன் டாக்டராவது எப்படி? பணத்தைப் பழுதுபார்த்து நாளுக்கு நாள் வீங்கிப் பெருக்கவைப்பதாலா? கூடவே கூடாது. தகுதிப்படிதான் பட்டம் வழங்கப்படவேண்டும். என்னுடைய செருப்பு வார் அறுந்துவிட்டது. ஒரு செம்மான் அதைச் சீர்ப்படுத்தினான். நான் உடனே அவனுக்கு டாக்டர் பட்டம் கொடுத்தேன். அவன் ஏமாளியில்லை? "ஐயா! உன்பட்டம் எனக்குப் படியளக்காது காசைக் கீழேவைத்துப்பேசு" என்று சொல்லிவிட்டான். கிழிந்த வேஷ்டியைத் தைத்தவனும் அப்படித்தான். அவனும் ஏமாறவில்லை. இருந்தாலும் அவர்களுக்கும் டாக்டர் பட்டம் கொடுக்கலாம் என்று நாம் சிபார்சுசெய்தால் தப்பென்று தள்ளிவிடுவீர்களா?

முக்காச் சுக்கா மூணுதரம்.

இது நம் நாட்டின் வீட்டுப்பழமொழி. வேல்ஸிலும் இப்பழமொழி வழங்கி வருவதாக பம்பாய் நகரசபை வரவேற்புக்குப் பதிலளிக்கையில் உலகமகாயுத்தகாலத்தில் இங்கிலாந்து மந்திரியாயிருந்த ஸ்ரீ லாயிட் ஜார்ஜ் கூறினார். மூன்றாவது வட்டமேஜையில் இந்தியாவெற்றியடையு மென்று ஜோதிடங் கூறுகிறார். இவரென்ன சொல்லுகிறது நமக்கென்ன தெரியாதா? நாம் நிச்சயமாய் இந்த முறை வெற்றியேயடைவோம்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டாமென்று பிரசாரம் செய்கிறான். கடைவைத்து விற்கவும் இடந்தரக்கூடாதென்கிறான். சமூக ஒப்பந்தத்திற்கு அவனேமுன்னால் நின்று உதவி செய்கிறான். உடனே அவனை வேலையை விட்டு நீக்கி விடவேண்டும்"

ஃ ஃ ஃ

கள்வியாபாரி:— ஒருவனும் குடிக்க வருகிறானில்லை. முட்டாள் தனமாய்க் குத்தகையெடுத்து விட்டேன். எனது ஒப்பந்தத்தை ரத்துச் செய்து விடுங்கள்.

அதிகாரி:— ஒப்பந்தத்தில் கையொப்பம் செய்து விட்டாய் பத்திரத்தின்படி உன் சொத்து வீடு வாசல், உன்னுடைய நண்பனின் சொத்து எல்லாவற்றையும், ஈடு வைத்திருக்கிறாய்.

க. வி:—குடிக்க ஆளனுப்புங்கள் இல்லாவிட்டால் எப்படிப் பிழைக்கிறது?

அதி:— போலீஸ்காரனையும் கலால் அதிகாரிகளையும் அனுப்பி வைக்கிறோம். கிராமத்தார் குடிக்காவிட்டால் ரிப்போர்ட்டனுப்பு

கவனிக்கலாகாதா?

வஹாப்பென்பது முஸ்லிம் தர்மஸ்தாபனங்களாகும். அம்மாதிரி இரங்கோனில் ஆயிரக்கணக்காக இருக்கின்றன. இவைகள் சட்டபூர்வமாக மேற்பார்ப்பதற்கு இந்தியா சட்டசபையில் ஒருசட்டம் சமைக்கப்பட்டதுண்டு. அதை பர்மாவில் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டுமென ஜனுப் தயாப்ஜி பர்மா சட்டசபையில் மிக்க பலமாய் வற்புறுத்தியதை நாமறிவோம். அவரது அபீஷ்டம் இன்னும் நிறைவேறவில்லையென்றே நாம் நம்பவேண்டியிருக்கிறது. இது முஸ்லிம்களுக்கு முக்கிய பிரச்னையென்பதை நாம் எடுத்துக் காட்டவேண்டியதில்லை, பள்ளிவாசல்களைத் தவிர பல முஸ்லிம்கனவான்கள் தங்களுக்குப்பிற்காலம் நடைபெறவேண்டி அனேக தர்மங்களையேற்படுத்தி அதற்கு பொருள்களும், சொத்துகளும் பிரத்தியேகமாக வைத்துச் சென்றனரென்பது வெளிப்படை, 29 வது வீதி முனையிலுள்ள தர்கா பள்ளியில நெடுநாளைய வரவு செலவு கொடுபடாமல் இப்பொழுது கோர்ட்டேறியிருப்பதும் இது போன்றே பல தர்மஸ்தாபனங்களிலும் தகராறுகளேற்பட்டிருப்பதும் இங்கே எடுத்துக் காட்டாய் எடுத்தாளலாம். இத்தியாதி தர்மங்கள் சரியாக நடைபெறுவிட்டால், கவனிக்கவேண்டியது முஸ்லிம் பொது ஜனங்கள் கடமையல்லவா? சின்னாட்களுக்கு முன், முஸ்லிம் மாணவர்சங்கத்தில், பேசுங்கால் பர்மா ஐகோர்ட்டு பிரதம நீதிபதி ஸர் ஆர்தர் பேஜ், இத்தர்மஸ்தாபனங்கள் ஒழுங்காய்க் கவனிப்பதற்கு தகுந்த யேற்பாடுகள் செய்யப்படவேண்டுமெனக் கூறியதாகவும் அறிகிறோம். கவர்ன்மெண்டாருக்கும் இதில் கொஞ்சம்பொறுப்புண்டு. சென்னையில் இந்து தர்மஸ்தாபனங்களை கவனித்துவர சட்டபூர்வமாக மூன்றுபெயர்களடங்கிய ஒரு போர்டு நியமித்துசில வருடங்களாகத் தர்மங்கள் செவ்வனே பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அதற்கு முன்னரே பல ஆண்டுகளாக சென்னை தர்மரக்ஷணசபை பல இந்து தர்மஸ்தாபனங்கள் விஷயமாகத் தலையிட்டு அவைகளின் ஊழல்களை நிவர்த்தி செய்துவந்தன. அம்மாதிரியே இரங்கூனிலும் முஸ்லிம் கனவான்கள் ஒரு சபை யேற்படுத்தி இந்த வஹாப்கள் செவ்வனே நடைபெற முயற்சி செய்யவேண்டுவது கடமையென்பதை எடுத்துக் காட்டவும் வேண்டுமா? இனியேனும் கவனிக்கலாகாதா என்று கேட்கிறோம்?

பொதுக்கணக்குக்கு மூடு திரையேன்?

பொதுக் கணக்குகளுக்கு மூடுதிரை போட்டு பொதுஜனங்களின்வெளிச்சத்துக்கு வரவிடாமல் மறைத்து வைப்பது என்பது ஒரு கெட்டவழக்கம். இது நமது நாட்டில் மலிந்து கிடக்கின்றது, எந்தவொரு பொது ஸ்தாபனத்தைப் பார்த்தாலும் இந்த ஓட்டையில்லாமலில்லை. "மடியில் கனமிருந்தாலல்லவா வழியில் பயப்படவேண்டும்? இல்லாதவரை தாராளமாய்ச் செல்லலாம். அதேபோன்று கணக்கில் கள்ளமில்லாவிட்டால பொதுக்கணக்கைப் பொதுவுக்குக் கொண்டுவருதில் ஆலசியமோ அன்றித் தாமதமோ இல்லை. மூடுமந்திரமோ தேவையேயில்லை. ஓட்டை யிருந்தால் அடைப்பதற்காக இவ்வளவும் செய்யப்படுகிறது. இது சாதாரணமாக ஜன சங்கங்களில் ஜன ஸ்தாபனங்களில் மாத்திரந்தான் என்பதில்லை. சர்க்காரின் கணக்கிலும் இந்தமாதிரி ஊழல்கள் இருந்தே வருகின்றன.

இந்தியா சட்டசபையில் பொதுக்கணக்குக் கமிட்டி யொன்றிருந்து வருகிறது. இவர்களின் வேலை பொதுக் கணக்கைப் பரிசீலனை செய்து வெளிப்படுத்துவதாகும். இந்த ஏழெட்டு வருடங்களாக கணக்கு எப்படியிருந்தாலும் கமிட்டியின் நடவடிக்கைகளில் பத்திரிகை நிருபர்கள் அனுமதிக்கப் பட்டிருந்தார்கள். இந்த வருடத்தில் மாத்திரம் வந்த கிறுக்கென்ன? வரவு செலவு ஏகப்பட்ட ஓட்டையாயிருப்பதாலா? அப்படியானாலும் ஒரு நாள் வெளிவந்து தானே யாகவேண்டும்? நாம் கேள்விப்பட்டவரை அக்கமிட்டி இப்பொழுது வேலை செய்து வருவதாகத் தெரிகிறது மூடு திரையென்னத்துக்கு? நிதிமசோதா சிரிப்பாய்ச்சிரித்து வெட்கமும் கெட்டு வெளிப்பட்டு விட்ட பின் மூக்காடென்னத்திற்கு? திரைமறைவில் இக்கமிட்டி என்னதான் செய்கின்றதென்றே தெரியவில்லை. இந்தியப் பெண்களெல்லாம் முகமூடிகளையும் திரையையும் தூக்கி யெறிந்து பகிரங்கமாக வெளிவந்து விட்டதால் இப்பொழுது இந்தியாவில் "கோஷா" "அந்தப்புறம்" என்பவை யெல்லா மெங்கோமறைந்து விட்டதென்றிருந்தோம். சட்டசபைக்குள் நுழைந்து பாதுகாப்பு வேண்டுகின்றதுபோலும். இல்லையென்று இவ்வாறு செய்ய அவசியமேற்பட்டிருக்கின்றதெனச் சொல்லப் படுமானால் அவசியத்துக்குச்சட்டம் தேவையில்லையென்ற ஆங்கிலப் பழமொழியை ஆதாரங்காட்டலாம்.

Printed & Published By A. V, Sellam Pillay at the Desopakari Press, 210, 36th Street, Rangoon.

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 38. அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை

DESOPAKARI

புதன், ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி, இரங்கோன், (9—12—31) கார்த்திகைமீ 24உ புதன்கிழமை

பிரிட்டிஷ்காரனில் எவன் நல்லவன்?

"முன்னையிவன் செய்த தீதெலா—மவர்
முற்று மறந்தவராகியே—தன்னைத்
தின்னவந்தமொர் தவளையைக்—கண்டு
சிங்கஞ் சிரித்தருள் செய்தல் போல்—நின்னை
யென்ன விவனை மதிப்பவும்—அவ
ரேற்றந்தைக் கண்டு மஞ்சாமலே—நின்றன்
தின்ன மதியினை யென்சொல்வேன்—பகை
செய்திட வெண்ணிப் பிதற்றினாய்."

—கவியரசன்.

பிரிட்டிஷ் காரனில் எவன் நல்லவன்?

சண்டை மந்திரி மிஸ்டர் லாயிடு ஜார்ஜ் பம்பாய் வந்திறங்கினார். பம்பாய் நகர சபை அவருக்கு வரவேற்பளித்ததே ஏன்? அவர் இந்தியாவுக்கு நன்மை யென்ன செய்துவிட்டார்? உலக சமாதானத்திற்காகவும் உலக விடுதலைக்காகவுமே போராடியதாக அவர் வாய்ப்பந்தல் போடுகிறார். இங்கிலாந்தின நன்மைக்காக மாத்திரமில்லை யென்று அக்காலத்தில் அவர் ஆஸ்குயித்தை அடித்து வீழ்த்தியபோது சொல்லியிருந்தால் நிச்சயமாய் மந்திரியாகி யிருக்கமுடியாது. சமயத்திற் கேற்றவாறு பேசுவதில் பிரிட்டிஷ்காரனுக்கு சரி நிகர்—சமானமானவன் எவனுமே யிருக்கமாட்டான். அதிலும் லாயிடு ஜார்ஜ் பழம் பெருச்சாளி. எலும்பில்லாத நாக்குப் படைத்தவன். அவனது நாக்கு எப்பக்கமும் புரளும். 1914ம் ஆண்டு சண்டை ஆரம்பித்தகாலத்தில் இவன் இந்தியாவுக்குசெய்து கொடுத்திருந்த வாக்குறுதியும் காரியம் முடிந்தவுடன் அதைக் காற்றில்பறக்க விட்டதும் எந்த இந்தியன் மனத்தை விட்டு இதற்குள் மறைந்திருக்க முடியும்? அவனது வாய் வார்த்தையை நம்பி காந்திஜீயும் சண்டைக்கு ஆள் சேர்த்துக் கொடுத்தார். நமது இந்தியச் சிப்பாய்களின் வீரம் அன்று ஐரோப்பா வெங்கணும் பேசவும், புகழவும் பட்டது. பாரீஸ்நகரத்தின் வீதிகளின் வழியே நமது சிப்பாய்கள் கெம்பீரமாய்ச் செல்லுந் தோறும் அவர்களது வாள்முனையைக் காணுவதற்கென்றே தெருவெல்லாங் குப்புகூடி வேடிக்கை பார்த்தார்கள். இந்தியன் தனது உயிரையும், உடலையும், பணத்தையும் பணயமாக வைத்து இங்கிலாந்தின்-ஏன்? நேசதேசங்கள் எல்லாவற்றின் மானத்தையும் காப்பாற்றினான். ஆனால் சண்டை ஜெயிக்கப்பட்டதும் நேசதேசத்தா னெவனாவது இந்தியாவைப்பற்றிச் சிந்தித்தானா? இதே லாயிடு ஜார்ஜ் தமது வாக்குறுதியை நிறைவேற்ற நினைத்தானா? சமாதான மகாநாட்டில் இந்தியப்பிரதிநிதிகளுக்கு ஸ்தான மளித்துவிட்டதால் இந்தியாவுக்குச் சம அந்தஸ்துக் கொடுத்திருப்பதாக சர்ச்சில் சொன்னானே. அந்தமாதிரி தான் லாயிடு ஜார்ஜும் தானளித்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டதாக நினைத்துக்கொண்டானா? வெறும் பேச்சுகள் ஆயிரம் வேண்டுமானாலும் பேசலாம். அப்பா வென்பதால் உச்சி குளிர்ந்து விட மாட்டாது. இதைச் சர்ச்சிலும் லாயிடு ஜார்ஜும் நன்கறியமே செய்வர். நம் மிந்தியர்கள் மண்டையிலே தான் இது நுழைகிறதில்லை. வெளுத்த தெல்லாம் பாலென்று இந்தியன் மனப்பால் குடித்துக்

குடித்துத்தான் இந்தியாவை இந்த நிலைமைக்குக்கொண்டுவந்து விட்டோம். லட்சத்து நாற்பதினாயிரம் இந்தியர்களை இந்திய மண்ணிலல்ல அன்னியர் நிலத்தில் நாம் பலிகொடுத்ததற்காகவும் 700, 800, கோடி இந்திய ரூபாய்களை யுத்தச் செலவுக்காக இறைத்ததற்காகவும் லாயிடு ஜார்ஜ் நம்மை போற்றுகிறான். அவ்வளவு சொல்லவாவது, அவ்வுண்மையை ஒப்புக் கொள்ளவாவது லாயிடுக்குத் தயவு பிறந்ததே. அது வொன்றே போது மென்று திருப்தியடைந்து விடலாமா? அதனாலெல்லாம் காரியமில்லை. விருந்தாவில் இவனுக்கெல்லாம் வரவேற்பளித்து விட்டதால் இந்தியாவுக்கு இம்மி நன்மை கூட ஏற்படாது. காந்திஜியை இந்தியா திரும்பிச் சட்டமறுப்பை ஆரம்பிக்கச் சொல்லித் தந்தி கொடுத்ததைக் கூட லாயிடு மறுக்கிறான். அப்படியானால் அதை எவன் திரித்த கயிறாயிருக்கலாம்? இந்தியன் எவனும் செய்ய ஹேதுவில்லை. அப்படியானால் வெள்ளைக்காரப் புழுகன் எவனாவது ஒருவன் தானே செய்திருக்கவேண்டும்? மேலும் இந்தியா விஷயமாக லாயிடு ஜார்ஜ் ஏதாவது வாயாலாவது சொன்னானா? என்னவோ பெரிய மூட்டையைக்கட்டி வைத்திருப்பவன் போல் பின்னால் உதவுவதாக உளறியதை தவிர உருப்படியாகவும் திட்டமாகவும் ஒன்றையுமே கூறி விட வில்லை. இதெல்லாம் வாய் ஜாலங்கள். இவன் போன்றவர்களாலெல்லாம் ஒரு காரியமும் ஆகிவிடாது. பிரிட்டிஷ்காரனது நிறமெல்லாம் ஒரேவிதமாகத் தானிருக்கிறது. வித்தியாச மில்லை இந்தியா விஷயமென்றால் எந்த வொரு பிரிட்டிஷ்காரனும் மாறுபட்ட மாதிரி நடந்து கொள்ளுகிறதில்லை. இந்த உண்மையை நாம்பலநாளும் கண்டிருந்தும் பம்பாய் நகர சபையார் லாயிடு ஜார்ஜுக்கு வரவேற்பளித்தது பொருந்தாது. ஆனால் ஒரே யொரு உண்மையை மாத்திரம் லாயிடு ஜார்ஜ் மறைத்துக் கூறவில்லை. வேல்ஸ் பழமொழிப்படி மூன்றாவது முறை இந்தியா ஜெயம் பெறும் என்பது வாஸ்தவமே இந்தியாவின் ஒவ்வொரு குழந்தையுங் கூட இவ்வுண்மையை அறிந்தே யிருக்கிறது. இம் முறைஇந்தியா கடைசி முயற்சியாக முழுபலத்துடனும் போராடத் தான் போகிறது. வெற்றியை எவரும் சந்தேகிக்க முடியாது. நிச்சயமாய் ஜெயமன்றித் தோல்விக்கு இடமே இல்லை.

நான் இளைத்தவனா?

இந்திய அரசியலில் பர்மாவைச் சாக்கடையென்றோ அல்லது கழிவு நீரோடை யென்றோ பலர் எழுத நாம் படித்திருக்கிறோம். ஆனால் எம்முடைய பார்வையில் அவ்வாறு தோன்றவில்லை. மற்றெந்த மாகாணத்தையும் விட அரசியல் நிர்வாகத்தில் பர்மா சர்க்கார் தான் போட்டியின்றி முதல் கோட்டில் நின்று வருகிறது. சிம்லா முதலாளியின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் நான் இளைத்தவனா? என்று நெஞ்சில் கைவைத்து விருதாவில் கூறுவதில் வங்க சர்க்கார் தானாகட்டும், பாஞ்சால சர்க்கார் தானாகட்டுமே பர்மா சர்க்காருக்குப் பிச்சை போடக்கூடப் போதாது. இது பற்றி நமக்கெல்லாம் சாலச் சந்தோஷமே. ஏனெனில் நம்ம சர்க்காருக்கு ஜோடி கிடையாதென்றால் அப்பெருமை அச்சர்க்காரின் கீழ் குடிகளுக்குமுண்டல்லவா? இதற்கு இரண்டொரு திருஷ்டாந்தங்களை யெடுத்துக்காட்டாமல் வெறுமனே சொன்னால் நம்பமாட்டீர்கள். நம்ம ரெஜினால்டு கிரடாக்கு பர்மாலெப்டினண்டு கவர்னராயிருந்த போது "ரெங்கூன் மெயில் பத்திரிகை" மீது சீறி விழுந்தது. ஜாமீன் கேட்டதும் அதற்கு அதன் ஆசிரியராயிருந்த ஸ்ரீமான் வேதமூர்த்தி கடாவிய ஆப்பையும் இவ்வுலகம் இதற்குள் மறந்திருக்க மாட்டாது. அப்போது வழங்கப்பட்ட நியாயத்தில் பொய்யேயாயினும் எச்சரிக்கை விடுப்பதென்பதை ஒப்புக்கொண்டே யிருக்கின்றனர். ஆனால் அது வெகுகாலத்துப் பேச்சு. இதுவரை ஞாபகத்தில்லாது நீங்கிவிட்டிருப்பினு மிருக்கலாம். எந்த வொரு அச்சுக் கூடத்தையும் ஏதாவது செய்வதானால் ஆதி அச்சுச்சட்டப்படி பார்த்தாலும் லார்டு சின்ஹாவின் வியாக்கியானப்படி முன்னெச்சரிக்கை கொடுத்தே செய்ய வேண்டியது முறை. சுகத்துக்கு சுகமும்; சாஸ்திரத்துக்கு சாஸ்திரமும் அதுவே யாகும். நாம் இங்கே இவற்றை வெறும் ஞாபகமூட்டும் நோக்கங் கொண்டே குறிப்பிடுகிறோம். மறதி மனித சுபாவம் என்று சிலர் சொல்லவும் கூடுமல்லவா? ஆதிசட்டமானாலும், அவசர சட்டமானாலும் சட்டம் சட்டந்தான் சட்டத்தை நிறைவேற்றுவதற்கும் சட்டவரம்புண்டு. ஆனால் நான் இளைத்தவனா? என்று போட்டிபோட்டுவிடுவதில் பிரயோஜன மில்லை. நீதியே நீதி யென்பதையும் பர்மா சர்க்கார் மறந்துவிடலாகாது என்பதே எமது பேரவா.

காந்திஜீயின் மூட்டை முடுச்சுகள்.

வட்டமேஜையிலிருந்து காந்திஜீ வெறுங்கையுடன் திரும்பிவருவாரென்றெதிர்பார்த்தோம். ஆனால் லண்டன் விட்டு புறப்பட்ட அன்றைக்குத்தான் அவர் பெரிய மூட்டையை யெடுத்து வருகிறாரென்பது புலனாகிறது. தேவி மீராபாய்க்கு வெள்ளிக்கிழமை ;யிரவெல்லாம் தூக்கமே கிடையாது. மூட்டைகளைக் கட்டுகிறதும்; முடுச்சுகளை அவிழ்க்கிறதும்; அதைத்தூக்கிவைக்கிறதும் இதையெடுத்து மூடுகிறதுமாக ஓயாத வேலையிருந்தது. லண்டனில் இறங்கும்போது காந்திஜீயிடம் இவ்வளவு சுமை கிடையாது. லண்டனை விட்டுப்புறப்படும்போது இவ்வளவு பெரிய சுமை எங்கிருந்து கிடைத்தது? என்பது தான் பேச்சு. லண்டனில் விற்கப்படும் ஆடம்பரச் சாமான்களை அள்ளிக் கட்டிக் கொண்டாரா? இங்கிலாந்தில் பாதகாணிக்கையாகப் பலர் சமர்ப்பித்தார்களே அவை யிவ்வளவு அதிகமாகி விட்டதா? இல்லை. ஆடம்பரச் சாமான்கள் ஒருதேசியப்பக்திச்சென்னத் தக்கது. அவைகளையெல்லாம்துச்சமாகக் கருதுகிறார் காந்திஜீ. வேறென்ன? இந்தியாவுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் கொடுத்த சுயராஜ்யந்தான் அவை. தூக்கமுடியாத அவ்வளவு சுயராஜ்யத்தை மெக்டானல்டு துரை அள்ளிக் கொடுத்து விட்டார். வட்டமேஜையில் நடந்த வெறும் பேச்சுகள் அவையனைத்தும் சேர்ந்து ஒரு மூட்டை. காமன்ஸ் சபையில் சமர்ப்பிக்கப்பட்டதே வெற்றுக் கடுதாசிகள் அவைகளெல்லாம் சேர்ந்து ஒருமூட்டை. இவைகள் தான் காந்திஜீயின் கனத்த மூட்டைகளாகிவிட்டன. இவற்றையேன் காந்திஜீ இவ்வளவு சிரமப்பட்டுச் சுமந்துவர வேண்டும்? மெக்டானல்டின் முகத்திலே தானே விசிறியெறிந்து விட்டிருக்க வேண்டாமா? இல்லாவிட்டால் தேம்ஸ் நதியில் தீர்த்தமாடவாவது செய்திருக்கலாமே, அதுவும் கூடாதென்றால் அக்கினி பகவானுக்கு இரையாக்கி யிருக்கலாம். வெறுமனே அம்மூட்டைகளைச் சுமந்து வருவதால் ஆவதென்ன? சுமைகூலியா? நாளை பிரிட்டிஷ் மந்திரிகள் மீது குற்றஞ் சாட்டுவதற்காக வேண்டுமென்றால் அவர்களென்ன இந்த வொரு குற்றத்தைத்தான் அபூர்வமாகச் செய்திருக்கிறார்களா? எத்தனையோ வாக்குறுதிகள்! எத்தனை எத்தனையோ குற்றங்கள்! இவைகளை யெல்லாம் சொல்லியாவதென்ன? தானே தெரியாதவன் பிறர் சொல்லியும் அறியப் போகிறான்?

நம்ம மௌலானா நம்மமௌலானாவே!

வட்டமேஜையில் முஸ்லீம்கள் ஏதோவொரு விதமாய் நடந்துகொண்டதாகவும் இந்திய தேசிய கோரிக்கைகளை பிடிவாதமாக மிதித்துத் வைத்து விட்டதாகவும் பொறுப்பாட்சிவேண்டாம் மாகாண சுயாட்சி கொடுத்தால் போதுமென்று கேட்டதாகவும் கூறப்படுகிறது. இது உண்மையிலேயே பெருத்த அபவாதமாகும். இதற்குப் பிராயச்சித்தமாக நமது மௌலானா சௌகத்அலியின் கட்சியினரான ஆகாகான்; முதன் மந்திரி இந்தியா மந்திரி இருவரையும் எச்சரித்து மத்திய சபையில் பொறுப் பாட்சியளிக்காவிட்டால் முஸ்லிம்கள் காங்ரஸுடன் சேர்ந்து கொண்டு சட்டமறுப்பைத் தீவிரமாய் நடத்துவார்கள் என்று கூறியுள்ளார். காங்கிரஸுடனும் கவர்ன்மெண்டுடனும் தங்களது உரிமைக்காகப் போராட முஸ்லீம்களுக்குச் சகல பாத்தியதையுமுண்டு. ஆனால் நாட்டுச் சுதந்திரத்திற்கிடையில் தடையாக நிற்கச் சித்தமாயிருக்க முடியாது... அல்லது இந்தியா விடுதலையடையாது. அடிமை நாடாகவே யிருக்கட்டுமென்று அன்னியருக்கு உதவி செய்யத்தான் நெஞ்சு வருமா? இப்பொழுது சர்க்காரின் தலை சுழலுகிறது. முஸ்லிம் கோரிக்கைகளையும் காங்கிரஸின் கோரிக்கைகளையும் கொடுத்தாக வேண்டும். இல்லாவிட்டால் இரட்டை பலத்துடன் ஆரம்பிக்கப்படும் சட்டமறுப்பை யெதிர்க்கத் தயாராகட்டும்.

ஆகாகானின் இக் கோரிக்கையை எந்தவொரு இந்தியன்தான் போற்றாதிருக்கமுடியும்? அன்சாரி கட்சி முஸ்லீம்களும் மௌலானா சௌகத்தலியின் கட்சியாரும் ஒரு முகப்பட்டு தோளோடு தோள் நின்று சத்தியப் போராடினால் சட்டமறுப்பு இயக்கம் சந்தேகமில்லாமல் வெற்றிபெறும். முதல் வட்டமேஜையில் இதே விஷயத்திற்காகத்தான் காலஞ்சென்ற மௌலானா முகமதலியவர்கள் உயிர் பிரியும்வரை போராடினார். அவரது இறுதிக் கடிதத்தை இன்று படித்தாலும் எந்த இந்தியன் இரத்தங் கொதிக்காது? “என்னைக் கைது செய்தவனை கைது செய்யும் அதிகாரம் பெறுவதற்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன்” என்று வட்டமேஜையில் ரீடிங் பிரபுவின் முன்னிலையில் பேசிய வீரம் இந்திய சரித்திரம் உள்ளளவும் போற்றப்படும்.

இதுதான் நடு நிலைமையோ?

1858-ம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடத்திலிருந்து பிரிட்டிஷ் தீவுகளை அரசாண்டிருந்த விக்டோரியா ராணியின் கையில் இந்திய அரசியல்மாற்றம் ஏற்பட்டபொழுது "மதவிஷயத்தில் நான் தலையிடாது சகல மதங்களுக்குமிடையே நடு நிலைமை வகிப்பேன்" என்ற வாக்குறுதி பெற்றிருக்கிறோம். இந்த வாக்குறுதியை—சத்தியப் பிரமாணத்தை முதலாவதாக மனதில் வைத்துக் கொண்டு கீழே நாமெழுதும் வியாசத்தைப் படித்தால் பிரிட்டிஷார் கிறிஸ்துவமதத்தின் சார்பில் ஒரு தலைப் பக்ஷமாக நின்று நமது இந்து-முகமதிய-புத்த கிறிஸ்தவ மக்களின் வரிப்பணத்திலிருந்து கிறிஸ்தவப் பாதிரிகளுக்கு ஏராளமாகக் கொட்டிக் கொடுத்து வந்திருப்பதைக் காணலாம். இம்முயற்சிகளெல்லாம் கிறிஸ்து மகரிஷியின் உண்மையான சுவிசேஷத்தை இந்தியாவிடைப்பரப்புவதற்காக வென்றெண்ணுகிறீர்களா? இல்லவேயில்லை. தங்களது ஆட்சியை இந்தியாவிடை சாசுவதமாக நிலைநிறுத்துவதற்கேயாகும். இந்தியர்களனைவரும் கிறிஸ்துவ மதத்தின் கீழ் வந்துவிட்டால் ஒரு கிறிஸ்தவ அரசனின் ஆட்சியை அவர்கள் வெறுக்கமாட்டார்கள் மதாபிமானத்தால் விரும்பவே செய்வரென்று கண்மூடித்தனமாகக் கருதிக் கொண்டார்கள். இப்பொழுதைய இங்கிலாந்தை எடுத்துக் கொண்டால் எல்லோருமே கிறிஸ்தவர்களாயிருந்தும் கிறிஸ்தவ அரசர்களையே சிரச்சேதம் செய்தும் சிம்மாசனத்தை விட்டோட்டியும் பல சீரழிவுகளும் ஏன் செய்தார்கள்? இந்தியாவையெடுத்துக் கொண்டால் இந்தியாவிலுள்ள கிறிஸ்தவர்களில் அநேகர் ஏன விடுதலையியக்கத்திலீடுபட்டுச் சுதந்திரப் போராடுகிறார்கள்? என்பதை எண்ணிப்பார்த்தால் உண்மையில் மதத்திற்கும் அரசியலுக்கும் சம்பந்தமேயில்லையென்பது விளங்கும். மதத்தின் பேராலும் மதத்தைப் பரப்புவதற்கென்றே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்களின் பேராலும் ஏழை இந்தியாவின் தாராளம் தண்ணீர்பட்ட பாடாய்ச் செலவு செய்யப்பட்டிருப்பதைக் காணுவீர்கள். இது சம்பந்தமாக மிஸ்டர் ஆர்தர் மேஹ்யூ என்பவர் "கிறிஸ்துவ மதமும் சர்க்காரும்" என்று தலைப்பிட்டெழுதியுள்ள புஸ்தகத்தில் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்:—

"மத விஷயத்தில் நடு நிலை வஹிப்பேன்" என்ற வாக்குறுதி காப்பாற்றப்படவில்லை. காற்றில் பறக்கவிட்டுவிட்டனர். ஒரு மதத்தினிடத்தில் மாத்திரம் பற்றுதலும் ஒட்டும் வைத்துக்கொண்டிருக்கும் ஒரு சர்க்கார் எவ்வாறு நடு நிலைமை வகிக்க முடியும்? இதனால் பிரிட்டிஷ் அரசியலில் கிறிஸ்தவ பாதிரிமார்களுக்கும் பங்கிருக்கிறது. மேலும் "இந்தியாவில் கிறிஸ்தவ மதப் பிரசாரம்" என்ற புத்தகத்தில் டாக்டர் ஜூலியஸ் ரிச்டர் என்பவர் கூறுகிறபடி இம்மத நடுநிலைமையை விட்டுவிடும்படி சில மிஷனரிகள் கூட்டத்தார் சர்க்காரைத் தூண்டியதாகவும் தெரிகிறது.'

இம்மாறுதலான கொள்கையை வைத்துக் கொண்டு இந்திய சர்க்கார் பாதிரிமார்களுக்கு பஹிரங்கமாகவும் மறைமுகமாகவும் பல உதவிகளைச் செய்து வருகிறார்கள். அதற்கென ஏராளமான இந்தியச் செல்வத்தை வாரி வாரியிறைக்கின்றனர். 897 ஜனவரியில் பாதிரிமார்களின் நிர்வாகத்திற்கென 30 லட்சம் இந்திய ரூபாய்கள் செலவு செய்யப்பட்டிருக்கிறதென கல்கத்தா ஸ்டேட்ஸ்மன் பத்திரிகையே கண்டித்திருக்கிறதென்றால் அதைப் பற்றி நம்முடைய வார்த்தையை யேன் செலவு செய்ய வேண்டும். "நாம் பலகாலும் செய்து கொடுத்திருக்கும் வாக்குறுதிகளின் உள்ளார்ந்த அர்த்தத்தின்படி நடந்து கொள்ளுவதானால் நாம் இந்தியாவை இந்தியர்களின் நன்மைக்காகவே யாளுகிறோம். நாடாளும் ஒருவர் சகத்தாரின் நன்மைக்காக இவ்வளவு விறாத செல்வத்தைச் செலவு செய்யலாமா? இம்முறை உடனே தவிர்க்கப்படவேண்டும். இல்லாவிட்டால் நமது வாக்குத்தத்தங்களெல்லாம் வெறும் வாய் வார்த்தைகள்—நாம் இந்தியர்களிடம் கொண்டுள்ளது கேவலம் உட்டுறவு என்றாகிவிடும்." என்று எழுதியுள்ளது. இதே விஷயத்தை "காப்பிட்டல்" என்றபத்திரிகையும் 1913ல் "நாம் இந்தியர்களின் வரிப்பணத்திலிருந்து ஏராளமான பணத்தை பாதிரிகளுக்காக சம்பளமாகவும் உபகாரச் சம்பளமாகவும் செலவு செய்து வருகிறோம். இதைவிட தில்லியில் ஒருபெரிய கிறிஸ்தவக் கோயிலையே கட்டிவிடலாமே" என்று கேட்கின்றது, பஞ்சாபில் சர் மைக்கேல் ஓட்வியர் காலத்தில் ஒரு மிஷனரிப்பள்ளிக்கூடத்திற்காக மாத்திரம் 42 ஆயிரம் ரூபாய்கள் கொடுத்துள்ளதாக அவனே பெருமையுடன் கூறிக் கொள்ளுகிறான். இவையெல்லாம் இந்தியாவின் இழந்த தனங்களல்லவா?

சட்டமறுப்பை யடக்க சுருக்க வழி!

ஐரோப்பிய சங்கத்தின் குட்டிச் சங்கமான சென்னைக் கிளைச்சங்கத்தில் சில மேதாவிகளின் மண்டையிலே சட்ட மறுப்பை யடக்கி விட ஒரு புதிய யோசனை தட்டியிருக்கிறது நாமும் சிந்தித்துப் பார்த்ததில் நல்ல யோஜனை யென்றே படுகிறது. அதன்படி சர்க்கார் நடந்து கொள்ளுவார்களானால் சீக்கிரம் உருப்பட்டு விடுவார்களென்பதில் சந்தேகமேயில்லை. சர்க்காருக்கு நாமும் கூட அந்த யோஜனைப்படியே நடந்து சட்டமறுப்பை யடக்கி விடும்படி சிபார்சு செய்கிறோம். யுத்த முறைப்படி அவர்கள் பேசுகிறார்கள்: போர் நடக்கும் பகுதிகளில் போக்குவரவு சாதனங்களையும் தந்தி தபால் வசதிகளையும் வெட்டி விடுவதென்பது ஒரு வழக்கம். "எனக்கு ஒரு கண் கெட்டாலுந்தோஷமில்லை எதிரிக்கு இரண்டு கண்ணும் கெட்டு விட வேண்டுமேடா! ஆண்டவனே!" என்று பிரார்த்தித்தவன் கதை யுண்டல்லவா? அதே மாதிரிதான் இந்த வெள்ளையர்களும் சொல்லுகிறார்கள். அதை விட இன்னொரு மாதிரியும் செய்யலாமே யென்று எமது சிறு மூளையில் முட்டுகிறது. ராணா பிரதாப சிம்மன் சம்ராட் அக்பருடன் போராடிய காலத்தில் கையாண்டமுறை யென்றால் அதற்கெனத் தனித்த வியாக்கியானமுமா வேண்டும்? நாட்டையெல்லாம் காடாக்கிக் காட்டையெல்லாம் நாடாக்கித் தனது ஜனங்களை வன வாசஞ் செய்யும்படி உத்திரவு போட்டான் ராணா ராஜபாட்டைகளையெல்லாம் போக்கு வரத்துக்கு உபயோகப் படாதபடி செய்து விட்டான் பாலங்கள்யாவும் தகர்க்கப்பட்டன. அம்மாதிரி இந்தியாவையும் செய்து விட்டால் சட்ட மறுப்பைத் தடைப்படுத்திவிடலாமல்லவா? சத்தியாக்கிரஹிகள் ரயிலேறிச் செல்லாமல், தந்தி தபால்களனுப்பாமல், ஓரிடத்தில் நடக்கும் செய்தி வேறிடத்தில் தெரியாமல் செய்து விடலாம் சத்தியாக்கிரஹிகளும் சோறு தண்ணீரில்லாமல் பட்டினி கிடந்து செத்துப்போவார்கள். இந்தமாதிரி பொரோபடியாய் நாட்டையே சர்வநாசஞ் செய்து விடுவது நல்ல யோஜனை யல்லவா? இதை நாம் சொல்லிக் கொடுத்ததற்காக ஐரோப்பிய சங்கத்திற்கோ இல்லை சர்க்காருக்கோ பில்லனுப்பிஆலோசனை "பீஸ்! வாங்கிக் கொள்ளென்று நண்பரொருவர் நமக்கு வழிகாட்டுகிறார். இருந்தாலும் நாம் தர்மவக்கீலாக விருப்பது தான் கௌரவம் என்றே விட்டு விட்டோம்.

வெல்லிங்டன் ஜாமீன் கொடுப்பாரா?

இதுவரை கடிதங்களும் தந்திகளும் இதர தபால்களும் சர்க்காரால் தணிக்கைச் செய்யப் படுவதாகக் கேள்விப்பட்டோம். ஏதாவதொரு தபாலில் சந்தேக மிருப்பதாக வாடைதட்டி விட்டால் மோப்பம் பிடிப்பவர்கள் அவற்றைத் தந்திரமாக—தோலிருக்கச் சுளைவிழுங்கிய மாதிரி உடைத்துப் பார்த்து விழுங்கி விடுவதோ அன்றேல் அப்படியே யனுப்பிவிடுவதோ வழக்கமாயிருந்து வந்தது. ஆனால் இப்பொழுதோ அதிகாரத்துடன் கௌரவமாக இந்தக் கொள்ளைக் களவைக் கையாளச் சொல்லி சிம்லா தெய்வம் உத்திரவு கொடுத்து விட்டது. வங்காளத்திலுள்ள ஜில்லாக்களிலிருக்கும் சில்லரைத் தேவதைகளுக்கெல்லாம் இனிமேலென்ன கூத்துக் கும்மாளங்கள் குறைச்சலிருக்குமா? கடல்வழியாகவோ, தரை அல்லது ஆகாயப்பாதையாகவோ வரும் எந்தத் தபாலையும் பத்திரிகை, புஸ்தகம் அல்லது தஸ்தாவேஜு எதுவாயினும் அவற்றைப் போலீஸுக்கு அனுப்பி அவர்கள் அவற்றை உடைத்துப்பார்த்துத்தான் விலாசதாருக்குக் கொடுக்கப்படும். இதனால் ஏதாவது புரட்சிக் காரர்கள் சம்மந்தமான இரகசியங்களோ அன்றேல் அவர்களுக்குச் சாதகமான வேறெதுவோ கிடைத்து விடாமல் சர்க்கார் தடைப்படுத்துவதில் நமக்குச் சிறிதும் ஆக்ஷேபமில்லை. ஆனால் பொது ஜனங்களின் இரகசியத்தில் சர்க்கார் தலையிடுவதை எவராவது அங்கீகரிக்க முடியுமா? ஒரு பள்ளி மாணவன் கூட இன்னொரு மாணவன் தனது கடிதத்தை ஒற்றுப்பார்த்ததை விரும்பாமல் "நான் இக்கடிதத்தை எழுதுகையில் ஒரு முட்டாள் எனக்கு பின்னிருந்து ஒற்றுப் பார்க்கிறான்" என்றெழுதி அவனை அவமானப்படுத்தி விட்டான். இத்தாலிய வீரன் மாஜினியும் இக் கூடாச்செயலைக் குறித்துக் கண்டித்துப் போந்தான். மேலும் ஏதோ சில சந்தேகத்தின் பேரில் சந்தேகப்பட்ட நபர்களின் கடிதங்களைக் கையாளுவதோடு நில்லாமல் எல்லாக் கடிதங்களையு மென்று வைஸிராய் அதிகாரங் கொடுத்து இந்திய சமூகத்தையே அவமதித்து விட்டார். நிரபராதிகளையும் கைது செய்தும் இதர பல இம்சைக்குள்ளாக்கியும் வரும் வங்க அதிகாரிகளுக்கு இவ்வுத்திரவும் கிடைத்து விட்டால் பொது ஜனங்களின் மரியாதை மிதித்துத் துவைக்கப் பெறுமென்பது என்ன நிச்சயம்? இதற்கு வெல்லிங்டன் என்ன ஜாமீன் கொடுப்பார்?

காந்திஜீ எழுந்தருளுகிறார்.

காந்திஜீ சனிக்கிழமை காலமே லண்டனிலிருந்து புறப்பட்டார். அன்று விக்டோரியா ஸ்டேஷனில் பெரிய கூட்டம். பிரிட்டிஷ்காரர்களின் தலைகளிலெல்லாம் ஹாட்டைக்காணோம்;- எல்லோரும் காந்திக் குல்லாய் போட்டிருந்தார்கள். மீராபாய் ஓய்வொழிவில்லாமே சாமான்களை யேற்றிக் கொண்டிருக்கிறார். "காந்திஜீ போகிறார், காந்திஜீ போகிறார்" என்ற பேச்சைத் தவிற வேறு பேச்சில்லை. எல்லோரும் அவரது வரவையே யெதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பல ஆங்கில நண்பர்களுடனும் காந்திஜீ தமது பொக்கை வாயையும், மலர்ந்த முகத்தையும் காட்டிக் கொண்டு வந்து சேர்ந்தார். படம் பிடிப்பவர்கள் வேட்டைநாய்கள் போலோடிவந்தனர். 12 நிமிஷங்கள் தான் அவருக்கும் அந்த ஜனத்திரளுக்குமிடையே யிருந்தது. இதற்குள் எல்லோருக்கும் செலவு கொடுத்து விட்டார். ஜன்னலில் தலையை நீட்டும் போதெல்லாம் படமெடுத்துக் கொண்டார்கள். ரயிலும் புகையைக் கக்கலாயிற்று. நம்ம நாட்டில் சர்வ சாதாரணமாகக் கேட்கப்படும் "வந்தே மாதரம்!" "காந்திக்கி ஜே!" என்ற சப்தம் வானத்தைப் பிளந்து விட்டது. அது முடிந்ததும் அக் கூட்டத்தாரனைவரும் காந்திஜீயை வாழ்த்தி இரண்டு கீதங்கள்பாடினர். கிறிஸ்மஸ் மாதத்தில் அந்த அதிகாலையில் வானம் அதிரம்மியமாயிருந்தது. போகஸ்டேஷன் வரை சரோஜினி தேவியும் சென்றார். இதே ஸ்டேஷனிலே தான் லண்டன் வரும்போது காந்திஜீயை பரிட்டிஷ் மந்திரிகள் வரவேற்று மோட்டாரிலேற்றிச் சென்றது. இப்பொழுது இங்கே கூட்டமேயில்லை. வரவேற்றபோது செய்த அத்தனை உபசாரம் காந்திஜீ பிரியும் போது பிரிட்டிஷ் மந்திரிகள் செய்யவே கிடையாது. அமெரிக்கக் குடியாட்சித்தலைவர் வில்சனையே மாற்றியது போல காந்திஜீயையும் ஏக தடபுடலாய் இராஜவரவேற்புச் செய்து ஏமாற்றிவிட முடியவில்லையென்று கசந்து விட்டார்கள். "விட்டதடி ஆசை விளாம்பழத்துத் தோலோடு" என்ற கதையாய்மந்திரிமாரெல்லாம் வீட்டிலேயே யிருந்து விட்டார்கள். ஆனால் ஒப்புக்குச் சப்பாக சர் சாமுவேல் ஹோர் மாத்திரம் விக்டோரியா ஸ்டேஷன் வரை வந்து வழியனுப்பினான்.

காந்திஜீ ரொமெய்னரோலண்டையும், முஸலோனியையும் பார்த்துவிட்டு இம்மாதம்கடைசிவாரத்தில் இந்தியா வந்திறங்குவார். அப்பொழுது நாம் அவருக்கு தெய்வ வரவேற்பளிப்போம்.

பொதுஜன அபிப்பிராயம்.

(ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார்.)

தென்னாட்டிலே கள்ளுக்கடை மறியல் எவ்வளவு வேகமாய் நடந்து கொண்டிருக்கின்றது தெரியுமா? மூலைக்கு மூலை ஒரு சிறு கிராமங் கூடத் தவறாமல் இத்திருப்பணியிலீடுபட்டு நிற்கின்றது. ஏதோ வொரு மகத்தான வெறி பிடித்ததுபோல் ஜனங்கள் கள்ளரக்கனை வெறுத்து வதஞ்செய்து வருகிறார்கள். யாருக்காவது சந்தேகமானால் தாராளமாய்ப் போய்ப்பார்த்துக் கொள்ளலாம்; தடையேயில்லை. ரோட்டுகளெல்லாம் கூடுமானவரை மோட்டாரோடுவதற்கு லாயக்காகத் தானிருக்கின்றன. கேட்டுகள் கூடத் திறந்து கிடக்கின்றன. வரிவம்பெல்லாமில்லை. ராஜாப்போலப் போய்ப்பார்க்கலாம்.

ஜனங்கள் கள்ளுக்கடை கூடவே கூடாதென்று கூறினார்கள். கள்ளென்றால் வாந்திகூடயெடுத்து விடுவார்கள் போலும் அவ்வளவு அருவருப்புத்தட்டிவிட்டது. நூற்றுக்கு 90 பேர் விரும்பாத, இந்த இழவைச் சர்க்காரேன் பலவந்தமாக—பிடிவாதமாகப் பிடித்து நிறுத்திக் கொண்டிருக்க வேண்டும், ஜனங்கள் வேண்டாமென்றால் வேண்டாந்தான். அப்புறமென்ன அப்பீல்? பலாத்காரத்தால் பொதுஜன விருப்பத்தை மாற்றிவிட முடியுமா? சாத்வீக விரதம் எடுத்துக் கொண்டிருக்கும் ஜனங்கள வெற்றியே பெறுவர்; சந்தேகமேயில்லை. ஏனெனில் அஹிம்ஸையின் ஆத்மபலத்துக்கு முன்னால் கேவலம் மிருகபலமோ ஆயுதபலமோ ஒடிந்த துரும்புக்குச் சமானமல்லவா?

இவ்வளவும் செய்தும் மது வியாபாரமென்னவோ நடந்து கொண்டுதானிருக்கிறது. போலீஸ்காரன், மாஜிஸ்டிரேட், பினல் கோடு சட்டங்கள், அவசரச் சட்டங்கள் இராணுவ சட்டங்கள் இவைகளெல்லாம் சேர்ந்து கொண்டு கள்ளுச் சாராயக்கடைகளைக் காத்து வருகின்றன.

இந்த நாட்டின் ஜனங்களனைவரும் ஏகோபித்து கள்ளுக்கடைக்கு முன்னால் சென்று "இ

சொல்லொன்று செய்லொன்று

நாராயணா? நடேசா?

நிதிமசோதா சீரழிந்து சிரிப்பாய்ச் சிரித்து கடைசியில் வைஸிராயின் காலில் விழுந்து உயிர்பெற்று முந்தண்ணா சபையிலே போய் நுழைந்ததே அதுவரைபேசியாகிவிட்டது. இனிமேல்தான் கதை ஸ்வாரஸ்யமாயிருக்கும். அம்மசோதாவை ஞூஸ்டர் சட்டசபைக்குள் கொண்டுவரும்போது வலதுகாலை யெடுத்து வைத்து வந்தான் போலிருக்கிறது. எவ்வளவு அடி உதையெல்லாம் பட்டும் நாராய்த் தோலாயிழுபட்டு இராஜாங்கசபை—இல்லையில்லை மறந்துவிட்டோம்—முந்தண்ணாக்கள் சபையிலும் நிறைவேறியே விட்டது. இதை நாம்ஏற்கனவே யெதிர்பார்க்கவே செய்தோம். ஏரோப்லேன் வைஸ்ராய் கிறிபகோட்டை இக் கசமாலங்கள் தாண்டமாட்டா வென்பது நாடறிந்த விஷயம். என்றும் நம் தமிழ்நாட்டுத் தலையாட்டிகளின் செயல் சிச்சீ கீரைவிற்குங் கிழவிகூடச் செய்யமாட்டாள். அட நாராயணா! அட நடேசா! நீங்களும் மனிதத்தோல் போர்த்து நாகரீக மக்கள் முன் உலவலாமா? ஏழைமக்களின் இரத்தத்தைத் துளிவிடாமல் உறிஞ்சப் போகும் இம் மசோதாவை நல்லபிள்ளைகள் மாதிரி எதிர்த்தீர்களே அந்த மட்டோடே கௌரமாய் நின்றிருந்தால் மரியாதையாகவிருக்கும். அதைவிடுத்துப் பேசியதற்கு நேர்மாராக மசோதாவுக்குச் சாதக ஓட்டுக் கொடுக்க உங்களுக்கு வந்த கேடென்ன? வாயினால்தான் பேசினீர்களா? இல்லை வேறுவாயால் பேசினீர்களா? அடமூடங்களே! “அவன் கிடக்கிறான் குடிகாரப்பயல் எனக்கிரண்டு புட்டிகள்கொடு” என்றவன் செய்கையைச் செய்து விட்டீர்கள். தொண்டை வெடிக்க கத்திவிட்டுக் கடைசில் கையை உயர்த்தி விட்டதால் உலகத்தையே மாற்றிவிட்டதாக நடேச நாராயணாவாள் கருத்துப் போலும். ஜீ. ஏ. நடேசன் புத்தகவியாபாரி. நல்ல காசு தட்டிக்கொண்டவர், கோபதி நாராயணனும் சர்க்காருக்குச் செல்லப் பிள்ளை. இல்லா விட்டால் தி. ப. பட்டம் கிடைக்காதல்லவா? தி. ப. என்றால் திவான்பகதூர்: தினப்பட்டினி என்று தப்பர்த்தம் செய்து கொள்ளக்கூடாதென்று தான் இவ்வளவு வியாக்கியானமும் செய்யவேண்டியதாயிற்று. இவர் முதுகிலே யெப்பொழுதும் ஒரு மூட்டையைச் சுமந்து திரிவார், பொதியில்லை. கழலைக்கட்டி. அலிபுரம் சிறையில் சத்தியாக்கிரகக்கைதிகள் ஒரு முறை இவரை கழிகம்பில் பிடித்தது இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது.

ங்கே எங்களுக்குக் கள்ளுக்கடைவேண்டாம்: எடுத்து விடுங்கள் என்று கத்துவார்கள். ஆனால் சர்க்கார் அவர்களைச் சும்மா விடுவார்களா? குறுந்தடி, ஈட்டி, துப்பாக்கிகளைப்போலீஸ் காரர்கள் கையிலே கொடுத்து அந்த ஜனங்களைச் சட்டவிரோதமான கூட்டத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்லி மாட்டிவிடுவார்கள். இது வெறும் பேச்சல்ல. வேண்டுமானால்நான் தனியொருவனாகவே ஓரே யொருவாரத்திற்கிடையில் இந் நாடு முழுவதையும் கிளம்பச்செய்து ஊர்வலமாகவும் நடத்திக் காட்டமுடியும். ஆனால் அதுகாந்தி—இர்வின் ஒப்பந்தத்துக்கு விரோதமென்பார்கள். போலீஸார் செய்வது?

—யங் இந்தியா.

சுதந்திரன் மீது பாணம்

சர்க்காருக்கு 1500 ரூபாய்வேண்டுமாம்.

நமது “சுதந்திரன்” 23—10—3 உ வெளியீட்டில் “ஆயுத பூஜை” என்ற விஷயத்தில் சில ஆட்சேபகரமான பதங்கள் இருப்பதாகக் காரணங் கூறி பர்மா சர்க்கார் 1500 ரூபாய் ரொக்கஜாமீன் கட்ட நமக்கு நோட்டீஸ் விடுத்திருக்கின்றனர். அதனால் தற்காலிகமாக நமது வெளியீடு நிறுத்திவைக்கப் பெற்றிருக்கிறது. நாம் ஹைக்கோர்ட்டில் தாவாசெய்துள்ளோம் முடிவு விரைவினில் தெரியவரும். அன்பர்கள் காலதாமதம் மன்னிக்க. தங்கள் ஊழியன்

சு. நா. சுந்தரன், ஆசிரியன்.
“சுதந்திரன்” 237—37 வது வீதி,
இரங்கோன்.

முதல் மந்திரி கைதியா?

முதல் மந்திரி மெக்டோனால்டு டோரிக் கோஷ்டியாரின் கைதியாயிருக்கிறார். தம்மிஷ்டம்போல் எந்தக் காரியத்தையும் செய்யவியலாத நிலைமையில் அவர் ஒரு கைதியைப் போன்று நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறார். தனது முதலாளிகளின் இஷ்டத்திற்கு இம்மி பிசகாமல நடக்கவேண்டும். இல்லா விட்டால் வேலையில்லை வெளியே போ வென்று சொல்லி விடுவார்கள். இதற்குப் பயந்துதான் காந்திஜியை வெறுங்கையுடனனுப்பி விட்டார்.

நம்ம ஊர்க் குருவி.

நம்ம குருவியை நகர் சோதனைக்கு விட்டிருந்தோம். இரங்கோன் நகர முழுதும் சுற்றிப்பறந்து திரிந்து இன்றுதான் நம் கையில் வந்துட்கார்ந்தது. மூச்சுவிடக்கூட நேரமில்லாமல் எத்தனையோ சமாச்சாரங்களை கோர்வை கோர்வையாய்க் கூறிவிட்டது. எதை யெழுதுவது எதை விடுவது என்று தோன்றாமல் பரக்கப் பரக்க விழித்தோம்; அப்புறம் குருவியே அடியெடுத்துக் கொடுத்தது. ஸ்காட்மார்க்கெட்டுக்கு நம்மையிழுத்துப்போய் அங்கே ரயில்வே தண்டவாளத்தைக் கடந்து செல்லுவதற்காகப் போடப்பட்டிருக்கும் பாலத்தையுந் தாண்டியழைத்துச் சென்றது. இரவுநேரம். தட்டுத்தடுமாறிக் கீழேயிறங்கினோம். உடனே நமது ஊசிக்கண்ணிலே ஒரு காட்சிதட்டிவிட்டது. குருவியைக் கூப்பிட்டு "கொஞ்சம் நில்! இங்கேயொரு சமாச்சாரம் நமது பத்திரிகையின் ஒரு பத்திக்குக் காணத்தக்கதிருக்கிறது" என்றோம். என்ன என்று கேட்டது குருவி. "இங்கேபார்! நகர சபையில் நிலவரி; வீட்டுவரி, விளக்குவரி, தண்ணீர்வரி, கக்கூஸ்வரி, மண்ணாங்கட்டிவரி, செருப்புவரி, இழவுவரி யென்றென்னென்னவரிகளையோ வாங்கிப் பிராணனைப் பிச்சுப்பிடுங்கித் தின்னுகிறார்களே. இந்த இடத்தில் ஒரு விளக்கைப் போட்டுத் தொலைத்தால் எவன் அப்பன் குடிமுழுகிப் போகிறதென்று இந்நகரசபையார் இருளடையப் போட்டிருக்கிறார்கள். இங்கென்னென்ன அக்ரமங்களெல்லாம் நடக்க முடியும் தெரியுமா? வழிப்பறி, விபசாரம், ஒருவனையொருவன் வஞ்சந்தீர்த்துக் கொள்ளுவது, இவைபோன்ற எத்தனையோ கூடாச்செயல்களுக் கெல்லாம் இடமேற்படுகிறதல்லவா? ஒரு சிறு விளக்கு அதிகமாய்ப் போனால் அதற்கெனத் தனிச் செலவாகப் பார்த்தாலும் ஒரு பத்து ரூபாய் பிடிக்கலாம் — இச்செலவைச் சிக்கனப்படுத்துவதால் பொதுஜனங்கள் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகின்றன ரென்பது இந்நகர தாதாக்களுக்கேன் மூளையில்படவில்லை? சிக்கனமெனச் சொல்லி அவர்கள் வீட்டில் விளக்கேற்றாமல் குடியிருப்பார்களா? அதைப்போல் நகரத்தையும் நினைத்து நகரஜனங்களின் குறையை நிவர்த்தி செய்யட்டும்.

இந்தியா தயார்! தயார்! தயார்!

(மகாத்மா காந்தி)

சட்டமறுப்புபோரை நான் மறுபடியும் ஆரம்பித்து விட்டால் நிச்சயமாய் என்னாட்டு மக்கள் என்னைக்கைவிட்டுவிடமாட்டார்கள். நான் நிறுத்திய போரை மறுபடியும் ஆரம்பிப்பதில் எவ்வித கஷ்டமோ, ஏமாற்றமோ எனக்கேற்பட்டது கிடையாது. நான் என்னைத்தானே தயார் செய்து கொண்டு விட்டால்—எனது அந்தராத்மா எனக்கு விடைகொடுத்துவிட்டால்—அப்புறம் நாடே தயாரடைந்து விட்டதென்பதில் சந்தேகமில்லை. எனக்கு நானே திருப்தி கொள்ளாதவரை என் ஜனங்களும் என்னிடத்தில் திருப்தி கொண்டுள்ளார்களென்று நான் திருப்தியடைய மாட்டேன். 1922 ல் பர்தோலியில சட்டமறுப்பியக்கத்தை ஆரம்பித்தேன். நாடுதயாராயில்லை யென்று கண்டவுடன் நானே வலியப் போர் நிறுத்தஞ் செய்துகொண்டேன். 1931ல் கிட்டத்தட்ட 10 வருடங்களுக்குப் பின்னால் மறுபடியும் போர் துவக்கிய போது எனது நண்பர்கள் சிலர் பயந்தார்கள்; சிலர் எச்சரித்தனர்;. ஆனால் என்னுள்ளிருந்த நம்பிக்கை என்னைத் தூண்டிகொண்டேயிருந்தது. பத்து வருடங்களுக்கிடையில் நடந்த நிர்மாண வேலைகள் இவ்வளவு தூரம் ஜனங்களைத் தயார் செய்யாதிருந்தால் பிரயோஜனமில்லை யென்றெண்ணினேன். அஹிம்சையின் தத்துவத்தை நாங்கள் நன்றாய்ப் போதித்து விட்டோம். இனிமேல் அதைச் சோதித்து விடவேண்டுமென என் ஆத்மத்தையும் ஆண்டவனையும் நம்பிப் போரில் இறங்கினோம். நான் எதிர்பார்த்ததிற்குமேல் எத்தனையோ மடங்கு அதிகமாகவே நாடு பக்குவப்பட்டிருந்தது. போராடினோம், எங்களது தாய்மார்களையும், குழந்தைத் தெய்வங்களையுங் கூட போரில் இறக்கிவிட்டோம்: வெற்றி கைபிடி தூரத்திலிருப்பதாகக் கண்டார்கள். இப்பொழுது நான் எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு இப்பாலிருந்த போதிலும் என் ஜனங்கள் எனது சமிக்ஞைக்காகத்தான் காத்திருக்கின்றனர்.' நான் தான் அவர்களைப் பொறுமையுடன் காக்கவைத்துக் கொண்டிருக்கிறேன். சீக்கிரம்போய்ச் சேரவேண்டும். என்னாட்டார் சுயராஜ்ய தாகத்தால் நாவறண்டு கிடக்கின்றனர். சட்டமறுப்பியக்கத்தாலன்றி நாட்டின் தாகத்தை யடக்கமுடியாது.

—நியூ லீடர்.

Printed & Published By A. V, Sollam Pillay at the Desopakari Press, 210, 36th Street, Rangoon.

பதிவு எண் 245   மலர் 9   இதழ் 39   அரையணா.

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை

DESOPAKARI

புதன், ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி, இரங்கோன், (13—12—31) கார்த்திகை மீ 28உ ஞாயிற்றுக்கிழமை

முட்டை பொறிக்கா முன் குஞ்சை எண்ணாதே

வறபுறுத்திக் கேட்டது தான்
வஞ்சனையோ நேர்மையோ?
முற்படவே சூழ்ந்து முடித்ததொரு
செய்கையன்றோ
மண்டப நீர் கட்டியது
மானிலத்தைக் கொள்ளவன்றோ?

—கவிராஜன்.

முட்டை பொறிக்கா முன் குஞ்சை யெண்ணாதே.

பர்மா வட்டமேஜைத் தேர் ஊர்ந்து கொண்டிருக்கிறது. பர்மானியாவின் கோயிலுக்குள்ளோ பிரித்தானியாவின் கோயிலுக்கோ அத் தேர் போய்ச் சேரவேண்டும். பர்மியப் பிரதிநிதிகளெல்லாம் பர்மியக் கோயிலுக்கே இழுத்துக் கொண்டு போய் விடுகிறதென்று ஒருவகையாக ஒத்துப் போய்வடம் பிடித்தார்கள். கரைத்தகராறு ஏற்பட்டு விட்டது. எனக்குத்தான் முதல் மரியாதை நீ இரண்டாவதாக நின்று தான் விபூதி வாங்கவேண்டும் என்ற வழக்கு வந்து விழுந்திருக்கிறது. நீ சிறியவன் நான் பெரியவன் என்ற வாக்குவாதங்கிளம்பி விட்டது. கடைசியில் தேர் ஒரு சக்கரத்தில் மாத்திரம் முட்டுக்கட்டை போடப்பட்டு பிரித்தானியக் கோயிலின் பக்கம் திரும்பியிருக்கிறது. அப்புறமென்ன அங்கேதான் போய்ச் சேரப்போகிறது. இதற்கொரு ஜோஷியமா சொல்லவேண்டும். இந்திய மேஜையில் மாகாண சுயாட்சி, மத்திய பொறுப்பாட்சி என்ற பேச்சுக்கள் பிறந்தன. இந்த மேஜையில் அப்படியொன்றும் பேசுவதற்கில்லை. பர்மா ஒரே தனி மாகாணம். ஆகையினாலே மாகாண சுயாட்சி யென்பது போய் மேல் வீடு, கீழ் வீடு என்ற பேச்சு புறப்பட்டிருக்கின்றது. கீழ் வீட்டில் எத்தனை பேரிருந்து மணியம் பண்ணலாம், எவர் கையில் என்னென்ன அதிகாரமிருக்கிறது என்று யோசிக்கின்றனர். செலவு அதிகமாகும் ஒரு 100 பேரிருந்தால் போதுமென்கின்றனர் சிலர். ஊ பாப்பேயும், ஊ ப்புவும் 200 பேருக்குக் குறையாமலிருக்க வேண்டுமென்று கூறினர். சந்தையில் ஆடு மாடு பேரம் பேசுகிற மாதிரி விண்டர்டன் பிரபு குறுக்கே விழுந்து இரண்டுக்கும் பொதுவில் 150 பேரிருக்கட்டும் என்று மத்தியஸ்தம் செய்து வைத்தார். அப்புறம் ஆயுள் பாகம் பார்க்கப்பட்டது. வழக்கம் போல் 5 வருஷத்துக்கொரு முறை சபையைக் கலைத்து புது சபை கூட்டுவதென்று பொதுவாக எல்லோருமே எவ்வித சண்டை சத்தமில்லாமல் ஒத்துக் கொண்டார்கள். அத்துடன் அன்றைய கூட்டம் கலைந்து மறுநாள் மாலை 2-30 மணிக்குக் கூடி சிறுபாலாரின் பேச்சைக் கிளப்பினார்கள். என்னுள் இத்தனை பேரிருக்கிறது உன்னுட்களிவ்வளவு பேரிருக்கிறது என்று பேச ஆரம்பித்தவுடனேயே சர்க்கார் தரப்பில் அன்று அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்த வார்டுலா மில்னி சொல்லுவார், "சர்க்காருக்கெனப் பிரத்தியேகமாக இன்னின்ன அதிகாரத்தை ஒதுக்கிவைத்துக் கொள்ளுகிறதென்ற பேச்சு இப்போதில்லை. ஆனால் அப்படி யேதாவது ஒதுக்கப்பட்டால்

அதைமேல் பார்ப்பதற்காக எத்தனை ஆசாமி களை கீழ் வீட்டில் குடியேற்ற சர்க்காருக்கு அதிகாரமிருக்க வேண்டுமென்பதுதான் இப்போது பேசவேண்டிய பேச்சு" என்றார். உடனே ஷ பாப்பே அதைத்தலையிலடித்து "அந்த மாதிரி சர்க்காருக்கு விசேஷ சலுகையிருக்க வேண்டியது அவசியமா? என்பதைத் தீர்மானிக்காமல் ஆள் எத்தனையென எண்ண முடியாதெனச் சொல்லிவிட்டார். ஐரோப்பியர்கள் தங்களுக்கு நூற்றுக்குப் பத்துவிகிதம் அதிகப்படியான பிரதிநிதித்துவமும் தனித்தொகுதியும் வேண்டுமென்றார்கள். இந்தப் பிரதிநிதி காவாஜி இந்தியர்களின் பிரதிநிதிகள் இப்பொழுதிருப்பதே குறைச்சல். இனனும் இதிலும் குறைத்து விடக் கூடாதெனக் கேட்டுக் கொண்டார். ஜனத்தொகையின் விகிதாசாரப்படி நூற்றுக்கு 50 விகிதமும் பொருளாதாரத்தின் மீது 50 விகிதமுமாக இரண்டையும் சேர்த்தே பிரதிநிதித்துவமளிக்கவேண்டுமென்றும் இவ்வழியில் பார்த்தால் நாட்டின் செல்வத்தில் பேர்பாதி பர்மியர் கையிலும், இருபதிலிருந்து இருபத்தைந்து விகிதம் பிரிட்டிஷ்காரர்களிடத்திலும் இருபத்தைந்து முதல் முப்பதுவிகிதம் இந்தியர்கள் கையிலுமிருப்பதால் இம்முறை கையாளப்படுவதே ஒழுங்கெனவும் ஹாஜி கூறினர். இப்படி ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கு வேண்டிய பாதுகாப்புகளை வற்புறுத்திக் கொண்டார்கள். முடிவு என்னுமென்பதை சொல்லப் போனால் பொல்லாப்பு. இருந்தாலும் இந்திய மேஜையின் கெதி என்னுயிற்றென்பது நமக்குத் தெரியாததல்லவே. நிற்க,

பர்மாவிலிருக்கும் ஐரோப்பியர்கள் பர்மாவுக்கெங்கே சுயராஜ்யத்தை கப்பலேற்றி அனுப்பவோ அல்லது பிரதிநிதிகள் கையில் தூக்கிக் கொடுக்கவோ போகிறார்களென்று பயந்து வட்டமேஜைக்கு பர்மியர்கள் எவ்வளதூரம் யோக்கியதை யுடையவர்களென்று கூறுகிறார்கள். சிறு பாலார் என்றவகையில் நாம் அந்த பாதாஸ்தைக் கண்ணில் ஒற்றிக்கொள்ளலாம். ஏனெனில் நம்மைப் போன்ற சிறு பான்மைக்காரர்களான வெள்ளைக்காரர்களை ஆதரிப்பதால் அவர்களுக்குக் கிடைக்கும் பாதுகாப்புகளும் உரிமைகளும் நமக்கும் கிடைக்க நியாயமுண்டென நண்பரொருவர் சொல்லுகிறார், வாஸ்தவந்தான். இல்லாவிட்டால் நமக்குச் சேர வேண்டிய உரிமை கிடைக்காமல் போய் விடுமென்று நாம் சந்தேகிக்க இடமில்லை. ஆனுல் சுதந்திரப் பிரியர்கள் லாயக்கில்லை யென்ற பல்லவியைப் பாடம் படிக்க விரும்பமாட்டார்கள். பர்மா விடுதலை பெறுவதை எந்த ஒரு இந்தியனும் வெறுக்க முடியாது? சுதந்திர பர்மாவிலோ அல்லது எந்தவொரு புதிய அரசியல் அமைப்புக் கொண்ட பர்மாவிலோ வெறும் பாதுகாப்பையும் தனித்தொகுதியையும் தவிர வேறொன்றும் நமக்கு வேண்டாம். பர்மா பர்மியர்க்கே கிடைத்து விட்டாலும் சரி, அல்லது பிரிட்டிஷ் ஆட்சியின் கீழேயே யிருந்தாலும் சரி, நமக்கு வேண்டியது ஆபத்தில்லா வாழ்க்கைதான். அதுவொன்றையே நாம் வற்புறுத்திக் கேட்போம்.

சுதந்தரன் வழக்கு.

"சுதந்தரன்" ஆசிரியர் தன்னை சர்க்கார் ஜாமீன் தொகை கட்டும்படி கேட்டது ஒழுங்கல்லவென ஹைகோர்ட்டில்வழக்குதொடர்ந்து இவ்வழக்கு முடிவு பெறும் வரையில், சர்க்கார் உத்திரவை தற்காலிகமாக தடைசெய்யும்படி கேட்டிருந்தது நேயர்களுக்குத் தெரியலாம். ஆசிரியருக்காக ஸ்ரீமான் சி. கே. தம்பி பாரிஸ்டர் ஆஜராகி பிரதம நீதிபதி ஸர் ஆர்தர் பேஜ் ஜஸ்டிஸ் கன்லிப் இவர்கள் முன்பு வாதித்தார். நீதிபதிகள் வழக்கைச் சீக்கிரத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுவதாகவும், ஆகையால் தடை உத்திரவு அவசியமில்லையெனவும் உத்திரவளித்தார்கள் வழக்கு அடுத்த வாரம் நடைபெறும். பர்மாவில் இம்மாதிரி வழக்கு இதுவேதான் முதலாவதாகும். இதன் முடிவை பத்திரிகாபிமானிகள் மிகக ஆவலுடன் எதிர்பார்ப்பது சகஜம்.

பட்டைநாமம் போட்டு விட்டார்

காந்திஜீ சுயராஜ்யத்தை வாங்கி வரவில்லை. வெறுங்கையோடுதான் திரும்புகிறார். மற்றவர்கள் ஏதோ கொஞ்சம் இருந்து சுயராஜ்யத்தை அள்ளிக்கொண்டு வரலாமென்று காத்திருந்தார்கள். ஆனுல் அவர்களுக்குப் பட்டைநாமத்தைச் சாற்றி விட்டான் என்பது பாவம் சாப்ரூ வாய் விட்டுச் சொல்லி விட்டார். பிரிட்டிஷ் நண்பர்கள் மரியாதையாக நடந்து கொண்டதாக வாழ்த்துக் கூறிக்கொண்டார்.

எளிய வாழ்க்கை.

(ஸ்ரீஜத் ராஜகோபாலாச்சாரியார்.)

திரு. ராமகிருஷ்ணன்:— ஏன் இவ்வாறு உற்சாகமின்றி யிருக்கின்றீர்?

திரு. பலராமன்:— நமது நாடு இவ்வளவு தூரம் சீர் கெட்டுக் கிடக்கையில் நாமெப்படி குதூகலங் கொண்டாட முடியும்?

ராம:— எல்லாவற்றையுந்தான் காந்திஜீ சரிப்படுத்தி விடுவாரே நீரேன் சிரமப்பட வேண்டும்?

பல:— அப்படிச் சொல்லலாமா? நீரும் நானும் மற்றவர்களும் யாருக்கு வந்த விருந்தோ வென்றிருந்து விட்டால் காந்திஜீ யொருவரால் என்ன செய்ய முடியும்?

ராம:— வட்டமேஜைப் பேச்சு முடியட்டும். அப்புறம் போராரம்பமானால் நம்மால் என்ன செய்ய முடியுமென்பதை அப்பொழுது யோஜிக்கலாமே?

பல:— இல்லை ராமகிருஷ்ணா! அரசியல் சம்மந்தமான கவலை யெனக்கில்லை. ஆனால் நாட்டிலேற்பட்டிருக்கும் பணநெருக்கடியும்பொருளாதாரக் கஷ்டமுந் தான் என்மனத்தை உள்ளே உறுத்துகிறது.

ராம:— சரி! இந்த இழவுகளை யெல்லாம் போட்டு மண்டையை யுடைத்துக் கொள்ளாதே பலராமா! உலக வறுமையைத் தீர்க்க உன்னால் முடியுமா?

பல:— இந்தக் கோடையிலே நான் எனது கிராமத்திலே யிருந்தேன் கொடைக்கானலுக்குப் போகவில்லை. ஜனங்கள் பசியும் பட்டினியுமாய்க் கிடப்பதைக் கண்டேன். அது தான் என்னை அரித்துத் தின்னுகிறது.

ராம:— என்ன ராமகிருஷ்ணா நீ எப்போது போல் ஷிவிக்கியானாய்? வேண்டுமானால் உன்சொத்துச் சுகங்களை யெல்லாம் உன்கிராம ஜனங்களுக்கு பகிர்ந்து கொடுத்து விடேன்?

பல:— ஏன் செய்யக் கூடாது? நீ நினைக்கிறமாதிரி அதுவும் அத்துணை முட்டாள்தனமானதல்ல. நானேன ஒரு மோட்டாரை வைத்துக் கொண்டு மணியர்பண்ணவேண்டும்? அது இல்லாவிட்டால் என் வாழ்க்கை நடவாதா? சென்னையில் பங்களா என்னத்திற்கு? அதற்கு ஆள்பந்தோபஸ்து கார் வாரி யெல்லா மில்லாவிட்டால் நான் வாழ முடியாதா?

ராம:— ஓ! சரிதான் செட்டாய் வாழப் போகிறாயென்று சொல்லேன். இதற்கென்னத்துக்கு காடுமேடெல்லாம் சுற்றுகிறாய்? எளிய வாழ்க்கை யென்ற பேச்சே எனக்குப் பிடிக்கிறதில்லை இதெல்லாம் பிசினாறுடைய சாக்குப் போக்கன்றி வேறில்லை பலராமா!

பல:— இல்லை ராமகிருஷ்ணா! அப்படித் தப்பாக நினைத்து விடக்கூடாது. நம்முடைய வாழ்க்கையையே யெடுத்துக்கொண்டுபார்ப்போம் நான் மாதா மாதம் 100 ரூபாய் செலவழிக்கிறேன்; நீ 500ரூபாய்செலவுசெய்கிறாய். இவ்வளவு பணமும் எங்கேபோய்ச் சேருகிறது என்று பார்த்தால் நான் சொல்லுவது சரி யென்று உனக்குப்படும்.

ராம:— படித்தவன் பழங்கணக்கை யெடுத்துப் பார்த்தமாதிரி நம்முடைய கணக்கைப் புறட்டிப் பார்க்கச் சொல்லுகிறாயா? செலவு செய்தால் செய்ததுதான். அப்புறம் அதைப்பற்றிப் பார்க்கிறதே யில்லை; போச்சுதே யென்று சிந்திக்கிறது மில்லை; கவலைப்படுகிறதுங் கிடையாது. போனது போனது தானே பலராமா!,

பல:— வாஸ்தவந்தான். ஆனால் காலத்தோடொத்து வாழ வேண்டாமா? நம்முடைய வாழ்க்கையைத் தேசிய முறையில் நாம்திருத்திக் கொள்ள வேண்டிய காலம் வந்திருப்பதை யறியாயா?

ராம:— அப்படியானால் நீயொரு முஸலோனி யாகி விட்டாய்?

பல:— லெனினாகி விட்டேன் என்று சொல்ல இஷ்ட மில்லாவிட்டால் ஆம் முஸலோனி யாகி விட்டேனென்றே சொல்லேன்.

ராம:— சரி. அப்படியானால் நீ யெவ்வளவுமிச்சம் பண்ணப் போகிறாய்?

பல:— வீட்டு வாடகையாக 50 ரூபாய் கொடுக்கிறாயல்லவா?

ராம:— ஆம் அதுவும் கொஞ்சம் கூடுதலாய் 55 ஆகிவிட்டது வீட்டுச் சொந்தக்காரன் ஒரு பேராசைப் பிடுங்கல். 55 கொடுக்கவேணும் இல்லா விட்டால் காலிபண்ணு என்று சொல்லுகிறான்.

பல:— சினிமாப் படங்கள் பார்ப்பதில் எவ்வளவு போகிறது?

ராம:— ஆம்அதில் ஒரு 50 ரூபாய் போகிறது எனது இரண்டாவது பிள்ளை வாரா வாரம் படம் பார்க்க வேணுமென்கிறான். என் மனைவியும்-அவள் ஒரு நோயாளி பாவம் அவ

கப்பலைத் திருப்பு கல்கத்தாவுக்கு

சென்னைக்கு வெள்ளிக்கிழமை கப்பல் புறப்படுவது முஸ்லிம்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறதென்றும், ஹிந்துக்களுக்கு ராகுகாலமாக விருக்கிறதென்றும், அதை வேறு கிழமைக்கு மாற்றவேண்டும் என்றும் சோலிய முஸ்லிம் வர்த்தக சங்கத்தார் ஒரு கடிதம் வெளியிட்டார்கள். ராகுகாலம் பார்ப்பதாயிருந்தால் எப்போதும் ராகுகாலம் ஏற்பட்டுக் கொண்டுதானிருக்குமென்று இதேபத்திரியில் முன்னொரு முறை எழுதப்பட்டிருந்தது. ஆளேற்றிக் கப்பல்களில் தபால் கட்டுகளும் ஏற்றிச் செல்லப்படுகின்றன. கப்பல் கம்பெனியாருக்கும் கவர்ன்மெண்டாருக்கும் அது பற்றிய ஒப்பந்தமுமிருக்கிறது. அதை மாற்றுவது இலேசான காரியமல்லவென்று இப்பத்திரியிலே எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. 9—12—31ல் வெளியான "இரங்கூன் கெஜட்"டில் "சோலிய முஸ்லிம் வர்த்தக சபையின் உதவிக் காரியதரிசி சென்னைக் கப்பல் புறப்படும் தினத்தை மாற்றும்படி கூறிய ஆலோசனையில் கப்பல் கம்பெனிக்காரர்களுக்கும் பிரயோஜனப்படும் முறையில் எடுத்துக் காட்டியிருக்கலாம். மார்க்கபக்திமான்கள் சில ரூபாய்களை அதிகமாகச் செலவிடுவதைப் பொருட்படுத்தாமல் கல்கத்தா மார்க்கமாகப் போகலாம்" என்று ஒரு நிருபர் எழுதியிருக்கிறார். மேலும் வர்த்தக சங்கத்தார் எழுதிய கடிதத்தில் 100-க்கு 70 பிரயாணிகள் சோலிய முஸ்லிம்கள் என்று குறிப்பிட்டிருப்பது மிகவும் நகைக்கக்கூடியதாகவே இருக்கிறது. கப்பல் கம்பெனி ஆரம்பத்திலிருந்து இதுவரைக்கும் கணக்கு எடுத்த போதிலும் 100-க்கு 70 பிரயாணிகள் சோலிய முஸ்லிம்கள் தேறாது. இந்தப் புள்ளி விபரத்தை எதிலிருந்து எடுத்தார் என்பது ஈசனுக்குத்தான் வெளிச்சம். கெஜட் நிருபருக்கு பதில் எழுத வர்த்தக சபையார் முன் வருவார்களோ, அல்லது வாய்பொத்திக் கொண்டு வாளாவிருந்து விடுவார்களோ தெரியவில்லை.

நகரசபையில் இடங்கேட்டதை—முறையும் வழியும் தெரியாமல், படித்த வகுப்பார் சிரிக்கக் கேட்டதைப் பற்றி" விஷயத்தின் முடிவு இதுவரைக்கும் ஒன்றும் தெரியவில்லை. சோலிய முஸ்லிம்கள் பிரபல வியாபாரிகளாக இருக்கையில் நகர சபை தேர்தலில் தங்களில் ஒருவரை நிறுத்திக் கண்ணியமாகஇடம்பெற முயற்சிக்காமல் சர்க்காரிடம் மண்டியிட்டு இடம் கேட்பதும்—கேட்பதற்கு வழியில்லாமலிருப்பதை கேட்டு மற்ற சமுகத்தார் ஒன்றும் தெரியாத பாமரர்களென்று நகைக்கும்படி கேட்பதும் சோலிய முஸ்லிம் வர்க்கத்தவர்களுக்கே அவமானமாக இருக்கிறது. நகரசபையில் வர்த்தக சபையார் இடங்கேட்டதைப்பற்றி "எக்சேஞ்ச் கெஜட்டி"ல் ஒரு நிருபர் வேடிக்கையாக எழுதி கேவலப்படுத்தி விட்டார். இப்போது வெள்ளிக்கிழமை கப்பல் விஷயமாகவும் கெஜட்டில் ஒருநிருபர் கல்கத்தா மார்க்கமாகப் போகும்படி ஆலோசனை கூறி அவமதிப்பாய் எழுதுகிறார். இதற்கெல்லாம் சரியான பதில் எழுதாமல் வர்த்தக சபையார் மௌனம்சாதிப்பதுசரியல்ல. அதற்கு ஆதியிலேயே இப்படிப்பட்ட காரியங்களில் இறங்கியிராதிருந்திருந்தால் எவ்வளவோ கௌரவமாயிருந்திருக்குமல்லவா?

ஓர் முஸ்லிம்.

ளுக்காகவும் நாங்கள் 'படக்காட்சி பார்க்க வேண்டியிருக்கிறது. அதுவும் கூட்டத்தில் மூன்றுவதுவகுப்பில் உட்காரமுடிகிறதல்லே.

பல:— அவையெல்லாம் வீண் விஷயங்கள். சரி அதுதான் போகட்டும் சிகிரெட்டுக்காக எவ்வளவு செலவழிக்கிறாய்?

ராம:— ஓ! சிகிரெட்டை நிறுத்தி விட்டேனே தெரியாதா! ஹுக்காமாத்திரம் பிடிக்கிறேன் ஏதோ யிடை யிடையே ஒன்றிரண்டு சிகிரெட்டுகளைப் புகைப்பேன். ஆனால் எனக்குப்பதிலாக என் பிள்ளை பிடிக்கிறான். பெட்டிபெட்டியாய் புகைத்துத்தள்ள ஆரம்பித்து விட்டான். மூத்தவனை நானினிக் கவனிக்கமுடியாது. இளையவனையாவது சிகிரெட்டுப் பிடிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். பள்ளிக் கூடங்களெல்லாம் கெட்டுப் போய்விட்டன. எல்லாப் பிள்ளைகளும் சிகிரெட்டைவாயில் வைத்துக் கொண்டுதான் பள்ளிக்கூடம் போகின்றார்கள்.

பல:— நீங்கள் புகைக்கும் காசுகளெல்லாம் எவன் பெட்டியில் போய்ச் சேருகின்றன தெரியுமா ராமகிருஷ்ணா?

ராம:— தெரியாமலென்ன? டபிள்யூ. அண்டு ஓ. வில்ஸ் கம்பெனிக்குத்தான் போகிறது. சரி. அப்படியானால் பீடி பிடிக்கலாமா? அல்லது திருச்சினாப்பள்ளி சுருட்டுப்பிடிக்கலாமா?

—யங் இந்தியா.

(தொடரும்)

இஞ்சிக்கேப்பே! இஞ்சி தின்னுயா?

(லோலாயி எழுதுகிறார்.)

பி. அண்டு ஓ. கம்பெனிக்குச் சொந்தக்காரன் இஞ்சுக்கேப். பி. ஐ. எஸ் என் கம்பெனிக்கும் அவன்தான் முதலாளி. இவன் இராக்ஷசவயிறு படைத்தவன், இந்தியாவின் செல்வத்தை எவ்வளவு தின்னு தொலைத்தாலும் இவன் வயிறு நிறைவதே கிடையாது. இந்தியாவை உள்ளங்கையில் வைத்து மூடிக்கொள்ள வேண்டுமென்று ஓலமிடும் கூட்டத்தில் இவன் முதல் பேர்வழி. சர்ச்சில், ராதர்மீரெல்லாம் இஞ்சுக்கேப்புக்கு உரைபோடக் காணமாட்டார்கள். நமது சுதேசிக் கப்பல்களையெல்லாம் தண்ணீரில் தரை காணச் செய்தவன் இந்தஇஞ்சுக்கேப்பே. எத்தனையோ கம்பெனிகளை அப்படியே அப்பட்டமாக விழுங்கிஏப்பம் விட்டுவிட்டான். இந்தியாவைப்பற்றி எங்காவது பேச்சு வந்துவிட்டால் போதும் பழைய ஜோட்டைக் கவ்விக்கொள்ளுவதில் சுணங்கன் இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டந்தஸ்துக் கொடுத்தால் பிரிட்டிஷ்காரர்கள் ஒரு பெரிய தப்பைச் செய்தவர்களாவார்களென்று கூறுகிறான். "இந்தியாவில் எண்ணத் தொலையாத சமூகங்கள் இருக்கின்றன. இதர குடியேற்ற நாடுகளில் பிரிட்டிஷ்காரனைத் தவிர வேறு எந்த ஜாதியானுமேயில்லை" யென்கிறான். அட மூடமே! கானடாவில் பிரிட்டிஷ் காரனைத் தவிர வேறு யாருமில்லையா? என்று எண்ணுமல் இஞ்சுக்கேப் இஞ்சி தின்ற... போல் இறைகிறான். "இவ்வளவு ஜாதிகளையும் சட்டி ஒரு இந்திய மந்திரி என்னமாய் ஆள முடியும்" என்றும் அழுகிறான். காந்திஜீ இப்போது 35 கோடி மக்களை எவ்வாறு கட்டியாளுகிறார் என்று கண்ணைத் துடைத்துக் கொண்டு காணட்டும். "சைப்பிரஸ் கலகத்தை யடக்கியது போல இந்தியாவையும் மூன்று வருஷத்துக்கு முன்னேயே அடக்கியிருந்தால் இவ்வளவு தொந்தரவும் ஏன் படவேண்டும்?" என்றும் கூறுகிறான். வாஸ்தவந்தான. பிரிட்டிஷ்காரர் செய்த தவறை அவன் ஒப்புக்கொண்டதே நேர்மைதான். மூன்று வருஷத்துக்கு முன்னமேயே பலமான அடக்குமுறைக் கரத்தைக் காட்டியிருந்தால் இந்த வட்டமேஜையிலல்ல போன வட்டமேஜையிலேயே இந்தியா பூரண சுயராஜ்யம் பெற்றிருக்கும். அந்தத் தப்பை யின்னும் கட்டியடிகாட்டுமே.

பாவைக் கூத்து.

சீமையிலே பாவைக் கூத்து நடக்கிறது. பிரபுக்களென்ற பொம்மைகளெல்லாம் இந்தியாவைப் பற்றிய வெற்றுக் காகிதத்தைக் கட்டிக்கொண்டு பாரடிக்கின்றன. பாவைக் கூத்துப் பார்ப்பதில் நமக்கிப்பொழுது பிரியமே கிடையாது; கர்நாடகமென்று தள்ளிவிட்டோம். என்றாலும் இந்தக் கூத்தில் இர்வின் பிரபுவும், சாங்கி பிரபுவும் இல்லாவிட்டால் "கழுதைக் கிடக்கெ"ன்று தள்ளி விடலாம். காமன்ஸ் சபையில் மந்திரிகளெல்லாம் கூடி ஏதாவதொன்றை முடிவு கட்டிவிட்டால் அப்புறம் இப்பொம்மைகளோ—மூத்தண்ணுந்தைகளோ—அப்படியே கையொப்பம் வைத்துவிட வேண்டுவதுதான். வேறு அதிட்டத்தை மாற்றவோ கூட்டவோ, குறைக்கவோ, கொஞ்சங்கூட அதிகாரமே கிடையாது. தலையாட்டிக் காளைகள்போல தலையை யாட்டிவிடவேண்டும். ஆனால் இந்த இரண்டு ஆத்மாக்களும் இந்தியாவின் பேரிலே பரிவு காட்டி வருகின்றன. லார்டு இர்வின் இல்லாவிட்டால் இந்த இரண்டாவது வட்டமேஜை கூட்டியிருக்கப் போகிறதில்லை; காந்திஜீயும் அதை அலங்கரித்திருக்க மாட்டார். அடக்குமுறையால் இந்தியாவின் சுதந்திர தாகத்தை அடக்கிவிட முடியாது என்று முதன்முதலில் கண்டுபிடித்தவர்—அதுவும் அடக்குமுறையின் கடைசி எல்லைவரை கரைகண்ட பின்னல் அனுபவார்த்தமாக அறிந்தவர் இர்வின் பிரபுவேயாவர். லார்டு சாங்கேயும் உண்மை இந்தியாவை சமஷ்டிக் கமிட்டி தலைவராயிருந்து காந்திஜீயிடம் உபதேசம் பெற்றுள்ளார். இவர்கள் இருவரதுபேச்சையுங்கேட்காவிட்டால் பிரிட்டனுக்கு நல்ல காலமில்லையென்றுதான் சொல்லவேண்டும். "கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" என்பதை பிரிட்டானியா தானுகக் கண்டுணரும் வரை இர்வினைப் போலும், ஸ்மட்ஸைப் போலும் எத்தனைபேர் சொன்னுலும் கேட்கப் போகிறாளா? எதிரிலிருக்கும் சத்தியாக்கிரகப் படுகுழியில் தலைகீழாய் விழுந்து சர்வநாசமாய்ப் போக இஷ்டமானுல் மகாராசியாய்ச் செய்து கொள்ளட்டுமே யார்வேண்டாமென்பது? கெட்டுப் போவதில் பந்தயங்கட்டினுல் நாம் ஆற்றமாட்டோம் தோற்று விடுவோம் என்பதை வெட்கமில்லாமல் நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். பாவைக்கூத்து என்னுகும் பார்க்கலாம்.

ஜோ ஹுக்ம் ஸாப்

கல்கத்தாவிலே ஏரோப்ளேன் இறங்கியிருக்கிறது. ஏரோப்ளேன் சர்க்கார் வெகதடபுடலாக நடக்கும். கவர்னர் முதல் சர்க்கார் தோட்டிவரை வைஸ்ராய் வெல்லிங்டனைச் சூழ்ந்திருப்பார்கள். வால்பிடிப்பவர் காக்காய் பிடிப்பவர், ஜோஹுக்ம் போடுபவர்களெல்லாம் அவருக்குக் காணிக்கை செலுத்திக் கொள்ளுவார்கள். கலியாணச் சந்தடியிலே தாலிகட்டமறந்த மாப்பிள்ளை மாதிரி வைஸ்ராய் சாகிப்புக்கு இவ்வளவு தடபுடல் மத்தியிலே வங்காள நிலைமையைப் பற்றிச் சிந்திக்கச் சந்தர்ப்ப மிருக்கவா போகிறது? பொதுஜனங்களின் மனப்பான்மை யெவ்வாறிருக்கிறதென்று நினைக்கவாவது நேரமிருக்குமா? இருக்கமுடியாது. என்றாலும் நாம் சொல்லவேண்டியதைச் சொல்லி வைத்தால் ஆகிறபடியாகிறது. வங்காளத்தின் உண்மையான நிலைமையை யறியவேண்டுமானால் வைஸ்ராயிக்கு ஒரே யொரு வழிதானிருக்கிறது. ஜோ ஹுக்ம் (உத்திரவுப்படி) போடுகிறவர்கள் பேச்சையோ மற்றும் எந்த அதிகாரிகளின் பேச்சையோ கேட்டுவிடுவதால் பொய்க் கலப்பில்லாத உண்மை கிடைக்க மாட்டாது. பல பத்திரிகைகளின் கோர்வையைப்படித்துப் பார்க்கவேண்டும்: பொது ஜனத்தலைவர்களை யழைத்துப் பேசவேண்டும். அவர்களது அபிப்பிராயத்தை சாங்கோபாங்கமாகத் தெரிந்துணரவேண்டும். அப்பொழுதான் அவசரச்சட்டத்தைப்பற்றி பொது ஜனங்கள் என்ன எண்ணங் கொண்டிருக்கிறார்களென்பது வெட்ட வெளிச்சமாய்த் தெரியும். சும்மா வெறுமனே ஏரோப்ளேனிலேறி ஊர் ஊராய்ச்சுற்றி அங்கே காப்பியும் இங்கேடீயும் வேறெங்கோ விருந்தும் சாப்பிட்டு விடுவதால் தன் தலையில் விழுந்த பொறுப்பைச் செய்து முடித்து விட்டதாக ஏரோப்ளேன் சர்க்கார் எண்ணித் திருப்தி கொண்டு விடலாமா? இரத்தஞ் சிந்தும் புரட்சியை யடக்கவேண்டுவதில் எந்த இந்தியனுக்கும் ஆக்ஷேப மில்லை. புரட்சிக்காரர்களெல்லாம் சர்க்காரின் அடக்குமுறைக்கு அஞ்சி அடங்கி விட்டால் அவர்களனைவரும் தங்களுக்குள்ள தேசாபிமானத்தைச் சாத்வீக முறையில் காங்கிரஸின் அஹிம்ஸை வழிபற்றி நடத்துவர். காங்கிரஸும், நாடும், சர்க்காரும் கூட இதனால் நன்மையடையமுடியும். ஆனால் பலாத்காரத்தை பலாத்காரத்தால் அடக்குவது துர்லபம். இதை அயர்லாந்தில் பார்த்தாகிவிட்டது. அன்பினால்—தாராளப் பான்மையால்—தேவையைப் பூர்த்தி செய்வதாலே தான் சமாதானங் காண முடியும்,

—அமிர்த பஜார்.

சர்க்கார் சலாம்.

தூர்த்தல் தூரவில்லை. மழையாய்க் கொட்டுகிறது. இடி மின்னல் குமுறல் இவைகளுக்கெல்லாம் குறைச்சலிருக்குமா? அச்சுச்சட்டம் வந்தது. அதைத் தொடர்ந்து வங்காள அவசரச்சட்டம். அதன் வாலைபபிடித்துக் கொண்டே வங்காளப் புதிய அவசரச் சட்டம். அப்புறம் அச்சட்டத்தின் நிபந்தனைகள். பின்பு சிட்டகாங் யாதாஸ்து. இவற்றுடன் நின்று விடுமென்றிருந்தோம். இப்பொழுதோ பெர்ஹாம்பூர் சிறைச்சாலை விதிகள் புறப்பட்டிருக்கின்றன. வங்காளத்தில் தினந்தோறும் எத்தனையோ பேர் கைது செய்யப்பட்டு வருகிறார்கள். நாள் தவறினாலும் இரவு போய் பகல் விடிந்தாலும் விடியாவிட்டாலும் கைதி செய்வது மட்டும் தவறவில்லை. இவ்வளவு பேரையும் நிரப்ப இடம் வேண்டுமல்லவா? இதுவரை இரண்டு சிறைகள் நிரம்பிவிட்டன. கைதிகளைப் பட்டியிலடைப்பது போல அடைக்க பெர்ஹாம்பூரிலே மூன்றாவதிடம் தயாரித்து விட்டனர். அதற்குச் சட்டதிட்டங்களும் சமைக்கப்பட்டாகிவிட்டது. அதனால் ஒவ்வொரு போலீஸ் அதிகாரியும் ஒவ்வொரு போலீஸ் கான்ஸ்டேபிளும் கூட தடைக் கைதிகளின் மீது அமுல்நடத்தும் அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறான். சவுக்கும் பிழைப்புக்கும் கூட விசேஷ அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஹிஜ்லி சம்பவத்தைப்பற்றிய அதிகார அறிக்கையின் மை இன்னும் காயவில்லை. ஹிஜ்லிச் சிறையில் காவல்காரன்களும், கான்ஸ்டேபில்களும் நடத்திய கவாப்தர்பார் இன்னும் நமது மனத்தை விட்டு மறையவில்லை. உத்தியோக தோரணையில் வெளியிடப்பட்ட அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்ட பாதுகாப்புகள் கையாளப்பட வேண்டியதில்லை போலும். ஹிஜ்லியில் இழைக்கப்பட்ட குற்றங்கள் தண்டிக்கப்படாது விட்டுவிடப்பட்டன. ஆனால் தடைக் கைதிகளைக் கடுமையாக நடத்துவதற்குச் சட்டங்கள் பிறந்து விட்டன.

" எந்த இடத்தில் எப்பொழுது ஆஜர்பட்டி வாசிக்கப்பட்ட போதிலும் அந்த இடத்திற்

பேரைச் சொல்லிப் பிழைப்போரே!

காந்திஜீயின் பெயர் ரொம்ப மலிந்து விட்டது; கிராக்கி யென்பதே கிடையாது. உலகமெல்லாம் இப்படித்தான்; இந்தியாவிலும் இப்படித்தான். எதற்கு வேண்டுமானாலும்-குழந்தைகளுக்காயினும் சரி, இடங்களுக்கானாலும் சரி, பொருள்களுக்கானாலும் சரி, கடைகளுக்காயினும் சரி எல்லோருமே காந்திஜீயின் பெயரை உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். ஆட்களும் கூட தாய் தகப்பன் வைத்த பெயரை கொஞ்சம் அப்பாலே வைத்து விட்டு காந்திஜீயின் பெயரை எப்படியோ ஒரு விதமாய் ஸ்வீகரித்துக் கொள்ளுகிறார்கள், ஊர், கிராமங்களுக்கும் காந்திபுரம், காந்தி நகர் என்ற பெயர்கள் வைக்கப்படுகின்றன. தெருக்களுக்கும் காந்தி தெரு காந்தி வீதி யென்னும் பெயர் வழங்குகிறார்கள், காந்தி சவுக்கம், காந்தி பார்க், காந்தி மைதானம் என்றெல்லா மழைக்கின்றனர். இதே மாதிரி சாமான்களுக்கும் காந்திஜீயின் பெயரோ அல்லது வியாபார முத்திரையோ (டிரேட் மார்க்) வைக்கப்பட்டாகிறது. கடைகளுக்கும் கூட, காந்தி வஸ்திராலயம், காந்தி கதர் நிலயம், காந்தி காப்பி கிளப், மஹாத்மா காப்பி கிளப். இந்தமாதிரி யெல்லாம் காந்திஜீயின் பெயர் பல விளம்பரப் பலகைகளில் விளங்குகின்றன. உண்மையில் காந்திஜீயின் பெயரில் ஒரு கவர்ச்சி ஒரு காந்தசக்தி, ஒரு இனிமை, ஒரு சத்தியார்த்தம் எல்லாம் இருக்கத்தான் செய்கிறது. காந்திஜீயின் பேச்சென்றால் தண்ணீர் குடிக்காமல் கூட பலர் பலநாட் கணக்கில் பேசினாலும் கூட சலிக்கிறதில்லை. அவரது பெயரை உச்சரிப்பதாலேயே நமது மனம் மாசு நீங்கிப் புனித மடைகிறது; எளிய வாழ்க்கையில் மனம் நாடுகிறது. இதை எவரும் மறுக்கவோ தடுக்கவோ முடியாது ஆனால் வியாபாரிகள் காந்திஜீயின் பெயரை இந்த நோக்கங்கள் கொண்டு தான் உபயோகிக்கிறார்களோ அல்லது வியாபார முறையில் லாபம் பெறுவதற்காக வென்றே உபயோகிக்கின்றார்களோ நம்மால் சொல்லி விடுவதற்கில்லை. இருந்தாலும் எப்படியுபயோகித்த போதிலும் அவர்கள் சத்தியத்தையும் புனிதத்துவத்தையும் தேசீயத்தையும் நன்கு கடைப்பிடிக்க வேண்டுமென்றே பிரார்த்திக்கிறோம். காந்திஜீயின் பெயரால் பிழைப்பதை எவரும் ஆக்ஷேபிக்க மாட்டார்கள். சுத்த கதரெனக் கூறிப் போலிக்கதரை விற்பதம்பாலும் சுதேசிய மல்லாத பொருள்களை உபயோகிப்பதாலும் ஒரு சிலர் ஜனங்களை ஏமாற்றிப் பிழைப்பதை நாம் கண்டிக்காது விடுவதற்கில்லை. காப்பிக் கடைகளில் அன்னிய நாட்டுச் சீனியை உபயோகிக்காது நாட்டுச் சர்க்கரையை உபயோகிக்க வேண்டுவது அவசியம் இல்லாவிட்டால்காந்திஜீயின் பெயரை உபயோகிப்பதில் அர்த்த மில்லை. மேலும் காந்திஜீயின் பெயரால் நடத்தப்படும் வியாபாரங்களில் கிடைக்கும் லாபத்தில் காந்திஜீயின் இயக்கங்களில் ஏதாவதொன்றுக்கு ஒரு பகுதியெடுத்துக் கொடுப்பதும்உசிதமாகும், இல்லாவிட்டால் பொது நல ஊழியராகிய அவரது பெயரை சுய நலங்களுக்காக உபயோகிக்கலாகாதெனக் கண்டிப்பாய் நமக்கு உரிமையுண்டு.

குச் சென்று ஒவ்வொரு தடைக்கைதியும்பதில் சொல்ல வேண்டும்:

"சோதனை அதிகாரியோ அல்லது அதிகாரம் பெற்ற விசிட்டரோ வந்து விட்டால் உடனே தடைக் கைதி எழுந்து நிற்கவேண்டும்; எந்தக் கேள்வி கேட்டாலும் பதில் சொல்லவேண்டும். அவர்களுக்கு சர்வ மரியாதையு மளிக்கவேண்டும்,"

இவைகளைப் போல் இன்னும் எத்தனையோ எடுத்துக் காட்டலாம். ஆனால் இதென்ன பழைய சர்க்கார் சலாமா? இல்லை அதன் புதிய பதிப்பா? என்ற சந்தேகம் பிறந்துதான் இங்கே குறிப்பிடவேண்டி நேர்ந்தது. தெரிந்தவர் விடையளித்தால் நமது கடமையைச் செலுத்திக் கொள்ள முன்பின் யோஜிக்கப் போகிறதில்லை.

—அமிர்த பஜார்

சமீபத்தில் பர்மாவில் பலபாகங்களில் அறுவடையாகிறது. பல இடங்களில் தருசு கிடப்பது ஒரு புறமிருக்க, விளைந்த இடங்களில் போதியும் காண வில்லையாம். விவசாயிகளுக்கு வரும்படி யில்லாததினால், கொலை, கொள்ளை, பின்னால் ஏற்படுமோ என்றஞ்சுகின்றோம். ஆனாலும் பர்மா சர்க்கார் தக்கது செய்யாது போக இடமில்லை. இதை உத்தேசித்தே தான் கவர்னர் சாஹிப் அவர்கள் பட்டாளத்திற்கு பையன்களை ஆளைச்சேர்க்கும் வேலையில் முனைந்திருக்கிறார் போலும், குழந்தை குட்டிகளை கொள்ளைக் காரர்கள் கொள்ளைகொண்டு போகாதபடி இப்பொழுதிருந்தே அதிக சிறத்தை எடுத்துக் கொள்ளும்படி நமது மாகாண அதிபதிக்கு ஞாபகமூட்டுகின்றோம்.

சபாஷ்! இளஞ்சிங்கங்களே

சோலிய முஸலிம் இளைஞர் மகாநாடு.

நிகழும் 1931 டிசம்பர் 13உ ஞாயிறன்று மாலை 8-30 மணிக்கு சிக்கே மவுங்டாலே வீதியிலுள்ள சோலிய முஸ்லீம் அஸோஸியேஷன் ஹாலில் சோலிய முஸ்லிம் இளைஞர்களின்மகாநாடு நடைபெறும். ஸ்ரீமான் சி. கே, தம்பி, பார்—அட்—லா, தலைமை வகிப்பார். அனைவரும் தவராது விஜயஞ் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

இளங்காளைகளே!

உங்களது முயற்சி திருவினை யாகுக! உங்களது எழுச்சியால் உலகம் உணர்ச்சிகொள்ளுக! உங்களது அபிலாஷை பூர்த்தி பெறுக! உங்களது சேவையால், தியாகத்தால் சுதந்திர உலகம் தோன்றுக! நீங்கள் தான் இந்தியாவின் உயிர் நாடி. நீங்கள்தான் வருங்காலத்து மன்னர்கள். நீங்களெடுத்துக் கொண்ட இம் முயற்சியில் உங்களது பாதை காடுமுரடின்றிச் செப்பனிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. உங்களது மகாநாட்டில் ஒற்றுமையின் மணங் கமழுகிறது. இந்து முஸ்லிம் இணக்கத்திற் கறிகுறியாக நீங்கள் ஸ்ரீமான் தம்பியை வழிகாட்டும்படி கேட்டிருக்கிறீர்கள். இணக்கத்தின் இரு கதவுகளையும் அகலத் திறந்து வைப்பதுடன் அவரது தலைமையில நீங்கள் உங்களது எல்லையை நிச்சயமாயடைவீர்க ளென்பதே எமது திடமான நம்பிக்கை. அத்துடன் நீங்கள் வெளியுலகத்துக்கும் ஒற்றுமைச் சிறப்பை வி.என். எம். நல்லகனியைக் கொண்டு பிரசாரம் செய்யப் போகிறீர்கள். இளைஞர் கடமையை கே. எம். என். பீர்முகமது பேசுவார், நாம் எழுத வேண்டியதில்லை. நாமெல்லாம் தமிழர்கள்; நமது தாய்த் தமிழைப் போற்றவும் வளர்க்கவும் நாம் கடமைப் பட்டுள்ளோ மென்று ஈ. காதர் பாஷா சொல்லுவார். சங்க மில்லாமல் சமூகமோ சமுதாயமோ முன்னேற முடியாது இதைப்பற்றிப்பேசத்தான் எம்.ஐ. உமர் இருக்கிறாரே அவரே சொல்லட்டும். உலக மக்களை நாகரீகத்தால் செல்வத்தால் உயரச் செய்வது கல்வியென பி. முகம்மதுஷரீபும் கெ. என். சுலைமானும் பேசக் கேட்போம். பெரியோர் கடமை செய்யாவிட்டால் இளைஞருலகம் இல்லவேயில்லை யென்பது பாரியவிஷயமென ஐ பி. ஜெய்னுல் ஆபிதீன் கூறுவார். இவையெல்லாம் சேர்ந்தஒரு மாபெருஞ்சமுதாயத்தை டி. எம். டி. நூர் முகம்மதுநிர்மாணிப்பார். "அருளில்லார்க்கவ்வுலக மில்லை - பொருளில்லார்க் கிவ்வுலகமிலலை" யென என். எஸ். செய்யது முகம்மது பேசுவார். அன்பு மயத்தால் உலகமக்களனைவரும் பிணைக்கப்படவேண்டு மென்று எஸ். செய்து ஜிந்தா மதார் அன்பூறக் கூறுவார். முயற்சி பலனளிக்கும் வழியை பி எம். ஜமால் நமக்குச் சொல்லிக் காட்டுவார். பெண் கல்வி ஏன் அவசியம்? பெண்களுக்குச் சம உரிமையும் சம அந்தஸ்து மளித்து வாழ்க்கைச் சகடத்தை நேரிய வழியில் நடத்த வென்று பி. என். ஈ. அபுதாலீபு விடையளிப்பார். நமது நிலைமையைக் கல்வியோ டொப்பிட்டு கே. எம். முகம்மது ஹனீபா கூறுவார். சிறுகதையில்லா விட்டால் மகாநாடு ரசிக்காதென எஸ். ஏ. இப்ராகிம் அலி சின்னஞ் சிறு குட்டிக் கதைகள் கூறி நம்மை மகிழ்விப்பார். விகடத்தால் ஆர். க. முத்து முகம்மது நம்மை சிரிக்கச் செய்வார். ஜாலவேடிக்கை காட்டி பி. எஸ். கே. முகம்மது தஸ்தகீர் நமது கண்ணையும் மனத்தையும் கவருவார். ஏ. ஏ. முகம்மது இப்ராகீம், எஸ். ஏ. செய்யது முகம்மதுஇருவரும் சம்பாஷிப்பார்கள். தேகப்பயிற்சியால் நம்மையெல்லாம் தேசிய வீரர்களாக்குவார் எஸ். பி. முகம்மது அபுபக்கர். நாரியதரிசிபின் யாதாஸ்தை என். கே. எய்ச் முகம்மது காஸீம் அழகாகவாசிப்பார். பாடலில்லை யென்று சங்கீதம் அல்லது பாடல் பிரியர்கள் குறை கூறுதவாறு ஓ. எம். முகம்மது ஹனிபா ஏ. ஈ. அப்துல் ரஹ்மான் இருவரும் நமது சிந்தை யெல்லாம் திரை கொள்ளப்பாடுவார்கள். இனிவேறென்ன வேண்டும்? எந்த அம்ஸமாவது குறைவாயிருக்கிறதென்று குறைகூறி விடமுடியுமா? சபாஷ் இளஞ் சிங்கங்களே! நீங்கள் எல்லோருக்கும் வழிகாட்டுங்கள். நாட்டைமீட்டுங்கள். நாட்டு மன்னர்களாகி விடுங்கள். உங்கள் தலைவர் முடிவுரையில் உங்களுக்கு வழி காட்டுமாறு கடைப்பிடித்து நடந்து ஈடேறுங்கள்.

தேசோபகாரி

சந்தா விபரம்

வருஷம் 1-க்கு	ரூ. 3	0	0
ஆறுமாதம்	ரூ. 1	8	0

மாத சந்தா அணா நான்கே

Printed & Published By A. V, Sellam Pillay at the Desopakari Press, 210, 35th Street, Rangoon.

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 40. அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை

DESOPAKARI

புதன், ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி, இரங்கோன், (16—12—31) கார்த்திகைமீ 31வ புதன்கிழமை

வட்டமேஜைக் கும்மி.

(திரு. மாரியப்ப செட்டியார்)

வட்டமேசை யுடைந்திட்ட தடி அதன்
வண்டவாளம் வெளிப் பட்டதடி
திட்டமெலாம் பறந்திட்ட தடி அங்கு
சென்றவர்க்கும் ஆசை விட்டதடி. (1)

என்ன நடக்குமோ? ஏது நடக்குமோ?
வென்றெதிர் பார்த்திருந்திட்டோமடி
முன்னைய அந்நிலை தன்னிலிருந்தொரு
முந்திரியும் பயனில்லையடி. (2)

பூரணமான சுயேட்சை யென்றார் அது
போன்ற டொமீனிய னந்தஸ்த் தென்றார்
காரணம் பற்பல காட்டிச் சுதந்திரம்
காலக்கிரமத்தி லாகு மென்றார். (3)

ஐக்கிய ஆட்சியின் திட்டமென்றார் அது
அல்ல மாகாண சுயேட்சை யென்றார்.
முக்கியமாகப் பணம் படை யாவையும்
முற்றுமுன் போன்றே இருக்குமென்றார்: (4)

ஒன்றுமில்லாத சுயேட்சை வேண்டாமென்று
உத்தமன் காந்தி யுரைத்துவிட்டார்
சென்று வருகிறேனென்ன விடைபெற்று
தீவிரமாகத் திரும்பிவிட்டார். (5)

தின்று ருசிகண்டபூனை யெலியினற்
ஜீவனை கார்க்க விழைவதுண்டோ?
என்றும் நமக்கு அடிமைத்தனமென்று
எண்ணும் ஓர் ஜாதிக் கிரக்க முண்டோ? (6)

எத்தனையோபல லட்சக்கணக்கினில்
இந்தியச் செல்வமிழந்தோமடி
இத்தனையும் எவர் அப்பன் வீட்டுச் சொத்து?
எவர்களுக்கு என்ன விதனமடி? (7)

கோலாகலமாக இந்தியத் தலைவரை
கூப்பிட்டதும் மேஜை யேற்பட்டதும்
ஏலாத இந்தியரென்ற புனைபெய
ரிட்டு அனுப்பவே யாகுமடி. (8)

முன்னே மணியோசை கேட்டோமடி
முற்றிலும் நம்பி இருந்தோமடி.
பின்னே யானைவருமென்ற பழமொழி
பேச்சுப் பொய்யாக முடிந்ததோடி. (9)

வட்டமேஜையினா லென்ன நஷ்டமென்று
மங்கையே நீயும் வினவுவையேல்
கெட்டது நாளும், பொருளும் இனமொன்று
கிஞ்சுகமே! சொல்வேன் கேட்டிடடி. (10)

என்னைத் தண்டித்தவன் தன்னை தண்டிக்க
எனக்கு அதிகாரம் வேண்டுமென்றே
சொன்ன மௌலானா முகமதலித்துரைச்
சிங்கத்தைத் தோற்றதும் நஷ்டமடி. (11)

சத்யாக்கிரகத்தின் தத்துவத்தை யிந்த
தாரணிகண்டது லாபமடி
சித்துப் புருஷனும் காந்திமஹானருள்
செய்வதைக் கேட்டு நடப்போமடி. (12)

முதலாவது சோலிய முஸ்லீம் இளைஞர் மகாநாடு.

சென்ற ஞாயிறு 13ந் தேதியன்று இரவு இரங்கோன் சோலிய முஸ்லிம் இளைஞர்களின் மகாநாடு இனிது நடைபெற்றது: ஸ்ரீமான் ஸி. கே தம்பி, பார்—அட்—லா. அவர்கள் தலைமை வகித்தார். ஏராளமான இந்து முஸ்லிம் பிரமுகர்கள் விஜயஞ் செய்திருந்தனர்.

இளைஞர்களின் எழுச்சியால் அன்று தமிழுலகமே பெரும் குதூகலம் பெற்று விளங்கிற்று. மகாநாட்டைத் திறந்துவைக்கும்போது நமது "தேசோபகாரி"யின் குறிப்பே பீடிகையாக வாசிக்கப்பட்டது. விஜயஞ் செய்திருந்தோரனைவரும் நமது பத்திரிகையின் புதிய முறைகண்டு புகழ்ந்தார்கள். அன்றைய மகாநாட்டில் பல்வேறு மாபெரும் விஷயங்கள் பற்றிப் பேச முன்வந்த இளைஞர்களும் பெரிதும் ஊக்குவிக்கப் பெற்றவர்களாய் உணர்ச்சியும் உற்சாகமும் கொண்டவர்களாய்—ஒரு பிரசங்கிக்கிருக்க வேண்டிய தலையெடுப்பில், கெர்வத்தில் காம்பீர்யத்தில் கொஞ்சமும் குறைவின்றிச் சொற்பெருக் காற்றினர். மாணவஸ்வாரஸ்யம், குழந்தைகளுக்குரிய மழலை மொழி, யுவர்களுக்கியல்பிலமைந்திருக்கும் துடுக்கு, வாலிபக் குரலின் இனிமை இளம்இரத்தத்தின் வேகம் இவையெல்லாம் ஒருங்கமையப் பேசினார்கள். தாய்த்தமிழ் வளர்ச்சிக்காக இவ்வாலிபர்கள் கொண்டுள்ள ஊக்கம் இத்தன்மைத்தென்பதை அவர்கள் வாயிலாகவே கேட்டோம். இ. ப. தக்களை (இங்கிலீஷ் படித்த தமிழர்களை) அன்று அப்பையன்கள் மூக்கையுடைத்து விட்டனர். முக்கால்வாசி ஆங்கிலமும் கால்வாசி தமிழும் கலந்து பேசும் மகா மேதாவிகள் அன்றுபட்ட அவமானம் ஆயுளுள்ள மட்டும் மறக்க மாட்டார்கள். ஆங்கிலம் படிக்கும் மாணவர்களேயாயினும் அவர்கள் பேசிய கலப்பற்ற தமிழ் மொழியால் தமிழ்த்தாய் புத்துயிர் பெற்றுவிட்டாள். சுத்தத் தமிழில் பேசப் பிரியப்படாமலோ—பேசுவது அகௌரவமென்றோ கருதும் பெற்றியாளரே! நீங்களெல்லாம் இந்த இளைஞர்களிடம் பாடம் கற்றுக்கொள்ளுங்கள். வயிற்றுப் பிழைப்புக்கான பிரவிர்த்தியில் போக்கும் நேரம் போக மற்ற நேரங்களில் தமிழனுமாகப் பேசும் போதெல்லாம் தாய்ப்பாஷையிலேயே பேசுங்கள்: தமிழ்த்தாய்க்கு பிறந்து தமிழ்த்தாயின் பாலையுண்டு, தமிழனும், தமிழ்தாயால் தாலாட்டப்பெற்று தமிழ்மொழியிலேயே அம்மா அப்பாவென கற்ற நீங்கள் இடைநடுவில்வேறுபாஷையைப் பேசுவதால் உங்களது தாயை நீங்களே உதைத்துத் தள்ளிய பாதகச் செயல் செய்தவராகிறீர்கள் என்று அன்று அப்பையன்கள் சொல்லிவிட்டார்கள்.

குழந்தைகளைப் பெற்றோரே! உங்களுக்கு ஒரேயொரு வார்த்தை. நீங்கள் உங்களது ஒவ்வொரு குழந்தையையும் இம் மாணவர் கழகத்தில் சேர்த்து விடுங்கள். அன்றுபேசிய இளைஞர்களின் தந்தையர் அச் சபைநடுவில் பிரசங்கியராக நின்று தத்தம் மக்கள் பேசக்கேட்டு எவ்வளவு பூரித்திருப்பர் தெரியுமா? எத்துணை குதூகலங் கொண்டாடியிருப்பர்! ஈன்ற பொழுதினும் பெரிது உவந்திருப்பர் என்பதில் எட்டுணையும் சந்தேகமில்லையென எத்தனை கோயிலில் வேண்டுமானாலும் சொல்லுவோம். இன்று மாணவனாகவிருக்கும் இளைஞன் நாளை நாடு காக்கும் மன்னவனாகவும், மந்திரியாகவும் நூல் வகுக்கும் கலைவலோனாகவும், கவிதொடுக்கும் கவிபரசனாகவும், கற்பனா சக்திபடைத்த சிற்பியாகவும், சட்டமியற்றும் நிபுணனாகவும் ஆவர். இன்று இச்சிறு மேடையேறிப் பேசியசிறான் நாளை பேரறிஞர் அவைக்களத்தே அரசியலை நிர்மாணிக்கும் நிர்வாகத் தச்சனெனப் பிரகாசிப்பான். இளைஞர் நெஞ்சம் தொட்டதைப் பற்றிக்கொள்ளும் இயல்புடைத்து இளம் பழக்கமே மனிதனை மனிதனாகவோ அன்றி வேறாகவோ சிருஷ்டிக்கும் ஆற்றலுடையது. இப்பருவத்தில் எத்துறையில் பழக்கப்படுகிறார்களோ அத்துறையிலேயே பிற்கால வாழ்க்கையும் அமையும். ஆகவே பெற்றோரே! சற்சங்கத்தில் உங்களது குழந்தைகளைப்புகுத்துங்கள். சோலிய முஸ்லிம்களாகிய உங்களுக்கு இதுவொரு நல்ல சந்தர்ப்பம். உங்களது எதிர்கால சந்ததியை முன்னேற்ற மடையச் செய்ய இது போன்றதொரு தருணம் வேறு கிடைக்குமென்று எதிர்பார்த்திருக்க வேண்டாம். இம் மாணவர் கழகத்தை வலுவுறச் செய்து கல்வியால், செல்வத்தால் நாகரீகத்தால் உங்கள் மகவுகளை மாண்புறச் செய்யுங்கள்,

நவஜவான்களே! உங்களுக்கும் இரண்டோ

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

நாரிமனின் வீர கர்ஜனை.

இங்கிலாந்தும் இந்தியாவும் சமாதான நாடுகளாக விருக்கவேண்டுமானால் ஹிஜிலி சிட்டகாங் அட்டூழியங்களுக்கு கஷ்ட ஈடு கொடுத்தாலொழிய முடியாது. எந்த வொரு சிவில் சட்டத்தாலும், இராணுவச் சட்டத்தாலும் வங்காளத்தை யடக்கி ஒடுக்கி விடுவது கூடாத காரியம் இத்தகைய எத்தனையோ அடக்குமுறைகளை வங்காளம் எத்தனையோ முறை கண்டிருக்கிறது. இந்தியாவின் ஒவ்வொரு பகுதியும் வங்காளத்தில் நடக்கும் சுதந்திரப்போரைக் கண்ணிமைக்காது கவனித்துக் கொண்டு தானிருக்கிறது. வங்காளிகள் படும் கஷ்ட நிஷ்டூரங்கள் வங்காளின் தியாகவெள்ளம் இவைகளையெல்லாம் நாடுமுழுதும் இரத்தக் கண்ணீர் விட்டுக் காணுகின்றது. வங்காளத்தில் இப்பொழுது நடப்பனவற்றை நினைத்தால் ஜாலியன் வாலாப் பாக்கத்தில் பத்துப் பனிரெண்டு வருடங்கள் முன்னிகழ்ந்த படுகொலையின் ஞாபகம் எழுகின்றது. அன்றிருந்தது போலவே இன்றும் நாம் அனாதரவான நிலைமையிலேயே நிற்கின்றோம். கேள்வி கேட்பாடில்லாமல் நாம் வலிய கரத்தால் கையாளப்படுகிறோம். பஞ்சாப்பில் நடந்த படு செயலில் நம்மாலென்ன செய்ய முடிந்தது? அனுதாபப் பட்டோம். அவ்வளவு தான்: ஆனால் இப்பொழுதைய இச் சம்பவங்களால் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கு மிடையில் சமாதானமோ ஓய்வொழிவோ காணமுடியாது. வங்காளம் ஆறுதலளிக்கப்படவேண்டும். வங்காளம் திருப்தியான முறையில் ஈடு செய்யப்படவேண்டும். உங்களது தலைவர் சுபாஷ் பாபு கூறியாங்கு உண்மையிலேயே இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஹிஜிலிப் பிரேதம் கிடக்கையில் சமாதானமேற்பட ஹேது வேது. "லண்டனில் நடக்கும் எந்த நிகழ்ச்சியாவது என்னை வருத்தியதில்லை. பிரதம மந்திரியின் பிரகடனமோ, ஜேம்ஸ் அரண்மனையின் நடவடிக்கைகளோ வேறெதுவோ என்னை இந்தியாவுக்குச் சீக்கிரம் செல்லும்படி தூண்டவில்லை. ஆனால் எனது பிரிய வங்காளத்தை நினைக்கையில் ஒவ்வொரு நிமிஷமும் நான் இந்தியாவிலிருக்க வேண்டுமென விரும்புகிறேன்" என்று காந்திஜீ கூறியுள்ளார். இதே மாதிரிதான் ஒவ்வொரு இந்தியனும் இரத்தக் கொதிப்பேறப் பெற்றிருக்கிறான். இதோ உங்கள் மத்தியிலே நமது மணிக்கொடியை யேற்றுகிறேன். இதன் கௌரவத்தைக் காப்பதற்கான காலம் வந்து விட்டது. உங்களது உயர் நீத்தும் காங்கிரஸின் கட்டளை கடவாமல் நின்று இக் கொடியின் மானத்தைக் காத்துவிடுங்கள். அப்புறம் உங்களது கவலை கஷ்டம் நஷ்டம் யாவும் நீங்கிச் சுகம் பெறுவீர்கள். பழைய கௌரவம், புகழ், அந்தஸ்து யாவும் வந்து சேரும்.

ஐம்பதுக்குமேல் கிறு கிறுப்பு.

இங்கிலாந்து பார்லிமெண்டின் காபினெட் சபையில் மந்திரிகளா யிருப்பவர்களெல்லாம் கிழவர்கள் 50 வயதுக்குக் குறைந்தவன் யாருமேயில்லை. கிழங்களாகக் கூடிச்செய்யும் எந்தக்காரியத்திலும் சுறு சுறுப்பிராது; கிறு கிறுப்பும் அருவருப்பும் ஏராளமாயிருக்கும் என்று நமநாட்டார் சொல்லிக் கொள்ளுகிறதுண்டு. அதேமாதிரிதான் இந்திய விஷயத்தில்இந்தக் கிழவர்கள் பண்ணிவிட்டன. மேலும்கிழங்களிடத்தில் பிடிவாதகுணமிருப்பதாகவும் ஒரு கதையிருக்கிறது. ஒருவன் எலி பிடிப்பதற்காகஒரு வளையை வெட்டினான். வளைக்குள்ளிருந்த எலியொன்று எட்டிப் பார்த்து விட்டு மற்ற எலிகளுக்குப் போய் விஷயத்தைச் சொன்னது. உடனே "வெட்டுகிறவன் கிழவனா? குமரனா?" என்று ஒரு கிழ எலி கேட்டது. "குமரன்" என்று வேவுபார்த்து வந்த எலி சொல்லிற்று. "அப்படியானால் உயிர் பிழைத்தோம். கிழவனாயிருந்தால் பிழைக்க முடியாது" என்றது கிழ எலி"ஏன்?"என்றுஉளவுஎலிமறுபடியும் கேட்க "குமரன் ஆரம்ப சூரத்துவத்தில் வேலை செய்வான்; கிழவன் விடாப்படியாய் ஓராய்ந்தோலாயிழுபடுவான்" என்றது. அதேமாதிரியே இங்கிலாந்து மந்திரிகள் விடாப் பிடியாய் இந்தியாவை பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மந்திரிகளின் வயதுப் பட்டி.

சர் டோனால்டு மாக்லீன் 67. ஸ்நோடன்66. மாக்டோனால்டு 65. சாங்கே 65. பால்டுவின் 64. சேம்பர் லேன் 62. ரன் சிமான் 61. சர் ஹெர்பர்ட் சாமுவேல் 61. சர் எப்ச் பெட்டர்டன் 64:ஹெய்ல்ஸ்ஹாம் 59. சைமன் 58. தாமஸ் 56. கில்மோர் 55. லண்டண்டரி 53. ஹில்டன் யங் 52. சர் சாமுவேல் ஹோர் 51.

வங்க மர்காண மகாநாட்டில்

உயிர் வாழ்ந்து மனித கோடிகளை உய்விப்பதற்காகவென்றே காங்கிரஸ் பிறந்திருக்கிறது. அதை எவ்வளவுதான் வலியக்ரத்தால் நசுக்கியபோதிலும் சாகப்போகிறதில்லை. இந்தியன் ஒருவன் உயிர்வாழும் வரை காங்கிரஸும் இருந்தே தீரும். காங்கிரஸின் காலையிளஞ் ஜோதியிலே சுதந்திர யௌவன சூரியன் உதயமாவான். என்ன விலை கொடுத்தும் இந்தியாவின் மானம், மரியாதை, கௌரவம் எல்லாம் காப்பாற்றப்படவேண்டும். தாய் நாட்டின் மீது ஆசை, அபிமானம் அன்பு அத்தனையுங் கொண்ள்ள ஒவ்வொரு இந்தியனும் சுதந்திர சபதம் எடுத்துக்கொள்ள வேண்டும்; விடுதலை விரதமும் தேசீயச் சன்னியாசமும் வாங்கிக்கொள்ளவேண்டும். காங்கிரஸ் கொடியைச் சூழ்ந்துநின்று சுதந்திரத்தை ஸ்தாபிக்க வேண்டும்.

புனிதமான எண்ணங்களே முதுமையில் ஆறுதலளிக்கின்றன. ஆண்டவனிடத்தில் பக்தி செலுத்துவதிலேதான் சாமாதானமும் சாந்தியுமடைய முடியும். நமது மகத்தான விடுதலைப் போர் நிறுத்தப் பட்டபின் நான் ஆண்டவனிடத்தில் என்னை அடைக்கலப் படுத்துவதற்கான மார்க்க சிந்தனையில் மனதைச் செலுத்த ஆரம்பித்தேன். இல்லாவிட்டால் வேறிடத்தில் சாந்தி கிடைக்குமென்று நான் காணவில்லை. சதிச் செயல்களாலும், கேவலமான சூழ்ச்சிகளாலும், நினைக்க முடியாத குடிலங்களாலும் இந்தியாவின் சமாதான வாழ்க்கை எங்கோ மறைந்து விட்டது. மகாத்மா காந்தியும், பிரபு இர்வினும் பெரும் பிரயாசையெடுத்துச் செய்து முடித்துள்ள சமாதானத்தை சர்க்கார் காப்பாற்றவில்லை; காற்றில் பறக்க விட்டு விட்டார்கள். ஆண்டவன் வழியில் சிந்தை திரை கொடுத்துக் கொண்டுவந்த ஒருதொண்டு கிழவனைக் கூட சர்க்காரின் செயல்கள் வாலிப உணர்ச்சிகொண்டெழச்செய்துள்ளது. சமாதானத்தில் இம்மியும் இஷ்டமில்லாத ஏகாதிபத்திய சர்க்கார் தங்களது ஒப்பாதத்தை மீறிவிட்டபோதிலும் காங்கிரஸ் தனது மகாமகத்தான சத்தியார்த்த தத்துவத்தால் உடன்படிக்கையின் ஒவ்வொரு எழுத்தையும் எள்ளத்தனையும் மீறாமல் காப்பாற்றி வருகிறது. சிட்டகாங்கிலும், ஹிஜ்லியிலும் கட்டப்பட்ட சட்ட ரீதியால்—டாக்காவில் நடத்தப்பட்ட பயங்கர ஆட்சியால் சமாதானமென்பது வெறும் விளையாட்டுச் செய்கையென்றும் பிள்ளைக்கதையெனவும் எனக்குப் படுகின்றது. இர்வின் ஒப்பந்தத்தால் எந்தவொரு நன்மையும் ஏற்படப் போகிறதில்லையென்றுதோன்றி விட்டது. வட்டமேஜை வீரர்களின் காட்டிக்கொடுத்த செயலால் நம்பிக்கையை யறவேயிழந்து விட்டேன்.

சட்டத்தையும் ஒழுங்கையும் தாண்டாமல் சமாதானமாக வாழும்படி சர்க்கார் தன் ஜனங்களுக்கு உபதேசஞ் செய்துவருகிறது. ஆனால் தன்னுடைய அதிகாரத்தை நிலை நாட்டும் வெறியேற்பட்டபோது சர்க்காரே வரம்பு மீறி—எல்லை தாண்டி பொது ஜன அமைதியையும் நாட்டுச் சமாதானத்தையும் காலடியில் போட்டு மிதித்துத் துவைத்து விடுகிறார்கள். நாம் சந்தேகப்பாலை வனத்தில் தேடுவாரற்று அலைந்து திரிகிறோம். ஒரு கட்சியார் மாத்திரம் சரணடைந்து விடுவதால் சமாதானம் நிலவி விடும் என்று எனக்குத்தோன்றவில்லை. என்றாலும் வங்காளிகளின் மனத்திலிருந்து காந்தி—இர்வின் சமாதானம் திட்டமாய் மறையும்படி சர்க்கார் செய்துவிட்டது. காந்தி—இர்வின் ஒப்பந்தத்தை வங்கசர்க்கார உதைத்துத் தள்ளிவிட்டார்கள் என்பது திண்ணமாய்ச் சந்தேகமறக்கண்டு கொண்டோம். என்றாலும் இன்றைய இச் சிக்கலான பிரச்னையைச் சிக்கறுப்பதற்காக நீங்களாவது மீந்தீர்களே அந்தவொரு ஆறுதலிலே நான் திருப்தியடைகிறேன். நமது எதிர்கால வேலையை நிர்ணயிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட இம் மகாநாட்டிற்கு ஒரு முடுகுடு கிழவனைத் தலைமை வகிக்கும்படி கட்டளையிட்டுவிட்டீர்கள். தனது வாழ்க்கை முழுதையும் சுதந்திரப் போர்வீரனாக விருந்து கழிக்கும் ஒருவன் மறுக்க முடியாத நிலைமையில் நான் இப் பொறுப்பை ஏற்காமல்—என் தாய்த் திரு நாட்டின் அழைப்பை ஏற்காமல் இருந்து விட முடியுமா? இந்தவொரு யோக்கியதையை விட வேறெந்த யோக்கியதா பத்திரமும் என்னிடத்திலில்லை.

வட்டமேஜையில் ஏகாதிபத்திய சர்க்காரின் மந்திரிகள் காட்டிய சுயநலச் செயல்களாலும், அவர்களுடைய மாயவலையில் சிக்குண்டு சமூகவாதிகள் செய்தசதிச்செயலாலும் நான் என் போக்கை மாற்றவேண்டியதாயிற்று. ஆண்டவன் வழியில் என் மனதை அடைக்கலப் படுத்தித் தேசத்திற்காக இச் சரீரத்தை சமர்ப்பணஞ் செய்ய உறுதி செய்து கொண்டு விட்டேன்.

ஹரிதயாள நாகர் பேருரை,

விடாப்பிடியாக இடைவிடாமல் அடிமை ஜனங்களை அடக்குமுறைக் காத்தால் அழுத்தி நசுக்கிய போதிலும் சத்தியமானது சாணை பிடிக்கப்பட்ட வயிரம்போல் பிரகாசிக்கின்றது. அரவக்கொடி பிடித்த அயோக்கிய துரியோதனனது கொடிய ஆட்சியை யழித்து புனிதமான தர்மராஜ்யத்தை நிலை நாடடுவதற்காக குருக்ஷேத்திர பூமியிலே கோரமான யுத்தம் மூண்டது.

யுக சந்தி.

வாலிபர்களே! நாம் இப்பொழுது அடிமை யுகதிற்கும் சுதந்திர யுகத்திற்கு மிடையிலேயுள்ள விடுதலைச் சந்தியிலிருக்கிறோம். சுதந்திர யுகத்தைத் தோற்றுவிப்பதற்காக நாம் புனர் சென்ம மெடுத்திருக்கிறோம். உலகமெங்கும் நவஜவான்கள் கிளம்பி நாட்டை மீட்டுகிறார்கள். இந்தியாவிலும் இந்த நவயுவர்கள் பிறக்காமல்—தோன்றாமலிருப்பார்களா? சாகத்துணிந்தவர்களை மிருகபலத்தால் வெல்ல முடியாதென்பதை இந்த நவஜவான்கள் நிரூபித்து வருகிறார்கள். நம்மாலும் நமக்குப் பின்னால் வரப்போகும் எண்ணற்ற எத்தனையோ சந்ததியாராலும் மறக்க முடியாத வீர தெய்வம் பிரஹலாதாழ்வான் எவ்வளவுக் கெவ்வளவு சாவை நெருங்கித் தழுவிக்கொள்ள விரும்பினானோ அவ்வளவுக் கவ்வளவு சாவும் அவனை விட்டு வெகுதூரம் அகன்றே சென்று விட்டது. சாகத்துணிந்தான்; சாவு அவனைத் தொடப் பயந்தது. இந்த நவயுவர்கள் சத்தியத்தை நிலை நாட்டுவதற்காகப் பிறரைக் கொல்லாமல் பிறரால் கொல்லப்படுவதற்கும் சித்தமாகத் துணிந்து இறங்கி விட்டார்கள். பாலைவனமத்தியில் கண்ணுக் கெட்டாத பல காதங்களுக்கப்பால் சிதரிக் கிடக்கும் தண்ணிலம்போன்று தோன்றிய ஒருவர் இருவர் இப்பொழுது பல கோடிக்கணக்கில் கூடி ஒரே கொடியின் கீழ் தோளோடு தோள் நின்று விடுதலைப் போரில் விறுகொண்டெழுந்திருக்கிறார்கள். இவர்கள் உலக முழுவதிலும் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தும் காலம் வெகு சமீபத்திலிருக்கிறது' எனது கண்ணெதிரேயும் தோன்றுகிறது. அவர்களுக்கு எனது தாழ்மையான தலை வணக்கத்தைச் செலுத்திக் கொள்ளுகிறேன்.

தயாபூர்வமாய்ச் சுதந்திரத்தைக் கொடுக்கவோ வாங்கவோ முடியாது. இச்சாபூர்வமாய்த் தாங்களாகவே இந்தியாவுக்குச் சுயராஜ்யமளித்து விடும் எண்ணம் ஆள்வினை வர்க்கத்தாரிடம் இல்லவே யில்லை இந்நியதிப்படி பார்த்தால் வட்டமேஜைமகாநாடு நாடகமேயன்றி உண்மையில்லை. வட்டமேஜையால் வகுப்புத்துவேஷத்தை வளர்த்து விட்டார்கள். எல்லாம் வெறும் பொம்மலாட்ட மென்பது நமக்கு நன்கு புலப்பட்டுவிட்டது. ஆளப்படும் வர்க்கத்தார் ஆளும் வர்க்கத்தாரால் மாத்திரமில்லை ஆளப்படுவோர் சிலராலும் முன்னேறமுடியாதபடி முட்டுக்கட்டைப் போடப்படுகிறார்கள்.

சுதந்திரம் வேண்டும்' மனித சுதந்திர மில்லாவிட்டால் மனிதவர்க்கம் தனது சுயேட்சை யுணர்ச்சியோடு கடவுளையும் வழிபட முடியாது. அடிமை மனிதன் தன்னை அடக்கியாளும் முதலாளியை முகஸ்துதி செய்வதைத் தவிர வேறு உரிமை யளிக்கப்படுகிற தில்லை. பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவின் 35 கோடி மக்களையும் இராஜ விசுவாசிகளாக விருக்க விரும்புகிறார்கள். ஒரு மயிரிழை கூட விட்டுக் கொடுக்கும் ஸ்வபாவம் அவர்களது ஹிருதயத்தின் ஒரு சிறு மூலையிலும் கிடையாது. சுதந்திரத்தை பிறரது தயவால் நாம் பெற்றுவிடுவதில்லை. மூட்டை முடிச்சுகளைப்போல்சப்பலேற்றிக்கொண்டுவரும்பொருளன்று. நமக்கு நாமேபெறவேண்டும். கொடுத்து வாங்குவதில்லை. வேண்டுமானால் ஏராளமான விலை கொடுத்து வாங்கவேண்டும். இவ்வளவு காலமாய் நாம் சுதந்திரப் பயிரைத் தண்ணீர் விட்டல்ல கண்ணீரால் காத்து வந்தோம். இனிமேல் அதை நமது இரத்தத்தை ஊற்றி வளர்க்க வேண்டிய காலம் வந்திருக்கிறது. ஒன்று வாழ வேண்டும் இல்லை இந்தியா அடியோடு சாகவேண்டும். இதற்கிடையில் நடுவழி வேறில்லை.

அன்னிய வர்த்தக ராட்சி.

நம்மையாளும் அன்னிய வர்த்தகர்களினடியில் நாம் எவ்வளவு காலத்திற்குத தான் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்? நம்மை நாமே ஆளத்தகுதியற்றவர் களென்று கூறுகிறார்களா? அப்படியானால் அவர்கள் தங்களது சொந்த நாட்டின் நலத்தை நீக்கிவிட்டு இந்தியாவின் நன்மைக்கே நம்மை யாளுகிறார்களா? நாம் ஆளத்தகுதியற்றவர்களானால் அது யாருடைய குற்றம்? என்பதை அவர்களே சொல்லட்டும்.

எளிய வாழ்க்கை.

(ஸ்ரீஜத் ராஜகோபாலாச்சாரியார்)

பல:— ஓ! வாஸ்தவந்தான். அந்நிய நாட்டுச் சரக்குகள் விலையேறி விட்டதல்லா?

ராம:— இல்லை பலராமா! காங்கிரஸ் காரர்கள் சுதேசி, சுதேசி யென்றடித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் சுதேசிப் பொருள்களை நயமாக்குவதில் சிரத்தை காட்டுகிறார்களில்லை. எல்லாப்பயல்களும் தம்படிக்குக்கூட பிரயோஜன மில்லாத சோம்பேரிக் கூட்டமும்; வாய்வேதாந்திகளுமே தவிர வேறில்லை.

பல:— இருக்கலாம். ஆனால் நாம் செயலிலேயே சீர் திருத்தக்காரர்கள். உருப்படியாக வேலைகள் செய்கிறோ மில்லையா? படக்காட்சிக்காக நீ செலவு செய்யும் பணத்தில் எவ்வளவு நம் நாட்டில் தங்குகிறது? எவ்வளவு அன்னிய நாட்டுக்குச் செல்லுகிறது தெரியுமா?

ராம:— இருந்தாலும் அவ்வளவு பணத்தையும் அவர்கள் என்னதான் செய்கிறார்கள். படக்கோர்வை, விளக்கு, மின்சாரம், நிர்வாகம் இவைகளுக்கெல்லாம் எவ்வளவு செலவாகிற தென்று தெரியவில்லை. இருந்தாலும் ஏராளமான பணம் நம் நாட்டை விட்டுப் போகிறதென்பது தென்னவோ வாஸ்தவந்தான்.

பல:— மோட்டாருக்காக எவ்வளவு போகிறது?

ராம:— அதையேன் கேட்கிறாய் பலராமா? மோட்டாருக்காக நான் இவ்வளவு செலவு செய்வது குற்றந்தான்; ஒப்புக் கொள்ளுகிறேன். அச்செலவில் முழுதுமே அன்னிய நாட்டுக்கே செல்லுகிறது. மோட்டா ரோட்டிக்குக் கொடுக்கும் சம்பளமும், வரியும் தவிர மற்றெல்லாம் வெளிநாட்டுக்குத்தான் போகிறது. ஆனால் அந்த இரண்டுக்குந்தான் செலவு செய்ய எனக்கு இஷ்டம் வருகிறதில்லை. மாதம் 150 ரூபாய்க்குமேல் செலவாகிறது. என் மனைவியேறிப் போகிறாள். என் மக்களெல்லாம் செல்கிறார்கள். என் வீட்டுக்கு வருகிறவர் போகிறவர்களெல்லாம் வேண்டிய போதெல்லாம் எடுத்துக் கொள்ளுகிறார்கள். சிநேகிதர்கள் கார் காரென்று பிச்சுப் பிடுங்கித் தின்னுகிறார்கள். இந்த நிலைமையில் எனக்கு நான் வேறு கார் தேடவேண்டிய திருக்கிறது. வேறொருவருடைய வண்டியிலேயே நான் பெரும்பாலும் போக வர வேண்டியதாகிறது.

பல:— சௌகர்யம் வேண்டுமானால் இன்னொரு மோட்டார்வாங்குவதுதானே ராமகிருஷ்ணா? பெரிய குடும்பத்திற்கு இரண்டு காரில்லாவிட்டால் முடியுமா? அதற்காகவென்ன 300 ரூபாய்தானே செல்லும்.

ராம:— அப்படியானால் திவாலாவாக வேண்டியதுதான். இப்பொழுதே இரண்டுமாசப் பணம் அடிஸன் கம்பெனிக்குப் பாக்கியிருக்கிறது. பெட்ரோல் எண்ணெய்க்கும் ஏராளமாகப் பாக்கிவிழுந்து விட்டது. இருக்க இருக்க எல்லாப் பயல்களும் ரொக்கமாகக் கேட்கிறார்கள்.

பல:— வாஸ்தவந்தானே ராமகிருஷ்ணா காலங் கெட்டுவிட்டதில்லையா? காலக்ஷேப சங்கத்தில் எவ்வளவு செலவாகிறது?

ராம:— அதற்கொன்றும் அதிகமாயில்லை. 5-ரூபாய் சந்தாக் கொடுக்கவேணும். அதையும் 7 ரூபாயாக உயர்த்தப் பார்க்கிறான். என் மகன் தான் அதைப் பிரேரேபித்தான். என்மகனையும் அடிக்கடி அழைத்துப் போகிறபடியால் இனிமேல் அவனுக்காக வேறு சந்தாக்கட்டியாகவேண்டும். ஆனால் இப்பணங்களெல்லாம் இந்தியாவை விட்டுச் செல்லவில்லை.

பல:— ஆமாம் இரும்புத் தூண், எலெக்ட்ரிக் ஜாமான்கள், பில்லியர்டு பந்துகள், டென்னிஸ் மட்டைகள் சீட்டுக்கட்டுகள், ஐஸ்க்ரீம் சத்து, பழச்சத்து இவைகளுக்காக தினந் தினம் கொடுக்கிறாயே ராமகிருஷ்ணா இப்பணங்களெல்லாமெங்கு போய்க்குவிகின்றன?

ராம:— கேலிபண்ணாதே பலராமா! இந்த மாதிரி காலக்ஷேப சங்கங்கள் இல்லாவிட்டால் பொழுது போகுமா? வாலிப வாழ்க்கை ரஸிக்குமா? இந்தியாவில் இந்தப் பொருள்களையெல்லாம் உற்பத்திசெய்வதற்கான ஏற்பாடுகளை காங்கிரஸ் செய்யும்வரை அந்நிய நாட்டிலிருந்து வாங்கித்தானே யாகவேண்டும்.

பல:— அவசியம் வேண்டுமானால்—இல்லாது தீராதென்றால் வாங்கித்தானாக வேண்டும். ஆனால் கிராமத்தில் போய்த் தங்கிவிட்டால் சங்கம், மோட்டார் முதலிய இழவுகளெல்லாம் தேவைப்படாது. —யங் இந்தியா.

(தொடரும்)

பெண்மைத் தெய்வம்

இந்தியாவில் பெண்மைத் தெய்வம் போற்றப்படவில்லை. மேனுடுகளில் பெண்களைத் தெய்வமாகப் பூஜிக்கிறார்கள். பெண்களுக்குரிய மரியாதை யனைத்தையுமளிக்கின்றனர். ஆனால் இந்தியாவிலேயே பெண்களை அலக்ஷியமாகப்புறக்கணித்து விடுகிறோம். மனைத்தலைவியென்ற மரியாதை கூட கொடுக்கிறதில்லை. ஆண்களுக்கு அடிமை வேலைசெய்ய வென்றே சிருஷ்டிக்கப்பட்டவளாகக் கருதுகிறோம், பிள்ளைபெறுக்கும் ஒரு இயந்திரமாகவே எண்ணிவிடுகிறோம். அவளுக்குக் கொடுக்கவேண்டிய உரிமை, அந்தஸ்து ஸ்தானங்களை யெல்லாம் இல்லையென்கிறோம். கூடாவொழுக்கத்தில் நாம் கூசாமலிறங்கி விட்டு பெண்ணுலகத்தை பெரிதும் அவமதிக்கின்றோம். அந்தோ! வாழ்க்கைச் சகடம் நேரிய முறையில் நடக்க முடியுமா? காதலிருவர் கருத்தொரு மித்திழுத்தாலல்லவா வாழ்க்கையில் இன்பங்காணலாம். இல்லாத விடத்து துன்பமும், துயரமு மிகைத்து குடும்ப மென்பது சுமக்கமுடியாத பெரும் பாரமாய் முடிகிறது. போதியகல்வியும், ஆண்களோடொத்த சர்வ சுதந்திரமுமளித்தபோது பெண்மையாம் சக்தி பிரகாசிக்கின்றது. மனைத்தலைவியாகவும், மந்திரியாகவும், நட்பாகவுமேற்படுகிறாள். வீட்டிலேயே வீட்டுடைத் தலைவன் வீட்டுத்தலைவியைத் தலைவியெனப் பாராது புறக்கணிக்கையில் வெளியுலகம் மதிக்குமா? சமூக சமத்துவமோ அரசியல் உரிமையோ அளிக்கவில்லை. ஆனால் பொருளீட்டுவதில் ஆடு மாடுகளை விட அதிகம் வருத்துகிறோம். தேசத்தின் பொருளுற்பத்தியில் அநேகமாய் ஆண்களோடொத்த கஷ்டமனைத்தையும் அவர்களுக்கு மளித்தே வருகிறோம். உழவுத் தொழிலாகட்டும் இதர எந்த வேலையிற்றானுகட்டுமே ஆணோடொப்ப பெண்களும் வேலை வாங்கப்படுகிறார்கள். பசு மாட்டை "கோ" வெனக் கும்பிடுகிறோம். அதை உழவில் கட்டுகிறதில்லை. உடல் வருத்தி வேலைவாங்கினால் "பாபம்" என்கிறோம், ஏனெனில் அதன் பாலையுண்பதால் இரத்தம் சுண்ட வேலை வாங்கலாகாதெனக் கூறுகிறோம். ஆனால் பெண்களின் பாலையுண்டு வளரும் நாம் பெண்மை இரத்தத்தைப் பிழிந்து பிழைக்கிறோமே கூடுமா? பாபமில்லையா?

1921ம் வருடத்திய ஜன கணிதப்படி பார்த்தால் இந்தியத் தொழிலாளிகளில் 100-க்கு 44 பேர் பெண்களாகவே யிருக்கின்றனர் வயல் தொழிலில் 95 லட்சம் ஆண்களும் 88-லட்சம் பெண்களும் வேலை செய்கிறுக்கின்றனர். பண்ணை வேலையில் 22 லட்சம் ஆண்கள் 11 லட்சம் பெண்கள் வீட்டு வேலைகளில் 17 லட்சம் ஆண்கள்; பெண்கள் வெறும் 8 லட்சம் பேர். ஆலைத் தொழில் முதலிய இதர வேலைகளில் 29 லட்சம் ஆண்கள்; பெண்கள் 23 லட்சம். ஆகமொத்தம் சுற்றேறக்குறைய 3 கோடி தொழிலாளிகளில் 16,347,463 ஆண்களும், 13,011,910 பெண்களும் ஆவர்.

இக்கதிதி பெண்களை நாம் மடமை நடத்தி வேலை வாங்கையில் சமத்துவம் பாராட்டவும் சம உரிமை யளிக்கவும் முன்வராவிட்டால் ஆண் ஹிருதயம் எவ்வளவு கொடியதும் கடினமானது மாயிருக்கவேண்டும். ஆண்மையில் ஆண்மையிருப்பது போல் பெண்மையிலும் ஆண்மையுண்டு. சரித்திர பூர்வமாகப் பார்த்தாலும் இதற்கு ஏராளமான எடுத்துக் காட்டுகள் காட்டலாம். ஆண்மகனோடெதிர்த்துப் பெண்மகளும் போராடி வென்றிருக்கின்றனள். அரசியல் யுத்தங்களில் பெண்மணிகள் காட்டிய வீரமே வெற்றியளித்திருக்கின்றன. 1857ம் வருஷத்திய சுதந்திரப் போரில் ஜான்ஸி லக்ஷ்மிபாய் புரிந்த வீரச் செயல்கள் எந்த ஆண்மகனால் செய்யமுடிந்தது? தனதொருமகனை முதுகிலே கட்டிக்கொண்டு, ஒரு கையில் வாளும், மற்றொரு கையில் பாலாவும் பிடித்து, வாயிலே கடிவாளத்தைக் கவ்விக்கொண்டு குதிரை மீதேறிப்பகைவர்மத்தியில்பெண் சிங்கமெனப் பாய்ந்த காட்சியை யின்று படத்தில் பார்த்தாலும் மயிர் சிலிர்க்கிறதல்லவா?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ருவார்த்தை, கலாசாலையிலோ கல்லூரியிலோ பயிலும் நேரம்போக—தேகாப்பியாசத்திலோ விளையாட்டிலோ கழிக்கும் போது போக இதர நேரத்தை—அவகாசங் கிடைக்கும் சர்வ பொழுதையும் இத்தகைய பயிற்சியில் செலவிடுங்கள், 'ஆசிரியன்' என்ற ஹோதாவில் நாமும் உங்களுக்கு வழி காட்ட முடியும், வழிகாட்டக் கடமைப்பட்டுள்ளோமென்பதையும் ஏற்றுக் கொள்ளுங்கள். வம்பர் மஹா சபையிலோ, வேடிக்கைக் காலக்ஷேபத்திலோ, கண் கவரும் களியாட்டங்களிலோ விருதாவில் பொழுது போக்கி எதிர் காலத்தை பாழ்படுத்திவிடாதீர். ஆண்டவன் உங்களது முயற்சியில் அருள் பாலிக்கட்டும்.

முச்சந்தி நியாயம்.

இரங்கூன் தெருக்களில் மோட்டார் எமன்கள் "கூ கூ" வென்று திரிகின்றன. இரத்த வெறி பிடித்த இந்த இழவுகள் எத்தனையோ உயிர்களை அப்படியே விழுங்கி விடுவதை நாள் தோறும் நாம் இந்தக்கண்களால் காணுகிறோம். மனிதநடமாட்டம் அடியடி தோறும் ஆபத்து நிறைந்திருக்கிறது. ஒரு தெருவிலிருந்து இன்னொரு தெருவுக்குக் குறுக்கிட்டுச்செல்லுவதென்றால் உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு போய்த் தொலையவேண்டும். என் செய்வது நடமாடாமல் முடியுமா? இல்லை மோட்டாரை ஓடவிடாமல் நிறுத்தத்தான் முடியுமா? பொது ஜன பாதுகாவலர்களும் கூடுமான வரை முச்சந்திகளில் கைகாட்டிப் போலீஸை நிறுத்தித்தான் பார்க்கிறார்கள். இருந்தும் எத்தனையோ அபாயங்கள் ஏற்பட்டே விடுகின்றன. இதற்கு யாரைத்தான் நோவது? அழியா வரம் வாங்கி வாழுவதா? போன வருடத்தில் மாத்திரம் பர்மா உள்பட்ட இந்தியாவில் நடுத்தெருக்களில் 7,000 உயிர்கள் துடிக்கத் துடிக்கச் செத்திருக்கின்றன. 1,70,000 பேர் குத்துயிரும் குறையுயிருமாய்ப் படுகாய மடைந்ததாகக் கணக்கெடுக்கப் பட்டிருக்கின்றது. இவ்வாபத்துக்களெல்லாம் பெரும்பாலாய் மோட்டார் எமன்களாலே நகரமத்தியில் நடுத் தெருக்களிலேயே நேர்ந்திருக்கின்றன. இரங்கோன் சம்மந்தப்பட்ட கணக்கை நாம் துருவிப்பார்க்கவில்லை. கைகாட்டிப் போலீஸார் வழிகாட்டுமிடங்களில் இப்பொழுது அதிகமான அபாயங்களேற்படா திருப்பதற்காக நாம் அவர்களது சேவகத்திறமையைப் போற்றுகிறோம். அதே மாதிரி அசம்பாவித மேற்படக் கூடிய இதர இடங்களிலும் போலீஸாரை நிறுத்தி பந்தோபஸ்தளிக்க வேண்டும். தெருக்களில் ரஸ்தாவைப் பழுது பார்க்கையில் பாதிப் பாதையில் நாலுபக்கமிருந்து வருவதும் போவதுமான வண்டிகள் மோதிக்கொள்ள இடமுண்டு. அத்தகைய இடங்களில் அவ்வப்போது தக்க பந்தோபஸ்தளித்துத் தர போலீஸோ அல்லது நகரசபையாரோ கடமைப் பட்டிருக்கிறார்கள். குறிப்பாக இப்பொழுது பிரேஸர் வீதியில் பார் வீதி சந்திக்குமிடத்தில் ரஸ்தா பழுது பார்க்கப் படுகிறது. வாய்திறந்து கொண்டிருக்கும் அபாயத்திற்கு இரையாகாமல் பொது ஜனங்கள் காப்பாற்றப்படவேண்டும்.

விட மாட்டோம்.

இன்றென்பதும், நாளையென்பதும் இல்லையென்பதற்கடையாளமென நம்ம நாட்டு மக்கள் நடை முறையில் சொல்லிக் கொள்ளுவது வழக்கம். அறிவாளிகளும், பொதுஸ்தாபனக் கணக்குகளை கையாண்டு வருபவர்களும் கூட அவ்வழக்கத்தில் ஒட்டிக்கொண்டு நிற்பதைக் குறிப்பிடாது விட முடியுமா? தாம்புவே மயானகணக்குகளைக் கேட்டோம்; கொஞ்சம் வந்துவிட்டது; மிகுதி வழியில் இருக்கிறது. ஆனால் கீமந்தான் மயான கர்த்தரோ இன்னும் உறக்கத்தில் இருந்து எழுந்தபாடில்லை. இது மிகவும் வருந்தத் தக்கதாகும். கணக்குகளும் ஒரு மாமாங்கத்திற்கு மேலாக வெளியில் காட்டப்படவில்லையென்று நினைக்கிறோம். டிரஸ்டியோ நீதிஸ்தலங்களில் பிறருடைய நியாயத் நியாயவாதஞ்செய்பவர். ஆனால் தமதுசொந்தவிஷயத்தில் வேறொருவருக்கு வக்காலத்துக் கொடுத்து, கணக்குகள் சீக்கிரம் வெளிப்படுத்துவதாக அறிவிக்கச் செய்தார். வயித்தியருக்கு சீக்குவந்து விட்டால், வேறு வயித்தியரைத் தேடுவதுபோல, தனக்குவந்த விவகாரத்திற்கு வேறொருவருக்கு வக்காலத்து கொடுத்தாராக்கும். அந்தப் பேர்வழியும், கிளிப்பிள்ளைமாதிரி இருந்துவிட்டார். மூலவிக்கிரகமே கணக்குகள் சீக்கிரம் கொடுப்பதாக 1928ம் ஆண்டு எழுதியவர் சும்மாயிருக்கும் பொழுது, உத்ஸவ விக்கிரகம், வேறு அதிகம் என்ன செய்துவிடும்? மனிதர்களைச் சொந்த ஹோதாவில் நாம் தாக்குவதாக பலர் பிதற்றுவதாக அறிகிறோம். ஒருக்காலும் அம்மாதிரி அல்ல. பொதுவிஷயத்தில் ஈடுபட்டவர்கள் தங்களுடைய கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டுமென்பதே நமது முக்கிய நோக்கம். இனியேனும் ஸ்ரீமான் ப. சி. சோமசுந்திரம் பிள்ளை அவர்கள் இவ்விஷயத்தில் தமது கவனத்தைச் செலுத்துவாரா?

தேசோபகாரி

சந்தா விபரம்

வருஷம் 1-க்கு ரூ. 3 0 0

ஆறுமாதம் ரூ. 1 8 0

மாத சந்தா அணா நான்கே

Printed & Published By A. V, Sellam Pillay at the Desopakari Press, 210, 36th Street, Rangoon.

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 41. அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை

DESOPAKARI

புதன், ஞாயிறு வெளியீடு

210–36-வது வீதி, இரங்கோன், (20—12—31) மார்கழி௴ 5 ௳ ஞாயிற்றுக்கிழமை

காற்றடிக்குது! கடல்குமுறுது!!

காற்றடிக்குது கடல் குமுறுது
கண்ணை விழிப்பாய் நாயகனே!
தூற்றல் கதவு சாளரமெல்லாம்
தொளைத்தடிக்குது பள்ளியிலே.

வானஞ் சினந்தது; வையம் நடுங்குது
வாழி பராசக்தி காத்திடவே
தீனக் குழந்தைகள் துன்பப்படாதிந்த
தேவியருள் செய்ய வேண்டுகின்றோம்.

—களியரசன்.

அரசியல் வானஞ் சினந்து வையத்தை நடுங்குறச் செய்கிறது. அடக்கு முறைக் காற்று சூராவளியெனச் சுற்றிச் சுற்றியடிக்க ஆரம்பித்து விட்டது. இந்தியா முழுதும் கொந்தளிப்புற்ற அட்லாண்டிக் மகாசமுத்திரம்போல் குமுறுகிறது. அவசரச் சட்டங்கள் புற்றீசல் போல் புறப்படுகின்றன. ஐக்கிய மண்டலத்தில் குடியானவர்கள் லட்சம் பேர் வரி மறுக்கின்றார்கள். அதையடக்குவதற்கென பிரத்தியேகமான அவசரச் சட்டமொன்றும் போடப்பட்டுவிட்டது. தலைவர்களின் வாய்க்குப் பூட்டும், கூட்டத்திற்குத் தடையும், பிரசுரங்களுக்குப் பறிமுதலும், பிரசாரகர்களுக்கு மோட்டார் போக்குவரத்துக்கு மறியலும் செய்யப்படுகின்றன. ஆரம்பத்திலேயே துப்பாக்கிப் பிரயோகங் கூடச் செய்து விட்டார்கள். தடியடி தர்பாரும் நடந்ததாம்.

இனி வங்காளச் செய்தியைப் பார்த்தால் வயிற்றிலே தீப் பாய்கிறது. காளிதாஸர்கள் கணக்கின்றி இரத்தவெறி பிடித்தலைகின்றனர். இந்தியாவின் புனிதமான அஹிம்ஸா தர்மத்தைப் புரட்சிக்காரர்கள் பாழ்படுத்துகிறார்கள். கத்தியெடுக்காமல்—இரத்தஞ் சிந்தாமல்—எதிரிகளை வார்த்தையாலும் சபிக்காமல்—அடிக்கும் அடியை முணுமுணுக்காமல்—திருப்பியடிக்காமல் சகித்து—இந்திய ஆதிக்கமாத்திரமில்லை. உலக ஆதிக்கத்தைக் கூட அடைந்துவிடமுடியுமெனக் கண்ட காந்திமகானின் மகா தத்துவத்தை வெறி பிடித்த வாலிபர்கள் கறைப்படுத்துகிறார்கள். இந்தியாவிலுள்ள இந்தியர்களில் ஒரு பகுதியாரே சாத்வீக தத்துவத்தில் நம்பிக்கை கொள்ளாவிட்டால் உலகத்துக்கு இத் தத்துவத்தை இந்தியா உபதேசிக்குமென்பதில் என்ன நம்பிக்கை கொள்ளமுடியும்?

சமீபத்தில் திப்பராக் கலெக்டர் திரு. ஸ்டிவென்ஸைக் கொலை செய்த சதிச் செயலை இந்தியா இரத்தக் கண்ணீர் வடித்தேகாணுகிறது. இந்தியப் பெண்மையை இன்று சந்தியிலிழுத்து நிறுத்திவிட்டார்கள். சாவித்திரியின் சந்ததியார், தமயந்தியின் வழித்தோன்றல்கள், சீதையின் சேய்கள், நளாயினி, வாசுகி அருந்ததிபோன்ற நமது பெண் தெய்வங்களின் பிள்ளைகள் இன்று பேய்ச் செயல் செய்யலாமா? தாடகை, சூர்ப்பநகைகளென்ன வங்கக் குமரிகளிருவர் பட்டப்பகலில் ஜில்லா மாஜிஸ்டிரேட்டொருவரைக் கட்டுக்காவலையெல்லாங்கடந்து போய்ச் சுட்டுக் கொன்றார்களென்று கேட்க

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

கதர் முனையில் சுயராஜ்யம்.

(ஸ்ரீ காக்கா கலேல்கார்.)

கடந்த இரண்டு மூன்றுண்டுகளாக இந்தியர்களின் மனத்தில் சுயராஜ்ய மென்பது எவ்வளவு ஆழமாய்ப் பதிந்திருக்கிறதோ அவ்வளவு தூரம் கதரின் தத்துவமும் வேர் கொண்டிருக்கிறது ஆனல் ஜனங்கள் நிரந்தரமான நோக்கங் கொண்டிருக்கவில்லை. இதை நாம் கதர் விற்பனையிலிருந்து காணுகிறோம். ஒரு சமயம் கதர் கிடைக்கிறதில்லை; மற்றொரு சமயம் கதர் ஏராளமாயிருந்தும் வாங்குவாரில்லாமல் குவிந்து கிடக்கின்றது. ஏழை மக்களின் வயிறு கழுவும் ஒரு காரண கருவியாக நாம் கதரைக் கருதும் போது விற்பனையில் இத்தகைய ஏற்றத்தாழ் வேற்படலாகுமா? இதனல் நம்மிடமுள்ள கதர்பக்தி சந்தேகிக்கப் படுகிறதல்லவா? தாய்க்குத் தன் குழந்தைகளிடத்தில் மாற்றமுடியாத அன்பு செலுத்துகிறாள். ஒரு நேரம் அதிகஅன்பும் மறுநேரம் குறைந்த அன்பும் காட்டமாட்டாள். அல்லது ஒரு சமயம் விருப்பும் மற்றொரு சமயம் வெறுப்பும் கொள்ளுவாளா? அதேமாதிரியே கதரிடத்தில் நமது பக்தியும்,பற்றுதலும் ஸ்திரம்பெற்றதாய் மாற்றமுடியாததாய் ஒரு தலைப்பற்றி நிற்கவேண்டும். ஒருதாய் எவ்வாறு தனதன்பத்தனையையும்தன் குழந்தைகளிடத்தில் காட்டுகிறாளோ அதே போல் நமது அன்பனைத்தையும் கதரிடத்தில் காட்டிவிட வேண்டும். வெறுமனே கணக்குப் போட்டுக் கொண்டிருப்பதால் பிரயோஜனமில்லை. கதர்கட்டுவதா லேற்படும் கட்டுச் செட்டுகளை யெண்ணிப் பார்த்தால் நாட்டின் பொது நலம் சிறுத்துச் சுயநலம் மிகைக்கிறது. தாய் நாட்டின் லாப நஷ்டத்தை இவ்வளவு தூரம் காட்டுமக்கள் கணக்குப் போடுகிறார்களேயென்று சைத்தான் கூடத்திடுக்கிடுவான். கதரபிவிர்த்தியால் கோடிக் கணக்கான சகோதர சகோதரிகள் கௌரவமான காலக்ஷேபஞ் செய்ய முடியுமென்ப தொன்றே போதாதா? இதை விடவேறென்ன நம்பிக்கை வேண்டும்? கதரில்லாது சுயராஜ்யப் போர் நடவாதென்பதை நாமறிந்தே யிருக்கிறோம். துப்பாக்கித் தோட்டா வேணுமென்றே! வெடிக்குண்டுக்கு மூடு குடுக்கை வேண்டுமென்றே எவனும் தேடிக்கொண்டு திரியவில்லை. நம்முடைய புனிதமான அஹிம்ஸைப் போருக்கு எந்த வொரு ஆயுதமும் வேண்டியதே யில்லை. வியாபார வெறி மூண்டுள்ள இங்கிலாந்தை யெதிர்த்துப் போராடுவதற்கு கதரொன்றே அழிக்க முடியாத—ஜெயிக்க முடியாத படையாகும். இதை நாம் ஒருநிமிஷங்கூட மறந்திருக்கலாகாது. கதரல்லாத வேறு துணியில் ஒரு கெஜம் வாங்கினலும் கூட நாம் நமது தேசியத்தைக் குறைத்தவர்களாகிறோம். இதர நாடுகள் தங்களது நாட்டு விடுதலைக்காக சலியாதுழைத்து வருகிருக்கின்றன. நாம் நமது வேலையைச் செவ்வனே சரிவர நடத்துவதானல் எத்தனை தலைமுறையானலும் விடாமல் தொடர்ந்து ஒய்வொழிவில்லாமல் சுதந்திரப் போர்புரிவோம். ஆண்டவன் கிருபையால் காந்திஜீ நமக்குக் கிடைத்திருக்கிறார். ஏகமனதாய் எப்பொழுது விரும்புகிறோமே அப்போதே சுயராஜ்ய மடைந்து விடும் வழியைக் காட்டியிருக்கிறார். சந்தேகமில்லாத அஹிம்ஸைப் போரால் சுதந்திரம் நிச்சயம். காந்தி—இர்வின் ஒப்பந்தம் உள்ளவரை யுத்தமென்ற பேச்சே பேசக்கூடாது. என்றாலும் இந்த இடைக்காலத்தில் தேசிய உணர்ச்சி தளர்ந்து விடலாமா? கதரைக் கைவிடுவதோ இல்லை அலட்சியஞ் செய்வதோ நிச்சயமாய் உணர்ச்சி குறைவதற்கேதுவாகும். கதர்ப் பிரசாரத்தை ஒய்வொழி வில்லாமல் செய்யவேண்டும். ஒவ்வொரு கதரபிமானியும் திண்ணைப் பிரசாரஞ் செய்தாவது தனது அண்டை அயலார்களைக் கதர்கட்டும்படி செய்யவேண்டும். இதனல் காந்திவாரத்தில் கிடைத்ததைப்போல் பதின்மடங்கு பலன் கிடைக்கும்.

இங்கிலாந்திலிருந்து காந்திஜீ புறப்பட்டு விட்டார். காங்கிரஸின் ஏக பிரதிநிதி நடுக்கடலில் வந்து கொண்டிருக்கிறார். இந்தியாவின் தெய்வீக பலத்தை—ஆத்ம சக்தியை இங்கிலாந்துக் குணர்த்திவிடுவதென்று தீர்மானித்திருக்கிறார். இந்தியாவுக்குத் தன்மானம், மரியாதை, சுயமதிப்பை யெல்லாம் காத்துக் கொள்ளத் தெரியும். அடிமைப் போர்வையை போர்த்திக் கொண்டிருக்க இந்தியமாதாவுக்குஇஷ்டமே கிடையாது. இந்தியாவின் சுதந்திரப் போர்வை கதரன்றி வேறாயிருக்க முடியுமா? கடவுளரெல்லாம் சேர்ந்து கார்த்திகேயனைச் சேனபதியாக்கினர்கள். நாம் 33 கோடி இந்தியரெல்லாங் கூடி காந்திஜீயைச் சேனபதியாக்கி யிருக்கிறோம். அன்னியத் துணி அடிமையின் சின்னம். சுத்தக் கதர் சுதந்திரத்தின் விருது. நமது தேசியச் சன்னியாசத்துக்கு கதரே காஷாயமாகும்.

—நவஜீவன்.

சுதந்திரத் தராசில்-இந்தியாவும்—அயர்லாந்தும்.

(ஸ்ரீ பட்டாபி சீத்தாராமய்யா.)

இந்தியாவின் சுதந்திரப் போருக்கும் அயர்லாந்தின் சுதந்திரப் போருக்கும் அநேக அம்ஸங்களில் ஒற்றுமையிருக்கின்றது. இரு நாடுகளும் ஏராளமான கஷ்ட நஷ்டங்களுக் காளாகியிருக்கின்றன ஆறேழு நூற்றாண்டுகளாக அயர்லாந்தும், கிட்டத்தட்ட நூற்றைம்பது வருடங்களாக இந்தியாவும் அடிமை நுகத்தடியில் அழுத்தப்பட்டு வருகின்றன. அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதில் வீறு கொண்டெழுந்து நிற்கின்றன. பாதைகள் வேறு. பலாத்காரத்தை அயர்லாந்தும் அஹிம்ஸையை இந்தியாவும் பின் பற்றுகின்றன. எல்லையொன்றே. இரண்டு தேசங்களும் சுதந்தரத்தையே நாடி யோடிக்கொண்டிருக்கின்றன வென்பதை எவரும் மறுக்க முடியாது. பத்துவருடங்களுக்கு முன்னால் ஆங்கில முதலாளிகளுடன் அயர்லாந்து கொண்ட முறையை நாம் ஞாபகத்தி லிருத்திக்கொள்ள வேண்டும். லண்டனுக்குக் காந்திஜீ போர் நிறுத்தத்தை நிரந்தரமான சமாதானமாக்கி விடவேண்டு மென்றே சென்றார். இது சம்மந்தமாக அயர்லாந்தில் நடந்தவைகளை இந்திய நிகழ்ச்சிகளுடன் ஒப்பிட்டு நிறைபோடுவது பொருந்தும்.

இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்கும் பெரும் போர நிகழ்ந்து கொண்டிருந்தது. இராஜகீய ஐரிஷ் போலீஸாரும் தேசீயக்கட்சியாரும் இரத்த ஆறு பெருக்கெடுத்தோடப் போராடிக்கொண்டிருந்தனர். அடக்க முடியாத நிலைமையில் தேசீய இயக்கம் வலுத்து விட்டது. அப்பொழுது முதல் மந்திரியாயிருந்த லாயிடுஜார்ஜ் குடியாட்சித் தலைவனான எமன் டி வால்ராவுக்குக் கடிதம் விடுத்துச் சமாதானம் விழைந்தார். கூடுமானதொரு உடன்படிக்கைக்கு வர இருதரப்பாரும் இணங்கினர். 1931 ஜனவரி 26ல் இந்திய சர்க்கார் காந்திஜீயையும் காரியக் கமிட்டி அங்கத்தினர் 27 பேரையும் விடுதலை செய்தது போல 1921 ஜூலையில் மௌன்ஜாய் சிறையிலிருந்த ஐரிஷ் தேசீயத் தலைவர்களான ஆர்தர் கிரிபித், ஜான் மக்நீல், ஸ்டெய்னஸ், எமன் டக்கன முதலிய நால்வரையும் விடுதலை செய்து காந்தி—இர்வின் ஒப்பந்தம் போன்ற தோருடன் பாடு செய்து கொண்டனர். பூரண சுதந்திரத்தைப பற்றியே முழுதும் விவாதிக்கப்பட்டது. இந்தியாவைப் போன்றோ அல்லது வேறுவிதமாகவோ அயர்லாந்து பூரண சுதந்திர மாத்திரமில்லை, பூரண சுதந்திரம், ஜன நாயக ஆட்சி, சொந்த சைன்யம், பஞ்சாயத்து கோர்ட்டு முதலியவற்றுடன் போட்டி சர்க்காரையும் நிர்மாணித்து விட்டது. நமது லாகூர் நிபந்தனைகளை யெதிர்த்தது போன்று பிரிட்டிஷ் சர்க்கார் ஐரிஷ்நிபந்தனைகளையும் கொடுக்கமறுத்தது. இதனால் 1921 ஜூலை 11-ல் ஆரம்பித்த சமாதான மகாநாடு நமது வட்டமேஜையைப்போல் அக்டோபர் 10வு வரை மூன்றுமாதங்களாக நடைபெறலாயிற்று. பூரண சுதந்திரத்தை எல்லையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஐரிஷ் மகாநாடு பூரண சுதந்திரத்தைஅடிப்படையாகக் கொண்ட இந்திய வட்டமேஜையைப் போன்றே முறிந்து விட்டது. எந்த வொரு பிரிட்டிஷ் சர்க்காரும் ஐரிஷ் தொடர்புகளை அறவே அறுத்துக் கொள்ள இசையமாட்டா தென சொல்லப்பட்டது. இதே மாதிரிதான் இந்தியாவும் கராச்சியில் பூரண சுயராஜ்யத் திட்டத்தை வகுக்கையில் "எப்பொழுது எந்தக் கட்சியார் விரும்பினாலும் ஒருவருக் கொருவருள்ள தொடர்புகளை வெட்டிக் கொள்ளும் உரிமை இருவருக்கும் இருக்கவேண்டும்" என்று வியாக்கியானஞ் செய்தோம். ஐரிஷ் சமாதானம் உடைவதும் உருப்படுவதுமாயிருக்கையில் லாயிடு ஜார்ஜ் எத்தனையோ பூச்சாண்டிகளை யெல்லாம் காட்டினார் டி வாலரா கட்சியாரிடம் பாட்சா பலிக்கவில்லை. பிறகு ஒருவாறு இருவரும் இணங்கிப் போயினர். நாமும் அப்படித் தான் செய்தோம்.

கைதிகளைப் பற்றி இரண்டொரு வார்த்தைச் சொன்னால் சந்தர்ப்ப பேதமாகி விடாது. சமாதான மகாநாட்டுக்கு முன்னால் ஏற்கனவே நாம் குறிப்பிட்டுள்ள ஐரிஷ் தலைவர்கள் நால்வருடன் இதர ஐரிஷ் காங்கிரஸ் அங்கத்தினர்கள் சிலர் மாத்திரமே விடுதலைசெய்யப்பட்டு 1921 டிசம்பர் 16வு யன்று ஒப்பந்த பத்திரம் கையொப்பமிடப்பட்டபின் 1922 ஜனவரி 12-ல் அரச அறிக்கையின் மேல் எல்லா அரசியல் கைதிகளும்விடுவிக்கப்பட்டனர்.

—யங் இந்தியா.

(தொடரும்

காற்றடிக்குது! கடல் குமுறுது!!

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

அஹிம்ஸை இந்தியா என்ன பாடுபட்டிராது! காந்திஜீயின் நெஞ்சம் எவ்வளவு கலங்கியிருக்கும். அந்தோ! போச்சுது பெண்மை! போச்சுது தர்மம்! போச்சுதே பாரதநாடு!

வட்டமேஜைமுறிந்து சத்தியப்போர் மறுபடியும் ஆரம்பமாகவிருக்கும் இதுகாலை-காந்திஜீ கட்டளையிடாததற்கு முன்னதாகவே நாடெங்கும் இடி, குமுறல், மின்னல் எல்லாங் கிளம்பிவிட்டன. ஐக்கிய மண்டலத்தில் வரிமறுப்புச் செய்வதற்கு ஜவஹரிலால் காந்திஜியிடமிருந்து அதிகாரம் பெற்றிருந்தாலும், மூளை மடங்காவீரம் ஜவஹரிலாலின் பிறவிப்பெருமையேயாயினும் காந்திஜீ இந்தியா வந்திறங்கிய பின்னரே—காரியக கமிட்டியில் கலந்தாலோசித்த பின்பே ஐக்கிய மண்டலத் தலைவர்கள் தங்களுக்குச் சர்தார் செய்யப்பட்டிருக்கும் தடையுத்திரவைப்பற்றித் தக்கன செய்வார்கள். சமாதான காலத்தில் இந்தியாவைவிட்டு இங்கிலாந்துக்குச் சமாதானம் விரும்பிச் சென்ற காந்திஜீ சமாதான இந்தியாவிலேயே இறங்கட்டும். அவரது நாவசைந்தாலன்றி நாடசையக் கூடாது. பலாத்காரத்தில் இந்தியா சுயராஜ்யம் அடைவதை விட அடிமைநாடாகவேயிருந்துவிடுவது மேல்.

வதந்தியா? வாஸ்தவமா?

கல்கத்தா பத்திரிகையொன்றின் கெய்ரோ நிருபர் துருக்கிப் பத்திரிகைகளில் நூதனமான செய்தியொன்றை வெளியிடுகிறார். ஹெட்ஜாஜ், ஆப்கானிஸ்தானம், அல்லது அல்பானிய போன்ற ஏதாவதொரு இஸ்லாமிய தேசத்துக்கு மௌலானா சௌக்கத் அலியை ஸ்தானிகராக நியமிப்பதென பிரிட்டிஷ் சர்க்கார் ஆலோசனை செய்கிறார்களாம். மேலும் இந்தியாவின் வைஸ்ராய் வெல்லிங்டன் பிரபு ஐந்து வருடங்களிடையில் விலகிக் கொள்ளக் கூடுமென்றும் அப்போது ஆகா கான் வைஸ்ராயாக நியமிக்கப்படுவாரெனவும் லண்டனில் பிரபலஸ்தர்கள் மத்தியில் பெரும் பேச்சாயிருப்பதாகவும் குறிப்பிடுகிறார். இது எம்மட்டும் உண்மையாயிருக்குமென்பதை இப்பொழுதொன்றும் சொல்லிவிட முடியாது.

மண்டி போட்டுத்தான் இடங்கேட்போம்

"மண்டிபோட்டுத்தான் இடங் கேட்போம்" அதுதான் கௌரவம், தேர்தலில் நிற்பது பேதமை எனப் 16—12—31ல் வெளியான "பரிபாலினி"யில் அன்பரொருவர் கடிதமொன்று எழுதியிருக்கிறார். அதற்கு மறுப்பாக ஒரு நண்பர் அதே பத்திரிகையில் 18—12—31ல் பதிலளிக்கிறார். "நியாயம் அத்யாவசியம்" உரிமை. என்பவைதெல்லாம் எல்லோரும் அறிந்ததே வழிபற்ற வழியில் நகரசபையில் இடங் கேட்டும், வெள்ளிக்கிழமை கப்பலை வேறுகிழமைக்கு மாற்றும்படியும் எழுதிய சோலியமுஸ்லிம் வர்த்தக சங்கத்தாரின் செயலை இதர வகுப்பார் கண்டு நகைக்க இடங் கொடுத்துவிட்டார்களென்றே நாம்வருந்தி எழுதினோம். அதற்கு நமது நண்பர் விஷமத்தைப் புகுத்துவதாகக்கூறுகிறார். ஆங்கிலப் பத்திரிகைகளில் எழுதியிருந்ததையே நாம் எடுத்துக் காட்டினோமன்றி வேறில்லை. "எக்சேஞ்சு கெஜட்"டில் வெளிவந்ததற்கு ஆதாரமில்லை எனக் கூறிய அன்பர் "இரங்கூன் கெஜட்"டில் வெளிவந்ததைப்பற்றி நாம் தேதியுடன் எடுத்துக் காட்டியிருந்தும்ஒன்றுஞ்சொல்லாமல் சொன்னால்வெட்கக் கேடென்றே வாய்பொத்தியிருந்துவிட்டார். நண்பர்கடைசியில் நாயகவாக்கியமொன்றை எடுத்துக்காட்டுகிறார். அதைப்பற்றி சந்தோஷமே. மார்க்கத்தில் அறவே நீக்கப்பட்ட கள்ளுக்கடைக் குத்தகையிலும், மதுவியாபாரத்திலும் நாயக வாக்கியத்தையும் மார்க்கக்கடமையையும் கவனித்து நடந்தால் நலமாக இருந்திருக்கும்; மது விலக்குப் பிரசாரத்திற்கு உதவியாகவும் தேசத்துக்கு உபகாரமாகவும் இருந்த பலனும் கிடைக்கும்.

சிலர் விஷமத்தைப் புகுத்தலாம்; சிலர் கள்ளைப் புகுத்தலாம்; சிலர் நலத்தைப் புகுத்தலாம். நாம் நலத்தையே புகுத்துகிறோம். உலகம் பலவிதம். பலவிதத்தில் ஒருவிதமாக நமது நண்பர் இருப்பதில் ஆச்சரியமேது? நகரசபையில் மண்டியிட்டு இடங் கேட்பதைப்பற்றியும், முடியாத காரியத்தில் முயன்று குட்டுப்பட்டுக் குனிவதிலும் எமக்கு ஆக்ஷேபமெதுவுமில்லை. சோலிய முஸ்லிம்களின் பெயருக்கு இழிவு வராமலிருக்கவேண்டுமென்பதே எமது பேரவா! பொதுஜன அபிப்பிராயமும் அதுவாய்த்தானிருக்க முடியும். மண்டியிடுவது மானக்கேடென்பதை அன்பர் அறியட்டும். —ஓர் முஸ்லிம்

பூச்சாண்டிகள்.

இரங்கோனில் பூச்சாண்டிகள் பெருத்து விட்டன. எதற்கெடுத்தாலும் ஒரு சிலர் பூச்சாண்டி காட்டிக் கொண்டலைவதையே ஒரு தொழிலாக வைத்துக் கொண்டு திரிகின்றனர். சாதாரண நாடோடி முதல் நாடுகாக்கும் சேவகன் வரை பூச்சாண்டி பூச்சாண்டி யென்று கூறித்திரிவது கோழைத்தன மென்றுதான் குறிப்பிட வேண்டும். தாய்மார் தம் குழந்தைகளுக்குச் சோறூட்டும் போதும், உறக்காட்டும் போதும் பூச்சாண்டி காட்டி பயமுறுத்தி பாரம்பர்யமாகத் தமது சந்ததியாரை பயங்கொள்ளிகளாகச் செய்வது விடுகிறார்கள். ஆனால் இப்பொழுதோ இப் பூச்சாண்டிகளைப் பெரும் பெரும் அரசியல் காரியங்களிலும் சில பேதைகள் காட்டத் தலைப்பட்டு விட்டனர். நாட்டுச் சுதந்திரத்திற்காகப் பாடுபடும் நாட்டபிமானிகளை இன்றோ இப்பொழுதோ இன்னுஞ் சற்று நேரத்திலோ சர்க்கார் கைது செய்து விடும் என்பதோர் பூச்சாண்டி. தேச விடுதலைக் கென்றே தேசீயப் பிரசாரஞ் செய்யும், தேசீயப் பத்திரிகைகளுக்கும் அவற்றின் ஆசிரியர்களுக்கும் இதோ ஜாமீன், இதோ பறிமுதல், இதோ சிறைதண்டனை என்பது இன்னொரு பூச்சாண்டி. இந்தமாதிரி காட்டப்படும் பூச்சாண்டிகளுக்கு தேசாபிமானிகளோ தேசியப் பத்திரிகைகளோ சிறுபிள்ளைத் தனமாய்ச் சிறிதும் பயந்துவிடுகிறதில்லை. ஏனெனில் அவர்களுக்கு இப் பூச்சாண்டிகளெல்லாம் காட்டப்படுமென்று தெரியும். ஆழமறியாமல் அவர்கள் அரசியல் கடலில் அடிவைத்ததில்லை. தலைக்குமேல் ஆபத்தை வைத்துக் கொண்டுதான் அவர்கள் தங்களது தேசியச் சன்னியாசத்தை வலிய வரித்தார்கள். எத்தனை பூச்சாண்டிகள் தானாகட்டும் இல்லை பூதந்தானாகட்டுமே அவர்களுக்கு லட்சியமில்லை. ஆம், முழுக்க முழுகினால் குளிரேது? மேலும் ஒரு மகாமகத்தான எல்லையை நோக்கி யோடிக் கொண்டிருப்பவர்கள் இடையில் எத்தனை இடைஞ்சல்கள் நேர்ந்தாலும்சோர்ந்துவிடுவார்களா?

இரங்கோனில் இந்தப் பத்திரிகைப் பூச்சாண்டிகள் பலத்துப் போயிருக்கின்றன. பத்திரிகாசிரியர்களுக்கு அச்சுச் சட்டத்தின் வரம்பு தெரியும்: அதன் எல்லைவரையும் ஓடுவார்கள். தாண்டுவதென்பது வேறு செய்தி. காரியமிருந்தால் தான் எல்லை தாண்டுவர் இல்லாவிட்டால் வீரியத்தைப் பாராமே காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பர். இச்சந்தர்ப்பத்திலே தான்சர்க்காருக்குச் சாதாரணச் சட்டம் பலமற்றதாய்ப்புதுப்புதிய அவசரச்சட்டங்கள் தேவைப்படுகின்றன.

சமீபத்தில்தோன்றிய அச்சுச் சட்டம் பர்மாவில் அடிவைக்காமல் அக்கரையும் இக்கரையுமாயிருக்கும் பொழுதிருந்தே இப்பூச்சாண்டிகள் "கூ கூ" வெனக் கிளம்பிவிட்டன. ஆங்கிலப்பத்திரிகைகளிடத்திலோ பர்மியபத்திரிகைகளிடத்திலோ இப் பூச்சாண்டிகளின பச்சாப் பலிக்கிறது கிடையாது. தமிழ் பத்திரிகைகளிடத்திலே மாத்திரந்தான் இப் பூச்சாண்டிகள் வெகு தாராளமாயுலவுகின்றன. தமிழன் பயங்கொள்ளி யென்ற கருத்தா? அப்படியாயின் அது பெருந்தவறு என்பதைத் தமிழ் பத்திரிகைகள் பலகால் நிரூபித்திருக்கின்றன.

இப்பூச்சாண்டிகளை யடக்குவதில் போலீஸ் இலாக்கா சிறிது சிரத்தையெடுத்துக் கொள்ள வேண்டும். சீ ஐ: டி இலாக்காவில் ஒரு சிறு காரியஞ் செய்யப்பட்டாலும் அது தொத்து நோய்போல் ஊரெல்லாம் பரவி அம்பலப்பட்டு விடுகிறது. அது கூடுமா? அதற்கு இரகசியம் என்ற பெயர் பொருந்துமா? ஒருபத்திரிகையின் மீது நடவடிக்கை யெடுக்க நினைக்கும்போதே அச்செய்தி வெளிப்பட்டு இன்ன பத்திரிகைக்கு இத்தனை ஆயிரம் ஜாமீன் கேட்கப் போகிறார்களென்று ஊரெல்லாம் கொட்டிவிடுகிறார்களே இந்த இரகசியம் எப்படி? எவர்வாயிலிருந்துவெளிவந்தது? என்பதுதெரியவேண்டும். இதனால்இருசாராரும்நன்மையடையலாம் இரகசியஇலாக்காவின்இரகசியம் வெளிவராமல் தடைப்படுத்துவதால் சர்க்காரும்,பத்திரிகைகளின்தொழில் முறைபாதிக்கப்படாமல்பாதுகாப்பளிக்கப் பெறுவதால் பத்திரிகைகளும் நன்மையடைகின்றன. வீண் பூச்சாண்டிகள் காட்டுவதால் குட்டிகுலைத்து நாய்த்தலையில் வைத்த மாதிரி சர்க்காரின் நன்மதிப்பும் கௌரவமும் சந்தியில் நிறுத்தப்படுவதுடன் பத்திரிகைகளின் நன்மதிப்பும் நல்லபெயரும் உயருகிறது. இரண்டையும் சர்க்கார் விரும்ப மாட்டார்கள். அநேகமாய் நாமறிந்தவரை பூச்சாண்டிக் காரர்களிலநேகர் வேலையற்றவர்களென்றே தெரிகிறது. இவர்களுக்கென சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் 109, 110 போன்ற சட்டங்களை வுபயோகித்து சீர் திருத்தசாலையில் வைத்து தொழில் கல்வி கற்றுத்தரலாகாது? சர்க்காரும் பூச்சாண்டிகளும்கூட இதைச்சற்று கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

இராஜாளியின் இராஜ காரியம்.

உள்ளூர்க் காரியமாயிருந்தால் செய்தி கொண்டுவர நம்ம சிட்டுக்குருவியேபோதும். ஆயிரம் பதினாயிரம் மைல்பறந்து போய் வரச் சின்னஞ் சிறிய சிட்டுக்குச் செட்டையில் பலமிருக்குமா? அதனாலேதான் இராஜாளிப் பக்ஷியைப் பறக்கவிட்டோம். அது போய் அநேகஞ் சங்கதிகளை அப்படியே வாரிக்கொண்டு இன்றுதான் வந்திறங்கிற்று. அது கூவியதனைத்தையும் இங்கே குறிப்பிடுவதென்றால் நம்ம "குள்ளப்பத்திரிகை"யில் இடங்கொள்ளாதென விடுத்து இரண்டு மூன்று சங்கதிகளை மாத்திரம் இங்கே எழுதுகிறோம்.

இந்தியா இழந்த தேசம்.

இந்திய வட்டமேஜை முடிந்து போய் காந்திஜீ உள்பட அநேகமாய் எல்லாப் பிரதிநிதிகளும் இந்தியா திரும்பி விட்டார்கள். பார்லிமெண்டில் இந்தியாவைப்பற்றிய வெற்றுக் கடுதாசியை வைத்துப் பேசினார்கள். உப்பும் சப்புமில்லாத தேதோ வொரு திட்டத்தை மூட்டையாய்க் கட்டிக்கொண்டு சாங்கே பிரபுவும் இன்னும் சில பிரபுக்களும் இங்கே வரப்போகிறார்களாம். மெக்டொனால்டுக்கு உள்ளூர் வேலை அதிகமிருப்பதால் அவர் அநேகமாய் வர முடியாதென்றே தோன்றுகின்றது. இங்கிலாந்திலே பணக்கஷ்டம் அதிகம். அச் சிக்கலைச் சிக்கறுக்காமல் இந்தியாவின் சிக்கலென்ன அத்தனை பெரிதா பிரித்தானியாவுக்கு? அதுவுமல்லாமல் இந்தியாவின் நிலைமையைச் சரியாகவோ எப்படியோ சரிப்படுத்துவதற்குத்தான் சர் சாமுவேல் ஹோரின் கையிலே குருவும் குழையுங் கொடுத்துவிட்டாரே, அவர் பார்த்துக் கொள்ளமாட்டாரா? இதையெல்லாம் இராஜாளி சொன்னது பெரிதில்லை. ஒரு பெரிய இரகசியத்தைக் கொண்டு வந்ததே அது தான பிரமாதம். இந்தியாவைப் பற்றி இங்கிலாந்தில் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்று காதைத் திறந்து கேட்டதாம்: வேந்தன் முதல் வெட்டியான் வரை எவனைப் பார்த்தாலும் இந்தியாவைப் பற்றித்தான் எப்பொழுதுமே பெரும் பேச்சாய்ப் பேசிக்கொள்ளுகிறார்களாம். காந்திஜீயின் ஆத்ம சக்தியையும், நல்ல கட்டான வாலிபசரீரத்தாலும் தாங்கமுடியாத குளிரை--பனியை—வெறுங்காலுடன் நிர்வாணமாய் கிழவயதில்—மெலிந்த மேனியுடன் நிர்வகித்ததைப் பற்றியும் பேசாத பிரிட்டிஷ்காரன் பாவஞ் செய்தவனாம். குழந்தைகளெல்லாம் வாய் தளிர 'காந்தி காந்தி" யென்று கூறிக்கொள்ளுகின்றனவாம். "சரி இதெல்லாம் இருக்கட்டும் இந்தியாவைப் பற்றி பிரிட்டிஷ் பொதுஜனங்களின் மனப்பான்மையெப்படி யிருக்கிறது? சீக்கிரம் சொல்லென்றோம். அதற்கு இராஜாளி சொல்லும்" இந்தியாவை இனிமேல் இழந்த நாடாகக் கைகழுவி விட வேண்டியதுதான் என்று தோட்டி, தொண்டமான், மந்திரி, தந்திரி எல்லோ சொல்லி விட்டார்கள்"

நம்ம கையிலிருந்தால்?

நம்ம நாடு நம்மகையிலிருந்தால் இப்பொழுதேற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை—பணக்கஷ்டத்தை "பூ" வென்றூதி விடலாம்; சுயேட்சை பெற்ற நாடுகளும், தங்கள் ஜனங்களை தாங்களேயாளும் தேசங்களும் தங்தள் தங்கள் நாட்டுமக்களின் வறுமையைப் போக்கவழி தேடிக்கொண்டிருக்கின்றன. இங்கிலாந்திலும் துருக்கியிலும் இறக்குமதிச் சரக்குகளின் மீது ஏராளமான வரிபோட முயற்சிகள பலமாக நடக்கின்றன. அடிமை இந்தியா என்ன செய்ய முடியும்? பொறுமையோடு வெறுமனே பார்த்து ஏமாந்திருக்கவேண்டியதைத்தவிற வேறு விதி கிடையாது. அன்னிய நாட்டுச் சரக்குகளுக்கு இங்கிலாந்து பலமான சுங்கச் சுவரு கட்டிவிட்டது. துருக்கியும் அன்னிய நாட்டு காப்பி, அரிசி, கோக்கோ, சர்க்கரை, முதலிய ஜாமான்களை மறியல் செய்கின்றது. இதேயாதிரி இந்தியாவும் செய்ய முடியும் ஒரு சில விதேசிப் பொருள்களை இந்தியாவில் இறங்கவிடாமல் செய்து நாட்டின் மூலாதாரமான கைத்தொழிலை விருத்தி செய்து தேசியச் செல்வததை வெளிநாடுகளுக்குச் செல்லாமல் தடைப்படுத்தி நாட்டின் வறுமையைப் போக்கலாம். இப்பொழுது பேசி யென்னாகும்? நாடு நம்மையிலிருந்தாலல்லவா?

இனாம் சம்பளக்காரர்கள்!

பென்ஷன் என்பதற்கு நேர்மையான அர்த்தம் சொல்லுவதானால் இனாம் சம்பளம் என்பதே பொருந்தும். கௌரவமான பெயர் எது வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். உபகாரச் சம்பளம் என்பதில் அருத்தமுமில்லை பொருத்தமுமில்லை. வேலைபார்த்த காலத்தில் ஏராளமான சம்பளத்தை வாங்கி மீதஞ்

செய்து வைத்திருப்பவர்களுக்கு உபகாரம் என்னத்திற்கு? உறைந்த சம்பளங்கொடுத்தால் தான் வயது போன காலத்தில் உபகாரஞ் செய்வது நியாயம். அது கிடக்கட்டும். இந்தியாவின் இனாம் சம்பளகாரர்களில் ஸர் ரெஜினால்டு கிரடாக் என்பவரும் ஒருவர். இவர் இந்தியாவுக்கு வயிறும் இங்கிலாந்துக்கு நெஞ்சும் படைத்தவர். இருந்தாலும் பரவாயில்லை. எள்ளத்தனை விசுவாசமாவது இருக்கவேண்டாமா? இந்தியாவின் உப்பைத் தினுகிறோமென்று எண்ணவேண்டாமா? அந்தச் சிந்தனைதான் அம்மகாப் பிரபுக்களிடம் சுட்டுப் போட்டாலும் வருகிறதில்லை. வருமான வரிகூட இல்லாமல் இந்தியாவின் செல்வத்தை சிறுபோதிலிருந்து சுடுகாடு போகிறவரை வாங்கித்தின்று கொழுக்கிறோமே என்றெவனாவது சிந்தனை செய்கிறானா? இந்தியாவின் வரி செலுத்துவோனுக்கு இவர்கள் ஒருபெரும் பாரமாயிருப்பதுடன் கஷ்டசிக்காலத்தில் இந்தியாவை பயமுறுத்தி சரியாகவோ தப்பாகவோ பிறரை தவறான வழியில் நடத்துகிறார்கள். சம்பாதித்துவைத்திருக்கும் பணத்தைக்கொண்டு பார்லிமெண்டில் நுழைந்து எவ்வளவு கெடுதல் செய்ய முடியுமோ அவ்வளவும் இந்தியாவுக்குச் செய்கிறார்கள். ஸர் கிரடாக்குக்கு இந்த தர்ம வேலையில் முதல் பாக்குக் கொடுக்கலாம்.

நான் சொல்லலையா?

பிரிவினை வேண்டாத கட்சியைச் சேர்ந்த மாங் மாங்ஜீ இங்கிலாந்தில் பர்மா வட்டமேஜையைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். வட்டமேஜையில் அவருக்கு இடங்கிடைக்காவிட்டாலும் தன்னுடைய அபிப்பிராயத்தை அவ்வப்போது வெளிப்படுத்தி குட்டையுடைக்கிறார். பீல் பிரபுவின் பிரகடனம் பிரயோஜன மற்றதென்பதைக் கூறும்போது இதை "நான் ஏற்கனவே சொன்னேனே கேட்டீர்களா?" என்று இடித்துக் கூறுகிறார். ஊச்சிலாய்ங், ஊப்பூ, ஊ அவுஞ் ஜோ முதலியவர்கள் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாது வெளி வந்து விட்டதையும் போற்றுகிறார்.

தேசோபகாரி

சந்தா விபரம்

வருஷம் 1-க்கு	ரூ.	3	0	0
ஆறுமாதம்	ரூ.	1	8	0

மாத சந்தா அணா நான்கே

ஒற்றைத் தும்மல்—ஆகாது.

ஜேம்ஸ் அரண்மனையில் நாடகம் முடிந்தபோது நடந்த காட்சி மிக உருக்கமாயிருக்கிறது. எல்லோரும் கைகுலுக்கி கொண்டார்கள். முழு முட்டுக்கட்டைகளாகவும், இந்தியாவின் பலத்திற்கல்ல—இந்தியாவின் இன்பத்திற்கில்லை—இந்தியாவின் விடுதலைக்கன்று—இந்தியாவின் துரதிருஷ்டத்திற்குப் பிரதிநிதிகளாகச் சென்றிருந்தவர்கள் திருப்தியுடன் பூரித்திருந்தனர். தொடை நடுங்கித்தம்பிரான்களும் குதூகலங் கொண்டாடினர். இருளடைந்த மாகாண சுயாட்சியில் வெற்றெலும்புக் கூட்டைக்கண்டு நாக்கில் ஜலம் சொட்டப் பெற்றனர். வேறு சிலர் வட்டமேஜையால் எதுவுமே கிடைத்து விடா விட்டாலும் நல்ல கடல் யாத்திரையும் இங்கிலாந்து விஜயமும், தாராளமான படிச்செலவும்கிடைத்ததே போதுமென்று தங்கள் தங்கள் அதிர்ஷ்டத்தை வியந்து புகழ்ந்து கொண்டார்கள். இவ்வளவு கோலாகலத்தின் மத்தியிலே ஒரேயொரு ஆத்மா மாத்திரம் நிச்சப்தமாய் நிர்மலங்கமாய்—சிந்தாக்கிராந்தையாய் வீற்றிருக்கின்றது. நவ இந்தியாவின் ஒற்றை உருவம் நாலுபுறமும் ஆயிரம் ஆபத்துக்கள் மத்தியிலிருப்பது போல இருக்கின்றார். மலிந்த வெறும் உபசாரங்கள் சில அவருக்கும் அளிக்கப்பட்டன. ருசியில்லாத ஒரு சிறு சிரிப்புச் சிரித்தார். அச் சிரிப்பில் ஒளியில்லை; இருள் அடர்ந்திருந்தது; வேறென்ன வாயிருக்க முடியும்?

"இந்தியாவுக்கு என்ன செய்ய வேண்டுமென்று தெரியும். ஆண்டவனுடைய உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு போரின் முடிவிலும் சத்தியமே ஜெயிக்கிறது. ஒரு நாட்டாரை இன்னொரு நாட்டார் ஆள்வதற்கென்றே கடவுள் சிருஷ்டித்ததில்லை. இந்தியா தனது புனிதமான அஹிம்சைப் போரை கத்தியின்றி இரத்தமின்றி புத்தம் புதிய முறையில் புத்தம் புதிய வேகத்துடன் நடத்தி வெற்றி பெறட்டும்" என்றெண்ணிக் கொண்டிருந்தார். மெக்டொனல்டின் கடைசி வார்த்தையும்முடிந்தது. ஒற்றைத் தும்மலொன்று தும்மி விட்டார் அது ஆகாது; அவசகுணம். காந்திஜிக்கு ஜல தோஷம் பிடித்திருக்கிறது தும்முகிறாரென்று சிலர் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனாலும் அது அவசகுனம்; ஆகவே ஆகாது.

—யங் இந்தியா.

செஞ்சட்டைவேந்தன் கான்கபார்கான்.

"எல்லைப்புற காந்தி' கான் அப்துல் கபார்கானையும் அவரது "குதாய் கித்மத்கர்" களான தொண்டர்களையும் கண்டு பிரிட்டிஷ் பத்திரிகைகள் வெருளுகின்றன. காபர் கானையும் அவரது மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட தொண்டர்களையும் அப்படியே உள்ளங்கையில் வைத்து ஊதி விட வேண்டுமென்று பிரிட்டிஷாருக்கு மூக்கு முட்டிய ஆசையிருப்பதில் ஆச்சரிய மொன்றுமில்லை. இந்தியா வெங்கணும் எல்லாத் தலைவர்களும் செய்யாத அவ்வளவு வேலையை எல்லைப்புற மாகாணத்தில் மாத்திரம் காபர்கான் ஒருவரே செய்திருக்கிறார். எத்தனையோ லட்சக்கணக்கில் தொண்டர்களைச் சேர்த்து அவர்களை யெல்லாம் செஞ்சட்டை பச்சைச் சட்டையென பலவாறு படைவகுத்து சாத்விக முறையில் பயிற்சி செய்து வருகிறார். அவர் தமது நுனி விரலையசைத்து விட்டால் போதும் இன்றைக்கு எத்தனையோ லட்சம் பேர் எல்லைப்புறத்தில் சிறை போகத் தயாரிவிருக்கிறார்கள் அப்துல் காபர் கானைப்பற்றி அனுப்பப் பட்டிருக்கும் யாதாஸ்தில் அவரை எல்லைப்புறத் தேசியத் தலைவரெனவும் இஸ்லாமிய விடுதலைக் காரரென்றும், செஞ்சட்டைச் சக்கிரவர்த்தி யெனவும், புனிதப் போர் மூட்டுவோ ரென்றும்; பிறவிப் போர்வீரனெனவும் குறிப்பிடுகிறார்கள், "டெயிலி எகஸ்பிரஸ்" பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டிருக்கும் சாரத்தை அப்படியே காண்போம். "காந்தியின் இளஞ் சகாக்களில் ஒருவரான கான் அப்துல் கபார் கான் செஞ்சட்டைக் காரர்களை யெல்லாம் சாத்வீகத் தொண்டர் (குதாய்கித் மித்கர்) களாகத் திருப்பி விட்டார். புனிதமான போருக்கு அவர்களை அறை கூவியழைத்துக் கொண்டிருக்கிறார்.

"நன்றி கெட்ட நயவஞ்சகக் காரர்களிடத்திலிருந்து உலகத்தை மீட்டுவதற்கு நீங்கள்தான் அடி கோல வேண்டும்.

"இந்தியாவை மாத்திரமில்லை, இஸ்லாமிய உலகமனைத்தையுமே பாழ்படுத்தி விட்ட கொடுங்கோலர்களாகிய இங்கிலீஷ்காரர் களிடத்திலிருந்து இந்தியாவை நீங்கள் தான் மீட்ட வேண்டும்:

"இஸ்லாத்தையும், இதர எல்லாஉலகத்தையுமே கொடிய நெஞ்சம் படைத்த இங்கிலீஷ்காரர்களின் பிடியிலிருந்து விடுவித்து விடுங்கள். உங்களுடைய நாட்டை அடிமைத் தனத்திலிருந்து மீட்டுவதை விட—அன்னியர் நுகத்தடியிலிருந்து அவிழ்ப்பதை விட புனிதமான போர் வேறொன்றுமே யில்லை."

நாளுக்குநாள் பெருகிக் கொண்டிருக்கும் சைன்யத்தில் காபர் கான் ஒரு சர்வாதிகாரி மாத்திரமில்லை, இஸ்லாம் மதத்தையே விடுவிப்பதற்காக ஆண்டவனால் அனுப்பப்பட்டவான தூதராகவும் விளங்குகிறார். இப்பொழுது அவர் எல்லைப்புறத்தில் சுற்றுப் பிரயாணஞ் செய்து தமது தெய்விகப் போருக்குச் சிப்பாய்களைச் சேர்த்துக் கொண்டு திரிகிறார்.

காபர் கானின் தொண்டர்கள்போலீஸ்காரர்களுடன் போட்டி போடுகிறார்கள். போலீஸ்காரர்கள் கவாத்துப் பழகும் மைதானத்தைக் கைப்பற்றிக் கொள்ளுகிறார்கள் கிராமாந்திரங்களில் பிரிட்டிஷ் அதிகாரிகளைப் போல் வேஷம் போட்டு வேடிக்கை நாடகங்களும் கேலிக் கூத்தும் ஆடுகிறார்கள். செஞ்சட்டைச் சிப்பாய்கள் அணிவகுத்துச் செல்லுகையில் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குக் கூட பொது ரஸ்தாக்களில் போகவர வழி விடுகிறதில்லை. இளைஞர்களெல்லாம் பிரிட்டிஷ்காரனைப் பார்த்தவுடன் சிரிப்பதும் வக்கனை பேசுவதும், கோணவலிப்பதுமாய் கேலிசெய்கிறார்கள். அவர்களது மதப்பிரசாரகர்கள் பிரிட்டிஷ் இராஜாங்கம் ஒழிந்தே பொய்விட்டதென்றும்கூறித்திரிகின்றனர்.

இந்த இபக்கத்தை காங்கிரஸுடன் இணைத்துக்கொண்டு உண்மையிலேயே கான் காபர் கான் செஞ்சட்டையர்களின் சக்கிரவர்த்தியாக விருக்கிறார். இருபத்து நாலு மணிநேரத்தில் எல்லைப்புறத்தில் ஒரு மகத்தான புரட்சியைக் கிளப்பிவிட முடியும் என்ற தன்னம்பிக்கையில் "பிரிட்டிஷ் சர்க்கார் எங்கே என்னைக் கைதி செய்யட்டும் பார்க்கிறேன்" என்று எத்தனை நெஞ்சழுத்தத்துடன் விருதாவளி கூறுகிறார், ஒவ்வொரு மலையுச்சியிலிருந்தும் ஒவ்வொரு குன்றத்திலிருந்தும் எந்த நிமிஷமும் இவர் ஆட்களை வேண்டியமட்டும் அறை கூவி யழைக்கலாம். அக்காலை ஒரு நாள் கேட்கவே போகிறோம்". —இந்தியன் டெயிலி மெயில்

Printed & Published By A. V. Sellam Pillay at the Desopakari Press, 210, 36th Street, Rangoon.

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 42. அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை

DESOPAKARI

புதன், ஞாயிறு வெளியீடு

210—36-வது வீதி, இரங்கோன், (23—12—31) மார்கழிமீ 8உ புதன்கிழமை

செத்தும் சிரஞ்சீவியானார் மௌலானா!

கல்வியைப்போ லறிவுமறி வினைபோலக்
கருணையுமக் கருணைபோலப்
பல்விதவூக் கங்கள்செயுந் திறனு மொரு
நிகரின்றிப் படைத்த வீரன்
வில்விறலாற் போர்செய்தல் பயனிலதா
மெனவதனை வெறுத்தே யுண்மைச்
சொல்விறலாற் போர்செய்வேன் பிறர்க்கன்
தனக்குழைபாத் துறவி யாவேன். [றித்

—கவியரசன்.

எம்மருந் தலைவர் மௌலானா முகமதலியின் முதலாவது சிரார்த்த நாள் இன்று. சென்ற வருடம் டிசம்பர் மாதத்தில் மௌலானா நம் மத்தியிலிருந்தார். இன்று நாம் அவரைக் காணவில்லை. அவரது ஸ்தூல சரீரம் நம்மிடை விட்டுப் பிரிந்து போய்விட்டது. பைத்துல் முகத்திஸென்னும் உமர் பள்ளியிலே—புண்ணிய பூமியிலே—அவரது பொன்னுடல் புதைக்கப்பட்டு மண்ணோடு மண்ணாய் மக்கிப் போய்விட்டது. ஆனால் அவரது புகழுடம்போ? என்றென்றும் மறையப் போகிறதில்லை. உலகம் உள்ளளவும்—இந்தியா இருக்குமட்டும்—இந்தியன் என்பான் ஒருவன் உயிர்வாழும் வரை மௌலானா முகமதலியின் மங்காத புகழ்—மடங்காத வீரம்—இணையற்ற இராஜ தந்திரம்—எல்லை யில்லாத தேச பக்தி—இவைகளெல்லாம் இருந்தே தீரும். இறக்கும் தருவாயிலும் இந்து முஸ்லீம் இணக்கத்திற்கே பாடுபட்டு பரகெதி யடைந்த பரமாத்மாவின் பரமோ தர்மத்தை இந்துவாயினும் முஸ்லீமாயினும் மறந்துவிட முடியுமா? முதல் வட்டமேஜையில் மௌலானா வீற்றிராதிருந்தால்—அவரது வீர கர்ஜனையால் அம் மேஜை அபிஷேகிக்கப் பட்டிராதிருந்தால்—அதை ஒரு மேஜை யென்றும் சொல்லியிருக்க மாட்டோம். தன்னைச் சிறை செய்தவனைத் தான் சிறைசெய்யும் அதிகாரம் பெறுவது தான் சுயராஜ்யம் என்று அன்று வியாக்கியானம் செய்த வாயெங்கே? மறைந்து போய்விட்டது. ஆனால் அவ் வாய்வழி யுதிர்ந்த வாசகத்தை பொன்னாய்—மொழியாய்—வேதமாய்ப் போற்றுகிறோம்.



எத்தனை பேர் போயிருந்தும் மகாத்மாவின் பாததூளி பட்டு இரண்டாவது மேஜைக் கேற்றம் ஏற்பட்டது முதல் மேஜையில் எத்தனை பேரிருந்தும் மௌலானா முகமதலி யிராவிட்டால் அதற்கேற்பட்ட அச்சிறு பெருமைகூட பிறந்திராது. அம் மேஜையை ஒரு சிலர் ஆராதிக்கின்றார்களென்றால் அப் புகழனைத்தும் முகமதலியின் பெருமையையே பெற்புறச் செய்கிறதன்றிப் பிறிதில்லை. அஞ்சாத ஆண்மையும், அகண்டிதமான அறிவும், அபாரமான அரசியல் ஆற்றலுமே மௌலானாவைத் தலைவராகவும், அழியாப் புகழ்பெற்ற சிரஞ்சீவியாகவும் செய்துவிட்டன. ஆசிரியச்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

சுதந்திர தராசு

(ஸ்ரீ பட்டாபி சீத்தாராமய்யா.)

(20ந்தேதி தொடர்ச்சி)

இன்னொரு சங்கதியும் இங்கே குறிப்பிடாது விடுவதற்கில்லை. இராஜீய கட்சி போலீஸ் இன்ஸ்பெக்டரொருவர் ஐரிஷ் குடியாட்சிப் படைத்தலைவராயிருந்த ஜான் மெக்கியான் என்பவரைக்கைது செய்யச் சென்றபோது ஜான் மெக்கியான் அப்போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கொன்றுவிட்டார். அதற்காக மெக்கியானுக்கு மரணத்திர்ப்பளிக்கப்பட்டு விடுதலை பெறவில்லை. டி வாலரா "அவரையும் விடுதலை செய்து விடவேண்டும். இல்லாவிட்டால் சமாதானத்திற்கு இணங்கமுடியா"தென மறுத்துவிட்டார். அவ்வாறே மெக்கியானும் விடுதலைபெற்றார்.

சரி. ஐரிஷ் சமாதான மகாநாட்டில் என்ன நடந்ததென்று துருவிப்பார்ப்போம். ஐரிஷ் பார்லிமெண்டில் ஒரு சபையிருப்பதா? இல்லை இரண்டு சபைகளிருப்பதா? தனித்த அரசியலை அமைப்பதா? அல்லது ஐக்கிய அரசியலையா? ஆள்வாரி பிரதிநிதித்துவமா அல்லது மாகாணவாரியான பிரதிநிதித்துவமளிப்பதா? தனித் தொகுதியா இல்லை கூட்டுத் தொகுதியா? என்றெல்லாம் விவாதித்தார்களா? அம்மாதிரிப் பேச்சே அங்கு பேசப்பட்டதில்லை இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்கும் நிரந்தரமான சமாதானத்தையே பேசினார்கள். கதையை வளர்த்துவானேன்? இருதரப்பாரும் ஒப்பந்தம் பேசி ஒரு முடிவுக்கு வர இரண்டு மாதங்கள் (அக்டோபர் 10உ யிலிருந்து டிசம்பர் 6உ வரை) பிடித்தன. அரசியல் அமைக்கும் பிரச்னையை முழுதும் ஐரிஷ் குடி ஜனங்களின்பொறுப்பிலேயே விடப்பட்டு மைக்கேல் காலின்ஸைத்தலைவராகக் கொண்ட ஐரிஷ் காங்கிரஸே (டெயில்) திட்டங்கள் தயாரித்தது. இங்கிலீஷ்காரருக்கு அதில் எவ்வித சம்மந்தமுங் கிடையாது. இதைப் பார்லிமெண்டு முணுமுணுக்காமல் சம்மதிக்க வேண்டியதாயிற்று. சமாதான உடன்படிக்கையின் வரம்பு மீறாமல் காரியாதிகள் நடத்தப்படுகின்றனவா என்று வெறுமனே பார்த்துக் கொள்ளும் ஒரே வேலைதான் பிரிட்டிஷ் மந்திரியான போனர் லாவின் கையிலிருந்தது. ஆனால் உண்மையில் திட்டம் சமைக்கப்பட்டதெப்பொழுது? பார்லிமெண்டு ஒப்பந்தம் 1921 டிசம்பர் 16உ செய்யப்பட்ட பின்னர் 1922 ஜனவரி 7உ யன்றுதான் ஐரிஷ் டெயில் அரசியல் திட்டத்தை யமைக்கலாயிற்று. அப்புறம் போர் நிறுத்தஞ் செய்யப்பட்டது; கைதிகளெல்லாம் விடுதலை செய்யப்பட்டனர். முதன் முதலாவதாக சட்டசம்பூர்த்தம் பெற்ற ஒரு சபையாக ஐரிஷ் காங்கிரஸ் கூடி அரசியல் ஆதிக்கத்தை நடத்திற்று. டி வாலரா இராஜினாமாச் செய்து விட்டதால் ஆர்தர் கிரிபித ஆட்சித் தலைவராக்கப்பட்டார், மைக்கேல் காலின்ஸ் முதன் மந்திரியானார். டப்ளின் அரண்மனை கைப்பற்றப்பட்டு மறுநாட் காலமே 60,000 பிரிட்டிஷ் சைன்யமும் காலிசெய்யப் பட்டாயிற்று. (இச் சந்தர்ப்பத்தில் இந்தியாவிலிருக்கும் பிரிட்டிஷ்சிப்பாய்கள் 61,0 0 பேர் என்பது குறிப்பிடத்தக்கது.)

இங்கே அரசியல் அமைப்பைப் பற்றி முன்னமேயே யேன் கூற நேர்ந்ததென்றால் சமாதான மாகாநாடு இவ்வளவு காலம் நீடித்ததற்குக் காரணமெல்லாம்கூடி மேற்காட்டிய கேள்விகளை விவாதிப்பதிலல்ல கீழ் காணும் நிபந்தனைகளுடன் கூடிய ஒப்பந்த உடன்படிக்கை செய்து கொள்ளுவதற்கே யாம்.

பூரண குடியேற்ற நாட்டந்தஸ்தை ஒப்பந்தத்தால் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. பொதுக் கடன்களையும், யுத்தத்தில் கொடுக்கப்பட்ட உபகாரச் சம்பளங்களையும் சரிக்கட்டுவதில் முதன் முதலாவதாக விவாத முற்றி பின்னால் ஒரு வாறு தீர்க்கப்பட்டு இருதரப்பாரில் எவராவது மீறினால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்ட—யாராவதொருவரின் மத்தியஸ்தத்தில் தீர்த்துக் கொள்ளுவதென்று முடிவு செய்யப்பட்டது. அடுத்த பிரச்னை புதிய சர்க்காரில் வேண்டப்படாத உத்தியோகஸ்தர்களை நீக்குவது அவர்களுக்கு ஈடு கொடுப்பது சம்மந்தமானது. ஏனெனில் பிரிட்டிஷ் சர்க்காரின் கையாள்களாக விருக்கும் நீதிபதிகளையோ போலீஸ் உத்தியோகஸ்தர்களையோ ஐரிஷ் டெயில விரும்பாதென்பது சகஜம். துறைமுகம், ஆகாயகப்பல் சாலைகள் முதலியனபற்றி ஏகாதிபத்தியத்திறகுச் சில காலம் வரை யிருக்க வேண்டிய உபயோக உரிமைகள் எல்லைத் தகராறுகள், சிறுபான்மையாரின் மத விஷயத்தில் சர்க்கார் நடுநிலை வகிப்பது, பிரஜைகளுக்கு கடவுள் வணக்கத்திலிருக்க வேண்டியன பற்றி விவாதித்து முடிவு செய்யப்பட்டது.

அதேபோல் காந்திஜீயும் இராணுவம், பொ

நாடகப் பிரசாரம்

எந்தவொரு தர்மத்தைப் பரப்புவதற்கென்றாலும் நாடகவியல் தனிப்பெருஞ்சக்தியுடைத்து: அரசியலாகட்டும், சமதர்மமாகட்டும், வேறெந்த வாழ்க்கை நலந்தானாகட்டும், நாடகப் பிரசாரத்தால் கற்றவன் முதல் தற்குறி வரை நன்கு வற்புறுத்தப் பெறுகிறான். கதை கதையாய்ச் சொல்லுவதிலும், கட்டுரை கட்டுரையாய் வரைவதிலும் நாடகமாய் நடத்திக் காட்டுவதிலேதான் பிரசார பலன் பெற்றியும் வெற்றியுமடைகிறது. எந்த நாட்டிலானாலும் எந்த பாஷையிலானாலும் இம் முறை பாரம்பர்யமாய்ப் பற்றி நிற்கும் ஒரு பழக்கம். நமது தமிழ்ப் பேரறிஞர்களெல்லாம் நாடகத்தைப் பண்டைகால முதல் நாளிது வரை நன்குபோற்றியும் வளர்த்தும் வந்திருக்கின்றனர். பண்டிதன் முதல் பாமரன் வரை யறிந்து கொள்ள முடியாத காவியச் சிறப்பை நாடகத்தால் நன்கறிவிக்கப் பெறுகின்றனர். பச்சை மரத்தில் ஆணியடித்ததுபோல நாடகத்தால் நடத்திக் காட்டப்படும் உண்மை ஒவ்வொரு உள்ளத்திலும் ஊன்றிப் பதிகிறது,

இரங்கோன் கணேஸ பால்ய பக்த சபையார் சமீபத்தில் நடித்துக் காட்டிய "கற்பின் வெற்றி" யென்னும் நாடகமும் தண்ணூற்றுரிடையே நன்கு சமைந்தது. கதையைக் கற்பித்த கற்பனைத்தச்சன் கற்பின் பெற்றியை—வெற்றியை கவினுறச் சித்திரிக்கின்றான். கள்வர்தலைவனின் வீரத்தை ஆசிரியர் இன்னுஞ் சிறிது அதிகப்படுத்திக் காட்டியிருக்கலாம். கைதுசெய்யப்பட்டு மரணத்தீர்ப்பளிக்கப்பட்டுத்தூக்கு மேடையில் தூங்கவிருக்கும் மைத்துனனின் உயிரை தங்கையிடம் வாக்களித்தவாறு கைது செய்யப்பட்டல்லாது தனக்குள்ள வீரத்தால்-கள்வனேயாயினும் மறக்கள்வனா அன்றி அறக்கள்வனாயிருக்கும் ஆற்றலால்—நீதி மன்றத்தில் நேரில் அவனே ஆஜராகும்படி செய்திருந்தால் கதை இன்னும் அதிகம் அழகுபெறும். என்றாலும் எடுத்துக்கொண்ட நோக்கம் மாத்திரம் சிறிதும் தவிர்க்கப்பட்டதென்று சொல்லி விட முடியாது. குடியால் வருங்கேட்டை இன்று காங்கிரஸ் காரர்கள் செய்வதை விட இச்சபையார் பன்மடங்கதிகமாய் பல நாள் வேலையை ஒரே நாளிரவில் பிரசாரஞ்செய்து விட்டார்கள். குடிப்பழக்கத்தை குலதெய்வமாகக் கும்பிட்டு வரும் கொடுங்குடியன் கூட இந்நாடகத்தைக் கண்டு திருந்திக் கொள்ளாதிருக்க முடியாது. கள்ளுக்கடை இக்காலத்தில் நாமெங்கும் காணும் சர்க்கார் கள்ளுக்கடைகளைப் போன்றில்லையென்றெவனும் சொல்லமாட்டான். கள் வெறி நன்கு காட்டப்பட்டது. கள்ளால்விளையும் கேட்டையும் கேட்டோம். சிப்பாயைக் கண்டஞ்சும் குடியானவன் உண்மைக் குடியானவனாகவே நடித்தான். போலீஸ் சேவனும் பிரிட்டிஷ் போலீஸ்காரன் போன்றே நடித்தான். கீழ் கோர்ட்டு நியாயத்தால் மரணத்தீர்ப்புப் பெற்றவனை விடுதலைசெய்த ஹை கோர்ட்டு நியாயம் பிரிட்டிஷ் நியாயத்தைத் தாண்டிவிட்டது. பால்ய விவாகத்தின் கேட்டைப்பற்றி நடிக்கப்பட்ட குட்டி நாடகமும் நன்கமைந்திருந்தது. சாரதா சட்டம் வற்புறுத்தப்பட்டதுடன் நமது கவீந்திரன் பாரதியின் "பெண் விடுதலை"யும் பெற்புறப் பாடப்பட்டது. பொதுவாய்ச் சொல்லப்போனால் நாடகம் முழுதும் நன்றாயிருந்தது. இத்தகைய நாடகங்களால் இரங்கோன் நகரத்தில் குடியால் கெட்டலைபவர்களும் விபசாரப் பிரியர்களும் திருந்தி நடக்க இது போன்ற சபையார் பிரசாரஞ் செய்யட்டும்.

க்கிஷம், கடன் பொறுப்பு சம்மந்தமான ஒப்பந்தஞ் செய்து கொள்ளுவதற்காகவே சென்றார். பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கும் இந்திய தேசிய காங்கிரஸுக்கும் அம்மாதிரி ஒப்பந்த உடன் படிக்கை ஸ்திரமான முடிவுக்கு வந்து பார்லிமெண்டும் அதை அங்கீகரித்து விட்டால் பிரிட்டிஷ் இராணுவம் இந்தியாவை விட்டுக் காலி செய்யப்பட்டதன்மேல் காங்கிரஸ் கூடி தங்கள் நாட்டுக்குப் பொருத்தமான அரசியலை அமைக்கும். அதை பார்லிமெண்டும் அங்கீகரிக்கும். அயர்லாந்தின் சரித்திரமும் இந்தியாவின் சரித்திரமும் ஸ்வாதந்தர்யம் சம்மந்தப்பட்ட மட்டில் ஒரே நிறையிலிருக்கின்றன. இந்தியாவுக்கு இது வோர் நல்லெழுத்துக் காட்டாய் விளங்கும்.

—யங் இந்தியா.

தேசோபகாரி

சந்தா விபரம்

வருஷம் 1-க்கு	ரூ.	3	0	0
ஆறுமாதம்	ரூ.	1	8	0

மாத சந்தா அணா நான்கே

செத்தும் சிரஞ்சீவியானார் மௌலானா

(1—ம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்பும் அவருக்குப் பிறப்புரிமை. "தேச மூன்" (காம்ரேட்) என்னும் பத்திரிகையில் அவர் வெறும் வார்த்தைகளை யல்ல நெருப்புத் துண்டங்களை யிறைத்து நாடெங்கும் தேசியத் தீயை மூட்டினார். உடல் பொருள் ஆவி மூன்றையும் தேசத்திற்காக பாரத மாதாவின் பலிபீடத்திலே சமர்ப்பித்து தேச பக்தர்கள் சமாஜத்திலே நம் மௌலானா சாகேப் திருக்கோயில் கொண்டிருக்கிறார். தேச விடுதலைக்காகத் தவம் கிடக்கின்றார்.

இற்றைக்கு ஓராண்டு கழிந்துவிட்டது. நாம் இன்று நமது கடமையத்தனையையும் அவருக்குக் காட்டிவிட வேண்டும். நமது காங்கிரஸ் தலைவரை— இந்து முஸ்லீம் இணைக்கத் தூதனை—எல்லோரும் வழிபட்டு வாழ்த்துவோம். கடைகளானாலும், வீடுகளாயினும், பள்ளித் தலங்களானாலும், கோயில்களானாலும் சரி எங்கும் அவருக்கு பூஜைகள் செய்குவோம். நாடெல்லாம் இன்று முகமதலி நாளாகவே கொண்டாடிவிட வேண்டும். சங்கங்களனைத்திலும் கூட்டங்கள் கூடி அவரது புகழைப் பேசவேண்டும். அவருக்காக பிரார்த்தனை புரியவேண்டும். எந்தவொரு எல்லையை வாழ்க்கைக் குறியாக வைத்துப் பாடுபட்டாரோ—எந்தவொரு கொள்கைக்காகச் சொத்துச் சுகமனைத்தையும் "தூ"வெனத் தள்ளினாரோ—எந்தவொரு காரியார்த்தமாக இங்கிலாந்து சென்று சுயராஜ்யம் பெறாமல் திரும்புவதில்லை—சுதந்திர இந்தியாவி லல்லாது அடிமை இந்தியாவில் இனிமேல் அடி வைப்பதில்லையெனக் கூறி—கூறியாங்கே அந்தர்த்தானம் ஆனாரோ அந்த நோக்கத்தை அந்த கொள்கையை நாமும் வலிய வரித்துக்கொள்ள வேண்டும். அதற்கான பிரதிக்ஞை யெடுத்துக்கொள்ள வேண்டும். இல்லாமல் இப்படியும் ஒரு மௌலானா இருந்தார் இறந்தார் என்று கொண்டாடுவதில் பேசுவதில் அர்த்தமில்லை. இஸ்லாத்தின் மஹா மஹத்தான விரத மாதத்திலே—இறந்தவர்களுக்குப் பிரார்த்தனைச் செய்யும் மஹோற்சவ காலத்திலே மௌலானாவின் தினமும் கூடியிருப்பதில் தெய்வீகமான கருத்தும் அந்தார்த்தமும் ஸ்புரித்து நிற்கின்றது.

இன்று மாத்திரமில்லை இவ்வார முழுதையுமே நாம் முகமதலி வாரமாக்கிவிடுவோம். இவ் வாரத்தின் ஏழு நாட்களிலும் அவரை ஆராதிப்போம். அவரது படத்தைப் பிரதிஷ்டை செய்வோம். அவரது ஆத்மா சாந்தியடையுமாறு பிரார்த்திப்போம். வந்தேமாதரம்: அல்லாஹூ அக்பர்: மௌலானா முகமதலிக்கி ஜே!

வட்டமேஜைகள்

பர்மா வட்டமேஜைக்கு இடையிடையே யேற்படும் முடக்கு வாதத்தைத் தவிர சபையின் அறிகுறிகள் அதிகமாயில்லை. தாராவாடி ஊப்பூ ஊச்சிலாய்ங், ஊ அவுஞ்ஜோ இந்த மூன்று ஆசாமிகளையும் சேர்த்திராதிருந்தால் முடக்குவாதங்கூட ஏற்படப்போகிறதில்லை. கவர்னரும் இதர ஐரோப்பியர்களும் எண்ணுகிறபடி இம்மிகூடக் குறையாமல் வெற்றிகரமாய் முடிவிடலாம். ஊபாப்பே கோஷ்டியாருக்கு பிரிவினைதான் பிரமாதம். மற்றவை பற்றி அதிகமாய்ச் சிந்திக்கமாட்டார். அது எப்படியாவது தொலைபட்டும் நாமதிகம் கவலைப்பட வேண்டியதில்லை. நமது காரியங்களைப்பற்றி மாத்திரம் இரண்டொரு சங்கதி கூறி முடித்துவிடுவோம். நம்ம ஆட்களெல்லாம் நன்றாய்ப் பேசுகிறார்கள். ஹாஜியார் சிறுபான்மையாரின் பாதுகாப்பு சம்மந்தமாக வற்புறுத்தியே வருகிறார்: அதற்காக அரசியல் ஜாமீன் கூடவேணு மென்கிறார்.

இந்தியா வட்டமேஜைக் காரியக் கமிட்டிகள் மூன்றும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் ஆள் மாகாணமெல்லாம் பொறுக்கி யெடுக்கப்பட்டு ஜனவரி 15ந்தேதி மூல்டான் கப்பலேறி இந்தியாவுக்கு வரப்போகின்றனவாம். வட்டமேஜையின் முழு பலனையும், இந்தியாவுக்கு சுயராஜ்யத்தையும் கூடவே மூட்டை மூட்டையா யேற்றிக்கொண்டு வருகிறார்களென்று ஏமாந்துவிடக் கூடாது. இந்தியா முழுதும் இராஜாக்கள் போலே சுற்றித் திரிந்து ஏதேதோ விசாரிக்கப்போகிறார்களாம். சைமன் ரிஷிகள வந்ததும் போனதும் விசாரித்ததும் போலத்தா னிருக்கும். முடிவு குதிரை முட்டையிட்டதைத் தவிர அதிகமொன்றும் கிடைக்கப் போகிறதில்லை, ஆற்றிலே போகிறது வெள்ளம் அப்பா கொஞ்சம் அம்மா கொஞ்சம் குடித்துக் கொள்ளென்று சொல்லுகிறார்கள், வட்டமேஜையில் செலவழிந்த 15 லட்சத்துக்கு இதை வட்டியாக வைத்துக் கொள்ளுவோம்.

சுதந்தரன் வழக்கு

"சுதந்தரன்" பத்திரிகைக்கும் அதன் அச்சுக் கூடத்துக்குமாகச் சேர்த்த 1500 ரூபாய் ஜாமீன் கட்டும்படி கேட்ட மாகாண சர்க்காரின் உத்திரவு 1931 ம் வருஷத்திய அவசர அச்சுச் சட்டத்திற்கு அப்பாற்பட்டதென "சுதந்தரன்" ஆசிரியர், பொறுப்பாளர் திரு. சு. ரா. சுந்தர முதலியார் ஹைக்கோர்ட்டில் தொடுத்திருந்த வழக்கு நேற்று முன்தினம் பிரதம நீதிபதி, மிஸ்டர் கன்லிப, மிஸ்டர் பாகுலி ஆகிய மூவரடங்கிய பிரத்தியேக கோர்ட்டில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது. ஸ்ரீமான் ஸி. கே. தம்பி பார்-அட்-லா அவர்கள் சுதந்தரன் சார்பிலும் சர்க்கார் தரப்பில் மிஸ்டர் ஏ. எக்காரும் ஆஜராகியிருந்தனர்.

மாகாண சர்க்காரின் உத்திரவு முழுதும் தப்பான மொழிபெயர்ப்பால் நேர்ந்ததென்றும், "சுதந்தரன்" பத்திரிகை மகாத்மா காந்தியின் கொள்கையை யடிப்படையாகக் கொண்டு முற்றும் அஹிம்ஸையையே பிரசாரஞ் செய்து வருகிறதென்றும் பிரஸ்தாப கட்டுரையும் சாத்விகத்தையேவற்புறுத்துகிறதெனவும் சர்க்காரின் உண்மைச்செயல்களை ஜனங்களுக்கு அப்படியே யெடுத்துக் கூறி ஆளுவோர் ஆளப்படுவோரிரு சாராருக்கும் பெரும்பயனளித்து வருகிறதென்றும் 1931 ம் வருடம் நவம்பர் மீ 7ல பர்மா கெஜட்டில் பிரசுரிக்கப்பட்ட ஒரு சட்டத்தை 1931 ஷு அக்டோபர் மீ 23ல யெழுதப்பட்ட கட்டுரைக்கு உபயோகப்படுத்தியது தவறெனவும், விவாதித்ததுடன் ஆயுத பூஜை, நவராத்திரி, அஹிம்ஸை முதலியவற்றின் தத்துவார்த்தங்களையும் விளக்கிக் காட்டினார். நீதிபதிகள் கேட்ட குறுக்கு கேள்விகளுக்கெல்லாம் அவ்வப்போது தக்க விடையளித்தார். 11 மணியிலிருந்து 1½ மணிவரை ஸ்ரீமான் தம்பியின் விவாதம் நடந்தது. அதன் மேல் மிஸ்டர் ஏ. எக்கார் விவாதித்தார். ஹைக்கோர்ட்டு மொழி பெயர்ப்பாளரையும் நீதிபதிகள் குறுக்கு விசாரணை செய்தனர். அஹிம்ஸை யென்பதற்கு அவர் வியாக்கியானஞ் செய்யும்பொழுது அ என்றால் இல்லை, ஹிம்ஸை யென்றால் ஆபத்து, பலாத்காரம். ஆகவே அஹிம்ஸை யென்பது ஆபத்தற்றது. அஹிம்ஸை வாள் என்பது எவருக்கும் தீங்கிழைக்காத வாள் என்று கூறினார்.

இன்று தீர்ப்பளிக்கப்பெறும்,

இழுத்துத் தள்ளு வெளியே!

சோலிய முஸ்லிம் வர்த்தக சபைக்கு ஜனவரி மீ 1 ந்தேதி முதல் புதிய தலைவர் வரப்போகிறதாகப் பலமான வதந்தி உலாவி வருகிறது. அவ்வதந்தி அநேகமாக உண்மையாகவே இருக்குமென்பதற்குப் போதிய காரணங்களும் இல்லாமலில்லை. வர்த்தக சபை போன்ற ஓர் முக்கிய ஸ்தாபனத்துக்குக் கல்வி, செல்வம், நிதான புத்தி, நேர்மை, சகிப்புத் தன்மை, தாராள நோக்கம், நடு நிலைமை, என்னும் விஷயங்களை ஒழுங்காக நடத்தும் ஆற்றல் ஆகிய எல்லா அம்ஸங்களும் ஒருங்கே அமையப்பெற்ற ஒருவரே தகுதியுடையவராக இருக்க முடியும். அவ்வாறின்றி இவைகளுக்கு மாறுபட்ட அந்தஸ்துடைய ஒரு மனிதன் தலைமைப் பதவிக்கு லாயக்காக இருக்க முடியாது. தனது அரும் பிரயாசையால் தலைமைப் பதவி யடைந்த ஒருவருக்கு இயற்கையிலேயே இக் குணங்கள் அமைந்திருக்காவிடின் அரிய முயற்சியால் தலைமைப் பதவி யடைந்ததைப் பொருட்படுத்தி அவரைச் சூழ்ந்து அவர் கீழ் இருப்பவர்கள் இக் குணங்களுள்ளவராகச் சீர்திருத்திவிடலாம். எவ்வளவு குணக்கு எடுத்தும் நாய் வாலைப் போன்று சுருண்டுகொண்டால் வெளியே இழுத்துத் தள்ளுவதில் யாருக்கும் ஆக்ஷேபமிருக்காது. தற்காலமிருக்கும் தலைவர் எடுபட்டுப் புதிய தலைவர் வருவதற்கு என்ன அவசிய மேற்பட்டிருக்கிறதென்பது நமக்கு விளங்கவில்லை. எவர் இருப்பினும், எவர் வரினும் நாம் கூறிய குணங்க ளமைந்தவராக இருக்க வேண்டுமென்பதே பொதுமக்கள் விருப்பமாக இருக்கும். பழைய கருப்பனே கருப்பனா? அல்லது புதிய கருப்பனா? என்பதை ஜனவரி மாதம் 1 ந்தேதி பார்த்துவிடுவோம்.

ஓர் முஸ்லிம்.

சோலிய முஸலிம் அசோஸியேஷன்
பொதுக்கூட்டம்.

இன்றிரவு மாலை 8-30 மணிக்கு சீக்கே மவுண்டாலே வீதியிலுள்ள மேற்படி சங்க ஹாலில் காலஞ்சென்ற மௌலானா முகம்மது அலி அவர்களின் வருஷாந்திர ஞாபகார்த்த பொதுக்கூட்டம் நடைபெறும். பலர் உபந்நியாசம் செய்வார்கள். அனைவரும் வருக.

கோழி கூவி விட்டது!

கோழி கூவாவிட்டாலும் விடிவது விடிந்துதானாகும். இருந்தாலும் கோழி கூவிவிட்டது. இனிச் சமீபத்தில் விடியப்போகிறது என்னும் நம்பிக்கை கொள்ளுகிறோம். அதே மாதிரி நமது சகவர்த்தமானியாகிய "சுதேசபரிபாலினி"யைச் சூழ்ந்திருந்த இருள் நீங்கி இரவுக்குப்பின பகல் தோன்றுவது போலச் சில தினங்களாக வெளிச்சங் காணுகிறோம். பழைய பாசண்டமாகிய பாசங்கள் நீங்கப்பெற்று "பரிபாலினி" புத்தம் புதிய ஒளியில் பிரகாசிக்கின்றாள். கடந்த இருபத்தாறுண்டுகளாகக் கொண்டிருந்த கொள்கையை மாற்றி இப்பொழுது தேசிய மணம் கமழ விளங்குகிறாள். ஒவ்வொரு தமிழனும் இவ்வுருவத்தில் அவளைப் போற்றாதிருக்க முடியாது. ஆனால் சில நண்பர்கள் இக் கொள்கை மாற்றத்தை வியார யுக்தியென்று கூறுகின்றனர். நாம் அவ்வாறு கருதமாட்டோம். ஏனெனில் விஸ்வேஸ்வரய்யாவின் சுதேசிப் பிரசாரத்தை யெடுத்துக்காட்டெனக் கொண்டு வியாக்கியானம் செய்யும் ஆசிரியரை நாம் சந்தேகிக்க இடமிருக்குமா? கதரின் சர்வ லட்சணங்களையும் சவிஸ்தாரமாகக் கூறி வாசகர்களைக் கதரணியும்படி வற்புறுத்தும் "பரிபாலினி"யின் பேர் ஆசிரியரோ அன்றி வேறாசிரியரோ வெறும் உபதேசமாத்திரஞ் செய்யமாட்டார்கள். "கொல்லாமை; புலாலுண்ணாமை" பற்றி மேடையேறிப் பேசிய பிரசங்கியார் வீடு சென்று மனைவியை யேன் மீன் கறி சமைக்கவில்லை யெனக் கேட்க மனைவியார் தங்கள் உபதேசங் கேட்டென விடையிறுக்க "அது ஊருக்கேயன்றி உனக்கில்லை" யெனக் கூறியவர் போன்றிருக்க முடியாது. கதர் தத்துவத்தைக் கூறிப் பிறரைக் கதர் கட்டும்படி வற்புறுத்திக் கூறும் "பரிபாலினி" ஆசிரியர்கள் கதரன்றி வேறு வஸ்திரந் தரிக்கக் காண முடியாது அப்படி கண்டதாக எவராவது கூறினால் அப்பொழுதுதான் நாம் "பரிபாலினி"யின் கொள்கை மாற்றத்தில் வியாபார யுக்தியிருக்கிறதென்பதைச் சந்தேகிப்போம். விளம்பரங் குறைந்துவிட்டதால் சந்தாவையோ விற்பனையையோ அதிகப்படுத்தி ஈடு பெற விரும்புகிறாரென்பதில் தப்பில்லை: வாசகர்களைத் திருப்தி செய்து விற்பனையை அதிகப்படுத்தும் நோக்கத்தை நாம் போற்றுகிறோம். ஆனால் உள்ளொன்று வைத்து புறம்பொன்று பேசுவது கூடாது. "பரிபாலினி" ஆசிரியர்கள் கதர் பக்தர்களாக மாறியதற்கு நாம் அவர்களுக்கு எமது கடமையத்தனையும் செலுத்துகிறோம். கதரன்றி வேறுடையில் அவர்களை நாம் இனிமேல் காண மாட்டோம். கண்டால்?

தமிழா! ஒரு சிறு செய்தி!

(நில. மணிவாசகன்.)

காந்தியடிகள் திரும்பிவிட்டார். அவரை வாலிப இந்தியா எதிர்நோக்கி நிற்கிறது. அவரது பாதம் பாரத பூமியில் பட்டதும், உடனே ஓர்வித மின்சார சக்தி நாடெங்கும் பாவிவிடும். போரின் அறிகுறிகள் இப்பொழுதே புலப்படுகின்றன. அதிகாரவர்க்கத்தின் அடக்குமுறை ஒருபாலும், பாரத மக்களின் சட்டமறுப்பு மற்றொருபாலும் தோன்றியிருக்கின்றன, இன்னும் என்னென்ன தோன்றுமோ எவரறிவர்?

பர்மாவாழ் தமிழனே! நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்? நாட்டின் விடுதலைக்கு ஒவ்வொருவரும் உழைக்கும்பொழுது, நீ என் செய்கிறாய்? அருமைப் பாரத நாடு துச்சிற் கிடந்து துயருறும்போது, நீ சாதிச் சம்பிரதாயத்தையும் சமயக் குப்பையையும் ஊறிக்கொண்டு வெறும்பேச்சுகள் பேசி நிற்கிறாய்? இவைகளால், போரும், பிணக்கும், பூசலும் உண்டாகின்றனவென்று அனுபவத்தில் கண்டும் நீ கண்ணை மூடிக்கொண்டோ அல்லது வேணுமென்றோ அதிலேயே விழுகின்றாயே? பர்மாவிலுமா நமது மானக்கேடான நிலைமையைப் புலப்படுத்தி, பார்ப்போர் யாவரும் சிரிக்கும்படி செய்யப்போகிறாய்? சாதியும் வேண்டாம்; சமயமும் வேண்டாம். நாம் இந்தியர்; தமிழர். இதுவே சாலும். நமது சுதந்தரமே நமது தெய்வம். அதையே வழிபடுவோம்.

"நாம் பாரத நாட்டைக் கவனிக்க வேண்டுவதில்லை. பர்மாவில் நமது தற்காப்பினிமித்தம் பாடு படுவோம்" என நீ சொன்னால், சமாதான காலத்தில் ஏதாயினும் ஊறிக்கொண்டிருக்கலாம். கடல் குமுறி நிற்கும்போது பாரத நாட்டினின்றே ஒரு ஒளி உண்டாகும். உனக்கு இந்த போதிய செல்வாக்கும், திற

மையுமில்லை. அதிகாரவர்க்க சூழ்ச்சி அறிந்தோர்க்கே புலப்படும். நமது நல்வாழ்வு பாரதநாட்டைப் பொறுத்தே நிற்கிறது. நமக்கிடுக்கண் நேரின் பாரத நாட்டு மக்கள் நம்மை நோக்காது போகார். தென்னாப்பிரிக்காவில் ஒரு காந்தி தோன்றியது போல், இப்புதிய தென்னாப்பிரிக்காவிலும் ஒரு புதிய காந்தி பாரத நாட்டினின்றும் வருவர். இந்தியருக்கு இக்காலம் சோதனைக் காலம். எந்த மூலை முடுக்கில் ஒரு இந்தியனிருப்பினும், அவனுக்கும் சோதனை. நமது வலிமையையும், அருளறத்தையும் காட்ட இதுவே தக்க காலம்.

அதற்கு வழி யாது? சாதியா, சமயமா? அல்லது இத்தகைய பிற இழிவா? எது வெனறு சொல்லாமலே உனக்கு விளங்கும். அதற்குப் பாடுபடாமல், காசி போக கதிர்காமம் நோக்கி நடப்பதுபோல் வீண் முயற்சியில் ஏன் ஈடுபடுகிறாய்? நாம் இன்று அடிமை, நமக்குச் சுதந்திரம் வேண்டும் அதற்காகவே நமது உடல், பொருள், ஆவி மூன்றினையும் தியாகம் செய்தல்வேண்டும். அதற்குரிய காலம் கிட்டிவிட்டது. எனவே உன் தாய்நாட்டுக்காக அதன் மூலம் உன் அருமையின்பாற்படும் பொருளுக்குப் பாடுபட இன்றே, இப்பொழுதே தயாராகுக! நீ இந்தியனாகையால் உன் வழியில் மேடும் பள்ளமும், கல்லும் முள்ளும், காற்றும் மழையும், இடியும், மின்னலும் நிறைந்திருக்கும். சுதந்திரத்தின் பொருட்டு இவைகள் எம்மாத்திரம்? பரிதியின்முன் பனிப்படலம்.

எனவே, என்னருமைத் தமிழனே! நீ செய்யவேண்டிய உண்மையான வேலையை ஒரு மூலையில் கிடத்தி, ஏன் பர்மாவில் வேற்றுமைக் காற்றையும், போலிப்பேச்சையும் ஊதுகிறாய்? நமது தாய் சவலையுற்றிருக்கிறாள். அதற்குரிய உண்மை மருந்து விடுதலை! விடுதலையே! இதற்குப் பாடுபடு. கூடாதாயின் சிவனே எனத்தொண்டு புரிவோர்க்கு உதவி செய். வீண் டம்பமும் தற்பெருமையும் கொண்டு பாரத மக்களின் சாபத்திற்கு ஆளாகாதே! நீ அடிமை இந்தியன் என்பதை உணர்! அதிலும் தமிழன் என்பதைக் கூர்ந்துணர்! இதுவே என் செய்தி.

உனக்கு வேண்டுவது விடுதலை! விடுதலை! பாழுஞ் சாதியல்ல! போலிச் சமயமுமல்ல!

விட்டகுறை தொட்டகுறை

சுடுகாட்டுக் கணக்கு.

மகா—ா—ா—ஸ்ரீ ப. சி. சோமசுந்தரம் பிள்ளையவர்களே! சுடுகாட்டுக் கணக்கெங்கே? ரொம்ப நாளாச்சே கணக்கு கேட்டு. இன்னும் கொடுக்க மனம் வல்லையா? இல்லையா? கடுத்து கேட்டதால் மனச் சள்ளையா? வேறேதேனும் தொல்லையா? எதுவாயிருந்தாலும் பரவாயில்லை. போனதெல்லாம் போகட்டும் கொஞ்சங் கோபித்துக் கொள்ளாமே கணக்கை விசி யெறிந்துவிடுங்கள்.

விளக்குப் போட்டாச்சா?

நகர தாதாக்களே! அங்கே யார்க் ரோட்டுக்குப் பக்கத்திலே ஸ்காட்டு மார்க்கெட்டுக்குப் பின்னாலே ரயில் பாலத்துக்கப்பாலே விளக்கில்லாமல் இருளடையப் போட்டுவிட்டீர்களே. நல்லாயில்லை விளக்குப் போடுங்கள் என்று கேட்டுக்கொண்டோமே ஞாபகமிருக்கிறதா? அங்கே இன்னும் விளக்கேற்றவில்லையென்று 'பார்த்துவந்த குருவி கூறுகிறது.

பர்மாவைப்பற்றி காந்திஜீயின் கருத்து

பர்மா வட்டமேஜைப் பிரதிநிதிகள் காந்திஜீயைக் கண்டு பேசினார்கள். பிரிவினை சம்மந்தமாக கேட்ட கேள்விக்கு அது முற்றும் பர்மியர்களின் இஷ்டத்தைப் பொறுத்ததெனக் காந்திஜீ கூறிவிட்டார். வட்டமேஜையின் முடிவு யாதாகலாமென வினவியபோது இந்திய மேஜையின் கதியை யெடுத்துக் காட்டியதுடன் பர்மியச் செல்வங்களாகிய மண்ணெண்ணெய், தேக்குமரம், நெல் முதலியவற்றை பிரிட்டிஷ் முதலாளிகளுக்கே சாஸ்வதமான சொத்துக்களாகச் செய்துகொள்ளும் "காலனி"யாகவோ அது போன்றதொரு அரசியலையோ அமைத்து விடுவார்களென்றும் சொன்னார். மேலும் இந்தியர்கள் பர்மாவுக்கு வருவதைத் தடுக்க மாகாண சர்க்காருக்கு அதிகார முண்டெனவும் அதுவும் சுகாதாரத்தை ஆதாரமாகக் கொண்டே செய்ய முடியுமென்றும் கூறினார். இதனால் பர்மா பர்மியருக்கே வேண்டுமானால் அதை எவரும் தடுக்கலாகா தென்பதே காந்திஜீயின் கருத்தென்பது நன்கு புலனாகிறது. ஒவ்வொரு நாடும் அதுதன் சுதந்திரத்தை ஸ்தாபித்துக் கொள்ளுவதைத் தடுப்பது இயற்கைச் சட்டத்திற்கு விரோதமானதாகும்.

ஆண்டவனை அவதூறுசெய்த வழக்கு

இராஜ நிந்தனை செய்ததாக நாம் எத்தனையோ வழக்குகளைப் பார்த்திருக்கிறோம்; படித்திருக்கிறோம். கடவுளைப் பழித்ததாக ஒரு ஹிந்துவின் மீது இஸ்லாமியரோ வேறு மதத்தினரோ வழக்குத் தொடுத்திருக்கின்றனர். ஆனால் ஒரு முஸ்லீம் பத்திரிகையின் ஆசிரியர் இன்னொரு முஸ்லீம் பத்திரிகாசிரியர் மீது கடவுள் துவேஷ வழக்குத் தொடுக்க நாம் கண்டதில்லை கேட்டதில்லை. அக் குறையும் இன்று நிவர்த்தியாகிறது.

லக்னோவில் "நிகார்" என்ற மாத சஞ்சிகையொன்று நடக்கின்றது. அதன் ஆசிரியரான ஜனாப் நியாஜ் முகமது கான் பலகாலும் தமது பத்திரிகையில் இஸ்லாம் மதத்தின் தத்துவங்களைத் திரித்துக் கூறி ஆண்டவனையும் அவனது தூதுவரான முகமது நபிகள் நாயகத்தையும் இன்னும் இஸ்லாமிய மதாச்சாரியார்களையும் இழிவுபட எழுதிவருவதாக "பெஷ்வா" பத்திரிகையின் ஆசிரியர் ஜனாப் அஜிஸ் ஹஸன் பாக்குவை தில்லி மாஜிஸ்திரேட்டின் முன்னால் 285 ஏ, 298 இ. பி. கோ. பிரிவின்படி வழக்குத் தொடுத்திருக்கிறார். அப் பிரியாதில் அவதூறான பகுதிகள் பலவற்றைப் பொறுக்கியெடுத்துக் காட்டுகிறார். அவைகளில் "நான் கடவுளைச் சந்திக்கும்படி நேரிட்டால் அவனுக்கு ஒரு நல்ல பாடம் கற்பிப்பேன்" என்ற பொருள் பொதிந்திருக்கிறது. இத்தகைய பதங்களால் தனது மத நம்பிக்கைக்குக் குந்தகம் ஏற்படுவதாகவும், அவைகளை தன்னால் சகிக்க முடியவில்லை யெனவும் வாதி வழக்காடுகிறார். வாதி தரப்பில் சாக்ஷிகளாக பிரபல முஸ்லீம் தலைவர்களான மௌலானா அபுல் கலாம் அஸாத், மௌலானா முப்டி கிபாயத்துல்லா, மௌலானா அஹமத் செய்யது, க்வாஜா ஹஸன் ஆஸம், இமாம் சாகிப் ஜும்மா மஸ்ஜீத் முதலியோர் அழைக்கப்படுகிறார்கள்.

ஆனால் பொதுஜன அபிப்பிராயம் வேறு விதமாயிருக்கிறது. ஒவ்வொரு மதஸ்தனுக்கும் அவனவன் வழிபடும் கடவுளையோ அல்லது மதாச்சாரியார்களையோ அவனவன் இஷ்டம் போல் போற்றவும் தூற்றவும் உரிமையுண்டெனக் கூறப்படுகிறது. இந்துக்களில் இந்தச் சங்கடமில்லை. கடவுளைத் திட்டினாலும் அதை நிந்தாஸ்துதி யென்று சொல்லுகிறார்கள். மற்ற மதத்தைப்பற்றி நாமொன்றும் கூறமாட்டோம்; தெரியவும் தெரியாது.

எல்வின் பாதிரியார்.

காந்திஜீயின ஆப்த நண்பர்களில் எல்வின் பாதிரியார் சிரேஷ்டமானவர், இவர் ஒரு ஆங்கிலர். காந்திஜீயின் அஹிம்ஸைத் தத்துவத்திலும் எளிய வாழ்க்கையிலும் இவருக்கு அளவிறந்த நம்பிக்கை யுண்டு. காந்திஜீயைப் போன்று எல்வின் பாதிரியும் அரை நிர்வாணப் பக்கிரியே யாவார். முழங்காளளவு கதராடை கட்டுவதில் திருப்தி கொள்ளுகிறார், சிற்சில சமயங்களில மாத்திரம் கதர் குடுதா அணிகிறதுண்டு சாதாரணமாய் முழத் துண்டு கட்டியே வாழ்க்கையைக் கழிக்கின்றார். உடுத்துவது மாத்திரமில்லை. உண்பது முதலிய சகலத்திலும்எளியவாழ்க்கையிலேயேஜீவிக்கின்றார். சமீபத்தில் மீரத்தில் கலாசாலைமாணவர்கள் மத்தியில் பேசும்போது அவர் கூறியது:—

"நான் ஒரு அன்னியன்; ஆங்கிலேயன்; உங்களுடைய விரோதி. என்றாலும் உலக சுதந்திரத்தை நேசிப்பவன் என்ற ஹோதாவில் பிரிட்டனுக்கு விரோதமாகப் புரியும் உங்களது போரில் நீங்களே வெற்றியடைய வேண்டுமென்று என்னிருதய பூர்வமாக விரும்புகிறேன். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியானது ஒருங்கே இந்தியா இங்கிலாந்து இரு நாடுகளையும் அடியோடு விழுங்குவதாகவே யிருக்கிறது. சென்ற உலக மஹாயுத்தத்தில் பிரிட்டன் ஜெர்மனியைத் தோற்கடித்து வெற்றி பெற்றதென்பது வாஸ்தவந்தான், எவ்வளவு சொத்தை யிழந்தோம்; எத்தனை உயிர்களைத் தான் பலி கொடுத்தோமே கடைசியில் என்னாயிற்று. பாரமார்த்திகமாகவும் ஆத்மார்த்தமாகவும், ஜட பூர்வமாகவும் ஒன்றுமே பெற்றதில்லை, கெட்ட பெயரே கிடைத்தது. உலக ஒற்றுமைக்கும் உலக சமாதானத்திற்கும் பலாத்காரம், ஹிம்ஸை யென்பது பெருத்த இடையூறே தருகிறதன்றி வேறில்லை. அன்பு, சத்தியம், இவையே இறுதியில் வெற்றி தருகின்றன. இதற்கு சரித்திர சாக்ஷிகள் ஏராளமாயுண்டு. கைராட்டையில் மஹத்தான பல அந்தார்த்தங்கள் ஸ்புரித்து நிற்கின்றன. சத்தியத்தின், சந்தோஷத்தின், அன்பின் விருதே சர்க்கா! இந்தியாவின் எண்ணற்ற நோய்களுக்கு ஏக சஞ்சீவி சர்க்கா! கிராமங்களின் உயிர் நாடியாவதும் சர்க்காவே! இந்தியாவின் வறுமையைத் தீர்ப்பதற்கு சர்க்காவன்றி வேறொன்றும் அமையாது. காந்திஜீயின் சர்க்காதான் இந்தியாவை மீட்டும்.

Printed & Published By A. V, Sallam Pillay at the Desopakari Press, 210, 36th Street, Rangoon.

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 43 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை

DESOPAKARI

புதன், ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி, இரங்கோன், (27—12—31) மார்கழிமீ 12 உ ஞாயிற்றுக்கிழமை

அவசரம்! அவசரம்!! அவசரம்!!!

நாட்டு மாந்த ரெல்லாம்—தம்போல்
நரர்க ளென்று கருதார்
ஆட்டு மந்தை யாமென்—றுலகை
அரச ரெண்ணி விட்டார்.

காட்டு முண்மை நூல்கள்—பலதாங்
காட்டினார்க ளேனும்
நாட்டு ராஜநீதி—மனிதர்
நன்கு செய்ய வில்லை.

—கவியரசன்.

நாமிருக்கும் இதுவொரு அவசர யுகம். எதற்கெடுத்தாலும் அவசரம் சிண்டைப் பிடித்துக்கொண் டோடுகிறது. தோட்டி முதல் தொண்டமானும் வேந்தன் முதல் வெட்டியானும் அவசரத்தைப் பிடித்துக்கொண்டுதானழுகிறான். அதிலும் இந்த 1931 ம் வருடமிருக்கிறதே இது கன அவசரத்திலே பிறந்திருக்கிறது. 12 மாதங்களில் 15 அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன வென்றாலென்ன கொஞ்ச அவசரமா யிருக்க முடியுமா? ஆளப்படுவோரை ஆளுவோர் அடக்கி யாளுவதற்குச் சாதாரணச் சட்டம் பலமற்றதாய்விட்டதென்று சர்க்கார் காணும்படி செய்யப்பட்டிருக்கின்றதென்றால் அது அந்த ஜனங்களின் உணர்ச்சியையும் முற்போக்கையும் காட்டுகிறதல்லவா? இந்தியாவில் இப்பொழு தேற்பட்டிருக்கும் தேசியக் கிளர்ச்சியை யடக்குவதற்கு இழுத்த இழுத்தபடி யாங்கெல்லாம் இழுபடவும் நீளவுங் கூடிய சர்வ வல்லமையும் வாய்ந்த 124 ஏ, 144 போன்ற எத்தனையோ சட்டங்களெல்லா மிருந்தும் அவற்றால் அடக்க முடியாத அளவுக்குக் கிளர்ச்சி வலுத்துவிட்டதென்பதற்கு அவசரச் சட்டங்கள் குபீர் குபீரெனக் கக்கப்படுவதே போதிய சாக்ஷியாகும்.

ஏரோப்ளேன் வைஸிராய் காலத்திலே புதுப்புதுச்சட்டங்கள் ஏரோப்ளேன் வேகத்திலே அவசர அவசரமாய்ப்புறப்படுகின்றன. இந்திய சர்க்கார் ரயில்வண்டி யேறி பிரயாணஞ் செய்தபோது சட்டங்களும் சாதாரணமாய் ரயில்வண்டி வேகத்திலேயே யிருந்தன. வெல்லிங்டன் சர்க்கார் இப்பொழுது ஏரோப்ளேனில் ஏறித் திரிவதால் சட்டங்களும் அந்த மாதிரி ஏரோப்ளேன் வேகத்தி லிருப்பதில் ஆச்சரிய மொன்றுமே யில்லை. 1931 ஏப்ரலிலோ என்னமோ வெல்லிங்டன் பிரபு இந்தியாவுக்கு வந்தார். இன்னும் ஒரு வருடங்கூடச் சரியா யாகவில்லை. காந்தி—இர்வின் ஒப்பந்தத்தை இன்னும் உடைக்கவுமில்லை. இந்த லட்சணத்திலேயே இவ்வளவு விஸ்வ ரூபத்தைக் காட்டிவிட்டால் இன்னும் குறைக் கேப்பையையுந் திரிப்பதற்குள் அடக்குமுறை திருகைக்குள் எத்தனை சட்டங்களைத்தான் அள்ளி அள்ளிப் போடுவாரோ ஆரறிவார்.

வெல்லிங்க்டன் அவசரச் சட்டங்களில் வேறு எவருடைய சட்டங்களிலு மில்லாத விசேஷக் கிளைகள் பலவிருக்கின்றன. இல்லாமலிருக்குமா? ஷோக் வெல்லிங்டன் ஷோக்காகத்தான் சட்டம் போடுவார். அச்சுச் சட்டம்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

மாமியார் வீட்டு மாப்பிள்ளைகள்:

நல்லநாள் பெருநாளைக் கெல்லாம் மருமகப் பிள்ளையாண்டான்களை மருவீட்டுக்கு அதாவது மாமியார் வீட்டுக் கழைக்கிறதென்ற வழக்கம் நம்ம நாட்டில் சாதாரண நடைமுறையி லுள்ளது. நாட்டைப்போல் நாட்டை யாளுபவர்களும் நடந்துகொள்ளுவதும் நல்ல முறை. அதை நாட்டு ராஜநீதி யென்று சொல்லலும் போற்றலும் பொருந்தும். அதேபோல இப்பொழுது விழுந்திருக்கும் இந்தக் கிறிஸ்மஸ் பெருநாளில் நம்மையாளும் சர்க்கார் நாட்டு மக்களுக்குப் பரிசும் மருமக்களுக்கு நல் விருந்தும் செய்திருப்பதை நாம் போற்றாது விட்டுவிடலாமா? கூடவே கூடாது. நன்றி கெட்டவரென்ற பட்டத்தை நாமேற்கவே மாட்டோம்.

இயேசுக் குழந்தை பிறந்திருக்கும் இக் காலத்தில், இவ் வருட கிறிஸ்துமஸ்தினத்தில். இந்தியர்களுக்குப் பரிசாக, இந்தியாவை இராஜப் பிரதிநிதியாக இருந்தாளும் வெல்லிங்டன் பிரபு அவசரச் சட்டங்கள் என்னும் மூன்று குழந்தைகளை ஏக காலத்தில் ஓரே கொர்ப்பத்தில் பெற்றுவிட்டிருக்கிறார். அஹிம்ஸைக் குழந்தை பிறந்தவன்றே அடக்குமுறைக் குழந்தைகளும் பிறந்திருப்பதில் ஏதோ அர்த்தமிருக்கிறது. விரிவாய்ச் சொல்ல மாட்டோம். எல்லாம் நன்மைக்கே யென்று மாத்திரம் நம்புவோம்.

விருந்தும் மருந்தும் மூன்று நாளென்று கூறுகிற மாதிரி கிறிஸ்து பிறந்து மூன்று நாள் முற்றுப் பெறுவதற்கு முன்னதாகவே நல்லநாள் விருந்துக்கு மாப்பிள்ளைகள் அழைக்கப்பட்டிருக்கின்றனர். பண்டித ஜவஹரிலால் ஒரு மாப்பிள்ளை. புது மாப்பிள்ளை யில்லை; பழைய மாப்பிள்ளையே யாயினும் வருடாவருடம் மருவிட்டிற் கழைக்கும் வழக்கம் போல இன்றும் கிறிஸ்தவ இராஜாங்க விருந்தினராக அழைக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு மாப்பிள்ளைத் தோழராக ஷெர்வானியுஞ் சென்றிருக்கிறார். இந்த மாப்பிள்ளைகளுக்கு மாமியார் வீட்டுச் (ஜெயில்) சோறு எத்தனை வருடத்துக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ தெரியவில்லை

எல்லைப்புறத்திலும் இன்றைக்கு 4 மாப்பிள்ளைகள் மருவீடு (ஜெயில்) போகிறார்கள். எல்லைப்புற காந்தி, அவர் தம்பி. தம்பி மகன், இன்னொரு வக்கீல். இவர்களுக்கெல்லாம் மருவுண்ணும் பாக்கியம் அதுவும் இந்தக் கிறிஸ்மஸ் தினத்தில் கிடைத்தமைக்குச் சந்தோஷிக்கிறோம். மாமியார் வீட்டிலே மாப்பிள்ளைமாகளெல்லோரும் கோபித்துக்கொள்ளாமே சந்தோஷமா யிருந்து மரு வீட்டுப்பலகாரமென்று தின்னத் தெரியாமல் தின்று விடாது சௌக்கியமாய் சொந்த (சுயாராஜ்ய) இந்தியாவில் வந்து சேர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

காங்கரஸ் தலைவர்



கைதியானார்.

வருக! வருக!

தூதுபோய் மீண்ட கரையே வருக! துயரெலாந்துளையுந் துங்கமே வருக! வருக! நின் வரவு நல்வரவாகுக! அன்று தருமர் காலத்திலேபகவான் தூதுசென்று சொந்த நாடு கேட்க, இல்லையென மறுத்த பின் ஐந்தூர், ஐந்து வீடுகளெல்லாம் கேட்டும் கொடுக்கப்பெறாமல் போர் வேண்டி வந்ததுபோல இன்று நீயும் வெறுங் கையனாய்ச் சத்தியப் போர் தொடுக்க வந்தனையோ? அஹிம்ஸை வீர! நின் நுனி விரலை யெடுத்து ஒரு அசைப்பு அசை! நினது சத்தியமாகிய பாஞ்ச சன்னியத்தை யெடுத்து ஒரேயொரு முறை ஊது. நாடெல்லாம் ஆண் பெண் அடங்கலும் உன் பின்னால் தொடர்ந்துவிடும். நாளையே நீ யிதைக் காணுவாய். நாடு தயாரிலிருக்கிறது. வானங் கருத்து மேகங்கள் தலைக்குமேல் தொங்கிக் கொண்டிருக்கின்றன கோவர்த்தன கிரியை குடையாகயுயர்த்தி எங்களையெல்லாம் குண்டுமழையில்நீயே காக்கக் கடவாய் பகவானே நமஸ்காரம்!

சனியன் எங்கிருந்தாலென்ன?

வறுமை நாடுகளிலே தான் மனித வர்க்கம் சரீரத்தை வருத்தி—இரத்தத்தைப் பிழிந்து வயிறு வளர்க்க வேண்டியதாகிறது. பசி வந்திடப் பத்தும் பறந்துபோமென்ற பழமொழிக்கிணங்க வயிற்றின் கொடுமையால் பெண் மக்கள் சரீரத்தை வாடகைக்கு விட்டும் பிழைக்கிறார்கள். காம இச்சையால் விபசாரம் நடப்பது வேறு. உடலை விற்று அதையே ஒரு தொழிலாக வைத்துப் பிழைப்பது வேறு. உலகத்தில் நடக்கும் பலவேறு அக்கிரமங்களுக்கெல்லாம் வறுமையே மூலாதாரமான காரணமென்பதை யொப்புக் கொண்டு விட்டால்—அதற்கேற்ப அவ் வறுமையைத் தீர்த்துவிட்டாலொழிய இத்தகைய தூர்த்தச் செயல்களை யெல்லாம் ஒழித்துவிட முடியாது. எத்தனை சட்டங்கள்தான போட்ட போதிலும், எவ்வளவுதான் ஈட்டி முனையில் வைத்துச் சீர்ப்படுத்தினாலும் சீராக்க முடியாது. இதைப் பலகாலும் பல நகரங்களிலும் பார்த்தாகிவிட்டது. என்றாலும் கை விட்டு விடலாமா? ஏதாவது கழுவாய் தேடித்தானாகவேண்டும். சீச்சீ! இதென்ன பிழைப்பு! உடலை வாடகைக்கு விட்டு இப்படியும ஒரு பிழைப்பா? கேவலம் நாயும் பிழைக்காதே என்று மனித ஜாதியின் மனத்தில் படும்படி செய்யவேண்டும். இயற்கை யுணர்ச்சியை யெதிர்த்துப் போராடச் சக்தி போதாமல் ஆண்பாலார் விபசார விடுதிகளை நாடவும் அதனால் பெண்பாலார் தங்கள் மானத்தை விற்றுப் பிழைக்கவும் மனித ஜாதியின் ஜீவ சக்தி குறைபவுமாகிறது. வெறும் சுகாதார முறையில் மாத்திரமில்லை ஆன்மா சம்மந்தமாகப் பார்த்தாலும் விபசாரத்தால் மனித வர்க்கம் அரித்துத் தின்னப்படுகிறது.

இதை நோக்க நினைக்காமல் இரங்கோன் நகர சபையார் விபசாரிகளை வேறுபடுத்தித் தனியாக ஒதுக்கிவைக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இதை எவரும் ஏற்பதற்கில்லை. ஏனெனில் இதனால் வறுவல் சட்டியிலிருந்து நெருப்பில் விழுவதுமாதிரியான நாடகமே நடத்தப்படும். இப்பொழுதிருக்கும் சட்டதிட்டங்களால் விலைமாதர்கள் பகிரங்கமாய்த் தங்களது வியாபாரத்தை நடத்த முடிகிறதில்லை. விலைமாதர்களின் வலைப்படும் காமியர்களும் தேடியலைந்து தங்களபீஷ்டத்தைப் பூர்த்திசெய்து கொள்ள முடியாமல் ஏலாப்பதிவிரதைகளாக வேனுமிருந்து சுகப்படுகின்றனர். ஒரு புறமாக ஒதுக்கிவிடுவதால் வியாபாரம் மலிந்து வேசைகள் சந்தையைத்திறந்து வைத்த தர்மத்தை நகர தாதாக்கள் செய்தவர்களாவார்கள். இல்லையென்று இதில் நன்னோக்கமிருக்குமானால் இதைவிட இன்னொரு வழியில் முயன்றுபார்க்கலாமென்று எமக்குத் தோன்றுகின்றது. கல்கத்தாவில் சமீபத்தில் செய்யப்பட்ட சட்டதிட்டங்களைப் பின்பற்றலாம். "விபசார விடுதிகள் சட்டவிரோதமானவை. விபசாரிகளும் விபசாரிகளுக்கு விடுகளை வாடகைக்கு விடுபவர்களும்கூட சட்டவிரோதமாக நடப்பவர்கள். இரு சாராரையும் தண்டிக்கவேண்டும். இளம் பெண்களை விபசாரத்தில் உபயோகித்து அதன் வருமானத்தைக்கொண்டு பிழைப்பவர்களும் தண்டிக்கப்படவேண்டியவர்கள் ஜன நடமாட்டமுள்ள எந்த இடத்திலும் விபசாரஞ்செய்யும் இரு பாலாரும் குற்றவாளிகள்" என்றனபோன்ற சட்டங்களை ஜே. என். வாஸு புகுத்தினார். அம்மாதிரி இரங்கோன் நகரசபையும் முயன்று பார்க்கட்டும். இதையெல்லாம் விட்டு விட்டுவெறுமனே வேசையரை யொதுக்கிவைத்து விடுவதாலும் லைசென்ஸ்கொடுப்பதாலும் நகரத்தை நரகமாக்காமல் சுகாதாரத்தைச் செப்பனிட்டு விடமுடியுமென்று தோன்றவில்லை.

இப்படியேன் செய்யக் கூடாதென்று இன்னொருகேள்வியும் எழுகின்றது. தனி மனிதனின் வியாபாரத்தைக்காட்டிலும் கூட்டுறவிலும் (லிமிடெட்டு) வர்த்தகம் செய்வதால் தக்கலாபம், வாங்குவோர் விற்போர் இருவருக்குங் கிடைக்கிறதென்பது மேனாட்டுப் புதிய வர்த்தகயுக்தி எல்லா வியாபாரங்களிலும் இம்முறை போதிய ஊதியத்தையளித்துவருவது அனுபவார்த்தமாகக் கண்டறிந்த உண்மை அதேமாதிரியேன் இந்த வியாபாரத்தையும் வைத்துக் கொள்ளக்கூடாது? நகர சபையார் சற்று சிந்தித்து இவ்வியாபாரத்தைத் தங்கள் கையிலே வைத்து நடத்துவதால் நகரத்தின் சுகாதாரத்தையும் கௌரவத்தையும்கூட காப்பாற்றமுடியும். வியாபாரமுறையிலும் நகரசபைக்கு நல்ல லாபங்கிடைக்கும். அதற்கெனத் தனி நிர்வாகத்தலைவைத்து சில விபசாரிகளைச் சம்பளத்திற்கமர்த்தி வைத்திய நிபுணர்களைக்கொண்டு வைத்தியப பரிட்சையும் நோய்ச்சிகிச்சையும் செய்துவிட்டால் போதும். லாபத்துக்கு லாபம் சுகத்துக்குச் சுகமுங் கிடைக்கும்; இல்லாவிட்டால் சனியன் எங்கிருந்து தொலைந்தாலென்ன?

அவசரம்! அவசரம்!! அவசரம்!!!

(1—ம் பக்கத் தொடர்ச்சி)

தேவையேயில்லாதபோது அதைப் புரட்சிக்காரர்கள் சாக்கில் இந்தியாவெங்கும் புகுத்தினர். மனோ வாக்குக் காயங்களாலும் புரட்சியையாதரிக்கலாகாது என்பது அச்சட்டத்தின் உள்ளார்ந்த அர்த்தம். ஐக்கியமண்டல அவசர சட்டத்தில் பிள்ளை செய்த குற்றத்திற்காகத் தகப்பனை தண்டிப்பதென்பது உலகத்தில் எந்த மூலையிலும் எந்தக்காலத்திலு மில்லாத நீதி. அப்புறம் இப்பொழுது சமீபத்தில் ஒரே நாளில் ஒரேயிடத்திற்கு மூன்று அவசர மேற்பட்டிருக்கிறதே இதுவொரு வேடிக்கை. எல்லைப்புறத்திற்கு 24ந் தேதியன்று மூன்றுருத்திர மூர்த்திகள்போல மூன்று சட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. இவைகளுக்குத் தான் அவசரம் 13, அவசரம் 14, அவசரம் 15 என்று பெயர் வைக்கப்பட்டிருக்கின்றன. இத்துடனாவது இந்த 1931 ம் வருடத்திய அவசரச் சட்டமென்ற வால்யும் முடிந்துவிடுமா? இல்லை இன்னும் பாக்கியிருக்கும் ஏழு நாட்களிலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாகச் சட்டங்கள் வளர்ந்து எண்ணிக்கையை அதிகப் படுத்திவிடுமா? என்பதை எவர் கூறிவிட முடியும்? இது கிடக்கட்டும். இந்தச் சட்டங்களில் ஏதாவது விபரீத அம்சங்களிருக்கின்றனவா? என்றும் பார்த்துவிடுவோம். தந்தி, தபால், ரயில் முதலிய சமாசார வசதிகளிலும், போக்கு வரத்துகளிலும் இச் சட்டங்களிலொன்று கையை வைக்கிறதும், மனித வாழ்க்கைக் கத்தியாவசியமான பொருள்களைக் குறிப்பிட்ட இடங்களுக்குப் போகவிடாமல் தடைப் படுத்துவதும் இச்சட்டங்களின் விசேஷ அதிகாரங்களாகும். காந்தி—இர்வின் ஒப்பந்தத்தைக் காந்திஜீ வெல்லிங்டனுடன் புதுப்பித்திருப்பதால் காந்திஜீயே இவைகளுக்கெல்லாம் வெல்லிங்டனைக் கணக்கு கேட்கட்டுமென விட்டுவிடுவோம்.

காந்திஜீ தூது

காந்திஜீ தூது போய் மீண்டதை முன்னிட்டு நாளது 28உ திங்கட்கிழமை சிக்கே மாந்தாலே வீதி 306 எண் இல்லத்தின் மேல் மாடியிலுள்ள (அபிராமம்) வேளாளர் அபிவிர்த்தி சங்கத்தின் ஆதரவில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். எல்லோரும் தவருது விஜயஞ்செய்து சிறப்பிக்கக் கடவீர்.

தூக்கிப்போடாதே பழியை!

சென்ற 10 ந்தேதி பிஷாவருக்குச் சமீபத்தில் ஐரோப்பியச் சீமாட்டி யொருத்தி வேட்டை மார்க்கமாகச் சென்ருள். எப்படியோ அவளுக்கு விபத் தேற்பட்டுவிட்டது. சமீபத்திலிருந்த கிராமத்தான் ஒருவன் அந்த அம்மாளுக்கு உதவி மறுத்துவிட்டானும். இதைப் பிரமாதமாகக் கயிறு திரித்து எல்லைப்புற காந்தியின் காங்கிரஸ் தொண்டர்களான குதாய் கித்மத்கர்களின் மீதிலே பழியைச் சுமத்துகிறார்கள். இது எவ்வளவு அக்கிரமம். ஒரு பட்டிக்காட்டான் ஆபத்திலிருந்த ஒருத்திக்கு அவள் ஆயிரந்தான் அன்னிய ஸ்திரியாயிருந்தபோதிலும் மனித தயாளத்தில் உதவி செய்யவேண்டுவது கடமைதான். அதை அவன் செய்யாவிட்டால் குதாய் கித்மத்கர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் மீது பழி சுமத்தியதைக் கேட்க பாவம் அந்தப் பரமாத்மாவான கான் அப்துல் காபர்கானின் பரந்த ஹிருதயம் என்ன துடி துடித்திராது?

கான் காபர் கானைக் கலியுக பீமனென்றே சொல்லிவிடலாம். நல்ல ஆஜானுபாகு. ஏழடி உயரமிருப்பார். பத்துப் பேரானும் ஒரு கைப்பிடியில் அடக்கிவிடக்கூடிய பலம் பெற்றவர். அத்தகைய ஒரு சிங்கம் அஹிம்சை நம்பிக்கை கொள்ளுவதென்றால் சாமான்யமல்ல; பலத்த சரீரத்தில் பலத்த மனம் என்பதுபோல அவரது பலத்த சரீரத்தில் பலத்த மனமிருக்கிறது. ஒரு கொள்கையைக் கடைப்பிடித்தால் அதிலிருந்து சிறிதும் பிசகாத உறுதி கொண்டவர்.

தமது தொண்டர்களை கான் காபர் கான் அஹிம்சை வழியில் அதி நுட்பமாகப் பழக்கி வருகிறார். சாத்விகத்திலிருந்து கொஞ்சம் விலகிவிட்டாலும் அவன் கித்மத்காராயிருக்க முடியாத முறையில் அவர்களுக்கு அஹிம்சைத் தத்துவத்தை அவ்வளவு தூரம் சொல்லி வைத்துவிட்டார். அஹிம்சையே யாயினும் காந்திஜியைப் பார்க்கிலும் எல்லைப்புற காந்தியை சர்க்கார் அதிகம் கண்காணித்து வருகிறது. அவரை வட்டமிட்டுத் திரிய பல வேவுக்காரர் (ஸி. ஐ. டி.) கள் ஏவப்பட்டிருக்கின்றனர். அவர்களிடத்திலும் கான் காபர் கான் இரக்கங் காட்டுகிறார். ஆனல் ஊரார் வேவுக்காரர்களை வெறுக்கின்றனர். வீட்டுகளில் தவித்த வாய்க்குத் தண்ணீரும்கூட கொடுக்கிறதில்லை. க

முடி சூடா மன்னர் யார்.

ஸ்ரீ ஜெகன்னாதமென்னும் புண்ணிய க்ஷேத்திரத்திலே சமீபத்தில் கூடவிருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் மஹாசபைக்குத் தலைவர்களாக பல மாகாணங்களும் பலரைத் தெரிந்தெடுத்திருக்கின்றன அவர்களில் பாபு இராஜேந்திரப் பிரசாதும், சக்கிரவர்த்தி இராஜகோபாலச்சாரியாரும் 14 மாகாணங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஜாபிதாவின் தலைப்பில் பிரகாசிக்கிறார்கள், டாக்டர் அன்சாரிக்கு 12 மாகாணங்களும், எல்லைப்புற காந்தி கான் அப்துல் காபர்கானுக்கு 6 மாகாணங்களும் பாபு சுபாஷ் சந்திர போஸுக்கு 5 மாகாணங்களும் மகாத்மா காந்திக்கும் ஸ்ரீஜத் சென்குப்தாவுக்கும் 4 மாகாணங்களும், ஸ்ரீயுத வித்தல் பாய் பட்டேலுக்கு 3 மாகாணங்களும், சாதகமாக வாக்களிக்கின்றன. அதன் முழு விபரமடங்கிய ஜாபிதாவை அப்படியே கீண்டுதருகிறோம்.

பம்பாய் மாகாணம்.
- டாக்டர் எம். ஏ. அன்சாரி.
- கான் அப்துல் காபர் கான்.
- பாபு ராஜேந்திர பிரஸாத்
- ஸ்ரீஜத் ராஜகோபாலச்சாரியார்.
- ஸ்ரீ சென் குப்தா.

ஐக்கிய மாகாணம்
- மகாத்மா காந்தி
- பாபு ராஜேந்திர பிரஸாத்
- ஸ்ரீஜத் புருஷோத்மதாஸ் தாண்டன்
- ஸ்ரீயுத ராஜகோபாலாச்சாரியார்
- ஸ்ரீமதி பெரின் காப்டென்.

மத்திய மாகாணம் (ஹிந்துஸ்தானி)
- பாபு ராஜேந்திர பிரஸாத்
- ஸ்ரீஜத வித்தல்பாய் பட்டேல்
- ஸ்ரீயுத ராஜகோபாலச்சாரியார்

உட்கல் மாகாணம்
- ஸ்ரீஜத் ராஜகோபாலாச்சாரியார்
- பண்டித ஜவஹரிலால் நேரு
- ஸ்ரீயுத வித்தல்பாய் பட்டேல்
- டாக்டர் அன்ஸாரி
- டாக்டர் ஆலம்.

அஸ்ஸாம்.
- ஸ்ரீஜத் ராஜகோபாலாச்சாரியார்
- பாபு ராஜேந்திர பிரஸாத்
- டாக்டர் அன்சாரி
- ஸ்ரீயுத நாரிமன்.

வங்காள மாகாணம்.
- ஸ்ரீஜத் சென்குப்தா
- டாக்டர் அன்சாரி.

பிஹார் மாகாணம்.
- பாபு ராஜேந்திர பிரஸாத்.

தமிழ் நாடு.
- ஸ்ரீஜத் ராஜகோபாலாச்சாரியார்
- கான் அப்துல் காபர் கான்.

பொரார் மாகாணம்.
- பாபு ராஜேந்திர பிரஸாத்
- ஸ்ரீயுத ராஜகோபாலாச்சாரியார்
- டாக்டர் அன்சாரி
- பாபு சுபாஷ் சந்திர போஸ்
- ஸ்ரீஜத் வித்தல்பாய் பட்டேல்.

சிந்து மாகாணம்.
- மகாத்மா காந்தி
- பாபு ராஜேந்திர பிரஸாத்
- ஸ்ரீஜத் ஜெயராமதாஸ் தெளலத்ராம்
- டாக்டர் அன்சாரி

டைகளில் இரட்டித்தவிலை கொடுப்பதானாலும் ஜாமான்கள் அவர்களுக்காக விற்கப்படுகிறதல்லை. இந் நிர்பாக்கிய நிலைமையில் பாவம் அந்த ஆத்மாக்கள் பசியும் பட்டினியுமாய்த் திரியவேண்டிய தாகிறது. ஒரு நாள் வேவுக்காரர்களி லொருவன் பட்டினியினால் சோர்ந்த தசையில் கான் காபர் கானின் கண்ணில் பட்டு விட்டான். அவனை யாரென விசாரித்தறிந்தார் ஸீ. ஐ. டி. யெனக் கண்டும்—தன்மேல் நோட்டம் போட்டுத் திரிபவனென அறிந்தும் அவருள்ளிருக்கும் இயற்கை தயாளத்தால் அவரது ஹிருதயம் விரிந்து அவனுக்கும் ஆகாரம் அளிக்கும்படி கட்டளையிட்டார். அத்தகைய பரமாத்மாவின் தலைமையில் கண்டிப்பான கட்டளையும் பயிற்சியும் பெற்றுவரும் குதாய் கித்மத்கர்கள் ஒடுக்காலும் கடினமான நெஞ்சம் படைத்தவர்களா யிருக்க முடியாது. மேலும் பழியொரு புறமிருக்க பாவத்தை சுமத்துவது கூடாது. குதாய் கித்மத்கர்களின் மீது அரசியல் சம்மந்தமான துவேஷமெதுவாவ திருந்தால் அதன் சாக்கில் மனித ஸ்வபாவத்தை யிழிவுபடக் கூறுவதை யேற்கமாட்டோம்; ஒரு கிராமத்தான் ஒரு வெள்ளை மாதுக்கு அவள் ஆபத்திலிருக்கையில் உதவி மறந்துவிட்டானெனில் அதுவும் அரசியலுக்குச் சிறிது சம்மத முற்றதென்றே கூறி நிறுத்துவோம்.

பாபு சுபாஷ் சந்திர போஸ்

மத்திய மராத்திய மாகாணம்.

ஸ்ரீஜத் ராஜகோபாலாச்சாரியார்
பாபு ராஜேந்திர பிரஸாத்
பாபு சுபாஷ் சந்திரபோஸ்
கான் அப்துல் காபர் கான்
டாக்டர் அன்சாரி.

டில்லி மாகாணம்.

மகாத்மா காந்தி
ஸ்ரீஜத் ராஜகோபாலாச்சாரியார்
பாபு ராஜேந்திர பிரஸாத்
கான் அப்துல் காபர் கான்
டாக்டர் அன்சாரி.

பாஞ்சால மாகாணம்.

ஸ்ரீஜத ராஜகோபாலாச்சாரியார்
பாபு ராஜேந்திர பிரஸாத்
மௌலானா அபுல் கலாம் அஸாத்
டாக்டர் அன்சாரி.

மஹாராஷ்டிர மாகாணம்.

மகாத்மா காந்தி
ஸ்ரீஜத் ராஜகோபாலாச்சாரியார்
பாபு ராஜேந்திர பிரஸாத்
டாகடர் அன்சாரி
பாபு சுபாஷ் சந்திரபோஸ்
ஸ்ரீயுத எம். எஸ் ஆனே.

எல்லைப்புற மாகாணம்.

ஸ்ரீஜத் ராஜகோபாலாச்சாரியார்
கான் அப்துல் காபர் கான்
டாக்டர் அன்ஸாரி.
ஸ்ரீயுத சென் குப்தா.

கர்னாடக மாகாணம்.

ஸ்ரீஜத் ராஜகோபாலாச்சாரியார்
பாபு ராஜேந்திர பிரஸாத்
டாக்டர் அன்சாரி.

ஆந்திர மாகாணம்.

பாபு ராஜேந்திர பிரஸாத்
கான் அப்துல் காபர் கான்
பாபு சுபாஷ் சந்திர போஸ்
ஸ்ரீஜத் சென் குப்தா
ஸ்ரீயுத கொண்டா வெங்கடப்பா.

குஜராத் மாகாணம்.

பாபு ராஜேந்திர பிரஸாத்
ஸ்ரீஜத் ராஜகோபாலாச்சாரியார்.

—சர்ச்லைட்.

இதற்கு இதுசரி; அதற்கு அதுசரி-

சென்னைக்கு வெள்ளிக் கிழமைக் கப்பல் பிரயாண விஷயமாய் கல்கத்தா மார்க்கமாய் போகும்படி 9-12-31 ல் வெளியான கெஜட்டில் ஒரு நிருபர் எழுதியதற்குப் பதிலாக 23-12-31 ல் வெளியான „இந்தியன்'' என்ற பத்திரிக்கையில் ஜனாப் கே பக்கீர் முகம்மது அவர்கள் ஒருகடிதம் எழுதியிருக்கிறார். அக்கடிதத்தில் அவர் சோலிய முஸ்லிம் பிரயாணிகள் அதிக செலவு செய்து கல்கத்தா மார்க்கமாகப் போகக்கூடிய சக்தியில்லாத ஏழைகளாக இருக்கிறார்களென்றும், ஏழை முஸ்லிம் பிரயாணிகளுக்கு உதவி செய்ய அந்நிபர் முன்வரவேண்டுமென்றும் எழுதியிருக்கிறார். அன்னவர் இக்கடிதத்தைத் தனது சொந்த ஹோதாவில் எழுதியிருப்பினும் நகரசபையில் சோலிய முஸ்லிம் வியாபாரிகளுக்கு இடங் கேட்டும், வெள்ளிக் கிழமைக் கப்பலை வேறு கிழமைக்கு மாற்றும்படி கேட்டும் எழுந்த பிரச்சனைகள் வர்த்தகசபையில் கிளப்பப்பட்டவிஷயம் என்பது பொதுமக்களின் அபிப்பிராயம். முந்திய கடிதங்களில் கே. பக்கீர் முகம்மது வர்த்தகசபைக் காரிய தரிசி என்ற கைசாத்துகள் வந்து இப்போது பெயர் மட்டும் வந்தாலும் விஷயங்கள் ஒன்றாக இருப்பதால் வர்த்தகசபை காரிய தரிசி போன்ற பதங்கள் தொக்கி நிற்கிறதாகவே கருதுகின்றோம். எது தொக்கினும் விஷயம் தொக்காமல் இருக்கவேண்டும்.

நகர சபையில் இடங்கேட்கும்போது சோலிய முஸ்லிம்கள் பிரபல வியாபாரிகளாயிருப்பதால் பிரதிநிதித்துவம் அவசியம் வேண்டுமெனச் சோலிய முஸ்லிம்களை மிகவும் கௌரவப்படுத்திக் கேட்கப்பட்டது. கப்பலைக் கல்கத்தாவுக்குத் திருப்பு என்றவுடன் சோலிய முஸ்லிம்கள் ஏழைகள்; அதிகச் செலவுசெய்து கல்கத்தா மார்க்கமாகப்போகச் சக்தியில்லாதவர்கள்; ஏழை முஸ்லிம்களுக்கு உதவிசெய்ய முன்வாருங்கள் என்று கேட்பது எவ்வளவு முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது. ஒரு இடத்தில் நாங்கள் பிரபல வர்த்தக சிகாமணிகள் எனச் சொல்கிறது; மற்றொரு இடத்தில் நாங்கள் பரம ஏழைகள் எனச் சொல்கிறது. இவ்வாறு முன்னுக்குப்பின் முரணாக எழுதுவதில் சோலிய முஸ்லிம் சமூகத்துக்கே அவமானமாக இருக்கிறதென்று உள்ளதைச் சொன்

இளைஞர் இந்தியா எது

குடியேற்ற நாடா? சுயராஜ்யமா?

இந்தியாவுக்கு இனியென்ன குறை? இளைஞர்களெல்லாம் இந்தியாவின் இராஜீயத்தை யமைப்பதிலே இறங்கி தற்கால நிலைமைக்குப் பூரண சுயராஜ்யம் வேண்டுமா? இல்லை குடியேற்ற நாட்டந்தஸ்தே போதுமானதா? என்று சர்ச்சை செய்து விவாதிக்க வந்துவிட்டார்கள். இந்தக் காலத்து உலகம் இளைஞர்களின் கையிலே யிருப்பதால் அவர்கள் பார்த்துச் செய்தால்—அவர்கள் பூரணமான மனது வைத்துவிட்டால் அவர்களால் எதுதான் முடியாது? சுயராஜ்ய இந்தியாவை வேண்டுமானாலும் குடியேற்ற நாட்டு இந்தியாவை வேண்டுமானாலும் நிமிடத்தில் நிர்மாணித்து விடும் சக்தி இளைஞர்களின் கையிலேதானிருக்கிறது. எதை வேண்டுமானாலும் செய்யட்டும். ஆனால் அவர்கள் அமைக்கும் அரசியலில் சுதந்திரத்தின் சத்திருக்கிறதா? என்று மாத்திரம் நிறுத்துப் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று நினைப்பூட்டுகிறோம். பீ. எம். ஜமால், என். கே. எய்ச். முகம்மது காஸிம், ஒ. எம். முகம்மது ஹூஸேன், ஈ. காதர்பாஷா இவர்களெல்லாம் குடியேற்ற நாட்டந்தஸ்தே போதுமென்கிறார்கள். இல்லை யில்லை; பூரண சுயராஜ்யத்தில் தம்படி குறைந்தாலும் ஒப்புக்கொள்ள மாட்டோ மென்கிறார்கள் கே. எம் என், பீர் முகம்மது. கே. எம். முகம்மது ஹனீபு. பீ. முகம்மது ஷரீபு, பீ. என். ஈ. அபுதாலிபு? ஆனால் இவர்கள் இரு கட்சியாரும் எவ்வளவுதான் பேசி யாவதென்ன? எதைத்தான் கேட்டென்ன? தலைசகுமேல் தொங்கும் தராசிலே போட்டு நிறுத்துப் பார்த்து ஸ்ரீமான் சி. கே.

னால் வருத்தம். சொல்லாவிட்டால் சமூகத்துக்குக் கேவலமாக இருக்கிறது. இசறகு இது சரி; அதற்கு அது சரி என்று நினைப்பவர்களுக்கு எதற்கு எது சரியாக இருந்தாலும் எமக்கு அக்கரையில்லை. சமூகத்துக்கு மட்டும் சரியாக இருக்கவேண்டும் இல்லாவிட்டால் சமூகத்தார் சும்மாவிடமாட்டார்கள். சமூகவிஷயத்தில் தலையிட்டுத் தாறுமாறாக நடந்துகொண்டால் சமூகத்தில் ஒவ்வொருவருக்கும் கண்டிக்க உரிமை உண்டு என்பதையும் ஞாபகமூட்டுகிறேன்.

ஓர் முஸ்லிம்

காந்திஜீயின் மறதி.

காந்திஜீக்குக்கூட மறதி யிருக்கிறது. சிற்சில சமயங்களில் சிறுசிறு சங்கதியைக்கூட காந்திஜீ மறந்துவிடுகிறார். கிருஷ்ணன் அறிதுயில் துயின்றானென்று சொல்லுகிறார்கள். காந்திஜீயின் மறதியும் அந்த மாதிரி அறிந்த மறதியென்றே தோன்றுகின்றது. அதிலும் அதிர்ஷ்டமுங் கலந்திருக்கிறது.

தில்லியிலே இர்வினோடு ஒப்பந்தஞ் செய்துகொண்டிருந்தாரே காந்திஜீ அப்போது ஒரு தடவை தமது மேல் வேஷ்டியை நாற்காலியிலே போட்டபடியே விட்டு விட்டுப் போனார். உடனே இர்வின் "காந்திஜீ உங்கள் சால்வையை விட்டுவிட்டுப் போகிறீர்களே! போட்டிருப்பதுஒற்றைவேஷ்டி அதையும் விட்டுவிட்டுப் போகலாமா?" என்று சொல்லி எடுத்துவந்து கொடுத்தாராம்.

வட்டமேஜை முடிந்ததும் காந்திஜீ லண்டன் விட்டு கப்பலேறும்போது குடையை மறந்துவிட்டார். அதையும் யாரோ எடுத்துவந்து மூட்டைகளுடன் சேர்த்துவிட்டார்கள். இந்த இரண்டு மறதிகளிலும் ஏதோ ஒற்றுமை யிருக்கவேண்டுமென்று படுகிறது. துண்டு மறந்தபோது ஒப்பந்தம் முடிந்தது குடை மறந்தபோதும் ஏன் அவ்வாறாகலாகாது?

தம்பி, பார்—அட்—லா, ஜனாப் கே எம். எஸ் ஹமீது பீ. ஏ., பீ எல். ஜனாப் கே. வ. அப்துல் ஜலீல் மரைக்காயர் பீ எ இவர்கள் மூவரும் நீதிபதிகளாக விருந்து நீதியே வழங்குவார்கள்; இரு கட்சிக்காரர்களின் வழக்கையும் நன்றாய் விவாதிப்பார்கள் சட்டநிபுணர்கள். வழக்கு முடிவதற்கு முன்னால் நமது அபிப்பிராயத்தைக் கூறி நீதிபதிகளை ஒருதலைப் பக்ஷத்தில் இழுத்துவிடுவது சட்ட விரோதமெனச் சொல்லக்கூடும். இருந்தாலும் மனப்ப4ன்மையை மானஸக் கருவியால் பார்த்தால் குடியேற்ற நாட்டுக்கே வெற்றி கிடைக்குமென்று நமது நண்பர் சொல்லுகிறார். ஆனால் நமக்கென்னவோ பூரண சுயேட்சையே வெற்றி பெறுமென்று தோன்றுகிறது. தன்னைப்போல் உலகமென் றெண்ணிவிட்டதற்கு மன்னிக்கவேண்டும். எல்லாவற்றையும் ஸ்ரீமான் ப. சி. ஷண்முகம் பிள்ளை அட்வகேட் அவர்கள் தணிக்கை செய்து தீர்ப்பைச்சொல்லுவார், ஏனெனில் அவர்தானே சபைத் தலைவர்?

கிறிஸ்து ஜெயந்தி

கடவுள் ஒருவரே. உலகத்தில் அவதரித்துள்ள தீர்க்கதரிசிகளெல்லாம் அவரால் அனுப்பப்பட்டவர்களே யாவர். ஒவ்வொரு தீர்க்கதரிசியைப் பின்பற்றுகிறவர்களும் ஒவ்வொரு வெவ்வேறு மதஸ்தர்களாகிவிட்டார்கள். ஆனால் ஒரே ஊருக்குப் பல பாதைகள் போவதுபோல ஒரே ஆண்டவனிடத்தில் சேருவதற்கும் பலவேறு மார்க்கங்கள் பலவேறு தீர்க்கதரிசிகளால் காட்டப்பட்டிருக்கின்றன என்றாலும் எல்லா மார்க்கங்களும் ஒரே எல்லையாகிய ஆண்டவனிடத்திலே தான் மனித வர்க்கத்தைக் கொண்டு சேர்க்கின்றனவென்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் சுய மதாபிமானத்தால்—தாம் தாம் கைக்கொண்ட மார்க்கத்தில் தாம் தாம் கொண்டுள்ள நம்பிக்கையால் ஒரு மதஸ்தன் இன்னொரு மதஸ்தனைத் தன் மதத்துள் சேர்க்கிறான் பேதையர் சிலர் மத மாற்றமடைகின்றனர். இந்துவாயிருக்கும் ஒருவன் இந்துவாயிருந்தே கதிமோட்சமடைய முடியாதெனக் கூறுவதை விட மடமை வேறில்லை. அதே போல் கிறிஸ்தவனும், அதேபோலவே முகம்மதியனும். இதுபற்றி இப்பொழுது உயிர்வாழும் தீர்க்கதரிசியாகிய மகாத்மா காந்தியும் கண்டித்துக் கூறியுள்ளார்.

இந்துவாயிருக்கும் ஒருவன் இதர மதக் குருக்களையும் வணங்கக் கடமைப்பட்டுள்ளான். மகரிஷி இயேசுவின் தீர்க்கதரிசனங்களில் ஏராளமான அந்தரார்த்தங்கள் நிறைந்து ஸ்புரித்து நிற்கின்றன. விவிலிய வேதத்தின் ஒவ்வொரு வார்த்தைகளையும் எவ்வித மத வேறுபாடற்ற நடுமனங் கொண்டு வாசித்தால் பெரும் பயனெய்த முடியுமென்பதில் சந்தேகமே கிடையாது. அதேமாதிரியே நபிகள் நாயகங்களின் தெய்வத் திருமொழிகளுமாகும். சர்வ சமயங்களின் சமய நூல்களிலும் பாராயணம் பண்ணத்தக்க பல உண்மைகள் நிறைந்தேயிருக்கின்றன. அவைகளின் சத்தியார்த்தத்தை மனித வர்க்கம் நுகர்ந்து ஈடேற வேண்டுமென்பதே தெய்வ கட்டளை. ஆண்டவன் சன்னிதானத்தில் எம் மதஸ்தனும் சம்மதமே. அவர் இவன் இந்துவென்றும் இவன் கிறிஸ்துவனென்றும் இவன் வேறு மதஸ்தனென்றும் பாகுபாடு படுத்துகிறதில்லை. சரி இந்த வேதாந்தமெல்லாமிருக்கட்டும்.

இன்று கிறிஸ்து பிறந்து மூன்றாம் நாள். குழந்தை நல்ல சுகத்திலிருக்கின்றதென கீழ் நாட்டிலிருந்து சென்ற மூன்று தீர்க்கதரிசிகளும் கண்டு சொல்லுகிறார்கள். இனி இக் குழந்தை பிறர்பொருட்டு கல்லாலெறியப்பட்டும் சிலுவையிலறையப்பட்டும் இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழும். ஆயக்காரர்களாலும் பரிசேயர்களாலும் மனித வர்க்கத்தின் பொருட்டு இக் குழந்தை பல கஷ்டங்களையடைந்தும் கடைசியில் சத்தியத்தையே ஸ்தாபித்துவிடுகிறது. மத ஸ்வாதந்தர்யத்துக்காக இக் குழந்தை என்னென்ன பாடுகளெல்லாம் பட்டிருக்கிறதென்பதை விவிலிய வேதம் விளக்கிக் காட்டுகிறது. இவர் பிறந்து இற்றைக்கு 1931 ஆண்டுகள் முடிந்துபோயினவென்றாலும் அவர் காட்டிப்போன மார்க்கத்தை உலகத்தில் சிறிது குறைய முக்கால் பங்கு மக்கள் பின்பற்றியொழுகுகிறார்கள். மகரிஷி இயேசுவின் மதஸ்தர்கள் தான் இன்று உலகத்தின் பெரும் பகுதியை யாளுகிறார்கள். என்றாலும் அவரது வேத வசனத்தின் தத்துவார்த்தப்படி வெகு பேரல்ல ஒரு சிலரே—லட்சம் கோடியிலொருவரே பின்பற்றி யொழுகுகின்றாரென்றால் இல்லையென்று எவரும் சொல்லிவிட முடியுமா? கிறிஸ்து மகானின் மலைப் பிரசங்கத்தைக் கேட்டு நடக்கின்ற பேர் உலக முழுதிலுமே எத்தனை பேரிருக்கின்றாரென்று விரல்விட் டெண்ணிவிடலாம் ''உன்னிடத்தில் இன்னொருவன் என்னவிதமாய் நடந்துகொள்ள வேண்டுமென்று நீ விரும்புகிறாயோ அவ்வாறே நீயும் பிறனிடத்தில் நடந்துகொள்'' என்றும், ''உனது வலது கன்னத்தி லடித்தவனுக்கு இடதுகன்னத்தையும் திருப்பிக்கொடு'' என்றும், ''உனது ஒரு வேஷ்டியை கேட்டவனுக்கு நீ யணிந்திருக்கும் எல்லாவற்றையும் ஈந்துவிடு'' என்றும் இவைபோன்று கூறப்பட்ட பிறவும் அக்ஷர லட்சம் பெறுமானமுள்ள அமுத மொழிகளல்லவா? இவற்றை பின்பற்று எவனாவது வெகு தூரம் ஏன்? போவானேன்? இந்த பிரிட்டிஷ் ஆட்சி யாள்பவராவது நடக்கின்றார்களா? நடந்தால் ஒரு நாட்டை இன்னொரு நாடு அடக்கி யாளவே முடியாது. ஆனால் இந்துவாய் பிறந்திருந்தாலும் காந்திஜீ மகரிஷி இயேசுவைப் பின்பற்றுகிறார். அவரது அஹிம்ஸா தத்துவத்தைத் தான் காந்திஜீ உலகத்திற்குப் புதுப்பித்துக் காட்டுகிறார்.

Printed & Published By A. V SSellam Pillay at the Desopakari Press, 210, 36th Street Rangoon.

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 44 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை **DESOPAKARI** புதன் ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி, இரங்கோன், (30—12—31) மார்கழி ௴ 15 ௳ புதன்கிழமை

அடக்குமுறை!

ஒரு மனிதன் தனைப்பற்றிப் பலநாடு
கடத்திடவுங் கூறுசெய்தல்
அருமையிலை எளிதினவர் புரிந்திட்டா
ரென்றிடினும் அந்த மேலோன்

பெருமையை நன்கறிந்தவனைத் தெய்வமென
நெஞ்சினிலே பெட்பிற் பேணி
வருமனித ரெண்ணற்றோர் இவரையெலாம்
ஓட்டிடுவர் வாழ்வதிங்கே ?

—கவியரசன்

அடக்குமுறை!

மனிதனை வெட்டி வீழ்த்தலாம்; சுட்டுக் கொல்லலாம்; மனிதனின் மனப்பான்மையை, மன உணர்ச்சியை யென்ன செய்ய முடியும்? தொடமுடியுமா? சுட முடியுமா? வெட்டிச் சாய்க்க முடியுமா? முடியவே முடியாது. மனிதனின் உள்ளக்கிடக்கையை, உள்ளத்திலூறிய உணர்ச்சியை, உணர்ச்சியிலெழுந்த எண்ணங்களை, எண்ணத்திலுதித்த ஆசைகளை எந்தவொரு ஆயுதமும், எந்தவொரு சரீரபலமும், எந்தவொரு மிருகச்செயலும் எதுவுமே செய்துவிடமுடியாதென்பதை ஒவ்வொரு ஆத்ம சிந்தனையும் அறிவுறுத்திக் கொண்டேயிருக்கிறது. சரீரத்தைச் சாய்க்கலாம்; சரீரத்திலே கட்டப்பட்டிருக்கும் தசை நாடிகளை யறுக்கலாம்; தசைநாடிகளிலோடிக் கொண்டிருக்கும் இரத்தத்தைச்சிந்தலாம். ஆனால் அந்த இரத்தத்திலூறிச் சோறியிருக்கும் ஜீவசக்தியை உயிர்நாடியை, ஒன்றுமே செய்ய முடியாது.

இவ் வுண்மையை இவ்வுலகிடைத்தோன், மறைந்து அருவமாக நிற்கும் ஆத்ம ஞானிகளெல்லாம் நமக்கு நன்கு கூறியிருக்கிறார்கள்; செய்து காட்டிப்போயிருக்கிறார்கள். மகரிஷி இயேசுவை நெஞ்சிலாணியடித்துச் சிதைத்தார்களே! இயேசுவின் மன உணர்ச்சி மாய்ந்ததா? இயேசுவின் மதப்பிரசாரம் மறைந்ததா? இயேசுவின் சரீரத்தை மண்ணிலே புதைத்தார்களே அவரது மத உணர்ச்சி, மார்க்க தத்துவம் புதைபட்டதா? அவரது ஜீவரத்தத்தின் ஒவ்வொரு துளியும், அவரது ஆத்ம சக்தியின் ஒவ்வொரு அணுவும் உயிர்த்தெழுந்து பிரசாரஞ்செய்து பிரமாண்டமானதொரு பிரமாணத்தை—சத்தியப் பிரமாணத்தைச் சாதித்து உலகிடை சாச்வதமான சர்வ சக்தியையுங் காட்டிவிட்டது. முகம்மது நபிகள் நாயகத்துக்கு என்னென்னவெல்லாம் இடையூறுகளும் இன்னல்களும் இடுக்கண்களும் இழைக்கப்பட்டன? என்ன வாயிற்று? அவரது தீன் இஸ்லாம் எல்லையில்லாதளவு பரப்பப்பட்டாயிற்று குரு தேஜ் பஹதூரின் சதையைத்துண்டு வேருக்கினார்களே! சிக்கிய மதம் செத்துப்பட்டதா? பிரகலாதனை இரணியகசிபு என்னென்ன பாடெல்லாம் படுத்தினான்; எத்தனை வகையிலெல்லாம் அவனது சரீரத்தைச் சித்திரவதைப்படுத்தினான்: முடிவென்னவாயிற்று? இரணியன் மாண்டான் பிரகலாதன் பெரும்பேறு பெற்றான். இன்றும் ஆவியென்றும் எவராலுமே அழிக்க முடியாத

(தொடர்ச்சி 4 பக்கம்)

இறங்கு துறையிலேயே நீச்சா?

"அகில பர்மா தென்னிந்தியர் பொதுக்கூட்டவிளம்பர' மொன்று எம்மிடையெய்தப் பெற்றோம். விளம்பரத்தை பத்திரிகையில் விளம்பரப்படுத்துவதற்கே அனுப்பப்பட்டது. நம் பத்திரிகை விளம்பரப் பத்திரிகையில்லை. ஆயிரந்தான் வருவதானாலும் நமது தேசோபகாரியில் அங்குல இடங்கூடக்கிடைக்காது. பிரஸ்தாப விளம்பரத்தில் கைச்சாத்திட்ட எண்பது பெயர்களையும் விளம்பரப்படுத்துவதென்றால் முடியுமா? மேலும் தகுதியாளர்களின் சிறு எண்ணிக்கையைத் தகுதியற்றோர்பலரின் கூட்டத்திடைப்புகுத்தியது உண்மையிலேயே தூற்றைக்கெடுத்த குறுணியின் கதைபோலாகும் கௌரவமும் கண்ணியமும் பொதுஜன மதிப்பும்பெற்ற சிலரின் பெயர் தம்படிக்கும் பிரயோஜனமற்ற புள்ளிகளின் பெயர்களுடன் பிணைக்கப்படுவதால் கெட்டுக்குட்டிச்சுவராகிவிடுகிறது. தூர்ச்சனரைக்கண்டால் தூரவிலகிக் கொள்ள வேண்டியது சர்ஜனாது கடமை ஆனால் இங்கோ எப்படியோ, தங்களது இஷ்டபூர்வமாகவோ அல்லது பெயரை இரவல் வழங்கியதாகவெண்ணியோ பாவம் பெரியார்சிலர் சந்தியில்நிறுத்தப்பெறுகிறார்கள். 'தென்னிந்தியர்' எவரென்றே தெரிந்துகொள்ளாத சிலசில்லறைப் பேர்வழிகளின் தப்பான பிரசாரத்தின் வயப்பட்டது பெரியார் தம் தவறு என்பதை இன்று விளக்கிக்காட்டப்படும்.

நேற்று வெளிவந்த "சுதந்திரனில்! இக்கூட்டம்பற்றி பொதுக்கூட்டமா? சீ! பிழைக்கும்வழி என்றதலைப்பின் கீழ் எழுதப்பட்டிருக்கும் கட்டுரையுங்கண்டோம் அதை அப்படியே மீண்டுந்தர ஆவல். ஆனால் நமது சின்னஞ் சிறு பத்திரிகை இடந்தா வில்லை. என்றாலும் அதிற் குறிப்பிடப்பட்டிருப்பவை யனைத்தையும் நாம் அப்படியே பெழுத்தெழுத்தாய் ஒப்புக்கொள்ளுகிறோம். சங்கத்தைக் கூட்டிவைப்பதாகக் கைச்சாத்திட்டிருக்கும் கனவான்களும் ஒப்புககொண்டு உள்ள சங்கத்தைத் திருத்தியமைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். காட்டில் திரியும் கணக்கற்ற பக்ஷிகளைப்பார்க்கினும் கையிலிருக்கும் ஒரு பறவையேமேல். மேலும் இக்கரைக்கு அக்கரை பச்சை யென்றலைவதும் கூடாது. வயிற்றுப் பிள்ளையை நம்பி மாட்டாம் பிள்ளையைப்புறக்கணிக்கலாமா?

இறங்கு துறையிலேயே இச்சங்கம் நீச்சடிக்கலாகிறது. எதிரிலிருக்கும் பெருங்கடலை வியாபார, விவசாய; கைத்தொழிற் கடலை இச்சங்கம் இராஜ தந்திரத்தில் நீந்திச்செல்லுமென்னும் நம்பிக்கை கொள்ள முடியாது, மேலும்சங்கம் பொதுஜன அங்கீகாரம்பெற்று ஸ்தாபிதமாவதற்கு முன்னதாகவே ஒரு சிறு கைப்பிடியாளரால் பெயரிடப்பட்டிருப்பது முற்றும் சங்கவிதிக்கு புறம்பானதுமாகும். இச்சிறுசட்டத்தைகூட கைச் சாத்திட்டிருக்கும் சட்டநிபுணர்கள் அறிந்திராதிருத்தல் அவர்கள் குற்றமோ அல்லது அவர்களிடம் கையெழுத்து வாங்கியவர்களின் குற்றமோ இல்லை விளம்பர வாசககர்த்தாவின்குற்றமோ? இதுவும் விளக்கம் செய்யப்பெறவேண்டும். தென்னிந்தியர்களாகிய ஆந்திர கர்னாடக கேரளமக்களும் இதாரும் இதில் என சேர்க்கப்படவில்லையென்பதற்கும் வியாக்கியானம் வேண்டும்.

முடிவாக இவ்விளம்பரத்தில் கைச்சாட்டிருப்பதாக அச்சிலடிபட்டிருக்கும் சிலரின் ஆக்ஷேப கடிதங்களும் கிடைக்கப் பெறுகிறோம். ஜனா ம. கு சிக்கந்தர் மஸ்தான் அம்பலம் அவர்கள் நமது பத்திரிகையில் பிரசுரிக்கும்படி விடுத்துள்ள நிருபம் இடமின்மையால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அவற்றையும் சர்ச்சை செய்யவேண்டும்.

இன்று இக்கூட்டம் ஆரம்பித்த உடனேயே இச்சங்கம் அவசியமா? இல்லை இப்பொழுதிருக்கும் பர்மா இந்தியர் சங்கமே போதுமா? என்றபிரச்னையை விரிவாக விவாதிக்கவேண்டும். அப்பொழுதே பிரஸ்தாப சங்கம் காணுவதா? வேண்டாமா? என்ற முடிவுடன் கூட்டமும் முடிவு காணும். அதையே விவாதிப்போம்.

நேற்று நம் குருவிகொண்டு வந்த இன்னொரு செய்தியும் குறிப்பிடற்பாலது. கட்டப்போகும் சங்கத்தில் தனக்குத் தலைமைப்பதவி வேண்டுமென மோட்டார் ஊர்ந்து பிரசாரஞ்செய்யும் கனவானொருவர் இன்னொரு பொதுநலஊழியரிடம் கொல்லதெவில்லைசிவிற்குச் சென்றாராம். தேசோபகாரியின ஆசிரியர்களுக்கு வாய்ப்பூட்டுப்போடப்பார்த்தாராம். அது முடியாது. தனது தம்பியிடமிருக்கும் பொதுக்கணக்கை (சுடுகாட்டுக்கணக்கை) "விசிறி பெறிந்து விடடா! தம்பி!" யென்று சொல்ல வாயில்லாத பிள்ளையா பொதுச்சங்கத்தின் தலைமை யேற்று அரிய பெரிய காரியங்களை சாதிக்கப்போகிறார். அது வேறு விஷம். இருந்தாலும் பொதுஜனங்களால் பிடித்துவைக்கப்பெறுதவரை இப்பேர்வழி தன்னைத்தானே தலைவரெனக்கூறியதற்கு இவரென்னசொல்லுவா

தொங்காதே!

"பூவாலே நாரும் மணம் பெறும்" என்பது நாட்டுப்பழமொழி. அதை யொட்டிக்கொண்டு அநேகர் பணம் பெறப்பார்க்கின்றனர். "என்னப்பன் குதிரையேறினான் எனக்குக் குண்டிகாய்த்துவிட்டது!!" என்று கூறுவதில் ஏதேனும் அர்த்தமிருக்கிறதா? இல்லை. பழைய பெயரைச்சொல்லிப் பிழைப்பதில்தான் வெட்கமில்லையா? நாமும் பலதினங்கள் பொறுத்திருந்தோம். திருந்திக் கொள்ளுவானெனப் பார்த்தோம். பயனில்லை. நாமே திருத்தவேண்டியதாகிவிட்டது.

நமது 'தேசோபகாரி' எவ்வளவுதான் இன்னல்வாய்ப்பட்டாலும் எத்தனைதான் சிறு உருவத்தில் உலவிய போதிலும் அதற்குள்ளசெல்வாக்கையும் அதற்குரிய கௌரவத்தையும் எவரும் சந்தேகிக்கவோ ஆட்சேபிக்கவோ முடியாது. பர்மாவிலிருக்கும் தமிழர்கள் மாத்திரமில்லை, தமிழ்பாஷை பேசுவோரெவ்வுலகத்திலிருந்த போதிலும் அங்கெல்லாம் 'தேசோபகாரி' தனிப்பெருமை பெற்றேயிருக்கிறது. தற்பெருமை பேசுகிறோமென்பீர்களா? ஒருமுறை மாத்திரமில்லை எத்தனை முறை வேண்டுமானாலும் இவ்வுண்மையை கெர்வத்துடன் கூறுவதில் நாம் வெட்கமடைய மாட்டோம். அதேசமயம் தேசோபகாரியின் பெயரைச்சொல்லிப் பிழைக்கிறவர்களையும் கண்டிக்கா தலையலாமா? நமது தேசோபகாரியின் ஆசிரியர்களாக விருந்த பலரையும் இக்குற்றத்திற்குள்ளாக்கமுடியாது. எல்லோருமே தேசோபகாரியின் மாஜி ஆசிரியரென்று தம்மைத்தாமே கூறிக்கொண்டு திரியவில்லை. ஆனால் ஒரேயொருவனை மாத்திரம் தனதுபெயருக்குப்பின்னால் தேசோபகாரி மாஜி ஆசிரியனென வொட்டுவைத்துக்கொண்டு திரிகிறான். அவனையும் நாம் பலனித்துவிடலாமென்று தாமெண்ணினோம். அவன் தோற்றுவித்திருக்கும் அவனது பத்திரிகை அவனுக்கு பெயர் கொண்டு வராதென எண்ணினால் போனால் போகட்டும் தேசோபகாரியின் பெயரைச்சொல்லியாவது பிழைத்துக்கொள்ளட்டுமே என்றிருக்கலாம். ஆனால் எதற்கெடுத்தாலும் 'சர்க்காரின் காலடியிலே விழுந்து தொங்கித்தான் கேட்கவேண்டும், முழந்தால் படியிட்டுக் கெஞ்சிக்கால்பிடித்துத்தான் உரிமைவேண்டுவேன' என்ற இழிகுணத்தை பேடிச்செயலை யிழுத்துப் போர்த்துக்கொண்டு திரியும் அவன் தேசோபகாரியின் பெயரடியில் தொங்குவதால்தேசோபகாரியின் புனிதப்பெயர் மகத்தான கொள்கைகளுக்கெல்லாம் கெட்ட பெயர் ஏற்படுகிறது ஆகையால் அவரையே நாம் கேட்டுக்கொள்ளுகிறோம். தம்பி! போதும் தேசோபகாரியின் பேரைச்சொல்லிபணஞ்சேர்த்துத்தனிப்பத்திரிகை யாரம்பித்ததேபோதும். இனிமேலாவது தேசோபகாரியின் பெயரைப் பிடித்துக்கொண்டு தொங்காதே.

ர்? இவைகளையெல்லாம் துருவிப்பார்த்தால்திரை மறைவில் முன்னக்கூட்டியே யேதோ வோர் சுயநலத்தை முன்னிட்டே சில சுலமிகளால் இச்சங்கம்பிறப்பிக்கப்படுறதெனச்சந்தேகிக்கவும் இடமில்லையென றுஎவராவது சொல்லமுடியுமா? எல்லாம் இன்றே தெரிவோம்.

இன்னும் ஏன் மூடு திரை?

சோலிய முஸ்லிம் வர்த்தக சபையார் நகர சபையில் இடங்கேட்டும் வெள்ளிக்கிழமை கப்பலை மாற்றும்படி கேட்டும் நகர சபைக்கும் கப்பல் கம்பெனிக்கும் எழுதிய கடிதங்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தனவே. அவைகளுக்கு நகர சபையாரும் கப்பல் கம்பெனியாருக்கும் என்ன பதில் கொடுத்திருக்கிறார்கள் என்பதை ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளிற் பார்த்து அலுத்து விட்டது. வர்த்தகசபையார் அந்தப்பதில்களை ஏன் இன்னும் வெளிவிடவில்லை? தாங்கள் எழுதிய கடிதங்களைப் பத்திரிகையிற் பிரசுரித்துவிட்டார்கள். அவ்விஷயம் எப்படி முடியுமோ வெனப் பொது ஜனங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள், இதற்கிடையில் "கப்பலைக் கல்கத்தாவுக்குத் திருப்பு" என்றும் "பண்டி போட்டுத்தான் இடங் கேட்போம்" என்றும் பலவாறாகப் பத்திரிகைகளில் வந்துகொண்டிருப்பதால் வர்த்தக சபைக்கு என்ன பதில் தான் கிடைத்திருக்கிறதென்று தெரியவில்லை. அதை ஏன் இன்னும் வெளியிடவில்லை? வெளியிட்டால் நல்லதுதானே. இன்னும் ஏன் திரை மறைவில் வைக்கவேண்டும்? அப்பதில்களை வெளியிட ஏதேனும் தொல்லையா? சள்ளையா? அல்லது பணமில்லையா? எதுவாயிருந்தாலும் பொது ஜனங்களிடையில் இறங்கிவிட்டபின் லாபமோ நஷ்டமோ, மானமோ, அவமானமோ எல்லாவற்றையும் எடுத்து விரித்துவிடத்தான்வேண்டும்.

ஜாதிப் பிரியன்.

அடக்குமுறை

(1-பக்கம் தொடர்ச்சி)

புகழுடம்பு பெற்று ஒவ்வொரு இந்துவின் சிந்தையிலும் ஹிருதயத்திலும் கோயில் கொண்டிருக்கிறான். இவைகளாலெல்லாம் என்ன தெரிகிறோம்? சத்தியத்திற்கு அழிவில்லை. சரீரம் என்றைக்காவதொருநாள் இறைந்துபடும், அல்லது இறந்து விடும்படி செய்யப்படும். ஆனால் ஆன்மாவோ, ஆன்மத்தின் எண்ணங்களோ எப்பொழுதும் எவராலும் எவ்வாயுதங்களாலும் எதுவும் செய்துவிடப்படாததெனக் காணுகிறோம்.

இவைபோன்றே இப்பொழுதிந்தியா வெங்கணும் சத்தியப்போர் நடந்துகொண்டிருக்கின்றது. சரீர பலத்தால் சர்க்கார் ஒரு புறமும் ஆத்ம பலத்தால் காங்கிரஸ் எதிர்ப்புறமும் நின்று கொண்டிருக்கின்றன. சர்க்காரின் கையிலே தடி, ஈட்டி, துப்பாக்கி, வெடிக்குண்டு முதலிய சகல ஆயுதங்களுமிருக்கின்றன. காங்கிரஸிடத்திலோ அஹிம்ஸையைத் தவிர வேறு ரூடகமான, உருப்படியான, கண்ணால் காணக்கூடிய எந்த ஆயுதமுங் கிடையாது. வேண்டவும் வேண்டியதில்லை. ஒரு சாரார் அடிக்கின்றனர்; சுடுகின்றனர். இன்னொரு சாரார் அடியைத் தாங்குகின்றனர்; சுடுந் துப்பாக்கிக்குண்டைக் கண்ணிமைக்காமல், முகஞ்சுளிக்காமல் மார்பகத்தே மாலையைப்போ லேற்கின்றனர். முடிவு என்னகுமென்பதுதான் விசித்திரம். வெறுங்கையன் வெற்றிகொள்ளுகிறான். அஹிம்ஸை வீரன் அலங்கலணிகின்றான் ஆயுத வீரன் கலங்கலுறுகின்றான். இதுதான் இந்தியாவிடை நடக்கும் புதிய போர், நவசக்தி, காந்திஜீயின் தவயோகம், இந்தியாவின் யுவ வேகம்.

சென்ற சத்தியாக்கிரஹத்திலே நாம் நல்ல பாடங் கற்றுக்கொண்டிருக்கிறோம். அடிபடப் பழகினோம்; சூடுபடக் கற்றோம்; இவையெல்லாவற்றையும் விட சாகவுந் தெரிந்துவிட்டோம். "பயமெனும் பேய்தனை யடித்தோம். பொய்மைப் பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம். வியனுலகனைத்தையும் அமுதென நுகரும், வேதவாழ்வினைக் கைப்பிடித்தோம்" வேறென்ன வேண்டும்? எல்லாம் சித்தியாகி விட்டன.

வங்காள அடக்குமுறையை வங்காளிகள் பொறுமையுடன் ஏற்றுக் கொள்ளுகிறார்கள் ஆடுகள் பட்டியிலடைபடுவது போல அடைபடுகிறார்கள். சிறைபயம், ஜீவபயம் இரண்டையும் இப்பொழுது வங்காளிகள் கடந்துவிட்டனர். ஐக்கிய மண்டலத்தில் விவசாயிகளைச் சர்க்கார் அடக்கி விடப்பார்க்கின்றனர். இர்வின் ஒப்பந்தத்தால் வெல்வெட்டுறைக்குள் மாட்டப்பட்டிருந்த இரும்புக்கரம் இப்பொழுது இந்தியா முழுதும் விசேஷமாக எல்லைப்புறத்தில் நிர்வாணத்துடன் நிர்த்தனஞ் செய்கிறது. செஞ்சட்டைகளும் இதர சட்டையாளும் எல்லைப்புற காந்தியின் இதோபதேசம் பெற்று காங்கிரஸைப் பின்பற்றி அஹிம்ஸாவழியில் அறப்போராற்றி வருகின்றனர். அவர்கள்மீது பிரிட்டிஷ்பத்திரிகைகள் சீறி விழுந்து செப்பும் அபவாதத்தைக்கொண்டு அடக்குமுறை நிர்தாக்ஷண்யமாய்ப் பிரயோகிக்கப்படுவதைக் கேட்க நெஞ்சம் பகீரெனலரிதோ! சாதாரணச்சட்டம் பலமற்றதாய் அவசரசட்டம் ஆக்ரமித்தெழுந்தும் பயனில்லையென அதையே இராணுவச்சட்டமாக அமுல் செலுத்தவும் தலைப்பட்டுவிட்டனர். தெருவில் திரியும் தேடுவாரற்ற நாய்களைப்போல் நாட்டுத்தொண்டர்கள் சுட்டு விழ்த்தப்படுகிறார்கள். என்ன எழுதமுடியும்? எழுதுகோலில் சக்தியேயில்லை முடிந்ததுரும்பைப்போல் ஆடமுடியாத நிலைமையில் அசைந்தாடுகிறது. கையும் நடுக்கலெடுக்க உள்ளமுங்குழைய சிரஞ்சுழல நம்மாலொன்றுமே எழுதமுடியவில்லை பேனா. அசைவற்று நின்றுவிட்டது.

சர்க்கார் மட்டுந்தானா தயார்? காங்கிரஸும் தயார்தான்

எத்தனைதான் நெருக்கடியான நிலைமையேற்பட்டபோதிலும் அவ்வளவையும் சமாளித்துக்கொள்ளத் தயாராயிருக்கவேண்டுமென இந்தியா சர்க்கார் மாகாண சர்க்கார்களுக்கும் இரகசிய சுற்றறிக்கை யனுப்பியிருப்பதாக பம்பாயில் பலத்த வதந்தியொன்று உலவி வருகிறது. சென்ற வருஷ விசேஷபோலீஸ் படைகளை மீண்டும் திரட்டும்படியும், தடிகளைத் தயாராக வைத்திருக்கும்படியும் உத்தரவிட்டிருக்கிறதாகத் தெரிகிறது. என்று பம்பாயில் வெளியாகும் கிரானிகிள் பத்திரிகை கூறுகிறது. அப்படியானால் காங்கிரஸும் தயாராகத்தானிருக்கும். இருதிறத்தாரும்பொருதுவதோ விலகுவதோ எல்லாம் காந்திஜீயின் கையிலேதானிருக்கிறது. அவர்தானே சர்வாதிகாரி.

புல்லின்ஜர் பூல்

இது ஒரு ஆங்கிலவார்த்தை; பிரிட்டிஷ் வர்த்தகசபையொன்றின்பெயர். வார்த்தைவார்த்தையாகப்பிரித்து அர்த்தஞ் சொல்லத்தெரியாது. இருந்தாலும் தெரிந்தவரை சொல்லுவதானால் இச்சொற்றொடரில் பூல் என்பதற்கு சிறுகுளம் அல்லது குட்டை யென்றபொருள் பொருந்தும். தண்ணீரும் நிறையவிருக்கும்; சேற்றிற்கும் குறைச்சலிராது குளமென்றால் மீனில்லாமலிருக்குமா? பெரிய பெரிய மீனாய் நாலே நாலு மீன்கள் மாத்திரமிருந்துகொண்டு பர்மாவாகிய குளத்தில் கொட்டமடித்துக் கலக்குவதுடன் சின்னஞ்சிறு மீன்கள் பலவற்றைத் தின்னுந்தொலைக்கின்றன. அரிசிவர்த்தகர்களாகிய ஸ்டீல் பிரதர்ஸ். புல்லக் பிரதர்ஸ் எல்லர்மேன் அரக்கான் அரிசிக்கம்பெனி, ஆங்கிலோ பர்மா அரிசிகம்பெனி, முதலிய பிரதாருகளும் கும்பினிகளும் கூடிக்கொண்டு பாமாவின் அரிசி விலையைத்தங்களுக்குச் சாதகமானமுறையில் நிர்ணயித்து விடுகிறார்கள். இதரா சில்லரை இந்திய, சீன, பர்மிய வர்த்தகர்களையெல்லாம் குட்டைக்குள் அமிழ்த்தி விழுங்கிவிடுகின்றனர். 1921-ம் வருஷத்திலே இந்த நாலுபேர் கூட்டுறவுகொண்டது முதல் அரிசிவிலையைத் தூக்குவதும் இறக்குவதுமாகாட்டுமக்களேயும், நாட்டு வர்த்தகர்களேயும் முன்னேற விடாமல் செய்ததுடன் எத்தனையோ பேரைத் திவாலாவாகும்படியும் செய்துவிட்டனர். திடீர் திடீரென விலையை யிறக்கி யேற்றுவதால் வியாபாரம் குட்டிச்சுவராய்ப் போவதில் சந்தேகமென்ன? வியாபாரசம்பந்தம்சிறிதுள்ளாரும்இதைமறுக்கமாட்டார்கள்.

பர்மாவை உலகத்தின் நெற்களஞ்சியமென்றுகூறலாம். பர்மாவின் அரிசி தான் உலகத்தின் எல்லாபாகத்திற்கும் படியளக்கின்றது. பர்மாவின் உயிர் நாடியாகிய அரிசி வர்த்தகத்தில், விலையை நிர்ணயிக்கும் பொறுப்பு ஐரோப்பியர் வசமிருப்பதால் அநேகமாய் அரிசிவர்த்தகமே ஐரோப்பியர் நால்வரின் கூட்டுறவுக் கழகமாகியபுல்லின்ஜர்பூலின் உள்ளங்கையிலிருக்கிறதென்றேசொல்லவேண்டும் ஆனால். முழு வர்த்தகத்தையும் அவர்களே கையாளவில்லை. பர்மாவில் திரிக்கப்படும் அரிசியில் 100-க்கு 30 விகிதம் போக மிஞ்சிய 70வது விகிதம் அரிசியை இதர இந்திய சீனச்சிறுவியாபாரிகளே செய்து வருகின்றனர். புல்லின்ஜர் பூலின் விலை நிர்ணயத்தால் இவ்வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்தவிஷயம். லண்டனிலுள்ள அரிசித் தரகர்களுடன் ஒப்பந்தஞ்செய்துகொண்டு இந்த ஐரோப்பிய வர்த்தகர்கள் இவ்வருஷத்தில் அரிசியின் விலை யிவ்வளவென முதன் முதலில் குறிப்பட்டு விடுகின்றனர்.

அதற்கேற்றவாறே அவ்வருடத்திய அரிசி விலை புல்லின்ஜர் பூல் விதிக்கும் விகிதத்தில் ஏறவும் இறங்கவுமாகிறது. இதுவொரு குற்றம். பர்மாவின் புது பகுல் வந்தவுடனே உள் நாட்டுச் சந்தையிலிருக்கும் விலையைவிட அதிகமான விலை கொடுத்து இவ்வர்த்தகக் கழகம் வாங்குவதும், அதன்பின் விலையை ஒடித்துயிறக்கி வாங்குவதுமாக உள்நாட்டு அரிசிவர்த்தகத்தில் ஒரு புரட்சியை யுண்டுபண்ணி விடுவது இரண்டாவது குற்றம். இனி மூன்றாவதாகஇந்தியா பர்மா இரு தேசங்களிலும் இக்கழகம் குறைந்த விலைக்கு விற்பனை செய்துஇந்திய வியாபாரிகளின் வர்த்தகத்தைக் கெடுப்பதும் குற்றம். இத்துடன் இவர்கள் கப்பல் கம்பெனிகளின் ஏஜெண்டுகளாக விருப்பதால் இதர வியாபாரிகளை நல்ல சமயத்தில் ஏற்றுமதிசெய்யவிடாமல் தடைப்படுத்தவும் ஹேதுவாகின்றது. இவைகளால் இதரவியாபாரிகள் மாத்திரமில்லை விவசாயிகளும், நிலச்சுவான்தாருங் கூடபெருத்தநஷ்டமடைந்து வருகின்றனர்பர்மாவில் பெருமுதல் போட்டு லேவாதேவிசெய்யும் நாட்டுக்கோட்டை தனவணிகர்கள் தாங்கள் கொடுத்த பணத்துக்கு பணங்கிடைக்காமல் நிலத்தை யேற்றுக்கொண்டிருக்கின்றனர். அவர்களும் அந்நிலத்திலிருந்து கிடைக்கும் சேவாய் நெல்லையோ வேறு நெல்லையோ வட்டிக்குக் கட்டக்கூடிய விலைக்கு விற்க முடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

இவற்றையெல்லாம் 1929-ம்வருஷ ஜூன்மீ நியமிக்கப்பட்ட அரிசி நெல் வியாபார விசாரணைக்கமிட்டியார் சமீபத்தில் வெளியிட்ட யாதாஸ்தில் குறிப்பிட்டு புல்லின்ஜர் பூல் மீது குற்றஞ்சாட்டுகிறார்கள். பர்மியர்களும் பத்திரிகைகள் வாயிலாகவும் பொதுக் கூட்டங்களிலும் இவ்வியாபாரச்சதியை வெறுத்துக் கண்டிக்கின்றனர். ஆனால் பர்மா சர்க்கார் இவற்றைக் காதில்போட்டுக் கொள்ளாதிருப்பதையென்னென்றுரைப்பது? வியாபார வர்க்கத்தின் ஆட்சியே நடத்தப்படுகிற தென்பதில் என்ன சந்தேகம்? இனியேனும் குடிமக்களின் கோரிக்கைக்குச் சிறிது செவிசாய்த்து புல்லின்ஜர் பூலை மேவி மூடிவிடட்டும்.

எட்டிக்குப் போட்டி யுகம்

நீரோடையொன்றிலே ஒரு ஆட்டுக்குட்டி தண்ணீரருந்தித் தாகவிடாய் தீர்த்துக்கொண்டிருக்கிறது, கூப்பிடு தூரத்திலே ஓநாயொன்றும் நீர் குடித்தது. அதன் கண்ணிலே ஆட்டுக்குட்டியின் உருவம் தட்டுப்பட்டுவிட்டது. நாக்கில் ஜலம் ஊற ஆட்டுக்குட்டியண்டை ஓநாய் சென்று "அடா! அற்ப ஆட்டுக்குட்டியே! மிருகேந்திரனாகிய நான் தாகசாந்தி செய்துகொண்டிருந்தது தெரியாது போயிற்றா? எனது குடி ஜலத்தைக் கலக்கிச் சேறாக்க உனக்கு அத்தனை நெஞ்சழுத்தமா?" என்று கேட்டது. ஆட்டுக்குட்டி உதறலெடுக்க நடுங்கிக்கொண்டு "ஐயா! அரசர் பெருமானே! நான் கலக்கவில்லையே"! யென்று குறையிரந்தது, "நீ செய்யாவிட்டால் உன்னப்பன் செய்திருப்பான்" என்று கூறியதும் ஆட்டுக்குட்டியின் மீது பாய்ந்து அதன் குரவளையைக் கடித்து இரத்தங் குடித்துக் கொன்றுவிட்டது.

இப்படியொரு கதையை நாம் சிறு வகுப்பிலேயே படித்திருக்கிறோம். அப்பொழுதே இதென்ன நியாயமடா அப்பா? என்று கேலியாய்ப் பேசிக் கொண்டதுண்டு,

அதே மாதிரிதான் ஐக்கிய மண்டல அவசர சட்டத்தின் கதையுமிருக்கிறது, மகன் செய்த குற்றத்திற்காகத் தகப்பனைத் தண்டிப்பதென்றால் "ஓநாயும் ஆட்டுக்குட்டியும்" என்ற கதையைப் போலில்லையென்று எவராவது சொல்லிவிட முடியுமா?

இதில் இன்னொரு எட்டிக்குப் போட்டியும் பொய்யிருக்கிறார்கள். தகப்பனது இரத்தம் மகனது சரீரத்திலோடுகிறது. தகப்பன் ஏதாவது கூடா வொழுக்கஞ் செய்திருந்தால் அதன் பலனை தண்டனையாக மகனடைந்து அனுபவிக்கின்றான். கரசம் போன்ற நோயையும் மகன் பெறுகிறான். இது சாஸ்திரப்படி. தகப்பன் முதல் மூதாதைகள் செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தமாக மகன் தண்டிக்கப்படுகிறானும். ஆனால் மகன் செய்த பாவத்திற்கோ அல்லது குற்றத்திற்கோ தகப்பன் இதுவரை எவ்வாற்றானும் தண்டிக்கப்பட்டதாக இல்லை. இந்த யுகத்திலே, இந்த ஆட்சியிலே இந்த எரோப்ளேன் காலத்திலேதான் கேள்விப்படுகிறோம், இது

காந்திஜீயின் பிரிய தமிழர்கள்

எனது பிரிய தமிழர்கள் ஆரம்ப சூரத்துவத்தில் வேலை செய்யமாட்டார்கள். திடீரென—ஆய்ந்தோய்ந்து பாராமல்—ஆழமறியாமல் எதிலும் இறங்குகிறதில்லை. இருந்தாலும் இறங்கிவிட்டால் கடைசிவரை சாதிப்பார்கள். ஆரம்பமுதல் போர் நிறுத்தம்வரை நிரந்தரமாக வேலை செய்தது தமிழ்நாடுதான். இப்பொழுதும் இச் சமாதான காலத்தை வெற்றிகரமாக உபயோகித்து வருவதும் தமிழர்கள்தான். போர் ஆரம்பிக்கப்பட்டால் இம்முறை தமிழர்கள் மற்ற மாகாணங்களுடன் போட்டி போடுவார்கள் மெதுவாகச் சென்றாலும் தமிழர்கள் வெற்றியின் எல்லைவரையோடியே தீருவார்கள். தென்னிந்தியர்களிடத்திலே—விசேஷமாகத் தமிழர்களிடத்திலேதான் நான் எனது முழு நம்பிக்கையையும் வைத்திருக்கிறேன். அவர்கள் நிச்சயமாய் என்னைக் கைவிடமாட்டார்கள். கதர் வேலையிலும் தீண்டாமை தீர்ப்பதிலும் அவர்களைப்போல் வேறு எந்த ஜாதி உருப்படியாக வேலை செய்திருக்கிறது? என்று கூறினர்.

—நியூ லீடர்

பற்றி பண்டித ஜவஹரிலால் கூறுவதைக் கவனிப்போம்.

> 'இது ஒருவர் செய்த குற்றத்திற்காக இன்னொருவர் தண்டிக்கப்படுங் காலம். வயது வந்த மக்களுக்காக தகப்பன் தண்டிக்கப்படுகிறான். பயங்கரப் புரட்சிக்காரர்களின் பீதிச் செயலுக்காக காங்கிரஸின் சாத்வீகத் தொண்டர்கள் சிறைப்படுகிறார்கள்—ஊருக்குப் புறம்பான ஒருவர் செய்த குற்றத்திற்காக ஒரு முழு கிராமத்தாரே கைதி செய்யப்படுகின்றனர்,

இதனால் இந்த யுகத்தை எட்டிக்குப் போட்டி யுகமென்றோ இல்லை 'உல்டா பல்டா' காலமென்றோ ஏன் அழைக்கலாகாதென எமது நண்பர் கேட்கிறார். சர்க்காரிடத்திலேதானே போய்க் கேளுமென்று கூறிவிட்டோம்.

தேசோபகாரி

வருஷம் 1-க்கு ரூ. 3 0 0

ஆறு மாதம் ரூ. 1 8 0

மாத சந்தா அணா நான்கே

மாமியார் வீட்டு மாப்பிள்ளைகள்

(சித்திர குப்தன் கணக்கு)

இது முதல் இத் தலைப்பின் கீழ் காங்கிரஸ் கொள்கையைப் பின்பற்றி மாமியார் வீட்டுக்கு (சிறைக்கு)ச் செல்லும் மாப்பிள்ளை (கைதி)களின் கணக்கை நமது கணக்குப் பிள்ளையாகிய சித்திரகுப்தன் பேரேடு போட்டெழுதி வருவார். இப்புள்ளி விவரம் நமது வாசகர்களுக்குப் பெரும் பயனளிக்கும். கூடுமான வரை மாகாண வாரியாகவும் பிரித்தெழுதிவரும்படி கணக்குப் பிள்ளைக்கு நாம் கண்டிப்பான உத்திரவு போட்டுள்ளோம். தேதியும் பிசகாமல் எழுதுவார். இத்துடன் வீர சுவர்க்கம் எய்தியவர்களின் எண்ணிக்கையும் குறிக்கப்பெறும். இங்கொன்று அங்கொன்றுகக் காணுவதைவிட ஒரே மொத்தமாகக் கண்டால் கணக்கும் சுலபத்தில் பிடிபடும். ஐந்தொகை யெடுப்பதும் அத்தனை சிரமப்படாதென்றே யிம்முறை கையாளுகிறோம்.

1931 டிசம்பர் 26 ம் நாள்வரை ஐக்கிய மண்டலத்தில் பண்டித ஜவஹரிலால் ஜனுப் ஷெர்வானி உள்பட ஆக மொத்தம் சிறை சென்றார். தொகை		66
27௳ ,,		1
28௳ ,,		1
ஆகமொத்தம்		68
பிஷாவர்.		
டிசம்பர் 26 ந்தேதியன்று பிஷாவரில் கைதியான கான் காபர் கான் டாக்டர் கான் சாகிப், அவரது குமாரர், இன்னொரு வக்கீல் ஆக		4
செஞ் சட்டைத் தொண்டர்களில்		
பிஷாவரில்		I02
கோஹத்தில்		38
பன்னுவில்		7
தேரா இஸ்மெயில் கானில்		13
ஹஜராவில்		30
கோஹத்தில் காயமுண்டார்		1
டிசம்பர் 27 ல் கைதுசெய்யபபட்டு 6மீ தண்டனை யடைந்தவர்கள்		45
26 ந்தேதி கோஹத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டார்		11
காயமுண்டார்		50
ஆகமொத்தம் இறந்தலர்கள்		11
கை யானூர்		258

காந்திஜீக்கி ஜே!

(திரு: ரிச்சர்டு கிரெக்)

காங்கிரஸின் ஏக தூதுவாக வந்த பாபுவின் ஒரு சிறு கோரிக்கைக்காவது பிரிட்டன் செவி சாய்த்ததா? போராரம்பிக்கப்பட வேண்டுவதுதான். என்றாலும் காந்திஜீயின் தூது வீண் போகவில்லை. நாளடைவில் பாபுவின் லண்டன் விஜயம் நல்ல பலனளிக்கவே செய்யும். இந்தியா தன்னைத் தானே ஆளத் தகுதிபற்றதெனக் கூறிய பிரிட்டனின் குட்டு வெளிப்பட்டுவிட்டது. உலகம் இந்தியாவின் கோரிக்கைகளை நியாயமானவைதான் என்றுணரும்படி செய்துவிட்டார். உலக அபிப்பிராயத்தில் இந்தியா தனது பொறுமையால் தனது சாத்வீகத்தால் தனது அஹிம்ஸைத் தத்துவத்தால் நிச்சயமாய் வெற்றியே யடையுமென நிரூபித்துவிட்டார். மிருக பலத்தின் அடக்குமுறையில் பிரிட்டன் நம்பிக்கை வைக்குமானால் இனிமேல் பாச்சா பலிக்காதென பிரிட்டன் தானே அறியாவிட்டாலும் உலகம் அறிந்துவிட்டது. காங்கிரஸ் பலாத்காரமாய், அவசரமாய், சமாதானம் விரும்பாதாய் அறிவற்றதாய் அரசியல் ஆற்றலில்லாதா யிருக்கிறதென்று இம்முறை பிரிட்டன் உலக மக்களின் கண்களைக் கட்டிவிட முடியாதவாறு பாபு செய்துவிட்டார். இராஜ தந்திரத்தில் பாபுவின் இணையற்ற ஆற்றலை பிரிட்டன் நேரில் கண்டு போற்றாவிட்டாலும் உலகம் கண்ணை மூடிக்கொண்டிருக்கவில்லை. ஏழைகளிடத்திலும் ஏழைத் தொழிலாளிகளிடத்திலும் பாபு கொண்டுள்ள நெருங்கிய பான்மையில் நிறைந்த அர்த்தமிருக்கிறது. அப் பரந்தசத்துவமே பிரித்தானியாவை அடியோடு கவிழ்த்துவிடும்.

இனியொரு முறை போராரம்பிக்கப்பட்டால் உலக முழுதுமே இந்தியாவின் பக்கத்தில் தான் நிற்கும். பிரிட்டனின் ஆற்றல் அதிகாரம் உண்மை அறிவு இவையெல்லாம் சந்தியிலிழுத்து நிறுத்தப்படும். இப்பொழு தொன்றும் தெரியாது. நாளடைவில் இவை யனைத்தும் போற்றப்படும். பாபுவின் தூதுக்குப் பலன் கிடைக்காது போகாது.

காந்தியைப் போற்றி

கதர் உடுத்துங்கள்

நமது காணிக்கை

இந்தியாவின் என்? முழு உலகத்தின் ஜீவ வர்க்கத்தினது சிந்தையத்தனையையும் திறை கொண்டு கலாபீடத்தில் ஏறியிருந்து ஏக சக்ராதிபத்தியம் செலுத்தும் கவி சக்கிரவர்த்திக்கு நாம் நமது காணிக்கையைச் செலுத்திக்கொள்ளுகிறோம். இந்தியர்களெல்லோரும் இவ்வாரமுழுதிலும், இல்லை யில்லை இந்தியன் ஒருவன் உயிர்வாழும்வரை "எங்கள் கவிச்சக்கிரவர்த்தி" யென்று கெர்வத்துடன் கூறிக் கடமைசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். முடியரசர்களை உதைத்துத் தள்ளிவரும் இக்காலத்திலும் மற்றெக்காலத்திலும் கவியரசர்களை ஹிருதயமத்தியிலிறுத்தி முடிசூட்டுவோம்.

இன்று ரவீந்திர ஜெயந்தி. ரவீந்திரரின் 70-வது ஆண்டு விழா. பழுத்த கிழவரின் பழுத்த கவித்திறத்தைக் களிபேருவகையுடன் கொண்டாடும் வைபவநாள். வாழ்க்கைச் சிற்பியின் வாழ்க்கைச் சரித்திரத்தைப் பேசவேண்டிய தினம். என்றாலும் எமதுள்ள மெல்லாம் அவனது கவிகளின் அர்த்தத்திலே, அழகிலே கட்டுண்டு லயித்து விட்டிருக்கிறன.

ரவீந்திரனின் "நந்தவன"த்தில் எத்தனை அழகிய தருக்கள், எவ்வளவு கற்பகவிருக்ஷங்கள். எத்தனை எண்ணிலடங்காத தேவதாருக்களெல்லாம் அணியணியாக விருக்கின்றன. கொடிய பசிப்பிணியால் பற்றிப் பிடிக்கப்பட்டிருக்கும் எவனும், வாழ்க்கைப்பாலை வனத்தல், வறுமை வெப்பத்தாலடிபட்டு வாடி வதங்கிக்கிடக்கும் எவனும் அவரது "நந்தவன"த்துக்குள் புகுந்து விட்டால் நல்விருந்தளிக்கப்பெற்று வாழ்க்கைச் சகடத்தின்கசடக்கால்கடோறும் அடிப்பட்ட புண்ணும் தழும்பும் ஆறப்பெற்று ஆறுதலடைகிறான்.

ரவீந்திரனின் "பூப்பறித்த"லில் ஏதாவதொரு புஷ்பமாவது குறைச்சலாயிருக்கிறதா? கவீந்தரனின் இருட்டறையில் எங்கும் ஜோதி! எங்கும் ஜீவகலை! எங்கும் காந்தி! யேயன்றி இருளென்பதேயில்லை. கவிஞனின் தபால் நிலயத்தில் மானஸதத்துவம் நிறைந்திருக்கிறது. டெல்ல சிராப்பைவிட, டெல்லபோனைப் பார்க்கிலும், டெல்லமானே அவனது தபாலாபீஸில் அதிகவேலை செய்கிறது. ரவீந்திர நாதனின் கீதாஞ்சலியில் கீதாமிர்தம் சொட்டுகிறதென்பதை கீத உலகம் கண்டுவிட்டது. பொதுவாய்ச் சொல்லப்போனால் கவிஞரின் ஜீவநாடியெல்லாம் அவரது நூல்களிலே அப்படியே ஸ்புரித்து நிற்கின்றன.

ரவீந்திரனை ஒருகவியென்பதைச்சிறிது மறந்துவிடுவோம். அரசியல் ரவீந்திரனாகவும் அவனைக் காணலாம்; கவிந்தச்சனாகவும், சிறு கதைகள் சொல்லும் கற்பனைச் சிற்பியாகவும் நமது கவி யெவ்வளவு ஸ்பஷ்டமாகப் பிரகாசிக்கின்றாரோ அவ்வளவு பிரகாசம், அவ்வளவு பிரபையுடனும் அவர் அரசியலில் பிரகாசிக்கவே செய்கின்றார்.

அந்நிய நாட்டவர் ஆட்சியிலிருந்து விடுபட இந்தியா செய்துவரும் சுதந்திரப்போரில் ரவீந்திரனை ஒரு தேசியப் பிரசாரகனா; தேசியச் சாரணன் என்றும் சொல்லலாம். நம்பிக்கைக்கு ஒரு தூதுவனாகவும், ஆண்மைக்கோர் அவதார புருஷனாகவும்' அரசியலின் அஸ்திவாரக்கல்லை நாட்டும் அபிமானியாகவும் அமைகிறான். இந்த யுகத்தின் ஆரம்பத்திலே அவனூதிய சுதந்திரச் சங்கமுழக்கமே இந்தியாவை விறுகொண்டெழச் செய்தது. அவன் பாடிய பள்ளியெழுச்சி கேட்டே நவ இந்தியா நித்திரை நீத்தெழுந்தது 1905-6ம் ஆண்டுகளில் எழுந்த சுதேசிக்கிளர்ச்சி காலத்தில் ரவீந்திரன் பாடிய போர்ப்பாட்டுகளே மக்களைப் போர்க்கோலங்கொள்ளச் செய்ததென்பது மிகைப்படாது. இன்றும் அவரது தேசிய கீதங்களைப் பாடிக்கொண்டு எத்தனைபேர் தேசவெறிகொள்ளுகிறார்கள். அவரதுஎழுத்துக்களில் எரிந்து கொண்டிருக்கும் நெருப்பு கலையுலகமுள்ள மட்டும் கங்குகரையில்லாது காட்டுத்தீப்போய் எரிந்துகொண்டே யிருக்கும்.

1919ல் நிகழ்ந்த பாஞ்சாலப்படுகொலையும் கவிஞருள்ளத்தைப்பற்றிப் பிடித்துவிட்டது. அன்றுசெலுத்தப்பட்ட இராணுவ அமுல்கலாவல்லவனின கருத்தைப்பறித்து விட்டது. பிரிட்டிஷ் சர்க்காரால் வழங்கப்பட்டிருந்த சர் பட்டத்தை தூ வெனத் தள்ளினார் கௌரவப் பட்டங்களும் விருதுகளும் அடிமை ஜனங்களின் முகத்தில் ஆள்வினை வர்கத்தாரால் பூசப்படும் கரி யென்றார் 1920-21-ல் இந்தியா விடைப்புகுத்தப்பட்ட ஒத்துழையாமையும் அவரது ஆசீர்வாதத்தைப்பெற்றேயிருக்கிறது. டாக்காவின் சமூகக் கலகமும் சிட்டகாங்கின் அட்டூழியமும் ஹிஜிலியின் சித்திரவதையும், பிஷாவரின் பேய்ச்செயல்களும் கவியுள்ளத்தைக்கடினமாக்கி எழைபழுத கண்ணீர் கூரிய வாளோடொக்குமென அறம்பாடி விட்டார். வாழ்க கவிஞர்! வாழ்க கலை! வாழ்க ரவீந்திரன்!

Printed & Published By A. V Sellam Pillay at the Desopakari Press, 210, 36th Street Rangoo

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 45 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை **DESOPAKARI** ஞாயிறு, புதன், வெள்ளி வெளியீடு

210–36-வது வீதி, இரங்கோன், (3—1—32) மார்கழிமீ 15உ ஞாயிற்றுக்கிழமை

போன வருஷம்! வந்த வருஷம்!

காண்ப வெல்லா மறையு மென்றால்
மறைந்த தெல்லாம் காண்ப மன்றோ?

விண்படு பொய்யிலே—நித்தம்
காண்பதுவே யுறுதி கண்டாய்

காண்ப தல்லா துறுதியில்லை
காண்பது சக்தியாம்—இந்தக்

காட்சி நித்தியமாம்.

—கவியரசன்.

போன வருஷம்! வந்த வருஷம்!

இன்று புது வருடம் பிறந்த மூன்றும் நாள். போனவருஷம் போயும் மூன்றே தினங்களாகின்றன. போனதற்குப் பிரிவுபசாரமும் வந்ததற்கு வாழ்த்தும் சொல்ல நாம் கடமைப்பட்டிருக்கின்றோம் ஏனெனில் இதுவொரு பத்திரிகா சம்பிரதாயமல்லவா?

1931ம் வருஷம் எவ்வாறு பிறந்தது; எவ்வாறு கழிந்தது என்றெழுதுவதுதான் அவ் வருஷத்திற்கு நாம் செய்யும் உபசாரமாகும். பொதுவாக—ஒரேயொரு நேற்பார்வையிற் கூறுவதானால் அநேகமாய் 1931ம் ஆண்டு சண்டையிலே பிறந்து சண்டையிலே முடிந்ததென்னலாம். போன வருடம் பிறந்தபோது இந்தியாவெங்கும் சட்டமறுப்புப்போர் முழுவேகத்துடன் நடந்துகொண்டிருந்தது. பம்பாயில் வானர சைன்யங்களின் சர்வ ஆர்பாட்டமும் தேச சேவிகாக்களின தெய்வீகத்தொண்டும் எள்ளளவுந் தளர்வுறாமல் ஏகபோகமாயிருக்கவும் சென்னையில் ஸ்ரீமான் பாஷ்யம் போன்றார் தடியடிபடவும் அதனால் சென்னை என்றுமில்லாத உத்வேகத்துடன்-உற்சாகத்துடன் வீறுகொண்டெழுவுமாகியவைகளெல்லாம் பிரிட்டிஷ் மந்திரிகளையும் ஏகாதிபத்திய வாஞ்சையாளரையும் கிறுகிறுக்கச்செய்து சமாதானம் நாடச்செய்தன. மகாத்மாவை அடைத்து வைத்திருந்த எரவாடா சிறைக்கும் இந்தியாவின் இராஜப்பிரதிநிதியின் அரண்மனைக்கும் தூது நடத்தப்பட்டது. ஜனவரி 25உ காந்திஜியும் காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் எல்லோரும் விடுதலையளிக்கப்பட்டார்கள். இந்தியாவின் அரசியல்சரித்திரத்தில் ஒருபுதிய-என்றுமில்லாத ஒரு புத்தம் புதிய மாறுதலான அத்தியாயம் எழுதப்பட்டது. ஒரு பெரிய ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியும் ஏழை இந்தியாவின் நிர்வாணப் பக்கிரியும் சரியாசனத்தமர்ந்து உடன்படிக்கைசெய்து ஒப்பந்தப் பத்திரத்தில் கைச்சாத்திட்டார்கள். எந்தெந்தக் காரியங்களைச் செய்தது குற்றமெனச் சர்க்கார் கூறி ஒருலட்சம் இந்திய மக்களைச்சிறைப் படுத்தினார்களோ—எந்தெந்த குற்றங்களைத் தடுப்பதற்காகச் சாதரண சட்டங்கள் ஒடிந்த துரும்பெனக் கருதப்பட்டு பத்துப் பதின்மூன்று அவசரச்சட்டங்கள் அடுக்கடுக்காய் வாரி வாரி யிறைக்கப்பட்டனவோ—எந்தெந்தகாரியங்களைச் சாத்விகத் தொண்டர்கள் செய்வ

(4-ம் பக்கம் பார்க்க.)

இந்தியச் சந்தையில் அன்னியச் சரக்குகள்.

இந்தியா ஒருசந்தை: இங்கு தான் உலகத்தி லுற்பத்தியாக்கப்படும் எல்லா சரக்குகளும் விற்பனையாகின்றன. வீடு பெருக்கும் விளக்கமாறு (துடைப்பக்கட்டை) முதல் வேந்தன் ஜமீன்தார், பணக்காரன் முதலாளிகளெல்லாம் சவாரிசெய்யும் மோட்டார்கார் வரை அந்நிய நாடுகளிலிருந்து வாங்கும் நிலைமைக்கு நாம் வந்துவிட்டோம். எத்தனை காலந்தான் பிறர் கையை எதிர்பார்த்துப் பிழைக்கலாம்? ஒவ்வொரு தேசமும் தன் தன் தேசப் பொருள்களை விருத்தி செய்து தேசத்துச் செல்வத்தை வளர்த்துவரும் இக்காலத்திற் கூட இந்தியா ஆண்டபண்டம் அறுபதுக்கும் பிற நாட்டார் கைபார்த்துக் கொண்டிருக்கலாமா? பிரிட்டனில் வேல்ஸ் இளவரசன்-இனிமேல் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சக்கிரவர்த்தியாகப் போகிற ஒருவனே. பிரிட்டிஷ் ஜனங்களை பிரிட்டிஷ் பொருள்களையே வாங்கும்படி பிரசாரஞ் செய்து வரும்போது நாம்மட்டும் இன்னும் அயல் நாட்டுச் சரக்குகளின் மீது மோகங் கொண்டு திரிகிறோமென்றால் எவ்வளவு கேவலம். ஸ்வதேசி வேகம் இந்திய சர்க்கார் பிரயோகித்து வரும் அவசரச் சட்டங்களைப்போல் அவ்வளவு வேகத்தில் அத்தனை அவசரத்தில் உலகமெங்கும் ஓடிக்கொண்டிக்கையில் இந்தியனின் இரத்த மாத்திரம் மந்தகதி பெற்றிருக்கலாமா? இந்தியனென்ன சோம்பேறியா? எவ்வளவு கேவலமான நிலைமையில் இந்தியா இருக்கிற தென்பதை இந்தியன் ஒவ்வொருவனும் எண்ணிப்பார்க்க வேண்டாமா? இது பற்றி நமது கண்டனத்தை நாமேஎழுதிக் கொண்டே போவதை விட இன்னின்ன சரக்குகள் இவ்வளவு ரூபாய்க்கு விலைபோகின்றன வென்னும் புள்ளி விவரத்தை அப்படியே கொடுத்து விடுகிறோம். இதனால் வாசகர்களே கண்டுதிருந்த முடியு மென்பதே கருத்தாகும்.

துடைப்பங்கள்:

வருஷம்	...	...	ரூபாய்
1927—28	...	...	47 லட்சம்
1928—29	...	...	51 ,,
1929—30	...	...	52 ,,

வருஷம்	வளையல்கள்.		ரூபாய்
1927—28	...	...	89½ லட்
1928—29	....	...	76½ ,,
1929—30	...	...	85¼ ,,

மீன்:

1927—28	...	...	37 ,,
1928—29	....	....	26 ,,
1929—30	...	...	26½ ,,

பாக்கு இஞ்சி கிராம்பு ஜாதிக்காய் மிளகு வகையறா.

1927—28	260 ,,
1928—29	295 ,,
1929—30	326 ,,

வாசனைப் பொருள்கள்.

1927—28	6½ ,,
1928—29	5 ,,
1929—30	4 ,,

இமிடேஷன் கண்ணாடிக்கல்கள்.

1927—28	27 ,,
1928—29	30½ ,,
1929—30	31 ,,

பொத்தான்.

1927—28	31½ ,,
1928—29	33 ,,
1929—30	29 ,,

குடை

1928—29	57 ,,
1929—30	43 ,,
1930—31	31 ,,

கைத்தடியும் சவுக்கும்.

1927—28	2 ,,
1928—29	2 ,,
1929—30	1 ,,

தின்பண்டங்கள்.

பிஸ்கோத்து, கேக்கு, டப்பியிலடைத்த பழம்; தாவர நெய், டப்பி மீன், டப்பி ஆகாரம், கொக்கோ, பால் ஏடு, பால் கட்டி, சாக்லேட், பப்பர் மெண்ட், இறைச்சி, சிசு ஆகாரம் புட்டிபால், ஊறுகாய், சட்னி, ஜாம், ஜெல்லி, வெண்ணெ, மாப்பண்டம், இதர ஆகாரங்கள்.

1928—29	618½ லட்
1929—30	558¼ „
ஹாட் தொப்பி ஹாட்டுஊசி	
1928—29	32 „
1929—30	30 „
பூட்ஸும்பூட்ஸ் சாமான்கள்	
1928—29	68¼ „
1929—30	88 „
பிசின் கம் வகையரு ஒட்டுப்பொருள்	
1297—28	4½ „
1928—29	7½ „
1929—30	8½ „
சோப்புத் தினுசுகள்	
1928—29	600 „
1929—30	166½ „
ஆகமொத்தம் சுமார்	3,497¼ லட்

இவைகள் மாத்திரந்தான் என்பதில்லை நமது கணக்குக்கெட்டாத இன்னும் எத்தனையோ கணக்குகளும் எவ்வளவோ பொருள்களுமிருக்கின்றன. அவைகளை யெல்லாம் கணக்கெடுத்து மொத்தமாகச் சொன்னால் ஒவ்வொரு உண்மை இந்தியனும் பெருமூச்சு விடாதிருக்க முடியாது அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதியாகும் துணி பட்டு சாராயம் பிராந்தி உல்கி வகையறுக்களையும் சேர்த்தால் அதில் ஒரு 70 கோடி வரை யாகலாம் பிரசார அளவுக்கு இவையிரண்டும் சரிபாதிக்கு மேல் குறைந்தே விட்டன.

நிற்க இப்புள்ளி விபரங்களால் நமது நாட்டுச் செல்வம் இம் மூன்று வருடங்களில் 420 கோடி ரூபாய்கள் நாட்டைவிட்டுப் போய்விட்டன. இம்மட்டோடும் அமையவில்லை அன்னியருக்குச் சம்பளமாகவும் உபகாரச் சம்பளமாகவும் கொடுக்கப்படுவனவும் இந்தியாவின் இழந்த தனமே யாகும்.

தமிழ்க் கொலைகள்

பர்மாவுக்கு ஒரு பிரத்தியேகமான அவசரச் சட்டம் இப்பொழுது தேவை. அதுவும் அவசர அவசரமாகப்புகுத்தப்பட்டு அவசரஅவசரமாக அமுல்செலுத்தப்படவேண்டும். இல்லாவிட்டால் பாவம் தமிழ் (பாஷை) சர்வ நாசமாய்க் கொல்லப்பட்டுவிடும். ஒரு தனி மனிதனைக்கொல்லவோ கொலை செய்யத்தூண்டவோ அல்லது கொலை செய்யத் தூண்டக்கூடிய வார்த்தைகளை உபயோகிக்கவோ அல்லது உபயோகிப்பதாகக் கருதவோபட்டால் உடனே சர்க்கார் அத்தகைய பத்திரிகை அல்லது பத்திரிகைகளின்மீது நடவடிக்கை யெடுத்துக் கொண்டு ஜாமீன் கேட்கலாமென்பது அவசர அச்சுச் சட்டத்தின் ஒரு பிரிவின ஷரத்து. அதன்படி பார்த்தால் வீதிகளில் விளக்கேற்றிக் குடியிருக்கிறவர்களும் தெருக்களில் விளக்குப் போடுகிறவர்களையும்கூட பத்திரிகைக்காரர்கள் கொலை கொலைக்கு உடந்தை முதலிய குற்றங்களுக் குள்ளாக்குகிறார்கள். ஏனெனில் எத்தனை (வாயில்லா) பூச்சிகளை வண்டுகளைத் தினந் தினம் கொல்லுகிறார்கள். கொலை யெனறால் பூச்சி புழுக்களைக் கொல்லுவதும் கொலைதான். மனித ஜெந்துவைக்கொல்லுவதும்கொலைதான்

இச்சட்டப்படி தமிழைக் கொலைசெய்யும் பத்திராசிரியர்களையும் இந்த அவசரச் சட்டம் கட்டுப்படுத்தலாமல்லவா? கோரி என்பதற்கு கொறி யென்று கொட்டை எழுத்தில் பிரசுரிப்பது எவ்வளவு பிரமாண்டமான—பிரமாதமான கொலை. இது வொன்று மாத்திரமில்லை தினந்தோறும் (திங்கட்கிழமை நீங்கலாக மற்றெல்லாக் கிழமைகளிலும் வெளியாகும் ஒவ்வொரு பிரசுரத்தின் ஒவ்வொரு வரியிலும் ஆயிரம் ஆயிரங்கொலை காணலாம். இதற்கு இரங்கோன் நகரத்தாரே சாக்ஷி. ஆகையால் இக்கொலை பாதகச் செயலைக் கண்டிக்காவிட்டால் சில தினங்களில் தமிழே முழுதும் கொலை செய்யப்பட்டாகிவிடும். எனவே தமிழர்களுக்கென பிரத்தியேகமாக ஆரம்பிக்கப் பட்டிருக்கும் தென்னிந்திய சங்கத்தார் உடனே ஒரு அவசரச்சட்டம் பிறப்பித்து தமிழர்களின் தமிழை முதலாவதாகக் காக்கட்டும். அப்புறம் தமிழர் தலைகளைச் சொத்தைச் சுத்தகைக்காக்கலாம். காரியதரிசியும் சிறிது கவனித்துத் தமிழைக் கொலை செய்யாதிருக்கட்டுமென எச்சரிக்கின்றோம்.

போனவருஷம் வந்தவருஷம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தால் ஏகாதிபத்யமே இடிந்து விழுந்துவிடு மெனப்பயந்து அடிதடி துப்பாக்கிப்பிரயோகங் களெல்லாம் செய்யப்பட்டனவோ அந்தக் குற் றங்களை யெல்லாம் இந்தியர்கள் செய்துகொள் ளலாமென்று வைஸ்ராய் சொல்லிவிட்டார். வரியில்லாமல் சர்க்காருக்குத் தம்படிகொடா மல் உப்புவாரி உபயோகித்துக் கொள்ளவும் சீமைத்துணி பஹிஷ்காரம் கள்ளுக்கடை மறி யல்கள் செய்யவும் காந்திஜீஉரிமையும் பெற்று விட்டார். சர்ச்சில் சொன்னமாதிரி சர்க்கார் இந்த இடத்திலே ஏககாலத்திலே இரண்டு தப் புகளைச் செய்துவிட்டது. ஒப்பந்தம் ஒருதப்பு. உரிமை கொடுத்தது இரண்டாவது தப்பு இவ் விரண்டு தப்புக்களையும் இர்வின் கண்மூ டித்தனமாய்ச் செய்துவிட்டார் என்று கருது கிறீர்களா? இனிமேல் முடியாது. இந்தியாவின் விடுதலை வேகத்தை—சுதந்திர தாகத்தையடக்க எந்த வொரு மிருகபலத்தாலும் முடியாது— வேறு விதியில்லையெனக் கண்டுதான் சமாதா னம் விழைந்தார். எப்படியோ அவர் சரித்திர இலக்கான நல்ல பெயரெடுத்துக்கொண்டு தன து முழுக்காலத்தையும் கழித்துவிட்டு இங்கி லாந்து சென்றார். மே மாதத்தில வில்லிங்டன் மகாப்பிரபு வந்துசேர்ந்தார். காந்திஜீயை வட்டமேஜைக்கு அனுப்பிவைத்தார். நாளு க்கு நாள் நகன்றது காண் அம்மானே! என்ற மாதிரியில்நாளுக்குநாள் டில்லி ஒப்பந்தம் காற் றுப் பறக்கலாயிற்று. சர்க்கார்மீது காங்கிரஸ் பல குற்றங்களைச் சுமத்திற்று. அதன்பயனாய் பர்தோலி விசாரணை யேற்பட்டு அதையும் பாழ்படுத்திவிட்டார்கள். வட்டமேஜையொரு வேடிக்கை நாடகம். பத்துப் பதினைந்து லட் சம் இந்திய ரூபாய்கள் செலவழிந்தும் கடைசி யில் கேலிக்கூத்தாய் முடிந்தது. சாந்தமும் சமாதானமுமாய்க்கிடந்த இந்தியாவிலிருந்து சென்ற இந்தியாவின் ஏகப்பிரதிநிதி வெறுங் கையராய்க் கொந்தளிப்பும் கூக்குரலும் மிகு ந்த இந்தியாவில் டிசம்பர் 28ந் திகதி வந்திறங் கினார். ஹிஜ்லி, சிட்டகாங் டாக்கா சம்பவங்க ளெல்லாம் வங்காளத்திலேநிகழ்ந்தன. 1931ம் வருடம் 12 மாதங்களுக்கிடையில் 15 அவச ரச் சட்டங்களுடன் அவ்வாண்டின் அவசரச் சட்ட வால்யூம் பூர்த்தியாகிறது. அப்புறம் கோமில்லாப் படுகொலை. சமீப உலக சரித்தி ரத்திலேயே கேட்டிராதவாறு இரண்டு வங்கக் கன்னிகள் ஒரு ஜில்லா மாஜிஸ்திரேட்டைப் பட்டப்பகலில் படுகொலை செய்த பரிதாபகர மான—அஹிம்ஸை இந்தியா விரும்பாத— காங்கிரஸைக் கறைப்படுத்தத்தக்க—படுகொலை செய்துவிட்ட சம்பவம்.

1931-ம் ஆண்டு ஆரம்பத்தில் இந்தியா வின் சீறுறு புதல்வன்-இஸ்லாத்தின் செம்மை யாளன்-விடுதலைவீரன்--கலைக்கடல்--மௌலானா முகமதலியை யிழந்தோம். அதன்பின் இந் தியாவின் கோடீஸ்வரனை, சட்டநிபுணனை, காங் கிரஸ் தலைவனை. சுதந்திரவிளக்கை பண்டித மோதிலாலைப் பறிகொடுத்திழந்தோம். பாஞ் சாலச் சிங்கம் பகத்சிங்கும் போனான். பத்திரி காசிரியர் சிரோண்மணி கே. ஸி. ராயையும் காணோம். கடைசியில் வருடக்கடைசியில் கா ந்திஜீயின் ஆருயிர்நண்பர், அஹிம்ஸைப்போரில் காந்திஜீயின் தளகர்த்தர், வலக்கரம் போன்றவர் இமாம் சாகிபும் இன்னுயிர் நீத்தார். இவர்க ளின்— இச்சுவர்க்கவாசிகளின் ஆத்மாசாந்திய டையட்டும். இப்பரலோக பரமாத்மாக்களின் சந்ததியார் நீடூழிவாழட்டும். நமது புதுவருட வாழ்த்து சுவர்கீய சுசீலர்களுக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் முதல் முதலசேரட்டும்.

சிறைக்கூடம் சேர்ந்துள்ள தபோதனர்க ளாளி, பண்டித ஜவஹரி, ஜனாப் ஷேர்வாணி, கான்காபர்கான் முதலியவர்கள் எல்லோருக்கும் எமதுகடமையையும் கருத்தும்உரித்தாகட்டும் போன வருடத்தில் பிறந்துள்ள அவசரச் சட் டம், ஐக்கியமண்டல் அவசரச்சட்டம்,எல்லைப் புறத்து மூன்று அவசரச் சட்டங்கள் முதலிய எல்லா அடக்குமுறைக்கும் எமது வாழ்த்து. அவசரச்சட்டங்களால் பீடிக்கப்பட்டார், பா திக்கப்பட்டார், சிறைப்பட்டார், செத்துப்பட் டார், அனைவருக்கும் நாம் கடமை செலுத்து கிறோம். அச்சட்டங்களை பிறப்பித்துள்ள வெ ல்லிங்டன் மகாபிரபுவுக்கும் நமது வணக்கம் சேருக

புதுவருடம் பிறந்திருக்கிறது சுக்கிர வா ரத்தில். அசுர குருவின் தினம் அசுர குரு இவ் வருடமெல்லாம் ஆட்சிசெலுத்தினும் செலுத் தலாம். பிறந்த நாளிலேயே போர்க்குறிகளெல்

'கொக்கில்லை கொங்கணரே'

"இதென்னடா சனியன்? எத்தனை இடைஞ்சல்? எவ்வளவு ஆபத்து? எதற்குத்தான் தப்பலாம்? பத்திரிகைத் தொழில் ஒரு பரம சங்கடமான தொழில். அதிலும் தேசியப்பத்திரிகையானால் சொல்ல வேண்டியதில்லை. கத்தியின் கூர்ப்புறத்தில் நடந்து செல்லுவது போல நடத்திச் செல்ல வேண்டும். எப்பக்கம் சருக்கினாலும் கிடு கிடு பாதாளம். வெட்டியான முதல் வேந்தன்வரை ஒவ்வொருவன் செய்யும் தப்பையும் அம்பலப்படுத்திச் சந்தியிலிழுத்து நிறுத்தி நிர்தாக்ஷண்யமாய்க் கண்டிக்கும் இயல்பிருந்து விட்டால் அப்பத்திரிகை அடியடிதோறும் ஆபத்திலேதான் செல்ல வேண்டியதாகிறது. சர்க்காரின் இராஜதுவேஷவழக்குகளுக்கும் தனிமனிதரின் மானநஷ்டதாவாவுக்கும், சமூகங்களின் பஹிஷ்காரத்துக்கும் இன்னும் எத்தனை ஆயிரமாயிரந்தொல்லைக்குத்தாளாகலாம். தலைக்குமேல் மயிரிழையில் கட்டித்தொங்கும் கத்திக்கு எந்த நேரமும் இரையாகலாம். ஆனால் வெறும் விளம்பரங்களைத்தாங்கி ஜீவனோபாயத்திற்கெனவே வாழும் பத்திரிகைகள் மாத்திரம் வாழலாம்; சந்தேகமில்லாமல் வாழலாம்.

இந்தக்கதையெல்லாம் என்னத்திற்கு? இப்பொழுது நமது தலைக்குமேல் "மான நஷ்டம்" என்னும் கத்தி ஓங்கப்பட்டிருக்கிறது. நமது தேசோபகாரியில் வெளியாகும் கட்டுரைகள் அநேகரது மானத்தைப் பறித்து விடுகிறதாம். ஜனாப் ஹாஜி எஸ். எஸ் ஷாகுல் ஹமீது என்பவரை "இழுத்துத்தள்ளு வெளியே" என்று நமது பத்திரியில் "ஓர் முஸ்லீம்" சொன்னாராம். நாம் எத்தனைபோழுதை கேட்டும் கல்லுப்போலிருந்துகொண்டு சுடுகாட்டுக் கணக்குக் கொடாமலிருக்கும் நமது ஸ்ரீமான் சி. பி. சோமசுந்தரம்பிள்ளை வக்காலத்து வாங்கிக்கொண்டோ அல்லது வெறும் விளம்பர (நோட்டீஸ்) பீஸ் வாங்கிக்கொண்டோ 31—12—31 உயிட்ட கடிதமொன்றை விடுத்துள்ளார். 24 மணி நேரத்துக்குள் அந்த ஓர் முஸ்லீமின் பேரும் ஊரும் வேண்டுமாம். இப்பொழுது 3 இருபத்துநான்கு மணி நேரங்கள் கடந்துபோய்விட்டன. நாம் நினைத்தோம் 25-வது மணியில் ஏதோ வருமென்று அப்படியொன்றும் வரவில்லை, வரப்போவதுமில்லை. ஜனாப் ஹாஜி ஹமீது அவர்களுக்கு ஒரேயொரு வார்த்தை "அக்கட்டுரையால் உங்கள் மானம் ஒன்றுமே போய்விட வில்லை. கேட்பார் பேச்சைக் கேட்கவேண்டாம்" இத்துடன் ஸ்ரீமான் ப. சி. சோ. பிள்ளைக்கும் ஒருவரி "தாங்கள் இன்னும் சுடுகாட்டுக் கணக்குக் கொடுக்கவேயில்லை. இப்படியெல்லாம் தூங்குகிறவர் தொடையில் கயிறுதிரிக்க வேண்டாம். கணக்கு வரட்டும்."

"கம்பைத் தமாஷின் விசித்திரம்" என்னும் தலைப்பைக் கொண்டு நோட்டீஸ் கொடுத்திருக்கும் ஸ்ரீமான் செட்டியாரும் இதைக் கொஞ்சம் கடைக்கண்ணால் பார்த்துக் கொள்ளட்டும். விடமாட்டோம். தப்புச் செய்பவர்களை சந்தியில் நிறுத்தவே செய்வோம்.

லாம் பூரண ஜோதியுடன் பிரதிபலிக்கின்றன. வருடம் பிறந்த முதல் மணியிலே காங்கிரஸ் காரியக் கமிட்டி போர்ச் சங்கமுழங்குகிறது. போர்ப்பறை சாற்றி போர்த்திட்டங்களும் வகுக்கப்பட்டாகிவிட்டன. புதுவருடத்தில் புதுப்போரும் துவக்கப்படுவதில் நற்சகுனமிருக்க வேண்டும். ஒன்று 1932-ல் இந்தியா சர்வநாசமடைய வேண்டும். இல்லை பரிபூரண விடுதலைபெற வேண்டும் சுதந்திரயுத்தத்திற்குக் காங்கிரஸும் அடக்குமுறைக்கு சர்க்காரும் தயாராகவேயிருக்கின்றன. இதன முடிவை முழு இந்தியாதான் நிர்ணயிக்க முடியும்.

பொருளாதார நெருக்கடியால் விழிபிதுங்கிக் கிடக்கும் உலகத்துக்கு இவ்வருடமும் நல்ல நேரத்தில் பிறந்திருக்கின்றதென்று சொல்ல முடியாது. 1914-ம் ஆண்டுக்கும் இந்த 1932-ம் ஆண்டுக்கும் ஒரு முறையில் ஒட்டிருக்கின்றது. 1914-க்கு கூட்டிய கூட்டுத்தொகை 15 ஆகிறது. அதேமாதிரியே 1932-க்கு கூட்டுத்தொகையும் 15. இதனால் எங்கே 1914-ல் எழுந்த உலகப்போர் ஏற்படுமோ என்றும் சந்தேகிக்க இடமாகிறது. எப்படியானாலும் போன வருடம் போகட்டும். வந்த வருடம் வரட்டும். வாழட்டும்

நாம்க்கே வாஸ்தே.

நமது நண்பரிருக்கின்றாரே அவர் ஒரு கிண்டல் பேர்வழி. எதற்கெடுத்தாலும் கோட்டாப்பண்ணுவதிலே அவருக்குப் பரம சந்தோஷம். அவரது கிண்டல்களை இடையிடையே கட்டுரைகளில் புகுத்துவதிலும் எமக்கு எல்லையில்லாத ஆசையுண்டு இருந்தாலும் அன்று நாம் அவருக்குக் கண்டிப்பாகச் சொல்லியிருந்தோம் "அந்தமாதிரி கிண்டல்களெல்லாம்" கூடாதென்று. இருந்தும் அவரது பிறவிக்குணம் போகவில்லை.

அகில பர்மா தென்னிந்தியர் பொதுக் கூட்டத்துக்குப் போயிருந்தோம். அகில இரங்கோனிலிருந்து சில ஆசாமிகள் கூடியிருந்தார்கள். இந்தமாதிரி ஒரு சங்கம் வேண்டவே வேண்டாமென்பவர்களெல்லாம் பேசட்டுமென்று நாம்க்கே வாஸ்தே சொன்னார் நாலைந்துபேர் நாம்க்கே வாஸ்தே பேசினார்கள். ஏனெனில் அவர்களுக்குத் தெரியும் செய்யப்பட்டிருந்த முன்னேற்பாடுகளெல்லாம். அப்புறம் வேண்டுமென்கிறவர்கள் முறைவந்தது ஸ்ரீமான் தம்பி எழுந்தார். விளம்பரப் பத்திரிகையில் அச்சிலடிபட்ட எண்பதின்மர் கூட்டத்தில் பெயர் பிரஸ்தாபிக்கப்படடதா ஒரே காரணத்தைக் கொண்டு ஆக்ஷேபிக்கலாமா? என்று கேட்டார். நமது நண்பர்தான் கிண்டல் பேர்வழியாயிற்றே தங்களது பெயர் விளம்பரப் பத்திரத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டதாலே தான் தாங்கள் ஆதரிக்கின்றீர்களோ? "என்று பதிலுக்குக் கேட்க எழுந்தார்" எல்லாம் நாம்க்கே வாஸ்தே "என்று நமது மந்திரத்தைச் சொன்னதின்மேல் அடங்கிவிட்டார். அதன்மேல் ஒரு பச்சோந்தி ஆசிரியர் மேடையேறினார்; கரடியாய்க் கத்தினார். போஷகர் பட்டியல் படிக்கப்பட்டது. அவர்களெல்லாம் அச் சங்கத்திற்கு போஷகர்கள் என்று பிரேரேபிக்கப்பட்டனர். ஐயோ! அப் பிரேரேபணையை ஆமோதிக்க நாதியில்லை. போஷகர்களை ஆதரிப்பார் கிடையாது. சங்க விதிப்படி அந்த அனுதிப் பிரேரேபணை குப்பைத் தொட்டியில் புதைபடவேணும். ஆனால் எல்லாம் நாம்கே வாஸ்தே யாகையால் சபைத் தலைவர் யோசேப்பு (மேரே குஷி) என்னிஷ்டம் என்று சொல்லிவிட்டார். தலைவர் தேர்தல் என்ற திரை விழுந்தது. திரு. பி. சி. ஷண்முகம்

ஒரு சின்ன தமாஷ்.

"சின்ன தமாஷ்" என்று சொன்னாலும் விஷயமென்னவோ பெரிதென்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் நமது உயிருக்கும், பொருளுக்கும் உழைப்புக்கும் பாதுகாப்பளிக்கக்கூடிய ஒரு விஷயம் சின்ன தமாஷாயிருக்க முடியுமா?

பர்மாவிலே தமிழர்கள் ரொம்பப்பேரிருக்கின்றோம். நாமெல்லாம் சிந்திச் சிதறிப்போய்க் கிடக்கின்றோமாம். நம்மனைவரையும் ஒன்று சேர்த்து ஒருமுகப் படுத்துவதற்காகச் சிலர் சேர்ந்து "தென்னிந்தியர் சங்கம்" ஒன்று கண்டிருக்கிறார்கள். தமிழர்கள் தென்னிந்தியர்தாம். ஆனால் ஆந்திரர்-கேரளர்-கன்னடர்களெல்லாம் யார்? வ— இந்தியா? அட்டதிக்கு பதினாறுகோணம் முப்பத்திரண்டுமூலைகளில் எதைச் சேர்ந்தவர்கள்? என்னும் கேள்வியே ஒரு தமாஷ்? அதற்கு விடை கொடுக்க முடியாது அன்று தென்னிந்தியர் கூட்டத்தைக் கூட்டி வைத்தவர்கள் ஆந்தையாய் விழித்தார்களே அது ஒரு தமாஷ்.

பிள்ளையைப் பிரேரிப்பதாகத் தாவித் தாவினர். ஆரோ ஒருத்தர் ஆமோதித்தார். அவரை யொருவர் ஆதரித்தார். இல்லாவிட்டால் நிற்க முடியுமா? இந்த இடத்திலே இல்லை அனுதைப் பிரேரேபணை அனாதையான இடத்திலே தூக்கத்திலிருந்தோ அல்லது புதைகுழியிலிருந்தோ எழுந்து வந்தவர்போல் இன்னொரு ஆசிரியர் தட்டுண்டு தடுமாறி நான் ஆமோதிக்கின்றேன் என்றாரே ஆமாம் சரியாய் அந்த இடத்திலேதான் நாம் மறுபடியும் நாம்கே வாஸ்தே என்றோம். நமது நண்பர் இல்லை யில்லை, "ரூப்யாக்கேவாஸ்தே" யென்று நம்மையும் ஆமோதித்த ஆசிரியரையும் திருத்தினார். அப்போதுதான் நாடகத்தின் இரகசியம் நமக்குத் தெரிந்தது. ரூப்யாக்கே வாஸ்தே என்று சொல்லாமல் ஏன் நாம்கே வாஸ்தே என்றோம் என்று நமக்குப்பட்டது. இருந்தாலும் சரி! தான் பெரியவர்களெல்லாம் நாம்கே வாஸ்தே சில்லரைப் பேர்வழிகளெல்லாம் ரூப்யாக்கே வாஸ்தே என்று நமக்கு நாமே சமாதானஞ் செய்து கொண்டோம். பொதுக்கூட்டமா? சீ பிழைக்கும் வழி! என்றெழுதிய சுதர்தாளின் தலைப்பும் ஞாபகத்துக்கு வந்தது.

திவால் பஹதூர்.

கம்பாஸ்ட்டருடைய தப்பில்லை. திவான் பஹதூர் என்பதற்குப் பதிலாக திவால் பஹதூர் என்று வாசித்து அர்த்தம் செய்து கொண்டால் நீங்கள்தான் தப்புச்செய்தவர்கள். திவான் பஹதூர், இராவ்பஹதூர் இந்த மாதிரி பட்டங்கள் இந்த இந்திய சர்க்காரால் வழங்கப்படும் சம்பிரதாயமிருக்கிறது அதே போல் நாமும் நமது சந்தோஷ மிகுதியால் இப்பட்டம் வழங்கலாமா? என்று கருதினோம். புது வருஷமில்லையா? வைஸ்ராய் சாகேப் கூட வங்காளத்திலுள்ள ஜில்லா மாஜிஸ்ரேட்டுகளுக்கு இராணுவ அமுல் செலுத்த அதிகாரப் பட்டம் அளித்து சர்க்கார் சிப்பந்திகளுக்கும் ஜனங்களுக்கும் புது வருஷப்பரிசு கொடுத்திருப்பதுபோல நாமும் நமது நண்பர்களுக்கு திவால் பஹதூர் பட்டத்தை ஏன் கொடுக்கக்கூடாதென்று உங்களைத்தானே கேட்கிறேன்.

மாஜி என்ற பதத்திற்குப் பொருத்தமான அருத்தம்சொல்லப்போனால் ஒருக்கால்இருந்து இப்பொழுது இல்லாத ஒரு பதவிதார் என்றே கூறவேண்டும். இல்லையென்று எவராவது மறுப்பீர்களா? முடியாது. அதேமாதிரி திவால் என்பதற்கும் இன்ஸால்வெண்டான--இப்பொழுது ஐவேஜு இல்லாத என்ற அருத்தமுஞ் சொல்லலாம். திவால் என்றால் சுவறு குட்டிச் சுவறு என்றுஞ் சொல்லப்படுகிறதென நமது நண்பர் ஞாபகமூட்டுகிறார். அப்பொருள் இப்பொழுது தேவையில்லை யென்று தள்ளிவிட்டோம். இப்பொழுதில்லாத என்ற பொருளில் தகுதியுடைய நண்பர்களுக்குத்தான் நாமிப்பொழுது திவால் பஹதூர் பட்டம் வழங்க வந்தோம். தகுதியென்ற பதத்தையெப்பொழுது உபயோகித்துவிட்டோமோ கண்டிப்பாய் தகுதியாளரையே பொறுக்கி எடுப்பது நமது கடமையாகும்.

இனிச் சொல்லப்போகும் மூன்றாவது தமாஷ்தான் ரஸமாயிருக்கும். தென்னிந்தியர்களாகிய தமிழர்களது தலையெல்லாம் கழுத்திலே கட்டாயம் இருக்கவேண்டியதுதான். இதை ஒவ்வொருவனும் கண்டிப்பாய் விரும்பாமலிருக்கமாட்டான். நம்முடைய பணங்களும் பெட்டிகளிலே பத்திரமாயிருக்கத்தான் வேண்டும். சிலபலம் ஆடு மாடு, கழுதை, குதிரை, செருப்பு விளக்குமாறு மண்ணாங்கட்டி ஆப்பை துடுப்புகளெல்லாம்பாதுகாப்பளிக்கப்படவேண்டாமென்று எவனாவது சொல்லுவானா? பர்மா வட்ட மேஜைக்கு வட இந்தியர்களாகிய ஹாஜியாரும் காவாஜியாரும் போய்ப் பாதுகாப்புக் கொண்டு வந்தாலும் தென்னிந்தியருக்குப் பகிர்ந்து கொடுப்பார்களோ கொடுக்கமாட்டார்களோஎன்றுபோலும் இப்பொழுதுஅகில பர்மா தென்னிந்தியர் சங்கம் ஸ்தாபிதம் செய்யப்பட்டு தென்னிந்தியர்களாகிய தமிழர்களுக்காகப் பல்லும் நகமுமாய்ப்பாடுபடப்போகிறது இனி நமக்குப் பயமில்லை. நமது தலைக்கும், பொருளுக்கும் உழைப்புக்கும் ஆபத்தில்லை. அப்படி யொருக்கால் யாருக்காவது சந்தேகம் பிறந்து-தலையில் பெரும பாரமிருப்பதாகவோ அல்லது தலைக்குமேல் ஆபத்திருப்பதாகவோ தோன்றினால் உடனே அச் சங்க காரியதரிசியிடம் தலையைக் கொடுத்துவிடலாம் (இன்சூர் செய்த மாதிரி) அவர் என்னவேண்டுமானாலும் செய்துகொள்ளட்டும். காரியதரிசியும் நமது நண்பர். தமாஷ்தானே கோபித்துக்கொள்ளவா போகிறார்?

தேசோபகாரி, ரெங்கூன்மெயில் போன்ற சிறந்த தேசிய பத்திரிகைகளின் ஆசிரியர்களாகவிருந்தவர்கள் சிலர் அப்பொழுது அவற்றின் கொள்கைக்கேற்றவாறு நடித்துவிட்டுஇதுகாலை தங்களுக்கெனத் தனிப் பத்திரிகை ஆரம்பித்து இயல்புக் குணத்துக் கேற்றவாறு சர்க்காரின் அடிவருடிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நடத்துகின்றார்களே அவர்கள் இவ்வருடமுதல் திவால் பஹதூர் பட்டத்துடன் அழைக்கப்படலாம். தங்களைப் போஷிப்பதற்கு பலரைத் தேடித்திரியும் பலர் பல சங்கங்களுக்குப் போஷகர்களாகின்றார்களே அவர்களுக்கும் திவால் பஹதூர் பட்டமளிக்கின்றோம். 28 மாதங்கள் சங்க சந்தாக் கொடுக்காத ஒரு பேர்வழிக்கும் ஒரு திவால் பஹதூர்பட்டம் இந்தப் பட்டமளிப்பு விழாவில் நமது நண்பருக்கு அக்கிராசனப்பதவி யளித்த அன்பர்களுக்கு நமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக

மானம் போய்விட்டதாமே

"இழுத்துத்தள்ளு வெளியே" என்ற தலைப்பில் 23—12—31ல் வெளிவந்த கட்டுரையால் தமது மானம் போய்விட்டதாகவும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போவதாகவும் சோலிய முஸ்லிம் வர்த்தக சபைத்தலைவர் தேசோபகாரி ஆசிரியருக்கு லாயர் மூலம் கடிதம் அனுப்பியிருக்கிறார். வர்த்தக சபை போன்ற ஒரு முக்கிய ஸ்தானத்துக்கு கல்வி, செல்வம், நிதானபுத்தி, நேர்மை, சகிப்புத்தன்மை தாராள நோக்கம், நடுநிலைமை, விஷயங்களை ஒழுங்காக நடத்தும் ஆற்றல் ஆகிய குணங்கள் அமையப்பெற்றவரே தலைவராக இருக்க முடியும் என்றும், அப்படிப்பட்ட குணங்கள் இல்லாதவர் லாயக்கில்லை என்றும் அதில் குறிப்பிட்டிருப்பதுடன் தற்காலத் தலைவர் எடுபட்டு புதிய தலைவர் வருவதற்கு என்ன அவசியம் என்றும் கேட்கப்பட்டிருக்கிறது. சபைத்தலைவருக்கு அக்குணங்கள் இல்லையென நாம் சொல்லவில்லை. பொதுவாகத் தலைவருக்கு இருக்கவேண்டிய குணங்களையும் அக்குணங்கள் இல்லாதவரை வெளியே இழுத்துத் தள்ளுவதில் யாருக்கும் ஆக்ஷேபமிருக்காது என்றும் பொதுப்படையாகவே கூறினோம். சபைத்தலைவர் தம்மைக் கூறுவதாகவும், அதனால் தமக்கு மானங் குலைந்து விட்டதாகவும் சொல்லி முன்வந்திருக்கிறார். நாம் சொல்லாமலிருக்கும்போது தமக்கு அதனால் மானம் போய்விட்டதாக ஸ்தாபித்து அவரே முன்வருவதில் எவருக்கும் ஆக்ஷேபமிருக்காது. பல சாட்சிகளை தயாரித்து அவருக்கு அக்கட்டுரையில் மானங் குலைந்துவிட்டது என்று கோர்ட்டில் அவரே நிரூபிக்க முன்வருவதும் அக்கட்டுரையால் மானம் போய்விடவில்லையென்று மற்றொரு தரப்பில் நிரூபிக்க முன்வருவதும் ஒரு வேடிக்கையாகவே இருக்கும். அக்கட்டுரையில் மானங் குலைந்துவிடவில்லையென்றே நாம்கூறுகிறோமாயினும் மானம் போய்விட்டதா? இல்லையா? என்று கோர்ட்டிலேயே முடிவுசெய்து பக்கா ரிக்கார்டு செய்யவேண்டுமென்று வர்த்தகசபைத் தலைவர் விரும்புகிறதாகத் தெரிகிறபடியால் அவர் இஷ்டத்துக்கே விட்டுவிடுகிறோம்.

ஓர் முஸ்லிம்.

போர் ஆரம்பிக்குமா?

சர்க்கார் தரப்பில் காங்கிரஸ் இயக்கங்களை நசுக்கிவிடுவதற்கான சகல ஏற்பாடுகளும் தயாராகியிருக்கின்றன. அவசரச்சட்டங்கள், குறுந்தடி, நெடுந்தடிகள் முதலியவைகளும் ஆர்டர் கொடுக்கப்பட்டுவிட்டன. அடுக்கிவைக்கப்பட்டிருக்கலாம். போன போரில் விசேஷ போலீஸ்காரர்களாகச் சேர்க்கப்பட்டிருந்தவர்களையெல்லாம் தயாராயிருக்கும்படி எச்சரிக்கை செய்துவிடும்படி மாகாண சர்க்கார்களுக்கு இரகசியச்சுற்று உத்தரவுகளும் அனுப்பப்பட்டாகிவிட்டதாக அறிகிறோம். அப்படியானால் சர்க்கார் சகல அடக்குமுறைக்கும் தடுக்குமுறைக்கும் தயார். காங்கிரஸ் தரப்பிலோ? எல்லாப் பொறுப்பையும் வைஸ்ராயின் தலையிலே போட்டிருக்கிறார்கள் தில்லி ஒப்பந்தம் ஒன்று ஊடே தொங்குகிறது. அதைஉடைத்து சர்க்கார் வாயால் வெளியாக்க வேண்டுமென்று காங்கிரஸ் காத்திருக்கிறது. நிலைமை நெருக்கடி அடுத்த போருக்குத் தயாராயிருங்கள் என்று காந்திஜியின் இரு நெருங்கிய தளகர்த்தர்கள் கூறியிருப்பதிலிருந்தும் காரியக்கமிட்டி போர்த்திட்டங்கள் வகுத்துள்ளதிலிருந்தும் வைஸ்ராய்க்கும் காந்திஜிக்குமிடையே நடந்துள்ள கடிதப் போக்குவரத்தாலும் வைஸ்ராய் கல்கத்தாவில் சமீபத்தில் பேசிய பேச்சிலிருந்தும் சமாதான மேகங்கலைந்து கொடூரமான கரிய மேகம் தலைக்குமேல் தொங்கிக்கொண்டிருக்கின்றதென்பதைச் சந்தேகமின்றிக் கண்கூடாகக் காண்கின்றோம். எந்த நிமிஷமும் அரசியல் வானங்குமுறி இடிமின்னல் எல்லாம் விழலாம்

இவ்வார முதல்?

நமது தேசோபகாரி வாசகர்களுக்கெல்லாம் இப் புதுவருட வைபவார்த்தமாக ஒரு நல் விருந்தளிக்க ஏற்பாடு செய்துள்ளோம். எல்லோரும் இதுவரை ஆதரவளித்து எங்களையும் எங்களது தேசோபகாரியையும் கௌரவித்ததுபோல் இனியும் ஆதரவளிப்பீர்களென்று கேட்டுக்கொள்ளுகிறோம். நாங்களளிக்கும் விருந்து என்னவாயிருக்கும்? வடை பாயாசமாயிருக்க முடியுமா? வார மும்முறையாக வெளியிட உத்தேசித்துள்ளோமே அதுதான் நமது விருந்து ஞாயிறு, புதன், வெள்ளி வாரங்களில் உண்டு மகிழுங்கள். —ஆசிரியன்

Printed & Published By A. V Sellam Pillay at the Desopakri Press, 210 ,36th Street Rangoon

பதிவு எண் 245 மலர் 9 (காந்தி மலர்.) இதழ் 46 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை

DESOPAKARI

ஞாயிறு, புதன், வெள்ளி வெளியீடு

ஆசிரியர்:— கா. நா. தினகரன்.

210-36-வது வீதி, இரங்கோன், (6—1—32) மார்கழி 22உ புதன்கிழமை

பகவானே போய்வா!

விடுதலை பெறுவீர் விரைவா நீர்!
வெற்றி கொள்ளுவீர் என்றுரைத்தெங்கும்
கெடுதலின்றி நந்தாய்த்திரு நாட்டின்
கிளர்ச்சி தன்னை வளர்ச்சி செய்கின்றான்
சுடுதலும் குளிரும் உயிருக்கில்லை;
சோர்வுகள் வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லை
எடுமினோ! அறப்போரினை யென்றான்
எங்கோ மேதக மேந்திய காந்தி!

கவிபரசன்.

காந்திஜீ கைது செய்யப்பட்டு விட்டார். இன்னேரம் எரவாடா சிறையிலே தவங்கிடப்பார். 1931 ஜனவரியில் சிறையிலிருந்து வெளிவந்தார்; 1932 ஜனவரியில் சிறைக்குள்ளே போய்விட்டார். இடையிலிருந்த ஒரு வருடங்களுக்கிடையில் நாலு சுவரில்லாத அகன்ற அடிமைச் சிறையிலே திரிந்தார். ஓயாத வேலை பனிரண்டு மாதங்களிலும் பகலிரவென்று பாராமே பாடுபட்டு வந்தார். காந்திஜீயும் இர்வின் பிரபுவும் செய்துகொண்ட ஒப்பந்தத்தை அப்படியே யெழுத்தெழுத்தாய் ஒப்புக்கொண்டு நாடுநடக்க வேண்டுமென்று காந்திஜீ யெடுத்துக் கொண்ட சிரமமெத்தனை; எத்தனை அலைச்சல்; எத்தனை இரவுகள் தூக்கமில்லாது கழிந்தன, கத்தை கத்தையாக எவ்வளவு கடிதங்கள்தான் சர்க்காருக்கு எழுதியிருப்பார், சர்க்காரின் முடக்கு வாதங்களை யெல்லாம் எவ்வளவுதான் நோக்கமுயற்சித்திருக்கிறார். அடிக்கடி சர்க்கார் செய்துவந்த ஒப்பந்தமீறிய செயல்களை அவ்வப்போது எடுத்துக்காட்டி எத்தனை குற்றப் பத்திரங்களை படித்திருக்கிறார் தெரியுமா? ஆண்டவனே! உனக்கு ஓய்வுவேண்டும் சிறையைத்தவிர வேரிடத்தில் உனக்கு மனச்சாந்தி; சரீரஓய்வு; நெஞ்சு நிம்மதி; இவைகளெல்லாம் கிடைக்கப் போகிறதில்லையென்று நீயே பன்முறை திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றாயல்லவா? வெளியிலிருக்கும்வரை நீயும் சோர்ந்திருக்கமாட்டாய் நாங்களும் உன்னைக் கசக்கிப்பிழிந்து வேலை வாங்காது விடமாட்டோம். உன் சரீரமென்ன தங்கத்தால் பொன்னால் வார்க்கப்பட்டிருக்கிறதா ஓயாது வேலைசெய்ய? செய்யவேண்டியதனைத்தும் செய்துவிட்டாய்; சொல்லவேண்டியதெல்லாம் சொல்லிவிட்டாய்; நாட்டைத் தயார்ப்படுத்த வேண்டியதெல்லாம் படுத்திவிட்டாய். சுதந்திரக் கோவிலின் வழியைக்காட்டியாயிற்று; கதவையும் அகலத் திறந்துவைத்துவிட்டாய். இனிமேல் உனக்கு ஓய்வுகொடுக்க வேண்டியதுதான் தர்மம்; முறை. அப்படியே கொடுத்தாகிவிட்டது. உனது எரவாடாக் கோயிலிலே கோயில்கொண்டிரு. உனது ஆத்மஜோதி—அஹிம்ஸை சக்தி—சிறைச் சுவருகளையுந் துளைத்துக்கொண்டு இந்தியா வெங்கணும் என்? உலக முழுமையிலுமே ஜெகஜ்ஜோதியாய் பிரகாசிக்கட்டும். உனது திருவவதார மூர்த்தியிலே—உனது தெய்விக மூர்த்தண்யத்திலே சுதந்திரதேவி தோன்றுவாள்.

இனிமேல் இந்தியா எவரது கட்டளைக்காகவும் காத்துக்கொண்டிருக்க வேண்டாம்

போர்த் திட்டங்களெல்லாம் வகுக்கப்பட்டாகி விட்டன. காந்தி—இர்வின், இல்லையில்லை காந்தி வில்லிங்டன்—சர்க்கார் ஒப்பந்தம் உடைந்துபோய் விட்டது. இதை வெறும் வார்த்தையாலல்ல கடுமையான செயலால்—இந்தியாவின் சர்வாதிகாரி காந்திஜியையும், முடிசூடா மன்னன் சர்தார் பட்டேலையும் கைதுசெய்து சர்க்கார் காட்டிவிட்டது. இனிமேலென்ன? அந்த மாதிரி ஒரு ஒப்பந்தமிருந்த தென்பதையே மறந்து விட்டு விட்டவிடத்திலேயே போரை ஆரம்பிக்க வேண்டியதுதான் என்று சர்தார் ஒருதரம் உத்தரவு பிறப்பித்துள்ளது ஞாபகத்துக்கு வருகிறது. "வாழில் முப்பதுகோடியும் வாழ்வோம், வீழில் முப்பதுகோடியும் வீழ்வோம்" என்ற பாரதியின் தீர்க்க தரிசனமும் இந்நிமிடம் சிந்தையில் தட்டுகிறது'

அஹிம்ஸைப்போர் ஆரம்பித்து விட்டது. தலைவர்களெல்லார் ஒருவர்பின்னொருவராய்ச் சிறைக்குள் செலுத்தப்படுகிறார்கள். எஞ்சியிருப்பவர்களும் ஏககாலத்தில் மறைக்கப்படலாம். ஒவ்வொரு தொண்டனும் தலைவனாகலாம். எல்லாரும் இந்நாட்டு மன்னராகலாம். போரிலே பிறந்த இந்த வருடம் போரிலே தான் முடியுமோ இல்லை சமாதானத்திலே சமாப்தியாகுமோ எவரறிவார்? இதை முழு இந்தியாவே முடிவு செய்யட்டும்.

இங்கிலாந்துக்கு பகவான் தூதுசென்றார். இந்தியாவின் கோரிக்கைகளை வட்டமேஜையின் மீது விரித்துவைத்தார். எந்த வொரு பிரிட்டிஷ் மந்திரியும் அவைகளைச் சட்டைசெய்தானில்லை. இரவு பகலாக ஜேம்ஸ் மாளிகைக்கும் கேட்ஸ் பிரிட்ஜுக்குமாக நடந்தார். வெறுங்கையோடனுப்பிவிட்டனர். டிசம்பர் 28உ திங்கட்கிழமை இந்தியா வந்திறங்கினர். மறு திங்கட்கிழமை—8 நாள் இளைப்பாறுவதற்குள்ளாகவே கைது செய்யப்பட்டுவிட்டார். சிறையிலேதான் அவர் இளைபாற முடியுமென்று ஏரோப்ளேன் வெல்லிங்டன் எண்ணினர் போலும். அப்படியானல் அந்த எண்ணத்திற்கொரு வாழ்த்து.

பகவானே! பகவத் கீதையைப் படித்துக் கொண்டிருங்கள். பகவத்கீதைக்கு வியாக்கியானம் எழுதிக்கொண்டிருங்கள். இராஜயோகம் கர்மயோகம், பக்தயோகங்களெல்லாம் செய்யுங்கள். சர்க்காரவ இன்னும் சிறிது வேகமாகச் சுற்றிக் குறைந்த நேரத்தில் அதிகம் நூல் நூற்கக் கற்றுக் கொள்ளுங்கள். சனாதன தர்மத்தைப் பற்றியும் பிரமச்சர்யத்தைக் குறித்தும் இன்னும் இவைபோன்ற சிக்கலான வேதாந்த சித்தாந்தங்களைப்பற்றியெல்லாம் விசாரணை செய்யுங்கள். முடிவாக பகவானே! நமஸ்காரம்! எங்களனைவரையும் ஆசிர்வதியுங்கள். எங்களுக்காக தினந்தினம் உங்களது பிரார்த்தனைகளில ஒரு பிரணவ மந்திரத்தைப் பிரயோகியுங்கள். உங்களுக்கு நீண்ட ஆயுளைத் தரும்படி ஆண்டவனைச் சதா இந்தியா வழிபட்டுக்கொண்டேயிருக்கும். வந்தேமாதரம்.

சத்திய ரூபன் காந்தி.

(ரிச்சர்டு கிரெக்)

"எத்தகைய அக்கிரமங்களையும் எதிர்த்துப் போராடும் அனுபவம் மகாத்மாவுக்கு உண்டு அந்தப் போராட்டங்களிலெல்லாம் அவர் வெற்றி யடைந்ததற்கு இணையாக வேறெவருமடையவில்லை பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் உலகத்திலுள்ள பெரிய தனவந்தர்கள் எவரும் அவருக்கு எவ்விதப் பதவியையும் அளிக்கமுடியாது அவருடைய சக்திக்கு ஸமானமான சக்தி தரவும் முடியாது புதிய கவுரவத்தையும் உண்டாக்க முடியாது அவருடைய ராஜீய அறிவு அவருடைய உழைப்பு அவருடைய பிடிவாதம் அவருடைய தியாகம் அவருடைய பணிவு இவைகள்தான் அவரை உலகிற் பெரியோராக ஆக்கியுள. அவரை விலக்கு வாங்கவும் முடியாது அவருக் ஒன்றையும் விற்கவுமிட்டார் அவரைப் பயமுறுத்தவும் முடியாது அவரிடம் இச்சகமபேசி ஏமாற்றவும் முடியாது அவர் இவ்வாறு ஒரே மாதிரியாக இருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு சத்தியத்தால் நேசமும் ஏழைகளுக்கு உழைப்பும் கொண்டிருப்பதாலேயே அவரை உலகம் போற்றுகிறது.

தேசோபகாரி

வருஷம் 1-க்கு ரூ. 3 0 0

ஆறு மாதம் ரூ. 1 8 0

பாத சந்தா அணு நான்கே

ஐயோ! ஐரோப்பாவே!

(ஸ்ரீஜத் ரொமெயின் ரோலண்டு)

ஆசியாவில் ஜனங்கள் விழிப்படைந்து வருகின்றனர். தனக்கு ஆயுதமுண்டு, தானும் ஓர் ஆளென்பதை ஜப்பான் காட்டுகின்றது; சீனம் விழித்துக்கொண்டது. இனி அது தூங்கப் போவதில்லை காந்தியடிகளின் இந்தியாவோ தனது சக்தியை அறிந்துகொண்டு விடுதலைப் போருக்கு ஆரம்பித்துவிட்டது.

ரப்பர் ரதங்களேறி போட்டார்) ஸ்வதந்திர தேவதையை ஊர்வலம் கொண்டுவருவதாகச் சொல்லி ஆத்ம ஒளி, கலை, விஞ்ஞானம், முன்னேற்றம், நாகரிகம் என்றவியாக்கியானம் செய்த பேர்வழிகள் இப்போது எங்கேயோ மறைந்துவிட்டனர் தங்களுடைய விலங்குகளை முறித்தெறிய முனைந்திருக்கும் ஆசிய மக்கள் நடுவிலும் ஆப்பிரிக்க சகோதரர்களின் நடுவிலும் ஏராளமான கலை முதலியன உண்டு கொட்டிக்கொட்டி அளப்பானேன்? ஐரோப்பாவினுடைய சுய நலத்தின் காரணமாகச் சென்றுள்ள ஓடுகாலிகளுக்காக நமது ஜோல்ஜர்கள் இனி உதவிசெய்யப் போகின்றார்களா என்ன?

என்மீது ஆணைவைத்துச் சொல்லுகின்றேன். இந்த ராக்ஷஸச் சண்டைக்கு நான் ஜோல்ஜராகப்போகவேமாட்டேன். ஐரோப்பாவே! உன்னை நான் எதிர்ப்பேன். உனது பேராசையைத் தாக்குவேன்: இந்தியர், சீனர் முதலிய எனது சகோதரர்களுக்காக, குறையிடப்பட்ட தேசத்தினர்க்காக நான் பரிந்துகொண்டு நிற்பேன் நீதியின் பெயராலும் ஜாதி உரிமையின் பெயராலும், நாகரிகத்தின் பெயராலும், நான் போரிடப் போகின்றேன் அநேக தேசமக்களின் செல்வத்தைக்கொள்ளை யிட்டார்கள். ஆனால் அத்தேச ஜனங்களிடம் ஆத்ம பலம் இருக்கிறது அறிவு ஒளிர்கின்றது அவர்களுடைய தங்கத்தைப பறிக்க முடிந்ததேயன்றி அவர்களது அறிவையும் நாகரிகத்தையும் அசைக்க முடியவில்லையல்லவா?

மேனாடுகளுக்கும் கீழ்நாடுகளுக்கும் ஏற்படப்போகும் மகாயுத்தம நடக்கக் கூடாதென்பது எனது கோரிக்கை ஆயினும் அது ஏற்

மந்திரவாதி மகாத்மா.

(ஜி. கே. செஸ்டர்டன்)

நாம் ஒரு காலத்தில் ஹைதர் ஆலியென்ற மகமதியரோடு போராடினோம் அவருடைய எதிர்ப்பு பூலோகத்தில் சர்வ சாதாரணமாக நடந்துவரும் யுத்தங்களைப் போலிருந்தது இரு கக்ஷிக்காரர்களும ஒரே விதமான ஆயுதங்களை அப்போது உபயோகித்தனர் ஆனால் இப்போது காந்தியின் சாத்விக எதிர்ப்பு நம்முன்னே நிற்கின்றது இத்தகைய எதிர்ப்பு இந்த பூவுலகத்தைச் சேர்ந்ததல்ல மகாத்மா ஏதோ ஓர் மந்திரவாதிபோலிருக்கிறார் அவருடைய தத்துவத்தை நம்மால் அறிந்துகொள்ள முடியவில்லை

மிருகபலப் பிரயோகம் உலகினின்று ஒழிய வேண்டுமென்று கூறுகின்றவரர்கள் 100கரு 2 பேர் இருந்தால் போதுமானது. இந்தக் கொள்கைக்காக வாதாடுவதால் சிறைபுக நேர்ந்தாலும் அல்லது அதைவிடக் கடின தண்டனைகள் நேர்ந்தாலும் கொள்கையை ஸ்தாபித்தே தீர வேண்டும்.

—ஈன்ஸ்டின்.

பட்டுவிட்டால் எனது மரணக் குழியில் நான் பாயப் போகிறேன் லெனினுடைய ஆத்மாவுக்கும், மகாத்மா காந்தியடிகளுக்கும் சொல்லுகின்றேன்.

ஹே மகாத்மா! நான் உங்களுடைய கோஷ்டியைச் சேர்ந்தவன் லக்ஷக்கணக்கானவர்களில் நான் ஒருவனாயிருக்கிறேன் என்னுடைய வாழ்நாளனைத்தையும் தாராள நோக்கங்களோடு செலவழித்திருக்கிறேன் நசுக்கப்பட்ட தொழிலாளி, ஜாதி, சமூகம் இவற்றின் பிரதிநிதி நான்தான்.

ஐரோப்பாவுக்குச் சொல்லுகின்றேன். ஹே ஐரோப்பாவே! நீ விசாலமாக மாறவேண்டும். இல்லாவிடின் செத்துப்போக வேண்டும். சுதந்திரமென்ற ஓர் போலிக் குல்லாவினால் முகத்தை மூடிக்கொண்டு ஏன் நடிக்கின்றாய்? ஐரோப்பாவைவிட அகன்றதான ஓர் தேசம் நமக்குத்தேவை. அந்தத் தேசத்தின் கதவுகளைத்திறக்க தேவதைகள் மணியடித்துவிட்டனர்.

இந்தியாவெங்கும் தடுக்கு முறை:

கண்டனக கூட்டம் கலைக்கப்பட்டது

பம்பாய் ஜன 4௳

இன்று அதிகாலையில் சரியாக மூன்று மணிக்கு போலீஸ் கமிஷனர் மிஸ்டர் வில்சன் கான்பகதூர் தேசாயுடனும் இதர மூன்று போலீஸ் உத்தியோகஸ்தர்களுடனும் ஓர் மோட்டாரில்மணிபவனம் சென்றார். அதுசமயம் அனைவரும் நித்திரையிலிருந்தமையால் ஆங்கு பூரண அமைதி நிலவியது. சிறு கூட்டத்தினரான பத்திரிகைப் பிரதிநிதிகள் அது சமயம் ஆங்கு காத்திருந்தனர்

காந்தியடிகள் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தபொழுது கைது செய்யப்பெற்றார் இதற்குள் ஏற்கனவே சர்தார்வல்லபாய் பட்டேலும் கைது செய்யப்பெற்றிருந்தார். இருவரும் மோட்டாரில் எரவாடா சிறைக்கு அதிகாலையில் 3-30 மணிக்கு கொண்டுபோகப் பட்டனர்.

காந்தியடிகள் கைது செய்யப்பெற்ற செய்தி நகரில் காட்டுத் தீயெனப் பரவியது! மக்கள் ஏராளமாக மணிபவனத்தில் கூடிவிட்டனர்; காந்தியடிகள் மோட்டாரில் ஏறுவதைக் கண்டனர். வந்தேமாதரம் காந்திக்குஜே! என்ற கோஷங்களிடையே மோட்டார் மறைந்தது.

அலகபாத் ஜனவரி 4௳

காந்திஜியையும் சர்தார் படேலையும் கைது செய்ததுபற்றிக் கண்டிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊர்வலத்தை போலீஸார் தடுத்துவிட்டனர். ஊர்வலம் புறப்படவிருந்த இடத்தில் ஏராளமான ஜனங்கள் கூடியிருக்கையில் போலீஸ்படை குறுக்கிட்டு கலைத்தனர். அதனால் பி. மகாதேவ பிரசாத் என்பவர் கொல்லப்பட்டார். அவர் ஒரு போஸ்ட்டாபீஸ் உத்தியோகஸ்தர் அனேகர் படுகாயப் பட்டனர். பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். வி. என். திவாரி, நர்பதா பிரசாத்சிங் கேசவ மாளவியா, ஆர் எல் பண்டிட் முதலிய உள்ளூர்த் தலைவர்கள் பலரது பெயரொட்டியிருக்கிறது. புருஷோத்தம தாஸ் பார்க்கை போலீஸ்காவல் செய்து வருகின்றனர். எவ்வித கூட்டமும் நடைபெறவில்லை.

பிந்திய செய்தி

அலகபாத் ஜனவரி 4: இன்று மாலை 30 பேர் கைதி செய்யப்பட்டனர். ஒருவர் கொலையுண்டார். ஜில்லா மாஜிஸ்திரேட் மிஸ்டர் பாம் போர்டும், சூப்பிரண்டெண்ட் மிஸ்டர் மிஷர் லாலும் ஒரு பெருத்த போலீஸ் படையுடன் முழுதும் அங்கேயே யிருந்தனர். கூட்டம் நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்து அவ்வப்போது போலீஷார் அதைக் கலைக்கவேண்டியதாயிற்று உடனே ஸ்ரீமதி உமாநேரு அங்கு தோன்றிக் கூட்டத்தைக் கலைந்துபோகும்படி தொண்டர்கள் மூலம் சொல்லச்செய்தார். அவ்வளதான் கூட்டம் கலைந்துவிட்டது; அமைதி நிலவுகிறது.

கல்கத்தாவில் தடியடி

கல்கத்தா ஜனவரி 4: சென்ற வருட சட்ட மறுப்பு மறுபடியும் இன்று பிற்பகல் ஆரம்பிக்கப்பட்டது. சிரத்தானந்தா பார்க்கில் ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது இரண்டாயிரம் பேருக்குமேல் கூடியிருந்தனர் போலீஸ் கமிஷனருடைய உத்திரவின்மேல் அக் கூட்டத்தை போலீஸார் கலைத்தனர். கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னால் அக்கூட்டத்தைக் கூட்டி வைத்தவர்களுக்கு போலீஸ் கமிஷனர் தடை யுத்தரவொன்று சாதரா செய்தார். உத்தரவு கூட்டத்தில் ஆங்கிலத்திலும் வங்காளி பாஷையிலும் வாசிக்கப்பட்டது. கூட்டி வைத்தவர்களையே அக்கூட்டத்தைக் கலைத்துவிடும்படி போலீஸார் கேட்டனர். மறுக்கப்பட்டதால் குறுந்தடியா லடித்துக் கலைத்தனர். மூன்று பேர் காயமடைந்தனர். மூன்று பேர் கைதி செய்யப்பட்டனர்.

ஃ ஃ ஃ

பவானி பூரிலும் அம்மாதிரியே கூட்டம் கலைக்கப்பட்டதில் இரண்டுபேர் காயமுண்டனர். போலீஸ் கமிஷனர் 62 ௨ கல்கத்தா போலீஸ் ஆக்டின்படி (1) சாமான் பஹிஷ்காரம் (2) சாமான் விற்பனையைத் தடுத்தல் (3) சட்டத்தை மீறுதல் (4) சட்ட மறுப்பென்னும் இயக்கத்தை நடத்தல் (5) 1908 வருஷத்திய

அடக்குமுறை: கைதிசெய்யப்படல்.

கிரிமனல் லா அமெண்டுமெண்டு ஆக்டின் 15-வது பிரிவுப்படி சட்ட விரோதமான சங்கங்கள் முதலிய யாவும் ஒரு வாரத்துக்கு நடக்கக் கூடாதென்றும், எவ்வித கூட்டமோ, ஊர்வலமோ நடத்தக் கூடாதெனவும் உத்திரவு பிறப்பித்துள்ளார்.

கல்கத்தா இந்திய வர்த்தக சங்கத்தின் கண்டனம்

காந்திஜியை கைதி செய்ததுபற்றி கல்கத்தா வர்த்தக சங்கத்தார் கீழ்கண்ட தந்தியை வைஸ்ராய்க்கு விடுத்துள்ளனர்:—

காந்திஜி, சர்தார் படேல், சுபாஷ் பாபு, முதலியவர்களைக் கைதி செய்ததுகேட்டு இச் சங்கம் பெரிதும் வருந்துகிறது. வைஸ்ராய் காந்திஜிக்கு பேட்டி மறுத்ததைக்கண்டு இச் சங்கம் வருந்துவதுடன், நாட்டி லேற்பட்டிருக்கும் இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் வைஸ்ராய் மறுத்து அவர் கெட்ட போதனைக்காரர்களின் பேச்சைக் கேட்டதையும், அவரது குறுகிய நோக்கத்தையுமே குறிக்கிறது. வெகு மிதவாத அரசியல் நோக்கமுடைய வர்த்தகர்கள் இச்சிறு சாதாரண மரியாதையைக் கூட காந்திஜிக்கு வைஸ்ராய் அளிக்க மறுத்துவிட்டதற்காக வருந்தாதிருக்க முடியவில்லை. காந்திஜிதான் தேசத்தின் ஏகப் பிரதிநிதி. அவர் தீர்க்கமான முடிவுக்கு வருவதற்கு முன்னால் வைஸ்ராயைக் கலந்தாலோசிக்க விரும்பினார். இம்மாதிரியான அடக்கு முறையாலெல்லாம் நாட்டின் ஜீவாதாரமான சுயமதிப்பை, நாட்டு மக்களின் முடிவான தீர்மானத்தை—அவசியம் செய்துதானாகவேண்டுமென் றேற்பட்டபோது தீக்குழிப் பாய்ந்தும் எவ்வளவு தியாகம் வேண்டுமானாலும் செய்தும், எவ்வளவு தூரமானாலும் விடுதலைப் போராட்டஞ்செய்தும்சுயராஜ்யம்அடைந்தேதீரவேண்டுமென் றெண்ணிவிட்ட ஜனங்களை நசுக்கிவிடமுடியாது என்பதை சர்க்காருக்கு இது சந்தர்ப்பத்தில் ஞாபகமூட்டுகிறோம். இன்று சங்கக் காரியாலயம் சாத்தப்பட்டிருக்கிறது

சந்திரபலி கைதியானார்

அலகபாத் ஜன 4: சல்தானுபூர் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி சந்திரபலி 144 வி. பி. கோ. வையும்ஐக்கிய மண்டல அவசரச்சட்ட உத்திரவையும் மீறியதற்காக கைது செய்யப்பட்டார்.

சங்கம் லால் கைதியானார்.

சல்தானுபூர் சத்தியாக்கிரஹ கமிட்டி காரியதரிசியான பி. சங்கம்லால் கைது செய்யப்பட்டு 6 மாத கடினகாவல் தண்டனையும் 200 ரூபாய் அபராதமும் கட்டத் தவறினால் அதற்காக $1\frac{1}{2}$ மாதக்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டார்.

120 பேர் கைதியாயினர்.

இதுவரை அலகபாத்து ஜில்லாவிலும் அலகபாத் நகரத்திலும் மொத்தத்தில் 120 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

சுயராஜ்ய பவனத்தில் சோதனை.

அலகபாத், ஜன 4: பிந்திய செய்தியிலிருந்து மற்றும் 28 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகத்தெரிகிறது. ஜனாப் மன்ஸுர்அலி சக்தா (இவர் 1922ல் இரங்கூன் மெயில் ஆசிரியராயிருந்தவர் இங்கு கைதி செய்யப்பட்டு 1922ல் காந்திஜி எரவாடா சிறையிலிருந்தபோது அவருக்கு உருது கற்றுக்கொடுக்க இங்கிருந்து எரவாடா சிறைக்குக் கொண்டுபோகப் பட்டவர். ப—ர்.) ராதாஸியாம பாட்டக், சந்திர காந்த மாளவியா, முதலிய இன்னும் பலர் முக்கியஸ்தர்களாவர், இரண்டு பேர் மாத்திரம் உயிர் நீத்தனர். மகாதேவ பிரசாத் (ஏற்கனவே கூறியிருக்கிறோம்) ஜெகன்னாத் என்பவர்களுமாவர் கூட்டம் கலைந்தபின் ஜில்லா மாஜிஸ்திரேட்டும் சூப்பிரண்டெண்டும் சுயராஜ்ய பவனம் சென்று ஐக்கிய மண்டல மாகாண காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்தைச் சோதனை செய்து இரண்டு டைப்படிக்கும் மிஷின்கள், காப்பி யெடுக்கும் மிஷின் ஒன்று சில தஸ்தாவேஜுகளைக் கைப்பற்றிக்கொண்டனர்

ஜவஹரிலாலுக்கு 2 வருடம்

பண்டித ஜவஹரிலாலுக்கு 2 வருட கடின காவலும் 500 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது, ஜனாப் ஷெர்வானிக்கு 6-மாத கடினகாவல் 150 ரூபாய் அபராதம்

நமது லக்ஷியம்.

(மகாத்மா காந்தி)

ராஜ்ய அதிகாரம் தான் நமது லக்ஷியமா? அல்லவென்று நான் கூறுகிறேன் நம்முடைய மக்கள் ஒவ்வொரு துறையிலும் நன்றாய் வாழ்வதற்காக ராஜ்ய அதிகாரம் என்பது கேவலம் ஓர் கருவியேயாகும் நம்முடைய தேசியவாழ்க்கையை தேசிய பிரதிநிதிகளைக்கொண்டு நிர்ணயிப்பதையே ராஜ்ய அதிகாரமெனக் கூறவேண்டும். நம்முடைய தேசிய வாழ்க்கை சுத்தமானதாயும், கட்டுப்பாடு உடையதாயும் மாறிவிட்டால் பிரதிநிதித்வம் கூடத்தேவையில்லை, அப்போது அறிவு மயமான ஓர் அராஜக நிலை நாட்டில் ஏற்பட்டிருக்கும். அத்தகைய நாட்டில் எல்லோரும் தங்கள் தங்களுக்கு மன்னராவர். பக்கத்திலிருப்பவனுக்குச் சிறிதும் தொந்தரவு தாராமல் ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே நடத்திக்கொள்வார்கள். இத்தகைய உண்மை ராஜ்யத்தில் அரசு என்பதே இல்லை, ஆனால் அந்த உண்மை அரசை முழுதும் நாம் அடைந்துவிட முடியாது எந்த அரசாட்சியில் அமுல் குறைவோ அதுதான் சிறந்த அரசாங்கம். என்று மகான் தோரு கூறிய வாக்யங்களை நாம் மெச்சவேண்டும்.

சீர்திருத்தங்களை அடைவதற்காக காங்கிரஸ் முயல்கின்றது. அச் சீர்திருத்தங்களை அடையவே நான் ராஜ்ய அதிகாரத்தைக் கோருகின்றேன். முஸல்மான்களோடும், சீக்கியரோடும் முரண்படுவதாகிய இராஜ்ய அதிகாரத்தை அடைவதினால், அது நமது சீர்திருத்தங்களுக்கு நஷ்டமுண்டாவதானால் நான் தேசத்திற்கு சொல்வதாவது: முஸல்மான்களும் சீக்கியரும் எவ்வளவு அதிகாரம் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளட்டும், அந்த சீர்திருத்தத்தை பிறகு நான் அபிவிர்த்தி செய்யப் பாடுபடுகிறேன்.

சென்ற பன்னிரண்டு வருடங்களாகக் காங்கிரஸின் சரித்திரத்தை ஆராய்ப்பார்த்தால் ஓர் உண்மை விளங்கும். நிர்மாண வேலைகளில் காங்கிரஸுக்கு எவ்வளவு அளவுக்கு சக்தி இருக்கிறதோ அவ்வளவு அளவுக்குத்தான் இராஜ்ய அதிகாரத்தையும் அடைந்துவந்திருக்கிறது. இப்போது நாம் நினைத்தன யந்திரத்தை மட்டும் அடைந்தால் அது வெறும் நிழல்தான்; ஏதோ அடையாளம்தான். ஜனங்கள் தக்கவர்களாகத் தயாராகாமல் வெளியாரால் தரப்பட்ட ஓர் சன்மானம்போல அந்த அதிகாரம் வருமானால் அதை வெறும் சுமையாகவே கருத வேண்டும்.

இராஜ்ய அதிகாரத்தைஅடைந்து அவத உபயோகிப்பதை விட, சத்யாக்கிரகத்தினால் நமக்கு அவசியமானதை சீக்கிரத்திலும் கட்டாயமாகவும் அடையலாம். பொது ஜன அபிப்பிராயம் ஏற்படுவதற்கு முன் சட்டங்கள் சிருட்டிக்கப்படுவது வியர்த்தமாகும். பெரும்பாலும் திருடர்கள் நிறைந்த ஓர் நாட்டில் திருடக்கூடாது என்று சட்டமிட்டுத் தடுப்பது பிரயோசனமற்ற செயலாகும். ஆனால் சீர்திருத்தங்களினின்று ராஜ்ய அதிகாரம் என்பது வேறாயிருக்குமாயின் ராஜ்ய அதிகாரத்திற்காகவே நாம் பாடுபடவேண்டும். இதுவரை நாம் மற்றொரு மார்க்கமாகப் போயிருக்கிறோம். ஸ்வராஜ்யத்தை அடைவதற்கு நிர்மாண வேலைகளால் தான் முடியுமென அவைகளின் அவசியத்தைபற்றி இதுவரை கூறி வந்தோம். பொதுஜன அபிப்பிராயம் வற்புறுத்தினால்தான் கள், லாகிரி வஸ்து அன்னியத்துணி இவைகளைத் தடுக்க சட்ட மேற்படுத்த முடியுமென நான் உணர்ந்திருக்கிறேன். தற்போது நம்முடைய நாட்டில் பொதுஜன அபிப்பிராயம் வற்புறுத்துவதாகவும், ஆனால் அன்னிய அரசாங்கம் மறுப்பதாகவும் சிலர் கூறலாம். இதில் பகுதி உண்மையே. இந்த நாட்டில் பொதுஜன அபிப்பிராயம் என்பது இப்போதுதான் சக்தியாக மாறிக்கொண்டு வருகிறது அது நாளடைவில் விர்த்தியடைந்து சத்யாக்ரஹம் என்ற ரூபத்தை யடையும்.

உலக ஆதரவு

(மகாத்மா காந்தி)

குருட்டுச் சுயநலம் மிகுந்த ஆண் மகன் ஸ்திரீயின் ஆத்மாவை நசுக்கியிராவிட்டால், அந்த 'இன்பங்களில்' ஸ்திரீயும் விழுந்திரா விட்டால் அவளிடம் மறைந்து இருக்கும்படியான மகா சக்தியை ஸ்திரீயானவள் உலகிற்குக் காட்டியிருப்பாள். சென்றபோரில் நமது தேசப் பெண்மக்கள் காட்டியது அத்தகைய மகா சக்தியின் பரமாணுவாகும். ஆனால் நமது பெண்

மக்கள் ஆணோடு சமத்துவத்தையும் ஒருவர்க்கொருவர் உதவி செய்யும் பான்மையையும், சேர்ந்துழைக்கும் நேர்மையையும் பெற்றார்களானால் இந்த உலகத்திற்கு தங்களது அபாரமான சக்தியை நிரூபித்து விடுவார்கள்.

அஹிம்ஸையை ஆயுதமாகக்கொண்டவன் பலமற்றவனல்ல. வேறு வழியின்றி அஹிம்ஸையை உபயோகித்ததாக எவரும் எண்ணிக்கொண்டிருக்கலாம். முரட்டுத்தன மிகுந்த மிருகத்தையும் வசியம் செய்யும் சக்தியுடையது அஹிம்ஸையாகும்.

சென்ற வருஷத்தில் நடந்த மிருகச்செயல்களின் நிமித்தம் உலகம் ஏன் சீறி விழவில்லை? உலகம் முரட்டுத்தனமாய் விட்டதா? இதயத்தை இழந்துவிட்டதா? இல்லை இல்லை நம்முடைய அஹிம்ஸை இயக்கம் வேண்டிய அளவு வெகுதூரம் பரவியிருந்ததாயினும் சக்திவானுடைய அஹிம்ஸா சக்தியாகவோ, அல்லது அறிவாளியினுடைய அஹிம்ஸையாகவோ அது இருக்கவில்லை அவசியத்திற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் முறையாகவே அது கையாளப்பட்டது.. போரில் நாம் திருப்பியடிக்கவில்லையாயினும் நம்மிடம் கோபம் நிறைய இருந்தது பேச்சில பலாத்காரம் நிறைந்திருந்தது எண்ணங்களைப்பற்றியோ கேட்கவே வேண்டாம். பலாத்காரத்தில் நாம் இறங்காதவாறு நம்மைக் 'கட்டுபாடு' தான் அடக்கிக் கொண்டிருந்தது. இவ்வாறு குறைவோடு கூடிய இந்த அஹிம்ஸையை பிரசாரமில்லாது போனாலும் உலகம் ஆதரித்தது. ஆனால் அஹிம்ஸையின் பூர்ண எழுச்சியை நாம் பின்பற்றி யிருந்தால் எவ்வளவோ உதவி கிடைத்திருக்கும்? உலகத்தின் இரத்தம் கட்டாயம் கொதிப்படைந்திருக்கும். அந்த தெய்வீக எழுச்சி இன்னும் நமக்குக் கிட்டவில்லை. நமமுடைய பாஷாண்டித்தனமானது கான்பூர், காசி, மிர்ஜாபூர் முதலிய இடங்களில் வெளியாயின.

ஸர்க்காருக்கு எதிராக அஹிம்ஸையை அனுஷ்டிக்கும்போது நம் ஜனங்கள தங்களுக்குள் ஒருவர்க்கொருவர் ஹிம்ஸையை ஆச்ரயித்துக் கொள்வதா? உண்மையான ஒளியைப் பின்பற்றினால் உலகத்தையே கவரும் சக்தியுடையது அஹிம்ஸையாகும். அந்த ஒளியை அடைவதிலேயே நான் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

வீரனே போய்வா.

நாம் எதிர்பார்த்தபடியே சுபாஷ் சந்திரா! நீ கைதியாகிவிட்டாய். அதற்காக நாம் வருந்துவோமென்றெதிர்பார்த்திருப்பாயா? இல்லவேயில்லை; சந்தோஷிக்கின்றோம், நீ கைது செய்யப்பட்டாய், கண்காணா இடத்துக்குக் கொண்டுபோகப்படுகிறாய் என்று கேட்க எவ்வளவு திருப்தி தெரியுமா? நீ ஒரு சுத்தவீரன்; சுதந்திரச்சுடர்; விடுதலை விளக்கு. சுத்தவீரன் எவனாவது இந்தியாவில் இந்த அராசாட்சியில் இருக்கலாமா? உன்மீது சர்க்காரின் நாட்டமெல்லாம் எத்தனை நாட்களாக இருந்து வருகின்றன? இரண்டொரு மாதங்களுக்கிடையில் உனை எத்தனை முறை கைது செய்துசெய்து விடுதலை செய்திருக்கிறார்கள். ஏனெனில் நீயொரு சட்டநிபுணன். சர்க்காரின் செல்லப்பிள்ளையாக ஐ. ஸி. எஸ். ஆகவிருக்கப் படித்தாய் சர்க்காரின் சட்டங்கள் உன் கண்ணுக்கு என்னவாய்ப் பட்டதோ? சட்டமறுப்போனாகிவிட்டாய். என்றாலும் சாதாரண சட்டங்கள் உன்னைத்தொட முடியவில்லை. ஆள்தூக்கிச்சட்டம் போன்ற பலத்த சட்டத்தாலேதான் உன்னைக்கட்டவேண்டியதாகிறது. முன்னொரு முறையும் அப்படித்தானாயிற்று.

பிரிட்டிஷார் இந்தியாவில் விற்றுப்பிழைக்கும் வியாபாரிகளாயிருந்தகாலத்தில்—நாடு பிடிக்கும் வெறி பிடித்துத் திரிந்தகாலத்தில்—இற்றைக்கு நூற்றுப்பதினாலு வருடங்களுக்கு முன்னால் ஏற்படுத்தப்பட்ட ஒருசட்டத்தால்-இராஜராஜாக்களுக்கென்றே சிருஷ்டிக்கப்பட்டதோர் சட்டத்தால்—இன்று நீ கைதுசெய்யப்பட்டிருக்கின்றாய். ஸ்வர்க்கீய லஜபதியை நாடு கடத்திய சட்டமிது. இந்த வொரு பெருமையில் நீ திருப்தி யடைந்துகொண்டிரு. தனிமைத்துயரம் உன்னைத் தொடாதிருக்கட்டும்

நிச்சயமாய் நீ எங்களுக்குவேண்டும். உன்னைப்போலொரு ஒப்பற்றவீரன இல்லாவிட்டால் இந்தியச் சைன்யத்திற்கு யார் சேனாதிபதியாவது? 'எல்லா அடக்குமுறைகளையும் எடுத்துக் கொள்ளுவோம்; சட்டமறுப்பியக்கத்தை அப்படியே உள்ளநிலையில்வைத்துவிடுவோம்'' என்று கூறும் ஏரோப்ளேன் சர்க்காரின் விருந்தினனாயிருந்துவா! நிறையவேலை செய்து அலுத்

அடக்குமுறைக்கு தாகூர் கண்டனம்.

கல்கத்தா ஜன 4உ

காந்திஜியைக் கைதுசெய்தது பற்றி கவிச்சக்கிரவர்த்தி ரவீந்தரநாத் தாகூர் பத்திரிகா நிருபருக்குக் கூறியதாவது.—"சர்க்காரின் மனப்பான்மையை காந்திஜீ பரஸ்பரமாய் அறிந்துகொள்ள சந்தர்ப்ப மளிக்காது கைது செய்யப்பட்டு விட்டார். இந்திய சரித்திரத்தை எழுதுபவர்களாகிய இருதரப்பாரில் பிரஜைகள் அவமானகரமாகப் புறக்கணிக்கப் படலாம். என்றலும் உண்மையை உண்மையென்ற காரணத்திற்காகவாவது ஒப்புக்கொண்டுதானாக வேண்டும். ஆளுவோரைவிட ஆளப்படுவோரே பிரதானமானவர்கள் என்பதை உலகத்தாருக்கு நிரூபித்துக் காண்பித்து விடுவோம். பலத்த பிடிவாதத்தால்—கொஞ்சங்கூட ஓய்வு ஒழிவு சளைப்பெல்லாமில்லாமல சிறு பிள்ளைத்தனமான மடைமையா லெழும் ஆத்திரத்தால் அரசியல் வெறிபிடித்து தன்னைத்தானே தற்கொலை செய்து கொள்ளாமல் தனக்குத்தானே அழிவு தேடிக் கொள்ளாமல் இயக்கத்தை தொடர்ந்து நடத்துவோம். ஓரே அதிர்ச்சியிலேற்படும் இத்தகைய சந்தர்ப்பங்கள் ஜனங்களுக்குச்சதா சம்பவிப்பதில்லை—அபூர்வமாகவே கிடைக்கின்றன. நம்முடைய சிந்திச்சிதரிக் கிடக்கும் பலத்தை ஒன்றுபடுத்தி ஜனங்களை ஒரே எல்லைக்குக் கொண்டுபோய் சுதந்திரத்தின் ஜீவாதாரமான முயற்சிகளைச்செய்யத் தூண்டுகிறது.

சென்னைக்குச் செய்தி எப்படி தெட்டியது

சென்னை, ஜன 4: சட்ட மறுப்பு இயக்கத்தில் ஆதரவும் அனுதாபமுங் கொண்ட தனி மனிதன் அல்லது சங்கமானாலும் சரி, காங்கிரஸ் கட்சியாரானாலும்சரி, எவரும் எவ்வித ஊர்வலமோ கூட்டமோ இன்று முதல் ஒரு மாதத்திற்கு நகர எல்லைக்குள் நடத்தக்கூடாதென 144 கி. பி. கோ. சட்டத்தின்கீழ் பிரதம பிரஸிடென்ஸி மாஜிஸ்திரேட் உத்திரவு பிறப்பித்துள்ளார்.

காந்திஜீ கைது செய்யப்பட்ட செய்தி நகரமுழுதும் சுவரொட்டி விளம்பரங்களாலும் சுயபாஷை பத்திரிகைகளின் விசேஷ அனுபந்தங்களாலும், மற்றும் துண்டுப் பிரசுரங்களாலும், தெரிவிக்கப்பட்டது. ஜார்ஜ் டவுனிலும் இதர இடங்களிலும் அநேகம் கடைக்காரர்கள் தாங்களாகவே கடைகளை யடைத்து ஹர்தால் அனுசரித்தனர். புல்லியன் மார்க்கெட் கொத்தவால் பஜார், கோடவுன்வீதி முதலிய இடங்களில்முழுதும் ஹர்தால்செய்யப்பட்டது காந்திஜீ சென்றவாரம் பம்பாய் வந்திறங்கிய காட்சியை "நேஷனல் டாக்கி" கம்பெனியார் படம்பிடித்து படக்காட்சி சாலையில் காட்டியதை கமிஷனர் கூடாதென தடுத்துவிட்டார்.

காந்திஜீயின் மூட்டைகள்

காந்திஜீ தம்முடன் எடுத்துச் செல்லும் புத்தகங்களுள் சுற்றுப் பிரயாணங்கள் என்ற தலைப்புடன் கூடிய புத்தகமொன்றிருக்கிறது இது பிரதம மந்திரி மிஸ்டர் ராம்ஸேமாக்டொனால்டு காந்திஜீக்குக் கொடுத்தது அதில் மாக்டொனால்டின் கையெழுத்திலேயே அன்பார்ந்த மதிப்பால் வட்டமேஜையின் மனமார்ந்த ஞாபகார்த்தமாக நானளித்தது என்று எழுதப்பட்டிருக்கிறது சர் சாமுவேல் ஹோரின காலாவது வருஷம் என்ற புத்தகமும் சர் சாமுவேல் காந்திஜீக்கெனக் குறிப்பிடப்பட்டிருந்தது இப் புததகங்களைப் படிப்பதற்கு இப்பொழுது தான் நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது என காந்திஜீ கூறினார் காந்திஜீயைப் பிரியும்போது ஆண் பெண் அடங்கலும் அப்படியே அழுது புலம்பினார்கள் ஆனால் காந்திஜீ மாத்திரம் எப்பொழுதும்போல் சந்தோஷகாமாகவே யிருந்தார்.

டுப் போயிருக்கிறாய். ஓய்வெடுத்துக்கொள். துப்பாக்கிக்கும் பீரங்கிக்கும் இரையாகாமல் சிறைப்பட்டாயே அதுவேபோதும். நன்றாய்ச் சாப்பிடு. உண்ணாவிரதம் வேண்டாம். அது அந்தக் காந்திக் கிழத்துக்குத்தான் சரிப்பட்டுவரும். நீ சேனாதிபதி கட்டுவிடாமலிருக்கவேண்டும்.

ஓரேயொரு வார்த்தை. அன்று இலவசமாய் பிரயாணஞ்செய்தாயே அந்த ரூ. 7-2-0ம் யார் கொடுத்தது? சர்க்கார் தானே?

சரி போய் மீண்டு சுகமே சுதந்திர இந்தியாவுக்குவா! தேசபந்துவின் சித்தத்துணிவே போய்வா? உன்னையெல்லாம் வழியனுப்பிவிட்டு நாங்கள்மட்டும் பின்னிருந்து விடுவோமா? வருகிறோம். எதிர்பார்த்துக்கொண்டிரு!

Printed & Published By A. V Sellam Pillay at the Desopakri Press, 210 ,36thStreet Rangoon

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 47 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை

DESOPAKARI

புதன், ஞாயிறு வெளியீடு

210–36-வது இரங்கோன், (13—1—32) மார்கழி ௴ 29௳ புதன்கிழமை

சோறு? குப்பையா?

பந்தமுற் றெத்தனை நாள்—இந்தப்
பாரினில் ஈடழிதல்?
இந்த வுடல் சதமோ?—இஃ
தென்று மிறப்பதுவே;
மக்கள் மனைவி பொருள்—யாவும்
மாயன் வினைப் பொருளே;
துக்கந் தரும் இவற்றை—உடன்
தூவென்று தள்ளி விடு;
மிக்க வெம் புல்லடிமை—நீக்கி
மேதகு வாழ்வு பெற
சத்தியப் போர் செய்குவாய்,—அட
இந்தியனே யெழு வாய்! (கவிபாசன்)

நமது அரும் பெருந் தலைவர்கள் சிறையில் கிடக்கும் போது நாம் வெளியே இருந்து கொண்டு வயிற்றை நிரப்புகின்றோமே, அதுசோறு? குப்பையா? பட்டுப்பாயில் படுக்கின்றோமே? அதுபாயா? பாடையா? யோசித்துப் பார்த்தீர்களா? நமது காந்தி மகான் எங்கே? ஜவஹரிலால் எங்கே? போஸ்பாபு எங்கே? எல்லைப்புற காந்தி அப்துல் கபூர்கானெங்கே? டாக்டர் அன்சாரி எங்கே? கிழச்சிங்கம் அப்பாஸ் தயாப்ஜி எங்கே? தமிழ்தலைவர் ஆச்சார் ஜீ எங்கே? எந்த மனிதன் இன்று முப்பத்தாறு கோடிமக்களின் அரசனாகஇருந்துசிறை இருக்கின்றானோ அவனது பொன்மொழிகளையிங்கே நாம்போற்றிப்புகழ முன்வந்துள்ளோம். அவன்யாரென்று வாசகர்கள் வாசித்துக் கொண்டுபோகும்போதேவாசகமுடியும் முன்பேயாரையோஒருவரைத்தீர்மானித்து அவராகத்தானிருக்கலாம், என்றுநிச்சயித்து விடுவார்கள். ஆனால் நாம் கூறவிருக்கும் இவரையும் பலர் தீர்மானித்திருப்பீர்கள் என்பதே எமது அபிப்பிராயம். அவர் யாரென்றால் அவர்தான் நமது ஸர்தார் வல்லபாய்.

"உலக சரித்திரங்களிலேயே காணப்படாத ஓர் தெய்வீக யுத்தம் குஜராத் மாகாணத்தில் உண்டாகப் போகிறது. மரணத்துக்குப் பயப்படுகிறவர்கள் தீர்த்த யாத்திரையாகப் போய் விடுங்கள். செல்வத்தை சேமித்து வைத்திருப்பவர்கள் சீமைக்கு ஓடி விடுங்கள். உண்மையான குஜராத்தி கதவைச் சாத்திக் கொண்டு வீட்டில் உட்காரமாட்டான்" என்று கடந்த போர் ஆரம்பிப்பதற்கு முன்னமேயே ஸர்தார் வல்லபாய் கூறினார். இந்த ஜோஸ்யம் போன்ற வார்த்தைகளை அமெரிக்காவில் ஆயிரத்து இருநூறு பத்திரிகைகள் பிரசுரித்தன. இந்த ஜோஸ்யம் வீண்போகவில்லை. கண்ணெதிரே அத்தகையயுத்தம்நடந்தது. நடந்தயுத்தத்தில் குஜராத்செய்திருக்கும்மஹத்தான தியாகத்திற்கு ஸர்தாரின் வார்த்தைகளே காரணமாயின. ஆயிரக்கணக்கான ஆண் மக்களும், பெண் மக்களும், காந்தி உப்பு தயார் செய்யவும், மோட்டார் லாரிகளில் அதை உள்நாட்டுக்கு எடுத்துச் சென்று விற்கவும், தர்சனா உப்பளத்தை முற்றுகை யிடவும்; குண்டுக்கும், தடிக்கும் அஞ்சாது மார்பு காட்டவும், வீட்டை விட்டு, நிலத்தை விட்டு, ஊரை விட்டு, வேற்று நாடுகளுக்குச் சென்று வெளி நிலங்களில் படுத்துக் கிடக்கவும், போர்ஸாத்தின் ஸ்திரீ ரத்தினங்கள் தடியடிகளுக்கு அஞ்சாது தலை கொடுக்கவும்,

இந்த வீரனின் பெயரே காரணமாயிருக்கதை அனைவரும் அறிவோம். அத்தகைய வீரனே வல்லபாய்.

அரசாங்கம் மாறினாலென்ன? அமைப்புகள் வேறுபட்டாலென்ன? இன்னும் நாலு கவர்னர்கள் வந்தாலென்ன? பத்து இந்தியர்கள் வைஸ்ராய்களாக வந்தால்தானென்ன? அவையெல்லாம் ஸ்வராஜ்யமாகி விடுமா? என்றைய தினம் இந்த பூமியின் ஏழைக் குடியானவன் வயிறார இரண்டு வேளையும் கஞ்சி குடிக்கின்றானோ, என்றைய தினம் வறுமை வாழ்வு தொழிலாளியிடமிருந்து அகல்கின்றதோ, அன்றைய தினமே ஸ்வராஜ்யம் வந்துவிட்டதாகக் கொள்ள வேண்டும். அத்தகைய ஸ்வராஜ்யத்திற்காகப் பாடுபடுபவர் வல்லபாய்.

“எப்போது பார்த்தாலும் சீட்டாடிக்கொண்டே பொழுது போக்கிக் கொண்டிருந்தேன். இராஜீய சமாசாரமென்றால் எனக்குத் தலைவலியாயிருக்கும். அந்த சமயத்தில் ஒரு மஹான் வந்தார். என் கண்ணைத் திறந்து வழியைக் காட்டினார். அவருடைய விடா முயற்சியையும், ஊக்கத்தையும், கண்டு எனது கொள்கைகள் மாறி விட்டன. அந்தமஹான் தான்காந்தி. அன்று முதல் நானும் ஒரு காந்தி ஆளாக மாறி விட்டேன்.” என்று வல்லபாய் கூறியிருக்கிறார். தனது குருநாதனின் கொள்கைகளை குஜராத்திக் குடியானவர்களிடை அன்று முதல் விதைக்கத் துவக்கினார். அந்தக் குடியானவர்களுக்கு ஸர்தாரிடம் உள்ள அன்பை என்னவென்று கூறுவோம்.

உற்றாரை யாம் வேண்டோம், ஊர்வேண்டோம், பேர் வேண்டோம். எங்கள் ஸர்தாரை விடுவித்தாலன்றி ஒரு சல்லிகூட தீர்வைதர மாட்டோம். வருவன வருக. என்று விடாப்பிடியாக நின்று அந்த மக்கள் வீறு கூறினர்.

இவ்வாறு ஒரு தேசத்து மக்கள் சொல்லும்படியாக அவர்களைத் தயார் செய்வது ஒரு நாளைய வேலையா? பிரசங்க மேடைகளாலும், பத்திரிகை வாயிலாகவும் இத்தகைய உணர்ச்சியை உண்டாக்கிவிட முடியுமா? முடியாது. பொறுமையுடன் பல வருஷங்கள் ஊழியம் செய்ய வேண்டும். அத்தகைய ஊழியத்தை செய்தவர், இன்னும் செய்பவர் நமது வல்லபாய்தான்.

பிரிட்டிஷாரின் துரைத்தன முறையைப் பல விதங்களில் தாக்கினவர்கள் படேல் சகோதரர்கள் ஆவர். அவர்களில் பம்பாய் கார்ப்பொரேஷனில் வித்தல்பாயும், ஆமதாபாத்முனிஸிபாலிட்டியில் வல்லபாயும் செய்திருக்கும் ஊழியங்களைப்பற்றி அந்நகர் வாசிகளைக் கேட்டால் சொல்லுவார்கள். இந்த தேசத்தின் நலத்திற்காக இந்த இரு சகோதரர்களும் எவ்வளவோ ஆண்டுகளாக உழைத்து வருவதை நாம் அனைவரும் அறிவோம்.

ஆங்கில பாஷையை அடியோடு மறக்க வேண்டுமென்பது சர்தாரின் கொள்கை. ஆங்கில நாட்டுக்குச் சென்று அங்கு மாணவனாயிருந்து கற்றவைகளை எல்லாம் மறந்து விட வேண்டுமென அவர் விரும்புகிறார். இந்தப் பத்து வருஷ காலங்களாக, ஏதோ சிற்சில மேடைகளில்தான் அவர் ஆங்கிலத்தில் பேசியிருக்கக்கூடும். குஜராத்தியிலோ அல்லது ஹிந்தியிலோதான் அவர் பிரசங்கம் செய்வது வழக்கம்.

“பர்தோலியின் மேற்குப் பாகத்தில் வல்லபாய் லெனினைப் போலிருக்கிறார். கிழக்கே லோகமான்யராயிருக்கிறார்” என்று மகதேவ் தேசாய் வல்லபாயை வர்ணிக்கிறார். “பனியடர்ந்த எரிமலை” என மௌலானா ஷவுக்கத் அலி அவரைக் குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தகைய புகழ் மொழிகளுக்கு இலக்காகிய பெரிய மனிதராயிருந்தும் மிகமிக எளிய வாழ்க்கை வாழுபவர் ஸ்ரீயுத வல்லபாய். வேண்டுமானால் மூன்று மாதம் காற்றையே சாப்பிட்டு ஜீவித்து விடுவேன் என்று அவர் ஓர் தடவை வீம்பு கூறியதுண்டு.

முன்னணியில் நிற்பவனே தலைவன் என்பது அவருடைய கருத்து. அதற்கேற்ப கடந்த இயக்கத்திலும் களப்பலியாக என்ற கிராமத்தில் முதன் முதலில் தலை கொடுத்தவர் வல்லபாய்தான். அந்த இயக்கம் நடந்த ஒரு வருஷத்திற்குள் மூன்றுதடவை சிறை சென்றவரும் இப்பொழுது சிறையிலிருப்பவரும் இவர்தான்.

சிறைவாசம் துயர வாழ்க்கையன்று. அந்த விசித்திரமான இடத்தில்தான் ஒரு நாளைக்கு ஒரே அணாவில் ஒரு மனிதன் ஜீவித்திருக்க முடியும் என்று ஒரு தடவைஅவர் கூறியுள்ளார்.

தேசீயக் கல்வியின் அவசியம்.

குஜராத்தி தேசியப் பாடசாலையின் வருஷாந்திரக் கொண்டாட்டத்தில் தலைமை வகித்த கனம் பி. ஜே. மேதாவின் அமுதவாக்கின் சாராம்சம் பின்வருமாறு:—

எண்ணிறந் தேசியப் பள்ளிக்கூடங்கள் நம் நாட்டில் தோன்றின. ஒரு சிலவே சர்க்காரின் அங்கீகாரத்தை பெற மறுத்து விட்டன. இந்தப் பள்ளிக்கூடம் சர்க்கார் அங்கீகாரத்தைப் பெற விரும்பாததைக் குறித்து நான் பெருமை கொள்ளுகிறேன். தற்பொழுது நம் நாட்டு மக்களுக்கும் சர்க்காருக்கும் இடையே மனக்கசப்பு-போராட்டம் வளர்ந்து கொண்டே வருகிறது. நம் மக்களின் தலை குண்டாந் தடிகளால் உடைக்கப்படும் முழக்கத்தை வாயுபகவான் கடல் கடந்து வந்து உங்கள் செவிகளில் போடுவான்! போராட்டம் காட்டுத்தீப்போல் பரவுவது திண்ணம்! இந்தச் சந்தர்ப்பத்தில் பிற்கால இந்திய வீரர்களாக முன்னணியில் நிற்கக்கூடிய நம் இளைஞர்கட்கு தேசீயக் கல்வியை நீங்கள் புகட்ட வேண்டியது அவசியமாகும். இந்தத் தேசீயக் கல்வியைப் போல் நம் இளைஞர்கள் மனத்தில் சுதந்தர உணர்ச்சியை வேரூன்றச் செய்யத்தக்க கருவி வேறெதுவும் இல்லை. ஆகவே இந்த சந்தர்ப்பத்தைக் கைசோர விடாமல் சுதந்திர ஞானத்தைப் புகட்டுங்கள். போதிக்குங்கால் தியாகபுத்தியும் தேச சேவையுமே மனித வாழ்க்கையை இன்புறச் செய்வது—மனிதவாழ்க்கையின் முக்கிய நோக்கமென்பதையும் வேரூன்றச் செய்தல் உங்களது முதற்கடமையாகும். மேலும் பந்தத்தினின்று விடுபடுதற்கு சத்தியமும் நியதியுமே அதி தீவிர மென்பதையும் அவர்கள் உணரட்டும். எத்தகைய உயரிய நோக்கங்கள் பண்டைக் காலத்திலும் இக்காலத்திலும் பெரியார்களின் மனத்தை உருக்கி தேசசேவையிலும், தியாகத்திலும், ஈடுபடச் செய்ததோ அத்தகைய மேன்மை நோக்கங்களை உங்களிடத்தில் ஒப்படைக்கப் பட்டிருக்கும் இளம் பயிர்களின் மனப் பெட்டியில் நிரம்பச் செய்யுங்கள்

ராஜபோகம், மனைவி மக்கள், மேல் ஆசை உள்ளத்தையும் உதறித்தள்ளி தவத்தின் மேற்சென்று அஹிம்ஸைத் தத்துவத்தை இந்திய மக்களிடையே பரவச் செய்த புத்த குருவின் உண்மை தத்துவசாரங்களைப் போதியுங்கள்! இன்னும் சித்தூர்பத்மாவதி, அமத் நகர் சாந்த் பீபீ, ஜான்ஸிராணி, லோகமான்ய திலகர், ஜெயதி ராய், மகாத்மா காந்தி, முதலிய பெரியோர்களின் சீரிய ஒழுக்கங்களையும் கொள்கைகளையும் குழந்தைகளின் மனதில் பதியச் செய்யுங்கள்!

ஐரோப்பிய சரிதைகளை மேற்போக்காகவேனும் ஆராய்ந்தால் பள்ளிக்கூடங்களும் போதனா சாலைகளுமே அவர்கள் நாட்டின் முன்னேற்றத்திற்குக் காரணமாயிருந்தனவென்பது நன்கு விளங்கும். ஜர்மானிய நாடு வெற்றி பெறுதற்கு உபாத்தியாயர்களே காரணமாயிருந்திருக்கின்றனர்.

சிறைமட்டு மல்ல, சாவுக்கும் அஞ்சாதவர் நமது சர்தார்.

சாவு நமக்கு ஒரே ஒரு தரம் தான் உண்டு. வேண்டுமென்று கேட்டாலும் இரண்டு தடவை கிடைக்கவே கிடைக்காது. மேலும் அது பணக்காரனென்றும் ஏழையென்றும் பேதம் காட்டுவதில்லை என்று அவர் ஓர் தடவை வேடிக்கையாக உரைத்தார்.

போர்க் கோலத்தோடு, அவரது பிரியத்திற்குப் பாத்திரமான குடியானவர்களிடையே நின்று கொண்டு, அனல் போன்ற சொற்களைக் கக்கிக் கர்ச்சனை செய்யும்போது வல்லபாயின் வீர ஸ்வரூபத்தைப் பார்த்தவர்கள் பாக்யவான்கள் ஆவார்கள். அவருடைய பிரசங்கத்தில் சில உதாரண வாக்யங்களை இங்கு தருகின்றோம்.

இந்த அரசாங்கத்தில் கேணியிலும், ஏரியிலும் உள்ள நீரின் மீதும் தீர்வை போடப் பட்டிருக்கிறது. இன்னும் காற்றுக்குத்தான் வரி விதிக்கவில்லை. அதற்கும் வரி போட்டுவிட்டார்களானால் மகா ஜனங்களே! உங்கள் மூச்சுகளை மூடிக்கொள்ளுங்கள்.

இவ்வாறு எவ்வளவுக்கெவ்வளவு சூடுறைக்கப் பேசுகின்றாரோ அதைவிடப் பன்மடங்கு அதிகமாக வேலைசெய்பவர் வல்லபாய். சொல், மனம், உடல் மூன்றையும் தாய் நாட்டுக்கு அர்ப்பணம் செய்ததால்தான் அவர் இன்று நமக்கெல்லாம் முடிசூடா மன்னனாக சிறையிலும் விளங்குகின்றார்.

சர்க்கா உபதேசம்.

முந்திய யூகத்தாலே
முறைமுறை பிரிட்டன்காரர்
யந்திர மில்களாக்கி
யாணரின் உடைகள் தந்தார்
தந்திர மொன்றே தானே
தகவில பலவென்றாலும்
வந்திடும் வறுமை யீதால்
வளர்த்திடுங் கதரை நீரே!

—கதர்த் தொண்டன்.

இப்பொழுது நம் தாய்நாடு சுதந்தரப் போராட்டத்தில் இறங்கி இருக்கின்றது.—போராட்டம் வெகு மும்முரமாய் நடந்துகொண்டிருக்கிறது. இப்போராட்டத்திற்குக் காரணம் யாதெனவென்று கவனிப்பது பிரதி இந்தியனது கடமையும் ஆகும்.

சுதந்திரப் போராட்டத்திற்கு வறுமையே பிரதான காரணமாகும்—இந்த வறுமை அந்நியர் ஆட்சியின் சூழ்ச்சியால் ஏற்பட்டதென நன்குணரவேண்டும்—அந்நியர் ஆட்சியினால் சிற்சில நன்மைகள் ஏற்பட்டிருப்பினும் அதனால் விளைந்த தீமைகளோ அளவிறந்தன.

அந்நியர் ஆட்சியினால் நம் தாய் நாட்டின் குடிசைத் தொழில்களெல்லாம்—கைத் தொழில்களெல்லாம்—உண்மைக் கல்வி நலன்களெல்லாம் ஒழிந்தே போயின. இதனால் நம் பாரத அன்னை வளமொழிந்து—சீர்குலைந்து சிறப்புக்குன்றி—செல்வமிழந்து—35 கோடி மக்களாகிய நம்மைப் போஷிக்க பாலின்றி மெலிகின்றாள். எனவே நாம் நொந்து வாடிய நெற்போன்று-சாரமிழந்த கரும்பஞ் சக்கையை ஒத்து-தரித்திரதேவதைக்குட்பட்டு வறுமையென்னும் கொடிய முதலை வாயிற்பட்டு சுதந்தரமிழந்து-அடிமைத் தொழில் செய்வதே மோட்சமென-எண்ணங்கொண்டவர்களாய் நடைப்பிணங்களாய் வாழ்கின்றோம்.

இன்னதொரு குறையை-நீக்குவான்வேண்டி சத்திய சீலர் காந்தி மகான் நம் பண்டைப் புராதன சொத்தாகிய சர்க்காவை நம் கையில் தந்தருளினர். இச்சர்க்காவே நமது நாட்டுக் காமதேனுவாகும்-கல்பக விருட்சமாகும்—ஞானவான காந்தி மகான் செய்த இந்த

அவசரச் சட்டம் அல்லவா?

பம்பாய் போலீஸாருக்கு ஒரு பெருத்த சந்தேகம் வந்துவிட்டதாம்! வரத்தானே செய்யும்? தற்சமயம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் அவசரச் சட்டத்தில் அன்னிய ஜவுளி மறியல் செய்கிறவர்களைக் கைது செய்ய, அதில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் பதங்கள் வியக்தமாக இல்லையாம்! அதை உத்தேசித்து சந்தேக நிவர்த்தி செய்யவழி தேடுகிறார்களாம்! அவசரக் கோலம் அள்ளித் தெளித்தேன் என்ற மாதிரி இருக்கிறதுபோலும்! அதற்குத் தகுந்த பதங்களை அதற்குள் திணித்து விட்டால் எல்லாம் சரிப்பட்டு விடுகிறது! பம்பாய் அதிகாரிகளுக்கு இது தெரியாத விஷயமல்லவே! சட்ட மறுப்பவர்களோ வழக்காடும் வழக்கம் கிடையாது. பிற்பாடு எல்லாம் சுலபந்தானே—பம்பாய் போலீசும் தைரியத்தை கைவிடாமல் வேலையை நடத்தட்டும். அதற்கேற்ற பரிசுகளும், பட்டங்களும் காத்துக்கொண்டே இருக்கின்றன. இன்னும் மற்ற மாகாண அவசரச்சட்டங்கள் விஷயமும் அப்படித்தான் இருக்குமோ என்னவோ! எல்லாம் கூடிய சீக்கிரத்தில பட்டப்பகல்போல வெட்ட வெளிச்சமாகிவிடும். அது வரையில் அமுல் நடைபெறட்டும்.

சர்க்கா-உபதேசத்திற்கு நாம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். சர்க்காவினால் சுற்றுவதினால் நாம் அடையக்கூடிய நன்மைகள் அளவுகடந்தன. இருந்தாலும் நமக்குத் தெரிந்த சிலவற்றைக் குறிப்போம்.

சர்க்கா மனிதவாழ்க்கைக்கு இன்றியமையாதது. இந்தியாவின் 35 கோடி ஏழை மக்களின் பசிப்பிணியைப் போக்கவல்லது சர்க்கா! ஸர்தார் வல்லபாய் படேல் அவர்கள் கூறியதே போன்று மதுவையும், பிராந்தி முதலிய போதைச் சரக்குகளின் மேலுள்ள பிராந்தியையும் போக்கவல்லது சர்க்கா! இந்தியருக்கு சுறுசுறுப்பையும், நல்லொழுக்கத்தையும், தன்னடக்கத்தையும், சேவையையும் ஊட்டுவது சர்க்கா! தனவானை ஏழையோடும், ஒரு சமூகத்தை மற்றொன்றோடும் பிணைப்பதும் சர்க்கா! ஏழை இந்தியர்களுக்கு ஸ்வராஜ்ய தேவாமிர்தத்தை கடைந்தெடுத்து ஊட்ட வல்லதும் சர்க்காவே!

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டியா?

நேயர்களே! இந்தப் பழமொழி தமிழர்களுக்குப் புதிதல்ல. கிராமாந்தரங்களில் இரு பெருங் குடும்பத்தார்கள்-திண்ணை தூங்கி முத்தண்ணாக்கள்-பணத்திமிர் கொண்டவர்கள் தங்களுக்குள் விரோதங் கொள்வதும்-கட்சி கட்டுவதும் சகஜம். கட்சி பேதங்கள் வலுவடைய கலகம் ஆரம்பமாவதும்-ஒருவரை ஒருவர் நசுக்கிவிட தக்க சமயம் பார்த்திருப்பர்-ஏனெனில் கைகலந்து கொள்ள ஏதேனும் அல்ப காரணமாவது வேண்டுமல்லவா? என்ன செய்வார்கள் தெரியுமா! இரு கட்சிக்காரர்களும் திருவிழாக் கொண்டாட்டத்திற்கு கோவிலுக்குப் போவார்கள்-கோவில் ஆண்டியோ இவர்கள் கட்சி பேதத்தை அறியமாட்டான். ஒருக்கால அறிந்திருந்தாலும் அவனுக்கு இதில் சம்பந்தமுமிராது-பூஜை முடிந்து பிரசாதம் வழங்கும்போது மாமூல்படி அதாவது ஊர் வழக்கப்படி-அதாவது ஒரு கட்சித் தலைவனுக்கு பிரசாதம் வழங்கவேண்டி வரும்-அங்கே தோன்றிவிடும் சண்டை-பிரசாதம் வழங்கப் பெறாத கட்சித தலைவன் தனக்கு மானபங்கம் எற்பட்டதாக பூசாரிமேல் சீறி விழுவான்-தலைவனுக்கு கோபம் சனிக்கவே ஐயோ! பாவம்! அவனது சுற்று வட்டப் பேய்கள் பூசாரிமேல் பாய்ந்து நையப் புடைத்து விடுவார்கள்-ஆண்டி பாடு சொல்லவும் வேண்டுமா! சட்னிதான்! உடனே இரு கட்சியாரும் அடித்துக் கொள்வார்கள்-இனி இந்தக் கொட்டாப்புளித் தலைவர்கள் சண்டை முடிவைப்பற்றி நாம் ஆராய வேண்டுவதல்லை-கவனிக்க வேண்டுவது யாதெனில் ஒன்றுமறியாத-அப்பாவியான-நிரபராதியான ஆண்டியின் கதியை நினைக்க நீங்களும் வருந்துகிறீர்களல்லவா? இந்த திருஷ்டாந்தக் கதையை இத்துடன் நிறுத்தி இனி தார்ஷ்டாந்தத்துக்குச் செல்லுவோம்.

ஜப்பானியர் ஆளுகைக்குட்பட்டது கொரியா என்ற நாடு. இந்தக் கொரிய நாடு சுதந்தரம் பெற பெரு முயற்சி செய்து கொண்டு வருகிறது. ஆகவே புரட்சிக்காரர்களும் இருக்கின்றனர், சில தினங்களுக்கு முன் ஜப்பானிய சக்ரவர்த்தி தமது மாளிகைக்குத் திரும்பும்போது கொரிய புரட்சி இயக்கத்தைச் சேர்ந்த ஒரு வெறியன் சக்ரவர்த்தி மேல் வெடிகுண்டு போட்டான். நல்ல வேளை-சக்ரவர்த்தி பாராது, குதிரையே மாண்டது. சக்கரவர்த்தி நீடூழி வாழ்க! இதுவரைதான் உண்மை விஷயம். இனிமேல்தான் முன்சொன்ன ஆண்டி கதைக்குத் தொடர்பு இருக்கிறது.

கொரியாக்காரர்களுக்கு வெடி குண்டு போடவே தெரியாதாம்-அந்தப் புரட்சிக்காரர்களில் ஒருவன் இப்பொழுது வெடிகுண்டெறிந்ததை கவனித்தால், இந்தியர்களிடமிருந்து வெடிகுண்டு போடும் சதி கற்றுக்கொண்டிருக்க வேண்டுமென்று எண்ண இடமிருக்கிறதாம். சுமார் 20 வருடங்கட்கு முன்பு சுதந்தர வெறிகொண்ட ஒருவன் வைஸ்ராய் ஹார்டிஞ்சு மேல் வெடி குண்டு போட்டதிலிருந்துதான் இப்பொழுது சுதந்தர தாகங்கொண்ட கொரியாக்காரர்கள் கற்றுக்கொண்டிருக்க வேண்டுமாம்-இவ்வாறு இந்தியர்கள்மேல் வீண் பழிசுமத்தி யாரோ கயிறு திரித்துவிட்டிருக்கிறார்கள்.

யோசிக்குங்கால் ஜப்பானியர்கள் இந்தக் கயிறு திரித்துவிட்டிருக்க இடமில்லை. நம் நாட்டு இந்திய மக்கள் அநேகர் ஜப்பானிய தேசத்தில் சுகமாக-கௌரவமாக வாழ்கின்றனர்-ஜப்பானியருக்கும் இந்தியருக்கும் உள்ள அந்நியோன்ய பாவத்தை குலைப்பதற்கென்று யாரோ மத்தியில் திரித்துவிட்ட கயிறு என்று நன்கு தெரிகிறது. ஜப்பான் தேசத்தில் நடக்கும் செய்திகள்-வெள்ளைத் தூதர்களால் இங்கிலாந்துக்கு அனுப்பப்படுகிறது-அங்கிருக்கும் நிருபக் கூட்டத்தார் உண்மை விஷயங்களுடன் தங்களது சொந்தவிஷமக்கயிறுகளையும் கூடத்திரித்த உலகெங்கும் பரப்பிவிடுகிறார்கள்-என்ன விஷமப் பிரசாரம் அறிந்தீர்களா!

சோலிய முஸ்லிம் அஸோஸியேஷன் அநுதாபம்.

கீழ்க்காணும் செய்தி தந்திமூலம் பேகம் ஷபி அவர்களுக்கு அனுப்பப்பட்டது.—

சோலிய முஸ்லிம் அஸோஸியேஷன் அங்கத்தினர்கள், தேசாபிமானியும் சென்ற வட்ட மேஜை மகாநாட்டில் முஸ்லிம்களின் உரிமைகளுக்காக அரும்பாடுபட்டு வாதாடிய வீருமாகிய ஸர் முகம்மது ஷபீ அவர்களுடைய அகால மரணத்திற்காகப் பெரிதும் வருந்துவதுடன் தங்களுடைய மனமார்ந்த அநுதாபத்தை, தங்களுக்கும் பேகம்ஷா நவாஸ் அவர்களுக்கும் மற்ற உறவினர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறதுடன் அன்னவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கிறோம்.

தேசியக் கொடிக்குச் சனியனா?

சர்க்கார் காங்கிரஸ் சபையுடன் யுத்தம் மும்முரமாக நடத்துகிறார்கள். எங்கும் தடியடி தான்! மூச்சுவிடவும், ஜலம்விடவுமகூட அவர்கள் உத்திரவு வேண்டும். சில்லரை தேவதைகள் இட்டதே சட்டம். இவர்களைத் தேசியக் கொடி என்ன செய்தது? இவர்கள் கண்ணைக் குத்தியதா? அவசரச் சட்டத்தில் அதைப்பற்றி சொல்லியிருக்கா? இல்லாவிட்டால என்ன! போலீஸ் ராஜ்யமல்லவா தேசியக் கொடியைப் பிடுங்கி தங்கள் வீரத்தைக் காட்டுகிறார்கள்! அந்தக் கொடியை சமீபத்தில் இவர்களும் வணங்கவேண்டி வருமே! என்று ஒரு சிறிதும் நினைத்தார்களா? அதற்குப் பதிலாக இங்கிலீஷ் கொடியைநாட்டினார்களாமே! அந்தக் கொடி தான் நமது ஊரில பல நூற்றாண்டுகளாகப் பறக்கின்றனவே! அதற்கு இப்பொழுது மறுபடியும் வந்ததென்ன? இது வெல்லாம் சிறு பிள்ளை விளையாட்டு. அபார புத்தியுள்ள சர்க்காருக்கு அடுக்காது. கீழ்த்தர சிப்பந்திகள் மரியாதையாக நடக்கும்படி சர்க்கார் எச்சரிக்கை செய்வார்களா?

அதிகாரிகளா? வியாபாரிகளா?

பல மாகாணத் தலைவர்கள், வியாபாரிகளுடன் தற்சமயம் கலந்து பேசி வருகிறார்கள். எல்லா பந்தோபஸ்தும் செய்து கொடுப்பார்களாம். பலே! பேஷ்! இவர்கள் என்ன அதிகாரிகளா? வியாபாரிகளா? பிரிட்டிஷ் வியாபாரத்தைக் கவனிப்பதே அவர்களுடைய முதல்வேலை என்பது உலகறிந்த ரகசியம்தான். இதுவரையில் எல்லாம் திரைக்குள் இருந்து கைகாட்டி வந்தார்கள். இப்பொழுது பகிரங்கமாய் நாடக மேடையின் மீது வந்துவிட்டார்கள். இதுவும் ஒரு முறையில நியாயம்தான். எல்லோரும் பிரிட்டிஷ் சாமான்களையே வாங்க வேண்டும். இல்லாவிட்டால் தண்டனை என்ற ஒரு அவசரச்சட்டம் பாக்கியிருக்கிறது. அதையும் சிருஷ்டித்து விட்டால், ஒரு குறைவும் இராது. வில்லிங்க்டன் பிரபு உடனே சனிப் பாரர்! உங்கள் இந்த நவீன நாகரீக ஆட்சியைப் பார்த்து நகைக்கவேதான செய்யும். அதைப் பற்றி எவருக்கென்ன? ரூபாய் அணா பைசா வந்து விட்டால் சரிதானே. இவ்வொன்று

செய்து விட்டால், சகலத்தையும் மிகைத்து விடும். அரசியல் மாறுதல் ஏற்படப்போகிறதல்லவா? இந்தியா பிரிட்டிஷ் வர்த்தகாதிபத்திய ஆட்சி யென்று சட்டத்தில் இயற்றி விட்டால் ஒருவரும் குறைகூற இயலாது. அதுவரையில தற்கால சாந்தியாக கிழக்கு இந்திய வர்த்தக கம்பெனி நமது தேசவுக்காரர்களையும், மற்றத்தொழிலாளர்களையும் தண்டித்தது மாதிரி முறைகளையும் அனுஷ்டிக்கலாம். ஆனல் இருபதாம் நூற்றாண்டில் அந்த ஜம்பம் நடக்குமா?

பணம் தேவையா?

இங்கிலாந்தில் பணப் பஞ்சம்! இந்தியா சர்க்கார் சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுக்க ஐவேஜியில்லை யென்று பல்லைக்காட்டுகிறார்கள்! போகும் வழி எப்படி? அதைக் கண்டுபிடிக்காமல் விடுவார்களா? மகா மேதாவிகளாச்சேசா நாக்கில் ஜலம் ஊறுமல் இருக்குமா? ஊறத் தான் செய்கிறது. முதல் நாளே வேறொருவருக்குகணக்குப் போய்விட்டதெனக்கூறி பாங்கிக்காரனும் கையைவிரித்துவிட்டான். என்செய்வார்கள் பாவம். மறுபடியும் சுற்றித் திரிந்தார்கள். சும்மா இருக்க முடியுமா? ஊரார் பணமல்லவா? கஷ்டப்படாமல் எடுத்தார்கள் ஒரு யோசனை! போடா காங்கிரஸினிடம்; அவசமாய் பிடித்தார்கள் ஓட்டம் போலீஸ் சிப்பாய்கள்! முதலில் அடுத்தார்கள் ஒரு பாங்கியை கொண்டா காங்கிரஸ் பணத்தை என்று வாயைப் பிளந்தார்கள். கிடைத்தால் எவர் தான் வேண்டாமென்கிறார்கள். அகப்பட்டானையா ஒரு பெரிய மார்வாரி. அதி விரைவினில் அவனை அணுகினார். ஏதாகிலும்காங்கிரஸ் பணம் உண்டா என்று கேட்டனர். அநேக லக்ஷம் ரூபாய்கள் இருப்பதாகத் தெரிவித்து விட்டு அவன் தன்வேலையைக்கவனித்துக்கொண்டிருந்தானும். கணக்குகள் பார்க்கலாமா எனக் கேட்டதற்கு தாராளமாய்ச் செய்யுங்கள்எனக் கூறிவிட்டான். நன்றாய்ப் பார்க்கட்டும். அதில் ஒரு தம்பிடியாவது இவர்கள் எடுத்துக்கொள்ள முடியுமா? பின்னல் வட்டியுடன் கொடுக்க வேண்டி வரும். எச்சரிக்கையாக இருங்கள்.

தேசோபகாரி

வருஷம 1க்கு ரூ 3 0 0

ஆறு மாதம் ரூ. 1 8 0

யாத சந்தா அணு நான்கே.

தாயே நோன்பு செய்துவா!

லோகமாதா கஸ்தூரி பாய் காந்தி தவச்சாலை புகுந்துவிட்டார். லோக ரக்ஷணைக்காக நோன்பு நோற்கின்றாள். இந்தியாவின் விடுதலைக்காக மகாசக்தி மஹா மந்திரம் ஜெபித்து வருகிறாள். அடிமை அரக்கனை நாட்டைவிட்டோட்டுவதற்காக நமது தாய் தவங்கிடக்கின்றாள் சக்தியும் சிவமுமாய் நின்று காட்சியளித்த காந்திகள் இன்று தவச்சாலை புகுந்தும் சர்வ ஜோதியுடன் பிரகாசிக்கின்றன. சிறைச்சாலைகளின் கற்களையும் கதவுகளையும் துளைத்துக்கொண்டு ஆத்மசக்தி இந்தியாவெங்கும் பிரதிபலிக்கின்றது. ஒவ்வொரு இந்தியனின் ஹிருதய நடுவிலும் இரத்தத்தின் ஒவ்வொரு துளியிலும், சுதந்திரதாகம் ஜ்வாலைவிட்டெரிகின்றது. ஒவ்வொரு இந்தியனையும் அன்னையின் ஆத்ம ஜோதி—ஜீவவொளி—தியாகப்பிரவாகம் கவர்ந்து—சூழ்ந்துவிட்டது. லோகமாதாவின் நோன்பு வீண்போகாது. நிச்சயமாய் சுயராஜ்யத்தைக் கொண்டுவந்தே விடும். ஏனெனில் சக்தி நோன்பல்லவா? மஹா சக்தியின் சத்திய விரதம் நம்மையெல்லாம் சாயுச்ய பதவில்—சுதந்திர சுவர்க்கத்தில் சேர்க்காமல் போகமுடியாது. தாயே நோன்பு செய்துவா! எரவாடாக் கோயிலிலே சிவசக்தி மகாத்மா காந்திஜீ இந்தியாவின் 33 கோடி வாயில்லா பூச்சிகளுக்காகத் தவங்கிடக்கின்றார். நீயும் உனது சக்தியை இந்தியனின் இரத்தத் துளிகளில் சுவறச்செய்துவிடு. விடுதலை விரதம் செய்துகொண்டிரு. டோன போரில் சிவனை மாத்திரம் அனுப்பிவிட்டு நீ ஆச்சிரமத்திலிருந்து விட்டாயல்லவா? அதற்குப் பிராயச்சித்தமாகத்தான் இந்தியா இவ்வோராண்டுகளாக சுதந்திரம் பெறவில்லை. அன்று சீதையைச் சிறை செய்தான். கூட்டோடு, கும்போடு ராவரோடுபட்டதல்லாமல் இலங்கையும் மீண்டது. பாஞ்சாலியைத் துயிலுரிந்தார்கள். கௌரவர்கூட்டம் சர்வ நாசமாயழிந்து தர்ம ராஜ்யம் நிலவியது. அவ்வாறே இன்று நீ சீதையாய்த் திரௌபதியாய்ச் சிறை செய்யப்பட்டிருக்கிறாய். ராம ராஜ்யமோ, தர்ம ராஜ்யமோ நிச்சயமாய் நிலவும்; சந்தேகமேயில்லை அன்னையே! நீ மாத்திரம் ஓயாமல் நோன்புசெய்துகொண்டிரு அவிர்ப்பாகத்தை நாங்கள் அள்ளி அள்ளி இறைக்கின்றோம். பலிதியாகம் எவ்வளவு வேண்டுமானாலும் இந்தியா செய்யும்.

மானம் போக வில்லையோ?

இத்தலைப்பிட்டு நமது நிருபர்—ஓர் முஸ்லிம் நண்பரெழுதிய கட்டுரை இடமின்மையால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மானம் போச்சுதென்று நோட்டீஸ் விட்டு இப்பொழுது மானம் போகவில்லையெனக் கூறித்திரியும் அன்பர் சிறிது மூச்சு வாங்கிக்கொள்ளட்டும். இல்லாவிட்டால் நமக்குக் கொடுத்த நோட்டீஸை வாபீஸ் வாங்கிக்கொள்ளட்டும். இல்லாதவரை நமது பேனாமுனை அதிகக் கூர்மை வாய்ந்ததென்பதை உணர்த்தவே செய்வோம், சந்தியில் நிறுத்தாமல் விடவே மாட்டோம். (ப—ர்.)

வந்துவிடப்பா கணக்குடன்?

1927ம் ஆண்டு திரு. ப. சி. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் இந்து மயானக் கணக்குகளை அதி சீக்கிரத்தில் வெளியிடுவதாக சுதந்திரனில் எழுதி இருந்தார். மூன்று வருடக் காலாவதியும் கழிந்துவிட்டது. ஒரு பேச்சும் கிடையாது. எல்லாம் கிணற்றில்போட்ட கல்மாதிரி இருந்தது. நாமும் அவசரப்படவில்லை, ஏனென்றால் அவரும் பல ஜோலிக்காரர். கோர்ட்டு வேலையும் உண்டு; வீடுகள் கட்டுவதையும் கவனிக்க வேண்டியதிருந்ததல்லவா? எல்லாவற்றையும் பார்த்தே நாம் கணக்குக்கேட்டோம். உடனே ஒரு அடிமை புறப்பட்டார். கணக்குத் தயாராகிறதென்றார். பல வருடக் கணக்குகள் அல்லவா? தயாராவதற்குக் காலம் பிடிக்குமென்பதும் வாஸ்தவம்தான். இன்னும் எவ்வளவு காலம் நமது பிள்ளை அவர்களுக்கு வேண்டுமோ தெரியவில்லை. நாம் மறுபடியும் பொறுத்தோம். நமது சம்மந்தமாகவும் சில்லறை விளையாட்டுகளைக் காட்டி பயமுறுத்த முன்வந்தார். அதற்கு நாம் அஞ்சுவோமா? நியாயத்தைக் கேட்டால் இவருக்கு வந்ததென்ன? இன்னும் கணக்குகள் பரிசோதகரிடம் இருக்கவும் கூடுமோ? அப்படியும் இருக்கலாம். இருந்தாலும் கொஞ்சம் துரிதமாக வேலை நடக்கட்டும். தவிரவும் நியாயஸ்தலம் போவதும், அங்கு நியாயம் விளங்கச் செய்வதும் கேவலமென்று நமது நண்பர் அடிக்கடி கூறுகிறார். அந்த அவசியம் ஏற்படாமல் செய்வாரா? கணக்குகள் உடனே வருமா? பார்க்கலாம்.

சந்தி மாமாக்களே!

நெருக்கூத்துப் பார்த்தவர்களுக்குத் தெரியும் சந்தி மாமாக்கள் கதை. நம்ம கோமாளி தாஸன் இந்த மாமாக்களைச் சந்தியில் நிறுத்தக் கேட்டிருப்பீர்கள். அதேமாதிரி இப்பொழுது நடக்கும் அடக்கு முறைத் தர்பாரிலே-எரோப்ளேன் வில்லிங்டன் நடிக்கும் அவசர ஆட்சி சர்க்காரிலே—சிறைப்படுத்தும் நாடகத்திலே சில பேர்வழிகள் சந்திமாமாக்களாகத் தோன்றியிருக்கிறார்கள். இவர்களெல்லாம் நம்ம கோமாளி தாஸன் போன்ற சர்க்கார் தாஸர்களேயன்றி வேறெவருமில்லை. தேசியப் போர் ஆரம்பமாகிவிட்டால் இந்தச் சந்தி மாமாக்கள் காங்கிரஸுக்கும் சர்க்காருக்கும்--காந்திஜீக்கும் வைஸ்ராய்க்குமிடையே தூது போகத் தலைப்பட்டு விடுகின்றனர். போன போரின்போது சாப்ரூ—ஜெயக்கர் இருவரும் தொங்கு தொங்கெனத் தொங்கியதை நாம் மறந்துவிட்டோமா? இப்பொழுதும்கூட வில்லிங்டன் சர்க்கார் இந்த இரண்டு சந்தி மாமாக்களுடன் இன்னுமொரு அறுவரையும் போடு குட்டிகளாக அழைத்திருப்பதாகச் செய்தி யறிகிறோம். எதற்காக? சந்தி பேசுவதற்காக விருக்கலாமா? என்றொரு சந்தேகம் பிறந்ததுண்டு. ஆனால் அப்பொழுது நினைத்தோம் இந்த மாதிரி இந்த சந்தி மாமாக்களைக் கால் தேசத் தூது விடுப்பதால் சமாதான மேற்படப் போகிறதில்லை எரோப்ளேன் வில்லிங்டனே ஏராடா சிறைகதவில் மூட்டிக்கொண்டாலொழிய இம்முறை காந்திஜீ இலகுவில் மசிந்துவிட மாட்டாரென்று. ஆனால் நமது நினைப்பே முழுதும் தப்பாய்ப் போய்விட்டது. சந்தி மாமாக்களை சந்திபேச ஷோக் வில்லிங்டன் அழைக்கவில்லை. விருந்துண்ண அழைத்திருக்கிறார். சாப்ரூவும் ஜெயக்கரும் நன்றாய் விலாப்புடைக்க தின்னுதின்னென்று தின்றார்கள். அது போகட்டும் இந்த அரங்கசாமி ஐயங்கார் கொக்குப் போலே போச்சே எதற்காக? சமாதானம் பேசவா? இல்லை விருந்துண்ணவா? எதுவாயிருந்தாலும் மீனுக்கு வாலும் பாம்புக்குத் தலையுங் காட்டும் ரெங்கசாமி காங்கிரஸ் வாலா வென்று தன்னையழைத்துக் கொள்ளுகிறவராயிற்றே காங்கிரஸ் சபைகளெல்லாம் சட்ட விரோதமான கூட்டங்களெனவும், காங்கிரஸ்காரர்களனைவரும்

நீயென்ன வாத்தியாரா?

உள்ளூர் பத்திரிகாசிரியர்களை யெல்லாம் தன் முன் இன்று ஆஜராகும்படி பர்மா சர்க்காரின் சீப்—செக்ரட்டரிககாக பிரசார ஆபீசர் கடிதம் விடுத்துள்ளதாக அறிகிறோம். எதற்காக? என்ன கருத்துக்கொண்டு? என்பன விளங்கவில்லை. பிரசார ஆபீசரின் வேண்டுகோளாகையால் அநேகமாய் சர்க்காரின் கொள்கையை ஆசிரியர்களிடையே பிரசாரஞ் செய்வதற்கென்றே படுகிறது. எப்படியானாலும் ஆசிரியர்கள் பத்திரிகா தர்மத்திலிருந்து சிறிதளவும் பிசகமாட்டார்களென்றே நம்புகிறோம். புதிய அச்சுச் சட்டத்தின் அழகைப் பற்றிப் பாடங் கற்றுக் கொடுப்பதானால் ஆசிரியர்கள் பள்ளிப் பையன்களல்ல. மேலும் பிரசார ஆபீஸர் கொல்லத் தெருவில் ஊசிவிற்க வந்ததில் நிச்சயமாய் ஏமாற்றமே அடைவார். இருந்தாலும் அதுபற்றி நாமேன் மண்டையை யுடைத்துக்கொள்ள வேண்டும்? நமக்கும் வாத்தியார் பாடத்திற்கும் எவ்வித சம்மந்தமுமேயில்லை. ஏனெனில் நம்மை வாத்யார் அழைக்கவில்லையல்லவா? நம்மை குருவுக்கு மிஞ்சிய சிஷ்யனெனக் கருதிவிட்டார்போலும் இல்லை குள்ளப் பத்திரிகை யாகையால் கண்ணில் படவில்லைபோலும். எப்படியானாலும் சரி, ஆசிரியர்களுக்கு ஒரேயொரு வார்த்தை. சக ஆசிரியர்களே! நிலை தவறிவிடாதீர்கள். ஆயிரம் போவதானாலும் கொள்கையை விட்டு விடாதீர்கள். வருவது வரட்டும். அனுபவிக்கத் துணிந்துவிடுங்கள். பெண்டுகளும் பிள்ளைகளும்கூட தியாகத்தீயில் குதித்துவிட்ட பின்னால் நீங்கள் மாத்திரமென்ன? உங்கள் சொத்துச் சுகமெல்லாம் அத்தனை கருப்பு கட்டியா? நிலை குலையாதீர் நண்பர்களே!

லகக்காரர்களெனவும் கூறி அடக்கு முறை ப அள்ளிஅள்ளி வீசும் வைஸ்ராயின் அழைப்புக்குத் தலையால் நடந்து தில்லி செல்லலாமா? கூடாது. தப்பிலும் அடித்து தவிலிலும் அடிக்காதே ரெங்கசாமி.

Printed & Published By A V. Sellam Pillay at the Desopakri Press, 210, 36th Street Rangoon

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 48 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை

DESOPAKARI

புதன், ஞாயிறு வெள்ளி வெளியீடு

210-36-வது இரங்கோன், (15—1—32) தை மீ 2உ வெள்ளிக்கிழமை

எரோப்ளேன் சர்க்காரில்?

கோடி மண்டபந் திகழும்—திறற்
  கோட்டை! யிககிதைபவர் பொழுதனைத்தும்
நாடி நின்றிடர் புரிவார்—உயிர்
  நதியினைத் தடுத்தெமை நலித்திடுவார்
சாடுபல் குண்டுகளால்—ஒளி
  சார்மதிக் கூடங்கள் தகர்த்திடுவார்
பாடி நின்றனைப் புகழ்வோம்—எங்கள்
  பகைவரை அழித்தெமைக் காத்திடுவாய்.

—கவியரசன்.

எரோப்ளேன் சர்க்காரில் வைஸ்ராய் வில்லிங்டன் மகாப் பிரபுவின் ஆட்சியிலே என்னென்னவெல்லாம் நடக்கின்றன? அவசர அவசரமாக அந்தர தர்பார்தான் நாள் தவறினாலும் தவறாமல் நடைபெறுகிறதென்று சொல்லலாமா? குண்டாந்தடி ராஜ்யம் நிகழ்கிறதென்னலாமா? இல்லை அவசரச் சட்ட அரசாங்கம் ஆதிக்கத்திலிருக்கிறதென்போமா? எப்படிச் சொன்னாலும் எதையுரைத்தாலும் ஒரு சாரார் சீறிவிழுவர். என் செய்வது உள்ளதை உரைக்காமலுமிருக்க முடியவில்லை. நாற்புறமும் ஆபத்துக்களால் சூழப்பட்டிருந்தாலும்—தலைக்குமேல் அச்சுச்சட்டம், அவசர அச்சுச் சட்டம், கன அவசர அச்சுச் சட்டமெல்லாம் மயிரிழையில் தொங்கிக் கொண்டிருக்க போதிலும்—எந்த நிமிஷம் வேண்டுமானாலும் காலடியில் பூமிவெடித்து, எரிமலை குமிறி அக்னிக் குழம்பை கக்குவதாயினும் உண்மையை உரைப்பதில்—பத்திரிகா தர்மமாகிய நடுநிலைமை வகிப்பதில் நமது கோட்குறியை, கொள்கையைக் கொஞ்சமும் விட்டுக் கொடுக்கவோ, தளரவிடவோ அல்லால் குனிந்து கொடுக்கவோ போகிறதில்லை. அதே போன்றே நமது சக வர்த்தமானிகளாகிய சுதந்திரன், பர்மாநாடு பரிபாலினி ஊழியன் முதலிய பத்திரிகைகளும் நடந்துகொள்ளுமென்பதில் நமக்குப்பூரண-பரிபூரண நம்பிக்கையுண்டு. ஒரு நாள் வாழ்ந்தாலும் சத்திய மார்க்கத்தில்—உண்மை நெறியில் வீரவாழ்வு வாழ்வோம். போதும்.

உலக சரித்திரத்திலேயே என்றுங்காணப்படாத தெய்விகயுத்த மொன்று நடக்கின்றது. உயிரைப் பிடித்துக்கொண்டு சாவுக்குப் பயப்படுகிறவர்களெல்லாம் தீர்த்தயாத்திரை போய்விடுங்கள். செல்வத்தை சேமித்து வைத்திருப்பவர்கள் சீமைக்கு ஓடிவிடுங்கள். உண்மை இந்தியன் வீட்டைப் பூட்டிக்கொண்டு உள்ளிருக்க மாட்டான், என்ற சர்தாரின் பொன் மொழியை வேதமாகக்கொண்டு வாழ்வோம்.

"இந்தியா நமது சொந்த நாடு; சொந்த வீடு. இங்கு வெறுமனே வயிறுகழுவவே வந்திருக்கிறோம். பர்மாவியா நமக்குத்தாயில்லை. பாரத மாதாதான் நமது உண்மையான, நம்மைப்பெற்று வளர்த்த தாய். அவள் அல்லலுறும் போது—அவளது அருந்தவப்புதல்வர்கள் அடுக்கடுக்காய் ஆயிரம், நூற்றுக்கணக்கில் சிறைப்படுத்தவும், தேகத்தைச் சாய்க்கவும், மூச்சை நிறுத்தவும் செய்யப்படும் பொழுது நாம் மாத்திரம் உண்டு களித்து உலவலாமா? நாம் யார்? என்பதை ஒவ்வொருவனும் அவனவன் நெஞ்

சில் கையை வைத்து நினைத்துப்பார்க்கட்டும். எவனது ஹிருதயம் தன்னை இந்தியனெனக் கூறுகின்றதோ—எவனது மனச்சாட்சி இந்தியன் இந்தியாவுக்குத் தொண்டு செய்யக்கடமைப்பட்டிருக்கிறனென்று ஓங்கி ஓங்கி—இடித்திடித்துச் சொல்லுகிறதோ அவனெல்லாம் வெறுமனே வீற்றிருப்பதில் பயனில்லை. அவனவனால் இயன்ற அளவுக்காயினும் சேவை செய்தே தீரவேண்டும். ஆயிரந்தான் இவ்வூரில் கொட்டமடித்தாலும் நாளை மூச்சாறுவது நம் மூரிலேதான் என்பதை எண்ணிவிட்டால் பிரயோஜனமில்லை. உயிரைச் சர்க்கரையாகத் தித்திப்பவர்களும்கூட உயிர் போக்காமல் சிறைப் படாமல் தடியடி அவதிகளுக்கு ஆளாகாமலே தொண்டு செய்யவும் முடியும். இப்பொழுது தான் தாய்மாரெல்லாம் சகோதரிகளெல்லாம் தடியடிபடவும் குண்டு மழையில் கூசாமல் நிற்கவும், சிறைக்குள கிடந்து புழுங்கவும் துணிந்து தீவிரமாயிறங்கி விட்டார்களே—நாள்தோறும் ஆண்களைப்பார்க்கிலும்கூட அதிகத்தொகையில் கைதிசெய்யப்படவும்படுகிறார்களே, அவர்களுக்கும் தேசப் பணிபூண்டு செல்லும் சிறுவர் சிறுமியர்க்கும் வீட்டிலிருந்து சோறு சமைத்து வைக்கலாம். அதையும்கூட ஒருவகையில் தேச சேவையென்று சொல்லிவிடவும்கூடும். ஒன்றுமே செய்யாதவர்களைவிட தினையளவு சேவைசெய்தவன் எத்தனையோமடங்கு மேல். இளங்காளைகளுக்கு இவ்வுரையில்லை. அவர்களது ஸ்வபாவமான இளம் இரத்தத்தின் தீவிர கெதியால் போரரங்கம் போகவே செய்வர். அதை அவரவர் தம் யுக்தத்துக்கே விடுத்து விடுகிறோம்.

இந்தியாவெங்கும் பிரபல தலைவர்களனைவரும் சிறையிலடைக்கப்பட்டு விட்டார்கள். நடுத்தரத் தலைவர்களும் சாதாரண தொண்டர்களும் தேச சேவகிகளும் தடியடிபடுகிறார்கள்; ஆடுகள் பட்டியிலடைபடுவதுபோன்று சிறைப் பட்டியில் அடைபடுகிறார்கள். காங்கிரஸ் நிதிகளும் காங்கிரஸ் கட்டிடங்களும் வேட்டையாடப் படுகின்றன. சமாதானமாகச் செல்லும் ஊர்வலங்களும், நிம்மதியாக நடைபெறும் கூட்டங்களும் தடியாலும் பிரம்பாலும் அடித்துக் கலைக்கப்படுகின்றன. அஹிம்ஸைக்கும் ஹிம்ஸைக்குமிடையே போர் நிகழ்கின்றதெனக் கூறுவதும் பொருந்தும். ஆத்ம பலத்துக்கும் சரீர பலத்துக்கும் யுத்த மென்றும் சொல்லலாம். ஒருசாரார் அடிபடுகின்றனர்; அடைபடுகின்றனர். இன்னொரு சாரார் சாத்விகத் தொண்டர்களை நிர்தாக்ஷண்யமாய் அடக்கிவிடப் பார்க்கின்றனர். இருதரப்பிலும் அஹிம்ஸை நிலவவிட்டாலும் இதை ஒரு சத்தியப் போரென்றே சொல்லுவோம். வெற்றியும் சத்தியத்தின் பக்கமே சாரும். இடையில் எவ்வளவு கஷ்டம் வேண்டுமானாலும், எத்துணை பலி தியாகம் வேண்டுமானாலும் செய்ய இந்தியன் துணிந்துவிட்டான்; இறங்கி விட்டான்.

அரசாங்கத்தின் அடக்குமுறை, தடுக்கு முறைகளை ஒவ்வொன்று பெடுத்துக்கொண்டு வியாக்கியானஞ் செய்யலாம். ஆனால் கூடாது. தந்திச் செய்திகளே அவற்றின் கொடூரங்களைப் பற்றிக் கூறப் போதுமானவை. விசேஷ வியாக்கியானம் மிகையேயென்னலாம். பொதுவாகச் சொல்லப்போனால் நாடு முழுதுமே ஒரு சிறு பகுதிகூட விலக்கு விதியப்படாமல் ஒரே அமர்க்களப்பட்டு நிர்தூளியான நிகழ்ச்சிகள் நிகழ்கின்றனவென்பதே போதும். பன்னிப் பன்னிப் பேசுவானேன? இந்திய ஆசியவில் ஒரே காரிருள் சூழ்ந்து கிடக்கின்றது.

இந்தியாவின் இப்பொழுதைய போரில் என்னென்ன திட்டங்கள் கையாளப்படுகின்றன. உப்புச் சத்தியாக்கிரஹமா? கள்ளுக்கடை மறியலா? அன்னியத்துணி பஹிஷ்காரமா? நிரந்தரமாக இன்னின்ன இடத்தில் இன்னின்னதுதான் நடக்கின்றதெனத் திட்டமாகக் கூறுவதற்கில்லை. பொதுவாகச சட்ட மறுப்பென்று சொல்லலாமே யொழியச் சிறப்பாக வெதுவையுமே குறிப்பிட்டுக் கூறிவிட முடியாது. ஒவ்வோரிடத்தில் அன்னிய ஜாமான் பஹிஷ்காரம் நடைபெறுவதாக அறிகிறோம். பிரிட்டனில் வருங்கால மன்னனாக வாவிருக்கும் வேல்ஸ் இளவரசன் செய்து வரும் பிரசாரத்தை இந்தியாவில் இந்தியர்கள செய்வதிலென்ன தவறிருக்கிறது? சுதேசிப் பொருள்களை சுதேசிகள் உபயோகிக்க வேண்டுமெனப் பிரசாரம் செய்வது சட்ட விரோதமானதெனக் கொள்ளுவதே இயற்கைச் சட்டத்திற்கு வெகு தூரம் விலகியதாகும். இருந்தாலும் தடுக்கப்படுகிறது. அடிமை நாடு அவ்வளவையும் சகித்துத்தானாகவேண்டும் போலும். வியாபார வர்க்க ஆட்சியாளர் வியாபா

இந்த ஊரில் இதுவேனும் செய்யலாமா?

இந்தியாவில் நடக்கும் சட்ட மறுப்பியக்கத்தை இவ்வூரிலும் நடத்த வேண்டுமென்பது அவசியமில்லை. பிறந்தகத்தில் செய்ய வேண்டியதைப் புகுந்தகத்தில் செய்வதால் பிரயோஜனமில்லையென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளவே செய்வர். மேலும் அத்தகைய கிளர்ச்சியொன்றையும் செய்துவிட இங்கெவரும் தயாரில்லையென்பதும் தெரிந்ததே. ஆனால் எமதெண்ணத்தில் இதுவொன்று செய்யலாமென்றுதோன்றுகிறது எமது நண்பர்கள்பலரும்கூட செய்யலமென ஒப்புகின்றனர். என்றாலும் பொதுஜன அபிப்பிராயமே பிரதானமாக வேண்டியதென இவ் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

சமீபத்தில்—இன்னும் இருபது தினங்களில் இங்கோர் கோலாகலமான கொண்டாட்டம் நடக்கும். ஏராளமான ஜனங்கள் கூடுவார்கள். பூச விழாவென்றால் கூடாமலிருப்போமா? என்னென்ன கண்கொள்ளாக் காட்சிகளையெல்லாம் காணப்போகிறோம். காசைக் காசெனப் பாராமே எவ்வளவெவ்வளவு செலவு தான் செய்வோம். மூன்று தினங்கள் ஓரே மட்டாய்க் களித்திருப்போம். சுப்ரமண்யன் வெள்ளி ரதத்தில் வீதி வருவான். இரக்கோனின்கீழ் கோடியிலிருந்து செட்டியார்கள் வீதிவரை எள்விழ இடமில்லாதபடி ஏக ஜனத்திரளாயிருக்கும். பர்மாவின் வடகோடி, தென்கோடி, மேலகோடி, கீழ்கோடியிலிருந்தெல்லாம் நம்மவர் இந்நகரில் கூடுவது வருடத்திலொருவட்டமாகும். இச்சந்தர்ப்பத்தில் நாமென்ன செய்யலாமென்பதுதான் இப்பொழுது பேசவேண்டிய பிரச்னை.

ஒருவொரு நாடும் அவ்வந் நாட்டுச் சுதேசிப் பொருள்களையே உபயோகிக்கத் தலைப்பட்டிருக்கின்றன ஏனெனில் ஒவ்வொரு நாட்டின் செல்வமும் வெளி வேறு நாடுகளுக்குச் செல்லாமல் அவ்வந்நாட்டிலேயே தங்கிவிட்டாலன்றி வறுமைப்பிரச்னையை தீர்த்துவைக்க முடியாதென இப்பொழுதுதான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டன் முதல் துருக்கி முதலிய பல நாடுகளும் அந்நியச் சரக்குகளுக்குப் பலமான சுங்கச்சுவறு எழுப்பி தேசீய பொருளாதார நிலைமையைச் சீர்ப்படுத்தி வருகின்றன. அதே போன்று பர்மா உளபட்ட இந்தியாவும் செய்யலாமென்றால் நாட்டுப் பொறுப்பு நாட்டு மக்கள் வசமில்லை என்றாலும் சுதேசியத்தை வளர்ப்பதில் எவ்வித தடையும் கிடையாது. கதர் கட்டுவதையோ வேறு எந்த சுதேசிப் பொருளை உபயோகிப்பதையோ எந்த சர்க்காரும் தடைப்படுத்தவியலா. ஆகவே நாமிங்கே சுதேசிப் பிரசாரஞ் செய்யலாம். வரும் தைப்பூச விழாவின்போது இங்கு சுதேசிப் பொருட்காட்சி சாலையும்—கதர் காட்சி சாலையும் திறந்து வைத்து விழாவுக்கு வரும் பலரும் வாங்கி உபயோகிக்குமாறு செய்யலாம். இதில் இந்தியர்மாத்திரமில்லைபர்மியருங் கலந்து பர்மாவில உற்பத்தியாக்கப்படும் பல பொருள்களையும் விற்பனைக்குவைத்துவிற்கவும்வாங்கவும் செய்யலாம். இதனால் இவ்வித நன்மைகள் ஏற்பட ஹேதுவுண்டு. பர்மியர்களின் கூட்டுறவால் பர்மாவில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களையும் பின்னித் துணியையும் இந்தியர்களும் இந்தியப் பொருள்களை இந்தியக்கதரை பர்மியர்களும் வாங்கி உபயோகிப்பதால் பரஸ்பரம் நேயப்பான்மை யேற்படுவதுடன் இரு சர்க்காரின் பொருளாதாரமும் விர்த்தியடைகிறது, இப்பொழுதிருக்கும் நிலைமைக்கு இவ்விரண்டுமே ஜீவாதாரமானவை. அதேசமயம் தேச சேவை செய்தவர்களுமாகிறோம்.

சரிதான். நல்ல யோஜனையில்லை யென்ன மாட்டீர்கள். ஆனால் மணி கட்டுவது யார்? என்னும் கேள்வியெழலாம். தைப் பூச விழா அனேகமாய்த் தமிழ் இந்துக்களின் விழாவேயாகும். ஆகையினாலே தமிழர்கள்—தமிழ் இந்துக்கள்தான் இப்பணியிலீடுபட வேண்டியவர்கள் என்பதில்லை. மதசார்த்திகமானதொன்றுமிதிலில்லை; தேசீயபொருளாதாரத்தையே இம்முயற்சி வற்புறுத்துகிறது. ஒவ்வொரு இந்தியனும் ஒவ்வொரு பர்மியனும், எவ்வித சாதிமத

(7-ம் பக்கம்)

ரத்திற்கு பாதுகாப்பளிக்கவே செய்வர். நாமென்ன செய்யலாம்? அஹிம்சைப் பிடியை நழுவவிடாமல், ஆத்திரப்படாமல் பொறுமையுடன் பொறுத்துத்தானாகவேண்டும். நாடுண்டு. நாடே இப் போருக்கு முடிவு காணட்டும். வேறு யாரால் முடியும்?

கோலமிடுந் தாய்மாரே!

வீடுகளின் முற்றங்களிலே கோலமிடுவதென்பது இந்தியாவில் தொன்று தொட்டு நிகழ்ந்துவரும் வழக்கமொன்று. காலைத் துயிலெழுந்து விட்டு முன் வெளியில் சாணந் தெளித்துக் கோலமிடுவதை ஒவ்வொரு நாளின் முதல் கடமையாக நமது பெண்மணித் தெய்வங்கள் கருதுகின்றனர்; கைக்கொண்டு வருகின்றனர். வீட்டை அலங்கரிப்பது என்ற ஒரே அர்த்தத்தில் மாத்திரந்தான் அம்முறை அநுஷ்டானத்தில் கொண்டு வரப்பட்டதா? முதன் முதலில் வாழ்க்கைச் சித்திரமாக வகுக்கப்பட்டதா? இல்லை. அதைப்பார்க்கிலும் அழகான அர்த்தத்துடன் ஆதியில் ஆரம்பிக்கப்பட்டது அழகுதெய்வத்தைமட்டும் வணங்குவதோடமையாது அத்துடன் தர்ம தேவதையையும் வழிபடுவது என்ற உத்கிருஷ்டமான தத்துவத்தை தாய்மார்கள் வழக்கத்தில் வைத்து போற்றி வருகின்றனர். வீட்டு முற்ற வெளியிலே அழகிய பலபல சித்திரங்களைச் சித்திரித்துக் கோலமிடுவது காலை இளம் பருதியின் சோபிதையிலே கண்களைப் பறிக்கும் வடிவை வாரிவாரி இறைக்கின்ற தென்பதை எந்தவொரு இந்தியனும் ஒப்புக்கொள்ளாமல் முடியாது. வாஸ்தவந்தான். ஆனால் கோலமிடுந் தத்துவத்தில் ஸ்புரித்து நிற்கும் அந்தரார்த்தம் தான் அந்தத் தத்துவத்தை முதன் முதலில் சிருஷ்டித்தானே அக் கவிஞனின் உள்ளக் கிடக்கையும், நோக்கமுமாகும். அதைப்பற்றி இப்பொழுது எவருமே என்னென்றுகூடச் சிந்திப்பதில்லை. அநேகமாய் மறந்துகூடப் போய்விட்டதென்றும் சொல்லி விடலாம். எந்தவொரு சனாதனமான தர்மநோக்குடன் அத் தத்துவம் ஆரம்பிக்கப்பட்டதோ அது நாளடைவில் நம் நாட்டைவிட்டு நீங்கிவருகிறது. காலவட்டத்தில் தர்மம் மெலிந்துபோய் விட்டதென்றே கூறவேண்டும்.

எறும்பு முதல் யானை யீறாகவுள்ளஎல்லா ஜீவ வர்க்கத்துக்கும் இந்திய தர்மம் செய்து வந்த காலம் ஒன்றிருந்தது. ஜீவகாருண்ய மிகுதியால் நமது தாய்மார் எறும்புகட்குத் தினே தினே உணவூட்டிப் போஷித்து வந்தார்கள் என்பது இக்கோலத்திலிருந்தும் காணக்கிடக்கின்றது. காலையிலெழுந்ததும் நமது தாய்மார் ஈகைக் கரத்தால் பிச்சையேற்றுண்பாருக்குப் பிடியரிசி பெய்து போஷித்து வந்தனர். அதில் சிந்திய அரிசி மணிகளை எறும்புகள் எடுத்துச் சென்றன. அதுகண்டு அவற்றிற்கெனவும் தனியாய் வீடுகளின் முன்றிற்கடோறும் அரிசி யிறைக்கப்பட்டன. முழு அரிசியை எறும்பு வர்க்கம் இழுத்துச் செல்லும் கஷ்டஞ் சகிக்காத நமது மெல்லியலார் அரிசியைத் துளாக்கி அள்ளி அள்ளி இறைத்தார்கள். எறும்புகள் விருந்துண்டு வாழ்ந்தன. பிற்போக்கில் வெறுமனே இறைப்பதோடுமாத்திரமிராமல் நமது பெண்மணிகள் அதைக் கோலமாகவுஞ் சித்திரித்து அழகையும் புகுத்தினர். சிறு சிறு குவியல்களாக அமைந்ததில் எறும்புகளுக்கு சௌகரியமும் கிடைக்கலாயிற்று. "அம்சரக் கோலம் அள்ளித் தெளித்தேன்" என்ற அழகு மொழியின் அர்த்தமும் அதுவேயாகும். உத்தம நோக்கமும் அறச் சிந்தனையுந்தான் கோலமிடுவதின் உள்ளார்ந்த அர்த்தம்.

ஆனால் இப்பொழுதோ இந்நோக்கமும் இச்சிந்தனையும் தேய்ந்து வெறும் அழகு காரணமாகவே தாய்மாரே! சகோதரிகளே! நீங்கள் கோலமிடுகிறீர்கள். ஏனெனில் இப்பொழுது நீங்கள் தர்ம தேவதையை மறந்துவிட்டீர்கள். அழகு தெய்வத்தை மாத்திரமே வணங்கத் தலைப்பட்டிருக்கிறீர்கள். பழைய சனாதன தர்மம் போய் புதிய நவ நாகரீகத்தில் நீங்கள் மயங்கிக் குளிக்கிறீர்கள். பஞ்சளழகை மறந்துவிட்டு வீட்டுக்கு வெள்ளை யடிப்பது போல வெள்ளைப் பொடியை (பவுடரை) முகத்திலடித்து அழகென மகிழும் நீங்கள் பழமையைக் கைக்கொள்ளுவீர்களா?

அரிசி யானால் இப்பொழுது நீங்கள் கோலமிடுகிறீர்களா! இல்லை. வெள்ளைக் கல்லைப் பொடி செய்தோ அல்லது சுண்ணாம்புத்தூளை அள்ளியோ கோலமிடுகிறீர்கள். தர்மமெங்கே? எறும்புக்கும் இரை போடும் வழக்க முண்டா? கிடையவே கிடையாது. அரிசியாக் கோலத்திற்கு பதிலாக கற்பொடியையோ சுண்ணாம்பையோ உபயோகிப்பதனால் சோற்றுக்கு மாறாக மண்ணை வாரிக் கொடுக்கும் பாதகச் செயல் செய்தவர்களாகிறீர்களே இதுதானா உங்கள் முன்னோர் தர்மத்தை நீங்கள் போற்றுவது; வளர்ப்பது. "அறஞ்செய விரும்பு" என்று தமிழ் மகள் சொல்லிய சொல்லெங்கே?

பொங்கலோ! பொங்கல்

இன்று தைப்பிறந்த இரண்டாம் நாள். நேற்று சங்கராந்தி தினம். வீட்டை மெழுகிக் கோலமெலாமிட்டு விட்டுப் பொங்கல் செய்தோம். புதிதாய் விளைந்த தான்யமணிகளைப் பொங்கி ஆண்டவனுக்கு அர்ப்பணஞ் செய்தாயிற்று. "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்பதை லட்சியமாக-வேதமாகக்கொண்டு நாம் செய்யும் எந்தக் கர்மமானாலும், நன்மையாயினும் சரி, தீமையாயினும் சரி-சகலத்தையும் அவனுக்கே அர்ப்பணஞ் செய்து விடுவதென்பது ஒரு தர்மம். கர்மயோகத்தின் சாரமும், சத்தும் அதுவேயாகும். வியாத கீதையிலே இந்த உண்மையைத் தான் காணுகிறோம். ஆடுகளைத் தூக்கி வாரிப்போட்டுத் துடிக்கத் துடிக்க அறுத்து அவற்றின் இறைச்சியை விற்றுப் பிழைத்த கசாய்க்கடை காரனும் ஒரு கர்மயோகியாகிறான். ஒரு பால சன்னியாசி காட்டிலே தவங்கிடந்தான். பிராணாயாமம் முதல் படிப்படியாக யோகசாதனை செய்து தவத்தின் ஒரு எல்லையை யடைகிறான். ஒரு நாள் அவனிருந்த மரத்தின் மீதிருந்த கொக்கொன்று பால சன்னியாசியின் மீது எச்சம் விட்டு விட்டது. வெறித்துப் பார்த்தான். தவ வலியால் நோட்டத்தனல் பொங்கி கொக்கு எரிந்து சாம்பலாய் விழுந்து விட்டது. பால சன்யாசிக்கு கொர்வம் எழுந்து எடுத்த காரியத்தில் வெற்றி பெற்று விட்டதாகத் துள்ளிக் குதித்தான். காட்டுக்குள் புகுந்தான். சன்னியாசியாகச்சே வீடுகடோறும் பிச்சை யேற்றுண்டான். ஒரு வீட்டின் முன் முகப்பிலே நின்று "அம்மா! தேவி" என்றான். "சற்றுப் பொறு மகனே!" என்று உளளிருந்தொரு ஓசை பிறந்தது. சன்னியாசி கோபம் தலைக்கேறப் பெற்றவனாய் "நமது தவ வலிமையை இப் பெண் பேதை அறியவில்லை" யென யெண்ணத்துள்ளே ஒரு தரம் எண்ணினான். இவ்வெண்ணத்தை மானஸத் தந்தி போறு மகனே யென்ற பெண்மணியிடம் கொண்டு சேர்த்தது. இங்கே கொக்குமில்லை குருவியுமில்லை யென்றாள். அவ்வளவு தான் சன்னியாசி தூக்கி வாரிப போட்டது போல் திடுக்கிட்டு விட்டான். நாம் கொக்கை யெரித்ததை இந்த அம்மணி யெப்படி யறிந்தாள்? எவர் சொன்னார்? என்றெண்ணினான். மறு நிமிடம் ஒரு பெண் தெய்வம் பிடியரிசியுடன் பிரசன்னமானாள். நான் காட்டிலே கொக்கை யெரித்ததை தாங்கள் என்னமாயறிந்தீர்கள்? என வினவினான். அதையெல்லாம் நானறியேன். தவ சித்தியோ, யோக சாதனையோ எனக்கொன்றும் தெரியாது. பக்த யோகம், ராஜயோகமெல்லாம் எனக்குப் பாடமில்லை. ஆனால் என் கணவருக்குச் செய்ய வேண்டிய தொண்டு மாத்திரம் செய்தறிவேன் என்றாள். சன்னியாசிக்கும் சந்தேகம் இன்னும் அதிகம் வலுத்தது. பன்னிப் பன்னிப் பலபல கேள்விகளைக்கேட்டான். எனக்கொன்றும் தெரியாது அதோ அந்த கிராமத்திலே கசாய்க்கடை வைத்திருக்கும் வியாதனைக் கேட்டறிந்துகொள். என்று சொல்லிவிட்டாள். அவசர அவசரமாகச் சன்னியாசி அங்கு சென்றான். ஆடுகளைத் தூக்கி வாரிப் போட்டுத் துடிக்கத் துடிக்க அறுப்பதும், தோலுரிப்பதும், சதையைச் சிதைப்பதும், நிறுப்பதும் விற்பதுமாயிருந்த வியாதனைக் கண்டான். வியாதனும் சன்னியாசியை ஒரேயொரு பார்வை மாத்திரம் பார்த்ததும் "அந்த அம்மாளா அனுப்பினார்?" என்று கேட்டான். சன்னியாசிக்கு ஆச்சர்யம் அளவு கடந்ததாய் விட்டது. எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு ஆம். அதைத் தாங்கள் எங்ஙனம் அறிந்தீர்கள்? என்று பதிலுக்கு வினவினான். வியாதன் விடையிறுக்காது தன் வேலையை முடித்துக் கொண்டு சன்னியாசியை வீட்டிற்கு அழைத்துப் போய் வெளித் திண்ணையில் இருக்கச்

எறும்பு முதல் யானை யீறாகவுள்ள ஜீவவர்க்கத்துக்கெல்லாம் உணவளித்த இந்தியா இப்பொழுது என்னிலையி லிருக்கின்றதென்பதை வாழ்க்கைத் தலைவியரே! நீங்கள் எண்ணிப் பார்த்ததுண்டா? வறுமை இந்தியனை வாட்டி வருத்துகிறது; பிச்சுப் பிடுங்கித் தின்னுகிறது. நாட்டு மக்கள் நாட்கணக்கில் பட்டினி கிடக்கின்றார்கள். தேசத்தின் செல்வம் கரைந்து போய்விட்டது. பசிப்பிணியால் இந்தியன் இறந்துபடுகின்றான். நீங்கள் தான் கஞ்சி வார்க்க வேண்டும், நீங்கள் அகப்பை பிடித்து அன்னம் சமைப்பது உண்மையானால் வாருங்கள் ஆண் பெண் குழந்தை குட்டிகள் அடங்கலும் விடுதலைப் போராடலாம். அடிமைத் தளையை அறுத்தெறிவோம். சுதந்திரப் போரில் இறங்கி விடுவோம். தியாகத் தீயில் குதித்து விடுவோம். அப்புறமென்ன? சுதந்திர ஜோதியிடைக் குளிப்போம்; களிப்போம்.

வித்தல் பாயின் வீரமொழி

காங்கிரஸ் தீர்மானங்களிலெல்லாம், பகிஷ்காரமே தலைசிறந்தது. பகிஷ்கார ஆவ்வியக்கத்தை வெற்றிபெற நடத்தி வைப்பதிலேதான் நமது ஊக்கமனைத்தையும் செலவழிக்கவேண்டுமென நான் வேண்டுகிறேன். இந்த ஆயுதத்தை சரிவரப் பிரயோகிப்போமானால், பிரிட்டன் நமது கொள்கைக்கு இணங்கியே தீரவேண்டும்—கேட்பதைக் கொடுத்தேதீரவேண்டும்.

செய்து தனது கிழத்தாய் தந்தையருக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளையெல்லாம் செய்து முடித்துவிட்டுச் சன்னியாசியிடம் வந்தான். மகனே! நான் வேத ரகசியமறியேன். கடமையைக் கடமையின் காரணமாகச் செய்கிறேன். நான் செய்வது கொலைத் தொழிலேயாயினும் எனக்கும் கொலைக்கும் எவ்வித பந்தமுமில்லாமே தாமரை யிலையில் தண்ணீர் போன்று கர்மத்தைக் கர்மமாகவே செய்து வருகிறேன். என்றான். இதுதான் கர்மயோகம். இதனாலேதான் கசாய்க்கடைக்காரனுங் கூட கர்மயோகி யாகிறான். கீதா ரகசியமும் இதுதான். குரவரையும் கிளைஞரையும் கொல்ல மாட்டேன். என்ற அர்ச்சுனனை கிருஷ்ண பரமாத்மா வில்லினை யெடடா! இந்தப் புலவியர் கூட்டத்தை பூழ்தி செய்திடடா! என்றதும் கர்மயோகமே யாகும்:

இக்கர்ம யோகத்தை ஆதாரமாகக் கொண்டுதான் நாம் செய்யும் பாவ புண்ணிய கிருத்தியங்களனைத்தையும் பகவானுக்கு நாம் அர்ப்பணஞ் செய்யப் பழகினோம். இயற்கை தேவி யளித்த புதிரை இறைவனுக்கு நாம் படைத்தோம்.

தானியத்தை விளைவிக்க காரண கர்த்தாவாயிருக்க மாடுகளையும் நாம் மறந்துவிடுவோமா? நன்றாய்க் குளிப்பாட்டி பொங்கலிட்டு புதிருட்டி வேஷ்டியோ விருதோகட்டி விரட்டி வேடிக்கை கொண்டாடுகிறோம்; ஆலத்தியெடுக்கிறோம்; அபிஷேகம் செய்கிறோம்,

ஆனால் தானியம் விளைந்த மண்ணை யெண்ணினோமா? அபிமானஞ் செலுத்துகிறோமா? இல்லையென்றுதான் சொல்லவேண்டும். ஆம் என்பவர்களெல்லாம் தேசாபிமானிகளாகுங்கள். தேசத்தை ஆராதியுங்கள். தேசத்திற்காகத் தியாகஞ் செய்யுங்கள். இல்லாவிட்டால் நன்றி கெட்டவர்கள் வர்க்கத்தோடு சேர்க்கப்படுவோர்.

இல்லையென மறந்தாலும், நமது இயக்கத்தை நசுக்க முயன்றாலும் தனக்குத்தானே அழிவைத் தேடிக்கொள்ளாமல் அங்ஙனம் செய்ய முடியாது. நமக்குத்தானென்ன கொஞ்ச இன்னலா, இடையூறுகளா? சிறை செல்ல நேர்ந்தாலும், அளவிறந்த அவஸ்தைகளுக்கு ஆட்பட்டாலும் பொருட்படுத்தக்கூடாது. உற்சாகத்துடன் ஏற்றுக்கொள்ளவே வேண்டும்.

பலாத்காரம் எவ்விதமான துராக்கிருதம் அல்லது பலாத்காரச் செயலில் ஈடுபட்டாலும் நாம் நிச்சயமாய் வெற்றிபெறவே மாட்டோம். சுதந்தரச் சூரியன் உதயமாவதற்கு குளிர்ந்த ஜெகஜோதி மயமான-கிரணங்களின்-மேன்மை ஸ்பரிசத்தை நீங்கள் இழந்தவர்களாவீர்கள். பலாத்காரக் கிளர்ச்சி எவ்விடத்தும் ஏற்பட்டுவிடாமல் தடுத்தற்கும்கூட நீங்கள் உங்களது உயிரையுங் கொடுக்க சித்தமாயிருங்கள். நம் நாட்டில் இருக்கும் ஒவ்வொரு ஆங்கிலமகனும் மகளும் அவர்களுடைய தாய் நாட்டில் எந்த-சுதந்தரத்துடன் வாழ்வார்களோ—அதே சுதந்தரத்தை இங்கும் அவர்கள் அனுபவிக்கும்படி நாம் பாதுகாக்க வேண்டும். இத்தகைய உயரிய கொள்கை நம்மிடை இருப்பதினால்தான், அயல் நாடுகள் நம்மைப் புகழ்கின்றன. நமது இயக்கத்தை எல்லோரும் பாராட்டப்படுகின்றார்கள். ஜீவ வர்க்கமே அறியாத, நிகரற்ற சீரியஇயக்கமெனச்சிறந்துவிளங்குகிறது.

இரண்டாவது தடையாதெனில், சிறுது காலத்தில காந்தி—இர்வின் ஒப்பந்தம் போன்றதோர் சமாதானம் ஏற்படலாம். அவ்வமயம் நாம் கட்டுப்பாடாகவிருந்து, பொது ஜனங்களுக்குள், உணர்ச்சியை உண்டுபண்ணி, காங்கிரஸ் காரியக்கமிட்டி ஒப்பந்தத்திற்கு புனராலோசனை செய்யுமானால், அதை தடைப்படுத்திவிடவேண்டும். இவ்வித ஒப்பந்தங்களினாலன்றோ நமது விடுதலை வீரன் விலங்கிடைச் சிக்குண்டு விடுகிறான். முக்கியமாக ஒன்று நீங்கள் ஞாபகத்திலிருத்திக்கொள்ளுங்கள். அதாவது நமது அரிய தியாகத்தின் பலனாக நாம் வேண்டுவது குடியேற்ற நாட்டந்தஸ்தல்ல. இங்கிலாந்துடன், கூடிவாழும் பங்காளித்துவ ஆட்சியல்ல பூர்ண—பரிபூர்ணமே. சுதந்தர ஒட்டில்லாத விடுதலையே.

ஹே! இளஞ் சிங்கங்களே! நாம் அனைவரும் ஏக மனத்துடன் தோளோடுதோள் நின்று இப்போரை முற்றிலும் வெற்றியின் எல்லைவரை நடத்திச் செலுத்துவோம்.

பலே! பள்ளிப் பையன்களே!

நேற்று முன் தினம் உள்ளூர்ப் பத்திரிகாசிரியர்களனைவரும் பர்மா சர்க்காரின் சீப்-செக்ரட்டரியின் அழைப்புக் கிணங்க சட்டசபை வாசகசாலையில் ஒவ்வொருவராக வந்து சேர்ந்தார்கள். சென்ற இதழில் நாம் குறிப்பிட்டிருந்த காரணம் பற்றியே அவர்களெல்லாம் அழைக்கப்பட்டனரென்பது ஊர்ஜிதமாகி விட்டது. புதிய அச்சுச் சட்டத்தை வியாக்கியானஞ் செய்வதற்காகவே ஆசிரியர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் நமது தேசோபகாரியின் ஆசிரியர் அழைக்கப்படாததால் வாத்தியார் செய்த பள்ளிப் பாடத்தை பற்றித் திட்டமாய் நாமறியோம்.

எல்லா ஆசிரியர்களும் சென்றிருந்தார்களல்லவா? அவர்களில் இரண்டே இரண்டு பேர் வழிகளைப்பற்றி மாத்திரமே இங்கு பேசுவோம். ஏனெனில் மற்றேனையோர் ஆசிரியர்களே; பள்ளிப் பையன்களென நாம் அவர்களை அழைக்கத் துணிந்ததில்லை.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பாகுபாடின்றி யீடுபடலாம். வர்த்தகத் துறையிலும் லாபமடையலாம்.

பர்மா காங்கிரஸ் கதர் பந்தர்க்காரர்களும் காந்தி கதர் நிலையம், மற்றும் காதி வஸ்திரக்காரர்களும் இதில் சிறிது கவனம் செலுத்தி நயநயமான கதர்களை வரவழைத்து காட்சி சாலையில் வைத்து காட்சியளிக்கவும் வர்த்தகஞ் செய்யவும் வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தைப்பூச விழாவைச் சிறப்புற நிறுவும் தனவைசிய மக்களும் இப்பணியில் பிரதானமாக ஈடுபட்டு இடமளிப்பதுடன் காட்சிசாலைக்குரிய சகல வசதிகளுங் கொடுக்க முன்வர வேண்டுமென வேண்டுகிறோம்.

பர்மிய சகோதரர்களும் பலவித நாட்டு உற்பத்திப் பொருள்களையும் பின்னி ஜவுளிகளையும் கொண்டுவந்து குவித்து காட்சிசாலையை அலங்கரிக்கப் பிரார்த்திக்கிறோம்.

உள்ளூர் தமிழ் பர்மிய பாஷைப் பத்திரிகைகளும் போதிய பிரசாரம் செய்தல் வேண்டுமென விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

அடிகள் அந்தமானுக்கா?

மகாத்மா காந்தியும், இதர மூன்று தலைவர்களும் இரங்கூன் மார்க்கமாக அந்தமான் தீவிற்கு நேற்று கொண்டுபோகப்பட்டதாக நகரில் பெருத்த வதந்தி உலவுகிறது.

பள்ளிப் பையன்களுக்கு பரிட்சை என்பது ஒரு சோதனைக்காலம். இன்ஸ்பெக்டர் முன் ஆஜராவதென்றால் ஏதோ தெய்வ சன்னிதானத்தில் ஆஜராவதென்கிறது பள்ளிப் பையன்களின் கருத்து. நன்றாய்த் தலைவாரி முடித்து நல்லாடை யுடுத்தி பயபக்தி வினயத்துடன் செல்லுவர். அவ்வாறு செல்லுவதால் இன்ஸ்பெக்டரை காக்காய் பிடிப்பதாகவும், குல்லாய் போடுவதாகவுங்கூட அப்பையன்கள் எண்ணிக்கொள்ளுவதுண்டு. இங்கே நாமெடுத்துக்கொண்ட இரு ஆசிரியர்களும் அன்று வாத்தியாரோ, இன்ஸ்பெக்டரோ வாகிய சீப்-செக்ரட்டெரியிடம் என்றுமில்லாதபடி நூதன ஆடையில் பளப்பளவென பிரசன்னமாயினர். ஒருவர் தமிழ் இந்து; மற்றவர் தமிழ் முஸ்லீம். இருவரும் ஆசிரிய உலகத்தில் பிறந்தது முதல் எந்நாளும் இப்புதிய உடைகளணிந்ததாகக் கண்டதில்லை. பிரஸ்தாப ஹிந்துத் தமிழர் எப்பொழுதுமே கோட்டணிய மாட்டார். வெறும் சொக்காயுடனும் அங்கவஸ்திரத்துடனுமே நாம் பார்த்ததுண்டு. முஸ்லீம் தமிழர் சூட்டுப் போட்டதில்லை. சாதாரண லுங்கியும் கோட்டு மணிவார். ஆனால் அன்று மாத்திரம் சீப்-செக்ரட்டெரி முன் ஆஜராவதற்கென்றே கோட்டணியாதார் கோட்டணிந்ததில் சூட்டணியார் சூட்டணிந்ததில் ஏதோ விசேஷமான அந்தரங்கமான அர்த்தமிருக்க வேண்டும். காக்காய் பிடிப்பது குல்லாய் போடுவது முதலிய கருத்துக்கொண்டெனில் சீப்-செக்ரட்டெரியோ—சர்க்காரோ ஏமாந்தவர்களில்லை. இன்னொன்றும் இங்கே விடமுடியவில்லை. ஹிந்துத் தமிழாசிரியர் பாவம் ஆங்கிலம் அறியார். செக்ரெட்டெரியின் ஆங்கில உபதேசவனைத்திற்கும் தலையசைத்துக் கொண்டாராம். என்ன ஜம்பம்! தெரியாததைத் தெரியாதென ஒப்புக்கொள்ளத் துணிச்சலில்லாமல்-தமிழில் மொழிபெயர்த்துச் சொல்லெனக் கேட்கத் துடுக்கில்லாமல்போன பெண்மைச் செயலுக்கு நாம் பெரிதும் வருந்துகிறோம். குருடனும் செவிடனும் கூத்துப்பார்த்தாவதென்ன?

தைரியம்.

(ஸ்ரீ சுப்பிரமண்ய பாரதி)

தீரனுடைய இயற்கை தைர்யம். தீரன் என்ற வார்த்தையின் தாதுபொருளைக் கவனிப்போமானால் அறிவுடையவன் என்று அர்த்தமாகும். துணிவுடையவனுக்கும் அந்த பாஷையிலே அதுவே பெயராக வழங்கப்படுகிறது. எனவே "தைர்யம்" என்ற சொல் அறிவுடைமை என்றும் துணிவுடைமை என்றும் இருவித அர்த்தங்களுடைத்து. துணிவுள்ளவனையே அறிவுள்ளவனென்பதாக உலகம் மதிக்கின்றது. எடுத்ததற் கெல்லாம் அஞ்சும் இயல்புடைய கோழை யொருவன் தன்னைப்பல சாஸ்திரங்கள் கற்றவனென்றும், அறிவாளி யென்றும் சொல்வானானால், அவனை நம்பாதே. அவன் முகத்தை நோக்கி காரியுமிழ்ந்து விட்டு அவனிடம் பின் வருமாறு சொல்லு:—"அப்பா" நீ ஏட்டைக் துளைக்கும் ராமபாணப் பூச்சியைப் போலப் பல நூல்களைத் துளைத்துப் பார்த்து ஒரு வேளை வாழ்நாளை வீணாக்கியிருக்கக்கூடும். ஆனால், அச்சம் இருக்கும்வரை நீ அறிவாளியாகமாட்டாய். அஞ்சாமைக்கும் அறிவுக்கும் நமது முன்னோர்கள் ஒரே சொல்லை உபயோகப் படுத்தி யிருக்கிறார்கள். அதை நீ கேள்விப் பட்டதில்லை போலும்.

ஆம். அச்சமே மடைமை; அச்சமின்மையே அறிவு. விபத்துகள் வரும்போது நடுங்குபவன் மூடன்: அவன் எத்தனை சாஸ்திரம் படித்திருந்த போதிலும் மூடன்தான். விபத்துக்கள் வரும்போது எவன் உள்ளம் நடுங்காமல் துணிவுடன் அவற்றை வெல்ல முயற்சி செய்கிறானோ அவன் ஞானி. "ஹரி ஓம்" என்று எழுதத் தெரியாத போதிலும் அவன் ஞானிதான்—சிவாஜி மஹாராஜா தனது சொந்தப் பிரயத்தனத்தாலும் புத்திக் கூர்மையாலும் அவுரங்கசீப்பின் கொடுங்கோன்மையை அழித்து, மகாராஷ்ட்டிரம் ஏற்படுத்தி தர்ம ஸ்தாபனம் செய்தார். அவர் ஏட்டுப் படிப்பில் தேர்ந்தவரல்ல. இக்காலத்திலே இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் படித்துப் பரீக்ஷைகள் தேறி 15 ரூபாயைக் கொண்டு பிழைப்பதற்காக தமது தர்மத்தையும், ஆத்மாவையும், விலைப்படுத்தக் கூடிய மனிதர்கள் ஆயிரக்கணக்கான சுவடிகள் படித்துக் கண்களைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சிவாஜி மகாராஜாவுக்கு மகாராஷ்டிர ராஜ்யம் லாபம். இவ்விருவரிலே யார் சிறந்தவர்? இவ்விருவரிலே எவர் அறிஞர்?

பாரதவாசிகளாகிய நாம் இப்போது புனருத்தாரணம் பெறுவதற்குக் கல்வி வேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள் நாம் துணிவு வேண்டும் என்கிறோம். துணிவே தாய். அதிலிருந்துதான் கல்வி முதலிய மற்றெல்லா நன்மைகளும் பிறக்கின்றன.

சிவாஜீ மகாராஜாவின் கடைசி நிருபம்.

நீ சோம்பேறியாய் இராதே. இதுதான் அரிய பெரிய காரியங்களைச் செய்ய வேண்டிய காலம். எழுந்திரு! நீ யென்ன செய்யக்கூடுமென்பதை நான் பார்க்கட்டும்! நீ யுன்னை வியாகூலத்திற்கும் துக்கத்திற்கும் ஆளாக்கிக் கொண்டனை. நாம் நம்முடைய சரீரத்தைக் கவனிக்காதது மல்லாமல் நமது பெருநாட்களையும், திருநாட்களையும் கொண்டாடுவதுமில்லை. நாம் ஆண்டிகளென வேற்பட்டதுமல்லாமல் உத்தியோகசாலைகளி லுட்கார்ந்து வேறு காரியங்களை சிந்தனைசெய்து காலத்தை வீணில் போக்கடிக்கின்றோம். நாம் ஒவ்வொரு கஷ்டங்களையும் அனுபவித்து அவைகளை மேற்கொண்டு அரிய செயல்களை செய்து முடித்தல் வேண்டும். பிரதிக்ஞையினாலும் ஆத்ம சக்தியினாலும், எல்லா விபத்துகளையும் தப்பித்து கீர்த்திபெறவேண்டும். இவ்வளவு அற்புதமான சமயங்களுக்கிடையில, எல்லா உலக வியாபாரங்களையும் விட்டு நாம் ஆண்டிகளாகப் போவதா?

நம்முடைய விவகாரங்கள் எல்லாம் நம்முடைய பூஸ்திதிகளையும் நம்முடைய செல்வத்தையும் நாட்டையும் கைக்கொண்டு நம்முடைய தர்மத்தை சின்னாபின்னமாக செய்பவர்களிடத்தில் நாம் விட்டு விட்டோம். இது எவ்வளவு காலம் நீடிக்கும்? இதன் முடிவு என்ன? ஆகையால் இந்த சோபத்தையும், இருளையும் விட்டுவிடு—ஆண்டியாகாதே. ஏக்கத்தை நீக்கிவிடு. உன்னுடைய நாட்களை சரியாய்க்கழி—உபவாச நாட்களையும், திருவிழா நாட்களையும் கைக்கொள். அனுஷ்டானங்களையும், சரீர சுகத்தையும் கவனித்துக்கொள். கீர்த்தியும், கம்பீரமும் பெற்றுக்கொள். எப்படியிருந்தபோதிலும் சோம்பேறியாயிராதே. கடவுளிடத்தில் பக்தியும் நமக்குள் பரஸ்பர நம்பிக்கையும் இருக்கவேண்டிய தவசியம்.

Priated & Published By A V. Sellam Pillay at the Desopakari Press, 210,36th Street Rngoon

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 49 அரையணா

தேசோபகாரி

DESOPAKARI

காங்கிரஸ் பத்திரிகை.

புதன், ஞாயிறு வெள்ளி வெளியீடு

210–36-வது இரங்கோன், (17—1—32) தை மீ 4உ ஞாயிற்றுக்கிழமை

அடிகளின் அஞ்ஞாத வாசம்.

தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும் எனு மியற்கை
மருமத்தை நம்மாலே யுலகம் கற்கும்
வழிதேடி விதியிந்தச் செய்கை செய்தான்
கருமத்தை மென்மேலுங் காண்போம்; இன்று
கட்டுண்டோம்; பொறுத்திருப்போம்;
(கால மாறும்)
தருமத்தை யப்போது வெல்லக் காண்போம்
தனுவுண்டு காண்டீப மதன் பேர்

அருச்சுனன் வாக்கு

பாரத மெங்கும் பாரதப் போர் நடக்கின்றது. பல்லாயிரம் ஆண்டுகள் முன்னர் பாரதத்திடை பஞ்சவர்க்கும் கௌரவர்க்கும் பதினெட்டு நாள் பாரதப்போர் நடந்ததாம். இன்றும் அதே பாரதப்போரைத்தான் இந்தியா நடத்தி வருகின்றது. சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும், அஹிம்சைக்கும், ஹிம்சைக்கும், தர்மத்திற்கும், அதர்மத்திற்கும், மனிதத்துவத்துக்கும் மிருகத்துவத்துக்கும், ஆத்மபலத்திற்கும், சரீரத்திமிருக்கும், பலத்த பல கொலைக்கருவிகளுக்கும், வெறுங்கைக்கும், இடையே இப்பொழுது போர் மூண்டிருக்கின்றதென்போம்.

இதிகாச பாரதத்துக்கும் இப்பொழுது நிகழும் போருக்கும் பல அம்சங்களில் ஒற்றுமையிருக்கின்றன. போன போரும் சத்தியப் போர்; இப்போதைய போரும் சத்தியப்போர். போன போர் முடிவில் தரும ராஜ்யம் நிறுவப்பட்டது. இப்பொழுதைய போர் முடிவிலும் தர்மராஜ்யமே நிறுவப்படும். போன பாரதப் போரை தருமர் தலைமை வகித்து நடத்தினார், வில்லுக்கு விஜயன், விறலுக்கு வீமன் முதல் எல்லா வீரர்களும் தர்மனின் கட்டளை கடவாதே போர் செய்தனர். பெண்களும் குழந்தைகளுங்கூட பங்கெடுத்திருந்தனர். இப்பொழுதைய போரிலும் அவ்வாறே ஒரு துளி அம்சங்கூடக் குறைவில்லாமல் நடக்கக் காண்கின்றோம். பஞ்சவரடைந்த வெற்றியில் துளிகூட குறையாமல் பெறுவதும் திண்ணம். கௌரவரிழைத்த எல்லா இடுக்கண்களையும் பொறுமையுடன் பஞ்சபாண்டவர்கள் சகித்ததே போன்று இப்பொழுதைய இந்தியர்களும் சகித்து வருகின்றனர்.

பஞ்சவர்கள் பனிரெண்டு வருட வனவாசத்தை ஏற்றனர்; ஒரு வருஷம் தலைமறைவாய் மாறுவேடந்தாங்கி அஞ்ஞாத வாசமும் செய்யலாயினர். அதே போன்றே இப்பொழுதைய போரிலும் பனிரெண்டு வருட வனவாசமும் ஒரு வருட அஞ்ஞாத வாசமும் மேற்கொண்டோம். 1919-ம் ஆண்டில் சத்திய ரூபன்—தர்ம சொரூபி—அறக்கடவுள்—அவதார மூர்த்தி காந்திஜி தமது ஒத்துழையாமை, சாத்விகம், ஸ்வாதந்தர்யம் ஆகிய முக்குணம் வாய்ந்த பாஞ்சஜன்னியமாச் சங்கை யெடுத்தூதினர். நாட்டுரிமை வேண்டினர்—தங்களுக்குக் கிடைக்க வேண்டிய தாயாதி பாகமாகிய ராஜ்யபாரம் கேட்டார். கௌரவர்கள் சூதில் வவ்விய உரிமையால் மறுத்தனர். பனிரெண்டு வருட வனவாசமும் ஓராண்டு அஞ்ஞாதவாசமும் பஞ்சவர்கள் செய்து முடித்து வந்த பின்னர் அவர்களுடைய நாட்டை

அவர்களிடமே கொடுத்து விடுவதென ஒப்பந்தம் செய்யப்பட்டது போன்ற சில உடன்பாடுகளேற்பட்டன. பாண்டவர்கள காடு மலை வனம் வனாந்திரங்களில் வறுமைப் பாலை வனங்களில் சஞ்சரித்துத் திரிந்தனர். எத்தனையோ எண்ணத்தொலையாத இன்னல்களும் இடுக்கண்களும் இழைக்கப்பட்டன. அவ்வாறே நமது தர்மபுத்திரர் காந்தீஜியும் அவரது தம்பியர் வீமன் போன்ற கபூர் கானும், அருச்சுனனை ஒப ஜவஹரிலாலும், நகுல சகாதேவரோடொத்த ஆலம், மேஹர் அலியும், வீர அபிமன்யு சுபாஷ் சந்திரனும் இவர்கள் போன்ற எண்ணற்ற பல வீரர்களும் கஷ்டக் கடலுற்றனர். இதுவரை பனிரெண்டாண்டுகள் கழிந்து போயின. பதின்மூன்றும் ஆண்டு பிறந்திருக்கிறது. தலைவர்களெல்லாம் கரந்துறைந்து அஞ்ஞாத வாசஞ் செய்யவேண்டிய காலம். எங்கெங்கே எவரெவரிருக்கின்றாரோ தெரியவில்லை. பீஹார் ஒரிஸாவிலோ—பர்மா மிட்சினாவிலோ வேறெந்த இடத்திலோ எல்லைப்புற காந்தி கான் அப்துல் கபூர்கான் இருக்கின்றார். வங்கச் சிங்கம் சுபாஷ் பாபு எங்கே? மற்றேனையோர் எங்கெங்கெல்லாம் மறைத்து வைக்கப் பட்டிருக்கின்றார்களோ எவரறிவர்? எந்த சிறைக்குள்ளோ எந்தத் தீவுகளிலோ வேறெந்தக் கண்காணாத இடத்திலோதான் அடைபட்டுக் கம்பிகளுக்குள்ளே கட்டுண்டுகிடப்பார்கள்.

காந்திஜி யெங்கே? இவ்வூரில் பரவிய வதந்தி வாஸ்தவமாயிருந்தால் இன்று காந்திஜி அந்தமான் தீவுகளிலொன்றி லிருப்பார். அந்தோ! பகவானே! நீ யிப்படியெல்லாமா எங்களுக்காகக் கஷ்டப்பட வேண்டும்? உனது தள்ளாத வயதில் எத்தனை சித்திரவதைகளைத்தான் உன்னால் சகிக்க முடியும்? மனித வர்க்கத்துக்காக சிலுவையிலே நெஞ்சில் ஆணியாலறையப் பட்டுத் தொங்கிய இயேசு மகானைப் போல், கேவலம் ஒரு புறாவுக்காகச் சதையைத் துண்டு துண்டாக அறுத்து நிறுத்துக் கொடுத்த சிபிச் சக்கிரவர்த்தியைப்போல், அசுரர்களிடமிருந்து தேவர்களைச் சிறைமீட்கத் தனது முதுகெலும்பைக் கொடுத்த ததீசியைப்போல் இந்தியர்களின் மீட்சிக்காக என்னென்ன பாடெல்லாம் படுகிறாய்! சாந்தமாயிருந்த நள்ளிரவில் எமபடர்களென நுழைந்து நிம்மதியான உனது நித்திரையைக் கெடுத்து உடலிலிருந்து உயிரைப் பிரிப்பதுபோல மணி பவனத்திலிருந்து மகா சக்தி கஸ்தூரி பாய், மகாலட்சுமி மீராபாய், மகன் தேவிதாஸ் இவர்கள் மத்தியிலிருந்து பிரித்துவிட்டார்கள். கஸ்தூரி விட்ட கண்ணீர், மீராபாய் அலறியஅலர், தேவிதாஸன் பிரலாபித்த பிரலாபம் எத்தகைய கன்னெஞ்சனைத்தான் கலக்கிவிடாது. "இன்னொருதரம் பிரார்த்தனை செய்துவிட்டுப் போங்களேன்." என்று சக்தி கேட்டாளே அந்த தெய்வ வலி எவரெவரைத்தான் கருவறுக்காதுவிடும். காந்திஜீயின் காலைக் கட்டிக்கொண்டு மீராபாய் ஆறுக் கண்ணீரைப் பெருக்கினாளே அது எந்த அரசாங்கத்தைத்தான் அடித்துக்கொண்டு போகாது. காந்திஜிக்குப் பிரியமான "வைஷ்ணவ ஜெனித்தோ" என்ற வேத கோஷ்டத்தை அந்த நடுச்சாமத்தில் தேவர்களும் ஓமென்றுரைக்க வானமும் ஓ மென்றுசொல்லியுரும, பூமியதிர, விண்ணைப் பூழ்செய்து ஒலிபரப்ப ஓங்கிப் பாடினார்களே அக்குரலோசை உலகத்தின் எந்த மூலையிலேதான் கேட்கப்படவில்லை. காந்தி கைதி செய்யப்பட்டார் என்று கேட்ட திண்டுக்கல் கண்ட்ராக்டர் வெள்ளைச்சாமி பிள்ளை திடீரென விழுந்திறந்தாரே அவரது இரத்தத் துளிகள் விருதாவிலே சுண்டிப்போய் விட்டனவா? ஒவ்வொரு சொட்டு இரத்தமும் ஒவ்வொரு காந்தியாய் இந்தியாவிடைப் பிறக்கா திருக்குமா? ஒரு காந்தியை கண்காணாவிடத்தில் மறைத்து விடுவதால் இந்தியாவின் சுதந்திரப் போரை—சத்திய யுத்தத்தை யடக்கிவிடலாமென வில்லிங்டன் கருதுவனானால் கண்டிப்பாய் பகல் கனவே காணுகிறான்; மூடர் செயலே செய்கிறான்; பிள்ளைக் கதையே படிக்கின்றான்.

காந்திஜி அந்தமானுக்குக் கொண்டுபோகப் பட்டது உண்மையானால் இச் செய்தியை கஸ்தூரி பாய்க்கு எவர் போய்ச் சொல்லுவார்? சொன்னால் அம்மகா சக்தி என்ன அலர் அலறுவாள்? மீராபாய்க்குத் தெரிந்தால் முட்டிமோதிக் கொள்ளுவாளே? எந்த வொரு இந்தியன்தான் பொறுப்பான்?

ஆனால் நான் பாவி கல்மனது கொண்டவன். உள்ளம் உருகவில்லை. கண்ணில் துளி ஜலம்கூடக் கசியவில்லை. ஏன்? காந்திஜிதான் "காட்டுத்தீ" யாயிற்றே எங்கிருந்தாலென்ன? அந்தமானை அந்தகன் உலகமெனப் பலர் சொல்லுகிறார்களே! சூரியன் நெருப்பாய்க் கக்குவானாமே! குளிர் காலத்தில் குளிர் நடுக்கு

மாமே! பனி கொட்டுமாமே! காந்திஜீயின் மெல்லிய உருவம், கிழப்பருவம் இவற்றையெல்லாம் என்னமாய்த் தாங்கும்? என எமது நண்பர் கண்ணைக் கசக்கினர். நாம் சற்று ஆறுதலாகச் சொன்னோம் அட! அசடே! காந்திஜீ காட்டு நெருப்பு. அதை வெந்தச் சூரியனும் காயாது. எந்தக் குளிரும் குளிராது. எந்தப் பனியும் நடுக்காது. அவரை அந்தமானிலில்லை எந்தமானில் போட்டால்தானென்ன? எல்லாவற்றையும் விழுங்கி ஏப்பம் விட்டுவிடுவார். அது ஒரு சூறாவளி. எதையும் பூ,வென ஊதிவிடும். அதுவொரு வேடிக்கை வஸ்து. எந்தக் கஷ்டத்தையும் தூவென்றுமிழ்ந்துவிடும். அந்தமான் கஷ்டந்தானா அதற்கொரு பெரிது. தள்ளு தூசு.

காந்திஜீ தனிமையான இடத்திலே தவஞ்செய்யட்டும். அவர் கைகாட்டிய யுத்தம் வெற்றியடைய வேண்டுமெனப் பிரார்த்திக்கட்டும். ஏகாந்தமான மலையடி வாரத்திலோ அல்லது வன மத்தியிலோ காந்திஜீ கடுந்தவஞ் செய்யட்டும். சுதந்திரமந்திரத்தைஜெபிக்கட்டும்.

அந்தமான் ஒரு கொடிய இடமானால் பாப ஸ்தலமாயிருக்குமானால் காந்திஜீயின மகோன்னதமான—மஹா பரிசுத்தமான--தெய்வத்தன்மை வாய்ந்த பாததூளிபட்டால் நிச்சயமாய் புனிதமடைந்துவிடும். இந்தியாவின் தீவுகளிலொன்று கூட பாபியாயிருக்கலாகாது. இந்தியாவின் மஹாமகத்தான பழமையை அந்தமானிருந்தேன் கறைப் படுத்திக்கொண்டிருக்கவேண்டும்? பூரண இந்தியாவும் புனிதமாயிருக்கட்டும். விடுதலை இந்தியாவில், சுதந்திர பாரதத்தில், நவ யுகத்தில் அந்தமான் ஒரு சிறைத் தீவாயிராது, தண்ணிலமாய், விளைச்சல் தரையாய்—பொன் விளையும் பூமியாயிருக்க வேண்டாமா?

இக்கட்டுரையை நாம் முடிக்க விருக்கையில் இங்கு வேண்டாம் காந்தி யென்று இவ்வூர் டைம்ஸ் பத்திரிகை தலையங்கத்திலெழுதியிருக்கக் கண்டோம். இதையெல்லாம் பார்த்தால் இந்திய சர்க்கார் காந்திஜீயை எங்கோ மறைத்து வைக்கத்தான் பார்க்கின்றன ரென்பது விளங்குகின்றது. ஏன்? காந்திஜீயை எங்கு வைத்தாலும் ஒன்றுதான். ஏதோவோர் ஊரில் ஒரு வீட்டில் உள்ளே பூட்டிக் கொண்டு உட்கார்ந்திரு என்று சர்க்கார் சொல்லி விட்டாலும் காந்திஜீ அதையே சிறையாகக் கொண்டு சிறை விதிகளை மீறாமல் நண்பர்களையும் நெருங்கவிடாமல் இருப்பார் சத்தியத்திற்கு மயிரிழையில் கட்டுப்படக் கூடிய அவருக்கேன் இவ்வளவு கட்டுக்காவலும்?

உன் தேசம் நசுக்கப்பட்டால்?

(எல்வின் பாதிரியார்.)

நான் ஒரு ஆங்கிலேயனானதால் இந்திய சுதந்திர இச்சையை ஆதரிக்கின்றேன். ஆங்கிலேயனென்றால் அவனுக்கு சுதந்திரப் பற்று அதிகம் இருக்கவேண்டும். எனது நாட்டினரில் சிலர் என்னை தேசத்ரோகி என்கிறார்கள். இது தவறு. ஆங்கிலேயருக்கு இயற்கையாகவுள்ள ஸ்வதந்திர வாஞ்சை என்னிடம் இருக்கின்றது. உனது தேசம் நசுக்கப்பட்டால் புரட்சி செய்! உனது தேசத்தினர் பிறரை நசுக்குவாரானால் இன்னும் அதிகமாகப் புரட்சி செய் என்று பால் ரிச்சர்ட் கூறினர். உனக்கு எவ்வளவு ஸ்வதந்திரம் விரும்புகின்றாயோ அவ்வளவு பிறருக்கும் கொடுக்கா விட்டால் ஸ்வதந்திரத்திற்கு அர்த்தம் என்ன உண்டு.

இரண்டாவதாக, நான் காந்தியடிகளின் சீடன். அவர்தான் இங்கிலாந்தின் அத்யந்த நண்பர். அவரது மெலிந்த கைகள் இந்த ஸாம்ராஜ்யத்தை பொடிப் பொடியாக்கப் போகின்றன. ஆனால் இங்கிலாந்தின் ஆத்ம ஜோதியை அவர்தான் காக்கப் போகிறார். ஒவ்வொரு ஜாதிக்கும் ஆத்மா இருக்கிறது. மனிதன் செய்வதைப் போல ஜாதியும் பாபங்கள் இழைப்பதுண்டு. இந்தப் பாபத்தினின்றும் இங்கிலாந்து விடுபட வேண்டுமென்பது எனது ஆசை.

மூன்றாவதாக நான் காங்கிரஸை ஆதரிக்கின்றேன். உலகத்தில் போருக்குப் பதிலாக சத்யாக்கிரகம் என்ற ஆயுதத்தைத் தந்து உதவியது காங்கிரஸ்தான். சத்யாக்ரகத்தை எதனாலும் வெல்ல முடியாது.

நான்காவதாக ஏழைகளுக்காக ஸ்வராஜ்யம் வரப்போகிறதை நான் ஆதரிக்கிறேன். கராச்சி காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட 20 உரிமைகளைப் படித்தபோது எனக்கு அடங்காத மகிழ்ச்சி உண்டாகியது. ஏழைகளின் சுயராஜ்யமே காந்தியடிகளின் கனவு. இந்த ஸ்வராஜ்யத்தில் தீண்டாமை இல்லை. வைஸ்ராயின் அரண்மனைக்காகவும், பெரிய சேனைக்காகவும் பொதுப் பணத்தை ஸ்வராஜ்யத்தில் வீணாக்க மாட்டார்கள். கல்விக்கும், ஆரோக்கியத்திற்கும் பணத்தைச் செலவிடுவார்கள். ஏழைகளின் துயரை நீக்குவார்கள். அப்போது எல்லோரும் சகோதரராக வாழ்வார்கள்.-(யங் இந்தியா)

இந்தியா மந்திரி ஈட்டி முனையில்?

இந்தியாவுக்கு நாங்கள் பொறுப்பாளிகளாயிருக்கும் வரை இந்தியாவை ஆளவே போகிறோம் என்று இந்தியா மந்திரி சர் சாமுவேல் ஹோர் கூறுகிறார். ஆனால் இந்தியாவுக்குப் பொறுப்பாளிகள் இந்தியர்களாகிவிட்டால் எதை யாளுவார் என்று நாம் கேட்கிறோம். சர் சாமுவேலுக்கு முந்தி மந்திரியாயிருந்த திரு. வெட்ஜ்வுட் பென் கூறியதுபோல இந்தியப் பெண்களும் பிள்ளைகளுமகூட சுதந்திரப் போரில் இறங்கி ஈடுபட்ட பின்னால் இந்தியாவில் மலைகளையும் மரங்களையுமா கட்டியாளுவது? என்றுரைத்தாரே அம்மொழியை இச் சாமுவேலுக்கு நாம் ஞாபகமூட்டி அப்படியாகி விட்டால் அவர் எதைக் கட்டியாளுவாரென்று கேட்கிறோம்.

தவையில்லையென்று தோன்றிவிட்டால் ஒரு நாள்—ஒரு மணி நேரங்கூட அவசரச்சட்டங்களை அமுலில் வைக்க மாட்டோம்; பயமுறுத்தல் செய்யும்வரை, சர்க்காரை கவிழ்க்க முயற்சிக்கு மட்டும் அவசரங்கள் வேலை செய்யவே செய்யுமென்கிறார். ஆனால் காங்கிரஸ் எவரையாவது பயமுறுத்துகிறதா? பயமுறுத்தலும் அஹிம்சைத் தத்துவத்துக்கு விரோதமானதாயிருக்கையில் எந்த வொரு காங்கிரஸ்காரனாவது பயமுறுத்துவானா? சர்க்காரை கவிழ்த்தவோ உடைக்கவோ எவர்கருதியுள்ளார்? திருத்தவும் மாற்றவுமே காங்கிரஸ் முயற்சித்தது. பிரிட்டனுடன் நேசப்பான்மையோடு பங்காளியாகவே இந்தியா இருக்க விரும்பியது. ஆனால் பிரிட்டன் வலுவில் இந்தியாவைச் சண்டைக்கிழுத்து விரோதப்பான்மை பாராட்டுகிறாள். இந்தியா சகித்து வருகிறது. இழைக்கப்படும் இம்சைகளை யெல்லாம் அஹிம்ஸா தர்மத்தில் பொறுமையுடன் பொறுத்து வருகிறது. பொறுத்தாரே பூமியாள்வார்.

நம்மீதுபோர்புகுத்தப்பட்டிருக்கிறது. நாம் போராடினால் வெற்றியே பெறுவோம். ஆனால் அம்முறை காலாவதியாகிவிட்டது என்கிறார் ஹோர். வாஸ்தவந்தான் ஒரு அரசாங்கத்திற்கு அதன் பிரஜைகளை எதிர்த்துப் போராடி வெற்றிபெற என்றைக்கு இஷ்டமில்லையோ அன்றைக்கே அவ்வரசாங்கம் குடி ஜனங்களின் கிளர்ச்சி நியாயமானதென் றொப்புக்கொள்ளுகிறதுடன் அவர்களின் கோரிக்கைகளை—உரிமையை உடனே பூர்த்தி செய்வதே கடவுள் சம்மதமானதென்போம்.

நாங்கள் சர்வதேச சமாதானத்தை விரும்புகிறோம் என்றார். ஆனால் அவர் திரிகரண சுத்தியாகப் பூஜிக்கும பிரிட்டன் சுதந்திரத்தைப்போல் இந்திய சுதந்திரத்தையும் ஏன் எண்ணக்கூடாது? சுதந்திரத்தாலன்றி ஒரு நாட்டில அதிலும் இந்தியாவில் சமாதானம் ஏற்பட முடியாது என்பதையும் சர் சாமுவேல் அறிவாரா?

இந்தியாவின் சர்வ அபிப்பிராயக்காரர்களுடையவும் நன்னம்பிக்கை, கட்டுறவுகளைப் புதுப்பிக்க நாங்கள் விரும்புகிறோம் என்கிறார். இந்தியாவின் ஏகோபித்த—35 கோடி மக்களின் பிரதிநிதித்துவம்வாய்ந்த காங்கிரஸ் அபிப்பிராயத்தை அவர் ஏன் புறக்கணிக்கின்றார்? அவ்வபிப்பிராயத்தை யெதிர்த்து ஏன் போர் புரிகிறார்?

வைஸ்ராய் வில்லிங்டனுக்கு சர் சாமுவேல் கொடுக்கும் மதிப்புரையுமிக்கே குறிப்பிடற் குரியது. வில்லிங்டனின் டம்பாச்சாரி நாடகத்திற்கும், ஏரோப்ளேன் ஆட்சிக்கும், அவசர அமுலுக்கும் சர் சாமுவேல் கை தட்டாவிட்டால் வேறுயார் தட்டுவார்? ஆகாய மந்திரியாயிருந்த ஹோர் அப்படித்தான் செய்வார். ஆகாயத்தில் தான் பறப்பார்.

வட்டமேஜைக் கமிட்டிகள் இந்தியாவுக்குள் நுழையும் போது நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலவவேணுமாம். சட்டத்தை மீறுகிறவர்களை யெல்லாம அடைத்துச் சிறைக்குள் பூட்டி விட்டால் தான் சட்டம் நிலவலாம். ஆனால் அமைதி நிலவுவது இந்தியா கோருவது கிடைத்தாலன்றி யமையாது.

கடைசியாக அதிதீவிர வாதிகள் காங்கிரஸைக் கைப்பற்றிக் கொண்டு விட்டனரென்றும் காந்திஜீ ஏமாந்து விட்டாரெனவும் கூறுகிறார். அப்படியானால் காந்திஜீ மித தீவிர வாதியோ? காந்திஜீயால் இப்போராரம்பிக்கப் படவில்லையானால் அவரையேன் சிறைப்படுத்தி வைத்திருக்க வேண்டும்? விட்டு விடட்டுமே.

இவைகளை யெல்லாம் ஓராமல் ஹோர் கரடியாய்க் கத்தியாவதென்ன? ஈட்டி முனையில் பாய்ந்தென்னாகும்? தக்கன செய்யட்டுமே.

அம்மாளுக்கு ஆறு வாரம்.

மகா சக்தி கஸ்தூரிபாய் காந்திக்கு 15வ யன்று மிஸ்டர் அல்மௌலா என்பவர் ஆறுவார வெறுங்காவல் தண்டனை விதித்தார். சிரித்துக் கொண்டே மகாசக்தி அத்தண்டனையை யேற்றுக் கொண்டதுடன் ஏனிவ்வளவு குறைந்த— இலகுவான தண்டனையை விதித்தீர்களென்று அந்த அம்மன் கேட்டதாம். ஆம். அதற்கும் அதிக ஓய்வு வேண்டுந்தானே. மாஜிஸ்ட்ரேட் வேறு விதியில்லை யென்றாராம்.

ஐயாவைக் கொண்டுவா!

பம்பாயில் பிரபல வக்கீல்கள் சேர்ந்து காந்திஜியை பிரதம நீதிஸ்தலத்தில் ஆஜர்படுத்தி 1827ம் வருஷத்திய 25வது ரெகுலேஷனில் அவரைக் கைதி செய்தது சட்ட பூர்வமாக சரியா சரியில்லையாவென விசாரணை வழங்க வேண்டுமென ஹைகோர்ட்டுக்கு மனுச் சமர்ப்பிக்கப் போவதாகத் தெரிகிறது. அம்மனுவுக்குத் தக்க பதில் கிடைக்காவிட்டால்?

தோழர்களே போய் வாருங்கள்.

நமது தோழர்களான "சுதந்திரச் சங்கு" "காந்தி" இரு பிரசாரகர்களும் நம்மிடைப்பிரிந்து அஞ்ஞாதவாச மேற்றமைக்கு நாம் சந்தோஷிக்கின்றோம். தலை குனியாமல் வேந்தனுக்கும் மற்றெவனுக்கும் முடிவணங்காமல் வணங்கா முடி மன்னர்களா யுலவிய வீரர்கள சர்க்காரின் சட்டத்தின் கீழ் கட்டுண்டு வாழாமல் விரப்பிரிவு பிரிந்த போது சந்தோஷிக்காது-போற்றாது வேறென் செய்வது? கோழை தான் பலதரம்சாவான். வீரன் ஒரே ஒருமுறையன்றிப் பல முறை மறைவ துண்டோ? நண்பர் ஸுப்ரமண்யரே! அன்பர் சொக்கலிங்கரே! எமது பிரிவுபசாரத்தை யேற்றுக் கொள்ளுங்கள். சீக்கிரம் சந்திப்போம்.

பொறுக்கு மலர்கள்

நான் என் வாலிபத்தை விணுக்க விரும்பேன். அதுவே நான் சிலாக்கியமாகக் கருதுவது. தேச சேவையிற் செலவிடப் படாத வாலிபப் பருவம் இருந்தென்ன? போயென்ன? வாலிபர்களே! எழுந்திருங்கள். சேவை செய்ய முன் வாருங்கள்! —திலகர்.

அஹிம்சை இல்லாத சத்தியாக்கிரகம் மாலுமி இல்லாக் கப்பலாகும். மற்றவர்க்கு எவ்வித இன்னலுமிழைக்காமல் நம்மையே நாம் துன்புறுத்திக்கொள்ளுமுகத்தான் பிறரை மாற்றுவதே சத்தியாக்கிரகம்.

—மகாத்மா காந்தி.

அஹிம்சையைக் கடைப்பிடித்தொழுகுபவனுக்கு அன்பே துணைக்கருவியாகும். நமக்குத் தீங்கிழைப்பவரை நாம் வெறுத்துத் தள்ளலாகாது. அவர்களிடம் அன்பு செலுத்துவதாலேயே அவர்களது தீய குணங்களைப் போக்க வேண்டும். —மகாத்மா காந்தி.

தீமையெனத் தோன்றுபவைகளுடன் ஒத்துழைப்பதே ஒத்துழையாமையாம்,'

கோபமும் ஆத்திரமும் தோன்றும் பொழுது அவற்றை யடக்கி மனத்தை அன்புமயமாக்கல் வேண்டும். கோபத்திற் கிடங்கொடுப்பவன் சில நிமிஷங்கள் தன்னையே தான் மறந்து மிருகமாகிறான். —மகாத்மா காந்தி.

என்றைய தினம் எனது நம்பிக்கை ஹிமாலயத்தைப் போன்று அசையாமலும் பனிச் சிகரங்களைப் போன்று சுத்தமாகவும் ஆகின்றதோ அன்று ஆண்டவனை முற்றிலும் உணர்வேனென்பது நிச்சயம்.

—மகாத்மா காந்தி.

இந்தியன் நெற்றி வியர்வை நிலத்தில் விழ மாடுபோலுழைத்துச் சம்பாதிக்கும்பணம் இப்படிக் கொள்ளை போகிறது. குதிரைகட்கும், மோட்டார்கட்கும், ஆடைகட்கும், அணிகட்கும், கொழுத்த தீண்டிக்கும், உயர்ந்த சாராயத்துக்கும், வேட்டைக்கும், நடனங்கட்கும் வேறு உல்லாசமான பொழுது போக்குகட்குமாக லக்ஷக்கணக்கான பணம் வாரி இறைக்கப்படுகிறது. இந்தப்பணத்தை யெல்லாம் சம்பாதித்துக் கொடுக்கும், இந்தியனோ அரை வயிற்றுச் சாப்பாட்டோடும் ஒரு வேளைப்பட்டினியோடும் வாடி, வருந்தி, வரிப்பளுவைத் தாங்க முடியாமல் "ஐயோ! முதுகொடிந்து போகும் போலிருக்கிறதே'

—ஆர்தர் ஆம்பர்ன்

பில்ஸானா கப்பலில் காந்திஜீ!

காந்திஜீ இங்கிலாந்திலிருந்து திரும்பிய போது "பில்ஸானா கப்பலில் அவர் கழித்த காலப்போக்கு மிக்க உருக்கமானது. வட்ட மேஜைக்குச் செல்லும்போதேறிச் சென்ற "இராஜபுதானா"வைப் போன்றே இப் "பில்ஸானா"வும் சரித்திர இலக்காதல் வியப்பன்று. மகாத்மாவின் பாததூளிபட்டபட்ட விடமெல்லாம் புனிதமடைவதில் புதுமையில்லை. அவரது தன்னலம் வெறுத்த தியாகசிந்தையும், எளிய வாழ்க்கையும், அமைபார்ந்த மூர்த்தண்யமுமே அவரை இயேசுவோடும், புத்தரோடும், கிருஷ்ண பரமாத்மாவோடும், சமஅந்தஸ்தும், சமவழிபாடும், சமகௌரவமும், அடையச் செய்கின்றன.

கப்பலில் அரண்மனை போன்ற எத்தனையோ அழகிய அறைகள் அவருக்காக ஒதுக்கித் தரப்பட்டன. அவற்றையெல்லாம் இத்தேசியச் சன்னியாசி, அரசியல் பக்கிரி வேண்டாமென்று விட்டார். வெட்ட வெளியிலே ஒரு சிறு கூடாரமடித்து அதிலேயே பிரிண்டிஸியிலிருந்துஇந்தியா வரும்வரை குடியிருந்தார். குடிசை போன்ற அக்கூடாரத்தை அரண்மனையென அழைத்தார். அவ்வரண்மனையிலுள்ள காந்திஜீ ஓர் ஒப்பற்ற—தெய்விக—அரசனைப் போன்றே விளங்கினார். "அழகிய பல அறைகளிருக்க இக் குறுகுடிசையிலா தாங்கள் பனியிலும் வாடையிலும்கிடந்துவருந்த வேண்டும்?" எனக் கேட்ட கப்பற்தலைவனுக்கு காந்திஜீ தான் "வானம்பாடிப் பக்ஷியைப் போல் கவலையில்லாமல் நிம்மதியாய்—சந்தோஷமாயிருக்கிறேன்" என்றார். ஒரு துண்டுக்கித்தானை விரிப்பாகவும் புத்தகங்களைத் தலையணையாகவும், கொண்டு இரவில் நிலவொளியில் காந்திஜீ நிம்மதியாய் நித்திரை செய்த காட்சி கப்பலிலிருந்தோரைவரையும் அப்படியே காந்தம் போல் கவர்ந்து இழுத்து விட்டது. தரித்திரத்தின் அவதார மூர்த்தியாகவும் 35 கோடி ஏழை இந்தியரின் உண்மைப் பிரதிநிதியாகவும் காந்திஜீ யில்லையென்று சொல்ல எவனுக்கு நெஞ்சு பொறுக்கும். ஒரு தாய்க்குரிய அன்பத்தனையையும் பிரதிபலித்துக் கொண்டு அந்த அன்பார்ந்த ஆத்மா மீராபாய் காந்திஜீயின் பக்கத்திலிருந்து ஒரு குழந்தையைப் பராமரிப்பது போலக் காத்து வந்தாள். ஆனந்த மயமான நித்திரையில் காந்திஜீ புன்முறுவல் பூக்கச்சிரிப்பதைக் காண மீராபாய் உள்ளங்குளிர உவகை பொங்கப் பூரித்து விம்முவாள். சற்று தூரத்தில் இதர சிஷ்யர்களும் மகன் தேவிதாஸும் குறட்டையிட்டுத் தூங்குவார்கள். இத்தனை பேரிலும் இந்த மீராபாய் மாத்திரமேன் தூக்கமில்லாமல் கூட காந்திஜீயைக் கண்காணித்து வருகிறாள்? ஒரு ஆங்கிலக் கன்னி ஆங்கிலர்களின் விரோதியான ஒரு அரசியல் பக்கிரியிடத்தில் இவ்வளவு பிரேமை யேன் கொண்டாள்? காந்திஜீயின் எளிய வாழ்க்கையும் ஆத்ம சமர்ப்பணமும் தான் அவளை காந்திஜீ யிடத்தில் அன்புத்தளையால் பிணைத்து விட்டது.

காந்திஜீ அக் கூடாரத்திலிருந்த காட்சியைக் கண்ட அமெரிக்க தூதுவரொருவர் நியூயார்க்குக்குப் பக்கத்தில் எல்லிஸ் தீவில் குடியேறியிருப்பவர்களோடும் அவர்களது குடிசையோடும் ஒப்பிட்டு வர்ணிக்கின்றார்.

காந்திஜீயின் பிரிய—அவரை விட்டுப் பிரியாத—சர்க்கா, பாத்திரங்கள், உண்கலங்கள், பழக்கூடைகள், பால் புட்டிகள், அரசியல் தஸ்தாவேஜுகள், புத்தகங்கள், வட்ட மேஜையின் நடவடிக்கைச் சட்டுகள், பழஞ் செருப்புக்கள், ஜமக்காளங்கள், இவைகளெல்லாம் அங்கு சிதைந்து ஆனால் அவையவை யிருக்க வேண்டிய விடத்தில் இருந்தன. இதைக் கண்ணுற்றார் காந்திஜீயை யின்னாரென அறியாத ஒருவன் யாரோ ஒரு பிச்சைக்கார யாத்ரீகன் என்றே கணிக்க முடியுமன்றி மகரிஷி கிறிஸ்துவோடும், கௌதம புத்தருடனும்ஒப்பிடும் மகாத்மாவென்றோ—ஏகாதிபத்தியத்தையே அஸ்திவாரத்தோடு ஆட்டி அலைத்துக் கொண்டிருக்கும் காந்திஜீ யென்றோ கருதிவிட முடியாது.

காந்திஜீ இராஜ மாளிகை யெனக் கொண்ட அக்குடிசை மத்தியில் வீற்றிருந்து சர்க்காவிலே அவர் நீள நீளமாக நூலை இழுத்திழுத்து நூற்கின்றார். அந்நூலைக் கதர் முனையிலே சுற்றுந்தோறும் இந்தியாவின் அதிருஷ்டத்தையும் அத்துடன் சேர்த்தே சுற்றுகிறார். இழை நெருங்கையிலும், சிக்கறுக்கையிலும், இந்தியாவுடன் பிணைக்கப்பட்டிருக்கும் ஏகாதிபத்திய பிரிட்டனின் தொடர்பை யறுக்கின்றார்; அவரது சிஷ்யர்களெல்லாம் ஆராய்ச்சிக் கெட்டாத முகஜோதியைக் குழப்பத்தோடு கூர்ந்து நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவரது கண்களிலிருந்து வழிந்துகொண்டிருக்கும் ஜீவ வொளியில் தாதுக்கனவில் அவர்கள் லயித்துக் கிடந்தார்கள்.

பாபேக்கும் பேப்பே!

பிரிட்டிஷ் சர்க்காருக்கு பேப்பே பாடம் வெகு நாளத்தது. அப்பனுக்கும், அப்பனுக்கு அப்பனுக்கும் பாட்டனுக்கும், பாட்டனுக்குப் பாட்டனுக்கும், உனக்கும், எனக்கும், எல்லாருக்கும் பிரிட்டிஷ் மந்திரிமார் இந்தப் பாடத்தைத்தான் படித்து வருகிறார்கள். இந்திய வட்டமேஜையை இழவு படுத்திய புண்ணியவான்கள் பர்மா வட்டமேஜைக்குக் கொள்ளியும் வைத்து குடமு முடைத்து நாடாத்துக் கருமாதி கல்லடுப்பெல்லாம் செய்துவிட்டார்களென்றால் விசித்திரமில்லை. பர்மா பிரதிநிதிகளும் வீசிய கை வெறுங்கையாய் வந்து கொண்டிருக்கிறார்கள். கோரிய குடியேற்ற நாட்டாட்சியின் சத்தில்லை வெறும் சக்கை கூடக்கிடையாது. பிரதிநிதிகளின் மனம் கசந்து விட்டது. ஸ்வதந்திரம் ஒருவர் கொடுக்கக் கையேந்தி வாங்குவதில்லை; தனக்குத்தானே ஸ்வாதந்தர்யத்தில் அடைவது எனத் தெரிந்து கொண்டனர்.

ஆனால் பர்மியருக்கு இரண்டு ஸ்வதந்திரங்கள் அளிக்க பிரிட்டிஷ் மந்திரிகளுக்குத் தயவு பிறந்தது. வட்டமேஜை யாரம்பத்தில் நமது ஊபாபே சாகிப் ஒரு சுதந்திரம் கேட்டார், எத்தகைய அரசியல் திட்டத்தை பர்மாவுக்களித்தாலும் அதை பர்மிய மக்களின் அபிப்பிராயத்திற்கு விடுவதற்காகசிறிது கால அவகாசம் அளிக்க வேண்டுமென விண்ணப்பித்துக் கொண்டாரல்லவா? அதை அப்படியே யேற்றுக்கொண்டு மந்திரிமார் ஒரு வருஷத்தவணை தந்திருக்கிறார்கள். பத்து வருஷத் தவணை கேட்டாலும் தரமாட்டார்களென்று எவராவது சொல்லுவார்களா? எப்படியிருந்தாலும் இது பர்மாவுக்குக் கிடைத்த சுதந்திரமென்றே சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

அடுத்த ஸ்வதந்தர்யம் இந்தியா—பர்மா பிரிவினை சம்மந்தமானது. இப் பிரச்னையைக் கிளப்பியது யார்? என்பதறிந்தார் இதைத் தீர்த்துவைக்க வேண்டியவர்கள் யார்? என்பதைத் தெரிந்திருப்பார்கள். ஆனால் நாம் நேர்மையுடன் கூறுவதானால் பிரிட்டிஷார் காட்டைக் கலைத்துவிட்டு வேடிக்கை பார்க்கிறார்களென்றே சொல்லுவோம். ஏனெனில் பிரிவினைப் பிரச்னையைக் கிளப்பி விட்டவர்கள் பிள்ளையையுங் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டப் பார்க்கிறார்கள். இதை யறியாதிருக்க பர்மியர்களோ பர்மிய பிரதிநிதிகளோ அத்தனை அறியாப் பிள்ளைகளல்ல. பிரிவினையை முடிவுகட்ட பர்மியர்களுக்கு ஸ்வாதந்தர்யம் வழங்கப்பட்டிருக்கிறதென்றால் அவர்களுக்கே அவர்கள் நாட்டையாளும் பூரண சுதந்தரத்தை யேன் கொடுத்துவிடலாகாது? ஆளப்படுவோருக்காகவே ஆளுவோர் ஆளுகிறார்களென்பதை இந்த வெற்றுப் பாசாங்கால் நிரூபிக்க முடியாது.

காவடிக்கும் கதரே வேண்டும்!

முருகபிரானுடைய தைப்பூச விழாவுக்கு ஆண்டுகள் தோறும் தன வைசிய இளைஞர்கள் காவடி செலுத்துவதும் இவ்விழாவுக்கு எல்லோரும், காவடிகள் செலுத்தும் இளைஞர்கள் உள்பட, புதிய ஆடை தரித்துக் கொள்வதும் வழக்கம். ஆனால் தற்பொழுது நமது நாட்டில் தீவிரமாக தேசீய உணர்ச்சி யேற்பட்டு கதர் அபிவிர்த்தியாகிக் கொண்டுவரும் இச்சமயம் மொகல் வீதியில் சிற்சில தனவைசியர்கள் கதருடுத்தும் இளைஞர்களை துன்புறுத்துவதைக் கண்டுமெதுமனம் மிகமிகவருந்துகிறது. காவடி செலுத்தும் இளைஞன் எனக்குத் தைப்பூச விழாவுக்கு, கதரே வேண்டுமென்று கேட்டால் என்னடா! கதர்என்று ஏளனம்செய்கிறார்கள். சமீபத்தில் அவர்கள் (தனவைசியர்கள்) சங்கத்திலிருந்து வெளியான அறிக்கையில் எல்லோரும் கதரணிய வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதாய் அறிகிறோம். ஆனால் இப்போது பார்த்தால் தீர்மானத்திற்கு முற்றிலும் மாறுபாடாகவே யிருக்கிறது. ஆனதால் இளைஞர்களே! அன்னிய ஆடையில் மோகங் கொள்ளாமல் நம் தாய்நாட்டு காமதேனுவாகிய—ஏழைகளுக்கு கஞ்சி வார்க்கும் சுத்த கதரையே அணிந்து முருகபிரானுக்கு காவடியைச் செலுத்துவீர்களாக!

உங்களுடைய வீரத்தையும், தாய் நாட்டுக்கு நீங்கள் செய்யும் தியாகத்தையும், பூசா விழாவன்றுதான் காண்போம். கதரே உயிர். கதரே கலியுகக் கடவுள். வந்தேமாதரம்

தேசோபகாரி

வருஷம் 1-க்கு ரூ. 3 0 0
ஆறு மாதம் ரூ. 1 8 0
மாத சந்தா அணா நான்கே.

காந்தியா? அப்பாடி! அவன் வேண்டாம்!

நேற்று முன் தினம் வெளியான உள்ளூர் மாலை "டைம்ஸ்" பத்திரிகையில் இங்கே வேண்டாம் காந்திஜீ என்ற தலையங்கத்தில் பிள்ளைக்கதைகள் பேசப்படுகின்றன. காந்திஜியின் சிறை மாற்ற சம்பந்தமாக இரங்கோனில் உலவிய வதந்தியைப் பற்றிக் கூறுமிடத்து இங்கிலீஷ் மெயிலை ஏற்றிவந்த பி. ஐ. கப்பலின் கால தாமதத்திற்கு காந்திஜியை அக்கப்பலிலிருந்து வேறு ஏதோ ஒரு கப்பலுக்கு ஆற்றிலோ அல்லது கடலிலோ மாற்றியதே காரணமென வதந்திக்காரர்கள் கயிறுதிரித்துக் கட்டிவிட்டார்களென்றும் இத்தகைய முட்டாள்தனமான கதை கட்டுவதற்கு இரங்கோனில் கொழுத்த பொது ஜனங்கள் போதுமானபேரிருக்கின்றனரென்றும் கூறுகிறது. அதுபற்றி நமக்குப் பேச்சில்லை. அப்பத்திரிகையின் கொழுப்பை கொழுத்த பொது ஜனங்களே அடக்கிக்கொள்ளட்டும்.

ஆனால் காந்திஜீ பர்மாவுக்குக் கொண்டுவரப்படலாமென பர்மா பத்திரிகைகளிலெதுவோவொன்று அபிப்பிராயங்கூறிய ஆதாரத்தின்மீதே இவ்வதந்தி உருக்கொள்ளுகிறதென்கிறார் டைம்ஸ் ஆசிரியர். நாம் சொல்லுகிறோம் அவனுடைய சகுனிமாமன் வில்லியர்ஸே கூறினானே காந்தியையும் அவரது அராஜகக் கூட்டுறவுக்காரர்களனைவரையும் பர்மாவுக்கோ அந்தமானுக்கோ அல்லது கண்ணுக்கெட்டாத வேறெந்தத் தீவுக்கோ நாடு கடத்திவிட வேண்டுமென்று அதுதான் இவ்வதந்திகளுக்கெல்லாம் ஆஸ்பதமான அஸ்திவாரம். பார்லிமெண்டில் வைகுண்ட எனி வாங்கி சொன்னதையும் சொல்லலாம். ஆனால் அது வட்டமேஜை காளத்துப்பேச்சு. சமீபத்தில் சொன்ன சகுனி பேச்சுத்தான் இப்பொழுதைய வதந்திக்கு ஆதாரம் என்பதை டைம்ஸ் ஆசிரியர் அறியட்டும்.

எங்களுடைய எரிச்சலுக்கும் குழப்பத்துக்கும் இலக்காக காந்திஜியையோ, வேறெந்தக் காங்கிரஸ் அல்லது காங்கிரஸல்லாத கிளர்ச்சிக்காரர்களையோ இங்கு கொண்டுவர நாங்கள் விரும்பமாட்டோம் என்று டைம்ஸ் கூறுகிறது அப்படியானால் வேறு யாருக்குத்தான் வேண்டும்? சர்க்கார் தங்களது விருப்பம் போல் செய்து கொள்ளட்டும்.

நெப்போலியனைச் சிறைவைத்த செயின்ட் ஹெலனாவைப் போல் பர்மாவை கைதிகளுறைவிடமாகவோ, சைத்தான் தீவாகவோ சபிக்கப்பட்டவர்களின் ஒதுக்கிடமாகவோ செய்ய பர்மா அப்படி யென்ன பாவத்தைச் செய்துவிட்டதென்று கேட்கிறார். அதையாரறியமுடியும்? ஆளுவோரையோ ஆளப்படுவோரையோ பிடித்த சனியாய்த்தானிருக்கவேண்டும். ஆனால் காந்திஜீ உலக சிரேஷ்டர்; உயிர் வாழும் தீர்க்கதரிசியென உலகத்தாரனைவராலும் போற்றவும் பூஜிக்கப்படுகிறவர். இப்பொழுதிருக்கும் மந்திரிகளாலும் வட்டமேஜையில் மகாத்மா! வென்றழைக்கப்பட்டவர். அவரை பர்மாவுக்குக் கொண்டு வருவதால் பர்மா சைத்தான் தீவாகவோ, சபிக்கப்பட்ட பிரதேசமாகவோ ஆகிவிடாது. புனித பூமியேயாகும்.

காங்கிரஸ் காரர்களை இந்தியாவிலேயே வைத்து அதனால் விளையும் பலாபலன்களைத் தாங்க இந்திய சர்க்காருக்கு வீரமில்லாவிட்டால் வேறெங்காவது ஒதுக்குப் புறமான தூரத் தொலையிலுள்ள தீவுக்கனுப்பட்டுமே யென்கிறார். வாஸ்தவந்தான்; நல்லதொரு இடி சொல்தான். பலே! டைம்ஸ் என்று நாம்பாராட்டுகிறோம். மேலும் இந்திய சர்க்கார் காந்திஜியை இங்கு மாற்றுவதாக மூச்சு விட்டாலும் மாகாண சர்க்கார் முன்னக் கூட்டியே அதைத் தடுத்துவிட வேண்டுமாம். ஆம், அப்படித்தான் செய்ய வேண்டும். சபாஷ்! நீ தான் தகப்பன் சாமி.

கடைசியாக பர்மா சர்க்காருக்கு ஒரேயொரு வார்த்தை. காங்கிரஸைப் பற்றிப் போற்றியோ தூற்றியோ எதுவும் எழுதலாகாதென சீப்—செக்ரட்டரி கூறினாராமே. இங்கு காங்கிரஸையும் காந்திஜியையும் தூற்றுவது கூட பிரசாரமாகிறது. ஆகையினால் போற்றுவார் மீதெடுக்கக் கொள்ளப்படும் நடவடிக்கைகளில் அணுகூடக் குறையாமல் தூற்றும் டைம்ஸ் மீதும் சர்க்கார் எடுத்துக் கொள்ளவே வேண்டும். மேலும் இந்திய சர்க்காரை—பர்மா சர்க்காரின் மூலப்பொருளை—ஆண்டையைத்திட்டுவதும் அராஜகக் குற்றம் ஆகாதோ?

Printed & Published By A V. Sellam Pillay at the Desopakari Press, 210,36th Street Rangoon

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 50 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. **DESOPAKARI** புதன், ஞாயிறு வெள்ளி வெளியீடு

210–36-வது இரங்கோன், (20—1—32) தை மீ 7உ புதன்கிழமை

பாபுஜீயின் பிரிய தமிழர்கள்.

கத்தியில் வாள் கதைகள்—எறி
கற்கள் சூலா யுதங்கள்
பித்தர்கள் தங்களுக்கே—வெகு
பெட்புடை ஆயுதங்கள்;

சத்திய மீதை யருள்—பக்தி
சான்ற மனப் பெரியோர்
நித்திய மான வுயிர்—ஆத்ம
நேர்படையே கொள்ளுவார்.

அவ்விதம் செய்வதுவே—குல
ஆரிய! நின் தருமம்;
தெவ்வர் செறக் கோழிய—அன்னை
தேச வளம் பெருக
எவ்வர் தரும் அடிமை—இனி
யென் றமில்லா தழிய
ஒவ்விய வேலதுவே—அதை
ஓங்குக! இந்தியனே!—கவிபாசன்.

காந்திஜிக்குத் தமிழர்களென்றால் வெகு பிரியம். சத்தியாக்கிரகதத்துவத்தை முதன் முதல் தென்னாப்பிரிக்காவில் காந்தி பாபு ஆரம்பித்த போதிருந்தே தமிழர்கள் காந்திஜிக்குப் பக்க பலமாயிருந்து வருகிறார்கள். தென்னாப்பிரிக்காப் போரில் சாத்விக தத்துவத்தின் தாதுப் பொருளறிந்து அதன் வழியினின்று துளிகூடப் பிசகாமல் சத்தியப் போர் புரிந்த நாகப்பனையும், நாராயணசாமியையும், வள்ளியம்மையையும் நினைத்த நினைத்தபோதெல்லாம் தமிழர்களிடத்திலே காந்திஜிக்கு நம்பிக்கை வலுவெய்துகிறது. வட்ட மேஜையின் போதுகூட இதுபற்றி பிரஸ்தாபம் எழுந்தபொழுது "என் பிரிய தமிழர்கள் என்னைக் கைவிட்டு விடமாட்டார்கள்; நான் எப்பொழுது வேண்டுமானாலும் அவர்களை அழைத்துக் கொள்ளுவேன்" என்றார். மேலும் காந்திஜியை அரை நிர்வாணப் பக்கிரியாகவும், கோவணாண்டியாகவும் ஆக்கிய பெருமையும் தமிழனையே சாரும். காந்திஜீயின் ஜீவ தத்துவமான- உயிர்க் கொள்கையான கதரை உற்பத்தி செய்வது அபிவிருத்தி செய்வதிலும் தமிழனை, ஒரு குஜராத்தியைவிட வங்காளியைப் பார்க்கிலும், ஒரு பஞ்சாபியைக் காட்டிலும் தீவிரமாய்நிற்கிறான்.

ஆனால் தடியடி படுவது, சிறை செல்லுவது, வரிமறுத்தார் சொத்துச் சுகங்களை இழப்பதுமுதலிய பலித்தியாகங்களில் தமிழன் இளைத்தேயிருந்தான். சென்ற சத்தியாக்கிரகத்தில் தமிழர்கள் அதிகம் பேர் சிறையை நிரப்பவில்லை; தீவிரமாய்த் தேசபணி செய்யவில்லை. இது சம்மந்தமாகக் கராச்சியிலே காங்கிரஸ் நடந்தபோது யாரோ ஒருவர்—வடநாட்டாரென்று ஞாபகம்—"தமிழன் என்னசெய்து விட்டா"னென்று ஏளனமாய்ப் பேசி விட்டாராம். அதற்காக நாம் அவரைக் கோபித்துக் கொள்ளலாமா? பிராயச்சித்தம் தானெடுத்துக் கொள்ள வேண்டும். நாம் சரியாக நடந்து கொண்டாலன்றி சுயராஜ்யத்தில் நமக்குரிய சுவை நாம் அடைய முடியாது. "தின்கறவன் தின்ன திருப்பத்தூரான் தெண்டம் கொடுத்த" கதையாக மற்ற மாகாணத்தவர்களெல்லாம் கஷ்டப் பட்டு கஷ்டப் பட்டுச் சம்பாதித்த சுயராஜ்யத்தை நாம் எளிதில் அனுபவிப்பதென்றால் அருமையில்லை;

அதன் அருமையையும் நாம் உணருவதற்கில்லை.

"உயிரை விட்டவன் வாழ்வான். விடாதவன் வீழ்வான்" என்றார் இயேசு பெருமான். எவனொருவன் உயிரின் மீதுள்ள ஆசையை விட்டானோ அவனே ஆண்மையுள்ளவன். அவனிடம் அச்சமென்பதற்கே இடமில்லை. எத்தகைய கொடிய பீரங்கியின் முன்னால் நிறுத்தினாலும் ஈட்டியினால் பாய்ச்சப் பட்டாலும் அவன் கண்ணைக் கூடச் சிமிட்ட மாட்டான். உத்கிருஷ்டமான எதை விரும்புகிறானோ அதை அவன் அடைந்தே தீருவான். ஆனால் உயிரின் மீதுள்ள ஆசையை—பற்றை விடாதவன் வீழ்வான். அவனால் ஒரு சிறு விரலைக் கூட அசைக்க முடியாது. தனக்காகவும், பிறருக்காகவும், தன்னாட்டிற்காகவும். எந்தவொரு பணியையும் அவனால் ஆற்ற முடியாது. அதே மாதிரியே இப்பொழுது நடக்கும் இந்த மஹா யுத்தத்திலும் கூட உயிரின் மீதுள்ள ஆசையைப் பற்றை யொழித்தவனே போர் வீரனாயிருக்க முடியும். ஒருவனை வெட்டி வீழ்த்துவதை விட ஒருவனால் வெட்டி வீழ்த்தப்படுவதே சிறந்த வீரம்—உண்மை வீரம் என்பதை இந்தியா இப்பொழுது உணர்ந்து வருகிறது. தமிழன் இவ்வுண்மையை நன்கறிவான். காந்திஜீயும் இது பற்றிப் பேசுமிடத்து "தமிழர்கள் தங்களுக்கு எது சரியென்று படுகின்றதோ அதையே செய்வர். ஒரு காரியத்திலிறங்கி விட்டால் இடை நடுவில் எத்தனை இன்னல் வந்தற்றிடினும் அஞ்சாமல், தளர்வுறாமல், ஓயாமல் செய்வர்." என்று அடிக்கடி கூறுகிறார்.

சரி இந்த ஸ்ஹிம்ஸைப்போரில் தமிழன் எவ்வளவு வேலை செய்கிறான், செய்திருக்கிறானென்று பார்ப்போம். இப்பொழுது இங்குவரும் தந்திச் செய்திகளிலிருந்து பார்த்தால் தமிழ் நாட்டுச் செய்திகளை நாம் உள்ளூர் பத்திரிகைகளில் அதிகப் படிக்க முடியவில்லை. இதனால் தமிழர்கள் இம்முறையிலும் அயர்ந்து விட்டார்கள், அதிகம் பேர் சிறை போகவில்லை. தேசத்தொண்டில் பின்னடைந்து விட்டார்களென்று ஒரு அவசரமான முடிவுக்கு வந்துவிடக் கூடாது. போன போரில் தமிழர்கள் தீவிரமாயிறங்கவில்லையென்பதற்குப் பிரசாரம் போதாதென்பதைக் காரணங்கூற ஹேது விருந்தது. ஆனால் இப்போரில் அப்படி பொருசாக்குப் போக்குக் கூறுவதற்கோ இடமில்லை. காந்தி—இர்வின் ஒப்பந்த காலத்தை ஒரு தக்க சந்தர்ப்பமாகக் கொண்டு பிரசார வேலை செய்ததில் தமிழ் மாகாணத்தைப் போல் வேறெம் மாகாணமுமே செய்யவில்லையென்பதை நாமறிவோம்; நாடுமறியும். ஆகவே இவ்வளவு வேலையும் செய்தும் தமிழர்கள் இம்முறை மற்ற மாகாணத்தவரில் எள்ளளவும் பின்னடைந்து விடுவர்களென்பதற்கு இடமிருக்குமா? தமிழ் நாட்டுத் தலைவர் ராஜாஜீயின (இராஜகோபாலாச்சாரியாரின்) நாள் தவறினும் தவறாத அறிக்கைகளும் சத்திய மூர்த்தியின் வீர கர்ஜனையும், பிரசாரகர்களின் ஓயாத பிரசாரங்களும் நல்ல பயனையளிக்காதிருக்கக் காரணமில்லை. "சுதந்திரச் சங்கு" "காந்தி" போன்ற பத்திரிகைகளின் நெருப்பைக் கக்கும் பிரசார வேலையும் வீண் போகாது.

தமிழ்நாடு இன்னும் தயாராகவில்லையென்றுதானா நாமும் நினைத்தோம். அன்றாடப்பத்திரிகைகளைப் புரட்டிப் படிக்குந்தோறும் சென்னைச் செய்திகளுக்காக எமது கண்கள் பறவையிட்டுத் திரிந்தன. பத்திபத்தியாகவேட்டையாடினோம். எமது பிரிய தமிழர்கள்—காந்திஜீயின் நம்பிக்கைக்குரித்தான தமிழர்கள் எத்தனைபேர் கைதிசெய்யப்பட்டிருக்கிறார்கள்? எங்கெல்லாம் போர் நடக்கின்றது! என்று ஆத்திர ஆத்திரமாகத் தேடியலைந்தோம். ஆனால் ஒவ்வொரு நாளும் பெருமூச்சுவிட்டு ஒடுங்கிவிடுவதைத் தவிர்த்து மனச்சாந்தி கிடையாது; மன ஆறுதலில்லை. அந்தோ! தமிழ் நாடே! ஐயோ! தமிழர்களே! கடைசியில் இம்முறையுமா நமது பாபுவை, நமது காந்திஜீயைக் கைவிட்டுவிட்டீர்கள். என்று மனங் கசந்தோம்; சபிக்கவும் சபித்தோம். ஆனால் சென்ற வாரம் வந்த தினசரிப் பத்திரிகைகளில் பதிவு எண் முதல் பதிப்பாளர் அச்சடிப்போர் வரை தமிழ் நாடெங்கும் தலைவர் முதல் தொண்டர்களாக ஏராளமாக எண்ணிக்கைக் கடங்காமல் தமிழர்கள் கைதி செய்யப்படுவதையும், தண்டிக்கப் படுவதையும் தடையுத்தரவு பிறப்பிக்கப்படுவதையும் காண எமதுள்ளம் குளிர்கிறது. சென்னை, திருச்சி, தஞ்சை, மதுரை, கோவை, விருதுநகர், இராஜபாளையம், திருநெல்வேலி முதலிய எல்லா இடங்களிலும் இயக்கம் தங்கு தடையில்லாமல் நடக்கின்றது. எத்தனையோ காங்கிரஸ் சபைகள் சட்ட விரோதமானவைகளெனக் கலைக்கப் பட்டிருக்கின்றன. எத்தனையோ இடங்களில் கூட்டங்கள் தடிகொண்டு கலைக்கப்படுகின்றன..

பத்திரிகைகளும் பலியாகின்றன. பெண்மணிகளும் பின்னால் தங்கிவிடவில்லை. அவர்களுக்குரிய பங்கை அவர்களும் கொஞ்சங்கூட விட்டுக்கொடாமல் பெற்றேயிருக்கின்றனர். ஸ்ரீஜத எஸ் ஸ்ரீனிவாசஐயங்காரின் அருந்தவச்செல்வி அம்புஜம் அம்மாளும், ஸ்ரீமதிகள் அஞ்சலை, பத்மாவதி ஆஷர், காமாட்சி நடராஜன், தஞ்சை நா. நடராஜன் மனைவியார் முதலிய பலரும் போராடவே செய்கின்றனர். அதன் வெற்றியையும் பெற்று சிறையும் சேர்ந்துள்ளனர்.

எல்லோரிலும் சிறப்பாக இன்னொருவருக்கும் நாம் பெரிதும் கடமை செலுத்த வேண்டும். நாட்டுக்கோட்டைச் செட்டியார் மரபும் இப்போரில் இறங்கியிருப்பதை நாம் போற்றுது விடலாமா? தனவைசியர் ஜாதியில் சிறை செல்லுவது பெரும் இழுக்காகக் கருதப்பட்டு வந்ததுண்டு. ஆனால் தேசத்துக்காகச் சிறை செல்லுவதை இப்பொழுது அச்சமூகத்தார் பெரும் பாக்கியமென--புனிதமெனக் கொள்ளுகின்றனர். எமது ஞாபகம் பிசகில்லாதிருந்தால்—எமது சிந்தனைக் கெட்டியவரை போன போரில் எந்தவொரு தனவைசிய மகனும் சிறை போனதாகவில்லை. ஆனால் இன்றைய சத்தியாக்கிரஹத்தில் காரைக்குடி "ஊழியன்" ஆசிரியர் ஸ்ரீராய சொக்கலிங்கஞ் செட்டியார் கைது செய்யப்பட்டு கையில் விலங்கிடப்பட்டு நீண்ட தண்டனை விதிக்கப் பெற்றமைக்கு எமது வாழ்த்துச் செய்தியை அச்சமூக முழுதுக்குமே அர்ப்பணிக்கின்றோம்.

காங்கிரஸ்காரர்கள் சிறை செல்லுவதையோ தடியடி படுவதையோ நாம் நமது உள்ளார்ந்த மனத்தோடு போற்றுகிறோமென்றாலும், காங்கிரஸ்காரர்கள் கடமையையே செய்கிறார்கள். ஆனால் சுயமரியாதைக் கட்சிக்காரர்களும் இவ்வியக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்களே அவர்களைத்தான் நாம் அதிகம் போற்றுகிறோம்.

முடிவாக பாபுஜியின் பிரிய தமிழர்கள் என்றென்றும் பிரிய தமிழர்களாகவே யிருப்பார்கள். காந்திஜியின் முழு ஆசீர்வாதத்திற்கும் உரித்தானவர்களாக இப்போரில் செயலாற்றுவர் திண்ணம்; எள்ளத்தனை சந்தேகமுமில்லை. நமது தவறை நாம் உணர்ந்தது போன்றே இங்குள்ள தமிழர்களும் தமிழ் நாட்டிலிருக்கும் தமிழர்களைப்பற்றித் தப்பாக நினைக்காதிருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

கேட்கின்றதா? அதோ சர்க்கா சப்தம்!

(ஸ்ரீமதி மீராபாய்)

எரவாடா சிறைக்குள்ளிருந்து சர்க்காவின் கீதவொலி கேட்கின்றதா? ஆம் பாபுஜி கம்பிகளுக்குள்ளிருந்து நூல் நூற்கின்றார். அந்த பரமாத்மாவை யார் சிறையிலிட்டார்கள்? பிரிட்டிஷ் சர்க்கார் என்பீர்களா? இல்லை நாம்தான் அடைத்தோம். நம்முடைய கடமையை நமக்கிடப்பட்டிருந்த கட்டளையை—நாம் சரிவரச் செய்திருந்தால் காந்திஜீ சிறையில் கிடக்கக் காரணமேயில்லை.

பாபுஜி கேட்டாரே அந்த ஒரு சிறிய—எளிய—வேண்டுகோளை நாம் கேட்டோமா? கதர் கட்டுங்கள் என்று சொன்ன காந்திஜியின் சொல்லைப் பின்பற்றியிருந்தால் இந்தியா இன்னும் அடிமைத் தளையால் கட்டுண்டு கிடக்காது.

நமது எல்லையை நாம் தொட்டோமா? காந்திஜீ தமது ஒவ்வொரு சக்தியையும் உபயோகித்து கௌரவமான ஒரு சமாதானத்தை சுயமதிப்புக்குப் பங்கமில்லாததோர் ஒப்பந்தத்தை நாட்டினிடையே நாட்டுவதற்காக இரவு பகலாய் என்னென்ன பாடெல்லாம் பட்டார்? அதை நாம் நினைத்துப் பார்த்தோமா? நமது கிராமவாசிகள் ஏழை எளியவர்கள் கையால் நூற்று கையால் நெய்கிறார்களே அந்தக் கதரைக் கட்டுவதற்காவது நமக்கு தயவுபிறந்ததா? இந்த ஒரு சிறுகைங்கர்யத்தைச் செய்திருந்தாலும் இந்தியாவை இந்தியாவின் சக்தி காந்திஜியை இந்திய சமுதாயத்தின் பாபுவை இப்பிரிட்டிஷ் அரசாங்கம் இவ்வாறு அவமதித்திருக்குமா? பத்துத் தினங்களாக எத்தனை எத்தனை அவதூறுகளை, எத்தனை எத்தனை கஷ்ட கஷ்டங்களை, எத்தனை எத்தனை நிஷ்டூரங்களை நாம் அனுபவிக்கின்றோம். இவற்றைக்கண்டாகிலும் நமது மனம் கொதிக்காவிட்டால், நமது இரத்தம் சூடாகாவிட்டால் வேறு விதியில்லை; கதிமோக்ஷமே கிடையாது.

பெருந்தவறு செய்து விட்டோம். நாம் செய்த தவறுகளை நாமே உணர்ந்து உள்ளம் உருக வேண்டாமா? ரொம்ப எளியது. ஏராளமான கதரும் கைவசமிருக்கின்றது. காதி வஸ்திராலயங்களிலெல்லாம் அழகு அழகாக கதர் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. பட்டுப்பட்டாயிருக்கும் கதரை ஒருமுறை கண்ணால்

(7-ம் பக்கம்)

காந்தி பிளேட்.

உலகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவையும் ஒரு சூக்ஷ்ம சக்தி இயக்கிக் கொண்டேயிருக்கிறது. அதை நான் உணர்கிறேன்; பார்த்ததில்லை. அரூபகமான அச்சக்தியை எதிர்ப்பது எவற்றாலும் இயலாது. எனது புலன்களில் அச்சக்தியின் உணர்ச்சி புலனாகின்றது. அந்த ஒரு காரணத்தைக் கொண்டே "கடவுள்" ஒருவர் இருக்கின்றாரென்று நான் நம்புகிறேன்; உறுதியாய்க் கூறுகிறேன்,

சாதாரணமாய் உலகத்தின்,அரசன்யார்? என்பதைப் பாமர ஜனங்கள் அறியார்கள். இருந்தாலும் ஒருவர் ஆண்டு கொண்டுதானிருக்கிறார். அதேபோன்றே இந்த அகிலஅண்டகோளத்தையும், சர்வ ஜீவவர்க்கத்தையும் பகவான் ஆளுகிறான். சில வருடங்களுக்கு முன்னே நான் மைசூரில் சுற்றுப் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தபோது பல கிராமத்தாரைச் சந்தித்தேன். மைசூரை யாளுவது யார் என்பது அப் பாமர மக்களில் அநேகருக்குத் தெரியாது. "கடவுள் ஆளுகிறார்" என்றார்கள் சிலர்.

கடவுள் முன்னிலையில்—சன்னிதானத்தில் நான் அணுவினும் அணுவானவன். உலகத்திலுள்ள அரசர்களுக்கெல்லாம் அரசான அவரது அருள் கிடைப்பது அரிது. மைசூர் ஜனங்கள் தங்கள் அரசனை அறியாததுபோலவே நான் எனது அரசனாகிய ஆண்டவனை உணர்கிறேன். அண்டகோள முழுதும் ஓர் ஒழுங்கு நிலவுகிறது. மாற்றுவதற்கியலாதவாறு ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு தொழில் உண்டு. எல்லாவற்றையும் எல்லாத் தொழிலையும் அடக்கி யாளும் அந்த மஹா சக்தியே "கடவுள்"

குருட்டுச் சட்டத்தால் உலகத்தை யாள முடியாது. ஜடப்பொருள்களிலும் ஜீவனிருக்கின்றதென திரு. ஜே. ஸி. போஸ் மெய்ப்பித்துக் காட்டிவருகிறார். இவ்வளவு ஜீவவர்க்கத்தையும் எந்த ஒரு அந்தராத்மா இயக்குகின்றதோ அந்த ஆத்மா—அந்த சக்திதான். 'பரமாத்மா.' அவரும் அவரது சட்டமும் ஒன்றே. அவரைப் பற்றியே எனக்கொன்றும் தெரியாது. ஆகையால் நான் அவரை மறக்கவில்லை. இவ்வுலகில் எத்தனையோ அனந்தம் சக்திகளிருக்கின்றன. அவைகளை யெல்லாம் மறப்பதால் எனக்கேதாவது நன்மையுண்டா? அவ்வாறே ஆண்டவன் சக்தியை எதிர்ப்பதாலும் எவ்வித பயனுமில்லை. ஆனால் ஆண்டவன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால் நமது வாழ்நாளை எளிதில் கழிக்கலாமென்பது நிச்சயம். என்னைச் சுற்றிலும் உள்ளவை எத்தனையோ மாறுவதையும் மாண்டு போவதையும் நான் காணுகிறேன். ஆனால் அவைகளுக்கிடையும், உள்ளும் புறமுமிருந்தும் என்றென்றும் மாறுமலும் சாகாமலும் நின்று ஒரு சக்தி உலகத்தை ஆட்டிக்கொண்டிருக்கின்றது. அது தான் சிருஷ்டிப்பது; அழிப்பது; மறுபடியும் ஆக்குவது. அந்த மகா சக்திதான் பரமாத்மா. அதற்கொப்பாக வேறெதுவும் இல்லாததால் எனது சர்வஸ்வ புலன்களையும் அச்சக்திக்கே அர்ப்பணித்துவிட்டிருக்கிறேன்.

இந்த சக்தி அருள் வடிவானதா? இல்லை த்வேஷமுடையதா? என்று பார்த்தால் முழுதும் அருள்மயமானதாகவே நான் காணுகிறேன். ஏனெனில் இப்பிரகிருதி உலகத்தில் சாவின் மத்தியில் வாழ்வு பொங்குகின்றது; அசத்தியத்தினுள்ளே சத்தியம் ஸ்புரிக்கின்றது. இருளினிடையே ஒளிபிரகாசிக்கின்றது. இக்காரணங்களாலே தான் கடவுள் அந்தராத்மா; அவர்தான் சத்தியம்; அவர்தான் ஜீவவொளி என்று நான் உணர்கின்றேன். அவர்தான் பரமஸ்வரூபி; அவர்தான் பரிபூரண வஸ்து; அவர்தான் புனிதாத்மா. அறிவுக்கு மாத்திரம் இன்பவொளி யூட்டுவதுதானா கடவுள்? இல்லை. கடவுள் என்றால் அவர் ஹிருதயத்தையே மாற்ற வல்லமை வாய்ந்தவரா யிருக்க வேண்டும். தமது பக்த கோடிகளின் சின்னஞ் சிறிய வேலைகளிலும் அவர் தோன்ற வேண்டும். அத்தகைய தோற்றம்—தெரிசனம்— அருபகக் காட்சி ஐம்புலன்களாலும் அறிவதற் கப்பாற்பட்டது. ஐம்புலன்களும் எப்பொழுதுமே ஏமாற்றும் இயல்புள்ளன. ஆனால் புலன்களுக்கு அப்பாற்பட்ட உணர்ச்சி அழிவற்றது. ஆண்டவனை தெரிசிக்கப் பெற்றவர்கள் பாக்கியவான்கள்.

ஒவ்வொரு தேசத்திலும் இத்தகைய மகான்கள் இடைவிடாமல் தோன்றிக் கொண்டே யிருக்கிறார்கள். இவ்வுண்மையை இல்லையென்பது தன்னையே எதிர்ப்பதையொக்கும். இவ்வுணர்ச்சி பெற வேண்டுமானால் முதன் முதலில் தளராத நம்பிக்கை அவசியம். எவ

னொருவன் தன்னோடு ஆண்டவனிருப்பதாக எண்ணுகிறானோ—உணருகிறானோ அவன் உறுதியான நம்பிக்கையோடு வாழ வேண்டும். நம்பிக்கையுடன் வாழ்வது சுலபமான மார்க்கமாகும். இவ்வுலகத்தைச் சத்குணமே ஆளுவதாக நம்பவேண்டும். அதாவது 'ஸத்யமேவ ஜெயதி' "அன்பே ஆண்டவன்" என நம்பிக்கை வைக்க வேண்டும். இதற்கு மாறானவைகளை மறந்து விட வேண்டும். காரணங்களைச் சொல்லிக் காரியத்தை விளக்க எனக்குத் தெரியாது. என்னில் நம்பிக்கை காரணங்களைக் கடந்தது. அதே மாதிரி உலகத்தில் அக்ரமம் ஏன் இருக்கவேண்டுமென்பதையும் என்னால் விளக்க முடியாது. தீமையையும் ஆண்டவன்தான் உலகிடைப் புகுத்தினார். அதையும் அவர் பொறுக்கிறாரென்று எனக்குத் தோன்றுகின்றது. ஆனால் அவரிடம் சிறிதுகூடத் தீமையில்லை. தீமையைப் புகுத்தியவர் அவரே யாயினும் அவரைத் தீமை தொட முடியாது. தீமையையெதிர்த்து நான் போர் புரியாவிட்டால் கடவுளை நான் அறியவே முடியாது. எனது குறைந்த அனுபவத்தினின்றே நான் இதை உறுதியாகக் கூறுகிறேன். எவ்வளவுக் கெவ்வளவு திரிகரண சுத்தியோடு நான் பாடுபடுகிறேனோ அவ்வளவுக் கவ்வளவு நான் ஆண்டவனிடத்தில் நெருங்குகிறேன். என்றைக்கு எனது நம்பிக்கை ஹிமயகிரி பர்வதத்தைப் போல் அசையாமலும் பனிச் சிகரங்களைப் போன்று பரிசுத்தமாகவும் ஆகின்றதோ அன்றைக்கே ஆண்டவனை முழுதும் உணருவ பரிபூரணத்துவ மடைவேன் என்பது திண்ணம்.

குறிப்பு:—இக்காலை காந்திஜியின் கிராமபோன் பிளேட்டுகள் அடிக்கடி பற்பல இடங்களில் பாடக்கேட்கின்றோம். காந்திஜி மூச்சுவிடக்கூட அவகாசமில்லாமல் அவசர அவசரமாகப் பேசுவதை நாம் பின்பற்றுவது சுலபமல்ல. மேலும் கடவுள தத்துவத்தை—வேத வேதாந்தங்களின் இரகசியத்தின் தாதுப் பொருளை வேகமாகச் சுழலும் கிராமபோனிலிருந்து தெரிந்து கொள்ளுவது துர்லபம். ஆகவே இம்மொழி பெயர்ப்பை பன்முறை பாடஞ்செய்து கொண்டு கேட்போமானால் அநேகமாய்ப் பயனடைய முடியுமென்றே ஈண்டு குறிப்பிடநேர்ந்தது.

(ப—ர்)

காந்தி வாரம்.

28 டிசம்'31—4 ஜன '32.

28 டிசம்பர்: காந்திஜி பம்பாயில் வந்திறங்கினார். ஜவஹரிலால், ஷெர்வானி, கபூர்கான் முதலியோர் கைது செய்யப்பட்டதாக கேள்விப்பட்டார். இராஜ வரவேற்பு; மணிபவனத்தில் ஜாகை. மாலையில் ஆஜாத் மைதானத்தில் இதற்கு முன் எப்பொழுதும் நடந்திராத பிரமாண்டமான—அமைதியான கூட்டம்.

காந்திஜி பேசுகையில் ஜவஹரிலால், ஷெர்வானி யிருவரையும் கைதி செய்ததையும் கான் அப்துல் கபூர் கானை நாடு கடத்தியதையும் வரவேற்கிறார். எல்லைப் புறத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தை விலிங்டனின் கிறிஸ்மஸ் விளையாட்டாக வர்ணிக்கின்றார். "இம்முறை நாம் வெகுகடுமையாகச் சோதிக்கப்படுவோம். குறுந்தடிக்குப் பதிலாகவோ அல்லது அத்துடன் சேர்த்தோ குண்டு மழைகள் வருஷிக்கப்படும். சுதந்திர தேவியின்—ஜெயலட்சுமியின் பலிபீடத்திலே உங்களை அர்ப்பணிக்கும்கால் ஒவ்வொருவரும் தயாராகி விடவேண்டும். எவ்வளவு வேண்டுமானாலும் தியாகஞ் செய்யவும், எவ்வளவானாலும் கஷ்டத்தை கஷ்டத்தைச் சகிக்கவும் நீங்கள் உங்களுக்குள்ளேயே கடினமான பிரதிஞ்ஞை யெடுத்துக் கொள்ளுங்கள். இன்னொருவருக்கு உங்களால் எள்ளளவு ஹிம்சைகூட ஏற்படாதபடி அஹிம்சை விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும்' என்று உபதேசித்தார்.

அன்று இரவு 10 மணிக்கு இந்திய நல உரிமைச் சங்கத்தில் பேசினர். லண்டன் மனோகர வாழ்க்கை குறித்துக் கூறிவிட்டு அதன் எதிரொலியை இந்தியாவில் காணலாமென்றெதிர்பார்த்த நான் நெருக்கு நேராய் கடுமையான அடக்கு முறையைக் காணுகிறேன். எல்லைப்புற அவசரச் சட்டத்தைச் சட்டமென்ற பெயர் கொண்டு தான் அழைக்க வேண்டுமென்றால் அதை மனிதத்துவ மற்ற மிருகச் சட்டமென்றே சொல்லுவேன். ஒரு அதிகாரியின் உத்திரவை மீறினால்—பலாத்காரத்தினாலல்ல அஹிம்சா தர்மத்தில்—அதற்காகத் துப்பாக்கிக் குண்டுகளை குபீர் குபீரெனக் கக்குவது தான் தண்டனையென நானிதுவரையெங்கும் எக்காலத்திலும் கண்டதில்லை; கேட்ட

இல்லை. எத்தனையோ பிரிட்டிஷ் நண்பர்களுக்கு நான் ஒற்றுமைக்காகப் பாடுபடுவேனென வாக்களித்திருந்தும் எனது சுயமதிப்பை விற்று— எனது 45வருடத்திய வாழ்க்கைச்சரித்திரத்தை வேறு போக்கில் எழுதி விட்டுச் சமாதானஞ் செய்து கொள்ள முடியவில்லை. எங்குபார்த்தாலும் அரசியல் காடாந்தகாரமாய் இருள் சூழ்ந்து கிடக்கின்றது. திக்குத்திசை தெரியாமலலைறேன். இச்சமயத்தில் ஓர் ஆங்கிலேயர் என்னை யேன் எல்லைப்புறத்துக்குச் சென்று நிலைமையைச் சரிப்படுத்தலாகாது? என்று கேட்கிறார்.

போன வருஷம் நான் மூன்முறை முயன்றேன்; தோற்றேன். டில்லி ஒப்பந்தத்திற்குப் பிறகும் இர்வின் பிரபுவைக் கேட்டேன்; கூடாதென்றுவிட்டார். வில்லிங்டன் பிரபுவையும் இருதரம் கேட்டேன்; இல்லையென்று தடுத்து விட்டார் இன்னுமொரு முறையும் முயற்சிப்பேன்.

பலாத்காரச் செயல்களையும் அதன் பயனாய் விளையும் படுகொலைகளையும் நான் உள்ளூற வெறுக்கிறேன். தனிமனிதனின் மீதோ அல்லது ஒரு ஆட்சியின் மீதோ ஆவேஷமும் வெறுப்பும் முற்றுக் கடுமையான பாஷாணத்தையுண்டு வெறிமூண்ட பின்னரே மனிதவர்க்கம் மிருகசசெயல் செய்யத் துணிந்து விடுகிறது. பலாதகாரத்தைக் கண்டிப்பதில் நான் எந்தவொரு இங்கிலீஷ்காரனுக்குங்கூட இளைத்தவனில்லை; அவர்களுடன் மனிதன் என்ற முறையில்—ஜெனரல் டையர் செய்ததுபோலில்லாமல்—பலாத்காரத்தை யடக்க எனது சக்தி யத்தனையையும் உபயோகிப்பேன். அவசரச் சட்டங்களை கண்மூக்குத் தெரியாமல் அவசர அவசரமாக அள்ளியெறிவதால் அமைதியை யுண்டாக்கிவிட முடியுமென்று கருதினால் அது நிச்சயமாய் பகல் கனவேயாகும், என்றார்.

29 டிசம்பர். ஹிந்துஸ்தானி சேவா தளத்தின் மாதர் பகுதியில் பேசினார். வங்காளிப் பெண்களிருவர் செய்த படுகொலைக்குப் பிராயச்சித்தமாக நீங்களெல்லாம் அஹிம்ஸை விரதம் அனுஷ்டிக்க வேண்டும். அவர்கள் செய்தது வீரச்செயலென எனக்குத் தோன்றவில்லை. நிரபராதியான ஒருவனைக்கொல்லுவது வீரமல்ல; ஒருவன் தனதுயிரையே அர்ப்பணம் செய்வதுதான் வீரம் என்றார்.

காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கூட்டம். ஏக முறையில் வைஸ்ராய்க்கு பேட்டி வேண்டி விடுத்த தந்தி வரைதல்.

டிசம்பர் 30உ காரியக் கமிட்டி கூட்டம். தூறுபோய் வந்த செய்தி கூறுகிறார். வங்காளம் ஐக்கிய மண்டலங்களின் நிலைமையைக் கேட்டறிகிறார். நண்பர்கள் பலருக்கு பேட்டி கொடுக்கின்றார். தம்முடைய சகாக்கள் கைது செய்யப்படுவதற்குள் அவரவர் செய்யவேண்டியவைகளைக் குறிப்பிட்டுக் கூறுகிறார் அவைகளில் ஒன்று தம்மை இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் இடைவிடாது காத்துவந்த ஸி. ஐ. டி. நண்பர்களுக்கு ஆங்கில கைக்கெடியாரங்கள் அனுப்பவேண்டியது.

டிசம்பர் 31உ வைஸ்ராயிடத்திலிருந்து பதில் கிடைக்கிறது. (வைஸ்ராயிடத்திலிருந்தல்ல வைஸ்ராயின் அந்தரங்க காரியதரிசியிடமிருந்து.)

அதற்குக் காந்திஜீ பதிலெழுதி இரவு 11 மணிக்கு காரியக் கமிட்டியின் அங்கீகாரத்துக்கு வைக்கின்றார். அன்றிரவு 2 மணிக்கு பிரசுரத்திற்கு அப்பதில் நிருபம் அனுப்பப்படுகிறது.

ஜனவரி 1உ நாடெங்கும் அதிருப்தி; தத்தளிப்பு. வைஸ்ராய் பேட்டி மறுத்ததை எல்லோரும் கண்டித்தல். பல ஸ்தாபனங்களிலிருந்தும் பல தூதுக்கோஷ்டிகள் காந்திஜீயை காண வந்தனர். ஆங்கில நண்பரொருவர் வைஸ்ராயின் பதிலைப்பற்றிப் பேசுமிடத்து மறுபடியேன் காந்திஜீ பேட்டிகாண விரும்பவேண்டும்? வில்லிங்டனோடு கோலி விளையாடப்போகிறாரா? என்று கேட்டார். அன்று முழுதும் மணிபவனம் கொள்ளாத ஜனத்திரள். ஜனத்தலைவர்களும், வியாபாரிகளும், வியாபார சங்கத் தலைவர்களும், பத்திரிகைப் பிரதிநிதிகளும் நிமிடத்துக்கு நிமிடம் வருவதும் போவதுமாயிருக்கின்றனர். பிரார்த்தனையின் போது காந்திஜீ மணிபவனத்தில் பிரார்த்தனை செய்ய முடியவில்லை. மணிபவனம் எங்கே விழுந்து விடுமோ வென்று பயந்தனர். அவ்வளவு கூட்டம். கார்க்கோட் சிமாட்டியின் ஹிந்து அநாதைக் கழகத்தின் மைதானத்தில வெட்டவெளியில் பிரார்த்தனை புரிதல். ஆயிரம் பதினாயிரக் கணக்கில் பிரார்த்தனை செய்தல்.

நவீன கதையாரின் நவீனம்.

வியாபார யுக்தியில் காலெண்டர் (தேதிக் குறிப்புகள் பிரசுரித்து விளம்பரஞ் செய்வதென்பது ஒரு சம்பிரதாயம். புதப்புதிய முறையில் ஒவ்வொருவரும் புதப்புதிய ஓவியங்கள் தீட்டி மபோட்டி போட்டு வெளிவருவதை நவ உலகத்தில் வருடந்தோறும் காணுகிறோம். இரங்கூன் நவீனகதா புத்தகசாலையார் இவ்வாண்டில் எல்லாக் காலெண்டர்காரர்களையும் ஒருபடி தாண்டி விட்டார். இந்திய தேசியத் தலைவர்களின் போட்டோ பிளாக்குகளை பலபல வர்ணத்தில் தீட்டிக் கண்ணாடிபோட்டு வைக்கத்தக்க அவ்வளவு அழகாகச் சித்தரித்த 1932-ம் வருஷ காலெண்டர் ஒட்டியிருப்பதை பாராட்டுகிறோம்.

கிடைக்குமிடம்:—நவீன கதா புத்தகசாலை,
வில்லை அண 2. இரங்கோன்.

ஜனவரி 2வ சாப்ரூ, ஜெயக்கருடன் காந்திஜீ கலந்து பேசுகிருர். இந்திய நலவுரிமைச் சங்கத்தில் அவசரச்சட்ட வாபீஸ் ஏற்புறுத்தப்படுகிறது. வைஸ்ராய் செய்த தவறுகளையெல்லாம் காந்திஜீ ஒவ்வொன்றாய்க்கூறுகிருர்,

ஜனவரி 3வ காலை 4 மணிக்குப் பிரார்த்தனை. பிரார்த்தனையின் தத்துவ பலத்தையும் ஆவசியத்தையுபற்றி உபதேசிக்கின்றார். இந்திய சமதர்மசங்கத்தைச்சேர்ந்த திரு ஹோராபின் ஆகக்கு இந்திய நிலைமைபற்றி சுருதிச்செய்தி விடுக்கின்றார். அன்று பகலெல்லாம் சர்க்கார் தரப்பில் சகல முன்னேற்பாடுகளுமெடுத்துக்கொள்ளப்பட்டன. டெலிபோன் தொடர்புகள் அறுக்கப்பட்டன. ஒவ்வொரு நிமிடமும் நிலைமை நெருக்கடியாகிக்கொண்டேயிருந்தது. காந்திஜிக்கு அன்று மௌனதினம். ஞாயிற்றுக்கிழமையல்லவா? சிலர் மௌனத்தைக் கலைத்துவிடும்படி கேட்டுக்கொண்டார்கள். அதற்கு காந்திஜீ அப்படியொன்றும் அவசியம் ஏற்பட்டுவிடவில்லையே? இவையெல்லாம்—இப்பொழுது நடப்பவை யனைத்தும் சர்வ சாதாரணமான நிகழ்ச்சிகள் தாமே என்று கூறினார். மௌனவிரத மெடுத்துக் கொண்டதிலிருந்து இதுவரை ஒரு முறையோ இருமுறையோதான் மௌனங் கலைத்திருக்கிருர். மகன்லால் காந்தி இறந்தபோது அவருடைய விதவை மனைவியைத் தேற்றுவதற்காக ஒரு முறை விரதம் கலைத்ததாவது ஞாபகம். அப்பொழுது அவசியமேற்பட்டது. ஆனல் இன்றைய நிகழ்ச்சி புதிதல்ல. காந்திஜீ எரவாடாச் சிறைக்குப் போவதும் வருவதும் சர்வ சாதாரணமாகிவிட்டது. ஆகையால் மௌனங் கலைக்க மறுத்துவிட்டார்.

அன்றிரவு வெகுநேரஞ்சென்றுதான் நிம்மதியாகச் சிறிது நேரம் நித்திரை செய்தார். இரவு 1 மணிக்கு கைது செய்யப்பெற்றார்.

கேட்கின்றதா? அதோ சர்க்காசப்தம்!

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

பாருங்கள். இது ஒரு பெரிய வேலை—பிரமாதமான காரியம என்று சொல்ல முடியுமா? ஒரு சிலர் சொல்லலாம் கதர் கனமாயிருக்கிறது. விலையும் அதிகம் என்று. ஆனல் பிரிட்டிஷார் நம்மீது சுமத்தும் அவமானத்தைவிட அதிக கனமானதா? நமது சுயமதிப்பின் விலையைவிட அதிகம் விலையேறப் பெற்றதா? அடக்குமுறைகள் மலையைப் பார்க்கிலும் அதிக பளுவோடு நமது தலைமீது அழுத்துகின்றன. எந்தக் காலத்திலானுலும் சரி, நமது சகோதர சகோதரிகள் குடிசைகளில் நூற்ற கதரையே கட்டுவோமானல் எந்த ஒரு அன்னிய அரசாங்கமும் நம்மை அசைக்கமுடியாது. வியாபாரவர்க்க ஆக்ஷி வீழ்ந்துபடும்.

இந்திய மில் துணிகளை ஏன் கட்டக்கூடாது? என்ற பழைய கேள்விகளைக் கேட்பீர்கள். "அன்னியத் துணியை நாம் சுட்டுத் தள்ளிவிடலாம். பெல்லிய மில் துணிகளை கட்டலாம். கதரைக்கட்டி ஏன் பாரத்தைச் சுமக்க வேண்டும்!" என்பீர்கள். பழைய பதிலையே நானும் பாடம் ஒப்புவிக்கிறேன. சதருக்க மாத்திரம் பகிஷ்காரமில்லை. அன்னியத் துணியைப் பகிஷ்கரிப்பதால் பசியும் பட்டினியுமாய் கிடக்கும் ஒவ்வொரு இந்தியனும் பசியாற உண்டு மகிழலாம். நூற்றுக்குத் தொண்ணூறு விகிதமுள்ள இந்திய விவசாயிகள் பிழைப்பதற்கும் கதர் பிரயோஜனப்படுகின்றது. மேலும் சாதாரண ஜனங்களின் சக்தியும் கிடைக்கின்றது. ஜனங்களின் சக்தியே நாட்டின் ஜீவநாடி; இரத்த ஓட்டம்.

இதைத்தான் காந்திஜீ நாட்டுக்கு உபதேசித்து வந்தார். இப்பொழுது அவருடைய இனிமையான குரல், மகாமந்திரமான வேதப் பிரசாரம் எரவாடா கோயிலுக்குள்ளே நாலு சுவர் மத்தியிலே அடங்கிக் கிடக்கின்றது. என்றாலும் அவர் சுற்றும் சர்க்காவின் சப்தம் நமது காதுகளில் இன்னும் கேட்டுக்கொண்டேயிருக்கின்றன.

ஊராரே! உங்களுக்குச் சரியா?

கீமந்தான் மயானகாவலர் ஸ்ரீமான் ப. சி. சோமசுந்தரம் பிள்ளை சுடுகாட்டுக் கணக்குக் கொடுக்காமல் கல்லுப்போலிருக்கின்றாரே. எத்தனை முறைபோ கேட்டாயிற்று. சுமார் பத்து வருஷத்துப் பணத்தை வைத்துக் கொண்டு மௌனம் சாதிப்பதின் கருத்தென்ன? தமது சொந்தச் செலவில் விழுந்துவிட்டதா? அல்லது கணக்கை மாடு மேய்ந்து விட்டதா? ஒருக்கால் தமது வீட்டின் அஸ்திவாரங்களில் புதைந்து போய்விட்டதா? எப்படியானாலும் அதற்கொருவழி பிறந்துதானாகவேண்டும். ஏதாவது கணக்குச் சொல்லித்தான் தீரவேண்டும்.

ஆனால் நாம் கேட்பது அவரது காதுகளில் கேட்கவில்லைபோலும். அல்லது இவனென்ன கேட்பது? நாமென்ன கொடுப்பது என்ற கருத்தா? அப்படியானால் இவ்வூராராகிய உங்களுக்காவது வாயில்லையா? பொதுஜன கைங்கர்யத்திற்கென்றே தோன்றி வாழ்ந்துவரும் பத்திரிகைகளில் "தேசோபகாரி" நீங்கலாக இதர எந்தப் பத்திரிகையும் இக்கணக்கு சம்பந்தமாக வாய் திறவாதிருப்பதும் பொருந்துமா? சுடுகாடு பொதுஜனங்களின் உடைமையாயிருக்கையில் பொதுஜன சேவை செய்யும் பத்திரிகாசிரியர்கள் தங்களது சொந்த நலனேதாவதிருந்தாலும் கூட அதையும் பொருட்படுத்தாது இத்தகைய. பொதுப் பொதுப்பணியில் கருத்துச் செலுத்துவது பத்திரிகா தருமமாகும். அதனையும் எந்தவொரு சகவர்த்தமானியும் செய்யத் தவறிவிட்டது. நாம் ஒற்றைக்குரல் கொண்டு கேட்பது ஸ்ரீமான் பிள்ளையின் காதுகளில் கேட்கவில்லையென்னுங் காரணங் கொண்டு எமது நண்பர்களையும் உதவிக்கழைக்கின்றோம். உதவி மறுக்க மாட்டார்களென்பதே எமது திடமான நம்பிக்கை. ஒருவாறு ஸ்ரீமான் பிள்ளைக்கும் எமது ஆசிரிய நண்பர்களுக்கும் பொருள் சம்பந்தமாகவோ அல்லது நட்புரிமை பற்றியோ ஏதேனும் சலுகை பாராட்ட இடமிருக்கலாம். ஆனால் நண்பராயினும் வேறவராயினும் சரி பொதுஸ்தாபன நிர்வாகி யென்ற முறையில் கணக்கு கேட்பது குற்றமாகாது. அதனால் நட்புரிமையும் முறியாது. ஆகலால் ஆசிரியர்களே! நீங்களெல்லோரும் வாருங்கள் சேர்ந்து கேட்போம். அப்பொழுதும் மறுப்பாரானால் ஊரார் கேட்பர்.

கண்ணபிரானும்—காந்திமஹானும்.

அன்று வெண்ணெய் திருடி மத்தாலடியுண்டார் கண்ணபிரான்; இன்று உப்பு திருடி சிறையுண்டார் காந்திமகான். அன்று துரௌபதையின் மானத்தைக் காக்க துகில் கொடுத்தார் கண்ணபிரான்; இன்று 33 கோடி பாரத மக்களின் மானத்தைக் காக்க கதர் தந்தார் காந்திமஹான். அன்று பாண்டவர்களுக்காக தூது சென்றார் கண்ணபிரான்; இன்று அதே பாரதநாட்டிலுதித்த 33 கோடிமக்களுக்காக தூது சென்றார் காந்தி மஹான். அன்று கௌரவாதிகள் முன் விஸ்வரூப மெடுத்தான் கண்ண பெருமான். இன்று பிரிட்டிஷார் முன் வட்ட மேஜையில் நானே இந்தியாவென்று விஸ்வரூபங் காட்டினார் காந்தி மஹான். அன்று வேணுகானத்தால் உலகத்தைவசப்படுத்தினார் கண்ணபிரான்; இன்று தன் மோஹனச்சிரிப்பால் உலகத்தையே வசியப்படுத்துகிறார் காந்தி மகான். அன்று பாண்டவர்களைக் காத்து ரக்ஷிக்க சக்ராயுதத்தைக் கொண்டார் கண்ணபிரான்; இன்று அதே பாரத மக்களை காத்து ரக்ஷிக்க சக்ராயுதம் போன்ற சர்க்காவைக் கைக்கொண்டார் காந்தி மஹான். அன்று கௌரவாதிகளை கருவறுக்க ஆத்ம சக்தியை உபயோகித்தார் கண்ணபிரான்; இன்று பிரிட்டிஷாரை ஜெயிக்க ஆத்ம சக்தியை யுணர்த்தி வருகிறார் காந்தி மஹான். இவ்விதம் அவதார மூர்த்தியாய் விளங்கும் சாந்த மூர்த்தி எங்கே? எங்கே? ஹே! அஹிம்ஸா மூர்த்தி! உன்னை காணாது 70 கோடி கண்கள் பஞ்சடைகின்றன. நீ எப்பொழுது அன்னை கஸ்தூரி சமேதராய் காட்சியளித்தருள்வாய்? இதுவும் உன் கபட நாடக மன்றோ? ஆனால் அடிமை அரக்கனுடன் போர்செய்கின்றாய் போலும். அப்படியானால் சத்தியாவதார ஸ்வரூபியான நீயே ஜெயமடைவாய்.

Printed & Published By A. V. Sellam Pillay at the Desopakari Press, 50,36th Street Rangoon

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 51 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. **DESOPAKARI** புதன், ஞாயிறு வெள்ளி வெளியீடு

210-36-வது இரங்கோன்; (22-1-32) தை மீ 9உ வெள்ளிக்கிழமை

தைப்பூசத் திருநாள்.

வெற்றி வடிவேலன்—அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்

சுற்றி நில்லாதே போ!—பகையே!
துள்ளி வருகுது வேல்!

—கவிபாரதன்.

நாளை தை மாதத்து பூச நட்சேத்திர நாள். ஹிந்துக்களெல்லாம் அந்நாளை ஒரு திரு நாளாகக் கொண்டாடுவார்கள். ஹிந்து வென்பான் ஒருவன் எங்கிருந்த போதிலும் அன்றுகோலாகல மத்தியிலே குளித்து வீர தெய்வத்தை—வெற்றிக் கடவுளை வீர வணக்கஞ் செய்வான். அக்காலத்தில் தேவர்களெல்லாம் கூடி சுப்பிரமணியக் கடவுளை—அக்கினிச் சுடரில் பிறந்தவனை—அழல்வடி வானவனை தேவ—அசுரயுத்தத்திற்குச் சேனாபதியாக்கினார்கள். அசுரர்களின் கொட்டத்தையடக்கி— அழித்து தேவர்களைச் சிறை மீட்டான். அவன் செய்த ஒவ்வொரு யுத்தமும் வீரதம் பொருந்தியவை. பால சுப்பிரமண்யனாக அவன் போர் மத்தியிலும்—கடுமையான சம்ஹாரத்தின் குவியலிலேயும் செய்த பால சேஷ்டைகள்—விளையாட்டுச் செயல்கள் வெறுங் கதையில்லை. மஹா பலக்கிரசாலியான சூரபத்மனுடன் சமர் செய்கையில் சூரனுடைய அறியாமை யிருளை யகற்றி சிறிதுபோழ்து அறிவுச்சுடர்கொளுத்துகிறான். சூரன் தனது வில், வேல், அம்பு, கதைகளை யெறிந்து விட்டு "என் குல தெய்வத்தை—கதி மோட்சத்தைக் காணப்பெற்றே"னென்று குமரன் காலடியில் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்கிறான். மறுபடியும் பாலன் அசுரனுக்களித்த அறிவு விளக்கை அணைத்துவிடுகிறான். யானிருக்க என்செய்தேன்? இச்சிறு பயலுக்கா என் வீரமுடி தாழ்த்துவது? என்றெழுகின்றான்; போர் புரிகின்றான்; மாண்டு மடிகிறான்.

வேத இரகசியத்தின் மூலப் பொருளை-பிரணவ சூத்திரத்தை விளக்கஞ் செய்து வைத்த ஞான பண்டிதனும் இவனேயாகிறான்.

முருகன் அல்லது அழகு தெய்வம்-வனப்புக் கடவுள் ஆவானும் இவனே யாதலால் அறிவு, அழகு, ஆண்மை யாவும் அமைந்த ஒரு ஒப்பற்ற தனி முதல்வனின் வழிபாட்டிலின்று ஈடுபட்டிருக்கின்றோம்.

விக்கிரஹ ஆராதனையைப் பற்றியாவது தேர்த் திருவிழாக்களைப் பற்றியாவது நாமிங்கு விசாரணை செய்யப் போவதில்லை. மானஸமாக மனத்தை ஒரு வழிப்படுத்தி—சித்தத்தைச் சிதறவிடாது ஆண்டவனிடத்தில் சிந்தை நிறை கொடுத்து மானதபூஜை செய்வதற்கு விக்கிரஹ ஆராதனை அவசியந்தானென பல ரிஷிகளும் ஞானிகளும் தீர்க்கதரிசிகளும் கூறியிருக்கிறார்கள். கடவுள் ஒருவரிருக்கின்றாரென்னும் நம்பிக்கையுடைய நாம் கடவுள் வழிபாட்டின் வெவ்வேறு மார்க்கங்களி லெதுவொன்றையும் குறைகூற மாட்டோம்.

ஹிந்துக்களிலே தன வைசிய நாட்டுக் கோட்டை செட்டியார் சமூகத்தினர் வேறெந்த வொரு சமூகத்தாரைப்பார்க்கிலும் தெய்வ நம்பிக்கையிலும் தெய்வ சிந்தனையிலும் தெய்வ வழிபாட்டிலும் மிகைத்திருக்கிறார்கள். தங்

களது பிரவிர்த்தியில் பெரும் லாபத்தில் பெரும்பகுதியை கோயில் சமைத்தல் தேரமைத்தல் முதலிய திருப்பணிகளில் செலவழித்து வருவதை நாம் தமிழ் நாடெங்கும் பார்த்து வருகிறோம். வடநாட்டிலுங்கூட காசி பிருந்தாவனம், ஸ்ரீஜகன்னாதம் முதலிய க்ஷேத்திரங்களிலும் அவர்களது திருப்பணியின் சின்னங்கள் சிறந்து விளங்குகின்றன.

இன்றும் இனி மூன்று தினங்களும் இவ்வூரில் பெரிய கொண்டாட்டம். முருகப்பிரான் சகல ஆபரண அலங்கிர்தராய் வெள்ளி ரதத்தில் ஆரோகணித்து ஆறுமையிலிருந்து பசுமத்தான் ஆலயத்துக்கு விதிவலங்கஞ் செய்து கொண்டு செல்லுவார். எங்கும் தூபதீப ஆராதனைகள் தெருவெல்லாம் நடக்கும். நாளை பூசத்தன்று விருந்து வைபவம் நிகழும். மூன்றாம் நாள் மறுபடியும் தேரேறி ஆண்டவன் ஆறரைப்புகுவார். இவை நம் விழா வைபவம். ஆனால் இவ்வழிபாட்டில் ஆழமான—சூக்ஷுமமான அர்த்தம் பொதிந்து கிடக்கின்றதே அதைப்பற்றி நாம் பார்க்க வேண்டாமா?

சுப்பிரமணியக் கடவுளை நாம் வீரதெய்வம், ஞானபண்டிதன், வனப்புக்கடவுள் என்றேமல்லவா? ஆம். நாமவனை வழிபடுகிறோமென்றால் வீரத்தை வணங்குகிறோம், அறிவை ஆராதிக்கின்றோம், அழகைப் பூஜிக்கின்றோம். தனி மனிதனுக்கானாலும் சரி, ஒரு முழு நாட்டுக்கானாலுஞ்சரி அறிவு, ஆண்மை, அழகில்லாவிட்டால் அதை யொரு நாகரீக நாடாகவோ அவனை யொரு நாகரீக மனிதனென்றோ கருத மாட்டோம். அறிவு வளர வளர ஆண்மை பெருகப் பெருக அழகு ஜ்வலிக்கிறது. நுட்பமான அறிவும் பண்படங்காத வீரமும் உள்ளவர்தான் இயற்கை சோபிதமான அழகன் அழகியாக முடியும். "குஞ்சியழகும், கொடுந்தானைக் கோட்டழகும், மஞ்சளழகும் அழகல்ல" கல்வி அதாவது அறிவின் அழகே அழகு. வீரத்தை வணங்குகிறோம், அறிவைப் பூஜிக்கின்றோம், அழகை ஆராதிக்கின்றோமே இவையெல்லாம் இப்பொழுது நமது நாட்டில் நமது நாட்டவரிடத்திலிருக்கின்றனவா? வீர தெய்வத்தை வணங்குவதால் நாம் வீரம் பெறுகிறோமா? அறிவுச்சுடரை ஆராதிப்பதால் நாம் அறிவடைகிறோமா? வனப்புக் கடவுளை வழிபடுவதால் இயற்கை வனப்புவாயப் பெறுகிறோமா? இல்லை. ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடத்தில் அடிமையாயிருக்கும் வரை ஒரு தேசம் இன்னொரு தேசத்தாரின் வசியகாரத்தால் அடக்கியாளப்படுமட்டும் எந்த வொரு மனிதனும் எந்த வொரு நாடும் இவ்வியற்கை நலன்களை எய்தப்பெற இயலாது. குமஸ்தாக்களை, மற்றும் உத்தியோகஸ்தர்களை உற்பத்தி செய்வதற்காக வயிற்றுப் பிழைப்புக் கல்வி யென்பது மறைந்து அறிவு வளர்ச்சிக்காக வென்றே கல்வி போதிக்கப்படுவது என்னும் உத்கிருஷ்டமான நோக்கம் நாட்டிடைத் தோன்றுதவரை அறிவு தெய்வத்தை ஆராதிப்பதில் அர்த்தமில்லை. உண்மை வீரமில்லாமல் வெறும் பேடிகளாயிருக்குமட்டும் வீர தெய்வத்தைப் போற்றுவது வெறும் நாடகமேயாகும். அறிவும் ஆண்மையுமில்லாவிட்டால் எத்தனை வயிர வயிரமாக நகை யணிந்தாலும் எத்தனை பட்டுப்பட்டாக ஆடை புனைந்தாலும் காது மூக்கு கண்களையெல்லாம் பொத்தல் பொத்தலாகத் துளைத்து பொன்னைத் தங்கத்தை கல்லை உருட்டித் திரட்டித் தொங்கவிட்டாலும், பலபல பவுடர்களையும் விதம் விதமான வாசனை வஸ்துக்களையும் வாரிவாரிப் பூசிக்கொண்டாலும் இயற்கையான அழகு மணம் கமழாது.

சுப்பிரமணியனை உண்மை ஹிருதயத்தோடு வணங்க வேண்டுமானால் அவனது வீர பராக்கிரமச் செயல்களை ஹிருதய பூர்வமாய் ஆராதிக்கிறோமென்றால் முதலாவதாக நாம் நம்மையும் நமது நாட்டையும் தயார்ப்படுத்த வேண்டும். கல்வியை நமது கையில் வைத்துக் கொண்டு அறிவு வளர்ச்சி செய்ய வேண்டும். இப்பொழுதிருப்பது போல் இந்த நூற்றைம்பது வருஷ காலமாக நம்மில் நூற்றுக்கு ஐந்து பேரை மாத்திரம் அறிவுடையராக்கியது போலில்லாமல் எல்லோருமே அறிவுடையோராக வேண்டும். அதற்கு அரசாங்க பொக்கிஷம் நம் கையிலிருந்தாலன்றி அமையாது. வீரம் வேண்டுமானால் இராணுவம் நம் கையிலிருக்க வேண்டும். நம்மவன் ஒவ்வொருவனும் இராணுவ வீரனாகப் பயிற்சி செய்யப்பட வேண்டும். இவையிரண்டுமிருந்தால் நாட்டின் வியாபாரம் கைத்தொழில், விவசாயமெல்லாம் விருத்தியடைந்து நாட்டில் அழகு தெய்வம் நர்த்தனஞ் செய்வாள். அப்பொழுதுதான் நாம் உண்மையோடு சுப்பிரமணியனை வழிப் பட்டவர்களாவோம்.

மஞ்ச நீராட்டம்.

சத்தியாக்கிரஹ மென்பது ஒரு வேடிக்கைப்போர். ஆளுவோர் அடிக்கும் அடிகளை ஆளப்படுவோர் பொறுமையுடன் சகித்துக் கொண்டு மஹத்தான சுதந்திரம் பெறவந்தன்றால் உண்மையிலேயே வேடிக்கைப் போரில்லையென்று எவர் சொல்லிவிட முடியும்? சத்தியாக்கிரஹத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் விநோதமாகவே யிருக்கின்றது. அதிலும் சென்னை மாகாண அதிகாரிகளின் மூளைகளிலே விசித்திர விசித்திரமான அடக்கு முறைகள் அடிக்கடி நுழைந்து கொள்ளுகின்றன. மற்ற மாகாணத்தவரைவிட இவ்வதிகாரிகள் அடக்கு முறைகளை தாராளம் தண்ணீர் பட்டபாடாய் உபயோகிப்பதில் பேர்போனவர்கள். போன சட்ட மறுப்பின்போது போலீஸ் கமிஷனர் கன்னிங்ஹாமைப்போல், இன்ஸ்பெக்டர் கற்றையைப்போல் அவ்வளவு கோரமான, கொடூரமான அடக்கு முறைகளை வேறெவன் கையாண்டான்? அதே போன்றே இப்போரிலும் சென்னையில் நடக்கும் அன்னியத் துணி மறியலை அடக்குவதில் அவ்வூர்ப் போலீசார் நூதனமானதொரு முறையைப் பிடித்திருக்கிறார்கள். தெருக்களிலிருக்கும் தண்ணீர்க் குழாய்களைத் திறந்து தொண்டர்களின்மீது பீச்சுகிறார்கள்; அதனுடன் வர்ணங்களையும் கலந்து வர்ணத் தண்ணீரடிக்கின்றனர். இது வென்ன முட்டாள்தனமான அடக்குமுறை? ஒரே அடியிலோ அல்லது ஒரே குண்டாலோ கொன்றுவிடுவதைவிட முகத்தில் தண்ணீரடிப்பது சித்திரவதையாகும். மூச்சுவிட முடியாமல் தொண்டர்கள் சித்திரவதைக்குள்ளாகிறார்கள்.

இன்னொன்று நகரத்தின் தண்ணீர்க் குழாய்களெல்லாம் நகர ஜனங்களின் சொத்து. அதை நகர ஜனங்களால் நியமிக்கப் பட்டிருக்கும் நகர சபையாரின் உத்தரவுப்படியே உபயோகிக்கலாம். போலீஸ்காரனானாலும் கவர்னரானாலும் சரி பொது ஜனங்களின் ஸ்தாபனமான நகரசபையின் அனுமதியின்றி நகரஜனங்களின் உபயோகத்திற்காக இருக்கும் ஜலத்தை அனாவசியமாக விருதாவில் செலவு செய்யலாகாது. போலீஸார் தொண்டர்களுடன் மஞ்சள் நீராடுகிறார்கள். சென்னை நகர சபையில் ஜனாப் பஷீர் அஹமது "யாரைக் கேட்டு இந்தப் போலீஸ் கமிஷனர் நகரத்தண்ணீரை உபயோகித்தான்?" என்று கேட்டது நியாயமான கேள்விதான். ஆனால் அத்தீர்மானம் தோற்றுப்போய்விட்டது. நகரசபை அங்கத்தினர் பேடிச் செயலைச் செய்துவிட்டார்கள்.

தெய்வ வழிபாட்டில் புனிதத்துவம் ஸ்புரித்திருக்க வேண்டும். கூச்சல் குழப்பங்களெதுவுமே கூடாது. தெய்வத்தினிடத்தில் நம்பிக்கையும் ஆராதனையுமுடைய எம்மதத்தாரானாலும் சரி இன்னொரு மதத்தாரின் தெய்வ வழிபாட்டில் தலையிடலாகாது. அவ்வாறு செய்தால் அம்மதத்தினரை மட்டுமல்ல ஏக கடவுளை—உலகத்தையெல்லாம் ஆளும் ஒரே ஆண்டவனை அவமதித்தவர் ஆவார்கள். மனித சமூகத்திலில்லாவிட்டாலும் ஆண்டவன் சந்நிதானத்தில் ஒரு நாள் நிச்சயமாய்க் கணக்குச் செல்லிடவே தீர வேண்டும். ஹிந்துக்களாயினும் இஸ்லாமியராயினும் கிறிஸ்தவர்களாயினும் ஒருவருள்ளொருவர் தாராள சிந்தையுடன் விட்டுக்கொடுத்து ஆண்டவனை ஆராதிப்பது மாத்திரமல்லாமல் நாமெல்லாம் ஆண்டவனின் புத்திரர்களென்பதையும் காட்டிக் கொள்ளுகிறோம்.

பலே! பரிபாலினி!

சில தினங்களாக நாம் பரிபாலினியின் போக்கை கவனித்ததுண்டு. பத்திரிகா வாசகர்களும் படித்திருப்பர். பழைய கொள்கைகளெல்லாம் முற்றும் மாறி புதிய வேகத்தில் அரசியலில் அறவைச் செலுத்தி ஆண்மைத் தலையங்கங்கள் வெளிவருவதை நாம் பாராட்டுகிறோம். சர்க்காரின் அவசர அவசரச் சட்டத்தை "தூ" வென்று திட்டி சுடச்சுட அக்கினித் துண்டங்கள் போன்ற அழல் மொழிகளைக் கக்குவதைப் போற்றாதிருக்கலாமா? பரிபாலினியின் "அடக்குமுறை" "முடியுமா? முடியாதா?" என்ற தலையங்கங்களைப் படித்தாரின் இரத்தஞ் சுண்டும்;—ஆவேசம் பொங்கும். பலே! பரிபாலினி! உனக்கோர்—உனது வீரத்துக்கோர் வாழ்த்து. வா; அரசியல் கடலில் நீந்துவோம். அபாயம் ஆபத்துகளையெல்லாம் சட்டை செய்யாமல் வெட்டியானானாலும் வேந்தனானாலும் தப்பச்செய்தால் சபையில் நிறுத்துவோம். உச்சிமீது வானிடிந்து வீழ்ந்தாலும் காலடியில் பூமி வெடித்தாலும், சூறைக்காற்றுகள் சுற்றிச்சுற்றி யடித்தாலும் கொள்கை—தர்மத்தை விலைக்கு விற்காமல் போராடுவோம்.

உலக சமாதானத்திற்கு : : ஸ்ரீ மாளவியா பிளேட்

இவ்வளப்பு வாய்ந்த பிரகிருதி உலகத்தை பகவான் சிருஷ்டித்தார். பூமியையும், பூமியிலுண்டான ஜீவ வர்க்கத்தையும் அவர் ஆசீர்வதித்து அவைகளுக்கு வேண்டிய எல்லாவற்றையும் அருளியிருக்கிறார். ஆனால் மனிதன் தனது அறியாமையால், அஹங்காரத்தால், ஆசையால் தனக்கும் தன்னைச் சார்ந்த ஜீவப்பிராணிகளுக்கும் சாச்வதமான கஷ்டத்தை வலிய வாத்துக்கொண்டான். மனிதனுக்கு மனிதன்—சமூகத்துக்கு சமூகம்—தேசத்துக்கு தேசம்—யுத்த காலங்களிலும், அதிகப் போட்டி காலங்களிலும், சரித்திரார்த்தமான ஊர்ஜிதம் பெற்ற எத்தனை இன்னல்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன. போரால் விளையும் பயங்கரமான தீமைகள் இவ்வளவவ்வளவென்பதைப் போன உலக மஹா யுத்தத்தில் பார்த்தாகிவிட்டது. அதனால் ஐரோப்பா பலத்த தாள முடியாத அடிபட்டாயிற்று—அதனால் தற்கால நவநாகரீகமென்பது வெறுந் தோல்வியெனக் கண்டுகொண்டோம். அந்த யுத்தத்தில் ஈடுபட்டிருந்த ஐரோப்பிய தேசங்களனைத்தும் ஒரே பக்ஷத்தைச் சேர்ந்தவை; பூரண ஆயுத பலம் படைத்தவை. எனினும் ஒன்றோடொன்று பொறாமை, துவேஷம், வெறுப்புக் கொண்டிருந்தன. கடல் ஆதிக்கத்திற்காகவும், ஆகாயத்தைக் கட்டியாளுவதற்காகவும், பரந்த நிலப்பரப்பை பிடிப்பதற்காகவும் போட்டி போட்டன. பொருளாதாரத்தில் ஜெர்மனிக்கும் அதன் எதிரிகளுக்கும் ஆபத்தேற்பட்டது. மனித அறிவின் நுணுக்கமான ஆராய்ச்சியால் சிருஷ்டிக்கப்பட்ட கொடுமையான கொலைக் கருவிகளை வாங்கி நிர்வகிக்க மாட்டாமல் உலகம் தத்தளிக்கின்றது. என்றாலும் சமீபத்தில் இன்னொரு புதியபோர் இடி முழக்கத்துடன் நடக்கப் போவதாக ஜோசியம் கூறப்படுகிறது.

மற்றேனைய மகாநாடுகளைப் போல் ஆயுதப் பரிஹாரண மகாநாடொன்றும் கூட விருக்கிறது. நல்லது. உலகத்தின் பல்வேறு நாட்டாரின் மனப்பான்மையில் ஹிம்ஸை பலாத்காரமெல்லாம் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்னும் மாற்ற மேற்பட்டிருக்கிறதா? காண அஞ்சவில்லை. அடி முட்டாள்தனமான அஸ்திவாரத்தின் மீது நிற்கும் தற்கால நாகரீகமே முற்றும் மாற்றப்பட வேண்டும். கடவுளைப் பற்றியும் மதத்தைப் பற்றியும் மனிதவர்க்கம் கொண்டுள்ள தப்பான எண்ணங்கள் சீர் திருத்தஞ் செய்யப்பட வேண்டும். ஒருவரோடொருவர் சண்டை செய்து கொள்ளும் போதும் தனக்குத்தானே வெற்றியைத் தரும்படி ஆண்டவனைப் பிரார்த்திப்பது எவ்வளவு துக்ககரமானது; எவ்வளவு வேடிக்கையானது. கடவுளின் புத்திரர்களை வெட்டி வீழ்த்திக்கொள்ளும் போதும் அவரிடமிருந்தே அருள்பெறமுடியுமென்றெண்ணுகிறார்களே எத்தனை அறியாமை. அவர்களது கொள்கையிலேயே அவர்கள் ஆண்டவனைப் பற்றித் தப்பான அபிப்பிராயம் கொண்டுள்ளார்களென்று காட்டிக் கொள்ளுகிறார்கள். ஒருவருக்குள்ளொருவர் வைத்துள்ள பாந்தத்துவமும் புலனாகிறது. மனிதவர்க்கத்தில் பெரும்பான்மையோர் கடவுளைப் பற்றி பேசுகிறார்கள். அவரது அனந்த நாமத்தைப் பாராயணஞ் செய்கிறார்கள். ஆண்டவன் ஒருவர் இருக்கிறாரென்று நம்புகிறார்கள் ஆனால் கொஞ்சபேருக்குத்தான் அவர் இருக்கிறாரென்பதில் ஜீவிதமான மனவுணர்ச்சியிருக்கிறது. அதைவிடக் கொஞ்சப்பேருக்குத்தான் அவரது இயற்கைக் குணத்தின் உண்மையான தத்துவம் தெரியும். மனித ஜாதியானது உன்னதமான நாகரீகத்தையடைய வேண்டுமானால் முழு உலகத்தாரும்—சர்வதேசத்தாரும் ஒன்று சேர்ந்து ஒருமித்த பலத்தோடு சகல வேதசாஸ்திரிகளின், சகல தத்துவ ஞானிகளின், சகல பிரகிருதி சாஸ்திரிகளின் அறிவைத் தூக்கி கடவுற்றத்துவத்தையும், மனிதனுக்கும் கடவுளுக்குமுள்ள சம்பந்தத்தையும் ஒவ்வொரு சாமான்ய ஆண்மகனும் பெண்மகளும் இலகுவில் அறியும்படி செய்து மனிதனை மதம் ஆளும்படி செய்ய வேண்டும். இதைச் செய்ய முடியுமெனவே நான் திடமாக நம்புகிறேன்.

(குறிப்பு) பண்டித மதன மோஹன மாளவியா கொலம்பியா கிராமபோன் ரிக்கார்டில் உலக சமாதானம் பற்றி ஆங்கிலத்தில் பேசியிருப்பதன் உண்மையான மொழிப்பைத் தந்திருக்கிறோம். பிளேட்டின் மறுபக்க மொழிபெயர்ப்பு அடுத்த இதழில் வெளிவரும். ப-ர்

"பதக்கத்தின் மறு பக்கத்தில்"

"பள்ளித்தலமனைத்தும் கோவில் செய்குவோம்" என்றார் கவிராஜ சுப்பிரமணிய பாரதியார். இல்லையில்லை அது சுதந்திர இந்தியாவில். அடிமை இந்தியாவிலோ? "பள்ளித்தலமனைத்தும் சிறை செய்குவோம்" என்கிறார் நமது சிம்லா தெய்வம் வில்லிங்டன் மகாப் பிரபு. ஒரு சின்ன திருஷ்டாந்தம். சியோனியிலுள்ள உயர்தர கல்லூரியைச் சிறையாக மாற்றி அதிலே நமது வீரவிளக்கு சுபாஷ் பாபுவைச் சிறை வைத்திருக்கிறார்கள். நாம் நமது சுதந்திர இந்தியாவில் சென்ற வருடம் நமது மாகாண மகாநாட்டை மதுரையில் நடத்தையில் சேதுபதி கல்லூரியை பிரதிநிதிகளின் ஜாகையாக்கி சுதந்திர வீரர்களின் கோயிலாக்கினோம். அக்கோயிலில் தங்கியிருந்த தெய்வங்களிலனேகம் இன்றைக்குச் சிறைச்சாலைகளிலே தவங்கிடக்கின்றன. நமது ராஜாஜி, சத்தியமூர்த்தி, சாமினாத சாஸ்திரி, அஞ்சலை, அம்புஜம், பத்மாவதி ஆஷர், உபயதுல்லா, மௌலானா, வைத்தியநாதர், முத்துசாமி, காமராஜ் முதலிய சிங்கங்களெல்லாம் கூட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கின்றனவல்லவா? அவர்கள் சிறைத்தல மனைத்தையும் பள்ளித்தலமாக்கிக் கொண்டிருப்பார்கள். சுயராஜ்ய இந்தியாவில் சிறைச்சாலைகளெல்லாம் ஆதியில் எந்த வொரு அழகான அர்த்தத்தில் சீர் திருத்தச் சாலைகள் என்ற கருத்தில் கட்டப்பட்டனவோ அதே அருத்தத்தில் கருத்தில் அமைக்கப்பட வேண்டுமல்லவா?

கொட்டிக் கொட்டி அளக்காமல் எடுத்துக் கொண்ட விஷயத்தைப் பேசுவோம் சர்க்காரின் அடக்குமுறை யென்பது ஒரு பதக்கம் (மெடல்). தங்கப்பதக்க மென்றோ வைரப் பதக்கமென்றோ எப்படி வேண்டுமானாலும் நீங்கள் செய்துகொள்ளுங்கள். ஒருதரம் சிறை சென்றவனுக்கு ஒரு பதக்கமும், இருமுறை, மும்முறை, பன்முறை சென்றவனுக்கு இரண்டு, மூன்று பல பதக்கங்களும் அளிக்கவேண்டும். சர்க்காரின் அடக்குமுறை எவ்வளவுக்கெவ்வளவு அதிகரிக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு சுதந்திர வீரர்கள் வெற்றியின் எல்லையை நெருங்குகிறார்கள். இதனால் நாம் அடக்கு முறைகளைக் கண்டிக்கக்கூடாது: பாராட்டுகிறோம். சர்க்கார் தரப்பில் இருப்புக் காத்தை எவ்வளவு உயரத்தில் ஓங்கினாலும் காங்கிரஸ் வாலாக்கள் அவ்வளவையும் சாத்விகமாய்ச் சகிப்பதில் எத்தனை உயிர்களைப் பலி கொடுக்கின்றோமோ, எத்தனை தடியடி, துப்பாக்கிச் சூடுகளெல்லாம் படுகின்றோமோ, எத்தனை பேர்களைச் சிறைக்கு அனுப்புகிறோமோ அத்தனை எண்ணிக்கையின் உயரில் சுதந்திரக் கோயிலைச் சமீபிக்கின்றோம். அடக்கு முறைப் பதக்கத்தின் மறு பக்கத்திலேதான் சுதந்திர வீரர்களின் வீரபட்டயம், விருது, பிரதாபங்களெல்லாம் அழ அழுந்தப் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

நீ உண்மை முஸ்லீமானால் எல்லைப்புறத்தைப் பார்!

அகில இந்திய முஸ்லீம் மகா நாட்டுக் கழகத்தின் நிர்வாக கமிட்டியார் சமீபத்தில் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்:-

முஸ்லீம் மகாநாட்டில் வரையறுக்கப்பட்ட எல்லாக் கோரிக்கைகளையும் கொடுக்க வட்ட மேஜை தவறிவிட்டது. நாட்டி லற்பட்டிருக்கும் தீவிரமான அரசியல் போராட்டத்தில் முஸ்லீம் பொதுஜனங்கள் பெருவாரியாகக் கலந்து கொள்ளும் தீவிர நோக்கமும் எழுச்சியுங் கொண்டிருக்கின்றனர். ஆதலால் அகில இந்திய முஸ்லீம் மகாநாட்டைக் கூடிய சீக்கிரம் கூட்டவேண்டுமென இக்காரிய கமிட்டி தீர்மானிக்கிறது.

எல்லைப் புறத்தில் அடக்கு முறை

வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் திடீரென கொடூரமான பல அவசரச் சட்டங்களைப் புகுத்தி கோரமான முறையில் அடக்கு முறைகளைக் கையாளுவதால் சர்க்காருடன் ஒத்துழைப்பதை எவ்வகையிலும் மறுப்பதைத்தவிர எல்லைப்புறத்து ஜனங்கள் வேறு செய்வதற்கில்லை. அவர்களின் துரதிருஷ்டம் வாய்ந்த நிர்பந்திய நிலைமையில் சகல உதவிகளுமளிப்பது ஒவ்வொரு முஸ்லீமின் பாற்பட்ட கடமையாகுமென்பதை யுணர்கிறது. அங்கு நாம் செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றி நேர்முகமாக நமக்குச் சொல்லுவதற்கு யாரும் அங்கிருந்து கிடைக்காததாலும் அங்கு நடப்பவை யின்னது தானெனத் திட்டமாய்த் தெரியாததாலும் மௌலானா ஷாபி டாடி, மௌலானா மஜ்ஹருடீன் ஆகிய இருவரையும் எல்லைப்புறத்தாருடன் தொடர்பு கொண்டு அவ்வப்போது விஷயங்

செட்டியார்களும் கதரும்.

(திரு. சரவண பெருமாள்)

கலையிலும் கைத் தொழிலிலும் கண்ணுங் கெட்டாத பண்டைக் காலந் தொட்டே வேறெந் நாட்டுடனும் சரி நிகர் சமானமில்லாது தனிப் புகழுடன் திகழ்ந்த பாரதப் பொன்னுலக நாட்டில் இற்றைக்கு 150 ஆண்டுகள் முன்னர் நுழைந்தோர் வியாபார வர்க்கத்தார் வியாபார நோக்குடன் நம் கைத்தொழில் அழித்து இந்தியாவையும் இந்தியரையும் அடிமைப் படுகுழியில் ஆழ்த்தி விட்டனர். ஆளுவோரின் நன்மைக்காக ஆளப்படுவோர் கசக்கிப் பிழியப்படுவது தாளாது சுயாட்சிக் கிளர்ச்சி தோன்றிற்று, காங்கிரஸ் மகாசபை பிறந்து கடந்த 46 ஆண்டுகளாக தாதாபாய் நௌரோஜி, திலகர், சித்தரஞ்சனர் போன்ற தியாக மூர்த்திகளின் தலைமையில் எவ்வளவோ கிளர்ச்சி செய்து வந்தது. என்றாலும் மகாத்மா காந்தியின் கையில் காங்கிரஸ் வந்த பின்னரே சுயராஜ்யத்தின் உருப்பெறுகிறது. நாட்டின் ஜீவாதாரமான பொருளாதார அஸ்திவாரத்தின் மீது காந்திஜீ காங்கிரஸையும் சுயராஜ்யத்தையும் நிர்மாணிக்கின்றார். சர்க்காவின் சக்கரச் சுழற்சியிலே—ராட்டையின் கதர் நூலிலேதான் சுதந்திரம் பெற முடியுமெனக் கண்டார். ஏனெனில் வியாபார வர்க்க ஆட்சியை வியாபார சூழ்ச்சியாலேயே வெல்ல முடியுமென்பதை வியாபார ஜாதியிலே பிறந்த காந்திஜீயாலேதான் காணமுடிந்தது. கதர் தத்துவத்தை நாட்டுக்கு உபதேசித்தார். அன்று முதல் நாடு கிளர்ச்சி கொண்டு சுதந்திர தாகமுற்று விடுதலைப் போராடி வருவது கண்கூடு. இந்தியனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் அவன் எங்கிருந்தபோதிலும் கதர் தத்துவத்தைக் கைக்கொள்ளுவது அவசியம்.

இங்கு வியாபாரத் துறைபற்றியோ அல்லது வயிற்றுப் பிழைப்பு நாடியோ வேறு எந்தப் பிரவிர்த்தியில் ஈடுபட்டோ யிருக்கும் நாமும் கதரணிவதே ஒவ்வுமென்பது தேற்றம். கதராடையே கட்டுவமெனப் பிரதிஞ்ஞை யெடுத்துக் கொள்ளவேண்டும். அத்துடன் கூடுமானவரை சுதேசப் பொருள்களையும் உபயோகித்தல் வேண்டுமென ஒவ்வொரு இந்தியனையும் எவ்வித ஜாதிமத பாகுபாடின்றி பொதுவாக வேண்டுகிறோம். சிறப்பாக எமதன்பார்ந்த தனவைசியர்களுக்கும் ஒரு வார்த்தை. நாம் கேள்விப்படுவது உண்மையானால் அம்மாபெரும் சமூகத்தவர்களிற் சிலர் சீட்டாடிப் பொழுதையும் பொருளையும் விரயஞ்செய்கின்றனர்; காங்கிரஸையும் கதரையும் வெறுக்கின்றனர். அது கூடவே கூடாது. அவர்களின் சங்கத் தீர்மானத்திற்கு அவர்கள் கட்டுப்பட்டு நடப்பது உண்மையானால்—அவர்களின் சங்கத்தை அவர்கள் கௌரவிக்கின்றார்களென்றால்—அவர்களது சங்கம் நடத்தும் வழியில் அவர்கள் நடந்து வருவது வாஸ்தவமானால் "சங்கத்தில் கதர்கட்டுவ" மென்று நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானத்தைப் பின்பற்றி நடக்கக் கேட்டுக் கொள்ளுகிறோம். இங்கிருக்கும் ஒவ்வொரு தனவைசிய மக்களும் கதரணிவதுடன் தங்களது சிப்பந்திகளுக்கும் கதரே வாங்கிக் கொடுக்கும்படி வினயமாய் வேண்டுகிறோம்.

களை அறிவிக்கும்படியும் கூடிய சீக்கிரம் காமெத்தைக் கொள்ள வேண்டிய திட்டத்தைத் தயாரிக்கும் படியும் இக்கமிட்டி கேட்டுக் கொள்ளுகிறது.

இதனிடையில் இந்திய முஸ்லீம்களின் மீது விழுந்திருக்கும் விலக்கமுடியாத இப்பொறுப்பை யுணர்ந்து ஒவ்வொரு தனி முஸ்லீமும் உண்மை இஸ்லாத்தின் தாதுப்பொருளுக்கேற்றவாறு தனது சர்வஸ்வத்தையும் தியாகஞ் செய்ய முன்வர வேண்டுமென விரும்புகிறோம். இக் கருத்தை மனத்திருத்தி நம் உண்மையான முஸ்லீம் வாழ்க்கை வழிச்சென்று நாட்டிலேற்பட்டிருக்கும் போராட்டத்தை வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டு வரலாம் என்பதையும் அறிவிக்கிறோம்.

திருப்புகழுக்கு மறுப்புகழ்.

"அவன் கிடக்கிறான் குடிகாரப்பயல் நீயொரு மொந்தை குடித்துக்கொள்" என்று ஆமதாபாத்திலே கள்ளுக்கடை மறியலுக்கு விரோதமான எதிர் பிரசாரம் செய்யப்படுகிறது. நல்ல உபசாரந்தான். ஆனால் வெள்ளை நண்பர் "வெள்ளைக் குதிரை" யாரும் அவசரச் சட்டத்தால் தண்டிக்கப்படலாமென்று நாம் பயப்படுகிறோம். ஏனெனில் குடிக்கக்கூடாதென்று மரியாதையாய் சமாதானமாய்ச் சொல்லுவதைப்போன்று "குடி"யென்று மிகமிக மரியாதையாய் சர்வ சாதாரணமாய்ச் சொல்லுவதும் சட்ட விரோதமேயாகும்.

எல்லாம் உல்டா பல்டா.

சர்க்காரின் வியாபார மெல்லாம் உல்டா பல்டா வாகவே யிருக்கிறது. உலகமே தலைகீழாக நடக்கையில் சர்க்காரும் தலைகீழாகத்தான் நடக்கின்றது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துவதற்காகச் செய்யப்பட்டிருக்கும் சட்டங்களில் சட்டமுமொழுங்குமில்லை. 1818-ம் வருஷத்து 3வது அவசரச் சட்டப்படி ஸ்ரீஜத் சென்குப்தாவைக் கைது செய்திருக்கிறார்கள். சட்ட மறுப்புக்கும் சென்குப்தாவைக் கைது செய்ததற்கும் துளிகூட சம்மந்தங் கிடையாது. காந்தி—இர்வின் ஒப்பந்த காலத்தில், காங்கிரஸும் சர்க்காரும் சமாதானமாயிருந்த சமயத்தில் சென்குப்தா சீமைக்குப் போனார். சமாதானங் குலைந்து ஒப்பந்தம் உடைந்து—காங்கிரஸும் சர்க்காரும் சண்டை செய்கையில் இந்தியாவுக்கு வந்தார். இந்திய மண்ணில் காலடி வைப்பதற்கு முன்னால் அவரைக் கைது செய்ததற்குக் காரண மென்ன? சர்க்காரின் சட்டங்களை மறுத்தாரா? சட்ட மறுப்பை ஆதரித்துப் பேசினாரா? எழுதினாரா? அப்படியொன்றும் அவர் செய்யவேயில்லை. ஆனால் செய்வாரென்று ஜோசியங் கண்டு கைது செய்திருந்தால் சர்க்கார் தப்பே செய்து விட்டனர். தப்பில்லை யென்று சொல்லுவார்களானால் அவர்களது சாமர்த்தியத்தை நாம் பாராட்டுவதுடன் இனிமேல் இந்தியாவில் ஏன்? பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலேயே கொள்ளை, கொலை முதலிய தொழிலுமே நடக்காமல் இம்மாதிரி யேற்கனவே ஜோசியம் பார்த்து தடுத்துவிடுவார்களென்று நம்பவும் இடமுண்டு. ஆனால் சர்க்காருக்கு அரசியலில் மாத்திரந்தான் ஜோசியஞ் சொல்லத் தெரியும். ஏனெனில் எப்படியும் சுதந்திரக் கிளர்ச்சியை நசுக்கிவிட வேண்டுமென்று கனவு கண்டுகொண்டிருக்கின்றன ரல்லவா?

இன்னொன்றும் இங்கே குறிப்பிடவேண்டும். சென்குப்தா இத்தாலியக் கப்பலிலிருக்கும்போது கைது செய்யப்பட்டார்; இத்தாலியக் கொடியின் கீழ் அடைக்கலப் பொருளாயிருக்கையில் பிரிட்டிஷ் சர்க்காரால் சிறைசெய்யப்பட்டார். இத்தாலியா சுதந்திரநாடு. சுதந்திர வீரன் மூஸோலினி இத்தாலியாவின் சர்வாதிகாரி. சுதந்திரக் கொடியின்கீழ் நின்ற—சர்வாதிகாரி மூஸோலினியின் அடைக்கலவஸ்துவாயிருந்த

ஐயோ லங்காஷயரே!

அன்றைக்கு வட்டமேஜையை வைத்து முடினார்களே அப்போது காந்திஜிக்கு முன்னால் ஒப்பாரி வைத்து ஓலமிட்டலறினாளே லங்காஷயரம்மாள் அவள்பாடு—இப்போது—இச்சட்ட மறுப்பு ஆரம்பித்ததன் பின்னால் பேராபத்தாய் முடிந்துவிட்டது. இந்தியாவிலும் இதர இடங்களிலும் அவளுடைய சரக்குகள் விலைப்போகவில்லை. இந்தியச் சந்தையின் தலைவாசலான பம்பாயில் வர்த்தகர்களெல்லாம் வாரக்கணக்கில் மாதக்கணக்கில் கடைகளை மூடிவிட்டதால பஞ்சுத் தரகர்களனைவரும் சட்ட மறுப்பை யாதரிப்பதால் இன்னும் அதிகப்படியான ஆபத்துச் சூழ்ந்திருக்கிறது. அங்குள்ள பஞ்சு வியாபாரிகள் சங்கத்தின் காரியக் கமிட்டியார் ஒருகோடி ராட்டினங்களையும் பத்து லக்ஷம் தறிகளையும் எடுத்து விடுவதெனத் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகாயக் கப்பல்களையழித்து க்ஷவரக்கத்தி செய்தது போல இத்தறிகளின் ராட்டைகளின் இரும்பை க்ஷவரக் கத்திகளாகச் செய்வார்களோ? என்னவோ? யாரறிவார்! இருந்தாலும் ஜப்பான் போட்டி போட்டுவிடாமல க்ஷவரஞ்செய்து மொட்டையடிப்பதற்காக நிச்சயமாய் கத்திகள் வேண்டவே வேண்டும். சுதேசிமானிகளும் சிறிது கவனஞ் செலுத்த வேண்டும். இல்லாவிட்டால் இந்தியாவையும் மொட்டையடித்து விடுவாள்.

சென்குப்தாவை பிரிட்டிஷ் போலீஸாரிடம் ஒப்படைக்க மறுத்த கப்பற்றலைவன் சரியே செய்தான்; இயற்கைச் சட்டத்தையும் நாட்டு ராஜநீதியையுமே தழுவினான். ஆனால் பம்பாயிலிருந்த இத்தாலிய ஸ்தானிகன் வழுவே செய்தான்; இந்தவொரு சாமான்ய ராஜ நீதியையும் மறந்துவிட்டான். ஆனால் ஐரோப்பாவின் விடுதலை விளக்காகப் பிரகாசிக்கும் முஸோலினிக்கு இந்த அடைக்கலங் காக்கத் தவறிய ஸ்தானிகன் கணக்குக் கூறியே யாகவேண்டும். முன்னொரு முறை பிரெஞ்சு சர்க்கார் பிரிட்டிஷ் சர்க்காரின்மீது சர்வதேச சங்கத்தில் குற்றஞ்சாட்டியதேபோல் இத்தாலியாவால் பிரித்தானியா குற்றஞ் சாட்டப்படலாமே. அரசியல்வாதிகளை இன்னொரு கொடியின்கீழ்க் கைதுசெய்வது அக்கொடியையே அவமதித்ததாகும்.

மகாத்மா காந்தி : :

ஸ்ரீ அலெக்ஸாண்டர்
பாலிடி.

மகாத்மா வந்தார்; வழக்கைச் சொன்னார்; போய்விட்டார். இந்திய வட்டமேஜையில் அவரோடு பழகிய பிரிட்டிஷ் மந்திரிகளெல்லாம் மனந்திரும்பாமல் அப்படியேதானிருக்கின்றனர்.

இந்தக் கதர் மாந்திரீகன், வெறும் செருப்பணிந்த சித்புருஷன், இங்கேன் வந்தான்? என் வெறுங் கையுடன் திரும்பப்பட்டான்? இந்தக் கேள்விகள்தான் இப்பொழுது லண்டனில் எங்கு பார்த்தாலும் கேட்கப்படுகின்றன. அரசியலில் கருத்துச் செலுத்துவோரெல்லாம் காந்திஜியை ஒரு ஞானியென்றோ அல்லது வேஷதாரியென்றோ சொல்லுகிறார்கள். ஆனால் அவர் இரண்டுமில்லை. அவர் ஒரு வைதீக அரசியல் வாதி. லௌகிகமான ஒவ்வொரு பிரச்னையையும் தமது கொள்கைக்கேற்ற தருமரீதியில்—சத்திய மார்க்கத்தில் தீர்த்து வைக்கின்றார்.

லண்டன் நைட்ஸ் பிரிட்ஜில் காந்திஜி இருந்தபோது ஒருவர் "காந்திஜி! தாங்கள் சத்திய உலகத்திலிருக்க வேண்டியவராயிற்றே என் இந்தச் சிக்கலான அரசியல் சுழற்சியில—சூறைக்காற்றில் அலைக்கழிக்கப் படுகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு காந்திஜி கொஞ்சங் கூட தாமதிக்காமல் "இல்லை. சிக்கலான அரசியல் சுழற்சியென்று நீங்கள் கூறும் சூறைக் காற்றினூடேதான் சத்தியம் ஸ்புரித்து நிற்கக் காணுகிறேன். அவை யிரண்டையும் ஒன்றிலிருந்தொன்றை பிரிக்க முடியவில்லை" என்றார்.

அரசியலுடன் பாரமார்த்திகமான சத்தியத்தைப் புகுத்தியகாலேதான் காந்திஜி இந்தியாவிலும், அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் இவ்வளவு செல்வாக்கும் ஆதிக்கமும் அடைந்திருக்கிறார் காந்திஜியைக் காணுறும் ஒவ்வொருவரும் அவரை அறிவுக் கெட்டாத ஆத்ம ஞானியா? அல்லது அரசியல் வாதியா? என்று நிர்ணயிக்க முடியவில்லை.

இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களெல்லாம் காந்திஜியை காங்கிரஸ் தோன்றிய 46 வருஷங்களிடையில் தலைமை வகித்த எவரோடும் ஒப்பிட முடியாத ஒரு மகாத்மாவாகக் கொள்ளுகிறார்கள். காங்கிரஸில் பற்றுதலுடைய சாதாரண ஜனங்களும் மகாத்மா வென்றே யழைக்கிறார்கள். ஒரு மகத்தான காரியத்தை அடைவதற்காக காந்திஜி மதத்தையும் அரசியலையும் ஒன்றாய்ப் பிணைத்து சத்தியாக்கிரஹம் என்ற ஒரு புதிய மதத்தை ஸ்ருஷ்டித்திருக்கிறார்.

காந்தியைப் பின்பற்றும் அநேகருக்கு அரசியலைப்பற்றி ஒன்றுமே தெரியாது. சாதாரண ஜனங்களெல்லாம் அவரை—அவரின் தத்துவத்தை அறிந்தோ அறியாமலோ அவரின் கட்டளைகளுக்குக் கீழ்படிகிறார்கள். சாதாரண ஜனங்கள் காந்திஜியை யறிந்த பின்னுல்தான் தலைவர்கள் காந்தியை யறியலாயினர்; தலைவராக ஒப்புக்கொண்டார்கள்.

"காங்கிரஸின் மூவர்ணக் கொடியின் கீழ் காந்திஜி ஒரு பெரிய சைன்யத்தைக் கூட நடத்துவார்" என்று பழுத்த மிதவாதியான சர் சாப்ரு கூறுகிறார். இந்தியாவில் இராஜப் பிரதிநிதியாயிருந்த இர்வின் பிரபு "காந்திஜிதான் இந்தியாவின் உண்மையான தலைவர்; காங்கிரஸின் உயிர். டில்லி ஒப்பந்தத்தை நான் பண்டித ஜவஹர்லால் நேருவுடனல்ல காந்திஜியுடன்தான் முடித்தேன்; அவர் சரியென்றால் இந்தியாவே சரி சொன்ன மாதிரி" என்கிறார்.

மகாத்மாவை எவனும் மகாத்மா வில்லையென்று மறுக்க முடியாது. அவர் ஒரு மகாத்மாதான்; அவர் ஒரு அரசியல் ஞானிதான்; அவர் ஒரு தத்துவ ரிஷிதான்; அவர் ஒரு நூல் நூற்பவர்தான். தனித்தனியாகப் பார்த்தாலும்சரி அல்லது ஒரே மொத்தமாகப் பார்த்தாலும்சரி காந்திஜி எல்லாமாய்—ஏகப்பொருளாய் விளங்குகிறார். வேதத்தையும் தேசத்தையும் ஒன்று சேர்த்த வேடிக்கை வஸ்துவாய்த் திகழ்கிறார். —பார்க்ஷையர் ஹெரால்டு.

தேசோபகாரி

வருஷம் 1-க்கு	....	ரூ.	3	0	0
ஆறு மாதம்	....	ரூ.	1	8	0
வெளியூருக்கு வருட சந்தா		ரூ.	4	8	Ư

Printed & Published By A V Sellam Pillay at the Desopakari Press, 210,36th Street Rangoon

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 52 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. **DESOPAKARI** புதன், ஞாயிறு வெள்ளி வெளியீடு

210-36-வது இரங்கோன், (24—1—32) தை மீ 11உ ஞாயிற்றுக்கிழமை

மாப்பிள்ளை யில்லாத கலியாணமா?

நாட்டு மாந்த ரெல்லாம்—தம் போல்
நரர்க ளென்று கருதார்
ஆட்டு மந்தை யா மென்—றுலகை
அரச ரெண்ணி விட்டார்
காட்டு முண்மை நூல்கள்—பல தாங்
காட்டினார்க ளேனும்
நாட்டு ராஜ நீதி—மனிதர்
நன்கு செய்ய வில்லை.

ஃ ஃ ஃ

ஊரை யாளுமுறைமை—உலகில்
ஓர் புறத்து மில்லை

—கவியரசன்

இந்தியா சமாதானமா யிருந்தது. காந்திஜீ வட்ட மேஜைக்குச் சென்றிருந்தார். வடக்கே இரண்டிடங்களில் மாத்திரம் ஏதோ அமைதிக் குறைவு ஏற்பட்டிருந்தது. ஒன்று இரத்தவெறி பிடித்தவர்கள் செய்த குழப்பம். மற்றொன்று வறுமையால் பீடிக்கப்பட்ட விவசாயிகளின் வரி மறுப்புக்கிளர்ச்சி. இரத்த வேட்கையாளரின் பிறிச் செயலுக்கு முழு இந்தியாவோ இந்தியாவின் சர்வ பிரதிநிதித்துவம் பெற்ற காங்கிரஸோ ஜவாப்தாரியில்லை. ஆனால் சர்க்கார் தாப்பில் தப்பாகக் கருதிவிட்டார்கள் எது வேண்டுமென்று விரும்பினார்களோ, விரும்புகிறார்களோ அது கிடைக்காதவழியில் இறங்கிவிட்டனர். வரி மறுப்பு காங்கிரஸின் திட்டமானாலும் ஐக்கிய மண்டலத்தில் அது ஆரம்பிக்கப் படுவதற்குத் தக்க காரணங்கள் இருக்கவே செய்தன. விளைபொருள்களின் விலைவாசிக் கேற்ற கணக்கிலேவரியை யுயர்த்தப் பட்டது. விலைவாசி குறைந்தால் வரியும் குறைக்கப்பட வேண்டுவது நியாயமில்லையென எவர் கூறமுடியும்? காந்தி—இர்வின் ஒப்பந்தத்திற்கு பங்க மேற்படாத முறையில் ஐக்கிய மண்டலத்தார் வரியைக் குறைக்கவேண்டுமென்று கேட்டதில தப்பொன்றுமில்லை. ஆனால் ஆளப்படுவோருக் கென்றில்லாத அரசாங்கம் ஐக்கிய மண்டில விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளைக்காலடியிலிட்டுத்தவைத்துவிட்டது. என்றாலும் ஜனங்கள் காந்திஜீயின் வரவுக்காகக் காத்திருக்கவே செய்தனர். சர்க்கார் ஆத்திரப்பட்டு விட்டது. ஆய்ந்தோய்ந்து பார்க்கவில்லை. ஆரம்பத்திலேயே கிளர்ச்சியைக் கிள்ளியெறிந்து விடவேண்டுமென்றெண்ணிற்று. அடக்கு முறையில் இறங்கலாகியது. இதனால் அடக்கு முறைக்குப் பின்னரே சட்ட மறுப்பு ஆரம்பிக்கப்பட்டதெனவும் காணக்கிடக்கின்றதல்லவா?

காந்திஜீ வட்டமேஜை நடவடிக்கைகளில் முழுதும் கலந்து முடித்து விடுவதென்றிருந்தார். பல தலைவர்கள் கைதி செய்யப்பட்ட பின்னும்கூட காந்திஜீ வைஸ்ராயைக் கண்டு பேசியேதாவதொரு விதமான சமாதானத்துக்கு வருவதென்ற கருத்துக்கொண்டேயிருந்தார். ஆனால் அடக்குமுறையின் ஆவேசத்தினால் ஆட்டி அலைக்கப்பட்டிருந்த ஆகாச வைஸ்ராய் பேட்டி மறுத்துவிட்டார்; காந்திஜீயையும் காங்கிரஸ் தலைவரையும், நாட்டுத் தலைவர்களையும் சிறைப்படுத்தலாயினர்; சிறைப்படுத்திக் கொண்டிருக்கிறார். அடிதடி அட்டகாசங்களெல்லாம் செய்கிறார்.

இதனிடையில் வட்டமேஜைக் கமிட்டிகள் இந்தியாவுக்கு வந்துகொண்டிருக்கின்றன. நாட்டில சட்டமும் ஒழுங்கும், சமாதானமும் நிலவ வேண்டுமென வில்லிங்டன் கனவுகாணுகின்றார். நாட்டிற்குச் சீர்திருத்தங்கள் வழங்குவதற்காக நாட்டைத் தயார்ப்படுத்த வேண்டுமென சர்க்கார் மனப்பால் குடிக்கின்றது. இந்தியாவின் ஜீவநாடிகளை - சுதந்திர ஆத்மாக்களை சிறை கம்பிகளுக்கு பூட்டிவிடுவதால் இந்தியாவில் சமாதானத்தை நிறுத்திவிடலாமென்று நினைப்பது எவ்வளவு அவசரப்பட்ட நினைப்பு?

சுதந்திரக் கிளர்ச்சியைத் தூண்டிவிட்டுத் தானா சமாதானஞ் செய்வது? நாட்டிலெங்கும் சுதந்திர நெருப்பு ஜ்வாலை விட்டெறிகையில் எத்தனை கடுமையான—கொடூரமான அடக்கு முறையாலும் அதை அவிக்க முடியாது என்று கண்டபின்னாலன்றி சமாதானம் காணுவது துர்லபம்; இல்லவேயில்லை. வட்ட மேஜைக் கமிட்டிகள் வலசாரி இடசாரியாக இந்தியாவில் வட்டமிடுவதுங்கூட சுதந்திராக்கினியில் எண்ணெய்விட்டு வளர்ப்பதாகவே முடியுமல்லால் வில்லிங்டன் எதிர்பார்க்கும் சமாதானத்தை படைத்துவிட முடியாது?

மேலும் சர்க்கார் தரப்பில் முன்னேற்பாட்டுடன் எவ்வளவு முன்திடுக்கை எடுத்துக்கொண்டாலும் எவ்வளவுதான் அடக்கு முறையைக் கைக்கொண்டாலும் நாட்டில் மூண்டிருக்கும் சுதந்திரக் கிளர்ச்சியை அடக்கிவிட முடியாது. பின்னர் நாட்டில் சமாதானம் நிலைக்கச் செய்வதெங்கே?

தவறு செய்வது சகஜம்; மனிதஸ்வபாவம். அதை எவரும் குறைகூறுவதற்கில்லை, ஆனால் தான்தான் செய்வதை யுணர்ந்து திருத்திக்கொள்ளும் போதுதான் குற்றவாளிகூட ஒரு பெரிய காரியத்தைச் செய்தவன்போல் போற்றப்படுகிறான். அப்பொழுதுதான் அவன் பிராயச்சித்தமடைகிறான். மனித விதிப்படி அரசாங்கத்தின் சட்டமுறையையால் அரசாங்கமும் தவறு செய்யலாம். ஆனால் தப்பை யுணர்ந்து பிராயச்சித்தம் பெறவேண்டும். பிரஜைகளிடத்தில் மன்னிப்பு வாங்கிக் கொள்ள வேண்டும். சர்க்கார் செய்த தவறுகள் கொஞ்சநஞ்சமல்ல. அடக்கு முறையின் கொடுமையெல்லாவற்றை அவர்கள் பார்ப்பார். பிரயோஜனமில்லை, தான் செய்தது, செய்வது தவறு என்று கண்டவுடன் காந்திஜியுடன் சமாதானஞ் செய்துகொண்டு ஜனங்களின் கோரிக்கைகளுக்கு விட்டுக்கொடுத்தார். பிராயச்சித்தம் வேண்டியவுடன் நாம் அவர் செய்த தவறுகளை மறந்து மன்னித்தோம். இதனால் சர்க்காருடையவோ அல்லது இர்வினுடையவோ அந்தஸ்து குறைந்து விடவில்லை. அதே மாதிரி வில்லிங்டன் பிரபுவும் செய்ய முன்வரவேண்டும். காந்திஜியையும் காங்கிரஸ தலைவர்களையும் தொண்டர்களையும்கூட விடுதலைசெய்து வட்டமேஜைக் கமிட்டிகளில் காங்கிரஸுக்கும் இடமளித்தாலன்றி நாட்டில் அமைதி ஏற்படப்போகிறதில்லை; வட்ட மேஜைக் கமிட்டிகளும் சரிவரத் தங்கள் வேலைகளைச் செய்துவிட முடியாது. ஏரோப்ளேன் கவ்ராய் வெறுமனே ஆகாயத்தில் பறப்பதால் காரியமாகாது. தயவுசெய்து பிரஜைகளைச் சமாதானக்கண்கொண்டு பார்த்துத் தக்கன செய்யட்டும்.

இந்தியாவே சட்ட விரோத மானதா?

இந்தியாவில் வெளிப்பட்டிருக்கும் அரசியல் சூறாவளியில்—அடக்கு முறைச் சுழற்சியில் எத்தனையோ எண்ணற்ற சங்கங்களும் சபைகளும் சட்ட விரோதமானவையெனக் கலைக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் பெரும்பான்மையானவை காங்கிரஸ் ஸ்தாபனங்களென்பது வாஸ்தவந்தான், மற்றவைகளும் தேசீய சபைகளல்லவென மறக்கமுடியாது, இருந்தாலும் தேக பயிற்சி சாலைகளும், நூற்றல நெய்தல் கழகங்களும், சமுதாய, சமூக, சமதர்ம சங்கங்களும், இலக்கிய சபைகளும், அறிவு வளர்ச்சிக்கான சங்கங்களும், இந்து—முஸ்லீம் இலக்கணச் சங்கங்களும் வாசகசாலைகள், ஞாபகார்த்த சபைகளெல்லாம் சட்ட விரோதமானவையென்பது எந்தச் சட்டத்தின் கீழ்அகப்படுகிறதோ தெரியவில்லை. காங்கிரஸ் சம்பந்தம் துளிகூடக் கிடையாத இளைஞர் இயக்கங்களெல்லாம் சட்ட விரோதமானவையென்பது இந்திய இளைஞர்களனைவருமே சட்ட விரோதிகளென்பதைக் குறிக்கின்றது. மேலும் இந்தியாவிலுள்ள எல்லா சங்கங்களும் சட்ட விரோதமானவையென்பதால் 144-வது சட்டப்படி நாலு பேருக்குமேல் கூடப்படாது என்பதன் அக்ஷரார்த்தப்படி நாலு பேருக்கு மேலுள்ள ஒவ்வொரு குடும்பமும் சட்ட விரோதமானதே—இந்தியாவே சட்ட விரோத மானதே.

கழுதைக்குள்ள மதிப்புக் கூட?

இந்தியா வட்டமேஜை சமஷ்டி சிறுபான்மைக் கமிட்டிகளின் யாதாஸ்துகளடங்கிய நீல நூலைப்பற்றி ராய்ட்டர் கூறும் மதிப்புரை. வியாக்கியானம் வெகு வெகு அழகாயிருக்கிறது. "600 பக்கங்கள், 13 அங்குல நீளம், 8 அங்குல அகலம், ஒரு அங்குலத்துக்கு மேற்கொண்ட கனம். கிறிஸ்து புராணத் (விவிலிய வேதத்திலிருப்பதற்கு மேற்பட்ட வார்த்தைகள்" என்று வர்ணிக்கப்படுகிறது. இதைப்படித்தவுடனே நமக்குப் பள்ளிக்கூடத்தில் படித்த கழுதையின் பாடம் ஞாபகத்துக்கு வருகிறது. "கழுதை ஒரு மிருகம், நாலு கால், இரண்டு நீண்ட காதுகள், முழு நீளமுள்ள முகம், வண்ணான் பொதி சுமப்பதற்கேற்ற முதுகு" என்ற வியாக்கியானத்தையும் படித்து ராய்ட்டரின் நீல நூல் வியாக்கியானத்தையும் படித்த பின்னும் நமது மதிப்பில் கழுதை தான் சிரேஷ்டமானதென்று தோன்றுகிறது. விவிலிய வேதத்தை விட அதிகம் வார்த்தைகளடங்கியிருக்கிற நீல நூலுக்குக் கழுதைக்குக் கொடுக்கும் மதிப்பைக் கூட கொடுக்கவில்லையென்று சரியாகவோ தப்பாகவோ கருதிவிடக்கூடாது. அதிகம் வார்த்தைகளடங்கியிருப்பதால் நீல நூல் விவிலிய வேதத்தை விட அதிக ஆதிக்யம் அடைந்து விடுமா? எது எப்படியானாலும் ஒரே ஒரு விஷயத்தை ராய்ட்டர் மறந்து விட்டார். அப்புத்தகத்திற்கு இன்னும் முற்றுப் போடவில்லை. ஒவ்வொரு நூலின் முடிவிலும் முற்றிற்று என்று எழுதும் சம்பிரதாயப்படி இப் புத்தகத்திற்கும் எழுதப்படவேண்டுமல்லவா? அதைத்தான் இப்பொழுது இந்தியா எழுதி வருகிறது. இச் சட்ட மறுப்புப் போர் முடிந்தால் நீல புத்தகமும் முடிவடைந்து விடும்.

யாது. சாத்விகம் சத்தியத்தைப் பின்பற்றுகிறது. பலாத்காரம் அசத்தியத்தை யடைகிறது. நசுக்கப்பட்டிருக்கும் உலகத்திற்கு சமாதானம்—விமோசனம் வேண்டுமானால் சத்தியம் அஹிம்சைத் தத்துவத்தாலன்றி வெறும் உதட்டுறவால் ஆகாது. இராஜதந்திரிகளும் பிரசாரகர்களும் பிரயோஜனப் படமாட்டார்கள். அன்பால் மாத்திரந்தான் சமாதானம் காணலாம்.

—அமிர்தபஜார்.

வாக்கு வாதம்.?

அகில பர்மா மாணவர் கழக வாக்குவாத விளம்பரப் பத்திரம் கிடைக்கப் பெற்றோம். அதை விநியோகிப்பதிலும் அக்கழக கௌரவ பொதுக் காரியதரிசி ஜனாப் எம். ஈ. முகம்மது மதினு சிரத்தை காட்டி வருவதைப் பாராட்டுகிறோம். தர்வான் வேலையையும் ஒரு கௌரவ காரியதரிசிமேற் கொண்டு செய்வதை எவராவது போற்றாது விடலாமா?

"இந்தியாவின் தற்கால நிலைமைக்குக் கல்வியை விட கைத்தொழிலே சிறந்தது" என்னும் விஷயம் பற்றி ஆதரித்தும், எதிர்த்தும் அறுவர் பேசுவார்களாம். இத்தகைய வாக்குவாதங்களால் மாணவர்கள் நற்பயனெய்த முடியுமென்பதை எவரும் மறுக்க முடியாது. அறிவு, விஷய ஆராய்ச்சி, பாஷை முதலியவைகளெல்லாம் வளர்ச்சி பெறுமென்பது வாஸ்தவமே. ஆனால் இப்பொழுது விவாதிப்பதற்கு எடுத்துக் கொண்ட விஷயம் அக்ஷரார்த்தமாகப் பார்த்தால் தர்க்கபூர்வமாக விவாதிப்பதற்கேற்ற விஷயமாகவே கொள்ளுவதற்கில்லை. ஏனெனில் கல்வியின் பல்வேறு பிரிவுகளில் தொழில் கல்வியும் ஒன்றெனவே கல்வியாளரால் கருதப்பட்டு வருகிறது. கல்வி வேண்டாம் கைத்தொழிலே வேண்டுமென விவாதிப்பவர் இரண்டையும் பாகுபடுத்திப் பேசும்போது இரண்டும் வேண்டும், இரண்டும் வேண்டாமென்றே பேசுகிறார். அக்ஷர கல்வியோ இலக்கியக் கல்வியோ வேண்டாம் தொழில் கல்வியே வறுமை நாடாகிய இந்தியாவுக்கு வேண்டுமென்று பேசினாலும் வழுவே பேசுவார்கள். கல்வி வேண்டும் கைத்தொழில் வேண்டாம் என்றாலும் ஒவ்வாது. ஒரு நாட்டின் நிலைமைக்குக் கல்வியும் (அக்ஷர இலக்கியக் கல்வியும்) கைத்தொழிலும் (தொழில் கல்வியும்) இரண்டுமில்லாதமையாது. தர்க்கமென்றாலும் அதிலும் பொருத்தமான அர்த்தமிருத்தல் வேண்டும். மாணவர்களை தர்க்க வாதத்தில் பழக்குவதென முயற்சியெடுத்துக் கொண்டார். விஷயங்களைத் தெரிந்தெடுப்பதில் சிறிது புத்தியை யுபயோகித்தலும் வேண்டும். எடுத்துக் கொண்ட விஷயத்தை ஆதரிப்போர், எதிர்ப்போர், நியாயந்தீர்ப்போர், எவருமே சரியான கடமையைச் செய்ய மாட்டார்கள்; முடியவும் முடியாது.

உள்ளூர் ஆசிரியர்களே?

சுடுகாட்டுக் கணக்குக்கேட்பதற்காக சென்ற முன் இதழில் உங்களது உதவிவேண்டினோம். "சுதந்தரன்" ஆசிரியர் மாத்திரம் அன்று மறு தினமே உதவியளித்து விட்டார். நம்முடன் சேர்ந்தோ தனித்தோ கணக்குக் கேட்க முன் வந்துவிட்டார். ஆனால் இதர ஆசிரியர்கள் ஏனென்றுகூட வாயில்லை. பத்திரிகா தர்மத்தை அவர்கள் உணராமல் வழுகிநிற்பதற்கு நாம் வருந்துகிறோம். பத்திரிகைத் தொழில் வயிற்றுப் பிழைப்புக்காகவில்லை பொது ஜனங்களின் நன்மைக்காகவே யென்றப் சாதாரண இலக்கணம் கூட நண்பர்களின் மூளையில் படாது போய்விட்டதா? இல்லை சிமசதான் மயானம் பொதுவுடைமையில்லை ஸ்ரீமான் ப. சி. சோமசுந்தரம் பிள்ளைக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட தனி மனிதனுடைமை யென்று கருதுகிறீர்களா? அப்படியானால் ஆசிரிய நண்பர்களே? நீங்கள் தப்பாகக் கருதுகிறீர்கள். நீங்களும் உங்கள் முன்னோர்களும் பின் சந்ததியாரும் நாமும் எல்லோரும் மயானத்திலேதான் ஒருநாளில்லாவிட்டால் ஒரு நாள் புதைபடவோ, எரிக்கப்படவோ போகிறோம். இனியாவது தெரிந்ததா சுடுகாடு பொதுச் சொத்தென்பது? அப்படியானால் அது சம்மந்தமான கணக்குக் கேட்க உங்களுக்கு வாயில்லாது போனதென்ன? நண்பர் டேவிடுக்கு தென்னிந்தியர் சங்கக் காரியதரிசியாகையால் தென்னிந்தியர் தங்களை பணங்களைப் பார்ப்பதில் ஓயாது உழைப்பதால் நேரமில்லையா? ஆசிரியரென்பதை விடுத்து காரியதரிசியாகப் பார்த்தாலும் அச்சங்கத்தின் பல வேலைகளில் இதுவும் ஒன்றாக முக்கியமானதாகக் கருதிச் செய்யவேண்டாமா? அவருடைய சங்கத்திலேயே கணக்குக் கொடுக்காத ஸ்ரீமான் ப. சி. சோ. பிள்ளையும் நிர்வாகஸ்தர்தானே? நண்பர் கொ. நா. சுப்பையா விதவைகளுக்கு மாப்பிள்ளை தேடியலைக்காதும் பத்திரிகா தர்மப்படியும், தென்னிந்திய சங்கத்தாரென்ற ஹோதாவிலும் கண்டிப்பாய் பொதுக் கைங்கர்யமாகிய சுடுகாட்டுக் கணக்குக் கேட்பதில் நம்முடன் ஒத்துழைக்கவேண்டும். நண்பர் ஏகாம்பர முதலியார் இருந்தாலும் பழம் பெருச்சாளி சுடுகாட்டுக்கும் கெடுகாலைய ஒட்டுண்டு. 1914ல் இடம் தயாரித்த

தவறைத்திருத்தும் சர்க்கார்.

சர்க்கார் தாங்கள் செய்யும் தவறுகளை அவ்வப்போது திருத்திக் கொள்ளுகிறதாகத் தெரிகிறது. திருத்தப்பட்டுத் திருந்திய போதும் முன் செய்த அதே தவறைச் செய்வதிலுந்தான் எவ்வளவு முட்டாள்தனம்? அதற்கு ஒரேயடியாய்த் தவறையே செய்வது நலம். இப் போராட்டத்தில் சிலரை ஏதோ வோர் சட்டத்தின்கீழ் கைது செய்கிறார்கள். மறுபடி பேரோ வொரு பிரபந்தனையைப் போட்டு விட்டு விடுகின்றனர். ஆனால் அப்படி விடுதலை பெறுவோர்கள் அந்த நிபந்தனைகளை ஒப்புக்கொள்ளுகிறார்களா? அதன்படி நடக்கிறார்களா? என்றால் அதுதான் இல்லை. பிடரியைப் பிடித்துத் தள்ளியதுபோல் தள்ளப்படுகிறார்கள். ஏன்? தப்பாகக் கைது செய்துவிட்டதாகக் கருத்தா?

அவசரச் சட்டங்களில் எத்தனையோ விருக்கின்றன. இப்பொழுதிருக்கும் அரசாங்கமே அவசரச் சட்ட அரசாங்கமா யிருக்கையில் சட்டங்களெல்லாம் அவசரச் சட்டமாகவேயிருப்பதில் சந்தேகமென்ன? எமர்ஜென்ஸி பவர்ஸ் ஆர்டினன்ஸ் (விசேஷ ஆதிக்க அவசரச் சட்டம்) என்ற சட்டத்தில் கைதி செய்யப்பட்டவர்களை விடுதலை செய்து குறைந்த தண்டனை விதிப்பதும், மறியல் சட்டத்தில் கைதி செய்யப்பட்டவர்களை விடுதலைசெய்து விசேஷ ஆதிக்கச் சட்டத்தின் கீழ் அதிக தண்டனை விதிப்பதும்தான் இந்த விடுதலைக்கு அர்த்தம். மறியல் சட்டத்தை மீறினால் ஆறுமாத தண்டனை விசேஷ ஆதிக்கச் சட்டத்தை மீறினால் 2 வருஷம். இந்த எண்ணிக்கையை எந்த இந்தியன் எண்ணிக்கொண்டிருக்கிறான்? இன்னொன்று இந்த விசேஷ ஆதிக்கச் சட்டம் இழுத்த இழுவைக்கெல்லாம் வரும் இதைச் சட்டத்திற்குள் அநேகமாய் மற்றெல்லா அவசரங்களும் அடங்கிவிடுகின்றன. பின்னேன் பற்ற சட்டங்களையெல்லாம் சிருஷ்டிப்பதில் வைஸ்ராயோ அல்லது சட்ட மந்திரியோ மண்டையை யுடைத்துக் கொண்டிருக்க வேண்டும்?

ளூர் மேலும் பக்கத்து வீட்டுக்காரர், எட்டிக் கேட்டாலும் போச்சு. இவ்வளவு சம்மந்தங்களும் கடமையிருந்தும் மௌனஞ்சாதித்தால் காலை வாரார் உர்களைப் குற்றஞ் சாட்டுவார்கள்; பஹிஷ்கரிக்கவும் கூடும் நட்புரிமையால

வழக்கில் வாதியாகவும் கோர்ட்டேறி ப்ரோசீடிங் ... ணைப் உதவ வேண்டுகிறோம்.

Printed & Published By A V· Sellam Pillay at the Desopakari Press, 210,35th Street Rangoon

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 53 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. **DESOPAKARI** புதன் ஞாயிறு, வெள்ளி வெளியீடு

210-36-வது இரங்கோன், (27—1—32) தை மீ 11உ புதன்கிழமை

பிரிட்டன் பேச்சில் உண்மையேயில்லை!

பழையவா னிதிபோது மென் றெண்ணிப்
பாங்கு காத்திடு மன்னவர் வாழ்வை
விழையு மன்னியரோர் கணத்துற்றே
வென்றழிக்கும் விதியறியாயோ?
குழைத லென்பது மன்னவர்க் கில்லை;
கூடக்கூடப் பின்கூட்டுதல் வேண்டும்
பிழை யொன்றே யரசர்க்குண்டு கண்டாய்
பிறரைத் தாழ்த்துவதில் சலிப்பெய்தல்

—துரியோதனன் கூற்று.

பிரிட்டன் பேச்சு பிரட்டன் (பொய்யன்) பேச்சாகவே யிருக்கின்றதல்லால் துளிகூட உண்மை யென்பதில்லை. தனக்குச் சாதகமாக வேண்டியசந்தர்ப்பங்களிலெல்லாம் பொய், புனைமொழி, பசப்பு வார்த்தைகள் கூறிக் காரியசித்தி பெறுவதில் பிரித்தானியாவுக்குப் பிச்சை போடக்கூட வேறெந் நாட்டவராலும் இயலாது. இந்தியா விஷயத்தில் மாத்திரமில்லை—சாம்ராஜ்ய சம்மந்தப்பட்டமட்டிலன்று—உலகத்தின் இதர வல்லரசுகளிடத்திலும் பிரிட்டிஷ் இராஜதந்திரிகள் இதே குடில முறைதான் கையாண்டு வருகின்றனர். இவ்வுண்மையை ஜெர்மனி, பிரான்சு, ருஷ்யா, அமெரிக்கா முதலிய நாடுகள் நன்கறிந்திருந்தபோதிலும் கடலிலும், தரையிலும் பலத்த படைவலி பெற்றிருப்பதால்—இரண்டு மூன்று வல்லரசுகள் சேர்ந்தெதிர்த்தாலும் ஜெயிக்க முடியாத ஆதிக்கம் அடைந்திருப்பதால் இதர நாடுகள் பிரித்தானியாவை யெதிர்த்துப் போராடப் பயப்படுகின்றன. மேலும் ஒருநாட்டுக்கின்னொரு நாடு இயற்கையில் கொண்டுள்ள பொறாமை, போட்டியின் காரணத்தால் அவைகள் ஒன்றுசேர்ந்து பிரிட்டனைப் போராடி வெல்லவும் முடியவில்லை. பல நூற்றாண்டுகள் முன்னர் ஐரோப்பாவில் நிகழ்ந்த நூறு வருட சண்டையிலிருந்து நெப்போலியன் சண்டைவரை பிரித்தானியா ஒரு வல்லரசுடன் சேர்ந்து இன்னொரு வல்லரசை வெல்லுவதும் அப்புறம் ஜெயிக்கப்பட்ட வல்லரசுடன் சேர்ந்துகொண்டு ஜெயமடைந்த வல்லரசைத் தோற்கடிப்பதுமாக நாளுக்கு நாள் வெற்றியின் மேல் வெற்றிபெற்று இப்பொழுது ஜெயிக்க முடியாத ஒரு பேரரசாகி விட்டது. பேராசை இரத்தப் பெருவெள்ளமாய் ஓடப்பெற்று பேராசையால் பெருத்துவிட்டது.

அக்காலத்தில் அதிகாரத் தராசு சமைத்து சம வன்மையுடன் போராடுவதென்ற சூழ்ச்சிச் சம்பிரதாயத்தை நடைமுறையில் செய்து வந்ததும் பிரித்தானியாதான். தராசு என்ற பெயரின் தாதுப் பொருளின்படி அதிகாரத் தராசு அமைக்கப்பட்டிருந்தால் உலகில் சண்டை யென்பதே யில்லா தொழிந்திருக்கும். தராசின் இரு தட்டுகளிலும் சம நிறையுள்ள பாரத்தைப் போட்டால் ஒரு தட்டை யொரு தட்டு தூக்காமல்—இறங்காமல்—ஏறாமல் ஒரே நிலையில்—சம அந்தஸ்திலிருக்குமல்லவா? அதே மாதிரி இரு கட்சியார் சண்டையிலிறங்கிவிட்டால் மெலிந்தவன் பக்கம் வலியவனொருவன் சேர்ந்து கொண்டு போராடினால்—இரு தரப்பாரும் சம பலத்துடன் போர் செய்தால் அநேகமாய் வெற்றி தோல்வி யேற்படுக்கும்

கிடைக்காமல் வெறுந் திமிறடங்கப்பெற்று அடங்கி விடுவர். விருதாவில் போராடினேமே யென்று வெட்கப்பட்டு இனிமேல் சண்டையென்பதையே யெண்ணாமல்—சிந்திக்கக் கூடச் செய்யாமல் உலகசமாதானம் ஏற்படவுங்கூடும். ஆனால் மனிதன் தன் தன் தோளைப் பார்த்துக் கொண்டு—தன் தன் புஜத்தை தட்டிக்கொண்டு திரியும் வரை சமாதானம் சமாதானமென்று சொல்லுவதெல்லாம் வெளி வேஷமேயன்றி வேறில்லை. தான் வலியன், அவன் எளியவன் என்பதை மனித வர்க்கம் மறக்காத மட்டும், சண்டை சச்சரவுகள் உலகத்தில் இருந்துகொண்டேதானிருக்கும். எத்தகைய இராஜ தந்திரிகளாலும், சமாதானப் பிரசாரகர்களாலும் ஒன்றுமே செய்துவிட முடியாது. ஆனால் இதற்கேதாவது விமோசனமில்லையா? ஒருவனை யொருவன் கொன்று ஒரு நாட்டையொரு நாடு வென்றுதான் வாழ முடியுமா? சமாதானமாய் அவனவன் வேலையைப் பார்த்துக் கொண்டு அவனும் அவனும் பரஸ்பரம் ஸ்நேகபாவத்துடனும் வாழக்கூடாதா? ஒருவன் தொண்டையில் இன்னொருவன் ஏன் கத்தியை வைக்க வேண்டும்? ஒருவன் மார்பில் இன்னொருவன் துப்பாக்கியைப்பிடித்து ஏன்குறிபார்க்க வேண்டும்? ஒருவன் மூக்கில இன்னொருவன் ஏன் விஷப் புகையை ஊதுகிறான்? இவற்றிற்கெல்லாம் ஒரு முடிவில்லையா? என்று உலகம் இப்பொழுது சிந்தித்துக்கொண் டிருக்கின்றது. எத்தனையோ அவதார புருடர்கள் தோன்றி—எத்தனையோ தீர்க்கதரிசிகள் பிறந்து உலக சமாதானத்திற்கான மார்க்கத்தைக் காட்டினார்கள். மனித வர்க்கம் அவர்களை யெல்லாம் வணங்குகிறது—தெய்வமாகச் சிந்தனை செய்கிறது; அவர்கள் கூறியவற்றை வேத மென்றும் போற்றுகிறது—பாராயணம் பண்ணுகிறது. கிறிஸ்து மகானின் அஹிம்ஸா பரமோ தர்மத்தை—அவரது மலைப் பிரசங்கத்தை ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் கிறிஸ்தவ உலகம் ஜெபிக்கவில்லையா? புத்த பிரானின் அன்பு மயமான ஹிதோபதேசத்தை எத்தனை எண்ணற்ற மக்கள் பின்பற்றுகின்றனர்? நபிகள் நாயகத்தின் தின தத்துவத்தை—சத்திய மார்க்கத்தை—சாத்விகக் கொள்கையை இஸ்லாமிய உலகம் எவ்வாறு செய்து காட்டுகிறது?

ஜெர்மனியில் ஒரு கார்ல் மார்க்ஸும், ருஷியாவில் ஒரு தோல்ஸ்தாயும் பிறந்ததன் பலனாய் இன்று ருஷியா, ருஷியர்களின் பொதுவுடமையாய்ப் பாவிக்கப் படுகிறது. அதே போல் அந்தந்த நாடு அந்தந்த நாட்டு மக்களின் கையிலிருந்து அங்கங்குள்ள வற்றை வைத்துக் கொண்டு இன்னொரு நாட்டைச் சுரண்டாமல் கால க்ஷேபம் செய்வது என்ற தத்துவம் உலகத்தில் எங்கும் நிரந்தரமாய் நிலவுமானால் சமாதான உலகம் ஸ்தாபித மாகலாம். உலகமே பொதுவுடமை யாகலாம். இதற்கு ஜீவாதாரமாக வேண்டுவது ஹிம்ஸை யில்லாத வாழ்க்கையும் சுத்தமான சத்திய ஹிருதயமும் தான். இதை யுபதேசிக்கவே காந்திஜீயை இவ்வுலகிடை ஆண்டவன் அனுப்பி யுள்ளார். அஹிம்ஸை சத்தியம் இரண்டையும் பரப்புவதற் காகத்தான் காந்தஜீ இவ்வளவு கஷ்டமும் படுகிறார்; இவ்வளவு தியாகமும் செய்கிறார்; தமது ஆத்மாவையும் உடலையும் அர்ப்பணஞ் செய்து விட்டார். ஆனால் இவரையும் இவரது தத்துவத்தையும் முழு உலகமும் நன்கறியவில்லை. ஏனெனில் கிறிஸ்துவைச் சிலுவை யிலடித்துக் கொன்ற உலகமல்லவா? மகான்களைக் கல்லாலடித்து மாய்த்த உலகமல்லவா? என்றாலும் சிலுவையிலடித்துக் கொன்ற கிறிஸ்துவைத்தான் கல்லாலடித்து மாய்த்த மஹான்களைத்தான் உலகம் இன்று தெய்வமாகவும் தீர்க்க தரிசிகளாகவும் வழிபடுகிறது. அதே மாதிரியே இன்று சிறையிலடைத்துச் சித்திரவதை செய்யப்படும் மஹாத்மாவைத்தான் வணங்கப் போகிறோம். அவராலே தான் உலக சமாதானங் காணப் போகிறோம்.

சமீபத்திலே உலகத்தரசுகளெல்லாம் சேர்ந்து ஆயுதப் பரிஹாரணஞ் செய்வதற்காக மகாநாடு கூடப்போகிறார்கள். கொலைக் கருவிகள் கொலை செய்யும் படைகள் இவைகளெல்லாம் புதைக்கப்பட்டு விட்டால் உண்மையிலேயே சமாதானம் காணமுடியும். ஆனால் "உனக்கா சொன்னேன் ஊருக்கல்லவா? என்ற பிரசங்கியார் போல மகா நாட்டில் மேடை யேறிப் பேசி விட்டு யுத்தக் கப்பல் செய்வதிலும், படைகளுக்கு ஆள் சேர்ப்பதிலும் முற்பட்டால் என்னாகும்? பஹிரங்கத்தில் கூடாதென்றதை அந்தரங்கத்தில் செய்தல் கூடுமா?

போன வருஷம் ஜூன் 29வ பார்லிமெண்டில் ஆயுதப் பரிஹாரணம் பற்றிப் பிரதம மந்திரி பேசுகையில் "பிரிட்டன் ஆயுதங்களைக்

குறைப்பதில் அதிதீவிரமாகவும் பொருமையுடன் நிரந்தரமாகவும் நடந்து காட்டி விட்டது. இனிமேல் இதர தேசங்கள்தான் பின் பற்ற வேண்டியவை" யென்று கூறியுள்ளார்.

வாஸ்தவத்தான், கூடுமானவரை சிறிதளவு ஆயுதங்களைக் குறைத்துள்ள தென்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் சிலபுள்ளி விபரங்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் பிரிட்டன் தனது தற்காப்புக்காகவும் உள் நாட்டில் அமைதியும் ஒழுங்கும் நிலவுவதற்காகவுமாத்திரம் போதிய அளவுக்கு குறைக்கவில்லை. 1914ல் பிரிட்டிஷ் இராணுவச் செலவு-இந்தியா—இதர சாம்ராஜ்யத்திற் குட்பட்ட நாடுகள் நீங்கலாக பிரிட்டனில் மாத்திரம் 4 கோடி பவுன் செலவாகி யிருக்கிறது; 1924ல் 4½ கோடி; 1931ல் 4 கோடி. இக் கணக்குப்படி பார்த்தால் பிரிட்டன் யுத்த ஆரம்பத்திலிருந்த அவ்வளவு ஆயுதங்களை வைத்துக் கொண்டு தானிருக்கிறது. இன்னொன்று, தரைப் படையிலும் கடல் படையிலுமாகச் சேர்த்து ஒரு அரைக் கோடி பவுன்களவுக்கு ஆயுதங்களைக் குறைத்து விட்டு ஆகாயப் படையில் 32,500 பேர் வீரர்களைச் சேர்த்துக் கொண்டால் அதற்குத்தான் பிரிட்டிஷ் அகராதியில் ஆயுதப் பரிஹார மென்ற அர்த்தம் போலும்.

இது பிரிட்டன் பேச்சு. இந்தியாவைப் பற்றிப் பார்த்தால் இன்னும் மோசம். மத்திய சர்க்காரின் வருமானத்தில் சரிபாதிப் பணத்தை வெள்ளை யானைக்காகச் செலவு செய்யப்படுகிறது. காரணங் கேட்டால் ருஷியா படை எடுத்து வந்து இந்தியாவை விழுங்கி விடும் என்று கூறுகிறார்கள். 60,000 வெள்ளை யானைகளைக் கட்டித் தீனி போடுகிறோமே இதற்கும் பரிஹாரம் வேண்டு மல்லவா? ஜினிவாவில் கூடப் போகும் மகாநாட்டில எவ்வளவு ஆயுதங்களை எறிந்து விடுவார்களோ பார்ப்போம்.

தேசோபகாரி

வருஷம் 1-க்கு	....	ரூ. 3 0 0
ஆறு மாதம்	...	ரூ. 1 8 0
வெளியூருக்கு வருட சந்தா		ரூ. 4 8 0

தண்ணீர் பந்தல் வாழ்த்து

(ஆசிரியர் டி. எஸ். நாதன், அபிராமம்,)

ஆனந்தக் களிப்பு.

தானக்கொடி தன்னைப் பாரீர்—ஆத்ம
சக்தியான காந்தி முக்யவிலாச நீர் (தா)

ஞானவேலாயுத வீரன்—திரு
நாளாங்கதைப் பூசனி பூரவிற்றே சாமி
மானமுற்ற தகையாளன்—கந்தன்
மாவடி போற்றாஜனப்ரியசீலன் (தா)

நாக வேந்தன் உபகாரன்—இமய
ராஜகுமாரிக னிஷ்ட குமாரன்
நாகபந்த மயில வாகன்—அரு
ளார்ந்தமனோகர ஞான மகிபன் (தா)

சீருறும் பர்மிய நாட்டில்—எழிற்
செழுமுப்பத் தோன்றும் வீதியின் வாசன்
சீர்பெறு வ்யாபார ஸ்தலத்தன்—அறஞ்
செய்யுந்த யாளசி தோதகப் பந்தல் (தா)

எண்ணிலாப் பக்தர்கள் கூட்டம்—தன்னை
இன்பமுடன்வா வேற்றுக் கொண்டாட்டம்
தண்ணமு தளிக்கும் நாட்டம்—த்யாக
சம்பன்னன் நாகலிங் கம்பிள்ளை ஸ்ரேட்டன் ()

நீடிய வாழ்வுபெற் றோங்க—புகழ்
நின்றுலவத் தண்ணீர்ப் பந்தல் விளங்க
நாடிய தொண்டர் குழாங்கள்—என்றும்
நன்றி மறவாமல் போற்றித் துலங்கும் (தா)

வந்தேமா தரம், அல்லா ஹு—அக்பர்
மகாத்மா காந்திக்கு ஜே! என்ற நாமம்
தந்தாதரக் கத ரா லே—துவஜந்
தாங்கியென் றென் றமித் தரணியில் வாழி. ()

சோலிய முஸ்லிம் அஸோஸியேஷன்

அங்கத்தினர்களுக்கு வந்தனம்.

ஸர் முகம்மது ஷபி அவர்களின் மாணத்திற்காக நமது அஸோஸியேஷன் சார்பாக நான் கொடுத்த தந்திக்குப்பின் வரும் பதில் கிடைத்திருக்கிறது.

சோலிய முஸ்லிம் அஸோஸியேஷன்
காரியதரிசி அவர்களுக்கு:—

அன்புமிக்க ஐயா,

தாங்கள் அனுப்பிய அனுதாப தந்திக்கு எனது நன்றி பறிதலைச் செலுத்துகிறேன் தங்கள் அஸோஸியேஷன் அங்கத்தினர்கள் அனைவர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரியப் படுத்தவும்.

தங்கள் அன்புள்ள, அமீர் எம். ஷபி.

நெஞ்சில் ஈரமிருக்குமா?

இந்தியாவில் நடக்கும் இந்த சட்ட மறுப்புத் தீயில் எல்லோரும் இறங்கிவிட்டார்கள். 9 வயதுக்கும் குறைந்த பாலகன் முதல் பூரண கர்ப்பவதிகள் வரை தீயின் கடுமையையும் ஆழத்தையும் சிந்திக்காமல் குதித்துவிட்டார்கள். அதிகாரிகளும் நிர்தாக்ஷண்யமாய் ஈவு இரக்கமில்லாமல் அடிக்கிறார்கள்; தண்டிக்கிறார்கள்.

பம்பாயைச் சேர்ந்த மவாட் காங்கிரஸ் "சர்வாதிகாரி"யான ஸ்ரீமதி கனேஷபென் ஷிணய்க்கு 4 மாத கடினகாவல்தண்டனையும் 300 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாஜிஸ்திரேட் ஆணோடு பெண்ணோடு பிறந்திருப்பானோ? அவனுடைய நெஞ்சில் ஈரமென்பதே யிருந்திராது. அபராதத் தண்டனையைப்பற்றி அக்கரையில்லை வெறுங்காவல் தண்டனையாயிருந்தாலும் பிரமாதமில்லை. கடுங்காவல்? அடபடுபாவி! உன் தாய்க்கு நீ பிழை செய்துவிட்டாயே. அந்த அம்மாள் நிறை கெர்ப்பத்துடன் என்ன வேலை செய்வாள் என்பதை எண்ண உனக்கு மனமிருந்ததா?

ஆனால் அம்மகா சக்திக்குப் பிறக்கப்போகும் குழந்தை மஹா பாக்கியஞ் செய்தது. ஆணாய்ப்பிறந்தால் சுபத்திரை வயிற்றிற் பிறந்த வீர அபிமன்யுவைப்போல் அக்குழந்தை ஆண்மை பெற்றிருக்கும். சிறையிலே பிறந்து கம்ஸனை வதைத்த கிருஷ்ணனைப்போலிருக்கும். சுயராஜ்ய இந்தியாவில் இந்திய சைன்யத்தின் சேனாதிபதியாக வரும் வீரம் பெற்றவரும். பெண்ணாய்ப் பிறந்தால் கௌசலையைப்போல் கௌரியைப்போல், ஜான்ஸி இலட்சுமி பாயைப்போல், கலாவதியைப்போல், வீர மாதாய் விளங்குவாள்.

அந்தவொரு திருப்தியில் ஸ்ரீமதி கனேஷபென் கல்லுடைக்கட்டும். செக்கிழுக்கட்டும். கடுமையான வேறெந்த வேலை கொடுத்தாலும் செய்யட்டும். வீரபுத்திரனைப்பெற விருக்கும் அவளுக்கு என்ன குறை! அவளுடைய ஆயுளுள்ள மட்டும் "இந்த என் மகனைச் சிறையிலே பெற்றெடுத்தேன்" என்று கெர்வத்தோடு சொல்லிக்கொள்ளும் ஒரு பாக்கியம் போதாதா? அவள் மகனும் "என்னை என் தாய் சிறையிலே பெற்றெடுத்தாள்" என்று அவன் ஆயுள் உள்ள வரை சொல்லிக் கொள்ளுவானே அந்த பெருமை யாருக்குக் கிடைக்கும்?

மரியாதை போச்சே!

நமது நாட்டில் பாத்திரமில்லை பொதுவாகத் தமிழர்களிடையே சாமி கும்பிடுவதில் மரியாதை கொடுக்கிறதென்பது ஒரு வழக்கமாக இருந்து வருகிறது. ஒரு ஊரிலே, ஒரு கோயிலிலே உற்சவம் கொண்டாடப்படுகிறதென்றால் அதில் முதல் மரியாதை பின்னொருக்கு இரண்டாவது மரியாதை பின்னொருக்கு என்ற சம்பிரதாயமுண்டு. அதே மாதிரி இவ்வூரில் நடக்கும் தைப்பூச விழா—வெள்ளி ரதோற்சவத்திலும் சிலருக்கு மரியாதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அம்மரியாதைகளில் ஸ்வர்க்கிய மதுரைப்பிள்ளை ராப்பகதூர் அவர்களுக்கும் ஒரு மரியாதை வழங்கப்பட்டு வந்தது. அவருடைய வீட்டுக்கு முன்னால் ரதத்தை நிறுத்தி தூபதீப நைவேத்தியங்கள் செய்வதென்பது 1883–84 முதல் சென்ற 1931-ம் வருஷம் வரை நடைபெற்று வந்ததுண்டு. இம்மரியாதையை ஸ்ரீமான் மதுரைப்பிள்ளை இலகுவில் பெற்றதில்லை. இரதோற்சவம் நடத்துவதென்று முதன் முதலில் சங்கற்பித்தபொழுது சப்-கமிஷனராயிருந்த ஸர் பிரடரிக் பிரையர் என்பவர் ஊர்வலம் நடத்த அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார். தனவசிய மக்களெல்லாம் எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அதன்பேல் ஸ்ரீமான் மதுரைப் பிள்ளையிடம் கூறிய போது "என் வீட்டின் முன்னால் ரதத்தை நிறுத்துவது ஆராதிப்பது என்ற உரிமையை—மரியாதையை யளிப்பதானால் நான் அனுமதி கிடைக்கும்படி முயற்சிக்கிறேன்" என்றார். அவ்வாறே முயன்றார்; அவரது செல்வக்கனத்தையும் உபயோகித்து அனுமதியும் பெற்றுவிட்டார். அது முதல் ரதம் ஓட ஆரம்பித்தது. அவருக்கும் மரியாதை கொடுக்கப்பட்டே வந்தது.

அவர் காலஞ்சென்ற பின்னும் பாரம்பரியமான மரியாதையை அவரது சந்ததியார் அடைந்து வந்தார்கள். ஸ்ரீமான் ஹரிகிருஷ்ண பிள்ளையே யனுபவித்தார். 1931-ம் வருஷத்துத் தைப்பூசம் வரை தப்பொன்றும் நிகழ்ந்ததில்லை. செட்டியார்களும் மரியாதை வழங்கியே வந்தனர்; பிள்ளையும் வாங்கியே வந்தார்.

இவ்வருடத்தில் மரியாதை போய் விட்டது. மாமூலெல்லாம் தலைகீழாக அடித்துக் கொண்டு விழுந்த வீழ்ச்சியில் ஸ்ரீமான் ஹரிகிருஷ்ண பிள்ளைக்குக் கிடைத்துக் கொண்டு

நெருப்புக் குச்சியில் நெருப்பு.

இம்மாகாணத்தின் வருமானத்தில பெரிய பள்ளம் விழுந்திருக்கிறதாம். அதை மேவுவதற்கென்று பல வரிகளால் உயர்வு செய்யப்பட்டிருக்கின்றன. இந்திய மத்திய சர்க்கார் விதித்துள்ள அதிக வரிகள் போதாதென இம்மாகாண சர்க்கார் தனியாக பிரத்யேகமாக நெருப்புக் குச்சியின் மீதும் வரி விதித்து இம்மாதம் 23ந் தேதியிலிருந்து அமுலிலும் வந்து விட்டது. இதனால் இவ்வூர் நெருப்புப் பெட்டித் தொழில் வெகுவும் பாதிக்கப் பெறுமென்பதில் சந்தேகமில்லை. ஒரு காசுக்கு—காலணாவுக்கு விற்கப்பட்ட தீப பெட்டி இனிமேல் முக்காலணாவுக்கு இரண்டு விகிதம் விற்கப்படுமென்கிறார்கள். "தோட்டத்தில் பாதி கிணறு" என்ற மாதிரி இவ்வரியால் காலணாவுக்கு அதிக சரி பாதி வரியை ஜனங்கள் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டிருக்கிறது. உள்நாட்டில் செய்யப்படும் தீப் பெட்டிகளுக்கும் வெளி நாடுகளிலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்படும் தீப பெட்டிகளுக்குமே இவ்வரி விதிக்கப்பட்டிருப்பதால் அநேகமாய் இவ்வரி பொது ஜனங்கள் செலுத்த வேண்டிய வரியே யாகிறது. பர்மாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தீப் பெட்டிகளுக்கும் வரி விதித்திருந்தால் பர்மா நெருப்புப் பெட்டியை வாங்கி யுபயோகிக்கும் ஒவ்வொரு நாட்டாரும் இம்மாகாண பொக்கிஷத்தில் விழுந்திருக்கும் துண்டை—ஓட்டையை மூடுபவர்களாவார்கள். ஆனால் மாகாண பொக்கிஷத்தை நிரப்ப வேண்டியது மாகாண ஜனங்களின் கடமையே யாகுமென்பது மாகாண சர்க்காரின் கருத்துப் போலும். இல்லா விட்டால் உலக வர்த்தக ஒப்பந்தத்திற்குப் பாதகமேற்படுத்தாகாதென்ற எண்ணமிருந்தாலுமிருக்கலாம்,

எப்படியானாலும் பர்மாவிலிருக்கும் நாம் இனிமேல் தீக்குச்சி வரியும் தினந்தோறும் செலுத்திக் கொண்டே வரப்போகிறோம். நெருப்புக் குச்சியிலும் வரி நெருப்பு விழுந்து விட்டது. மூச்சு வாங்கும், மூச்சு விடும் ஆகாயத்தைக் காற்றைத் தவிர எதைத் தொட்டாலும் வரி வரி யென்றவர்களின் காதில் ஒரு பிடி—வேண்டியானால் இருபிடி காந்தி உப்பைப் போட வேண்டும். ஏனெனில் அவர்கள் வாக்குப் பலித்து விட்டதல்லவா? தீப் பெட்டித் தொழிலாளிகளைப் பார்த்தால் அவர்கள் கெதி இன்னும் மோசம். தொழில்வரி ஆள்வரிகளோடு இவ்வரியையும் இவர்கள் அழ வேண்டும். தீப் பெட்டி விலையைத் தூக்கி விற்க வேண்டியிருப்பதால் சரக்கும் அதிகம் விலைப் போகாது. நான் பீடி பிடிப்பவன். நாள் தவறினாலும் ஒரு நெருப்புப் பெட்டி வாங்க தவறியதில்லை. இனிமேல் நான் தினம் தினம் வரி செலுத்தப்போகிறேனா? இல்லை. சிக்கனஞ் செய்யப் போகிறேன். ஒரு பீடிக்கு ஒன்பது குச்சி செலவழித்த டம்பாச்சாரித்தனத்தை விட்டு விட்டு இனிமேல் சத்தியமாய் ஒரே யொரு குச்சிதான் செலவழிப்பேன். காற்றோ மூச்சோ ஊதி அவித்து விட்டால் போனால் போகிறதென்று இரண்டு குச்சி செலவழிப்பேன். அதுவும் வீட்டிலிருக்கும் போது அடுப்பில் நெருப்பில்லா விட்டால் தான். வெளியில் சென்றால் வெற்றிலை பாக்குக் கடைகளில் கயிற்றில் தொங்கும் நெருப்பாலேயே தான் பீடியைக் கொளுத்திக் கொள்ளுவேன். இதனால் நான் வரி மறுப்போனாய் விட்டேன். சிக்கனஞ் செய்பவனுமே ஆவேன். வீட்டில் விளக்கேற்றும், அடுப்பு கொளுத்தும் தாய்மாரும் தீக் குச்சியில் சிக்கனஞ் செய்து அதிகச் செலவேற்படாமல் செய்வார்களா?

ருந்த மரியாதையும் போய் விட்டது. ஸ்ரீமான் பிள்ளை இம்மரியாதையை என்னவிலை கொடுத்தும் காப்பாற்றி யிருக்கவே வேண்டும். நமது நாட்டில் கிராமாந்திரங்களிலும் நகரங்களிலும் கூட இத்தகைய மரியாதைகளை யிழக்காமல் காப்பாற்றுவதற்காக எவ்வளவு செலவு செய்கிறார்கள். எத்தனை பலி தியாகங்கள் செய்கிறார்கள். அம்மாதிரி பொருளும் ஸ்ரீமான் பிள்ளை செலவழிக்க வேண்டியதில்லை. நகர பிரமுகர்களில் ஒரு புள்ளியாகவும், நகர சபையில் ஒரு அங்கத்தினராகவுமிருக்கும் பிள்ளை மரியாதையை யிழக்கக் கூடாதென்று சிந்திக்கத்தாகவேயில்லை. மரியாதை போனால் போகிறதென்றிருந்து விட்டார். ரதத்தை வேறுபாதையில் போகவிடாமல் மாமூலான மார்க்கத்தில் செல்லும்படி சங்கம் கமிஷனர்வரை யாத்திரையிலே கவர்னர்வரை சென்றிருந்தும் இவர் இவ்வித மரியாதையைக் காப்பாற்றவில்லையா? வெட்கம்! வெட்கம்! ஸ்ரீமான் ஹரிகிருஷ்ணபிள்ளையின் மரியாதை போச்சே! வெட்கம்.

வெள்ளிரத வேடிக்கை.

இரங்கோன் முருகபிரான் வெள்ளிரத வேடிக்கை வேடிக்கையாகவே முடிந்தது. காலச்சக்கரத்தின் மாறுதல்களில் கடவுளரும் தங்கள் மார்க்கத்தை மாற்றிக் கொள்ளுகின்றன என்பதை வெள்ளிரத வேடிக்கையில் கண்டோம். உலகம் போய்க் கொண்டிருக்கும் சாத்விகப் போக்கில் சாமிகளுங் கூட சகிப்புத் தன்மையையும், ஒதுங்கிப் போதலையும் கைக்கொண்டிருக்கின்றன. கடவுளைச் சிருஷ்டிக்கும் மனிதன் கடவுளின் மார்க்கத்தையும் பாதையையும் வரையறுக்கிறான்—நிர்ணயிக்கிறான் என்னும் நியதி கேற்று முன் தினம் வெளுத்து விட்டது. மாமூலாகச் சென்று கொண்டிருந்த வழியை மாற்றி வேறு வழியில் ரதத்தை ஓட்டி விட்டார்கள். ரதம் ஓடியதிலும் ஒரு விசேஷம் சாதாரண வண்டிகளை "இடது பக்கம் போ" வென்று சொல்லுவது போன்று ஆண்டவன் வெள்ளி வண்டியாகிய ரதத்தையும் சொல்லி விட்டார்களோ என்னவோ சாமியும் அவரது தேரும் அவரது விருது துவஜங்களும் இடது புறமாக ஒதுங்கியே சென்றன. மனிதர்களில் எல்லோருக்கும் சட்டம் ஒரே மாதிரியில் உபயோகிக்கப் படுவது போல் (ஆனால் நடைமுறையில் அப்படியில்லை) ஆண்டவனிடத்திலும் மனித சட்டங்கள் உபயோகிக்கப் பட்டிருந்தால் நாமென் செய்யலாம்? வீரமுருகனும் தனது ஹிம்ஸை வேலை—குருதி வேலை—யெறிந்து விட்டு அஹிம்ஸை வேலைக் கைப் பிடித்து சாத்விகக் கொள்கையில் சகித்தல் தன்மையில் ஒதுங்கிப் போகிறார் போலும். அதை நாம் பாராட்டுகிறோம்.

நடமாடுந் தெய்வங்களாகிய மனிதவர்க்கத்தைப் பிடித்துள்ள வறுமை கடவுளரையும் பிடித்திருக்கிறது. இவ்வருடத் திருவிழாவில் உயிரில்லை; சத்துக் கிடையாது; கண்ணுக்கு ரசிக்கவில்லை. "பசிவந்திடப் பத்தும் பறந்து போம்" என்ற சபித்த பாட்டியின் பாடம் சரியாய்ப் போய்விட்டது. குபேர பூமியான பர்மாவில் ஜீவவர்க்கம் பட்டினி கிடப்பதால் இந்த விழாவுக்குக் காட்டுப் புறத்திலிருந்து வேடிக்கை பார்க்கவோ—ஆண்டவனை ஆராதிக்கவோ வர முடியவில்லை. உள்ளூராராவது விசேஷமாகக் கூடினார்களா? கொண்டாடினார்களா?

தேருக்கு முன்னால் மதுரை வீரன்போல் ஒரு குதிரை வீரன் சவாரி செய்து திரிந்தான். குறுக்கு மறுக்கும் வாடகை மோட்டார் முதல் குப்பை வாரும் மோட்டார் வரையும் ரிக்ஷா வண்டிகளும் கூட்டத்தினிடையே போய் வந்துகொண்டிருந்தன. அவற்றைக்கை காட்டிவேறுபக்கம் போகச்சொல்லவாதியில்லை.

வேதங்களாகிய குதிரைகளைப் பூட்டிய தேரில் பகவான் பவனி வருவதாகச் சொல்லப்பட்ட காலம் ஒன்றிருந்தது. வேத பாராயணக்காரர்கள் உற்சவ காலங்களில் முன்னால் செல்லுவது போய் பின்னால செல்லுகிறார்கள். அந்த இடத்தில் தேவடியாள்கள் ஆடுகிறார்கள். ஆனால் அந்தமாதிரி யில்லாவிட்டாலும் வேத பாராயணம் போன்ற பஜனைக் கோஷ்டியார் ரதத்தின் பின்னால் வெகு தூரத்தில் பாடிக்கொண்டு வந்தார்கள். தூரத்தைப் பற்றிப் பேச்சில்லை. எவ்வளவு தொலையிலிருந்து பாடினாலும் பகவானின் காதுகளில் கேட்குமென்ற கருத்திருக்கலாம். ஆனால் ஊர்வலத்தில் கோர்வையில்லை யென்பதற்காகவே யிங்கு கூற நேர்ந்தது.

"சக்தி சிவானந்த சபையா"ரின், "கணேஷ பால பக்த சபையா"ரின் பஜனையிலேதான் விசேஷமெல்லாம். பக்தி ததும்பி நின்றது. கடவுள் பக்தி மாத்திரமில்லை தேச பக்தியும் காட்டினார்கள்; ஊட்டினார்கள். தேசியக்கொடி பறந்ததும், காந்திஜியின் வாழ்த்துச் சுலோகங்கள் சிறந்ததும் குறிப்பிடாது விடுவதற்கில்லை.

ரதமிழுத்த காளைகளையும் வர்ணிக்காமல் விடலாமா? அழகு சொட்டிற்று; காம்பீர்யம் ஜ்வலித்தது. ரதத்தின் ஓரமாயிழுத்த தாக்கலா கணக்குப் பிள்ளையின் காளைகளும், அடுத்துவந்த ஸ்ரீமான் ஆத. நாகலிங்கத் தேவரவர்களின் ரிஷபங்களும் முன்னால் சென்ற ஸ்ரீமான் வெள்ளைச்சாமி பேஸ்திரியாரின் எருதுகளும் கைலாசபதியின் நந்தியைப்போன்றே திகழ்ந்தன. இவ்வருடம் ரதக்கை சவாரி வண்டிபைப்போல் விரட்டிய விரட்டில் அக்காளைகள் நன்றாய்ப் பருத்துக் கொழுத்திருந்ததாலோ அலது மாமூலை விடமாட்டோமென்றோ வாலைச்சுழற்றிக்கொண் டோடவில்லை. முடிவில் வாழ்த்துக்கூறும் சம்பிரதாயப்படி இரதோற்சவம் மங்களகரமாக முடிந்ததென்று முடிக்கிறோம்.

சந்தி தெருப் பெருக்கும் சாஸ்திரம்.

இப்படியும் ஒரு சாஸ்திரம் இருக்கவா செய்கிறதென்றெண்ணுவீர்கள். இல்லாமலா நம்து தமிழ் கவியரசு சுப்ரமண்ய பாரதியார் தமது "பாரத தேச"த்தில் மலைமீது லாவுவது, கப்பல் விடுவது, முத்துக் குளிப்பது, பாட்டிசைப்பது, ஆயுதம், காகிதம் செய்வது. மந்திரம் வினைத்தந்திரம் கற்பது, காவியம் செய்வது முதலிய சாஸ்திரத் தொழில்களோடு "சந்தித் தெருப் பெருக்கும் சாஸ்திர"த்தையும் சேர்த்து அதையும் கற்போம் என்று சொல்லியிருக்கிறார். இதனால் காவியஞ் செய்யும் ஒரு கவித்தச்சனைப் பார்க்கிலும். பாட்டிசைக்கும் ஒரு பாட்டாசிரியனைவிட, கோயில் பாலஞ் சமைக்கும் ஒரு சிற்பியைக் காட்டிலும், மலைமீதுலாவும் ஆகாய விமானி, கடலில் கப்பலோட்டும் கப்பலோட்டி யிவர்களில் எள்ளளவும் குறையாதவன் தெருப் பெருக்கும் தோட்டியென்பது புலனாகிறது. எத்தொழிலும் கேவலமானதில்லை. மேனாடுகளில் தெருப்பெருக்கும் தோட்டி முதல் நாடு காக்கும் அரசன் வரை எவ்வித ஏற்றத்தாழ்வு மில்லாமல் சம அந்தஸ்தில் மதிக்கப்படுகின்றனர். செருப்புத் தைக்கும் செம்மான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை யாளும் மந்திரியானான். அங்கு எவனும் அவன் செய்யும் தொழிலைக்கொண்டு கணிக்கப்படுகிறதில்லை. இந்தியாவில் தொழில் பிரிக்கப்பட்டு இன்ன தொழிலைச் செய்பவன் இன்ன ஜாதியான் என்று பாகுபாடு படுத்தப்பட்டு இன்ன தொழில் கேவலமானது அதைச் செய்பவன் தீண்டப்படாதவன்—தாழ்ந்த ஜாதியான் என்று ஒதுக்கப்பட்டதாலேதான் தொழிலும் சீரழிந்து மனிதவர்க்கமும் சீரழிந்து விட்டது. தொழில் அது எத்தொழிலா யிருந்தாலும் தொழில் என்ற ஒரு காரணத்திற்காகப் போற்றப்பட்டிருந்தால்—போற்றினால் நாட்டின் கைத்தொழிலும் நாட்டின் மக்களும் இவ்வளவு தூரம் கேவலமான நிலைமைக்கு வந்திருக்கக் காரணமில்லை.

தெருப் பெருக்கும் சாஸ்திரமும் வீடு பெருக்கும் சாஸ்திரமும் வேறில்லை. வீடுபெருக்கும் கலையை நமது மனைத்தெய்வங்கள்-பெண்மைக் கடவுள்கள் பேணிப் போற்றி வளர்த்து வருகின்றனர். இல்லாவிட்டால் நமது வீடுகளில் லட்சுமி—ஸ்ரீதேவி குடி கொண்டிருப்பாளா? குப்பைகுவிந்தால் அவ்வீட்டில் மூதேவி குடிபுகுந்து அழகு, செல்வம், சலை, வாழ்க்கை முழுமையும் சர்வ நாசஞ் செய்து பாழ் மனையாக்கி விடுகிறாள். அதே மாதிரியே சந்தி தெருப் பெருக்குதலுமாம். ஒரு ஊரின், அல்லது நகரத்தின் சந்திகளும், தெருக்களும் சுத்தமாகப் பெருக்கப்படா விட்டால் அவ்வூரின் நகரத்தின் அழகு குன்றி நரகம் போல் தோன்றுகிறது.

சுகாதாரம் மனிதவாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். மனிதன், தன் தன் சரீரத்தை யெவ்வளவுக் கெவ்வளவுசுத்தமாக வைத்துக் கொள்ளுகிறானோஅவ்வளவுக்களவு ஆரோக்கிய திடகாத்திரமாக வாழ முடியும். அதே போல்வீட்டையும், தெருக்களையும், நகரத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். தெருவும், நகரமும் சுத்தமா யில்லாவிட்டால் அந் நகரத்தில் தெருவில் குடியிருக்கும் தனி மனிதன் எவ்வளவுதான் சுத்தமாக விருந்தாலும் பிரயோஜன மில்லை.

நமது நாட்டின்சாத்திரங்களெல்லாம் கலையிழந்தது போல் இச் சந்தி பெருக்கும் சாஸ்திரமும் கெட்டு விட்டது. சிறு குக் கிராமம் முதல் பெரிய பெரியநகரங்கள்வரை இக்குறையில்லாமலில்லை. மற்றேனைய நாடுகளை விட நம் நாட்டில் அதிசப்படியான விகிதாசாரத்தில் ஜனங்கள் இறப்பதற்கு நாம் சரிவரச் சந்தி பெருக்கவில்லை. யென்பதே மூலகாரணமாகும். இதுபற்றி காந்திஜியும்தமது "ஆரோக்கியவழி" யில் அழகாக எழுதியுள்ளார். சென்ற வருடம் தண்டிக்கு உப்பெடுக்கும் காரியார்த்தமாகயாத்திரை சென்றபோது இடையில் குறுக்கிடும் ஒவ்வொரு கிராமத்தையும் தாமும் தமது 100 தொண்டர்களுமாகச் சேர்ந்து பெருக்கிக் கிராமக் குடியானவர்களுக்குச் சந்தி பெருக்கும் சாஸ்திரங் கற்றுக் கொடுத்தார். இதனாலேயும் இச்சாஸ்திரம் இன்னும் அதிகமான மஹத்துவம் பெறுகிறது.

அங்கிங் கலைவானேன்? இவ்வூர் சந்தி பெருக்கும் கலைவாணர்கள் இச் சாஸ்திரத்தில் எவ்வளவு தூரம் தேர்ச்சி பெற்றிருக்கிறார்க

சிறை நிறையும் கஜானாகாலி : :

ஸ்ரீ பிரெய்ல்ஸ் போர்டு.

காந்திஜீ சிறைக்குத் திரும்பிச் சென்று விட்டார். அதுதான் அவருக்குச் சிறந்த இடம். ஓய்வு வாங்கிக்கொள்ள—மூச்சாறிக் கொள்ளத் தகுதியான இடம். அவரைச் சுயேச்சையாக விட்டு வைக்க சர்க்காரால் முடியவில்லை. அவரைவிட இன்னும் பெரிய தொல்லையான சர்தாரையும் வெளியில் விட்டுவைக்க முடியவில்லை. காந்திஜீ சிறையிலிருக்கலாம். ஆனால் அவரை சிறைக் கோட்டைகளால்—சற்களால் மறைத்துவிட முடியாது. வெளியிலிருப்பதைப் பார்க்கிலும், சிறையிலிருக்கையிலே தான் உலகம் அவரை அதிகமாகச் சிந்திக்கிறது. போற்றுகிறது.

இப்பொழுது இந்தியாவி லேற்பட்டிருக்கும் நிலைமையையும், அயர்லாந்தில் உடன்படிக்கைக்கு முன்னிருந்த நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அயர்லாந்து டய்லும் அயர்லாந்துத் தலைவர்களும் எவ்வாறு சட்ட விரோதமானதென்று கலைக்கப்பட்டதோ- எவ்வாறு சிறை செய்யப்பட்டார்களோ அவ்வாறே இந்தியாவின் காங்கிரஸ் சபைகளும் இந்தியத் தலைவர்களும் செய்யப்படுகின்றனர். டிவாலரா கைது செய்யப்பட்டதுபோல் காந்திஜியும் கைது செய்யப்பட்டிருக்கிறார்; கடூரமான கவர்னர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியாவைத் தோற்கடிப்பது இலகுவல்ல. பிரிட்டிஷார் அவசரச் சட்டங்களை அவசர அவசரமாக அள்ளி அள்ளி யெறியலாம். பிரிட்டிஷ் சைன்யத்தையும் இந்தியத் துருப்புகளையும் இந்தியா வெங்கும் அணிவகுத்து நடத்தலாம். அமைதியாக நடக்கும் கூட்டங்களையும் ஊர்வலங்களையும் சுடலாம். குழந்தைகளையும், பெண்மணிகளையும் தடியாலடித்து சிறையிலடைக்கலாம். ஆனால் இவைகளெல்லாம்—இந்தப் பயங்கரச் செய்கைகளாலெல்லாம் 33 கோடி இந்தியப் பிரஜைகளின் சுயேச்சை உணர்ச்சியைத் தடைப்படுத்தவோ—அடக்கி விடவோ முடியாது.

கன்னங்கரிய இருளில் ஒருவனைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு அதன் முடிவு என்னுருமோ என்று நினைத்துக்கொண்டு மனத்தை மனம் தின்னுவது போன்ற நிலைமையில் இப்பொழுது பிரிட்டிஷாரிருக்கின்றனர். சீர்திருத்தமென்கிற ஒரு ஆசை வார்த்தை காட்டுகிறார்கள். இந்தியா என்ன செய்யப்போகிறது? சீர் திருத்தத்தை வாங்கிக்கொண்டு திருப்தியடைந்து அமைந்து விடுமா? சீர்திருத்தம் கண்ணைப் பறிக்கலாம்; ஆனால் பிரிட்டிஷ்காரன் இன்னொரு கையில் பிடித்திருக்கும் தடியை மறைக்க முடியாது; இந்தியனும் மறக்கமாட்டான்.

பிரிட்டனின் அடக்குமுறை வெற்றியளிக்காது. 1930ல் பலனளிக்கத் தவறிய அடக்குமுறைகளை யெல்லாம் இப்பொழுது உபயோகித்துப் பார்ப்பது முடித்துவிடுவதென்று துணிந்து விட்டிருக்கிறார்கள். இதனால் சிறைச்சாலைகள் சீக்கிரம் நிரம்பிவிடும், கஜானா வரண்டுச் சுண்டிக் காலியாகவே யிருக்கும். காயமடைந்த தலைகள் இராஜ விஸ்வாசங்கொள்ள முடியுமா? தடிகளால் அடித்துக்கொண்டிருக்கையில் இடதுகையால்சீர் திருத்தத்தைக்கொடுத்தால் எந்த இந்தியன் வாங்கப் போகிறான்.

ளென்று பார்ப்போம். தெருக்கள் சுத்தமாயில்லை. எங்கு நோக்கினும் குப்பை மேடுகள் உயர்ந்து கிடக்கின்றன. மாஸ்கோ நகரத்தில் கிழித்த நெருப்புக் குச்சியையும், பிடித்த சிகரெட்டுத் துண்டையும் தெருவில் போட்டால் அபராதம் விதிக்கப்படு மென்று விதி செய்திருப்பது போல் நகர சபையார் சட்டம் சமைக்க வேண்டும். ஆங்காங்கு தொட்டிகளமைக்க வேண்டும். தெருப் பெருக்கும் சாஸ்திரிமாரை (தோட்டிகளை) நன் முறையிலமைத்து வேலை வாங்க வேண்டும். தெருப் பெருக்குவதில் நகர சபையார் கவனம் செலுத்தாவிட்டால் பிரயோஜன மில்லை.

Printed & Published By A V: Sellam Pillay at the Desopakari Press, 210,36th Street Raugoon

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 54 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை.

DESOPAKARI

புதன் ஞாயிறு வெள்ளி வெளியீடு.

210-36-வது இரங்கோன், (29—1—32) தை மீ 16உ வெள்ளிக்கிழமை,

சுவாமி விவேகாநந்தர் பிறந்த நாள்.

"எந்த வொரு ஆத்மாவை உலகம் போற்றுகிறதோ, வணங்குகிறதோ, அன்பு செலுத்துகிறதோ, அந்த ஆத்மா தனக்கென எதுவையும் வைத்துக்கொண்டிருந்ததில்லை, எந்த வொரு தானியத்தையும் விளைச்சல் செய்ததில்லை, எந்த வொரு காட்டையும் ஆண்டது கிடையாது, எந்த வொரு இயந்திர சக்தியையும் சிருஷ்டித்ததில்லை. உலக சுகபோகத்தையெல்லாம் வெறுத்து மனித வர்க்கத்திற்காக வென்றே வாழ்ந்த அந்த ஆத்ம சன்யாசிகளை ஞானிகளை வாழ்த்தி வணங்குவோம். —எமர்ஸன்.

ஹே! இந்தியனே! எழுந்திரு! உனது கண்ணைத் துடைத்துக் கொண்டு இந்த உலகத்தைப்பார். நீ மகா சக்தியின் அம்ஸம். உன்னால் எது வேண்டுமானாலும் செய்யமுடியும். தியாகிகளில் தியாகியான சங்கரனை நீ வணங்குகிறாய் சீதை சாவித்திரி உமாதேவி முதலிய கற்புக்கடவுளரின் வயிற்றிலே நீ பிறந்தாய். அருச்சுனன, அபிமன்யு இராமன் முதலிய வீரர்களின் சந்ததியிலே நீ தோன்றியிருக்கிறாய். இந்த சிந்தனைகளை மறந்து விடாமல் உன்னைச்சுற்றி என்ன நடக்கின்றதென்பதை ஒரு முறை பார்" என்று கூறி இந்தியாவைய்ய கட்டி பெழுப்பியவர் சுவாமி விவேகானந்தர்.

அவரது 70-வது ஜெயந்தி நாளை, நாளைக் கொண்டாடப் போகிறோம். ஹிந்து மதம் இன்னது என்பதை உலகத்திற்கு உபதேசித்த ஒரு அவதார புருடனை வணங்கப் போகிறோம். நடை முறையிலிருக்கும் ஹிந்து மதம் வேறு சனாதனமான ஹிந்து மதம் வேறு என்பதை எடுத்துக்காட்டி உலகத்திலுள்ள எல்லா மதத்தின் தத்துவத்தையும் தன்னுள் கொண்டுள்ளது ஹிந்து மதம் என்பதை அமெரிக்காவில் சிக்காகோ மத பார்லிமெண்டிலே சர்வமத அதிகாரிகளின் முன்னிலையிலே யெடுப்புத்த மகரிஷி பிறந்த தினம்.

மனிதனுக்காகவே மார்க்கம்; மார்க்கத்திற்காக மனிதனில்லை. எல்லா மார்க்கங்களும் மனிதனை ஒரே எல்லையிலேதான் கொண்டு சேர்க்கின்றன; எனக்கு எம்மதமும் சம்மதம்; நமது முன்னோர்கள் காட்டியுள்ள எல்லா வழிகளும் நல்வழிகள். நான் எல்லோருடனும்—அவர்கள் எந்தெந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயினும்சரி—ஆண்டவனை வழிபடுவேன்; எல்லா மதத்திலும் கடவுளைக் காணுகிறேன். உலகத்திலுள்ள எல்லா மதங்களின் எல்லா வேதங்களும் ஒரே உண்மையைத்தான் கூறுகின்றன. அவைகளில் எழுதப்பட வேண்டிய இனனும் எத்தனையோ வங்கள் பாக்கியிருக்கின்றன. நாமிருக்கும் இந்த யுகத்திலிருந்து கொண்டு எதிர்கால யுகத்தைக் கட்டுகிறோம். சென்ற யுகத்தில் நிகழ்ந்தவைகளை இந்த யுகத்தின் தீப ஜோதியாக வைத்துக்கொண்டு இனி வரும் யுகத்திற்குள் நுழைவதற்காக ஹிருதயமாகிய கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து வைக்கின்றோம். இறந்த யுகத்தில் பிறந்திறந்த

தீர்க்கதரிசிகளுக்கும் இந்த யுகத்தில் பிறந்திருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் இனிமேல் பிறக்கப்போகிற தீர்க்கதரிசிகளுக்கும்கூட வணக்கஞ் செலுத்துவோம். "எழுமின்! விழிமின்!! எடுத்த காரியம் கைகூடும் வரை சலியாது உழைமின்!!!" என்ற வேதத்தைக் கூறிய மகரிஷியை நாளைப் போற்றுவோம்.

சுவாமி விவேகானந்தரின் மதம் சர்வவியாபிதமானது. "மத சம்பிரதாயத்தை ஒரு சில வைதீகங்கள்—மத குருக்கள் தங்கள் தங்கள் கைக்குள் வைத்தாட்டும்வரை மதமென்பதை கோயில்களில், புஸ்தகங்களில், சடங்குகளுள், விக்கிரஹங்களில்தான்காணுவோம். உண்மையான மதம் இன்னது—கடவுளை வழிபடும் வழியிது வென்று மனித வர்க்கம் தீர்க்கமாகத் தெரிந்து கொள்ளும்போதுதான் சனாதனமான மதம் ஸ்புரிக்கும்; உண்மையாக நாம் பகவானை வழிபட முடியும்.

மனித வர்க்கத்திற்காகப் பிறந்து மனித வர்க்கத்திற்காக இறந்த மகான்களின் கூட்டத்திலே சுவாமிஜி ஒரு வேதவிளக்கு. மனித வர்க்கத்திற்காகச் சேவை செய்வதுதான் மதம் என்று கண்டுபிடித்த பெருமை அவரையேசேருகிறது. தரித்திரநாராயணர்களுக்காக உழைப்பதிலேயே கடவுள் தெரிசனங் காண முடியுமென்றவர் நாம் வணக்கும் சுவாமிஜி. நமது சகோதர ஜனங்களுக்காக நாம் நமது வெறுங்கையை நீட்டுவதைவிட அவர்களை நமது சகோதரர்களாகவே தழுவிக்கொள்ள வேண்டும் என்றவர் விவேகானந்தர். இதே தத்துவத்தைத்தான் இன்று காந்திஜி தமது அனுபவத்தில் அனுஷ்டானத்தில் செய்து வருகிறார். சுயராஜ்ய மடைவதற்காக நாம் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் நாம் நமது சகோதரர்களை நமது எலும்பைப் போலவும், நமது தசையைப் போலவும், நமது இரத்தத்தைப்போலவும் கருதாதவரை பலனளிக்காது.

வேதத்தையும் தேசத்தையும் ஒன்று சேர்த்தவர் சுவாமிஜி. "நெய்யையும் நவதானியங்களையும் ஹோமத் தீயிலிட்டு எரிப்பதைவிட ஏழைகளின் அடி வயிற்றிலே பற்றியெரிந்து கொண்டிருக்கும் பசித் தீயிலே போட்டு அவிர்ப்பாகமாக்கு அப்பொழுதுதான் பகவான் உன் சேவையை மெச்சுவார்; உனக்குத தெரிசனங் கொடுப்பார். சும்மா வெறுமனே வாய்க்குள் ஏதோ மந்திரங்களை முணுமுணுப்பதைவிட—மலையையும், மரங்களையும் நோக்கி ஜெபிப்பதைப் பார்க்கிலும் இதோ நிற்கும் ஏழைகளுக்கு நீ யறிந்திருப்பதைக்கூறு. வேத பூமியாகிய இந்தியா—எத்தனையோ எண்ணற்ற மகான்களின்—தீர்க்கதரிசிகளின் அடிச்சுவடு பட்டுப் புனிதத்துவம் பெற்றிருக்கும் பாரத வர்ஷம், இன்று அடிமைப்பட்டுக் கிடக்கின்றது. எத்தனையோ ஜென்மங்களாக இந்தியன கட்டுண்டு கிடக்கின்றான். அடிமைக்கு இன்பமேது? விமோசனமேது? "ஸ்வதந்திரம், ஸ்வதந்திரம், ஸ்வதந்திரந்தான் ஆத்மாவின் கீத நாதம். ஒவ்வொருவனுடைய ஆத்மாவும் அதைத்தான் பாடிக்கொண்டிருக்கிறது. ஆகையினாலே விடுபடு. சரீரத்தால் விடுபட்டாலன்றி ஆத்ம விடுதலையில்லை. தேசம் விடுபட்டால்தான் சரீரமும் ஆத்மமும் சகலமும் ஸ்வதந்திரம் பெற முடியும். ஹே! இந்தியனே! எவனும் உனக்கு எஜமானில்லை; எவனுக்கும் நீ அடிமையில்லை. உனக்கு நீயே எஜமான்; உனக்கு நீதான் ராஜா. எந்த சர்க்காருக்கும் நீ பயப்படவேண்டியதில்லை; எல்லா சர்க்காரும் உனக்கு பயப்படும்." இதுதான் சுவாமிஜியின் அரசியல் சாஸ்திரம். சமத்துவம், சகோதரத்துவம், ஸ்வதந்திரம் இம்மூன்றுமில்லாத ஒரு நாட்டைச் சுட்டுச் சாம்பலாக்கிவிடு. அஃதிருந்தேன் பூமிதேவிக்குப் பாரமாயிருக்க வேண்டும்.

நாம் வணங்குஞ் சுவாமிஜியின் பூதவுடல் இப்பொழுது நம் மத்தியிலில்லை. அது மறைந்து முப்பது வருடங்களாகிவிட்டன. என்றாலும் அவரது புகழுடம்பை எந்த உலகம் காணாதிருக்கிறது? அவரது இனிமையான குரல், அவரது வேத வசனங்கள் நமது காதுகளில் இன்னும் கேட்கவில்லையா?

"நம்மைச் சூழ்ந்திருந்த காடாந்தகாரமான இருள் நிறைந்த இரவுகள் அநேகமாய்க் கழிந்துவிட்டன. கடூரமான கஷ்டங்கள் நம்மை விட்டு நீங்கிக்கொண்டிருக்கின்றன. இறந்து கிடந்த பிரேதம் உயிர்பெற்று எழுந்திருப்பதுபோல் தோன்றுகிறது. அதோ வொரு சப்தமும் எழுகின்றது.

ஹிமாசலத்திலிருந்து ஒரு குளிர்ந்தகாற்று வீசுகிறது. ஜீவகளையை அக்காற்றுக் கொண்டுவந்து உயிரற்றுக்கிடந்த உடலில் புகுத்துகிறது. ஏதோ வொரு மின்சார சக்தி எங்கும்

கொங்கணராயன் குதிரை!

கொங்கணராயரிருக்கிறாரே அவர் ஒரு உபாத்தியாயர். குதிரையேறிச் சவாரி செய்ய வேண்டுமென்கிற ஆசை வந்துவிட்டது. கையில் நிறையக் காசில்லை. ஒரு குதிரை முட்டை வாங்கி வந்து அதைத் தானும் தனது சிஷ்யப் பிள்ளைகளுமாகச் சேர்ந்து அடைகிடந்து பொறிக்க வைத்து குதிரையாக்குகிறதென்று முடிவு கட்டினார். குதிரை முட்டை வாங்கிவர பையன்களுந் தானுமாக பயணப்பட்டு வெவ்வேறு மார்க்கமாகச் சென்றார்கள். ஒரு பையன் புத்திசாலி. மற்றெல்லோரும் குதிரை மிருகமாகச்சே காட்டிலே தானே முட்டையிடும் என்று காடெல்லாம் லாம் அலைந்தனர். புத்திசாலிப் பையன் காட்டைக் கடந்து ஊருக்குள்ளே நுழைந்தான். வியாபாரியொருத்தன் பெரும் பூசனிக்காய் போட்டு விற்றுக்கொண்டிருக்கக் கண்டு "இது தானே குதிரை முட்டை?" யென்று கேட்டான். வியாபாரி ''ஆம்'' எனக் கூறினான். கையிலிருந்த காசை யெல்லாங் கொடுத்துப் பையன் குதிரை முட்டையை வாங்கித் தலை மீது தூக்கிக்கொண்டு ஓட்டமும் நடையுமாக வந்தான். வழியிலிருந்த மரத்தின்வேர் தட்டிக் கீழே விழுந்து விட்டான். விழுந்த வேகத்தில் பூசனிக்காயும் உடைந்து விட்டது. பக்கத்தில் மரப்பொந்தில் பதுங்கியிருந்த நரி வாலைக் குழைத்துக்கொண்டோடிற்று. பையன் பார்த்தான் குதிரை ஓடுகிறதென்று குதிகால் பிடரியிலடிக்க அவனும் ஓடினான். காட்டில் குதிரை முட்டை தேடியலைந்த குருவும் இதர சிஷ்யர்களும் கண்டார்கள். எல்லோரும் நரியைத் தொடர்ந்தோடினர். நரி யெங்கோ புதருக்குள் மறைந்து விட்டது. அந்த இடத்தில ஒரு கிழக்குதிரை எலும்புந் தோலுமாய்ச் சகப் பிழைக்க நின்றுகொண்டிருந்தது. எல்லோரும் நாலுபுறமும் வளைந்து பதுங்கிப் பதுங்கிப் போய்ப் பாய்ந்து "டபக்"கெனப் பிடித்துக் கொண்டார்கள். அப்புறமென்ன வாத்தியாருக்கு சாம்ராஜ்யமே கிடைத்த மாதிரி சந்தோஷம் பொங்கிவிட்டது. ஏறினார் குதிரைமீது. சிஷ்யர் குழாம் புடைசூழ ஊருக்குள் பவனி போவதென்று குரு மனக்கோட்டை கட்டினார். லகானைப்பிடித்து குதிரையைத் தூண்டினார்; குதிரை அசையவில்லை. அடித்தோட்டினார்; அப்பொழுதும்குதிரையெடுத்தடி வைக்கவில்லை. குருவும் சிஷ்யர்களுமாகச் சேர்ந்தடித்தார்கள்; குதிரையின் உடம்பெல்லாமிருந்து இரத்தந்தான் பாய்ந்ததே யொழியக் குதிரை பாயவில்லை. மூன்று பேரை முன்னே நின்று கடிவாளத்தைத் தொட்டிழுக்கவும் பின்னிருந்து மற்றவர்களைத் தள்ளவும் சொன்னார். அப்பொழுதும் குதிரை அசையவில்லை. ஐயோ! பாவம்! ஜீவனற்ற குதிரை யென்ன செய்யும்?

அந்த மாதிரி வட்ட மேஜைக் குதிரையை இந்தியாவுக்குள் தள்ளுகிறார்கள். அசல் வட்ட மேஜையே ஒரு செத்துப்போன குதிரையாய்ப் போய்விட்ட பின்னால் இந்தக்கழி கூளங்களாகிய கமிட்டிகளால் என்ன காரியமா

பரவுகிறது. குருடர்கள் மட்டுந்தான் அச்சக்தியைக் காணவில்லை. அடிமைக்குத்தான் அதை உணர சக்தியில்லை அதோ நமது தாய்-பாரத மாதா தனது கையைத் தூக்குகிறாள்; நம்மையெல்லாம் அழைக்கிறாள்; விலங்கையசைக்கிறாள். தூங்காதே! இந்தியனே! எழுந்துவா! என்றழைக்கிறாள். இனிமேல் அவள் அடிமையில்லை. அவளைக் கட்டுப்படுத்த எந்த சக்தியாலும் முடியாது. அவளும் தூங்கமாட்டாள்; நம்மையும் தூங்கவிடமாட்டாள். அவளது காலடியில் அடிமை ராக்ஷதன் கிடக்கின்றான் அவனது சவத்தின்மீது நின்றுகொண்டு ஸ்வதந்திர தேவி ஆட்சிசெலுத்துகிறாள். அவளுக்காகச்சுயராஜ்யக் கோயிலைக் கட்டுவோம் வாருங்கள்." இந்த கீதவொலி இந்தியாவில் எந்த மூலையில் கேட்கப் படவில்லை? கண்ணிருப்பவர்களெல்லாம் சுவாமிஜீயின் இந்த தீர்க்க தரிசனம் பலித்து விட்டதைப் பார்ப்பார்கள். காதிருப்பவர்கள் ஸ்வதந்திர கீதத்தைக் கேட்பார்கள். கண்ணிருப்பவரும் காதிருப்பவருமே பாக்கியம் செய்தவர்கள்.

கும்? வெந்த புண்ணில் வேல் சொருகியது போல கொந்தளித்துக் கொதித்துக் கொண்டிருக்கும் இந்தியாவில் இக் கமிட்டிகள் வருவதால் சட்ட மறுப்பு இயக்கம் இன்னும் அதிகமாகவே வளரும். சமீபத்தில் ஹஸரத் மோஹினியின் தலைமையில் கூடிய அகில இந்திய முஸ்லிம் மகாநாட்டில் வட்ட மேஜையில் முஸ்லிம் கோரிக்கைகள் திருப்திகரமாகத் தீர்த்து வைக்கப் பெறாததால் வட்ட மேஜைக் கமிட்டிகளைப் பஹிஷ்கரிப்பது என்று தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். விரும்பப்படாத வட்ட மேஜைக் கமிட்டிகளை இந்தியாவுக்குள் புகுத்தி இந்தியாவுக்கு ஏதோவொரு சப்பும்சவருமான சீர்திருத்தங்களைக் கொடுத்து ஏமாற்றி விடுவதென்பது முடியாத காரியம்; அக்காலம் மலையேறி வெகு காலமாகிவிட்டது. சுதந்திரத்தின் சத்து இன்னது சக்கை யின்னதென்பதை ஜனங்கள் நன்றாய்த் தெரிந்துவிட்ட பின்னால் வெறும் சீர்திருத்தங்களைக் கண்டு ஏமாந்து விடமாட்டார்கள். பிரிட்டிஷ் சர்க்காரின் ஒவ்வொரு சிப்பந்தியும் ஊர் காக்கும் போலீஸ்காரன் முதல் நாடு காக்கும் வைஸ்ராய் வரை தடியையும் துப்பாக்கியையும் தூக்கிக்கொண்டு திரிகையில் கடிநாய்க்கு எறியப்படும் வெற்றெலும்பு போன்ற இந்த சீர்திருத்தத்தை எவன் சட்டை செய்யப்போகிறான்? இந்தியன் ஏமாந்தவனா?

சமீபத்தில் இந்தியா சட்ட சபையில் வைஸ்ராய் வில்லிங்டன் பேசுகையில் "முடியாது" என்கிறார். என்ன முடியாது? இந்தியாவை ஆள முடியாதா? இல்லை இப்பொழுது நடக்கும் சட்ட மறுப் பியக்கத்தை அடக்க முடியாதா? அதெல்லாமில்லை. காங்கிரஸுடன் சமாதானம் செய்துகொள்ளமுடியாதாம். யார் சமாதானம் வேண்டுமென்று இவர் காலைப் பிடிக்கிறார்கள்! சட்ட சபையிலிருக்கும் வெட்கங்கெட்ட அங்கத்தினர்கள் கேட்டிருப்பார்களா? அதற்கு பதில் சொல்லியிருப்பாரா? அவரும் அவரது சிஷ்யர்களுமாகச் சேர்ந்து செத்த குதிரையாகிய கமிட்டிகளையும் அதன் முட்டையான சீர்திருத்தங்களைத் தள்ளு தள்ளென்றாலும் பலிக்காது.

ஏறுதே தீ! தீ!! தீ!!!

எல்லைப் புறத்தில் சாந்தியும்சமாதானமும் நிலவி விட்டதென்று அங்கிருக்கும் சீப்—கமிஷனர் சாகிப் தந்திகளைத் தட்டிய மணியமாயிருக்கிறார். அங்கு நடப்பனவகளை பொய்யோ நிஜமோ எப்படியாவது சொல்லுவதற்கு அவருக்குத்தான் அதிகாரம். வேறு யாரும் உள்ளதை உள்ளவாறுகூடக் கூறக் கூடாது. கமிஷனர் மாத்திரம் கயிறு திரிக்கலாம். ஆனால் அதை ஒரு ஏமாந்த இந்தியன் கூட நம்புகிறதில்லை. அவனது அறிக்கையில் எதைச் சொல்லுகிறானோ அதற்கு நேர்மாறான அர்த்தத்தில் செய்திகளை ஜனங்கள் லக்ஷித்துக் கொள்ளுகிறார்கள். அதுவும் அநேகமாய்த்தவறுகிறதில்லை. ஆனையைக் குத்திச் சொல்லால் மறைத்த குறப்பெண் செய்கையை இந்தக் கமிஷனர் செய்கிறாரென்பதே ஜனங்களின் கருத்து.

எவ்வளவுதான் உண்மையை மறைத்தாலும்—எவ்வளவுதான் திரித்துக் கூறினாலும் ஊர் வாயை மூட உலை மூடி கிடையாது. எல்லைப் புறத்திலிருந்து வீசும் காற்றுக்கூட எத்தனை எத்தனை செய்திகளைக் கொண்டுவருகிறது. தெரியுமா? நாம் செய்யும் சத்திய யுத்தத்திற்கு இயற்கை தேவிகூட தனது ஒவ்வொரு சக்தியாலும் உதவியளிப்பாள்.

எல்வின் பாதிரியார் கூறுகிறபடி எல்லைப் புறத்தில் இராணுவமும் போலீஸும் சேர்ந்து இரட்டை யாட்சி செய்கிறார்கள். 'நிர்தாக்ஷண்யமாய் ஈவு இரக்க மென்பது லவலேசமேனுமில்லாமல் கொடிய—நினைத்தாலும் நெஞ்சு திடுக்கிடக்கூடிய அடக்கு முறைக் கரத்தால் சாதாரண நகர மக்களுடைய வாழ்க்கை கூட பரிதாபகரமா யிருக்கிறதாகத் தெரிகிறது. ஆனால் சட்ட மறுப்போர் தீயை வளர்த்துக் கொண்டு தானிருக்கிறார்கள். தங்களுக்குள்ள சர்வஸ்வத்தையும் அந்தத் தீயில் போட்டுக் கொண்டு தானிருக்கிறார்கள். தீயவிந்து விடவில்லை. மேலும் மேலும் எறிக் கொண்டேயிருக்கிறது. சர்க்காரின் அறிக்கைப்படியே ஒரு மாதத்துக் கிடையில் 5,000 பேர் சிறைப்பட்டிருக்கின்றார்களென்றால் கொஞ்சமா? உண்மையில் 5,000த்தை விட அதிகப் பலியே யேற்பட்டிருக்கும். எல்லைப்புற காந்தி யிட்டதீ, ஏறுதே! எல்லைப்புற மெங்கும் ஏறுதே!

தடியடி தர்பார். : :

டாக்டர்
முத்துலெக்ஷுமி.

தினந்தோறும் தலைவர்களும், நூற்றுக் கணக்கில் ஆயிரக் கணக்கில் தொண்டர்களும் கைது செய்யப்படுவதையும்—அவசரச் சட்ட ஆட்சியை துச்சமென மதித்து ஊர்ஊராய் ஊர் ஜனங்கள் ஹர்தால் நடத்துவதையும் படிக்கிறோம்; பார்க்கிறோம். குதிரைகளிலேறிக் கொண்டு சார்ஜெண்டுகளும் துப்பாக்கியைத் தடியைத் தோளில் வைத்துக் கொண்டு போலீஸ் காரன்களும் தெருத் தெருவாயலைகிறார்கள். சமாதானமாக அமைதியுடன் செய்யும் மறியல் தொண்டர்களை படுபாவி போலிஸார் மூர்ச்சிக்கும் வரை அடிக்கிறார்கள். மண்டையோ, கண்ணோ, காதோ, மர்ம ஸ்தானமோ இன்ன விடமென்று கூடப் பாராமே ஓங்கிய பாரம் ஓரே பாரமாய் அடிக்கின்றனர். இதனால் அநேகர் இறந்து விடுவதாகவும் கேள்விப்படுகிறோம்.

சென்ற 15ந் திகதியன்று நானும் எனது நண்பரொருவருமாக சென்னை எஸ்பிலனேட் ரோட்டுக்குச் சென்றிருந்தோம். அங்கே ஐரோப்பிய கனவான் ஒருவர் கதர் கட்டிய பாவத்திற்காக போலிஸாரால் அடி பட்டதாகக் கேள்விப் பட்டோம். அவர் யாராயிருக்கலா மென்றறிய விரும்பினோம். அதற்காக அவர் சென்றிருந்த ஒய். எம். ஸீ. ஏ. கட்டிடத்திற்குப் போய்ப்பார்த்ததில் திருப்பத்தூர் கிறிஸ்து குல ஆஸ்ரமப் பாதியார் டாக்டர் பாரஸ்டர் பேட்டன் என்று தெரிந்து வருந்தினோம். கிராமாந்திரங்களில் அமைதியாக கிறிஸ்து மகானின் தத்துவத்தைப் போதித்துத் திரியும் ஒரு பாதிரியார் என்ன செய்தார்? கூட்டத்தில் கூட நிற்காமல் தன் போக்கில்போய்க் கொண்டிருந்த ஒரு கடவுளடியாரையும் அடிக்க போலீஸ் காரன்களுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம்? அங்கு நின்றிருந்த சார்ஜண்ட், பாதிரியாரை ஓடச் சொன்னானாம். அதை மீறிப் பாதிரியார் நடந்தே சென்றால் அவரை அடிக்க எந்தச் சட்டம்—அவசரச் சட்டமா? அல்லது ஓட்டச் சட்டமா? இடங் கொடுத்தது. காலிலும், கையிலும், தலையிலும், ஏற்பட்ட காயங்கள் வெறுங் காயங்களா? இரத்தக் காயங்கள். போலிஸாரின் இத்தகைய அடாதசெயல்களை ஹத்து மீறிய அக்ரமங்களை மன்னிக்கவே முடியாது.

இந்திய சமுதாயமே அவமதிக்கப் பட்டாகி விட்டது. பொது இடங்கள், தனி மனிதனுக்குச் சொந்தமான இடங்களில்கூட போட்டிருந்த தேசியத்தலைவர்களின் படங்களைப் பறிமுதல் செய்வதையும் தேசம் சகித்துக் கொண்டிருக்க முடியுமா? எந்த வொரு இந்தியனும் அவன் எந்த மதம், எந்த ஜாதி, எந்த வகுப்பு, எந்த நிறம், எந்தக் கட்சியைச் சேர்ந்தவனானாலும் இறந்து போன ஒரு இந்தியனை கௌரவிக்கக் கடமைப் பட்டிருக்கிறான். நாம் வணங்கும் நாம் போற்றும் நாம் பின்பற்றும் தலைவர்களின் படத்தை அவமதித்தால் தலைவர்களையே அவமதித்ததாகும். சுயமதிப்புள்ள எல்லா இந்தியனும் ஏகோபித்து இதை எதிர்க்கா விட்டால்—தடுக்கா விட்டால் இந்தியர் என்றஜாதியே இல்லாது அழிந்து போகட்டும். அந்த ஸ்தானத்தில் தகுதியுடைய இன்னொரு ஜாதி தோன்றட்டும். ஸ்வபாவத்திலேயே நாடெங்குப் அதிருப்தி யேற்பட்டிருக்கிறது. சரித்திர காலத்துக்கு முன்னும் பின்னும் இப்படி மிருக பலத்தால் அடக்கியாளப் படும் ஒரு வகையான ஜாதியார் இருந்திருப்பார்கள் இனிமே இருப்பார்களென்று சொல்லவும் நினைக்கவும் முடியாது. எவ்வெப் பொழுது இத்தகைய மிருக பலம் உபயோகிக்கப் பட்டதோ அப்பொழுதெல்லாம் அந்தந்த சாம்ராஜ்யமோ வம்ஸமோ அழிந்தே போயிருக்கின்றதன்றி நிலைத்ததில்லை. அவ்வுண்மையை மாற்ற வேண்டுமானால் சர்க்கார் ஜெயம் பெறுவார்களானால் நிச்சயமாய் சரித்திரம் அழித்தெழுதப்பட வேண்டியது தான்.

அந்த மஹத்தான ஆத்மா அழைத்த சப்தம் இந்தியா வெங்கும் கேட்டு விட்டது. இந்தியனை மாத்திர மில்லை மனிதவர்க்க முழுவதையுமே காக்க வல்லவர் காந்திஜீதான் என்பதை இந்தியா நன்கு அறிந்து விட்டது. பேராசைப் பேயைத் துரத்தி பாவ மன்னிப்பளிக்க வந்திருக்கிறார் காந்திஜீ.

இந்தியாவின் இந்த சுதந்திர யுத்தம் சத்தியமானது; நியாயமானது. உலகம் சத்தியத்

கதர் ராணி மீராபாய்.

பிரிட்டிஷ் சாமான்களை வாங்க வேண்டா மென்றும், சுதேசி சாமான்களையே வாங்க வேண்டு மென்றும் இந்தியாவில் யாராவது சொல்லி வருகிறதாக சந்தேகமேற்பட்டாலும் உடனே அத்தகையோர்களை சிறைக்குள் தள்ளி விடுகிறார்கள். இந்தியாவில் சுதேசியை ஆதரித்து, அன்னிய சான்களை பகிஷ்கரிப்பதை ஓர் பெரும் பாபமாக சர்க்கார் கருதுகிறது. ஆனால், இங்கிலாந்திலோ சுதேசியை ஆதரிப்பதுதான் உயர்ந்த புண்ணிய காரியமாகக் கருதப்படுகிறது. இங்கிலாந்தில் சுதேசி சாமான்களுக்கு ஆதரவளிப்பதை சிறந்த தேச பக்தியாகக் கருதும் போது, இந்தியாவில் மாத்திரம் நிலைமை அதற்கு நேர்மாறாக இருப்பானேன்? தற்போது லண்டனிலுள்ள தெருக்களெல்லாம், "பிரிட்டிஷ் சாமான்களை வாங்குங்கள்" என்ற விளம்பரங்களும், பிரசாரமும் எங்கு பார்த்தாலும் மிகவும் கடபுடலாக இருந்து வருகின்றன. ஸ்டேஷன்கள், பஸ்கள் ரயில் வண்டிகள், கடை வாசல்கள் முதலிய சகல இடங்களிலும் "பிரிட்டிஷ் சாமான்களை வாங்குங்கள்" என்ற விளம்பரங்கள் பிரபலமாக இருந்து வருகின்றன. வெளி நாட்டு சாமான்களை பகிஷ்கரித்து, சுதேசி சாமான்களை ஆதரிப்பதால் ஏற்படும் பயனை பிரிட்டிஷார் நன்கு அறிந்து கொண்டிருக்கிறார்கள். இன்று இங்கிலாந்து முழுதும் சுதேசி மணம் ஆச்சரியகரமாக வீசி வருகிறது. இத்தேசத்திலும் கூடிய சீக்கிரம் அத்தகைய நிலைமை ஏற்படுமென்பதில் சந்தேகமில்லை. அத்தகைய சந்தோஷகரமான நிலைமை சீக்கிரம் ஏற்பட அவசாச் சட்டங்களும், தடியடிகளும் மிகவும் உதவியாக இருக்கும்.

நாங்கள் லண்டன் சென்றிருந்த போது எங்கள் கதர் உடைகளின் உயர்வைக் கண்டு பல நண்பர்கள் ஆச்சரியப் பட்டனர். எங்கள் உடைகள் படாடோபமாக இராவிடினும், கைகளால் உயர்ந்த நூல் நூற்று நெசவு செய்திருப்பது அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. உயர்ந்த கதர் உடைகளும், கதர் சால்வைகளும் அவர்களுக்கு மிகுந்த திருப்தியை அளித்தன. லண்டனில் எல்லாம் யந்திரங்களில் உற்பத்தியான சாமான்களாக இருப்பதால் கையால் செய்யப்பட்ட எந்த சாமானும் மிகவும் அதிக விலைக்கு விற்பனையாகிறது.

இவ்வுலகில் முதன் முதலாக யந்திரத் தொழிலில் முன்னேற்ற மடைய ஆரம்பித்த தேசம் இங்கிலாந்தே யாகும். தற்போது வேலையில்லாமல் திண்டாடும் 30 லக்ஷம் பேர்களின் பாரம் தாங்க முடியாது தவிக்கும் தேசமும் அதுதான். எனவே ஏராளமான விவசாயிகள் நிறைந்த தேசத்தைக்கண்டு அதற்கு பொறாமை உண்டாகிறது. கையால் செய்யப்பட்ட சாமான்களின் உயர்வையும், தத்துவத்தையும் இப்போதுதான் பிரிட்டிஷார் அறிந்துகொண்டு வருகிறார்கள். கதர் உடையை இழிவாகக் கூறி மில் துணிகளைப் புகழுபவர்கள், உலகத்திலேயே யந்திர சாதனங்களில் முன்னணியில் நிற்கும் தேசம் படும்பாட்டை கவனித்து உண்மை நிலைமையை அறிந்துகொள்ள வேண்டும்.

ஆகையால், நீங்களெல்லோரும், கையால் நூற்று, கையால் நெய்த சுத்தமான சுதேசி துணிகளையே உடுத்திக்கொள்ள வேண்டும். அவ் வேலையில் இந்தியாவிலுள்ள 7 லக்ஷம் கிராமவாசிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தியாவில் குடிசைத் தொழில்களும், கைத்தொழில்களும் விருத்தியடையும் பட்சத்தில், அத்தகைய நிலைமையைக் கண்டு உலகத்தார் எல்லோரும் ஆச்சரியப் படுவார்களென்பதில் சந்தேகமில்லை.

—இந்தியன் டெயிலி மெயில்.

தையாதரிக்குமானால் நியாய மென்ப தொன்றிருப்பதாகக் கருதுமானால் இந்தியாவுக்கு ஆதரவும் அனுதாபமுங் காட்டட்டும்: காந்தீயத்தை யெதிர்க்க முடியாது; ஜெயிக்க முடியாதென்பதை பிரிட்டிஷ் மந்திரிகளும் உணரட்டும். ஒவ்வொரு இந்தியத்தாயும் தன்னுடைய குழந்தைக்கு காந்தீயமென்னும் செவ்வெண்ணெய் புகட்டுகிறாள். தன்னையும் தன் சந்ததிகளையும் கூட காந்திக்காக அர்ப்பணித்துவிடுகிறாள். இனி வரும் இளம் இந்தியாவை பிரிட்டனால் அடக்கியாள முடியாது. மரியாதையாய் காந்திஜியுடன் சமாதானஞ் செய்து கொள்ளட்டும்.

எல்லைப்புறத்தில் நான் கண்டது: எர்வின் பாதிரியார்

எல்லைப்புறத்தில் நான் ஒரு வாரமாவதிருந்தேனா? போன ஐந்தாம் நாளே அவ்வூர் கமிஷனர் என்னைப் போவென்று சொல்லிவிட்டார். இருந்தாலும் எல்லைப்புறத்திலேயே முக்கியமான இடங்களையெல்லாம் பார்த்துவிட்டேன். பெஷாவர் கோஹத், முதலிய நகரங்களையும், மர்தான், சர்சாதா, உதுமான்செய் முதலிய கிராமங்களையும் பார்த்தேன். அங்குதான் அடக்குமுறை முழு வேகத்துடனுத் தாண்டவமாடுகிறது.

எல்லைப்புறத்துக்குள் செல்லும் எல்லாப் பாதைகளிலும் முள்கம்பியால் வேலியிட்டு துப்பாக்கி பிடித்த சிப்பாய்கள் பாராக் கொடுக்கிறார்கள். கோஹத் நகரத்தைச் சுற்றிலும்கூட முள்வேலி. இராணுவச் சிப்பாய்களும் சோல்ஜர்களும் சாரியடிக்கிறார்கள். அவைகளையெல்லாம்—இத்தனைக் கட்டுக்காவலையும் கடந்து போய் வியாபாரிகள், வக்கீல்கள், மாணவர்கள், செஞ்சட்டையர்கள் எல்லோரையுங் கண்டு பேசினேன். அவர்கள் கூறியதிலிருந்து அடக்குமுறையின் கொடூரம் நெஞ்சை நடுக்குறச் செய்கிறது.

நான் எல்லைப்புறத்துக்குள் நுழையும்போது இப்பொழுதிருப்பதுபோல் கதர்வேஷ்டியும், கதர்ஷர்ட்டும் போட்டிருந்திருந்தால் என்னைப் போக விட்டிருக்கமாட்டார்கள். ஒரு சாயிப்பைப்போலிருந்தேன். ரோந்து சுற்றின சிப்பாய் என்னையுமொரு எல்லைப்புறத்தானாகவே கருதி வழிவிட்டு விட்டான். எல்லைப்புறத்து மண்ணில் மிதித்ததும் நேரே ஒரு இங்கிலீஷ் ஹோட்டலுக்குச் சென்றேன். அங்கே ஐரோப்பிய அதிகாரிகள்தான் அதிகமாக வந்துபோய்க் கொண்டிருந்தார்கள். என்னை எவனுமே சட்டை செய்யவில்லை. வழக்கம்போல் எல்லைப்புறத்துக்குள் வருகிறவர்கள் போகிறவர்களையெல்லாம் வேட்டை நாய்போல் தொடரும் ஸி. ஐ. டி. கூட என்னை மோப்பம் பிடிக்கவில்லை.

மூன்று நாளைக்குப் பின்னால் எப்படியோ நான் எல்லைப்புறத்திலிருப்பதாக உளவு எட்டி ரயிலில் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த ஐரோப்பிய கனவான் ஒருவனைத் தடைப்படுத்தி விசாரணையும் சோதனையும் செய்தார்கள். அவர் எல்வின் இல்லை [illegible]ளையெல்லாம் பிசைந்து பார்த்தாகிவிட்டது. எல்வின் அகப்படவில்லை. அப்புறம் எல்லாம் விசாரித்தாகிவிட்டது என்று கண்டவுடன் நான் கமிஷனர் சாகிபை பேட்டிகாண விரும்பினேன். அதற்கு அம்மகான் என்னைக் கைது செய்து பதிலளித்தார். எல்லைப்புறத்திலிருந்து புறப்படும் முதல் ரயிலில் ஜனவரி 15௳ நடு இரவில் அனுப்பிவிட்டார்.

அங்கு கண்டதைக் கேட்டதைச் சொல்லுகிறேன். அவசரச் சட்ட அரசாங்கமும் இராணுவ அமுலையும் தவிர வேறு அமைதியென்பதையே எல்லைப் புறத்தில உச்சரிக்கக் கூடாது. துப்பாக்கிப் பிரயோகங்களின் முன்னும் தடியடி சாம்ராஜ்யத்தின் மத்தியிலும் அஹிம்சை ஸ்புரித்து நிற்கிறது. இடையினிடையே பட்டாணியர் இயற்கை இரத்தத்தோடூறிய துடுக்கால் பொது ஜனங்களில் சிலர் பலாத்காரத்திலிறங்கியிருந்தாலும் கான் அப்துல் கபூர்கானிடத்திலிருந்து உபதேசம்பெற்ற பயிற்சியடைந்த தொண்டர்கள்—குதாய் கித்மதகர்கள் சாத்வீகத்திலிருந்து கொஞ்சங் கூட நழுவியதில்லை அவர்கள் காட்டியுள்ள சகிப்புத் தன்மைக்கு தமிழ் சத்தியாக்கிரஹி கூடத் தலை குனிய வேண்டும், செஞ்சட்டையருக்கும் மாஸ்கோ செம்படைக்கும் துளி கூட சம்மந்தமில்லை. எல்லையில்லாத—சகிக்க முடியாத அடக்குமுறைக்கும் பட்டாணிய வீரம் நிலைகுலுங்காமல் ஸ்திரமாய் நின்றதை, போற்றாது விட முடியாது.

கிளர்ச்சிக் காரர்களை யடக்குவதில் மாத்திரமில்லை சாதாரண ஜனங்களிடத்திலும் சிப்பாய்கள் மனிதஸ்வபாவத்திற்கு மாறாக நடக்கின்றனர். இராத்திரிகளில் இராணுவம் கிராமங்களில் குறுக்கிட்டுச் செல்லுந் தோறும் பல துராக்கிருதங்களைச் செய்ததாகக் கேள்விப் பட்டேன். அவைகளை மனிதவாயினால் உச்சரிக்கவே முடியாது.

நாலு முறை துப்பாக்கிகள் குண்டுகளைக் கக்கியிருக்கின்றன. இதை மாத்திரம் சர்க்கார் அறிக்கை ஒளிக்கவில்லை. அதனால் விளைந்த

நீங்களாவது கேளுங்களேன்?

ஏறக்குறைய மூன்று மாதங்களாக விடேன் தொடேன் எனக் கேட்டும் சவசண்டித்தன மாய் ஸ்ரீமான் ப. சி. சோமசுந்தரம் பிள்ளை மேற்றான் சுடுக்காட்டுப் பணத்தை வைத்துக் கொண்டு கணக்குக்கூட கொடுக்க மாட்டே னென்கிறார். நாமும் மரியாதையாகக் கேட் டோம்; சுடச்சுடக் கேட்டோம்; வெட்கம் வரக் கேட்டோம். பிரயோஜன மில்லை. செத்த மாட்டில் சிற்றெறும்பு கடித்தது போல் அவை யொன்றும் அவரது தடித்தோலில் தைக்க வில்லை. சீ! இதென்ன மானங் கெட்ட வாழ்க் கை! ஊரார் சொத்தை—சுடுகாட்டுப் பணத் தைக் கொண்டு விடுகட்டிக் குடியிருக்கலாமா? வாய்க்கரிசியை யுண்டு வயிறு வளர்க்கலாமா? கொள்ளிக்காசில் குடித்தனஞ் செய்வதா? செச் சே! இப்படியும் ஒரு பிழைப்பா?

மலையிடிந்து விழுகையில் சுண்டைக்காயை அண்டைக் கொடுத்தது போல் ஒரு சுண்டைக் காய் வந்தது. "இதோ வந்து விட்ட" தென் றார். மடானருத்திரனுக்கு முன்னோடியான் போல் ஸ்ரீமான் பு. மாணிக்கஞ் செட்டியார் வருகிறாரே சரிதான் கணக்கு வந்து விடுமென் றெண்ணினோம். ஏனெனில் செட்டியாரை நம் பலா மல்லவா? ஆனால் இவர் வேறு செட்டியா ராம். நம்பிக்கைக்கும் நாணயத்துக்கும் இவருக் கும் வெகு தூரம். இருந்தாலும் செத்துப் பிற ந்த தென்னிந்தியர் சங்கத்திற்கு இந்தச் செட் டியாரும் காகாசும் பணந்தண்டல் செய்கிறவர் களில்லையா? அந்த உத்தியோக தோரணையில் அவருக்கும் சுடுகாட்டுக்கும் நெருங்கிய சம்மந்த மிருக்கிறது. ஆதலால் சுடுகாட்டுப் பணத்தை யும் ஸ்ரீமான் பு. மா. செட்டியார் தண்டல் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

உள்ளூர் பத்திரிகாசிரியர்களை உதவிக் கழைத்தோம் "ஊழியன்" சுடுக்காட்டுக்கும் சுடுகாட்டு வீரனுக்கும் ஊழியக்காரன் என்று சும்மா இருந்து விட்டான். பர்மா நாட்டான் "நமக்கென்ன? ஹிந்து மயானந்தானே! ஒரு கிறிஸ்தவனுக்கும் முஸல்மானுக்கும் ஹிந்து மயானத்தில் என்ன வேலை?" என்றோ தான் காரியதரிசியாயிருக்கும் சங்கத்தலைவரின் தம்பி யாச்சே, சங்க மெம்பராச்சே என்று சலுகை காட்டுகிறாரோ பேசாமடந்தை போலிருந்து விட்டார். சுதேசத்தைப் பரிபாலிக்கிறவர் இருக் கிறாரே அவர் கேவலம் சுடுகாட்டைக்காப்பாரா? மேலும் அரசியலில் புதுசு புதுசாய் இறங்கி சர்க்காரையே ஒரு கை பார்க்கிறதால் சுடு காட்டையும் ஸ்ரீமான் சோமசுந்தரம் பிள்ளை யையும் பார்க்க நேரமில்லையோ என்னவோ? அப்புறம் "சுதந்தரன்" அவருக்கு எல்லாம் சுதந்தரந்தான் ஐந்து வருஷத்துக்கு ஒருமுறை சுடுகாட்டுக் கணக்கு கேட்கவும் அவருக்கு சுதந் தரம் உண்டு போலும். இருந்தாலும் அதாவது அவர் கேட்டாரே! அவ்வளவு தயவாவது பிறந் ததே அதை நாம் பாராட்டுகிறோம்.

இனி இவர்களால் பிரயோஜன மில்லை. ஊரார்தான் கேட்க வேணுமென்கிற நிலைமை க்கு வந்து விட்டது. ஆனால் ஊர் கூடிச் செக் குத் தள்ளுவதும் ஆகாத காரியம். ஆகவே ஊரில் குறிப்பிட்ட சில பெரிய மனிதர்களையா வது உதவி கேட்கலாமா? கணக்குக் கேட்கச் சொல்லலாமா? என்ற சிந்தனை பிறக்கிறது.

இவ்வூர் அந்தப் பிரமுகர்களான ஸ்ரீமான் கள் ஆத. நாகலிங்கத் தேவர், நரசிம்ம ஐய்யர், ஸி. கே. தம்பி, எஸ். பி. எஸ். மணி ஐயர், பி. ஸி. ஷண்முகம் பிள்ளை, சுப்பையா பத்தர், முத லிய பெரியார்கள் இக் கணக்கு விஷயத்திலும் சிறிது கவனஞ் செலுத்துவது நலம். அவர்கள் கூடி ஸ்ரீமான் பிள்ளையைக் கூப்பிட்டுக் கணக்கு கேட்கட்டும். அப்பொழுதும் மறுத்து விடுவா ரானால் மௌனஞ் சாதிப்பாரானால் அதற்கு மேல் செய்ய வேண்டிய வேலையை அடுத்த இதழிலோ அல்லது அதற்கடுத்ததிலே கூறு வோம். இதனிடையில் இவ்வூர் ஹிந்துப் பிர முகர்கள் என்ன செய்யப் போகிறார்கள் பார்ப்போம்.

பலனை—ஏற்பட்ட நஷ்டத்தைக் கூற வில்லை. கோரம்! இரத்தக் களரி! வேறென்ன சொல்லட்டும்.

எல்லைப்புறத்துக்குக்கொடுக்கும் சீர்திருத் தம் வெற்றுச் சமாதானம் சுதந்திரத்தின் நிழல் கூட இல்லாத வெறும் பாலைவனம் போன்றது. அதை ஒரு சுடு குஞ்சுகூட ஒப்புக் கொள்ளப் போகிறதில்லை. —பம்பாய் கிரானிக்கிள்.

Printed & Published By A V. Sellam Pillay at the Desopakari Press, 210,36th Street Rangoon

பதிவுஎண் 245 மலர் 9 இதழ் 55 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. **DESOPAKARI** புதன் ஞாயிறு வெள்ளி வெளியீடு

210-36-வது இரங்கோன், (31—1—32) தை மீ 18உ ஞாயிற்றுக்கிழமை,

துளி குறையாத சுயராஜ்யம்!

துணி வெளுக்க மண்ணுண்டு—எங்கள் முத்து
தோல் வெளுக்கு சாம்ப ருண்டு [மாரி
மணி வெளுக்க சாணை யுண்டு ,,
மனம் வெளுக்க வழி யில்லை ,,
பிணிகளுக்கு மாற்றுண்டு ,,
பேதமைக்கு மாற்றில்லை ,,

—கவியரசன்.

இந்தியாவில் இவ்வளவு தீ வளர்த்திருக்கிறோமே எதற்காக? ஜார்ஜ் சக்கிரவர்த்தியின் தலை மீதிருக்கும் கிரீடத்தை யெடுத்து காந்திஜீக்குச் சூட்டவா? இல்லை வில்லிங்டன் வேண்டாம் வித்தல்பாய் தான் வைஸ்ராயாக வேண்டு மென்பதற்காகவா? என்கிற கேள்விகளைக் கேட்டு விட வேண்டும். சர்வ தடாபரனுன மகாத்மாவே இந்தியாவின் ஏகசக்ராதிபதியாகி விட்டாலும், அரசியல் நிர்வாகத்தில் ஒப்புயர்வற்ற வித்தல்பாயே முதன் மந்திரியானாலும் இந்தியாவின் இப்பொழுதைய போராட்டம் முடிவடைந்து விட வில்லை. இந்தியாவின் அரசியலில் மாற்றம் ஏற்படாதவரை வெறும் ஆள் மாற்றத்தால் மாத்திரம் சுதந்திரத்தின் சத்தாவது சுபராஜ்யத்தின் லட்சியமாவது கிடைத்து விட்ட தென்று எந்த வொரு இந்தியனும் ஏமாந்துவிட மாட்டான். இந்தியாவின் அரசியல் பொறுப்பு முழுதும் இந்தியர்கள் கையில்-இந்தியப் பிரஜைகளின் கையில் மாற்றப்பட்டாக வேண்டும். இந்தியா வெங்கும் ஜன நாயகத்தின் ஜோதி பிரகாசிக்க வேண்டும். இந்தியாவின் ஒவ்வொரு ஏழையும் ஒவ்வொரு பிரபுவும், ஒவ்வொரு பிச்சைக்காரனும் கூட இந் நாட்டு மன்னனாக விளங்க வேண்டும். அப்பொழுது தான் இப் போராட்டம் அடங்கும். அதுவரை இந்தியனுக்கு ஓய்வு ஒழிவில்லை; பூரண சுயராஜ்யத்தின் மணங்கமழாது. காந்திஜீ இந்தியாவின் சக்கிரவர்த்தியாகி இந்திய அரசியல் பொறுப்பு பிரிட்டிஷ் பார்லிமெண்டின் கையிலிருந்தால் அவரால் என்னாகும்? இந்தியாவின் வைஸ்ராயாக வித்தல்பாய் வந்து வெள்ளை மண்டபத்திலிருக்கும் இந்திய மந்திரி சர் சாமுவேல் ஹோருக்கு கணக்குச் சொல்ல வேண்டியவரா யிருந்தால் அவரால் என்ன பலன் கிடைக்கும்? காந்திஜீயானாலும் வித்தல்பாயானாலும் இந்திய ஜனங்களுக்கு ஜவாப்தாரியாக இராதவரை எந்த வொரு அரசியல் அமைப்பும் பிரயோஜனப்பட போகிறதில்லை. நாம் ஆரம்பித்திருக்கும் இப் போராட்டம் ஆள் மாற்றத்திற்காக வில்லை; அரசியல் மாற்றத்திற்காகவே யென்பதை மறந்து விடக்கூடாது. எத்தகைய அரசியலை ஜனங்கள் வேண்டுமென்கிறார்கள்; எதற்காக காங்கிரஸ் மகாசபை இவ்வளவு ஆட்களையும் இவ்வளவு பணத்தையும் பலி கொடுக்கிறது என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிந்திருப்பதைவிட நம்மையாளும் சர்க்காரோ நன்கறிவர் சரி அது தான் என்ன? கொட்டிக் கொட்டி யளக்காமல் ஒற்றை வரியில் கூறுவதானல் அது தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினிட மிருக்கும் இந்தியாவின் பொறுப்பாட்சியை துளிகூட தொடர்பில்லாமல் இந்திய ஜனங்களிடத்தில் கொடுத்து விடுகிறது. ஜனங்கள் தங்களுக்குள் தேர்ந்தெடுத்த மந்திரிகளைக் கொண்ட சபைகளையமைத்து ஜன நாயகமாக ஆளுவது.

அப்படியானால் ஜன நாயகத்தின் முக்கியமான அம்ஸம் என்ன? வாக்குரிமை. வயது வந்த ஒவ்வொரு ஆண் மகனுக்கும் பெண் மகளுக்கும் வாக்குரிமையிருக்க வேண்டுமென்று காங்கிரஸ் விரும்புகிறது. காங்கிரஸின் ஏக பிரதிநிதியாக லண்டன் சென்ற காந்திஜீயும் இதைத்தான் வட்டமேஜையில் கூறினார். அவ்வாறு வாக்குரிமை பெற்ற இந்தியர்களனைவரும் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளடங்கிய சபையும் அச்சபைக்குள்ளடங்கிய நிர்வாக சபையுமிருந்து ஒரு குறிப்பிட்ட காலவரை மறைவரை ஆட்சி செலுத்தினால் எந்தவொரு கவர்னரும், வைஸ்ராயும் தன்னிஷ்டம் போல் ஏதேச்சாதிகாரமாய் ஆள முடியாது. ஒருதனி மனிதன் தானிட்டதே சட்டமாய் 33 கோடி மக்களின் கோரிக்கையைக் காலடியிலிட்டு மிதித்துவிட முடியாது. சட்டமும் அதன் தாதுப் பொருளுக்கேற்ப தனது முழுபலத்தையும் காட்டும். இதோ இந்த இங்கிலீஷ்காரர்களையே யெடுத்துக் கொண்டு பார்ப்போம். அவர்களுக்குள் ஒழுங்குக் கட்டுப்பாடு மில்லா விட்டால் அவர்களால் சூரியன் அஸ்தமனமாகாத ஒரு சாம்ராஜ்யத்தை யடக்கியாள முடியுமா? அரசியல் நிர்வாகத்தில் மாத்திரமில்லை, இராணுவத்திலும் கூட ஒரு இங்கிலீஷ் சோல்ஜர் தனது தளபதியின் கட்டளை கடவாது கீழ்படிந்து நடப்பதில் ஒப்புயர்வற்று விளங்குகிறான். ஆனால் சென்ற வட்டமேஜையில் கூறப்பட்டபடி ஒரு ஆங்கில சிப்பாய் இந்திய சேனாதிபதிக்குக் கீழ்படிய மாட்டான், என்று கருதுவது ஒரு வழியில் இராணுவக் கட்டுப்பாட்டின்படி குறையே யாகும்; வழு வென்றே சொல்லலாம், எப்படியானாலும் இந்தியச் சேனாதிபதிக்கு பிரிட்டிஷ் சிப்பாய் கீழ்படிந்தாலும் படியா விட்டாலும் இராணுவம், பொக்கிஷம், அயல் நாட்டு சம்மந்தம் முதலிய முழு ஆதிக்கம் வாய்ந்த பொறுப்பாட்சி கிடைக்காதவரை பூரண சுயாட்சி பெற்றதாக அர்த்தமில்லை. வைஸ்ராயும் அவர் எவராயிருந்தாலும் இர்வினோ, வில்லிங்டனோ, வேறுயாரானாலும்சரி அவசரச் சட்டங்களால் ஆளுவது நிற்கமாட்டாது. மகாணசுயாட்சியோ அல்லது ஐக்கிய அரசியல் திட்டமோ போதுமென்று வட்டமேஜையின் பிற்பட்ட வேலைகளில் ஈடுபடுகிறவர்களும், துணை செய்கிறவர்களும் ஏகாதிபத்திய வாஞ்சையாளர்களின் கைப் பொம்மைகளாகவே யிருக்கின்றனர்.

நாயா? நாவடக்கிப் பேசு!

இந்தியா சம்மந்தமாக சமீபத்தில் இந்தியா மந்திரி சர் சாமுவேல் பேசுகையில் "நாய்கள் குலைத்தாலும் யாத்ரீகன் போய்க் கொண்டேயிருக்கிறான்" என்று கூறியதைக் கேட்க நெஞ்சு துடிக்கிறது. இந்தியன்—ரோஷமுள்ள எந்த இந்தியன்—சுயமதிப்புள்ள எந்த இந்தியன் இந்தப் பேச்சைக் கேட்டு இரத்தம் துடிக்காதிருக்க முடியும்? இந்தியாவில் நடக்கும் சத்தியாக்கிரக சட்டமறுப்பியக்கத்தையும் இரத்தஞ் சிந்தும் புரட்சி யியக்கத்தையும் பற்றி வியாக்கியானஞ் செய்து விட்டு முடிவில் நாய்கள் குலைத்தாலும் யாத்ரீகன் போய்க் கொண்டுதானிருக்கிறான்" என்றதின் அர்த்தமென்ன? இந்தியர்கள் பிரிட்டிஷ்காரர் இருவரில் எவர் நாய்? எவர் யாத்ரீகர்? பொறுப்பு வாய்ந்த ஒரு ஸ்தானத்தில்—அதிலும் இந்தியர்களின் உப்பைத் தின்று கொண்டிருக்கும் இந்தியா மந்திரி இவ்வாறு செங்காங்கடைப் பதங்களை உபயோகித்தால் நாம் என்ன செய்யலாம்? திருப்பிப் பதிலுக்கு பதில் திட்டலாமா? சீ! நாய் கடித்தால் திருப்பி நாயைக்கடிக்கும்பித்தன்செயலல்லவா? ஆனால் அதைவிட வேறு வழியில் பதில் சொல்லலாம். சட்ட மறுப்போர் யாத்ரீகர்கள். ஏனெனில் தேசிய யாத்திரை போகின்றனரல்லவா? ஆகையினால் எவ்வளவு நாய்கள் குலைத்தபோதிலும் நாம் நமது சுதந்திரயாத்திரையாக போய்க் கொண்டு தானிருப்போம் என்று அவர் படித்த ஏட்டையே திருப்பிப்படித்து விடுவோம்.

புதிய அரசியல் அமைப்பில் மந்திரி பதவிக்கோ வேறு உத்தியோகங்களுக்கோ நாக்கைச் சொட்டப் போடுகிறவர்கள்தான் அவ்வாறு செய்ய முடியும். ராமனோ? ராவணனோ? ஆளைப்பற்றி நமக்கு அக்கரையில்லை. பூரண சுதந்திரந்தான் இந்தியாவின் ஏகோபித்த லட்சியம். வேறு எந்தத்திட்டத்தாலும் இந்தியர் திருப்திபடைந்து அடங்கி விடமாட்டார்கள்.

கொடூரமான சோதனைக்குள் தேசம் புகுத்தப்பட்டிருக்கும் போது எந்தவொரு இந்தியனாவது தனக்கு விரிக்கப்படும் மாயா வலைக்குள் சிக்குவானானால் தனதொரு சுய நலத்தைச் சிந்தித்து நாட்டு நலத்தைக்காலடியில் போட்டு மிதித்து நசுக்குவானானால் அவனை அறக்கடவுள் சாய்க்கட்டும். அவன் வேண்டாம். வேண்டவே வேண்டாம்.

யௌவன இந்தியா. : :

மாஜி இந்தியா மந்திரி
ஸ்ரீ வெட்ஜ்வுட்பென்.

யௌவன இந்தியா எழுச்சி பெற்றுவிட்டது. இந்தியாவின இளைஞர்களெல்லாம் இனி மேல் அடக்க முடியாத நிலைமைக்கு வந்துவிட்டார்கள். இளம் இந்தியாவின் உள்ளமெல்லாம் சுதந்திர வெறியால் பற்றிப் பிடித்துவிட்டது. சென்ற சட்ட மறுப்பில் இளைஞர் இயக்கம் செய்த வேலையை நாம் அறியோமா? அதைவிட வேறு அத்தாக்ஷியும் வேண்டுமா?

சின்னச் சின்ன பையன்களும் மரப்பாம் பொம்மைகளையும் மணல் வீடு கட்டியும் விளையாடுகிற பெண் குழந்தைகளுங்கூட பிரிட்டிஷ் சர்க்காரின் சட்டங்களை மீறத் துணிந்து விட்டார்கள். வானர சைன்யம் செய்த கிளர்ச்சியும், பஜனைக் கோஷ்டியார் மூட்டிய விந்தலைத் தீயும் ஏகாதிபத்தியத்தையே கிறுகிறுக்கச் செய்துவிட்டது. அடக்கு முறைக்கு எவ்வளவு எல்லையுண்டோ அதுவரையும், எவ்வளவு வேகமுண்டோ, எவ்வளவு கொடூரமிருக்குமோ அவ்வளவையும் பார்த்தாகிவிட்டது. பொது ஜனங்களை எவ்வளவு ஆத்திரங்கொள்ளச் செய்யலாமோ அவ்வளவையும் செய்தாமே என்ன பிரயோஜனமாயிற்று? சாத்விகத்திலிருந்து அஹிம்ஸைக் கோட்டிலிருந்து கொஞ்சங்கூட ஜனங்கள் விலகவேயில்லை. பொதுஜன அமைதி வேண்டுவதுதான்; நாட்டில் ஒழுங்கும் சட்டமும் நிலவச்செய்யவேண்டுவது அத்தியாவசியந்தான். எவ்வளவுக் கெவ்வளவு வலிய காத்தினால் அமைதியை நிலவச்செய்ய வேண்டுமென்று அபேக்ஷிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அதே இடத்தில் அபாயமும் ஆபத்தும் அதிகரிக்கின்றது. வெறிமூண்ட இந்த கிளர்ச்சியை, காடாந்தகாரமான இத்தீயைச் சரீர பலத்தால் கொடூரமான அடக்கு முறையால் அடக்கி விடலாம், அவித்து விடலாமென்று குருட்டுத்தனமாய் நம்பும், நினைக்கும் கொள்கையாளர் இன்னும் இருக்கவே செய்கின்றனர்.

இதுவொரு குறுகிய நோக்கம்; பிற்போக்கான கொள்கை. சரித்திரத்தில் இதற்கு ஆதாரமே கிடையாது! ஆளப்படும் குடி ஜனங்களின் நன்மைக்கும் நல்லெண்ணத்துக்கும் உத்திரவாதமாக ஆளுவது என்ற ராஜ நீதியை அடியோடு புறக்கணிப்பதாகும். நாட்டு மக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெறமுடியாத அரசாங்கம் இருந்தென்ன தொலைந்தென்ன? ஆனால் அதை அடைவதற்கு அரசாங்கத்தினிடமும் பொறுமையும் சகிப்புத்தன்மையும் இல்லாமல் தீராது. நம்பிக்கையைத்தான் நாம் தேட வேண்டும். அதுவும் இலகுவில் பெற்றுவிடுவதில்லை. முதல் வட்டமேஜை வெற்றிபெற்றதென்றால் அது இந்த இடத்திலேதான். சமாதானத் தூதுவர்கள் இந்தியாவுக்குத் திரும்பி நம்பிக்கைச் சுடர் கொளுத்தினார்கள். அப்படித்தான் இப்பொழுதும் செய்ய வேண்டும். சமாதான முயற்சி பலிதமடைய வேண்டுமானால் இரண்டாவது வட்டமேஜையிலேற்பட்ட ஒத்துழைப்புக் குணத்தை விருத்தி செய்து சுயேச்சை—சுதந்திரத்தை வளர்க்க வேண்டும். வட்டமேஜைப் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் பரஸ்பர நம்பிக்கை கொண்டு இரண்டு தேசங்களுக்குமிடையிலுள்ளவற்றை யுணர்ந்து நம்பிக்கைப் பிரசாரஞ் செய்யும்படி தூண்டப்படவேண்டும். உடனே—திடீரென எழுச்சியுற்ற இளம் இந்தியாவின் நம்பிக்கையைப்பெற பிரிட்டிஷ் மந்திரிகளால் முடியாவிட்டாலும் முடியாதென்று தோன்றினாலும்—இந்தியர்களைக் கொண்டே செய்ய முயற்சிக்க வேண்டும். இத்தகைய தூதுவர்கள் நம்மிடம் எதைக் கேட்கிறார்களோ—எதைக் கொடுப்பதாக நாம் அவர்களிடம் கூறுகிறோமோ அதைவிட அதிகமாகவே இந்திய இளைஞர்கள் கேட்பார்கள் என்பதைக் கட்டு மறைத்துவிடக் கூடாது.

மகாநாட்டினாலேயே நம்பிக்கை பெற முடியுமென நாம் நம்பினால் சென்ற மகாநாட்டைப்போல் பிரதிநிதித்துவம் வாய்ந்த இன்னொன்று கிடைக்கப் போகிறதில்லை.

ஜேம்ஸ் அரண்மனை தன்னுணர்ச்சியிழந்து அவ்விடத்தில் யுத்த நாட்டம் தலை தூக்குமானால்—மிருக பலத்தால் அடக்குவதுதான பரிகாரமென்ற மூட நம்பிக்கை பிறக்குமானால் அவ்விடத்திலேதான் அபாயம் ஆரம்பமாகிறது. சண்டையைத் துவக்குவது சுலபம்; முடிப்பது மஹா கஷ்டம். இந்தியாவை நேசிக்கும் ஒவ்வொருவனும் சமாதானமாய் அதை யெப்படி யடையலாம் என்பதைத் தவிர

வேறு சிந்திக்கவேகூடாது. அறிவாகிய அஸ்திவாரத்தின்மீதும், நம்பிக்கை நல்லெண்ணமாகிய கற்களைக்கொண்டும்இளைஞர்களாகிய சிற்பிகள் இந்தியாவின் அரசியல் கட்டிடத்தைக் கட்டினால்தான் எந்தவொரு அரசியலும் பலம் பெறும்; எந்தவொரு திட்டமும் சாத்தியமானதாகும். உண்மையிலேயே பிரிட்டிஷ் பொது மக்கள் நன்மையடைய வேண்டுமானால் இந்திய இளைஞர்களை சட்டை செய்திருக்கவேண்டும்.

முஸ்லீம் பிரதிநிதிகள் எல்லோரிலும் யுவ பேகம் ஷா நவாஸைப்போல் ஆழ்ந்த நிதானமாய்ப் பிடிவாதமாய் யார் பேசினார்? டாக்டர் ஷாபட் அஹமத் கானைவிட படிப்பாளி அறிவாளி யென்று எவரைச் சொல்லலாம்? சீக்கியத்தலைவர்களில் சர்தார் உஜ்ஜல் சிங்கைப் போல் எவருக்கு வாலிப இரத்தம் துடித்தது. தன்னுடைய சமூகத்திற்கேயானாலும் அவரைப்போல் எவர்உரிமை வாதம் செய்தார்? தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்காக இளைஞர் டாக்டர் அம்பேத்காரைப்போல் எவர்வாதஞ் செய்தவர்?

இவர்களை யெல்லாம்விட காங்கிரஸ் பிரதிநிதியாக பண்டித ஜவஹரிலால் நேரு வந்திருந்தால்-தெரிந்தெடுக்கப் பட்டிருந்தால் இந்திய இளைஞர்கள் வேண்டும்—இந்தியாவின் அதிகப்படியான நன்மைகள் விவாதிக்கப் பட்டிருக்கும். ஆனால் துரதிருஷ்டவசமாக அவர் வாவில்லை. வந்திருந்தவர்கள் பேசியதில் ஆழமான சனாதனமான தேசிய உணர்ச்சியில்லவே யில்லை. இந்தியர்களுக்கே பொதுவான தத்துவம் ஸ்புரிக்க வில்லை.

சுதந்திரத்தின் தோற்றம் விடுதலையின் ஞானம் இந்தியாவில் இனிமேல்தான் உதயமாக வேண்டு மென்பதில்லை. இளைஞர்களுக்குள் பிளவு கிடையாது. வகுப்பு வாதம், ஜாதிப் பிளவு, மத வேறுபாடு, இதுகளெல்லாம் இளைஞர்களுக்குத் தெரியாது. இளம் மாணவனும், இளந்தொழிலாளியும்,யுவதிகளும்சுதந்திர ஜோதியைத்தான் காணவேணு மென்கிறார்கள்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியா ஒரு கூட்டாளியாய்—நண்பனா யிருக்கவேணுமென்று பிரிட்டிஷ் பிரஜைகள் விரும்பினால் இளம் இந்தியாவைப் பார்க்கட்டும். அவர்களது ஹிருதயத்திலேதான் தேசிய சுதந்திரத்தின் இளம்இரத்தம் வேகமாக ஓடுகிறது. அவர்களால் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும்.

—டெயிலி ஹெரால்டு.

வெட்கம்! வெட்கம்!!

எமன், காலன், தூதன் போலே மூன்று கமிட்டிகள், வட்டக் கமிட்டிகள் இல்லையில்லை வட்டமேஜைக் கமிட்டிகள் நேற்று முன்தினம் இந்தியாமண்ணில்வந்திறங்கின. தலைவாசலிலேயேதட்டிவிட்டது. முட்டிவிட்டுக்குனியும்ஸ்வபாவமுள்ள சர்க்கார்தலைதட்டியும் இந்தியசுதந்திரஉணர்ச்சிக்குத்தலைகுனிந்து போகஇஷ்டமில்லை. ஆனால் அதன்பாடு சைமன்பட்டபாட்டைவிட விபரீதமாய் மோசமாயிருக்குமென்றுசொல்ல நமக்கென்ன ஜோசியம் தெரியுமா? இருந்தாலும் முதன் முதலில் காலடி வைத்தவுடனேயே பம்பாயில் ஹர்தால் பஹிஷ்காரம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். ஏழு நாளைக்கு இக்கமிட்டிகள் முகத்திலேயே விழிக்கிறதில்லை யென்று எல்லா வியாபாரிகளும், பஞ்சுத்தாகர்களும் சங்கத்தார்களும் கடைகளையடைத்து கதவுகளை மூடிவிட்டார்கள். "கருப்புக் கொடிகளால் அலங்கரித்தார்கள் "கம்மமிட்டிகளே! திரும்பிப்போ!" என்று பஜனை பாடினார்கள். என்ற செய்தி யெட்டவில்லை. என்றாலும் அந்த ஆராதனைகளெல்லாம் நடவாதென்று நாம்சொல்லிவிடமுடியுமா?யார் கண்டார்? நடந்தாலும் நடந்திருக்கலாம்.

விரும்பப்படாத இக்கமிட்டிகள் வேண்டப்படாத இந்தச் சந்தர்ப்பத்தில்—இந்தியா முழுதும் இரணகளமா யிருக்கையில் இந்திய சர்க்கார் சாத்விகத் தொண்டர்களை தடியாலடித்தும் துப்பாக்கியால் சுட்டும் இரத்தங்களறி கொண்டாடுகையில்—ஒரு கட்சியார் தங்களது ஸ்தானத்தையும் ஆட்சியையும் நிலைநிறுத்தவும் இன்னொரு கட்சியார் தங்களது பிறப்புரிமையை—சகலரும் தழுவும்—விரும்பும் தேசிய சுதந்திரத்தை யடையவும் போராடிக்கொண்டிருக்கையில் இக்கமிட்டிகள் இந்தியாவுக்குள் நுழைந்ததே வெட்கம்.

அழையாதவீட்டுக்கு நுழையாதவிருந்தினராய் வந்ததே வெட்கம். அதிலும் இந்தியர்கள் சீர்திருத்தத்திற்கு லாயக்குடையவர்களா வென்று விசாரித்தறிய வந்ததாகக் கூறுவதும் வெட்கம். உதட்டில் சீர்திருத்தமும் கையில் அவசரச் சட்டங்களும், தடி, துப்பாக்கிகளும் வைத்துக்கொண்டிருக்கும் வில்லிங்டன் ஆட்சியில் எதுதான் வெட்க மில்லை? வர்த்தகர்கள் கமிட்டிகளின் முகத்தில் கதவடைத்தது தானா ஒரு வெட்கம்?

புயலடிக்கிறது உஷார்! : :

பண்டித மாளவியா.

தனி மனிதனுக்கேற்படுவதுபோல் இவ்வுலகத்திற்கே ஒருகண்டம் ஏற்பட்டிருக்கிறது. பணக்கார தேசங்கள்கூட பணக் கஷ்டத்தால் தத்தளிக்கின்றன; அநேகம் ஆடிக்கொண்டிருக்கின்றன. இப்புயலினூடே இந்தியா என்ன செய்யும்? இந்தியாவின் விளைச்சற் பொருளை வெளிச்செல்ல விடாமல் தடுப்பதற்கோ இந்தியாவுக்கு சக்தி கிடையாது. சர்க்கார் கையாண்டு வரும் சகிக்க முடியாத அடக்குமுறையால் வியாபார பொருளாதாரம் மாத்திரமா சாதாரண வாழ்க்கைகூட ஆபத்திலிருக்கிறது. முடிவு என்னாகும்? எவ்வளவு காலம்பிடிக்கும்? என்று இப்பொழுது ஒன்றும் சொல்ல முடியவில்லை. இதனால் தேசியசிக்கன வாழ்க்கையை எப்பொழுதுமில்லாத நிலைமையில் கையாள வேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கிறோம்.

ஒவ்வொரு இந்தியனும் என்ன செய்ய வேண்டும்? அரசியலைப்பற்றி அவனவன் அபிப்பிராயம் எதுவாயிருந்தாலும் தேசப் பொது நலத்தைக்குறித்து அவனவன் என்னென்ன கொள்கைகொண்டிருந்தாலும் தனியொருசுய நலம் சம்மந்தப்பட்டமட்டிலாவது சாச்வதமாகவில்லாது போனாலும் தற்காலிகமாகவாவது எவ்வளவு சிக்கனமாக வாழமுடியுமோ—எவ்வளவு செலவைக் குறைத்து ஜீவிக்க முடியுமோ அவ்வளவு அளவுக்குக் குறைத்து எளிய வாழ்வு வாழவேண்டும். அவசியமென்றேற்படுவதை—இல்லாது தீராது என்று தோன்றுவதை மாத்திரம் வாங்கி ஒவ்வொரு ரூபாயின் ஒவ்வொரு தம்படியையும் மீதப்படுத்த வேண்டும். இனி வரும் இரண்டொரு மாதங்களில் எளிதாவது பணம் கிடைக்கும் எந்தத் தொழிலிலாவது லாபமடையலாமென்று நம்பினால் நிச்சயமாய் ஏமாற்றமேயடைவீர்கள். கையிலுள்ள ஒவ்வொரு காசையும் சிக்கனஞ் செய்யுங்கள்.

இந்தியா செல்வாதாரத்திலும் அரசியலிலும் கண்டிப்பான சோதனைக்குஆளாகியிருக்கிறது. நாம் இந்நெருக்கடியை நீந்திக் கடக்க வேண்டுமானால் புராதன காலத்தில் நமது முன்னோர்கள் வாழ்ந்த எளிய வாழ்க்கைக்குச் செல்லவேண்டும். ஆடம்பரம், டாம்பீகமெல்லாவற்றையும் விட்டு உயிர் வாழ்க்கைக்காகவே வாழுவது என்ற சிந்தனைக்கு வரவேண்டும். காலத்திற்கேற்ற கோலமும், வரவுக்குத் தக்க செலவும் செய்வதில் இறங்கவேண்டும். சிக்கனப்படுத்திய ஒவ்வொரு தம்படியும் இலாபம். உங்களுடைய செல்வாதாரத்தைப் பலப்படுத்தி நாட்டில் இப்பொழுதிருப்பதற்குமேல் வறுமை வந்து விடாமல் தற்காத்துக் கொள்ளுங்கள்.

ஒரு பெரிய அரசியல் சுழற்சியிலும் நாம் அகப்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆயிரம் பல்லாயிரக் கணக்கில் நமது சகோதரர்களும் சகோதரிகளும் சிறைக் கம்பிகளுக்குள் அடைபடுகிறார்கள். உயிர் வாழும் திர்க்கதரிசியான மகாத்மா காந்தி எரவாடா சிறைக்குள்ளே கிடக்கின்றார். நமது தாயை—பிறந்த பொன்னாட்டை விடுவிக்க வேண்டுமென்று நாமனைவரும் விரும்புகிறோம். அதற்காக எவ்வளவோ பலி தியாகங்கள் செய்கிறோம். எந்த வொருகாரியசித்தி பெற வேண்டுமானாலும் எந்த வொரு வரம் வேண்டுமானாலும் அதற்காக தவஞ்செய்தால் முடியுமென்று நாம் பலமான நம்பிக்கை கொண்டுள்ளோம். இக்காலத்திலும்சரி அக்காலத்திலும்சரி இந்தியா இந்த வொரு நம்பிக்கையை இழந்ததில்லை.

இதைவிட இன்னும் அதிகமாக த்யாகத்தைச் செய்ய முடியுமோ—கஷ்டத்தைச் சகிக்க முடியுமோ—முடியாதோ அதைப்பற்றி இப்பொழுது பேச்சில்லை. ஆனால் இந்தச் சிக்கனமாகிய தேசிய சந்நியாசத்தை கட்டாயம் வரித்துத்தானாகவேண்டும். நமது மகாத்மாவும், நமது மாபெருந் தலைவர்களும், அன்பார்ந்த சகோதர சகோதரிகளும் சிறையிலிருந்து வர—நமது லட்சியமாகிய சுதந்திரம் கிட்டுமட்டும் எந்தவொரு பொருள் இல்லாமல் வாழ்க்கை நடவாதென்று படுகிறதோ அதைத் தவிர வேறு வாங்குவதில்லையென்ற பிரதிஞ்ஞை யெடுத்துக்கொள்ளத்தான் வேண்டும். அப்புறம் சுயராஜ்ய இந்தியாவில் சுதேசப் பொருள்களை இஷ்டம்போல் வாங்கிச் சுகிக்கலாம்.

இங்கிலாந்தில் இளவரசனும், பிரதம மந்திரியும் ஒவ்வொரு பிரிட்டிஷ்காரனும் சுதேசப்

காந்தி கோயில்.

விக்கிரஹ ஆராதனையில் நம்பிக்கையுடையவர்களெல்லாம் தங்கள் தங்கள் இஷ்ட தேவதைகளுக்கோ குல தெய்வங்களுக்கோ வழிபடு கடவுளுக்கோ கோயில் கட்டிச் சிலைவைத்து வணங்குவது வழக்கம். இதை யொரு மத சம்பிரதாயமாகவும், திருப்பணியாகவும் ஹிந்துக்கள் செய்து வருகிறார்கள். இதன் தத்துவத்தைப்பற்றி இங்கு தர்க்கிக்க வேண்டாம். சரியோ சரியில்லையோ வழக்கத்திற்கு வந்துவிட்டது. அந்தமட்டில வைத்துக்கொண்டு பேசுவோம். வணங்குந் தெய்வம் பொதுவானது. வணங்கத்திற்குரிய கோயிலும் பொது ஸ்தானம்; பொது ஸ்தாபனம். எல்லோரும் போய் வழிபடக்கூடிய இடத்திலேதான் அத்தகைய விக்கிரஹங்கள் அமைக்கப்படவேண்டும்; அதுதான் முறை.

மகாத்மா காந்தியை இந்தியாவின் தேசீய தெய்வமாகவோ—சுதந்திரக் கடவுளாகவோ இந்தியர்கள் வணங்குகிறார்கள். ஆத்ம ஞானியாகவும், சத்திய அவதார புருடனாகவும் உலகம் வழிபடுகிறது. இந்தியன் ஒவ்வொருவனும் காந்திஜீயின் படத்தையோ, சிலையையோ வீடுகளில் வைத்துப் பூஜிக்கிறான். எல்லோரும் பொதுவாகச் சென்று வணங்குவதற்கென்று ஒரு பொதுக் கோயில் கட்டப்படவில்லை. நடமாடுந் தெய்வமாக—பிரத்தியக்ஷமாக காட்சி கொடுத்துக் கொண்டிருக்கும் கடவுளாக காந்திஜீ யிருக்கும்வரை அவருக்குத் தனிக்கோயில் என்னத்துக்கு என்று நினைக்கலாம். ஆனால் அது தவறு; அப்படிக் கருதுவது தப்பு என்று நமக்குத் தோன்றுவ

பிரசாரஞ் செய்வது கேட்கவில்லையா! போன வருஷத்தில் மாத்திரம் அன்னியச் சாமான்களுக்காக 165 கோடி ரூபாய்கள் நம் நாட்டைவிட்டுப்போயிருக்கின்றன. இறக்குமதி தீர்வையாக சர்க்காருக்கு 48 கோடி ரூபாய்கள் கொடுத்திருக்கிறோம். இவையெல்லாம் இந்தியாவின் இழந்ததனமல்லவா?

இந்த எனது வேண்டுகோளைப் படிக்கும் ஒவ்வொரு இந்தியனும் எந்த ஜாதி, எந்த மதம், எந்தக் கட்சியைச் சேர்ந்திருந்த போதிலும் சரி தனது சொந்த நலத்தை யுத்தேசித்தாவது சிக்கனமும் எளிய வாழ்க்கையும் கைக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கூட்டோடு கைலாசம்.

கைலாசம் என்பது மோக்ஷ உலகம். சாவுக்குப் பின்னால் அங்கு போகவேண்டுமென்கிற ஆசை ஸ்வபாவத்தில் எல்லோருக்குமிருப்பது சகஜம். அதிலும் இந்த சரீரத்தில் ஆசையும் பற்றுதலுமுடையவர்களுக்கு இந்தக் கூட்டோடு போகவேண்டுமென்கிற ஆசை சிலருக்கு உண்டு. அதே மாதிரி ஆசை இப்பொழுது இந்தியர் எல்லோரையுமே பிடித்து விட்டிருக்கிறது. எங்கேயோ தூரந் தொலையிலே—கண்ணுக்கெட்டாத இடத்திலே இருக்கும்—தான் எப்பொழுதுமே கண்டிராத கைலாசத்திற்கே இவ்வளவு ஆசைப்பட்டால் இங்கேயே சதா கண்ணில் தட்டிக் கொண்டிருக்கும்—எங்கும் காணப்படும் தேசியக் கைலாசமாகிய சிறைக்குப் போக எவ்வளவு ஆசை யிருக்கும்? அங்கு வேண்டிய சுகங்களை யடையலாம்; படிக்கலாம்; அடைய வேண்டிய சரீர, மன ஆத்ம ஓய்வுகளனைத்தையும் அடையலாம் என்று போன வருஷங் கண்ட பின்னால், கேட்ட பின்னால எவன் இந்தக் கூச்சலும் குழப்பமும் மிகுந்த—உப்பில்லை, புளி யில்லை, கா[illegible]க்கு நகையில்லை, தம்பிக்குச் சட்டை யில்லை, தங்கச்சிக்கு பாவாடை யில்லை, குழந்தைக்குப் பாலடை யில்லை—எல்

தற்கு முன்னால் இந்திய சர்க்காரின் எண்ணத்திலே பட்டுவிட்டது. அதற்காக நாம் சர்க்காரை வாழ்த்துகிறோம். ஆந்திர பிரதேசத்தில் மசூலிபட்டணத்தின் பக்கத்தில்பத்லபேனுமா என்னும் கிராமத்தில் ஒருவன் வீட்டில் ஒரு காந்திசிலையைவைத்துவணங்கிவந்தான். அவன் செய்தது சரியில்லையென்று போலீஸார் அச்சிலையைப் பறிமுதல் செய்து தாலூகா ஆபீஸில் வைத்திருக்கிறார்கள். அவர்கள் செய்ததுதான் சரி. தாலூகா ஆபீஸ் பொது இடமாகையால் அதை காந்தி கோயிலாக்கியதைப் பாராட்டுகிறோம். காந்தி கோயிலுக்குப்போய் எல்லோரும் காந்தியை வணங்குவார்கள். சத்தியாக்கிரகமில்லை. சத்தியமாய் காந்தியைக் கும்பிடுவார்கள். இந்த மாதிரி புத்திசாலித்தனமான சட்டத்திற்குச் சட்டமறுப்போர் கட்டுப்படத்தான் வேண்டும் மீறக் கூடாதென்று சர்க்கார் சார்பில் கேட்டுக் கொள்ளுகிறோம். ஏனெனில் இப்பேர்ப்பட்ட விஷயங்களில் நாம் சர்க்காருடன் ஒத்துழைக்கும் பக்கா சர்க்கார் வாலாவல்லவா?

எவன் பத்மாஷ்!

சர்க்காரின் அடக்குமுறை நேற்றிருந்தது போல் இன்றைக்கில்லை: இன்றைக்கிருப்பது போல் நாளைக்கிருக்கப் போவதில்லை. புதுசு புதுசான முறைகள் கையாளப்படுகின்றன. தொண்டர்கள் மீது தண்ணீரை-சாக்கடை நீரையிறைத்தார்கள்; தடியாலடித்தார்கள்; பிரம்பாலடித்தார்கள்; துப்பாக்கியையும் உபயோகித்தார்கள் இவைகளெல்லாவற்றையும் உபயோகித்துக்கொண்டிருக்கிறார்கள். பிரயோசனமில்லை. அவசர அவசரமாக அவசர சட்ட அரசாங்கம் நடைபெற்ற போதிலும் மிஞ்சினால் மூன்று மாதம்; அதுவும் தாண்டினால் ஆறுமாதம். அதற்குமேல் பாச்சா பலிக்க மாட்டாது, இதற்கிடையில் எல்லா இந்தியருடையவும்

லாம் இல்லை இன்னும் இந்த வெளிச் சிறையில் கோட்டையில்லாக் கப்பியில்லாச் சிறைக்குள் கிடந்து மனம் வெதும்பி சரீரம் புழுங்கிச் சாவான்?

இந்தக் கைலாசத்திற்கு இப்பொழுது இந்தியர்கள் தன்னொடு கூட்டோடு மாத்திரமில்லை குடும்பத்தோடு—மனைவி மக்கள், மாமன் மாமி, அண்ணன், தம்பி, அனைவரோடும் போக விரும்புகிறான். வயிற்றுப் பிள்ளை, கைப் பிள்ளை இடுப்புப் பிள்ளை, நடை பிள்ளை, எல்லாப் பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு இந்தியத் தாய் சிறைக்குப் போகிறாள். இதென்ன பைத்தியம்? காந்திப் பைத்தியமா? தேசியக் கிறுக்கா? எதுவாயினும் சரி இவர்களை சர்க்கார் கிறுக்காஸ்பத்திரியாகிய சிறையிலே போட்டுவிடட்டும். தடியாலடிப்பதும் துப்பாக்கியால் சுடுவதும் தான் பைத்தியாகாரத் தனம்; கிறுக்கன் செயல்.

இனிமேல் வம்சத்தோடே, சமூகமே சமுதாய முழுதுமே சிறைக்குப் போகும் எண்ணம் ஏற்படுவது பிரமாதமில்லை; ஏற்படத்தான் போகிறது. மஹா மேதாவிகளான மிதவாதிகளுக்கும், தடியடித் தம்பிரான்களுக்கும், துப்பாக்கித் துரோகிகளுக்கும் கூட இந்தக் காந்திப் பைத்தியம் பிடிக்காமல் போகிறதா? அப்போது தான் அடக்கு முறை நாடகத்தின்-சுதந்திரப் போரின் கடைசிக்களம்—இறுதித் திரை விழும். ஏரோப்ளேன் வில்லிங்டன் இஞ்சி தின்னப்போலிருப்பார். சுபம்; சுபமஸ்து.

காந்தி கொடுக்கவேண்டிய கடன்!

காந்திஜீ கொடுக்க வேண்டிய கடன் எவருக்கும் பாக்கியில்லை. அவர் ஒரு செட்டியார் நாணயத்தில் வெகு நாணயமாக நடந்து கொள்ளுகிறார் மனிதவர்க்கத்துக்கு அவர் எவ்வாறு கடனாளியில்லையோ அதேபோல் தீரி இயற்கைக்கும் அவர் கடனாளியில்லை. ஏதாவது கடன் வாங்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டாலும் உடனுக்குடனே தீர்த்து விடுகிறார். இதை அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளில் நன்காங்கு காண முடியும்.

சென்ற சத்தியாக்கிரஹப் போரில் சிறைப்பட்டவர் வைஸ்ராய் இர்வின் வேண்டிக்

நன்மதிப்பை யிழந்து கெட்ட பெயரெடுப்பது தான் சர்க்கார் தரப்பில் ஆதாயம்.

ஹோட்டல்களிலும் கிளப்புகளிலும் தொண்டர்களுக்கு காப்பியோ சோறோ போடக் கூடாதெனச் சிற்சில இடங்களில் போலீஸார் தடுப்பதும் ஒரு அடக்குமுறையாகக் கொள்ளப்படுகிறது. வேண்டுமானால் மாதக் கணக்கில் வருஷக் கணக்கில் சோறும் சாற்றைக் குடித்துக்கொண்டுகூட சத்தியாக்கிரஹிகள் சட்டத்தை மறக்க முடியும். ஏனெனில் சத்திய பலம் அவர்கள் பக்கலிருக்கிறதல்லவா? மேலும் விற்றுப்பிழைக்கும் ஹோட்டல்காரர்களின் வியாபாரத்தைக் கெடுப்பது போலீஸ்காரர் மீது குற்றமில்லையோ?

இன்னொன்று, கல்வியால் செல்வத்தால் நாகரீகத்தால் உயர்ந்த தேசாபிமானிகளைக் கேவலம் திருடர்களையும், பத்மாஷிகளையும் நடத்துவதுபோல் தினந்தோறும் போலீஸ் ஸ்டேஷனில் ஆஜராகும்படி கூறுவது எவ்வளவு அக்ரமம்? எவன் பத்மாஷ்? கூலிக்கு மாரடிக்கும் போலீஸ்காரன் பத்மாஷா? வயிற்றுச் சோற்றுக்காக அடிமையா யிருப்பவன் பத்மாஷா? சாத்விகத் தொண்டர்களை யடிக்கும், சுடும், தடியன், துப்பாக்கிக்காரன் பத்மாஷா? ஒரு பெரிய அரசாங்கத்திற்கும் மந்திரிகளுக்கும் ஆலோசனை சொல்லக்கூடிய பொறுப்பும் புத்திக் கூர்மையும் வாய்ந்த ஆசிரியர் ஜனாப் பிரெல்வி போன்றோரா பத்மாஷ்? நாளை இந்திய ஜனநாயகத்தின் சர்வாதிகாரியாகவும்! பிரதம மந்திரியாகவும் இருந்து இந்தியாவையே ஆளப் பார்க்கும் இவர்களா பத்மாஷ்?

இந்த லட்சணமும் இவ்வளவுதானா?

சுடுகாட்டுக் கணக்கை விட்டாலும் வேறு கெதியில்லை—கண்ணடைகிறதில்லை யென்று ஊரார் எம்மீது குற்றஞ் சாட்டக்கூடும். கணக்கென்றால் கணக்கு; சும்மாவென்றால் சும்மா தான். இவ்வூர் ஹிந்துக்கள் எல்லோருடைய பணத்தையும் பல ஆயிரக்கணக்கில் பல வருடங்களாக வைத்துக்கொண்டு கொடாதகண்டன் கதை படிக்கிறார் ஸ்ரீமான் ப. சி. சோமசுந்தரம் பிள்ளை. நாமும்விடாத கண்டனாக நிற்கிறோம். ஊர்வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நியாயம் எவர் கட்சியிலிருக்கிறது என்பதை அறியாது ஒரு சிலர் வீணே எம்மைக் குறை கூறுவதில் அர்த்தமில்லை; அந்த நாக்காலேயே ஸ்ரீமான் பிள்ளையைக் கணக்குக் கேளுங்கள் என்று அந்த அன்பர்களுக்கு ஆலோசனை கூறுகிறோம். இல்லாவிட்டால் இன்னொன்று செய்தாலும் விட்டுவிடலாம் "போனாற் போகட்டும் ஊர்ப்பணத்தையெல்லாம் அவரே உண்டு கொழுக்கட்டும்" என்று ஊரார் சொல்லிவிட்டால் நமது விலையுயர்ந்த மையை இது விஷயத்தில் செலவழிக்கிறதில்லை யென்று நாற்பதாயிரம் கோயிலில் வேண்டுமானாலும் சொல்லித் தருகிறோம். கணக்கு வராதவரை, நாமும் நமது பிள்ளையும் சுடுகாடு போகும்வரை சுடுகாட்டுக் கணக்கை அம்பலப்படுத்தாமல் விடுகிறதில்லை.

இவ்வூர் ஹிந்துக்களிடத்தில் ஜீவகளையில்லை. உயிரற்று உலாவுகிறாரென்றால் எவரும் கோபித்துக்கொள்ளக் கூடாது. பொதுக் கணக்கைக் கேட்க பொது ஜனங்களில் ஒரு பிராணிக்காவது வாயில்லையென்றால் வேறென்னதான் சொல்லலாம்? பொதுஜன காரியங்களில் ஈடுபட்டுழைக்கும் பிரமுகர்களின் கவனத்திற்கும் சென்ற இதழில் விண்ணப்பஞ் செய்திருந்தோம். அந்த சன்னிதானங்களும் அருள் கண்ணைத்திறந்து பார்க்கவில்லை. சுடுகாடு பொது இடம், சுடுகாட்டுக் கணக்கு பொதுக்கணக்கு என்பதை பொது ஜனப் பிரியர்களான நாம் குறிப்பிட்டிருந்த பெரியார்களுக்குத் தெரியாமலா இருக்கும்? என்னவோ இதுவரை எவரும் ஏனென்றுகூட கேட்கவில்லை. ஆனால் அவரவர் சொந்தக் காரியார்த்தமாயிருந்தால் இவ்வளவு அசட்டை அவர்களுக் கேற்படாது எது எப்படித் தொலைந்தாலென்னவென்று எண்ணுவார்களானால் அவர்களும் பொது ஜனாபிமானிகளாவார்களா? ஒருக்கால் சுய வேலைகளால் ஓய்வில்லாமல் நினைக்கக்கூட நேரமில்லாம லிருந்திருக்கலாம். அப்படியானால் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை குறுக்கிடுகிறதே அன்று ஆலோசித்தோ அல்லது அழைத்துக் கேட்டோ அடுத்த வெளியீட்டில் அவர்கள் ஒருக்கால் வாய்திறக்கக்கூடும். இதற்கிடையில் இவர்கள் லட்சணமும் இவ்வளவுதானா? என்று கூற நமக்கு நாவேது?

கொண்டவாறு விடுதலையடைந்த நாள் முதல் மறுபடியும் இம்முறை சிறைப்பட்ட நாள்வரை காந்திஜீ ஒரு கெடியாரத்தைப் போல் ஓயாது இரவு பகலென்று பாராமே பாடுபட்டுவந்தார். அதனால் எத்தனையோ இரவுகள் தூக்கமில்லாது கழிந்தன; எத்தனை எத்தனையோ இரவுகள் இரண்டு ஜாமம் மூன்று ஜாமங்கள் மட்டும் கண் விழித்துக் காரியங்கள் செய்தார். வட்டமேஜையில் இரவு இரண்டு மூன்று மணிவரை மந்திரிகளோடு கலந்தாலோசித்தார். இவ்வளவு வேலையினால் ஏறக்குறைய ஒரு வருஷத்துப் பாக்கி நித்திராதேவிக்கு தரவேண்டியதாகி விட்டது. இவ்வளவு கடனையும் இப்பொழுது சிறைக்குள்ளிருந்து கொண்டு செலுத்துகிறார். ஒரு பெரிய தேசத்து 33 கோடி ஜனங்களின் மீது சுமத்தப் பட்டிருக்கும் 1,500 கோடி ரூபாய்க் கடனையே "இரத்தத்தைப் பிழிந்தாவது தம்படி குறையாமல் கொடுப்பேன்" என்றவர் தன்னொரு நித்திரைக் கடனை வைத்திருப்பாரா? இது சம்மந்தமாய் மீராபாய்க்கு அவர் எழுதியுள்ள கடிதத்தைப் பாருங்கள்:—

எரவாடா சிறை. 22 ஜனவரி 1932.

அன்பார்ந்த மீரா!

நித்திரா தேவிக்கு நான் கொடுக்க வேண்டிய கடனைக் கொடுப்பதில் அதிக சிரத்தையெடுத்து வருகிறேன். அதனால் தினம் 200 கெஜத்திற்கு மேல் நூல்நூற்கநான் பழக முடியவில்லை. இரண்டு மணிநேரத்துக்குக் குறையாமல் பகலில் உலாவுகிறேன். பரிட்சைக்குப் படிக்கும் பள்ளி மாணவனைப் போல் நன்றாய்ப் படிக்கவும் செய்கிறேன். இவ்வளவு ஓய்வும் இவ்வளவு சந்தர்ப்பமும் எனக்கு வேண்டத்தான் வேண்டும்.

உனதுபிரிய பாபு,

எம். கே. காந்தி.

Printed & Published By A V· Sellam Pillay at the Desopakari Press, 210,36th Street Rangoon

பதிவுஎண் 245 மலர் 9 இதழ் 56 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. **DESOPAKARI** புதன் ஞாயிறு வெள்ளி வெளியீடு

210-36-வது இரங்கோன்; (3—2—32) தை மீ 21உ புதன்கிழமை.

ஐராவதி ஆற்றிலே தீ! தீ!! தீ!!!

ரிஷிகள்:—எங்கள் வேள்வி கூடமீதில்
ஏறுதே தீ! தீ!—இந்நேரம்
பங்கமுற்றே பேய்களோடப்
பாயுதே தீ! தீ!—இந்நேரம்.

அஸுரர்:-வலியிலாதார் மாந்தரென்று
மகிழ்ந்து வாழ்ந்தோமே ஐயோ; நாம்
கலியை வென்றோர் வேத வுண்மை
கண்டு கொண்டாரே—அம்மவோ!

—கவியரசன்.

மகாத்மா காந்தியைக் கைது செய்தவன்று முதல் இந்தியாவினின்று வெளிவரும் செய்திகளை யெல்லாம் தலைப்பைப் பிய்த்து, காலை யொடித்து, மூக்கைப் பிடுங்கி, கண்ணைக் குத்தி யனுப்புகிறார்கள். உருப்படியான செய்தி யொன்றுமே கிடைக்கிறதில்லை. கிடைக்கும் அரை குறைச் செய்தியிலிருந்தும் உண்மையைக் கிரஹிக்க முடிகிறதில்லை. ஆனால் இடைநடுவிலே செய்திகளைச் சித்திரவதை செய்கிறார்கள்—திருட்டுச் செய்கிறார்கள் என்பது மாத்திரம் தெளிவாய்—துளிகூட சந்தேகமென்பதில்லாமல் தெரிகிறதென்பதைக் கொஞ்சமேனும் பொய்க் கலப்பில்லாமல் கூறுவோம். சித்திரவதை செய்பவர்கள்—திருடுபவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் அவசரச் சட்ட அரசாங்கத்தில் அவ்வாறு செய்திகளைத் திருடவும் சித்திரவதை செய்யவும் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தால் பாபம் தணிக்கையாளர்கள் என் செய்வார்கள்? இர்வின் ஆட்சியில் இவ்வாறு நிகழ்ந்ததில்லை. வேடிக்கை வில்லிங்டன் செய்வதெல்லாம் வேடிக்கையாகவே யிருக்கின்றன. இதன் கருத்துத்தானென்ன? இந்தியாவைத் திரை போட்டு மூடிவிட வேண்டுமென்ற நினைப்பா? இந்தியாவில் நடக்கும் நிகழ்ச்சிகளை பிற நாட்டார் கண்ணில் போடக்கூடாதென்னும் எண்ணமா? எவ்வளவுக்கெவ்வளவு செய்திகளைச் சர்க்கார் தணிக்கை செய்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஜனங்கள் அச் செய்தியையே ஒன்று, பத்து, நூறு, ஆயிரமாகக் கற்பனை செய்துகொள்ளத்தான் செய்கின்றனர். மூடப்பட்டிருக்கும் ஒரு வஸ்துவை இன்னதென அறிய மனித நெஞ்சம் ஆசைப்படும் ஸ்வபாவம்போல் மூடப்பட்டிருக்கும் இச் செய்திகளையும் திறவிப்பார்த்து ஒரு முடிவுக்கு வந்துவிடத்தான் செய்கிறோம். அனேகமாய் அம்முடிவும் சரியாகவேயிருந்துவிடுகிறது. டெல்லகிராபைத் தணிக்கலாம்; டெல்லிபோனைத் தடுக்கலாம். ஆனால் டெல்லமேனை ஒருவன் இன்னொருவனுக்குச் சொல்லி அது ஊரெல்லாம் பரவுவதிருக்கிறதே அதைத் தடுக்க எந்த சர்க்காரால் முடியும்?—எந்த வில்லிங்டனால் அதை மூட உலைமூடி செய்ய முடியும்? இந்தியாவிலிருந்து வெளி நாடுகளுக்குச் செல்லும் கப்பல்களெல்லாம் கப்பல் கொள்ளாச் செய்திகளைக்கொண்டு சென்று ஒவ்வொருவன் காதிலும் ஊதிவிடுகிறதே—அதற்கு இந்த வில்லிங்டன் என்ன செய்வான்? கடிதங்களையோ தந்திகளையோ தணிக்கை செய்வது தப்பு—பெரிய குற்றம் என்றுகூட எவ்வளவோபேர் எத்

தனையோ முறை சொல்லியும் புத்திவரவில்லை. இத்தாலிய வீரன் மாஜினிக்கு அடைக்கலம் அளித்துவிட்டு அவன் கடிதங்களையே தணிக்கை செய்து பிரிட்டிஷ் சர்க்கார் பெருந்தவறு செய்து விட்டதென மாஜினி முதல் பிரிட்டிஷ் இராஜ தந்திரிகள்கூட எவ்வளவோ சொல்லியாயிற்று. தணிக்கைக்காரர்கள் கொள்ளைக்காரர்கள் திருட்டுச் செய்கை செய்கிறார்கள் என்றும் கண்டித்தாகிவிட்டது. இரத்தத்தோடு ஊறியது இரத்தஞ் சுண்டி மண்ணோடு மண்ணாய் மக்கிப்போகும்வரை மங்கி மறையப்போகிறதில்லை யென்பதுதான் ஊர்ஜிதமானதேயொழிய வேறில்லை.

இன்னொரு இரகசியத்தையும் சொல்லிவிடுவோம். ஒருவன் தன் கைக்குள்ளே ஒரு வஸ்துவை வைத்து மூடிக்கொண்டு "இதென்ன சொல்?" என்று கேட்கிறான். ஒருவன் "காசு" என்கிறான்; இன்னொருவன் "பூ" என்று சொல்லுகிறான. வேறொரு பயங்கொள்ளி "வெடிக்குண்டாயிருக்கலாமா?" என்றெண்ணக்கூடும். இன்னொரு சந்தேகப் பேர்வழி "வெறுங்கையாயிருக்கும்" என நினைக்கவும் இடமுண்டு. கற்பனைக்காரர்கள் அவரவர் நெஞ்சுக்குத் தட்டியவாறு கற்பனைசெய்ய எல்லோருக்கும் இடமுண்டு; அதே மாதிரி உண்மையை மறைப்பதால் அவனவன் மனப்பான்மைக்குத் தக்கவாறு கயிறு திரிக்கிறார்கள். இந்தியாவினிடத்தில் பேரன்பு பெற்றார் அவர்கள் நோக்கப்படி பேசவும் வெறுப்புக் கொண்டார் வெறுப்புரை கூறவுமாகிறது. இதனால் தணிக்கைக்காரர்களடையும் லாபமென்ன? ஒன்றுமேயில்லை. கெட்ட பெயரெடுப்பதுதான். ஆனால் ஒரு வழியில் பார்த்தால் வில்லிங்டனை நாம் மாத்திரம் போற்றுகிறோம். செய்தித் திருட்டை அவர் செய்திட்டாலும் எல்லோரிடமும் திருடுகிறாரே அந்தகாரம் மறந்துவிடமுடியுமா? இந்தியா மந்திரியென்றும் சாதாரண இந்தியனென்றும் பாகுபடுத்தாமே ஆண்டையென்றும் அடிமையென்றும் விலக்குச்செய்யாமேஎல்லோரிடத்திலும்சமயாகஎல்லோருக்கும்"பேப்பே" பாடம்படிக்கிறார் அதனாலேதான் இந்தியா மந்திரி சர் சாமுவேல் ஹோர் "இந்தியாவில் சட்ட மறுப்புக் கிளர்ச்சி அடங்கி சமாதானம் நிலவுகிறது" என்று கூறுகிறார். இல்லாவிட்டால் —வில்லிங்டன் இம்மாதிரிக் கருத்துக்கொண்ட தந்தியை கட்டிவிராதிருந்தால் லண்டனிலிருக்கும் மந்திரிக்கு பாவம் என்னமாய்த் தெரியும்? அவர்கண்ணென்ன ஆறாயிரம் மைல் நீளமா? இந்திரப்புரட்டன் வில்லிங்டன்மீது இந்த வொரு திருப்தி கொண்டு நம்ம ஐராவதி ஆற்றுக்கு—பர்மாவுக்கு வருவோம்.

தணிக்கைக்காரர்கள பல்லோடு நகத்தோடு பாடுபடுவதெல்லாம் பர்மாவிலேதான் அதிகம். ஏதோவோர் பூகோளசாஸ்திரத்திலே எப்பொழுதோ படித்த ஞாபகம் சிறிது வருகிறது. நன்றாய் நெஞ்சில் தட்டவில்லை. துருக்கி ஸ்தானத்தில்தானோ அல்லது ஆசியா மைனரிலோ சாக்கடலென்றோ அல்லது வேறு பெயராலோ —இது மட்டும் நிச்சயம், ஒரு கடலிருக்கிறது. அதன் தண்ணீரில் கெந்தகச் சத்தோ அல்லது கெரோஸின் (மண்ணெண்ணெய்) சத்தோ யிருப்பதால் திடீரென சூரிய வெப்பத்தால் நெருப்புப்பற்றி யெறிவதுண்டாம். அதைப் போன்று எங்கே ஐராவதி ஆற்றிலே நெருப்புப் பிடித்துக் கொள்ளுமோ வென்றும் அப்படி யொருக்கால் பற்றிப் பிடித்துக்கொண்டால் அதை அப்படியே அவித்து விடுவதற்கென பர்மா சர்க்கார் மண்ணெண்ணையும் கையுமாய் திரிகிறார்கள். இதென்ன பைத்தியக்காரத்தனம் தண்ணீரிலாவது நெருப்புப் பிடிப்பதாவது என்று சிலர் எண்ணக்கூடும். தண்ணீரிலே அதுவும் இதே இரங்கோன் ஆற்றிலே—ஐராவதிநதியிலே தீப்பற்றி யெறிந்ததை நாம் இந்தக் கண்ணாலேயே கண்டிருக்கிறோம். இரங்கோன் ஆற்றிலே கிடந்த மண்ணெண்ணெய்வத்தலி(போட்)ல்நெருப்புப்பற்றிதாங்கி வெடித்து ஆற்று ஜலத்தில் எண்ணெய் கொட்டி அதிலும் தீப்பற்றி யெறிந்தது. அந்த மாதிரி யொருக்கால் ஐராவதி நதியில்—பர்மாவில் அரசியல் நெருப்புப் பிடித்துக்கொள்ளுமோ வென்று நினைப்பதில் தப்பிருக்க முடியுமென நாம் சந்தேகிக்கவில்லை. இருந்தாலும் ஐராவதி ஆறு அமைதியாகவே யிருக்கிறது. பிரம புத்திராவைப்போலும் சிந்துவைப்போலும் கொந்தளிப்பும் குழப்பமுமில்லை. சட்ட மறுப்பின் ஒரு சிறு அலைகூட ஐராவதியில் கிடையாது. ஒருவாறு இருப்பதாக தப்பாகச் சர்க்கார் கருதினால் ஹிந்துஸ்தானத்தார் ஐராவதி நதியில் நீந்தத் தயாரில்லை யென்பதைக் கண்டிப்பாய் கூறுவோம்.

பஞ்சமர் துயர்தீர

(மகாத்மா காந்தி)

சுவாமி விவேகானந்தர் பஞ்சமர்களை "தாழ்த்தப் பட்ட வகுப்பினர்" என அழைப்பது வழக்கம். விவேகானந்தரிட்ட இந்தப் பெயர் மிகவும் சரியானதே. அவர்களை நாம் தாழ்த்தி விட்டதன் மூலமாக நம்மையே நாம் தாழ்த்திக் கொண்டிருக்கிறோம். "பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் பறையர்களாக நாமிருந்து வருகிறோம்." என்று கோகலே சொன்னது எந்த விதத்தில் தவறானது? "தன் வினை தன்னைச் சுடும்" அல்லவா? நாம் ஒரு வகுப்பினரைத் தாழ்த்தியதால் பிறர் நம்மைத் தாழ்த்தும்படி கடவுள் ஆக்ஞாபித்து விட்டார். "அவர்களுக்காக நீங்கள் என்ன செய்து விட்டீர்கள்?" என்று ஒரு நிருபர் என்னைக் கேட்கிறார். "நம்மைச் சரியாக நடத்தும்படி ஆங்கிலேயரைக் கேட்பதற்கு முன்பு ஹிந்துக்களாகிய நாம் நமது இரத்தம் தோய்ந்த கையைக் கழுவிக் கொள்ள வேண்டாமா?" (அதாவது தீண்டாமையை ஒழிக்க வேண்டாமா) என்றும் அந்நண்பர் கேட்கிறார் இந்தக் கேள்வி நல்ல கேள்வி தான். அடிமை ஜாதியைச் சேர்ந்த ஒருவன் தன்னை அடிமைத் தனத்தினின்றும் நீக்கிக் கொள்ளாமல் தாழ்த்தப்பட்ட மக்களை அடிமைக் குழியினின்றும் கை தூக்கி விடுவது சாத்தியமானால், அதை நான் இன்றே செய்து விடுவேன். ஆனால் அது சாத்தியமானதல்ல. நியாயமான ஒரு காரியத்தைச் செய்யும் உரிமைகூட அடிமைக்கு இல்லை வெளி நாட்டுச் சாமான்களின் இறக்குமதியைத் தடுப்பது எனக்கு ரொம்ப சரியெனப் படுகின்றது. ஆனால் அதைச் செய்ய எனக்கு அதிகாரமில்லை. உண்மையான தேசியச் சட்ட சபை ஒன்று இந்தத் தேசத்தில் இருக்குமானால் தாழ்த்தப்-பட்டவரின் உபயோகத்துக்காக மட்டும் பிரத்யேகமான, நல்ல கிணறுகளை வெட்டியும், அவர்களுக்காகப் பிரத்யேகயானப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தியும், ஹிந்துக்களின் அவமதிப்புக்கு நான் சரியான பதிலளிப்பேன். ஆனால் அந்நாளுக்கு நான் இன்னும் காத்திருக்க வேண்டும்.

அது வரையில் தாழ்த்தப் பட்டவர்களை நாம் நிர்க்கதியாக விட்டு விடுவதா? கூடாது. பஞ்சம சகோதர, சகோதரிகளின் நிலையை உயர்த்த என்னால் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவையும் நான் செய்து வருகிறேன். தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்கு மூன்று வழிகளிருக்கின்றன. ஒன்று பொறுமையின்மை காரணமாக அவர்கள் அடிமைத் தனத்தைக் கட்டியணைக்கும் அரசாங்கத்தினரை உதவிக் கழைக்கலாம். அவர்களுக்கு உதவிக் கிடைக்கும். ஆனால் அது எரியும் கொள்ளியில் எண்ணெய் வார்த்தது போலவேயிருக்கும். இன்று அவர்கள் அடிமைகளினும் அடிமைகள். ஆகவே அவர்கள் சர்க்காரின் உதவியை நாடினால், தங்களைச் சேர்ந்தவர்களை நசுக்கவே சர்க்கார் அவர்களை உபயோகித்துக் கொள்ளும். இந்தப் பாபம் தாழ்த்தப் பட்டவர்களையே சாரும். முஸல்மான்கள் இம்முறையைக் கையாண்டு பார்த்து தோல்வியுற்றனர். சீக்கியர்களும் இதை ஒரு கைபார்த்தனர்; ஆனால் வெற்றி கிட்டவில்லை. இனி எதற்கும் சர்க்காரின் உதவியைக் கோருவதில்லை என இன்று வைராக்கியம் கொண்டுள்ளவர்களில் முக்கியமானவர்கள் சீக்கியர் தான். இத்தகைய உதவிக்குச் சென்றதால் முன்னை விடத் தங்கள் நிலைமை கேவலமாகி விட்டதென்பதை அவர்கள் உணர்ந்து கொண்டு விட்டனர். ஆதலால் சர்க்காரின் உதவி இதற்கெல்லாம் நிவர்த்தியளிக்காது.

இரண்டாவது வழி என்னவென்றால் ஹிந்து மதத்தையே விட்டொழித்து, இஸ்லாமிய மதத்தையோ அல்லது கிறிஸ்தவ மதத்தையோ தழுவி விடுவது. உலக நன்மைக்காக ஒருவர் ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்துக்குச் செல்வதென்றால் தயக்கமின்றி அங்ஙனம் செய்யும்படி நான் சொல்லுவேன். ஆனால் மதமென்பது ஹிருதயத்தைப் பற்றியது. எந்த தேக அசௌகரியத்தைக் குறித்தும், எந்த சொந்த கஷ்டங்களுக்காகவும் ஒருவர் தமது மதத்தை விட்டு விடுதல் கூடாது. பஞ்சமர்களைக் கொடுமையாக நடத்த வேண்டுமென ஹிந்து மதத்தில கூறியிருக்குமானால் அதை நிராகரித்துவிட வேண்டியது அவர்களுடைய கடமை மட்டுமன்றி என்னுடையதுமாகும். மதத்தின் புனிதமான பெயரால் செய்யப் பட்டு வரும் எத்தனையோ தீங்கான காரியங்களை நான் கண்டித்து வருவதால் இவ்விஷயத்தில் என் கடமை இன்னும் அதிகமாகின்றது.

ஆனால் தீண்டாமை என்பது ஹிந்து மதத்தின் ஓர் பகுதியல்ல என்பது எனதபிப்பிராயம் ஹிந்து மதத்தின் நற்பெயரை இது கெடுத்து

ஸ்திரி ஸ்வதந்திரம்.

(மகாத்மா காந்தி)

நாம் நம்மை ஸ்வராஜ்யத்துக்கு அருகதையுடையவர்களாகச் செய்து கொள்ள வேண்டுமானால் ஸ்திரீகளிடம் ஆண்கள் இப்பொழுது காட்டி வருவதைவிட அதிக மரியாதையும், கௌரவமும் காட்டி வரவேண்டும்; ஸ்திரீகளைப் பரிசுத்தத்தின் நிலைக்களன்களாக ஆடவர் பாவிக்க வேண்டும். ஸ்வதந்திரமின்றி வாழ்ந்து வரும் நமது ஸ்திரீகளின் நிலை எவ்வளவு வெட்கக் கேடானது!

ஸ்திரீகளை ஸ்வதந்திரமாக நடத்தும் விஷயம் ஆத்மார்த்தமானது. மனித இச்சையைத் திருப்தி செய்யவே ஸ்திரீகள் ஜென்மம் எடுத்திருக்கின்றனர் என்று நாம் நினைக்கும்படி ஒரு பெண்ணாவது இருக்குமளவும் நாமெல்லோரும் வெட்கித் தலைகுனிய வேண்டியதுதான். ஆண்டவனால் படைக்கப்பட்ட ஜீவ ராசிகளுள் மிகவும் உத்தமமானவள் பெண். நாம் மனிதத் தன்மையை விட்டொழித்து, மிருகங்களாக மாறி அவளை நமது காம ஆசையின் கருவியாக எண்ணுவதைவிட ஆண் சமூகம் அழிந்துவிடுவதே மேல் என எனக்குத் தோன்றுகிறது.

ஆனால் இந்த பிரச்னை இந்தியாவுக்கு மட்டுமே சொந்தமானதல்ல. இது உலகப் பிரச்னையாகும். காம இன்பம் நிறைந்த நவீன சொகுசான வாழ்வைவிட்டு, ராட்டையை அறிகுறியாகக் கொண்டிருக்கும் எளிய வாழ்வுக்குத் திரும்பும்படி ஆடவருக்கும், பெண்டிருக்கும் நான் உபதேசித்து வருகிறேன். இதற்குக் காரணம் விவேகத்துடன் எளிய வாழ்வைக் கைகொள்ளாவிடில், நாம் காட்டுமிராண்டித்தனத்துக்கும் கீழான நிலையை அடைவதைவிட வேறு விதியில்லை.

ஸ்திரீகளுக்கு நிரம்ப—பூராவாக—ஸ்வதந்திரம வேண்டுமென்பதில் என்னைவிட அதிகமாக வெறிகொண்டிருப்பவர்கள் எவருமிரார். கலியாணம் என்றால் என்னவென்றுகூடத் தெரியாத குழந்தைப் பெண்களுக்குக் கலியாணம் செய்துவரும் கொடிய வழக்கத்தை நான் பலமாகக் கண்டிக்கிறேன். "கழுத்தில் தாலியேறிய பின்பு, தன் புருஷனைப் பார்த்து, மரப்பாச்சி வைத்துக்கொண்டு விளையாடுவோமா" என்று கேட்கும் பச்சைக் குழந்தைக்குக் கலியாணம் முடிப்பது தர்மமா? பாலியத்திலேயே பெண்கள் விதவைகளாகி விடுவதையும், மனைவி இறந்தவுடனேயே ஆடவன் மற்றொரு மனைவியைக் கட்டிக்கொள்வதையும் கண்டால் என் உடல் நடுங்குகிறது. பெண்களுக்குக் கல்வியே போதிக்காமல், அவர்களை மடைமையிலாழ்த்திவைத்து, நல்ல ஆஸ்தி உள்ளவர்களுக்குக் கலியாணம் செய்து கொடுப்பதற்காகவே அவர்களைப் பெற்றோர்கள் வளர்ப்பதைக் கண்டால் என் மனம் அவதிப்படுகின்றது. வாழ்வின் ஆரம்பமும், முடிவும் கலியாணந்தானே! ஸ்திரீகள் தங்கள் சரீரத்தை அழகு செய்வதைப்போல் கேவலமான வேறெதுவுமில்லை.

வருகின்றது. ஆகவே எத்தகைய முயற்சியையும் செய்து இதை நாம் போக்க வேண்டும். இம்மாசை நீக்கிப்போட ஹிந்துமதச் சீர்திருத்தக்காரர்களில் எத்தனையோபேர்கள் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால் மத மாற்றமும் நிவர்த்தியல்ல என்பதைக் குறிப்பிடுகின்றேன்.

மூன்றாவது மார்க்கம் தன்னுதவி. பஞ்சமர்களல்லாதார் தங்கள் கடமையை அறிந்து எவ்வளவு உதவியைத் தாங்களாகவே அளிப்பார்களோ அவ்வளவையும் பெற்றுக் கொண்டு தம்மைத்தாமே சார்ந்து நிற்றல் தங்களை மனிதத் தன்மைக்கு விரோதமாக நடத்துவதைக் கண்டிக்கும் முறையில், தங்களது முக்கியமான குறைகள் நீக்கப்படாத வரையிலும் மற்ற ஹிந்துக்களுடன் எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்ளுவதில்லையெனப் பஞ்சமர்கள் கட்டாயமாகச் செய்யலாம். ஆனால் இதை ஒழுங்காகவும், கட்டுப்பாடுடனும் செய்ய வேண்டும். இந்த ஒத்துழையாமை மூலமாக பஞ்சமர்களுக்கு வெற்றியுண்டாகும் வகையில் அவர்களை நடத்திச்செல்லக்கூடிய தலைவர் அவர்களுக்குள் எவருமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

ஆகவே இந்நிலையில் பஞ்சமருக்குச்சிறந்த வழியாதெனில், தற்போதுள்ள கவர்ன்மெண்டாருக்கு நாம் அடிமைகளாயிருந்து வரும் பெருமிதமான தேசிய இயக்கத்தில் முழுமனதுடன் அவர்கள் சேர்ந்து கொள்வதுதான். சர்க்காருடன் நாம் போர் புரிவதென்றால் ஹிந்துக்களும், பஞ்சமர்களும் ஒற்றுமைப் படவேண்டுவது மிக மிக அவசியம்.

இரண்டு சுதந்திர யுத்தங்கள்.

(ஸ்ரீயுத மகாதேவ தேசாய்)

இன்று பாமரமக்களும் சரி, உயர்தர வருப்பினரும் சரி, காங்கிரஸ் வாதிகளில் பலரும்சரி, அஹிம்ஸையில் கண்மூடித்தனமான நம்பிக்கையை வைத்துப் பின்பற்றி வருகிறார்கள். இதனின்றும் அவர்களைத் திருப்பி அஹிம்ஸையில் உண்மையான பற்றுதலேற்படும்படி செய்ய வேண்டுமானால் காங்கிரஸ் தொண்டர்கள் சரியானவர்களாக விருக்கவேண்டும். மகாஜனங்கள் மனதில் ஒரு தடவை அஹிம்ஸை பசுமரத்திலறைந்த ஆணிபோல் பதிந்து விட்டதானால் பின்னர் அதனாலேற்படக்கூடிய விசேஷ சக்தியை அளவிட முடியாது. அஹிம்ஸை யில்லாமல் போனால் இவ் வருஷம் பாரததேசம் பூராவு மேற்பட்டதொரு மகத்தான விழிப்பை நாம் கண்டிருக்கவே முடியாது. என்னுடைய கண்களைக்கொண்டு நீங்கள் சரித்திரத்தை வாசியுங்கள். சிப்பாய்க் கலகச் சரித்திரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஹிம்ஸையை உண்டு பண்ணக்கூடிய கொடிய ஆயுதங்களைக்கொண்டு சண்டை யிடப்பட்ட சுதந்திர யுத்தங்களில் அதுவுமொன்று.

கர்னல் மாலிஸன் என்பவர் அனேகமாக உண்மையான விஷயங்களை நமக்கு எடுத்துக் கூறியிருக்கிறார். கொழுப்பு தடவிய தோட்டாக்களே இந்த யுத்தத்தின் நேரிடையான காரணமாயினும், நீறு பூத்த நெருப்புப்போல் விஷயங்கள் அடியில் புதைந்துகொண்டே யிருந்தன என்பதும், இந்தப் பொறி பட்டதும் எல்லாம் ஒரேயடியாக தீப்பிடித்துக்கொண்டு, கொழுந்துவிட் டெரிந்தது என்பதும்தான் உண்மை. ஆனால் அதன் முடிவு என்னவாயிற்று பாருங்கள். 1857-ம் ஷூத்தில் நடந்த கிளர்ச்சியின் முக்கிய பாகமாகிய ஐக்கிய மாகாணத்தையும் விடக் கேவலமாக ஸ்தம்பித்துக் கிடந்தது. பாரிச வாயுவினால் கை, கால்கள் விழுந்து விட்ட ஒருவன் எப்படியிருப்பானோ அப்படித்தான் அந்த மாகாணம் இருந்தது, ஏனெனில் மனிதர் மிருகங்களாக மாறிப் புரிந்த செயல்கள் மக்களின் மனதில் சித்தரிக்கப் பட்டிருந்தன. அந்தக் கொடூர, கோர நிகழ்ச்சிகளின் சிந்தனைகள் அவர்களின் மனதை விட்டு அகலவேயில்லை. இப்பொழுது கடந்த 12 வருஷங்களாக நடந்து வரும் புதிய முறையான கிளர்ச்சியை நோக்குங்கள். இந்தத் தேசத்தின் சரித்திரத்தில் 12 வருஷமென்பது மிகவும் சொற்பமான காலமே. அஹிம்ஸையின் மகா சக்தியில்லாமல் போனால் நமது புதிய முறைக் கிளர்ச்சியும், அதனாலேற்பட்டுள்ள பயன்களும் உண்டாகியே இருக்கமாட்டா. ஆயினும் அந்த அஹிம்ஸையின் சக்தி இன்னமும் நம்முடைய நாடிகளிலும், நரம்புகளிலும், இரத்தத்திலும் ஊறவில்லை. அப்படி ஊறியிருந்தால் இப்பொழுது நாம் கண்கூடாகக் கண்டுவரும் கோரமான கொலைகள் நிகழா.

ஹிம்ஸையைத் தழுவி நிற்கும் ராணுவப் படைக்கும் அஹிம்ஸையைக் கடைப்பிடித்தொழுகும் சுத்த வீரர்கள் நிறைந்த படைக்கும் வித்தியாசமுண்டு. இந்த வித்தியாசம் அவர்களது ஒழுங்கு முறையைப் பற்றியது. முதலில் சொன்ன படையைச் சேர்ந்தவன் யுத்தம் நடக்கையில் அடங்கி, ஒடுங்கி, கீழ்ப்படிந்து நடக்கின்றான்; ஆனால் யுத்தமில்லாத காலத்தில் அவன் யாதொரு ஒழுங்குக்கும் கட்டுப்படாது தன் மனம்போனவாறே நடக்கின்றான். ஆனால் அஹிம்ஸா வீரனோ எப்பொழுதும் ஒழுங்கு முறையைக் கைவிடுவதில்லை. அஹிம்ஸையைப் பற்றி நிற்கும் ஸோல்ஜர்கள் கூட்டங்களில் ஒழுங்காக நடந்து கொள்ளுவது மட்டுமன்றி, வீட்டிலும், வீட்டு விவகாரங்களிலும் ஒழுங்காகவும், அடக்கமாகவும், நேர்மையுடனும், நடந்துகொள்ள வேண்டும். அஹிம்ஸை நிறைந்த ஸோல்ஜர்கள் எல்லா இடங்களிலும், எல்லாக் காலத்திலும் அஹிம்ஸையையே கடைப்பிடித்தொழுகுவான்.

ஆணடவனின் உள்ளத்தை மகிழ்விக்கவே இங்ஙனம் பெண்கள் ஜோடித்துக் கொள்வதாகக் கூறப்படுகின்றது. ஆடவனின் காம ஆசையை தீர்க்கவே தாங்கள் பிறந்ததாகப் பெண்மணிகள் எண்ணுவதை விட்டொழிக்க வேண்டும். ஸ்திரீகள் பிரச்னையைத் தீர்க்கும் வழி ஆடவரைவிடப் பெண்களிடமே யிருக்கின்றது. புருஷனின் மனதை மகிழ்விப்பதற்காகத் தன்னை அலங்கரித்துக்கொள்ள முடியாதென ஒவ்வொரு மனைவியும் சொல்லிவிட வேண்டும். ஸ்ரீராமபிரானைத் திருப்தி படுத்துவதற்காக சீதாதேவி தன்னுடலை அழகு செய்துகொண்டனள் என்று சிந்திக்கவாவது முடியுமா?

படித்தவன் உயர்ந்தவனா?

நாட்டுக்குப் பயனளிப்பவன் எவன்? நாட்டின் செல்வத்தை வளர்ப்பவன் எவன்? நாட்டின் பெருமையைப் பார்ப்பவன் எவன்? நாட்டுக் கலையை வளர்ப்பவன் எவன்? ஆண்டவன் அளித்த உடல் உறுப்புக்களைக் கொண்டு உழைப்பவனே! அதாவது தொழிலாளியே! படித்த வகுப்பினர் தங்களது கல்வித் திமிரில், ஈனத் தொழில் என சிலவற்றை அழைக்கின்றனரே, அவற்றைச் செய்பவனே உண்மையில உலகுக்கு தொண்டு செய்கின்றான். உதாரணமாகக் குப்பையைப் பெருக்கித் தள்ளும் தொழிலை எடுத்துக் கொள்ளுவோம். குப்பைக்காரனை நாம் உதாசீனமாகப் பேசுகிறோம். அவனைக் கேவலமாக நடத்துகிறோம். ஆனால் ஒரு நாள் குப்பைக்காரர்கள் வேலை நிறுத்தம் செய்து விட்டால் ஒரு நகரமே நாற்ற மெடுத்து, நரகமாகின்றது. அப்பொழுது தோட்டியினால் மனித சமூகத்துக்கு எவ்வளவு உதவி என்பது விளங்குகிறதல்லவா? தொழிலாளியே நாட்டின் கைத்தொழில்களை வளர்க்கிறான். செல்வத்தைப் பெருக்குகிறான் தொழிலாளியின் உழைப்பினாலேயே, அவர்களது இரத்தத்தை உறிஞ்சியே முதலாளி உலகம் கொழுத்துத் திரிகின்றது. உணவுப் பண்டங்களை விளைவிப்பவன் தொழிலாளி: அதைக் கொண்டு செல்வம் குவிப்பவன் முதலாளி. குயவன் சோறு கொதிக்கப் பானை செய்து தருகிறான்; சக்கிலி வெயிலின் கொடுமையினின்றும் பாதங்களைக் காக்கச் செருப்புத் தைத்துக் கொடுக்கிறான்; தோட்டக்காரன் நல்ல நிழலும், சுகந்த மாருதமும் வீசத் தோட்டமமைக்கிறான். தச்சன், கருமான், அம்பட்டன் வண்ணான், நூல் நூற்பவன், நெசவுக்காரன், விவசாயி முதலியவர்கள் தத்தம் தொழிலைச் செய்து மனித வர்க்கத்துக்குச் சேவை செய்கின்றனர். படித்தவன் தான் உயர்ந்தவன் தொழில் செய்பவன் தாழ்ந்தவன் என்ற பேதமை நம்மை விட்டு ஒழிய வேண்டும். வயிற்றுக்குச் சோறிடும் விவசாயியை விட, மானத்தை மறைக்கத் துணி நெய்து தரும் நெசவாளியை விட படித்தவன் எந்த விதத்தில் உயர்ந்தவன்? ஆகவே நமக்காக உழைப்பவனை நாம் தெய்வமென வணங்குவோம். அவனது க்ஷேமத்துக்காகப் பாடுபடுவோம்.

இரங்கூன் "மிக்சர்"களுக்கு

பாலோடு தண்ணீர் கலத்தல், நெய்யோடு கொழுப்புச் சேர்த்தல், காப்பித் தூளோடு கரித்தூள் சேர்த்தல், தேயிலையோடு ஆவாரை இலைத்தூளைக் கலத்தல், இப்படி "மிக்சர்கள்" செய்து ஊரை ஏமாற்றி அநேக அயோக்கியர்கள் வியாபாரம் செய்து வருகின்றனர். நல்ல சரக்கின் விலை கொடுத்தும், உபயோக மற்ற சாமான்களை அடையும் துர்ப்பாக்கியம் பொது மக்களுக்கு இருந்து வருகிறது. இவைகளைக் கண்டு பிடித்துத் தண்டிக்க வேண்டிய பொறுப்பு ஆங்காங்குள்ள நகர சபையைச் சேர்ந்த வேலை. இந்த விஷயத்தில் பர்மா மாகாணம் நீங்கலாக மற்ற மாகாணங்களிலுள்ள கார்ப்பரேஷன் ஹெல்த் ஆபீஸர் தமது அதிகாரங்களை உபயோகித்து அநேக அயோக்கியர்களின் குட்டுகளை வெளிப்படுத்தியும் விட்டார். ஆனால் இம்மாகாணத்தில் முக்கியமாக இரங்கூன் நகரில் மட்டும் கார்ப்பரேஷனின் கவனிப்பு மிகக் குறைவென்றே தோன்றுகிறது. ஆதலால் இத்தகைய வியாபாரிகளை ஆங்காங்குள்ள முனிசிப்பல் அதிகாரிகள் கண்டு பிடித்துத் தண்டித்து பொது ஜனங்களுக்கு சவுகரியம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

ஃ ஃ ஃ

"ஏகாதிபத்திய ஆட்சிமுறையினின்று இந்தியா விடுபட்டே தீரவேண்டும். சுதந்திரமடைந்தே தீர வேண்டும். சுதந்திர மென்பது ஓர் கொடுக்கல்-வாங்கல் பொருளல்ல. தங்களாகப் பாடுபட்டுத்தான் அதைப்பெற வேண்டும். கடவுள் அனுக்ரஹத்தினால் உங்கள் கையிலிருந்து அதை நாங்கள் பிடுங்கிக்கொள்வோம். எங்கள் நாட்டின் விடுதலைக்காக நாங்கள் இதுவரை செய்த தியாகமே போதுமானது என நினைத்தோம். ஆனால் அது ஆங்கில இதயத்தை இன்னும் சிறிதாவது அசைக்கவில்லை. என் தாய் நாட்டு மக்களை மறுபடியும் தியாக அக்கினியில் குதிக்கும்படி தூண்டவும் தயார்! முன்னணியில் நின்று போரிடவும் யான் தயார்!"

(மகாத்மா)

தேசோபகாரி

வருஷம் 1-க்கு	....	ரூ.	3	0	0
ஆறு மாதம்	...	ரூ.	1	8	0
வெளியூருக்கு வருட சந்தா		ரூ.	4	8	0

ஈ அடிச்சான் காப்பி.

பத்திரிகாசிரியர்கள் விஷயங்களை இன்னொரு பத்திரிகையில் இருந்து தங்கள் பத்திரிகையில் அப்படியே காப்பியடித்து விடுவது வழக்கம். பெரும்பாலும் அவைகள் சமாச்சாரங்களாகவே இருக்கும் தலையங்கங்களாக இரா. சில பத்திரிகைகளின் தலையங்கங்களைச் சிலர் அப்படியே காப்பியடித்து விடுகிறார்கள். இச்செய்கை வெறுக்கத் தக்கது. ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர் கருத்தை உள்ளது உள்ளபடி காப்பியடிப்பதில் உள்ளூர் பழைய தினசரி ஒருசமயம் கைதேர்ந்து விளங்கியதுண்டு நாம் இங்கே குறிப்பிடுவது அதுவல்ல. ஆனால் புதிய தினசரியாகிய பர்மா நாட்டானையே இப்போது குறிப்பிடுகிறோம். ஆரம்ப சூரத்தனமாக என்னென்னவோ தந்திகள் வருகிறதாகப் பறை சாற்றினான். இப்போது அப்படி ஒன்றும் காணோம். காப்பியடிப்பதில் இறங்கி விட்டான். சென்ற மாதம் 30ல கெஜட்டில் வெளியான "சென்ற மாதம்" என்ற தலையங்கத்தை பர்மா நாட்டான் தனது 31ல இதழில் ஈ அடிச்சான் காப்பியாகப்போட்டு விட்டான். தலையங்கம் ஆசிரியன் சுய அறிவால் எழுதப்படுவது, சுயஅபிப்பிராயத்தை கூறுவது. அதே தலையங்கத்தை ஆசிரியர் உரையாக தமது பத்திரிகையிலும் காப்பியடித்து வெளியிடுவது எத்தனை வெட்கம்? அது அவனுக்கு மட்டுமல்ல பத்திரிகை உலகத்துக்கே மானக்கேடானது. சமயத்துக்குத் தக்கபடி வேஷம்போடும் "சூட்டாசிரியர் ராஜீய ஞானம் நமக்குத் தெரியும். ராஜீய விஷயமாக இவர் ஒரு சமயம் ஆங்கிலத்தில் வியாசமெழுதி "டெயிலிநியூஸ்" ஆசிரியரிடம் கொடுக்க அதை அவர் கிழித்து வீசி எறிந்து விட்டதும் அறிவோம். இப்படிப்பட்டவர் ஆசிரியர் பீடத்தில் அமர்ந்தால் காப்பியடிப்பதைத் தவிர பாவம் வேறு விதியில்லை. என்றாலும் தனது முடியாமையை யொளிக்காமல் வேறொரு பத்திரிகையில் இவ்வாறு எழுதுகிறது என்றோ இல்லாவிட்டால் அப்பத்திரிகையின் பெயரையோ குறிப்பிட்டு விடலாம். அது குற்றமாகாது. தலையங்கமானாலும் வேறு அங்கமானாலும் அக்கறை யில்லை. நேர்மையுடன் செய்வதே நலம். இனிமேலாவது இத்திருட்டைச் செய்யாமலிருக்கும்படி பர்மா நாட்டானைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

,,பர்மா நாட்டான்"

சீ! இப்படியும் வயிறு வளர்க்கவா?

சில காலமாக சில அனாமதேயப் பிரசுரங்கள் வெளி வந்துகொண்டிருக்கின்றன. சில வாரங்களுக்கு முன் எஸ். பி. ஜி. ஸ்கூல் விஷயமாகச் சோலிய முஸ்லிம் சங்கத்தையும், சோலிய முஸ்லிம் வர்த்தக சபையையும் தாக்கி ஒரு துண்டுப் பிரசுரம் வெளிவந்தது. இப்போது ஒரு கனவானைத் தாக்கி மற்றொரு பிரசுரமும் வெளிவந்திருக்கிறது. இவ்வாறு திரைமறைவிலிருந்துகொண்டு பொது ஸ்தாபனங்களையோ தனி மனிதர்களையோ மிகவும் அருவருக்கத்தக்க முறையில் தாக்கி எழுதி வருபவர்களை நாம் பலமாகக் கண்டிப்பதுடன் அவர்கள் ஏன் ஆண் பிள்ளைகளானால் சுய பேர்களுடன் வெளியில் வரக்கூடாதாவென்றும் கேட்கிறோம். இப்படிப்பட்ட வேலைகள் செய்கிறவர்கள் தங்களுக்குள் ஒரு நோக்கம் இல்லாமல் செய்யமாட்டார்கள். வயிற்றுப் பிழைப்புக்கு இதையொரு புதிய முறையாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள் போலும். கோர்ட்டைச் சுற்றிக்கொண்டு வயிறு வளர்க்கும் வியாபாரமும் இப்போது மந்தமாகி விட்டது. அந்த வியாபாரத்தை முன்னுக்குக் கொண்டுவர ஓர் புதிய முறையை அனுஷ்டித்துப் பணம் பறிக்க முயல்வது உண்மையிலேயே புதிய முறைதான். சில பெரிய மனிதரைப்பற்றி தாறுமாறாக தூஷித்து எழுதி வெளியிட்டுவிட்டு அவரிடம் போய் அவருடைய விரோதிகள்தான் செய்திருக்கிறார்கள். அவர்களைப் பிடித்துவிடுவோம். அதற்குச் செலவுக்கு ஏதாவது கொடுங்கள் என்று வாங்கிக் கொண்டும், அதே சமயம் அவருடைய விரோதிகளிடம்போய் அத்துண்டு பிரசுர விஷயமாய் இன்னார் உங்களைத்தான் சந்தேகப்பட்டிருக்கிறார். உங்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போகிறார். நீங்கள் ஏதாவது கொடுத்தால் உங்களை நீக்கிவிடுகிறோம் என அவரிடமும் பணம் பறித்து இருபக்கமும் காசடிக்க இவ்வேலையை ஆரம்பித்திருக்கிறதாகத் தெரிகிறது. இவ்வாறு வயிறு வளர்க்க முற்பட்டிருக்கும் அனாமதேயப் பேர்வழிகளின் சூழ்ச்சிகளில் சிக்கிவிடாதிருக்கும்படி நாம் பொது ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

"ஓர் முஸ்லிம்"

பூனைப்பாவம் பொல்லாது.

கடையிலிருந்த சரக்குகளை யெல்லாம் அங்கிருந்த பூனை ஆபாசப்படுத்தி வந்தது. எலிகளை யெல்லாம் கொன்று தின்றது போக மீதத்தையும் எலும்பையும் அங்குதானே போட்டதால் செட்டியாருக்கு சகிக்க முடியாத கோபம். பூனையைக் கொன்று விட்டார். அடுத்த நாள் வந்தவன் "ஐயையோ பூனைப்பாவம் பொல்லாதாச்சே" யென்றார். செட்டியாரின் மனத்தை மனந்தின்ன வாரம்பித்து விட்டது. தூக்கமே வர வில்லை. பூனையின் பிசாசு இரவு பகலாய் அவரைச் சுற்றிக் கத்துவது போலவும், கடிப்பது போலவும் தோன்றிற்று. பொறுக்க முடிய வில்லை; கடைசியாக ஒரு பஞ்சாங்கப்பார்ப்பானிடம் சென்று "பூனையைக் கொன்ற பாவத்திற்கு பிராயச்சித்தமேதாவதுண்டா?" என்றான். ஐயர்சொல்லுவார் "அடடா! அந்தப் பாவம் பொல்லாதே ஜென்ம ஜென்மாந்திரத்துக்கும், பிள்ளை பிள்ளை தலை முறைக்கும் உன்னை விடாதே" என்று இன்னொரு பிசாசைப் பிடித்து விட்டார். "என்ன செய்தால் பாவம்தீரும் விமோசன மில்லையா"?என்று நடு நடுங்கிக் கொண்டே செட்டியார் கேட்டார்.

"பூனைப்பாவம் தீர தங்கப்பூனை செய்து தக்ஷிணையோடு பார்ப்பானுக்குத் தானஞ் செய்தால் தீரும்" என்றார் ஐயர். "பாவம் செய்தவன் ஏழையாயிருந்தால்?" என்று கேட்டார் செட்டியார் "வெள்ளிப்பூனை கொடுக்கலாம்" என்றார் ஐயர் "அதற்கும் ஏழையாய் இருந்தால்" என்றார் செட்டியார். "பித்தளைப் பூனை தரலாம்" எனப் பதில் வந்தது "அதுவும் தர முடியாத ஏழையா யிருந்தால்!" என்று செட்டியார் வினவினார். "வெல்லத்தால் பூனை செய்து தான மிடலா" மென்றார் பார்ப்பனர். செட்டியார் சிந்தித்தார் "நம்ம கடையில் சவித்துப் போன வெல்ல மிருக்கிறதே அதிலே ஒரு வெல்லப்பூனை செய்து தானஞ் செய்து தொலைவோம்" என்று "சுவாமிகளே! நாளை என் குச்சுக்கு எழுந்தருளுங்கள். சாஸ்திரப்படி பிராயச் சித்தம் செய்து கொள்ளுகிறேன்" என்று சொல்லி விட்டு கடைக்குப் போய் விட்டார்.

மறு நாள் காலமே செட்டியார் வீட்டுக்கு சாஸ்திரியார் போனார். மந்திர மெல்லாம் படித்தார். வெல்லப் பூனையையும் கையிலே வாங்கிக் கொண்டார். செட்டியாருக்கும் பாபம் போய் விட்டது. அப்புறம் ஆசை வந்தது. வெல்லப் பூனையைப் பார்க்க பார்க்க வாயில் ஜலம் ஊறிற்று. பார்ப்பான் கையிலிருந்த வெல்லப் பூனையை வெடுக்கெனப் பிடுங்கி வாயில் போட்டு விழுங்கி விட்டார். "என்ன காணும் செட்டியாரே! இப்படி பண்ணி விட்டீர்?" என்று ஐயர் கோபத்தோடு கேட்டார். "நன்றாய்த் தாவ் செய்தேன் ஸ்வாமி! பூனைப்பாவம் போய் விட்டது. பார்ப்பான் பாவந்தானே பாக்கி இன்னொரு சமயம் உங்களைக் கூப்பிட்டுத் தானே அதையும் தீர்த்து விடுகிறேன்" என்றான் செட்டியார். அப்புற மென்ன? ஐயருக்கும் செட்டியாருக்கும் சண்டை.

அந்த மாதிரி இந்தியாவின் ஸ்வதந்திரத்தை பிரித்தானியா பேராசைப் புத்தியால் கொன்று விட்டான். அவளைப் பிசாசுகள் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. மந்திரிமாரெல்லாம் சிம்ம சொப்பனம் காணுகிறார்கள். "இந்தியாவுக்கு அதன் சுதந்தரத்தைக் கொடுத்து விடலாமே" என்பது முதல் யோஜனை "அது முடியாவிட்டால்?" "சுதந்திரம் தருவதாக போனாற் போகிறது வாயாலாவது செல்லுகிறது" இது இரண்டாந்தரமான பிராயச்சித்தம் "அதுவும் முடியா விட்டால்?" "நாலுபேரை மகா நாடு கூட்டி ஆலோசிப்பது" "அதுவும் முடியா விட்டால்?" நாலுபேரை இந்தியாவுக்கு அனுப்பி சவித்துப்போன வெல்லப் பூனைப் போன்ற ஊசல் சீர் திருத்தங்களைக் கொடுப்பதற்காக இந்தியர்கள் லாயக்குடையவர்களா? என்று விசாரிப்பது "அதுவும் முடியாவிட்டால்?" கதையில் செட்டி செய்தமாதிரி வெடுக்கெனப் பிடுங்கி வாயில் போட்டுக் கொண்டு "லாயக்கில்லை யென்ற பாவந்தானே பனுல் பிராயச் சித்தம் செய்து கொள்ளுகிறேன்" என்கிறது.

இந்தியர்கள் இந்தத்தடவை யேமாந்து போக மாட்டார்கள். இப்பேர்ப்பட்ட கமிட்டிகளையும் அவைகள் அப்பனுக்கு அப்பனையுங் கூட பார்த்திருக்கிறார்களல்லவா?

Printed & Published By A V· Sellam Pillay at the Desopakari Press, 210,36th Street Rangoon

பதிவுஎண் 245 மலர் 9 இதழ் 57 அரையணா

தேசோபகாரி


காங்கிரஸ் பத்திரிகை **DESOPAKARI** புதன் ஞாயிறு வெள்ளி வெளியீடு

210-36-வது இரங்கோன், (5—2—32) ஈத பீ 23உ வெள்ளிக்கிழமை.

தாலியறுத்த சர்க்கார்! [2-ம் பக்கம்]

ஸ்வர்க்கீய மதிலால் இறந்த நாள் நாளை.

நாளை நமது மாபெருந் தலைவர்—சுதந்திர ஜோதி—விடுதலை விளக்கு பண்டித மதிலால் நேரு நம்மிடை விட்டுப் பிரிந்த நாள். சென்ற வருடம் இந்த மாதம் இன்று தேதியில் மதிலால் நம்மிடை பிரிந்தார். நாளை ஆறுந் திகதியில் அவரது ஆத்மா சமாப்தி யடைந்து விட்டது; அவரது உடல் குளிர்ந்து போய்விட்டது. இந்தியா வெற்கும் சுதந்திர யுத்தம் நடந்து கொண்டிருக்கையில அவருடைய புனிதமான பூத உடம்பு புதைக்கப் பட்டு மண்ணோடு மண்ணாய் மங்கிப்போய் விட்டது. அகனல். இந்திய மண்ணின் ஒவ்வொரு அணுவும் சுதந்திர இரத்தத்தால் அபிஷேகிக்கப் பட்டிருக்கிறது. இனிமேல் இம் மண்ணிலிருக்கும் ஒவ்வொருவனும் சுதந்திரதாகம் கொள்ளாதிருத்தல் முடியாமா? "சுதந்திர இந்தியாவிலே தான் எனது தேகம் அடக்கஞ் செய்யப்பட வேண்டும். சுதந்திர இந்தியாவைப் பார்த்து விட்டுத்தான் நான் இறப்பேன்" என்றகோறுக்கு அவரது முதல் ஸ்ராத்தத்திலாவது சுதந்திர ஸமாதி கட்டினோமா? சுதந்திரக் கோயில் சமைத்தோமா?



தாலியறுத்த சர்க்கார்!

நவ்வாது சகுனி செயுக் கொடுமை யென்பார்
ஒருநாளு மிதனை மறக்கா தென்பார்
எவ்வாறு புகைந்தாலும் புகைந்து போவீர்
எந்திறமை அவைக்களத்தே இகழ்தல்
[வேண்டாம்.
செவ்வானம் படர்ந்தாப்போ விரத்தம் பாயச்
செருக்களத்தே நிருமடா பழிபிஃ
[தென்பார்
—பாஞ்சாலி சபதம்.

பெண்மைத் தெய்வம் பேணுதற்குரியது.

பெண்மைத் தெய்வம் பேணுதற்குரியது. பெண்மை போற்றப்படாவிட்டால் வானமும் வையமும் குலுங்கிவிடும். சிருஷ்டியில்லை; சர்வமும் நாசம். இப்பிரகிருதி உலகத்தில் பிறப்பதும், இறப்பதும் இடைநடுவில் சிறிது காலம் வாழ்ந்து மடிப்பதுவும் எல்லாம் நான் வினைச்செயல் என்பீர்கள். நாம் சொல்லுகிறோம் எல்லாம் சக்தியின் செயல். உலகத்தின் ஒவ்வொரு ஓட்டத்தையும்—ஒவ்வொரு இயக்கத்தையும் நில்லென்பதும் போவென்பதும் சக்தியின் திருவிளையாடல். அவளது மிருதுவான நுனிவிரலின் ஒரே பொசிகிற அசைப்பிலே, காதலை ஊதும் கண்களின் கடைப் பார்வையிலேயே, தேன் கசியும் பவளவாய் கொழிக்கும் நிரதிக்கும் வார்த்தையிலே, அன்பக்கனியின் பேரழகினிலே காவியம் செய்யப்பட்ட புருஷர்த்திர செறிவிலே பரமாத்மாவின் மகன்—மன்னியாங் கவிதை—அரங்கத்திலும் சகல நிலையர்—லௌகீக வாழ்வு நாடிய காளிடக்கேசரியில் சாத்து எல்லாப் பொருளினையும் இணைத்து வாழ்வைச் சக்தியத்தைக் காணுகிறான். அவன் கடைக்கண் கிடைத்தும் எங்கும் மாறுதல் அம்மவோ! எத்தனை பேர்த்தன' பேரான யுகத்தை பெட்புறச் செய்வதும், வாழ்க்கைப்பாதையின் வஞ்சகம் சூது பொய், கொலை, களவு, காமமாம் கானில் நீக்கி கன்னியர் சகலமும் பதும் ஜீவ வர்க்கத்திற்கே ஜீவர்களைக் காப்பதும் யாவும் பெண்மைக் கடவுளின் பேருட் செயலாம். இன்பக்காதல் இசைப்பதும் அன்புக் காதல் ஆர்ப்பதும் அச்சினைசகியின் விளையாட்டு. மனிதனை தெய்வமாக்கவும், மனிதனைக் கவும், மிருகமாக்கவும்கூட பெண்மையால் முடியும். அவள் நினைத்தால் இவ்வுலகத்தை புண்ணிய பூமியாக்கவும் பாவ மண்ணுலகவும் இரணகளப்படுத்தவும், சாந்தமயமாகச் செய்யவும் கூடும். நமது ஆராய்ச்சிக் கெட்டியவரை இவ்வுலகத்தில் ஏற்பட்டிருக்கும் எந்த பெரிய யுத்தத்தைப் பார்த்தாலும் அவளது கட்டளையிலலாமல் நடக்கவில்லை. துரௌபதை வல்லமுக்கச் சொன்னாள்; பாண்டவர்கள் போர்க்கோலம் பூண்டனர். கைகேயி கட்டளையிடாவிட்டால இராம—இராவண யுத்தம் பிறந்திருக்குமா? சீதை சித்தமிசையா விட்டால இராவண லக்கூட்டம் அழிக்கப்படல் ஆகுமா? சென்ற ஐரோப்பியர் சண்டையைப் பார்த்தாலும் இளவரசி பொருத்தியின் இரத்தத்திற்காக வல்லவா இரத்த ஆறு பெருக்கெடுத்தோடிற்று. இந்தியாவில பாஞ்சாலத்தார் படுகொலை செய்யப்பட்டதான எவரால்? ஒரு ஐரோப்பிய மாது அவமதிக்கப்பட்டதாலன்றோ? இதனால். பெண்மையே இவ்வுலகத்தில் தனியரசு செலுத்துகிறாள்—மனிதவர்க்கம் முழுதையுமே ஆட்சி புரிகிறாள். என்பதை மனதில வைத்துக்கொண்டு கதையை நடத்துவோம்.

இந்தியாவில் தர்மம் குன்றி அதர்மம் அதிகரித்து விட்டது. பெண்மைத் தேவின் பெற்றிபோய் ஆணுக்கு அடிமையானாள். வீரத் தாய்மார் வீரப்பாலூட்டாமல் வேறுபாலூட்டினர். கோழைத்தனம் நாட்டில் குடிகொள்ளலாயிற்று. கிரேக்கர் எழுச்சி, பாரசீகப்படையெடுப்பு மொகலாயர் ஆதிக்கம், ஆங்கிலேயர் சைன்யத்திறம் இவற்றை யெதிர்த்துத் தோன்கொக்க மாட்டாமல் இந்தியா அடிமையாகிவிட்டாள். அன்னியன் கைமேல், நாட்டான் கை கீழ் என்று ஏற்பட்டுவிட்டது. அன்னியன் நமது நாட்டில் அதிர அதிரச் சாரியடிப்பது, நாட்டிலே பிறந்து நாட்டிலே வளர்ந்து நாட்டை யனுபவிக்க வேண்டிய நாம் அஞ்சி அஞ்சி நடப்பது என்ற நிலைக்கு வந்துவிட்டோம். இப்பொழுதுதான் இந்தியத்தாய் தனது சக்தியை யுணருகிறாள். ஒரு தாதாபாய், ஒரு திலகன், ஒரு கோகலே, ஒரு தாஸன், ஒரு லஜபதி, ஒரு மோதிலால், ஒரு காந்தியாதிய குழந்தைகளைப் பெற்று வீரமூலையூட்டுகிறாள்; சுதந்திரச் செவ்வெண்ணெய் புகட்டு

(5-ம் பக்கம் பார்க்க)

அப்னு! துஸ்ரா!

தேநீர் குடிக்கப் போகிறோமென்றே மார்த்து விடக்கூடாது. ஏனெனில் தேநீர்க் கடைகளிலேதான் அப்னு! துஸ்ராக்கள் அதிகமாக உலவுவதைக் கேட்டிருப்பீர்கள். உங்கள் காதுகளுக்கு அந்த இரண்டு அபாயகரமான வார்த்தைகளும் என்னவாயிருக்குமோ எமக்குத் தெரியுமா? ஆனால் எமது காதுகளில் அவைகள் குத்தலெடுக்கின்றன. ஒரு விஷசர்ப்பத்தைக் கொதிக்கக் கொதிக்க ஊற்றியது போலிருக்கிறது. ஏனெனில் சாய்க்கடைகளில் தேத்தண்ணீருடன் துவேஷத்தையும் சேர்த்துக் கொடுக்கிறார்கள். நாமும் குடிக்கிறோம். "அப்னு" வென்றும் "துஸ்ரா" வென்றும் பிரிக்கிறார்கள். இந்தப் பிரிவையெல்லாம் முஸ்லீம்கள் சாய்க்கடைகளிலேதான். "ஹிந்துக்கள் வைதீகப் பிடுங்கள் ஜாதி மதம் என்றவைகளால் பீடிக்கப்பட்டவர்கள்." என்று நிந்திக்கப் படுகிறார்கள். அதை நாம் வெட்கத்துடன் ஒத்துக் கொள்ளுகிறோம். வேறு வழியில்லை. ஆனால் சமதர்மத்தை அஸ்திவாரமாகக் கொண்ட முஸ்லீம்கள் நம்மவன், பிறன் என்று பாகுபடுத்துவதேன் என்பது எமக்கு விளங்கவில்லை. "முஸ்லீம் சாப்பிட்ட கோப்பையில் ஹிந்துக்கள் சாப்பிட மாட்டார்கள்" என்று கூறப்படுகிறது. இதை நாம் நம்ப முடியுமா? அவ்வளவு வைதீகமாயிருக்கும் ஹிந்து முஸ்லீம் சாய்க்கடையிலே சாப்பிட மாட்டான். இதனால் இந்துக்கள் சாப்பிட்ட கோப்பையில் முஸ்லீம்கள் சாப்பிட விரும்புகிறதில்லை யென்றே சரியாகவோ தப்பாகவோ ஹிந்துக்கள் எண்ண இடமிருக்கிறதல்லவா? நாடு போய்க் கொண்டிருக்கும் ஒற்றுமையுணர்ச்சியில் இத்தகைய அபாயகரமான பாகுபாடே கூடாதென்பது நமது கருத்து. ஹிந்து ஹோட்டல்களில் அப்னு துஸ்ரா வென்னும் பேச்சே கிடையாது. அவ்வாறே முஸ்லீம் சாய்க்கடைகளிலும் இருத்தல் வேண்டும். நாளுக்கு நாள் இந்துக்களும் முஸ்லீம்களும் கொஞ்சி பாந்தத்துவம் கொண்டாடுவதற்கு இத்தகைய பிரிவினைப் பதங்களும் கூட இல்லாது களையப் படுவதில் எவரும் அபிப்பிராய பேதப்படக் காரணமில்லை. இவ்வூரிலிருக்கும் முஸ்லீம் பிரமுகர்கள் கொஞ்சம் கருத்துச் செலுத்த வேண்டுகிறோம். மதம் இடந்தரா விட்டால் வற்புறுத்த நமக்கு உரிமையில்லை.

வீணாதி வீணர்கள்.

புதிய தில்லியிலே சட்டசபை மண்டபத்திலே வெட்டிப்பேச்சு வீணர்களெல்லாம் கூடினார்கள். வழக்கம்போல் கூடினார்கள்; வழக்கம்போல் பேசினார்கள்; வழக்கம்போல் தேசிய கட்சியார் என்ற மஹாமேதாவிகள் சர்க்காரின் அவசரச் சட்டத்தைக் கண்டித்துக் கொண்டு சென்ற தீர்மானம் வழக்கம்போல் தோல்வியே முடிந்தது. இதைப்பற்றி யெல்லாம் நமக்குக் கவலையில்லை. "சட்டசபை யொன்றிருக்கிறது அதைக் கலந்து செய்வோம்" என்ற எண்ணமேயில்லாமல் இந்த சர்க்கார் தனது எதேச்சாதிகாரத்தில் அவசரச் சட்டத்தை அந்தக் கணக்காய்ப் பிரயோகித்த பின்னால் "நாங்களும் சட்டசபை மெம்பர்கள்" என்று கூடலாயா? "மதியாதார் வாசல் மிதியாமை கோடி பெறும்" என்று பாட்டி சொன்னவாறு நடந்திருந்தால் நலமாயிருந்திருக்கும். தேசியக் கட்சியார் சர்க்காரை சுடச்சுடப் பேசினார்கள் என்று சிலர் சொல்லக்கூடும். ஆனால் உண்மையில் சர்க்கார் மெம்பர்கள்தான் தேசியக் கட்சியாரை வெட்கம்வர, மானங்கெடக் கேட்டார்கள் என்று நாம் சொல்லுகிறோம்.

"அவசரச் சட்ட அரசாங்கத்தை யிவ்வளவு இழிவுபடப் பேசுகிறீர்களே எங்கே நீங்கள் ஆண் பிள்ளைகளானால் வெளியிலே இப்படிப் பேசுங்கள் பார்க்கிறோம்!" என்று கூறிய கிட்னியின் வாயில் ஒரு பிடி காந்தியுப்பைப் போட வேண்டும். மீசை முளைத்த ஆண் சிங்கங்களானால் எங்கே பார்க்கலாம் அவ்வாறு பேசியே காட்டட்டுமே. தடியடி படும் தாய்மார்களும், குழந்தைகளுக்குமுள்ள ரத்தத்தில் கோடியில் ஒரு பங்காவது இருக்குமானால் கண்டிப்பாய் அப்படித்தான் செய்வார்கள். "வந்தே மாதரம், இங்கிலாப் ஜிந்தாபாத், (புரட்சி நீடூழி வாழ்க) என்றுகூட சட்டசபைக்குள் கத்தினார்களே அதையாவது பாராட்டக் கூடாதா? என்று கேட்பீர்கள். சட்டசபை மண்டபத்துக்கு வெளியிலே அவ்வாறு கத்தினால் நிச்சயமாய் நாம் பாராட்டவே செய்வோம். சிங்கம் கடிக்காது என்று தெரிந்தால் ஒரு பேடி கூட அதன் வாய்க்குள் கையை விடுவான். அதனால் அவனைப் போற்றி விடலாமா? உத்தியோகப் பற்றற்றோர் அதிகப்படியானவர்கள் கண்டனத் தீர்மானத்திற்கு சாதகமாக இருந்தால் வெற்றி தேசியக் கட்சியாருக்கே.

கிமெந்தான் இந்து மயானம்.

(ஸ்ரீஜத் எஸ். பி. எஸ். மணி ஐயர்.)

கிமெந்தான் இந்து மயானக் கணக்குகளை அதன் மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீமான் ப. சி. சோமசுந்தரம் பிள்ளை நீண்ட நாட்களாகக் கொடுக்கவில்லை யென்று தாங்கள் கேட்டிருந்தீர்கள். 1927ம் ஆண்டில் "சுதந்தர"னிலும் இதே கேள்வி பிறந்தனது. அப்பொழுதே கணக்குகள் கொடுப்பதாக ஸ்ரீமான் பிள்ளை தெரிவித்ததையும் நாமறிவோம். சின்னாட்களுக்குமுன் ஊரில் உள்ள பல தலைவர்களையும் உதவிக்கு அழைத்தீர்கள். அதில் நம்முடைய பெயரும் காணப்படுகிறது. நாம் அவ்விதத் தலைமை ஸ்தானம் வகிக்கவில்லை என இவண் அறிவித்து விட்டு நமக்குத் தெரிந்ததைச் சொல்லி விடுவோம்.

1913—1914ம் வருடங்களில் தாம்புவே, கிமெந்தான் இந்த இரு மயானங்களின் பரிபாலனத்திற்காக ஒரு திட்டம் தயாரிக்கப் பட்டு லோயர் பர்மா சிப் கோர்ட்டில் தாவா செய்யப்பட்டது. வழக்குகளின் நம்பர் 83,84 என்று நினைக்கின்றோம். இருமயானங்களுக்கும் தலா ஐந்து டிரஸ்டிகள் ஏற்படுத்தப் பட்டார்கள். கணக்குகளும் வருடம் ஒரு முறை யோக்கியதை யுற்ற கணக்குப் பரிசோதர்களால் பார்வையிடப் பெற்று கோர்ட்டுக்கு ஒரு காப்பி கொடுத்து விட்டு அந்த நகலை ஒரு ஆங்கில பத்திரிகையிலும், ஒரு தமிழ்ப் பத்திரிகையிலும் பிரசுரிக்கவேண்டுமென்று கோர்ட்டு உத்திரவிட்டிருக்கிறது. தாம்புவே மயான டிரஸ்டிகள் அம்மாதிரி செய்து வருகிறார்கள். நாமறிந்த வரையில் கிமெந்தான் டிரஸ்டிகள் கணக்குகள் பகிரங்கமாகக் கொடுத்ததாக ஞாபகமில்லை. ஒருவேளை நாம் சொல்லுவதில் தவறிருந்தால் திருத்தப்படும். மேற்கூறிய வழக்குகளில் ஆசிரியர் புரசை ஸ்ரீமான் ஏகாம்பரமுதலியாரும் ஒரு கக்ஷிக்காரர் ஆவார். இதன் முழு விபரங்கள் அன்னவருக்குக் கண்டிப்பாய்த் தெரியும். ஸ்ரீமான் பிள்ளையைத் தவிர மற்ற டிரஸ்டிகள் தற்சமயம் இல்லை யென நம்புகிறோம். கோர்ட்டு மூலமாக நியமிக்கப் பட்டவரை ஊரார் கணக்கு கேட்கச் சொன்னால் எப்படிக் கேட்க முடியும் பிள்ளையும் அதற்கு பதில் சொல்ல கடமைப் பட்டிருக்க வில்லை. கோர்ட்டு மூலமாகக் கேட்பதுதான் ஒழுங்கான முறை. அதைவிடுத்து நம் பதப்பிரயோகம் செய்வதில் பயன் ஏற்படுமென்று நாம் நினைக்கவில்லை. நாம் விசாரித்த வரையில் கணக்குகள் பரிசோதகரிடம் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பல வருடக் கணக்குகளாதலால் கொஞ்சம் தாமதம் ஏற்பட முடியும்.

குறிப்பு:—நாம் கேட்டுக் கொண்ட பிரபலஸ்தர்கள் பலரில் ஸ்ரீமான் எஸ். பி. எஸ். மணி ஐயர் தாது முழு உதவியையும் அளித்ததற்கு எமது நன்றியைச் செலுத்துகிறோம். அவர் கூறுவதில் ஆழமான அர்த்தமிருந்தாலும் வெட்டொன்று துண்டிரண்டில்லை. இருந்தாலும் இரகசியத்தை வெளிப்படுத்தி விட்டார். அதை நாம் பச்சைத் தமிழில் பேசிவிடுகிறோம். 1913—14 முதல் ஏறக்குறைய 10 வருஷங்கள் ஸ்ரீமான் பிள்ளை சுடுகாட்டுக் கணக்கில் ஆதாயம் செலவு செய்து வந்திருக்கிறார். பல ஆயிரக் கணக்கான ரூபாய்கள் அவரிடம் இருக்கின்றன. பகிரங்கத்தில் கணக்குக் கொடுக்கவில்லை யென்று ஸ்ரீமான் ஐயர் கூறுகிறாரே அப்படியானால் அந்தரங்கத்தில் கொடுத்திருக்கிறாரென்ற அர்த்தமா? புரசை ஸ்ரீ ஏகாம்பர முதலியார் தலையிலும் ஒரு வெடிக்குண்டை வீசுகிறார். இனியாவது முதலியாரின் காதுகளில் கேட்கிறதா? கணக்குக் கேட்பாரா? கோர்ட்டு மூலமாய் நியமனஞ் செய்யப்பட்ட டிரஸ்டி கோர்ட்டுக்கே கணக்குச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்" என்று ஐயர் கூறுகிறார். ஐயரும் பிள்ளையும் நண்பர்களென்பதை நாமறிவோம். நட்புரிமையில் ஐயர் நழுவுகிறார். சுடுகாடு பொது ஸ்தாபனம், பொது ஜனங்களுக்கே டிரஸ்டி கணக்குக் கொடுக்கக் கட்டுப்பட்டவரென்பதை நமது ஐயருக்கு நாம் ஞாபக மூட்டுகிறோம். மேலும் கோர்ட்டேறத்தான் வேண்டுமென்பது ஐயரின் கருத்தா? அப்படியானால் "ஆமையையடிப்பது மல்லாக்க" என்று நமக்கு வழி காட்டுகிறார். நாம் அஹிம்ஸா வாதிகள். சாத்வீக முறையில் கோர்ட்டேறாமலே கணக்கு வாங்க முடியுமென்பதையும் கூறிவிடுகிறோம். கணக்குத் தயாராகிறதென்றும் ஐயர் கூறுகிறாரே அதை அவரெப்படியறிவார்? ஸ்ரீமான் பிள்ளையை நேரில் கேட்டறிந்தாரா? இல்லை தொட்டிலாட்டுகிறாரா? இதையெல்லாம் ஸ்ரீமான் ஐயர் விளக்கி வைத்தால் நலம். நாம் உதவி கேட்ட இதர பிரமுகர்கள் மௌனஞ் செய்கிறார்கள். அவர்களைப் பற்றி அடுத்த இதழில் பேசுவோம். ஐயருக்கு நமஸ்காரம்.

தாலியறுத்த சர்க்கார்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறுள். அன்று முதல் நாட்டில் ஒரு விதமான புதிய உணர்ச்சி, வேகம் எல்லாம் உண்டாகிறது. விடுதலை வேண்டும் என்று ஒவ்வொரு இந்தியனும் எண்ணத் தலைப்பட்டான். திலகரைப் பின் பற்றியோ காந்தியைப் பின் பற்றியோ சுதந்திரப் போரில் நாட்டு மக்களெல்லாம் இறங்கி யிருக்கிறார்கள். "இந்த உடலென்ன அத்தனை பெரிதா? நாட்டுச் சுதந்திரம் நமக்கில்லாத பிழைப்பொரு பிழைப்பா? தெருவில் திரியும் தேடுவாரற்ற நாயை விட அடிமை யெந்த விதத்தில் உயர்ந்தவன்?" என்பன சிந்தனைகள் இந்திய உள்ளத்தில் வேரூன்றி விட்டது. பெண்டு பிள்ளை, சொத்து சுகம், உடல் உயிர், எல்லாவற்றையும் தியாகம் செய்யத் துணிந்து விட்டார்கள். "கடைசிவரை கண்டு விடுகிறது. தியாகத்தின் முடிவு எம்மட்டு மென்று பார்த்து விடுகிறது மீட்சி அல்லது முடிவான வீழ்ச்சி யிரண்டி லொன்றைத் தழுவிக் கொள்ளுகிறது" என்ற இறுதி யெண்ணத்தில் இந்தியா இக்காலை இறங்கி விட்டிருக்கிறது. இதில் வெற்றி தோல்வியைப் பற்றித் துளிகூட சந்தேகம் வேண்டாம். ஏனெனில் பெண்மையின் வீரம் பிரகாசிக்கிறதல்லவா? ஆண் சந்ததியாரை மாத்திரம் போரிலிறக்கி விட்டு பெண்மைத தெய்வம் கோட்டைக்குள்ளே தலையடைத்துப் பூட்டிக் கொண்டிருக்கவில்லை. ஆணோடு பெண்ணோடு பிள்ளை குட்டிகளோடு இந்தியா போராடுகிறது. பெண்மையின் வீரத்திற்குத் தான் பிரிட்டன் தலை குனியப் போகிறது; அடிவணங்கப் போகிறது.

கஷ்ட மின்னதென்றே யறியாத கன்னிப் பெண்களும், பிறவியிலேயே செல்வத்தில் பிறந்து செல்வத்தில் வளர்ந்து செல்வத்திலேயே குளித்திருக்கும் ஸ்திரீ ரத்தினங்களும் லோகாதாரமான ஜீவவர்க்கத்தின் உயிர் நாடியான தாய்மாரும் தடியடி தாங்கிச் சிறைக் கோட்டைக்குள்ளே சீதையைப் போல் புழுங்குகிறார்கள். இவர்களாலன்றி இந்தியாவுக்கு விமோசனமே யில்லை. "உலகம் ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே" யென்று ஆன்றோர் சொன்ன சொல் அமுத மென்போம்.

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வரையறை புண்டு. தீமை செய்வதற்கும் கூட ஒரு எல்லை யில்லாமலில்லை. அதைத்தாண்டிய விடத்து அறக்கடவுள் அவரை யழித்து விடுகிறது. இப்பொழுது இந்தியா வெங்கும் நடத்தப்படும் அவசரச்சட்ட அரசாங்கத்தில் எவ்வளவு அக்ரமங்கள் நடக்கின்றன. சட்டத்தை மீறினால் சட்டப்படி தண்டிக்க வேண்டியதைவிட்டு தடியாலடிக்கவும் துப்பாக்கியால் சுடவும் ஈட்டியால் குத்தவும் எந்தச் சட்டம் இடங்கொடுக்கிற தென்பது தெரியவில்லை. "ஏரோப்ளேன் வெலிங்டன் எவ்வளவு ஓட்டம் ஓடுவார் பார்த்து விடுகிறது" என்ற நெஞ்சழுத்தம், மனத்துடுக்கு, சித்தத்துணிவு கொண்டு இந்தியர் எல்லாக் கஷ்டங்களையும் இந்த மண்ணுக்காக—பிறந்த பொன்னாட்டிற்காக சகித்துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தும் அடக்குமுறை எல்லை தாண்டி விட்டது. நமது தாய்மாரை அடித்துக் கொன்றாலும் பொறுப்போம், சித்திரவதை செய்தாலும் சகிப்போம. ஆனால் மானங் குலைத்தாலோ? அதுமாத்திரம் பொறுப்பதில்லை.

"இது பொறுப்ப தில்லை—தம்பி
எரிதழல் கொண்டு வா
கதிரை வைத்திழந்தான்—அண்ணன்
கையை எரித்திடுவோம்"

என்றான் விறல் வீமன். ஆனால் நாம் காந்தியடிகளின் அஹிம்ஸை வழிச் செல்லுபவர்கள். அக்ரமம் செய்யமாட்டோம்; அக்ரமத்தை அழிப்போம்.

தலைச்சேரியிலே ஸ்ரீமதி பிரபாதேவி சர்க்காரின் சட்டத்தை மறுத்தாள்; மீறினாள். அதற்காக ஆறுமாத சிறை தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப் பட்டாள். அபராதத் தொகையை ஈடு செய்வதற்காக அந்த அம்மாள் அணிந்திருந்த நகைகளை யெல்லாம் கழற்றும்படி மாஜிஸ்ட்ரேட் கட்டளையிட்டான கழற்றியாயிற்று. அதுவரை அவன் தவறு செய்தானென்று நாம் சொல்ல மாட்டோம். அவளணிந்திருந்த நகைகளெல்லாம் வயிரமாயிருந்தாலும்சரி, நவரத்தினம், ஜீவரெத்தினமானாலும் சரி இல்லை தொட்டதையெல்லாம் பொன்னாக்கும் தேவமணியாயிருந்தாலுஞ்சரி நமக்கு அக்கரையில்லை. ஆயிரம்பதினாயிரம் கோடி பவுன் பெறுமான முள்ள ஆபரணமாயினும் எந்த வொரு இந்தியன் பிரமாதமாய்ச் சிந்திக்கப் போகிறான்? "போனால் போகிறது. நாட்டுச் சுதந்திரத்தைவிட அந்நகைகளே

நட்பே! போய்வா!

நமது சென்னைக் "காந்தி" சென்ற ஞாயிறன்று சிறைக்குள் புகுத்தப்பட்டுவிட்டது. ஆசிரியர் வேறு பத்திரிகை வேறு என்று பிரிக்காமல் பேசுகிறோம். "காந்தி" பத்திரிகையின் ஆசிரியரும் எமது நண்பருமான ஸ்ரீஜத் டி. எஸ். சொக்கலிங்கம் கைதி செய்யப்பட்டு 6-மாத தண்டனையும் 50 ரூபாய் அபராதமும் விதிக்கப்பெற்றார். "நட்பே! போய்வா!" என்று சொல்லுவதைத் தவிற வேறு உபசாரமென்ன சொல்லலாம்?

ன்ன அத்தனை பெரிதா? என்று சட்டை செய்ய மாட்டான். ஆனால் அப்படுபாவியின் கண் அவன்—கண்ணிலே தீப்பாய— இந்தியாவின் ஹிருதயத்திலே பாய்ந்து விட்டது. இந்தியாவின் தெய்வமான—ஹிந்துக்களின் ஜீவிதமான தாலியையும் கேட்டு விட்டான். அடடா! இந்தியாவின் பெண்மை இப்படியுமா அவமதிக்கப் பட வேண்டும். "பெண்டிர் தலைமையுடையீர்! பெண்களுடன் பிறந்தீர்! பெண்பாவ மன்றோ? பெரியவசை கொள்வீரோ?"

தாலியையும் பறிகொடுத்தாள். எதற்காக? என்ன விலை கொடுத்தும் உயிரைப் பயமாக வைத்தும் சுதந்திரம் பெறுவது என்று துணிந்த அந்த மகாலட்சுமி தாலியை மாத்திரமா? தர்ரத்தையும் தனயர்களையுங்கூட இழப்பாள்.

இந்தியசர்க்கார் இவ்விடத்திலேதான் மன்னிக்க முடியாத—ஹிமயமலை யளவு குற்றத்தை—தவறைச் செய்கிறது. ஹிந்து ஜாதியை மாத்திரமில்லை, இந்தியப் பெண்மையை மட்டுமில்லை, இந்திய சமுதாய முழுமையுமே கேவலப்படுத்தி விட்டது. ஒருசிறு கதர் நூல் தாலி இப்பொழுது காலியாய்க் கிடக்கும் இந்திய சர்க்கார் கஜானாவை நிறைத்து விடுமா? இந்திய சர்க்காரின் வரவு செலவில் விழுந்திருக்கும் பொத்தலை யடைத்து விடுமா? இங்கிலாந்தி லேற்பட்டிருக்கும் பணக்கஷ்டத்தை —வேலையில்லாத் திண்டாட்டத்தை நிவிர்த்தி செய்து படியளந்து விடுமா? ஆடிக்கொண்டிருக்கும் தங்கத்தம்மாளைத் தூக்கி நிறுத்திவிடுமா? அதெல்லா மொன்றுமில்லை. ஏற்கெனவே இந்தியரின் உள்ளத்தில் எரிந்து கொண்டிருந்த நெருப்பில் எண்ணெயை யூற்றி வளர்த்துவிட்டான். இதைக்கண்டும் கேட்டுமெந்தவொரு இந்தியனது இரத்தம் கொதிக்க வில்லையோ அவன் உண்மை யிந்தியனில்லை.

ஸ்ரீமதி பிரபா நீடூழி வாழக்கடவாள். அவளது மாங்கல்யமும் மங்களகரமாயிருக்கட்டும். இந்தியா விருக்குமட்டும், இந்தியன் ஒருவன் உயிர்வாழும் வரையும் அழியாத கீர்த்தி பெற்றுவிட்ட அவள் பாக்கியவதி. இந்தியப் பெண்மணிகள் இந்தியாவின் ஸ்வதந்திரத்திற்காக தங்களுக்குள்ள சர்வ ஸ்வத்தையும் இழக்கச் சித்தமாயிருக்கிறார்களென்பதை இத்தேவி உலகினுக் கறிவித்துவிட்டாள். இளம் இந்தியாவின்—நவ ஹிந்துஸ்தானத்தின் பெருமை பிரகாசிக்கட்டும்.

ஸ்ரீமதி பிரபா தேவியின் தாலி திருப்பியளிக்கப் பட்டு விட்டது. ஆனால் அதிலிருந்த புனிதத்துவம் இப்பொழுதில்லை. தெய்வீகக்கலை மங்கிப்போய் விட்டது. அன்னியனின் இரத்தக் கரத்தால் தொட்டறுத்ததில் தாலிக் கயிறு இரத்தக் கறையாகிவிட்டது. மேலும் அறுந்த தாலி இனிப் பொருந்தாது. சுதந்திரதேவியின் சன்னிதானத்திலேதான் அது பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும்.

பிரபாவின் தாலியை யறுத்ததால் இந்தியாவையும் பிரிட்டனையும் பிணைத்திருந்த கயிறு அறுக்கப்பட்டதாகிவிட்டது. இனிமேல் இரண்டும் ஒன்று சேர்ந்து வாழ்க்கை நடத்துமென்பதில்லை. பிரிந்துபோன இருவர் போலவேதானிருக்கவேண்டும். இதற்கு அறிகுறியாகத்தான் சர்க்கார் தாலியறுத்தது.

தாலி திருப்பிக் கொடுக்கப்பட்டதால் சர்க்காரோ சர்க்காரின் வேலைக்காரனோ செய்த தப்பு திருத்தப்பட்டதாகி விட்டதென்று சர்க்காரோ அல்லது ஜனங்களோ திருப்தி யடைந்து விடமுடியாது. செருப்பாலடித்துத் தடவிக் கொடுத்துவிட்டால் எவ்வளவோ அவ்வளவு அளவுக்கே தவறு திருத்தப்பட்டிருக்கிறது. தாலியறுத்த படுபாவி இனிமேல் இந்தியப் பயணத்தில் ஜீவனஞ் செய்யக்கூடாது. தாலியறுத்த சர்க்காருக்கு பிராயச்சித்தம் வேண்டுமானால் இந்தியாவும் பிரிட்டனும் கூடுமானவரை ஸ்நேகபாவத்துடன் வாழ வேண்டுமானால் இந்தியாவுக்கு பூரண ஸ்வதந்திரமளித்து விடட்டும்.

Printed & Published By A V· Sellam Pillay at the Desopakari Press, 210,36th Street Rangoon

பதிவுஎண் 245 மலர் 9 இதழ் 58 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை **DESOPAKARI** புதன் ஞாயிறு வெள்ளி வெளியீடு

210-36-வது இரங்கோன், (7—2—32) தை மீ 25உ ஞாயிற்றுக்கிழமை,

வில்லிங்டன்பிரபுவுக்குசிறைதண்டனை

சகுந்தலை பெற்றதோர் பிள்ளை சிங்கத்தினை
தட்டி விளையாடி—நன்
றுகந்ததோர் பிள்ளைமுன் பாரதராணி
ஒளியுறப் பெற்ற பிள்ளை.

—கவியரசன்.

சத்தியாக்கிரஹிகளெல்லாம் சர்க்காரைத் துரும்புபோலெண்ணிவிட்டார்கள். சர்க்காரின் சட்டங்களையும்சர்க்காரின்நிர்வாகங்களையும் வேடிக்கை வஸ்துவாகக் கொண்டு விளையாடுகின்றனர். தடியடியையும், துப்பாக்கிக் குண்டையுங்கூட சிரித்துக்கொண்டே நடுநெஞ்சில் தாங்கும் அவர்கள் யாருக்குப் பயப்படுவார்கள். சத்தியமும், நியாயமும் சத்தியாக்கிரஹிகளின் பக்கத்திலேதானிருக்கின்றதென்பதை சத்தியாக்கிரஹிகளும் முழு உலகமும் அறிந்தேயிருக்கிறது. இல்லாவிட்டால் ஹிரண்யகசிபு செய்த எல்லா இடையூறுகளையும் இன்னல்களையும் பிரகலாதாழ்வான் பொறுக்க முடியுமா? ஆண்டவன் அவனுக்குக் காட்சி கொடுப்பாரா? இப்பொழுதைய சாத்வீகத் தொண்டர்கள் இத்தனை கொடுமையான அடக்குமுறைகளையும் அவசரச் சட்ட அரசாங்கத்தையும் "தூ"வென்று தள்ளுவார்களா? ஒரு பெரிய நாட்டின் சுதந்திரத்தை—33 கோடி மக்களின் விடுதலையை—மணல் வீடுகட்டி மரப்பாக் பொம்மை வைத்துவிளையாடுவதுபோல்நடத்துவார்களா? சர்க்கார் தரப்பில் எவ்வளவு கடூரம், கொடுமைகளெல்லாமிருந்தாலும் சத்தியாக்கிரஹிகள் சர்க்காருடன் விளையாடுவது போலத்தான் ஒரு தமாஷாகக் கொள்ளுகிறார்கள். நெஞ்சழுத்தம், மனத்துடுக்கு, அஞ்சாமையே ஆபரணமாக அணிந்திருக்கிறார்கள். தடியடியோ துப்பாக்கிக் குண்டோ ஒரு பிரமாதமில்லை. சர்வ சாதாரணமாகப் பூமாலை போட்டுக் கொள்வதுபோன்றிருக்கிறது. சிறைக்குச் செல்லுவது மாமியார் வீட்டுக்கு மருவுண்ணச் செல்லுவதுபோல் விசாரணையென்பது நாடகத்தில்நடிப்பது மாதிரி. அதிகாரிகளிடம் பேசுவதோ, வாக்குமூலங் கொடுப்பதோ வண்ணாத்திப்பூச்சிகளோடு விளையாடுவது போல்.

அதிகாரிகள் கூட்டங் கூட்டமாய்த் தொண்டர்களைக் கைதுசெய்து ஆடுகளைப் பட்டியிலடைப்பது மாதிரி கூட்டம் கூட்டமாய்ச் சிறையிலடைக்கிறார்கள். சென்ற மாதம் 28உ ஒரு கூட்டத்தார் கிர்காம் மாஜிஸ்திரேட்டால் விசாரிக்கப்பட்டபோது நிகழ்ந்த சம்பவம் வெகு விசித்திரமானது. பத்துத் தலையும் இறவாத வரமும் படைத்த ராவணேஸ்வரன் முன்னால் அங்கதன் பேசியதுபோல ஒரு தொண்டன் பேசுகிறான். அவனுக்கும் மாஜிஸ்திரேட்டுக்கும் நடந்ததை சம்பாஷணை ரூபமாகவே தருகிறோம்:—

மாஜி.—உன் பெயரென்ன?

தொண்டன்.—லார்டு வில்லிங்டன்.

மாஜி.——நீ யொரு காங்கிரஸ் தொண்டன்தானே?

தொண்டன்:—இல்லை. நான் தொண்டனுமில்லை; காங்கிரஸ்காரனுமில்லை.

அடித்தகைக்கும் ஆராதனையா?

எல்லைப்புற தினத்தின்போது கைது செய்யப்பட்ட பல சத்தியாக்கிரஹிகள் லாகூரிலே விசாரிக்கப்பட்டார்கள். அப்பொழுது ஒரு தொண்டன் அன்பே வடிவான காந்தியடிகள் கூடச் செய்ய நினைக்காத—செய்யாத ஒரு அபார செயல் செய்ததை இங்கே குறிப்பிட வேண்டும். தொண்டர்கள் எல்லோரும அவன் செய்ததேபோல் செய்யவேண்டும். அப்பொழுதான் அஹிம்ஸைத் தத்துவம் ஸ்புரிக்க முடியும். அடிப்பவனும்கூட வெட்கப்பட்டு அடிபணிவான். நமது சத்தியப்போர் வெற்றியடையும். அன்பால் தன்னைக் கொல்லவரும்—தின்னவரும் புலியையும் வெல்லலாம்.

"தின்ன வரும்புலி தன்னையு மன்பொடு
சிந்தையிற் போற்றிடுவோம்"

என்ற பாரதியாரின் வாக்கு பலிக்கும். கொலையாளியின் வாளைக்கூட—ஈட்டியைக்கூட 'நில்'லென்று சொல்லிவிடலாம். சரீரத்தில் ஈட்டி பாய்ச்சப்பட்டபோதும் அதை சகித்துக் கொள்வதால் ஈட்டிக்காரனை சபிக்காமல் வாழ்த்துவதால் அவன் மனமே மனத்தைத்தின்று "ஐயோ! இந்த அன்பார்ந்த ஆத்மாவுக்கு இத்துன்பிழைத்தோமே" என்று மயங்கசிந்து அஹிம்ஸை வழிப்பட்டுவிடுவான். இதைத்தான் காந்திஜி சொன்னார். அத்தொண்டனும் செய்கையில் செய்து காட்டினான். வஞ்சம் தீர்த்துக்கொள்ளுவது பேடியின் செயல். சகித்துக் கொள்ளுவதற்கு அதிகம் ஆண்மை வேண்டும். அங்கதன் காட்டிய ஆண்மையைவிட அனுமன் சாதித்த வீரத்தைப் பார்க்கினும், அருச்சுனன் செய்த வில் வித்தையைவிட, விறல் வீமன் புரிந்த போர்த்திறனைக் காட்டிலும் இப்பொழுது சாத்வீக வீரர்கள் காட்டும் வீராண்மைக்கு எல்லோருமே முடி வணங்குவார்கள்.

மாஜி:—ஊர்வலத்தில் நீ கலந்ததுண்டா?

தொண்டன்:—இல்லை.

மாஜி.—நீ குற்றவாளிதானே?

தொண்டன்:—நான்-அக்ரமமான கொடிய அவசரச் சட்டங்களால் நிரபராதிகளைக் கைதுசெய்து தண்டிக்கும் ஒரு கூட்டத்தாரின் தலைவனாயிருந்து இந்தியாவை யாளும் வைஸ்ராயாகிய வான் குற்றவாளிதான்.

மாஜி:—யார்?

தொண்டன்.—லார்டு வில்லிங்டன். எவனாயிருந்தாலும் கிருஷ்ண பகவான் கூறுகிறபடி எனது உடலைச் சிறைப்படுத்தலாம். ஆனால் எனது ஆத்மாவை உணர்ச்சியை யொன்றுமே செய்ய முடியாது.

சத்தியாக்கிரஹிகளை குற்றவாளிகளென்று மாஜிஸ்திரேட் விசாரிக்கின்றார். எல்லோருக்கும் சிறை தண்டனை விதித்தாயிற்று. ஒரு தொண்டன்மாத்திரம் இரண்டடி முன்செல்லுகிறான். அவனது முகத்தில் அஹிம்ஸையின் ஜோதி பிரகாசிக்கிறது. சத்தியகலை ஸ்புரிக்கிறது. வெற்றியின் பிரபை ஹிருதய நடுவிலிருந்து உதடுகளை உடைத்துக்கொண்டு வெளிவரப் புன்சிரிப்புச் சிரிக்கின்றான். அன்பால் அவனது உள்ளமும் உடலும் பூரிக்கின்றது. ஆத்ம பூப்படைகின்றான். தண்டித்த மாஜிஸ்திரேட்டுக்கு என்னவென்றே விளங்கவில்லை. தொண்டன் தனது சட்டைப் பைகளுக்குள் கையைவிட்டு ஏதோ வொரு வஸ்துவை யெடுக்கின்றான். கோமிலா கோமளங்களைப்போல் கைத் துப்பாக்கியை யெடுத்தானா? பகத் சிங்கைப்போல் வெடிகுண்டை யெடுத்தானா? பிடி சாபத்தை என்றானா? இல்லை. இரண்டேயிரண்டு புஷ்பங்களை யெடுத்தான். அவனது ஹிருதயத்தைப் போல் அவைகள் மலர்ந்திருந்தன. அவனது அன்பைப்போல் அவைகள் மணம் வீசின. அவனது சாத்வீகத்தைப்போல் அவைகளில் அழகு தவழ்ந்தது. ஒன்றைத் தன்னைத் தண்டித்த மாஜிஸ்திரேட்டுக்கும் இன்னொன்றைத் தன்னைக் குற்றம் சாட்டிய இன்ஸ்பெக்டருக்கும் கொடுத்து "இதோ எனது ஹிருதய பூர்வமான நன்றியை யேற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறினான். அவர்களும் அதை மறுக்க முடியாமல் புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டே வாங்கிக் கொண்டார்கள். தொண்டன் அன்பை விதைத்துவிட்டான். அதிகாரிகள் மனத்திலும் செடி முளைத்துவிட்டது. வளர்க்க வேண்டியதும் அவர்கள் கடமைதான். அடித்த கைக்கும் பூப்போட்டுப் பார்த்த புண்யமூர்த்தி வாழ்க!

இனிமேல் முடியாது!

ஜோரேஸ்
ஸி. அலெக்ஸாண்டர்

உலக ஜனத்தொகையில் ஏறக்குறைய சரி பாதி மனித வர்க்கத்தைக் கொண்ட இந்தியாவும் சீனாவும் இப்பொழுது அடிமை நாடுகளாகவிருக்கின்றன. ஒவ்வொன்றும் மேனாட்டுடன் பிணைக்கப்பட்டுள்ள அடிமை பந்தத்தை அறுத்துக்கொண்டு தன் தன் விவகாரத்தை தானே பார்த்துக்கொண்டு சுயேச்சையாய் வாழவேண்டுமென்று விரும்புகிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்கீழ்ஒன்றும மேனாட்டுச்சர்வதேச சங்கத்தின்கீழ் மற்றொன்றும் இருந்தது போதும் என்ற நிலைமையை நன்கு உணர்ந்துவிட்டன. எளியாரை வலியவர் அடக்கியாளுவது டிராஸ்டிகளாக இருப்பது இனிமேல் வேண்டாம். வாழவோ அல்லது வீழவோ ஒவ்வொரு நாட்டுக்கும் உரிமை வேண்டுமென்றால் முற்றும் நியாயமான முறைதான். இவ்வுணர்ச்சியை எவரும் தடுப்பதற்கில்லை; எதிர்ப்பதற்கில்லை; அழிப்பதற்கில்லை.

விசாரணைகள் நடக்கின்றன. சர்வதேச சங்கமும் விசாரிக்கின்றது; பிரிட்டிஷ் கமிட்டிகளும் விசாரிக்கின்றன. இவையிரண்டுமே உருப்படுமென்று கூறிவிடமுடியாது. இவையிரண்டும் தவறினால் எதிர்காலம் என்னவாய் முடியுமென்று திட்டமாய்க் கூறுவதற்கில்லை. இந்தியா 1932-ம் ஆண்டிலோ அல்லது 1933-ம் ஆண்டிலோ ஒரு புதிய யுகத்தைக் காணப்போகின்றது. ஒன்று நிரந்தரமான சமாதானம், இல்லாவிட்டால் முடிவான சண்டை இரண்டிலொன்றைத்தவிர வேறு நடுவழி கிடையாது. பலாத்காரத்தை யழித்து முற்றும் சாத்விக முறையில்—எதிரிக்கு எள்ளத்தனை தீமை கொடுக்காமல் எல்லா கஷ்டங்களையும் தாங்களே சகித்து சுயராஜ்யம் பெறுவது என்ற நவீன வழியில் மகாத்மா காந்தி இந்தியாவை இறக்கிவிட்டிருக்கிறார். இதனால் அரசியல் குற்றம்—இராஜீடக் கஷ்ட நஷ்டம் பதின்மடங்கு அதிகரிக்கும். பொறுமை யெல்லை தாண்டி கட்டுக்கடங்காமல் போவதைத் தடுக்கமுடியாது. "நாங்கள் பட்ட கஷ்ட நஷ்டத்தை-அவைகளைப் பொறுமையுடன் சகித்ததை நீங்கள் கொஞ்சங்கூட சட்டை செய்யவில்லை. காந்திஜீயின் பங்காளித்துவத்தை நீங்கள் ஆத்திரத்துடனும் வெறுப்புடனும் மிதித்து துவைத்துவிட்டீர்கள்; உங்கள் நாட்டான் இரத்தம் ஒரு துளி சிந்தப்பட்டாலும் நீங்கள் சீறியெழுந்துவிடுகிறீர்கள். எங்கள் நாட்டான் இரத்தத்தை தண்ணீரைப்போல் தாராளமாய்ச் சிந்தத்துணிந்து விடுகிறீர்கள். ஜப்பானின் ராணுவ வன்மையைக்கண்டு ஜப்பானை மதிக்கிறீர்கள். நாங்களிருக்கும் பலஹீனத்தில்—ஈனஸ் திதியில் எங்களை தூசிலும் துச்சமாய் நடத்துகிறீர்கள். அதனால்—எங்களது நியாயமான தர்க்க வாதத்தை கேட்டு அதற்குத்தக்க பரிஹாரஞ் செய்யாததால் இதோ உங்களை நேரே குறிதப்பாமல் சுடக் கற்றுக்கொண்டோம்" என்று இந்தியர்கள் கர்ஜிக்கப் போகிறார்கள். இங்கிலாந்தின் இல்லங்கள் இவ்வாறேற்படும் கொலைகளால் காலியாகி விட்டபோதுதான் இங்கிலாந்தின் ஆலைகளெல்லாம் புகை கக்காமல் அயர்ந்து ஓய்ந்துவிடும்; ஆலைக் கதவுகள் இனிமேல் எக்காலத்திலும் திறக்கப்படாதபடி அடைத்துத் தாளிடப்படும். இந்தியாவுடன் வியாபாரஞ் செய்வது என்பது பழங் கதையாகிவிடும்.

மஞ்சூரியாவில் ஜப்பான் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதால்—தடுப்பதால் பிரிட்டன் ஏதாவதொரு நன்மையை யடைந்து விடுமென்று எவராவது தப்பாகக் கருதிவிடப் போகிறீர்கள். அதனால் பிரிட்டனுக்கே தீமை விளையும். சர்வ தேச சங்கம் பயனளிக்காவிட்டால்—வட்ட மேஜைக் கமிட்டிகள் தவறிவிட்டால்—நிச்சயமாய் புதியதொரு இரத்தஞ் சிந்தும் போராட்டம் ஆரம்பிக்கப்படும். வியாபாரச் சந்தை வேறு இடத்தில் கூட்டப்படும். இவைகளை யெல்லாம்விட பிரமாதமான தின்றொன்றும் ஏற்படத்தான் போகிறது. கிறிஸ்துவ உலகம் போன ஐரோப்பிய யுத்தத்தில் புதைக்கப்பட்டதைவிட இன்னும் அதிகமான ஆழத்தில் புதைக்கப்படப் போகிறது; கிறிஸ்துவ உலகத்திற்கு நாசகாலம் வரப்போகிறது. ஆஸியா கூட முழுதும் ஐரோப்பாவை துவேஷக் கண்ணால் வெறுப்பு நோக்கு நோக்கி ருஷியாவையோ அல்லது வேறு தேசத்தையோ பின்பற்றும். அந்த வெள்ளப் பிரவாகத்தில் அடித்துக்கொண்டு போகப்படுவதைத் தடுக்க வேண்டுமானால் ஒவ்வொரு அறிவாளியும் இப்பொழுது தானே அணைகோல வேண்டும். ஒவ்வொரு இராஜ தந்திரியும் திட்டம் தயாரிக்கவேண்டும். இந்தியாவும் சீனமும் எழுந்திருக்கும் வேகத

திரி சூலம்.

ஈட்டியைப்போலே மூன்று ஈட்டிகளை கொண்ட ஒரு ஆயுதத்திற்கு திரிசூல மென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். இது எதிரிகளிடம் கையாளப்படும் கொலைக்கருவி—ஒரே குத்தில் மூன்று காயங்களை யுண்டாக்கிவிடும் பயங்கரமான கொலைக்கருவி. நமது கையில் இது இப்பொழுதில்லை—நமக்கு வேண்டவும் வேண்டாம். நமது சுவாமிகளின் கையிலே கொடுத்திருக்கிறோம். அவர்கள் உல்லாசமாய் ஊன்றித் திரிகிறார்கள். அக்ரமம் அதிகரித்தும் உபயோகிக்கவில்லை. இவ்வளவு வியாக்கியானம் என்னத்திற்கு? இங்கே வேண்டுவது திரிசூலம் என்ற வார்த்தைதான்.

மூன்று ஈட்டிகள் ஒன்று சேர்ந்தாப்போல் மூன்று கமிட்டிகள் ஒன்று சேர்ந்து வட்ட மேஜைக் கமிட்டிகள் என்று பெயர் வைத்துக் கொண்டு இந்தியாவுக்குள் சாய்ந்திருக்கின்றன இன்னும் சில தினங்களில் கமிட்டிகள் வேலையைத் தொடங்கும். ஒவ்வொரு மாகாணத்திலும் மாகாணக் கமிட்டிகள் வேலை செய்து அவற்றை மத்தியக் கமிட்டியில் கலந்தாலோசித்து அப்புறம் புனராலோசனைக் கமிட்டியில் போட்டு, அதன்மேல் வைஸ்ராயும் வந்த மேதாவிகளும் வடிகட்டி ஏதோவொரு சத்தையிரக்கி இந்தியாவுக்குக் கொடுக்கப் போகிறார்களாம். இவைகளெல்லாம் திரிசூலத்தை நன்றாய்க் கூர் வரும்படி தீட்டுவதைத் தவிற வேறில்லை ஏனெனில் இந்தியனுடைய ஹிருதயத்தில் ஆழமாகப் பாய்ச்சப்பட வேண்டுமல்லவா?

இந்தியன் என்ன செய்யப்போகிறான்? திரிசூலத்தின் பளபளப்பிலே பட்டுமாயப்போகிறானா? இல்லை தப்பிப்பிழைத்து தன் காரியத்தை—கோரிக்கையைச் சாதிக்கப் போகிறானா? ரோஷமுள்ள இந்தியன்—சுயேச்சை யுணர்ச்சியுள்ள இந்தியன் இக்கமிட்டிகளுடன் கலந்து வேலை செய்ய மாட்டான். தன்னுடைய சொந்த நலத்திற்காக தன்னை விற்று—தான் பிறந்த நாட்டை பிறனுக்குக் காட்டிக்கொடுக்கும் படுபாவிகள் மாத்திரம் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். இக்கமிட்டிகளை நியமிப்பதுபற்றி இந்தியாவில் பிறந்த எந்த வொரு சுடுகுஞ்சிவையும் கேட்டதில்லை; கலந்தாலோசித்ததில்லை. பிரிட்டிஷ் மந்திரிகள் தங்களது எதேச்சாதிகாரத்தில் ஏற்படுத்திக்கொண்ட இக்கமிட்டிகளை—அவைகளால் எள்ளளவு நன்மைகூட இந்தியாவுக்கு ஏற்படாது என்று தெரிந்தும் ஒத்துழைப்பது மடமை; பட்டம் பதவி மோகம்; ஆசைப் பைத்தியம். இதை இந்தியன் செய்யவா போகிறான்? மூழு வட்ட மேஜையால் முடியாத காரியத்தை, காங்கிரஸூம் காந்திஜியும் ஒத்துழைத்தும் ஆகாது வேலையை அதுவும் நாடு நெருக்கடியான நிலைமையில் சாவுக்கும் பிழைப்புக்கும் பயப்படாது துணிகரமான போரில்—கடைசி யுத்தத்தில இறங்கி—தியாக வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கையில்—அவசரச் சட்டங்களால் ஈட்டி, துப்பாக்கி முனையில் நாட்டு மக்களை அழுத்திக்கொண்டிருக்கையில்—சாதிப்ப தென்பது சாத்தியமாகாது. பன்னிப் பன்னிப் பேசுவானேன்? காங்கிரஸின் கலப்பில்லாத கமிட்டி—காந்திஜீ வீற்றிராத கமிட்டி எங்களுக்குவேண்டாம். திரும்பிப் போய் விடட்டும் என்றுதான் நமக்குச் சொல்லத் தெரியும். அதைத்தான் ஒவ்வொரு இந்தியனும் சொல்லுவான்.

தில்-தேசியப் புத்துணர்ச்சியில் ஆசியா கண்டமே அதிர்ச்சிகொள்ளப் போகிறது. ஆசியாக் கண்டத்தின் புனிதக் கிளர்ச்சிக்கு அடிபணிந்து உலக அபிசூஷத்தை ஆதரிப்பதைத் தவிற வேறு இடைவழி யில்லவேயில்லை. வகுப்புத் துவேஷம், நிறவேறுபாடு, ஆதிக்கப் பைத்தியம், இராணுவத்திமிர், நாட்டு மோகம் இவைகளை பிரிட்டிஷ்காரன் தனது நடு ஹிருதயத்திலிருந்து வேரோடு பறித்தெறிந்துவிட வேண்டும். இனிமேலும் ஆசியாவை ஏமாற்ற முடியாது. இந்தியா தன் எல்லையை யடைந்தேதீரும்.

—ஜப்பான் டைம்ஸ்.

தேசோபகாரி

வருஷம் 1-க்கு	ரூ.	3 0 0
ஆறு மாதம் ...	ரூ.	1 8 0
வெளியூருக்கு வருட சந்தா	ரூ.	4 0 0

கிழக்கிந்தியார் சண்டை.

சில மாதங்களாகச் சீனாவும் ஜப்பானும் மோதிக்கொண்டிருந்தது கடைசியில் பெரும் போராகவே மூண்டுவிட்டது. இனி இதுவும் முற்றி—சீன ஜப்பான் போர் என்பது போய் உலக மஹா யுத்தமாயினும் ஆகக்கூடும். அதற்குரிய அறிகுறிகளும், ஆதாரங்களும் இருக்கவே செய்கின்றன. அவைபற்றி இன்னொரு சமயம் பேசுவோம்.

வடக்கே மஞ்சூரியாவிலிருந்து தெற்கே ஷாங்காய்க்குச் சண்டை மாற்றப்பட்டிருக்கிறது. இதனால் போருக்காஸ்பதமான காரணம் மாறியதில்லை. இருந்தாலும் சிறு சண்டை திடீரென இவ்வளவு பெரியகோரமானயுத்தமானதற்கு ஒரு காரணம் காட்டித்தானாகவேண்டும்- ஏற்பட்டிருக்கத்தானிருக்க வேண்டும். ஐந்து ஜப்பானிய சன்னியாசிகளை ஷாங்காயில் சீனர் கூட்டத்தார் தாக்கிவிட்டதாகவும், ஜப்பான் சர்க்கார் அதற்கு நஷ்டஈடு கேட்டதாகவும் சீனம் மறுத்துவிட்டதால் சண்டை யாரம்பிக்கப்பட்டதெனவும் கூறப்படுகிறது. ஆனால் சீன சர்க்கார் ஜப்பான் சர்க்காருக்கு என்ன பதில் கொடுத்ததென்பது கூறப்படவில்லை. திடீரென ஜப்பான் 33 யுத்தக்கப்பல்களையும் ஒரு காவற் கப்பலையும், 12 நீர்மூழ்கிக் கப்பலையும் ஷாங்காய்க்கு அனுப்பியதைத்தான் கண்டோம். "சீனாக்ஷாரப் பயல்களுக்கு பாடம் கற்பிக்க வேண்டும்" என்று ஜப்பான் யுத்த மந்திரி கூறுகிறார். எவன் தப்புப் பண்ணுகிறானோ அவனுக்குப் பாடம் கற்பிக்கவேண்டியதும் அவன் திமிரை யடக்க வேண்டியதும் நியாயம்தான். ஆனால் எளியாரை வலியார் அடித்தல் கூடாது. ஆண்டவன் அவன்புற மிருக்கவே மாட்டான். எந்த வொரு ஏகாதிபத்தியத் திமிரால் மஞ்சூரியாவில் ஜப்பான் வலியச் சண்டை யிழுத்ததோ அதே திமிரினால்தான் ஷாங்காயிலும் சண்டை யிழுத்ததென்பதை தூரதிருஷ்டி யுடையார் கூறமுடியும். நமது ஞாபகம் சரியாயிருக்குமானால் சீனாவில் சீனர்கள் அமெரிக்க, பிரித்தானியா மிஷனரிகளையும் மாதர்களையும்கூட ஷாங்கெய், காண்டன், ஹாங்காங், முதலிய நகரங்களில் தாக்கியதுண்டு. அப்பொழுது பிரிட்டனோ, அமெரிக்காவோ சீனாவுடன் போர் தொடுத்ததில்லை. ஏதோ வொரு வழியில் ஈடுசெய்து விவகாரத்தை முற்றவிடாமல் முடித்துக்கொண்டனர். ஜப்பானிய சன்னியாசிகள் தீங்கிழைக்கப்பட்டால் அதற்குப் போர் தொடுத்துத்தான் பாடம் கற்பிக்கவேண்டுமென்கிற பிரமேயமேயில்லை. சீனாவில் ஒரு பகுதி நிலம் ஜபபானுக்கு வேண்டும். அதுதான் மூலாதாரமான காரணமாயிருக்க முடியும்.

ஜப்பான் சீறியதற்கு இன்னொரு காரணமுண்டு. ஜப்பான் சின்ன தேசம். வியாபார நாடு. நாலு காசுக்கு விற்றுப்பிழைத்தால்தான் உண்டு. ஜப்பான் சாமான்களை சீனம் பரிபூரணமாக பஹிஷ்கரித்துவிட்டால் ஜப்பான் சகிக்குமா? ஜப்பான் சகித்தாலும் ஜப்பானின் வயிறு சகிக்குமா? இதுவும் ஒரு காரணம். இனி இவற்றிற்கெல்லாம் மேலாக ஜப்பான் கொண்டுள்ள இராணுவத் திமிர்தான் முக்கியமான காரணம். எவனொருவன் தன் தோளைப் பார்த்துக் கொண்டு திரிகிறானோ அவன் உருப்படமாட்டான்; அடுத்தவனையும் உருப்படவிடமாட்டான். "ஒன்று யுத்த மென்பதே உலகத்தில் இல்லாதொழிய வேண்டும் அல்லது யுத்தத்தால் மனிதப்பூண்டே உலகத்தில் இல்லாது அழிய வேண்டும்.

சர்வ தேச சங்கம் இது வொரு திண்ணைத்தூங்கிகள் கூட்டம்; அங்கு நடப்பவைகளெல்லாம் வாய் வேதாந்தங்களேயன்றி உண்மையும் நேர்மையுமில்லை. ஒப்பந்தம் உடன்படிக்கை யென்பனவும் வெற்றுக் கடுதாசிகள் என்றும் இப்பொழுது திட்டமாய்த் தீர்க்கமாய் விளங்கி விட்டது. இல்லாவிட்டால் சீனமும் ஜப்பானும் சர்வ தேச சங்கத்தில் மெம்பர்களாயிருந்தும், வெர்ஸெய்ல்ஸ், கெல்லாக் உடன்படிக்கைகளில் கையொப்பம் வைத்தவர்களாயிருந்தும் இவ்வாறு சண்டையிட்டுக்கொள்ளவும் இதர 58 அரசாங்கங்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கவும் முடியுமா? இப்பொழுதுந்தானென்ன? ஜினிவாவிலே சர்வதேசங்களும் ஒன்றுகூடி யிருக்கின்றன. சீனப் பிரதிநிதியும் ஜப்பானிய பிரதிநிதியும் பக்கத்திலே பக்கத்திலேதான் உட்கார்ந்திருக்கிறார்கள். ஏதோ வொரு நாடகம் நடப்பதுபோல் நடக்கின்றது. பெரிய தமாஷா! அவ்வளவுதான். இங்கேயோ ஜப்பான் பக்கத்தில் ஆயிரக்கணக்

யாரையடா! சொன்னாய் அடா!!''

"வில்லினுக்குப் போர் மிக விளையுதடா! தம்பி!'' என் செய்யலாம் வந்தால் விடமுடியுமா? நாமும் "போகிறான் செத்த முண்டை'' யென்று விட்டுவந்தோம்; பொறுத்திருந்தோம் ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மேய்ப்பவனையும் கடிக்க வந்து விட்டான். நமது நாய்க்கன் சுப்பையா இதைப் பொறுப்பதில்லை.

30வது தெரு பத்திரிகை மடத்தில் எவனெவனோ நாலுபேர் மத்தியில் சின்னாட்களுக்கு முன்னால் நாய்க்கன் கொலுவிருந்து நம்மையும் நமது நண்பரையுங் குறித்துப்பேசுகையில் சென்ற வெள்ளிக்கிழமைக் கப்பலில் நாங்கள் ஓடிப்போக விருப்பதாகச் சொன்னானாம் என்ன சொன்னான்? யாரைச் சொன்னான்? நாமா ஓடுவது? தாஞ்சாவைத் தட்டிக்கொண்டு செஞ்சாய் மலைக்கு ஓடினானே சுப்பையா அப்படி நாம் திருடியதில்லை. "நாம் நாய்களா?'' என்ற பேர் புள்ளி யில்லாத துண்டுப் பிரசுரத்தை அச்சடித்து விட்டு நாய்போலோடினானே அப்படி நாம் ஓடவேண்டியதில்லை. நாம் மனிதன். "தூங்குகிறவன் தொடையில் கயிறுதிரிக்கப்பார்க்கிறானா?'' ஒருபிரபல முஸ்லீம்மீதும்முஸ்லீம் சங்கம்சபைகளின்மீதும் அவதூரான அனாமதேயப்பிரசுரங்களை அச்சடித்துப்பரப்பிவிட்டு இருபக்கமும் காசடிக்கப் பார்க்கும் இவன் தான் தலை மறைவாயோட வேண்டியவன். நாம் அப்படி யில்லை. பொதுமனிதர்களின் குற்றத்தைக் கண்டால் அதனால் பொது ஜனங்கள் பிரயோஜனம் அடைய முடியுமானால் பேர் புள்ளியுடன் நேரில் பகிரங்கவாதம்தொடுப்போம். திரைமறைவில் பேடித்தனமாய் வேலைசெய்யச் சுப்பையாதான் கற்றவன். நம்மை அம்மாதிரிவிரல் மடக்க அவனாலும் எவனாலும முடியாது. உஷார். இனியொருதரம் நம்மைப்பற்றி இம்மாதிரி பேசினால் நாவடக்க நமக்குத் தெரியும். வாலையாட்ட வேண்டாம்.

கான ஜனங்கள் மாண்டு போயினர். சீனர் தலைகளும் உருளுகின்றன. சர்வதேச சங்கத்தில் பேசப்படுவதெல்லாம் சாரமற்றவார்த்தைகள். இருந்தாலும் எளியவனுக்கு உதவி செய்து வலியவனை அடக்கத்தான் வேண்டும். சீனாவுக்கு எந்தவொரு வல்லரசு உதவி செய்தாலும் உலகயுத்த மேற்படாது. ஜப்பான்பககம் சேர்ந்தால் ஏற்படவே செய்யும். ஏனெனில் ருஷியா சீனர் பக்கமே சேரும்.

தேசத் தொண்டர்கள்

(ஸ்ரீ எம். பி. ஈஸ்வர ஐயர்.)

நம் தேசத் தொண்டர்களின் பெருமையே பெருமை! காந்தி இர்வின் சமாதானத்தின் பிறகு நடந்த மறியல் சமயங்களிலும் நமது தொண்டர்கள் விளக்கிக் காட்டியுள்ள அபூர்வமான தியாகத்தை ஸ்ரீமான் சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியார் அவ்வப்போது பத்திரிகைகளில் குறிப்பிட்டு விளக்கியிருக்கிறார். அந்நியத்துணி மறியலிலும், கள்ளுக்கடை மறியலிலும் எத்தனையோ வழியில் துன்புறுத்தப் பெற்றும் பிரகலாதாழ்வானைப்போல் எல்லாவற்றையும் புன்சிரிப்புடன் சகித்த தொண்டர்கள் மனப்பாங்கை என்னென்று கூறுவது நம் பாரத மன்னியில் மற்றெந்த நாட்டிலும் மக்கள் இத்தகைய சேவைக்கு எக்காலத்தும் துணிந்ததில்லையென்று கூறல் பொருந்தும்; மிகையாகாது. நம்மவர்களில் பலர் எதிலும் குற்றங் குறைகாணும் இயல்புள்ளார். "புரட்டிப் புரட்டி உதைத்தாலும் பிறவிகுணம் மாறாதையா'' என்று என் ஆசிரியரொருவர் சொல்வதுண்டு. நான் இத்தகைய நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறதென்னவென்றால், "உம்மால் தேச சேவையில் காந்தி திட்டப்படி ஒத்துழைக்க முடியாவிட்டால் பாதகமில்லை. உமது திருவாயை மூடிக்கொண்டிரும், நாட்டில் தூண்டப்பட்ட உணர்ச்சி சோரும்படி செயல்களாலோ பேச்சாலோ ஒன்றும் செய்யாதிரும். இதுவே நீர் செய்யும் தேச சேவை'' ஸ்ரீமான் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் சென்ற ஆண்டு சத்தியாக்கிரஹப் போர் ஆரம்பிக்குமுன் தொண்டர்களைக்கூட்டி அவர்களுக்கு ஒரு நல்லுபதேசம் செய்தார். "நீங்கள் சிறை செல்ல வேண்டியவர்கள். அது இன்றோ நாளையோ. என்றாலும் தயாரா? தயாரானால் இந்நிமிஷ முதலே சிறைவாச சௌகரியங்களுக்குத் தயாராகுங்கள். சிறையில் தேனீர் இல்லை. சுருட்டு பீடி பிடிக்கக்கூடாது. இந்தப் பழக்கம் உங்களிடமிருக்குமாகில் அதை இன்றே நிறுத்திவிடுங்கள். ஆகாரத்தை சமப்படுத்திக் கொள்ளுங்கள். உயிர் வாழ்வதே ஆகாரமல்லாது ஆகாரத்திற்காக உயிர்வாழ்தல் என்பதில்லை என்றார். அதனையும் சொல்லிவிட்டோம்.

மகரிஷி கிறிஸ்துவின் பெயரால்

(ஸ்ரீ ஜி. பி. ஹால்ஸ்டெட்)

மஹா மஹத்தான புனிதத்துவமும் தெய்வீகத்துவமும் நிறைந்துள்ள இந்திய ஸ்வதந்திர யுத்தத்தை, சத்தியத்தை விரும்பும்—தழுவும் ஒவ்வொருவனும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறான். உலகத்தில் நிரந்தரமான அழகு ஸ்புரிக்க வேண்டுமானால்—சாச்வதமான தர்மம் நிலைக்க வேண்டுமானால்—தீமை யில்லாத நன்மை நிலவ வேண்டுமானால்—கடவுள் சிருஷ்டியின் மேன்மைப் பொருளான மனித வர்க்கம் ஈடேற வேண்டுமானால் ஸ்வதந்திரத்தை வளர்க்காமல் முடியாது என்பதை ஆழமாக ஆதரிக்க வேண்டும்.

பொருளாதார, சமுதாய, அரசியல் வானம் புகைபடர்ந்து இருள் சூழ்ந்திருக்கிறது. தங்களுடைய தனி நன்மைக்காக முழு இந்தியாவின் பிறப்புரிமையாகிய ஸ்வதந்திரம் காலடியில போட்டுத் துவைக்கப்படுகிறது. ஒரு பெருந் தேசமோ ஒரு கூட்டமான ஜனங்களோ அல்லது தனி மனிதனோ இன்னொரு தேசம், இன்னொரு கூட்டத்தார், அல்லது இன்னொரு மனிதனால் அடிமைப் படுத்தப்படுவதற்கு ஆண்டவன் சம்மதமான சட்டமோ ஆதாரமோ கிடையாது. இந்தியாவில் நடக்கும் இந்த ஸ்வாதந்தர்ய யுத்தத்தைப்பற்றி இதர எந்த நாடுகளாவது ஏனென்று கேட்டதுண்டா? குரல் எழுப்பி யிருக்கின்றனவா? ஏதாவதொரு முடிவுக்கு வந்திருக்கின்றனவா? ஒவ்வொரு நாடும் தனக்குள்ள பூரண ஸ்வதந்திரத்தில் தனது கலையை, மதத்தை, செல்வத்தை, சமூகத்தை. அரசியலை, திருத்தி மேன்மைக்குக்கொண்டுவர முயற்சிப்பதால்—கொண்டு வருவதால் உலகத்தின் நாகரீகம், கலாஞானம் செல்வாதாரமெல்லாம் செப்பனிடப்பெற்று உச்சஸ்தாயியில் ஸ்புரித்து விளங்குகிறது. இப்பொழுதிருக்கும் உலகமானாலும் சரி, இனிப் பிறக்கவிருக்கும் உலகமானாலும்சரி நல்ல நிலைமையிருக்க வேண்டுமென்னும் ஆசை யெவருக்கிருக்கிறதோ அவர்களெல்லாம் இந்தியாவின் ஸ்வதந்திரத்திற்குக் கை கொடுக்கட்டும்.

நீங்கள் வணங்கும் கிறிஸ்துவின் பெயரால் ஹே! மதப் பிரசாரகர்களே! கிறிஸ்தவர்களே! உங்களை நான் போருக்கழைக்கின்றேன். நீங்கள் தொண்டு செய்ய விரும்பும் அதே இந்தியாவின் பெயரால் உங்களை நான் போருக்கழைக்கின்றேன். எங்கானாலும் சரி, ஆண்டவனின் பிள்ளையான ஒவ்வொரு ஆண் மகனுக்கும் பெண்களுக்கும் பிறக்கும் பொழுதே ஆண்டவனால் அளிக்கப்பட்டுள்ள சுதந்திரத்தின் பெயரால் நான் உங்களைப் போருக்கழைக்கின்றேன்.—இந்தியன் ஸோஷியல் ரிபார்மர்.

ஒரே யொரு துளி வெற்றி.

சுடுகாட்டு டிரஸ்டி ஸ்ரீமான் ப. சி. சோமசுந்தரம் பிள்ளைக்கும் நமக்கும் இந்த மூன்று மாத காலமாக மூச்சுவிடக்கூட நேரமில்லாமல் நிகழ்ந்த "விடாத கட்டன் கொடாத கண்டன்" போராட்டத்தில் சென்றவெள்ளியன்றுதான் நமது பக்கத்தில சிறிது ஜெயங்கிடைத்திருக்கிறது. அதை நாம் முழு ஜெய மென்று முழு கௌரவத்துடன் கூறிக் கொள்ளும் பாக்கியம் பெற வில்லை. சப்த சாகரத்தில் ஒரு சிறு துளி ஜலத்தளவு பிரமாண மெவ்வளவோ அவ்வளவு வெற்றியைக் கண்டு திருப்தி யடைந்து ஓய்ந்துவிட நமது மனது இடந்தர வில்லை. இருந்தாலும் வெற்றியின் தோற்றம் தோன்றி விட்டதால் அநேகமாய் துளி குறையாத வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கை பெற்று விட்டோம். இந்த வொரு திருப்தியிடைக் குளித்த நாம் நமது ஸ்ரீமான் பிள்ளையை மறந்துவிடலாமா? அவருக்கும்நமக்கும்நெடுநாளைய ஒட்டல்லவா? இன்னும் எவ்வளவுநாளைக்குஇருக்குமோ இப்பொழுதென்ன தெரியும்? இருந்தாலும் பல வருடக் கணக்குகளில் சமீபத்து 1930-31-ம் வருடக் கணக்காவது கொடுக்க அவருக்கு மனது வந்ததே—தயவு பிறந்ததே அதற்காகவாவது ஒரு வெற்று நன்றியை நாம் செலுத்திக் கொள்ளுகிறோம். கணக்குப் பரிசோதகரின் கையெழுத்தில்லாத "பரிபாலினி"யில் பிரசுரித்திருக்கும் கணக்கின் யோக்கியதையைப் பற்றி அடுத்த இதழில் பேசுவோம். இதனிடையில் இனனொரு சிறு நன்றியும் ஸ்ரீமான் பிள்ளைக்கு ஹிந்துக்களின் சார்பில் செலுத்திவிடவேண்டும். ஏனெனில் செலவுப் பட்டியலில் பாக்கி யிருப்பில் 9 தம்படிகள் வட்டிக்காகவோ அல்லது இவ்வளவு காலம் கணக்குக் கொடுக்காததற்கு அபராதமாகவோ சேர்த்தெழுதி ஆதாயம் காட்டியிருப்பதால் பொதுப் பணத்தை விருத்தி செய்வதில் அவர் காட்டியுள்ள சிரத்தை தட்டுகிறதல்லவா? கணக்கென்றால் கணக்கு. 9 பைசாவானாலும் ஆதாயம் ஆதாயமே. பிழையென்றால் மன்னித்து விடுகிறோம்.

தோட்டக்காரன் மகள் : :

தினகரன்

(கதை நமக்குச் சொந்தமில்லை. பாஷைக்கு நாம்தான் முழுப் பொறுப்பாளி. கற்பனையிலும் சரிபாதி பங்குண்டு. ஆங்கிலக்கதையைத் தழுவி எழுதியிருக்கிறோம்.)

விடியற்காலம். வானம் பனி மப்பாயிருக்கிறது. கைவெழுத்துத் தோன்றவில்லை. வீடுகளும் தெருக்களும் புஷ்பங்களும் சிவப்பு வர்ணத்தில் நீல நிறம் கலந்தாற்போன்ற புது வர்ணத்தில் பூசப்பட்டிருக்கிறது. மரங்களெல்லாம் மங்கலான பொன்னம் பொன்னிறத்தில் கண்ணுக்கழகான பசுமையை வீசிக்கொண்டிருக்கின்றன. குளிர்ந்த வாசனையால் ஜீவவர்க்கத்தின் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் வாச மலர்கள் செல்வாதாரமான சிவப்பு, நீலம், மஞ்சள் வர்ணங்களைக் கொழிக்கின்றன. புது மகளிரைப்போல் அவைகளில் ஒரு புது உற்சாகம்; புது ஜோதி; புது மணம்; புதுவனப்பு எல்லாம் புலப்படுகின்றன. ஒரு மிருதுவான தென்றலும் வீசுகிறது. மணமகனைக்கண்ட மணப்பெண் போல அவைகள் ஒரு சிறு சிரிப்புச் சிரிக்கின்றன.

பக்கத்திலிருக்கும் தடாகத்தில் தங்கத்தைக்காய்ச்சி ஊற்றுவதுபோல பால சூரியன் தனது பதினாயிரம் கரங்களால் தொடுகிறான். கவிகள்தான் அக்காட்சியைக் காணுகிறார்கள். கவி நெஞ்சுதான் அந்த போகத்தை யனுபவிக்கிறது. காவியங்கள்தான் அவ்வின்பத்தை எழுதுகின்றன. ஓவியக்காரனுக்கு அந்த வர்ணம் அகப்படுமா?

கோழிக்கூட்டம் சிறகு தட்டுகிறது, "கொக்கரக்கர்—கோ" வென்று கூவுகின்றது. "இரவு கழிந்தது: பகலைத் தோற்றுவிக்க உதய ஞாயிறு பிறந்துவிட்டான்" என்று அழுத்தமாகப் பறையறைகிறது. உலக மெங்கும் கோழிகளின் நாதம்; உலகமெங்கும் ஜீவகளை.

நிமிஷத்திற்கு நிமிஷம் பகல் வெளிச்சம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. மாட்டு வண்டிகள் கிரிச்சிடும் சப்தமும், பசுக்களின் கழுத்துமணி கலகலெனும் ஓசையும், கானகத்துப் பறவைகளின் கூட்டமுகப் பாட்டும், பிள்ளையைப் பெற்றெடுத்தார் பண்ணோடு பாட்டோடு தாலாட்டுமிசையும் பருவத்துப்பெண்களின் கிண்கிணிக்கும் தண்டையொலியும், கோலமிடும் கோமளங்களின் நாவொளியும், சாணமிடுந் தங்கையரின் வளையலொலி நாதமும், பாத்திரக் குலக்கும் பண்புடையார் பழகு குரலோசையும் விரக்தியான மனத்திலுமொருபுதுமையொளி பரப்புகிறது.

— 2 —

ஒரு வயோதிகன். அவனுடைய கரிய மேனியை மறைக்க போதிய துணியில்லை. வயிறு முதுகோடு ஒட்டிப்போயிருக்கிறது, வறுமையைச் சுமந்து சுமந்து கூனிக்குறுகிப் போனான். நெற்றியிலே கவலையின் கரம்படிந்து வரைவரையா யிருக்கிறது. ஓயாத உழைப்பு அவனது சதையை யெல்லாம் தின்றுவிட்டு வெறும் எலும்பையும் தோலையுந்தான் வைத்திருக்கிறது. அந்த வயதில் அவனுக்கு உதவி செய்வது யார்? அவன் ஊன்றிஊன்றி நடக்கின்றானே அந்தத் தடியொன்றுதான். ஒவ்வொரு மரமாகப் பார்த்துக்கொண்டு தள்ளாடித் தள்ளாடிப் போகிறான். ஏதோவொரு திருப்தியில் அவனது தொங்கிய உதடுகளில் ஒரு சிறு சிரிப்புத் தழுவுகிறது. பிழை சாடிய கண்களில் ஒரு சிறு பிரகாசம். மெலிந்த நடையில் ஒரு சிறு வேகம். ஒவ்வொரு மரத்தின்—செடியின்—கொடியின்—இலை கொப்பு—பூக்களில் அவன் கை பட்டவுடன் அவைகளும் சிரிக்கின்றன, ஏதோபேசுகிறான்; அவைகளும்ஏதோ பேசுவதுபோல இலை யசைக்கின்றன. யோக க்ஷேமங்கள் விசாரித்துக் கொள்ளுகிறார்களோ? புது விருந்துக் களைக்கின்றனவோ? அந்த ஜெகதீச சந்திர வஸுவுக்குத்தான் தெரியும். பிள்ளைகளைப்போலத் தழுவிக்கொள்ளுகிறான்; காதலரைப்போலக் கனிந்து பார்க்கிறான்: ஆசைதீர பூக்களைக் கொம்போடு முகருகிறான்; கன்னஞ் சிவக்க முத்தமிடுகிறான். இந்த ஆசை யில்லாவிட்டால் இந்தத் தோட்டக்காரன் இன்னேரம் ஒரு மூலையிலே புதைக்கப்பட்டிருப்பான். அவ்விடத்தில் ஒரு புல்லோ மரமோ முளைத்திருக்கும். "நில்லு. கூச்சலிடாதே. அதோ பாடுகிறதே அதென்ன கோகிலமா? வீணையா? இல்லை வானத்து மோகினியாள்தான் வன்னமிசைக்கின்றாளா? கந்தர்வத்தாள் காவியம் அசைக்கின்றாளா? ஆம். பாடிக்கொண்டே தோட்டக்காரன் மகள் ஜோதியாய் வருகிறாள்.

(தொடரும்)

Printed & Published By A V Sellam Pillay at the Desopakari Press, 210.36th Street Rangoon

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 59 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை

DESOPAKARI

புதன் ஞாயிறு வெளியீடு

210-36-வது இரங்கோன், (10—2—32) தை மீ 28உ புதன்கிழமை.

நனைத்துச் சுமக்கும் சர்க்கார்.



ராஜா ராமனாத ரெட்டியார் விண்ணுலகடைந்தார்.

பர்மா-வாழ் இந்திய மக்களின் மனம்பதைபதைக்க-தமிழ்சமூகத்தினர்தளர்வடைய-கல்விநிலையங்களின்கால்கள்சோர்வடைய--தருமங்களும்தலைசிதற-அம்மம்மா! அனைத்தினுக்கும் அஸ்திவாரமாய் விளங்கிவந்த மாபெரும் தலைவர் ராஜா டாக்டர் எஸ். ராமனாத ரெட்டியார் இம் மாதம் 8உ காலை விண்ணுலகடைந்தாரெனக் கேட்க நாம் ஆற்றொணாத் துக்கக்கடலில் ஆழ்ந்து அழுங்குகின்றோம்.

காலஞ்சென்ற இப்பெரியாரைப்பற்றி சிறு குழந்தைகளும் நன்கறிவர். இவரைக் குறிக்க நம் சிறு பத்திரிகையின் ஏடெல்லாம் நிரம்பினாலும் இடம் போதாது. ஆனால் எழுதிதான் என்ன பயன்! இனி அன்னாரது பூத உடல் அழியின், என்றும் அழியாப் புகழுடப்பு சாந்திபெறுமாறு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது நீங்காத்துயரத்துக்காளாகிய தர்ம பத்தினியாருக்கும்--ஸ்வீகாரச் செல்வருக்கும் எமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நனைத்துச் சுமக்கும் சர்க்கார்.

நாட்டி லெங்கும் ஸ்வதந்திர வாஞ்சையை
நாட்டினாய்...கனல்...மூட்டினாய்!
வாட்டியுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன்...வழி...காட்டுவேன்.

எங்குமிந்த ஸ்வராஜ்ய விருப்பத்தை
ஏவினாய்...விதை...தூவினாய்!
சிங்கம் செய்யும் தொழிலைச் சிறுமுயல்
செய்யவோ...நீங்கள்...உய்யவோ.

—கவிபாசன்

நம்மையாளும் சர்க்கார் நனைத்துச் சுமப்பதையே தொழிலாகக் கொண்டுவிட்டது. நமது ஒப்பற்ற தலைவர் காந்திஜீ ஒற்றை மனிதராய் அன்று இங்கிலாந்தில் நூற்றுக் கணக்கான கன்சர்வேட்டிவ் வெறியர்களோடு போரிட்டுக்கொண்டிருந்ததை உலகம் நன்கு அறியும். மனிதத் தன்மையைக்கூட இழந்த அந்த வெறியர்கள் கூச்சலிட ஆரம்பித்ததையும் நாமறிவோம். "காந்திஜீ ஆத்திரம் பிடித்த ஒரு புரட்சிக்காரரென்றும், வட்டமேஜை மகாநாட்டில் ஏதாவது கலகம் விளைவித்துவிட்டு கோபித்துக்கொண்டு திரும்பிவிடுவாரென்றும்" நினைத்த தொடை நடுங்கிச் சர்க்கார் இன்று காந்திஜீயை எங்கு வைத்திருக்கிறது? எதற்காக? பிரிட்டிஷ் சூழ்ச்சிக்காரர்களை யெல்லாம் வட்டமேஜையில் அடியோடு ஏமாற்றி விட்டார் என்பதற்காகவா? காந்திஜீ இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டதுதான் தாமதம் இந்தியாவில்—வில்லிங்டன் ஆட்சியில் என்னென்ன அடக்கு முறைகளை கையாளவேண்டுமோ அத்தனையும் நடந்தேறிவிட்டது. பாக்கியாய் நின்றது துப்பாக்கிப் பிரயோகம் தான். அதையும் சர்க்கார் வினியோகிக்காவிட்டால் சர்க்காரின் தவறு என்றுதான் சொல்ல வேண்டும் என எண்ணியிருந்தோம். அதையும் சர்க்கார் உபயோகிக்க துவங்கிவிட்டது. இனி ராம—ராவண யுத்தம்தான். முடிவு வெகு தூரத்திலில்லை. அதற்கும் நாலு சுவர்களுக்கு மத்தியிலே பூட்டப்பட்டிருக்கும் காந்திஜீ வந்தாகவேண்டும். வருவன வருக! இந்தியத் தியாகிகளே! தமிழ் வீரர்களே! நம்முடைய சுயேச்சைப் போரின் இந்தக் காண்டத்தை நடத்துவதற்குத் தயாராகிவிடுங்கள்.

தமிழா, உன் தாய் எங்கே?

(ஆசிரியர் திரு. வி. கல்யாணசுந்தரர்.)

வேறு நாட்டினின்றும் எவர் புகினும் அவரை அன்புடன் வரவேற்பதைப் பேரின்பமாகப் பழந்தமிழ் மன்னர்கள் கொண்டிருந்ததைச் சரித்திரத்தில் இன்றுங் காணலாம். தமிழ்நாட்டில் ஆரியர்கள் புகுந்தார்கள்; ரோமர்கள் வந்தார்கள்; கிரேக்கர்கள் நுழைந்தார்கள்; இன்னும் மற்ற மற்றவர்களும் அணைந்தார்கள். அவர்களை வரவேற்ற பெருமை பழந்தமிழ் மன்னர்கட்குண்டு. அவர்கள் எவரையும் மாற்றாராகக் கருதினார்களில்லை. "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்பது அவர்களின் வாழ்விற்கலந்த கொள்கையாயிருந்தது. அதனால் அவர்கள் மாட்டு சகோதர நேயம் கனிந்திருந்தது.

இவ்வரும் பெருங் கொள்கை நாளடைவில், தான் பிறந்த தமிழ் நாட்டிலேயே வீழ்ந்துபட்டது. அஃது எழுத்தளவில் புலவோர் உதட்டளவில் நிற்கலாயிற்று. அது புறநானூற்றில் ஓரிடத்தில் தனியுண்டு கிடக்கிறது. சிறையில் அது நன்றாக உறங்கிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொருபோது அது விழித்துப் பார்க்கிறது: வெளியே வரவும் முயல்கிறது. இடைக்காலத்தில் நுழைந்த வேற்றுமைப் பேய்கள் அதை வெளியேறாதவாறு தகைந்து காத்து வருகின்றன. சாதி மதம் நிறம் மொழி நாடு முதலியவற்றினின்றும் பிறந்த பேய்களும் பூதங்களும் காளிகளும் கூளிகளும் தமிழ்நாட்டை ஆட்சி புரியலாயின. இவ்வாட்சியில் அன்புக் கொள்கைக்கு இடம் ஏது! அக்கொள்கை தற்போது பெற்றுள்ள இடம் சிறையென்று சொல்லவும் வேண்டுமோ? தமிழன் அடிமையாகிவிட்டான். அருமைத் தமிழனே! உன் பழைய நிலை யென்ன? இப்பொழுது நீ எங்கே இருக்கிறாய்? சாதி முதலிய சேற்றில் நெளியுந் தமிழனே! உனது தற்கால நிலையை உன்னுவாயாக.

இடைக்காலம் தமிழ்த்தாய்க்குச் சிறை வாழ்வு வழங்கிற்று. இந்நாளோ, அவளுக்குச் சிறையுடன் நோய்களையும் வழங்கியிருக்கிறது. தமிழ்த்தாயின் அழகிய உடல்—செழிய மேனி புண்ணீர் ஒழுகும் புன் தேகமாகிவிட்டது. அவள் உள்ளமோ * * தமிழனே! நீ தமிழ்த்தாயின் சேயா? நீ எங்கேயிருந்து விடுதலை விடுதலை என்று முழங்குகிறாய்? எவ்வழியில் நின்று எத்துறையிலிறங்கி அவளை நோயினின்றும் சிறையினின்றும் விடுதலை செய்யப் போகிறாய்?

கொட்டை விளம்பரங்கள்.

பிரட்டன் நகரத்தில் ஒவ்வொரு வீதியிலும், ஒவ்வொரு கடைகளிலும்''பிரிட்டிஷ் சாமான்களையே வாங்குங்கள்'' எனக் கொட்டை எழுத்துக்களில் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. பிரயாணிகள் ரயிலிலோ, மோட்டாரிலோ, குதிரைக் காடிகளானாலும் எதில் சென்றாலும் சரி, அம்மாதிரி விளம்பரங்கள் உள்ப்புறமும், வெளிப்புறமும ஒட்டி யிருக்கிறார்கள் இரவு காலங்களில்கூட மின்சார விளக்குகள் பலவற்றைக்கொண்டு பிரிட்டிஷ் சாமான்களையே வாங்குகள் எனக்கோர்த்து ஜோடித்து வைத்திருக்கிறார்கள். பிரிட்டிஷார் எதையும் செய்கையில் செய்து காட்டக்கூடியவர்கள் அன்னியச் சாமான்களை தங்கள் நாட்டுக்கு வரவொட்டாமல் தடுத்து தம் தேசத் தொழில்களையே ஆதரிக்க வேண்டி அவசியத்தை அவர்கள் (பிரிட்டிஷார்) நன்கு உணர்ந்து விட்டார்கள். நாமும் இன்று லண்டனிலுள்ளோர் முழுமே கண்டோர் ஆச்சரிய முறுவாரு நம் தேச கைத்தொழில நல்ல நிலைமைக்கு வரச் செய்வது நீண்டகால மாகாது நாங்கள் லண்டனிலிருக்கையிலும் கூட அங்குள்ள பல நண்பர்கள் நாங்களணிந்திருந்த கதரின் அழகைக் கண்டு வியந்து பேசினர் ஆயினும் அந்தசென்றிருந்த நாங்களாவது இந்தியாவில் செய்யப்படும் உயர்ந்த கதரில் சிலராவது சிலவற்றை அணிந்திருந்தோமென்று சொல்லலாமா? அதுவுமில்லை சாதாரண வெள்ளை உடைகளையே நாங்கள் அணிந்திருந்தோம் ஆயினும் அவைகள் நாகரீகத்திலும் மற்றும்பல கல்வித் துறைகளிலும் திறமை வாய்ந்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் பிரிட்டிஷாரின் கண்களைக் கவர்ந்தன ஆ.ஃபோர்என்னும் கிராமத்தில் நெய்யப்பட்ட பழைய கம்பளி கதர் போர்வையைக் கண்டு "என்ன அழகான சால்வை! அடடா என்று அவர்கள்கூறி ஆச்சரிய மடைந்ததுமுண்டு. பின்னும் எனது கையால் நான் நூற்ற நூலிருந்து நெய்த புடவையைப் பார்த்துவிட்டு என்னே! கையால் நெய்யப்பட்ட இப் பஞ்சுப் புடவையின் நேர்த்தி என்றும்கூறினர் லண்டனிலோ இயந்திரங்களினாலேயே செய்யப்பட்ட பொருள்கள் நிறைந்துக் கிடக்கின்றன. ஆகவேகையால் நெய்யப்பட்டதைக் கண்டதும் அவர்கள் அவைகளை இணையற்ற மதிப்புள்ளதாகக் கருதினர். (ஸ்ரீமதி மீரா பென்)

திய்யா! திய்யா!! பொம்மக்கா!!!

இந்த விளையாட்டு விளையாடுகிறார் திரு சோமசுந்தரம் பிள்ளை, ஆனால் இரங்கோன் இந்துக்களெல்லாம் விளையாட்டுப் பிள்ளைகளல்ல சுமார் 16,17 வருஷத்து கணக்குகளில் ஒரு வருஷக் கணக்கு எறிந்து விட்டதால் இந்துக்கள் ஏமாந்துவிடப் போகிறார்களா? முழுக்கணக்கும் அவர் டிரஸ்டியான காலம் முதல் நாளது வரை தம்பிடி குறையாமல் கணக்குச்சொன்னாலொழிய விடப்போகிற தில்லை. ஒரு ரூபாய் கொடுக்கவேண்டிய கடனாளிக்கு ஒரு அணாவைக்கொடுத்து ஏமாற்றப்பார்க்கிறாரா? நமது சகவர்த்தமானி "சுதந்தரன்" இப்பிரச்சினையை எடுத்துக்கொண்டிருப்பதால் இனிமேல் முன்னைப்போல் மூச்சு விட்டுக் கொண்டிருக்க முடியாது.

இவ்வளவு கணக்கும் தயார்செய்ய சிறிது காலம் பிடிக்குமென்பதையும் அறிவோம். நாம் எப்பொழுதும் தர்ம யுத்தமே செய்யும் சுபாவமுடையவர்களாகையால் எதிரிக்கும் சந்தர்ப்பமளிக்கவே செய்வோம். நமது நண்பர் பிள்ளைக்கு அவகாசம் கொடுக்காமல் இருக்கலாமா? போனால்போகிறது நமது தயாள சிந்தையில் தாராளமாய்ப் பத்துநாள் தவணை கொடுக்கின்றோம். இன்று 10 தேதி, 20 தேதிவரை பொறுப்போம். கணக்கோ அல்லது கணக்கின் வாடையோ வீசாவிட்டால் நாம் என்ன செய்யப் போகிறோமென்பதை 21 தேதி இதழில் தீர்க்கமாய் கூறி விடுகிறோம். இன்னொரு முறையும் சொல்லுகிறோம். திருப்திகரமான கணக்கு வராதவரை நமது பிள்ளை திரி திரி! பொம்மக்கா!! திய்யா திய்யா! பொம்மக்கா!! விளையாடாமல் கொஞ்சம் கடுமையாகச் சிந்தித்து சுடுகாட்டுப் பேரேட்டைப் புரட்டாதவரை விடமாட்டோம்.

தேசோபகாரி

வருஷம் 1-க்கு	....	ரூ.	3	0	0
ஆறு மாதம்	...	ரூ.	1	8	0
வெளியூருக்கு வருட சந்தா		ரூ.	4	8	0

போச்சுது 385 கோடி ரூபாய்!

நமது பாரத நாடு ஒரு தீபகற்பமே ஆனாலும், கண்டம் என்று சொல்லத்தக்கது. 33 கோடி ஜனத்தொகை கொண்ட நாடு. பண்டைக் காலந்தொட்டு செல்வத்திலும் சிறப்பிலும் மேன்மை பெற்றது. இந்த நாட்டை சுமார் 150 வருடங்களாக, உலகத்திலேயே நாகரீகத்திலுயர்ந்தவர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளுகின்ற ஆங்கிலேயர்கள் அரசாண்டு வருகின்றனர். இவர்கள் தங்களை இந்தியாவுக்குத் தர்மகர்த்தாக்களென்றும், இந்தியர்கள் சுதந்தரம் பெறுவதற்கு யோக்கியதை பெற்றுவிடில் நாட்டை இந்தியர்கள் கையில் ஒப்படைத்து விடுவதில் தடையில்லை என்றும், இந்தியர் கல்வி, நாகரீகம் ராஜரீகம் முதலிய பல துறைகளில் முன்னேற்றமடைய வேண்டிய துறையில் பயிற்றுவிப்பதற்கான வழியில் தீவிர ஏற்பாடுகள் செய்து வருவதாகவும் சொல்லுகிறார்கள். இது எதுவரை உண்மை என்பதை கவனிப்போம். 150 வருட ஆங்கில ஆட்சிக்குப்பின் இந்தியாவில் படித்தவர்கள் $2\frac{3}{4}$ கோடிதான். இவர்களும் மேல்நாட்டு நாகரீகப் படிப்பே படித்தவர்கள். ஒவ்வொரு இந்தியரின் சராசரி தினசரி வருமானம். 0—1—7. இங்கிலாந்திலோ ஆங்கிலேயரின் தினசரி வருமானம் ரூ. 2—9—4. மற்றும் அன்னிய நாட்டு ஏற்றுமதி இறக்குமதி. ரயில்வே போக்குவரத்து சாதனங்கள்—வகையறு மூலம் இந்திய நாட்டிலிருந்து 590 கோடி ரூபாயை பிரிட்டன் கொள்ளையடித்துச் செல்லுகிறது. இந்தத் தொகை எவ்விதத்திலும் இந்தியாவுக்குத் திரும்புவதில்லை. வருஷாவருஷம் இவ்வாறு நம் நாட்டிலிருந்து பணம் வெளியேறிக் கொண்டிருப்பதினால், இந்திய நாடு நாளுக்குநாள் ஏழ்மையை யடைந்துவிட்டது. இதுவுந்தவிர அவசியமில்லாத பட்டாளச் செலவோ சொல்லத்தரமில்லை. எனவே, இந்தியாவுக்கு அந்நியர்கள் ஒருநாளும் சுதந்தரம் கொடுக்கப் போவதில்லை. சுதந்தரம் என்பது பிறர் கொடுப்பது ஒன்றன்று. சுதந்தரம் பிரதி மனிதனுக்கும் உரித்தானது. அவனவன் சுதந்தரத்தைத் தானே பெறவேண்டியதுதான். ஆகவே நம் நாடு சுதந்தரம் பெற வேண்டுமானால், பின்வரும் மார்க்கத்தைக் கவனியுங்கள்.

1. அந்நியத்துணி (பருத்தி அல்லது பட்டு அல்லது கம்பளி) யை வாங்காதிருந்தால் இந்தியாவுக்கு 70 கோடி ரூபாய் மிச்சம்.

2. பீர், விஸ்கி, ஒயின், பிராந்தி முதலிய போதைச் சரக்குகளையும் சிகரட்டு, சுருட்டு, லாகிரி வஸ்துக்களையும் உபயோகிக்காமலிருந்தால் இந்தியாவுக்கு ரூ. 100 கோடி மிச்சம்.

3. அந்நிய நாட்டு சீனி உபயோகிக்காவிடில் 20 கோடி ரூபாய் லாபம்.

4. அந்நிய நாட்டு பென்சில், பேனா, மைக்கூடு, கடியாரங்கள், விளையாட்டு பொம்மைச் சாமான்கள், கண்ணாடிச் சாமான்கள், ஜாடிகள்; மண் பாத்திரங்கள், பிஸ்கோத்துகள், பார்லி முதலிய அரிசிகள், வளையல்கள், நகைகள், மருந்து வகையறுக்களை உபயோகிக்காதிருந்தால் 40 கோடி ரூபாய் மிச்சம்,

5. அவசியமில்லாத ரயில்வே யாத்திரை பிரயாணங்கள்—தமாஷ் பிரயாணங்கள்—மோட்டார் சவாரிகள் முதலியவைகளை நிறுத்திவிடில் 100 கோடி ரூபாய் மிச்சம்.

6. உப்புவரியும் நீங்கினால் 20 கோடி ரூபாய் மற்றும் லாபம். ஆகவே இத்த அறுவ வகையிலும் மாத்திரம் இந்திய நாடு 385 கோடி ரூபாய் மிச்சம் பிடிக்கலாம் பிரிட்டனுக்கு போச்சுது 385 கோடி ரூபாய்.

பர்மாவாழ் தமிழ் தோழர்களே! இந்திய சகோதரர்களே! வீரத் தாய்மார்களே—நமது தாய் நாட்டினின்றும் நம்மை—கடல் பிரித்திருக்கிறது—காடுகள் அடைத்திருக்கின்றன. மலைகள் பிரிக்கின்றன—என்றாலும் நம் மனம்—நமது ஆவி நம் தாய் நாட்டிலேயேதான் ஈர்க்கின்றது—இழுக்கின்றது—உலாவுகின்றது.

நமது நாடு தற்காலம் இருக்கும் நெருக்கடியான நிலைமையில்—நமது தலைவர்களெல்லாம் சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டிருக்கும் தருணத்தில்—நமது நாட்டுத் தாய்மார்களின் மண்டைகளெல்லாம் குறுந்தடிகளால் உடைக்கப்படும் சமயத்தில் நமது சுதந்தர வீரர்களின் உயிர்களெல்லாம் துப்பாக்கி முனையில் நிறுத்தப்பட்டிருக்கும் சமயத்தில் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்--என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்--நாட்டுக் கைத்தொழில் சாமான்களின் மேல் ஆர்வமும் அதற்கு ஆதரவும் காட்டுங்கள். சுதந்தரம் நமது வீட்டு வாசற்படியண்டை தாண்டவமாடுவது பிரத்யக்ஷம்.

ஜப்பான் காந்தி

ஸ்ரீ. ஹெர்பர்ட் ஏ. மில்லர்.

தோயோஹிகோ காகவா என்பவருக்கு வயது இப்பொழுது நாற்பதுக்குமேலாகிறது. இவர் சிறந்த கவிஞராகவும்பிரபல நாவலாசிரியராகவும் விளங்குகிறார். ஆனாலும் இத்துறைகளில் இவருக்கு அதிக விருப்பமில்லை. ஜனங்களுக்கு ஒரு புதிய வாழ்க்கையைக் கற்பித்துக்கொடுக்க வேண்டுமென்பதே இவருடையநோக்கம். இதனால், ஒருசமயம் டோகியோ நகரசபைத் தலைவர் அந்நகரத்திலுள்ள ஏழைக்குடிசைகள் இருக்கும் இடங்களைச்சீர்திருத்தும் வேலைக்குத்தலைமை வகிக்குமாறு இவரைக்கேட்டுக்கொண்டார். ஆசியாகண்டத்திலே அநேககாலந்தொட்டு பல மகான்கள் தோன்றிவந்திருக்கிறார்கள். கன்பூஷியஸ், புத்தர், கிறிஸ்து, முகம்மது முதலியோர்தோன்றினர். இப்போது இந்தியாவிலே காந்தி தோன்றியிருக்கிறார். இவர்களனைவரும் மனித சமூகத்தின் ஒற்றுமையைப் பற்றியே உபதேசித்திருக்கிறார்கள். இவர்களைப் போலவே, தோயோஹிகோகாகவாவையும், பிற்கால சரித்திரக்காரர்கள் குறிப்பிட்டுப் பேசுவார்கள் என்பதில் ஐயமில்லை. ஒரு மகானுக்கு இருக்க வேண்டிய முக்கியகுணங்கள், அறிவு, ஞானம், தீர்க்க தரிசனம் ஆகிய மூன்றுமேயாம். இந்த மூன்றும் காகவாவிடத்தில் நிரம்பியிருக்கின்றன. இயந்திரங்களையும், அரசியல்ஸ்தாபனங்களையும் காந்தியடிகள் மறுத்துப்பேசுகிறார். ஆனால், காகவா இவைகளை புனருத்தாரணம் செய்ய வேண்டுமென்று கூறுகிறார். காந்தி நூல் நூற்கிறார்; அதிகமான துணிகளை அணிவதில்லை. ஆனால்காகவாவோ, ஒருகூட்டுறவுச்சங்கத்தை ஸ்தாபனம் செய்து சாமான்கள் சொற்ப விலையில் விற்கப்படும்படி செய்கிறார். இவருடன் நான் ஒருநாள் பூராவும் இருந்தேன். சம்பாஷணையில் இவரைப் பலவிதங்களிலும் மடக்கிப் பேசினேன். ஆயினும் இவர் மிகத்திறமையாக தம் சம்பாஷணையை நடத்தினார். ஜர்மானிய தத்துவ சாஸ்திரம், பொருளாதாரம் முதலிய யாவற்றையும் அவர் மிகநன்றாக உணர்ந்திருக்கிறார். அவர் எதையும் புன் சிரிப்புடனேயே கூறுகிறார். அன்பினாலேயே உலக துன்பங்களைப் பரிகரிக்கலாமென்று அவர்பாடுபடுகிறார். அன்பினாலேயே உலகை வெல்லலாம் என்று இதுவரை பலர்சொல்லளவில் கூறியிருந்தபோதிலும், காகவா இதனைத் தமது வாழ்க்கையிலும் ஒழுங்காக நடத்தி வைக்கிறார்.

1888-ம் வருஷத்தில், பணக்கார பரம்பரையைச்சேர்ந்த ஒரு ஜப்பானியக்குடும்பத்தில் காகவா பிறந்தார். இவர், பாலியத்தில், பௌத்த பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கன்பூஷியஸ் என்பாரின் கொள்கைகளை நன்றாகக் கற்றுணர்ந்தார். சிறு வயதிலேயே, மதப் பிரசாரகர்களின் வாழ்க்கையில் இவருக்கு அதிக விருப்பம் இருந்தது. பள்ளிக்கூடத்தில் இவர் படித்துக் கொண்டிருந்தபோது, வலைஞர்கள் வசிக்கும் ஒரு கிராமத்தில், சுமார் ஒரு வருஷகாலம் மிகுந்த எளிய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். கோப் நகரத்திலுள்ள கலாசாலையில் படித்துவிட்டுப் பின்னர், ஏழைகள் வசிக்கும் இடத்திற்குச் சென்று சுமார் நான்கு வருஷ காலம் அங்கே வசித்து வந்தார். அப்பொழுது ஏழைகளுக்குப் பல விதங்களிலும் உதவிசெய்து வந்தார். பின்னர் பிரின்டன் என்ற ஊருக்குச் சென்று, அங்கே தியான சமாதியில் பலகாலம் இருந்தார். அப்பொழுதே இவருக்கு ஞானோதயம் உண்டாயிற்றென்று சொல்லலாம். அங்கிருந்து திரும்பிவந்த முதல் நாளிலேயே இவர் ஏழைகளின் வாசஸ்தலத்திற்குச் சென்று அங்கே வசித்தார். இங்கே சில காலம் வசித்துக் கொண்டிருந்தார். பின்னர் இவருக்குச் சந்ததிகள் உண்டாயின. அதனால் வேறோரிடத்திற்குச் சென்று வசிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவைகளுக்குப் பன்னிரண்டு வயதானதும், இவர் மீண்டும் ஏழைகளின் மத்தியிலேயே வசிக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார். எவ்விதத்திலும் தமது அந்தஸ்தையும்மேன்மையையும்பாராட்டாமல்ஏழைகளிடத்தில் அன்புடன் நடந்துவந்த ஒரு ஸ்திரீயையே இவர் காதலித்து விவாகம் செய்து கொண்டது குறிப்பிடத்தக்கது. இவருக்குக் கண் பார்வையும் மங்கிய நிலையில் இருக்கிறது. ஆயினும் அவர் தத்துவமெல்லாம், ''எல்லாரையும் நேசிக்கிறேன்'' என்ற ஒரு வாக்கியத்திலேயே அடங்கியிருக்கின்றன. இந்த அனுபவத்திலும் நன்கு நடத்திக் காட்டியிருக்கிறார்.

உலக விஷயங்களை இவர் அறிந்திருப்பது போல் வெகு சிலரே அறிந்துகொண்டிருப்பர் என்று நான் கருதுகிறேன். இவர் தேக நலிவு உடையவராக இருந்தபோதிலும் இதுவரை ச

மார் நாற்பத்தைந்து நூல்களுக்கு மேல் எழுதியிருக்கிறார்; இன்னும் எழுதிக்கொண்டிருக்கிறார். தவிர, வேறு பல அலுவல்களையும் கவனித்துக் கொண்டிருக்கிறார். வருஷத்தில் ஆயிரக்கணக்கான கூட்டங்களில் பேசுகிறார்; இக்கூட்டங்களுக்கு இலட்சக்கணக்கான ஜனங்கள் வந்து கூடுகிறார்கள். இவர் உழைப்பெல்லாம் ஏழை ஜனங்களுடத்திலேயே யாகும். ஆனால் பணக்காரர்களும் அரசாங்கத்தாரும் இவருக்குச் சிநேகிதர்களே. சில சமயங்களில், அரசாங்கத்தார், இவரைத் தங்களுக்கு விரோதியாகக் கருதுவது முண்டு. இவர் ஒரு சமயம் "ஏழைகளின் மனோதத்துவம்" என்பதைப்பற்றி ஒரு சிறுநூல் எழுதினார். இதில் ஏழைகளின் துன்பத்தை மிக அழகாக வருணித்திருந்தார். இதைப் பார்த்த அரசாங்கத்தார் ஜப்பானிலுள்ள ஆறு பெரிய நகரங்களில் ஏழைகளின் விடுதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு கோடி டாலர்கள் செலவழிக்கத் தீர்மானித்தார்கள். இவர் எழுதிய முதல் நாவலில் தம்முடைய ஜீவிய சரித்திரத்தையே சுருக்கமாகக் குறிப்பிட்டிருந்தார். இது, 180 பதிப்புகள் செலவழிந்தன. இவர் ஒரு சமயம் கப்பல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தஞ் செய்தபோது, அவர்களுக்குத் தலைவராக இருந்து வேலை நிறுத்தத்தை நடத்தினார். இதனால் இவர் அரசாங்கத்தாரால் கைது செய்யப்பட்டார். இவர் சிறையில் இருந்தபோது, இவருடைய புஸ்தகம் ஒன்று, குறித்த ஒரு மணி நேரத்தில் வெளியாகும் என்று விளம்பரப்பட்டிருந்தது. இதனை வாங்கும் பொருட்டு ஜனங்கள் கும்பல் கும்பலாகக் காத்துக்கொண்டிருந்தார்கள். இதனால் இவருடைய நூல்களை ஜனங்கள் எவ்வளவு சுவையுடன் படித்து வந்தார்கள் என்பது நன்கு புலனாகும். இவர் வறுமையில் வாழ்ந்து கொண்டு, தாம் சம்பாதிக்கிற பணத்தை யெல்லாம் ஏழைகளின் நன்மைக்கென்று செலவிடுகிறார்.

காகவா, கிறிஸ்தவ மதத்தை அனுசரிக்கிறவராயிருந்தும், ஜப்பானியர்களுக்கு இயற்கையாயுள்ள சில அம்சங்கள் அவரிடம் இருக்கின்றன. ஜப்பானியர்கள், எவ்வளவு கஷ்டகாலத்திலும் புன் சிரிப்புடன்கூடியே இருப்பார்கள். காகவா, சர்வ தேசத்தாரிடமும் அன்பும் சகோதரத்துவமும் உடையவராக இருக்கிறார். யுத்த உணர்ச்சியிலேயேதிளைத்திருப்பவர்களையும் அன்பால் வசப்படுத்தலாம் என்று இவர் கருதுகிறார். ஜப்பானில் உண்மைக் கிறிஸ்தவ அன்பைப் பரப்பவேண்டுமென்பது தமது நோக்கமென்று இவர்கூறுகிறார். இவர், சமூக சீர்திருத்தத்தில் உழைக்கும் மூன்று சங்கங்களுக்குத் தலைமை பூண்டிருப்பதுடன், ஒரு குஷ்டரோகிகள் சாலையையும், கூட்டுறவுப் பண்டசாலையையும் நடத்துகிறார். இவருடைய எளிய வாழ்வையும், சலியா உழைப்பையும் பாராட்டாதவர் எவருமில்லையென்று கூறலாம்.

இன்னும் டிமிக்கி அடிக்கவா?

தலை வாசலில் புகுந்து—தட்டியைத் தாண்டி—பொங்கிச்சானுக்குள் நுழைந்து—ஆற்றுக்குள் விழுந்து—ஸி. ஐ. டிகளை டிமிக்கி அடிச்சது ஒன்று. தல்லாவுக்குத் தண்ணீ எற்றிச் சென்ற படகோட்டிக்கு ஒரு அணாகூட கொடுக்காமல் ஏமாற்றிய டிமிக்கி இரண்டு. "இந்தா வர்ரேங்க" பிள்ளை! கொஞ்சம்பொருத்துக்குங்க! ஆஜராயிடுறேன்;" என்று சொல்லி மோல்மீன் மரக்கப்பலில் மூட்டை கட்டிக்கொண்டு ஓடிய டிமிக்கி மூன்று. இனி அடிக்கப்போகிற டிமிக்கி நாலு. ஸி. ஐ. டி. சிப்பாய்களே! ஏமாந்து விடாதீர்கள்!

நாம் பொது மனிதர்களை தப்புச்செய்தவிடத்து புள்ளி விவரத்துடன அவ்வப்போது சந்தியில் நிறுத்துவதுசகஜம். இதை நாம்மாத்திரம் சொல்லவில்லை. இரங்கோன் முழுமையும் உலகமும்அறியும். எந்தவொரு மூஸ்லீம்கனவானிடத்தில் காசு தட்டுவதற்காக நாயுடு—செருப்பாலடித்தாலும் பிறவிக்குணம் போகாத நாயுடுஇருட்டுக்குள்—திரைமறைவில் எந்தப்பேடியின் செயல்செய்தானோ. அந்தகனவானை நாம் ஒரு முறையல்ல-பலமுறை--சந்தியில்நிறுத்தியதுண்டு.இதனால்அவருக்கோ அல்லதுநமக்கோ தனிப்பட்டமுறையில்எவ்விதவெறுப்பும்துவேஷமும்ஏற்பட்டதில்லை. இருவரும்மனிதமுறையிலேயே நடந்துகொண்டோம். வயிற்றுபிழைப்புக்காக நாயுடு-சுப்பையா—ஒருபெரிய பாவத்தைக் கட்டுகிறான். இப்பொழுதும் ஸி. ஐ. டி. களை எம்மைக் காட்டித்தான் தப்பிக்கப் பார்க்கின்றான். ஸி. ஐ. டி. கள் அவ்வளவு ஏமாளிகளில்லை. நமது நண்பர் சுந்தராஜுலுநாயுடு ஜாதி அபிமானத்தினாலோ அல்லதுகைகூட்டினாலோ நாயுடுவின் பசப்பு வார்த்தையாலோ இம்முறையும் ஏமாந்து விட்டால் அவரையும் நடத்த சர்க்காருக்குத் தெரியும். கயிறு திரிக்காதே!

ஜினிவா தமாஷா!

பீரங்கிகள் குண்டுகளைக் கக்குகின்றன. துப்பாக்கிகள் சீறுகின்றன, போர்க் கப்பல்கள் பாய்கின்றன, சீனாவும் ஜப்பானும் மூச்சுவிடாமல் சண்டையிட்டுக்கொண்டிருக்கின்றன. உலக முழுதிலும் போர்க்கிலி—போன யுத்தத்தின் பைசாசம்—கண்ணை புருத்திக்கொண்டு பயங்கரமான தோற்றத்தோடு தாண்டவமாடுகிறது. இவ்வளவு ஆபத்துகளுக்கு மத்தியிலே சர்வ தேசத்துச் சமாதான மந்திரிகளெல்லாம் ஜினிவாவிலேகூடி ஒரு தமாஷா (நாடகம்) நடத்துகிறார்கள், அதற்கு சமாதான தமாஷா என்று பெயர். போரிலேதான் எத்தனை தமாஷா? பேச்சிலேதான் எவ்வளவு தமாஷா? அடப் படுபாவிகளே! சீனனும், ஜப்பானியனும் குரல்வளையை நெரித்துக் கொண்டு சாகிறான். நீங்கள் நாடகமாடுகிறீர்களா நீங்கள் பேசும் பேச்சில் நேர்மை யிருக்கிறதா? நிஜமென்றவாடையாவது உண்டா? ஆயுதப்பரிஹரணம் என்பதற்கு ஏதாவது அர்த்தங்கொடுப்பதாய் உங்களது தாத்பரியமா? ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் உங்களுக்கு ஒரு ஒத்ததுரும்பு. வாக்குநாணயத்திற்கும் உங்களுக்கும் வெகுதூரம். மலைக்கும் மடுவுக்குமுள்ள தாரதம்மியம். வெர்ஸெய்ல்ஸ் உடன்படிக்கைகள் எங்கே? கெல்லாக் ஒப்பந்தம் எங்கே? எல்லாவற்றையும் காற்றிலே பறக்கவிட்ட பின்னால் இன்னும் ஒரு ஒப்பந்தமா? சீனப்பிரதிநிதியும் ஜினிவாவிலே உட்கார்ந்து கொண்டு தாளம் போடுகிறீர்களா? இல்லாவிட்டால் வேறு வேலையென்ன?

எளிய நாட்டை வலிய நாடு நசுக்குவதை பிற வல்லரசுகள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. ஜப்பான்காரன் உடன்படிக்கையை மீறினானென்றால் அமெரிக்கனும் பிரிட்டிஷ்காரனும் பிரஞ்சுக்காரனும் ஜர்மானியனும் மீற வில்லையா? இல்லை யென்றால் இவர்களும் இந்நேரம் சீனன் பக்கத்திலே நின்றிருப்பார்களல்லவா? இந்த லட்சணத்தில் சிறிய தேசங்களும் அதன்விகிதத்தில் ஆயுதங்களைக் குறைத்துக் கொள்வதென்றால் வல்லரசுகள் தோண்டிய குழிக்குள் அங்கங்களை போட்டுப் புதைப்பதாகும். கூடுமானவரை தற்காப்புக்கு வேண்டிய சைன்ய பலத்தை அமைத்துக் கொண்டு வாழ்வதை விட பலவான்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு சிறிய தேசங்கள் ஆயுதத்தைக் குறைத்துக் கொள்வதால் சிறிய தேசங்களுக்கு அதிக ஆபத்தேயன்றி கடுகளவு விமோசனங்கூட ஏற்படப் போகிறதில்லை.

"கைவீசம்மா! கைவீசு!!"

பத்துவயது வரையில் மனித ஜன்மத்தை குழந்தையென்றழைப்பார்கள், ஆனால் சில அபூர்வ படைப்புகளும் உலகில் ஏற்படுவதுண்டு. எப்பொழுதுங் குழந்தைகளாக அறுபது வருடமாயினும் குழந்தைகளாகவே இருக்கின்றவை உலகத்தில் உண்டு. இத்தகைய அபூர்வ சிருஷ்டிகள் இந்தியாவிலும் முக்கியமாக பர்மாவிலும் தான் அதிகம் உண்டாய்க்கொண்டிருக்கின்றது. அவைகளை அடிக்கடி வெளிநாட்டு எக்ஸிபிஷன்களுக்குக் கொண்டு போகிறார்கள். வேற்று நாடுகளில் அந்தக் குழந்தைகளில் சில "கீசசு மீச்சு" என்று கத்தும். சில எப்பொழுதும் இழித்துக்கொண்டிருக்கும். சில பட்டு பட்டான துணியை அணிந்து நடை பழகிக்கொண்டிருக்கும், சில எப்பொழுதும் விளையாடிக் கொண்டிருக்கும். சிலகுழந்தைகள் ஒன்றன்காதை இன்னொன்று கிள்ளிவிட்டுக் கூச்சலிட்டுக் கொண்டிருக்கும் இந்தக் குழந்தைகளால் எந்தக்காரியத்தையாவது செய்யமுடியுமா? ஒன்றும் முடியாது எல்லாக்காரியத்திற்கும் அபமாதான!' என்று தாயாரை இக்குழந்தைகள் கைகாட்டிவிடுவன. வேடிக்கையிலும் விளையாட்டிலும் பொழுது போக்கக் குழந்தைகள் விருப்புமேயன்றி வேலை செய்யவோ, பொறுப்புவகிக்கவோ விரும்பமாட்டா. இந்த அபூர்வமான குழந்தைகள்யாரென்று பார்த்தால் மூன்றுநாள் வந்திறங்கிய பர்மா வட்டமேஜை குழந்தைகள் தானென்று சொன்னாலும் பொருத்தமே பொருந்தும். இக்குழந்தைகள் லண்டன் காக்ஷிசாலையில் விளையாடிக்கொண்டிருந்ததையும் நாம் அறிவோம், பர்மாவுக்கு குழந்தைகள் கொண்டுவந்த தொன்றுமில்லை சுயராஜ்யம் என்ற பணத்தைக் கொண்டுவந்திருந்தால் இராப்பட்டினி, பகல்பட்டினி, முழுப்பட்டினிக்காரர்கள் சொன்னபடிக்கு தொழில் பர்மா பிரதிநிதிகள் வந்திறங்கிய அன்று முதலே நின்றிருக்கும். கொண்டு வரவுமில்லை. இம்மாதிரி "கைவீசம்மா கைவீசு" என்று ஆட்டி அலைத்துக்கொண்டு திரிகிறவர்களுக்கு ஆடம்பரமான வரவேற்புமா வேண்டும்? அப்படியானால் வரவேற்பளித்தவர்களும் குழந்தைகளாகத்தானிருக்கவேண்டும்!

தோட்டக்காரன் மகள் : :

சர்நாண்ஜீ.

ஜோதிபாயின், இனிய கீதத்தொனி கிழவன் காதில் பட்டதுதான் தாமதம்—அவன் தளர்ந்தமேனி திடமடைந்துவிட்டது. அவன் வாடிய முகம் மலர்ச்சி பெறுகின்றது. பொக்கை வாயில் மழலைப் புன்னகை தவழுகின்றது. அவன் ஒரு வாலிபன் போல் துள்ளுகின்றான். "குழந்தாய்! குழந்தாய்" என வாயார அழைக்கிறான். என்ன ஆச்சர்யம். ஜோதிபாயின் கீதாநாதம் வயோதிகனுக்கு அமிர்த சஞ்சீவி யென்றே சொல்லலாமா! ஆம்! வீணையின் ஓசையும், புல்லாங்குழல் நாதமும் குழந் பாக்கியமில்லா மலடர்களுக்கன்றோ இனிமை பயக்கும். மழலைச்சொற்களைக்கேட்டு இன்புறக் கொடுத்துவைக்கும் பெற்றோர்களுக்கு அவை இனிமையைத்தருமா? (3)

ஜோதிபாய் பிறந்து பத்து வசந்த காலங்களையே பார்த்திருக்கிறாள். ஜோதிபாய் தோட்டக்காரன் குலத்துக்கு ஒரு ஜோதியே. தோட்டக்காரன் தான் அருமையாக வளர்க்கும் செடி கொடிகள், பக்ஷிசாலங்களினிடத்தில் எத்துணை ப்ரேமை வைத்திருக்கின்றானோ அதைவிட ஆயிரம்மடங்கு தன் மகளான ஜோதிபாயினிடத்தில் கொண்டிருக்கிறான்.

தந்தை அழைத்ததின் குறிப்பறிந்தாள் நம் ஜோதி. சிவப்புக் கரையிட்ட கருப்புச் சித்தாடையை மின்னல் கொடி போன்ற தன் மேனியெங்கும் சுற்றிக்கொண்டாள். பவளத் துண்டங்கள் போன்ற மெல்லிய விரல்களில் இரு புஷ்பக் குடலைகளை மாட்டிக்கொண்டு செம்பஞ்சு ஊட்டியது போன்ற தனது சிறு அடிகளை வீசி எறிந்து தோட்டத்துக்குள் ஓடி மறைந்தாள். (4)

நான் இப்பொழுது நன்கு விழித்துக் கொண்டேன். நந்தவனத்தின் இயற்கை அற்புதக் காட்சிகளைக் கண்ணாரப் பருகினேன். வெளி முற்றத்துக்கு வந்து நின்று பார்த்தேன். மலருக்கு மலர், செடிக்குச்செடி கொடிக்குக்கொடித் தாவித்தாவிப் பறந்துசென்று, தேனைமாந்தும் வண்ணாத்திப் பூச்சியைப்போல்; ஜோதி, சுறுசுறுப்பாக புஷ்பங்களைக் கொய்து தன் குடலைகளில் நிரப்பிக்கொண்டிருந்தாள். அவளது பூக்குடலைகளில் ரோஜா, பாரிஜாதம், செண்பகம், மல்லிகை, முல்லை, இருவாட்சி முதலிய புஷ்பங்கள் நிறைந்திருந்தன. குழந்தை என்னை எறிட்டுப்பார்த்துவிட்டாள். ஆ! என்ன கம்பீரமான நடை. என்ன உல்லாசம்—என்ன ஒய்யாரம், வெற்றிபெற்ற அன்னம்போல், கை வளையல்கள் கல்லென ஒலிக்க, தண்டைச் சலங்கைகள் ஆர்ப்ப என்னருகில் வந்து நிற்கின்றாள். இவளது குற்றமற்ற உதடுகளில் மந்தகாசம் கொஞ்சுகின்றது. என்னைப் பார்த்து சிரிக்கிறாள். (5)

ஜோதியின் கவனம் இப்பொழுது ஒரே விஷயத்தில்தான் சென்றுகொண்டிருக்கிறது. தான் பறித்து வந்த மல்லிகை மலர்களை சரமாகத் தொடுக்கிறாள். பெற்ற தாய்மார்கள் தங்கள் அருமைக் குழந்தைகள் கவனத்துடன் ஊக்கத்துடன் சக்காரியங்களைச் செய்யும்போது சந்தோஷமடைகிறார்கள். ஜோதியின் செய்கையும் இப்படியே! நிமிஷத்தில் ஒரு பூமாலை தொடுத்துவிட்டாள். மாலையும் மலர்களையும் என்னிடம் கொணர்ந்து இட்டாள். "இவைகளை நீ எற்றுக்கொள்" என்று தயாள சிந்தையுடன் சாதுர்யமாகக் கூறினாள்.

"இத்துணைப் புஷ்பங்களையும் யான் என்ன செய்வது" "அப்படியானால் அம்மனுக்குச் சாத்துவோம்" என்று சொல்லி விரைந்தோடி எங்கள் வீட்டிலிருந்த கௌரீ அம்மன் செப்பு விக்கிரகத்தை புளிக்காப்பிட்டு பளிச்செனத் துலக்கி எடுத்து வந்து பீடத்திலிட்டு, இதர புஷ்பங்களையும் சிறுசிறு மாலைகளாகத் தொடுத்து, அம்மனுக்கு அலங்காரஞ் செய்தாள்.

இத்துடன் அவள் மனம் திருப்தி அடையவில்லை. சாந்தமடையவில்லை—திடீரென எழுந்தாள்—தான் அலங்காரம் செய்ததைச் சற்று சமீபமாகவும், தூரமாகவும், மூலைச்சாய்வாகவும் நின்று கவனித்தாள். கை, கண், புத்தி. மனம் ஆகிய பணியாளர்கள் செய்த வேலையை, சரிபார்க்கும் எஜமானி எனவே அவள் விளங்குகிறாள். அடிக்கடி தான் செய்த அலங்காரம் சரியாயில்லை என்று தோன்றியவுடன், விரைந்து சீர்திருத்தினாள். கடைசியாக "தம்பி! அலங்காரம்இப்பொழுது நேர்மையாயிருக்கின்றனவா" அவளுடையகண்கள் என்னை ஊன்றிக்கவனிக்கின்றன. என்னுடைய [illegible]லையே அவைகள்எதிர்பார்க்கின்றன. (தொடரும்)

Printed & Published By A V· Sellam Pillay at the Desopakari Press, 210,36th Street Rangoon

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 10 அரையணா

தேசோபகாரி

காயகிரவல பத்திரிகை

DESOPAKARI

புதன் ஞாயிறு வெளியீடு

210 36-வது வீதி இரங்கோன், (14—2—32) மாசி மீ 2உ ஞாயிற்றுக்கிழமை.

லேடி வில்லிங்டன் கபட நாடகம்.

இந்தியா சுதந்தர மடைவதில் முட்டுக்கட்டை போட்டுவந்த சூழ்ச்சிக்காரர்கள்; இம்மாதம் ஆரம்பத்தில் நடந்த இந்திய சட்டச் சபையில் வெற்றி பெற்றதாகக் கூறிக்கொள்ளுகிறார்கள். கூறிக்கொள்ளத்தானே செய்வார்கள். இதுதான் ஆங்கிலேயரின் பிறவிக் குணமாச்சே. மானங்கெட்ட வில்லிங்டன் மார்தட்டிக் கொள்ளக்கூடத்தான் வேண்டும். சபையில் உத்தியோகப்பற்றுடையோரும், உத்தியோகப் பற்றற்றோரும் குழுமியிருந்தனர். இரண்டு நாட்கள் மட்டும் இடைவிடாமல் அவசரச் சட்டங்களைக் கண்டித்து விவாதம்நடந்தேறியது. ஸ்ரீஜக்-சவர் காங்கிரஸிற்கு சாதகமானவரல்லவாயினும், அவசர சட்டங்களின் அட்டூழியங்களைப்பற்றி கண்டித்து நீண்ட நேரம கர்ஜனை செய்தார். அப்படியே ஜனாப் அப்துர்ரஹிமானும் எல்லைப்புறத்தில் நடக்கும் கொடுமைகளைப்பற்றி கண்டித்துப் பேசினார். உள்நாட்டு மந்திரி கிரர்கூட திருதிருத்துப் போனார். பேச நாவெழவில்லை. தீர்மானமோ நிறைவேறிவிடும்போலிருந்தது.

வைஸ்ராய்-லேடி வில்லிங்டன் ஓடோடியும் வந்து சேர்ந்தார். "படப்போட இன்ற மாட்டுக்குப் பிடிக்கிப்போட்டால் போதுமா"? தீர்மானத்திற்கு சாதகமாயிருந்தவர்களை எல்லாம் ஒரு கொஞ்சம், ஒரு குலுக்கும், குலுக்கினாள். பின்பு கேட்பானேன்! சாதகமெல்லாம் பாதகமாய் முடிந்துவிட்டது. இந்த மானங்கெட்ட கபட நாடகம் ஆங்கிலேயர்களுக்கு இயற்கையிலேயே அமைந்தது. பின்பு வெற்றிதானென்று ஏன் சொல்லிக்கொள்ள மாட்டார்கள். சொல்லிக்கொள்ளத்தான் செய்வார்கள் சூழ்ச்சிக் காரர்கள் முதலில் வெற்றியாகத்தான் தோன்றினாலும், கடைசியில் தோல்வியையும். பெரும் கஷ்டத்தையும் விளைவிக்குமென்பது திண்ணம். அன்று சீதாதேவி ஆரண்ய ஆசிரமத்தில் தனியாயிருந்தாள். அச்சமயம் பார்த்து ராவணன் அங்கே வந்தான். எப்படி வந்தான்? சன்னியாசி மாதிரி வேஷம் போட்டு பிச்சை கேட்க வந்தது மாதிரி வந்தான். அவன் வந்தது பிச்சைக்காகவல்ல. சீதா தேவியை அபகரித்துச் செல்லவே வந்தான். சன்னியாசி உடையைக்கண்டு சீதாதேவி ஏமாந்து போனாள். கபட நாடக உடைக்குள்ளே அவன் நெஞ்சத்திலிருந்த சூதை அவள் அறியவில்லை. ஆகவே பிச்சை போட வெளியே வந்தாள். உடனே ராவணன் பொறிக்குள் அகப்பட்டாள். இலங்கையில் சிறை செய்யப்பட்டாள். இந்த சூதை நமது இந்தியச் சகோதரர்கள் மறந்து லேடி வில்லிங்டன் வலையில் சிக்கிக்கொண்டார்கள், ஆனால் வெற்றிகொண்டு விட்டோம் என்று மட்டும் சொல்வதற்கில்லை.

சீதை யென்றால் லக்ஷ்மி. லக்ஷ்மி என்றால் செல்வம். இந்தியாவின் செல்வமாகிய சீதையை முன்பு அன்னிய நாட்டானாகிய இலங்கையான் எடுத்துச் சென்றான். இன்று அந்த சீதேவிக்கு பல நாட்டார்கள் போட்டி. ஒவ்வொரு நாடும தான் அபகரித்துச் செல்லச் சூழ்ச்சி செய்கிறது. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வேடம் போடுகிறது. ஒவ்வொரு நாடும் தனது சூதை மறைக்க முயற்சி செய்கிறது. இதைப்போலவே, ஒவ்வொரு பொருளும் வெ

அவகாசம் வேண்டுமோ?

வாய் வேதாந்தம் பேசுவதில் நாம் அனைவரும் சமர்த்தர்கள். உதட்டில் தேனைத் தடவிக்கொண்டு தித்திக்கத் தித்திக்கப் பேசுகின்றோம்—பிறர் மெச்சப் பேசுகின்றோம்—பெண்டுகள் மெச்சவே பேசுகின்றோம்! பேசுவதினால் தோஷமில்லை—பேசலாம்—பேச்சுப்படி செயலில்—அனுபவத்தில்—கிஞ்சித்தேனும் நடக்கின்றோமா?

காங்கிரஸ் என்று புகழ்ந்து பேசுகின்றோம்—சத்தியாக்கிரகிகளது வீரத்தை மெச்சுகின்றோம்—ஸ்திரீ ரத்தினங்களின் வீரத்தைக்கண்டு புஜந்தட்டுகிறோம்—தொண்டர்கள் துன்பமடையும்போது நீலிக்கண்ணீர்வடிக்கின்றோம்—சுதந்திரம் வேண்டும்! வேண்டும்!! என்றும் போர் ஜெயமடைவது உறுதியென்றும் அடுப்பண்டை உட்கார்ந்து வேதாந்தங்கள் கூறுகின்றோம்—பயனென்ன?

இவற்றால் சுதந்திரப்போரில் முனைந்து நிற்கும் சத்தியாக்கிரஹிகளுக்கோ, நமது தாய் நாட்டிற்கோ, நமக்கேதானோ, லவலேசமும் பிரயோஜனமுண்டா? நமது கோழைத்தனத்தை பிறர் கண்டு நகைக்கும்படி நாம் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளுகிறோமேயன்றி வேறென்ன?

எல்லோரும் இன்றே பெண்டு பிள்ளைகளை விட்டு—வயிற்றுப் பிழைப்புகளை விடுத்து சத்தியாக்கிரஹப் போரில் கலந்துகொள்ள முடியாதென்பதை நாமும் ஒருவாறு ஒப்புக்கொள்ளவே செய்கிறோம். ஆனால் வேறு எத்தனையோ சிறந்த வழிகள் இல்லையா?

சென்ற சத்தியாக்கிரஹப்போரில் நமது மாபெருந் தலைவர் காந்திமகான் கூறிய மாதிரி தக்ளி சுற்றுவதைப் போன்ற இயக்கத்திற்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் அளிக்கக்கூடிய கைங்கர்யம்வேறு எது இருக்கின்றது. இதைப் பற்றிப் பேசுங்கால் நமது நண்பர்கள் அவகாசமில்லையென்று சாக்குப் போக்குச் சொல்லிவிடுகிறார்கள். இதுவும் ஒருவிதம் உண்மையாயிருக்கலாம்—காலை ஏழு மணி முதல் மாலை எட்டு மணி வரை கம்பெனிகளிலேயும்—ஆபீசுகளிலேயும் கைகட்டி சேவகம் செய்வதின் கஷ்டத்தை நாமும் நன்கறிவோம். ஆனால் இத்தனை உழைப்புகளிடையேயும் தேச சேவை செய்துவரும் ஒருவரது புகழத்தக்க திறத்தை—உண்மை உழைப்பை—அவகாசமில்லையென்று வீண்வம்பு பேசும் நண்பர்களுக்கு எடுத்துக் காட்டாக இங்கு கூறுகின்றோம்.

வில்லி—பார்ளி உபாத்தியாயர் ஒரு பெரும் குடும்பஸ்தர்—சம்சாரி. பெறும் ஊதியமோ சொல்பம்—குடும்ப சம்ரக்ஷணைக்கு வேறு சில அலுவல்களும் செய்தேதீரவேண்டும். ஆகவே ஒரு நாளில் இருபத்துநான்கு மணி நேரமும் இவருக்கு உழைப்பேதவிர ஓய்வென்பது கிடையாது. என்றாலும் தேச சேவை செய்வதில மிகுந்த ஆர்வம் கொணடவர். காந்தியடிகளின் உண்மை பக்தர். சததியாக்கிரகப்போரில் கலந்துகொண்டு சிறை புகுவதென்றாலோ குடும்பபாரம் அவரை சிறைபுகா வண்ணம் தடையாய் நிற்கின்றது. என்னசெய்வார்?

நூல் நூற்பதே சிறந்த தேச சேவையென அவர் தீர்மானித்தார். ஆனால் அவகாசமில்லையே என்ற பிரச்சினை அவருக்கும் உண்டாயிற்று. யோசித்தார். அவரது அலுவல்களுக்கிடையே தினசரி பலதடவை ரயில் பிரயாணம் செய்யவேண்டியிருந்தது. அந்தப் பிரயாண காலமே அவருக்கு அவகாசமானகாலம்—ஓய்வுநேரம்—அந்தச் சிறு பொழுதை தேச சேவைக்கு அர்ப்பணம் செய்ய உறுதி கொண்டார். வாங்கினார் ஒரு தக்ளியை! நூல் நூற்க ஆரம்பித்தார். ஓடும் ரயிலில் நூல் நூற்பது மிகக் கடினமானகாரியம். இருந்தாலும் வல்லவனுக்குப் புலலும்ஆயுதமலலவா? ஓடும்ரயிலிலேயே அருமையாக நூல் நூற்கப் பழகிவிட்டார். இப்பொழுது அவர் கட்டை வண்டி சவாரிகளிலும் நூல் நூற்கும் திறமை பெற்றுவிட்டார்.

இவரது ஊக்கத்தையும், தேச பணியின் மேன்மையையும் கவனிக்கும் நண்பர்கள் இனிமேலாவது அவகாசமில்லை யென்ற வீண் தர்க்கத்தை விட்டு தேச சேவையில் ஈடுபடுவார்களென நம்புகிறோம்.

வ்வேறு உருவத்தோடு சீதையை ஏமாற்றப்பார்க்கிறது. சீதா, நீ ஏமாந்து போவாயா? முன்னால் இலங்கையை ஆண்ட மன்னனிடம் ஏமாந்தது போல மறுபடியும் ஏமாறப் போகிறாயா?

கச்சையணிந்த கொங்கை மாதர்
கண்கள் வீசு போதிலும்
..........ஏமாறப் போவதில்லை

நமது லக்ஷியம் என்ன?

(மகாத்மா காந்தி)

ராஜீய அதிகாரம்தான் நமது லக்ஷியமா? அல்லவென்று நான் கூறுகின்றேன். நம்முடைய மக்கள் ஒவ்வொரு துறையிலும் நன்றாய் வாழ்வதற்காக ராஜீய அதிகாரம் என்பது கேவலம் ஓர் கருவியாகும். நம்முடைய தேசிய வாழ்க்கையை தேசியப் பிரதிநிதிகளைக் கொண்டு நிர்ணயிப்பதையே ராஜீய அதிகாரமெனக் கூறவேண்டும். நம்முடைய தேசிய வாழ்க்கை சுத்தமானதாயும், கட்டுப்பாடு உடையதாயும் மாறிவிட்டால் பிரதிநிதித்துவம்கூடத் தேவையில்லை. அப்போது அறிவு மயமான ஓர் அராஜக நிலை நாட்டில் ஏற்பட்டிருக்கும். அத்தகைய நாட்டில் எல்லோரும் தங்களைத் தாங்களே நடத்திக் கொள்வார்கள். இத்தகைய உண்மை ராஜ்யத்தில் அரசு என்பதேயில்லை. ஆகலால் ராஜீய அதிகாரம் என்பதும் இல்லை. ஆனால் அந்த உண்மை அரசை முழுதும் நாம் அடைந்துவிட முடியாது. "எந்த அரசாட்சியில் அமுல் குறைவோ அதுதான் சிறந்த அரசாங்கம்'' என்று மகான் தோரு கூறிய வாக்கியங்களை நாம் மெச்சவேண்டும். சீர்திருத்தங்களை அடைவதற்காக காங்கிரஸ் முயலுகின்றது. அந்த சீர்திருத்தங்களை அடையவே நான் ராஜீய அதிகாரத்தைக் கோருகின்றேன். முஸல்மான்களோ, சீக்கியரோடும் முரண்படுவதாகி இராஜீய அதிகாரத்தை அடைவதினால் அது நமது சீர்திருத்தங்களுக்கு நஷ்டமுண்டாவதானால் நான் தேசத்திற்கு சொல்வதாவது:— "முஸல்மான்களும், சீக்கியரும் எவ்வளவு அதிகாரம் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளட்டும். அந்த சீர்திருத்தத்தைப் பிறகு நான் அபிவிர்த்தி செய்யப் பாடுபடுகிறேன்."

சென்ற பன்னிரண்டு வருஷங்களாகக் காங்கிரஸின் சரித்திரத்தைத் துருவிப்பார்த்தால் ஓர் உண்மை விளங்கும். நிர்மாண வேலைகளில் காங்கிரஸுக்கு எவ்வளவு அளவுக்கு சக்தி யிருக்கிறதோ; அவ்வளவு அளவுக்குத்தான் இராஜீய அதிகாரத்தையும் அடைந்து வந்திருக்கிறது. இப்போது நாம் துரைத்தன யந்திரத்தை மட்டும் அடைந்தால் அது வெறும் நிழல் தான். ஏதோ அடையாளம்தான். ஜனங்கள் தக்கவர்களாகத் தயாராகாமல் வெளியாரால் தரப்பட்ட ஒரு சன்மானம்போல் அந்த அதிகாரம் வருமானால் அதை வெறுங்கூடையாகவே கருதவேண்டும். ராஜ்ய அதிகாரத்தை அடைந்து அதை உபயோகிப்பதைவிட, சத்தியாக்கிரஹத்தினால் நமக்கு அவசியமானதை சீக்கிரத்திலும், கட்டாயமாகவும் அடையலாம். பொது ஜன அபிப்பிராயம் ஏற்படுவதற்கு முன் சட்டங்கள் சிருஷ்டிக்கப்படுவது வியர்த்தமாகும். பெரும்பாலும் திருடர்கள் நிறைந்த ஒரு நாட்டில் திருடக்கூடாது என்று சட்டமிட்டுத் தடுப்பது பிரயோஜனமற்ற செயலாகும். ஆனால் சீர்திருத்தங்களினின்று ராஜ்ய அதிகாரம் என்பதுவே யிருக்குமாயின் ராஜீய அதிகாரத்திற்காகவே நாம் பாடுபடவேண்டும். இதுவரை நாம் மற்றொரு மார்க்கமாகப் போயிருக்கிறோம்.

ஸ்வராஜ்யத்தை அடைவதற்கு நிர்மாண வேலைகளால்தான் முடியுமென அவைகளின் அவசியத்தைப்பற்றி இதுவரை கூறிவந்தோம். பொதுஜன அபிப்பிராயம் வற்புறுத்துவதாகவும், ஆனால் அன்னிய அரசாங்கம் மறுப்பதாகவும் சிலர் கூறலாம். இதில் பகுதி உண்மையே. "இந்த நாட்டில் பொதுஜன அபிப்பிராயம் என்பது சக்தியாக மாறிக்கொண்டு வருகிறது. அது நாளடைவில் விர்த்தியடைந்து சத்தியாக்கிரஹம்'' என்ற ரூபத்தை யடையும்,

இங்கு இப்படி! அங்கு அப்படி!!

கொடிய அவசரச் சட்டங்களாகிய காளிங்க சர்ப்பங்கள் இந்திய சுதந்தர யமுனை ஆற்றின் தெளிந்த நீரை விஷங்களைக்கக்கி பருக வொட்டாமல்— சுதந்தர தாகத்தை தவிர்த்துக்கொள்ள முடியாதபடி தீங்கு செய்து வருகின்றன. கடும் விஷம் ஏற்றவர் போல் சுக்கு மாந்தடிப் பிரயோகங்களுக்கு இலக்காய சத்தியாக்கிரஹ வீரர்கள் எத்தனை! சிறைபுகுந்தோர் எத்தனை ஆயிரம்! முதுகின்தோல் சல்லி! சல்லியாய்ப் பிய்த்தோட — வெள்ளெலும்பாட — சவுக்கடி உண்ட பள்ளிப்பிள்ளைகள் எத்தனை!— கடுங்காவல் தண்டனை யடைந்த மைனர்கள் எத்தனை! — "கோவிந்தா'' "கோபாலா" என அற்றினளாய் இரு கரங்களையும் மேலே குவித்து நின்ற பாஞ்சாலி போல் துப்பாக்கிக்குண்டுகளையும் நிகர் செய்யாமல் நெஞ்சை விரைத்து சத்தியாக்கிரகப்போர் நடத்தும் வீரமாதர் எத்தனை — எண்ணுதற் கடங்குமா? பிரிட்டனே சிறைபுகுந்தவர்களை காவலில் வைக்க இடம் போதாமல பொதுப்பள்ளிக்கூடங்களையும்—

சாவடிகளையும் — சத்திரங்களையும் — அவரவர்கள் வீடுகளையுமே சிறைக்கூடங்களாக மாற்றிவிடுகிறார்களென்றால் வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

இத்தனை ஆர்ப்பாட்டங்களையும் இந்த ஐரோப்பியன் வில்லிங்டன் சர்க்கார் ஏன் செய்கிறார்கள். தங்கள் நாட்டுக்கைத்தொழில்கொழிக்கவும்— தங்கள் வியாபாரம் நல்ல சிறக்கவும்— தங்கள் நாட்டவர் செல்வ வந்தர்களாகவாழவும்— தங்கள் நாடு எவ்விதத்திலும் செழிக்கவுமன்றோ! இல்லை என்பீர்களா! இதில் உங்களுக்கு சந்தேகம் உண்டா?

சாத்தீகமாக —கடைகள் வாயிலில் நின்று—அந்நியத்துணிகளை வாங்கவரும் தங்கள் நாட்டவர்களை— கெஞ்சிய முகத்துடன்— கை கூப்பிய வண்ணமாய்— காலில் விழுந்து — இந்திய த்துணிகளை வாங்குங்கள் —கதரை வாங்குங்கள்— சுதேசியை ஆதரியுங்கள் என்று நயமாக வேண்டினால்— இத்தகைய வீரனுக்கு தடியடியும்— கடுங்காவலும்— அநீத அபராதமும்— அவன் சொத்துப்பறிமுதலும் — என்றால் இதன் அர்த்தமென்ன.

இங்குதான் வெள்ளையர்களிப்படிச்செய்கிறார்கள். அங்கு அவர்கள் நாட்டில் அதாவது இங்கிலாந்தில் எப்படி? தெருத் தெருவாய்—விளம்பரத்திற்கு விளம்பரம் பிரிட்டிஷ் சாமான்களையே ஆதரியுங்கள் என்று கொட்டை விளம்பரங்கள் செய்கிறார்கள். இத்துடனு?

ஒருவன் இறந்து அவனை அடக்கம் செய்தால் மேலேபடும் கல்லும் அன்னியநாட்டுக்கல்லாயிருத்தல் கூடாதாம். அந்நியநாட்டு அழகிய சலவைக்கற்களைவிட அவர்கள்நாட்டு மரத்துண்டையோ— இரும்புத்தட்டத்தையோ தான் உபயோகிக்க வேண்டுமென்று கிளர்ச்சிகள் செய்கிறார்கள். ஆங்கில கவர்மெண்டார் இதற்கு முழு மனதுடன் ஆதரவளிக்கத்தானே செய்கிறார்கள், தங்கள் நாடு போல வன்றோ பிறநாடும். அங்கானால் அப்படி இங்கானால் இப்படியா! இந்தியா உப்பைத்தின்று வெள்ளையர்கள் இந்தியாவுக்கு இரண்டகம் நினைக்கலாமா என்றுதான் கேட்கின்றோம்.

இந்தியத் தோழர்களே! மேல் சொல்லியவற்றை நன்கு கவனியுங்கள் இனிமேலாவது நீங்கள் எங்கிருந்தாலும் எத்தொழிலைச்செய்தாலும் இந்திய சாமான்களையே— சுதேசிச்சாமான்களையே ஆதரியுங்கள்.

ஐயோ! ஐரோப்பாவே!

(ரோமெயின் ரோலண்டு)

ஆசியாவில் ஜனங்கள் விழிப்படைந்து வருகின்றனர். தனக்கு ஆயுதமுண்டு, தானும் ஓர் ஆளென்பதை ஜப்பான் காட்டுகின்றது. சீனம் விழித்துக்கொண்டது. இனி அது தூங்கப் போவதில்லை. காந்தியடிகளின் இந்தியாவோ தனது சக்தியை அறிந்துகொண்டு விடுதலைப் போருக்கு ஆரம்பித்துவிட்டது.

ரப்பர் சதக்களிலேற்றி (மோட்டார்) ல்வதந்திரதேவதையை ஊர்வலங் கொண்டு வருவதாகச்சொல்லி ஆத்ம ஒளி, கலை, விஞ்ஞானம், முன்னேற்றம், நாகரீகம் என்று வியாக்கியானம் செய்த பேர்வழிகள் இப்போது எங்கேயோ மறைந்து விட்டனர். தங்களுடைய விலங்குகளை முரித்தெரிய முனைந்திருக்கும் ஆசிய மக்கள் நடுவிலும் ஏராளமான கலை முதலியன உண்டு. கொட்டிக் கொட்டி அளப்பானேன்? ஐரோப்பாவினுடைய சுயநலத்தின் காரணமாக சென்றுள்ள ஓடுகாலிகளுக்காக நமது ஸோல்ஜர்கள் இனி உதவி செய்யப் போகின்றார்களா என்ன?.

என்மீது ஆணை வைத்துச் சொல்லுகின்றேன். இந்த ராக்ஷஸச் சண்டைக்கு நான் ஸோல்ஜராகப் போகமாட்டேன். ஐரோப்பாவே! உன்னை நான் எதிர்ப்பேன். உனது பேராசையைத் தாக்குவேன். இந்தியர், சீனர், முதலிய எனது சகோதரர்களுக்காக — குறை இடப்பட்ட தேசத்தினற்காக நான்பரிந்து கொண்டு நிற்பேன். நீதியின்பெயராலும், நாகரீகத்தின் பெயராலும் நான் போரிடப்போகின்றேன். அனேக தேசமக்களின் செல்வத்தைக் கொள்ளை இட்டீர்கள். ஆனால் அந்த தேசமக்களிடம் ஆத்ம பலம் இருக்கிறது. அறிவு ஒளிர்கின்றது. அவர்களுடைய தங்கத்தை பறிக்க முடிந்ததேயன்றி அவர்களது அறிவையும் நாகரீகத்தையும் அசைக்க முடியவில்லையல்லவா?.

மேனாடுகளுக்கும் கீழ்நாடுகளுக்கும்ஏற்படப்போகும் மகாயுத்தம் நடக்கக் கூடாதென்பது எனது கோரிக்கை. ஆயினும் அது ஏற்பட்டு விட்டால் எனது மரணக்குழியில் நான் பாயப் போகின்றேன். லெனினுடைய ஆத்மாவுக்கும் ஸன்யாத் ஸன்னுடைய ஆத்மாவுக்கும், மகாத்மா காந்தியடிகளுக்கும் சொல்கின்றேன்.

கண்ணன் என் நண்பன்.

(ஸ்ரீ எம். வி. ஈஸ்வர ஐயர்.

தமிழ்க் கவிச்சக்கரவர்த்தி ஸி. சுப்பிரமணிய பாரதியார் கண்ணன் பாட்டு என்ற அருமையான நூலியற்றியுள்ளார். அதில் கண்ணனை நண்பனாகவும், அன்னையாகவும், பிதாவாகவும், குழந்தையாகவும், குருவாகவும், நாயகனாகவும், நாயகியாகவும், ஆண்டானாகவும், அடிமையாகவும் பாவித்து அருமையாய்ப் பாடியிருக்கிறார். இந்நூலை எத்தனையோ முறை படித்துப் படித்து ஆனந்தித்திருக்கிறேன். சில பாகங்களில் என்னை யறியாமலே என் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் பெருகியுள்ளது. என் நண்பருக்கும், என் மாணவருக்கும் படித்துப் படித்துக் காட்டியிருக்கிறேன். குயிலின்குரல் எனக்கில்லையே! ஆயினென்! என் மனோபாவத்துக்கும் உற்சாகத்துக்கும் தக்கபடி பாடுவேன். உடலிலென்னவுள்ளது. உயிரிலுள்ள தன்றோ ஒளியும் தெளிவும். பாரதியே பாடக்கேட்டிருக்கும் பாக்கியம் பெற்றவன்யான். ஒருதடவை அவர் பாடும் சமயம் சங்கீத ஞானமிக்குடையார் ஒருவர் "காப்பியும் இந்துஸ்தானும் கலக்கிறது." என்று சொன்னதுதான். உடனே கவிக்குக் கோபமுண்டுவிட்டது. அவர் சொன்னார்: "சங்கீத ஞானசூனியமே! முதலில் இராகம் ஒன்றாய், இரண்டாய்ப் பலவாய், பல்பலவாய்ப் பெருகுகிறது. இது பாரதி ராகம். 32-உடன் 33 ஆய்ச் சேர்த்துக்கொள்ளும்." நான் சொல்கிறேன் என் இராகம் 34வது என்று.

"ஹே மகாத்மா! நான் உங்களுடைய கோஷ்டியைச் சேர்ந்தவன். லக்ஷக்கணக்கானவர்களில் நான் ஒருவனாயிருக்கிறேன். என்னுடைய வாழ்நாளனைத்தையும் தாராள நோக்கங்களோடு செலவழித்திருக்கிறேன். நசுக்கப்பட்ட தொழிலாளி ஜாதி, சமூகம் இவற்றின் பிரதிநிதி நான் தான்.

ஐரோப்பாவுக்குச் சொல்லுகின்றேன்! "ஹே ஐரோப்பாவே! நீ விசாலமாக மாறவேண்டும். இல்லாவிடில் செத்துப்போகவேண்டும். சுதந்திரமென்று ஓர் போலிக் குல்லாவினால் முகத்தை மூடிக்கொண்டு ஏன் நடிக்கின்றாய். ஐரோப்பாவை விட அகன்றதான ஓர் தேசம் நமக்குத் தேவை அந்தத்தேசத்தின் கதவுகளைத் திறக்கத் தேவதைகள்மணி யடித்துவிட்டனர்.

நிற்க கண்ணன் என் நண்பனைக் கண்டேன். அவர் தையல்காரர். சுமார் 10 ஆண்டுகளாக நான் அறிவேன். அவர் கேட்டார். "ஐயா, தங்களை நெடுநாளாய்க் காணோம். எப்பொழுது வந்தீர்கள்? அந்தேசத்தில் தேசியக் கிளர்ச்சி எப்படியுள்ளது?..........." என்று கேள்விகளை மூச்சுவிடாமல் அடுக்கினார். அனைத்திலும் ரசமுள்ளது: "தாங்கள் இச்சமயம் இயக்கத்தில் ஈடுபட்டிருப்பீரென்றல்லவோ நான் நினைத்தேன்?" என்ற வினா.

நான் பதிலுரைத்தேன்: இராமாயணத்தில் மூலபலசேனைபோரின்முடிவுகாலத்துக்காகத் தோல்வியை வெற்றியாக்கும் திறனுடைத் தன்மையாக வைக்கப்பட்டுள்ளதை தாங்கள் படித்திருக்கிறீர்களா? இராவணன் பல நெருக்கடியான அமயங்களில்தான் போருக்குச் செல்ல ஆயத்தமாகும் போதெல்லாம் இந்திரசித்து, கும்பகர்ணன் முதலானோர் "அற்ப மனிதனுடன் போராட இராவணேசுவரன் சென்றால் அம்மனிதனுக்குப் பெருமையை விளைவித்ததாகும். நான் சென்று அவனைச் சின்னாபின்னமாக்கி வருகிறேன்" என்று மாறுதட்டியது தெரியுமா? யுத்ததத்துவம்பெரிது. போர்முனையில் செல்பவரும் காயம் படுவோரும், உயிரிழப்போருமே யுத்த வெற்றிக்குக் காரணம் என்று கூறுவது சரியன்று. வெளியினின்றும் தேசசேவையாக தேசோபகாரி செய்யக்கூடிய பணி பற்பல உள."

கண்ணன் என் நண்பர் ஆம், ஓம் என்று ஆமோதித்தார். தாம் கதர்த்துணி தைக்க வந்தால் தாம் அரைச்சார்ஜ் வாங்குவதாகச் சொன்னார்; இதுவும் ஒரு சிறந்த பணியே! சிறந்த தியாகமே உங்களுக்கு எவ்விதத் தையல்வேலை கதரிலாக வேண்டுமானாலும் அவரிடம் போகலாம். அக்கண்ணன் உங்கள் நண்பருந்தான். நேரில் கண்டால் நட்பு வளரும். அதுதான் மதி. அதனால் பண. மீதியுண்டாம். பண நெருக்கடியான நேரத்தில் சிக்கனத்துக்கு வழிகாட்டிய எனக்கு வந்தனம் தாரும்.

தேசோபகாரி

வருஷம் 1-க்கு	....	ரூ.	8	0	0
ஆறு மாதம்	...	ரூ.	1	8	0
வெளியூருக்கு வருட சந்தா		ரூ.	4	8	0

பர்மா அரிசிக்கு ஆபத்து.

பர்மாவேறு இந்தியா வேறல்ல, எல்லாம் ஒன்றுதான். முதலாவதாக நம்நாட்டு நாட்டைத்தொழில் அழிந்தது. அடுத்து நெசவுத் தொழில் அழிந்தது, பின்பு உப்புத் தொழிலும் அழிந்தது. இன்னும் எண்ணிறந்த குடிசைத் தொழில்களெல்லாம் இருந்தவிடந் தெரியாமல் மறைந்தொழிந்தன. இவ்வளவும் போதாதென்று நம் நாட்டு அரிசி வியாபாரத்திற்கும் ஆபத்து வந்துவிட்டது. விஷயத்தைச்சொல்லிவிடுகிறேன் கேளுங்கள்' 1925 — ம் ௵ வரையில் வருஷா வருஷம் ஏராளமான அரிசி பர்மாவிலிருந்து ஜப்பான் தேசத்திற்குப்போய்க்கொண்டிருந்தது. மேற்கூறியவருஷத்திற்குப் பிறகு நிலைமை மாறி விட்டது. பர்மா அரிசியில் வளர்ந்து வந்த ஜப்பான், இப்பொழுது தன்தேச அரிசியை வெளித் தேசங்களுக்கு அனுப்பி வருகிறது 1928 — ம் ஆண்டில் ஜப்பானில் இறக்குமதியான சுமார் நாற்பதாயிரம் எடை கொண்ட பர்மா அரிசியை ஜப்பான் சர்க்கார் அப்படியேதிருப்பி பம்பாய்க்கு அனுப்பிவிட்டனர், இந்த ஜப்பானுக்கு போய்த் திரும்பிவந்த பர்மா அரிசி பம்பாயிலிருந்ததைவிட விலை குறைத்து விற்கப்பட்டது அந்தவருஷத்திலிருந்து பர்மா அரிசி ஜப்பானுக்குப்போவதில்லை. இப்பொழுது ஜப்பானில் நெல் விளைவும் அதிகமாகிவிட்டது. ஜப்பானியரின் உபயோகத்திற்குப்போக ஏராளமான அரிசி மிஞ்சிக்கிடக்கிறது. ஜப்பானியசர்க்கார் வசம் மீதப்பட்டுக்கிடக்கும் அரிசி 6 லக்ஷம் டன்கள். சென்ற வருஷம் சுமார் 3 ஆயிரம் டன் ஜப்பான் அரிசி பம்பாய்க்கு வந்திருக்கிறது. இன்னும் ஏராளமான ஜப்பான் அரிசி கப்பலில் வந்துகொண்டேயிருக்கிறது. இப்பொழுது அவர்களும் இந்தியாவை நம்பி அதனையே வியாபார ஸ்தலமாக ஆக்கிக்கொள்ள நினைக்கிறார்கள்போலும், இந்த அரிசியை அவர்கள் இந்நாட்டில் கொண்டுவந்து, குறைந்த விலைக்கு விற்றால் நம்நாட்டு அரிசி வியாபாரிகளின் வாயிலும் மண் விழுவது நிச்சயம், இன்னும் எத்தனை நாளைக்கு அன்னிய தேசத்தினரின் சந்தைக்கடையாக விருப்பது? சீமையிலிருந்து துணியும், ஜாவாவிலிருந்து சர்க்கரையும், ஜப்பானிலிருந்து அரிசியுமஇங்குவந்துகுவிந்தால் நம்தொழில்களும், வியாபாரமும் என்னாகும்!

நூதன மறியல் முறை.

பம்பாயில் மறியல் வெகு மும்முரமாக நடக்கிறது. மறியல் செய்யப்படாத ஒரு விதேசிக் கடைகளும் கிடையாது. மறியல் தொண்டர்கள் ஒரு நூதன முறையைக் கையாண்டு வருகின்றனர். அதிகாலையிலிருந்து இரவு கடை மூடும்வரை தொண்டர்கள் ஒவ்வொரு விதேசிக்கடை முன்னாலும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். கடைக்காரர்களும் இவர்களுக்கு நாற்காலி குரிச்சி முதலியன கொடுத்து உபசரிக்கிறார்கள். தொண்டர்கள் வெகு சாத்வீகமாக நடந்து கொள்ளுகிறார்கள். விதேசி சாமான் வாங்குபவர்கள் வருவதைக்கண்டால் தொண்டர்கள் கையைத்தலைமேல் கூப்பிக்கொண்டு மலர்ந்த முகத்துடன் பார்க்கும் தோற்றமே விதேசி சாமான்களை வாங்கவரும் ஜனங்கள் மனத்தை கரையும்படி செய்துவிடுகிறது. அவர்கள் சொல்லாமலே போய்விடுகிறார்கள். மோட்டாரிலும், கோச்சுகளிலும், ரிக்ஷாக்களிலும் தடபுடலாய் வந்து ஒயிட்வே லயிட்லா முதலிய கம்பெனிகளில் சாமான் வாங்கவந்து சேருபவர்கள் தொண்டர்களின் வெண்மைக் காந்திக்குல்லாயைக்கண்டு, வண்டியினின்று இறங்காமலே போய்விடுகிறார்கள். மறியலை வேடிக்கை பார்க்க சதா 200, 300 பேர் ரஸ்தாவில் ஒவ்வொரு கடை முன்னாலும் கூடியேயிருக்கிறார்கள். போலீஸ் புலிகளும் இவற்றைக் கவனித்துக்கொண்டேதான் இருக்கிறார்கள். தொண்டர்களைக் கைதுசெய்ய முடிகிறதில்லை. ஏனெனில் கடைகள் முன்னால் எவருக்கும் நிற்க பாத்தியமுண்டல்லவா? சச்சரவு ஏற்பட்டால்தானே கைது செய்யலாம். அதிவா ஒரு மறியல் தொண்டர் கைது செய்யப்பட்டாலும் உடனே மற்றொரு தொண்டர் மாயமாய் அங்கு தோன்றிவிடுகிறார் மஞ்சள கதர் சேலை தரித்த ஸ்திரீ தொண்டர்களே வெகு தீவிரமாக மறியல் நடத்துகிறார்கள் போலீஸ் கமிஷனர் வில்ஸனும் இந்த சாத்வீக மறியல் முறையைத்தடுக்க வகைதெரியாமல் தவிக்கிறார். "இந்த காங்கிரஸார்கள் ஈயைப்போன்று வெகு தந்திரமுள்ளவர்களாயும் தொந்தரை கொடுத்துக்கொண்டுமிருக்கிறார்களே-இவர்களை வலைக்குள் சிக்கவைப்பது மிகக் கடுமையாயிருக்கிறதே" என்று அவர்வருத்தப்பட்டுக்கொண்டாராம். சென்றவாரத்தில்பம்பாயில்50மறியல்தொண்டர்களே கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

முஸ்லீம்களே

கிலாபத் இயக்கம் நடந்த காலத்தில் முஸ்லீம்களாகிய நீங்கள் முழுமனதுடன் குதித்தீர்கள். கிலாபத் என்பது முஸல்மானுக்கு மத சம்பந்தமான போராகும். அதில் தியாகம் செய்தால் நமது தேசத்திற்கோ, அல்லது இதர மதத்தினருக்கோ நாம் உதவிசெய்தவர்களாவோம். ஆனால் அந்தச்சமயத்தில் கிலாபத் இயக்கத்தில் நம்மோடு ஒத்துழைத்த இதர மதத்தினருக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். நிற்க இந்த நெருக்கடியான சமயத்தில் சிலர் இராஜ்யத்தினின்று ஒதுங்கிநின்று கொண்டிருப்பதும் இதர மதத்தினர்பாடுபட்டு இந்தேசத்திற்கு ஏதாவது நன்மை விளைந்தால் அதில் பங்குகேட்டும் சண்டை போடுவதும் நியாயமல்ல. இந்த நிலைமையில் நமது மௌலானா சவுக்கத்தலியின் போக்கும் புதுப்போக்காகவே தோன்றுகிறது. சுருங்கக்கூறுமிடத்து இப்பொழுதேற்பட்டிருக்கும் துன்பங்களுக்கெல்லாம் காங்கிரஸே காரணமென்று யாவரும் வந்து கூறுகிறார். மௌலானா முகம்மதலி இருந்திருந்தால் இன்று இவ்விதம் கூறத்துணிந்திருக்கமாட்டார். காந்திஜிக்கு வலதுகைபோன்று இருந்துவந்த ஷவுக்கத்தலி புதிய ஏற்பாட்டுடனும், தீர்மானங்களுடனும், போவதானது நமக்குப் புதுமையாகவே தோன்றுகிறது,

சுதந்தரம் | பிரதி மனிதனுக்கும் உரித்தானதென இஸ்லாம்போதிக்கின்றது. சிலமுஸல்மான்கள் விலகி நிற்கின்றனர். இந்தியமுஸ்லீம்களுக்கு தேசபக்தியில்லையா? சுயமரியாதையில்லையா? கடந்த போராட்டத்தில் தேச முழுவதிலும் பன்னீராயிரம் (12000) முஸல்மான்கள் சிறைக்குச் சென்றனர். அன்று பஞ்சாபிலும், வங்காளத்திலும் முஸல்மான்கள் முன்னணியில் நின்று செய்திருக்கும் தியாகத்தை என்னவென்று புகழ்வது.

கடந்த போரிலும், இந்தப் போரிலும் எல்லைப்புற மாகாணம் செய்திருக்கும் தியாகம் இந்திய சரித்திரத்திலே ஒரு முக்கியமானதாகும். இன்னும் மதிற் பூனைகளாக இருக்கும் முஸல்மான்களுக்குச் சொல்லுகிறேன். சர்க்காரால் தரப்படும்பிச்சை உத்தியோகங்களுக்கு ஆசைப்படாதீர்கள். இந்து சகோதரர்களின் அவநம்பிக்கைக்குப்பாத்திரமாகாதீர்கள். சென்ற வருடத்தைக் காட்டிலும் வேலை செய்ய வேண்டி வெளியேறி விடுங்கள்.

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது.

தலைவர்களெல்லாம் சிறைசெய்யப்பட்டு சத்தியாக்கிரஹப்போர் ஆரம்பிக்கப்பட்டதும் அந்நியச் சாமான்கள் பகிஷ்காரம் வெகு தீவிரமாக துவக்கப்பட்டது. பகிஷ்கார இயக்கத்தை வெற்றிபெறச் செய்யும்படி லக்ஷக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பெற்றன. விதேசி சாமான் கடைகளில் தப்படியும் வியாபாரமில்லாமல் வியாபாரம் ஸ்தம்பித்துப்போயிற்று. பிறகுதான் கவர்ன்மெண்டார் விழித்துக்கொண்டனர். தங்கள் 144 பூதத்தை ஏவினார்கள் பகிஷ்காரத் துண்டுப்பிரசுரங்களை வெளியாக்கும் அச்சியந்திரங்களும், சைக்ளோஸ்டைல், டைப்ரைட்டிங் மிஷின்களும் பூதத்திற்கு இரையாயின.

பார்த்தார்கள் காங்கிரஸ் பூசாரிகள்! அடித்தார்கள் உடுக்கை! எடுத்தார்கள் ஒரு யுக்தி! சுவற்றுக்குச்சுவர், வீதியின் நடுவேயும், மரங்களிலும்கூட சுண்ணாம்பு, செம்மண், கொண்டு பகிஷ்கார விளம்பரங்களை எங்கும் தீட்ட ஆரம்பித்துவிட்டார்கள் இவற்றிற்குப் "போய் பத்திரிகைகள்" என்று பெயர். இவை பலவிதமாயின. ஆகவே சாதாரணமாக காங்கிரஸ் பொதுக் கூட்டங்கள்கூட வேண்டுமானாலும், ஹர்த்தால் நடத்த வேண்டுமானாலும், இம்முறையையே கையாளுகின்றனர். இதனால் காங்கிரஸாருக்கு பணச்செலவும் சரீரப்பிரயாசையும் குறைவது மாத்திரமன்றி, ஆள் மாகாணங்களும் தேவையில்லை. மேலும் காங்கிரஸ் சம்பந்தமான யாதொரு விஷயத்தையும் பொது ஜனங்களுக்கு அறிவிக்க வேண்டுமானாலும், போலீஸாருக்குத் தெரியாமல் ஒரு பொதுக்கூட்டம் கூட்ட வேண்டுமானாலும் தொண்டர்கள் பல பக்கங்களுக்கும் சென்று ஏக காலத்தில் சுவற்றில் பெரிதாக எழுதிவிடுகிறார்கள். ஐந்து நிமிஷத்திற்குள் குறித்த இடத்தில் லக்ஷக்கணக்கான பொது ஜனங்கள் கூடிவிடுகின்றனர்.

இதில் முக்கியமாகக் கவனிக்கத்தக்கது யாதெனில்! எந்த அவசரச் சட்டத்தை பகிஷ்காரத்திற்கு எதிராக சர்க்கார் ஏவினார்களோ அந்தச்சட்டமே பகிஷ்காரத்திற்கு வலுவை உண்டாக்கிவிட்டது. காங்கிரஸார் இனி காகிதம், மை, அன்னிய நாட்டுயந்திரங்கள் வாங்கவேண்டியதில்லை. அவர்கள் கொள்கை முற்றிலும் பூர்த்தியாகின்றது. ஸ்வாமி நதிர வில்லிங்டன சிருஷ்டி கிணறுவெட்ட பூதம்புறப்பட்ட கதையாய் முடிந்தது,

தோட்டக்காரன் மகள் : :

குரன்ஜீ.

ஜோதிபாய்க்கு இப்பொழுது வயது பத்தே என்று முன்னமேயே சொல்லியிருக்கின்றோம். அவர்களதுபெற்றோர்கள் புராதனமாக வசித்துவரும் குக்கிராமத்தைத் தவிர வேறு ஊர் ஜோதிபாய்க்குத் தெரியாது. ரயிலையும் விநோதப் பட்டணங்களையும் மின்சார சாதனங்களையும் அவள் அறியாள். எனினும் தங்கள் கிராமப் பெண் பாடசாலையில் ஐந்து வருஷகாலம் படித்திருக்கிறாள். சுத்தமாக எழுதவும் நன்றாகப் படிக்கவும் தெரியும். வீட்டுக்குரிய கணக்குகளும் நன்கு போடுவாள். இந்த வருஷத்துடன் அவள்படிப்பு முடிவடைந்துவிட்டது.

ஜோதிபாயினுடைய உத்தம குணாதிசயங்களும், லக்ஷணமும் அந்த ஊருக்கு மாத்திரமேயன்றி பக்கத்துக் கிராமங்களுக்கெல்லாம் தெரியும்—ஜோதிபாயை மருமகளாகக் கொள்ள வேண்டுமென்று ஏங்காத பிள்ளைகளைப் பெற்றோரில்லை. பலர் ஜோதிபாயின் தந்தையிடத்தில் ஜோதிபாயின் விவாகத்தைக் குறித்து அடிக்கடி வந்துபோய்க்கொண்டே இருக்கிறார்கள். ஜோதிபாயின் குடும்பத்தார்களோ ஏழை. பல பணக்காரர்களும் வந்து பெண் கேட்கிறார்கள்—பணத்துக் காசைப்பட்டு பெண்ணை இளவயதில் மணஞ்செய்து கொடுக்கப் பெற்றோர்கள் இசைந்தாலும் இசையலாம்—எல்லாம் காலத்தின் கோலம். சாரதா சட்டம் இந்த நிகழ்ச்சி காலத்தில் இல்லையே!

ஜோதிக்கு அடிமைத்தனம் இன்னதென்று தெரியாது. அவள் பேச்சுக்களெல்லாம் ஓர் அரச ஆக்ஞையைப் போன்றே இருக்கும். ஆனால் அவள் திருவாயிலிருந்து வெளிப்படும்ஒவ்வொரு அக்ஷரமும்தேவாமிர்தத்திற்கு ஒப்பானது. தைமாதம்நடப்பிலிருக்கிறது-ஊரெங்கும் மணக்கோலங்கள்கமழ்கின்றன. இன்று மாலை ஜோதிபாயின் தாயார் தோட்டத்தின் மாநிழலில் அப்பளமிட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாள். ஜோதிபாய் வந்து சேர்ந்தாள், பின் இருவருக்கும் பின் வருமாறு விநோதமான சம்பாஷணை நடக்கிறது.

ஜோதி.—அம்மா! எதற்காக அப்பளமிடுகின்றாய்? அப்பளந்தான் இரண்டு கட்டு பானையில் இருக்கே.

தாயார்:-உனக்கு அடுத்தவெள்ளிக்கிழமை கலியாணம். அதற்குத்தான் அப்பளம் இடறேன்.

ஜோதி.— கலியாணமா—கலியாணமுன்னு! என்ன!

தாயார்.—கலியாணம்னு தாலிகட்றது.

ஜோதி:-தாலிகட்றதா! தாலின்னா என்ன!

தாயார்:—தாலின்னா—மஞ்சக் கயித்தை கழுத்திலே கட்டுவா?

ஜோதி.—(பிரமிப்புடன்) கழுத்திலே கயத்தைக் கட்டறதா—நான் என்ன! கன்னுக்குட்டியா மாடா! என் கழுத்திலே கயத்தைக்கட்டினா அறுத்து எறிஞ்சுடுவேன்.

தாயார்—சீ! கழுதை அப்படிச் சொல்லாதே! என்னடி கலியாணம்னு அபசகுனம் போலே அசடாட்டமா பேசறியே! ஜீப்பட்டா நாங்களெல்லாம் தாலி கட்டிக்கிலியா நாங்களெல்லாம் மாடா?

ஜோதி:—யாரோ கட்டுவான்னியே! யார் தாலி கட்டுவா?

தாயார்.—பொன்னூர் கோவிந்தனைத்தான் உனக்கு நிச்சயம் பண்ணியிருக்கோம். அவன் நல்ல பணக்கார வீட்டுப் புள்ளே! அவன்தான் கட்டுவன்.

ஜோதி:—(கோபமடைந்து) உ.......ம். கோவிந்தனு! அவன் யாரு வெளக்கமாறு. என்னைத் தொட்டு என் கயத்தாலே கட்டுவன்? என்கிட்டே வந்தா வெளக்கமாத்தாலே அடிச்சுடுவேன். என்னைத் தொட்டும் கையை ஒடிச்சுடறேன்.

தாயார்:—சீ! ஜோதி இப்படியெல்லாம் பேசாதே. நாங்கெளெல்லாம் தாலி கட்டிக்கிலியா? எங்களுக்கெல்லாம் தாலி கட்டினபோது இப்படித்தான் பேசினோமா?

ஜோதி.—அப்படின்னா-உனக்காரு தாலி கட்டினா?

தாயார்:-எனக்கு ஒங்கப்பா தாலிகட்டினா!

ஜோதி:—எனக்கும் அப்பாவே தாலி கட்டிவிடட்டுமே. அந்தப் பயல் ஏன் கட்டணும்.

தாயார்:—சீச் கழுதை. என்னடீ அம்மா! இப்படியெல்லாம் சொல்லுவாளா! சமத்துன்னு இருந்தேன். ரொம்ப அசடாய் போயிட்டியே.

Printed & Published By A V Sellam Pillay at the Desopakari Press, 210,36th Street Rangoon

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 61 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை **DESOPAKARI** புதன் ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி இரங்கோன், (17—2—32) மாசி மீ 5உ புதன்கிழமை.

ஏழைகள் அழுத கண்ணீர்?

"துக்க மயம் ஜகத்" என்று வேதாந்தம் முடிவு செய்யலாம். இன்பமும் துன்பமும், சுகமும் துக்கமும், ஏற்றமும் தாழ்வும் கலந்திருப்பதையே நாம் அனுபவத்தில் காண்கின்றோம். எண்ணிறந்த கோடி நூல்களும் இன்ப துன்பங்களையே பற்றிப் பேசுகின்றன—துன்பத்தைநீக்கி இன்பத்தைஅநுபவிப்பதிலேயே சகல ஜீவகோடிகளும் தத்தமது நாட்டத்தைச்செலுத்துகின்றன—அதற்காகப் போராடுகின்றன. எனவே பிரபஞ்சமே இன்ப துன்ப ஏதுவாக பெரியதொரு போராட்டத்திலேயே முனைந்து நிற்கிறது என்று முடிவு செய்வது தவறாகாது. ஆராயுங்கால் தற்காலத்தில் வலிய கட்சிகளே ஜயபேரிகை முழக்குகின்றன. சிறிதைப் பெரிதும்—கீழ் ஜாதியை மேல் ஜாதியும், அடிமையை ஆண்டையும் குடிகளைக் கொற்றவனும், சிற்றரசனைப் பேரரசனும், ஒரு நாட்டானைப் பிறநாட்டானும், நசுக்குவதும், அடிமைப்படுத்துவதும், துன்புறுத்துவதும், தீமை விளைவிப்பதுமாகவே முடிகின்றது. எளியாரை வலியார் வாட்டுவது சகஜமாகிவிட்டது. வலியார் எளியாருடைய துன்பங்களைக் கவனிக்கிறதில்லை. இதனால் ஏழைகள் படுந்துயரம் சகிக்கமுடியவில்லை. எளியாரை வலியார் வாட்டின் வலியாரைத் தெய்வம் வாட்டும் என்பதை எப்பொழுது அவர்கள் உணரப்போகிறார்களோ தெரியவில்லை. கடவுள் ஏழை பங்காளன் என்பதை வலியார் உணர்வார்களா? "ஏழை அழுத கண்ணீர் கூறிய வாளோடு ஒக்கும்! வலியாரது கொழுப்பை அடக்கி, அவர்களை ஏழேழு தலைமுறையும் தலையெடுக்க வொட்டாமல் பாதாளக் குழியில் ஆழ்த்திவிடும்" என்பதை அவர்கள் எப்பொழுதுதான் உணர்வார்களோ தெரியவில்லை! இத்தனைப் பீடிகையும் எதற்காக?

வங்காளத்தில் சுமார் 2000 குடும்பங்கள்—ஏழை மக்கள்-கண்ணீர் கடல் மடையாய்ச் சொரிந்தவண்ணமாக உழல்கின்றார்கள்? தாய்மார்கள் தங்கள் செல்வப்புத்திர வாஞ்சையினாலே சோகமுற்று அழிகின்றார்கள். அகாரணமாய் — விசாரணையின்றி காலவரையின்றி கல்வியிலும் ரூபத்திலும் புத்தியிலும் மேன்மை பெற்று—தங்கள்வயிற்றிலுதித்த புத்திரரத்தினங்களெல்லாம் பிரிட்டிஷாரின் சுயநலத்தின் பொருட்டாக சிறை வைக்கப்பெற்றால் புத்திர சோகத்தினால் தாய் மார்களின் பெற்றவயிறு பற்றியெரியாதா? அவர்கள் விடுங்கண்ணீர் வீணாய்ப்போகுமா?

உள்ளதைக் கேட்டால் கோப்பாளம்—அவசரச்சட்டக்குரை நாய்களையும் அடக்குமுறைச் செந்நாய்களையும் விட்டுப்பயமுறுத்துகிறார்களே? இதுதான் நாகரீக அரசாங்கத்திற்கு அழகு போலும்? இந்த தர்மகர்த்தாக்கள் இந்தியரை சுதந்தரத்திற்கு தயார் செய்வதாக மார்தட்டுவது எத்தனைக்கேவலம்! வெட்கம்!! வெட்கம்!!

நிற்க சில தினங்களுக்குமுன் சிறைப்பட்டிருக்கும் கைதிகளைப்பற்றி கவுன்ஸிலில் பிரச்சினை ஏற்பட்டதே என்னமுடிவாயிற்று? மெம்பர்கள் என்னகேட்டார்கள்: வெகுகாலமாக சிறைக் கஷ்டங்களை அனுபவித்து வரும் இளைஞர்களை வெளிப்படையாக விசாரணைக்கு

க்கொண்டுவந்து குற்றமிருப்பின் தண்டிக்குமாறும் குற்றமில்லையானால் அவர்களை விடுதலை செய்யுமாறுந்தானே கேட்டார்கள்! இது நியாயமல்லவா? அதற்கு பிரண்டில் என்னபதில் சொன்னான்? விசாரணையின்றி கைதுவைப்பதும் ஒரு அரசாங்க தந்திரமென்றும், இந்தியநாட்டில் ஏற்படக்கூடிய புரட்சி இயக்கத்தை அடக்குவதற்கு இது ஒரு சாதனமென்றும் கூறினான். இந்த பிரண்டிஸின்மூளையின் வலிமைதான் என்னே! இவரை பயித்தியக்காரர் ஆஸ்பத்திரிக்கு அனுப்புவித்தால் பயித்தியக்கார ஆஸ்பத்திரியே மூடிவிடப்படும் போலும்.

நிற்க சுமார் 800 பேர்களை விசாரணையின்றி சிறையில் தேக்கி வைத்திருப்பதினால் புரட்சி இயக்கம் நின்றுவிட்டதா என்று கேட்கின்றோம். மற்றும் இறு இறுத்த உள்நாட்டு மந்திரி ஸிரிரார் தேக்கக்கைதிகள் வங்காளத்தில் இருப்பதினால்புரட்சிஇயக்கம் தொத்துவியாதிபோல் வங்காள மக்களிடையே பரவுகின்றதென்றும் ஆஜ்மீர் மீர்வார சிறைக்கு மாற்றப்படவேண்டுமென்றும் கரடியாய்க்கத்துகிறார். இதுவும் வாஸ்தவந்தான். இந்தத் தொத்துவியாதி அப்பொழுதும் ஏற்படாதோ? எந்தமூளையுள்ளவனும் இதை ஒப்புக்கொள்ளவே செய்வான்? புரட்சி இயக்கம் மேலும் மேலும் வலுவடைய பிரிட்டிஷாரே ஆஸ்பதமாயிருக்கிறார்கள். ஜனங்களின் மனப்பான்மையை இவர்கள் எப்பொழுதான் உணரப்போகிறார்கள். புரட்சி இயக்கம் இளைஞர்கள் மனதில் வேரூன்றி இருக்கிறதென்று அவர் மற்றொருஇடத்தில் ஒப்புக்கொள்ளுகிறார். புரட்சிஇயக்கத்தைஇந்தியர்கள் முழு மனதுடன் வெறுக்கவே செய்கின்றார்கள்.

இதை அறியாமல் இந்தியமக்கள் புரட்சி இயக்கத்துக்கு ஆதரவளிக்கிறார்கள் என்று சர்க்கார் எண்ணுவார்களானால் 150 வருஷ காலமாக அரசு செலுத்திய பின்னர் ஜனங்களின் சாப்திக மனப்பான்மையை அறிய முடியாமல் போன குற்றம் அவர்களையேதான் சாரும்.

முடிவாக மக்கள் வேண்டிக்கொள்வது யாதெனில் அன்பினால் புரட்சி இயக்கத்தை அடக்கிவிட முடியும் என்று அவர்கள் வற்புறுத்துவதுடன் அடக்குமுறையினால் புரட்சி இயக்கத்தைக்களைந்து விட முடியாதென்று வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள். பிரிட்டிஷ் சர்க்கார் இனியாவது குடிகள் பேச்சைக்கேட்டு நடப்பார்களா? அங்ஙனம் ஏதேனும் ஒருவழி செய்யாவிடில்— தேக்கக்கைதிகளை விசாரணைக்குக்கொண்டுவராதவரை பிரிட்டனே! ஏழை அழுத கண்ணீர் கூறிய வாளொடொக்கும் என்பதை அறிந்து கொள்வாயாக! தெய்வ சாபத்திற்குப்பாத்திரமாகாமல் நடந்து கொள்ளுமாறு அறிவிக்கின்றோம்!

கதர் வேந்தர் எல்வின் பாதிரியார்

கதர்வேந்தர் எல்வின்பாதிரியார் சமீபத்தில் ஐக்கியமகாணப் பிரதேசங்களில் ஆற்றிய சொற்பொழிவின்னூடே புகட்டிய சிலஅமிர்த வசனங்களை இங்கே தருகின்றோம்.

நான் இந்தியாவுக்கு முதன் முதலாக வந்தபொழுது கதரை தமாஷுக்காகவே அணிந்து கொண்டேன். நான் நாட்டுப்புறங்களில் சுற்றிப்பார்த்த பிறகே இந்தியர்களின் ஏழ்மை நிலைமையும் கதரின் மகத்துவமும் எனக்குத் தெரியவந்தது.

இங்கிலாந்தில் வேலையில்லாதவர்களுக்கு மாதம் ரூ. 40 ஊழியமாக வழங்கப்படுகிறது இந்தியாவிலோ வேலை இல்லாதவர்கள் கதி அதோ கதிதான். அவர்கள் பட்டினி கிடந்து சாகவேண்டியதுதான்.

இந்திய மக்கள் இப்பசிக் கொடுமையை தவிர்த்துக் கொள்ள ஒரேஒருவழிதான் உண்டு அது ஏழை மக்கள் கை ராட்டையில் நூல் நூற்பதனாலும் கரி நெய்தனாலுமே கை கூடும் மேலும் இம்முக்கிய குடிசைத்தொழில் விருத்தி அடைய வேண்டுமானால் நகர வாசிகளும் பட்டணவாசிகளும் கதரையே ஆதரிக்க வேண்டும். கதரை ஆதரிப்பதென்றால் கதரை ஆண் பெண் இருபாலரும் சுப அசுப எல்லாக் காரியங்களுக்கும் உபயோகித்தலேயாகும்— மில்துணிகளை நான் முற்றும் வெறுக்கின்றேன் மேலும் இந்தியச்சாமான்களை சகல விதத்திற்கும் உபயோகிக்கவேண்டும்,

இந்தியர் இவ்வளவு தரித்திர நிலையில் கஷ்டப்படுவதற்கு ஆங்கிலேயர்களே காரணபூதர்களாகையால் நான் என்னை ஓர் ஆங்கில மகன் என்று கூறிக்கொள்ள நாணுகின்றேன். எங்கள்நாட்டவர் இழைத்த இழைக்கும்கொடுமைக்காக பாவச்செயல்களுக்காகஎன்முழு உழைப்பை உங்களுக்காக அர்ப்பணம் செய்கிறேன்.

இந்தியாவின் விரோதி பிரிட்டன் :

பண்டித ஜவஹர்லால்

இந்தியாவிலிருந்து இங்கிலாந்தின் ஆட்சி ஒழியுமானால்! இந்தியா விடுதலை அடையுமானால்! பிறநாடுகள் என் செய்யும்? இந்தியாவைக் கவர நினைக்குமா? அப்படி நினைக்குமானால் வெற்றி பெறுமா? இந்தியாவினால் இங்கிலாந்துக்குக் கிடைத்த உன்னதமான பதவியை சகல நாடுகளும் அறியுமாகையால் இனி எந்தநாடும் இந்தியா மற்றோர் நாட்டின் கையில் போவதை பார்த்துக்கொண்டிராது. ஏதாவது ஓர் நாடு இந்தியாவை அபகரிக்க நினைக்குமானால் மற்றநாடுகள் யாவும் ஒன்று சேர்ந்து அந்நாட்டை எதிர்க்கும். இம்மாதிரியாக பிற நாடுகள் ஒன்றின் மேலொன்றுகொண்டுள்ளபகைமையும், போட்டியும் இந்தியாவுக்குப்போதியபாதுகாப்பாகும்.

நம்மீது ஓர் நாடு படை எடுத்து வருவதாக வைத்துக்கொள்வோம். அவ்விதம் நம்மை வலிய வம்புக்கு இழுக்கக்கூடிய நாடு எதுவாக இருக்கக்கூடும். ஐரோப்பாவிலுள்ள நாடுகளை எடுத்துக்கொண்டால் அவைகளுள் சண்டைகளும், சச்சரவுகளும் நிறைந்திருப்பதால் இந்தியாவைப்பற்றி நினைப்பதற்குக்கூட அவைகளுக்கு நேரமில்லை. அமெரிக்காவுக்கும் நமக்குமோ வெகு தூரமிருக்கிறது.

ஜப்பானோ சைனாவில் ஏற்படும் சச்சரவுக்கும், அமெரிக்காவின் பகைமைக்கும் இடையே அகப்பட்டு மூச்சு விடுவதற்கில்லாமலிருக்கிறது. ஒரு சமயம் மிகுந்த சிரமத்திற்கிடையே தலைதூக்கினாலும் மேல் நாட்டார் அதன் தலையில் கல்லைப்போடத் தயாராகக் காத்துக்கொண்டிருக்கின்றனர். சைனா தன் நாட்டினை பிறர் பிடுங்கிக்கொள்ளாமலிருக்கவேண்டுமென்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறது. மேலும் நம்மைப்போல அது கஷ்டப்பட்டு விடுதலையடைந்துள்ள நாடானபடியால் நமது தேசத்தோடு நட்புடையதாயிருக்கும்.

ஆப்கானிஸ்தானம் தொன்றுதொட்டு இந்தியாவுடன் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொண்டு வந்திருக்கிறது. இனி எதிர்காலத்திலும் அத்தகைய சம்பந்தத்தை உண்டுபண்ண நாம் முயற்சி செய்யவேண்டும். அப்படி நம்மால் முடியாவிட்டாலும்கூட அதற்காக நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

நம்மைத் தாக்க அவர்களுக்குப் போதிய வலுவில்லை; நம்நாட்டைத் தாக்கக்கூடியகடைசியானநாடு ருஷியாவாகும். அதுஓர்பெரியநாடு. நம்மை எதிர்ப்பதற்குத் தகுதியானநாடு. பராக்கிரமசாலியாயும், நம்மிலும் பெரிய ஓர் நாடாக இருப்பினும் தன்னைக் காத்துக்கொள்ளக்கூடிய சக்தி வாய்ந்ததேயன்றி நம்முடன் போர் புரியக்கூடிய திறமை வாய்ந்ததன்று. சோவியத் அரசாங்கத்தார் வெளி நாட்டுச் சண்டைகளைப் பல முறையில் விலை கொடுத்து வாங்கி இருக்கின்றனர்; உள்நாட்டுக் கலகங்களை அரசாங்கத்தின் இருப்பாக வைத்திருக்கின்றனர். இதற்கெல்லாம் ஓர் விதாயம் பிறப்பது சாமான்யமல்ல. இந்நிலையிலிருந்துகொண்டு ருஷ்யா இந்தியாவைப்பற்றி சொற்பனத்திலாவது நினைக்குமா? ஒருக்காலுமில்லை. அப்படி நினைக்குமானால் அன்று முதல் அதற்கு அனர்த்தம்தான்.

வெகு காலமாக இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் விரோதமிருந்து வருகிறது. இங்கிலாந்தின் ஆளுகையின் கீழ் இந்தியா இருப்பதால் ருஷியா நம்மீது விரோதப் பான்மை கொண்டிருக்கலாம். அதன் காரணமாக ருஷியா நம்மீது படை எடுக்கலாமோ என அஞ்சலாம். நாம் எதற்காக அஞ்ச வேண்டும்? ருஷியாவிற்காகப் பயப்படத் தேவையில்லை. ருஷியாவும் இந்தியாவின்மீது சந்தேகப்படப்போவதுமில்லை. சுயேச்சை இந்தியா ருஷியாவின் நண்பனாகவேயிருக்கும். இந்தியா என்று சுதந்திரத்தை அடைகிறதோ அன்றுமுதல் அதற்கு விரோதிகள் என்பவர் எவருமிரார். இந்தியாவிற்கு விரோதிகள் இருப்பார்களானால் அதற்குக் காரணம் பிரிட்டிஷ் ஆட்சி என்றே சொல்ல வேண்டும். பிரிட்டன் இந்தியாவை விட்டு விடுமானால் அதுவே இந்தியா விரோதிகளிடமிருந்து தப்புவதற்குச் சிறந்த பாதுகாப்பாகும்.

இந்தியா பிறநாட்டின் ராணுவ உதவியின்றி தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ள முடியுமென்பது வெளிப்படை. ஒரு சமயம் நமக்கு ஆபத்து நேரிட்டாலும், அதற்காக நாம் வெளிநாட்டு ராணுவத்தில் உதவியைத் தேடுவதோ அல்லது நம்பி இருப்பதோ மானங்கெட்டதனமாகும். நமக்கேற்படும் எத்தகைய இன்னல்களையும் எதிர்த்துப் போராடவும், சமாளிக்கவும் நாம் தயாராக இருக்கவேண்டும்.

பாதிரி பேட்டன் பட்டபாடு.

வில்லிங்டன் பெண் மகனார் வைஸ்ராய் புருஷனை மணந்து கொண்டதுதான் தாமதம். ரிஷி கர்ப்பம் இராத்தங்குமா? அடுக்கடுக்காய் தள்ளிவிட்டாள் அவசரச் சட்டங்களென்ற அடங்காப் பிடாரிகளை! பிள்ளைகளாயிருந்தாலல்லவா சும்மாயிருக்கும்! அத்தனையும் பிடாரிகளல்லவா? அவைகள் தலைவிரி கோலமாய் இந்திய நாடெங்கும் வெறிகொண்டு அலைகின்றன. பிடாரிகள் மக்களைப் பிடித்துக்கொண்டு படுத்தும்பாடோ எழுத ஏட்டிலுமடங்கா?

மூலைமுடுக்குகளில் ஒடுங்கிக்கிடந்த சட்டசபை மெம்பர்களும் அவற்றின்அநீதச்செயல்களைக் கண்டித்துப்பெற்றோர்களாகியவில்லிங்டன் கோஷ்டியினருக்கு அவற்றை அடக்குமாறு சொன்னார்கள். இடித்திடித்துஉரைத்தும்செவிடன்காதிலூதியசங்குகதையேயாயிற்றுபெற்ற பிள்ளைகள் பிடாரிகளானாலும் பிறர் குறைகூறத் தாய் விட்டார் சகிப்பார்களா? வந்தானைய்யா தாய் மாமன் கிரீரார்! ' அவசரச் சட்டங்களாவது! முறை தவறி நடப்பதாவது! போங்கள்! போங்கள்!! என்றுவெகுசவடாலெல்லாம் பேசினானும். சூர்ப்பனகை லேடி வில்லிங்டன் சொகுசு நாடகங்களும் ஆடினாளாம். இந்த சவடாலெல்லாம்அடித்த உள்நாட்டுமந்திரி கிரீரார் பின்வரும் பேட்டன் செய்திக்கு என்ன சொல்லுவாரோ தெரியவில்லை.

டாக்டர் பேட்டன் ஒரு ஐரோப்பியப்பாதிரி! பிரபல டாக்டர்! திருப்பத்தூரில் தர்ம வைத்தியசாலை வைத்து ஏழை மக்களுக்கு உதவி புரிவதிலேயே தமது வாழ்நாட்களை கழித்து வருகிறார். தமிழ் நாடுகளில் மிகுந்த செல்வாக்குடையவர். மேலும் கதரபிமானி. கதரணிவதில் மிகுந்த ஆர்வங்கொண்டவர்.

இந்த டாக்டர் சத்தியாக்கிரஹத் தொண்டர்களின் தேசப் பணியையும் சர்க்காரின் அடக்குமுறைகளையும் நேரில் காணவேண்டி மதராஸை அடைந்து ஓர் வீதி வழியே தனியே போய்க்கொண்டிருந்தார். இருந்தது இருந்தாற்போல் போலீஸ் சார்ஜெண்டுகளும், தடி தாங்கிய போலீஸ் புலிகளும் ஓடிவருவதைக்கண்டு பிரமித்துப்போனார். சத்தியாக்கிரஹிகள் ஒருவரும் அங்கில்லை ஓடிவந்தவர்கள் பாதிரியைச் சூழ்ந்துகொண்டு அவரை இன்னாரெனத் தெரிந்துகொண்டும் கதரணிந்திருந்ததற்காகத் தடிகொண்டுபலமாகக்கைகளிலும், புஜங்களின் மேலும், தொடைகளிலும் தாக்கினார்கள். தலைமேல் ஒருவன் ஓங்கி தடியால் அடித்தான். நல்லவேளை! தலைக்கு வந்தது தலைப்பாகையால் தப்பியது. இத்துடனும் அவர்கள் விடவில்லை. சாயத்தண்ணீரை அவர் மேல் வேகமாய்ப் பாய்ச்சினார்கள். பேட்டன் தொப்பலாய் நனைந்து விலவிலத்துப்போய் நடுங்கி ஓர் கைவண்டியின் பக்கத்தில் ஒளித்துக்கொண்டார். அப்பாபிகளுக்கு மனமிரங்கவில்லை. கைவண்டியை அப்புறப்படுத்தி மேலும் வேகமாக தண்ணீர்அடித்தார்கள் பிறகு கைதுசெய்து அவர்மேல் குற்றம்சாட்டி அவசரச்சட்டப்படி வழக்குத்தொடுத்தார்கள். வழக்கு விசாரணைக்கு வந்ததும் கிரௌன் பிராசிக்யூட்டர் பேட்டன் வழக்கை நடத்த மறுத்து கேஸை வாபீஸ் வாங்கிக் கொண்டார். பேட்டன் தான் பட்ட பாட்டை மனதாரச்சொல்லிக் கொள்ளவும் முடியவில்லை. அவர் செய்து கொண்ட யாதாஸ்தில் மேல் கூறிய வரலாற்றைத் தெரிவித்திருக்கிறார்

இந்தப் பேட்டன் வரலாற்றைக்கவனித்தால் கள்குடியருக்குவாயென்றும்வேறென்றுந் தெரியாது என்று சொன்ன புகழேந்தியார் வாய்க்குச் சர்க்கரை தான் போட வேண்டும்.

ஒரு கண்ணிய ஐரோப்பியப் பாதிரியின் கதியே இவ்வாறானால் பின்சாதாரணபாமரமக்களுக்கு அவசரச்சட்டங்களால்எவ்வளவுஇன்னல்கள் ஏற்படுமென்பதை பொது ஜனங்களின் கவனத்திற்கே விட்டுவிடுகின்றோம். அப்படியானால் அவசரச்சட்டத்தை ஒழிக்க நீங்களும் தயார்தானா?

அஹிம்சையைக் கடைப்பிடித் தொழுகுபவனுக்கு அன்பே துணைக்கருவியாகும். நமக்குத் தீங்கிழைப்பவரை நாம் வெறுத்துத்தள்ளலாகாது அவர்களிடம் அன்பு செலுத்துவதாலேயே அவர்களது தீயகுணங்களைப் போக்க வேண்டும்.

தீமையெனத் தோன்றுபவைகளுடன் ஒத்துழைக்க மறுப்பதே ஒத்துழையாமையாம்.

கோபமும் ஆத்திரமும் தோன்றும்பொழுது அவற்றை யடக்கி மனதை அன்புமயமாக்கல் வேண்டும். கோபத்திற்கிடங்கொடுப்பவன் சில நிமிஷங்கள் தன்னையே தான் மறந்து மிருகமாகிறான். (மகாத்மா)

காந்திஜீயும் பூனையும்.

மண்டலம் புகழ் மகாத்மாஜீயின் வாழ்க்கைச் சரிதமே அன்பு மயமாகும்! அன்பே அடிகளின் உருவம்! அவரது நுனிவிரலசைப்பில்--ஒரு மௌனசாதிப்பில்—பொக்கைவாய்ப் புன்னகையில்—திருக் கடைக்கண் பார்வையில்—அமிழ்தூறும் இனிய ஒரு சொல்லில் கட்டுப்பட்டு 35கோடி மக்கள்—அடடா! உலகமே அவரைப் பின்பற்றுகின்றது—ஆதரவுபெறுகின்றது—சாந்தி அடைகின்றது—வாழ்கின்றது.

கவி ரவீந்திரநாத் தாகூர் அடிகளைப்பற்றி புகழுங்காலத்து "அடிகள்! தமதுகழுத்தை இறுகப்பிடித்துநெறிப்பவரிடத்தும், மலர்ந்தமுகத்துடன் புன்னகை கொள்ளும் குழந்தை மனம் உடையவர். அடித்த கையையும் ஆராதிக்கும் மேன்மைக் குணம் வாய்ந்தவர். இது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை. நான் அவரை நன்கு அறிந்தே சொல்லுகின்றேன்" என்று கூறுகிறார். யாரே அடிகளின்பால் அன்புகாட்டாதார்,

சமீபத்தில நம் பெரியார் வட்டமேஜைப் பிரதிநிதியாக லண்டனில் வெள்ளையர் குழாத்தின் நடுவில் தங்கியிருந்த காலத்து அத்தேச மக்கள் இவர்பால் செலுத்திய அளவு கடந்த அன்பின்மாட்டெழுந்த செயல்களை நாம் பத்திரிகைகள் வாயிலாக அறிந்து பூரித்திருக்கிறோம்! இனி அவர் அங்கிருந்த காலையில் கேவலம் வாயில்லாப் பிராணிகளுங்கூட இந்த மானிட தெய்வத்தின் சக்தியை உணர்ந்து பக்தி செலுத்தியது என்று கேட்டு நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்,

ஓர் அழகிய விநோதப்பூனை லாயிட்ஜார்ஜ் அவர்கள் வீட்டிற்குள் பலதடவை சுற்றிச்சுற்றித் திரிந்ததாம். அவ்விட்டார் இந்தப்பூனையை ஒவ்வொரு தடவையும் விரட்டியடித்தார்களாம். இடையில் ஓர் நாள் காந்திஜீ லாயிட்ஜியார்ஜ் இல்லத்திற்குச்சென்று, அவருடன் அளவளாவிக்கொண்டிருந்தார். அப்பொழுது திடீரென அந்த விநோதப்பூனை ஜன்னல் வழியாக உள்ளே புகுந்து, நேரே அடிகளின் மடிமீது தாவி தாயைக்கண்ட சேய்போல் பரிவுடன் படுத்துக்கொண்டதாம். அடிகள் பேச்சு முடிந்து எழுந்தவுடன் பூனையும் அவ்விடத்தை விட்டகன்றதாம். இந்த சம்பவத்திற்குப் பிறகு அந்த விநோதப் பூனையை அவ்விட்டார் காணவேயில்லையாம்.

வந்துவிட்டாயடா மயானவீரா?

கேமந்தான் மயானக் கணக்கு சந்திசிரிக்கிறது. சம்பந்தப்பட்டவர் வாயை இறுகமூடிக்கொண்டார். கூத்தில் கோமாளிபோல், மயான வீரன் வக்காலத்து வாங்கிப் புறப்பட்டுவிட்டான். செட்டியார் கொஞ்சம் தயங்கினால் நாயக்கர் கொஞ்சம் வெளியில் வரவேண்டுமல்லவா? பதினைந்து வருஷம் கணக்குக் கொடுக்கவில்லை என்றால் இதோ எல்லாம் வெளியில் வந்துவிட்டதே என்று நாயக்கர் ஒரே பாய்ச்சலில் ஆத்திரத்துடன் பிடுங்க வருகிறார். வாலை ஆட்டியும், பல்லைக் காட்டியும் பார்க்கிறார். சுடுகாட்டில் என்ன கிடைக்கும்? வெள்ளெலும்புதான். அதைக்கடித்துப்பார்த்துநமது நாயக்கர் பல்லுடைந்தும் இரத்தம் கக்குகிறார். இது போகட்டும்! முந்திவந்த பு ம. இஞ்சி தின்றதுபோல விழித்ததே! இப்பொழுது இவருக்கு வந்தகேடென்ன? ஒத்துஉழைப்பாரம்! உண்மையில் நீ அப்படிச் செய்வதாயிருந்தால் பதினைந்து வருஷத்துக் கணக்குடன் வெளியில் வா? இந்த மாயாஜாலம் இனியும் பலிக்காதப்பா! உண்மைக்கு மாறானவைகளா? சுடுகாட்டு டிரஸ்டியே! நீதான் இந்த மடையனுக்குச் சொல்லேன். நமது ஏகாம்பரப் பெரியாரும் இவனுக்கு புத்திகற்பிக்கப்படாதா? ஆடிட்டர் கணக்கைப் பார்த்ததாக உளறுகிறரே. பொது ஜனங்களுக்கு இவர் அறிவிக்கட்டுமே. எடுத்ததற்கெல்லாம் விஷமப் பத்திரிகைகள் என்று ஏமாற்றுவதுமுடியாது. அப்படியா! சுடுகாட்டுப் பணத்தில் இவனுக்கும் விழுக்காடா? பொது ஜனங்களே! இந்த டிமிக்கிப் பேர்வழியைஉண்மையைச்சொல்லச் சொல்லி நீங்களாவது கேளுங்களேன். ஏ! கொ. நா. சு! போதும்! உன் ஊத்தைவாயை மூடு!

என்னே! மகாத்மாவின் தெய்விக சக்தி! பகுத்தறிவில்லா ஜந்துக்களும் எந்த தெய்விக சக்தியை உணர்ந்து பக்தி செலுத்துகின்றனவோ! வணங்குகின்றனவோ! போற்றுகின்றனவோ! பேச நாவில்லாவிடினும் செய்கை மூலம் தமது அன்பைத் தெரிவித்துக்கொள்ளுகின்றனவோ அந்த சக்தியின் பாத்திரத்தை—காருண்யமூர்த்தியை—மகாத்மாவைசிறைக்கோட்டம் புகுத்தியிருக்கும் சூழ்ச்சிக் கூட்டத்தினரை மக்களென்று நாம்கருதுவதா? மாக்களென்று தள்ளுவதா?

பிரிட்டனே அறிவோடு ஆலோசி.

சட்ட மறுப்புப் போர்—சத்தியாக்கிரஹப்போர்—அஹிம்ஸைப்போர் தொடக்கப்பட்டு ஒன்றரைமாத காலங்களே ஆகின்றன. அடுக்கடுக்காக—அவசர அவசரமாக — நவநவமான—அவசரச் சட்டங்கள் தோன்றி தலைவிரி கோலமாய் இந்திய நாடெங்கும் தாண்டவ மாடுகின்றன. சத்தியாக்கிரஹிகளும்—இந்தியப்பொது ஜனங்களும்வாய்திறவாமல்—மகாத்மாவின் உபதேச மொழிகளையே சிரமேற்கொண்டு—பொறுமையுடன் அதன் கொடுமைகளை சகித்தே வருகின்றனர். பிறநாட்டினரும் இந்த ஆர்ப்பாட்டங்களை கவனித்தும் வருகின்றார்கள்— இந்தப் பாரளும் மன்றத்தார் ஆணவ ஆட்சியின் சீர்கேடான அடக்கு முறைகளைப்பற்றி எத்தனை புத்தகங்கள் உலக சரித்திரத்தில்—என்றும் அழியாத நிலையங்களாய்—வசைப் புராணங்களாய்—புகுத்தப்படுமோ போருக்குப் பின்னரன்றோ தெரியவரும்!

“நாளைத் தெரியுமடா மாலியவான் பேச்சு” என்பன போன்ற மாளவியாஜீயின் உண்மை உபதேச மொழிகளை யெல்லாம் இப்பொழுது நிராகரிக்கும் லங்கேஸ்வர வில்லிங்டன் “யாரத்தாள் செத்தாள்” என்று விடிந்தவுடன் தெரிந்து கொள்வார். சட்டமும் அமைதியும் என்ற நெற்கோட்டைக்குள் தங்களது வஞ்சக வலையை எத்தனை காலந்தான் இவர்கள் மறைத்து வைக்க முடியும். எல்லாம் சொல்பகாலத்திற்குள் பட்டப்பகல்போல் வெட்டவெளிச்சமாகிவிடும்.

எல்லைப்புறத்தில் சென்ற ஐந்து வாரங்களுக்குள் சுமார் 12000 பேர்கள் வரை சிறைக்கோட்டம் சென்றிருக்கின்றனரென்றும்—அங்கு ஜனங்கள் நிர்வாணமாக்கி அடிக்கப்படுகிறார்களென்றும்—மக்கள் உரத்துப் பேசவும் அஞ்சுகிறார்களென்றும் சட்டசபை விவாதத்தில் வெட்டவெளிச்சமாயிற்று. இவற்றுடன் இதுவரை எல்லைப்புற சிப் கமிஷனர் நினைத்தவாறு வெளிப்படுத்திய விசேஷ அறிக்கைகளின் கூற்றை ஒப்பிட்டுப் பார்த்தால் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் காணப்படுகின்றது. எல்லைப்புறத்தை ஸிவிலியன்ஸ் வர்க்கத்தினர் தங்கள் கபட நாடகத்திற்கு மேடையாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அதில் எல்லைப்புற சிப் கமிஷனர் சிறந்த விதூஷகனாக நடித்திருப்பதுதான் விநோதம். அவருக்கு தக்க தங்கப் பதக்கம் பரிசாக அளிக்கவேண்டியதுதான். பொருளாதார நெருக்கடி இதற்குத் தடையாக நிற்பதற்கு நாம் மெத்த வருந்துகின்றோம்.

இந்த சிப் கமிஷனரது விதூஷக அறிக்கைகளில் “எங்கும்! எப்பொழுதும்!! எல்லாம்!! அமைதியே!!! என்ற பதங்களைத் தவிர வேறு காண்பதற்கில்லை. அணியணியாகச் சென்று திரும்பும் பட்டாளங்களுக்கு எல்லைப்புற பட்டாணியர் பந்தாட்டப் பந்தயங்களும், டீப் பார்ட்டிகளும், விசேஷ விருந்துகளும், ஏற்பாடு செய்து நட்புமுறை கொண்டாடியதாக அவர் தெரிவித்திருக்கின்றார்.

பொறுமையுள்ள வாசகர்களே! நாமும் விதூஷகரது கூற்றை விகடமென்ற வகையிலே நம்பி சில விகடத் தீர்மானத்திற்கே வருவோம். எல்லைப்புறத்து சர்க்கார் ஆகாய விமான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்ட அந்த நாள் மாபெரும் செஞ்சட்டையர் கூட்டங்களின் நடுவே—அவர்கள் வீட்டு முன்றில்தோறும் விமானத்திலிருந்து உருண்டை உருண்டையாக உருட்டிவிட்டார்களே அவைகளெல்லாம் வெடி குண்டுகளல்ல! பாம்களல்ல! பட்டாணியக் குழந்தைகளுக்கு விளையாடுதற்கு அளித்த செவ்வாடை பூட்டிய பொம்மைகள்!! அணியணியாக நின்று ஸோல்ஜர்கள் நீண்ட குழாய்கள் மூலம் செலுத்தினார்களே அவைகள் துப்பாக்கிக்குண்டுகளல்ல! தோட்டாக்களல்ல! ரவைகளல்ல! புஷ்பசரங்கள்! பூமாரியே பெய்தார்கள்!

பின்னர் என் பட்டாணியர்கள் விதூஷக சிப்கமிஷனர் வெளியிட்டமாதிரி செய்திருக்க முடியாது! கபட நாடக விதூஷகரே! உமது நடிப்பை மெச்சவே செய்கின்றோம். பிரிட்டனே அறிவோடு உங்கள் ஸிவிலியன்ஸ் கூட்டத்தினர் செயலை நடுநிலைமையோடு ஆலோசித்துப்பார்!

என்னடா மடையா.

ஒரு ஊரில் ஒரு இலக்கண வித்வானிருந்தார். அவருக்கு உலகானுபவ மதிகங்கிடையாது. அவருக்கு சமையக்கார னொருவனிருந்தான். அவன் ஒருநாள் எஜமானெதிரில் வீணாய் நின்று வார்த்தையாடிக் கொண்டிருந்தான். அதைக்கண்ட வித்வான் "என்னடா மடையா" போய் வேலையைப்பார்க்கிறதுதானே என்றார்". இதைக்கேட்ட சமையக்காரன் "எஜமான் நம்மை மடையனென்றாரே நாம்என்னமடத்தனம் செய்தோம்" என்றுகோபமடைந்து சாதத்தையும் குழம்பையும் ஒன்றாய்ச்சேர்த்துக் கொதிக்க வைத்து சாம்பல் கரித்துள் முதலியவைகளை யள்ளிப்போட்டு சமைத்து எஜமான் சாப்பிட வந்துட்கார்ந்ததும் பரிமாறினன். சாதத்தை தொட்டுப்பார்த்து எஜமான் "என்னடா இது" வென்றார். "இதுதான்என் னுடையமடத்தனம். நீர்தான் மடையனென்றீரே" என்றான். உடனே வித்வான் "மடையன் என்பது சமையக்காரனுக்குச் சொல்லும் பெயரப்பா, இதையறியாமல் நீ கோபித்துக்கொள்ளலாமா?" என்றார். "எனக்கு அதெல்லாம்தெரிந்தால் நானும் உம்மைப்போல் வித்வானாயிருக்கமாட்டேனா?" என்றான். இதையறிந்த வித்வான் "அடடா நாம் என்ன படித்திருந்தும் என்ன பிரயோஜனம்! உலகானுபவம் தெரியாமல் கோபத்தில் சிலேடையாய் சொல்லித் தப்பிக்க நினைத்தோமே, திராககோபம் போராய் முடியும் என்பதை மறந்தோமே" யென்று தனக்குத் தானே சிந்தித்து வெட்கித் தலைகுனியலானார். நமக்கும் ஒரு ஞாபகம் வருகிறது. பத்திரிகை ஆசிரியர்களும் கம்பாஸிட்டர்களிடத்தில் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு சிலருடைய கோபத்திற்கு ஆளானாலோ ஆசிரியர்கள் சிறைக்கோட்டம் ஏக வேண்டியதுதான். 1927ம் வருடம் சர்க்கார் நம்மீது ஒரு வழக்குத் தொடுத்தார்கள். இரகசிய போலீஸாரால் சிருஷ்டிக்கப்பட்ட வழக்கு! நமக்கும் அதற்கும் சம்பந்தமே கிடையாது. தொடுத்த வழக்கு சித்தியடைய வேண்டுமல்லவா? ஒரு கம்பாஸிட்டருக்கு ஏதோவிழுக்காடு போட்டு "நாம் நாய்களா" என்ற துண்டு பிரசுரத்தை நாம் (செல்லம் பிள்ளை) செய்யச்சொல்லி செய்ததாகவும், கூறி மாஜிஸ்ட்ரேட்மார்ட்டின் 18மாதங்கள்கடுந்தண்டனை விதித்தான். ஹைகோர்ட்டிலோ நமக்கும் நியாயம் கிடைத்தது. அவர்களுக்கும் மூக்குடைந்தது. மறந்திருந்தால் மறுபடியும் ஞாபகமூட்டுகின்றோம்.

மூளை கெட்ட மாஜிஸ்ட்ரேட்

சத்தியாக்கிரஹிகளின் உண்மைத் தியாகத்தை — தேச சேவையை—அடக்கி ஒடுக்கி நசுக்குவதற்காக வில்லிங்டன் சர்க்கார் செய்யும் சூழ்ச்சிகளெல்லாம்—தொண்டர்களுக்கு மாறாகத் தொடுக்கும்பாணங்களெல்லாம்—பயனற்றுப் போகின்றன. காங்கிரஸ் வீரர்களை எத்தனைத் தடிகொண்டு அடித்தாலும்—கைகால்களை ஒடித்தாலும்--சாக்கடைத்தண்ணீரை மேலே பாய்ச்சினாலும் அவர்கள் தங்கள் இடத்தை விட்டுப் பெயராமல்—புறங்காட்டாமல் பொறுமையுடன் சகித்துக்கொள்ளுகிறார்கள்! ஆகையால் "காங்கிரஸார்கள் சண்டிமாடுகள்! மான வெட்கங்களைத் துறந்தவர்கள்!!" என்று இகழ்ந்துவிட்டு "கை சளைத்துப்போயிற்றே! கை நோகுகிறதே!" என்று வீட்டுக்குப்போய் ஒத்தணம் போட்டுக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. என்ன செய்வார்கள் பாவம்! போலீஸ்பாடுதான் இப்படியென்றால் காவலுடன் மேடையில் உட்கார்ந்திருக்கும் மாஜிஸ்திரேட்டுகளுக்கும் தொண்டர்களை விசாரிப்பதில் விழி பிதுங்கிப் போகின்றது. இதற்கு அத்தாட்சியாக பம்பாய் மாஜிஸ்திரேட்டுக்கு முன் விசாரணைக்கு நிறுத்தப்பட்ட மிஸ்ஸில் ஜம்னுபென் வெல்ஜி! தயாபாய் மங்களலால்! கனேஷ்பான்ஸலே மூவரின் கூற்றும் மிக ரஸமானது.

கோர்ட்டார் — உங்களுக்கு ஏதாவது சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறதா?

ஸ்ரீமதி ஜட்லாவெல்ஜி —இதை நான். கோர்ட்டு எனக் கருதவில்லை.

பான்ஸலே—"மிஸ்டர்!........தங்கள் பேர் என்னவோ தெரியவில்லையே! எதுவாயிருந்தாலும் ஐயா! மாஜிஸ்திரேட் சாஹேப்! நீங்களும் வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு சட்ட மறுப்பு இயக்கத்தில் சேருங்கள். அப்பொழுதுதான் தாங்களும் தங்கள் கடமையைச் செய்தவராவீர்கள்; நாங்களும் எங்கள் கடமையைச் செய்தவர்களாவோம். என்று கூறியும் அந்த மூளைகெட்ட மாஜிஸ்ட்ரேட் முறையே ஒவ்வொருவருக்கும் 18 மாதங்கள் கடுங்காவல் தண்டனை விதித்தானாம். இவன் குதிரையும் எவ்வளவு நாளைக்குத்தான் ஓடும் பார்ப்போம்.

பாச்சா பலிக்காது.

அப்பாடா! அறுபது கேள்வியா ஒரு நாளில்! பதில் சொல்லுகிறதென்றால் கஷ்டந்தானே! இந்தியா மந்திரிகளென்ன அவ்வளவு லேசானவர்களா? சர் சாமுவேல் ஹோரைச் சொல்லவும் வேண்டுமா! ஒரே பாய்ச்சலில் ஒடுங்குவாரே! ஒற்றை வாய்ப்பேச்சிலே அடித்து வாய் அடைத்தாற்போல் பதில் சொல்லிவிட்டார்! அதாவது "உங்களுக்குச் சொல்ல என்னிடம் ஒன்றும் பதிலில்லை" என்பதுதான்; மீரத்து வழக்கைத்தான் பார்ப்போமே! வருஷம் இரண்டுக்கு மேலாயிற்று! பணமோ கோடிக்குமேல் செலவு! லாயர்களெல்லாம் பிரபுக்களாய் விட்டார்கள்! விசாரணையோ இன்னும் பாதியிலேயே இருக்கிறது. இவருக்கு முன்னேயிருந்த மந்திரிகளும் "எங்களுக்கு ஒன்றும் தெரியாது" என்றுதான் சொன்னார்கள். அதற்குத்தான் இவர்களுக்கெல்லாம் இந்தியா பணத்தை வாரிவாரி கொடுக்கப்படுகிறது போலும்! எதிரிகளே வழக்கைக் தாமதப்படுத்துகிறார்களென்று குறைகூறுகிறார். ஆனால் வாதி வழக்கை ருசுப்படுத்த இரண்டு வருஷத்திற்கு மேல் எடுத்துக்கொண்டார்! அவர் சர்க்காரல்லவா! பாதகமில்லை! எதிரிகள் சத்தியாக்கிரஹ இயக்கத்தில் ஈடுபட்டு வாயைப் பொத்திக்கொண்டு இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறாராக்கும். அப்படியிருந்தால் இதிலும் பெரிய நூறு கேசுகளில் ஒரே தினத்தில் தீர்ப்புக்கூறி விடலாம். மாஜிஸ்திரேட்டுகளுக்கும் லகுவாயிருக்கும். வக்கில்களுக்கும் (ராப்பட்டினி) ராவ்பகதூர் (தினப்பட்டினி) திவான்பகதூரும் வழங்கிவிடலாம்.

இவரே முன்பு கோடை காலத்திற்குள் வழக்கு முடிவடைந்து விடுமென்று கூறினார். இவருக்கு முன்னிருந்தவர்களும் இவ்விதமாகவே கூறியதுண்டு. ஆனால் எத்தனைக் கோடைக்காலங்களும் மாரிக்காலங்களும் மறைந்தொழிந்தன. வழக்கு இருந்த ஸ்தானத்திலிருந்து எத்தனை தூரம் நகர்ந்திருக்கிறதென்று கவனித்தால், திருவாரூர் தேர் அசைந்த கதையாய்த்தான் இருக்கிறது. எதிரிகளுக்கு பல சாட்சிகளையும் அயல் நாடுகளிலிருந்து வரவழைக்க அனுமதியளிக்கப்படவில்லை. இனியும் இந்தப் பசப்பு வார்த்தைகள் செல்லாது. உன் பாச்சா பலிக்காது.

"தேசோபகாரி"யில் சி. ஐ. டி.

13ந்தேதி சனிக்கிழமை சந்நிதியல்லவா? வந்துவிட்டதடி! சனியன் நம்ம ஆபீசுக்கு! பொழுது விடிந்தால் சனியன் தனுசிலிருந்து மகரத்திற்கு போகுதில்லையா? சனிப்பெயர்ச்சி உற்சவம் நடக்க வேண்டுமே! வந்தாரய்யா நமது போலீஸ் வீரர் சுந்தரராஜலு! பாதி ராத்திரியிலே! "அவசரம், அவசரமினு" அவசரச்சட்டமில்லையா? அவருக்குந் தெரியாதா! "விட்டேனு தகடுகை! பாரு!" என்று பாய்ந்தாரய்யா ஆபீசுக்குள்ளே! சவாரியோ சினக்குதிரை! டிகிரியோ 150!! வாசனையோ கம் கம் கம்!!! உள்ளே வந்தார்: தொப்பென்று நாற்காலியில் சாய்ந்தார்! தடமாட்டத்திலிருந்து சற்று நிதானித்து; "என்னங்கசார்! நப்பப்பேர்லே பேப்பர்லே போட்டீங்க! ஆபீசிலேயோ பிச்சுத்துண்ணுறாங்க! நான் என்ன செஞ்சேங்க!" என்று சற்று இருமாந்தார்! பக்கத்தில் இருந்த கம்பாஸிட்டரை முறைத்துப்பார்த்து "வேலையை ஒழுங்காய்ச்செய்!" என்று ஒரு கரம் உறுமினார்! நாமும் பேர்வழி குதிரைச் சவாரியில் வந்திருக்கிறாரே என்று, "இந்த நிலைமையில் வெளியில் வரலாமா! சோதனை போடுவதாயிருந்தால் காலையில் பார்த்துக்கொள்ளலாகாதா! நாமென்ன உமது நண்பரைப்போல் டிமிக்கிப் பேர்வழியா?" என்றோம். அதற்கு அவர் "இல்லீங்க மிஸ்டர்! அந்த நாயுடு டிமிக்கி அடிச்சிட்டு என் வேலைக்கே ஆபத்து கொண்டுவந்தாங்க! உங்களுக்கும்தெரிஞ்சதுதானுங்களே! நான் கல்தப்பினது தம்பிரான் புண்ணியம்! புழைச்சுக்கிட்டேங்க!" என்றார். நாமும் "அங்குதானே உங்களுக்கு குதிரை ஏற வசதியிருக்கிறது!" என்றோம். "என்னங்க உங்களுக்கு என்னவோ செய்றோன்! முப்பது பேர் கை எழுத்துப்போட்டு பெட்டிஷன் போட்டாங்க! உங்க பேரை நான் அமுக்கிப்பிட்டேன்! குறைச்ச சம்பளம்! நாங்களும் பிழைக்கணுங்களே? சினக்குதிரை ஏறி ரொம்ப நேரமாச்சுங்க! அதுக்காவது ஏதாவது உண்டா" என்றார் "இல்லை மிஸ்டர் நாயுடு! நாளை மறுநாள் கவனிப்போம்!" என்றோம். வீட்டு விலாசத்தையும் (256 நெம்பர் வீடு 40-வது தெரு) என்று சொல்லிவிட்டு ரிக்ஷா வண்டியிலேறிப்போய் விட்டார். பலர் இவருடைய திருவிளையாடல்களை நம்மிடம் கூறினதுண்டு! இப்பொழுதுதான் நாம் நேரில் பார்த்தோம்.

Printed & Published By A V Sellam Pillay at the Desopakari Press, 210.36th Stree – Rangoon

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 62 அணைபயஞு

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை

DESOPAKARI

புதன் ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி இரங்கோன், (21-2-32) மாசிமீ 9௨ ஞாயிற்றுக்கிழமை.

ஓடு எடுக்கும் சர்க்கார்.

தர்ம யுத்தம் மறைந்து அதர்மப் போர் மலிந்துவிட்டது. விஷப்புகை நீர்மூழ்கிக்கப்பல் வெடிக்குண்டுவீசல் முதலிய அகோர ஆயுதங்களால் நவநாகரீக மனிதவர்க்கம்போராடிவருகிறது. வீரம் ஸ்புரிக்கவில்லை. கைமுந்தியவனும் கண்விழித்தவனும் வெற்றியடைகிறான். இதனால் வெற்றி தோல்வியென்பது வெறும் அதிர்ஷ்டத்தால் கிடைப்பது என்றாகிவிட்டது. தர்ம யுத்தமென்றால் எதிரிக்கு சகல சந்தர்ப்பங்களுமளித்துக்கூடுமானால் உணவுவசதி கூட கொடுத்து நெஞ்சுக்கு நேரே போராடுவதாகும் துரியோதனாதிகள் போல் விஷத்தைக் கொடுத்தும்—நச்சுப்பொய்கை சமைத்தும் வஞ்சந் தீர்த்துக்கொள்வது சீ! பேடியர்செயல். கோமளமீரக் கோட்டையில் சுதந்தர வீரன் ராணா—பிரதாப சிம்ஹனுக்கு ஸம்ராட் அக்பர் இதே கோழைச் செயலையே செய்தான். அதே போன்று இப்பொழுதைய பிரிட்டிஷ் வீரர்களும் செய்து வருகின்றனர். சத்தியாக்கிரஹத் தொண்டர்களுக்குத்தவித்தவாய்க்குத் தண்ணீரும் பசித்த வயிற்றுக்குச் சோறுங் கொடுப்பதுங்கூட ராஜத்துவேஷமான—சர்க்காரைக் கவிழ்க்கக்கூடிய குற்றமென கருதப்படுகிறது, காலிபறுத்தசர்க்கார் சட்டிமுட்டிகளையும் பறிமுதல் செய்வதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஏகப் பொத்தலாய்க்கிடக்கும் இந்திய வரவு செலவை மூடுவதற்கு இவைகளெல்லாம் வேண்டத்தான் வேண்டுமென்று ஷுஸ்டர் சொன்னானோ? சபிக்கவில்லை! யதார்த்தத்தையே பேசுகிறோம். சர்க்கார் ஓடெடுத்துவிட்டது. பிரிட்டிஷ் பார்லிமெண்டில் பிறந்த கேள்விகளுக்கு இந்திய மந்திரி ஹோர் ஆகாய மந்திரியாயிருந்த அனுபவத்தில் ஆகாயப்புளுகு புளுகிய போதிலும் இப்பொழுது நடக்கும் சட்ட மறுப்பு இயக்கத்தால் சர்க்கார் அந்தநிலையடையாமல்—திவாலாகாமல் தீராது. தொண்டர்களின் வரிமறுப்போரின் எந்தெந்த சொத்துச் சுகங்களை வேண்டுமானாலும் சர்க்கார் கைப்பற்றிப் பார்க்கட்டுமே! அடக்குமுறையில் ஏற்படும் அத்தனை செலவுக்கும் இனிமேல் முடியாது.

காந்திஜியின் ஸபர்மதி ஆச்சிரமத்திலே வரி பாக்கிக்காக சில சொத்துக்களை சர்க்கார் ஜப்தி செய்துவிட்டது. ஏலம் போட்டதில் பாக்கி முழுதையும் ஈடுசெய்ய முடியாததால் துண்டு விழுந்த தொகைக்காக காய்ச்சிக்குடிக்கும் ஓட்டையும், பொங்கித்தின்னும் சட்டியையும், ஆப்பைத்,துடுப்பு, அரிவாமணை,செருப்பு, விளக்குமாறு மண்ணாங்கட்டி எல்லாவற்றையும் ஜப்தி செய்திருக்கிறார்கள். இதனால் ஆச்சிரமத்திற்கு அதிகம் நஷ்டமேற்பட்டுவிடாது. ஒரு தேசியப் பக்கிரிக்கு இவையெல்லாம் வேண்டுவதில்லையென்றால் சர்க்கார் எடுத்துக் கொள்ளட்டுமே. நாங்கள் காந்திஜிக்கு வேண்டியதெல்லாம் கொடுப்போம். எங்கள் உயிரையே அவரிடத்தில் ஒப்படைத்துவிட்ட நாங்கள் வேறெதுதான் கொடுக்கமாட்டோம். சர்க்காருக்கோ?

மாசி மகோற்சவம்

இன்று மாசி மக நாள். சக்தியின் பூஜைக்குரிய புனிததினம். கடல் பொங்குவதும் வெறுங்குளம் ஊற்றூறுவதும், இன்றுதான், கும்பகோணத்தில் மாமாங்கக் குளத்திலே மக்களெல்லாம் தீர்த்தமாடுவார்கள். ஆராதனைக்குரிய இன்னாளை இந்துக்களெல்லாம் போற்றுகிறார்கள். பூஜிக்கிறார்கள் —திருவிழாக்கொண்டாடுகிறார்கள், கடவுள் ஒருவர் இருக்கிறார். என்னும் நம்பிக்கையுடைய இந்துக்களெல்லாம் இன்னாளில் ஆண்டவனிடத்தில்—சக்தியிடத்தில் சிந்தை திறைகொடுத்து நிற்கிறார்கள். வந்தனை வழிபாடுகளெல்லாம் செய்கிறார்கள்,

நம்மூரிலும் நாம் இவ்விழாவைக் கொண்டாடத்தான்போகிறோம். பக்திமான்களெல்லாம் பரவசப் படுங்கள். ஆராதனைக்காரர்களெல்லாம் ஆராதியுங்கள். பாட்டுக்காரர்களெல்லாம் பஜனைபாடுங்கள். காசுக்காரர்களெல்லாம் காணிக்கை செலுத்துங்கள். நாம் நமது அன்பைச்செலுத்துகின்றோம். மனிதனுக்காகவே மார்க்கம், மதம், மதத்திற்காக மார்க்கத்திற்காக மனிதனில்லை. கடவுள் மனிதனைச் சிருஷ்டிப்பது போல மனிதனும் தன்தன் கடவுளை சிருஷ்டித்துக்கொள்ளுகிறான். எவனெவன் எப்படி எப்படிரூபகப்படுத்திக்கொண்டாலும் ஆண்டவன் அப்படிஅப்படியேகாக்ஷி கொடுக்கின்றாரென்பது தோரகஸ்யம். யானைகண்ட குருடர்கள் போல் மனிதன் கடவுளை ரூபகப்படுத்த முடியும். இந்தவேதாந்தமெல்லாம் வேண்டாம் விஷயத்திற்குவருவோம்.

லோகமாதா மகமாரியின்று வீதிவரப் போகிறாள். நாலு தெருவும் சுற்றுவாள். ரதத்தின்மீது வீரதெய்வம், ஹனுமான் ஆரோஹணிப்பார் பெருச்சாளிமீது பிள்ளையார் வருவார். பூப்பல்லக்கில் மாரியாத்தாள் கொலு விருப்பாள், பாலசுப்பிரமண்யனும் வள்ளிமனோகரனாய் தேவசேனையை நடத்திவருவார். நடராஜரும் நடனமாடுவார் வேறென்ன வேண்டும். எல்லாத் தெய்வங்களையும் ஏககாலத்தில் கண்டு களிக்கலாம்;

இம் மகோற்சவத்தை நடத்திவைக்கும் தேவரை மறந்துவிடலாமா? எவ்வளவு பணத்தைத்தான் இறைத்து இந்தத் தேவ இன்பம் கொடுக்கின்றார். காசைக்காசென்று பாராமே; கஷ்டத்தைக் கஷ்டமென்று கருதாமே தெய்வ காக்ஷி கொடுக்கின்றார். இவ்விருந்துக்கு—கண்குளிரும் காக்ஷிக்கு சிந்தையள்ளும் திருவீதிப் பிரதக்ஷணத்திற்கு இவ்வூர் இந்துக்களெல்லாம் ஸ்ரீமான் ஆ. ஆ. நாகலிங்கத் தேவர் அவர்களுக்குப் பெரிதும் கடப்பாடுடையோம். தேவர் வாழ்க! திருவீதிப் பிரதக்ஷணம் சிறப்புறுக!!

தவணை நாள்

இன்று சுடுகாட்டு வாயிதா நாள். மயான டிரஸ்டி திரு, சோமசுந்தரம் பிள்ளைக்கு நாம் கொடுத்திருந்த பத்து நாள் தவணை நேற்றுடன் முடிவடைந்து விட்டது. இனிமேலென்ன செய்யப்போகிறோமென்பதை இன்று நாம் தீர்க்கமாய்— திட்டமாய்— ஸ்திரமாய்சொல்லி விடுகிறோம்.

சுலபமான வழியில் கணக்குத் தீர்த்துக் கொள்ளும்முறையில் ஸ்ரீமான் பிள்ளையின் வாசலில் சுடுகாட்டுச்சத்தியாக்கிரஹம் செய்து காரிய சித்திபெறலாமெனக்கருதினோம். இவ்வூர் பிரபலஸ்தர்களைசத்தியாக்கிரஹத்தொண்டர்களாய் சேர்த்து மறியல்செய்தால் நமதுபிள்ளை, அவர்களை மிதித்துக்கொண்டு தனது சொந்தக்காரியார்த்தமாக வீட்டைவிட்டு வெளிச்செல்லத் துணியமாட்டார், கணக்கும் நேர்ப்பட்டுவிடும் என்றெண்ணுகிறோம்— ஆனால் அப்பிரபலஸ்தர்களில் ஒருவரான ஸ்ரீமான் எஸ். பி. எஸ். மணி அய்யர் நமக்கு வேறுவழி காட்டிவிட்டார் கோர்ட்டில் நியமிக்கப்பட்ட டிரஸ்டி கோர்ட்டின்மூலமாகவே கணக்குச்சொல்லுவார் என்பதால் நாமும் பொதுஜனங்களின் நன்மையை உத்தேசித்துக்கோர்ட்டேறிநியாயம்பெற முடிவுகட்டிவிட்டோம். எப்படியேனும்கோர்ட்டுமூலமோ அல்லது வேறுவழியிலோ நமக்கு வேண்டியது கணக்குத்தான். பொதுநலப்பிரியர்களெல்லோரும் நமக்குத் துணை புரிவார்எனும் நம்பிக்கைகொண்டே இறங்குகின்றோம். நியாயவாதம்செய்ய ஹிந்து வக்கீல்களெல்லோரும் சிறப்பாக மயானடிரஸ்டியின் சகோதரர் ஸ்ரீமான். பி. ஸி. ஷண்முகம்பிள்ளையுங்கூட கௌரவமாக—கண்டிப்பாக—நம்பக்கம் நியாயவாதஞ் செய்வாரென திட்டமாக நிச்சயிக்கின்றோம்.

பிரிட்டனே! ஒப்புக்கொள்ளுவாயா?

"பசித்தவன் பழங் கணக்கைப் பார்த்தமாதிரி!" என்று ஹாஸ்யமாக—ஏளனமாக இப்பழமொழியை நாம் உபயோகிக்கிறோம். ஆனால் இது ஹாஸ்யப் பழமொழியல்ல! பசித்தால் பழங்கணக்கை எடுத்துப்பார் என்று—அனுபவக் குறைவினாலோ பிறரது வஞ்சகத்தினாலோ மற்றும் யாதாமொரு காரணத்தினாலோ வியாபார முதலிய தொழில்களில் நொடித்துப்போனவர் சீர்திருந்தி மேன்மைக்கு வருவதற்கான—மிகுந்த அனுபவசாலிகளின் உபதேச மொழிகளேயாகும். எனவே இந்திய மக்களாகிய நாமும் நமது பழங்காலக் கணக்கை சிறிது ஆராய்வோம். இந்தியநாடு ஆங்கில அரசாட்சிக்குட்பட்டு சுமார் 150 வருடங்களுக்கு மேலாகிறது. ஆதியில் ஆங்கில வியாபாரக்கூட்டத்தினர் இந்தியாவில் வியாபாரத்தின் பொருட்டு நுழைந்தது—இவர்கள் காலடி வைத்த பின்—இந்தியக்குடிசைத்தொழில்கள் வேருடன் களைந்து வெந்நீர் ஊற்றப்பட்டு இருந்தவிடந் தெரியாமல் மறைந்தொழிந்ததும் வெள்ளிடைமலை. அன்றுமுதல் இன்றுவரை கிழக்கிந்திய ஆங்கிலக்கம்பெனியார் எந்த எண்ணத்துடன் இந்தியாவினுள் நுழைந்தார்களோ அந்த ஒரு வியாபாரநோக்கத்துடன் அரசாங்கம் இன்றும் நடத்தப்படுகின்றதே ஒழிய வேறில்லை. வேலியே பயிரைத் தின்றமாதிரி அரசாங்கமும் வியாபாரக் கூட்டத்தினரும் ஒன்றாய் இருப்பதினால் இந்தியநாடு இப்பொழுது எந்நிலையில் யில் இருக்கிறதென்றால் இன்றுமுதல் அன்னியத் துணியை இந்தியாவுக்கு அனுப்புவதில்லை என்று பிறநாடுகள் கட்டுப்பாடு செய்துகொள்ளுமானால் இந்தியர்களாகிய நாம் நாளையே உடுக்க ஆடையின்றி, மானத்தைக் காப்பாற்ற வகையின்றி அம்மணத்தாண்டிகளாய்த் தவிக்க வேண்டிய ஸ்திதியில் இருக்கிறோம். இந்த நம் நிலைமையை அறிந்துதான் பிரிட்டன் இத்துணை ஆர்ப்பாட்டங்கள் செய்கின்றது. அறிவில்லா இந்தியர்கள் என ஏளனஞ்செய்கிறது—பிறநாடுகள் நம்மைப்பார்த்து நகைக்கின்றன—நமது ஏழ்மை நிலைமையைப்பார்த்து சம பந்தியில் உட்கார இடமில்லை எனத் தள்ளிவிடுகின்றன.

இந்தக் குறைகளை நீக்கும்பொருட்டு—ஏழை இந்தியர்கள் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கி, சௌக்கியமாக வாழும் பொருட்டு கதர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. கதர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு சொற்ப காலங்களேயாயினும் அது செய்துள்ள அபாரவேலைகளை—நமக்கு அது தந்துள்ள வெற்றியை பின்னால் குறிப்பிடுகின்றோம். ஆனால் ஆங்கில வியாபாரக் கூட்டத்தினருக்கு கதரியக்கமானது இடிவீழ்ச்சியென பீதியையும் நடுக்கத்தையும் உண்டு பண்ணிவிட்டது. கதர் இயக்கம் மிக வலிவடைந்து வருவதனால் தங்கள் வியாபாரம் இனி ஒழிந்துபோம் என்று அவர்கள் அறிந்துகொண்டு விட்டார்கள். துணி வியாபாரமே மற்றெல்லாச் சில்லரை வியாபாரங்களைக் காட்டிலும் ஆங்கில அரசாங்கத்து முதுகெலும்பு போன்றிருப்பதால், இந்த வியாபாரம் ஒழிந்தால் ஏழாயிரமைலுக்கு இப்பாலுள்ள மிகக் கொடூரமான சிதோஷ்ண நிலைமையையுடைய இந்தியாவை தண்டத்துக்கு ஆளுவதால் பிரயோஜனமில்லை என்று அவர்கள் நன்கு உணர்ந்து கதரியக்கத்தை முளையிலேயே களையவேண்டும் என ஆர்ப்பாட்டம் செய்தார்கள்—செய்தும் வருகிறார்கள்.

1920-21 வருஷங்களில் நடந்த ஒத்துழையாமைக் கிளர்ச்சியும், சென்ற வருட சத்தியாக்கிரஹப் போரும், இப்பொழுது நடக்கும் போரும் கதரின்மாட்டே யாகும். காங்கிரஸ் என்னும் தலைநகரைச் சுற்றி வளைந்து நிற்கும் கோட்டையான—சுதந்தர மாளிகையின் பாதுகாப்புச் சுவரான—விடுதலை தேவாமிர்தத்தை ஏந்திநிற்கும் பொற் கலசங்களான—சாந்தப்போரின்—அஹிம்சைப்போரின்—அமைதி ஆயுதமான கதருக்கு எதிராக—அதை அழிப்பதற்காக இந்த—அவசர அவசரமான—நவநவமான அடக்குமுறை பாணங்களெல்லாம் பாணாத்தடிகளெல்லாம் பிரயோகிக்கப்படுகின்றன.

ஆனால் கதருக்கு எதிராக—கதரியக்கத்தை நசுக்குவதற்காக இவ்வித முறைகளைக் கையாளுவதாக சர்க்கார் ஒப்புக்கொள்வதில்லை. பகிரங்கமாக இதை ஒப்புக்கொண்டால் பிறநாடுகள் நகைக்காதா? அன்றியும் இதுகாறும் தங்களைத் தர்ம கர்த்தாக்களென்றும், இந்தியருக்கு அரசியல் பொறுப்பு பூரணமாக கொடு

பிரிட்டனே! ஒப்புக்கொள்ளுவாயா?

த்து விடுவதாகவும் சொல்லிவரும் இவர்களது குட்டு, கெட்டிக்காரன் புளுகுமாதிரி வெளியாகி விடாதா! ஆகவே முதலைக் கண்ணீர் வடித்துக்கொண்டு, வாக்கிலொன்று செய்கையிலொன்றாய்க் காட்டுகிறார்கள். உதாரணமாக பார்லிமெண்டில் இந்திய மந்திரி ஸர். ஸாமுவேல் ஹோரை தொழில் கட்சியைச் சேர்ந்த மிஸ்டர் தாமஸ் வில்லியம்ஸ் "இந்தியாவில் இந்தியர்கள் தங்கள் சுதேச சாமான்களை அமைதியாகப் பிரசாரம் செய்வதற்கோ அல்லது வாங்கும்படித் தூண்டுவதற்கோ எதிரிடையாக அவசரச் சட்டங்களும் அடக்குமுறைகளும் பிரயோகிக்கப்படுகின்றனவா?" எனக் கேட்டதற்குப் பதிலிறுக்கையில் "இந்தியர்கள் கலவரமின்றித் தங்கள் கைத்தொழில் சாமான்களை பிரசாரம் செய்யவோ! விற்பனை செய்துகொள்ளவோ! அவசரச் சட்டங்கள் தடைப்படுத்துவதில்லை," எனத் தெரிவித்திருக்கிறார். மற்றோரிடத்தில் அவர் அந்நியத்துணி வியாபாரங்கள் குறைவுபடவில்லையென்றும் கதரியக்கத்திற்கு சிறுபான்மைக் காங்கிரஸாரைத் தவிர வேறு ஆதரிப்பாரில்லையெனவும் தெரிவித்திருக்கிறார். இந்த இரண்டின் தன்மைகளையும் ஸர் ஸாமுவேல் ஹோர் மகானின் கயிறுதிரிப்பு எவ்வளவு தூரம் இருக்கிறதென பொதுஜனங்கள் அறியுமாறு சற்று விளக்குவோம்.

சென்ற சத்தியாக்கிரஹ இயக்கத்தில் ஆந்திரதேச குண்டூர் கலெக்டர் முலோலினிஸ்டூவர்ட் காந்திக் குல்லாய்களை அணிந்துவருபவர்களை சிறையில்மாட்டி, பிரக்கியாதிபெற்றது இந்திய நாடெங்கும் தெரியும். இந்த மகான் இப்பொழுதும் அதே முறையைக் கையாளுகிறார் எனத்தலைவர் சாம்பமூர்த்தியாரது எதிர்ப்பற்ற பகிரங்க அறிக்கையிலிருந்தும், ராஜமஹேந்திரம், சிதாநகரச் சம்பவங்களிலிருந்தும் வியக்தமாக அறிகின்றோம். நிற்க சர்க்கா சங்கங்களும், கதர் சாலைகளுங்கூட சர்க்காரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. பாங்கூரா அகில இந்திய சர்க்கா கிளைச் சங்கம் சட்ட விரோதமாக்கப்பட்டு அதன் தளவாடங்களும் ரூ. 1000 பெறுமானமுள்ள கதர் நூல்களும் போலீஸாரால் கைப்பற்றப் பட்டதென்றும், ஐக்கியமண்டல அக்பர்புர கதர்நிலையமான காந்தி ஆசிரமத்தைப் போலீஸார் தங்கள் வசமாக்கிக் கொண்டனரென்றும் அறிகிறோம். இவைகளெல்லாம் அதிகாரிகளது உத்தரவின்றி செய்யப்படுகின்றனவா என்று கேட்கின்றோம்! இரண்டாவதாக பிரிட்டிஷ் வியாபாரம் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறதென்று அவர்கள் ஏற்றுமதியிலிருந்து கவனிப்போம். 1929ல் இந்தியாவுக்கு ஏற்றுமதியானது 839 பவுன். 1930ல் 658பவுனாகக் குறைந்து 1931ல் 453 பவுனாக இழிந்துபோய் விட்டது. இதற்கேற்ப பருத்தி ஆடைகள் ஏற்றுமதியையும் கவனித்தால் முறையே 3672, 2407, 1716 மில்லியன்களுங்களாக வருஷா வருஷம் குறைவாகியிருக்கிறது.

மேல் கண்ட புள்ளி விவரங்களிலிருந்து வெள்ளையர்கள் வியாபாரம் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறதென்பதும் ஸர். ஸாமுவேல் ஹோர் குப்புற விழுந்தாலும் மீசையில் மண்ணொட்டவில்லை என்று பசப்பும்வார்த்தைகளின் குறும்புத்தனமும் நன்கு விளங்குகிறது. இப்பொழுதாவது ஸர். ஸாமுவேல் ஹோரும் அவரது உள்ளடக்க மந்திரிகளாரும் தோல்வியை ஒப்புக்கொள்ளுகிறார்களா? அடக்குமுறையினால் பகிஷ்காரம் வலுவடைகிறதே ஒழிய குறையாது என்பதை அறிந்து கொள்வார்களா? இந்திய மக்களை அன்பினால் வெல்லலாமே தவிர அவசரச்சட்ட ஆர்ப்பாட்டங்களினால் ஒன்றும் ஆகாது என்பதை தெரிந்து கொள்வார்களா? பிரிட்டனே! இந்தியாவை இந்தியரது கையில் ஒப்படைத்து சகோதரப் பான்மையில் உனக்கு அரைவயிற்றுக் கஞ்சியேனும் வருங்கால சுயராஜ்யத்திலே கிடைக்குமாறு வழி தேடிக்கொள்ளுவாயா?

அல்லம் மாரியம்மன் கோவில்

மாசி மக மஹோத்ஸவமும், குருபூஜையும்,

லான்டோ பில்டிங் கன்ட்ராக்டர் வி. ரா. லட்சுமண வீர வன்னியர் திருப்பணிமுடித்து, பிரசோற்பத்தி௵ தை௴ 26௳ (8—2—32) சோமவாரம் மகா கும்பாபிஷேகம் செய்த அல்லம் வீரமஹேஸ்வரி மாரியம்மன் கோவிலில், மாசி௴ 6௳ 21—2—32 ஆதிவாரம் காலை காவடிகளும் மாலை கரகம், அக்கினி கப்பரையும் நடைபெறும், மாசி மகோற்சவமும், மாசி௴ 19௳ 2—2—32 புதன்கிழமை சாமிநாத சுவாமிகள் செய்யும். பெரியபுராணம் அறுபத்து மூன்று நாயன்மார்களில், காரிநாயனார் குருபூஜையும் நடக்கும். மகாஜனங்கள் விஜயம்செய்து தரிசிக்க!

விலைப்போகாத மாடு!

உள்ளூரில் விலைப் போகாத மாட்டை அயலூர் சந்தையிலே கொண்டுபோய் விற்பது வழக்கம். அங்கேதான் அம்மாட்டைப்பற்றிப் பிரமாதமாய் அளக்கமுடியும். பக்ஷியாய்ப்பறக்கும் பத்துப்பொதி சுமக்கும் என் என்னென்னவெல்லாமோ சொல்லுகிறான். உள்ளூரிலானால் அதன் பவிசை எல்லாருமே அறிவர். மாதக் காதவழி நடப்பதும், மணலைக்கண்டால் கண்ட மாத்திரத்திலேயே விழுந்து படுப்பதுவும் உள்ளூராருக்குத் தெரியாதிருக்குமா? எவன் விலை கொடுத்து வாங்கப்போகிறான்? கதையில்லை. கண்கூடாகக்காணும் செய்தியிது. நம்ம ஊர் நாயுடு இருக்கிறாரே அவரும் உள்ளூர் மாடு மாதிரி உள்ளூரில் விலைப்போக மாட்டாமல் செல்லாக்காசு போலே சீப்படுகிறார் பாவம். ஜீவாதாரமான கொள்கையில்லை; கவர்ச்சியான வாசகமில்லை; ருசிகரமான சமாச்சாரங்கள் கிடையாது இவ்வளவுமில்லாத இழவுக்கு என்னமாய் இரண்டுகாசு கொடுத்துக் கொள்கிறது?" என்று பத்திரிகா வாசகர்கள் பஹிஷ்கரிக்கின்றனர். நாயுடுவும் சில ஏமாளிகளைக் கால்பிடித்து காக்காய் பிடித்து காலக்ஷேபம் செய்து வருகிறார். ஆனால் ஏமாற்றிப் பிழைக்கும் காலம் போய்விட்டது. ஒவ்வொரு பத்திரிகையையும் நன்றாய் துளி குறையாமல் எடைபோட்டு நிறுத்துத்தான் ஜனங்கள் இப்பொழுது வாங்கி வருகின்றனர். இந்நிலைமையில் நாயுடு பேந்தப்பேந்த விழிக்கின்றார். ஏதாவதொரு சங்கத்தை சிருஷ்டித்து அதன் பேரால் பிழைக்கலாமா? என்று பார்த்தார். அதுவும் பலிக்கவில்லை. அப்புறம் என்ன செய்கிறது என்று எண்ணியெண்ணிக்கடைசியில் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார். இவ்வூர் முஸ்லீம்களைப் பிடித்தால்தான் காரியமாகுமெனக் கண்டிருக்கிறார். நல்ல யோஜனை. பத்திரிகை படிப்பவர்களில் முஸ்லீம்களே அதிகம்பேர் என்பதால் அவர்களின் ஆதரவைப்பெற நாயுடு முற்பட்டிருப்பதில் ஆச்சர்யமில்லை. ஆனால் நாயுடு ஓர் ஹிந்து. இந்துக்களில் அவருக்கு நண்பர்களில்லையாம். முஸ்லீம் நண்பர்கள்தான் அதிகமாம். அவரது ஒட்டைச் சங்கை அவரே ஊதுகிறார். அவரது கொள்கையையும் நேர்மையையும் இந்து சகோதரர்களைவிட முஸ்லீம் சகோதரர்களே நன்கறிவார்கள் இந்துவாயிருந்தும் இந்துக்களிடையில் விலைப்போகாமல் முஸ்லீம்களிடை விலைப்போவதில் அர்த்தமிருக்கிறது. அவரது கொள்கையிலும் நேர்மையிலும் இந்துக்களுக்கு நம்பிக்கையில்லாததால் அயலூரில் விலைப்போகவேண்டிய நிலைமைக்கு வந்திருக்கிறார். ஆனால் ஹிந்துக்களை கழித்துவிட்ட சரக்கை முஸ்லீம்கள் வாங்கப் போகிறார்களா?

"விஷமப் பத்திரிகைகள் (இந்துக்களால் வெளியிடப்பெறும் பத்திரிகைகள்)" என்று நாயுடு கூறுகிறார். இவ்வூரில் இந்துக்களால் வெளியிடப்பெறும் பத்திரிகைகளில் இப்பொழுதிருப்பன "தேசோபகாரி" "சுதந்தரன்" "சுதேசபரிபாலினி" "ஊழியன்" "ரெங்கூன் மெயில்" முதலியனவைகளேயாகும். இவைகளெல்லாம் விஷமப் பத்திரிகைகளென நாயுடு சொல்லுகிறார். "எல்லாக் கிரிட்டன்களும் முட்டாள்கள்" என்று சொன்ன கிரிட்டன்போல இந்த முட்டாள் நாய்க்கரும் கூறுகிறார். தன்னைப்பற்றியும் தனது பத்திரிகையைப்பற்றியும் விஷமியென்றோ விஷமப் பத்திரிகையென்றோ அவர் சொல்லிக்கொள்வதில் நமக்கு எதிர்ப்பில்லை. ஆயிரந்தரம் வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும். ஆனால் நமக்கு வேண்டுவதெல்லாம் நாயுடு யார்? என்பதே. ஹிந்துவா? கிறிஸ்தவரா? முஸல்மானா? ஹிந்துவென நாமெண்ணியிருந்தோம்! இப்பொழுது சந்தேகம் பிறந்துவிட்டது.

பர்மாவிலிருக்கும் இந்தியர்கள் யாவரும் ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்று முஸ்லீம் சகோதரர்களுக்கு நாயுடு விண்ணப்பம் விடுத்திருக்கிறார். பொதுவாக இந்தியருக்கு இவ்விண்ணப்பம் விடுபட்டிருந்தால் சந்தேகத்திற்கு இடமில்லை. முஸ்லீம்களுக்கு மாத்திரம் பிரத்தியேகமாக விடுத்திருப்பதில் ஏதேனும் விசேஷ அர்த்தமிருக்கவேவேண்டும். முஸ்லீம்களைக் கலகக்காரர்களென்று நாயுடு கருதுவாரானால் அதற்காக அச்சமூகத்தினிடம் அவர் கண்டிப்பாய் மன்னிப்பும்—பிராயச்சித்தமும் பெற்றுத்தானாகவேண்டும். முஸ்லீம்களும் அதை வாங்கவே விரும்புவர். இன்னொன்று சந்தர்ப்பத்தைப்பற்றியது. முஸ்லீம்களுக்கு நாயுடு இவ்விண்ணப்பம் விடுக்க வேண்டிய பிரமேயம் இப்பொழுது என்ன நேர்ந்து விட்டது என்பதைப் பற்றி வேண்டுமானால் மற்றொரு சமயம் பேசுவோம்.

பொதுவாகப்பார்த்தால் இவ்வூரில் இந்துக்களும் முஸ்லீம்களும் ஸ்நேகப்பான்மையுடனேயே வாழ்ந்துவருகின்றனர் என்பதை நா

காசைக் கரைக்கலாமா?

மனித வாழ்க்கைக்கு உணவு எவ்வளவு அவசியமோ அவ்வளவு சுகாதாரமும் அவசியமென பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இது பற்றித்தான் "கந்தையானாலுங் கசக்கிக்கட்டு," எனும் பழமொழியும் பிறந்தது. உடலும் உடையும், சுத்தமாயில்லாவிட்டால் மனித ஆயுள் குன்றிப்போம். எனவே உடைவெளுக்க மண்ணோ சவுக்காரமோ அவசியமென்பது தேற்றம். உணவுக்கு உப்பும், உடைக்கு சோப்பும், இல்லாது தீராது. இவையிரண்டும் எவ்வளவு விலை யேற்றமாய் விற்கப்பட்டாலும், எவ்வளவு வரி விதிக்கப்பட்டாலும் மனித வர்க்கம் இந்தியாவில் மாத்திரமில்லை உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் உபயோகித்துத்தான் ஆகவேண்டும். மனித உபயோகத்துக்கு அவசியமான எல்லாவற்றையும் இயற்கைதேவி கொடுக்கிறாள். ராமனுண்ட காலத்திலுஞ்சரி, ராவணனுண்ட காலத்திலுஞ்சரி—சந்திரகுப்தனுண்ட காலத்திலுஞ்சரி, அசோகனுண்ட காலத்திலுஞ்சரி—அக்பர் ஆண்ட்காலத்திலுஞ்சரி ஔரங்கசீப் ஆண்டகாலத்திலுஞ்சரி—தர்மனுண்ட காலத்திலுஞ்சரி இப்பொழுது இந்தப் பிரிட்டிஷார் ஆளுங்காலத்திலுஞ்சரி.—சாதாரணச் சட்டமானாலும் ராஜநீதியானாலும் நாட்டு நீதியானாலும்—இல்லை! அராஜகம் மிருக நீதியானாலும் இவற்றிற்காகவெல்லாம் இயற்கை தேவி தனது கொடைக் கரத்தைக் குறைப்பதில்லை. அக்காலத்தில் நமது மூதாதைகளெல்லாம் உவர் மண்ணைக்கொண்டு உடை வெளுத்து வந்தார்கள். இக்காலத்திலோ! நாகரீகம் முற்றிப்பழுத்து ஸன்லைட்.சோப் மூன்-லைட் சோப்பு, கிரோஸன்-லைட் சோப்பு, ஸ்டார்-லைட் சோப்புகளெல்லாம் புதிது புதிதாய் தோன்றிவிட்டன. சோப்பில்லாமல் வேஷ்டி வெள்ளையில்லை என வண்ணான் சொல்லுகிறான். இதற்காக நாம் எவ்வளவு பணத்தைச்செலவுசெய்கிறோம். நமது நாட்டுச் செல்வம் எவ்வளவு கரைந்து போகிறது. சோடா உப்பில்லாமல்—சோப்பில்லாமல்—துணி வெளுக்கும் சாஸ்திரத்தை நமது நாட்டு வண்ணான்கள் மறந்துவிட்டனர். சோடா உப்புக்காக வருடந்தோறும் பிரிட்டனுக்கு கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டிக் கொடுக்கின்றோம். சோப்புக்காக எண்ணற்ற கோடிகளை இறைக்கின்றோம். உப்புக்காக ஏராளமான விலையுங் கொடுக்கின்றோம். நமது நாட்டுக்கு மாத்திரம் கடல் மகள் உப்பை இறைக்காமல் ஓய்ந்து விட்டாளா? நமது நாட்டில் உவர்மண் மறைந்துபோய் விட்டதா? நமது நாட்டில் சோடா உப்பு பொரிபவில்லையா? அறியாமையால் கண்ணை மூடிக்கொண்டு நாம்தான் வீண்விரையஞ் செய்கின்றோம். சும்மா சொன்னால்தெரியாது; ஒப்புக்கொள்ளவும் மாட்டார்கள். புள்ளிவிவரத்தோடு சொல்லுகிறோம்.

	1928-29.	1929-30.	1930-31.
சோடா			
ரூ.	85,71,0,00	121 39,000	1,69,91,000
உப்பு			
ரூ.	1,73,68,000	13,89,000	1,17,79,000
உடை சோப்பு			
ரூ.	1,01,06,000	1,13,60,000	70,94,000
வாசனை சோப்பு			
ரூ.	60,00,000	53,08,000	41,04,000
	4,20,45,000	3,01,96,000	3,99,68,000

டறியும்; நாயுடுமறிவர். விசேஷமாக ஒற்றுமை உபதேசம் செய்ய வந்ததில் நாயுடு ஏதோவோர் சூக்ஷ்ம நோக்கம் கொண்டுள்ளாரென்பது மாத்திரந் தீர்க்கமாய் விளங்குகிறது. இல்லையென்றால் அவரே பதில் சொல்லட்டும்.

"என்னைப்பற்றி என்சிநேகிதர்களைக்கொண்டு ஒரு தீர்மானம் செய்யுங்கள்" என்று நாயுடு சொல்லுகிறார். அதுவும் ஒரு நல்ல சோதனைதான். நாயுடுவின் சிநேகிதர்கள் யார் யாரென்பதை நாமெல்லாம் அறியத்தானே செய்வோம். ஸ்ரீமான் பு. மாணிக்கஞ் செட்டியாரும் ஜனாப் கா. காதிறுசல்தானும், வி. ஐ. டி. சுந்தராஜனும் தான் நாயுடுவின் நண்பர்கள். அவர்களைக் கொண்டு நாயுடுவை நிறுப்பதானால் அவர்களைப்பற்றி நாம்பலகாலும் பிரகடனஞ்செய்துள்ளதிலிருந்தே தீர்மானித்துக்கொள்ளலாம். பச்சைத்தமிழில் சொல்லத்தான் வேண்டுமென்றால் நாயுடுவின் யோக்கியதை விரும்பத்தக்கதில்லை. நமது தேசோபகாரியை நாயுடு விஷமப் பத்திரிகை யென்று பல தடவைகளில் கூறியிருக்கிறார். தப்புச்செய்பவனுக்கு நமது பத்திரிகை விஷமம் செய்யவே செய்யும். நாயுடுவின் விஷமத்தை அவ்வப்போது வெளிப்படுத்துவதால் அவருக்கும்நமதுபத்திரிகைவிஷமப்பத்திரிகைதான் என்பதை கண்டிப்பாய்—தீர்க்கமாய்—துடுக்காய்—அறிவுறுத்துகிறோம்.

ஆண்டிச்சி அரசியல் கைதி.

காந்தியடிகளின் சிரிய ஒழுக்கங்களை, உயரிய கொள்கைகளை, உத்தம குணாதிசயங்களை, பரந்த நோக்கங்களை தெய்வ சக்தியை நன்குணர்ந்து அவரைச் சற்குருவாகக்கொண்டு—அவரது திருநாமத்தைப்பாராயணஞ் செய்பவர்களாய்—அரிய போதனைகளை மனனஞ் செய்பவர்களாய் காலங்கழிப்பவர்கள் பிற நாடுகளிலும் எண்ணிறந்தோர்.

ஆங்கில மகனர் ஆண்ட்ரூஸ் என்ன! கதர் வேந்தர் எல்வின் பாதிரியாரென்ன! ரோமெயின் ரோலண்டுப் பெரியாரென்ன!—விரிக்கில் பெருகும்—எனைப்பல பெரியார்களும் இந்திய ஏழை மக்களின் கஷ்டங்களை அறிந்து அவர்களது அஹிம்ஸைப் போரினிடத்து அனுதாபங்காட்டி வருகின்றனர். மேலும் டாக்டர் பேட்டன்— எல்வின் பாதிரியார் போன்ற பெரியார்கள் தங்கள் வாழ்நாட்களையே இந்திய மக்களுக்காக அர்ப்பணஞ்செய்து அடக்குமுறை இரும்புக் கரங்களின் கொடுஞ்செயல்களுக்கு இலக்காயுமிருக்கின்றார்கள்.

இத்தகைய மகான்களுக்கெல்லாம் நடுநாயகமாய்—இந்தியர்களின் புண்ணியமேஓர்திவ்யப் பெண்ணுருவாய்த் திரண்டு வந்ததென-பாரதத்தேவியின் செந்திருப் புதல்வியென—காந்தியின் உண்மைச் சிஷ்யை மீராபாய் விளங்குகிறார். இவர் சென்ற சத்தியாக்ரக காலத்தில் இந்திய நாடெங்கும் முழக்கிய சங்கநாதம் இன்னும் நம் செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. தற்பொழுதும் அவர் செய்யும் தியாகத்திற்கு யாம் நன்றி பாராட்டுகின்றோம். நம் தேய சரித்திரத்தில் இவரது புகழ்ப்பெயர்—திவ்ய ஜீவிய சரிதை—என்று மழியா நிலையமாய்—குன்றாப் பொக்கிஷமாய் திகழுமென்பதற் கையமில்லை. இவர் இம்மாதம் 16உ நள்ளிரவுக்குள் பம்பாயை விட்டு அகலுமாறு போலீஸ் கமிஷனர் பிறப்பித்த உத்தரவை நிராகரித்ததற்காக 18உ காலை 8 மணிக்கு கைது செய்யப்பட்டு மூன்றுமாத வெறுங்காவல் தண்டனையை புன்னகையுடன் ஏற்றுக்கொண்டார். இனி அவரதுதிவ்ய பிறப்பு வளர்ப்புகளையும் காந்திஜீயின்மேல் ப்ரேமைகொண்ட ரஸமான சம்பவத்தையும் அறியாதவர்களும் அறிந்துகொண்டு அன்பு செலுத்துமாறும் நமது வீர பெண்மணிகளுக்கு எடுத்துக்காட்டாகவும் இங்கே குறிக்கின்றோம்!

மீராபாய். பிரிட்டிஷ் கப்பல் தலைவராயிருந்த அட்மிரல் எட்மண்டு ஸ்லேட் என்பாரின் இரு புத்திரி ரத்னங்களில் ஒருத்தி. இவரது ஆதிப்பெயர் மிஸ். ஸ்லேட். அடிகளின் உண்மைச் சிஷ்யையாக வந்த பிறகே தமது பெயரை மாற்றிக் கொண்டார். இப்பொழுது இவர் நைஷ்டிக பிரம்மச்சாரிணியாக வாழ்ந்து வருகிறார். இவரது சகோதரியார் ஒரு ஸிவிலிய உத்தியோகஸ்தருக்கு வாழ்க்கைப்பட்டு இந்தியாவில் வாழ்ந்து வருகிறார். மீராபாய்க்கு ஒன்று விட்ட சகோதரிகள் இருவர் லண்டனில் நாடகத் தொழிலில் இருந்து வருகின்றனர். அவர்களில் ஒருவரான மேரிஸ்லேட் இவரைப்பற்றி சொன்னதாவது:—"மாதலேன் ஸ்லேட் சிறந்த அழகுடையவள். உத்தம குணங்களுடையவள். எடுத்துக்கொண்ட காரியத்தில் தீவிரமாகவும் ஊக்கமாகவும் உழைக்கும் ஸ்வபாவமுடையவள்."

மாதலேன் இந்தியாவிலேயே பெரிய பிரிட்டிஷ் பணக்காரர்களிடையேயும், உத்தியோகஸ்தர்கள் மத்தியிலும் பழகி செல்வத்திலேயே காலங்கழித்தவர். இவ்வாறு வளர்ந்த இவர் தாம் காந்திஜீயின்மேல் ப்ரேமைகொண்டு, ஓர் ஆண்டிச்சியாக வாழத்தீர்மானங் கொண்டதற்குக் காரணம் தாமே பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

"நான் அந்த நாட்களில்கிஞ்சித்தும் கவலையின்றி ஷோக்கிலும் தமாஷிலுமே பிரியமுடையவளாய் சோம்பேறியாக வாழ்ந்துவந்தேன். லண்டன் பாரீஸ் போன்ற பெரும் பட்டணங்களில் ஆனந்தமாகச் சுற்றிக்கொண்டிருந்தேன். செல்வக் குடும்பத்தில் பிறந்ததனல் இன்ப வாழ்க்கையிலேயே என் நாட்டம் சென்றது. தற்செயலாக ரோமெயின் ரோலண்டுப் பெரியார் எழுதிய "மகாத்மா காந்தி" என்ற புத்தகத்தை படிக்க நேர்ந்தது. படிக்கப் படிக்க பரவசமடைந்தேன். அதுவே என் வாழ்க்கையை மாற்றிய மாய ஜாலம். பிறகே காந்தியடிகளுக்கும் இந்திய மக்களுக்கும் என்வாழ்நாட்களை அர்ப்பணஞ்செய்யத்துணிந்துவிட்டேன்"

எங்கு பார்த்தாலும் ஈட்டியா?

பத்திரிகைத் தொழில் பேராபத்தானது; கத்தியின் கூர்ப்புறத்தில் நடந்து செல்வது போன்றது. ஒரு வரம்பு உண்டு. அதைத் தாண்டி அப்புறம் இப்புறம் சென்றுவிட்டால் அந்தோ! ஒரே ஆபத்து! தலைக்குமேல் மயிரிழையில் தொங்கும் இருபுறமும் கூரான விஷக் கத்தியின்கீழ் இருந்து கொண்டுதான் ஆசிரியன் தனது சக்தியை பேனாவழிச் சொட்டுகிறான். நெஞ்சுத் துடுக்கான ஆசிரியர்கள் நிமிர்ந்து பார்க்காமல் எழுதிவந்தனர். இப்பொழுதோ தலைக்குமேல் மாத்திரமில்லை எப்பக்கம் திரும்பினாலும் ஈட்டிகளால் பாய்ச்சப்படுகிறான். எந்த நிமிஷமும் ஆபத்து. ஈட்டி பின்கூர் இருதயத்தில் புகுந்தாலும் புகலாம்: மருமத்தில்பாய்ந்தாலும்பாயலாம். இவ்வளவையுஞ் சட்டை செய்யாது—எப்பக்கமும் திரும்பிப் பாராமல் வேந்தனானாலும், வெட்டியானானாலும் இவ்வளவு தாட்சண்யங்கூடக் காட்டாது கண்டிக்கும் ஆசிரியனிருக்கின்றானே அவன் உண்மையிலேயே வீரஆசிரியன்தான். தன்னுடைய சர்வ ஸ்வத்தையும் உயிரையுங்கூட பேனா முனையிலே கட்டி வைத்துக்கொண்டு பேனா முனையிலே வீரம் பேசும் அந்த ஆசிரியனுக்கு வீர வணக்கம் செய்வோம்.

அச்சுச்சட்டம்—அவசர அச்சுச் சட்டம்

இங்ஙனம் ஒரு பெரிய தனவந்தனுக்குப் பிறந்த மீருபாய் மகாத்மாவின் சிஷ்யையானவுடன் சொத்து செல்வம் முதலியவைகளை வெறுத்தாள். மகாத்மாஜியின் உயரிய கொள்கைகளில் இதுவு மொன்றல்லவா?

சில மாதங்களுக்கு முன் மீருபாயின் தாயார் விண்ணுலகடைந்தார். அப்பொழுது அவர் தமது சொத்தை தமது இருபெண்களுக்கும் பாகம் செய்து கொடுக்க விரும்பினார். அதுதெரிந்து மீருபாய் தனக்குச் சொத்தில் இம்மியும் வேண்டாமென்றும் அடிகளின்கொள்கைகளுக்கு அது மாறுபட்டதென்றும் தெரிவித்தார். எனவே பதினாயிரம்பவுன் மதிப்புள்ள பெற்றோரது செல்வம்முழுமையும் இவளது சகோதரி மிஸர்ஸ் வர்னன் என்பவருக்கே சேர்ந்தது. மீராபாயின் செயற்கரிய தியாகத்தை யாம் என்றும் புகழ்வோம்—போற்றுவோம்!

"லேடி இர்வின்" எரிந்து போனாள்?

மாஜி வைஸிராய்—லார்டு இர்வின்—அவருடைய காலத்தில் தென்னிந்தியாவில் சுற்றுப் பிரயாணஞ்செய்தபோது திருவாங்கூர் சமஸ்தானத்தில் பெரியாற்றில் ஜலக்கிரீடை செய்வதற்காக வென்றே செய்யப்பட்ட நீராவிப்படகு "லேடி இர்வின்" தீப்பிடித்து முழுதும் எரிந்து சாம்பலாய் நீரில் கரைந்து போயிற்று. ஐயோ! பாவம்! "லேடி இர்வின்" போய் விட்டாள்.

—அவசர அவசர அச்சுச்சட்டம். "அதைப் போடாதே! இதைஎழுதாதே! பேரைச் சொல்லாதே! படத்தைப் போடாதே!" இம்மாதிரியெல்லாம் தொணதொணத்த மாமியார் போலே சர்க்கார் கொலுவிருந்துகொண்டு ஆட்சி செலுத்தினால் ஆசிரியர் என்ன செய்யமுடியும்? பத்திரிகா தர்மத்தைச் செய்யாதே! என்பது சர்க்காரின் மமதையேயொழிய—தன்னுடைய பல பொத்தல்களை—குற்றங்களை—பிறர் கண்ணுக்குக் காட்டாமல் உலைமூடியால் ஊரை மூடியது மாதிரி செய்வதேயன்றி பிறிதில்லையென்போம். புருஷனடித்தால் கொழுநன் காலில் மூட்டிக்கொண்ட நாட்டுப்பெண்போல் நம்மநாட்டு மந்திரி ஸர். கிரிரார் செய்யப்பார்க்கிறார். சட்ட சபையில் விவாதிக்கையில் வெளியில் உச்சரிக்கவும் முடியாத அவ்வளவு ராஜதுவேஷம் பேசினாலும் சட்டம் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் அதே பேச்சை பத்திரிகையில் பிரசுரித்துவிட்டால் ஆசிரியனை ஆபத்தில் புகுத்த, இடமுண்டென்று கிரிரார் கூறுகிறார். இது அவசரச் சட்ட அரசாங்கத்தின் அமுல். வேண்டுமானால் சட்டசபை மந்திரிகளின் வாய்க்கேபூட்டுப்போட்டு விடட்டுமே. பேசியது தப்பில்லை; பிரசுரிக்கறதுதான் தப்பு என்றால் இதை வில்லிங்டன் நியாயம் என்போமா! இல்லை கிரிரார் நியாயமென்போமா? அல்லது குண்டாந்தடி நியாயமென்போமா? எதுவாயிருந்தாலும் எவன் சட்டை செய்யப்போகிறான். பத்திரிகா தர்மம் காசு பணத்திற்கு விற்கக்கூடியதில்லை. உயிரைப் பணயமாக வைத்தும் தர்மத்தைக் காப்பது ஆசிரியன்கடமை. அதைச்செய்பவே செய்வான்.

Printed & Published By A V Sellam Pillay at the Desopakari Press, 210,36th Street Rangoon

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 63 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை

DESOPAKARI

புதன் ஞாயிறு வெளியீடு

210–36-வது வீதி இரங்கோன், (24–2–32) மாசி மீ 12௳ புதன்கிழமை.

எண்டி பாட்டி மஞ்சள் குளித்தாய்?

நமது பாட்டியொரு கிழம். வயது காலத்தில் வாலிபர்களை மயக்கும் அழகு அவளிடத்திலிருந்தது. நன்றாய் மஞ்சள் குளித்து மேனி மினுக்குவதில் அவளுக்குச் சரிநிகர் சமானம் வேறு யாருமே கிடையாது. இப்பொழுதில்லை. மயிர் வெளுத்து முகம் திரைந்து தோலும் தொங்கலுமாயிருக்கிறாள். அவளிருந்த ஸ்தானத்திலே மகளும், மருமகளும் பேத்திப் பெண்களுமிருக்கிறார்கள். ஒரு நாள் ஸ்நான அறைக்கு பாட்டி போனாள். குளிக்கும் போதே என்ன நினைத்துக்கொண்டாளோ பாவம் அங்கிருந்த மஞ்சளைத் தேய்த்துக்கொண்டாள். பேரப்பையன் சிறிது கிண்டல்காரன்: பாட்டியென்றால் கொஞ்சம் கோட்டாப் பண்ணிவிட்டால் அவனுக்குக் கண்ணடையாது. மஞ்சள், முகத்தோடு வந்த பாட்டியைப் பார்த்துதான் "எண்டி பாட்டி மஞ்சள் குளித்தாய்?" என்று கிண்டலாய்க் கேட்டுவிட்டான். பாட்டியும் நாணும் உதிர்த்தவள்: வெட்கம் மானமென்பதெல்லாம் போய்விட்டது. அவள் சற்று சாவதானமாகச் சொல்லுகிறாள் "பழைய நினைப்படா! பேராண்டி!"

அந்த மாதிரிதான் நமது கிழ வில்லிங்டன்—ஏரோப்ளேன் வைஸ்ராய் செய்கிறார். சென்னை கவர்னராக ஷோக் வில்லிங்டன் இருந்த காலத்தில் மாப்பிளைக் கைதிகளை ஈவு இரக்கமில்லாமல்—நெஞ்சில் துளி ஈரமில்லாமல் நடத்தியதை நாமறிவோம். பதினாயிரக் கணக்கானோரை ஆடு மாடுகளைத் தளைந்து தாவணியிலடிப்பதுபோல சங்கிலிகளில் கட்டி இரவு பகலாய் சித்திரவதை செய்தான். அதனால் மாப்பிளைகள் சிறிது தளர்ச்சி யெய்தி சித்திரவதை சகிக்கமாட்டாமல் நிர்ப்பந்தத்துக்குள்ளானார்கள். ஒருவாறு சிறை விதிகளை ஒப்புக்கொண்டு நடக்கலாயினர், அதேபோல் சத்தியாக்கிரஹக் கைதிகளையும் நடத்தினால் சிறை பயமேற்பட்டு சட்ட மறுப்புத் தளர்ந்து விடுமென்று நினைத்தோ அல்லது வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் நோக்கத்துடனோ அலகபாத்து ஜில்லா சிறையில் இரவில் சங்கிலியால்கட்டி வெளியில் போடுகிறார்கள். இக்கொடுமை மன்னிக்க முடியாதது; பொறுக்கலாற்றாதது.

அலகபாத்து ஜில்லா சிறை சிறிது. 900 கைதிகளுக்குத்தான் இடமுண்டு. அதற்கு மேற்பட்ட பேர்களை யடைப்பதென்றால் கல்கத்தா இருட்டறை என்கிறார்களே அதே போன்றேற்பட்டுவிடும். அதனால் மனிதச்செயல் போய் மிருகச்செயலைச் செய்கிறான் என்று சொல்ல நேரும். மனித வர்க்கத்தில் உயர்வு தாழ்வு கிடையாது. அதிலும் மகரிஷி கிறிஸ்துவைப் பின்பற்றும் கிறிஸ்தவ வில்லிங்டன் கிறிஸ்துவுக்கு முன்னிருந்த காட்டுமிராண்டிகள்—மிலேச்சர்கள் — வனமக்கள் — செய்த கொடுஞ்செயல் செய்தவனாகிறான்.

சுமார் 1300 கைதிகள் பிரஸ்தாப சிறையிலிருக்கிறார்கள். அவர்களில் 900 பேர் போக மீதி 400 பேரை கேவலம் ஆடு மாடுகளைப் போல் காலில் சங்கிலியால் கட்டிப்போடுகிறார்கள். என்ன அநியாயம்!" எவ்வளவு [illegible]மம்! "உன்னிடத்தில் பிறர் எவ்வாறு நடக்க

அட! ஆகாசப் புளுகா!

நம்து நாய்க்கன் சப்பையாவைப்போல் நாம் பொய்சொல்லக் கற்றதில்லை; தெரியவும் தெரியாது. தர்க்க பூர்வமாயில்லாமல் வெறுமனே ஒன்றுமின்றுமென எழுதவும் நமக்குப் பாடமில்லை. உண்மையை நேர்மையுடன் கூறுவதிலும், தப்புச் செய்பவனை சபையில் நிறுத்துவதிலும் நாம் கண்ணிமைக்கமாட்டோம்! முன் பின்னெண்ணமாட்டோம். எவனுடைய தயவு தாக்ஷண்யமும் நமக்கு வேண்டாம். நமது எழுத்தில் ரஸமுண்டானால்—நமது பத்திரிகையில் ருசியிருக்குமானால்—நமது லட்சியத்தில் நேர்மையும் புனிதத்துவமும் இருக்குமானால் நம்மில் தேசிய நோக்கமும் கொள்கையுமுண்டானால் வாசகர்கள் "தேசோபகாரி"யை யாதரிக்கட்டும். இல்லையேல் புறக்கணிக்கட்டும்; வாங்கி வாசிக்காதிருக்கட்டும்; வாசகர்களின் கவனத்தையோ, நல்லெண்ணத்தையோ, ஆதரவையோ நாம் பொய்ச்சொல்லி காக்காய்பிடித்துப் பெற விரும்பவில்லை; வேண்டவும் வேண்டாம். அப்படியும் ஒரு பத்திரிகை உயிர் வாழ்வதைவிட சாகட்டும்; அதுவே சரி.

"வழிய"வின் நாள் வாழ்க்கையிலேயே அதன் வளர்ச்சி அதிகரித்து விட்டதாமே அதன் காரணமாய் வாரம் வந்தவன் நாள் தோறும் வருகிறானாமே அதிக ஆதரவும் அதிக [illegible] கிடைக்கின்றதாமே அதனால் காலனுக்கு வழியம் செய்கிறானாமே அட! ஆகாசப் புளுகா! அண்டப்புளுக! உன்னுடைய கொள்கையில் ஜனங்கள் மயங்கிவிட்டார்களா? இல்லை. உனது வாக்கத்தில், தடிக்கில், நேர்மையில் பொதுஜன ஆதரவைப்பெற்று விட்டாயா? வாசகர்கு ஒன்றில்லை பத்துக்கொடுத்த போதிலும் உனது உதவாக் கறைப்பத்திரிகையை யாதரிக்க தமிழ் மக்கள் பகுத்தறியும் பான்மை யற்றவர்களில்லை. நமது "தேசோபகாரி"யை தமிழ் வாசகர்கள் வாங்கி யாதரிப்பதையும், "வழியனை" யாதரிப்பதையும் அதனதன் விற்பனையை பொதுஜனங்களில் நடுநிலைமையிப்போர் சோதித்தறிந்து கொள்ளலாம். இல்லையென்றால் தெருவில் பத்திரிகை விற்பவர்களையோ அல்லது புத்தகவியாபாரிகளையோ கேட்டால் உண்மை விளங்கி விடும். இதைச்செய்து நமது நேர்மையையும் நாயுடுவின் பொய்மையையும் அறிந்து கொள்ளல் நலம். நமது "தேசோபகாரி"யின் ஏழ்மையை இடித்துக் கூறுகிறான் நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். நாயுடுவும் அவன் போன்றோரும் "தேசோபகாரி"யின் ஆயிரக்கணக்கான ரூபாய்களை வஞ்சித்து அபகரித்துக் கொண்டதால் தான் 'தேசோபகாரி" ஏழ்மை நிலை யெய்த வேண்டியதாயிற்றே யொழிய பொது ஜனங்களின் ஆதரவு கிடைக்காமலில்லை. நாயுடு வசூலித்து வாயில் கொட்டிக்கொண்ட ரூபாய்களுக்கு நாங்கள் எங்களது "தேசோபகாரி"யை யனுப்பியே வருகிறோம். வேண்டுமானால் நாயுடு தமது தலைமீது பூவைப்போட்டுக்கொண்டு சத்தியபூர்வமாய் நமது குறைகளைச் சொல்லட்டும். ஊரார் அவர் யோக்கியதையையும் நமது அந்தஸ்தையும் நியாயந்தீர்க்கட்டும். நாமும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வேண்டுமென்று விரும்புகிறாயா அவ்வாறே நீயும் பிறரிடத்தில் நடந்துகொள்" என்று சொன்ன இயேசு மகானின் மலைப்பிரசங்கத்தைப் படித்த கிறிஸ்தவ அரசாங்கத்தின் அரசியல் நீதி யிதுதானா! சிறைச்சாலையில் இடமில்லாவிட்டால் வைஸ்ராய்க்காக புதிய தில்லியில் கட்டப்பட்டிருக்கும் அரண்மனையைக் காலி செய்து அதில் அடைக்கலாம். ஒரு தனி மனிதனின் சௌகரியத்தைவிட பல நூறாயிரக்கணக்கான ஜனங்கள் பனியிலும் வாடையிலும் சங்கிலியால் கட்டுண்டு வருந்துவது கூடாது. நாம் ஜீவகாருண்யத்தால் சொல்லுகிறோம். இதில் இம்மியும் அரசியல் இல்லை. வைஸ்ராயோ கவர்னரோ சிறு கூரைக்குடிசைகளில் குடியிருந்துகொண்டும் பெருமிதமான நிர்பாக்கிய கைதிகளுக்குக் கூடுமானவரை வசதி செய்து கொடுக்க வேண்டும். அதுவும் இஷ்டமில்லாவிட்டால் தங்களது சொந்த சுகபோகத்தை யிழக்கப் பிரியமில்லாவிடின் பறிமுதல் செய்திருக்கும் காங்கிரஸ் கட்டிடங்களை சுயராஜ்யபவனம் போன்ற மாளிகைகளில் அடைத்து வைக்கட்டும். அதைவிடுத்து ஈவு இரக்க சிறையைவிட்டு விடுதலை செய்யப்பட்டாலொழிய அதன் தணிக்கதவுகளையும் விலக்கிக்கொண்டு வெளிவரவும் செய்யார் அவ்வாறிருக்கசங்கிலியால் கட்டிப்போடுவது அடாத செயலேயாகும். பழைய நினைவுகளை வில்லிங்டன் மறந்து மனித ஸ்வபாவத்தில் நாடகத்தை நடத்துவதே நலம். இல்லாவிட்டால் சத்தியாக்கிரஹிகளிடத்தில் மிகுந்த அனுதாபம் கொண்டுள்ள எல்லா இந்தியர்களின் அதிருப்தியையடைவது திண்ணம்.

சாயாத பிரிட்டன் ஜம்பம்.

: பெர்னாட் ஹௌட்டன்.

ஸர். ஸாமுவேல் ஹோரின் சமீபகாலப் பேச்சுக்கள் இந்தியாவைப்பற்றிய பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கைகளை ஸ்பஷ்டமாக வெளிப்படுத்திவிட்டது. தொழில் கட்சியினராகட்டும், லிபரல் கட்சியினராகட்டும் மற்றெந்தக் கட்சியினராலும் இந்தியாவை எவ்விதத்திலாவது அடக்கி ஆளுவதற்கான ஒவ்வொரு நூதன உபாயங்களை நிர்மாணம் செய்கிறார்களே ஒழிய பொறுப்பாட்சி பூர்ண சுதந்தரம் இந்தியாவுக்குக் கொடுப்பதாகக் காணோம். அரசியல் சீர்திருத்தம் பொறுப்பாட்சி வழங்குதல் என்று பேச்சளவிலே—பெயரளவிலேயே சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் வைஸ்ராய்க்கு அளவுகடந்த ஆதிக்கியத்தைக் கொடுக்கும் சீர்திருத்தம் பிரயோஜனப்படுமா? ஸர் ஸாமுவேல் ஹோர் உண்மையில் மத்தியப் பொறுப்பாட்சியின் சாயலையேனும் இந்தியர்களுக்குக் காட்ட விரும்பவில்லை. அரசியல் சீர்திருத்தம்—முன்னேற்றம் என்பதெல்லாம் சொல்லளவிலே தான். ஏனெனில் முன்னேற்றம் என்ற பதம் இவ்வளவுதான் என்று நிர்ணயிக்கத்தக்கதில்லை. எவ்வளவும் செய்யலாம். ஒன்றும் செய்யாமலுமிருக்கலாமல்லவா? அரசியலில் மாறுதல் என்பது பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் பேச்சில் அல்லது தந்திர யுக்தியிலேதான் மாறுதலே ஒழிய பிறிதொன்றில்லை.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தாரின் இந்தக் கொள்கைகளுக்கு பர்மாவை ஓர் எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். சென்ற வருடம் சத்தியாக்கிரஹ இயக்கம் நாடெங்கும் நீர்த்துளி செந்துளியாக எழுச்சி பெற்றிருந்தது. இயக்கம் மிக வலிவடைந்திருந்ததால் இந்தியா எங்கு தானே தன்னை ஏகாதிபத்தியத்தினின்று விடுவித்துக்கொண்டு, வெள்ளையர்களின் பாங்கிகளும், கம்பெனிகளும் பாதிக்கப்பட்டு விடுமோ எனத் திகிலடைந்தது. இதனால் பர்மாவிலுள்ள கம்பெனி வெள்ளையர்கள் அப்பொழுது இங்கிலாந்திலிருந்த ஸர் சார்லஸ் இன்னஸின் மூலம் பர்மாவையாவது காப்பாற்றிக் கொள்ளுதற்கான முஸ்தீபுகளை அதாவது பர்மாப் பிரிவினையை வற்புறுத்தும்படி வேண்டிக்கொண்டார்கள். ஆங்கில மந்திரிகளும் ஆவலுடன் இதை ஆமோதித்தார்கள்.

வந்தது தில்லி ஒப்பந்தம், சட்டமறுப்பியக்கமும் நிறுத்தப்பட்டது. சில மாதங்களில் சர்க்காரும் இழந்த தைரியத்தைப் பெற்றார்கள். ஸர் சாமுவேல் ஹோரும் இந்திய மந்திரிஸ்தானத்திற்குள் நுழைந்தார். "இந்தியாவை அடக்குவதா கஷ்டம்! ஹாய்! ஹாய்! இந்தியாவை இழப்பேனா" என்று உறுமினார். தந்திரத்தினாலானாலும் தண்டத்தினாலானாலும் இந்தியாவை ஆளுவதாக நிச்சயித்தார். ஆகவே இவருக்கு பர்மா பிரிவினையைப்பற்றி அக்கறையில்லை. நாளை நவம்பர் மாதத் தேர்தலில் பர்மியர்கள் பிரிவினைச் செடியை வேருடன் களைந்து விடுவார்களென்று ஊகிக்கப்படுகிறது.

நிற்க ஸர் ஸாமுவேல் ஹோரின் பேச்சுகளை ஆராய்ந்தால் வட்டமேஜை முடிவுக்குப் பிறகு காந்திஜி இந்தியாவுக்குப்போனபின் சர்க்காருடன் ஒத்துழைக்கவேண்டுமென கேட்டுக்கொண்டிருக்கிறார். பின்னர் ஏன் இந்தியாவில் காலடி வைத்ததும் அடிகள் கைது செய்யப்பட்டனரோ தெரியவில்லை.

ஸர் ஸாமுவேல்விவேகத்துடன்இங்ஙனம் செய்தாரா எனே நாம் கவனிக்கத் தேவையில்லை. பிரிட்டனின் உண்மைத் தோழர்களான இந்திய லிபரல் கட்சியாரும், சர்க்கார் அடக்கு முறைகளைக் கண்டிக்க வேண்டியதாயிற்று. இந்தக் கண்டனங்களும் லங்காஷயர் துணிகளின் தீவிர பஹிஷ்காரமும் இந்திய மந்திரியின் மனதைக் கலக்கியிருக்கிறதுபோலும். அவர் கமிட்டிகளில் காலிஸ்தானங்களை நிரப்புமாறு முடிவாக வேண்டிக்கொள்ளுகிறார். ஒருக்கால் காங்கிரஸார் திரும்பவும் தில்லி ஒப்பந்தத்திற்கு வருவார்களென அவர் எதிர்பார்க்கிறாரா! பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சூழ்ச்சி வலையில் திரும்பக் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கிறாரா? ஆ! புனித காங்கிரஸே! இந்திய மக்களே! இந்திய நாட்டை அடிமைப்படுத்தி—பங்கப்படுத்தி வைக்கவென்று—ஸர். ஸாமுவேல் ஹோர் உங்களை ஏமாற்றுவதற்காகக் கொடுக்க முன்வரும் அரசியல் மாறுதலென்ற சிறிய பேரீச்சம் பழத்திற்கு ஆசைப்பட்டு சுதந்தரம் என்ற தேவாமிர்தத்தை இழக்கப் போகிறீர்களா?

அந்தர தர்பார்.

சில ஆண்டுகளுக்குமுன் இந்தியாவின்மேல் படையெடுத்து வந்த கொள்ளைக்கூட்டத்தலைவர்கள் செங்கோலாசனத்தை வீழ்த்தி மூர்க்க அரசாங்கம் நடத்திக்கொலுவிலமர்ந்து வழக்கு விசாரணைசெய்த காலங்களில் வாதிகள் பட்சம் 25 கேஸ், பிரதிவாதிகள் பட்சம் 25 கேஸ் எஞ்சிய 50 கேஸ் சாட்சிகள் பட்சம் என்று விசாரணைக்கு வந்த நூறு வழக்குகளில் ஒரே மூச்சில் தீர்ப்புக்கூறிய விநோத அரசர்களைப் பற்றி இந்திய மக்களாகிய நாம் கண்டதுண்டு—கேட்டதுண்டு ஆனால் பிரிட்டிஷார் நியாயம் இத்தகைய நிலைமைக்கு வந்துவிடாது என்று நினைத்தோம். இப்பொழுது இந்த அரசாங்கத்தின் நியாயாதிபதிகளின் தர்பார்களும் அந்தரதர்பாராகத்தான் காணப்படுகின்றது.

சென்ற சத்தியாக்கிரகத்தில் சிறைகொள்ளக் கூடாதவண்ணம்—சர்க்காரும் பிரமிக்கும்படி எதிர் பாராத அவ்வளவுபேர் சிறை புகுந்தார்கள். சிறைக்கூடங்களில் இடமில்லை. மற்றோ ஜமீன்தார்களும்—லாயர்களும், சட்டசபை மெம்பர்களும்—முடிசூடா மன்னனாகிய பண்டித மோதிலால் நேரு போன்ற பெரியார்களும் சிறைக்கூடம் ஏகினர். சர்க்காருக்குப் பீதி உண்டாகிவிட்டது. குற்றக் கைதிகளுடன் இவர்களையும் சேர்த்து வைப்பது நகைக்கிடமென்று அவர்கள் நெஞ்சே அவர்களைச் சுட்டது. சுடத்தானே செய்யும். மனதில் இல்லாவிட்டாலும் பாசாங்கிலாவது இந்தப்பெரிய சத்தியாக்கிரஹத் தலைவர்களுக்கு மரியாதை காட்டுவதாக ஊராருக்கு ஒப்படைக்க வேண்டாமா? ஏ. பி. ஸி. என சிறையில் மூன்று வகுப்புப் பிரித்தார்கள். ஏ வகுப்பை உயரிய அந்தஸ்தையும், சிறந்த வாழ்க்கையையும் நடத்துபவர்களுக்கும், பி வகுப்பு மத்திய தரத்தவர்களுக்கும், சாதாரண வாழ்க்கையும் அந்தஸ்துமுடையவர்களுக்கு ஸி வகுப்பென்றும் வகுத்தார்கள்—இதற்காக ஜெயில் சீர்திருத்த சட்டங்களும் புகுத்தப்பட்டன. அந்த சட்டப்படி கைது செய்யப்பட்டவர்கள் அவரவர்கள் அந்தஸ்துக்குத் தகுந்தவாறு ஏ வகுப்பிலோ பி வகுப்பிலோ ஸி வகுப்பிலோ விசாரணைக்கு முன்னும் பின்னும் வைக்கப்படவேண்டும். மாஜிஸ்திரேட் தகுந்த மூகாந்தரத்தினால் கைது செய்யப்பட்ட நபரின் அந்தஸ்தை நிர்ணயித்து, அவசரமானால் தந்தி மூலமாகவேனும் அறிந்து ஏ. பி. ஸி. வகுப்புகளைப் பிரிக்கவேண்டியது அவரது கடமையாகும். ஆனால் இப்பொழுது இந்த சட்டம் மலையேறிவிட்டது போலும். முன் சொன்ன மூர்க்க நியாயமே நடக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட நபரின் அந்தஸ்தைப் பற்றிப் போலீசார் என்ன கூறுகிறார்களோ அதைக்கொண்டுதான் எதிரிக்கு ஏ. பி. ஸி. எனத் தீர்மானிக்கப்படுகிறது. சத்தியாக்கிரஹ கைதிக்கும், போலீஸாருக்கும் பொதுவாக அவர் செய்தது நியாய அநியாயமென நடுநிலைமையுடன் பாரபட்சமின்றி நியாயம் கூறவேண்டியது மாஜிஸ்திரேட்டின் கடமை என்பதை அவர் மறந்துவிடுகிறார். போலீஸாரது ரிப்போர்ட்டைக் கொண்டு அதாவது ஒரு கட்சியினரின் சொல்லைக்கொண்டு எதிர்க்கட்சியினரின் அந்தஸ்தை நியாயாதிபதி நிர்ணயிப்பதென்றால் அது ஒருதலைப்பக்ஷத் தீர்ப்பேயன்றி நடுநிலைமையாகாது. இப்படி போலீஸார் ரிப்போர்ட்டைக் கொண்டு ஒருவரது அந்தஸ்தை தீர்மானிப்பதினால் என்ன நேர்ந்தது. ஒரு ஜமீன்தார் ஸி வகுப்பிலும் அவரது குமாஸ்தா ஏ வகுப்பிலும் போடப்பட்டார்கள். எத்தனைக் கேவலம்! மேன்மைக் குடும்பத்தார்கள்—உயரிய அந்தஸ்தை உடையவர்கள் ஸி வகுப்பில் போடப்படுகிறார்கள். எனவே இனி சென்ற ஜெயில் சீர்திருத்தச்சட்டம் மலையேறிவிட்டதெனத் தீர்மானிக்கலாமா! இல்லையேல் சர்க்கார் தங்களிஷ்டப்படி அந்தரதர்பார்தான் நடத்துகிறார்களா? எனக் கேட்கின்றோம்.

உண்மையைக் கூறுங்கால் சத்தியாக்கிரஹிகள் போக்கிரிகளானாலும் வெட்டியார்களானாலும் சகோதரப் பான்மையையே கொண்டாடுகிறார்கள். தொண்டர்கள் சிறையில் எத்தகைய வித்தியாசமும் தங்களுக்குள் விரும்புகிறதில்லை. பின்னர் ஏன் ஏ. பி. ஸி. என்று மூன்று பிரிவினை செய்து சர்க்கார் புளி பண்ணுகிறார்களோ தெரியவில்லை. இனியேனும் சர்க்கார் எத்தகைய கைதியையும் ஒன்று போலவே நடத்துவார்களா?

தேசோபகாரி.

வருஷம் 1க்கு	...	ரூ.	3	0	0
ஆறு மாதம்	...	ரூ.	1	8	0
வெளியூருக்கு வருட சந்தா		ரூ.	4	8	0

குய்யோ!! முறையோ!!!

ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள் தங்கள் விஷமத்தனத்தை விடுகிறதேயில்லை; தங்கள் புத்திக்கிணங்கப் பத்திரிகா தர்மத்தையும் மறந்து—ராஜீய ஞான சூன்யர்போல் பிதற்றித் திரிகின்றன. இந்தியன் டைம்ஸ் பத்திரிகையில் "காங்கிரஸ் கொடுமை" என்று தலைப்பிட்டு விடுத்துள்ள கட்டுரையில் பின் வருமாறு காங்கிரஸாரைக் குறைகூறியிருக்கிறது.

"சட்டமறுப்பியக்கம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் ஆமதாபாத் குஜராத் காங்கிரஸ் கமிட்டியார் கடுமையான பகிஷ்கார தீர்மானங்களை நிர்மாணம் செய்து, அன்னிய நாட்டு மிஷின்களையும் சாமான்களையும் ஆர்டர் கொடுத்த மில்காரர்கள் டெலிவரி எடுக்கக்கூடாதென்று பயமுறுத்தி இருப்பதனால் 37 லக்ஷ ரூபாய் பெறுமானமுள்ள நெசவாலை யந்திரங்களை வரவழைத்துள்ள ஆங்கிலக் கம்பெனியார்களுக்கு பெருத்த நஷ்டமும் மனக்கலக்கமும் ஏற்பட்டிருக்கிறதாம். ஆமதாபாத் ஆலைக்காரர்களும் காங்கிரஸாருடன் சேர்ந்து 7 லக்ஷ ரூபாய் ஆர்டர்களை ரத்துசெய்துவிட்டனராம். இதர மில்காரர்களும் பகிஷ்காரத்திற்குப் பயந்து மிஷின்களை வாங்க அஞ்சுகிறார்களாம். அடக்கு முறைகளையும் மீறிய காங்கிரஸாரின் கொடுமைகளை அடக்க சர்க்கார் யாதொரு நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளவில்லை என்றும் காங்கிரஸ் தலைவர்களெல்லோரும் சிறை செய்யப்பட்டாலும் எஞ்சிய காங்கிரஸாரையும் அடைக்கும்வரை இந்தக் கொடுமைகள் அடங்கா" என்றும் குய்யோ முறையோ என அப்பத்திரிகை கூக்குரலிடுகின்றது.

வாசகர்களே! உண்மையாக காங்கிரஸ் அறிக்கையைக் கவனித்தால் சத்தியாக்கிரஹப் போர் நடக்கும்வரைதான் மிஷின்களும், அந்நியச் சாமான்களும் பகிஷ்கரிக்கப்படுமென்றும் அதற்கு இணக்கப் பான்மையில் ஆலைக்காரர்கள் உதவிபுரியவேண்டுமென்றுமே கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் டைம்ஸ் கட்டுரைக்காரர் ஆலைக்காரர்களைப்பற்றி பேசும்பொழுது காங்கிரஸாருடன் ஆலைக்காரர்களும் சேர்ந்து கொண்டுதான் இவ்வாறு ஆர்டர்களை ரத்து செய்திருக்கிறார்களென ஒப்புக்கொண்டு மற்றொரு இடத்தில் காங்கிரஸாரின் கொடுமை பொறுக்கமுடியவில்லை என்று வாயிலடித்துக் கொள்ளுகிறார். இவருக்கு யாம் என்ன சொல்வது. "உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கக் கூடாது" என்பதும் "செய்நன்றி மறவாதே" என்பதும் இவர்கள் நீதி நூல்களில் இல்லை போலும்.

இவருடைய ஒப்பாரியை நாம் கவனிக்கும்பொழுது இரத்தம் உரிஞ்சும் ஓர் உண்ணி சேற்றில் உழும் மாட்டைப் பார்த்து "ஏ! மாடே! நீ உழுவது எனக்குப் பிடிக்கவில்லை. மிக்க கஷ்டமாயிருக்கிறது. நீ எனக்குத் தொந்தரவு கொடுக்கிறாயே! இது கொடுமையல்லவா? நான் உன் இரத்தத்தை உரிஞ்ச முடியாமல் தவிக்கிறேனே. என் நாக்குத் தள்ளுகிறதே. உன்னை சிறையில் மாட்டும் சர்க்கார் இல்லையா?" என்று முறையிட்டுக் கொண்ட மாதிரி இருக்கிறது. டைம்ஸ் கட்டுரைக்காரர் இந்த உண்ணியின் செயலை நியாயமென ஒப்புக்கொள்ளுகிறாரா?

ரோஷமில்லையா?

அஹிம்ஸை என்னும் உருக்கு இரும்பைக்கொண்டு அன்பெனும் உலையிற் காய்ச்சி வளர்க்கப்பட்டது சத்தியாக்கிரஹம் என்னும் ஆயுதமாகும். சத்தியாக்கிரஹ அஸ்திரத்தை சீரிய வழியில், பிரயோகிக்க வல்லவன் உத்தம சத்தியாக்கிரஹி ஆவான். காந்தி அடிகள் இந்த உயரிய ஆயுதத்தைப்பற்றிப் பேசும்பொழுது "சத்தியாக்கிரஹம் எளியவர் ஆயுதமல்ல. எதிரியைக் கண்டவிடத்து தடியைத் தூக்குபவனும், துப்பாக்கிகளைப் பிடிப்பவனும், கோழைகளேயாவர். அன்பெனும் சத்தியாக்கிரஹ ஆயுதத்தை எத்தகைய எதிரியின்பாலும் செலுத்துவதற்கு மனவலிமையுடைய, பொறுமையுடைய சாந்தமூர்த்திகளே வேண்டும்" எனத் தெரிவிக்கிறார். எனவே சத்தியாக்கிரஹத்தொண்டர்களின் மேன்மையை நாம் அளவிட்டுச் சொல்லுதற்கியலுமா? சத்தியாக்கிரஹத்தைப் போற்றுக—அதன் அபார சக்தியை உணராத அரசாங்கம் பிரிட்டிஷ் அரசாங்கத்தைத் தவிர வேறெதுவுமில்லை.

சாப்தீகத் தொண்டர்களை சர்க்கார் ராஜத்துவேஷிகள் என விபரீதமாக எண்ணுவாரானால் சிறை செய்யட்டுமே! கைது செய்தால் சத்தியாக்கிரஹிகள் சற்றும் சலிப்புக் காட்டுகிறோமா? சிறை புகுவதற்குப்பின் வாங்

கின்றோமா? குதூகலமாக தவச்சாலைபுகும் உத்தம சீடன்போல் ஏற்றுக்கொள்ளுகிறோம், இப்படியிருக்கக் கேவலம் சாமான்யக் குற்றவாளிகளைப்போல்—மகாதேவ தேசாய் போன்ற பெரியார்களையும் தினசரி போலீஸில் ஆஜர் கொடுக்கவேண்டுமென்றால் எத்துணை இழிவான காரியம். ஆனால் ஒரு தாலியறுத்த சர்க்காருக்கு—தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடாத பாவிகளுக்கு—சிறைக்குள் படமெடுத்து சீறிவந்த நாகசர்ப்பத்தினின்று தெய்வாதீனமாகத் தப்பிய தன் புருஷனைக் காணவந்த பத்தினிக்கு அநுமதியளிக்காத அறிவிலிகளுக்கு—சட்டிமுட்டி தூக்கிய சண்டாளர்களுக்கு—இது இழிவென்று எவ்வாறு தோன்றும்—விநாசகாலே விபரீத புத்தியன்றோ! எனினும் இவ்வியாபார அரசாங்கத்தாருக்கு நாம் அறிவிப்பது ஒன்றுண்டு. சத்தியாக்கிரஹிகள் சத்தியாக்கிரஹத்திற்கு மயிரிழை பிசகாது நடப்பார்களே ஒழிய தாங்கள் கண்ணியத்துக்குக் கௌரவத்திற்கு ஆண்மைக்கு ஏற்புக்குப் பங்கம் விளைவிக்கிற செயலை--உத்தரவைமீறியே தீருவார்கள்—நிராகரிப்பார்கள். உதாரணமாக போலீஸில் ஆஜராகும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்ட எந்தத்தொண்டன்—எந்த சத்தியாக்கிரஹி இதுவரை ஆஜர் கொடுத்திருக்கிறான். விரலை மடக்கட்டும்.

சென்ற சத்தியாக்கிரஹத்தில் பல பெண் தொண்டர்களுடன் கண்காணு இடத்திற்கு அபகரித்துச் செல்லப்பட்டதாக சார்ஜண்டின் மேல் வழக்குத்தொடுத்த சிறுமி இத்தகைய ஆஜர் உத்தரவை மீறியதற்காக 8 மாதக் கடுங்காவலும் 50 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்ட பொழுது "சுயமரியாதையுள்ள எந்தஸ்திரீயும் போலீஸில் ஆஜர் ஆவதற்கு ஒப்புக்கொள்ளமாட்டாள்" என்றும் 'இன்னொரு தொண்டர் "நான் போலீஸில் ஆஜராவதற்கு ஒரு கள்வனல்ல' என்று தெரிவித்ததும் மற்றொருவர் "என்னிடம் ஒன்றும் கேட்கவேண்டாம்" என்று தெரிவித்ததும் எவ்வளவு உண்மைக[illegible]ற்று என்பதை மாஜிஸ்ரேட் தெரிந்துகொண்டாரா? இவ்வளவு அவமான மடைந்தும் இன்னும் அம்மாதிரி உத்தரவுப்படி தொண்டர்களைக் கட்டுப்படுத்துவதின் அர்த்தமென்ன? அப்படியானால் மாஜிஸ்திரேட்டுகளுக்கு ரோஷமில்லையா?

புள்ளிக்கணக்கு பொய்சொல்லாது.

"காங்கிரஸ் இயக்கம் தொலைந்தது! ஒழிந்தது" என்று சர்க்கார் கனவுகண்டு கவிலையிலே ஒருத்தனும் கன்னியாகுமரியிலேயே ஒருத்தனுமாக இருந்து கொண்டு பஜனைகள் கேட்டினால் நாமும் நமது கால். செவியையே காட்டுவோம். இந்தப் பள்ளிப்பிள்ளைகளின் புள்ளிக்கு உதவாப் பேச்சு நமக்குத் தேவையில்லை. இதோ புள்ளி விவரத்துடன் மூன்று வருடக் கணக்கை இந்திய வர்த்தக ஸீனியர் கமிஷனர் உள்ளதை உள்ளபடி தெரிவித்திருக்கிறார். யாருக்குத் தோல்வி வெற்றி என்பதை அவருடைய கணக்கு நன்கு விளக்கும்.

கீழ்வரும் கணக்கைத்தரும் கமிஷனர் தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்போது "சென்ற வருட சட்ட மறுப்பு இயக்க பகிஷ்காரத்தினால் ஆங்கிலப் பலவகை வர்த்தகர்களும் தாங்களடைந்த நஷ்டத்திலிருந்து மீண்டு எழுவதற்கு அநேக வருஷங்கள் வேண்டும். இனி இந்தியாவுடன் சிநேகபான்மையுடன் வியாபாரம் செய்யாதபோனால் பிரிட்டன் தலைதூக்க முடியாது. ஏனெனில் நம் சாமான்களுக்கெல்லாம் அதுவே சிறந்த மார்க்கட்டாகும்." என்று உண்மையைக் கூறியுள்ளார் இனி அவரது புள்ளி விவரமாவது.

இறக்குமதி (இலட்சம் ராத்தல்களில்

	1929	1930	1931
கோதுமை	1120	1050	1090
மாட்டுக்கறி	130	130	130
சர்க்கரை	420	380	370
ஏற்றுமதி லட்சக்கணக்கில்			
நிலக்கரிடன்கள்	600	5:0	430
இரும்பு ஸ்டீல் ,,	440	320	200
பருத்தி சாக்குகள் கஜங்கள்	36720	24070	17160
கம்பளி ,,	1030	790	560

இவைதவிர கப்பலேற்றுமதி முதலியவைகளை அளவிட முடியாத ஏற்றுமதி வகையறாக்களில 1930 வருஷத்தில் 105 மில்லியன் பவுன்கள்—1931 வருஷத்தில் 80 மில்லியன் பவுன்களாக குறைந்துபோயிற்று.

இனியாவது சர்க்காருக்கு புத்தி வருமா? காங்கிரஸின் பலத்தை அறிந்து கொள்வார்களா? புள்ளிக்கணக்குப் பொய் சொல்லாது என்பதைத் தெரிந்து கொண்டார்களா?

மகாத்மாவின் அருந்தவம்.

ஹே! மகாத்மா! அன்பே உருவாய்ச் சமைந்த ஆத்ம ஜோதியே! ஏழைகள் இனிதே வாழ எரவாடா சிறைபுகுந்த சாந்தமூர்த்தி! ஏ! சுதந்தரவீர! எங்கள் பொருட்டு காய்கிழங்கருந்திகடுந்தவம்புரிகின்றீர். ராஜாதிராஜர்களும், மதியூக மந்திரிப் பிரதானிகளும் திடுகிடாய்த்து விலவிலத்துச் சலசலென வியர்க்க ராஜ்யக் குறைகளை முன் பின் தயக்கஞ் சிறிதுமிலாது கண்டித்து நிற்கின்றீர். வலிய உமது மூளை—எளிய நும்சரீரம் இப்பொழுது நீர் பாலையும் வெறுத்தீராதலால் உடலினைப் பொறுக்க வல்லதோ? காயுங்கனியும், பச்சைத்தண்ணீரும், ஓயாது உழைக்கும் நும் தளர்ந்த மேனியை ஏந்தும் சக்தி வாய்ந்தனவோ? அன்பே! நீர் பாலையும் வெறுத்தீரெனக் கேட்டு அந்தோ! எமது உள்ளம் பதைபதைக்கின்றது. வேண்டாம் வேண்டாம் அடிகளே! உமது புனித சரீரம் என்றும் திடமாய் நீர் என்றும் சிரஞ்சீவியாய் இருக்கவே நாங்கள் விரும்புகின்றோம். இந்தத் தவப் பரீட்சை வேண்டவே வேண்டாம்.

என்னே! நமது அறியாமை! ஆத்ம சக்தியின் பலத்தை நாம் அறியக்கூடுமா? மெய்யன்பர்கள் ஆகாராதிகளிலா சக்தியைப் பெறுகின்றார்கள். ஸ்தூல சரீரத்தைப் போற்றுதலும், நிலையற்ற உடலுக்கு விலையறற பொருளணிந்து வயிறு பொறுக்கத் தின்பதுவும், கேவலப் பேதையர்களின் செயலன்றோ! முற்றும் துறந்த முனிவர்களின் அபார சக்தியை யாரே அறியவல்லார்.

அடிகளே! நீர் 107 பவுன் நிறையுள்ளவராகச் சற்று பருத்திருப்பதைக் கேட்டு உள்ளங் குளிர்கின்றோம். நீர் இனிதே வாழ்க! நீர் தினம் மூன்று மணிகாலம் நூல் நூற்பதிலேயே தீவிரமாக உழைக்கின்றீராம். உழையும்! உழையும்! சர்க்காரது சிறையில் உமக்குவேலை கொடுக்காவிட்டாலும், எங்கள்மாட்டு நீர் ஏற்றுக்கொண்ட தவச்சாலையில் உழையும்! புனித நூலை நூறும். நூற்கும்போது எங்களுக்கு ஆசிகூறும்! சத்தியாக்கிரஹிகள் ஜயம் பெறுகவென நூறும்! அடிபட்ட தொண்டர்கள் உடைபட்ட மண்டைகளுக்கு கட்டுக்கட்டத் துணியாகவென நூறும்! தாலியைப் பறிகொடுத்த குலக்கொடிக்கு தாலிதழைக்கவென நூறும்! சாட்டையடி உண்ணும் பிள்ளைகட்கு சாட்டையடி சாந்தமாகவென நூறும்! சவுக்குகள் தூர்ந்துபோகவென நூறும்! செல்வம் ஓங்கவென நூறும்! கைத்தொழில் சிறக்கவென நூறும்!

மாரியம்மன் ஊர்வலச் சிறப்பு.

தேவர்கள் பூமழை சொரிய—துந்துபி நாரதாதியர் பல்லியல் வாத்தியங்கள் முழங்க—ரிஷிகணங்கள் வேத கோஷங்கள் ஒலிக்க—பூதகணங்கள் தீப்பந்தங்கள் செம்மையாய் ஜ்வலிக்க—நாமகள் நல்லிசையாழினை மீட்ட—பூமகள் பொன்மொழி சிற்சில வழங்க—அரம்பையர் ஆட—குரவையர்கூவ—தேவர்கள் புடைசூழ—மயன் தவங்கிடந்து சமைத்த முத்துப் பல்லக்கில் கந்தர்வகன்னியர் இருபுறமும் கவரிகளிரட்ட—பராசக்தி முத்துமாரி—எந்திழைநல்தேவி மாசி திரு மாதம் மக நட்சத்திர சுபதினத்தில் சிறப்புடனுரோகணித்து அளகாபுரி இரங்கோன் அமரர் நெடு வீதிகள் தோறும் "அஞ்சலஞ் சலஞ்ச" லென்று மிஞ்சிகள் சப்திக்க—"செந்தினந்தின" மென்று தண்டைகள் குலுங்க--கண்டிகை மதாணியாழி ஒளிவீச—நத்துபுல்லாக்கு முத்துமுகத்தழகை கொள்ளை கொள்ள—செந்திருவாய்ப் புன்னகை ஜெகத்தோரை ஆண்டுகொள்ள—அழகு திருக்கர வைப்பதனில் செய்வினைகள் ஓட

தகஜெணுத ஜெணுத ஜம்
கஜெணுத ஜெணுத ஜம்
ஜெணுத ஜெணுத ஜம்
ணுத ஜெணுத ஜம்
தஜெணுத ஜம்
ஜெணுத ஜம்
ணுத ஜம்
தஜம்
ஜம்

என அம்மன் நிர்த்தனமாடி பவனி வந்த காட்சி எம்மாற் வருணிக்கற்பாலதாமோ? தேவர்களும் காணுதற்கரிய இந்தமுத்துரத்ன-மணி மாரியம்மன் திவ்ய சேவையை தேவன் நாகலிங்கத் தேவனேயன்றி யாரே காட்டவல்லார். இனி அன்னான் தேவனேயென என்றும் சிரஞ்சீவியாய் செல்வந்தழைத்து புகழோங்கி திகழ்ந்து விளங்குமாறு தேவி அருள் மாரியைப் பிரார்த்திப்போமாக!

சீன ஜப்பான் யுத்தம்.

விளையாட்டுபோல் சிறுகச் சிறுக ஆரம்பித்த சீன—ஜப்பானியச் சண்டை வரவர அதிகரித்து. இனி உலக மகாயுத்தமாக வந்து முடியலாமென்பது அறிவாளிகளின் அபிப்பிராயம்.

சீனனும் ஜப்பானியனும் யாது காரணத்தினால் மோதிக்கொள்ளுகிறார்கள் எனஸ்பஷ்டமாக தீர்க்கமாகக் கூறமுடியவில்லை. காரணத்தை விசாரிக்கச் சென்ற கமிட்டியார்களும் மழுப்பிக்கட்டி விடுகிறார்களே யொழிய—மஞ்சூரிய கலகத்திலிருந்துதான் சண்டை முற்றியிருக்கலாம் என்று ஊகிக்க இடமிருப்பதாகக் கூறுகிறார்களே ஒழிய—நிச்சயமாகக் காரணத்தை வெளியிடவில்லை.

ஆனால் வேறு சில தக்க ஆதாரங்களையும், நமக்கு ஏகாதிபத்ய எதிர்ப்பு சங்கத்திலிருந்து சில மாதங்களுக்கு முன் வந்த விசேஷச் செய்திகளையும் ஆராயுங்கால் பின் வருமாறு நாம் சண்டைக்குக் காரணத்தை ஒருவாறு தீர்மானிக்கலாம்.

ஜப்பான் ஒரு தீவு. எரிமலைகளே நிறைந்த நாடு. ஒவ்வொரு வேளை ஆகாரத்திற்கும் ஏதாவது அரும்பாடுபட்டு பலவித ஸாதனப் பொருள்களை யுக்தியால் செய்து பிறநாடுகளில் விற்றுத்தான் ஜீவனோபாயம் செய்யவேண்டும். எனவே அவர்கள் ஊக்கமும், சுறுசுறுப்புமுடையவர்கள் தங்கள் தீவுக்குப் பக்கத்திலுள்ள சீனப் பிரதேசத்து மஞ்சூரியாவில் குடியேறி தென் மஞ்சூரியாவை தங்கள் வியாபாரத்திற்கு ஓர்சிறந்த ஸ்தலமாக்கிக்கொண்டு விட்டார்கள். வட மஞ்சூரியா சீனப்பிரதேசம். கர்னாடக முறையில் விதைகளை அள்ளித்தெளித்தாலும் பிடி நெல்லுக்கு கோட்டை நெல்லாக விளைவிக்கும் செழித்த பிரதேசம். ஆடு மாடுகளும், தோட்டம் துறவுகளும், மிகுதி. ஜப்பானியர் இந்த வட மஞ்சூரியாவையும் தங்கள் வசமாக்கிக்கொள்ள எண்ணி வியாபார சம்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள நினைத்தார்கள். முடிவாக எப்படியும் சீனப்பிரதேசத்தில் ஏதாவது ஒரு பாகத்தை நயத்திலோ பயத்திலோ பிடித்து விடுவதாக ஜப்பான் தீர்மானம் செய்துவிட்டது. இந்த ஜப்பானியரது பேராசையே சண்டைக்கு முதல் காரணமாகும். பல மாதங்களுக்கு முன் சீனாவில் கொலையுண்ட நால்வர் மரணத்தின் காரணமாக ஜப்பான் சீனாவை நஷ்ட ஈடுகேட்க சீனா மறுத்ததினால் மஞ்சூரியாவில் ஏற்பட்ட கலகம் நாளடைவில் ஷாங்காய், சாபே, ஊசக் பிரதேசங்களில் 'யுத்தமாக மாறிவிட்டது. முதலில் சீனர்களின் ஒற்றுமைக் குறைவினால் சீனர்கள் சேதமே அடைந்தார்களென்றாலும் பின்னர் சீனத்தலைவர்களெல்லாம் ஒன்றுபட்டு பெரிய படை திரட்டிவிட்டனர். சீனப் பெண்களும் ஆயுதமெடுத்துவிட்டனர். இதனால் சாப்பே முதலிய இடங்களில் வெடிகுண்டுப் பிரயோகங்களினால் சீனருக்கு பெருஞ் சேதம் விளைவித்த ஜப்பான் இப்பொழுது பின்னடிக்கப் படுகின்றது. ஜப்பானியரது 20,000 சிப்பாய்கள் கொண்ட படையும், 12 யுத்தக் கப்பல்களும், 30 ஆகாய விமானங்களும் சாப்பே, கியாங்குவான் முதலிய பிரதேசங்களில் நான்கு முகமாகத் தாக்கியும் நான்கு ஆகாயக்கப்பல்கள் சீனர்களால் சுடப்பட்டு ஆற்றில் வீழ்ந்து மூழ்கின. ஒரு யுத்தக்கப்பலும் மூழ்கிற்று. 700 ஜப்பானிய வீரர் சுரங்க வெடிகளால் நாசமாயினர். 3000 ஜப்பானியர் பிடிபட்டுப் போயினர். ஜப்பானியப் படையின் நிலை வெகு ஆபத்திலிருக்கிறது. உதவிப் படைகளுக்கு டோகியோவுக்கு செய்தி அனுப்பியிருக்கிறார்கள். சீனர்கள் பக்கம் அதிகம் சேதமில்லை. அவர்கள் வெற்றி நிலையிலேயே இருக்கிறார்கள்.

நமது பிரதிநிதி

"தேசோபகாரி"யின் அபிவிருத்தியை கருதி திருவாளர் என். கோபால்சாமி அவர்கள் புரோம் மார்க்கமாகப் பிரயாணம் செய்துவருகிறபடியால் ஆங்காங்குள்ள "தேசோபகாரி" அபிமானிகள் சந்தாதாரர்களாகவும் ஏஜெண்டுகளாகவும் சேர்ந்து கொள்வதுடன் அவருக்கு வேண்டிய சகல வழிகளிலும் உதவி புரியுமாறும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஆசிரியன்,
தேசோபகாரி, இரங்கோன்

Printed & Published By A V Sellam Pillay at the Desopakari Press, 210,36th Street Rangoon

பதிவு எண் 246 மலர் 11 இதழ் 64 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை **DESOPAKARI** புதன் ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி இரங்கோன், (28-2-32) மாசியீ 16வ ஞாயிற்றுக்கிழமை.

வில்லிங்டனைக் கொன்றுவிட்டு?

"ஆற்றிலே போகுது வெள்ளம் அப்பா கொஞ்சம் குடிச்சுங்கோ, அம்மா கொஞ்சம் குடிச்சுங்கோ" என்பதில் ரூபத்துமில்லாமலில்லை. வெள்ளப்பிரவாகத்தின் வேகத்தில்பாவம்! பிழைக்காய்த்தனைபர்கால்சறுக்கி விழுந்து விடுவார்கள். வெறுமே இந்தியாவின் செல்வத்தை வாரி யிறைப்பதுவே பிரிட்டிஷாரின் உள்ளார்ந்த நோக்கமா யிருந்தமானுல் இந்தியாவின் அரசியல் நிர்வாகத்தில் தெருப்பெருக்குந் தோட்டி முதல் நாடாளும் மந்திரி வரை இந்தியர்களே இருக்கவேண்டும். இந்தியர்களின் நன்மைக்காகவே ஆளவேண்டுமானுல்—இந்தியாவைப்பற்றியும், இந்தியர்களின் பழக்க வழக்கங்களைப் பற்றியும் நன்கறிந்தாலன்றி முடியாது. ஆள்ப்படுவோரின் வழக்கத்திற்குப் புறம்பான தெதுவையும் சட்டம் பறிக்குமானுல் அப்பொழுது ஆளுவோரிடத்தில் துவேஷம், வெறுப்பு, அடக்கமின்மை எல்லாம் ஏற்படுகிறது. ஆசாரத்தைக் குலைக்கும்—மதத்தைப் பழிக்கும்—மானத்தைப் பறிக்கும் அப்படி ஒரு சர்க்கார் வேண்டவே வேண்டாமென்று ஸ்வபாவத்தில் ஜனங்கள் புரட்சி கொள்ளுகிறார்கள். சர்க்காரின் ஒரு சிப்பந்தி செய்த அடாத செயலால் முழு சர்க்காரிடத்திலும் ஜனங்கள் மாண்படுகிறார்கள். குட்டி குலைத்து நாய்த்தலையில் வைத்தமாதிரி ஏற்படுகிறது. தலைச்சேரி தாலிச்சர்பவமும் இதையே வற்புறுத்துகிறது: ஒரு இந்தியனுயிருந்தால்—தாலியின் மகத்துவ மறிந்தவனுனல் சட்டமேயாயினும் சர்க்காரின் கடமை என்றாலும் நிச்சயமாய் இந்தத் தப்பைச் செய்திருக்க மாட்டான். இந்தியாவை யாளும் மந்திரி ஸர். சாமுவேல் ஹோரைச் செருப்பாலடித்து விட்டோ, வைஸ்ராய் வில்லிங்டனைக் கொலைசெய்து விட்டோ மனப்பூர்வமாய் உள்ளார்ந்த இருதயத்துடன் வருந்துவதாக கூறிவிடுவதால் மாத்திரம் எவனும் மன்னிக்கப்பட மாட்டான். அப்படியே தாலியறுத்த டாபெல்லும். இந்தியர்களின் வழக்கம் தெரியாத அவன் வேண்டாம். போய் விடட்டும்.

குற்றம் செய்வது மனித ஸ்வபாவம். ஆனல் அக்குற்றத்தை யுணர்ந்து அதற்காக வருந்தித் தலைகுத்தானே திருந்திக்கொள்ளுவானுகில் அவனை மன்னித்து விடலாமெனச் சொல்லுவீர்கள். அதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். என்றாலும் குற்றத்தைத் தாரதம்மியப்படுத்திப் பார்த்தால் மன்னிக்க முடியாத குற்றங்களும் உண்டல்லவா? அவற்றிற்காக அக்குற்றத்தைச் செய்தவன் சரியான பிராயச்சித்தம் பெற்றாலொழியத் தீராது. தாலியறுத்த டாபெலுக்காக சென்னை சர்க்கார் மாத்திரமில்லை—முழு இந்திய சர்க்காரோ அல்லது பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சர்க்காரோ மன்னிப்புக் கேட்டுக்கொண்ட போதிலும்கூட இந்தியாவுக்கிழைக்கப்பட்ட இக்குற்றம் மன்னிக்கக்கூடியதில்லை. இந்தியாவுக்குப் பூரண சுயராஜ்யம் அளித்து விடுவதன்றி வேறு பிராயச்சித்தம் கிடையாது.

சீ! அரிய ஊழியம் இதுதானா?

"சோலிய முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் அரிய ஊழியம்'' என்ற தலைப்பிட்டு 24-2-32ல் வெளியான "பரிபாஷினி" யில் கா. மு. ஷேக் மதார் என்பவர் அச்சங்கத் தலைவர் ஜனாப் கு. சாகுல் ஹமீது கசாயிக்காரர்கள், வண்டியிழுப்பவர்களுக்குள் ஒற்றுமையை உண்டாக்கியதாகவும், மொகல்வீதி, பிரோசர்வீதி, 25, 26, 27, 28 நம்பர் வீதிகளிலுள்ள எண்ணை, மாவு, கடலை மில்களினால் பலருக்குக் கஷ்டமாக இருக்கிறதென அவைகளை எடுத்துவிடும்படி நகரசபைக்கு மனுச்செய்து மிகுந்த முயற்சியெடுத்து வருவதாகவும் பாராட்டி எழுதினார். பொதுக்கூட்டத்தில் வர்த்தகசபை வேண்டாமெனத் தீர்மானிக்கப்பட்டது. சிலர் தங்கள் சுயநலத்துக்காக அந்தபுரத்தில் ஸ்தாபித்தார்கள். வியாபாரிகளுக்கு நன்மை செய்யப் போகிறதாக வெளியில் விளம்பரப்படுத்தினார்கள். கபட எண்ணத்தையறியாத பலர் அதிற் சேர்ந்தார்கள். கெட்டிக்காரன் பொய் எட்டு நாளைக்கு. அதன் சுயநலமும் கபட எண்ணமும் இப்போது வெளி வந்துவிட்டது. இனி நாம் சும்மா விடமாட்டோம். வியாபாரிகளின் மில்களை எடுத்து விடுவதுதானா வர்த்தக சங்கம் செய்யும் அரிய ஊழியம்? நகரசபையின் அநுமதி பெற்று எத்தனையோ வருஷக்கணக்கில் இருந்துவரும் மில்களினால் நேற்று முளைத்த வர்த்தக சங்கத்துக்கு என்ன கஷ்டமும் சுகாதாரக் குறைவும் வந்துவிட்டது. வியாபாரிகளின் மில்களை எடுத்து அவர்களுக்கு நஷ்டத்தை உண்டாக்கி அவைகளில் பிழைத்துக்கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான ஏழை முஸ்லிம் மக்களுக்குப் பிழைப்பில்லாமல் திண்டாடச் செய்யும் இந்த வேலைதான் வர்த்தக சங்கமும் அதன் தலைவரும் செய்யும் நன்மையோ? இவ்விஷயம் நிருவாக சபையில் தீர்மானித்துச் செய்யப்பட்டதா? அல்லது தலைவரே தம்மிஷ்டத்துக்குச்செய்ததா? என நிருவாகசபை அங்கத்தினர்களை நாம்கேட்கிறோம். வியாபாரிகளுக்கு அபாரமான கெடுதியை உண்டாக்கக்கூடிய இந்த வேலை பொது ஜனங்களுக்குள் அதிகமான மனக்கொதிப்பை உண்டாக்கி யிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சங்கத்தில் நம் சகோதரர்களின் வியாபார அபிவிர்த்தியில் நல்லெண்ணமுள்ள எந்த ஒரு வியாபாரியும் அங்கத்தினராக இருக்க முடியாது. சங்கம் ஸ்தாபிக்கப்பட்டவுடன் தங்கள் சுயநல எண்ணத்தை வெளியிடாமல் சில பொது வேலைகளைச் செய்துகாட்டலாமென முற்பட்டார்கள். எண்ணமும் செயலும் ஒன்றுபட்டிருந்தால் விஷயம் ஒழுங்காக முடிந்திருக்கும். எண்ணமும் செயலும் வேறுபட்டிருந்தபடியால் விஷயமும் விபரீதமாக முடிந்தது. கப்பலை கல்கத்தாவுக்குத் திருப்பவும், மண்டிபோட்டு இடம் கேட்கவும் நேரிட்டு ஊர்சிரிக்க அவமானமாக முடிந்தது. காசு கொடுத்தும் கள்ளத்தனமா என தங்கள் சுயநல எண்ணத்தை நிறைவேற்ற நேர்முகமாக இறங்கிவிட்டார்கள். வியாபாரிகளுக்கு நன்மை செய்யப் போகிறதாகப் பறைசாற்றி இவ்வாறு வியாபாரிகளுக்குக் கெடுதல்செய்ய நேர்முகமாக வந்துவிட்டதால் அப்படிப்பட்ட வர்த்தக சங்கத்தைக் குழிவெட்டிப் புதைக்காத வரையிலும் நமது பேனாவைக் கீழே வைக்கமாட்டோம். கசாயிக்காரர்களைப் பஜார் கம்பெனி காரியதரிசி ஜனாப் பாம் அவர்கள் ஒற்றுமைப் படுத்திவைத்தார். வண்டி யிழுப்பவர்களுக்குள் யாதொரு ஒற்றுமைக்குறைவும் ஏற்படவில்லை. உண்மை இவ்வாறிருக்க இவைகளை யெல்லாம் ஜனாப் ஷாகுல் ஹமீது அவர்கள்ஒழுங்கு செய்ததாகக்கூறுவது ஆகாசப்புளுகாக இருக்கிறது. இது யாரை ஏமாற்ற? எல்லோரும் இளிச்சவாயன் என்று மனப்பால் குடிப்பதுபடத்தினாம்.

கடைசியாக ஒரு வார்த்தை. வர்த்தக சங்க அங்கத்தினர்களே! மொகல்வீதி, பிரோஸர் வீதி, 25, 26, 27, 28, நெம்பர் வீதிகளிலுள்ள மில்களை எடுத்துவிட உங்கள் தலைவர் நகரசபைக்கு மனுப்போட்டு பலமான முயற்சியெடுப்பது வியாபாரிகளுக்கு அதிகமான நஷ்டத்தையும் கஷ்டத்தையும் கொடுக்கக்கூடியது. இது நன்மையான வேலையில்லை. இதனால் ஏற்படுகிற நஷ்டத்துக்கு நீங்கள்தான் ஜவாப்தாரியாக வேண்டும். மில் முதலாளிகள் மூலதனமுடையவர்கள். வேறுதொழில் செய்துகொள்வார்கள். அவைகளில் வேலை செய்யும் நூற்றுக்கணக்கான ஏழை முஸ்லிம்களின் வேலை போய் அவர்களின் வயிற்றெரிச்சல் உங்கள் குடும்பத்தை நாசமாக்கிவிடும். நீங்கள் உடனே பொதுக்கூட்டம் போட்டு வியாபாரிகளுக்குப் பெருந் தீங்கு செய்த உங்கள் தலைவரின் தவறான நடத்தைக்குச் சரியான பரிகாரம் தேடிக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் இதனால் நம் வியாபாரிகளுக்குள்ளேயே அதிகமான குழப்பமும் ஒற்றுமைக்குறைவும் ஏற்படுமென்பதை எச்சரிக்கிறேன்.—ஓர் வியாபாரி.

முட்டாள் சர்க்கார்.

இங்கிலாந்தில் இந்திய சர்க்காரின் அடக்கு முறைகளைக் கண்டிப்பதற்காகக் கூடிய ஒரு பொதுக்கூட்டத்தில் லான்ஸ்பரி பேசியதில் சில முக்கிய அம்சங்களை இங்கு தருகின்றோம்:

இந்தியாவுடன் இங்கிலாந்து சம்பந்தம் வைத்துக்கொண்டிருப்பதானது இந்தியரின் செல்வத்தைக் கொள்ளை கொள்வதற்கே என்பது வியக்தம். இக்கக் கொள்ளையைத் தடுப்பதற்கே தேசிய இயக்கம் தோன்றியது. பிரதமத்தில் தேசீய இயக்கம் வெகு அமைதியுடன்தானிருந்தது. சில வருடங்களுக்கு முன்னமேயே இந்தியர்களின் குறைகளில் நாம் கவனம் செலுத்தியிருந்தால்—அவர்களது முறையீட்டுக்கு நாம் செவி கொடுத்திருந்தால் இந்நேரம் பாரததேவி சீர் பெற்று செல்வந்தழைத்து நம்முடன் சிநேகப் பான்மையோடு உறவாடுவாள். இந்தப் போராட்டம் ஆரம்பித்தே இருப்பதற்கில்லை. இந்தியாவுக்குப் பூரண சுதந்தரமளித்து எங்களோடு பங்காளிகளாக நீங்கள் இருக்க விரும்புகிறீர்களா இல்லையா எனக் கேட்டால் அவர்கள் மறுப்பார்களா? உடல் பொருள் ஆவி மூன்றினையும் தத்தம் செய்தன்றோ நம்முடன் தோளோடுதோளாய் ஆபத்திலும் சம்பத்திலும் கலந்து கொள்வார்கள். இந்திய மக்களெல்லாம் அடிமைகள் நாம் அவர்களை ஆளப்பிறந்தவர்கள் என்ற ஆணவத்தை இங்கிலாந்து அடியோடு விட்டுவிட வேண்டும். இந்தியர்களது எதிர்காலவாழ்க்கையைஇந்தியாவே நிர்ணயித்துக்கொள்ளுமாறு விட்டுவிட வேண்டுமேயன்றி, அரசியல் சீர்திருத்தம் செய்யப் போவதாக புரளி பண்ணுவதில் கிஞ்சித்தும் பிரயோஜனமில்லை. மகாத்மா காந்தி வட்டமேஜைக்கு வந்திருந்தபொழுது இந்தியாவும் இங்கிலாந்தும் பங்காளிகளாக உண்மைத் தோழர்களாக வாழ வேண்டியதற்கான ஒரு அரசியல் திட்டத்தை வகுத்துக்கொண்டு போவதற்கான பரிசுத்த மனத்துடன் இத்தனை தூரம் வந்தாரென்பதை நான் நன்கறிவேன். வட்டமேஜை ஒரு முடிவுக்கும் வராமல் முறிந்து போனது காந்திஜியின் குற்றமாகாது. ஏனெனில் மதப் பிரச்னைகளையும், வகுப்புப் பிரச்னைகளையும் இந்தியாவில் இந்தியர்களே தீர்த்துக்கொள்ள வேண்டிய விஷயமே தவிர இங்கிலாந்து அவ்விஷயத்தில் தலையிடுவது சுத்த முட்டாள்தனமேயாகும்.

தபால் கிலி!

காங்கிரஸ் கிலி சர்க்காரைப் படாதபாடு படுத்திவைக்கிறது. படுத்திவைக்கத்தானே செய்யும். தன் நெஞ்சே தன்னைச் சுடுமென்ற நீதி வாக்கியம் பொய்க்குமா? காங்கிரஸ் கிலியினால் தலைவன் முதல் சேவகன் வரை சர்க்கார் சிப்பந்திகள் இராத் தூக்கமின்றித் தவிக்கிறார்கள். அடாது செய்தால் படாது படத்தான் வேண்டும். பெர்னாட் ஹௌட்டன் சொல்லுகிறமாதிரி கிலியினாலேயே இந்தியா மந்திரி ஹோர் உத்தம காந்திஜியைச் சிறையில் தள்ளினான். கிலியினாலேயே வில்லிங்டன் கண்மூடித்தனமாய் அவசரச் சட்டங்களைப் பிறப்பித்தான். சேலம் முனிசிபு கோர்ட்டில் கதரணிந்த லாயர்களை சேவகன் அதிகார தோரணையில் வெளியில் நிறுத்தியும், ஜில்லா ஜட்ஜியைக் கேட்காதவரை முனிசிபுகார் லாயர்களை உள்ளே அனுமதிக்காததும் கிலியினாலே. தாலியறுத்ததும் கிரிமினல் சட்ட கிலியினாலேயென்று. அந்த மாஜிஸ்திரேட் ஒப்புக்கொள்ளுகிறான் கிலிகொண்ட சர்க்காரது விநோதச் செயல்கள் அளவிட முடியாது என்றாலும் வங்காள பிரசிடென்ஸி போஸ்ட் மாஸ்டரைப் பிடித்துக்கொண்ட கிலி வெகு ரஸமானதே. காங்கிரஸார் இமிடேஷன் போஸ்டல் ஸ்டாம்புகளை உபயோகித்து சர்க்காரை வஞ்சிக்கப் போவதாக ஏதோ காற்றுவாக்கில் அவன் காதில் விழுந்ததாம். ஒரு அவசர அறிக்கை பிறப்பித்து ஒவ்வொரு ஸ்டாம்பும் சர்க்கார் ஸ்டாம்புதானா அல்லது காங்கிரஸ் ஸ்டாம்பா என நன்கு பரிசோதிக்க வேண்டுமென்று ஊரூராய்க் கிராமம் கிராமமாய் சிப்பந்திகளுக்கெல்லாம் தாக்கீது கொடுத்தானாம். ஐயோ பாவம்! போஸ்டாபீஸ் வேலையோ மிகப் பொறுப்புள்ளதாயிற்றே! மூளைவலியுள்ளவனும் சமயத்தில் அடிப்போவானே. இந்த கிலி பிடித்த ஜில்லா போஸ்ட்மாஸ்டர் எப்படி தமது பொறுப்பான வேலையைச் சரிவரப் பார்ப்பார். ஒரு வருஷம் ரஜா எடுத்துக் கொள்ளக்கூடாதா?

பிரிட்டனே தொழிலை விட்டாயில்லையே?

வங்காளத்தில் ஐரோப்பிய ஆலைக்காரரின் மனைவி ஒருத்தி மலேரியா காய்ச்சலில் பிடிக்கப்பட்டு இறந்துபோனாள். அதே சமயத்தில் இதர இருபது ஐரோப்பியர்களுக்கும் "லாத்லோவி" என்ற கொசுக்கடி (தொத்து) வியாதியும் தொத்திக்கொண்டது. ஐரோப்பியர்களிடையே மிகுந்த பரபரப்பையும், குழப்பத்தையும் உண்டுபண்ணிவிட்டது. கொசுக்கடி (தொத்து) வியாதியை வேருடன் களைய வேண்டுமென கவர்னரிடமும் முறையிட்டுக் கொண்டார்கள். ஆங்கிலப் பத்திரிகைகளும் கொசுக்களை அறவே ஒழிக்க வேண்டுமென தணல மொழிகளைக் கக்கின. கொசுக்கடியினால் பிடிக்கப்பட்ட ஸ்தலத்தை வங்கக் கவர்னரும் நேரில்சென்று பார்வையிட்டார். விட்டேனா தகடியை என்று சொல்லி கல்கத்தாவிற்கு அருகாமையிலுள்ள ஐந்து மைல் சுற்றளவுக் குட்பட்ட நகரசபை (முனிஸிபாலிடி) தலையில் சுமையை வைத்து மூன்று லக்ஷத்து அறுபதினாயிரம் ரூபாய்களை அள்ளித் தெளித்து தொத்து வியாதியையும் அறவே ஒழித்துவிட்டார்.

இங்கு நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. இந்தியாவிலுள்ள ஐரோப்பியர்களைப் பிடித்த வியாதி முதலாவது அவர்களையே அணுகினாலும்; வியாதி தொத்து வியாதியானதால் பின்னால் இந்தியர்களையும் பிடிக்கத்தான் செய்யும். ஜாதி அபிமானத்தை உத்தேசித்து சர்க்கார் ஏராளமான தொகையைவாரி இறைத்தபோதிலும் இந்தியர்களுக்குப் பிரயோஜன படாமல் போகவில்லை. யாதொரு பிரயோஜனமுமின்றி குண்டாந்தடிகளுக்காகவும், குண்டுகளுக்காகவும் கோடிக்கணக்கில் செலவு செய்யப்படும்பொழுது தொத்து வியாதியை ஒழிப்பதற்காக செலவு செய்த தொகையைப்பற்றி குறைகூறுவதற்கில்லை. ஆனால் தற்சமயம் டம்டம் சிறையிலுள்ள கைதிகளுக்கு மலேரியா பெருங் கேட்டை விளைவித்து வருவதாக அறிகிறோம். அதுவும் லாத்லோவிகள் போன்ற சிறு கொசுக்கூட்டங்களுமில்லை. பருமனில் பெரிதாகவும், மிகக்கடும் விஷச்செயலையுடைய "அனுபலஸ்" என்ற தடித்த கொசுக்களாம். இக்கொடிய வியாதிக்கு ஆளான கைதிகள் அநேகரிருப்பினும், மிக்க அவஸ்தைக்கு உட்பட்டுக்கொண்டிருந்த ஒரு கைதியைக்கூட கல்கத்தாவிலுள்ள வைத்தியசாலைக்கு சிறை அதிகாரிகள் அனுப்பியிருக்கிறார்கள். இந்த விஷக்கிருமிகளை ஒழிப்பதற்கு மட்டும் சர்க்கார் ஏன் சிரத்தை காட்டவில்லை என்று கேட்கலாம். அதற்கும் காரணம் இல்லாமலில்லை. வியாதியும் வெளியில் பரவவில்லை. முக்கியமாக சிறையிலேதான் நடமாடித் திரிவதாகத் தெரிகிறது. சிறையிலுள்ள அதிகாரிகள் ஒன்றிரண்டு பேரும் வயிற்றுச் சோத்துக்கு மாரடிக்கும் இந்தியர்களாகவேதானிருக்கவேண்டும். ஐரோப்பியக் கைதிகளும் இருக்கமுடியாது. ஆனதால் தான் சர்க்கார் வியாதியை ஒழிக்க சிரத்தை காட்டவில்லை என்பது ஸ்பஷ்டமாக விளங்கிவிட்டது. சர்க்காரின் குணமோ நனைத்துச் சுமக்கும் தன்மையை வாய்ந்தது. நாலு சுவர்களுக்கும் மத்தியில் ஏற்பட்டிருக்கும் வியாதி நாலு சுவர்களைத் தாண்டியும் வந்து ஜனங்களுக்கு கேட்டை விளைவிக்கும் என்பது திண்ணம்.

நிற்க டம் டம் சிறையில் 2800 கைதிகள் மட்டும்தான் வசிப்பதற்கு இடமுண்டு. ஆடு, மாடுகளைப்போல் அடைக்கப்படும் இந்நேரத்தில் எத்தனை, எத்தனை ஆயிரம் கைதிகள்தான் இருக்கிறார்களென்பது அதிகாரிகளுக்குத்தான் தெரியுமே, ஒழிய நம் போன்றோர்கள் தெரிந்துகொள்வது சிரமசாத்தியம். எத்தனை ஆயிரம் கைதிகள் இருந்தாலும்சரி சர்க்கார் கணக்குப்படி 1000 கைதிகள் "ஏ", "பி" வகுப்பிலும் 1800 கைதிகள் "ஸி" வகுப்பிலும் வைக்கப்பட்டிருக்கிறார்களாம். ஏ, பி வகுப்புக் கைதிகளுக்கு கொசுவலைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஸி. வகுப்புக் கைதிகளுக்கு கொசுவலை கிடையாது. ஏ, பி வகுப்புக் கைதிகள் நீங்கலாக மற்றெல்லாக் கைதிகளும் கொசுக்கடியினாலும், மலேரியாவினாலும் இரவு நித்திரையின்றித் தவிக்கின்றார்கள். சிறைச்சட்டம் நோயைத் தீர்க்கும் விஷயத்தில்கூட மனிதனைப் பிரித்து வைக்குமானால் அதைத் தகர்த்தெறிய வேண்டியதுதான், வேறு வழியில்லை. ஐரோப்பியர்களுக்காக செலவு செய்த மூன்று லக்ஷத்து அறுபதினாயிரமல்ல, ரூபாய் ஆறு ஆயிரமும், கொயினாவும் கொடுத்ததினால் கைதிகள் இத்தனை அவதி

இந்த சர்க்கார் அல்ல?

சிறு விதையை பூமியில் நாட்டுகின்றோம். ஓரிரண்டு தினங்களில் முளை வெளித்தோன்றுவதற்காக விதை இரண்டாகப் பிரிகின்றது. அல்லது சற்று விரிந்து கொடுக்கின்றது. உடனே பூமி என்ன நினைத்துக்கொள்ளுகிறது தெரியுமா? தனக்குள் அகப்பட்டுக்கொண்டிருக்கும் விதையைத்தான் நசுக்கிவிட்டதாகவும், கூடிய சீக்கிரத்தில் அதைத்தான் விழுங்கி, ஜீரணித்துவிடலாமென்றும் எண்ணித் துள்ளுகின்றது. ஆனால் விதை என்ன செய்கிறது? பூமியை ஒரு உதை. உதைத்துவிட்டு, பூமிக்கு வெளியே முளையாகத் தலைதூக்கி, பூமியை நோக்கிப் பரிகசிக்கின்றது. விதைக்குள்ளும், பூமிக்குள்ளும் மடங்கிக்கிடந்த இந்தச் சிறு முளைதான் பின்னர் பெரு விருக்ஷமாகி பூமிக்குப் பயப்படுகின்றது. இதுதான் இயற்கைத் தத்துவம். இதே தத்துவங்கள்தான் ராஜீய விவகாரத்திலும் ஏற்படுகிறது. சத்யாக்கிரஹ இயக்கமும் ஒரு விதை. இந்த விதையை ஒடுக்கிவிட—நசுக்கிவிட எண்ணுகின்றது சர்க்கார். விதை சிறியதாயினும் பரந்த பூமியால்கூட அதை விழுங்க முடியவில்லை. அதே மாதிரிதான், நாய்களும்கூட சத்தியாக்கிரஹ இயக்கத்தில் கலந்துகொள்ளும் இந்தக்காலத்தில் சத்தியாக்கிரஹ இயக்கத்தை நசுக்க இந்தச் சர்க்காரல்ல, வேறு எத்தகைய வலிமைகொண்ட சர்க்காராலும் முடியாது

க்கு ஆளாகமாட்டார்கள். ஐரோப்பிய நாடுகளிலுள்ள சிறைக்கைதிகளிடத்தில் சர்க்கார் இவ்விதம் நடந்துகொள்ளுமா? அங்கு அப்படி நடந்துகொண்டால் ஆக்ஷிக்கே ஆபத்து. நாமும் சர்க்காரும் ஒப்புக்கொள்ளவே செய்வோம். இந்தியாவில் அந்த பயம் தொலைந்தொழிந்தது. கஷ்டப்படத்தான் வேண்டும். இது யாருடைய குற்றம். அந்தப் பயத்தை உண்டுபண்ண இந்தியர்களே! இனியாவது விழித்துக்கொண்டீர்களா? அரசாங்கமே அடியோடு அழிந்து போகாதே! தொத்து வியாதிகளை ஒழிக்கும் சட்டம்கூட நிறமாட்டிவிருப்பதை தீயில் போட்டுவிடு. உற்றார் — உறவினரை விட்டு—ஒதுங்கி நிற்கும் கைதிகள் விஷயத்தில் எது எப்படிப் போயினும், பிரிட்டனே! உடம்பு நிலையிலும், உனது தொழிலை — ஒருதலைப் பட்சத்தைக் காட்டாதே!

மலைமுழுங்கி மகாதேவன்.

உலகமெங்கும் பொருளாதார நெருக்கடி. சீன ஜப்பான் சண்டையால் நாகரிகப் பொருள்கள் விலையேற்றம்; வியாபாரக் குறைவு—லக்ஷ லக்ஷமாகக் கோடி கோடியாக லேவாதேவி செய்யும் பெருத்த தனவந்தர்கள் கையும் தாழ்ந்து தணிந்துவிட்டது. சட்டமறுப் பியக்கத்தினால்—அன்னியப் பொருளின் தீவிர பகிஷ்காரத்தினால்-இங்கிலாந்திலும் பணமுடை—இந்தியாவிலோ அதற்கு விளப்பன். பம்பாய் சர்க்கார் தனது குடித்தனத்தை மானத்தோடு நடத்த வேண்டுமானால் நடப்பு வருஷத்திற்கு 78 லக்ஷம் கடன் வாங்கித்தானாகவேண்டும்—வங்க சர்க்காருக்கோ கோடிக்கணக்கில் பணத் தேவை. இந்திய கவர்ன்மெண்டார்பாடு விழி பிதுங்குகிறது. பர்மா கவர்ன்மெண்டை கேட்கலாமென்றால் ஏற்கனவே கொடுக்க வேண்டிய கடன் 218 லக்ஷத்தையும் ஏப்பமிட்டு இன்னும் கடன் வாங்கிக் காலக்ஷேபம் செய்யவேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டிருக்கிறது. பாவம்! ஏழைபாழைகள் வயிற்றிலடித்து வரி விதித்துப் பார்த்தார்கள்; சிக்கனக் கோடாரியை ஓங்கமட்டும் ஓங்கியாயிற்று. பெறும் புள்ளிகளை தொட்டால் ஆபத்தென்று, சின்ன சிப்பந்திகளை யெல்லாம் கல்தா கொடுத்து வெளியே போவென்று சொல்லியாயிற்று. காங்கிரஸ் நிதிகளையெல்லாம் கைப்பற்றியாச்சுது. காங்கிரஸ் தொண்டர்கள் கொஞ்சம் பசை உள்ளவர்களெனத் தெரிந்தால் அரை லக்ஷம், கால் லக்ஷம் ஆயிரக்கணக்கில் அபராதமும் விதித்தாயிற்று. அதுவும் போதவில்லை. ஏழைத் தொண்டனுடைய சட்டிமுட்டி விளக்குமாறு செருப்புகள் முதலியவற்றை அதிகம் சொல்லுவானேன் தாலியையும் அறுத்தாயிற்று. மலைமுழுங்கி மகாதேவர்களுக்குக் கதவு ஒரு அப்பளம்தானே. கவந்தவர்களுக்கு கால் லோட்டா கஞ்சி பற்றுமா? எடுத்தார்கள் ஒருயுக்தி. நமது வீரசிங்கம் ஜவஹர்லால் நேருவும் ஷர்வாணியும் காந்திஜியைக் காண பம்பாய்க்குப் போகும்பொழுது அடுத்த ஸ்டேஷனில் கைதுசெய்யப்பட்டதால் அவர்களது டிக்கட்டுகளை ரயில்வே கம்பெனிக்கு வாபீஸ்செய்து முறையே 50, 62 ரூபாய் அபராதத்தில் ஈடு செய்துகொண்டார்களாம்.

உண்மை அன்பு இருக்குமானால்!

சனீஸ்வரன் ஏழை விவசாயிகளைத்தான் பலமாய்ப் பிடித்திருக்கிறான் என்பதில் ஐயமில்லை. நிலம் வைத்துப் பயிரிடுவது கையைக்கடிக்கும் நஷ்டத்தொழிலாக மாறிவிட்டது. ஐயோ பாவம்! ஏழை விவசாயியைச் சுற்றி எத்தனை பெயர்கள் நிற்கின்றார்கள்! உழுது பயிரிட்ட உழவன் கூலி கேட்கின்றான். போனவருடக் கிஸ்திக்குக் கடன் கொடுத்த ஸாவ்கார் வட்டிப் பணத்தை வந்து வசூல்செய்ய நிற்கின்றான். கிராம மணியக்காரன் "விளைந்தாலென்ன? விளையாத போனாலென்ன? வெள்ளம் அடித்தாலென்ன? 'சாவி' விழுந்தாலென்ன? சர்க்காருக்குத் தரவேண்டிய கிஸ்தியைத்தாரும்" என்று கேட்டுக்கொண்டு நிற்கின்றான். நெல்லைப் பாதி விலைக்கும் எடுத்துக்கொள்ள மாட்டேனென நெல் வியாபாரி சொல்கின்றான். இவ்வாறாக இத்தனை பேர்களுக்கிடையே உட்கார்ந்துகொண்டு விவசாயி விழிக்கின்றான். இந்தியாவின் எல்லா மூலையிலும் இன்று குடியானவன் படுந்துயரத்தைச் சொல்லி முடியாது.

வடக்கே கெய்ரா ஜில்லா பர்தோலித் தாலூகாவிலே விவசாயிகள் படுந்துயரம் கொஞ்சம் நஞ்சமன்று. அங்கு விலைவாசிகளும் நமது பாட்டன் காலத்து விலைக்குப் போய்விட்டன. இந்த நிலையில் ஒரு விவசாயி வரி செலுத்துவதென்றால் எங்கிருந்து செலுத்த முடியும்? அப்படியிருந்தும்கூட ஒரு விவசாயி வரிவஜா செய்ய வந்த சர்க்கார் பிள்ளைகளிடம் "ஸர்தார் பட்டேலையும், காந்திஜியையும் விடுதலை செய்யாதிருக்கும் வரை வரிகொடுக்க மாட்டேன்" என்று மூஞ்சியில் அடித்தது மாதிரி சொல்லிவிட்டார். அன்றைக்கு அம்மட்டோடு விட்டார்களா அதிகாரிகள். இல்லை. சிறைவாசத்திற்கும் ஆளாக்கிவிட்டார்கள். அதையும் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டார். இம்மாதிரி சர்க்காரின் தடைகளை "தூ"வென்று தள்ளிவிட்டு சிறைசெல்லத் தயாராயிருக்கிறவர்கள் எத்தனை பெயர். இதைப் பின்பற்றியே நமது தமிழ் நாட்டவர்களும் நடந்து கொள்வதுதான் முறை. காந்திஜீ, என்றும், கதர் என்றும் பேசிவிட்டால் மட்டும் போதாது உண்மையில் தேசத்திடத்தும்—காந்திஜீ இடத்தும் அன்பு இருக்குமானால் பர்தோலி விவசாயி வழியைப் பின்பற்றவும்.

கடி நாய்கள்.

சில தினங்களுக்கு முன் பம்பாய் கவர்னர் தமது சொற்பொழிவில் "சர்க்காரோடு சேர்ந்துகொண்டு காங்கிரஸ் இயக்கத்தை நசுக்க உதவிபுரியும் இந்தியன்தான் உண்மை தேசபக்தன்" என்று வியாக்கியானம் செய்துள்ளார். இந்த மகானின் உபதேசத்தை சிரமேற்கொண்டு பின்னே யானை வருவதை முன்னே அறிவிக்கும் மணியோசைபோல், நாமும் சர்க்காருக்கு பின்னே நேரக்கூடிய விபத்துகளினின்று தற்காத்துக்கொள்ளுமாறு முன்னெச்சரிக்கையாக பின்வரும் விஷயங்களை பகிரங்கமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்:

அமிர்தசரஸ் நாய்களுங்கூட அவசரச் சட்டங்களை அவமதித்துவிட்டன. எரோப்ளேன் வில்லிங்டனது கெடுபிடி ராஜ்யபாரத்திற்கு அவைகள் அஞ்சப்போவதில்லை. ஐந்தாறு நாய்கள் கூடிக்கொள்வதும் கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட—பகிஷ்கார விளம்பரங்களைக் கழுத்தில் தொங்கவிட்டுக்கொண்டு ஜனப்புழக்கமுள்ள கோவில் குளங்களுக்குச்சென்று பிரசாரம் செய்வதும்—அந்நிய ஆடை தரித்த ராஜ விசுவாசிகளைக் கடிப்பதும் எத்துணை அடாத செய்கை? எவ்வளவு பெரிய ராஜதுவேஷமான குற்றம்? கதரணியாத ராஜ விசுவாசிகள் வெளியில் தலை நீட்டவும் அஞ்சுகிறார்களே! என்னே காலக்கொடுமை. ஒரு துப்பாக்கி முனை அரசாங்கத்திலே இப்படியும் உண்டா? கேள்விமுறை இல்லையா? காங்கிரஸ் இயக்கம் தலைதூக்கினால் ஒழிக்க நாணுச்ச என்று மார் தட்டிய ஜிம்மி ஜேமிஸ் கிரிராரே! நீ என்ன தூங்குகிறாயா? காங்கிரஸைக் குறைகூறும் விஷயத்தில் சற்றும் பின்வாங்காத ஆங்கிலப் பத்திரிகைகளே! நீங்கள்தான் இரண்டு கட்டுரைகள் எழுதக்கூடாதா? கிரிமினல் சட்ட பிரண்டினே! ஒரு தனி நாய்ச் சிறை கட்டி குட்டிநாய்களானால் பிரத்தியேக போர்ஸ்டல் பள்ளிக்கூடங்களும் நிர்மாணஞ் செய்யத் தயங்காதே! மாஜிஸ்திரேட்டுகளே! நாய்களுக்கு கோடிக்கணக்கில் அபராதம் விதித்து சர்க்காரைப் பாப்பர் தனத்தினின்று காப்பாற்ற வேண்டுவது உங்களது கடமை. பெண் நாய்களாயிருந்தால் தாலியறுங்கள். குட்டி நாய்களாயிருந்தால் சவுக்காலடியுங்கள். ஆனால் உஷார்! அடிக்கும்போது அஞுசை செய்யாமல் எச்சரிக்கையாயிருக்க வேண்

சீன-ஜப்பான் சிண்டுபிடி.

சீன ஜப்பான் தொந்த யுத்தம் வலுத்து விட்டது. ஜப்பானியன் ஆகாயத்திலிருந்து அனல்மாரி கக்குகின்றான். சீனன் பீரங்கிகளால் கீழிருந்து தாக்குகின்றான். ஜப்பானியரது யுத்தக் கப்பல்கள் ஷாங்காய் வூசங் பிரதேசக் கோட்டைகளைத் தகர்க்கின்றன. சீனரது வெடி குண்டுகள் ஜப்பானியரது ஆகாயக் கப்பல்களையும் யுத்தக் கப்பல்களையும் சின்னாபின்னமாக்கி தண்ணீருக்குள் ஆழ்த்துகின்றன. ஜப்பானியரது படைகள் சீனப் பிரதேசத்திற்குள் ஆக்கிரமித்துத் தாக்கின. சீனப்படைகள் அவைகளைச் சூழ்ந்துகொண்டு அபேஸ் செய்துவிட்டன. இப்பொழுது ஜப்பான் தோல்வி நிலையிலேயே இருக்கின்றது. இனி அடுத்த நிமிஷம் எவ்விதம் மாறுமோ யாரறிவார். சீன ஜப்பானிய யுத்தத்தினால் உலகமே அல்லோலகல்லோலப்பட்டிருக்கின்றது.

இவ்வாறிருந்தும் ஜினிவா சர்வதேசப் பிரதிநிதிகள் குண்டுவெடி சப்தத்தைக் கேட்க முடியாத செவிடன் "அதென்ன புகை?" எனக் கேட்டமாதிரி "சீன—ஜப்பானியச் சண்டை பெரும் யுத்தமாக மாறும்போலிருக்கிறதே" என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அடப் பரிதாபிகளே! போர்க்களத்தின் அருகில் உட்கார்ந்திருக்கும் உங்களுக்குக் கண்களும் காதுகளும் அடைத்தா போயிற்று.

நிற்க சில தினங்களுக்கு முன் சர்வதேசப் பிரதிநிதிகள் 2000 பேர் கூடி ஆயுதப்பரிகார யானையைத் தடவிப்பார்த்தார்களே! என்ன அபிப்பிராயம் தெரிவித்தார்கள்? முன் பல குருடர்கள் ஓர் யானையின் தனித்தனி உறுப்புகளைத் தடவிப்பார்த்து முடிவு சொன்னார்களே அந்தக் கதையேயாயிற்று. பிரிட்டானியாவுக்கு சப்மேரின்ஸ் என்ற நீர் மூழ்கிக் கப்பல்களுக்கும் விஷப்புகைக்கும்தான் பயம். ஆகவே அதன் அந்தகர் பிரதிநிதிகள் நூதனவிஷப் புகையைக்கண்டு பிடிக்காமல் சப்மேரின்களை ஒழிப்பதே ஆயுதப்பரிஹாரம் என்றார். அமெரிக்காவுக்குச் சகல யுத்த தளவாடங்களும் அளவுக்கு மிஞ்சியிருப்பதால் வெடி மருந்து, யுத்த சாமான்கள் செய்வதில் சிக்கன முறை தேடுவதே ஆயுதப் பரிஹாரணமென்று அமெரிக்கக் குருடர் தெரிவித்தார். இத்தாலிக்கு கப்பலோ—படையோ— விமானங்களோ கிடையாது. ஆகவே எவ்வித ஆயுதமும் கூடாதென அந்தக் கண்ணில்லாதவர் சொன்னார். பிரான்ஸுக்கு இதர தேசங்களைவிட பெரியயுத்தக்கப்பல்கள் இல்லை. ஆகாய விமானங்கள் அதிகம். ஆகவே சர்வ தேசங்களும் ஒரே அளவான ஆயுதங்களைக்கொள்ளவேண்டுமென்பது அந்தக்குருடரின் அபிப்பிராயம். ஜர்மனியோ பாப்பர். ருஷியாவோ புரட்சியில் மூழ்கிக்கிடக்கின்றது. இவை இரண்டின் அந்தகர்களும் ஆயுதங்களை அடியோடு ஒழிக்க வேண்டுமென முறையிட்டுக் கொண்டதில் ஆச்சரியமில்லை. என்னே! இவர்களது நடிப்பு! காஷாய வேஷம் கஷ்கத்தில்கன்னக்கோல் என்பது இவர்களுக்கேதகும்.

திறப்பு விழா.

"வாணி விலாச சபை"யினால் தமிழ் ஆங்கில புத்தகங்களடங்கிய ஒரு புத்தகசாலை ஏற்படுத்தப்பட்டு, இன்று மாலை 6-30 மணிக்கு திரு. வி. கே. தம்பி அவர்களால் திறந்து வைக்கப்படும்.

அமுத மொழிகள்.

நான் வாலிபத்தை வீணாக்க விரும்பேன். அதுவேநான்லக்ஷியமாககருதுவது. தேசசேவையிற்செலவிடப்படாதவாலிபப்பருவம் இருந்தென்ன, போயென்ன? வாலிபர்களே, தேசசேவை செய்ய முன்வாருங்கள். —திலகர்.

ஒருவனுக்கு உணவு அளிப்பதைக் காட்டிலும் அதை அவனே தேடிக்கொள்ளும் வழியை காட்டுவதே சிறந்தது. உதவி புரிவதைக் காட்டிலும் பிறர்க்குதவி செய்யக் கற்றுக்கொடுப்பதே லக்ஷியம். —ஆவ்பரி.

உண்மையிலேயே தர்ம மார்க்கத்தைக் கடைப்பிடிப்பவன் இதர தர்மங்களும் சத்தியத்தைத் தேடிக் காண்பதற்கேற்ற மார்க்கங்களேயென உணரவேண்டும். —பரமஹம்சர்.

டும். போலீஸ் வீரர்களே! ஆடிமாதத்தில் நாய படிப்பவர்களுக்குப் பதிலாக உங்கள் தடியை இப்பொழுது உபயோகியுங்கள். சர்க்கார் சிக்கனக் கோடாரிக்கும் இது சாதகமாயிருக்கும் விஸ்வாமித்திர வில்லிங்டனே! வீண் வாதவில்லியர்லே—நீங்கள் இருவரும் தீர்க்க ஆலோசனை செய்து ஆயிரக்கணக்காக அவசரச் சட்டங்களை வாரிவாரி இறையுங்கள். இல்லாவிட்டால் இனி யானை, ஆடு, மாடு, குதிரை, கோழி, பூனை, எலி எல்லாம் காங்கிரஸாருடன் சேர்ந்து கொள்ளும் போலிருக்கிறது. கடைசியாக எது, எதைக் கடிக்குமோ!

அழகான படம்.

ஸ்ரீமான்
[illegible] பி. பிள்ளை.

எனது தாய்நாடு எதை அடைய வேண்டுமென்று நான் விரும்புகிறேனோ; அதையெல்லாம் எனது பிரிய பர்மியரும் அடைய வேண்டுமென்று அபேக்ஷிக்கின்றேன். முதல் மந்திரியின் பிரகடனத்தைப்பற்றி அதிகம் பேச எனக்கு இஷ்டமில்லை. பர்மாவின் எதிர்கால அரசியலை பர்மியர்களே அனுமானித்துக் கொள்ளட்டும். இந்தியர்களாகிய நாங்கள் பர்மியர்களிடம் நேயப்பான்மையையே காட்டுகிறோம். அன்னிய ஆட்சியிலிருந்து பர்மியர்கள் பர்மாவை பர்மியர்களுக்காகப் பிடுங்கிக்கொள்ள வேண்டுமென்றால் நாங்கள் எங்களது முழு ஆதரவையும் அளிக்கின்றோம். ஆனால் வெறும் வாக்குறுதிகளை மட்டும் நம்பிவிட வேண்டாமென பர்மியர்களுக்கு எச்சரிக்கவேண்டும். ஏனெனில் இது ஒரு விசித்திரமான யுகம். ஆடம்பரமான வாக்குறுதியளித்து துக்ககரமாக நிறைவேற்றி வைக்கும் வேடிக்கைகாலம். சொன்னதுபோல் செய்யமறுத்து வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்கும் வழக்கம் போய்விட்டது.

பர்மா வட்ட மேஜையின் இறுதிக் கூட்டத்தில் பர்மாவின் அரசியலை பிரதம மந்திரியார் வெகு அழகான வர்ணத்தில் தீட்டுகிறார். எனது ஒரு சிறு பார்வையிலே—ஒரு கடைக்கண் நோக்கத்திலே—வெறும் முதல் தோற்றத்திலேயே பிரமத மந்திரியின் படத்தில் வனப்பும், ஒற்றுமையும் பிரகாசிக்கப் பார்க்கின்றேன். அப்படத்தின் அழகைவிட அதில் இணைத்துள்ள சட்டங்களுக்கே அதிக கவர்ச்சியிருக்கிறது. கண்களை துடைத்துக்கொண்டு நன்றாய்க் கூர்ந்து நோக்கினால்—அதன் தாதுப்பொருளை தெளிவாக ஆராய்ச்சி செய்தால் அதை வெறும் மாயப் பொருளென்றுதான் சொல்லவேண்டும். உண்மை உணர்ச்சியில்லை; ஜீவகளை கிடையாது. முதல் தோற்றத்திலே நம்மை மயக்கியதெல்லாம் முழுதும் தப்பும், தவறும் எனவே படுகிறது. இதனாலேயே படத்தைவிட சட்டமே முக்கியமானதெனச் சொல்லுகிறேன்.

பர்மாவின் அரசியல் திட்டமும் அப்படியேதான். அதன் அம்சங்கள் அழகிய பொம்மைகளால்—தின் பண்டங்களால் சிறு குழந்தைகளை ஏமாற்றுவதேபோலிருக்கிறது. மந்திரியின் மகத்தான மனத்தில் க்ஷேமித்து வைத்திருக்கும் பெரிய பொக்கிஷத்தை பர்மியர்களுக்கு அளித்து விட்டதாக அர்த்தமில்லை. ஏனெனில் அதன் சாவி அவரிடமேயிருக்கிறது; பர்மியர்களிடம் கையளிக்கப்படவில்லை. ஒற்றை வரியில் அப்படியே கூறுவதானால் "இதோ என் மனத்திலிருப்பனவெல்லாம் உங்களுடைமை; எடுத்துக்கொள்ளுங்கள். சாவி மாத்திரம் என்னிடமிருக்கட்டும்" என்கிறார். இதைத்தான் இங்கிலாந்தின் பிரதம மந்திரி தமது ஸ்கொத்லாந்திய பிறப்புரிமையாகிய கபடம், வஞ்சகம், சூது, புனைமொழி முதலிய யாவுங் கலந்து கொடுக்கின்றார். ஆங்கிலக்கடலின் அலைகளிலே ஒரு காந்தசக்தி—மின்சாரவேகம் இருக்கவே இருக்கிறது. இங்கிலாந்தின் சிநேகஸ்திதியிலே—இங்கிலீஷ்காரர்களின் விருந்துபசாரத்திலே எனது பர்மியர்கள் மயங்கிக் குளித்திருந்தால் அதை ஏன் நான் தடுக்கவேண்டும். எனது பர்மிய நண்பர்களிடத்தில் நான் பூரண நம்பிக்கை வைத்துள்ளேன். அவர்களது சகிப்புத் தன்மையிலும், உண்மை வீரத்திலும் எனக்குச் சந்தேகமேயில்லை. இந்தியரும், பர்மியரும் சமரசமானதோர் ஒப்பந்தத்திற்கு வரமுடியும் என்பதே எனது திடமான நம்பிக்கை.

பர்மானியா முச்சந்தியில் நிற்கிறாள். எந்த வழியைப் பின்பற்றுவதெனத் தெரியாமல் திகைத்துக்கொண்டிருக்கிறாள். பர்மாவில் வசிக்கும் நாம்—பர்மானியாவை நேசிக்கும் நாம்—அவள் அறிவோடு ஆராய்ச்சிசெய்து வெற்றிகரமான முடிவுக்கு வரவேண்டுமென விரும்புகிறோம். அவளது சோதனை காலத்தில் நாம் பக்க பலமாக நிற்கவே செய்வோம்.

—சட்டசபைப் பேச்சு.

Printed & Published By A V Sellam Pillay at the Desopakari Press, 210, 36th Street Rangoon

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 65 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை **DESOPAKARI** புதன் ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி இரங்கோன், (2-3-32) மாசிமீ 19உ புதன்கிழமை

உயிர் கொடுத்தும் சுயராஜ்யம்.

உள்ளதைச் சொல்லி விடுகிறேன்; என்ன எழுதுவதென்றே தெரியவில்லை. சீனனும் ஜப்பானியனும் மண்டையை உடைத்துக்கொண்டு நிர்த்தூளியாக சண்டைபோட்டுக் கொள்ளுகிறார்களே அதைப்பற்றி எழுதுவதா? இல்லை! இந்தியாவில் சட்டமறுப்புப் போர் முழு வேகத்துடன் நடக்கின்றதே அதைப் பேசலாமா? அல்லது மாகாண சட்ட சபைகளில் வீராதிவீரர்கள் திண்ணைத்தூங்கி வேதாந்தம் பேசுகிறார்களே அதைப்பற்றி அளக்கலாமா? வேண்டாம்! இந்தியா-பர்மா பிரிவினைபற்றி வீண்பேச்சுப் பேசலாமா? இவைகளைப் பற்றியெல்லாம் எமது கவனம் இப்பொழுது செல்லவில்லை. வேறு எதைத்தான் எழுதுவது எனச் சிந்தித்தோம். கடைசியில் ஒரு நல்ல விஷயம் அகப்பட்டுக்கொண்டது. நமது சிந்தையனைத்தும்—நமது கவனத்தையெல்லாம் எந்தவொரு மகத்தான காரியம் ஈர்த்து நிற்கின்றதோ—நமது சேவையை யெல்லாம் எந்தவொரு லக்ஷியத்திற்காகச் செலவழிக்கின்றோமோ அந்த எல்லைக்காக எவரொருவர் பலி தியாகஞ் செய்கிறார்களோ—எவரொருவர் வீர சேவை செய்கின்றார்களோ அவர்களைப்பற்றி எழுத ஆசைப்பட்டுவிட்டோம். இப்பொழுதைய இந்தியாவுக்கு எது தேவையோ அதற்காக—அந்த ஸ்வராஜ்யத்திற்காக—அந்தப் பூரண சுதந்திரத்துக்காக—அந்தப் பரிபூரண விடுதலைக்காக தங்களுக்குள்ள சர்வஸ்வத்தையும் விலைகொடுத்து வாங்கத்துணிந்த—ஆனால் மானத்தை மாத்திரம் உயிர் கொடுத்தும் காக்க விரும்பும் பெண்மைத் தெய்வங்களை—வீரத் தாய்மாரை—கற்புக் கடவுளரைப்பற்றிப் பேசுவோம்.

சத்தியாக்கிரகத்தில் நவநவமான முறைகள் கையாளப்படுகின்றன. போன போரில் இல்லாத புதுப்புதிய பல சத்தியாக்கிரகங்களை இப்போரில் காணுகிறோம். தங்கசாலை சத்தியாக்கிரகம் கோர்ட்டு சத்தியாக்கிரகம் போன்றவை புதுரகங்களாகும். ஆமதாபாத்தில் தர்ஸன தினத்தன்று அன்னியத்துணி மறியல் செய்த பெண்மணிகளின் வீரம் பேசப்படவேண்டியது. தங்களுடன் தொண்டச்சிகள் கிர்பான் (கட்டாரி) தாங்கி மறியல் செய்ததில் விசேஷ அர்த்தமிருக்கிறது. தேசியமாகப் பார்த்தால் ஒவ்வொரு தேசத்தின் ஒவ்வொரு தனி நபருக்கும் சுதந்திரம் நிச்சயமாய் வேண்டவே வேண்டும். அதற்காக ஒவ்வொரு ஆண்மகனும் பெண்மகளுங்கூட தனக்குள்ள எல்லாவற்றையும் உயிரை வேண்டுமானாலும் கொடுத்து அடையவே செய்வர். ஆனால் புருஷார்த்தமாகப் பார்த்தால் ஒவ்வொரு தனி நபரும் தனது மானத்தை யெல்லாவற்றையும்விட பெரிதாக மதிக்கவும், காக்கவும் கடமைப்பட்டிருக்கிறான். ஏனெனில் இகம், பரம் இரண்டிலும் காப்பாற்றப்பட வேண்டுவது மானம். சுருக்கமாகச் சொல்லிவிடுவதானால் தேசத்தைவிட—மதத்தைவிட—சமூகத்தைவிட மானமே பெரிது. இதுபற்றித்தான் நமது தாய்மார் கட்டாரியேந்தி மறியல் செய்கிறார்கள். போலீஸாரின்—சர்க்காரின் அத்துமீறிய அக்கிரமத்தால் சிற்சில

விழுந்து கும்பிடவா?

"கடன் வாங்கி உடன்வாங்கி சாமி கும்பிட நீரார்......மகன் விழுந்து கும்பிட?" என்பது நாட்டுப் பழமொழி. என்றாலும் ஆழமான அர்த்தமிருக்கிறது. காசு பணம் செலவு செய்து—கஷ்ட நஷ்டங்களடைந்து ஒரு காரியத்தை ஒருவர் செய்தால் வேறொருவர் சிரமமில்லாமல் இலகுவில் அக்காரிய சித்தியில் லாபமோ, பங்கோ அல்லது பெயரோ பெறுவதென்பது கேவலம் திருட்டுச்செயல் என்றுகூட சொல்லிவிடலாம். பேர்பெற பேராசைப்படும் அப்பேர்வழி கஷ்டப்படாமல் இலகுவில் இன்னொருவரது கைப்பணத்திலடைவது ஒருவன் வாயுணவைப் பறித்துண்ணும் செயல் செய்கிறான். பிரபஞ்ச பிரவிர்த்தியில்—உலக வாழ்க்கையில் நல்லதொரு ஸ்தானமடையவேண்டுமானால்—நாலுபேருக்குப் பெரிய மனிதன் என்ற பெயரெடுக்க வேண்டுமானால்—பத்திரிகை உலகத்தில் சஞ்சரிக்க இஷ்டமிருக்குமானால் உருப்படியான—லோகாதாயமான—ஜன சமூகத்திற்குப் பிரயோஜனப்படத்தக்கது ஏதாவதொன்றை செய்யவேண்டும். அப்பொழுதான் அவனை உலகம் அங்கீகரிக்கும். அதை விடுத்து "காசுக்கொரு குதிரையும் வேண்டும்; அது காற்றாய்ப் பறக்கவும்வேண்டும்" என்றால் ஆகக்கூடிய காரியமா? வெறுமனே பொய்யும்புனைமொழியும் சேர்த்து—தான்செய்யாத தொன்றைச் செய்ததாகத் திரித்துக் கூறி வயிறு வளர்க்கவோ—வாழ்க்கை நடத்தவோ—ஸ்தானம் வகிக்கவோ விரும்புகிறவன் முகத்தில் ஜன சமூகம் "தூ"வெனக் காரியுமிழ்ந்துவிடும். தெருவில் திரியும் தேடுவாரற்ற நாயைவிட அவன் வாழ்க்கை அருவருக்கத்தக்கது.

சமீபத்தில் இரங்கோனில் இந்துக்களிடையில் மாசி மாதத்து மகம் கொண்டாடப்பட்டது. ஸ்ரீமான் ஆ. ஆ. நாகலிங்கதேவர் அன்று கோலாகலமான ரதோற்சவம் செய்தார். அதற்காக ஹிந்து சமூகமே அவருக்குப் பெரிதும் கடப்பாடுடைத்தெனப் பேசியிருந்தோம். அதன் மகத்துவத்தைப்பற்றி பல பத்திரிகைகளும் பிரஸ்தாபப்படுத்தியதுண்டு. அவைகளில் ஆங்கிலத்தில் வெளியான பத்திரிகை யொன்றில் ஏன்? பெயரையே சொல்லிவிடுகிறோம்—"இரங்கூன் கெஜட்டில்" தேவர் செய்த திருவிழாவைப்பற்றி இருமுறை பிரஸ்தாபப்படுத்தியிருக்கக் கண்டோம். அவற்றை ஆங்கிலத்தில் எழுதியது யார், என்னோக்கத்துடன் எழுதப்பட்டது என்பனவும் எமக்குத் தெரியும். அக்கட்டுரைகளிலும் படத்திலும் நாம் முற்கூறிய நாட்டுப் பழமொழியின் வாடை வீசுகிறது. யாரோ வொரு மணி. ஏ. எஸ். மணி யென்று ஞாபகம். அவர் தம்மை ஸ்ரீமான் தேவரின் தளபதி (தளவாய்) யெனக் கூறிக்கொள்ளுகிறார். தேவரின் "லெப்டினெண்டு" எனப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதை நாம் அத்துணையாய்ப் பொருட்படுத்தியதில்லை ஸ்ரீ தேவரின் அனுமதி பெற்றோ அல்லது அவரால் நியமனம் பெற்றோ மணி தளபதியாயிருந்தாலும்சரி இல்லாவிட்டால் தம்மைத்தாமே தளபதியாக்கிக் கொண்டாலும்சரி நமக்கு அக்கறையென்ன? ஆனால் பிப்ரவரி 23உ வெளியான இன்னொரு செய்தியில் அதே மணி "பக்தியில் இடமில்லை யென்றாலும் இலை போத்தல்" என்று அழையா வீட்டு விருந்தினராகத் தம்மை தொண்டர் படைத் தலைவராக அழைத்துக்கொள்ளுவதுடன் அன்று அவர் தமது தலைமைத்திறத்தால் ஊர்வலத்தை ஒழுங்குற நடத்தியதாகவும் தாமே தமது சங்கை ஊதுகிறார். இது முற்றும் அபத்தம்—பொய்—புனைமொழி யென்பதே எமது திடமான கண்டனம். மேலும் நாம் ஆதாரத்துடனேயே இதை எழுதுகிறோமேயன்றி வெற்றுரையில்லை,

---

சமயம் பெண்மணிகளின் கற்பும் பறிக்கப்படுகிறது. அச்சமயம் ஆண்டவனின் துணையன்றி வேறு கெதியில்லை. தெய்வமும் நின்றே கேட்கும் இயல்புடைத்தால் தங்களுடைய உயிரைப் பறிகொடுத்தும் அவர்கள் கற்பை காத்துக்கொள்ள கட்டாரி ஏந்திக்கொண்டிருக்கின்றனர். பதிவிரதா தர்மத்திற்கு பங்கம் ஏற்படும் என்று கண்டவிடத்து கட்டாரியை தங்களது மார்பிலே பாய்ச்சி உயிர் விடுவதில் எவ்வளவு வீரம், சனாதன தர்மம் பொதிந்திருக்கின்றது. அவர்களது வீரம் வாழ்க! கற்பு ஓங்குக!!

பூர்வீக இந்தியாவில்!

முஸ்லிம் மன்னர்கள் இந்தியாவில் ஆட்சி புரிந்து கொண்டிருக்கையில் ஜனங்களின் சமூக ஆசார விவகாரங்களில்! பெரும்பாலும் தலையிடாமலே இருந்தார்கள். ஆனால் சில காலத்திற்கு பிறகு ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமையின் அவசியத்தை பல மன்னர்கள் உணர்ந்தார்கள். லோடி சுல்தான்கள் பதினைந்தாம் நூற்றாண்டில் ஆண்டுகொண்டிருக்கையில் இராமானந்தரும் அவருடைய சீடராகிய கபீரும் தோன்றினார்கள். கபீர் ஒரு முஸ்லிம் நெசவுத்தொழிலாளி. இவர் பிரசாரத்தின் பயனாக, தனியான ஒரு மதமே தோன்றியது. இந்த மதத்தினர் றஹ்மானுடையவும், இராமனுடையவும் குழந்தைகள் என்று தங்களைச்சொல்லிக் கொள்ளுகிறார்கள். இவரால் பாடப்பட்ட சங்கீர்த்தனங்கள் பல வட இந்தியாவில் மிகப் பிரபலமாய் இருக்கின்றன. சீக்கிய மதஸ்தாபகரான நானக் தேவரின் மதாச்சாரியார் என்று கபீரைச் சொல்ல வேண்டும். பிற்காலத்தில் சீக்கியர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் தீவிரப் பகைமை ஏற்பட்டுவிட்ட போதிலும் ஹிந்து மதத்தையும், இஸ்லாம் மதத்தையும் ஒற்றுமைப்படுத்திக் கொண்டு செல்லக்கூடிய மதமாகவே சீக்கிய மதம் இருந்தது. இந்துக்களும், முஸ்லிம்களும் தங்கள் மதத்தினரே என்று குரு நானக்கைக் கொண்டாடினார்கள். அவருடைய சவத்தை முஸ்லிம்கள் புதைக்க வேண்டுமென்றார்கள். ஹிந்து மக்கள் எரிக்கவேண்டுமென்றார்கள். ஆனால் இந்த சவமே காணாமற் போய்விட்டதென்றும், ரவி நதிக்கரையில் இந்துக்கள் ஒரு கோயிலையும், முஸ்லிம்கள் ஒரு மசூதியையும் கட்டினார்களென்றும் ஒரு சரித்திராசிரியர் கூறுகிறார். பிறகு அக்பர் காலத்தில் "தீன்இலாஹி" என்றஒருவகைமதக்கொள்கைஆரம்பிக்கப்பட்டது. இஃது அவ்வளவு முக்கியமல்லவாயினும் ஒற்றுமைப் படுத்துவதற்குச் செய்யப்பட்ட பல முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

சித்திரம், ஒவியம் முதலியவைகளிலும் ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை மிக முக்கியமாகக் கவனிக்கப்பட்டு வந்தது. தாஜ்மஹால் என்னும் கட்டிடமானது, ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு ஒரு சின்னமாக விளங்குகிறது. தாஜ்மகாலின் மேலேயுள்ள சிகரமானது, தாமரைப் பூவைத் தலைகீழாக வைத்ததுபோல இருக்கிறது. இன்னும் பல கட்டிடங்களில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையின் உணர்ச்சி நன்றாகக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த உதாரணங்களிலிருந்து நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். இப்பொழுதோ இந்து—முஸ்லிம் தலைவர்களில் சிலர் எதற்காகப் போராடுகிறார்கள் பார்த்தீர்களா? கேவலம், வெட்கம்!

புரட்சியின் மகத்துவம்.

"மாஸினி" எனும் இத்தாலிய தேசாபிமானி "கார்லைல்" என்னும் ஆசிரியன் வெளியிட்ட "பிரஞ்சுப்புரட்சி" என்ற புஸ்தகத்தை ஆராய்ந்தால் ஒவ்வொரு புரட்சியும், ஒரு மகத்தான தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டேதான்நடைபெறுகிறது என்கிறார். நாமும் அதையேதான் ஒப்புக்கொள்கிறோம். ஒருதேச முறைகளை மாற்றி யமைப்பதற்காகச் செய்யப் படுவதே புரட்சியாகும். 1857ம் வருஷம் பாரத நாட்டில் ஏற்பட்ட புரட்சியும் ஒரு மகத்தான புரட்சியாகும். ஒரு சிறிய அக்கிரமச் செயலுக்காகப் பெரிய புரட்சிஒரு பொழுதும் ஏற்படாது. பழைய ராஜாங்கமழிந்து, புது ராஜாங்க மேற்பட்டும், பழம் முறைகளழிந்து நவீன முறைகள் சிருஷ்டிக்கப்பட்டும், சிம்மாசனங்கள் சிதறுண்டும், கணக்கற்ற வீரர்கள் உயிரை மதியாது, லக்ஷியத்திற்காகப் போர் புரிந்து உயிர்விடவும் ஏற்பட வேண்டுமானால் முக்கிய காரணமில்லாமல் புரட்சி ஆரம்பித்திருக்கவே மாட்டாது.

அன்று பெஷாவரிலிருந்து கல்கத்தா வரையில் பொங்கிப் புரண்ட ராஜீய வெள்ளமானது ஏதாவதொன்றை முழுகப்பண்ண வேண்டுமென்ற எண்ணம் கொஞ்சமும் இல்லாமலேயா கிளம்பி இருக்கமுடியும்! டெல்லி முற்றுகையென்ன—கான்பூர் படுகொலைகளென்ன—தேசியக் கொடிக்காக எண்ணற்ற வீரர்கள் உயிர் துறந்ததென்ன—இவைகளெல்லாம் காரணமில்லாமல் நடந்ததென்று சொல்லக்கூடியதல்ல? ஒரு சந்தைகூட ஒரு காரணம் முடிவு இவைகளில்லாமல் திறந்துமூடப்படுவதில்லை. எந்த லக்ஷியத்திற்காக இன்று அஹிம்ஸைப் போர் நடைபெறுகின்றதோ அதே நோக்கத்தோடுதான் அன்றும் நடந்திருக்க வேண்டும்!

இயேசுநாதரும் காந்திஜீயும் : ஸ்ரீமதி டெர்மண்ட்கே.

இந்தியாவுக்கு மகாத்மா காந்தி கேட்கும் கோரிக்கைகளையும், அவருக்குள்ள சக்தியையும் அலட்சியம் செய்ய வேண்டாமென பிரிட்டிஷாரை எச்சரிப்பதுடன், பிரிட்டிஷார் நியாயத்துடனும் தர்மத்துடனும் நடந்துகொள்ள வேண்டும்.

மகாத்மா காந்தி தெய்விக சக்தியுள்ளவர். அவரை இந்தியாவில் அவதரித்துள்ள அரசியல் தீர்க்கதரிசி என்றே கூறவேண்டும். அமெரிக்காவின் விடுதலைக்கு அவதரித்த ஜார்ஜ் வாஷிங்டனைப்போல மகாத்மா காந்தியும் இந்தியாவின் விடுதலைக்காக அவதரித்திருக்கிறார். எதிர் காலத்தில் அவர் விடுதலை வீரராக விளங்குவாரென்பதில் சந்தேகமில்லை அவர் சிறிதும் ஆடம்பரமற்றவர். லண்டன் மகாநாட்டில் அவரை நான் நேரில் சந்தித்தபோதுஅவருடைய கைப்பெட்டியொன்றில் எப்பொழுதும் ராட்டினம் இருக்கிறது. அவரது தாய்நாட்டின் கைத்தொழிலுக்கு அது ஓர் அறிகுறியாகும். 2000 ஆண்டுகளுக்கு முன் இயேசுநாதர் கழுதையின்மேல் ஏறிக்கொண்டு எருசலேத்திற்கு வந்தது போலவே, மகாத்மா காந்தியும் யாதொரு ஆடம்பரமுமின்றி லண்டன் வந்திருந்தார். ஆட்டுப்பாலை ஆகாரமாகக்கொண்டவரும், மூக்குக்கண்ணாடி தரித்த வருமான இந்த அரையாடை மனிதரை சில பிரிட்டிஷ் பத்திரிகைகள் கடுமையாகத் தூஷித்தன. சிறிதும் பொறுப்பில்லாத சிலர் துவேஷத்தால் அவரைவேஷதாரியென்றும்சாகசக்காரரென்றும் அவதூறாகக் கூறினார்கள். முன்னர் இயேசுநாதர் எருசலேம் தெருக்களில் சென்றபோதும் மேற்கூறிய விதமே கூச்சல்கள் கிளம்பின. இயேசுநாதரை அப்போது பலர் தூஷித்தார்கள். அவரது நோக்கங்கள், கொள்கைகள் அவைகளுக்குத் தவறான வியாக்கியானம் செய்தார்கள். அதன் பயனாக அம்மகான் கடைசியில் சிலுவையில் மாண்டார். அவர் மாண்டதால் கிறிஸ்துவ நம்பிக்கையும், மதமும் அழிந்துவிடுமென அவரது விரோதிகள் நினைத்தார்கள். ஆனால் அவர் சிலுவையில் மாண்டது தான் அசைக்கமுடியாதஅஸ்திவாரமாயிற்று!

தற்போது இவ்வுலகில் மகாத்மா காந்தி இயேசுநாதர் போன்றே இருந்து வருகிறார். அவரைக்காட்டிலும் பரிசுத்தமானவர் ஒருவருமேயில்லை. அவர் கனக்கென வாழாப் பிறர்க்குறியாளராயும், இவ்வுலகத்திலுள்ள ஸ்தூல விஷயங்களை வெறுத்தும் தமது வாழ்க்கையை நடத்தி வருகிறார். இவ்வுலக விஷயங்களில் அவருக்கு ஆசையில்லை. அவரை முற்றும் மறந்த ஒரு மகரிஷியெனக் கூறுவது மிகையாகாது. வேட்டையாடுவதையொட்டியோ அல்லது ஆகாரத்திற்காகவோ அவர் ஒருபோதும் ஜீவ இம்சை செய்வதேயில்லை. தமது தேசத்திற்காகவும் தமது ஜனங்களுக்காகவும் அவர் எவ்விதத்திலும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறார். எனவே அவரை இந்தியாவின் அரசியல் இயேசு நாதர் எனக் கூறுவதற்குக் காரணமிருக்கிறது.

ஆகையால் பிரிட்டிஷ் சர்க்கார் எந்தக் காரியத்திலும் பரம்பரையாக நியாயமாகவே நடந்துகொண்டு வருவதை அனுசரித்து மகாத்மா காந்தி விஷயத்திலும் நியாயமாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம். பிரிட்டனின் தற்காலிக நிலைமை எதிர்கால நிலைமை இவைகளை அனுசரித்து நியாயமாக நடந்து கொள்ளுவதுதான் மேன்மையாம். நம்மிடையுள்ள அறியாமை, துவேஷம், கர்வம் இவைகளால் சர்க்கார் கண்மூடித்தனமாக இருந்துவிடக் கூடாது.

இந்தியாவை இழந்தால்!

"1783-ல் அமெரிக்காவை இழந்தோம். அதேபோல் 1931ல் இந்தியாவை இழந்துவிடுவோம் போலிருக்கிறது. இந்தியாவோடு நமக்கு சம்பந்த மேற்படுவதற்கு முன் நம்மிடம் செல்வமே கிடையாது. இன்று இந்தியாவை இழந்துவிட்டோமானால் மறுபடி செல்வ நிலையை எதிர்பார்க்க முடியாது. இன்றைக்கு இங்கிலாந்தில் லக்ஷக்கணக்கான ஏழைமக்கள் பிழைக்கிறார்களென்றால் என்ன காரணம்? இந்தியாவோடு நாம் செய்துவரும் வியாபாரம், கைத்தொழில், பாங்கிங்,கப்பலோட்டம், இன்ஸ்யூரன்ஸ் முதலியவைகளே. இவைகளை அழிக்கவே காந்தியும், இந்திய தேசிய வாதிகளும் முயல்கின்றார்கள்" என்று பிரபு ராதர்மீர் என்பவர். ஜெயிண்ட் ஜார்ஜ் என்ற இடத்தில் ஒரு தேர்தல் கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

அகப்பட்டதைசுற்றடா ஆண்டியப்பா!

தருமம் தழைத்தது நம் இந்தியநாடு. பண்டைக்கால இந்திய மன்னர்கள் தெய்வத்திற்குப் பயந்து, நெறிதவறாமல், அரசாண்டு வந்தனர். அரசர்கள் தரும வைத்தியசாலைகள் அன்னசத்திரங்கள், தண்ணீர்ச் சாலைகள் முதலியன நிருமித்து முப்பத்திரண்டு தருமங்களையும் வழுவாது காத்து வந்தனர். அனாதையான ஒருவனுக்கு வீடு முதலியன கட்டிக்கொடுத்து தக்க பெண்களை விவாகஞ் செய்வித்து அவனுக்கு தொழில் கொடுத்து குடி வளர்ப்பதும் வாழாத குலத்தை வாழ வைப்பதும், அக்கால மன்னர்களது முதல் நோக்கமாயிருந்தது. அதனால் குடிகளும் கொற்றவனுக்கு எதிர்மாறு பேசாமலும், அவனைத் தெய்வமாகவும் வணங்கி வந்தார்கள். அபயமளித்த புறாவுக்காகத் தனது உடலையிந்த சிபிச்சக்கரவர்த்தி என்ன! சத்தியத்தைக் காத்த அரிச்சந்திரனென்ன! கொடை வள்ளல் கர்ன மகாராஜனென்ன! சந்திரகுப்தன், விக்கிரமாதித்தன், அசோகன், பாபர், அக்பர் போன்ற சமீபகால உத்தம அரசர்களென்ன? இவர்களை யெல்லாம் நாம் மறந்து விட்டோமா! ஏன் மறக்கவில்லை? குடிகள் க்ஷேமமாய் வாழ்ந்தால்தான் கொற்றவன் செங்கோல் செலுத்த முடியுமென்ற உததமக் கொள்கைகளைக் கொண்டிருந்தபடியினாலன்றோ!

தற்காலம் பிரிட்டிஷ் அரசாங்கத்திலே—ஓர் எரோப்ளேன் வில்லிங்டன் சர்க்காரிலே எம்மாதிரி நடக்கிறது. குடிகளைக் கலைப்பதிலும்—அவர்களை வாழவொட்டாமல் அடித்துத் துரத்தி அவர்கள் சொத்தை பறித்துக் கொள்வதிலுமே சர்க்கார் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றனர்.

பம்பாய் மூல்ராஜ் கரோசனதாஸ் ஒரு காங்கிரஸ் தொண்டர். இவருக்கு விதிக்கப்பட்ட ரூ 5000 அபராதத்தை வசூலிப்பதற்காக அவருடைய மனைவியார் பெயராலுள்ள வீட்டையும் ஜங்கம சொத்துக்களையும் சர்க்கார் காபந்துசெய்து, அவருடைய 90 வயது சென்ற கிழத்தாயாரையும், மனைவி, மக்களையும் வெளியில் துரத்திவிட்டார்கள். அகப்பட்டதைச் சுற்றும் ஆண்டிகள். அனாதைக்கு தெய்வமே துணை யென்பதை உணரவேண்டும்.

மறியல் வர்ணனை.

நான் ஓர் ஆங்கிலத்துணி வர்த்தகசாலை முன் நின்றுகொண்டிருந்தேன். அந்த வர்த்தகசாலை காங்கிரஸ் தொண்டர்களால் மறியல் செய்யப்பட்டு வந்தது. கடை வாசலின் ஓர் பக்கம் சுமார் 16 வயதுள்ள ஓர் வாலிபன்; கதர் நூலினால் நெய்யப்பட்ட அரைச்சராயும், உள்ளங்கியும், காலில் செருப்பும், தலையில் துல்லியமான காந்திக் குல்லாயும் தரித்தவனாய் நின்றுகொண்டிருந்தான். மாந்தளிர்போன்ற மேனியுடையவனேயாயினும், காந்தி குல்லாயைத் தவிர, அமெரிக்க வாலிபச்சாரணனெனவே தோற்றினான். வாசலின் மற்றொரு பக்கம் குரிச்சியின்மேல் அதே வயதுள்ள ஒரு சிறுமி நூல் நூற்றுக்கொண்டு கம்பீரமாக உட்கார்ந்திருந்தாள் இச்சிறுமி எலுமிச்சம்பழம் போன்ற மேனியுடையவள். ஆரஞ்சு வர்ணமுள்ள விலையுயர்ந்த துல்லியமான சித்தாடையில் இவள் தெய்வப் பெண்ணெனவே விளங்கினாள். இரு தொண்டர்களும் விளையாடும் பருவத்துப் பிள்ளைகளேயானாலும், அவர்களது இந்தியக் கருவிழிகள் இமைக்காமல் அந்நியத்துணி வாங்கவருபவர்களை எதிர்பார்த்துகுறுகுறுவெனப்பிரகாசித்தன. அந்தக்காட்சிதேசசேவையில் அவர்களுக்குள்ள அந்தரங்கபக்தியைநன்கு புலப்படுத்தியது. மறியல் செய்யப்பட்ட கடை மும்மரமான வியாபாரஸ்தலத்தில் இருந்தாலும் ஒருவரும் கடைக்குள் நுழையத் துணியவில்லை. வெகு நேரத்திற்குப் பிறகு ஒருவர் கடைக்குள் நுழைய யத்தனித்தார். தொண்டர்கள் சிரமேற் கைகுவித்து அஞ்சலி செய்தவராய் இரங்கிய நோக்கத்துடன் பார்த்த ஒரு பார்வையில் அவர் வாய்பேசாமல் வந்தவழி திரும்பிவிட்டார். அந்தோ! ஒரு மோட்டார்? சில போலீஸ் ஜவான்கள் திடீரென வெளிப்போந்து இரு தொண்டர்களையும் கவர்ந்து சென்றனர். ஐயோ இந்த இளம் பயிர்கள் இரண்டு மாதமோ மூன்று மாதமோ அரசாங்க விருந்தினராவார்கள். தொண்டனுக்கு ஜே!

கிழ மாப்பிள்ளை—கிளி மணப்பெண்.

நாடு இருக்கும் நிலையில் சாச்வதமாக ஒரு குடித்தனத்தை நிர்வகிக்க முடியாதென்று நினைத்து நம்முடைய இளைஞர்கள் அநேகர் விவாகம் செய்துகொள்ளாமலிருந்து வருகிறார்கள். கல்யாண மார்க்கட்டில் பெண்கள் மலிந்து கிடக்கின்றார்கள். எப்படியாவது பெண்களைக் கட்டிக்கொடுத்து விடவேண்டுமென்று பெண்களின் பெற்றோர் எண்ணுகின்றனர். இந்த சமயத்தை உபயோகித்துக்கொள்ள பெண்ணாசை பிடித்துப் பேயாய் அலையும் சில கிழவர்கள் 50, 55, 60 வயது வந்தவர்கள், கிளிகள் போன்ற பெண்மணிகளைக் கட்டிக்கொள்ள முயல்கின்றார்கள். இத்தகையவிவாகங்களினால்தான் சமூகத்தில் அநேக கெடுதல்கள் விளைகின்றன என்பதை அறிவாளி கண்டறிவான். இப்போது அநேக விடங்களில் நடந்துவரும் கிழமாப்பிள்ளை —கிளி மணப்பெண் விவாகங்களைத் தடுக்க வேண்டுவது சர்க்காருடைய பொறுப்பு; சமூகத்தினுடைய வேலை. பொய்ப் பல்லைக்காட்டி, இளித்துத் தடியூன்றி நடக்கும் கிழக் கோட்டான்களுக்கு இளம் பெண்களைக் கட்டிக்கொடுக்க வேண்டாமென பெற்றோருக்கு எச்சரிக்கை செய்கின்றோம். அப்படியே ஏதேனும் கல்யாணங்கள் நடக்குமாகில் அந்தக் கல்யாணங்களை மறியல் செய்து தடுப்பது நம்முடைய வேலையாகும்.

சட்டங்களை உபயோகித்து இத்தகைய விவாகங்களைத் தடுக்கமுடியுமானால் சர்க்கார்சிப் பந்திகளும் தயங்கலாகாது. உதாரணமாக ஒரு 10 வயதுப் பெண்ணை ஒரு கிழப்பயல் கட்டிக்கொள்ள விரும்புவதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுதேனும் சாரதாச் சட்டத்தை உபயோகித்து அந்த விவாகத்தைத் தடுக்கலாமல்லவா?

பாவம் வாயில்லாத நம் பெண்களை இவ்வாறு மடுப்பது மகாபாவம்! கிழவனுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட சிறு பெண் தனிமையில் அழும் காக்ஷியை நம்மவர் அறிந்துகொள்ளவில்லையே. சில வருஷங்களில் கிழக் கணவனை இழந்து கதறும் இளம் விதவைகளின் ஓலம் நம் காதில் படவில்லையே!

இரண்டு மாதங்களில்!

பாரத நாட்டில் நடந்துள்ள செய்திகளை வரைய வேண்டுமானால் ஆயிரம் பாரதங்களாக எழுதவேண்டும். இந்த இரண்டு மாதங்களில் இந்தியர்கள் காட்டிவரும் ஆவேசமும், வீரமும், தியாகமும், ஊக்கமும் கண்கொள்ளாக் காக்ஷியாயிருக்கின்றன.

தங்கத் தொட்டில்களில் வளர்ந்த வாலிபச் சிங்கங்கள் துன்ப வாழ்க்கையை இன்பமென ஏற்று சிறைவாசம் அநுபவிக்கின்றனர். தடியடிகளை பூமாலைகளாக ஏற்றுக்கொள்கின்றனர். சிலர் சாவுக்கும் அஞ்சாமல் துப்பாக்கி முன்னேயும், தூக்குமேடைக்கும் ஆயத்தமாயிருக்கின்றவர். "ஆண்மக்களின் வீரத்திற்கும தேசபக்திக்கும் அணுவளவும் குறையேம்." என்று நாட்டின் வீரப் பெண்மணிகளும் முன்னணியில் நிற்கின்றனர். சென்னை, ஆந்திரா, போர்சாத் முதலிய இடங்களில் அதிகாரிகளின் அட்டூழியங்களுக்கு அஞ்சாது நின்ற— நிற்கின்ற பெண்மணிகளை எவ்வாறு புகழ்வது. இவ்வாறு பாரதநாட்டில் ஆண்மையும், பெண்மையும் போட்டிபோடும் காக்ஷியைக் கண்டு வியப்படைந்து நிற்கும்போது பால்மணம் மாறாத சிசுக்கள்—தின்பண்டமென்றால் கைகளை நீட்டும் பாலர்கள் அரசாங்கத்தாரோடு போரிட்ட—போரிடும் காக்ஷிக்கு ஈடாக உலக சரித்திரங்களிலேயே உதாரணங்களில்லை என்று நிச்சயமாகக்கூறலாம். இந்த தியாகமூர்த்திகளுக்கு—வீர சிங்கங்களுக்கு வேலை முற்றுப்பெற ஆசிகூறுவோமாக. சுதந்தர யுத்தத்தின் பூர்வாங்கங்கள் நடந்துவிட்டன. இனிமேல்தான் இந்த நாட்டினர் தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளப் பாடுபடவேண்டும். நம்முடைய யுத்தத்தை தலைமை வகித்து நடத்துவதற்கு மகாத்மா இருக்கும்போது நமக்கென்ன குறைவு! ஒன்றுமில்லை.

தேசோபகாரி.

வருஷம் 1க்கு	...	ரூ.	3 0 0
ஆறு மாதம்	...	ரூ.	1 8 0
வெளியூருக்கு வருட சந்தா		ரூ.	4 8 0

ஸர் ஸாமுவேல் ஹோர் வைத்தியம்.

நம் புராதன இந்திய நாடு மேன்மை பொருந்திய சித்தாதி வைத்திய முறைகளைக் கொண்டநாடு. யார் செய்த பாவமோ? எவர் செய்த கர்மமோ சித்தாதி வைத்திய முறைகள் மறைந்தொழிந்து போலி சித்தாதிகள் கிளம்பிவிட்டனர். ஒரு போலி சித்தாதி வைத்தியன் ஒரு நோயாளிக்கு வைத்தியம் செய்ய ஆரம்பித்தான். வைத்தியம் செய்யுமுன் கஞ்சி ஒரு அண்டா நிறைய காய்ச்சச் சொன்னான். மருந்தை ஒரு அண்டா கரைத்து வைத்துக்கொண்டான். ஐந்து நிமிஷங்களுக்கு ஒரு முறை ஒரு தூக்குச்சட்டி கஞ்சியை முன்னெச்சரிக்கையாக—அதாவது பின்னால் கொடுக்கப்போகும் மருந்தின் வேகத்தை தணிப்பதற்காக வார்த்துவிடுவதும் — உடனே ஒரு தூக்குச்சட்டி நிறைய கலக்கிய மருந்தையும் இம்மாதிரியே அனுபானம் கொடுத்துவந்தான். இத்தகைய வைத்தியன் கையில் சிக்கிய நோயாளியின் கதி என்னவாயிருக்குமென்பதை நாம் சொல்லத் தேவையில்லை!— நோயாளி நிரந்தர சவுக்கியத்தை அடைந்திருப்பானல்லவா?

இத்தகைய வைத்திய முறையையே விடுதலை தாகங்கொண்ட 35 கோடி இந்திய மக்களுக்கும் பிரயோகிக்கிறார் சித்தாதி வைத்தியர் ஸர் ஸாமுவேல் ஹோர். சட்டமென்பதே அவர் உபயோகிக்கும் கஞ்சியாகும். ஒழுங்கு என்பது பிணிதீர்க்கும் மருந்து பரவாயில்லை! நல்ல முறைதான். ஈட்டன் தேச வைத்தியசாலை நிபுணத் தலைவராக இவர் இறந்த பின்னும் கொண்டாடப்படுவார் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

நிற்க காங்கிரஸ் இயக்கம் ஒழிந்ததென்றும், அவசியமில்லாவிடத்து அவசரச் சட்டங்களை வைத்திருப்பதில்லையென்றும் கூறிய ஸர் ஸாமுவேல் ஹோர் இன்னும் அவசரச்சட்டங்களையும் அடக்குமுறைகளையும் எடுக்காததன் காரணம்யாது? ஸர் ஸாமுவேல் சொன்னபடி காங்கிரஸ் அடியோடு தொலைந்துபோயிருக்குமானால் மேலும் மேலும் அடக்குமுறை மருந்துகளைப் பிரயோகிப்பது அறிவீனமல்லவா? உலக ஞானம் படைத்த இவருடைய மூளை இவ்வாறு முன்னுக்குப்பின் முரணான அர்த்தமில்லா வார்த்தைகளையும், அனர்த்தம் விளைவிக்கக் கூடிய செயல்களையும் பிரயோகிப்பதின் அர்த்தமென்ன?

இனி வங்காள கிரிமினல் சட்ட பிரண்டிஸ் மூளை பிறண்டே போய்விட்டதினால் பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டுமென்று முன்னமேயே நாம் சிபார்சு செய்தோம். நாம் எதிர்பார்த்தபடியே பிரண்டிஸ் இன்னும் இழிவான—சர்க்காருக்கு ஈனத்தை விளைவிக்கக்கூடிய செயலையே செய்து வருகின்றான். அவசியமில்லா கிரிமினல் சட்ட சீர்திருத்தத்தைக் கொண்டு வந்துவிட்டான்.

1931ஹு வங்காள அவசரச் சட்டம் 1932ஹு ஏப்ரல் மாதம் 28உயுடன் தீர்ந்து போகிறபடியால், நாட்டின் நிலைமையை உத்தேசித்து அவற்றை உயிர்ப்பிக்க வேண்டியது கடமை என்று அவன் காரணங்கூறுவது விநோதமாகவே இருக்கின்றது. விசாரணையின்றி—காரணமுமின்றி சிறைக் கஷ்டங்களை அனுபவித்துவரும் எண்ணிறந்த தடைக்கைதிகளுக்கும் அநாதரவான தடைக் கைதிகளின் குடும்பத்தாருக்கும் மேலும் மேலும் கஷ்டங் கொடுக்க முன் வந்திருக்கும் பிரண்டிஸின் அடாத செயலை அறிவாளிகள் கண்டிக்கவே செய்வர். தடைக் கைதிகளின் குடும்பத்தாருக்கு சர்க்கார் கொடுத்துவரும் சொல்பத் தொகையும் இனி இதர வருமானமுள்ள குடும்பத்தாருக்குக் கொடுக்கக்கூடாதாம். என்னே அநீதி! தடைக் கைதிகள் சமான்யப்பட்டவர்களா? இவர்கள் அக்கிரமமாக—பிரிட்டிஷாரின் சுயநலத்தின் பொருட்டு சிறைசெய்யப்படாதிருந்தால் எத்தனை ஆயிரங்கள்—எத்தனை லக்ஷங்கள்—எத்தனை கோடிகள் — சம்பாதிப்பார்கள். அவர்களை அண்டிய எத்தனை குடும்பத்தாரகள் இன்புற்று சுகவாழ்வு வாழ்வார்கள்? இவை பிரண்டிஸ் மூளைக்கு எட்டவில்லையா? தடைக் கைதிகளின் குடும்பத்தார்களின் செல்வப் புத்திரர்களையும் கொள்ளைகொண்டு அவர்களை வயிற்றிலும் அடிப்பதை எந்த நாகரீக அரசாங்கந்தான் செய்யும்! இந்தியர்களைத் தவிர எந்த நாட்டான் பொறுப்பான்? இத்தகைய மிருகச் செயல்களை நாம் பலமாகக் கண்டிக்கின்றோம். முடிவாக சர்க்கார் தங்களது மிருக பலத்தினால் எத்தகைய அநீதங்களையும் செய்யட்டும்! எண்ணிறந்த கோடி அவசரச் சட்டங்களையும் பிறப்பிக்கட்டும்! ஆனால் எத்தனை காலத்துக்கு என்றுதான் பாரததேவி கேட்கின்றாள்?

ஏகப் பொத்தல்கள்.

தன் குற்றத்தை உணராதவன் பிறன் குற்றத்தைக் காண்பது மனித ஸ்வபாவம். இத்தகைய செயலையே அறிவாளிகள் கண்டிக்கிறார்கள். ஆனால் தன் குற்றத்தை உணராதவன் பிறன் குற்றத்தை—பிறனது ஊழல்களை எடுத்துக் காட்டுவதினால், பிறனுக்கு நன்மையில்லையோ எனக் கேட்கலாம். இந்தக் கேள்விக்கு அறிவாளிகள் பதில் சொல்வதாவது. மிதமிஞ்சிக்குடித்து விட்டவன்—குடியிலேயே மூழ்கிக் கிடப்பவனொருவன் தான் கீழே விழுந்துவிட்டாலும் தலை கிறுகிறுப்பினால் திடமாக எதிரில் நிற்பவர்களை கீழே விழுந்துவிட்டதாகக் கண்டு எளனஞ் செய்கின்றான். அதனாலே எதிரில் நிற்கும் திடகாத்திரர் விழுந்துவிட்டதாக ஆகுமா? இங்ஙனமே பிறன் குற்றத்தைச் சுட்டிக்காட்டுவதும். பிறன் குற்றத்தைச் சுட்டிக் காட்டுமுன் பிரதி மனிதனும் தன் குற்றத்தை தானே சீர்படுத்திக்கொள்ளக் கடவன்.

இங்கிலாந்தின் செயலும் இத்தகையதேயாகும். இந்தியாவை இந்தியர்கள் கையில்—இந்தியத் தலைவர்கள்பால்—ஒப்படைத்து விட்டால் அவர்களால் இந்தியாவை ஒழுங்கு பெற சீர்திருத்த முடியாதென்று சொல்லுகிறார்கள். இவ்வளவு இந்தியத் தலைவர்களைக் குறைசொல்லும் பிரிட்டிஷ் சர்க்கார் பிரிட்டானியாப் படகு ஏகப்பொத்தலாய் அரசியல் ஊழல் என்ற கடலில் மூழ்கிக் கிடக்கின்றதினின்றும் ஏன் சீர்திருத்திக் கொள்ளக்கூடாது. பொத்தல்கள் எவை என்பீர்கள். சென்ற யுத்தத்தின் காரணமாக கோடிக்கணக்கான வெளி நாட்டுக் கடன் பொத்தல்—வருங்கால யுத்தத்திற்கு போர்க்கப்பல்—யுத்ததளம் சேமித்துக்கொள்ளுதற்காக இங்கிலாந்தின் பாப்பர் சர்க்கார் வாங்கவேண்டியிருக்கும் கடன் பொத்தல்—சென்ற யுத்தத்துக்காக உள்நாட்டில் பத்திரக் கடன்களை தீர்க்கவேண்டிய பொத்தல்—சாமான்யக் கடன் பொத்தல்—நாடெங்கும் வேலையில்லாத் திண்டாண்டத்தினால் ஆங்கில மக்கள் பார்லிமெண்டைத் தாக்குகிறார்களே அந்தப் பொத்தல்—நடப்பு வருடத்திற்கு வரவு செலவு செய்ய பணமில்லாப் பொத்தல்—இந்த ஏகப் பொத்தல்களினால் பிரிட்டானியா கடலில்—மூழ்குகின்றனரே இவர்களுஞ்சற்றும் அறிவின்றி இந்தியப் பொத்தல்களை அடைக்க முற்படுகின்றார்களே என்றுதான் இந்தியனை அல்ல—உலகமே அல்ல இங்கிலாந்தின் நன்மையைக் கோரும் மிஸ் ஸில்வியா பாங்கர்ஸ்ட் போன்ற ஆங்கில பெண்மகளும் நகைக்கின்றாள்.

இரண்டு பலாத்கார கூட்டம்!

இந்தியாவிலோ இரண்டு விதமான ஹிம்ஸைக் கட்சிகள் இருப்பதை அஹிம்ஸா தர்மத்தின் அவதாரமான மகாத்மா கண்டார். மூன்று அதிகாரிகளால் மக்களுக்கு இழைக்கப்படும் ஹிம்ஸை, பம்பாயில் வில்ஸனும், சென்னையில் கன்னிங்காமும், கல்கத்தாவில் தேகார்த்தும் இழைத்தது போன்ற ஹிம்ஸை. இன்னொன்று புரட்சிக் கூட்டத்தினரால் ஆங்கிலேயர்களுக்கு இழைக்கப்படும் ஹிம்ஸை. பஞ்சாப் கவர்னர், பெங்கால் கவர்னர், சிறை இன்ஸ்பெக்டர்கள் இவர்களை சுடுதல் போன்ற ஹிம்ஸைகள். இந்த இரண்டு பலாத்காரக் கூட்டமும் தத்தம் செயல்களை நிறுத்திவிட வேண்டுமென்பது மகாத்மாவின் அபிப்பிராயம்.

அதற்கேற்ப அதிகாரிகளும் ஹிமாலயத்தினின்று குமரிமுனை வரைக்கும் அடக்குமுறைகளைக் கையாண்டுவிட்டனர். வில்லிங்கடனும் ஓய்ந்து விழுந்து திகைதப்பி நிற்கின்றான். அன்றுகூட "இந்தியா சுதந்தர யுத்தத்திற்கு வியாபாரிகளும், முதலாளிகளும் ஒத்தாசை செய்துகொண்டிருக்கிறார்கள். அதை நசுக்கிவிட முடியாது" என்று வெட்ஜ்வுட் பென் கூறினதையும், வைஸ்ராய் பிரபு மனதில் போட்டுக்கொள்ளவில்லை. இந்திய இளைஞர்களோ ஆத்திரம் ஊட்டப்பட்ட நிலைமையிலிருக்கிறார்கள்.

இனித் தமிழராகிய நாம் செய்யவேண்டுவதென்ன? இன்னும் தூங்கிக்கொண்டிருப்பவர்களைத் தட்டி எழுப்ப வேண்டியது நமது வேலை. நம்முடைய அஹிம்ஸைச் சிப்பாய்களின் கூட்டம் அதிகரிக்கப்பட்டு எப்போதும் தயாரிலிருக்க வேண்டும். இப்போது நாம் செய்யும் வேலையில்தான் ஸ்வராஜ்யத்தின் அஸ்திவாரம் உள்ளது.

Printed & Published By A V Sellam Pillay at the Desopakari Press, 210,36th Street Rangoon

பதிவு எண் 245 மலர் 9 இதழ் 66 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை

DESOPAKARI

புதன் ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி இரங்கோன், (6-3-32) மாசி மீ 23உ ஞாயிற்றுக்கிழமை

விடு, பிடி வேடிக்கை!

மற்றவர் நாட்டவர்முன் நின்றிடும் போழ்து
மண்டு மென் வெட்கத்தின் ஆணை
மாற்றலரெங்கள் கொடியர்க் கிழைக்கும்
வருங் கொளுத் துயர்களின் ஆணை
ஆற்றகிலராய் எம்மரு நாட்டின்
அன்னைமார் அழும் கண்ணீர் ஆணை
ஏற்ற இவ்வாணை அனைத்து மேற்கொண்டு
இருமையும் போர் பொருதுவனே!

நமது ஜனனி ஜென்ம பூமியிலே—மாதுரு தேசத்திலே-பிறந்த பொன்னாட்டிலே—இவ்வாறு அடுக்கடுக்காக அடுக்கி எமது தாய் மண்ணுக்குத் திருமாலை சூட்டுவதிலே தான் எவ்வளவு இன்பம், எத்தனை கவிதா சக்தி, என்னென்ன ஆசை வெறியெல்லாம் ஏற்படுகிறது தெரியுமா? இப்பொழுது இந்தியா வெங்கும் இரணக்ஷேத்திரமாக்கிக் கொண்டு இந்தியர்கள் மூச்சுவிடக் கூட நேரமில்லாமல் உயிர் உடல் உள்ளதெல்லாவற்றையும் ஈடாக வைத்துப் போர் செய்து கொண்டிருக்கும் போர் மத்தியிலேயும் நாம் நிம்மதியாக நின்று கற்பனை பேசுகிறோம் வர்ணனை வரைகிறோமே யென்று நினைப்பீர்கள். ஆனால் நம்மைப் பொறுத்தமட்டில் நாம் இப்போரை போரென்று கருதவில்லை; சண்டையென்று எண்ணவில்லை. நாம் கத்தி பிடித்திருக்கிறோமா? கவசந் தரித்திருக்கிறோமா? துப்பாக்கி தூக்கியிருக்கிறோமா? வெடிக் குண்டு வீசுகிறோமா? இவைகளையெல்லாங் கொண்டு எவருடைய இரத்தத்தையாவது சிந்துகிறோமா? இல்லை எதிரியென்று எவரைச் சொல்லுவதற்காவது இடமிருக்கிறதா? அதுவுமில்லை. அப்படியானால் இப்பொழுது நடப்பதுதான் என்ன? சமாதானமாக, சாத்வீக முறையில் ஒரு கட்சியார்—ஆளப்படும் அடிமை ஜனங்கள் ஆளும் அன்னியர்களை "எங்களது நாட்டை எங்களிடமே கொடுத்து விடுங்கள். எங்களை நாங்களே ஆண்டு கொள்ளுகிறோம், எங்களது கணக்கு வழக்கை—வரவு செலவை நாங்களே பார்த்துக்கொள்ள எங்களது பெட்டிச் சாவியை எங்களிடமே கொடுத்து விடுங்கள். சரிசெய்யவோ தப்புச் செய்யவோ எங்களை எங்கள் விதியின் போக்கில் விட்டு விடுங்கள். ஆண்டவனுக்கு அடுத்தபடியாக நீங்கள் தர்மகர்த்தர்களாக இருந்ததும் நாங்கள் பட்டதும் போதும்" என்று சொல்லுகிறோம்; பிறப்புரிமை வேண்டுகிறோம். பிரிட்டனில் பிரிட்டிஷ் ஜாமான் பிரசாரம் நடப்பதேபோல் நமது நாட்டில் நமது நாட்டுப் பொருளையே நமது நாட்டு மக்கள் உபயோகிக்கவேண்டுமென்று பிரசாரம் செய்கிறோம். நமது சகோதர சகோதரிகளை கள் வெறிகொள்ள வேண்டாமென்று மதுவிலக்குச் செய்கிறோம். இவற்றைத் தவிர காங்கிரஸ்காரன் எந்தவொரு பிரிட்டிஷ்காரன் தலையை வெட்டுகிறான்; எந்தவொரு கவர்னர் மீது வெடிக் குண்டு போடுகிறான்; எந்தவொரு கலெக்டரைச் சுட்டுக்கொல்லுகிறான். கையிலொரு சிறு துரும்பைக் கூட எடுக்காமலும், எவரையும் பகைவரெனக் கொள்ளாமலும் சாத்விக

மறியல் செய்யும் தேசத் தொண்டர்களை சவுக்காலடிக்கவும், தடியாலுடைக்கவும், துப்பாக்கியால் சுடவும் எந்தச் சட்டம் எந்த நீதி இடங்கொடுக்கின்றதென்று இந்தியரையல்லால் வேறெவரை நாம் கேட்க முடியும்? இந்தியாவின் பெண்மைத் தெய்வங்களுக்குங் குழந்தைக் கடவுளருக்கும் இச்சர்க்கார் எத்தனை யெத்தனை பிழை—எவ்வள வெவ்வளவு கொடுமை—என்னென்ன தவறுகளெல்லாம் செய்திருக்கிறது. இவைகளை நினைத்தபோதே—செய்தி கேட்டபோதே எந்த இந்திய நெஞ்சம் பகீரெனாது? எந்த இந்திய ஹிருதயம் படபடத் துடிக்காது? எந்த இந்திய இரத்தம் எரிமலையெனக் கொதிக்காது? கல்லச்சேரித் தெய்வம் பிரபா தேவியின் தாலியறுத்த சர்க்காரை எந்தவொரு இந்தியன்—அவன் ஹிந்து இந்தியனாயினும் முஸல்மான் இந்தியனாயினும் சட்டசபை இந்தியனாயினும், தேச பக்த இந்தியனாயினும், ஜஸ்டிஸ் அல்லது சுயமரியாதை இந்தியனாயினும் சரி அவன் இந்தியன், இந்தியன் என்ற உணர்ச்சியில் அது பொறுப்பதற்கில்லை. அந்த சர்க்காரை இன்னும் இந்தியாவில் வைத்துப் பார்க்கலாமா? இந்தியத் தாய்க்கு இழைக்கப்பட்ட அவமானத்திற்கு இந்தியா எல்லோருமே ஏகோபித்தெழுந்து விவகாரம் பேசவேண்டாமா? ரோஷமுள்ள இந்தியன்—ஆண்மையுள்ள இந்தியன் அஹிம்ஸை வழியில் அப்படித்தான் செய்வான். வேறு சமாதானமோ ஓய்வோ ஒழிவோ கிடையாது.

இரத்தக் கொதிப்பு நம்மை வெகுதூரம் தள்ளிக்கொண்டு போய்விட்டது. விஷயத்தை விட்டு விலகிப் போய்க்கொண்டிருக்கிறோம். தவறு செய்தோமென்றால் மன்னித்துவிடுங்கள். "இப்பொழுது இந்தியாவில் நடக்கும் இப்போரொரு போரில்லையென்றீரே அப்படியானால் அது என்னதான்" என்று கேட்கிறீர்கள். சுதந்திர வேட்கை; விடுதலை விளையாட்டு என்று வைத்துக்கொள்ளுங்கள். காங்கிரசுக்கும் சர்க்காருக்கும் மிடையே நடக்கும் இச்சம்பவத்தில் இரு தரப்பாரும் மகத்தானதொரு காரியத்திற்கே யென்றாலும் விளையாட்டே செய்கின்றனர். காங்கிரஸ்காரர்கள் அஹிம்ஸை வழியில் சுயராஜ்யம் பெறுகிறது அடிபட்டுச்சுடுபட்டுச்சிறைப்பட்டாகிலும் சுதந்திர மடைகிறது என்று சபதமெடுத்துக் கொண்ட போதே இதையொரு கடுமையான யுத்தமென்று கொண்டதில்லை. விசித்திரமான புதிய முறையென்றனுஷ்டித்தோம். எதிரிகளும் இக்கிளர்ச்சியை யடக்குவதில் சிறுபிள்ளை விளையாட்டுச் செய்கிறார்கள். கொடுங்கோன்மையின் கலப்புக் கொண்டிருந்தாலும் சர்க்காரின் செய்கைகளில் வீணர் செயலும் சேர்ந்துவிடுகின்றன. சட்டமறுப்புப் போரை சட்டப்படி தண்டிக்காமல் தடியாலடிப்பது சுடுவது ஒரு பைத்தியக்காரன் விளையாட்டு. தண்டித்தவர்களை காலத்துக்கு முந்தி விடுதலை செய்து மறுபடியும் அன்றோ மறுதினமோ பிடித்து அடைத்துவிடுவதை கிறுக்கன் செயலென்றோ அல்லது சிறுபிள்ளைச் செயலென்றோ எப்படி வேண்டுமானாலும் அழைத்துக்கொள்ளுங்கள். ஆனால் இதைக் கண்டிக்கும் நோக்கம் நமக்கில்லை. சர்க்கார் தரப்பிலேற்படும் சிரமத்திற்கும் காசுச் செலவுக்கும் தான் கவலைப்படுகிறோம். என்றாலும் இன்னொரு தவறை இங்கே விட மனமில்லை. சமீபத்தில் புருஷோத்தம தாஸ் திரிகம்தாஸை விடுதலை செய்தார்கள். குறவர்களைத் திருடர்களை கொலைஞர்களைக் கொள்ளையரைப் போல் அவரையும் போலீஸ் ஸ்டேஷனில் அன்று 2—30 மணிக்கு அதாவது விடுவித்த அரை மணிக்குள் ஆஜராகும்படி கூறப்பட்டது. வெளிச் சென்றார். பின்னால் போலீஸ் உத்தியோகஸ்தன் ஒருவனும் தொடர்ந்தான். தனது மோட்டாரிலே புருஷோத்தமரை யேற்றிச் சென்று வீட்டில் விடுவதாய் மரியாதையாகச் சொன்னான். புருஷோத்தமரும் எதிரியின் உபசாரத்தை மனித மரியாதையில் ஒப்புக்கொண்டேறிச் சென்றார். அவ்வளவுதான் மோட்டாரை எங்கும் நிறுத்தாமல் ஓட்டி ஓட்டி ஊர் சுற்றிவிட்டுச் சரியாய் 2—30 மணிக்கெல்லாம் புருஷோத்தமரை போலீஸ் ஸ்டேஷனில் ஆஜர்படுத்தினான். பிரிட்டிஷ் அகராதியில் விடுதலை யென்பதற்கு இதுவே அர்த்தமென்றால் இவர்கள்தானா இந்தியாவுக்கு சுதந்திர மளிப்பவர்கள்? அரைமணி நேரத்துக்கு அளிக்கப்பட்ட சுதந்திரத்தையும் அப்போலீஸ் படுபாவி மோசஞ் செய்து பறித்துவிட்டானே இல்லையா? புருஷோத்தமருக்கு அளித்த தண்டனை குறைந்தது நீண்டகாலந் தண்டிக்க வேண்டுமென்ற கருத்திருக்குமானால் அவரைச் சிறையில் வைத்துக்கொண்டே ஒரு வருஷமில்லை

நான் தான் இந்தியன்!

நம்மையாளும் மந்திரியும், வைஸ்ராயும் இரும்புக்கரத்தோடு இந்தியாவை ஆளுகிறார்கள். ஏன்? எந்த பார்த்தாலும் ஆள்வினைக்காரர்கள் இரும்பு உருவத்தோடு இந்தியனை மோதி நசுக்கி வருகின்றனர். இரும்பு உருவத்துள் இரும்பு மனம் இருப்பதில் வியப்பில்லை. இல்லாவிட்டால்—மனித மனம் படைத்திருந்தால்—மனச்சாக்ஷி யென்பதொன்றிருந்தால்—விலங்கிடப்பட்ட நிர்பாக்கிய கைதிகளை—சிறைக்கம்பிகளுக்குள் கட்டுண்டு கிடக்கும் வீர விருந்தினரை—அரசியல் தியாகிகளை—அலட்சியமாய்—ஆடு மாடுகளினும்—தெரு நாய்களினும் கேவலமாய் நடத்தத் துணிவார்களா? இக்கொடிய கஷ்ட நஷ்டங்களை பிறந்த மண்ணுக்காகச் சகித்துக்கொள்ளுகிறதென்று சபதமெடுத்துக் கொண்ட—வலிய வரித்துக்கொண்ட தேசியச் சன்னியாசிகள் கொஞ்சங்கூட முணுமுணுக்காமல்—முகஞ் சுளிக்காமல் அனுபவித்து வருகின்றனர். 'சட்டத்தால் ஸ்தாபிக்கப்பட்ட' பிரிட்டிஷ் சர்க்கார் மகத்தானதாயிருக்கலாம். ஆனால் அதைவிட மஹா மகத்தானது 'நீதி தர்மம்' என்பதை சர்க்கார் இவ்வளவுகூட உணரவில்லை. மனிதனுக்கு மனிதன் காட்டிக்கொள்ள வேண்டிய தெய்வீகக் கைம்மாறு இன்னதென்பதை கல் மனது கொண்ட பிரிட்டிஷ்காரன் கண்டானில்லை. சட்டத்தை மறுத்த சத்திய சீலர்களைச் சிறை நரகத்துள்ளே தள்ளிச் சித்திரவதை செய்கிறார்கள். இன்றைக்கு ஒரு யதீந்திரன் சங்கிலி நெருக்கிச் சாகலாம். இன்றைக்கு ஒரு விஜய முனிவன் சிறைச்சாலையின் கல்லு சுவரால் நசுக்கப்பட்டிறக்கலாம். இன்றைக்கு எண்ணற்ற தேசாபிமானிகளுக்கு மனித உணவும் மனித உடையும் கொடுக்காமல் நாகரீகமாய் நடத்தாமல் கொல்லலாம், ஆனால் பிரிட்டிஷ் சர்க்காருக்கு அது

த்து வருஷம் வேண்டுமானாலும் தண்டனை விதித்தால் யார் கேட்கிறது? அப்படிச் செய்வதை விடுத்து ஏதோ அரை மணி நேரம் விடுதலை செய்து மறுபடியும் தண்டித்ததை விடுபிடி வேடிக்கை யென்னுமல் வேறு என்னவென்போம்? இவ்வாறு தினந்தினம் செய்வதெல்லாம் விடு பிடி விளையாட்டுத்தான்.

அதோகெதியாய் அடித்து விழுவதற்கு முன்னால் எச்சரிக்கின்றோம் 'இத் தியாகிகளின் சாம்பலிலிருந்து கோடிக்கணக்கான யதீந்திரன்—விஜயன் பிறந்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அடியோடு—அஸ்வாரத்தோடு ஆட்டி அலைக்கப் போகிறார்கள்.'

ஆனால் நமக்கோ இன்னும் என்னென்ன இன்னல்களெல்லாம் ஏற்படப் போகின்றனவோ எவரறிவார்? நாட்டு ராஜநீதி இந்தியாவில் எந்த மூலையிலுமில்லை. இருந்தால் 1919-ல் பாஞ்சாலத்தில் நிகழ்த்தப்பட்ட அந்தப் படுகொலையை மறந்துவிடாமல் மனக் கண்ணில் வைத்து வளர்ப்போமா? அரசியல் கைதிகள் அரசாங்கத்திற்கு இடரு சட்டைகளாயிருக்கலாம். ஆனால் அவ்விடரு கட்டைகள் அன்னிய ஏகாதிபத்தியத்திலே தான் உருப் பெற முடியும். "ஹே! இந்தியனே! நீ உன் தேசத்திற்காக சிறைப்பட எவ்வளவு ஆசைப் படுகிறாய்? திருடாமல் கொலை களவு செய்யாமல், மனித உரிமைக்காகவே சிறைப்பட்டாலும் அதற்காக நீ ஏராளமான விலை கொடுத்துத்தானாகவேண்டும். ஹே! பிரிட்டிஷ்காரனே! நீ மனிதனில்லாவிட்டால்—மனித ஸ்வபாவம் உனக்கில்லாவிட்டால்—உன்னிடமிருந்து மனித நடத்தையை எவர் எதிர் பார்ப்பர்? இவ்வளவு மிருகச் செயலைச் செய்தும் மனிதன் என்று உன்னை நீயே கூறிக் கொள்ளுகிறபடியால் ஆண்டவனுக்காகவாவது உனது கைதிகளிடத்தில் மனிதத்துவத்தை காட்டு; அவர்களையும் உன்னைப்போல் கருதி நடத்து. இல்லையென்று பழிவாங்கும் நோக்கத்தோடு பாவ மிழைத்தால் அரசியல் கைதிகளிடம் பூரண அனுதாபம் வைத்துள்ள முழு இந்தியாவுக்கு உன்னை யென்ன செய்வதென்று தெரியும். "அவர்கள் விருகாவில் கஷ்டப்படவில்லை" யென்பதை ஒவ்வொரு இந்தியனும் அறிவான்.

இந்தியாவில் அவசர அரசாங்கம்—அரக்க ஆட்சி நிலவுகிறது. இதைப்போல் எத்தனையோ சர்க்காரை நாங்கள் கண்டிருக்கிறோம்; முழு உலகமும் பார்த்திருக்கிறது. மனித வர்க்கம் இனிமேல் இத்தகைய இரும்பாட்சியால் அடங்கி ஒடுங்கி விடாது. இப்பொழு

கடவுள் முன் கட்டிய தாலி ::

டாக்டர் லாம்.

சொல்லப்போனால் தாலி யென்பது ஒரு சிறு கயிறுதான். ஆனால் அது செய்யும் மகத்தான காரியத்தை நினைத்தபோதுதான் அதனிடத்தில் நமக்கு ஒருவிதமான தெய்விக மரியாதை யேற்படுகிறது. ஆணுள்ளத்தையும் பெண்ணுள்ளத்தையும் பிணைத்து வைக்கும் பெற்றியை மனிதவர்க்க முழுதுமே மதிக்கவும் கௌரவிக்கவும் கடமைப்பட்டுள்ளது. ஆணும் பெண்ணும் வாழ்க்கைத் துணைவராக அதன் உண்மை உணர்ச்சியில் ஒன்றுபட்ட போது உலகத்தின் எந்த ஆஸ்ரமத்திலுமில்லாத ஒரு திவ்ய ஜோதி—தெய்வகலை பிறக்கிறது; காதல் மணத்தால் சனாதனமான—என்றும் நீடித்திருக்கும்படியான இன்ப வொளி தோன்றுகிறது.

இவ்வுத்கிருஷ்டமான கட்டுறவால் காதலன் காதலிக்காகவும்—காதலி காதலனுக்காகவுமே வாழுகிறது என்ற பரோபகார சிந்தையில் இன்பம் இரட்டிக்கவும் துன்பம் பகிர்ந்தனுபவிக்கப்படவும் ஏற்படுகிறது

கடவுள் முன்னிலையில்—சர்வ வியாபகனாகிய ஆண்டவன் சன்னிதானத்தில் மணமகன் மணமகளின் கழுத்திலே அந்தக் கயிற்றைக் கட்டினான். அக்னி சாக்ஷியாகவும் அன்பர்கள் சுற்றத்தார்கள் சாட்சியாகவும் அவளைத் தொட்டுத் தாலிகட்டினான்' அதனால் அத்தாலியும் தெய்வ ஜோதியால்—கடவுள் கண்காணிப்பால் அபிஷேகிக்கப்பட்டது. அன்றெடுத்துக்கொண்ட சபதமிருக்கின்றதே அதற்குத்தான் சகல கௌரவமும். "இன்பத்திலும் துன்பத்திலும்; வாழ்விலும் சாவிலும் உன்னை விட்டுப் பிரியேன்: உனக்குத் துரோகம் புரியேன்" என்று ஒருவருக்கொருவர் கூறியெடுத்துக்கொண்ட விரதம் மஹா மகத்தானது அதன் கடமையும் கௌரவமும் இரு பாலாரலும் என்ன விலையெடுத்தும் காப்பாற்றப்பட வேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் கடவுள் முன்னிலையில் கட்டிக்கொள்ளாமல் வேறு வழியில் வைப்பாகவோ அன்றி வேறு விதமாகவோ காம இன்பம் கழித்துக்கொள்ளலாம்.

ஆண்டவன் சன்னிதானத்தில் ஒன்றுபட்ட கணவன் மனைவியர் மாயை வயப்படக்கூடாது. சோதனையால் இடர்ப்பட்டபோது ஜோதி மறைந்து இருள் படர்ந்து வாழ்க்கையை பாழ்படுத்திவிடும். கடவுளை மறந்து சைத்தான் ஆட்சிக்குட்பட்டு விட்டால் அப்பொழுதுதான் மனைவாழ்க்கை சகிக்கமுடியாத வேதனையாய் சுமக்க முடியாத பாரமாய் மூளுகிறது. ஆகையால் உங்களது வாழ்க்கையில் ஆண்டவனை மறந்துவிடாமல் உங்களில்லத்தில் அவனுக்காக ஒரு புனிதமான கோயிலை கட்டி ஆரம்ப முதல் அந்தம்வரை அவனைத் துணை கொண்டிருங்கள். அல்லாது மீட்சி கிடையாது. வீழ்ச்சியிலும் மீட்சி பெற அவனே துணைவன்.

குடும்ப வாழ்க்கையின் நன்மையிலும் தீமையிலும், சகல பொறுப்பிலும் ஆண்டவனை அரூபகமான மூன்றாவது துணைவனாக விரித்து வழிபடக் கடவீர். அவனது மக்களான மனித வர்க்கம் சகலத்தினிடமும் சமதர்மத்தையும் சம அன்பையும் ஸ்புரிக்கச் செய்யக் கடவீர். அதிலும் ஓர் இன்ப வொளி தோன்றும்.

இல்லற தர்மத்தில் இன்னொரு தேவ இரகசியமும் இருக்கிறது. சிருஷ்டித் தொழிலையும் கடவுளின் கட்டளை வழி கணவன் மனைவிகள் கைக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளனர்,

---

திருப்பதே போல் போலீஸ் ஆட்சியிலில்லை—இராணுவ ராஜ்யத்திலிருந்த போதிலும் இந்தியா இளைக்கப் போகிறது கிடையாது. இந்தியனின் இடப்புறத்திலும் வலது பக்கத்திலும் முன்னும் பின்னும் சட்டத்தைக் காப் பார் ஈட்டி பாய்ச்சுகிறார்கள்—துப்பாக்கியால் குறி பார்க்கிறார்கள்—சிலம்ப வரிசை செய்கிறார்கள். ஆனால் இவன் பழைய அடிமை இந்தியனில்லை; புதிய—நவ வேகம் ஓட்டம்பெற்ற சுதந்திர இந்தியன், ஒவ்வொரு இந்தியனது நெற்றியிலும் "நான் தான் இந்தியன்" என்று எழுதி ஒட்டியிருக்கிறான். அவனை இனிமேல் ஜெயிக்க முடியாது. சிறையிலடைத்தும் பயனில்லை: சிறையில் சித்திரவதை செய்தும் பிரயோஜனமில்லை.

சாவதற்கு முன்னால் * *

சர்தார் பட்டேல்.

காங்கிரசுக்கு உதவி செய்தவர்கள் நமது தாய் நாட்டின் அருமைப் புதல்வர்கள் ஆவர். இதுவரை உதவி செய்யாதவர்களும், இன்னும் செய்யத் தயாராயில்லாதவர்களும் நாளடைவில் தங்கள் தவறை உணர்ந்துகொள்வார்கள். பட்டினி கிடக்கும் பல கோடி மக்களின் வாழ்வுக்காக தங்களது ஈனத் தொழிலை வியாபாரிகள் விட்டுவிட வேண்டும். நீண்ட தீர்க்காலோசனைக்குப் பிறகே நாங்கள் இந்தத் தீர்மானத்திற்கு வந்திருக்கிறோமென்பதை அன்னியத் துணி வியாபாரிகள் உணர்ந்து கொள்ளட்டும். உலக முழுவதும் நம்மையே கவனித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பரந்த நாட்டை உலகம் கேலி செய்ப அதை எங்களால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

மகாத்மாவுக்கும், எனக்கும் வயதாகிவிட்டது. இன்னும் கொஞ்சம் வருஷம் தான் நாங்கள் உயிரோடிருப்போம், எங்களுடைய வாழ்நாட்களில் மானத்தோடு வாழ்வதென நாங்கள் தீர்மானித்து விட்டோம், இல்லாவிடின் இறப்பதெனத் துணிந்து விட்டோம்.

இன்னும் அன்னியத் துணி வியாபாரிகள் பழைய கதைகளை எண்ணிக் கொண்டு உயர்ந்த சிம்மாசனத்தில் அமர்ந்து 'வாயில்' போன்ற துணிகளை அளந்து விற்பார்களானால் ஏமாந்து போவார்கள். இன்னும் சில மாதத்தில் என்ன நடக்குமென்று சொல்வதற்கில்லை. சமாதானம் ஆகிவிட்டால் ஏழைகளை நசுக்கும் இந்த அக்ரம வியாபாரம் நடைபெறா வண்ணம் தடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்து விடுவது திண்ணம். அல்லது மறுபடியும் அக்னி சூழ்ந்தால், அப்போது தடியடியும் சிறையும் சாதாரணமானவை, அப்போது இராணுவச் சட்ட பூதம் தலை விரித்து ஆடினாலும் ஆடலாம். அப்படி ஓர் நிலைமை ஏற்பட்டு விட்டால் அன்னியத் துணிக் கடைக்கு துணி வாங்குவதற்கு யார் வருவார்கள்?

சமாதானமோ, யுத்தமோ எது வந்தாலும் அன்னியத் துணிக்கு இனி ஆபத்து தான். இதை வியாபாரிகளுக்கு எச்சரிக்கை செய்கிறேன்.

முதலாளிகள், ஜமீன்தார்கள் முதலியவர்களுடன் காங்கிரஸ் கை கோர்த்துக்கொண்டு விட்டதாகக் குறை கூறப்படுகிறது. 150 வருஷகாலமாக லங்காஷயர் நம்முடைய இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கிறது எல்லோரும் இதனால் கஷ்டப்படுவர் தான். நாங்கள் ராஜாக்களுடனும், ஜமீன்தார்களுடனும் சேரத்தான் சேர்வோம். ஆலைச் சொந்தக்காரருடனும், முதலாளிகளுடனும் ஒன்றுபடுவோம். எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை இந்தியாவை விட்டு ஓட்டுவோம்.

பிள்ளைகளைப் பெற்று மனித வர்க்கத்தின் தொகையை வளர்ப்பதிலும் கடவுள் உங்களுக்கு வரப்பிரசாதம் வழங்குகிறார். ஆதலால் வெறும் பிள்ளைகளைப் பெறும் நோக்கத்தோடோ அன்றிப் பெறக்கூடாதென்ற கொள்கையோடோ கல்யாணஞ் செய்து கொள்ளுவதும் கடவுள் சம்மத மல்லாதது.

பெற்றவர் பேறு பேசற் திறத்ததில்லை. மனித வாழ்க்கையில் மகோன்னதமான இன்பம் துய்ப்பது பிள்ளையைப் பெற்றெடுத்த போதே. ஆணும் பெண்ணும் காதலால் கனிந்த போது—கல்யாணத்தால் கட்டுண்ட போது—கலந்துறவாடிய போது அடைந்த இன்பம் ஒரு பிள்ளையைப் பெற்றபோது இன்னும் அதிகரித்து காதலன் அல்லது காதலியிடத்திலிருந்த அன்பு அவன் அல்லது அவள் வழிப் பிறந்த பிள்ளையிடமும் பாய்ந்து அது விரிந்து உலக மக்களிடமும் வியாபிக்கின்றது. அப்பொழுதுதான் அக் கூட்டுறவில் இருவருக்கும் புறம்பான இன்னொரு தியாக சிந்தை ஜெனித்து நியதியும் ஏற்படுகிறது. இதனால் அன்பு மன நிகழ்ச்சியே யன்றி பெறவேண்டிய கெகிழ்ச்சி யில்லையென்ப தேற்படுகிறது. இவற்றிற்கெல்லாம் மூல காரணமாயிருந்த—ஆதியனாதியாயிருந்த அந்தத் தாலியின் மகத்துவத்தாலேயே உலகம் இயங்குகிறது. காதல் வாழ்க! காதல் மணம் வாழ்க! காதல் மணத்தை மணக்கச் செய்த தாலி வாழ்க!

விஞ்ஞி வீணனுக்கு தோப்பா!

ஓரே பொரு ஊர். ஊரிலே ஒரு வீணன். வீணனுக்கு வீண் சோறு போடுவோரும் ஊரிலே கிடையாது. என்ன செய்வான்? எதாவதொரு வகை பிறக்காதா என்று யோசித்தான். கடைசியில் ஒரு யோசனையும் கட்டிவிட்டது. சுடுகாட்டிற்குப் போகும் பிணத்துக்கெல்லாம் ஐந்தைந்து பணம் கேட்கிறது கொடுக்காவிட்டால் கலகம் செய்கிறது என்று தீர்மானித்துக்கொண்டு தடிக் கம்பும் கையுமாய் மயானத்தைக் காத்து காசு கறந்தவன் தான். "இவனோடென்னத்துக்கு இந்த வம்பு" என்று ஊரார் வீணனுக்குச் சுடுகாட்டுப் பணம்—தோப்பராப் பணம் கட்டி வந்தார்கள். இது ஊரை யாளுகிற இராஜனுக்கு தெரியாது. அவ்வளவு லட்சணத்தில் ஆளுகிறான். அதே ஊரில் இன்னொரு ஏழை. புருஷன் பெண்சாதி இரண்டு பேர் புருஷன் செத்து பெண்சாதி ஒப்பாரி வைத்து அழுது கொண்டிருக்கிறாள், அவ்வேளையில் அரசன் நகர் சோதனை வந்தான்" "வீட்டைப் பிரித்து விறகாயெரித்தாலும் விஞ்ஞி வீணுக்கு ஐந்து பணம் யார் தருவார்?" என்று அந்த அம்மாள் ஒப்புச்சொல்லிப் பாடினாள், அதை அரசன் கேட்டு விட்டான்; பிறகு விசாரித்ததில் விஷயம் விளங்கிற்று. விஞ்ஞி வீணனும் பெரிய ஆசாமிகட்டி ஆள் மணியமெல்லாம் மமர்த்தி மயான தர்பார் நடத்துகிறான். ராஜ ஆக்கினைகூட அவனை அணுக பயந்து விட்டதாம். இப்படியொரு சின்னக் கதை.

நம்மவூர் மேல்தான் இந்த மயானத்தின் கதைக்கும் இந்தக் கதைக்கும் பிற்பகுதியில் அதிகப் பொருத்தமிருக்கிறதல்லவா? இந்தப் பதினாறு பதினேழு வருஷங்களாக ஊரிலுள்ள பிணங்களெல்லாம் கட்டிவந்த தோப்பராப்பணத்தைப் பற்றியோ வேறு எதற்காகவோ இன்று தினம் எங்கோ என்னோரத்திலோ தர்பார் (கூட்டம்) நடத்தப்போவதாக மயான டிரஸ்டி ஸ்ரீமான் ப. சி. சோமசுந்தரம் பிள்ளை இவ்வூர் பத்திரிகைகள் இரண்டொன்றில் சில தினங்கள் முன் செய்தி விட்டிருந்தார். ஏன்? எதற்காக இக் கூட்டம்? என்று பலர் எம்மைக் கேட்கின்றனர். இதுவரை வசூல் செய்து வந்த தோப்பராவைத் தமது தமிழ் ஜனங்களின் முன்னால் தொப்பெனப்போட்டு தமது தலையிலிருக்கும் மயான காவல கிரீடத்தையும் கழற்றிக்கொடுத்து விடுவதற்காகவிருந்தாலும் இருக்கலாமா? என்று நினைக்கிறோம். எப்படியாகிலும் கணக்கும் கைச்சாற்றும் வந்துவிட்டால் போதும். அப்புறம் வேறொருவரைப் பிடித்து வைக்கலாம்.

அடக்கு முறையாலாகாது.

(லார்ட் இர்வின்)

இந்தியாவில் நடப்பவைகளை யெல்லாம் கூர்ந்து கவனித்தே வருகிறேன். அரசியல் இந்தியாவில இந்தியர்கள் அவர்களுடைய நாட்டை அவர்களே ஆளவேண்டுமென்றால்— அந்த உணர்ச்சியை அவர்கள் வளர்ப்பதானால் -அதற்காக அரியபல தியாகங்களைச் செய்வதானால் அது முற்றும் மனிதஸ்பாவமே. கடந்த ஒரு நூற்றாண்டுகளாக இக்கிளர்ச்சியைநாம் எந்த நிமிஷமும் எதிர்பார்த்ததுதான். உலகத்தின் எல்லா ஜனங்களைக்காட்டிலும் பிரிட்டிஷ்காரர்கள் இவ்வுணர்ச்சிக்கு பேராதரவளிக்கவும் அனுதாபமும் ஆதரவுங் காட்டவும் வேண்டியவர்கள். இந்தியாவில்மதநிலைமை ஆழியகடலுக்கும் ஆபத்தான சைத்தானுக்கும் இடையகப்பட்டது போலிருக்கிறது. நமது மானம்—மரியாதை கௌரவமெல்லாம் காப்பாற்றப்படவும் வேண்டும். அத்துடன் அடக்குமுறையால் எத்தகைய அரசியல் கிளர்ச்சியையும் அடக்கிவிட முடியாதென்பது சரித்திர சம்மந்தமான உண்மை. ஒரு சிறு சாதாரண கிளர்ச்சியானால் அரசாங்கத்தின் ஆதிக்கத்தால் அடக்கிவிட முடியும். ஒருபரந்த நாட்டு மக்களின்—நாட்டுச் சுதந்தர உணர்ச்சியை நசுக்க இரும்புக் கரத்தாலும் இயலாது, தர்க்க பூர்வமாய் ஜனங்களின் உண்மையான குற்றங் குறைகளை யுணர்ந்து அதற்கு வேண்டிய பரிகாரத்தை செய்தாலொழிய வேறு வழியில்லை. இந்தியர்களின் இக்கிளர்ச்சிக்கு ஒரு முடிவு காண வேண்டுமானால் விவேகத்துடன் ஆலோசனை செய்து தீர்க்கமான திட்டமொன்றை இந்தியர்களுடன் கலந்தாலோசித்து தயாரித்தல் வேண்டும்,

போர் முடிவு? சர்வ நாசம்: சமாதானம்

எத்தனையோ சண்டைகளைப் பார்த்திருக்கிறோம்; எத்தனையோ யுத்தங்களைப் படித்திருக்கிறோம்; எத்தனையோ போரைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறோமே அவற்றின் முடிவெல்லாம் என்னவாயிற்று? சமாதானம் அல்லது சர்வநாசம் இரண்டில் ஒன்றிலே தானே முடிந்திருக்கின்றன. இரு கட்சியாரோ, இரண்டு தேசங்களோ போர் தொடுத்தால் ஒன்றின் ஆதிக்கத்தை இன்னொன்று அழித்து வேறொரு ஆதிக்கத்தை ஆக்கி அமைக்கின்றது. இராம—இராவண யுத்தத்தில் கொடுங்கோலாட்சி போய் தர்ம தயாளு விபூஷணன் கீழ் நல்லாட்சி நிறுவப்பட்டது. அதேபோன்று பாரத யுத்தத்திலும் அதர்மம் அறவே அழிக்கப்பட்டு தர்ம ராஜ்யம் ஸ்தாபிதமாயிற்று. இவ்விரு இதிகாச யுத்தங்களை விடுத்து சரித்திர காலத்துச் சண்டைகளைப் பார்த்தாலும் கிரேக்க எழுச்சி பாரசீகர் படையெடுப்பு, மொகலாயர் போர் அப்புறம் ஆங்கிலச் சண்டைகள் இவைகளெல்லாம் இந்தியாவில் ஹிந்து சாம்ராஜ்யத்தை இல்லாதொழித்து வெவ்வேறாய் அடிமை இந்தியாவுக்கு அடிகோலவும் ஆக்கவும், ஸ்திரமாக அமைக்கவுமாயிற்று. இந்த நூற்றைம்பது வருடங்களாக அன்னியர்கள் நமது நாட்டில் கொட்டமடிக்கின்றார்கள். அயல்நாட்டுப் படை வீரர்கள் நமது பூமண்டலம் அதிர அதிர, ஹிமாசலமும் தென் குமரியும் குலுங்கக் குலுங்க வடக்கிலிருந்து தெற்குவரை துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு சாரி யடிக்கின்றனர். நாட்டிலே பிறந்து நாட்டிலே வளர்ந்த நாட்டான் கைகீழ் அன்னியன் கைமேல் என்றாகிவிட்டது. ரோஷமுள்ள இந்தியன் இதை பொறுக்கவில்லை. "நமது நாடு நம் கையிலில்லாமல் சீ! இப்படியும் ஒரு பிழைப்பா! நமது உயிரைக் கொடுத்தாயினும் நாட்டுச் சுதந்திரம் பெற்றுவிடுகிறது" என்று எழுந்தார்கள். 1857 ல் இந்தியாவெங்கும் ஒரு மகத்தான தெய்வீகச் சண்டை கிளம்பிற்று. அதை நம்மை யாளுகிறவர்கள் வெறும் கலகமென்று பெயரிட்டழைத்தாலும் சுதந்திர யுத்தமெனலாகி நானா சாகிப், தாந்தியா தோப்பி, அஹமத்ஷா, வீர லக்ஷ்மி ஜான்ஸி பாய், முதலிய விடுதலை வீரர்கள் எண்ணற்றோரின் வீர இரத்தம் சிந்தப்பட்டது. அடிமை ஜனங்களின் தேகம் சிதைக்கப்பட்டு, மூச்சு நிறுத்தப்பட்டு சதையுடலம் சாய்க்கப்பட்ட போதிலும் அவர்கள் நாட்டிய ஸ்வதந்திர வித்து, அவர்களுள்ளெழுந்த ஸ்வதந்திர உணர்ச்சி, அவர்கள் ஊதிய ஸ்வதந்திரக் காற்று சிறந்து சிறிதாய் வேகங்கொண்டு இப்பொழுதொரே சண்டமாருதமாய், பிரசண்ட சூறாவளியாய்க் கிளம்பி இந்திய வுள்ளத்தை ஆட்டி அலைத்துக் கொண்டிருக்கிறது. "இறுதிவரை போராடி முடித்து விடுகிறது; வெற்றி தோல்வி இரண்டிலொன்றின் எல்லைவரை ஓடிப்பார்த்து விடுகிறது. சுதந்திர வாழ்க்கை அல்லது அடிமை இருள் இரண்டிலொன்றைத் தழுவிக் கொள்ளுகிறது" என்று இந்தியர்கள் இப் போரில் ஆழமறிந்தோ அறியாமலோ; முடித்துவிட்டிருக்கின்றனர். மகோன்னதமாக வளர்க்கப்பட்டிருக்கும் தியாக நெருப்பில் அடிமைத் தன்மை மை அள்ளிக் கொட்டி விடுதலை வேள்வி வளர்க்கிறார்கள். சுயராஜ்ய அவிர்ப்பாகத்தை இந்தியா இன்றைக்கோ நாளைக்கோ அனுபவிக்கப் போகிறது. "இது என்றாகும்? இப்பொழுது நடக்கும் இந்த யுத்தத்தின் முடிவு யாதாய் முடியும்? காந்தி கட்சி ஜெயிக்குமா? இல்லை சர்க்கார் தரப்பிலே தான் வெற்றி பெறுமா? சுயராஜ்யம் பெறுவோமா? அல்லால் இன்னும் அடிமையாகவே இந்தியா இருக்காக வேண்டுமா?" என்றெல்லாம் இந்தியர்கள் மாத்திரமில்லை இந்தியர்களின் எதிரிகளும் உலக மகா ஜனங்களும் உற்று நோக்கிக்கொண்டிருக்கின்றனர். எந்தவொரு யுத்தத்தையும் அது நடந்து கொண்டிருக்கையிலேயே இன்னதாகுமென்று தீர்க்கமாய் சொல்லிவிட முடியாது. ஏனெனில் வெற்றியும் தோல்வியும் ஒருவர் பங்கல்ல என்று சொல்லப்படுகிறதல்லவா? இருந்தாலும் தெய்வ நம்பிக்கை யுடையவர்கள் எந்தப் பக்கத்தில் தர்மமிருக்கிறதோ, எந்தக் கட்சியார் தங்களது பிறப்புரிமைக்காகப் போராடுகிறார்களோ அந்தக் கட்சிக்கே ஆண்டவன் வெற்றி கொடுக்கின்றானென்று தீர்மானித்துவிடுகின்றனர். முடிவும் அவ்வாறே அமைகிறது. இப்பொழுது இந்தியாவில் நடக்கும் இந்த சத்தியாக்கிரஹப் போரில் தர்மம்

சோலிய முஸ்லிம்களே!

நியாயங் கிடையாதா?

சோலிய முஸ்லிம் வர்த்தக சங்கத் தலைவர் என்ற ஹோதாவில் ஜனாப் ரு. ஷாகுல் ஹமீது அவர்கள் சோலிய முஸ்லிம்களின் எண்ணெய், மாவு, கடலை அரைக்கும் மில்களை எடுத்துவிட நகர சபைக்கு மனுப் போட்டு பலமான முயற்சி யெடுத்து வருவதாக வர்த்தக சங்கத்தாருக்கு 28—2—32 ல் வெளியான இதே பத்திரிகையில் முறையிட்டுக் கொண்டேன். மில்களை எடுத்துவிடுவதால் வியாபாரிகளுக்கு ஏற்படும் நஷ்டங்களும், அவைகளில் நூற்றுக் கணக்காகப் பிழைத்துக்கொண்டிருக்கும் ஏழை முஸ்லிம் சகோதரர்களுக்கு உண்டாகக்கூடிய கஷ்டத்தையும் வயிற்றெரிச்சலையும் கவனித்தாவது வர்த்தக சபை அங்கத்தினர்கள் அவ்விஷயமாக யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. தலைவர் செய்யும் காரியம் அங்கத்தினர்களுக்கும் சம்மதமாக இருக்கிறது போலும். அப்படியாயின், வியாபாரிகளுக்கு நன்மை செய்யப் போகிறதாகப் பறைசாற்றிய சங்கம் நமது சோலிய முஸ்லிம் வியாபாரிகளுக்கும் நூற்றுக்கணக்கான ஏழை மக்களுக்கும் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் உண்டாக்கும் துரோகத்தனமான செய்கையையும், அதைச் செய்பவர்களையும், அதற்கு உடன்பட்டிருக்கும் அங்கத்தினர்களையும் நாம் கண்டிக்காமல் விட முடியாது, அத்தகைய துரோகஞ் செய்யும் சங்கத்தைக் குழி வெட்டிப் புதைத்துக் காலின் கீழ் போட்டு நசுக்காமல் விடமாட்டோம். அதன் அங்கத்தினர்களிடம் முறையிட்டோம். அவர்கள் இதுவரை கவனித்ததாகத் தெரியவில்லை. இப்போது சோலிய முஸ்லிம்களிடம் முறையிடுகின்றோம். சோலிய முஸ்லிம் சகோதரர்களும் வர்த்தக சங்க அங்கத்தினர்களைப்போல் மௌனமாக இருந்துவிட மாட்டார்கள். வர்த்தக சங்கம் செய்த இந்தப் பெரிய தீங்கைக் கண்டு மனக் கொதிப்படைந்த சகோதரர் பலர் இருக்கவே செய்கிறார்கள். நூற்றுக்கணக்கான ஏழை முஸ்லிம் சகோதரர்களைப் பிழைப்பில்லாமல் திண்டாடச் செய்யும் இக் கொடிய செய்கையைப் பார்த்து ஆத்திரமடைந்து அதை நிவர்த்திப்பதற்குக் காருண்யமுள்ள பரோபகாரிகளும் இல்லாமலில்லை. அவர்களிடத்தில் நாம் இப்போது முறையிட்டுக்கொள்கிறோம். அவர்கள் எப்படியாவது பரிகாரம் தேடிக். கொடுப்பார்களென்று நம்புகிறோம். அவர்களும் கேட்காவிட்டால்——?

ஓர் வியாபாரி.

எவர் பக்கமிருக்கிறதோ—எவர் தங்களது பிறப்புரிமைக்காகப் போராடுகிறார்களோ அவர்களுக்கே—இந்தியருக்கே வெற்றி நிச்சயம். எமது வாசகர்களுக்கு நாம் சொல்லுகிறோம். "இன்றே எழுதி வைத்துக் கொள்ளுங்கள். இந்தியா இம்முறை பூரண ஸ்வதந்திரம் பெறவே போகிறது. அதுவும் அதிக தூரத்திலில்லை; கைப்பிடி தூரத்திலேயே யிருக்கிறது." இந்திய இரத்தம் ஓடப்பெற்ற ஒவ்வொரு இந்தியனும், இந்தியா எனது நாடு என்று சொல்லிக்கொள்ளும் ஒவ்வொரு இந்தியனும் அவன் ஏழை இந்தியனாயினும் பணக்கார இந்தியனாயினும் சரி, இந்து இந்தியனாயினும் முஸ்லிமான் இந்தியனாயினும், கிறிஸ்தவ இந்தியனாயினும் சரி ஜெயத்திற்காக—எள்ளளவும் தோல்வி யென்பதில்லாத வெற்றிக்காக இத் தர்ம யுத்தத்தில் சேர்ந்து போராடட்டும்.

நமக்குக் கிழக்கே சீனப் பிரதேசத்தில் நடக்கும் ஜப்பானியச் சண்டையும் கூட இந்நியதிப்படியே தான் முடிவடையப் போகிறது. சீனர்கள் தங்களது சீன தேசத்தை ஸ்வதேசிமயமாக்கவும் தேசியத்தை வளர்க்கவும் முற்பட்டால் அதையேன் ஜப்பான் தனது பணத் திமிரால்—படைவலியால் அடக்க முனையவேண்டும்? நாட்டு மோகத்தால் ஜப்பான் பிடிக்கப்பட்டு சீனத்தைச் சுரண்டுவது ஆசை வெறியல்லால் வேறில்லை. இதனால் சிதைந்து சிடந்த சீனம் ஒன்று சேர்ந்து பொது எதிரியாகிய ஜப்பானைத் தாக்குகிறது. பெண்களும் ஆண்களும் பள்ளி மாணவர்களும் கூட இச் சாவீரர்களாகச் சேர்ந்து சீனத்தின் படைவலியை யதிகரிக்கச்செய்து விட்டனர். சீனத்தால் ஜப்பான் திமிர் அடங்கப்பெறும். வெற்றியும் சீனனுக்கே கிடைக்கும். ஏனெனில் அவன் புறமே தர்ம நியாயமிருக்கிறது.

Printed & Published By A V Sellam Pillay at the Desopakari Press, 210 36th Street Rangoon

பத்தாவயனம் 2ம் மலர் 8 இதழ் 67 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை **DESOPAKARI** புதன் ஞாயிறு வெளியீடு

210-36-வது வீதி இரங்கோன், (9-3-32) மாசிமீ 26வ ஞாயிற்றுக்கிழமை

கூறை ஏற முடியாதவனா?

ஊரை யாரும் முறைமை—உலகில்
ஓர் புறத்து மில்லை
சாரமற்ற வார்த்தை—மேலே
சரிதை சொல்லு கின்றோம்

—கவிராசன்.

இனிமேல் உலகத்தை ஏய்க்க முடியாது. உலகமெங்கும் சுதந்திர ஜோதி பிரகாசித்து விட்டது. எந்த ஒரு நாட்டாரும் இனிமேல் அடிமை என்பதில்லை. கொஞ்சம், கொஞ்சமாகவோ ஒரே மூச்சிலோ—ஒரே ஒரு வீச்சிலோ அடிமை தன் மீது படிந்திருந்த அழுக்கை உதறித் தள்ளி விட்டான். முடியாட்சியால் மூதேவி படிந்து குடியாட்சிக்கு ஸ்ரீதேவி திருவருள் பாலிக்கின்றாள், ஜெயமளிக்கின்றாள். தனி மனிதன் ஆட்சிபோய் மன்னாதி மன்னரெல்லாம் மண்ணைக் கவ்வ ஜனநாயகம் தலை தூக்கி விட்டது. எந்த ஒரு வல்லாதிறுவர்—எந்த ஒரு இருப்பாட்சியாலும்—எந்த ஒரு நாசகாரி கருவிகளாலும்—போலீஸ் படையாலும்—எந்த ஒரு அவசரச் சட்டத்தாலும்—எந்த ஒரு ராணுவ பலத்தாலும் இந்த உணர்ச்சியை இனிமேல் மிதித்து விட முடியாது. இதற்கு எடுத்துக்காட்டாக இன்றைய உலகிடைச் சம்பவங்களை எடுத்துக் கொண்டால் இதோ நமது காலடியில் வெடித்திருக்கும் எரிமலை போன்ற—நம்முடைய நாலு புறங்களிலும் வீசிக் கொண்டிருக்கும் சூறாவழி போன்ற—நமது தலைக்கு மேல் கக்கிக் கொண்டிருக்கும் ஊழியத் தீப்போன்ற இந்தியக் கிளர்ச்சியையும் அதோ அயர்லாந்திலே கிளம்பியிருக்கும் அரசியல் பூகம்பத்தையும் சொல்லலாம். இன்று நேற்றல்ல நமது ஞாபகத்துக்கு எட்டிய வரை சரித்திர சாக்ஷியாக அயர்லாந்திலே ஒரு நூற்றாண்டுகளாக எழுந்த சுதந்திரப் போராட்டத்தில் இன்று தான் தேசிய கக்ஷியார் பக்கம் முழு வெற்றியும் ஏற்பட்டிருக்கிறது. காஸ்கிரேவ் சர்க்கார் தலை கவிழ்ந்து திவாலா கக்ஷி கையோங்கி விட்டது. நாம் நமது இதே பத்திரிகையில் பலகாலும் அயர்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் ஒப்பிட்டு பேசியிருக்கிறோம். ஒரே ஜாதியைச் சேர்ந்த இரு நாட்டவர்கள் ஒரு நாட்டான் ஆக்ஷி இன்னொரு நாட்டானுக்குப் பிடிக்காமல் உயிரைப் பிணைவைத்துப் போராடினார்கள். ஐரிஸ் காரனுக்கும், இங்கிலீஸ் காரனுக்கும் ஜாதியில் வேற்றுமையில்லை. அயர்லாந்தும், இங்கிலாந்தும் அடுத்த வீடுகள் போன்றே. அடுத்திருக்கும் அயர்லாந்தை பருமனில் எவ்வளவோ பெரிய இங்கிலாந்தால் ஸ்காட்லாந்தும் வேல்ஸும் சேர்ந்த இங்கிலாந்தால் அடக்க முடியாவிட்டால் 6500 மைல்களுக்கு இப்பாலிருக்கும் இந்தியாவை பிரிட்டிஷ்காரன் அடக்க முற்படுவது கூரை ஏறி கோழி பிடிக்கமாட்டாதவன் கோபுர மேறி குரங்கு பிடித்த கதையை ஒக்கும். அயர்லாந்தைப் பாடமாகக்கொண்டு இந்திய சாவுக்கும் பிழைப்புக்கும் துணிந்து சண்டையில் இறங்கியிருக்கிறது. இதை யடக்க எந்தச் சர்க்காராலும் முடியாது.

இந்தியா கறவை பசுவா

இந்தியாவென்னும் கறவைப் பசுவை ஆங்கிலேயர்கள் கறப்பதை விட்டுவிடக் கூடாதென அபிப்பிராய முடையவர்களில் நமது இந்தியா மந்திரி ஸர் சாமுவேல் ஹோரிருக்கின்றானே அவன் மகா சமர்த்தன். இந்தியாவின் இராணுவம், வரவு செலவு, அன்னியநாட்டுச் சம்பந்தம் முதலிய விஷயங்களை ஆங்கில தர்மகர்த்தாக்களே இருந்து நடத்திவர வேண்டுமென்பதுதான் இந்த சாமுவேலின் தீவிர ஆசை. மேலும் பிரிட்டிஷ் சாமான்களுக்கு இந்தியாவில் விசேஷ சலுகை காட்டவேண்டுமென்பது. சென்ற வாரம் பார்லிமெண்டில் இந்தியாவைக் குறித்த பிரச்னை எழுந்தபோது பிரிட்டிஷ் பிரபல அரசியல் வாதி ஸ்ரீ லான்ஸ்பரி குறிப்பிடுவதாவது. "இந்தியர்களுக்கு தங்களது நாட்டை ஆட்சிபுரிய தெரியாதென்ற முறையில் அவமதிப்பாக எண்ணுவது பிரிட்டிஷாரின் அகங்காரத்தையே காட்டுகிறது. இந்த அகங்கார நினைவை பிரிட்டிஷார் அகற்றிவிட வேண்டும். சாத்விகமான மார்க்கங்களிலேயே உழைப்பதே காங்கிரஸின் கொள்கையாகும். பார்லிமெண்டிலிருந்த ஹோம்ரூல் கக்ஷியினரால் ஒன்றும் செய்ய முடியாமல் போனபோது அநகஸ்தக் கிளர்ச்சி மூலம்தான் அயர்லாந்துக்கு சுய ஆக்ஷியை அளித்தனர் என்பதை இந்த மெம்பர்களுக்கு நினைப்பூட்ட விரும்புகின்றேன். கடல்களுக்கப்பாலுள்ள பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளைப் போலவே இந்திய ஐக்கிய சர்க்காருக்கும், பூரணமான அதிகாரம் ஓர் குறிப்பிட்ட காலத்தில் ஏற்பட்டுவிடுமென்பதுதான் பிரதம மந்திரியின் அறிக்கையின் பொருளா என்று கேட்கின்றேன். ஓர் குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன் ராணுவம், நிதி முதலிய விஷயங்களைப் பற்றிய பாதுகாப்புகள் மறைந்துவிடுமென்று சர்க்கார் காங்கிரஸுக்கு திருப்தி அளிக்கத் தவறிவிட்டனர். இந்தியாவுக்கு சுய நிர்ணய உரிமை அளித்துவிட்டால் மற்றவைகளெல்லாம் திருப்திகரமாகத் தீர்த்துக்கொள்ளலாம் என்பதிலும் சந்தேகமில்லை. இந்தியாவில் அதிருப்தி ஏற்பட்டிருப்பதும், ஜனங்களை அருவருக்கத் தக்க முறைகளைக் கொண்டு அடக்கிவருவதுமே நமது ஆட்சி முறையின் யோக்கியதையை வெளிப்படுத்துகின்றன.

எட்டிக்குப் போட்டி!

இமேந்தான் இந்த மயானசம்பந்தமாக டிரஸ்டி ஸ்ரீமான் ப. சி. சோமசுந்தரம் பிள்ளைக்கும் நமக்கும் மூன்று மாதகாலமாக மூச்சுவிடக்கூடநேரமில்லாமல் போராடிகடைசியாக கோர்ட்டேறித்தான் நியாயம் பெறவேண்டுமென்றெண்ணியிருந்தோம் அதற்குள்ளாக ஸ்ரீமான் பிள்ளையும் தனது தவறை உணர்ந்து பொதுக்கூட்டமொன்றைகளாபஸ்தியில் தனது இல்லத்திற் கருகில் கூட்டுவித்தார். கூட்டத்திற்கு நூற்றுக்கணக்கான ஜனங்கள் வராதபோதிலும் முப்பது பேர்களுக்குக் குறையாது வந்திருந்தார்களென்பது மட்டும் உண்மை. அங்கு நிகழ்ந்த கேள்விகளுக்கு ஸ்ரீமான் பிள்ளை திணறியதையும் அங்கு வந்திருந்தவர்களும் பர்மா நாட்டானுபகூட காதில் துணியை வைத்துக் கொண்டிருக்கவில்லை திறந்துதான் வைத்துக் கொண்டிருந்தார்கள். அதைவிடுத்து பர்மா நாட்டான எட்டிக்குப் போட்டியாகவெளியிட்டிருக்கும் செய்தியிலிருந்து ஏதோ சூழ்ச்சியிருப்பதாக தெரிகிறது. கமிட்டியார்கணக்கை பரிசீலனை செய்து குறையும் துலைகையை கண்டுபிடிக்கவும் மயானத்திற்குப் பொருப்புள்ளவராகவிருந்தும் பண சம்பந்தமாக சரியாகவைத்துக்கொள்ளும் திறமையில்லாததினால் புது தேர்தல் ஒன்று நடத்தி புதிய டிரஸ்டிகளைத் தேர்ந்தெடுப்பதற்குத்தான் கமிட்டி நியமனம் செய்யப்பட்டதே ஒழிய பர்மாநாட்டான்கூறுவதைப்போலன்று என்பதையும் நமதுபிள்ளைக்குக் கூறத்தேவையில்லை. ஒரு வாரத்திற்குள் நமது பிள்ளை அவர்களும் கமிட்டியார்களை ஏககாலத்தில் கூப்பிடுக் கணக்கை பரிசீலனைக்கு விடத் தயங்கமாட்டார் கணக்கின் யோக்கியதையைப்பற்றி கணக்கு பரிசீலனைக்குப் பின்பேசுவோம்.

வருந்துகின்றோம்.

பிரபல பத்திரிகாபிமானியும். இரங்கோன் இராமானுஜ விசிஷ்டாத்வைத சிஷ்டாசார சம்பிரதாய சபையின் உப அக்கிராசனாதிபதியுமான திரு ஆ. முருகேசம் பிள்ளை அவர்கள் 6ந் தேதி ஞாயிறன்று இரவு 11–30 மணிக்குவின்னுலகடைந்தாரெனக் கேட்டு மிகவும் வருந்துவதுடன் அன்னாரது நீங்காத் துயரத்துக்கு ஆளாகியிருக்கு அவரது குடும்பத்தாருக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்

பிரிட்டனே உன் பழைய வாக்குறுதி!

1914 ல் மகா யுத்தம் ஆரம்பமாவதற்கு முன் இந்தியா முழுவதும் புரட்சிச் சங்கங்களும், சதியாலோசனைக் கூட்டங்களும் நிறைந்திருந்தன. இந்திய அரசாங்கத்தைப் பற்றி அதிருப்தியே எங்கணும் குடிகொண்டிருந்தது. மகா யுத்த காலத்தில் ஐக்கிய கட்சி ராஜ தந்திரிகளும், அமெரிக்க பிரசிடெண்டு வில்சனும் வெளியிட்ட அபிப்பிராயங்களினால், யுத்தத்தில் ஐக்கிய கட்சியார் வெற்றி பெற்றால், தமது பிறப்புரிமைகள் அங்கீகரிக்கப்பெற்று, சுயராஜயம் கிடைக்கக்கூடுமென்று இந்தியதேசியவாதிகள் நம்பியிருந்தனர். 1916 ல் யுத்தம் மும்முரமாக நடந்துகொண்டிருந்த காலத்தில் இந்திய தேசிய காங்கிரசும், அகில இந்திய முஸ்லிம் லீகும் சேர்ந்து, இந்தியாவுக்குத் தேவையான அரசியல் சீர்திருத்தங்களைப் பற்றி ஒரு திட்டம் வெளியிட்டனர். அத்துடன் யுத்தத்திற்கும் தம்மாலான உதவியை மனப்பூர்வமாகவும் செய்துவந்தனர். இன்று யரவாடாக்கோயிலில் குடிகொண்டிருக்கும் மகாத்மா காந்தியும் படைக்கு ஆள் சேர்க்கவும் தீவிரமாக முயர்சித்தார். மகா யுத்த வெற்றிக்காக இந்தியர்களின் கோடிக்கணக்கான பணம் ஏராளமாகச் செலவு செய்யப்பட்டது. இந்தியர்ளும், உயிரை உயிரென்று கருதாமே இரத்தம் சிந்தினர். இந்தியாவிலிருந்து ஆளுதவியும் பண உதவியும், 'போர்க்கருவி உதவியும்' போஜனத்திற்கு பொருள் உதவியும் சென்றிருக்காவிட்டால் இன்று ஏகாதிபத்தியத் திமிர்கொண்ட இவ்வுயர் பிரிட்டிஷாரின் அந்தஸ்துக்கு ஹானி உண்டாவதுமன்றி ஐக்கிய கட்சியாரும் வெற்றியும் அடைந்திருக்க முடியாது, அக்காலத்தில் இந்தியாவின் உதவி எத்தகைத்தாயிருந்தது என்று சர்க்கார் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது.

''நல்ல சமயத்தில் இந்தியப்படை பிரான்சில் வந்து சேர்ந்தது. அவர்கள் வந்ததினால் ஜெர்மன் முன்னேற்றம் தடைப்பட்டது, அக்காலத்தில் பிரான்ஸ் போர்முனைக்கு வரக்கூடிய பழக்கம் பெற்ற படை இந்தியப் படையைத் தவிர சாம்ராஜ்யம் முழுதிலும் வேறு படை இல்லவே இல்லை. எகிப்து, பாலஸ்தீனம், பாரசீகம், கிழக்கு—மேற்கு ஆப்பிரிக்கா முதலிய பிரதேசங்களில் பிரிட்டிஷ் படையோடும். குடியேற்ற நாட்டுப்படையோடும் சேர்ந்து இந்தியப்படை தைரியமாகவும், உண்மையாகவும் உழைத்ததனாலேயே இறுதியில் ஐக்கிய கட்சியாருக்கு வெற்றிகிடைத்தது.''

1916-ம் வருடம் ஏப்ரல் மாதத்தில் மொஸப்பட்டோமியோவில் உண்டான குழப்பங்களுக்கு இந்தியச் சர்க்காரின் உபேட்சையே காரணமென்று புகார் கூறப்பட்டது. அதைப்பற்றி விசாரணை நடத்த நியமனம் செய்யப்பெற்ற கமிட்டியாரும் இந்தியான திராணியின்மையினாலேயே அக்குழப்பமுண்டாயிற்றென்று தீர்ப்புச்செய்தனர். அதைப்பற்றிப் பார்லிமெண்டில் விவாதம் நடந்தபோது இந்திய அரசாங்க அமைப்பு காலப்போக்குக்கு ஒத்ததாக இருக்கவில்லையென்றும், அதைத்திருத்தியமைக்கவேண்டியது அவசியமென்றும் ஸ்ரீ இ. எஸ். மாண்டேகு பிரஸ்தாபித்தார். அவர் மேலும் கூறியதாவது.

''நீங்கள் எந்த நோக்கத்துடன் இந்தியாவை ஆளுகிறீர்கள் என்று வெளிப்படையாகக் கூறிவிட வேண்டுமென்று இந்தியர்கள் விரும்புகிறார்கள். இந்தியர்களுக்கு சுயராஜ்யம் அளிப்பது உங்கள் நோக்கமானால், முதற்படியாகச் செய்யவேண்டிய சீர்திருத்தங்களை உடனே நாம் செய்துவிடவேண்டும். ஆபத்துக் காலத்தில் இந்தியர்களை நம்பலாமென்றும், அவர்கள் நமக்கு உதவி புரிவார்கள் என்றும் இந்த யுத்தம் மூலம் வெளிப்பட்டுவிட்டது. இந்தியர்களின் ராஜ பக்தியைக் காப்பாற்ற இந்திய அரசியல் நிருவாகத்தில் அவர்களுக்கும் சரியான பங்கு அளிக்கவேண்டும். அப்படியளித்தால் மேலும் ஒரு யுத்தமுண்டானால் அவர்கள் மனமுவந்து நமக்கு உதவி செய்வார்கள். நமது ஏகாதிபத்தியத்தின் க்ஷேமத்துக்கு இந்தியர்களின் திருப்தியும் இன்றியமையாதது''

பேச்சு பேச்சளவிலிருக்க யுத்தம் மகா பயங்கர நிலைமை அடையத் தொடங்கிற்று. ருஷியா அழிந்தொழியும நிலைமையிலாயிற்று, இந்தியாவிலிருந்து எவ்வளவு ஆட்களையும், பணத்தையும் கொண்டுபோக முடியுமோ அவ்வளவையும் கொண்டுபோகா விட்டால் ஐக்கிய

கட்சியார் தோல்வியடைவது நிச்சயமென்றும் வெளியாயிற்று. உடனே ஸ்ரீ லாயிட் ஜார்ஜ் ஒரு தந்திரம் செய்தார். ஸ்ரீ மாண்டேகுவை இந்தியா ஆபிஸில் பிரதிஷ்டை செய்து, 1920ம் ஆண்டு ஆகஸ்டுமாதம் 20உ வெளிவந்த விஞ்ஞாபனத்தை வெளியிடுமாறு தூண்டினர். அவ் விஞ்ஞாபனத்தின் சாரமும் பின்வருமாறு.

"இந்தியர்களை அரசியல் நிர்வாகத்தில் பழக்கி காலக்கிரமத்தில் அவர்களுக்கு சுயராஜ்யமளிப்பதே பிரிட்டிஷ் சர்க்காரின் நோக்கம். அதற்கு பூர்வாங்கமான ஏற்பாடுகள் வெகு சீக்கிரத்தில் செய்யப்படும். அவ்வாறு ஏற்பாடுகள் செய்வதற்குள் இந்திய அதிகாரிகளுடன் தம்முன் கலந்துகொள்ள வேண்டியது அவசியம். அதற்காக மன்னர் பிரான் சம்மதப்படி வைஸ்ராயிடம் கலந்து ஆலோசனை செய்ய நான் இந்தியாவுக்கு வருகிறேன்"

விஞ்ஞாபனமோ முன்னாலோசனையின்றி வெளியிடப்பட்டதல்ல. சாம்ராஜ்யத்தின் க்ஷேமத்துக்கு அது இன்றியமையாததென்று முடிவுசெய்யப்பட்டது. அந்த விஞ்ஞாபனத்தை இந்தியத் தலைவர்கள் மெய்யென்றே நம்பினார்கள். "இங்கிலாந்தின் ஆபத்து அயர்லாந்தின் நற்றருணம்," என்று ஐரிஷ் தேசியவாதிகள் எண்ணியது போல் இந்தியர்கள் எண்ணவில்லை. ஆபத்துக் காலத்தில் இந்தியா, இங்கிலாந்துக்குக் கைகொடுத்து உதவியதை இங்கிலாந்துமட்டுமல்ல உலகமே தெரிந்திருக்கும். கடைசியாக என்ன கிடைத்தது?

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும், காலத்தின் மாணப்பெரிது" என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். காலத்தினாற் செய்த உதவி பெரிதாயிருந்தும், பிரிட்டிஷ் சர்க்காருக்குக் கடுகளவும் நன்றியில்லாமல் போய்விட்டது. பழைய வாக்குறுதிகளை மறந்தார்கள். ஜெர்மனியுடன் யுத்தம் செய்ய திண்டாடி இந்தியர் உதவியைக் கேட்ட வீரர்கள் தான் இன்று இந்தியாவை உள்ளங்கையில் வைத்து நசுக்கப் பார்க்கிறார்கள். பிரிட்டனே உன் நக்கப் புத்தியினால் இனியும் இந்தியாவை ஆண்டுகொண்டிருக்க நினைக்காதே' வாக்குறுதி தவறிய நீ கண்டிப்பாய்—கட்டாயமாய் ஒரு நாள் தத்தளிக்கவேண்டும். இல்லாவிட்டால்?

எந்த சனியன் வேண்டும்?

"ஊரைக் கெடுக்கும் சனியன்களுள் எந்த சனியன் வேண்டும்? என்று கேட்டால் ஒரு சனியனும் வேண்டாம்". என்று தான் நாம் சொல்லவேண்டும். நம் நாட்டுக் கதர்த்துணிக்குப் போட்டியாக பல சனியன்கள் இருக்கின்றன. இத்தாலியத்துணி, பிரிட்டிஷ் துணி, ஜப்பானியத் துணி இதர அன்னிய நாட்டுத் துணி இந்திய ஆலைத்துணி இவ்வளவு சனியன்களும் சேர்ந்துகொண்டு நமது கதரோடு போட்டி போடுகின்றன, கதருக்குப் போட்டியாக உள்ள சனியன்கள் ஒன்றை யொன்று தாக்கிக்கொண்டு செத்து வருகின்றன. உதாரணமாக பிரிட்டிஷ் துணியின் வியாபாரம் வருஷா வருஷம் குறைந்து கொண்டே வந்திருக்கின்றது. ஜப்பானுடைய துணியின் இறக்குமதி ஏறிக்கொண்டே போகிறது. பட்டும், பருத்தியும் கலந்துள்ள துணிவகைகளின் இறக்குமதியைக் கவனிப்போம்.

வருஷம்	பிரிட்டிஷ் துணி	ஜப்பான் துணி
1928—29	ரூ 8412889	ரூ. 3053110
1929—30	,, 4155343	,, 41000-65
1930—31	,, 1274417	,, 1503[illegible]850

போலிப் பட்டு நூல் வியாபாரத்திலும் பிரிட்டிஷ் வர்த்தகம் நாளடைவில் குறைந்துகொண்டே போகிறது, ஆனால் இத்தாலிய நாட்டிலிருந்து இறக்குமதியாகும் சரக்கோ எப்படியோ சமாளித்துக் கொண்டிருக்கிறது.

வருஷம்	பிரிட்டிஷ் பட்டு	இத்தாலி பட்டு
1928—29	ரூ. 3051629	ரூ 6103645
1929—30	,, 1954094	,, 4580665
1930—31	,, 1197842	,, 5060263

இந்த சனியன்களில் ஒன்றுக்கு ஆதரவு காட்டுவோமானால் அது மகா தப்பிதமாகும். பிரிட்டிஷ் சரக்கை மட்டும் பகிஷ்கரித்துவிட்டு ஜப்பானுக்கும், இத்தாலிக்கும், இதர நாடுகளுக்கும் சலுகை காட்டலாகாது. எல்லா அன்னியத் துணியையும் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் முன்னொரு தடவை காந்திஜிகூட கூறியுள்ளார். கதருக்குப் போட்டியாக உள்ள எந்தச் சனியனையும் ஆதரிக்கத் தேவையில்லை'

ஆங்கில ஆட்சியால் வந்த வினை.

விவசாய முன்னேற்றத்திற்கும், கட்டுறவு வியாபார விருத்திக்கும், மின்சார உபயோக வளர்ச்சிக்கும் போதுமான பணம் இந்தியாவிலிருக்கின்றதா? வருடா வருடம் இறக்குமதியாகும் 20 கோடி டாலர் விலையுள்ள தங்கம் பெண்களுக்கு நகைகளாகவும், கோவில் கருவூலப் பணமாகவும் போகின்றதே யல்லாமல் உபயோகத்திற்கு வருவதில்லை, இவ்வாறு புதைக்கப்படும் பணம் ஒவ்வொரு வருடமும் அதிகரிக்கின்றது, அந்தத் திரவியமெல்லாம் பாங்குகளிலிருந்தால் பொது ஜனங்களுக்குப் பயன்படும். அது நடைபெறுமா? ஒருக்கால் தேசிய அரசாங்கம் வந்த பின் அவர்களது முயற்சியால் நடைபெறலாம், முன்னேற்றத்தில் ஜனங்களுக்கு ஒரு ஆசையைக் காட்டிவிட்டால் திரவியம் தானாகவே புதைபட்ட இடங்களிலிருந்து வெளிவந்துவிடும். கிராமந்தோறும் ஒவ்வொரு மரத்தின் கீழும் ஒவ்வொரு "ரேடியோ"க் கருவி வைக்கப்பட்டால் எவ்வளவு நலமாயிருக்குமென்று நினைத்துப் பாருங்கள், இந்தியாவின் தரித்திர தசைக்கு இரண்டு காரணங்கள் உள, ஒன்று ஜாதி மதக் கட்டுப்பாடுகள். இரண்டாவது ஆங்கில அரசாங்கம். தொடர் வண்டிகளும், மற்ற வாகனங்களும் கிராமங்களில் இயந்திரத்தால் செய்யப்பட்ட சாமான்களைக் கொன்றுவிட்டன. தொழிலின்மையால் கிராமவாசிகள் விவசாயத்தை ஆரம்பித்தார்கள். "கம்பெனி' அரசாங்கத்தில் நெசவுத் துணி ஏற்றுமதி வியாபாரத்திற்கு ஆங்கிலேயர்கள் தடை ஏற்படுத்தினார்கள். உடனே லங்காஷயர் துணிகள் இந்தியாவில் வந்து குவிந்துவிட்டன. மகா யுத்தம் ஆரம்பமாகும் வரையில் இந்தியாவில் இறக்குமதியாகும் பொருள்களுக்குத் தீர்வையில்லாமலிருந்தது, ஆகவே தொழில் விருத்தியடையவில்லை. பிரிட்டிஷ் இறக்குமதி வியாபாரங்களுக்கு இம் முறை அனுகூலமாயிற்று. விவசாயம் ஏன் அபிவிருத்தி செய்யப்படவில்லையென்பதுதான் தெரியவில்லை. 1903 ம் வருஷம் முதன் முதல் வியவசாய ஆராய்ச்சி யொன்று ஆரம்பிக்கப்பட்டது. அதுவும் ஒரு அமெரிக்க கோடீசுவரது உதவியால்தான் செய்யப்பட்டது. வியவசாயத்தில் மிக முன்னேற்றமடைந்ததென்று சொல்லப்படும் பஞ்சாப் மாகாணத்திலுங்கூட போதிய பணம் விவசாயத்திற்காகச் செலவு செய்யவில்லை. 1000 ஆட்களுக்கு 30 டாலர் விதம்தான் வியவசாயச் செலவாகிறது. இங்கிலாந்தில் 360 டாலர் செலவாகிறது. யுத்தத்திற்குப் பிறகு இந்திய கைத்தொழிலுக்கு கொஞ்சம் நல்லகாலம் பிறந்திருக்கிறது. பிரிட்டிஷ் இறக்குமதிகளுக்கு சொற்ப தீர்வைகள் விதித்ததாலேயே இந்தமட்டாவது நன்மை யுண்டாயிற்றென்று சொல்லவேண்டும், ஆனால் தேசிய அரசாங்கம் செய்யக்கூடிய நன்மைகளை பிரிட்டிஷ் அரசாங்கம் செய்ய முடியாது. (ஸ்ரீ பிரெய்ல்ஸ்போர்ட்)

உறிஞ்சுவது யார்?

தாராவாடி ஊப்பூ என்பார் ஆங்கிலக் கல்வியில் சிறந்து கற்றுக்கொண்ட பெரியார். பெர் ரேன்தாயபாகு'வரை 'உத்தாறு' சுயராஜ்ய) கக்ஷியைச் சேர்ந்தவனென்று சொல்லிக்கொள்ள பின் வாங்கினதில்லை. வட்டமேஜை மகாநாட்டுக்குப் போய் வந்தது தான் தாமதம். பர்மாவிலுள்ள இந்தியர்களெல்லாம் பர்மியர்களின் இரத்தத்தை உறிஞ்சி வருகிறார்கள் என்று நாக்கில் நரம்பில்லாமல் பேச ஆரம்பித்துவிட்டார். பர்மாவிலிருந்து இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு என்று கணக்கிடவேண்டுமென முன்னொரு முறை டில்லி சட்டசபையில் கோரப்பட்டது; ஆனால் இந்த யோசனை நிறைவேறவில்லை. அந்தக் கணக்கு விவரங்களிருந்தால் பர்மாவின் இரத்தத்தை உறிஞ்சுவது யார் என்பதை வெட்ட வெளிச்சமாக்கிவிடலாம். ஆனால் பர்மியர்கள் தலைவரெனப் போற்றிவரும் ஊசு என்பார் "பர்மா இந்தியாவுடன் சேர்ந்திருந்தால் பெருமை அதிகம்" என்று கூறுகிறாரே அதற்குக் காரணம் பர்மாவின் இரத்தத்தை இந்தியா உறிஞ்சுவதுதானோ? பிறர் இரத்தத்தை உறிஞ்சும் மா பாதகச் செயலை இந்தியா என்னாளும் செய்யாதென்பதையும், இந்திய தர்மம் அல்லவென்பதையும் வாயில் வந்தபடி உளறும் ஊப்பு அறியட்டும்.

உலகத்தின் ஜோதி. : :

திரு. ஹெரால்டு
லஸ்கி

எந்த வகையில் எடுத்துக்கொண்டு பார்த்தாலும் மகாத்மா காந்தி உலகத்தின் ஜோதியே. சாத்விக சத்தியாக்கிரஹ முறையில் உலகத்திலுள்ள பெரும்பாலான ஜனங்களின் மனத்தை கொள்ளை கொண்டவர் வேறு யாரும் இப்பொழுது இல்லையென்றே கூறலாம். ராஜீய விஷயத்தில் இவர் தம் நாட்டினருக்கு ஓர் ஒப்பற்ற வழிகாட்டியாகவும், தலைவராகவும் இருந்து வருகிறார். இந்திய மக்கள் யாவரும் அவரைஓர்சுதந்திரதெய்வமாகக் கொண்டு அன்பும், மரியாதையும் காட்டி வழிபட்டு வருகின்றனர். இத்தகைய மரியாதையும், கள்ளங் கபடமற்ற அன்பும் வேறு யாரிடமும் எதிர் பார்க்கவே முடியாது. பல்லாண்டுகளாக பல இந்தியக் காங்கிரஸ் சுதந்திர வீரர்கள் இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு வந்திருக்கின்றனர். ஆனால் அந்தத் தியாகமூர்த்திகள் இவர் தற்சமயம் எடுத்துக்கொண்டிருப்பது போன்று தீவிர முயற்சி எடுத்துக்கொண்டார்களில்லை. இவருடைய தூய சந்நியாச வாழ்க்கையும், கள்ளங் கபடமற்ற தன்மையும் எத்தகைய கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும் தளராது காரியத்தைச் செய்து முடிக்கும் ஆற்றலும் இவருக்குஉலகத்தினிடைஒப்பற்றதோர் பக்தியைத் தர ஏதுவாகவிருந்தன. கடந்த முப்பதாண்டுகளுக்கு முன்னர் இவர் தென் ஆப்பிரிக்காவில் காட்டிய தீரமும், வீரமும், இவருடைய சத்தியாக்கிரகத்தின் வலிமையும், விடா முயற்சியும், தமது கொள்கையைப் பற்றி நின்று சாதிக்கும் வன்மையும், நிர்வாக சக்தியும் தெற்றென விளக்குவதாயின்- கடந்த பதினைந்தாண்டின் இந்திய சரித்திரம் பெரும்பாலும் மகாத்மாவின் சரித்திரமாகவே கொண்டிருக்கிறது.

தற்சமயம் இவர் உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்தினர் மனத்தையும் கவர்ந்து நிற்கின்றார். சாத்விக சத்தியாக்கிரகத்தின் முன்னர் இரத்தம் சிந்தும் படைப் போர்களெல்லாம் வெட்கி தலைகுனிந்து ஓடி ஒளிவதாயின. லெனினைத் தவிர மற்ற எந்த சுதந்திர வீரத் தலைவரும் இவரைப்போல் மக்கள் மனதைக் கவர்ந்தவர் இல்லையென்றே கூறவேண்டும். காந்திஜியின் கள்ளங் கபடமற்ற தூய தன்மையை யாரும் சந்தேகிக்க முடியாது. இவர் தாம் நாட்டு மக்களுக்காக மேற்கொண்டுள்ள தியாகமும், முயற்சியும் அளவிடற் பாலது. தேசத்தின் நன்மையைக் கோரி இம் மகானுபாவர் தமது உடலுயிராதியனை தியாகம் செய்து நிற்பது எவ்வுலகத்தினரும் செய்வதற்கரிய செய்கையே யாகும். தேசப் பணிக்காக இவர் தமது ஜென்மத்தையே அர்ப்பணம் செய்து நிற்கின்றார், தமது சுகா சௌகரியங்களையும், செல்வத்தையும் உதறித் தள்ளிவிட்டு தூய எளிய வாழ்க்கையைக் கொண்டு திகழ்கின்றார்.

இரண்டு கட்சியார்களுக்குள் சமாதானம் உண்டுபண்ண இவரைப்போல் சாமர்த்தியம் கொண்டுள்ளவர்கள் அதிகம் இருக்க முடியாதென்றே கூறுவோம். இச் சக்தி இவருக்குப் பிறப்புரிமையாகின்றது. நியாயத்திற்கே பாடுபட்டு அந்த நியாயத்தை நிலைநாட்டும் வன்மையும் இவரிடத்தில் பூரணமாக இருப்பது குறிப்பிடத்தக்கவையாகும். பழையன வென்றுவது கண்மூடித்தனமாகக் கொள்ளுதல்—ஒதுக்குதல் என்ற வழக்கம் இவரிடத்தில் இல்லை. எக்காலத்திலாயினும் அவற்றிலுள்ள நன்மை தீமைகளை உணர்ந்தே நன்மையைக் கைக் கொள்ளுவார்.

இந்தியர்கள் சுயமரியாதைக்குப் புத்துயிர் கொடுத்து இயக்குவித்தவர் மகாத்மாவே யாவர். இவருடைய உபதேசத்திற்குக் கட்டுப்பட்ட சீடர்களை எந்தச் சர்க்காரும் கலைக்கவும் முடியாது. சில ஆங்கிலேயர்கள் மகாத்மா ராஜீய ஞானத்தை ஆங்கிலேயர்களிடமிருந்தே கற்றுக் கொண்டதாகப் பிதற்றுகின்றனர். இது காலத்தினால் எழுதும் பொய்க் கூற்றே யாகிறது. இவர் கொண்டிருக்கும் விடுதலை மார்க்கம் மற்ற எந்த தேசத்தினரும் எக்காலத்திலும் கைக் கொண்டிராத நூதனமும், ஒப்பற்ற வலிமையும் கொண்டதாக இருக்கிறது. சாத்விக சத்தியாக்கிரஹமெனும் முறையை இவர் உலகத்திற்கு அருளியிருக்கின்றார். இவருடைய பூரண சாமர்த்தியம் இந்தியா சுயராஜ்யமடைந்து தன்னைத் தானே நிர்வகித்துக் கொள்ளும் போதுதான் தெரியவரும்.

பயமென்பதில்லையே!

மூதிர்ந்த தேச பக்தியே உருவெடுத்து வந்ததுபோல் தமிழ் நாட்டிற்கென்றே உதித்த பாரதியார் பாடல்களில் பன்முறை 'அச்சமென்பதில்லையே' என்றும் 'பயமென்னும் பேய்தனை யடித்தோம்' என்றும் கூறியுள்ளார். அவர் சொல்லின் தத்துவத்தை ஆழ்ந்த ஆலோசனையின் பயனால் உணர்ந்தோர் அவர் கூறியதின் அவசியத்தை எளிதில் அறிவார்கள்.

நம் நாட்டில் நாம் படும் இடர்களில் பலவற்றிற்கும் காரணமும், நாம் அனுபவிக்கும் பல கஷ்டங்களுக்கு ஆதாரமும்! பயமே! ஆராய்ந்து பார்க்குமளவில் நாம் இதுகாறும் அடிமை வாழ்க்கையினின்றும் நீங்காததற்கு அடிப்படைக் காரணம் நம்மவர் மனத்துள் இருக்கும் பயமே என உணரலாம். நம் நாட்டவர் ஒற்றுமைப் படாததின் காரணமும் பயமே எனவும் தெளிந்து கொள்ளலாம்,

பாம்பைக் கண்டு பயந்து அதை நாம் அடிக்கப் போவது போலவே, அது நம்மைக் கண்டு பயப்படுவதினாலேயே நம்மைக் கொல்லப் பார்க்கிறது எனும் விஷயத்தை அநேகர் அறிந்தும் நடவடிக்கையில் அறியாதவர் போலவே நடந்து கொள்ளுகின்றனர் தூங்குகிறவரை பாம்பு கடிப்பதில்லை, ஏனெனில் நித்திரையி லிருப்பவருக்கு பயத்தில் உதித்த பரபரப்பும், கொடுமை புரியும் ஆற்றலும் ஏற்படுவதில்லை. அதனால் பாம்புக்கும் பயமில்லை: இருவருக்கும் தீங்கு நேரிடுவதில்லை; வெள்ளைத் தோலுடையாரிடத்து நம்மவர் பெரும்பாலோர் உள்ளத்துள்ள பயமே நம் நாட்டின் விடுதலையை இதுகாறும் தடுத்து வந்திருக்கிறது. அரசாங்கத்தார் விதிக்கக்கூடிய சிறைவாசம், தடியடி முதலிய ஹிம்சைகளுக்கு பயந்திருந்ததனாலேயே அதிகாரிகள் அவற்றை பிரயோகித்து நம்மை அடக்கிவந்தனர். அவர்களால் கிடைக்கக்கூடிய சிறு ஊதியங்களையும் இழக்கும்படி இருக்குமே எனினும் பயமே நம்மிற் சிலரை இன்னும் தேசத் துரோகிகளாயும் அன்னியர்களின் கையாட்களாயும் வாழச் செய்கிறது. அவமானத்திற்கு அஞ்சவேண்டியதை விடுத்து, ஏழ்மைத் தனத்திற்கும், சமநிலைக்கும் வீண் பயம் பயந்து, மேன்மேலும் பழைய கேவல வாழ்க்கையையே ஸ்திரப்படுத்தும் வழிகளையும் பழக்கங்களையுமே கையாடச் செய்கிறது.

சமூக வாழ்க்கையில் பெரும்பாலாரான இந்துக்களின் தொகையைக் கண்டு இஸ்லாமானவர் அஞ்சியும், சிறுபான்மையாரான இஸ்லாமானவரை, வீரத்தையும் தைரியத்தையும், ஒற்றுமை உணர்ச்சியையும் கண்டு புலியைக் கண்டஞ்சும் யானைபோல், ஹிந்துக்கள் பயப்படுவதும், சிறுபான்மையான அந்தணர் மற்றவர் தொகையைக் கண்டஞ்சவும், மற்றவர் சிறுதொகையினராயினும் பார்ப்பனரின் சமயோஜித வல்லமையையும், ராஜதந்திர பயிற்சியையும் கண்டு பிரமிக்கவும், இதுகாறும் பயமின்றி வாழ்ந்து வந்த தாழ்த்தப்பட்ட ஜாதியார் மனத்தில் அச்சம் உதிக்கவும் நாம் ஒற்றுமை குலைந்தவராகிறோம். மனிதனும் பாம்பும் போல் ஒருவரிடத்து மற்றவர் பயந்தும், அதனால் சந்தேகம் கொண்டும், அன்னியர் ஆட்சியை உறுதி செய்துகொண்டு வருகிறோம். அச்சமொழியவேண்டும்! சந்தேகம் நீங்கவேண்டும்! இதற்காகவே ஆங்காங்கு சமூகத் தலைவர்கள் பாடுபடவேண்டும்! மகாத்மா காந்தி முன்னொருமுறை சொல்லியதுபோல் ஹிந்துக்கள் பயத்தை யொழிக்கவேண்டும். அப்போதுதான் மற்றவர்கள் அவர்களை பயமுறுத்துதலால் காரியத்தை சாதிக்கலா மென்னும் எண்ணத்தை யொழிப்பார்கள்!

கொஞ்ச நாள் முன்னர் நடந்த ஒரு சில்வரை சமூக சச்சரவை கவனித்தபோது பயத்தால் விளைந்து பெருகும் தீங்கு நன்கு புலப்படுகிறது. ஒன்றுமில்லாத விஷயங்களெல்லாம் மலைபோல் வதந்தியின் ஊட்டத்தால் பெருகிவிடுகிறது. அருகில் சென்று உண்மையை அறிவதற்குப் பயப்படுவதினாலேயே, இருட்டில் அரைகுறையாய் காணப்படும் சாதாரண கம்பம் ஆகாயத்தை அளாவி நிற்கும் பாம்பைப்போல தோன்றும். பொய் தோற்றங்களுக்கு பயமே காரணம். பல பயங்களை மகாத்மாகாந்தி நீக்கிவிட்டார்! இன்றும் நம் முன்னேற்றத்தைத் தடுத்து நிற்கும் மற்ற பயங்களையும் அவரும் அவரைச் சேர்ந்தவரும் நீக்குவார்களாக!

தேசோபகாரி

சந்தா விபரம்.

ஒரு மாதத்திற்கு	0	4	0
6 மாதத்திற்கு	1	8	0

சீன-ஜப்பான் போர்

போர் தளவாடங்களைக் குறைக்க வேண்டுமென்று சொல்வதன் நோக்கம் என்னவென்றால் போரின் பயனாக ஏற்படும் எல்லாவிதத் தொல்லைகளையும் ஒழிப்பதேயாகும். மனித சமூகம் தோன்றின நாள் தொட்டே போரின் அறிகுறி எல்லாரிடையிலும் இருந்துகொண்டு வந்திருக்கிறது. முதன் முதலில் மனிதன் போர்ச் சூழலிலேயே வாழ்ந்தான் என்று சொல்லப்படுகிறது. ஆண்டவன் பெயரால் பல போர் நடைபெற்றிருக்கின்றன வென்றும் இவைகள் தர்மப் போர்களென்றும் ஜிஹாத்துகள் என்று அழைக்கப்பட்டன வென்றும் மத சம்பந்தமான நூல்கள் கூறுகின்றன. எனவே போர் என்பது, பூர்வகாலந் தொட்டு ஒருவாறு அங்கீகரிக்கப்பட்டே வந்திருக்கிறதென்றே கூறலாம். மனித சமூகம் தோன்றிய நாள்தொட்டு இதுகாறும் எவ்வளவு போர்கள் நடைபெற்றிருக்கின்றன வென்பதை நாம் கணக்கிட முடியாது. ஆனால் 1821-ம் வருஷ முதல் 1914-ம் ஆண்டுவரை மொத்தம் நாற்பது போர்கள் நடைபெற்றிருக்கின்றன வென்று கணக்கிடலாம். நெப்போலியன் நடத்திய போரானது ஒன்பதினாயிரம் நாட்கள் நடைபெற்றது. 20 லக்ஷம் பேர் அதில் மாண்டனர். சென்ற ஐரோப்பிய யுத்தமோ 1750 நாட்கள் நடைபெற்றது. ஒரு கோடி ஜனங்கள் இறந்து போனார்கள். யுத்தத்தின் விளைவாக ஏற்படும் தீங்குகள் எண்ணில. இதனாலேயே ஒரு பெரியார் "மனித சமூகம் யுத்தத்தை ஒழிக்காவிட்டால், யுத்தம் மனித சமூகத்தை ஒழித்துவிடும்" என்று கூறினர். இந்தத் தீமைகளை எல்லாம் உணர்ந்தே சர்வதேச சங்கம் போன்ற அமைப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்னும் தோன்றியது. யுத்தத் தளவாடங்களை குறைக்கவேண்டுமென்ற உணர்ச்சியும் உண்டாயிற்று. இப்பொழுதோ சர்வதேச சங்கத்தின் முற்றத்திலும் ஜப்பானின் குண்டுகள் பாறுகின்றன. தட்டிக் கேட்க யாரும் கிடையாது. தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன் தானே! ஆனதினால் தான் ஆறு கோடிக்குங்கூட குறைந்த ஜப்பானியர்கள் ஆயுத பலத்தின் திமிரைக் கொண்டு நாற்பது கோடி மக்கள் நிறைந்துள்ள சீன தேசத்தில் புகுந்து அட்டூழியம் செய்கிறார்கள்.

பிரிட்டனுக்கு நண்பனில்லை!

(ஸ்ரீ மார்கன் ஜோன்ஸ்)

"அவசரச் சட்டத்தின் அட்டூழியங்களினால் மனிதனுக்கு சுயேச்சை என்பதே கடுகளவும் இல்லா தொழிந்துவிட்டது. இக் கொடிய முறைகளைக் கையாளுவதால் மீண்டும் சமரசம் ஏற்படுவதற்குச் செய்யும் முயற்சிகள் யாவும் சர்க்காரின் கொள்கையை அழித்துவிடுமென்றே கருதுகிறேன். சர்க்காருக்கு கோபமுண்டு பண்ணத்தக்க விதத்தில் காங்கிரஸ் நடந்துகொண்டிருப்பதாக ஸர் சாமுவேல் ஹோர் ஆத்திரமடையலாம். ஆனால் காங்கிரசும் இந்த அனுபவத்தையே அடைந்திருக்கிறது. காலமும் கடந்துவிடவில்லை. கடைசி நேரமாகிய இந்நேரத்திலாவது நிலைமையை தீர ஆலோசித்து புனராலோசனை செய்து, துரிதமாக யதேச்சாதிகாரங்களை குறைத்துக் கொள்ள முன் வருமாறு இந்தியா மந்திரியைக் கேட்டுக்கொள்கின்றேன். இல்லாவிடில் கூடிய சீக்கிரத்தில் பிரிட்டனின் நண்பன் என்று பெயர் சொல்லக்கூடிய ஒருவர்கூட இந்தியாவில் இல்லாது போய்விடும் நிலைமை ஏற்பட்டுவிடும் என எச்சரிக்கிறேன்."

இச் சந்தர்ப்பத்திலும் வல்லரசுகள் ஜினிவாவில் ஆயுதங்களைப் பற்றிப் பேசி வருவதானது வேடிக்கைக் கூத்தாகவே இருக்கிறது. நாளுக்குநாள் ஷாங்கெய் போர் வலுத்துக்கொண்டே வருகிறது. நவீன முறையில் தேர்ச்சி பெற்ற ஜப்பானுடன் பயங்கரமான போர்த்தளவாடங்களல்லாத வீரமும், ஊக்கமும் கொண்ட சீனன் சற்று சக்திபற்றே நிற்கின்றது. ஜப்பானின் கொடுமையோ பொறுக்க முடியவில்லை. உள்நாட்டு நகரங்களிலும், வெடிகுண்டுகளை வீசி பயங்கரத்தை யுண்டுபண்ண முயன்றுவிட்டனர், இச் சந்தர்ப்பத்தில் வல்லரசுகள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டு கல் நெஞ்சமுடையவனும் வருந்தாதிருக்க முடியாது. ஜப்பான் செய்வது அக்கிரமந்தான் என்று எல்லா நாடுகளும் தெரிந்திருந்தும் தட்டிச் சொல்வதற்கு எந்த நாட்டுக்கும் தைரியம் கிடையாது என்பது தெற்றென விளங்கிவிட்டது. ஜப்பானின் ராணுவத் திமிரை தட்டியெறிய முற்படாவிட்டால் முக்கியமாக பிரிட்டனுக்கும், உலகத்துக்குமே ஆபத்து உண்டாகுமென்பது நிச்சயம்.

Printed & Published By A V Sellam Pillay at the Desopakari Press, 210,36th Street Rangoon

பதிவுஎண் 24ம மலர் 9 இதழ் 68 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை **DESOPAKARI** புதன் ஞாயிறு வெளியீடு.

210-36-வது வீதி இரங்கோன், (13-3-32) பங்குனிமீ 1உ ஞாயிற்றுக்கிழமை

போலோ! ஸ்வதந்திர தேவிக்கி ஜே!

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமமென்ப துறுதியாச்சு
சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே
—இதைத்
தரணிக்கெல்லா மெடுத் தோதுவோமே;

—கவியரசன்.

அதோ மேலைப் பிரதேசத்திலே—இங்கிலாந்துக்கு அடுத்த வீட்டிலே—அயர்லாந்து தேசத்திலே ஸ்வதந்திர ஜோதி ஸ்புரித்து விளங்குகிறது, அதன் உதயங் கண்டவுடன் ஒவ்வொரு ஸ்வதந்திரப் பிரியனும் அவன் உலகத்தின் எந்த மூலையி லிருந்த போதிலும் சிந்தை சிறை செலுத்த—தலை வணங்க—தெய்வ வழிபாடு செய்யக் கடமைப்பட்டிருக்கிறான். மனித உடலைப் போன்று இவ் வுலகத்தின் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு அவயவமாக—அம்சமாக—கற்பனை செய்துகொண்டு பார்த்தால் எல்லா அவயவங்களும் நோய்ப்படாமல் இருந்தால் எப்படி மனித வாழ்க்கை சாத்தியமோ அவ்வாறே எல்லா தேசங்களும் அததன் போக்கில் பூரண ஸ்வதந்திரத்தோடு வாழ்ந்தாலன்றி உலக சமாதானம் நிலவுவது துர்லபம். ஆகவே சமாதானப் பிரியன்—விடுதலை வாஞ்சையாளன் தனதொரு நாட்டின் ஸ்வதந்திரம் மாத்திரமில்லை. வேற்று நாட்டின் ஸ்வதந்திரத்தையும் விரும்பவும் போற்றவும் செய்கிறான். இதனாலேயே இப்பொழுதைய அடிமை இந்தியா எழாயிரம் மைல்களுக்கு அப்பாலிருக்கும் அயர்லாந்தின் ஸ்வதந்திரத்தையும் விழாவெனக் கொண்டாடுகிறது. மேலும் அயர்லாந்துக்கும் இந்தியாவுக்கும் பொது எதிரியாக விளங்கும் இங்கிலாந்திலிருந்து விடுபடும் அயர்லாந்தின் எல்லையும் இந்தியாவின் எல்லையும் ஏகமன்றி இரண்டில்லை. பூரண ஸ்வதந்திரத்தை கோடற் குறியாகக் கொண்டு போராடி இன்று துளி குறையாத வெற்றியில் அயர்லாந்து மூழ்கிக் குளித்திருக்கிறது. இனிமேல் இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்கும் மயிரிழை சம்மந்தம் கூட இருக்கப் போகிறதில்லை. கொஞ்ச நஞ்சமிருந்த ஒட்டையும் ஆசையையும் இங்கிலாந்து கை கழுவிவிட வேண்டியதுதான். அயர்லாந்துக்கு வேண்டிய ஆட்சித் திட்டத்தையும் வியாபார—விவசாய—கைத்தொழில் விருத்தியையும் அயர்லாந்தார் அவர்கள் அபிப்பிராயப்படி இனிமேல் அமைத்துக் கொள்ளுவார்கள். அப்பொழுது அடிமையென்பவன் எவனும்—இல்லை யென்பவனும் எவனுமே இருக்கமாட்டான். அந்தவொரு சாம்ராஜ்யத்தைத் தான் இந்தியாவும் அடைய விரும்புகிறது.

அயர்லாந்தின் ஸ்வதந்திரப் போரை சரித்திரத்தில் படித்த பேரெல்லாம் இன்று ஒரு பெரு மூச்சு விடுவார்கள். "அயர்லாந்துக்கு ஜே!" என்று தத்தம் மனதுக்குள்ளாவது ஒரு முறை ஜெபித்துக் கொள்ளுவார்கள். பத்தொன்பதாவது நூற்றாண்டிலும் இந்த இருபதாவது நூற்றாண்டிலும் இவ் வெற்றிக்காக எவ்வளவு கஷ்டம்! எவ்வளவு தியாகம்! எவ்வளவு பலி! யெல்லாம் கொடுத்திருக்கிறது. ஓய்வு உண்டா? ஒழிச்சலிருந்ததா? மூச்சுவிடக் கூட நேரமில்லாமல்—கோர்வை விடாமல்—ஒரே தொடர்ச்சியாக அயர்லாந்து இங்கிலாந்

போலோ சுதந்திர தேவிக்கி ஜே!

...டன் போராடி கடைசியில் இன்றுதான் பூரண ஜெயம்—பரிபூரண விடுதலை யடைந்திருக்கிறது, உலக சரித்திரத்தில் என்றும் எங்கும் ஏற்படாத நவ நவமான பலி தியாகத்தையெல்லாம்செய்திருக்கிறது. நாட்டின் சுதந்தரத்திற்காக சிறைச்சாலையில் உண்ணாவிரதங் கிடந்து அங்குல அங்குலமாகவுயிர் நீத்தவொருமாக்சுவினி அயர்லாந்திலே தான் முதன் முதல் அவதரித்தான். அவனுக்குப் பின்னால் இந்தியாவில் ஒரு யதீந்திரனும் பர்மாவில் ஒரு விஜயனும் பிறந்தார்கள். ஆர்தர் கிரிபித்தின் தலைமையில் சின்பீன் இயக்கம் தோன்றி அது செய்த கிளர்ச்சியும் தியாகமும் கொஞ்சமல்ல. என்றாலும் திவாலரா அயர்லாந்தின் அரசியலில் பிறந்த பின்னால்தான் விடுதலை வேகம் அயர்லாந்தார் மனத்தில் பூரணத்துவம் பெறுகிறது. பத்து வருடங்களுக்கு முன்னால் அயர்லாந்து பிரிட்டனால் சுயேச்சை நாடாக ஒப்புக்கொள்ளப்பட்டு தேசீயக் கட்சித் தலைவரான காஸ்கிரேவின் கீழிருந்து வந்தது. என்றாலும் ஜனநாயகம் ஸ்புரிக்கவில்லை, இங்கிலாந்தின் ஒட்டு முழுதும் அறுக்கப்படவில்லை. காஸ்கிரேவ் சர்க்காரில் எத்தனையோ எண்ணற்ற மாறுதல்கள் ஏற்பட்டு தேசம் தேசியமாக விளங்கியபோதிலும் திவாலராவின் எண்ணமெல்லாம்—கோரிக்கை முழுதும் நிறைவேறி விட்டதாக அமைந்துவிடவில்லை.

1921-ல் ஐரிஷ் தேசியத் தலைவர்களான ஆர்தர் கிரிபித், ஜான் மாக்நீல், ஸ்டெய்னஸ் டக்கன், ஜான்மெக்கிபான், மெய்க்கேல் காலின்ஸ், எமன் தி வாலரா, எமன்தி காஸ்கிரேவ் முதலியவர்களால் நிர்மாணிக்கப்பட்ட சுயேச்சை அயர்லாந்து பத்து வருடங்களிடையில் ஆட்சித் தலைவரிருவரால் ஆளப்பட்டு வந்தது. முதல் ஐந்து வருஷம் ஆர்தர் கிரிபித் ஆட்சித் தலைவராகவும் மைக்கேல் காலின்ஸ் முதன் மந்திரியாகவுமிருந்தனர். அதன் பின் எமன் தி காஸ்கிரேவ் தலைவரானார். திவாலரா பூரண சுதந்திரத்தில் சிறிது குறையப்பெற்ற அயர்லாந்து ஆட்சியிலிருந்து விலகினார். இப்பொழுது மூன்றாவது முறையாகத் தேர்தல் ஆரம்பிக்கப்பட்டபோது தான் திவாலரா வெளிவந்து தமது திட்டத்தை ஜனங்களுக்கு அறிவித்தார். பொருளாதாரத்தில் சீர்கேடடைந்து கிடக்கும் அயர்லாந்தைச் செம்மைப்படுத்துவதற்காக இறக்குமதிக்கு சுங்கச் சுவரமைத்தல் கைத்தொழில் விருத்தி செய்தல் முதலியவற்றின் அத்தியாவசியத்தைக் கண்ட ஜனங்கள் திவாலராவின் கட்சிக்கே வாக்களித்து அவர்களிடம் ஜன நாயகத்தை ஒப்படைக்கலாயினர். அதனால் இம்முறை திவாலரா ஜன நாயக ஆட்சித் தலைவரானார், இவர் தமக்கியல்பிலுள்ள அறிவுத் திறமையால் தேசத்தின் மீதுள்ள அபிமான வன்மையால் பல மாறுதல்களையமைத்து நாட்டைப் பண்படுத்துவார். எதிரிகளின் ஏவுதலால் பல இடையூறுகளும் ஏற்பட முடியும். இருந்தாலும் எல்லாவற்றையும் நீந்திக் கரைசேரும் ஆற்றலும் அறிவும் அவருக்குண்டு.

இதனால் நாம்—இந்தியர் என்ன அறிகிறோம்? ஒரு நாட்டின் ஸ்வதந்திர உணர்ச்சியை எளிதில் அடக்கிவிட முடியாது. முடிவில்—இன்றைக்கோ நாளைக்கோ அந் நாடு அவசியம் தனதெல்லையை அடைந்தே தீரும். இதற்குச் சாக்ஷியாக அயர்லாந்தை வைத்துக்கொண்டு நமது விடுதலைப் போரை நாமும் வேகத்துடன்—முழு வேகத்துடன் நடத்தக் கடவோம். ஆனால் நன்றாய் ஞாபகமிருக்கட்டும் வழி மாத்திரம் வேறு, நாமெடுத்துக் கொண்டிருப்பது அஹிம்ஸை விரதம்—சாத்விக சன்னியாசம். இப்பக்கம் அப் பக்கம் எள்ளளவு பிசகினோமோ அவ்வளவு தான் கிடுகிடு பாதாளம். அப்புறம் வெகு காலத்துக்கு மீட்சியில்லை. உஷார்! அஹிம்ஸை வழியில் இந்தியாவும் அயர்லாந்தைப்போல் ஸ்வதந்திரம்—பூரண ஸ்வதந்திரம்—பரி பூரண விடுதலை யடையட்டும். இந்தியரெல்லோரும் ஒரு முறை ஸ்வதந்திர தேவிக்கு ஜெயம் கூறுங்கள்—பல்லாண்டு பாடுங்கள். ஸ்வதந்திர தேவிக்கி ஜே! திவாலராக்கி ஜே!

தேசோபகாரி

(வாரம் இருமுறை)

வருட சந்தா (உள் நாடு)	ரூ	3	0	0
6 மாத ,,	,,	1	8	0
வருட சந்தா (வெளிநாடு)	,,	4	8	0

காந்தி கலகக்காரன்.

இந்தியாவெங்கும் கோரமான யுத்தம். நசுக்கப்பட்ட உலகம்—வலிய ஆட்சியால் வாட்டி வருத்தப்பட்ட உலகமுழுதும் இன்று ஒரு பயங்கரமான கரிய மேகத்தால் சூழப்பட்டிருக்கும் சம்பவத்தில் பிரிட்டன் மங்கி மறைந்து விட்டிருக்கிறது. இனிமேல் அவளுடைய ஆட்சிக்கு அங்கே இடங்கிடையாது. பிரித்தானியா கொலுவிருந்த இடத்தில் பாரதி பாராளுவாள். இதனிடையில் பிரிட்டிஷ்காரர்களுடன் இந்திய அரசியல் அமைப்பில் ஒத்துழைக்கவும் அடங்கி நடக்கவும் விரும்பாத பிரஜைகளை பிரிட்டிஷ் சர்க்கார் வலியகரத்தால்—பலாத்காரத்தால்-கொடிய அடக்குமுறைகளால் அடக்கி விடலாமென எண்ணுவது இந்த 1932ல் முடியாது. போன சட்டமறுப்பு எதற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அதற்காக—அந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இற்றைய சட்டமறுப்புப் போரும் தொடங்கப்பட்டது. ஆனால் இம்முறை காந்திஜீ உலகத்தின் முழு ஆதரவையும் பெற்றிருக்கிறார், தர்ம நியாயமும் அவர் பக்கத்திலேதானிருக்கிறது. இவ்வாற்றான் காந்திஜீ தமது பலம் இரட்டிக்கப் பெற்றிருக்கிறார். போன போரின் போது ஒரு சிலரால் கூறப்பட்ட அபவாதங் கூட இப்போரில் இப்பொழுது கூற இடம் வைக்கவில்லை. தம்மால் கூடிய அளவுக்கு சமாதானமாகப் பேசி முடித்துக்கொள்ளுகிறது என்ற கொள்கையுடன் இரண்டாவது போட்ட வட்டமேஜையில் எத்தனையோ வாரங்கள் வீற்றிருந்து எவ்வளவு தூரம் விட்டுக்கொடுக்க முடியுமோ அவ்வளவுக்கு தாராளமாக விட்டுக் கொடுத்தும் பிரயோஜனமில்லை—பிரிட்டிஷ் வாக்குறுதிகளில் உண்மையும் நேர்மையுமில்லையென்று கண்ட பிறகுதான் போர்புரிந்தாகிலும் ஒரு தேசத்தின் பிறவிச் சுதந்திரத்தைப் பெறுகிறது என்ற முடிவுக்கு வந்தார். வங்காளம், வடமேற்கு எல்லைப்புறம் ஐக்கிய மண்டலம் முதலிய மாகாணங்களில் நடத்தப்பட்ட அட்டூழியங்களை சகிக்கமாட்டாமல் காந்திஜீ இந்தியாவின் வைஸ்ராயை—வில்லிங்டன் பிரபுவை கண்டு பேசி சமரஸமானதோர் முடிவுக்கு வர முடியாதா என்று யோசித்தார். ஆனால் அதை வில்லிங்டன் அடியோடு மறுத்துவிட்டதுடன் காந்திஜியையும் அவரது சகாக்களையும் உடனே கைது செய்து கம்பிகளுக்குள்ளே பூட்டியும் விட்டார். அவ்வளவுதான் இந்தியர் வெங்கும் கொந்தளிப்பும் குமுறலும் ஏற்பட்டு சாவுக்கும் பிழைப்புக்கும் துணிந்து தியாகத் தீயில் குதித்து விட்டது, ஒரே அலைபோன்ற சத்தியாக்கிரஹம் ஹிமாசலம் முதல் தென் குமரிவரை மூண்டிருக்கிறது, இதை நீந்திக்கடக்க எந்த சர்க்காராலும் முடியவே முடியாது இந்திய தேசிய மஹா சபையையும்—தேசிய இலக்கியங்களையும்—தேசிய செய்திகளையும் கூட பறிமுதல் செய்தபோதிலும் இந்திய சர்க்கார் ஒரு துளி வெற்றியாவது அடைந்துவிடப் போகிறதில்லை. சட்டத்திற்கும்—நீதி தர்மத்திற்கும் புறம்பாக நடப்பதொன்றே அந்த ஆட்சிமுறையை அடியோடு கவிழ்த்துவதற்குப் போதுமானது என்பது பலகாலும் சரித்திர சாக்ஷியாக ருஜுச் செய்யப்பட்டிருக்கிறது, இந்தியாவை விட்டு பிரிட்டன் விலகிடுமா ?

காந்திஜீ லண்டன் வந்திறங்கியதும் முதல் முதலாவதாகப் பேசும்போது "காங்கிரஸ் சுதந்திரம் வேண்டுகிறது; இந்தியா இனிமேல் அடிமைப் பந்தத்திலிருந்து வெட்டிக்கொண்டு சுயேட்சையாய் வாழ விரும்புகிறது. ஆனால் அதை அடையும் மார்க்கத்தில் சத்தியத்தையும் சாத்வீகத்தையுமல்லாமல் வேறு கைக்கொள்வதில்லை; 32 கோடி வாயில்லாப் பூச்சிகளுக்கு அவ்வழியல்லால் வேறுவிதியுமில்லை" யென்றார். அவர் ஆலோசித்த ஆலோசனை—இங்கிலாந்திலிருந்த காலத்தில் அவர் இங்கிலீஷ்காரர்களுடனே அளவளாவிய அன்பு—காட்டிய சகிப்புத்தன்மை இவையெல்லாம் அவரது புனிதமான இயக்கத்திற்கு வழிகாட்டியாகவும்—அவரது வாழ்க்கை மான்மியத்திற்கு தெய்வங்களாகவும் அமைகின்றன.

காந்திஜீ ஒரு ஒடிந்த துரும்புபோலிருக்கிறார். அவருள்ளிருக்கும் மஹா சக்தி தெய்வதம் பொருந்தியது. அவர் ஒரு மகத்தான கலகக்காரர், அவர் எதிர்த்து நிற்கும் சாம்ராஜ்யத்தையும் அவரையும் ஒரு முறை ஒப்பி

இந்தியா தூங்கின காலங்களில்!

தூங்குகிறவன் தொடையில் கயிறு திரிக்கலாம். எரிச்சல் கண்டு அவன் விழித்துக்கொண்டவுடன் திரித்தவனின் மடியைப் பிடித்துக்கொள்வான். இந்தியா தூங்கிக் கொண்டிருந்த நாட்களில் அதன் தலையில் ஏராளமாகக் கடன் ஏற்பட்டு வந்தது. அந்தக் கடன் பணத்தில் பெரும் பகுதி இராணுவச் செலவாகக் கரைக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் ஏகாதிபத்திய வளர்ச்சிக்காக இந்திய இராணுவத்தை உபயோகப் படுத்திக்கொண்டிருந்தனர். ஸக்லத் வாலா சொன்னது போல் இங்கிலீஷ்காரன் எங்கே காலடிவைத்தாலும் அந்த நாட்டினரை வலுச் சண்டைக்கு இழுப்பான்; அந்தச் சண்டைகளுக்கெல்லாம் இந்திய இராணுவத்தை உபயோகித்துக்கொண்டார்கள். செலவு இந்தியாவுக்கும், லாபம் பிரிட்டனுக்குமாக அநேக சண்டைகள் முடிவடைந்தன. இதெல்லாம் இந்தியா தூங்கிக்கொண்டிருந்த காலத்தில் நடந்தவை. இப்போதோ இந்தியர்கள் விழித்துக்கொண்டனர். பிரிட்டனுக்கு இந்தியா இராணுவம் உதவியிருப்பதையும், பிரிட்டனுக்காக இந்தியக் காசு செலவழிக்கப்பட்டிருப்பதையும் இந்தியர்கள் கணக்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர். நியாயமாகப் பார்க்கப்போனால் பிரிட்டன் இந்தியாவுக்குக் கொடுக்கவேண்டிய பாக்கி ஏராளமாக உண்டு. இந்தியாவுக்குச் சேரவேண்டிய காசுகளையெல்லாம் கீழே எண்ணி வைக்க வேண்டுமென்று நல்ல வார்த்தையாக பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்டுக் கொள்கின்றோம்.

எந்தெந்த வகையில் பிரிட்டிஷ் சர்க்கார் நமக்குக் கடன் பட்டிருக்கிறார்கள்; அல்லது எந்தெந்த வகையில் நம்மை ஏமாற்றினார்கள் என்று கேட்கலாம். நன்று, "பாம்பறியும் பாம்பின் கால்" என்ற பழமொழிப்படி ஆங்கிலேயரின் இரகஸ்யத்தை ஆங்கிலேயனே நன்றாயறிவான். இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த பிரபு நார்த்ப்ரூக் என்பவர் 1895—96ம் வருஷத்திலே செல வாராய்ச்சிக் கமிஷன் முன்னிலையில் தந்த சாக்ஷியத்தைக் கீழேதருகின்றோம்:-

"இராணுவத்தைத் தந்து உதவிய இந்திய சர்க்காருக்கு பிரிட்டிஷ் சர்க்கார் ஒழுங்காகப் பணஞ் செலுத்தவில்லையென்றே யான் கருதுகின்றேன்.

அபிஸீனியச் சண்டைக்கு முன்னால் நடந்த கதைகளை விட்டுவிடுவோம். அபிஸீனியச் சண்டைச் செலவை இந்தியாவின் தலையில் சுமத்தியிருக்கலாகாது. அந்தச்சண்டை எதற்காக நடத்தப்பட்டது? ஆங்கிலத் துருப்புகளுக்குத் தங்குமிடம் தேடுவதற்காக அந்தச் சண்டை போடப்பட்டது. ஆங்கிலேயனின் சுய மரியாதையையோ, இந்தியரின் கவுரவத்தையோ காப்பதற்காக அந்தச் சண்டை போடப்படவில்லை.

அடுத்தாற்போல் பிராக்குப் படையெழுச்சியின் கதை நடந்தது. அந்தச் சண்டையின் செலவை அநியாயமாக இந்தியாவின் தலையில் தள்ளினார்கள். சண்டையோ இந்தியாவுக்கு வெளியில் நடந்தது. இந்தப் படையெழுச்சியின் செலவை யார் ஏற்றுக் கொள்வது என்பதைப் பார்லிமெண்டார் பரிசீலனை செய்திருக்கவேண்டும். நான் அப்போது கவர்னர்

டுப் பார்த்தால் எல்லையில்லாத வித்தியாசத்தைக் காணுகிறோம். வில்லிங்டன் மஹாப்ரபுவின் ஆடம்பரமான ஆதிக்கமெல்லாம் காந்திஜியைக் கைது செய்யவந்த போலீஸ்காரர்களைக் கண்டவுடன் அவர் சிரித்த அந்த மோஹனச் சிரிப்பிலே மங்கி மறைந்து மக்கிப்போய் விட்டது. "எங்களுக்குள்ள எல்லாவற்றையும் நாங்கள் இழக்கத் துணிந்துவிட்டோம். எங்களது குடும்பத்தினரையும் நண்பர்களையும் சரீரத்தாலும் உயிராலுங்கூடப் பிரிந்து வாழவும் வாழ்வோம். தேச சுதந்திரத்தைவிட எங்களது சர்வ ஸ்வப்பொருளோ, சுகபோகமோ அத்தனை பெரிதில்லையென்று கண்டு விட்டோம், தடியடியையும் துப்பாக்கிப் பிரயோகத்தையும், பீரங்கிக் குண்டுகளையும் கூட நடு மார்பில் தாங்குவோம். ஆனால் அதே சமயம் எங்களை அடிக்கும், சுட்டுக்கொல்லும் பிரிட்டிஷ்காரன் மீது கொஞ்சம் கூட பகைமையோ, குரோதமோ கொள்ளமாட்டோம்" என்றும் கூறினார், அந்த உணர்ச்சியிலே— அந்த அறிகுறியிலே—அந்த வழியிலேதான் இந்தியா வெற்றியடையப் போகிறது.

—"நேஷன்".

ஜெனரலாக இருந்தபடியினால் இந்தியா இந்த அநியாயச் செலவை ஏற்பதை எதிர்த்தேன். என் எதிர்ப்பை ஒருவரும் பொருட்படுத்தினார்களில்லை.

1882-ம் வருஷத்தில் எகிப்துக்குச் சென்ற படையெழுச்சியைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். ஸுயஸ் கால்வாயை அடைவதில் இந்தியாவுக்குப் பிரயோஜனமிருக்கலாம். எத்தகைய பிரயோசனம், எவ்வளவு பிரயோசனம் என்பதையும் கருதவேண்டுமென்றோ ? இந்தப் படையெழுச்சி கொஞ்சச் செலவில் முடிந்து போகுமென எண்ணி, முதலில் இந்தியாவின் தலையில் அந்தச் செலவைக் கட்டுவதாக ஏற்பாடாகி இருந்தது. ஆனால் வரவர அந்தச் சண்டை தெரிதாகிவிட்டது. படையெழுச்சியின் மொத்தச் செலவு 17 லக்ஷம் பவுன்கள்! அந்தச் செலவில் 12 லக்ஷம் இந்தியா ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றார்கள். முணுக்கிக்கொண்டே இந்திய சர்க்கார் அந்தச் செலவை ஏற்றுக்கொண்டனர். இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் சரிபாதியாக அச்செலவைப் பங்கிட்டிருக்க வேண்டியது நியாயமாகும்,

ஸுடான் படையெழுச்சியில் இந்தியாவுக்கு இம்மியும் இலாபமில்லை. இந்தச் செலவைப் பற்றியும் பார்லிமெண்டு சபை ஆலோசிக்கவில்லை. சென்ற வருடம் சூகிம் என்ற இடத்திற்குச் சென்ற செலவை இந்தியாவின் தலையில் தள்ளி இருக்கவே கூடாது.

அபிஸீனியச் சண்டையில் செலவான 6 லக்ஷம் பவுனையும் இந்தியாவிற்குத் தரவேண்டும். பிராக் படையெழுச்சியில் செலவான 2 லக்ஷம் பவுனையும் இந்தியாவுக்குச் செலுத்தவேண்டும், எகிப்துச் சண்டையில் மூன்றரை லக்ஷம் பவுனை இந்தியாவுக்குத் தரவேண்டுவதே நீதி.

சென்றன செல்க. இனியேனும் இந்தியாவை மரியாதையாக நடத்தலாகாதா ?

இவ்வாறு இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த பிரபு நார்த்ப்ரூக் கூறியிருக்கின்றார். இந்தியாவின் கடன், விஷம் மாதிரி ஏறி வந்ததற்கு இந்த வைஸிராயின் சாக்ஷியம் ஓர் உதாரணமாகும். மேலும் இந்தியாவுக்கு எவ்வளவு தொகை பிரிட்டனிடமிருக்க சேரவேண்டியது என்னும் இரகஸ்யமும் இதனின்றும் வெளியாகின்றது. ஒன்று இந்தியக் கடன்களெல்லாம் காங்கிரஸ்காரரால் பரிசோதிக்கப்பட்டு, அநியாயக் கடன்கள் ஜாடாவும் மறுக்கப்பட வேண்டும். அல்லது பிரிட்டனே! ஒரு சல்லி விடாமல் இந்தியாவிற்குத் தரவேண்டியவைகளை நீ தந்துவிட வேண்டும். இரண்டில் ஒன்று செய்யாவிட்டால் பழைய கணக்குகளை யெல்லாம் நோண்டி நோண்டி பிரிட்டிஷாரின் மானத்தைக் காற்றில் பறக்கவிட்டு, உலகம் சிரிக்கும்படியாகச் செய்வோம்.

கடைசியில் கழுதை வழிகாட்டி ?

எமது நண்பரும் நண்பருக்கு நண்பரும் சென்னைக்குச் செல்லுவதாக இருந்தார்கள். அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் நண்பரை வழியனுப்பிவர கப்பற்றுறைமுகத்துக்குப் போனேன். கையெழுத்துத் தெரியவில்லை; இருள் கவிந்துகொண்டிருந்தது. அத்துடன் பனியும் கொட்டியது. நடப்பதைப் பார்த்தால் நான் செல்லாமல் முடியாது. ரூஸ்ப் பையா இரண்டாவது எண்ணிடப்பட்ட பாலத்தில் கப்பல் கட்டப்பட்டிருக்குமெனப் பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யப்பட்டிருந்தது கண்டு அங்கு சென்றேன். இல்லாவிட்டால் மதராஸ் பாலமென்று சொல்லிக்கொள்ளும் ஸ்பார்க் வீதி பாலந்தான் போயிருப்பேன். ஏனெனில் அங்குதான் சகஜமாக சென்னைக் கப்பல் கட்டப்படுவது வழக்கம். பத்திரிகை படித்த நாமோ அல்லது நாலெழுத்தறிந்த நாமோ இந்தப் பால மாற்றத்தைத் தெரிந்து தப்புச் செய்யவில்லை. ஆனால் மற்ற இரண்டும் அறியாதவர் கப்பலைத் தேடித் திரியலாயினர். ஆற்றங்கரை யெல்லாம் ஓடிஓடி யலைந்தனர். கடைசியில் வண்டிகளில் பூட்டப்பட்ட கோவேறு கழுதைகள் போன வழியில் வழி காட்டப்பெற்று கப்பலைக் கண்டுபிடித்தனர், ஏனெனில் போன கப்பலில் பட்டாளம் போவதாக உலவிய வதந்தியால் அதுவும் ஊகித்தறிய நேர்ந்தது. அது அவர்கள் கெதி. நமது சந்தேகமோ இன்னும் கொஞ்சம் அதிகம். ரூஸ்ப் பையா இரண்டாவது எண்ணிட்ட பாலத்துக்குள் நுழைந்து பார்த்தோம். எதிரே கப்பலைக் காணோம். சிறிது தயங்கினோம்; பேந்தப் பேந்த விழித்தோம். கடைசியில் கழுதை வழிகாட்டிகதான் நா

(தொடர்ச்சி 7 ம் பக்கம் பார்க்க)

தங்கம் இல்லாமலே.

திரு. தினகரன்.

தனியொரு மனிதனும் சரி அரசாங்கங்களும் சரி தங்கத்தின் மீது தாங்க முடியாத மோகங் கொண்டிருக்கக் காணுகிறோமே என்? இரும்பைப் போல் செம்பைப் போல் ஈயத்தைப் போல் இதுவும் ஒரு உலோகந்தானே? இரும்பால் ஏற்படும் எண்ணற்ற எத்தனையோ உபயோகங்களைப் போன்று தங்கத்தால் ஏற்படுகிறதுமில்லை. இருந்தாலும் நாம் இரும்பை இரும்பென்று மதிக்கின்றோம்; தங்கத்தைத் தங்கமென்று போற்றுகிறோம். இதற்கு ஒரே யொரு நியதியைத்தான் காரணமாய் கூற முடியும். எந்தவொருவஸ்துவை நாம் எளிதில் பெறுகின்றோமோ-எந்தவொருபொருள் மலிவாய் கிடைக்கின்றதோ அதனிடத்தில் நாம் அதிகம் பிரேமை கொள்ளுகிறதில்லை. இது உலக சகஜம். அதேபோல் இரும்பை எளிதில் பெறுவதால் எளிதாய் மதிக்கவும் தங்கத்தை கிராக்கியில் பெறுவதால் மேன்மையாய் மதிக்கவும் தலைப்பட்டோம். இன்று உலகத்தின் எந்த மூலையிலாவது ஒரு இடத்தில் தங்கம் ஏராளமாக இருக்கக் கண்டுவிட்டால்—நமது ஹிமாசல பர்வதமோ அல்லது மேற்கு மலைத் தொடரோ தங்கமாக மாறிவிட்டால், கங்கா நதியும் காவிரியாறும் தங்கத்தை பிரவாகமாக ஊற்றினால் அப்பொழுது நாம் அதற்கு எவ்வளவு மதிப்புக் கொடுப்போம் என்பது தெரியும். இப்போது நாம் இரும்பை மதிக்கும் அந்த அளவுக்குக்கூட மதிக்கப் போகிறதில்லை. தங்கம் தண்ணீர் பட்ட பாடாய் ஒரு தங்கக் காசு, செப்புக் காசு விலைக்குக்கூட மதிக்கப்பெறாமல்—மாற்றப்பெறாமல் தேங்கிவாரற்றுக் கிடப்பதைக் காணலாம். அருமையாய்க் கிடைப்பதாலே தான் அணியலெனவும் அணிகிறோம். கூழாங் கல்லுக்கும் வயிர மணிக்கும் ஏற்பட்ட தாரதம்மியமும் இத்தகைத்தே யாகும். காலைச் சூரியனின் காந்தியிலே அதோவொரு கூழாங்கல் எவ்வளவு மின்னு மின்னுகிறது; எவ்வளவு ஜோதியாய்ப் பிரகாசிக்கிறது. அதைக் கண்ட மனித உள்ளம் வயிர மணியென ஆசித்து அடைய விரும்புகிறது. நெருங்கிக் கையி லெடுத்தபோதும் அதன் பிரகாசம் மாறியதில்லை. என்றாலும் "சீ! கூழாங் கல்லா?" என்று எறிந்துவிடுகிறான். ஏன்? எளிதிற் பெற்றதால்; எங்கும் சர்வ சாதாரணமாய் அக் கல் வியாபித்திருப்பதா லன்றோ! சரி இம் மதிப்பெல்லாம் போகட்டும். இப்பொழுதிருக்கும் இதே நிலைமையில் தங்கத்தையும் இரும்பையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தங்கத்தை விட இரும்புக்கே இவ்வுலகம் அதிகம் கடமைப்பட்டிருக்கிறது. இரும்பைக் கொழு வடித்து கலப்பை முனையில் கட்டி நிலத்தை உழுது விதைக்காவிட்டால்—மண்வெட்டியாக்கி வரப்புயர்த்தி நீர் பாய்ச்சாவிட்டால்—அரிவாள் செய்து கதிர் அறுக்காவிட்டால் மனித வர்க்கம் வயிறு வளர்க்க முடியுமா? தங்கத்தை காதெல்லாம் கண்ணெல்லாம் மூக்கெல்லாம் குத்தித் துளைத்துத் தொங்கவிட்ட போதிலும் கழுத்திலும் கையிலும் உருட்டி உருட்டிக் கட்டியபோதிலும் கஞ்சி வார்க்கப் போகிறதில்லை. என்றாலும் இவ்வுலகம் இரும்பை எளிதாக்கி தங்கத்தை மேன்மையாய் மதித்துவிட்டது. இவ்வாறுதான் தொழிலாளியும் விவசாயியும் அவர்களே உலகத்தின் உயிர் நாடியா யிருந்தும் போற்றப்படுகிறதில்லை.

இனி இப்பொழுதைய தங்க நிலை காண்போம். பிரிட்டன் தனது தங்க விலை நிர்ணயத்தைக் கைவிட்டபோதிருந்து தங்க விலை முன்னிருந்த விலையில் சுமார் மூன்றிலொரு பங்கு மிகைத்துவிட்டது. இதனால் தங்கம் வைத்திருப்பவர்களெல்லாம் இந்த ஏற்றமான விலையில் விற்றுக் காசாக்கி வருகின்றனர். இந்தியத் தங்கங்களெல்லாம் கப்பல் கப்பலாக ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கின்றன. இவ்விடத்தில் ஒரு ஆராய்ச்சிக் கிடமேற்படுகிறது. அழகுக்காக தங்கத்தை நகையாக அணிந்திருப்பவர்கள் விலை யேற்றத்தால் விற்றார்களா அல்லது பணப் பஞ்சத்தால் விற்றார்களா என்பது கேள்வி. நமது அனுமானத்திற் கெட்டியவரை நகை யணிவது வெறும் அழகு காரணமாக மாத்திரமில்லை, அதையொரு பெட்டிப் பணம் மாதிரியும் க்ஷேம நிதியாகவும் கருதுகிறார்கள். நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது அந்நகையை விற்றோ ஈடு செய்தோ பணம் பெறுகிறார்கள்: இதைத் தவிர வெறும் கௌரவம் காரணமாக வென்றால் அழகுபெறச் செய்யப்பட்ட நகையை ஒருவனோ ஒருத்தியோ என்ன விலை கொடுத்தாலும் கொடுக்கிறதில்லை. இப்பொழுதும் இவ்வுலகிடை ஏற்பட்டிருக்கும் பணப் பஞ்சத்தாலேயே வயிற்றுக்கும் வரிக்காகவுமே இந்தியர்கள் தங்கத்தை விற்கிறார்கள். வேறு விதியில்லை.

கருவாட்டு சந்தை கூட!

இந்தியாவிலே பிறந்து, இந்தியாவிலே வளர்ந்த இந்தியப் பிரபுக்களுக்கு இந்திய செம்படவர்களால் பிடிக்கும் மீன் நாவுக்குப் பிடிக்கிறதே கிடையாது. பிற நாடுகளிலிருந்து வரும் மீனையும், உலர்ந்த கருவாட்டையும் தின்றுதான் கொழுப்படைகிறார்கள். மீன் கருவாடு தின்பதில் குறைவில்லை, மேல்நாட்டுப் பெட்டி மீன் வேண்டுமாம், வெட்கம்! இப் பிரபுக்களுக்கு நல்ல புத்தி என்றுதான் வருமோ? மீன் கருவாடுக் கணக்கைப் பார்த்தால் இந்தியா கருவாட்டுக்கும் கூடச் சந்தையாகத்தானிருக்கிறது.

கடந்த வருடங்களில் இந்தியாவில் இறக்குமதியானவை.

காய்ந்து உப்பிடாதது	1, 75	லக்ஷ ரூபாய்
உப்பிட்டது	21, 12	,,
ஈரல் சுறு மீன்	53	,,
ஈரம் உப்பிட்டது	1, 53	,,
இதர தினுசுகள்	1, 40	,,
ஆகமொத்தம்	6631	லக்ஷ ரூபாய்

இந்த ஆட்சி முறை ஒழிந்தால்தான் கருவாட்டுச் சந்தை என்ற வசைச் சொல் கூட நீங்கும்.

(5-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

றும் கப்பலைக் கண்டுபிடித்தோம். இவ்வாறு பிரயாணிகளும் பிரயாணிகளை வழியனுப்பச் சென்றவர்களும் வெகு கஷ்டப்பட்டுவிட்டார்கள். அந்த அதிகாலை வேளையில் ஜனங்களை சந்தேகாஸ்பதத்தில் விட்டது கப்பல் கம்பெனியாரின் தவறு என்போம். இது தவிர இன்னொரு பெருந் தவறும் இழைக்கப்பட்டது. கப்பலடியில் சில டிக்கட்டுகள் விற்கப்படுவது வழக்கம். அன்று அதுவுமில்லை. துருப்புகள் போவதால் இடமில்லையென்று டிக்கட் விற்பவர் கூறினார். அப்படியானால் துருப்புகளுக்காக பொது ஜனங்கள் புறக்கணிக்கப்பட்டு விட்டார்களல்லவா? அதிகப் பிரயாணிகள் செல்லும் இக்காலத்தில் பிரயாணிகளின் வசதியைக் கெடுத்து துருப்புகளால் கப்பலை நிறப்புவது பொருந்தாது, வாரா வாரம் இவ்வாறு பிரயாணிகளின் வசதியைப் பறிப்பதைவிட துருப்புகளுக்கெனத் தனிக் கப்பலை யோட்டுவதே கடமை. சர்க்காரின் சௌகரியத்தை விட ஜன சௌகர்யமே ஸ்ரேஷ்டம். இதை கப்பலோட்டிகள் அறியட்டும்.

சர்வதேச விபசாரி மடம்.

1914 ல் மூண்ட உலக மகா யுத்தத்தால் நைந்து நசித்துப்போன காரணத்தாலும்—பட்ட கடன் சுமை தாங்கமாட்டாமல்—இனிமேல் இப்படியுமொரு போர் மூண்டுவிடாமல் தடுப்பதற்காக ஆயுதங்களைக் குறைத்துக் கொள்வதென்று பேசி முடிவு செய்ய சமீபத்தில ஜினிவாவில் சர்வதேசங்களும் கும்புகூடிப் பேசின. அந்தந்த நாட்டுப் பிரதிநிதிகளும் அங்கு போயிருந்தார்கள், அதுபற்றி நாம் பிரதாபிக்கையில் அதை பொருவுருதாக் கூடமென்று தமாஷாவென்றும் பேசியிருந்தோம். நோக்கமென்னவோ போற்றக்குரியது தான். நிகழ்ச்சிகளில் சத்தில்லை. முடிவும் பூர்த்திபெறக் கிடையாது. வீணர் கூட்டம் வீணாகவே முடிந்தது. என்றாலும் எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு எல்லையில்லை. பிரதிநிதிகளுக்கு சகல வசதிகளும் அளிக்கப்பட்டிருந்தன. வேசையர் கூட விளங்கினார்களாம்.

பூஜை வேளையில் கரடி யோட்டிய கதையாய் புனிதமான அக் கூட்டத்தில் மானத்தை விலைக்கு விற்றுப்பிழைக்கும் விலைமாதரை வைத்து வீணர் செயல்செய்து விட்டனர். ஆயுதங்களைக் குறைத்து உலகத்தில் போரேற்படாமல் செய்ய முற்பட்ட மேதாவிகள் ஏதோ சில தினங்கள் காம நுகர்ச்சியை கட்டுப்படுத்த முடியவில்லையென்றால் வேறு எதைக் கட்டுப்படுத்திவிட முடியும்? ஜினிவாவில் விபசார விடுதி கூடாதெனச் செய்திருந்த சட்டத்தையும் சிறிது போழ்து தள்ளிவைத்தாகிவிட்டது. இப்படியும் தவறிழைத்த ஜினிவா சர்க்காருக்கு சிச்சீ! மானத்தை விற்று விட்டது. பிரதிநிதிகளும் மானம் பறிகொடுத்தார்கள். இந்த இரகசியத்தை அம்பலப்படுத்திய நிருபர் அம் மடத்துக்குள் நுழைந்தபோது அங்கு எல்லாப் பெண்களும் வாடகைக்கு விடப்பட்டிருந்தார்களாம். இதனால் பிரதிநிதிகளின் நடத்தையும் நன்கு புலனாகிறது. நன்னடத்தையும் நற்குணமில்லாத இப் பீற்றைப் பிரதிநிதிகளால் உலகமென்ன நன்மையெய்தப் பெறல் இயலும்? ஒவ்வொருவனும் அவனவன் சுகபோகங்களை அனுபவிப்பதில் அவ்வளவு கருத்துக்கொண்டிருந்தால் பொதுக் காரியத்தில் புனிதமான சிந்தை செலுத்தி சிந்தனை செய்து கருமஞ்செய்தல் முடியுமா? நல்ல ஹிருதயத்திலேதான் நல்ல சிந்தனை பிறக்கும்,

ஜினிவாவில் சிங்கம் புலி கரடி

சில வாரமுன் ஜினிவாவில் ஆயுதப் பரிகரண மகாநாடு கூடிற்று. விவாத காலத்தில் மகாநாட்டில் நடந்த ஒரு சம்பவம் ருசிகரமானது.

ருஷியப் பிரதிநிதி திரு லிட்விநோப், கமிஷன் அறிக்கையை எதிர்த்துப் பேசுகையில் அறிக்கை திருப்திகரமானதாயிருக்கவில்லையென்றும், பூரண ஆயுதப் பரிகரணத்துக்கு உதவி புரியக்கூடிய ஒரு திட்டத்தை தயார் செய்யும் பொருட்டு அறிக்கை விவாதத்தை தற்காலம் ஒத்திவைக்கவேண்டுமென்றும் கீழ்த் தேசங்களுக்கு சர்வதேச ஆதரவுடன் கப்பல் கப்பலாக யுத்த தளவாடங்கள் அனுப்புகையில் கீழ்தேசங்களில் நடைபெறும் யுத்தங்களைப்பற்றி சர்வதேச சங்கம் கண்ணீர் வடிப்பதும், போரை நிறுத்தவேண்டுமென்று சீனத்துக்கும் ஜப்பானுக்கும் விண்ணப்பம் செய்வதும் மிக்க வேடிக்கையாக இருக்கிறதென்றும் சொன்னார். கரடிக் கொடியுடைய ருஷியத் தலைவர் பூரண ஆயுதப் பரிகரணத்தை ஆதரித்துப் பேசியது ஸ்பெயின் பிரதிநிதிக்குப் பிடிக்கவில்லை. ஆகவே ருஷ்யாவின் பூரண ஆதயுப் பரிகரணத்தை ஆதரிக்கும் சூழ்ச்சியை விளக்க அவர் ஒரு கதை சொல்லத் தொடங்கினார்.

"சிங்கமும், கழுகும், புலியும், காளையும், கரடியும் ஒரு மகாநாடு கூடி ஆயுதப் பரிகரணத்தைப்பற்றி விவாதித்தன. சிங்கம் கழுகை நோக்கி சிறகுகளை அறுத்துவிடுமாறு கேட்டுக் கொண்டது. கழுகு காளையைப் பார்த்து கொம்புகளை வெட்டிவிடுமாறு வேண்டிக் கொண்டது. காளைக்கு புலியின் நகங்கள் அச்சத்தை விளைத்தன. ஆகவே நகங்களை எடுத்துவிடுமாறு காளை புலியைக் கேட்டுக்கொண்டது. கழுகு தன் சிறகையும், புலி தன் நகத்தையும், காளை தன் கொம்பையும் போக்கிவிட வேண்டியது அவசியமென்றும் அவ்வாறு செய்யப்பட்டுவிட்டால் தாராளமாக அளவளாவி எல்லாரும் பழகலாமென்றும் கரடி ஆமோதித்தது."

ஸ்பெயின் பிரதிநிதி இந்தக் கதையைக் கூறி முடித்ததும் மகாநாட்டாரெல்லாம் வயிறு வெடிக்கச் சிரித்தார்கள்; "ஒக்கச் சிரித்தால் வெட்கமில்லை" என்ற பிரகாரப்படி ருஷியப் பிரதிநிதி திரு லிட்விநோபும் கூடச் சேர்ந்து சிரித்தார். வாஸ்தவத்தில் ருஷியப் பிரதிநிதி செய்த புகாருக்கும் ஸ்பெயின் பிரதிநிதி கூறிய வேடிக்கைக் கதைக்கும் பொருள் இல்லாமலில்லை. போரை நிறுத்தவேண்டுமென்று சீனத்தையும், ஜப்பானையும் சர்வதேச சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது. ஆனால் சர்வதேச சங்கத்தில் அங்கம் வகிக்கும் வல்லரசுகளோ சீனத்துக்கும், ஜப்பானுக்கும் யுத்த தளவாடங்களை அனுப்புவதுடன் தந்தம் போர்க் கப்பல்களையும் ஷாங்கேய்க்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றன. ஆகவே ருஷியப் பிரதிநிதி புகார் ஆதாரமற்றதல்ல. ஸ்பெயின் பிரதிநிதி கூறிய கதையும் முக்கியமாக கவனிக்கத் தக்கதாகும். பீரங்கிப் படையுடைய தேசங்களைப் பார்த்து பீரங்கிப்படையில்லாத தேசங்கள் பீரங்கிப் படையைப் பரிகரிக்கும்படி கேட்டுக்கொள்கின்றன. நீர்மூழ்கிக் கப்பல்களை அதிகதாக வைத்திருக்கும் தேசங்களைப் பார்த்து இதர தேசங்கள் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பரிகரித்து விடும்படி சொல்லுகின்றன. மற்றும் சிங்கமும், புலியும், கரடியும், காளையும், கழுகும் ஒன்றிற்கொன்று விரோதப் பான்மையுடையவை. அதே நிலைமையில்தான் சர்வதேச சங்கத்தில் அங்கத்தினராக உள்ள நாடுகளுமிருக்கின்றன. ஆகவே வல்லரசுகளுக்குள் பரஸ்பர நம்பிக்கை இல்லாதிருக்கும்வரை ஆயுதப் பரிகரணம் சாத்தியமில்லை, பரஸ்பர நம்பிக்கை, சமீபத்தில் ஏற்பட்டுவிடுமென்று நம்புவதற்கும் மார்க்கம் காணவில்லை. நாகரீக உலகத்தை திருப்திப்படுத்தும் பொருட்டு வல்லரசுகள், ஒரு மகாநாடு நாடகம் நடத்துகிறதே தவிர உருப்படியான வேலை எதுவும் நடைபெறும் என்று தோன்றவில்லை. ஆயுகப் பரிகரண விஷயமாக முதன் முதல் முயற்சி செய்த பிரிட்டிஷ் முதன் மந்திரி திரு ராம்ஸே மாக்டொனல்டு இந்த மகாநாட்டில் கலந்துகொள்ள சௌகரியப்படாது போனது வருந்தத் தக்கதாகும். கடைசியில் மகாநாடு ஆண்டிகள்கூடி மடங்கட்டிய கதையாக முடியுமேதவிர உலகத்திற்கு இதனால் யாதொரு பயனும் விளையப்போவதில்லை.

—தேசபக்தன்

Printed & Published By A V Sellam Pillay at the Desopakari Press, 210 26th Street Rangoon

பதிவுஎண் 245 மலர் 9 இதழ் 69 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை **DESOPAKARI** புதன் ஞாயிறு வெளியீடு.

210-36-வது வீதி இரங்கோன், (16-3-32) பங்குனி மீ 4உ புதன்கிழமை

தில்லிக்கா லட்டு!

பேயரசு செய்யில்
பிணந்தின்னும் சாத்திரங்கள்
—கவியரசன்

ஹிந்துஸ்தானத்தாருக்கு இனிமேல் 'ஹிந்தி' தான் ராஷ்ட்ர பாஷையாக - இந்தியா முழுதுக்கும் பொதுப் பாஷையாக வரப்போகிறது. நமது தேசீய சர்க்காராகிய காங்கிரஸ் மஹா சபையும் ஹிந்தியைப் பொது மொழியாக ஒப்புக்கொண்டுவிட்டது. அதனாலேதான் நமக்கும் ஹிந்தியின் மீது ஒரு பிரத்தியேகமான அன்பும் ஆசையும் விழுந்திருக்கிறது; கொஞ்சம் பயிற்சியும் பெற்றிருக்கிறோம். இல்லாவிட்டால் இடையிடையே இம்மாதிரி தலைப்பிடுவோமா? ஆனால் "சுத்த தமிழ்" வளர்ப்பவர்களுக்கு இது பிடிக்காமல் கொஞ்சம் மனக் கசப்பேற்பட்டாலும் ஏற்படக்கூடும். அவர்களெல்லாம் இதையொரு சின்ன தமாஷாக வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளட்டும்.

"லட்டு" என்றவுடன் அதுவும் 'தில்லிக்கா லட்டு' என்றதும் உங்கள் வாயில் ஜலம் ஊறப்போகிறது. ஏனெனில் 'லட்டு' தித்திக்கும் இனிப்புப் பண்டமென்று நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். கடைகளில் விற்கப்படும் சினி லட்டு, ரவா லட்டு, குஞ்சாலட்டாயிருந்தால் தித்திக்கத்தான் செய்யும். ஆனால் அந்த லட்டுகளை நாம் இப்பொழுது உங்களுக்குக் கொடுக்க வரவில்லை. வேண்டுமானால் என்றைக்கு நமக்கு சுயராஜ்யம் கிடைக்கின்றதோ அன்றைக்கு உங்களுக்கெல்லாம் ஒரு நல்ல விருந்து வைத்து தித்திக்கும் சினி லட்டோ ரவா லட்டோ தின்னும்படி தருகிறோம். இப்பொழுதெடுத்துக்கொண்ட "தில்லிக்கா லட்டு" கசக்கும்; கண்ணிலே கூட ஜலம் சுரக்கும். ஏனெனில் வங்காளத்தில் வெறும் சந்தேகத்தின் மீது எவ்வித குற்றமும் செய்யாத நிரபராதிகளை விசாரணையில்லாமல் கேள்வி கேட்பாடில்லாமல்—நெஞ்சில் ஈரமில்லாமல் கட்டுப்படுத்திச் சிறைக் கம்பிகளுக்குள் சிறைப்படுத்தியிருக்கிறார்களே அவர்களை பாகாணத்தை விட்டு பாகாணம் காடு கடத்துவதற்காக புதிய தில்லியிலே சட்டசபையில 'லட்டு'களெல்லாம் கூடி சட்டம் கட்டுகிறார்களே அதைப்பற்றிப் பேசினால் கசக்காமல் ருசிக்கவா செய்யும்? இவ்விடத்தில் இந்த சட்டசபை 'லட்டு'களைப்பற்றி சிறிது வியாக்கியானம் செய்துவிட வேண்டும். இல்லாவிட்டால ஏதோ 'கன்னா பின்னா' வென்றெழுதியிருப்பதாகக் குறை கூறினாலுங் கூறுவீர்கள். 'லட்டு' என்றால் வெறும் உருண்டை யென்றுதான் அர்த்தம். களிமண்ணுருண்டைக்கும், ரவையுருண்டைக்கும், சினி யுருண்டைக்கும் எதற்கு வேண்டுமானாலும் "லட்டு" என்று சொல்லலாம். உருவத்திற்கே அப்பெயர் அமைந்ததொழிய உருசிக்கல்லவென்பதை மனதில் வைத்துக்கொண்டு நமது சட்டசபை மந்திரிகளுக்கு அப்பெயர் பொருந்துமானால் நீங்களும் அவர்களை அப்படியே அழைக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொண்டு மேல் நடத்துகிறோம்.

தில்லிக்கா லட்டு!

வங்காளத் தடைக் கைதிகளை வங்காள மாகாணத்திலிருக்கும் சிறைகளிலிருந்து வேறு மாகாணங்களிலுள்ள சிறைச் சாலைகளுக்கு மாற்றுவது சம்மந்தமான மசோதாவொன்றை இந்திய சட்டசபையில் வைத்து விவாதிக்கின்றனர். அதை யெதிர்த்துப் பேசுகையில் திரு எஸ்.ஸி.மித்தர் "அரசியல் தடைக் கைதிகளைப் புதைப்பதற்குக் குழி தோண்டும் நோக்கத்துடனேயே இம் மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்பாவத்திற்கு நாங்கள் உடந்தையாயிருக்கமாட்டோம். இதனால் தடைக் கைதிகள் அவர்களது உற்றார் உறவினர்களால் கண்டு பேசப்படும் உரிமை பறிக்கப்படுகிறார்கள். நான் ஒரு தடைக் கைதியாக விருந்த அனுபவத்தில் சிறையில் தனிமையில் புழுங்குவது எவ்வளவு சித்திரவதைக்குள்ளானது என்பது எனக்குத் தெரியும். பகுத்தறியும் மனிதத்துவம் சிறையில் மங்கி மழுங்குகிறது. இடை யிடையே தனது பந்து மித்திரர்களின் முகதெரிசனம் பெறுவிட்டால் ஒரு கைதி அதிக காலம் நிம்மதியாய் வாழல் இயலாது; ஆத்மத்தில் செத்து சிந்தை மடிந்து போகிறான். ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 70 மைல் தூரத்தில்-அதுவும் போதிய போக்கு வரத்து சாதனமில்லாத. ஒட்டகை முதுகிலும், மாடு பூட்டிய கட்டை வண்டியிலும் போகக்கூடிய ஒதுக்குப்புறமான ஓரிடத்தில்-அஜ்மீரத்திலிருக்கும் திவாளி ஜெயிலில் அடைபடுவதை விட ஒரு வங்காளிக்கு வேறு சித்திரவதையும் வேண்டுமோ? வங்காளிகளின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான- சத்தாகாரமான மீன் உணவு கிடைக்கப்பெறாத அங்கு வங்காளிக் கைதி என்னமாய் உயிர்வாழ்வான்? இதனால் உற்றார் உறவினர் முகத்தில் விழிக்காமலும்- உயிருக் காதாரமான உணவு கொடுக்காமலும் உயிர்பறித்தலைத்தவிர சர்க்காருக்கு வேறு காரணம்- உள்ளார்ந்த வேறு நோக்கம் இருக்க முடியாது. இச் சித்திரவதையைச் செய்ய எந்தவொரு இந்தியனும் உடந்தையாயிருக்கமாட்டான்" என்றார். சாந்தசிம்ஹரும் இம் மசோதாவை யெதிர்த்துப் பேசுகையில் "சட்டசபைக்கு சாவுமணி அடிப்பதற்காகவே இம்மசோதா இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது" என்கிறார். ஆனால் இப்பொழுது இவ்வளவு பலமாக ஆட்சேபிக்கும் இந்த லட்டுகள் உண்மையிலேயே சட்டசபைக்குச் சாவுமணியடித்துவிடுவார்களானால் அன்றைக்கே பிரிட்டிஷ் ஆட்சி இந்திய ரெண்ணத்திற்கு அடிபணிந்துவிடுமென்பதில் ஆட்சேபனையில்லை. ஆனால் இவர்கள் வெறும் "களிமண் லட்டுகள்" என்பது நமக்குத் தெரியும்.

இன்னொரு லட்டு "இதோ இந்தத் தடைக் கைதிகளில் அயர்லாந்திய சுதந்திர வீரன் திவாலராக்கள் எத்தனையோ பேர் இருப்பினும் இருக்கலாம். அவர்கள் இந்தியாவின் இதே பாராளு மன்றத்திலே ஒரு காலத்தில் பொக்கிஷ மந்திரிகளாக ஆயினும் ஆகலாம். ஆதலால் இக்கொடுமையான-மிருகத்தனமான-மனிதச் செயலுக்குப் புறம்பான மசோதாவை சட்டசபைப் புத்தகத்தில் எழுதி வைக்கவேண்டாம்" என்கிறார். அந்த லட்டுக்கு நாம் அறைகிறோம். "ஆம் அவர்களில் எத்தனையோ திவாலராக்கள் இருக்கிறார்கள்- ஏன்? எல்லோருமே திவாலராக்கள்தான். அதில் எள்ளளவு சந்தேகமும் வேண்டாம். அவர்களாலேதான் இந்தியாவை மீட்கமுடியும். அவர்களே மீட்கப் போகிறார்கள்"

மற்றொரு 'லட்டு' அது ஆர். எஸ். சர்மா என்று ஞாபகம்—அவன் வயிற்றிலே தீப்பாய—அவன் ஆணோடு பெண்ணோடு பிறந்திருப்பானோ? அவன் சொன்னான் "தடைக் கைதிகளுக்கு சர்வ வசதிகளும்—சகல சௌகரியங்களும் தேடிவைக்க வேண்டுமென்பது எனது விருப்பமில்லை. புரட்சி இயக்கத்தை அடியோடு அழித்துவிட வேண்டுமென்பதே சட்ட சபையின் அடிப்படையான நோக்கம். புரட்சிக்காரர்கள் சிறைச்சாலையை மாமியார் வீடென்று நினைத்துக்கொள்ள விட்டு விடலாகாது" அட! பாவி! நீயும் இந்தியன் தானோ? உனது நெஞ்சிலும் ஈரமிருக்கிறதா? உனது எண்ணத்திலும் நீதி தர்மத்திற்கு இடமுண்டா? தடைக் கைதிகளை புரட்சிக்காரர்கள் என்று என்ன ஆதாரத்துடன் பேசுகிறாய்? அவ்வாறு நிரூபிக்கப்பட்டிருக்கிறதா? நிரபராதிகளைச் சித்திரவதை செய்ய உனக்கு அவ்வளவு நெஞ்சழுத்தமா?

அப்புறம் ஒரு வெள்ளை லட்டு. சீமை 'லட்டு' என்றும் சொல்லுவோம். அது அம் மசோதாவை ஆதரித்துப் பேசுகையில் வங்காளிகளின் வாழ்க்கை யறிந்த ஒரு அதிகாரியின் கீழ் வங்காளிச் சமையற்காரனால் சமைக்கப்பட்ட வங்காளி உணவளிப்பதாகவும் கூடுமான

இறங்கு சக்கரம்.

விஷப் பாம்புகளுக்கு ஏறு சக்கரம், இறங்கு சக்கரம் இரண்டு மிருக்கின்றன. ஒரு மனிதனைப் பாம்பு கடித்துவிட்டபோது அவன் விஷம் தலைக்கேறிச் சாகவோ அல்லது விஷமிறங்கி மீளவோ செய்கிறான். அதே போன்று இந்தியாவை அதன் உயிருக்கே உலைவைக்க வெண்ணி-இந்தியாவின் ஜீவதாதுவான காங்கிரஸையும் அதைக் காத்துநின்ற தலைவர்கள், தொண்டர்களையும் இந்தியாமந்திரி ஹோர் முதல் ஒரு சாமான்ய போலீஸ் 'சேவகன்வரை அடக்குமுறையாகிய விஷத்தால் தீண்டிக்கொண்டிருந்தார்கள். அவ்விஷம் இந்தியாவெங்கும் பரவி நிமிடத்துக்கு நிமிடம் நாளுக்கு நாள் ஏறு சக்கரமென ஏறிக்கொண்டிருந்தது. தான் செய்வது தவறு-ஆண்டவனுக்கும் அடுக்காத காரியம் என்பதைக் கொஞ்சங்கூட ஈரமில்லாமல்-ஒரு வினாடி எண்ணிப்பாராமல்-சிப்பாய் முறுக்கிலே இந்தியா மந்திரி வாய்வீச்சு வீசிக்கொண்டிருந்தான். லான்ஸ்பரி, பென்தால், இர்வின், ஸ்மட்ஸ், டாம் போன்ற மனித ஹிருதயம் படைத்த பலர் எவ்வளவோ கூறியும் சர் சாமுவேல் ஹோருக்கு தானேறியிருக்கும் உச்சக் கொம்பிலிருந்து இறங்க மனமில்லை. அடக்குமுறையின்-ஹிம்ஸைப் பிரயோகத்தின் கடைசி எல்லைவரை கண்டுவிடுகிறதெனக் கையோங்கிய செயல்கள் நாள் தவறினும் தவறாமல் செய்துவந்தான். ஆனால் சத்தியத்தைத் தலைமேற்றாங்கி அஹிம்ஸை வழிச் சென்றுகொண்டிருக்கும் சாத்வீகத் தொண்டர்கள் "காட்டுத்தீ"ப்போல் கொடிய அடக்குமுறைகளையெல்லாம் தகித்துவந்தார்கள்- வருகின்றனர். கர்வம் அடங்கி, மிருகஸ்வபாவத்தைச் சிறிது தள்ளிவைத்தபோதுதான் மனிதனுக்கு மனிதஸ்வபாவம் உதயமாகிறது. அப்பொழுதுதான் அவன் செய்த தவறுகள் அவனுக்குத் தோன்றி அவற்றிற்குரிய பிராயச்சித்தம் தேடுகிறான். இல்லாதவரை கொலைசெய்யும் கொலைஞனும் கொள்ளையடிக்கும் கொள்ளைக்காரனும் அவனவன் புத்திக்கேற்ப அவனவன் செய்வது சரியென்றே யெண்ணிக்கொள்ளுகிறார்கள்.

எவ்வளவோ தினங்கள் கழிந்துவிட்டன. திருப்பத்தூர் கிறிஸ்தகுல ஆச்சிரமப் பிரசாரகரான டாக்டர் பேட்டனைச் சென்னைப் போலீஸார் தடியாலடித்துச் சிறையும்செய்தார்கள் அது தவறு, அநீதியானது என்ற எண்ணம் இதுவரை இந்தியா மந்திரியின் மூளையிலே-புத்தியில்பட்டதில்லை. ஏனெனில் ஏறுசக்கரத்திலிருந்தார். இப்பொழுதுதான் ஏதோ சிறிது மனந் திரும்பி போலீஸார் செய்தது தவறுதான்; தான் பாராமுகமாயிருந்தது தப்பு என்று உணர்ந்து மன்னிப்புக் கேட்கிறான். எத்தகைய பிரமாண்டமான குற்றத்தைச் செய்தவனையும் மனமாற மன்னித்துவிடும் இயல்புடைய இந்தியர்கள் மன்னித்து விடுவோம். அத்துடன் அவன் செய்துவரும் இதர பல குற்றங்களையும் உணர்ந்து மனந் திரும்பட்டும். பொதுவாகப் பார்த்தால் இந்தியா மந்திரி இப்பொழுது இறங்கு சக்கரத்திலிருக்கிறானென்றே நாம் ஸ்திரமாய்-தீர்க்கமாய்ச் சொல்லுவோம். இம்மாத முடிவுக்குள்ளோ அல்லது ஏப்ரல் முதல்வாரத்திலோ இந்தியாவில் சமாதான முயற்சி தலையெடுக்கக் காணுவோம். எல்லாம் நமது கையிலேதானிருக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு ஊக்கம் காட்டுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு சமீபத்தில் ஸ்வராஜ்ய வெற்றி பெறுவோம்.

வரை தேசப் பயிற்சிக்கேற்றவான விளையாட்டுகளும் அனுமதிப்பதாகவும் வாக்களித்து சத்தியம் செய்கிறார்? பிரிட்டிஷ் வாக்குறுதியின் வேதனை அறிந்த இந்தியர்கள் அலைது இந்த லட்டுகள் ஏமாந்துவிட்டுப் போகிறதில்லை. இன்னொரு கேள்வியும் கேட்கப்பட்டது. "இவ்வளவு தூரம் சென்று தடைக் கைதிகளைக் கண்டு பேசுவதில் அவர்களது உறவினருக்கு ஏற்படும் செலவை சர்க்கார் கொடுக்குமா?" என்றதற்கு ஹோர் தளுக்காய்—குஞ்சா லட்டைப் போல் தித்திப்பாய் "வரி செலுத்தும் வங்காளிகளை இச் செலவுக்காக அதிக வரி கேட்பது தர்ம நீதியில்லை" என்று சொன்னான். அடடா! ஆடு நனைகிறதென்று ஓநாய் குந்திக்கொண்டு அழுகிறது பார்த்தீர்களா? எவ்வளவு தயாளம்! இம்மாதிரி மந்திரிகள் இந்தியாவுக்கிருக்கும்போது இந்தியர்களுக்கு என்ன குறைச்சல்! இந்த மூத்தவர்களை யெல்லாம்—மூதேவி மடத்தார்களை யெல்லாம் 'லட்டு' என்றழைத்ததில் தப்பிருந்தால் மன்னித்துவிடுங்கள்.

இராணுவ நீதி!

நீதி தர்மத்தை அதை பரிபாலிக்கும் சாதாரண நீதிபதிகளிடமிருந்து சிப்பாய்களிடம் கொடுத்தால் அவர்கள் எவ்வாறு நிர்வகிப்பார்களென்பது எல்லோருக்கும் நன்கு தெரியவே செய்யும். “கல்லுளித் தச்சன் சென்றவிடம் காடுமேடெல்லாம் தவிடுபொடி” என்பது போலவே முடியுமன்றி வேறு தர்ம நீதியை எதிர்பார்ப்பதற்கில்லை. இதற்கு எடுத்துக்காட்டாக சமீபத்தில் அயர்லாந்தில் “காங்ரல் கிரேவ்” சர்க்காரில் இத்தாலிய விடுதலை வீரன் டிவாலராவின் பத்திரிகைக்கேற்பட்ட கதியைக் கூறலாம். பீதிச்செயலை நசுக்குவதற்காக சிருஷ்டிக்கப்பட்ட அரசியல் திருத்தச் சட்டத்தின்படி “ஐரிஷ் பிரஸ்” என்ற அப் பத்திரிகையின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் ஆசிரியருக்கும் பத்திரிகைக்கும் 100 பவுன் அபராதம் விதிக்கப்பட்டதாக அறிகிறோம். நீதி, நீதிபதிகளின் கையிலிருந்தால் நீதியே வழங்கப்பட்டிருக்கும். இராணுவக் கோர்ட்டில் இருந்ததால் இராணுவ முறுக்கில் இராணுவ தர்பார் நடத்தப்பட்டது. அரசியல் திருத்தச் சட்டப்படி கைதுசெய்யப்பட்ட அரசியல் கைதிகளை அடிப்பது கூடாதெனவும் அதற்கு உடந்தையாயிருந்த அரசாங்கம் சதிச்செயல செய்துவிட்டதெனவும் அப் பத்திரிகை எழுதியதில் என்ன பிசகிருக்கிறது. தப்புச்செய்வது தனி மனிதனுக்கும் அரசாங்கத்திற்குங்கூட சகஜமாயிருக்கலாம். ஆனால் தப்புக்குமேல் தப்பிழைப்பதுதான் கூடாது. ஒரு பத்திரிகையின் ஆசிரியர் பிறரது கட்டுரைகளாலோ அல்லது பிறரது தூண்டுதலாலோ ஏதாவது எழுதினால் அதற்குப் பொறுப்பாளி அவன்தான். ஐரிஷ் காங்கிரசின் (டபிளின்) செய்தியை ஆதாரமாகக்கொண்டு அப் பத்திரிகை சர்க்காரை கண்டித்தது தவறு என்று அவர்கள்கூறும்ஒரே காரணத்தைக்கொண்டு அபராதம் விதித்தல்—தண்டித்தல்நீதிச்செயலாகுமா? மேலும் கண்டனத்திலும் கௌரவமான—அனுதாபமானகண்டனத்தையே அப்பத்திரிகை செய்திருக்கிறது. ஜூரர்களின் ஆலோசனைக்கு விடாமலும், மேல்கோர்ட்டிற்கு அப்பீல் அனுமதிக்கப்பெறாமலும், ராணுவக் கோர்ட்டார் தங்களுக்குத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள கோட்டை கட்டிக்கொண்டார்களென்றால் அவர்கள் வழங்கிய நீதியின் நீதி எம்மட்டென்பது நன்கு தெரியும்.

இந்தியாவில் இப்பொழுது பத்திரிகைகள் கையாளப்படுவதும் இதுபோன்றே. இராணுவ ஆட்சி என்ற பேரில்லாவிட்டாலும், இந்தியாவில்நடப்பனவெல்லாம் இராணுவதர்பாரோ அல்லது போலீஸ் தர்பாரோ அல்லாமல் அரசர் தர்பாரல்ல. நீதி தர்மத்தை உண்மையில் நீதி இலாகாவே நிர்வஹித்தபோதிலும் இராணுவ நீதியே வழங்கப்பட்டுவருகிறது. அவசியம் நேர்ந்தபோதெல்லாம் தாங்கள் செய்யும் அட்டூழியங்களையும் அத்துமீறியசெயல்களையும் பொது ஜனங்களின் கண்ணிற்படாமல் மறைப்பதற்காக அவசர சட்டங்கள் சிருஷ்டிக்கப்படுவதால் அரசியல் நிபுணர்களோ ராஜ தந்திரிகளோ அல்லது அரசாங்கத்திற்கே வழிகாட்டும் ஆசிரியர்களோ தங்களுடைய அபிப்பிராயத்தை உள்ளது உள்ளவாறு நேர்மையுடன் கூற முடிகிறதில்லை. ஒரு அரசாங்கம் தப்பான அடக்குமுறையில் இறங்குவதற்கு முன்னதாக பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு இட்டுவிட்டே தனது தவறைச்செய்கிறது. இல்லாவிட்டால்சர்க்கார் சரியே செய்கிறதென்றால் பத்திரிகைகளுக்கு பயப்படவேண்டிய பிரமேயம் இல்லை. மடியில் கனமுள்ளவனே வழியில் பயப்படுகிறான்: சர்க்கார் கட்டிவரும் பாவ மூட்டையைப் பத்திரிகைகள் பிரஹிரங்கப்படுத்துவதால் பிரஜைகள் சர்க்காரிடத்தில் வெறுப்பும் துவேஷமும் கொள்ள ஏதுவாகிறது. அதனால் அவ்வாட்சிக்கு ஆபத்தும் ஏற்படமுடியும் என்பது வாஸ்தவம்தான். ஒரு பொய்க்கு ஒன்பது பொய் சொல்லி மறைக்க வேண்டிய தேற்பாவதேபோல் சர்க்காரும் ஒரு குற்றத்திற்குப் பல குற்றங்களை செய்யலாகிறது. ஜனங்களுக்காகவே அரசாங்கம் என்பது ஏற்பட்டால் இத்தகைய ஆபத்திற்கும் அபவாதத்திற்கும் இடமில்லை. அயர்லாந்து ஜனநாயக ஆட்சியில் இருந்திருந்தால் அரசியல் கைதிகள் அடிபடவும் அதைக்கண்டித்த பத்திரிகைகள் அவதிப்படவும் காரணமில்லை. இப்பொழுது பிறந்திருக்கும் டிவாலராவின் ஜனநாயகத்தின்கீழ் இதற்கு—அவரது பத்திரிகைக்கு ஏற்பட்ட அபவாதத்திற்கு காஸ்கி

கமிட்டி எங்கே?

சுடுகாட்டுக்குப் போனால் மீள்வது முண்டா என்பது கேள்வி. மீளவும் மீளலாமெனப் பல தினங்கள் நாமும் போர் கொடுத்தோம்; கலந்தும் பேசினோம்; ஒப்பந்தமும் ஏற்பட்டது. மபான டிரஸ்டியும் தமது மானம் மரியாதையையெல்லாம் ஒரு கூட்டம் கமிட்டியார் கையில் கொடுத்துள்ளார். கமிட்டியைக் கண்டால் அது ஒரு நவக்கிரகக் கூட்டம். இவைகள் ஒன்று பார்த்த திசை இன்னொன்று பார்க்கிறதில்லை. அதனதன் போக்கில் அததுவக்கரித்துக் கொண்டிருக்கின்றன. இக் கமிட்டி பிறக்கும்போதே எமக்கும் சந்தேகம் பிறந்ததுண்டு. ஊரோடு ஒத்து வாழுவோமென்றிருந்துவிட்டோம். காலம் அதன் போக்கில் எவரையும் கேட்காமல் கடுக நடந்து கொண்டிருக்கிறது. கமிட்டியைக் கமிட்டியென்று கூறி டிரஸ்டியை டிரஸ்டியென்று பதித்து கொஞ்சம் மெல்ல நடக்க மாட்டேனென்கிறது. ஸ்ரீமான் சோமசுந்தரம் பிள்ளையோ எப்பொழுதும்போலவே யிருக்கிறார். போற்றலோ தூற்றலோ அவருக்குப் பொருளில்லை. பொறுப்புணர்வதாகவும் கிடையாது. சுடுகாட்டுக் கமிட்டியைக் கூட்டிவைக்கும் அதிகாரம் அவருக்கே அளிக்கப்பட்டிருந்தும் பல வேலைத் தொந்தரைகளால் இந்த நவ கிரஹங்களையெல்லாம் எங்கோ ஓரிடத்திலே கூட்டிவைக்க முடியவில்லை போலும். தேசோபகாரியை அலட்சியம்செய்யலாம். ஆனால் நவக்கிரஹங்களிடத்தில் சிறிது ஜாக்கிரதையாகவே நடக்க வேண்டும். அன்று அவரெடுத்துக்கொண்டிருக்கும் பொறுப்புக்கேற்ப கமிட்டியைக் கூடிய சீக்கிரம் கூட்டி கணக்கு வழக்குகளை அவர்களிடம் சமர்ப்பிப்பதே நலம். விருதாவில் பொது ஜனங்களில் கெட்ட எண்ணத்திற்குப் பாத்திரமாவது நல்லதில்லையென்பதை நண்பரென்ற முறையில் நாம் ஞாபகமூட்டுகிறோம்.

ரேவ் சர்க்கார் கணக்குக் கொடுத்தே தீரவேண்டும். இந்தியாவில் இப்பொழுது நடக்கும் அவசரச் சட்ட அரசாங்கத்திடமிருந்து நாமும் நமது சர்க்காரில் கணக்கு வாங்கவேபோகிறோம்.

மதுரை 24

பர்மா கொடுத்த பலி.

தாய்நாட்டின் அழைப்புக் கேட்டு பர்மாவிலிருந்து தமிழ் தொண்டர்கள் தமிழ்நாட்டில் சட்ட மறுப்புச்செய்ய சென்றுகொண்டிருக்கிறார்கள். 'பிறந்த பொன்னாடு' என்றபோது ஒவ்வொரு மனித உள்ளமும் அதன் வாழ்க்கைப் பேற்றை பேராவலுடன் கனிந்து அதை சேர்ந்தபோது நெகிழ்ந்த துப். எத்தனை சப்த சாகரங்களைக் கடப்பதிருந்தாலும் அப்பதறைபோது அங்கு விரைந்து செலுத்தல் இயல்பு. இவ்விதி கடவாது பர்மாவிலிருந்து சந்தர்ப்பம் கிடைத்த சமயங்களிலெல்லாம் தமிழ் தொண்டர்கள் தாய்நாடு சென்று தாய்ப்பணி யாற்றுவதில் தயங்குவதில்லை. போன சட்ட மறுப்பின்போதும் பர்மா தன்னிடமிருந்து சிலரை பலி தியாகம் செய்தது. இப்பொழுது நடந்திருக்கும் இப்போரிலும் அவ்வாறே தொண்டர்கள் கப்பலேறி கடல்தாண்டிக் கடனாற்றுவதாக அறிகிறோம். அத்தகைய திருக்கூட்டத்தாரில் தலைசிறந்த வீரன் திரு சாலமோனுக்கு பர்மா தமிழர்கள் சாலவும் நன்றிசெலுத்தக் கடன்பட்டுள்ளனர். மாதத்தில் பல நூற்றுக்கணக்கான வரும்படியை விடுத்து சாலமோன் செய்த தியாகம் பெரிது; பெரிது அதைவிடப் பெரிது அவர் பட்ட கஷ்டங்கள். தமிழ்நாட்டுப் பம்பாய் போல் சளைக்காமல் மூச்சுவிடக் கூட நேரமில்லாமல் போராடிக்கொண்டிருக்கும் மதுரைப்பதியிலே சாலமோன் பட்டிருக்கும் தடியடிகளின் வடு சுயராஜ்ய சர்க்காரில் விழுப்புண்ணெனப் போற்றப்படும். அவர் பட்ட அடியின் ஒவ்வொரு தழும்பையும், ஒவ்வொரு வீர பட்டயமாகவோ வீர விருதாகவோ கணிக்கவும் மதிக்கவும் போகிறோம். அவர் செய்த தியாகத்திற்கு தமிழுலகம் தக்க பரிசளித்து விட்டது. மதுரையின் 24-வது சர்வாதிகாரிப் பட்டம் பெற்றார். அதற்காக சர்க்காரும் அவருக்கு வீர விருந்தளித்திருக்கிறது. 18மாதங்கள் மாமியார் வீட்டில் நன்றாய்-சுகமாய் மறவுண்டு கொழுத்துத் திருப்பட்டும். அவரைத் தொடர்ந்த பன்னிரு வீரருக்கும் விருந்து செய்துவைக்க சர்க்காரை வினயமாய்க்கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஐயோ! வரி செலுத்த வகையில்லையே!

நிலம் படைத்தவனெல்லாம் பணம்படைத்தவனென்று சொல்லப்பட்ட காலமொன்றிருந்தது. ஆனால் இப்பொழுதில்லை; இந்தவருஷத்தில் அப்படியில்லை. வரிப் பணம்கூட செலுத்தமுடியாமல் நிலச் சுவான்தார்கள் தங்கள் மனைவி மக்களின் காது, கழுத்தில் கிடந்த நகை நட்டுகளை விற்றுக் கொடுத்தும் போதாமல் நிலங்களை ஈடு வைத்தும், ஏலத்துக்கு விட்டும் விடுகிறார்கள். அப்படி யென்ன பஞ்சம் ஏற்பட்டுவிட்டது? விளைச்சல் விளையவில்லையா? பஞ்சமாகிவிட்டதா? அப்படி யொன்றுமில்லை. கீரைக்காரி முதல் மளிகை வியாபாரி வரை, தோட்டி முதல் தொண்டைமான் வரைக்கும் ஏற்பட்டிருக்கும் பணப் பஞ்சத்தினாலேயே பொதுவாக உலக முழுதும் விசேஷமாக இந்தியாவெங்கும் இதுகாலை விழிபிதுங்கக்கூடிய நெருக்கடியில் நிற்கிறது. அத்துடன் 'காந்திச் சண்டை'யும் காரணம் என்பீர்கள். எதுவாயினும்—எவரிட்ட தீயானாலும் இந்தியவிவசாயிகளின்—நிலச்சொந்தக்காரர்களின்பாடு அதோகெதியில் அகப்பட்டிருக்கிறது என்பதை மாத்திரம் மறுக்க முடியாது, நமது கைக்கெட்டியிருக்கும் ஆதாரத்தைக் கொண்டு புள்ளி விவரத்தோடு பேசுவதானால் இது சமயம் வங்காளத்தைத் தவிர வேறு கணக்கு நம்மிடமில்லை. பாரிசால் ஜில்லாவில் மாத்திரம் 1931ஆம் செப்டம்பர் மாதக் கிஸ்தி கொடுக்க முடியாத ரூ. 2,78,634க்கு 66 ஜமீன்களும் 1932ஆம் ஜனவரி மாத கிஸ்தி ரூ. 50,000க்குகாக 3 ஜமீன்களும் ஏல விளம்பரம் செய்யப்பட்டிருக்கின்றன. பாப்னா ஜில்லாவிலுள்ள 2,400 ஜமீன்களில் 359 ஜமீன்கள் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய கிஸ்திக்காகவே ஏல விளம்பரமிடப்பட்டிருக்கின்றன. சொராஜ்கஞ்சிலும் தாங்க முடியாத பணப்பஞ்ச மேற்பட்டு ஜனங்கள் வரி செலுத்த வியலாத நிலைமையிலிருக்கின்றனர். இவைபற்றி வங்காள சட்டசபையில் பேச்சுப் பிறந்தபோது 1931 ஜூன், செப்டம்பர் மாதங்களுக்கும் 1932 ஜனவரிக்கும் வரி பாக்கி யேற்பட்டிருக்கும் ஜமீன்கள் 13,475 என்றும் அவைகளில் 518 ஏலமிடப்பட்டுவிட்டன வென்றும் ரெவினியூ மந்திரி பதிலளித்துள்ளார். இதனால் வங்காள மாகாணத்தில் நிலச்சுவான்தார்களுக்கிடையில் பணப் பஞ்சம் பிச்சுப் பிடுங்கித் தின்னுகிறதென்பது நிரூபணமாகிறது. மேலும் சட்டசபைப் பிரஸ்தாபத்திலிருந்து ஏலத்துக்கு விடவேண்டியிருக்கும் பாக்கி ஜமீன்களை வாங்குவாரில்லை யென்றும் தெரிகிறோம். இவை போன்றே இதர ஜில்லாக்களின் நிலைமையும் இதர மாகாணங்களின் ஸ்திதியும் இருக்குமென்பது தேற்றம்.

அப்படியானால் இதற்கேதாவது விதாயமேற்பட வேண்டாமா? என்னலாவது ஒரு வழி கண்டுபிடிக்கவேண்டாமா? சொந்த நிலம் படைத்த நிலச் சுவான்தார்களைப் பற்றி நமக்கு அவ்வளவாய் அக்கரையில்லை. பணக்காரர்கள் எப்படியும் சமாளித்துக்கொள்ளுவார்கள். யானைபடுத்தால் குதிரை உயரம், என்பதுபோல பணக்காரர்கள் மெலிந்தால்- அவர்களுக்குப் பஞ்சமேற்பட்டால் ஏதோ இருப்பதில் சிறதை விற்று வாழ முடியும். ஆனால் ஏழைகளோ? பணக்காரர்களின் கஷ்டத்திற்காக மாடென உழைத்து-குறைந்த கூலி வாங்கி அரை வயிறு, குறை வயிறாய்க் கிடப்பார்களே அவர்களது வயிற்றுக்குத்தான் உணவளிக்க வேண்டும். இருந்தாலும் இரு சாராருக்கும் சாதகமான ஒரு சுருக்க—நேர் வழி சொல்லிவிடுகிறோம். வரிகொடுக்கமுடியாவிட்டால் நிலச்சுவான்தார் வரி மறுப்புச் செய்யட்டும். முடியாத நிலைமையிலோ அல்லது காங்கிரஸ் திட்டப்படியோ வரி மறுப்புச் செய்து வரி மறுப்பு வீரனென்ற நல்ல பெயரெடுத்துக்கொள்ளட்டும். ஏழைகளுக்கும் ஒரு வழி. நாள் முழுதும் மாடாயுழைத்தும் மண் வெட்டியாய்த் தேய்ந்தும் வயிறு நிறப்ப முடியாமல சாவுக்கும் பிழைப்புக்குமிடையே உயிரை ஊசலாடவிடுவதை விடுத்து சட்ட மறுப்பி லீடுபட்டு கூட்டோடு குடும்பத்தோடு சிறை சென்று அங்கு சுபிக்ஷமாய்-வயிறார உண்டு வாழட்டும். விருதாவில் கஷ்டப்படுவதைவிட தேசத்திற்காக கஷ்டப்படுவது எவ்வளவோ மேலாகலாம்.

பயங்கர ஆட்சி.

காங்கிரஸ் காரியாலயங்களின் மேல் பறந்து கொண்டிருந்த இந்திய தேசியக் கொடிகளை யிறக்கிவிட்டு அந்த இடங்களில் பிரிட்டிஷ் கொடியை பறக்க விட்டிருப்பது பிரிட்டிஷாருக்கு வெற்றியைக் கொண்டு வந்து விடாது; தோல்விக்கென்றே கூறவேண்டும். இந்தியாவில் இதுகாலை நடைபெறுவது போன்ற பயங்கர ஆட்சி உலகில் ஓர் புறத்திலும் ஒருக்காலும் நடந்ததில்லை. குற்றமற்ற செய்கைகள் கூட கொடும் பாதகங்களாகப் பாவிக்கப் பட்டுக் கொடூரமாகத் தண்டிக்கப்படுகின்றன. காந்தி சிறைக்குள்ளே கிடக்கின்றார். அவரை நாடு கடத்திக் கண்ணுக்கெட்டாத தனித் தீவில் போடவேண்டுமென்று படு பாவிகள் போட்ட கூக்குரல் இன்னும் கொஞ்சங் கொஞ்சம் கேட்கின்றன. காங்கிரஸ் நிதிகளை கொள்ளைப் பொருள் போலக் கைப்பற்றுகிறார்கள். காங்கிரஸ்காரர்களின் பணம் பாங்கிகளிலும் தடைப்படுத்தப் படுகின்றன. ஆயிரம் பதினாயிரக் கணக்கில் அபராதம் விதிக்கப்படுகிறார்கள். சாத்வீகத் தலைவர்களெல்லாம்—அஹிம்சை வீரர்களெல்லாம் கூட்டம் கூட்டமாய் கைதி செய்யவும் கடுஞ் சிறைப்படவும் ஆகின்றனர். தந்தி தபால் செய்திகள் கூட தடுக்கப்படுகின்றன. பிரசங்கவாயிலாகவோ பத்திரிகைகள் மூலமாகவோ அபிப்பிராயமும் கூறக் கூடாதாம். சர்க்காரின் தடியடியாலோ—துப்பாக்கி குண்டாலோ காயம்பட்ட தொண்டர்களை சிகிச்சை செய்வதற்காகவென் றேற்படுத்தப்பட்ட ஆஸ்பத்திரிகளையும் சட்ட விரோதமான ஸ்தாபமெனக் கலைக்கின்றனர். சமாதானமாக மறியல் செய்வதும் குற்றமா? கள் குடித்துக் கெட்டுச் சீழிபவனைக் கடைத்தேற்றுவதும் குற்றமா? உள் நாட்டு உற்பத்தியை, கைத் தொழிலை, வளர்ப்பதும் குற்றமா?

சிறு சிறு குழந்தைகளும் பெண்மணிகளும் அடக்கு முறையின் கொடுமைக் குள்ளாகின்றனர். அடித்தாலும் உதைத்தாலும் சுட்டுக் கொன்றாலும் கூட பதில் சொல்லாத—சபிக்காத சாத்விகிகளின் தலைமேல் விழும் தடிகளுக்கும் துப்பாக்கிகளுக்கும் வீர பட்டமும் வீர விருதுமளிக்கப் படுகின்றன. நிராயுதபாணிகளான காங்கிரஸ்காரர்களை அடிப்பதும் கொல்லுவதுமே பிரிட்டிஷ் ஆண்மையானால் அதற்காக அந்தோ! வருந்துகின்றோம். இந்த அட்டூழியத்தை—அக்ரமத்தை எவரும் பொறுப்பதற்கில்லை. காந்தியின் கொள்கையையோ, காங்கிரஸின் திட்டத்தையோ இதுவரை இவ்வளவும் ஆதரிக்காத கவிச் சக்கிரவர்த்தி தாகூர் கூட "எமது சட்ட கர்த்தாக்களின் அட்டூழியம்" என்று அலங்கரிக்கும்படி அவ்வளவு அத்து மீறிவிட்டது. போன போரில் 60,000 பேர் சிறை சென்றார்கள். இப்பொழுதோ தாய் நாட்டை மீட்க லட்சம் கோடிக் கணக்கில் சிறை செல்ல ஜனங்கள் தயாராயிருக்கிறார்கள். இவர்களையெல்லாம் அடைப்பதற்கு இப்போதிருக்கும் சிறைச் சாலைகள் போதாவிட்டால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் உக்கிரத்தினால்—உன்மத்தத்தால் பிடிக்கப்படும் நிர்ப்பாக்கிய கைதிகளை—அடிமைகளைக் குடியேற்றுவதற்கு எத்தனையோ சௌகரியமான தீவுகள் பிரிட்டனிடம் இருக்கவே செய்கின்றன. வரைமுறையின்றி வாயில்லாப் பூச்சிகள் போன்ற பிரஜைகளை கொடுங்கோலாட்சி செய்வது கூடாது. அதனால் இந்தியர்களின் சுதந்திரக் கிளர்ச்சி ஓய்ந்து ஒடுங்கிவிடாது. சாத்விகமான ஜனங்களின் மீது பிரிட்டன் மிலேச்ச ராஜ்பம் செய்வதை எவராவது இந்த இருபதாவது நூற்றாண்டில் அங்கீகரிக்க முடியுமா?

நிதான புத்தியில்லாமல் வெறும் ஆசை வெறிபிடித்து குரூரமான நடத்தையிலும், கொடூரமான தண்டனையிலும் பிரிட்டன் இறங்கியிருப்பதால் இந்தியாவில் சமாதானத்தையோ அல்லது தனது அரசாட்சியையோ நிலைக்கச் செய்ய முடியுமென நினைக்குமானால் அதனால்—அந்த பிற்போக்கான—நேர்மையற்ற நோக்கத்தினாலேயே அது அடியோடு அழியப்போகிறது. பலாத்காரமற்ற சத்யாக்கிரக இயக்கத்தை பலாத்காரத்தால்—ஹிம்சைப் பிரயோகத்தால் அடக்க முடியாதென அறிந்தும் பிரிட்டன் மூடர் செபல் செய்கிறது. அஹிம்சைப் போரை ஆரம்பித்தவுடனேயே காந்தி வெற்றி மேல் வெற்றியடைகிறார். "விரல் விட்டெண்ணக் கூடிய ஒரு சிறு கைப் பிடியாளரே பிரிட்டிஷ் ஆட்சியை வெறுக்கின்றனர்" என்பது கண்மூடித்தனமான பொய்ப் பிரசாரம். இக்

அத்தையும் மாமியும் ஒருத்தியே.

ஒவ்வொரு நாடும் அதனதன் பொருளாதா
ர நிலையைச் செப்பனிட்டுக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கின்றது. இல்லாவிட்டால் அந்நாட்
டின் செல்வநிலை சீர்கெட்டு பிற நாட்டார்
கை பார்த்துப் பிழைக்கவேண்டியதாகிவிடும்;
பிரிட்டனின் பொருளாதாரத்தில் பெரிய பள்
ளம் விழுந்து நாட்டுச் செல்வம் வற்றி வரண்டு
வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்து ஜனங்
கள் பசியும் பட்டினியுமாய்க் கிடக்க நேர்ந்திரு
க்கும் இதுகாலை பிரிட்டிஷ் அரசியல் நிபுணர்
கள் அப்பள்ளத்தை மூடுவதற்காகப் பெரு
முயற்சி செய்துவருகின்றனர். அந்நிய
நாட்டிலிருந்து பிரிட்டனுக்குள் இறக்கும
தியாகும் அன்னியச் சரக்குகளுக்கு அதிக வ
ரி விதித்து பலத்ததோர் சுங்கச்சுவர் கட்டிவிட்
டார்கள். "பிரிட்டிஷ் சாமான்களை வாங்குங்
கள்" என்ற ஸ்வதேசிப் பிரசாரம் பலமாய் நட
ந்துவருகிறது. இளந் துருக்கியிலும் கிழநாட்
டு வீரன் கமால்பாஷாவின் சர்க்காரிலும் அ
தே போன்று சுங்கச்சுவரமைத்து துருக்கிப்
பொருள் பிரசாரமும் நடைபெற்றுவருகிறது.
இந்தியாவிலும் இதேபிரசாரம் இன்றுநேற்றல்
ல வெகுகாலமாக-சுயராஜ்யக்கிளர்ச்சியும்சுதந்திரய
க்கமும் தோன்றியநாள்தொட்டு நடைபெறுங்கா
ஙுவிரோட் பஹிஷ்காரஇயக்கத்தின் தாதுப்பொ
ருளும்-உள்ளார்ந்த அர்த்தமும்ஸ்வதேசிசாமா
ன்பிரசாரஇயக்கத்தின் அர்த்தமும் இரண்டில்லை;
ஒன்றே. ஒரு சாரார் "அன்னியப் பொருளை
வாங்காதீர்கள்; இந்திய சாமான்களையே வாங்
குங்கள்" என்கின்றனர். மற்றொரு சாரார் "இ
ந்திய சாமான்களையே வாங்குங்கள்" என்கிறார்
கள். இதன் பின்னால் "அன்னிய சாமான்களை
வாங்காதீர்கள்" என்ற பொருள் தொக்கிநிற்
கிறது. ஊன்றிப் பார்த்தால் இருவரது கருத்
தும் நோக்கமும் ஒருமித்திருத்தல் நன்கு தோ
ன்றும். ஆனால் இந்தியசர்க்காரின் குரோதக்
கண்களில்-சுயநலப் பார்வையில் மாத்திரம் ப
ஹிஷ்கார இயக்கத்தார் செய்வது தவறு
என்று படுகிறது. பாரபக்ஷமாய்-ஒருதலை நி
யாயமாய்-ஒருவரை ஒன்றுசெய்ய அனுமதிக்க
வும்-வேறொருவரைத் தடுக்கவும் அடக்கவும் மு
ற்படுவது பிரிட்டிஷ்காரனுக்குப் பிடித்த நீதி
யேயன்றி வேறெவருக்கும் ஒவ்வாது. அத்
தையும் மாமியும் ஒருத்தியே யானபடியால் அவ
ளுக்குரிய மரியாதையைச் செலுத்துவோம். இ
தில் எவ்வித அபிப்பிராய பேதத்திற்கும் இடம்
வைக்கவேண்டாம்.

இந்தியாவிலெங்கும்-பம்பாய்,காரச்சி,செ
ன்னை, கல்கத்தா முதலிய நகரங்களில் ஸ்தாபிக்
கப்பட்டிருக்கும் "இந்திய சாமான்களை வாங்
குங்கள்" சங்கத்தில் இந்தியர் எல்லோரும் எவ்
வித பாகுபாடுமின்றி-எவ்வித அபிப்பிராய பே
தமுமில்லாமல்-காங்கிரஸ்காரனானாலும்சரி வேறு
இயக்கங்களைச் சேர்ந்தவர்களானாலும் சரி இல்
லை சர்க்கார் கட்சியினரானாலும் சரி எல்லோ
ருமே ஈடுபட்டு உழைக்கவும், பிரசாரம் செய்ய
வும்வேண்டுமென இந்தியத்தாய் விரும்புகிறாள்.
இச் சங்கத்தை சர்க்காரே அனுமதித் திருப்ப
தால் எவரும் பயப்படத் தேவையில்லை. இந்
தியாவின் செல்வ நிலை சீர் கெட்டிருப்பதால்
ஏழை எளியவர்களின் பசிப்பிணி போக்கவும்
வேலையற்றிருப்போருக்கு வேலை கொடுத்து நா
ட்டுக் கைத்தொழிலையும் உற்பத்தியையும் விரு
த்தி செய்வதே இச்சங்கத்தின் ஜீவாதாரமான
நோக்கமாகும். இதை யாதரிக்க எந்த இந்தி
யனும் தயங்கமாட்டான். சுங்கச்சுவரு கட்ட
இந்திய ஆட்சி இந்தியர் கையிலில்லை.

தியர் ஏக மனதாக—ஒரு சில மிதவாதிகளைத்
தவிர—எல்லா இந்தியருமே சுதந்திரம் விரும்
புகிறார்கள். அவர்களது பஹிஷ்கார இயக்க
த்தால் 'சுதந்திரம்' சீக்கிரம் உதயமாகவே
போகிறது. பிரிட்டிஷ் வர்த்தகம் இனிமேல்
உருப்படப்போகிறதில்லை; கூடிய சீக்கிரத்தில்
உருக்குலைந்து விடும். நமது பகிஷ்காரம், சத்
தியாக்கிரஹம், உலக அனுதாபம் இவைகளில்
மாத்திரமில்லை பிரிட்டிஷ் பொதுமக்களின் சுய
மரியாதையிலும் மனச்சாக்ஷியிலும் காந்திக்கு
நம்பிக்கையுண்டு. அதுவொன்றே "இந்தியா
வில் நடத்திவரும் கொடுமைகளை உடனே நிறு
த்துங்கள் என்று சொல்லுவதற்குப் போதுமா
னதாகும். இந்தியாவின் நியாயமான கோரி
க்கைகளுக்கு இணங்குவதால்—விட்டுக் கொடு
ப்பதால் பிரிட்டிஷ் அந்தஸ்து—மானம் போய்
விடாது. அதோ எரவாடாசிறையிலே ஒட்டி உல
ர்ந்த சரீரத்தோடு ஆனால் உறுதியான மன
வலியோடு தவங்கிடக்கும் மகாத்மாவின் கால
டியிலன்றி பிரிட்டனுக்கு மீட்சியில்லை.

—நியூயார்க் "நேஷன்".

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பந்துவனன் 245 மலர் 9 இதழ் 70 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை

DESOPAKARI

புதன் ஞாயிறு வெளியீடு.

210-36-வது வீதி இரங்கூன், (20-3-32) பங்குனியீ 8உ ஞாயிற்றுக்கிழமை

அட! ஹோரே! ஆண்பிள்ளையானல்வா!

சாகத் துணியிற் சமுத்திரம் எம்மட்டோ
மாயையே—இந்தத்
தேகம் பொய்யென்றுணர் தீரரை யென்
செய்வாய்—மாயையே
என்னைக் கெடுப்பதற் கெண்ணமுற்றாய்
கெட்ட மாயையே—நான்
உன்னைக் கெடுப்பதுறுதி யென்றே
உணர் மாயையே.

—கவியரசன்.

வீடு கட்டும் சிற்பிகள் மட்டப்பலகையை யுபயோகிக்கிறார்கள். அதைக்கொண்டு அகல நீளத்தை அளக்கவும் மேடு பள்ளத்தைச் சரிப்படுத்தவும் கூடும். அதேமாதிரி டாக்டர்களும் மனிதனின் உடலில் உண்டாகும உஷ்ணத்தையும் குளிர்ச்சியையும் அளப்பதற்கு "தெர்மா மீட்டர்" என்னும் கருவியை யுபயோகிக்கிறார்கள். காலநிலையின் சீதோஷ்ணத்தைக் கண்டறிவதற்கு "பாரோ மீட்டர்" ஒரு கருவியாயிருக்கிறது. இவை மூன்றும் இப்பொழுது தேவை. ஏனெனில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் என்னும் கட்டிடம் அஸ்திவாரத்திலிருந்து ஆடிக்கொண்டிருப்பதைப் பழுதுபார்க்கவேண்டும். இந்தியா மந்திரியின், இந்திய வைஸ்ராயின், இந்திய மாஜிஸ்டிரேட்டுகளின், போலீஸ்காரர்களின் மூளையில் ஏற்பட்டிருக்கும் கொதிப்பை அளந்து பார்க்கவேண்டும். இந்தியாவெங்கும் இப்பொழுது மூண்டிருக்கும் அரசியல்மேகம் கலைந்து அடக்குமுறைச் சூறாவளி குறைந்து சமாதானக் காற்று வீசுமா? என்றுகாணவேண்டும். இவைகளையெல்லாம் கணக்கெடுக்காமல் அரசியல் சாஸ்திரத்தை கணிப்பது துர்லபம்.

திலகரிஷி காலத்தில் இந்து முஸ்லீம் ஒற்றுமைபற்றி பிரசாரம் செய்யப்பட்டபோது பிரித்தாளுவதையே ஒரு தந்திரமாகக்கொண்ட பிரிட்டிஷ்காரர்கள் முஸ்லீம்களை நோக்கி "நீங்கள் இந்துக்களுடன் ஒன்றுசேர வேண்டாம். மொகல் சாம்ராஜ்யத்தை யெதிர்த்து இந்து ராஜ்யத்தை ஸ்தாபித்த மஹாராஷ்டிர மன்னன் சிவாஜியின் ஜாதியிலே பிறந்ததிலகன் உங்களை அடியோடழித்துவிடுவான். ஆனால் நாங்கள் உங்களுக்கு, நீங்கள்வேண்டுவதையெல்லாம் தருகிறோம்" என்றார்கள். உடனே திலகர் தமது மட்டப்பலகையைக் கையிலெடுத்து பிரிட்டிஷ்காரர்களின் ஹிருதயத்தை அளந்துகாட்டிவிட்டார் "எங்களுக்கு சுயராஜ்யம் வேண்டாம்; முஸ்லீம்களுக்கே... கொடுத்துவிடட்டும்; அவர்களின்கீழ். நாங்கள் பிரஜைகளாயிருக்கிறோம். முஸ்லீம்களுக்கு அவர்கள் வேண்டுவதைத் தருவதாகச் சொன்னால் சர்க்கார் அப்படியே செய்யட்டும்; சும்மா வெறுமனே "அப்பா வென்றால் உச்சி குளிர்ந்துவிடாது" என்றார். வாயளவில் பேசிய வெள்ளைக்காரன் அவ்வாறு கொடுக்கவில்லை.

இப்பொழுது நடக்கும் இப் போரிலும் இம்மாதிரி மட்டப்பலகையும், பாரோ மீட்டரும், தெர்மா மீட்டரும் உபயோகிக்கப்படாததால் எதுவையும் திட்டமாய் அளக்கவும் நிர்ணயிக்கவும் முடியவில்லை, மெல்லிய பிரம்படி இலகுவான தடியடியே பிரயோகிக்கப்படுவதாக சென்னை சர்க்கார் கூறுகிறது. அப்படியானால் அதை யளக்க மட்டப்பலகையும் பாரோ

மீட்டரும் தடியன்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இத்தனை யடி உயரம் கையைதூக்கி யடிக்கிறதுஎன்ற நிர்ணயப்படி போலீஸ்காரன் அவ்வளவேதூக்கியடிக்கிறானென்றளக்க மட்டப்பலகை அவசியம் வேண்டும். தடியடி எவ்வளவு எரிச்சல் எரிகிறதென்றளக்க பாரோ மீட்டரோ தெர்மா மீட்டரோ கண்டிப்பாய் வேண்டும். இல்லாவிட்டால் கடுமையென்பதையும் இலகுவென்பதையும் எவ்வாறு கண்டுபிடிப்பது?

பத்திரிகைகளில் ஒருவிதமான செய்திகள் படிக்கிறோம்; சர்க்கார் அறிக்கைகள் வேறு விதமாயிருக்கின்றன; சாமுவேல் மற்றொருமாதிரி பேசுகிறான். நாட்டில் நடப்பது ஒன்று; நடப்பதாகப் பார்லிமெண்டிலேபேசப்படுவது வேறு. "இந்தியாவில் காங்கிரஸைப் பின்பற்றுகிறவர்கள் ரொம்ப, ரொம்ப, ரொம்பக் கொஞ்சப்பேர்கள்" என்று ஸர் சாமுவேல் கூறுகிறார். ஆனால் உண்மையில் பார்த்தால் இந்தியாவில் காங்கிரஸைப் பின்பற்றாதபேர் வெகு, வெகு, வெகு சொற்பம். இதில் எது நிஜம்? எது பொய்? என்பது தெரியவேண்டும். நாம் சொல்லுகிறோம்! சர் சாமுவேல்தான் பொய் சொல்லுகிறான்; நம்மில் எள்ளத்தனை கள்ளமில்லை; முற்றும் உண்மையே-உள்ளதை உள்ளபடியே பேசுகிறோம். வேண்டுமானால் இதைச் சோதித்துக்கொள்ளலாம். சர் சாமுவேலுக்கு தைரியமிருந்தால்-சர் சாமுவேல் பொய் சொல்லவில்லையென்றால்-கள்ளங் கபடில்லாவிட்டால்-யானையைக் குத்திச் சொல்லைமறைத்த குறப்பெண்ணில்லை, ஆண்பிள்ளையென்றால் வெளியில் வரட்டும். நாம்போட்டி போட்டழைக்கிறோம். அவருடைய பொய்யையும் நம்முடைய நிஜத்தையும் நடுவிருந்து உலகத்தார் நியாயம் தீர்க்கட்டும். இந்திய ஜனங்களுக்கு அவர்களது உள்ளக் கிடக்கையை உள்ளது உள்ளவாறு உணர்த்த ஸ்வாதந்தர்யம் அளிக்கட்டும். சர்க்கார் தரப்பில் நாவன்மை படைத்தபேச்சாளிகளையும் காங்கிரஸ் தரப்பில் காந்திஜீ உள்பட்ட தலைவர்களையும் மேடைமீதேறிப் பேசிப் பிரசாரம்செய்ய அனுமதித்து ஜனங்களின் அபிப்பிராயத்தை அறியட்டும். பத்திரிகைகளுக்கு எழுத்துச் சுதந்திரம் அளித்து ஆசிரியர்களின்-கட்டுரையாளர்களின்--அரசியல் ஆராய்ச்சியாளரின் அபிப்பிராயத்தை அறியட்டும். அப்பொழுதுதான்-பொது ஜனங்களின் வாக்கு (ஓட்டு) நியாயமாய் பக்ஷபாதமில்லாமல் எடுக்கப்பட்டபோதுதான் எவர் பேசுவதில் உண்மையிருக்கிறதென்பது புலனாகும். இல்லாது வேறு சோதனையால் முடியாது. சர் சாமுவேல் மூன்று கண்ணால் எரித்தாலும், மூன்று கொம்புகளால் முட்டினாலும், இரண்டு வாய்கொண்டு பேசினாலும் நாம் ஏற்க மாட்டோம். அடக்குமுறையை ஆட்சேபிக்கும் பொதுக் கூட்டங்களைத் தடுத்துக்கொண்டும் பத்திரிகைவழி ஜனப் பான்மையை யறிவுறுத்துவதை அவசரச் சட்டங்களால் அடக்கிக்கொண்டும், காங்கிரஸ் பக்கம் ஆளில்லையென்று பேசுவதில் அர்த்தமே கிடையாது. அவர் கூறுவதை அவரே நிரூபித்துக் காட்டட்டும். இல்லாவிட்டால் அவரைப்பொய்யராக்க காங்கிரஸுக்குச் சந்தர்ப்ப மளிக்கட்டும். பம்பாயில் வர்த்தகர்களெல்லாம்-முப்பதுக்கு மேற்பட்ட வியாபார சங்கத்தார் சர்க்காரின் அடக்குமுறையைக் கண்டிக்கக் கூட்டங் கூட ஏற்பாடு செய்தபோது சர்க்கார் தடுத்துவிட்டது. எத்தனையோ வக்கீல் சங்கங்களும் தடுக்கப்பட்டிருக்கின்றன. சட்ட சபைகளும் கண்டிக்கின்றன. இம்மாதிரி செய்வதிலிருந்தே எவர்பக்கம் ஆள்சேர்க்கை அதிகமிருக்கிறதென்பதை நாம் நிரூபிக்கிறோம். ஒரு ஷவுக்கத்தோ, ஒரு கஜனவியோ, ஒரு ராமனோ (ஸி. பி.) ஒரு சாஸ்திரியோ சர்க்கார் பக்கம் இருப்பதைக்கொண்டு தங்கள்பலத்தை சர்க்கார் மிகைப்படப் பேசிவிடவேண்டாம்

இன்னொரு சந்தேகமும் தீர்க்கப்படவேண்டும். பிரிட்டிஷ் பத்திரிகைகளுக்கும் வேறு அன்னியநாட்டுப் பத்திரிகைகளுக்கும் இந்தியாவின் நிலைமையைப்பற்றியும் ஜனவரி முடிவதற்குள் 46,000 பேர் கைதிசெய்யப்பட்டிருக்கின்றனரெனவும் மாளவியா கொடுத்த தந்தியை தடைப்படுத்தியதும் நமது பக்கம் சாக்ஷியாயமைகின்றன. சிறைப்பட்டோர் தொகை வெறும் 15,000 என்று சர்க்கார் தரப்பில் கூறுகிறார்கள். இதில் எது நிஜம்? இதற்கும் கணக்கெடுத்துப் பார்த்துவிடவேண்டும். கைது செய்யப்பட்டதாக பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கணக்கையும், கைதுசெய்த போலீஸாரின் கணக்கையும், சிறைக் கணக்கையும் எடுத்துப்பார்த்தால் இதன் உண்மையைத்

அடக்கி ஆளவா?

இர்வின் பிரபுவின் சமாதானக் கொள்கை மஹா புனிதமானது. அதைத்தான் பிரிட்டிஷ் சர்க்கார் கைக்கொண்டு நடக்கவேண்டும். அடக்குமுறைகளை அதிகமாக்கி அரசியல் வாக்குறுதிகளை வெற்றுக் காகிதங்களாகக் காற்றில் பறக்கவிடுவதால் நமக்கு நாமே அழிவைத்தேடிக்கொள்வதுடன் இந்தியாவில் நாம் வைத்திருக்கும் நமது "கிறிஸ்துவ வைஸ்ராய்"க்குப் பெரிதும் துரோகம் செய்தவர்களாகவும் ஆகிறோம். கிறிஸ்து பெருமானின் அஹிம்சைத் தத்துவத்தை மறந்து ஹிம்சையான அடக்குமுறை செய்வதால் நமது மதத்திற்குக்கூட இந்தியாவில் இடமில்லை. நாட்டையும் இழந்துவிடுவோம்.

—ரிப்பன் பிஷப்.

கண்டுவிடலாம். ஸர் சாமுவேல் பொய்யனில்லாவிட்டால் எல்லாவற்றையும் கணக்குப் பரிசோதகரின் மேஜையிலே போட்டுவிடட்டும்.

இவைகளையெல்லாம் விடுத்து இந்தியாவெங்கும் அமைதி, அமைதியென் றடித்துக் கொள்ளுவதாலாவதென்ன? அடக்குமுறையால் இந்தியாவில் அமைதி நிலவிவிட்டதாக அவர் வீட்டில் அவரே ஆயிரந்தரம் வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டிருக்கட்டும்; நமக்கு ஆவதொன்றுமில்லை. வெறுமனே வாய் கொண்டளப்பதால் அவருக்குத்தான் என்ன கிடைக்கிறது? ஜனவரி ஒரேயொரு மாதத்தில் சிறைசென்றோர் தொகை 4ப் ஆயிரங்களானால் இப்பொழுது பிப்ரவரியும் போய் மார்ச்சும் முடிவடைந்துகொண்டிருக்கையில் அநேகமாய் எழுபது எண்பதினாயிரங்களை எட்டிப்பார்க்கவோ அல்லது தாண்டவோ செய்திருக்கும். அரசாங்கத்தார் அமைதி அமைதியென்று அடித்துக்கொண்டேயிருக்கட்டும், நாம் போர் போரென்று போராடிக்கொண்டே யிருப்போம். வெற்றி யெவருக்குக் கிடைக்குமென்பது அப்பொழுதுதான் விளங்கும்.

தேசோபகாரி

(வாரம் இருமுறை)

வருட சந்தா (உள் நாடு)	ரூ	3	0	0
6 மாத ,,	,,	1	8	0
வருட சந்தா (வெளிநாடு)	,,	4	8	0

"கழுதை"

கழுதையை கேவலமான மிருகம் என்று கருதுவீர்கள். ஆனால் தனிமென்னுக்குக் கவி வாணர்களுக்கு அது அருமைப் பிராணி. வண்ணாப்பிள்ளைகளுக்கு சவாரிசெய்யும் குதிரை. வண்ணாரப் பெண்களுக்கு ஸ்ரீதனப் பொருள். அதன தோற்றத்தைக்கண்டு வெறுக்காமல் கவிவாணர்கள் அதன் குணத்திற்கு கவிமாலை சூட்டியிருக்கின்றனர்.

பத்திரிகைகளுக்குப் பேர் சூட்டும் சம்பிரதாயத்தில் மிருகங்களின் பேர்கூட பொறுக்கி யெடுக்கப்படுகிறது. "கேஸரி" யென்பது சிங்கத்தின் பேர். அப்பெயர்கொண்ட பத்திரிகையைத் திலகரிஷி மஹாராஷ்டிரத்தில் நடத்தினார். பர்மாவிலும் ஒரு "கேஸரி" நடத்த பதிப்புரிமைக்கும் அச்சுரிமைக்கும் எவரோ மனுச்செய்திருப்பதாக அறிகிறோம். இன்னும் வேறு நான்கு பத்திரிகைகளுக்கும் மனுச்செய்யப்பட்டிருக்கிறதாம். அவைகளல்லாமல் "கழுதை" யெனனும் பெயரோடு இன்னொரு பத்திரிகையும் வெளிவரப்போகிறதாம். பெயரைப் பற்றி நாம் பொருட்படுத்தவில்லை. ஏனெனில் கடவுளால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட எதுவும் கேவலமானதில்லை யென்பதே எமது கொள்கை. "ஆனவரெல்லாம் ஒருவரைப்போலின்னொருவரிருப்பாரா? காலை "கழுதை" யென்றபெயரோடு ஒரு பத்திரிகை பிரசுரிக்கப்பட்டால் அதன் வாசகர்களில் எவராவது தொறுவர் "கழுதை வந்ததா?" என்று கேட்கநேரும். அச்சொல் காதிற்பட்ட வழிப்போக்கர் "இவன் யாடா வண்ணான் இரங்கோன் பட்டணத்துக்குள் கழுதையைத் தேடி திரிகிறவன்!" என்று கேட்டுவிடக்கூடும். இல்லாவிட்டால் "கழுதையாசிரியர் வந்தாரா?" என்று கூட்டங்களில் எவரும் கூறினும் கேட்பினும் கேட்கலாம். இவ்வளவு ஆபத்துக்கள் மத்தியிலேன் ஒரு பத்திரிகைக்கு ஒரு ஆசிரியர் அப்பேரைக் கொடுக்கவேண்டும் என்று கேட்கிறோம். அவரது பெயரும் விலாஸமும் தெரியாததாலேதான் பத்திரிகை வாயிலாக அவருக்கு இச்செய்தியை விடுக்கின்றோம். நமது வாசகர்களும் அவரைக் கண்டால் தயவுசெய்து சொல்லிவிடுங்கள். "பத்திரிகைகள் பல பல தோன்றுவதில் நமக்குப் பொறாமை கிடையாது: தோன்றினால் மறையாமல் நடக்கட்டும். இல்லாவிட்டால் தோன்றாமலேயிருக்கட்டும் என்பதையும் கூறிவிடுங்கள்.

பழிகாரப் பாவிகளா !

இந்தியா சுயராஜ்யம் அடைகிறதோ இல்லையோ அதைப்பற்றி அநேகருக்கு அக்கரையில்லாதிருக்கலாம். ஆனால் இந்தியர்களின் மானத்தைப் பறிகொடுக்க இந்தியன் எவனுமே விரும்பமாட்டான். அரசியலில் அபிப்பிராய பேதப்பட்டிருக்கும் ஷவுக்கத்அலியோ, சாஸ்திரியோ அம்பேத்கரோ, ராமசாமி நாயக்கரோ எவராயிருந்தாலும் உண்மையான இந்திய இரத்தம் அவர்களின் ஹிருதயத்தில் ஓடிக்கொண்டிருக்குமானால் கண்டிப்பாய்—நிச்சயமாய்—சத்தியமாய் இந்தியாவின் மானத்தை, மரியாதையை இழக்க இஷ்டப்படமாட்டார். மதத்தை விற்றாகிலும், கொள்கையை விட்டாகிலும், உயிரை இழந்தாகிலும் காப்பாற்றவே விரும்புவர். இந்தியாவைத் தூஷித்த ராதா மீரையும், சர்ச்சிலையும் சும்மா விட்டு விட்டோம். இந்தியாவின் புனிதத்துவத்தைப் பழித்த குப்பைக்காரி மேயோவின் குப்பை மொழிகளைப் பொறுத்திருந்தோம். இஞ்சக்கேப் பின் வசைமொழிகளைச் சகித்தோம். இவ்வளவையும் எவ்வளவு காலந்தான் சகித்திருப்பது ? பொறுமைக்கும் எல்லையில்லையா ? திட்டுவதற்கும் வரம்பு கிடையாதா? அட ! பழிகாரப் பாவிகளா! இந்தியாவின் செல்வத்தைச் சல்லியடியாமல் சுரண்டுவது மல்லாமல் தூற்றுவதும் தர்ம நீதியாமோ ?

“இந்தியாவை இந்தியர்களிடமே கொடுத்துவிட்டால் இந்தியாவில் கொலை பழி கொள்ளையெல்லாம் மிகுந்து ஒரே இரத்தக்களரியாகிவிடும். நமது மிருகக் காட்சி சாலையிலிருக்கும் புலி, கரடி, சிங்கம், மான், ஆடு, மாடுகளெல்லாம் ஒரே கூட்டிலடைத்தால் எம்மாதிரிக் காட்சியைக் காணுவோமோ அம்மாதிரியான கொலைக் காட்சியையே இந்தியாவிலும் காணுவோம்” என்று சென்ற டிசம்பரில் ராதர்மீர் சொன்னான், “நாய்கள் குலைத்தாலும் பொதி மாடுகள் போய்க்கொண்டுதானிருக்கும்” என்றான் சர் சாமுவேல் ஹோர். அதையெல்லாம் சகித்தோம். “கேட்டுண்டோம்; பொறுத்திருப்போம், காலம் மாறும்” என்ற கவியரசனின் விமசபதம் நமக்கு ஆறுதலளித்து வந்தது.

ஆனால் நமது பெண்கள் பிழை பேசப்பட்டால்—நமது மாதர்களின் மானம் பறிக்கப்பட்டால்—அது மாத்திரம் பொறுப்பதில்லை. அப்பொழுதுதான் இந்தியர்களின் இரத்தம் கொதிப்புக்கொண்டு விடுகிறது. “டெயிலி டெலிகிராப்” பத்திரிகை நமது பெண் தெய்வங்களுக்குச் செய்த பிழையை எந்த இந்தியனாவது மன்னித்தால் அவன் மானமுள்ள இந்தியனாவானா? “இந்தியாவின் இளம் பெண்கள் கொலை செய்யப் பயிற்சி செய்யப்படுகிறார்கள்” என்று எழுதிய அவ்வாசிரியனின்—நிருபனின் கரத்தைத் துணித்தாலும்—காயத்தைச் சாய்த்தாலும் அடடா ! ஆறுமா ?

இந்தியா எவ்வளவுக் கெவ்வளவு ஸ்வாதந்தர்ய உணர்ச்சி கொள்ளுகிறதோ—எவ்வளவுக் கெவ்வளவு தீவிரமாய் விடுதலைப் போராடுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு அவமதிக்கவும் படுகிறது. அன்னிய ஆள்வினை வர்க்கத்தார் ஆத்திரமும் கொள்ளுகிறார்கள். “டெயிலி டெலிகிராப்” பத்திரிகைக்கு இவ்வசைமொழிகளைத் தந்தி சொல்லியவன் எந்தப் பேடியென்பதும் தெரியவில்லை. தெரிய வேண்டுமென்ற அவசியமும் கிடையாது. திரை மறைவில் தீங்கு செய்து ஓடி ஒளிந்து கொண்ட கோழையைப் பொருட்படுத்தவேண்டாம். ஆனால் அத்தந்தியை அனுமதித்த தந்திக் காரியாலயத்தாரைக் கண்டிக்காமல் விட முடியுமா? பார்லிமெண்டு பத்திரிகளுக்கு இந்தியாவின் நிலைமையைப்பற்றி இந்தியத் தலைவர்களால்—இந்தியாவின் விடுதலை வீரர்களான பண்டித மாளவியா, ஸ்ரீமதி மீராபாய், ஸ்ரீயுத மஹாதேவ தேசாய் போன்றோரால் கொடுக்கப்பட்ட தந்திகளைத் தடுத்த சர்க்காரோ அல்லது தந்திக்காரர்களோ இந்தியாவின் மீது தூற்றப்பட்ட வசைமொழிகளை எவ்வாறு அனுமதித்தார்கள் என்பது தெரியவில்லை. “டெயிலி டெலிகிராப்”பின் ஆசிரியனோ, நிருபனோ, அல்லது தந்தியையனுமதித்தவனோ அவனைப் பெற்றெடுத்த தாய் ஜாதியை—தன்னுடன் பிறந்த சகோதரியின் ஜாதியைத் தூஷித்துவிட்டதால் தனது தாயையே—தனது சகோதரியையே தூறு செய்த தாய்—கேவலப்படுத்திய தாய் கருதி விடுவோம். “அடிமை ஜனங்கள் படும் அவதிகளில் அவர்கள் அவதூறு செய்யப்படுவதுதான் சகிக்கமுடியாதது” என கவியரசன் ரவீந்திரன் கூறுகிறான். வாஸ்தவத்தில் நம்மால் இம்மாதிரி அவதூறுகளை சகிக்கவே முடியவில்லை. “டெயிலி டெலிகிராப்” செய்த இதே பிழையை சீனத்துப்பெண்களிடமோ ஜப்பானிய ஸ்திரீகளிடமோ செய்யமுடியுமா?

சுடுகாட்டுக் கூட்டம்!

இமேந்தான் சுடுகாட்டுக் கணக்கையும், இடத்தையும் கண்டு கணிப்பதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டியார் நேற்று முற்பகல் "முனிஸிட்டில்" கூடினார்கள். ஸ்ரீமான்கள் ப. சி. சோமசுந்தரம் பிள்ளை, எஸ். பி. எஸ். மணிஐயர், க. கா. சுந்தர முதலியார், தினகரன், பு. மாணிக்கஞ் செட்டியார் ஐந்துபேர் மாத்திரமே விஜயஞ்செய்திருந்தனர். திரு செல்லப்பிள்ளை நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரி சிகிச்சையிலிருந்தபடியால் கூட்டத்திற்கு வரமுடியவில்லை. ஆனால் மற்றேனையோர் ஏனோ வராதிருந்துவிட்டனர்? தவறிவிட்ட மூவரில் இருவர் பத்திரிகாசிரியராயிருந்தும் தாங்க ளேற்றுக்கொண்ட பொறுப்பில் இவ்வளவு தூரம் சிரத்தை காட்டாதிருந்தது உண்மையிலேயே வருந்தத்தக்கதாகும். ஏதோ தடுக்கமுடியாத அவசர சந்தர்ப்பத்தால் தடைப்படுத்தப்பட்டாலும் அதை யெடுத்துக்காட்டி மன்னிப்புக் கடிதம் விடுப்பது மரியாதை: அதையும் செய்யவில்லை. பொதுக் காரியத்திற்காக அரைமணி நேரத்தை தங்களது சொந்தப் பிரவிர்த்தியில் பற்றெழுதிக் கொள்ளமுடியாத இவர்கள் வேறு எந்தவொரு பொதுச் சேவையைப் பூர்த்திசெய்வர்? இன்னொருவர் நமது பிரதிநிதி; பர்மா சட்டசபையில் நமக்கு வேலைசெய்ய நம்மால் அனுப்பப்பட்டவர். அவருங்கூட கூட்டத்திற்கு வந்த பாவம்; வராமைக்கு வருந்திய பாவம் இரண்டையும் செய்யவில்லை இச்சிறு காரியத்தில் தனது பொறுப் புணராத இவர் நமக்காக ஒரு சிறு விரலைக்கூட அசைக்கமாட்டார் அன்றைக்கே இப்பொறுப்பற்ற பேர்வழிநா தங்களது முடியாமையைக்கூறி பொறுப் பேற்றிராதிருந்திருந்தால் நலமாயிருந்திருக்கும்: மரியாதையும் அதுதான். ஏற்றபின்னுல் அதற்கேற்ப நடக்காதது கண்டிக்கத்தக்க- மன்னிக்கமுடியாத குற்றம்.

> "அரசியல் கோலைசெய்யத் துணியும் பெண்கள் தூக்கு தண்டனைக்குத் தப்புவதற்காக கெர்ப்பவதிகளாகிவிடவேண்டுமென்று புரட்சி யியக்கத்தார் போதிக்கிறார்கள்"
>
> —டெயிலி டெலிக்கிராப்

ஈரமற்ற செய்கை

பாட்னு சிறையில் கோலக் பிஹாரிதாஸ் என்பவரும் அவருடன் கைதிசெய்யப்பட்ட மற்றொருவரும் மலேரியாவால்வின்னுற்றுவிட்டனர். கடவுளின் விதிப்படியே யிறந்தாரென்றாலும் மனித விதிப்படியும், சிறை விதிப்படியும், அவர்கள் நோய்ப்பட்டிருந்ததை அவரது தாய் தந்தையருக்கோ சுற்றத்தாருக்கோ தெரியப்படுத்த வேண்டாமா? அந்த நிர்பாக்கியமான கைதிகள் துரதிருஷ்ட ஜீவாத்மாக்கள் தனக்குப்பிரியமான முகக்களை கடைசியாகவொரு முறையாவது கண்டுகொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டாமா? அவரது உற்றாரும் பெற்றாரும் கடைசித்தருவாயிலிருக்கும் அந்நோயாளிகளுன் முகத்தில் விழித்துக்கொள்ள வேண்டாமா?

சிறையுள்ளே மலேரியா புகுந்தால் செம்மறியாட்டு மந்தையில் நோய் நுழைந்தது மாதிரிதான். நல்ல உணவும், சுத்தமான உடையும், போதுமான சுகாதார வசதியுமற்ற சிறைச்சாலையை அநேகமாய் பூலோக நரகம் என்றே சொல்லவேண்டும். அங்கு தொத்துநோய் தொத்தினால் அதிகம் ஆபத்திலேயே முடியும். சிறைச் சேவகர்கள் தக்க சிரத்தைக்காட்டி திக்கை செய்யவேண்டும். இல்லாவிட்டால் ஜீவன் இழக்கும் கைதிகளின் உற்றவர்களும் பெற்றவர்களும் வயிறெரிந்தால் அந் நெருப்பு பிரிட்டனை அடியோடு எரித்துவிடும்.

பிரிட்டனுக்கு வழி.

இந்தியாவிலிருந்த புராதனமான கிராம வாழ்க்கையை அடியோடு அழித்துத் தகர்த்துவிட்டோம். கண்டிப்பானதோர் வல்லாட்சியையமைத்து இருப்புக்கரத்தால் இந்தியாவை நாம் விடாப் பிடியாய் அடக்கி ஆளுகிறோம். அந்த எண்ணம் நமது ஹிருதயத்திலிருந்து எடுபடும் வரை நமக்கு நல்ல காலமேகிடையாது. இந்தியாவுக்கு இறுதியான ஒரு பிரிவுபசாரத்தை செய்துவிட்டு-இந்தியாவை இந்தியர்கள் கையிலே கொடுத்துவிட்டு விலகிக்கொள்ளுவதுதான் பிரிட்டனுக்குள்ள ஒரே வழி.

—ஸ்ரீமதி வில்கின்ஸன்.

தாடிவாலா!

நமது தாடியியான் சாகிபை உங்களுக்குத் தெரியுமா? ஒரு காலத்தில் அதன் தலையிலே சிங்கத்துக்குப் பிடரிமயிரிருப்பதுபோல ஏதோ வொன்றை-ஆங்கிலத்திலே "விக்" என்று சொல்லுகிறார்களே அதைப் போட்டுக்கொண்டு இந்தியா சட்டசபையிலே அட்டகாசம் செய்து கர்ஜித்த குரலைக் கேட்டிருப்பீர்கள். அக்காலத்தில் இந்தியாவெங்கும் ஏகாதிபத்தியமாய்த் தனியரசு செலுத்திய வைஸ்ராய்கூட அதற்குப் பயப்பட்டதுண்டு. சட்டசபைத் தலைவர் அது ஆட்டி யாட்டி யசைத்ததையும் தாடியை உருவி யுருவிக்கொண்டு அமுல்செலுத்தியதையும் பார்த்திருந்தால் பயங்கரமாயிருக்கும். அரசியல் காட்டில் அந்த தாடிவாலா தனியரசு செலுத்தினான். எந்தச் சட்டங்களும் அவனுக்கு அஞ்சி அடங்கவேண்டும். ஆனால் இப்பொழுதில்லை அவரிருந்த இடத்தில், அந்தச் சிங்கமிருந்து ஆட்சிசெலுத்திய இடத்தில் வெறும் நரிப்படோத்தும், பூனைக் குட்டிகளுந்தானிருக்கின்றன. நமது வித்தல்பாய் பட்டேலிருக்கிறாரே அவருக்குத் தாடி அழகாயில்லை. இவரேன் தாடியை வளர்த்து முகத்தை-கெம்பீரமான தோற்றத்தைக் கெடுத்துக் கொண்டாரென்று நாம் சிற்சில சமயங்களில் நினைத்ததுண்டு; ஒரு சமயம் "உங்களுக்கு தாடி யழகாயில்லை யெடுத்துவிடுங்கள்" என்று எழுதலாமென்று எண்ணிக்கூட இருக்கிறோம். அப்படிச்செய்வதுமரியாதைக்குறைச்சலென்று பட்டவுடன் அந்நினைப்பை நிறுத்திவிட்டோம். இப்போது பார்த்தால் காரணமில்லாமல் அவர் தாடி வளர்க்கவில்லையென்று தெரிகிறது. நமது நாட்டில் ஏதாவது நோய்கொண்டவர்கள் ஸ்வாமிக்கு பிரார்த்தனையாக முடிவளர்த்து மொட்டையிடுவதென்கிற புராதன வழககத்திற்கும் பட்டேல் தாடிக்கும் சம்மந்தமிருக்கிறது. பட்டேல்பல்வலியால்உபத்திரவப்பட்டபோது தான் தாடிவளர்க்க ஆரம்பித்தார். ஒவ்வொரு பல்லாய் பல பற்களைப் பறிகொடுத்தபின்னால் யாரோ ஒரு வைதிகம் தாடி வளர்க்கும் வைத்தியத்தைச்சொல்ல அதனால் அவர்பட்ட பல்வலியும் போயிற்று. மயிர் வளர்ப்பதால் மயிர்க்கால் வேர்கொண்டு அதன் வளர்ச்சிவழி நோய் நீங்குகிறது என்பது காரணம். பறிகொடுத்த பல்களுக்கு பட்டேல் பொய்ப் பல் கட்டிக்கொண்டார். அதனால்-பொய்ப்பல்லின் கெடுதியால் ஏதோ அசடுகள் உட்சென்று வயிற்று வலியை உண்டாக்கிவிட்டதாம். அதைச் சிகிச்சைசெய்து கொள்ளுவதற்காகத்தான் இப்போது ஐரோப்பாவுக்கு-வியன்னாவுக்குப் போயிருக்கிறார். தாடியையும் எடுத்துவிட்டார். அவரது படர்ந்த முகத்திற்கும் உயர்ந்த நெற்றிக்கும் என்ன காம்பீர்யமாய்த்தோன்றுகிறார் தெரியுமா! ஸ்வர்க்கீய மோதிலால் மீசையைக் களைந்துவிட்டபோது தில்லிப் பெண்கள் தூது சென்று மீசை வளர்க்கும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டதுபோல் பட்டேலையும் எவரும் கேட்டுவிடக்கூடாதெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

சிலுவைக்கும் பிறைக்கும் சண்டுபிடி !

உலகானுபவம் உடையவர்களையும், சரித்திரம் படித்தவர்களையும் கேட்கிறேன். "சிலுவையும் பிறையும் என்றாவது, எப்பொழுதாகிலும் சேர்ந்து வாழ்ந்ததுண்டா?" மதத்தை நாம் பழிக்கவில்லை மதத்தைப் பின்பற்றுகிற வர்களை குறைகூறவில்லை. பிரபஞ்சமும், மனிதவர்க்கமும் படைக்கப்பட்டு மனிதன் மதத்தை ஸ்ருஷ்டித்துக்கொண்ட காலத்திலிருந்தே இயேசுமகானைப் பின்பற்றுகிறவர்களும் முகம்மது நபிகளைப் பின்பறறுகிறவர்களும் ஒருவருக்கொருவர் வேண்டா வெறுப்புடன், குரோதப் பான்மையும்கொண்டு மாற்சர்யத்தில் நின்றுவந்திருக்கின்றனர்மதத்தில்மாறுபாடுகளிருந்தாலும் மனிதத்துவத்தில் மாறுபாடில்லாத மனிதன் ஒருவனோடொருவன் மனப்பான்மையில் மாறுபட்டு மாற்சர்யமுற்றிருக்கலாகாதென்பதே எமது இக் கட்டுரையின் நோக்கம்.

சரித்திர சாக்ஷியோடொட்டப்பார்த்தால் இவ்வுலகத்தில் கிறிஸ்துவ இராஜாங்கங்களுக்கும் இஸ்லாமிய இராஜ்யங்களுக்கும் இணக்கமில்லாமல் சிலுவைக் கொடியும், பிறைக் கொடியும் நீண்ட காலங்களாக மோதிக்கொண்டிருப்பதைக் காணுகிறோம். ஐரோப்பாவின் கிறிஸ்துவ அரசர்களெல்லாம் சேர்ந்து 1,500 ஆண்டுகளுக்கு முன்னதாக துருக்கியின் பிறைக்கொடியின்மீதுபோர் தொடுத்தனர். இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ருஷியா, ஆஸ்திரியா முதலியஎல்லா நாடுகளும் படைத்துணையும் பண வலியுங்கொடுத்து சிங்கபலம் படைத்த ரிச்சார்டு மன்னன்கீழ் சிலுவைப்போரெடுத்து மும்முறை போராடினர். பிற்காலத்திலும் கூட துருக்கியை கிறிஸ்துவ மன்

சித்தரே! செத்தீரோ?

சித்தரே! மதன சித்தரே!! எனது சித்தரே!!! நீர் இறந்தீர்; எம்மிடைவிட்டுப் பிரிந்தீர்; எமது கண்ணுக் கெட்டாத தூரத்தில் மறைந்தீர்; இந்தியாவின் அழைப்புக் கெட்டாத தொலை தூரத்திற்குச் சென்றுவிட்டீரென்று கேட்க எமக்கேற்பட்ட உள்ளக் குழைவை-எமது வருத்தச் செய்தியை எவருக்குச்சொல்லியாறுவது. உனது பூத உடலுக்கு உரைப்

ணர்கள்கூடி ஸ.நய அடித்து ஐரோப்பாவின் நோயாளியாக்கிவிட்டார்கள். இப்பொழுதும் தான் என்ன? எருஸலேத்தில் "ஓலச்சுவர்" சம்மந்தமான தகராறு தீர்ந்துவிட்டதா? இஸ்லாமிய அரசர்களை கிறிஸ்தவ மன்னர்கள் அன்பு நோக்கு நோக்கி ஸ்நேகபாவம் பாராட்டுகிறார்களா? புலியும் பசுவும் ஒரு துறையில் நீர் குடிக்கிறதில்லை.

இப்பான்மையை இல்லையென்றுக்க இவ்வூரில் எமது நண்பரிருவர் கூட்டுறவு கொண்டனர். அப்பொழுதே எமக்குச் சந்தேகம். "இக்கூட்டுறவு நீடிக்குமா?" என்றெண்ணினோம். எண்ணியவாறே முடிந்தது. ஜனாப் அப்துல்கரீம் கனியும் திரு வி. எய்ச். டேவிடும் இருவர் பொறுப்பில்-இருவர் ஆசிரியத்துவத்தில் பர்மாநாட்டை ஏற்று நடத்தி இரண்டொரு மாதங்களுக்குள் பிரிந்துகொண்டனர். விரோதம் வளர்ந்து, வாய் முற்றி, கையும் கலந்து, அடித்துக் கொண்டதாக கேள்வியுற்று வருந்துகிறோம். ஒருவருக் கொருவர் நட்பு கொள்ளுவதற்கு முன்னால் ஒருவரையொருவர் நன்கறிந்து கொள்ளவேண்டும். இல்லாதபோது இடை நடுவில் நட்பு முறிந்துவிடும். நேற்று வெளிவந்த "பர்மாநாடு" கூறுவதிலிருந்து முறிந்த கூட்டு மறுபடியும் ஒட்டியிருப்பதாகத் தெரிகிறோம். ஆசிரியர் இருவரில் எவரோ ஒரு தனியாசிரியர் பேரில்லாது ஆசிரியன் என்ற ஸ.கச்சாற்றின்மேல் "நாமே முழுப் பொறுப்பையும் ஏற்றுள்ளோம்" என்று எழுதுகிறாரே அவர் யார்? ஜனாப் கரீம் கனியா? அல்லது திரு. டேவிடா? எவராயிருந்தாலும் அகலஇருந்து உறவு கொண்டாடட்டும். சிறுவையும் பிறையும் சேராவிட்டாலும் மோதிக்கொள்ளாதிருக்கட்டும்.

பதனால் அது இன்றைக்கெல்லாம் பௌதிகமாக மண்ணோடு மண்ணாய் மக்கிப்போயிருக்கும். உனது ஆத்மத்திற்குச் சொல்லலாமா? அதுவும் சயாப்தி யெய்திவிட்டது. திருத்தொண்டர் கூட்டத்தோடு-திலகன், லஜபதி, மோதிலால், முகமதலி, யதீந்திரன், பாபுக்கனு போன்ற தியாகமூர்த்திகளின் மத்தியிலே இந்தியாவின் இற்றைய சரித்திரத்தைக் கலைக் கதைபாரச் சொல்லிக்கொண்டிருப்பீர். எமது குரல் அவ்வளவு தூரத்துக்கெட்டுமா? இந்த 72 வருடங்களாக இந்தியர்களுக்காகப் பிரகாசித்த உமது ஒளிபொருந்திய கண்களாலே இந்தியர் வடிக்கும் கண்ணீரைக் காணப் போகின்றீரா? என்றாலும் ஒரேயொரு ஆறுதலிலேதான் நாங்கள் எங்கள் கண்களைத் துடைத்துக்கொள்ளுகின்றோம். நாங்கள் படும் கஷ்டத்தை-இந்தியா வளர்த்திருக்கும் தியாக நெருப்பின் வானவளர்ச்சியை-எங்களது தாய்மாரும், குழந்தைக் கடவுளரும் தீக்குளித்திருப்பதை எமது திலகருக்கும் தாஸருக்கும் எடுத்துச் சொல்லுவீரே அந்தத் தூதொன்றே போதும்.

1897ல் தென்னாப்பிரிக்காவில் காந்திஜியோடுழைத்த உனது உடலம் மறைந்துபோய்விட்டது. ஆனால் அவருக்குச்செலுத்திய சேனாபத்தியம் இந்திய குள்ளத்தில் எழுதப்பட்டிருக்கிறது. டர்பனில் "இந்தியன் ஒப்பீனியன்" என்ற பத்திரிகையை யெழுதிய உனது பேனா இப்பொழுதில்லை; ஆனால் மை மாத்திரம் எமது மனத்தில் காய்ந்ததில்லை. பர்மாவில் நீ வெளியிட்ட "யுனைட்டெட் பர்மா" (ஐக்கிய பர்மா) டிஸ்பார்ட்டட் பர்மா (பிரிக்கப்பட்ட பர்மா) வாகப்போவதைப் பார்க்க சகிக்காமல் கண்ணை மூடிவிட்டாயா?

கூர்ஜரத்திலே பிறந்து, தென்னாப்பிரிக்காவிலே சிறந்து, பர்மாவிலே இறந்த உன்னை எவர் மறப்பார்? இரங்கோனில் தெருத் தெருவாய் அலைந்து, வீடு வீடாய்ப் படியேறி, தேசியப் பிரசாரஞ்செய்த தேசிய பக்கிரியை-கள்ளப் பொக்கிஷை இன்று காணோம். கம்பூன்றிய கைபனாய், காவிக் கதர் சூடிய மெய்யனாய் இங்கு திரிந்தானே ஒரு காந்திப் பித்தன், நாட்டுச் சன்னியாசி அவனெங்கே? யென்று ஒவ்வொரு இந்திய ஹிருதயமும் கேட்கிறது. அவனுடலில்லை; ஆத்மா சாந்திப்பெற்றுவிட்டது.

திருப்பதி அம்பட்டன்.

திருப்பதி அம்பட்டன் வெட்டிக்காரப் பேர்வழி. நிறையக் காசு சம்பாதிக்கவேண்டுமென்று ஆசைபிடித்தவன். அவசர அவசரமாக சிரைக்கிறதில் காலேத்து மயிரை தப்பவிட்டுக் கூட தாறுமாறாய்த்தான் சிரைப்பான். ஒருவன் தலையிலே தண்ணீர்த் தடவியிருப்பான்; வேறொருவனுக்குப் பாதி சிரைத்திருப்பான்; இன்னொருவனுக்கு ஒரு இழுப்பு இழுத்திருப்பான். வேறொருவனை உட்காரவைத்திருப்பான். இவ்வாறு பலபேருக்குப் பிழைசெய்தாலும் காசுதான் அவனுக்குக் குறி. சிரைப்பதில் தப்பும் தவறும் நேர்ந்தாலும், நன்றாய்ச் சிரைக்கவில்லையென்ற கெட்டபேர் கிடைத்தாலும் காசுவந்தால் போதுமென்னும்கொள்கை திருப்பதி அம்பட்டனுக்குச் சரிப்பட்டுவரும்.

அம்மாதிரிதான் நமது சர்க்காரும் நம்மை சிரைக்கிறார்கள். மந்திரி முதல் போலீஸ் சேவகன்வரை எந்த இலாக்காவில் பார்த்தாலும் இப் பிழைகளைத்தான் செய்துவருகிறார்கள். சிறைச்சாலைகளின் நிர்வாகத்தை தனியாயெடுத்துக் கொண்டால் ஓட்டையில்லாத இடமே கிடையாது: அவ்வளவும் பொத்தல். கைதிகளை ஒருவனை நடத்துவதுபோல் இன்னொருவனை நடத்துகிறதில்லை; குற்றத்தின் தாரதம்மியமறிந்து தண்டிக்கிறதும்கிடையாது. அரசியல் கைதிகளானால் அவர்கள் பாடு இன்னும் ஆபத்து. தெருவில் பிச்சை வாங்கித்தின்று திரியும் வெள்ளையன்-குடிகார வெள்ளையன்-முடிச்சுமாறி வெள்ளையன்-கொலைகார வெள்ளையன்-கொள்ளைக்கார வெள்ளையன்-ஒருவன் குற்றஞ் செய்து தண்டிக்கப்பட்டால் அவனை முதல்வகுப்பு கைதியாக சகல சுகவசதிகளுடன் நடத்துகிறார்கள். அதே குற்றத்திற்காகவே அல்லது தேசோத்தாரமான ஸ்வாதந்தர்யம் விரும்பிய குற்றத்திற்காகவோ தண்டிக்கப்படும் இந்தியன் கேவலம் மிருகத்தை நடத்துவதிலும் துச்சமாய் நடத்தப்படுகிறான். மனிதர் எல்லோரும் சமம்; சமமாகவே எங்கும் எவராலும் எக்காலத்திலும் நடத்தப்படவேண்டும் என்பது அறிவாளிகள் கொள்கை. சிறைச்சாலை சீர்திருத்தஞ்செய்யும் பாடசாலை என்ற முறையில் இல்லாமல் வஞ்சம் தீர்த்துக் கொள்ளப்படும் வஞ்சகர் சாலையென்ற முறையில் நிர்வகிக்கப்படுமட்டும் அதன் ஓட்டைசாட்டைகள் மூடப்பெறமாட்டா. ஒரே குற்றத்தைச் செய்த இருவரை இருவிதமாகத் தண்டிக்கவும் இருவிதமாக நடத்தவும் மனித நீதியில் இடமிருக்க முடியாது. இருந்தாலும் இந்த சர்க்காரில் இவ்விதப் பிழைதான் செய்கின்றனர். இது கூடாதென எவ்வளவோ கூறியும்—இதற்காகவே யதீந்திரன், [illegible] விஜயன் போன்றார் உயிரைக் கொடுத்தும் சர்க்காரின் அசட்டுக்குணம், அறியாப் புத்தி, வஞ்சச் செயல்களெல்லாம் மாறவில்லை ஒரு சிலருக்கு சிறிது சௌகர்யத்தையும் பலருக்குப் பெருத்தகஷ்டத்தையும் மாறுதலென முதல், இரண்டு, மூன்று வகுப்பாக பிரித்து நடத்தி வருகின்றனர். ஒரு கைதி அவன் எத்தகைய குற்றத்தைச் செய்தவனாயினும் கல்வி, செல்வம், நாகரீகத்தின் தாரதம்மியப்படி முதல் வகுப்பிலோ, இரண்டாம் வகுப்பிலோ மூன்றாம் வகுப்பிலோ நடத்தப்படுகிறான். இத்தகைய பாகுபாடு கூடாதென்பதே காங்கிரஸ் வாதிகளின் தேசிய சீர்திருத்தக்காரர்களின் அபிப்பிராயம். என்றாலும் சர்க்காருக்கு அவர்களது புத்தியே நேரெனத் தெரிவதால் இவ்வாறு பிரித்து நடத்துகின்றனர். சரி. அதையாவது சரிவர—அவர்கள் வகுத்த சட்டப்படியே செய்கிறார்களா? கல்வியால் செல்வத்தால், நாகரீகத்தால் மிகுந்த ஒருவனை மூன்றாம் வகுப்பிலும் அவனிடத்தில் சம்பளத்திற்கு கூலிவேலை செய்யும் இன்னொருவனை முதல் வகுப்பிலும் நடத்துகிறார்கள். இது சர்க்கார் சட்டத்தை சர்க்காரே மீறிய செயல்.

சேத் ஜம்னாலால் பாஜாஜை விடப் பணத்திலோ, படிப்பிலோ, நாகரீகத்திலோ மிகுந்தவர் இந்தியாவிலாயினும் சரி உலகத்திலாயினும் சரி அதிகம் பேரில்லை. அவரை அவர் செய்த அரசியல் குற்றத்திற்காகமூன்றாம்வகுப்பில் வைத்திருக்கிறார்கள். ஸ்ரீமதி கஸ்தூரிபாய்த் தாயையும் அவ்வாறே 'ஸி' வகுப்பில் நடத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது. இதனால் சர்க்காரின் பைத்தியகாரச் செயல் பட்டவர்த்தனமாய் விளங்குகிறதல்லவா? நாம் நமது அபிப்பிராயத்தைச் சொல்லுவதானால் சேத் ஜம்னாலால் ஜீயையோ கஸ்தூரி மாதாவையோ கன்யமாய் நடத்தக் கேட்கவில்லை. எல்லோரையும் அவன் இந்தியனாயினும் வெள்ளையனாயினும் சரி, வேந்தனாயினும் வெட்டியானாயினும் சரி ஒரே விதமாகவே நடத்தவேண்டும். அதுவே தர்ம நீதியெனக் கூறுவோம்.

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

திவ்யாண் 245 மலர் 9 இதழ் 71 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை

DESOPAKARI

புதன் ஞாயிறு வெளியீடு.

210-36-வது வீதி இரங்கோன், (23-3-32) பங்குனிமீ 11௳ புதன்கிழமை

46-வது பூரி காங்கிரஸ்

காங்கிரஸ் வாரம் ஆரம்பமாகப்போகிறது இவ்வருடக் காங்கிரஸைக் கூட்ட ஏற்பாடுசெய்திருந்த பூரி பட்டணத்திற்கு-காங்கிரஸ்நகருக்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும காங்கிரஸ் ஸ்பெஷல்கள் இன்றைக்கெல்லாம் ஓடிக்கொண்டிருக்கும். இந்தியாவெங்குமிருந்து தலைவர்களும், பிரதிநிதிகளும், விசிட்டர்களும் கூட்டம் கூட்டமாகப் போய்க்கொண்டிருப்பார்கள். பத்திரிகைகளெல்லாம் காங்கிரஸ் நகரத்தின் சிறப்பைப்பற்றியும் தலைவர்களின் வருகை குறித்தும் பத்தி பத்தியாக எழுதத் தலைப்பட்டுவிடும். தமிழ்நாட்டுத் தலைவர் சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரோ, பாபு ராஜேந்திரப் பிரசாதோ ராஷ்டிரபதியாகமுடிசூட்டப்படுவார். வரவேற்பு வைபவங்களெல்லாம் தடபுடலாக நடக்கும். 40 குதிரை பூட்டிய ரதத்திலோ, ஆயிரம் யானைகள் கட்டிய தேரிலோ இந்திய மன்னன் ஊர்வலம் வருவான். புதுசு புதுசான திட்டங்கள் தலைவர்களின் மூளையிலே துள்ளிப் பாய்ந்துகொண்டிருக்கும். இதை வெழுமும் இப்பாவியின் எளிய மூளையிலே கூட ஒரு திட்டம் தட்டியதுண்டு. அதை யலங்கரிக்க அவன் அகராதிகளைப் புரட்டிப் புரட்டிப் வார்த்தைகளுக்காக அலைந்து திரிந்தான். ஆனால் "என்னைக் கண்ட பாவி எடுத்துவைத்து மூடிவிட்டாள்" என்றமாதிரி எல்லாம் முடிவடைந்துவிட்டது. ஒரே இருள்; அரசியலில் வெளிச்சமே கிடையாது, காங்கிரஸ் உதயமாகும் என்கிற அறிகுறிகூடயில்லை. அடக்குமுறை இடியும் குமுறலுமாயிருக்கிறது. அடிவானத்திலே சமாதானத்திற் கேதுவான மின்வெட்டுப்போன்ற ஒரு சிறு கோடு கூடக் காணோம். என்றாலும் இன்னும் இரண்டு தினங்கள் இடைநடுவிலிருக்கின்றன. சமாதானக் காற்று வீசினாலும் வீசலாம்; விடுதலைச் சூரியன் உதயமானாலும் ஆகலாம்; எவர் அறிவார். அரசியல் உலகம் நேற்றிருந்ததுபோல் இன்றைக்கில்லை; இன்றைக்கிருப்பதுபோல் நாளைக்கிருக்கப்போவதில்லை. நாம் எதிர்பார்ப்பதோ அல்லது எதிர்பாராததோ ஏதாவதொன்று நிகழ்ந்தேதீரும்.

இற்றைக்கு 47 வருஷங்களுக்கு முன்னதாக 1885ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட காங்கிரஸ் மஹாசபையின் வருடாந்திரக் கூட்டங்கள் அவ்வவ் வருடத்து டிசம்பர் மாதத்தில் கிறிஸ்மஸ் வாரத்தில் நடத்தப்பட்டுவந்தன. ஆனால் மஹாத்மா காந்தியின் கையில் காங்கிரஸ் ஒப்படைக்கப்பட்டதுமுதல் அதன் அம்சங்களும், கொள்கைகளும் முற்றும் மாற்றப்பட்டு புதுப் புதிய திட்டங்களால் திருத்தியமைக்கப்பட்டதுபோல் நடைமுறை காலத்தையும் லாகூரில் டிசம்பரிலிருந்து மார்ச்சுமாதத்திற்கு மாற்றினார்கள். அதிலிருந்து காங்கிரஸின் வாழ்க்கை சந்தேகாஸ்பதத்திலாகிவிட்டது. இம்மாற்றத்தால் 1929ல் கூடிய கூட்டம் 1930 முழுதுமே கூடாமல், 31 மார்ச்சில் அதுவும் அவ்வருட பிப்ரவரிமீ வரை சந்தேக நிலைமையிலிருந்து ஏதோ தெய்வச் செயலாய்—காந்தி—இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டதால் ஒருவாறு அவசர அவசரமாக கூட்டப்பட்டது. இதனாலும் இந்தியாவின் இறுதிப் போர் ஆரம்பிக்

கப்பட்ட 1930ம் ஆண்டு சரித்திரார்ப்பணம் அடைகிறது. இப்பொழுது நடக்கும் இந்த 1932ம் ஆண்டும் அவ்வாறே காங்கிரஸ் கூட்டத்தால் அபிஷேகிக்கப்படாமல் சமாப்தியெய்திவிடுமோ வென்றெண்ணவேண்டிய நிலைமையிலிருக்கிறது. ஆனால் இன்னும் 9 மாதங்கள் பாக்கி யிருக்கின்றன. இவை மத்தியில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்படலாம். காங்கிரஸ் பூரண வெற்றிபெற்றோ அல்லது காங்கிரஸுக்கும் சர்க்காருக்கும் சமாதானம் ஏற்பட்டோ இவ்வருடக் கூட்டத்தை நடத்தமுடிந்தாலும் முடியும். ஆனால் நமது எண்ணம் கைவாய் முடியாமல் சாத்தியப்படுமானால் நாம் குறித்தபடியே இம்மாதக் கடைசி வாரத்திலேயே நடத்தியும் விடலாம்.

46 வது காங்கிரஸ் நடத்தப்பட வேண்டும். ஆனால் நம்பிக்கையில்லை. 12 மணியடிக்க இன்னும் சில நிமிஷங்களே பாக்கி யிருந்தாலும் நாம் நினைத்தால் நடத்தியும் விடலாம். இவ்வளவு அடக்குமுறையின் மத்தியிலும் இத்தனை அவசரச் சட்டங்களி னிடையிலும் கூட நாம் மனம் வைத்தால்—நடத்தித்தான் தீருகிறது என்று பிரதிஞ்ஞை யெடுத்துக்கொண்டால் கண்டிப்பாய் காங்கிரஸை நடத்தியே காட்டலாம். காங்கிரஸ் பிறந்து இந்த 46 வருடங்களும் விடாமல்—தடைப்படுத்தப்படாமல் நாம் நடத்தி வந்த நமது தேசியத் திருச்சபையை இவ் வருடம் நடத்தாமல் விடலாமா? நடத்தித்தான் தீரவேண்டும்; நடத்தத்தான் போகிறோம் என்று இந்தியா வெங்கும் ஒரேயொரு சப்தம் கேட்டால போதும் நடத்தியே விடலாம்; சட்ட விரோதமான கூட்டத்தை நமது சட்ட பூர்வமாக நாம் ஸ்தாபித்தும்விடலாம். இந்தியர்களே! எமது பிரிய இந்தியர்களே! என்ன சொல்லுகிறீர்கள்? நடத்தவேண்டும் என்கிறீர்களா? வேண்டாம் என்கிறீர்களா? இரண்டி லொன்றைச் சொல்லிவிடுங்கள். வேண்டும் என்பீர்களாயின்—நடத்தத்தான் வேண்டுமென்றால் அதற்கு ஒரேயொரு வழிதானுண்டு. அவ் வழியைப் பின்பற்றினால் நிச்சயமாய்—சந்தேகமில்லாமல் காங்கிரஸை நடத்துவது மாத்திரமில்லை பூரண சுதந்திரமும் பெற்றுவிடலாம். ஒரே வேட்டில் இரண்டு பக்ஷிகளைச் சுடுவீர்கள் விரும்பாதிருப்பீர்களா? அப்படியானால் அவ்வழியைச் சொல்லிவிடுகிறேன். சுலபமா யிருந்தால்—சாத்தியமானதுதான் என்று தோன்றினால் ஒப்புக்கொள்ளுங்கள்; உடனே அனுஷ்டானத்திற்கும் கொண்டுவந்து விடுங்கள். இந்தியர்கள் எல்லோருமே இந்தியாவின் ஸ்வதந்திரத்திற்காக உயிரைக் கொடுக்க வேண்டும்—உடலைச் சாய்க்க வேண்டும்—பொருளை யிழக்க வேண்டும்—தடியடி படவேண்டும்—சட்டமறுப்புச் செய்யவேண்டும்—சிறை போகவேண்டும் என்றால் "இதென்னடா ஆபத்து இவ்வளவு பாடும் பட யாரால் முடியும்?" என்று ஒரு பெருமூச்சு விட்டு ஓய்ந்து உட்கார்ந்து விடுவீர்கள். நாமும் அதைத்தான் செய்யச் சொல்லுகிறோம். ஒரே ஒருநாள்—வெறும் 24 மணி நேரம் இந்தியாவெங்கும் ஒரு நிரந்தரமான—கூச்சல் குழப்பமில்லாத சாந்த நிலவட்டும். இந்தியர்கள் எல்லோரும் அன்றைக்கு அவரவர் இருந்த இருந்த இடத்தில் அப்படி அப்படியே இருந்து விடட்டும். உழவன் உழப் போகவேண்டாம். வியாபாரி கடையைத் திறக்கவேண்டாம். தொழிலாளி தொழிலைச் செய்யவேண்டாம். மாணவன் பள்ளிக்குச் செல்லவேண்டாம். எந்த உத்தியோகஸ்தனும் வேலைக்குப் போகவேண்டாம். போலீஸ்காரன் தடியைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு ரோந்து சுத்தவேண்டாம்; சிப்பாய் தனது துப்பாக்கியைத் துலக்கவேண்டாம் அவனவன் வீட்டில் உள்ளதை காய்ச்சிக் குடித்துக்கொண்டு அவனவன் வீட்டிலேயே இருந்துவிடட்டும். ஊரை யெல்லாம் குடிபோன ஊராக்கி தெருக்களை யெல்லாம் ஜன நடமாட்டமும் வண்டிப் போக்குவரத்தும் இல்லாது செய்து எல்லோரும் சும்மா இருந்துவிட்டால் எந்த சர்க்கார் சட்டம் செல்லுபடியாகுமென்று பார்த்துவிடுவோம்—எந்த அரசாங்கம் நடக்குமென்று பார்க்கலாம் இந்திய சர்க்கார் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிடும். தோட்டி முதல் தொண்டமான் வரை—வேந்தனும் வெட்டியானும் இங்கிலீஷ்காரனே வந்து அமுல் செலுத்த முடியுமா? முடியாது அதனால் காந்திஜீ உள்பட்ட காங்கிரஸ் தலைவர்களை விடுதலை செய்து இந்தியாவின் சர்வ கட்சித் தலைவர்களையும் ஒன்று சேர்த்து பிரிட்டிஷ்காரர்களே இந்தியாவை இந்தியர்களிடம் கொடுத்துவிட்டுப் போய்விடுவார்கள். இல்லாவிட்டால் நாமே நமது சுயராஜ்ய சர்க்காரை நிர்மாணித்துக் கொள்ளலாம். அப்புறமென்ன பூரியில் நாம் குறிப்பிட்டிருந்த அதே நாளில் காங்கிரஸை நடத்திவிடலாமல்லவா?

எமது பிரிய பகத்சிங்குக்கு!

எமது பிரிய பகத்சிங்குக்கு இன்று காணிக்கை செலுத்திவிடவேண்டும். போன வருடம் இந்த மாதம் இந்த நாளில் இந்த நேரத்திலேதான் அவரும், அவரது தோழர்கள் சுகதேவரும், ராஜகுருவும் தூக்குமேடையேறினார்கள்; பிறந்த மண்ணை இரத்தத்தால் அபிஷேகித்தார்கள்; தேசத்திற்காக பலிகொடுத்துக் கொண்டார்கள்.

பகத்சிங்கும் அவரது தோழர்களும் எரிமலை போன்ற தேசாபிமானிகள். அவர்கள் இந்நாட்டை நேசித்ததுபோல்-இந்நாட்டை மீட்க முயன்றதைப்போல் இந்தியாவில் அதிகம் பேர் செய்யவில்லை. அவர்களெடுத்துக்கொண்ட பிரதிக்ஞையை—வீரசபதத்தை அவர்களைப்போல் வேறு எத்தனைபேர் கிரியாம்சையில் செய்து காட்டினார்கள்? அரசியலில் அவனவன் எந்தெந்தக் கொள்கையைக் கைக்கொண்டிருந்தபோதிலும்—ஹிம்ஸை வழியையோ அஹிம்ஸை வழியையோபின்பற்றினாலும் கூட பகத்சிங்கின் தேசாபிமானத்தை—வீரத்தை எவரும் சந்தேகிப்பதற்கில்லை. அவரது நாட்டுப்பற்றைப் போற்றவேண்டும்; அவரது வீரத்திற்குத் தலைவணங்கவேண்டும்; அவரது தியாகத்திற்குக் காணிக்கை செலுத்தவேண்டும். ஆனால் அவர் பின்பற்றிய வழியை—இரத்த வெறிபிடித்த செயலை புரட்சிக் கொள்கையை நாம் அடியோடுவெறுக்கிறோம். அவர் நடந்த பாதை அதிக காடு முரடானது, அஹிம்ஸை இந்தியா விரும்பாத மார்க்கம். எதிரியேயாயினும் எதிரியின் இரத்தத்தைச் சிந்தாமல் சாத்விகத்தால் வெல்லவிருக்கும் இந்தியா பகத்சிங்கின் பாதையைப் பின்பற்றவே கூடாது.

இளவயது வாலிபர்கள்—உலக இன்பத்தை எவ்வளவோ அனுபவிக்கவேண்டியவர்கள்-"சீ! சுதந்திரமில்லாத வாழ்வொரு வாழ்வா? என்ன விலை கொடுத்தும்-உயிரைப் பணமாக வைத்தேனும் அதை அடைந்துவிடுகிறது'' என்ற ஜீவ உணர்ச்சியில், காம்பீர்யமான தலையெடுப்பில், முனை மடங்காத நெஞ்சுத் துடுக்கில், கவலையில்லாத புன்சிரிப்பில் பக்திமயமான பகவத் கீதையைப் பாடிக்கொண்டே தூக்கு மேடையில் தொங்கினார்கள். மூவரும் அன்று காலமே யெழுந்து புதுமாப்பிள்ளைபோல் அழகாய் உடுத்திக்கொண்டு ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு எங்கோ ஊர்ப் பிரயாணம் போகிறவர்கள்போல், மூட்டை முடிச்சுகளைக் கட்டி யெடுத்துக்கொண்டு பலிபீடத்திலேறினார்கள். ஜெயலக்ஷ்மி அவர்களை மணந்து கொண்டாள். இன்றைக்கெல்லாம் போக பூமியிலே வெற்றிதேவியோடு கூடிக் குலாவிக்கொண்டிருப்பார்கள். வீர தியாகிகள் வாழ்க.

சர்தார் பகத்சிங் தூக்கிலிடப்படுவதற்கு சில மணிகளுக்கு முன்னால் தனது இளைய தம்பியான பத்துவயதுள்ள குல்தாருக்கு எழுதிய கடிதம்.—

எனதருமைக் குல்தார்!

உனது கண்களில் கண்ணீரைக் கண்ட பொழுது நான் பெரிதும் துயரமடைந்தேன். இன்று நீ சொன்ன வார்த்தைகளில் எவ்வளவு உணர்ச்சி யிருக்கிறது தெரியுமா! என்னால் பொறுக்கமுடியவில்லை.

கண்ணே! மன உறுதியோடு படித்துவா. சுகத்தையும் கவனித்துக்கொள். மனந்தளராதே. அவ்வளவுதான் அதிகமாக என்ன சொல்லட்டும்; இதோ இந்தப்பாட்டைக்கேள்.

விதியை நோவதில் பயனில்லை
உலகமெல்லாம் நம்மை எதிர்த்து
நின்றபோதிலும் தீமையில்லை
விதியுடன் போரிடுவோம் வா.

தமது தோழருக்கும் தேசமக்களுக்கும் விடுத்த நிருபம்:—

நண்பர்களே!

எனது வாழ்நாள் மணிக்கணக்கில் இருக்கிறது. சூரியோதயம் (சுயராஜ்யம்) வந்தவுடன் ஆடி அணைந்துவிடும் விடியற்கால விளக்குபோல் இருக்கிறேன்.

எங்கள் நோக்கமும். ஆவேசமும் உலகத்தில் மின்சார சக்தியைப்போல் எங்கும் எழுச்சியை உண்டாக்கும்.

இந்தக் கைப்பிடிமண் (தமது உடம்பைக் குறிப்பிடுகிறார்) அழிந்துபோனாலென்ன?

நல்லது, போய்வருகிறேன். எனது பிரிய இந்தியரே! நீங்கள் சுகமாயிருங்கள்! நாங்கள் நீண்ட யாத்திரை போகிறோம். துணிச்சவிழந்துவிடாதீர்! ஊக்கத்தையும் கைவிட்டுவிட வேண்டாம். சரி நேரமாகிறது, நமஸ்தே.

உங்களின் பிரிய பகத்சிங்.

சாவின்றி ஸ்வர்க்கமில்லை.

(நிலமணிவாசகன்.)

"உயிரை விட்டவன் வாழ்வான்
விடாதவன் வீழ்வான்"—கிறிஸ்துமஹான்,

இல்லை என்று எவரும் சொல்லமாட்டீர்கள். எப்பொழுதோ—திரேதா யுகத்தில் ஒரு தருமர் வைகுந்தம் போனார் என்று நீங்கள் சொன்னாலும் சொல்லக்கூடும். அதெல்லாம் இக் காலத்திற்கு வேண்டாம்; முடியவும் முடியாது.

பயமெனும் பேயானது மனிதனது வீர குணத்தை—வைராக்கிய வலுவைக் குலைத்து நாசமாக்குகிறது; மனித வர்க்கத்தையே நடுங்கச் செய்கிறது. பயத்தி லெல்லாம் பயங்கரமான பயம் மரண பயம். மரணத்திற்குப் பயப்படாதவர்கள் யாருமில்லை. இறப்பு வேண்டாமெனறே நம் நாட்டு மெய்யடியார்கள் தவத்தைக் கண்டு அதை நகர்வழிலேயே தங்கள் காலத்தைச் செலவழித்தார்கள், "பிறப்புண்டேல் இறப்புண்டு" என்றபடி தோன்றியது கட்டாயம் மறையவே செய்யும். இந்நியதிக்கு விலக்கு விதி கிடையாது. எவனும்—தோட்டியாயினும் சரி தொண்டமானாயினும் சரி மரணம் சம்பவிக்கப் போகிறதென்றால், உடனே திடுக்கிட்டு. வேலையைப் போட்டுவிட்டு, மரண மேற்படாதிருக்க வழி யேதாவது அகப்படாதாவென அலைந்து திரிவான். ஆனால், நமக்கு மரணமில்லாமல் ஸ்வர்க்கம் கிடைக்குமா என்பதை சிந்திக்கிறோமா? இல்லவே இல்லை. "கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை" என்றபடி ஸ்வர்க்கமும் வேண்டும், இறக்கவுங்கூடாது, என்றெண்ணுகிறோம். மரணத்தை எம் மனித உடல் எதிர் நோக்கி நின்று, அதற்குள் மிஞ்சி நிற்கும் வாழ்வில் வேண்டுவன செய்து நிற்கிறதோ, அது நிச்சயமாய்—உறுதியாய் வைகுந்தமோ கைலாயமோ எய்தும் என்பதில் எட்டுணையும் ஐயமே இல்லை. மரணம் எளிதல்ல. தன் தேகம், தன் நிலபலம், மனைவி, மக்கள், நகை நட்டு, ஆடுமாடு, வீடு கன்று ஆகிய இவ்வுலகப் பொருள்களின்மேல் தான் வைத்திருக்கும் பாசம் அறுபட முடியாமல், ஏங்கித் தவித்து, வெம்பி வெதும்பி, பின் தன் சக்திக்கு—தன் ஆசைக்கு மாறாக, இறந்துபோகிறான். சாகும்போது தன் வாழ்வின் புண்ணிய பாவ அனுபவங்களை தன் வறண்ட நெஞ்சில் வலிய நினைத்து நினைத்து வருந்துகிறான். கடைசியில் அம் மனித வாழ்வு ஒரு முடிவுக்கு வந்துவிடுகிறது,

இவ்வளவு வேதாந்தமும் எதற்கு? ஒரே வரியில் பச்சைத் தமிழில் சொல்ல வேண்டுமென்றால் "தியாகமின்றி ஸ்வதந்திர ஸ்வர்க்கமில்லை" என்பதற்கே நாம் ஒவ்வொருவரும் நம்மில் இந்தியச் செங்குருதி ஓடும்வரை. நாம் இந்தியக் காற்றை சுவாசிக்கும்வரை-நாம் இந்திய மண்ணில் நடமாடும்வரை—தியாகத்திற்குத் தயாராய் இருக்கவேண்டும்—தியாகிகளாக மாறவேண்டும். தியாகத்திற்கு பயந்து விடுதலை விடுதலை என்றால் எங்கிருந்து வரும் விடுதலை? விடுதலைக்கு வேண்டிய—அவசியமான முயற்சி தியாகம்! தியாகம்! தியாகமே! சிலருக்குச் சுயாட்சிமேல் வெகுவான—பலே பலே கனவு—கரையற்ற காதல். ஆனால் எல்லாம் சமையற் கட்டிலேதான்; வெளியில் சுத்த சைபர். இதனால்தான் நம்மை இந்தியன் "குலைக்கும் நாய்களெல்லாம் கடிக்கும் நாய்கள் அல்ல", என்றானும். கடித்திருந்தால் இவ்வவமானம் நமக்கு வருமா? அயன் வாயும் இப்படி செப்பியிருக்குமா? நம்மால் எவ்வெவ் வழியில் தியாகியாக மாற முடியுமோ, அவ்வவ் வழியில் கட்டாயம் நாம் உண்மையான இந்தியராயின் நாம் உண்மையாகவே இந்தியாவிற்கு விடுதலை விரும்பினால் நுழைந்தே தீரவேண்டும். ஆதலால் என்ன கஷ்டம் வந்தாலும், அதற்கும் தயாராய் இருக்கவேண்டும். உலகையும், அதிலுள்ள நமது உலகப் பொருளையும் இழந்தால்தானே ஸ்வர்க்கம் கிடைக்கும்.

கதர் கட்டுவது ஒரு தியாகம்; காங்கிரஸை போற்றுவது ஒரு தியாகம், சத்தியாக்கிரகப் போரில் முன் பின் திரும்பிப் பாராமல் உடல் பொருள் ஆவி உள்ள தெல்லாவற்றையும் பலி தியாகம் பண்ணிவிட்டிறங்குவது எல்லாவற்றிலும் சிறந்த தியாகம். இந்தியர்களை சாதி மத பேதமின்றி சகோதரர்களாகப் பாவிப்பது வேறொரு தியாகம், பெண்ணுரிமை நல்குவது மற்றொரு தியாகம். இன்னும் எத்தனை எத்தனையோ தியாகங்கள் இருக்கின்றன. அவை யனைத்தையும் செய்துவிடவேண்டும்.

நமது பக்கத்தில்

சர்க்காரின் ஆட்சிமுறையையும், அடக்குமுறையையும் கண்டித்து கண்டித்து நமது கையும் சலித்துவிட்டது. தனக்குத் தானேயும்—பிறர் சொல்லியும் அறியாத சாம்பிராணிகளுக்கு நாம் இம்முறை எதுவும் சொல்லப்போவதில்லை. எல்லாம் அறிந்த இந்தியருக்குச் சொல்லிப்பார்த்துவிடலாம். ஒரு தனி மனிதனின் ஸ்வதந்திரத்திற்கோ அல்லது பல மனிதர்களைக்கொண்ட ஒரு நாட்டின் ஸ்வதந்திரத்திற்கோ ஆளுகிறவன் ஆளப்படுகிறவன் இருசாராருமே ஜவாப்தாரிகளாவார்கள்; இருவர் பக்கத்திலும் குற்றமும் பாபமும் இருக்கவே செய்கிறது. ஸ்ருஷ்டிக்கும்போதே-ஸ்ருஷ்டிக்கடவுளால் ஒவ்வொரு மனிதனுக்கும் சொந்தமாகக் கொடுக்கப்பட்ட உரிமையை—ஸ்வாதந்தர்யத்தை இன்னொருவன் பறித்துவைத்துக்கொண்டு தானே ஏகபோகமாய் ஆளுவது—அனுபவிப்பது தப்பென்றால்-கடவுளுக்கும் மனிதனுக்கும் சம்மதமில்லாத செயல் என்பீர்களாயின் தனது ஸ்வாதந்தர்யத்தைப் பறிகொடுத்து இன்னொருவனுக்கு அடிமையாயிருப்பதும் குற்றம்-பாபம் என்றே சொல்லவேண்டும். ஒவ்வொரு மனிதனும் அவனவனுக்கு ஆண்டவனால் அளிக்கப்பட்டிருக்கும் கை, கால்களால் உழைத்து அவனவன் தொப்பையை அவனவனே நிரப்பிக்கொள்ள வேண்டும் என்பது கட்டளை. அதை மறந்து இன்னொருவன் வியர்வையில் பிழைப்பது பாபமாகும். பொதுவுடமை வேதாந்தம் பேசுகிறோம் என்பீர்கள். இல்லை. மனிதன் பொதுவுடமையல்ல; மனிதனின் ஸ்வதந்திரமும் பொதுவுடமையில்லை. ஒவ்வொரு மனிதனும் அவன் அவனுக்கே உரித்தானவன்; அவனவன் மனச்சாக்ஷியின்படி இன்னொருவனுக்குப்பாதகமும் சாதகமும் கூடச் செய்யாமல் தன் தன் போக்கில் வாழ்ந்துவிட்டால் உலகத்தில் சண்டை சச்சரவுகளுக்கும், ஆள்வினைக்கும் அடிமைத் தன்மைக்கும் இடமில்லை. இன்னொன்றுகூடக் கூறமுடியும். மனிதன் ஏன் தர்மம் செய்யவேண்டும்? என்ற கேள்வியைக்கூடக் கேட்கலாம். ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு ஏதோ ஒன்றைத் தருமாக-இனாமாகக் கொடுக்கிறான். அதை யேற்றவன்-அப்பொருளை உழைத்துப் பெறுவதற்கு பதிலாய் இலகுவில்-இலவசமாய் எவ்வித கஷ்டமும் படாமல் பெற்றதால் சோம்பலையும் ஸ்வீகரிக்கிறான். சோம்பல்காரன் குறும்புசெய்வது இயல்பு. அதன்படி பல தீங்குகளைச்செய்கிறான். பூமியில் தோன்றிய காரியத்தை முடிக்காமல்-கடவுள் அவனை எதற்காக ஸ்ருஷ்டித்தாரோ அதைமறந்து இறந்துவிடுகிறான். இதனால்தருமம் செய்தவனும் தருமம் ஏற்றவனும் அபராதிகளாகிறார்கள். அதேபோன்றே அரசனும் அடிமையும் ஆகின்றனர். அரசன் தன்னொரு நலத்திற்காக இன்னொருவனுடைய உழைப்பையும், உடலையும் அதனால் சம்பாதிக்கப்பட்ட பணத்தையும் பறித்துக்கொள்ளுகிறான். அடிமை தன் உடலையும் உழைப்பையும் பொருளையும் அரசனுக்கு விற்கிறான். இவை யிரண்டையுமே கடவுள் விரும்பவில்லை. அவனவன் அனுபவித்துக்கொள்ளுவதற்காகக் கொடுக்கப்பட்ட வொன்றை விற்கவும் வாங்கவும் கடவுள் இஷ்டப்படுவாரா? குட்டக் குட்டக் குனிந்தவனும் மூடன்; குனியக் குனியக் குட்டியவனும் மூடன் என்பது வெறுஞ் சொல்லில்லை; ஆழமான அர்த்தம் இருக்கிறது.

பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை அடக்கி ஆண்டுகொண்டிருக்கிறார்கள். உள்நாட்டுக் கைத்தொழிலை-உற்பத்தியை யழித்து வியாபாரத்தை யொழித்து தங்களது வர்த்தகத்தை வளர்த்து வருகின்றனர். அடிமை நாடாகியதுமல்லாமல் இங்கிலாந்தின் சந்தையாகவும் செய்துவிட்டார்கள்: இராணுவ மடமாகவு மாக்கி விட்டனர் இந்தியர்களுக்குக் குறைந்த சம்பளமும் வெள்ளையருக்கு ஏராளமான சம்பளம் உபகாரச் சம்பளமும் கொடுத்துவருகின்றனர். இங்கிலாந்துக்காக இந்தியா உழைத்துச் சாகிறது என்ற நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டனர். இருந்தாலும் இக்குற்றத்திற்கு முழுதும் அவர்களே பொறுப்பாளிகளல்ல. நாமும் அவர்கள் அளவுக்கு அபராதம் இறுத்தவர்களேயாகிறோம். அப்படியானால் இருசாராரும் ஏதாவதொரு சமரஸமான முடிவுக்கு வரவேண்டும்-பிராயச்சித்தம் தேடிக்கொள்ள வேண்டும். பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை விட்டு விலகிக்கொண்டு இந்தியர்களிடம் தாங்கள் செய்துகொண்ட பிழைகளுக்கெல்லாம் மன்னிப்பு வாங்கிக் கொள்ளட்டும். இந்தியர்களுக்கு பிராயச் சித்தம் பிரிட்டிஷ்காரர்களுக்கு பிரிவுபசாரப் பத்திரம் படித்துக் கொடுப்பதைத் தவிர வேறு

இரத்த வெறி : : ஏ. ஜி. கார்டினர்.

கிழ்நாட்டில் சீனமும் ஜப்பானும் மோதிக்கொண்டிருப்பதை நினைக்க—கான 1914ம் வருஷத்து ஜூன்-ஜூலை மாதத்தின் சிம்ம சொப்பனம் தோன்றுகிறது. செராஜிவோவில் வெடித்த ஒரேஒரு தோட்டா ஒரேயடியாய் நாலு வருடங்கள் ஐரோப்பாவெங்கும் இரவு பகலாய் ஓய்வு ஒழிவில்லாமல் வெடித்துக்கொண்டிருந்தன. ஒரேயொரு உயிருக்காக எத்தனையோ கோடி உயிர்கள் கொல்லப்பட்டன. ஒரேயொரு உடலுக்காக எத்தனையோ உடல்கள் சுட்டுச் சாய்க்கப்பட்டன. 18 வருஷங்களுக்குப் பின்னால் இப்பொழுது நினைத்தாலும் நெஞ்சுதிடுக்கிடக்கூடிய அக்கோரமான யுத்தமிருகம் கிழக்கே தோன்றியிருக்கும் தோற்றத்தில் ஐரோப்பா மாத்திரமில்லை முழு உலகமும் பீதிகொண்டிருக்கிறது.

செராஜிவோவின் தெருவிலே ஆர்ச்டியூக் பெர்டினண்டு சுட்டு வீழ்த்தப்பட்ட ஜூன் மாதத்திலே ஆயிரத்தில் ஒருவனாவது தனக்கும் அக்கொலைக்கும் சம்மந்தமில்லையென்றெண்ணினனா? செர்வியா தேசத்துப் பன்றியை ஆஸ்திரியா தேசம் இறக்குமதிசெய்ய மறுத்துவிட்டால் நமக்காவதென்ன? நமது வேலையை நாம் பார்த்துக்கொண்டிராமல் பிரிட்டனும் ஏன் அப்பெரு நெருப்பில் குதிக்கவேண்டும்? அல்ஸ்டரில் ஏற்பட்ட புரட்சிக் கலகத்தை நாம் பார்த்துக்கொண்டு இருந்துவிடக்கூடாதா? ஒரேயொரு நெருப்புக்குச்சியால் ஊரையே கொளுத்திவிடலாமென்பதுபோல் செராஜிவோவில் பிடித்த ஒரு சிறு நெருப்பு உலகத்தையே எரித்துவிட்டது.

அதேபோன்றுதான் இப்பொழுதைய சீன-ஜப்பான் சண்டையும் ஏற்பட்டது. சென்ற தகஷ்ணுபணருறவில் ஜப்பான், மஞ்சூரியாவுக்குத் தனது சேனையை யனுப்பிற்று. ஒப்பிட்டுப் பார்த்தால் காரணம் அத்துணை பிரமாதமானதில்லை. சின்னதோர் விஷயத்திற்காகவே தகராறு முற்றிச் சண்டைமூண்டதென்னலாம். செராஜிவோவில் ஏற்பட்ட கொலையால் உலக சமாதானம் பாதிக்கப்படக் காரணமில்லையென்பதில் எவ்வளவு அளவுக்கு பொருத்தமிருந்ததோ அவ்வளவு அளவுக்கே மஞ்சூரியா தகராறும் உலக சமாதானத்தைப் பாதிக்கமுடியும். என்றாலும் நெருப்புப் பற்றிவிட்டது. 1914ல் ஏற்பட்டதைப்போல் உலகமும் பற்றியெரிந்தாலும் எரிந்துபோகலாம்.

முழுஉலகத்தையும்ஒருவெடிக்குண்டுசாலையோடு ஒப்பிடலாம். ஒரு இடத்தில் நெருப்புப் பிடித்தால் அதன் கடைசி எல்லையில்-அது எவ்வளவு தூரத்துக் கப்பாலிருந்தாலும் பற்றிக்கொள்ள முடியும். யுத்தம் வேண்டும் என்று எவருமே ஸ்வபாவத்தில் எண்ணுகிறதில்லை. என்றாலும் யுத்தம் வந்துவிட்டால் தன்னையறிந்தோ அறியாமலோ எல்லோரும் அதில் இறங்கிவிடுகின்றனர். யுத்தத்தின் கஷ்டநஷ்டங்கள் இன்னதெனத் தெரிந்திருந்தும் எல்லோரும் அதன் பலாபலனைச் சிந்திக்காமல் சித்தமாகிவிடுகிறார்கள்.

ஏதாவது ஒரு மாயா சக்தியால் உலகம் மயக்கப்பட்டு மனிதவர்க்கம் எல்லா ஆயுதங்களையும் இன்றைக்கு எறிந்துவிட்டால் நாளைக்கே சமாதானத்தை சாத்திய மாக்கிவிடலாம்.

ஒவ்வொரு மனிதனும்—ஒவ்வொரு நாடும் தனக்குள்ளதைக்கொண்டு திருப்தியடையாமல் பேராசைப் பேய் வயப்பட்டு-இரத்தவெறி மூண்டலைகிறவரை யுத்தமென்பது உலகத்தில் இருக்கத்தான்போகிறது. ஒருவனுக் கொருவன் பயப்படும்வரை ஆயுதப் பரிஹாரணமென்பது வெறும் வாய்வதாந்தமல்லாது உண்மையில்லை. எதிர்காலத்தில் திர்க்கமான நம்பிக்கை மனித உள்ளத்தில் வேர்கொள்ளாதமட்டும் நாகரிகம் வளர்ச்சியடைந்துவிடாது.

கிடையாது. கைத்தொழில் ஆதிக்கம், வியாபாரப் பெருக்கம், இராணுவ அமைப்பு, பொக்கிஷ க்ஷேமம், ஜனநாயகத்துவம் இவைகளையெல்லாம் நம்மிடமிருந்து எவர் பறித்துவைத்திருக்கிறார்களோ அவர்களிடமிருந்து என்னவிலை கொடுத்தும் எவ்வளவு பலிதியாகம் செய்தும் கைப்பற்றிக்கொள்ளவேண்டும். காந்திஜியின் கண்காணிப்பும்சத்தியாஹிரகத்திட்டமும் சகித்தற் கொள்கையும் கிடைத்தபின்னர் இந்தியாவுக்கு இனிப் பயமில்லை. ஆனால் ஒன்றுபட்ட உழைப்பும், இணக்கமான திட்டமும் தான் தேவை,

அம்மா விளையாடு’ரு’.

எமது நண்பர் ஒரு நாட்டுப் வைத்தியம் தினம் ஒரு வேளையாவது எம்மைக் காணாவிட்டால் அவருக்குக் கண்ணடையாது; எமக்கும் அப்படித்தான். ஒரு நாள் மாலை வழக்கம்போல் வந்தார். அவசர அவசரமாகப் பார்த்துவிட்டு செலவு வாங்கிக்கொண்டார். அவசரம் அவரது பின்னடைப் பிடித்துக்கொண்டிருந்தது. ஏன் என்று கொஞ்சம் கலவரத்தோடு கேட்டோம். “வீட்டிலே அம்மா விளையாடு’ருள்” என்றார். எமக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவர் பேசுவது ‘தமிழ்’தானா என்னும சந்தேகம் கூடப் பிறந்ததுண்டு. பெருஞ் சிரமப்பட்டு விசாரித்ததில் அவரது மனைவியார் வைசூரி வாய்ப்பட்டிருப்பதாகத் தெரிந்தது. “அட! கர்நாடகமே! என்று எமக்கு நாமே சொல்லிக்கொண்டு அவரை விடுதலை செய்துவிட்டோம்.

இலங்கையிலே வைசூரி நோய் மிகுந்திருக்கிறது. வீடுதோறும் என்று கூடச் சொல்லிவிடலாம். வைசூரி யென்பது தொத்து நோயாகையால் ஒரு பெரிய நகரத்தில் இவ்வளவு தூரம் இவ்வளவு சீக்கிரத்தில் பரவி விட்டிருப்பதில் ஆச்சரியமில்லை. இதைக் கண்டதும் எமது நண்பரின் ‘அம்மா விளையாட்டில்’ எமது ஆராய்ச்சி பாய்ந்தது. சிந்தனை செலுத்தினோம். எல்லாம் கலவர மெய்தி ஒரே குழப்பமாயிருந்தது. வைசூரி மனிதனை வாட்டி வதைக்கிறது; எலும்புருக்கி நோய்போல் உள்ளூற உருக்குகிறது; சாகவும் சாகிறான். இதை விளையாட் டென்கிறார்களே என்றெண்ணினோம். ஆனால் அதன் அர்த்த மின்னதென்பது பின்னால்தான் விளங்கிற்று. ஹிந்துக்கள் தெய்வ நம்பிக்கை யுடையவர்கள். அவர்களது முன்னையர் செய்த எந்தக் காரியத்தையும் தெய்வார்ப்பணமாகவே செய்தார்கள். ஒவ்வொன்றையும் தெய்வத்தோடு—தெய்வத்தின் பெயரால் செய்வதால் அவர்களது க்ருமத்தில் “கர்ம கர்த்தவ” ஸ்புரித்து விளக்குகிறது. அதனால் அவர்கள் எதுவையும் தெய்வத்துக்குப் பயந்தே செய்கிறார்கள். அப்படியிருக்க நோக்கத்துடனேயே வைசூரியையும் கொடூரமான சக்தியின் பெயரால் அழைத்தனர் அழைக்கிறனர். மனித தேகத்திலிருக்கவேண்டிய உஷ்ணத்திற்குச் சற்று அதிகரித்தவுடன் உடம்பில் அனல்கொண்டு கொப்புளங்கள் தோன்றுகின்றன. அதனால் சுத்தமாகவும் சுகாதாரத்தோ டொட்டியும் நோயாளி மாத்திரமில்லை, ஒரு வீட்டாரோ அல்லது ஒரு ஊராரோ வாழவேண்டும். தொத்து நோயாகையால் தேகச் சேர்க்கை கூடக் கூடாது. இவ் விதிகளை வெறுமனே சொன்னால் ஜன சமூகம் மீறினும் மீறக்கூடும். அதற்காகத்தான் ‘மஹா மாரி’ யென்றும் ‘அம்மை’ யென்றும் அழைத்துத் தெய்வ பயத்தால் நியதியை நிலை நாட்டினர். இதற்கு மருந்து சாப்பிடக் கூடாதென்பதும் இயற்கை வைத்தியம். உஷ்ணத்திற்குக் குளிர்ச்சிப் பொருளைக் கொண்டு சரிப்படுத்துவதென்னும் வைத்திய முறையும் இருக்கிறது. இருந்தாலும் நண்பர் வைசூரியை “அம்மை” என்று அழைப்பதில் எமக்கு ஆட்சேபனையில்லை.

ஏதோவொரு காரணத்தைக் கொண்டோ இல்லாமலோ இருவர் சண்டையிட்டுக்கொண்டால் மூன்றாவது மனிதன் ஏன் அதில் தலையிடுகிறான்? அதனால் அவனுக்குப் பிரயோஜனம் உண்டோ இல்லையோ அதைபபற்றிச் சிந்திக்காமல் மனத்திலேற்பட்ட மின்வெட்டுப்போன்ற தேசாவேச உணர்ச்சியால் அவனும கைகலந்து நெருப்பை வளர்த்துவிடுகிறான். இதனாலேதான் சமாதானம் சாத்யமற்றதாகிறது.

1919ல் போர் நிறுத்தம் செய்யப்பட்டு வெர்ஸைல்ஸில் சமாதான ஒப்பந்தம் கையெழுத்திட்டபோது ஒருபெரிய ஹிமாலயத் தவறு ஏற்பட்டுவிட்டது. இராணுவ சம்பிரதாயத்தை யொழித்து கொலைக் கருவிகளை வீசி யெறிந்துவிட்டு உலகசமாதானத்திற்கு அடிகோலவேண்டிய சந்தர்ப்பத்தை அப்பொழுதிழந்துவிட்டார்கள். பட்டுப்பட்டும் பாடம் கற்றுக்கொள்ளாவிட்டால் வேறு எப்பொழுதுதான் ஈடேற முடியும்? போன போரால் உலகம் என்ன பலன் பெற்றதென்று பார்த்தால் உலகச் செல்வநிலை சீர்கெட்டதொன்று, சிக்கன வாழ்வு போய் ஊதாரியான ஜீவனம் ஏற்பட்டது இரண்டு, ஒருவனுக்கொருவன் நம்பிக்கையிழந்தது மூன்று, பயம் வளர்ந்தது நான்கு, படை பெருத்தது ஐந்து, எந் நிமிஷமும் உலக அழிவை எதிர்பார்த்திருப்பது ஆறு. “மனிதன் யுத்தத்தை யழிக்கவேண்டும், இல்லாவிட்டால் யுத்தத்தால் மனிதவர்க்கம் அழியவேண்டும்” என்ற மகான் வாக்கில் பொய்யே கிடையாது.

—ஜான்புல்.

மேனாட்டு நாகரீகம் ::

இத்தாலிய சர்வாதிகாரி
முஸலோனி,

எனது அனுபவத்தைக் கொண்டு எக்காரியத்தையேனும் மிகைபடுத்திக் கூறுபவன் முஸலோனியல்ல. எனினும், மனித வர்க்கத்தின் க்ஷேமலாபத்தில் கவனமுடையவர்களை இவ்வருடம் கஷ்ட நஷ்டம் நிறைந்ததாய் விளங்குமென எச்சரிக்கை செய்வது எனது கடமை. ஐரோப்பிய நாடுகளில் பெரும்பான்மையானவை போல்ஷிவிக் (பொதுவுடமை) மயமாகிவிடும். இதற்குரிய அறிகுறிகள் ஸ்பஷ்டமாய் சுவர்களில் தடித்த எழுத்துக்களில் எழுதப்பட்டிருப்பது போன்று தோன்றுகின்றன. இவ்வியக்கம் தழைத்துவிடாதபடி சர்வ ஜாக்கிரதையுடன் உடனுக்குடன் நடவடிக்கைகளெடுத்துக்கொள்ள வேண்டியது ஜனத் தலைவர்களின் கடமையாகும்.

நாகரீகம் எப்பொழுதும் நன்மை பயக்கும் என்ற மனோராஜ்யத்தில் நாம் ஈடுபடுவது பெருந் தவறு. அபிவிர்த்தி ஜனங்களுக்குப் பேரிடர் விளைவிக்கக்கூடிய ரீதியில் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றதென்பதை நாம் கவனிக்கவேண்டும். இதற்கு முன் தோன்றிய நாகரீகங்களெல்லாம் அடியோடு மாண்டுபோய்விட்டன. முதன் முதல் அந்நாகரீக வீழ்ச்சி நமது கண்ணுக்குப் புலப்படவில்லை. எனினும் அந்நாகரீகம் பேரிரைச்சலுடன்சமாப்தியடைந்துவிட்டது. நாம் கைக்கொண்ட பரம்பரை பழக்க வழக்கங்கள் நமக்குத் தகுதியுடையவைகளல்லவென நாம் நிர்ணயித்தவுடன் நமது கண்ணுக்கு முன்னால் அப்பழைய நாகரீகம் இறந்தொழிவதைக் காண்போம். உலகத்தின் எப்பகுதியிலும் இறந்துபட்ட பழஞ்செல்வாக்குடைய பல நாகரீகத்தைக் காணலாம். எகிப்திய நாகரீகம் எங்கே? பாரசீக நாகரீகம் எங்கே? பாபிலோன் நாகரீகம் எங்கே? ரோம நாகரீகம் எங்கே? இயந்திரத்திடை நொறுங்கி இருந்த இடந்தெரியாமல் மறைந்துவிட்டன. நமது பாதுகாப்பிற்கு எத்தகையநாகரீகவுணர்ச்சி இன்றியமையாததோ அத்தகைய நாகரீகவுணர்ச்சியை மட்டும் ஏற்றுக்கொண்டு, சுகவாழ்விற்குச் சத்துருவாய்த் தோன்றியிருக்கும் நவீன நாகரீகத்தை முற்றிலும் அழித்துவிட வேண்டும்;

ஆனால் அநாகரீகவுணர்ச்சிதான் தற்சமயம் மக்களுக்குள் மிகைத்துவருகிறது. இது பிரத்தியக்ஷம். மக்களில் மற்றேனைய வகுப்பினர் போல்ஷிவிக் கொள்கையை எதிர்த்துப் போராடாது வரவேற்கவேசெய்வர் என்பது உறுதி. சிலதினங்களுக்கு முன்னர் ஜெர்மன் விவசாயிகளிற் சிலர் பொதுவுடமை கொள்கையை ஆதரிப்பதாகவும், ஜெர்மன் நாட்டு முன்னேற்றத்திற்கு பொதுவுடமையே தேவையெனவும் பகிரங்கமாகத் தெரிவித்துவிட்டனர். ஜெர்மனியில் தலைசிறந்துவிளங்கும் மத்திய வகுப்பினர் போல்ஷிவிக்க இயக்கத்தில் பற்றுக்கொள்வார்களாகில் ஜெர்மனியின்நிலைமை என்னவாகுமென்பதைச் சற்று சிந்தித்துத்தான் பார்க்கவேண்டும்.

பொதுஜனங்களை வறுமை வருத்துகின்றது. அவர்களின் அமைதி நிலைகுலைந்துவிட்டது. எங்கு சரண்புகலாமென்ற சிந்தனையே அவர்களுக்கு மிகப்பெரிது. ஆகவே, தங்களை வாட்டும் பிணிக்கு எது உதவியளிக்கின்றதோ, எது மருந்தாக விளங்குகின்றதோ அதையே மக்கள் முன்பின் கவனியாது பற்றிக்கொள்வர். அமைதியின்மையையும் வறுமையையும் நீக்குவதற்கு சமதர்மக்கொள்கை நல்லதுதான். ஏழைகளை ஆசைகாட்டியிழுக்குங்குணம் அதற்குண்டு. ஜெர்மன் நாட்டில் அது வேரூன்றுமெனில், தொத்துவியாதிபோன்று ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் அதிசீக்கிரம் பரவிவிடுமென்பது திண்ணம்.

மேனாட்டு நாகரீகத்தைப் பழுதுபடாமல் பாதுகாப்பதற்குரிய வழியொன்று மிராது. தன்னைச் சூழ்ந்த சமுத்திரமிருப்பதால் மேனாட்டு வியாதி தன்னிடம் பரவிவிடாது என அமெரிக்கா நினைப்பது தவறு. மனித குணம் தூரத்தைப் பொருட்படுத்துகிறதில்லை. அக்குணம் கடல் தாண்டியும் சம்பந்தம் வைத்துக்கொள்ளும் இயல்புடையது. அரசியல் வியாதி தோன்றியபொழுதே கெல்லியெறியப்படாவிடில் காட்டுதீபோல் விரைவில் எங்கணும்பரவிவிடும். தனிப்பட்டநாடு, நாற்புறமும் கடலால் சூழப்பட்டிருக்கின்றது என பெருமைபாராட்டிவந்த காலம் மலையேறிவிட்டது. அரசியல் விஷயமாகவோ, பொருளாதார சம்மந்தமாகவோ எந்நாடும் தீவாந்திர தேசமாக இருக்கமுடியாதென்பது திண்ணம். ஆகவே, ஐரோப்பிய நாகரீகத்தைச் சுத்திசெய்யும் வேலையைத் தீவிரமாகச் செய்யவேண்டும்.

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுள்ளன் 345 மலர் 9 இதழ் 72 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை

DESOPAKARI

புதன் ஞாயிறு வெளியீடு.

210–36-வது வீதி இரங்கோன், (27–3–32) பங்குனிமீ 15உ ஞாயிற்றுக்கிழமை

காசைக் கீழே வைத்துப் பேசடி!

"ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்'' என்றசொல் பொய்த்துப்போகவில்லை. தன்னுடைய இராணுவத் திமிரால் பிரிட்டன் அயர்லாந்தை துளிவிடாமல் கறந்தகாலம் ஒன்றிருந்தது. எத்தனையோ வருஷங்கள் இங்கிலாந்து அயர்லாந்தை அடக்கி ஆண்டு அனுபவித்து வந்ததுபோய் இப்பொழுது அயர்லாந்தின் காலம் வந்திருக்கிறது. போனதெல்லாம் போகட்டும் இந்தப் பத்துவருடங்களாக அயர்லாந்து இங்கிலாந்துக்கு அதன் விருப்பத்திற்கு விரோதமாகக் கட்டிவந்த கப்பத்தை-காசை கீழேவைத்துப் பேசடி பிரிட்டனே! என்று எமன் திவாலரா கேட்டுவிட்டார். பிரிட்டன் பேந்தப் பேந்த விழிக்கின்றாள். உடுப்பு வேண்டாம் கைவந்தாற் போதும் என்ற நிலைமையில் பாவம் பிரித்தானியா திகைத்து நிற்கின்றாள். இதுவரை தனக்குச் செய்துகொடுத்த இராஜவிசுவாசப் பிரமாணத்தை வேண்டுமானாலும் நிறுத்திக்கொள்ளட்டும்; வருடாவருடம் கட்டிவந்த கப்பத்தைவேண்டுமானாலும் வைத்துக்கொள்ளட்டும். இதுவரை கட்டியதை வட்டியும் முதலுமாய்க் கேட்டால் எங்கிருந்துகொடுக்கமுடியும்என்று ஒரு ஏங்கு ஏங்குகிறாள். என்னசெய்யலாம்? செல்லாக்காசில்லாமல்சுண்டிச் சுண்டி வாங்கியதைத் தம்படி குறையாமல் தொடுத்துதான்விடவேண்டும். இல்லை இனும் சாசனம் என்பாளாயின்-1921ம் வருஷத்து ஒப்பந்தத்தைப் படிப்பாளாயின் வாஸ்தவந்தான் அது நாணயஸ்தர் செய்யவேண்டியசெயல் என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் தயவுசெய்து பிரித்தானியா-கொஞ்சம் கோபித்துக்கொள்ளாமல் எப்பொழுதேனும் மழைக்காவது நாணயம்என்கிற கூரையின்கீழ் ஒதுங்கியிருக்கிறாளா? என்னும் கேள்விக்கு அவளே பதில் சொல்லிவிடட்டும். நாணயத்திற்கும், வாக்குறுதிக்கும் பிரித்தானியாவுக்கும் வெகுதூரம். ஆகையால் எந்தவொரு உடன்படிக்கையையும்-அவைகளெல்லாம் சிறக்கப்பட்ட வெற்றுக் கடுதாசிகள் என்று [illegible] போதரம் கூறியிருக்கும் அவள்-எந்தவொரு ஒப்பந்தப் பத்திரத்தையும் ஆதாரமாகவைத்துப் பேசமுடியாது. எத்தனையோமுறை பிரித்தானியா நாக்குச்செத்துப்போனாள். அவள் எப்படி அயர்லாந்தை வெய்க்கமுடியும்?

இந்தியாவின்மீது பிரித்தானியா முன்னக்கூட்டியே கள்ளக் கணக்குஎழுதி 1100 கோடி ரூபாய் பற்றெழுதிவைத்திருக்கிறாள். நமது கணக்குப் பரிசோதகர்கள் துருவிப்பார்த்து 750 கோடி ரூபாய் பிரித்தானியா தான் இந்தியாவுக்குத் தரவேண்டுமென்று திட்டம்கட்டிவிட்டார்கள். இது எப்படியாவது போகட்டும். நாலுபேர் நடுமனிதர்கள் முன்னிலையில் பேசித்தீர்த்துக்கொள்ளலாம். ஏனெனில் பெற்றுவிட்ட பிள்ளையும், கொடுத்துவைத்த கடனும் வீண்போகாதென்று லேவாதேவிக்காரர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆனால் இதைப்பற்றியெல்லாம்எம்போன்ற சாதாரண ஜனங்களுக்குத் தெரியாது. இப்பொழுது-இச்சட்டமறுப்புப் போரில் ஜனங்களின் பணத்தையும், சொத்தையும் கொள்ளை கொள்ளையாய்ப் பறித்துக்கொள்ளுகிறார்களே இவற்றிற்கு ஏதாவது விதாயம் பிறக்குமா? என்று கேட்கிறார்கள். அ

வர்களின் சந்தேகத்தை நிவர்த்திசெய்யவேண்டியது நமது கடமையென்பது மாத்திரமில்லை பிரசாரம் என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது நாம்இழக்கும்- நம்மிடமிருந்து வலுவில் பறித்துக்கொள்ளப்படும் ஒவ்வொரு தம்படியையும் இதே சர்க்காரிடமிருந்து சுண்டிச் சுண்டி வாங்கவேபோகிறோம்; வாங்காமல் விடப்போகிறதில்லை. சென்ற சட்டமறுப்பிற்கு சர்க்கார் சரணடைந்தபோது சமாதான ஷரத்துகள் எழுதினார்களல்லவா அதில் பறிமுதல்செய்த சொத்துக்களையும் சர்க்கார் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்ற நிபந்தனையை காந்திஜீ மறந்துவிடாமல் புகுத்தினார் சர்க்காரும் வேறுவிதியில்லாமல் ஒப்புக்கொள்ளவேண்டியதாயிற்று. சொத்துக்களும் திருப்பியளிக்கப்பட்டன. அவ்வாறே இனியும் ஏற்படப்போகிறது. ஆயிரம், பதினாயிரம், லட்சக் கணக்கில் சட்டமறுப்போரின் பணத்தை பறிமுதல் செய்தாலும் நாம் திரும்ப அடையவேபோகிறோம். ஏட்டைத் திருப்பிப் படிக்காமல் விடமாட்டோம். சிறிதுகாலம் சர்க்கார் நமது சொத்தை வேண்டுமானால் பூதம்போல் காத்துக்கொண்டிருக்கட்டும்: சட்டமறுப்போரும், வரிமறுப்போரும் தைரியமாய்-கொஞ்சங்கூட சந்தேகமில்லாமல் எவ்வளவு சொத்தையோ இழக்கட்டும். காந்திஜீ வந்தவுடன் கணக்குக்கொடுத்துவிட்டால் சல்லி குறையாமல் கொடுத்துவிடுவார். சட்டமறுப்போரின் பணத்தைக்கொண்டே அடக்க வேண்டுமென்பது கருத்தானால் நமது கையைக் கொண்டு நமது கண்ணையே குத்துவதுபோலாகும். குத்தட்டும், நாமும் சகித்திருப்போம். காலம் மாறும்போது சர்க்காரின் கையையெடுத்து சர்க்காரின் கண்ணைக்குத்திவிட நமக்குத்தெரியும். காசுபணத்தைப்பற்றிய கவலைமாத்திரம்வேண்டாம். நமது செட்டியார் காந்திஜீயிருக்கும்போது நமது பணம் போய்விடாது

தமிழ் வீரம் தழைக்க



வாலிபம் துள்ளிக் குதிக்கும் இரண்டு வாலிபர்கள்— பொறுப்பறியாத புதுப் பிராயத்தில் இந்தியா, பர்மா, ஸயாம், மலேயா முதலிய நாடுகளை துவிச்சக்கர (சைக்கள்) வண்டியில்சுற்றிப்பார்க்கப் புறப்பட்டிருப்பதில் தமிழ் வீரம் ஸ்புரிக்கின்றது. அவ் விளைஞர்களின் மிடுக்கான துணிச்சல் எமது நெஞ்சை யள்ளிவிட்டது. எந்தவொரு சீதோஷ்ணத்தையும் நிர்வஹிக்கக் கூடிய அவர்களின் சரீரபலம் பார்க்கப்படவேண்டிய காட்சிப் பொருள். பல திறம்பட்ட மலைகளையும், பல திறம்பட்ட பாஷைகளைப் பேசும் மனிதர்களையும் அவர்கள் கடந்து செல்ல வேண்டும்; வழியில் எத்தனையோ ஆபத்துகளை எதிர்க்க வேண்டும்; அதற்கு சிறு சிறு கட்டாரிகள் இரண்டைத் தவிர வேறு ஆயுதங்கள் அவர்கள் வசமில்லை. நல்ல நெஞ்சழுத்தம். கஷ்டம் சகிக்கும் உடலமைப்பு. ஒரு சல்லிக் காசுகூட எடுத்துக் கொள்ளாமல் புறப்பட்டிருக்கின்றனர். தமிழர் மாத்திரமில்லை எல்லா இந்தியரும் இந்தியர் என்ற கௌரவத்தில் பொருளுதவி செய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம். ஏனெனில் இனிமேல் நமது நாட்டைக் காக்கும் சேனாபதிகளானாலும் ஆகலாம்.

மகரிஷி விநோபா

(எல்வின் பாதிரியார்)

இந்தியாவில் போர்நடக்கின்றது. இம்மாதிரிப் போரை இந்தியாவிலல்லாது உலகத்தின் வேறெப்பாகத்திலும் கண்டதில்லை; கேட்டதில்லை. ஏதோ இரண்டு தேசங்கள் சண்டையிட்டுக்கொள்வதுபோலிருக்கிறதா? இல்லை. இரண்டுபேர் வாழ்க்கைத் தத்துவத்தை விவாதிப்பதுபோன்றிருக்கிறது. ஒருபுறம் ஆத்மசக்தி இரத்தம் சிந்தாத அஹிம்ஸை ஆயுதத்தைப் பிடித்துக்கொண்டும், மற்றொருபுறம் கொலைக் கருவிகள் தாங்கிய இராணுவபலமும் நின்றுகொண்டு போராடுகின்றன. தங்களுடைய கஷ்டத்தை நிவர்த்தித்துக்கொள்ள தங்களைக் கஷ்டப்படுத்துபவர்களுக்குக் கொஞ்சங்கூட கஷ்டங்கொடுக்காமல் தாங்களே மேலும் மேலும் கஷ்டத்தை வலிய வரித்துக்கொள்ளுகிறார்கள். ஆத்மத்தால் போராடும் ஆத்மஞானிகள் வெறும் இராஜரீக சாஸ்திரிகளல்ல.

சில மாதங்களுக்கு முன்னே நான் வார்தாவிலுள்ள ஒரு ஆச்சிரமத்தில் சிறிதுகாலம் விருந்தாளியாயிருந்தேன். அங்கு நான்கண்ட காட்சி யார் கண்டார்? எங்குகண்டார்? சின்ன குடிசையில் சாந்தியும், சமாதானமும், ஒழுங்கும், ஓர்மையும் எந்த அரச மாளிகையாவது இருக்கமுடியுமா? ஆத்ம ஒளியைத் தவிர அரசியல் என்ற வாடைகூட அங்கு வீசியதில்லை. அதன் கூரையில் காங்கிரஸ்கொடிகூட பறக்கக் கிடையாது. மகரிஷி விநோபாவுக்கு இவைகள் எல்லாம் வேண்டாம். ஆத்மவிசாரணை செய்துகொண்டு சதா பகவத்சிந்தனையில் இருக்கும் அந்த ஆத்மஞானி இப் பிரகிருதி உலகத்தின் விஷக்காற்றைக்கூட நுகராமல் வேறு உலகத்தின் பரிசுத்தமான தெய்வக்காற்றை உறிஞ்சுவதும் ஊதுவதுமாயிருந்தார். ஆண்டவனது ஸ்ருஷ்டிப்பொருள்களின் கூட்டத்திற்கு புறம்பல்லாத தீண்டாதார் மத்தியில் தமது சிஷ்ய குழாத்தைச் செலுத்தி அவர்களுக்கு லௌகிகமான உதவிகளும் ஆத்மார்த்தீகமான உபதேசங்களும் செய்வது அவருக்குச் சரிப்பட்டுவரும். நான் அவருடனிருந்த ஒரேயொரு மாதத்தில்மாத்திரம் தாழ்த்தப்பட்ட அத் துரதிருஷ்டசாலிகளுக்காக 80 பொதுக்கிணறுகளைத் திறந்துவிட்டுவிட்டிருக்கிறார். இப்பொழுது அந்த வேலை அவருக்கில்லை. சிறைச்சாலைக்குள்ளே கிடக்கிறார். எதற்காக? இராஜதுவேஷம்பேசினாரா? இராஜநிந்தனைசெய்தாரா? வெறும் சந்தேகத்தின்பேரில் பிடித்து அடைத்துவைக்கப்பட்டிருக்கிறார். அங்கு அவருக்கு எந்தவொரு குறைச்சலுமில்லை. நிம்மதியாய் தவஞ்செய்துகொண்டிருக்கிறார். இருந்தாலும் அவர் அங்கிருக்கக்கூடாது. புனிதமான ஒரு பொருளைப் புழுதியிலெறிந்ததுபோலாகிறது. விநோபாவைப்போன்ற மகரிஷிகளைச்சிறையில் அடைத்து வைத்திருப்பது ஒன்றே இங்கிலீஷ்காரர்களாகிய நம்மை சபிப்பதற்குப்போதுமான குற்றமாகும்.

இந்தியாவின் தலைவிதி

(லாரன்ஸ் ஹௌஸ்மன்)

“எனது கொள்கைக்கும் சர்க்காரின் கொள்கைக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமிருப்பதால் இந்தியாவும் பிரிட்டனும் இரண்டு பிரிந்த பாதைகளில் நிற்கின்றன” என்றார் மகாத்மா காந்தி. அது உண்மையாகத்தான் முடியும்போலிருக்கிறது. அதற்குரிய அறிகுறிகளெல்லாம் இந்தியாவிலே இப்பொழுது காணப்படுகின்றன.

இந்தியாவின் தலைவிதியை இந்திய ஜனங்கள்தான் நிர்ணயிக்கவேண்டியவர்கள். அவர்கள்மீது அநியாயமாக அமிழ்த்தப்பட்டிருக்கும் அடக்குமுறை ஆட்சியை ஒழித்துவிட்டு அவர்களின் தலையில் அவர்களே சரியாகவோ, தப்பாகவோ எழுதிக்கொள்ள விட்டுவிடுவது தான் தர்மநீதியாகும். அதைவிட்டு இந்தியாவை அதன்போக்கில் விட்டுவிட்டால் ஒரே இரத்தக்களரியில் முடியுமெனக் கூறுவது பொருத்தமற்ற கூற்று. எந்தவொருநாட்டின் அரசியலிலும் மாற்றம் ஏற்பட்டபோது குழப்பமும் கூச்சலுமில்லாமல் முடிந்ததுண்டா? சோதனையும், தவறுகளும் ஏற்படவேசெய்யும். ஆனால் அவற்றை அவர்களே சரிசெய்துகொள்ளவும் செய்வர். இதையொரு காரணமாகக் கொள்ளுவதில் அர்த்தமில்லை.

இந்தியரும் நாமும் பிரிந்துகொண்டேயிருக்கிறோம். நம்மிடையில் வேற்றுமை வளர்ந்துகொண்டே வருகிறது. அந்த அளவில் இருசாராருக்கும் கஷ்ட நஷ்டங்களும் ஏற்படவேசெய்கின்றன. நாளாக ஆக துவேஷமும் வளர்ந்து கடைசியில் காந்திஜீ கூறியபடி பிரிந்தவர்களாகவே நாம் ஆகப்போகிறோம். இந்தியாவின் விடுதலைவிளக்கு இனி அணையாது; அணைக்கவும் முடியாது.

கடவுளும் அரசியலும் : :

நிலமணிவாசன்.

கடவுள் உண்டு என்று ஒருமுறைக்குப் பலகோடிமுறை பறைசாற்றிக்கொண்டு இக்கட்டுரை வெளியே தலையை நீட்டுகிறது. ஏனென்றால், நாம் சுயமரியாதைக்கட்சியைச் சேர்ந்தவரல்ல. ஆனால், "கடவுளும், அரசியலும்" என்று நினைக்கும்போதுதான், நமக்கு "கடவுள் இருக்கிறாரா இல்லையா" என்ற கெட்டசந்தேக எண்ணம் "பீறிட்டு"க்கொண்டு நம்மண்டைமூளையைக் குழப்புகிறது. பயப்படாதீர்கள்! அப்படி ஒன்றும் ஆபத்து இல்லை; முற்றிலும் படித்தபிறகு உங்கள் மூளைக்கு வேலை கொடுங்கள்.

உலகம் தோன்றிய இன்னாள்தொட்டு உலகமக்கள் கடவுள் என்ற ஒருவனை, ஒருத்தியோ, அல்லது ஒருவரோ, அதுவுமில்லாவிட்டால் ஒன்றை தங்களைக்காட்டிலும் சர்வ வல்லமை படைத்து தங்களின் துன்பகாலத்தில் உதவிசெய்கிறது என்றுஎண்ணிவந்திருக்கிறார்கள். நாமும் அப்படியே எண்ணுவோம். கடவுளை அது என்றே பேசுவோம். கடவுள் என்ற ஒன்று இருக்கிறது. (சமயக்குதர்க்கத்தை மூட்டைகட்டி வங்காளக்குடாக் கடலில் போட்டுவிடுங்கள்) அதற்கு ஆதியுமில்லை, அந்தமுமில்லை. அது அநாதியாய் 'அங்கிங்கெனாதபடி எங்கும்' நீக்கமறநிறைந்திருக்கிறது. மாற்ற மனங்கடந்து என்றும் ஒளிர்வது. அது எல்லாவற்றையுங்கடந்து நிற்கிறது: அது தூணிலுமுண்டு, துரும்பிலும் உண்டு. அதுதான் நாம் கூறும் கடவுள் இலக்கணம்.

அதைக்கண்டு அடைவதுதான் நமது வாழ்வின் விழுமிய இறுதிநிலை. அதைத்தேடி அடைவதில்தான் நமது அரிய வாழ்நாளைச் செலவழிக்கவேண்டும். அதற்காகத்தான் நாம் இவ்வுலகில்தோன்றி நடிக்கிறோம், இவ்வுலகத்தில் பாபமும் உண்டு; புண்ணியமுமுண்டு. பாபமியற்றுவது கடவுளுக்கு வெறுப்பு; அதனால் நரகம்; மீண்டும் இவ்வுலகப் பிறப்பு. புண்ணியமியற்றினால் கடவுளுக்கு விருப்பு. அதனால் சுவர்க்கம்; மீண்டும் பிறப்பில்லை. சத்-சித்-ஆனந்தமயம். நமக்கும் இக்கட்டுரைக்கும் இப்பொழுது வேண்டாத சுவர்க்கத்தைச் சற்று மறந்து, பாபத்தையும், நரகத்தையும், அரசியலையும் கவனிப்போம்.

அரசு என்றால் என்னதெரியுமா? கடவுளைநாடி அடைவதற்குக் குடிகளை உத்ஸாகப்படுத்தி, வழியில்நேரும் கஷ்டங்களுக்கு உதவிசெய்து, அம்முயற்சிக்கு இடையூறாய் உள்ள பாறைகளை உடைத்தெறிய மக்களால் மக்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு அமைப்பு. நீங்கள் வேறுவிதமாய் அர்த்தங்கூறினால் பாதகமில்லை. அது ஒழுங்காய்—நியாயமாய்—நேர்மையாய்மாத்திரம் நடைபெறவேண்டும். அதன் தலைமையில் அரசன் இருக்கவேண்டும். "நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலைஉலகம்" என்பது விழுமிய தமிழ் முதுமொழி. கடவுளின் பிரதிநிதி மன்னன் இல்லாவிட்டால் ஆட்சி குடியாட்சியாயிருக்கும். குடியாட்சியோ, கோனாட்சியோ அன்றி குடிக்கோனாட்சியோ எதுவாயினும் ஒழுங்காய் நிலவவேண்டும். ஆனால், அரசன் என்றகொள்கை தொலைந்துவிட்டது-அது தொலைந்துகொண்டே வருகிறது. ஆம், தொலைந்து குட்டிச்சுவராகி குடியாட்சி-ஜனநாயகத்துவம்-பிறந்து வளர்ந்து செழித்தோங்கவேண்டும். இதுதான் நமது அரசு இலக்கணம்.

நமது பொன்னாட்டை யார் ஆளுகிறார்கள்? ஆங்கிலேயர்கள். அரசன் என்று ஒப்புக்கு தலைமுறை தலைமுறையாய்வந்த வழக்கத்துக்காக ஒரு அரசனைவைத்துவிட்டு, ஆங்கிலேயர்-எல்லோருமில்லை எனெனில், அவர்களில் 'குப்பையில் மாணிக்கங்கள்' என்ற முறையில், அருமையான மனித உடலங்கள் உலாவுகின்றன- ஆனால், சில படுபாவிகள்-சில சண்டாளர்கள-சில சுயநலப் பேய்கள்-கொடுமையாக-பயங்கரமாக-நமது விருப்பத்திற்கு நேர் மாறாக ஆளுகிறார்களே, இது ஒருபாபமல்லவா? இவர்களுக்கு நரகம் எப்பொழுது? எங்கே? கண்களினால்பார்த்து ஆனந்திக்கவேண்டும். அப்படி ஆண்டு கோடி கோடியாய் ஏழைஇந்தியனுடைய உலர்ந்து முதுகோடு ஒட்டிய வயிற்றை பிழிந்து தங்கள் ஊருக்குக் கொண்டுபோய் பீரங்கி, துப்பாக்கி செய்து சண்டை மதவெறிபிடித்து அலைகிறார்களே,இதுவொரு பிரமாண்டமான பாபம். இதற்குக் கடவுள் என்னசெய்யப் போகிறார் என்று ஒரு 'பக்கா' வைதீகன்கூறட்டும். "ஏன் இப்படி ஆளுகிறீர்கள்? எங்கள்

கடவுளும் அரசியலும்

நாட்டை எங்களுக்குக் கொடுத்துவிடுங்களேன்'' என்றுகேட்க இம்மென்று முன்னே எழுநூறு எண்ணூறு தடியடிபூசையால் மண்டை ஓட்டையும், கைகால் எலும்புகளையும் உடைத்து, முறித்தும். அம்மென்று முன்னே பீரங்கியால் சுட்டு நாசமாக்கியும் வருகிறார்களே; இது ஒரு பாபம். இதற்குக் கடவுள் தண்டனை என்ன? மைக்கேல் ஓட்வியரும்-ஆண்டவனே! அவன் பெயர் எங்கள்மனதில் நீடூழி வாழட்டும்-ஜாலியன் வாலாபாக்கும் நமது நெஞ்சில் கொழுந்துவிட்டெரிகிறதல்லவா? அந்தத் துக்ககரமான சம்பவம் நிகழும்போது கடவுள் இல்லாமல் போகவில்லையே. அப்பொழுது அது என்ன செய்தது?

சற்று நில்லுங்கள்! இந்தியாவை உங்கள் ஞானதிருஷ்டியென்னும் மனக் கண்ணால்நோக்குங்கள்! என்ன அறிகிறீர்கள்? அணி அணியாய் நிற்கும் சாத்விகத் தொண்டர்கள்-செந்தலை புலிகள்—தடியடிகள் கைகால் உடைத்தல்-சிவப்பு இரத்தம்-கடைசியில் கொடுமையானசிறைத் தண்டனை. இதற்கென்ன சொல்லப்போகிறீர்கள்? கடவுள் இதற்கென்ன நரகத்தை ஏற்படுத்தப்போகிறார்?

பஞ்சமாபாதகங்கள்தான் அசல் பாபங்கள். முதலில் கொலை, இரண்டாவது களவு, அப்புறம் காமம், கடைசியாக பொய்.

சென்ற ஐரோப்பாப் போரில் எத்தனை ஆயிரம் உயிர்களை எத்தனைப் பயங்கரமான, நீசமான யுக்திகளால் கொன்று தொலைத்தழித்தார்கள். இதோ, நமது அருமை இந்தியாவில் எத்தனை உயிர்களைச் சித்திரவதைசெய்கிறார்கள்? இதற்கென்ன நீதி? வழி?

களவு இரண்டாவது. ஒரு அகண்டு, விரிந்து, இயற்கையிலேயே வளம்பெற்று உலகிற்கு வியப்பை உண்டாக்கும் ஒரு பிரமாண்ட இந்தியாவினின்றும் பகற்கொள்ளை நடப்பது தெரியவில்லையா? இல்லாவிட்டால் ஆங்கிலேயர் அரசை நமது கையில் கொடுக்க ஏன் தயங்குகிறார்கள்? நம்மீது போர்க் கடன்களைச் சுமத்தி பலவந்தமாய்ப் பிழிவது ஞாபகத்திலிருக்கிறது. இது பாபமில்லையா? நீங்களே யோசித்துச் சொல்லுங்கள்.

கள். மதிக்கு மயக்கம் தரும் மதுவில் தற்கால நாகரீக பழக்கப்படி பிராண்டி, உஸ்கி, ஜானிவாக்கர்..........எழவு! பெயர்கள்கூட வரமாட்டேனென்கின்றன. அதில் பழக்கமிருந்தால்தானே- இந்த மோகக் கன்னிகைகள் எங்கிருந்து, யாரால் செய்யப்பட்டு விற்கப்பட்டு குடிக்கஅனுமதிக்கப்பட்டு இந்திய ஷோக்மைனர்களைமயக்கித்தொலைக்கிறார்கள்? நமதுசொந்தநாட்டிலே பனங்கள்ளு-தென்னங்கள்ளு குடிக்கக்கூடாது-காசு நஷ்டம்- தேகக்குறைவு உலக அவமதிப்பு, அகால மரணம் அது ஒருபாபம் என்று சாத்வீக்முறையில்-அஹிம்சைவழியில் குக்கிராமங்களில் கள்ளுக்கடை மறியல்செய்தால் நடக்கிறதுதான் உங்களுக்குத் தெரியுமே! இதற்கென்ன கடவுள் செய்கிறார்?

காமம். ஏன்? சமீபத்திலே கூடிய சர்வதேச சங்கத்தில் சீன—ஜப்பானிய சச்சரவுநிமித்தம் சென்ற பிரதிநிதிகளில் சிலர்மண்டையில் மோகலாகிரி மயல் உச்சித்தலையிலேறி, கிறுகிறுத்து, சுறன்று தட்டுத்தடுமாறுவதால், வேசையர்கள் இன்பம் மிருக முயப்பு நுகர்ந்தார்களென்று பத்திரிகைகளில் படித்தோமே. இதென்ன கூத்து! இதென்ன கேவலம்! இப்பேர்க்கொத்த காமிகளா உலகில் அமைதி நிலவ பாடுபடுபவர்கள்? ஆ, கன்பபன்யாதாயிருக்கு?

பொய். அப்பா! மூளையே உருகிவிடும் போலிருக்கிறது. இந்த இரண்டு நூற்றாண்டுகளிலே, எத்தனை ஆங்கிலேய வாக்குறுதிகள் தெரியுமா? எமது சிற்றறிவில்படும் ஒன்று-இரண்டு. மகாராணி அறிக்கை ஒன்று, எண்ணுங்கள். மிண்டோ மார்லி சீர்திருத்தம் இரண்டு, மாண்டேகு-செம்ஸ்பர்ட் சீர்திருத்தம் மூன்று, அப்புறம் முதல் வட்டமேஜை, டெல்லி உடன்படிக்கை, இரண்டாவது வட்டமேஜை வைஸ்ராய்களின் விருந்துபேச்சுகள், பார்லிமெண்ட் விவாதம், லார்டுகள் பிரசங்கம், பிரதம மந்திரி, இந்தியா மந்திரி ஹிஸ்எக்ஸலன்ஸி கவர்னர்கள், இன்னும் ஐ. ஸி. எஸ். கள், இவர்கள் நிச்சயமாய் மூக்காலும் உண்மையாய் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் எங்கே? எந்த காற்றில்பறந்துபோயின? நீர்மேலெழுத்து, சுத்த ஹம்பக். முதல்தரப் புரட்டு. இந்தப் பொய்களுக்கு கடவுள் என்ன பலன்கொடுக்கப் போகிறார்? எண்ணிறந்த சந்தேகங்கள்- "கடவுளும், அரசியலும்" என்று பிணைத்து நினைக்கும்போது வீறுகொண்டு எழும் சந்தேகங்கள் மண்டையை உடைக்கின்றன.

இந்திய சுதந்திரப் போர்

இந்தியாவின் ஸ்வதந்திரப் போர் கொஞ்சங்கொஞ்சமாய் உலக ஆதரவைப்பெற்றுவருகிறது. இந்திய சர்க்காரின் சிம்மாசனமாயிருக்கும் லண்டனில் அச்சிம்மாசனத்தினடியிலேயே பெருத்ததோர் பூகம்பம் வெடித்திருக்கிறது. அதன் அக்கினிக் குழம்பில் அடிபட்டு அவ்வாட்சி அடியோடு தகிக்கப்பட்டாலும் படலாம். பிரிட்டிஷ் சர்க்காரின் அடக்குமுறையை இந்தியாவில் இந்தியர்கள் கண்டிப்பதைவிட பிரிட்டனில் பிரிட்டிஷ்காரர்களே கண்டிப்பதில் அதிக அர்த்தமும், அதிக பலனும் இருக்கிறது. இதற்காக லண்டனில் பரந்த நோக்கமும் ஆராய்ச்சித் திறனும், ஸ்வதந்திரப் பிரியமும்கொண்ட பலர் "இந்திய சங்கம்" என்ற பெயரால் ஸ்தாபனமொன்று தோற்றுவித்திருக்கின்றனர். அது செய்துவரும் அரிய சேவையை இந்தியாவும் பிரிட்டனும் கூட என்றென்றும் மறந்துவிடமுடியாது. இந்திய சர்க்காரின் அட்டூழியங்களை-அக்கிரமங்களை அவ்வப்போது இச்சங்கம் கண்டித்துவருதல் காணுகின்றோம். சமீபத்தில் இச்சங்கத்தின் ஆதரவில் கூட்டமொன்று கூட்டினர். ஸ்ரீபெர்ட்ராண்டு ரஸ்ஸல் தலைமைவகித்தார். அவரே இந்தியசங்கத்தின் தலைவருமாவதால் தமது நீண்ட ஆராய்ச்சியின் அனுபவத்தில் பின்வருமாறு பேசினார்:—

இந்தியாவில் நடக்கும் எல்லாச் செயல்களுக்கும்-அது நல்லதாயினும் சரி, கெட்டதாயினும் சரி அனைத்திற்கும் நீங்களும், நானும், ஒவ்வொரு பிரிட்டிஷ்காரனும் பொறுப்பாளியாகவேண்டும்-கணக்கும் கொடுத்துதீரவேண்டும். இந்தியா சம்பந்தமாகக் கேள்விப்படுகிறவைகளைச் சிலர்சட்டைசெய்யாமல் எவ்வளவோ தூரந்தொலைவிலிருக்கும் இந்தியாவைப்பற்றி நமக்கென்ன கவலை. நமது விவகாரத்தை-நமது வீட்டுவேலைகளை நாம் பார்த்துக்கொண்டால் போதும் என்று இருந்துவிடுகிறீர்கள். அந்த எண்ணம் நமக்கிருந்தால் நாம் இந்தியாவை ஆளுவதற்கு எவ்வித உரிமையும் அற்றவர்கள்-எவ்வித லாயக்குமில்லாதவர்கள், என்பதை நாமே ருஜுப்படுத்துகிறோம்; வேறுவிவாதம் வேண்டியதில்லை. இந்திய விவகாரத்தில் நமக்கு சிரத்தையில்லாவிட்டால் நாம் இந்தியாவை ஆளவேண்டிய தேவையில்லை; இந்தியர்களிடமே-அவர்கள் விவகாரத்தை அவர்களே நிர்வகித்துக்கொள்ளட்டுமென்று விட்டு விலகிக்கொள்ளுவதுதான் மரியாதை (கரகோஷம்) இந்தியாவில் இப்பொழுது நாம் அனுஷ்டித்துவரும் கொள்கை முட்டாள்தனமானது; முட்டாள்செயலுக்கு நாங்கள் உடந்தையாயிருக்கமாட்டோம். எங்கள் பெயரால்-நமது பெயரால் செய்துவரும்இந்த அக்கிரமங்களுக்கு நாமும் அபராதிகளாகக்கூடாது. அக்கிரமம் செய்பவர்களை விட்டு நாம் உடனே விலகிக்கொள்ளவேண்டும்.

கொஞ்சநஞ்சம் புத்தியுள்ளவனுக்குக்கூட இந்தியாவில் நாம் நடத்தும் தர்பார் பிடிக்காது. நம்மை நமது அக்கிரமமே அடியோடு அழித்துவிடப்போகிறது. இப்பொழுதிருக்கும் இதே போக்கிலேயே இந்தியாவும் பிரிட்டனும் போயக்கொண்டிருக்குமானால் கண்டிப்பாய் இந்தியாவின் கோரிக்கைகளுக்கு நாம் முடிவில் முடிவணங்கவேபோகிறோம். அதைக் காலந்தாழ்த்தாமல் நமது பலமனைத்தையும் உபயோகித்துப் பார்த்த பின்னால்-இனிமேல்முடியாது என்று ஏற்பட்டபிறகு செய்வதைவிட கௌரவமாய் நாமே கொடுத்தயாதிரியாய் இந்தியாவை இந்தியர்களிடம் ஒப்படைத்துவிடுவது நல்லது. நீதியை நாம் செய்தோம் என்ற நன்மதிப்பும் நட்புரிமையும் பாராட்டலாம். அதை அன்றி நசுக்கப் பிழியப்பட்டதுபோல் ஆகிவிட்டால் மரியாதையில்லை (கேளுங்கள், கேளுங்கள்.)

உலகம் ஓடிக்கொண்டிருக்கும் இற்றைய ஓட்டத்தில் இங்கிலாந்து கிறிஸ்து தர்மத்தை பின்பற்றியிருக்குமானால் அடடா! அவள் நிலைமை எவ்வளவு மேன்மையாயிருக்கும். இங்கிலாந்து இராஜநீதியில் நடந்திருக்குமானால்-இப்பொழுது செய்துவரும் குருட்டுச்செயலைச் செய்யாது சுய அறிவோடு-சுய மதிப்புக்கேற்றவாறு ஆட்சிசெய்யுமானால் உலகத்தின் போக்கே வேறுவழியில் திருப்பப்பட்டிருக்கும்; நாமும் இவ்வாறு கெட்டபெயரெடுக்கவும் நமது மதிப்பெல்லாம் குறைந்துபோகவும் காரணமில்லை. இதனாலேதான் இந்தியப் பிரச்னை ஒவ்வொரு இங்கிலீஷ்காரனையும் பாதிக்கிறது. இனிமேல் நமது உள்ளூர் ஸ்வதந்திரத்தையும் பாதித்தாலும் பாதிக்கக்கூடும். நமக்குள்ளேயே கட்சி பிரதிகட்சிகள் ஏற்படாதென்று எவன் நிச்சயமாய்ச் சொல்லிவிடுவான். நான் எனது உள்ளுணர்ச்சியில்-அநுபவ சித்தாந்தத்தில் என்னுயிர் சகோதரர்களுக்கு-எனதுபிரிய பிரிட்டிஷ் நண்பர்களுக்கு என் கடமையையுணர்ந்து எச்சரிக்கின்றேன்.

காதல்! கற்பு! கடவுள்!

சிலதினங்கள்முன் பங்கூரில் தெய்வீக காதலொன்று நிகழ்ந்து முடிந்தது. இரு காதலர்கள் இரண்டு உடலும் ஒரு உயிருமாய் வாழ்க்கைக காரியம் வகுத்துவந்தார்கள். காதலன் நோய்வாய்ப்பட்டான்; காதலி அவனுக்குச் சிகிச்சைசெய்துவந்தாள். தன்னுடைய பொறுப்பையெல்லாம் ஆண்டவன் பொறுப்பில் விட்டு அவனையே நம்பினாள். இரண்டு வரங்கள் கேட்டாள். ஒன்று தன்னுயிர்க்கணவன் உயிர் வேண்டும்; இல்லாவிட்டால் தன்னுயிரையும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கடவுளிடத்தில் பிரார்த்தனைசெய்தாள். இதைப்பற்றி அடுத்தவீட்டாரிடம் அக்காதல் தெய்வம் பிரஸ்தாபித்தபோது "என் காதலன் இறந்துவிட்டால் நானும் அப்புறம் உயிர்வாழ்வதில்லை" என்று கூறிக்கொண்டாள். அவ்வாறு காதலன் இறந்தான்; அந்த அம்மணியும் தன்னை நன்றாய் அலங்கரித்துக்கொண்டு தனது கணவனைக்கட்டித் தழுவிக்கொண்டு இருகரங்களையும் கூப்பிக்கொண்டு தனது மூச்சை நிறுத்திக்கொண்டாள். பிரேதசோதனைசெய்துபார்த்தபோது அவளுடைய சரீரத்தில் விஷ சம்மந்தமோ அல்லது தற்கொலைக்கேதுவான எந்தவொரு காயமோ சின்னமோ கிடையாது.

இதுபற்றி இவ்வூர் ஜெகட் பத்திரிகை குறிப்பெழுதுகையில் அக்கற்புக்கடவுள் இரண்டு வரங்களையல்லாது ஒரே நம்பிக்கையோடு ஒரே வரத்தைக் கேட்டிருந்தால் கொடுக்கப்பட்டிருப்பாள் என்று கூறுகிறது. அவ்வாசிரியரின் அபிப்பிராயம் நமது அபிப்பிராயத்தோடு ஒன்றுபடவில்லை. அவர் அக்கற்பரசியையும் கடவுளையும் பிழைபேசுகிறார். ஏனெனில் தன்னை நோக்கிவரும் பக்தர்களுக்கு பகவானும் அவர்கள் முயற்சியில் உதவி செய்கிறார் என்பது வேதப்பொருள். 'பசுபதி' என்பதின் அந்தரார்த்தமும் அதுவேயாகும். பசுவாகிய ஆத்மா லௌகீகமாகிய முக்குற்றங்களைவிட்டு பதியையடையச் செல்லுகையில் பதியும் சிறிது தூரம் சென்று பசுவைத் தழுவிக்கொள்ளுகிறதென்ற சாஸ்திரத்துணிபின்படி அவளுக்கு ஆண்டவன் மாங்கல்யப் பிச்சை யளித்திருக்கவேண்டும். அதைச்செய்யாததால் ஆண்டவன் அபராதியென்பதும், இரண்டிலொருவரம் தரவேண்டுமென்றது அந்த அம்மணியின் தவறு என்பதும் ஜெகட்டின் கருத்து. நமது அபிப்பிராயம்வேறு. "சரீரத்தால் கணவனைவிடுவிக்கவேண்டும்; இல்லாவிட்டால் ஆத்மத்தில் எங்களிருவரையும் ஒன்றுசேர்க்கவேண்டும்" என்று அந்தஅம்மான் கேட்டாள். ஆண்டவன் அவளுக்கு உயர்ந்த வரத்தை தந்து ஆத்மத்தில் காதலர்களிருவரையும் ஒன்றுசேர்த்துவிட்டார். "காதல் இன்றேல் சாதல்" என்ற பாரதியாரின் குயில் பாட்டு நமது கருத்துக்குச் சாக்ஷியாகிறது.

பாலோ! பாழ்!

மனிதன் பிறந்தமுதல் இறந்தவரை பாலிலே வளர்ந்து பாலிலேயே முடிகிறான். குழந்தை பிறந்தவுடன் தாய் தனது பாலை ஊட்டினாள். இறந்தபோது உற்றாரும் ஊராரும் பால் ஊற்றுகிறார்கள்; இறந்த மூன்றாம்நாளும் பால்தெளிக்கின்றனர். இதனால் மனிதவளர்ச்சிக்குபால் ஜீவாமிர்தம்என்பதாகிறது. ஆனால் மனிதன் தனது சுயநலத்தால்-தனது கெட்ட சிந்தனையால்-ஆசைப் பைத்தியத்தால் பாலில் தண்ணீரைக் கலக்கிறான்; மாவைக் கலக்கிறான்; தனக்குப் பால்கொடுத்த தாயின் முலையை யறுப்பதற்கும் பாலில் தண்ணீர் கலப்பதற்கும் வித்தியாசமில்லை. அப்பேர்ப்பட்ட பாவியை அறக்கடவுள் அழித்துவிடட்டும்.

ஒரு பால்வியாபாரி கடல் கடந்து சென்று பால் விற்றுச் சம்பாதித்து தன்னிடமிருந்த பணத்தையெல்லாம் மூட்டைகட்டியெடுத்துக் கொண்டு ஊருக்குக் கப்பலேறினான். அக்கப்பற்றலைவன் வளர்த்து வந்த, குரங்கொன்றும் அக்கப்பலில் இருந்தது. ஒருநாள் பால்காரன் கொஞ்சம் அயர்ந்திருந்த சமயம்பார்த்து அக்குரங்கு பணமூட்டையைத்தூக்கிக்கொண்டு மரத்தில் ஏறிக்கொண்டது. பால்காரன் கூக்குரலிட்டு, அலறினான். ஆனால் குரங்கோ மூட்டையை யவிழ்த்து கடலில் ஒரு ரூபாயையும் பால்காரனிடம் ஒரு ரூபாயுமாக எறிந்தது. அங்கிருந்தவர்கள் பால்காசு பால்காரனுக்கு அவன் அப்பாலில் கலந்த தண்ணீர் காசு தண்ணீரோடு என்று சொல்லிக்கொண்டார்கள்.

இவ்வூரில் இந்த அக்ரமத்திற்கு கங்குகரையில்லை. நகரபரிபாலன சபையார் இதற்கு ஏதோ, சட்டம் சமைத்து லைசென்ஸும் கொடுக்கிறார்கள்; சோதனையும் செய்துவருகின்றனர். என்றாலும் அக்ரமம் நிற்கவில்லை. அவ்வளவு தூரத்திற்கு நகரசபையாரும் டாக்டர்களும் சிரத்தையோடு வேலை செய்கிறார்கள். பாலில் ஜலங்கலக்கும் பால்காரர்கள் எவ்வளவு குற்றவாளிகளோ அவ்வளவு அளவுக்கு நகரசபை டாக்டர்களும் குற்றவாளிகளாவார்கள்.

நல்ல வெள்ளிக்கிழமை

நேற்று முன்தினம் கிறிஸ்தவர்களுக்கு நல்ல வெள்ளிக்கிழமை. உலகத்தின் பலபாகங்களிலும் இவ்வெள்ளி கொண்டாடப்பட்டிருக்கும். இங்கிலீஷ் கிறிஸ்தவனும், ஜெர்மன் கிறிஸ்தவனும், ருஷியக் கிறிஸ்தவனும், சீனக் கிறிஸ்தவனும், ஜப்பான் கிறிஸ்தவனும், இந்தியக் கிறிஸ்தவனும் எல்லாக்கிறிஸ்தவர்களும் அன்று கிறிஸ்துபிரானுக்குப் பிரார்த்தனையும், காணிக்கையும் செலுத்தியிருப்பார்கள். கிறிஸ்து தர்மத்தைப் பின்பற்றுகிறவர்கள் கிறிஸ்து மகானுக்கு வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும் எந்த இடத்திலும் எந்த காலத்திலும் சிந்தை திறைசெலுத்தக் கடமைபட்டிருக்கிறார்கள். எந்தவொரு தர்மத்திற்காக-எந்தவொரு கொள்கைக்காக-எந்தவொரு சத்தியத்தை ஸ்தாபிப்பதற்காக அந்த மகரிஷி மனிதருக்காகப் பிறந்து, மனிதருக்காக வாழ்ந்து, மனிதருக்காகவே இறந்தாரோ அந்தமஹத்துவத்தை மனிதவர்க்கம் மறக்கமுடியாது.

இயேசு மகானின் மலைப்பிரசங்கத்தைப் படித்தால்-மனிதஜாதி பின்பற்றிவிட்டால் உலகத்தில் சண்டை சச்சரவுகள் இருக்கவும், ஏற்படவும்முடியாது. ஆனால் "படிப்பது பாகவதம் இடிப்பது பெருமாள் கோவில்" என்ற கொள்கையில் மதத்தை மனிதர் கையாளும்போதுதான் எல்லா அக்ரமங்களும் நடைபெறுகின்றன. அசத்தியத்தைச் சத்தியத்தால் ஜெயிக்கிறது; அக்ரமத்தை கிரமத்தால் வெல்லுகிறது; கஷ்டத்தை சகிப்பால்-சாத்வீகத்தால் ஹிதமாக்குகிறது என்ற தத்துவத்தை உலகத்திற்கு உபதேசித்த தெய்வத்தை-தெய்வ ஞானியை கிறிஸ்தவ உலகம் உண்மையில் பின்பற்றவில்லை.

காடுமேட்டைச் சுற்றாமல் கொட்டிக் கொட்டியளக்காமல் நேரே விஷயத்திலிறங்குவதானால் இந்தியாவையும் இந்தியாவை யாளும் கிறிஸ்தவ அரசாங்கத்தையும் எடுத்துக்கொண்டு இருசாராருக்குமிடையே நடக்கும் பான்மையைப் பார்த்தாலே போதும். கிறிஸ்தவ குலத்தலைவர்கள் கிறிஸ்து தர்மப்படி இராஜநீதிசெலுத்துகிறார்களா? என்பது கேள்வி. கிறிஸ்து பிறந்தநாளில்-அந்த மகானது புனிதமான ஜெயந்தி தினத்தில் ஆரம்பிக்கப்பட்ட அடக்குமுறை-அட்டூழியம் இன்னும் ஓயவில்லை. இந்தியா சம்மந்தப்பட்டமட்டில் நல்ல வெள்ளிக்கிழமை, நல்ல வெள்ளிக்கிழமையாக இல்லை. கெட்ட வெள்ளி யென்போமானால் மததூஷணை செய்வதாகச் சொல்லுவீர்கள். இருந்தாலும் கிறிஸ்து கோவிலில் கிறிஸ்து புராணத்தைப் படித்து கிறிஸ்து தர்மத்தை உள்ளொன்று புறம்பொன்றாக அனுஷ்டிப்பதில் உத்கிருஷ்டமான கிறிஸ்து நாமம் கறைப்படுத்தப்படுகிறது.

விளக்கு அணைந்துவிட்டது

இந்தியா ஒரு மஹோன்னதமான பூமி. மலைகளில் உயர்ந்த ஹிமயமலை இங்கேதான் இருக்கிறது. ஹிமாசலத்தின் சிறந்த சிகரங்கள் போன்ற அவதாரபுருடர்கள் இந்தியாவிலேதான் எண்ணற்றோர் பிறந்தார்கள்; எண்ணற்றோர் பிறந்திருக்கிறார்கள். ஒரு புத்தபிரானை ஒரு கிருஷ்ண பரமாத்மாவை, ஒரு சைதன்யவஸ்துவை, ஒரு திலகரிஷியைப் பெற்றெடுத்த பாக்கியம் இந்தியாவுக்கே உண்டு. ஒரு கவிச்சக்கிரவர்த்தி யேற்றிவைத்த கவிதை விளக்கு இன்று உலகம் எங்கும் பிரகாசிக்கிறது. ஒரு அஹிம்சைக் கடவுள் கொளுத்திவைத்த சத்தியஜோதி உலகத்தின் எந்த மூலையில் ஒளிபரப்பவில்லை. ஒரு ஸி. வி. ராமனும், ஒரு பி. ஸி. ராயும், ஒரு ஜெகதீஸ சந்திரபோஸும் பிரகாசிக்கச்செய்த அறிவுச்சுடர், கலையின் தீபம் இக்காலை எவ்வளவு பிரபையோடு விளங்குகிறது.

இவைகளின் மத்தியிலே இன்னொரு விளக்கும் எரிந்துக்கொண்டிருந்தது. ஹடயோகத்தால் அபிஷேகிக்கப்பட்ட அவ்விளக்கில் திரி நன்கு சமைந்திருந்தது. யோகசாதனையால் எந்தவொரு கொடிய விஷத்தையும் உண்டு உஜ்ஜீவிக்கமுடியும்; ஜீரணிக்கச்செய்யலாம்; உண்டு உயிர்வாழலாம் என்பதை அந்த ஜோதியினைக் கண்டோம். எவ்வளவோ விஷப் பரீட்சைகளெல்லாம் செய்துபார்த்து அறிவாளிகள் அந்த ஆத்மாவை ஆராதித்தார்கள்.

நரஸிங்கயோகி வந்தார்; ஹடயோகத்தை அப்பியஸித்தார். விஷங்களையெல்லாம் விழுங்கி விழுங்கி ஹடயோகத்தின் ஒரு விளக்காய் விளங்கினார். அவர் வந்தகாரியத்தை அவசர அவசரமாகச் செய்துமுடித்ததும் போய்விட்டார். அவ்வளவுதான் அந்த விளக்கு அணைந்துவிட்டது. அவரது ஆத்மா சமாப்தியடைந்துவிட்டது.

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுஎண் 245 மலர் 9 இதழ் 73 அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ பத்திரிகை **DESOPAKARI** புதன் ஞாயிறு வெளியீடு.

௨10-36-வது விதி இரங்கான், (30-3-32) பங்குனிமீ 18உ புதன்கிழமை

நமது குடுகுடுப்பைக்காரன்!

நமது குடுகுடுப்பைக்காரனுக்கு கொஞ்சம் ஜோசியும் தெரியும். ஜோசியத்தோடு ஒட்டி அவனுடைய ஜோசியமும் ஓய்வதால் அநேகமாய் அவன் சொல்லில் பழுதிருப்பதில்லை. அரசியலிலும் கொஞ்சம் அறிவுண்டு. காசு பணத்திற்காக அவன் தனது குடுகுடுப்பையைக் கொட்டுகிறது கிடையாது. நாமும், நாட்டிலுள்ள யாவரும் நல்லாயிருக்கவேணும்; அதன் நடுவிலே தானும் வாழவேணும் என்கிற வேதாந்தம் அவனுக்குச் சரிப்பட்டுவரும். அதனாலேதான் அவன் பேரிலே பிரத்தியேகமான ஒரு அன்பு விழுந்து விட்டிருக்கிறது; நம்பிக்கையும் கொண்டிருக்கிறோம்,

நேற்றுக் காலமே தனது குடுகுடுப்பையைக் கெட்டியாய்க் கொட்டிக்கொண்டு நமது காரியாலயத்தின் வாசலிலே வந்து நின்றான். நமக்குக் கொஞ்சம் தேசீயப் பைத்தியம் பிடித்திருப்பதால் அவனை இரண்டொரு ஜோசியம் கேட்கலாமென்னும் எண்ணம் ஏற்பட்டது. உடனே அவனைக் கூப்பிட்டு "நான் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். நீ சரியாய்ச் சொல்லிவிட்டால்—உன்று வாக்குப் பலித்துவிட்டால் இரண்டொரு கதர் கந்தைகள் பரிசளிப்போம்." என்று கூறினோம், அவனும் மிகுந்த உற்சாகத்தோடு காதைத் திறந்து கேட்கத் தொடங்கினான். "தேவி சரோஜினி புதிய தில்லி போனாள். அங்கிருந்து காசிக்குச் சென்று பண்டித மாளவியாவைக் கண்டு இந்தியாவின் நிலைமையைப்பற்றி 5 மணி நேரம் என்னென்னவோ கலந்து பேசினாள். அப்புறம் பண்டிதரும் தேவியும் தில்லிக்குப் போனார்கள். ஏதோ சமாதானமுயற்சி நடக்கப்போவதாக எல்லோரும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் சரோஜினி பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியில் தான் காங்கிரஸ் சர்வாதிகாரி என்ற முறையில் சமாதானம் விரும்பக்கூடாதெனவும் சர்க்காருக்கும் சமாதான நோக்கம் இல்லையெனவும் கூறுகிறாள்: நமது சர்வாதிகாரியின் பேச்சில் நமக்குப் பூரண நம்பிக்கையுண்டு. ஆனால் சர்க்காருக்கு சமாதான நோக்கம் இல்லையென்பதை இவள் என்னையாய்க் கண்டாள் என்பதை எம்மால் யூகிக்க முடியவில்லை. ஒன்று வைஸ்ராய் வில்லிங்டன் சாத்தியமாகாத நிபந்தனைகளைக் கூறி சரோஜினியைச் சமாதானம் செய்யச் சொல்லியிருக்கவேண்டும். இல்லாவிட்டால் சர்வாதிகாரியின் முன்னால் மீசை முறுக்கிக் காட்டியிருக்கவேண்டும். அதனாலேதான் சர்க்காருக்கு சமாதான எண்ணம் இல்லையென சரோஜினி தீர்க்கமாய்ச் சொல்லுகிறாள். சரி அதுவுமிருக்கட்டும். ஜூன் முதலுக்குள் வில்லிங்டன் ஏரோப்ளேனில் லண்டனுக்குப் பறந்துபோய் இந்தியாவைப்பற்றி ஏதோ முடிவு செய்யப்போவதாகவும் ஒரு வதந்தியிருக்கிறது. இவைகளிலெல்லாம் நமது போர் என்னவாய் முடியும்? ஒற்றை வரியிலே சொல்லு பார்க்கலாம்" என்றோம்.

குடுகுடுப்பைக்காரன் சொல்லுவான், "இப்பொழுது வியாழ பகவான் கடகராசியில் இருக்கிறார். அவரைச் சனி பார்க்கிறான். மே மூன்றாம் வாரத்தில் வியாழன் சிம்மராசிக்கு வந்தவுடன் சண்டையெல்லாம் ஓய்ந்து சமாதானமாகும். வில்லிங்டன் லண்டனுக்குப் போகும் காலமும் ஒத்துக்கொள்ளுகிறதல்லவா? முன்பின் யோசிக்காமல். இந்தியரை வெற்றிக்காகப் போராடச்சொல் பிரசாரம் செய்யுங்கள். ஜெயம் நமக்குத்தான்" என்றான்.

பிரிவினை சூழ்ச்சி

பர்மாவையும் இந்தியாவையும் பிரித்துவிடப் பகீரதப் பிரயத்தனங்கள் நடந்து வருகின்றன. இந்த இரண்டு தேசங்களுக்குமுள்ள தொடர்பை அறுத்துவிட சர்க்காரும் கங்கணம்கட்டிக்கொண்டு விட்டது. இதை நிறைவேற்ற என்னென்னவோ ரகசிய வேலைகளெல்லாம் நடக்கின்றன. பர்மியரில்பெரும்பாலரும் பர்மிய சங்கங்களின் பொது சபையாகிய ஜி.ஸி.பி.ஏ. யும் பர்மியத் தலைவர்களும் இம்முயற்சிகளை எதிர்த்து வருகின்றனர். தற்சமயம் ஒரு சிலர் பர்மாவைப் பிரித்துவிடத்தான் வேண்டும் என் பிரசாரம் செய்து வருவதற்கும் காரணம் இல்லாமலில்லை. பர்மாவில் 1930ஹல் ஏற்பட்ட கலகம் தான் காரணம் என்று வாய் கூசாமல் கூறலாம். பர்மாவில் ஏற்பட்ட கலகத்தை அடக்குவதற்கு இந்தியாவிலிருந்து இந்தியத் துருப்புகளைக்கொண்டு வந்ததுதான் முதல் துவேஷம் அக்காலத்தில் சீனத்தேசியக் கிளர்ச்சியையும், சுதந்திர தாகத்தையும் கொல்லக்கூட இந்தியத்துருப்புகளைத்தான் அனுப்பி வந்ததென்பதையும் மறந்து விட முடியாது இச்செய்கையையும் நாம் ஏகமுகமாக அக்காலத்திலேயே எதிர்த்தோம்; கண்டித்தோம். டில்லி சட்டசபையுங் கூட சண்டையிட்டது. ஆனால் வெகுஜன வாக்குக்கு கட்டுப்படாத இந்த அரசாங்கம்தன்னிஷ்டப்படியே காரியத்தை நடத்தியது அதேபோல் பர்மியரைச்சுட்டுத் தள்ளவும், அவர்களை அடித்து வீழ்த்தவும் இந்தியத்துருப்புகளையே கருவியாக உபயோகித்து பர்மியருக்கும், நமக்கும் இருந்து வரும் சிநேக பாவத்தை ஒழிக்கும் யோசனையுடனேயே அரசாங்கம் செய்தது. பர்மாக்கலகத்தை அடக்க பர்மாவில் போலீஸ் இல்லாமலில்லை. சைன்யமில்லாமலில்லை,— ராணுவப்படை இல்லாமலில்லை. இந்த சூழ்ச்சியை மண்டையிலடிக்க இந்தியா அக்காலத்தில் ஏகமுகமாகக் கிளம்பியும் முடிவடைந்தபாடில்லை. சர்க்காரின்சூழ்ச்சியே ஒருவாறு பலிதமடைந்தது. பர்மியரில் ஒரு சிலர் இதைஸ்பஷ்டமாகத்தெரிந்துகொள்ளாததே இந்திய பர்மிய துவேஷம் முற்றியதற்கு காரணம். போனதெல்லாம் போகட்டும்; பர்மாவில் நடக்கும் கொலை, கொள்ளைகள் இந்தியத் துருப்புகளாலாவது நிறுத்தப்பட்டதா? இல்லவே இல்லை. இந்தியத் துருப்புகளைக் கொண்டுவந்து உயிரைவாங்கியதுதான் மிச்சம்.

போதும் அப்பா போதும்!

எமது அன்பின் மிகுதியால்-நீங்கள் எம்மிடை கொண்டுள்ள பிரேமையின் காரணத்தால் "தேசோபகாரி"யின் அபிவிருத்தியை முன்னிட்டு மாத சந்தாவை நிறுத்திவிட்டு ஆறுமாதம், ஒரு வருஷத்திற்கு சந்தாதாரர்கள் சேர்ப்பதென முடிவு செய்துள்ளோம். வாசகர்களின் நன்மைக்கென நாலு அணாவுக்கு லாண்மடோ எங்கே, பசுமந்தான் எங்கே எங்கெங்கு மூலை, முடுக்குகளிலெல்லாம் அலைந்து, படிபடியாய் ஏறி, வீடு, வீடாய் முட்டி, கெஞ்சிக், கெஞ்சி கடைசியில் கையை விரித்ததுதான் ஆதாயம். கால் எலும்புவரை தேய்ந்ததைத் தவிற நாலு அணாக் கிடைத்தபாடில்லை. இதனால் நாமே நமது வாசகர்களைக் குறை கூறுவதாக தப்பாக அர்த்தம் கொண்டுவிடக்கூடாது. எமது கஷ்டத்தை நாமறிவோம். வாசகர்களில் கூர்ந்த நோக்குடையாரும் அறியமுடியும். நமது பத்திரிகா நண்பர்கள் குறிப்பாக காலணாவிற்கு அரண்டுவிற்கும் அன்பர் ஒரு சந்தர்ப்பத்தில் இதை ஆதாரமாகக்கொண்டு நம்மைத் திட்டுவதற்கு ஒரு கருவியாகவும் உபயோகித்துக்கொள்ளவும் கூடாது. ஏனெனில் நமது "தேசோபகாரி"யை ஆதரிப்பதே போல் வேறு எப்பத்திரிகையை ஆதரிக்கின்றனர், இதற்காக நாம் நமது மனப்பூர்வமான நன்றியையும் கடமையையும் நமது வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இன்னொன்றும் சொல்லி விடுகிறோம். எமது காரியாலயத்தில் வேலை செய்து விலகிக் கொண்ட கானிமுத்தும், பூரணமும் திருட்டுத்தனமாக சந்தா வசூலிப்பதாகவும் அறிகிறோம். இத்தேதி முதல் எமது கையொப்பமில்லாத எந்த ரசீதுக்கும் நாம் ஜவாப்தாரியல்ல.

சந்தா வாசகர்களுக்கு அவ்வப்போது சரியான காலத்தில் பத்திரிகை கிடைப்பதில்லை என்னும் புகாரும் புகைந்துகொண்டிருக்கிறது. அதை நிவர்த்திப்பதற்கும் ஒரு காரணமாகவே. நாலணா சந்தாவை நிறுத்திவிட்டோம். ஆறுமாதம், ஒரு வருஷம் சந்தாதாரர்களாகச் சேர்ந்துகொள்ளும்படி வாசகர்களை வினயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்,
"தேசோபகாரி."

சுதேசிப் பிரசாரம்

தற்சமயம் உலகம் பூராவுக்கும் பொருளாதார நெருக்கடியால் ஒவ்வொருவனும் விழிபிதுங்கிப்போகிறான். இந்தியர்களனைவரும் செய்ய வேண்டிய வேலை ஒன்றுண்டு. நானே அகில இந்திய சுதேசி சங்கத்தை ஸ்தாபித்திருக்கிறேன். ஜில்லா, தாலுகா, கிராமாந்தரங்களிலுள்ள ஒவ்வொருவனும் சுதேசி ஸ்தாபனத்தில் கண்டிப்பாய்ச் சேர்ந்துகொள்ளவேண்டும். முதலாவதாக காசியிலேயே ஸ்தாபிதம் செய்யப்பட்டபடியால் அங்குள்ள ஒவ்வொருவரும் அதில் அங்கத்தினர்களாகச் சேரவேண்டும். சேர்ந்த அங்கத்தினர்களிடமிருந்து இனிமேல் சுதேசிப் பொருட்களையே உபயோகிக்கவேண்டுமென உறுதிமொழிப் பத்திரமொன்று எழுதி வாங்க வேண்டும். ஒவ்வொரு ஸ்தாபனங்களிலிருந்தும் துண்டு பிரசுரங்கள் வழங்கவேண்டும். பொதுக்கூட்டங்கள் கூட்டியும்; கண்காட்சிசாலைகள் ஏற்படுத்தியும், ஊர்வலங்கள் மூலமாக, வீடு, வீடாகச்சென்று சுதேசியத்தின் அவசியத்தைப் பற்றி எடுத்துரைக்க வேண்டும். தலைமை சுதேசி ஸ்தாபனத்தோடு பதிவுசெய்துகொள்ளும் கிளை ஸ்தாபனங்களுக்கு வேண்டிய சௌகரியங்களை தெரிவிக்க தபால் மூலம் காலாகாலங்களில் அறிவித்துவிடவேண்டும். இந்திய கைத்தொழிலை ஆதரிப்பது ஒவ்வொரு இந்தியனுடைய கடமை என்பதை உணர்ந்து அபிப்பிராய பேதமின்றி நடந்துகொள்ளவேண்டும்.

இங்கிலாந்தில் தோட்டி முதல் தொண்டமான் வரை பிரிட்டிஷ் பொருள்களைவாங்கி உபயோகிக்கவேண்டும்-விற்கவேண்டும் என பலத்த பிரசாரம் செய்யப்பட்டுவருவதை இந்தியனென்ற முறையில் மனதைவிட்டு அகலாதிருக்கட்டும். இங்கிலாந்தைப் போன்று இந்தியாவிலும் இந்தியர்கள் இந்திய சாமான்களையே உபயோகிக்கவேண்டுமென பிரசாரம் செய்வது குற்றமாகாது. அப்படியானால் சர்க்கார் சுதேசிப் பிரசாரத்திலீடுபட்டவர்களை எல்லாம் இப்பொழுது கைதிசெய்யவில்லையா என்று கேட்கலாம். வாஸ்தவமே சர்க்காரின் முட்டாள்தனம் தான். சர்க்கார்செய்தது தவறுதானென்பதை சிலதினங்களில் தெரிந்துகொள்ளும். இந்தியர்களின் வருமானம் ஆங்கிலேயர்களின் வருமானத்தில் 20-ல் ஒரு பங்குதானென்பதை உணர்ந்து சுதேசி ஸ்தாபனத்திற்கும்-பிரசாரத்திற்கும் ஆதரவுகாட்ட பின்வாங்கவேண்டாம்.

—பண்டிதமாளவியா.

வாய்ச் சவடால் கூட்டம்!

சுடுகாட்டுக் கமிட்டிக்கூட்டம் வாய்ச்சவடால் கூட்டமாக ஆகியிருப்பது அநேகருக்குத் தெரியாது. நமது பிள்ளை-சுடுகாட்டு மானேஜிங் டிரஸ்டி-அவர்தான் சோமசுந்தரமும் மகா சமர்த்தர். கணக்கைப் பரிசிலனை செய்வதற்காக கமிட்டி நியமனமும் மாதத்தைத் தாண்டிவிட்டது. ஒரு கூட்டம் அவரது ஆபீஸில் கூட்டினார். கமிட்டியாரில் இரண்டொருவர்வந்திருந்தனர். வந்திருந்தவர்களிடம் கணக்குப் புத்தகத்தை விரித்திருந்தால் பதினைந்து வருடத்துக்கணக்குகளில் ஓரிரண்டுவருடக் கணக்காவது பரிசிலனை செய்யப்பட்டிருக்கும். கள்ளங், கபடமற்ற கணக்காயிருந்தாலல்லவோ கணக்கை வீசிப்போட வரும். பாவம் அவர்தான் என்னசெய்வார், தன் வீடுபோய்விட்ட விசனத்தில் கணக்கைக் காளாபத்தியில் வைத்து வந்துவிட்டார். கணக்குப் பரிசிலனைக்குச் சென்றிருந்த கமிட்டியாருக்கோ; பலகம்பெனிகளை ஏற்படுத்தி அதன் மானேஜிங் டிரஸ்டியாயிருந்த இன்னா[illegible] பற்றியும், நமது சுடுகாட்டு மானேஜிங் டிரஸ்டி எடுத்துக் கூறினாராம், அப்படியானால் 50 கம்பெனிகளுக்கு மானேஜிங் டிரஸ்டியாயிருந்த வில்லியர்ஸ் கணக்குக் காட்ட முடியாமல் இன்சால்வென்ஸானாரே சுடுகாட்டு கணக்குக்கு மட்டும் தானே நாம் மானேஜிங் டிரஸ்டி [illegible] என்று எண்ணுகிறார் போலும். அப்படி ஒன்றுமட்டுமல்ல; 'தேசோபகாரி' லிமிட்டெட் கம்பெனிக்கும் நமது சோமசுந்தரம் பிள்ளை மானேஜிங் டிரஸ்டி ஆனதின் பின்தான் அதையும் ஒப்பேத்தினார் என்பதையும் ஞாபகமூட்டாமலிருக்க முடியவில்லை. கணக்குக் கொடுக்கும் வழக்கம் இவர் பேரேட்டில் இல்லவேயில்லை. ஓரிருவாரக்குப் பணம்தெண்டி கணக்கை சால்சாப் செய்துவிடலாம் என்று இனி எண்ணுவது பகற் கனவேயாகும் என்பதை நமது ஸ்ரீமான் பிள்ளை அறியட்டும். கணக்கை பரிசிலனைசெய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இவ்வாரத்திலேயே செய்துமுடிக்கட்டும். இல்லாவிட்டால்...?

கிறிஸ்து பிரான் : :

டபிள்யூ. என்.
ஈவர்

இங்கிலாந்திலே காந்திஜீ ஒரு சாமான்ய கிழ வுருவத்தோடு இருந்தார். ஆனால் இந்தியாவிலோ அவருடைய வாக்கு வேத வாக்கு. அவரது சொந்தவூரில் அவர் ஒரு ஞானியாகவும், மகாத்மாவாகவும் இருக்கிறார். ஆனால் ஜேம்ஸ் அரண்மனையில் எவரும் அவரை அவ்வளவாய் பொருட்படுத்தவில்லை.

காந்திஜீ ஒரு சத்தியபுருஷன்; அவரை யாரும் நம்பலாம். மனிதர்களுக்கு அவர்ஒரு தலைவர்;குரு. அந்தமுறையிலேயே அவரும் நடந்துகொள்ளுகிறார். காந்திஜீ ஒரு சாதாரண மனிதனல்ல, உள்ளும், புறமும் ஆத்மஜோதியால் அபிஷேகிக்கப்பட்டிருக்கு மவர் வெறும் மனிதனல்ல. "கடவுள் எனக்குக் கட்டளையிடுகிறார் நான் அவரது கட்டளைகளை பின்பற்றுகிறேன் ஆண்டவன் எனது சேனாதிபதி. நான் அவரது சிப்பாய். கடவுள் எனது இரட்சகர். நான் அவரது அடைக்கலப் பொருள்'' இவைதான் காந்திஜீயின் வாழ்க்கைக் காவியம்.

காந்திஜீயின் ஆத்ம சமர்ப்பணத்தைப் பார்த்தவுடன் எனக்கு பிரிட்டிஷ் கப்பற்றலைவனின் ஞாபகம் வருகிறது. தங்கப் பதக்கங்களாலும், வீரவிருதுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும்அவனது போர்உடையை கழற்றிவைத்துவிட்டு பிரார்த்தனைசெய்கிறான். தான் ஒருபோர் வீரன் பலசிப்பாய்களுக்கு கட்டளைகொடுக்கும் சேனாதிபதிஎன்பதைமறந்துவிட்டு,வெறும் மனிதன் என்ற முறையிலேயே ஆண்டவனிடத்தில் தனது குற்றங்குறைகளை கூறிக்கொள்ளுகிறான். ஆனால் காந்திஜீ அப்படிச் செய்கிறதில்லை, ஒரு பெரிய தேசத்தை போரில் இறக்கவும் சமாதானத்தில் இறக்கவும் கூடிய பொறுப்புவாய்ந்த அவர் அரைமுழத் துண்டை சேனாதிபதியின் கவசமாக பூண்டிருந்தாலும் ஆண்டவனிடத்திலும், அப்படியேதான் தம்மை அர்ப்பணஞ் செய்கிறார்.

காந்திஜீயின் வறுமை விரதத்தில் உண்மையில்லை. பச்சைத் தமிழில் சொல்லுவதானல் அவர் ஏழையல்ல, வலிய வறுமை விரதத்தை ஒரு நாட்டுக்காகவும், ஒரு நாட்டுமக்களுக்காகவும் மேற்கொள்ளுவது ஏழ்மையில்லை. தனக்குத் தேவையானவைகளை கூடிய அளவுக்கு குறைச்சலாக குறைத்துக்கொண்டதால், அவருடைய எளிய வாழ்க்கையில் திருப்தியும் வெற்றியுமடைகிறார். ஒரு பெரிய அரசனுடைய ஆடம்பரமான வாழ்க்கையை காந்திஜீயின் வறுமை வாழ்க்கையில் மகத்தான தத்துவம் பொதிந்திருக்கிறது. அவருக்கு அவர்கொண்டுள்ள தன்னம்பிக்கை 35கோடி ஜனங்களை அவர் வசப்படுத்துகிறது.

கிறிஸ்துவை கிறிஸ்து புராணத்தில் படித்திருக்கிறோம். அவருடைய வாழ்க்கைத் தத்துவத்தையும், ஜீவிதலக்ஷியத்தையும் நன்றாய் விளக்கிக்கொண்டுபார்த்தால் கிறிஸ்துவை காந்திஜீயில் காணலாம். காந்திஜீயைப் போற்றும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவை வணங்கும் உண்மைக் கிறிஸ்தவனாகிறான். அவரைப் புறக்கணிக்கும்—அவமதிக்கும் - சோதனைசெய்யும் ஒவ்வொரு கிறிஸ்தவனும், சயித்தானை வணங்கும் பாவியாகிறான்.

இந்தியாவின் ஏக பிரதிநிதியாக விருக்கும் காந்திஜீயின் கோரிக்கைகளுக்கு பிரிட்டன் இணங்காமல் மேலும் மேலும் அடக்குமுறைகளையே கையாண்டுவருமானல் கிறிஸ்துவை சிலுவையில் அறைந்த அதே கொடுஞ்செயலை மறுபடியுஞ் செய்தவர்களாகிறோம்.

—டெய்லி ஹெரால்ட்

மறுபடியும் சாமுயல்

இனிமேல் வேலைக்கு லாயக்கில்லையென்றநிலைமைக்கு வந்துவிட்ட கிழப் பிராணிகளுக்கு-வற்றல் தொத்தலாய் மெலிந்துபோன மிருகங்களுக்கு-மனிதஜாதிக்காக உழைத்த எருதுகள் குதிரைகளுக்கு பின்சர்போல் கட்டித் தீனிப்போட்டுப் போஷிப்பது வழக்கம். அக்கொள்கையைப்பற்றி மனிதர்களிலும் உழைத்துக் கிழமாய்ப்போன உத்தியோகஸ்தர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கிறது என்ற வழக்கம் வழக்கத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதுபற்றி நாம் இங்கே பேசவரவில்லை. பின்சர்போலுக்கு நமது சாமுயலை அனுப்பிவிடவேண்டுமென்பது நமது கருத்து, ஏனெனில் அவருக்கு ஐம்பதுக்குமேல் வயதாகிவிட்டது. கொஞ்சம் கிறுகிறுப்பும் ஏற்பட்டிருக்கலாம். மூளைக்கு வேலை அதிகமல்லவா? இந்தியாவில்

கொடி வணக்கம்.

(டெரன்ஸ் மாக்ஸ்வினி)

தேசத்திற்காக-பிறந்த பொன்னாட்டிற்காகச் சிறைக்கம்பிகளுக்குள் புழுங்கி முதல்முதல் அங்குலக் கணக்கில் உயிரையும், உடலையும் பலிதியாகம் செய்த-விடுதலை வீரன்-வீர விளக்கு—சுவர்க்கவாசர் மாக்ஸ்வினி தனது தாய்க்கொடியை வணங்கிய பாணியை ஈண்டு குறிப்பிடுகிறோம் இதையொரு எடுத்துக்காட்டாய்க்கொண்டு ஒவ்வொரு இந்தியனும் இந்தியாவின் மணிகொடியை வணங்கக் கடவான்.

இதோ அயர்லாந்தின் சுதந்திரக்கொடி நாட்டப்பட்டிருக்கிறது. எத்தனை இளைஞர்கள் இதைச் சூழ்ந்து நிற்கப்போகிறீர்கள். எத்தனை வாலிபர்கள் உங்களது வாலிப இரத்தத்தால் இக்கொடியை அபிஷேகிக்கப் போகிறீர்கள். எத்தனைவீரர்கள் உங்களுக்குள்ள சர்வஸ்வப்பொருளையும் செலுத்தப்போகிறீர்கள். ஸ்திரமான கொள்கையில்லாமல்-நிலவரமான திட்டமில்லாமல் எப்பொழுதும் சிந்தனையிலேயே கிடக்கும் வாலிபர்கள் இக்கொடியைக்காக்க மாட்டார்கள். ஒரு நாடு அந்நாட்டு இளைஞர்களை ஜெயித்து விட்டால் மற்றவர்களை ஜெயிப்பது பிரமாதமில்லை. ஒவ்வொரு இளைஞனும் அவன் பிறந்த நாட்டிற்கும் நாட்டுமக்களுக்கும் தான் செய்யவேண்டிய கடமை இன்னதென்பதை உணர்ந்து விட்டானானால் அப்புறம் அவன் ஒரு நிமிஷம் கூட அடிமையாயிருக்க முடியாது. கஷ்டத்தையும், நஷ்டத்தையும் சாவையுங்கூட வலிய வரித்துக்கொண்ட அவனைக் கட்டுப்படுத்த எந்தச் சட்டத்திற்கு பலமிருக்கும் பார்க்கலாம்; நாளைக்கு வீரனாகி விடலாம் என்று எண்ணிக்கொண்டு இன்றைக்கு மனிதனாயிருப்பதில் மதிப்பில்லை. ஏனெனில் சந்தர்ப்பம் ஒரு மனித ஆயுளில் ஒரே ஒருமுறை தான் வாய்க்கிறது. அதைக்கை நழுவ விட்டுவிட்டு இன்னொருசந்தர்ப்பத்திற்கு எதிர்பார்த்திருப்பது அலை ஓய்ந்து குளிக்கலோடொக்கும்.

ஒரு நாட்டின்உயிரெல்லாம்அந்நாட்டுக்கொடியிலேயேயிருக்கிறது, அதற்குரிய மரியாதையை அந்நாட்டான் கொடுப்பது மாத்திரமில்லை. பிற நாட்டாரிடமிருந்து பெறவும் வேண்டும். நமது கொடி நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் பறக்க வேண்டும். அதை இறக்கத்துணியும் எந்த ஆண் பிள்ளையும் வெல்லவேண்டும். நமது கொடி அவமானப்படுத்தப்பட்டால் அப்புறம் நமது உயிரென்ன வெல்லமா? அப்படியும் ஒரு உயிரோ ஒருஜாதியோ உயிர்வாழ்வதைவிட அழிந்து போகட்டும். உனக்கு வன்மையுண்டு; எந்தக்காரியத்தையும் உன்னால் சாதிக்க முடியும் வெளியில் வந்து பார் அதோ உனது கொடியை ஒரு அன்னியன் கம்பத்தோடு ஆட்டி அலைத்துக் கொண்டிருக்கிறானே அவனை வெல்லவேண்டும். உனது கொடியை நன்றாய் ஊன்றவேண்டும் நீயும் உனதுகொடியும் இல்லாமல் அழிக்கப்படவேண்டும். மறைந்திருப்பதில் பிரயோஜனமில்லை. அப்படியேநின்று கொண்டு பின்னால் திரும்பிப் பாராமலும் ஒரு அங்குலம் கூட பின் வாங்காமலும், கொடியைக் காக்கவேண்டும். உங்கள் எண்ணம் பாழாய் முடியலாம்:—உங்களது சரீரம் இல்லாது அழிக்கப்படலாம்-உங்களது கொடி கந்தை, கந்தையாக்கிக்கிழித்தெரியப்படலாம். ஆனால் அந்த முடிவுகளைப்பற்றி உங்களுக்கு அக்கரை என்னத்திற்கு. கடமையை கடமையின் காரணமாகச் செய்து விடுங்கள். சாம்ராஜ்யங்களின் வெற்றியைவிட நீங்களடைந்த வெற்றி தான் சரித்திரத்தில் ஆழ அழுந்த எழுதப்படும் ஒரு நாட்டை அவன் கௌரவமான அந்தஸ்தில் வைக்கவேண்டுமானால்—அழிக்கப் படுவதிலிருந்து காப்பாற்ற வேண்டுமானால் தேசோத்காரமான சத்திய ஜோதியை உங்களுடைய ஆத்மத்தின் மத்தியிலும் ஜீவனின் நடுவிலும் ஏற்றி வைத்து விடுங்கள்.

இவ்வளவு கூச்சலும் குழப்பமும் நடக்துகொண்டிருக்கையில் எல்லாம் அமைதி அமைதியென்று பிரமாதமாகப் பேசுகிறான். அடக்குமுறை செத்துப்போகும் சமயத்தில்தான் அமைதி என்கிறபேச்சை ஆரம்பித்திருக்கிறான். விளக்கு அணையும்போதுதான் தீபமும் சுடர்விட்டெரியும். அடக்குமுறையாலாகாது என்ற எண்ணம் உதித்தான பின்புதான் அடக்குமுறையாலாகிவிட்டது என்கிறார்போலும். அப்படியானால் விசாரணைகூடயில்லாமல் தேசபக்தர்களையெல்லாம் ஏன் சிறையில் பூட்டிவைதிருக்க வேண்டும்? பிரதிதினமும் ஏன் தலைவர்கள்கைதி செய்யப்படவேண்டும்? என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளட்டும். அமைதி என்று சொல்வது உண்மையானால் உலகம் சொல்லட்டும்.

என் தாய் நாடு

(நீலமணிவாசகன்)

தவமே உருவாய் சத்தியமே ஒளியாய்
சிவத்தினைக் கண்ட சீர்பெற்ற நாடு
போகபூமி யென்றும்புகழ் வளம் மோனம்
யாக மிவற்றிலும் தலையாய நாடு
அன்புடை அன்னை பாரதப் புதல்வியை
இன்புடன் பெற்ற எழில்பெரு நாடு
அத்திருநாடு அன்னியர் கையில்
அல்லலுறுவதை ஐயகோ! கேண்மின்!

ஆதியில் இந்தியர் ஆங்காங் குன்மை
ஜோதிமயமாய சொல்லுதற் கரிதாய
வாழ்வு நடாத்தினர் இவ்வையத்தில்
மேன்மையாய்

தாழ்மையும் கீழ்மையும் தானெனுங் கர்வமும்
பாவமும் பழியும் பன்மையும் பற்றலும்
ஏவலும் எள்ளலும் இழிவான மற்றவை
பூமியிற் பிறக்க புன்மையை வளர்த்து
காமிகள் பற்பல நாட்டையும் பற்றினர்

இம்மண் ணிழிவுற்ற பான்மையு மிதுவே
ஐம்பெருங்கண்டமு மழிந்தன அன்றே
எனினும் பாரதம் இவ்விழிந்த நிலையிலும்
தனித்தே தன்சிரத்தை நன்றுமே ஏநிமிர்த்து
என்னே! என்னே! இந்தியா நீவாழ்ந்த
மேன்மையும் நின்மேழிச் செல்வமுங் கல்வியும்
எங்கே எங்கே அவை என்றுன் புதல்வர்
ஏங்கிநிற்கின்றோம் அச்சீரெப்பொழு தடைவை

கண்ணீர் பெருகுது கன்மன முருகுது
மண்ணில் என்னம்ம நின்வாழ்நிலை காணில்
எங்குநின் செல்வம் எங்குநின் சிறப்பு?
எங்குநின் கல்வி எங்குநின் மேன்மை?
அந்தோ! அந்தோ! அருமைத் தாயே
எந்தன்குருதி கொதித்தல்நீ காணாய்
வெவ்வேறு ஏடுகள் வெறுவாய் உயரவும்
அவ்வாறுநீ இன்றடைந்திலாய் அந்தோ!

நின்னழகும் மனமும் ஒளிர்புன் னகையும்
நின்மேனியின் வண்ணமும் நின்னலங்காரமும்
அம்ம! என்னம்ம! அவையாண்டுச் சென்றன?
இம்மாநிலத்தில் எவரதைப் பற்றினர்?
சிறியேன் உந்தன்செல்வ மின்மையை
உறுகண்ணியற்றி உறுத்தாரை கினைக்கின்
தீம்மொழியாய் என்றன் திருவுள்ளம்
விம்மிவெடித்து வெதும்புதல் காணாய்

மிலேச்சராம்சிறு வெண்ணிறக் குழுவினர்
மோட்டினர் வெய்ய பொல்லாங்கினர்நிலை
நாயை யுமிழிய நாட்டினர் கரிய
பேயையொத்த பேதையர் உந்தன்
சீரைக் குலைத்தனர் செல்வத்தைப் பற்றினர்
வரையறையற்ற வன்மம் புரிந்தனர்
தாயே தண்ணருளாய்!
நேயமாய் அவர்புரி நிகழ்ச்சி பொருத்தனை

பொறுமையே வடிவாய் பொன்னே! நின்மலமே!
வறுமையடைந்தனை வல்லமை குன்றினை
பைந்நிறப்பழனம் பசுநிறக் காடுகள்
மைந்நிறமுகிலுடை மாபெருந் தேவி!
அருளுடையாய்! அன்னாய்! நின்
திருவடிவு எழில்வளம் குன்றின
ஆவென்னம்மே என்னம்மே யெனக்
கோவெனக் கதறினர்நின் கோடிமக்கள்

மேலைநாட்டினர்(அவரை யாரெனவழைப்பது?)
காலை நின்புண்ணிய பூமியில்வைத்ததும்
வந்ததுனக்கு என்றும் வாராத் தரித்திரம்
அந்நாணின்று அலைந்தது நின்வளம்
மற்றத்தேவிகள் வாழவும் நீயாற்றல்
அற்றனை நின்மக்கள் அலிகளாயினர்
மெலிந்துவாடி மேன்மையற் றின்று
எலிபோலிருள்வளை தன்னில்வாழ்கின்றனர்

அன்னியர் நின்னை அவமானஞ்செய்ய
உன்னருநின்னரசர் ஓடிப்பதுங்கினர்
கயவர்நின்முகிற் கருங்கூந்தல்பற்ற
சயனம் நாடினர் சற்குணமக்கள்
புல்லறிவாளர்நின் பொன்னெழில் கவர
நல்லதுஎன்றனர் உந்நன்னாட்டினர்
அன்னாறிய அந்நியர்புரி கீழ்மையை
புன்காலச்சக்கர மவ்வாறுசுழன்றது

ஈராதி! என்னம்ம!
பெரியஉலகை சிறியேன் கவனித்தேன்
பூமியிலுன்னில புகலொணாத் துயரமே
காமியருன்னைக் கள்வது கண்டேன்
பாரதமக்களில் பல்வகை வேற்றுமை
ஊரில்சாதி அதனுள்ளுமொரு சாதி
மேல்ஒருசாதி அதன்மேலுந் தீண்டாமை
ஆலமென்றிவற்றை அறியாராயினர்

தேசோபகாரி

(வாரம் இருமுறை)

வருட சந்தா (உள் நாடு)	ரு	3	0	0
6 மாத ,,	,,	1	8	0
வருட சந்தா (வெளிநாடு)	,,	4	0	0

காந்திஜீ காட்டு நெருப்பு.

காந்திஜீ ஒரு காட்டு நெருப்பு. எந்த குற்றங்களும் அதை அணுகமுடியாது தவறுகளெல்லாம் அவரது காலடியிலே திருத்தப்படுகின்றன. பின்னர் அவரைப் பிழைபேசுவதெப்படி? எவரால் முடியும்? அது தொட்டதையெல்லாம் பொன்னாக்கும் தேவமணியல்லவா? மேல்நாட்டுமாமாக்கள் நவநாகரீகத்தில் மூழ்கி குளித்தவர்கள். இரவு நேரத்தில் நாய்தும்மினால் கூட தூக்கங்கெட்டுவிடுமன்றோ? உல்லாச வாழ்க்கை நடத்துவதே அவர்களுக்கு உயிர். உள்ளங்காலில் வெள்ளெலும்பாட ஓடி உழைக்கும் இந்தியர்களைக் கண்டால் அவர்கள் மண்டையில் சுயகௌரதை என்ற புழு நெண்டுகிறது. இந்தியர்களென்றால் அவர்களுக்கு இளப்பம். வெள்ளையர்கள் கண்டதே காட்சி கொண்டதே கோலம். சமீபமாக வட்டமேஜை சென்றபொழுது காந்திமகான் பாரிஸ் பட்டணம் போயிருந்தார். ஓர் இந்தியஸ்திரீ ரத்தினத்தின் வீட்டில் விருந்தாளியாக தங்கியிருந்தார். பலவிடங்களில் பேசிவிட்டு தனது ஜாகைக்குத் திரும்பினார். அவ்விடத்தில் மீண்டும் அவரைப் பேசும்படி அபிமானிகள் கேட்டுக்கொண்டனர். அப்பொழுது அதிகாலை 2-மணி. காந்தி பேசிய பேச்சுக்கள் மிக உற்சாகமாக இருந்தன. அனைவரும் ஆரவாரம் செய்தனர். இதைக்கண்டு பக்கத்திலிருந்தவர்களுக்கு தூக்கம் கெட்டு விட்டதாம். சப்தம் வேண்டாம் என வீட்டு முதலாளியிடம் கூறப்பட்டது; பயனில்லை. ஆரவாரமும், உற்சாகமும் அதிகரித்தது. தூக்கங் கெட்டவர்கள் போலீஸாரை வரவழைத்தனர். ஆனால் இவர்கள் மீது ஸிவில் வழக்கு தொடருவதைவிட வேறு வழியில்லையெனக் கூறப்பட்டது. வழக்கில் எதிரிகள் காந்தி தாத்தாவும் அவருக்கு இடமளித்த இந்திய ஸ்திரீ ரத்தினமும், மற்றும் சப்தம் செய்தவர்களும். தற்காலிகமாக விசாரணை நடந்தேறியது வழக்கு நியாயமானதெனக் கூறப்பட்டது. ஆனால் காந்தியடிகள் அந்த நாட்டிலேயே பிறந்து வளர்ந்தவரல்லவாதலால் அவர் மீது வழக்கு தொடர முடியாதெனக் கூறப்பட்டது. பாரிஸில் இரவு நேர வாழ்க்கையில் கலாட்டா அதிகம் ஏற்படுவது வழக்கம். அதைவிட காந்திப் பேச்சில் கலந்தவர்கள் அதிகப்படியானதும்மாளம்செய்ததாகக் கூறப்பட்டது. காந்தியடிகளை வரவேற்றதற்காக இந்திய ஸ்திரீரத்தினத்திற்கு ஏதாவது நஷ்டம் ஏற்பட்டால் அந்த நஷ்டத்தைஈடு செய்வதற்கு அவ்விடமுள்ள பிரபல இந்தியர்கள் நன்கொடை சேர்க்க ஆரம்பித்துள்ளனர். காந்தி தாத்தாவிடம் பாரிஸ் இந்தியர்களுக்கு என்ன அபிமானம்!. நிற்க காந்திக்கு இடமளித்த இந்திய ஸ்திரீ ரத்தினம் தனது வீட்டை காலிசெய்யவேண்டுமென வீட்டு முதலாளி நோட்டீஸ் கொடுத்துள்ளார். ஆனால் இந்திய ஸ்திரீ ரத்தினம் இதை ஏற்கவில்லை. கோர்ட்டில் நோட்டீஸுக்கு எதிரிடையாக மனுதொடுத்துள்ளார். காந்தியவர்கள் பிரஸ்தாப வீட்டில் பேசும்பொழுது அவ்வீட்டில் அவரது சிஷ்யர்கள் போட்ட சப்தத்தைக் காரணமாகக் கொண்டு வீட்டு முதலாளி வீட்டுக் குடிக்கூலிக்காரரை வெளியேற்ற முடியுமா? இந்த கேள்வியை நிர்ணயிப்பதற்காக மற்றோர்நியாஸ்தலத்திற்கு வேலை ஏற்படபோகிறது.

உபசரித்த இந்திய ஸ்திரீ ரத்தினத்தின் சார்பாக ஓர் இந்திய பாரிஸ்டர் வாதாடப்போகிறார். இது பிரஞ் நியாயஸ்தல சரித்திரத்திலேயே முதன்மையான சம்பவமாகும். இது சம்பந்தமாக நியாயவாதக் குழுவில தீர்மானிக்கப்படும்'

நமது காந்திஜீ ஒரு பக்காபேர்வழி-எங்கு போனாலும் அதிகாரிகளுக்கு நிறைய வேலை கொடுக்கிறார். பிரஞ்சு கோர்ட்டாருக்குமுன்று வேலைகொடுத்துவிட்டார். ஒரு குற்றத்தை மறைக்க பல குற்றங்களைச் செய்யும் செயலை பிரான்ச் சர்க்கார் செய்கிறார்கள். எய்தவன் இருக்க அம்பை நோவதுபோல இவ்வளவுக்கும் காரணக் கர்த்தாவான காந்திஜியை விட்டுவிட்டு பிறரை துன்புறுத்துவது நாட்டு ராஜநீதியாகுமா? ஆனால் பிரான்ஸில் நாட்டை ஆளும் முறைமை நன்குசமையவில்லையென்பது நமக்குத் தெரியும். சவர்க்காருக்கு அடைக்கலம் கொடுக்காத அவ்வரசாங்கத்தார் இந்தியர்களை வெறுப்பதில் ஆச்சர்யமில்லை ஆங்கிலேய சர்க்காரும், பிரெஞ்சு சர்க்காரும் சகபாடிகளானதால் அவர்கள் எதுவையும் செய்யமுடியும். ஆனால் பாரிசிலிருக்கும் நமது தோழர்......... தொழிலாளிகளுக்கு வேதம் வகுத்த தொல்கவிவாணர் கார்ல் மார்க்ஸ் மகரிஷி பேரன்— லாஹுமனைட் பத்திரிகையின் ஆசிரியர் நமது நாட்டிலிருந்து ஓடித்திரியும் இந்திய தேசாபிமானிகளுக்கு: இடமும், உணவும், வசதியும் அளித்து வரும் லாங்வெட் என்பாரே நமது வாழ்க்கை அங்கு வாதிக்கட்டும்!

அனுமந்தன் பாய்வானா?

இந்தியாவிலே சமாதான தேவியைக் காணோம். சாந்த லக்ஷ்மி மறைந்துவிட்டாள். சிம்லாவிலிருக்கும் ஹனுமானுக்கு அவளைத் தேடிப்பிடிக்க ஆசை உண்டாகிவிட்டது. வேறு விதியில்லாவிட்டால் என்னதான் செய்யலாம்? ஐந்து வருஷம் எப்படியாவது ஆண்டு தொலையவேண்டுமல்லவா? லார்டு இர்வினைப்போல் நல்ல பேர் சம்பாதிக்க வேண்டாமா? இப்படி எல்லாம் கேட்டுக் கேட்டு கடைசியில் இலங்கையில்—ராவணன் ஆக்ஷி செலுத்திய லங்காபுரியில் சீதையைத் தேடிச்சென்ற ஹனுமான் போல இங்கிலாந்துக்குப் போகவிருப்பதாக அறிகிறோம். அங்கே அசோகவனம் போன்ற வெள்ளை மண்டபத்திலே.............மத்தியிலே சாந்த தேவியைக் காணலாமென்பது அவரது கருத்து. ஜூன் மாத முடிவுக்குள்ளாக ஹனுமன் மகேந்திரகிரியிலிருந்து பாய்ந்தது போல வைசிராய் வில்லிங்டன் சிம்லா மலையிலிருந்து ஆகாசத்திலே பாய்ந்து லண்டனிலே தொப்பென விழப்போகிறாராம். இச் செய்தியை சிம்லா சென்றிருந்த நமது குருவி கொண்டுவந்தது. சட்ட சபை மெம்பர்கள் குசு, குசுவென்று காதுக்குள்ளே பேசிக்கொண்டார்களாம். எப்படி இருந்தாலும் நமது குருவியின் பேச்சில் நமக்குப் பூரண நம்பிக்கை உண்டு. ஆனால் கணக்கில் மாத்திரம் அது மண்டையை உடைத்துக்கொள்ளுகிறதில்லை; அந்தக் கலம் கொஞ்சம் பூஜ்யம். நமது மூளையில் எட்டியதை சொல்வதென்றால் அனேகமாய் ஏப்ரல் முதல் வாரத்திற்குள் வைசிராய் வில்லிங்டன் லண்டனுக்குப் பாய்வார். இல்லாவிட்டால் லண்டனிலிருந்து நமது அரசியல் இந்தியாவுக்குப் பாய்ந்தாலும் பாயலாம். எப்படிப் பார்த்தாலும் கதையை வளர்த்தாமல் சுருக்கமாய்ச் சொல்லி முடிப்பதானால் நமது பக்கத்தில் வெற்றிக் காற்று வீசுகிறது என்போம். பண்டித மாளவியாவையும், தேவி சரோஜனியையும் இதுவரையில் சிறைப்படுத்தாமல் விட்டு வைத்திருப்பதும் சமாதான முயற்சிக்காகவே என்பதும் நமது இந்த ஜோசியத்திற்கு ஆதாரமாய்—சாக்ஷியாய் அமைகிறது. கீர்த்தியில்லை விரும்புகிறவர்களெல்லாம் சந்தர்ப்பத்தை இழந்துவிடால் சட்டமறுப்பில் கலந்து வீர பட்டயமும், வீர விருதும் பெற்றுக்கொள்ளட்டும்.

எடுத்துப் போடு எலும்பை

கடிக்க வரும் நாய்க்கு மாத்திரமில்லை, பிரியமாய் வளர்க்கும் நாய்களுக்கும் எலும்பெடுத்துப்போடுவது வழக்கம். ஆனால் இரண்டின் கருத்தும் ஏகமாய் சிற்சில விஷயங்களில் பொருத்தமாய் அமைகின்றது, கடிக்கவரும் நாயை எலும்பைக்கொண்டு தனது பண்ணித் தன்னைக் கடிக்காமலிருக்கச் செய்வது ஒன்று. வளர்ப்பு நாய்க்கு எலும்பு போடுவது தன்னிடத்தில் விசுவாஸம் குன்றாமல் மேலும் மேலும் அதிகப்பற்றுதலுடன் இருப்பதற்காக. இது வொரு சாதாரண விஷயம். அரசியலில் புகுத்திப்பார்த்தால் இது பெரிய ராஜதந்திகளின் மூளைகளில் மட்டும் எட்டக்கூடிய பெரிய ராஜதந்திரம். இதை பிரிட்டிஷ் சர்க்கார் வெகு தாராளமாய் இந்தியர் விஷயத்தில் உபயோகித்து வருகிறார்கள். இந்திய அரசியலில் நெருக்கடி ஏற்படுங்காலங்களிலெல்லாம் தங்களின் வாலைப் பிடித்திருப்பவர்கள் சிறிது தளர்ச்சியடையும் போதெல்லாம் சர்க்கார் பட்டம் வழங்கும் வேலையில் இறங்கிவிடுகின்றனர். அருகதைக்குத் தகுந்தபடி எதுவும் செய்கிறதில்லை. கண்ணில்லாதவனுக்குக் கமலக்கண்ணன்-கண்ணப்பன்-செந்தாமரைக் கண்ணன் என்கிற பெயர் சூட்டுவதற்கும் சர்க்காரின் பட்டமளிப்பிற்கும் வித்தியாசமே கிடையாது.

சமீபத்தில் சென்னை செனட் சபையில் ஒரு 11 புள்ளிகளுக்கு சில பட்டங்கள் வழங்குவதென தீர்மானஞ் செய்யப்பட்டிருக்கிறது. அவர்களில் ஸர் சங்கரநாயர், திவான் பகதூர் ஸர் வெங்கிட ரெத்தின நாயுடு, ஸர். பி. எஸ். சிவசாமி அய்யர், மகா கனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரி, ஸர் எம். அப்துல் ஹைதரி, ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் இவர்களுக்கெல்லாம் எல். எல். டி. (சட்ட மேதாவி) பட்டமும் மகாமகோ உபாத்தியாயர் வி. சாமிநாதய்யருக்கு டி. எல் (இலக்கிய மேதாவி) பட்டமும் வழங்கப் போகிறார்கள். இவர்களெல்லாம் சர்க்காருக்கு வேண்டும். காங்கிரஸ் பக்கம் சேர்ந்துவிடக்கூடாதென்பதே இப்பட்டமளிப்பின் முக்கிய நோக்கமாகும்.

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுஎண் 245] (1922-ஹு ஸ்தாபிதம்.) 1 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இரு முறை.

இரங்கோன், பிரஜோற்பத்தி-ஹு (3-4-32) பங்குனி-மீ 22உ ஞாயிற்றுகிழமை

ராஜாவின் கண்ணுக்குப் பின்னால்?

ஒரு நாடு நாகரீகத்தால் உயரவேண்டுமானால்—செல்வத்தால் சிறப்புறவேண்டுமானால் அந்நாட்டின் கலைவளர்ச்சிவளரவேண்டும். "வீடு தோறும் கலையின் விளக்கம் வீதிகள்தோறும் இரண்டொரு பள்ளி"கள் சமைத்து நாட்டின் எதிர்கால மன்னர்களாய் வரவிருக்கும் இளைஞர்களை மாணவர்களாகப் பயிற்றுவிக்கவேண்டும். "நிதி மிகுந்தவர் நிதிகளுதவியும், காசுகளுள்ளவர் பொற்காசோ, செப்புக்காசோ கொடுத்தும், அதுவுமற்றவர் உடலால் உதவியும்" கலைவிளக்கம் செய்யக் கடமைப்பட்டுள்ளனர். அரசனும், சமூகமும், தனி மனிதனும்கூட தேசீயமாகவோ, சமுதாயமாகவோ, தர்ம ரீதியாகவோ கலை வளர்ச்சியில் கருத்துச் செலுத்தாவிட்டால் அவ்வரசனும், அச்சமூகமும், அம்மனிதனும் அதிக நாள் சுபீக்ஷமாய் வாழமுடியாது. நாடு பிரகாசமடைவதற்கு கல்வி விளக்கில் திரி நன்குசமைத்து அறிவுச் சுடர் கொளுத்தினாலன்றி அமையாது.

இராஜா டாக்டர் இர்ாமநாத செட்டியார் கண்ணை மூடிவிட்டார். சீமானாக பிறந்து, சீமானாக வாழ்ந்து, சீமானாகவே சாய்ந்தார். அத்துடன் அவரது வாழ்க்கைக் காவியம் முடிவடைந்துவிட்டது; அவரது ஜீவியக் கோயில் அடைத்துத் தாளிடப்பட்டுவிட்டது. இராஜாவின் இரண்டு கூறுகளில் ஆத்மக்கூறு சாந்திமயமாய் சமாப்தி யெய்தியபோது அவரது பூத உடலைச் சுட்டுச் சாம்பலாக்கி ஒரு சிறு அணுப் பிரமாணம்கூட இல்லாமல் அழித்துவிட்டோம். ஆனால் அழியாத—அழிக்கமுடியாத இன்னொரு உடம்பு—புகழ் உடம்பு என்கிறோமே அது மாத்திரம் நம்மிடைவிட்டுப் பிரியவில்லை. மனிதவர்க்கம் கோயில் கட்டிக் கும்பிடும்வரையும்—மனிதஜாதி பள்ளி சமைத்துக் கல்வி கற்கும்வரையும்—இராஜா இராமநாதர் நமது மத்தியில் இருக்கவேசெய்வார். இறந்தார் என்று சொல்லவும் முடியாது, இறக்கச் செய்யவும் முடியாது.

இறந்த ஆத்மா கௌரவிக்கப்படவேண்டும். புனிதமான தாயின் அதன் ஞாபகம் நம்மிடை மறக்கப்படாமல் வளர்க்கப்படவேண்டும். அவ்வாத்மா ஸ்தாபித்துவைத்த அடையாளங்கள் அவற்றின் நோக்கத்தில் சிறிதும் குறையாமல் நிலைக்கப் பெறவேண்டும். அதை அன்றிக்குலைப்பது—அவ்வடையாளங்களை அழிப்பது—அவைகள் சீரியமுறையில் நடைபெறாமல் தடுப்பது அல்லது அசட்டைச் செய்வது, இறந்த ஆத்மாவை அகௌரவம் செய்தலாகும். பாலூட்டி வளர்த்த தாயின் முலையை அறுப்பதற்கும் இதற்கும் அதிகம் வித்தியாசமில்லை.

இராஜா செட்டியாரின் புகழுக்குப் பாத்திரமாக அவர் வைத்துச்சென்ற சின்னங்கள் இரண்டு நமது கண்களில் சதா தட்டிக்கொண்டிருக்கின்றன. கிழக்கு இரங்கோனில் வெங்கடேசப்பெருமாள் கோயில் கொண்டிருப்பதும் அதற்கடுத்தாப்போல் ஸ்வர்க்கிய இராஜாவின் தந்தையார் சிதம்பர செட்டியாரின் பள்ளித்தலம் பிரகாசிப்பதும் இந்த இரண்டு புனிதமான ஆத்மாக்களின் புகழ் ஒளியை பரப்பவில்லையா? அவர்களது கொடைக் காத்தை—தர்ம ஸ்வரூப

இராஜாவின் கண்ணுக்குப் பின்னுல் ?

த்தை காட்டவில்லையா ? அவர் ஏற்றிவைத்த பக்திவிளக்கும், கலை விளக்கும் இருளை விலக்கி ஜோதி கொடுக்கவில்லையா ?

தமது திரண்ட செல்வத்தை இராஜா செட்டியார் பலவேறுஸ்தாபனங்களுக்கென பங்கு வைத்துப் போனுர். அவைகளில் கோயிலுக்கும் பள்ளிக்கூடத்திற்கும் அவற்றைச் சமீபத்துள்ள பல மாளிகைகள் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் வருவாயிலிருந்து அவ்விரு தர்ம ஸ்தாபனங்களும் குறைவற நடத்தப்பெறவேண்டுமெனத் திட்டப்படுத்தியுள்ளார். ஆனுல் அவர்இறந்து இன்னும் மாதக்கணக்கு முடிவாவதற்கு முன்னதாகவே பள்ளி நிர்வாகத்தில் பல சூழல்கள் தோன்றத் தலைப்பட்டுவிட்டன. இதைப்பற்றி செட்டியாரின் குடும்பஸ்தர்களும் பள்ளி நிர்வாகத்தினரும் பொதுமக்களும் இப்பொழுதே கவனம் செலுத்தாவிட்டால்—தக்கனசெய்ய முற்படாவிட்டால் தமிழர்களின் கௌரவத்திற் கிலக்காகவும், இறந்த இரு செட்டியார்களின் புகழுக்கு அடையாளமாகவும் இராஜாவால் நாட்டப்பட்டிருக்கும் ஞாபகச்சின்னம்—கலையுலகத்தின் ஜோதி விளக்கு—அழிக்கப்பட்டு—அணைக்கப்பட்டு விடுவதை சீக்கிரம் எதிர்காணலாம். தவறு ஏற்படுவது சகஜம். அதை அவ்வப்போது திருத்தாவிட்டால் விபரீதம் விளைந்துவிடுகிறது. பெரிய பெரிய ஸ்தாபனங்களும் பெரிய பெரிய அரசாங்கங்களும் கூட நிர்வாகத் தவறுல் கவிழ்ந்துவிடுவதுண்டு. அதேபோல் செட்டியார் ஸ்கூலும் ஆகிவிடலாகாது என்பதே இக்கட்டுரை எழுதப்பட்டதின் கருத்தாகும். செட்டியார் ஸ்கூல் நிர்வாகத்தில் பெரியதொரு தப்பு இருக்கிறது. அது எந்தஇடத்தில் என்பது தெரியவில்லை. ஆனுல் தப்பிருக்கிறது என்பது மாத்திரம் சந்தேகமில்லாமல்—தீர்க்கமாய்—ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. அது திருத்தப்பட வேண்டும்.

இறந்த இராஜா செட்டியார் இருந்த காலத்தில் அவரும் ஸ்ரீமான் ஆ. ஆ. நாகலிங்கத் தேவரும் ஒருவரோடொருவர் நட்புரிமையால் அளவளாவி வந்ததை நாமறிவோம். தொழிற் றுறையிலும் ஒருவருக் கொருவர் கலந்தாலோசித்து தங்கள் தங்கள் தொழிலை விருத்தி செய்துவந்ததும் நமக்குத் தெரியும். தர்மாபிவிர்த்தியிலும் கருத்தொருமித் திருந்தனர். இப்பொழுது இராஜா கண்ணை மூடிவிட்டார். என்றுலும் ஸ்ரீமான் தேவரின் மனக்கண்ணை விட்டு மறைந்திருக்க முடியாது; மறைந்திருக்கவும் மாட்டார். செட்டியாரின் புகழுடம்பு அழிவு பெறுமல் ஸ்தாபிதமாக்கப்படுவதில் ஸ்ரீமான் தேவருக்குள்ள அவ்வளவு சிரத்தை வேறு பலருக்கு இருக்காது. நாம் கேள்விப்படுகிறவரை ஸ்ரீ தேவரும் செட்டியார் விட்டுச்சென்ற குடும்பத்தினரின், தொழிலின், ஸ்தாபனங்களின் அபிவிருத்தியில் சிந்தையும் சிரத்தையும் செலுத்துகிறுரெனவே அறிகிறோம். பின் ஏன் பள்ளி நிர்வாகத்தில் ஓட்டை விழவேண்டும் ? விழப் பார்த்திருக்கவேண்டும் ?

பள்ளிக்கூட டிரஸ்ட் திட்டத்தின்படி எந்த ஜாதியாரும் அதன் தர்மகர்த்தர்களாக பொது ஜனங்களால் நியமிக்கப்பெறலாமெனக் கேள்விப்படுகிறோம். அது உண்மையாயின் இப்பொழுதிருக்கும் தர்மகர்த்தர்கள் கூட்டத்தில் எவராலோ ஏற்பட்டிருக்கும் தவறை திருத்தவோ அல்லது தர்மகர்த்தரையே மாற்றி வேறொருவரை நியமிக்கவோ நமக்கு உரிமையுண்டு. அவ்வுரிமையை உடனே உபயோகிக்க வேண்டும். ஸ்ரீமான் தேவர் இது விஷயத்தில் சிறிது சிரத்தைக்காட்டி பள்ளிக்கூடத்தை நன்முறையில் அமைக்க வேண்டுகிறோம்.

பள்ளிக்கூடத்திற்கு எழுதிவைக்கப்பட்டிருக்கும் சொத்திலிருந்து தக்க வருமானம் வாராது அதனுல் நிர்வாகம் பாதிக்கப்பெறுதவகையில் வீடுகளில் நல்ல குடித்தனக்காரர்களை வைத்து தவறுமல் வசூல் செய்யவேண்டும். அநேகமாய் அந்த இடத்திலேதான் தவறு ஏற்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. எப்படியானுலும் இரங்கோன் பிரமுகர்கள் சிந்தை செலுத்தட்டும்; தவறு திருத்தப்படட்டும். தேவருக்கும் அவர் கடமையை மீண்டும் ஞாபகமூட்டுகிறோம்.

தேசோபகாரி

(வாரம் இருமுறை)

வருட சந்தா (இரங்கோன்)	ரூ	3	0	0
6 மாத ,,	,,	1	8	0
வருட சந்தா வெளியூர்)	,,	4	8	0

பத்தாவது வருஷம்.

நமது "தேசோபகாரி"க்கு பத்தாவது வருஷம் பிறந்துள்ளது. தேசோத்தாரமாகவே பிறந்து தேசத்திற்காகவே பல, பல பலித்யாகங்களைச்செய்த நமது ஒன்பது வருஷ வாழ்க்கையின் சரித்திரத்தை ஒருமுறை மேற்பார்வையாகப் பார்த்துவிட்டு பத்தாம் வருடத்தைத் தொடங்குவோம்.

இந்தியாவில் ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு காந்திஜீ சிறைக் கம்பிகளுக்குள்—நாலு சுவர்களுக்கு மத்தியில் ஆறுவருஷம் புழுங்கிக் கிடக்கவேண்டுமென்று ஏற்பட்டபோது நாட்டில் ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டதல்லவா? அது இந்தியாவின் எல்லையோடு மட்டும் நின்றுவிடாமல்பர்மாவுள்ளும் புகுந்தது அக்காலத்தில்தான் காலஞ்சென்ற தேசபக்தர் டாக்டர் கே யூ. ஆர். ராவ் அவர்களால் ஆரம்பமாயிற்று. எதற்காக ஆரம்பிக்கப்பட்டது என்பதை "எமது நோக்கம்" என்றதலைப்பின்கீழ் "தேசோபகாரி" பிறந்தவன்று கூறியவாறு அப்படியே ஒரு அக்ஷரம்கூட மாற்றமில்லாமல் இவ்விதழின் மற்றோர் பக்கத்தில் பிரசுரித்துள்ளோம்.

ஒத்துழையாமைக் காலத்தில் நாடெங்கும் ஒரு புதிய இரத்த ஓட்டம்—புதியஉணர்ச்சி—புதிய தியாக சிந்தனை—புதிய ஆத்ம சமர்ப்பணம் எல்லாம் ஏற்பட்ட அக்கால் பர்மிய மண்ணிலே—பர்மாவில் வசிக்கும் தமிழ்ஜனங்கள் மத்தியிலே தேசோபகாரியும் தோற்றுவிக்கப்பட்டது 1922-ம் வருட ஒத்துழையாமை முதல் இற்றைய சட்டமறுப்பு வரை தேசோபகாரி செய்து வரும் தொண்டை வாசகர்களுக்கே விட்டு விடுகிறோம். நமது நோக்கம் பூர்த்தியடையுமாறு நிதி மிகுந்தவர் பலர் எமக்கு நிதியம் வழங்கினார்கள். காசு உள்ளவர்கள் சிலர் காசு கொடுத்தார்கள். அவர்களுக்கெல்லாம் எமது ஹிருதயப் பூர்வமான ஆசீர்வாதம் சேரட்டும்.

ஆனால் எமக்கிடர் பல செய்தவரும் உண்டு. அவர்களை நாம் சபிக்கலாமா? சீ! வேண்டாம். எமக்கிடர் செய்தவர் எமக் கிடர் செய்தவரில்லை; தேசத்திற்கிடர் செய்தவர் ஆவர். "தேசோபகாரி" பேரைச்சொல்லி வசூலித்த எவ்வளவு பணத்தை பாவிகள் தமக்கென உபயோகித்துக்கொண்டனர். சமீபத்திலும்கூட ஒரு பாதகன் சுமார் ஆயிரம்ரூபாய்கள் வரை வஞ்சனையால் வசூல்செய்து வாயில் கொட்டிக்கொண்டார். நன்றாய் வாழட்டும்.

மகத்தான கஷ்டங்கள் எத்தனை, எத்தனை வழியில் மலையாய் முளைத்தன. பணக்கஷ்டங்கள், சர்க்காரின் அடக்குமுறைகள், நம்மவர் சிலரின் துவேஷம் இவைகளையெல்லாம் காலடியில் மிதித்து ஏறிச் சென்றுகொண்டிருக்கிறோம். தேசோபகாரியின் வேகத்தையும்—போக்கையும் எதுவும் தடுக்கமுடியாது.

ஒன்பதுவருடங்களையும் தாண்டி பத்தாம் வருடத்தில் வந்துள்ளோம். பல அபிவிருத்திகளும் செய்யப்படவேண்டும். எழுத்துக்கள் பழமையெய்திவிட்டன. அச்சுயந்திரம் வேறு அமைக்கவேண்டும். இவைகளுக்கெல்லாம் பலரது பேருதவி கிடைக்குமானால் இன்னும் சற்று வேகத்தில் நடத்தலாம்.

அ. வெ. செல்லம் பிள்ளை.
ஆசிரியன் (பொறுப்பாளன்.)

ஏப்ரல் பூல்

மார்ச்ச மாதம் முடிந்து ஏப்ரல் பிறந்தது. எல்லோரும் அதற்கு முட்டாள் பட்டம் கட்டினார்கள். இதென்ன முட்டாள்தனம்! கால மாறுதல்களில் ஒரு சுகமான பருவகாலம்போய் கடுமையான வெயில்காலம் வந்தபோது அது ஒரு சிலருக்குச் சரிப்படாவிட்டால் அதற்காக முட்டாள்பட்டம் கட்டுவதாவது? ஏப்ரல் பிறந்ததும் மண்டை வெடிக்க வெயில் அடிக்கிறது. இம்மாத முழுதும் இப்படித்தான் இருக்கும். இந்தியாவில் மணற் பாலைவனம்போல் ஒரே அக்கினியாய்ச் சுடும். சூரியன் மத்திய ரேகையில் வெகு சமீபத்தில் ஒளிவதால் உக்கிரமாக இருப்பதில் ஆச்சரியமில்லை குளிர் பூமியிலிருந்து இங்கு வந்திருக்கும் வெள்ளையர் இதை சகிக்கமாட்டாமல் இம்மாதத்தை சபிக்கிறார்கள். ஓய்வெடுத்துக்கொண்டு குளிர்ந்த மலைகளுக்கு ஓடிக் கோடைநாளைக் கழிக்கிறார்கள். வேலை செய்யாத இரண்டு மூன்று மாதங்களுக்கும் முழு சம்பளத்தையும் வரிசெலுத்தும் ஏழைகள் வியர்வையைப் பிழிந்து கொட்டிக் கொடுக்கின்றனர். மனிதன் செய்த தவறுக்காக—அவனால் நேர்ந்த கஷ்டத்திற்காக கடவுளை நொந்துகொள்ளுவதோ? கால இயற்கையாலேற்படும் வெயில் கொடுமைக்காக அம்மாதத்தைச் சபிப்பது முட்டாள்தனமா?

(6-ம் பக்கம் பார்க்க)

எப்படி அழைப்பது?

தேசியத் தொண்டர்கள் ஒவ்வொருவருக்கும் ஆபத்து ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று. போலீஸ்காரன், கடைக்காரன், குடிப்பவன் இவர்கள் மூவர்களாலும் தொண்டர்கள் தாக்கப்படுகிறார்கள். சர்க்கார் தர்ம சத்திரத்தில்-இந்தியாவில் சாப்பிட்டு ஜீவிப்பதற்காக ஏதாவது ஒரு ஓட்டைச் சட்டத்தைக் காட்டி போலீஸ்காரன் கைதிசெய்துவிடுகிறான். பரதேசித்துணிக்கடைக் காரனும், கள்ளுக் கடைக்கார முதலாளியும் தொண்டர்களை ஏசுகின்றார்கள். போலீஸ்காரன் தடியாலோ, கத்தியாலோ குத்துவதையும் கூட பொறுமையுடன் பொருத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் தூங்குகிறவனை எழுப்பலாம்; விழித்துக்கொண்டு படுத்திருப்பவனை எவ்வாறு எழுப்புவது? அதேபோன்று தேசபக்தி துளியேனும் இல்லாதவனாயிருந்தால் அவனை அரைக்ஷணத்தில் விழித்துக்கொள்வச் செய்யலாம். இவ்வருஷத்துச் சண்டையைப் பார்த்துவிட்டு தேசபக்தி என்பது என்னவென்று தெரிந்துகொண்ட அநேகர் இன்னும்கூட அன்னியத் துணியைக் களைந்தெறியாதிருக்கின்றனர். அவர்களுடைய நண்பர்களுங்கூட அவர்களைக் கண்டிப்பதில்லை. உள்ளொன்று வைத்து புறமொன்று செய்பவனைக் கண்டு சமூகம் வாளாவிருக்கலாமா? ஆதலால் யார் யாருக்கு தேச உணர்ச்சி துளியேனும் ஏற்பட்டுவிட்டதோ, எவரெவருக்கு காந்தியடிகளிடமும், காங்கிரஸினிடமும் பக்திஏற்பட்டுவிட்டதோ அவர்கள் உடனே அன்னியத் துணிகளை நெருப்பிட்டுத் தள்ளுவதே நியாயம். உடனே—வாசித்தமாத்திரத்திலாவது கதரை அணிவார்களாக.

பரதேசித் துணி என்பது ஒருசயித்தான். பிடித்தவர்களை அது எளிதில்விடுவதில்லை. ஊடேயே ஒரு நண்பர் ஒருவர் வந்துசேர்ந்தார். நேற்று நண்பரைக் கண்டபோது கதர் தரித்திருந்தார். இன்று சந்திப்பில் பரதேசித் துணியை அணிந்திருந்தார். நாம் உற்றுக் கவனிக்கவேண்டியதாயிற்று நமது பக்கத்திலிருந்த நண்பரோ ஒரு விண்டல் பேர்வளியிலும், கதர்ப்பேர்வளி. கூர்மையான பார்வையைத் தெரிந்துகொண்டார். நம்மை நோக்கினார். பார்ப்பதில் பயனில்லை; நண்பர் கலியாணகாலங்களில் உபயோகித்த துணிகளை தரித்துக்கொண்

ரயில்வே வகுப்பு பிரிவினை

பர்மா ரயில்வே ஊழல்களைப் பற்றிப் பலதடவைகளில் பிரச்சனை எழுந்ததுண்டு. கோடிக் கணக்கான ரூபாய்களை ரயில்வே ஸ்தாபனத்திற்காக செலவழித்திருப்பதாக வானமளாவப் புகழ்ந்து பேசிக்கொள்ளுகிறார்கள். உண்மையில் பர்மியர்களின் சௌகரியத்தை முன்னிட்டுச் செய்ததாகவோ—செய்து வருவதாகவோ கூறிவிடமுடியாது. எல்லாம் ஆங்கிலேயர்கள் தின்று கொழுத்துக் குப்பை போடுவதற்காகத்தான். ஒருவேளை பர்மாவும் ஸ்வராஜ்யதாகத்தினால் புரட்சிக்கு எழுவார்களாடு வந்திருக்கிறார்; இனி வாங்குவதெல்லாம் கதராகவே யிருக்கமுடியும் என்றார். வந்திருந்தவரும் தலையை அசைத்துக்கொண்டார். நண்பரும் ஊன்றிப் படிப்பாராக.

அன்னியத் துணியை ஒழிப்பதற்காக இந்தியர்கள் சிந்தும் இரத்தத்திற்கு அளவேயில்லை தொண்டர்கள் ஆவியையும் அர்ப்பணம் செய்துவிட்டார்கள். அவர்களுடைய தியாகத்தை நீங்கள் போற்ற வேண்டாமா? இன்னும் ஏன் அன்னியத் துணியைக் கட்டிக்கொண்டு அழுகின்றீர்கள்? அன்னியத்துணி கட்டுபவர்களை திருத்துவதற்காகவே இன்னும் எவ்வளவோ உயிர்கள் பலியிடப்படுகின்றன. அந்தப் பலியின் பாவங்களை ஏன் சுமக்கின்றீர்கள். அன்னியத் துணிகளைக் களற்றி எறிந்துவிடுங்கள். அன்னியத்துணி தரித்து அழகனுகிவிட்டதாக எண்ணிக்கொள்பவனைத் திருத்தவேண்டுவது சமூகத்தின் கடமை. "அன்னியத் துணிதான் தரிப்பேன்" என்று பிடிவாதம் செய்யும் பிள்ளையை வீட்டைவிட்டுத் துரத்துவது தாய் தந்தையின் வேலை. அன்னியத் துணியிடம் தாய், தந்தையர்கள் மோகங்கொண்டிருப்பார்களாகில் அவர்களிடமிருந்து பிரிந்து வாழ்வதுதான் மக்களின் கடமை. ஏனெனில் அன்னியத்துணி யிருக்கும் குடும்பத்தைச் சாபம் சூழ்ந்து கொள்ளுகிறது. அன்னியத் துணியே நீ அழியாயா? என்று அடி, தடிக்கு ஆளாகி தவிக்கும் தொண்டர்களின் சாபம் அன்னியத் துணி அணிபவரைச் சார்ந்தேதீரும். இன்னமும் அன்னியத் துணியை விறகுக்காக சேர்க்கவேண்டுமென்று அலைகின்றானே அவன் அறியாதவனெனக் கூறுவதா? அக்கிரமக்காரனென அழைப்பதா?

னுல் அவர்களை இலகுவில் வழிமறித்து அடக்கிவிடுவதற்காகவேயாகும். பட்டாளங்கள் போவதற்கும், வருவதற்கும் சவுகரியமாக இருக்க வேதண்டவாளங்கள் போடப்பட்டன--போடப்படுகின்றன. உலகத்திலேயே அதிக பொருட் செலவில் போடப்பட்ட ரயில்வேக்களில் இந்தியா—பர்மா ரயில்வேயும் ஒன்று. கொண்டது யார்? கொடுத்தது யார்? என்று லக்ஷியம் செய்யாமல் செலவு செய்கின்றனர். ரயில்வேக்களைப் போடுவதற்கு பர்மாவில் நிலங்கள்கூட இனமாகக்கிடைத்தன--கிடைக்கின்றன அப்படியிருந்தும் ஒருமைல்ரயில் போடுவதற்கு சாரசரியில் பதினுயிரக் கணக்கில் பவுன் செலவழித்தனர்—செலவழிக்கின்றனர். இன்றைக்கு எடுத்துக்கொண்டாலும்கூட வரவு, செலவில் ஆங்கிலேயர்களுக்கென்றும், இராணுவத்திற்கென்றும் வீண் செலவு செய்யப்படுகின்றன. பர்மாவில் பஞ்சமோ நிர்வகிப்பதற்கில்லை. பஞ்சம் வந்திருக்கும் இக்காலத்தில் காசேது? பணமேது? ரயில்வண்டி ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு கட்டணமின்றி ஜனங்களையும், சாமான்களையும் சேர்ப்பதுதான் ரயில்வே நிர்வாகத்தின் ஓர் முக்கிய அம்ஸமாகும்— கடமையுமாகும். 'அப்படியானுல்தான் ஜனங்களிடையே காசு தாராளமாய் புளக்கமான காலங்களில் ரயில்வே கட்டணங்களையும் அதிகப்படுத்தி வசூலித்துக்கொள்ள ஏது உண்டு. காசு நெருக்கடியான சமையத்தில் இவைகளைப்பற்றி ஒருவராவது ஆலோசித்தது கிடையாது. இந்த யோசனையை அதிகாரிகள் புத்திக்கே விட்டுவிடுவோம்.

நிற்க, முன்னேற்றமடைந்துள்ள நாடுகளைப் பின்பற்றி பர்மா ரயில்வேயும் நிர்வாகம் நடத்த பின்வாங்கக்கூடாது. அமெரிக்க ரயில்வேக்களில் முதல்வகுப்பு என்றும், இரண்டாம் வகுப்பு என்றும், மூன்றும் வகுப்பு என்றும் பிரிவினைகள் கிடையாது. அங்கு எல்லாம் ஒரே வகுப்புதான். ஆனுல் இந்தியா—பர்மாவிலோ எவ்வளவோ வகுப்புக்களை உண்டாக்கியிருக்கின்றனர். முதல் வகுப்பு வண்டிகளில் இன்னும் இரண்டு மெத்தைகளைத தைக்கிறார்களேயன்றி, அதிகவருமானம் தருகின்ற மூன்றுவது வகுப்புப் பிரயாணிகளின் சவுகர்யங்களை சரிவரக் கவனிப்பதே கிடையாது. சவுகர்யங்களையெல்லாம் கவனிப்பதாகச் சொல்லிக்கொண்டு ரயில்வேக்களில் அநேக மேலதிகாரிகள் இருக்கின்றனர். பெரிய மேலதிகாரிகள் என்னப்படும் கோஷ்டியெல்லாம் அநேகமாக ஆங்கிலேயர்களாகவேயிருக்கின்றார்கள். அவர்களுக்காக ரயில்வேக்களிருப்பதாகத்தோன்றுகிறதேயன்றி ரயில்வேக்களுக்காக அவர்களிருப்பதாகத் தோன்றவில்லை. ரயில்வே நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள நஷ்டத்தை நிவர்த்திப்பதற்காக குறைவான சம்பளம் வாங்கிறவர்கள்—முக்கியமாக பர்மியர்- இந்தியர்களுக்குத்தான் மாதா, மாதம் சீட்டுக்கொடுத்துக் கொண்டுவருகின்றார்களேயன்றி, கொழுத்த சம்பளம் பெறும்—ஆங்கிலேயர்களை நீக்கினபாடில்லை. ஆனதால் கொழுத்த சம்பளங்களுக்கு சீட்டுக் கொடுத்துவிடவேண்டுவதும் முக்கியமானதாகும்.

நமது சென்னை கடிதம்.

பர்மாவும் அதன் பங்கை எந்தக் காலத்திலும் இழந்துவிடுகிறதில்லை. தாய்நாட்டு அழைப்புக் கேட்டவுடன் தமிழர்கள் அவ்வப்போது தாங்கள் பிறந்த நாட்டிற்கு அதன் உற்ற தருணத்தில் உழைப்பதற்காகச் சென்று சர்க்காரின் சகல பாணத்திற்கும் இலக்காகி வந்திருக்கின்றனர். சென்ற சட்டமறுப்போரின்போதும் அப்படித்தான்; இப்பொழுதுதைய போரின்போதும் அப்படித்தான். கூட்டம் கூட்டமாக தொண்டர்கள் கடல் கடந்து சென்று தமிழ்நாட்டில் சட்டமறுப்புச் செய்து சிறைப்பட்டு வருகிறார்கள். நமக்குக் கிடைத்திருக்கும் கடிதத்தின் போக்கிலிருந்து இம்மாதம் 4-ம் தேதி பத்துப் பதினைந்து தொண்டர்கள் சென்னை சென்று அங்கு பல தொல்லைகளுக்குள்ளாகி 9, 11, 13, 19-ம் தேதிகளில் விருதுநகரிலும் அதைச்சார்ந்த பல் விடங்களிலும் ஆறுபேர் வரை கைதியாகியிருப்பதாகத் தெரியக்கிடக்கிறது. இதார்களும் இராமநாதபுரம் ஜில்லா முதுகுளத்தூர் வட்டகையில் பிரச்சாரம் செய்து திரிவதாகவும் அறிகிறோம். அவர்களும், அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய பரிசையும், பதக்கத்தையும் பெற்றுவிடுவார்கள். கடல் கடந்து 1500 மைல்களுக் கப்பால்ச் சென்று தமிழர்கள் தொண்டுசெய்வதில் தமிழ்நாடு முழுதுமே புத்துணர்ச்சியும், புதவேகமும் கொண்டுள்ளது; என்னும் செய்தியையும் அக்கடிதம் கூறுகிறது.

ஸை ! வேண்டாம்.

மிஞ்சினுல் கெஞ்சுவது, கெஞ்சினுல் மிஞ்சுவது. இதுதான் நம்மை ஆளும் சர்க்காரின் யோக்கியதை. அடக்குமுறைக்காக ஓர்புறம் அவசரச்சட்டங்கள், தடியடி தர்பார் வைபவம் பிறிதோர் புறம். ஐயோ! வேண்டாம். வேண்டும் என்ற ஓலம் மற்ரெருர்புறம். எது வேண்டும்? சமரசம் வேண்டும். எக்காரணம் பற்றி? இந்தியாவின் செல்வத்தை இங்கிலாந்தில் சேர்ப்பதற்கு. எது வேண்டாம்? அஹிம்ஸாதர்ம அவதார புருஷர் காந்திஜீயின் சாத்விகப் போரின் உக்ரம் வேண்டாம். சரி அப்படியாயின் இந்தியர்களுடன் சமாதானஞ்செய்துகொள்வதுதானே! அவசர புத்தியை நொந்து கொண்டு இந்தியத் தலைவர்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்வதுதானே! சுய கௌரதை என்ற பேயல்லவோ பிடித்து வாட்டுகிறது.

இந்திய நிலைமை என்னவாகும்? அஹிம்ஸை உருக்கொண்ட சாந்தமூர்த்தி காந்திஜீயின் ஆணைவழிச் சென்றால் சுதந்திரம்—இந்தியாவின் உன்னத லக்ஷியம் கோரியவகையில் சித்திபெறும் அந்நாளே நன்னாள்! முடிசூடா மன்னன் காந்திஜீயின்-பாரத அன்னையின் முடியில் சுதந்திரக் கிரீடம் சூட்டுவார்; வாகை மாலை சூடுவார்; அஹிம்சை வெற்றி வாளை வீசுவார்

இங்கிலையில் யாது வேண்டும்? சமாசம் வேண்டும். ஆங்கிலேய மக்களே இதை விரும்புகின்றார். "இது சமயம் சமரசங்குறித்துப் பேசுவது முன்கூடிய செயலாகும். எந்த சந்தர்ப்பத்தை யொட்டியும் காங்கிரஸ் மஹாசபை சமாதானபேச்சை ஆரம்பிக்காது; ஆரம்பிக்கவும்முடியாது சமாதான பாவனையைஏற்கவோ, நிராகரிக்கவோ வல்லவர் காந்தியவர்களே. தேசியப் போர்வீரர்கள் அவரது ஆக்ஞையை எதிர்நோக்கி நிற்ககிறார்கள்".

சபாஷ்! சரோஜினி! நின்போன்ற வீர மங்கையரின் மாசிலாமொழிகளையே பாரதப் புதல்வர்களின் உள்ளம் நாடுகிறது. நினது மொழிகளை வீரவாலிபர்கள் உள்ளத்தினின்று அகற்றுவரோ? அகற்றவும் இயலுமோ? ஒவ்வொரு இளஞ் சிங்கமும் ஸை! வேண்டாம் என ஓலமிடுகின்றது. என்ன வேண்டாம்? சமாதானம் வேண்டாம். பின்னர் யாதுவேண்டும்? சமாதானம் வேண்டுமாயின் கௌரவமானவகையில் வேண்டும். இந்திய மக்களின் பண்டையப் பெருமையை நாகரீக உலகத்தவருக்கு செவிடுபடத்தக்க வகையில்—விளக்கிக் காட்டத்தக்க வகையில் அச்சமாதானம் இருத்தல்வேண்டும்.

தர்க்க வாதம்.

இன்று மாலை 8—30 மணிக்கு சோவிய முஸ்லீம் அஸோஸியேஷன் ஆதரவில் சிக்கே மவுண்டாலே வீதியிலுள்ள ஷெ சங்க ஹாலில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அவ்வமயம், "கீழ் நாட்டு நாகரீகம் சிறந்ததா"? அல்லது "மேல் நாட்டு நாகரீகம் சிறந்ததா"? என்பதுபற்றிப் பல நண்பர்கள் பேசுவார்கள். ஸ்ரீமான் சி. கே. தம்பி, பார்-அட்-லா அவர்கள் தலைமை வகிப்பார். கூட்டத்திற்கு விஜயஞ் செய்திருக்கும் பொது ஜனங்களுக்கிடையே ஓட் எடுத்து முடிவு செய்யப்படும். ஆதலால் இதைக் கண்ணுறும் அனைவரும் விஜயஞ் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இங்ஙனம்,

எம். கே. ஏ. முஹம்மது இப்ராஹிம்,
கௌரவ காரியதரிசி.

(3-ம் பக்க தொடர்ச்சி)

அல்லது ஏப்ரல் மாதமே முட்டாள் மாதமா?

வெள்ளையர் சம்மந்தப்பட்டமட்டில் ஏப்ரல் மாதம் முட்டாள் மாதமாயிருக்கலாம். ஆனால் இந்தியருக்கும், இந்தியாவுக்கும் இம்மாதம்—இக் கோடைகாலம்—இவ் வெயில் நாளம் நிச்சயமாய் வேண்டியது. வெயிலும் காற்றும் அம்மாதங்களிலே எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாய் அடிக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு மழை பெய்கிறது என்பது இயற்கை சாஸ்திரிகளின்—மழைக் குறிபார்க்கிறவர்களின் துணிபு. வெயிலின் உக்கிரத்தால் கடல் நீர் ஆவியாகி மேகம் கருக்கொண்டு திரண்டு மழையாய்ப் பொழிகிறது. இதனாலேதான் இந்தியாவில் விளைச்சல் அதிகமாய் விளைய ஹேதுவாகிறது. பூகோள சாஸ்திரத்தைச் சிறிது ஆழ்ந்து கவனித்தால் பூகோளத்தில் இந்த உஷ்ண ரேகையிலேயே விளை நிலங்கள் அதிகமிருக்கக் காணலாம். ஆகையால் மனிதவர்க்கத்திற்கு ஜீவாதாரமானது வெயில்என்பது தேற்படுகிறதல்லவா?

இந்தியாவின் இயற்கையைக்கூட வெள்ளையர் வெறுக்கின்றனர் என்பற்கு இந்த ஏப்ரல் பூலே போதுமானது. பின்னர் எவ்வாறு இயற்கையில் மாறுபட்ட மனப்பான்மைகொண்ட இருவர் வாழ்க்கைநடத்துவது? நடத்தமுடியும்?

எமது நோக்கம்.

(16—7—22)

தேசத்திற்கு ஊழியம் செய்வதுதான் எல்லா தர்மங்களிலும் மிக்க மேன்மையானதென்றுணர்ந்து இன்று நாம் கடவுளைப் போற்றி "தேசோபகாரி" என்னும் பத்திரிகையின் மூலமாய் இந்நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்குத் தொண்டுசெய்ய வணக்கமாய்வெளிவருகிறோம். தேசத்திற்குத் தொண்டுசெய்வதுதான் இப்பொழுது நம்முடைய நாட்டின் மதம் இந்தியாவிலுள்ள மகான்கள் இதன் உண்மையையறிந்து தம்முடைய உயிரை பாரதநாட்டின் முன்னேற்றத்திற்கு அர்ப்பணம் செய்துவருகிறார்கள். தேசத்திற் குபகாரம் செய்யும் பொருட்டே பல்லாயிரம் ஜனங்கள் சிறைச் சென்றிருக்கின்றனர். தேச உபகாரம் செய்வதற்கே கங்கணம் கட்டிக்கொண்டு பிரதிக்ஞை செய்து வந்த மகாத்மா காந்தி இப்பொழுது எரவாடா சிறைச்சாலையில் ஆறுவருஷ காலம் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் உறைந்துவருகிறார். லோகமான்யதிலகர் தேச ஊழியராகவே மரித்தார். தேசோபகாரம் செய்வதுதான் சிறந்த தர்மம் அப்படி உபகாரம் செய்யும் தேசபக்தன்தான் மனிதர்களில் சிரேஷ்டன். "தேசோபகாரி" யென்றால் சுதேசாபிமானங்கொண்டு தன்னுடைய தேசத்திற்கு ஊழியஞ்செய்பவன் —அப்படி தொண்டுசெய்யும் ஆசையுடையவன் பரிசுத்தமானவனாயிருக்கவேண்டும். சதா தன்னுடைய தேசமே கண்முன்பு தோன்றவேண்டும். மற்றெல்லாவற்றையும் விட தன்னுடைய தாய் நாடே பெரிதென்று நினைத்து உயிரை அர்ப்பணஞ் செய்யவேண்டும். அதன் முன்னேற்றத்திற்கும், சுதந்திரத்திற்குமே பாடுபட வேண்டும். இவ்வளவு லக்ஷணங்களைக்கொண்டவனே தேசோபகாரி. இந்நாமம் மிக்க பரிசுத்தமானதா யிருப்பதால்தான் நாம்எம்முடைய பத்திரிகைகு "தேசோபகாரி" யென்னும் பெயர் வைத்திருக்கிறோம். ஆனால் எமக்கு தேசோபகாரிக்குரிய பூர்ண லக்ஷணங்களில்லை. நாம் ஒருவிதத்திலும் சிரேஷ்டராகத் தோன்றவில்லை. ஆனால் எம்மிடத்தில் உண்மையான தேசோபகாரியாகவேண்டுமென்றும்: எம்முடைய நாட்டோரை யெல்லாம் தேசோபகாரிகளாக்க வேண்டுமென்றும் அவர்கள் மனதில் ஓர்புதிய உணர்ச்சியை யுண்டுபண்ணவேண்டுமென்றும் நம்முடைய தாய்நாட்டார் பாடுபடுவதுபோல் நாமும் இங்கு சுவதந்த்ர தாகங்கொண்டு எம்மாலியன்றமட்டும் பிறந்த நாட்டிற்கு ஊழியஞ் செய்து இந்துஸ்தானத்தின் பூர்விகபழைமையையும், ஆர்ய தர்மங்களையும் கல்வி ஞானத்தையும் அழியாமல் காப்பாற்றவேண்டுமென்றும், மகாத்மா காந்தியைப்போல் த்யாகம்செய்து எம்முடைய உடல் பொருள் ஆவியையும், பாரத மாதாவிற்கு அர்ப்பணம் செய்யவேண்டுமென்றும் அளவற்ற ஆவல் மாத்திரமுண்டு. காங்கிரஸ் மகாசபையின் நோக்கங்களை அறிவித்து இந்நாட்டில் நாம் அடிமைகளாயிராமல் ஆண்தன்மை யுடையவர்களா யிருக்கவும், மற்றும்எல்லா பொது விஷயங்களையும், சுதேசபாஷையில் பிரசுரிக்கவும் நாம் "தேசோபகாரி" என்னும் தமிழ் பத்திரிகையை வெளியிடுகிறோம். அடிக்கடி ஆத்ம சக்தியைப்பற்றியும், சுதேச அபிவிர்த்தியைப்பற்றியும் தீண்டாமையைப்பற்றியும், ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைப் பற்றியும் கல்வியைப்பற்றியும், அஹிம்ஸாதர்ம மேன்மையைப்பற்றியும் விசேஷமாய் விவரித்து எழுதுவோம். எம்முடைய நோக்கமும் எண்ணங்களும் மனோரதங்களும் பெரிதாயுள்ள அவற்றையெல்லாம் இங்கு விஸ்தரிப்பதில் பயனில்லை. எம்முடைய ஆசைகளையெல்லாம் வேண்டுவது போல் நிறைவேற்றிவிட்டால் சத்ய யுகம் பிறந்துவிடும். ஆனால் இவ்வளவு பாழடைந்த உலகின்கண் அந்நிலைமை யுண்டாவது அரிது. தேசாபிமான லக்ஷணம்சங்களுடைய நிலைமையை யடைவதிற்றான் நமது ஆண்மையிருக்கிறது. தோல்வியடைந்தபோதிலும் மறுபடியும் மறுபடியும் விடாமல் எங்கள் மனோரதங்களையடைய முயற்சி செய்வோம். எம்மால் கூடியமட்டும் தேசோபகாரியாயிருந்து தேசபக்தியின் மகிமையை அங்குள்ளோருக்கு விளங்கச்செய்ய இறைவன் அருள்புரிவானாக.

தேசோபகாரி கோர்வை!

1931-௵ அக்டோபர் முதல் 1932-௵ மார்ச்சு மாதம்வரை "தேசோபகாரி" சேர்ந்து விலைக்குக் கிடைக்கும். இந்தக் கோர்வையின் முதல் இதழ் இன்று.

தபாற்கூலி உள்பட ரூபாய் இரண்டுதான்
கொஞ்சம் பிரதிகளே உள.

வங்காளத்திற்கு வந்தவர் போனவர்.

வங்காளத்திற்கு புதிதாக ஒருவர் கவர்னராக வந்தார். இருந்த பழைய கவர்னர் சர் ஸ்டான்லி போகிறார். இதில் ஒன்றும் விசேஷம் இல்லை. இந்தியா பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருக்கும்வரை கவர்னர்கள் வருவதும் போவதுமாகத்தானிருப்பார்கள். சர் ஸ்டான்லி வந்தார்; போனார் இடை நடுவில் எவ்வளவோ ஆபத்துக்கள் மத்தியில் ஐந்து வருஷகாலம் ஆட்சி செலுத்தினார். இராஜீய வெள்ளம் கரைபுரண்டோடிக்கொண்டிருந்த வங்காளத்தில்—இரத்த வெறிகொண்டு புரட்சித் தீயில் குதித்துத் திரியும் இளம் வங்காளிகளின் மத்தியிலிருந்து உயிர் மீண்டு செல்லும் அவரது அதிருஷ்டத்திற்கு நாம் வியப்படைகிறோம்.

1927-ம் ஆண்டு ஸர் ஸ்டான்லி இந்தியாவுக்கு வந்தார். அதே வருடத்திலேயே இந்தியா பூரண சுயராஜ்யத்திற்கு சென்னையில் டாக்டர் அன்ஸாரி முன்னிலையில் ஸ்ரீனிவாச ஐயங்கார் ஜவஹரிலால், சுபாஷ் போஸ் ஆகிய மூவரின் பெரு முயர்சியில் பேருக்கத்தில் அடிகோலியது. அதுமுதல்தான் இந்தியாவின் இராஜீயக் கிளர்ச்சி தீவிர வேகம் கொள்ளுகிறது; அரசியல் நிர்வாகம் பெருத்த ஆபத்திற்குள்ளாகிறது. ஸர் ஸ்டான்லியின் தலைநகரத்திலே—கல்கததாவிலே—1928ல் காங்கிரஸ் கூடி நேரு திட்டத்தை நாடு ஒப்புக்கொள்ளலாயிற்று. அதன்பின்னர் 1929ல் லாகூரில் பூரண சுயராஜ்யத் திட்டம் தீர்மானிக்கப்பட்டு காந்திஜிக்கு சர்வாதிகாரப்பட்டம் கட்டப்பட்டதுமுதல் நாட்டில் ஒருபுதிய வேகம், புதியஉணர்ச்சி, புதிய கிளர்ச்சியெல்லாம் ஏற்பட்டு 1930ல் சட்டமறுப்புப் போர் நடைபெறுகிறது. சர்க்காருக்கும் காங்கிரஸுக்குமிடையில் மூண்ட அப்போரில் சர்க்கார் சமாதானம் செய்துகொள்ளும்படி நிர்ப்பந்தப்படுத்தப்பட்டது. காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டும் இரு சாராருக்கும் நாட்டில் வேலையிருந்தே வந்தது. பின்னர் வட்டமேஜை யுடைந்து மறுபோர் ஆரம்பித்து இதுவரையும் நாட்டுத் தலைவர்களும் நாட்டு அரசியல் நிர்வாகிகளும் கொதித்துக்கொண்டிருக்கும் அக்கினிப் பிரவாகம்போன்ற அரசியல் கிளர்ச்சியின்மீது நடந்துசெல்லவேண்டியிருந்தது; இருக்கிறது.

இவ்வளவு சுழற்சியிலும் ஸர் ஸ்டான்லி அடிபட்டார். வங்காளத்தில் திடீர் திடீரென வெடித்த எரிமலைபோன்ற சம்பவங்களையெல்லாம் சமாளித்துக்கொண்டார். சிட்டகாங் ஆயுதசாலைச் சம்பவம், ஹிஜ்லி சிறை விபத்து, தினேஷன் தடுக்கு, வில்லியர்ஸ் துப்பாக்கிப் பிரயோகம், டூர்னோ கொலை முயற்சி, ஸ்டீவென்ஸ் கொலை, டாகார்ட்டுமீது வெடிகுண்டு, ரிவால்வர் முனையில் கவர்னர் இத்தனையையும் ஸர் ஸ்டான்லி கையாளவேண்டியதாயிற்று. இந்தியாவின் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் ஸ்டான்லி அதுவும் வங்காளத்தில் ஐந்து வருடம் இருந்து போய்விட்டார்.

இது போனவன் செய்தி. இனி வந்தவன் செய்தியைப் பற்றிப் பார்த்தால் அவன்பாடு இன்னும் அதிக ஆபத்து. ஸ்டான்லியை விட இப்பொழுது வந்திறங்கியிருக்கும் ஸர் ஹெண்டர்ஸன் வங்காளத்தில் பல பல அபாயகரமான காரியங்களைக் கையாளவேண்டியதிருக்கும் என்றாலும் பிரிட்டிஷ் சர்க்கார் வங்காள காரியாதிகளைக் கையாள அண்டர்ஸனை தகுதியானவர் என்று பொறுக்கியெடுத்துள்ளனர். அண்டர்ஸனும் தனது அயர்லாந்திய அனுபவத்தில்—அயர்லாந்தில் ஸின்பீன் கிளர்ச்சியாரையெதிர்த்து அடக்குமுறையில் தன்னம்பிக்கையோடு சிப்பாய் முறுக்கில் இருப்புக்கரத்தால் அடக்கி ஆண்டுவிடலாம் என்ற நெஞ்சழுத்தத்தில் வந்திருக்கிறார். பலாத்காரப் புரட்சியில் ஈடுபட்டுள்ள இரத்த வெறியாளரை ஒருபுறமும், சாத்வீக சட்டமறுப்போரை இன்னொரு புறமும் நாட்டிலேற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை மற்றொரு புறமும் எதிர்த்துப் போராடவேண்டிய நிலைமையில் ஹெண்டர்ஸன் வங்கத்தில் கால்வைத்துள்ளார்.

இவ்வளவு வேலையும் நமக்கென்னத்திற்கு? எல்லாவற்றையும் அன்டர்ஸன் பார்த்துக்கொள்ளுவார். ஆனால் போனவர் வந்தவருக்கு என்ன சொல்லிப் போயிருப்பாரோ தெரியவில்லை. தமது அனுபவத்தைக் கூறி அதற்கேற்ற முறையில் நடந்துகொள்ளச் சொல்லியிருக்கலாம். நமது புத்திமதியை-நாம்சொல்லுவதானால் அடக்குமுறைபால் வங்காளத்தை அடக்கிவிட முடியாதென்றே சொல்லுவோம். வில்லியர்ஸ் போன்ற கபவாளிகளின் பேச்சைக் கேட்டு அண்டர்ஸன் நடப்பாரானால் அவரது காரியம் வெற்றிபெறாது என்பதையும் எச்சரித்துவிடுகிறோம்.

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுஎண் 245] (1922-௵ ஸ்தாபிதம்.) 2 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இருமுறை

இரங்கோன், பிரஜோற்பதி-௵ (6-4-32) பங்குனி-மீ 25உ புதன்கிழமை

பிரிட்டிஷ் பத்திரிகை யோசனை!

இந்தியா—இங்கிலாந்து சரித்திரத்திலே இன்று ஏற்பட்டிருக்கும் நிலை மிக நெருக்கடியானதாகும். ஆசியாவிலுள்ள ஒரு பெரிய ராஜ்யத்தை—இந்தியாவை 150 வருஷகாலமாக அனுபவித்துவந்த ஐசுவரியத்தை பிரிட்டன் இழந்துவிடும் காலம் நெருங்கிவிட்டது. இந்தியாவிலேற்பட்ட தேசியஉணர்ச்சி சமீபகாலத்தில் ஏற்பட்டதல்ல. ஐம்பது வருஷத்திற்கு முன்னமேயே அது ஏற்பட்டுவிட்டது. ஆனால் 1919-ம் ௵த்திலிருந்து அது வளர்ச்சியடைந்துகொண்டே வந்திருக்கிறது. இப்பொழுது இந்தியாவில் நடக்கும் சட்டமறுப்புப்போரை எடுத்துக்கொள்வோம். இந்தியாவின் பல கக்ஷிக்காரர்களும் தங்கள், தங்கள் சுயநலங்களை அறவே மறந்துவிட்டனர். "தாய்நாடு" என்ற உணர்ச்சியில் அனைவரும் ஒன்று சேர்ந்துகொண்டனர். ஊர் சுற்றித்திரியும் லோதியன் கமிட்டியை மிதவாதிகளாகட்டும், முஸ்லீம்களாகட்டும் ஒருவரேனும் விரும்பவில்லை. மூன்று தினங்களுக்கு முன்கூட "அடக்குமுறையும், அவசரச்சட்டமும் நாட்டிலில்லாது தொலைந்தொழியு வரையும், கைதியாகிக் கிடக்கும் எல்லா அரசியல் கைதிகளையும் விடுதலையடையாதிருக்கும் வரையிலும் அந்தக் கமிட்டியுடனும், எவ்விதத்திலாயினும் ஒத்துழைக்க இசையாது" என பண்டித மாளவியாவும் பகர்ந்துவிட்டார். மொத்தமாகப் பார்த்தால் பிரிட்டனின் எதிர்ப்புத் தோல்வியடையுமென்பதில் சந்தேகமில்லை. காங்கிரஸின் பெருமையும், காந்திஜியின் சிறப்பும் ஒருபடி உயர்ந்துதான் செல்லுகிறது. இங்கிலாந்து ஒன்றொன்றாய் விட்டுக்கொடுக்க வேண்டிய நிலைமைக்கு வந்திருக்கிறது. ஐரோப்பிய அதிகாரத்தை அழிப்பதற்காக ஹிந்துக்களும் ஒன்றுபி விடுவார்களென்பதில் ஐயமில்லை. இந்தியா விடுதலையடைந்தால் போச்சுது பிரிட்டனின் செல்வாக்கு! அழிந்துவிடும் லங்காஷயர். இதுபற்றி லண்டன் டைம்ஸ் பத்திரிகை தலையிலே, தலையிலே அடித்துக்கொள்ளுகிறது. வடமேற்கு எல்லைப்புறத்தை ஓர் கவர்னர் மாகாணமாக்கியிருக்கிறார்கள். 40 அங்கத்தினர்களடங்கிய ஒரு சட்டசபை அங்கு ஏற்படலாம். ஆனால் செந்தொண்டர்களின் தலைவரான கான் அப்துல் கபூர்கான் கிறிஸ்துமஸ் விழாவன்று சிறையில் அடைபட்டார். அவரைப்பற்றியும், அவரது எதிர்கால வேலையைப்பற்றியும் பொது ஜனங்களுக்கு நம்பிக்கையுண்டு. அவர் அபேக்ஷகராகநிற்குப்போதும் ஜெயமும் நிச்சயம். ஆனால் சட்டசபை விவகாரங்களில் தலையிட்டுக்கொள்வாரென்று சொல்வதற்கில்லை. கடந்த 17-வருஷகாலமாக சர்க்காரோடு ஒத்துழைக்க முடியாதென சட்டோடு மறுத்து வந்திருக்கிறார். பல தடவைகளில் கையாகித் தண்டிக்கப்பட்டு விடுதலையடைந்திருக்கிறார். சென்ற சத்தியாக்கிரஹப்போருக்குப் பின்புதான் பெரும் படை ஒன்றை எல்லையில் திரட்டினார். எல்லைப்புறமெங்கும் சுயேச்சை வேண்டுமென்னும் கொள்கையை ஜனங்களுக்கு எடுத்துக்காட்டி, ஜனங்களெல்லாம் சுயேச்சை என்பதை உணரும்படி செய்துவிட்டார். அதன்பொருட்டேதான் கம்பீரதோற்றமுடையவரும், தற்காலிகமாக ஆபத்தேற்படுத்தக்கூடியவருமான அப்துல்கபூர்கான் மறைக்கப்பட்டுவிட்டார். முஸ்லீம்களின் கிராமாபி

புதிய புலி !

பழைய புலி அபாரமான வேலைகளை தனது சாமர்த்தியத்தினால் செய்துமுடித்தது. மக்கள்மீது பாய்ந்து, பாய்ந்து விழுந்தது; தாவி, தாவி குதித்து கடித்தது. பழைய புலி மறைந்தது. ஏனெனில் அது கிழப்புலியாகிவிட்டதன்றோ? பல்லிருந்தும் பயனில்லை. நகமிருந்தும் பலனில்லை. தேசிய, ராஜீய உணர்ச்சிக்கு உறைவிடமாக உள்ள வங்காளத்திலே இந்த பழைய புலி சர் ஸ்டான்லிஜாக்ஸன் ஓயாது அடக்குமுறையில் ஈடுபட்டது. ஜனங்களெல்லாம் பயந்துவிடுவார்களென நினைத்தார். ஆனால் நாட்டு சுதந்திரத்தையே கனவிலும் நினைவிலும் கருதும்—ரத்தம் சிந்தவும் தயாராயிருக்கும் மக்களிடம் இந்த ஜம்பம் செல்லவில்லை. ஜம்பம் பலிக்காதது கண்டு ஓட்டமே!

புலி மறைந்தது. வங்காளத்தை ஆட்சி செய்ய தோன்றியுள்ளாரையா! சர்ஜான் ஆண்டர்ஸன்! மிகுந்த பரிசுத்தமானமனப்பான்மையுடன் பாடுபடப்போகிறாராம். சரி! நமக்கும், அவர்களைச் சார்ந்த மற்றவர்களுக்கும் சந்தோஷமே.

இவர் கவர்னராக நியமிக்கப்பட்ட அறிக்கை லண்டனில் வெளியானதல்லவா? விருந்தும் மற்றும் பலவும் தடபுடலாக நடைபெற்றது. பகிரங்கமனப் பான்மையுடன் பாடுபடப்போவதாக பகன்றார். இந்த சவடால் விருத்தியில் மட்டும் சிரத்தை எடுத்திருந்தால் ஒருமகத்தான வெற்றியை யடைந்திருப்பார் எனஓலமிடுகிறது.

கான் அப்துல்கான் செய்யும்வேலை லண்டன் டைம்ஸ் பத்திரிகைக்குப் பிடிக்கவில்லை போலும். அதுபற்றியே எல்லை காந்திஜீயை முஸ்லீம்களுக்கென பிரத்தியேகமாகபாடுபடும் படி யோசனைகூறுகிறது. இந்தியாவின் உண்மைநிலைமையை இங்கிலாந்தின் பொதுஜனங்கள் அறியாதவாறு சூழ்ச்சிசெய்வதற்குபிரிட்டிஷ் அரசாங்கமும் எக்காலத்தும் பத்திரிகைகளுக்கும் உதவியாகவேதா னிருந்துகொண் டிருக்கிறது. முக்கியமாக இங்கிலாந்துபத்திரிகைகள் செய்துவரும் போக்கிரித்தனத்தை உலகம்அடியோடு வெறுக்கிறது என்பதுமட்டும் ஞாபகமிருக்கட்டும்.

பொதுவாக நிர்வாக அதிகாரத்தை தாங்கிநிற்கும் அதிகாரிகளுக்கு அதிகமாக உண்டு. சரி! பரிசுத்தமாக பாடுபடட்டும், பல்லவி பாடப்போவதில்......ஆனால் இவ்வண்ணம் பாடுபடுவதற்கு பரிசுத்தமான சௌகரியம் இருக்க வேண்டுமல்லவா? இவருடைய மனப்பான்மையில் தற்சமயம் கவர்ன்மெண்ட் அளவிறந்த இச் சந்தோஷத்தில் திறந்த வெட்டவெளியாக இருக்கலாம். ஆனால் அதிகாரம் ஏற்பட்டதும் உடனே திமிரும் ஏற்படும். அப்புறம் அட்டகாசம்செய்வார். தடபுடல் ஆட்சி நடக்கும். “சும்மாயிருந்த சங்கை ஊதிகெடுத்தான் ஆண்டி” என்பதுபோலதற்சமயம் அவசரச்சட்டங்களினாலும் மற்றும் பிறவற்றினாலும் பாதிக்கப்பட்டுள்ள வங்காள நிலைமை முற்றிலும் பாழ்படுத்திவிட்டால்! அதற்கு யார் ஜவாப்தாரி? அவர்தான்! ஆனால் சமயம் வந்தபொழுது மறைந்துவிடுவார். அன்றி இருந்தாலும் ஜவாப் சொல்லத் தெரியாமல் விழிப்பார்.

ஆட்சி செய்வோர்கள் தமது வீரப்பிரதாபங்களைப்பற்றி ஆரம்பத்திலேயே புகழ்ச்சியாகக் கூறிக்கொள்வது பண்டைய வழக்கம். அந்த வழக்கமே இப்பொழுதும் கையாளப்பட்டு வருகிறது. தாம் ஆட்சிசெய்வோர்களின் யோக்கியதையைப் பற்றியோ அன்றி தகுதியைப்பற்றியோ அறிந்துகொள்ள அவர்களுக்கு—ஆட்சி செய்பவர்களுக்கு திறமையுண்டாம். யார் இல்லையென்று சொன்னார்கள். அவரவர்களது யோக்கியதையையும், புகழையும் பற்றி அவர்களே பேசிக்கொண்டிருப்பதில் பலனென்ன? இதை மற்றவர்களன்றோ நிர்ணயிக்கவேண்டும். புதிய கவர்னர்—சர்ஜான் ஆண்டர்ஸன் வங்காளத்தில் அடக்குமுறைகளில் ஆர்வங்கொள்வாரா? அன்றி சர்க்கார் தற்சமயம் சமரஸத்திற்காக அடிக்கும் பல்டியில் கலந்துகொள்வாரா? பொறுத்துப் பார்ப்போம். பொறுத்துப், பொறுத்துக் கண்டசுகமென்ன? ஏற்பட்ட புண்ணியமென்ன? சரி! இந்தியாவிற்கோ கூடியசீக்கிரம் நல்லகாலம் ஏற்படப்போகிறது. அந்தகாலத்திலே சர்ஜான் பல்டி அடிக்காமல் நிதானமாக நின்றுகொண்டு நேர்மையான புத்தியுடன் நடந்துகொள்ளவேண்டும். இதுவே சிறந்த யோஜனையாகும்.

மகரிஷி மகாத்மா : :

—ரெவ்ரண்டு
எம். கிஸ்லிஸி

காந்திஜீ நியாயவரம்புக் குட்பட்டவர். துளிகூட வரம்புகடந்து செல்லமாட்டார். வரம்புமீறி நடப்பவர்களுக்காக விட்டுக்கொடுப்பதும் கிடையாது. அதற்காக மலைப்போன்ற கஷ்டங்களையும் சகித்துக்கொள்ளும் தன்மையுடையவர். சட்டமறுப்பை ஆரம்பித்தார். காந்திஜீக்கு சொந்தமான அவரது ஆசிரமத்திலுள்ள கைராட்டினம், டைப்டைர்தர், கெடியாரம், 10 டாலர் மதிப்புள்ள இந்திய நாணயம் முதலியவைகளை சர்க்கார் ஜப்தி செய்தது. தமது கைராட்டினத்தை காந்திஜீ எவ்வளவு அருமையாய்ப் பார்த்துவருகிறார் என்பதை உலகம் நன்கு அறியும். காந்திஜீக்குச் சொந்தமான லௌகிகப் பொருளெல்லாம் பறித்துக்கொண்டது. உலகத்தில் அவருக்கு அரைவேஷ்டியைத்தவிர வேறு எதுவும் கிடையாது. ஆனால் அவரை பரம ஏழையென்று சொல்லிவிடலாமோ? உலகத்திலேயே அவர்தான் பெரியார் என்பதையும் மறுக்கமுடியுமோ, முடியாது. கைராட்டினம் ஒன்றே அவரது சத்திய நெறியையும், எளிய வாழ்க்கையையும் உணர்த்தத்தக்கதோர் சின்னமாகும். சர்க்கார் அவருடைய லௌகிகப்பொருளைத்தான் ஜப்திசெய்ய முடியுமேயன்றி அவருள்ளடங்கி இருக்கும் சிறந்த பொக்கிஷங்களை காணவும் முடியாது; பறிக்கவும் முடியாது.

உலகத்தில் பற்பல தேசங்களில் பல, பல அரசியல் தலைவர்களிருக்கிறார்கள். காந்திஜீயோ உலகத்திலுள்ள அரசியல் தலைவர்களிலெல்லாம் விசேஷமானவர் என்றேகூறவேண்டும். முதலாவதாக ஜெபத்தில் அதிக பக்தியும்—நம்பிக்கையும் உண்டு. துவக்கும் ஒவ்வொரு காரியத்தையும் ஜெபத்தோடே துவக்குகிறார். ஜெபத்தோடு துவக்கும் முதல்மந்திரியோ, ராஜீயத் தலைவர்களோ வேறு எந்த நாட்டிலும் கிடையாது. ஜெபத்துடன் மட்டும்கூட நின்றுவிடுவது கிடையாது. இந்துமதப்படி தியாகத்திலும் அளவற்ற நம்பிக்கை உண்டு. அவரது ஆகாரமும், ஆடையும் மிக சாமான்யமானதே. கிருஸ்துவ மதத்தில் கூறியபடி மகரிஷிகளான ஜான்பாப்டிஸ்ட், ஜெயிண்ட்பீட்டர் முதலியவர்களைப்போல் அவரது உணவைச் சுருக்கித் தபம்செய்து வருகிறார். நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவுமே பாடுபடுவதாகவும் கூறிக்கொள்ளும் அரசியல் தலைவர்களோ, பிறரோ இவ்விதம் உணவை மட்டுப்படுத்தி தவம் செய்துவருவோரில் எவராவது உண்டு என்று யாரேனும் கூறமுடியுமா? ஏசுகிறிஸ்து ஜெபத்தையும், தபத்தையும்பற்றி பல தடவைகளில் ஸ்பஷ்டமாக கூறியிருந்தும் காந்திஜீயை தவிர அனுஷ்டித்து வருகிறவர்கள் யாரும் கிடையாது.

பிரமாச்சரியத்தை எடுத்துக்கொண்டாலும் அவரிடம்தான் உண்டு. விவாகம் செய்துகொண்டவர். அவரது மனைவியாரின் சம்மதத்தின்பேரில் பிரமச்சாரியாயிருந்துவருகிறார். கத்தோலிக்க மதபுஸ்தகங்களிலும் சில மகான்கள் காந்திஜீ கூறும் காரணங்களையே எடுத்துக் கூறியுள்ளார்கள். காரணங்கள் ஒன்றோடொன்று சளுவியேயிருக்கின்றன. கத்தோலிக்க கிறிஸ்துமதத்தில் தியாகமான செயின்ட்களிருக்கிறார்கள். காந்திஜீயைப்போல் தியாகஞ்செய்தவர்களல்ல. அவர்களது கொள்கையும் போக்கும் காந்திஜீயின் கொள்கைக்கு [illegible] மாறுபட்டிருக்கின்றன. பட்டினி கிடக்கும் கொள்கையை காந்திஜீ நாட்டு மக்களுக்காகப் பலதடவைகளில் மேற்கொண்டுள்ளார். கிறிஸ்துமதத்தின் உயர்ந்த கொள்கையுமிதுவே. கிறிஸ்துவ மகரிஷி செயின்ட்பிரான்சிஸ் ஆப் அஸிஸியின் தியாகவாழ்க்கையைக்கூட காந்திஜீ புகழ்ந்து பேசுகிறார். ஆனால் இரண்டு வாழ்க்கையும் ஒன்றேபோல்தானிருக்கிறது. அவ்வித சத்திய வாழ்க்கையை ஒரு கிறிஸ்துவனாவது செய்கையில் காட்டிவருவதைக்காணோம். உத்தமமான ஜீவியத்தை ஒரு இந்து—காந்திஜீ நடத்திவருகிறார். அவரது உத்தமஜீவியத்தையும், ஆத்மசக்தியையும் நேரில் காணும் கிறிஸ்தவர்கள் வெட்கித் தலைகுனியவேண்டியதுதான்.

யார் தலையில் விடியும் ?

போதும்! போதும்! பட்ட அவஸ்தையெல்லாம் போதும். படமுடியாதினித் துயரம் தாய்நாடு விரஞ் செரிந்த தமிழ்நாட்டின் சுயநலன்கருதி உழைப்பவர்களுக்கெல்லாம் பெருத்த அவதி. தவச்சாலையென மதித்து சிறைச்சாலையில் வாழ்பவர்களுக்கெல்லாம் சொல்லொணா அவஸ்தை. துன்பத்திலேயே இன்பம் காணும் தேசபக்தர்கள் சிறையினில் படும் அவதி குறித்து கேட்பாருண்டோ? எங்கு பார்க்கினும் கேள்விகளே. ஆனால் செயல் பூஜ்யமே. ஏதாகிலும் பேசினால், அன்றி கேட்டால் சர்க்காரின் மனம் புண்பட்டுவிடுகிறது. உத்தியோகப் பற்றுள்ள—கவர்ன்மெண்ட்மீது காதல்கொண்ட அங்கத்தினர்களுக்கு வந்துவிடுகிறது கோபம். பிறந்துவிடுகிறது ரோஸம். சர்க்கார் செய்வது சரியென நினைத்து தடாலென்று மேஜையைத் தட்டித் தாளம்போடுகின்றனர். சர்க்கார் நினைப்பது சரி. பேசுவதும் சரி. செய்வதும் சரியே. அவர்கள் நம்மை ஆளுவோர்கள் நாம் ஆளப்பட்டவர்களல்லவா? அவர்கள் நினைத்தபடி செய்யலாம். நாம் நினைத்தபடி செய்தால் தவறு. அடி, உதை, குத்து, பிரம்படி முதலியன முதலும் வட்டியுமாகச் சேர்த்தன்றோ கிடைக்கும். எங்ஙனமாயினும் சரியே! அது அவர்களது இஷ்டம் யார்கேட்பது? யாரை நோவது. பொதுமக்களுக்கு பயன்தரும் பத்திரிகைகள் பல உண்டு. அவை கேட்கலாம்; கேட்டால் யாதுகிடைக்கும்? இது தெரிந்த விஷயமன்றோ? சமீபமாக வங்காள சட்டசபையிலே மிஸ்டர் எச். பெர்க்மேயர் அவர்கள் ஓர் அவுட் போட்டார். அது என்ன தெரியுமா? சிறைச்சாலைகள் மிக மிக உல்லாஸமாயிருக்கிறதாம். ஷோக்கான காற்று வீசுகிறதாம். அதுதான் சுவர்க்கலோகமாம். ராஜீயக்கைதிகள் ஷோக்காக காலம் கழிக்கின்றனராம். அவர்கள் இருப்பிடம் நல்ல இடமாம். நெய்யும் பாலும் கலந்து ஜில்லென்று சாப்பாடு போடப்படுகிறார்களாம். மற்றொரு வெள்ளைமனிதர் பெர்க்மேயருடன் தாளம் போட்டார். அதாவது என்ன தெரியுமா? சிறையிலே ராஜீயக்கைதிகள் ரொம்ப நிதானமாக நடத்தப்படுவதால்—மற்றவர்களும் ஜெயிலுக்குப் போவதற்கு ஆசை ஏற்படுமன்றோ. தவிரவும் அன்னிய சிறைகளுக்கு சமானமாக இந்திய சிறைகள் இருக்கின்றதாம். ஓயாமல் புளுகிப் புளுகி இவர்கள் தேர்ந்தவர்களல்லவா? இந்தியாவிலுள்ள சிறை நிலைமையையும் ஒப்பிட்டால் அது சரியா? அன்றி இது சரியா? எனக் கூறமுடியாதாம். இவர்கள் பலே பேர்வழிகள்.

இது இருக்கட்டும். வேறு எது இல்லாவிட்டாலும் ஸ்திரீ ரத்தினங்களுக்காவது மரியாதை கொடுக்கவேண்டாமா? பாவம்! வீடு வாசல்களையெல்லாம் விட்டு—உதறித் தள்ளி தேசத்தின் மானத்தைக் காப்பாற்றவந்த புனித மணிகளை பங்கப்படுத்தலாமா? வெட்கம்! சர்க்கார் ரொம்ப ஜம்பமாகப் பேசிக்கொள்வார்கள். வங்காள சட்டசபையிலே ஸ்திரீ கைதிகள் சம்பந்தமான பேச்சு எழுந்தது. கணவனை இழந்த பலரும் தேசியப்போரில் ஈடுபட்டனர். என்ன அபிமானம்! அவர்கள்சற்றுவைதிகர்களாகவிருந்தனர். ஆண்மக்களைவிட பெண் இனத்தவர் சற்று சாஸ்திர ரீதியாகத்தானே நடப்பார்கள். அவர்களுக்கு இந்த உரிமையாவது கொடுக்கவேண்டாமா? சூரி சிறையிலே 9 ஸ்திரீ ரத்தினங்கள் படும் பல பாடுகளை மௌலவி ஜலாலுதீன் ஹாஷமி அவர்கள் விளக்கமாகக் கூறினார். ஹிந்து விதவை கைதிகள் தம் கையாலேயே சமைத்து தாமேசாப்பிடுவது வழக்கம். இந்த உரிமை அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. இதன் பயனாக அவர்கள் உணவு சாப்பிட மறுத்துவிட்டனர். இந்த பாவம் யார்தலையில் விடியும்! சர்க்கார் தலையிலேயே விடியும். சர்க்கார் தமது குருட்டுத்தனமான புத்திப் போக்கை மாற்றவேண்டும். இன்றேல்! அவர்கள் ஜம்பம் பலிக்காது அனுவசியமாக கஷ்டப்படவேண்டி நேரிடும். அவர்கள்மானம் காற்றில் பறக்கும். அவஸ்தைப்பட்டும் புத்தியில்லையே! பிரயோஜனமில்லையே! யாரைநோவது? ஆளும் சர்க்காரைத்தான் நோகவேண்டும்.

தேசோபகாரி
(வாரம் இருமுறை)

வருட சந்தா (இரங்கோன்)	ரூ	3	0	0
6 மாதம் ,,	,,	1	8	0
வருட சந்தா வெளியூர்)	,,	4	8	0
மலாய்நாடு ,,	,,	6	8	0
6 மாதம் ,,	,,	4	0	0

எது வேண்டும்?

இந்தியாவின் வறுமை அறவே ஒழியவேண்டும். இந்தியமக்கள் சுதந்திர வீரர்களாய்த் திகழ வேண்டும். பாரதநாட்டைப் பீடித்தாளும் பஞ்சம் பஞ்சாய்ப் பறக்கவேண்டும். இந்நிலை இந்தியமக்களால் விரும்பப்படுகிறது. இந்நிலை ஏற்படுவதற்குரிய மார்க்கங்களை இந்தியமக்களே தேடிக்கொள்ளவேண்டும். பிறர் போதனை உதவாது. இந்தியமக்களாய்ப் பிறந்தோர் ஒவ்வொருவரும் தத்தமது கடமையை தாமே செய்துகொள்ளவேண்டுமன்றோ? இந்தியமக்களுக்கு ஆங்கிலேயர்களா சுதேசிய ஞானம் ஊட்டப்போகின்றனர்? இல்லை. அன்றி ஆங்கிலேய மக்களுக்கு இந்தியர்கள் சுதேச அபிமானத்தை ஊட்டி வளர்க்கப்போகின்றனர். இல்லை "பிரிட்டிஷ் சாமான்களையே வாங்குங்கள்" என்ற பிரசாரம் பிரிட்டனில் பலமாக உருக்கொண்டுள்ளது. அதன்படியும் மக்கள் அனுஷ்டிக்கின்றனர். ஆனால் இந்தியாவிலோ! என்ன? இப்பொழுதுதான் "இந்திய சாமான்களையேவாங்குங்கள்" என்றசங்கங்களைத் தோன்றச் செய்துள்ளனர். இந்திய மக்களுக்கு உணர்ச்சி இல்லாமலில்லை. தேசாபிமானம் இருந்தே வருகிறது. இதையும் மறுக்கமுடியுமா? ஆனால் முயற்சி குறைவாக உள்ளது. இந்த முயற்சியன்றோ காரியசித்திக்குஊக்கமளிக்கவல்லது.

"ஒவ்வொரு மார்க்கெட்டும் ஓர் ஸ்வதேசி மார்க்கெட்டாக இருக்கவேண்டும். ஒவ்வொரு சரக்கும் சுதேசச் சரக்காக இருத்தல் வேண்டும்" என்ற மொழிகள் பம்பாயில் ஸ்வதேசி மார்க்கெட் ஸ்தாபனமான பொழுது பல பிரபலஸ்தர்களால் கூறப்பட்டது. லக்ஷ்மிதாஸ் கிம்ஜி ஜவுளி மார்க்கெட் பம்பாயில் ஓர் பிரபல மார்க்கெட்டாகும். ஆதியில் இந்த மார்க்கெட்டில் அன்னிய ஜவுளிகளும், சுதேச ஜவுளிகளும் பாகுபாடில்லாது விற்பனைசெய்யப்பட்டன. ஆனால் இதுசமயம் என்ன? இந்த மார்க்கெட்டில் ஸ்வதேசி உணர்ச்சி தாண்டவமாட ஆரம்பித்துவிட்டது. அன்னிய ஜவுளி அகற்றப்பெற்றது. "புதிய ஸ்வதேசிமார்க்கெட்" எனும் அழகிய திருநாமமும் சூட்டப்பெற்றது.

மார்க்கெட்டின் ஸ்தாபன தினத்திலே மஞ்சள் ஆடை அணிந்த மடமாதர், பாலர் ஆங்குள்ள அழகிய கடைகளில் புகுந்தனர். இவர்களே அன்னிய ஜவுளிகளைக் கண்டு ஆவேசங்கொண்டு அதனை அகற்ற மறியல்-தவம் செய்தனர். -மாதங்களாக அன்னிய ஜவுளி படையெடுப்பில் தீவிரர்களாக விளங்கினர். பலன் என்ன? பரதேசி பறந்தொழிந்தது; சுதேசி மார்க்கெட்டும் உருக்கொண்டது. பாரத அன்னை தன் அருள் ஒளியை வீசினாள்.

மார்க்கெட்டிலும் ஸ்வதேசிமயமாக விருந்தது. மறியல் ஸ்திரீரத்தினங்களும் மனமகிழ்ச்சியடைந்தனர். மகிழ்ச்சிப் பெருக்கினால் மாதர் பலர் சுதேச ஜவுளிகளை வாங்கி தமது அன்பின் அறிகுறியைக் காட்டினர்.

இந்திய மக்களை ஆட்சி செய்வதற்காக வேண்டிமாத்திரம் பிரிட்டிஷ் மக்கள் இந்தியாவுக்கு வரவில்லை என பிரபல பொருளாதார நிபுணராகிய மிஸ்டர் கோவிந்தலால் அவர்களே ஒப்புக்கொண்டுள்ளார். ஆட்சிசெய்ய பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வரவில்லையென்பதை உலக மறியும். ஆனால் ஏன் வந்தார்கள்? இந்திய செல்வத்தை சுரண்டுவதற்கே! எந்தவகையில் சுரண்டுவது? இந்தியாவின் லாபகரமான தொழிலை தம் கையில் பற்றிக்கொண்டு அவர்களது மக்களுக்கு வேலை வாங்கிக்கொடுப்பதற்கேயாம். இந்தியாவிலோ வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம். சுதந்திரம் பெற்ற மேனாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும்பொழுது சர்க்கார் வாரிக் கட்டிக்கொண்டு போராட முன் வந்துவிடுகின்றனர். ஆனால் இந்தியாவிலோ வெனின் நிலைவேறு. இருந்தாலும், செத்தாலும் கேட்பாரில்லை. இந்த நிலை உதவாது. ஆகவே மக்களிடையே சுதந்திர உணர்ச்சி நிலவவேண்டும். தியாக உணர்ச்சி வேண்டும்; தேசாபிமானம் தலைசிறந்து நிற்கவேண்டும். இந்நாளே நன்னாள்! இதை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

கற்றவனிடம் வித்தை காட்டி!

இந்திய ஆலைகளில் தயாராகும் துணியும் சுதேசித் துணிதான். ஆனால் ஆலைத்துணியை விரும்பி ஓடுவதால் ஏற்படும் அநேகமோசடிகளை எடுத்துக்காட்ட விரும்புகிறோம். பொய்யிலே பிறந்து, புளுகிலே தவழ்ந்து, வஞ்சமே உருவான சில கடைக்காரர்கள் அன்னியத் துணிகளையும்; சுதேசித் துணிகளெனச்சொல்லி ஏமாற்றிவிடுகிறார்கள். பசுத்தோல் போர்த்த நம்

கற்றவனிடம் வித்தை காட்டி!

உதிரத்தை உறிஞ்சும் புலியாக இந்தத் துணியை நாம் பாவித்துவருகிறோம். நமது புனிதமான உடையை—கதரைப்பற்றி லண்டனிலுள்ள கார்டியன் பத்திரிகைகூட ஒரு சமயம் பின்வருமாறு சிலாகித்து எழுதியதுண்டு:--

பருத்தி பருவகாலத்தின்போது ஏதாவது ஒருதுணிவாங்கலாமென்றுலண்டன்பர்லிங்டன் ஆர்கேடிலுள்ள ஒருபெரியகடைக்குச்சென்றேன். வாலிபர்கள் விரும்பத் தகுந்ததான அநேக சரக்குகள் அங்கு இருந்தன. காலர்கள் குறுக்கும், நெடுக்கும் கோடுகள் போட்டுவைக்கப்பட்டிருந்ததானது பார்ப்பவர்களின் மனதைக் கவரக்கூடியனவாயிருந்தன. நான் அதன் அழகைப் பார்த்துவிட்டு கடைக்காரரை நோக்கி எங்கே செய்யப்பட்டது'' என்றேன். "சென்னையிலிருந்து வந்தது'' என்று கூறினார். "இந்தியாவில் உற்பத்தியாகும் பருத்தியா'' ? என்று கேட்டேன். ஆம் என்றார் அவர். மாஞ்செஸ்டரில் செய்யப்படும் காலர்களின் சித்திரங்களைவிட இந்தியாவில் செய்யப்படும் துணிகளில்உள்ள சித்திரங்கள், அச்சுக்கள் வெகு நேர்த்தியா யிருக்கின்றன. இந்த அழகான ரகங்களை இடுப்புத் துணிகளாகவும், துவாலைகளாகவும், இந்தியர்கள் உபயோகிக்கின்றார்கள். அமெரிக்காவிலும் இதே ரகத்தை இங்கிலீஷ் ரகமென்று கூறி விற்றுவருகிறார்கள். நல்ல விலைவைத்து விற்கிறார்கள். வாங்குகிறவர்களும் பெறக்கூடிய விலைதான்; கொடுக்கலாம் என்று எண்ணுகிறார்கள். ஏராளமான இந்தியத் துணி எடுபடுவதால் இங்கிலீஷ் துணிக்கு பங்கமேற்படுகிறது. ஆனதால் "இந்தத் துணி விற்கப்படும் கடைகளை மறியல் செய்யலாமா'' ? என்று கூறினதுமுண்டு. நம் நாட்டு கதரின் மகிமையையும்—மகத்துவத்தையும் பார்த்துவிட்டு அந்நியர்களே விற்று லாபமடையும்போது, அந்நியத் துணியின்மீது மோகம்பிடித்து அலையும் சில கடைக்காரர்கள் "கற்றவனிடத்திலேயே வித்தைகாட்டி'' என்ற விதமாக நம் நாட்டு வியாபாரிகளும் நம்மிடத்திலேயே கொள்ளையடிக்கப் பார்க்கின்றனர். அன்றொருநாள் கதர் சால்வை ஒன்று வாங்கும்பொருட்டு முகல் ரோட்டிலுள்ள கடைக்குச் சென்றிருந்தோம். கையால் நெய்யப்பட்ட கதர் சால்வை வேண்டுமென்றோம். கடைக்காரரோ நவீன உடைகளை அணிய விரும்புபவன் இன்னான், விரும்பக்கூடாதவன் இன்னான் என்றுகூடத் தெரிந்துகொள்ளாத முறையில் நம்மிடமே கதையைக்காட்ட ஆரம்பித்துவிட்டார். கதர் வாங்குவதிலும்கூட வழியில் குறுக்கிடும் மாய வலைகளைபபற்றி நாம் திட்டமாய் அறிவோமாதலால், ஒருவாறு தப்பினோம். கடைக்காரருக்கு ஒரு வார்த்தைசொல்ல விரும்புகிறோம். இந்தக்காலம் சுதேசியக் காலம், கதர் புத்துயிர்பெற்றுள்ள காலம், இந்தக்காலத்தில் அந்நியத் துணிகளை அணிந்துகொள்பவனை மட்டுமல்ல; அவனைப் பெற்றெடுத்த தாய், தந்தையர்களையும், அந்நியத்துணி வியாபாரிகளையும், குழந்தைகள் கேலிசெய்யும் காலமென்பதை நினைப்பூட்டுகின்றோம். தமக்கும், தம் குடும்பத்திற்கும், தம் நாட்டு மக்களுக்குமாக தம் நாட்டுத் துணிகளுடன், அந்நிய நாட்டுத் துணிகளையும் வைத்து வியாபாரம் செய்யும் கடைகளின் வாயற்படிகூட ஏறாமலிருப்பதே நம்நாட்டு மக்களின் கடமையாகும்.

பிரம்பா லடித்தல்!

பர்மாவிலிருந்து சென்ற தொண்டர்கள் சிலர் தெற்கே இராமநாதபுரம் ஜில்லா முதுகுளத்தூர் வட்டகையில்கிராம பிரச்சாரம்செய்து திரிவதாக முதல்கடிதமூலம் தெரியவந்தது. ஏற்கனவே கைதிசெய்யப்பட்டிருந்த ஸ்ரீமான்கள் பாலையா நாடார், சந்யாசித் தேவர், ஆதிமூலம் பிள்ளை மூவருக்கும் முறையே ஒருவருடம் தண்டனை விதிக்கப்பட்டார்கள். எஞ்சிநின்ற தொண்டர்கள் கொடுமளூர் திருவிளாவில்அந்நியத்துணி மறியல் செய்ததாகவும் போலீஸார் கிரம மீறிப் பிரம்பா லடித்ததாகவும்இரண்டாவது கடிதத்திலிருந்து அறியக் கிடக்கிறோம். அவ்விதம் அடித்தவர்களை நாகரீக அரசாட்சியில் உத்தியோகம் வகிக்க லாயக்கற்றவர்களென்றே அங்குள்ள அதிகாரிகளைக் கூறவேண்டும்.

கடந்த மாதம் நடந்த சென்னை சட்டசபைக் கூட்டத்தில் சில நாட்களுக்கு முன் கிருஷ்ணாஜில்லாவில் ராபாட்சன் பேட்டையில் ஸ்ரீமான்கள் வெங்கடகிருஷ்ணய்யா, சூரியப்பிரகாச ராவ், ஆதிநாராயணன் முதலியோர் துண்டுப்பிரசுரங்கள் வளங்கியதாகவும் அவர்களை போலீஸ் ஸ்டேஷன் அழைத்துச்சென்று போலீஸ் அதிகாரிகள் பிரம்பாலடித்ததாகவும் கேள்வி பிறந்தபோது அவ்விதம் நடந்திருக்கமுடியாது என்றும், அப்படி செய்திருப்பரேல்

என்றுதான் ஒழியுமோ?

"ஜாதி இரண்டொழிய வேறில்லை" அவ்விதமே நிறமும் இரண்டே; வர்ணம் தீட்டும் பல வர்ணங்கள் இருக்கலாம்; ஆனால் இறைவனால் ஆக்கப்பட்ட மனிதர்களில், கருப்பர், வெள்ளையர் என்ற இரு பிரிவினர் உள்ளனர். மனிதன் கடவுளால் படைக்கப்பட்டானேயொழிய, நிறம் அவனால் படைக்கப்படவில்லை; இது சீதோஷ்ண ஸ்திதியை யொட்டியது இந்தப் பாழும் நிறமா மனிதனுக்கு அந்தஸ்துக் கொடுக்கப்போகிறது? இல்லை. ஒருக்காலுமில்லை. கேவலம் சிறு மிருகங்களுக்குக்கூட பகுத்தறிவு உள்ளது. ஆனால் இந்தப் பகுத்தறிவிற்கும் மனிதனின் பகுத்தறிவிற்கும் பெருத்த தாரதம்மியங்கள் உளது. மிருகங்களுக்கு ஏற்படும் பகுத்தறிவு அதன் பழக்கவழக்கத்தை பொட்டியது. மனிதனின் பகுத்தறிவு அவனின் அறிவு விஷயத்தை பொட்டியது.

"வெள்ளையர் ஹோட்டலிலே கருப்பர் நுழையக்கூடாது" "கருப்பர் ஹோட்டலிலே வெள்ளையர் தனது தகப்பன்—அப்பன் வீடு போல் நுழையலாம்" இதெல்லாம் நிறத்தின் பயனாக ஏற்பட்ட திமிரெனலாம். லண்டன் ஹோட்டல்களில் சிலவற்றில் ஆங்கிலேயருக்குப் பிறந்தவரைத் தவிர வேறு எவரும் வரக்கூடாது. அனுமதிகேட்டாலும் தாமுடியாது அப்படி தந்தாலும் துரத்தவேண்டுவார்கள். என்னே! நிறத்தின் கொடுமை! வெள்ளையராயினும் சரி; கருப்பராயினும் சரி; அறிவில் ஒருவர்க்கொருவர் குறைந்தவர்களாவரா? கறுப்பு நிறமனிதர்களில் மேதாவிகளில்லையா? கறுப்பு நிற மேதாவிகளைக் கண்டு வெள்ளையர் பக்தி ருபத்துடன் பாதம் பணியவில்லையா? இச்சமயத்தில் இவையெல்லாம் பழங்கதையா? புதுக் கதையா? சரி! அதைப்பற்றி மண்டையை உடைத்துக்கொள்வானேன். ஆனாலும் சமயா சமயங்களில் ஏற்படும் விபரீதங்களைக் கண்டு மனம் பொறுக்கவில்லையே! என்னசெய்வது? சமீபமாக லண்டன் ஹோட்டல் ஒன்றில் ஆக்ஸ்போர்ட் பட்டதாரி அலகாயா நுழைந்தாரும்; வயது 23 இருக்கலாம். ஆரம்பத்தில் எல்லா ஏற்பாடுகளும் ஷோக்காக நடைபெற்றது. குறிப்பிட்டமாதிரி அறையும் ஒதுக்கிவைக்கப்பட்டது. குறிப்பிட்ட தேதியில் வந்தாராம். ஆனால் அவன் ஓர் ஆப்பிரிகாவாசிபோல்வான். அவன் தகப்பனார் ஓர் பாரிஸ்டர், அவனது மூன்று சகோதரர்கள் இங்கிலாந்தில் கல்விபயின்றுகொண்டிருந்தனர். நிற்க, பிரஸ்தாப ஓட்டலில் குறிப்பிட்ட அறையில் உள்செல்ல அனுமதி கிடைக்கவில்லை. வந்ததையா வழக்கு! ஹோட்டல்காரர்மீது! கேட்ட கேள்விகளுக்கு ஓடாமல் பதிலளிக்கும்படியான சந்தர்ப்பமும் நேரிட்டது. ஹோட்டல் அதிகாரிகள் வரிசையாக நிறுத்திவைக்கப்பட்டு ஒருவர்பின் ஒருவராக விசாரிக்கப்பட்டனர்.

ஐயா! கருப்புநிறங்கொண்ட மனிதரை எனது ஹோட்டலில் நுழையவிட்டால் எனது பிழைப்புப் போய்விடுமே என்னசெய்வது? என் பிழைப்புத்தானே எனக்கு என்று ஓலமிட்டு அழுதாராம். நீதிபதி மருண்டார்—விழித்தார்—ஒத்து ஊதினார். வெள்ளையரல்லாதோர்க்குள்ள ஹோட்டல்களின் ஜாபிதாவை நீட்டினார்; வழக்கும் ஒருவாறு முடிந்தது. ஏனையா இந்தத் துன்பம்? ஆரம்பத்திலேயே அறிவுடன் நடந்துகொண்டிருந்தால்? நல்லபடியே இருக்கும். இதுசமயத்தில் ஓர் ஆராய்ச்சிநிபுணர் கூறியது எமது ஞாபகத்திற்கு வருகிறது. நிற வேற்றுமையைப் போக்க கலப்புமணமே தகுந்ததாம். அதுவே சிறந்த யோஜனையென்று எமக்குத்தோன்றுகிறது. இந்தியன் ஆங்கிலேயஸ்திரீயை மணந்துகொள்ளவேண்டும், ஆங்கிலேயன் இந்திய ஸ்திரீயை மணந்துகொள்ள வேண்டும் இதுபோன்றே ஒவ்வொரு ஜாதி மத நிறக்கொள்கையினரும் கொடுக்கல், வாங்கல் செய்யவேண்டும். காலமும் நேரமும் ஒழுங்குபட்டுவரும்பொழுது இப்பிரச்னையை கண்டிப்பாகக்கவனித்து முடிவுசெய்துவிட்டு பின்னர் தான் வேறு எந்தவேலையையும்கவனிப்போம்.

சட்டத்திற்கு விரோதமான செய்கை என்றும் சட்டமந்திரி கூறினார். ஆனால் சென்னை மாகாணத்திலோ இராஜீய நிலைமை வெகு விபரீதமாகயிருந்துவருகிறது. அஹிம்ஸா தத்துவத்தின் மேன்மையை அறியாத ஏதோ சில வெறியர்கள் எதற்கெடுத்தாலும் பிரம்படியையும், தடியடியையும்தான் உபயோகிக்கிறார்கள். இப்படியாக துரைத்தன அதிகாரிகள் தலைகீழாய் நடப்பார்களானால், அமைதி எங்கிருந்து உண்டாகும். சாத்விகமாக மறியல் செய்யும் தொண்டர்களை அடிப்பதுதான் பிரிட்டிஷ் துரைத்தனத்தின் ஒழுங்கோ? ஷபாஷ்! என்ன ஒழுங்கு!

இது நீதியா? இது தர்மமா?

எங்குபார்த்த போதிலும் தணிக்கை தந்திச்செய்தி கட்டுப்பாடு. உண்மை வழலை வெளிவிடவேண்டாமென்ற ரகஸ்ய அறிக்கை எங்கு மர்மங்கள் வெளியாகிவிடுகிறதோ வென்ற தொடை நடுக்கம். இந்திய செய்திகள் வெளிநாடுகளுக்கு எட்டவிடுவதில்லை. இது தான் தபால் தந்தி உத்தியோகஸ்தரின் ராஜ விசுவாசம்போலும்! பாரதநாடு சுதந்திர ஆவேசத்துடன் மகத்தான தியாகங்களைச் செய்து போராடுகின்றது. இந்தியர் நடத்தும் விடுதலைப் போரின் முறை இதுவரை உலக சரித்திரத்திலேயே காணக்கிடைக்காத நவீனமான முறையாகவிருப்பதால் அது உலகத்தாருடைய முழு கவனத்தையும் இழுத்துக்கொண்டிருக்கிறது. துளி இரத்தம்கூட சிந்தாமல் தேசம் விடுதலைபெறமுடியுமா? மிகப் பெரியதும், பயங்கரமானதுமான மிருகபலத்தை நிராயுதபாணிகள் தம்முடைய ஆத்மபலத்தினால் வென்றுவிடமுடியுமா? இத்தகைய கேள்விகளுக்கு பாரதமக்கள் என்ன பதில்களை அளிக்கப்போகிறார்கள். இதையே நாகரீக உலகம் எதிர்நோக்கி நின்றுகொண்டிருக்கின்றது. இற்றைய இந்தியாவில் நடைபெறும் சுதந்திரப் போர் உலகத்தின் சரித்திரத்திலேயே அதி முக்கியமானதோர் நிகழ்ச்சியாகும். அதிலிருந்து எதிர்கால உலகமே பல சிறந்த பாடங்களை கற்றுக் கொள்ளவேண்டி உள்ளதென்பது அறிஞர்கள் துணிபு.

சுதந்திரப்போரின் மாண்பை உலகம் பூராவாக அறிந்துள்ளது. ஆனால் யார் திட்டமாக அறியவில்லை. பேராசையும், சுயநலமும் கொண்ட பிரிட்டன் இதை உணரவில்லை.

ஏன்! உணரவில்லை? இந்தியர்களென்றால் கிள்ளுக்கீரை என்றே நினைத்துக்கொண்டுள்ளனர். இந்திய சுதந்திரப் போரின் மாண்பை எவரும் மறைக்கமுடியாது. மறைக்க, மறைக்க அதன் ஜோதி குன்றின்மேல் இட்ட தீபம் போன்றல்லவோ பிரகாசிக்கும். தடியடி தர்பார். சிறைத்தண்டனை, சொத்து பறிமுதல், அடக்குமுறை அட்டூழியம் ஓயாமல் நடைபெற்றுவருகிறது. ஆயினும் என்ன? இந்தியாவில் அமைதியும், திருப்தியும், சந்தோஷமும் நிலவியிருப்பதாக புத்திசாலி சர்க்கார் அறிக்கை காற்றில் பறக்கிறது.

"நான் உங்களை நம்பமாட்டேன். என்னை நீங்கள் கண்டிப்பாக நம்பவேண்டும்" என்பது போல் உள்ளது சர்க்கார் மனப்பான்மை. அவர்கள் வெளியிடுவதை அப்படியே நம்பிவிடும்படியான முழு மூடர்கள் இன்றைய உலகத்தில் இல்லையென்பதை பிரிட்டிஷ அதிகாரவர்க்கத்தினர் தமது ஞாபககுறிப்பு புஸ்தகத்தில் குறித்துக்கொள்ளவேண்டும். "மடியில் கனமிருந்தாலல்லவோ வழியில் பயமுண்டு" என்பது பழமொழி அதுபோல் இந்தியாவில் வாஸ்தவமாகவே அமைதி நிலவியிருக்குமாயின் இந்தியத் தந்திகளை கவர்ன்மெண்டார் ஏன் தடுக்கவேண்டும். பயங்கரமான புரட்சி இயக்கத்தார் உண்மைக்கு மாறாக விஷமப்பிரசாரம்செய்யத் தலைப்படின் அப்பிரசாரத்தை தடுப்பதற்காக தந்திகளை தணிக்கைசெய்வது வழக்கம்.

ஆனால் அல்லும் பகலும் உழைத்து அடிமைப்பட்ட இந்தியா புரட்சிசெய்யவில்லையே! கொலையிலும், கொள்ளையிலும் இறங்கிவிடவில்லையே? பாரத மக்கள் அராஜகத்திலா, இறங்கிவிட்டனர்? அதுவுமில்லை பின்னர் சர்க்கார் ஏன் தொடை நடுங்கவேண்டும். சர்க்கார்மீது குற்றமில்லாமலிருந்தால் தைரியமாக முன்வருவதுதானே?

நிற்க அதிகாரவர்க்கத்தினர் வாய்ப்பிரசாரம் கண்டு வெளிஉலகம், அதனிலும் குறிப்பாக பிரிட்டிஷார் ஏமாந்துவிடக்கூடாதென பண்டிட் மாளவியா சொஞ்ச தினங்களுக்கு முன்னதாக பிரிட்டிஷ் பிரபலஸ்தர்களுக்கு தந்திச்செய்தி அனுப்பியிருந்தார். இந்தியவிஷயத்தை கலாட்டா செய்யும் பாராளுமன்ற அங்கத்தினர்களுக்கு இந்தியாவின் தவப்புதல்வி மங்கை மீராபென்சில விஷயங்களைத் தந்தியிலனுப்பினார். எல்லாவற்றுக்கும் தடை! ஆணை! ஐயோ! சர்க்கார் ரொம்ப மோசம் செய்கிறார்கள். அதிகமாக கேள்விகேட்டால் சட்ட புஸ்தகங்களைப் புரட்டிப் புரட் செக்ஷனைப்பார்ப்பார்கள். ஆனால் அவர்களது சட்டங்களெல்லாம் பஞ்சாய் பறக்கும் காலம் நெருங்கிவிட்டது. தந்திகளையும் செய்திகளையும் தடுத்துவிட்டால் இந்தியா அடங்கிவிட்டதென நாகரீக உலகத்தின் கண்ணில் மண்ணைப்போடலாமென நினைக்கிறார்கள் போலும். இது சுத்தபிசகு. உண்மை பகிரங்கப்படும் காலம் நெருங்கிவிட்டதன்றோ! மானம் காற்றாய்ப் பறக்குமன்றோ! அப்போது தான் சாமுயல்ஹோரும், வில்லிங்டன் சர்க்காரும் வெட்கித் தலைகுனிவார்கள். அத்தகைய நிலைமை வந்தாலொழிய அவர்களது ஏகாதிபத்தியப் பித்தம் தெளியாதுபோலும்? சரி! எல்லாம் பொறுமையுடன் பார்ப்போம்.

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவு எண் 245] (1922-ஷ ஸ்தாபிதம்.) 3 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இரு முறை

இரங்கோன், பிரஜோற்பத்தி-ஷ (10-4-32) பங்குனி-மீ 29உ ஞாயிற்றுக்கிழமை

ஒரே மூச்சில் சுயராஜ்யம்!

ஹே! இந்தியனே! இந்தியாவின் விடுதலை மார்க்கத்தை ஒரே மூச்சில் சுயராஜ்யம் பெறும் வழியை உள்ளது உள்ளபடியே—ஸ்பஷ்டமாக—பகிரங்கமாகக் கூறி விடுகின்றேன்.

நமது பூமி எங்கே? நமது செல்வம் எங்கே? நமது சக்தி எல்லாம் எங்குபோயிற்று? அடிமை வழியில் அழிந்துபோயிற்று? அன்னியர் ஆதிக்கத்தில் ஆண்மையற்ற பேடிகளாகி விட்டோமா? ஆண்டவனால் அளிக்கப்பெற்ற மனித சுதந்திரத்தை பறித்து அரக்க ஆட்சியை ஸ்தாபிக்க முடியாது. இந்தியா இப்பொழுது சுதர்மத்திற்காக—சுதந்திரத்திற்காக—சுயராஜ்யத்திற்காக உயிரைத் திரணமாகவைத்து போராடி வருகிறது. சுய உணர்ச்சியுள்ள இந்தியன்—இந்திய இரத்தம் ஓட்டப்பெற்ற இந்தியன்—ஆண்மையும், அறிவும் படைத்த இந்தியன்—இந்தியனுக்கு விரோதமாக எதிரிகளுடன் சேர்ந்துகொண்டு தெய்வீகமான—அஹிம்சையின் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்ட இக் கிளர்ச்சியை அடக்கத் துணைபுரியமாட்டான்.

நீ, கலெக்டராலும் சரி, நீதிபதியானாலும் சரி, இல்லை சாமான்ய போலீஸ் சேவகனானாலும் சரி, இந்தியன் தான். இந்தியா அன்னியர் ஆதிக்கத்தில் இருக்கும்வரை ஆயிரக்கணக்கில் சம்பளம் வாங்கினாலும், பதினாயிரம், கோடிக் கணக்கில் பணம் படைத்திருந்த போதிலும் நீ அடிமை இந்தியனே. நாளை சுயராஜ்யம் கிடைத்துவிட்டால் எல்லா இந்தியனும்—இப்பொழுது நடத்தும் சாத்வீகத் தொண்டர்களைத் தடியாலடிக்கும் போலீஸ்கார இந்தியனும்—சத்தியாக்கிரஹிகளை தங்களது நாட்டிற்காக—பிறந்த பொன்னாட்டிற்காக—பிறப்புரிமையாகிய சுதந்திரத்திற்காக தியாகம் செய்யும் தெய்வீக தேசாபிமானிகளைத் தண்டிக்கும் மாஜிஸ்ட்ரேட் இந்தியனும்—சட்டசபைகளில் அநியாய—அக்கிரம அவசரச்சட்டங்களுக்கு சாதகமாக நிற்கும் மந்திரி இந்தியனும்—அன்னிய அரசாங்கத்தின் கஜானாவுக்கு—நம்மை அடக்குவதற்கு வரிப்பணம் கொடுக்கும் இந்தியனும்—வர்த்தக வர்க்கத்தாரின் சாக்கை வாங்கி வர்த்தகம்செய்யும் வியாபார இந்தியனும்—சர்க்காருடன் ஒத்துழைக்கும் எல்லா இந்தியனும் கூட—எவ்வித ஏற்றத் தாழ்வுமில்லாமல்—கூடுதல் குறைச்சலில்லாமல் ஆளவேபோகிறான். ஆகையால் எல்லா இந்தியரும்—ஹிந்து இந்தியனும்—முஸ்லிமான் இந்தியனும்—சீக்கிய இந்தியனும் விரைந்து வாருங்கள். ஹே! சுதந்தர தேவி! தேச விடுதலைக்காக எங்களுடைய எல்லாம் ஆண்மையைக்கொடு. "மாதா யுத்தத்திற்குப் புறப்பட்டுவிட்டாள்" அதோ சகோதரியும், கைக்குழந்தையோடுபோகிறாள், வானர சைன்யம் (பிள்ளைப் படை) அதோ அணிவகுத்து நிற்கின்றது இன்னொருபுறம் கொடிய குண்டுகளைக் கக்கும் துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டு—மண்டைகளை உடைக்கும் குண்டாந் தடிகளைப் பிடித்துக்கொண்டு சர்க்காரின் சைன்யம் நிற்கின்றது. நாலாபக்கங்களிலும் அடக்குமுறையாகிய அக்கினிக் குழம்பு பிரவாகமாக வெள்ளமெடுத்து ஓடுகிறது. ஹிந்துஸ்தானமெங்கும் கொடூரமான எரிமலை குமுறிக்கொண்

13-ம் தேதி ஞாபகந்தானா?

ஏப்ரல்மீ 13-ந்தேதி நாம் மறக்கக்கூடாத நாள். அன்றுதான் பஞ்சாபிலே நிரபராதிகளின் ரத்தம் சிந்தப்பட்டது. ஹிந்துக்கள், முஸல்மான்கள் இருவரது ரத்தமும் ஒரே ஆறுகக் கலந்தோடிய தினம் இதுவே. புதிய ஆவேசத்துடன் எழுந்த ஓர் தேசத்தின் சக்தியை அடக்கி, ஒடுக்கி, நசுக்கிக் கொல்ல முயற்சிசெய்யப்பட்ட தினம் இதுதான்.

1919-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 6-ந்தேதியன்று உலகம் சத்தியாக்கிரஹ சூரியனின் உதயத்தைக் கண்டது. தேசிய வாழ்க்கை சத்தியத்தினாலும், அஹிம்ஸையினாலும், பரிசுத்தமாக்கப் படுவதே சத்தியாக்கிரஹமாகும். ''அஹிம்ஸைகலந்தசத்தியத்தினால் ஒருவர்பிரபஞ்சத்தையே தமது காலடியின்கீழ்க் கொண்டு வந்துவிடலாம்'' என்பது மகாத்மா வாக்கு.

1920-ம் வருஷத்திலிருந்து, ஏப்ரல் 6-ந் தேதி தொடங்கி 13-ந் தேதிவரையுள்ள வாரத்தை தேசிய வாரமென பாரதநாடு கொண்டாடி வருகிறது. ''நாம் யார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்'' எனப் பாரதமக்கள் அனைவரும் ஒன்றுபட்டு சுதந்திரப் போர்முரசு கொட்டிய வாரம் இதுவே. மேற்கூறிய இரண்டு தினங்களும்தான் நமது சுதந்திர யாகம் தொடங்கிய நாட்கள். பாரததேசம் சாந்த சட்டமறுப்பைக் கைக்கொண்டது. நாட்டுணர்ச்சி கடல்போல் பொங்கி எழுந்தது.

ஏப்ரல் 1 -ந் தேதியை எண்ணுங்கால் நமது நெஞ்சம் துடித்தது, மனம் வெதும்புகின்றது. நமது சுதந்திர யாகத்துக்கு அன்று சுமார் 500 பேர் பலியாயினர். அன்றே கடுகளவும் பச்சாதாபமற்ற படுபாவி டயர் பஞ்சாப் மாகாணத்தில்—அமிர்தசரஸ் நகரிலே—ஜாலியன்வாலா திடலிலே நிரபராதிகளாய் கூடி இருந்த இந்திய மக்கள், ஆண், பெண், குழந்தைகள் அனைவர்மீதும் குண்டுமாரி சொரிந்து கொன்று குவித்தான். ஈவு, இரக்கமற்ற ஒருவன் செய்த இம் மகாபாதகச் செயலுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் பளபளப்பான பட்டாகத்தியும், பணமுடிப்பும், ஒரு தோட்டாவும் பரிசளித்தது. ஆயினும் அவன் நிகழ்த்திய அப்படுகொலையின் கோர நிகழ்ச்சிகள் இன்றும் நம் கண்முன்னே தோன்றி நிற்கின்றன. இந்த அநீதியைப் பொறுமல் பாரதம் அன்று விழித்துக்கொண்டு வீறிட்டெழுந்தது. சாந்தமூர்த்தியாகிய காந்தியும், தமது சத்தியாக்கிரஹப் போரை ஆரம்பிக்க நாட்டைத் திரட்டி பிரிட்டிஷ் ஆக்ஷியின் அஸ்திவாரத்தையே ஒரு ஆட்டம் ஆட்டக் கிளம்பினர். அதிகாரவர்க்கமும் நடுக்கங்கொண்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியச் செருக்கும் சற்று அடங்கியது. இந்தியரின் உள்ளக் கோயிலிலே வீர விளக்கு பிரகாசித்துக்கொண்டிருக்கு மளவும் ஜாலியன் வாலாபாக் ஒரு புண்ணிய ஸ்தலமாக வணங்கப்படும். நமது சுதந்திர ஒழிக்கு கண் திறந்த இந்த வாரத்தில் நாம் துயிலெழுந்து தொண்டை தீவிரமாக தொடங்குவோம். காந்ஜியைப் பின்பற்றுவோம். இன்று நடக்கும் போரில் வெற்றி யடைவோம்.

டிருக்கிறது. சுதந்திர நெருப்பு தேசமெங்கும் பற்றிப்பிடித்து எரிகிறது. இன்னும் அதிக நேரமில்லை. ஹே! ஆயுதபலம்படைத்த பிரிட்டனே! உனது கொடுங்கோன்மைக்கு ஒரு முற்றுப் புள்ளிபோடு. சிறிது அறிவோடு ஆலோசனைசெய்து, அதோ எரவாடாவிலே கோயில்கொண்டிருக்கின்றானே அந்த மகாத்மாவின் காலிலே விழுந்து சரணாகதியடை. இல்லாவிட்டால் தேசிய எரிமலை ஒரே யடியாய் வெடித்து பிரிட்டனை பூழ்திசெய்துவிடும். உனது போலீஸாரும்—உனது சிப்பாய்களும்—உனது சர்வ சிப்பந்திகளும் எங்கள் பக்கம் நிற்கும்போது உனக்கு வேறு கெதியேது? ஹே! இந்தியரே! வாருங்கள், ஒரே மூச்சில் சுயராஜ்யம் பெற்றுவிடுவோம். அப்பொழுது பிரிட்டன் இஞ்சி தின்னுப்போல் நிற்கும். அதுகண்டு களித்துக் கூத்தடிக்கலாம்.

பகவான் சத்தியத்தின் சார்பிலேயே இருக்கின்றார். சகோதரர்களே! சகோதரிகளே இதோ இந்தச் சத்தியப்போரில்—சாத்விக மறியலில் சேருங்கள்!! ஒன்று விடுதலைவேண்டும்; இல்லாவிட்டால் சாவுவேண்டும். இவையிரண்டையும் விடுத்து இனிமேல் ஆடு, மாடுகளைப்போல—பிச்சை நாய்களைப் போன்று அடிமையாயிருக்க முடியாது? இதுதான் கடைசிப்போர்! முடிவான யுத்தம்! வெற்றியின் எல்லைவரை ஓடியேதிருவோம்! இடையில் ஓய்வு ஒழிவு வேண்டாம்.

—தொண்டன்

அவசர சட்ட ஆட்சி! :,

ஸ்ரீ பென்னர்ப்ராக்வே

இவ்வருடம் முதற்கொண்டே பிரிட்டிஷ் பத்திரிகைகள் இந்திய விஷயங்களைப்பற்றி பத்தி, பத்தியாக எழுதிவருகின்றன. ஆயினும் பிரிட்டிஷ் பொது ஜனங்களுக்கு உண்மையில் என்ன நடக்கிறதென்பது தெரியாது. லண்டனில் நடந்த மகாநாட்டுக்கு யாரோ சில இந்தியர்கள் வந்ததாகவும்; காந்தி இந்தியாவுக்குத் திரும்பியதும், மீண்டும் ஏதோ குழப்பத்தை ஆரம்பித்துவிட்டதாகவும் பொதுவாக ஆங்கிலேயர்கள் கருதுகிறார்கள். இந்தியாவில் அவசரச்சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதை பத்திரிகைகளில் வாசிக்கிறார்களே ஒழிய அவசரச்சட்டமென்றால் என்ன என்பது அவர்களுக்குத் தெரியாது. லண்டனிலுள்ள பத்திரிகாசிரியர்களுக்குள்ளேயே சரியாக மூன்றுபேருக்குக்கூட இந்திய அவசரச்சட்டங்களின் விதிகள் தெரியாது. வங்காள அவசரச்சட்டம் சென்ற அக்டோபரிலேயே கல்கத்தாவில் பிரசுரிக்கப்பட்டிருந்தும், சிலவாரங்களுக்குமுன் அதன் பிரதி ஒன்றுகூட இங்கிலாந்தில கிடைக்கவில்லை. 1930-ம் வருஷத்தில் காந்திஜி சட்டமறுப்பை ஆரம்பிப்பதற்குமுன் அவருடைய இறுதிக் கடிதத்தை அப்போது வைசிராயாக இருந்த லார்டு இர்வினிடம் கொண்டுபோய்க் கொடுத்த ஸ்ரீ ரெஜினால்டு ரெய்னால்ட்டு அந்த அவசரச்சட்ட பிரதி ஒன்று வேண்டுமென லண்டன் நகர்முழுதும் தேடியும் அகப்படவில்லை. கடைசியாக இந்தியா மந்திரி காரியாலயத்திலிருந்து ஒரு பிரதியைக் கடனாக வாங்கினார். பிரிட்டிஷ் ஜனங்கள்பேரால் பிறப்பிக்கப்பட்ட அவசரச்சட்டத்தின் விதிகளோ பிரிட்டிஷாரின் பெருந்தன்மைக்கும் கௌரவத்துக்கும் பொருத்தமுடையதாகவில்லை. படித்ததை தெரிந்துகொண்ட அளவில் அவை ருஷ்யாவில் பொதுவுடைமைக்காரர்களாலும், இத்தாலி பாசிஸ்ட் கக்ஷியினராலும் விதிக்கப்படும் கொடிய விதிகளைப்போலவே இருக்கின்றன. வங்காளத்திலுள்ள பயங்கர இயக்கத்தை நசுக்கவே இந்த அவசரச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. லண்டன் சர்வகக்ஷி மகாநாடு கலைவதற்குமுன்பே இச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. லண்டனில் மகாத்மா அதைப்பற்றிக் கேள்விகேட்டபோது ம் நான் இருந்தேன். அவர் அதை பீதியுடன் வரவேற்று சர்க்காருக்கும், காங்கிரஸுக்கும் ஏற்பட்டிருந்த சமாசம் முறிந்துவிட்டதோ என அஞ்சினார். பின்பு சிலநாட்களுக்குள் எல்லைப்புற மாகாணத்திலும் அவசரச்சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டதை யறிந்து மகாத்மா மிகவும் வருந்தினார். இருந்தும் நம்பிக்கையை இழந்துவிடாமலேயே இருந்தார். இந்தியா மந்திரிக்கும், மகாத்மாவுக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள அபிப்பிராய பேதங்களிருந்த போதிலும் கன்சர்வேடிவ் கட்சியினரான அவரிடம நம்பிக்கை இருந்தது.

எல்லைப்புறத்தில் செஞ்சட்டையர்களின் காரியங்களை தடைப்படுத்துவதற்காகவே அவசரச்சட்டங்கள் அதி தீவிரமாக கையாளப்பட்டன. கான் அப்துல் கபூர்கானின் செஞ்சட்டை வீரர்கள் பார்வையில் ராணுவ வீரர்களைப் போல் தோன்றினாலும் [illegible] படி—காங்கிரஸ் கொள்கையாகிய அஹிம்ஸையை அடிப்படையாகக் கொண்டவர்கள். மதஉணர்ச்சியிலேயே அவர்களுக்குச் [illegible]சையில் பிரியமதிகம். சர்க்காரும், காங்கிரஸும் சமரசம் செய்துகொண்டதில்கூட அவர்களுக்கு நம்பிக்கையில்லாததால் சமாச காலத்திலும் தங்கள் நடவடிக்கைகளைநிறுத்தாமல் ஆர்ப்பாட்டம் செய்துவந்தார்கள். அவர்களை அடக்குவதற்காகவே அவசரச்சட்டத்தை சர்க்கார் பிறப்பித்தார்கள் அத்தோடு நில்லாமல் இதர எல்லா மாகாணங்களிலும் அமுலுக்குக் கொண்டுவந்தார்கள்.

1930-ம் வருடம் சட்டமறுப்பின்போதும் அவசரச்சட்டத்தைக் கொண்டுதான் காங்கிரஸையும் சட்டவிரோதமான சபையாக்கினர்கள். இதனால்தேசத்தின் ஒருபாகத்தில்காங்கிரஸ் சட்டவிரோதமானதாகவும், மற்றொருபாகத்தில் சட்டவிரோதமல்லாததாகவும் கருதப்பட்டது. அலகாபாத் தலைமை காங்கிரஸ் காரியாலயம் அவ்வருடம் பூராவுமே திறக்கப்பட்டிருந்தது. யாதொரு தடங்கலுமின்றி காரியக் கமிட்டிக் கூட்டமும அக்கட்டடத்திலேயே கூட்டப்பெற்று நடந்தது. பம்பாயிலோ காங்கிரஸ் சட்டவிரோதமான சபையாகக் கருதப்ப

பிரிட்டனே! மீட்சி வேண்டுமா?

இந்தியாவில் இதுகாலை நடைபெறுவது போன்ற அரக்க ஆட்சி உலகத்தில் ஒருபாகத்திலும் நடந்தது கிடையாது. குற்றமற்ற ஸ்தாபனங்கள், கூட்டங்கள், தேசியக் கொடிகள் கூட கொடும்பாதகங்களாகப் பாவிக்கப்பட்டுத் தடுக்கப்பட்டு—பறிக்கப்பட்டு— தண்டிக்கவும் படுகிறார்கள். அரசியல் வாதிகள் யாவரும்—காந்திஜீ உள்பட சிறைப்பட்டுவிட்டார்கள். தேசபக்தர்களுக்கு ஆயிரம், பதினாயிரக் கணக்கில் அபராதம் விதிக்கப்படுகின்றன. சாத்வீக தலைவர்களெல்லாம்—அஹிம்ஸை வீரர்களெல்

ட்டு தலைவர்களை எல்லாம் சிறைப்படுத்தினர் காரியாலயங்கள் பறிக்கப்பட்டன.

இவ்வருடத்து சட்டமறுப்புப் போரிலோ வென்றால் இந்தியா முழுவதிலுமுள்ள காங்கிரஸ் ஸ்தாபனங்களும், காங்கிரஸ் சபையைச்சேர்ந்தவர்களெல்லாம் கைதிசெய்யப்பட்டிருக்கின்றனர். இந்தியா முழுவதிலுமே அவசரச் சட்ட ஆட்சி நடைபெறுகிறது. அன்னியத் துணி அல்லது சாமான்களை விற்கும் இடங்களுக்கு முன்னால்கூட காங்கிரஸ் தொண்டர்கள் சாத்வீகமாக உட்கார்ந்துகொண்டிருந்தபோதிலும் அவர்களை கைதிசெய்து சிறைப்படுத்துகின்றனர்.

நிற்க, விபரீதமான அவசரச்சட்டம் யாதெனில் "அவசர அதிகார அவசரச்சட்டம்." இதனால் அதிகாரிகள் பலவிதமான அதிகாரங்களைப் பெருகின்றனர். அவர்கள யாரையும் கைதிசெய்யலாம்—அவர்களுடைய சொத்தை பறிமுதல் செய்யலாம்—இந்த இடத்தைவிட்டு வெளியில் போகக்கூடாதென்று தடுக்கலாம். இது ராணுவச்சட்டத்தைப் போலவே அவ்வளவு கடுமையாகவிருக்கிறது. இக்கொடிய—அக்ரமச்சட்டங்களால் பிரிட்டன் இந்தியாவை ஆளுகிறது. லிபரல் கட்சிப் பத்திரிகைகளோ மிகத் தந்திரமாக பலாத்காரம் மட்டும் பயன்தராது என்று எழுதுகின்றன. தொழிற்கட்சியினரோ அரசாங்கக் கொள்கையைக் கண்டு கோபிக்கின்றனர். சென்ற சட்டமறுப்பில் காந்திஜியையும், 60 ஆயிரம் இந்தியர்களையும் சிறையிலடைக்க உத்திரவிட்டது தொழிற்கட்சி சர்க்காரேஎன்பதை மறந்துவிட்டார்கள். சுயேச்சைத் தொழிற்கட்சியினர் மட்டுமே இந்தியாவின் கோரிக்கையை மனமார ஆதரிக்கின்றனர்.

லாம் கூட்டம் கூட்டமாய்க் கைதிசெய்யப்பட்டு கடும் சிறைவாசத்திற்கும் ஆளாகின்றார்கள். பிரசங்க வாயிலாகவோ, பத்திரிகைகள் மூலமாகவோ ஒரு அபிப்பிராயமும் சொல்லக்கூடாதாம். சர்க்காரின் தடியடிக்கும், துப்பாக்கிக் குண்டுகளுக்கும் ஆளாகிக் கிடந்து தவிப்பவர்களை சிகிச்சை செய்விப்பதற்காக கட்டப்பட்ட வைத்தியசாலைகள் கூட சட்ட விரோதமானதெனத் தடுக்கப்படுகின்றன. காங்கிரஸ் நிதிகளை எல்லாம் சூதாட்டப் பணமோ- கொள்ளைப் பொருளோபோல் பறிமுதல் செய்யப்பட்டன. காங்கிரஸ் காரர்களின் இருப்புப் பணமும் தடை செய்யப்பட்டன. எஞ்சி நிற்பது 46-வது வருட காங்கிரஸ் ஒன்றுதான். நமது நியாயஸ்தலம் அதுதான். தலைவர் சரோஜினி தேவியும் நடத்தியே தீருவதென பிரதிக்ஞை கட்டிவிட்டாள். பண்டிதர் மாளவியா தலைமை வகிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டார். அவர் இசைந்தபின்பே டில்லியில் 46-வது வருட காங்கிரஸ் நடைபெறுவதற்கான வேலைகளெல்லாம் செவ்வன நடைபெற்று வருகிறது. இடையே டில்லி அதிகாரிகள் வேறே பூச்சாண்டி காட்ட ஆரம்பித்துவிட்டார்கள். இவ்வருடம் காங்கிரஸ் மகாசபையைக் கூட்டுவதற்குக்கூட அதிகாரம் கிடையாதாம்! அதிகாரிகள் அதிகாரம்பெற்றுத்தான் இந்த 45வருடகாலமாகக் காங்கிரஸ் நடைபெற்றதா என்பதுதான் விளங்கவில்லை. காங்கிரஸைத் தடைப்படுத்துவதற்கு இந்தியா வைசிராயல்ல, இந்தியா மந்திரியல்ல யாராலும் தடைப்படுத்த முடியாது. தலைவர் பண்டிதர் அழைப்போ இந்தியா எங்கணும் பறந்து சென்றுகொண்டிருக்கிறது. இமயமலை முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள இந்தியமக்கள் மட்டுமல்ல, இதர வகுப்பினர்களும் வந்து டில்லியில் குழுமிவிடுவார்கள் என்பது நிச்சயம். பொது இடம் கிடைக்காவிட்டால், கண்மாய் கரையோ—கடற்கரையோ—மரத்தடியிலோ கூடி தலைவர் தீர்மானத்தை நிறைவேற்றியே தீருவார். தடைப்படுத்திவிடுவதென்பது பகற் கனவேயாகும். ஒருக்கால் பண்டிதர் மாளவியாவோ, ஸ்ரீமதி சரோஜினியோ கைதிசெய்யப்படலாம்; ஆனால் காங்கிரஸை தடைப்படுத்திவிடலாமென்று பிரிட்டன் நினைக்குமானால் இந்தியாவில் சமாதானமோ, அல்லது அரசாட்சியோ அடியோடு அழிக்கப்பட்டுப் போகுமென்பது திண்ணம். பிரிட்டனுக்கும் மீட்சி கிடையாது.

மற்றுமோர் கடிதம்!

பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு சட்டமறுப்புக்காக சென்ற தொண்டர்களின் தொண்டு அவ்வூர்தொண்டர்களின் தொண்டையும் தாண்டிவிட்டது. அத்தகைய தொண்டர்களுக்கு பர்மாவாழ் இந்தியர்கள் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள்.

இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வரும் சீமைத் துணியின் இறக்குமதி நாளுக்கு நாள் குறைந்துவருவதை காமன்ஸ் சபையில் வெளியிட்ட புள்ளி விபரங்களிலிருந்து சீமைத்துணி மறியல் எவ்வளவு பலனளித்திருக்கிறதென்பதையும் தெரியலாம். 1931-ம் வருடம் ஆகஸ்டுமாதம் 31-ந் தேதியோடு முடிவாகும் ஐந்து மாதங்களில் மொத்தம் இறக்குமதியான சீமை நூல், ஜவுளிகளின் தொகை 406 லக்ஷம் ரூபாய் ஆனால் 1930-ம் வருடம் அதேகாலங்களில் 935 லக்ஷம் ரூபாய்க்கு இறக்குமதியாகியிருந்திருக்கிறது. 1929-ல் அதே மாதங்களில் 1610 லக்ஷம் ரூபாய் பெறுமான சீமைத் தினுசுகள் இந்தியாவில் வந்து குவிந்திருக்கின்றன. ஆகவே மறியல் தொண்டர்கள் எவ்வளவு உற்சாகத்துடன் மறியல் செய்துவந்திருக்கிறார்கள் என்பது புலனாகிறது. வியாபாரிகளும், பொது மக்களும் அன்னியத் துணியை வாங்குகிறதில்லை என்று பிரதிக்ஞை செய்துகொண்டால், எண்ணிக்கையற்ற தொண்டர்கள் ஏன் இன்று சிறையில் வதியவேண்டும். நேற்றுக்கூட உங்கள் சகோதரர்களாயினும் சரி, பிள்ளைகளாயினும் சரி விருதுநகரில் ஸ்ரீமான்கள் சன்னியாசித்தேவர், ஆதிமூலம் பிள்ளை, மற்றும் நான்கு பேர்களும் சென்றமாதம் 29-ந் தேதி ஒவ்வொருவரும் ஆறுமாதம் தண்டனையடைந்திருக்கிறார்கள். முதல் தடவையாக ஒருவாரத் தண்டனையை அனுபவித்து விடுதலையடைந்த இரண்டு தினங்களில் மறுதடவையாகவும் தண்டனையை ஏற்றுக்கொண்டு புன்னகையுடன் சென்றதானது போற்றற்குரியதாகும்.

சென்னை மாகாணத்தில் 9000 சாராயக் கடைகளிருக்கின்றன. கடந்த டிஷம்பர் மாதத்திற்குள் 6000 கடைகள்தான் ஏலத்துக்குப் போயினவாயினும் 100-க்கு 30 வீதம் லைசென்ஸ்காரர்களிடமே ஒப்படைக்கப்படவில்லை.

தேசோபகாரி கோர்வை.

1931-௵ அக்டோபர் முதல் 1932-௵ மார்ச்சு மாதம்வரை "தேசோபகாரி" சேர்ந்து விலைக்குக் கிடைக்கும்,

தபாற்கூலி உள்பட ரூபாய் இரண்டுதான்

கொஞ்சம் பிரதிகளே உள.

இராமநாதபுரம் ஜில்லாவில் எல்லாக் கடைகளும் குத்தகைக்கு விடப்பட்டுப்போனாலும், முன்னைய வருடங்களில் 4 லக்ஷரூபாய் குத்தகை கிடைத்திருக்க இந்த வருடம் 2 லக்ஷம்தான் கிடைத்திருக்கிறது. இதிலிருந்தும் கள்ளு, சாராயக்கடை மறியலும் மிகத் தீவிரமாக நடந்ததாக அறியக்கிடக்கிறது. பர்மாவிலிருந்து சென்ற தொண்டர்கள் கள்ளு, சாராயக்கடை மறியலிலும் பங்கெடுத்துக்கொள்ளாமலில்லை. விதேசித்துணி மறியலன்றே ஸ்ரீமான் [illegible]லையா நாடார் அவர்களுக்கு கள்ளு மறியலுக்காக 6 மாத தண்டனையும், 250 ரூபாய் அபராதமும் பணம் கட்டத்தவறினால் 6 வார தண்டனையும் விதிக்கப்பட்டார்கள். சாராயக்கடை மறியலுக்காக ஸ்ரீமான் சண்முகவேல் நாடாருக்கு ஏழுமாத தண்டனையும், 250 ரூபாய் அபராதமும், கொடுக்கத்தவறினால் 6 வார தண்டனையும் விதிக்கப்பட்டார். அவர்களுடன் முறையே சில தொண்டர்களும் கண்டிக்கப்பட்டு திருச்சிச் சிறையிலிருந்து வருகிறார்கள். சிறைமுகம்சென்ற நமது நண்பர்கள் மாமியார் வீட்டில் மருவுண்டு மகிழ்ச்சியுடன் வருவதை யார்தான் போற்றாதிருக்க முடியும்.

* *

உலகம் இருக்கக்கூடிய இன்னொருக்கடியில் ஒவ்வொரு தேசங்களும் ஆயுதங்களைக் குறைத்துக்கொண்டு வருகிறது. பிரிட்டனுடைய ஆயுதங்களோ நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போகிறது. அமெரிக்கா; பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், இந்த ஐந்து தேசங்களும் 1913-ல் [illegible]00 கோடி, 1926 ல் 5[illegible]0 கோடி, 1930—ல் 750 கோடி வீதம் ஆயுதத்திற்காகச் செலவு செய்திருக்கிறது. பிரிட்டன் மாத்திரம் சமாதானம் நிலவிய 10—வருடங்களில் 1300 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறது.

போருக்கு எழுந்திரு.

சோபமடையாதே. வீணாய் விசனப்படாதே. மனமெலுவை நீக்கித் தைரியமாய் போருக்கெழுந்திரு என்று அர்ச்சுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ணபகவான் குருக்ஷேத்திரத்தில் ஞானோபதேசம் செய்தார். எழுந்திரு! உன்னுடைய கர்மத்தைச் செய்யென்றார். கர்மத்தால் தான் லோக சக்கரம் சுழன்று வருகிறதென்றும் அக்கர்மத்தைச் செய்தல் வேண்டுமென்றும் உபதேசித்தார். கிருஷ்ணபரமாத்மா அவதரித்து ஐயாயிரம்வருடங்களுக்குமேலாகிறது. ராமகிருஷ்ணாவென்று ஸ்மரணை செய்யாத ஹிந்துக்கள் ஒருவருமில்லை. ஒவ்வொருவர் மனதிலும் ஸ்ரீகிருஷ்ணன் குடிகொண்டிருக்கிறார். அவருடைய இனிய தேவகீதங்கள் ஒவ்வொருவர் காதிலும் வந்து விழுகின்றன. யமுனா நதிக்கரையோரத்தில் கடம்ப மரத்தடியில், நின்றுகொண்டு பில்லாங்குழலை வாசித்துக்கொண்டிருக்கும் அழகிய திருமுகத்தைத் திருப்பித் திருப்பிப் பார்க்க ஆசைகொள்ளாதவர் எவர்? சதாகாலமும் தம்முடைய பில்லாங்குழலில், "தைரியமாய் எழுந்திரு சோபமடையாதே" யென்று ஒவ்வொரு மனங்கலங்கிய அர்ச்சுனனுக்கும், ஊதுகின்றார். இன்று நாம் ஸ்ரீ கிருஷ்ணனுடைய கீதங்களைக் கவனமாய் கேட்கவேண்டும்-நம்முடையநாடோ பாழாய்க் கிடக்கிறது. தர்மமோ அழிந்துபோய்விட்டது. பக்தியோ குறைந்துவிட்டது. ஜனங்களோ சோபமடைந்து கிடக்கிறார்கள்-மனமோ புண்பட்டுக்கிடக்கின்றது. இச்சமயத்தில் நாம் ஒவ்வொருவரும், கிருஷ்ணனுடைய பில்லாங்குழலைக் கேட்க ஆசைகொள்ளவேண்டும். கிருஷ்ணனுடைய கீதங்கள் தான் நம்முடைய மனதை ஆற்றி, ரணங்களைத் தீர்த்து, சோகத்தை நிவர்த்திசெய்யும். ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தின் மகத்துவத்தை நாம் உணரவேண்டும்—எதற்காக இந்நாட்டில் அவதரித்தார். என்றும், அவர் ஜனித்த வேளையையு மிடத்தையும், அவர் பிறந்த தறுவாயில் வசுதேவனும் தேவகியும் பட்ட கொடிய கஷ்டங்களையும், கம்சனுடைய ஹிம்சைகளையும் நினைத்துப்பார்க்கவேண்டும். அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுவதற்கே இப்பெரிய ஆரிய வீரர் பாரத நாட்டில் பிறந்தார். குருக்ஷேத்திரத்தில் குருவாய் நின்று சோபமடைந்த அர்ச்சுனனுக்கு ஞானோபதேசம் செய்தார். அஞ்சாதே! என்றார்! நீ என்மீது மனம் வைத்து பக்திசெய்யின் முக்தியடைவா யென்றார். ஸ்ரீ கிருஷ்ண பகவானின் உண்மையான ஸ்வரூபத்தை நாம் உணரவேண்டும். அவர் செய்த ஞானோபதேசத்தை யறியவேண்டும். அவருடைய ஆக்ஞைக்கு உட்பட்டு நடக்கவேண்டுமானால் இன்று நடக்கும் அரக்க ஆக்ஷிக்காக போராட வேண்டும். அப்படியானால் நம் ஜீவன் முக்தியடையலாம்.

மிகுந்துவிட்டது!

துர்ப்பாக்கியமான பர்மாவிலும் வறுமை தலைவிரித்து ஆடுகிறது. வயிற்றின் கொடுமையால் தன் உடலை வாடகைக்கு விடுவதற்கு முக்கியமாக ஏழை பர்மியப் பெண்கள் துணிந்துவிடுகின்றனர். அதே வறுமை காரணமாக ஆண்மகன் மனைவி, மக்கள் முதலிய பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வழியில்லாமல், ஆனால் இயற்கையை எதிர்க்கவும் சக்தியில்லாமல் விபசார விடுதியை நாடுகின்றான். இவ்வாறாகப் பெண்மை சீரழிகின்றது; ஆண்மையும் நாசமாகின்றது. சீ! கேவலம்! சரீரத்தை வாடகைக்கு விடுவதா? அதைப் பார்த்துக்கொண்டு பாராதவர்போல் அறிஞர் செல்லுவதா? இந்த அநியாயம் கொஞ்சமேனும் குறையவாவது வழி கண்டுபிடிக்கவேண்டும். இல்லாவிடில் பர்மா பாழாகிவிடும்—துர்வியாதிகள் நாட்டில் மிகுந்துவிடும்—பர்மிய ஜாதியின் ஜீவசக்தி குறையாதவண்ணம் அவ்வப்போது ஏற்பாடுகள் செய்யவேண்டியது இந்திய—பர்மியப் பிரிவினையை விரும்பும் அறிஞர்களின் கடமையாகும். வறுமைதான் விபசாரத்தின் மூலகாரணம். வறுமையைப் போக்குவது பர்மா சர்க்காரின் கடமையாயினும் விபச்சார விடுதிகளை நடத்துபவர்களையும், சொந்தக்காரர்களையும் அறிந்து வீட்டுவாடகைக்குத் தங்கிருப்பவர்களையுங்கூடத் தண்டிக்கவேண்டும். இளம் பெண்களை விபசாரத்திற்கு உபயோகித்து அந்த வருமானத்தினால் பிழைக்கும் கள்ளிகளினும், பெரிய, பெரிய வீதிகளிலுமுள்ளவர்களைத் தண்டிக்கவேண்டும். விபசார வீதிகளில் பர்மியப் போலீஸை நிறுத்திவைக்கவேண்டும். இதர வகுப்பு போலீஸை நிறுத்திவைப்பதால் பர்மிய இள நங்கைகள் மானம் மரியாதைக்கு பயப்படுகிறார்களில்லை. கமிஷனர் துரையவர்கள் சற்று விபசாரிகள் பக்கம் திரும்புவாரா?

காந்தி, கதர், காங்கிரஸ் : :

கதர் வியாபாரி

காந்தி, கதர், காங்கிரஸ் என்னும் மொழிகள் சாமானியமாய் நம்முடைய நாட்டில்வழங்கி வருகின்றன. கோடிக்கணக்கான ஜனங்களுக்கு காந்தியாரின் திருநாமதேயம் தெரியும். சூரியனுடைய காந்தியைப்போல், மகாத்மாவின் கீர்த்தியும், தியாகமும், தேசபக்தியும் எங்கும் வீசுகின்றது. காந்தியாரின் பெயரைத் தெரிந்தவர்களுக்கெல்லாம் "கதர்" என்ற வார்த்தையும் சாதாரணமாய்த் தெரியும். 'கதர்' என்பது தமிழ்ப் பதமல்ல-அது ஹிந்தி பாஷையிலுள்ள ஒரு இன்பமான தேன்மொழி. "கதர்" என்றால் கையால் நூற்று கையால நெய்த வஸ்திரம். ஹிந்துஸ்தானமெங்கும் இப்பெயர் பிரசித்தமாய் இன்று விளங்குகிறது. கதர் என்னும் வார்த்தைக்கு ஒரு மிகப் பரிசுத்தமான தெய்வபக்தியுள்ள அர்த்தமிருக்கிறது. அதைப் பூர்ணமாயுணர்ந்துதான் காந்தியார் எப்படி தியாகத்திற்கும், அன்பிற்கும், சாந்தத்திற்கும் அழகான அடையாளமாய்த் தோன்றுகிறாரோ, அதுபோல் 'கதர்' பரிசுத்தத்திற்கும், சன்மார்க்கத்திற்கும் அற்புதமான அறிகுறியாய் தோன்றுகிறது. காந்தியாரின் திருநாமத்தை நினைப்பவர், கதரின் மகிமையை அறிந்து அதையே அணியவேண்டும். 'காங்கிரஸ்' மகா சபையின் வரலாற்றையும் சரித்திரத்தையும் தெரியாதவர் மிகவும் சிலர். சென்ற நாற்பத்தாறு வருடமாக இந்தியா சுயராஜ்யத்திற்காக நாடெங்கும் கிளர்ச்சிசெய்து தேசாபிமானத்தை யூட்டி வருகின்றது. 'காங்கிரஸ்தான் இந்தியாவிலுள்ள பெரிய ராஜீய மகாசபை. அதன் கட்டளைப்படிதான் தேசிய ஊழியர்கள் நடக்கிறார்கள்' காங்கிரஸ்தான் நம்முடைய நாட்டில், தீர்க்காலோசனை செய்யுமிடம். அதனுடைய நியமத்திற்குட்பட்டுத்தான் இன்று பல்லாயிரம் தேசபக்தர்கள் சிறைக்குச் சிரித்துக்கொண்டே சென்றிருக்கிறார்கள். இன்று நாம் இம் மூன்று பதங்களின் விசேஷ மகிமையை நன்று உணரவேண்டும். காந்தியாரின் பெருமையையும் தேஜஸையும் அறியவேண்டும். அவர் எதற்காக சிறைக்குச் சென்றிருக்கிறாரென்றும் ஏன் இவ்வளவு கொடிய கஷ்டப்படுகிறாரென்றும், தாம் பிறந்த தாய்நாட்டிற்காக எவ்வித அரிய தியாகம் செய்துவருகிறாரென்றும் நாம் யூகித்துப் பார்க்கவேண்டும். அவருடைய அனுஷ்டானங்களையும், ராஜீய கொள்கைகளையும் கிரகித் தறியவேண்டும். 'ஆத்ம சக்தியின்' தெய்வீக பலத்தையும் சத்யாக்ரகத்தின் அழியாப் புகழையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். சுயராஜ்ய மடைவதற்காக ஏன் கதரை இன்றியமையாத மூலாமிசமாக ஏற்புறுத்துகிறாரென்றும் கவனிக்கவேண்டும்-கதர் பூர்த்தியாய் உபயோகிப்பதில்தான் சுயராஜ்யமிருக்கிறதென்று சொல்லுகிறார். அதன் உண்மையை நாம அறியவேண்டும். சுயராஜ்யம் எதற்காகப் பெற விரும்புகிறோம். கதர் தரிப்பதினால் சுதந்திரம் எப்படி வரும்-ஏன் கதரைப்பற்றி இவ்வளவு பிரசாரமெடுத்துக்கொண்டு காந்தியார் தியாகம் செய்துவருகிறார் என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். காந்தியாரின் பெயரை இனி நாம் மறக்கப்போகிறதில்லை. அவர் ஆகாசத் தீபத்தைப் போல் காந்தியுடன் நம்மிடையில் ஜொலிக்கிறார். அவரை மறக்காமலிருந்தால் அவர் பூஜித்துவரும் கைராட்டினத்தையும் கதர் வஸ்திரத்தையும் மறக்கமுடியாது. காந்தியும் கதரும் நம்முடைய நாட்டின் அடையாளங்கள். சுதந்திரத்தைத் தேடுவோர் காங்கிரஸ் மகாசபையில் அங்கத்தினராய்ச் சேர்ந்து கதர் ஆடையில் பூரண நம்பிக்கைகொண்டு அதையே ஆடையாக தரித்து மகாத்மா காந்திஜீயின் ஜீவ வாழ்க்கையின் சரித்திரத்தையும், அவருடைய அரிய தியாகத்தையும் நினைத்து, நினைத்து யூகித்துப்பார்க்கும்படி நாம் அனைவரையும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

தேசோபகாரி
(வாரம் இருமுறை)

வருட சந்தா (இரங்கோன்)		ரூ	3	0	0
6 மாதம்	,,	,,	1	8	0
வருட சந்தா (வெளியூர்)		,,	4	8	0
மலாய்நாடு வருடசந்தா		,,	6	8	0
6 மாதம்	,,	,,	4	0	0

46=வது டில்லி காங்கிரஸ்.

பூரி பட்டணத்தில் நடத்தப்படவேண்டிய 46-வது காங்கிரஸ் புதிய டில்லியில் 24-ந் தேதி நடைபெறப்போகிறது. பண்டிதர் மதன்மோகன மாளவியா தலைமை வகிக்கப்போகிறார். இக் காங்கிரஸுக்கு தலைவர்களாகவேண்டியவர்கள் தமிழ் நாட்டுத் தலைவர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரும், பாபு ராஜேந்திர பிரசாத்தும் ஆவர். காங்கிரஸ் மாதம், வாரம், பட்டணமும் எப்படி மாறிக்கொண்டுவருகிறதோ, அதேபோன்று தலைவர்களும் மாறிக்கொண்டுதானிருக்கிறார்கள். பண்டிதர் மாளவியா 46-வது தேசிய மகாசபைக்கு ராஷ்டிரபதியாக முடிசூட்டப்படுவார். வரவேற்பு வைபவங்களெல்லாம் வெகு சிறப்பாக நடக்கும் காங்கிரஸ் உதயமாகும் என்கிற அறிகுறிகூட இல்லாமல் இடியும், குமுறலுமாக இருந்த இன்னேரத்தில் காங்கிரஸ் நடைபெறப்போகும் செய்தி எல்லோருக்கும் ஒரு நற்செய்தியாகவேயிருக்கும். ஆனால் நமது எண்ணம் கனவாய் முடியவில்லை. மார்ச்சு மாதத்தில் நடத்தவேண்டிய காங்கிரஸை ஏப்ரல் மாதக் கடைசி வாரத்தில் நடத்தப்போகிறோம்.

“46-வது வருட காங்கிரஸ் நடத்தப்படத்தான் வேண்டும். ஆனால் நம்பிக்கையில்லை 12-மணி யடிக்க இன்னும் சில நிமிஷங்களே பாக்கியிருந்தாலும், நாம் நினைத்தால் நடத்திவிடலாம். இவ்வளவு அடக்குமுறையின் மத்தியிலும், இத்தனை அவசரச் சட்டங்களினிடையிலும் கூட மனம்வைத்தால்—நடத்தித்தானே தீருகிறது என்று பிரதிக்ஞை செய்துகொண்டால் கண்டிப்பாய் காங்கிரஸை நடத்திக் காட்டலாம். காங்கிரஸ் பிறந்து 46 வருடங்களும் விடாமல்—தடைப்படுத்தப் படாமல் நாம் நடத்திவந்த நமது தேசிய திருச்சபையை இவ்வருடம் நடத்தாமல் விடலாமா? நடத்தித்தான் தீரவேண்டும்” என சென்ற மாதம் காங்கிரஸ் வாரத்தில் நாம் குறிப்பிட்டிருந்தோம். அதன்படியே சர்க்காரால் கருதப்படும் சட்டவிரோதமான கூட்டத்தை நமது சட்டபூர்வமாக நடத்தப்போகிறோம். நடத்துவது மட்டுமல்ல, பண்டிதர் தலைமையில் நடக்கும் தேசிய திருச்சபை—காங்கிரஸ் பூரண சுதந்திரமும் அடைந்துவிடுமென்பதும் திண்ணம்.

நமக்கும் வேண்டாம்!

ஹேமந்தான் சுடுகாட்டு டிரஸ்டி சோமசுந்தரம் பிள்ளை மானம், மரியாதையெல்லாம் கமிட்டிகையில் ஒப்படைக்கப்பட்டது. துவக்கத்திலேயே கமிட்டி நவக்கிரக பார்வையிலிருந்தது. ஒன்று பார்த்த திசையை இன்னொன்று பார்ப்பது கிடையாது. ‘ஊரார் புகார் பொறுக்கமுடியாது “ஊரோடு ஒத்து வாழ்” என்றபடி நாமும், கேட்டுக்கொண்டதற்கிணங்க ஸ்ரீமான் எஸ். பி. எஸ். மணி ஐயர் அவர்களும் கமிட்டி மெம்பரானோம். ஸ்ரீமான் சோமசுந்தரம் பிள்ளையே கமிட்டியைக் கமிட்டியென்று கருதாமே கணக்குக் காட்டவும் முன்வரவில்லை. போற்றலோ, தூற்றலோ பெரிதல்லவென எண்ணி கமிட்டியிலிருந்து ஸ்ரீமான் ஐயரும் விலகிக்கொண்டார்கள். எண்ணிக்கையில் எட்டு ஆகிவிட்டது, எட்டு குட்டிச்சுவர்தான். ஒன்றும் நடைபெறப் போவதாகத் தெரியவில்லை. கடைசியில் பார்க்கப்போனால் கமிட்டிகளுக்குள்ளேயே சிண்டுப்பிடி சண்டையையும் உண்டுபண்ணிவிடுவார்போல் தெரிகிறது. பொறுப்புக்கேற்ப கமிட்டியினிடத்தில் நடந்துகொள்ளும் தன்மையை உணர்கிறாரில்லை. ஒரு கூட்டத்தில் தாங்கிப் பேசிய அவரது நண்பர்களைக்கூட கிரிமனல் குற்றவாளி அவரையெல்லாம் சுடுகாட்டு டிரஸ்டியாக நியமிக்கக்கூடாது என்கிறார். கிரிமனல் குற்றவாளி (ஊழியன் ஆசிரியர் சுப்பையா நாயுடு) ஆனால் கமிட்டியில் ஏன் மெம்பராகச் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். கஷ்டத்திற்கு கழுதையையும் காலைப்பிடி என்றமாதிரி ஒரு அரசியல் குற்றவாளியை, கிரிமனல் குற்றவாளியெனக்கூறுவது அவரது வாய்த்துடுக்கென்றல்லாமல் வேறென்னென்று கூறுவது? தனிப்பட்ட முறையில் நமக்கும் நாயுடுவுக்கும் அபிப்பிராய பேதங்கள் உண்டுதான். ஆனால் அவரைக் கிரிமனல் குற்றவாளி என்றுசொல்வதற்கில்லை. சுடுகாட்டு கமிட்டியிலும் ஒரு மெம்பராகச் சேர்த்துக்கொண்டு அவமரப்பின்னால் பிழை பேசுவது சுடுகாட்டு டிரஸ்டிக்கு அழகில்லை. பொறுப்புக்கேற்ப கமிட்டியைக் கூட்டிவைத்து கணக்குகளை சமர்ப்பிப்பதாகவும் தெரியவில்லை. கணக்குகள் சீக்கிரத்தில் நேர்செய்யப்படுவதற்காகவேண்டியே சுடுகாட்டுக் கமிட்டியிலிருந்து நாமும் விலகிவிடுகிறோம்.

8—4—32 அ. வெ. செல்லம் பிள்ளை.

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுஎண் 245] (1922-ஹு ஸ்தாபிதம்.) 4 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இரு முறை

இரங்கோன், ஆங்கீரஸ-ஹு (13-4-32) சித்திரை-மீ 1௳ புதன்கிழமை

துப்பாக்கிகளை "தூ" வென்றூதிவிடு!

எதுநேரினும் இடர்ப்படமாட்டோம்
அண்டஞ் சிதறினும் அஞ்சமாட்டோம்
கடல்பொங்கியெழுந்தால் கலங்கமாட்டோம்
யார்க்குமஞ்சோம் எதற்கு மஞ்சோம்
எங்குமஞ்சோம் எப்போது மஞ்சோம்

—பாரதியார்

தமிழா கண்ணைத் திறந்து பார்!

வெளியுலகத்தில் என்னென்னவெல்லாம் நடக்கின்றதென்று ஒருமுறை எட்டிப் பார். நீயொரு நெருக்கடியான உலகத்திலே பிறந்திருக்கிறாய்; இரணகளத்திலே நிற்கிறாய்; சாவுக்கும், பிழைப்புக்கும் இடையிலே கிடக்கின்றாய். ஒன்று வாழவேண்டும்; அல்லால் வீழவேண்டும். இடைவழி இல்லவே இல்லை. சுதந்திரபுருஷனாக வாழுகிறாயா? இல்லை அடிமைநாயாகவே இருக்கிறாயா? நாம் சொல்லுகிறோம். சுதந்திர வீரனாகவே ஆகிவிடு. ஏனெனில் சுயராஜ்யமல்லாத வாழ்க்கையைவிட சாவதே-மேல்.

ஹே! தமிழா! உனக்கு ஆண்மையிருக்கிறதா? உன்னுடைய தசைநாடிகளில் வீரரத்தம் ஓடுகிறதா? ஆமென்றால் இதோ உனது கண்ணெதிரில் நடக்கும் அக்ரமங்களை அடக்கு. இதோ உனது காலடியில் சீறிக்கொண்டிருக்கும் விஷப்பாம்புகளை மிதித்து நசுக்கு. இதோ உன்னை சூழ்ந்துநிற்கும் அரக்கர்களை அஹிம்சைவாளால் அதம்செய்துவிடு. இதோ உன்னுடம்பெங்கும் பாய்ச்சப்பட்டிருக்கும் ஈட்டிகளை—குண்டுகளைக் கக்கிக்கொண்டிருக்கும் துப்பாக்கிகளை—தலைக்குமேல் ஓங்கப்பட்டிருக்கும் தடிகளை "தூ"வென் றூதிவிடு. ஒரு சிரிப்புச் சிரித்துக்கொண்டே அதோ நெஞ்சுக்கு நேர் வரும் பீரங்கிக் குண்டுக்கு உனது வீரமார்பை திறந்து காட்டு. உனது ஹிருதயத்திலிருந்து கொழுக்கும் இரத்தத்தைக் கையிலேந்திக்கொண்டு ஜெலக்ஷிமியை அபிஷேகம் செய். அப்போதுதான் சுதந்திரதேவி பிரசன்னமாவாள். அவளுக்காக நமது தியாகத்தை அஸ்திவாரமாக்கி நமது உடலை கற்களாக அமைத்து சுயராஜ்யமாகிய கோயிலைச் சமைப்போம். இல்லாவிட்டால் தமிழா! பேடிதான்; பேதைதான்.

தலைவர்களெல்லாம் கம்பிகளுக்குள்ளே அடைபட்டுவிட்டார்கள்; பத்திரிகைகளெல்லாம் பூட்டிடப்பட்டிருக்கின்றன; பிரசாரகர்களெல்லாம் தண்டிக்கப்பட்டுவிட்டார்கள். நமது தாய்மாரும், சகோதரிகளும், குழந்தைகளும் கூட சிறைகளுக்குள்ளே புழுங்கிக்கொண்டு கிடக்கின்றார்கள். தமிழா! நீமாத்திரம் உண்டு உடுத்திச் சுகமானகாலக்ஷேபஞ்செய்கின்றாயே! ரோஷமில்லையா? உனது தாய்க்குத் தவறிழைத்த சர்க்காரை—உனது சகோதரியைத் தண்டித்த அரசாங்கத்தை—உனது பெண்மைத் தெய்வங்களுக்குப் பிழைசெய்த பிரிட்டிஷ் ஆட்சியை—நீ கட்டிய தெய்வீகத் தாலியை நீ உயிருடனிருக்க அறுத்த அன்னியர்கொட்டத்தை இன்னுமா கண்ணால்கண்டு சகித்துக்கொண்டிருப்பது? இன்னுமா அக்ரமச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வாழுகிறது? சீ! இப்படியும் மானமில்லாமல்—ரோஷமில்லாமல்—ஆண்மையில்லாமல், அடிமையாய் வாழ்வதாவது. வா! தமிழா! வெளியிலே வா! அடிமைஇருளை அகற்றிவிடு; சுதந்திரஜோதியைக் காணுவாய். அப்பொழுதுதான் நீயும், உனது வம்சத்தாரும்—உனது சந்ததியாரும் சுபிக்ஷமாய், சுகமாய் வாழலாம். தலைநிமிர்ந்து மற்றைய நாட்டாருடன் சரிநிகர் சமானமாய் உலவலாம். இல்லாவிட்டால் வெட்கம்! வெட்கம்!!

முட்டாள் கிழவன் காந்தி!

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி கூடாதென்று சொல்வதற்கு முக்கிய காரணம் யாதெனின் பிரிட்டனிலுள்ள பொதுஜனங்கள் இந்திய ஆட்சியைப்பற்றி ஒன்றும் அறியாமலிருப்பதேயாகும். பிரிட்டிஷ் பொதுஜனங்கள் தெரிந்துகொள்ளவேண்டிய தங்கள் சொந்த விஷயமே பல கிடக்கின்றன. பிரிட்டனிலுள்ள ஏழைத் தொழிலாளர்கள் இவ்வளவு குறைந்த கூலியைகொண்டும், வேலையில்லாதார்க்குரிய உதவியைகொண்டும் எப்படிக் காலங்கழிப்பதென்று சிந்திக்கின்றனர். நடுத்தர நிலைமையிலுள்ளவர்கள் எப்படி வருமான வரியைக்கட்டுவதென்று தவிக்கின்றனர். ஆகவே அவர்களெல்லாம் ஏழாயிரம் மைலுக்கப்பாலுள்ள ஜனங்களின் பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்துவார்களென்று எப்படி எதிர்ப்பார்க்கமுடியும்? இந்திய விஷயத்தில் அவர்கள் பொறுப்பற்றவர்களாகவே இருக்கிறார்கள். சாதாரணமாகப் பிரிட்டிஷார் இவ்விஷயத்தில் என்னசெய்வதென்றால் இந்தியாவில் அதிகாரப்பதவியிலிருக்கும் பிரிட்டிஷாரிடம் அப்பொறுப்பை விட்டுவிடுவது வழக்கம். எப்போதாவது ஒரு முறைதான் பத்திரிகைகளில் ஆச்சர்யமான செய்தி வெளியாகும். அச்சமயத்தில் ரயிலில் பிரயாணம் செய்யும் ஒருவர் மற்றவரிடம், 'அந்த முட்டாள் கிழவன் காந்தி மறுபடியும் ஏதோ இம்சை செய்கிறான்போலிருக்கிறது' என்று கூறுவார். பிறகு அவ்விருவருமாகச் சேர்ந்து காந்திஜியின் இடுப்புத் துண்டைப்பற்றிப் பேசுவார்கள். இந்தியா விஷயத்தில் சரியான கவனமுடையவர்கள் இருபிரிவினர்களே. அவர்கள் யாரெனின், ஏகாதிபத்திய ஆசை பிடித்தவர்களும், சமூக சமத்வ வாதிகளுமே யாவர். ஆனால் அவ்விருகட்சியினருமே மிகச் சிறுபான்மையோராக இருக்கின்றனர். மூன்றாவது கட்சியாரான லங்காஷையர் ஜனங்களும் இந்திய விஷயத்தில் அக்கரையுடையவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் அவ்வாறு இருப்பதற்குக் காரணம் அவர்களுடைய வியாபாரம் வீழ்ச்சியடைவதுதான்.

பிரிட்டிஷ் சர்க்காரோ இந்தியாவில் நிலங்களுக்குச் சொந்தக்காரராக இருப்பதால் அரசியலும் அதில் கலக்கவேண்டியதாயிற்று. இந்தியாவில் சில இடங்களில் விவசாயிகள் நேராக சர்க்காருக்குப் பணம் கட்டுகின்றனர். வேறு சில இடங்களில் அவர்கள் ஜமீன்தார்களுக்குப் பணம் செலுத்துகின்றனர். சென்ற வருஷம் விலைவாசிகள் குறைந்துவிட்டதால் விவசாயிகள் பணம் செலுத்த முடியாமல் வரிசெலுத்தமறுத்துவிட்டனர். இந்த வரிமறுப்பு இயக்கம் ஐக்கியமாகாணம் பூராவிலும் பரவிவிட்டது. கவர்ன்மெண்டார் 1901-ம் வருஷத்தில் இருந்த அளவுக்கு வரியைக் குறைப்பதாகச் சொன்னார்கள். ஆயினும் வரிமறுப்பு இயக்கம் நிற்கவில்லை.

—நேஷன்

போதிய பிரசாரமில்லாமலும்—வேண்டிய தலைவர்களில்லாமலும்—உணர்ச்சி ஊட்டக்கூடிய பிரசங்கங்கள் கேட்கப்படாமலும் போன சத்தியாக்கிரஹப் போரில் சுமார் 3000 இளந் தமிழர்கள் சிறைச்சென்றார்கள்; தடியடி பட்டார்கள், எத்தனையோ என்னற்றோர் சித்திரவதைக்குள்ளானார்கள். ஆனால் இப்பொழுது நடக்கும் இந்த யுத்தத்தில் நாம் எதிர்பார்த்த அளவுக்கு இன்னும் தமிழர்கள் தியாகம்செய்யவில்லை—சட்டமறுப்புச் செய்யவில்லை என்பதை வெட்கத்துடன் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். நாளை தியாகிகளின் கணக்கெடுக்கப்படும்பொழுது நமது தொகை குறைந்துவிட்டால் ஐயோ! அன்றைக்கு நாம் தலைகுனியவேண்டும். அப்படிப்பட்ட தமிழ் ஜாதி இல்லாமல் அழிந்தேபோய்விடட்டும். வீரவாழ்வு வாழ்வோம்; மானங்கெட்ட வாழ்க்கை—இன்னொருவனுக்கு இளைத்த வாழ்க்கை வேண்டவே வேண்டாம்.

காங்கிரஸே யுத்தசபை

பிரிட்டிஷ் ஆட்சி இந்திய சமூகங்களுக்கிடையில் ஒரு ஆப்புமாதிரி இருந்துவருகிறது. அதைப் பிடுங்கி எறிந்துவிட்டால் பிரிந்த பாகங்கள் மறுபடியும் ஒன்றுசேர்ந்துகொள்ளும். அன்னியர் தங்கள் மிருக பலத்தால் அடக்கி, ஒடுக்கி சமாதானமாய் வாழும்படிசெய்வதைவிட, சுதந்திர நாட்டில் ஆரம்பத்தில் ஏற்படும் குழப்பம் சிலாக்கியமே. அந்த குழப்பம் அடங்கியதும் மறுபடியும் ஒற்றுமை ஏற்பட்டுவிடும். பிரிட்டிஷ் ஆட்சியில் நன்மை ஏற்பட்டிருக்கிறதா இல்லையா என்பதை யார் தீர்மானிப்பது? பிரிட்டிஷாராகிய நீங்களா அல்லது நாங்களா? சக்கரத்திற்கு அடியில் அகப்பட்டிருப்பவர்களுக்குத்தான் அவர்கள் அனுபவிக்கும் துன்பம் தெரியும். தாதாபாய் நௌரோஜி, பிரோசிஷா மேத்தா, ரானடே, கோகலே முதலியவர்கள் பிரிட்டிஷ் சம்பந்தத்தைக்கண்டு பெருமை கொண்டிருந்தபெரியார்கள். அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா? பிரிட்டிஷ் ஆட்சியால் இந்தியா தரித்திரமாய்விட்டது என்று. நாம் என்ன பலவீனமான ஜாதியாரா? நமக்கோ கலங்காத நெஞ்சமிருக்கிறது. எவ்வளவு மெலிந்தபோதிலும் நமது ஆண்களோ, பெண்களோ போலீஸ்வீரர்களின் தடியடிகளை கண்டு பயந்துவிடவில்லை. அன்னிய சர்க்கார் அள்ளி, அள்ளிக்கொடுத்தாலும் சுயராஜ்ய சர்க்காருக்கு ஈடாகாது. பிரிட்டனே நீ எவ்வளவோ தவறுகள் செய்திருந்தும் எங்களுக்குத் தவறுசெய்ய உரிமையில்லை என்கிறாய். பிரிட்டன் ஆட்சியைக்கண்டு வெறுப்புற்ற பல்லாயிரக்கணக்கான ஆண், பெண்களின் நெஞ்சம் இரும்புபோல் கடினமாய்விட்டது. இந்தியாவிலுள்ள பல சபைகளில் காங்கிரஸ் ஒருசபை என்று சொல்வது வெறும் பேச்சு. காங்கிரஸே மற்றெல்லாச் சபைகளையும்விடப் பெரிதும், பிரதானமானதுமாகும். விடுதலை யுத்தத்திற்கான சபையும் காங்கிரஸே. காங்கிரஸிற்காக சகிக்கொணாத் துன்பங்களை இந்து, முஸ்லீம், சீக்கியர், பாரசீகர், கிறிஸ்தவர் முதலிய பல வகுப்பினரும் சகித்தனர். காங்கிரஸே எல்லா சமூகங்களுக்கும் பூர்ண உரிமை கொடுக்க வல்லது.

—மகாத்மா காந்திஜீ

பசுத்தோல் போர்த்திய ஓநாய்

இந்தியாவில் சட்டத்தையும் அமைதியையும் ஏற்படுத்த நியாயமான முறையிலேயே அரசாட்சி நடத்திவருகிறதாக இந்திய சர்க்காரும் பிரிட்டிஷாரும் பன்முறை பகன்றுள்ளார்கள். போலிஸார் செய்யும் அதிக்கிரம அட்டகாசங்களை எடுத்துரைத்தால் அவர்கள் அவ்வாறு ஒன்றும் செய்துவிடவில்லை என சர்க்கார் பதிலளித்துவிடுகிறார்கள். பசுத்தோல் போர்த்திய ஓநாய் பசுவைப்போல் பாசாங்கு செய்து கிட்ட நெருங்கியதும் அதன் இயற்கைக் குணத்தைக் காண்பித்துவிடுவது சகஜம். அஃதேபோல் நியாயமான முறையில் இந்தியாவை ஆளுகிறோம் என்று வாய்ப்பறை சாற்றும் சர்க்காரின் குண விசேஷம், அதன் தலைவர் வில்லிங்டன் பிரபு வாயினின்றும் இயற்கைக் குணம் வெளியாகிவிட்டது.

சமீபத்தில் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்து திரும்பிய மாஜிபார்லிமெண்டு அங்கத்தினரான பீட்டர் பிரீமன் என்பவர் இந்தியா லீகின் ஆதரவின்கீழ் "இந்தியாவில் நான் கண்ட காட்சி" என்னும் விஷயத்தைப்பற்றி ஓர் பிரசங்கம் செய்திருக்கிறார். திடுக்கிடக்கூடிய பல விஷயங்களை அவர் வெளியிட்டிருக்கிறார். அவர் இந்தியாவில் சுற்றுப்பிரயாணஞ் செய்து பல இடங்களிலும் கண்ட அக்கிரம அடக்குமுறை ஆட்சியைப்பற்றி வைசிராயிடம் தெரிவித்தபோது, "தலையில் அடித்தலே இந்தியாவுக்குத் தேவை; அவ்வாறு அடி கொடுப்பதே நமது கடமை" என வைசிராய் ஸாகிபு பதிலளித்திருக்கிறார் ஆனால் ஒருஇந்தியரிடம் தன் மனதிலுள்ளதை இவ்வாறு விட்டுச் சொல்லியிருக்கமாட்டார். பிரீமென் தன் சொந்த ஜாதியினர்— இங்கிலாந்திலுள்ளவர்— தமது கொள்கையை மெச்சிக்கொள்ளலாம் என்பதாகத் தனது ஜன்மக் குணத்தைவெளியிட்டுவிட்டார். பிரீமென் சுயமதிப்புள்ள ஆங்கிலேயர். இந்தியாவில் நடக்கும் மிருகபலஅடக்குமுறையில் ஆங்கிலேய ஜாதிக்கே அவமானமெனக் கருதுபவர். அவர் அப்படியே வில்லிங்டன் பிரபுவின் மனப்பான்மையை வெளியிட்டுவிட்டார். வருஷக் கணக்கில் இந்தியாவின் உப்பைச் சாப்பிடும் வில்லிங்டன் பிரபு இந்தியரை மண்டையில் குண்டாந் தடியால்

பெண்மைக்கும் பேரிடரா ?

"உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்தத் தாயை உமையவளென்றறியீரோ? உணர்ச்சிகெட்டீர்"
—பாரதியார்

நமது சுதந்திரப் போரிலே நமது பெண்மைகலந்து நடிக்கிறது. பெண்மையை வெறுக்கும் காலம் மலையேறி, அதைப் போற்றுங்காலம் வந்திருக்கிறது. நமது விடுதலைப்போரில் பெண்கள், ஆண்களிலும் மிகுதியாக உழைக்கிறார்கள். அடுப்பங்கரையை விட்டு வாசற்படி கடந்து வெளியேறி பாரதமாதவின் நலனுக்குப் பாடுபட புறப்படும் பெண்மையின் வீரம் அவ்விடத்தில்தான் ஸ்புரித்து விளங்குகிறது. எவ்வித ஆயுதமுமின்றி எவ்வித ராணுவ பயிற்சியுமின்றி நமது ஸ்வதந்திரத்தை—பிறப்புரிமையைக் காப்பாற்ற பெண்மணிகள் ஓயாது உழைக்கிறார்கள், சிறை செல்கிறார்கள்; பட்டினிக் கிடக்கிறார்கள்; மடிகிறார்கள். இந்தியப் பெண்மைக்கு எவ்வித சூழ்ச்சியோ—இராஜதந்திரமோ—பொய், புரட்டோ தெரியாது. அதை நமது முன்னோர்கள் நமக்குக் கற்பிக்கவில்லை. நமது எதிரிக்கு சகல சந்தர்ப்பங்களும்—சர்வ வல்லமையும் உண்டாக்கியே, நாம் விடுதலை வேண்டுகிறோம். இவ்வித பெண்மை கலந்த சாத்விகப்போர், இப் பிரபஞ்ச உற்பத்திமுதல் இந்த உலகத்தின் எந்த மூலை, முடுக்கிலும் நடந்ததில்லை. சுதந்திரப்போரில் பெண் தெய்வம் கலந்துள்ளதனால், அது கௌரவமானதாக கறைபடியாதபடி இருக்கவேண்டும். பெண்மைக்கும் பேரிடர் விளைவின் அதனிலும் நீசச்செயல் வேறு இல்லவே இல்லை.

ஆனால், ஆங்கிலேயர் ஆட்சியில் எல்லாம் சுத்த தலைகீழ்ப் பாடம். உதாரணமாக, தென்னாட்டில் வேலூர் மத்திய சிறையைக் கவனியுங்கள். சத்தியாக்கிரகப்போரிலே—சாத்விகமயமாய் ஈடுபடும் நமது இந்திய வீரமணிகள்-பெண் நாயகங்கள், ஸ்வதந்திரப் பதுமைகள் வேலூர் மத்திய சிறையிலே அடைக்கப்படுகிறார்கள். தன்னை மாலையிட்ட மணாளன்-தான் பெற்றெடுத்த மழலைக் குழவிகள்—அன்புத்தாய் தந்தையர் - உலக இன்பங்கள் முதலிய சௌகரியாதிகளை ஸ்வதந்திரத்தின் பொருட்டுத் திரணமென நீத்து சிறைச் சுவர்களின் உள்ளே ஜெயிலின் இருப்புக் கம்பிகளின் மத்தியில், தங்களையே வலிய நுழைத்துக்கொள்கிறார்கள். தங்கள் சுதந்திரத்திற்கு, எதிரியின் பாவத்திற்கு மகான் கிறிஸ்துவைப்போல் தாங்களே வருந்துகிறார்கள். அழகின் உறைவிடம்—சாந்த வடிவம்—அமைதியின் அருள்மயம் மிருகபலத்தினால் அழிக்கப்படுகிறது. அந்த வேலூர் மத்திய சிறையின் செயலை பிற்கால இந்திய சரித்திரத்தில் ஒரு தனி அத்தியாயமாய் அமைக்க வேண்டும்.

வேலூர் சிறையில் அரசியல் பெண்கைதிகள் நுழையுமுன் பலவந்தமாக அவர்கள் நெற்றியில் ஜ்வலிக்கும் சிவந்த குங்குமப் பொட்டு அழிக்கப்படுகிறது. கைவளையல்கள் உடைத்தெறியப்படுகிறது. அந்தோ! எத்தகையக் கொடுமை! சுமங்கலியை அமங்கலியாக்கும் செ

அடித்து ஆட்சிபுரிகிறார். இத்தக் கொடுங்கோன்மையைப் பற்றி பிரீமென் "கல்கத்தா இருட்டறைச் சம்பவத்தைக் காட்டினும், பிரான்ஸ் தேசத்தில் ஜோன் ஆவ் ஆர்க் மாதை நெருப்பிட்டுக் கொன்றதைக்காட்டினும் கன்ன கடூரமாக இருக்கிறது'' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

தேசிய உணர்ச்சியை—சுதந்திரதாகத்தை—தன் வீட்டுக்குத் தானே எஜமானாகஇருக்க வேண்டுமென்னும் அபிலாஷையைஎப்படிப்பட்டமிருக பலத்தினாலும், அாக்க ஆட்சியினாலும் அடக்கிவிடமுடியாது. கடைசி லட்சியமாகிய சுதந்திரத்தை யடைந்தால் மட்டும் அதற்காய அவா நீக்கும். இவ்வுண்மையை ஓர்ந்தே பிரீமென் இர்லிய நிலை சீர்பெற சுயராஜ்யமளிப்பதைத் தவிர வேறுமார்க்கமில்லை,'' எனவும், "பல வருஷங்களுக்கு முன்னமேயே சுயராஜ்யம் அளிக்கப்பட்டிருக்கவேண்டும்'' எனவும் வலியுறுத்திக் கூறுகிறார். அவர் கூறுவது யார் காதில் ஏறப்போகிறது ? யாருடைய காதிலும் ஏறவேண்டிய தேவையில்லை. சுதந்திரமடைவது நம் கையிலேயே இருக்கிறது. நாம்ஒன்றுபட்டால் முடியாமல்இருப்பது ஒன்றுமன்று. நமக்குள் ஒற்றுமையின்மையே அந்நியர் அரக்கர் ஆட்சி நடத்த இடந்தந்து இருக்கிறது. வேற்றுமை நீங்கி நம்மனோர்க்குள் ஒற்றுமை ஏற்படின் சுதந்திரம்—சுயராஜ்யம்—சுயமரியாதைவாழ்க்கை—நம் வீட்டுக்கு நாமே எஜமானுய் ஒரு விநாடியில் ஆகிவிடும்

பெண்மைக்கும் பேரிடரா?

யல் அண்டசராசரங்களை ஆட்டி அழிக்கும் எம்பிரான், சிவபிரானின் நெற்றிக்கண்ணை ஞாபகமூட்டும் அந்தப் பொட்டு—கண்புருவங்களின் இடையில் சுடர்விட்டெறிந்து மறைவோரை மாய்த்த கண்ணை நினைப்பூட்டும் அந்தப் பொட்டு—அருளாளருக்கு அருள்கொடுத்த அந்த அருட்கண் அழிக்கப்படுகிறது. என்ன அநியாயம்! இது அரசியல் போரா? அன்றி மதவெறியா? பெண்மையில் கைவைத்தவுடனே நமது மண்டையில் பேரிடி விழுந்தது. சத்தியாக்கிரகப் போருக்கும் குங்குமப் பொட்டிற்கும்—கை வளையலுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது? அல்லது சிறையின் சட்டம் அப்படி செய்யச் சொல்லுகிறதா? அதுவுமில்லையே. பின்னர் அதை ஏன் அழிக்கவேண்டும்? உடைக்கவேண்டும்? சமீபத்திலே தில்லிச் சேரியில் பிரபுவின் மாங்கல்யத்திற்கு—இந்தியப் பெண்மைக்குப் பங்கம் விளைத்த சர்க்கார் என்னோக்கங்கொண்டு இந்தியப் பெண்மைக்குக் கேடு உண்டாக்குகிறது? அனுமதிக்கிறது?

அந்தப் பாவிகள் செய்யும் பாவத்தினால் அவர்கட்கு குங்குமப்பொட்டில் ஒருவித சிவத்த பயங்கர எச்சரிக்கை—கடவுள் சினம்—சிவன் நெற்றிக்கண்ணின் தனல் எரிந்திருக்கவேண்டும். கைகளில் பிரகாசிக்கும் வளையல்கள் சிவனின் கழுத்தைச் சுற்றிக்கொண்டிருக்கும் நாகப்பாம்பாய் அல்லது விஷ்ணுவின் சக்கராயுதமாய்த் தென்பட்டிருக்கவேண்டும். இந்த இரண்டு சின்னங்களுள் இந்தியப்பெண்மையின் குறிகள்-இந்துமதத்தின் மங்களத்தோற்றம் அகற்றப்படுவதின் காரணம் சிந்தித்துப்பார்க்கின் மிக, மிக ஆழமானது.

இதைப்பற்றிச் சென்னை சட்டசபையில் கேள்விகள் கேட்கப்பட்டபொழுது மகாக்கனம் ஹோம்மெம்பர் குங்குமமும், வளையலும் இந்துமத சம்பந்தமற்றதென்றும், அப்படி நடந்ததாகத் தமக்குத் தகவல் தெரியாதென்றும், கூடியசீக்கிரம் விசாரிப்பதாகவும் கூறினர். சட்டசபை தலையாட்டி அண்ணாக்தைகளும் 'கப், சுப்' ஆகிவிட்டனர். பாரத மாதாவின் மங்களம் தொலைந்தபிறகு—இந்தியப் பெண்மையை விதவைமயமாக்கிய பிறகு, விசாரித்தென்ன? விசாரியாமலிருந்தென்ன? சர்க்காரின் சில்லரைத் தேவதைகள் இம்மாதிரிக் கொடுமைகள் செய்துகொண்டுதானிருக்கும். ஆர், நடந்துகொண்டுதான் வரும். காரணமென்ன? அன்னிய ஆட்சியே—நமது அடிமைத்தனமே. நாம் அடிமை அந்தகார இருளில் அலையும்வரை நாம் சொல்லொணாக்கொடுமைகளெல்லாம் இயற்றப்படுவோம். நமது அருமைப் பெண்மையும் அழிக்கப்படும். நாமும் பல்லைக்கடித்துக்கொண்டு அனுபவிக்கவேண்டியேவரும். இந்தியப்பெண்மையை மாசுபடுத்திய பெரும் பாவத்திற்கு—அந்தமறச்செயலுக்கு ஆங்கிலேயரும் இந்தியரும் பிராயச்சித்தம் தேடவேண்டும். இரு சாராரும் பாவத்தை வளரவிட்டுக்கொண்டிருக்கிறோம். இனிமேலும் இப்படிக்கொத்த கயமை உண்டாகாதபடி நாம் வழிதேடவேண்டும் அதற்குரிய நேர்மையான வழி இந்தியச் சுதந்திரமே.

ஹே! இந்தியப் பெண்மையே! உன் மகத்துவம் அழிக்கப்படுகிறது. ஹே! புராதன ஹிந்துமதமே! நீ எரிக்கப்படுகிறாய். ஆனால், நீங்கள் அன்னியால் எவ்வளவுக்கெவ்வளவு அழிக்கப்படுகிறீர்களோ, அவ்வளவுதூரம் எங்கள் ஹிருதய கமலத்தில்—இந்தியரின் நெஞ்சின் ஆழத்தில் செழித்திருப்பீர்கள். உங்களை ஆலிங்கனஞ்செய்து கனவிலும், நனவிலும் விட்டுப்பிரியோம்.

கண்காணா இடமெது?

பிரிட்டிஷார் விற்றுப் பிழைக்கும் வியாபாரிகளாக இந்தியாவிற்கு வந்த காலத்தில்—நாடுபிடிக்கும் வெறிபிடித்துத் திரிந்தகாலத்தில் இன்றைக்கு நூற்றுப்பதினைந்து வருடங்களுக்கு முன்னால் ஏற்படுத்தப்பட்ட ஓர் துருப்பிடித்த சட்டத்தால்—இராஜாக்களுக்கென்றே சிருஷ்டிக்கப்பட்டதோர் சட்டத்தால் எல்லைக்காந்தி அப்துல்கபூர்கான் சிறைசெய்யப்பட்டார்.. முடிசூடா மன்னன் லாலா லஜபதியை நாடுகடத்திய சட்டமுமதுவே! கைதிசெய்ததுதான் தாமதம். அவரது மாமன், மாமி மருவுண்ணுவதற்கு எங்குதான் கொண்டுபோயினரோ தெரியவில்லை. அவரிருக்கும் கண்காணா இடந்தான் எது? "சட்டமறுப் பியக்கத்தை அப்படியே உள்ளங்கையில் வைத்து ஊதிவிடுவோம்" என்று மார்தட்டும் வில்லிங்டனே இந்திய சைன்யத்தின் சேனாதிபதியாகிய எல்லைக்காந்தி இருப்பிடமெதுவாக்கினாய்?

நாற்றிசை நடப்பு.

கோர்ட்டு விடுமுறை

இரங்கோன் ஹைகோர்ட்டும் சுமால்காஸ் கோர்ட்டும் பர்மிய புதுவருடப் பண்டிகைக்காக 12—4—32ல் அடைக்கப்பட்டு 25-4-32ல் திறக்கப்படும்.

குடியேற்ற நாடல்ல.

அயர்லாண்டு குடி ஆட்சித் தலைவர் டிவாலரா எனிஸ்ஸில் 6000 பேர் முன்னிலையில் "அயர்லாண்டு பிரிட்டிஷ் குடியேற்ற நாடல்ல தேசத்தின் எல்லா உரிமையுடன் கூடிய ஒரு புராதன தேசம். அயர்லாண்டை அடக்கியாள வேண்டுமென்னும் பயித்தியக்கார ஆசையை பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் விட்டுவிடவேண்டும் சம உரிமையிருந்தால் மட்டும் நேசப்பான்மையோடு இருப்போம்." எனக் கூறுகிறார்.

சீன—பர்மிய சண்டை

திங்கட்கிழமை மாலை கமாயுட்டுக்குச் சமீபம் சீன, பர்மிய கலகம் ஏற்பட்டு 6 சீனர்களுக்கும், 6 பர்மியர்களுக்கும் பலமான காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கலகம் ஒரு தையல் கடையில் ஏற்பட்டதாகத் தெரிகிறது சீனர்கள் கூட்டமாக இன்ஸீனுக்கும் அதன்சுற்றுப் பக்கங்களிலும் போயிருக்கிறார்கள்.

ஜெர்மன் தலைவர் தேர்தல்

ஜெர்மன் குடி அரசுத் தலைவராகப்பெரும்பான்மையான வோட்டின்பேரில் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

புலிக்கும்—ஆட்டுக்கும் சண்டை

கட்டக்கில் சிலர் புலிக்கும் ஆட்டுக்கும் ஆற்றங்கரையில் சண்டை நடக்கப்போவதாக நகரெங்கும் பறையடித்தார்கள். ஆயிரம் ஜனங்களுக்குமேல் கூடியதும் ஒருவர் எழுந்து காங்கிரஸ் பிரசாரம் செய்தார். உடனே போலிஸார் அவரை கைதுசெய்து கூட்டத்தைக் கலைத்துவிட்டனர்.

பர்மாப் பிரிவினை

லெகியில்நடைபெறும்19-வது ஜி.ஸி.பி.எ மகாநாட்டுத் தலைவர் யூசு தன் அக்கிராசன முன்னுரையில் பர்மாப் பிரிவினையால் ஏற்படும் கெடுதிகளை வெகு தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார். நிறைவேறிய முக்கியதீர்மானங்களில் பர்மாப் பிரிவினைக் கூடாது என்பது ஒன்று.

பியாப்வேயில் தீவிபத்து

8உ ஏற்பட்ட நெருப்பால் பெரிய பஜார் உள்பட 400 வீடுகள் தீக்கிரையாயின. அநேக ஜனங்கள் வீடின்றி தவிக்கிறார்கள். நஷ்டம் 4 லட்சம் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ரவீந்திரர் பறக்கிறார்

பெர்ஸியா ஷா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி கவிரவீந்திரர் டச் ஆகாயவிமானத்தில் கல்கத்தாவிலிருந்து புஷயருக்குப் போயிருக்கிறார்.

லண்டனில் தேசீயக் கொடி

லண்டன் டிராமல்கார்ஸ்தூபியில் இந்திய தேசீயக்கொடியை பரக்கவிட்டு இந்தியா லேயர் சங்கத்தினர் வில்லிங்டன் ஆட்சியைக் கண்டித்துப் பேசினர். பிரேகேட்டர் ஜெனரல் கொரோசிர் தலைமை வகித்தார்.

போலீஸ் ஆட்சி

அலஹாபாத்தில் ராணுவச்சட்டம் கர்பியூ ஆர்டர்) பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நகர் போலிசார் கைலாசத்தில் இருக்கிறது. மணிக்கூண்டில் தேசீயக் கொடி ஏற்ற மறுபடியும் முயற்சித்து தடுக்கப்பட்டு அமைதி நிலவுகிறது.

சோலிய முஸ்லிம் அஸோஸியேஷன்

இன்றிரவு 8—30 மணிக்கு ஷெ சங்கஹாலில் சோலியாப்பள்ளி பேஷ் இமாம் ஜனாப் மவுலவி கே. எல். எம். அஹமது முகையதீன் ஸாகிபு அவர்கள் "ஹஜ்ஜின் மகிமையும், நமது கடமையும்" என்னும் விஷயம்பற்றி அரிய உபந்நியாசம் செய்வார்கள். அனைவரும் விஜயஞ்செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

காந்தி கடவுள் தூதர் ::

(ஸ்ரீ. ஜமால் முகமது சாஹிப்)

ஒரே ஒருமனிதர், அவரது மதநம்பிக்கை எதுவே யாயினும் சரி, உலகத்திலேயே மிகப் பெரியாரென மதிக்கப்படுவது உண்மையிலேயே மிக விசேஷமாகும். இந்தியாவில் உள்ள 35-கோடி மனிதர்களால் மாத்திரமல்ல, பிற நாட்டவராலும் மகாத்மா காந்தி அவ்வாறே மதிக்கப்பட்டுள்ளார். இந்தியாவிலுள்ள 35-கோடி மனிதர்களுக்கும் அவரிடம் பூரண நம்பிக்கை யிருக்கிறது. மகாத்மா காந்தியிடம் இன்னொர் விசேஷமு மிருக்கிறது. தங்களுடைய பரம சத்ருவென்றும் தங்கள் ஜீவனத்தைக் கெடுத்தவரென்றும் அவரை எண்ணுவோருங்கூட இதுவரை அவரை உபசரித்து வரவேற்றுப் புகழ்ந்து மரியாதை செலுத்துகின்றார்கள். ஆனால், இப்பொழுது அவரைப் பற்றி உயர்ந்த புகழுரைகள் கூறுவோர், மகாத்மாவின் நியாயமான கோரிக்கைகளை விட்டுக் கொடுப்பார்களா என்பது எனக்கு மிகவும் சந்தேகமாகவே யிருக்கிறது. ஆனால், கடவுளிடம் நம்பிக்கை வைத்துத் தங்களால் முடிந்த முயற்சியை யெல்லாம் செய்வோர், சோர்வுற வேண்டியதில்லை. இப்பொழுது உலக முழுவதும் ஏற்பட்டுள்ள கடினமையான நிலைமை நமக்கு எதிர்ப்பட்டிருக்கிறது. ராஜீய நிபுணர்கள் நிலைமையைச் சீர்செய்ய முயற்சி செய்து, ஓர் வழி காணமுடியாது தோல்வியுற்று விட்டார்கள். ஏதாவது வழியிருக்குமானால், அது கடவுளால் காட்டப்பட வேண்டுமென்றே நான் கருதுகிறேன். எங்கேயாவது எத் தேசமாவது சாம்ராஜ்யமாவது மிகப் பாதாளத்திலே வீழ்ந்துவிட இதனால் மனித சமூகம் துன்புறுமாயின், இறைவன் அருள்புரிந்து ஏதாவதோர் கருவிமூலம் உலகத்திலே அமைதியை உண்டாக்குவார் என்ற நம்பிக்கை உலகத்துள்ள எல்லா நாட்டு ஜனங்களுக்குமிருந்து வருகிறது. இத்தகைய நம்பிக்கை யுடையவருள் நானுமொருவன். இவ்வுகத்தில் இறைவன் தம் சித்தத்தை நிறைவேற்றும் அத்தகைய கருவிகளா யிருப்பவரை, இறைவனின் தூதர் என்றோ காரியஸ்தர் என்றோ கூறலாம். மகாத்மா அத்தகையோருள் ஒருவனே என நான் நம்புகிறேன்.

நான் உலகத்தின் வருங்காலம் நன்மையாகவே முடியுமென்ற நம்பிக்கை யுடையவன். தற்பொழுதைய துன்பம் எத்தகைத்தா யிருப்பினும், விடிவுகாலம் நிச்சயம் வரும். அந்த விடிவுக்காலத்தில் இந்தியா ஓர் முக்கிய ஸ்தானத்தை வகிக்கும். உலகாயதக் காரர்களாலும், பிறரை இம்சிக்கும் தேசபக்தியுடைய நாட்டவராலும் உலகம் போதிய துன்பம் அனுபவித்து விட்டது. இதற்கோர் முடிவுவந் தாகவேண்டும். இவ்வகில வுலகமும் ஓர் ஜகந்நாதரால் தான் சிருஷ்டிக்கப்பெற்றுள்ளது. அவர் சக்கரவர்த்திகளுக்கெல்லாம் சக்கிரவர்த்தியாவார். தர்மம் நிலைபெறுமாறு அவர் பார்த்துக்கொள்ளுவார். உலகின் துன்பங்கள் சிலவற்றினின்றும் அதனை விடுவிக்கத்தக்க உன்னத பாக்கியம் இந்தியாவுக்குக் கிடைக்கப் போகிறதென்று நான் நம்புகிறேன். இந்தியா ஆன்மார்த்தத் துறையில் மாண்புமிக்கது. உலகின் நான்கு பெரும் சமயங்கள் அதில் சந்தித்துளது. சீர்திருத்தமேலே இத்தேசத்தினின்றே புறப்படவேண்டும். இதனை இந்தியா பூரணமாக உணர்ந்து கொள்ளவில்லையே என்பது தான் என் வருத்தம். இந்தியாவிலுள்ள முஸ்லிம்களுள் சில பிரிவினர், இஸ்லாம் மார்க்கத்தின் உட்கருத்தை நன்றாக விளங்கிக்கொண்டு அதன்படி நடக்கவில்லை. இது எனக்கு வருத்தத்தைத் தருகிறது. இஸ்லாத்தின் மிக முக்கியமான கொள்கை உலகத்திலுள்ள சகலஜனங்களிடத்தும் சகோதரத்துவம் பாராட்டுதலே. இஸ்லாம் மார்க்கம், அநேக தத்துவங்களின் தொகுப்பே யாகும். வேறு குறுட்டு அபிப்பிராயங்களைக் கொண்டதல்ல. இதுவே என் அபிப்பிராயம். இவற்றை எவர் பின்பற்றி நடந்தாலும், அவர் ஓர் முஸ்லிமே யாவர். மகாத்மா காந்தி ஓர் பக்கா முஸ்லிம் என்பதே எனது அபிப்பிராயம். பிற சமயத்தவர்களும் இதைப்போலவே மகாத்மா தங்கள் மதஸ்தரெனப் பாத்தியம் கொண்டாடுகிறார்கள். சகல மதங்களினின்றும் மூலாதார தத்துவங்களையெல்லாம் அவர் அனுஷ்டித்து நடக்கிறார் என்பதையே இது ருசுப்பிக்கின்றது.

—காந்தி

வியாபாரிகளே! விவசாயிகளே!!

இந்திய வியாபாரிகளே! விவசாயிகளே!! நீங்கள்தான் இந்தியாவின் உயிர்நாடி. இந்தியா வாழ்வதும், விழ்வதும் உங்களுடைய கையிலே தானிருக்கிறது. இப்பொழுது நடக்கும் இந்த சுதந்திர யுத்தத்தின் வெற்றிக்கும், தோல்விக்கும் நீங்கள்தான் பொருப்பாளிகள். நீங்கள் மனம்வைத்தால் - நீங்கள் வீறுகொண்டு எழுந்துவிட்டால் நீங்கள் உங்களுக்கிருக்கும் பலத்தை உணர்ந்து உங்களது சக்தியைப் புகுத்தினால் நிச்சயமாய் இந்தியாவின் பக்கத்திலேயே ஜெயமிருக்கிறது. ஏனெனில் ஒரு நாட்டின் ஜீவாதாரமான செல்வத்தை —மனிதவர்க்கம் உயிர்வாழுவதற்கான உற்பத்திப் பொருளை —விளைச்சலைச்செய்யும் ஸ்ருஷ்டிகர்த்தர்களாகிய நீங்கள் மூச்சுவாங்கிக்கொண்டு உட்கார்ந்துவிட்டால் உலகமே ஸ்தம்பித்து நின்றுவிடும். அதுகாலை எந்தவொரு வல்லரசும்—எந்தவொரு மிருகபலமும்—எந்தவொரு ஆட்சிமுறையும் அப்படி அடங்கி ஒடுங்கி உங்களுக்கு அடிபணிந்துவிடுவதைத் தவிர வேறு விதியில்லை. பிரிட்டிஷ் வியாபார வர்க்கத்தாரின் ஆட்சியை நமது நாட்டிலிருந்து அடியோடு ஒழிக்கவேண்டுமானால்—நமது நாட்டை நாமே சொந்தமாக்கிக்கொள்ளவேண்டுமானால் நமது நாட்டின் சர்வ ஆதிக்கமும் நமதுகையிலேயே யிருக்கவேண்டுமானால்—நமது நாடும் நாட்டுமக்களும் பிறநாட்டாருக்கு அடிமையாயிராமல் விடுதலையடைந்து சர்வ ஸ்வதந்திரத்துடன் சகல உரிமைகளையும் அனுபவித்து தேவையென்பதிராமல்—தனி யொருமனிதன்கூட பட்டினிகிடவாமல் சுபிக்ஷமாய் வாழவேண்டுமானால் வியாபாரிகளாகிய உங்களாலேயேதான் முடியும். பெரிய வியாபாரிகளான பிரிட்டிஷ்காரர்களின் சரக்குகளை இந்தியாவாகிய சந்தையில் இந்தியவாடிக்கைக்காரர்களாகிய நீங்கள் வாங்கி சிறு வியாபாரம் செய்யாவிட்டால் பிரிட்டிஷ் துறைமுகங்கள் ஏற்றுமதிசெய்வதில் அயர்ந்துவிடும்; பிரிட்டிஷ் முதலாளிகளின் கொட்டம் அடங்கி நமது நாட்டான்கை மேல், அன்னியநாட்டான் கை கீழ் என்றாகிவிடும். அப்பொழுது நிச்சயமாய் நமது லட்சியம் பூர்த்தியடைந்து சுயராஜ்யம் கிட்டும். நமது நாட்டின் கைத்தொழில் வியாபாரமெல்லாம் ஓங்கும். இதற்காகத்தான் இப்பொழுதைய கோர யுத்தத்தில்—அக்னிக் குழம்பில் இந்தியாவில் வீரபுருஷர்களும், வீரத் தாய்மாரும், வீரக்குழந்தைகளும் குதித்திருக்கின்றனர். ஒரு பாபுக்கண்ணின் இரத்தத்தால் தோய்க்கப்பட்டிருக்கும் அன்னியத் துணியைவைத்து வர்த்தகம் செய்கிற நீங்கள் கொலைகார அரசாங்கத்தின் கொலைக் குற்றத்திற்கு உடந்தையாயிருந்த படுபாவத்தைச் செய்தவர்களாகிறீர்கள். ஐயோ! அந்த சிசுஹத்தி தோஷத்திற்குப் பிராயச்சித்தம் வேண்டுமானால் இப்பொழுதே முன் பின்னெண்ணாமல் கடைகளை மூடிவிடுங்கள். உங்களது கடைகளின் முன்னால் மறியல்செய்யும் தொண்டர்கள் அடிபடுவதற்கும் நீங்களே காரணகர்த்தர்களாகிறீர்கள். அந்தப் பாவமும் உங்களையே சாரும். ஆத்மார்த்தமாகவும், தேசியமாகவும் நீங்கள் அஹிம்ஸையோடுகூடிய சட்டமறுப்புக்கு துணைசெய்யாமல் முடியாது.

வியாபாரிகளே! வருடம் முந்நூற்றறுபது நாளும் வெயிலிலும், வேனலிலும், மழையிலும், தண்ணீரிலும் உடல்கருத்தி உழைத்து கஷ்டப்பட்டும், பட்டினிகிடக்கின்றீர்களே உங்களுக்கு விமோசனம் வேண்டாமா? உலகமுழுதுக்குமே வயிறுநிறப்பும் வாழ்க்கையாளர்களாகவிருந்தும் நீங்கள் உங்களது சாண் வயிற்றைநிறப்ப வழியில்லாமல் இப்படியும் இப்பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் வருந்துகிறீர்களே! அதற்கு வழிபிறக்கவேண்டாமா? சுயராஜ்யம் உங்களுக்குத்தான் அத்தியாவசியம். சிறிதளவு யாகத்தைச்செய்து மஹத்தான லாபத்தை அடைய இஷ்டமுண்டானால், உங்களுடைய இரத்தத்தைதுளிவிடாமல் உறிஞ்சிக்கொண்டிருக்கும் அன்னிய அரசாங்கத்திற்கு சல்லிகூட வரிக்கொடுக்காமல் மறுத்துவிடுங்கள். உங்களுக்குரித்தான சொத்துச் சுகங்களையெல்லாம் இழந்தும், சுதந்திரமடைந்துவிடுகிறது என்று வெளிவந்துவிட்டீர்களானால் சுயராஜ்யம் கண்டிப்பாய் கைமேல்கிடைத்துவிடும். அதோ சிறைக் கம்பிகளுக்குள்ளே தர்மவடிவான காந்திக்கடவுள் உங்களுக்காகத் தவங்கிடப்பதைக் காணுங்கள். நீங்களும் சிறையை நிறப்புங்கள். சுதந்திரம் நிச்சயம்.

—தொண்டன்

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுஎண் 245] (1922-ஆம் ஸ்தாபிதம்.) 5 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியர் அ. வெ. செல்லம் பிள்ளை. வாரம் இரு முறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஆம் (17-4-32) சித்திரை-மீ 5உ ஞாயிற்றுக்கிழமை

செட்டிமார் விழாவில் சீமையான் தலை!

ஒரு நாடு—ஒரு சமூகம் சிறப்புறவேண்டுமானால்—உயரவேண்டுமானால் அந்நாட்டு மக்களின்—ஒரு சமூக இளைஞர்களின் கலை—கல்வி வளர்ச்சியே காரணமாகும். கல்வியே இளைஞர்களை எதிர்காலத்தில் கவிகளாவதற்கும்—பண்டிதர்களாவதற்கும்—மன்னர்களாக விளங்குவதற்கும் ஒரு கருவியாக இருக்கிறது. அது பற்றியே நம நாட்டிலுள்ளோர் ஒவ்வோர் சமூகத்துள்ளும் கல்வி நிலையங்களமைத்து இளமையிலிருந்தே கல்வியைப் புகட்டிவருகிறார்கள். சமூகக்கல்வி நாட்டு மக்களுக்கும் உற்றதருணத்தில் உபயோகப்படத்தான் செய்யும். சமூகக் கல்விபற்றி பெருமைகொள்வதற்குமில்லை நம் நாட்டுக்கல்வியோடு பிறநாட்டு கலைகளையும் புகுத்திவிடுதலாலேயே; நம் நாட்டான் கல்வியும், பிறநாட்டான் கல்வி மேலுமாகி—ஒரு படி உயர்ந்த ஸ்தானம் கொடுப்பதாக-உயர்ந்ததாகவுமாகிவிடுகிறது. இவ்வூரில் நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தின் சார்பாக கல்வி நிலயம் ஒன்று ஸ்தாபனமாகி மூன்று வருடங்களாக நடந்துவருகிறது. செட்டிமார்கள் குழந்தைகள் கல்வி பயில்வதற்கு மட்டுமே இடமளிக்கப்படுவதன்றி இதர வகுப்பினப் பிள்ளைகளுக்கு வசதிகிடையாது. உபாத்தியாய தொழிலிலோ—உபாத்தியாயர்களோ செட்டியார்களைத் தவிர இதர ஜாதி உபாத்தியாயர்களை உபயோகிக்கப்படுகிறார்கள். சமூகக்கல்வியில் உபாத்தியாயர்களுங்கூட சமூகத்திலுள்ளவர்களே உபயோகிக்கப்படவேண்டுமென்பது பல அறிஞர்களின் கருத்தாகும். கலைவிருத்திக்காக பல சமூகங்களிலிருந்தும் திறமையுடைய—அனுபவசாலிகளைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அதன்பெயரால் நடக்கும் வைபவங்களுக்குக்கூட தலைமைவகிக்கவோ, சொற்பொழிவாற்றவோ ஆங்கிலேயர்களைத் தேடியலைவதென்றால் பிறநாட்டுக் கல்வி எங்ஙனம் மதிக்கப்படுகிறது—போற்றப்படுகிறது என்பதைக் கவனியுங்கள். ஆங்கிலக்கல்விக்கு உயர்ந்த ஸ்தானமும்—உயர்சிறப்பும் நாமே கொடுத்தவர்களாகிறோம். நேற்று நடந்த "தனவைசியர் கல்வி நிலைய ஆண்டுவிழாவில்" கூட ஒரு ஆங்கிலனும், ஆங்கிலச்சியும் தலைமைவகித்திருந்தார்கள். இக்காலத்தில்—இதே செட்டியார் சமூகத்தில் கலைவல்லால்கள் இல்லாமலில்லை. அப்படியுமில்லையென்றால் நம் நாட்டு கலைகளில் சீரும், சிறப்பும்வாய்ந்தவர்கள் இருக்கவேயிருக்கிறார்கள். அவர்களாவது தலைமை வகித்திருக்கப்படலாம்; "ஆங்கிலக்கல்வி அடிமைவிலங்கு" என்பதை கவி ரவீந்திரநாத தாகூர் கூட விளக்கிக்காட்டியிருக்கிறார். சுமார் 40-வருடங்களுக்குமுன் சென்னை கவர்னராக இருந்தவரும், இந்தியா சுப்ரீம் கௌன்சில் மெம்பராயிருந்தவருமான சர் சார்லஸ் டிரிவேலியன் இந்தியர் கல்வியைப்பற்றி ஒரு புஸ்தகம் வெளியிட்டிருக்கிறார் அதில் "இந்தியர்க்கல்விக்காக வருடந்தோறும் 10 லக்ஷம் பவுன் செலவுசெய்தால் இந்தியர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடங்கி நேசபாவனையிலிருப்பார்கள்" என்று. பின்னும் அவர் கூறுவதாவது:—

நாம் பின்பற்றப்போகும் முறை புதிதல்ல உரோமர்கள் தமது இலக்கியங்களையும், கலைகளையும் ஐரோப்பியர்களுக்கு கற்பித்து உரோம நாகரீகத்தை ஐரோப்பா முழுதும் பரப்பி உரோமமயமாக்கியதனால் ஐரோப்பா முழுதும் உரோமாபுரிக்கு அடிமையாயிற்று. யுத்தமூலம் பெற்றவெற்றியை அவர்கள் தமது கல்விமுறையால் வலுப்படுத்திக்கொண்டார்கள். இத்தாலியா ஸ்பெயின், ஆப்ரிக்கா, கால் முதலிய தேசங்கள் முன்னேற்ற உணர்ச்சிக்கான கல்வி எதுவுமின்றி உரோம நாகரீகத்தை குருட்டு நம்பிக்கை

யுடன் பின்பற்றி கடைசிவரை உரோம சாம்ராஜ்யத்திற்கு அடிமைகளாகவே யிருந்தன. இறுதியில் அந்நாடுகள் உரோமர்பந்தத்திலிருந்து விடுபட்டது. உள்நாட்டுப் புரட்சியாலல்ல; வெளிநாட்டு அரசியல் நிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவே பிரியநேரிட்டது. நாம் ஒருக்காலத்தில் உரோமர்களுக்கு எவ்வாறு கிமுடங்கியிருந்தோமோ அவ்வாறே இந்தியர்களும் நமக்குக் கிழடங்கிவிடுவார்களென்பதும் நிச்சயம். பிரிட்டிஷ் தலைவர்களின்மக்களுக்கு உரோமக்கலைகளையும், இலக்கியங்களையும், சாஸ்திரங்களையும் போதித்து உரோம நாகரீகத்தில் சுவை யூட்டுவது ஜூலியஸ் ஆக்ரிகோலாவின் வழக்கமாயிருந்ததென்று டாசிட்ஸ் என்னும் ஆசிரியர் கூறுகிறார். அவரது யுக்தி சரியாகப் பலித்ததென்று நாமனைவரும் அறிவோம். பிரிட்டிஷார் உரோமர்களுக்கு சத்துருவாயிராமல் நம்பிக்கையுள்ள நேயர்கள் ஆனார்கள். உரோமர் ஆக்கிரமிப்பதைத் தடுக்க அவர்களது முன்னோர்கள் எவ்வளவு முயன்றார்களோ அவ்வளவு இவர்கள் உரோம நாகரீகத்தை பின்பற்ற முயன்றார்கள்'' என்கிறார்.

சர் டிரிவேலியன் நூல் வெளிவந்தகாலத்தில் வங்காளத்தில் ஆங்கிலக் கல்வியைப் பரப்பிய ரெவரண்டு அலக்சாண்டர் டப்பும் அவர் எழுதிய புஸ்தகத்தில் வெளியிட்டிருப்பதாவது:— உரோமர்கள் ஒரு மாகாணத்தைப் பிடித்து அடக்கிய உடனே அதை உரோமமயமாக்கமுயற்சிசெய்தனர்; அதாவது உரோம இலக்கியம், கலை, சாஸ்திரம், வீரப்பாடல்கள் இவைகளில் தாம் அடக்கிய தேசத்தாருக்கு சுவை யூட்டினர். உரோமர்கள் தம் முயற்சியில் வெற்றிபெறவில்லையா? சுதேசக்கல்விமுறை பிரிட்டிஷார் க்ஷேமத்துக்கு ஆபத்துவிளைவிக்குமென்று சர். டிரிவேலியன்நினைத்தார். ஆகவே இந்திய சிறுவர்கள் ஆங்கிலக் கல்வியிலும், ஆங்கில நாகரீகத்திலும் மூழ்கி ஆங்கிலமயமாக வேண்டுமென்று அவர் விரும்பினர். "ஆங்கில இலக்கியத்தின் போக்கு ஆங்கில பந்தத்துக்கு அனுகூலம் செய்யத்தவறாது. ஆங்கில இலக்கியத்தில் பழகிய இந்தியர்களுக்கு நாம் அன்னியர் என்ற உணர்ச்சி நீங்கிவிடும். அவர்கள் நமக்கு ஜென்ம விரோதிகளாயிராமல், பட்சமிகுந்த நேயர்களாகவும், ஒத்துழைப்பார்களாகவும் மாறிவிடுவார்கள்'' என்பதாகும்.

கடைசிவழி காலில் முட்டுவது!

பிரிட்டிஷ்ஆட்சிமுறையைஅடியோடுதகர்க்கவேண்டுமெனக் கங்கணம் கட்டிக்கொண்டுள்ள காந்திஜீ முன்னொருகாலத்தில் இதே பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு உதவிசெய்பவராகவிருந்தார் திலக மகரிஷிபோன்ற முதலிய பெரியோர்களால் தடுக்கப்பட்டதையும் மீறி காந்திஜீ பிரிட்டிஷாரின் யுத்தத்திற்கு ஆள்ச்சேர்த்துக்கொடுத்ததை உலகம் மறந்துவிடவில்லை. ஆனால் இந்தியாமந்திரி சாமுயல்ஹோர் தான் மறந்து பேசுகிறான். சென்றமாதத்தில் கூறினான் காங்கிரஸைப் பின்பற்றுபவர்கள் அதிகம் குறைவான பேர்கள்தான். இப்பொழுது இந்தியாவெங்கும் அமைதி ஏற்பட்டுவிட்டது. சர்க்காரின் அடக்குமுறைதான் அமைதிநிலவியதற்கும் காரணமென்றான். இப்பொழுது எரவாடாக் கோவிலில் குடிகொண்டிருக்கும் காந்திஜிக்கு எழுதிய கடிதப்போக்கிலிருந்து என்ன தெரிகிறதென்றால்; காங்கிரஸ் காரர்கள் தொல்லை பொறுக்கமுடியவில்லை என்றும் யாதொரு நிபந்தனையுமின்றி சட்டமறுப்புச் செய்பவர்கள் சட்டமறுப்பியக்கத்தை நிறுத்திக்கொள்ளவேண்டுமென்றும், அல்லது தானே நேரில் சட்டமறுப்பியக்கத்திற்கு உத்திரவிடக்கூடாதென்றும் அப்படியானால் போர்நிறுத்தம் செய்வதாகவும், ஏககாலத்தில் காந்திஜியையும் விடுதலையடையச்செய்து சமரசப் பேச்சுகளை நடத்திக்கொள்வோமென்றும் கூறுகிறான். என்னே! சாமுயலின்போக்கு. மாதத்தில்நாலு விதமாகப் பேசுகிறான். அடக்குமுறையால் ஜம்பம் சாயாது என்று தெரிந்தால் நேரே எரவாடா வந்து காந்திஜிகாலில் முட்டிக்கொள்ள வேண்டியதுதானே. ஒத்தையடிப்பாதையை விட்டு சுற்றிக்கொண்டு ஏன் வரவேண்டும்? வேறு வழியில்லை.

ஆகவே தனவைசியர் கல்விநிலையத்தில் கல்விகற்றுக்கொள்ளும் எதிர்காலத்துசுவிகளே —பண்டிதர்களே-உங்களது ஆண்டுவிளாவிற்கு தலைமைவகிக்கசமூகத்தவரையோ, நாட்டவரையேனும்தெரிந்தெடுத்திருக்கக்கூடாதா? மேலே கூறியவற்றுள் அடங்கிய சூட்சியை இதைவிட தெளிவாக நமக்கு விளக்கிக்காட்ட முடியாது. வரப்போகும் ஆண்டிலாவது ஞாபகமிருக்கட்டும்.

வாக்கைக் காக்கும் காந்தி : : ஸ்ரீ ஆண்ட்ரூஸ்.

ஒரு தேசத்தை மற்றொரு தேசம்போற்றுகிறது. ஒரு நாட்டான் மற்றொரு நாட்டானைப் புகழ்ந்துபேசுகிறான். ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தை வர்ணனை செய்கிறது. ஆனால் உலகமே ஒரு தேசத்தையோ—தனி மனிதனையோ போற்றுவது—புகழ்வது—வர்ணனை செய்வது கிடையாது. இந்தியமண்ணில் பிறந்த காந்திஜீயோ உலகத்தார் அனைவராலும் போற்றப்படுகிறார்—புகழப்படுகிறார். தனி ஒரு மனிதன் போற்றப்படுவதினாலோ—புகழப்படுவதாலோ பூரிப்படைந்து—பெருமைகொண்டோனாய் இறுமாப் படைந்து—கண் மூக்குத் தெரியானாய் எல்லாம் எமதே என எண்ணிக்கொள்கிறான்—பிறர் மெச்சப் பேசியும்விடுகின்றான். காந்திஜீயோ பெருமையை—போற்றலை காலடியில் மிதித்துத் தள்ளிக்கொண்டு செல்வதாலேயே மென்மேலும், யாவராலும், எக்காலத்தும் போற்றலுக்குடையராயிருக்கின்றார், அதுபற்றியே நம் நாட்டானைவிட பிறநாட்டான்— மேல்நாட்டான் புகழ்வதையே திரும்பத் திரும்ப எடுத்துக்காட்ட விரும்பி ஒரு பெரியாரின் உட்கருத்தை கீழே தருகின்றோம்.

காந்திஜீ குழந்தைகளின் அன்பர், அதனாலேயே குழந்தைகள்கூட அவரைக் காணுவதற்குப் பிரியப்படுகின்றன. குழந்தைகள் பரிகாசம்செய்தபோதிலும்கூட அவர் மிக்கச் சந்தோஷத்தை அடைகிறார். இதனை நான், அவர் தென் அப்ரிக்காவிலும், இந்தியாவிலும் இருக்கும்போது என் கண்முன் கண்டிருக்கின்றேன். அவரது நகைப்பு பிறர் மனதைக் கவரச்செய்வதாக இருக்கிறது தனக்குக் கஷ்டம்நேர்ந்த காலையிலும்கூட புன்னகைதான் புரிகின்றார். சிரமத்தைப் பிறர் அறியாவண்ணம் அவரதுபுன்சிரிப்பு -பொக்கவாய்அழகு மறைத்துவிடுகிறது, அவரைத் தரிசிக்கச்சென்று மீண்டுவந்தவர்கள் பலரைக் கண்டிருக்கிறேன். அவர்கள் யாவரும் முகமலர்ச்சி அடைந்தவர்களாகவே காணக்கிடக்கிறது. காந்திஜீ உண்மையிலேயே உருவான சத்தியவந்தர். ஒரு காரியத்தைச் செய்துகொடுப்பதாக வாக்குறுதிகொடுத்தால் வாக்குறுதியைக் காக்க எவ்விதத்திலும் சாதிப்பார் என்பதை அவரை நன்குணர்ந்தோர் யாவரும் அறிவர். எனக்கு அவரிடமுள்ள அனுபவத்திலிருந்து வாக்குத் தவறி நடந்ததைக் கண்டதில்லை. வாக்குறுதியைக் காக்கப் பல இடுக்கண்களுக்கு ஆளாகியிருந்ததையும், இருப்பதையும் அறிவேன். அவர் லார்டு இர்வினிடம் செய்துகொண்ட ஒப்பந்தப்படி நடக்கவில்லையென்றுகூட ஒரு சிலர் புகார்செய்தார்கள். நானும் லார்டுஇர்வினும் கூட நம்பவேயில்லை. உண்மையைக் கூறுமிடத்து காந்திஜீ டில்லி உடன்படிக்கையை கிரியாம்சத்தில் நிறைவேற்றிவைக்க உள்ளும், புறமும் ஒன்றாகப் பாடுபட்டார். அவர் ஒருசமயம் "நான் லார்டு இர்வினுக்கு வாக்களித்துவிட்டேன், வாக்கை காப்பாற்ற என்னால் இயன்றவரையில் பாடுபடுவேன்" என்று கூறினார். காந்திஜீ ஒரு வக்கீலாக இருந்தவராகையால் அதற்கேற்றவாறு விசேஷ திறமை, வாய்ந்தவராக இருக்கிறார். அதனால்தான் அவர் எழுதுவதில் வெகு ஜாக்கிரதையாகவே இருந்துவந்திருக்கிறார். எதிலாவது கையொப்பமிட நேரிட்டாலும் யோசனை செய்துதான் எழுதுகோலெடுத்து கையை நாட்டுகிறார். பொதுக்கூட்டங்களிலும் வெகு நிதானமாகப் பேசுகிறார். கடுமையும்—சர்வசாதாரண காரியங்களிலும் சீக்கிரத்தில் முடிவு கூறாமலும், விட்டுக்கொடுக்காமலும் இருப்பதிலிருந்து அவரைச் சிலர் தந்திரவாதியென்றும், வன்நெஞ்சரென்றும் கருதுகின்றார்கள். இது தப்பபிப்பிராயமாகும்' காந்திஜீயை தந்திரவாதி என்றோ, வன்நெஞ்சர் என்றோ முடிவுகட்டிவிடுவதிலும் "நிஷ்களங்கமற்ற—எச்சரிக்கையாகஉள்ள காரியவாதி" என முடிவுகட்டுவதே பொருத்தமுடையதாகும். சாவதானமாக ஒரு முடிவு கட்டிவிட்டால் அதன்படியே கடைசிவரையிலும் நடக்கிறார். இத்தகைய அரியகுணத்தை உண்மையான ஆங்கில ரத்தம் ஓடும்படியான எம்மனிதனும் பாராட்டவே செய்வான,

காந்திஜீயின் குணத்திற்கும், கிராமவாசிகளுக்குமே பொருத்தமிருக்கிறபடியால் அவர் கிராமவாசிகளின் தோழனானார். சென்ற இருபத்தைந்து வருடங்களாக கிராமத்திலேயே --

கலெக்டர் ஊளை !

வரி வசூல் தலைமை அதிகாரி ரத்னகிரி கலெக்டருக்குபிறந்தது காங்கிரஸ்மீதுகோபம். பொறுக்கவில்லை தாபம். என்செய்வான் பாபம். காங்கிரஸில் சேர்ந்தவர்களையெல்லாம் நரிகள்போன்று மதிக்கவேண்டுமெனக் கூறினான். உண்மையில் நரியின் தந்திரமும், மற்றும் பலவும் காங்கிரஸ்காரர்களுக்கு உண்டு. இதை இந்த மேதாவி அறிந்துகொள்ளவில்லை போலும். அறிந்திருந்தால் இவ்விதம் ஒருக்காலும் கூறியிருக்கமாட்டான். கூறவேண்டிய அவசியந்தானென்ன இருக்கிறது. இவன் வேலையோ வரி வசூல். வரி வசூலிக்கசத்காரமில்லாவிடின் கவர்ன்மெண்டாரிடம் ஊளையிடுவது இவரது வேலையே ஒழிய காங்கிரஸார் இவரிடம் ஊளையிடவேண்டிய அவசியம் சிறிதளவும் இல்லையன்றோ! பம்பாயில் உள்ள ரத்னகிரி என்னுமிடத்தில் வரி குமஸ்தாக்களிடம் வேலைவாங்கும் இந்த கலெக்டர் விடுத்தான் ஓர் சுற்றறிக்கை ரத்னகிரிவாசிகளுக்கு. அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டான். "நீங்கள் உங்களது நகரத்திலோ கிராமத்திலோ அமைதியுடன் வாழ விரும்பினால் அத்தகைய மனிதர்களை (காங்கிரஸ்காரர்களை) கொல்லைக்காட்டில் உத்தரவின்றி நுழையும் நரிபோல் மதிக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளான். இந்த அறிக்கை வெளியிடுவதற்கு இவனுக்கு அபார மூளை இருந்திருக்கவேண்டுமல்லவோ? ஐயோ! காங்கிரஸைக் கண்டால் இந்தபேர்வழிக்குஏன்? வேப்பங்காயைப்போலக் கசப்பாகஉள்ளது. ஆனால் வேப்பமரமாக இருந்தபோதிலும் அற்புத மரத்தினால் மக்களுக்கு ஏற்படும் நன்மை தீமையை இவனுக்கு உணர ஆற்றலுண்டா? அது இல்லை. எது இல்லை? மூளை இல்லை ரத்னகிரிவாசிகள் மிகவும் ராஜவிசுவாசமாகஇருப்பதாகப் போற்றிப் பாராட்டி புகழ்மொழிகள் கூறினான். ராஜவிசுவாசம் பிரஜைகளுக்கு இருக்கவேண்டியதுதான். அதைப்பற்றி ஒருவரும் கேட்பதற்கில்லை. ஆனால் ராஜா இருக்கிறாரே அவர் ஏற்பாடு செய்துள்ள சர்க்கார் பிரஜைகளிடத்து விசுவாசமாயிருந்தாலல்லவோ பிரஜைகள் ராஜாவிடத்தோ அன்றி சர்க்காரிடமோ விசுவாசமாயிருப்பார்கள். ரத்னகிரி ராஜவிசுவாசிகள் போன்று இருக்கலாம். ராஜவிசுவாசிகளாகவே நடிக்கலாம். ஆனால் அவர்களது உள்ளத்தினின்று பொங்கி வழிந்தோடும் ஓர் பேருணர்ச்சியை யார் கண்டார்கள். கலெக்டர் துரை கண்ணில் மண்ணைப்போடுவதற்காக ஒரு சமயம் இவ்விதம் நடிக்கலாம். இந்த உண்மையை அவன் அறியப்போகிறானா? அது இல்லை. ரத்தினகிரியில் சிலபேர் காங்கிரஸில் சேராதிருக்கலாம், ஆனால் அவர்களது மனதில் காங்கிரஸ் எண்ணமே குடிகொண்டிருக்குமன்றோ? ஐயோ! பாவம், ரத்னகிரி கலெக்டரின் மூளையைப் பரிசோதனைசெய்தால்?

சந்தாவசூலித்தவன்மாயம்

ஒரு வாரமாக "தேசோபகாரி" சந்தாதார்களுக்கு பத்திரிகைகளைப் பட்டுவாடாச் செய்து சந்தா வசூலித்துவந்த 20-வயதுள்ள ரெங்கநாத அய்யர் என்பவன் நேற்று காலை காரியாலயத்திலுள்ள சில துணிகளையும், எமது பெயரைச்சொல்லி மற்றொருவரிடம்ஏமாற்றிரூ10ம் வசூலித்துக் கொண்டு எங்கேயோ மாயமாய் மறைந்துவிட்டான். அவனைப்பிடித்துக் கொடுப்பவர்களுக்கு "தேசோபகாரி"யை ஒருவருடத்திற்கு இனாமாக அனுப்பப்படும்.

மானேஜர்.

கிராமவாசிகள்போன்று வாழ்க்கையை நடத்திவந்திருக்கிறார். உடையிலும், செயலிலும் கிராமவாசியாகவேதான் விளங்குகிறார். கிராமவாசிகளை நன்குணர்ந்த அவர் தன்னையும் அவர்களில் ஒருவராகப் பாவித்து அவர்களின் சுகதுக்கங்களிலும் பங்கெடுத்துக்கொள்ளப் பின்வாங்கினதில்லை. இதனாலேயே அவர்கள் காந்திஜீயைத் தங்களின் உரிமைகளைப்பாதுகாக்கவந்த வீரன் என மதிக்கின்றார்கள்—போற்றியும் வருகின்றனர். அவர்மீதுள்ள அன்பும், மரியாதையும் குறைவின்றி தேசங்கடோறும் வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்துகொண்டே வருகிறது. கிராம வாசத்தின்பயனால் அவருக்குள்ள சாவதானபுத்தி ஸ்திரமானதாகி அவருடைய ஆணித்தனமான முடிவுகளுக்கு ஆக்கமளித்தது. லார்டு இர்வினும் உணர்ந்து கிராமவாசிகளின்—குடிஜனங்களின் பிரதிநிதி என எண்ணினார். ஒற்றுமையும் நிலவியது.

பின்பு வந்த வில்லிங்டன் ஆட்சியில்தான் புரட்சிக்காரராகிவிட்டார். பயணக்காரனோ பயித்தியக்காரனோ என்பதுபோல் பயணத்திலிருக்கின்றான் வில்லிங்டன். கடவுள் தப்பிக் கொள்ளட்டும்; பாவம்!

இவருக்குவந்த கவலை ஏன்?

பம்பாயிலுள்ள சர்தார் சுலைமான் காசிம் மேத்தா என்னும் பிரபல முஸ்லீம் ஜவுளிக் கிடங்கை காங்கிரஸ்காரர்கள் மறியல் செய்ததின் சம்பந்தமாக மவுலானா ஷவுக்கத்தலி காங்கிரஸ்தலைவி சரோஜினிக்கு எச்சரிப்புக்கடிதம் ஒன்று விடுத்திருந்ததை இவ்விதழின் மற்றோர் பக்கத்தில் காணலாம். அதுபற்றி "மவுலானாவின் குரும்பு" என்ற தலைப்பின்கீழ் சர்தார் சுலைமான் காசிம் மேத்தாவின் மூத்த குமாரர் வெளியிட்டிருக்கும் அறிக்கை வருமாறு:—

விதேசித்துணி மறியல் விஷயமாக மவுலானா ஷவுக்கத்தலி ஸ்ரீமதி சரோஜினி தேவிக்கு எழுதிய கடிதம் முற்றும் உண்மைக்கு மாறானவைகளாகும். நீண்டநாட்களாக நடைபெற்றுவரும் ஜவுளிக் கம்பெனிகளில் கரீம்பாய் அபுபக்கர் கம்பெனியே முக்கியமானதாகும். அவர்களும் வியாபாரங்களை அமைதியாகவே நடத்திவருகின்றனர். எனது தகப்பனார்பெயராலும் கம்பெனி எதுவும் பருத்தி மார்க்கட்டில் கிடையாது. பருத்தி வியாபாரமும்செய்யவில்லை. எனது சகோதரர்களான மகமத் சுலைமான், உஸ்மான் சுலைமான் இருவரும்சொந்தத்தில் வியாபாரம் செய்கிறார்கள். இவர்களில் முதலில் குறிப்பிட்டவரே பஹிஷ்காரம் செய்யப்பட்டார். பின்னொருவர் எவ்வித தொந்தரையுமின்றி தொழிலை நடத்திச்செல்கின்றார். ஏதோ ஒரு கம்பெனி பஹிஷ்காரம் செய்யப்பட்டதற்காக காங்கிரஸ்காரர்கள்பஹிஷ்கரித்துவிட்டனர் என்று கூறுவதுபிளவுஉண்டுபண்ணக்கூடிய குற்றமாகும். அநேக ஹிந்துக்கம்பெனிகளும்கூடபஹிஷ்காரத்திற்குட்டன்பட்டேதானிருக்கிறது. மகமத் சுலைமான் கம்பெனிகூட பெயரளவில் மட்டும் முஸ்லீம் கம்பெனியாகக் காணப்படுகிறதே யொழிய பாகஸ்தர்கள் பெரும்பாலும் ஹிந்துக்களேயாவர். பஹிஷ்காரத்தால் எனது சகோதரரைக் காட்டிலும் ஹிந்துக்களேதான் அதிகமாகவருந்தவேண்டும். பாரபக்ஷமின்றி ஆராய்ந்து பார்த்தால் பஹிஷ்காரம் வகுப்பு வாதத்தை உண்டுபண்ணவில்லை என்பது ஸ்பஷ்டமாக விளங்கும். எனது தகப்பனார் ஊரிலில்லாத இச்சமயத்தில் அவர் அந்தஸ்து, செல்வாக்கு இவற்றைக குறைக்கும் விதமாக மவுலானா கூறித்திரிவதானது அழகல்ல; எனது தகப்பனாரும் அவ்வாறு செய்ய அனுமதி யளிக்கவில்லை. மவுலானா இவ்வாறு அவசரப்பட்டுச் செய்ததானது அவரதுகுரும்புத்தனத்தையேகாட்டுகிறது.

பழைய காலமல்ல!

அண்டர்ஸன் வங்காளத்திற்கு புதியகவர்னராக பதிவுசெய்யப்பட்ட அன்றே நமது புத்திமதியை (அடக்குமுறையால் வங்காளத்தை அடக்கிவிட முடியாது; வில்லியர்ஸ்போன்ற கபவாளிகளின் பேச்சைக்கேட்டு அண்டர்ஸன் நடப்பாரானால் காரியம் வெற்றிபெறாது) சொன்னோம். வெள்ளையர்கள் உத்தியோகத்திற்கென வந்து இந்தியாவில் காலடிவைத்த வுடனே பித்தம் தலைக்கேறிவிடுவதுவழக்கம். அதேபோல் நமது வங்காள கவர்னர் அண்டர்ஸனும் பித்தத்தின் முதிர்ச்சியால் அவர் வாயில்வந்தபடி பிதற்ற ஆரம்பித்துவிட்டார். இந்திய சங்கத்தார் வாசித்தளித்த வறவேற்புப்பத்திரத்திற்கு அவர் பின்வருமாறு பேசியிருக்கிறார்.

"ஜனங்களுக்குவேண்டிய பாதுகாப்பும், நாட்டில் அமைதியும் நிலவுவதற்காகவேதான் சட்டங்கள் சர்க்காரால் கையாளப்படுகின்றன. காங்கிரஸ் காரர்களின் அமைதியின்மைதான் அவசரச்சட்டம் ஏற்படுவதற்கும் காரணமாகும். காங்கிரஸ் காரர்கள் சர்க்காருடன் ஒத்துழைக்காதபக்ஷத்தில் அவசரச்சட்டம் அமுலில் இருந்துகொண்டேதானிருக்கும்" என்று கூறியிருக்கிறார்.

அயர்லாந்தில் ஸின்பின்கிளர்ச்சியை எதிர்த்த சிப்பாய்முறுக்கில் பேசுகிறான் பாவம்! இந்தியர்களை பயமுறுத்துகிறான்! பலாத்காரச் சட்டம் இருந்துகொண்டேதானிருக்குமாம். ஏ! அண்டர்ஸனே! நீலனென்ற வெள்ளைப்பாவி கிராமம் கிராமமாகப் பொசுக்கினானே! 'கத்தியால் ஆளுவேன்' என்று லாரன்ஸ் சொன்னானே! டயர் என்ற ஓர் பேய் தன்கையிலிருந்த குண்டுகள் தீரும்வரை சுட்டதே! ரயிலிலடைக்கப்பட்டுமாப்பிள்ளை சகோதரர்கள் செத்தார்களே? எங்கள் லஜபதியும் அநேக தொண்டர்களும் தடியடி தாங்கிக்கொண்டார்களே! தூக்குக்கும், சிறைக்கும் பகவத்சிங்போன்ற வீரர்களைப் பலிகொடுத்தோமே! அதெல்லாம் நாங்கள் வாயளவில் பேசிக்கொண்டிருந்த காலமாகும்: ஆனால் இப்பொழுதோ இந்தியா செயலில் இறங்கியிருக்கிறது! என்பதை உலகம் உணருமாக.

மவுலானாவின் மறதி!

நமது மவுலானா ஷவுக்கத்அலியின்போக்கு பிற்போக்கிலேயே போய்க்கொண்டிருக்கிறது. அவரைப்பற்றி முன் பின் ஆழ்ந்து சிந்திப்பவர்களுக்கு விபரீதமாகவே தோன்றலாம். இந்தியாவின் துர்அதிர்ஷ்டம்தானோ, என்னவோ? இன்று நடக்கும் சட்டமறுப்புப்போர்—சாத்விகப் போர் நமது ஷவுக்கத்அலியை மட்டுமல்ல; இந்தியாவிலுள்ள இந்து, முஸ்லிம், சீக்கியர் யாரையேனும் பாதிப்பதற்கில்லை. இம்மாதிரி இயக்கம்—அன்னியத்துணி மறியல்—விதேசித்துணிக்கடைகளை அடைத்தல்முதலிய வேலைகளை சாவுக்கும்கூட பயமின்றி நடத்திச் செல்லவேண்டும்; என இதேஷவுக்கத்அலி பன்முறைகளில்பகர்ந்ததுண்டு. இவரேபோகட்டும். இவரது தாயார் 75-வது வயதில்—மரணத்தருவாயிலும் கூறிச்சென்றார். தாய்க்குத் தவறிழைக்கும் ஷவுக்கத்அலி தேசத்திற்குப் பிழைசெய்வதில் ஆச்சர்யமொன்றுமில்லை. தாய்க்கு பிழைசெய்யும்—தவறிழைக்கும் எவனாயினும் ஆண்டவனால் மன்னிக்கக்கூடாத குற்றத்தைச் செய்தவனாகிறான். இத்தருணத்தில் காங்கிரஸ் தலைவி ஸ்ரீமதி சரோஜினிக்கு விடுத்திருக்கும் கடிதம்தான் நகைப்பிற்கும், ஆச்சரியத்திற்கும் இடமாயிருக்கிறது. "சட்டமறுப்பு இயக்கம்—விதேசத்துணிக் கடைகளின் மறியல்—அன்னியச்சாமான் பகிஷ்காரம்வளர்ந்து கொண்டேபோகிறது. அதன் போக்கில் விட்டுவிட்டால் நாடுமுழுதுக்குமே தொல்லை ஏற்படக்கூடும். வருங்காலத்தில் நாம்செய்யஎண்ணியிருக்கும் காரியங்களெல்லாம் வீணாகிவிடும்! முஸ்லிம்கள் காங்கிரஸ் சட்டமறுப்பை ஒப்புக்கொள்ளவுமில்லை. முஸ்லீம்களெல்லோரும் தனித்ததோர்வேலைத்திட்டத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். அப்படியிருக்க முஸ்லீம்களின் விதேசித் துணிக் கடைகளையும் காங்கிரஸ்தொண்டர்கள் மறியல்செய்கிறார்கள். முஸ்லீம் வியாபாரிகளின் கடைகளுக்கு முன்னால் காங்கிரஸ் தொண்டர்கள் மறியல்செய்தால், தொண்டர்களையும், அவர்களை ஆதரிப்பவர்களையும் அப்புறப்படுத்தநேரிடும் அமைதிக்கும், பங்கம் ஏற்படுவதும் நிச்சயம்"எனக்கூறுகிறார். என்னே மவுலானாவின்மறதி! அஹிம்சைவாளை ஏந்திக்கொண்டு சட்டமறுப்புசெய்யும் சகோதர, சகோதரிகளை ஹிம்ஸை வாளோடு யுத்தம் செய்ய நேரிடும்என ஆரவாரம்செய்கிறார். ஆரவாரத்திற்கு ஞாபகார்த்தமாக அவரது தாயாரின் உருக்கமான பிரசங்கத்தை அடுத்ததோர் பக்கத்தில் ஞாபகமூட்டுவதைத் தவிர வேறு வழியில்லை.

பிரிட்டிஷ் ஆட்சி ஒழிந்தால்

நான் சென்ற 45 வருஷங்களாக இந்தியாவில் கிறிஸ்தவ மதப்பிரசாரம்செய்துவந்திருக்கிறேன். "நான் ஒரு ராஜீய வாதியல்ல; இராஜீயச் சண்டைகளில் நான் இதுவரை கலந்துகொண்டவனுமல்ல ஆயினும் இந்தியாவுக்கு கலப்படமற்ற சுதந்திரம் பெறுவதற்கு உரிமையுண்டென நான் கருதுகின்றேன். மகாத்மா காந்தியடிகள் அத்தகைய கலப்படமற்ற சுதந்திரத்தையே விரும்புகின்றார். இந்த நாட்டில் எவ்வளவோ பிரிவினைகள் இருக்கின்றன; அநேக கஷ்டங்களும் உண்டு. ஆனால் இந்த நாட்டுக்குச் சுதந்திரம் தரப்பட்டால்தான் அந்தக் கவலைகளெல்லாம் தீரும்.

"இந்தநாட்டின் சாபத்தீடாகஉள்ள மதுபானம் ஒழியுமாறு நானும் என்னாலான அளவு கொஞ்சம் கொஞ்சம் பாடுபட்டிருக்கிறேன். கள் இறக்குவதையும், விற்பதையும் மட்டும் சர்க்கார் ஆதிக்கத்துக் குட்படுத்துவதால் மதுவிலக்கு ஏற்படுத்தலாமென்று இந்த துரைத்தனத்தார் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். அது சுத்தத்தவறு டெல்லியிலும், இதரமாகாணத் துரைத்தனத்தின் தலைமையிலும் அநேக ஸ்காட்ச் தேசத்தினர் உத்யோகம் வகிக்கின்றனர். ஆதலால்தான் இவ்வளவு தொல்லையும் ஏற்பட்டுள்ளது.

"இந்த தேசத்தின் மதங்களும், ஜாதிகளும், குடிப்பது தவறு எனக்கண்டறிந்து தடுத்துவருகின்றன. ஆதலால் மதுவை ஒழிப்பது ஓர் ஜாதிய வேலையாக, தேசீய வேலையாகச் செய்யப்பட்டு வருகின்றது. அதை பிரிட்டிஷ் துரைத்தனம் முட்டாள்தனமாக எதிர்த்து தோல்வியுற்று வருகிறது. பிரிட்டிஷ் ஆட்சி ஒழிந்த மறு க்ஷணமே இந்தியா மதுவிலக்கு நாடாக ஆகிவிடும். அப்போது இந்தியாவிலுள்ள ஸ்காட்ச்தேசத்தினர் விஸ்கிப்புட்டியை மறந்துசுத்தஜலம் அருந்தவேண்டியிருக்கும்."

—ரெவரண்ட் ஹெர்பர்ட் அண்டர்சன்

ரஸுலும் கதரே அணிந்தார் : : இறக்குமுன் பி அம்மன்

கிழவியாகிய எனக்கு எழுத படிக்கக்கூட தெரியாது. உங்களுக்கு ஏதாவது கிடைக்க வேண்டுமென்ற விருப்பமிருந்தால் நீங்கள் முன்னின்று பாடுபடவேண்டுவது அவசியமென்று மாத்திரம் நான் கூறக்கூடும். நீங்களே உங்களுக்கு அபகீர்த்தியை உண்டாக்கிக் கொள்ளாதீர்கள். எனக்கு இந்துக்களும் சரி, முகம்மதியர்களும் சரி இருவரும் சமமானவர்கள்தான். எனக்கு ஹிந்து முஸ்லீம்கள், ஷௌவுக்கத்தலி முகம்மதலிபோன்றிருக்கிறார்கள். இந்தியர்களெல்லோரும் சமமாக இருப்பதாகவே நான் கருதுகிறேன். சகோதர, சகோதரிகளே! உழைமின்! விடாமுயற்சிகொண்டுழைமின்! எப்பொழுதும் தளர்ச்சியடையாதீர்கள். நீங்கள் கதருடுத்துவதில் விருப்பங்கொள்ளவில்லை. உங்களது முன்னோர்கள் இதைத்தவிர வேறெதையும் அணியவில்லையென்பது உங்களுக்குத் தெரியாதா? நமது "ரஸுலும்" கதரே அணிந்தார்கள். நமது புராதன ஆசாரியர்கள் சாதாரண உணவை உட்கொண்டு மிகவும் முரட்டுத் துணியே அணிந்துவந்தார்கள்.

நம்முடைய தேசமானது பிறர்கைக்கு மாறும்படி விட்டதற்கு நாமே ஜவாப்தாரிகளாவோம். அது நம்முடைய குற்றத்தாலேற்பட்டது. நாம் சாமர்த்தியசாலிகளாகயிருந்தால் இந்த வியாபாரிகள் இந்தியாவில் தங்களுடைய ஏகாதிபத்தியத்தையேற்படுத்தி நம்மையெவ்வாறு ஆட்சிபுரிய முடியும்? நாமே அவர்களை அரசர்களாக்கினோம். அவர்கள் நமக்கு இப்பொழுது "தமாஷா"க்களைக் காட்டிவருகின்றனர். நம்முடைய தேசமானது எரிந்து சாம்பலாலும் குப்பைகளாலும் நிறைந்திருப்பதுபோலிருக்கின்றது. 100 ரூபாய் சம்பளம் பெறுகின்றவர்களே பெருங் கஷ்டத்தோடு ஜீவனஞ்செய்ய வேண்டியிருக்குமிக்காலத்தில் அதற்குக் குறைந்த சம்பளம் பெறுகின்றவர்களுடைய கஷ்டங்களைப்பற்றிப் பேசவானேன். அவர்கள்பால் நாம் அன்பும் இரக்கமும் காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். நீங்களும் உங்களுடைய சகோதரிகளும் சௌக்கியமாக வாழும்படியான வழியில் நடந்துகொள்ளுங்கள். "கடவுளாணைப்படி நானே சிறைச்செல்லத் தயாராக இருப்பதாக உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக்கூடும்" என்னுடைய குமாரர்களான ஷௌவுக்கத்தலியையும், முகமதலியையும் விடுவிக்குமாறு அரசாங்கத்தாருக்கு விண்ணப்பித்துக்கொள்ளுங்கள் என்று என்னைத் தினந்தோறும் தொந்தரவு செய்கின்றவர்களைப் பார்த்து "நீங்களும் மகாத்மா காந்தி, ஷௌவுக்கத்தலி, முகமதலி முதலியவர்களைப் பின்பற்றிச் சிறைச் செல்லுங்கள். நீங்களும் அவர்களைப்போலாகி விடுவீர்கள்" என்று நான் கூறிவருகிறேன்.

முகம்மதிய சகோதர, சகோதரிகளே! நீங்கள் கதர் அணிவதற்கு எது தடையாகவிருக்கின்றது? கதரில் என்ன கெடுதல் இருக்கின்றது? உங்களுடைய மதத்தையே வேரோடு களைய முயல்கின்றவர்களிடமிருந்து வரும் துணிகளை நீங்கள் அணிகின்றீர்களா? நீங்கள் அடிமையை விடுவிக்கும் சுதேச ஆடைகளை அணிய விரும்புகின்றீர்களா? உங்களுடைய அடிமைத்தனத்திற் கறிகுறியாக இருக்கும் அச் சைத்தானியத் துணியை அணியாதீர்கள். அவை உங்களுடைய அகௌரவம், க்ஷீணதிசை இவற்றிற் கறிகுறியாக இருக்கின்றன. உங்களுக்குச் சொந்தமாயிருந்த இஸ்லாம் நேர்மை, கிலாபத் முதலியவையெல்லாம் போய்விட்டன. உங்களுக்காக ஒரு ஹிந்து உழைத்தால் நீங்கள் அவரைவிட நான்குமடங்கு அதிக ஊக்கத்துடன் வேலை செய்யவேண்டும்.

ஹிந்து சகோதரர்களே! உங்களுடைய சுயமரியாதையையும் முன்னோர்களுடைய கௌரவத்தையும் காப்பாற்றுங்கள். இந்த தேசம் உங்களுடையது. நம்முடைய முட்டாள்தனத்தால் அது அந்நியர்வசமாகிவிட்டது. உங்களுடைய ஜீவாதார மூலங்களையே அழிக்கும் கெடுதல்கள் உங்களைச் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. நீங்கள் பொறுமையாகக் கஷ்டப்பட்டு வேலை செய்தால் அவற்றிலிருந்து உங்களை விடுவித்துக்கொள்ளலாம். நீங்களெல்லோரும் விதேச ஜவுளிகளை பகிஷ்கரித்துவிட்டால் நம் நாட்டில் 6 கோடி ரூபாயும் தங்கிப் போய்விடும். இது உறங்கும் காலமல்ல. நீங்கள் வெகுகாலம் உறங்கியாகிவிட்டது. கடவு

ரஸூலும் கதரே அணிந்தார்

ளிடம் நம்பிக்கைகொண்டு முன்னேற வாருங்கள். உங்களுடைய தலைவராக நியமித்துக் கொள்ளுகின்றவர்களுடைய உத்தரவுப்படி நடப்பீர்களாக. நீங்கள் கோடிபேர்கள் இருந்தால்கூட இவ்வேலைக்குப் போதும். முகமதிய சகோதரர்களே! நீங்கள்கூட ஆழ்ந்தாலோசனை செய்யுங்கள். உங்கள் நபிசெய்ததை ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் எல்லோருமாக மொத்தம் 30 கோடியிருக்கின்றீர்கள். உங்களில் ஒருகோடிப்பேராவது சிறைசெல்லத் தயாராக இருக்கவேண்டும். உங்களுடைய வேலைகளைச் சாவதானமாகச் செய்யுங்கள். எப்படியாயினும் இவ்வேலையைவிட்டுவிடாதிர்கள். என்னுடைய பாட்டி ஆங்கிலேயர்கள் 1875-ம் வருஷத்தில் இந்தியாவுக்கு மிக்க நன்மை செய்ததாகக் கூறுவதைத் தாம் நம்பவில்லை என்பதாகவும் அவர்கள் தங்களது ஆட்சியை நிரந்தரமாக்கிக்கொள்ள விரும்புவார்களென்று தாம் கருதுவதாகவும் என்னிடத்தில் கூறியது உண்மையாகிவிட்டது. சிறைக்குச்செல்ல எப்பொழுதும் பயப்படாதீர்கள். மரணமேற்படுமே என்று கவலைப்பட்டுக்கொண்டிருப்பதில் பலனில்லை. வருவது வந்தேதீரும். குண்டுகளுக்குப் பயப்படாதீர்கள். அடிமையாக வாழ்வதிலும் தனது தேசத்திற்காக இறப்பதேமேல். சிறையிலுள்ள உங்களது சகோதரர்களெல்லோரையும் நீங்கள் ஒரு நிமிஷத்தில் விடுதலை செய்யக்கூடும். அந்நிமிஷமானது ஹிந்து முஸ்லீம்கள் ஐக்கியப்படும்போதுதான் வரும். சமயகலத்தை நாடுகின்றவர்கள் உங்களிடை பிளவு உண்டுபண்ண முயலுவார்களாதலால் ஜாக்கிரதையாக இருந்து விடாமுயற்சி செய்யுங்கள். கடவுள் உங்களது பிரார்த்தனையைக் கேட்டு உங்களுடைய கோரிக்கையை யருள்வார். எனக்கு வயது 75, கதரே தேசமெங்கும் உடுத்தப்படும் காலத்தை நான் எதிர்பார்க்கின்றேன். கெஜம் 1 அணுவிற்கு அயல்நாட்டுத் துணி கிடைப்பினும் அதை வாங்கிக்கொள்ளாதீர்கள். உயிர் போனாலும் போகட்டும் கௌரவமும், சுயமரியாதையும் போகக்கூடாது.

— டில்லி பிரசங்கம்.

வளையல் அழகும் அழகா?

நம்மை அடுத்து ஒழுக்கமுடைய சிலபெண்கள் வசிக்கிறார்கள். வளையல் வியாபாரிகளை வீடுகளில் ஏற்றி இறக்கிவிடுவது கண்டுதான் நமது சோதரிகளுக்கு ஞாபகமூட்ட விரும்பினோம். வளையலைப் போட்டுக்கொள்வதால் அழகிகளாகிவிடுவதாக கருதுவது பெண்மை தெய்வங்களுக்கு மாறானதாகும். வெறுங்கைகளோடு உலகத்தில் அநேக ஜாதிப் பெண்கள் இருக்கவில்லையா? அவர்களெல்லோரும் குரூபிகளாகவா இருக்கின்றனர்? "அழகு" என்பது வழக்கத்திலிருக்கும் அபிப்பிராயத்தைச் சார்ந்தது. காலில் தளைபோட்டு, காதிலும் தொளைபோட்டு ஓர் நீள ஜிமிக்கியை க[illegible]க்கும் காதுக்கும் கட்டிவிடுவது வழக்கத்திலிருக்குமானால் அதையும் ஓர் அழகாக எண்ணிக்கொள்ளும் மனித இயற்கை. மூக்கினின்று ஓர் பெரிய கிண்ணத்தைத் தொங்கவிட்டுக்கொண்டு போவது அழகென்று பத்து, பதினைந்து பெண்கள் செய்தால் அதையும் பின்பற்றுவது இதரர்களுக்கு இயற்கை. சுதேசி வளையல்களையாவது நமது பெண்கள் போட்டுக்கொண்டால் ஒழிந்துபோகட்டும் என்று சும்மாவிருக்கலாம்; அதுவுமில்லை விதவிதமான பெயர்களோடு விதேசி வளையல்கள் லக்ஷக்கணக்கில் வாங்கப்படுகின்றன. பாலாமணி வளை! மோட்டார் வளை! முருங்கக்காய் வளை! சுண்டக்காய் வளை! ஹோம்ருல் வளை! காந்தி வளை! காம்போஸ் வளை! இந்த "வளை"களில் இந்தியக்காசு கொட்டப்படுகிறது. அவைகளை அணிந்தால் அதிக அழகடைந்துவிட்டதாக நமது பெண்மணிகள் மனப்பால் சடிக்கின்றனர். அந்நியநாட்டுவளையல்கள் இந்தியாவில் எத்தனை லக்ஷரூபாய்க்கு இறக்குமதியாகிறதென்பதை கவனித்தால் வயிறு திப்பற்றிஎறிகிறது. இனியேனும் விதேசி வளையலணியும் வழக்கம் நிறுத்தப்படவேண்டுமாகக் கேட்டுக்கொள்கிறோம். இந்த வளையல்விற்பனைக்காக வீடு, வீடாகஏறி, ஒரு பனை உயரமுள்ள வீடுகளில் நுழைந்து வியாபாரம் செய்யும் வளையல் செட்டியார்களையும் வேறு தொழில் பார்க்கும்படியாக கேட்டுக்கொள்கிறோம்.

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பந்யுளை 245] (1922-ஹு ஸ்தாபிதம்.) 6 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இரு முறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஹு (20-4-32) சித்திரை-மீ 8உ புதன்கிழமை

இரண்டில் ஒன்று வேண்டும்.

ஒன்று அந்நிய ஆட்சிக்கு அடிமைபட்டு அமைதியாக வாழவேண்டும். இன்றேல் விடுதலையடையவிரும்பினால்—சுயராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டுமானால்-அன்னியர்கள் நம்நாட்டைவிட்டு ஓடிப்போகவேண்டுமானால்—விரட்டிவிடவேண்டுமானால்அதற்காக வேலை செய்ய முன்வரும் இந்திய வீரர்கள்—இளஞ்சிங்கங்கள்—இளம் வாலிபர்கள் ஒன்றுசேர்ந்து ஒரே மூச்சில் விடுதலையாவது அடையவேண்டும். இந்தஇரண்டுமின்றி இரண்டுங்கெட்டான் வழியில் பொது ஜனங்களுடைய காலத்தையும், பொருளையும், சக்தியையும்செலவிடுவதால் பிறயோஜனமென்ன ?

பாதித்தூக்கத்தில்நடப்பவன் கதைபோல் எங்காவது இடறி விழுந்துவிடுவான். மேலும்தற்காலஇயல்பில்வேகமாய் ஓடும் மோட்டார்களுக்கோ, பிறிதொன்றுக்கோ இரையாகி எமனுலகு சேரவேண்டியதுதான். இராஜீபத்தலைவர்கள் சிலர் இராஜீய வாழ்க்கையில் பாதித் தூக்கத்துடன் நடப்பவர்கள்போன்று 100-க்கு 50 பேருக்கு ஒரு திட்டமான—ஸ்திரமான கொள்கை கிடையாது. நாம் எதை விரும்புகிறோமோ--எதை அடையவேண்டுமோ அதற்கேற்றவழியில் சென்றாலொழிய அடையமுடியாது. இப்பொழுது நாம் வேண்டுவது விடுதலையாயின் அதைப் பெறுவதற்குரிய வழியில் சென்றாலன்றி அடையமுடியாது. அடிமைப்பட்ட நாடுகள்--அன்னியர் தம் ஆட்சிக்குட்பட்ட நாடுகள் எந்தவழி சென்று, எந்தமுறைகளைக் கையாண்டு விடுதலை பெற்றிருக்கின்றனர்—சுதர்மத்தை ஸ்தாபித்திருக்கின்றன—காலத்தின் மாறுதலுக் கேற்ப வாழ்க்கைப் போராட்டங்களும் மாறவேண்டாமா? அவ்வித மாறுதல்கள் உலகத்திற்கே பொதுவா ; அன்றி இந்தியர்களுக்கு மட்டும் பிரத்தியேக பாத்தியதையா ? இந்த சந்தேகங்களை நிவர்த்திக்க வேண்டியது வாய்ப்பந்தல்ப் போட்டு பாமரஜனங்களை ஏமாற்றுங் கூட்டத்தாரைச் சார்ந்ததேயாகும். அல்லது அவர்களாவது சந்தேகங்களை நிவர்த்திக்கட்டும். இந்தியாவில் அரசர்களாலும், ரிஷிகளாலும் வகுக்கப்பட்ட எத்தனையோ தெய்வீகம் பொருந்திய அரசியல்நூல்களிருக்கின்றன. இப்பொழுது பல வேறு நாடுகளில் பல அரசியல்வாதிகளால் எழுதப்பட்ட அரசியல நூல்களுமிருக்கின்றன. விடுதலையை--சுதர்மத்தை விரும்பும் நாம் நமது முற்காலத்தவர்களின் அரசியல் தர்மத்தையாவது கைக்கொள்ள வேண்டும். அன்றி தற்கால அரசியல் தர்மத்தையாவது கைக்கொள்ளவேண்டும். இந்த இரண்டுமின்றி புத்தம் புதிய வழியில் செல்வதனால் விடுதலையடைவது சாத்தியமா ? அந்தக்கால அரசியல் சாஸ்திரம் அந்தக்காலத்திற்குத்தான் பொருந்துமெனின்; இந்தக்காலத்தில் இந்தியாவிற்கு மாத்திரம் ஒரு தனி தர்மம் உண்டா? என்பதை வாசகர்கள் நன்கு ஆராயவேண்டும்.

விடுதலையடைந்து சுதந்திர புருடர்களாக பிரகாசிக்கவேண்டுமானால்--சுதர்மத்தை ஸ்தாபிக்க விரும்பினால் சிறிதும்பின்வாங்காமல் தன்னுடைய உடலையும், பொருளையும் இழக்கவும் வேண்டும். இதுதான் சுதர்மத்தை-ஸ்வராஜ்யத்தை ஸ்தாபிப்பவனுடைய தர்மம். முற்காலத்தில் இந்த விதிதான் கையாளப்பட்டிருக்கிறது. இந்தக் காலத்திலும் இதுதான் விதி—எந்த நாட்டவர்களுக்கும் இதுதான் விதி. நம் நாட்டிற்கும் இதுதான் விதி. ஒரு பெரியவிஷயத்தை சாதிக்கும் விஷயத்தில் பிழைகள் நேரத்தான்செய்யும். பல திட்டங்களை மாற்றிக் கொள்ளவேண்டித்தான் இருக்கும். அங்ஙனம் மாறுவதும், பிழைப்படுவதும் எதிர்பாரா

இந்தியாவின் வீரம் ! (மகாத்மா காந்தி)

(வட்ட மேஜை மகாநாட்டின் சமஷ்டிக் கமிட்டியின் முன் இந்திய இராணுவப்பிரச்னையைப்பற்றி மகாத்மா காந்தி ஓர் அரிய பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கம் லார்டு ஸாங்கே உள்பட அநேக பிரிட்டிஷ் ராஜ்ய வாதிகளைத் திடுக்கிடச் செய்தது. அந்தப் பிரசங்கத்தின் சாராம்சத்தை அடியில் தருகின்றோம்.)

இந்தியாவின் ஆட்சியைப் பூரணமாக இந்தியர்களிடம் ஒப்படைத்து விடவேண்டுமென்பதே காங்கிரஸ் கோருவது. அதாவது இந்தியாவின் தற்காப்பு பிறநாடுகளோடு இந்தியாவுக்குள்ள சம்பந்தம் முதலியவைகளில் இந்தியருக்கு பூர்ண அதிகாரம் வேண்டும். எந்தஅரசாட்சிக்கும் இராணுவ அதிகாரமே முக்கியம். அந்த அதிகாரத்தை பிறரிடம் விட்டு விடுவதா? அதைப் பிறர்கள் எவ்வளவு ஸ்நேகத்தோடு இருந்தாலும் விட்டுக் கொடுப்பதற்கில்லை. அப்படி விட்டுக்கொடுத்தால் அது பொறுப்பாட்சியாகவே ஆகாது.

இப்போது இந்தியாவிலுள்ள இராணுவம்—அது பிரிட்டிஷ்ராணுவமாயினும் சரி, இந்தியர் படையாயினும் சரி—கேவலம் தொழில்முறையான இடத்தை யடைத்துக்கொண்டு சூந்திருப்பதாகவே இருக்கிறது. நான் அனுபவத்தினின்று சொல்லுகின்றேன், சீக்கியர்கள் கூர்க்கர்கள், பட்டாணியர்கள், தமிழர்கள், ராஜபுத்ரர்கள் முதலியோர் இன்று இந்திய இராணுவத்தில் உண்டு. ஆயினும் அவர்களையும் ஏதோ அன்னிய நாட்டினர்போல நான் எண்ணவேண்டியிருக்கிறது. அவர்களோடு நான் பேசக்கூடாதாம்! அநேக சிப்பாய் இரகஸ்யமாக என்னோடு பேசக்கூடாதாம். அப்படிப்பேசினால் எங்கே மேலதிகாரிகளுக்குத் தெரிந்துவிடுமோவென பயப்படுகின்றார்கள். மேலும் சிப்பாய்கள் வசிக்குமிடத்திற்கு நாங்களும் போவதற்கு முடியாமலிருக்கிறது- எங்களையெல்லாம் ஸ்வதேசத்தினராகப்பாவிக்கக்கூடாதென ஒவ்வொரு சிப்பாய்க்கும் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு சிப்பாய் ஒருசாதாரண பிரஜைகளோடு கடிதப்போக்குவரத்து கூட வைத்துக்கொள்ளக்கூடாது. இதுவேறு எந்த நாட்டிலாவது உண்டா? சிப்பாய்களுக்கும் எங்களுக்கும் இடையே பெரியதொருச் சுவர் இருப்பதை ஆயிரக்கணக்கான காங்கிரஸ் வாதிகள் அனுபவத்தால் உணர்ந்திருக்கின்றனர்.

பிரிட்டிஷ் சேனை இந்தியாவில் இருப்பதற்குக் காரணமென்ன?‘ சேனையிலுள்ளவன் சிப்பாயாயினும், ஸோல்ஜராயினும் அவன்பிரிட்டிஷாரின் நன்மைக்காகவே இருக்கின்றானென்பதில் ஐயமில்லை. இதைக் குழந்தை கூடவெகு நன்றாயறியும். உள்நாட்டில் ஏதாவது கிளர்ச்சியேற்படுமானால் அதைநசுக்கவேண்டியேஇந்த இராணுவம் வைக்கப்பட்டிருக்கிறதென்பதும் நிச்சயம்.

இந்தியர்களைப் பொறுக்கியெடுத்து அவர்களைப் பயிற்சி செய்வித்து பிரிட்டனுக்குப் பணிவுடன்நடக்கும்படி செய்துளளார்கள். உத்தரவு கொடுத்துவிட்டால் உடனே யாதொரு ஆலோசனையுமின்றி எவனையும் சுட்டுத் தள்ளிவிடுவார்கள். தங்கள் சொந்தநாட்டினர்களையே இந்தியச் சிப்பாய்கள் ஜாலியன்வாலா தோட்டத்தில் சுட்டுத்தள்ளினார்களல்லவா?

இந்திய இராணுவத்தைப்பற்றி நான்கனவுகொண்டிருக்கிறேன். எனக்கு அதிகாரமிருந்தால் இப்போதுள்ள இந்திய இராணுவத்தைக் கலைத்துவிடுவேன். எங்களிடம் பூரண அதிகா

த சில சம்பவங்களால் நேரவேண்டுமேயன்றி எதிர்பார்க்கும் சில சம்பவங்களால் நேரிட்டதாக இருத்தல்கூடாது. தோல்வியடையுமென்று தெரிந்தும் அந்தத் திட்டத்தின்படி வேலை செய்யத் தூண்டும் தலைவர்கள் சரியானதலைவர்களாகமாட்டார்கள்.

வெள்ளையரிடம், மண்டியிட்டு கெஞ்சி சுதந்திரம் பெறமுடியாது என்பதை 50 வருடங்களின் சரித்திரம் நமக்கு ருசுவாகவிருந்தும், அன்னியர்களிடம் கேட்டுக்கொண்டிருப்பதிலும், மனுச்செய்துகொள்வதிலும் ஒருக்காலும் ஆகப்போவதில்லை. நாம் போடும் திட்டம் வெள்ளையர்கள் இழக்கும்படியாக இருந்தாலன்றி ஒன்றும் ஆகப்போவதில்லை.

காந்திஜி திறந்த பொக்கிஷம்

காந்திஜியின் வாழ்க்கை முழுவதும்திறந்த புத்தகம். அப்படிக் கிருந்தும சிலர் அவருக்கில்லாத ஓர் தன்மையை இருப்பதாகக் கூறி வருகின்றார்கள். ஆனால் காந்திஜீ ஒரு காலத்திலும சிறிய சமாசாரத்திற்குக்கூட உள்ளொன்று வைத்துப் புறமொன்று செய்தது கிடையாது. தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டபோது அவர்களின் துயரை நீக்க வேண்டுமென மகாத்மா பாடுபட்டார். செடுகாட் சண்டையின் பிறகு அங்கிருந்த அதிகாரிகளோடு ஓர் ஒப்பந்தத்திற்கு வந்தார். அந்த ஒப்பந்தத்தில் கண்டபடி ஒவ்வொரு இந்தியக் குடியும்தனதுபெயரை துரைத்தன ஆபீஸில் பதிவு செய்து கொள்வதென ஏற்பாடாகி இருந்தது. இதைப் பகிரங்கமாக இந்தியருக்கு மகாத்மா எடுத்துரைத்தார். அவ்வாறு பதிவுசெய்துகொள்வதை ஒரு அவமானமாகப் பல இந்தியர்கள் கருதிபதுண்டு. அவ்வளவு பெயருக்குமிடையே தைரியமாக இந்த ஏற்பாட்டை மகாத்மா கூறிவிட்டார். மகாத்மாவை அநேகர் எதிர்த்தனர். "நானே முதலில் சென்று பதிவுசெய்து கொள்கிறேன்" என்று மகாத்மா அறிவித்தார். இந்தத் தீர்மானத்தைப் பகிரங்கமாகச் சொன்னதால் பயனென்ன விளைந்தது தெரியுமா? மகாத்மாவை ஒரு இந்திய மூடன் தடியால் தலையிலடித்தான்; கொன்றுபோட முயன்றான் காயம் பட்டு ஆஸ்பத்திரியில் கிடந்தபோதும் அவர் தளர்ச்சி யடையவில்லை பிரக்ஞைவந்தவுடன் தமது பெயரை ஆபீஸில் அவர் பதிவுசெய்து கொண்டார் மகாத்மாவின் வாழ்க்கை ஓர் திறந்த புத்தகம்-பொக்கிஷம் என்பதை பிறகுதான் தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் அறிந்து கொண்டனர்.

வெள்ளையருக்கு மகா ஆபத்து ஏற்பட்ட காலங்களில் உதவிசெய்தே தீரவேண்டுமெனக் கருதினார் மகாத்மா அவர் போயர் யுத்தத்திற்கும், ஐரோப்பிய யுத்தத்திற்கும் வெள்ளைக்காரர்களுக்கு ஆள்சேர்த்துக் கொடுத்தார். மனம் வேறு, செயல் வேறு என்பது மகாத்மாவிடமில்லை

1919ம் வருஷத்தில் ரௌலட் சட்ட சத்யாக்ரகத்தை ஆரம்பித்தார் பஞ்சாபில் கலவரம் ஏற்படவே உடனே சத்யாக்ரகத்தையே நிறுத்திவிடும்படி உத்தரவிட்டுவிட்டார். அமிருதசரஸ் காங்கிரஸுக்குமுன்புதான், பஞ்சாப் படுகொலை நடந்தது. ஆனால் அமிர்தசரஸ் காங்கிரஸில்கூட மகாத்மா சர்க்காரோடு ஒத்துழைப்பையே பற்றிப் பேசினார்

பிறகு ஒத்துழையாமை இயக்கம்நடந்தது எங்கேனும் பலாத்காரம்நடந்தால் இயக்கத்தை நிறுத்தி விடுவேனென முதலிலேயே மகாத்மா எச்சரிக்கை செய்திருந்தார். "மகாத்மா அஹிம்சையை ஒரு கருவியாகவேகொண்டிருக்கிறார்" என்று மறைவாகச் சிலர் கூறிவந்தனர். இதைபோன்ற அபாண்டம் வேறில்லை. மகாத்மாவுக்கு அஹிம்சை என்பது ஓர் கொள்கை. அவருடைய இரத்தத்தில் அஹிம்சை ஊறிக் கிடக்கிறது. 1921 வரு பிப்ரவரியீ சௌரி சௌராவில் பலாத்கார மேற்படவே உடனே இயக்கத்தை நிறுத்திவிட்டார். அஹிம்சை என்பதில் மகாத்மாவுக்குள்ள பிரியம் அப்போதுதான் வெளியாயிற்று.

உப்பு சத்தியாக்கிரஹத்தையும் திடீரென்று அவர் ஆரம்பித்துவிடவில்லை. லாகூர் காங்கிரஸிலேயே இயக்கத்தைப்பற்றிப்பேசிருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அது வளர்ச்சியடைந்தே யுத்தம் ஆரம்பிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

"கூடுமானால், எதிரியோடு சமாதானமாக வாழ்வதே சத்தியாக்கிரக தத்துவம்" என்பது மகாத்மாவின் கொள்கை. அந்தக் கொள்கையின் காரணமாகவேமகாத்மா இர்வினோடு ராஜி பேசினார். ராஜி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். பிறகு வட்டமேஜைக்கு மகாத்மா போக வேண்டுமென காங்கிரஸ் தீர்மா

லதிகாரிக்குத் தெரிவிப்பதாகச் சொல்லி இரண்டு மூன்று பேர்களின் விலாசங்களைத்தெரிந்து கொண்டு பாவம் வந்த வழியே சென்றுவிட்டார். அந்த இடத்தில் சிப்பாய் என்பவன் நடந்துகொண்டதானது மிகக் கண்டிக்கத்தக்கதாகும். இது மேலதிகாரிகளின்பார்வைக்கு வருமானால்சிப்பாய்க்குத் தக்க தண்டனைகொடுக்கப் பின்வாங்க மாட்டார்களென்று நம்புகிறோம்,

எதற்குத்தான் ஆளாவது?

பத்திரிகை நடத்துவோருக்கு எப்பொழுது பார்த்தாலும் தொல்லைதான்; துயரந்தான் பத்திராசிரியர்களின் வாழ்வு மஹா பயங்கரமானது—உபத்திரவமானது—உயிரோடு வதைக்கப்படுவதற்கே சமானமானது. வேண்டுமானால் எங்களுடைய வேலையைச் சோதித்துப்பாருங்கள். “சுதேச பரிபாலினி” பத்திரிகாசிரியரை எடுத்துக்கொள்வோம். எவ்வளவோ ஜாக்கிரதையாக அவர் அவரது உடம்பைப்பார்த்துக்கொண்டும் அலுப்புற்று நிம்மதியாக வாழுகிறார்.

வேறு இரண்டு ஆசிரியர்கள் வெகு ஜாக்கிரதையாக இருந்து வருவதால் ஏதோ தப்பித்துக்கொண்டு வருகிறார்கள்.

நான் சம்பந்தமட்டில்சகிக்கமுடியாதநிலைமையிலிருந்துகொண்டிருக்கிறேன். ஒரு பெரிய மணிக்கூண்டின் மீதுநின்றுகொண்டு சதாகாலமும் உயிருக்கு ஆபத்துவருமோவென்று நடுங்குவோரின் நிலைமையில் நான்இருந்துவருகின்றேன். கண்கொட்டினால் உயிர்போய்விடும்.

ஆசிரியர் ஏகாம்பர முதலியாரை இத்தகைய கஷ்டங்கள் பாதிக்கவில்லை. அவர் ஒருவர்தான் பாதிக்கப்படாதவர். அவரை அதிர்ஷ்டசாலியென்று சொல்லாமல்வேறென்னவென்று கூறுவது?

என்றைக்கு சாவு வரப்போகிறதென்பதே எங்கள் கவலை. ஆனால் கவலைப்பட்டுச் சாக எங்களுக்கு இஷ்டமில்லை.

னித்தது. அவர் போவதற்காக இராட்டை முதலியன கூட மூட்டை கட்டியானபின்பே பம்பாய் கவர்னரின் கடிதம் வந்தது. அது திருப்திகரமாயில்லை யென்றும், மகாத்மா போகலாகாதெனவும் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் தீர்மானித்தனர். அதன்படியேதான் மகாத்மா நடந்துகொண்டார்.

மகாத்மா எதையும் மறைப்பவரல்ல. அவர்ஓர் திறந்தபுத்தகத்திற்குபொக்கிஷத்திற்கு சமானம் என்பதையே மேற்படி சம்பவங்கள் தெரிவிக்கின்றன.

சட்டமாக்குவார்களா?

1929-ம் வருஷத்தின் ஆரம்பத்தில் இந்தியாவில் 7863 தொழிற்சாலைகளிருந்தன. வருஷக் கடைசியில் கணக்கு பார்க்கும்போது 8129 தொழிற்சாலைகளாக அதிகமாயிருப்பது தெரிந்தது. வருஷ ஆரம்பத்தில் 15 | கால் லக்ஷம் தொழிலாளிகள் வேலை செய்துகொண்டிருந்தனர். வருஷக் கடைசியில் தொகை 15 | அரை லக்ஷமாயிற்று. முப்பது கோடிக்கு மேற்பட்ட மக்கள் வேலையில்லாது அலைகின்றனர்.

தொழிற்சாலைகளில் அபாயங்கள் ஏற்படுவதும் அதிகமாய் விட்டது. ஒரு வருஷத்தில் மட்டும் 20208 அபாயங்கள் நடந்தன. இவ்வாறு தொழிலாளிகளுக்குஅபாயம் ஏற்படுவதற்கு மூலகாரணம் மதுபானமேயாகும். மதுபானத்தை நாட்டைவிட்டு ஒழித்தால்தான் இத்தகைய அபாயங்கள் குறையும். கடையில் கள்ளு விற்றுக்கொண்டேயிருக்குமானால் திருட்டுத்தனமாகவாவது குடிக்கவேண்டுமென வேதொழிலாளிக்குத்தோன்றும். ஆதலால்கட்டாயப்படுத்தி கடைகளை எடுத்தால்தான் தொழிலாளிக்குச்க்ஷேமம்ஏற்படும். இந்தக்கட்டாயத்தை யார்செய்வது? துரைத்தனத்தார்தான் இக்காரியத்தைச் செய்யவேண்டும். ஊரைக் குடியர்களாகச்செய்து கள் வருமானத்தையே நம்பிநடக்கும் இந்த சர்க்கார் மதுவிலக்கைச் சட்டமாக்குவார்களா?

“தேசோபகாரி” விளம்பரமல்லாத பத்திரிகைதானே! விளம்பரக்காரர்களின்தொல்லை கிடையாதே எப்படிக் கஷ்டம் எனக் கேட்கலாம். காரணங்களுண்டு. முதலாவது போட்டி. இரண்டாவது ஒரே பெயர்வழி இரண்டு காரியங்களில் சம்பந்தப்பட்டிருத்தல். மூன்றாவது பத்திரிகையில் காணப்பெறும் ஒவ்வொரு வார்த்தைக்கும் நாங்களே ஜவாப்தாரியென்று பொதுஜனங்கள் நினைத்தல். நான்காவது பத்திரிகையின் கொள்கைக்கு ஜவாப்தாரியாக இருத்தல்.

எல்லாவற்றையும்விட தலையங்கம் எழுதுவோர்தான் மற்ற வியாசங்களையும் எழுதுவது போல் பொதுஜனங்கள் கருதுவது. எதற்குத்தான் நாங்கள் ஆளாகலாம்.

47-வது தில்லி காங்கிரஸ் !

காங்கிரஸ் வாரம் ஆரம்பமாயிற்று. சென்ற வருடங்களைப்போல் காங்கிரஸ்தலைவர்களுக்கும், விசிட்டர்களுக்கும்ஸ்பெஷல்களெல்லாம் அமைக்கப்படவில்லை. காங்கிரஸ் நகரம் என எந்த ஒரு இடத்தையும் அலங்கரிக்கவும் கிடையாது. தலைவர்களின் வருகையும், காங்கிரஸ் நகரத்தைப் பற்றியும் வர்ணனைசெய்யும் பத்திரிகைகளெல்லாம் கவலைப்படாம விருப்பதற்கில்லை தலைவர்களும், விசிட்டர்களும், மாட்டுவண்டிகளிலும், கால்நடையாகவும்வந்து கொண்டிருக்கிறார்கள். 22-ந் தேதிக்குள்ளாகவே எல்லோரும் வந்து சேர்ந்துவிடுவார்கள். 23-ந் தேதி காங்கிரஸ் தலைவர் பண்டிதர் வந்து சேருவார். நமது தலைவருக்கு வேண்டிய மரியாதைகளெல்லாம் குறைவாகவேதான் நடக்கும். சிறைக்கம்பிகளுக்குள்ளே கிடக்கும் நமது தலைவர்களெல்லாம் வெளியிலிருப்பார்களானால் வரவேற்பு வைபவங்களெல்லாம் வெகு விமரிசையாக நடக்கும். சிறப்புர நடவாமைக்குக் காரணம் அன்னிய ஆக்ஷிதானென்பது ஸ்பஷ்டமாக விளங்கிவிடும். சீமானாகப் பிறந்து சீமானாக வளரும் பண்டிதர் மாளவியா போடும் திட்டங்கள்—தீர்மானங்கள் மிகுந்த அபாரமானவைகளாகவே யிருக்கும். இவ்வருடம் அவர் கலால்போடும் முடிச்சை கையால்கூட ஆங்கிலேயர்கள் களட்ட முடியாதுஎன்பது திண்ணம்.

ரத்தோடு இராணுவத்தை ஒப்படைத்துவிட வேண்டுமெனக் கேட்கின்றேன். எனதுகனவு மெய்ப்படுமோ அல்லவோ அறியேன்,

இந்தியாவுக்கு தன்னை காத்துக்கொள்ள வெகு நன்றாய்த் தெரியும். வீர முஸல்மான்கள் எங்கள் நாட்டைக் காப்பார்கள்; பிறர்படையெடுக்க வொட்டாது தடுப்பார்கள். சீக்கியர்களை எதிர்க்க யாரால் முடியும்? கூர்க்கர்களுக்கு தேசாபிமானம் ஊறிவிட்டால் "நான் தான் என் நாட்டைக்காப்பேன்" எனத்தோள் தட்டிப் பாதுகாப்பர். எங்கள் நாட்டு ராஜபுத்ரர்களின் வீரத்தைப்பற்றி கேட்பானேன்! இவர்களெல்லாம் எங்கள் நாட்டை வெகு நன்றாய்க் காக்கும் வீரர்களாவார்கள். ஆதலால் இந்திய இராணுவத்தை இந்திய மயமாக்கி இந்தியர்களிடமே ஒப்படைத்து விடவேண்டும்.

கேலிசெய்கிறாரா என்ன?

எத்தனை நாளைக்குத் தான் இந்தசோமசுந்தரத்தைக் கட்டி மாரடிக்கிறது; எவ்வளவோ சொல்லிபார்த்தோம்; கொஞ்சமும் உறைக்கவே இல்லை. இப்பொழுது துணைக்கு ஆளத் தேடுகிறாருக்கும். வேறு டிரஸ்டிகள் நியமிப்பாராம். அதற்குள் பழைய 15 வருடக்கணக்குகளையும் ஒழுங்குப்படுத்தி விடவேண்டாமா? ஒருமாமாங்கத்திற்குமேலாக டிரஸ்டிகள் இடம் காலிதானே! அதற்கு இப்பொழுதுவந்த அவசரம் என்ன? பணம் வரவு செலவு தானே நமக்கு முக்கியம். அதை விடுத்து வேறுவழியாய் பாய்கிறாரே. நமது பிள்ளையோ லாயரல்லவா? அவருக்கு எல்லாத் தந்திரங்களும் தெரியத்தானே செய்யும், கணக்கு பரிசோதகர் யாதாஸ்தில் கணக்கு ஒழுங்காய் வைக்கப்படவில்லை என்று சொல்லியிருப்பது வாஸ்தவந்தானா? பக்கிரி என்ற ஒரு பேர் வழியே எல்லா வவுச்சர்களிலும் கையொப்பம் வைத்திருக்கிறாராமே! அதில் ஏதேனும்உண்மையுண்டா? சமீபத்தில் நடந்த சுடுகாட்டுக் கூட்டத்தில் ஸ்ரீமான் பிள்ளை கனம் சாமி அய்யரும் கனம் சண்முகம் முதலியாரும் கணக்குகளுக்குப் பொருப்பென்று தெரிவித்தாரே! ராஜினாமாச் செய்துகொண்ட டிரஸ்டிகளுக்கும் இந்தப்பாளாப்போனகணக்குக்கும்என்ன சம்பந்தம்என்பதை நாம் அப்பொழுதே அறிவோம். இந்த மாதிரிப் பூச்சாண்டி எத்தனை காலம் நடக்கும். ஒருவரை பலகாலும் ஏமாற்றலாம்; பலரைச்சிலகாலம் ஏமாற்றலாம்; எல்லோரையும் எல்லா காலங்களிலும் ஏமாற்றமுடியாதென்பதை நமது பிள்ளை உணர்ந்து கோர்ட்டுத் திறப்பதற்கு முன் கணக்குடன் வெளிவரும்படி மீண்டும் எச்சரிக்கிறோம்!

அவர்பால் அனுதாபமுள்ள சகோதரர்களே! பின்னால் நம்மை குறைகூறுவது பிரயோஜனமில்லை. பாவம்! அவனால் கெட்டான், இவனால் கெட்டான் என்று கூறினால் நாம் அதற்கு ஆளாகமாட்டோம்.

தேசோபகாரி
(வாரம் இருமுறை)

வருட சந்தா (இரங்கோன்)	ரூ	3	0	0
6 மாதம் ,,	,,	1	8	0
வருட சந்தா வெளியூர்)	,,	4	8	0

'சர்க்கார் கும்பிடு'

திங்கட்கிழமை தோறும் பர்மா சிறைகளில் ஒரு தர்பார் நடப்பதுண்டு. அதற்கு மேல் பார்வை என்று பெயர். சிறை மேலதிகாரி ஒரு அரசனைப்போல் முன்னேயும், பின்னேயும் பரிவாரங்கள் சூழ இரு மருங்கிலும வரிசையாக நிற்கும் கைதிகளைப் பார்வையிடுவதாக அந்த சம்பிரதாயம் அனுஷ்டிக்கப்படுகிறது. கைதிகள் சிறை சூப்ரெண்டெண்டைப் பார்த்தவுடன் ''சர்க்கரர் கும்பிடு'' (இருகைகளையும் மேல் தூக்கிக்கொண்டு) என்று வணங்கவேண்டும்.

இந்த ஜபர்தஸ்து ராஜிய கைதிகளுக்கு வெகு அருவருப்பானது, ராஜீய கைதிகளில் பெரும்பாலோர் சமூகத்தில் நல்ல ஸ்திதியில் இருப்பவர்கள்; அறிஞர்கள்; குணாதிசயமுள்ளவர்கள், திருடிவிட்டோ, கொலை செய்துவிட்டோ சிறைக்கோட்டம் புகுந்தவர்களல்ல; (நாமும் நமது நண்பரும் சிறைசென்றிருந்தபோதுங்கூட அவர்கள் அமளியைமீறியதற்காகவே எங்களை வெவ்வேறு சிறைகளுக்குஅனுப்பிவிட்டார்கள்). ஆதலாலேயே இந்த அதிகார அமளியை ஒரு சிலர்விரும்புவதில்லை. ஜெயில் சட்டங்களை மீறுவதற்கும் இஷ்டப்படாமல் ஆனால் இத்தகைய அவமானப்படுத்தும் கோலாகலத்தில் பங்கு எடுத்துக்கொள்ளாமல் வரிசையில் ராஜிய கைதி மௌனமாக நின்றுவிடுகின்றான்! கைதிக்கு வேண்டிய தேவைகளையோ இதர அசௌகரியங்களையோமேலதிகாரிக்குத் தெரிவித்துக்கொள்ளுவதற்காக பார்வைகள் நடைபெறுகின்றன. ஆனால் இந்த அவமானகரமான முறையில் தெரிவித்துக்கொள்ள ராஜிய கைதிவிரும்பதில்லை,

இதை முன்னிட்டு 25 வருடங்கள் தண்டனையடைந்த அமிர்தஸிங் என்பவரைக்குற்றஞ் சாட்டிக் கொட்டடியில் அடைத்திருப்பதாகச் சமீபத்தில் விடுதலையடைந்த ஒரு பர்மிய கைதி நமக்குத் தெரிவிக்கிறார். அப்படியானால் இந்த அநாகரீக முறைகளை இன்னும் மேலதிகாரிகள் நடத்திச் செல்வார்களானால் அவர்களை மனிதர்களாக எண்ணுவதற்கில்லை.

சிப்பாயின் கிரம மீறிய செய்கை.

எத்திசையை நோக்கினும் போலீஸ்காரர்களின் கிரமமீறிய செய்கையாகவே யிருக்கிறது சர்க்காரும் அவர்கள் பக்கமிருத்தலாலேயே நாளுக்கு நாள் அவர்களது அக்கிரமங்கள் வளர்ந்துகொண்டே வருகிறது. போலீஸ்காரன் செய்த குற்றத்தை பத்திரிகைமூலம் தெரியப்படுத்தினாலும்கூட மேலதிகளோ சர்க்காரோ பராமுகமாயிருந்துவிடுகிறது. போலீஸ்காரன்கிரம மீறிச்செய்தகுற்றத்திற்கு கோர்ட்டுமூலம் வழக்குத் தொடரினும் நீதிபதியும் வழக்கைதள்ளிவிட்டு விடுகிறான். ஒருவன் செய்த குற்றத்திற்காகநீதிபதியால் எவ்வளவுகடுமையாகத் தண்டிக்கப்படுகிறானோ; அதே போன்றுகுடிகளிடம்சண்டைசச்சரவு நேரா வண்ணம் பாதுகாக்கும்பொருட்டு களைக்கப்புகள போன்றுநிறுத்தப்பட்டிருக்கும்போலீஸகாரர்கள் செய்தகுற்றத்தையும்பாரபக்ஷமின்றி பார்த்து தண்டிக்கப்படுவார்களானால் சட்டத்தைமீறியகுற்றங்களைச்செய்யத்துணியார்கள்நேற்றுமுன் தினம் நாமும் நண்பரிருவரும் பிரேசர்வீதிவழியாகச் சென்று கொண்டிருக்கும்போதுபிகாண்டட் வீதி 47வது கல்விமுனையிலுள்ள பர்மாபோலீஸ் சப்ளை ஆபீஸ்க்கு அருகாமையில் வந்தோம். ஆங்கிலேயரால்கௌரவமானஉடைகளாகக்கருதப்படும் (சூட்டு) கால்ச்சராயுடன் இந்தியரொருவர் போலீஸ் சப்ளை ஆபீஸ்க்கு முன்னுள்ள அஞ்சடி வழியாய் வந்துகொண்டிருந்தார். அங்கு சிப்பாய் முறுக்கில் நின்றுகொண்டிருந்த மிலிட்டரிகாரன் வந்தவரைப்பார்த்து ''ஏ, ரஸ்தா நைகே; உஸ்த்ரப் ஜாவ்!'' என்று கையிலிருந்த துப்பாக்கியை எடுத்து கீழே ஒரு குத்து குத்தினான். பாவம்! அவருக்கு வெட்கமாகிவிட்டது மிலிட்டரிக்காரனை விரைக்கப்பார்த்து நானென்ன நாயா? நீ எதற்காக இந்தவழியாகச் செல்லக்கூடாதென்பதுடன துப்பாக்கியையும் ஒரு இடி இடித்தாய் மேலதிகாரிகளுக்கு தெரிவிக்கின்றேனென்றார். மிலிட்டரியானோ முகம் சிவக்க நீ என்ன செய்வதானாலும் செய்துகொள் நீ இந்த இடம் விட்டு அகன்று விடு இல்லையேல் இப்பொழுதே உன்னைப்பிடித்துக்கொடுத்து விடுவேன் என்று தாறுமாறாகச் சிப்பாய் முருக்கில் பேசினான். கூட்டமும் அதிகரித்து விட்டது. சிப்பாயிடம் தாறுமாறாகப்பேச்சு வாங்கிய இந்தியர்மே

வேறு எந்த நாட்டிலேனும் உண்டா?

நாட்டின் செல்வம், உணவுப் பொருள்கள், மக்களின் வீரம் கலைஞானம் முதலிய யாவும் அந்த நாட்டுக்கு உதவியாக இல்லாமற் போயினும், போதாக்குறைக்கு தீங்கு விளைவிக்கும்—எதிர்க்கும் தன்மை—இந்தியாவிலன்றி வேறு எந்த நாட்டிலேனும் இருக்கிறதாக எவரேனும் கூற முடியுமா? இப்படிப்பட்ட இழிவான நிலை இந்தியாவில் ஏற்பட்டதனால்தான் இந்தியா அன்னியருக்கு அடிமைப்பட்டது. இன்னும் அந்த நிலையிலிருப்பதினால்தான் அடிமைத்தனத்தினின்றும் மீளாமல் தத்தளிக்கிறது—உழல்கிறது.

இந்தியாவில் எவ்வளவோ செல்வம் இருக்கிறது அவற்றில் பெரும்பாகம் நமது நாட்டின் விடுதலைக்கு பயன்படவில்லை. அத்துடன் போகிறதா? நமது விடுதலைக்கு எதிராகவும் நிற்கிறது— உபயோகப் படுத்தப்படுகிறது— கொடுக்கப்படுகிறது. நம்மைக் கொல்லும் கருவிகள் செய்ய அந்தப் பணம் உபயோகப்படுகிறது. நம்மை அடைத்துத் துன்புறுத்தும் சிறைக்கூடங்களும், அடக்கியாளும் போலீஸ் உத்தியோகப் பெயர்வழிகளும் நமதுபணம்—செல்வத்தைக்கொண்டே சிருஷ்டிக்கப்படுகின்றன. கொடிய பீரங்கிகளும், ஆகாய விமானங்களும், யுத்தக் கப்பற்படைகளும் நமது செல்வத்தாலேயே நிர்மாணிக்கப்படுகின்றன. இந்த நிலை எந்த நாட்டிலேனும் உண்டா? நம் நாட்டின் செல்வம் நமது விடுதலைப் போராட்டத்திற்கு பயன்படாமல்மட்டுமா போகிறது. நம்மைப் பழிவாங்கவும், நமது விடுதலைப்போரை அழிக்கவும், அதிகாரவர்க்கம் நம்மைஎதிர்க்கவும் உபயோகிக்கப்படுகிறது. நமக்கு நமது நாட்டுச் செல்வம் உதவியாக இல்லாவிடினும், எதிர்ப்பாக இல்லாமலேனும்இருக்கக்கூடாதா? சுதந்தர நாடுகளில் இந்த நிலைமையைப்பற்றியறிய சரித்திரங்களையும் புரட்ட வேண்டியதில்லை. அடிமைப்பட்டுக்கிடந்த எந்த நாட்டுச் சரித்திரத்திலும் இப்பொழுது இந்தியாவிலிருக்கும் நிலைமையைக் காண்பதரிது. சீன வாசிகள் எவ்வளவு அபினி ஊட்டப்பட்டார்களெனினும் நமது இந்தத் தாழ்ந்த நிலையில் இருந்து விடவில்லை. ஈஜிப்ட்டில் இந்த நிலையில்லை. பிலிப்பைன் தீவுகளிலும் இல்லை. ஜப்பான் கொடுங்கோலரசு புரியும் கொரியாவிலும் இந்த நிலையில்லை. இந்தியாவிலன்றி வேறெந்த நாட்டிலும் இல்லவே இல்லை.

இந்தியாவில் வீரம் இருக்கிறது. நல்ல புஜபலமுள்ள வீரர்கள் இருக்கின்றனர். இந்தியா அடிமைப்பட்டுக் கிடப்பதற்கு காரணம் வீரர்கள் இல்லை என்பதனாலல்ல. இந்தியாவின் வீரம்—வீரர்கள் நமது நாட்டின் க்ஷேமத்திற்குப் பயன்படவில்லை. நமது நாட்டின் விடுதலைக்கு உபயோகப்படவில்லை, உதவியாக இல்லை என்பது மாத்திரமல்ல, நமதுநாட்டின் விடுதலைக்கு எதிர்ப்பாகவும் இல்லாமல்போகவில்லை நம்மை அடக்கியாளும் வர்க்கம் நமது நாட்டு வீரமக்களைக் கொண்டுதான் நம்மை அடக்கி ஆளுகிறது. அதுமாத்திரமா? நம்நாடு அடிமைக் குழியில் வீழ்த்தப்பட்டதும் நமது நாட்டுமக்களின் வீரச் செயல்களால்தான். இந்தியாவை ஆங்கிலேயர் தங்கள் வீரத்தால் கைப்பற்றிவிடவில்லை இந்தியச் சிப்பாய்களைக் கொண்டு—இந்திய வீரர்களைக்கொண்டுதான் —இந்தியாவைக் கைப்பற்றினர். இந்தியமக்கள் அப்பொழுது தங்கள் வீரத்தை சிலவெள்ளிக்காசுகளுக்காக வெள்ளையர்களுக்குத் தங்கள் வீரத்தை விற்றுவிட்டனர். சில காசுகள் மாதா மாதம் கிடைப்பதற்காக இந்தியாவையே அடிமைப்படுத்திக் கொடுத்தனர். அவர்களும் சேர்ந்து அடிமையாயினர்.

இந்தியாவில் எண்ணற்ற பொருள்கள் உற்பத்தியாகின்றன. அவைகள் இந்தியர்களுக்கு எவ்வளவுதூரம் பயன்படுகின்றன? தானியங்கள் ஏராளமாக் உற்பத்தியாகின்றன. அன்னிய நாடுகளுக்குமூலப்பொருள்களாகவே ஏற்றுமதியாகின்றன. இந்தியர்களும், பர்மியர்களும் பட்டினிக்கிடக்கின்றனர். இங்கிருந்து செல்லும் பொருள்களே, வேறு ரூபத்துடனும், வேறு பெயருடனும் திரும்ப வந்து இந்திய பர்மிய மக்களுடைய பணத்தைக் கொள்ளைகொண்டு போகின்றது. இந்தியாவிலும், பர்மாவிலும் நிலக்கரி, மண் எண்ணை உலோகவகைகள் உற்பத்தியாகின்றன. அதன் பயனில் 100-க்கு 99 பாகத்தை அன்னியர்கள்,

பாஞ்சாலமே!

முற்காலத்திலும் சரி; தற்காலத்திலும் சரி நீ சிறப்புடைத்தாய், உனது முற்காலபெருமையை அளவிடுதற்கரிது. தற்காலபெருமையும் அதற்கு குறையவில்லை. 1857-ல் நடந்த சுதந்திர யுத்தத்தின்போதும் நீ சிறிது மாயைவசப்பட்டாய்—தர்மத்தைகைவிட்டாய்—நாட்டிற்கு சிறிது துரோகம் செய்தாய்—நீமாத்திரம் சற்று விழிப்புடன் 1857-ல் தர்மத்தைக் கொண்டிருப்பையேல், இந்தியத் தாய் அப்பொழுதே விடுதலை பெற்றிருப்பாள்—இன்றைக்கு உலகத்திற்கே திலகமாய் விளங்குவாள். வீர மக்களைக்கொண்ட நீ அப்பொழுது சிறிது துரோகம் செய்ததாலன்றோ இந்தியா மறுபடியும் அன்னியர் ஆட்சிக்குட்பட்டது. "நீலன்" போன்ற ஆங்கிலர்கள் எத்தனையோ இந்தியமக்களை சித்திரவதை செய்தனர்—நம் தாய்மார்கள் கற்பையும், உயிரையும் இழந்தனர்—நம் பழமை கிராமங்கள் அழிந்தன. நீ மட்டும் துரோகம் செய்யாதிருந்தால் இவையெல்லாம் நடந்திரா. 1857-ல் இந்தியாவின் விடுதலைக்குஉதவி செய்யாமல்மட்டும் போகவில்லை அந்நியக் கம்பெனி அரசாங்கத்திற்கு (1858 வரை இந்தியாவை ஆட்சிபுரிந்தவர்கள் சில வெள்ளை வியாபாரிகள்தான்) உன் கண்ணையே நீருக்கிக் கொண்டாய். அதற்குப் பிராயச்சித்தமாகத் தான் 1919-ல் பஞ்சாப் படுகொலை நடந்தது போலும். இந்தப் பிராயசித்தம் பிறரின் வற்புறுத்தலால் நடந்ததன்று. நீயாகவே வலிந்து விடுதலைப் போரில் முன்னணியில் நின்று பெற்றுக்கொண்டாய். 1919-ல் விடுதலைக்காக எவ்வளவு இரத்தம் சிந்தினாய்—வீரர்களை இழந்தாய்—பெண்கள் கற்பழிக்கப்பட்டனர்; இதுமாத்திரமா? விடுதலைக்காக "கதர் கட்சி" யார் (கதர்என்றால் பரிசுத்தம், சத்தியம் என்ற பொருள் பொருந்தும். அதனால்தான் கையால் தயார்செய்யப்படும் துணி என்று பொருள் கொடுக்கப்பட்டது.) என்ற உனது வீரமக்கள் எத்தனையோபேர் தூக்கு மேடையிலேறி புன்முறுவலுடன் உயிரை விட்டனர். இன்னும் எத்தனையோ பெயர்கள் சிறையிலும், அன்னிய நாட்டிலுங்கூட கிடந்து வாடுகின்றனர். பாஞ்சாலமே! 1857-ல் சிறிது தவறு செய்தாயாயினும் கடந்த இரண்டு வருடத்திற்குள் எவ்வளவோ தியாகம் செய்துவிட்டாய். வீரர்களினும் ஒரு சிலரை தியாகம் செய்துவிட்டாய். நேற்றுக்கூட ஸ்ரீமதி மோதிலால்நேரு அடிபடுவதற்கு—மண்டையில் இரத்தம் சிந்துவதற்கு இடங்கொடுத்துவிட்டாய் எனினும் அதிகார வர்க்கத்தின் அட்டூழியங்கண்டு அஞ்சி ஒடுங்கிவிடவில்லை. உனது மக்கள் தர்மத்தை உணர்ந்து கையாள ஆரம்பித்துவிட்டனர். ஏனைய மாகாணங்களும் உன்னைப் பின்பற்றிச் செல்ல ஆரம்பித்துவிட்டது. பாஞ்சாலியின் கண்ணீர் வீண்போகவில்லை. உன்னால்தான் இந்தியா விடுதலை யடையவேண்டும். அந்தப் புண்ணிய கைங்கர்யத்தை தலைமைவஹித்து நடத்துவதற்காகவே வருட தேசியமகாசபைக்கு முடிசூடா மன்னன் மோதிலால்நேரு தலைமைவஹிக்கப் போகிறார் அப் புண்ணிய கைங்கர்யத்தைப் பண்டிதர் தலைமையில் சித்திபெறச் செய்வாயாக!

அடைகின்றனர். அவைகளே இந்திய பர்மிய மக்களை வதைக்கும் கொலைக்கருவிகளாகமாறுகின்றன. இந்தியா பர்மா உற்பத்திப் பொருள்கள் சொந்த மக்களுக்கு உதவியாகத்தான் இல்லை எனில், தீங்கு விளைவிக்காமலாவது இருக்கலாகாதா? தீங்கும் விளைவிக்கின்றது. இதற்குக் காரணம் அன்னியர் ஆட்சியே. அன்னியர் ஆட்சி வலுத்துவிட்ட எந்த நாட்டிலும் அப்படித்தானிருக்கும். அன்னியஆட்சிஒழிந்தாலொழிய இந்த பொருளாதார நிலை சீர்பட முடியாது.

படித்த நிபுணர்களும், பெரிய ராஜதந்திரிகளும் இந்தியர்களில் இருக்கின்றனர். எனினும் அவர்களிற் பெரும்பாலோருடைய படிப்பும், அறிவும் நமது விடுதலைப் போராட்டத்திற்கு உதவவில்லை—உதவிசெய்யாமல் மாத்திரம்போகவில்லை—நமது விடுதலைப்போராட்டத்திற்கு எதிர்ப்பாகவும் நிற்கின்றனர். கேவலம் பட்டத்திற்கும், பதவிக்கும் ஆசைப்பட்டு நம்மை ஆட்சிசெய்யும் அன்னியர்களுக்கு உதவியாக இருக்கின்றனர். கேவலம் ஒரு கைக்கூழுக்காக நாட்டைக் காட்டிக்கொடுக்கின்றனர். இத்தகையவர்கள் நமது விடுதலைப்போராட்டத்திற்கு உதவிசெய்யாவிடினும் எதிர்க்காமலும், துரோகஞ் செய்யாமலும் இருக்கக்கூடாதா? வேறு எந்தநாட்டிலேனும் ஏற்படுமா? இந்தியாவின் துர்அதிஷ்டம் இப்படி இருக்கிறது.

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுஎண் 245] (1922-ஷு ஸ்தாபிதம்.) 7 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இரு முறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஷு (24-4-32) சித்திரை-மீ 12உ ஞாயிற்றுக்கிழமை

பஞ்சமர் முன்னேறும் வழி!

ஸ்வாமி விவேகானந்தர் பஞ்சமர்களை "தாழ்த்தப்பட்ட வகுப்பினர்" என அழைப்பது வழக்கம். விவேகானந்தரிட்ட இந்தப் பெயர் மிகவும் சரியானதே. அவர்களை நாம் தாழத்திவிட்டதன் மூலமாக நம்மையே நாம் தாழ்த்திக் கொண்டிருக்கிறோம். "பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் பறையர்களாக நாமிருந்து வருகிறோம்." என்று கோகலே சொன்னது எந்த விதத்தில் தவறானது? "தன் வினை தன்னைச் சுடு" மல்லவா? நாம் ஒருவகுப்பினரைத் தாழ்த்தியதால் பிறர் நம்மைத் தாழ்த்தும்படி கடவுள் ஆக்ஞாபித்து விட்டார். "அவர்களுக்காக நீங்கள் என்ன செய்துவிட்டீர்கள்?" என்று ஒரு நிருபர் என்னைக் கேட்கிறார். "நம்மைச் சரியாக நடத்தும்படி ஆங்கிலேயரைக் கேட்பதற்கு முன்பு ஹிந்துக்களாகிய நாம் நமது இரத்தம் தோய்ந்த கையைக் கழுவிக் கொள்ள வேண்டாமா?" (அதாவது தீண்டாமையை ஒழிக்க வேண்டாமா) என்றும் அந் நண்பர் கேட்கிறார். இந்தக் கேள்வி நல்ல கேள்விதான். அடிமை ஜாதியைச் சேர்ந்த ஒருவன் தன்னை அடிமைத் தனத்தினின்றும் நீக்கிக்கொள்ளாமல் தாழ்த்தப்பட்ட மக்களை அடிமைக் குழியினின்றும் கைதூக்கி விடுவது சாத்தியமானால், அதை நாம் இன்றே செய்துவிடுவோம். ஆனால் அது சாத்தியமானதல்ல. நியாயமான ஒரு காரியத்தைச்செய்யும் உரிமை கூட அடிமைக்கு இல்லை. வெளிநாட்டுச் சாமான்களின் இறக்குமதியைத்தடுப்பது எனக்கு ரொம்ப சரியெனப் படுகின்றது; ஆனால் அதைச் செய்ய நமக்கு அதிகாரமில்லை. உண்மையான தேசிய சட்ட சபை ஒன்று இந்தத் தேசத்தில் இருக்குமானால் தாழ்த்தப்பட்டவரின் உபயோகத்துக்காக மட்டும் பிரத்யேகமான, நல்ல கிணறுகளை வெட்டியும், அவர்களுக்காகப் பிரத்தியேகமான பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தியும், ஹிந்துக்களின் அவமதிப்புக்கு நாம் சரியான பதிலளிப்போம். ஆனால் அந் நன்நாளுக்கு நாம் இன்னும் காத்திருக்க வேண்டும்.

அது வரையில் தாழ்த்தப்பட்டவர்களை நாம் நிர்க்கதியாக விட்டு விடுவதா? கூடாது. பஞ்சம சகோதர, சகோதரிகளின் நிலையை உயர்த்த எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவையும் நாம் செய்து வருகிறோமா? தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு மூன்று வழிகளிருக்கின்றன. ஒன்று பொறுமையின்மை காரணமாக அவர்கள் அடிமைத் தனத்தைக் கட்டியணைக்கும் அரசாங்கத்தினரை உதவிக்கழைக்கலாம். அவர்களுக்கு உதவி கிடைக்கும். ஆனால் அது எரியும் கொள்ளியில் எண்ணெய் வார்த்தது போலவேயிருக்கும். இன்று அவர்கள் அடிமைகளினும் அடிமைகள். ஆகவே அவர்கள் சர்க்காரின் உதவியை நாடினால், தங்களைச் சேர்ந்தவர்களை நசுக்கவே சர்க்கார் அவர்களை உபயோகித்துக் கொள்ளும். இந்தப் பாபம் தாழ்த்தப்பட்டவர்களையே சாரும். முஸல்மான்கள் இம்முறையைக் கையாண்டு பார்த்து தோல்வியுற்றனர். சீக்கியர்களும் இதை ஒரு கை பார்த்தனர்; ஆனால் வெற்றி கிட்டவில்லை இனி எதற்கும் சர்க்காரின் உதவியைக் கோருவதில்லை என இன்று வைராக்கியம் கொண்டுள்ளவர்களில் முக்கியமானவர்கள் சீக்கியர்தான். இத்தகைய பதவிக்குச் சென்றதால் முன்னிடத்

பஞ்சமர் முன்னேறும் வழி!

தங்கள் நிலைமை கேவலமாகி விட்டதென்பதை அவர்கள் உணர்ந்துகொண்டு விட்டனர். ஆதலால் சர்க்காரின் உதவி இதற்கெல்லாம் நிவர்த்தி யளிக்காது.

இரண்டாவதுவழி என்னவென்றால் ஹிந்து மதத்தையே விட்டொழித்து, இஸ்லாமிய மதத்தையோ அல்லது கிறிஸ்துவமதத்தையோ தழுவி விடுவது. உலக நன்மைக்காக ஒருவர் ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்துக்குச் செல்வதென்றால் தயக்கமின்றி அங்ஙனஞ்செய்யும்படி நாம் சொல்லுவோம். ஆனால் மதமென்பது ஹிருதயத்தைப் பற்றியது. எந்த சொந்த கஷ்டங்களுக்காகவும் ஒருவர் தமது மதத்தை விட்டு விடுதல் கூடாது. பஞ்சமர்களைக் கொடுமையாக நடத்தவேண்டுமென ஹிந்து மதத்தில் கூறியிருக்குமானால் அதை நிராகரித்து விடவேண்டியது கடமை யாகும். மதத்தின் புனிதமான பெயரால் செய்யப்பட்டு வரும் எத்தனையோ தீங்கான காரியங்களை நாம் கண்டிக்காதுவிடுவதால் இவ்விஷயத்தில் நமது கடமையைச் செய்யாதவர்களாகிறோம்.

ஆனால் தீண்டாமை என்பது ஹிந்து மதத்தின் ஓர் பகுதியல்ல என்பது எனதபிப்பிராயம். ஹிந்து மதத்தின் நற்பெயரை இது கெடுத்து வருகின்றது. ஆகவே எத்தகைய முயற்சியையும்செய்து இதை நாம்போக்கவேண்டும். இம்மாசை நீக்கிப்போட ஹிந்து மதச் சீர் திருத்தக்காரர்களில் எத்தனையோ பேர்கள் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால் மத மாற்றமும் நிவர்த்தியல்ல என்பதைக் குறிப்பிடுகின்றேன்.

மூன்றாவது மார்க்கம் தன்னுதவி. பஞ்சமர்களல்லாதார் தங்கள் கடமையை அறிந்து எவ்வளவு உதவியைத் தாங்களாகவே அளிப்பார்களோ அவ்வளவையும் பெற்றுக்கொண்டு தம்மைத் தாமே சார்ந்து நிற்றல் தங்களை மனிதத் தன்மைக்கு விரோதமாக நடத்துவதைக் கண்டிக்கும் முறையில், தங்களது முக்கியமான குறைகள் நீக்கப்படாத வரையிலும் மற்ற ஹிந்துக்களுடன் எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்ளுவதில்லையெனப் பஞ்சமர்கள் கட்டாயமாகச் செய்யலாம். ஆனால் இதை ஒழுங்காகவும், கட்டுப்பாடுடனும் செய்யவேண்டும். இந்த ஒத்துழையாமை மூலமாக பஞ்சமர்களுக்கு வெற்றி யுண்டாகும் வகையில் அவர்களை நடத்திச் செல்லக் கூடிய தலைவர் அவர்களுக்குள் எவருமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

ஆகவே இங்கிலையில் பஞ்சமருக்குச் சிறந்தவழியாதெனில், தற்போதுள்ள கவர்ன்மெண்டாருக்கு நாம் அடிமைகளாயிருந்து வரும் தன்மையை ஒழிக்க நாட்டிலே நடந்து வரும் பெருமிதமான தேசிய இயக்கத்தில் முழு மனதுடன் அவர்கள் சேர்ந்து கொள்ளுவது தான். சர்க்காருடன் நாம்போர்புரிவதென்றால் ஹிந்துக்களும், பஞ்சமர்களும் ஒற்றுமைப்படவேண்டியது மிக, மிக அவசியம்.

காந்தியின் தமாஷ்!

மகாத்மாவுடன் நெருங்கிப் பழகுகிறவர்கள் அவரது இணையற்ற "தமாஷ்" மிட்டாய்களைத் தின்று இன்பமனுபவிக்கின்றனர். இடி இடி என்று சிரித்துக்கொண்டு, தமது பொக்கைவாயைக் காட்டிக்கொண்டு வேடிக்கைத் துணுக்குகளை வெளியிட்டுப் பேசுவதில் காந்திஜி வெகு சமர்த்தர். லண்டனிலுள்ள குழந்தைகளும, ஸ்திரீகளும் மகாத்மாஜி மீது அத்யந்த பிரியம் காட்டுவதற்கு இதுவே காரணம். எவ்வளவு கடுமையான வேலையின்மத்தியிலும் அவரது கொள்ளைச் சிரிப்புக்கும், தமாஷுக்கும் அவர் லீவு கொடுப்பதில்லை. அன்றொரு நாள் மிஸஸ் யூஸ்டேஷ் மைல்ஸ் காந்தியுடன் பேசிக்கொண்டிருக்கையில், "மகாத்மாஜி உங்களுக்கு எப்பொழுதாவது கோபம் வருவதுண்டா?" என்று வேடிக்கையாகக் கேட்டாள் "மிஸஸ். காந்தியை (மகாத்மாவின் மனைவி) யைக் கேளுங்கள், அவள் பதில் சொல்வாள்" என்று கூறிக் காந்திஜி சிறித்தார். "உலகத்தில் நான் எல்லோருடனும் நன்றாக நடந்து கொள்வதாகவும், ஆனால் அவளிடம் மாத்திரம் கோபங் காட்டுகிறேனென்றும் அவள் சொல்வாள்" என்று. மேலும் மகாத்மா சொன்னார். மிஸஸ் மைல்ஸ் தாங்கமுடியாத சிரிப்புடனேயே, "என் புருஷன் என்னைக் கோபித்துக்கொள்வதே கிடையாது" என்றாள். "அப்படியானால் உங்களுக்கு அவர் நிறைய பணத்தைக் கொடுத்து உங்களை மயக்கி விட்டார் போலும்!" என்றார் காந்திஜி. பக்கத்திலிருந்த எல்லோரும் இந்தத் தமாஷை அனுபவித்தார்கள்.

பழையசாத்தனே! சாத்தன்!

போன வருஷம், எந்த முட்டாள்பயலோ இந்தியர்கள் பர்மாவுக்கு வந்து தனவந்தராயிருக்கவும், பர்மியர் ஏழையாய்ப் போனதற்கு காரணம், திருத்திக் கூறிவிட்டான். அதன் சார்பாக நாடுகளில் நடந்த அனியாயங்களை சொல்வதற்கு விரிவாகும். இந்தியருடைய வீடுகளும், வைக்கோல் போர்களும் அக்கினிக் கிரையாயின, விஷமிகளைப் பற்றி எவ்வளவு தெளிவாகப் பிரியாது செய்திருந்த போதிலும் ராஜாங்கத்தார் தக்கபடி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை அதுபற்றி பின்னால் நொண்டிச் சமாதானங் கூறப்பட்டது. விஷயந் தெரியாத ஜனங்கள், செயாசானையே காரணஸ்தனென்று நம்பினார்கள். அது எப்படியாயினும் இனிமேல் தக்க பாதுகாப்பு அளிக்கப்படுமென சட்டசபைகளிலுங் கூறப்பட்டது. இந்தியா கெவர்ன்மெண்டும் ஒத்துக்கொண்ட முறையிலிருந்து விட்டது இந்தியாவிற்கு பயந்து ஓடின ஜனங்களுந் திரும்பிவந்தனர். முடிவில் என்ன ஆச்சு. பழய குருடி கதவைத் திற! என்றபடி சவுட்டான், தோங்குவா முதலிய பக்கங்களில் இந்தியருடைய வீடுகளில் கொள்ளையுங், கொலையும், வைக்கோல் போர்களில் தீவைத்தலும் மிகுந்துவிட்டது. ராஜாங்கமோ! மவுனஞ் சாதிக்கிறது. ஏழை இந்தியரின் உயிர். திரணமாய்ப் பாவிக்கப்படுகிறது. போலீஸ் புலிகளின் ஆரவாரம் மிகுந்திருக்கிறது. உண்மையைக் கண்டுபிடிப்பதற்கில்லை. தட்டிக் கேட்கநாதியுமில்லை. இந்நிலையில் நமது செட்டியார்களுக்கு சொந்தமாகிய நிலங்களில் இருப்பவர்களைத்தான் இம்சிக்கப்படுகிறார்கள். அவர்களாவது, தாங்கள் நட்பாற்றிக்கொண்டிருக்கும் கனவு கண்டுகொண்டிருக்கும் ஆங்கில மேதாவிகளின் மூலமாவது, கலகங்களை விசாரித்தறிய முற்படுகிறார்களா? அவர்கள் அப்படியிருக்க உரிமை யுண்டு ஆனால், நாம் ஒன்று சொல்வோம். எந்த இந்தியனும் செட்டிகளுக்கு சொந்தமாகிய நிலங்களை பயிரிடுதல்பற்றி தீர்க்கமாய் யோசித்துச் செய்யவேண்டுமென்பதே! பர்மியர்களும், இந்தியர்களுக்குச் செய்துவரும் இடுக்கண்களுக்குத்தக்க பிராயச்சித்தம் உண்டாகுமென்பது யோர்ந்து நடப்பார்களாக! அரசாங்கத்தாரும் மவுனஞ் சாதிப்பதை விட்டு காரியத்தில் கவனஞ்செலுத்துவாரென நம்புகிறோம். போகப் போக பார்ப்போம்.

ஏட்டிக்குப் போட்டி

ஜி. சி. பி. ஏ. கமிட்டித் தலைவர் ஊ சோத்தெய்ன் சர்க்காரோடு கடிதப் போக்குவரத்து செய்துகொண்டிருந்தது. சமீபத்தில் வெளியாகியிருக்கிறது. அதுபற்றி ஆச்சர்யப்படுவதற்கில்லை நாம் நினைத்திருந்தபடியே பதில் கிடைத்திருக்குமென சந்தோஷப்படுகிறோம். பர்மியப் தலைவர் இனிமேல் எவ்வித ஒத்துழைப்பும் வைத்துக்கொள்வாரென்பது சந்தேகம். ஒரு மாகாணத்தில், அதன் ஏழ்மைக்குத் தக்கபடி வயிற்றுக் கஞ்சிக்கு இல்லாமலும், உடுத்திக்கொள்ளத் துணி யில்லாமலும், ஒட்டி உலர்ந்த ஜனங்கள் இருப்பதிலும் இறப்பது மேலென்று துணிகரச் செயலாற்றுவது இயற்கை. ஆனால் சிற்சில இடங்களில் மிதமிஞ்சிய செய்கைகளையும், நாம் கண்டிக்கிறோம். அவற்றிற்குத் தகுந்த பரிகாரமும் அவர்கள் பெற்றுவிட்டார்கள். சமுதாய முதிர்ந்த இக்கலகம் நாளடைவில் பெரிதாகி அரசியல் ஞானம் பெற்று உழைப்பதற்காகுங் கால் மதபோதனைக் குருக்களையும் ஒப்புயர்வற்ற புத்திமான்களையும் மிதமிஞ்சிய தண்டனைக்குள்ளாக்கியதற்கும், இக்கலகங்களுக்கும் சம்பந்தமுமிருக்கலாம் எனினும்; அரசாங்கத்தார்விடுத்த பதிலில் செயா சான், பெரிய கலகத் தலைவரென்றும் கல்லோரனென்ற காவாடிகளோடு செய்துகொண்ட உடன்படிக்கையின் தலையங்கத்தில் ஜி. சி. பி. ஏ. கூட்டுதலிருந்து செயாசான் வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டிருந்ததென்றும் 1923—28 வருஷங்களிலேயே இக்கலகங்களுக் காதாரந் தேடி இருந்ததென்றும், 1931-ல் அதன் தலைவர் மவுங்ஜி ஞான் ராஜுவப் புலியென்றழைக்கப் பட்டானென்றும், எண்சடா, தாராவாடி, இன்சீன் முதலிய ஜில்லாக்களின் கலகங்களே இதற்காதாரமென்றும் விடுத்துள்ளார். சம அறிவு பெற்ற எவனும் இதனை நம்ப முடியுமா? எவ்வாறாயினும், பர்மியத் தலைவர் பிரிவினை சூட்சிக்கடலிலும்—சமூக அபிவிர்த்திக் கடலிலும் எப்படிக் கப்பலோட்டுவரென்பது பார்ப்போம்?

ஐ. சி. எஸ். பிரிட்டிஷ் சிப்பாய்கள்!

சமீபத்தில் காமன் சபையில் இந்தியாவைப் பெட்டிக்குள் பத்திரமாய் மூடிவைப்பவர்களுள் முதன்மை வாய்ந்த சாமுயல் ஹோர் கொண்டுவந்த அங்கீகாரம் பெற்ற ஈஹுவ வீரரின் ஐ. சி. எஸ். உத்தியோகத்தைப் பற்றி மிஸ்டர் டாகார் அவ்வுத்தியோகங்களுக்கு அநுபவம் வாய்ந்த இந்தியர்களில்லாமலா பிரிட்டிஷ் சிப்பாய்கள் அநுப்பப்படுகிறதெனக் கேட்டார். ஐந்து உயர்தர ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள், இந்திய கவர்ன்மெண்டின் சிபார்சு பெற்றிருப்பதால், யான் இதனை அங்கீகரித்துள்ளேனென்கிறார்.

சாதாரண காலங்களில், நெருக்கடியான சில வேளைகளில் இந்தியா மந்திரி தனது விசேஷ அதிகாரத்தை உபயோகிப்பதற் கேதுவாயிருந்த போதிலும், ஐ சி. எஸ். உத்தியோகத்தாரை நியமிப்பதற்கு சாதாரண நிரந்தர விதிகளையாவது அநுசரித்திருக்கவேண்டும்.

அதாவது ஐ. சி. எஸ் பரீக்ஷை தேறியுள்ள ஒவ்வொருவரும் போதுமான அநுபவம் வாய்ந்தவராகியும், காமன் சபையினரால் அங்கீகரிக்கப் பெற்றவர்களாகிய இவர்கள் தாங்கள் நிர்வகிக்கப்புகும் மாகாண நிலைமைகளையும் சட்ட திட்டங்களையும் அறிந்திருப்பதோடும் மாகாணத்திய சர்க்காரின் அநுமதியும் பெற்றிருக்க வேண்டும் என்ற கருத்தடங்கி இருக்கிறது. இதனின்று நமது மந்திரியாரின் பதில் யோசியாமலே தெரிகின்றதல்லவா? ஐந்து ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களின் வேண்டுகோளுக் கிணங்கி ஒரு தேசத்தினரை அவமதிப்பதற்கான தன்மையிலும், துருப்பிடித்த சட்டங்களால் நிருவகிக்கிறோமென்ற சமயோசித வார்த்தைப் புலிகளாகிய இவர்கள் சுயநலம் தெரிந்ததுதானே! நமது மந்திரி பாடும் பாட்டிற்கு டேப்பு அடிப்பதற்கு வங்காள கவர்னர் தனது அயர்லாண்டின் அநுபவத்தைக் காண்பிக்க கர்ச்சிக்கிறார்! இவ்விரு பொறுப்பாளிகள் கூறியிருப்பதிலிருந்து நாம் ஆச்சர்யப் படுவதற்கில்லை. இன்னும் திண்ணை தூங்கிகளாகிய குடியர்களைக்கூட நீதிபதி பதவிக்கு அனுப்பலாம். இவர்களைக் காட்டிலும் அவர்கள் ஒருபடி தாண்டிக் குதித்தாடலாம். இவ்வளவும் இந்தியாவைக் கைவிடுவதற்கு மனமில்லையென்பதை அறிந்தபின் நாம் இனியும் தூங்கலாமா?

“ காந்தி ஒரு தெய்வீக புருஷன் ”

நாம் நினைக்கிறபடி நடந்தேறுவதற்கான ஒவ்வொரு விஷயங்களும், நமது ஆத்ம பிரகாசத்தால் தெளிவு படுகிறது. இதுபோழ்து இந்தியர் பரம சன்னியாசியின்மூலம் புண்ய கைங்கர்யத்தைக் கையாண்டு, தாமகோரியுள்ள லக்ஷியத்தை அடைவதற்கு முற்பட்டுவிட்டது. ஆச்சர்யப்படும் வண்ணம் அநேக ஐரோப்பிய நண்பர்கள் ஏளனஞ்செய்யும் வகையில், முரட்டுத் துணியாலும், மவுனத்தாலும் மிக்க பலம் வாய்ந்த அரசாங்கத்தை—தன்னலம் படைத்த சட்டத்தை—ஜெயித்துவிட முடியுமாவென் றுலோசித்தது. தவிரவும் பயனளிக்கும் வகையில் விளக்கமாகிறது. நான் ஒரு பிஷப் என்ற ஹோதாவில் இந்தியா, பர்மா, இலங்கையின் அநுபவம்பெற்றிருக்கிறேன். ஆரம்பத்தில் முரட்டுத் துணிகட்டுபவர்கள்மேல் வெறுப்பாக இருந்தபோதிலும், ஏசேயா தீர்க்கதெரிசனம் 12-13-வது வார்த்தைகள் ஞாபகம் வந்ததும்; பெரிய முக்கிய காரியத்தைமுடிப்பதற்கு விடாமுயற்சியும், சந்தோஷமும், திருப்தியும் வேண்டுமென்பதுபோல்; காந்திஜி கதர் திட்டத்திலும், அறிவுகூர்மை, சாந்தம், சுயமதிப்பு மனோவலிமை உண்டாகக்கூடுமென நிச்சயித்ததை—யானும் ஒப்புக் கொள்கிறேன். கதர்—அன்னியத் துணி பகிஷ்காரத்திற்கும் பொறுப்பற்ற ராஜ்யாதிகாரத்தைப் போக்குவது போல் தனி மனிதனுடைய புலன்களில் வதிந்து இடக்கு—அடுக்கடுக்காய் விசாலமாயிருக்கும், போலி எண்ணங்களையும் வெறுப்பு—சினம்—அகங்காரம் இவைகளை நீக்கி இயற்கையின் வடிவை நன்கு அறியப்பெற்று, நானே இப்பொழுது சர்க்கா சுற்றுகிறேன். அத்துடன் தன்னையறியும் சக்தியுமுண்டாகிறது. இந்தியா புராதனமாக கடவுளை நம்பும் நாடுகளில் ஒன்று. நமது இரக்ஷகர் கல்வி பயின்ற நாடுமாகும். பொதுவாக கிரிஸ்தவரோ கிரிஸ்தவரல்லாதவரோ ஒரு தேசத்தினர், மத விஷயமற்ற எந்தக் கோட்பாட்டையுங் கைக்கொள்ள வேண்டியதவசியம். இதிலும் சில விதிகளுண்டு. காந்தியின் கிளர்ச்சி ராஜீயக் கிளர்ச்சியாகத் தோன்றி மதங்களை ஊடுருவி ஆத்மப்பிரகாசத்தை விசாலப்படுத்துகிறது. என் மதத்தை அநுசரித்திருப்பதெனில் ஜெபம் செய்வதில் ஒருவருடைய மனம் உரிமை பெறுவது அசாத்தியமெனினும் சர்க்கா சுற்று

பெண் பாவம் பொல்லாது!

ஸ்ரீ ராமபிரானின் பிராட்டியாராகிய சீதையை கபடமாக, இராக்ஷத சந்நியாசியாகிய இராவணன் அபகரித்துச் சென்றான். பிராட்டியாரின் கற்பிற்கு பங்கம் விளைவிக்கத் துணிந்தான். மனச் சஞ்சலத்தை யுண்டாக்கினான். பிராட்டியார் அசையாது— சலியாது துன்பங்களை எல்லாம் சகித்துக்கொண்டிருந்தார். அந்தப் பெண் தெய்வத்தின் பாவம் இராவணனை சும்மா விட்டதா? இல்லை. இராவணன், இராம பாணத்திற் கிரையானான், அழிந்தான்— ஒழிந்தான். அவன் தம் பராக்கிரமம் எங்கு போயிற்று? இராமன்கை வில்லுக்கு எதிர்நிற்க முடியாது போயிற்று. அதர்ம உருவாகத் தோன்றிய இராவணன் தர்மஉருவாகிய இராமன் முன் நிற்க முடியவில்லை. தர்மமும் நீதியும் வெல்லுமென்பதற்கு இது ஒரு சான்று.

துரியோதனன் பஞ்சபாண்டவர்களுக்கு பல சூழ்ச்சிகள் செய்தான். ராஜ்யத்தையும், சூதால் அபகரித்துக்கொண்டான். அத்துடன் நிற்கவில்லை. அதோடு நின்றிருந்தால் தப்பிப் பிழைத்திருப்பான். பஞ்சபாண்டவர்களின் தர்மபத்தினியாகிய பாஞ்சாலியை அவமதித்தான். திரௌபதையை தனக்கு மனைவியாக்கிக்கொள்ள நினைத்தான். பலர் முன்னிலையில், துற்சாதனன் துகிலுரிந்தான். துரியோதனன் அச்செயலைக் கண்டு மகிழ்ந்தான். இறுதியில் துரியோதனனுடையவும், துற்சாதனன் முதலியவர்களுடையவும் கதிஎன்ன ஆயிற்று? அவர்கள் பரந்த ராஜ்யம் எங்கே? மந்திரி பிரதானிகள் எங்கே? எல்லோரும் கிருஷ்ண பரமாத்மாவின் கோபத்திற் குள்ளபட்டனர்.

கௌரவர்கள் ஒழிந்து சாம்பலாயினர். இந்த ஏகாதிபத்திய இரு அரசர்கள் கதியிருக்கட்டும்; இனி இப்பொழுது ஏகாதிபத்திய அரசாங்கமாக விளங்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்தைப்பற்றி யோசிப்போம்.

இன்று இந்தியாவில் நடக்கும் அரசியல் போர் தெய்வீகப் போராகும். அந்தத்தெய்வீகப் போரை யடக்க ராக்ஷத சக்தியை யரசாங்கம் உபயோகப்படுத்துகிறது. ஒரு குடிகாரனைப் போல் நடந்துகொள்ளுகிறது. ஒரு வரைமுறையும் இல்லை. தெய்வீகப் போருக்கு தலைவர், மகாத்மா காந்தி. இராக்ஷதப்பேய்க் கூத்துக்குத் தலைவர், லார்டு வில்லிங்டன். வில்லிங்டனின் ஆட்சி; இராவண, துரியோதன ராஜ்யத்தினுள் விபரீதமாக ஆய்விட்டது. சாத்விக—தெய்வீக யுத்தத்தில் ஆண்மக்கள் மட்டும் ஈடுபடவில்லை; பெண் தெய்வங்களும் நாட்டுக் கொடியைக் கையிலேந்தி நாட்டிற்குத் தொண்டு செய்துவருகின்றனர். இந்தக் கற்பரசிகளை நாயினுங்கடையர்களான போலீஸ்காரர்கள் துன்புறுத்துகின்றனர். சமீபத்தில் காசியில் கைதியான 8 பெண் தொண்டர்களை போலீஸார் அடித்தனராம். அதை பார்லிமெண்டில் சாமுயேல் ஹோரும் ஒத்துக்கொண்டார், ஆனால் பரிகாரம் செய்யப்படுமென்று கூறுகிறார். இந்திய ஸ்திரீகள் தெய்வீகப்பெண்களாவர். கண்டவர்களையெல்லாம் கையைப் பிடிக்கும் வெள்ளைக்காரர்களன்று. இந்தியத் தாய்களுக் கிழைக்கும் தீங்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைச் சும்மா விட்டுவிடாது. பெண் பாவம் பொல்லாது. அதனால்தான் பேய்கள் கூட பெண்களைக்கண்டு அஞ்சுகிறது. ஆனால், பிரிட்டிஷார்களுக்கு அந்த அச்சங்கூடக்கிடையாதுபோலும். வெள்ளையர்களின் கதி இராவணன் கதியைவிட வேறென்ன? வில்லிங்டனே! தேவர்களையெல்லாம் ஆட்டுவித்த இராவணன் எங்கே? உங்களுக்கும் அதுதான் கதி. உங்கள் ஏகாதிபத்தியம் ஒழிந்து, நீங்கள் சாம்பலாகாதிருக்க வேண்டுமானால், இந்தியப்பெண்களிடத்தில் மரியாதையாக நடந்துகொள்ளுங்கள். இதுவே நமது எச்சரிக்கை.

வதிலும் இந்நிலை அடைகிறதென அறியலாம். ஒவ்வொருவரால் தோன்றிய இயக்கங்கள்— மதவேறுபாடுகள் மிகுந்திராத அக் காலங்களிலேயே, ஒவ்வொரு தேசத்தினர்களாலேயே அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றது. நமது காந்தி இயக்கமோ உலகத்தில் யாவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறதிலிருந்து இது ஒரு தெய்வீக இயக்கமென்றே சொல்லவேண்டும்.

—பட்டேலிபர்ச்சட்

இயன்றதைச் செய்

சுயராஜ்யப் போரில் கலந்து கொள்வதற்கு பின்னிடையும் யாதொருவனையும், பழிக்கலாகாது. அவனிடத்தில் இயற்கையாயுள்ள அறிவின்மையைப் போக்குவதற்கு முயலவேண்டும். அறியாமை நீங்கியதும் இருள் நீங்கி சூரியன் பிரகாசிப்பதுபோல் அவனது ஆத்மாவில் தெளிவு புத்தி யுண்டானதும்—தன்னைத் தானே நடத்திக்கொள்ளும் சக்தி தோன்றிவிடும். அவனுக்குத் தலைவன் வேண்டாம். இதைத்தான் கீதை சொல்லுகிறது. அறியாமை நீங்கினால், பயமில்லை, சுக துக்கங்களில்லை பயமும்-சுக துக்கங்களுமில்லாவிடில் சமரச பாவனையேற்படும், உயர்வு தாழ்வு கருதாது வாழ்க்கையிலீடுபட்டவன் இயன்றதைச் செய்தவனாகிறான். இவ் வருடத்தில் நமது பண்டித மாளவியா செய்வதும், செய்யப்போவதும் இதுவே. கொழுத்த அரசியல் ஞானியாகிய இவர் இதுகாறும் சிறை புகாதிருந்து காங்கிரஸ் தலைவராக முன்வருவதற்கு இயன்றதைச் செய்திருப்பரென்பது பின்னால் தெரியலாம். நாம் கூறுவதும் கதர் கட்டுவது; கதரை ஆதரிப்பது; பிரசாரஞ் செய்வது, எளிய வாழ்க்கை நடத்துவது. அரசியலைப்பற்றித் தெளிவுபடக் கூறுவது முதலியவையும், சுயராஜ்யத் திட்டங்கள் தாங்கும். ஆதலால்தான் ஸ்திரீகள், குழந்தைகள், கிழவர்கள் முதலியோரும் போரில் கலந்து கொள்கின்றனர். 35 கோடி ஜனங்களுள்ள தேசத்தில் மூன்று கோடிப்பேர்களாவது போரில் கலந்துகொண்டிருந்தால், இதுவரை தேச சரித்திரம் மாறி இருந்திருக்கும். இந்த அவமானமான செய்தியை யோசித்தே மகாத்மா சென்ற வருஷப்போரில் இர்வினோடு இணங்கினர். அவரவரும் இயன்றதைச் செய்வதற்கு—உழைப்பதற்கு முற்படின் காங்கிரஸ்தான் எதற்கு? எழுந்து நில்! அதோ! புரோகிதர் யாகம் தொடங்குகிறார்; உனக்கு யாகத்தின் அம்சமோ—அதனிருந்தெழும் அவிர்ப்பாகமோ பெரிதில்லை. உனது கடமையாம் சுதந்தரத் தன்மையைக் காட்டி முன்னணியில் நிற்பதே பெருமை. சுதந்திர தேவி தனது மதுரம் நிறைந்த மொழிகளால் அழைக்கிறாள். இயன்றதைச் செய்யில், சீக்கிரம் அவளைப் பெருவாய். சுதந்தரம் அடைந்தபின் உனக்குக் கவலை ஏது? இப்போது நடந்து கொண்டிருக்கும் அக்கிரமங்களுக்கு காரணம் அடிமையல்லவா? உனது பெண்ஜாதி தாலிகட்டினவள் உனக்கு உரியவளென்று சொல்லிக்கொள்கிறாயா? ஐயோ! வெட்கம்! நாம் இன்னொருவருக்கு அடங்கி வாய்ப் பொத்திக்கொண்டிருக்க உனக்கும், பெண்டாட்டியா! காலஞ்சென்ற பாட்டன், பூட்டன்களுக்கு நோட்டீஸ் பிரப்பித்து, செத்தவன் பாரம், சுமந்தவன் தலையில்; என்பது போல் தந்தை போல் நோட்டீஸாம், மகனிடம் வரும் தலைகீழாக நடக்கிறபோது, உணர்ச்சி கெட்டு, மடமை பிடித்து உன்னால் இயன்றதைச் செய்யத் தவறாதே!

போஸ் பிள்ளைப்பூச்சியல்ல

கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் தேளையும் பிள்ளைப் பூச்சியாகக் கருதுவது உலக சுபாவம். இந்த சுபாவம் வெள்ளைக்காரனையும் விடுமா? வெள்ளையனும் மனிதன்தானே மனித சுபாவத்திலிருந்து வெள்ளைக்காரன் மட்டும் எப்படி மீறுவது ஒருக்காலும் முடியாது. சுபாஸ் சந்திரபோஸ் ஐ. ஸி. எஸ் பெயர்வழி. ஆனால் வெள்ளையருக்கு அடிமையல்ல. சுபாஸ் பாபு சிறு குழந்தைமுதலே வெள்ளையர்க்கு விரோதி. பாடசாலையில் படிக்கும் பொழுது ஒரு வெள்ளை ஆசிரியன் தாறுமாறாக நடந்து கொண்டான். போஸ் எச்சரிக்கைக் கடிதம் விடுத்தார். ஒரு முறை, இரண்டுமுறை, மூன்று முறை பார்த்தார். தண்ணீரும் மூன்று பிழை பொறுக்குமென்று தாய்மார்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். போசும் மூன்றும் பிழை பொறுத்தார். ஆனால் வெள்ளை ஆசிரியன் வழிப்படவில்லை. போசும் அவர்தம் சிஷ்ய குழாமும் சேர்ந்து உதையில் விட்டார்கள். நையப் புடைத்தார்கள். வெள்ளையனுக்குப் பட்டால்தான் தெரியும். பட்டால்தான் தெரியும் பறையனுக்கு உதைபட்டவுடன் வெள் ஆசிரியன் போஸ் கூட்டத்தாரிடம் மரியாதையாக நடந்துகொண்டான். அப்படிப்பட்ட அனுபவ ஞானத்தை நமது போஸ் பாபு இளமையிலேயே தெரிந்துகொண்டவர். அதே நம்பிக்கை போஸுக்கு நாளுக்கு நாள் வளர்ந்தது, 6 வருடங்களுக்கு முன்புவரை வங்க வாலிபர்களுக்கு தலைமை வகித்து வந்தார்.

மது வருந்திய குரங்கு!

குரங்கு இயற்கையிலேயே மிகவும் சேஷ்டையுள்ளது. அதற்குப் பைத்தியம் பிடித்துவிட்டால், அந்தப் பைத்தியத்துடன் மதுவும் அருந்திவிட்டால், மது மடக்கத்தில் வெறியாடல்கள் புரிந்துகொண்டிருக்கும் குரங்கை; தேளும் கொட்டிவிட்டால், அப்புறம் அந்தக் குரங்கின் திருவிளையாடல்களுக்குக் கணக்குண்டா? வழக்குண்டா? நினைத்ததெல்லாம் செய்யும், குதிக்கும், கூத்தாடும், கொள்ளிக்கட்டையை எடுத்துக்கொண்டு கூரையில் ஏறியும் சுற்றும். சிறு குழந்தைகளையும் துன்புறுத்தும், பெண்களைக் கண்டால் அஞ்சாது. முடிவில் இன்னது செய்வதென்று தெரியாது கஷ்டத்துள்பட்டு தன்னைத் தானே மாய்த்துக்கொள்ளும். அந்தச் சமயத்தில் ஆயிரம் காந்திகள் வந்து போதித்தாலும் செவியில் ஏறுமா? ஒருக்காலும் முடியாது. இந்தியாவில் சில வெள்ளைக் குரங்குகளிருக்கின்றன. அவைகள்தான் ஐ ஸி எஸ் வர்க்கம். அதிகார வர்க்கம். இந்த மனிதக் குரங்குகளும் வெகு மமதை பிடித்தவைகள்தான். தன் மனம் போனபடி செய்யும். வெள்ளையர்களை வெள்ளைக் குரங்குகள் என்று சொல்வதற்காக, வெள்ளை நண்பர்களேனும், இந்தியர்களேனும் என்மீதில் சீறி விழாதிருக்கவேண்டும். டார்வின் என்ற வெள்ளைக்காரர் பிரபல ஆராய்ச்சியாளர் என்பது உலகம் அறியும். அந்த அறிஞரே குரங்குகளாக இருந்து மாறினவர்களே? தற்காலத்து மனிதர்களின் முன்னோர்கள் என்று முடிவுகட்டியிருக்கின்றார். ஆதலால் எந்த மனிதனையும் குரங்கு என்று சொல்வதில் குற்றமில்லை. கறுப்பர்களைக் கறுப்புக் குரங்குகள் என்றும், வெள்ளையர்களை வெள்ளைக் குரங்குகளென்றும் கூறலாம். அது கிடக்கட்டும் இந்தியாவிலுள்ள வெள்ளைக் குரங்குகளுக்கு இப்பொழுது பைத்தியம் பிடித்துவிட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் போகப்போகிறதே என்ற பைத்தியம். அத்துடன் மதுவையும் உண்டுவிட்டது. அவசரச்சட்டங்கள் என்ற மதுவை வயறுபுடைக்கக் குடித்துவிடவில்லையா? தேளும் கொட்டிவிட்டது. அந்தத் தேள்தான் அன்னிய நாட்டுச் சாமான் பஹிஷ்காரத் தேள். இத்தனை தொல்லைகளும் வெள்ளையர்களைப் பிடித்தாட்டுவதால் அவர்களுக்கு இன்னது செய்வது என்று தெரியவில்லை. 47 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு வெள்ளையராலேயே ஆரம்பிக்கப்பட்டு உலகம் போற்றும் உத்தமராகிய மஹாத்மா காந்தியால் வளர்க்கப்பட்டு சீரிய முறையில் நடைபெற்றுவரும் தெய்வீக சபையாகிய காங்கிரஸை இவ்வருடம் கூடவொட்டாது தடுக்கிறது. எல்லோரையும் கைதிசெய்கிறது. பெண்களை

போஸ் ஒரு சமிக்ஞை செய்தால் போதும். பிரிட்டிஷ் அரசாங்கத்தைத் தவிடு பொடியாக்கிவிடுவார்கள். இத்தனை ஐ ஸி எஸ் வர்க்கத்தின் தலைகளும் தரையில் உருளும்.

1923-ல் போஸ் பாபுவை வங்காள அவசரச்சட்டப்படி கைதிசெய்து அரச குமாரனைப்போல் நடத்தினர். நாள் ஒன்றுக்கு ரூ. 8-10 அணா கொடுத்தனர். உடைகளுக்கு வேறே பணமும் தந்தனர். ஆனால் இப்பொழுதோ நமது போஸுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் கொடுக்கின்றனர். காரணம் என்ன? ஏன் 6 வருடங்களுக்குள் இவ்வளவு வித்தியாசம். முன்னர் வெடிகுண்டு ஆசாமிகளுக்குத் தலைவராகத் தோன்றினார். வெள்ளைக்காரனும் அவரை மதித்தான். இப்பொழுதோ போஸ் பாபு சத்தியாக்கிரகிகளுக்குத் தலைவராகத் தோன்றுகிறார். முன்னர் சம்மதித்துக் கொண்டிருந்த வெள்ளையர்கள் இப்பொழுது நமது பாபுவை பிள்ளைப்பூச்சி என நினைத்துவிட்டனர். சிறையில் ஒரு சாதாரண அரசியல் கைதியை நடத்துவதுபோல் நடத்துகின்றனர். இனியொருக்கால் போஸ் பாபு வெடிகுண்டுக்காரர்களுக்கு தலைமை வகிக்க நேர்ந்தால் அதற்கு ஜவாப்தாரி பிரிட்டிஷ் அரசாங்கமே யல்லாது வேறு யாரும் காரணமாக இருக்கமாட்டார்கள்! போஸ் பிள்ளைப்பூச்சியல்ல. வேங்கை யென்பதை உணருவாயாக. இதை எழுதுபவனுக்கு போஸ் பாபுடன் நல்ல பழக்கமுண்டு. போஸ்பாபுவின் சக்தியை இவன் நன்குணருவான். ஆதலால் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை செய்கின்றேன். உங்களுக்கு வேண்டுவது எது? அன்பா? அழிவா?

அங்கும்புகுந்துவிட்டாயா?

இன்றைய வரையில் நம் நாட்டு தாயின் மணிக்கொடியை நாட்டுவிப்பதற்காக பல்லாயிர மக்கள் சிறைக் கம்பிகளுக்குள்ளே புழுங்கித் தவிக்கின்றனர். ஒரு நாட்டின் உயிரெல்லாம் கூட அந்நாட்டின் கொடியிலேயேதா னிருக்கிறது. அந்த நாட்டான் கையிலும் ஒவ்வொரு கொடி கண்டிப்பாய் இருக்கப்படவேண்டும். நமது கொடி ஒருகாலத்தும் அவமானப்படுத்தப்படக்கூடாது. நம் நாட்டுக் கொடியின் மகத்துவம் தெரிந்த மாஜி பார்லிமெண்டு மெம்பர் பீட்டர் பரீமென் லண்டன் ஜனங்களின் மத்தியிலும் புகுத்திவிட்டார். சட்டமறுப்பு காலத்தில் சென்னையில் ஓ ரிரண்டு மாதங்கள் தங்கியிருந்து அவசரச்சட்ட அட்டூழியங்களைக் கவனித்துத் தெரிந்துகொண்டு தற்சமயம்லண்டன் போய்ச் சேர்ந்துவிட்டார்.

லண்டனில் இந்திய சங்கத்தாரின் சார்பில் கூடிய மாபெருங் கூட்டத்தில் பின்வருமாறு பேசலானார். சென்னையிலும் அதைச்சார்ந்த மற்ற கிராமங்களிலும் சட்டமறுப்பு வெகு தீவிரமாக நடைபெறுகிறது. சட்டமறுப்பு நடக்கும் ஒவ்வொரு கிராமங்களையும் நேரில்பார்த்த பின்புதான் அவர்களது காங்கிரஸ் கொடியையும், போலீஸ்காரர்கள் உபயோகிக்கும் தடியையுங்கூட மாதிரிக்காக கொண்டுவந்துள்ளேன் (ஜனங்களிடம் காண்பிக்கப்பட்டது) பிரிட்டிஷ் பத்திரிகைகள் சட்டமறுப்பு விஷயமாக கூறும் ஒவ்வொன்றும் அபத்தம். சர்க்காரின் அடக்குமுறையால் அனைவருக்கும் அனர்த்தம்தான் ஏற்பட்டிருக்கிறது. சர்க்கார் வருடம் தவறினாலும் கமிட்டி மட்டும் நியமிப்பதில் பின்வாங்குகிறது கிடையாது. அம்மாதிரிக் கமிட்டிகளால் பொது ஜனங்களுக்கு யாதொரு பயனும் கிடையாது. இந்தியர்களும் வெறுக்கின்றனர். ஆனதால் பிரிட்டிஷ்—இந்தியாவுக்கு சமாதானம் நிலவும் பொருட்டு, தேசிய மகாசபை, ஹிந்துக்கள், முஸ்லீம்கள், சுதேச மன்னர்கள், மற்றும் இதர வகுப்பினரடங்கிய பிரதிநிதிகள் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்து அனைவருக்கும் தனிப்பட்ட ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து சமரசம் ஏற்படச்செய்யவேண்டுவது சர்க்காரின் கடமை. இந்தியாவில் நடக்கும் அட்டூழியங்கள் இங்குள்ள பிரிட்டிஷ் பொதுஜனங்கள் யாவருக்கும் தெரியுமானால் அவர்கள் இந்தியசர்க்காரின் முறைகளை—கொடுமைகளை ஆதரிக்கவே மாட்டார்கள்.

யும் அடிக்கிறது, அந்தக் குடித்த குரங்கின் கதியையே இந்த வெள்ளைக் குரங்குகளும் அனுபவிக்கப் போகின்றன. இருப்புத் தூண்களை கட்டிக்கொண் டழும் இவர்கள் ஏகாதிபத்தியமும் ஒழிந்து அழியப்போகின்றனர். வெள்ளையர்களே! இந்தியாவை நீங்கள் இழந்தால் உங்கள் கதி என்னவாகும்? நீங்கள் இருக்குமிடம் புல் முளைத்துப் போகும். இந்தியா உங்களுக்குக் கிடைக்குமுன்பு எந்த நிலையிலிருந்தீர்களோ அந்த நிலைக்கே வந்துசேருவீர்கள்.

காந்தி சுருட்டு வேண்டுமா?

நல்லவர் பெயரை, கெட்ட காரியங்களில் உபயோகப் படுத்திக்கொள்வது கேவல செய்கையாகும். சர்தார் சிகரெட்டு, ஜவர்லால் பீடி, காந்தி சுருட்டுகள் என்று பெயர் கொடுத்து, படம் போட்டு, காந்தி மார்க்சுருட்டை கவனித்து வாங்குங்கள்! என்று விளம்பரம் செய்கிறார்கள். இந்த சுருட்டு வியாபாரிகளுக்கு ஒருக்கால், தேசியத் தலைவர்கள் பால் இருக்கும் பக்தியால் அவர்கள்பெயரைக் குறிப்பிடுகிறார்களோ? என்று சிலர் எண்ணலாம். கிராமபோன் பெட்டி, பண்டித நேருவின் மேல் எவ்வளவு பக்திவைத்து உருக்கமாகப் பாடுகிறதோ; அவ்வளவு பக்திதான். இச்சுயநலமி களுக்குண் டென்று நாம் கூசாமல் கூறுவோம். இந்தியாவில் செய்ததுதானே என் காந்தி பெயரை வைக்கக் கூடாது? என்று சிலர் கூறுகிறார்கள். இந்தியாவில் ருக்கும் கள்ளை புட்டியில் அடைத்து காந்தி கள்—சுதேசிக் கள்—சர்தார் கள்—உள்நாட்டுச் சரக்கு எனக் கூறி விற்றால் அச்செய்கை எவ்வளவு யோக்யமானதோ, அஃதேபோன் றுதான் இக் காந்திமார்க் சுருட்டுக் காரர்கள் செய்கையு மிருக்கிறது. காந்தி சுருட்டு, சிகரெட்டு, பிடிக்கிறாரா? இவைகள் உலக ஜனங்களுக்கு பொதுவாக நன்மையைத் தருவதா? மூக்காலுமில்லை. சாராயம், கள்ளைப் போல் சுருட்டு, பீடிகளும் லாகிரி வஸ்துக்களின் இனத்தைச் சேர்ந்ததே

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுஎண் 245] (1922-ஹு ஸ்தாபிதம்.) 8 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இரு முறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஹு (27-4-32) சித்திரை-மீ 15உ புதன்கிழமை

46-வது டில்லி தேசீய மஹாசபை.

இந் நெருக்கடியான சமையத்தில்—வில்லிங்டன் ஆட்சியில் தலைவர்களெல்லாம் நாலு சுவர்களுக்கு மத்தியிலே அகப்பட்டுக்கொண்ட தருணத்தில் எஞ்சி நின்ற வாலிபர்கள் நமது நோக்கத்தை—46-வது டில்லி தேசீய மகாசபையை—நமது திருச்சபையைக் கூட்டி தீர்மானம்செய்துவிட்ட செய்திகேட்ட எந்த ஒரு இந்தியன்தான் சந்தோஷப்பட—மகிழ்ச்சி யடையாதிருக்க முடியும் காங்கிரஸ் பண்டிதர் தலைமையில் நடைபெறப்போவதாக கேள்விப்பட்ட வில்லிங்டன் சர்க்கார் நடுக்கங்கொண்டது. பண்டிதரையும், அவரது மகன், பேரன் முதலியோரையும் கைதிசெய்தனர். தலைவி ஸ்ரீமதி சரோஜினியும் கைதி செய்யப்பட்டு ஒரு வருடம் தண்டனைக்குள்ளானார் பண்டிதரும்—சரோஜினியும் கைதிசெய்யப்பட்டுவிட்டால் காங்கிரஸ் நடைபெறாதென்று வில்லிங்டனும் அவனது கோஷ்டியாரும் கனவு கொண்டிருந்தனர்; வெறுங் கனவாய் முடிந்துவிட்டது எத்தனை. எத்தனை அடக்குமுறைகள் வரினும், காங்கிரஸை நடத்தியே தீருவோமென்று பிரதிக்ஞை எடுத்துக்கொண்டால்—முடிவுகட்டிவிட்டால் நடத்தியே திருவோம் என்று நாம் தெரிவித்திருந்தபடியே சட்டவிரோதமான காங்கிரஸை நமது சட்ட பூர்வமாக சேட் ரான்சோடதாஸ் அமிர்தலால் தலைமையில் கூடி நிறைவேற்றியேவிட்டோம்.

ஏ! வில்லிங்டனே உனது எண்ணம்பூர்த்தியடைந்துவிட்டதென நினைக்கிறாயா? ஒருபோதும் இல்லை. நமது எண்ணம் பூர்த்தியானது எப்படியென்றுகேட்பாய்; சட்டமறுப்பு இயக்கம்—அஹிம்ஸைப் போர், என்னபடும் இரண்டும் ஒன்றிலடக்கம். இதனைப்புரிய ஆத்மசக்தியாலன்றி முடியாது. காங்கிரஸை ஆதரிப்போர்; எனப் பாகுபடுத்தி அதனை நசுக்கிவிட எத்தனித்த நமது விரோதிகள் நமக்குப் பேருதவி புரிந்துவிட்டனர். இதற்குமுன் காங்கிரஸ் திட்டங்களை ஒப்புக்கொள்பவர்தான் காங்கிரஸ் காரரென்று அழைக்கப்பட்டனர். இப்போது காங்கிரஸும், அதன் நிர்வாகிகளுமில்லாதகால இந்தியா முழுமையும் காங்கிரஸ் மயமாகவே மாறிவிட்டது. சுதந்தரதேவி தனது சேவர்களுக்கு பிரசன்னமாகிறாள். இரும்புக் கம்பிகளுக் கிடையே தவம் புரியும் அருமைப் புதல்வர்களை ஆதரிக்கிறாள். தவச் சாலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் தலைவர்களை எதிர்கொண் டழைக்க, அதோ! முகமலர்ந்து புன்னகை புரிந்து நிற்கிறாள்.

நமது சக்தியின் ஆற்றலை—மாற்றறியாப் பிரகாசத்தை நோக்கி விருப்பம், வெறுப்பு, சினம், பயம், காமம், குரோதம், மாச்சர்யம் முதலியன சென்றுகொண்டிருக்கின்றன அதோ! பெரிய ஆத்மா பாரதமாதாவின் பிரதம புத்திரன்—பொக்கைவாய்க் கிழவன்—தர்மதேவதை சபர்மதி முனி வீர புருஷன், வல்லபாய் படேல், இளஞ் சிங்கங்களாகிய நேரு, போஸ் உண்மைத் தியாகி அன்சாரி. பெண் தெய்வமாகிய கஸ்தூரிபாய் கமலாதேவி சரோஜினி நாயுடு முதலானவர்களும், அமிர்தபானம் பருகுகிறார்கள். அம்மருந்து இருதயகமலத்தூற்று—வீரஞ்செறிந்த பாகு நமக்கு வேண்டாமா? எழுந்து நில்! காலந் தாழ்த்தாதே? எதற்கும் பொறுப்புவைத்துக் கொள்ளாதே! மனைவி மக்களைப்பற்றி விசனப்படாதே! அவர்களுக்கு நீயே எஜமான்? அவர்களினுள்ளத்தினொளித்துநின்று கேட்கப்படுவதை கொடுத்துக்கொண்டிருக்கும் காருண்ய மூர்த்தியை நீ பார்க்க வேண்டாமா? ஹே! இந்தியா நீ யாராயிருந்தா

சர்க்காரே! ஜாக்கிரதை!!

முப்பத்து ஐந்துகோடி ஜனங்களின் பரிதாபகரமான வயிற்றெரிச்சலை வாரிக் கட்டிக்கொண்டு, "பட்ட பத்மாஸ் கர்த்தே!" நீங்கள் செய்யும் அட்டூழியங்கள் அப தந்திரங்கள் பொய், பித்தலாட்டங்கள், சமயத்திற்குத் தக்க வேஷங்கள் எங்களுக்குத் தெரியாதென் றிருந்தகாலம்; மலையேறிவிட்டது. உங்கள் தலைவன் வில்லிங்டன் மலையிலிருக்கும்போது நீங்களும் அருகாமையி லிருக்கவேண்டிய தவசியமே! ஆயினும் ஒரு தடியனுக்கு பல ஸ்திரீகளிருக்கிறார்களென்று வைத்துக்கொள்வோம். அத்தடியன் காம வெறிகொண்டோ, குடி மிஞ்சியோ அரக்கச்செயலை கையாடும்போதாவது, நல் மனைவிகள் புத்தி புகட்டா திருப்பார்களா? அம்மனைவிகள் தங்கள் கணவனின் நன்மையை உத்தேசித்தாவது, சொல்லா திருப்பார்களா? அம்மனைவிகள் புருஷன் செய்கின்ற காரியங்கள் ஒழுங்கற்றதென வுரைத்தும்கேட்காது மூடச் செயல் புரியின் மனைவிகள் புத்திசொல்லியும் கேட்கவில்லையென்ற அபவாதம் அவன் மீதேற்படும். இரணியன் கொடுந் தொழில் புரிந்தான். பகவத் நாமம் கூறக்கூடாதென முரசறைவித்தான். தனது ஆண்மையை-மிருக பலத்தை பிர்ம்மாவினிடம் பெற்ற அழியா வரத் திமிரைக் காட்டிச் சேயனை (மகனை) அஹிம்சை வழிகாட்டியை ஹிம்சித்தான். இறுதியில் அவனது வம்ச மிருந்ததா? ஏன் அவன் செயலை அதுபோழ்து கண்டித்தா ரொருவருமில்லை. இராவணனையோ நல்லறிஞன், விபீஷணன், மாலியவான் முதலியோர்கள் பன்முறை கண்டித்தும், இராவணன் மனைவி மண்டோதரி முதலியவர்களும் சீதையை விட்டு விடும்படியும் வற்புறுத்தியுள்ளார்கள். அதனால்தான் அவர்களைப்பற்றிய புகழ் இன்னும் ஒழிந்தபாடில்லை. மனைவி, மக்கள் நியாயம் சொல்லியும் கேட்கவில்லை என்ற ஒரு வார்த்தையாவது இருந்துவருகிறது.

நீங்களோ உங்கள் தலைவன் சொல்கிறபடி—ஏவுகிறபடி கேட்கத்தான் வேண்டும். பாவ கர்மம் மன சாட்சிக்கு விரோதமான கொடுஞ்செயல்களைப் புரிவதற்கு ஆதரவு காட்டலாமா? நீங்கள் செய்துவரும் இந்த எதேச்சாதிகாரங்கள் எவ்வளவு காலம் நீடித்திருக்குமென்று நினைக்கிறீர்கள். இந்தியாவின் பெண்மைத் தெய்வங்களை இருட்டறையில் பூட்டியும் மண்டையி லடித்தும் இம்சித்திருக்கின்ற பாவம் சும்மா போகுமா? உங்கள் பதவிகளுக்கு சாவு மணி யடிக்குங்காலம் சமீபத்தி லிருக்கிறது. இந்தியா சுதந்தர மடைந்த பின் உங்கள் கெதி எவ்வாறாகுமென்பதை சிந்தனை செய்யுங்கள். உங்களுக்கு ஆக்கமளித்துகொண்டிருந்த சாமுயல்ஹோர் கண்விழி பிதுங்குகின்றான். உங்கள் நிலைமையும் உங்களது தலைவன் நிலைமையும் ஆட்டம் கொடுத்துக்கொண் டிருந்தும் வெளிப் பார்வைக்கு உங்கள் மதிப்புக் குறைவுபடாதது போல் காட்டிக்கொண்டிருக்கிறீர்கள். எங்கள் புரோகிதர் மாளவியா ஜீயை அடைத்துவிட்டதாய் கெர்வங் கொள்ளுகிறீர்கள்; அவர் தமது சகாக்களோடு யோசித்து ஆத்மயோக வஜ்கரண யாகஞ் செய்யப்போகிறார். யாகம் தொடங்கியதும் உலகமெல்லாம் எங்கள் பக்கம் திரும்பிவிடும் நீங்கள் "இஞ்சி தின்ற குரங்கு" போல் விழிக்க நேரிடுமென்பதைக் கவனிக்க!

லும் உன்னை இந்தியனென்றுதான் அழைப்பேன். உனது உபதேசத்தைப் பெறுவதற்கு உலகமும் காத்துக்கொண் டிருக்கிறது. என்னதா மதிக்கிறாய்? வரிசை, வரிசையாய்க்குதிரை வீரர்கள் கிளம்பிவிட்டார்கள். நீ உனது குதிரைக்கு சேணம் வைத்துவிட்டாய். புறப்படு! கடிவாளம் கையிலிருக்கட்டும், குதிரையை வெகு நிதானமாக நடத்த முன்பே பழகி இருக்கிறாயல்லவா? உனது சரியான பாட்டையில் போவதற்கு உரிமையுண்டு. அதைத் தடுக்க பூதங்கள்—தடியடிகள்—துப்பாக்கிகள் முதலியனவரினும் அஹிம்ஸைவாளால்தாங்கத் தவராதே! என்ன விழிக்கிறாய்! அதைப்பற்றிய கவலை ஏன் வைத்திருக்கிறாய்? இதோ! வானத்தை பார்! சுயராஜ்யம், புதிய இந்தியா உதயமாகிறது. ஆ! ஹா!! என்ன பிரகாசம்! என்னநேர்மை! அது நம்மை நோக்கிக்கொண்டே வருகிறது. காங்கிரஸாம் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டது. உனது கடமையைச் செய்ய இனியும் பின்வாங்காதே!

தச்சன் சென்றவிடம் தவிடுபொடி!

அடிமை நாட்டில் காவல்காரர்கள்—சிப்பாய்கள் செய்துவரும் அட்டூழியங்கள் இந்நாட்டிலன்றி வேறு எந்த நாட்டிலேனும் உண்டாவெனில்; இல்லையென்றே தான் சொல்லவேண்டும். ஒருக்கால் நீதி பரிபாலனத்தைப் பரிபாலிக்கும் நீதிபதிகளிடமிருந்து சிப்பாய்கள் வசம் ஒப்படைக்கப்பட்டால், எவ்வாறு நிர்வகிப்பார்கள் என்பது நன்கு தெரியவே செய்யும். "கல்லூரித் தச்சன் சென்ற விடமெல்லாம் தவிடுபொடி" என்பது போலவே முடியுமேயன்றி வேறு தர்மநீதி ஒருக்காலும் கிடைக்கப்போவதில்லை என ஸ்பஷ்டமாக—தீர்க்கமாகக் கூறலாம்.

அதிலும் பஞ்சாப் மாகாணத்தில் தான் அக்கொடியவர்களின் ஆர்ப்பாட்டம் மிதமிஞ்சியிருந்து வருகிறது. அந்த மிடாக் குடியர்களை பிரிட்டிஷ் அரசாங்கம் உத்தியோகத்தில் அமர்த்தியிருப்பதற்கு ஏதாவது காரணமில்லாதிருக்கமுடியாது என்று கிரிமினல் சட்ட புத்தகத்தைப் புரட்டிப் பார்க்கத் துணிந்துவிடாதீர்கள். துருப்பிடித்த சட்டமாயினும் நியாயம் நீதி இல்லாதிருக்க முடியாது, ஆனால் அவசரச் சட்டம்—அவசர, அவசரச் சட்டமென்னும் புதிய, புதிய முறைகள் கையாளப்படுகிறதே அவைகள் தான் காரண பூதங்களாயிருக்கின்றன வென்பதையும் ஞாபகப்படுத்தாதிருக்கமுடியாது. நமது வேலையாட்களாக நியமித்து, நம் மால்கஞ்சி வார்க்கப்படும் அடியர்கள் கனவிலும் நினைப்பதற்கில்லாது வளர்த்த கிடாய் மார்பில் பாய்வதுபோல் நம்மையே பாய்வதற்குத் தலைப்பட்டுவிடுகிறார்கள். மற்றொன்றும் ஆச்சரியத்திற்கிடமானதாகவே யிருக்கிறது. சிப்பாய்களின் அக்கிரமச் செயல்கள் விசாரிக்கப்படுங் காலத்தும் அவர்களது பதிலும் "வெள்ளைத் திமிராக"வே காணுகிறது. பஞ்சாப் படுகொலையின் நிமித்தம் லார்டு ஹண்டர்ஸன் கமிட்டி முன் வாக்குமூலம் கொடுத்த டையர், கர்னல் ஜான்ஸன், டிப்டி கமிஷனர் ஒபினியன் முதலியோரின் அதிகாரத் திமிர் யாவருடைய மனதிலும் குடிகொண்டே தானிருக்கிறது. பிரிட்டிஷ் ஆக்ஷி உள்ளவரையிலும், காவல்க்காரர்களின் முறுக்கும்—திமிரும் நடந்துகொண்டேதானிருக்கும். நீதிபதிகள்—சட்ட நிபுணர்கள் ஒரு சிலர் பாரபக்ஷமின்றி சிப்பாய்களின் அதிக்கிரமங்களை வெட்டவெளிச்சமாக வெளிப்படுத்தி விடுவதால் சற்று ஆறுதலடைய வேண்டியிருக்கிறது. சென்ற மாதம் ஆங்கிலோ கலாசாலை ஆசிரியர் திரு சாந்தராம் சாயல் (எம். ஏ.) தொடுத்திருந்த நஷ்ட ஈட்டின் வழக்கில் நீதிபதி பின்வருமாறு தீர்ப்புக் கூறினர்:—

ஒழுங்கையும், சமாதானத்தையுமே நிலைநாட்டுவதற்காகவே இங்கிடாவை ஆக்ஷிபுரிகிறோம் என்று கூறும், பிரிட்டிஷாரிடம் சிப்பாய்த் தொழில் புரியும் போலீஸ் சேவகர்கள் பழிவாங்கும் தன்மையுடையவர்களாயிருக்கிறார்கள். சாதாரணமாகத் தெருக்களில் சுற்றித் திரியும் காலிகளைவிடவாவது மேலான முறையில் நடந்துகொள்ளவேண்டும். போலீஸ் சிப்பாய்கள் தெருவில் திரியும் காலிகளை அடக்கியொடுக்குவதற்காகவே சமுதாயங்கள் போன்ற நியமிக்கப்பட்டிருக்கிறார்களேயொழிய, அடித்துத் துன்புறுத்துவதற்காகவல்ல. அக்கொடியர்களை—வரம்பு மீறிய சிப்பாய்களை குற்றஞ்சாட்டி சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நஷ்ட ஈடு வழங்கப்படவேண்டும். அவ்விதம் விதிக்கப்படும் தொகைகளாலேயே, அத்தகைய செயல் புரியவொட்டாதபடி தடுக்கத் தக்கனவாயிருக்கும். ஒரு தனி இடத்தில் அடிக்கப்படுவதைவிட பொது இடத்தில் அடிக்கப்படுவது—அவமானப்படுத்தப்படுவது மிக்க அமரியாதையாயிருக்கும். மிக அவமரியாதையாகவும், பிரஜா உரிமைகளைப் பாதிக்கத்தக்க முறைகளிலும்; பொது சட்ட திட்டங்களுக்கு மாறாகவும் அவரது உரிமையைத் தடைப்படுத்தியதுடன்—பக்கப்படுத்திய முறையில் போலீஸார் அடி, தடியை உபயோகித்துள்ளார்கள். அவரது உத்தரவின்றி வேறொருவருக்குச் சொந்தமான இடத்திற்கு அழைத்துச் சென்று மூர்க்கத்தனமாக நடத்தியதாகவும், இனிமேலும் அத்தகைய அடாத செய்கைகளைத் தடுக்கத்தக்க தண்டனை விதிக்கப்படவேண்டுவது அவசியந்தானென்று ஜூரிகள் அபிப்பிராயப் படுவதுபோல் கோர்ட்டாரும் அபிப்பிராயப் படுகின்றனர். பார

நாம் தானா தென்பட்டோம்?

போலீஸ்வீரர் சுந்தரராஜுலு இருக்கிறாரே; அவருக்கு நம்மீதும், நமது சகவர்த்தமானிமீதும் வந்த கோபம் என்ன? ஒருக்கால் எங்களது காரியாலயங்களில் சட்டித்தண்ணி அடிப்பதற்கு இடங் கொடுக்கவில்லை என்ற கோபமோ? இல்லை; இரண்டொரு மாதங்களுக்கு முன் சீனக் குதிரையில் ஏறிவந்தார்; இறங்கினார், தொப்பென்று விழுந்தார், உருமினார், மேலதிகாரிகள் சற்று தலை தூக்கிப் பார்க்க வேண்டும் எனப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி யிருந்தோமே அதுகாரணம் பற்றிய கோபமாயிருக்கலாமோ? அநேக ஆண்டுகளாக நம்மையும், நமது பத்திரிகையின் கொள்கையையும் நன்கு தெரிந்து—அறிந்துகொண்ட போலீஸ் வீரருக்குத் தெரியாது போனதேன்? சென்ற வாரத்திலேயே நமது நிலைமையைப் பற்றித் தெரிவித்திருந்தோம். பத்திரிகைப் போட்டி, பணக் கஷ்டம், சர்க்கார் சட்ட திட்டங்களை மயிரிழைகூட பிசகாது எழுதுவது முதலியவைகளுக்கே நேரமில்லா தொழியும்போது சீனக் குதிரை (சட்டித் தண்ணி) ஏறுவதற்கு எங்கிருந்து நேரம் கிடைக்கும். போகட்டும் தனிமனிதன் தப்புச்செய்தபோதும் தவறுகளைக் கண்டிக்கவே பிறந்த "தேசோபகாரி" ஒரு போலீஸ்காரன் தப்பை அவ்வப்போது கண்டிக்கத்தானே செய்யும். அதை விடுத்து கான்ஸ்டேபிள் சுந்தரராஜுலு "தேசோபகாரி"மீது பாணம் தொடுத்துவிட்டதாகப் பறைசாற்றுகிறார். "ஒரே மூச்சில் சுயராஜ்யம்" என தலையங்கமிட்டு அஹிம்ஸைப் போருக்காக தமிழர்கள் தலை தூக்கவேண்டும் என "தொண்டன்" கைசாத்திட்டு எழுதியிருந்ததை ஒரு கோணத்தினின்று வெளியாக்கப் போவதாகக் கூறிக் கொள்ளும் புதிய பத்திரிகாலயத்திலேயே மொழிப்பெயர்த்து மேலதிகாரிகளுக்கு அனுப்பிவிட்டாராம். அதன்பொருட்டு புதிதாகப் புறப்படப்போகும் பத்திரிகையின் பத்திராதிபரே. டைப்ரைட்டிங் மிஷினும் கொடுத்துதவினாராம். அவர் உதவி இருக்கமாட்டாரென்பது மட்டும் நிச்சயம். அவரது முதலாவது அறிவிப்பிலேயே ஒற்றுமையின் மணம் வீசிற்று. அப்படி இருக்க பொதுஜனங்களின் தூற்றலுக்கு ஆளாகமாட்டார். ஒரு போலீஸ்காரன் சட்டத்தை மீறி ஆபீஸிலுள்ள ரகசியங்களை வெளியில் வந்து கொட்டிக்கொண்டு திரிவதுதான் நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இதுபற்றி நாம் பன்முறையும் மேலதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியதுண்டு. அதிகாரிகளும் அவ்வப்போது கண்டித்திருந்தால் ஆபீஸிலுள்ள விஷயங்களை கண்டவன், போனவன், வந்தவனிடமெல்லாம் தூற்றிக்கொண்டு திரியமாட்டான். இது போலீஸிற்கே அவமானமாகும். அவரிடம் நேரில் கேட்கப் போனால் போலீஸ் உத்தியோகமே, பெய்ஞ்சா, லுச்சவாய்த்தனமானது. சரி விட்டேனா தகடிகை, நாலுபெய்ஞ்சாக்களிடம் களிமண்ணையும், கல்லையும் கொடுத்து எறியச் சொல்லுகிறேன் பார்! என்கிறார். மேலதிகாரிகளே! போலீஸ் தொழில் பெய்ஞ்சாக்கள்தான் செய்யக் கூடியது என்று போலீஸ் கான்ஸ்டேபிள் சுந்தரராஜுலு சொல்லுகிறது உண்மையானால் விட்டுவிடுங்கள். கல்லையும், சட்டியையும், மண்ணையும் கொண்டு எறியட்டும்; பொறுத்துக்கொள்கிறோம். இல்லையேல் நமது சகவர்த்தமானியால் சர்க்கார் சிப்பந்திகளுக்கு மானம் போய்விட்டது ஞாபகமிருக்கட்டும். அஹிம்ஸை என்பதற்கும், ஹிம்ஸை என்பதற்கும் அர்த்தம் தெரியாத முழு முட்டாள் சுந்தரராஜுலுவாலல்லவோ பத்திரிகாசிரியர்கள் நஷ்டப்படவும் சர்க்கார் அவமானத்திற்குள்ளாகவும் நேரிடுகிறது. போலீஸ் ரகசியங்களை கொட்டி உளரும் போலீஸ் சிப்பாய்களை வேலையினின்று நீக்கிவிடுவதே மேல் என்பதை மீண்டும் மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்திக்கொள்ளுகிறோம்

பக்ஷமின்றி சீர்தூக்கிப் பார்த்தால் கலாசாலை ஆசிரியர் சதானந்தர் விஷயத்தில் போலீஸார் நடந்துகொண்டது சட்டத்தை மீறியதாகும். அதுபற்றியே ரூ. 5500 நஷ்ட ஈடாக விதித்துள்ளேன். மிஸ்டர் ஆர்டின்ஸ் பேரிலும் குற்றமில்லாமலில்லை. உத்தரவின்படி சிப்பந்திகள் நடந்துகொள்ளுகிறார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டும். இந்த ஒரே குற்றந்தான் அவர் பேரிலும் சாட்டப்படலாம் எனக் கூறியுள்ளார்.

வில்லிங்டன் ஆட்சியில் நடப்பனவெல்லாம் நடந்துதானே தீரவேண்டும். குப்பை கூளங்களை எல்லாம் தன் தலையின் மேல்கொட்டிக்கொண்டிருக்கும் வைஸிராய் சாஹிப் இதற்கென்ன சொல்வாரென்பதுதான் தெரியவில்லை.

காந்திஜியும்-புதிய உலகமும் : :

பிஷப் ரஷல்

வருங்காலத்தி லிருக்கவேண்டிய உன்னதமான—மாசற்ற—நம்பிக்கையுள்ள—ஒரு இயக்கத்தை—விடுதலையின வேலையை இந்தியா உணர்த்திக் கொண்டிருக்கிறது. அதன் முரசை—அஹிம்சைப் போரை—ஒத்துழையாத்தன்மையை பிறர்க்கு அறிவுறுத்தும் தத்துவநிலையை பாடமாகக் கற்பிக்கத் தொடங்கிவிட்டது. நமது அபிப்பிராயப்படி பிரிட்டிஷார் இந்தியாவில் காலடி வைக்கப்பட்டதி லிருந்து வரவேள மாளா அதன் ஜீவகாதுக்கள் அபகரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவின் நன்மைக்காகவே—இந்தியாவின் மேல் பற்றுதல் வைத்துக்கொண்டிருக்கிறதென பறை சாற்றிவந்தது; மோசமானதென ரூபித்தாய்விட்டது. இந்தியர்களுக்கு அரசியல் ஞானம் சிறிதுமில்லை யென்றும், கோழைகளென்றும் இந்தியாவை நிர்வகித்துக் கொள்வதற்கு பிரிட்டிஷாரின் உதவி பெற்று—பயிற்சி யடைந்து படிப்படியாய்ச் சீர்திருத்தம் வழங்கப்பட வேண்டுமென்றும் சொல்லிவந்த தெல்லாம், சுயநலம் பற்றியதென யூகிக்க ஹேதுவாய்விட்டது. எதிர்காலத்தில்—காலைய உலகில் இந்தியா முதன்மைஸ்தானம் பெற வழிதேடிக் கொண்டது. அதன் சுய மதிப்பு—பிறப்புரிமை அன்னிய ஆட்சியின் கெடுதி பொருளாதார நிலைமை, சுகாதாரம், கல்வி, கைத்தொழில் முதலியயாவும், சுதந்திரமின்றி அமைக்காயிருக்கக் கூடாதென இந்தியத் தலைவர்கள் நன்கு அறிந்துகொண்டனர். ஒரே வார்த்தையில் கூறினால் உலகத்திலேயே இதுவரை கேட்டிராத—மகத்துவமான ஒரு பிரசாரத்தை இந்தியா எல்லா வுலகிற்கும் எடுத்துக் காட்டிவிட்டது.

ஏகாதிபத்தியக் கொள்கை கசப்புள்ளது. வாக்குரிமை யாபேருக்கும் பொதுவாக இருக்க வேண்டுமென்றும், ஏழை, பணக்காரர்கள், உயர்வு, தாழ்வு பிரிவினையை உண்டாக்குமென்று விளக்கிவிட்டது.

இனி அரை நிமிஷமேனும் பிரிட்டிஷாரின் எதேச்சாதிகார சட்டத்திற்கு உட்படோமென தலைதூக்கி நிற்கிறது. போதுமான வரை 150 வருஷகாலம் இம்சைகளைப் பொறுத்து வந்தது. அஹிம்சை—இந்தியாவின் புராதனக் கொள்கையாயினும், அந்தப்புண்ணியச் செயலை நாளடைவில் கை நழுவவிட்ட பயனை அநுபவித்துவிட்டது. இந்திய பொது ஜனங்கள் எதையும் லக்ஷியில் நம்பும்குணமுடையவர்கள். இப்பொழுதுகூட பிரிட்டிஷார் சொல்லுகிறபடி பிரிட்டிஷ் ஆட்சிதான்வேண்டுமென்பாருமில்லாமலில்லை. ஆனால் நூற்றுக்கு தொண்ணூறு பேர் மகாத்மா காந்தியை எவரும் மறுக்க முடியாமலுமிருக்கிறது. காந்திஜீ சம்பந்தமற்ற எக்காரியத்திலும் சீர்திருத்தமும் இந்தியர் விரும்புவதற்கில்லை. பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளாவர்க் கூற்றின்படி இந்தியா சுதந்தரமடைவதற்கு தேசிய மகாசபை (காங்கிரஸ்) முக்கிய தடையாயிருக்கிறதென்று சொல்லுவது சுத்த அபத்தம். பிரிட்டிஷாரின் உதவியைக்கொண்டு சுதர்மத்தை-சுயராஜ்யமெல்லாம் அடையப் போவதில்லை என்று இந்தியத் தலைவர்கள் தீர்மானித்துவிட்டனர். பலாத்கார முறையில் காந்திஜீயின் இயக்கத்தை—தெய்வீக சக்தியை—மன ஒற்றுமைப் பாட்டையை—ஒரு தேசத்தினரின் முக்கிய நோக்கத்தை அடக்கிவிட முடியாது. இந்த இயக்கம் இன்னும் உன்னத மடையுமானால், பிரிட்டிஷ் சட்ட திட்டங்கள் உபயோகமற்றதாயும், பிரிட்டிஷாருக்குள்ளேயே பிரிவினையையும், அபிப்பிராய பேதங்களையும் உண்டுபண்ணிவிடும். அடக்குமுறையை வைத்துக்கொண்டே இந்தியசர்க்கார் அவர்களது தாஸர்களைக் கொண்டு சீர்திருத்தம் ஒன்றை வழங்கிவிடலாமென கனவு காண்கிறது. அது எவ்வளவு தூரம் பலிக்குமென்பதற்கில்லை. சுதந்தர தாகம் பெற்று—அதன் எல்லையை அடைவதற்கு எவ்வளவு இன்னல்களையும் தாங்க சக்தி பெற்றிருக்கும் இந்தியாவும் அதன் இயக்கத் தலைவர் அரசியல் புண்ணிய புருஷன்—மத பக்தியும், மனோதைரியமும், அஹிம்சை ஞானமும் ஒருங்கு அமையப்பெற்ற இல்லற ஞானி காந்திஜீ யவர்களின் வாழ்க்கை நல பெருமையை உலகமே கவனித்துக்கொண்டிருக்கிறது.

அரை கண்பார்வை அழகைகுறைக்கும்

தமிழா! தமிழா!! தூங்காதே! விழி திற! எழுந்திரு வென பலதரம் முரசறைந்தோம். செவிடன் காதில் ஊதிய சங்குபோலாகுவதே தவிர, காரியத்தில் பசை யில்லை வீர மில்லை—ரோஷமில்லை என்று சொல்ல வில்லை. பொதுவாகத் தமிழர்கள்! என்பதில் கிழவர், வாலிபர், ஸ்திரீகள், குழந்தை, குட்டிகளு மிருப்பார்களாகையால், யாருக்கோ வென, வாளாதிருக்கலாம். நாம் அழைப்பது யாரை எனில்? உன்னைத்தான்! ஏ! வாலிபா!! கௌமாரதிசையை யடைந்துவிட்டாய், தலைமயிரை ஒழுங்குபெறச் சீவியிருக்கிறாய். நான் ஒரு தமிழன். ஆண்பிள்ளை வருங்காலத்திய நிர்வாகியெனக் காட்டிக்கொள்ள மீசையை ஒதுக்கித் திருக்கி, முறுக்கி விட்டிருக்கிறாய். காப்பிஹோட்டல்களிலும், அடுப்பங் கரையிலும் கிழிந்த பத்திரிகையை வைத்துக்கொண்டு அவர்களுக்கென்ன? அவ்வளவு ஆண்மை என்று சுற்றும்முற்றும் பார்த்துக்கொண்டு படபடத்து ஏதேதோ உளறுகிறாய். அர்த்தமற்ற பேச்சில் வீரமற்ற கைவீச்சில், உன் காலத்தைக் கழிக்க நினைக்கிறாயா? நீ இப்பொழு திருக்கும் யௌவன பருவத்திற்சேற்ற மனைவியை அடைய உனது பெற்றோர்கள் முயற்சிப்பதற்கு முன் கல்யாணமாவதற்குள் நீ உன்னையும், உனது சகோதரர்களையும் விடுவித்துக்கொள்ள வேண்டாமா? அப்படி செய்யாதிருந்தால் உன் மனைவியிடம் சுதந்திரபுருஷனென்று உன்னைச் சொல்லிக்கொள்வதற்கு லச்சை உண்டாகாதா? ஐயோ! மேனாட்டுக்கல்வியும், நாகரீகமும், மலிந்த இக்காலத்தில் ஆங்கிலங் கற்ற உன் மனைவி உன்னைப் பார்த்து நீ எங்கே போனாய் என்றால் கோபம் வரலாமா? நீ அடிமையா யில்லாதிருந்தால் அவள் அப்படி சொல்லுவதற்கஞ்சுவாளா? முகத்தைச் சுழிக்காதே! ரோஷமுண்டாயிற்று? எழுந்து நில்! காலந் தாழ்த்தாதே உன் கடமையைச் செய்! செய்வதில் பற்றுதல் வைக்காதே! உனது லக்ஷியத்தை லகுவில் அடைவாய். சுதந்திர தேவியை முழுப்பார்வையால் பார்! அரைப் பார்வை உனது தொழில் பங்கமுண்டாக்கும். பிறர் மதிக்கும்படி நடாதே! மதித்தாலும், மதிக்காவிட்டாலும் ஒன்றே. மகாத்மாவைப் பார்த்தாயா! பிறர் தன்னை மதிக்கும்படி செய்துகொள்வது அவரது அகராதியில் காண்பது அரிது. தனக்கு நன்மையெனத் தோன்றியதைச் செய்! பிறர்எவ்வளவு இடுக்கண் விளைத்தாலும், பொருட்படுத்தாதே! குடும்பங்கள் உன்னைச் சார்ந்து உனது உடம்பையே ஒட்டி நிற்குமா? உடம்பிற்கும் ஓரளவு நன்மையே கிடைக்கும். அந் நன்மை தான் கீர்த்தி எனப்படுகிறது. சுதர்மத்திற்காக பாடுபடும் கிழட்டுக் காந்திக்கும் கீர்த்தி தான். அதை ஒடுக்கி ஆளமுற்படும் வில்லிங்டனுக்கும் கீர்த்திதா னென்றாலும் கீர்த்தி அபகீர்த்தி என்பதில் சொற்ப வித்தியாசந்தான் உண்டு. இதனை இங்கு வியாக்யானஞ்செய்வதற்கில்லை. நமது வியாக்யானந்தான் நமக்கு முக்கியம்.

ஆங்கு அபிப்பிராயம் அப்படியென்றால்

துப்பாக்கிமுனையில் வில்லிங்டன் அடக்குமுறை காங்கிரஸ்வைத்தியசாலைகளையும் தாண்டிவிட்டது. தாண்டத்தானே செய்யும்! ஐந்து வருடத்தின் முதல் பகுதியிலேயே அடக்குமுறை ஆரம்பமாயிற்றல்லவா? முடிவுவரை அப்படித்தானிருக்கு மென்றால் இடைநடுவிலேயே இங்கிலாந்து செல்லத் தீர்மானித்து விட்டதும் உண்மைதானோ; என்னவோ அறியக்கூடவில்லை. அடக்குமுறையால் ஒன்றும் நடைபெறாதென்று கண்டுகொண்ட அவர் போய்த்தானே ஆகவேண்டும். அங்கும் தலை தப்புவது தம்பிரான் செயலாகத்தானே முடியும் போலத் தெரிகிறது. ஆயுள்க்காலம் நீடித்திருக்க வேண்டுமென்பதுதான் எப்போன்றாரின் கருத்து. லண்டனிலுள்ள வொயிட் பீல்டு மாதாகோவிலில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் இந்தியாவின் நிலைமை பற்றி பேசுங்கால் போல்ஸ்விக் பிரசாரம் அனுஷ்டிக்கப்பட்டால் அதை அடக்குவதற்கு சர்க்கார் எவ்வளவு முறையைக் கையாளலாமோ அதையும் வில்லிங்டன் அடக்குமுறை தாண்டிவிட்டது. இந்த நிலையில் வில்லிங்டன் காந்திஜீயோடு சமாசம் செய்யவேண்டி ராசிபேச முற்பட்டிருப்பது பெருந் தவறாகும். பிரிட்டிஷாரின் தவறை உலகம் பூராவுக்கும் அறிவிப்பான் வேண்டி ஐரோப்பாவுக்கும் பிரயாணப் பட்டுவிட்டேனே அங்கிருந்து ஜினிவா வந்தவுடன் "அகில தேச செஞ்சிலுவை சேனை" தலைமைக் காரியாலயக்

இதுவும் ஒரு சூழ்ச்சிதான்

பர்மாவில் வெகு ஜனமதிப்புக்குரிய ஜி.சி.பி.எ.சங்கம் சட்ட விரோதமானதெனச் சர்க்கார் அறிக்கை விடுத்துள்ளதை நேயர்களறிந்ததே. பர்மியரால் "அத்தின்" என்றழைக்கப்படும் அச்சங்கம் மூன்று பிரிவுகளாக இருந்தன. சென்ற வருஷம் அக்கமிட்டியினர் அதாவது ஊசு, ஊசுத்தைங், ஊசிடலேய்ங் மூவரும் ஒன்றுசேர்ந்து காலத்துக்கேற்பநடந்துகொள்ளத்தக்க தீர்மானங்களோடு வேலைசெய்ய ஆரம்பித்தனர். ஆனால் அதன் கொள்கைகள் பெறக்குறைய காங்கிரஸைத் தழுவியே இருந்ததாதலால், அதனை நசுக்கப் பிரயத்தனஞ் செய்ததை சர்க்காரால் ஊசுத்தெய்னுக்கு கிடைத்துள்ள பதிலிலிருந்து அறியக்கிடக்கிறது. இந்தியாவினின்றும் பர்மாவைப் பிரிப்பதற்கு முக்கியத் தடையாக இச்சங்கங்களிருக்கிறதென்பது வெளிப்படை. இந்தியர்களுக்கு எவ்வித உரிமையும் வழங்கப்படாதென வாதாடிய நமது பாப்பே வர்க்கத்தார் இச்செய்தி கேட்டதும், தமது எண்ணத்தை முடித்துக்கொள்ள பிரிவினைப் பிரசாரத்தைப்பரப்புவதற்குகிளம்பிவிட்டனர். சும்மாவேஆடும் பிடாரி, கச்சைக்கட்டினால் ஆடாதிருக்குமா? நெற்றித் தண்ணீர் நிலத்தில்விழப் பாடுபடும் அரை வயிற்றுக் கஞ்சிகூட இல்லாமல் கந்தைத் துணியை உடுத்திக் காலங் கழிக்கும் இந்தியர் வந்ததால்தான் நாம் ஏழையாய்விட்டோம்; என்ற பொய்ப் பிரசாரத்தை இவர்கள் செய்யத் தயங்கமாட்டார்களாகையால் ஏற்கனவே இந்தியர் வீடுகளிலும் சொத்துக்களிலும் கண்வைத்துக்கொண்டிருக்கும் பெய்ஞ்சாப் பேர்வழிகள் கலகம் விளைவிக்

கில் இந்தியாவிலுள்ள காங்கிரஸ் ஆஸ்பத்திரிகளும்கூட சட்ட விரோதமானது என்று வில்லிங்டன் ஆட்சியில் கருதப்பட்டு அவைகளையும் பறிமுதல் செய்யும் கொடிய—அட்டூழியங்கள்பற்றி கேள்வி கேட்கப்போகிறேன் என்பதாக டாக்டர் பிரைவாட் பேசியுள்ளார். பிரிட்டனிலுள்ளவர்களின் அபிப்பிராயமே இவ்விதமெனின் அடக்குமுறையின் தாண்டவம் பற்றிப் பேசவும் வேண்டுமா? அடிமை வாழ்க்கையின் பலனையும் அனுபவிக்கத்தான்வேண்டும் இன்றேல் அறுபட வேண்டும்; இரண்டிலொன்றுதான்!

மஹோற்சவம்.

இரங்கூன் பூர்தட்டான் 59-வது வீதி 40-வது எண்ணுள்ள இடத்தில் ஸ்தாபித்திருக்கும் ஸ்ரீமத் இரங்கோன் இராமாநுஜ விஸிஷ்டாத்வைத ஸிஷ்டாசார ஸம்பிரதாய சபையாரால் மேமீ 1-ந் தேதி ஆதிவாரந் தொடங்கி 10 நாட்களும் மாலை 5 மணி முதல் 8 மணி வரையில் உற்சவம் கண்டருளிவித்து 10உ செவ்வாய்க்கிழமைதினம் சாற்றுமுறையும் 11உ புதன்கிழமையன்று வஸந்தோற்சவமும் பரிபாலிக்கப்படுமாகையால் இதைக் கண்ணுறும் பாகவதர்களும் பக்தசீலர்களும் பிரதிதினமும் எழுந்தருளி சேவை சாதித்து மேற்படி மஹோற்சவத்தை தலைக்கட்டிவைப்பதுடன் நம் இராமாநுஜரை மங்களாஸாஸனஞ் செய்யும்படி மிக்கபக்தி விநயத்துடன் ப்ரார்த்திக்கின்றனம்.

—காரியதரிசி

காமலிருப்பதற்கில்லை. ஆதலால் நமது சகோதரர்கள் பர்மியரோடு, நட்புமுறையிலேயே நடந்துகொள்வதோடு அடியிற் குறிப்பிடும் காரணங்களையும் அனுசரித்து நடக்கவேண்டும்.

பர்மியருக்குச் சொந்தமாயிருந்து கடனிறுக்கச் சக்தியற்று, கடன்காரர்களுக்குச் சமீபத்தில் ஒப்படைத்த நிலங்களைப் பயிரிடுதல் கூடாது. இதற்குமுன்பர்மியர் உழுதுகொண்டிருந்த நிலங்களை சேவாயை உயர்த்தியாகிலும் மற்றெவ்வித காரணத்தாலாகிலும் சம்பந்தம் வைத்துக்கொள்ளக்கூடாது. பர்மிய விவசாயிகளிடம் இந்தியர்கள் வேலைக்கமருதலாகாது. பர்மிய முதலாளிகளிடம் இந்தியக் கொடுக்கல் வாங்கல் பற்றுவரவு செய்துகொள்ளவுங் கூடாது. இவைகள்தான் இந்தியர்மீது பர்மியர் துவேஷங்கொள்ளக் காரணமாய் இருந்துவருகிறது. இந்தியர்களிற் தீண்டப்படாதாரில் சிலர் பர்மிய பாஷை தெரிந்துகொண்ட செருக்கில் ஒரு வேலையுமில்லாமல் அகட விகட சாமர்த்தியஞ் செய்பவர்களைப் பற்றி பொது ஜனங்களுக்கு தெரிவித்துவிடவேண்டும். இவர்களாலும் பர்மியர்கள் காரணமற்ற கலகத்தைச்செய்துவிடாமலில்லை. இவ்வுதாரணங்களை ஞாபகப்படுத்திக்கொண்டிராவிடில் எதிரிகளின் சூழ்ச்சி பலித்து நமக்கு ஆபத்தேற்படுவதுதிண்ணம்.

—விவசாயி

தெய்வத்தை நம்பு! தீவினை யகற்று!

நமது லக்ஷியத்தை யடைய-சுதந்தர வாழ்வைப்பெற அடிமை வாழ்வைப் போக்க முயற்சித்த பல நல்ல தலைவர்களையு மிழந்தோம். நமது பிரதம சேனாதிபதியையும், தளகர்த்தர்களையும் படிப் படியாய்ப் பிரிந்துவிட்டோம். நமது மானமும் போய்விட்டது; ஸ்திரீகளின் மங்கிலியத்தையும், மத சின்னமாகிய குங்கும பொட்டுகளையும் இதரர்கள் கைத்தொட்டுஅறுக்கவும், அழிக்கவும் ஆளானோம். துச்சாதனன் துரோபதையை துகிலுரிதலைக் கண்டும் சத்தியத்தை மீறா திருந்த விமனை, அர்ச்சுனனை நகுல, சகாதேவனை விட்டும் தர்ம சொரூபியாம் மகாத்மாவின் கட்டளையைச் சிரமேற்கொண்டோம். தடியடிகள், துப்பாக்கிக்குண்டுகள் யாவையும் புஷ்பமாலையாகத் தாங்கினோம். சிறைச் சாலையை தவச்சாலையாக நினைத்தோம். நமது தீரத்தையும், வீராவேஷத்தையும் உலகமே மெச்சத் தலைப்பட்டது. பயங்கொள்ளி—கோழைத்தன முடையவர்களென்ற மாசு நீங்கியது. ஆத்மஜோதி ஜ்வலித்தது. வில்லிங்டன் ஆட்சி நேர்மை யற்றது; ராக்ஷதத்தன்மை யுடையது எனப் பலரும் இகழ்ந்தனர். சர்க்கார் குருட்டு முழி முழித்தது. கண்டனங்கள் மிகுந்தது. கோவில் பூசாரி சாமுயல் ஹோர் பார்த்தார். தமது தர்மகர்த்தர்களைத் திருப்திசெய்ய ஒன்றும் வழியில்லை. கடைசியில் சுருக்குப் பையை யவிழ்த்து அடக்குமுறையால் அமைதியென்ற பொய்யைவெளிவிட்டான். இந்தப் புழுகைக் கேட்டதும் புழுகினிப் பத்திரிகைகள் புன்சிரிப்புக் கொண்டது. குட்டிப் பிரசாரகர் கூத்தாடினர். காந்திக்கும், ஹோருக்கும் கடிதம் நடக்கிறதெனக் கட்டிவிட்டார்கள். அதைக் கேட்டதும் நமது மித வாத சிகாமணிகள் சோதிடத்தைத் திருப்பிப் பார்த்தனர். எப்ரல் 13-ந் தேதி பிறந்தது. கோழிமுட்டைதான் கிளம்பியது. இது விஷயம் வேறு; வில்லிங்டனின் சம்பிரதாயம், வீர மொழி, கனைகனைப்பு, குட்டிக்கரணம், பல்டி, உள்ட்டி யாவையும் விழுங்கி நிற்கும் காங்கிரஸ் தலைவர்களையும், தொண்டர்களையும் என்னசெய்வதென ஆந்தை முழிமுழிக்குந் தருணம்; பழைய, பழைய மிகப் பழைய கிழட்டுப் புலியைத் தலைவராகக் கொண்ட டில்லி காங்கிரஸ் கூடப்போகிறதெனத் தெரிந்ததும், அமைதிப் புழுகுக்கு ஆபத்து யேற்பட்டுவிட்டது. எவ்வளவோ நேரங் குசு குசுவென்று பேசி 19-ந் தேதி காங்கிரஸ் கூடாதே! யெனத் தெரிவித்துவிட்டனர். கடைசியாக பண்டிதரும் கைதிசெய்யப்பட்டார். காங்கிரஸோ அதன் தீர்மானத்தை நிறைவேற்றியது. இனிமேல் நமது வேலை யென்ன? பிருகபலங்கொண்ட கோலியாத் வீரனை—கடவுளை நம்பி எதிர்த்த தாவீதைப் போல், அஹிம்ஸையாம் கவண் கொண்டு கடவுளை நம்பி இன்னல்களைத் தாங்குவோமாக!

ஆசி கூறுகின்றோம்.

சென்ற 21-4-32 இரவு சுமார் 7-30மணிக்கு இரங்கோன், பசுபக்தான் ஹீப் ரோட் 19 நிர். இல்லத்தில் இரங்கோன் போகலே பஜார் 152 நிர் கத்திக்கடை நா. மு. காதர்பாக்ஷா அம்பலம் அவர்களின் கனிஷ்டகுமாரரும் எமனேஸ்வரம் முஸ்லீம் வாலிப அபிவிர்த்தி சபாவின் அங்கத்தினருமான ஜனாப் ஜெயினுலாப்தீன் அவர்களுக்கும், இரங்கோன் போகலே பஜார் 154 நிர். கத்திக்கடையினதிபரும் சிறந்த தேசாபிமானியும் எமனேஸ்வரம் முஸ்லீம் வாலிப சங்கத்தின் பொக்கிஷதாரரா யிருந்தவருமான ஜனாப் சி. கா மீ. காதர்முகைய்தீன் அம்பலம் அவர்களின் சிரேஷ்ட புதல்வி திருவளர்ச்செல்வி ஹவ்வா பீவிக்கும் இறைவனருளால் திருமணம் இனிது நிறைவெய்தியது. அழைப்பிற் கிணங்க நாமும் விஜயஞ்செய்திருந்தோம். வைபவம் கண்கொள்ளாக்காட்சியாக விருந்தது. நாம் வதூவரர்களுக்கு ஹிருதய பூர்வமாக வாழ்த்துக்கூறுகின்றோம். எல்லாம் வல்ல பரம்பொருளின் இன்னருள் சித்திக்குமாக.

தேசோபகாரி

(வாரம் இரு முறை)

வருட சந்தா (இரங்கோன்)		ரூ	3	0	0
6 மாதம்	,,	,,	1	8	0
வருட சந்தா (வெளியூர்)		,,	4	8	0
6 மாதம்	,,	,,	2	12	0

1931-ஞு அக்டோபர் முதல் 1932-ஞு மார்ச்சு மாதம்வரை "தேசோபகாரி" சேர்ந்து விலைக்குக் கிடைக்கும். (50 பிரதிகள் உள்ளது) தபாற்கூலி உள்பட ரூபாய் இரண்டுதான்.

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுஎண் 245] (1922-ஹு ஸ்தாபிதம்.) 9 [அரைபணு

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இருமுறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஹு (1-5-32) சித்திரை-மீ 19உ ஞாயிற்றுக்கிழமை

குப்பை கூளங்களுக்கு இடமல்ல!

ஒரு நாட்டினர், ஒரு குறிப்பிட்ட நிறத்தினர் உலகத்தைஎல்லாம் தாங்களே ஆளவேண்டுமென்று நினைக்கின்றனர்—திமிர் கொண்டலைகின்றனர் ஏகாதிபத்திய ஆட்சி புரியவேண்டுமென்ற அவாவுக்கு காரணம் என்னவென்று பலரும் நன்கு ஆராயவேண்டும். ஏகாதிபத்திய ஆசைகொண்டிருப்பவர்கள் தங்கள், தங்கள் நாட்டில் செய்யப்படும்—குப்பை கூளங்களை எல்லாம் கொண்டுபோய் விற்று தங்கள் பையை நிரப்புவதற்காகவேதான் என்பது ஸ்பஷ்டமாக தெரியவே செய்கிறது. "முன்னர் ஏகாதிபத்தியஅரசர்கள் இருந்திருக்கின்றனரே"? எனின் ஆம் உண்மைதான். அந்தக் காலம் வேறு; இந்தக்காலம் வேறு. அக்கால அரசர்கள் மனித சமூகத்திற்கே—பொதுவான நீதியை வழங்குவதற்காகவே ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்தனர். மோட்டார் கார்களையும், விளையாட்டுப் பொம்மைகளையும், சாராயம் முதலியலாகிரி வஸ்துக்களையும் விற்று பிழைப்பதற்காக மட்டும் ஏகாதிபத்திய அரசர்களாக இருக்கவில்லை என்பதையும் உணர்வார்களாக.

தற்சமயம் உலகத்திலேயே செம்பாதிப் பகுதியை ஆளும் பிரிட்டனின் ஏகாதிபத்திய ஆசைக்குக் காரணம் என்ன? லங்கஷயர்த் துணிகளும், மற்றும் தன்னாட்டில் உற்பத்தி செய்யப்படும் செயற்கைப் பொருள்களை விற்க சந்தைகள் வேண்டுமே என்ற காரணத்தால் தான்.

பிரான்ஸின் ஏகாதிபத்திய ஆசைக்குக் காரணம் தனது நாட்டில் உற்பத்திசெய்யப்படும், சாராயம், வாசனைதிரவியங்கள், சோப்பு முதலிய எண்ணற்றஉதவாக்கரையானபொருள்களை எல்லாம் விற்க இடம் வேண்டும் என்பதற்காகத்தான்.

அமெரிக்காவில் ஏகாதிபத்திய விளைவிற்கு காரணம் தனது மோட்டார்களையும், மற்றும் எண்ணற்ற பொருள்களையும் விற்க இடம் வேண்டுமென்பதுதான்.

உலகில் ஒருநாடு செழிக்கவும், ஒருநாடு வறுமைக் குழியில் வீழ்ந்து தவிக்கவும், ஒரு நாட்டினர் அஷ்ட ஐஸ்வர்யத்துடன் வாழவும் மற்றொரு நிறத்தார் தீரா வறுமையின்வாய்ப் பட்டுழலவும் ஏகாதிபத்திய ஆட்சியின்போக்கே காரணமாகும். ஆதலால்தான் இப்பொழுது எத்திசையை நோக்கினும் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்ச்சிகளைப் பார்க்கிறோம். எல்லா நாடுகளும் ஜாதியினரும் சுதந்திரத்துடன் சுயராஜ்யத்துடன் அடிமை வாழ்க்கையை அறுத்துவாழவேண்டுமானால் ஏகாதிபத்தியம் ஒழிய வேண்டியது அவசியமாகும்.

தமிழ் உத்தியோகஸ்தர்களும், தமிழ்மந்திரிகளும் ஆட்சிசெய்யும் தமிழ்நாட்டில் நேற்றுக்கூட சுதந்தர வீரர் குப்புசாமியை பலித்தியாகம் செய்துவிட்டதற்கும் அன்னிய ஆட்சிதான் காரணமென்பது விளங்கவில்லையா? சென்ற மாதம் 2-ந் தேதி போலீஸ்காரன்களால் அடிக்கப்பட்டு—படுகாயமடைந்து தலைமை வைத்திய சாலைக்குக் கொண்டுபோகப் பட்டும் சென்னை சர்க்காரும் வாளாவிருந்து விட்டது. நமது குப்புவும் மரணத்திற்காளாகி விட்டார். கமிஷனர் சாஹிப் இனிமேல்தான் விசாரணையை ஆரம்பிக்கப் போகிறாராம். ஒரு இந்தியனின் உயிர் அவ்வளவு சர்வ சாதாரணமாகக் கருதப்படும்பொழுது பிரிட்டிஷ் ஆட்சி இருந்தென்ன, இறந்தென்ன?

இந்தியா அடைந்த நன்மை

ஆயிரக் கணக்கான தெய்வங்கள், சாஸ்வதமற்ற திட்டங்கள் சுயநலங்கொண்ட தான ராமங்கள், பல பிரிவினைஜாதிகள், வல்லான் வகுத்த மதங்கள், நாகரீகமற்ற நடவடிக்கைகள் முதலியன நிறையப்பெற்ற—விசாலமாகிய ஒரு தேசத்தை எவ்வளவோ கஷ்டசாத்தியமாய் உழைத்து முன்னுக்குக் கொண்டுவந்திருக்கவேண்டும் என்ற பொருள்பட ஒரு ஐரோப்பிய நண்பர் பாம்பே கிரானிக்கலில் வரைந்துள்ளார். அதுபற்றி அவருக்கு மூளைபெரிதாய்த் தானிருக்கவேண்டும். "ஆதாயமில்லாமலா தம்பி ஆற்றைக் கட்டி இரைத்தீர்" என்பது போல் நாம் எவ்வளவு தெய்வபேதங்கள் ஆசித்திருந்தபோதிலும், கடவுளென்று ஒருவரைத் தான்—பரபிர்மத்தைதான் இந்தியா ஒப்புக்கொண்டும், பரபிர்மத்தின் பிரதி யொளியை-ஆத்ம நிலையை உணர்த்திக்கொண் டிருக்கிறது. குப்பைத் தொட்டியைக் கிளரிப்பார்த்த நண்பர் நம்மை முன்னுக்குக் கொண்டுவந்ததாகக் கூறும் பிரிட்டிஷாரின் தன்மையைச் சுருக்கியாவது கூறிஇருக்கின் சிறிது ஆறுதலளித்திருக்கும். அவர் மறந்திருந்தாலும் நாம் ஞாபகப்படுத்தாமலிருப்பதற் கில்லை. இந்தியருடைய செயற்கை பல கிளைகளை உடையதாயினும் இயற்கைத் தத்துவத்தை விசாலப்படுத்தியே வந்திருக்கிறது. பிரிட்டிஷார் இங்கு அடிவைத்தவுடன் இந்தியருடைய புராதன விதிகள் மறைந்தன. அநுஷ்டானப் பூசை முதலியவைகள் செய்வதொழிந்தன. வியாபாரத்தை-பண முடிச்சை-சுயநலத்தை விசாலஞ்செய்ய சுயமதிப்புத் தந்திரத்தை-மித்திர பேதகத்தை கைக்கொண்டதும் இந்தியக் கலைமகள் ஒளி மழுங்கினள். மிருக பலங்கொண்ட பெரிய அரசாங்கத்தைக்கூட ஒரு பெண்பாவாய் அழிந்துபோகச்செய்யும் வாக்கின் தத்துவத்தை இழந்தது. கூழுக்குழைக்கும் உத்தியோகமே சிறந்து விளங்கியது. இந்தியாவிற்குரிய பழக்க வழக்கங்கள்முற்றும் மாறின. அவரவரின் சொந்த பாஷைகளைக் கொலை செய்தனர். உஷ்ணதேச உடைகளைக் களைந்து பனிமண்டல உடைகளைத் தரித்தனர். வாய்களில் கொள்ளிக் கட்டைகளைப் புகுத்திப் புகைகளை ஊதினர். மதுபானத்திலும் மேனாட்டுச் சரக்கையே உயர்வெனக் கருதினர். ஸ்திரீகளோ மானமில்லாமல் நிர்வாண உடை அணிந்தனர். லக்ஷக்கணக்காய் அன்னியமதத்தில் புகுந்தனர்''. இது வேறு விஷயம். அரைவயிற்றுக் கஞ்சிக்கில்லாத் பரமஏழைகள் மிகுந்தனர். நியாயம்-தர்மம்-யோக்கியப்பொறுப்பு, கிஞ்சிற்றுமில்லாது இந்தியர் தண்டிக்கப்படுகின்றனர். கௌரவம் வாய்ந்த ஸ்திரீகள், வயது முதிர்ந்த அம்மையர்கள் வதைக்கப்படுகின்றார்கள். இஷ்டமானபோது பொக்கிஷ மந்திரி சொன்னபடி கேள்வி முறைஇல்லாமல் கடிதத்தை-நோட்டுகளை அடித்து இந்தியப் பவுன்களை ஏற்றுமதியாக்கினர். சர்வதேச சங்கம்-சோம்பேறிகள் இளைப்பாறுமிடத்திற்கு 20 லக்ஷ ரூபாயும் கோழிமுட்டை மகாநாட்டுக்கும், இராணுவக் கூட்டத்திற்கும் அதிகாரிகளின் சம்பளத்திற்கும் உழைத்து, உழைத்து மண்டையில் மயிரில்லாமல் போய்விட்டது. இதுதான் பிரிட்டிஷார் இந்தியாவிற்குச் செய்திருக்கும் நன்மை என்பதை அன்பர் அறிவாராக. பஞ்சாப் மாஜி கவர்னர் மைக்கேல் ஓட்வியர் எழுதிய புஸ்தகத்தைப் படித்துவிட்டு இந்தியாவைப் பற்றிய அபிப்பிராயங் கூற முற்படுதல் கேவலத் தன்மையும், அறியாமையுமே யாகும்.

அவரை இவர் சந்தித்து !

"என்ன ஸார் ஊரிலே மழை கிழை உண்டா''? ஜனங்கள் பாடெல்லாம்சுகக்கியந்தானே? என்று கேட்டார்.

சௌக்கியத்துக் கென்ன குறை, வெயில் கான் மண்டையைப் பிளக்குது; வைக்கோல் போர்களெல்லாம் சாம்பலாக்கப்படுகிறது; முண்டமிருக்கு தலையை வெட்டி பர்மிய சிப்பாய்கள் வாசம்செய்யும் போலீஸ் ஸ்டேஷன்களுக் கருகாமையில் தொங்கவிட்டுவிடுகிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன் கூட "தேசோபகாரி" ஆசிரியர் ஓய் வந்திருக்கும் போதுபள்ளியில்புகுந்து விளக்கு,விளக்குமாறு, செருப்பு முதலியவைகளையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். ஊரெல்லாம் அழுகுது. இதைத்தானா ஒரு பெரிய சேதியாய்க் கேட்க வந்துவிட்டீர்.

அதுக்கல்ல ஸார்! ஊரெல்லாம் கொள்ளையும், கொலையும் என்று சொல்லுகிறார்களே! போலீஸ்காரன்களெல்லாம் உயிரோடுதானிருக்கிறான்களா? செத்துப்போனான்களா என்பதற்காகத்தான் கேட்டேன்.

மாங்கல்யத்திற்கும் மங்கையர் நூல்

(சீதை அம்மாள் வரைவது)

பண்டைய காலத்தில் நம்நாடு—இந்தியா எந்நிலையுற்றிருந்ததென்று பார்க்குங்கால்; சத்தியத்தை நிலைநிறுத்த சீதை சிறை புகுந்த நாடு— அகங்காரங்கொண்ட கௌரவாதிகள் அகத்தை அழிக்க துரௌபதை வனம்புகுந்த நாடு—கணவனின் உயிரைக்காக்கக் கங்கணங்கட்டி காலனிடம் மன்றாடிய சாவித்திரி பிறந்தநாடு—கணவனைக் கள்வனல்லவென்று காட்டி பாண்டியனைப் பழிக்குப் பழிதீர்த்த கண்ணகி பிறந்த நாடு—நளாயினி, தமயந்தி பிறந்த நாடு—ஔவை பிறந்தநாடு ஆண்டாளும் அம்மையாரும் அருள்புரிந்தநாடு—கவியரசன் பாரதி பிறந்த நாடு— பழம் பெருநாடு—பாடுவோமிதை யெமக்கில்லை ஈடு என்று கூறியதைப்போல் அநேக கற்பரசிகள் பிறந்த உத்தம நாட்டிலும் போர்முனைக்குப் புருஷனையும், புதல்வனையும் புன்னகையுடன் அனுப்பி வீரத்தை நிலைநாட்டிய உத்தம மாதசிரோன்மணிகள் பிறந்தநாட்டிலுதித்த சகோதரிகளே! நான் ஒன்றுமட்டும் ஞாபகப்படுத்தா திருக்க முடியவில்லை. பாரதநாடு தற்காலம், பசியாலும் பிணியாலும், சட்டமறுப்பால் அவர்களிடும் தொனி உங்கள் செவிக்குக் கேட்கவில்லையா? நமது படைத்தலைவர்—பொக்கைவாய்க் கிழவர்—காந்திஜி சிறை சென்றும் கையிலேந்தி பஞ்சடிக்கும் கைராட்டினத்தின் தொனியை—சர்க்கா சப்தத்தை உலகம்பூராவும் கவனித்துக்கொண்டிருக்கிறது. சுதந்திரத்தை-சுயராஜ்யத்தை நிலைநாட்டுவதற்காக ஸ்ரீமதி சரோஜினி நாயுடு, கஸ்தூரிபாய், கமலாதேவி, சிவபோகம் அம்மாள், பிருதாஸ், ஸ்ரீமதி ஜகட்ஷி முதலியயோர்களின் கஷ்டங்களில் நாமும் பங்கெடுத்துக்கொள்ளவேண்டாமா? தேச பக்தர்களையும், மகாத்மாவையும் சிறை மீட்கவும், தேசத்தை விடுவிக்கவும் உங்களுக்கு இஷ்டமில்லையா? நாட்டை மீட்கவேண்டிய வேலையில்-சத்தியாக்கிரஹப் போரில் கலந்துகொள்ளாவிடினும் நம் தலைவர்-காந்திஜி யிட்ட கட்டளைப்படி ராட்டினத்தை ஏந்தி நூல் நூற்கவாவது வேண்டாமா? குறிப்பாக பெண்கள் நூல்நூற்கும் தொழிலை கைக்கொள்ளாதலாலேயே 60 கோடி ரூபாய் அன்னிய நாட்டான்—நம்மை ஆளும் பிரிட்டிஷ்காரன் கொள்ளை கொண்டுபோகிறான் என்று நமது தலைவர்கள் பிரசாரம் செய்துவந்ததைக் கேட்டிருந்தும், அவ்வளவு சீக்கிரத்திலா மறந்துவிட்டீர்கள்! ஏழைகளின் துயர் நீங்கவும், நாட்டின் கைத்தொழில் ஓங்கவும் நூல் நூற்கவேண்டியதுதான் பெண்களின் முதற் கடமையாகும். "மங்கையர் நூற்ற நூலை கங்கணங்" கட்டிக்கொள்ளென்று ஆன்றோர் கூறிய வார்த்தைக்கு மாறாக மில் நூலினால் கட்டும் மாங்கல்யம் பலமற்றதாயிருப்பதை ஒழித்து நம் மாங்கல்யத்தைப் பலப்படுத்த நாம் நூல் நூற்கவேண்டியது இரண்டாவது கடமையாகும். நிற்க, நம் முன்னோர்கள் கொஞ்ச நாட்களுக்கு முந்தியவரையில்கூட நமக்குச் சீதனம் கொடுக்கும் காலத்தில் ராட்டினத்தையும் சேர்த்துக் கொடுப்பது வழக்கமாயிருந்ததென்பதை நோக்குங்கால் அது நம்கற்புக்கோர் வேலியாகுமென்பது தெற்றென விளங்கும். சில பெண்கள் கையினால் நூற்ற நூலில் நெய்த கதர் புடவை கனமாயிருக்கிறதென்று கூறுவதைக் கேட்க நகைப்பிற் கிடமாகவே யிருக்கிறது. நானும் நீண்ட நாட்களாக கதர்புடவையே தரித்து வந்திருக்கிறேன். கனம்-பளுவு என்னவோ தோற்றவில்லை. மாங்கல்யத்திற்காக கையினால் நெய்த நூலும் தயார் செய்துவிட்டேன். சகோதரிகளே! நாம் ஒவ்வொருவரும் மாங்கல்யத்தை கட்டுவதற்காகவாவது நூல் நூற்றத் தயாரிலிருக்கவேண்டாமா? ஸ்ரீமத் ராமாயணத்தில்சத்தியத்தையும்-தர்மத்தையும் நிலைநாட்ட அவதரித்து துஷ்டனை நிக்ரஹிக்க ஸ்ரீ ராமபிரான் ஸேதுவை அணைகட்ட முயற்சித்த காலத்தில் மிருகஜாதிகளும், பக்ஷிவர்க்கங்களும்கூட உதவிபுரிந்ததென்பதைபடித்தும் கேட்டவர்களாகிய நாம் சுதந்திரத்தை நிலைநிறுத்த சத்தியத்தையும் ஞானத்தையும் வெளிநாட்டிற்கு காட்டத் தோன்றிய மகாத்மாவின் சுதந்திரப் போருக்கு; சத்தியாக்கிரஹப் போரில் ஈடுபட்டவர்கள் போக எஞ்சிநிற்கும் நாம் நம்மாலியன்ற நூல் நூற்கும் தொழிலையாவது கைக்கொள்ளாது தூங்குவதுதர்மமாகுமா? நம் நாட்டு விடுதலை தற்காலம் நமது சகோதரிகளின் கைவசமே இருக்கிறது. ஓர் பெண்மணிக்கு ராஜீய ஞானம் உதித்து நான் ராட்டி

முடிந்ததைச் செய்யுங்கள்!

தமிழ்நாட்டில் குறிபபாக சென்னை வாசியும், சட்டமறுப்பில் தீவிரமாக வேலைசெய்து வரும் 25 வயதும் பூரா நிரம்பாதவருமான ஸ்ரீ குப்புசாமி இரண்டு கான்ஸ்டேபில் உத்தியோகஸ்தனால் அடிக்கப்பட்டு அதன் காரணமாக—தேசத்தின் உயர்ந்த இலக்ஷியத்திற்காக தமது உயிரையேதியாகம்செய்துவிட்டார். எதேச்சாதிகாரமுள்ள அன்னிய ஆட்சியில் எது நடக்குமோ; அது நடந்தேறிவிட்டது. இனியும் என்ன நடக்குமோ கடவுளே அறிவார். இம்மாதிரி சம்பவம் இந்தியாவிலன்றி வேறெந்த நாட்டில் நடந்திருப்பினும் நிலைமை வேறு விதமாக இருக்கும். நம்நாடோ அடிமைகள் நிறைந்த நாடென்றே அதிகாரவர்க்கம நினைத்து நம்மைக் கேவலம் புழுக்களுக்குச் சமானமாய் நினைத்து தனது தீய செயல்களை ஆற்றிவருகிறது. இந்த நெருக்கடியான நிலையிலும் சர்க்காரிடம் மண்டியிடும் துரோகிகள் சிலர் இருக்கும்பொழுது; அங்ஙனம்நினைப்பதில் என்ன ஆச்சர்யமிருக்கிறது இப்படிப்பட்ட அடிமைப் புத்தியுள்ளவர்கள் வேறு எந்த நாட்டிலுள்ளார்? எப்பொழுது எந்த நாட்டிலும் நாட்டைக் காட்டிக்கொடுத்து வயறுவளர்ப்பவர்கள் இருக்கத்தான்செய்வார்களெனினும் ஸ்ரீ குப்புசாமி எதே நோக்கத்திற்காக உயிரைவிட்டாரோ—மறிக்காரோ அதே வேலைக்கு—சட்டமறுப் பியக்கத்திற்கு நாமும் சிறிதாவது தியாகம் செய்யவேண்டாமா?

ஸ்ரீ குப்புசாமி காலஞ்சென்றதி நிமித்தம் நமது உருக்கத்தையும், கோபத்தையும் அதிகார வர்க்கத்திற்கு உணர்த்துவதற்காக தமிழ்நாட்டு இளைஞர்கள் சட்டமறுப்பில் சேர்ந்து இன்னும் அதிகமாக வேலைசெய்யவேண்டும். "அதிகார வர்க்கத்தின் ஹிம்ஸையால் இறந்தவருக்காக அஹிம்ஸை போர்வற்றபதிலாய்விடுமா"? என்று சிலர் கேட்கலாம். இந்தக்கேள்வி வேறுநாடுகள் சம்பந்தப்பட்டவரையிலுந்தால் சரியேயொழிய உடல் நலிந்து, உள்ளம் சிதைந்து, அடிமைப் புத்தியுடன் உலாவும் இந்தியர் சம்பந்தப்பட்டமட்டில் ஏற்காதென்பதே நமது அபிப்பிராயம். ஒடுக்கப்பட்டுக்கிடக்கும் ஒரு சமூகம்; காந்திஜி யிட்ட கட்டளையை சட்டமறுப்பில்கலந்து வேலைசெய்வதைத் தவிர வேறு என்னதான் செய்யத் தகுதியுடையது?

பொது தர்மத்திற்காக—35 கோடி இந்தியர்களுக்காக—உயர்ந்த இலக்ஷியத்தின்பொருட்டு தமது வாழ்க்கையையே தியாகம்செய்துவிட்டபோது திண்ணை வேதாந்தம் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. மனமிருந்தால் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டு சுதர்மத்தை ஸ்தாபிக்கும்வரை வீடுகளில் கறுப்புக் கொடிகளை ஏற்றிவிடுங்கள். அதிகாரிகள் வசிக்கும் கூட, கோபுரங்களிலும் சிகப்பு விளக்கை போடுங்கள். முடியுமென்று தோன்றினால் முடிந்ததைச் செய்யுங்கள். கடவுளும் நமக்கு விடுதலையை அளிப்பார்.

னத்தை நூற்கிறேன்; ஆடவர்களாகிய நீங்கள் அஹிம்ஸாதர்மத்தை அடிப்படையாகக்கொண்ட சுதந்திரப்போருக்கு-சட்டமறுப்பில் கலந்துகொள்ளுங்களென்று தங்கள் மக்களையும், கணவனையும் எழுப்பிவிடவேண்டியது நம்போன்றார் கடமையன்றோ? நாமும் அத்தகைய கணவன்மார்களையும் தெரிந்தெடுப்பதில் ஜாக்கிரதையாகவே இருக்கவேண்டும். நானும்கூட நீண்ட நாட்களாகத் தாமதித்து கொள்கைக்கேற்றவாறு கணவனை முடிவுகட்டிவிட்டேன். பூர்த்திபெற-கணவனுடன்சேர்ந்துவேலைசெய்ய ஆண்டவன் அருள் பாலிப்பானாக. சகோதரிகளே! தூக்கத்தினின்று எழுந்துவிடுங்கள். நம் தலைவர்களிட்ட கட்டளைப்படி நூல்நூற்கவும், கதராடை அணியவும் வேண்டிய வேலைசெய்வதற்காக கிளம்பிவிடுங்கள்.

குறிப்பு:— பர்மாவிலுள்ள பெண்களில் அநேகருக்கு சுதேசியம் என்னவென்பதே தெரியாதிருந்த காலம் மலையேறிவிட்டது பற்றிச் சந்தோஷமடைகிறோம். நமக்கு எழுதிவிடுத்த சீதைபோன்ற பெண்மணிகள் சற்றுத் தலைத் தூக்கிப் பார்ப்பின் ஆடவர்கள் செய்யும்தொண்டு இன்னும் வேகமாக போவதற்கு ஏதுவுண்டு.

(ப-ர்)

தேசோபகாரி

(வாரம்இரு முறை)

வருட சந்தா (இரங்கோன்)	ரூ	3	0	0
6 மாதம் ,,	,,	1	8	0
வருட சந்தா (வெளியூர்)	,,	4	8	0
6 மாதம் ,,	,,	2	12	0
மலாய்நாடு வருட சந்தா	,,	6	8	0

பொதுஜன பாதுகாப்பல்ல : :

ஸர் கவாஜி காங்கிர்

சமீபத்தில் பிரதம மந்திரி எங்கள் நாட்டையும், எங்கள் நாட்டு மக்களையும் பற்றிப் பேசியதில் நான் ஒரு இந்தியன் என்ற ஹோதாவில் பெருமையும், வெட்கமுமடைகின்றேன். தாராளக் கட்சியினரது கொள்கைகள் குறுகிய நோக்கமுடையவைகளாயிருப்பினும், ஆங்கிலேயர்களிற் பெரும்பாலோர் இந்திய விஷயத்தில் அனுதாபங் கொண்டவர்களாயில்லை எனக் கூறமுடியாது. மாறுதல் இந்தியாவிலிருந்து ஆண், பெண்களும் சில மாறுதல் அடைந்துள்ளார்கள். அவர்களது அநுபவத்தை-தாராள சிந்தையை உபயோகிக்கச் சந்தர்ப்பம் வாய்க்கும்போது சற்றும் தயங்கப்போவதில்லை. பொதுக் கூட்டங்களிலும், சட்டச்சபைத் தகராறுகளிலும் கூறப்படும் விஷய தோரணைகளை அறிஞர்களுணர்ந்திராமலில்லை. வருங்காலத்திய சர்க்கார் எந்த முறையைக் கையாளவேண்டுமெனப் பாடங்கற்பிக்கத் தொடங்கிவிட்டது. இந்தியா ஒரு பெரிய குருகுலமென இதர தேசத்தினர் எண்ணும் சீர்மைப் பெற்றிருக்கிறது. நான் தனிமனிதன் என்ற முறையில் சுயேச்சையடைய விருப்பமில்லாமல் எதிர்த்தும் வந்திருக்கின்றேன்.

பிரிட்டிஷாரின் சம்பந்தம் பெற்ற சுயேச்சையையே வரவேற்கிறேன். ஒத்துழைப்புச் சமஷ்டிக் கமிட்டியின் சார்பாக சாஸ்திரி, டேஸ் பகதூர் சாப்ரூ, ஜயகர் முதலியோர் கூறியதை கூறி காலந்தாழ்த்த விருப்பமில்லை. நாம் கேட்பது மாகாண சுய ஆட்சி யல்ல அதைப்பெற்றாலும் கவர்னரின் விசேஷ அதிகாரம் இருக்கத்தான் செய்யும். சுயராஜ்ய திட்டத்தில் பிரிட்டிஷாருக்கு பாதுகாப்பளிக்கவேண்டுமெனக் கோருவதை உள்ளுணர்ந்துபார்த்தால் இந்தியா நீண்டகாலமாக பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்டிருந்ததில் அடைந்த நன்மை என்ன? பிரிட்டிஷார் அநுபவித்த தீமை என்ன? வென்பதை ஒருவரும் ஏன் விளக்குகிறார்களில்லை? என்பது ஆச்சரியமாகவேயிருக்கிறது. இந்தியா ஒரு கொழுத்த பணக்காரதேசம் இப்போது கடன்காரர் தேசமாக விளங்குகிறது. லக்ஷக்கணக்கான இந்தியர்கள் கடன்காரர்களாகிவிட்டார்கள். ஜனத்தொகையில் முக்கால்பகுதி ஒரு வேளைக்கஞ்சிக்கின்றி பரிதபிக்கின்றனர். பிரிட்டிஷ் ஆட்சியின் போக்கும் பொருளாதார விகிதம் நாணய மாற்றுப்பேதம் இவைகள்தான் இதற்குக் காரணம் என்பதற்கில்லை. இந்தியாவின் பொறுப்பு இந்தியரிடமே இருந்திருப்பின் இந்நிலைமை மாறி இருக்கும். சென்ற சில வருஷங்களாக உலகிலுள்ள தங்கமெல்லாம் அமெரிக்காவிற்கும், பிரான்ஸிற்கும் போய்க்கொண்டிருந்தது. உலகிலுள்ள மொத்தத் தங்கத்தில் முக்கால்பங்கு இவ்விரண்டு நாடுகளிலுமுண்டு. இங்கிலாந்திற்குப் பணநெருக்கடி ஏற்பட்டது. ஆங்கில சர்க்காரின் நோட்டு நாணயத்தின் மதிப்பு குறைந்துவிடுமென்று அறிந்தவுடன், நோட்டுக்களை எல்லாம் தங்கமாக மாற்றினார்கள். நோட்டுக்கொடுப்பவர்களுக்குத்தங்கம் தருவதாக சொல்லியிருந்ததை ரத்து செய்தார்கள். பத்து வருஷத்திற்கு முன்னால் மார்க்கெட்டில் பவுன் விலை ரூபாய் 19 ஆக இருந்தபோது திடீரென்று சர்க்கார் ரூபாய் 10 என்று குறைத்தனர். இந்தியாவிலுள்ள ஐரோப்பியரெல்லாம் ரூபாயைச் செலுத்தி சீமையில் பவுனைப் பெற்றுக்கொண்டார்கள். இதனால் 100-க்கு 100 லாபம் அடைந்தனர். இந்தியாவிற்கு 51 கோடி ரூபாய் நஷ்டமாயிற்று. இதைத்தான் சட்டரீதியின் கொள்ளை என்று காங்கிரஸார் கூக்குரலிட்டனர். பிறகு பவுன் விலை ரூ 13 | அரை என்று நிர்ணயித்தார்கள்: இதன்பயனாய் இந்தியாவிற்கு 25 கோடி ரூபாய் கடனேற்பட்டதென திரு. பிர்லா கூறுகிறார். சென்ற ஐந்து வருஷத்தில் இந்தியசர்க்கார் 125 கோடி ரூபாய் பெருமான நோட்டுகளையும், 19 கோடி வெள்ளி ரூபாய்களையும் இருக்கிக்கொண்டார்கள். விசுவாசி மலிந்துவிட்டது. சர்க்காரே 100-க்கு 6 | அரை வீதம் கடன் வாங்கியபடியால் பண நெருக்கடியாயிற்று. இந்தியாவில் இப்போது 148 கோடி ரூபாய் நோட்டுகள் செலாவணியிலிருக்கின்றன. பிரிட்டிஷாரின் இந்தப் போக்குத்தான் பாதுகாப்புக்கு முக்கிய நோக்கம். இந்தியரைப் பாதுகாப்பதென்பதும் ஐரோப்பியர்க்கு பாதுகாப்பளிக்கப்படவேண்டுமென்பதும் ஐரோப்பியரின் செல்வத்தை விருத்திப்பண்ணிக் கொள்வதற்கேதான் என்பது ஸ்பஷ்டம்.

—க்ரானிக்கல்

நிர்வாண சட்டமும் ஒன்றுண்டா?

இந்தியாவுக்கும், பிரிட்டனுக்கும் ஏற்பட்டிருந்த நேசப்பான்மை தற்சமயம் முரண்பட்டு தன் மதிப்பிழந்து நிற்கிறது, சாதாரண விஷயங்களில்கூட சர்க்காரும் குடிஜனங்களும் வேறுபட்டே போகிறது. "எதார்த்தவாதி வெகுஜன விரோதி" என்பதுபோல் தேசத்தின் வறுமை, மடமை, பொருளாதார சீர்கேடு முதலியவைகளை அகற்ற உழைக்கும் காங்கிரஸ்—தேசிய மகாசபை பிரிட்டனுக்கு ஒரு எதிரியாகவே தோற்றப்படுகிறது. பொதுஜனநன்மைக்கான—நாட்டின் செழிப்புக்குரிய—தேச நிலைமைக்கேற்ப அவ்வப்போது திட்டங்களை அமைத்து உருப்படியான வேலைகளைச் செய்திருந்தால் இப்பொழுதிருக்கும் நெருக்கடியான நிலைமை ஏற்படக் காரணமில்லை. பிரிட்டனும் அவமான நிலையை அடைந்திருக்காது. ஒத்துழைப்புத் தேடி ஊதுகுழலூதும் சர்க்கார் காங்கிரஸின் மீது நம்பிக்கைவைப்பின்—நல்லெண்ண மிருப்பின்—மனித சுபாவத்தை கடைபிடித்தொழுகின் வட்டமேஜை மகாநாட்டின் போக்கும் உயர்ந்திருக்கும். ஆனால் சர்க்கார் மிருகபலத்தை அடிப்படையாகக் கொண்டது சிலாக்கியமாக நினைத்தது. அவசர, அவசரமாக துருப்பிடித்த சட்டங்களை உபயோகிக்க—வரம்பு மீறி செய்கைகளைச் செய்ய போலீஸிற்கு அதிகாரமளித்தது. நிரபராதிகள்கூட போலீஸாரால் நிர்ப்பந்திக்கப்பட்டனர்—இம்சைக்கு ஆளானார்கள். எங்கும் கொந்தளிப்பு; ஒரு சாராரைக் காப்பாற்றும்—பாதுகாக்கும் முறையில் சந்தேகப்பட்ட கௌரவமானவர்களைக்கூட அவமரியாதையாக நடத்தத் தலைப்பட்டனர். சட்டசபைகளில் கேட்கப்படும் கேள்விகளுக்குக்கூட தலைசாய்ப்பதே கிடையாது. பரந்த தேசத்தை—இந்தியாவை ஆட்சி செலுத்தும் பிரிட்டனுக்கு முகத்தில் அக்கினிப்பொறி பொறித்தது. எந்தஒரு இடத்திலாவது, பிரசங்க மேடையிலாவது சமரசம் காணப்படவே கிடையாது. அதிகாரிகள் அத்துமீறிச் சட்டங்களை உபயோகித்தனர். ஏழை இந்தியர்கள்—வாயில்லாப் பூச்சிகள்—வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணுகிறவர்கள் கடைசியாக தேசத்திற்குமட்டுமல்ல; உயிருக்கே ஆபத்து சமீபத்தில் வந்துவிட்டதென்று கருதினவர்களானார்கள். இவைகளெல்லாம் சர்க்கார் சட்டமும், ஒழுங்குமாகவே கருதப்பட்டது. அவசரப்பட்ட—அதி தீவிரவாதிபர்கள் நடந்துகொண்டதையும் கண்டிக்காமலில்லை. அளவுக்கு மிஞ்சி துராக்கிரஹத்தில் இறங்கிய சர்க்காரிடம் இந்தியர்கள் இன்னும் சாத்விக முறையில்நடந்துகொண்டு வருவதுதான் நமக்கும் ஆச்சரியமாயிருக்கிறது. அவசரச்சட்டம் கையாளப்படும்போதெல்லாம் பொதுஜன பாதுகாப்பு அமைதி இவைகளை உத்தேசித்துத்தான் கையாளப்படுகிறதென்பது எவ்வளவு தூரம் உண்மையென்பது புலனாகவில்லையா? அதன்படி அதிகாரிகள் நடந்துகொள்வதும் கிடையாது. காங்கிரஸே சட்டவிரோதமான சபை என்று சர்க்காரால் தீர்மானிக்கப்படும்பொழுது அத்தகைய சர்க்கார் வேண்டவே வேண்டாம். காங்கிரஸ் தலைவர் பரமசாது—அஹிம்சை ஞானியை புரட்சிகாரர் என்று சொல்வதை யார்தான் ஒப்புக்கொள்வர். பன்முறை காங்கிரஸ் நடைமுறைகளுக்குச் சென்றுள்ளேன். சாந்தமும், அமைதியும் நிலவுமே தவிர; பிரிட்டிஷ் காமன் சபையில் வாய்ச் சண்டை முற்றிக் கைச் சண்டையிலிறங்கிவிடுவது போலிராது. சில தினங்களுக்கு முன்கூட பம்பாயில் ஒரு முஸ்லீம் கடைமுன்பு மறியல்செய்துகொண்டிருந்த தொண்டரை அடித்து, அவரது உடையையும் அவிழ்த்து நிர்வாணமாக்கியதாகவும், அவரது நிர்வாணக் கோலத்தைக் கண்ட அடுத்தக்கடை முஸ்லீம் ஒருவர் கட்டிக்கொள்ளத் துணி கொடுத்துதவியதாகவும் கேள்விப்படுகிறேன்

நாகரீக பிரிட்டிஷ் ஆட்சியின் போக்குத்தானென்னே! தொண்டரை நிர்வாணமாக்கும் சட்டம் ஒன்றும் இருக்குமானால் அது எந்தச் சட்டத்தின்படி நடந்திருக்குமென்று கேட்பதும் குற்றமாகலாமோ? அன்னியத் துணிவாங்காதே என்பதுகூடக் குற்றமாயின் வாய்த்திறப்பதும் குற்றம், சாப்பிடுவதும்குற்றந்தானென்பது தெரிகிறதல்லவா? ஆறுமாத காலம்வரை இக்கொடிய சட்டம் அமுலிலிருந்தும் என்ன பலன்? கூடியசீக்கிரம் இந்தியத்தலைவர்களுடன் சமரசம் செய்துகொள்வதைத் தவிர வேறுவழியில்லை.

—மான் செஸ்டர் கார்டியன்

அவமானமும் நஷ்டமும் யாரால்?

பர்மா சர்க்கார் அடிக்கடி அவமானமடைவதற்கும் காரணங்களில்லாமலில்லை. ஒன்று போலீஸ்காரர்கள் விரோதப் பான்மையை முன்னிட்டு தப்பாக மொழிப்பெயர்த்து மேலதிகாரிகளுக்கு அனுப்பிவிடுகிறது. இரண்டாவது வயிற்றுப் பிழைப்புக்காக வேலைசெய்யும் ஒரு சிலருக்கு ஐந்து, பத்துக் கொடுத்து உண்மைக்கு மாறான விஷயங்களில் தலையிடச்செய்வது. முக்கியமாக இம்மாதிரி செயல்களை தமிழ் பத்திரிகையங்களிலேயே செய்துவந்ததாலேயேதான்; சர்க்காருக்கு மானம்போய்விட்டதென்பது ஸ்பஷ்டம். இதை நன்கு அறிந்து—தெரிந்துகொண்ட மேலதிகாரிகள் சர்வஜாக்கிரதையாகவே இருந்துவருகிறார்கள். இதை போலீஸ் வீரன் சுந்தரராஜுலுஎன்பவன் அறியத்த கிடையாது. இவனாலேயே பதைகளில் சர்க்கார் அவமானமடைந்திருந்தும் அவனை இன்னும் வேலையைவிட்டு நீக்கினபாடில்லை. சர்க்காருக்கு அவனால் ஏற்பட்ட கஷ்ட, நஷ்டங்களையும் ஞாபக மூட்டாமலிருந்தால் மென்மேலும் அவமானப் படவேண்டி இருக்கும் என்பதை உத்தேசித்து மறுபடியும் ஞாபகம் மூட்டுகின்றோம்

ஒன்று:- "நாம் நாய்களா" என்றதுண்டுப் பிரசுர வழக்கில் நம்மையும் உடந்தைப்படுத்தி அவமானமடைந்தது.

இரண்டு:- தேசியவாசனையையே அறியாத சிலருடையவீடுகளில் சோதனை போடுவதற்காக ஏராளமான பணச் செலவுடன் போலீஸ்காரர்களை முடுக்கு, மூலைகளுக்கு அனுப்பினால் கண்டுபிடித்துவிடலாம் என்று மதாப்புட்டீன் போன்ற மேலதிகாரிகளுக்கு தப்பாகச் சொல்லியது.

மூன்று:- தமிழ் வாசனையே அறியாத இவன்—சுந்தரராஜுலு "பாரதியாரின் பாடல்களை" தப்பாக மொழிபெயர்த்து, அதிகாரிகளுக்கு அர்த்தம்செய்து கொடுத்ததால் பர்மா சர்க்கார் பறிமுதல் செய்யத் தலைப்பட்டு கடைசியாக மானமிழந்தது

நாலு:- அஹிம்ஸை என்பதற்கும் ஹிம்ஸை என்பதற்கும் வித்தியாசம் தெரியாது "சுதந்தரனி"ல் வெளியான வியாசம் சட்ட விரோதமானதென்று தப்பாக மொழிப்பெயர்த்து ஜாமின் கேட்பதற்கு தூண்டுகோலாயிருந்ததால் பர்மா சர்க்கார் முழு முட்டாள்பட்டம் பெற்றுக்கொண்டது.

சர்க்காருக்கு கஷ்ட நஷ்டங்களை விளைவிக்கக்கூடிய இத்தகைய பேர்வழிகள் தண்டனைக்காளாகா திருப்பதாலேயே மறுபடியும் மறுபடியும் குற்றங்களை துணிந்துசெய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள் என்பதை மட்டும் மீண்டும் சர்க்காருக்கு ஞாபகமூட்டுகின்றோம்.

நமது சகவர்த்தமானிகளுக்கு·

சர்க்காரின் சட்டதிட்டங்களுக்கு நாம் மயிரிழைகூட பிசகாது நடந்துவந்தும் சில்லரை அதிகாரிகளின் சேஷ்டையால் பல இன்னல்களுக்கு ஆளாக—உடந்தையாக இருக்கவேண்டி நேரிடுகிறது. அதைத் தகர்ப்பான் வேண்டி கீழ்க்கண்ட வேலைத் திட்டத்தின்படி வேலை செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

1. இந்தியாவினுடையவும், பர்மாவினுடையவும் பூரண சுயேச்சைக்காக வேலை செய்தல்.
2. உலகத்தில் எந்தப் பாகத்திலும் ஒரு நாட்டாரை இன்னொரு நாட்டார் அடக்கி ஆளுவதற்கு ஏதுவாயிருக்கிற ஏகாதிபத்தியங்களை ஒழிக்கும் ஸ்தாபனங்களுடன் கலந்து வேலை செய்தல்·
3. பர்மாவிலுள்ள இந்தியர்களின் தற்காப்பிற்குரிய வேலைகளைச் செய்தல்.
4. பர்மாவிலுள்ள விவசாயிகளுடையவும், இதர தொழிலாளர்களின் க்ஷேமத்தை நாடியும் வேலைசெய்தல் போன்றவை யாகும்.

——0——

நமது ஆசிரியர்.

நமது "ஊழியன்" ஆசிரியர் திரு. கொ. நா. சுப்பையா நாயுடு அவர்கள் ஒருவாரமாகநோய் வாய்ப்பட்டு, சிகிச்சையிலிருந்துவருகிறார். பொது ஊழியத்தையே தலைமேற்கொண்ட நமது நாயுடு சீக்கிரம் குணமடைந்து மீண்டும் தொண்டாற்ற ஆண்டவன் அருள்பாலிப்பானாக.

சர்க்காரும்-சுதேசியமும்

இந்தியா உன்னதமான நிலைமையிலிருந்து படிப் படியாய் பாதாளத்திற்கு வந்ததிற்கு காரணம் பிரிட்டிஷ் ஆட்சிதானென்பதை மாடு மேய்க்கும் பையனும் உணரவே செய்வான். பிரிட்டனும் முழு பூசனிக்காயையே சோற்றில் மறைக்கும் தன்மையுடைத்தாதலால், நயவஞ்சகங்களால் சமயத்திற் கேற்றவாறு நடந்துகொள்வதில் பின்னடைந்ததில்லை. காங்கிரஸ் கொள்கைப்படியும், அதன் தலைவர்களின் ஆக்ஞைப்படியும் சுதேசிப் பிரசாரம் செய்வதைத் தடுப்பதற்காகவே அவசர, அவசரச்சட்டம் புகுத்தப்பட்டதெனலாம். இந்திய சாமான்களை வாங்கும்படி தூண்டும்—பிரசாரம் செய்யும் ஒவ்வொருவரும் தண்டிக்கப்படுகிறார்கள். காங்கிரஸ் காரியக் கமிட்டியின் 9-வது நிர்மாணத்திட்டத்தின்படி பிரிட்டிஷ் சாமான்களை பஹிஸ்கரிப்பது தெளிவாகின்றமையால் அதை அடக்கி, ஒடுக்குவதற்காகவே அவசரச்சட்டங்கள் அமைத்துள்ளார்கள். கைத்தொழில் விஷயத்தில் சர்க்கார் தலையிடுவதில்லை என்ற கண்டிப்பான உரிமையிருந்தும், இந்திய கைத்தொழிலுக்கு பங்கம்—அவமானம் நேரும்வண்ணம் நடந்துகொள்வதுதான் இந்த முக்கியமாய்க் கவனிக்க வேண்டியதாகும். கடந்த 46 வருடங்களாக காங்கிரஸானது சுதேசி ஜாமான்களையே ஆதரிப்பதோடு, ஒவ்வொரு இந்தியனும் கதர் உடைதான் அணியவேண்டும் என்ற நிபந்தனையும் ஏற்படுத்தியிருக்கிறது. எவ்வளவு உயர்ந்த விலையானாலும் சரி, சரக்குமட்டமாயிருப்பினும் கூட சுதேசி சாமான்களுக்கு ஆதரவு காட்ட வேண்டுமென்பதேதான் சுதேசியத்தின் முக்கிய தத்துவமாகும். இந்திய சாமான்களை செழிக்க—வளமையடையச் செய்யவேண்டுமென்பதே சர்க்கார் அகராதியில் கிடையாது. லங்காஷயர் துணிகளுக்கு ஆதரவு காட்டுவதற்காக இந்தியாவில் நெய்த பருத்தி நூல் துணிகள் கலால் வரியால் மிக்க அவதிக்குள்ளாகி யிருந்தது. பெரும்பாலும் பிரிட்டிஷ் சரக்குகளுக்கேவிசேஷ சலுகை காட்டப்பட்டுவந்தது. சர்க்காரின் மனப்பான்மையை ஒருவாறுதெரிந்துகொண்ட பின்புதான் காங்கிரஸானது சுதேசி சாமான்களையே வாங்கவேண்டுமென்று உறுதிகொண்டு பிரசாரம் செய்யத் தலைப்பட்டது. சர்க்காருக்கென்னவோ; வறுமைப் பிணியைப் போக்கும் கதரின்மேல் நம்பிக்கையில்லை. சுதேசியத்தை நாட்டில் பரப்பவேண்டுமானால் சர்க்காரும் உதவி புரிவதில் பின்வாங்கக் கூடாது. முன்பணமாக மூலதனம் முதலியனகூட கொடுத்துதவ வேண்டும். இத்தகைய நன்முறைகளை பிரிட்டிஷ் சர்க்கார் கனவிலும்கூடக் கருதுவதுகிடையாது. "ஒழுங்கான வழியில் சுதேசியத்தை வளர்ப்பதற்கு எங்களுக்குஆக்ஷேபனையேகிடையாது" என்று மிண்டோ காலமுதலே வாய்ப்பறை சாற்றப்பட்டு வந்திருக்கிறது. மிண்டோ சமையத்திற்கேற்ற நயவஞ்சகப் புளுகன்.

1930ல் விதேசி பஹிஸ்காரம் தீப்பற்றிக் கொள்ளவே; இர்வினும் அனுதாபஉரையோடு அவசரச்சட்டத்தை ஏவிப் பார்த்தார். பயனில்லை என்று கண்டுகொண்ட இர்வினும் தலை தப்பிக்கொண்டார். வில்லிங்டன் மஹாமகனார்தான் சுதேசியத்தின் பொருட்டு தடியடி தர்பாரில் இறங்கியுள்ளார். கண்மூடித் தனமாக நடந்துகொண்டார். பொதுமக்களெனும் பொருட்படுத்தினார்களில்லை. தொழிலைச்செய்துகொண்டிருப்பினும், இல்லாவிடினும் யாதொரு சம்பந்தமும் வைத்துக்கொள்ளமாட்டோம் என்று கூறிய சர்க்காரே இன்று சுதேசி இயக்கத்திற்குப் பாடுபடும் இந்திய மக்களைத் தண்டனைக்குள்ளாக்கியுள்ளார்கள். அன்னியத்துணி கடைகள்மீது காங்கிரஸ்காரர்கள் முத்திரை போட்டிருந்ததைக்கூட நீக்கிவிட வேண்டுமென ஜில்லாக் கலெக்டர் சூரத்தில் உத்தரவிட்டிருக்கிறார். இந்தியருடன் சமாதானம் செய்துகொள்ளாமல் இராணுவச் சட்டம்போன்ற முட்டாள்த்தனமான தத்துவத்தால் பலனேற்படாது. இருதரத்தினரும் சார்ந்து செல்லுதலே நேரிய முறையாகும். இந்தியர் துணிந்து தலைதூக்கி நிற்கின்றனர். இந்தியர்களைநயந்து கொண்டால்தான் பிரிட்டிஷ் சாமான்களுக்கு இந்தியாவை இன்னும் சிலநாட்களுக்கு சந்தையாக உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்றிருந்த காலமும் தவறிவிட்டது.

—ஜூனியர்ஸ்

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுநம்பர் 245] (1922-ஹு ஸ்தாபிதம்.) 11 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வெ. செல்லம் பிள்ளை. வாரம் இருமுறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஹு (8-5-32) சித்திரை-மீ 26உ ஞாயிற்றுக்கிழமை

நாய் அறியுமோ ஒருசந்திபானை !

இந்திய சரித்திரத்தில் மிக்க பயங்கரமான செய்கையை யியற்றியவன் மூடத் டையர் அவன் தனது ராக்ஷத தர்மப்படி அநேகரை ஒரே தருணத்தில் கொலை செய்திருந்தாலும் சட்ட திட்டங்களில்லா, அக்காலத்தில் அவனது மிருகத்தனமை பலித்தது. சட்டம்—ஒழுங்கு—ஞாயம் ஆகியவற்றைக் கடைப்பிடித்து நடக்கும் ஆங்கில ஆட்சியின் பஞ்சாப் படுகொலைக்குக் காரணஸ்தனா யிருந்தவர் மைக்கேல் ஓட்வியர் இந்தியாவில் கொடுக்கப்பெறும் உபகாரச் சம்பளத்தைப் பெற்று பெண்டு, பிள்ளைகளோடு காலங் கழித்துவருகின்றான், இந்தக் குப்பைத்தொட்டி; இந்தியாவைப்பற்றி பிரஸ்தாபிக்கப்படும் போதெல்லாம், நன்றியை மறந்து, உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்பவனைப் போல், அதிகப் பிரசங்கித்தனம் பேசிவிடுகிறது வழக்கத்திலிருந்து வருகிறது. இவனது பேச்சுக்கு அர்த்தமில்லை என்று பலதடவை மண்டையிலடித்துக் கூறியிருக்க; சாக்கடையில், வீசி எறியப்பட்டிருக்கும் இந்தக் கிழட்டுக் குரங்கு, லண்டன் கிழக்கு இந்திய சங்கத்தில் பேசும்போதும், காந்தி-இர்வின் ஒப்பந்தம் சர்க்காரை ஒடுக்க முயற்சிப்போருக்கு சட்டமறுப் பியக்கத்திற்கு அடங்கி நடக்கச் செய்கிறதென்றும், இந்தியாவிற்கு சுயராஜ்யத் திட்டம் அளிக்க பிரிட்டிஷார் இணங்கிவிட்டால் சிங்கபலத்தைப் பெற்றிருக்கின்ற பிரிட்டன், நரியைப்போ லிருக்கநேரும்; எனக் கண்ணீர் விடுகின்றான். இவனுடைய ஆட்சியிலிருந்து தான் இந்தியருக்குச் சுய மதிப்பும், வீராவேஷமும் கிளம்பி, இவனைப்போன்றவர்களை வாய் குளர, மெய்ப்பதறச் செய்து வருகின்றனர்; என்பதை யறிந்து இனி மேலாவது ஓட்வியர் சும்மா இருப்பானா? சர்ச்சில் இவனைப் போலவே காட்டி மறைத்து சம்பிரதாயமாகப் பேசிவிடுகிறார். இவர் காமன் சபையில் இந்தியாவைப்பற்றி அனுதாபப் படுபவர்போல் கேள்வி கேட்டு, உடனே ஒருபல்டியடித்து இந்தியருக்குச் சீர்திருத்தம் வழங்குக வென்று சொல்லவில்லை; என்கிறான். மிஸ்டர் பிராட்வே என்னும் கனவான் காந்திஜிக்கு இந்தியா முழுவதும் ஆதரவளிக்கும் என்கிறார். இவர்களோடு நில்லாமல் இன்னொரு பேர்வழியாகிய ஜெட்லாண்டு சமயத்திற்கு தக்க வேஷம் போடுவதில் பிரிட்டன் சமர்த்தனென்கிறார். இவர்களின் பாசாங்கு வார்த்தைகளில் இந்தியர்கள் நம்பிக்கை கொள்ளப் போவதில்லை. ராவணன் தனது மந்திரிகளோடு ராமனை ஜெயிக்க யோசனை கேட்கிறான். கும்பகர்ணன், பிர்த்தியுமன்னன், மாலியவான் முதலியோர் நீதிகளைப் புகட்டி சீதையை விட்டுவிடும்படி சொல்லுகின்றனர். ஓட்வியர் - சர்ச்சில், வில்லிங்டன், ஹோர் போன்ற, மஹோதரன், மூன்றரைக்கோடி வயதும், ஆயிரம் வெள்ள மூலபலங்களும், இந்திரஜித்து முதலிய சேனா வீரர்கள் இல்லாமலில்லை நமது புஜபல மறியாத இந்தப் பயங்கொள்ளிகள் வார்த்தைகளைக் கேட்காதீர்களென இராவணனை விழித்துக் கூறி கடைசியில் ராவணனை குடும்பத்தோடு தொலைத்தான். அதுபோலவேதான் பிரிட்டன் நடவடிக்கைகளு மிருக்கிறது. ஏ! ஓட்வியா!

"என்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டு;
உய்வில்லை செய் நன்றி கொன்றமகர்க்கு"!

நமது தலைக்குமேல் ராஜா செட்டியார் மான நஷ்டம்!

எப்படிச் சொன்னாலும், எதைஉரைத்தாலும் ஒரு சிலர் சீறியே விழுவர். என்செய்வது; உள்ளதை உரைக்காமலும் இருக்கமுடியவில்லை. நாற்புறமும் ஆபத்துக்களால் சூழப்பட்டிருந்தாலும் "தலைக்கு மேல், ராஜா செட்டியார் மான நஷ்டம்" தொங்கிக்கொண்டிருந்தபோதிலும்—எந்த நிமிஷமானாலும், காலடியில் பூமி வெடித்து, எரிமலை குமுறி அக்கினிக் குழம்பைக் கக்குவதாயினும் உண்மையை உரைப்பதில்—பத்திரிகா தர்மமாகிய நடு நிலைமையை வகிப்பதில் நமது கோடற் குறியை, கொள்கையை கொஞ்சமும் விட்டுக்கொடுக்கவோ, தளரவிடவோ அல்லால் குனிந்து கொடுக்கவோ போகிறதில்லை என்பதை நன்கு தெரிந்துகொண்டவர்களில் சிலர்கூட நம்மிடம் பூச்சாண்டி பிடிப்பதற்கு பின்வாங்குகிறார்களில்லை என்பதுதான் பெருநாளைய ஆச்சரியமாயிருக்கிறது. எந்த ஒரு திசையை நோக்கினும், முடுக்குமூலைகளிலெல்லாம் நமது "தேசோபகாரி"யின் சேவையும்—வீரமுமே பிரகாசிக்கின்றன—ஜ்வலிக்கின்றது. அப்பாக்கியம் பெற்ற "தேசோபகாரி"யும் அதன் அபிமானிகளும் நீடூழி வாழ்க!

சென்ற இதழில் இந்திய சர்க்காரின் சம்பிரதாயப்படி ராஜாப் பட்டம் பெற்ற ஸர் அண்ணாமலை செட்டியாரை பொதுஜனங்களின் கவனத்திற்கு கொண்டு வந்தோம். இந்திய சர்க்காரின் சலுகையையும், பாங்கிகளின் அநுபவமும், கொடுக்கல், வாங்கல் நிர்வாகத் திட்டங்களையும் நன்கு தெரிந்த ஒரு சட்ட நிபுணரை இந்நெருக்கடியான சமயத்தில் பர்மா வரவேற்றதெனக் களிப்பெய்திய—சந்தோஷ மிகுதியால் சில செட்டியார்கள் நம்மிடம்கேட்டுக்கொண்டதிற்கிணங்க; நமது விசேஷப்பிரதிநிதியை பேட்டி காணச்செய்தோம். வெட்டியான் முதல், வேந்தன் வரை ஒவ்வொருவனும் செய்யும் தப்பையும் அம்பலப்படுத்தி—சந்தியில் இழுத்துவிடும் நம்மிடத்திலேயே "சொந்த விஷயமாக வந்திருப்பதாகவும், சவுகரியத்தை உத்தேசித்தே ஸ்ட்டாண்டு (வெள்ளையர்) ஓட்டலில் தங்கியிருப்பதாகவும், சவுகரியம் போல் சுயதேசம் செல்வேனென்றும்" கூறினார் எதிர்பாராத இந்த பதில் பொதுவாக இந்தியர்களையும், குறிப்பாக செட்டியார் சமூகத்தையே அவமானப் படுத்தியதாகும். குடிகளைப் பரிபாலிக்கும் ஒருவனுக்கே ராஜாப்பட்டம் வழங்குவது வழக்கத்திலிருந்துவருமானால் இத்தகைய பதிலை அளித்திருக்கமாட்டார். காற்றில் பறக்கவிடும் பட்டமாதலால் அதைப் பற்றிய அக்கறையும் நமக்கு வேண்டாம்.

மற்றொன்றும் கூறிவிடுகின்றோம் "சிரிப்பா சிரிக்கும் செட்டி நாட்டு ராஜா" என்ற தலைப்பின் கீழ் 4-5-32-ல் வெளிவந்த கட்டுரையால் ராஜா ஸர் செட்டியார் மானம் போய்விட்டதாகவும், நம்மீதும், நமது பத்திரிகை மீதும் மானநஷ்ட வழக்குத் தொடரப்போவதாகவும் ஊரில் ஒரே வதந்தியாக இருக்கிறது. தனி மனிதன் தவறு—தப்பைக்கூட சந்தியில் நிறுத்துவதற்கு பத்திரிகைச் சட்டம் இடங்கொடுக்கிறதே யொழிய மானத்தை உடைப்பதற்கு பொது ஜனங்களாலன்றி நம்மால்முடியாது. மானத்தை உடைக்கும் சட்டம்ஒன்று நம் கையிலிருக்குமானால் செட்டியார் இன்றுவரை ஸ்ட்டாண்டுஹோட்டலில் உல்லாசமாய்க் காலங் கழித்துக்கொண்டிருக்கமுடியவே முடியாது. மானம் போகாததினாலல்லவோ நாம் எவ்வளவோ சொல்லியும் ஆங்கிலேயனின் ஓட்டலினின்றும் ஒரு படியேனும் அகன்றாரில்லை. செட்டியாரின்மானத்தை; கல்லோ, கட்டியோ கொண்டு உடைக்காதிருக்கும் பொழுதே தமக்கு மானம்போய்விட்டதாக ஸ்தாபிக்க அவரே முன்வருவதிலும், நமக்கும், எவருக்கும் ஆக்ஷேபணையில்லை. பல சாட்சிகளை தயாரித்து அவருக்கு அக்கட்டுரையால் மானம் குலைந்துவிட்டது என்று கோர்ட்டில் ராஜா ஸர் செட்டியாரே நிரூபிக்க முன் வருவதும்; அக்கட்டுரையால் மானம் போய்விடவில்லை என்று "தேசோபகாரி" ஆசிரியரும், அபிமானிகளும் மற்றொரு தரப்பில் நிரூபிக்க முன்வருவதும் ஒரு வேடிக்கையாகவே யிருக்கும். நம் நாட்டான் ஒருவனை நம்நாட்டுப் பொருளை வாங்கும்படி தூண்டவும், நம் நாட்டு பழக்க வழக்கங்களின்படி நடக்கத் தவறிய ஒருவனை தவறிழைக்காதபடி செய்ய வேண்டிக்கொண்டபின்பும், அத்துமீறி

இந்தியாவின் துரதிஷ்டம்!!

தர்மத்திற்காகவும், அதர்மத்தை அழிப்பதற்காகவும், தியாகஞ்செய்ய அல்லது உயிர் துறக்க எந்த சமூகம் தயாராகவில்லையோ அந்த சமூகத்தினை இயற்கை தேவி கொள்ளை கொள்ளுவாள் என்றும்; அப்படிப்பட்ட சமூகத்தினை அழிப்பதற்கு இயற்கை தேவி தனக்கு ஆயுதமாக பஞ்சம், அன்னியர் படையெடுப்பு, காலரா, அம்மை முதலியவைகளையே கைக்கொள்ளுகிறாள்; என்ற பொருள்பட பகவான் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்திருப்பதை கீதையில் எல்லோரும் படித்திருந்தும் உண்மைக்காக தர்மரக்ஷணார்த்தத்திற்காக—விடுதலைக்காக உயிர் தியாகம் செய்ய சிலர்கூட முன்வராதிருப்பது இந்தியத்தாயின் துர் அதிர்ஷ்டம் என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்லுவது.

பஞ்சத்தாலும், விஷஜுரத்தாலும், அம்மையாலும், காலராவினாலும், இன்னும் எண்ணற்ற தொத்துவியாதிகளினாலும் இந்தியாவில் பிரதிதினமும் எத்தனையோ மக்கள் எமனுக்கு இரையாகின்றனர். நோயினால் இறந்துவீணாவதைப் பார்க்கிலும், உத்தமமான லக்ஷியத்திற்காக உயிர்விடுத்து சுவர்க்கத்தை யடைவதே மேலென்ற கொள்கையை இந்தியாதான் முதல் முதல் உலக மக்களுக்கு உணர்த்திற்று எனினும் இப்பொழுது ஏனையோர்—ஏனைய நாட்டோர் அந்த தர்மத்தை யுணர்ந்து கையாளுகின்றனர். இந்திய மக்கள் கைநழுவவிட்டு, மிதிக்க இச்சிக்கின்ற கழுதைகளிடமெல்லாம் மிதிபட்டு சாகின்றனர். இந்திய மக்களின் இந்த தாழ்ந்த நிலைக்குக் காரணம் என்ன? இந்திய மக்களின் துர்அதிர்ஷ்டமென்று சொல்லுவதா அன்றி, இந்தியத் தாயின் துர்அதிர்ஷ்டமென்று கூறுவதா? எனக்குப் புரியவில்லை. வாசகர்களே! நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

சில வெள்ளிக் காசுகளுக்காக நமக்கு எந்தவிதத்திலும் விரோதிகளல்லாத ஜர்மனியர்களை எண்ணாயிரம் மைல்களுக்கு அப்பால் போய் கொலைசெய்ய ஐரோப்பா யுத்தகாலத்தில் அதாவது 1914-லிருந்து 1918-வரை—இந்தியாவிலிருந்து 1 லட்சம் இந்திய வாலிபர்கள் துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டு ஓடினார்கள் இதற்கு முன்னும் பின்னும் எத்தனையோ நாடுகளில் சென்று கூலிக்குக் கொலைசெய்யுந் தொழிலை மேற்கொண்ட இந்தியர்கள் எண்ணற்றவர்—பிரஸ்தாப யுத்தங்களில் உயிர்விட்ட இந்தியர்கள் லட்சக்கணக்கிலல்ல, கோடிக்கணக்கானவர்கள் என்பது பொய்யல்லவெனினும் நாட்டின் விடுதலைக்காக; பிறப்புரிமையான சுதந்திரத்திற்காக; அடிமைத்தனத்தை நீக்கிக்கொள்ளுவதற்காக; புராதன தர்மத்தை நிலைநாட்டுவதற்காக சிலரேனும் உடல்களை தியாகஞ்செய்யமுன்வராதிருப்பது இந்தியத்தாயின் துர்அதிர்ஷ்டமன்று என்று எவரேனும் துணிந்துசொல்ல முடியுமா?

1914—8 யுத்தத்திற்கு லட்சக்கணக்கான மக்களை சேர்த்து இங்கிலாந்து, பிரான்சு யுத்தகளங்களுக்கு ஆசீர்வதித்து அனுப்பிய மகாத்மா காந்தி இப்பொழுது இந்தியமக்களெல்லோரும் அஹிம்ஸா தர்மத்தைஏற்றுக்கொண்டால்தான் நான் தலைமை வகித்து தேசிய வேலைகளை நடத்துவேனென்று கூறுவது இந்தியத்தாயின் துர்அதிர்ஷ்டமல்லாமல் வேறு என்ன?

ஆட்சி செய்யும் அன்னியர்களின் அடிபணிந்து பலர் ஜீவிக்க நினைக்கின்றனரேயன்றி ஆட்சியைக் கைப்பற்றி பெருமையுடன் ஜீவிக்க பலரும் விரும்பவில்லை. இது எத்தனை இழிவு ரிஷிகளின் புத்திரர்கள் என்ற பெருமையடையும் இந்திய சகோதரர்கள் இன்னிலை இருப்பதற்குக் காரணம் இந்தியத்தாயின் துர்அதிர்ஷ்டமல்லாமல் வேறாக இருக்கமுடியுமா?

செய்வானானால் அடித்துச், செய்யச்சொல்லுவதற்கும் காங்கிரஸ் சட்டம் இடங்கொடுக்கிறதென்பதை சட்ட அனுபவமுள்ள ஸர் செட்டியார் அறிவாராதலால், நிதான புத்தியுடன் நடந்துகொள்வாரென்பதில் சற்றும் ஐயமில்லை.

ஒருக்கால் இந்திய சர்க்காரின் சலுகையை உத்தேசித்தோ, பணத் திமிராலோ மானம் போய்விட்டதாகச் சொல்லி வழக்குத் தொடுப்பினும், நாமும் விடமாட்டோமென்பதை ஸர் செட்டியாருக்கு ஞாபகமூட்டுகின்றோம். நம்மையும், நமது பத்திரிகையின் கொள்கையையும் நன்கு தெரிந்துகொண்ட இவர் நம்மைக் கோடேற்றுவதால் நமக்கு மானம் போய்விடாதென்பதையும்—மானத்திற் கஞ்சி மறையப்போவதில்லை என்பதையும் ஸர் செட்டியார் அறிந்துகொள்வாராக.

பழைய மாமூல் வேண்டாம் : :

பாரதியார்

நடந்ததெல்லாம்போக, இனிமேல் நடக்க வேண்டிய காரியத்தை நாம் யோசனை செய்ய வேண்டும். கோயில் குருக்களுக்கு இனி நம்முடைய தேசத்து ஜனங்கள் ஒத்து நடக்கவேண்டுமானால் ஜனங்களிடம் பூசாரிகள் எதையும் மறைக்காமல், எந்த விஷயத்திலும் ஜனங்களை ஏமாற்றாமல் விஷயத்தையும் சொல்லவேண்டும். கடவுள் எங்கும் இருக்கிறாரே; எல்லாம் கடவுள் தானே. ஊருக்குநடுவில் ஒரு கோவிலைக் கட்டி அதில் ஒரு கல்லையோ, செம்பையோ நட்டு அங்கேதான எல்லோரும் வந்து கும்பிட வேண்டும் என்ற நியமம் எதற்காக என்றால் ஜனங்களுள் ஐக்யம் ஏற்படுவதற்காக. கல்லில் மாத்திரம் தெய்வ மிருக்கிற தென்று நம்பி நம்மைச் சூழ்ந்த ஜனங்களிடம் தெய்வம் இல்லையென்று நம்பலாமா? கவனி. அண்டபஹிரண்டங்கள் எல்லாவற்றையும் உள்ளேயிருந்து ஆட்டுவிக்கும் பரஞ்சுடரே நம்மைச் சூழவும் அனந்தங்கோடி ஜீவராசிகளாக நின்று களிக்கின்றது. இதுதான் வேதத்தின் கடைசியான கருத்து "தன்னிடத்தில் உலகத்தையும் உலகத்தினிடத்தில் தன்னையும் எவன் காண்கிறானோ அவனே கண்ணுடையவன்" என்பதுமுன்னோர் கொள்கை. உன்னுடைய ஆத்மாவும் உலகத்தினுடைய ஆத்மாவும் ஒன்று. நீ, நான், முதலை, ஆமை, ஈ, கருடன், கழுதைஎல்லாரும் ஒரே உயிர். அந்த உயிரே தெய்வம். ஒன்றுகூடிக் கடவுளை வணங்கப்போகுமிடத்து மனிதரின் மனம் ஒருமைப்பட்டுத்தமக்குள் இருக்கும் ஆத்ம ஒருமையை அவர்கள் தெரிந்துகொள்ள இடமுண்டாகு மென்று கருதி முன்னோர்கள் கோவில் வகுத்தார்கள். ஊரொற்றுமை கோவிலால் நிறைவேறும். வீட்டுக்குள் தனியாக சிலை வைத்துக் கும்பிடுவது குடும்ப ஒருமை உண்டாகும் பொருட்டாக கவனி.

நல்ல பச்சைத் தமிழில் சொல்லுகிறேன். ஆறுகிய நீ கும்பிடுகிற தெய்வங்களில் பெண் தெய்வமெல்லாம் உலகு தாய், மனைவி, சகோதரி, மகள் முதலிய பெண்களின் இடத்தே வெளிப்படாமல் இதுவரை மறைந்து நிற்கும் பராசக்தி மகிமையைக் குறிப்பிடுகின்றன. அம்மன் தாய்; அவளைப்போலவே நம்முடைய பெண்கள் மனைவி, ஸகோதரி, மாதா முதலியோர் ஒளிவீச நாம் பார்க்க வேண்டும் என்பது குறிப்பு. ஆண் தெய்வமெல்லாம் நீ உன் பிதா உன் ஸகோதரர், உன் மகன் உன்னைச் சேர்ந்த ஆண்மக்கள் அடையவேண்டிய நிலைமையைக் குறிப்பிடுகின்றன. சிவன், நீ; சக்தி உன் மனைவி விஷ்ணு நீ லக்ஷ்மி உன் மனைவி. பிரம்மா நீ. ஸரஸ்வதி உன் மனைவி. இதைக காட்டி மிருக நிலையிலிருந்த மனிதரை தேவநிலையில் கொண்டு சேர்க்கும் பொருட்டாக ஏற்பட்ட தேவப் பள்ளிக்கூடங்களே கோயில்களாம். இதைப் பூசாரிகள் மறைக்கிறார்கள். கும்பிடுவோர் நித்திய அடிமைகளாகவும் தெய்வாம்சம் உடையோர் தாமாகவும் இருந்தால் நல்லதென்று பூசாரி யோசனை பண்ணுகிறான். பிறரை அடிமை நிலையில் வைக்க விரும்புவோரிடம் தெய்வாம்ஸம் ஏற்படாது. அப்படியிருக்கப் பல பூசாரிகள் தம்மிடம் தெய்வாம்ஸம் இருப்பது போல நடித்து ஜனங்களை வஞ்சனை செய்து பணம் பிடுங்குகிறார்கள். கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள். எத்தனைகாலம் ஒரு மோசக்கார மனிதனை மூடிவைத்து அவனிடம் தெய்வம் காட்ட முடியும். ஆகையால் இந்தப் பூசாரிகளுடைய சாயம் சீக்கிரம் வெளுத்துப்போகிறது. ஜனங்கள் பூசாரிகளை அவமதிப்பாக நடத்திய பழைய மாமூலை உத்தேசித்துக் கல்லைமாத்திரம் கும்பிடுகிறார்கள். அப்படிப்பட்ட கல் வரம் கொடுக்கவே கொடுக்காது. எப்படி சாதாரணமாக ஒரு கல்லில் நல்ல சாதுக்கள் பக்தியுடன் மந்திரம் ஜபித்துக் கும்பிட்ட மாத்திரத்தில் பகவான் நேரே வந்து நிர்த்தனம் பண்ணுவாரோ அதுபோல யோக்யதை யில்லாத பூசாரி தொட்ட மாத்திரத்தில் பகவான் அந்த கல்லைவிட்டுப் போய்விடுவார். அது அறுபடில் சாதாரண ரஸ்தா உருளை ஸ்தமனத்துக்கு வந்து சேர்ந்துவிடும். கோவிலுக்குப் போனாலும் சரி, போகாவிட்டாலும் சரி, தெய்வத்தைக் கும்பிட்டாலும் சரி, கும்பிடாவிட்டாலும் சரி, பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினால் தெய்வம் அருள் செய்யும். ஏமாற்றுவதே கிடையாதென்று ஒருவன் பரிபூரண சித்தி யடைவானாகில் அவனே ஈஸ்வரன். குருவி, காக்கை, புழு, எறும்பு ஒரு ஜந்துவுக்கும் வஞ்சனை பண்ணக்கூடா

சுதந்திர ஜெயக் கொடி!

இவ்வருட சட்ட மறுப்புப் போரில்—வில்லிங்டன் ஆட்சியில் எண்ணத்தொலையாதசட்டங்கள் தாங்கமுடியாத தடியடி தர்பார், சகிக்கொணாத அவமானம், படமுடியாத துன்பம் இன்னும் என்னென்ன பேரிழவை யெல்லாம் இந்தியர்கள் அடைந்தனர்- தாங்கிக் கொண்டனர். ஒரு டையர் செய்தசெயல், எதிரொலி சமீபத்தில் ஜாலியன் வாலாபாக் ஞாபகத்தினத்தன்று நடந்தேறி விட்டது. நாய், நரி மான்வேட்டை ஆடுவதைப் போல், துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றன—நடைபெறுகின்றன. அதுபற்றி ஒரு வெள்ளையனும் பொருள் படுத்தியது—கவலைப்பட்டது கிடையாது. போகட்டும் வான மளாவப் புகழும் லண்டன் பத்திரிகைகளென்னும் ஒருவரிகூட வரைந்ததில்லை. ஒரு ஏழை இந்தியன் இரத்தக் கொதிப் பேர்ப்படும் பொழுதுமானத்தைக் காப்பாற்ற சிறிது தவறு செய்துவிட்டாலோ போதும், பத்திரிகைகள் சரமாரியாகக் கிளம்பிவிடும். உலகமே முழுகிவிட்டதென்று கட்டுக்கட்டி விடுவார்கள். சமயத்திற்குத்தக்கவார்த்தைகள் உபயோகிப்பதில் நம்மவர்கள் அநுபவசாலிகள்தான் சமர்த்தர்களென்றும் சொல்லலாம். ஆனால் ஏன் குறை கூறிக்கொண்டும் கஷ்டப்பட்டுக்கொண்டும் இருக்க வேண்டுமென்பதுதான் கேள்வி. மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு புறப்பட வேண்டியதுதானே? சமீபத்தில்கூட பத்துலட்சம் பவுன்கள் கடன் வாங்கத் திட்டம்போட்டிருக்கின்றனர் ஆனால் நோட்டு பாவத்தாய் வாங்குவதா? ரொக்க பாவத்தாய் வாங்குவதா என்பதுதான் ஆலோசனையிலிருந்துவருகிறது. 'நோட்டு' பவுன்களுக்கு பிரிட்டனின் முதலாளிகளோ, இதரதேச முதலாளிகளோ இணங்கப் போவதில்லை. பழைய கடனே 250 கோடி ரூபாய்கள் இருந்து தொலைகிறது. அதுவும் இன்னும் ஒழிந்தபாடில்லை. இந்தியாவிலிருந்து 40 லட்சம்பெறுமானமுள்ள பவுன்களை மூட்டை மூட்டையாகக் கப்பல்களில் ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்தியாவின் செல்வத்தை கப்பலேற்றுவதைக் கண்ட அரசியல் வாதிகளின் கண்டனத்திற்கும் செவிசாய்க்கின்றார்களில்லை. எல்லாம் தங்களின் சுயநலத்தைக் கருதியே ஒரு தேசத்தின் வாயில்லாப் பூச்சிகளை வயிற்றிலடித்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களையும் ஒரு கிறிஸ்தவ இனத்தில் சேர்த்துக்கொள்ளலாமா? 1921 ஹு இந்தியாவுக்கு வந்திருந்த காலையில் பார்த்தநிலைமையைவிட இந்தியாவும், அதன் ஜனங்களும் மிக கேவலமடைந் திருக்கிறார்களே தவிர ஒரு சிறிதும் மாறுதலென்பதே கிடையாது. ஏதேதோ "வரியில்" இந்தியர்கள் சகிக்கமுடியாதகஷ்டத்தையும், துயரையும் அநுபவித்துவருவதாக கூறுவது உண்மையாயின் அவ்வரிப்பணத்தைக் கொண்டே இந்தியர்களின் நலத்துக்கென ஏதாவது ஒரு ஸ்தானம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? பொதுவாக அசங்கிதமாகவும் இந்தியர்களின் மதத்திற்கு வேறுபட்டதுமாகவுள்ள லாகிரி வஸ்துக்களையேநம்மவர்கள்-வெள்ளையர்கள் இந்தியாவில் பரவச்செய்து அதனையும் ஆதரிக்கின்றனர். வெள்ளையர்களின் தீயச் செயல்கள் இந்தியர்களின் மதக் கோட்பாடுகளுக்கு

து. தெய்வம் விட்டவழி நடப்பதே வழியென்று ஆற்றின்மீது மிதந்து செல்லும் கட்டைபோல் உலகை வெள்ளத்தில் மிதந்துசெல்ல வேண்டும். அங்ஙனம் முற்றிலும் பராதீனனாக எவன் ஈஸ்வரன் மீது ஸகலபாரத்தையும் போட்டுவிட்டு நடக்கிறானோ அவனுக்கு தெய்வத்தன்மை உண்டாகும். இதில் சந்தேகமே கிடையாது.

பலஹீன ஜந்துக்களுக்கு மனிதன் எதுவரை அநியாயம் செய்கிறானோ அதுவரை கலியுகம் இருக்கும், அநியாயம் நீங்கினால் கலியில்லை. "உலகம் முழுதும் அநியாயத்தை விட்டு ஸமீப காலத்தில் நீங்குமென்று நினைக்க ஹேதுவில்லை. யாதலால் கிருதயுகம் வரப்போவதில்லை; நாம் மட்டும் என்ன நியாயம் செய்யவேண்டும்" என்று விபரீதமாக யோசித்து, எவனும் தான் நடக்கும் அநியாய வழியில் தொடர்ந்து செல்லக்கூடாது. எவன் அநியாயத்தை விடுகிறானோ அவனுக்கு கிருதயுகம் அந்தக்ஷணமே கைமேலே கிடைக்கும். இதில் சந்தேகமில்லை. ஒருவன் கலியை யுடைத்து நொறுக்கினால் அவனைப் பார்த்துப் பத்துபேர் உடனே நொறுக்கி விடுவார்கள். இங்ஙனம் ஒன்று, பத்து, நூறு ஆயிரம், லக்ஷம், கோடி யாக மனித ஜாதியில் ஸத்ய யுகம் பரவுதலடையும் காலம் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. இதில் சந்தேகமில்லை.

நமது ஜெயரதம்.

இரவு 10 | அரை மணியாய்விட்டது. ஐந்து புலன்களும் நிம்பதி யடைய ஜீவ வர்க்கம் ஓய்ந்திருக்கப் பழக ஆரம்பித்தது. மனம் தனிமையாய் எஞ்சிய பிரச்னையை அலசிப் பார்த்தது. கட்டுக் கட்டாய் மூட்டைப் பூச்சிகள் போன்ற சுயநல வார்த்தைகள் மிளிர்ந்தன, ஜோசியங்கள் தங்களது அட்டவணையை மீறிக் கிளம்பின மூலை முடுக்குகளில்கூட சுதந்தரப் பேச்சாகவே தொனித்தன. சிறிது தூரம் சற்று ஆழ்ந்த யோசனை செய்யுமுன் இன்னிலை ஆவதற்கு காரணம் யாதெனச் சிந்தித்து ஆ! ஹா!! என்ற ஒரே இரைச்சலோடு பதினொன்கு சிங்கங்கள் பூட்டிய ரதத்தின் மீது ஆரோஹணித்திருக்கும் நம்மையும், பால்ய இந்தியாவையும் கண்ட மனம்; ஹே! பாரதா! உனது சுயரூபத்தை—எதார்த்த வடிவை—அமிர்த பார்வையை எங்கு ஒழித்திருந்தனை? பனிமண்டல ஒளி நிறம்பிய புஷ்பவாசனை தென்றல், சந்தன மாருதம், இந்து சமுத்திர முாசரை விப்பு உன்னை விழிக்கச்செய்ததா? இல்லை பேரிரைச்சல், அபாயகுரல், அழுகைச் சத்தத்தால் விழித்திருப்பாயென நினைக்கிறேன். என்னை பற்றியிருந்த இருள் நீங்கிற்று; இனி அரைக்கணமேனும் தாமதியாது உனது காருண்ய—தயாள வீரப் பார்வையை தெரிசித்தபின் நான் யாரென அறிய மனோசக்தி பெருகிவிட்டது. எனது விரோதிகள் பயம், மடமை, அகங்காரம், கோபம் அவா, பொறாமை அகன்றன. எனது தலைவன்—அறிஞன் கட்டளைப்படி நடக்கத் துணிந்துவிட்டேன். அவர்களால் ஏற்படும் எந்தத் துன்பங்களும் எனக்குப் பெரிதல்ல சகோதரா! அஹிம்ஸை வீரா! எனது தன்மையடைவாய் உனக்கு நன்மை கிடைக்கும் வழியைக் காட்டுகிறேன்: எழுந்து நில்!

முற்றும் மாருக-பாதகமாக இருப்பதால் இந்தியர்கள் எவ்வளவு காலந்தான் சகித்துக்கொண்டிருப்பார்கள்—பொருத்துக்கொண்டிருப்பார்கள். அத்தகைய தீயச் செயல்களை தகர்ப்பான் வேண்டியே கட்சிப் போர், சட்ட மறுப்புப் போர் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்களது சத்தியப் போர்—சுதந்திரப் போர் வெற்றியையே அளிக்கும்.

—உஸ்போர்ஸிமித்

சுதந்தரதேவியின் உதயம்.

வாயில்லாப் பூச்சிகளாகிய இந்தியரைத் தலை தூக்காது அழுத்தி விடுகிறேமென்று மீசையை முறுக்கி உறுமிக்கொண்டிருந்த—சுயநலப் புலிகள்—மிருக சுபாவமுடையவர்கள்—அகம்படைத்தவர்களின் நிலைமை தட்டுத் தடுமாறி ஒடுங்கிவிட்டது. மூச்சு விடமுடியாது திணறுகின்றனர். இரகசியமாக-அந்தரங்கமாக பார்த்துக்கொள்ளக் கடிதங்கள், தந்திகள் குவிகின்றன. எல்லையற்ற—வரம்புமீறிய சொல்லொணாத—சகிக்கமாட்டாத செயல்களை புரிந்தும் பார்த்துவிட்டனர். வில்லிங்டன் ஆட்சி கொடியது—நேர்மையற்றது எனப் பலரும் தூற்றினர். பண உலகில் அதிக நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது. காமன்ஸ் சபையில் அடிக்கடி காங்கிரஸைப் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது, தில்லு முள்ளு, திருகு தாளம், சமயப் பொய் முதலியவைகள் கையாளப்பட்டது. சாமுயல் ஹோர் கம்பத்தில் நின்று வித்தை காட்டினார். யாவையும் இந்தியா உதறித் தள்ளி தனது லக்ஷியத்தை—சுதந்தரத்தையேகுறிப்பாக நாடி நிற்கிறது அதிகாரிகளென்னும் நாடக ஆசிரியர்கள் சீர்திருத்த நாடகம் நடைபெறுவதற்கு அறிகுறியாக நமது சாதாரண தெருக் கூத்துகளில் நாடக ஆரம்பத்தில்பாடுகின்ற நாட்டை என்னும் இராகத்தைப் போல் இந்தியாவிற்கு அதைச் செய்யவேணும், இதை செய்யவேணும், அவர்கள், இவர்கள், செய்தது தவறு என்பன போன்ற பயனற்ற சொற்களை வெள்ளைப் பத்திரிகைகள் எழுதி ஏமாற்ற நினைப்பது; ஒருபுறமிருக்க, தீர்க்காலோசனை செய்து 47-வது காங்கிரஸை நசுக்க அதன் தலைவரையும், இதரர்களையும் கைதி பண்ணிய சர்க்கார் யாதொரு நிபந்தனையுமின்றி விட்டுவிட்டதும்; வில்லிங்டனும், அவனுடைய சகாக்களும் லண்டனுக்குப் பறக்கப் போவதும் யாதுக்கென ஒசிக்க அன்பர்களுக்கேவிட்டுவிடுகிறேன் எந்த நாடும் சுயேச்சை யடைய—உரிமைவகிக்க அதற் குரிமையுண்டு. அவ்வுரிமையைப் பெறவே நாமும் முனைந்து விட்டோம். வெற்றி நமது பக்கமே!

கிணறுவெட்ட பூதம் புறப்பட்டது!

பிரிட்டிஷ் ஆட்சியை வெட்டிப் புதைக்கவேண்டுமென்பதே உலகிலுள்ள முக்கால் வாசிஜனங்களின் நெடுநாளைய அவா. இன்றைய இந்தியாவின் நிலையை உலகமே போற்றுகிறது. இந்தியாவும் அதன் மக்களும் போற்றலையோ, தூற்றலையோ பொருட்படுத்தாது அடிமைவாழ்க்கையை அறுக்க—சுதர்மத்தை ஸ்தாபிக்க—சுயராஜ்ய இந்தியாவில் வாழக்கங்கணம் கட்டிவிட்டார்கள். சட்டமறுப்புப் போரை—சாத்விகப்போரைக் கையாடினர் வில்லிங்டன் ஆட்சியில் மறியல்த் தொண்டர்கள் கைதிசெய்யப்பட்டார்கள். தண்டிக்கவும் பட்டார்கள். சாக்கடைத் தண்ணீரை மோட்டார் லாரிகளில் ஏற்றிக்கொண்டு தெருத் தெருவாய் அலைந்து தொண்டர்கள்மீது ஊற்றினார்கள். வீச்சத்தையும் சகித்துக்கொண்டு அதனையும் தொண்டர்கள் ஏற்றார்கள் அடிதடியையும், துப்பாக்கிக்குண்டுகளையும் மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டார்கள். மிதமிஞ்சி சிறை சென்றதைக்கண்ட சர்க்கார் தாஸர்கள், தொண்டர்களைப் பிரம்படிக்கும் ஆளாக்கினார்கள். அதையும் ஆண்மையுடன் பொறுத்துக்கொண்டனர், வேறுவழி தோன்றாதே அரக்கர்கள் அரக்கத்தொழிலாகிய மானங்கெட்ட தொழிலைச் செய்ய ஆரம்பித்தனர். தொண்டர்கள் துயிலுரியப்பட்டனர். சுதந்தர தாகங்கொண்ட ஒருவனை எவ்வளவு அவமானத்திற்காளாக்கினால்தானென்ன. அதிலும் சர்க்கார் கைப்பிள்ளைகள் வெற்றிபெற்றார்களில்லை. கடைசியாகக் கைக்கொண்டிருப்பதுதான் கிரிமினல் சட்டம் என்பதே பிரிட்டிஷ் ஆட்சியில் இல்லாதொழியும் முறையைக்கைக்கொண்டுள்ளார்கள். கொலை கொள்ளை முதலிய அறுவருக்கத் தகுந்த கொடிய குற்றங்களால் முறையே 5, 10, 15, 20 வருடங்கள் தண்டனையடைந்த கைதிகள் யாவும் விடுதலையடையப்படுகிறார்கள். காந்திஜீ சிறைசென்ற ஓரிரண்டு மாதங்களிலேயே கிரிமினல் குற்றவாளிகளுக்கு விமோசனம் கிடைத்துவிட்டதென்றால். காந்திஜீயின் ஜீவிய காலத்திற்குள் கிரிமினல் சட்டமென்னும் ஒரு சட்டத்தையே 'ஆங்கிலசட்டப் புத்தகத்தினின்று கிழித்தெறிந்து விடுவார் என்பதில் சந்தேகமில்லை. கிணறு வெட்ட பூதம் புறப்பட்டமாதிரி அரசியல் கைதிகள் தண்டனையடைய கிரிமினல் கைதிகள் விடுதலையடையும்படி நேரிட்டது. கிரிமினல் குற்றவாளிகளாக கருதப்பட்ட இவர்களே அரசியல் சீர்திருத்தக்காரர்களாகிவிடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. அப்படியானால்............அப்பொழுது?

இந்தியாவில் புரட்சியா?

ஒரு நாட்டில் பலதிறப்பட்ட கொள்கைகள், பழக்க வழக்கங்கள், சட்டதிட்டங்கள் உண்டாயிருக்கலாம், எவ்வளவுபேதப்பட்ட நடவடிக்கைகளிருந்தாலும், மனிதனாலேயே அவைகள் புரியப்படுவதன்றி மிருகங்கள், பக்ஷிகளாலல்ல ஐரோப்பியரும், இந்தியரும் மனிதரே! மனிதவர்க்கத்தில் உயர்வு தாழ்வு உண்டென்பது நீக்கப்பட்டுவிட்டது. சில ஆண்டுகளுக்குமுன் காட்டுமிராண்டிகளாய் சட்ட நிர்ணயமின்றி எதேச்சாதிகாரம் பூண்டிருந்த ருஷியா உலகத்தில் பெரிய மாறுதலை உடைத்தாயிருக்கிறது அதன் பூர்வாங்கமான பொது இயக்கத்தை நாம் வெறுத்தாலும் ருஷியர்களின் விடாமுயற்சியையும், திடபுத்தியையும் மெச்சாதிருக்கமுடியாது. கைத்தொழில்வன்மை சிறந்து விளங்கும் தற்கால ருஷியாவையும், அதன் இயக்கத்தையும் இந்தியா அனுசரிக்கவில்லை எனினும் அடிமைவிலங்கைத் தகர்த்தெறிய இந்தியாவைப்போல் ஒழுங்கான வழியைக் கையாடியதில்லை. அயர்லாந்தின் விடுதலைச் சரித்திரத்தில் காணப்படும் பயங்கரமான செயல்களில் 100-க்கு ஐந்துதான் இந்தியாவிலிருக்கும். ஐரோப்பியர்கள் தங்களது குற்றத்தை மறைத்துக் கொள்வதற்குத் தகுந்த வினாக்களை சர்ச்சில் போன்றார் கேட்பதும் இந்தியா மந்திரி பதில் கூறுவதும் இந்தியருக்குத் தெரிந்திராமலில்லை புரட்சி இயக்கத்தைப்பற்றி விசாரிக்க கமிட்டி நியமிப்பதற்கு மாளவியாஜியை யோசனை கேட்கும் சாமியேல்ஹோர் ருஷிய புரட்சியைப்போல் இந்தியாவிலிருந்தாலும் அடக்குமுறையைவிட அது பெரிதல்லவென்பதை நன்கு அறிந்திருக்கவேண்டும். இந்திய ராஜீயவாதிகள் பிரிட்டன் தந்திரத்தை நன்கு அறிந்துகொண்டிருக்கின்றனர். இரு சாராரையும் சமரசப்படுத்திவைப்பது பிரிட்டிஷ் பொதுமக்களின் கடமை.

—அலெக்செண்டர்

உயரப் பறந்தாலும், ஊர்க்குருவி ?

மே, அல்லது ஜூன் மாதம் வில்லிங்டன் பிரபு உயரப் பறக்கப்போவதாக, லண்டன் பத்திரிகைகள் விளம்பரப்படுத்திய வண்ணமாகவேயிருக்கிறது. அதோடு அப்பத்திரிகைகள் புளுகினி ஜோதிடர்கள் மாதிரி கட்டுக் கதைகளையும் கட்டிவிடப் பின்வாங்குகிறதே கிடையாது. அவைகளை நமது குப்பைத் தொட்டிகளில் தள்ளிவிட்டு நமக்குத் தெரிந்தவரையில் சொல்லுவோமா? சொல்லித்தான் பார்ப்போமே. இந்தியாவின் செலவின் பேரில் நமக்கு சிம்மாதனப் பதவி யளிக்கக்கூடிய இரண்டாவது கோழி முட்டை மஹாநாடு கலைந்ததும், சபர்மதி கிழடு இந்தியாவில் காலடி வைத்ததும் ஏற்கெனவே செய்திருந்த சூழ்ச்சிகளை அமுல் நடத்த—காங்கிரஸை நக்கக் கிளம்பிய வில்லிங்டன் மீசையை முறுக்கி சாமுயல் ஹோர் கரைத்த தாடியை உறுஞ்சி, ராக்ஷத சட்டங்கள் தலைவிரித்தாடியதும், தலைவிரித் தாடிய பூதம் ஏராளமான ஸ்திரீ, புருஷர்களை வாரி, வாரி விழுங்கியது. பொது ஜனங்கள் பல இன்னல்களுக்காளானார்கள். இவைகளை யெல்லாம் மறைத்துவிடலாமென—ஏமாற்றிவிடலாமென லோதின் கமிட்டி வந்து ஊர், ஊராகச் சுற்றித்திரிந்தும் தேடுவாரற்றுத் திரும்பிப் போனது ஒரு பழங் கதை. அப்பாடா சற்று பொறுத்துக் கொள்ளுங்கள் சொல்லிவிடுகிறேன்! சிறைகளிலோ இடமில்லை; அடித்தாலும்—சுட்டாலும்—அடைத்தாலும் குவிந்துகொண்டே இருக்கிறார்கள். இந்திய வீரம் ஜ்வலிக்கிறது. பிரிட்டிஷாரின் ராஜ தந்திரங்கள் ஏப்பம்; ஏகோ கோவென்கிறது. அந்தக் காற்றில் அகப்பட்ட வில்லிங்டன் பார்த்தார்; பாச்சா பலிக்கவில்லை. தமது சகாக்களோடு லண்டன் சென்று யோசித்து வந்து மிளகாய்ப் பொடி தூவலாமென்று நினைத்திருக்கலாம். இவர் புறப்படுவதற்கு முன் லண்டன் பத்திரிகைகள்; வில்லிங்டன் அதைப்பற்றி, இதைப்பற்றி யோசிப்பார் என்பது போன்ற ஜோசியத்தை முன்னெச்சரிக்கையோடு சொல்லுவதுதான் நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இவர் எதைப்பற்றிக்கொண்டிருந்தாலும்; தூக்கத்திலிருந்து விழித்து நிற்கும்—ஆத்ம சக்தியைத் தாங்கி நிற்கும் சுதந்தர இந்தியா இடந் தராது. பிரதமமந்திரி அறிக்கையில் கூறியுள்ள இந்து முஸ்லீம் பிரச்சினையைப் பற்றி யானாலும் சீர்திருத்த விஷயமாக பிரபுக்கள் சபைக்கும்—வைஸிராய்க்கும் நடந்துவந்த கடிதத்தைப்பற்றி யானாலும், இந்தியாவிலுள்ள குறுகிய கட்சியாலும் சகல கட்சிகளின் அபிப்பிராயத்தைப் பற்றியாவது பொது ஜனங்களுக்குப் பாதுகாப்பளிக்கப்படுவதல் காரணம் அரசியல் தேர்ச்சி, கல்வி நிலைமை, பொருளாதார நிலை எதையாவது ஆதாரமாகக்கொண்டு அவர் வாதித்து ஒருமுடிவுக்கு வரலாம். அவருக்கு ஆதாரமாக சாஸ்திரி ஜெயகர். சப்ரு போன்றவர்கள் ஆமாஞ்சாமிபோடலாம். சுருக்கமாகச் சொல்லிவிடுவோமே நமது தேசீய இயக்கத்தால் ஒப்புக் கொள்ளப்படாத எந்த ஒரு சீர்திருத்தத்தையும், இந்தியா ஏற்பதற்கு தயாராயில்லை. ஆதலால், அதுபற்றிய கவலையுமில்லை.

சபாஷ் ! தமிழ்நாடு !!

சுதந்தரப் போரில் நமது தமிழ்நாடு சரியான பங்கு எடுத்துக்கொள்ளவில்லை யென்று, சென்ற வருஷ யுத்த அறிக்கை வெளியிட்ட போது நாமும் வெட்கமடைந்ததுண்டு. இவ் வருஷப் போரில் தமிழன் உடல், பொருள், ஆவி மூன்றையும் பாரதமாதாவிற்கு அர்ப்பணம் செய்துவிட்டான்—வீராவேசங்கொண்டு நிற்கின்றான். தமிழன் துணிவையும், சுயமதிப்பையும் சகிப்புத் தன்மையுங் கண்ட ஸ்டேல்மென் தமிழர்கள் சோம்பேரிகள்—பயங்கொள்ளிகள் என்ற பட்டந் தொலைந்துவிட்டது. சகோதரிகள் மரியல் லேலையையும் சட்டமறுப்பையும் ஒழுங்குபெறச்செய்து சிறை புகுகின்றனர். அச்சிறையில் அரக்கர்கள் கொடிய செயலாற்றினும்:—சீதையைப்போல் .ஆரோபதையைப்போல் நிகர்த்து ஆத்ம சக்தி நிரப்புகின்றனர் மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் உள்ள அந்நியத்துணி சாமான்கடைகள் தாராள நோக்கமாக விற்கமுடியாது. எவ்வளவு குறைந்த விலையானாலும் வாங்குவாரில்லை. அவ்விடங்களில் அந்நியத் துணி வியாபாரிகள் காங்கிரஸ் என்றாலே நடுங்குகின்றனர். சர்க்காரும் குட்டி அதிகாரிகளும் இயன்ற அளவு கைமிஞ்சியும் பயனில்லை என ஒலமிடுகிறது.

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-86th Street, Rangoon.

பதிவுஎண் 245] (1922-ஹு ஸ்தாபிதம்.) 12 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் புத்திரிகை. ஆசிரியன் அ. வெ. செல்லம் பிள்ளை. வாரம் இருமுறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஹு (11-5-32) சித்திரை-மீ 29உ புதன்கிழமை

அப்படியானால் பர்மியருக்கு நன்மையா

இந்திய ஆட்சியின் ஓர்பாகமாகிய பர்மாவும புதிய நாகரீகத்தில்— ஆடம்பர வாழ்க்கையிலீடுபட்ட ஒரு நாடு. இந்நாட்டினர் கள்ளங் கபடமற்றவர்கள். இவர்கள் புத்த மதத்தினராயினும்; மேனாட்டுக் கிறிஸ்தவப் பாதிரிமார்களால் அநேகர் கிறிஸ்தவராயிருக்கின்றார்கள். பொதுவாக இந்தியர்களைப்போல் பர்மியர்கள் கஷ்டமான வேலைகளைச் செய்வதற்கு முற்படார். சில வருடங்களுக்கு முன்பு அரசியலைப் பற்றி இவர்களுக்கு ஒன்றுந் தெரியாது. இப்பொழுது பார்த்தாலும் ஒரு சிலரே ராஜீய உலகில் பிரஸ்தாபிக்கப்படுகிறார்கள். அவர்களிலும் பொதுஜன நன்மைக்கென உழைப்பவர் மிகச் சிலரே. பர்மாவில் கட்டுப்பாடான கட்சி ஒன்றுமில்லை. சுயராஜ்ய கட்சி ஒன்று காலஞ்சென்ற, ஊடோச்சியின் தலைமையிலிருந்தது. அக்கட்சிதான் சர்க்காரை சமயாசமயங்களில் எதிர்த்தது. மற்றும் சுயேச்சைக்கட்சியினர். தேர்தல்நெருங்கியதும் கிளம்பி;காரியத்தை முடித்துக்கொண்டு ஆமாஞ்சாமி போடுபவர்கள். நிலைமையே ஆடிவிட்டது. இப்போது சர்க்காரின் ஒததுக்குத் தாளம்போடும் 21 வர், ஜனக்கட்சியின் தலைவர் மிஷ். ர்ஊபாப் பே. இந்தப் புண்ணியவான்தான் இந்தியாவினின்று பர்மாவைப் பிரிப்பதற்குக் கங்கணங்கட்டிக்கொண்டு திரிகிறார். பர்மாவை இந்தியாவிலிருந்து பிரித்துவிட்டால், பர்மியர் உன்னத நிலை அடைவரா? இந்தியர்களுக்குக் கெடுதி சம்பவிக்குமா? அநேகருக்கு இதன் கருத்து விளங்கவில்லை என்றே தெரிகிறது. இந்தியா அடிமை நாடாகையால் பர்மாவும் அடிமை நாடே! இந்தியா விடுதலையடைய அதிதீவிர முயற்சி செய்கிறது. பர்மாவில் பெருத்த தலைவர் ஒருவருமில்லை. என்றாலும் இந்தியா சுதந்தரம் பெறின் பர்மாவும் அதனை அடையும். இந்தியாவினின்று பர்மா பிரிந்துவிடின்றால்— தலைவரில்லாத—ஊக்கங் சிதைந்த—ஏழ்மையடைந்த பர்மியர் கூலிக்கு உழைக்கத்தானே வேண்டும். கூலிக்காரர் மிகுத்தால் மேஸ்திரி, முதலாளி வேண்டுமல்லவா? அதற்கு முதலாளி இல்லாதிருந்தாலும் மேனாட்டு முதலாளிகள் இருக்கலாம். பிறகு ஆட்டுத்தோலுக்கு இடங்கேட்ட கதைதான். நிற்க; இந்தியாவினின்று பர்மாவைப் பிரித்து மாகாண சுயஆட்சிக்கிணங்க மந்திரிசபை ஏற்படுத்தி பர்மியரை முக்கிய உத்தியோகத்திலமர்த்தி தேர்தல்மூலம் பர்மியருக்கு அதிகபிரதிநிதித்துவம்அளித்து மந்திரி சபையாரால் சட்ட நிருபணங்கள் செய்து, பர்மாவைப்பற்றிய வரையில் வரி வசூல் நிர்வாகம், சைன்னியம், போலீஸ் படை, பொருளாதாரம் முதலியவைகளின் பொறுப்பு மந்திரி சபைக்குக் கொடுக்கப்பெற்றாலும், சமயா சமயங்களுக்கேற்ப மாகாண கவர்னருக்கு விசேஷ அதிகார உரிமையுமிருக்கும். இதனை பிரதம மந்திரி லண்டனில்-பர்மா வட்டமேஜைக் கூட்டத்தில் சில மாறுதல்களோடு அறிக்கை விடுத்துள்ளார். இது கிணறு வெட்டப் பூதம்புறப்பட்ட கதைபோலாகும். ஆகையினால்தான் பர்மாவின் பிரபல தலைவர்கள் ஆக்ஷேபிக்கின்றார்கள். பிரித்த பின்பு இப்போது இந்தியர், பர்மியருக்கு பாதகமாக சர்க்கார் யாதொன்றைச் செய்யின் இந்தியரின் சார்பாகத்தான் இந்தியாகவர்னமெண்டு தலையிடலாமன்றி, பர்

பிரிட்டிஷாரே புரட்சிக் காரர்கள்.

எந்த ஒருவிஷயத்தையும் அலசிப்பார்த்து ஒரு முடிவுக்கு வருதல் தீர்க்க புத்தியாகும். அவசரப்பட்டு, ஆத்திரத்துடன் நல்ல காரியத்தைச் செய்ய முயற்சிப்பினும், அனேக இன்னல்களுறு மென்பதற்கையமில்லை. இதற்கு சான்றாக நமது அதிகாரிகள் தங்களுக்கு ஒத்துக்கு மத்தளம் போடும் ஆசாமிகளை ஆதாரமாகக்கொண்டு காங்கிரஸை ஒடுக்கிவிட்டு, மாகாண சுயாட்சி கொடுத்துவிடலாமென யோசித்தனர். ஆனால், பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் கட்சி அதிக பலமான இருப்புத் தூண்களாகையால், வைத்தது சட்டமாக—தங்களுக்கநுசரணையாகவுள்ள வில்லிங்டனை அனுப்பி பிரிட்டிஷ் வியாபாரத்தைப் பரப்பக்கூடியவகையில் நிர்வகிக்க எத்தனித்தனர் பிரிட்டிஷ் அரசாங்கம் என்றால் என்ன? வியாபாரக் கம்பெனியாகும். அக்கம்பெனியில் டங்கு சேர்ந்துள்ளவர் யாவருக்கும் பிரதிநிதிகள் உண்டு அந்தப் பிரதிநிதிகள் நிரம்பியுள்ள சங்கம்—கூட்டத்திற்கு,பார்லிமெண்டென்னப்படும் அதுபிரபுக்கள்கூட்டம்-பொதுக்கூட்டமென இருவகைப்படும். இவ்விரு சபையினங்கத்தினர்கள்பொதுஜனங்களால் தேர்ந்தெடுத்திருப்பினும்,பணக்காரர்களுக்கே அதிக ஓட்டுரிமை உண்டாகையால்; முதலாளிகள் சபை என்றே கூறலாம். தொழிற்கட்சி அரசாங்கம் நடந்ததே! என்று கூர்பவருமுளர். பணக்காரர் மிகுதி உரிமை பெற்றிருப்பதால்தான்தொழிற்கட்சி பதவியிழந்ததென, நாம் அறியக்கிடக்கிறது. இந்திய சட்டசபையில் அங்கத்தினர் கேட்கும் கேள்விகளுக்கு முன்னெச்சரிக்கையோடு கேள்வி கேட்கப்படினும் இஷ்டமிருந்தால்தான் பதில் சொல்வார்கள். சர்க்கார் தரப்பில்கேள்விகளை மழுப்பிவிடுவதற்கான பதிலே கிடைக்கும். தலைவர்களுடைய அதிகாரமும் உபயோகமற்றதே. பிரிட்டிஷ் பார்லிமெண்டிலோ அங்கத்தினர்களின் கேள்விகளுக்கு பதிலே அளித்துத் தீரவேண்டும், யாதொரு விசேஷ அதிகாரமும், அங்கு பிரதிபலிப்பதில்லை. பிரதம மந்திரி யுள்பட சக்ரவர்த்தியார் அபிப்பிராயங்கூட அங்கத்தினர்களின் எண்ணங்களை மீறு யண்ணம் சட்டமாக்கப்படுகிறது. ஒரு அங்கத்தினர் தனக்கு மாறாக உபயோகிக்கும் நடவடிக்கையை ஆதரிக்கும் யாதொருவரையும் கடுமையான வரை கடின பதங்கள் கையாள—கைமிஞ்சஇ— வசதி யுண்டு ஆனால் இந்தியாவில் அப்படி நடப்பதும் இல்லை சாந்த குணம் மிகுந்த இந்தியர்கள் அத்துமீறி நடக்கத்தெரியார். பொறுப்புள்ள அரசியல் சபையில் முறைதவரி நடந்துகொள்ளும் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் புரட்சி இருக்கிறதென கட்டிவிடுவது ஆச்சரியமாகவே இருக்கிறது. அதும் ருஷியப் புரட்சி இந்தியாவில் தலையிடுகிறதென்று கூறுகின்றனர். புரட்சி என்ற வார்த்தையைக் கனவிலும் நினைத்திராத இந்தியாவில் பிரிட்டிஷாராலேயே புரட்சி உண்டாயிருக்கலாம். ஆடு, மாடு, கோழிகுஞ்சுகளை அடைப்பதுபோல், இந்தியர்களை அடைப்பதும், அடித்தும், சுட்டும் இம்சிப்பதையும் ஞாயமற்றதெனக் கருதும் சில வாலிபர்கள் பலாத்காரச் செயலைக் கையாளுகின்றனர். இது ஒரு புரட்சியா? பிரிட்டிஷார் வலிய சண்டை இழுக்கும் முகத்தாய், லண்டனிலிருந்து திரும்பிய காந்திஜீயை அடைத்துத் தாங்கள் வைத்தது சட்டமாக காங்கிரஸ் தலைவர்களையும் தண்டித்து,ஸ்திரீ,குழந்தைகளென்ற தாரதம்மியங்கூட இல்லாமல் ஆட்சிபுரிவது கொடிய புரட்சியல்லவா? தற்காலம் இந்தியாவில் நடக்கும் அடக்குமுறையைவிட கொடிய புரட்சி இருந்ததில்லை. பிரபல ஆங்கிலேயர்கள் எச்சரித்துக்கொண்டு இருந்தும் மனந்திரும்பாத நாம் புரட்சிசெய்கிறோம். புரட்சி என்பது குண்டுபோடுவது அன்று. ஒரு மனிதன் நலத்தை மற்றொருவன் பறிப்பதுதான் புரட்சி எனப்படும். உலகத்தில் பரிபூரண சாந்தி ஏற்படும் வரை புரட்சியுமிருக்கும்.

—வில்லியர்ஸ் உட்

மியருடைய சகல தாவாக்களையும் பிரிட்டிஷ் பார்லிமெண்டே தீர்த்துவைக்கக் கூடிய நிலைமையாகும். பர்மாவிற்கு இந்தியரின்சார்பாக இந்தியா கவர்னமெண்டின் ஏஜண்டு ஒருவரிருப்பர் இந்தியர்களுக்கு சில உரிமைகள் வழங்காவிடினும், பிரிட்டிஷ் சர்க்கார், இந்தியசர்க்காராகிய இரண்டு சலுகைகள் உண்டு. பர்மியருக்கு பிரிட்டிஷ் சலுகை ஒன்றுதானிருக்கும், இந்த லட்சணத்தைக் கண்ட நமது பர்மியர் முனைந்து நிற்பது யாதுபற்றியென அறிவுடையோர் அறியாமலில்லை. இன்னும் பார்ப்போம்.

விளக்கையும் பிடித்துக்கொண்டு!

பன்முறையும் வாரா வாரமாகப் பறை சாற்றி விடுதலை முழக்கம் செய்து தண்டோரா போட்டதின் பயன் வீணாகவில்லை. உலகத்தில் பல பாகங்களிலும் தமது செல்வத்தை—கீர்த்தியைப் பரப்பி, அமுதூட்டி—நல்லுபதேசஞ் செய்துவந்த இந்தியா வரண்டுபோய் இருப்பதற்குக் காரணம? அன்னிய வியாபாரந் தான். என்பதைத் தெளிவாய் அறிந்துகொண்டபின்பு, "விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் விழுகலாமா"? தமிழா! உனது தாய்மார்கள், சகோதர, சகோதரிகள் துயிலுரியப் பட்டும், தாலி அறுபட்டும் சிறைவசித்தும், துன்பப்பட்டுக்கொண்டிருக்க, அவர்களை இம்சைசெய்தபேர்வழிகளின் லாபத்துக்குசலுகை காட்டலாமோ! நமது விரோதிகளிடம், நாம் எதிர்த்து நிற்கும் ஆற்றல்—வலிமை அவர்களுடைய சாமான்களைப் பஹிஷ்கரிப்பதுதான். உன்னை ஒருவன் வைதால்—அடித்தால் அவனோடு பேசுவாயா? அவன் வீட்டுக்குப் போவாயா? பிராணயிருந்தால் அவன் கடைக்குச் சாமான் வாங்கப் போவாயா? நம்மை இழிவுபடுத்திக்கொண்டு—சுரண்டிக்கொண்டு ஏமாற்றி வரும், கொடியவர்களின் கடைகளை ஏரிட்டுப் பார்க்கலாமா? இந்தியாவில் பிறந்த ஹிந்து, முஸ்லீம், கிறிஸ்தவராயினும் இந்தியரென்றே சொல்வதன்றி, கருப்புத் துரை என்று யாருஞ் சொல்வார்களா? உனது வீட்டிலிருக்கும் குவளை செம்பு—வட்டி—லோட்டாவைப் பார்! என்ன அழுத்தம். என்ன காந்தி. மக்குப் பூசிய தகரம் அலுமோனியப் பாத்திரங்களைப் பார்த்தாயா? துருப்பிடித்திருக்கிறது. கையினால் செய்து உனது சகோர, சகோதரிகளின் வறுமைப் பிணியைத் தணிக்க அவதரித்த, துணியைப் பார்! தமிழா! ஜோதி பிரகாசிக்கிறது. அதைக் கட்டியதும், இடுப்பின்கீழ்சுவாதிஷ்டானம், மணிபூரகத்துக் கிடையில் உள்ள பராசக்தி தூக்கம்விட்டு உன்னை நோக்குகிருள். நீ ஒரு பரமபக்தன். சாந்த புருஷனுகத் திகழுகிருய். இந்தியா உஷ்ணபூமி. வெயில் மண்டை பிளக்க, மூளை உருக அடிக்கும் தேசம். அண்ணு! உனக்கு ஏண்டாப்பா இரண்டு மூன்று சட்டை, கால்ச்சிருய், தலையில் சட்டி, வாயில் கொள்ளிக்கட்டை. தம்பி! நான் சொல்வதென்ன பிசகா? நீ ஒருவனுக்குப்பிறந்து, ஒருவனை அப்பா வென்றழைக்கச் சம்மதித்தாலும், தாய் தந்தையர் சம்மதிப்பார்களா? கதர் முரட்டுத் துணி: அது ஏன் நமக்குஎன்று நினைக்கிருயா? அன்னியரால் உன் தலையில் ஏற்றிவைத்திருக்கும் பாரத்திலும் கதர்பாரம் கனதியல்ல நாம் பேசிக்கொண்டிருக்கும்போதே உனது முகத்தில் தேஜஸ் நிலவுகிறது, வீரந்ததும்பிய புன்னகை கமழ்கின்றன. உனது சகோதர, சகோதரிகள் சிறைக்குள்ஓலமிடும்—உன்னைக் கெஞ்சிக் கேட்கும் சப்தம் உன்செவியில் நுழைந்துவிட்டது. இனி ஒருபோதும் சுதேசியத்தை மறக்கமாட்டாயென நம்புகிறேன். சீன-ஜப்பான் தகராறு எதுபற்றித் தெரியுமா? ஜப்பான் கைத்தொழிலில்சிறந்தது. ஜப்பானில் உற்பத்திசெய்த சாமான்களை, சீனுவில் விற்று ஜப்பானியர் முன்னேற்றமடைகின்றனர், இதன் உண்மைத் தத்துவத்தை அறிந்த சீனு; ஜப்பானிய சாமான்களை பஹிஷ்கரிக்க ஏற்பட்டதும், மிருகபலம், ஆயுதத்திமிர் படைத்த ஜப்பான் தனது ஆயுத பலத்தால் அடக்க முயற்சிக்கிறது. துப்பாக்கி முனையில் வியாபாரத்தைப் புகுத்தப்பார்த்து மஞ்சூரியாவைக் கைப்பற்றிக்கொள்ளச் செய்த சூழ்ச்சி பலிக்கவில்லை. சீனர்கள், ஆண், பெண், பாலர், விருத்தர் யாவரும் ஒருமனப்பட்டவராய் ஜப்பானிய சாமான்களை வாங்காதிருக்க முனைந்துவிட்டனர். ஜப்பானின் திமிர்ஒழிந்துபடும் நிலைமையிலிருக்கிறது. நமது பிரிட்டிஷ், லங்காஷயர் முதலாளிகள் இந்தியாவோடு சமரசம் செய்துகொள்ள, தீவிரமுயற்சி செய்துவருகின்றனர். ஆனல், இந்தியா மந்திரி அப்படி ஒன்றும் மூழுகிப்போய்விடவில்லை; என்கிறன். நமது தளகர்த்தர் மாளவியாஜீ விட்ட அறிக்கையில் பாரபக்ஷமற்ற பிற நாட்டு அறிஞர்களைக் கமிஷனுகச் செய்து விசாரித்துப் பைசல் செய்யும் முடிவை காங்கிரஸ் ஒப்புக்கொள்ளத் தயார்; என்று கர்ஜித்த அதிர்ச்சிக்கு ஒருபதிலுமில்லை. அவர்களை சீக்கிரம் இணங்கச்செய்வதற்கு வழி அன்னியச் சாமான்களை வாங்காமலிருப்பதே.

கண்ணு போன கபோதி!

வட்டமேஜை வாக்குரிமைக் கமிட்டி விசாரணையும் முடிந்து, இருப்பிடம் திரும்பியது. அதன் ரிப்போர்ட்டு பிரதம மந்திரியின் மேற்பார்வையில் வெளிவரும். இம்மாதிரி எத்தனைக் கமிட்டிகள் ஏற்படினும் ஒருபயனும்விளைந்திடாது. சைமன் கமிஷன் வந்து போன மாதிரிதான் இக்கமிஷனுடைய நடவடிக்கையுமிருக்கும். இதெல்லாம் இந்தியாவுக்குச் செலவே தவிர வேறொன்றுமில்லை. கமிட்டியின் விசாரணையும் கட்சிகளின் வாக்குமூலமும், அந்தரங்கமாகயிருக்க சில பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் அபிப்பிராயங்கூறதலைப்பட்டதைக் கண்ட லோதியன், நல்லசமயத்தில் அறிக்கை ஒன்று வெளியிட்டனர். கமிட்டியின் விசாரணையைப் பற்றிய அபிப்ராயம் எதுவும் கூற இயலாமலிருக்கிறபடியால், விஷயந் தெரியாமல் மிகைப்படுத்திக் கூறுவது யோக்கியமும், ஞாயபுத்தியு மல்லவென்றும், கமிட்டியின் ரிப்போர்ட்டு பிரதம மந்திரியினால் அலசிப் பார்த்த பின்பு காமன் சபையில்பிரஸ்தாபிக்கப்பட்டு—அங்கீகாரம் பெற்று வெளிவரும் என்றும், செய்தி விடுத்துள்ளார். இந்தப்படியே சில விஷமப்பத்திரிகைகள் உத்தேசமாக எழுதிவிடுவதை பொதுஜனங்கள் நம்பாதவண்ணம் செய்யும் பிரசாரம் அவசியம். இந்தியரை அவமதிப்புக்குரிய செயலாற்றும், எந்த மனிதனும் சிறிது மனத்தாங்கலடைந்து ஜீவிக்கநேரிடு மென்பதற்கு நமது பிரதம மந்திரியே சாட்சியாவார். இப்பெரியார்—மகா ராஜீய நிபுணர் இந்தியருக்கு நன்மை புரிபவரைப் போல் நடித்து பாலுக்கும், பூனைக்கும் காவலாயிருக்கிறார். சென்ற வருட வட்டமேஜை மஹாநாட்டில் நடித்த கூத்து—பள்டி-குட்டிக்கரணம் ஒருபுரமிருக்க; அடக்குமுறையை அதிகப்படுத்த ஆதாவு காட்டியவரும்இவரே. இப்பெரியாருக்கு கடைசிகாலத்தில் கண்ணும் கெட்டுப்போனதாம்! "கண் கெட்ட கபோதி" குருட்டுத் தனமாய்த்தான் பேசுவார். இவரைத்தள்ளிவிட்டு எந்தப் புண்ணியவான் இவர் பதவிக்கு வருவாரோ பார்ப்போம். வெள்ளையர்களுக்கு இந்தியாவைப்பற்றி ஒன்றுந் தெரியாது. இந்திய சர்க்கார் அனுப்பும் பொய்ச் செய்தியைக் கொண்டு பிரிட்டிஷ் பொதுமக்கள் நம்பிவிடுகிறார்கள். பண்டிதமாளவியாஜீ சொல்கிறபடி பொறுப்புள்ள ஆங்கிலேயரெவராகிலும் இந்தியாவுக்கு வந்து தற்காலநிலைமையை ஏன் அறியக்கூடாது. ஆனால் பிரிட்டிஷ் சர்க்காரின் சார்பாக யார் வந்தாலும் உருப்படியான சமாச்சாரம் வெளிப்படாது. பொதுநிலை வாய்ந்த—பாரபக்ஷமற்ற கனவான்கள் உண்மையை அறிய விரும்பி இந்தியாவுக்குவந்தால் இந்தியத் தலைவர்கள் அவர்களை வரவேற்று, உண்மையை நன்கு தெரிவித்து சமரசத்தன்மை ஏற்படும் வகையில் நடக்கத்தவரமாட்டார்கள். அப்படி நடப்பவர்கள் வந்தால்தான் சாமுயல் ஹோர் பொய் வெளியாகும். வீண் பயமுறுத்தலுக்கு இந்தியர் அஞ்சப்போவதில்லை.

அன்பே! அஹிம்சை, துணைவி.

சாதாரண பற்றுதல், உரிமை, தற்காப்பு மனிதனுக்கு முக்கியமெனக் கருதப்படுகிறது. நீ அவா மிகுந்து, வருஷா வருஷம், மாதா மாதம், வாரா வாரம், நாழிகை நாழிகையாக உனது கண்ணைத் திறந்தபடியே வெகு ஜாக்கிரதையாக—வெட்கமடைவதற் கேதுவானஉனது நிலையற்ற ஜீவ நாடியை—இருதயத் துடிப்பைக் கவனித்துக்கொண் டிருந்தபடியால்தான் செவிடனாயு மிருக்கிறாய். கோடிக் கணக்கான வருஷம் உனது பிறவி விருப்பங்கள் மாறி மாறி உருக்கொண்டு உன்னை யாட்டிவிக்கும், இந்தப் பிறவியிலும் உன்னை யறியாமலேயே உன்னை இயக்கும் பொருள் தீர்மானஞ்செய்யும் மனம் உனக்குச் சொந்தமெனநினைத்திருக்கின், அது தப்பிதம். பூரண வாழ்க்கையை எய்துதற்கு சகல உயிர்களும் முன்னணியில் நின்றாலும், மனிதனுடைய சாயல், எண்ணம் மிகத் தாழ்ந்த நிலையைப்பற்றி நிற்கும்; அவற்றை ஒரு யந்திரத்தைப்போல் திருப்பிக்கொள்ள மனிதனுக்கு, ஆற்றல்—சக்தி இருக்கிறது. அதை எவ்வழியில் உபயோகிக்கலா மென்பது பற்றி தீர்மானிக்காது, அவசரமாக பழைய வழக்கமான — மங்கிப்போனகொள்கையை அநுசரித்து உயிர் பற்றுதல் கொண்ட தன்னலச் சேர்க்கைகளால், மிகத் தாழ்ந்த நிலையை அடைகின்றான். எனது கலாசாலை நண்பரொருவர் வருங்காலத்தைப் பற்றிய பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர, படிப் படியாய் உலகானுபவத்தைக் கூறினார். அவர் சொல்லியபடி காத்திருந்து நினைவின்படி செயலாற்ற

அவ்வளவு நாள் ஜீவித்திருக்க முடியுமா? என்ற ஒரு கேள்வியால், தனது உன்னத எண்ணத்தை மாற்றிவிடுகிறது. அவரால் இன்னும் உலகத்திற்கு ஒரு பயனுமில்லை. அநுபவமுதிர்ந்த செய்கையில் பற்றுதல், நீக்கி உரைப்பாயானால், சகல உத்கிருஷ்டமான பலன்களும் உன்னையே வந்தடையும். நீ அவற்றைத் தேடியலையவேண்டியதுமில்லை. வாலிபா! ஒரு பிரயாணி வழியிலுள்ள ஒரு கடையில் தனக்கு வேண்டிய சாமான்கள் அகப்படுமா? என்று கேட்ட கதைபோலவேதான் உனது உயிர்த்தன்மை. அது தனது பிரயாணத்தில், சகல வஸ்துக்களையும் பார்த்தும், நினைத்தும், சுகித்தும் இருந்தாலும் கடியாரத்திற்கு சாவி கொடுத்திருப்பதுபோல் பிராப்தகன்மமிருக்குமளவும், நானென்று ஆக்ரமித்து, குறிப்பிட்ட நேரத்தில் கடிகாரம் நின்றுவிடுவதுபோல், உனது உயிரில் செயலற்றுப்போம்.

—"விதிவசம்" ஒரு நண்பருக்கு வருஷத்தில் 3000 பவுன் வரும்படி; அவர் தனது மனைவி, மக்களோடு குடும்ப வாழ்க்கையை சந்தோஷமாகவும், கௌரவமாகவுமே நடத்தினார். நாமும் அவரை ஒரு அதிர்ஷ்டசாலி என்றே நினைத்தோம். அவர் இறந்துபோனார். அவர்மக்கள் பின்காலத்தில் கஷ்டத்தையே அடைந்தார்கள்.

—"துணைவலி" ஒவ்வொரு ஆத்மாவும், தனக்குத் துணை தேடிக்கொள்வதில் பின்னடையவில்லை. ஆனால் அவ்விதம் வைத்துக்கொள்வது மனித சுபாவத்திற்கு ஒத்திருக்கவேண்டும். மனித சுபாவத்திற்கு மீறிய செயலில், பலாத்காரமும் மிருகச்செயலு மடங்கியிருக்கிறது. பலாத்காரத்தில் முனைந்து நிற்கும் எந்தத் தேசத்தினரும் அழிந்தேபோவர். ஒரு உயிரைப் போஷிப்பித்துக்கொள்வதற்கு எண்ணற்ற உயிர்களைக் கொன்றும், இம்சித்தும் வருவது மடமையேயாகும். நாகரீக மிகுந்த ஐரோப்பாவில்தான் இந்தப் பாதகச் செயல்கள் கையாளப்படுகிறது. இவர்களும் ஒருநாளில் சாகவே செய்வர். உயிரின் துணை அன்பே! அதுதான் அறிவு. அறிவில்லாதவன் இருந்தும் செத்தவனே! ஒரு ஸ்திரீயைத் தனக்குத் துணைவியாகத்தேடிக்கொள்வது, அவள்மீதுள்ள அன்பினால்தான். அஹிம்சை என்பதுவும், பிறர்மீது அன்பு செலுத்துவதேயாம்.

—ஜே. ஏ. வார்ன்ஸ்

ஒட்டைபானையில்சர்க்கரை.

வானத்தில் சுற்றிக்கொண்டு திரியும் ஆற்றலைப்பெற்ற உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களையும் இயக்கும்—ஆட்டுவிக்கும் அபார சக்தியையே நாம் பராசக்தி என்கிறோம். இப்பராசக்திக்கு ஆதாரமாகிய பொருளைத்தான் கடவுளென்று சொல்லப்படுகிறது, கிறிஸ்து சொல்லியதுபோல் கடவுள் முன்னிலையில் எல்லா வஸ்துக்களும்-பிராணிகளும்—மனிதவர்க்கமும் சமமே" எனினும், சகல ஆடம்பரச்செல்வீகனாய் விளங்கும் அரசனுக்கும்; வயிற்றுக் கஞ்சி அகப்படாது ஏங்கி நிற்கும் தரித்திரனுக்கும் தாரதம்மிய மிருக்கவே செய்கிறது. அரசியல் உலகில் தேசத்தின் நிலைமைக்கேற்ப ராஜதந்திரத்தோடு நடந்துகொள்வதில் பிரிட்டிஷார் கைதேர்ந்தவர்களாகையால், தற்கால இந்தியா அநுஷ்டிக்கும் சுதந்தரப்போர் வெற்றி பெறுமென்று பிரபல ராஜீயவாதிகள், தங்களுக்குத் தோன்றியவாறு பேசியும், எழுதியும் வருகின்றனர். அவர்களது அந்தரங்க சிந்தை எவ்வாறிருப்பினும், நான் அவைகளையும், ராஜதந்திரமெனவே நினைக்கிறேன். இந்தியாவின் பிரதம சேனாதிபதி—ஒடிந்து மெலிந்த கிழவன்—காந்திஜியிடம் எந்தவிதமான ஆயுதமுங் காணப்படவில்லை. ஆனால் அவர் ஒரு பக்கா ஹிந்துவாயினும், கிறிஸ்தவ வேதத்தை அறிந்து நடக்கிறார். "உன்னை ஒருவன் கன்னத்திலடித்தால் மற்றொரு கன்னத்தையும் திருப்பிக்கொடு" இதுதான்கிறிஸ்துவின் உபதேசம். காந்திக்கிழவனும், உன்னை அடிப்போனைத்தடுக்காதே, அடிக்காதே" என்கிறார். கிறிஸ்துவின்வேதமொழி இன்றைக்கும் கொஞ்சங் குறைய இரண்டாயிர வருஷத்திற்கு முன் சொன்னது. அதன்படி ஒரு கிறிஸ்தவனும் நடந்ததாய்—நடப்பதாய்த் தெரியவில்லை. ஆனால் காந்திஜியின் வாய் மொழியையோ இந்தியாவும், மற்ற உலகமும் கடைபிடித்தொழுகஆரம்பித்திருக்கிறது. வேண்டுமானால், நாம் திரித்துக்கூறிக்கொண்டிருக்கலாம்; உண்மையில் பிரிட்டிஷ் மந்திரிகள்கூட ஒப்புக்குத் தாளம் போடுகிறார்களே யன்றி காந்திஜியை வெறுக்கிறவர்கள் ஒரு சிலரே! இவரது இயக்கங்கள்—காங்கிரஸ் நிர்மாணத் திட்டங்களில் மதுவிலக்கு ஒன்று. பம்பாய் மாகாணத்தில் சென்ற வருட வரவு செலவுக் கணக்கு சமீபத்தில் வெளியிடப்பட்

இந்தியாவில் ரஷ்யபுரட்சி!

பலத்த சங்கடங்களுக்கிடையே—கடினமான நடவடிக்கைகளினூடு அரசியல் கப்பலோட்டுவது எளிதல்ல! இங்கிலாந்து—இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள விஷயத்தில் முடிவான தீர்மானத்தை யார் அறிவிப்பதென அந்தரங்கத்தில் பலதரப்பட்ட அபிப்பிராயங்களால் விவாதிக்கப்பட்டு பிரபுக்கள் இந்தியாமந்திரி—வைஸ்ராய் முதலியவர்களின் பேரால் வெளியே பிரஸ்தாபிக்கப்பட்டுவிட்டது. காங்கிரஸ் சென்ற வருஷமுதல் பிரிட்டிஷாருக்கு நல்ல பாடம் கற்பிக்கத் தொடங்கி இந்தியாவுக்கு அனுகூலமான காரியங்களை உருப்படியாக்குகின்றவரையில் சட்டமறுப்புப் போரை நிறுத்துவதில்லை என்று முடிவுகட்டிவிட்டார்கள். இந்தியர்கள் சர்க்கார் அடக்குமுறைகளைக்கண்டு பயந்து பிரிட்டிஷ் வியாபாரத்தை ஒழிக்கப் பின்வாங்கவில்லை. அன்னிய வியாபாரம் அடியோடு இந்தியாவில் இம்மியுமில்லாமல்களையப்படும்வரை சர் சாமுயல் ஹோரின் கோஷ்டியார் இணங்கமாட்டார்களென்பதையும் அறிந்துதான் லங்காஷயர் துணி வியாபாரத்திற்கு சாவுமணி அடித்துக்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸின் வேலைத்திட்டத்தை இந்தியாமுழுதும் ஏற்று நிற்கிறது. சர் சாமுயல்ஹோர் இந்தப் பிரமாதமான அம்சத்தை மறைத்து வெளிப்படையாக ஆத்திரங்கொண்ட சிலவாலிபர்களின் செயலை ஆதாரமாகக்கொண்டுருஷியப் புரட்சி இந்தியாவில் மிகுந்துவிட்டது; உடனுக்குடனே, அடக்கவேணுமென்று ராணுவ சிப்பபாய்களை ஜில்லாக் கலெக்டர்களாக நியமிக்க யோசனை செய்கிறார். அவ்வாறு நியமித்தபோதிலும், பொதுஜன உணர்ச்சி மிகுந்துகாங்கிரஸிற்கு அதிக பலமுண்டாவதன்றி, பிரிட்டிஷ் வியாபாரத்திற்கு சாவோலை வாசித்தே தீருமெனக் காணக்கிடக்கிறது. இந்தியா மந்திரி மகாத்மாவோடு சமாசஞ்செய்வதற்கான கடிதப்போக்கு செய்திருக்கிறேன்; என்றகேள்விக்குப் பதிலளிக்கையில், அவ்விதம் கடிதப்போக்கு வரத்து செய்திருந்தாலும், காங்கிரஸோடு சமாசஞ்செய்துகொள்வதான நோக்கம் அக்கடிதத்திலில்லை என்கிறார். மேலும் காங்கிரஸ் சட்டமறுப்பை விட்டுவிட்டதாக காந்திஜீ பூரணமாகத் தெரிவித்தாலன்றி, அடக்குமுறையை நிறுத்திவிடுவதில்லை என்றும் கூறுகிறார். இந்த அர்த்தமற்ற கேள்விகள் முன்னெச்சரிக்கையோடு கொடுப்பதிலிருந்தும் மாகாண சர்க்காரின் அறிக்கை, வியாபாரச் சங்கங்களின் அறிக்கைமூலமும், பிரிட்டிஷ் முதலாளிகள் கட்டுப்பாடாக முடிவுக்குவந்திருப்பாரெனச் சொல்லிடுவதற்கில்லை. இரண்டு ஐரோப்பிய தலைவர்கள் காங்கிரஸும், சர்க்காரும் ஒற்றுமைப்படாது வழங்கப்படும் சீர்திருத்தம் பயனற்று இன்னும் அதிக கேவல நிலையை அடையச்செய்யும்; என்று அபிப்பிராயங் கூறி இருக்கின்றனர். இவை யாவையும் சீர்தூக்கிப் பார்த்து வரப்போகும் மாதம் சட்டசபையில் சட்டமாக்க இருக்கும் அவசரச் சட்டத்திருத்த மசோதாவை என்ன செய்வார்கள் என்று பொறுத்துப் பார்ப்போம்.

டிருக்கிறது. அதில் கள்ளு வியாபாரத்தில் மட்டும் மூன்றும் வருடத்தைவிட சென்றவருடத்தில் 38 லக்ஷரூபாய் குறைந்துவிட்டதாம். அதற்குக் காரணம் காங்கிரஸாரின் மதுவிலக்குப் பிரசாரமும் மறியலும். சமூகபஹிஷ்காரமுந்தானென சர்க்கார் அறிக்கை கூறுகிறது. கல்க்கத்தா வியாபாரச் சங்கத்தின் அறிக்கையும் அதற்குச் சான்றுகிறது. சென்றவருடம் லங்காஷயர் துணி வியாபாரம் 60 கோடி ரூபாய் நஷ்டமடைந்திருக்கிறதென மில்சொந்தக்காரர்கள் ஒப்பிடுகின்றனர். ஆனால் இந்தநஷ்டங்களால் இந்தியர்களுக்கு நன்மையே தவிர யாதொரு பாதகமுமில்லை. காங்கிரஸாரால், இந்தியா சீர்கேடடைந்திருக்கிறதெனச் சொல்லிக்கொள்வது வெறும் பித்தலாட்டம். தனி மனிதனுடைய வாய்மொழியைத் தெய்வவாக்காகப் பாவிப்பது அன்னியரால் யாது வந்தாலும், அனுபவிப்போம்; அவர்களுக்குத் தீங்கு செய்யோம் என்ற அதிசய நெறியைக் கைப்பிடித்தொழுகும் ஒரு பெரிய தேசத்தினரை அடக்கிவிடுதல் சாத்தியமன்று. காந்திஜீயால் யாது செய்ய இயலும் என்றெண்ணிய பிரிட்டன் கண் கலங்குகின்றது. "ஓட்டைப்பானையில் சர்க்கரை" இருக்கும் என்ற இந்திய பழமொழி ருசுவாகிவிட்டது.

—பிஷல் ஆர்கர்

நமது ஜெயரதம்.

இந்தியா உனது தெய்வத்தன்மையை—ஆத்ம சக்தியை பொறுமைக் குணத்தைக் காட்டிக்கொண்டிருந்தால்மட்டும்போதாது வீர மக்களின் ஜீவநாடி எவ்விதம் துடிக்கிறது இருதய கமலர்சனி—உபாசனி தற்கால வாழ்க்கையைச் சற்று நிதானி. என்ன அவதி; நமது சகோதரிகள் அரக்கர்களால் கொடிய மிலேச்சர்களால் அடிபடுகின்றனர் துரோபதையை துயிலுரிந்த துர்ச்சாதனனை ஆதரித்த துரியோதனனை—துணையாய் நின்ற கௌரவாதிகளை விகர்ண னீங்கிய பாதகர்களை ஒழிக்கும்வரை தலை முடிவதில்லை; எனப் பாஞ்சாலி சபதம் செய்தாள் பாண்டவர்கள்—வீரபுருஷர்கள் கொடியவர்களின் கொட்ட மடக்கி, அவர்களைக் கொன்று, பாஞ்சாலியின் சபதத்தை நிறைவேறச் செய்தனர். வாலிபா! உனது அருமைச் சகோதரிகளின் கண்ணீர் பெருக்குக்கு யாது செய்ய உத்தேசித்திருக்கிறாய்? சமீபத்தில் காசியைச் சேர்ந்த போலீஸ் ஸ்டேஷனில் காங்கிரஸ், ஸ்திரீ தொண்டர்களை நிர்வாணமாக்கி அடித்ததாக இந்தியப் பத்திரிகையில் வெளிவந்ததாகவும், காமன் சபையில் பிரஸ்தாபித்ததற்கு சாமுபல்ஹோர் நீதிபதி ஒருவரால் வழக்கு விசாரிக்கப் படுகிறதாகச் சொன்னாலும் என்ன ஆச்சர்யம்! இந்தமாதிரியான பதில் நாம் கேட்டும் பேடித்தன்மாய் காலங் கழிக்கலாமா? மானம்போய் உயிர் காவலா? வீர வாலிபா! பாவிகளுக்குத் தண்டனை புரியுங்காலம்—கடவுள் இந்தியர் மீது கிருபை செய்யுங் காலம் சமீபித்துவிட்டது. அந்தோ!! எவ்வளவு தைரியம்! நிர்வாணமாக—மிலேச்சத்தனமாக—காடுகளில் திரிந்தலைந்த பூனையை உரித்து பாதையில் நின்றுகொண்டிருந்த—முறையற்ற காமப் பித்துக்கொண்ட ஒரு வெள்ளையன் ஸ்திரீயை நிர்வாணமாக்கி அடித்திருந்தால் அவர் வெட்கிப் போவதில்லை. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இந்நான்கையும் பூஷணமாகக்கொண்ட இந்திய ஸ்திரீகள் அதற்காளா? அடா! பாவி! சாமுயல் ஹோரே! மனம் பதை பதைக்கிறதே; உனது உத்தரவா? உனது ஆஞ்ஞையா? கடவுள்முன்னிலையில் இதைப்பற்றிக் கேட்கப்படும் நாளில்—தேவராஜ்யத்தில் இந்த அதிகாரத் திமிராகவே சொல்வாயா? ஆத்திரத்துடன் எங்கேயோ பேனு

பிரிட்டிஷ் பூதம்!

கிரேட் பிரிட்டன் வல்லரசுகளிளொன்றாக உலகம் மதிக்க, ஆதிக்கம் பெற்றுவிட்டதிலிருந்து பேராசை பிடித்து, மமதை கொண்டு பிறரைச் சுரண்டி, தன்னல மிகுந்து, தீயசெயல்கள் பல ஆற்றிக்கொண்டிருக்கிறது. இதற்கு லக்காக இந்தியாவை வைத்துக்கொண்டு இந்தியர் தோளின்மீது ஏறிச் சவாரிசெய்து, தனது எல்லைகளை விசாலப்படுத்தி வியாபார அபிவிருத்திக்கான சட்ட திட்டங்களை எழுதி வைத்து இந்தியருக்கு நன்மை செய்வதுபோல் பாவனை காட்டி, இந்தியாவின் செல்வமெல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டது. வருங்காலத்திலும் தனது நிலைமை பிசகாது—தாமாதிருக்கச் சைன்யம் என்ற பெரிய பூதத்தைச் சிருஷ்டித்து இந்தியாவின் அங்கத்தில் ஊறும் இரத்தத்தை உரிஞ்சி ஜீவிக்கும்படி தக்க பாதுகாப்புத் தேடிக்கொண்டிருக்கிறது. இந்தியத்தலைவர்கள் ராஜீபவாதிகள் பூதத்தால் பயனில்லை எங்களுக்கு வேண்டாமென்றாலும் பாதுகாப்புக்கு பூதம் அவசியமென வற்புறுத்தப்படுகிறது. கிழிந்த கந்தையும், கழுருண்டையும் பிரிந்த குடிசையும் கொண்டுள்ள தற்கால இந்தியாவுக்கு ராக்ஷதப் பூதம் வேண்டியதுமில்லை. சுமார் 12 வருஷங்களாக பிரிட்டிஷ் அரசாக்ஷியால் நமக்கு அனர்த்தம் என்பதை அறிந்து அதை நிராகரிப்பதற்கு தங்கள்பலவீனத்தைக் கருதி செம்மையான பாதையைக்கடைப்பிடித்தொழுகின்றனர் இந்தியரிடத்தில் வேரூன்றியுள்ள அவநம்பிக்கை, பொறுமை, பயம் இம்மூன்றும் ஒரு சிலருக்கு இன்னும் ஒழிந்தபாடில்லை. அவநம்பிக்கையால் தன்னது கொள்கையில் தாமதமும், பொறுமையினால் வெறுப்பும், பயத்தால் முன்னேற்றத் தயக்கமும் ஏற்படுகின்றது. நம்பிக்கையுடன் பயமொழிந்தவனுக்கு எந்தவித ஆயுதங்களாலும் கெடுதலில்லை. பொறுமை நீங்குபவனுக்கு பதவி

முள சாய்கிறது திரும்பு தமிழா! புறப்படு! வெற்றிக்கான வழியைச் செய்! அழாதே! எழுந்து நில்! சிரித்த முகத்துடன், சிவாஜியைப் போல்—தேசிங்குவைப் போல்—கான்சாஹிப்பைப் போல் வீர கவசம் பூணு.!

ஜெய, ஜெய பாரத!!

இந்தியர் கொள்கை ஞாயமே.

நான் நினைக்கிறபடி மற்ற ஆங்கிலேய நண்பர்களும் நினைக்கிறார்களாவென்பது எனக்குத் தோன்றவில்லை. அது எனக்கு மிக்கக் கவலைக்கு இடந்தருகிறது. இந்தியாவைப்பற்றியும் அதன் நிலைமையைப் பற்றியும் அதைப்பாதிக்கும் பிரச்சினையைப்பற்றியோ எனக்கு நன்றாய்த் தெரியுமெனக் கூறிவிடவில்லை ஆனால் ஆங்கிலேயர் இந்தியாவை என்னநிலையில்வைத்திருக்கிறார்களென்று சொல்வதற்கு என்மனது என்னையே வருத்துகிறது. நாம் என்ன இறுதி நோக்கத்துடன் மிருகச் செயலை—பலாத்காரத்தை உபயோகிக்கிறோம். அது வெற்றியை விளைவிக்கக்கூடியதா? தற்கால சாந்தியாக நாம் அநுஷ்டிக்கும் செயல் வெற்றியைக்கொடுக்கக்கூடியதாயிருந்தால் காலக்கிரமத்தில் பெருந்த கஷ்டத்தை விளைவிக்குமல்லவா? இதுபோன்ற கேள்விகள் நியாய புத்தியுடைய ஒவ்வொருவர் மனதிலும், தோன்றுவதியல்பே. அக்கேள்விகளைக்கேட்பதும்எளிதே! ஆனால்அக்கேள்விகளுக்குபதில்அளிப்பதுதான்கஷ்டசாத்தியம். இந்தியாவின்இன்றைய நிலைமையைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது, ஒரு விஷயம் மட்டிலும் நன்றாய்த் தெரியும் அதாவது 35கோடி ஜனசங்கியையுடைய கூட்டத்தாரை, அவர்கள் அநுமதியும், நல்ல மனதுமின்றி ஆண்டுவருவதென்பது முற்றிலும் இயலாத காரியம். 30 வருடங்களுக்கு முன் நான் இந்தியாவில் ஒரு சங்கத்தின் காரியதரிசியாக வேலைபார்த்தேன். அது சம்பந்தமாக டில்லிக்குப் போகநேர்ந்தது. அச்சந்தர்ப்பத்தில், மதம், பழக்க வாசனை, சரித்திர ஆராய்ச்சிகளைப்பற்றி எழுதவும் சமயம் வாய்த்தது. அக்காலத்திய ஜனத்தொகை, 28 கோடி இப்பொழுது 35கோடியாயின்எவ்வளவோபெருகிக்கொண்டிருக்கிறது இங்லாந்து, அயர்லாந்துஸ்காட்லாந்துஇம்மூன்று தேச ஜனசங்கியும், இந்தியாவும் சமமே. இந்தப் பெரியதேசம் நமது கைக்குள்ளிருக்கிறது. ஆங்கிலேயரால் இந்தியா நன்மையடைந்திருந்தாலும், மனிதனுடைய வாழ்க்கை வயிற்றுக் கஞ்சிக்குமட்டும் அல்ல என்ற பழமொழிபோல் ஒரேஒரு கேள்வி தோன்றுகிறது அயர்லாந்தைப்போல் கொடுமையான நிலை இந்தியாவில் ஏற்படும்வரை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? உலகத்தில் ஒவ்வொருசமுதாயமும், நல்லசந்தர்ப்பத்தை வசைபின்என்னும்தேவதையின்கதையைப்போல்நழுவவிட்டால் பின்னால் பரிதவித்து எல்லாவற்றையும் இழக்க நேரிடும். அயர்லாந்தை துவக்கத்திலேயே சமாதானம்செய்யாமல்கொலைகளும், கொள்ளைகளும் நடைபெற்றன. மகாத்மாஜியைப்பற்றி இரண்டு புஸ்தகங்கள் எனக்குக் கிடைத்தன. அவர் ஒரு கபட்டுச் சன்யாசி. ஒருசமுகத்தினருடைய நோக்கத்தை சமாதானமாக எடுத்துரைக்கும் ஒருவன் தேவனாயிருந்தாலும், தூஷிக்கப்படுவது நிச்சயம். பல்லாண்டுகளாக உலகமறிய தேச சேவையில் உழைத்துவருபவரை இழித்துக் கூறுபவர்கூட தற்சமயம் சொல்லுமளவில் காந்தி ஒரு வைராக்கிய கிழவன் என்றமட்டிலும் குறை கூற முடியுமென்றால் அவர் ஒரு மஹாத்மாதான். இந்தியாவின் தற்போதைய நிலைமையைத்தெரிந்து இரு தாரத்தாருக்கும் சமரசம் உண்டாக்குவதே நன்மை பயக்கும்.

—எட்வர்ட் கிரேக்

வேண்டாம். நம்பிக்கையுடையவனுக்கு சட்டதிட்டங்கள் வேண்டாம் இம்மூன்றையும் இந்தியா சரிவர அடையப்பெறின், ஆங்கிலேயரும் அவர்களின் பூதங்களும் திரும்பிவிடுவது நிச்சயம். ஆனால அதுவரை காத்திருக்கச் சொல்லவில்லை. விரிந்த—பரப்புள்ள தேசத்தின் நீண்ட பழக்கத்தை உதரித்தள்ளுவதற்கு திடீரென முடியாததற்குக் காரணம் இதுவே எந்தப் பூதமானாலும்—பிசாசானாலும் ஆகாரமிருந்தால்தான் ஜீவிக்கும். ஆகாரத்தைக் குறைத்து, மூச்சைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டால் பிசாசு, பூதங்கள் அழிந்துவிடும். இப்போது இந்தியாவில்நடக்கும்சட்டமறுப்பு இயக்கமும் பிரிட்டிஷாரின் மூச்சைப் பிடிப்பதற்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் அன்னியவியாபாரம் மூச்சடங்கிவிடுந்தருணத்திலிருக்கிறது. வில்லிங்டன் சர்க்கார் திக்குமுக்காடுகிறது. பிரிட்டிஷ் சர்க்கார் ஊளையிடுகிறது. இவ்வளவும் பிரிட்டிஷாரின் இயற்கைக் குணமும், இந்தியரின்ஒற்றுமையில்லாத்தனமும் மெய்யாகிறது அன்றேல் ஒருவரும் விரும்பாத பூதம் தங்குமா ?

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-86th Street, Rangoon.

பதிவுஎண் 245] (1922-ஹு ஸ்தாபிதம்.) 14 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இருமுறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஹு (18-5-32) வைகாசி-மீ 5உ புதன்கிழமை

அடா! நன்றிகெட்ட பிரிட்டனே!!

அடா! நன்றிகெட்டபிரிட்டனே! செய்தநன்றியைமறக்கும் பாதகர்களுக்கு உய்வு கிடையாது. முக்கியமாய் உடல், பொருள், ஆவி மூன்றும் பறிபோகக்கூடிய சமயத்தில் அவற்றைக் காப்பாற்றும் நன்றியை மறப்பவர்களுக்கு எழு, எழு தலைமுறைக்கும் உய்வு கிடையாது. 1914-ம் வருஷத்தில் திடீரென்று ஜெர்மானியா யுத்தம் ஆரம்பித்தது. அதில் பிரிட்டன் அகப்பட்டுககொண்டு ஆந்தைபோல்—இருதலைக்கொள்ளிக்கு இடையே அகப்பட்ட எறும்பு போல் விழித்ததை உலகம் பூராவுமே நன்கறியும். ஆனால் பிரான்ஸிலோ, பிரிட்டனிலோ ஜெர்மானியப் படையை எதிர்க்கக்கூடிய படைவீரர்கள் இல்லவே இல்லை. இன்று ஆண்பிள்ளையைப் போல் வீரம்பேசும் இந்தியா மந்திரிசாமுயல்ஹோர் என்பவன் அப்பொழுது எந்தப் புதரில்—பனிக்கட்டிகளுக்குநடுவில்மறைந்துக்கொண் டிருந்தானோ? நாம் அறியோம். ஜெர்மானியரோ வீராவேசத்தோடு ஆண்மையோடு—ஆண்மைக்குறிய லக்ஷணமாய ஹிம்ஸைவாளை கையிலேந்திக்கொண்டு தடுப்பாரின்றி கடல் மடை திறந்ததுபோல் வேகமாய் ஓடிவந்தனர். பிரிட்டனும், பிரான்ஸும் தாலி பறிகொடுத்த முண்டையைபபோல் விழித்தது. மானம் போகக்கூடிய நிலைமையிலிருப்பதைக் கண்டு; கையையும், காலையும் பிசைந்துகொண்டு கண்ணீர் விட்டன. அக்காலத்தில் இந்தியாவில் லார்டு ஹார்டிஞ்சு வைஸிராயாகஆக்ஷிபுரிந்தார். இன்று பூட்டி வைக்கப்பட்டிருக்கும் எலும்புந் தோலுமான—பொக்கைவாய் வீரன்—காந்திஜியிடமும், இதர தலைவர்களிடமும் துருப்புகள் வேண்டுமென லார்டு ஹார்டிஞ்சு ஓலமிட்டான். பிரிட்டனுக்கு ஏற்பட்டிருந்த—மயிரிழையில் தொங்கிக்கொண்டிருந்த ஜெர்மானியரின் ஈட்டி முனையைக்காட்டி இந்தியத் துருப்புகளை அனுப்புவதற்கு உதவிசெய்ய—ஒத்துழைக்கவேண்டுமெனக் கெஞ்சினான். தலைவர்களும், முக்கியமாக காந்திஜியும், காலஞ்சென்ற லோகமான்யத் திலகரும் ஆள்ச்சேர்த்துக் கொடுத்தார்கள். இந்தியாவிலிருந்த துருப்புகள் பிரான்சு போர்முனைக்குச்சென்றன. கரைபுரண்ட வெள்ளம்போல் ஓடிவந்த ஜெர்மானியத் துருப்புகளை எதிர்த்துநிறுத்தின. பிரிட்டன் மானம் காப்பாற்றினர். அன்று இந்தியத் துருப்புகள் போயிருக்காவிட்டால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இருந்தவிடம் தெரியாமல் புல்முளைத்துப் போயிருக்கும். அன்று இவ்வருடம் நடப்பதைப் போல் சட்டமறுப்புப் போர்—சுயராஜ்யப் போர் தோன்றியிருந்திருக்குமானால் அப்பொழுதே சுயராஜ்யம் கிடைத்திருக்கும். ஆனால் இந்தியர்கள் அவ்வளவு நன்றிகெட்டவர்களா? அப்பொழுது அப்படிச் செய்யவில்லை. ஏன்? பிரிட்டன் கஷ்டத்தில் அகப்பட்டுக்கொண்டு திண்டாடும்போது; அதை மேலும் கஷ்டத்திற்குள்ளாக்க--ஜெர்மானியர்களுடன் சேர்ந்து ஹிம்ஸைவாளை கையிலேந்த இந்தியர்கள் விரும்பாமல் இரக்கம் காட்டினர். அந்தப் பெருந் தன்மையை நன்றிகெட்ட பிரிட்டனும், முண்டையின் மூத்த குமாரன் லார்டு வில்லிங்டனும், தாய், தகப்பன் தெரியாத கழுதைப் பாலால் வளர்ந்த சாமுயல் ஹோரும், அவனது கோஷ்டியாரும் மறந்து இன்றுபஞ்சமா பாதகங்களையும் செய்கின்றனர்.

அட! நன்றிகெட்ட பிரிட்டனே!! இந்தியா அச்சமயம் உதவி செய்திருக்காவிட்டால் பிரிட்டன் என்னபாடுபட்டிருக்கும் தெரியுமா? அச்சமயத்தில் சர்க்கார் வெளியிட்ட அறிக்கையிலேயே "தக்க சமயத்தில் இந்தியப்படைகள் பிரான்ஸுக்கு வந்துசேர்ந்தன. அவர்கள் வந்ததாலேயே ஜெர்மானியர்கள் முன்னேறுவது தடைப்பட்டது. பிரான்ஸ் போர்முனைக்கு அக்காலம் வரக்கூடிய பயிர்ச்சிப்பெற்ற படைகள் இந்தியப் படைகளே. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் முழுவதிலும் வேறு படைகள் இல்லவே இல்லை. எகிப்து, பாலஸ்தீனம், பாரசீகம், கிழக்கு, மேற்கு ஆப்ரிக்காமுதலிய பிரதேசங்களில் பிரிட்டிஷ் படைகளோடும், குடியேற்ற நாட்டுப் படைகளோடும் இந்தியப் படைகள் தைரியமாகவும், உண்மையாகவும் போராடியதாலேயே நேச தேசப் படைகள் முடிவில் வெற்றி பெற்றன." சுமார் 15லக்ஷம் இந்தியர்களை யுத்தத்திற்குக் கொடுத்துதவினோம். நாம் பசியும், பட்டினியும் கிடந்து கொண்டு 150 கோடிரூபாய்வரை யுத்தத்திற்கு செலவுசெய்தோம். இந்தியர்கள் பொருளையும் கொடுத்து, உயிரையும் விட்டு, பிரிட்டனின் மானத்தைக் காப்பாற்றினோம். இன்று நம்மை கைதிசெய்யவும், தடியடி படவும், துப்பாக்கிக் குண்டுகளால் தாக்கப் படுவதற்கும், நமது சகோதரிகள் அவமானத்திற் குள்ளாவதற்கும் காரணம்? இந்தியா—இந்தியர்கள் தான். இன்று இருக்கும் சிறப்பிற்கும்-பிரிட்டன் உயிரோடு வாழுவதற்கும் இந்தியர்கள் உதவிதான் காரணமென்பதை மறந்து கண் மூடித்தனமாக மறக்க—நடக்க ஆரம்பித்து விட்டனர்.

இன்று இந்தியர்களை சித்திரவதைக்கு ஆளாக்கும் வில்லிங்டன் துரைமகனே! உனது வம்ஸத்தாரின் தாலியைப் பரிகொடுக்கவிருந்த தருணத்தில் மானத்தைக் காப்பாற்றிய இந்தியர்களை என்னென்ன வெல்லரம் கேவலமாக நடத்த எண்ணிவிட்டாய்? அடுத்தார் மானத்தை—பிரிட்டனின் தாலியை—குண்டுகளைக் கக்கும் விஷப் புகைகளைக் கையிலேந்தி அறுக்க விடாது லம்காரம்செய்த இந்தியர்கள் இன்று தன் மானத்தைக் காக்க—பிரிட்டனின் தாலியை அறுக்க பின்வாங்கப்போவதில்லை என்பதை உணர்ந்திராவிட்டால்? உணர்வாயாக.

நீதி=நேர்மை=அரசியல்.

தோட்டி முதல் தொண்டமான் வரை ராஜீய உலகில் பங்கெடுத்துக்கொள்ள நல்ல சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. அரசியலை நன்கு ஆராயின் சமுதாய விருத்திக்கே அரசியலன்றி; சமுதாயமற்ற அரசியல் கரும்பு என நினைந்து "நாணல் தட்டையைக் கடித்துத்" தின்பதை ஒக்கும். அரசியல் கட்சி, அரசியல் சண்டை, அரசர்கள் ஒருவருக்கொருவர் நாடு பிடிக்கஎத் தனித்தல், யுக்தத்தில் ஈடுபடல், முறைதவறி நடத்தல் முதலியன யாவும் சமுதாயத்தைப் பெருக்க நினைத்து அரசியலின் பேரால் செயலாற்றுவதென புலப்படுத்துகின்றது, சமுதாய சீர்திருத்தக்காரர்கள் பழைய மிகப் பழையகாலத்திலிருந்தே ராஜாங்கத்தாரோடு நெருங்கிய சம்பந்தம் வைத்திருக்கிறார்கள். லண்டன் பாராளுமன்றமும்சமுதாயவிருத்திக்கே அமைக்கப்பெற்றிருப்பது வெளிப்படை. அரசியலின் பேரால் பலத்த அரண்களுக்கிடையே சமுதாயம் புகுத்தப்பட்டிருப்பதால் சாதாரண அறிவுள்ளவர்களுக்குத்தெளிவுபடாது. இந்திய ஆட்சி கிழக்கிந்திய கம்பேனியாரெனும் வியாபாரிகளாட்சி, தங்களின் வியாபாரத்தைப் பெருக்க நோக்கங்கொண்ட சமுதாயசீர்திருத்தக் காரர்களேயாம். ஒருதேசத்தின் கட்டுப்பாடு மதத்தை அடிப்படையாகக்கொண் டிருந்தாலும் சமுதாயமே உழைப்பிற்குக் காரணமாகும். சமுதாயம்—சமூகப்—வகுப்பு என்றால் சமூகத்தின் தனிப்பட்ட ஜாதி சமூகமெனப் படும். சமூக விருத்தி அதன் ஒற்றுமை சமுதாயத்தில்தான் பதிந்து கிடக்கிறது, சமுதாயப் பரப்பு விரியின் சமூகமோங்கும் சமூக மோங்கின் அரசியல் பலப்படும், அரசியல் பலப்படின் நீதி-நேர்மை அபிவிருத்தியாகும்.

உப்பிட்டவரை உள்ளளவும் மறஎன்பது பிரிட்டனின் சட்டப் புத்தகத்தில் இருக்குமானால் தாலி அறுந்து—முண்டையாய் தவிக்கத்தான் வேண்டும். பருவத்தில் முண்டையானால் பேடியாய்—பெண்மையாய் பலர், சிரிக்க விரும்புகிறாயா? அட! நன்றி கெட்ட பிரிட்டனே!! நாசமாய்ப் போகாதே!!!

இந்திய—பர்மிய தொண்டர் படை.

பர்மா நமக்கு—இந்தியர்களுக்கு ஒருகாலத்தில் சொந்த நாடாய் விளங்கியது. இந்தியா, பர்மாவிற்கு சிநேகப்பான்மையில் அநேக நலன்களுதவின. இந்திய—பர்மிய ஐக்கியம் ஒற்றுமை வளர்ந்தே வந்தன. சிறிது துவேஷங்கூட இரு சாராருக்கும் இருந்ததில்லை. பர்மியர் அய்யாஜீ என்றே அழைத்துவந்தனர். ஆனால் அப்போது பர்மியர்கள் சாப்பாட்டுக்கு போதுமான நெல்லுக்காக மட்டும் நிலங்களைப் பயிர்செய்துவந்தனர். விளைந்த நெல்லில் உணவுக்காக உண்டது போக அதிகப்படிநெல்லை (லேக்கிலே) என்னும் சிறியஓடங்களிலேற்றி நூறு கூடை நெல் ரூபாய் 30, 40-க்கு விற்று, மிளகாய், வெங்காயம், எண்ணெ,புகையிலை முதலிய சாமான்களை வாங்கிப் போவார்கள். அதிக விலைக்கு விற்கவேணுமென்ற கவலையும் இருந்ததில்லை. அக்காலத்திய பர்மியருடைய மதக் கோட்பாடோ, சமூகக் கட்டுப்பாடோ, தெய்வ பக்தியோ குறைவு என்பதற்கில்லை. பௌத்த சந்நியாசிகள இப்போதிருக்கும் நிலைமையைவிட சிறந்து விளங்கினார்கள். பர்மாவில் விளைவுத் தானியம் நெல்லேயாகையால், நெல் விளைவுக்கான மழையும் வருஷித்தது. பயிர்தொழில் அதிகப்பட்டு, நிலங்களை பண்படுத்த ஆரம்பித்ததும், இந்தியர்களின் உதவியை பர்மா நாடிற்று. நாடாதிருந்தால் இந்தியர் பர்மாவுக்கு வராதிருந்தால் பர்மாவிலுள்ள நிலங்கள் பண்பட்டிருக்க இயலாதென்பதை எவரும் மறுக்க முடியாததோர் உண்மை.

பர்மியர்களுக்கு மண்வெட்டத் தெரியாது. கட்டப்பாரையினால் குழி தோண்டுவது போல் மண்ணைப் பெயர்த்துவைக்கத்தான் இப்போதுகூடத் தெரியும். பர்மியர்கள் கபடற்றவர்களாயினும், முன்கோபிகள்; கோழைத்தனமுடையவர்கள்; அகப்பட்டதை அக்கணமே ஒழித்துவிடும் தெண்டசோற்றுப் பேர்வழிகள். நூற்றுக்குத் தொண்ணூறு பெயர் வழிகள் உண்டு இதுவேறு. பிரிட்டிஷ் முதலாளிகள் இந்தியாவை வியாபாரச்சந்தையாக்கி பர்மாவிலும் பாங்கிகள் நியமித்து லேவாதேவி செய்ய உத்தேசித்ததின் பலனாய் மேனாட்டு நாகரீகம் புகுத்தப்பட்டது. பர்மியர் (பெக்காயின்) கைத்தறி போடுவதை நிறுத்தி சீமைத்துணியை வாங்கினர். பர்மியருடைய இரத்தத்தாதுக்களில் லங்காஷயர் வியாபாரம் நுழைந்தது. நமது நாட்டுக்கோட்டையார்கடைகளும் விசாலித்தது. நெல் விலையும் ரூபாய் 150, 200, 300 என்றும் விலைஉயர்ந்தது. வைரக் கம்மல், மோதிரங்கள் விளங்கியது. பர்மிய பண்டை நாகரீகம் போய், புதிய நாகரீகம் வந்தது. பர்மா சீர்கெட்டது. நகரத்தாருக்கு பாங்கிப்பணம் கிடைத்ததும்; பர்மியருக்கு தவணைக்கு இல்லை பொறுப்புக்கொடு என்ற ஆரவாரம் மிகுந்தது. எல்லாம் கடதாசியாகையால் கடதாசியில் கையெழுத்து வாங்கிக்கொண்டு நோட்டுக் கடதாசியைக் கொடுத்துகடன்எற்றிவிட்டார்கள். நிற்க; சுயராஜ்யம்என்றபெரும் கல்லை காந்திக்கிழவன் இந்தியாவில் போட்டார். இந்தியர் தங்களது நிலைமையை உணர்ந்தனர். சட்ட மறுப்பு கோஷித்தது. சர்க்காருக்கு பயமாயிற்று. இந்தியாவோடு பர்மா சேர்ந்திருந்தால் ஆபத்து என்பதை யோசித்து தனது சொற்கிணங்கும் பேர்வழிகளிடையே சூழ்ச்சியைப் போட்டு இப்போதிருக்கும் நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். சுருக்கமாகக் கூறுவோம். சென்ற வருடம் இந்திய திட்டத்தை ஒப்புக்கொண்ட ஒருவரின் செயலைத் திரித்துக் கூறி இந்தியரை விரட்டிவிடுவதற்கான கலகங்களை ஆரம்பித்து இந்தியரை துன்புறுத்தினர். இவ்வருஷமும் கலகத்திலாரம்பித்து விட்டனர். இதற்கு காரணமும் இல்லாமலில்லை. ஆங்கிலஇந்தியப் பத்திரிகைகள் இந்தியர்மீது துவேஷமாக எழுதிவருகிறது நாம்பர்மாவைப் பெரிதாகநினைத்து விடவில்லை. பர்மா பிரிவினையைப்பற்றி நமக்கு நன்றாய் விளங்கும். இந்தியர், பர்மியரோடு நட்பு கூட்டுறவுவைத்துக்கொள்ள புத்திசொல்லப்படுகிறது. இந்தியர். பர்மியரோடு சகோதரத் தன்மையோடேயே இருக்கிறார்களன்றி அடித்துக்கொண்டிருக்கவில்லை. எவ்வளவு உருக்கமான சிநேகத்தோடிருந்தாலும் கலைப்பதிலேதான் அவர்களுக்கு பிரியம். கலைத்தாலும்பர்மியர்கள்என்கலகமேசெய்கிறார்கள். இந்தியர் பர்மியர்களுக்கு முதலாளிஸ்தானத்திலிருக்கும் சர்க்கார் மௌனஞ் சாதித்தால் காலாடி பர்மியர்கள் சும்மா யிருப்பரா? இந்தியரே நீங்கள் உங்களது புத்திக்கேற்ப நடந்துகொள்ளச்சொல்லவில்லை, பர்மியரோடு சிநேகப்பான்மை வைத்துக்கொள்வது எந்தவிதமா

என்று தொலையும் அநீதி?

நீதி என்பது, மனிதவர்க்கத்திற்கும், வாழ்க்கை நலனுக்கும், உலக பழக்க வழக்கங்களுக்கும், ஜீவன்களின் பொருப்பறிந்து நடந்துகொள்வதற்கும்தான் ஆபரணமாய்த் திகழ்கிறது. இதனை சான்றோர் பல அடைமொழிகளைப் புகுத்தி விரித்துரைத்திருக்கின்றனர். இக்காலத்தில் அரசியல் விவகாரங்களில்நீதிபதிகளும், நீதி முறையைப் பிரிக்கப்பட்ட அட்டவணைகளோடு திருத்திய மைத்த வியாக்யானங்களுமிருக்கின்றன. ஆளுவோர் ஒரு தேசத்தை அடக்கி ஆள—ஆளப்படுவோரின்உரிமைகளைப் பங்கிடத் தங்களுக்குபிரயோஜனப்படத் தக்கவைகளை முன்னமே சிறிது நன்மையான தோற்றத்தோடு எழுதிவைத்திருப்பதைச் சட்டமெனச் சொல்லப்படுகிறது. இங்கிலாந்தில் ஸ்டாட்டியூடன் என்ற சட்டம் மேற்கூறிய விதமாயுள்ள சட்டத்திலிருந்தே இந்தியஆட்சிக்கென ஒரு திட்டஞ் செய்து இந்தியன் பினல் கோடுஎன்ற பெயருடன் வெளிவந்துள்ளது. இச் சட்டத்தின் பிரிவுகளாலேயே சகல நிர்வாகமும் நடைபெறினும், அவ்வக்காலத்தில் மசோதாக்கள் சட்டமாக்கப்பட்டு, மானுயல் வால்யூமாகச் சேர்க்கப்பட்டு மிருக்கின்றன, பிரதானமாக இந்திய அரசியல் ஆக்ட் அரசியல் நிர்வாகத்தைக் குறிப்பிட்டும் 1908-ம் வருடத்து கிரிமினல் சட்டம் போலீஸாரைக் குறிப்பிட்டும் ஒவ்வொரு காரியங்களுக்கும் சந்தர்ப்பத்திற்கேற்ற விதமாய் சட்டமாக்கப்பட்டிருக்கிறது. சட்டத்தை மீறி ஆரம்பித்த நீதியைச் சற்று கவனிப்போம், காந்திஜீயை ரெகுலேசன் ஆக்ட்படி அடைத்தார்கள்: நீட்டினால் நீளக்கூடிய கம்பிச் சட்டத்தை எத்தனை தடவை ஒரு மனிதன்மீது பிரயோகிக்கலாம்? சென்ற வருடத்திலும் இச்சட்டத்தைப் பிரயோகித்தாய்விட்டதா? இல்லையா? ஒரு மனிதனைக் கெட்டவனென்றும், நல்லவனென்றும் முன்னவர்களே பறைசாட்டி ராஜி ஒப்பந்தம் செய்த பிறகும் நினைத்த போதெல்லாம்சட்டப்படி கைதிசெய்கிறோம் என்றுகூறி கைதிசெய்வதுதான் எந்த நீதி? சென்ற வருடமும் சட்ட மறுப்பு சர்க்காரை ஒரு ஆட்டு ஆட்டிற்று. மாஜி வைஸிராய் தன்னாலானமட்டும் அடக்கி, ஒடுக்கியும் கடைசி முடியாத்தன்மை யடைந்து நமது கிழவன் காலைப்பிடித்து ராஜி செய்தபிறகு; லண்டனுக்கு வரவழைத்து தந்திர நாடகம் நடித்த அரசருடன் பேட்டி கண்டபின்பும் காந்திஜீயை அதே சட்டத்தால் அடைத்து வைப்பது நீதியாகுமா? இந்த ஒருநீதியிலிருந்தே பிரிட்டிஷ் நீதி முழுவதையும் அளப்பது கடினம்தான்: போலீஸ் சட்டங்களை தாறுமாறாக அமைத்து குண்டாந்தடிப்பிரயோகம்தான் சரிஎன்று ஒரு பொறுப்புள்ள ஜில்லாமாஜிஸ்ட்ரேட் நீதியை வழங்கினால் உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்கிற தோரணையில் குற்றஞ் சாட்டுவதும் நீதியா? அப்பேர்ப்பட்ட வேட்டையாளனை பதவியை விட்டு அகற்றாதிருப்பதும் நீதியா? பலவீனமுள்ளவனை—பரமசாதுவை மூர்க்கனொருவன் அடித்தால் ஐயோ ஒருவன் அடிக்கிறானே—அடித்தானே அந்தப்பாவி சாகமாட்டானா? அவன் அழியவில்லையா? அவனுடைய பெண்ஜாதி, பிள்ளைகள், பந்துக்கள் யாவரும் மண்ணுக்குள் போகமாட்டார்களா! என்று வயிற்றெரிச்சலால் குறைகூறினாலும் பிரிட்டிஷ்ஆட்சியில் குற்றந்தான். லக்ஷக்கணக்கான பேர்வழிகள் கோடிக்கணக்கானவர்களை அடக்கி ஆளுவதும் நீதிதான்போலும். பிரிட்டிஷ் நீதியே நீதி; என்று தொலையும் அநீதி?

துள்ளின மாடு பொதி சுமக்கும்.

பர்மாவில் சென்ற வருட ஆந்திர—பர்மா கலகத்திலிருந்து பர்மியருக்கு இந்தியர்மீது அவேஷமிருந்து கொண்டே வருகிறது. பர்மியர்கள் நன்றி மறந்த தனமாய் ஆட்டிவிக்கப்பட்டு தங்களது கேவல பலவீன உண்ண, உடுக்க உடையற்றிருக்கும் நிலைமையைக் கருதாது துள்ளிக் குதித்துத் திரிகின்றனர். துள்ளின பர்மியரோடு என்பதை ஆலோசியுங்கள். இப்போது கலகஞ் செய்புங் காலாடிகளோடு எந்தக் காலத்தும் சிநேகமாயிருக்கலாமா? ஆனால் இந்திய—பர்மியர் கூட்டுறவு தொண்டர் படை நியமித்து காலக்கிரமங்களில்சமரசமேற்படுத்துதற்கு முற்படும் யோசனையை நாமும் வரவேற்கின்றோம்.

ளின மாடு பொதி சுமக்கவே செய்யும் என்பதை இவர்களறியாமலுமில்லை. வரப்போகும் எலெக்ஷனில் வெற்றிபெறவெண்ணி—சுயாலக் கருதி கயர் திரித்துவிடுவதை சில கனவைக்குதவாத காலாடிகள் இந்தியரை இள்ளிக்கிரையென மதித்து சங்கம் செய்ய ஆரம்பிப்பதும், இந்தியர் வீட்டில் கொள்ளையடிப்பதும் கொலை செய்வதும் சர்வ சாதாரணமாய்விட்டது. இதைப்பற்றி பர்மா சர்க்கார் போதிய அளவுகவனம் செலுத்துவதாய்த் தெரியவில்லை. இந்தக் கஞ்சித் தொட்டிகளின் ஆர்ப்பாட்டம் பேடித்தனமானது—ஆண்மையற்றதெனப் பொருள்படுத்திக்கொண்டாலும், ஆட்டைக் கடித்து; மாட்டைக்கடித்து, மனிதனைக் கடிக்கும் என்ற பழமொழிபோல் சில காலாடிகள் மிரமிஞ்சி கொழுப்புவைத்து வலியச் சண்டைக்கு முனைந்து நிற்பதால், அஹிம்சைப் பேர்வழிகளாகிய நாம் எதிரிக்குத் தக்க பதில் கொடுப்பதற்கு தயாராக இருத்தல் அவசியம் என்பதை ஞாபகப்படுத்திக்கொள். சில பர்மியர்கள் விஷயமே தெரியாமல் கல்லாக்காரன் (இந்தியன்) தானே என்று, அவர்கள் அப்பன், பாட்டனுக்கு, நிலத்தைப் பண்செய்து கொடுத்த நன்றியைக்கூட மறந்து அடிக்கடி கொள்ளையடிக்கவும், வெட்டவும் தலைபடுகின்றனர். ஜீவகாருண்யம் மிகுந்த புத்த மதத்தினராகிய பர்மியர்கள் ஜீவவதைசெய்வது மிகுந்து மதத்தையே கொலை செய்துவிட்டார்கள். இவர்களைக் கடவுள் தண்டிப்பதற் கறிகுறியாக அகால மழை, பூகம்பம், கல்மாரி, புயல், வறுமை முதலியவைகள் அடிக்கடி காணப்பட்டும், உணர்ந்தார்களில்லை "வானோக்கு வாழுமுலகிலெல்லாம், மன்னவன் கோனோக்குவாழுங்குடி" என்பதற்கிணங்க ஒரு தேசத்தை பாரபக்ஷமற்று அரசியற்றும், அரசனிருந்தால் ஏழை மக்களின் உயிர் திரணமாக்கப்படுமா? நாம் எவ்வளவு சொன்னாலும், பர்மா சர்க்கார் தனது இயற்கைக் குணம் மாறும்வரையில் ஒழுங்கானவற்றைச் செய்யார். இனிநமக்குத்துணையாக எவரையும் எதிர்பாராது தன் கையே தனக்கு உதவியென உலக முழுவதும் ஜெயக்கொடி நாட்டிய வடதேசமெல்லாம் நடுங்கச் செய்த —பர்மாவைக்கூட வெற்றி புரிந்தஇந்தியர்களிலும் சிறப்பாகத் தமிழர்கள் வீரர்களைப்போல் நடந்துகொள்வார்களாக.

வி. ஐ. டி. சுந்தரராஜுலு அந்தமானுக்கு!

போலீஸ் வீரன் சுந்தரராஜுலுநாயுடு அந்தமானுக்கு கப்பலேற்றப்படுவது கேட்டு அவரது சட்டித்தண்ணி நண்பர்கள் சிலர் வருத்தமடைவதில் நாமும் விசனப்படாதிருக்க முடியவில்லை. சர்க்கார் சிப்பந்திகளும் நாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க கவலை எடுத்துத்தான் வந்திருக்கிறார்களென்றாலும்; உத்தியோக முறையிலேயே அந்தமானுக்கு போவதாக அறிகிறோமே யொழிய ஆபீஸிலுள்ளவும், மேலதிகாரிகளினுடையவும் இரகசியங்களை வெளியில் சொல்லிக்கொண்டு திரிந்ததற்காக தக்க தண்டனையை அனுபவிக்கவேண்டி அந்தமானுக்கு அனுப்பப்படுவதாகவிருந்தால் சர்க்கார் கடமையைச் செய்யத் தவறவில்லை என்று கூறலாம். அந்தமானே பெரும்பாலும் அரசியல் வாதிகளும், கொலை, கொள்ளை முதலிய கொடிய குற்றங்களை இழைக்கக்கூடியவர்கள் மிகுந்திருக்கும் இடம். சர்வ சாதாரணமான பர்மாவிலேயே போலீஸ் இரகசியங்களை வெளியில் பரப்பும் இந்த ஆசாமி அங்கும் போலீஸ் நடத்தைக் கேற்ப நடந்துகொள்ள முடியாது. அங்கும் அவனை நடத்துவதற்கு சர்க்காருக்குத் தெரியத்தான் செய்யும்; என்றாலும் தமிழன் என்ற முறையில் போலீஸ்வீரன்சுந்தரராஜுலுக்கும் நாமும் ஒன்று கூறிவிடுகிறோம். இங்கு நடந்துகொண்ட மாதிரி அங்கும் பொதுஜனங்கள் விஷயத்தில் நடந்துகொள்ளாதிருப்பாராக. செய்யாததைச் செய்ததாக சிருஷ்டிக்கும் தொழிலை அங்குள்ள அரசியல் வாதிகள் விஷயத்தில் சிருஷ்டிப்பாயானால் ஆபத்தாக முடியும் என்பதையும் ஞாபகப்படுத்திக்கொள்வாயாக! சர்க்காரும்; இவன்விஷயத்தில் ஜாக்கிரதை!

தேசோபகாரி

(வாரம்இரு முறை)

வருட சந்தா (இரங்கோன்)	ரூ	3	0	0
6 மாதம் ,,	,,	1	8	0
வருட சந்தா (வெளியூர்)	,,	4	8	0
6 மாதம் ,,	,,	2	12	0
மலாய்நாடு வருட சந்தா	,,	6	8	0

வருங்காலத்திய கணக்கில் : :

ஷண்முகதாஸ்

ஹே! வாலிபர்களே! வருங்கால நிர்வாகியாம் இந்தியரே! ஆத்ம யக்யம் செய்து பூத பரித்யாகம் பண்ணிக்கொள்ளுங்கள். பாரத மாதாவினிமித்தம், உங்களை யக்ய ஆகுதியாய்ப் பரிணமித்துக்கொள்ளத் தேர்ச்சிபெற்று விட்டீர்களென்றே நினைக்கிறேன். எவ்வளவு வருஷம், மாதம், நாள், நாழிகை, விநாடி பொருத்திருந்தோம்! சொன்னதெல்லாம் பொருமையோடு கேட்டுக்கொண்டிருந்தோம். இன்று, நாளை, நீங்கள் தகுதியற்றவர்கள்; அநேக பிரிவினையுடையவர்கள்; உங்களை நீங்கள் நிர்வகிக்க ஆற்றல்—அநுபவம் ஒற்றுமை இல்லையென வாய்ப்பறை சாற்றி செய்கையில் நமது ஜீவதாதுக்களிலுள்ள மச்சையெல்லாம் உரிஞ்சப் பெற்றுவிட்டன. கல்வி அறிவே இல்லாத பரந்த எல்லையையுடைய ஏகாதிபத்தியப் பேய் பிடித்தாட்டிய ருசியா நிலையைப்பற்றிக்கொண்டு தனது ஜீவ ஐக்யத்தை உலகத்திற்கு காண்பித்து புதிய கொள்கையை அநுசரித்து நிற்கிறது. அயர்லாந்து பேராசைப் பூதங்களின் கையிலிருந்து தப்பித்துக் கொஞ்சம் நஞ்சம் இருக்கின்ற தொடர்பையும், அறுத்துக்கொள்ள முனைந்துவிட்டது. சீனா, ஜனநாயக ஆட்சியாய் மாறிவிட்டது. இந்தியா ஒரு காலத்தில் பூதேவியின் ஸ்வர்ன பீஜமாயிருந்த சகல தேசத்திற்கும், உணவு, ஆடை கொடுத்துதவிய ஜெயலக்ஷ்மி வாசஸ்தான பாரதநாடு தாழ்மையாய் ஒட்டி உலர்ந்த எலும்புக் கூடாம் மக்களைத் தாங்கி நிற்பதேன்? அந்தோ! பரிதாபம்! தமிழர்களே! கிடைத்த பொருளை பெட்டியில் வைத்து பூட்டி பகற் கனவு கண்டிருக்கும் புதிய பணக்காரர்களே! பாட்டன், பூட்டன்தேடி வைத்திருந்த நிலங்களின் வார்சுகளாகிய நீங்கள் வழக்குச்செய்து பெற்று பெரிய நிலச்சுவான்தார்—ஜமீன்தார்—கிராமாதிபதி என்ற பேர் வகிக்கப்பட்டவர்களே! எந்தப் பயல் எப்படியானால்தானென்ன வென்று அகங்காரத்தில் மூழ்கி இருக்கும் அதிகப்பிரசங்கிகளே! சட்டமறுப்புப்போர்—சத்தியாக்கிரஹப்போர் கடயிசில் வாலிபர்கள் பக்கம் ஜெயம். இந்தத் தருணத்தில் அவர்களோடு நீங்களும் ஒத்துக்குத் தாளமாவது போடுங்கள்! அப்படியானால் யுத்தவீரர்களாகிய வாலிபர்களின் சாப்தாவில் உங்களது நீளப் பெயரும் சேர்த்துக்கொள்ளப்படும். அன்றேல் நீங்கள் அவமதிக்கப் படுவீர்கள். சோம்பேறிகள், பேடிகளென்று பிறரால் நகைக்க—எளனஞ்செய்யப்படுவது நிச்சயம். பார்த்தீர்களா! 16 வயது மன்மதனை நிகர்த்த அபிமன்யு போன்றகாளைகள் தாய்நாட்டின் விடுதலை மயக்கத்திற்சென்று;

"ஜெயமுண்டு பயமில்லை மனமே
இதிற் சேர்ந்தவர்கட்கதி கழகுண்டு தினமே"

ஜெஜெய பாரத ஜெயவென முன்னேற பொருளாவது கொடுக்காதிருந்தால் உங்களை இந்தியருடைய சாப்தாவில் சேர்ப்பது பொருந்துமா? இந்தியர்களே! கவனியுங்கள்; உங்களுக்குத்தான் அதிக பொறுப்பு; உங்களின் ஞானேந்திரியங்கள் இயற்கை யடைகிறதாயினும் இன்னும் நன்றாய்ச் சொல்லிவிடுகிறேன். ஆண்பிள்ளைத் தத்துவமுண்டாயிருக்கின் சட்டமறுப்பில் கலந்துகொள்ளுங்கள். தாயை இன்னொருவன் பெண்டாட்டி, தங்கை, தமக்கை, மனைவியை மற்றொருவன் கையில் விட்டுக் கொடுக்கத் தங்களுக்குச் சம்மதமா? ரோஷம்—வீரம் கிளம்பிவிட்டது என்னடா? ஆ! தம்பிமார்களே! உங்களுக்கு ஆசீர்வாதம்; செல்லுங்கள். இதோ! தருகிறேன். உங்களது வீர கவசத்தைத் தளரவிடாதீர்கள். புன்னகை மிகுங்கள். நீங்கள் குருக்ஷேத்திரமாம்—யுத்த பூமியை அடைந்ததும், 144 என்னும் ஒருநகத்தை வெள்ளைத்தாள்; சிப்பாய்களின் குண்டாந் தடி உங்களைச் சிறிது தடுக்கும்; வீரர்காள்! ஆயிரம் பணமுடிகளை அரவின்மீது யோக நித்திரைபுரியும் கமலக் கண்ணனை நினைக்க மறந்துவிடாதீர்கள்! நினைத்தஉடன் குண்டாந்தடிகள் புஷ்ப ஆரங்களாக மாறும்! பிறகு தங்களுக்கு எல்லாம் கீர்த்தி. துப்பாக்கி குண்டுகளை எல்லாம் தைரியமாகிய வீர வாளினால் மார்பில் தாங்குங்கள். அப்போது இதனையாவது 'சிவா' என்பதையாவது ஞாபகப்படுத்திக்கொள்ள தவறாதீர்கள். அப்புறம் தவச்சாலையைத் தான் அடைவீர்கள்.

பொய்யும், சூதும், நிலைக்குமா ?

மனதுக்கு அறியக்கூடாத மெய், பொய் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. யாதொன்றுக்கும் மனமே பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு காலத்திலும் இருந்திராத தேசிய இயக்கம் கடினமான எதிர்ப்புகளைமீறி உன்னதமடைந்து வருகிறது. உண்மையை மறைத்துக் கூறுவதில் ஒருபயனும் கிடைப்பதற்கில்லை. உண்மையின் தத்துவத்தைத் தெரிவித்துள்ள எவனும் புலன்களுக்கு நிரந்தர இன்பத்தைக் கொடுக்க முயலுகிறான். இன்பம் மேலான செய்கைகளினூடு கட்டப்பட்டிருக்கிறது. பிணைக்கப்பட்டு தன்னையடைய எத்தனிப்பவர்களுக்கு சந்தோஷ லக்கத்தைத் தந்து முதிர்ந்த அறியாமையைப்போக்க நல்ல கனிதத்தை உதவுகிறது. லண்டன் டெய்லி எக்ஸ்பிரஸ் போன்ற சுயநலப் பத்திரிகைகள் வேணுமென்று எவ்வளவு தாழ்வாக வரைந்து கொண்டிருந்தாலும் அதன் புராதனப் பெருமையை ஒரு சிறிதாவது ஏற்றுத்தானாகவேண்டும். வடமேற்கு எல்லைப்புற பிரச்சினையைக் கிளப்பி வாயளவில் மழுப்பிக்கொண்டுபோவது பிரிட்டிஷாரின் கொள்கையாயின் அறிஞர்கள் அதனை வெறுக்கவேசெய்வர். திரு. எல்வின்பாதிரியார் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம்செய்தபோது தனது அநுபவத்தில் கண்டவற்றை கூறுவது, குற்றமாகப் பாவிக்கப்படுவது இந்தியாவிலன்றி மற்றைய நாடுகளில் இல்லை. எல்வின் பாதிரியார் கூறியதில் ஒன்றும் பிசகென்பதற்கில்லை. "மிஸ்டர் மார்டன் சொல்லுகிறபடி எல்லைப்புற நிலைமையைக்கவனிப்பதற்கு, புறப்படஇருந்த மகாத்மாவை சர்க்கார் தடுத்தது பெருத்த தவறுதான். எல்வின் பாதிரியார் இந்தியர்களுக்கு ஜவாப்தாரியான செய்கை—நடவடிக்கைகளைக் கவனித்து உதவ பிரசாரம்செய்தார். தான் ஒரு பாதிரி என்றவகையில் அவர் அப்படிச் சொல்லித்தானிருக்கவேண்டும். எல்வின் ரிப்போர்ட் நகல் ஒன்று மான்ஜெஸ்டர் கார்டியனில் வெளியாயிருந்தது. அதில் இந்தியாவில் நடக்கும் அக்கிரமங்களை சட்டம்—உத்தரவு என்று பிரித்துப் பார்த்தறியலாம். ஆனால் டபிள்யூ கிரஹம் எழுதிய லெட்டரை ஆதரவுகாட்டுவது சுத்த முட்டாள்தனமாகும். மிஸ்டர் கிரஹம் விஷயாலோசனை யற்றதும், அநுபவமில்லாததும், பொய்யும், பித்தலாட்டமுமாக உளறி யிருக்கிறார். 35 கோடி மக்களின் ஏகப்பிரதிநிதி உலகத்திலேயே மகிமை பொருந்திய மகாத்மா பட்டம் பெற்ற தீர்க்கதரிசியை யொத்த ஒருமேதாவியை ஒருபெண் பிள்ளைகூட மெச்சுதற்கில்லாத வெட்கந்தரத்தக்க வகையில் தவறான அபிப்பிராயங்கூறமிஷ்டர் கிரஹம் முற்பட்டது வருந்தத்தக்கதே! சகல கல்வி ஞானமும் உடைத்தாயிருந்த இங்கிலாந்து இந்தியாவிற்குக் கல்வி யறிவூட்டாவிட்டால் அந்தக்குற்றத்தை இங்கிலாந்துதான் அடையவேண்டும். ஏகாதிபத்தியஆசைகொண்டு இந்தியாவைக் கண்டவரெல்லாம் தூற்றுவது பாவம்; அசட்டுத்தனம் மிகுந்த மிஸ் மேயோ இந்தியாவைப்பற்றிக் கூறிய பழி அவள் மீதே பிரதிபலிப்பதை தற்கால அமெரிக்க நடவடிக்கை தக்க சான்றாகும். ஜெர்மனி உவால்ட்டர் போஜார்டு எழுதிய புஸ்தகத்தில் இந்தியாவைப்பற்றி பெரிய புளுகன்களுக்கிடையே சாந்தமும், சத்தியமும் குடிகொண்ட இந்தியா தனது விடுதலை இயக்கத்தை துவக்கி வெற்றிக் குறி காணும் வழியில் நிற்கிறது. 1930-ம் வருடத்திலிருந்த நிலைமையைவிட அதிகமான—உன்னத நிலையை இந்தியாஎட்டிப் பார்த்துக்கொண் டிருக்கிறது. சமயோசிதமான பொய்யும், தந்திரங்களும் இந்தியாவில் இனி தாண்டவமாட முடியாது.

—ரெயினோல்ட்ஸ்

இவ்வளவில் உங்களை நிகர்த்த யாவரும் ஆரவாரிப்பார்கள். தேவதுந்துமி முழங்கும். பாரததேவி ஜெய ரதம் அனுப்பத்தவாள். யாகசாலையடைந்ததும் யாகக்குருக்கள்—சபர்மதி முனி, பராசக்தி, கஸ்தூரி பாய் முதலியவர்களைத் தெரிசித்து யோகத்திலமரச்செல்லுங்கள். தாமதியாதிர்கள். வெற்றி பெறுவீர்கள். வாலிபா! உங்களுக்கு நான் சொல்லிவந்த பாடங்களைவிட முக்கிய கற்பனைச்சட்டங்களை உத்தேசித்து அதை ஆதரிப்பதன் காரணமாக பொருளுதவி செய்யவும் இசைந்துவிட்டதிலிருந்து உங்களது வீரப்பிரதாபத்திற்கு இனி தட்டு தடை யேது? கௌரி! பைரவி சின்முத்திரி உங்கள் முகத்தில்பிரகாசித்துவிட்டாள். ஈரேழு பதினான்கு புவனங்களும் நடுங்கும்படியான வீர முழக்கமும் முழங்குகிறது. பதினாயிரம் சிங்கங்கள் பூட்டிய ஜெய ரதத்தில் தேவர்களின் பிரதிநிதிகள் போருக்குப் புறப்படுகிறார்கள். விரைவாய்ப் போங்கள் ஜெயக் கிடைக்கும்.

நமது ஜெய ரதம்.

நீ! இருபத்தைந்து வயதுடையவனாக இருக்கிறாய். இதுதான் கௌமார பருவம். உனது நரம்புகளில் ரத்தம்—தேஜஸ் மிகுந்திருக்கும். அருமையுள்ள வயது மனிதவர்க்கத்திற்குப் பயன் தரக்கூடிய செயல்களைப்புரிய—அஞ்சா நெஞ்சம்படைக்கத்தக்கபிராயம். கௌமாரா! கிளம்பு; போர் முரசைத் தட்டு; ஜெயக் கொடியை நாட்டு. உனது வீரந்தங்கிய மார்பைத் தட்டிக் காட்டுவாயானால் விரோதியின் செயல் ஒழிந்துபடும். உனது சகோதர, சகோதரிகள் வீர கர்ஜனைபுரிவார்கள். அந்த கர்ஜனை! ஈரேழு புவனங்களின் கவனத்தை இழுக்கக் கூடியதாயிருக்கும். அடிமையென்று பெயர் படைத்து ஜீவனம் செய்வது எப்பொழுதும் துக்கம் நிறைந்த பாண்டம் என்றறி! துக்கம் பாவங்களுக்குக் காரணத்தைப் பார்த்தாயா? நெருப்புப் பந்து விளையாடுகிறார்கள். நீ ஒரு தீர புருஷனாகில்—சுதந்தர வேட்கையுள்ளவனாகில்—தாய்நாட்டை விடுவிக்க முற்படின்—அஹிம்ஸைப்போரை ஆதரிக்கின், மனதை இன்பம்நிறைந்த கிணற்றின் தண்ணீரால் குளிப்பாட்டு. கொடிய ராக்ஷதரால் வீசி எரிகின்ற நெருப்புப் பந்தைத் தாங்கு. முன்னாடியேபந்து விளையாட்டத் தேர்ச்சிப்பெற்றிருந்தாலும், புதிய, புதிய, அவசர, அவசர சட்டக்கொட்டுக்களையும் தாங்கப் பழகி இருந்தால், அதிக நலம். உன்பக்கம் விருதக்கொடி நாட்ட உனக்கநுகூலமாக மானசத் தந்திகள் கிடைத்திருக்கலாமே? தந்தியாவது, கடிதமாவது கிடைத்திருந்தாலும் அதைப் பிரமாதப்படுத்தி காரியநாட்டி ஏற்படுத்தாதே. ஏராவட்ட தவச்சாலையில்—மௌன நிலையில்—ஆத்மப் பரிசில் சமரசம்! இதுவும் ஒரு புரளி. பிடியைத்தளர்த்தாதே! பத்திரம்! பகைவர்கள்! பராக்கிரமசாலிகள், பொய்யும், பித்தலாட்டமும் மிகுந்தவர்கள், சமயத்திற்குத் தகுந்த பாசாங்குவார்த்தையில் நம்பிக்கை வைக்காதே! நீ நம்பி இருந்த காலமெல்லாம் பயன் பெற்றனையா? வேண்டாம். ஒருவர் தந்து நீ அடையக்கூடிய எந்த நன்மையையும் அசட்டைப்பண்ணத் தவறாதே! நீ அன்பைத் துணைவலி பெற்றபின் உனக்கு வேறு துணை எற்றுக்கு?

தமிழா! விழி திற! துயிலெழு! துணிவுகொள்!

ஆற்றிலிரங்கலாமா ?

இந்திய சர்க்கார்; காங்கிரஸையும், தலைவர்களையும் நசுக்கிவிட, பலத்த தீவிர முயற்சி எடுத்துவருகிறது. காங்கிரஸ் தலைவர்கள தங்களுக்கிழைக்கும் தீமைகளை நன்மையாக ஏற்று நிற்கிறார்கள். நாட்டில் எங்கு பார்த்தாலும், இதே பேச்சாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. காங்கிரஸ் சென்ற நான்கு மாதங்களாக பொறுமையுடனும், தீர்க்க புத்தியுடனும் நடந்துகொண்டிருப்பதிலிருந்து, அன்னிய நாட்டாரின் கவனத்தை இழுக்கும் சக்தி வாய்ந்திருக்கிறது. காங்கிரஸ் கையாண்டுவரும், இந்த யுத்தம் உடலைப்பற்றியதல்ல; வீரம் ததும்புகிற ஆத்ம பலங்கொண்ட எதிரியின்மேலே போலொத்த ஆற்றலை—வல்லமையை—மிருகச் செயலை—ஆயுதத் திமிரை "தூ"வென மதித்துநிற்கிறது. அதன் பூரண எண்ணத்திற்கு, சர்க்காரின் அவசரப்பட்ட—ஆத்திரங்கொண்ட ராக்ஷதச் செயலுக்கும், ஒற்றுமை நிலவுவது கஷ்டசாத்தியம். ஜெயமா..ஜெயம் கருதி இந்தியா யுத்தம் துவக்கவில்லை. வெற்றி தோல்வியை அது நினைக்கவில்லை. தனது அடிப்படையான எண்ணம் முடிவுபெறும் வரை எதிரி தன் குற்றத்தை உணர்ந்து பிராயச்சித்தம் செய்யும் வரை தன் வேலையை அஹிம்ஸைத் தொழிலை செய்துபார்ப்பதெனவே முடிவுகட்டிவிட்டது

அடக்குமுறையைப் பற்றி எந்த அறுதாபங்களையோ, கோரச் செயல்களையோ பொருட்படுத்துவதில்லை; என்றமுடிவுக்குவந்துவிட்டது. ஐரோப்பியர்கள் இந்தியர்மீது பரிதாபங் காட்டுபவர்போல், உள்ளொன்றுவைத்து. வெளியொன்றுபேசி செயலைக்குறைக்கும் சகஜத்தை நன்குதெரிந்து நம்பிக்கைவைக்க மறுத்துவிட்டது. இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர், ஆங்கிலஇந்தியர்களை ஒருகாரணமாகக்கொண்டு மைனாரிட்டி என்று பாகுபடுத்திக் கூறுபவற்றை சுயநலத்துக்கென்று தள்ளி இந்தியாவில் உள்ள யாவரும் இந்தியரே என்று கர்ஜிக்கிறது. சுயமரியாதை கட்சி, மிதவாதக் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி ஆகியவைகளைக்கொண்டு இந்திய அரசியலை அமைப்பது, மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கின கதை போலாகும்.

—பிரிபிரஸ்

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுஎண் 245] (1922-ஆம் ஸ்தாபிதம்.) 15 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இருமுறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஆம் (22-5-32) வைகாசி-மீ 9வ ஞாயிற்றுக்கிழமை

அண்ணாமலையின் பிச்சைக்கோலம்!

ராஜா ஸர் அண்ணாமலை செட்டியைப்பற்றி எழுதும் துர்பாக்கியம் மறுபடியும் கிடைத்ததுபற்றி வருந்துகிறோம். ஒரு சாதாரணப் பேர்வழியை பிரமாதப்படுத்திக்கொண்டு போவதென்றால் அதில் அர்த்தமில்லை. "புருஷனடித்தால் கொழுநன் காலில் முட்டிக்கொண்ட காட்டுப்பெண்"போல பரங்கிப் பெண்களின் மத்தியிலே ஆடி, பாடிக் காலங் களிக்கும் ராஜா அண்ணாமலை—ஸர் அண்ணாமலை. அவர் தான் அண்ணாமலையை "சீ" எனக் காரி உமிழ்ந்துவிட்டோம். நமது நடுநிலையை அறிந்த பொது மக்கள் மென்மேலும் "தேசோபகாரி"யை ஆதரிக்க விரும்பினர் அண்ணாமலையின் மானம் தெருத் தெருவாய் சிரிக்கத் தலைப்பட்டன. மானம்பறிகொடுத்த அண்ணாமலை கம்பை தனவைசியர் கல்வி நிலையத்திற்குச் சென்று கன்னா, பின்னா வென்று கத்தவாரம்பித்தார். அவரது விபரீதப் போக்கைக் கண்ட கல்விக்கழக இளைஞர்கள் நம்மிடம் வந்து குறை கூறினார்கள். இவரது அறியாமையை பொதுமக்களுக்கு எடுத்துக்காட்டினோம்.

கடந்த 10 வருடங்களாக "தேசோபகாரி" செட்டியார்களுக்கு செய்துவந்திருக்கும் நன்மைகளையும் அறியவே செய்வர். ஓரிரண்டு பர்மிய பத்திரிகைகளால் செட்டியார்கள் தூற்றப்படுவதை அவ்வப்போது எடுத்துக் காட்டியதையும் நமது நகர வணிகப் பிரபுக்கள் தெரியாமலில்லை. ஒருகாலத்தில் செட்டியார்களின் தஸ்தாவேஜிகள் நெருப்பிட்டப்பட்டபோது "தேசோபகாரி" செய்திருக்கும் வேலையை நன்றியுள்ள ஒரு செட்டியாரேனும் இலகுவில்—அவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிட அவ்வளவு நன்றி கெட்டவர்களில்லை.

இவ்விதமிருக்க; அண்ணாமலையின் தூண்டுதலின் பேரில் செட்டியார்கள் பூராவுமே "தேசோபகாரி" "சுதந்திரனை" வாங்கக்கூடாது என்ற பிரச்சனை கிளப்பப்பட்டு வருவதாக அறிகிறோம். அண்ணாமலையின் முயற்சி அப்படி இருக்குமானால் சிவில், கிரிமினல் குற்றங்களுக்கும் ஆளாகவேண்டியிருக்குமென்பதையும் ஞாபகமூட்டுகின்றோம். அண்ணாமலையின் பிச்சைக்கோலம் கண்ட ஓரிரண்டுபேர் வழிகள் அவருடன் ஒத்துழைக்க விரும்புவதிலும் நமக்கு அக்கரையில்லை. பத்திரிகைத் தொழிலே பேராபத்தானதுதான்; அதிலும் "தேசோபகாரி" கத்தியின் கூர்புறத்தில் நடந்துசெல்லுவது போன்றது. அதற்கும் ஒரு வரம்பு உண்டு. அதைத் தாண்டி அப்புறம், இப்புறம் சென்றுவிட்டால் அந்தோ! ஒரே ஆபத்து! தலைக்குமேல் மயிரிழையில் தொங்கும் இருபுறமும் கூரான விஷக் கத்தியின் கீழ் இருந்துகொண்டுதான் ஆசிரியன் தனது சக்தியை—பேனாவழிச் சொட்டுகிறான். நெஞ்சுத்துடுக்கான ஆசிரியர்கள் நிமிர்ந்து பார்க்காமல் எழுதிவரத்தான் செய்வார்கள். இப்பொழுதோ தலைக்குமேல் மாத்திரமில்லை; எப்பக்கம் திரும்பினாலும் ஈட்டிகளால் பாய்ச்சப்படக்கூடிய நிலைமையிலிருந்துகொண்டிருக்கிறோம். பத்திரிகா தர்மத்தை—அண்ணாமலை போன்றோரின் தவறு (ஆங்கில மாதுகளுடன் அண்ணாமலை வீற்றிருக்கும் காட்சி)களை எடுத்துக்காட்டுபவர்களுக்கு எந்த நிமிஷமும் ஆபத்துத்தான். ஈட்டியின் கூர் இருதயத்தில் புகுந்தாலும்புக

லாம்; மருமத்தில் பாய்ந்தாலும் பாயலாம். இவ்வளவையும் சட்டைசெய்யாது—எப்பக்கமும் திரும்பிப் பாராமல் வேந்தனானாலும் வெட்டியானானாலும் சிறிதும் தாட்சண்யங்காட்டாது கண்டிக்கும் ஆசிரியனிருக்கின்றானே; அவன் உண்மையிலேயே வீர ஆசிரியன்தான். தன்னுடைய ஸர்வஸ்வத்தையும் உயிரையுங்கூட பேனா முனையிலே கட்டிவைத்துக்கொண்டு, பேனா முனையிலே வீரம் பேசும் எந்த ஆசிரியக்கும் பொதுமக்கள் வீரவணக்கம் செய்யக் கடமைப்பட்டுள்ளார்கள். அதைப் போடாதே! இதை எழுதாதே! என்று கவருக்குள் பச்சைத்தாளை வைத்து அனுப்புவதையும் உண்மையுள்ள—வீர ஆசிரியன் பொருட்படுத்தப் போவதில்லை. பத்திரிகா தர்மத்தைச் செய்யாதே என்பது அண்ணாமலையின் பணமமதையே யொழிய—அவருடைய பல பொத்தல்களை-குற்றங்களைபிறர்கண்ணுக்குக்காட்டாவிட்டால் உலைமூடியால் வாயைமூடியதுமாதிரிசெய்வதேயன்றி பிறிதில்லை என்போம். ஆங்கில நாடுகளிலுள்ள ஓட்டல்களில் கருப்பன் நுழைந்துவிட்டால் அபராதத்திற்கும், தண்டனைக்கும் ஆளாகிறான். இங்கோ அண்ணாமலை போன்ற கருப்பன்கள் ஆங்கில மாதர்களுடன் கொஞ்சிக் குலாவுவதை சட்டம் கட்டுப்படுத்தக் காணோம்! அதனாலன்றோ பத்திரிகைகளை பஹிஸ்கரிக்கவேண்டுமென வாய்த் துடுக்காக பேசிவருகிறார். இவரது பேச்சை யார்தான் சட்டைசெய்யப் போகிறார்கள். பத்திரிகா தர்மம் காசு பணத்திற்கு விற்கக்கூடியதல்ல! உயிரைப் பயணமாகவைத்தும் தர்மத்தைக் காப்பதுதான் ஆசிரியனின் கடமை. அதைச்செய்யவே செய்வோம்.

அண்ணாமலையாரே! தனிமனிதனின் தப்பையும் முச்சந்தியில் நிறுத்துவதற்கு பின்னடையப்போவதில்லை என்பது மட்டும் ஞாபகமிருக்கட்டும்.

அடக்கிப் பார்த்தாள் கருப்பாயி!

சந்தர்ப்பத்திற் கேற்றபடி பொய் பேசுவது பிரிட்டனுக்கு சர்வ சாதாரண—அதன் இரத்தத்தி லூறிய—உள்ளத்தில் பதிந்த—மச்சையாய் விட்டது. இதன் தோலை வேறுபடுத்தி குடற் கும்பிகளைச் சோதித்து, இருதய பரிசுத்தஞ்செய்ய கிறிஸ்துநாதர் சொல்லியபடி மறுமுறை தேவ ராஜ்யம் ஏற்படும்வரை உங்கள் கண்ணை மூடிக்கொண்டு காத்திருக்கலாமா? என்பதற்கில்லை. தற்கால இந்திய புயல் காற்று பயங்கர தோற்றங்கொண்டிருக்கிறது. பிரிட்டனின் மிஷின் பீரங்கிகள், ராஜ தந்திரங்கள் அதனை ஒடுக்கிவிட முடியாது. 1914-லு ஜெர்மனியர் பயமுறுத்தியதைவிட பெல்ஜியத்தின் லீஜ் கோட்டையை ஜெனரல் ஸ்டீன்பர்க் தாக்கியதைப்பார்க்கிலும் சாமுயல்ஹோர் வாய்ப் பீரங்கி கடினமுள்ளதாயிருந்தாலும் அவர் வாயில் வெடி மருந்துகளைக் கிட்டித்தும், மூச்சுத் திணறி என்னென்னவோ உளறிக்கொண்டே போய், ஆமாம்—வாஸ்தவந்தான் இந்தியா மந்திரி சபைக்கு உதவியாக லார்டு சாங்கி சீர்திருத்தச் சட்டம் சேகரிப்பதில் அதிக உற்சாகம் காட்டுகிறார்; என்ற உண்மைச் சங்கதியைக் கக்கிவிட்டார். "அடக்கி முடிக்கிப்பார்த்தாளாம் கருப்பாயி ஐம்பது குசுவைப்போட்டாளாம்" என்பதுபோல் தாங்கமுடியாமலிருந்ததை நமது மந்திரி கக்காமலிருந்தால் இந்தியா நண்பர்களாகிய திரு லான்ஸ்பரி போன்றோர் தெரியப்படுத்தி அம்பலத்திற்குக் கொண்டுவராதிருப்பதற்கில்லை. இன்னொரு பேர்வழி பிரதம மந்திரி பதவிக்கு நீண்ட தாடியை உருவிக்கொண்டிருக்கிறதாகவும் கேள்வி! இந்தியாவில் அப்புண்ணியவான் ஆட்சி கோழிமுட்டையாயிருந்ததை அறியாதார் எவர்? அந்த சட்ட நிபுணத்துவ ரீடிங் பிரிட்டிஷ் முதன் மந்திரியாயிருக்க ஆசைப்படுகின்றாராம்! ஆனால் இந்தியா மந்திரிக்குள்ள சம்பளம் கிடைக்காதது பற்றி நாம் மிகவும் அநுதாபங் காட்டுகிறோம். இந்தியாவுக்கு கவைக் குதவாத சீர்திருத்தம் வழங்கப்படுவதன் வதந்தி முன்னமேயே உலாவிவிட்டது. அவர்கள் விழித்துக் கொண்டார்கள் எந்தவிதமான சுயஆட்சி கிடைக்கப்பெறின், நாட்டில் மக்களைப் பிடித்திருக்கும் வறுமைப் பேய் நீங்குமென அறிந்திருக்கிறார்கள். அவர்களது கருத்துக்களின் வேறுபட்ட எந்த நல்ல ஆட்சிமுறையும் இந்தியர் விரும்பப் பிரியப்படார். அன்னிய வியாபாரந்தான் இந்தியாவின் செல்வத்தை உறிஞ்சிவிட்டதெனபள்ளிமாணவர்களும் உணர்ந்திருக்கும் தற்காலத்தில் இந்தியாவை அடக்குமுறையில் ஆள்வது முட்டாள்தனமும், வீரமற்ற நடத்தையுமாகும்.

—ஆர்தர் பெட்ஸன்

வழக்கிழந்தோன் கண்ணீர்!

வழக்குடையோன் நிற்க—வலியானைக்கூடி
வழக்கை அழிவளக்குச் செய்தோன்
வழக்கிழந்தோன் அவன் சுற்றமும் தானும்
தொடர்ந் தழுத கண்ணீர்—போல்
அக்குடி அறமே அறு
(ஔவைப்-பாட்டியார்)

நாட்டின்—நாட்டு மக்களின் நன்மையை உத்தேசியாத—சிந்தனையே செய்யாத அரசன் இருந்தென்ன பயன்? இந்தியக் கோவில்களின் கோபுரங்களில் பொம்மை—குரங்கு இருப்பது போலாயின் அவ்வரசனும், அரசியலும் பயனற்றவையே. இக்காலத்தில் அரசியலின் பேரால் நீதி மன்றங்கள் ஸ்தாபிக்கப்பட்டு நாட்டின் பொது மக்களால் அளிக்கப்படும் வரிப் பணத்திலிருந்தே எல்லா நீதிபதிகளும் ஜீவிக்கின்றனர், ஆகையால் பொது ஜனங்களின் ஊழியக்காரர்கள் என்று அவர்கள் அறிந்திருந்தாலும் அந்தக் குணம் படைப்பதில்லை. பொதுஜனங்களில் அநேகருக்கு நீதிபதிகளும் சரி, மற்ற சர்க்கார் சிப்பந்தி அதிகாரிகளானாலும் சரி கூலிக்காரர்களென்று தெரியவே தெரியாது. இரண்டொருவருக்கு தெரிந்திருந்தாலும் பயத்தால் சொல்வதும், நினைப்பதும் கிடையாது. இம்மாதிரி இந்தியாவிலன்றி இதர நாடுகளிலுமில்லை. அரசியல் போக்கென்று ஆரம்பித்து திடீரென நீதிபதிகளிடம் போய்விட்டதாகக் குறை கூறுபவர்களிருந்தால் சற்றுபொறுங்கள்,

3-ம் நெம்பர் கல்லியில் சிப்பாய் ஒருவன் காவல்புரிகிறான். அவன் எதற்கு, எதைநினைத்து, எவனாவது தன்னை மீறிக் குடித்துவிட்டு சட்டை ஜேப்பியில் ரூபாய் ஒன்றிரண்டுபோட்டுக்கொண்டு வரமாட்டானா; எவனாவது நடுநிசியில் தேவடியாள் வீட்டுக்குப் போய்விட்டு வரமாட்டானா? என்றுதான் இவன் காவல்! திருடர்களைப் பிடிப்பதற்கோ, போக்கிரிகளை அடக்குவதற்கோ இவனுக்கு சாமர்த்திய மிருந்தால் இப்போது நடக்கும் கலகங்களுக்கு ஆதாரம் உண்டா? சாதாரண சிப்பாய்—போலீஸ் வீரர்களின் நிலைமை இப்படி இருக்க; போலீஸ் ஷ்டேஷன் ஆபீஸர்களுள்பட-குட்டிக் காவலாளிகள்வரைஜனங்களின் விண்ணப்பங்களைவரும்படியன்றி பரிதானம்கொடுத்தாலும் பிரயாசை எடுப்பதில்லை. எவ்வளவு அவசரமான காரியங்களாயிருந்த போதிலும் கவனிக்கப்படும் என்றபதிலே போலீஸ் உயர்தர அதிகாரிகளிடமிருந்தும் சாதாரணமாகக் காணக் கிடைக்கிறது,

தாசில்தாரிலிருந்து ஜில்லா ஜட்ஜி உத்தியோகம்வரை அவ்வவர்களின் பொறுப்புக்குத் தக்கபடி சட்ட நிர்ணயம் செய்வது வழக்கமும்—கண்டிப்பான கட்டளையாயிருந்தபோதிலும் நியாஸ்தலங்களில் தாவாக்களை, விஷய பரிசீலனை செய்வதில் ஊக்கமுடைத்து சட்டத்தை மீறிவிடுவதில்லை. ஆனால் சிலர் கூறுகிறபடி அநேக தப்பெண்ணங்கள் புகுத்தப்பட்ட வழக்குகளும், மாஜிஸ்ட்ரேட்டின் தயவைப்பெற்றிருந்தவர்களின் வழக்குகளும் ஆச்சரியப்படும் வகையில் தீர்ப்புக் கூறிஇருப்பதுதான் விசனிக்கத்தக்கதாயிருக்கிறது. சிலர் சொற்ப அதிகாரத்தை அத்துமீறி உபயோகிக்கின்றனர். வழக்கிளந்த பலருக்கு மேல்கோர்ட்டில் ஞாயம் கிடைத்திருப்பதை ஏராளமாய்க் காணலாம். தர்மவாதிகளாகிய வக்கீல்கள்கூடஅஞ்சவேண்டியதாயுமிருக்கிறது. பொதுவாக உண்மையாளர்கள் செய்கின்ற எந்தத் தாவாவும் தள்ளுபடியே செய்யப்படுகிறது. பொய்யும், கட்டுப்பாடான சாக்ஷிகளும் கொண்டுள்ள பிரியாது வெற்றிப் பெறப்படுகிறது. பரம ஏழைகள் கோர்ட்டுக்குப் போவதென்றால் பிடிப்பதில்லை. ஏன்? பணமில்லாது வழக்குத் தொடர்வதென்றால் கஷ்டசாத்தியமென அவர்கள் அஞ்சி பணக்காரர்களுக்குப் பயந்து வாழாதிருந்து விடுகின்றனர். இதிலிருந்துபணக்காரர்களன்றி ஏழைகளுக்கு ஞாயம் கிடைப்பதில்லை எனச் சொல்லவில்லை. சிரமப்பட்டு, காலந் தாழ்த்தியே ஒருவாறு மூளையினால் கண்டுபிடிக்கும் இவர்கள் நீதிஸ்தலங்களின் பேதாபேதங்களையும், அநியாயமான திர்ப்புகளையும் ஏன் அம்பலத்திற்குக் கொண்டுவரக்கூடாது? ஏழை ஜனங்களின் வயிற்றெரிச்சலை வாரிக் கொள்ளும இந்தப் பலிகளை நடத்திவைக்கும் அதிகாரிகள் மிதமாயிருக்கலாமா? அன்றேல், அந்த இலாக்காவை எடுத்துவிடவாவதுவேண்டும்.

நமது ஜெய ரதம்.

நேற்றுப் பகல் உனக்கு மானசத் தந்திக் கிடைத்திருக்கலாமே! அதைப்பற்றி என்ன முடிவுக்கு வந்திருக்கிறாய்? நெடிய மண் குடிசைகளைத் தாண்டி வரிசை, வரிசையாய் ஒழுங்கினமன்றி உனது மனதைப் புருவ மத்தியில் நிறுத்துப் பழகியானபின்பும் பனிமண்டல ஒழிநிரம்பிய ரோஜாவெனத்தக்க வதன காந்தி—பாரதமாதா உன்னைப் பெற்றதற்காக நீ, செய்யவேண்டிய தியாகம் யாதென—நிர்மாணத் திட்டங்களாக ஆக்ஞாபித்த உனது மூத்த சகோதரர்களுக்கு மரியாதைகொடு. உனது சுயமரியாதையை விளக்கஞ்செய், விசௌறி-நீராரம் அருந்து, தங்காய்! உன்கணவன் நல்ல காரியத்திற்கு—சுதந்தர யுத்தத்திற்கு புறமுதுகு காட்டாமல் போரில் ஜெயமடைய—அஹிம்ஸை வாளைக் கையிலேந்திக்கொண்டு புறப்படவிருக்கிறானகையால் சமையலாகிவிட்டதா? இன்றேல் பழங் கஞ்சியிருந்தால் காடித் தண்ணீருடன் கலந்ததா யிருந்தாலும் போதும் வார்த்து அனுப்பு! புன்முறுவலோடு வீதியில் நிற்கும் மற்ற போர்வீரர்கள் இந்திய வாலிபர்கள் அகிலாண்ட ஈஸ்வரியின் கருணையைப் பெற்று குருக்ஷேத்திர பூமியை நோக்கிப்போய்க்கொண்டிருக்கின்றனர். அவர்களோடு உனதுமணவாளனையும் அனுப்பினால் ஒழுங்கான பாதை தவறினும் அவர்களால் நன்கு அறிவிக்கப்பட்டு யெக்கிய நிலையம் அடைவார்கள். வாடா அப்பா! புத்திமதி என்ன வென்கிறாய். சீ! சீ!! அப்பா உனக்கு ஆட்டா ரொட்டி, பருப்புச் சாம்பார் போட்டார்! இந்திப் பலகாரம்வாங்குவதற்குப் போகிறான். போகும்போது நற்சகுனமாய் அழாதே! போய்வரச் சொல்லடா உன் அப்பனை! பாட்டியோ, பூட்டனோ அம்மாளைப் பெற்றவனை சிறையிலிருந்து மீட்கப் போகிறான். குயில் கூவுகிறது! குரங்குகள் கனிகளுள்ள மரங்களிலிருந்து தாவுகிறது! மந்திகள்—கிளட்டுக் குரங்குகள் தாளம்போடுகிறது நன்றாய்ப் பழுத்த பழங்களைத் தின்று, தின்று கொழுத்த நுரையீரல் பெருத்த கூனக் குரங்குகள் இருந்த விடத்தைவிட்டு எழுந்திருக்க சக்தியற்ற குடும்ப நடுத்தர குரங்குகளைப்பார்த்தாயா? உறுமுகிறதை! உறுமட்டும்; இந்தக் குரங்குகள் கடிக்காதா? கடிக்கப் பல்லில்லை! உ

பார்ப்பதெல்லாம் பச்சை!

இந்தியாவில் ஆயிரக்கணக்கான இந்தியர்கள்சுடப்பட்டனர். பதினாயிரக்கணக்கானவர் சிறை செய்யப்பட்டனர். ஸ்திரீகள், வயோதிகர், பிள்ளைகள், தாரதம்மியமின்றி தண்டிக்கப் பட்டார்கள். இதுபற்றி நம்மனோர் ஒருவரும், கண்ணீர் விடவில்லை. அமைதி, ஒழுங்கு சட்டம் என்று பறைசாற்றினர். உலகத்தை செவிடாக்கி வந்தோம். காங்கிரஸை கடினமான முறைகளில் தாக்கி அதை ஒழித்துவிட எண்ணியதில் பாச்சா பலிக்கவில்லை. ஜன பாதுகாப்புச் சட்டங்களென தெளிவாகக் கூறிக்கொண்டு அர்த்தமில்லா—ஞாயமற்ற 108, 109, 110 கிரிமினல் குற்றவாளிகளைக்கூட "மாலைக் கண்ணுக்கு பார்ப்பதெல்லாம்பச்சை" என்பதுபோல் காங்கிரஸ்காரர்களென்று, சிறுபிள்ளைத்தனமாக செய்தது தவறு; கருப்பு,

தட்டைக்கொண்டுதான் அவைகள் உசாவ வேண்டும். அந்தக் குரங்குகளின் பாச்சாவெல்லாம் நம் அஹிம்ஸை வீரர்களிடம் ஒரு எள்ளுப் பிரமாணம்கூட செல்லாது! வாலிபா! இதோ உன் மகன் அருமைச் சேயன் உன்னை வழியனுப்பிவிட்டான். இனி தைரியக்கனலால் மூட்டு! ஸ்பெஷல் புகை ரதம் எல்லா உலகிற்கும் அப்பாலுள்ள பரப்பிரமத்தினுடைய ஆனந்த உலகில் ஜோடிக்கப்பட்ட ஜெய் ரதம் புல்லர்களை கறுவருக்கும் புண்ணியர்களேறும் ரதம் 21,600 மிலேச்சர்களை இந்த ரதத்தின் மீது ஆரோகணித்துத்தான் அதம் பண்ணியதென அறி! அவ்வித மஹா, மஹா சிரேஷ்ட பொக்கைவாய் காந்திஜீகூட ஆச்சரியப்படும் ரதம்! ஏறு, அதோ! விடுதலைக்கொடி—ஜெய பேரிகை சப்தம்!

சென்று வா; உனது உள்ளார்ந்த விருப்பங்களை எல்லாம் ஒன்றாய்க் கட்டு. விடுதலைப் பேராவலாம், புருஷத் தத்துவத்தில் உன்னைப் பிணைத்துக்கொள். எவ்வளவு வேகமாய் ரதம் ஓடினாலும் விழமாட்டாய்! ஆனால் அங்கு மிங்கும் எட்டிப் பார்த்தாலோ பாதாளம்தான்! உஷார் !!

வெள்ளை என்ற பாகுபாடுகள் இருக்கும்வரையில் நாம் இம்சிக்கப்படுவோம் என, சாதாரண இந்தியர் தெரிந்துகொள்ள அவ்வளவுசுருசுருப்பாயும், முரட்டுத்தனமாகவும் வேலைகள் நடந்திருக்கிறது. இம்மாதம் 5உ கூட பர்டோலி ஆசிரமம் போலிசாரால் இழுக்கப்பட்டு சிதைவுற்றிருக்கிறது. இந்தியா நமக்கு உதவிபுரிந்த கருணையை நாம் மறவாதிருப்பதற்குப் பதிலாக நமது கொடிய செயலை அவர்கள் மனதில் தோன்றிக்கொண்டிருக்கச் செய்துவிட்டோம். இந்து—முஸ்லீம் பிரச்சனையைக்கிளப்பினதின் பயனாக மேமீ 16உ பதினாறுபேர் இறந்தும், 150 பேர் காயமடைந்திருப்பதாகவும் தெரிகிறது. சர்க்காரின் ஆப்தநண்பர்களாகிய வெங்கட்டராமய்யர், ராமசாமி அய்யர், ஸ்ரீனிவாச சாஸ்திரி முதலியவர்கள் சுதேசி இயக்கத்திற்கு ஆதரவு காட்டி இந்தியாவிலுள்ள வஸ்துக்களையே வாங்கவேண்டுமென நேர்மையான பிரசாரமும் செய்துவருகின்றனர். கபடநாடக சூஸ்திரதாரிகளாக. மதித்த லல்லியார்ட் ஜார்ஜ் போன்றவர், லண்டன் யுனிவர்சிட்டி கிளப்பில் செவ்வாயன்று பேசியதிலிருந்து காமன் சபையில் அன்னிய விஷயம் தக்கபடி பிரஸ்தாபிக்கப்பட்டு பரிசீலனை செய்யவில்லை என்றும் பொதுஜன உதவிக்கென நியமித்திருப்பவர்கள் சுயநலங் காட்டுவது முட்டாள்த்தனமானதென்றும்தெரிகிறது. லண்டன் மிஷ்டர் லாரன்ஸ் அவுஸ்மென் ஒரு பிரபல கவிஞ்ஞரும், இந்திய நேசர்களிலொருவரும் ஆவர். இவர் சாமுயல் ஹோருக்கு விடுத்த பகிரங்க கடிதத்தில் இந்தியாவைப்பற்றி தவறாகஅபிப்பிராயங்கூறிக்கொண்டிருப்பதற்கு ஆதாரங்காட்ட முடியுமா? வென்றும், இவ்வாறு இன்னும் கூறிக்கொண்டு போவதாயிருந்தால் இந்திபாவின் செல்லப்பிள்ளைகளென்பதை மறந்துவிட நேரிடுமென்பதாக எச்சரித்துள்ளார். லார்டு பீல் அயர்லாந்திலிருந்து இந்தியா கற்றுக்கொண்டதாகவும், கன்சர் வேட்டிவ் பள்ளிக்கூடத்தின் அநுபவத்தையொட்டிக் கத்துகிறார். இவரின் கூற்றுக்கு எல்லை இல்லை, இப்படிப்பட்ட பேர்வழிகளின் அர்த்தமற்ற வார்த்தைகளைப் பொருட்படுத்தாது; இரு தேசத்தினருக்கும் சமரசம் உண்டாக்கும் மார்க்கத்தை உண்டுபண்ணுவது நமது கடமை.

—லான்ஸ்பரி

ஏது ஞாயம்?

பேராசை—அதிக ஆசையென நினைத்துவிடாதிர்கள். முன்னதுகுறிப்பிட்டது ஒருவஸ்துவை இதாரிடமிருந்து அபகரித்துக்கொண்டு போவதற்கு பேராசை எனப்படும். அதிக ஆசை என்பது, தான் பெற்றிருக்கும் வஸ்துவைவிட மற்றொன்றையும் கிடைக்கச்செய்யும் முயற்சிக்கு அதிக ஆசையென நமது அகராதியிலுண்டு. பேராசை பிடித்தது கீழ்நாட்டில் ஜப்பானும், மேல்நாட்டில் பிரிட்டனும்தான். ஜெர்மனியையும் கூறலாம். ஆனால் அதுஉலக மகா யுத்தத்தில் அதன் பல் பிடுங்கப்பட்டுவிட்டது. கடன்கார தேசமாயிருக்கிறது. கண்கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் என்பதுபோல் அது இப்போது ஞான உபதேசம் செய்யமுற்படுகிறது. இருக்கட்டும்; ஆஸ்த்திரியா ஹங்கேரி விருத்தாப்பியதிசையடைந்திருக்கிறது. ருசியா உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் உள்ள பணக்காரர்களுக்கு சாவுமணியடிப்பதாலாகிய இயக்கத்தைத் தழுவி கைத்தொழில் சிறக்கும் நல்ல புதிய சேவையைக் கையாண்டு வருகிறது. ஆனால் கடவுள் இல்லை என்ற ஆராய்ச்சியிலிறங்கி நீச்சு நிலையில்லாமல் மிதக்கின்றன. சுற்றுப்புறங்களிலுள்ள வல்லரசுகள்கூட அதற்குப் பயப்பட—திகிலடைய—தனது பிரசாரத்தை உலகில்பரப்புவதற்குநினைக்கிறது. ஜப்பான் சீனாவை ஏமாற்றநினைத்து ராஜ தந்திரமெல்லாம் செய்துபார்த்து; முடிவில் போர்தொடுத்து சீனாவிற்கு கெட்ட எண்ணம் கொள்ளத்தக்க முறைகள் கையாளப்படுகிறது. இதன் சர்வாங்கத் திட்டங்களை உணர்ந்த சீனா, ஜப்பானிலிருந்து வரும் சாமான்களை பஹிஷ்கரிப்பதுதான் தக்க பீரங்கி எனக்கருதி பஹிஷ்கரிக்கிறது. அமெரிக்கர் நடுநிலை வகிக்கும் பரம ஞானியைப்போல் பாவனைகாட்டி தனது வியாபாரத்தைப் பெருக்க எல்லாமுயற்சியிலும் ஈடுபட்டு நிற்கிறது. இது பணக்கார தேசமாகையால் செல்வாக்கு மிதமிஞ்சியிருந்தபோதிலும் ஜப்பானோடு மட்டும் கசப்பாகவே இருந்துவருகிறது. பிரிட்டன் இங்கிலாந்து அவ்விதமெல்லாம் வெளிப்படையாக ஒன்றையும் காட்டிக்கொள்ளாதிருக்க, நரியின் செயலை அநுஷ்டிக்கப்பார்த்து மனப்பால் குடித்திருந்த பிரிட்டிஷ் பொதுமக்கள் நன்கறி

யும் வண்ணம் இந்தியா தனது சாத்விகப் போரைத் தொடங்கி நிரூபித்துவிட்டது. பிரபல ராஜ தந்திரிகள் மூட்டை மூட்டையாய்ப் பொய்யும், பித்தலாட்டமும் புகட்டிவிட்டும் இன்றைய இந்தியாவின் நிலைமையை—உண்மையை சில பிரிட்டிஷ் மக்கள் தெரிந்துகொண்டுவிட்டார்கள். இனி அவர்களுடைய யோசனையை சாமுயல் ஹோராவது, வில்லிங்டனாவது கேட்காதிருக்க முடியாது. பெரிய—பெரிய மகாநாடுகள், பொதுக்கூட்டங்கள் இந்தியாவைப்பற்றியோசிப்பதற்குகூடுகிறது. காமன் சபையில் அடிக்கடி கண்விழி பிதுங்கும்படி கேள்வி கேட்கப்படுகிறது. லங்காஷயர்துணி வியாபாரிகள் தங்களது அபார நஷ்டத்தைக் கண்டு ஓலமிடுகிறார்கள், எப்படியாவது இந்தியாவில் லங்காஷயர் சரக்கு விற்பனையாகும் வகையிலுள்ள ஒருதிட்டத்தை ஸ்திரப்படுத்தி சமரசமேற்படுத்தினால் காரியமுண்டெனநினைக்கிறார்கள். இந்த யோசனையை அன்னியவியாபாரத்தைஇந்தியா குடிகொள்ளச் செய்ய மறுக்கிறது. அதன் சுதந்தர நாடி துடித்துக் கொண்டே இருக்கிறது. இந்து-முஸ்லீம்பிரச்சினையை ஒரு காரணமாகக் கிளப்பி மழுப்பிவிட பார்க்கிறார்கள். இதன் அடிப்படையான விஷயத்தை அறிந்த இந்தியர்கள் நாங்கள் யாவரும் மதத்தில் வேறுபட்டாலும் காரியத்தில் ஒன்றுதானென காட்டுவதுஅதிக சுலபமுமாகும். இந்தக் கிளர்ச்சியைக்கொண்டு உருப்படாச் சீர்திருத்தம் கொடுக்கப்படில் இந்தியா ஏற்கபோவதில்லை. லோத்தின்கமிட்டி அறிக்கையும் பயன்படாமலே இருக்கும். சைமன் யதாஸ்திலிருந்து இந்தியர் பிரிட்டிஷார்களின் நோக்கத்தை அறிந்திராமலில்லை. அடக்குமுறையை வாபீஸ் வாங்கினாலன்றி சட்டமறுப்பு நிறுத்தப்படப்போவதில்லை. எது ஞாயம்?

—பிலிப்ஸ் கார்டின்

தேசோபகாரி

(வாரம்இரு முறை)

வருட சந்தா (இரங்கோன்)	ரூ	3	0	0
6 மாதம் ,,	,,	1	8	0
வருட சந்தா (வெளியூர்)	,,	4	8	0
6 மாதம் ,,	,,	2	12	0
மலாய்நாடு வருட சந்தா	,,	6	8	0

மண மகன்=மணப் பெண்!

பத்திரிகை உலகத்தில் மணமக்கள் விளம்பரங்கள் மலிந்துவிட்டது. சீர்திருத்த முறைகளில் இதுவும் ஒன்றாதலால் நாமும் முழுமனதுடன் ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளோம். மணமக்கள் விளம்பரங்களைத் தாங்கிவரும் நமது சகவர்த்தமானிகளுக்கு மட்டும் நாம் ஒன்று ஞாபகமூட்ட விரும்புகின்றோம். மணமகளை விரும்பியோ, மணமகனை விரும்பியோ விளம்பரம் செய்பவர்களின் யோக்கியதாம்ஸத்தைப் பற்றி முதலாவது நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். பின்பு விளம்பரம் செய்யப்படலாம். அதைவிடுத்து உள்ளூரில் விலைபோகாத—மணமகளோ, மணமகனோ வயிற்றை நிரப்ப கருதி விளம்பரப்படுத்திக்கொள்ள விரும்பும் மணமக்களின் விளம்பரங்களை விளம்பப்படுத்தாதிருப்பதுடன், காரியசித்தி யடைய விரும்பும் அவ்வயோக்கிய மணமக்களை பொது ஜனங்களுக்கும் தெரியப்படுத்திவிடவும் வேண்டும். இதுவே பத்திரிகா தருமமுமாகும்.

மணமக்களின் பேச்சைக்கேட்டு திடீரென விளம்பரம் செய்துவிடுவதால்; பத்திரிகை ஆசிரியர்கள் பொது ஜனங்களின் நம்பிக்கைக்கும், பொறுப்புக்கும் பாத்திரமுடையவர்களாயிருப்பதால் நம்மை நம்பி ஒருவரை ஒருவர் மணமுடித்துக்கொள்ள விரும்பிவிடுகிறார்கள். பத்திரிகைகளில் வெளியாகும் ஒவ்வொருவார்த்தைக்கும் ஆசிரியர்களே ஜவாப்தாரி என்று ஜனங்கள் கருதிவிடுவதால்; மணமக்கள் அழகிகள், படித்தவர்கள் என தாய், தந்தை, சகோதரர்கள் கூறியதைக்கொண்டு மட்டும் விளம்பரம் செய்வதற்கு ஆளாகக்கூடாது. அதுவுமன்றி விளம்பரம் செய்யப்படுபவர்களின் யோக்கியாம்ஸத்தை நேரில் சென்று தெரிந்துதான் விளம்பரத்திற் குட்படுத்தவேண்டும். அன்றேல் மூளிப் பெண் முக்காடு போட்டும், குறைக் கையன் சால்வையால்மறைத்த "கை நொண்டிக்கும், காதுபோன மூளிக்கும் கலியாணம் நடந்த கதையாய்—கனவாய் முடியுமென்பதை மீண்டும் ஞாபகப்படுத்துகிறோம்.

இன்று நம்ம மௌலானா!

பாஞ்சால சிங்கமெனப் பெயர்வகித்தது இந்திய சரித்திரத்தில் குறிப்பிடப்பட்ட மௌலானா சவுக்கத்தலி ஒருகாலத்தில் ஆங்கிலேயர்கள் ஒவ்வொருவர்களையும் விடாமல் ஆயுதந்தாங்கிக் கொலை செய்யவேண்டுமென்று வீரகர்ஜனை புரிந்த இவர் அதே ஆங்கிலேயர்களுக்கு உடம்பு பிடிக்கும் வேலையில் ஈடுபட்டுவிட்டார். இந்நெருக்கடியான நிலைமையில் இவர்போன்றோர் எதைச் சொன்னாலும், கவனிப்பாரில்லாதிருந்தாலும் சமீபத்தில் நடந்த பம்பாய் இந்து-முஸ்லிம் கலகத்திற்கு ஷவுக்கத்தலியே காரணஸ்தரென கூறுவதை எவரும் மறுக்கமுடியாது. இவர் ஒரு மேனாட்டு ஸ்திரீயை காதலிக்கின்றாரென்ற வதந்தி உலாவியபோதே நாம் சந்தேகிக்கப்பட்டதுண்டு. தற்கால இந்தியர்களின் முன்னேற்றத்திற்குத் தடைக் கல்லாக மேனாட்டு உளவுதெரிந்து சொல்லும் ஸ்திரீகளில் ஒருத்தி சமயவேஷம்பூண்டு நமது ஷவுக்கத்தலியை காதலித்தாள் என்பது ஸ்பஷ்டம். அவ்வாறு தீர்க்கமாகஇல்லாவிடினும், இவரின் செய்கைகளிலிருந்து சர்க்காரின் அடிபரவுதலில் நமதுஅலி மிருந்துவிட்டனரென்றேசொல்லுவோம். அந்நிய ஸ்திரீயின் காதலால் பீடிக்கப்பட்டிருக்கும் இவர் முஸ்லீம் தலைவரென்று சொல்லிக்கொள்வதும் ஆச்சரியமாகவே இருக்கிறது. சமீபமாக பொதுக்கூட்டத்தில் அரைடஜன் இந்துக்களுக்கிடையே பேசும்பொழுது சிறையிலுள்ள அரசியல் கைதிகளுக்கு ரொட்டியும், தண்ணீரும் கொடுக்காது சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபடுவதில்லை என்ற நிபந்தனை, ஒப்பந்தம் செய்யும்வரை பூட்டியே வைத்திருக்கவேண்டுமென்கிறார். இந்த புளியின் போக்குத்தானென்னே! இவர் இப்படிக் கூறுவதற்கு மேல்நாட்டுக் காதல் பித்துத்தான் காரணமென்பதை வாசகர்களே தெரிந்துகொள்ளட்டும். பூசை வேளையில் கரடியைவிட்டு ஓட்டும் ஷவுக்கத்தலிக்கு ஆண்டவன் தேசிய உணர்ச்சியை ஊட்டி தேச சேவையி லீடுபடும்படி செய்வானாக.

பர்மா பிரிவினை சூழ்ச்சி.

பர்யா தேசிய மகாசபை என அழைக்கப்படுவது ஜீ. ஸி. பீ. ஏ. ஒன்றுதான். கமிட்டி தலைவர்கள் ஊதோத்தைங், ஊசு, ஊச்சுட்லைங் மூவரும் மும்மூர்த்திகளாக விளங்கிவருகிறார்கள். பர்மியர்களின் ஆதரவும் இவர்களுக்குத்தான் அதிகம். இந்திய—பர்மிய பிரிவினை வேண்டாதாராகிய அன்னியரும், பர்மியகளில் பெரும்பாலரும் இம் மஹாசபைக்கு ஆதரவு அழிப்பவர்களே. பர்மா பிரிவினைக்கு இருபத்தொருவர் கக்ஷி என அழைக்கப்படுகிறது. சர்க்கார் சலுகை இதற்கு அதிகமிருப்பினும், சில கஞ்சித்தொட்டி இந்தியர்களும் உதவியாயிருப்பதுபோல் நடிக்கின்றனர். எவ்வளவு பேர்தான் சேர்ந்தாலும், பிரிவினை வேண்டாதார் தங்களது தீர்மானத்தை அழுத்தம்திருத்தமாய்க் கூறிவிட்டார்கள்.

எற்கனவே மாந்தலை மகாநாட்டின் பிரிவினை வேண்டாத தீர்மானத்தை பிரதமமந்திரி முதல், பர்மா கவர்னர் வரைக்கும் தெரிவித்துள்ளார்கள். சர்க்காரின் மனோபாவம் சென்றவருடத்திய கலகங்களையும், தற்சமயம் கூட பர்மியர்கள் அனுஷ்டிக்கும் துணிச்செயல்களையும் காரணமாகவைத்து மிகுந்த வாக்குரிமையுள்ள ஜனப் பொறுப்பை அலட்சியம் செய்துவிடமுடியாது. தலைவர்கள் அறிக்கையில் கண்டபடி பர்மியர்களுக்கு ஓட்டுரிமை இருப்பதில், வித்தியாசப்படாமல் கிராமாதிகாரிகள் ஓட்டரின் ஜாப்தாவை தயாரிக்கும் முறையில் கூட தவறிழைத்து வருகிறார்களென்பதுபற்றியும் தாத்தமிடா வரியைப்பற்றியும் ஜனங்களுக்கிருக்கும் பெர்ருப்பை நன்கு தெரியப்படுத்தியும், பர்மாவை நன்னிலைமைக்கு—வறுமையைப் போக்குவதற்கு இயன்ற அளவு உதவி செய்கின்றவர்களையும் சேர்த்துக்கொண்டு பிரிவினைச்சூழ்ச்சியை வேரறுக்கக் கிளம்பியிருக்கும் தலைவர்கள் வெற்றிபெறுவார்களாக. இடையே விஷமிகளும், விஷமப் பத்திரிகைகளும் கயிறு திரித்துவிட்டபோதிலும் இந்தியர்கள் பரமசாதுக்கள் என்றமுறையில் நியாயக் கட்சியில் சேர்ந்தே தீரவேண்டுமாகையால் சிறிது துவேஷங்கூட இல்லாமல் பர்மியத் தலைவர்கள் ஜீ. ஸி. பீ. ஏ. தலைவர்களோடு ஒத்துழைப்பதே நேர்மையான பாட்டை—பாதையாகும்.

அணைகரைக்கும் கூக்குரல்:

உல்லியம் ஸ்மித்

நாம் அதிகப்படியான நடவடிக்கைகளை இந்தியாவிலிருந்து உலகத்திற்கே பாடங்கற்பிக்க ஏதுவாயிருக்கிறது. பிரிட்டிஷார் இந்தியாவைப்பற்றி இன்னும் தெளிவாய் உணர்ந்துகொள்ளவில்லை. சந்தர்ப்பத்திற்கேற்ற அரசியல் போக்கை நுழைத்து அதற்கு ஆதாரவாக இந்திய சரித்திரம் எழுதப்பட்டது—வரையப்பட்டிருக்கிறது, நான் நினைக்கிறபடி அநேக பாஷைகளையும், மத போதனைகளையு முடைய தேசத்தில் சிறிய, சிறிய சமூகக் கலகங்கள் நடக்கவே செய்யும். இதை ஆதாரமாகக்கொண்டு பெருத்த ஜனத்திரளை மூடத்தனத்தி லாழ்த்துவது மனித சுபாவமல்ல. வெளிப்படையான அநேக பிரச்சினைகளை நமது பார்வையில் தீர்க்காலோசனையில் அலசிப்பார்ப்பதில்சொல்லுவது இயற்கையில் தத்துவத்தை ஒட்டியே இருக்கும். சுயநலம் புகுத்தாத எந்தக் காரியத்திலும் ஆத்மசக்தி திகழ்ந்துகொண்டிருப்பதைக் காணலாம். ஆனால் ருசுப்பிக்கவியலாததாயிருக்கும். பிரிட்டிஷாரின் அடிப்படையான யோசனை—அவர்கள் போட்டிருக்கும் அணை, எவ்வித பெருக்கெடுப்பும் உடைத்துவிடாத பலங்கொண்டிருந்தாலும் தேச மஹா ஜனங்களின் கூக்குரல்—எண்ணங்கள் அலைகளாக மோதி, மோதி அணையைக் கரைத்துவிடும். அதுபோலவேதான் இந்தியாவும் சிறிது சிறிதாய் அரசியலில் மெதுவாகஈடுபட்டே வந்து பிரிட்டனை திணறவைத்துவிட்டது. உண்மையான சாக்ஷியாக நாம்கூறுவதென்றால் இந்தியாவிற்கு அதன் நன்மைக்கான சீர்திருத்தம் வழங்காவிடின் சுயாட்சியை—சுதர்மத்தை—தனக்குத் தானே ஏற்படுத்திக்கொள்ளும்செய்கையில் இந்தியா இறங்கிவிடில் பிரிட்டனுக்கு மகா ஆபத்தேற்படுவது திண்ணம். சுயேச்சைத் தாகத்தை எந்த முட்டாளும் அடக்கிக்கொள் என்று சொல்ல முற்படான். நாம் ஒரு காலத்தில் இந்தியாவில் இந்தியருடைய ஆக்ஷி திறமையைக் கண்டு வெட்கமடையுங் காலம் வரும் அக்காலத்தில் நாம் செய்த—புரிந்திருந்த கொடிய செயல்களை நினைவுகூட்டி நம்மை ஏளனஞ் செய்யாவகையில் நடந்துகொள்வதவசியம். எனது சொற்ப அறிவுக்கு எட்டியபடி இந்தியனும், ஐரோப்பியனும் சுகமாக வாழ்ந்து சுகிக்கக்கூடிய வாழ்க்கை நிலையை அமைக்கத் தெரிந்துகொள்ளவேண்டும். நாம் இந்தியாவுக்கு என்னென்னவோ செய்துவிட்டோமென்று கர்வங்கொள்ளுவது அறிவீனமேயாகும். இந்தியாவிற்கு இரட்டையாட்சி பயனற்றதென அவர்கள் பன்முறை சொல்லியதில் தண்டனையுமடைந்திருக்கிறார்கள். எக்காலத்தும் தந்திரச் செயல்களையே ஆற்றுகின்ற பிரிட்டன், தன் மதிப்புடனும், கௌரவமாகவும் பேசிவரும் அதிகாரிகள் அவர்களின் மிதமிஞ்சிய செயல்களுக்காக வெட்கப்படுவதில்லை. ஒரு இயக்கம் தனது பலம், கூட்டுறவு, ஆதரவு முதலியவைகளை பொருட்படுத்தாது தலையெடுப்பதற்கில்லை அவ்வியக்கத்தை சமாச பாவனையாலேயே ஒழுங்குபடுத்தலா மென்பதை அறியவேண்டும். ஐரோப்பியர்கள் தங்களுடைய நாட்டின் கௌரவத்தைப்பற்றிய சங்கங்கள், சுஸைட்டிகள்மூலம் தீர்மானசரத்தின்படி ஒத்துழையாத் திட்டத்தை அமிழ்த்திவிட நினைப்பது பலிக்குமா? சிலர் இந்தியா போதுமான கல்வியைப் பெற்றிருக்கவில்லை; பிரிட்டனோடு சம்பந்தம் வைத்திருப்பதால் மட்டும் முன்னேற்ற மடையலாமென கூறிக்கொண்டு திரிவது சரியல்ல! அப்படிக் கூறுபவர்கள் தங்களது அனுபவமின்மையையும், தன்னலம் பற்றியதையும் ரூபிப்பது போன்றிருக்கும். காங்கிரஸ் பெருத்த அரசியல் கட்சியினர் சேர்ந்தேசீய மஹாசபை, செல்வாக்கும் அதிகம் அதன் நோக்கம் நேர்மையானதும், ஒழுங்கானதுமான பாட்டையில் செலுத்தப்படும் அறிவுநூல் பொருப்புள்ள இந்தியர்கள் எவரேனும் காங்கிரஸில் சம்பந்தம் வைத்துக்கொள்ளவில்லை எனலும் தற்காலிகமாயுள்ள அரசியலை உத்தியோகமாகப் பாவிப்பவர்கள்தான் சட்டமறுப்பில்—சுதந்தரப் போரில் ஈடுபடுகிறார்களென்று கூறுவது அசட்டுத்தனமாகும். இவ்வுண்மை தத்துவத்தை பிரதம மந்திரி, இந்தியா மந்திரி, வைசிராய், கவர்னர் முதலானவர்களாலும் எதிர்க்கட்டும்; அல்லது தக்க காரணம் சொல்லட்டும்.

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுஎண் 245] (1922-ஷ ஸ்தாபிதம்.) 16 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இருமுறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஸு (25-5-32) வைகாசி-மீ 12உ புதன்கிழமை

பிரிட்டிஷ் ஆட்சியின் யோக்கியதை!

பிரிட்டிஷ் ஆட்சியின் யோக்கியதையைப் பற்றி பலர் பல்லவி பாடுகிறார்கள். ஆயினும் பிரிட்டிஷாரின் வார்த்தையினின்றே அதன் யோக்கியதையைத் தெரிந்துகொள்ளுவது இன்னும் விசேஷமாகையால் மாஜி இந்தியா மந்திரியாயிருந்த மிஸ்டர் லான்ஸ்பரி கூறுவதிலிருந்து பிரிட்டிஷாரின் யோக்கியதை ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது. பிரிட்டிஷார் இந்தியாவைக்கைப்பற்றுமுன்பு இந்தியர் சோம்பேறிகளாகவும், ஒழுக்க மற்றவர்களாகவும் இருந்தார்களென்றும் சிலர் சொல்லுகிறார்கள். சோம்பேறிகளும், சுயநலப் புலிகளுமான தற்கால கவர்னர்கள் அந்தக்கால இந்திய மன்னர்களைவிட சிறந்தவர்களென்றும், கருணையுள்ளவர்களென்றுங்கூட சொல்லப்படுகிறது. மொகல் சக்கரவர்த்திகள் சுகபோகத்திலும், டம்பத்திலும் ஈடுபட்டதால் குடிகள் வறுமையால் தவித்தார்களாம்! அவர்களுக்கும் முன்னிருந்த மன்னர்கள் கொடுங்கோல் மன்னர்களாயும், காம வெறிகொண்டவர்களாயுமிருந்தார்களாம்: பிரிட்டிஷ் பத்திரிகைகள் எல்லாம் நமக்கு அனுகூலமாகவும் பொதுஜனங்கள் நம்மிடம் பட்சமுடையவர்களாகவும் இருக்கையில் இந்தியர்களைத் தூற்றி நம்மவர்களை புகழ்வது மிகவும் லேசானவேலை. நம்முடைய புகழை நாமே பாடுகிறோம். அதை மறுக்க ஒருவரையும் காணவுமில்லை. நமக்குமுன் அரசாண்டவர்களைப்பற்றி யாராவது அனுகூலமாக எழுதவோ, பேசவோசெய்தால் அதற்கு ஆதாரமே கிடையாது. 14-வது நூற்றாண்டில் நடைபெற்ற மொகலாயர் ஆட்சியை 19-வது நூற்றாண்டில் பிரிட்டிஷ் ஆட்சியோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்கிறோம். நாம் எள்ளளவேனும் நியாய உணர்ச்சியும், உண்மையுமுடையவர்களாயிருந்தால் முஸ்லீம்கள், இந்தியாவை ஆக்கிரமித்ததையும், நார்மன்கள் இங்கிலாந்தைஆக்கிரமித்ததையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்: முஸ்லிம் அரசர்களை அக்காலத்தியமேனாட்டு அரசர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அக்காலத்தில் இந்தியாவில் நடைபெற்ற யுத்தங்களை நாம், பிரஞ்சுக்காரரோடு செய்த யுத்தங்களோடும், கிறிஸ்தவ மன்னர்கள் தொடுத்த மதப் போர்களோடும் சீர்தூக்கிப்பார்க்கவேண்டும். முஸ்லீம் அரசாட்சியால் ஹிந்துக்களுக்கு நேர்ந்த பலாபலன்களையும், நார்மன் அரசாட்சியால் ஆங்கிலோ ஜாக்ஸன்கள் நிலைமை எவ்வாறிருந்தது? நீதி பரிபாலன உத்தியோகஸ்தர்கள் அநீதிக்கு உறைவிடமாயிருந்தார்கள். நியாயம்வழங்க நியமனம்பெற்ற யாஜிஸ்ட்ரேட்டுகள் கன்னெஞ்சர்களாகவும், இருந்தனர். பணத்துக்காக எதுவும்செய்ய அவர்கள் பின்வாங்கவில்லை. நிர்வாக உத்தியோகஸ்தர்களெல்லாம்; சிற்றின்பப் பிரியர்களாயிருந்தார்கள். அவர்களுக்குப் பயந்து ஸ்காட்லாந்தில் ஒரு அரசிளங்குமரி சன்னியாசி உடை தரித்து தன் கற்பை காத்துவந்தாளாம்.

முஸ்லிம் அரசாட்சியிலும் பல அக்கிரமங்களும், அநீதிகளும் நடந்திருப்பது உண்மையே ஆனால் பூர்வீக கிறிஸ்தவ அரசர்கள் காலத்தும் அத்தகைய கொடுமைகள் நடந்துதான் இருக்கின்றன. கிறிஸ்தவ அரசர்கள் புண்ணிய யுத்தகாலத்தில் எருசலேம் நகரத்தைமுதன்முதல் கைப்பற்றியபொழுது அங்கிருந்த 40,000 வீரர்களையும் தயவு தாட்சண்யமின்றி கொலை

ஆளுவோருக்கே வெட்கம்!

நாம் ஆரம்பத்தில் சொல்லியபடி அடக்கு முறைகள் தீர்க்கபுத்தியுடன் அநுமதிக்கப்பெற்றிருக்கிறது. இதைப்பற்றி அநுபவ சாத்தியமான நடவடிக்கையின் மூலம் தெளிவாகக் கூறவிருப்பினும், கடைசித் தீர்மானமாக சாமுயல் ஹோரின் மனச்சாட்சியாம் உத்தரவெனவும் கூறலாம். ஒருவனது மனசாட்சி அநேகருக்குப் பிடியாதிருக்கின் அறிஞர்கள் ஏற்பதற்கில்லை. இது மிகவும் அங்கீகரிப்பதான ஒரு விஷயம். சர்க்கார் தனது முக்கியபிரகடனத்தில் பொதுஜன பாதுகாப்பு மைனாரிட்டி உரிமை முதலியவைகளைக் காரணமாகக் கூறிக்கொண்டு அத்துமீறி போய்க்கொண்டிருந்தால் அதற்கும் தட்டு தடங்கலுண்டென்பதை பின்னால் அறியக்கிடக்கிறது. அதிக வேகமாய் ஓடிக்கொண்டிருக்கும் நீரோட்டத்திற்கும், சிற்சில சமயங்களில் அவசரமென்பது தனிப்பட்ட நபர்களுக்கன்றி ஏகோபித்த ஒரு கூட்டத்தாருக்கு தீங்கிழைப்பதன் காரணமாக அவசரமென்று வைத்துக்கொள்வதில் அர்த்தமிருக்கிறதா? வைசிராய்க்கு இந்திய நிர்வாகத் திட்டத்தின் சகல ஆதிக்கமுமிருந்தும் அதிகப்படியாக விசேஷ அதிகாரமொன்று இருப்பதாயின் ஜனதர்ம ஆட்சிக்கு நேர்மையுண்டா? அடக்குமுறையைப்பற்றி வருகிற ஜூன், ஜூலை, டிசம்பர் மாதம்வரையில் இருக்குமென்று ஜோதிடஞ் சொல்லவில்லை. அது ஒரு போக்கைக் காணும்வரை இருக்கலாம். ஆனால் எவ்வித கட்டுப்பாட்டையும் நிதரிசனமாக உட்படுத்தாது தனது கோரச் செயலை பிறர் மெச்சசெய்வதென்றால் அது கூடுமா? அவசரச் சட்டங்களுக்கு அம்சபூதராகச் சிலர்இருக்கலாம். அப்படிப்பட்டவரை நன்குகண்டுபிடித்து தண்டிக்கலாமே;தவிர நிரபராதிகளையும், நியாயவான்களையும் தண்டித்தல் அறிவுச் செய்கையல்ல.

இந்திய அரசியல் கசப்பானதும், சிக்கலானதுமாய் இருக்கலாம். அதை இந்தியத் தலைவர்களும் தெரிந்தே இருப்பார்கள், காலக்கிரமங்களில் எவ்வாறு அநுஷ்டிப்பதுஎன்பதை சர்க்கார், இந்தியத் தலைவர்களோடு கலந்தாலோசிக்க வெட்கக்கேடாக நினைப்பதுதான் தடங்கலாக இருக்கிறது. இந்தத் தவரான எண்ணத்தை சர்க்கார் கைவிடுமாயின் சமரசம் வெகு சமீபத்திலிருக்கிறது. இந்தியப் பொருளாதார நிலை நிதானமடைவதற் கேதுவாயும் சமூக கலகங்களுமில்லாமல் இருக்கும். சர்க்கார் தனக்கு பலமிருக்கிறதாக நினைத்தால், ஜனப்பெருக்கம் எதிர்க்கத்தானே நேரிடுமென்பதை இவர்கள் கவனிக்கிறதில்லை. ஜனநாயக ஆட்சி நிகழும் இக்காலத்தில் இந்தியாமட்டும் தலை குனிந்துகொண்டிருப்பது ஆளப்படுவோரைவிட ஆள்வோருக்குத்தான் வெட்கம்.

—பி. ஜி, ஹார்னிமென்

செய்யப்பட்டனர். தாய்மாரும், குழந்தைகளும்கூட ஈவிரக்கமின்றி ஆயிரக்கணக்காக வதைக்கப்பட்டனர். எருசலேம் வீதிகளெல்லாம் இரத்த ஆறு ஓடிற்று. 12-வது நூற்றாண்டில் ஏழாவது லூயிஸ் என்னும் மன்னன் வித்ரி நகரத்தைபிடித்தபொழுது அந்நகரத்தை நெருப்புக் கிரையாக்கி நாசஞ்செய்தான் அதே காலத்தில் இங்கிலாந்தில் நடைபெற்ற ஸ்டீபன் யுத்தக் கொடுமையினால் நாடுமுழுதும் பயிர்செய்வாரற்று தரிசாகக் கிடந்தது. குடியானவர்கள் மாடு, கன்று, மேழி, கலப்பை முதலியவைகளையும் அப்படியே விட்டுவிட்டு உயிர்தப்பும் பொருட்டு ஓடி ஒழித்துக்கொண்டனர். 14-வது நூற்றாண்டில் பிரஞ்சுக்காரரோடு யுத்தம் செய்தபோது நிகழ்ந்த பயங்கர சம்பவங்களைப்போல் ஒருகாலத்தும் நிகழ்ந்ததில்லை. முஸ்லிம் அரசர்கள் கொடுமைகள் பல செய்திருந்தபோதிலும், நன்மைகளும்செய்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் கிறிஸ்தவ அரசர்கள் தீமையைத் தவிர நன்மை ஏதாவது செய்ததாகச் சொல்லக்கூடுமா? இந்தியாவை எந்நாளும் அடிமைப்படுத்தி வைத்துக்கொள்ளும் பொருட்டே, இந்தியர்கள் இந்தியாவை ஆளுவதற்கு தகுதியற்றவர்கள் பிரிட்டிஷார் இந்தியாவில் இல்லாதொழிவார்களானால் இந்து-முஸ்லிம்கள் சண்டையிட்டுக்கொண்டு மாண்டு போவார்கள், என தந்திரச் சொற்களைச்சொல்லி இயந்திரங்களை உபயோகிப்பதே சகஜமாகிவிட்டது.

உடல் நலங் கருதி!

நமது ஆசிரியர் சிறைவாசத்திலிருந்துவந்தது முதல் ஓய்வு ஒழிவில்லாமல் வேலைசெய்துவந்தபடியால் "உடல்நலங் கருதி" சில வாரங்களுக்கு நாட்டுப்புறங்களில் தங்கிவருகிறாரென்பதை "தேசோபகாரி" அன்பர்களுக்கு ஞாபகப்படுத்துகின்றோம். (மானேஜர்.)

பம்பாய் இரத்தப்பெருக்கு!

பம்பாயில் இந்து முஸ்லிம் கலகமென்னைப்பட்ட இரத்த வெறிபிடித்த பூகம் விசித்திர குணானுபவமுடையதாய்த் தன்னை யெக்கியத்திலிருந்து சிருஷ்டித்தபுரோகிதர்களின்மாந்திரீக சத்துக்குகூட அஞ்சாமல்—கட்டுப்படாமல் அநேகஉயிர்களைக்கொன்றும், அநேகரைப் படுகாயர்படச் செய்தும், நகரமெங்கும் நிலைகுலையும்படியும் செய்துகொண்டிருக்கிறது. இதைப்பற்றி அநுதாபங்காட்டி; பாரபக்ஷமற்றுப்பேசுவோர் துவேஷிக்கப்படுகின்றனர். நடுநிலைமையுடன் விஷயத்தைப் பரிசீலனைசெய்து முடிவுக்குவர ஏற்பட்ட சமரசக் கமிட்டியை நிராகரித்துவிட்டனர். சர்க்கார் சமயா சமயங்களில் துப்பாக்கிப் பிரயோகமும் செய்திருக்கின்றனர். இந்தியாவில் புரட்சி அதிகம் பரவியிருக்கிறதென முறசடித்துக்கொண்டிருந்த ஆசாமிகளுக்கு இது ஒரு மத்தளமாகப் பாவிக்கப்பட்டு இந்தியா சுதந்தரமடைவதற்குரிய பக்குவமாகவில்லை; என்று ஊதப்படும் ஒத்துக்கு, பம்பாய் கலகமும் மத்தளமாக அடிப்பதற்கு ஹேதுவாகிறது.

சனிக்கிழமை யன்று மத்தியானத்திற்கு மேல் ஒரு ஹிந்துக் கடைக்காரனுக்கும், சில பக்கிர்களுக்கும் சச்சரவு வளர்ந்து சிறிது நேரத்திற்கெல்லாம் 1929-ஞு நடந்தகலகத்தைப் போலாகிவிட்டது. பம்பாய் வைத்தியசாலையில் 16-ந் தேதி 10-மணிவரை 300 பேர் படுகாயமுண்டும், 20 பேர் மரணாவஸ்தையிலிருப்பதாயும் சீக்கிரத்தில் குற்றுயிரிலிருக்கும் இன்னும் அநேகரை வைத்தியசாலைக்குக் கொண்டு வரலாமென்றும் யூகிக்கப்படுகிறது.

வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட காயம்பட்டவர்களில், அதிகப்படியானவர்கள் இந்துக்கள்தான் (மெஜாரிட்டி) அதிகப்பட்ட காயமடைந்தவர்களைக் கொண்டுவரும்போதே இறந்துவிட்டனர். அநேக காயங்கள் போலீஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தால் தான் ஏற்பட்டிருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமை நல்பஜாரில் ஒருஹிந்து ஸ்திரீ முஸ்லிம்களால் தாக்குண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு இறந்துவிட்டனள். பெயர்போன அநேக இந்துக்களின் கடைகள், மளிகைகள் நெருப்பிடப்பட்டன. சந்தர்ப்பத்திற் கேற்றபடி துப்பாக்கிக்குண்டுகளை எரிந்த போலீஸ் படைகளை ஒரு பெரிய கலகக்கூட்டம் தாக்கி போலீஸ்காரன்களுக்கும் காயமிருக்கிறதாயின், பிரதம அதிகாரிகள் ஒருங்கே இருக்கக்கூடிய பம்பாய் நகரத்திலே இரத்தம் சிந்திக்கொண்டிருப்பதற்கு காரணஸ்தர் யார்? பாதுகாப்புக்காக தருவிக்கப்பட்ட ஐரிஷ்படை ஏன்? பூர்வாங்கமான கலகம்நடைபெறுதவாறு இருந்திருக்கக்கூடாது? இந்து-முஸ்லிம் கலகங்கள் எத்தனையோ தடவை நடந்திருக்கிறது. இப்படி ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்தும், நூற்றுக்கணக்கானவர் இறந்திருப்பதாகக் கேள்விப்பட்டிருப்போமா? இவ்வளவு கரியநிறமான கொடிய எண்ணங்கள் இந்து-முஸ்லிம்களிடத்தில் ஏற்படுவதற்கு முன்னெச்சரிக்கையான ஆதாவு இருந்திருக்கவே வேண்டும். —குரானிக்கல்

இந்தியாவின் தலைவிதி!

பஞ்சைசத்தனமாக—அதிக கேவலமுள்ள மூர்க்கச் செயல்களைப் புரிபவர்களால் தர்ம தேவதையின் அடிச்சுவட்டைப் பற்றியிருப்பவனை அசைக்கமுடியாது. சட்ட பூர்வமான ஆட்சியென்று வாசாமட்டில் கூறிக்கொண்டு நாம் நினைத்தபடிக்கெல்லாம் இந்தியரைத்தெண்டிப்பதென்று லென்ன? எல்வளவு காலம் பொருக்கமுடியுமோ அவ்வளவுகாலம்வரை பொருத்து அநுசரித்து, கண்ணீர்விட்டுக் கெஞ்சிக் கும்பிட்டுப் பார்த்தனர். பிரிட்டனின் மனப்பான்மை சிறிதும் மாரவில்லை. கொடுங்கோல்ஆட்சியே மிகுத்துவந்தது. இந்தியாவின் தலைவிதி இந்தியர்கள் வசம்தானிருக்கவேண்டும். அல்லாத அன்னியர் வசமிருக்கின் நசுக்கப்படுவோமென்று நன்கு உணர்ந்த இந்தியர் வில்லிங்டனுக்கு சமரச முறையில் கடிதம் விடுத்த உதார குணத்தையாவது பிரிட்டிஷ் சர்க்கார் அறிந்திருக்கக்கூடாதா? நமக்கு வலுவிருக்கிறதென்று, ஏழை இந்தியரைக் கரை சேர்க்கவிருக்கும் ஒரு தெய்வீக புருஷனை பெட்டியிலடைப்பதுபோல் அடைத்துவைத்திருப்பது நமது மடமையே யல்லாது வேறென்ன? மாணிக்கம் அல்லது நெருப்புப் பந்தை எந்தப் பெட்டிக்குள் போட்டு பூட்டி இருந்தாலும் அதன் ஒளி குன்றுமா! காந்திமிழவனை அடைத்து வைத்திருப்பது இதுபோலல்லவா? சாமுயல்ஹோர் நபமவர், கேட்கும் கேள்விகளுக்கு

(தொடர்ச்சி 6-வது பக்கம்)

சாமுயல் ஹோர்—லான்ஸ்பரி ஆட்சி!

இந்தியமக்களின் பரிதாபகரமான தற்காலநிலை ஒவ்வொரு ஆங்கிலேயனையும் வசீகரித்து நிற்கிறது. எவருக்கோவென வாளாதிருந்த அநுபவசாலிகள்கூட இந்திய போராட்டத்தில்—சட்டமறுப்புப் போரில்—சுதந்தர இயக்கத்தில் பங்கெடுத்துக்கொள்ள முற்படுகின்றனர், இவ்விதம் இந்தியர் விஷயத்திலீடுபடுவதெல்லாம், தன்னலம்பற்றியேயென அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லுவோம். நான் பலதடவையுங் கேட்ட கேள்வி அர்த்தமற்றதென சிலர் உறைக்கின்றனர். நான் மந்திரியாகவிருந்த காலத்தில் இம்மாதிரி அதிக அடக்குமுறைகள் நடந்ததாக எனக்கு ஞாபகமில்லை. எனது கட்சியும் அரசியலில் கடின குணம்காட்டியதில்லை. எனது கட்சியை வீழ்த்திவிட வேண்டுமென்று கன்சர்வேட்டிவ்கள் நினைத்ததுண்டு. அவர்கள் பழிகூறுவார்களென்ற ஒரே எண்ணத்தில்தான் நாங்கள் சிற்சில கடினமான நடவடிக்கையை அநுஷ்டித்திருந்தபோதிலும் இப்போதுள்ள மானபங்கமாக இந்தியரை அவமதிப்பதற்கான செயல்களெதுவும் புரிந்ததில்லை. காங்கிரஸ்காரர் புரட்சிக்கலகம் விளைவிப்பவர்கள் எனும் வதந்தியே அக்காலத்தில் நிலவியது. சீர்திருத்தம் வழங்கியபோதிலும், நிர்வகிக்குந் திறமை இந்தியர்களுக்கில்லை; எனப் பறைசாற்றப்பட்டது. இந்திய சர்க்காரின் அபத்தமான செய்திகளைக் கொண்டே நான் எனது அபிப்பிராயத்தைத் தெரிவித்திருப்பேனாகையால், அதனை ஆதாரமாகக் கொண்டு என்னையோ, எனது கட்சியையோ தூற்றுவதற்கில்லை. நண்பர் சாமுயல்ஹோர் ஆட்சி. எனது ஆட்சியைவிட அவ்வளவு கொடுமை இல்லை எனில்; இருக்கலாம். தேசமக்களை சீர்படுத்த—நல்ல வழியில் திருப்ப அத்தேச ஜனங்களின் அன்பைப் பெற்றிருந்தாலன்றி எந்தவித செயல்களாலும், மனத் திருப்தியாகா. எனது ஆட்சியில் தொழிற்கட்சியினர், இந்தியாவிற்கு நன்மையைச் சாதித்துவிடுவரென்று இந்தியர்கள் கொண்டிருந்த தப்பெண்ணத்தை குறைகூற முடியவில்லை.

நடந்துபோனதை சாமுயல் ஹோர் சொல்லிக்கொண்டு போனால், நெருக்கடியான நிலையைச் சமாளிப்பதெப்படி? இவர் இவருடைய கட்சினரின் தனி ஹோதாவில் ஒருநன்மையும் செய்யவியலாதென்பதை இந்தியத் தலைவர்களறிந்ததே! ஆயினும், சந்தர்ப்பத்துக்கேற்ற சமாளிப்பு, பொறுப்புள்ள அதிகாரிக்கு இருக்கவேண்டியதாயினும் முழுப் பூசிணிக்காயை சோற்றில் மறைக்கப்புகுந்து திருட்டுப்பட்டமும், அவநம்பிக்கையும் பிரிட்டிஷார் இந்தியர்கள்மீது போடுதற்கு இடங்கொடுப்பதுதான் வெறுக்கத்தக்கதாகும். லார்டு சாங்கி தயாரித்துக்கொண்டிருக்கும் சீர்திருத்தம் எவ்வகையான நன்மையுடையதாயினும், நேருதிட்டத்தை தழுவியில்லாமலிருந்தால், இந்தியர்களில் ஒரு பகுதியினர் ஒப்புக்கொண்டபோதிலும், நிர்வகிப்பது சர்வ சாதாரணமல்ல? சுதேச மன்னர்களின் ஒத்துழைப்பையோ முஸ்லிம்களில் ஒரு சில கட்சியினுதாவினாலோ மிதவாத நடனத்தாலோ காங்கிரசுக்காரரன்றி, காந்தி சம்பந்தமில்லா யாதொரு நன்மையையும் இந்தியா ஏற்பதற்கில்லை, ஆதலால் காந்திஜீ உள்பட காங்கிரஸ் தலைவர்களை விடுதலைசெய்து சர்வகட்சி சமரச மஹாநாடு கூட்டி ஆலோசிப்பது புத்திசாலித்தனமாகும்.

—லான்ஸ்பரி

சொற்ப ஆசை வையாதே!

இந்திய புராதன வழக்கங்களிலொன்றாகிய தீபாவளிப் பண்டிகையை எடுத்துக்கொண்டு ஆராயின், நராகாசுரனை ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா சம்காரம் செய்த நாளைக் குறிப்பிடுகிறது. ஆனால் நரகாசுரனை ஸ்ரீமதி சத்தியபாமா கொன்றிருப்பதாகக் கதை கட்டி இருந்தபோதிலும் நரகாசுரன் ஒரு மிலேச்சத்தன்மையுடையவன். தர்மமுறை தவறினவன். மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவனென்பதை மறுக்க முடியாமலுமிருக்கிறது. அவன் செய்துவந்த கொடிய செய்கைகளைப் பல மகரிஷிகள் அநேக தடவை ஸ்ரீ கிருஷ்ணனிடம் முறையிட்டபோதிலும் இராஜதர்ம பரிபாக சுபாவத்தை மீராத கட்டளை ஏற்படுத்தியுள்ள ஸ்ரீ கிருஷ்ணன் தனது ஆளுகைக்குட்பட்டுள்ள ஸ்திரீ புருஷர் யாவருக்கும் நரகாசுரன்மீது வெறுப்படையும்வரை பொறுமையோடிருந்திருக்கின்றனர், அரக்கனின் செயல் மிஞ்சிவிட்டது. என்பதறிந்த கிருஷ்ணனுடைய முகத்தில் கோ

பாக்கினி ஜொலித்தது. அருகிலிருந்த சத்யபாமா கண்டாள். தனது கணவனை அமர்த்தி பலாத்காரம், மிருகசெயல், ராக்ஷதக்கொடுமையை ஸ்திரீகள்கூட எதிர்த்து வெற்றிபெற்றிருக்கின்றனரென்னும் சரித்திரம் என்பேரால் உண்டாக கிருபை புரியவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க வருங்காலத்திய இயல்பை நன்கு அறிந்த கிருஷ்ணன் அதற்கிசைந்தார். சத்தியபாமா சென்று நரகாசுரனைக் கொன்று வெற்றிபெற்ற தினத்தையே தீபாவளியென்று சொல்லப்படுகிறது. வருஷாவருஷம் அதே தினத்தில் சிறப்புவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் பூர்வாங்கமான அபிப்பிராயம் வேறு. அதாவது சத்தியபாமா நரகாசுரன்மீது யுத்தத்திற்குப் புறப்பட்டபோது நகரத்தில் எல்லா இடங்களிலும் வெளிச்சம் போடப்பட்டது. அவ்வெளிச்சம் எதற்கு? நகரத்திலுள்ள ஒவ்வொருவருடைய உள்ளத்திலுள்ள பயத்தை—மடமையை-அந்தகாரத்தைப் போக்க, ஆத்ம பிரகாசத்தைத் தோற்றுவிக்க அநுஷ்டிப்பதன்றி வேறல்ல.

இன்றைய விடுதலை முயற்சியி லீடுபட உள்ளத் தெளிவும், மனத் தூய்மையும், உற்சாகமும் வேண்டும். உற்சாகமில்லாவிடில் எந்தத் தொழிலும் விருத்தியடைவதில்லை. 1921-வருஷத்து சட்டமறுப்புப் போரில் ஒரு மாணவன் 9மாதம் தண்டிக்கப்பட்டிருந்தான். அவன் ஜெயிலிலிருக்கும்போது ஓயாது—மறவாது கடவுளின் திருநாமத்தையே சொல்லிக்கொண்டிருந்ததாகவும், அவன்சிறைச்சாலையில் ஒன்பது மாதமும் உன்னதமான சந்தோஷத்துக்கிடையே வசித்துவந்ததாகவும் சொல்லி இருக்கிறான். ஆகவே சுதந்தர இயக்கத்திலீடுபடுகிறவர்கள், பரந்த உள்ளமும், சகிப்புத்தன்மையும் பெற்றிருப்பதோடு, தனது செயலால் உண்டாகும் பயனிலும் பற்றிருக்கக்கூடாது. விஷயப் பற்றுள்ளவர்கள் அவநம்பிக்கைப்படுவார்கள். முன்னும், பின்னும் பார்த்து எல்லையை அடையத் தாமதித்து குறிப்பிட்ட நேரத்தில் பெறக்கூடிய நன்மைப் பயனை அடையாதிருக்கக்கூடும். சந்தோஷமாய் இருக்கப் பழகினால் சாந்தலக்ஷ்மி நம்மைச் சுவீகரிப்பாள்.

நமது ஜெய ரதம்.

இயற்கை என்பது சக்தி எனப்படும், சக்தியினால் பெரிய பெரிய மலைகளைச் சிறிய அணுவாய்ச் செய்துவிடலாம். சக்தியைப்பற்றி இந்தியர்கள் வாலை என்றும், பராசக்தி, வீரலக்ஷ்மி என்றும் கூறுகிறார்கள். சக்தியின் தோற்றம் தத்துவசாஸ்திரத்தை நன்கு அறிந்தவர்களுக்கு எளிதாகப் புலப்படும். தத்துவ சாஸ்திர நிபுணத்துவம் இந்தியர்களுக்கே உண்டு. என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. சக்தியின் சாயல்தான் விருப்பம். விருப்பங்களானது மின்மினிபோல் தோன்றி மறைந்து. சக்தியினது அசையுந்தன்மைபெற்றிருந்தாலும், விருப்பம் நீங்கினால்தான் சக்திதோன்றப்படும். இந்தச் சக்தியின் ஆற்றல் செப்பத்தரமன்று. மனிதவர்க்கத்தின் ஆத்மப் பிரகாசத்தில் இச்சக்தி மிளிவுறும். இதனை மனமென்பர். மனது நிர்மலமாயின் அறிவுஎன்பர். அறிவு தெளிவாயின் பிர்ம்மமெனப்படுகிறது. ஆகவே சக்தி ஒரு அபார பொருள்தான். அப்பொருளை எப்படி உபயோகிப்பார்களோ அப்படியே அடைவர். நிற்க; இந்த ஆத்மசக்தியை ஒன்றும் கட்டுப்படுத்தஇயலாது. ஆத்மசக்தி என்று இதற்கு தனிப்பெயர் இல்லை. மனிதனது ஆத்மத்தை யொட்டி இருப்பதாலேயே அவ்வாறு கூறப்படுகிறது. வாலிபா! நீ மனிதனுகையால் உனது சக்திக்கு ஆத்மசக்தி என்றழைக்கிறேன். முன்னமே அதனில் பிணைக்கக் கற்றுக்கொண்டிருக்கிறாய். உனக்குத் தோன்றிக்கொண்டிருந்த, சந்தேகந் திரவே விரிவாகச் சொல்லப்பட்டது. இப்பொழுது புதுமாதிரியான பாணங்களை எதிரிகள் பிரயோகித்திருக்கிறார்கள். அதுதான் இந்து-முஸ்லிம் பாகுபாடு, மூட மனிதர்கள், மனிதனில்; மனிதன், குரங்கு, நாய், மாடு, பூனை, புலி, சிங்கம், எலி முதலானவை காணப்படுகிறதென ஆராய்ச்சியாளரின் துணிபு; எனினும், மனிதனில் மனிதனைக் கொலைசெய்யப் பார்ப்பது அறியாமை எனப்படும், அறியாமையாலேயே! அடிமைத்தளைபூண்டிருக்கிறாய், யார் எதைச் சொன்னாலும்—செய்தாலும்—நீ உனது கூட்டத்தைப் பிரித்துச்சொல்லாதே. உன்னை நீ பிரித்தால் பலவீனப்படுவாய். உனது பலவீனத்தைக்கண்ட விரோதிகள் சற்று

ஒருபடி முன்னேறிவிடுவார்கள். பிறகு தக்க அரண்கட்டி அவர்களைத் தூரத்திவிடுவதற்கு, நீண்ட நாட்செல்லும். நாளை, நாளை என்று தள்ளிக்கொண்டேபோனால், கூர்மை மழுங்கிவிடும். எழுச்சி குன்றும். மனச் சோர்வடையும். சோம்பலேற்பட்டிடும்; பயமுண்டாகும். பிறகு ஆபத்துண்டு· மரணமுண்டு· உன் காரியமெல்லாம் மண்ணாங்கட்டிதான். உன் இருதயக்கமலத்தைச் சுத்தம்செய். சுத்தம்செய் யென்று முறையிடுகிறேன். போர் அதிக மும்முரமா வெற்றிக்குறி காண்கிறது. மிஸ் சிலேட், மீராபாய், மணிப்பெண், அபுல்கலாம், அஜாத் முதலியோரைப் பார்த்தாயா! நீ சீக்கிரம் உடுப்பை மாட்டு! நட!

ஜெய ஜெய பாரத! கணீர்! கணீர்!! வீர கண்டாமணி சப்தம் நிதானி! எங்கிருந்து அச் சப்தமுண்டாகிறது? எர்வாடா தவச்சாலையிலிருந்தல்லவா? ஆமாம்! காந்திக் கிழவன் உனது தீரச் செயலைப்பற்றி தனது சகாக்களோடு பேசும்போது உண்டாய பொக்கைவாய் புன்னகை! மணி யோசைபோல் கேட்கிறது. இதுதானா? இன்னும் உண்டு! உனது வீரகர்ஜனையை மெச்சாதாரெவர்? உனது பாக்கியமே பாக்கியம்! உனது கீர்த்தியே கீர்த்தி!!

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

சரியானபதில் சொல்லாததிலிருந்து, இவரின் ஆட்சிக்கூர்மை வெளிப்படவில்லையா! லோத்தின் கமிட்டி அங்கத்தினர்களிலொருவரும், பார்லிமெண்டு எதிர்க்கக்ஷி அங்கத்தினருமான ஒருவர்; காந்திஜியை சந்திக்க பம்பாய் கவர்மெண்டை உத்தரவு கேட்டார். உத்தரவு கொடுக்க மறுத்துவிட்டனர். அவர் சந்தித்தால், வண்டவாளமெல்லாம்—புரட்டு உருட்டுகளெல்லாம் வெளியாகிவிடும்; என்று எண்ணியே பம்பாய் சர்க்கார் இப்படிச் சொல்லியிருக்கவேண்டும். எத்தனை நாளைக்குத்தான் மறைத்துவைப்பது. ஆத்மதத்துவத்தை தெளிந்த புத்தியுடன் தெரிசித்து அதன்பேரில் படிந்துள்ள தூசியணுக்களை அப்புறப்படுத்திக் கொண்டிருக்கும் பிரபல சந்யாச தர்மத்தை ராக்ஷத சட்டம்—கொடிய தீர்மானம்—ஆயுத பலம் யாது செய்யமுடியும் என்பதை நாம் அறிந்திருப்பதோடு இந்தியாவைப்பற்றி நல்ல எண்ணமுடையவர்களாகவும், அவர்களோடு சமாச பாவனையும் உடனே வேண்டும்.

—கர்னல் பிக்கர் உய்ட்

குருந்தடியும்! பிரிட்டிஷ்சட்டமும்!!

அடிமை நாடுகளில் ஜனங்களின் உயிர் திரணமாக்கப்பட்டிருப்பதை சரித்திர பூர்வமாய் காணலாம். அவர்கள் பெரிய கட்டுப்பாடாகிய ஒரு திட்டத்தைத் தாண்டிப்போகமுடியாததாயும், ஆள்வோர்களின் அமுலுக்குப் பயந்து இருக்கவேண்டியதாகவு மிருக்கிறது. சிறிது பக்குவம்பெற்ற வாலிபர்கள் நடுத்தரவயதுள்ளவர்கள், விருத்தாப்பியர்கள் தங்களது தாழ்ந்த நிலையை உணர்ந்து உன்னதநிலையை எட்டிப் பார்க்க முற்படின், சட்டமென்ற குருந்தடியால் தலையில் அடிக்கப்பட்டு குந்திவிடுகின்றனர். இவ்விதக் கொடிய சட்டங்கள் இந்தியாவிலிருப்பதாக உலகமே அறிந்துவிட்டது. உலக அறிஞர்கள் சமதர்மக் கொள்கையையுடையவர்கள். இந்தியாவின் தற்கால நிலைமையை பிரிட்டிஷார் எவ்வண்ணம் சமாளிப்பார்களென்று கண்சிமிட்டாது—இமைகொட்டாது பார்த்திருக்கின்றனர். உலகம் எதைச் சொன்னாலும் தமக்கு அவசியமில்லை; எனத்தனது முடிவை—தீர்மானத்தை அமுல்நடத்துவதில் பிரிட்டன் சற்றுந் தயங்கவில்லை. இந்திய காங்கிரஸ், கலகஸ்தானம்—சட்ட விரோதமானது என்று சர்க்கார் தனது விசேஷக் குறிப்பில் பதிந்திருக்கிறது. காங்கிரஸோ, சட்டவிரோதமானதல்ல. ஞாயமற்ற—மனித சுபாவத்திற்கொவ்வாத எந்த உத்தரவையும் மீறுவதென நிக்ஷேபித்து செயலில் காண்பித்துவருகிறது.

விரிந்த தேசப்பகுதிகளில் சிற்சில இடங்களில் பலாத்காரம்—மிருகச்செயல் புரியும் வாலிபர்களைக் கண்டிக்காமலிருப்பதற்கில்லை. அத்துமீறிய அந்தக் கொடிய செயல்கள் இந்தியாவுக்கு பழுது விளைவிக்குமென முழு எச்சரிக்கையும் செய்திருக்கின், இவ்வளவு ஆர்ப்பாட்டம்செய்யும் காங்கிரஸ் தலைவர்களில்லாதிருப்பதால் சிறிது சீர்கேடாகவுள்ள மதஸ்தாபனங்களை எதிர்க்கும் ஆற்றலைப் பெறுமலிருக்கிறது. இந்தத் தாரதம்மியத்தாலேயே பிரிட்டிஷார் வற்புருத்திக்கொண்டு இந்துக்களை காங்கிரஸ்காரரென்றும் அதன் தலைவர்களை கலகத் தலைவரென்றும் சொல்லிக்கொள்வது; அசட்டுத்தனமும், சமய புரட்சியுமாகும். 150 வருடமாக

கனவு காணும் பர்மியர்!

பர்மாவில் சிறிய கலகங்கள் நடந்தாலும் பிரமாதமாகிவிடுகிறது. "ஆண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பது போல் இந்தியரை பர்மாவைவிட்டு விரட்டும்படியாகத்தான் கலகங்கள் நடக்கிறதென சிலர் யூகிப்பதற்கும், ஆதாரம் இல்லாமலில்லை. எப்படியாயினும் இந்தியருடைய உடல், பொருள், உயிர் மூன்றையும் பாதுகாப்பதற்கு என்ன செய்வது? சர்க்காரை வேண்டிக்கொண்டால், அவர்கள் சட்ட திட்டங்களைப் புரட்டிப் பார்க்குமுன் காரியம் மிஞ்சிவிடும். பொறுப்புள்ள இந்தியர்களும் முன்னுக்குப், பின் முரணாகப் பேசுகின்றனர். சென்றவருடத்தில், காடுகளில் இருந்த இந்தியர்கள் ஓட்டம்பிடித்தது. பர்மிய காலாடிகளுக்கு ஏளனமாயிற்று. இந்தியர்களுக்கு கட்டுப்பாடான அரசியல் கட்சியாவது, தனிச் சங்கங்களாவது அவ்வளவு பெரிதாகவோ—காரியசித்தியி லீடுபடவோ அமைக்கப்பெறவில்லை. பெரும் தனவந்தர்களாய் மதிக்கப்பெறும் ஒரு வகுப்பார் தங்களை இந்தியர்என்று சொல்லிக்கொள்வதற்கு இஷ்டப்படவில்லை. நமது தமிழர்களோ அதிக வறுமையால் பீடிக்கப்பட்டிருக்கிறார்களேயன்றி சிறந்து விளங்கக்காணோம்.

படாடோபமாக ஒரு சிலர் வாழ்ந்திருந்தாலும் பொதுவாழ்க்கையி லீடுபடுவதென்றால் அவர்களுக்கு வேப்பங்காய்மாதிரி. இந்த நிலைமையில் பர்மாபிரிவினைக் கிளர்ச்சி மும்முரமாய் இருக்கும் தருவாயில் இந்தியர்கள் சாந்த குணம் படைத்திருப்பதும் விஷயந் தெரியாத மூர்க்கர்களோடு பழகிவருவதில் ஞாயபுத்தி படைப்பதும் அன்னியன் உதவியை நாடாது தன்னைத் தானே காப்பாற்றவும் தெரிந்து தைரியமாயிருப்பதே நலம்.

பர்மா பிரிவினை வேண்டாதாரின் சார்பாக ஊசிட்லேயின் தலைமையில் காலாபஸ்தியில் கூடிய மகாநாட்டில் பிரிவினை வேண்டாமென்று பல ஆதாரங்களோடு தக்க திருஷ்டாந்த பூர்வமாக தலைவரும், ஸ்ரீமதி மாலாட்டுன், மாலாக்கின் முதலியவர் எடுத்துக்கூறினர். இதை அறியாத பிரிவினைப் பேய்பிடித்த சில காலாடிகள், பர்மாவை இந்தியாவினின்று பிரித்துவிட்டால் இந்தியர்கள் தங்களுக்குச் சொந்தமாகிய வீடு, நிலம் முதலிய சொத்துக்களை போட்டுவிட்டு போய்விடுவார்களென்றும் அச்சொத்துக்கள் ஏழைகளாகியபர்மியருக்குக் கிடைக்கப்பெறும் என்றும் இந்தியர்கள் தங்கள் தங்களது சுயதேசம் போகாமலிருந்தால் சென்ற வருடம் நடத்திய பர்மா ஆந்திர கலகத்தைப்போல் ஆரம்பித்து இந்தியர்களை ஆயுதந்தாங்கி தாக்குவதெனவும் கூறிக்கொண்டிருக்கிறதாக செய்தி எட்டுகிறது. பிரிவினைக்கட்சித் தலைவர் ஊபாபே தலைமையின்கீழ் மகாநாடு ஒன்று கூடப்போவதாகவும் அறிகிறோம். அம்மகாநாட்டில் இந்தியர்களுக்குப் பாதகமாகிய தீர்மானமே முடிவுபெறுமாதலால் நமக்குப்பிரிவினையைப்பற்றி ஆக்ஷேபனை இல்லை. முடிந்தால் பிரித்துக்கொள்ளட்டும் நன்றிசெய்துள்ள இந்தியர்களை பர்மியர் துன்புறுத்த நினைப்பதுதான் ஆச்சரியமாயிருக்கிறது.

இந்திய கவர்மெண்டார் இதுபற்றிமௌனஞ்சாதித்திருக்க முடியுமா? பெருக்கெடுக்குமுன்னே அணைபோடுவது நன்மை என்பதை பர்மா சர்க்காரும் கவனித்து இந்தியர்களுக்கு நியாயம் கிடைக்கும்படி செய்வதில் பின்வாங்கமாட்டார்களென்பது திண்ணம்.

கஷ்டங்கள்பட்டோம். அதிக ஏழையாக இருக்கின்றோம். ஏராளமான நிலப்பகுதியை பண்படுத்தினோம். சர்க்காரின் மூத்த பிள்ளையாக நடந்தோம். நாளையவரை எங்கள்மீது தயாளமில்லை. எங்களை ஆண்டுகொள்ளப் பழகுகிறோமென்ற வஞ்சகப் பேச்சு தொலைந்தபாடில்லையென இந்தியர்கள் வயிற்றைக் காண்பித்து அழுகின்றனர்—கெஞ்சுகின்றனர். எங்கள் உடம்பிலுள்ள ஜீவதாதுக்களெல்லாம் போய்விட்டது. தோலும், எலும்பும் ஒட்டிக்கொண்டிருக்கிறது. நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்களென்று சொல்வது குற்றமாகப் பாவிக்கப்படுகிறது. அக்குற்றத்தை ஏற்று சோர்வடையாதிருக்க முன்னேற்றமடைய நல்ல பாட்டையை இந்தியர் பற்றி நிற்கின்றனர்.

தலைவர்களில்லாத சமரசமா?

ஏராளமான வசதி நமக்கு இருப்பதாக மனப்பால் குடித்துக்கொண்டு உலகத்தையே நமக்குள் அடங்கிகடக்க கிழ்படிய லாபத்தைக் கொடுக்க, ஆழ்ந்த—கடினமான பிரச்சினைகளை உண்டாக்கி, விஷயாலோசனையென சிறிது சங்கல்பித்துநமக்குச் சாதகமாகஇல்லாவிடில் வழவழென விட்டுவிடுவது கெட்டபழக்கமாகயிருந்துவருகிறது. ஜப்பான் சமீப சில ஆண்டுகளாக ஆயுதத் திமிர்படைத்து, அன்னியரை உதாசினம்செய்யஎத்தனித்ததிலிருந்து புரட்சியையே குடிகொண்டுவிட்டது. சீனா ஒரு சாதாரண தேசம். அது போதுமான அறிவு வளர்ச்சியை இன்னும் பெற்றிருக்கவில்லை. அது விடாமுயற்சியும்தேசாபிமானமும்மற்ற தேசங்களைவிட அதிக குறைவுமில்லை ஜப்பான் எவ்வளவு தந்திரங்கள் செய்தபோதிலும், சீனாவின் தேசாபிமானத்தை எதிர்த்துநிற்கும் ஆற்றல் சிறிது குறைந்தே இருக்கிறது. சர்வதேச சங்கம் ராஜிபடுத்த—சமரசபாவகஞ்செய்ய முயற்சித்தாலும், மீண்டும் ஜப்பான்-சீனாவிற்கு யுத்தம் ஏற்படலாமென வதந்தி யுலாவுகிறது. இதை தக்க அநுபவ ஆராய்ச்சியாளர்கள் கவனிக்கின் பஞ்சாயத்து ஸ்தானத்தில்தான் ஊழல் இருப்பதைக் காணலாம். காரணமில்லாமல் சீனா தன் பலவீனத்தைப் பாராமல், பெரிய ராக்ஷக பூதத்தோடு எதிர்க்கிறது. பிரிட்டிஷார் இந்தியாவில் எப்படித் தலையிடுகிறார்களோ, அப்படியே ஜப்பான், சீனா தகராரில் இருப்பது வருந்தத்தக்கதாயிருக்கிறது.

இந்தியா சுதந்தரமடைய—அதன் உரிமையைப் பெற, அதற்கு உரிமை இல்லை என மறுக்கப்படுவது இயற்கையின் தத்துவமல்ல. நமது மூன்றுகாலச் செயல்களையும் தீர்க்க தெரிசன வியாபக இந்தியா அறிந்துகொண்டது. நாம் எவ்வளவு அடுக்கடுக்காய்—படிப்படியாய் நல்லெண்ணம் காட்டினாலும், இந்தியர்கள்காங்கிரஸ் தலைவர்களின் சம்பந்தமற்ற எவ்வித அரசியலை ஏற்க மறுத்துவிடுவார்கள். போகப் போக அவநம்பிக்கையைப் பெருக்கிக்கொள்ளாமல் கூடிய விரைவில் அரசியல் கைதிகளை விடுதலைசெய்து சமரசந் தேடுவது கெட்டிக்காரத்தனமாகும்.

—மோர்க் ஹறியு

அடிமை யில்லை; உரிமை யுண்டு!

ஒரு நாட்டின் செல்வத்தை பறித்துக் கொள்ள பல சூதுகள் செய்யப்படுகின்றன. நாட்டின் மக்கள் தெரிந்தோ, தெரியாமலோ மௌனஞ்சாதித்திருந்த போதிலும், பொருக்க முடியாத நிலைமை ஏற்பட்டதும் உணர்ச்சி தோன்றி எந்தவிதம் செல்வம் சுரண்டப்படுகிறதென எண்ணத் தலைப்படுகின்றனர். எண்ணியதைத் தடுக்க—எதிர்க்க உருப்படியான ஒரு நல்ல திட்டத்தைக் காண பலதிரப்பட்ட அபிப்பிராயங்களுக்கிடையே வெகு ஜனம் ஒப்புக்கொண்ட ஒரு திட்டத்தை முடிவுசெய்து அதன் சார்பாக இயக்கம் புரிகின்றனர். இவ்வித இயக்கம் மூலை முடுக்குகளிலிருந்து கிளம்புவதல்ல. ஊரறிய, உற்றாரறிய தமுக்குப்போட்டுத்தான் கிளம்புவது. இதை புரட்சி என்று சொல்லமுடியாது. பிரிட்டிஷாருக்கு எப்படி அவர்களின் வியாபாரம் இந்தியாவில் நடப்பதற்கு, தடையாயுள்ளவற்றைஎதிர்க்கிறார்களோ அப்படியே இந்தியர் முதலிய யாவருக்கும் உரிமைஉண்டு. ஆனால் இந்தியருக்கு மதபேத காரணமாய் ஏற்படுங் கலகங்கள்கூட ஒற்றுமை குறைவால் பிரமாதமாகி விடுவதன்னியில் கட்சி பிரதிகட்சி யுடைய இயக்கம் சோர்வடைந்து நிற்கும் சணக்கில் வந்துவிடுகிறது. கோழை மிகுந்த பயங்கொள்ளிகள் நீண்டநாள் பழகி அடைந்துள்ள-இரத்தத்தில் பதிந்துள்ள புராதன இந்திய முறைகளை விடுத்து, முன்னணியில் நிற்பதற்கு அவர்கள் சக்தியற்றவர்களாய்—தலைவரில்லாதவர்களாய் பரிதவிக்கின்றனர். அப்படி இந்தியத் தலைவர்களை அடைத்துவைப்பதற்கு பிரிட்டிஷாருக்கு உரிமை இருப்பின், அவர்களை விடுதலைசெய்ய இந்தியருக்குஉரிமையில்லையா?

தேசோபகாரி

(வாரம்இரு முறை)

வருட சந்தா (இரங்கோன்)	ரூ	3	0	0
6 மாதம் ,,	,,	1	8	0
வருட சந்தா (வெளியூர்)	,,	4	8	0
6 மாதம் ,,	,,	2	12	0
மலாய்நாடு வருட சந்தா	,,	6	8	0

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுஎண் 245] (1922-ஸ்தாபிதம்.) 17 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இருமுறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஸ்ரீ (29-5-32) வைகாசி-மீ 16உ ஞாயிற்றுக்கிழமை

பிரிட்டனே! முக்காட்டுக்குள் கையா?

தேசீயம் என்பது, தேச மக்களின் உரிமை நலத்தைப்பற்றியதோர் சக்திஎனப்படும். தேசிய உணர்ச்சி குன்றியஎந்த நாடும் அடிமையாக்கப்பட்டிருப்பது பிரத்தியட்சம். இந்த இருபதாம் நூற்றாண்டில்கூட அவ்வாறு செய்துகொண்டிருப்பது பிரிட்டன் மட்டுந்தான். உலகத்திலேயே முக்கால்பங்கு பூமியை, ஆசிரயித்திருக்கும் பிரிட்டன் இந்தியாவை இன்னும் அழுத்திக்கொண்டிருக்க நினைப்பது அதன் லோபித்தனத்தையும், பேராசையையும் புலப்படுத்துகிறது. பிரிட்டன் ஒரு வல்லரசு. இந்திய தர்மகர்த்தர்கள்நிறைந்த பார்லிமெண்டிலுள்ள சுயநலதேசம். அது அவ்விதம் செய்துகொண்டிருப்பதற்கு உரிமை இல்லாமலில்லை. பிரிட்டன் தனது வரும்படியிலிருந்து விண்ணைத் தூங்கிகளாகிய அதிகாரிகளுக்குச் சம்பளம் கொடுந்துவரின்; நாமும் அதில் தலையிடப்போவதில்லை. இந்தியாவின் வருமானத்திலிருந்து சம்பளம் வாங்கிக்கொண்டு, வயிறாரத் தின்று, கொழுத்திருக்கும் உப்காரச் சம்பளம் பெற்றுக்கொண்டிருக்கும் கிழடுகள்கூட தங்களது தயாள புத்தியைக் காட்டாது, புட்டி தட்டுங் குணத்திலீடுபடுவதென்றால், எந்த இந்தியனும் சகித்துக்கொண்டிருக்க முடியுமா? பிரிட்டிஷார் வல்லமைசாலிகள்—தந்திர ச்ரிகள்—ஆயுதபலமுள்ளவர்களாக இருந்தபோதிலும், இந்தியனது மானம் போய்க்கொண்டிருக்க, உயிர் பெரிதென்று வாளாதிருப்பானோ? தனது கோஷாத் தனத்தை உதறித்தள்ளி பயங்காப் போர்வையை வீசிஎறிந்து, அஹிம்சை வாளைக் கையிலேந்தி வீரகர்ஜனையுடன் போர்க்கோலங்கொண்டு சேனாதிபதியின் திட்டத்தை—தர்ம உபதேசத்தை அப்படியே ஒப்புக்கொண்டு எதிரிகளின் வீராவேசத்தா லெய்கின்ற நெருப்புப்பொறிகளைக் கக்குகின்ற பாணங்களெல்லாவற்றையும், ஒன்றன்பின் ஒன்றாய் ஏவிபார்த்து, தளகர்த்தன் வில்லிங்டனும், சேனாதிபதி சாமுயல் ஹோரும், அயர்ந்து கொட்டாவி விட்டுக்கொண்டிருக்கும் முறையில் இந்திய சிப்பாய்கள் வெற்றி அடைந்துவிட்டனர். பிரிட்டிஷ் தலைவர்கள் ஒரு வினாடியேனும் தாமதியாது இந்தியர் கேட்கும் ஆட்சிமுறையைக் கொடுத்துவிட்டு மறுவேலை பாருங்களென்று கடுமையாக எச்சரிக்கின்றார்கள். வில்லிங்டனும், அவரது சகாக்களும் புதிய அவசர மசோதாக்களைத்தயார் செய்ய நினைத்திருந்த மூளைகளில் தேரைபுகுந்துவிட்டது. அவர்களுக்கு வைத்தியஞ்செய்ய நமது தேரையரைத் தேடிப் பார்ப்பதற்கு முயற்சிசெய்யப்படுகிறது. தேரையர் அநேக ஆண்டுகளுக்கு முன்னமே சமாதியாகிவிட்டார். அவரின் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பது சாமான்யமல்ல. ஏரோப்ளேன், சப்மெரின், ஆகாய தந்தி முதலியவைகளைக் கண்டுபிடித்த ஆங்கிலேயருக்கு இதுவொரு பெரிதா? என்று அறியாதவன் சொல்வதுபோல் சொல்லிவிடுவது எளிதாயினும், இந்த ஆங்கிலேயர்கள் பதினாயிரம் வருஷம் ஊசி முனையில் நின்றாலும் தேரையரைக் காண இயலாது ஆனால் நமது பொக்கைவாய்க் கிழவன்மட்டும் நினைத்தால், கால் வினாடியில் தேரையரைக் காணமுடியும். இது ஒரு பெருத்த விஷயம். இதற்காக எவ்வளவோ தந்திரத்துடன், அந்த சனியனை ஏண்டா அடைத்து வைத்திருக்கிறீர்

மூட்டை தூக்கி முத்தையா!

தெருக் கூத்துகளில் ராஜாவேஷம் பார்த்திருப்பவர்களுக்கு, முத்தையாவைப்பற்றித் தெரியாதிருக்க மாட்டாது. அரிச்சந்திரன் நாடகத்தில், காலகண்டன், கால்கண்டிக்குப் பிறகு மூட்டைக்கார முத்தையா. இப்போது எல்லோருக்கும் நினைவுக்கு வந்திருக்குமே? ஆமாம்! அந்த முத்தையாவுக்கு என்ன வேலை தெரியுமா? காலகண்டனுக்கும், காலகண்டிக்கும் இடையில் நின்று, ஒத்துக்கு மத்தாளம் போடுவது. அதுபோலவே நமது டேஜ் பகதூர் சாப்ரூ. சென்ற வருஷம் சட்டமறுப்பு இயக்கம் அதிகமும்முரமாய் சர்க்காருக்கு கண் விழி பிதுங்கி, பீளை பீளையாய்த் தள்ளிக்கொண்டு, எவ்வளவோ வைத்தியம் செய்தும், பயன் தராமல் பிரிட்டிஷ் வியாபாரத்திற்கு பிர்மஹலை வாசித்துக்கொண்டிருக்கும்போது, ஜெயகர், சாப்ரூ இவ்விரண்டு புலிகளும், லார்டு இர்வினுக்கு மூட்டை தூக்கிகளாக, எர்வாடா சிறைக்குப் போவதும், ரகசியப் பேச்சுகள் பேசுவதுமாக இருந்து, "டாப்பர்மாமா" வேலைக்கு விண்ணப்பம் செய்துகொள்ளும் தருவாயில், நமது கிழப்புலி பெண்ணைப் பாராமலே விருத்தாப்பியராகையால், பெண்ணென்றால் பேயும் இறங்கும் தன்மைபோல் பெண்கொள்வதற்கு இறங்கினார். முகூர்த்தப் பட்டயமும் எழுதி முடிந்தது. பெண்ணின் சார்பாக லார்டு இர்வினும் மாப்பிள்ளையின் சார்பாக பொக்கைவாயரும், கைச்சாத்திட்டார்கள். விஷயம் இப்படியிருக்க மாப்பிள்ளையை நேரில் பார்ப்பதென விடுத்த அழைப்பிற்கிணங்கி அங்கு மாப்பிள்ளை போனார். மாப்பிள்ளையோடு பெண்ணை அனுப்ப இஷ்டமில்லை. மாப்பிள்ளையும் திரும்பி வந்துவிட்டார். பெண் தன்னாலேயே வரும்படியான வசியத்தைச் செய்ய எத்தனித்து பயன்பெறும் தருவாயில் பழைய குருடி கதவைத் திற. என்பதுபோல் சாப்ரூ, மாமா தூது செல்வதாக கேள்விப்படுகிறோம். இந்த முற்றுதலுக்கு வில்லிங்டன் கொடுத்தனுப்பியது சிறிதா? பெரிதா? ஆனால் மூட்டை பெரிதாய்த்தான் இருக்கவேண்டும். தம்பி! எங்கள் மாப்பிள்ளைக்குச் சம்மதமானால்தான், பழையதை மறந்துவிடு. ஞாயமானதை கையாளு! இந்தியனாகவே இரு! நரை ஈரல் பெருத்திருப்பதனாலேயே பெரிய மனிதனாகிவிடமாட்டாய். முதலில் பெண்வீட்டுச் சம்மதத்தைக் கேட்டு மாப்பிள்ளையினிடம் சொல்வதுதான் நலம். அண்ணன் தம்பிகள் அடித்துக்கொண்டிருப்பதையே காரணமாகவைத்துக்கொண்டு சாக்குப்போக்குச் சொல்லுவார்களாயின் ஜம்பம் பலிக்காது.

கள்? என்று மானசத் தந்திகள் இரவும், பகலும் வந்துகொண்டிருந்தபோதிலும், கீழே விழுந்தால் மீசையில் மண் ஒட்டவில்லை; என்று பயில்வானொருவன் சொன்னதுபோல், பிரிட்டிஷார் சொல்லிக்கொண்டிருப்பதில் காலதாமதமும், நாட்டில் பலநெருக்கடியும் மிகுக்குமேயன்றி, காங்கிரஸ் விட்டுக்கொடுக்கப்போவதில்லை. சர்க்கார்தான் முதலில் சமரசத்திற்கு வழி தேடவேண்டும்.

அதிகாரிகள் கவனிக்க!

பசுமந்தான் போலிஸ்ஸ்டேஷனுக்கருகில், பட்டபகலில், துணிகரமான கொள்ளை சமீபத்தில் நடந்திருக்கிறது. இதுபற்றி பொதுஜனங்கள் அதைரியப்பட ஹேதுவாகிறது. என்னென்னவோ, பெரியவேலைகளையெல்லாம் சாதித்துவிடுவதாக வாய்ப்பறைசாற்றும் போலீஸ் புலிகளும், உயர்தர அதிகாரிகளும் அடர்ந்துள்ள இரங்கூன் பட்டணத்தின் ஓர்பாகமாகிய பசுமந்தானில், இக்கொள்ளை நடந்திருப்பதெனில், காட்டுப் புறங்களில் நடந்துகொண்டிருக்கும், கொலை, கொள்ளைகளைச் சொல்லவும் வேண்டுமா? அந்தரங்க விஷயங்களை எல்லாம் கண்டுபிடித்து, சர்க்காரின்செல்லப்பிள்ளைகளென கௌரவித்துக்கொள்ளும், ஸி. ஐ. டி. ஆசாமிகள் என்னசெய்கிறார்கள்? என்பது தெரியவில்லை. திருடர்களைக் கண்டுபிடித்து, தண்டித்தாலன்றி, பொதுஜனங்கள் பயமின்றி காலங்கழிப்பது முடியாதகாரியம். இன்னும் சில இடங்களில் சொற்ப திருட்டுகள் நடந்திருப்பதாகவும் வதந்தியாகிறது. பர்மா அரசாங்கத்தின் தலைநகரிலேயே, இச்சம்பவங்கள் நடப்பது மிகுதியும் வெட்கக்கேடாகும். அதிகாரிகள் இது விஷயத்தில் கவனம் செலுத்தவேண்டியது அவசியம்.

—அபிமானி

அரசியல் சமூக திருத்தம்.

அரசியலின் போக்கு சந்தர்ப்பத்திற்கேற்றவாறு திருத்தி அமைப்பதெனில் தனிப்பட்ட எதேச்சாதிகாரமென்றே சொல்லலாம். ராஜதந்திரத்தின் பேரால், ஒழுக்கற்ற—மனிதசுபாவமற்ற, மிருகச்செயல்களை புரிந்துவருவதுவெறுக்கத்தக்கதாகும். தற்கால அரசாங்கப்பொருளாதாரத்தைப்பற்றி நிற்கிறது. பொருள் நெருக்கடியான நேரங்களில் அரசாங்கமும், ஆட்டத் தலைப்படுகிறது. அந்த நெருக்கடியை சமாளித்துக்கொள்ள பிரஜைகள்மீது பாரஞ்சுமத்தப்படுகிறது. பாரஞ் சுமக்க ஆற்றலில்லாத ஏழைகள் முடியாத் தன்மையால் ஓலமிடுதல்கூட சட்டபூர்வமாய்த் தடுக்கப்படுவதெனில் சட்டத்திற்கும், அரசியலுக்கும் சம்பந்தமுடையதாயிருப்பதைக்கவனிக்கின் விளங்கும், இன்றைய அரசன் ஞாயமுடையவனும், தர்மவானுயு மிருக்கலாம். ஆனால் அவனைச் சுற்றி பெரிய சங்கிலிகள் பிணைக்கப்பட்டிருக்கிறது. அவன் அப்பக்கம், இப்பக்கம்பார்க்கமுடியாது. அவசியமாகப் பார்க்க நேரிடின் தன்னைப் பிணைத்திருக்கிறவர்களிடம் உத்தரவு கேட்டே தீரவேண்டும் இரும்புத தூண்கள் போன்ற இவர்கள் ஏழைகளின் உழைப்பால் கிடைக்கும் பணத்தை டம்பாசாரித்தனமாக செலவு செய்து காலங் கழிப்பவர்களாயிருக்கிறார்கள், ஆனால் கல்விமான்களென்றும், நீதிபதிகளென்றும் பெயர்படைத்த இவர்கள் அரசனுக்கு விஷயங்களைத் தெரிவிக்கவோ, அரசனின் ஆஞ்ஞையை ஏற்று நடப்பதாகவோ இல்லை என வைத்துக்கொண்டு இந்திய ஆட்சித்திட்டங்களைப் புரட்டிப் பார்த்தால் தற்கால இந்திய தேச நிர்வாகிகளின் போக்கும் அவர்கள் எதற்காக, யாரால் நேமிக்கப்பட்டிருக்கிறார்களென்று தெற்றெனப் புலப்படும். இவ்வித சுயநலப்பற்றிய நிர்வாகம் ஒரு தேசத்தில் படைக்கப்பெற்று அநேக வருஷங்களாக நடைபெற்று வந்திருப்பது அரசியல் நிர்வாகிகளுக்கே மிகுந்த அவமானம்.

அரசியல் கொந்தளிப்புற்ற சமயம், சமூக சீர்திருத்தக்காரர்களும், ஒத்துழைக்கவேண்டிய அவசியத்தை அறியவேண்டும். அவர்கள் பிளவுபட்ட மனத்தினராய் தங்களது நோக்கத்தை அரசியலில் சம்பந்தப்படுத்தாதுஇருக்கக்கூடாது சமூக சீர்திருத்தக்காரர்கள் அரசியலைப் புறக்கணிப்பது பெருந் தவறு. அதோடு மதபேதகம்—துவேஷங்கள் நுழையப்படின் தேசத்திற்கும், தேசத்தின் மக்களுக்கும் இன்னல்களுறுமாதலால், தேசத்தின் அடிப்படையான அரசியலை புண்யமயமாக்க முயல்வதே அறிஞர் கடமை.

—மில்டன்

பிரிட்டனே! முயலுவாயா?

கோழி முட்டை மகாநாடு கலைந்தவுடன் லார்டு சாங்கி இந்தியாவுக்குப் புறப்படுவார்! என்ற ஒரு குண்டுவெடித்தது. அக்குண்டைப்பற்றி வியாக்யானங்கள் பலவாகக் கிளம்பின. நாமும் அக்காலத்தில் எப்போதும் அடிபடாத அபார மூளையுடையவரின் பேர் எதற்காகக் கிளப்பப்படுகிறதென யோசித்து ஒரு முடிவுக்கு வந்ததுண்டு. இந்தியாவின் தலைவிதியை நிக்ஷயப்பதற்குப் புதிதாக வக்கலாத்து வாங்கி இருப்பாரென்று நாம் கருதியபடி இந்தியாவிற்கு ஏற்ற சீர்திருத்தம் ஒன்று லார்டு சாங்கி வரைந்து வருகிறாரென்று புகைந்துகொண்டிருந்த, வதந்திக்கு சாமுயல் ஹோர் "ஒப்புக்கழுகிறார். ஹோர் சரிக்காமல் வகைகெட்ட பெண்டுகளா! என் வாயைத்தான் பொத்துங்களே! என்று ஒப்புக்கொண்டுவிட்டார். இந்தியாவின சகல நன்மையும் நன்கு அறிந்திருந்தாலும் லார்டு இர்வின் சொல்லுகிறபடி இன்றைய நெருக்கடியை அதிக சிக்கலானவழியைத் தீர்த்துவைக்க இந்தியத் தலைவர்களே தகுந்தவர்கள். பொருப்புள்ள இந்தியத் தலைவர்களென்றால், மிதவாதிகளாகார்கள். காங்கிரஸ் தலைவர்களையே இந்தியா தலைவர்களென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால் அவர்களினது உதவியன்றி—மத்திய பொறுப்பாட்சியன்றி மாகாண சுயாட்சி பிரிட்டிஷாரால் வழங்கப்பெறினும், நிர்வாகத்தில் அதனைச் சமாளிப்பது முடியுமா? பிரதம மந்திரி தனது பிரசங்கத்தில் கூறியுள்ள அம்சங்களை இந்தியர்கள் பொருத்தமான வியாக்யானம் செய்து பார்த்துதான் வேறு வழியில்லையென்று சட்டமறுப்பி லிறங்கினார்கள. எவ்வளவு உள்நாட்டுக் கலகங்கள்—தடியடிகள்—அடக்குமுறைகள் தாண்டவமாடினும் சட்டமறுப்பு இயக்கத்தைக் கைவிடுவ

வாலிபர் இருந்த.

சுதேச இயக்கம் தேச ஜனங்களாலும், அடக்குமுறை சர்க்காராலும் நடத்தப்படுகிறது. இந்தியா அரசியல் ஜனங்களுக்கு ஜவாப்தாரியாக இருக்கவில்லையெனக் கூறப்படுகிறது. பொது ஜனங்களின் வரிப்பணத்திலிருந்து நடத்தப்பெறும் ராஜ்யமுறை ஜனங்களுக்குக்கீழ்படிந்தே இருக்கவேண்டும். சர்க்கார் இந்தியரின் நன்மைக்காகவே அமைக்கப்படுகிறதெனக் கூறப்படுவது அபத்தமெனநிரூபிக்கப்பட்டது. இந்தியர்களின் இயற்கைக் குணம் அதிக சாந்தமுள்ளது. கள்ளங் கபடற்றது. ஆயினும் வஞ்சகம், படுகொலையைப்போன்ற கொடிய காரியங்கள் ஒவ்வொருவனுடைய மனதிலூன்றிப் பதிந்திருப்பதால், சர்க்காரால் புரியப்படும் எந்த நல்ல காரியத்திலும் பிரிட்டிஷாருக்கு அதிக உரிமை இருப்பதாக நினைக்கும்படி யாய்விட்டது. இன்றைய நிலையின்படி சர்க்கார்மீது அவநம்பிக்கை மிகுந்துவிட்டதென்றாலே போதும். சர்க்கார் தனது நிர்வாகத்தில் செல்வாக்கதிகம் அமைத்துக்கொண்டு உத்தியோகஸ்தரல்லாதாருக்கு ஸ்தானங்களிருப்பினும், விசேஷ உரிமை சர்க்காருக்குஇருக்கவே செய்கிறது. இந்நிலைமையை இந்திய ராஜீய வாதிகள் அறிந்தே இருப்பினும், எதுகாரணம்பற்றியோ சர்க்கார் பக்கமாகவேஇருந்து மிதவாதம் பேசிவருகின்றனர்.

வருங்காலத்தில் இந்தியாவை நிர்வகிக்கும் பொறுப்பு வாலிபர்களுக்குத்தான் உண்டு அவர்கள் தேசத்தொண்டி லீடுபட கலாசாலைப் படிப்புதகுந்ததல்ல. கலாசாலையில் போதிக்கப்படும் தேச சரித்திரம் திருத்தி யமைக்கப்பட்டதாதலால், பயமும், கோபமும் நிறைந்துள்ள அச்சரித்திரத்தின் பாகுபாட்டை உணர்வதற்கு உலகாநுபவமும், சமமாயிருந்தாலொழிய பொதுவிஷயத்தி லீடுபடல் சாமான்யமல்ல. இந்தியர்கள் பழைய புராணம் பாடுவதில் கைதேர்ந்தவர்கள். அந்தப் புராணக் கதைகளில் இவர்களுக்கு அளவுகடந்த பிரியம் உண்டாகிவிடுகிறது. பழங் கதைகளை விட்டு புதிய, புதிய நேர்மையான முறைகளைக் கையாளும் இந்தியரும் மிகச் சிலரே.

புதிய திட்டமென்றால், ஆத்ம வியாபகத்தை அநுசரித்த ஒரு திட்டமிருக்குமாயின், அத்திட்டம் தேசமெங்கும் பரவி, சகல வசதியையும் பெற்றுவிடும். வாலிபர்கள் அதனை விட்டு பலாத்காரத்தைச் சிலர் கையாள்வதாயின், இதுகாறும் இந்தியா சேகரித்திருந்த நன்மைகளையும், சிதர அடிக்கும்படியான இம்சை வழியில் செல்லுகின்றார்களெனவே சொல்வோம். பலாத்காரம்எப்பொழுதும்வெற்றியைத் தராது. வாலிபர்கள் நடுநிலைவகித்து கோழைத்தனம் அகற்றி, தர்மச்செயல்கள்—ஜீவகாருண்யத் தன்மையை அடைந்தாலன்றி புரட்சிஎன்ற புயல் இந்தியாவில் அடித்துக்கொண்டுதானிருக்கும். வாலிபர்கள் புரட்சியை ஒழித்து அஹிம்சையைக் கடைபிடிக்கும் வழியை இந்தியத் தலைவர்கள் காட்டித் திருந்தச்செய்ய வேண்டும்.

ருஷிய=ஜப்பான் முயற்சி.

ருஷியாவைப்பற்றி உலக முழுவதும்எண்ணப்பட்டிருந்த நிகழ்ச்சிக்கு ஆதாரமாக ருஷியா—ஜப்பான் கடிதப் போக்குவரத்துகளும், ருஜுவாகத்தக்க வகையில் ராஜாங்கத்திற்கும், நேசப் பான்மை முறிந்துவிடுமெனத் தெரிகிறது. சோவியத் கவர்மெண்டாரின் மனப்பான்மை சென்ற சில மாதங்களாக பத்திரிகையில் வெளிவந்திருப்பதை நாம் அறிந்தே இருக்கிறோம். ஏப்ரல் மாதம் 20-உ ஜெனிவா மகாநாட்டு லீக்ஸ் சோவியத் பிரதிநிதிதனதுஸ்டேட்மெண்டைத் தாக்கலாக்கினதும், ஆயுதப்பரிகரண மகாநாட்டில் ஆயுதங்களைக் குறைப்பதின் தத்துவத்தை வாசாமட்டில் இல்லாம தில்லை; என்ற வைராக்யம் ஒவ்வொரு இந்தியருடைய உள்ளத்திலும் உதித்தபின்பு திரைமறைவில் நின்றுகொண்டு பல்லவி பாடுவதில் என்ன பிரயோஜனம்.

லார்டு சாங்கி கவைக் குதவாத ஒருராஜ்ய திட்டத்தைத் தயாரிக்கிறார். அது நமக்கு வேண்டாமெனச் சொல்ல, இந்தியாஎதிர்பார்த்ததே! ஆகையால் அவரவரின் மனதில்தோன்றிய பிரகாரம் அவசரப்பட்டுக் காரியத்தைப் புகுத்தாது தீர்க்க புத்தியும், சமாசமும் தரும் பக்கூடிய ஒரு நிலைமையை ருசுப்படுத்த பிரிட்டன் முயலவேண்டும்.

—பிராஸ் போடு

னும், செய்கையில் காட்டினாலன்றி, இம்மகா நாட்டில் பிரயோஜனமில்லை; என்ற பொருள் பட பேசினாலும், சிலமாதங்களாக மஞ்சூரியாவிற் சீனப் படைகள் போய்க்கொண்டிருந்தது. ஜப்பான், சீனா தகராரைத் தீர்த்துவிட்டோமென வல்லரசுகள் பறைசாற்றியதும், கிழக்குச் சீனா ரயில்வேயில் ஏராளமான யுத்த தளவாடங்கள் சீனாவின் பேரால் மஞ்சூரியாவிற்கு போய்க்கொண்டிருந்ததும் எதிர்பார்த்தபடி பெரும் புயல்காற்று அடித்தே தீருமென நம்புவதற் கிடமாகிறது.

சோவியத் கவர்மெண்டின் பிரதிநிதி ஒருவர் சிபிரியாவில் நான்கு லட்சம் யுத்தவீரர்களும், நானூறு வெடிமருந்துசாலைகளும், அமைக்கப்பட ஏற்பாடு செய்திருக்கிறதாகப்பேசியதிலிருந்தும் மஞ்சூரியாவிலிருக்கும் சிபிரியக் தூதர் ருஷியாவிற்கும் ஜப்பானுக்கும் சீனாவின் சார்பாகச் சச்சரவு ஏற்படக் காரணமில்லை; என்று நேசப்பான்மையை விஸ்தரிக்க நூற்றுக்கணக்கான ஜப்பானிய வியாபாரஸ்தலங்களைப் பஹிஷ்கரிப்பதின்நோக்கம் சீனாவில் மிகுந்திருப்பதாலும், கிழக்கு சீனா ரயில்வேயில் ஜப்பான் நடைமுறையைக் கவனிக்காததாலும், ஜப்பான் யுத்த அறிக்கையில் சமீபத்தில் யுத்த ஆரம்பக்குறி காட்டி இருப்பதால் ருஷிய—சீனாவின் பெயரால் ஜப்பானோடு போர்தொடுக்குமென்பது தெளிவாகிறது ஜப்பானியர் சிபிரியில் அனியாயமாகத் தாக்கப்படுவதாகச்சொல்லும் சேதிகளுக்கு ஆதாரமில்லாமலுமில்லை. மாஸ்க்கோ ஐக்ய தந்தியொன்று ஏப்ரல்மாதம் 25-உ வெளியீட்டில்சோவியத்யூனியனிலுள்ள மில்டேரி சேவகர் லட்சக்கணக்கானவர்கள் யுத்த சைந்நியத்தில் சேர்க்கப்பட்டு யுத்தப்பயிற்சி பெறவேண்டுமென்று நிற்கிறது. தினந்தோறும் புதிய புதிய யுத்தத் திட்டங்களை சோவியத் கவர்மெண்டு உத்தரவிட்டுக்கொண்டிருக்கிறது. இவைகளைச் சீர்தூக்கிப் பார்த்தால் ஜப்பான் தனது, வியாபாரத்தைப் பெருக்கி சீனாவிலுள்ள செல்வத்தைச் சுரண்டினதின் காரணமாகப் புகைந்து, கொண்டே இருந்தது இப்போது இருதேசங்களின், சம்பந்த மட்டுமன்றிஉலகமே திடுக்கிடும்படி செய்துவிட்டது.

—சீனா உய்க்கிலி ரெவ்யூ

செய்கையில் காட்டு!

வியாபாரத்தை பெருக்குவதற்கு பிரிட்டன் நீண்டநாள் அனுஷ்டித்துவந்த சட்டம்—ஒழுங்கு பாதுகாப்பு என்பதெல்லாம் நம்பிக்கையற்றுப்போய் இருக்கிறது. அநேக உத்தரவுகள், சுயநலம்பற்றி தெரிவிக்கப்பட்டிருந்ததை மீறுவதென இந்தியர் துணிந்துகொண்டபின்பு, சட்டம் உத்தரவு வெறும் கடதாசிப் பெருமை என்று அறிந்தபின்பு பிரிட்டிஷார் இன்னும் இந்தியாவைப் பழக்குகிறோமென்று சொல்லிக்கொண்டிருப்பதின் அர்த்தமென்ன? மிஸ்டர் லாசன், தற்கால இந்திய நிலைமையைப் பற்றிச் சொல்ல எத்தனித்து கல்கத்தாவைக் குறைகூறி இருக்கின்றனர். ஐரோப்பியர்கள் இந்தியாவைப்பற்றி நினைப்பதெல்லாம் இம்மாதிரிதான். லோதியன் கமிட்டி, டேவிட்சன் கமிட்டி ரிப்போர்ட்டுகள், கன்சர்வேட்டிவ்களின் வியாபார பணக்கார கூட்டத்தாருக்கு முன் ஆஜர் செய்யப்பட்டு யோசித்த பின்புதான் காமன் சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்கிற வழக்கம் நாளடைவில் நடந்து வருகிறது. வருங்கால சீர்திருத்தமென்று சொல்லிக்கொள்வதெல்லாம் வியாபாரநிலையை—செல்வத்தைப் பெருக்கிக்கொள்வதற்கன்றி வேறில்லை.

ஐரோப்பியர்களுக்கு இந்தியர்மீது எவ்வித துவேஷமும் இருப்பதற்கு காரணமில்லையாயினும்; உத்தியோகப் பொறுப்பொன்று—அதிகாரத்திமிர் இருபகுதியினருக்கும் தாரதம்மியங் காட்டுகிறது. இந்தத் தாரதம்மியம் இம்மிகூட இருக்ககூடாதென்றுதான் இப்போதே நடைபெரும் கிளர்ச்சி ஆரம்பமானதென்பதை அறிந்த-நம்பிக்கையிழந்த ஒரு தேசம் தகுந்த ஆதாரத்தோடு நன்மை திகழப் படும் யாதொரு விஷயத்தையும் ஆழ்ந்து யோசித்தபின்னரே சமரசங் கோரும், தேசத்தினர் ஒருவருக்கொருவர் நேசமாயிருப்பதும் சரி. ஆள்வோரும், சிநேகமுறையில் நிர்வகிப்பதும் தங்கள், தங்கள் தப்பிதங்களை உணர்ந்த பின்னரே, அவ்விதம் சாத்தியப்படும். வருங்காலத்தில் அனுஷ்டிக்கப்படும் ஒத்துழைப்பு விருத்தியாக, ஐரோப்பியர்கள் நடவடிக்கையில் காண்பிக்கவேண்டும்.

—வல்லபர்ஸ்

நமது ஜெய ரதம்

ஹே! வாலிபா!! உனக்கு இற்றைவரை ஆத்மசக்தியை நீ அடையும் சுபாவத்தைக்கூறி வந்தேன்; இப்போது நீ சிறிது ஊக்கமும், சித்தத் தெளிவும் அடைந்திருக்கிறாய். ஆத்மசக்தி உன்னை அடையும்—அடைந்திருக்கும். அபூர்வக் காட்சியைச் சொல்லுகிறேன். நீ எண்ணப்படும் ஆத்மா சர்வ சாதாரணமாய்க் கூட பார்ப்பவர்களுக்குப் புலப்படும் ஆனால் உனக்கு லகுவில் தோன்றும். நீ அதை அறியலாம், என்பதற்கில்லை. உன் மனது சிறிதுநாள் பல சிக்கலான நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஊக்கம் சிதைந்திருக்குமென நினைக்கிறேன். ஆனால் உனது கட்டுப்பாடான தீவிர முயற்சி பயன் அளிக்கும்; திடமாயிரு. கண்களைமூடி புலன்வழியாக மனதைச் செலுத்தாது; உள்பார்வையாகப் பார். உனது உள்ளம் தெளிவாக—விருப்பங்களன்றி சுத்தமாய் வைத்துக் கொள்வதற்கு, பலதடவை முகாந்திரம்சொல்லி இருக்கிறேன். ஞாபகமிருக்கிறதா? ஆம் அதுதான் பூர்வஜென்மப் பழக்கம். பிராப்தமெனப்படும். உன்னை அடைந்திருக்கும் ஆத்மசொரூபத்தை நீ அறிந்திருந்தும், பிராப்த கன்மப் பலன்களை நீ அநுபவிக்கவேண்டியவரை உன்னை மறைத்துக்கொண்டிருக்கும் அகங்காரத்தை—நான், நான்என்னும் மமதையை நிலையற்ற நினைவை அதன்போக்கில்விடாதிருப்பு புருவ மத்தியில் நினைவை வைத்தாயோ, என்னமோ, உன்னை நீ அறியாமல் ஓரிடத்திற்கு இழுக்கப்படுவாய். சித்த சலனமிகும். அப்பொழுதுதான் பயங்கரமானதோற்றங்கள் உண்டு. நீ தயங்காது தீர புருஷனாக அசங்கியத்திற்கு இடங்கொடுக்காதிருந்தால் பரிபூரணத்துவ நிலை அடைவாய். இதுசமயம் மோகப் பிசாசுகள் ஸ்திரீகள்மூலம் பார்த்தவிடமெல்லாம் பரவும். உனது ஜீவநாடியாம், தாரகமந்திரத்தை ஜெபித்துக்கொண்டு தாமரை இலையில் தண்ணீர் போல விஷயப்பற்றில்லாமலிரு. இப்படி சிலநாள் இருப்பாயானால், விருப்பம், வெறுப்பின்றி ஆனந்தமுதிக்கும். இவ்வானந்தத்திலும் மூழ்கிவிடாதே! தைரியமாயிரு. உலக மாதா உன்னை அறிவிக்க பச்சைப் புடவையுடன் தோன்றி உனக்கு உபதேசம் செய்வள். அவ்வுபதேசம் உனக்கு இம்மை-மறுமை இரண்டிற்கும் வழி. அதிக கஷ்டமென்று அதைரியப்படாதே! விஷயத்தைச் சுருக்கிவிட்டேன். ஏன்? அடுத்தாப்போல் ஆனந்தத்தின் உன்னத நிலையைத் தெரிவிப்பதற்கு—நீ உன்னை அறிந்துகொள்வதற்கு உனக்குபத்தியமாக ஓய்வு கொடுக்கின்றேன். மறுபடி வரும்போது தெளிவாய் நீ கேட்பதற்கு வசதிஉண்டு.

நாம் விட்டுக்கொடுக்கலாமா

பர்மாவில், இந்தியரைப்பற்றி தப்பெண்ணங்கள் பர்மியரிடை புகுத்தியாய்விட்டது. அதை மெய்ப்பிக்க பிரிவினைப்பிரசாரம் முயலுகிறது. விஷமப் பத்திரிகைகள் துவேஷத்தைக் கிளப்பிவிடுகிறது. பிரித்தாளும் கொள்கையைப்பற்றியோ, ஒருவகுப்பாரைத் துவேஷித்தோ, பொது ஜனங்களிடை தப்பெண்ணங்களை பரவச்செய்யவோ முற்படும் யாதொன்றையும் தண்டிக்க சர்க்காரின் பாணமாகிய 153 விஷமிகளமீது என்ன காரணம்பற்றி பிரயோகிக்கப்படவில்லை; என்பது வாசகர்களுக்குத் தெரிந்துமிருக்கலாம். நாம சொல்வது—நியாயத்தை உரைப்பது குற்றமெனப்படும்போது, இவ்வளவு தைரியமாகத் துவேஷ மூட்டப்படுவதை பர்மா சர்க்கார் சலுகைமீது மௌனஞ்சாதித்தாலும் இந்திய சர்க்கார் தூக்கம் கொள்ள நாம் விட்டுக் கொடுக்கலாமா?

பர்மாவிலிருக்கும் இந்தியத் தலைவர்கள் இதைப்பற்றி பொதுக்கூட்டம் கூட்டி, பலதரப்பட்ட அபிப்பிராயங்களைக் கலந்து யோசித்து முடிவுசெய்து இந்தியருக்குப் பாதகமேற்படாத காரணத்தைத் தேடக்கூடாதா? ஆந்திரர்களின் பழைய புண் ஆறாதிருந்துகொண்டிருக்கையில் இன்னும் கலகக் குறியும், கொலைகளும், கொள்ளைகளும் தாண்டவமாடுகிறதை ஒழிக்க தலைவர்களே! வெளி வாருங்கள். ஏழை இந்தியரை—வாயில்லாப் பூச்சிகளைக் காப்பாற்ற முயற்சியுங்கள். இந்திய சட்டசபையில் பர்மா பிரதிநிதியை தூக்கத்திலிருந்து எழுப்புங்கள். கலகம் என்றால் தேகம் நடுங்குகிறது. இந்திய மக்களின் சகோதரத்துவம் மாறிகோரச்செயலில் ஈடுபட்டுபர்பாய்மாகாணம் கிகிலடைந்திருக்கிறது. பர்மா சட்டசபையில் செட்டியார்களுக்குப் பாதகமாக தாராவாடி ஊமௌங்மங் கொண்டுவந்த பிரேரணை சர்க்கார் அங்கீகாரம் பெற்றுவிட்டது பர்மாவின்

மானஸ யோகமும்-வாலிபரும்

தற்கால வாலிபஉலகு, தேச முன்னேற்றத்தில் மூனேந்து நிற்கிறது. வீரகர்ஜனைபுரிந்து தனது எதார்த்த சொரூபத்தை தாங்கிநின்றாலும், நேர்மையான தேகப்பயிற்சி பெற்றிருக்கவில்லை. ஆதலால் தனது கோட்பாட்டை—அஹிம்ஸை திட்டத்தை சிலஇடங்களில்—சந்தர்ப்பங்களில் மீறி நடந்துவிடுவது பயங்கரத்திற்கு எல்லையாகவு மிருக்கிறது.

வாலிபர்கள் சுமார் 18 வயதுமுதல் 25 வயது உள்ளவர்களாக இருந்தபோதிலும் தீர புத்திபடைப்பதற்கேற்ற யோகப்பயிற்சி இருக்கவேண்டியது அவசியம். நீ ஒரு வாலிபன், யௌவன புருஷன், கலாசாலையில் உனது பள்ளிச் சிநேகிதர்களோடு எந்தெந்த காரியங்களில் சிரத்தை எடுத்திருந்தபோதிலும், கடவுளின் பெயரை உனது தலையீடான காரியத்தில் கூறியிருக்கமாட்டாய் அல்லவா? அதனுல்தான் எந்தக் காரியத்திற்கும் பொறுப்பு ஏற்றுக்கொண்டு மலைக்கிறுய். அதுவொரு அசட்டுத்தனம். காலையில் எழுந்திருக்கப் பழகி இருந்தால் சொல்லு. எத்தனை மணிக்கு எழுந்திருப்பது? நீ எதைச்சொன்னுலும், "வைகரையில் துயிலெழு! உனது தொழிலுக்கேற்ற சாவகாசத்தைக் குறிப்பிட்டு, அந்த நேரத்தில்உட்கார்ந்து மூக்கு நுனியைப்பார்த்து மனதில்ஒரு விருப்பங்களும் வொன்றுது சலனமற்றிருக்க உன்னுல் கூடுமானவரை தினம், அரை வினுடியாவது அப்யாசித்துவந்தால் உனது பிராணவாய்வின் அசைவுதோன்றும் அதுதான் அஜபை. நெருப்புத், தண்ணீர், காற்று ஆகிய மூன்றுஞ் சேர்ந்த ஆவி. இதை சூக்கும தேகம் என்று சொல்லுவர். நீ இதனை ஊன்றிக் கவனித்துவிட்டால் வாலிபா! உனக்கு நிகரேது! உனது இருதயம் பரிசுத்தமாகிவிடும். உன் மனதில் தோன்றிக் கணப்பொழுதில் மறைந்துவிடுவது தான் மாய்கை—ஆசைகள். இதனை விட்சேபமென்றுஞ் சொல்லுவார்கள். ஆனுல் நான் உனது நன்மைக்காக அதனைச் சத்தி என்றே சொல்லுகிறேன். இப்போது சத்தி தெரிசனமும் ஆகிவிட்டது. கௌமாரா! எத்தனையோ வருஷா, வருஷங்களாக பெண்டாட்டி, பிள்ளை, உற்றூர், உறவினர் யாவரையும் விட்டு காட்டு மிருகங்களைப்போல் காடுகளிலிருந்து கண்ணை மூடிக்கொண்டு யோகஞ் செய்தாலும், தெரியவொண்ணு அத்விதச்சுடரை—காற்றை இவ்வளவு சீக்கிரத்தில் காணக்கூடுமா? என சந்தேகப்படுகிறுய். உனது சந்தேகம் நீங்கத்தான் தொடர்ச்சியாகச் சொல்ல நினைத்தேன். ஆனுல் நீ மூக்கு நுனியைப் பார்க்கக் கஷ்டமாக யிருந்தால் ஏதாவது ஒரு ரூபத்தை—மனதில் ரூபகம்பண்ணிப்பார்த்தாலும் சரியே. ஒரே எண்ணமாகமட்டும் இருக்கவேண்டும். நீ அப்படிப்பார்ப்பதனுல் உனது கருவிகரணுதிகள் நெகிழாது சமமடைய ஹேதுவாகிறது. இந்திரியங்கள் உனக்கு வசமாக இது நல்ல பயிற்சி. இந்திரியங்களென்றுல் தேகத்திலுள்ள கருவிகளாகும்.

இந்திரியங்களாவது, கண், செவி, மூக்கு, வாய், உபஸ்தம், குய்யம், சித்தம், கை, கால், தோல், (உள்ளம்) அறிவு, மனம் முதலியவைகளாகும். ஒவ்வொரு இந்திரியங்களும், புலன்களின்வழி நின்று தொழிற்படும். இதனைப் பின்னுல் விவரிப்போம். நீ உனது காலைக் கடனை முடித்துக்கொண்டு, எதுகாரியத்திற்கும் புறப்படும்போது; உனது இருதயத்தைச் சுத்தமாகவைத்து, முன்சொன்ன நிலையைக் கூர்ந்துபார்த்துச் செல்வாயாகில் உனது காரியம் வெற்றி. அப்படிச் செய்வது பிரமாதமல்ல.

(தொடரும்)

பிரிவினைச்சூட்சி செட்டியார்களைப்பற்றியே கிறது.

இந்தியாவின் பாதுகாப்புக்கென (கோடி ரூபாயை வருஷா வருஷம் வாயில்பே ட்டுக்கொள்ளும், ஆங்கில ராணுவமும் கா ரஸ் தன் கையாலாகாத் தனத்தால், அடி, தை, அவமானம், மாணம் வந்தாலும், என உரிமைகளை செய்தே தீருவேனென்று அஹி சை வழியில் நிற்போரை மூலை முடுக்குகளி நின்றுலும் கண்டுபிடிக்கும் போலீஸூம், ர

செய்யவேண்டியதே!

சர்க்கார் தனது கொள்கையை மாற்ற வேண்டிய அவசியத்தை இன்னும் கருதாமலிருக்கிறது. அது அநுபவத்தில் ஆபத்தாகவே முடியும். ராஜீயக் கைதிகளை சிறையில்நிறைப்பிவிட்டதாக இந்தியா கவர்மெண்டு பெருமை பேசிக்கொள்ளுதல் நிகழ்காலத்தில் அதற்கிருக்கும் பலவீனத்தையே குறிப்பிடுகிறது. காந்திஜியும், அவரது சகாக்களும் கூறிவரும் அபிப்பிராயத்தை ஞாயமானதென ஒப்புக்கொண்டு பிரசுரித்துவரும் மான்ஜெஸ்டர் கார்டியன் இந்திய வைசிராயுடைய அரசியல் தினசரிக்குறிப்பில் எக்காலத்தும், எந்த வைசிராய்களும் அனுஷ்டித்திராத அபார வேறுதிட்டத்தைவரைந்து வைத்திருக்கிறாரென்று கூறிவிட்டு, லார்டு வில்லிங்டன், காந்திஜியையும், அவரது சேனா வீரர்களையும் கைதிசெய்து, அவரது இயக்கத்தைத் தலைதூக்காதவாறு சம்மட்டியால்அடித்துக்கொண்டிருக்கிறார். ஆனால் முடிவில் அயர்லாந்தைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கும் திவாலாவையும், அவரது திடமான—நம்பிக்கையுள்ள தைரியத்தையும் இந்தியர்கள் கைக்கொள்ளும் முறையில் இப்போது வந்துவிட்டதைப்பற்றி என்னசெய்யப் போகிறோம். ஆமாம்! வில்லிங்டன் சட்டம், ஒழுங்கு, உத்தரவு என்று அடக்குமுறை பாணங்களை அடுக்கடுக்காய் பிரயோகித்தும், இந்தியா மந்திரி இந்தியாவில் அமைதி, அமைதி என்று பரைசாற்றியும், இந்தியா பிரிட்டிஷாரின் வியாபாரஸ்தானமென உலகமுழுவதும்—அன்னியதேசத்தினர் யாவரும் அறிந்து ஞாயம்வழங்கச்செய்யும் வகையில் இந்தியர் நடந்துகொண்டனர். இப்போதுதான் ஐரோப்பியர்கள் இதுவரை இந்தியாவை நடத்திவந்தது அனியாயம். தன்னலம்—பொருப்பற்ற நிர்வாகம் என்று பலர் சொல்லிக்கொள்வதைக் கேட்டு வெட்கமடைகின்றார்கள்.

பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் இந்தியர்களை ஆட்சிமுறையில் பயிற்சி பண்ணிவைக்கிறோமென்று சொல்லிவந்த பச்சைப் பொய்யை மெய்ப்பித்துவிட்டார்கள். டப்ளின் தத்துவத்தை இந்தியா உணர்ந்துகொண்டதாக பிரபல ஆங்கிலேயர்கள் எண்ணுகிறதுபோல் அயர்லாந்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து விலகுவதற்கு ஆயுத உபயோகமும் இருந்திருப்பதுபோல இல்லாது, இந்தியா, அதன் தலைவர் காந்திஜியால்—ஆத்மசக்தியால் விடுதலைப்பெற அஹிம்சைத் துப்பாக்கியைக்கொண்டுநிற்பதை கண் சிமிட்டாது பார்த்துக்கொண்டிருப்பவர்கள் இல்லாமலும் இல்லை. பிரிட்டிஷாரின்தந்திரத்தை விருத்தி செய்வதற்கு முற்படுவதுபோல இந்தியாவும் முன்னேற்றமடைந்துகொண்டிருக்கிறது. சமீபத்தில் இளவரசர் சொல்லியதுபோல் ஒரு மனிதனை, மனிதன் ஏமாற்றியாவது, அவனுக்கு இடுக்கண் விளைவித்தாவது சுயநலம்பற்றி பிறரைத் தூண்டியாவது பிழைத்து—ஜீவித்துக்கொண்டு திரிவது அசங்கியமும், மனிதசுபாவ மற்றதுமாகும். அவர் சொன்னது முற்றும் பிரிட்டிஷாருக்கு பொருந்தும். சர்க்கார் பொதுசேவையில் ஈடுபடுவதாக வரி வசூலிப்பதும், அவற்றிற்குசமாதானம் சொல்லுவதும், கட்டுப்பாடான வார்த்தை திட்டமாகவே இருக்கும், பிரிட்டிஷ் ராஜாங்கம் நேர்மையானது. சுயராஜ்யம் வேண்டாம்; என்று சொல்லுகிறவர்களும், இந்தியாவில் இல்லாமலில்லை. அவர்கள்தான் வகுப்புவாத சிகாமணிகள். அந்த பேர்வழிகளில் அம்பேத்காரைப்போன்றவரின் ஒத்துழைப்பும் பெந்தால் முதலியவர்களின் சமயோசிதவார்த்தைகள் பிரிட்டிஷாருக்கு நம்பிக்கையுள்ளதாயின், காந்திஜீயின் ராஜ்யத் திட்டத்தை வரவேற்காவிடின் இந்தியாவிலுள்ள எந்தக் கட்சித் தலைவர்கள் ஒத்துழைத்து சீர்திருத்தம் வழங்கப்பெறினும், நாளடைவில் அயர்லாந்தை இழந்துநிற்கும் பிரிட்டன், இந்தியாவையும் அதே நிலையான ரூபத்தில் காணநேரிடுமாதலால், இந்திய மக்களின் மனக்கொதிப்பைமாற்றவேண்டும். அதற்கு வழி சபாசம் செய்துகொள்வதே!

—ஒரு ராஜீப வாதி

திகிலடைந்திருக்கிறது. பர்மா சட்டசபையில செட்டியார்களுக்குப் பாதகமாக தாராவாடி ஊமெளங்மங் கொண்டுவந்த பிரேரணை சர்க்கார் அங்கீகாரம் பெற்றுவிட்டது பர்மாவின்

ரண்டிற்கும் வழி. அதிக கஷ்டமென்று அதைரியப்படாதே! விஷயத்தைச் சுருக்கிவிட்டேன். ஏன்? அடுத்தாப்போல் ஆனந்தத்தின் உன்னத நிலையைத் தெரிவிப்பதற்கு—நீ உன்னை அறிந்துகொள்வதற்கு உனக்குபத்தியமாக ஓய்வு கொடுக்கின்றேன். மறுபடி வரும்போது தெளிவாய் நீ கேட்பதற்கு வசதிஉண்டு.

Printed & Published by A. V. Sellam Pillay at

பதிவுஎண் 245] (1922-ஹுஸ்தாபிதம்.) 18 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இருமுறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஹு (1-6-32) வைகாசி-மீ 19உ புதன்கிழமை

பிரிட்டன் ஆட்சிமுறை!

நீண்ட நாள் மூடப் பழக்கங்களில் மூழ்கி இருந்த இந்தியா தனது நிலையை தெரிய இன்னும் கஷ்டப்பட்டிருக்கவேண்டியதில்லை; என்ற ஒரே நோக்கத்துடன் தன்னை அடக்கிக்கொண்டிருக்கும்—பயமுறுத்தல் செய்யும் பிரிட்டனை தூவென மதித்துவிட்டது. தன்னைப்பற்றி இருக்கும்—பிளவுபடுத்திக்கொண்டிருக்கும் மதம், சமூகம், ஜாதி உயர்வு, தாழ்வுகளைக் கருதாது இந்தியன்—கருப்பன் ஆசியாக்காரனென்ற ஒரே நாமத்தைச் சூட்டிக்கொண்டு தனது குடும்பத்தினருக்குள் எவ்வளவு கடுமையான பிளவேற்பட்டாலும் சகோதரத்துவம், தயாளமென்னும் சகிப்புத் தன்மையால், விரோதிகளால் வெட்டப்படும் படுகுழிகளை மூடிவிட இந்தியர் கற்றுக்கொண்டு முன்னணியில் நிற்கின்றனர். தக்க சமயங்களில் இந்தியா ஒரு யந்திரத்தைப்போல் பாவிக்கப்பட்டிருப்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, பொய்யையும், புளுகையும் பொருட்படுத்தவில்லை. பம்பாய் இந்து-முஸ்லிம் கலகம் நடப்பதற்கு பலர் பலவாறாய்க் கூறினும், ஒரு தேசத்தை ஆண்டுவரும் அதிகாரிகள்மீதே குற்றமிருப்பதாக யோசிக்க இடந் தருகிறது.

இந்தியாவின் பாதுகாப்புக்கென 68 கோடி ரூபாயை வருஷா வருஷம் வாயில்போட்டுக்கொள்ளும், ஆங்கில ராணுவமும் காங்கிரஸ் தன் கையாலாகாத் தனத்தால், அடி, உதை, அவமானம், மரணம் வந்தாலும், எனது உரிமைகளை செய்தே தீருவேனென்று அஹிம்சை வழியில் நிற்போரை மூலை முடுக்குகளில் நின்றாலும் கண்டுபிடிக்கும் போலீஸாரும், ரகசியப் போலீஸாரும் ஏன் முன்னமே உளவு அறிந்து தெரிவித்திருக்கக்கூடாது. ஒருவெள்ளையன் செத்திருந்தால், மற்ற வெள்ளையன்கள் இதே நிலைமையி லிருப்பார்களா? அவர்களின் ஊத்தவாயை மென்று கைமுஷ்டிகாண்பிப்பார்களே! ஐரோப்பா வெள்ளத்தில் மூழ்கி இருப்பதுபோலல்லவா கண்ணீர் பெருகிவிடும். அவ்வளவு அசட்டையோ டிருப்பதற்கு இந்தியரும், காங்கிரஸுமா ஜவாப்தாரி? இருக்கட்டும், சமூக கலகம் தொத்துநோய் என்பதை ஒப்புக்கொண்டபோதிலும் தொத்துநோயை நீக்குவதற்கு அமைக்கப்பட்ட வைத்தியர்கள் அந்நோய்க்குத்தக்க ஔடதம் கொடுக்காதிருப்பது குற்றமென வழிப்போக்கன்கூட கூசாமல் சொல்லிவிடுவான். உலகத்தில் அதர்மம் கைவிடுவதுபோல் இருந்தாலும் தர்மத்தை நிலைநாட்டவே காருண்யமுள்ள பெரியார்கள் தீர்க்கதரிசிகள் தோன்றி ஞாயத்தை நிலைநாட்டுவதும், அதர்மம் அழிந்துபோய் இருப்பதும் புராதன வழக்கமாய் இருந்துவருகிறது. இதுவேறு. அதர்மம்நிலைக்கவொண்ணாத வகையில் பல தீரச்செயல்கள்புரிந்து பலாத்காரத்தை முறியடிக்கப் பட்டிருக்கின்றதும் வெளிப்படையாக இன்னும் தெளிவுபட விளக்காதிருப்பதால் அன்னிய ஆட்சி தொத்திக்கொண்டிருக்கிறதெனவே பரிக்ஷிக்க ஹேதுவாகிறது. அரசியல் சாதாரண முறையில் நடிப்பதன்று; பல கொள்கைகள் நிறைந்த பெரிய சக்தியின் பீடமாகும்.

அதிலிருந்து பாதகமாகவோ, சாதகமாகவோ கிளப்பப்படும் எந்தப் பிரச்னைகளையும் பீடத்துக்குரியோர் அலசிப்பார்த்து நன்மை

இன்னும் தாமதமா ?

லண்டனில் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகளில் இந்திய கவிச் சக்ரவர்த்தி அறிக்கையை முன்னிட்டு தலையங்கங்களும், குறிப்புகளும் காணப்படுகிறது. நமது கவிக்கு மதிப்பளிக்கும் தன்மையில் அர்ச்பிஷப் ஆப்யார்க் மாஷ்டர் பால்யல் பிரபெஷர், கில்பெர்ட் முரே, பிரான்ஜிஸ் யெங்கஸ்பாண்டு முதலிய பிரபலஸ்தர்கள் பொது அறிக்கையின்மூலம் இங்கிலாந்துக்கும், இந்தியாவுக்கும் சமரச உணர்ச்சி உண்டாகக்கூடிய பிரசாரம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய வார்த்தையில் மதிப்பும், ஆக்ருஷ்ணமும்! பொருந்தி இருக்கிறது. பிரபல இந்திய கவி, செய்துகொண்ட விண்ணப்பத்திற்கு இரு சாராரும், இணங்கி விட்டுக்கொடுப்பதென்ற நல்லெண்ணத்தோடு நம்பிக்கை இன்மையும், சந்தேகமும் குடிகொள்ளாதிருந்து உருப்படியான ஒரு சீர்திருத்தத்தை இந்தியருக்கு அளித்து பிரிட்டிஷாரின்நல்லபிப்பிராயத்தை உலகிற்கு அறிவித்துவிட வேண்டுமென்றும், லண்டன் டெய்லிஉவர்ல்டு இந்தியருக்கென வரையப்பெறும் சீர்திருத்தத்தை கோடைகால விடுமுறைக்குமுன் பிரபுக்கள் சபையில் ஆஜராக்கி பிரபுக்களின் அங்கீகாரம் பெற்றுவிடின் விடுமுறைக்குப்பிறகு காமன் சபையில் பிரஸ்தாபித்து விவாதம் செய்வதில் காலதாமதமேற்படாதெனவும் கூறிஇருக்கிறது. மற்றொரு பிரபல இந்திய ராஜ்யவாதியும், மிதவாதியுமான சாஸ்திரியும், காலந்தாழ்த்தாது காங்கிரஸ்காரர்களை விடுதலைசெய்து இந்திய பாதுகாப்புடன் கூடிய ஓர் சீர்திருத்தத்தை வழங்குவதுதான் ராஜ தந்திரமெனவும் கூறியுள்ளார். இவ்வளவு அளவு நீளமான எச்சரிக்கை கிடைத்திருந்தும், பார்லிமெண்டு எதிர்கட்சித் தலைவர் லான்ஸ்பரி போன்ற பிரபல அரசியல்தலைவர்கள் அடக்குமுறையை வாபஸ் பெற்றுக்கொள்ளும்படி வருத்தியும் வில்லிங்டனும், சாமுயல் ஹோரும் குசு குசு மந்திரம் பண்ணிக்கொண்டிருப்பதின் தாத்பர்யம் என்ன ?

யானவற்றையே உபயோகித்தல் ஞாயமான முறை, அதை விடுத்து சின்னபின்னமான முறைகளைப் பிரயோகிப்பதா ஆட்சி முறை?

மனித சுபாவம்.

மனிதனது இயற்கை தத்துவம் நிலையுள்ளதல்ல. நம்மிற் சிலர் இயற்கை ஸ்திரமாக மாறிக்கொண்டே இருக்கிறதென திருஷ்டாந்தபூர்வமாக நிரூபிக்கினும், காலக்கிரமத்தில் அதன் பொருள் விசேஷித்துக்கொண்டு அவாவர்களின் அநுபோகத்திற்கும், வாழ்க்கைப்பயனுக்கும் ஒத்தே நடைபெறும். மனிதன் சிறிய அணுவை பெரிதாகவும், பெரிய மலையை சிறிய மண்ணாங்கட்டியாகவும் ஒப்பிடும்; சந்தர்ப்பம் வாய்ந்தபோது மிதமிஞ்சி மனதை ஸ்பரிசித்து விடுவதனாலேயே துவேஷமும் பகையும் உண்டாக்கப்படுகிறது. எந்த மனிதன் தனது சுபாவகுணம்—சாந்த புத்தி அவசரப்படாத ஆழ்ந்தமனம் வசப்படுதலன்றி அதன் பால்மனம் போனபடி நடக்கஆரம்பித்தானோ அவன் மேலேஇருந்து கீழே வந்துகொண்டிருக்கும் கடிதத் துண்டுக்குச் சமானமாவான். அவனுக்கு ஆராய்ச்சி, அறிவு சிறிதும் கிடையாது. ஆனால் சப்பிரதாயமாக கெட்டிக்காரனைப்போல் பேசினாலும் அடித்திருப்போர்; அவன் ஒரு மண்ணாங்கட்டி என்றே மதித்திருப்பர். மனித சுபாவமென்பது களங்கமற்ற—வெள்ளை—மாசுபடாத மனதைப் பெற்றவர்க்குத்தான் மனித சுபாவமென்று சொல்லுவது. ஒவ்வொரு யதாசாரியரும் மனிதசுபாவமடைந்த பிறகுதான் மேன்மை பெற்றிருக்கிறார்கள். தனது இயற்கை தனது சுபாவம் இவைகள் தன்மையில் ஒத்திருக்கினும் யாதொருவன் கொண்ட பற்றுதலின்படியே இவனது அறிவு நோக்கிக்கொண்டிருக்குமாதலால், அவன் செய்வது—நினைப்பது நடவடிக்கையில் பிசகாயிருந்தாலும் தனது நினைவின்படியே நல்லவற்றை கெடுதியென்றும், கெடுதியை நன்மை என்று சொல்லக்கூடியவர்களும் இல்லாமலில்லை. எப்படியாயினும் மனிதவர்க்கத்தின் சுபாவம் அவாவர்களின் யோக்கியதைக்கும், சுய அறிவுக்கும் தக்கபடிதான் இருக்கும்.

தேசோபகாரி

வருட சந்தா (இரங்கோன்)		ரூ	3	0	0
6 மாதம்	,,	,,	1	8	0
வருட சந்தா (வெளியூர்)		,,	4	8	0
6 மாதம்	,,	,,	2	12	0
மலாய்நாடு வருட சந்தா		,,	6	8	0

கடவுளின் கருணை : :

வ. ஈ. பென்

கல்வி, பொருள், பூமி என மூன்றையும் பிரித்துப் பார்த்தால் கல்விதான் உன்னதமாக இருக்கும், பொருளும், பூமியும் அதிகமாயுள்ளவர்கள் அதை நிர்வகிப்பதற்குத்தான் கவலை எடுக்கமுடியும். இதைத்தான் ஆசை—மாய்கை என்று சொல்வது. கல்வியினால் சர்வசாதாரண குடும்பத்தில் பிறந்தவன்கூட உலகில் கீர்த்திவாய்ந்திருக்க இந்நிலைமை எய்துகிறது. ஆனால் கல்வி கற்று கடவுளின் கருணையைப் பெறவேண்டும். துன்மார்க்க வழிகளில்செல்லுதல் கூடாது· யாதொரு புதிய எண்ணங்களையும் கடவுள் செயலென்று நம்புதல் காலக்கிரமத்தில் நன்மையைபயக்கும். இதற்குஒரு சிறு கதை உதாரணமாகக் கூறுவோம்.

எமானுயல் ஸ்வேடன்பர்க் என்பவர் பரமஏழை. அவர் ஸ்காரா பிஷப்பாய் உப்பாசலா சர்வகலாசாலையில் பட்டம்பெற்றவர். இவருக்கு கல்வியே முக்கியமன்றி மற்ற நேரங்களில் தெய்வபக்தி மிகுந்திருப்பவராதலால், 17 வருஷம் தனது பெண்டாட்டி, பிள்ளைகளுக்கு அன்னவஸ்திரம் கொடுப்பதற்கே கெதியில்லாது இருந்திருக்கின்றனர். இவர் ஒரு மதப் பிரசாரத் தலைவராயிருந்தபோதிலும், இவரது சாதாரண வார்த்தை—நடத்தைகுடும்ப நிர்வாகம் முதல் பின்பு மந்திரி பதவிவகிக்கும் காலம்வரை எல்லா செயல்களும் கடவுளாலேயே நடக்கிறதெனச் சொல்லுவதற்கு தவறுவதில்லை· தன்னையடையும்—தன்னிடம் பற்றுள்ள எந்த மனிதனும் கடவுளால் அனுப்பப்பட்டவனென்று கருதினார். தனது கண்முன் கடவுளின் அருட்பிரகாசம் தோன்றிக்கொண்டிருப்பதாக எண்ணினார். ஒரு மனிதனுடைய மனதின் சுத்தம் எவ்வளவோ அவ்வளவில்தான்; இதாமனிதனுடைய மனப்பான்மையை அறியக்கூடுமென அடிக்கடி அவர் கூறுவதுண்டு. கடவுளின் கருணையை நாடவிரும்புவோர் தங்களதுமனதையும் தயாளமாக வைத்திருக்க வேண்டுமென பலதடவையும் சொல்லுவார்· இவரதுஜீவியகாலத்தில் கவலை, நோய் இருந்ததில்லை. 150 வருஷ அநுபவத்தை நேரில் கண்டதுபோல சொல்லும் ஆற்றல் பெற்றிருந்தார். எதற்கும் கடவுளின் கருணையைப்பற்றி சொல்லிக்கொண்டிருப்பார்·

இவரது ஜீவியத்தில் சமூக கலகமொன்று நடைபெற்றது. அக்காலத்தில் அடிபட்ட ஒருவன் மூர்ச்சித்திருந்தபோதிலும் அடித்தவன் முனைமேயே வந்து பிரியாது செய்திருந்தான். இதனை கீழ் அதிகாரிகள் தீர்ப்புக் கூறுவதற்கு பொதுஜனங்கள் இணங்கவில்லை. அக்காலத்தில், நமதுஸ்வேடன்பர்க்மந்திரியாக இருந்ததினால் இவரது பார்வைக்கு நடவடிக்கையை அறிவிக்கப்பட்டது. ஏராளமான ஜனங்கள் தீர்ப்பைக் கவனிக்கக் குழுமிவிட்டனர். வாதி—பிரதிவாதிகளின் வாக்குமூலத்தை கீழ்கோர்ட்டார் எழுதிவைத்திருந்தஸ்டேட்மெண்டை வாசித்துப்பார்த்தார். பார்த்து கடவுளின் மகத்துவத்தை எண்ணி வாதி—பிரதிவாதிகளின் முகத்தைக் கூர்ந்து சில விநாடிகள்வரை பார்த்துவிட்டு, வாதியைநோக்கி மனிதா! உனது துணிகரமான பொய்யை மெய்யாக நிரூபிக்க நீ செய்த அறிய முயற்சி ஜனங்களிடையும். பொதுவாக மனிதரின் புத்தியையும் புகுத்தி இருக்கிறது. அது வெற்றிபெருந்தருவாயில் உன்னையும், என்னையும் படைத்த கடவுள் எனது இருதயத்திலிருந்து, உனது பொய்யை, மெய்யாகவே தெரிவிக்கும்படி ஆக்ஞை பிறப்பித்திருக்கிறார். பிரதிவாதியை நீ நன்றாய்ப் புடைத்து, அவர் மரண மூர்ச்சையிலிருந்த தருவாயில் முன்னெச்சரிக்கையாகவே சட்டத்தைக் கடைபிடித்து, வழக்கு வெற்றிபெறுவதற்கு நினைத்தாயே யொழிய, உனது குற்றத்தைக் கண்டு கவலைப்பட்டு பிராயச்சித்தம் செய்துகொள்வதுதான் உயர்வு என்பதை நீ கவனிக்கவில்லை. உனது அறியாமையைப்பற்றி, நான் விசனித்து உனது பிரியத்தைத் தள்ளிவிடுகிறேன். இனிமேல் இப்பேர்க்கொற்ற அனியாயக் காரியங்களில் பிரவேசியாதிருக்கக் கற்றுக்கொள்வாயென நம்புகின்றேன்·

இவ்வாறு ஒரு தீர்க்கதரிசியைப்போல் தீர்ப்புக்கூறிய விந்தையைப் பார்த்த ஜனங்கள் ஆர்பரித்தார்கள். ஸ்வேடன்பர்க்கைப் புக

(7-ம் பக்கம் பார்க்க)

நமது ஜெய ரதம்.

பச்சைப் புடவையுடன் தோன்றுவாளென்று மாய்கை—காமக் குறியை—உற்றார், உறவினர் சிநேகிதர்பந்தத்தைக் கூறினேன். அதைத் தப்பார்த்தம் செய்துகொள்ளாதே. உன்னை நீ அறிந்துகொள்வதற்கு நேற்று ஓய்வு கொடுத்திருந்தேன். இப்போது நீ பேச்சில் மதிப்பு வைத்துவிட்டாய். இனி எல்லா நன்மைகளும் உனக்குக் கிடைக்கும். என்ன கவனிக்கிறாய்? புத்தியை, நான் சொல்வதில் நாட்டு. சாப்பாட்டையும், நொருகல் தின்பதையும் பொருட்படுத்தாதே. உனது தளகர்த்தர்கள், தவஞ் செய்கின்றவர்கள் மனவிசாரத்தாலோ, தேக சௌக்கியக் குறைவாலோ துன்பப்படுகிறார்களென பத்திரிகைமூலம் தெரிந்து விசனிக்கிறாயா? அதுதான் கூடாது. சர்ச்சில் போன்றார்கட்டுக்கதைக்கும், மெக்டானேல்டுவை நிகர்த்த பிரிட்டிஷார் இனிப்புப் பேச்சுக்கும், இந்திய கவர்மெண்டார் நிறைவேற்றும் சட்டங்களுக்கும், வங்காளம்—ஐக்கிய மாகாணம், பஞ்சாப் கவர்னர்களாகியவர் உளறுகின்ற வார்த்தைகளுக்கும் எப்படி நீ பதிலளிக்கக்கூடாதோ, அப்படியே உனது தலைவர்களின் இன்ப துன்பங்களைப்பற்றி உன்மனதில் இடங்கொடுத்துவிடாதே! பத்திரம்! இது ஒரு சோதனை காலம். ஈட்டிமேல் ஈட்டி, கத்திமேல் கத்தி, பீரங்கி, துப்பாக்கி இன்னும் எவ்வளவு உனக்காக காத்துக்கொண்டிருந்தாலும், உனது மனம் நீ குறிப்பிட்ட லக்ஷியத்தை அடையும்வரை, அப்பக்கம் இப்பக்கம்சாயாது சம நிலையாய்வைத்து உனக்குவேண்டிய சந்தேகத்திற்கேற்றபடி திருப்பிக்கொள்ளும் விதத்தை விட்டுத் தவறிவிடாதே! ஆனந்தத்தின் சொரூபம் உன்னை அடையும் காலவரை சமீபித்துவிட்டது. நான் எனது மனதில்உள்ள ஆத்ம தாரணையைச் சொல்ல முற்பட்டுவிட்டதனாலேயே உனக்கு விடுதலைப் பித்து உண்டாகிவிட்டதாகக் கூறுவதற்கில்லை. அது உனது இயற்கை விரோதிகளை விடுத்து விலகிநிற்பதற்கு முயலுகிறது. அப்படித் தூண்டுவது குற்றமெனப் பாவிக்கப்படுகிறது. இதைமனித சுபாவத்தில் சேர்த்தல் கூடாது. உனது தெளிந்த மனதைக்கொண்டு போர்க்கோலம்கொண்டிருக்கின்றாய் நீயேவெற்றிபெருவாய். உனது வீரத்தைப் பூரணமாக வாழ்த்துகின்றேன்.

மேல்பர்மா அதிபதிகள் இந்தியர்களே.

பிரிட்டிஷ் வர்த்தகர் கொள்ளையடித்துக்கொண்டே இருப்பதற்கான நோக்கோடு பர்மாவைப் பிரிக்கும் விஷயத்தில் முபற்சிசெய்து வருவதை சாதாரணப் பையனும் அறியவேசெய்வான். இன்றைய நிலையில் பர்மாவை ஆக்ஷி புரியும் பர்மா மாகாண அதிபதி சார்லஸ் இன்ஸ, இந்தியர்களுக்கு விரோதமாக பர்மியர் ஏவிவிடாதபோதிலும் மாஜி அதிபதி ஹார்க்கோர்ட் பட்லர், காலத்திலேயே இந்திய-பர்மிய துவேஷம் கிளப்பப்பட்டதென்பது மட்டும் உண்மை. அதுமுதல், இதுவரை துவேஷம் இருந்துகொண்டேதானிருக்கிறது. ஆயினும் ஒரு சாராரின் ஆதரவைக்கொண்டு துவக்கப்பட்ட பர்மிய—ஆந்திர கலகத்திற்குப் பின்பே துவேஷம் மிகுந்து, குடியும்கொண்டுவிட்டது; என்றாலும், அதே பர்மியர் இன்று சர்க்காருக்கு விரோதமாகக் கிளம்பிவிட்டார்கள். பர்மாவைப் பிரிக்கச் செய்யும் சூழ்ச்சியை பர்மியத் தலைவர்கள் அறிந்துகொண்டதும், முடுக்கு மூலைகளிலெல்லாம் கூட்டம் போட்டு பர்மா பிரிவினை, பர்மியரையேபாதிக்கக்கூடியது என்ற பிரச்சனையைப் பிரசாரம் செய்துவருகிறார்கள்.

ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் எதிர்பாராதவிதமாக மற்றொரு ஆக்ஷேபனையும் கிளம்பியிருக்கிறது. பர்மாவானது இரண்டுபாகம். மேல் பர்மா ஒன்று. கீழ் பர்மா ஒன்று, மேல் பர்மா என்பது ஷான் சமஸ்தானங்கள் என்று பெயர். இந்த சமஸ்தான அதிபதிகள் பர்மியர்களல்ல; இந்தியர்களே. இவர்களே முன்பு ராஜ்யத்தை ஆண்டுவந்தார்கள். இப்பொழுதும் அவர்கள் சொற்ப அதிகரங்களோடாவது அதிபதிகளாயிருந்து வருகிறார்கள். இவர்கள் மேல் பர்மாவைப் பிரிக்கக்கூடாதென்று முன்னொரு தடவையும் இந்தியா மந்திரிக்கு விண்ணப்பித்துக்கொண்டது ஞாபகமிருக்கிறது. இயற்கை அமைப்புப்படி மேல்பர்மாவைச் சேர்ந்ததுதான். அதிலுள்ள அதிபதிகள் படித்தவர்களாதலால் கீழ்நாட்டோடு சேர்க்கக்கூடாதென்று கூறுவதில் தப்பிதமொன்றுமில்லை. மேல்பர்மாஅதிபதிகள் இந்தியர்களே; என்பதிலிருந்து பர்மாப் பிரிவினை சர்க்காருக்கு இது ஒரு தடைக் கல்லாகவிருக்கிறதென்பது ஸ்பஷ்டம்.

மானஸ யோகமும்-வாலிபரும்

உனது சுவாசம் அடிக்கடி மாறுந் தன்மையை மட்டும் நிதானம்பண்ணிக்கொண்டால் போதும். உன் மனதை உன் நோக்கப்படி திருப்பிக்கொள்ள சர்வசாதாரணமாக இயலும். ஆனால் சிலநாள் வாய்வுகள் இரைச்சல் கொடுத்துக்கொண்டிருக்கும். அதைப்பற்றிப் பயப்படாதே!

இரண்டு மூன்று மாதம் நீ இந்தச் செயலைப் புரிந்துவரின் உனது முகத்தில் தேஜஸ் தோன்றும். வதனம் பிரகாசிக்கும். உன்னைக் கண்டவர்களெல்லாம் ஆசைப்படுவார்கள். உன் மனது உன்மேல் காதல்கொள்பவரால் இழுக்கப்படும். அப்போது உன் சாமர்த்தியத்தால் மனம்போன போக்கில் விடாது, நிறுத்துவாயானால் உனது பிடரி நரம்புகளிலிருந்து ஓசை கிளம்பி உன்னை ரீங்காரப்படுத்தும். இந்தக் காலத்தில் உன்னுடைய ஜீவதாதுவாகிய விந்து ஸ்கலிதமாகும்—போக இச்சைஉண்டாகும். படுகுழியில் விழுந்துவிடாதே! அதே வேலையாகவுந் திரியாதே! சுமாராய் அநுஷ்டிப்பதன் தாத்பரியத்தை யோகாப்பியாசந் தெரிந்தவர்களிடத்து அணுகிக் கற்றுக்கொள். அவர்களைத் தேடிப் போகவேண்டிய காலத்தை அதிகப்படுத்தாதே!

நான் சொல்லியபடி உனது நிலையைப் பார்த்தறியுந் தன்மையை பழக்கமாகக்கொண்டே நீ புறப்படும்போது உனது சுவாசத்தை இடதுகலையில் மாற்றி நட. வாலிபா! உனது சிநேகிதர்கள் உன்னைத்தொடர்ந்து வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றியாவது, தங்களின் பருவத்திற்கேற்ற நடவடிக்கைமூலமாவது பின்னால் நீ அனுஷ்டிப்பதற்கு அடிப்படையான எவ்விதக் கொள்கைகளையாவது அவர்கள் பேசிக்கொண்டு வழிநடந்தாலும், நீ உனது மனதில் மறைத்து வைத்திருக்கும் ஒரு செயலைமட்டும் அவர்களிடம் சொல்லாதிருக்கக் கற்றுக்கொண்டிருப்பாய். அதுதான் உன்னை நீ பேதையாக்கிக்கொள்ளும் மோகம். அந்த மோகம் ஒரு ஸ்திரீயாலேயே எழுப்பி, அவளின் உள்ளார்ந்த—சமயோஜித பார்வையால் நிக்ஷிபித்திருப்பினும் உனது சந்தேகம் மட்டும் அவளையும் வாட்டிக்கொண்டுதானிருக்கும். நீ முழுகிப்போய் இருக்கும், மோகத்தால் அத்துமீறி உன் மனதில் அவளை பாவனைசெய்து கொண்டிருப்பதால் என்னென்னவோ மனக்கோட்டை கட்டி சிறப்பித்து பெருமூச்சு விடுவாய். அவளின்செய்கைகளெல்லாம் உன்னைப் பற்றியதென நப்பார்த்தங் கொள்ளுதற்கு ஹேதுவாகும் வகையில் மனப்பால்குடிப்பாய். இதைத்தான், சாக்கிர சொற்பனமென்று சொல்லப்படும். மனப்பால் குடிப்பதால்தான் அறிவு மழுங்கி, ஆத்மசக்தி குறைவுபடுகிறது. அனாவசியமாக உன் மனதில் கடைப்படாத எண்ணங்களை நிறைத்து பாரமாக்கிவிடாதே! பாரம் அதிகமானால், ஆக்ஞாநிலையோடு பிணைத்திருக்கின்ற ராஜ கருவிகள் பலவீனப்பட்டு, உனது தேகத்தை ஆட்டிவைக்கும்; யந்திர சக்தி மாறுதலடையும். இதனை மலின வாசனையென்றும் சொல்லுதல் பொருந்தும். உனது மனதில் அநேக ஜெனனப்பற்று பாலாடைபோல் படர்ந்திருக்கின்றன. மனது அசைவு ஏற்பட்டதும், பூர்வ ஜென்மப்படைகளும் அசைகிறது. ஆகவே ஆத்மா, பெரிய பெரிய, புதிய புதிய எண்ணங்களையும், என்றும் பார்த்திராத தோற்றங்களையும் இரவில் உனது சுழுத்தியால் பிரக்ஞைபற்ற தூக்கத்தில் காணுவாய். தூக்கத்தில் கண்ட இந்தக் கற்பனையைக் கனவு; என்று சொல்லப்படும். நீ என்றும் பார்த்திராத ஒரு ஜீவனைப் பார்த்திருப்பாய். ஆனால் அந்த பாவனா ரூபமான, கற்பனையை யாராவது ஒருவர் காண்பித்தாலொழிய தன்னைக் காட்டிக்கொள்வதற்கு—பயாஸ்கோப்வித்தைக்கு சக்தி இல்லாததுபோல் ஆத்மசக்தியன்றி, மனம் முதலியவைகள் செயற்கையி லீடுபடாதே! என்பதை சந்தேகிக்காதே! ஆத்மாவிற்கும், மனதிற்கும் தாரதம்மிய சம்பந்தமும் உண்டு. எதற்கு; எதன்மீது, சம்பந்தமில்லையோ; அதற்கு அத்துடன் காரிய விசேடமும் இல்லை. உனக்கு ஒரு ஸ்திரீமீதோ, காரியத்தின்மீதோ சம்பந்தம் வைத்துக்கொள்ள நீ முயற்சிக்காவிடில் அவைகளும், உன்னோடு சம்பந்தம் வைத்துக்கொள்வதற்கு முற்படுவதும் இல்லை; முயற்சியி லீடுபடுவதுமில்லை.

(தொடரும்)

இந்தியா விழித்துக்கொண்டது!

ராஜீய உலகு கொந்தளிப்படைந்து, திக்குமுக்கலாடி, எதார்த்தநிலை காணப் பெறாதிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்தியாவின் சாபமாகிய இந்து—முஸ்லிம் கலகம் ஏற்பட்டதும், பிரிட்டிஷ் பெரிய பெரிய, பூதங்களும், குள்ளநரிகளும் தங்களுடைய கக்ஷியின்நோக்கத்தைக்கூட மறந்து, தங்களின் தேசாபிமானம்ஒருபக்கமும், பொதுஜனங்களின் வாக்கு ஒருபக்கமும் இழுக்க, என்னசெய்வதென மெய்மறந்து, பைத்தியம் பிடித்தவன்போல் உளறுதற்கு சீட்டு வாங்கிக்கொள்ளுதல் முதலியவைகள் பிரிட்டிஷ் அகராதியில்தான் காணப்படுகிறது. இந்தியா கேட்பது நியாயம். அதன் உரிமைகளைப்பற்றி அன்னியருக்குப் பாத்தியதை இருந்தாலும், ஒரு திட்டமான முடிவுகாணும்; காரணம் இல்லையென மூலை முடுக்குகளிலிருந்துகூட எச்சரிக்கையும், கண்டனங்களும் வந்துகொண்டே இருந்து, உலகமே இந்தியாவுக்கு நன்மைஅளிக்கப்படுவதன் அவசியத்தை வற்புறுத்திய பின்பும், அண்ட புரட்டனும், ஆகாயப் புரட்டனும் பழங்கதைகளைச் சொல்லி· ஏமாற்றப் பார்ப்பது சுத்த மடமைத்தனமேயாகும். பிரிட்டிஷாரின், சமய தந்திரம் நமக்கு நன்றாய்த் தெரியும். இந்தியருக்கு அபாரமான தயவைக்காட்டி விடும்படி, உயரஇருந்து கீழே விழுந்து ஒருவர் கத்துவார், மற்றொருவர் அங்கு நடைபெறும் அனியாயங்களைப் படிப்படியாய் எடுத்துக் காட்டுவதுபோல் நடப்பார். ஆனால் காரியத்தில் மட்டும், விட்டுக்கொடுப்பதற்கு முற்படார்கள் நமது மாஜி லல்லியார்ட்ஜியார்ஜ் இவர் ஒரு அரிச்சந்திரனிடம் பொய்சொல்லப் படித்துக்கொண்டதாகக்கூடக் கேள்வி· பிரிட்டிஷார் இந்தியாவிற்குச் செய்த நன்மையில், விஷ ஜுரத்தையும், பிளேக் நோயையும் பிரதானமாகக் கூறி தனது பல்லை இளிக்கிறார். பாவம் இவர் ஒரு விருத்தாப்பியர். அறுபதுக்கு மேல் கிறுகிறுப்பு உண்டாவதும் சகஜம்.

சமீபத்தில் "ராபல்யூனியன்" ஸ்பெஷல் மீட்டிங்கில், சர் நாட்டர், லல்லியார்டு, சர்ச்சில்போன்ற அதிகாரிகளுக்குசாட்டைகொடுத்திருப்பது வருமாறு.

பிரிட்டிஷார் இன்று இந்தியாவுக்கு பொருப்பாட்சி கொடுக்காதிருப்பதினாலேயேபிரிட்டிஷ்வியாபாரம்சீர்கேடடைந்திருக்கிறது.நான் இந்தியாவில் கிறிஸ்துமார்க்க பிரசாரத்திற்கு 18 மாதங்கள் வரை தங்கியிருந்தபோது இந்தியர்களின் மனப்பான்மையை நெருங்கிப் பழகி அறிந்திருக்கிறேன். இந்தியாவில் யாரைக் கேட்டாலும் சுய ஆட்சிமுறையைப்பற்றியே பேசுவார்கள். இந்தியர்களுக்கு அரசியலைப் பற்றி அவ்வளவு தெளிவாய்த்தெரியாதென்று சொல்லுவது, உண்மையை மறைத்துக் கூறுவதாகும். பிரிட்டிஷார் காலந்தாழ்த்தாது மாகாண சுய ஆட்சிஅளித்து குறிப்பிட்ட சில மாதங்களுக்குள் மத்திய பொருப்பாட்சியும் அளிக்கப்படவேண்டும். அப்படிச் செய்வதுதான் புத்திசாலித்தனமும், பிரிட்டிஷாருக்குள்ள கண்ணியமும், குறைவுபடாதிருக்கத்தக்கதாகும். நம்மிற் சிலர் இந்தியரை ஏமாற்றும் முறையில் சீர்திருத்தம் வழங்குவதாக ஏற்பாடு செய்வதை டெயிலி நியூஸ், மான்செஜ்டர்கார்டியன், டெயிலி கிராப் முதலிய பத்திரிகைகள் மூலம் ஏற்கனவே அபிப்பிராயங்கள் வெளிவந்திருப்பதை பிரபலஇந்தியர்கள் வாசித்துஅறிந்து கொள்ளும் வகையில் செய்தும் இருக்கிறார்கள்.

ஆகவே நாம் அவர்களோடு நேசப்பான்மை அடைவதே சீரியமுறை இந்தப் பெரியார் இந்தியர்மீது அநுதாபங்காட்டிக் கூறியதல்ல; சுதந்தர தாகங்கொண்ட விரிந்தபரப்புடைய ஒரு தேச மக்களின் உணர்ச்சியைக் குழிதோண்டிப் புதைக்கப் பல மிருகச்செயல் புரிந்தும், முடியாமல் கீழே விழுந்தும், மீசையில் மண்ணில்லை; என்றவர்க்கோர் புத்தி; என அறிக. அடக்குமுறையை ஒழியுங்கள்; காங்கிரஸ்காரரை விடுதலைசெய்யுங்கள். என்றுஒருபுரமிருந்தாலும், இந்திய சட்டசபையில் புதிய புதிய மசோதாக்கள் சேகரிப்பதும் இல்லாமலில்லை. புரட்சிக் கைதிகளின் விசாரணையை நீளவிடாமல் தண்டிப்பதற்கு யோசனை, சிம்லா தெய்வங்கள் செய்திருப்பதாகவும் கேள்வி. முடிவில் பிரிட்டன் தலையில் கையை வைத்துதான் அழுகவேண்டும்.

ஏழைகள் பாவம் விடாது.

ஜுன், ஜுலை மாதங்களில் இந்திய சட்டசபையில் முக்கியமாக, வருமான வரி லாக்காவைப் பற்றியதாகும். மாறுதலான சில சட்டங்கள் திருத்தி அமைக்கப்பெறும். கட்டாயமாக கவர்மெண்டார் அப்படிச்செய்வதற்கு முன்னமே தேடிக்கொண்டிருக்கவேண்டுமே தவிர, நிச்சயமாக தேதி குறிப்பிடாமல் ஒரு பிரச்சினையைப்பற்றிப் பேசப்படும் என்பது பிரஸ்தாப சட்டத்தின் பீடிகைக்கொத்ததல்ல. சென்ற நவம்பர் மாதத்தில், கிளப்பியுள்ள பொதுக் குறிப்புகளுக்குத் தக்கபடி ஆகஸ்டுமாதம், நான்காவது வாரத்தில் யோசனை எடுத்துக்கொள்ளப்படுமென அர்த்தமற்றுக் கூறுவது திருப்திகரமானதல்ல. அநேகமாக அது சமயம் சட்டசபை மெம்பர்கள் அவர்களுடைய ஸ்தானங்களுக்குத் திரும்பிவிடுவார்கள். பிறகு அவர்கள், நவம்பர்மாதம்தான் டில்லிக்கு வருவார்கள் இதனினும் ஒரு முக்கியவிஷயத்தைப்பற்றி தீர்க்காலோசனைபண்ணியே முடிவு செய்வதாக இருந்தாலும், சர்க்கார் தரப்புப் பலத்தைக்கொண்டு ஆகாயக் கோட்டை கட்டிவிட்டாலும், எதிர்ப்பு ஏற்படுமென அஞ்சியிருப்பதாக தெரிகிறது.

மெம்பர்களின் வசதிப்படி நடக்கச் சட்டம் இடந்தரவில்லை; என்றாலும், பண நெருக்கடியான சமயத்தில் பொக்கிஷ மெம்பர்தனது கீர்த்தியை—மூளைக் கூர்மையை விளம்பரப்படுத்திக்கொள்ள பிரிட்டிஷ் பார்லிமெண்டிலிருந்து பொருப்பும். சன்னத்தும் பெற்றிருக்கிறார். ஆகையால் வருமான வரி அமென்மெண்டு அவசியம் திருத்தி அமைக்கப்படும். நாட்டின் மக்கள் வரி வலுவே பெரிதாயிருக்கிறது. பொறுக்கமுடியவில்லை; என்று கத்துகிறார்கள். சர்க்கார் இப்போதிருக்கும் வரி போதாதென்று புதிய வரி. அல்லது புதுமாதிரியான வரி நேமிக்கப் பார்க்கிறார்கள். இதனால்தான் பொதுஜனங்கள் சர்க்காரைத் தூற்றுவது; சகஜமாய்விட்டது. எதைச் செய்தாலும், எத்தனை சட்டசபை அங்கத்தினர் எதிர்த்தாலும், அதிகாரிகளின் பிடித்த பிடி தளராது—விட்டுக்கொடுக்காது. தீர்மானம் நிறைவேற்றும்வரை தப்பெண்ணங்கள் உண்டாகவே செய்யும். சர் ஜோசப் போர் தனது சட்ட ஞானத்தை விஸ்தரித்து பாசில் உசேன், வியாக்கியானித்த அகில இந்திய வைத்திய மசோதாவை எதிர்த்தாலும், வரம்புமீறி சிரிக்குதித்தும் இந்தியர்களின் பலவீனத்தையே குறிப்பிடுகிறது. இந்தலட்சணத்தில் நமது ராமசாமி அய்யர்வாள்—வில்லிங்டன் சகபாடிகள் தட்டிக்கொடுப்பதை ஆழ்ந்து யோசியாது குடியிருந்த இடத்தில் கொள்ளிவைப்பது என்ற இந்தியக்கொள்கையை எட்டிப் பார்க்கிறார். இவருக்கு கடைசி முடிவு ஒன்று இருப்பதாகக்கூட நினைக்கவில்லை. ஆனால் ஏழைகள் பாவம் விடாது.

(3-ம் பக்க தொடர்ச்சி)

ழ்ந்தார்கள். பிரதிவாதியாகிய—அடிபட்டவன் உண்மையை உள்ளபடி கூறிய புண்ணிய புருஷனைப் போற்றித் துதித்தான். கடவுள் ஒவ்வொருவருடைய இருதயத்திலுமிருந்து, அன்பார்ந்த தயாளகுணத்தைச் சிறப்பிக்கிறார் என்பதற்கு, ஸ்வேடன்பர்க்கே சான்றாகும். கடவுளின் எல்லை—வரம்பற்ற காருண்யம்—கருணைப் பிரகாசம் பூலோகத்தில் உள்ள சகல ஜீவாத்மாக்களுக்கும் ஒருவனது ஒளியைப்போல் அடையப்பெறுகின்றன. கடவுளின் ஆற்றலைக் காணமுடியாத, அறிவில்லாதார்கடவுளில்லை; என்று அவர்களின் சிற்றறிவுக்குத் தக்கபடி உளரிக்கொண்டிருந்தாலும், ஒருகாலத்திலாவது ஒப்புயர்வற்ற பெருமான் ஒருவர் உண்டென்பதை ஒப்புக்கொண்டுதானாகவேண்டும்.

முஸ்லிம்சகோதரர்களுக்கு.

கடந்த 10ஆண்டுகளாக "தேசோபகாரி" முஸ்லிம் சகோதரர்களுக்கு விரோதமான விஷயங்களில் தலையிடுவதாக யாரேனும் கூறமுடியாது. ஆனால் சென்ற மாதம் 22-வ வெளியீட்டில் "இன்று நம்ம மௌலானா" என மகுடமிட்ட வியாசம், முஸ்லிம் சகோதரர்களைப் புண்படுத்தக்கூடிய முறையில் இருப்பதால், அதற்காக நாம்மிகவும் வருந்துவதுடன், முஸ்லிம் நண்பர்களை மனம் பொருத்துக்கொள்ளும்படியும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜியார்ஜ் ஜோசப் கூத்து.

ஸ்ரீ. ஜியார்ஜ் ஜோசப் "மதராஸ் மெயில்", பத்திரிகையில் கீழ்கண்டவாறு எழுதியுள்ளார். மத சம்பந்தமான விஷயங்களில் தலையிடாது நடு நிலைமை வகிப்பதனால்தான், பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆபத்தான நிலைமை ஏற்படுகிறதென்பது என் அபிப்பிராயம். மத விஷயங்களில் சகிப்புத் தன்மை காட்டக்கூடாதெனக் கூற நான் முன்வரவில்லை. இன்னும் பிரிட்டிஷ் சர்க்கார், ஓர் பாதிரிமார் சங்கத்தைப்போல் கிறிஸ்து மதக்கொள்கைகளை உபதேசம்செய்ய வேண்டுமென்றும் நான் கூறவில்லை. மதவிஷயங்களில் சர்க்கார் சகிப்புத்தன்மை காட்ட வேண்டியது அவசியமே. அதாவது ஹிந்துக்களை ஹிந்து மதத்தை அனுஷ்டிக்கும்படிக்கும் முஸ்லிம்களை இஸ்லாம் மார்க்கத்தை தழுவும்படிக்கும், கிறிஸ்துவர்களை கிறிஸ்து மதத்தை பின்பற்றும்படிக்கும் சர்க்கார் அனுமதிக்க வேண்டியதே. எனினும், இயற்கை நண்பர்கள் யார் என்பதையும், தவிர்க்கமுடியாத சத்துருக்கள் எவரென்பதையும், அவர்கள் பகுத்தறிந்துகொள்ளவேண்டியது முக்கியமாகும். அதாவது பிரிட்டிஷ் சர்க்கார் மற்றவர்களை ஒதுக்கிவிட்டு, கிறிஸ்துவர்களைக் கொண்டே தங்கள் நிர்வாகத்தை நடத்தவேண்டும். இந்தியாவில் 25 கோடி ஹிந்துக்களும், 8 கோடி முஸ்லிம்களும் இருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களைப்போல் மானிடர்களே. அவர்களுக்கு மதத்திலோ, நாகரிகத்திலோ, வருணத்திலோ ஆங்கிலருடன் சிறிதும் சம்பந்தமில்லை. ஐரோப்பாவிலிருந்து வந்துள்ளகிறிஸ்தவர்களை அவர்கள் விரும்பவில்லை. எனவே பிரிட்டிஷ் சர்க்கார் அவர்களை நம்பியிருப்பதென்பது முடியாத காரியம். ஆனால், இந்தியாவிலுள்ள 60 லக்ஷம் கிறிஸ்துவர்களும், அமெரிக்கா, ஐரோப்பிய பாதிரிகளின் முயற்சியால் மேற்படி மதத்திற்கு மாறியவர்களாவர். பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு துரத்தப்பட்டுவிட்டால், கிறிஸ்துவர்கள் இங்கு மகா கஷ்டத்திற்குள்ளாகவேண்டியிருக்குமென்பதை அவர்களறிவார்கள். 1919-ம் வருஷம் ஆமதாபாத்திலும், அமிர்தசரசிலும் சர்ச்களும், கிறிஸ்துவர்களும், பாகிரிமாரும் பட்ட கஷ்டங்கள் அத்தகைய தகுந்த உதாரணங்களாகும். எனவே, கிறிஸ்துவர்கள் க்ஷேமத்தை உத்தேசித்தாவது இந்தியாவின் பூரண சுயேச்சைகோரிக்கையை தடுத்து, பிரிட்டிஷாருடன் உள்ள சம்பந்தம் கத்தரித்துவிடாமல் பாதுகாக்கவேண்டியது அவசியமாகும். மத விஷயங்களில் சர்க்கார் தற்போது தலையிடாமலிருந்தும் கிறிஸ்துவர்கள் தொகை வருஷா வருஷம் அதிகமாகிக்கொண்டே வருகிறது. தவிர மற்ற எந்த மதத்தினரையும் காட்டிலும் கிறிஸ்துவர்கள் அதிகமாக படித்தவர்களாகவே இருக்கிறார்கள்.

இந்தியாவின் சுயேச்சை கோரிக்கையைக் கண்டு எனக்கு நடுக்கமுண்டாகிறது. ஆனால் இந்தியாவிற்கு "குடியேற்றநாட்டு அந்தஸ்து" அளிப்பதை நான் அவ்வளவாக ஆட்சேபிக்கவில்லை. எனினும் ஸ்ரீ. மாண்டேகு திட்டப்படி "பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அம்சமாக இந்தியாவிற்கு பொறுப்பாட்சி" அளிப்பதுதான் எனக்கு திருப்தியை அளிக்கிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்பத்தின் அம்சம் என்றிருப்பதே எனது திருப்திக்கு காரணமாகும். ஆங்கிலர்களும் கிறிஸ்தவர்களே. எனவே அவர்கள் கிறிஸ்துவர்களை கிறிஸ்துவர்களாகவே கருதவேண்டும். அவ்விதம் கருதுவதில் முரண்பாடொன்றுமில்லை. மிதவாதிகள் சர்க்காருடன் சேரவில்லையென சர்க்காரும் நீங்களும் வருந்துகிறீர்கள். அவ்விதம் நீங்கள் வருந்துவது வீணாகும். ஏனெனில் மிதவாதிகளும் ஹிந்துக்களே. காங்கிரஸ் எதைக் கேட்கிறதோ அதைத்தான் அவர்களும் கேட்பார்கள். எனினும், பொறுப்பாட்சியுடன்மாகாணசுயாட்சியோ அல்லது மாகாண சுயாட்சி மாத்திரமோ, எது வந்தாலும் பிரமுகர்களான மிதவாதிகள் சர்க்காருடன் ஒத்துழைக்கவோ அல்லது எதிர்க் கட்சியிலோ வந்து சேர்ந்துகொள்வார்களென்பது நிச்சயம். (த. நா.)

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுஎண் 245] (1922-ஹூஸ்தாபிதம்.) 19 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இருமுறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஹு (5-6-32) வைகாசி-மீ 23உ ஞாயிற்றுக்கிழமை

சர்க்கார் கைத் துடுக்கு!

பிரிட்டன் 150 வருடகால ஆக்ஷியாயியும் அவளின் சிப்பந்திகள் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொள்வதில் எந்தவொரு வல்லரசுக்கும் இளைத்தவர்களல்ல என்றால் குற்றமாகாது. ஐந்துமாத காலமாக சட்டமறுப்பாளர்கள்பால் சர்க்கார் அனுஷ்டித்து வந்திருக்கும் முறைகளை இந்தியாவிலன்றி வேறு எந்த நாட்டிலேனும் அனுஷ்டிக்கப்பட்டிருந்தால் வேறுகெதி யாகியிருக்கும். காங்கிரஸ் கணக்குப்படி 13 வயது பாலகன் முதல் 90 வயது தொவண்ட கிழவன் வரை ஒரு லக்ஷத்திற்கதிகமான பேர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். எண்ணிறந்தோர் குண்டாந்தடி (வாசகர்களே! குண்டாமியான் என்று அர்த்தம் செய்துவிடாதீர்கள்) குறுந்தடிகளுக்காளானார்கள். சிறைசென்ற பலர் தாய், தந்தை, உற்றார், உறவினரற்று மலேரியாவாலும், கொசுக்கடியாலும் விண்ணுற்றனர். கடவுளின் விதிப்படியே இறந்தார்களென்றாலும், மனித விதிப்படியும் நோய்வாய்ப்பட் டிறந்ததை அவர்களது தாய், தந்தையர்களுக்கோ, சுற்றத்தாருக்கோ தெரிவிப்பின்றி அனாதைகளாக அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். சட்டம் வகுக்கும் சர்க்கார் சட்டப்படி நடக்கத் தவரினால் அவர்களைக் காட்டுமிராண்டிகளென்று கூறினால் ஒருக்காலும் தப்பிதமாகாது. நேற்றுக்கூட சத்தியாக்கிரஹத்தில் கலந்துகொண்ட நாகபுரி பீட்டல் ஜில்லாவிலுள்ள மலைவாசியை பிரம்பாலடித்து மரிக்கச்செய்திருக்கின்றனர். நீதிபதிகள் விதிக்கும் தண்டனைகளில் கசையடியைப்பற்றி; மிருகச்செயல்—அரக்கச் செயல் என்று கூறிவருகிறது மன்னியில்; அதையே சட்டப் புத்தகத்தினின்று எடுத்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் கசையடி தண்டனையைக்கொடுத்து மரணத்திற்கும்ஆளாக்குவதென்றால்அவர்களது மிருகச்செயலையும்—மிலேச்சத்தனத்தையும் என்னென்று சொல்வது! மேல்நாடுகளில் இத்தகைய முறை கையாளப்பட்டு மரணத்திற்காளாகியிருந்தால் பிரிட்டனின் கெதி என்னவாயிருக்கும்? அதோகெதிதான் என்றால் உண்மைக்கு மாறுபட்டதல்ல. இந்தியர்களே! இந்தியா சுயராஜ்யமடைகிறதோ, இல்லையோ என்ற சந்தேகங்கொண்டவர்களாயிருப்பதினாலன்றோ இத்தகைய அநீதங்களைப்பற்றி அக்கரை யில்லாதவர்களாயிருக்கிறீர்கள். இந்தியரின் மானம்—மரியாதை எல்லாம் பறிபோவதன்றி உயிரையும் பறிகொடுத்து எத்தனைநாட்கள்தான் சகிக்கமுடியும். அரசியலில் அபிப்பிராயப் பேதப்பட்டிருக்கும் எவராயிருப்பினும் உண்மையான இந்திய இரத்தம் அவர்களின் ஹிருதயத்தில் ஓடிக்கொண்டிருக்குமானால் கண்டிப்பாய்—நிக்ஷயமாய்—சத்தியமாய் இந்தியாவின் மானத்தை—மரியாதையை உயிரை இழக்க இஷ்டப்பட முடியாது. மதத்தைவிற்றாகிலும், கொள்கையை விட்டாகிலும், உயிரை இழந்தாகிலும் காப்பாற்றவே விரும்புவர்.

இந்தியாவின் புனிதத்துவத்தைப் பழித்த—தூஷித்த பலரை விட்டுவிட்டோம்—வசைமொழிகளை சகித்தோம்—தாலியறுத்த சர்க்கார் தண்டிக்கப்படவில்லை—பெண்கள் பிழை பேசப்பட்டார்கள்.

தீவிலுள்ளவர்கள் விடுதலை!

பிரிட்டிஷ் சர்க்கார் சமய சந்தற்பத்திற்கேற்ப காரியங்களை கையாளுவதில் முதன்மை ஸ்தானம் பெற்றது. இந்தியர்களின் எச்சில் இலைகளை நக்கிக்கொண்டேயிருக்கவேண்டுமென்று இந்த இருபதாம் நூற்றாண்டிலும்—இந்தியர்கள் சுதந்தராதாகமேலீட்டால் பொருளையும், உயிரையும் தூசென மதித்து சென்றுகொண்டிருக்கும் இத்தருணத்திலும் நினைப்பதானது தான் நமக்கும் ஆச்சரியமாகவிருக்கிறது. பொருளையுடையவன்—பூமியுடையவன் கொடுத்துவிடத்தான் வேண்டுமென்றால் இவ்வளவு அபாரமான நயவஞ்சகத்தனங்களெல்லாம் எதற்காக? மலபாதைக்குப் போகும் ஒருவன் வெள்ளரிக்காயைக் கடித்துத் தின்றுகொண்டிருந்த கதையாக வல்லவோ இருக்கிறது. பிச்சையுண்டு வயிறு வளர்க்கும் ஆசாமிகளுக்கு கௌரவமும் வேண்டும்போலும். ஐந்து மாதங்களில் நடந்த சட்டமறுப்புப்போராஸ்சட்டமறுப்பாளர்களுக்கேசிறையில்இடம் போதாத முறையில் கொலை, கொள்ளை முதலிய குற்றங்களில் ஈடுபட்டு தண்டனையடைக்திருப்பவர்களில் அநேகரை விடுதலை செய்தார்கள். அது வேறு காரணம்.

சமீபத்தில் பம்பாய் இந்து-முஸ்லீம் கலகத்திற்கு பின்னால் தண்டனைக்காளாக்கி அந்தமான்தீவுகளில் வைக்கப்பட்டிருக்கும் மாப்பிளைக் கைதிகள் கூட்டம்-கூட்டமாக விடுதலை செய்யப்படுகிறார்கள். இது எக்காரணம்பற்றி என்பது நமக்கு விளங்குகிறதாயினும், சமயம் நேர்ந்த காலத்து வெளியிடுவோம். ஹிந்து-முஸ்லீம் சகோதரர்களே! அரசியலில் அபிப்பிராய பேதமிருப்பினும், அதற்குத் தலைசாய்த்துவிடாதீர்கள். சத்தியாக்கிரஹிகளுக்கு அந்தமானை ஒரு வாசஸ்தலமாக்க இடங்கொடுத்துவிடாதீர்கள்.

ஆனால் சத்தியாக்கிரஹத் தொண்டர்கள்—அஹிம்ஸை வீரர்களின் உயிர் பறிக்கப்பட்டால் யார்தான் சகிப்பார்கள்? கசையடியால் மாணத்திற்காளாக்கும் சர்க்காரிடத்து இந்தியர்களின் இரத்தம் கொதிப்புராதென்னசெய்யும்? இந்தியா எவ்வளவுக் கெவ்வளவு ஸ்வதந்தர்ய உணர்ச்சி கொள்ளுகிறதோ—எவ்வளவுக் கெவ்வளவு தீவிரமாய் விடுதலைப்போராடுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு அவமதிக்கப்படுகிறது—உயிர் வாங்கப்படுகிறது—பலியிடப்பட்டாய்விட்டது. சர்க்காரும் இவ்வளவையும் கைத்துடுக்காகவே தான்செய்துவருகிறது. இந்தியர்களின் வயிரெரிந்தால் அந்நெருப்பு பிரிட்டனை அடியோடு எறித்துவிடும் என்பது மட்டும் ஞாபகமிருக்கட்டும்.

"ஊழியன்" அன்பர்களுக்கு!

"ஊழியன்" ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் ஒரு மாதம்வரை நான் பிரதிநிதியாகப்பலவிடங்களிலும் சென்று வந்ததுமன்னியில் டிசம்பர் மாதம் முதல் மானேஜர் என்ற முறையில் நிர்வாகத்தைப் பார்த்துக்கொண்டு வந்ததன்னியில் பல இடங்களுக்குப் பிரதிநிதியாகவும் சென்று "ஊழிய"னுக்கு வேண்டும் உதவிகள் பலவற்றையும் நாடினேன். முடித்தேன். "ஊழியனும்" ஆரம்பமுதல், நாமிருக்கும்வரை சீறிய முறையில் நடைபெற்று வந்தது, எக்காரணத்தை முன்னிட்டோ ஆசிரியர், நாயுடு நிர்வாகத்தை மற்றொருவருக்கு மாற்றிக் கொடுத்துவிடப் போவதாக நமக்கு மிக விசனத்துடன் அறிவித்தார். நான் விலகிக்கொண்டேன். அதன்பின்னர் என்பேரில் அநேகர் சந்தேகப் படக்கூடியதான விஷயங்கள் பல சொல்லுவதாக நம்மைவந்து கேட்கின்றனர். நான் சம்பந்தப்பட்டவரையுள்ள நிர்வாக விஷயங்கள் பூராவையும் நாயுடுஒப்புக் கொள்ளும்காலை நான் பற்றிக்கொண்டது ரூ 65 தான். மீ 7 வேலைபார்த்துள்ளேன். ரூ88—1—0வும் எனக்குக் கொடுக்கவேண்டியதுளதெனவும் மீ 1-க்குப் பின்னால் தருவதாகவும் சொல்லியுள்ளார். அப்படியிருக்க பலரிடத்தில் பலவிதம் நாயுடு சொல்லினும் அல்லது "ஊழியன்" அன்பர்கள் நினைப்பினும்உண்மைக்கு மாறுபட்ட விஷயமென இதன்மூலம் அறிவித்துக்கொள்ளுவதுடன் ௨6-ந் தேதிக்கு பின் நான் ரூபாய் வாங்கியிருப்பதாகக் கூறினால் எனது கையொப்பமிட்ட ரசீதுகளைப்பெற்றிருக்கவேண்டுமென்பதையும் நாயுடுக்கு ஞாபகமூட்டுகின்றேன்.

இங்ஙனம்

க. பெ. ஆள்வார்.

சுயராஜ்யம் என்றால் என்ன : :

காலஞ்சென்றதிலகர்

சுயராஜ்யமென்றால் என்ன? அநேகர் இதைப்பற்றித் தப்பபிப்பிராயப்பட்டு வருகின்றனர். சிலர் இதை யுள்ளபடி தெரிந்துகொண்டிருந்தும், தப்பாக அர்த்தம்செய்து காட்டி வருகிறார்கள். சிலர் சுயராஜ்யமடைய இஷ்டப்படாதவர்களா யிருந்துவருகின்றனர். இவ்வாறாக நமக்குள் பலவகைப்பட்ட அபிப்பிராயங்களுடைய மனிதர்கள் இருந்துவருகிறார்கள். எனவே நான் "சுயராஜ்யமென்றால் என்ன?" வென்பதைப்பற்றியும், அது நமக்கு எப்படி இன்றியமையாததாகு மென்பதைப்பற்றியும் சுருக்கமாகச் சொல்லிவிடுவதோடு நிறுத்திக்கொள்ளப்போகிறேன்.

எந்த தேசத்தை எடுத்துக்கொண்டாலும் அதற்கு ஓர் அரசரும், அரசாங்கத்தை நடத்திவரும் அதிகாரிகளும், ராஜீய நிர்மாணசட்டங்களும் இருந்தே தீரவேண்டும்.

"இந்திய சுயராஜ்யக் கிளர்ச்சியானது இப்போது இந்நாட்டில் நடந்துவரும் ஆட்சிமுறையை மாற்றி யமைக்கவேண்டுமென்பதைப் பற்றியதேயாகும்."

இந்தியாவை ஆண்டுவருகிறவர்கள் யார்? நமது சக்ரவர்த்தி இங்குவந்து நேரில் இந்நாட்டை ஆட்சிபுரிகிறாரா? இல்லை. பின் யாரைக்கொண்டு இந்த ஆட்சிமுறை நடத்தப்பட்டு வருகிறது? இப்போது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்கீழ் ஊழியம் செய்துவரும் இந்தியா மந்திரி, ராஜப் பிரதிநிதி, கவர்னர்கள், கிராம உத்தியோகஸ்தர்கள், போலீஸ் சிப்பாய்கள் முதலியவர்களாலேயே இந்த நாடு ஆண்டுவரப்படுகிறது.

ஒரு போலீஸ் சிப்பாயியை இந்தஇடத்தைவிட்டு மாற்றி வேறொருவரை அவருக்குப்பதிலாக நியமிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டால், அது ராஜத் துவேஷமாகுமா? இப்போதிங்கிருக்கும் கலெக்டருக்குப் பதிலாக மற்றொருவர் கலெக்டராக நியமிக்கப்படவேண்டுமென்று சொல்லப்பட்டால் அது ராஜதுவேஷமாகுமா? ஒரு கவர்னருக்குப் பதிலாக மற்றொரு கவர்னர் நியமிக்கப்படவேண்டுமென்று சொல்லப்பட்டால்தான் இராஜத் துவேஷமாகுமா? இப்போ திருந்துவரும் மந்திரி வேண்டாமென்றும், அவரைத் திருப்பி அழைத்துவிட வேண்டுமென்றும் சொன்னால், அதுதான் ராஜத்துவேஷ மாகுமா? இவற்றையெல்லாம் இராஜத்துவேஷமான காரியமென்று இதுவரையில் ஒருவரும் சொன்னதே யில்லை. ஒரு போலீஸ் சிப்பாய் விஷயத்திற்குள்ள விதிகளே இந்தியா மந்திரி விஷயத்திலும் பொருந்தும். நாம் எல்லோரும் இந்த உத்தியோகஸ்தர்களெல்லாம் எந்த அரசரின் கீழ் ஊழியம் செய்துவருகிறார்களோ, அதே அரசரின் குடிகளாவோம். இந்தப் "புல்லர்" களும், ராஜப் பிரதிநிதிகளும் நமக்கு வேண்டாமென்று நாம் சொன்னால், அதற்குக் காரணம் காட்டவேண்டுமென்று கேட்கிறவன் மூளை புரண்டிருக்கிறதென்றே நாம் கருதவேண்டும். இப்படிச் சொல்லுவது ராஜத்துவேஷ மாகாதென்பது சரித்திரப் பிரசித்தம். நாம் வேண்டுவது சுயராஜ்யமேயாகும். நான் சொல்லுவதை நீங்கள் தீர்க்கமாக யோசனைசெய்து பார்க்கவேண்டும். இப்போது நடந்துவரும் ஆட்சிமுறை ஒழுங்கானதென்று நீங்கள் நினைத்தால் நான் அதற்குமேல் ஒன்றும் சொல்லவேண்டியதே இல்லை. காங்கிரஸிலும் மகாநாடுகளிலும் வந்து நீங்கள் போலீசாரின் அதிக்கிரமத்தைப்பற்றியும் கலால் இலாக்காவால் மதுபானம் அதிகரித்திருப்பதைப் பற்றியும் சரியான கல்வி புகட்டப்படாததைப்பற்றியும்குறைகூறி கொள்ளுகிறீர்கள். இதற்கெல்லாம் மூலகாரணமென்ன? இவைகளை யெல்லாம்பற்றிக் குறைகூறுவதால் மாத்திரம் ஏற்படும் பலனென்ன? உங்களுக்கு ஏன் சரியான கல்வி புகட்டப்படவில்லை? நமக்கிஷ்டப்படாத ஜாகாக்களில் கலால் இலாக்கா அதிகாரிகள் சாராயக் கடைகளை யேற்படுத்தி வைத்திருப்பதேன்? காட்டிலாக்காவில் நமதிஷ்டத்திற்கு விரோதமாக பலவிதமான சட்டங்கள் இயற்றப்பட்டுவருகின்றன. இவைகள் ஏன் இயற்றப்பட்டுவரவேண்டும்? தற்காலம் இப்பேர்ப்பட்ட விஷயங்களைப்பற்றிய பல குறைகள் காங்கிரஸின் முன் கொண்டுவரப்படுகின்றன. உங்களுக்கு உண்மையான அதிகார

மில்லாததாலேயே இப்பேர்ப்பட்ட காரியங்கள் நடைபெற்றுவருகின்றன. இந்த ஆட்சி முறையால் பயனடைய வேண்டிய உங்கள் கையில் அதை நடத்தும் அதிகாரம் இருந்துவரவில்லை. எனவே நாம் கேட்பது ஒரு குழந்தையின் வேண்டுதலேயாகும். பசியெடுத்தால் அழுவது குழந்தைகளின் வழக்கம். தனக்குப் பசியாயிருக்கிறதென்று ஒரு குழந்தைக்கு வாய்விட்டுச் சொல்லத் தெரியாது. குழந்தை வயிற்றுநோயால் அழுகிறதா அல்லது பசியால் அழுகிறதாவென்று தெரிந்துகொள்ளவேண்டியது தாயின் கடமையாகும். சில சமயங்களில் தாய் செய்யும் பரிகாரங்கள் அனுவசியமானதாகவும் முடியும். நமது தற்காலநிலைமையும் இப்படியேதானிருந்துவருகிறது. முதல் முதல் உங்களுக்குள்ள குறைகளுக்குக் காரணமின்னதென்றும், நீங்கள் தெரிந்துகொள்ளவேயில்லை. அதைத் தெரிந்துகொண்டு விட்ட பிறகே நீங்கள் வாய்திறந்து பேச ஆரம்பித்தீர்கள். ஆனால் உங்களிஷ்டம்போல் உங்கள்காரியங்களைச் செய்து முடிப்பதற்கான அதிகாரம் உங்கள் கையிலில்லை. இப்போதிருந்துவரும் ஆட்சிமுறை நமக்கு வேண்டியதில்லை. இதைவிட சிலாக்கியமானதோர் முறையே நமக்கு வேண்டும். அதுதான் "சுயராஜ்யம்" அதுதான் "சுய்ஆட்சி" அதுதான் "உள்நாட்டு சுதந்திரம்"

இன்று மாலை!

6—30-மணிக்கு பூந்தட்டான் "வாணிவிலாச சபை" கல்விக்கழகத்தின் சார்பாக ஸ்ரீமான் கே. பக்கிரிசாமி பிள்ளை அவர்களின் தலைமையின்கீழ் சுந்திரமூர்த்தி நாயனாரின் வாழ்க்கையைப்பற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தப்பெறும்.

தேசோபகாரி

(வாரம்இரு முறை)

வருட சந்தா (இரங்கோன்)	ரூ	3	0	0
6 மாதம் ,,	,,	1	8	0
வருட சந்தா (வெளியூர்)	,,	4	8	0
6 மாதம் ,,	,,	2	12	0
மலாய்நாடு வருட சந்தா	,,	6	8	0

மூக்கால் மூன்று தடவை!

கனம் ஆசிரியர், "தேசோபகாரி"

முக்கால் மூன்று தடவை என்பது நம் நாட்டு வெகுகால பழமையான பேச்சு. அந்தக்காலத்தில் மன்னர்கள்கூட இரண்டுதடவை பொறுத்துப்பார்த்து மூன்றுவது தடவைதான் சிட்சை விதிப்பார்களாம். சாதாரண எந்த விஷயத்திலும் மூன்றுவதுதடவை பலன் கிடைப்பது உறுதி என்ற நம்பிக்கை நம் நாட்டாருக்கு உண்டு. உபாத்தியாயர்கள்கூட இருதடவைகள் தப்பிதம் செய்தாலும் மாணவர்களை மன்னித்துவிடுவார். மூன்றுவது தப்பிதத்தை விடமாட்டார். தெய்வம்கூட இந்த முக்கால் மூன்றுதடவைப் பழமொழியை கடைபிடிக்கிறதாம். தண்ணீரில் ஒருவன் தப்பிக்கமுடியாமல் மூழ்கினால் மூன்றுதடவைமேலே வந்து கீழே போவான். மூன்றுவதுதடவை கீழே போவதுதான் கடைசிப் போக்கு. ஒருசில மாணவர்களால் நேர்ந்தசிரமத்திற்காக உங்களது ஆண்மையின் கோடற்குறி—பர்மாவிலுள்ள ஹிந்து-முஸ்லிம்களுக்கு வீரப்பாலூட்டிய "தேசோபகாரி"களைப் புற்றிடக்கூடாது. உங்களது பெருந்தன்மையை நாங்கள் போன்றோர் அறியவே செய்வோமாயினும் சென்ற இதழிலும் ஸ்பஷ்டமாகக் கூறிவிட்டீர்கள். தாங்களும், எங்களது உபகாரியும் நீடூழி வாழ்க!

முகம்மது காசிம்

குறிப்பு:—

பொது வேலையில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் ஆபத்து தலைக்குமேல்தான் என்பதை பலதடவைகளில் எடுத்துக் காட்டியுள்ளேன். அதைப் பொருட்படுத்துவதும் என் அகராதியில் கிடையாது. "தேசோபகாரி" நடுநிலைமையில் சென்றுகொண்டிருக்கும்போது எம்மை எரிந்துகொண்டிருக்கும் நெருப்பில் தூக்கிப் போட்டபோதிலும் எரிந்துபடப் போவதில்லை. (ப—ர்)

சந்தா நேயர்களுக்கு

சந்தா பணம் முடிந்த அன்பர்களுக்கு இதுமுதல் வீ. பி. அனுப்பி வருகின்றோம். கம்பெனிக்கு நஷ்டம் நேராவண்ணம் பணம் கட்டிப் பெற்றுக்கொள்வீர்களாகவும்.

மானேஜர்.

பிரிட்டனின் கடைசி வேலை : :

மிஸ்ரார்போன்

காந்திஜீயைக் கைதியாக்கி இருப்பது சரியோ, தப்போ நான் அவரைப்பற்றி அறிந்திருக்கிற முக்கிய காரணங்களிலிருந்து வைசிராய், காந்திஜீயின் நட்புக்கடிதத்திற்கும், சிநேகமுறைக்கும் கதவைத் திறந்திருந்தால் மகாத்மாஜீ கைதியாகி இருப்பதற்கு நினைத்திருக்கமாட்டாரென்பதுமட்டும் மறுக்கமுடியாது. தற்போது காந்திஜீ கைதியாக இருந்தபோதிலும், அவரின் திட்டங்கள் ஒவ்வொரு இந்தியனுடைய மனதிலும் பதிந்திருக்கிறது. அதன் நம்பிக்கை, அவநம்பிக்கை கொள்ளும் பலரையும் ஒழுங்குபடுத்திக்கொண்டு தற்காலிகமான உத்தரவுகளையும் ஊடுருவிச்சென்று, இந்திய ஜனங்களின் புராதன வழக்கத்தோடுபிணைக்கப்பட்டு இந்தியாவின் வருங்கால அமைப்பை மாற்றி அமைப்பதற்கு தனக்குள் தானே தீர்மானித்துக்கொள்ள—மாற்றித் திருத்த உரிமை இருக்கிறதென செய்கையில் காட்டிவருகிறது.

சிலசமயங்களில் இந்தியாவிலுள்ள அவசரச்சட்டங்களை பிரிட்டிஷ் பத்திரிகைகள் கொடுமையற்ற ஆயுதங்களாக வியாக்கியானம்செய்திருப்பது இந்திய ஸ்திரீகள் கருணையின்றிதண்டிக்கப்படுவதைகூட உள்ளபடி கூறவில்லை என்றே நினைக்கிறேன். அநேக ஜனங்களிடை எதேச்சாதிகாரச் செய்கைகளும், சர்க்கார் நினைத்த—மனதில் தோன்றிய பிரகாரம் அடக்கிவந்திருக்கிறார்களென்றும், அவர்கள் அப்படிச் செய்வது சரியெனக்கூட ஒப்புக்கொள்ளப்பட்டதென்றும் தெரிகிறது. இந்தியாவின் இயக்கம் தலைவர்கள் மூலமும், கொடியின் ஆர்ப்பாட்டத்தாலும் நடக்கிறதே தவிர, மூடுமந்திரமாய் நடைபெறவில்லை. இந்தியா மந்திரிவெகு தூரத்திலிருந்து கிடைக்கும் தகவல்களைக் கொண்டு அடக்குமுறையால் அமைதி நிலவுகிறதென ஐந்தாறு பேர்வழிகள் நம்புவதுபோல் சொல்லலாமே தவிர அநேகருடைய மனதில் உதித்திருக்கும்—அறிந்துகொண்டிருக்கும் கேள்விகளுக்கேற்ற முடிவான பதில்அல்ல. இந்தியர்களின் உணர்ச்சி வர, வர உன்னதமடைந்துவிட்டது. நான் இந்தியாவிலிருந்தபோது, பம்பாயில் சமூகப் பிரச்சினையான ஒரு சிறிய விவாதத்துக்கிடையே கூட்டம் நடக்க; அக்கூட்டத்தைப்பற்றி மிகைத்துக்கூறப்பட்டது. தடபுடலான நடவடிக்கையை ஆரம்பிக்குமுன் ஒரு சிலகாங்கிரஸ் தொண்டர்களாலேயே சிறிது நேரத்திற்குள் கூட்டம் கலைக்கப்பட்டது. காங்கிரஸ்காரர்களால் கலகம் விளைகிறதெனக் கூறுவதற்கு எந்தஒரு ஆதாரமும் இருந்ததாக எனக்கு ஞாபகமில்லை. கலாசாலை மாணவர்களிடம் தேசிய உணர்ச்சி இருப்பதாகக்கூட சொல்வதற்கில்லை. இந்தியக்கல்வி திட்டம் மேனாட்டு முறையாகவே அமைக்கப்பெற்றிருப்பதால், அவ்விதம் சொல்லுவதும் பொருத்தமல்ல. கையில் தேசியக்கொடி வைத்திருப்பது குற்றமாகக்கருதி தண்டிக்கப்படும் இந்திய மாணவர்கள் அரசியலைப் பற்றி அறிந்திருப்பார்களென்பதற்கில்லை. இந்திய ஜனங்களின் கொள்கைகள் காங்கிரஸ் திட்டங்களை அனுசரித்தவைகளாகவேஇருந்தபோதிலும், அவர்களினுடைய சுய உரிமைகளைக் காட்டி விட்டுக்கொடுக்க சிலசமயங்களில் சர்க்காரால் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். தேசியத்தை வளர்க்கக் கங்கணம் கட்டியிருப்பதாக மெய்ப்பித்துக்கொள்ளும் பேர்வழிகளும் சர்க்கார் பட்டதாரிகளும் வருத்தந் தெரியாது கூறிக்கொள்ளுவது வெறுக்கத்தக்கதாகும். லார்டு இர்வின் பார்லிமெண்டில் சென்றடிசம்பர்மாதக் கூட்டத்தில் பேசியபடி, இந்தியாவின் சிநேகத்தைப்பெருக்க பிரிட்டன் முயற்சிக்கவேண்டுமே தவிர அடக்குமுறை விளையாட்டுத் தோல்வி அடையுமென்பதை அழுத்தமாகவும் கூறுவேன். நாலைந்து வருஷமாக இந்தியாவின் போக்கைக் கவனித்தால் ராஜீயஉடன்படிக்கையின் சரத்துப்படி அதிகப்படியான பாதுகாப்புடன் இந்தியாவிற்கு சுயேச்சைஅளிப்பதே நியாயமாகையால், அடக்குமுறையை நிறுத்தி காங்கிரஸ் இயக்கத்தை தடுப்பதே புத்திசாலித்தனமாகும்.

அரசியல் தலைவன்.

அரசியலை ஒரு உத்தியோகமாகக்கொண்டிருப்பது சோம்பேரித்தனமும், பித்தலாட்டம் நிறைந்த தொழிலாகும்; பக்குவப்பட்ட தேசிய வீரன்—தியாக புருஷன் தனது புஜபலத்தை மெச்சுவது இல்லை. தனது திட்டத்தில் பரிபூரண நம்பிக்கையுடன் செயலாற்றில் இதாருடைய நன்மையே பயன் அளிக்கும் கருவியென நினைத்துவிடுகிறான். அவனுக்கு எப்பக்கத்திலிருந்து எதிர்ப்பு வந்தாலும், தனது லக்ஷியத்தைஎய்தும்வரை பின்னிடைகிறதில்லை. தேசியவாதிகளின் சகபாடிகளாக இருப்பவர்கள்சிலவேளைகளில் தவறுதலும்உண்டு. ஆனால் திட்டங்களைப்பற்றி குறைகூறுவதில்லை. அப்படிக் குறைகூறுவது ஒரு அரசியலில் சம்பந்தப்பட்டவனுக்காவது இன்றைய உலகில் பாகுபாடு பிரிக்கப்படாமல் சுதேச இயக்கத்தில் சேர்க்கப்படுவதன் நோக்கம், தேசியப்பற்று பரவவேண்டுமென்பதே. இந்தியாவில் தேசிய உணர்ச்சி எவ்வளவுக் கெவ்வளவு ஓங்குகிறதோ, அவ்வளவில்தான் விடுதலையுமிருக்கிறது. களங்கமற்ற அரசியல்வாதி தனது தேச மகாஜனங்களின் தகுதிக்கேற்பசெயல்புரிந்து வெற்றிபெற தனது ஞானமான விவாதத்தை தீர்த்துக்கொள்ள கோரிநிற்கின்றான். ஆனால் வேஷதாரிகளாகிய தேசிய வாதிகளின் பொருத்தமற்ற சமயோசித வாதங்களுக் கிடையே தனது உபதேசத்தைச் செய்துகொண்டிருக்கசாத்தியமின்றி சற்று தயங்கினதும், சுயநலமிகுந்தவர்கள் முன்னேற்ற மடையாததுபோலிருந்தாலும், அரசியல்வாதிகளின் திட்டத்தையோ அவனது லக்ஷியத்தையோ அசைத்துவிடுவதற்கில்லை. கடினமையான அரசியல் போராட்டத்தில் சில்லரையான உள்நாட்டுக் கலகங்கள்நடப்பதைக் கவனித்துக்கொண் டிருக்கமுடியாது. அவைகளை அப்படிப் பொருட்படுத்திக்கொண்டிருந்தால் அரசியலின் முற்போக்குக் குறைவுபடுமென்பதை அறிந்தே இருப்பார்கள். மாசற்ற தேசியவாதியை யாவர் குறைகூறினும் பொருட்படுத்தப்போவதில்லை. தனது நிலையை மாற்றிக்கொள்வதில்லை. பிறருடைய புகழ்ச்சிக்கும் வசதி அளிப்பதில்லை. ஆகவே தனது பூர்வாங்கமான திட்டத்திலேயே கண்ணும், கருத்துமாயிருந்து வெற்றிபெருவான். அவன்தான் அரசியல் நிபுணன்எனப்படுவான். போலி தேசியவாதிகளை நம்புவது ஆபத்துக்கிடமாகும்.

மறதி மனித சுபாவம்!

இந்திய-பர்மிய அரசியல் வியவகாரங்களில் பர்மாவைச் சீர்தூக்கிப்பார்த்தால் சாக்கடையென்றோ, கழிவு நீரோடை யென்றோ பலர் எழுதவும், பேசவும் கேட்டிருக்கின்றோம். அது அப்படி இருக்க; மற்றெந்த மாகாணத்தையும்விட அரசியல் நிர்வாகத்தில் பர்மா சர்க்கார்தான் போட்டியின்றி கோர்ட்டில் நின்று வந்தது. சிம்லா தெய்வங்களின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் வங்காள சர்க்கார்தானாகட்டும், பாஞ்சால சர்க்கார்தானாகட்டும் பர்மா சர்க்காருக்குப்பிச்சைபோடக்கூடமுடியாதென்பதை நமது சகவர்த்தமானியால் மானம் போகும்வரை வாய்த் துடுக்காகச் செய்துவந்தது. அது நன்குதெரிந்து ஹைகோர்ட்டு பிரதம ஜட்ஜ் ஆர்தர்பேஜ்அவர் தம் ஸ்டேட்மென்டொன்றில் ஸ்பஷ்டமாக விளக்கியும் காட்டியுள்ளார். அதை நன்கு தெரிந்துகொள்ளாத சில்லரை தேவதைகள் சர்க்காருக்குப் பணச்செலவையும், கஷ்டத்தையும் உண்டுபண்ணமுற்படுவதுதான் நமக்கு ஆச்சரியமாகவிருக்கிறது. மறதி மனித சுபாவம்தான்; ஒருக்கால் குட்டி அதிகாரிகள் மறந்திருந்தால் சீப்ஜட்ஜ் மிஸ்டர் ஆர்தர்பேஜ் எழுதிய ஜட்ஜ்மெண்டையும், ஒருகாலத்து லார்டு சின்ஹாவின் வியாக்கியானத்தையும், பள்ளிப் பிள்ளைகளாகிய பத்திராசிரியர்கள் சீப் செக்ரட்டரியால் எச்சரிக்கப்படும்பொழுது மெயில் ஆசிரியர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மூன்றுதடவை எச்சரிக்கை செய்வதாக ஒப்புக்கொண்டதையும் ஞாபகமூட்டுகின்றோம். சட்டம், சட்டந்தானென்றாலும் அதை உபயோகிப்பதற்கும் சட்டவரம்புண்டு. அதை மீறி—எச்சரிக்கைசெய்வதை விடுத்து வயிற்றுச் சோத்துப் பேர்வழிகளின் பேச்சை நம்பி திடீரென ஒன்றைச் செய்துவிடுவதால் இருசாராருக்கும் கஷ்டமும் நஷ்டமும்ஒருபுறமிருக்க சர்க்கார் அவமானத்திற்கும் ஆளாகவேண்டி இருக்குமென்பதை மீண்டும் ஞாபகமூட்டுகின்றோம்.

ஆசிரியர் விடுதலை.

ஒரு பத்திரிகையில் பிரசுரயாகும் அனைத்திற்கும் அச்சிடுவோரும்பிரசுரகர்த்தாவும்பொறுப்பாளிகள் எனச் சட்டம்விதிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் ஒரு குறிப்பிட்ட கட்டுரை வெளியாகும்தினம், ஊரிலில்லாமலாவது, அல்லது நேர்மையான காரணத்தை முன்னிட்டு ஆஜராவிலாவது இருப்பதாக மெய்ப்பிக்கப்பட்டால் அவர்கள் பொறுப்பாளிகளாகமாட்டார்களென்று பிரதம பிரஸிடென்ஸி மாஜிஸ்திரேட் குறிப்பிட்டு பம்பாய் "சமாச்சார்" என்னும் பத்திரிகையின் ஆசிரியரும் பிரசுரகர்த்தாவுமான திரு ஜயந்திலால் அமீனை விடுதலை செய்தார்.

காங்கிரஸ் காரியக் கமிட்டித் தீர்மானம் எனக் கூறப்படும் ஒரு செய்தியை அப்பத்திரிகையில் பிரசுரித்ததை முன்னிட்டு அவர்மீது கிரிமினல் சட்டத் திருத்தச் சட்டத்தின் 17 (1) வது செக்ஷன்படியும் 2-ம் நம்பர் அவசரச் சட்டப்படியும் வழக்குத் தொடரப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டிஷ் நீதியில் எந்தப் பகுதி?

பம்பாயில் நடந்த கலகத்தை முன்னிட்டு இந்து-முஸ்லிம்கள் ஏராளமாக மரணத்திற்குள்ளானார்கள்; என்பதை நண்பர்கள் அறிவார்கள். பம்பாய் கிராணிக்கள் போன்ற பிரபல பத்திரிகைகள் கலகத்திற்கு காரணஸ்தர்களானவர்களை வெளியிட்டதற்காக ரூ 6000 ஜாமீன் கேட்டிருப்பதானது "குதிரை தூக்கிப் போட்டது மல்லாமல் குழியும் பறித்த"கதையைப்போ லிருக்கிறது. ஜனங்களைப்பாதுகாக்கவேண்டிய பொருப்பு சர்க்காரைச்சேர்ந்தது. அப்பொருப்பை கொஞ்சமும் உணராத சர்க்கார் சிப்பந்திகள்; ஹிந்து-முஸ்லிம்களின் உயிர்கள் குழிக்குப் போவதற்கு காரணஸ்தர்களாயிருப்பதும் பிரிட்டிஷ் நீதியில் இது எந்தப்பகுதியைச் சேர்ந்தது? என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. பம்பாய் சர்க்காரின் போக்கும் ஒரு விசித்திரமாகவே இருக்கிறது. பம்பாய் கவர்னரே! வழக்கத்திலிருந்து வரும் பரிசையும் கலகத்திற்கு காரணபூதராயிருந்தவர்களுக்காக அளிக்கப் பின்வாங்கவேண்டாம்!

நமக்குத் தேவை தியாகம்.

காராக்கிரஹமும், போலீஸ் தடியடியும், பிரிட்டனின் துப்பாக்கிக் குண்டுகளும்தான் நாம் அடையவிருக்கும் சுயராஜ்யத்திற்கு—சுதர்மத்திற்கான வழி. தற்சமயம் பம்பாயில் நடக்கும் ஹிந்து-முஸ்லிம் கலகம்போன்ற கொடிய—மூர்க்கத்தனமான விஷயங்களில் தலையிடுவதல்ல; இந்திய இரத்தம் ஓடப்பெற்ற ஒரு உண்மை இந்தியன்; ஹிந்துவாயினும்சரி, முஸ்லிமாயினும்சரி பம்பாயில் நடைபெருவது போன்ற கலகத்தைப் பொருட்படுத்தவேமாட்டான். ஆண்டவனால் கொடுக்கப்பட்ட அறிவைக்கொண்டு திரேகத்தை வளைத்து, கையால் கடினமான வேலைகளைச்செய்து பிழைக்க வழி தெரியாத சில கஞ்சித்தொட்டிகள்; இதுதான் சமயமென்று விஷமப் பிரசாரம் செய்துவருவதை ஆலோசனை—தீர்க்கபுத்திஉள்ள எவனும் ஒத்துக்கொள்ளவே மாட்டான். தனி ஒரு மனிதன் வயிறு நிரபபவேண்டி ஹிந்துவை; முஸ்லீமோ, முஸ்லீமை ஹிந்துவோ கிள்ளி விட்டால் அந்தப்பிரசாரத்தைக்காலடியில்போட்டு மிதித்துவிட்டு நமக்கு வேண்டிய தியாகம் எதுவோ அதையே நோக்கிப் போய்க்கொண்டிருக்கவேண்டும். நமது தியாகத்திற்கு—அடிமைப்பந்தத்தைவிட்டு அறுபடுவதற்கு தடைக்கல்லாகவிருப்பவர்கள் எக்காலத்தும் தங்களது சூழ்ச்சியைச் செய்துகொண்டுதா னிருப்பார்கள். அதற்குத் தலைசாய்க்கவேகூடாது. சுயராஜ்யம் பெரும் ஒரே நோக்கத்தில்மட்டும் நம் மனதைச் செலுத்திச் செல்லவேண்டும். அப்பக்கம் இப்பக்கம் திரும்பினால் மஹா ஆபத்துத்தான். ஹிந்து-முஸ்லிம் அடித்துக்கொள்வதென்பது அவரவர் தம் சகோதரர்களுடன் அடித்துக்கொள்வது போன்றது. நாம் காட்டிக்கொள்ளும் துவேஷங்களாலேயே பஞ்சாப் படுகொலைபோன்ற அத்தகைய அநீதிகள் இந்தியாவில் நிகழ்கின்றன. இத்தகைய துவேஷங்கள்—கலகங்கள் ஒழியுமானால் அபாரமான அநீதிகளும், கொலைகளும் நடக்க காரணமே இல்லை. துவேஷம் எந்த எந்த இடத்திலிருந்து புறப்படுகிறதோ; அதை வேருடன் களைவதைவிட்டு நாமிருவரும் சண்டையிட்டுக்கொள்வதென்பது இந்தியாவிலன்றி வேறு எந்நாட்டிலேனும் கிடையாது.

பகிரங்கப் பேச்சு!

தேவடியாள் தெருவில்!

போலீஸ் வீரன் சுந்தரராஜ்லு நாயுடு எது மேலீட்டாலோ மங்கமாரிவீதியிலுள்ள 39நிர் 40நிர். கல்விகளுக்கு நடுவே நின்றுகொண்டிருக்க மேல்வீடுகளிலுள்ள விலைமாதர்களால் போத்தல்களும், கற்களும் பூமாரி சொரிவது போல் ஸி. ஐ. டி. சுந்தரராஜ்லு நாயுடுவின் மேல் போடப் பட்டனவாம். அன்புமேலீட்டால் நடந்தனவா யிருப்பினும் இத்தகைய அவமானப்படத்தக்க முறையில் விலைமாதர்கள் நடந்து கொண்டதானது அவர்களது துஷ்டத்தனத்தையே காட்டுகிறது. அதுசம்பந்தமாக போலீஸ் வீரரும் மேலதிகாரிகளுக்குத் தெரிவித்திருப்பதாக நம்மிடம் கூறுகிறார். இத்தகைய விஷயங்களில் தலையிட்டுக் கொள்வது பற்றி நாம் அவரைப் போற்றுகிறோம். அவருக்கும் அவள்களுக்கும்தான் சரி.

❖ ❖ ❖

ஓடாத ஆடாத பங்கா!

ரயிலில் பிரயாணம் செய்யும் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளுக்கென டிக்கட்டு எடுக்குமிடங்களில் பங்கா (காற்றோட்டத்தைக்கொடுக்கும் கருவி) அமைக்கப்பட்டுப் பலவருடங்களாயினபோதிலும். ஒரு சமயத்திலாவது ஆடியிருக்குமென்று ரயில்வே சிப்பந்திகளேனும் பிரயாணிகளேனும் கூறமுடியாது, மூன்றாம் வகுப்பில்தான் அதிகவருமானமுமுண்டு. டிக்கட்டு வாங்குமிடங்களில் ஜன நெருக்கடியும் 3-வது வகுப்பு டிக்கட்டுவாங்குமிடத்தில்தான். ஜன நெருக்கடியால் புழுக்கமாகி ஒருவர் வாடை ஒருவருக்குப் பட்டு நோய்வாய்ப்படவும் ஆளாகிறார்கள். இவ்வித துர்வாடைகளை அகற்றுவான்வேண்டியே மேலே ஒரு பங்காகட்டித் தொங்கவிடப்பட்டும், ஆட்டி அசைப்பாரற்றுக் கிடக்கிறது. பொது சௌகரியத்திற்காக வைக்கப்பட்டிருக்கும், அப்பங்கா ஏன் உபயோகிக்கப்படாம லிருக்கிறதென்பதை ரயில்வே மேலதிகாரிகள் இனிமேலாவது கவனிப்பரா?

பதிப்புரிமைத் தொல்லை.

புதியபத்திரிகைக்கேனும்சரி, பழையபத்திரிகைகளுக்காயினும் சரி பதிப்புரிமை கிடைப்பது; சிரம சாத்தியமாயிருப்பதாக பலர் நம்மிடம் முறையிடுகிறார்கள். அது உண்மையானால் பதிப்புரிமை அதிகாரிகளுக்கு ஒன்றுகூற விரும்புகின்றோம். ஒரு புதுப் பத்திரிகை பதிப்புரிமையை யடைவதாயின் இரண்டொரு நாட்கள் சுணக்கம் நேரிடினும் பொறுத்துக் கொள்ள ஹேது உண்டு பதிப்புரிமை பெற்று நடந்து சென்றுகொண்டிருக்கும் பத்திரிகைகளின் பொறுப்பாளர்கள் சவுகரியங்களை முன்னிட்டு மாற்றிக்கொள்ள இஷ்டப்படும்பொழுது உடனே மாற்றிவிடுவதால்தான்பொறுப்பாளர்கள்கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் ஆளாகாதிருக்கமுடியும். பதிப்புரிமைச்சுணக்கத்தால் இரண்டொரு நாட்கள் தாமதப்படுத்திவைத்திருந்தால் சந்தாதாரர்களின் தூற்றலுக்கும், அவநம்பிக்கைக்கும் ஆளாகவேண்டியிருக்கிறது. அத்தகைய சுணக்கமின்றி அதிகாரிகள் நடந்துகொள்ளும்படி நாமும் ஒருபத்திரிகையின் பொறுப்பாளன் என்ற முறையில் எச்சரிக்கின்றோம்.

❖ ❖ ❖

தாக்குண்டார்.

ஒரு அரசியல் தலைவன் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு; அரசியலினின்றும் இம்மி பிசகினும் அதைக் கண்டிப்பதற்கு இந்தியனென்ற ஹோதாவில் ஒவ்வொருவனுக்கும் உரிமையுண்டு என்பதை அறிவாளிகள் ஒப்புக்கொள்ளவே செய்வார்கள். ஒப்புக்கொள்ளத் தகாத குற்றத்தையே செய்திருந்தபோதிலும் சீரிய முறையில் நடந்துகொள்வதுதான் முறையுமாகும். அவைஎல்லாம்விடுத்து தனிமையாகச் சென்றுகொண்டிருந்த நமது ஆசிரியர் சிக்கேமவுந்தாவி 31-நிர். கல்வி மத்தி ப்ரேசர் வீதியில் ஒரு முஸ்லிம்சகோதரனால் தாக்குண்டார். திரும்பிப் பார்ப்பதற்குள் மாயமாய் மறைந்த முஸ்லிம் நண்பரின் வீரத்தை நாம் மெச்சுகின்றோம்.

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுஎண் 245] (1922-ஸ்தாபிதம்.) 20 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இருமுறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஸு (8-6-32) வைகாசி-மீ 26உ புதன்கிழமை

காந்திஜீயே உலகப் பெரியார்.

சென்ற ஏப்ரல்மாதம் 24உ அமெரிக்கா நியூயார்க் பட்டணத்தின் கோவிலொன்றில் அதன் நிர்வாகிகளின் ஆதரவில் கூடிய வேத பரிசீலனை சபையில் கோவிலின் ஸ்தாபகத்தைப் பற்றியும் அதன் மூல புருஷர்களின் முயற்சியைப் பற்றியும் மதவிசாரணை பாதிரிமார்களின் சிரத்தையையும் அறிவிக்கப்பட்டபின்பு, இந்தியாவின் நிலைமையைக் குறித்து சிந்திப்பதன் மூலம் இந்தியாவின் புண்ய சீலன், மதம், அரசியல், சமூகம் என்னும் பாகுபாடற்ற ஒரே இயக்கத்தை முன்னேற்றமடையச் செய்வதன் அந்தஸ்தில் உலகத்திலேயே மிகச் சிறந்தவரென மதிக்கப்பெறும் மகாத்மா காந்தியின் செல்வாக்கும் அவரின் உயரிய நோக்கமுள்ள திட்டங்களையும் நன்கு ஆலோசித்து கோவிலின் சார்பாக காந்திஜீ உலகப்பெரியாரென மெடல் ஒன்று அளிக்கப்பெற்றது அதனை டாக்டர் அரிதாஸ் முசும்தார் மகாத்மாவின் சார்பில் பெற்றிருக்கின்றனர். அந்த மெடலை வழங்கும்போது காந்திஜீயின் எல்லையற்ற பரோபகாரமும், விடா முயற்சியும் திடநம்பிக்கையும், ஆழ்ந்த மனோபாவமும் விஸ்தரிக்கப்பட்டது. தவிர சுமார் பதினொரு வருஷத்திற்கு முன் அதே கோவிலில், உலகப் பெரியாரென சிறந்து விளங்கும் "ஜான்ஹாய்னெஸ்ஹோல்ம்ஸ்" என்னும் பெரியார் பொது நன்மையும் பிறர் இன்பமடைய மகிழ்ந்திருத்தலும் உடைத்தா இருந்தாலும் அவர் ஒரு மத மாணவரென்று மதிக்கும் வகையில் கிரிஸ்து மத போதகராயிருந்தாரென்றும் அவரது வாழ்க்கையில் மத ஸ்தாபன விஷயத்தில் ஆச்சரியப்படும் பல காரியங்களைச் செய்திருந்தார். காந்திஜீயோ சரித்திர பூர்வமாக மதப்பற்றுடையவராயினும் பொது மதக்கொள்கை—ஆயசில் வேத சலுகை முதலியவைபற்றி ஜனங்களுக்குக் காட்டி தனது அபாரமான ஆத்மசக்தியால் பரிணமித்துக்கொண்டு இந்தியாமட்டுமல்ல உலகமே தனது திட்டத்தையும், இயக்கத்தையும் மெச்சிக்கொள்ள நல்ல பாடங் கற்பித்துவிட்டார். அவரின் உன்னத தைரிய—விசேட மிக மிகப் பெரிய செயல்களைக்கொண்டு சீர்தூக்கிப் பார்த்து உலகப்பெரியாரென நாமஞ் சூட்டப்பெற்றிருக்கிறார். டாக்டர் ஹோல்மஸ்கூட மகாத்மாவைப்பற்றி நூற்றுக் கணக்கான பிரசங்கங்களை கேள்வியுற்றிருக்கிறார். முக்கியமாக ஜனங்களின் அபிப்பிராயங்களுக் கேற்ற வழியில் நீதிவழங்கும் தன்மைபோல் இயக்கத்தைத் தோற்றுவிப்பது காந்திஜீயின் அபூர்வமான தீர்ப்பு ஆகையால் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க ஒழுங்கானதும்—சர்வஜன சம்மதமுமான மதபோதகராகவும் விளங்கி தனது ஆத்ம வியாபகத்தின் பிரகாசத்தை ஒவ்வொரு மனிதனுடைய ஜீவநாடிகள் தோறும் செலுத்தக்கூடிய சக்தியைப்பெற்று அணுவுக்கணுவாக ஏழைகளின் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்ட நடவடிக்கையோடு, விடுதலை—சுயேச்சை என்ற முகாந்திரததைக் காட்டி தேசிய பந்தயத்தை ஆட்டுவிக்கும் நேசப்பான்மை பெற்று பிறரை, எண்ணத்திற்கும்—செயலுக்கும் மாறுத செயல்களைப்புரியும்படி தூண்டி விடுகின்றனர். கோவிலின் வருஷாந்திர விழாவின் முதற்பரிசு அளிக்கும், காரணமாகக்கூடிய ஒரு தினத்தில், உலக பெரியார் என நிச்சயிக்கும்போட்

டியில், ராபி—ஸ்டிபென் எஸ் ஒய்ஸ் டாக்டர் பிராங் ஒலிவர்ஹால் டாக்டர் ஹோல்ம்ஸ் முதலியவர்கள் பேசியதில் டாக்டர் ஹோல்ம்ஸ் கடவுளின் உண்மைத் தொண்டாளர், உலகப் பெரியார் என்பதாக மகாத்மாஜீயை புகழ்ந்திருப்பதன்றியும், லக்ஷக்கணக்கான அமெரிக்கர்கள், காந்திஜீயின் இயக்கத்தையும், நீதியையும், திட்டங்களையும் ஆதரிப்பதாகவும், வெறும் வாய்மொழியாலன்றி செய்கையிலும், காண்பிக்க முற்படுவோமென்றும், இந்த மெடலின் உள்ளார்ந்த கருத்தின்படி, இந்தியாவின் விடுதலையை ஆவலோடு எதிர்பார்த்திருப்பதாகவும் கூறி தங்களது ஆவேசக்குறியைக் காண்பிக்கின்றனர்.

உலகமே மகாத்மாவின் செயலை நம்பி இருக்கிறது. ஆனால் டாக்டர் ஹால் சொல்கிறபடி காந்திஜீயின் முகமலர்ந்த வார்த்தையில் சிலர் நம்பக்கை இல்லாதிருக்கலாம். அதனாலேயே அவரைப் புறக்கணிக்க இயலாது. எவனுடைய ஆத்ம சக்தி—சாந்தபுத்திவிசாலப்பட்டு, அதிமேதாவிகளைக் கூட வஜீகரப்படுத்துகிறதோ! அம்மனிதனைத் துவேஷித்து தன்னலமுடையவனென்று பிதற்றித்திரியும் போலிகளுக்கு ஆதரவு கிடைக்குமா? புகழும் கீர்த்தியும் தேடிக்கொள்ள முயற்சித்து நமது கிழவன் எந்தச் சமயத்திலும் நடந்துகொள்ளுகிறதில்லை. அன்னியனுடைய மனதைத்திருந்தச் செய்வதில் தான் முனைந்து நிற்பவராகையால் தான் பிறருடைய உள்ளத்திலூன்றிப்பதிந்து கிடக்கின்றனர். இவ்வித மகிமை வாய்ந்த ஒரு பெரியாரைப் பூட்டி வைத்துப்பயமுறுத்துவது அறிவீனர்களின் செயலல்லவென மறுக்க முடியுமா? மிஸ்டர் ஹாயிஸ்மெய்யர் பேசும்போது காந்திஜீயின் ஒவ்வொரு வார்த்தைகளிலும்ஆனந்தம்ததும்பிஇருந்தது. தன்னை தனது நிலைமையை மறந்து நின்றுவிட்டதாகக் கூறுகிறார் என்னே! ஒரு ஆத்ம சக்தி. சாந்த புருஷனின் கொள்கை இப்போது யாரால் நிந்திக்கப்படுகிறாரோ அவர்களாலேயே காலக்கிரமத்தில்மதிப்பு கண்ணியமும் வாய்க்கப்பெறுவரென்பது திண்ணம்,

இந்தியா எதை நாடுகிறது?

இந்தியாவிலுள்ள விநோதமான நடவடிக்கைகளில் இந்து-முஸ்லிம் தகராறு அடிக்கடி நடைபெறுவதும் அதன்மூலம் கலகமேற்படுவதும் நகைப்புக்கிடமாகவே இருக்கிறது. இரண்டு பிரிவினையான மத கோட்பாட்டை ராஜீய வியவகாரமாக சிலர் பற்றிநிற்பது இந்தியாவை அவமதிப்பதேயாகும். மதம் அரசியலில் பிணைந்துக் கொண்டிருப்பது தன்னலத்தாலன்றி பொது நன்மைக்குரியன அல்ல. ஒரு தேசத்தின் சாயல் பல்வேறு பிரிவுகளாக காணப்படினும் தேசத்தின், மொத்த பகுதி பிரிக்கப்படாமல் அத் தேசத்தையே குறிக்கப்படுவதுபோல், இந்தியாவின் மக்கள் மதப் பிரிவுகளிலீடுபட்டிருக்கினும் அம்ஸத்தில் இந்தியனாகவே பாவிக்கப்படுகிறான். ராஜீய வியவகாரத்தின் ஆணி வேரில் அந்த இரண்டு பிரச்சினைகளும் சாடியபோது மரத்தையும், ஆட்டச் செய்யும் புயல் காற்று கிளம்பிவிடுகிறது. அவ்விதம் பெரும்புயல் இந்தியாவில் மட்டுமல்ல. எல்லா தேசங்களிலும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இந்தியா அன்னியரின் பாதுகாப்பிலிருக்க வேண்டிய நிர்பந்த மிருப்பதால், காற்றைத் தடுக்க அன்னியரையேதேடி மத்தியஸ்தம் செய்ய முயலுவதால் சிறிது அபாயங்களும் தாமதத்தில் உண்டாகிறது. இதற்கு முன் மௌனத்தைக்கொண்டு கலகம் ஆரம்பிக்கப்பட்டு வந்தது. இப்போது ரவீந்தரநாத் டாகூர், டாக்டர் பாரன்ஷீப், பிரப்பெஷர்ஸ் விலாபிரசாத் ஆகிய மூவர்களைக் கொண்டு சமாதான உடன்படிக்கை மூலம் ராஜி ஏற்பட்டுவிட்டது. ஜனங்களின் அறியாமையை அவர்கள் முற்றிலும் தொலைத்துவிட்டதாக நினைப்பதற்கில்லை. சந்தர்ப்பத்திற்கேற்ற முடிவேயாகும். இந்தியாவின் செல்வநிலை குன்றியிருந்தபோதிலும், மத உணர்ச்சி அதிகப்பட்டிருப்பதற்கு போலித் தலைவர்கள் தான் காரணம். சில ராஜீய வாதிகள் தங்களது கொள்கைக்கேற்ப மதத்தைத் திருப்பிக் கொள்ளும் உரிமையில்லாதிருந்தாலும் உரிமை இருப்பதாக அநேகர் மதித்திருப்பதும், ஒரு காரணமாகும். ஒரு சிறிய தகாறு விஷமிகளால் பெரிதாக்கப்பட்டு கண்மூடித்தனமான செயல்கள் புரியப்படுகின்றன. முன்னூறு வருடத்திற்குமுன் ஐரோப்

போதுமென்கிறான். இப்பேர்பட்டவனுக்கு எவன் போதிக்க முடியும். இவர்களெல்லாம் செவிச்சுவையிற் பொம்மைகள்.

திருநாவுக்கரசு நாயினார் திருவங்கமாலை

"செவிகாள் கேண்மின்களோ
சிவனெம்மிறைசெம்பவளம் எரிபோல்மேனிப்
பிரான் றிறமெப்போதும்—செவிகாள்?"

திருவங்கமாலை யென்றால் நம்முடைய தலையிலிருந்து யாக்கைவரைக்கும் உள்ள ஒவ்வொரு அவயவமும் செய்யவேண்டியது இன்னதெனக் கூறுவது. கடவுள் கிருபையால் நாமடைந்த உடம்புக்கு யாதொரு ஊனமுமில்லாத உறுப்புகளிருந்தும் செய்யவேண்டிய தொழிலைச் செய்யாமலிருப்பது பேதமையல்லவா? நாம் முடம், நொண்டி, குருடு, செவிடு, ஊமையாயிருக்கும்படி கடவுள் செய்யவில்லையே? மனிதனாகப் பிறந்தவனுக்குப் பகுத்தறிவு (ஞானம்) வேணுமே. நாம் மானுடராகப்பிறந்தது மிகுந்த புண்ணியமல்லவா? நமக்கு இவ்வளவு நன்றி செய்தகடவுளை நாம்மறக்கலாமா? அவரை யெப்போதும் தியானிக்கவேண்டுமே. நம்மைப் படைத்தவர் யாரென்று தெரிந்து கொள்ளாமலிருப்பது மனிதனாகப் பிறந்தவர்களுக்கு அழகாகுமா? இகலோக புத்திமாத்திரமுடைய மிருகம் பக்ஷிகளுக்கும், பிறவுயிர்களுக்கும் தங்களைப் படைத்தவர் யாரென்று அறியும் புத்தி கொடுக்கப்படவில்லை. அதனால்தான் அவைகள் நன்மை தீமைகள் தெரியாதவைகளாய் உலகத்திற் சஞ்சரிக்கின்றன; என்று ஞானவான்கள் கூறுகின்றனர். மனிதருக்கு இகலோக புத்தியுடன் பரலோக புத்தியும் அதிகமாகக் கடவுள் கொடுத்திருக்கிறார். அதனால்தான் அறம், பொருள், இன்பம் வீட்டை அறிகிறார்கள்—அடைகிறார்கள். மிருகம், பட்சி முதலிய உயிர்களுக்கு இந்த வுலக அநுபவமே யன்றி பரலோக எண்ணமில்லை. இது உங்கள் அநுபவத்திற் கண்டதல்லவா? மிருகங்கள் பட்சிகள் முதலியவற்றிற்கு ஆகாரம் நித்திரை புணர்ச்சியன்றி வேறே யேதேனுமுண்டா? மனிதன் அப்படியல்லவே. தாய் தந்தை, தமயன், தம்பி, அக்காள், தங்கைமுதலிய பல முறைகளைக்கொண்டவனாயிருக்கிறான். நன்மைகளுக்குண்டான அநேக காரியங்களி லீடுபட்டவனா யிருக்கிறான்.

(தொடரும்)

சங்கங்களின் கடமை.

பலசங்கங்கள் நீண்ட பெயர்களுடன் இங்கு பிழைக்கவந்தஇடங்களில்கூட அட்டைகளிலும் பலகைகளிலும் கொட்டை எழுத்துக்களால் பொறித்துத் தொங்கவிடப் பட்டிருக்கின்றன வேயொழிய உறுப்படியான வேலைசெய்வதென்னவோ; அதன் அகராதியில் கிடையாது, என்றால் அதன் காரிய தரிசிகள் கோபித்துக் கொள்ளமாட்டார்கள். சங்கம் என்னவோ அவசியத்திலும் அவசியமே. நமக்கும் கூடஎதாவது ஒரு சங்கத்தின் அங்கத்தினனாகவேண்டுமென்ற ஆவா உண்டுதான். ஆனால்பெர்லின்நகரிலுள்ள "ஏகாதிபத்தியஎதிர்ப்புச்சங்கம்" போன்றவைகளில் கலந்து உறுப்படியான வேலை செய்வதில் இஷ்டமேயொழிய சமூக சங்கங்களிலோ, சுதேசியங் கலவாத இதர சங்கங்களிலோ வேலை செய்வதென்றால் மனம்செல்லுவதில்லை. குறிப்பாக இவ்வூரில் நடைபெறும் சங்கங்களை எடுத்துக்கொண்டால்; சங்கத்தின் அங்கத்தினரோ சங்கங்களில் இணைக்கப்பட்ட "கல்வி நிலைய" இளைஞர்கள—பள்ளிப் பிள்ளைகளோ சிறுபிள்ளை குணத்திற்கேற்ப சேஷ்டைகள்செய்தால் கண்டிப்பதற்கே சக்தியற்ற சங்கங்களாயிருக்கும்போது அத்தகைய சங்கங்கள் இருப்பது பூமிக்குத்தான் பாரமேயொழியவேறல்ல! ஒரு சங்கத்தின் வாலிபர்கள் இத்தகைய இழிவுதுறையில் இறங்கி விடுவதால் சங்க கௌரவ நிர்வாகிகளுக்கும் கெட்டபெயர் சம்பாதித்துக் கொடுத்து விடுகிறார்கள். சங்கத்தில் இணைக்கப் பட்டிருக்கும் வாலிபர்கள் சங்க மெம்பர்களை கலந்துகொள்ளாது இழிவுதுறையில் நடந்து கொள்வதென்றால் சங்கத்தையும் அவர்கள் இழிவு படுத்தியவர்களாகிறார்கள். சங்கத்தில் செய்யவேண்டிய வேலையை-கடமையை செய்யத் தவறியவர்களுக்குத்தக்கதண்டனையைகொடுக்க முற்படுவதே சங்கத்தின் கடமையாகும்.

—முகம்மது சுல்தான்

குறிப்பு:- நாம்தாக்குண்ட விஷயமாககுறிப்பாக முஸ்லிம் சகோதரர்களேசோலிய முஸ்லிம் சங்க கல்விக் கழக இளைஞர்களைக் கண்டனம் செய்து எழுதியனுப்பும்ஒவ்வொன்றையும் அப்படியே பிரசுரிக்க முடியாமைபற்றி வருந்துவதுடன் குள்ளப் பத்திரிகை இடந்தராதென்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். (ப-ர்)

(3-ம்பக்கம் தொடர்ச்சி)

வங்காள புரட்சி சம்பந்தமாக, விஷயங்களை மிகைபடக் கூறுவது ஒழுங்கானதல்ல, அப்படி பார்த்தாலும் எங்கு அடக்குமுறை அதிகமாக்கப்பட்டிருக்கிறதோ அங்கு தான் புரட்சியும்,கலகங்களும்மிகுந்திருக்கிறது. அரசியல் தீவிர வாதிகள் தான் புரட்சியும் கலகமும் செய்கிறார்களெனக் கூறப்படுகிறது. ஆயிரக்கணக்கான பொதுஜனங்கள், அடிபட்டும், சுடுபட்டு மிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசியலைப்பற்றி ஒன்றுமே தெரியாது. இந்திய சர்க்கார், இந்தியருக்காக அமையும் ஸ்தாபனமெனக் கருதுவதற்கில்லை. அதன் தலைவர்கள், உத்தரவுகளைக் கொண்டே இந்தியாவை ஆளுவதென நினைத்து இந்தியரின் ஒத்துழைப்பை சுதேச மன்னர்களை கைவசமாக்கிக் கொண்டு காரியத்தை முடித்துக்கொள்ள எண்ணுகிறார்கள். காந்திஜீ ஒரு தனி மனிதனுயினும் காங்கிரஸ் சர்வ அங்கத்தினர்களும் ஒப்புக்கொண்ட ஏக தலைவர், அவருடைய லக்ஷியத்தை அடைந்தாலன்றி அவரும் அவருடைய இயக்கமும், ஒழிவதற்கில்லை. சாமுயல்ஹோர் ஒரு எளிய திட்டத்தைக் காண்பித்து இந்தியரை ஏற்றுக்கொள்ளச் செய்யலாம். ஆனால் மிஸஸ் நாயுடு, பண்டித மாளவியா போன்றவர்களின் மனதுக்கேற்ற திட்டமல்லாததை, காந்திஜீ அங்கீகரிப்பதற்கில்லை. இந்திய காங்கிரஸின் நிலைபற்றி கானடாவில் சென்றவருஷத்தில் லார்டு இர்வின் பேசியபோது, இந்தியப் பிரச்சினை நாடெங்கும் கொந்தளிப்படைந்திருக்கிறதென்றும் ஐயர்லாந்தின் கொள்கைகள் இந்தியாவிலும் புகுத்தப் படுமென்றும், காந்திஜியின் அறிக்கையின்றி, சமாதானமோ—அமைதியுமோ நிலவுவதற்கில்லை என்றும், தனது அநுபவத்தில் அடக்கு முறையில் பயனில்லை என்றும், சுய ஆட்சி என்பது ஜனங்களுக்கு ஜவாப்தாரியான ஆட்சியென இந்தியத்தலைவர்கள் விளங்கிக் கொண்டார்களென்றும் விஸ்தரித்துள்ளார். நாமும் அதனை வரவேற்று பிரிட்டிஷாரின் நல்லெண்ணத்தை காண்பிக்க முயலட்டும்.

—லண்டன் வார மெயில்

இன்னும் பார்ப்போம்.

சமீபத்தில் சிம்லா அதிகாரிகள் தங்களது சாப்பாட்டுவேளை முடிந்ததும், உண்டகளைகூட தீர்த்துக் கொள்ளாமல், அவசரச் சட்டத்தில் புதிதாக—எதை—எந்தமாதிரியான இடுக்கியை வைத்து சர்க்காரின் அதிகாரத்தை தன் மதிப்பாக்கிக் கொள்ளலாமென்று, யோசித்ததாகவும் தற்கால நிலைமையில் புதிய அவசரமான—ராக்ஷத—கொடிய திருத்தச் சட்டங்கள் வேண்டிய அவசியமில்லை என்று வாதித்ததாகவும், ஏற்கனவே சர்க்கார் சுற்றுக்கடிதம் அனுப்பி நிலைமைக்குத் தக்கபடி அடக்குமுறையின் தத்துவத்தை தெரிவிக்க அறிவிக்கப் பட்டதற்கு, அப்படி அவசரமான சட்டத்தைப் புதுப்பித்துக் கொள்வதற்கில்லை. என்று பதில் கிடைத்திருப்பதாகவும், ஒரு குருவி நமது காதுக்குள் சொல்லிற்று.

சாதாரண ராஜீய ஆதிக்கத்தைப்பற்றிய அறிக்கையொன்றில் வைசிராயின் நிர்வாகக்கமிட்டி கூட்டத்தில் மாகாணங்களிலிருந்து கிடைத்துள்ள தகவல்களிலும், பொருப்பான—ஒரு நேர்மையுள்ள ஆட்சிமுறையை, ஸ்தாபிதஞ் செய்ய தீவிரமுயற்சி எடுத்துக்கொள்ள வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. ஆகையால் மாகாண அரசியல் திட்டத்தை சைமன் ரிப்போர்டின் வரம்புப்படி பொதுஜன அங்கீகாரம் பெறக்கூடியவகையில் மிக அவசரமாய் தயாரிக்கவேண்டுமென தீர்மானித்திருக்கிறது.

அகில இந்திய மசோதாவொன்று மாகாண சர்க்காரின் அபிப்பிராயத்தை ஒட்டியும் பிரபல ராஜீயவாதிகளின் வேண்டுகோளை அநுசரித்தும், கட்சிப்பிரதி கட்சிவாதங்களுக்கு இடமில்லாமலும் நல்ல பாதுகாப்புடன் தயாரித்து விடவேண்டும்' ஆனால் எவ்விதத்தும் உள்நாட்டுக் காரியாலய மிஷ்டர் ஹய்க், சீர்திருத்த காரியாலய மிஷ்டர் டன்னிட் முதலியவர்களின் கருத்தை யொட்டியும் இந்திய சர்க்கார் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக் கனுப்பியுள்ள யதாஸ்தின் சரத்துக்களை அநுசரித்தும், சென்ற வட்டமேஜை ஒத்துழைப்புக் கமிட்டியின், சிபார்சைக் காட்டியும் அச்சீர்திருத்தமிருக்கலாம் என்றால். சர்க்காரின் மனப்பாகம் இந்த வெளிப்படையான அறிவிப்புகளி லிருந்து அறியக் கிடக்கிறது. இதுவொரு முன் எச்சரிக்கையான வேலை. பிரிட்டிஷாரின் சாதித்

புரட்சியின் காரணம்

அரசியல் தலைவர்களா?

இந்தியா மந்திரி காமன் சபையில் இந்தியாவைப்பற்றி பிரஸ்தாபித்தபோது பொது ஜனங்கள் இந்திய சர்க்காரை நேசிப்பதாகவும் அடக்குமுறையால் திருப்தியான அமைதிநிலவுகிறதெனவும் பிரிட்டிஷ் தேசியக் கட்சியின் நோக்கமும் பொது நன்மைக்கான வகையில் இந்திய சர்க்கார் நிர்வாகஞ் செய்துவருவதெனவும் கூறியுள்ளார். அவரின் உறுதியற்ற வார்த்தைகளில் அணுவளவேனும் உண்மை என்பதில்லை. சாமுயல் ஹோரின் ஸ்டேட்மெண்டில் இந்தியர்கள் அறிந்துள்ள யாதொரு விஷயமும் புலப்படவில்லை. இந்தியர்களின் கொடுமையான வறுமைக்கு பிரிட்டிஷ் வியாபாரந்தான் காரணமென அழுத்தம் திருத்தமாய்க் கூறியிருக்க, சுதேச சாமான்களையே வாங்கவேண்டுமென்று இந்தியர்கள் கெஞ்சிக் கேட்பது சட்ட விரோதமானதென நிர்ணயித்திருப்பது சட்டத்திற்கு அப்பாற்பட்டதென ஒரு முட்டாளும் சொல்ல எளிதாக இருக்க பொருப்பு வாய்ந்த அதிகாரி அதனை மறைத்துக்கூறுவது ஞாயமன்று. சாமுயல் ஹோர் காபினெட்டுகளின் பிரதிநிதி என்ற ஹோதாவில் பேசுவதை விட்டு இந்தியாவின் பொறுப்பு வாய்ந்த அதிகாரியென தன்னை நினைத்துக்கொண்டு பேசினால் தான் ஞாயம் கிடைக்கும். மிஸ்டர் உய்ன்ஸ்—சர்ச்சில் வெளிப்படையாக சாமுயல் ஹோரின் உத்தியோகஸ்தானத்திலிருந்து இப்போதுசெய்து கொண்டிருப்பதைத் தவிர வேறெதுவுஞ் செய்யமுடியாதென கூறியதும், மிஸ்டர் மெக்டானெல்டு பால்டுவின், லார்டு சாங்கி முதலியோர் சாமுயல் ஹோரின் பழைய பாடத்தையே புரட்டிப் புரட்டி ஒப்புவித்துக் கொண்டிருந்திருக்கிறதையும் இந்தியாமட்டுமன்றிஉலகமும் முக்கியமாக பிரிட்டிஷ் பொதுஜனங்களும் அறிந்துகொண்டனர். சாமுயல்ஹோர் எவ்வளவு ஜாக்கிரதையோடு பேசினால் இந்தியகிரிக்கட் பந்தயத்தின் சார்பாக அவர் பேசியதில் அநேக மனிதரும், ஸ்திரீகளும் சிறைபுகாதிருந்தால் இன்னும் அதிகமாய்ப் போட்டிப் பந்தயங்களில் தேர்ச்சி பெறுவார்கள். இந்த வெளிப்படையானபேச்சில் அவருடைய ஆட்சிமுறை இந்தியாவிற்கேற்றதல்லவென ருசுவாகிறது.

இந்திய சர்க்கார் இதுவரை கூறிவந்த கட்டுக்கதைக்கும், அதன் தலைவரின் வார்த்தைக்கும் வெகு தூரம் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு வந்துகொண்டிருக்கும் தந்திச்செய்திகளும், கடிதங்களும் திருத்தப்படாமல் உள்ளபடி கூறுவதாயிருந்தால் சாமுயல் ஹோரின் அசங்கியத்தனம் வெளியாகிவிடும்.

(6-ம் பக்கம் பார்க்க)

பாவில், ஜெ. டி. ஜே. என்பவரால் கூறியதை இதே பத்திரிகையில் எழுதியிருந்ததை நேயர்கள் அறிந்திருப்பர். இப்போதும் ஐரோப்பாவின் ஒரு பிரபல தேசத்தினர் மதமே இல்லையெனவும் கடவுள் கிடையாதென்றும் முடிவுக்கு வந்திருக்க இந்தியர்கள் ராஜீய வியவகாரத்தைப் போர்த்திக்கொண்டு மதத்தின் பேரால் கலகம் விளைவிப்பது தன்னைத்தானே கொலை செய்வதாகும். மதப்பற்று இருக்கத் தான் வேண்டும். நான் ஒரு மூட அடிமையாக இருந்துகொண்டு மதத்தைப்பற்றி பேசுதல் வெறும் பேச்சே யன்றி செயலில் ஒன்றுமில்லை. நூறு வருஷத்திற்குமுன் ஐரோப்பாவிலிருந்த மத கொடுமைகள் மதாசாரியார்களுக்குள்ள உரிமைகள் அதிக கசப்பானதும் நேர்மையற்றதுமாக இருந்தமையால் நிராகரிக்கப்பட்டு இப்போது திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. ரவீந்திர நாத் சொல்லியபடி இந்தியாவின் புராதனக் கொள்கையாகிய மதத்தைத் திருத்தி அமைக்கப் பெறுவிட்டால் மதத்தின் போரில் இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான ஜனங்கள், அன்னியராகி விடுவதன்றியில் இந்தியாவையும் இழந்துவிடுவார்கள்.

இந்த மாபெருந் தலைவர் சொல்வது காலக்கிரமத்தில் நிகழ்ச்சிக் குறியனவாகுமென்பதை ஞாபகப்படுத்தி ஒவ்வொரு இந்திய வாசியனும் அரசியலில் ஒற்றுமைப்பட வேண்டும். கலாசாலைகளில் உபாத்திமார்கள் அரசியலை அநுபவார்த்தமாக போதிப்பதுடன் மதத்தைப் பற்றி தப்பர்த்தம் கொள்ளாதவகையிலும் முயற்சிக்கப்படின் சிறிது நன்மையோடு இந்தியாவின் எதிர்கால நிலை சீர் பெறும்.

—டாக்டர் சி. எல். அவாய்ன்.

உலக நீதி :

: திரு நா. கோவிந்தசாமிபண்டிதர்'

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.

அறிவைத்தரும் நூல்களை ஒருநாளாவது படிக்காமல் இருக்கவேண்டாம். (படியுங்கள்)

ஏனெனில், கல்லாதவர்களைக் குருடர்களென்று தர்ம சாஸ்திரங்கள் கூறுவதினாலே. எந்தத் தரும சாஸ்திரமென்று கேட்பீராயின், சொல்லுவோம். அவலமாகிய விஷயங்களில் மனதைச் செலுத்திவிடாமல் கவனமாகக்கேளுங்கள்.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்
அச்செல்வம் செல்வத்து ளெல்லாந் தலை"

(தேவர் குறள்) செல்வத்துட் செல்வமானது (தரும சாஸ்திரங்களைக் கேட்கும்) செவிச்செல்வந்தான். அந்தச் செல்வமானது (உலகத்தில் ஒருவன் புண்ணிய வசத்தால் பெறும்) செல்வங்களுக் கெல்லாம் மிகவும் உயர்ந்த செல்வமாகும். இந்த செல்வத்தேடிக்கொள்ளாதவன் பேதையே. அவன் இந்தப் பெரிய பூமியிற் பிறந்தும் பிறவாதவனே.

"கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப்படாதசெவி."

(தேவர் குறள்) தம்புலமான சப்தமாத்திரத்தைக் கேட்குமாயினும், பெரியாரிடம் கேட்கப் படவேண்டும் கேள்விகளாலே துளைக்கப்படாத காதுகள் நல்ல காதுகளாகமாட்டா. அவைகள் செவிட்டுக் காதுகளேயாகும், மண்ணினாலும் சாணியாலும் மக்கினாலும் வர்ணத்தினாலும் செய்த பொம்மைகளின் காதுகளுக்குச் சமானமானவை— அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கு புருஷார்த்தங்களுக்குரிய கேள்விகளைக் கேட்காத காதுகளெனக் கூறுகின்றனர். பிறரும் பெரிய சீமானாயிருக்கிற ஒருவனைப்பார்த்துக் கல்வியிற் சிறந்த பெரியோர்கள்—ஐயா! சீமானே! தாங்கள் வீணாகக் கழிக்கிற காலத்தைக் கொஞ்ச நேரம் அரிகதை சிவகதை கேட்கும் காலமாகவோ? தர்ம சாஸ்திரங்கள் கேட்குங் காலமாகவோ? வைத்துக் கொள்ளலாகாதா வென்றுகேட்டால்— அதற்கு அந்தப் பெரிய சீமான் சொல்லுகிறான். ஐயா பெரியவரே! உங்கள் காலமெல்லாம் அரிகதை சிவகதைகளில் கழித்தீர்களே. என்னபலனை அடைந்துவிட்டீர்கள். தாங்கள் கதைகேட்ட பலன் தரித்திரந்தானே' சாப்பாட்டுக்கில்லை, சாப்பாட்டுக்கில்லை யென்றுசொல்லி என்னைத்தானே துன்பப்படுத்த வருகிறீர்கள் அந்தக்கதை எல்லாம் என்காதில் போட்டுக் கொள்வதில்லை நம்மிடம் வந்தால் உங்களுக்கு வேண்டிய வேலைகளைப் பார்த்துக்கொண்டு போங்களென்று சொல்லி விடுகிறான். அந்தப் பொம்மைக்கு யார் சொல்லமுடியும். பெரிய இந்தச் சீமான் அபிப்பிராயத்தின் முடிவு—அரிகதை சிவகதை கேட்பவரை தரித்திரம் பிடித்துக்கொள்ளும் என்பதல்லவா? இப்படியும் பேசும் பேதைகள் இக் கலியுகத்திற்சிலர் இருப்பார்போலும்.

"செவியிற்சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினுமென்" (தேவர் குறள்)

காதுகளாலே நுகரப்படும் சுவைகளை யுணராது வாய்ருசி யொன்றையே நுகரும் மனிதர்கள் உலகத்தில் செத்தாலுமென்ன? உயிரோடிருந்தாலும் என்ன என்றார், பின்னும்,

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்" (தேவர் குறள்!

ஒருநாளில் சிறிது ஆயினும் நல்ல தருமங்களை கேட்கவேண்டும். அந்தக்கேள்வி சிறிதாயினும் நிறைந்த பெருமையைத்தரும் என்றார்.

நல்ல கேள்விகளைக் கேட்கப்போகும் ஒருவன் தனக்குச் சிநேகமான ஒருவனைக்கண்டு சார்-சார்! இன்றையதினம் இன்னவிடத்தில் நல்லகதைவாருங்கள் போய்வருவோமென்றால் போங்கசார் போங்க, உங்களுக்குத்தான் வேலையில்லை. எனக்குமா வேலையில்லை. என்வீட்டில் எனக்கு ரொம்ப கதையிருக்கு. நீங்கள் போய் கேட்டுவந்து எனக்குச் சொன்னால்

எப்படி நன்றியுள்ளவர்கள்?

ஆங்கிலேயர்கள் வெளி நாடுகளில் குடியேறி பேரன், பேத்தி எடுக்கும் ஜனத்தொகைக்கணக்கும், அவர்களுக்காக சர்க்காரால் செலவிடப்படும் பொன் கணக்குகளும் நம்போன்ற இந்திய மக்கள் இலகுவில் தெரிந்துகொள்ளமுடியாது. இந்தியாவில் இந்தியர்களுக்கென செலவிடப்படுவதையே பிரமாதப்படுத்தி கூறுவார்களேயொழிய ஆங்கிலேயர்களுக்கு இந்தியாவின் செல்வம்—திரவியம் செலவாக்கப்படுவதை அவ்வளவு பிரமாதப்படுத்திக் கூறுவதற்கு அவ்வளவென்ன செய் நன்றியுள்ளவர்களா? அதுவேறு கதை

1913-ல் வெளி நாடுகளில் குடியேறின ஆங்கிலேயர்கள் 285000 பேராவர். 1920-ல் 198600 பேர் செலவிடப்பட்ட பொன் 702200. இவர்களில் 1931-ல் இங்கிலாந்திலேயே 53000 பேர் நிரந்தரமாகக் குடியேற வந்துள்ளார்கள். 27000 பேர் பிறநாட்டுகளுக்கும் குடியேறச் சென்று விட்டார்கள். இந்தியாவில் 1931-ல் குடியேறிய ஆங்கிலேயர்களுக்காக மட்டும் 195500 பொன் சர்க்கார் செலவு செய்திருக்கிறது. இம்மாதிரி நம் நாட்டுப் பொன்னும், பொருளும் நமக்கு உதவாவிட்டாலும் ஆங்கிலேயர்களுக்கு உதவியாகவிருப்பது உண்மையாயிருக்கும் போது அவர்களை நன்றிகெட்டவர்களென்று காக்குப் போட்டுக் கூறமுடியுமா?

தொழில் என்றாலும், சிம்லாவின் உச்சியிலிருந்து அதிகாரவர்க்கத்தார் கண்ணைமூடி வசிமுனையில் தவஞ்செய்து, எதைச் சிருஷ்டித்து லண்டனுக்கனுப்பி, அங்குள்ளவர் ஆமென்று குதித்து தட்டிக்கொடுத்துக் காரியம்பெறநினைத்தாலும் இந்தியர்கள் உறுப்படாத வெறும்யோசனையென்றே கருதுவார்கள். இன்னும்பார்ப்போம்.

கிராணிக்கள்.

காங்கிரஸ் பிரகாசம்.

கூத்தாடி காலை மெச்சிக்கொள்வதுபோல் சில பேர்வழிகள் இந்திய காங்கிரஸ் ஒழிந்துபட்டதென கூறிக்கொள்வதுபற்றி நமக்குக் கவலை இல்லை. உண்மையை மறைத்துச்சொல்வதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. சென்ற சிலமாதங்களாக அன்னிய தேசங்களில்முக்கியமாக வெள்ளையர்கள் வசிக்கும் பிரதேசத்தில் இந்தியாவைப்பற்றிய பிரச்சினை அடிக்கடி கிளப்பப்பட்டு அநேக பொது நிலையங்களில் கண்டனத் தீர்மானங்களும், எச்சரிக்கைகளும் சரமாரியாகத் தோன்றிக்கொண்டிருந்தது. பிரிட்டிஷ் பார்லிமெண்டில் மும்முரமான விவாதங் கிளம்பியது. வில்லிங்டன் சர்க்கார் மூட்டை முடிச்சுகளிலிருந்த பொய்யை எல்லாம் அவிழ்த்துப் பார்த்தார்கள். காங்கிரஸ்மென்மேலும் புகழப்பட்டும், காந்திஜியைப் போற்றியும் வர்த்தமானம் நடந்துகொண்டிருக்கிறது. இனிமேல்பேசாதிருந்தால் பிரிட்டிஷாரின் குட்டு வெளியாகிப்போகும் அல்லவா? சாமுயல் ஹோர் எடுத்தார்; காங்கிரஸுக்கு சுவாசமில்லை; ஒடுங்கிவிட்டது; என்று செய்தி விடுத்தார். இப்படி இவர்கள் உளறிக்கொண்டு பைத்தியகார ஆஸ்பத்திரிக்குப் போகுந்தருவாயில் அமெரிக்கர் லக்ஷக்கணக்கானவர்கள் காங்கிரஸை ஆதரிக்கக் காத்திருக்கிறோம் என்றார்கள். எந்தக் கிழவனை—60 வயதுவிர்த்தாப்பியரை—ஒட்டி உலர்ந்த உடலை—கலகமே இன்னதென்றறியாத மகரிஷியை அடைத்து பூட்டிவைத்திருக்கிறார்களே! அவரை அந்தப் பாழும் அமெரிக்க வெள்ளையர்கள்—பாதிரிமார்கள்—மேதாவிகள் உலக சிரேஷ்டரென்று இதுவரை இருந்திராத நூதன மெடலை அளித்திருக்கிறார்கள். இது எட்டிக்குப் போட்டி அல்லவா? நகரங்களில் ராஜ்ய மகாநாடு கூடி தற்கால அரசியல் நிலைமையைப் பொதுஜனங்களுக்குத் தெரிவிக்கப்படுவது அவர்களை அரசியலில் பழக்குகிறோமென்ற பித்தலாட்டத்திற் காதாரமாகயிருக்க "ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு" என்பதுபோல் அரசியல் மகாநாடுகளைத் தடுப்பதினால் காங்கிரஸ் மறைந்துவிடுமென்று நினைப்பது கனவு காண்பதேயாகும்.

தேசோபகாரி

வருட சந்தா (இரங்கோன்)	ரூ	3	0	0
6 மாதம் ,,	,,	1	8	0
வருட சந்தா (வெளியூர்)	,,	4	8	0
6 மாதம் ,,	,,	2	12	0
மலாய்நாடு வருட சந்தா	,,	6	8	0

பூர்வீகச் சிறப்பும்-தற்கால நிலையும்

நம் தாய்நாடாம் இந்திய தேசம். இந்நாட்டை நமது மூதாதையாலும், தற்போதையாலும், மற்றும் மண்ணுலகிலுள்ள சகலராலும் பாரதநாடென்றும், ஆரிய வர்த்தனமென்றும், பொன் விளையும் புனித பூமியென்றும், விலைமதியா முத்தலவும் சித்துலகமென்றும், குருக்ஷேத்திரமென்றும், நாவலந்தீவென்றும், ஞானவுதய பூமி என்றும், ஆத்மார்த்தத்தை சிறு குழவிகட்கு பாலூட்டுதல் போல் மானிடருக்கு எளிதிற்போதிக்கக்கூடிய ஞானியரையும், மேதாவிகளையும், உடைத்தாயிருந்ததும்—இருப்பதும்—இருக்கக்கூடியதுமான நாடென்றும்: தேனும், பாலுந் திகழ்ந்து சொரியக்கூடியதும், பஞ்ச புண்ணிய நதிகளையுடைய தெய்வீக அருளையுடைய—கீர்த்தியுடைய நாடென்றும் பலவாறாகப் புகழ்ந்து பல சிறப்புப் பெயர்களால் கொண்டாடுகிறார்கள் இந்நாட்டிற் பிறந்தவரும் கண்கூடாகக் காணவுஞ் செய்கின்றோம். இவ்வாறு சிறப்புற்று விளங்குவது நம் தாய் நாடென்னும் இந்துதேசமே. இத்துணைச் சிறப்புற்று விளங்கியநாடு சிலநூற்றாண்டுகளுக்கு முன் அரசியலிலும், செல்வாக்கிலும், தொழிலிலும், வியாபாரத்திலும், விவசாயத்திலும் உலகிற்கே சிரோரத்னம் போன்று விளங்கிவந்தது. நாகரீகத்திற்கேபிறப்பிடமாகவிருந்தது. "நாஜூக்கான சல்லாக்களை நெய்வதிலும், வர்ணங்களை வெவ்வேறு மாதிரி கலந்து பல பல வர்ணங்களை உண்டுபண்ணுவதிலும், செம்பு, பித்தளை முதலிய உலோகங்களில் வேலை செய்வதிலும், நவரத்தினங்களைச் செதுக்குவதிலும், அத்தர்களை இரக்குவதிலும் இவைபோன்ற எல்லா வேலைகளிலும் ஆதிகாலந்தொட்டு உலகமெங்கும் இந்தியாவின் புகழ் பரவியிருந்தது.

"இவ்வாறு இந்தியாவிலே எங்கு பார்த்தாலும் தொழிற்சாலைகளும், வியாபார சாலைகளும், நாணய சாலைகளும் முன்னம் நிறைந்திருந்தனவென்று மேலே சொன்னோம். சுருங்கச் சொல்லின் இந்திய நாடு பழையகாலத்தில் நாகரீகம் நிரம்பப்பெற்ற நாடாயிருந்தது; என்று சொல்லலாம். அத்தகையநாடு இந்நாளில் என்ன நிலையிலிருக்கிறது என்று கூறிய மதியோடுஆராயும் ஒவ்வொரு பாரதமக்களும் உலகில் வாழவும் எண்ணுவரோ? இந்திய நாட்டின் வளம் எங்கே? இந்தியநாட்டின் வனப்பு எங்கே? அன்பெங்கே? பாரத நாடெங்கே? பாரத மக்களே! யோசியுங்கள். அநாகரீகமிலேச்சரெல்லாம் நாகரீகராகிவிட்டார்களே! சரித்திர காலத்திற்கு முன்னரே நாகரீக மனிதராக வாழ்ந்த நீங்கள் இப்பொழுது தேவர்களாக வல்லவோ வாழ்தல்வேண்டும். நீங்கள் அரசியலையும், செல்வங்களையும், தொழிலையும், வியாபாரத்தையும் இழந்து வறியவராயன்றோ வாழ்கிறீர்கள்?

நம் நாட்டின் தொழிற்கும், வியாபாரத்திற்கும் ஆதியில் ஆங்கில வியாபாரிகள் இங்கே வர்த்தகங்கருதி வந்தனர். வாணிபத்தில்மிக்க பணமுஞ் சேர்த்தனர்; என்றாலும் இத்தேசத்தில் தழைத்தோங்கிய தொழில்களை விருத்தியாக்க முயலவில்லை—விருத்தியாக்கத்தான் முயலவில்லை; என்றால் தொழில் வளர்ச்சிக்கு இடையூராவது செய்யாமலிருந்தார்களா? இல்லை.

"கடவுளை நம்பினவர் கைவிடப்படார்" என்பது கிறிஸ்துவேதப் பிரமாணம். அதனைக் கடைபிடித்தொழுகும் சாந்தி கிழவனையும் அவாது ஜனங்களின் அபிப்பிராயமாகிய இயக்கத்தையும் ஒடுக்கிவிடுவது அவ்வளவு எளிதா? இந்தியருடைய பலவீனத்தை முக்கியமாகக் கொண்டு அவர்களை இம்சித்துவருவது அடாத செயலாகையால் முடிவில் எப்போதாகிலும் ஒருக்கால் அதற்குத் தண்டனையு முண்டென்பதை அறியாது அறிஞர்கள் உமிழந்த எச்சிலையைத் தின்பதொக்கும்.

எப்படியும் இந்தக் கலியுகத்தில் காங்கிரஸையோ அதன் இயக்கத்தையே அழித்துவிட சாத்தியமன்று. காங்கிரஸ் முன்னிருந்த நிலையைவிட மிக உன்னதமாயும் சாணைபிடித்த—வைரம் மாதிரியாகவும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. இன்னும் அதிகமாக உன்னத நிலையை அடைய மிக்கபலமும் உண்டாகலாம்.

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுஎண் 245] (1922-ஹு ஸ்தாபிதம்.) 21 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இருமுறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஹு (12-6-32) வைகாசி-மீ 30உ ஞாயிற்றுக்கிழமை

சட்டமறுப்பின் பேரால் கொலை!

இந்திய சர்க்காரின் கையோங்கிய செய்கையில்; சட்ட மறப்பின் பேரால் இந்தியர்களின் உயிர் திரணமாக மதிக்கப்பட்டு—பலியிடப்பட்டாய் வருகிறது. இந்தியர்களும் மிக்க ஆழ்ந்த சிந்தனையுடன் தீர்க்க புத்தியாக, நீண்டநாள் தூக்கமற்று யோசித்தறிந்த பயனை—உலகமே ஒப்புக்கொண்ட இயக்கத்தை தோற்றுவித்தோம். நமது ஆரம்ப எண்ணம் இந்திய சாமான்களை—இந்தியாவின் விளைபொருள்களை—கைத்தொழிற் சாலைகளை ஆதரிப்பதன் மூலம் தேசத்தின் வறுமையைப் போக்கடிக்க எத்தனித்தோம். இதன் விஸ்தீரணம் பல பாகங்களிலும் விசாலிக்கும் வண்ணம்; தேசீய மகா சபையின் அமைப்பைப் புதுப்பித்து, அதன் தீர்மானப்படி நடந்தோம். இந்தியர்கள் ஒற்றுமை இல்லாதவர்கள், பல ஜாதி பிரிவினையும், மதக்கோட்பாடும், மாறுபட்ட கருத்துமுடையவர்களென அடிக்கடி வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல, ஆங்கிலேயர்கூறியும் எழுதி வந்திருந்தபோதிலும், ஒரு தாயின் பிள்ளைகள் அநேக செயல்கள் புரிவது சகஜமென்ற தாராளபுத்தியினால், பகைமை நீங்கிய வாழ்க்கையை நடத்திவந்தோம். ஆள்வோர், எனப்படும், வகுப்பார் கொடுங்கோன்மை---மிருகச்செயல்—எதேச்சாதிகாரம் முதலியவைகள், சட்டத்தின்பேரால், இழைத்திருப்பினும், கோபம் மூட்டப்பட்ட சமையங்களில் இந்தியரை ஆடு மாடுகளாக மதித்திருந்த—இருமாப்புக்கொண்டவேலைகளிலும்—பேச்சளவிலும்—எழுத்தளவிலும், சென்றிருந்தாலும்கூட கொடிய தண்டனையையும், அவமானமும், அடைந்தே இருக்கின்றனர். பஞ்சாபில், இரண்டொரு வெள்ளையர்கள்; இறந்ததற்கும், தாக்குண்டதற்கும், நூற்றுக்கணக்கான இந்தியர்கள் சுடப்பட்டும் ஆயிரக்கணக்கானோர், மனித சுபாவமற்ற துன்பத்தையும், கௌரவக் குறைவான இழிவையும்பெற்றனர். சமார் 2000 பேர்வரை ஜாலியன்வாலா பாக்கில் டையரென்பவனால் பீரங்கியால் சுடப்பட்டார்கள். அக்காலத்தில் பஞ்சாப் படுகொலையைப்பற்றி விசாரணைசெய்த லார்டுஹண்டர், கமிட்டியின் முன்பு வெள்ளையதிகாரிகள்கூறிய வாக்குமூலத்திமிரை பார்த்த எவரும் கண்கலங்காதிருப்பதற்கில்லை. இரண்டாயிரம் இந்தியர்களைச் சுடுவதற்குக் காரணமாயிருந்த டையரென்பவனுக்கு ஆங்கில ஸ்திரீகள் பட்டாக்கத்தியும் பணமுடிச்சும், பரிசளித்தனர். இந்தப் பொருப்பற்ற செயலிலிருந்து, இந்தியர் விழித்துக்கொண்டனர். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியா சேர்ந்திருப்பது ஆபத்தானது— நரகவாதனையானது — துன்பமுடையதெனக் கருதிவிட்டனர். அக்காலத்திலேயே இந்தியா விலகிநிற்பதற்கு இந்தியர் எண்ணியது சரியேயாயினும், அப்படி விலகிநிற்பதற்கு தடையாயுள்ள, பயம்—அறியாமை இரண்டும் தற்கால நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறது. இந்தியா பிரிட்டிஷாருக்குச்சொந்தமென்பது என்ன? கிழக்கு இந்தியக் கம்பெனியர்களாக இந்தியாவில் வியாபாரம் செய்ய வந்த பிரிட்டிஷாருக்கு இந்தியாஎப்படி சொந்தமாகுமென்பதை ஆராய்ந்துகொண்டிருக்க வேண்டியதில்லை, தற்கால நிலைமையைக்கொண்

டே அதனைத் தீர்மானித்துக்கொள்ளலாம். பிரிட்டிஷாரின் அயோக்கியத்தனத்தை, அன்னிய ராஜாங்கத்தார் கவனித்தால், ஹிந்து முஸ்லீம் கலகத்தையே ஆதாரங் காட்டுவதில் பிரிட்டிஷார் எக்காலத்தும் பின்வாங்கினதில்லை இரண்டு மூன்று வெள்ளையர் இறந்ததற்காக மீசைதுடித்த—ஆவேசமுற்ற பிரிட்டிஷ் புலிகள், நூற்றுக்கணக்கான இந்தியர்கள் கொல்லப்படுவதற்கு என்னசொல்வார்கள். தாங்கொணு சிரிப்பு, சிரித்து தொடையிலும், தொட்டியிலும் கிள்ளுகிறுர்கள். இதுவேறு. நிர்வாகக் குறைவைப்பற்றி எந்த மனிதனும் பிரிட்டிஷ் பிரஜை என்ற ஹோதாவில் பிரசங்க மேடையினுலோ பத்திரிகை வாயிலாகவோ தெரிவிக்கலாமெனினும், வெள்ளையர்களைப்பற்றிக் கூறிவிட்டால்மட்டும் ஆபத்தாய் விடுகிறது. அதற்கு ஜவாப்தாரியான ஒரு தேசத்தின் நிர்வாகத்திலேற்படும் தவறுகளுக்கு, தேசாதிபதிதான் காரணஸ்தனுகையால், இபபோது தெய்வமே கெதியென்று, சிறைச்சாலையை தவச்சாலையாக நினைத்திருக்கும் இந்தியத் தலைவர்கள், நோய்வாய்ப்பட்டிருப்பதும், அவர்களைக் கவனியாதிருப்பதற்கும், தேசாதிபதியாகிய வில்லிங்டன் ஜவாப்தாரி அல்லவா? ஐரோப்பியன் எவனுவது இந்நிலைமையிலிருந்தால், சாமுயல் ஹோரின் வர்க்கத்தார் சும்மாஇருப்பார்களா? ஐரோப்பாவே! அலரிக்கொண்டிருக்காதா? இருக்கட்டும். எப்ரல் மாதம் 25உ 1 வருஷக் கடினகாவல் தண்டனை அடைந்து, ஏரவாடா சிறையிலிருந்த, முடுசுடான் பொடானி என்னும் சட்ட மறுப்புத் தொண்டர் இம்மாதம் 7உ சிறைச்சாலையிலேயே இறந்துவிட்டதற்கு ஜவாப்தாரியார்? இந்த துக்ககரமான செய்தியைக்கேட்ட இந்தியர்களின் மனம் கொதிக்காதா! இவர் சிறையிலே நோய்வாய்ப்பட்டிருந்ததுபற்றி ஒரு தகவலுமில்லாமலிருந்ததற்கு காரணம் என்ன? சாந்தகுணம் படைத்த அஹிம்சை வழியில் நடக்கின்ற இந்தியரின் உயிரை, காலாவழியிலும் கொள்ளைகொள்ளும் இந்திய சர்க்காரும் அதன் தலைவர் வில்லிங்டனும், இக்கொலைக்கு ஜவாப்தாரியல்லவா? ஹே! முடிசுடன் பொடானி? வீ ர பு ரு ஷா! உனது ஆத்மா சாந்தியாகுக!

உலக நீதி.

(8—6—32. தொடர்ச்சி)

ஜீவன் ஈஸ்வரன் ஜகத் லக்ஷணங்களைத் தேடியறிபவனும் வேதாகம புராணேதிகாசங்களை யறிபவனும் பாவம் புண்ணியம் என்று பகுத்தறியும் அறிவுடையவனுயுமிருக்கிறுன். இரு வினைகளாலே பலகோடி ஜன்மங்களை யடைந்தோமென்று நன்குணர்ந்தவனுயும் கன்மகாண்டி பக்திகாண்டி ஞானகாண்டியாயுமிருக்கிறுன். அஷ்டகன்மம் அணிமாதி சித்திகளை யறிந்தவனுயும் தன்னையண்டிய சிஷ்யர்களுக்குச் சரிகை கிரியை யோகம் ஞானங்களை யுபதேசித்து அவர்களைச் சாலோக சாமீப சாயுச்ய பதவிகளிற் சேர்ப்பிக்கிறவனுயுமிருக்கிறுன். கம்ப ராமாயணம் வாலி வதைப் படலம்—"தக்கவின்ன இன்னவென், றுக்க வுன்னலராயி னுயர்ந்துள, மக்களும் விலங்கே மறுவின்நெறி, புக்கவே லவ்விலங்கும் புத்தேளிரே" தரையிலே மானிடமாக உருவெடுத்தவர் மனிதனுக்குக் கடவுளால் விதிக்கப்பட்ட கட்டளைப்படி நன்மையான செயல்களை யறிந்து சன்மார்க்கத்திலே நடந்திலராயின், தாம் செய்த புண்ணியவசத்தால் மிசிர பூமியிற்பிறந்து பல சிறப்புகளைப்பெற்று உயர்ந்த பதவியில் வாழும் மானிடர்கள் மிருகங்களுக்குச் சமானமாவர். மிருகங்களாகப் பிறந்தும் சத்துவ குணத்தைப் பெற்றிருக்குமாயின் அவைகள் தேவருக்குச் சமத்வமாக மதிக்கப்படும்.

"நுண்மா ணுழைபுல னில்லா னெழினலம்
மண்மாண் புனைபாவை யற்று" (குறள்)

நுண்ணியதாய் மாட்சிமைப்பட்டுப் பலநூல்களினுஞ் சென்ற அறிவுஇ ல்லாதவனுடைய எழுச்சியும் அழகும் மண்ணினுலே மாட்சிமைபடச் செய்த பொம்மையின் எழுச்சியும் அழகும் போலும் என்றுர் தெய்வப்புலவர். இனி மனிதனுய்ப் பிறந்தவன் முக்கியமாகக் கற்கவேண்டிய பொருளாகிய கல்வியைப்பற்றிச் சிறிது சொல்லுவோம்.

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்
கவலொன்

(8-ம் பக்கம் பார்க்க)

புதிய நாகரிக முறையா?

நியாயப் பிரமாணமூலம், பூர்வ அரசியல் திட்டங்களை வகுத்து, நீதிவழங்கி இருந்தன. காலக்கிரமத்தில் அதன்படி நிர்வகிப்பது, கஷ்டசாத்தியமாயிற்று. அப்படி இருப்பதற்கு பல காரணங்களிருந்தபோதிலும், பண ஆசையும் லோபித்தனமும் தற்பெருமையுந்தான் முக்கியமெனச் சொல்வதற்கு இடந்தராமலில்லை. அநேக ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பாவில் காட்டுமிராண்டித்தனமும் அசங்கியமும் ஓங்கி இருந்தது. அரசியலைப்பற்றி தப்பாக எண்ண முடியாது. எண்ணுவதற்கு பிரஜைகள் லாயக்கில்லாமல் குருட்டுத்தனமு மிகுந்திருந்தார்கள். கொடிய செயல்களை அடக்கி, ஆளநேமிக்கப் பட்டும், சிப்பாய்கள் பொறுப்பிழந்து துராக்கிரதத்தி லீடுபட்டிருந்தார்கள். தேசமெங்கும் மிருகச்செயல், குடிகொண்டிருந்தது பிரபல ராஜ தந்திரிகள் காரணமில்லாமல், தாக்கப்பட்டனர். நீதி மன்றங்களில் வசை மொழிகளும் கைநீட்டுதலும் வழக்கத்திலிருந்தன. தனிப்பட்ட மனிதனைப் பேசினாலும் இக்காலத்தில் இந்தியாவில் நடப்பதுபோல் ராஜத் துவேஷமாக இணைக்கப்பட்டு, அளவுக்கு மிஞ்சிய தண்டனை புரிந்துவந்தார்கள். அரசனது, முடிவே சட்டம்—பிரமாணம் மந்திரிகள், அரசனது நட்பு பெற்றிருப்பதுதான் மேன்மை. சமையசமயங்களில், அரசனுக்கு யோசனை சொல்வதுகூட மந்திரிகளுக்கு இராது. எப்போது பார்த்தாலும் அரசசபையில் வேடிக்கையும், தற்புகழ்ச்சியும் எதேச்சாதிகாரமும் பிரகாசித்துக் கொண்டே இருக்கும். மூலைமுடுக்குகளில்கூட ராஜாங்கத்தைப்பற்றிப் பேசக்கூடாது. இப்போதிருக்கும் ஸி. ஐ. டி. புலிகளைப்போல அக்காலத்தில் வேவுக்காரர்கள், சந்துபொந்துகளிலெல்லாம் ஒளிந்திருந்து, ராஜ சபைக்கு உளவு சொல்லிவந்தார்கள். தில்லு—முல்லு—திருகுதாளம் சொல்லுவதிலும் பிரபலமாகத்தானிருந்தது. வாயாடியாகவுள்ளவனுக்கு; இப்போதிருக்கும் மதிப்பைப்போலவே அக்காலத்திலும் இருந்தது. ஆனால் இக்காலத்தில், சட்டம்—கம்பி—பிரிவு—கூட்டம் என்பதுபோ இல்லாமல் குற்றவாளியை உடனுக்குடன் தண்டித்து விடுவது என்ற இந்த ஒரு நல்ல பழக்கமிருந்தது. அந்தப் பழக்கம் மட்டுந்தான் இப்போது இந்தியாவில் நடக்கும் ஆட்சி முறைகளில் நடைபெறாதது. ஆகையால் அந்தக் கொடிய பழக்கம் இப்போதிருந்தால்கூட அடக்குமுறையைவிட அது அவ்வளவு பெரிதல்ல.

இந்த இருபதாம் நூற்றாண்டில் நாகரீகமிகுந்த பிரிட்டிஷ் ராஜ்யத்தில், 300 ஆண்டுகளுக்குமுன் நடைபெற்றிருந்த ஆட்சி முறையை நிர்வகிப்பதாக இருந்தால் உலக முழுவதும ஜனநாயக ஆட்சிமுறை தாண்டவமாடும்போது இந்தியாமட்டும் தாழ்த்தப்பட்டு—நசுக்கப்பட்டு வருவது அதன் தலைவிதியாக இருந்தாலும், அதனை ஒழுங்குபடுத்த, ஏற்படுத்தி இருப்பதாகச் சொல்லும் அதிகாரிகள், புண்ணியமாயும்—நீதியாயும் நடந்துகொள்வதில் ஆக்ஷேபனை யுண்டாயினும்; தன்மட்டிலாவது பொறுப்புள்ளவர்களாக இருத்தல் அவசியம்.

—எப். ஜீ. போஸ்வெல்.

வீண் டம்பம் வேண்டாம்.

அடக்குமுறையைப்பற்றி, படாடோபமாக, எங்கு பார்த்தாலும் வதந்தி உலாவுகிறது. இந்திய சர்க்கார், சற்றாவது களைப்பில்லாமல் துருப்பிடித்த—உருவரித்த, சட்டங்களையெல்லாவற்றையும் தீமூட்டிவிட்டார்கள். காங்கிரஸ் என்ற பெயர்கூட கட்டியிருக்கக்கூடாதென அதிகாரிகள் கனைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அவ்வளவு வெற்றி பெறாவிட்டாலும், வெற்றி அடைந்து வருவதாக வெளிக்குக் காண்பித்துக்கொள்வதில் வெகு சாமர்த்தியசாலிகளாகவும் இருக்கிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சி பயனற்றது. தன்னலமுடையது. நீதியற்றதென இந்தியர் கூறுவதெல்லாம், அதிகாரிகளின் ஊழலைப்பற்றியதென கருதுவதற்கில்லை இங்கிலாந்தில், சாதாரண மனிதன்கூட, நிர்வாக ஊழல்களைக் கண்டிப்பது, ஒப்புக்கொள்ளப்படுகிறது. சலுகைகள் காட்டப்படுகின்றன.

இந்தியாவில் ஜனத்தலைவர்கள்கூட ஒரு சிப்பாயைப்பற்றி, எடுத்துக் கூறுவது குடி முழுகிப்போனதாகப் பாவிக்கப்பட்டு தாரதம்மியம் பாராமல் தண்டிக்கப்படுவது சர்வசாதாரண முறையாக நடந்து வருகிறது. இது

லில்தான் இந்தியர்கள் ஐரோப்பியர்களைக் குறைகூறத் தயங்கவில்லை. பம்பாய் கலகத்தை எடுத்துக்கொண்டு அதிகாரிகள் அக்கலகத்திற்கு பாடுபட்டிருப்பதைக் கவனித்தால், இந்த சோம்பேறி போலீசும் இராணுவமும் இருப்பதில் பயனில்லை என்று பைத்தியகாரன்கூட சொல்லிவிடுவான். சுபாஷ் பாபுவை ஒரு புரட்சித் தலைவரென பிரிட்டிஷாரெண்ணி ஆள் தூக்கி சட்டத்தால் அடைத்துவைத்திருக்கின்றனர். இந்தியர் அவரை ஒரு மேதாவியாகவும் விடுதலை வேட்கை கொண்டவராகவும், மதித்திருக்கின்றனர். இன்னிலையில் அவர் அபாய நிலையிலிருப்பதாக தெளிவாக அறிந்தபின் இன்னும் அவரை பந்தோபஸ்தில் வைத்திருப்பது நேர்மையென மனச்சாட்சியினால் ஒப்புக்கொள்ளும் — ஐரோப்பியன் ஒருவனுண்டென நிச்சயிக்கலாமா? இருக்கட்டும் காந்திஜீ ஒருகிழவன் பலாத்காரத்தைக் கனவிலும் கண்டறியாதவர். அவருடைய திட்டங்களும் எண்ணங்களும், தீங்கில்லாத உயரியசெயலை அடக்கிக்கொண்டு அரசியலுலகில் புகுத்தப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பரம சாதுவை இரும்புக்கூட்டில் வைத்திருப்பது ஒரு ராஜதந்திரமா? கஸ்தூரிபாய் அம்மையார் என்ன விஷமத்தனம் செய்துளார்கள். அவர்களை அடைத்து வைத்திருப்பதனால் இந்தியர்கள் பயந்து அடங்கி வாயைப் பொத்திக்கொண்டு பேசாமலிருந்து விடுவார்களா? இதெல்லாம் எதேச்சாதிகாரமென்று தெரியவில்லையா? இந்திய சர்க்கார் இன்னும் பழைய பாடங்களை ஒப்பித்துக்கொண்டிருப்பதால், நாட்டின் கொந்தளிப்பு மாறிவிட்டதென்று தங்களுக்குத் தாங்களே சொல்லிக்கொள்ளலாமே தவிர, எந்த ஒரு புத்திமானும்— சுயமதிப்புள்ள இந்தியனும் தனது பிடிவாதத்தை விட்டுக்கொடுக்கத் துணியான். இதனை என் பெருமிதமாகக் கூறிக்கொண்டு கட்டுக்கதை கட்டிவிட வேண்டுமென கேட்கிறேன்,

—பி. ஜி ஹார்னிமென்.

தேசோபகாரி

வருட சந்தா (இரங்கோன்)	ரூ	3	0	0
6 மாதம் ,,	,,	1	8	0
வருட சந்தா (வெளியூர்)	,,	4	8	0
6 மாதம் ,,	,,	2	12	0
மலாய்நாடு வருட சந்தா	,,	6	8	0

கீழ்தேச யுத்தக்குறி.

ஜூன் மாதக் கடைசியிலாவது, ஜூலை மாதம் முதலிலாவது, மறுபடியும் யுத்தம் ஆரம்பிக்கப்படுமென, வதந்தி உண்டாகிறது.

சோவியத் சர்க்கார், யுத்தத்தைநாடி அதிதீவிரமாய்; முயற்சித்து வருகிறது. பண்டித சங்கர்ஸ் சாஸ்திரி ஹெஸ்ரிட் சீனாவைப்பற்றி பேசியபோது, ருஷியா சமரசத்தை நாடுகிறது. ஜப்பான் யுத்தந் தொடங்க ஆயத்தம் செய்துகொண்டிருப்பதால், ருஷியாவும், அதன் நோக்கத்தை நிறைவேற்ற முற்படுகிறது. என்று கூறுகிறார். யுத்த அறிகுறி காணப்படவில்லை என்பதற்காதாரமில்லை. யுத்தம் குறுகிய நோக்கம் கொண்டவர்களுக்குச் சொந்தமானது. ஆனால் எப்படியும் ஜூலை மாதம் யுத்தம் தொடங்கி நவம்பர்மாதம் முடிவடையுமென்றும்; ஜப்பான்தான் முதலில் போர் தொடுக்குமென்றும், ருஷியா தனது உரிமையைக் காப்பாற்றிக்கொள்ளக் கடைசியில் போரிலீடுபடுமென்றும், இந்த யுத்தத்தில் முக்கியமாக, மத்திய ஐரோப்பா, ஆஸ்திரேலியா, ஜெர்மனி, இட்டாலி, அமெரிக்கா, முதலிய நாடுகள் தலையிடுமென்றும், அவைகள் எப்பக்கத்தில் நின்று எதிர்க்கப்படலாமென்பதை இப்போது சொல்வதற்கில்லை. ஆனால் மிஸ்டர் ஹெஸ்ட்டரி ஜோதிடத்தில் நிபுணர் அவர் கூறுவதில் இங்கிலாந்து தனது சகபாடியாம், இதர தேசங்களோடு சேர்ந்து நிற்குமெனினும், உலக பொருளாதார நெருக்கடி— வேலையில்லா திண்டாட்டம் ஜனங்களின் அதிருப்தி முதலிய காரணங்களால் யுத்தத்திலீடுபட மனமில்லாதிருந்தாலும், கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருக்கப்போகிறதில்லை என்கிறார். இப்படிச் சொல்லியவர் மகா ஜோதிடரெனப்பட்டாலும், உலகஞான மிகுந்த சீர்திருத்தக்காரரில் ஒருவராகிய மிஸ்டர் ஹெஸ்ட்டிரிட் வல்லரசுகளின் மனோபாவத்தை நீண்டநாள் ஊன்றிக்கவனித்து, திட்டமான ஒரு முடிவை வெளியிட்டிருப்பதால், யுத்தம், ஆரம்பிப்பதோடு தேச மக்களுக்குத் துன்பமும் துயரமும் மிகுந்திருக்கும்.

—சீனா வாரமெயில்.

மானஸ யோகமும்-வாலிபரும்.

வாலிபா! தர்ம சங்கடமான ஒரு விஷயத்தி லீடுபட்டுவிட்டதாக, உன்னை நீயே வருத்திக் கொள்ளாதே. உன்னை யறியாமலே, உனது மனம் இழுக்கப்படுவதை நீ! அறிந்து கொள்ள நீண்டநாள் அநுபவம் வேண்டும். மனம், மனதை இழுக்கும். அப்படி இழுக்கப்படுவதில் அன்பு நிறைந்திருக்குமாயின், மோகமூட்டுதலெனப்படும். வெறுப்புண்டாயின், பிறர் தூஷணையும், சோம்பலுண்டானதும், சரியான வேளையில், சாப்பிட நினைக்கமாட்டாய். ஏதோ நீ குறிப்பிட்ட நினைவையே காரணமாகத் திருப்பித்திருப்பி வருவித்துக் கொண்டிருக்க உனக்குப் பிரியமுண்டாகும், அதிலீடுபடாதே! பலவீனத்திற்கு இடந்தரும். காரியமற்ற முன் கோபமும் முகத்தைச் சுளித்துக்கொண்டிருக்குந் தன்மையும், மிஞ்சி உன்னுடைய ரகசியத்தை அம்பலமாக்கிவிடும். நீயே நினைத்துப்பார். உனது அனுபவத்தில் இப்படிப்பட்டநிலைமையிலிருந்திருப்பாய். அதற்கும்பரிகாரமுண்டு. தத்துவக் குழாங்கள், உயிரற்றவை. நீசெயற்படுத்தினாலன்றி, செயற்படா. அன்பும் மோகமும், ஒன்றே. கேவலம் ஒரு ஸ்திரீயின்மீது மனம் பாய்ந்தால் மோகமெனச் சொல்வது ஒவ்வாது. மனதில் அன்பு கலந்திருப்பதால்தான், மோகமுண்டாகிறது, ஒவ்வொரு வாலிபரும் தங்களின் மிதமிஞ்சிய செயலில் இதைக் கண்டிருக்கலாம். நீ அவர்களிடம், கேட்பதென வைத்துக்கொள்ளாதே! அவர்கள் சுபாவமற்றவர்களாக யிருக்கலாம், சந்தர்ப்பத்திற்கேற்றபடி திருத்திப்பேச பழகி இருப்பார்கள். இது வேறு. சற்று நிதானி மனதை ஒருமையாக்கு. நிஷ்டைபுரி! சித்தத்தைத் தெளிவாகவை. அதுதான்நிஷ்டை. உனது சுவாசத்தின்மீது ஞாபகமிருக்கட்டும். வாசி எனப்படும் சுவாசத்தை வேகமாக விடாமல் மெதுவாக நிதானத்தோடு விடப்பழகிக்கொண்டால் உனது உடலில் உள்ள நரம்புகளினூடு காற்றைச் செலுத்த லகுவாயிருக்கும். ஆனால் உணவில் ஞாபகமிருக்கட்டும்! குடல்களிலும் நரம்புகளிலும் வாய்வு தங்கி இருப்பதற்கும் வேண்டும்போது வெளியேறுவதற்கும் சாதம் அளிக்கவேண்டும். இல்லையேல் வாய்வினால் பீடிக்கப்பட்டு வியாதியடைந்துவிடுவாய். இதற்கும் பரிகாரமுண்டு. சிறிது வாய்வு சங்கல்பத்தால் நோவு உண்டாயினும் மனதைப் பேதலிக்கவிடாதே! இதில்தான் உனது அதிதீவிர முயற்சியைக் காண்பிக்க முயலவேண்டும். உனது ஆத்மா சாந்த ரூபமுள்ளது. மனதின் ரூபமும் சாந்தந்தான் இந்த முரண்பட்ட அர்த்தத்தைக்கண்டு கசப்பெய்தாதே! ஜீவநாடியைப் பத்திரப்படுத்திக்கொள். இயற்கைவிதிகளைத் தவறி வேறு பாட்டையில் சென்றுவிடாதே! பிரமாண்டமாகிய பிராப்தம் உன்னை வலிய இழுக்கும்; அதை மட்டுப்படுத்தி நிதானத்தோடுநட! எல்லாம்பிராப்தம்தான் என்று, கண்டது கேட்டது எல்லாவற்றையும் உனது சம்பந்தம், வைத்துக்கொள்ளாதே! புதிதாக சிந்திக்க உனது தரத்திற்குமீறிய எந்த விஷயத்திலும் தலையிடாதே! கடவுளை நம்பு. வேஷதாரிகள்—பெரிய சாதுக்கள் சொல்லினுங்கூட தன்னலமிருக்கும் அறிவை விசாலப்படுத்து. மனம் விஷயத்தில் செல்லாது பந்தனஞ் செய்ய ஒரு மந்திரமும் நல்லதுதான். அதையே மனதில் நினைத்துக்கொண்டிருந்தால், மற்ற எண்ணங்களுக்கு அங்கு இடமில்லையல்லவா? அந்த மந்திரமும் உனது சுவாசத்தை மெதுவுபடுத்தக்கூடியதா யிருந்தால்தான் நன்மை யுண்டாகும். நன்மை என்றால் உனது மனதில் ஆனந்தமுதிக்கும் முகத்தில்தேஜஸ்ஜ்வலிக்கும். திரேகம் பொன்மயமாகும். ஜெகத்தில் உன்னைப் பார்த்தவர்கள் யாவரும் வசியம்—நேசம் உரவினர் பகைமை கிடையாது. இங்கு ஒரு சோதனை உண்டாகலாம். அதாவது பிறர் மதத்திற்குறிய லக்ஷணம் ஸ்வதர்மம் ஞாயம் பரிதாபம்—தயாளம் தோன்றுதற் கிடையே ஸ்திரீ சங்கல்ப தோஷங்களுண்டாகும். அவற்றிற்கு மிடந்தரலாகாது. வீரபுருஷனாக இம்மியாவது பாவச்செயலில் புகாமல் தொழில் செய்திருந்தால்ஆத்ம தெரிசனமுண்டு. அதனை பேரின்பத்தை—அமிர்தத்தை வியாபகமற்றதை — சலனமற்றதை — சுகமாயிருத்தலை சாகாதிருக்கும் மருந்தைப் பெற்றுவிடுவாய் பிறகு நீ ஒரு புண்ணியாத்மாதான். மஹான்தான்.

பொக்கைவாயன் பொரிமாவை! மெச்சினான்.

வழியில் நடந்துகொண்டிருந்த தந்தமில்லா—ஒவாய்ப்பிரபு, காதமுந்து குறவருல் ஒட்ட வைத்திருந்த காதுடைய ஒரு பெண்ணைப் பார்த்தான். அந்தப் பெண் ஒரு சந்தைக்குப் போய் மிளகாய், கொத்தமல்லி வாங்கிக்கொண்டு வந்தாள். அவளைக் கண்டதும் நமது ஓவாயருக்கு சிரிப்பு வந்துவிட்டது! தனது இடுப்பில் கையைவைத்து நிமிர்ந்து அந்தப் பெண்ணைப்பார்த்து. அம்மா! வர்காத்துச் சந்தையிலே நெல் எத்தனைபடி விற்கிறதென்றான். அந்த அம்மாள் சில நாள் நகரத்தில் வசித்தவளாகையால் விநயமாக ஐயா! உன் ஒவாய் மரக்காலினால் ஒன்பதுபடி என்றாள். ஓவாயருக்குச் சப், சப் அதுபோல லார்ட் லம்பார்ட் ஓவாய் மந்திரியை—இந்திய அடக்குமுறையைப்பற்றி கேள்வி கேட்டார். அதற்குச் சமாதானம் சொல்ல ஏட்டைப் புரட்டிப்பார்த்தார். எல்லாம் பழைய பாடமாகவே இருந்தது. உமக்கு அதைப்பற்றி கேட்பதற்கு ஆதாரமுண்டா வென்றால் மிஸ்டர் லம்பார்ட், கர்நாடக பேர்வழியல்ல. புதிய பிரிட்டிஷ் தந்திரத்திலும் கொஞ்சம் கற்றவராகச்சே, ஆட் ஏராளமான ஆதாரமிருக்கிறது. ஆனால் உமது ஓட்டைவாயினால்வந்த 46500 பேர்கள் சிறையில் வசிக்கிறார்களென்பது ஒன்றே போதுமென நினைக்கிறேனென்கிறார். ஓவாயருக்குத் தொண்டை விக்கிக்கொண்டது. ஜூலை மாதக் கடைசியில் அவசரச் சட்டம் காலாவதியாய்விட்டாலும் இந்திய சர்க்கார் அவசரமானதும்—அவசியமானதுமான சில மாகாணங்களில் புதிய சட்டங்கள் தயாரிக்கப்படுவதாயும் இந்தியாவில் அமைதி நிலவுவதால் அச்சட்டத்தில் 41, பிரிவுகளை மாத்திரம் சேர்க்கப்படுமென்றும் உளறுகிறார். இந்தப்பெரிய தாடிவாலா பிள்ளைகுட்டிக்காரன் ஈவு—இரக்கம்—தயவு— தாட்சண்யம் கொஞ்சங்கூட இல்லாமல் அவசரச் சட்டத்திற்கு புத்துயிரளிப்பதற்கு உத்தரவு கொடுப்பது ஞாயமாவென்பது கேள்வி. இக் கேள்விக்கு மிஸ்டர் லம்பார்டே பதிலிருக்கட்டும் என்றாலும்; நாம் ஒன்று சொல்லிவிடுவோம். வானத்தில் இருண்ட மேகங்கள் பரவுகிறது. யுத்த முழக்கம் தொனிக்கின்றது. அதன் பயன் 1914ம் ஆண்டின் பயங்கரத்தை நினைவூட்டுகிறது. அக்காலத்தில், மாண்டேகு பல்லைக்காட்டி இந்தியரைக் கெஞ்சியதுபோல், ஒவ்வொருவரும் கெஞ்சவேண்டிய காலமும் சனி—பார்வையும் பெற்றிருப்பதாலும் சாமுயல் ஹோரின் குட்டிக்கரணம் கிரிகையையும் பார்த்த இந்தியருக்கு ஏளனமாகவே இருக்கும்.

இந்தியர் சந்தேகிப்பது சரியே!

ஞாயமுறையில் இந்தியாவிலிருக்கும் பாமர ஜனங்களுக்கு, சுதேச இயக்கத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாது. நாம் நமது வியாபாரத்தைப் பெருக்கிக்கொள்ள கொழுத்த பணம் சம்பாதிக்க, இந்தியர்களின் தலைமை ஸ்தானங்களிலிருந்து கக்கூஸ்வரை விளம்பரம் ஏற்படுத்தியிருக்கிறோம் நான் இப்படிச் சொல்லியதைப் பற்றி தப்பர்த்தம் கொள்ளாதீர்கள். தெளிவான ஒரு விளம்பரத்தை ஒரு தேசத்தின் அரசியலோடு ஒப்பிட்டுப் பார்ப்பதெனில் வியாபாரக் கம்பெனி என்று சொல்லாது அரசியலென்று எண்ணுதற்காகுமா? இந்தியாவின் பூர்வாங்க நிலைமையின்படியே எந்த ஐரோப்பியனும், பாரபட்சமற்று நடுநிலைமையில் நின்று தேசத்தின் செல்வம் கல்வி—கைத்தொழில் முதலியவைகளையும், போலீஸ் ராணுவம் முதலிய நிர்வாகங்களையும் கவனித்தால் இந்தியர்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கின்றனவென்பது தெற்றென விளங்கும். சுதேசியத்தை நாங்களும் ஆதரிக்கிறோம் என பிரிட்டிஷார் சொல்லுவதில் அர்த்தமுண்டா? சுதேசியத்தை விருத்திசெய்ய சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சியாது? அதற்காக எவ்வளவு ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு தேசத்தின் பொருளை மகிமைப்படுத்த, அந்தத் தேசத்தின் அரசாங்க உதவியில்லாது எவ்வாறு இயலும்? கைத்தொழிற் சாலைகள் இந்தியாவிலிருப்பது, அதன் விஸ்தீரணத்தில் லட்சத்திலொருபங்கெனில், மற்ற பொதுநல ஸ்தாபனங்கள் என்ன கதியாக இருக்கும்.

இந்தியாவிலுள்ள அநேக வியாபாரஸ்தானங்கள் பிரிட்டிஷாரின், நன்மைக்காகவே அமைத்திருப்பதுபற்றி எத்தனையோ தடவை இந்தியர் பலத்த கிளர்ச்சி செய்திருந்தாலும், சட்டம்—ஒழுங்கு என்ற காரணங்காட்டி

பர்மா பிரிவினைபற்றி தலைவர்கள்.

நாம் சமீபத்தில் சின் ஆரியாலையும் ஊபா டுனேயும், சவுட்டானில் சந்தித்துப்பேசினோம் அப்பெரியார்கள் பர்மாவின் தற்கால நிலைமையைப்பற்றி கூறியதின் சாரம்:—

பர்மா பிரிட்டிஷ் நாகரீகத்தில் முழுகிய தின் பயனை சென்ற ஐந்தாண்டுகளாக அநுபவிக்கிறது. காலஞ்சென்ற ஊட்டுஞ்சோ பர்மாவின் மாபெருந் தலைவர். அவர் அப்பர் பர்மாவில் அதிக செல்வாக்கு வாய்ந்தவர். அவர் காலத்திலேயே பர்மாவை புராதன பழக்க வழக்கங்களிலீடுபட முயற்சித்து பயன் பெறுந் தருவாயில் மறைந்துவிட்டார். பின்னர் எனது சகோதரரும், ஊகாகேந்ராவும், தங்களாலான பாடுபட்டு, புத்த சன்யாசிகளை வசப்படுத்தி வந்தாலும், தேசத்தின் அம்சம் ஆங்கிலேய பாஷையாகவும், உத்தியோகப் பற்றுடையதாயுமிருப்பதால், உத்தியோக வேட்டைக்கார ஆசாமிகளின் வாய்ப்பேச்சில், நம்பிக்கைகொண்டு, கேவலம் வயிற்றுக் கஞ்சிக்காக, தேசத்தின் மானத்தை இழக்க முற்படுவது விசனகரமாயிருக்கிறது என்றாலும், லோயர் பர்மா முழுவதும், பர்மா பிரிவினையை ஆதரிக்கப் போகிறதில்லை. அப்பர் பர்மாவில் ஊ, ஊபா பேக்கும் அதிக மதிப்பிருப்பினும், தொழிலாளர்களுக்கு என்னவோ சாதித்துவிடுவதென அலங்கரிக்குஞ் சொற்களில் நம்பிக்கை வைக்கும், சிலரே அவரின் வலையிற்படுவார்கள்.

எந்தக் கட்சியும் தேர்தல் காலங்களில், பெருமித நலன்களை சாதித்துவிடுவதாகச் சொல்லி தங்களது பதவியைப்பெற முயற்சிப்பது வழக்கந்தானென்று நாம் சொல்லாமலேயே அவர்களறிந்திருப்பதால், பர்மாவின் தற்கால நிலைமைக்கு அடிப்படையையும், பிரிவினைக் கட்சியின் சமஷ்டி யோசனையையும், முக்கால்பங்கு பர்மியர் நன்கு தெரிந்திருக்கின்றனர். பிரிவினைக்காரரின் பிரசாரப் பத்திரிகையாகிய "சன்" "மய்மாஅலின்" முதலியவைகள பத்திரிகா தர்மத்தைமீறி சில இடங்களில் சென்றிருக்கின்றன. அதன் போஷகர்கள், சர்க்காரின் தெத்துப் புத்திரர்களாகையால், பிரிவினை வேண்டாதார், பொருப்பற்றவர்கள்; இந்தியரின் சகபாடிகள்; இவர்களெதைச் சொன்னபோதிலும் சர்க்கார் செவி சாய்க்காது விசேஷ சலுகைகாட்டி பிரித்துவிட வேண்டுமென்று முட்டாள்தனமாய் எழுதிவருகிறது. மற்றோரிடத்தில் சர். ஜோசப் மவுஞ்ஜியின் உத்தியோக கேமகத்தைக் குறித்து எதிர் கட்சிக்கு சிபார்சு செய்கிறது. அதன் மூல புருஷர்கள், பர்மாவை — இந்தியாவினின்று பிரித்தவுடன் இந்தியர்கள் முட்டைமுடிச்சுகளுடன், சொத்து சுதந்திரம் யாவற்றையும், போட்டுவிட்டு ஓடிப்போக வேண்டுமென்று, விஷயந்தெரியாத ஜனங்களை ஏமாற்றி, ஓட்டவாங்கப் பார்க்கிறார்கள். விஷமப் பத்திரிகைகள் மூலம் பிரித்தாலும், இந்தியரைப் போகச் சொல்ல ஒருக்காலும் முடியாது. ஆனால் பர்மாவிலுள்ள சகல நிர்வாகமும், பர்மியமயமாக்கப்படுமென்றும் எழுதுகிறது. இந்த முரண்பட்ட பிரசாரத்தினால் பயன்விளையப்போவதில்லை. ஆனால் சர்க்காரின், மனப்பான்மை அவர்களுக்குச் சாதகமாக இருந்து பிரிவினையினாலும் பர்மாவிற்கு அதிக வேற்றுமை ஏற்படுமேயன்றி, இந்தியாவுக்கும் இந்தியர்களுக்கும், கெடுதிகளேற்படுவதில்லை. நமது இந்திய சகோதரர்கள், பர்மியரை வெறுக்கப் போவதுமில்லை இந்தச் சமத்துவ—சகோதர வாஞ்சை, இந்திய—பர்மியர் ஒற்றுமைக்கு வசதியிருப்பினும், ஒரு சில கஞ்சித்தொட்டிகளின் ஆரவாரத்தைக்கண்டு, இந்தியர்கள் கோழை நெஞ்சம் படையாது; பொறுமையுடனும் போதுமான — நியாயமான — சகிப்புத்தன்மையுடனும், இருக்க வேண்டியது அவசியமென்பதை வற்புறுத்துகின்றோம்.

அவைகளை அழுத்தி தலைதூக்காதிருக்க செய்துவிடுவது பிரிட்டிஷாருக்குச் சகஜமாகிவிட்டது. இந்தத் தவரான—யோக்கியதையற்ற செயலை நாம் செய்துகொண்டிருக்கும் வரை, இந்தியர்கள், ஐரோப்பியர்கள்மீது நம்பிக்கை வைப்பதற்கில்லை. இந்திய வியாபாரக் கம்பெனிகளில், நம்மவர் சேர்ந்திருக்கிறார்களா? நமது கம்பெனிகளில் இந்தியர் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா? இந்தியாவின் உணவை உண்டு களித்து இருமாந்திருக்கும், அவர்களை வருத்துகிறோமல்லாது அவர்களின் பணத்தையும் சுரண்டுகிறோம். அதனைப் பட்டவர்த்தனமாய்ப் பார்த்துத்தான் இந்தியர் நம்மைச் சந்தேகிக்கின்றனர். —எப். ஜி. கிராஸ்வெல்.

தன்னடக்கம் வேண்டும்.

ஆச்சரியப்படும்படியான இயற்கைத் தத்துவத்தின், மந்தப்போக்கு ஒரு பெரிய உண்மையான உயிர்நாடியை உள்ளடக்கிக்கொண்டிருந்தாலும், ஒரு மனிதனுடைய நினைப்பின்படி உண்மைதானென்ன? பந்தவ்யம் யாது? முன்னேற்றமும் அபிவிர்த்தியுமான தேசிய இயக்கம் என்பதென்ன? பொதுவாக ஒருவன் நினைக்கிறபடியே, அவனது செய்கையுமிருந்தாலும், லோகமான்ய பாலகங்காதர திலகர் சொன்னதுபோல், ஒருவனுடைய நினைவைக்கொண்டே அவனது உணர்ச்சியைக் கண்டறிய முடியாது. இந்தியாவினுடைய, அவசியமான கொள்கை உயிர் பற்று நீங்குதலே! உயிரில் பற்று வைத்திருப்பவன் பொது ஜனங்களின் நன்மையில் பிரவேசிப்பது முடியாதகாரியம். தற்கால இந்தியா நீண்டகாலப் பழக்கத்திலிருந்த பயங்காமென்பதை தொலைத்ததை நினைவூட்டும்படி எஞ்சிநிற்கிறது. திலகர் 40 வருஷகாலம் சுயராஜ்யத்துக்காக பாடுபட்ட அவரின் எளிய வாழ்க்கை—திடநம்பிக்கை ராஜ்பஉலகில் சிறந்துவிளங்குகிறது. ஒருகாலத்திலாவது எந்த நிலைமையிலும், பயந்து உண்மையை மறைத்துப் பேசினதில்லை. அவரது வழக்கில், சர்க்கார், லாயரிடமோ — நீதிபதிகளிடமோ தாழ்ந்து நின்று பேசியதில்லை. ஆவிரக்கணக்கான, வார்த்தைகளுக்கு விரிவான வியாக்கியானம், வேண்டப்பெற்றபோது, மூன்றுதடவை ஆயுள் கைதியாகப் பாவிக்கப் பட்டபோதும், பதஷ்டமாக—நடுக்கமான—பயங்கரமாய் உத்தியோகஸ்தர்களுக்கு அடங்கி, தான் சொன்னது தவறு என்பதில்லாமல்—ஆச்சரியமான—புதிய அர்த்தமுள்ள பதங்களை தேசிய இயக்கத்தின் சாதாரண வார்த்தைகளாகச் சொல்லுவதற்கஞ்சவில்லை.

தேசிய இயக்கம்—வளர்ச்சி ஜனங்களிடை பதிந்திருக்கிறது. அது சுயமதிப்புப் பொருந்தியுள்ளது. புதிதாக எவரும் சிருஷ்டிப்பதற்கில்லை. என தெளிவாகவும், அழுத்தமாகவும், சொல்ல அஞ்சார், எவ்வளவு தொந்தரவுகளேற்பட்டபோதும், ஒரு தேசியவாதி சுயமதிப்பை விட்டுக்கொடுக்கச் சம்மதியான். ஆனால் பொதுவாக எவருக்கும் தன்னடக்கம் வேண்டும். கோபமூட்டப்பட்ட சமையம், நமது வாலிபர்களிற் சிலர் மிதமிஞ்சி விடுவதாலேயே இகழப்படுகின்றனர்.

தேசிய இயக்கத்தின் உழைப்பாளிகளுக்கு, புகழ்ச்சியும், இகழ்ச்சியும் ஒன்றுதானெனினும், சந்தர்ப்பத்திற்கேற்ற வழக்கத்தையும், அவர்கள் அநுசரித்து நடக்கவேண்டும். சுயேச்சையை விரும்புவோன் பலாபலன்களை கருதக்கூடாது. பயனை விரும்புபவர்க்கு, துவேஷபுத்தியுண்டாகும் துவேஷத்தினால் பகை. பகையினால் ஆபத்தும் மரணமும் உண்டு. கிரிஸ்துவும் இதனையே தமது சிஷ்யர்களுக்கும்—கிருஷ்ணபரமாத்மா அருச்சுனனுக்கும், விளக்கி இருக்கிறார்கள். நாம் ஒன்று தெளிவாகச் சொல்லலாம். பயனை விரும்பினால் சோம்பலும்—மனக்கவலையும், அதிகரிக்கும்.

—அறிஞர் வாஸ்வானி.

உலகநீதி.

(2-ம்பக்கம் தொடர்ச்சி)

"................................... ற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியி
னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்றதுணை."
(குமரகுருபர சுவாமிகள்)

கல்வியானது தர்மத்தையும் திரவியத்தையும் மோட்சத்தையுந்தரும். தலைவாசலில் நல்ல கீர்த்தியையும் உண்டாக்கும். யாதாமொரு கவலை வந்தவிடத்தும் உதவிபுரியும் ஆதலால் சில வாழ்நாளுடைய ஜீவர்களுக்குக் கல்வியினுஞ் சிறந்த பொருள் பிறிதொன்றுமில்லை. ஏனெனில் அந்தக் கல்வி எவ்விடத்தும் உற்ற துணையாயிருப்பதினாலேயே. கல்வி யென்பது கற்றலென்னுந் தொழிற்பெயர். வி-தொழிற்பெயர் விகுதி. கல்-பகுதி. செந்தமிழ் நாட்டிற் அரசராகிய பாண்டியர்கள் வைத்து நடத்திய மூன்று சங்கத்திலும் நம்முடைய பாஷையாகிய தமிழானது மிகச் சிறப்புற்றிருந்ததாகச் சங்க நூல்கள் பலவற்றாலும் புலப்படுகின்றது.

திரு. நா. கோவிந்தசாமி பண்டிதர்

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுஎண் 245] (1922-ஸ்தாபிதம்.) 22 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இருமுறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஹு (15-6-32) ஆனி-மீ 2உ புதன்கிழமை

ராஜாவின் இரண்டு சின்னங்கள்.

இன்றைய நிலையில் ஒரு குறிப்பிட்ட நிறத்தினர்; உலகத்தில் செம்பாதியை ஏதேச்சாதிகாரமாய் ஆளுவதற்குக்காரணம் 'கல்வி' தான். நாகரிகமற்ற—அநாகரீகத்தில் மூழ்கிக்கிடந்த ஒரு நாட்டார் நாகரிகத்தால் செல்வத்தால் உயர்ந்து நிற்பதற்கு அந்நாட்டின்கலை வளர்ச்சியேயாகும். கலைவளர்ச்சியில் தேர்ச்சிபெற்றநாடு, மற்றொரு நாட்டுக்கு அடிமையாயிருக்க ஆளுவதைச்சகித்திருக்க—பொறுத்துக்கொள்ள ஒருக்காலும் சகித்திருக்கவேமாட்டாது. முன்னேற்றத்தில்வந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு நாட்டை எடுத்துக்கொண்டு பார்த்தாலும்; அந்நாட்டுப் பணம்படைத்தோர் பலர் கல்விக்காக பணம் செலவு செய்வது ஒருபுறமிருக்க; சர்க்காரும் கே டிக்கணக்கில் பணத்தை செலவுசெய்து வீதிகள் தோறும் கல்வி நிலையங்களமைத்து; மாணவர்கள் கல்விபயிற்றுவிக்கப்படுகிறார்கள் நம்மை ஆளும் சர்க்காரும் இந்தியர்கள் விஷயத்தில் கோடிக்கணக்கான பணத்தை கல்விக்காக செலவழிப்பார்களானால் பிண்டத்திற்கே திண்டாட்டமாக வந்துவிடும் என்பதை நன்கு அறிந்தே-தெரிந்தே அத்தகைய வழியில் இறங்குவதற்கு-இந்தியர்களுக்கென படிப்பிற்கு பணம் செலவிடுவதற்கு அஞ்சுகிறார்கள்-பயப்படுகிறார்கள். வாசகர்களே! நமது நண்பரென்னவோ கிண்டல்பேர்வழி என்பதை முன்னுடியே தெரிவித்திருக்கிறோம். அவர் கூறுகிறார்; சர்க்கார் ஏன் தொடை நடுங்கவேண்டும்; பிரிட்டிஷாரே 2000! வருடங்களுக்கு இந்தியர்களுக்கு முதலாளிகளாகவிருப்பதற்கு சம்மதித்து ஒரு ஒப்பந்தம் செய்துகொடுத்துவிட்டால் பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு கல்விக்,காக செலவழிக்கப்படும் விகிதப்படி இந்தியர்களுக்கும் செலவு செய்வார்களா என்கிறார். கலை வளர்ச்சியினாலேயே ஒரு நாட்டினர் முன்னேறிவிடுகிறார்களென்பது ஸ்பஷ்டமாகத்தெரிந்தும் நமது நண்பர் கூறுகிறபடி செய்கையில் செய்து காட்டுவார்களானால் இன்று பிரிட்டன் குதிரையில் சவாரி செய்யும் டிவாலாரா கதையாய் முடிந்துவிட்டால்; பிரிட்டனின் எண்ணம் கனவாய் முடிந்துவிடுமன்றோ! அப்படி ஆகிவிட்டால் பிரிட்டிஷார் பிழைக்க வந்த காலத்தில் அனுஷ்டித்த முறைகளையல்லவோ மீண்டும்கையாளவேண்டும்-கேவலம்மனிதவர்க்கம் இனியும் வயிற்றுப்பிழைப்புக்காகமானத்தைவிற்றுவிட-இழிவு துறையில் இறங்கச் சம்மதிப்பார்களா? எப்படியும் தொலையட்டும்; எடுத்துக்கொண்ட விஷயத்திற்குப்போவோம்.

சர்க்கார் வாங்கிய கடனைத்திருப்பிக்கொடுக்கவியலாத நிலைமையில் மீண்டும் கடன்பத்திரங்கள் எழுதிக்கொடுத்து கடன்வாங்க ஆவென்று வாயைப்பிளந்து கொண்டிருக்கும் போது இந்தியர்களின் கல்விக்காகப்பணம் செலவிடுவதென்னவோ முடியாத காரியம். நமக்கும் சர்க்கார் பணம் தேவையில்லை. நமது பெரியோர்களால் எதிர் கால மன்னர்களாக விளங்கவிருக்கும் மாணவர்களுக்காக வைத்துச்சென்ற கல்வி நிலையங்களை போதுமானது அவைகளைப்பரிபாலிப்பவர்கள் சிறிய முறையில் நடத்திவந்தால்—மாணவர்களுக்கு கல்வி பயிற்றுவிக்கப்பட்டால் மாணவர்கள்மன்னர்களாகிவிடுவதற்கு நீண்ட ஆண்டுகள் தேவை

யில்லை. நாமும் நமது நாட்டு மக்களும் சுபிக்ஷமாக வாழலாம்.

காலஞ்சென்ற நமது ராஜா ராமனாத ரெட்டியாரின் தந்தையார் கிழக்கு இராங்கோனில் கல்வி சின்னம் ஒன்றை ஏற்படுத்தி அவருள்ளளவும், அவருக்குப்பின் ராஜா ரெட்டியாருள்ளளவும் அக்கல்வி சின்னங்கள் பக்தியை விளக்கி, கலையை வளர்ச்சி, இருளை விலக்கி, ஜோதியைக்கொடுத்துக்கொண்டிருந்தது. அப்பெரியார்களின் காலத்தில் அக்கல்விதலங்களைப் பற்றி யாரேனும் குறைகூறுவதற்கு இம்மியும் விட்டுக்கொடுக்காத முறையில் செவ்வனே நடைபெற்றுவந்தனவென்பதை நாமறிந்தவரையில்—ஸ்பஷ்டமாக—தீர்க்கமாகக்கூறலாம் அப்பெரியார்களின் காலத்திற்குப்பின்னும் செவ்வனே நடைபெறும் நன்னோக்குடனேயே தமது திரண்ட செல்வத்தில் ஒரு பகுதியை கல்விக்கென எழுதிவைத்துள்ளார். அப்பெரியார் காலஞ்சென்று ஆறுமாத முடிவதற்குள் பள்ளியில் பல ஊழல்கள் நிகழ்வதாக பள்ளிமாணவர்களிடமிருந்து பல கடிதங்களும், மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து பல கடிதங்களும் கிடைக்கப்பெற்றுள்ளோம். முதலாய ஆராதனை-கடவுள் தியானத்திற்கே; பள்ளிதலைமை உபாத்தியாயர் வருவதில்லை என பள்ளி மாணவர்கள் தெரிவிப்பது உண்மையாயின் நிர்வாகத்தில் பல குறைகளிருப்பதாக பொதுஜனங்கள் நம்புவதற்கேது உண்டாகிறது.

நிற்க இரண்டாவது சின்னம் வெங்கடேஷப்பெருமாள் கோவில். ராஜாவின் சொத்தின் பேரால் நடக்கும் வழக்கு இந்த இரண்டு சின்னங்களையும் பாதிக்குமோ வென்றும் பலர் ஐயுறுவதாக அறியக்கிடக்கிறது. அங்கு நடக்கும் வழக்குக்காக ராஜாவுடன் நெருங்கிப்பழகிய ஸ்ரீமான் நரசிம்மய்யரையும், இங்கு வசிக்கும் ஒரு யோக்கியப்பொறுப்புள்ள—சட்ட நிபுணத்துவமுள்ள ஒரு லாயரையும் வழக்கு சம்பந்தமாக கவனிக்கச்செய்வதுதான் பொதுஜனங்களை திருப்தியளிக்கும் என்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள் இதுசம்பந்தமாக நீண்டநாள் ஆலோசனையிலிருந்து கொண்டிருக்கின்றோம், எவ்விதத்தாயினும் பொதுமக்களுக்கென வைத்துச்சென்ற இவ்வூர் சின்னங்கள் இரண்டும் பாதிக்கப்படாமலிருக்கவேண்டுமென்பதுதான்; நமது முக்கிய நோக்கம் ஸ்ரீமான் ஆ. நாகலிங்கத்தேவர் அவர்களும் இது விஷயத்தில் சிறத்தை எடுத்துவந்தார்களென்பதை நாம் அறிவோம். அன்னார் ஒருமாத காலமாக தேக அசௌக்கியமாயிருப்பதாகக் கேள்விப்படுகின்றோம். நமது ஸ்ரீ. தேவர் அவர்கள் சீக்கிரம் குணமடைய பாரசக்தி அருள்பாலிப்பளாக. நாமும் சீக்கிரத்தில்பலபெரியார்களைக்கலந்து ஒருமுடிவுக்கு வருவதுடன் சின்னங்கள் இரண்டும் பாதிக்கப்படாதமுறையில் தக்கன செய்ய முற்படுகின்றோமென்பதை நண்பர்களுக்கும், பள்ளிமாணவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வரவரத் தெரியும்!

காங்கிரஸ் தேசீயத்தை வளர்ப்பதற்கு யாதொரு ஆட்சேபனையும் இல்லை என்று கூறிய இந்திய சர்க்கார் மறைமுகமாக சுதேச சாமான்களை வாங்குபவர்களைத்தடுக்காமலுமில்லை. ஒழுங்காக—மரியாதையாக விதேசி சாமான்களை விற்காதீர்கள்—வாங்காதீர்கள் என்று தடுத்த தொண்டர்களை தடியடியாலும் வசை மொழியாலும், அலங்கரித்ததன்னியில், அவர்களைக் கைதி செய்து அடைத்தும் வைத்தனர். இந்தச்செய்தி இந்தியா முழுதும் எட்டி இங்கிலாந்திலும் முட்டி உலகமுழுவதும் கவனஞ்செலுத்த ஆரம்பித்தது, எந்த ஒரு மனிதனும் சுதேசியத்தை ஆதரிப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. காங்கிரஸ் தொண்டர்கள் அதன் மூலம் இன்னல் விளைவித்து கலகம்செய்து விடுவார்களென்று அஞ்சுவதாக, அதிகாரப்புலிகள் சமாதான அறிக்கை விட்டார்கள், பிரிட்டிஷாரின் செப்பிடு வித்தையைத்தெரிந்த இந்தியத்தலைவர்கள் காங்கிரஸ் சம்பந்தமற்ற சுதேசிய சங்கமொன்று தோற்றுவித்து அதன்மூலம் சுதேசிய இயக்கத்தைப்பரப்ப எண்ணினர். நாளடைவில் அவ்வியக்கம் வலுவடைந்து உன்னதநிலையடைவதற்கேதுவாக அதன் தலைவர் பண்டித மாளவியா, சர்க்கார் பித்தலாட்டம், புனைசுருட்டுகளெல்லாம் நன்றாய்த்தெரிந்த நிபுணர் இவரை ஏமாற்ற முடியுமா? முடியாது. ஆரம்பத்திலேயே-முளைக்கும் போதே-முளையைக்

(7-ம் பக்கம் பார்க்க

அரசியல் கைதிகள் ஏற்றுமதி!

இந்திய சமுதாயமே அவமதிக்கப்பட்டு, தினந்தோறும், தலைவர்களும், ஆயிரக்கணக்கில் தொண்டர்களும், கைதியாகின்றனர் இந்தியாவிலுள்ள சிறைச்சாலைகளில் இடமில்லாமல் அந்தமானுக்கு ஏற்றுமதி செய்ய நினைத்திருப்பது வெளியாகிவிட்டது! குதிரைகளில் சார்ஜண்டுகளும் துப்பாக்கியை ஏந்திக்கொண்டு திரிகிறார்கள். போலீஸ் பையன்கள் தடியைத்தோளில் வைத்துக்கொண்டு அமைதியுடனிருக்கும் தொண்டர்களைத் தாக்குகின்றனர். அடிபொறுக்கமுடியாமல் கீழே மூர்ச்சித்துவிழும்வரை அடிப்பதிலும் பின்வாங்குவது இல்லை. அடிபட்ட தொண்டர்கள் போலீஸ் ஸ்டேசன்களில் தூஷிக்கப்பட்டும் சிகிச்சை பெறாது வைத்தியசாலை சென்றதும் இறந்துவிடுகின்றனர். இதற்கு கேள்வி கேட்பாடில்லை.

தண்டனை அடைந்த கைதிகளை பயமுறுத்தி அடிப்பதாகவும் வதந்தியுலாவுகிறது. இந்திய ஸ்திரீகளை நிர்வாணமாக்கி அடித்ததாக வெளிவந்த வதந்திக்கு, இதுவரை சர்க்காரின் மறுப்பு இல்லாததிலிருந்தே நிர்வாணமாக அடித்தது உண்மைதானென நினைக்க ஹேதுவாகிறது. இதுபற்றி பிரபல ஐரோப்பியர்கள், இந்தியாவில் கேரில்கண்ட விஷயங்களை காமன்சபையில் எடுத்துச்சொல்லியும், சண்டாளனாகிய சாமுயல்ஹோர், அண்டப்புரட்டு—ஆகாசப்புரட்டுகட்டுகிறான். ஹே! இந்தியா! ஜாதி—மதம்—வகுப்பு நிறம் வேறுபட்டிருந்தாலும் எந்தக்கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தாலும், இறந்துபோன ஒரு இந்தியனை கௌரவிக்கக்கடமைப்பட்டிருக்கிறான். சுயமதிப்புள்ள எல்லா இந்தியனும் இந்த அதர்மத்தை எதிர்த்து, அஹிம்சைவாளால் வெட்டித்தடுக்காவிட்டால் இந்தியசமுதாயமே அழிந்துபடும். இந்திய ஜாதி இன்றோடே தொலைந்துபோனாலும் போகட்டும் சரித்திரகாலத்திற்கு முன்னும் பின்னும் இப்படிமிருகபலத்தால் அடக்கி ஆளும், ஒருவகையான ஜாதியார் இருந்திருப்பார்களென்று சொல்லவும் நினைக்கவும் கூடாமல் செய்துவிடவேண்டுமென்பதே பல அறிஞர்களின் கருத்தாகும். எங்கெந்தக்காலத்தில் மிருகபலம் உபயோகிக்கப்பட்டதோ, அப்பொழுதெல்லாம் அந்தந்த சாம்ராஜ்யம், அழிந்துபோய் இருக்கிறதன்றி நிலைத்ததில்லை. அவ்வுண்மையைமாற்றி சர்க்கார் வெற்றிபெறுவார்களானால், தீர்க்கமாகச் சரித்திரம் அழித்தெழுதப்படவேண்டும். உலகப்பெரியார்—கடவுளின் மெய்யடியான மகாத்மாஜீ பேராசைப்பேயைத்துரத்தி—புண்ணியத்தை நிலைநாட்ட இந்தியாவின் சுதந்தர யுத்தம் ஆரம்பமானது அரசியலில் இந்தியர் தலைமை ஸ்தானம் வகிப்பதற்கல்ல—காந்திஜிக்கு மகுடஞ் சூட்டுவதற்கல்ல—இந்தியாவின் அரசியல் பொறுப்பு முழுதும் இந்தியர் கையில் மாற்றப்படவேண்டும். ஜனநாயக ஆட்சி பிரகாசிக்க வேண்டும். அழுகிற பிள்ளைக்கு வாழைப்பழத்தைக்காட்டுவதுபோல் ஏதாவது ஒரு உருப்படாத சீர்திருத்தத்தைக்கண்டு இந்தியர் ஏமாந்துவிடமாட்டார்கள் என்ற மனத்தைரியத்தைக்காட்டிவிடவேண்டும் சர். ஸி. பி. ராமசாமி போன்ற சர்க்கார் தத்துப்புத்திரர்கள் வில்லிங்டனை உயரத்தூக்கி ஆடட்டும்—புகழட்டும் ஏழை—பிரபு—மூடன்—விவேகி—பெண்—அலி முதலிய யாவருக்கும், சம ஓட்டுரிமை இருப்பதாகிய அரசியல் கிடைத்தால் தான் சுதந்திரப்போரை இந்தியர் கைநழுவவிட்டுவிடுவரென்னும், ஊக்கமுடைமைதளர்ந்து ஒவ்வொரு இந்தியனுடைய இருதயத்திலும் ஊன்றி இருந்த அடக்குமுறையின் கொடுமையைச்சகிக்க துணிந்தபின்பு ஜெயம், யாருக்கு?

தேசோபகாரி

(வாரம் இருமுறை)

வருட சந்தா (இரங்கோன்)	ரூ	3	0	0
6 மாதம் ,,	,,	1	8	0
வருட சந்தா (வெளியூர்)	,,	4	8	0
6 மாதம் ,,	,,	2	12	0
மலாய்நாடு வருட சந்தா	,,	6	8	0

விட்டுக் கொடுப்பதே ராஜதந்திரம்.

மேற்இந்திய தாராளகட்சியின் தலைவர் சர். சிம்மன்லால் சேத்தல்வாட் தற்கால அரசியலைப்பற்றி பத்திரிகைகளில் பின்வருமாறு வெளியிட்டிருக்கிறார்.

நான் இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்குச்சென்று திரும்பி வந்ததும்; இந்திய பிரச்சினையிலாழ்ந்து சிந்தித்து ஒரு முடிவுக்கு வர அநேக நாள் பிடித்தது. இந்திய தலைவர்களுடைய அதிதீவிர முயற்சி, எனது முடிவை ஏற்றுக்கொள்வதற்கில்லை; என அஞ்சின போதிலும், இந்திய சர்க்காரின் மனப்பான்மையையறிந்துவிட்டால் எனது தீர்மானத்திற்கு அநுகூலமாக இருக்குமென்று நினைத்தேன். சர்க்காரின் மனப்பான்மை வேறுவழியில் சென்றுகொண்டிருப்பதை எனது தீர்மானத்தின் மூலம் திருப்பமுடியாதென்று உறுதியாக நம்பினேன் இந்திய கவர்ண்மெண்டின் பதிலை எதிர்பார்த்திருந்தேன். ஆனால் பிரிட்டிஷ் ஆலோசனைக்கமிட்டி அனுமதியின்றி எனது கேள்விக்குத்தக்கபதில் கிடைப்பதில்லை; என ஒரு அறிக்கையின் மூலம் தெரிவிக்கப்பெற்றேன். பிரதம மந்திரியின் கண்வியாதி ஒரு காரணமாகவுமிருந்தன மந்திரி சபையினர் இந்தியா விஷயத்தைப்பற்றி ஒட்டவா மகாநாட்டில் ஆஜர் செய்யப்படும் திட்டங்களை ஆலோசிப்பார்களென நான் நினைத்தபடி நடக்கவில்லை. மாஜி இந்தியா மந்திரி மிஸ்டர் பென் முதல் வட்டமேஜைமகாநாடு முடிவடைந்ததும், காமன்சபையில் இந்தியாவுக்குரிய ஒரு தீர்மானத்தை முடிவு செய்ய 18மாத காலமாக வளர்த்திக்கொண்டு போவது விசனிக்கத்தக்கதெனவும்; இந்தியா மனச்சோர்வு அடையாது நம்பிக்கையோடிருக்கும்படியான திட்டம் ஒன்றை இந்தியத்தலைவர்களோடு யோசித்து முடிவு காணுவதில், ஆட்சேபனை என்ன? தாழ்ந்த நிலைமையிலுள்ள எந்தவர்க்கமும், அவசரப்படுவதும், ஆவேசமுற்று தன் மதிப்பிழப்பதும் சகஜமே. கவர்ண்மெண்டார் தமது மேலான பரந்த எண்ணத்தை இனிகாட்டவேண்டுமென்றும் பேசினார், இவர் தனது ஆட்சியின் அநுபவத்தை யொட்டியே பேசியுள்ளார். ஆகையால் அதனை எவரும் மறுப்பதற்கில்லை. பிரிட்டிஷாரின் தேர்ந்தமுடிவு இந்தியாவுக்கு மாகாண ஆட்சி அளிப்பதாயும், மத்திய ஆட்சியில் இந்தியருக்கு சில உரிமை அளிக்கப்படுவதாயும் இருக்கலாம். எவ்வித சீர்திருத்தமும் இந்தியத்தலைவர்களோடு சமரசஞ்செய்து கொண்ட பின் அல்லவோ—அவர்களது மனோபாவத்திற்கு ஒத்திருந்தாலல்லவோ ராஜி ஏற்படக்கூடும். நான் கேள்விப்பட்டமட்டும் மிதவாதிகளின் சமயோசித அபிப்பிராயங்கூட சர்க்காருக்கு பிடிப்பதில்லை என்றால் ஐரோப்பிய சங்கத்தாரின் கருத்துக்கிணங்க சர்க்கார் நடத்தை நிர்வாகப்பொறுப்பு இருப்பின் தேசமகாஜனங்கள் கூக்குரலுக்கு இதைவிட வேறு ஆதாரம் ஏற்றுக்கு?

பொதுஜன உரிமைக்காக—பாதுகாப்புக்காக அடக்குமுறைகள் அநுஷ்டிப்பதெனச் சொல்லுவது முரண்பட்டதல்லவா? சர். எர்னெஷ்டு ஹோட்சன் பம்பாய் போலீஸாரின் நடவடிக்கையைக்கவனித்தால் இந்தியரின் நலத்துக்காகவன்றி பிரிட்டிஷாரின் உரிமைகளைக்காப்பாற்றுவதின் மூலம் அமுல் செய்கிறார்கள் என்பதாகச்சொன்னார். இந்திய மன்னர்களும் மகாநாட்டில் பிரிட்டிஷாரின் உரிமைகளை நன்கு பாதுகாப்பதாக உள்ள ஓர் சீர்திருத்தத்தையே வரவேற்பதாக கூறியுள்ளார்கள் இந்த பேச்சுகளிலிருந்து, ஒதுங்கி நிற்பது யார்? காங்கிரஸ்தான். காங்கிரஸ் இழிவுபட்ட நிலையிலிருப்பதாகப்பறை சாற்றுகிறவர்கள் அதன் தலைவர்களல்லாமலேயே எந்த ஓர் சீர்திருத்தத்தையும் செய்துகொள்ளுகிறது தானே! ஏன் கொட்டாவி விடவேண்டும்.!

அரசர் பிறந்ததின விழாவன்று முதன் மந்திரி பேசியபோது இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அமர்ந்திருப்பதற்கு முக்கிய தடை அவநம்பிக்கை எனக்கூறி-நம்பிக்கைக்கு சாசுவதமான அரசியலொன்றை நேமித்துவிடுவது மட்டும் போதாது; காலக்கிரமத்தில் அதனை ஏற்றுக்கொள்வதுதான் பிரதானம் ராஜீய நிர்வாகத்தில் பாரபக்ஷமிருப்பதாக—இம்மிகூட இல்லாதிருந்தால் தான் இந்தியா

ராஜியவாதியும்—சந்நியாசியும்

ஒருசாது அவனுடைய மனதில் பற்று தல் நீங்க நிஷ்டைசெய்கிறான். தேசிய தலைவன் தன் மனதில் தன்னலமும், பெருமையும் நீங்கப்பழகுகிறான். இருவருக்குமுள்ள வேற்றுமை அவ்வளவு அதிகமாயில்லை. தேசிய பிரசாரம் அத்தேசத்தின் எல்லா ஜனங்களினுடைய மனதையும் கவரும் வழியில் செய்யவேண்டும். நான் உனக்குச்சொல்லுகிறபடி அதிக உன்னதமானதும், சிலாக்கியப்பட்டதுமாகிய கேள்விக்கு பதில் சொல்ல எப்படி சிந்திப்பாயோ, அப்படியே சுதந்தர இயக்கத்திற்கும், சிந்தித்துப்பார்க்கவேண்டும். நீ பேசும்போது ஆகாயத்தைப்பார்த்துப்பேசாதே. இது முற்றமெல்லாம் விடுதலையைப்பற்றிப்பேசுங்காலம். மகா மகா ரிஷிகள் இந்தக்காலத்திலிருந்தால் தேசிய உணர்ச்சி அவர்களுக்கு இல்லாதிருப்பின் புரக்கணிக்கப்படுவது நிச்சயம்.

ஒரு சந்நியாசி அவனுடைய ஆத்மசாந்திற்கப்பாடுபடுகிறான். அது பெரிதல்ல! தேசியவாதி—தேசத்தின்—நல்லவர்—கெட்டவர் ஏழை-பணக்காரன்-கண்குருடு-நொண்டி முதலிய யாவருக்கும், பயனுண்டாக உழைக்கிறான் ஆத்மஞானிக்கு இன்பமுமல்ல, துன்பமுமில்லை. தேசிய வீரனுக்கு அடிக்கடி, சிறைத்தண்டனை-கவலை-குடும்பப்பிரிவு முதலியன உண்டு. தான்—ஏற்படத்தான் செய்யும். இடுக்கண்களிலிருந்து வெளியேற அவன் முயற்சிப்பதில்லை. ஞானி அஞ்ஞானத்திலிருந்து விடுபட நினைப்பதுபோலவே தேசியவாதியும் அடிமையிலிருந்து விடுதலைபெற முயற்சிக்கிறான். முனி கண்ணை மூடிமௌனஞ்சாதிக்கிறான். தேசியவாதி ஞாயப்பிரமாணத்தின் மூலம் ஆத்மசாந்தி உண்டாக பிரசாரம் செய்கிறான். ஏ! வாலிபா! உனது தாய்நாட்டைக்கடைத்தேறச்செய்ய நீ முற்படுவதும் மௌனமே. எல்லா ஆசையையும் விட்டு விடுதலையை மட்டும் குறிப்பாக நாடுவதும் மௌனமல்லவா? யோகமல்லவா? ஞானமல்லவா! உனது மனைவி மக்களைப்பற்றிய கவலை எடுத்துக்கொண்டிருப்பது தான் பாவம் அந்தப்படுகுழியிலாழ்ந்துவிட்டால் நீ ஒரு மண்டு. உலகமே உன்னைப்புகழும் வகையில் பெருந்தன்மையாக முயற்சி எடு. அந்த முயற்சி கீர்த்தி அளிக்கும் அநேக ருஷங்களுக்குமுன் ஐரோப்பாவின் ஹென்றி அரசன் காலத்திலிருந்த பிலிப்சிட்னி என்னும் சேனாதிபதியின் தயாளகுணம் தேசசரித்திரத்தில் முக்கிய ஸ்தானம் பெற்றிருப்பதற்கு அக்காலத்தின் அவரின் சுயநலமற்ற காரணந்தான்.

இந்தியாவில் சந்நியாசிகள் மிகுந்துவிட்டனர். சந்நியாச தர்மத்தை அநுசரிக்க செய்த விஷயம் வேறு. உபநிடதக்கருத்துக்களின் ஆராய்ச்சிக்காகவே சந்நியாசங்கோரப்பட்டது. ஆனால் உபநிடதங்களுக்கு, பாஷிய வியாக்யானம் செய்தவர்கள், தன்மதிப்பு—மத பிடிவாதம்-தாட்சண்யம் முதலிய காரணத்தைக்கொண்டு சந்நியாசம் புண்ணியமானதெனக்கருதிவிட்டார்கள். இந்தியா விடுதலை அடையவிரும்பினால், சுதந்திரப்போரிலீடுபட எத்தனித்தால்-தேசிய ஞானத்தைப்பருகினால், அளவுகடந்த அன்பும் விசாலபுத்தியும் உண்டாகிவிடும். இதைத்தான் சித்தத்தெளிவு, என்று கீதை சொல்லுகிறது. சந்நியாசம் வேண்டாம், என்று சொல்வதாக தப்பர்த்தங்கொள்ளக்கூடாது கால நிலைமைக்கேற்ற சீர்திருத்தந்தான் பயன் தரத்தக்கது. ஆகையால் வாலிபர்கள் தேசிய சந்நியாசிகளாக விளங்கவேண்டுமென்பதே எமது அபிப்பிராயம்,

—வாஸ்வானி

வின் அரசியல்வாதிகள் திருப்தி அடைவார்களாகையால் நாம் நமக்கேற்பட்டிருக்கும் பொறுப்பை இலகுவில் விட்டுக்கொடுக்காமலும் தாமதத்துடனும் பாதுகாப்பற்றதுமான வேலையை ஆரம்பிக்காமல் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய குடியேற்ற நாட்டந்தஸ்துள்ள அகில இந்திய மசோதாவொன்றை இந்தியா நம்பும்படி தயாரிக்கச்சரியான முறையை பிரிட்டிஷ் கவர்ண்மெண்டு முயலவேண்டுமென்கிறார். நாம் இவரது பிரசங்கத்தை வியாக்கியானம் செய்துகொண்டிருப்பதற்கில்லை. எவ்வகையிலும் பிரிட்டிஷ் அரசியல்வாதிகளும் இந்திய தலைவர்களும் ஒன்றுபட்டு நடந்ததைப்பற்றிக்கவனியாமல் திடமான நம்பிக்கையோடு—விட்டுக்கொடுப்பதென்ற பெருந்தன்மையோடு ஒரு அரசியல் திட்டத்தை ஸ்தாபிப்பதே ராஜதந்திரமாகும்.

தினமும் 22 இறக்குமதி கைதி!

அரசியலின் போரால் சுயகலங்கொண்டு கண்டவர் நகைக்கும்படியான—பிடிவாதமற்ற செயலை-இந்திய சர்க்கார் புரிந்துவருகின்றனர். அரசியல் கைதிகள், சாதாரண கைதிகளைவிட அதிக கேவலமாக நடத்தப்பட்டிருக்கிறார்கள். சிறைச்சாலைகளின் நிர்வாக அந்தஸ்து குறையுள்ளதென அடிக்கடி புகார் செய்யப்பட்டிருந்தும். அதிகாரிகள் கவனிக்கவில்லை. அதன் மூலம் சில சிறைகளில் கலகமும் நடந்திருக்கிறது. கௌரவமிருந்த கைதிகளிற் சிலர் தங்களுடைய, வயது தேகநிலை-மனச்சாட்சி முதலியவைகளின் பாகுபாடற்று நடத்தப்பட்டிருக்கிறார்கள். சுகாதாரக்குறைவினாலும், சிலர் நோய் வாய்ப்பட்டிருப்பதும் ஒப்பததக்கதே! பொதுவாக அரசாங்கத்தார் காங்கிரஸ்காரர்களை, அளவுக்கு மிஞ்சி தண்டித்திருந்தும், இந்தியாவிலுள்ள சிறைகளில் இடமில்லாமல் அந்தமான் தீவுகளுக்கு கைதிகளை ஏற்றுமதி செய்வதாக யோசித்திருந்தாலும், காங்கிரஸை நசுக்கிவிட்டோம். அதற்கு செல்வாக்கில்லை என்றும் நாட்டில் அமைதி நிலவுகிறதெனவும் உண்மையை மறைத்துக்கூறும் கயவாளிகள்; சென்ற மூன்றுமாதத்திற்குள் அரசியல் கைதிகள் தினம் சராசரி, 22. பேர் விதம், இறக்குமதி-விடுதலை செய்ய பெற்றிருப்பதை அறிந்து என்ன சொல்லுவார்கள். விடுதலைபெற்ற கைதிகளில் அநேகர் தண்டனை கால அளவின்படி விடுவிக்கப்பெறவில்லை. அவர்களது அசௌக்கியம்—இடைக்குறைவுகளுடன் அரசியல் பிரசாரத்தை விஸ்தரிப்பார்களெனப்பயந்தும் விடுதலை செய்திருப்பார்கள். சிறை அதிகாரி (சூப்பிரண்டெண்டு ஆப்ஜெயில்) சீனியர் இலாக்கா அதிகாரி அட்வர்சரி மெம்பர் முதலியவர்களின் சிபார்சாலும் சில கைதிகள் விடுதலை பெற்றிருப்பதிலிருந்து ஏற்கெனவே நாம் சொல்லியபடி சிறை நிர்வாகங்களின் ஊழல் தான் காரணமென நம்புவதற்கு ஹேதுவாகிறது.

போலீஸ் ஆபீசர் மொத்தத்தில் 202 அரசியல் கைதிகள் விடுதலை பெற்றிருக்கிறார்களெனத்தெரிவிப்பதிலிருந்து தற்கால நிலைமையில் இன்னும் அதிகமாக விடுதலை செய்திருப்பார்களெனவே யோசிக்க இடமுண்டல்லவா.?

இது ஒரு பிழைப்பா?

விரைவாகச்சென்று கொண்டிருந்த ராஜீய வேகம் தடைபட்டு—சோர்வடைந்திருக்கிறதாகச் சொல்லப்படுவது அபத்தம். ஒருவனின் இரத்தக்கொதிப்பு அவனது ஆழ்ந்த சிந்தனையின், முடிவினாலேயே ஏற்படுகிறது. தக்க, அவனுக்கேதுவான, சிகிச்சை செய்யப்பட்டாலொழிய நிலைமை சற்றும் மாறாது. இந்திய ராஜீய ஞானம் பிரஜைகளிடையே பெருகி அணைகடந்துவிட்டது. அதிகாரிகள் பதினாறாம் நூற்றாண்டின் அனுபவத்தைக்கொண்டு, இந்தியாவின் தற்கால அறிவின் தெளிவை—அரசியலில் இந்தியரின் எண்ணத்தை மாற்றிவிடமுடியாது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்—வியாபாரக்கம்பெனி—ஏஜண்டுகள் ஸ்தானம் பணக்கார ஆட்சி என்று தம்பட்டம் அடிக்கப்பட்டிருப்பதை பிரிட்டிஷார் தெரிந்திருந்தாலும் வெளிக்காண்பித்துக்கொள்ளாமல் கயிறு திரித்து வந்தார்கள். இந்தியா மந்திரி சர்வீஸ் விருந்தொன்றில் வயிறுபுடைக்க சர்ப்பிட்டு விட்டு உளறியதாவது:— இதற்குமுன் சிவில் சர்வீஸ்காரர்கள் நிர்வாக சம்பந்த பொருட்பில்லாதவர்கள் இருந்திருப்பதால், சில சமயங்களில் நெருக்கடியில் அகப்பட்டிருப்பீர்கள். இனி வருங்காலத்திய அரசியலில் உங்களுக்கும் எங்களுக்கும் உள்ள உடன்படிக்கையின் அம்சத்திற்கு, பங்கமில்லாமலிருப்பதற்கேற்ப இந்திய நிர்வாகத்தில் பொருப்பாற்றியிருக்குமென்கிறார், மற்றும் இவர்பட்டவர்த்தனமாய் ஐ. சி. எஸ். காரர்கள் பிரிட்டிஷ் வியாபாரக்கம்பெனியின் பிரதிநிதிகளெனச் சொல்லவேண்டியதை மறைத்துப்பேசுகிறார்—ஏகாதிபத்திய சலுகை காட்ட சாமுயல் ஹோருக்கு அவர் ஒரு ஐரோப்பியனென்ற ஹோதாவில் உரிமை இருக்கலாம். ஆனால் இந்தியாவைப்பற்றிய பிரச்சினையில் இந்தியா மந்திரிஸ்தானத்திலிருந்து, மறைவுபட்ட அபிப்பிராயத்தைக்கூறுவது, அயோக்கித்தனமாகும். முன்னேற்றம் தடைபட்டாலொழிய வருங்காலத்தில் சிவிலியன்ஸ்களின், ஆலோசனையும் உதவியும் அவசியம் இருக்கவேண்டுமென்கிறார். இந்தவார்த்தை இவரது சகபாடிகளோடு ஆலோசனை செய்து முடிந்ததெனவே மதித்தால், பிரிட்டிஷார் வியாபாரத்திற்கு இந்தியா

வில் சாசுவத நிலைமை உண்டாகுமெனவே அறியக்கிடக்கிறது. இப்படி உத்திரசுப்பூனையாயிராமல் இந்தியாவிலுள்ளவர்கள் பிரிட்டிஷ் சாமான்களையே வாங்கவேண்டுமென்று வருங்காலத்திய அசெம்பிளியில் ஒரு சட்டம் நிறைவேற்றுவதாக சிவிலியன்ஸ்களுக்கு ஆறுதல் சொல்லி இருந்தால் நலமாயிருக்கும் ஆனால் இதையோசித்தால் பங்கியிலுட்காரா தே என்றால் இலை பீத்தல் என்பதுபோல் பிரிட்டிஷ் சம்பந்தமற்ற ஆட்சியே தேவை என்று இந்தியர் கேட்கும்போது இதுவுமொரு பிழைப்பா?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒள்ளிவிட மந்திராலோசனைசெய்து சுதேசிய திருவிழாவிற்கு-கொண்டாட்டத்திற்கு லைசன்ஸ் கேட்டதற்கு, போலீஸ் சூப்பிரண்டென்டும், டிஸ்டிரிக்டு மாஜிஸ்டிரேட் போலீஸ் கமிஷனருள்பட ஏக அபிப்பிராயமாய் சுதேசிய இயக்கத்தில் காங்கிரஸ் பிரசாரமும் நடைபெறவிருக்கிறதென சர்க்காருக்குத்தெரிகிறதால்; லைசன்ஸ் மறுக்கப்படுகிறது" என்ற பதில் கிடைத்திருக்கிறது, இந்தமாதிரி வழக்கம் தலைமுறை தலைமுறையாக நடந்துவந்திருக்கிறது; என்றாலும் பட்டவர்த்தனமான பச்சைப்பொய்யை-பூனை கண்ணை மூடிக்கொண்டு பாலைக்குடித்ததுபோல், வெள்ளை நரிகள் சொல்லுவதுதான ஆச்சரியமாக இருக்கிறது. சுதேசியத்தை ஆதரிப்பதாக சத்தியஞ்செய்யும், வெள்ளையர்கள் பிரிட்டிஷ் சாமான்களுக்கு சலுகை காட்டாத அதிகாரிகள்-இந்தியர்மீது பரிதாபங்கொள்ளும் ஐரோப்பியர்கள் சுதேசிய இயக்கத்திற்கு லைசன்ஸ் கொடுக்கமறுத்த காரணம் விளங்கவில்லையா? மிதவாத சிகாமணிகளே! நீங்கள் எத்தனையோ, கண்டனங்கள் விடுத்தீர்களே! தீர்மானத்தை பெரிய, பெரிய கொட்டை எழுத்துக்களில் எழுதித்தெரிவித்தீர்களே உங்களின் கூக்குரலுக்கு இந்திய சர்க்காராவது பிரிட்டிஷ் பார்லிமெண்டாராவது கவனித்தார்களா? இப்படித்தான் புதிய சீர்திருத்தம் வழங்குவது என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டு மூட்டை முடிச்சுகளைக்கட்டி ஒரு பக்கத்தில் போட்டுவிட்டு மகாத்மா காந்திக்கு ஜே! என்று சொல்லுங்கள் உங்களைப்பிடித்திருக்கும் மிதவாதப்பேயைத்துரத்துங்கள். வருங்காலத்தில் உங்களுக்கு நல்ல ஓர் இடத்தைக்

ஜப்பானில் கொரியா நிலை.

கொரியா டைம்ஸ் பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது:

ஜப்பான் ஏகாதிபத்தியத்தின் வெடிகுண்டு திறமையும், ஜப்பானியருடைய ஷாயகே பிரயத்தனங்களும், கொரியர்களுடைய தேசியக்கிளர்ச்சியும், காரணவிதமாக அபிப்பிராயபேதமின்றி ஒப்பிட்டுப்பார்த்தால், ஒரு தேசத்தில், விடுதலைபெற விரும்பும் ஜனங்களை அதிகாரத்திமிர்பிடித்த வெறியாளர்களால், எப்படித்தேசியக்கிளர்ச்சியை அடக்கப்பார்க்கின்றனரென்பது விளங்கும். கொரியர்களுடைய இயக்கம் சுயேச்சை பெற்ற அரசியலைப்பற்றியுள்ளது. அதன் நோக்கத்தை உலகமே சிந்தித்துக்கொண்டிருக்கிறது. ஜப்பான் தனது ஏகாதிபத்தியத்தின் எல்லையில் கல்வி விருத்தி—கைத்தொழில் மிகுதி பாவியிருப்பினும் கொரியர்களையும்—கிரிஸ்தவர்களையும் சுயேட்சை பெறவேண்டுமென்ற எண்ணத்தை மாற்றிக்கொள்ள போதுமான நன்மை செய்யவில்லை. கொரியன்ஸ் ஜப்பானியர்களுடைய நம்பிக்கைக்குத்தக்கபடி நடந்தாலன்றி எவ்வித வசதியும் பெறுவதற்கில்லை எந்த பொது ஸ்தாபனங்களிலோ—மீட்டிங்குகளிலோ—சுயேட்சை—விடுதலை—அதிகாரத்திமிர் முதலியவைகளைப்பற்றிபேசவோ—எழுதவோ கூடும் ஆனால் ஜப்பான் தான் அதற்குக்காரணமென எழுதக்கூடாது; உலக அநுபவத்தை யொட்டி ஜனங்கள் தங்களுக்குள் வாதித்தாலும், குற்றம் இவ்வளவு கடுமையான சட்டதிட்டங்களிருந்தாலும் கொரியர்கள் தங்களின் உரிமைகளைக்கவனித்து பேசாமல் இருந்துவிடவில்லை. இருபது வருஷ அநுபவத்தில் கொரியர்கள். ஜப்பானியர் பொறாமைப்படும்வண்ணம் சகல தொழில்களிலும் தேர்ச்சி பெற்று ஜப்பானியரின் அடுத்தபடியிலிருக்கிறார்கள்

காலி பண்ணிக்கொள்ளுங்கள். உங்களுடைய சவடால் பாச்சா பலிக்காது. ருஷியாவைப் பார்த்தீர்களா? பணக்காரர்களின் வீடுகள் பிராணிகள் தங்குமிடமாக்கப்பட்டிருக்கிறது இந்தியாவும் அக்கொள்கையை நாடுங்காலம் சமீபத்திலிருக்கிறது.

சர்க்கார் சலுகை அல்லவா?

கொண்டவன் வலுவறிந்து கூறை எறி சண்டை செய்வதுபோல லண்டனிலுள்ள ஐரோப்பியப்பத்திரிகைகளும், இந்தியாவில் ஆங்கிலேயர்களால் நடத்தப்படும் பத்திரிகைகளும்; இந்தியாவில்நடைபெறும் ஹிந்து—முஸ்லீம் கலகங்களைப்பற்றித்திரித்துக்கூறிவருவது வழக்கமாய்விட்டது.

இந்தியாவிலுள்ள தேசிய ஸ்தாபனங்களையும், தேசிய இயக்கங்களையும் தேசிய ஸ்தாபனத்திற்கென ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும், பணத்தையுங்கூட விழுங்கி ஏப்பம்விட்டுவிட்டு இந்தியாவின் அளவற்ற—மிதமிஞ்சிய செல்வத்தை தன் வர்க்கத்தவரே—ஆங்கிலேயர்களே ஏகபோகமாக ஆளவேண்டுமென்பது அப்பத்திரிகைகளின் ஏகவிரதம்.

சர்க்கார் சலுகையை வைத்துக்கொண்டு தலைகால் தெரியாமல் கூத்தாடிக்கும்மாளமடிப்பதில் ஓரிரண்டைத்தவிர ஆங்கில பத்திரிகைகளுக்கு—சரிநிகர்—சமானமான பத்திரிகைகளோ, தனி மனிதனோ கிடையாது. சர்ச்சில், ராதர்மீர் கூட கல்கத்தா ஸ்டேட்ஸ்மென் போன்ற பத்திரிகைகளுக்கு பிச்சை போடக்காணுதென்றால் வேறு பேசுவானேன்.

சமீபத்தில் பம்பாயில் நடைபெற்ற ஹிந்து—முஸ்லீம் கலகத்திற்கு காரணமாயிருந்தார் யாரென்பதை; ஒரு ஆங்கிலேயரையே ஆசிரியராகக்கொண்ட; இந்தியர்களால் நடத்தப்பெறும் பிரபல பத்திரிகைகளில் ஒன்றாகிய 'பம்பாய்க்ரானிக்கல்' போன்றபத்திரிகைகள் சர்க்கார் முதல் தனிமனிதன் வரை புரட்டிப்புரட்டி சந்தியில் இழுத்தும் இன்னும் புத்திவரவில்லை. அதன தன் ஜாதி புத்தி என்னவோ ஒழிந்துபடுவதில்லை என்பது ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது, முஸ்லீம்களில் சிலர் கலகத்திற்கு காரணம் ஹிந்துக்களென்றும், ஹிந்துக்களில் சிலர் முஸ்லீம்கள் தான் காரணமென்றும் கூறிக்கொள்வதற்கேற்ற முறையில்; அப்பத்திரிகைகளும் சந்தர்ப்பத்திற்கேற்ற—சமயத்திற்கு தகுந்தவாறு ஹிந்து,—முஸ்லீம்களிலும் காரணமல்லாதவர்களையும் காரணப்படுத்திக்கூறுவதென்றால் எவ்வளவு நெஞ்சழுத்தம்; பல்லில் நாக்கைப் போட்டுப்பேசுவதற்கு—எழுதுவதற்கு இடங்கொடுத்தது சர்க்கார் சலுகைதானென்றால்—உண்மையைக்கூறினால் சர்க்காரும் கோபித்துக்கொள்ளமாட்டார்கள், இத்தகைய விஷமப் பத்திரிகைகள் இனிமேலாவது நாவடக்கிப்பேசுவதற்கான முறையில்—நேரான வழியை நமது சகவர்த்தமானிகள் எடுத்துக்காட்டுவதில் பின்னடையாதிருக்குமாக.

கொரியர்கள் தங்களின், மனோபாவத்தை இனத்தார்களின் மூளையில் புகும்படி பிரசாரம் செய்யத்தவறிவிட்டார்கள். சுயஆட்சி அரசியல் வேண்டிய அவசியத்தைப்பற்றி வெறும் கிளர்ச்சி செய்தார்களே யொழிய அதற்குத்தகுந்த திட்டமொன்றையும் தயாரித்திருக்கவில்லை. 1910—ம் வருஷம் வரை கொரியா அடிக்கடி ருஷியாவினால், தாக்குண்டு, முந்தின அதாவது 1905,ல் ஜப்பானுக்கும் கொரியாவுக்கும் ஏற்பட்டிருந்த உடன்படிக்கை சரத்தின் சிலபாகத்தைத்திருத்தி, ஜப்பானின் ஏகாதிபத்தியத்திற்குள் கொரியா அரசியல் சம்பந்தமாக, ஜப்பானின் அரசியல் அதிகாரிகளிடம் உத்தரவுபெற்ற நிர்வாக சட்டதிட்டங்கள் ஏற்படுத்துவதென உறுதி செய்யப்பெற்றது. ஆனால் இந்தியாவைப்போன்றே பல இன்னல்கள் அடைந்துகொண்டிருந்து 1919, வருஷம் நன்னம்பிக்கையுடைய ஜப்பான் உயர்தர உத்தியோகஸ்தர் மிஸ்டர் சியோ, என்பவரால் சகல வசதியுமுள்ள ஒருசெழிப்பான, நாட்டின் தன்மையை அடைந்துவிட்டது. இந்தியாவுக்கும், ஐரோப்பாவுக்கும் உள்ள தற்கால நிலைமையைப்போலவே இருந்திருப்பதாலும் மிஸ்டர் சியோஎன்பவரால் சமரசமும் செழிப்பும் உண்டானதுபோல இந்தியத்தலைவரோடு ஐரோப்பியரொருவர் ஏற்படுவது எப்போ?

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுஎண் 245] (1922-ஸ்தாபிதம்.) 23 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை. ஆசிரியன் அ. வே. செல்லம் பிள்ளை. வாரம் இருமுறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஹு (19-6-32) ஆனி-மீ 6உ ஞாயிற்றுக்கிழமை

குண்டாமியானையும் தாண்டிவிட்டது!

சர்க்கார் அடக்குமுறை குண்டாமியான்களின் யோசனையையும் தாண்டிவிட்டது. அமிர்தசாகரத்திலுள்ள சிலமேதாவிகளின் மண்டையிலே—போலீஸ் வீரர்களின் புத்தியிலே சட்டமறுப்பை அடக்கிவிட ஒரு புதியயோசனை தட்டியிருக்கிறது. நாமும் சிந்தித்துப்பார்த்ததில் நல்லயோசனை என்றே படுகிறது. அதன்படி சர்க்கார் நடந்து கொள்வார்களானால் சீக்கிரம் உருப்பட்டுவிடுவார்களென்பதில் சந்தேகமேயில்லை. சர்க்காருக்கு நாமும் கூட அந்த யோஜனைப்படியே நடந்து சட்டமறுப்பை அடக்கிவிடும்படி சிபார்சு செய்கின்றோம். சட்டமறுப்பை அடக்குவதற்கு பலரும் பல அபிப்பிராயங்களைக்கூறினார்கள். தெருக்களில்--வீதிகடோறும் பிரசாரம் செய்யும் ,தொண்டர்கள் பேரில்; சாக்கடை தண்ணீரை வாரியிறைத்தால் நின்றுவிடுமென்றனர் ஒரு சிலர். யுத்தமுறைப்படி தொண்டர்களை குண்டாந்தடிகளால் அடித்து தந்தி, தபால் போக்குவரத்து சாதனங்களை எடுத்துவிட்டால் ஒருவாறு ஒழிந்துவிடுமென்றனர் இன்னும் சிலர். பெண்மைத்தெய்வங்கள் அவமானமாக நடத்தப்பட்டால்—தாலியை முதற்கொண்டு பறிமுதல் செய்தால் அவமானத்திற்கஞ்சி அறவே நின்றுவிடும் என்றனர் ஒருசாரார். தொண்டர்கள் சிறுகொட்டங்களில் அடைக்கப்பட்டு சோறும், தண்ணீரும் கொடாதபடி செய்தால்; இருந்தவிடம் தெரியாமல் மறைந்தோடி விடுவர் என்றனர் குண்டாமியன்கள் போன்றார். இவைகளாலெல்லாம் சட்டமறுப்பு இயக்கத்தை—இந்திய இளைஞர்களின் சுதந்தர உணர்ச்சியை—சுதர்மப்போரை அடக்கிவிட—இயலாதென்பதை அறிந்த சர்க்காரும் குண்டாமியான்களின் யோசனைகளை எல்லாம் கையாண்டு காரியம் வெற்றிபெறாது; இப்பொழுது ஒருபுதிய யோஜனையிலிறங்கிவிட்டது. இம்மாதம் முற்பகுதியில் அமிர்தசாகரத்தில் நடைபெற்ற ராஜீய மகாநாட்டில் சொற்பொழிவாற்றிய கமால்சிங் என்பவரை போலீஸ் மேதாவிகள் பேசவிடாதபடி அவரது வாயில் துணியை வைத்து அடைத்து பேச்சைத் தடைப்படுத்தினார்கள். இந்திய இரத்தம் ஓடப்பெற்ற கமால்சிங் மூர்ச்சையற்றிருந்த போதிலும் குழுமி இருந்தோருக்கு கையையும், காலையும் சைகை காட்டிப் பேசியுள்ளார். இத்தகைய வீரர்கள் நமக்காக மரண தருவாயிலிருக்க, நாம் திண்ணைவேதாந்தம் பேசிக்கொண்டிருப்பதனாலன்றோ குண்டாமியான்கள் கும்மாளமடிக்கிறார்கள். பிரிட்டனே! ஹிந்து—முஸ்லீம்களுக்குள் பிளவுகளை உண்டுபண்ணி நீண்டநாளைக்கு மிருகசுபாவத்தை கொலை கொள்ளித்தொழிலை குடியாகக்கொண்டு மானத்தைக்காப்பாற்ற வயறுவளர்க்கலாமென்றெண்ணி மிதமிஞ்சிய துராக்கிரஹத்தில் இறங்கிவிடாதே; மனித சுபாவத்திற்கே அடுக்காத கொலைபாதகத்தொழிலை வேறுடன்களைந்தெரியும்—இந்திய இரத்தம் ஓடப்பெற்ற ஒரே இந்தியனாலேயே இந்தியா சீக்கிரம் சுயேச்சையை அடைந்துவிடும். அப்பொழுது இன்றைய நிலையில் பிரிட்டனின் முதுகில் டிவாலரா குதிரை ஏறிய கதையாய் முடிந்தாலும் முடியலாம்.

முப்பது கத்திகளுக்கு 5 ரூ. அபராதம்

நான் எனது அநுபவார்த்தமாக தற்கால நிலைமையைச்சீர்தூக்கிப்பார்த்து, வெளியிடுவதென வந்த முடிவுக்கு; அனுச்சாரமும், இழிவான செய்கைகளும்—பொருப்பற்ற நிர்வாகக்குறைகளும் தடைப்படுத்திவிட்டது. எப்படியும் எனது எண்ணத்தையும்—அடிக்கடி மாறுதலாலாகிய போலி நோக்கங்களையும் மீறிடாவண்ணம்—சோதனையிலீடுபடாது காரியத்தை முடிப்பதென்ற அழுத்தமான தீர்மானத்திற்கு திடீரென பம்பாய் கலகமும் ஒருகாரணமானதுபோல், எனது பண்டைய நண்பர்களும் தங்களின் ஆதாரமற்ற பித்தலாட்டங்களை என்னோடு எதிர்த்துப்போராட நிறுத்தியது—அதிகபாரமாக இருந்தது. யாதொரு உதவி சாட்சிகளையாவது பின் துணையையாவது, எனது நோக்கத்திற்கு தேடிவைத்திருந்தேனென்பது வெறுங்கட்டுக்கதை அப்படித் தேடிக்கொள்வது என்வாழ்நாளின் அநுபவமும்அல்ல கவர்ன்மெண்டார்வேண்டுமென்று எவ்வளவு கடினபாரத்தை என்மீது சுமத்தினும் தாங்கிநிற்பதோடு, உண்மையல்லாததை மறுப்பதற்குத்தயங்கேன். இரண்டு முக்கிய விஷயங்கள், வருங்காலத்தில்—இந்திய சரித்திரத்தில் கறையாகவுள்ளது அதாவது வீதிகளில்கத்திபிரகாசங்களும், அவைகளைக்கொண்டு விரைவாகவும் துணிக்ரமாகவும்கலகம்விளைவிக்கக்கூடியது இன்னும்என்மனதில்தோற்றமாகவேஇருக்கிறது. எங்கேயாகிலும் சச்சரவு என்றுகேட்டதும்—ஜனங்கள்பீதி அடைந்திருந்ததால்குறைவானவர்கள் பக்கம்துக்ககரமாகவே இருந்தது. ஜனங்களின் பாதுகாப்புக்கென ஸ்தாபிதம் செய்யப்பெற்றிருக்கும் போலீஸ் ஸ்டேஷன்களுக்குக்கூட செல்வதற்கு வசதி இல்லாதிருப்பினும்; போலீஸ்காரர்கள் கலக சம்பந்தமான இடங்களில் இருக்கவேஇல்லை. என்றால், நியாயகுணம் படைத்த எவனும் ஜனங்களின் பரிதாபகரமான நிலைமையை விவரிக்காதிருப்பானோ? நான் அனேககதைகள் கேட்டிருந்தாலும் அவைகள் எல்லாவற்றினும் உன்னதமானபயனை பம்பாய்கலகம்நிதரிசிக்கிறது. ஐரோப்பியர்கள் என்னை எப்படி நினைத்தாலும்; பம்பாய் சர்க்கார் கருதுகிறபடி உள்ளங்கையில் வைத்துக்கசக்க இலகுவாய் மதித்தாலும், அஞ்சுவதற்கில்லை கிராப்போர் மார்க்கட்டிலுள்ள நாலு முஸ்லீம்கள்மீது 30 கத்திகளடங்கிய மூட்டை ஒன்று வைத்திருந்ததாக அவர்களைக்கைதிசெய்து வழக்குத்தொடர்ந்திருந்தது. அவர்கள் நால்வரும் கஜாயிகடைக்காரர்களென்றும் கத்தியும் கரிகறுக்கும் கத்திகளென்றும் சொல்லப்பட்டு அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 5 அபராதம் விதித்தார்கள் அத்தண்டனை பாரபக்ஷமுள்ளது. நியாயமல்லாதது. கஜாயர்கள் உபயோகிக்கும் கத்திகளை மூட்டைகட்டி வைப்பதில்லை. தவிரவும், கத்தி ஒருவரும் வைத்திருக்கக்கூடாதென்று உத்தரவுசெய்துவிட்டு உத்தரவைமீறியதற்கு ரூபாய் 5 அபராதம் விதிப்பதென்றால் கலகக்காரன் இதனைப்பொருள்படுத்துவானோ? இப்படிபலவிதமான நியாயமற்றமுறைகளைக்கண்டிப்பதைக்குற்றமென்று சொல்லப்படுவது. குற்றமல்லவா? எனக்கேட்கிறேன் எந்த சந்தர்ப்பத்திலும் கவர்ன்மெண்டு அனுஷ்டிப்பதெல்லாம் சரி, என்று ஒப்புக்கொள்பவன் நானல்ல, எனத்தெரிந்திருந்தும் அவர்கள் என்மீது சீறிவிழுவது தான் ஆச்சரியமாக இருக்கிறது. காரணமில்லாமல் வெகுஜனக்கூட்டத்தில் துப்பாக்கிக்குண்டு உதிர்ப்பது துஷ்டர்களை அடக்குவதாகுமா? எவ்வளவு நெருக்கடியான சமையத்திலும், நிரபராதிகள் தான் பகிரங்கமாக குழுமியிருப்பார்களேயன்றி, மூர்க்கர்கள் விஷயம்மிஞ்சிவிட்டபிறகும் இருப்பார்களென்பது ஒருபோதுமில்லை. போலீஸ்காரர்கள் இதுசமையம்; செய்திருப்பதானது அருவருக்கத்தக்கதாயிருக்கிறது. அத்துமீறிசென்று கொண்டிருக்கும் ஒருகூட்டத்தைக்கலைக்கவோ,தடுக்கவோ, போலீஸார்உண்மையைக்கடைப்பிடித்து நடந்தாலல்லது மனம் போனபடியும், மேலதிகாரியின் உத்தரவுப்படியும் நடப்பதென்பது அவர்கள் அதிககேவலத்தன்மை பெற்றுவிடுவதுடன் குற்றமற்ற ஜனங்கள் பாதிக்கப்படுவது இதன்மூலம் காணலாம்.

—கிரானிக்கல்

இம்மென்றாலும் பூட்டு.

ஒருவிஷயத்தைப்பற்றி, எழுதுவது-பேசுவது சாதாரண உணர்ச்சியின் பாலுடையது அவ்வுணர்ச்சியின் பயன், ஜனங்களுக்கு விவரித்து எடுத்துக்காட்டுவதே. உணர்ச்சியைத் தூண்டுவதென்னலாம். அறிவுக்கு மட்டிலும், காலப்போக்குகளைத்தெரிவிப்பதானால், நிஷ்சயமாகக்குற்றமாகாது. எழுதுகிறவன் சற்று வேகமாகவும் செல்லக்கூடும் ஒருவன் குறை கூறும்போது கெட்ட உணர்ச்சி உண்டாவது இயற்கைதான். நாமெல்லாம் முனிவர்களல்ல. ஆகவே வெறுப்பின்மேல் கெட்ட உணர்ச்சி உண்டாகிறது. சர்க்கார் தவறுதலாய் நடக்கிறதாக எழுதுகிறபோது, அதிகாரிகள் விரும்பாத எதையோ சொல்லுகிறதாக நினைத்து விடுகிறார்கள். அது தூஷணமாகமாட்டாது இந்த இருபதாம் நூற்றாண்டில், உண்மையான தத்துவத்தை அடைய கூச்சல் போட்டுத்தானாகவேண்டியிருக்கிறது. என்னகுறைகள் நாட்டிலிருக்கிறதென்றும் என்னமாதிரியான சீர்திருத்தங்கள் பிரேரேபிக்கப்பட்டிருக்கின்றனவென்று, யோசிக்கவும்; எழுதினோன் எண்ணத்திற்குத்தக்க உண்மையைக்கண்டறியவும், அவனுக்கு உரிமை உண்டு. துவேஷமென்பது, அவமதிப்புக்குக்கொண்டுவரும் நோக்கமாய்த் தூண்டப்பட்டிருக்கவேண்டும். அஃதன்றி உண்மையைச்சொல்வதினாலேயே ஒருமனிதனைகுற்றவாளி என்றுதண்டித்துவிடுவது எதேச்சாதிகாரமேயாகும். இப்போதுஅவசர அச்சுச்சட்டங்கள் அமுலிலிருப்பது போதாதென்று இதுகாறும் உலகத்திலேயே நடைபெற்றிராத—கொடுமையான சட்டத்தை உண்டுபண்ணி, இருக்கிறார்கள். அதன்மொத்தகருசியையக்கவனித்தால், பத்திரிகைகளின் உரிமைகளை அடியோடுபறித்து விடுவதற்காகவே செய்திருப்பதாகத்தெரிகிறது. தனிமனிதனின் தப்பிதத்தையாவது—ஒருதேசத்தின் நிர்வாகத்தைப்பற்றியாவது-மந்திரிகளையாவது-அரசரும் அரசகுடும்பத்தைச்சேர்ந்தவர்களை எழுதினாலும், சீர்கேடாகச்சொன்னாலும், குற்றவாளியெனப்பாவிக்கப்படுமாம். இந்த அபூர்வமான வாய்ப்பூட்டுச்சட்டத்தை மனிதஉலகில் புகுத்துவதற்கு-மனித சுபாவமுள்ள எவனாவது சம்மதிப்பதற்கு காரணமுண்டா?

தொல்லை! தொல்லை!!

இந்தியாவில் எறக்குறைய பத்துவருடங்களில் பெண்கள் வேசைத்தொழிலில்மிகுந்துவிட்டதற்குக்காரணம் மேல்நாட்டு அநாகரிக-நிர்வாணமான படக்காக்ஷிகள் இங்கும் நடிக்கப்படுவதேகாரணம். சிலபெண்களும், ஆண்களும் அத்தகைய படங்களைப்பார்க்காவிட்டால் தூக்கம் பிடிக்கிறதில்லை. மானங்கெட்ட-மரியாதைபற்ற ஆங்கில ஸ்திரிகளின் நிர்வாணக்கோல காக்ஷிகளைக்கண்ட அநேக பெண்கள் மனம் வேறுபட்டு, உல்லாசமாகக்காலங்கழிக்கலாமென்ற கருத்துடன் வேசைத்தொழிலுக்கே ஆளாகி—அடிமையாகிவிட்டார்கள் மேல்நாட்டு படக்காக்ஷிகளாலேயே இந்தியர்களிற் பலர் இழிவுநிலையிலிருக்கிறார்களென்று "சென்சார்கமிட்டி" பர்மாவுக்கு வந்து விசாரணை செய்யும் காலத்து "தேசோபகாரி" மூலம் எடுத்துக்காட்டப்பட்டதுண்டு. இந்தியாவில் பல இடங்களில் விலைமாதர்களைக்கண்டுபிடித்துத்தண்டனைக்கு ஆளாக்குகின்றார்கள். பர்மாவின் பிரதம நகரமாகிய இரங்கூனில் சந்துபொந்தெல்லாம் விலைமாதர்கள்விலைகூறித்திரிவதாகவும்,முக்கியமாக மங்கமாரி வீதி 38க்கும் 40 நெம்பர்களிக்கும் மத்தியில் மேல் வீதெளிலுள்ளவர்களின் முன்னிலையில் ஏதோ இரண்டு சிநேகிதர்களாக ஏதோ காரியார்த்தமாக கீழே வழியில் நடந்து சென்றுகொண்டிருந்தால் லெச்சைகெட்டதனமாக நடந்துகொள்ளுகிறார்களாம் நாமும் பலதடவை மேலதிகாரிகளுக்கு எடுத்துக்காட்டியதுண்டு. வீட்டுச்சொந்தக்காரர்களுக்குக்கூட விலைமாதர்களுக்கு வீடு சேவாவுக்குக் கொடுக்கக்கூடாதென்ற யோசனையைக் கூறியிருந்தோம். விலைமாதர்களுக்கு வீடு சேவாவுக்குக்கொடுக்கும் வீட்டுச்சொந்தக்காரர்களையும் நன்குவிசாரணை செய்யவேண்டும். ஒழுங்கற்றவர்களுக்கு—விலைமாதர்களுக்கு வீடு சேவாவுக்கு விடப்பட்டிருந்தால் வீட்டுச்சொந்தக்காரர்களும் தண்டனைக்கு ஆளாகத்தான் வேண்டும் சென்னை மாகாணத்தில் நடைபெறுவதைபோன்ற சிறத்தையை போலீஸ் அதிகாரிகள் இங்கும் எடுத்துக்கொண்டால் இல்லாதொழிந்துவிடும்.

மிதவாதிகள் குட்டிக்கரணம். : ஹார்னிமன்

இந்தியாவில் வசியும் ஒவ்வொரு பிரிட்டிஷ்காரனும், தன்னுடைய ராஜீய வியாபார பாத்தியதையைக்காப்பாற்றும் பொருட்டும், அவர்களின உரிமையைச்சிறிதளவாகிலும் பாதிக்காவண்ணம், சட்டத்தையோ-சட்டத்தை மீறியோ நடந்துவிடுவதாகப்பயமுறுத்தியும் பயனில்லை. தேசீய தாராள ஒற்றுமைக்கக்ஷியினரில், சிலரைக்குறிப்பிட்டால், இந்தியா எவ்வளவு பலவீனமுள்ளதாயிருக்குமென அறிவதற்கில்லை. மாகாண சுயஆட்சி அவசரம் அவசரமாக சமாச்சாரத்தைக்காதுசெவிடுபடும்படி ஊதிவிட்டதன்றி மத்திய பொருப்பாட்சிக்கு அஸ்திவாரம் போடப்படும் என்று ஆனரபிள் சர்-பைரோஷ் செத்னு காலப்போக்காகக்குறிப்பிட்டதையும், சர் சிம்மன்லால் சேத்வாட் மத்தியபொருப்பாட்சி வழங்குதற்கான, மூச்சைக்கூட அறியமாட்டோமென்று பட்டவர்த்தனமாகச்சொல்லியும், மற்றொரு சமையம் தனது வாய்ச்சாதுர்யத்தை அளவுகடந்து காண்பித்திருந்தாலும் பழையபாடத்தையே புரட்டிப்புரட்டிக்கூறினதாலும், தாராளக்கக்ஷியில் பிளவுபட்டு விடுமோவென சிலர் அஞ்சும்படி இருந்தது எனினும், சாப்ரூ—சாஸ்திரி பகிரங்க அறிக்கையிலிருந்து ஒன்றுபட்ட முகத்தினராக, விளங்கினபோதிலும் காங்கிரஸை நேர்முகமாகவோ—மறைமுகமாகவோ ஆதரித்ததில்லை. மிதவாதிகளாலேயே இந்தியா சுதந்தரமடைய பெருந்தடையாக இருந்தது, சிந்தாமணியினுடைய அரசியல் சரித்திரத்தில் பூச்சாண்டிகாட்டி இருப்பது பிரத்தியட்சம் நாணயமாகப் பேசக்கற்றுக்கொண்டவர்களில் சிந்தாமணியும் ஒருவர். இவர் இப்போது நடக்கும் அடக்குமுறையை பிரபலப்படுத்தியவர். காங்கிரஸின் போக்கு, புரட்சிக்குரியது-ஆபத்தானது—-தேசத்தைப்பாழ்படுத்தக்கூடியது என்று நாக்கை அளவுமீறி நீட்டிப்பேசியவர்; தான் பொதுஜன அபிப்பிராயம் பெற்ற—அநுபவமுள்ள அரசியல்வாதி என்று சர்க்காருக்கு எச்சரிக்கையும் செய்தவர் அடக்குமுறையை வாபீஸ் பெற்றாலன்றி நாட்டில் அமைதி நிலவுவதற்கில்லை என்று முன்னுக்குப்பின் முரண்பட அறிக்கை வெளியிட்டவரும் நமது சிந்தாமணியே. இவரது நிலையற்றவார்த்தையில் யாதொரு அர்த்தமுமில்லை என்று சர்க்கார் தள்ளிவிட்டபின்பு பூர்வஞானம் பிறந்து—கண்கெட்டபிறகு சூரியநமஸ்காரம் புரிவதுபோல், இந்திய சர்க்காரை பழிகொள்ளும் வகையில் வில்லிங்டனின் அவசரச்சட்டங்களின் அளவுகடந்த அம்சத்தைக்கண்டித்தும் தனது கக்ஷியின் போக்கை சிலாகித்தும், வாக்குரிமை ஒத்துழைப்புக்கமிட்டியின் யாதாஸ்தின் விசேஷக்கருத்துகளை வியாக்கியானம் செய்தும் வருகிறார். என்னே! காலத்தின் விபரீதம் தனது தப்பிதத்தைக்காட்டி சமாதான முறையிலாவது இவ்விதங்கூறிக்கொண்டிருந்தால் அர்த்தமுண்டு நாமும் அவரைமதிக்கவேசெய்வோம். சமையம்போல் வேஷம்போட்டு பாம்புக்கு வாலும் மீனுக்குத்தலையும்காட்டி, ஜனங்களின் நட்பைப்பெற்றுவிடமுடியாது, கவர்ன்மெண்டார் முதன்மந்திரியின் வாக்குறுதியைப்பலப்படுத்த முயற்சிப்பதுபோல் மிதவாதக்கக்ஷியின் ஸ்திரமற்ற பிரயத்தனத்தை பயன்படுத்திக்கொள்ள நினைப்பது புத்திசாலித்தனமல்ல மிஸ்டர் பைரோஸ் சேட்னு பிரதமமந்திரியின் வாக்குறுதியைமெய்ப்பித்துப்பேசுவதுபோல் மாகாண ஆட்சியைப்பற்றி வியவகரிப்பதும் பொதுஜனங்களை அவமதிப்பதேயாகும்.

முதன்மந்திரியின்கூற்று இந்திய அரசியலின் வருங்காலத்திட்டம், பாதுகாப்புடன் கூடியதும், தற்கால இந்தியாவுக்கேற்ற வோட்டுரிமை வசதியும், பொருளாதார முன்னேற்றமும், இருக்கக்கூடிய திட்டமாகும். மாகாண ஆட்சியின் மந்திரிசபை நிர்வாகப்பொருப்பு வாய்ந்திருக்கும் அச்சபையும், சிலகாரணத்தை முன்னிட்டு கவர்னருடைய விசேஷ அதிகாரத்திற்குள்ளிருக்கும் மத்தியபொருப்பாட்சி அதன்பின் இந்தியரது நிர்வாகத்திறமையைக்கொண்டு நிக்ஷயிக்கப்படும்.

இந்ததிருத்தப்பட்ட பேச்சில்—இவையனைத்திற்கும் பிரிட்டீஷ் பார்லிமெண்டு ஜவாப்தாரியாக இருக்கும் என்பதும் அடங்கி இருக்கிறது. இரட்டை ஆட்சியைப்பழித்த இந்தியருக்கு இதுதான்பதில். இரட்டை ஆட்சியைவிட மாகாண சுயஆட்சி சீர்கேடானதும், செ

சிங்கத்தை நரி எதிர்த்ததா?

பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவுக்கு அவசியமில்லை என்பது நீண்டநாளைய பிரச்சினை. பிரிட்டிஷார் தங்களது நலனுக்காக இராணுவ—போலீஸாரும் ஏற்படுத்தியது வெட்ட வெளிச்சம். வியாபாரக்கம்பெனியின் பாதுகாப்புக்காக ஐ. சி. எஸ். வர்க்கத்தாரின் ஜீவனத்திற்காக வென்பதை பட்டவர்த்தனமாக உணர்ந்த பின்பு—தெளிவாக அறிவிக்கப்பட்டும், பிரித்தாளும், தந்திரத்தைக்கையாண்டுபார்த்தனர், ஜம்பம்பலிக்கவில்லை, சந்துபொந்துகளிலெல்லாம், வாக்குரிமைக்கமிட்டியின், விசாரணையைப்பற்றி வியவகரித்தனர். அதுவும் கூட முஸ்லீம்கள்—தீண்டப்படாதார்கள்- குறைவுபட்ட அன்னியர்களின் பிரச்சினையைப்புகுத்தி இந்தியரைக்குஸ்திபோட விட்டுப்பார்த்தனர்! பம்பாய் ஹிந்து—முஸ்லீம் கலகமென்ற நாடக சர்க்கஸ் ஆட்டத்தில் கத்தி தீட்டிக்கொடுத்துப்பார்த்தனர். ஒருதலைப்பக்ஷமான தீர்ப்புக்கூறி ராஜதந்திரமென தப்புக்கொட்டினர். ஒன்றிலும் ஜெயம் கிடைக்கவில்லை. தங்களுடைய ஜாதிப்பழக்கத்தின்படி இந்தியர்மீது அநுதாபங்காட்டுவதுபோல் பத்திரிகைகளில் காங்கிரஸையும்—காந்திஜியையும் புகழ்ந்தெழுதினார்கள். மற்றொரு பக்கம் காங்கிரசை நசுக்கிவிடுவது இலகுவென்றும் நியாய முறைக்கு விரோதமாகுமென யோசித்து, வாளாதிருப்பதாகவும் பொருள்படக்கர்ச்சித்தனர். ஆ! ஹா! இந்தியாவுக்கு சீர்திருத்தம் வழங்க (அவர்) மூக்கரையன் முகருகிறான். குருடன் எழுதுகிறான், ஊனன் ஆலோசனை சொல்கிறானென பித்தலாட்டப்பேச்சு முழங்கியது. இதற்கிடையே இந்தியர் அவமானம் பொறுக்காமல் இரண்டொரு தீயசெயல்கள் புரிந்ததை காரணப்படுத்திக்கொண்டு கழுதைக்காம்போதி இராகம் பாடினார்கள்—கண்சிமிட்டாது மரங்களில் தூங்கும் ஆந்தைகளைப்போன்ற போலீஸ் தடியன்களுக்கு கட்டிக்கொடுத்து, ஏழை இந்தியரை, அடிக்கவும்— உதைக்கவும், ஸ்திரீகளைத்தொட்டு இழுக்கவும், செய்தார்கள்—கைதிகளை எற்றுமதி செய்யவும்—இறக்குமதியைத்தாராளமாய் அநுசரித்தும் பார்த்தார்கள் கிளர்ச்சி தளர்ந்தபாடில்லை. கூக்குரல்மிகுந்துவிட்டது. சாமுபல்ஹோர் திணறினான். வில்லிங்டன் கண்கலங்கினான். நாட்டில் கொள்ளை அதிகரித்தது' கவர்ன்மெண்டுக்குப்பயப்படுவதில்லை என்ற துணிவை இந்தியா தாங்கி நின்றது. சிங்கத்தை நிகர்த்த போலீஸாரை—வெள்ளைப்பிரபுவைத் தலைவராகக்கொண்ட—மில்டேரிப்படையை—கொள்ளைக்கூட்டத்தவர் எதிர்த்தனர். துப்பாக்கிச்சண்டை நடந்தது. வெள்ளைச்சிங்கத்தை சுட்டனர்—இரண்டு வெள்ளையனும், ஒரு கருப்பனும் இறந்துபட்டனர். அடடா! துப்பாக்கி குறிபார்த்துச்சுடப்பழகி இருக்கும், போலீஸ்—சார்ஜண்டு சுடப்பட்டனர் என்றால் போலீஸாருக்கே அவமானம்! இந்தக்கேவலத்தை பொருட்படுத்துவதற்கில்லையாயினும், நரிக்கு இவ்வளவு கர்வமா? என்பது ஆலோசிக்கப்படும், தண்டப் போலீஸாரும்—ஸ்பெசல் உத்தியோகஸ்தரும் நியமிக்கப்பட்டார்கள் என்றாலும், நரிகள் மிருகராஜனை எதிர்த்தும், ஒரு சிங்கத்தைக்கொன்றதுப் சரித்திரத்தில் பிரகாசிக்கும். இதுதான் சங்கடம் ஆனால் நாமொன்று சொல்லுவோம் இந்த கஞ்சித்தொட்டி போலீஸ் சோம்பேறிகளைவிட்டு தொண்டர்படை நியமிப்பதுதான் நேர்மை அப்படிச்செய்தால் சிங்கம் நரிஎன்ற பாகுபாடு நீங்கி மனிதசுபாவம் மதிக்கப்பெறும்.

—ஒரு தொண்டன்

லவு பிடிக்கக்கூடியதாயிருக்குமேதவிர வெறுக்கத்தக்கதான இவ்வாட்சி வழங்கப்படலாமென்று வாயளவில் மட்டுமே மொழிய செய்கையில் காட்டவில்லை. சீர்திருத்தம் வந்தாலும்—வாராவிட்டாலும், நிர்மாணதிட்டங்களைப்பூர்த்தி பண்ணுவதுதான் தக்கவழி அதைவிட்டு மெத்தைமீது உல்லாசமாய்படுத்து தூங்கிவிட்டு என்னென்னவோ சாதித்து விடுவதாக தொண்டை கிழிபக்கத்துவதிலும், கைநோவஎழுதுவதிலும் பிரிட்டிஷார் பயந்துவிடப்போகிறதில்லை.

உத்தியோக வேட்டையாடவா?

இந்தியாவின் சாபமாகிய வகுப்புவேற்றுமைமிகுந்தவுடன் படித்தவகுப்பினரும்,பணக்காரர்களும், பேராசைபிடித்து உத்தியோகவேட்டையாடி ஏழை மக்களின் வரிப்பணத்திலிருந்து கொழுத்தசம்பளம்பெற்று ஜீவித்திருக்க எண்ணிவிடுகின்றனர். இவர்களுக்கு இப்போதிருக்கும் பணப்பெருமை எவ்வளவு காலந்தான் நீடித்திருக்குமென்பது நிச்சயிப்பதற்கில்லை. தற்கால அரசியல் போர் கடுமையாக நடந்துகொண்டிருக்கையில் அதற்கு ஆதரவு காட்டாதிருந்தாலும் இந்தியனென்ற ஹோதாவில் அவ்வியக்கத்திற்கு மாறுதலாகவாவது நடவாதிருக்கவேண்டும். இந்திய சர்க்கார் எந்தச்சமையத்திலும், சென்னை மாகாணத்தைப்பற்றி மெச்சாதிருக்கவில்லை. சர்க்காரின் தத்துப்புத்திரர்களும்——வெளவாலினத்தார்கள்தான் அத்தப்புகழுக்குரியவர்களென நாம் சொல்லாமலேயேவிளங்கும். காங்கிரஸ் தேசிய ஸ்தானம், தன்மதிப்புள்ள பெரிய அந்தஸ்துள்ளவர்களடங்கியசபை. அதன் புண்ணிய ஜீவகாருண்ய திட்டங்களை உலகமே ஒப்புக்கொண்டுவிட்டது. இந்திய சர்க்காரின் தலைவர் லார்டு வில்லிங்டனும், ஒத்துக்குத்தாளம் போடுகிறாரேயன்றி காங்கிரஸின்மீது துவேஷமுடையவரல்லவென்பது தனிமனிதனென்ற ஹோதாவில் விளக்கமாகலாம். சென்னை-மைலாப்பூர்வாசிகளும்-சர். ராமசாமி போன்றவர்கள் எவ்விதம் தோப்புக்கண்டம் போடுகிறார்களென்பதும் வெளிப்படை. புதிதாக டாக்டர் சுப்பராயன் முக்காட்டைவிட்டுக்கிளம்பி இருக்கிறார். இவருக்கு பிரதமமந்திரி பதவி இப்போதில்லாவிட்டாலும், காந்திஜீயின் ஒத்துழையாதிட்டம் இவரைப்பயமுறுத்தி இருந்தாலும், எந்த மந்திரவுபதேசத்தாலோ; காந்திஜீயின் பூரண சுயேச்சையே நமக்குவேண்டும். என்று குதிக்கிறார். இந்தப்பேர்வழிகள் காந்திஜீ கோரிய சிலசந்தர்ப்பங்களில் தனது உத்தியோகத்திமிரால் ஏறெடுத்துக்கூடப்பார்க்கவில்லை. இந்தப்புதிய ஞானம் உதிப்பதற்கும் இவருடைய கக்ஷிமெம்பர்களின் முன் ஜாக்கிரதையான நடவடிக்கையிலுமிருந்து, நண்பர்கள் சற்று நிதானிக்கின், வருங்காலத்தில் உத்தியோகம் பெறுவதற்கே என்பது தெற்றென விளங்கும். ராமசாமி தொழில் மந்திரி பதவி ஏற்றுவிட்டதாக சிம்லா அறிக்கைகூறுகிறது. ததாஸ்து—அவர் பெரியவரல்-நாம் புகழ்வதற்குரியவரல்ல என நண்பர்கள் நம்மீது பாய்ந்துவிடாதீர்கள். ஒருமனிதன் தனதுபழைய சகபாடியோடு சேர்ந்து விறக்கடை தூரத்திலிருப்பதுபற்றி புகழாதிருக்கமுடியுமா? இனிமேல் இந்திய சர்க்காருக்கு அதிக வேலை இராது அபார மூளையுள்ள சர். ராமசாமி திருப்பதி அம்பட்டையன் போல் அரைகுறையாய்ச்செய்பவரல்ல. எதையும் ஆராய்ந்துபார்த்து மயிரிழைகூட விடாமல் வேலைசெய்வார். புதியசீர்திருத்தமும் நெருங்கி இருக்கலாம். அதை ஒப்புக்கொள்வது யாரென்று இன்னும் தெரியவில்லை.

❖ ❖ ❖

சோலியமுஸ்லிம் அஸோஸியேஷன்

இன்று மாலை 8-30 மணிக்கு சீக்கே மவுந்தாலே வீதியிலுள்ள நமது சங்க ஹாலில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அவ்வமயம்

ஜனாப். பி. எஸ். முகம்மது இப்ராகிம்
'நமது சமூகத்தின் தற்காலநிலைமை'
ஜனாப் எம். கே. அலாவுதீன்
'வியாபார உலகில் முஸ்லிம்களின் தற்கால நிலைமை'
கே. ஏ. அப்துல் ஜலீல் மரைக்காயர் (பீ. ஏ)
'பொது நலம்'

என்னும் விஷயங்களைப்பற்றி அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள்.

ஸ்ரீமான் வி. கே. தம்பி பார்-அட்-லா அவர்கள் அக்கிராசனம் வகிப்பார்கள்.

ஆகையால் இதைக்கண்ணுறும் அனைவரும் தவறாமல் விஜயம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இங்ஙனம்:
ஒ. எச். பீர் முகம்மது
உதவி கௌரவ காரியதரிசி

❖ ❖ ❖

தேசோபகாரி
(வாரம் இருமுறை)

வருட சந்தா (இரங்கோன்)	ரூ	3	0	0
6 மாதம் ,,	,,	1	8	0
வருட சந்தா (வெளியூர்)	,,	4	8	0
6 மாதம் ,,	,,	2	12	0
மலாய்நாடு வருட சந்தா	,,	6	8	0

இன்றைய உலகு

உலக சரித்திரத்தை, ஆராயின் சுவைச்சைபெறவிரும்பும், இயக்கங்களை பரவி இருக்கக்காண்போம். ஒரு வஸ்துவின் ஆராய்ச்சி சாஸ்திர ஆராய்ச்சியைப்பார்க்கிலும் மிகநுண்ணியது சாஸ்திரத்தைப்பற்றியே சகல-தன்னல உரிமைகளும் உன்னத நிலைபெற்றிருக்கக் காரணமானது. உலகம் பண்படுத்திய—மெழுகிய சமதரையல்ல உலகவாசிகளும், சமத்துவ இயற்கையரல்லவென்பதுதேர்ந்ததுணிபு; உலகமென்றால் இக்கட்டுரை உலகவாசிகளைப்பற்றியதென தழுவியெழுதியதாகையால், ஐரோப்பாவைச்சற்றுகவனிக்கின், நாகரிகதேசங்களில் முற்போக்கடைந்த தேசமாகக்கருதுவீர்கள். அது தப்பிதம். முற்போக்கென்பது பாவமற்றதென பொருள் கோடல்வேண்டும். பணத்திலோ—மிருகபலத்திலோ—ஆயுதத்திமிரிலோ-முற்போக்கில்லை. ஏழை பணக்காரன்-கல்விமான்—மூடன் —அழகன்-குரூபியென்ற பாகுபாடற்று சம உரிமை படைத்துள்ள தேசந்தான் முற்போக்கடையப்படுமென்பது மறுப்பதற்கில்லை. அத்தேசத்தின், செல்வம்-கொள்ளைபோவதில்லை சுரண்டப்படுகிறதில்லை; ஐரோப்பா ஒரு பணக்கார-ஏகாதிபத்திய அன்னியரை அடக்கியாளும் தேசம். இதன் வல்லரசுகள் ஒன்றுக்கொன்று, யோசனைகூறிக்கொண்டு-தொடையில் கிள்ளிக்கொண்டுதானிருக்கும். ஆனால் மகாநாடு—நியாயசபை என்றபேரால் அக்காடுகள் செய்துவரும் அட்டூழியங்கள் மெய்ப்பிக்கப்படுவதில்லை. காரணம்—என்பது ஒருகாரியத்திற்கு தூண்டுகோலாகும் சில சந்தர்ப்பங்களில்காரணமில்லாமலே காரியம்நடைபெறினும், பிரதானமான தனிமுகாந்திரமொன்றிருப்பதுபோல, மங்கலான-தெளிவுபடாத செயலொன்று இருக்கத்தான் செய்யும்

ஜீவவர்க்கத்தைப் பொதுவாகநோக்கின், மனிதசுபாவமும்—மிருக சுபாவமும், ஏறக்குறைய ஒன்றுபட்டே இருக்கும். மனிதனது எண்ணம், மாற்றமடைவது போல மிருகங்களுக்கும் உண்டாகிறது. இது சரியோ—தப்போ தெரியாது. நான் பொதுவாக சொல்லிறபடியால் ஒப்புக்கொண்டு பார்த்தால், உண்மை ஒன்றே. சகல ஜீவர்களும், தூண்டுதலாலேயே தொழிற்படுகிறது. சாதாரணகோபத்திலீடுபட்ட எவரும் மிருகமே—நாயே-பன்றியே; எனக்கூறுவது சகஜமே இதைப்பற்றி இங்கு ஆராயப்போவதில்லை. மனம் எவ்வளவுக்கெவ்வளவு அநுபவமும்-தேர்ச்சியும் பெற்றிருக்கிறதோ! அவ்வளவுதான் மனித முன்னேற்றத்திற்குக்காரணம். தூண்டுதலைத்துணையாகப்பற்றி மனதின் எல்லையை அடைந்துவிடலாம் ஆனால் உலக இயற்கையில் மலிந்துகிடக்கின்ற ஒருவனோ ஒருநாடோ மனதின் எல்லையை அடைவது கஷ்டம். பூத—பௌதீக சாஸ்திர ஆராய்ச்சியிலீடுபட்ட தேசங்கள் செயற்கையிலேயே, கல்வி-செல்வம்-பலம் ஆகியவைகளைப்பெற்றிருப்பதென்பது தவறு. கல்விக்கும் ஆபத்தேற்படுங்காலமும் உண்டு. பிலிப்பைன் தீவில் ஒருவன் திடீரென அவன்படித்த—கேட்ட-செய்ததெல்லாம் மறந்துவிட்டதாகவும், அவனைப்புதிதாய் உலகஞானத்தில் பழக்கிவருவதாகவும் ஒருபத்திரிகையில் நான் படித்த ஞாபகம் இருக்கிறது. உலகமுழுவதும் மனிதனுக்கு அதிகஆசை உண்டாவதுதான் ஒருசக்தி எதுபற்றியதென இன்னும் ஆராயவில்லை. இந்தியாமட்டும், ஆசையினாலேயே மனிதன் அழிந்துபோகிறானென்ற புராதன தீர்மானத்தை ஏற்று அவ்வாசையை தகர்த்தெறிந்து-மனதை நிம்மதி அடையச்செய்யும் வழியில், சுதந்திர யுத்தத்தின் பேரால், இயக்குவிக்கிறது இந்தியா ஏகோபித்து அந்தப் புண்ணிய தர்மத்தைக்கைக்கொள்ள இயலாததால் உலகமே பின்பற்றக்கூடிய ஒரு இயக்கத்தை, வாயளவில் புகழுகின்றனர். எப்படியும் மனதிற்கு சாந்தமேற்படுமொரு நல்ல இயக்கம்—சக்தி காந்திஜீ என்னும் பெரியாரால் இந்தியாவில் தோற்றப்படுவதற்கு தீர்க்கதெரிசனமும் இருக்கலாம். நாளடைவில் தெரியும்.

—எ. ஈ. பென்

❖ ❖ ❖

வேளாள வித்தியாபிவிருத்தி கழகம்

நாளை (20-6-32) திங்கள்கிழமை வேளாள வித்தியாபிவிருத்திக்கழக ஆதரவில் சிக்கேமவுண்டாலே வீதியிலுள்ள 30நம்பர் என்னுள்ள மேல்மாடியில் திரு. கே. நடராஜத் தேவர் தலைமையில் ஒருபொதுக்கூட்டம்நடைபெறும். யாபேர்களும்விஜயம்செய்யும்படிகேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மானஸயோகமும்—வாலிபரும்.

வாலிபா! உன்னைமஹானென்று சொன்னேன் அதுதான், உன்னை விளிக்கச்செய்திற்று. சும்மாஇருப்பது சுகமென்றால் நீகலியாணம் பண்ணாதே! அல்லது விவாஹம் செய்திருந்தால் அவளுக்கு உழைத்துப்போடாதே, என்று சொல்வதாகத்தப்பர்த்தம் பண்ணாதே! உனது அன்பிற்கிசைந்த கன்னிகையின்—ஸ்திரீயின் பிரிய சிநேகிதனாகிவிட்ட பின்பும் அதே நினைவாக இராதே! சந்தேகப்படாதே! துன்பத்துக்கிடங்கொடாதே உனது மனதில் ஓயாமல் எதைப்பற்றியாவது கவலை இருந்துகொண்டுதானிருக்கும் ஆனால் சொற்ப காரியத்துக்கெல்லாம்-க்ஷணநேரத்தில் மாறுந்தன்மையுடையதற்கெல்லாம்-உம்மென்று முகத்தைச்சுளித்துக்கொண்டிருப்பாயாகில், உனது நிலைமையே முற்றும் உருப்படாததாக இருக்கும் ஒரு காரியத்தை எண்ணி அதனால் பயன்பெற நினைத்து-பயன் அல்லது லாபம் அடைவதற்குள் அதைப்பற்றிய நினைவை வருவித்துக்கொள்வதுதான் மனக்கவலை எனப்படும் இதனை மாற்றுதலரிதெனக்கூறப்பட்டிருந்தாலும், மாற்றும்வகையில் முயற்சிக்கில் வெற்றிபெறுவாய் அது நிச்சயம். நேற்றுவழியில் பார்த்த அதிசயமான உனது மன எழுச்சிக்கு ஆதாரமான குறிப்பை-வடிவை-பொருளை-வஸ்துவை-நிதரிசிக்க தூக்கமில்லாமல் நீண்டநேரம் விழித்திருந்தாயாகில் உனது மனதில் வீரமில்லை. தைரியமில்லை என்றே சொல்லுவேன். மனித இயற்கை தனக்கு எவ்வளவு பாத்தியதையாக இருப்பினும்-அன்னியரின் பாத்தியதையை-உரிமையை-தேடிக்கொள்வது சகஜமாயினும் கண்டதை எல்லாம் தனக்கென நினைப்பது, படுகுழியிலாழ்த்திவிடும். நீ உன் சந்தோஷத்துடன் உறவினரை-பந்துக்களைக்காணுவாயாகில், அவர்களும் நன்மதிப்புடனேயே நடத்துவர். சிநேகிதரிடம் சந்தோஷம் வைக்கலாகாது. நண்பர்களில் பலர் சுயகாரியப்புலிகளாகவும்-காரியம் முடித்துக்கொள்வதற்கு தற்கால சாந்தியான நட்புரிமையையும் கொண்டிருப்பார்கள் அவர்களின் பேச்சில் சர்க்கரை இருப்பதுபோல் காணப்பட்டாலும் உண்மையில், இனிப்பில்லாத சர்க்கரையாகத்தான் இருக்கும் கௌமாரா! சிறிது பொருளையோ போலி ஸ்தாபத்தையோ பெற்றுவிட்டதாக உனது இருதயத்தில் இடங்கொடாதே! உஷார் மறுநாள் வஞ்சித்த குணங்கள் தோன்றினாலும் தோன்றலாம். நீஎந்தஇயக்கத்தை பிறரிடத்தில் சொல்லாதிருக்கவேண்டுமோ, அதுதான் உனது அன்பின் இரகசியம் தம்பீ! இந்த இரகசியத்தில் உனது உண்மை நட்பாளன்கூட பகையாளியாகக்கூடும். ஏன்? எல்லாருக்கும் கண்களுண்டு. உனது குடும்பத்தையோ-சிநேகிதரையோ அவன் பார்ப்பதென்னவோ——நல்லெண்ணத்தோடிருந்தாலும் மனிதசுபாவம் சந்தேகித்தே தீர்வதால் சுலபத்தில்பகையும்--பொறாமையும்பற்றி புகைந்துகொண்டே இருந்துகொழுந்துவிட்டு எரியும்போதுதான் அம்பலத்திற்குவரும். நிரந்தர அநுஷ்டானத்தில்கூட உனது மனச்சோர்வு அதிகப்படுவதற்குக்காரணம், சிநேகிதவெறுப்பு என்பதை அறிவாய். உனது சித்தம் தெளிவடைந்தபின்பு நீ, நினைத்தபடியே சகலமும் இயலும். அதனில் அகப்படாதே! மற்றொரு முக்கிய விஷயத்தையும் கவனி சத்தியத்தைக் காப்பாற்று பொய் சொல்லாதிருப்பதுமட்டும் சத்தியமல்ல. உண்மை அல்லாதனவற்றைமறைக்காதிருப்பது-மூலகாரணம் தெரியாமல் பேசுவது-செய்வது-அநுதாபங்காட்டுவதும்சத்தியந்தவறியதாகும். உண்மை-நியாயம் எப்போதும் மாறுதலுள்ளதல்ல-மாறுதலை அடையக்கூடியதுமல்ல. ஸ்திரமானது-அதைத்தான்பிரமசுபாவமென்பர். துன்பந்தான்நரகம் இன்பந்தான் மோக்ஷம்இரண்டுமொன்றே. துன்பமும் இன்பமுமில்லாமல் நடுநிலை வகிப்பதுதான் மோக்ஷம் எனப்படும். செத்தபிறகு மோக்ஷம் உண்டென்பதை ஒப்புக்கொண்டாலும் மரணாவஸ்தை ஒவ்வொரு ஜீவனும் பெறக்கூடியதாக இருப்பதால்இந்தஜெனனத்திலேயே நரகமும் சுவர்க்கமும் உண்டென்பதையும் ஒப்புக்கொண்டுதானாகவேண்டும். வாலிபா! இதுகாறும் சொல்லிவந்ததை ஞாபகத்தில் வைக்க மறந்துவிடாதே! இதுவே உபதேசம்.

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.

பதிவுளண் 245] (1922-ஸ்தாபிதம்.) 24 [அரையணா

தேசோபகாரி

காங்கிரஸ் பத்திரிகை.

ஆசிரியன்
அ. வே. செல்லம் பிள்ளை.

வாரம் இருமுறை

இரங்கோன், ஆங்கிரஸ-ஸு (22-6-32) ஆனி-மீ 9உ புதன் கிழமை

எத்தாக எத்தனை காலம் !

பிரசுதந்தரதாகக்கொண்டு கத்தி—ஈட்டி—துப்பாக்கி-பீரங்கியாவற்றையும் சட்டை பண்ணாது தனது லக்ஷயமே பிரதானமானது; அதனை அடைவோம். சாதனையாக சாதிக்க—உருப்படியாக முன்னுக்கு வருவாய் நான் தவத்திற்கேருகின்றேன், கண்கலங்காதீர்கள்; என ஒவ்வொரு இந்தியனது இருதயத்திலும் ஊடுருவி நிற்கும்படி செய்துவிட்டுச்சென்ற கிழவன்—இந்திய ஞானி-சேனைத்தலைவரது வேண்டுகோள் பலித்தது; வீரஞ்செறிந்தது. அதுததும்பி இந்தியாவெங்கணும்,—குண்டு குழிகளெல்லாம் தங்கி, பருகுவதற்கு உருசியாக இருக்கிறது இந்தியர்கள் அதனைச்சாப்பிட்டுக் களை இல்லாது சிரஞ்சீவியாக—அடிமையன்றி ஜீவிப்பதற்கு பயின்றுவிட்டார்கள். அடக்கியாண்ட—பணக்கொள்ளைபடித்த—பிரிட்டிஷ் சர்க்கார், இந்தியாவின் செல்வாக்கை இழந்து கொட்டாவி விடுந்தடுவாயிலிருப்பதாகக்கூட "மான்ஜெஸ்டர் கார்டியன்" வெட்ட வெளிச்சமாய்கூறிவிட்டது. சாமுயல்ஹோர் ரகசியமாக நமது மகரிஷியுடன் கடிதப்போக்குவரத்துச்செய்து வேப்பிலை அடித்துப்பார்த்தான் ஒருதுளிகூட விட்டுக்கொடுக்கப்படாத இந்த பரமரகசியங்கூட அம்பலத்துக்கு வந்துவிட்டது. இல்லுமுள்ளுச்சமாதானங்களை பிரிட்டிஷ் ராஜீயவாதிகள் அநுதாபங்காட்டுவது போல், மூலைமுடுக்குகளிலெல்லாம், இந்தியாவைப்பற்றியே பேசினர். கீழே விழுந்தாலும் மீசையில் மண்ணில்லை என்ற தடியனைப் போல், சர்ச்சில் போன்றார் பாணம் போட்டு பார்த்தார்கள். மிஸ்டர் லம்பார்ட் தாமஸ்—சாங்கி என்னவோ நன்மையான சீர்திருத்தம் தயாரிப்பதாக மறைமுகமான அறிக்கை ஒன்றையும் விட்டுப்பார்த்தனர். காந்திஜீயின் சம்மதம் கேட்பதுபோல் கேட்டு காங்கிரஸ்தான் முதலில் சமரசங்கோரியது எனதம்பட்டமும் அடித்தனர். இந்தியத்தலைவர் தமது சகாக்களோடு கலந்தாலோசித்து ஒன்றும் முடிவு சொல்லமுடியாதெனக்கூறிவிட்டார். ஒன்றும் இயலாதநிலையில் பழைய மாமாக்களாகிய ஜயகர்—சாப்ரு இருவரையும் மறுபடியும் அழைத்து யோசிப்பதாகவும் தெரிகிறது. சீர்திருத்தம் வருகின்றன; வாக்குரிமை நடம்பெறவிருக்கிறது எனமிதவாதிகள் சொப்பு ஊதுகின்றனர். சுயராஜ்யம் என்ற வார்த்தையை காதில் கேட்டாலும் வெறுப்புக்கொள்ளும் சாமுயல்ஹோருக்குங்கூட நற்சமையம் ஞானம் பிறந்திருக்கிறதாக அறிகிறோம். ஆனால் உண்மையான அநுதாபத்தை நாமும் ஒப்புக்கொள்ளவே செய்வோம். ஏமாற்றுதலென்ற பழைய நீண்டநாளைய எண்ணத்தை இந்தியரிடம் காட்டுவதாக இருந்தால், பிரிட்டனே உனக்கும்பேப்பே உன்னப்பனுக்கும்பேப்பே தான்! மிஸ்டர் மெக்டானேல்டும் பால்டுவினும், இந்தியாவிற்கு விஜயம்செய்து, இந்திய பிரச்சினையை நேரில பார்த்து, காமன்சபைக்கு அறிவித்து, முடிவான, தீர்மான சீர்திருத்தத்தை வழங்க யோசிக்கப்படலாமென வதந்தி பரவியிருக்கிறது. பால்டுவினாவது—மெக்டானேல்டாவது, இந்தியா வருவதற்கும் பணம் யார் கொடுக்கிறது? பிரிட்டிஷ் சர்க்காரா? இந்திய சர்க்காரா? இந்தியாவின் தலைவிதியை

மேல்நாட்டு குச்சிக்காரிகள்!

அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரத்தில் விபசாரத்தொல்லையினிமித்தம் வருடத்தில் நானூறு, ஐந்நூறு கொலைகளுக்குக்குறையாமல் நடைபெறுவதுடன், அபார கொள்ளைகளும், சாமர்த்தியத்திருட்டுகளுமதிகம். அந்நாட்டு வண்டவாளங்களை அறிந்த குப்பைக்காரி மேயோ அவைகளை எல்லாம் அம்பலத்திற்குக்கொண்டுவராமல் இந்தியாவில் நடைபெறும் சிற்சில குறைகளை பிரமாதப்படுத்தி எழுதிவந்த அவள் கையை தரித்திருந்தால் அல்லது அவளையும் அவளெழுதிய புஸ்தகத்தையும் நெருப்பிட்டுக்கொளுத்தியிருந்தால் அவளைகடைப்பிடித்தொழுக முன்வரும் குச்சிக்காரிகளும் முன்வரமுடியாது. நியூயார்க்கில் நடைபெறும் விபசாரத்திற்கு மூலகாரணமாகயிருப்பவள் போலி அட்லாஸர் என்னும் பெயர்போனமாது. அவளை பெண் மோகினி, முதல்த்தர விற்பனைமாது என்றபட்டப்பெயர்களுடன் நகரவாசிகள் அழைப்பதுண்டு. அவளால் கொலை நடைபெறுதினம் ஒன்றை குறிப்பிடுவதென்றால் கஷ்டம்தான். பெரும் பெரிய தனவந்தர்களின் குடும்பத்திலுள்ள பெண்களையும், விபசாரமே இன்னதென்று அறியாதஇளமாதுகளையும் விபசாரத்திற்களாக்குவதில் இவளுக்குமிஞ்சிய ஒருவள் உலகத்திலேயேஇல்லையென்று அந்நகரவாசிகள்கூறக் கேட்கலாம். நீண்ட ஆண்டுகளாக வெகுசாமர்த்தியத்துடனும், தந்திரத்துடனும் நடத்திவந்தாள்! விபசாரத்தொல்லை மிகுதியாகவே அதை ஒழிப்பதற்கு சர்க்கார் ஸ்பெஷல் போலீஸ்படை ஒன்றை ஏற்படுத்தினார்கள். கடிக்கவரும் நாய்க்கு எலும்பைப்போட்ட மாதிரி போலீஸ் நாய்களுக்கு இரண்டொரு வளையங்களை விட்டெறிந்து அவர்களையும்தன் கைவசப்படுத்திவிட்டாள். போலீஸ் புளிகளாலேயே பல தீங்குகளும் நாட்டில் நடைபெறுகின்றனவெனவறிந்த சர்க்காரும் ஒன்றும் செய்யவியலாது போய்விட்டது.

நாட்டின் நன்மையை நாடி உழைப்பவைகள் பத்திரிகைகள்தான் என்பதை வாசிப்புள்ள ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளத்தக்க விஷயம். அதேபோன்று நியூயார்க்கிலுள்ள பல பத்திரிகைகள் விலைமாதர்களின் கொட்டத்தைப்பற்றிப் பத்திபத்தியாக வரையத்தலைப்பட்டன. பத்திரிகை ஆசிரியர்களின் நெடுநாளைய கிளர்ச்சியின் பயனாய் விசாரணைக்கமிஷன் ஒன்று நியமனம் செய்யப்பட்டது. அவ்விசாரணையில் விபசாரத்தின் தலைமைமாது போலி அட்லாஸர் என்பவளின் குட்டுயாவும் வெள்ளிடைமலைபோல் வெளியாகிவிட்டது. இதற்குமுன்னால் 11 தடவைகள் வழக்குத்தொடரப்பட்டும் விடுதலையடையப்பட்டவள் கடைசியாக பத்திரிகைகளின் கிளர்ச்சியால் கைதி செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டாள். நீண்ட நாட்களுக்குப்பின் விடுதலை செய்யப்பட்டு அன்றாடம் கோர்ட்டில் வந்து ஆஜராகும்படி செய்தார்கள். ஒருநாள் ஆஜராகாததைக்கண்ட போலீஸார் அவளைத்தேடிக்கொண்டு போய்க்கொண்டிருக்கும் சமையத்தில் வழியில் கொலை செய்யப்பட்டுக்கிடந்தாளாம்! அவள் செய்த புண்ணியத்தால் நியூயார்க் நகரில் மட்டும் 5000 விபசாரிகள் சம்பூரணமாய் வாழுகின்றார்கள்! இந்தியாவிலும் ஒவ்வொரு வருடத்தைக்காட்டிலும் விபசாரம்மிகுந்து வருவதைக்கேள்விப்படும் நாம் திடுக்கிடாதிருக்கமுடியவில்லை. நியூயார்க்கில் தனி ஒருத்தியால் துவக்கப்பட்ட விபசாரம் எத்தனையோ கொள்ளை, கொலைகளுக்குக்காரணமாயிருக்கும்போது; மேல்நாட்டு குப்பைக்காரிகளைப்போன்று நடந்துகொள்வதற்கு இடம் கொடுக்காதபடி இந்தியப்பத்திரிகைக்காரர்களும் விபசாரிகள் விஷயத்தில் கிளர்ச்சி செய்யவேண்டுமென்பதே முக்கிய கடமையாகும்.

நிரூபிக்க—நிர்ணயிக்க வருபவர்களாகையால் இந்தியாதான் கொடுக்கவேண்டும்போலும்! வெறும்பய சர்க்காரில் பணமேது வருகிறபோகிறவர்களுக்கும் பணம் கொடுக்கவேண்டுமென்று இந்தியாவின் தலையில்தான் எழுதப்பட்டிருக்கிறதே ஒழிய; பாவம்! பிரிட்டிஷ்க்காரன் பணத்தையும், பொருளையும் எத்தாகக்கொண்டு வாழுகிறவன் தானே! போகட்டும்; எத்தனைகாலம் தான் எத்தாக வாழ—வயிறு வளர்க்கமுடியுமோ வாழட்டும்.

தடியடி தாண்டவராயன்!

தாண்டவராயன் ஒரு குண்டாந்தடியன் இவனுக்கு பேராசை அதிகம். சாந்தமென்பது அவனது வாழ்நாளில்—அகராதியில் கிடையாது. இவனது சிறுவயதிலேயே பெற்றோர்கள் இறந்துவிட்டனர். அயல்வீட்டுக்குப்புச்சாமிதான் இவனைப்படிக்க வைத்தார். இளம் வயதிலேயே குறும்புத்தனம் குடிகொண்டிருந்தானெனினும் காலம்; மாறமாற மனதில் ஏதோ ஒரு உணர்ச்சி தோன்றிக்கொண்டிருந்தது. சிநேகிதர்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதுகூட தனக்குத்தெரியாமலேயே உணர்ச்சிக்குறியைக்காட்டிவிடுவான். அனாதைப்பிள்ளையாகையால் பால்ய சிநேகிதர்கள் அதிகமாக நேசிப்பதற்கேற்ப தாண்டவராயனும் கௌரவமாகவே நடந்துகொள்ளுவான். கலாசாலைப்படிப்பில் தாண்டவராயன்தேறி பி. ஏ. பட்டதாரியாக இருந்தபோதிலும், தனது சகாக்களை விட்டுப்பிரிந்ததில்லை—மாறுபடப் பேசியதுமில்லை. வயது முப்பதானதும் குப்புசாமி தாண்டவராயனுக்கு விவாஹம் செய்துவைக்க எண்ணினார். ஜாதி பைத்தியம் பிடித்த இந்தியாவில் தாண்டவராயனுக்குப்பெண் அகப்படவில்லை. வேலையில்லாததும் ஒரு காரணம். குப்புச்சாமியின் முயற்சி பலிக்காமற்போனதும், தாண்டவராயனுக்கு ரோஷம் உண்டாயிற்று. இந்த இருபதாம் நூற்றாண்டில்—கலப்பு விவாஹம் மிகுந்தகாலத்தில் பெண் கொடுக்கமறுப்பதென்றால் இந்த ஜாதிக்கு என்ன திமிர். இந்த ஜாதியைத்தொலைத்து ஜாதிபேதகம்இல்லாமல்செய்து விட்டுத்தான் உட்காருகிறதென்று தீர்மானித்து முடிச்சவிழ்க்கி மூப்பன் சடையன் கருவாளி, கழுதை, குதிரை, முதலிய தனது நண்பர்களோடு யோசித்து முடிவுக்கு வந்துவிட்டதாக எண்ணி, இந்திய தேசத்தை அவமதிக்கும் ஜாதிவழக்கத்தைத்தொலைப்பதற்காக "ஈவெட்டி சிப்பாய்கள் சங்கம்" என்ற கழகம் ஒன்று நிறுவி கேள்விகேட்பாட்டில்லை; வைத்தது தான் சட்டமென திட்டங்களை நியமித்து தடபுடலாக நடந்தது. பத்திரிகைகளிலெல்லாம் "ஈவெட்டி சிப்பாய்கள் சங்கம்" என கொட்டை எழுத்துக்களில் பொறித்து வெளிவந்துவிட்டது. ஈவெட்டி என்றவார்த்தை நூதனமாக இருந்ததால் இரகசிய போலிஸார் அந்தரங்க சோதனை செய்துவந்தனர். ஜாதிப்பிரிவினை ஆகாதென்று உண்மையில் பாடுபடும் காங்கிரஸ்காரர்கள்கூட பிரமித்துவிட்டனர். உண்மை அறிந்து கொள்வதற்கு சிலர் முற்பட்டனர். சங்கத்தின் தலைவர் யார்? நிர்வாகஸ்தர் காரியதரிசி முதலியவர்கள்யாரென்பதைத்தெரிவிக்கும்படி கேட்டும்-எழுதியும் பதிலில்லை. இதற்குள் ஏராளமான ரூபாய்சேர்ந்துவிட்டது. மகாநாடு-பொதுக்கூட்டங்கள், அங்குமிங்கும் எங்கும் நடப்பதாக செய்தி பரவியதற்கு மறுப்புக்கடிதங்களும் குவியாமலுமில்லை-தாண்டவராயனும்பொருட்படுத்துவதற்கில்லை. பத்திரிகைகளில் தன்னைப்பற்றிப்புகழுவதற்கு பணச்செலவு அதிகப்படுவதால் சொந்தப்பத்திரிகையொன்றும் நடத்தினான். அதன் பெயர் "திமிர்வாதம்" பத்திரிகையின் போக்கைக்கொண்டே பெயரின் அர்த்தத்தை தெரிந்துகொள்ளவேண்டுமே தவிர [illegible] வியாக்கியானம் செய்யும்படி கேட்காதிருக்கக் கேட்டுக்கொள்கிறோம்,

சாசுவதமற்ற புத்தியையுடைய தாண்டவராயனுக்கு பழைய நிலைமைமாறிவிட்டது. மீசை முறுக்குமிகுந்தது. இவனது குலகுரு சாந்தலிங்க சுவாமியைக்கூட மதிப்பதில்லை. அரசியல் விவாதங்கள் நடைபெற்றிருந்தசமையத்தில் இவனது புரட்சியும் கொடுஞ்செயலும் அரசாங்கத்தை வாதித்தன. 1908-ம் வருஷத்திய கிரிமினல்சட்டம் 13வது பிரிவின்படியும் 7, 8, வது உட்பிரிவின்படியும், தாண்டவராயனை ஏன் கைது செய்யக்கூடாது. என்பதற்கு காரணம் காட்டும்படி சம்மன்சார்பு செய்யப்பட்டது. தாண்டவராயனது நண்பர்கள் கம்பிநீட்டிவிட்டனர். தொடை நடுங்கியது பித்துப்பிடித்தவன் போல் இருந்தான்.

வைசிராய் விசேஷ அதிகாரம் :

ஹார்னிமன்

சட்டநிபுணத்துவமுள்ள எவனும் தற்கால அவசரச்சட்டத்தின் வேகத்தைப்பற்றி மத்தியஸ்தம் கூறிக்கொண்டிருக்கப்போகிறதில்லை. ஆயிரக்கணக்கான ஜனங்களை, அவசர ஆள்தூக்கிப்பூதம் விழுங்கிக்கொண்டிருப்பதை உண்மையாளி மறைத்துப்பேசுவதற்கு உடன்படான். ஆறுமாதமாக புதிய புதிய அவசரச் சட்டங்களை சர்க்கார் பிரயோகித்தும் வெற்றிபெறவில்லை. நாட்டில் அமைதி நிலவுகின்றதென பொய்வதந்தி கட்டிவிடுவது அயோக்யத்தனமாகுமென்பது பொருள்பட லிபர்ட்டி பத்திரிகையில் எழுதியிருந்த தலையங்கத்தில் ராஜத்துவேஷமிருப்பதாக குருட்டுப்பேர்வழிகள் பாணம் தொடுத்திருக்கிறார்கள். இந்திய அரசியல் சட்டம் 72,வது பிரிவில் யாதொரு நபர் கவர்ன்மெண்டார் அறிக்கையின்படி நடந்து கொள்ளாவிட்டால் சட்டபூர்வமான அமுல் நடத்தப்படுமென தெரிவித்திருந்ததா? புதிய அவசரச்சட்ட திருத்த விதிகள் எதிரிக்குத்தெரிந்திருக்குமென ரூபிக்க வழியில் போய்க்கொண்டிருந்த ஆயிரக்கணக்கானவர்களை கைது செய்யவில்லையா? குற்றமுள்ளவர்களென போலீஸார் மதிப்பிட்டபடி நிரபராதிகளும் அடைபட்டு விடுதலையாக வில்லையா? இதுபற்றித்தான் (லிபர்ட்டி) எழுதியிருந்தது. சட்டத்துக்கு கீழ்படியாதது மட்டும் குற்றமாகும்போது சட்டத்தை அனுசரியாத தீர்ப்பும், நிர்வாகமும் குற்றமாக்கப்படவேண்டுமென்பதும், குற்றமா? இப்போது சிறையில் வசிக்கும் கைதிகளிற் பெரும்பாலார் சத்தியாக்கிரஹிகள், என்பதை மறுக்கமுடியாதாயின் இவர்களை எந்தக்குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டிருக்கிறது. தாவாவில் சாட்சி இருந்ததா? தீர்ப்பின் விபரமென்ன? இதை ஒரு சாதாரண மனிதனென்ற ஹோதாவில்கேட்ககூட உரிமையிருக்க; பிரபலஸ்தர்களைசந்தாதாரராகக்கொண்ட ஒரு பத்திரிகை வினவுதல் குற்றமெனப்படுவதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. அவசரச்சட்டத்தின் பொதுவிதிகளைக்கொண்டே அதன் ராக்ஷத உதவியை நிக்ஷயித்துவிடல் ஸ்வல்பம்—அவசரம் என்பதை விவரிப்போம் நாட்டின் பல பாகத்திலிருந்தும் நெருக்கடியான நிலையைப்பற்றிய தகவல்-திடுக்கிடக்கூடிய—செயல்கள், பொதுஜன நடமாட்டத்திற்குப்பங்கம்—பெருந்தன்மையில்லாத பலாத்காரமுயற்சி ஏற்பட்டிருந்தால்—அவசரமாகச் சட்டங்களைப்பறக்கவிட வைசிராய்க்கு விசேஷ அதிகாரம் உண்டென வைத்துக்கொள்வோம். பொதுஜன அமைதிக்கு உற்பவித்ததாகச் சொல்லப்பட்ட சட்டங்கள் கையைக்கட்டிக்கொண்டு தடியடியைத் தாங்கிக்கொண்டிருக்கும் ஜீவகாருண்ய இயக்கத்தாரை பின்பற்றுதிருக்கலாமா? ஜனங்களின் தயவைப்பெற்று அவர்களை இம்சிக்கும் ஞாயமற்ற கொள்கைகளைக்கண்டிக்காதிருக்க எந்தவொர் பத்திரிகைகளுக்கும் உரிமையுண்டா? அவசரச்சட்டப்—காட்டுத்தீ-கொடிய பூதம் இந்தியாவெங்கும்-பரவிவிட்டது. ஜனங்களைப் பற்றிக்கொண்டு வயிறுபுடைக்கத்தின்கின்றது. என்று அப்பத்திரிகை எழுதியதற்கு தீர்ப்புச் சொல்ல இத்தனை நாளாகல், ராஜப்பிரதிநிதி அரசியலைப்பற்றி அறிந்திருக்கவில்லை என்று டாக்டர் மோகினி மோகன் பட்டாச்சாரி, ஏன் சொல்லி இருக்கக்கூடாது: அவர் எழுதிய தலையங்கத்தின் கருத்தையோ சிக்கில் குற்றமற்ற ஜனங்கள் அவசரச்சட்டத்தால் கடின தண்டனை அடைந்தும், அவர்களின் மடியில் நெருப்பைக்கட்டிக்கொண்டிருக்கும் நிலையிலுமிருக்கிறார்கள். சர்க்கார் தண்டித்திருந்தாலும்—வேண்டுமானால் எவ்வித தண்டனையும் விதிக்கசட்டம் இடம் கொடுக்கிறதாகையால், அவ்வித அபாயகரமான—எதிர்பாராத துன்பக்குறியை தங்களுக்கு எப்போதுசார் பாக்குகிறார்களோவென நினைப்பதும் சகஜம்தான் இந்திய அரசியல் சட்டப்படி இதுவும குற்றமாகாது. சர்க்கார் செய்துவரும், மற்றொரு தனிச்செயல்—சட்டத்தில் காணப்படாத வார்த்தைகளை புதிய வியாக்கியானத்தால் விஷயந்தெரியாத ஜனங்கள் நம்பும்படி செய்வது சட்டசபையில் கேள்வி கேட்கப்படும்போது திமிராகபதில் சொல்வது இவைகளை எல்லாம் சட்டசம்மதமென்று சொல்லாதவர்களை தண்டிப்பதென்ற நோக்கத்துடன் புதிய அவசரச் சட்டத்தைத்தோற்றுவித்தது, வில்லிங்டனின்

தவரிஷியும்-அரசியல் தலைவனும்.

முனி-மகரிஷி-தனது இருதயத்தைமாசுபடாதுவைத்திருக்கவேண்டும். இந்தியாசட்ட நிபுணத்துவமருந்தால் ஜீவித்துவருகிறது. இரவும் பகலும் தனது கந்தைத்துணியை கூழுணவையும் மெச்சி வந்தனர். அதன் அறுசுவையை நாக்கு மறந்தொழிந்தது ஆகாய வாணி-அசரீரீவார்த்தை-தெய்வமொழி, வேத வாக்கியம் என தேசீய இயக்கத்தை, வெளிமுற்றம்-சந்துபொந்து—மூலை—-முடுக்கெல்லாம், நிரப்புவதுதான் தேசீய ரிஷிக்கு வேலை. காடுகளில் சஞ்சரிக்கும் முனியைப்போல் தேசீய ஞானி இருப்பதில்லை இவனுக்கு பெண்சாதி பிள்ளைகள்தான் சிஷர்களாகவும், வேலைக்காரர்களாகவும் இருப்பார்கள். உண்மை அல்லாததற்கு மாறுபட்ட அபிப்பிராயத்திற்கு—தேசீயவாதி தலையை அசைப்பது இல்லை-ஆமாம் சாமி போடுவதுமில்லை. ஆனால் பலாத்காரத்தை அவன் பொருட்படுத்துவதற்கு எக்காலத்தும் நினையான் இந்த சுதந்திரப்போரில் இந்தியருக்கு பெருமித அவமானச்செயல்களை இந்திய சர்க்கார் புரிந்திருக்கின்றனர். இந்தியர்கள் எந்தத்திட்டத்தை அநுஷ்டிப்பினும்; பிரிட்டிஷார் அத்திட்டத்தை உருப்படாமல் செய்யத்தயங்கவில்லை.

ராஜிய மகாநாடு கூடி, தற்கால நிலைமையைப்பற்றியோசிப்பது தடுக்கப்பட்டு இம்சிக்கப்படுகிறார்கள். மகாநாட்டின் ஆரம்பத்திலேயே, பொருப்பற்றவகையில் நடந்துகொண்டதோடு, கௌரவ மனிதர்களையும், இழிவுபடுத்தியுமிருக்கின்றனர், பஞ்சாப் ராஜ்ய மஹாநாடு கூடி பேசப்படும்போது, போலீஸார் மிருகச்செயலை-காட்டுமிராண்டித்தனத்தைக்காட்டி, வாயில் துணியை வைத்து அடைத்து பேசாதிருக்கும்படி செய்திருக்கின்றனர். இந்த துணிகரமான செயலை போலீஸ்காரன் அநுஷ்டித்தபோது, ஜில்லா அதிகாரி—மாஜிஸ்டிரேட்டுகளும் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். ஆதலால் ஞாயம் கிடைக்குமென்று நினைப்பதற்கில்லை. தன் கையே; தனக்குதவி. இந்தியர் யாவரும் தேசிய சந்நியாசியாவதற்குமுற்படில், எனக்கு அதிகப்பொருத்தம். வாலிபர்கள் குடும்பக்கவலையை நீக்கி தேசிய சந்நியாசிகளாய், அஹிம்சையைக்கடைப்பிடிப்பினும்-மூர்க்ககுணம் படைக்கினும்-தேசிய உணர்ச்சி மட்டிலும் அவனது மனதில் மறைவுபடாதிருந்தால்; ராக்ஷதபலத்தை அடியோடே அழித்துவிடலாம்.

ஆதாரமற்ற லக்ஷிய வீரன் தனது எல்லையை எப்படி அடைகிறதில்லையோ, அப்படியே தியாகமில்லா தேசிய தலைவன, வழிமாறி-தட்டுதடுமாறி நிற்கிறான். இவன் தியாகியாக இருந்தால்சந்நியாசியாகவேகருதப்படுகிறான். ஆத்மா விரிந்த சக்தியை உடையது, அதன் பிரகாசத்தை நிக்ஷயிக்கமுடியாது. சிறிது ஒளியிலிருந்தே அண்டபிண்டம் இயலுகிறதென்றால், ஆத்மசக்தியின் வியாபகத்தை எவ்வாறு புகழலாம். நேர்மையான—அன்பு செறிந்த-ஒருமனதின் முடிவை—தீர்மானத்தின் யத்தனத்தை யாகாதி விதிக்கிரமம் தப்பாமல் ஆவிர்ப்பிக்கில் அதற்கு இடையூறுமில்லை. கங்குகரை இல்லை. கட்டுத்திட்டமில்லை. எல்லாப்பகைமையும், ஒழிந்துபடும். ஆகையினால் தேசிய தலைவன் தன்னைப்புகழப்படுவதற்கு ஆளாக்கிக்கொள்கிறதில்லை. பிறரால் மதிக்கப்படவோ—இகழப்படவோ முயற்சிப்பதில்லை. ஒரு உண்மை தலைவனை அறிவிலிகள் பலர் தூஷித்தால், அவனது மாற்றுக்குறைவுபடாது. ஒளிகுன்றுது கீர்த்திமங்காது.

விசேஷ அதிகாரமாயின் அந்தஅதிகாரம் அவருக்குக்கொடுத்தவர்க்கத்தாரும், குற்றவாளியாகிறபோது, வில்லிங்டனும் இராஜப்பிரதிநிதி ஹோதாவில் குற்றவாளியாகப்பாவிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படாதா? இது விஷயங்களில் நான் தலையிடுவதால் கவர்ன்மெண்டார் என்னை ஒரு அட்வைசர் என்று மதிப்பிடவேண்டியதே தவிர அவர்கள் நினைக்கிறபடி, சந்தேகப்படும் ஆள்மாருட்டப்பேடியல்ல. இப்படிசொல்வதற்கும் அவசரச்சட்டம் இடங்கொடுப்பதாயின்,காத்திருந்துபார். சகித்திரு. அடக்கமாகயிரு. இதுதான் எனது நன்மொழியும் இந்தியர்களுக்கு எச்சரிக்கையுமாகும்.

மானஸயோகமும்—வாலிபரும்

உனக்கு வயது முப்பது ஆகிவிட்டது. இனி உன் மனம் சிறிது குழப்பத்திலீடுபடும். தயங்காதே. இதற்குத்தானே பிரமசாரியத்தைப்பற்றி, அல்லது வாலிபர்களின் அடக்கத்தைப்பற்றி, நிதான புத்திபடைக்க ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். சேர்க்கையினால் உனது புத்தி அபலமாகிவிடும்- உனது இருதயத்தில் பூரண பிரகாசத்தை மிளிரவொட்டாமல், அடுக்கடுக்காயுள்ள—மாசுபடர்ந்த-சென்ற காலச்செய்கைகள் அனுபவ துன்பத்திலாழ்த்திவிடும்போது மனத்தேர்ச்சி பெற்றுவிட்டதாக நினைத்திருப்பாய். அப்படி நினைப்பதற்கு தற்பெருமை—சுயநலம் உண்டானது எதைபற்றி மாச்சரியத்தினாலேயே. நீ பிரியப்படும் யாதொரு வஸ்துவோ; ஜீவனோ கிடைக்காதுபோனால் சீ அது கெட்டது-கவைக்குதவாதது, என்பன போன்ற மிதமிஞ்சிய தூஷணைப்போராட்டத்திலீடுபடுகிறாய். அதுதான் மலின வாசனை இதற்கு எதிரியானது விட்சேபமெனப்படும். உனது தீர்க்க புத்தி மாயா சக்தியென்றோர்வாய். நீ குடும்ப இயக்கத்தில் பணத்தைக்குறித்தோ--மோக்ககளையினாலோ-வேலை இல்லாத்திண்டாட்டத்தினாலோ, மனதிற்கு வேலை உண்டாக்கப்படுவதுதான் விட்சேபம். விட்சேபத்தின் விவரணம் எல்லையற்றது-தடையல்லாதது. அதிலும் ஒரு பக்கமுண்டு. நீகட்டுப்பட்டு உன்னை நிவர்த்திக்க-எண்ணத்தைப்பூர்த்தி செய்ய, பரிசீலிப்பதின் முடிவில், காரியானுகூலத்தைக்கண்டு பிடித்ததாக நிரூப்பது தெளிந்தபுத்தி-விஷயஞானம்.

விஷயஞானம் உலக அநுபவத்தைக் காட்டி தன்னை மிகைபடுத்தியே தோற்றி நிற்கும். இவ்வித ஞானத்திலும் உனது பொறுப்பை, நீ அறியும்படியான சந்தர்ப்பம் வாய்ப்பதுதான் விட்டகுறை என்னப்படும். பூர்வ ஜென்மத்தில் நீ எடுத்தெடுத்து இறந்த ஜெனனங்கடோறும் அடைந்த நன்மைகளை அச்ஜென்மத்திலடைவதற்கு முன் மரணமடைந்துவிட்டால், இச்ஜென்மத்தில் அப்பலனுன்னைச் சாரும்போது அதனை அநுபவிக்கத்தூண்டுவதுதான் விட்டகுறை, அல்லது மனதில் படிந்துள்ள—சேகரித்திருந்த செயல்கள்தான் தெரிந்தனையா! என்ன சிரிக்கிறாய்' இதுதானாவென்று நினைத்துவிட்டாய்போலும். இந்த அலட்சிய புத்திதான் ஆகாது இதுதான் சிறுபிள்ளைத்தனம் உனக்குவயது 27-28 ஆகும் போலிருக்கிறது. கொஞ்சம்கூட பாரபுத்தி என்பதில்லையே உன்னைப்பற்றி யோசிக்கில் குடும்பத்தில் அடிக்கடி சண்டைபோட்டுக்கொண்டிருப்பது—தடிவெடுப்பது--சந்தேகப்படுவதும் உன்னை ஆட்டி, சில சமயங்களில், கள்குடித்தவனினும் மோசமாக இருந்திருப்பாயென தெரிகிறது. உனது ஆரம்ப குடும்ப அந்தஸ்திற்குத்தக்க, மகிழ்ச்சி இல்லாவிட்டால், உன்னை மணந்த ஆ! ஹா! அந்த இளம் பெண் கல்லா—மரக்கட்டையா உன்னையே நினைத்து இரவும் பகலும், வெளிக்குக்காட்டாதபடி உன்மீது கொண்ட காதலை, பிறரறிந்து கொள்ளாதவிதமாக நடந்துவந்த நல்ல ஒரு துணைவிக்கு தீங்கிழைப்பதுகூடாதென நினைக்கிறாயே; அதுதான் பக்குவஞானம். இதுதான் முப்பதாம் வயதில், நீ கைவிடப்படாத அறிவு உன் சிற்றன்னை—அக்காள்—தங்கை—மருமகள்—பேத்தி முதலியவர்களோடு சமயாதீதம் போல் பேசினதில்லையா? நடந்ததில்லையா? அவளுக்கு அந்த உரிமை இல்லையென நினைக்கலாமா? இந்ததர்ம சங்கடமான காரியத்திற்கு உன்னை நீ தயாரித்துக்கொண்டது கெட்ட பழக்கத்தின் சேர்க்கையேயாகும். என்ன! ஒருமாதிரியாகப் பெருமூச்சு விடுகிறாய் மனது நிறைய குப்பைகூளமெல்லாம் நிறப்பி விட்டாயோ! அதனால் தான் திக்குமுக்காடுகிறாய்—திணறுகிறாய். நீ அறியக்கிடக்கும் அறியவிஷயங்களை சேகரித்துவைப்பதற்கு இடமில்லாமல் செய்துவிடுகிறாயே உனது இருதயம் காலியாயிருந்தாலல்லவோ; விஷயங்களைச்சேர்த்து-நல்லது-கெட்டது ஆராய்ந்து—அலசிப்பார்ப்பதற்கு வசதியுண்டு. நீ ஒரு மண்ணாங்கட்டியாக இருக்கிறாயே இடது நாசியில் சுவாச ஓட்டம், மூக்கின்மேற்றோலை ஓட்டிப்போகிறதாவென்று பார் சரிதான். மூலாதாரத்தில் உஷ்ணம் மிகுந்துவிட்டது-மலம் சிக்கலாக இருக்கிறது. கடுக்காய்த்தூளைச்சாப்பிட்டுமலச் சிக்கலைப்போக்கிவிடு.

ஸ்தல ஸ்தாபனங்கள்.

பிரிட்டிஷார் இந்தியாவிற்கு வழங்கியிருக்கும் இரட்டை ஆட்சி முறையில் ஸ்தல ஆட்சியை மிகைபடக்கூறி வருகின்றனர். யோக்கியதையுள்ள எவனும் இந்தியாவின் ஸ்தலஸ்தாபனங்களைக்கவனிக்கில் முற்றிலும் மாறுபட்டதாயிருக்கிறது. இந்தியாவிலுள்ள பிரஜைகள்--அனேகமாய் விவசாயிகளுக்கு முக்கியமாக கண்ணும் கருத்துமாக இருப்பது கால்நடைதான். விவசாயத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள கிருஷிகலாசாலைகள் சில இருந்தாலும் கால்நடையைப்பற்றி ஸ்தல சர்க்காரோ மாகாண சர்க்காரோ—மத்திய சர்க்காரோ—நினைப்பதுகூட இல்லை. பொதுவாக இந்தியாவில்—பர்மா நீங்கலாக 398 ஸ்தலஸ்தாபனங்கள் இருக்கின்றன. இந்த ஸ்தாபனங்களில், அபிவிருத்திக்கேற்ப ஆரம்பபாடசாலைகள் நகரங்களிலிருந்தாலும், மூலபுருஷர்கள் வசிக்கும், கிராமங்களில் அளவுக்குத்தக்கபடி இல்லாதிருப்பதுதான் விசனிக்கத்தக்கது. எந்த மாகாணத்தில் ஸ்தலஸ்தாபன நிர்வாகங்கள் ஒழுங்காக்கப்பட்டிருக்கிறதோ; அதனையே சர்க்கார் அதிகாரிகள் பெருமையாகக்கூறிவிடுகின்றனர். கிராமங்களில் சென்று பார்த்தவருக்கு இந்தியர் நிலைமை அதிகேவல ஸ்திதியிலிருப்பதற்கு பிரிட்டிஷ் சர்க்காரே பொறுப்பு என்பது விகசிதமாய்விடும்.

கால்நடை சவதரிப்பு ஆரம்பப்பாடசாலை-பால்வியாபாரம் ஆகியவைகளைப்பற்றி 1921ல் மத்திய சட்டசபையில் கேட்கப்பட்டு சரியானபதில் அனுப்பும்படி அகில இந்திய ஸ்தாபனங்களுக்கு அறிவிக்கப்பட்டது. 339-ஸ்தாபனங்களிலிருந்தும் பணமுடையைப்பற்றியே பதில் வந்திருந்தன. ஸ்தாபன நிர்வாகங்களுக்கு போதிய பணம் ஒதுக்கப்படாததால் நிர்வாகக்குறைவு—பொருப்பில்லாத்தனம் என்ற வெட்கக்கேடான கூக்குரல் மிகுந்துவிடுகிறது. ஒரு தேசத்தின் ஜனங்களால் கொடுக்கப்பெறும் வரிப்பணங்களால் நிர்வாகஞ்செய்யும் வகையில் அதிகாரிகள் நினையாதிருப்பதும், சுகாதாரப்பகுதி, சட்ட நிபுணத்துவம் ஆகியவைகள் மிகக்குறைந்திருப்பதும் ஒருகாரணமாக இருந்தாலும், இந்தியரின் நிர்வாகத்திறமையைப்பரிக்ஷிப்பதற்கே, இரட்டை ஆட்சி

சமைய தந்திரம்!

“இழிச்சாளாம் பெரியாள் வழிப்பணத்திற்குச்சரியா” என்பது ஒருபண்டைய காலப் பழமொழி. வாசகர்கள் வேறுவிதமான அர்த்தம் பண்ணிக்கொள்ளக்கூடாது. பிரிட்டிஷ் ராஜீயவாதிகள் ஒரு திறப்பட்ட அபிப்பிராயத்தின் பேரில்; இந்தியாவின் வருங்காலத்திய அரசியல் திட்டத்தைத்தயாரிப்பதன் வாக்குரிமையைப்பரிசீலனை செய்வதற்கென, மகுடமிட்ட லோதியன் கமிட்டி வந்து போய்விட்டது. இதைப்பற்றி நமது அபிப்பிராயம் எவ்வாராயினும், பத்திரிகைகளில் பெரிய பெரிய வியாக்யானங்கள்—மதிப்புரைகள் வெளிவிட்டன. ஆகையால் நமதுமூட்டையையும் சிறிது அவிழ்த்துவிட நினைத்துவிட்டோம். இந்தியா விரிந்த பரப்புள்ள தேசம். ஜன நெருக்கமுள்ளது. இத்தேசத்தில் தற்காலமிருந்துவரும் ஓட்டுரிமை 710800 இனி உயர்த்தப்படும் தொகை 36000000 ஆக உயர்த்தப்படவேண்டும். இந்தக்கணக்கிட்டால் 100-க்கு 10வீத

வழங்கப்பட்டிருக்கிறதென்று மார்தட்டிச்சொல்லும் பிரிட்டிஷார். அரிசிக்குத்தகுந்த தண்ணீர் ஊற்றினலல்லவோ சாதம் வேகும் என்பதை ஏன் கவனிக்கவில்லை என்று கேட்கிறேன்

சில வருஷங்களுக்கு முன் லண்டனில் பொது ஸ்தாபன ஆராய்ச்சி சங்கத்தார் விடுத்த அறிக்கையொன்றில் ஸ்தல ஊழல் ஏற்படும்போது பொருப்புள்ள அரசியல் நிர்வாகிகள் தான் பாதிக்கப்படவேணுமென்று வற்புறுத்தியதுபோல் கூறிக்கொள்வது கஷ்டமாகுமா? சட்டஞானத்தைப்பற்றி கவர்ன்மென்டார் சிரத்தை எடுத்துக்கொள்கிறதில்லை எனப்புகார் செய்யப்படுகிறது. ஒரு மாகாணத்தில் எத்தனை கலாசாலைகளிருக்கின்றனவோ அவைகளில் ஐந்திலொருபங்கு சட்டகலாசாலையாக இருக்கவேண்டும். இந்தியாவில் சட்டகலாசாலைகளிருக்கிறதென அநேகருக்கு தெரியாதிருக்கும் வகையில் பிரிட்டிஷாரின் கண்காணிப்பிருந்தால் அதிகம் சொல்லவேண்டுமா? இந்தியரின் பொருப்பில்விடப்பட்டஸ்தல சுயாட்சி இந்நிலைமையில் நடந்து பிரிட்டிஷாரின் மேல் குற்றம் சாட்டிக்கொண்டிருக்க இந்தியர் திறமையற்றவர்களென்று வாயினால் சொல்லிக்கொண்டிருப்பதில்காரியம் சாயாது

தம் ஓட்டுரிமைப்பெருவார்கள். இப்போதிருக்கும் ஓட்டுரிமை பாத்தியதை, நூற்றுக்கு ஒருவரே. தற்கால பெண்வாக்காளர் தொகையை 315000ல் இருந்து 6600000 ஆக உயர்த்த வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களின் வாக்குரிமையையும் அதிகமாக்கவேண்டும். தொழிலாளருக்கு அதிகமாக பிரதிநிதித்வம் இருக்கவேண்டும். ஸ்தாபன விஷயங்களில் இப்போதுள்ள வாக்குரிமை விகிதமே இருந்துவரவேண்டும் சட்டசபையில் மொத்தம் 38 ஸ்தானங்கள் இருக்கவேண்டும் என்று லோதியன் பிரபு சிபார்சு செய்திருக்கிறார். வகுப்புப்பிரச்சினை அக்கமிட்டியின் அதிகாரத்துக்குட்பட்டதல்லவாகையால் அதைப்பற்றிசிபார்சுசெய்யவில்லை.

நூற்றுக்கு ஒருவர் விகிதமிருந்த ஓட்டை அதிகப்படுத்தியிருப்பது நலந்தான். இந்தியாவுக்கு எத்தனைவிதமான ஓட்டுரிமை இருந்தவரினும், சட்டசபையை இந்தியர் குவிந்துகொண்டு, எறும்புகூட நுழையவிடாமல் வைத்திருந்தபோதிலும், இந்தியாவிலுள்ள 36 கோடி மக்களும் அப்படியே வாக்குரிமை பெற்றிருந்தபோதிலும் ஆவதென்ன? இப்போது நடமாடும் அவசரச்சட்டங்கள், எந்த ஓட்டுரிமையைக்கொண்டு நடைபெறுகிறது. ஜனநாயக ஆட்சிக்கு, வாக்குரிமைதான் காரணமென்பதை ஒப்புக்கொண்டபோதிலும், எல்லா வாக்குரிமைகளையும், கீழே அழுத்திவிட்டு, தலைதூக்கும், வைஸிராயின் விசேஷ வாக்குரிமை அதிகாரம்; தொலைந்தாலல்லவோ, ஜனநாயக வாக்குக்கு மதிப்புண்டு. இந்திய ராஜ்ய நிர்வாகிகளின் விசேஷ அதிகாரங்களைக்குழிதோண்டிப்புதைத்துவிட்டு, ஜனநாயக அபிப்பிராயத்தின்படி நடப்பதென்ற நேர்மை அரசியலைப்பெறும் வரையில், சட்டமறுப்புத்திரும்பத்திரும்ப ஆரம்பிக்கபபடலாமென்பது தேர்ந்த துணிபு இதற்கிடையில் வழிச்செலவுக்கணக்கு ஒப்புவிப்பது போன்ற லோதியன் சிபார்சையும், அதைக்கண்டு பல்லை இளிக்கும் மிதவாதிகளின் வேண்டுதலையும் பிரிட்டிஷ் சர்க்கார் சரியானபடி ஏற்றுக்கொள்ளாதது போல், காங்கிரஸும் ஒத்துக்கொள்ளப்போவதில்லை. இது சமையதந்திரமென்பதை மாடு மேய்க்கும்பையனும் அறிந்துள்ளகே.

வருங்கால மன்னர்கள்.

அகில இந்திய தேசிய மகாசபை—காங்கிரஸ் மகாசக்தி வாய்ந்தது. இந்தியா முழு திலுமே இந்த ஒரு ஸ்தாபனமே ஒழுங்குபெ சீர்பெற பலபெரும் அரசியல் தலைவர்களா அமைக்கப்பட்ட ஓர் ஸ்தாபனமாகும். அ தேசிய மகாசபை யாரால்? எவரா நடைபெறுகின்றன வென்பதைக் கண்டுபிடிப்பதே கஷ்டசாத்தியமானகாரியம். நா கண்ணை மூடிக்கொண்டிருக்கவில்லை விழித்துக்கொண்டு தானிருக்கின்றோம். அல்ல கண்கட்டிவித்தையுமல்ல! நமது கண்முன்—பிரத்தியக்ஷமாகத்தோன்றும் காங்கிரஸ் த வர்கள் ஒவ்வொருவரும் கைதி செய்யப்பட் தண்டிக்கப்பட்டு சிறைக்கு—நாலு சுவர்களுக்கும் மத்தியில் தள்ளப்பட்டுக்கொண்டே ஏ விருக்கின்றார்கள். கடைசியாக தலைவர்க ன்ற ஹோதாவில் பெரும்பாலோர், பதினா ரக்கணக்கில் சிறையில் தள்ளிதாழிடப்பட்ட கியும் காங்கிரஸையும், அதன் காரியாதிகளை யும் தடைப்படுத்திவிட்டதாக; மார்தட்டு சர்க்காரோ, அவர்களது சிப்பந்திகளோ கூ முடியுமா? அறிவு, விவேகமுள்ள ஒருவ காங்கிரஸை நசுக்கிவிட்டதாக ஒருபோது கூறவேமாட்டான், அடைக்கப்பட்ட தலை கள் விடுதலை செய்யப்படாமல் வருடக்கண கில் வைக்கப்பட்டபோதிலும் சரி, எஞ்சி க்கும் பூராபேர்களும் கைதி செய்யப்பட்டுவி டபோதிலும் சரி காங்கிரஸ் அதன் கட்ட ளை—ஆணையைமீராது நடந்து சென்றுகொ ண்டுதானிருக்கும் என்பதற்கறிகுறியாக எ ணற்றதலைவர்கள் வெளியில் இல்லாமல்கூ காங்கிரஸ்செல்வாக்கு தூரதொலைகளிலி க்கும்சிறு,சிறு கிராமங்களில் கூட பரவி-தீவிரம நிற்பதிலிருந்து நன்கு தெரியவருகிறது. உ ளதை உள்ளபடியே, உண்மையைக்கூறி வா தற்காக; சர்க்காரை—பிரிட்டிஷ் ஆக்ஷியை அடியோடு வெட்டி வீழ்த்தும் நோக்கத்தோ கூறியதாக சிறைப்பட்டிருக்கும் இவர்களே காங்கிரஸ்ஊழியர்களேதான் இந்தியாவின்வரு ங்கால மன்னர்களாகஆவார்களென்பதைப்ப றியாரேனும் ஜோஸியம் கூறத்தேவையில்லை.

Printed & Published by A. V. Sellam Pillay at the Desopakari Press, 210-36th Street, Rangoon.